# வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பதின்மூன்று



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu13unse

# வாழ்வியற் களஞ்சியம்

# வாழ்வியற் களஞ்சியம்

## தொகுதி பதின்மூன்று

(பேரளவு உற்பத்தியில் மிகை ஆற்றல் - முதியோர் நலத்திட்டம்)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-204-5

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு 53 – 13

திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி - ஜூன் 1994

| | | |
|---|---|---|
| துறை | : | களஞ்சிய மையம் |
| நூல் | : | வாழ்வியற் களஞ்சியம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு ; **மறுபதிப்பு 2009** |
| விலை | : | உரூ. **800/-** |
| அச்சுப் பதிவம் | : | கே. பி. டி. இண்டஸ்ட்ரி<br>அண்ணாமலை நகர் |
| மறுதோன்றி அச்சு | : | **நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்,<br>சிவகாசி.** |

# வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்

**மேதகு டாக்டர் எம். சென்னாரெட்டி**

ஆளுநர், தமிழ்நாடு

புரவலர்

**மாண்புமிகு**

**டாக்டர் (செல்வி) ஜெ. ஜெயலலிதா**

முதலமைச்சர், தமிழ்நாடு

இணைவேந்தர்

**மாண்புமிகு பேரா. க. பொன்னுசாமி**

கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

**முனைவர் ஔவை நடராசன்**

முதன்மைப் பதிப்பாசிரியர்

**பேரா. முனைவர் அ. மா. பரிமணம்**

பொறுப்பாசிரியர்

**திரு சா. உதயசூரியன்**

# பதிப்புக் குழு

*முதன்மைப் பதிப்பாசிரியர்:*

பேரா. டாக்டர் **அ.மா. பரிமணம்**, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

*பதிப்பாசிரியர்:*

பேரா. தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ., (ஆனர்சு), எம்.ஏ., எம்.ஏ.,
(விசுகான்சின்), (எப்.ஐ.எச்.)
(5.8.86) — வரலாறு, அகழாய்வு

*செய்தி திரட்டுவோர்:*

1. திரு சீ. பக்தவச்சலு, எம்.ஏ., எம்.ஏ. (4.2.85) — மானிடவியல், கல்வியியல், சமூகவியல்
2. திரு சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில். (25.11.87) — மொழி, மொழியியல். தத்துவம்

*மொழி வல்லுநர்கள்:*

1. திரு க. அம்பிகாபதி, எம்.ஏ., (16.11.88)
2. திரு செ.இரெ. செயச்சந்திரன், எம்.ஏ., (வரலாறு), எம்.ஏ., (தமிழ்), டி.பி.ஈடி. (17.10.89)

# நன்றியுரை

## பதின்மூன்றாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia, Anthropology by Victor Barnouw, Sociology by Elbert W. Stewart, Sociology by David Popenoe.

## ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை; டாக்டர் கு. முருகேசன், தஞ்சாவூர்; திரு. அ. காசிலிங்கம், பெருமாங்குப்பம்.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெரு மக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர். **சி. பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணை நிற்கும் பதிவாளர் டாக்டர் பெ. சின்னையன் அவர்களுக்கும், துணைப் பதிவாளர் திரு. இரா. சுப்பராயலு அவர்களுக்கும், முன்னாள் முதன்மைப் பதிப்பாசிரியர் பேரா. டாக்டர் நா. பாலுசாமி அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டுதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகத்தாருக்கு என் நன்றி.

தஞ்சாவூர்
நாள்: 17—1—90

அ.மா. பரிமணம்
முதன்மைப் பதிப்பாசிரியர்.

# பதின்மூன்றாம் தொகுதி: கட்டுரையாளர்கள்

**அ.க.**

திரு அ. கலியபெருமாள், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

**அ.கா.**

திரு அ. காசிலிங்கம், எம்.ஏ.,பி.எட்.
பெருமாங்குப்பம் & அஞ்சல்
கீ.வ. குப்பம் வழி
வ.ஆ. அம்பேத்கார் மாவட்டம்.

**அ.கு.சா.**

டாக்டர் (திருமதி) அரோமா கு.சாம்.,எம்.ஏ.,
பிஎச்.டி.
சமூகவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**அ.ச.ந.**

திரு அ.ச. நடராசன், எம்.ஏ.,பி.காம்.,பி.எல்.
வழக்குரைஞர்
98, மூன்றாவது குறுக்குத் தெரு
இராகவன் காலனி
ஜாபர்கான் பேட்டை
சென்னை.

**அ.சி.**

டாக்டர் அ. சிவசங்கரன், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
திரு.வி.க. அரசினர் கலைக் கல்லூரி
திருவாரூர்.

**அ.பா.**

டாக்டர் அ. பாண்டுரங்கன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
புதுவைப் பல்கலைக்கழகம்
காரைக்கால்.

**அ.ம.**

டாக்டர் அலெக்சாண்டர் மந்திரமூர்த்தி, எம்.ஏ.,
பிஎச்.டி.
அரசியல் துறைத் தலைவர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை.

**அ.ம.ஷெ.**

திரு அ.ம. ஷெரிப், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
43, தாணாத் தெரு
புரசைவாக்கம்
சென்னை.

**அ.மா.ப.**

டாக்டர் அ.மா.பரிமணம், எம்.ஏ., பிஎச்.டி.,
20, கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்புச் சாவடி
தஞ்சாவூர்.

**அ.ர.**

டாக்டர் அப்துல் ரசாக், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

**அ.வி.**

டாக்டர் அ. விசயராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**அ.விசு.**

டாக்டர் அ. விசுவநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

**அ.வெ.பெ.**

பேரா. அ.வெ. பெருமாள், எம்.ஏ., எம்.பில்.
வரலாற்றுத் துறை
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

**ஆ.இரா.**

திரு ஆ. இராஜா, எம்.ஏ.,எம்.பில்.
பொருளியல் துறை
வ.உ.சி. கல்லூரி
தூத்துக்குடி.

**ஆ.ச.**

பேரா. ஆ.சந்திரசேகரன், எம்.ஏ., எம்.பில்.
டி – 76 – ஏ, 7வது அவென்யூ
பெசண்ட் நகர்
சென்னை.

**ஆர்.சு.**

திரு ஆர். சுந்தர ஸ்ரீநிவாசன், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
விசாலாட்சி இல்லம்
21, சுப்பிரமணியபுரம் கிழக்குத் தெரு
தேவகோட்டை
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

**ஆர்.ம.**

திரு ஆர்.மணியன்,எம்.ஏ., பி.ஓ.எல்.,பி.டி.
தமிழ்த்துறை
தியாகராயர் கல்லூரி
சென்னை.

**ஆர்.வா.**

திரு ஆர். வாசு, எம்.ஏ.
இளநிலை ஆய்வாளர்
கணிப்பு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**ஆ.ஜெ.**

பேரா. (திருமதி)ஆவுடைத்தாய் ஜெயராமன்,எம்.ஏ.
9, தவுலத் நகர்
கடலூர்
தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம்.

**இ.உ.**

திரு இளங்கோ உதயணன், எம்.ஏ.
நகராட்சி ஆண்கள் மேனிலைப் பள்ளி
ஆர்.எஸ்.புரம்
கோயம்புத்தூர்.

**இ.தி.**

பேரா. இ. திருமலைக் குமாரசுவாமி.எம்.ஏ.,எம்.பில்.
பொருளியல் துறைத்தலைவர்
ம.தி.தா.இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

**இர.ஆ.**

திரு இர. ஆரோக்கியசாமி.எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த் துறை
அ.வீ.வா.நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**இரா.அ.**

பேரா.இரா. அண்ணாமலை, எம்.ஏ.
ஏ – 54, அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

**இரா.இ.**

புலவர் இரா. இளங்குமரன்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர் கோயில் சாலை
மதுரை.

**இரா.இரா.**

திரு இரா.இராசு, எம்.ஏ.
விரிவுரையாளர்
நாடகத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**இரா.கி.**

திரு இரா. கிருட்டிணமூர்த்தி,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**இரா.குரு.**

திரு இரா. குருநாதன், எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த் துறை
உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர்.

**இரா.ச.**

திரு அம்பை. இரா. சங்கரன்
பெருஞ்சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**இரா.சா.**

டாக்டர் இரா. சாரங்கபாணி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
330, குறள் இல்லம்
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

**இரா.த.**

பேரா. இராசசேகர தங்கமணி, எம்.ஏ.
சின்னாண்டான் கோயில் தெரு
பாண்டியர் நகர்
கரூர்.

**இரா.பா.**

டாக்டர் இரா. பாலகிருஷ்ணன், எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**இராம.கு.**

டாக்டர் இராம. குருநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

**இரா.வி.**

திரு இரா. விவேகானந்த கோபால், எம்.ஏ.,எம்.பில்.
அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**இரா.வே.**

டாக்டர் இரா.வேங்கடரத்தினம், எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**இரெ.க.**

டாக்டர் இரெ. கண்ணப்பன், எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
ஆராய்ச்சி உதவியாளர்
உளவியல்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**இரெ.கு.**

திரு இரெ. குமரன்,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த்துறை
அ.வீ.வா.நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**ஈ.ஜா.**

பேரா.ஈ.ஜான் ஜெயக்குமார்,எம்.ஏ.,எம்.பில்.
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

**எச்.அ.**

பேரா.எச். அமீர் அலி,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
ஏ.வி.சி.கல்லூரி
மயிலாடுதுறை.

**எச்.எம்.அ.**

திரு எச்.எம். அபுல்கலாம், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
எல்–2813
26 – வது குறுக்குத் தெரு
பெசண்ட் நகர்
சென்னை.

**எம்.எஸ்.சு.**

டாக்டர் எம்.எஸ்.சுப்பிரமணியன்,எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறை
அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**எம்.சீ.**

திரு எம்.சீராளன்,பி.ஏ.,பி.எல்.ஐ.எஸ்ஸி.
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

**எம்.சு.**

டாக்டர் எம்.சுசீலா,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**எம்.பி.சு.**

திரு எம்.பி. சுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
18,விநாயக தெரு
அபிராமபுரம்
சென்னை.

**எல்.இரா.**

டாக்டர் எல்.இராமமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
சிறப்பு நிலை ஆய்வாளர்

மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**எல்.ஜெ.**

டாக்டர் எல்.ஜெயசேகர், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
சமூகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**எல்.ஜே.சௌ.**

டாக்டர் எல்.ஜே.சௌந்தர்ராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

**என்.எஸ்.பா.**

டாக்டர் என்.எஸ்.பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,
பிஎச்.டி.

186,முனிச்சாலை
மதுரை.

**என்.எஸ்.மு.**

திரு என்.எஸ்.முத்துமலைச்சாமி,பி.ஏ.,பி.எல்.
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
தமிழ்ச் சங்கம் சாலை
மதுரை.

**என்.சு.**

டாக்டர் என்.சுரேந்திர பிரசாத்,எம்.ஏ.,எம்.பி.ஏ.,
பிஎச்.டி.

உளவியல் துறைத் தலைவர்
பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

**என்.ந.**

டாக்டர் என்.நடராசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்.

**எஸ்.உ.**

செல்வி எஸ்.உஷாராணி,எம்.ஏ.
சிறப்புநிலைச் சோதனையாளர்
இளைஞர் வழிகாட்டி நிலையம்
சென்னை.

**எஸ்.க.**

திரு எஸ்.கருணாநிதி,எம்.ஏ.
விரிவுரையாளர்
உளவியல்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**எஸ்.கே.ரா.**

திரு எஸ்.கே.ராமராஜன்
பெருஞ்சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**எஸ்.சு.**

டாக்டர் எஸ்.சுவாமிநாதப் பிள்ளை,எம்.ஏ.,
எம்.எட்.,பிஎச்.டி.

கல்வியியல் பேராசிரியர்
தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
தரமணி
சென்னை.

**எஸ்.சுத.**

திரு எஸ்.சுதர்சன்,எம்.ஏ..
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை.

**எஸ்.சொ.**

திரு எஸ்.சொக்கலிங்கம்,எம்.ஏ.,எம்.பில்.
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

**எஸ்.மோ.**

டாக்டர் எஸ்.மோகன்,எம்,ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

**எஸ்.வே.**

டாக்டர் எஸ்.வேலாயுதப் பெருமாள்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
அஞ்சல்வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**எஸ்.ஜெ.**

டாக்டர் எஸ்.ஜெகதீசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
2, பொன்மேனி நாராயணன் தெரு
எஸ்.எஸ்.காலனி
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ.ஆதித்தன்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.ர.

ஏ.ரமா,எம்.காம்.
வணிகவியல்துறை
வி.வி.வி.கல்லூரி
விருதுநகர்.

க.அ.

திரு க.அம்பிகாபதி,எம்.ஏ.
மொழி வல்லுநர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

க.ஆ.

பேரா.க.ஆறுமுகம்,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த் துறைத் தலைவர்
சிக்கைய நாயக்கர் அரசினர் கலைக் கல்லூரி
திருப்பூர்.

க.இ.

டாக்டர் க.இளமதி ஜானகிராமன்,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

க.த.தி.

டாக்டர் க.த.திருநாவுக்கரசு,எம்.ஏ.,பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

க.தெ.

திருமதி க.தெய்வமணி, எம்.ஏ.
விரிவுரையாளர்
பொருளியல் துறை
அஞ்சல்வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

க.ந.

டாக்டர் க.நரசிம்மன்,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
சென்னை.

க.நா.அர.

திரு க.நா.அரங்கராசன்,எல்.சி.இ.
92, வடக்கு நரசிம்மபுரம்
கரூர்.

க.போ.

டாக்டர் க.போஸ்,எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி
உசிலம்பட்டி.

க.ம.

புலவர் க.மருதமுத்து
ஓய்வு பெற்ற ஆசிரியர்
புதுக்கோட்டை கிராமம்
திருமழபாடி அஞ்சல்
திருச்சி மாவட்டம்.

க.மு.

திரு க. முத்துசாமி, எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
திரு. வி.க. அரசு கலைக் கல்லூரி
திருவாரூர்.

க.முரு.

டாக்டர் க. முருகையன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.செ.

திரு கி. செம்பியன், எம்.ஏ.
தமிழ்த் துறை
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

கி.ர.அ.

டாக்டர் கி.ர. அனுமந்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
ஓய்வு பெற்ற, வரலாற்றுத் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

கு.ச.ஆ.

திரு கு.ச. ஆனந்தன், பி.காம்.,பி.எல்.
வழக்குரைஞர்

45, பாரதி வீதி
கோபிசெட்டிப் பாளையம்
பெரியார் மாவட்டம்.

**கு.தி.**

டாக்டர் கு. திருமேனி, எம்.ஏ.,பி.ஓ.எல்.,பிஎச்.டி.
14, வீரேசுவரம்
ஸ்ரீரங்கம்
திருச்சி.

**கு.து.**

டாக்டர் (திருமதி) கு.துளசி பிருந்தா,
விரிவுரையாளர்
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**கு.மு.**

டாக்டர் கு.முருகேசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
நாடகத் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**கு.வெ.பா.**

டாக்டர் கு.வெ. பாலசுப்பிரமணியம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
இலக்கியத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**கூ.பா.**

திருமதி கூ. பாக்கியம், எம்.எஸ்ஸி.
அழகர் கோயில் சாலை
மதுரை.

**கே.ஆ.**

டாக்டர் கே. ஆதிநாராயணா, எம்.ஏ.,எம்.எட்.,
பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
திண்டுக்கல்
காயிதே மில்லத் மாவட்டம்.

**கே.கி.**

திரு கே. கிருட்டிணமூர்த்தி, பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
பிளாட் எண். 1292, 27-ஆம் தெரு
அண்ணாநகர் மேற்கு
சென்னை.

**கே.நி.**

டாக்டர் கே. நிர்மலானந்த ரெட்டி, எம்.எஸ்ஸி.,
பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

**கே.மீ.**

திரு கே. மீனாட்சி சுந்தரம், எம்.ஏ.,எம்.பில்.
விரிவுரையாளர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்
திண்டுக்கல்
காயிதே மில்லத் மாவட்டம்.

**கே.மு.**

பேரா. கே. முருகேசன், எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
செங்கற்பட்டு
செங்கை அண்ணாம வட்டம்.

**கே.வி.அ.**

திரு கே.வி. அனந்தகிருட்டிணன், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
149, வடக்கு உஸ்மான் சாலை
தியாகராயநகர்
சென்னை.

**கே.வி.தா.**

டாக்டர் கே.வி. தாட்சாயிணி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியை
காயிதே மில்லத் மகளிர் கலைக் கல்லூரி
சென்னை.

**கே.ஜி.கி.**

திரு கே.ஜி.கிருட்டிணன், எம்.ஏ.
711, வைஜயந்தி
16, முதன்மைச் சாலை
சரசுவதிபுரம்
மைசூர்.

**கே.ஜி.சே.**

பேரா. கே.ஜி. சேஷாத்திரி, எம்.ஏ.
ஆங்கிலப் பேராசிரியர்

ஈஸ்வரி நகர்
தஞ்சாவூர்.

**கோ.இரா.**

டாக்டர் கோ. இராமதீர்த்தம், எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் துறைத் தலைவர்
மதுரைக் கல்லூரி
மதுரை.

**கோ.ச.**

டாக்டர் கோ. சங்கர நாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
இந்திய மொழிகளின் நடுவண் மையம்
மைசூர்.

**கோ.சட.**

பேரா. கோ. சடகோபன், எம்.ஏ.
பொருளியல் துறை
அரசு ஆண்கள் கலைக் கல்லூரி
கும்பகோணம்.

**கோ.சீ.**

டாக்டர் கோ. சீனிவாச சர்மா, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**ச.அ.**

டாக்டர் ச.அகத்தியலிங்கம்,எம்.ஏ.,பிஎச்.டி.,பிஎச்.டி.
முன்னாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**ச.க.**

டாக்டர் ச. கங்காதரன், எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறைப் பேராசிரியர்
மதுரை காமராசா பல்கலைக்கழகம்
மதுரை.

**ச.சா.**

டாக்டர் ச. சாம்பசிவம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**ச.செ.**

திரு ச. செந்தூரன், எம்.ஏ.
52, லூர்து நகர்
முதன்மைச் சாலை
கே. புதூர்
மதுரை.

**ச.பா.**

திரு ச.பாலசுந்தரம்
367, மேல வீதி
தஞ்சாவூர்.

**ச.மெ.**

டாக்டர் ச. மெய்யப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**ச.மோ.**

நீதிபதி ச.மோகன், எம்.ஏ.,பி.எல்.
நீதிபதி
உயர்நீதி மன்றம்
சென்னை.

**சா.உ.**

திரு சா. உதயசூரியன், எம்.ஏ., எம்.பில்.
பெருமாங்குப்பம் & அஞ்சல்
(வழி) கீ.வ.குப்பம்
வ.ஆ.அம்பேத்கார் மாவட்டம்.

**சா.கி.**

டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
அறிவியல் தமிழ்த் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சா.மு.**

டாக்டர் சா.முத்தழகு,எம்.எஸ்ஸி., எம்.பில்.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
அரசு கலைக் கல்லூரி
தருமபுரி.

**சாவி.கி.**

டாக்டர் சாவித்திரி கிருஷ்ணன், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
ஜனாப் பஷீர் அகமத் சையத் மகளிர் கல்லூரி
சென்னை.

**சி.ஆர்.நா.**

திரு சி.ஆர். நாராயணசாமி,எம்.ஏ.
தமிழ்த் துறை
தியாகராயர் கல்லூரி
சென்னை.

**சி.இரெ.**

பேரா. சி. இரெத்தினம், எம்.ஏ.
மனை எண்: 58
முருகவேள் நகர்
திருச்சிராப்பள்ளி.

**சி.என்.ந.**

டாக்டர் சி.என். நடராசன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக
விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

**சி.சு.**

திருமதி சி. சுந்தராம்பாள், எம்.ஏ.
தமிழ்த் துறை
அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர்.

**சி.மூ.**

டாக்டர் சி. மூக்கரெட்டி, எம்:ஏ.,பிஎச்.டி.
நூலகத் தலைவர்
ஸ்ரீ வாசவி கல்லூரி
ஈரோடு.

**சி.வி.இரா.**

திரு சி.வி. இராசகோபால், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
102, ஆச்சாரப்பன் தெரு
சென்னை.

**சி.வே.**

டாக்டர் சி. வேங்கடபதி, எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர்.

**சீ.ப.**

திரு சீ. பக்தவச்சலு, எம்.ஏ.,எம்.ஏ.
மனை எண்: 52, ஜெயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

**சு.ஆ.**

திரு சு. ஆறுமுகம், எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்ஸி.
நூலக உதவியாளர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சு.இரா.**

திரு சு. இராசவேலு, எம்.ஏ.,எம்.பில்.
வேந்தன் வீதி
அண்ணாநகர்
சேண்பாக்கம் அஞ்சல்
வேலூர்
வ.ஆ. அம்பேத்கார் மாவட்டம்.

**சு.ச.**

டாக்டர் சு. சக்திவேல், எம்.ஏ., எம்.ஏ.,பி.எச்.டி.
நாட்டுப்புறவியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சு.சு.**

பேரா. சு. சுவர்ணகாளீசுவரன்
ஓய்வு பெற்ற தமிழாசிரியர்
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

**சு.ப.**

திருமதி சு. பத்மாவதி, எம்.ஏ., எம்.பில்.
பொருளியல் துறை விரிவுரையாளர்
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர்
கலைக் கல்லூரி
தஞ்சாவூர்.

**சுப.அ.**

டாக்டர் சுப. அண்ணாமலை, எம்.ஏ.,எம்.லிட்., பி.எச்.டி.
முதல்வர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

**சுபா.இரா.**

டாக்டர் சுபாஷிணி இராமசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறை விரிவுரையாளர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**சூ.இ.**

டாக்டர் சூ. இன்னாசி, எம்.ஏ., பிஎச்.டி
மரியகம்
காமகோடி நகர் இணைப்பு
வளசரவாக்கம்
சென்னை.

**சூ.சூ.**

திரு.சூ. சூரியக்குமார், எம்.ஏ.
பொருளியல் விரிவுரையாளர்
உருமு தனலட்சுமி கல்லூரி
திருச்சி.

**செ.இரா.**

திரு செ. இராசு, எம்.ஏ.
இணைப் பேராசிரியர்
கல்வெட்டுத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**செ.இரெ.செ.**

திரு செ. இரெ. செயச்சந்திரன், எம்.ஏ.,எம்.ஏ., டி.பி.ஈடி.

888, பரசுராம்ர் தெரு
கரந்தை
தஞ்சாவூர்.

**செ.ஐ.**

பேரா. செ. ஐயாத்துரை, எம்.ஏ.,எம்.பில்.
வரலாற்றுத் துறை
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

**செ.வை.**

பேரா. செ. வைத்தியலிங்கம், எம்.ஏ.,எம்.லிட்.
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**செ.ஜோ.**

திரு செ. ஜோசபு, எம்.ஏ.,எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

**சே.இரா.**

பேரா. சே. இராமானுஜம், எம்.ஏ.,டிப் (நாடகம்).
நாடகத் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சே.பி.**

டாக்டர் சே. பிரேமா, எம்.டி. (சித்தா).
இணைப் பேராசிரியர்
சித்த மருத்துவத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சொ.சா.**

திரு சொ. சாந்தலிங்கம், எம்.ஏ.
தொல்பொருள் ஆய்வாளர்
தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

**சோ.ந.க.**

டாக்டர் சோ.ந. கந்தசாமி, எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
மொழிப்புல முதன்மையர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சௌ.ல.**

திரு சௌ. லட்சுமி நரசிம்மன், எம்.ஏ.
ஆங்கிலப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

**ஞா.கு.**

திருமதி ஞானா குலேந்திரன், எம்.ஏ.
இணைப் பேராசிரியர்
இசைத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**டி.ப.**

திரு டி. பரதன், எம்.ஏ.
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

**த.நா.வா.**

பேரா. த.நா. வாசுதேவராவ், எம்.ஏ.
வரலாற்றுத் துறை

மாநிலக் கல்லூரி
சென்னை.

**த.ரா.**

செல்வி த. ராஜேஸ்வரி, எம்.ஏ.
தமிழ்த் துறை
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்
கேரள மாநிலம்.

**த.வெ.பா.**

செல்வி த.வெ. பானுமதி, எம்.ஏ.
கௌரவ சோதனையாளர்
இளைஞர் வழிகாட்டி நிலையம்
சென்னை.

**தா.ஈ.**

டாக்டர் தா. ஈசுவரப் பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
இலக்கியத் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**தா.எ.**

டாக்டர் தா. எட்மண்ட்ஸ், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
த.பே.மா. லுத்தரன் கல்லூரி
பொறையாறு.

**தா.ஏ.ச.**

டாக்டர் தா.ஏ. சண்முகம், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**தா.ஏ.ஞா.**

டாக்டர் தா.ஏ.ஞானமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
18, தாமு நகர்
கோயம்புத்தூர்.

**தி.அர.இரா.**

பேரா. தி.அர. இராமச்சந்திரன், எம்.ஏ.
37, 8வது குறுக்குத் தெரு – மேற்கு
செனாய் நகர்
சென்னை.

**தி.கோ.நா.**

பேரா. தி.கோ. நாகராசன், எம்.ஏ.,எம்.பில்.
முதுகலை வரலாற்றுத் துறை
அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி
செய்யாறு
வ.ஆ. அம்பேத்கார் மாவட்டம்.

**தி.சு.**

திரு தி. சுப்பிரமணியன், எம்.ஏ.
காப்பாட்சியர்
தொல்பொருள் ஆய்வுத் துறை
தஞ்சாவூர்.

**தி.லீ.**

டாக்டர் தி. லீலாவதி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியை
இராணிமேரிக் கல்லூரி
சென்னை.

**து.ஆ.த.**

பேரா.து.ஆ. தனபாண்டியன்
இசைத் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**தெ.ஞா.**

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
சென்னை.

**தெ.பா.**

பேரா. தெ. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம். ஏ. (விசுகான்சின்), (எம்.ஐ.எச்.)
182, பூங்காத் தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்
தெ.ஆ.மாவட்டம்.

**தே.ஆ.**

டாக்டர் தே. ஆண்டியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
16, சவகர் சாலை
காந்தி நகர்
மதுரை.

**தே.தே.**

திரு தே. தேவதாஸ், எம்.ஏ.
தமிழ்த்துறை ஆய்வாளர்
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்.

**தே.வே.**

டாக்டர் தே. வேலப்பன், எம்,ஏ.,பிஎச்.டி.
முதுகலைப் பேராசிரியர்
பொருளியல் துறை
தெ.தி. இந்துக் கல்லூரி
நாகர்கோவில்.

**ந.க.ம.**

பேரா. ந.க. மங்களமுருகேசன், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**ந.ச.**

திரு ந. சண்முகம், எம்.ஏ.
தமிழ்த் துறை ஆய்வாளர்
கேரளப் பல்கலைக் கழகம்
திருவனந்தபுரம்.

**ந.சொ.**

டாக்டர் ந. சொக்கலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
78,11, இராதாகிருட்டிணன் வீதி
ஆழ்வார் நகர்
மதுரை.

**ந.து.**

திரு ந. துரைராசு, எம்.ஏ.
பொருளியல் இணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**ந.பி.**

திரு ந. பிச்சமுத்து, எம்.ஏ.
5, பாரதி சாலை
திருவல்லிக்கேணி
சென்னை.

**நா.கு.**

டாக்டர் நா. குமாரசாமி ராஜா, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

**நா.செ.**

டாக்டர் நா.செயராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

**நா.ப.**

பேரா.நா. பக்தவச்சலு, எம்.ஏ.
604, அண்ணாநகர் மேற்கு விரிவு
சென்னை.

**நே.தே.**

டாக்டர் நே. தேவசகாயம், எம்.எஸ்ஸி., எம்.ஏ., எம்.ஏ.,பிஎச்.டி.
மானிடவியல் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**ப.இரா.**

திரு ப. இராசமோகன், எம்.ஏ.
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**ப.கொ.**

திரு ப. கொழந்தசாமி, எம்.ஏ.
தமிழ்மொழித் துறை ஆய்வாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**ப.தெ.**

டாக்டர் ப. தெய்வசேனாபதி, எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**ப.ப.**

டாக்டர் ப. பத்மனாபன் தம்பி,எம்.ஏ.,பிஎச்.டி.
ஆய்வியல் அதிகாரி
சுவடிக் காப்பகம்
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்.

**பழ.மு.**

டாக்டர் பழ. முத்து வீரப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
தொலைதூரக் கல்வி இயக்ககம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பா.அ.

பேரா. பா. அலெக்சாண்டர் கனகராஜ், எம்.ஏ.
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
21, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

பா.ந.

திரு பா. நடராசன், எம்.ஏ., எம்.பில்.
தமிழ்த் துறை
வைணவக் கல்லூரி
சென்னை.

பா.பி.

திரு பா. பிரபாகரன்,
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

பா.ஜெ.

திரு பா. ஜெயக்குமார், எம்.ஏ.,எம்.பில்.
முதுநிலை ஆய்வாளர்
தொல் தொழில் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தத்துவத் துறை
அருள்மிகு பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

பி.செ.

திரு பி. செகதீஷ் சேத்தி, எம்.ஏ.
வரலாற்றுத் துறை
மங்களூர்ப் பல்கலைக்கழகம்
மங்கல கங்கோத்திரி
கருநாடகம்.

பி.பி.

டாக்டர் பி. பிரேமா, எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் துறை விரிவுரையாளர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

பி.வி.

திரு பி. விசுவநாதன், எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
வரலாற்றுத் துறை
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

பு.வே.

புலமை. வேங்கடாசலம். எம்,ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
15 – பி, முதல் தெரு
அருளானந்த நகர்
தஞ்சாவூர்.

பூ.சு.

டாக்டர் பூ. சுப்பிரமணியம், எம்.ஏ.,பிஎச்.டி.
சுவடி இயல் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

பூ.த.

திரு பூ. தர்மலிங்கம், எம்.ஏ.,எம்.பில்.
195, விருதுநகர் சாலை
திருமங்கலம்
மதுரை மாவட்டம்.

பெ.கோ.

டாக்டர் பெ. கோவிந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
நாடகத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பெ.சு.

திரு பெ. சுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த்துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

பெ.டே.

திருமதி பெற்றி டேவிட், எம்.ஏ.

உளவியலார்
இளைஞர் வழிகாட்டி நிலையம்
சென்னை.

பெ.த.

திரு பெ. தமிழ் ஒளி, எம்.ஏ.
மானிடவியல் துறை ஆய்வாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பெ.து.

பேரா. பெ. துரைசாமி, எம்.ஏ.,பி.டி.
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

பொன்.பா.

டாக்டர் பொன். பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச்.டி.
35, சங்கர நாராயணபுரம் வீதி
ஆலம்பட்டி
விருதுநகர்.

ம.இர.

டாக்டர் ம. இரகுராம்சிங், எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
தலைமைப் பேராசிரியர்
தமிழ்நாடு கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்
கல்லூரி சாலை
சென்னை.

ம.இரா.

டாக்டர் ம. இராசேந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
துணை இயக்குநர்
மொழிபெயர்ப்புத் துறை
புனித சார்சுக் கோட்டை
சென்னை.

ம.க.

பேரா. ம. கமல்ராஜ், எம்.ஏ.
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

ம.கா.

பேரா. ம. காந்தி, எம்.ஏ.,எம்.பில்.
82, சின்ன சுப்பராய பிள்ளை வீதி
பாண்டிச்சேரி.

ம.சு.

திரு ம. சுப்பிரமணியன், எம்.ஏ.
மண்டலக் கணக்காளர்
பொதுப்பணித் துறை
பாண்டிச்சேரி.

ம.ந.பு.

திருமதி ம.ந. புஷ்பா, எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ம.நா.

திரு ம. நாகரெத்தினம், எம்.ஏ.
6 – பி/7, எல்.என்.புரம்
அறந்தாங்கி.

ம.பெ.

டாக்டர் ம. பெரோஸ், எம்.எஸ்ஸி.,எம்.எட்., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
இராமகிருட்டிணா கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன், எம்.ஏ.,பிஎச்.டி.
7/188, என்.ஜி.ஓ. காலனி
நாகமலை
மதுரை.

மா.பா.கு.

டாக்டர் மா.பா. குருசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மீ.அ.

பேரா.மீ. அப்துல் ரசாக் கபூர்கான், எம்.ஏ.,எம்.எல்.
விரிவுரையாளர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

மீ.ம.

பேரா. மீ. மனோகரன், எம்.ஏ.
32/5, தெப்பக்குளம் கிழக்குத் தெரு
சிவகங்கை
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

மீ.மு.

டாக்டர் மீனாட்சி முருகரத்தினம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அஞ்சல்வழித் தொடர் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

மு.அ.

திரு முகமது அப்துல் கலாம், எம்.ஏ.
மானிடவியல் துறை விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மு.இரா.

டாக்டர் மு.இராசமாணிக்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மு.உலோ.

பேரா. மு. உலோகநாதன், எம்.ஏ.,எம்.ஏ.
விரிவுரையாளர்
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

மு.க.

பேரா. மு. கம்சா முகைதீன், எம்.ஏ.
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மு.ச.

திரு மு. சதாசிவம், எம்.ஏ.
இயக்குநர்
சரசுவதிமகால் நூலகம்
தஞ்சாவூர்.

மு.த.

திரு மு. தனுசுகோடி, எம்.ஏ.
மாநிலக் கல்லூரி
சென்னை.

மு.ந.

செல்வி மு.நளினி, எம்.ஏ.
91, வடக்குத் தெரு
மலைக் கோட்டை
திருச்சி.

மு.நி.

டாக்டர் மு. நிலாமணி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறை
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சி.

மை.அ.கி.

டாக்டர் மை.அ. கிருட்டிணன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

லா.பி.

திரு லாரன்ஸ் பிரபாகர், எம்.ஏ.
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை.

வ.கு.

டாக்டர் வ. குருநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
இலக்கியத் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வ.தே.சா.

டாக்டர் வ.தே. சாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வ.வெ.

திரு வ. வெங்கடேசன், எம்.ஏ.,எம்.பில்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை.

வி.அ.

திருமதி வி. அனுசுயா, எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியை
காயிதே மில்லத் மகளிர் கலைக் கல்லூரி
சென்னை.

வி.எஸ்.ஆர்.வி.

டாக்டர் வி.எஸ்.ஆர். விஜயகுமார், எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
உளவியல் விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**வி.சி.**

திரு வில்பிரட் சில்வேரா, எம்.ஏ.
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
திருநெல்வேலி.

**வீ.சொ.**

புலவர் வீ. சொக்கலிங்கம்
261, தத்தோஜியப்பா தெரு
தஞ்சாவூர்.

**வெ.சீனி.சே.**

திரு வெ. சீனி சேஷாத்திரி, எம்.ஏ.
17, மேற்குச் சித்திரை வீதி
திருவரங்கம்
திருச்சி.

**வே.இரா.மா.**

டாக்டர் வே.இரா.மாதவன், எம்.ஏ.,பிஎச்.டி.
ஓலைச் சுவடித் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**வே.க.**

டாக்டர் வேதகிரி கணேசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

**வே.த.**

டாக்டர் வே. தயாளன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

**ஜி.ஆர்.கி.**

டாக்டர் ஜி.ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

**ஜி.ப.**

டாக்டர் (திருமதி) ஜி. பங்கஜம், எம். எஸ்ஸி.,
எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்
திண்டுக்கல்
காயிதேமில்லத் மாவட்டம்.

**ஜே.பா.**

திரு ஜே. பால் பாஸ்கர், எம்.ஏ.,எம்.எட்.
79, என்.ஜி.ஓ.குடியிருப்பு
திண்டுக்கல்.

**ஜே.ர.**

திரு ஜே. ரமேஷ் சுந்தர், எம்.ஏ.
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | — | அகநானூறு |
| அணி. | — | அணியதிகாரம் |
| உரூ. | — | உரூபாய் |
| உவம. | — | உவமவியல் |
| எ.டு. | — | எடுத்துக்காட்டு |
| ஐங். | — | ஐங்குறுநூறு |
| கலி. | — | கலித்தொகை |
| க.வெ. | — | கல்வெட்டு |
| களவு. | — | களவியல் |
| கி.பி. | — | கிறித்துவுக்குப் பின் |
| கி.மீ. | — | கிலோ மீட்டர் |
| கி.மு. | — | கிறித்துவுக்கு முன் |
| குறள். | — | திருக்குறள் |
| குறு. | — | குறுந்தொகை |
| ச.கி.மீ. | — | சதுரக்கிலோ மீட்டர் |
| சிலம்பு. | — | சிலப்பதிகாரம் |
| செங். | — | செங்கீரை |
| செ.மீ. | — | சென்ட்டி மீட்டர் |
| செய். | — | செய்யுளியல் |
| சேனா. | — | சேனாவரையம் |
| தொல். | — | தொல்காப்பியம் |
| தொன்.விள. | — | தொன்னூல் விளக்கம் |
| நற். | — | நற்றிணை |
| நன். | — | நன்னூல் |
| நூ. | — | நூற்றாண்டு |
| நூற். | — | நூற்பா |
| ப. | — | பக்கம் |
| பக். | — | பக்கங்கள் |
| பரி. | — | பரிபாடல் |
| பா. | — | பாடல் |
| புறம். | — | புறநானூறு |
| பெரிய. | — | பெரியபுராணம் |
| பொருள். | — | பொருளதிகாரம் |

| | | |
|---|---|---|
| மணி | — | மணிமேகலை |
| மர. | — | மரபியல் |
| மீ. | — | மீட்டர் |
| முத்தொள். | — | முத்தொள்ளாயிரம் |
| மு.தா.கீ. | — | முத்துத்தாண்டவர் கீர்த்தனை |
| மு.தி. | — | முதல் திருவந்தாதி |
| மு.வீ. | — | முத்து வீரியம் |
| மெய். | — | மெய்ப்பாட்டியல் |
| யாப். | — | யாப்பருங்கலம் |
| யாப்.கா. | — | யாப்பருங்கலக்காரிகை |
| யாப்.வி. | — | யாப்பருங்கல விருத்தி |
| வீரசோ. | — | வீரசோழியம் |

# வாழ்வியற் களஞ்சியம்

**பேரளவு உற்பத்தியில் மிகை ஆற்றல்:** இக்கால உற்பத்தி முறையைப் பொதுவாகச் சுற்று வழி உற்பத்தி முறை (Round about Process of Production) என்பர். நுகர்வுப் பண்டங்களை நேரடியாக உற்பத்தி செய்யாமல் குறிப்பிட்ட நுகர்வுப் பண்டத்தைப் பேரளவில் (Large Scale) உற்பத்தி செய்வதற்குத் தக்கதொரு மூலதனப் பண்டத்தை முதலில் உற்பத்தி செய்து கொண்டு, பின்னர் அம்மூலதனப் பண்டத்தைக் கொண்டு நுகர்வுப் பண்டத்தைப் பெருமளவில் உற்பத்தி (Mass Production) செய்வது இக்கால முறை. எடுத்துக்காட்டாகச் சட்டை தைப்பதற்குத் தையல் இயந்திரங்களை முதலில் உற்பத்தி செய்துகொண்டு அதன்துணைக்கொண்டு பேரளவில் சட்டைகளைத் தைப்பதைக் குறிப்பிடலாம். இக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தொகையும் வாழ்க்கைத்தரமும் பண வரவும் பெருகிக் கொண்டே செல்வதால், எதை உற்பத்தி செய்தாலும் பேரளவில் உற்பத்தி செய்யும் போக்கு (Excess Capacity in mass Production) காணப்படுகிறது. பொருளாதாரக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு அங்காடி அமைப்புகளில் நிறைவுப் போட்டி நிலவும் அங்காடி அமைப்பை நடைமுறையில் காண்பது அரிது. எனவே, இக்காலப் பேரளவு உற்பத்தியானது நிறைகுறைப்போட்டி அங்காடியிலேயே நிருணயிக்கப் படுகிறது. நிறைகுறைப் போட்டி அங்காடியில் ஒவ்வொரு நிறுவனமும் அதன் முழுத் திறனையும் பயன் படுத்திப் பண்டங்களை உற்பத்தி செய்வதில்லை. மாறாக, அவற்றின் முழுத் திறனுக்குக் குறைவான அளவிலேயே பண்டங்களை உற்பத்தி செய்கின்றன. எனவே, நிறைகுறைப்போட்டிச் சந்தையில், நிறுவனங்களிடையே மிகையாற்றல் அல்லது எச்ச ஆற்றல் (Excess Capacity) காணப்படுகிறது என்பது தெளிவாகிறது.


பொருளாதார இயலில், உற்பத்தி நிகழும் அங்காடிகளைப் பொதுவாக நிறைவுப் போட்டி நிலவும் அங்காடி என்றும், நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடி என்றும் இருவகைப்படுத்துவர். சருவாதீனம் அல்லது முற்றுரிமை (Monopoly), இருவர் முற்றுரிமை (Duopoly), ஒருசிலர் முற்றுரிமை (Oligopoly), முற்றுரிமைப் போட்டி (Monopolistic Competition) ஆகிய பல்வேறு அங்காடிகளை உள்ளடக்கியதாக நிறைகுறைப் போட்டி அங்காடி திகழ்கிறது. எவ்வகை அங்காடியாக இருப்பினும் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்யும் (பயன்பாட்டைப் படைக்கும்) அமைப்பை நிறுவனம் (Firm) என்பர். பொதுவாக, எல்லா நிறுவனங்களும் உச்ச அளவு மொத்த ஆதாயத்தைப் பெறுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு செயற்படும். உச்சநிலை மொத்த ஆதாயத்தைப் பெறவேண்டுமானால் மரபுவழிப் பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் இரு நிலைகள் அமையப் பெறுதல் வேண்டும். முதலாவதாக, ஒரு நிறுவனத்தின் இறுதிநிலைச் செலவும், இறுதிநிலை வருவாயும் சமமாக இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனம் மிகுதியாக ஒரு குறிப்பிட்ட அலகு பண்டத்தை அல்லது பணியை உற்பத்தி செய்வதற்காகும் செலவை இறுதி நிலைச் செலவு அல்லது எல்லை நிலைச் செலவு (Marginal Cost) என்பர். எடுத்துக்காட்டாக 10 இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான மொத்தச் செலவு உரூ.9,000/-என்றும், 11 இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்காகும் மொத்தச் செலவு உரூ.9,800/-

பேரளவு உற்பத்தியில் மிகை ஆற்றல்


என்றும் இருக்குமானால், இறுதிநிலைச் செலவு உரூ.800/-ஆகும். மிகுதியாக ஓர் அலகுப்பண்டத்தை அல்லது பணியை விற்றுப் பெறுவது இறுதிநிலை வருவாய் அல்லது எல்லைநிலை வருவாய் (Marginal Revenue) ஆகும். எடுத்துக்காட்டாக 10 இயந்திரங்களின் மொத்த விற்பனைத் தொகை உரூ. 14000/- என்றும், 11 இயந்திரங்களின் மொத்த விற்பனைத் தொகை உரூ.15,000/-என்றும் இருக்குமானால்,இறுதிநிலை வருவாய் உரூ. 1000/-ஆகும். இரண்டாவதாக, இறுதிநிலைச் செலவுக்கோடு இறுதிநிலை வருவாய்க் கோட்டைக் கீழிருந்து மேல்நோக்கி வெட்டிக்கொண்டு செல்வதாய் அமைதல் வேண்டும். கீழ்வரும் இரண்டு வரைபடங்களிலும் இந்நிலையை E என்ற புள்ளி காட்டுகிறது. உச்சநிலை மொத்த ஆதாயத்தைத் தரத்தக்க இந்நிலையைச் சமநிலை (Equilibrium) என்பர்.

நிறுவனத்தின் சமநிலையையும் காட்டுகின்றன. நிறைவுப் போட்டி நிலவும்போது நிறுவனத்திற்கெனத் தனி விலைக்கொள்கை (Price Policy) இருக்காது என்பதால், நிறுவனத்தின் சராசரி வருவாய்க்கோடும்(AR), இறுதிநிலை வருவாய்க்கோடும்(MR)ஒன்றுக்கொன்று சமமாக அமைந்திருக்கும். ஆனால், நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடியில் நிறுவனத்திற்கெனத் தனி விலைக் கொள்கை உண்டு. எனவே, அதன் சராசரி இறுதிநிலைவருவாய்க் கோடுகள் மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்து செல்லுகின்றன. இறுதி நிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் ஒன்றுக்கொன்றுசமமாக இருக்கும் E என்ற புள்ளி சமநிலையைக் காட்டுகிறது.

படம் 1-இல் சமநிலையில் OR அளவுப் பண்டத்தை அல்லது பணியை நிறுவனம் உற்பத்தி செய்கிறது. இதற்கு மிகுதியாக உற்பத்தி செய்தால் அதன்




வரைபடம் 1




வரைபடம் 2

அளிப்பின் அளவைத் தேவை மாற்றத்திற்கேற்றவாறு மாற்ற முடியாத நிலையை அங்காடிக் காலம் (Market Period) என்றும், சிறிதளவே மாற்றத்தக்க நிலையைக் குறுகிய காலம் (Short Period) என்றும், முழு அளவில் மாற்றத்தக்க நிலையை நீண்ட காலம் (Long Period)என்றும் பொருளாதார இயலில் குறிப்பிடுவர். மேற்கண்ட இருபடங்களிலும் நீண்டகாலச் சராசரிச் செலவுக்கோடும் (LAC), நீண்டகால இறுதிநிலைச் செலவுக்கோடும் (LMC) குறிப்பிடப்பட்டிருக்கின்றன. முதற் படம் நிறைவுப்போட்டி நிலவும் அங்காடியில் நிறுவனத்தின் சமநிலையையும், இரண்டாம் படம் நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடியில்

சராசரிச் செலவு மிகுந்துவிடும். எனவே, OR அளவே அதன் உச்ச அளவு உற்பத்தித் திறன். அதாவது, நிறைவுப் போட்டி நிலவும் அங்காடியில் நீண்டகாலத்தில் நிறுவனம் எச்சத்திறன் எதுவுமில்லாத அளவுக்கு முழுத்திறனையும் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுகிறது எனலாம்.படம் 2-இல் சமநிலையில் OM அளவு உற்பத்தி நிகழ்கிறது. நிறுவனம் ON அளவுக்கு மிகுதியாக உற்பத்தி செய்தால், அதன் சராசரிச் செலவு குறைந்துகொண்டே செல்லத்தக்க நிலையிருந்தும் OM அளவுக்கே உற்பத்தி செய்யும். அதாவது, சராசரிச் செலவு மிகாமல் ON அளவுவரை நிறுவனம் உற்பத்தியைப் பெருக்கத்தக்க நிலையிருந்தும் நிறை

குறைப் போட்டி அங்காடியில் நிறுவனம் OM அளவு உற்பத்தியோடு நிறுத்திக்கொள்கிறது. அந்நிலையில் MN அளவுக்கு நிறுவனத்திற்கு எச்சத்திறன் இருக்கிறது. OM அளவிலேயே நிறைகுறைப் போட்டி அங்காடி இயல்பு ஆதாயத்தைப் பெற்றுவிடுவதே MN அளவுக்கு எச்சத்திறன் இருப்பதற்கான காரணமாகும். என்.எஸ்.பா.

**துணை நூல்:**

**David**, W.Pearce., The Dictionary of Modern Economics, The Macmillan Press Ltd., London, 1983.

*பேராசிரியர்*: இப்பெயர் கல்வி கேள்விகளான் சிறந்து நற்பண்புகளால் நிறைந்து தூய ஒழுக்கமுடையவராய் இளம்பாலாசிரியர், பாலாசிரியர், கணக்காயர் முதலானோர்க்கும் மேலாக விளங்குபவர்க்குரிய காரணப் பெயராகும். தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை ஆராயுமிடத்துப் பேராசிரியர் என்னும் பெயராற் சுட்டப்படுபவர் அறுவர் உளர்.

**தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர்:** பேராசிரியர் என்று சொன்னவுடன் நினைவுக்கு வருபவர் இவரேயாவர். மற்றவரைப் பிற அடைமொழிகளைக் கொடுத்தே கூறுவர். இத்தகு சிறப்புடைய இவர்க்கு இப்பெயர் தொல்காப்பியத்திற்கு உரை கண்டமையான் வந்த பெயரா அல்லது இயற்பெயரா என்பது தெரியவில்லை. சிலர் இயற்பெயராகவும் கருதுவர். எனினும், இவர்தம் உரையைப் பயிலுமிடத்து இவர் ஆசிரியர்க்கெல்லாம் ஆசிரியர் எனப் போற்றுதற்குரிய தகுதியுடைமை நன்கு விளங்கும்.

தொல்காப்பியத்தின் மூன்றாம் அதிகாரமாகிய பொருளதிகாரத்தின் பிற்பகுதியாகவுள்ள மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கு மட்டுமே இவரது உரை வழக்கில் உள்ளது. அவ்வுரையை ஆராயுங்கால் ஏனைய ஐந்தியல்களுக்கும் இவர் உரை செய்துள்ளமை புலனாகின்றது. அவை வெட்சித்திணை ஒழிந்த திணையுள்ளும் காட்டப்பட்டன (செய். 189), காரணம் களவியலுள் கூறினாம் (மெய்.18), அகத்திணையியலுள் கூறினாம் (மெய்.19), என இவரே கூறுதலானும், நச்சினார்க்கினியர்தம் அகத்திணையியல் உரையுள் 'பேராசிரியரும் இப்பாட்டில் மீனெறி தூண்டில் என்றதனை ஏனையுவமம் என்று குறிப்பிடுகின்றார்' எனக் கூறுதலானும் அது தெளிவாகின்றது. ஏனைய எழுத்ததிகாரத்திற்கும்சொல்லதிகாரத்திற்கும் இவர் உரை வரைந்தாரா இல்லையா என்பது புலப்படவில்லை. மரபியலுரையுள் இவர் எழுதும் குறிப்புகளை நோக்கின் அவ்விரு அதிகாரங்களுக்கும் இவர் உரை எழுதவில்லை எனக் கருதவேண்டியுள்ளது.

இளம்பூரணர் உரையை அடுத்து எழுந்த அகல உரை இவருடையதே எனத் துணியலாம். இளம்பூரணர் மிகச் சுருக்கமாக வரைந்த பகுதிகளுக்கெல்லாம் இவர் மிக விளக்கமாக உரை கூறுகின்றார். பல இடங்களில் இளம்பூரணர் கருத்துகளை விடுத்துத் தம் கருத்துகளை விரித்தெழுதுகின்றார். எனினும், இளம்பூரணரைச் சுட்டி எவ்விடத்தும் மறுப்புரை கூறாமல் பொதுவாகப் பொருந்தாவுரைகளைச் சுட்டுகின்றார். காரணம் இவர் இளம்பூரணரிடத்துக் கொண்டிருந்த மதிப்பே என ஆய்வாளர் கூறுவர். மற்றும் இவர் காலத்தில் உரையாசிரியர் உரை என வழங்கியவை ஒருவராற் செய்யப்பட்டவையல்ல. அவை மரபாக இளம்பூரணர் அல்லது உரையாசிரியர் என்னும் பேரால் வழங்கப்படுபவை என அறிந்திருக்கலாம். ஏனெனில் இவரால் மறுக்கப்படும் பல கருத்துகள் உரையாசிரியர் உரையுள் காணப்படவில்லை. இதற்குச் சான்றாக மரபியல் 93 – ஆம் நூற்பா உரையுள் 'இந்நூல் இலக்கணத்தினை இவ்வோத்தின் இறுதிக்கண் வைத்தார் வழக்கும் செய்யுளும் என்று விதந்து கூறப்புகுந்த இரண்டிலக்கணமும் முடிந்தல்லது அவற்றைக் கூறலாகாமையின் என்பது. இக்கருத்தறியாதார் செய்யுளியலினை ஒன்பதாம் ஓத்தென்ப' என்றாற் போல்வனவாகும். இளம்பூரணத்துள் செய்யுளியல் எட்டாவதாகவே வைத்து உரை கூறப்பட்டுள்ளது. முன்னைய உரைகளுள் ஒவ்வாதனவற்றை மறுக்கும்பொழுது நயமாகவும் நகைச்சுவை தோன்றவும் மறுத்துரைத்தல் இவரது இயல்பு. சான்றாக அவர் அறியார், அவ்வாறு சூத்திரம் செய்வது ஆசிரியர் கருத்தன்று (செய்.101), தலை குலுக்கிவலியச் சொல்லினும் தன்சீர் இன்மையின் என மறுக்க (செய்.108), நாலசைச் சீர் கொண்டாரும் உளர், ஐயசைச்சீர் கொண்டாரைக் கண்டிலம் (செய்.12) என வருவனவற்றைக் கூறலாம்.

தமிழில் அகத்தியமே முதனூல் என்பதும், தொல்காப்பியர், அகத்தியனாரின் மாணவர் என்பதும், மாணவருள் தொல்காப்பியரே தலைவர் என்பதும் இவர் கருத்து (மர.94). தொல்காப்பியம் வழிநூல் என்பதும் வழிநூலன்றிச் சார்புநூல், எதிர்நூல் என்றல் மரபாகாது என்பதும் இவர் கருத்து (மர.95). இறையனார் களவியல் என்னும் நூலை மதுரை ஆலவாய்ப் பெருமான் செய்தது என்பதும் பிற்காலத்துச் செய்யப்படினும் இறைவனாற் செய்யப்பட்டமையின் அதுவும் முதல் நூலே என்பதும் இவர் கருத்து (மர.94). நூலாசிரியன் இறைவனொடு ஒப்ப மதிக்கத்தக்கவன் என்னும் கருத்தில் இவர் ஆசிரியனை ஒருமையிற் சுட்டிப் பேசுகின்றார். ஐயப்பாட்டிற்குரிய கருத்துகளைக் கூறுமிடத்து ஆசிரியன் கூறியதே தக்கது என்னும் கொள்கையுடையவர் இவர். சான்

றாக, 'நண்டிற்கு மூக்குண்டோ வெனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டெனப்து பெற்றாம்' (மர. 31) என்றாற்போல வருவனவற்றைக் கூறலாம்.

மக்களை நாற்பாலாக வகுத்துக் கூறுவது பிறப் படிப்படையிலன்று. மேற்கொள்ளும் வினை காரண மாகக் கூறப்படுவதென்பதும், அவர் பற்றிய மரபு களைக் கூறுவது புலனெறி வழக்கிற்கு உபகாரப்படு தல் நோக்கி என்பதும் இவர் கருத்தென்பது, மரபி யல் 20 - ஆம் நூற்பாவின் இறுதிக்கண் 'இதனது பயன் புலனெறி வழக்கினுள் இவர்க்கு இவை சிறந்த மரபெனலாயிற்று' எனக் கூறுவதால் புலனாகின்றது.

**உரைச்சிறப்பு:**, இவரது நடை தருக்கவியல்புடன் கூடி வினாவிடை போலச் செறிவுடையதாக விளங்கு கின்றது. அரிய சொற்களுக்கும் இலக்கணக் குறி யீட்டுச் சொற்களுக்கும் இவர்தரும் விளக்கம் வியந்து போற்றற்குரியதாகும். சான்றாக 'மெய்ப்பாடென் பது பொருட்பாடு; அதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோ ராற்றான் வெளிப்படுதல்', 'அசை வென்பது பண்டைய நிலைமை கெட்டு வேறொரு வராகி வருந்துதல்', 'கொலை என்னும் மெய்ப் பாட்டுப் பொருளாவது அறிவும் புகழும் முதலா யினவற்றைக் கொன்றுரைத்தல்' 'முனிதல் என்பது வெறுத்தல், அது அருளும் சினமுமின்றி இடை நிகர்த்தாதல்' 'கருதல் என்பது மறந்ததனை நினைத்தல், என வருவனவும்மெய்ப்பாட்டியலுள் கூறும் விளக்கங்களுமாம். சிலவற்றை மிக நுட்பமாக விளக்குவார். சான்றாகத் தலைமக்களின் ஒப்புக் கூறுமிடத்துத் திரு என்பது பொருளுடைமையும் பொருள் கொணர்ந்துதுய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாயதோர் உள்ள நிகழ்ச்சிஎனக்கூறுவதும், சொல்லதிகாரத்துள்பண்புபற்றி ஆசிரியர் கூறுமிடத்து 'வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையின் என்று அன்னபிறவும் அக்குணம்' என்று கூறி உவமவியலுள் வினைபயன் மெய் உரு என்று வடிவையும் வண்ணத் தையும் பரிந்து கூறியது ஏன்? என விளக்குமிடத்து, 'கட்புலனாம் பண்பும் உற்றுணரும் பண்பும் வேறாக நோக்கி வடிவினையும்உருவினையும் வேறுபடுத்தான்; என்னை? வடிவுபற்றிய பண்பினை இரவின்கண் உற்றுணரப்படும். வண்ணமாயின் அவ்வாறு உணரப் படா தென்பது; அல்லாக்கால் பகற் குறிக்கட் கூறப் படும் வண்ணம் முதலாயின இரவுக் குறிக்கண் எய்து வான் செல்லும்' எனப் பொருளாராய்ச்சி பற்றிக் கூறுவதும்நோக்கத்தக்கன. உள்ளுறை உவமம் பற்றிய விளக்கம் யாவும் இவர்தம் நுண்ணறிவைக் காட்டு வனவாகும். வடநூல் மரபைப் பின்பற்றி இடைக் காலத்தார் கூறும் அணியிலக்கணத்தை இவர் உடன் படவில்லை. அணிகள் பல உவம வேறுபாடுகளே; சில தொடை பற்றியன என்பது இவர் கருத்து. ஆனந்த உவமை முதலியவை கொள்ளத் தகாதன என்பதும் இவர் கருத்து (உவம. 37 உரை). இவரு டைய பரந்த புலமைக்கும் ஆராய்ச்சி உணர்விற்கும் செய்யுளியல் உரையும் மரபியல் உரையும் தக்க சான்றுகளாகும். நச்சினார்க்கினியரின் செய்யுளிய லுரை தொண்ணூறு விழுக்காடு இவருடைய விளக்கங் களை மேற்கொண்டிருப்பதே பேராசிரியர் உரைத் திறனுக்குப் பெரிதும் சான்றாகும்.

**குறுந்தொகைக்கு உரையெழுதிய பேராசிரியர்:** நச்சினார்க்கினியரின் உரைச்சிறப்புப் பற்றிக் கூறும் பாயிரச் செய்யுளுள் 'நல்லறிவுடைய தொல் பேரா சான் கல்வியும் காட்சியும் காசினியறிய; பொருள் தெரி குறுந்தொகை' என வரும் தொடர்களால் பேராசிரியர் என்னும் பெயருடையவர் ஒருவர் குறுந் தொகைக்கு உரையெழுதியுள்ளார் என்பது தெரி கிறது. இவர் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியரா வேறொருவரா என்பது தெரிய வில்லை. அக்குறுந்தொகை உரையும் கிடைக்க வில்லை.

**திருக்கோவையார்க்கு உரைவரைந்த பேராசிரியர்:** சைவத் திருமுறையுள் எட்டாவதாகிய மாணிக்க வாசகர் அருளிய திருக்கோவையார் என்னும் அகப் பொருட் கோவை நூலுக்கு உரை வரைந்தவர் பேராசிரியர். இவர் உரை,சுருக்கமும் தெளிவும் நுட்ப மும் வாய்ந்தது. பரந்த இலக்கியப் பயிற்சியும் சமய நூற்புலமையும் உடையவர் என்பது இவர் எழுதும் குறிப்புகளால் தெரிகிறது. அவற்றால் வடமொழி தென்மொழி இலக்கண மரபுகளை நன்கறிந்தவர் என்பதும் புலனாகின்றது. தொல்காப்பிய நெறியை நன்குணர்ந்து ஏற்ற இடங்களில் அதிலிருந்து மேற் கோள் காட்டிச் செல்கிறார்.

திருவளர் தாமரை என்று தொடங்கும் முதற் செய்யுளுக்கு இவர் வரைந்துள்ள உரையால் இவரது மதிநுட்பமும் பேரறிவும் புலனாகின்றன. தொல்காப் பிய உரையாசிரியராகிய பேராசிரியரும் இவரும் வேறு வேறானவர் என்பது ஆய்வாளர் கருத்து. தொல்காப்பிய உரையுள் (செய்.155) அவ்வுரை யாசிரியர் அகப்பொருட் கோவை இலக்கியத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவ்விடத்துத் திருக்கோவையா ரிலிருந்து ஒரு மேற்கோளும் தாராமல், மாறாக வேறொரு கோவைச் செய்யுளை எடுத்துக் காட்டி யிருத்தல் ஆய்வாளர் கருத்துக்கு அரணாக உளது. கோவை உரையுள்ளும், அவர் தொல்காப்பியத்திற்கு உரை வரைந்துள்ளதாக யாதொரு குறிப்புமில்லை. இவர் செய்ததாக வேறு நூலோ உரையோ காணப்

படவில்லை. இவர் பற்றி வேறு விவரங்கள் கிடைத்தில.

**ஆத்திரையன் பேராசிரியன்:** 'வலம்புரிமுத்திற் குலம்புரி பிறப்பும்' எனத் தொடங்கும் ஆசிரிய நடையிலான பொதுப்பாயிரச் சூத்திரத்தினை இயற்றியவர் இவர். இச்சூத்திரம் ஆசிரியனுடைய தகுதி இயல்புகளையும் மாணாக்கரின் தகுதி இயல்புகளையும் ஒப்பற்ற உவமை வாயிலாக மிகத் தெளிவாக விளக்குகின்றது. தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் மரபியல் 92 – ஆம் நூற்பா உரையுள், பாயிர இயல்பு பற்றி விளக்குமிடத்து, 'வலம்புரிமுத்திற் குலம்புரி பிறப்பும்' என்னும் பொதுப்பாயிரம் செய்தான் ஆத்திரையன் பேராசிரியன் எனவும், 'பாயிரஞ் செய்தான் பெயர் கூறியவாறு' எனவும் கூறுதலான் அவர் வேறு இவர் வேறென்பது தெளிவாம். இப்பாயிரச் சூத்திரத்தைச் சிவஞான முனிவர் தமது நன்னூல் உரை முகத்து எடுத்துக்காட்டிப் போற்றியுள்ளார்.

**மறைமுடிக்கறை மிடற்றினார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்:** யாப்பருங்கல விருத்தியுரையுள் அவ்வுரையாசிரியர் யாப்பிலக்கண நூல்களைச் செய்தவருள் இவரையும் ஒருவராகக் குறிப்பிடுகிறார். இவரைச் சுட்டுமிடத்தெல்லாம் உமையொரு பாகனாகிய இறைவனின் தன்மைகளை அடையாகச் சுட்டிக் கூறுவார். இவர் இயற்பெயர் மயேச்சுரர் என்பதும், பேராசிரியர் என்பது சிறப்புப் பெயர் என்பதும் விளங்கும். இவர் செய்த யாப்பிலக்கணத்துள் சில சூத்திரங்களை உரையாசிரியர்கள் காட்டுதலன்றி அந்நூல் முழுமையும் கிடைத்திலது.

**பேராசிரியர் நேமிநாதர்:** சின்னூல் எனப்படும் நேமிநாதத்தை இயற்றிய ஆசிரியரைப் பேராசிரியர் என்னும் அடைகொடுத்து வழங்கியுள்ளமை தமிழ் நாவலர் சரிதையுள் வரும் குறிப்பாற் புலனாகின்றது. அக்குறிப்பாவது: 'ஒட்டக்கூத்தர் உலாப்பாடியபோது பேராசிரியர் நேமிநாதர் பட்டோலைப் பிடிக்கப் பாடியது' என்பதாகும். ச. பா.

**பேராண்மை உரிமை நாடுகள்:** முதலாம் உலகப் போர் (1914-18) முடிவுற்றவுடன் 1919 – இல் கையெழுத்தான வெர்சே உடன்பாட்டின்படி (Treaty of Versailles) செருமனி, துருக்கி ஆகிய நாடுகளுக்கு உரிமையாக இருந்த சில பகுதிகள் பிரான்சு, இங்கிலாந்து, பெல்சியம் ஆகிய நாடுகளின் பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டன. இவை பேராண்மை உரிமை நாடுகள் (Mandated Territories) எனப்பட்டன. இவை 'ஒப்படைக்கப்பட்ட நாடுகள்' எனவும் கூறப்படும்.

நன்கு வளர்ச்சிபெறாத, பெற்றோர் இல்லாத குழந்தைகளை, பாதுகாப்பாளர் ஒருவரிடம் ஒப்படைத்து, அவர்கள் வளர்ந்து தம்மைத்தாம் காப்பாற்றிக் கொள்ளும் பருவம் அடையும் வரைப் பாதுகாத்து வளர்த்துவரும்படி அமைக்கப்பெறும் ஒரு பெரியவர் போன்று, சருவதேச சங்கம் (League of Nations) சில பிற்போக்கு நாடுகளை வல்லரசுகளான இங்கிலாந்திடமும் பிரான்சிடமும் ஒப்படைத்தது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட நாடுகளை நன்முறையில் ஆட்சி புரிவதும், சுதேச மக்களைப் பாதுகாத்து அவர்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதும் அவர்களை அரசியல் துறையில் ஈடுபடுத்திப் பயிற்சியளித்துச் சுயாட்சியில் தகுதிபெறச் செய்வதும் பாதுகாப்பு நாடுகளின் கடமைகளாகும். அவை சுயாட்சி பெறத் தகுதி பெற்ற பின்னர், அவற்றை விட்டு நீங்கி அவற்றிடமே ஒப்படைப்பதும் கடமையாகும் என்று சருவதேச சங்கம் அறிவித்தது.

மேற்கூறப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்த பின்னர், இங்கிலாந்து, பிரான்சு முதலான நாடுகளுக்குத் துருக்கியின் ஆட்சிப் பகுதிகளாக இருந்த ஈராக்கு, சிரியா, பாலசுதீனம் ஆகிய பகுதிகளும், செருமன் மத்திய ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளான தோகோலாந்து, காமரூன்சு, தங்கனிக்கா, உருவாண்டாஉருண்டி ஆகியனவும் அளிக்கப்பட்டன. ஆசியாக் கண்டத்தில் உள்ள பாலசுதீனமும், ஈராக்கும், ஆப்பிரிக்காக் கண்டத்தில் உள்ள தங்கனிக்கா, பிரிட்டானிய காமரூன்சு, தோகோலாந்து முதலான நாடுகளின் சில பகுதிகளும் பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டன. பிரான்சிற்குச் சிரியாவும், காமரூன்சு, தோகோ ஆகியவற்றின் பெரும்பகுதிகளும் வழங்கப்பட்டன. பெல்சியத்திற்கு உருவாண்டாஉருண்டி வழங்கப்பட்டது. கியாசௌ துறைமுகம் சப்பானுக்கும் நியூகினியா ஆசுதிரேலியாவிற்கும் விடப்பட்டன.

இந்நாடுகள் தம் பாதுகாப்பின்கீழ் விடப்பட்ட நாடுகளின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுடன் அவை வளர்ந்தபோது விடுதலை அளிக்கவும் தயங்கவில்லை. இங்கிலாந்து பாலசுதீனத்திற்கும் ஈராக்கிற்கும் சுதந்திரம் அளித்தது. தோகோலாந்து, கானா (Ghana) குடியரசிற்கு வழங்கப்பட்டது. சிரியாவும் இலெபனானும் 1941-இல் விடுதலை பெற்றன. திரான்சு சோர்டான் (Trans – Jordan) 1946 – இலும் இசுரேல் 1948-இலும் விடுதலை பெற்றன. தங்கனிக்கா, 1961-இலும் உருவாண்டா உருண்டி 1962-இலும் விடுதலை பெற்றன. பிரான்சுத் தோகோலாந்து, 1956-இல் பிரான்சுக் கூட்டாட்சியில் தனிப்பட்ட குடியரசாக அறிவிக்கப்பட்டது. இதுவே 1960-இல் தனிக் குடியரசாகவும் மலர்ந்தது.

இவ்வாறு சருவதேச சங்கம் பேராண்மை முறையில் முன்னேற்றமடையாத நாடுகள் வளர்ச்சியடைய நல்லதோர் திட்டத்தை நிறைவேற்றியமை பாராட்டத்தக்கது. ம.நா.

பேராலவாயர்: ஆலவாய் என்பது மதுரையின் வேறு பெயர்களுள் ஒன்று. அதனால் மதுரைச் சொக்கநாதப்பெருமான் ஆலவாயுடையார் எனவும் வழங்கப் பெறுவார். அவ்வகையில் பேராலவாயர் என்பது மதுரைச் சொக்கநாதப் பெருமானைக் குறிக்கும் பெயராகும்.

சோமசுந்தரக் கடவுள் மதுரையில் சங்கப் புலவராக எழுந்தருளி இருந்தபோது அவருக்கு மதுரைப் பேராலவாயர் என்ற பெயர் கூறப்பட்டது என்று பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம் கூறுகிறது. பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் இதனைத் தம் திருவிளையாடற் புராணப் பதிப்புள் வேறுபாடுகள் என்னும் முன்னுரைப் பகுதியில் எடுத்துக் காட்டியுள்ளார்.

மதுரைச் சொக்கநாதர், 'பாணபத்திரனுக்கு உதவி புரிய வேண்டும்' என்று சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிய திருமுகம், பதினோராந் திருமுறையின் தொடக்கப் பாசுரமாக அமைந்துள்ளது. அதில் ஆசிரியர் பெயர் திருவாலவாயுடையார் என்று குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது. இறைவனுக்கு அமைந்த பெயர், பின்னர்ப் பேராலவாயர் என்று மக்கள் பெயர்களுள் ஒன்றாக வழங்கப் பட்டிருத்தல் கூடும்.

**பேராலவாயர்[2]**: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இப்பெயர் கொண்டு இவர் மதுரை மாநகரினைச் சேர்ந்தவர் என எண்ணுதல் கூடும். சங்கப் புலவர் பெயர் வரிசையில், மதுரைப் பேராலவாயர் என்னும் மற்றொரு பெயர் காணப்படுவது இதனை உறுதி செய்வதாக உள்ளது. பேராலவாயர், மதுரைப் பேராலவாயர் என்னும் இருபெயர்களுக்கும் இடையே யுள்ள அடைமொழி வேற்றுமை கருதாது இரு பெயர்களும் ஒரு புலவரையே குறிக்கும் என்று சிலர் கருதுகின்றனர். மற்றுஞ் சிலர் இருபெயர்களும் வெவ்வேறு புலவர்களின் பெயராகும் என்று கொள்கின்றனர். பேராலவாயர் என்னும் பெயரில் நற்றிணை 51 – ஆம் பாடல் மட்டுமே காணப்படுகிறது. மதுரைப் பேராலவாயர் என்னும் பெயரில் சங்கத் தொகை நூல்களில் 5 பாடல்கள் (நற். 361, அகம். 87, 296, புறம். 247, 262) காணப்படுகின்றன. பேராலவாயர் என்னும் பெயரில் அமைந்த புலவரின் நற்றிணைப் பாடல் குறிஞ்சித் திணையில், ஆற்றது ஏதம் அஞ்சி வேறுபட்டாள், வெறியாடல் உற்ற விடத்துச் சிறைப்புறமாகச் சொல்லியது என்னும் கருத்தில் அமைந்துள்ளது. அன்னை வெறியாட்டு எடுக்க முற்பட்டமையால், அதற்குரிய வேலன் வந்து விட, அதனால் தலைவியின் கொண்டையில் செறித்து வைக்கும் பூவினைக் குலையாது காத்தலும் அரிதாகின்றது என்னும் செய்தியினைச் சிறைப்புறத்தானாகிய தலைவனுக்கு, 'மின்னு நிமிர்ந்தன்ன வேலன் வந்தெனப், பின்னு விடு முச்சி அளிப்பானாதே' (நற். 51:6-7) என்று தலைவி கூறி, வரைவு கடாவுவது நயமிக்கதாக உள்ளது (காண்க. மதுரைப் பேராலவாயர்). அ.மா.ப.

பேரிங்குக் கடல்: பசிபிக்குப் பெருங்கடலின் நீட்சியே பேரிங்குக் கடலாகும். இது பேரிங்கு நீர்ச்சந்தி (Bering Strait) மூலமாக ஆர்ட்டிக்குப் பெருங் கடலிலுள்ள சுக்சிக்கடலை (Chukchi Sea) இணைக்கிறது. தெற்கு வடக்காக 1500 கிலோ மீட்டரும் கிழக்கு மேற்காக 2000 கிலோ மீட்டரும் உள்ள இதன் பரப்பளவு 2, 274,020 ச.கி.மீ. இதன் வடக்கில் ஆர்ட்டிக்குப் பெருங்கடலும், தெற்கில் அலுசியன் தீவுகளும் (Aleutian Islands), மேற்கில் சைபீரியாவும் காம்சட்கா முந்நீரகமும் (Kamchatka Peninsula) கிழக்கில் அலாசுகாவும் (Alaska) எல்லைகளாக உள்ளன. இப்பகுதியில்தான் ஆசிய, வடஅமெரிக்கக் கண்டங்கள் 85 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், சோவியத்து உருசியாவிற்கும் இடையே பேரிங்குக் கடலும், அதன் நீர்ச்சந்தியும் எல்லைகளாக இருக்கின்றன. இக்கடலின் மிக அதிகமான ஆழம், அலூசியன் தீவுகளின் மேற்குக் கோடியில் 4115 மீட்டர்களாகும். ஆனால் பேரிங்கு நீர்ச்சந்தியில் இதன் ஆழம் 33 மீட்டரிலிருந்து 55 மீட்டர்வரை உள்ளது. இப்பகுதியைக் கண்டறிந்த மாலுமி விட்டசு பேரிங்கு (Vitus Bering) என்பவர் பெயரால் இது வழங்குகிறது.

இப்பகுதியில் உள்ள பெரிய வளைகுடாக்கள் மேற்கில் அனாடிர் வளைகுடாவும் (The Gulf of Anadyr) கிழக்கில் நார்ட்டன்சவுண்டு(Norton Sound) வளைகுடாவும், பிரிசுடல் விரிகுடாவும் (Bristol Bay) ஆகும். இப்பகுதியில் பல தீவுகள் உள்ளன. அவற்றுள் மிகப் பெரிய தீவுகள் அலூசியன் தீவுகள் (The Aleutians), நுனிவாக்கு (Nunivak), புனித இலாரன்சு (St. Lawrence), காரகின்சுகி (Karaginsky), நெல்சன் (Nelson), புனித மேத்யூ (St. Mathew) ஆகியனவாகும்.

இப்பகுதியில் சனவரி, பிப்பிரவரி மாதங்கள் கடுங்குளிர் காலம். சூலை, ஆகசுட்டு மாதங்கள் வெதுவெதுப்பான காலம். தெற்கு மேற்குப் பகுதிகளில் கோடைக்காலம் குளிர்ச்சியாகவும் மழையுடன்

அடிக்கடி மூடுபனி உள்ளதாகவும் இருக்கும். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குளிர் காலத்தில் குளிர் மிகக் கடுமையாக (-35 பாகை செலிசியசிலிருந்து -45 பாகை செலிசியசு வரை),வேகமான காற்று வீசக் கூடியதாக இருக்கும். அக்டோபர் முதல் சூன் முடிய இப்பகுதி போக்குவரத்திற்கு ஏற்றதன்று. கோரியக் கடற்கரை (Koryak Coast) ஆண்டில் 8 மாதங்களும், சுக்சீ முந்நீரகம் ஆண்டில் 10 மாதங்களும் பனியால் மூடப்பட்டிருக்கும். சில சமயங்களில் தென் பகுதியில் புயல் வீசும்.

இக்கடலானது மாலுமிகளால் கடற் பயணத் திற்கு ஏற்றதன்றெனக் கருதப்படுகிறது. ஏனெனில், குளிர் காலத்தில் இங்கு அடிக்கடி கடுமையான புயல் வீசுகிறது. கப்பல் முழுவதிலும் பனி படர்வதுடன் அலைகள் 14 மீட்டர் உயரம் வரை வீசுகின்றன. அத்துடன் மூடுபனி, மழை, மிதந்துவரும் பனிக்கட்டி கள் ஆகியவை இக்கடலின் வட பகுதியில் பயணம் செய்வதை மேலும் கடினமாக்குகின்றன. குளிர் காலத்தில் வடபகுதியில் 1½ அல்லது 2 மீட்டர் உயரத் திற்குப் பனி மூடியிருக்கும். சில இடங்களில் அது 33 மீட்டர் வரை கூட இருக்கும். ஏப்பிரல் மாதத்தில் பனி மிக அதிகமாகிப் பிரிசுடல் விரிகுடா (Bristol Bay), காம்சட்காக் கடற்கரைகள் (Kamchatka Coasts) வரையிலும் பரவியிருக்கும். மே மாதத்தில் பனி உருகத் தொடங்கும். சூலையில் பனி இருக்காது. ஆனால், பேரிங்கு நீர்ச்சந்தியில் மட்டும் பனிக்கட்டி கள் மிதந்து கொண்டிருக்கும்.

இப்பகுதியில் சால்மன் (Salmon), எர்ரிங்கு (Herring), காடு (Cod), புளண்டர் (Flounder), ஆலிபத்து (Halibut), பொல்லக்கு (Pollack) முதலான 315 வகை மீன்கள் கிடைக்கின்றன. அவற்றுள் 21 வகை மீன்கள் வணிகத்திற்காகப் பிடிக்கப்படுகின்றன. வடபகுதியில் நீர்யானை (Walrus), நீர்நாய், கடற் சிங்கம் ஆகியவை மிகுதியாக உள்ளன. சில இடங்களில் எண் ணெயும், இயற்கை வாயுவும்,கடலுக்கடியில் தங்கமும் தகரமும் இருப்பினும் அவை எடுக்கப்படவில்லை.

பேரிங்குக் கடலையும், அதன் நீர்ச்சந்தியையும் கண்டுபிடிக்க கி.பி. 1648 – இல் செம்யன் தெசுனேவு (Semyon Dezhnev) தலைமையில் உருசியக் கப்பல்கள் சென்றன. உருசியப் பேரரசர் மகாபீட்டர் கி.பி.1704-இல் தென்மார்க்குத் தளபதியான விட்டசு பேரிங்கு (Vitus Bering) என்பவரைப் பணியில் சேர்த்துக் கொண்டார். அவர் கி.பி. 1728 – இல் இந்நீர்ச்சந்தி யில் பயணம் செய்து புனித இலாரான்சு, தியோமீடு (Diomede) ஆகியவற்றைக் கண்டுபிடித்தபோதிலும், அலாசுகா கடற்கரையைக் காணவில்லை. அவர் கி.பி. 1733 – இல் புனித பீட்டர்சுபர்கில் (St.Petersburg) இருந்து புறப்பட்டு, சைபீரியாவின் வடக்குக் கடற்கரையை ஒட்டிப் பயணம் செய்து, கி.பி. 1741 - இல் அலாசுகா வளைகுடாவை அடைந்தார். அலாசு காவின் தென் மேற்குக் கடற்கரையையும், அலாசு கன் முந்நீரகத்தையும், அலூசியன் (Aleutian) தீவு களையும் ஆராய்ந்தார். எனவேதான் இக் கடலானது அவருடைய பெயரால் 'பேரிங்குக் கடல்' என வழங்கப்படுகிறது. உருசிய வணிகர்கள் கி.பி. 1780 – இல் தனியார் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு, வடமேற்கு அமெரிக்காவில் 'பர்' (fur) என் னும் உரோமம் உள்ள விலங்குகளின் வணிகத்தில் ஈடுபட்டனர். இப்பகுதியில் கி.பி. 18 – ஆம் நூற்றாண் டில் நிலவியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இங்கி லாந்து நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கி.பி. 1827 – இலிருந்து ஆழ்கடல் ஆய்வினை மேற்கொண்டனர். அமெரிக்கர்கள் 'அல்பட்ராசு' (Albatross) என்னும் ஆய்வுக் கப்பலிலிருந்து கி.பி. 1893 – 1906 ஆண்டு களில் விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். அதிலிருந்து சோவியத்து உருசியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சப்பான் ஆகியவை இக்கடற் பகுதியை ஆராய்ந்து வருகின்றன. சி.இரெ.

**பேரி சாத்தனார்:** இவர் சங்க காலப் புலவர் களுள் ஒருவர். இவர் பாடியனவாக நற்றிணையில் எட்டுப் பாடல்களும் (25, 37, 67, 104, 199, 299, 323, 378), குறுந்தொகையில் ஐந்தும் (81, 159, 278, 314, 366), அகநானூற்றில் ஐந்தும் (38, 214, 242, 268, 305), புறநானூற்றில் இரண்டு பாடல்களும் (125, 198) கிடைத்துள்ளன. இவரை வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் என்றும் வடவண்ணக்கன் பேரிசாத் தனார் என்றும் வழங்குகின்றனர்.

கடலலையின் ஒலிக்கு முழவின் ஒலியை உவமை யாகப் பாடிய சிறப்பினைக் கருதி (நற்.378), இவர் பெயருக்கு முன்னால் 'பேரி' என்னும் அடை கொடுக் கப்பட்டது போலும் என்று கருதுகின்றனர்.


'பெருஞ்சாத்தனார் வடநாட்டிலிருந்து தமிழ கத்தில் குடியேறிய பழங்குடி மக்களுள் ஒருவர். அக் குடியினரை 'வடமர்' என்பது வழக்கு. இது இப் பொழுதும் பார்ப்பனரிடையே வழங்குகின்றது. பொன்னின் நோட்டம் பார்ப்பது இவரது தொழிலா தல் பற்றி இவர் 'வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்' எனப்படுவாராயினர். வடம வண்ணக்கன் பேரிசாத்த னார் என்பார் ஒருவர் உளர். அவர் பாண்டியன் இல வந்திகைத் துஞ்சிய நன்மாறனைப் பாடியுள்ளார். அவர் வேறு; இவர் வேறு' என்று கருதுவர்.

இப்புலவரின் பெயரில் பல்வேறு பாட வேறுபாடுகள் காணப்படுகின்றமையினை உ.வே. சாமிநாதையர் தம் பதிப்புகளில் சுட்டிக்காட்டுவார். வடம வண்ணக்கன் பேரிசாத்தன் (புறம்.125), பெரியசாத்தன் (புறம்.198), வேரிசாத்தன் (குறுந்.278), பெருஞ்சாத்தன், பேறிச்சாத்தன், பேரிச்சாத்தன் (குறுந். 314), பேரீ சாத்தன், பெரிச்சாத்தன் (குறுந்.366) என்றும் பாட வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன.

இவர், பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறன், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை,சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோர் காலத்தில் வாழ்ந்தவராவார். மேற்கண்ட சேரனும் சோழனும் போர் செய்த போது சோழ மன்னனுக்குத் துணையாக நின்ற தேர்வண்மலையனைப் பாடிச் சிறப்பித்துள்ளார் (புறம்.125). பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறனைப் பாடிப் பரிசில் கேட்க, அவன் கொடானாக இவர் மனம் வருந்திப் பாடிய பாடல் புறநானூற்றில் (198) காணப்படுகிறது. இவர், அகப்பாடலும் புறப்பாடலும் பாடுகின்ற வல்லமை பெற்றிருந்தார். பெரும் சுற்றத்தாருடன் வாழ்கின்ற குடும்பப் பிணைப்பிற்கு இப்புலவர் முளைகளால் அழகு பெற்ற மூங்கிலை உவமை கூறுவார்(அகம்.268). ‘முளையணி மூங்கிலிற் கிளையொடு பொலிந்த பெரும்பெயர் எந்தை’என்பதே அவ்வுவமை. இவர் குறிஞ்சியையும், நெய்தலையும், பாலையையும், முல்லையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். ந.சொ.

**பேரியல் பொருளாதார மாதிரிகள்:** பேரியல் பொருளாதார வளர்ச்சிக்குப் பல்வேறு நிலைகள் அடித்தளமாக இருந்தன. பொருளாதாரக் கோட்பாடு விளக்கங்களில் கணிதம் பேரளவில் பயன்படத் தொடங்கிய நிலையும் ஒன்றாகும். அதனால் கணித முறையிலான விளக்கங்கள் பொருளாதார அறிஞர்களிடையே மிகவும் விருப்பத்துடன் ஏற்றுக்

**கீன்சின் மாதிரிச் சுருக்கம்**



கொள்ளப்பட்டன. அந்நிலையில் 1930 – ஐச் சேர்ந்த ஆண்டுகளில் தோன்றிய உலகப் பெருமந்தம் தொன்மைப் பொருளாதாரக் கருத்தினரின் ஆலோசனைகளால் தவிர்க்கமுடியாமல் போய்விட்ட நிலையில், பேராசிரியர் கீன்சின் பேரியல் பொருளாதார மாதிரிகள் புகழ்பெற்றதோடல்லாமல், பல புதிய பேரியல் பொருளாதார மாதிரிகள்(Macro Economic Models) தோன்றுவதற்கும் அடித்தளமாக அமைந்தன.

1) பேர நோக்கமும், முன்னெச்சரிக்கை நோக்கமும், ஊகவாணிக நோக்கமும் பணத்திற்கான நீர்மை விருப்பத்தை நிருணயிக்கின்றன. 2) பணத்திற்கு நீர்மை விருப்பமும் பண அளவும் வட்டி விகிதத்தை நிருணயிக்கின்றன. 3)எதிர்பார்க்கப்படும் ஆதாய அளவும், மூலதனச் சொத்துகளின் அளிப்பு விலையும் மூலதனத்தின் இறுதிநிலைத் திறனை நிருணயிக்கின்றன. 4) வட்டி விகிதமும், மூலதனத்தின் இறுதிநிலைத் திறனும் முதலீட்டை நிருணயிக்கின்றன. 5) வருமான அளவும், நுகர்வு நாட்டமும் நுகர்வை நிருணயிக்கின்றன. 6) நுகர்வும், முதலீடும் உறுதித் தேவையை நிருணயிக்கின்றன. 7) உறுதித் தேவையே நாட்டு வருமானத்தை (வேலையை, மொத்த விளைவை) நிருணயிக்கிறது.

பேரியல் பொருளாதாரத்தை இயங்கா நிலைப் பேரியல் பொருளாதாரம்(Macro Static Economics), ஒப்பீட்டு இயங்கா நிலைப் பேரியல் பொருளாதாரம் (Macro Comparative Static Economics), இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரம் (Macro Dynamic Economics) என வகைப்படுத்துவர்.

இயங்கா நிலைப் பேரியல் பொருளாதாரத்தில் முடிவுறு நிலைச் சமன்பாட்டையே சிறப்பாகக் கருதுவர். ஒப்பீட்டு இயங்கா நிலைப் பேரியல் பொருளாதாரத்தில், ஒரு முடிவுறு நிலைச் சமன்பாட்டிலிருந்து அடுத்தடுத்த முடிவுறு நிலைச் சமன்பாடுகளுக்குப் பொருளாதாரம் மாறிச் செல்வதைச் சிறப்பாகக் கருதுவர். இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரத்தில் பொருளாதார மாறிகளின் தொடர்ச்சியான இயக்கங்களைக் கருத்தில் கொள்வர். இம் மூன்றில் கீன்சின் பேரியல் பொருளாதார மாதிரியை ஒப்பீட்டு இயங்கா நிலை மாதிரி என ஒருசில அறிஞர் வகைப்படுத்துவர். மூலதனத்தின் இறுதிநிலைத் திறன்(Marginal Efficiency of Capital) என்ற கருத்துக்குச் சிறப்பிடம் தரப்பட்டிருப்பதால், கீன்சின் மாதிரியை இயங்கு நிலைப் பேரியல் மாதிரி என விவாதிப்பவர்களும் உளர்.'C' நுகர்வையும் I முதலீட்டையும் '$\triangle$I' அரசு மேற்கொள்ளும் தன்னிச்சை முதலீட்டையும் (Autonomous Investment) Yவருமானத்தையும் குறிப்பிடுகின்றன. நுகர்வு வருமான விகிதமும், முதலீட்டு நிலையும் மாறாதிருக்கும் என்ற எடுகோள்களைக் கொண்டு C+I என்ற நேர்கோடு வரையப்பட்டிருக்கிறது. இக்கோடும் வருமானமும் நுகர்வும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் என்ற எடுகோளின்அடிப்படையில் வரையப்பட்டிருக்கும் C=Y என்றகோடும் சந்திக்கும் $E_0$ என்ற புள்ளி சமநிலையைக் காட்டுகிறது. வருமானம் $OY_0$ அளவாக இருக்கும்போது உள்ள தொடக்க நிலைச் சமநிலை இது. இந்நிலையில் அரசு அதன் தன்னிச்சை முதலீட்டை $\triangle$I அளவுக்கு அதிகரித்தால் ஏற்படும் C+I+$\triangle$I என்ற புதிய நுகர்வு முதலீட்டுக்கோடும் C=Y என்ற நேர்கோடும் $E_n$ என்ற புதிய சமநிலையில் அமைவதைப் படம் காட்டுகிறது. இப்போது வருமானம் $OY_n$ ஆக அமைகிறது. இவ்வாறு $E_0$ என்றதொரு சமநிலையிலிருந்து $E_n$ என்ற புதியதொரு சமநிலைக்கு மாறுவதை மட்டும் குறிப்பிட்டு, அப்போக்கு எவ்வாறு நிகழ்கிறது என்ற விளக்கம் தரப்படாமலிருப்பதால் ஒப்பீட்டு இயங்கா நிலைப் பொருளாதாரம் என்பர்.

**இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரம்**: இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரமே நடைமுறையில் காணத் தக்கதொன்று. இயற்பியலிலிருந்து (Physics) பெறப்பட்ட சொல்லாகிய இயங்குநிலை' என்ற கருத்து, பொருளாதார மாறிகளின் தொடர்ச்சியான இயக்கங்களை விளக்குவதற்குப் பொருளாதார இயலில் பயன்படுகிறது. விளைவு விகிதங்கள் (Rates of Output) மாறிக் கொண்டே இருப்பதைக் ஆராடு (Harrod) சுட்டிக் காட்டுகிறார். மக்கள்தொகை தாதுப் பொருள்கள் கிடைக்கும் அளவு, மூலதன, இருப்பு, உற்பத்தி முறைகள், உற்பத்தி நுட்பங்கள், உற்பத்தி அமைப்புகள், நுகர்வோரின் விருப்பு வெறுப்புகள், பண்பாட்டு நிலைகள் போன்ற பல்வேறு பொருளாதார மாறிகளும் மாறிக்கொண்டே இருப்பதால் ஒவ்வோர் ஆண்டிலும் பெறத்தக்க விளைவின் அளவுகளும் மாறிக் கொண்டே இருக்கின்றன என்பதைக் ஆராடு தெளிவுபடுத்துகிறார். இடுமானங்களைப் பயன்படுத்துவதும் விளைவுகளைப் பெறுவதும் ஒரே நேரத்தில் நிகழ்வனவல்ல; பல காலக் கட்டங்களில் நிகழத் தக்கன. எனவே, காலக் காரணிக்குச் (Time Factor) சிறப்பிடம் தருவது பேரியல் இயங்கு நிலையின் இன்றியமையாத இயல்பு என்ற பொருளில் பேராசிரியர் இக்சு (Prof. Hicks) விளக்கம் தருகிறார். பொருளாதாரக் காரணிகளில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும், சீரற்ற தன்மையில் இம்மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும், பொருளாதாரத்தின் எதிர்கால நிலைகளைப் பற்றிய எவ்விதமான துல்லியமான கணிப்பையும் மேற்கொள்ளுதல் இயலாது. இவ்வாறு, உறுதியற்ற தன்மையும்,துல்லியமான முன்கணிப்பு இருக்க இயலாத

தன்மையும் இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரத்தின் இன்றியமையாத இயல்புகளாகும்.

பேராசிரியர்கள் இராபர்ட்சன் (Robertson), கேலக்கி (Kalechi), பிரிச்சு (Frich), ஆசுகார்இலாஞ்சு (Oscar Lange), தின்பெர்கன் (Tinbergen), சாமுவேல்சன் (Samuelson), ஓகிலின் (Ohlin), இலிண்டால்(Lyndhal), மிர்தால் (Myrdal), இக்சு (Hicks), ஆராடு(Harrod), தோமார் (Domar), கீன்சு(Keynes), சான் இராபின்சன் (John Robinson), இசுடிக்லர் (Stigler) மற்றும் பல பேராசிரியர்கள் பேரியல் இயங்கு நிலைக்குச் சிறப்பிடம் தந்து அவர்தம்விளக்கங்களைத் தந்திருக்கின்றனர்.

**காராடு- தோமார் மாதிரிகள்:** பொருளாதார வளர்ச்சியின் உறுதியற்ற தன்மையை (Instability in Economic Growth) விளக்கப் பல பேரியல் மாதிரிகளை அறிஞர்கள் தந்திருக்கின்றனர். முதலீடும், தேவையும் பொருளாதார வளர்ச்சியின் உறுதியற்ற தன்மைக்கு எவ்வாறு காரணங்களாக அமைகின்றன என்பதைக் ஆராடு-தோமார் மாதிரிகள் (Harrod-Domar Models) விளக்குகின்றன.

இயற்கைச் செல்வங்களின் அளவு, சேமிப்பின் அளவு, மூலதனக் குவிப்பின் அளவு, தொழில் நுட்ப வளர்ச்சி, மக்கட்பெருக்கம் போன்ற பல்வேறு பொருளாதாரக் காரணிகள் பொருளாதார வளர்ச்சிகளை நிருணயிக்கின்றன. இவற்றைச் சுருக்கமாக 1) முதலீட்டு விகிதம், 2)மூலதன விளைவு விகிதம் (Capital Output Ratio) என இருவகைப் படுத்தலாம். இவை பொருளாதார வளர்ச்சியை நிருணயிக்கும் இன்றியமையாத காரணிகள் என்றும் குறிப்பிடலாம். இந்த அடிப்படையில் பல சமன்பாடுகள் தரப்படுகின்றன.

முதலாம் சமன்பாடு

$$(1)\ Gy = \frac{I}{Y} \times \frac{\triangle Y}{\triangle K}$$

Gy — வருமானத்தில் தோன்றத்தக்க விகிதாச்சார அதிகரிப்பு.

I — முதலீடு

Y — வருமானம்

$\triangle Y$ — மிகுதியாகப் பெறப்படும் வருமானம்

$\triangle K$ — மிகுதியாகப் பயன்படுத்தப்படும் மூலதன இருப்பு

சமமானதொரு (Balanced Economy) பொருளாதாரத்தில் சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும். S = I. எனவே,

$$\frac{I}{Y} = \frac{S}{Y}$$

$\frac{S}{Y}$ ஐ, சேமிப்பு விகிதத்தைக் (Savings Ratio) குறிப்பிடும் 's' என்று குறிப்பிடலாம். எனவே, முதலாம் சமன்பாட்டை இரண்டாம் சமன்பாடாகக் கீழ்வருமாறு மாற்றியமைக்கலாம்.

$$(2)\ Gy = s \times \frac{\triangle y}{\triangle K}$$

மூலதன விளைவு விகிதம், மூலதனத்தின் உற்பத்தித்திறனைப் (Productivity of Capital) பொறுத்து அமைகிறது. உரூ. 5000/- பெறக்கூடியதொரு இயந்திரம் உரூ.1000/- பெறுமான விளைவைத் தோற்றுவிக்கிறது என்றால் மூலதன விளைவு விகிதம் $\frac{5000}{1000} = 5$. இதே இயந்திரத்தின் உற்பத்தித் திறன் மிகுதியாக இருந்து உரூ. 1250/- பெறுமான விளைவைத் தோற்றுவிக்கிறது என்றால் மூலதன விளைவு விகிதம் $\frac{5000}{1250} = 4$ ஆகும். அதாவது, மூலதனத்தின் உற்பத்தித் திறன் மிகுதியாக இருந்தால் மூலதன விளைவு விகிதம் குறைவாக இருக்கிறது என்பது பொருள். 'v' என்னும் குறி இறுதி நிலை மூலதன விளைவு விகிதத்தைக் குறிக்கிறதென்றால் முதல் சமன்பாட்டில் குறிப்பிட்ட $\frac{\triangle y}{\triangle K}$ யின் தலைகீழ் மதிப்பே 'r'. அதாவது $\frac{\triangle Y}{\triangle K} = \frac{1}{v}$

இதனடிப்படையில் மூன்றாம் சமன்பாடு அமைக்கப்படுகிறது.

$$(3)\ Gy = s \times \frac{1}{v} \text{ அல்லது}$$

$$Gy = \frac{s}{v}$$

குறிப்பிட்டதொரு காலத்தில் தோன்றத்தக்க விளைவு அதிகரிப்பானது, அக்காலத்தில் மேற்கொள்ளப்படும் அதிகப்படியான முதலீட்டையும், மூலதனத்தின் ஒவ்வொரு அலகிலிருந்தும் பெறத்தக்க விளைவையும் பெருக்கி வருவதற்குச் சமமாக அமையும் என்பதை மூன்றாம் சமன்பாடு குறிப்பிடுகிறது.

**உத்திரவாதமளிக்கப்படும் வளர்ச்சி விகிதம்:** குறிப்பிட்ட அளவு முதலீடு மேற்கொள்ளப்படும்போது என்ன நிகழும் என்பதை மூன்றாம் சமன்பாடு குறிக்கிறது. ஆனால், அவ்வளர்ச்சி விகிதம் தொழில் முயல்வோர்களுக்கு மன நிறைவு தரத்தக்க உத்திரவாதமளிக்கப்படும் வளர்ச்சி விகிதமாக இருக்கவேண்டுமென்பதில்லை. உத்திரவாதமளிக்கப்படும் (தொழில் முயல்வோர்களுக்கு மன நிறைவு தரத்தக்க)வளர்ச்சி விகிதத்தை நான்காம் சமன்பாடு குறிப்பிடுகிறது.

$$(4)\ Gw = \frac{S}{v_n}$$

Gw என்பது உத்திரவாதமளிக்கப்படும் வளர்ச்சி விகிதம், நடப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தியில் பொறி நுட்பம் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாய விகிதம் ஆகியவற்றிக்கு ஏற்ப அமையத் தக்க மூலதன விளைவு விகிதத்தில் vn நிருணயிக்கப்படுகிறது.

கிடைக்கத்தக்க இயற்கை மூலவளங்கள், மனித மூலவளங்கள் ஆகியவற்றால் தோன்றத்தக்க வளர்ச்சி விகிதத்தை இயற்கையான வளர்ச்சி விகிதம் (Gn) என்று குறிப்பிடுவர். இயற்கையான வளர்ச்சி விகிதத்தை மக்கள்தொகைப் பெருக்கமும், பொறி நுட்ப வளர்ச்சியும் நிருணயிப்பதன் அடிப்படையில் ஐந்தாம் சமன்பாடு அமைக்கப்படுகிறது.

$$(5)\ G_n = l + t$$

I — மக்கட் பெருக்கம்

t — பொறிநுட்ப வளர்ச்சி (Technical progress)

மூன்றாம் சமன்பாடான $Gy = \frac{s}{v}$ என்ற சமன்பாட்டை ஆராடு-தோமார் சமன்பாடு என்பர். இதனை எண்ணிக்கையின் அடிப்படையிலானதொரு சிறு எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம்.

$$G_n = \frac{S}{v} = S \times \frac{1}{v}$$

அதாவது, வளர்ச்சி விகிதம் =

$$\text{முதலீடு} \times \frac{1}{\text{மூலதன விளைவு விகிதம்}}$$

முதலீட்டு விகிதம் 10 சதவீதம் என்றும், மூலதன விளைவு விகிதம் 4 என்றும் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டால்,

$$\text{வளர்ச்சி விகிதம் } 10 \times \frac{1}{4} = \frac{10}{4} = 2.5$$

**பிற பேரியல் பொருளாதார மாதிரிகள்:** இயங்கு நிலையில் எதிர்பாராமல் ஏற்படத்தக்க பணவளர்ச்சி விகிதத்தையும், நீண்டகாலப் பணவீக்கம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றையும் ஒருங்கிணைத்து ஒரு பேரியல் பொருளாதார மாதிரியை 1971 – இல் பேராசிரியர் மில்டன் பிரீடுமேன்(Prof. Milton Friedman) விளக்கினார். இவரது அணுகு முறையைத் தார்பை (Darby)என்பார் (1976, 1979–ஆம் ஆண்டுகளில்) ஒரு நாட்டின் இயங்கு நிலையில் தோன்றத் தக்க பல்வேறு பேரியல் பொருளாதார மாற்றங்களுக்கான விளக்கங்களில் பயன்படுத்தி விளக்கம் தந்தார்.

இவ்வெடுத்துக்காட்டுகளைப் போலப் பல்வேறு பேரியல் பொருளாதார மாதிரிகளை அறிஞர்கள் ஆக்கித் தந்திருக்கிறார்கள். என்.எஸ்.பா.

**துணை நூல்கள்:**

**Alfred**, W.**Stonier**, & **Douglas**, C. **Hague**., A text Book of Economic Theory, Layman Group Ltd., London, 1982.

**Keynes**, **J.M.**, The General Theory of Empolyment, Interest and Money, Macmillan, London, 1936.

**Rana**, **K.C.** & **Verma**, **K.N.**, Macro Economic Analysis, S.Nagin & Co., Jallundar, 1976.

*பேரியல் பொருளியல்*:பொருளியலை நுண்ணினப் பொருளியல் அல்லது நுண்ணினப் பொருளாதாரம்(Micro Economics), பேரியல் பொருளியல் அல்லது தொகையினப் பொருளாதாரம் (Macro Economics) என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். நுண்ணிய என்பது சிறியதையும் பேரியல் என்பது மொத்தத்தையும் குறிக்கும். நாட்டின் மொத்தச் சேமிப்பு, மொத்த நுகர்வு, மொத்த வருமானம், மொத்த வேலை போன்ற பல மாறிகளையும் (Variables) அவற்றிற்கிடையே நிலவும் தொடர்புகளையும் சுட்டிக்காட்டுவது பேரியல் பொருளியலாகும். இதனை கி.பி.19 – ஆம் நூற்றாண்டில் மால்தசு (Malthus), சிசுமாண்டி (Sismondi), காரல் மார்க்சு (KarlMarx) போன்றோரும், அண்மையில் வால்ரசு (Walras), விக்செல் (Wicksell), பிசர் (Fisher), கீன்சு (Keynes) போன்றோரும் விளக்கிப் புகழடையச் செய்தனர்.

**பேரியல் பொருளாதாரம்:** இதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. பொருளாதார மொத்தங்களிடையே உள்ள தொடர்பை விளக்குவது பேரியல் பொருளியல் என்கிறார் ஆர்.சி.டி. ஆலன் (R.G.D. Allen) என்பவர். வருமானம், வேலை, விலைகள்

பணம் ஆகியவற்றைப் பற்றிய கோட்பாடுதான் பேரியல் பொருளியல் கோட்பாடு என்பது சே.எம். கல்பர்டன் (J.M. Calburton) என்பவரின் கருத்தாகும். முழுவேலை அளவிலான அல்லது குறைந்த அளவிலான உற்பத்தி ஆற்றல், நிறைவு தரத்தக்க அல்லது தாராத பொருளாதார வளர்ச்சி விகிதம், பணவீக்கம் அல்லது மாறாவிலை நிலைகள் போன்ற பெரிய வினாக்களுக்கு விடையளிக்கப் பேரியல் பொருளியல் முயலுகிறது என்று கார்டுனர் அக்லே (Gardner Ackley) விளக்கம் தருகிறார்.

**கருத்து வளர்ச்சி வரலாறு**: பேராசிரியர் கீன்சு, வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு (General Theory of Employment, Interest and Money) என்ற நூலை 1936 - ஆம் ஆண்டில் வெளியிட்ட பின்னர் இவ்வியல் புகழ்பெற்று விளங்குகிறது. இருப்பினும் இக்கருத்து பல காலமாகப் பரவி வளர்ந்திருக்கிறது. வாணிகத் தத்துவத்தினர் (Mercantilists) கி.பி.16,17- ஆம் நூற்றாண்டுகளில் ஒரு மொத்தமான பொருளாதாரத்தைப் பற்றிய கருத்துகளைக் கொண்டிருந்தனர். செல்வம் நாடு முழுவதிலும் எவ்வாறு சுழன்று செயற்படுகிறது என்ற 'செல்வத்தின் சுழல் ஓட்டம்' (Circular flow of wealth) என்ற கருத்தைப் பிரான்சு நாட்டைச்சேர்ந்த இயற்கைவாதிகள் விளக்கினர். பிரான்சின் சே.பி.சேயின் (J.B. Say of France) அங்காடி விதியின் (Law of the Market) அடிப்படையில் பொருளாதாரம் தானியங்கும் தன்மையுடையதாக இருக்கும் என்று தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் (Classical school of Economists) கருதினர். ஒவ்வோர் அளிப்பும் அதனதன் தேவையை உருவாக்குகிறது என்பது சேயின் அங்காடி விதி. இவ்விதியின் செயற்பாட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்ததால் தொன்மை அறிஞர்கள் அளிப்புப் பகுதியைப் பற்றி மிகுந்த கவனம் செலுத்தினர். இருப்பினும் இவர்களுள் ஒருவரான மால்தசு மொத்தத் தேவை மொத்த அளிப்பைக் காட்டிலும் குறைவாகவும் இருக்கலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

உலகப் பெரு மந்தக் காலத்தில் கீன்சின் 'வேலைக் கோட்பாடு' வெளியான பின் இப் பொருளியல் புகழ் பெற்று விளங்கி வருகிறது. கீன்சின் கோட்பாடுகளில் உள்ள குறைகளைக் களைந்து புதிய புதிய கருத்துகள் இக்காலத்தில் தோன்றி வருகின்றன.

நுண்ணினப் பொருளியலில் பகுத்தாய்வைத் தனி நுகர்வோர், உற்பத்தியாளர் சமநிலை, எல்லா அங்காடிகளிலும் ஒரே நேரத்தில் நிகழும் சமநிலை என்ற நிலைகளில் விளக்குவர். முழுவேலை (Full Employment) நிலவுகிறது, மூலவளங்கள் குறிப்பிட்டதொரு அளவில் இருக்கின்றன என்ற இரு இன்றியமையாத எடுகோள்கள் நுண்ணினப் பொருளியலில் அமைந்துள்ளன. ஆனால், இவை உண்மைக்குப் புறம்பானவை என்பதே நுண்ணினப் பொருளியல் பகுத்தாய்வின் பெருங்குறையாகும். எனவே, பேரியல் பொருளியல் பகுத்தாய்வு பல வழிகளில் இன்று கையாளப்படுகிறது.

**சமநிலை**: மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் நிலையைப் பேரியல் பொருளியலில் சமநிலை (Equilibrium) என்பர். உள் நாட்டில் பல துறைகளிலும் உற்பத்தி ஆவதோடு பிற நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்தத்தைத் தொகு அளிப்பு (Aggregate Supply) என்பர். உள்நாட்டு வாணிக நிறுவனங்கள், அரசு அமைப்புகள், வெளி நாடுகளில் உள்ள நுகர்வோர் ஆகியோர் தேவைகளின் மொத்தத்தைத் தொகு தேவை (Aggregate Demand) என்பர். தேவையையும் தொகு அளிப்பையும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிடுவது எளிதன்று என்பதால் பணமதிப்பின் அடிப்படையில் அவற்றைக் குறிப்பிடுவர். அதாவது, பணத்திற்கான மொத்த அளிப்பும் மொத்தத் தேவையும் சமமாக இருக்கும் நிலையைப் பேரியல் பொருளியல் சமநிலை எனலாம். இப் பொதுச் சமநிலை (General Equilibrium) இல்லாதிருந்தால் உற்பத்தி, விலைகள், வேலை நிலைகள் ஆகியவற்றில் மாற்றங்கள் தோன்றிக் கொண்டிருக்கும்.

வேலையின்மையைக் கட்டுப்படுத்துதல், நாட்டு வருமானத்தை மிக உயர்ந்த நிலையில் நிலை நிறுத்துதல், விலைகளில் உறுதித் தன்மையைப் பெறுதல் பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுத்தல் போன்ற குறிக்கோள்களை எய்தும் வழிமுறைகளை விளக்குவதில் பேரியல் பொருளியல் கருத்துகள் மிகுந்த பயன் உடையவை. குறிப்பாக, வளரும் நாடுகளில் காணப்படும் குறைகளைக் களைந்து விரைவான பொருளாதார வளர்ச்சியைக் காண இவ்வியல் உதவுகிறது.

என். எஸ். பா.

**துணை நூல்கள்:**

**பாலசுப்பிரமணியன், என் எஸ்.**, பேரியல் பொருளாதாரம், உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1986.

**Rana, K. C.&Verma K.N.**, Macro Economic Analysis, S.Nagin & co., Jallundar, 1976.

## பேரியா இலாவரன்சி பாவ்லோவிச்சு:

பேரியா இலாவரன்சி பாவ்லோவிச்சு என்பவர்

சோவியத்து நாட்டில் இசுடாலின் காலத்தில் அரசியல் தலைவராகவும், காவல்துறை உயர் அலுவலராகவும் இருந்தவர். சியார்சியாவிலுள்ள (Georgia) மெர்க் கெட்டி என்னுமிடத்தில் கி.பி. 1899-இல் இவர் பிறந்தார். இளமையில் கட்டுமானப்பொறியாளராகக்கல்வி பெற்ற இவர், 1917-இல் போல்சுவிக்குக் கட்சியில் (உருசியப் பொதுவுடைமைக் கட்சி) சேர்ந்தார். இவர் 1921 முதல் 1930 வரை உருசியப்பகுதி முழுமைக்குமான இரகசியக் காவற்படையில் பணியாற்றினார். சியார்சியாசு மற்றும் காகசசுப்பகுதிகளில் பொதுவுடைமைக் கட்சியின் அலுவலராக 1931 முதல் 1938 வரை பணியாற்றினார். இவர் 1934-இல் இரகசியப் பொதுவுடைமைக் கட்சியின் மையக்குழுவின் உறுப்பினராக்கப்பட்டார்.

பேரியா இலாவரன்சி பாவ்லோவிச்சு (Beria Laurenci Pavlovich), சோசபு இசுடாலின் உருசியத் தலைவராக இருந்தபோது அவரது நம்பிக்கைக்குகந்த தொண்டராகப் பணியாற்றினார். இவர் இசுடாலினின் இளமை வாழ்க்கையைப் பெரிதும் போற்றித் திரான்சு காகசசுப் பகுதியில் 'போல்சுவிக்கு இயக்கத்தின் வரலாறு' என்ற நூலை 1935-இல் எழுதினார். இசுடாலின் இவரை 1938-இல் இரகசியக் காவல்துறையின் பொறுப்பைக் கவனித்த உள்துறை அமைச்சகத்தின் தலைவராக்கினார். அப்பதவியிலிருந்த நிகோலாய் யசோவு நீக்கப்பட்டார். 'களையெடுப்பு' எனப்படும் பல அரசியல் பதவி நீக்கங்களில் 1930-களில் நடைபெற்ற மேற்குறிப்பிட்ட பதவி நீக்கம் இறுதியானதாகும். இசுடாலின் இரகசியக் காவல்துறையின் மீது பெரு நம்பிக்கை வைத்திருந்ததால், பேரியாவின் செல்வாக்குப்பெரிதும் வளர்ச்சி பெற்றது.

பேரியா 1939-இல் உருசியப் பொதுவுடைமைக் கட்சியின் உயர்குழு (Politburo) எனப்படும் அரசியல் நிருவாக உயர்குழுவின் உறுப்பினரானார். இவர் 1941-இல் சோவியத்து ஒன்றியத்தின் துணைப்பிரதமர் ஆனார்.

உருசியா இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்டவுடன் பேரியா போர் அமைச்சரவையில் உறுப்பினராக்கப்பட்டு ஆயுத வெடிப்பொருள் தயாரிக்கும் இரகசியக் காவல்துறைத் தலைமைப் பதவிக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். போர் முடியும் போது அவர் இரகசியக் காவல் மற்றும் உளவுத் துறையின் நடவடிக்கைகளுக்குத் தலைவராக இருந்தார். உருசிய அரசியல் நிருவாக உயர்குழு பின்னர் ஆட்சிக்குழு (Presidium) என்று திருத்தி அமைக்கப்பட்ட போது பேரியா தொடர்ந்து அதில் உறுப்பினராக நீடித்தார். இசுடாலின் 1953-இல் இறந்த போது இவர் முதல் துணைப்பிரதமராகவும், ஆட்சிக் குழுவின் உறுப்பினராகவும், உள்துறை அமைச்சகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். இசுடாலின் இறந்தபோது, உருசியத் தலைவர் சியார்சி மாலங்கோவால் மட்டுமே மீறப்படும் அளவுக்குப் பேரியாவின் அதிகாரங்கள் வளர்ச்சியுற்றன.

ஆனால் 1953 சூலை மாதத்தில் அரசு அறிவிப்பொன்று பேரியா பொதுவுடைமைக் கட்சியினின்றும், சோவியத்து அரசிலிருந்தும் நீக்கப்படுவதாகத் தெரிவித்தது. ஒரு மாதத்திற்குப் பிறகு பேரியா நாட்டு நலனுக்கெதிராகச் சதி செய்தார் என்று விசாரிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டது. உருசிய அரசின் அனைத்து அதிகாரங்களையும் பறிக்க முயற்சி செய்ததாகவும், வெளிநாட்டு உளவாளியாகச் செயற்பட்டதாகவும், உருசியாவிற்குள் முதலாளித்துவத்தைப் புகுத்த முயற்சி செய்ததாகவும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. உருசியாவிலிருந்து அவர் தப்பிச் சென்றுவிட்டார் என்ற வதந்திகள் பின்னர்த் தவறானவை என்று அறிவிக்கப்பட்டன. பின்னர், 1953 திசம்பர் மாதத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பேரியா, ஆறுநாள் விசாரணைக்குப் பிறகு குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு அம்மாதம் 23-ஆம் நாளில் மாசுகோவில் கொல்லப்பட்டார். தி.கோ.நா.

**பேரூர்:** இது கொங்குநாட்டினைச் சேர்ந்த கோயம்புத்தூரின் மேற்பால் 6 கி.மீ. தொலைவில் நொய்யலாற்றின் கரையில் அமைந்துள்ள பழைமையான ஊராகும். தனக்கெனத் தேவாரப்பாடல் இல்லாமல், பிறதலத்துப் பதிகங்களில் வைத்துப் பாடப் பெறுவதாகிய சிறப்புடைய தேவார வைப்புத் தலங்களுள் இதுவும் ஒன்று. பண்டைய கொங்கு மண்டலத்தில் இருந்த பேரூருக்கு நாட்டின் தலைநகராக விளங்கிய பெருமை உண்டு.

அரசவனம், பிறவாநெறி, மேலைச் சிதம்பரம் என்ற வேறு பெயர்களும் இவ்வூருக்குண்டு. சோழன் பூர்வ பட்டயம் என்னும் பழைய நூலின் வாயிலாகப் பேரை என்னும் இருளன் வாழ்ந்த பேரைப்பதியே பேரூர் எனத் தெரியவருகிறது. இங்குள்ள கோயிலுக்கு ஆன்பட்டி என்றும், இறைவனுக்குப் பட்டீசுவரன் என்றும், அம்மைக்குப் பச்சைநாயகி என்றும்,நடராசப் பெருமான் எழுந்தருளியுள்ள சபைக்கு அரவம்பலம், வெள்ளியம்பலம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

நொய்யலாறு, காஞ்சியாறு எனவும் வழங்கும். இது வெள்ளியங்கிரிமலையில் உற்பத்தியாகி, கொங்கு நாட்டில் பாய்ந்து கொடுமுடிக்கருகில் காவிரியில் கலக்கிறது. பதிற்றுப்பத்தின் 48-ஆம் பாட்டில், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் என்னும் புலவர், 'நீ காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவூழி வாழ்வாயாக' என வாழ்த்தியுள்ளார்.



பேரூர்

தொல்காப்பியம் சொல். 42-ஆம் நூற்பாவுக்கும் நன்னூல் 392-ஆம் நூற்பாவுக்கும் எடுத்துக்காட்டாகக் குறிக்கப்படும் ஆசிரியன் பேரூர்கிழான் என்ற தொடரால் குறிக்கப்படுவதும் இவ்வூரே. பேரூரில் பல இடங்களிலும், குறிப்பாகக் காஞ்சியாற்றங்கரையின் ஓரத்திலும் காணப்படும் பெருங்கற் சின்னங்கள் இவ்வூரின் பழமையைச் சுட்டும். மாண்டார் வீடு என்று கூறப்பட்ட இவை பிற்காலத்தில் பாண்டியர் வீடு எனத்திரிந்து வழங்கப்பட்டன. சங்கப்பாடல்களில் இக்கல்பதுக்கைகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

பேரூருக்கருகில் மேற்கே ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருநீற்று மேடு என்னும் இடத்திலிருந்து கோயிலுக்கு வேண்டிய திருநீறு எடுக்கப்படுகிறது. கால்நடை வளர்ப்பதை முக்கிய தொழிலாகக் கொண்ட தென்னிந்திய மக்கள் தாங்கள் தங்கியிருக்கும் பகுதியில் கால்நடைகளின் சாணத்தைக் குவித்து வைப்பது வழக்கம். மேய்ச்சல் நிலம் வேண்டி வேறிடத்துக்குப் புறப்பட்டுச் செல்லுமுன் சாண மேட்டினைத் தியிட்டுக் கொளுத்துவர். அதுவே, சாம்பல்மேடாகிப் பின்னாளில் பூதிமேடு என்றும், திருநீற்றுமேடு என்றும் பெயர் பெற்றது.

இத்தலத்தில் சிறப்பாக எடுத்துக்கூறப்படுவன: 1)பிறவாப்புளி: பிறவாநெறி என்னும் பெயருக்கேற்ப முளைக்க வைப்பினும் முளையாத வித்துடைய ஒரு புளிய மரம். 2) இறவாப்பனை: நெடுங்காலமாக அழியாமல் உள்ளது எனக்கூறப்படும் ஒரு பனைமரம். 3) பிரமதீர்த்தம்; இதில் சிலநாள் நீராடிவரின் தீராத பைத்தியமும் வேறுசில நோய்களும் நீங்கிவிடுகின்றன. இதன்நீரில் இட்ட பித்தளை, செம்புப் பாத்திரங்கள் பிறநீரில் ஒளிமழுங்கல் போல் மழுங்காமல் விளங்குகின்றன.

காலவேச்சுரம், அழகிய சிற்றம்பலம், தென்கயிலாயம், வடகயிலாயம் என்னும் சுற்றுக் கோயில்கள் இங்குள்ளன. இவ்வூரின் வடபால் சில கிலோமீட்டர் தொலைவில் முருகன் எழுந்தருளியுள்ள மருதமலையும், மேற்பால் சில கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளியங்கிரிமலைத் தொடரும், இதனோடு தொடர்புடையன எனத் தலபுராணம் கூறும்.

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை வழிபட வந்தபோது தோழமையால் ஒரு திருவிளையாடலை உன்னிய இறைவர் தாமும், அம்பிகையும், பிறபரிவாரங்களோடு கோயிலில் இல்லாமல் அருகிலே உள்ள வயலில் பள்ளனும், பள்ளியுமாக வேடங்கொண்டு நாற்று நடவுத் தொழில் புரிந்திருந்தனர். சுந்தரர் திருக்கோயிலில் வந்து எங்கும் காணாமையால் இறைவன் இங்கிலன் அவனைக் காண்போம் என்று

தேடி வயலிற் சென்று 'பறையனும் முன்னர் ஆன நீ இன்று பள்ளனானமை தெரிந்தேன் யான்' என்று அசதியாடித் துதித்தனர் என்பது தலபுராணத்தின் பள்ளுப் படலத்தில் இடம்பெறுகிறது. இத்திருவிழா ஆனிமாதத்தில் பூரம் நாளில் நாற்றுநடவு விழா என நடத்தப்படுகிறது.

இவ்விழாவில் பள்ளர்களும், பள்ளியருமே முக்கிய பங்கேற்பர். வேளாண் தொழில் முழுமையும் இவ் விழாவின்போது செய்து காட்டப்படும். இந்த விழா தமிழகத்தின் வேறு எந்தக்கோயிலிலும் நடை பெறாத ஒன்றாகும்.

இப்போதுள்ள பட்டீசுவரர் கோயில் கொங்குச் சோழர் காலத்தில் கட்டப்பட்டதாகும். அம்மன் கோயில் நாயக்கர் காலக்கட்டட அமைப்பைக் கொண் டுள்ளது. கனகசபை மதுரைத் திருமலைநாயக்கரின் உறவினரான அழகாத்திரி நாயக்கர் கட்டிய கலைக் கோயில் ஆகும். ஒரு தூணில் அவருடைய படிமம் செதுக்கப்பட்டுள்ளது. மாதையன் என்னும் ஓர் அதி காரி கோயிலுக்கு முன்னுள்ள குளத்தைவெட்டி, அதன்கீழ்க்கரையில்மாதேசுவரம்என்னும் ஆலயத்தை யும் எடுப்பித்தான். தேவகோட்டை நகர வணிகர் ஒருவர் பெரும்பாகங்களைத் திருத்தித் திருப்பணி செய்துள்ளார்.

ஒரே கல்லால் செதுக்கப்பட்ட பலவித நுட்ப வேலைப்பாடமைந்த காளி, பிச்சாண்டி, விநாயகர் போன்ற கடவுளரின் பெரிய திருவுருவங்களும்,கல்லாற் செய்த சங்கிலிகள், சுழல் தாமரைப்பூ, அதன் இதழில் உட்கார்ந்திருக்கும் கிளிகள் ஆகியனவும், யானைத் தோலைப் போர்த்த மூர்த்தி, காலைமேலே தூக்கியாடும் கூத்தப் பெருமான் திருவுருவங்களும், நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கனகசபையில் அமைக்கப்பட்டுள்ளன. துப்பாக்கியுடன் நிற்கும் குதிரைவீரன், குதிரை வீரர்கள் ஆகிய சிற்பங்களும் குறிப்பிடத் தக்கவை.

பேரூர்க் கல்வெட்டுகளில் சேரமன்னர்களான கோக்கண்டன், இரவிகோதை, இரவி கண்டன் ஆகி யோர் குறிக்கப்பட்டுள்ளனர். கொங்குச் சோழர் களில் கலிமூர்க்கன், விக்கிரம சோழன், வீரராசேந் திரன், கரிகால் சோழன், கோனேரின்மை கொண் டான் போன்ற மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகள் உள்ளன. வீரபாண்டியன் என்னும் கொங்குப் பாண் டியர் கல்வெட்டுகள் இரண்டு உண்டு. ஒய்சள மன் னனான மூன்றாம் வீரவல்லாள தேவனின் கல்வெட்டு களும் உள்ளன. தெற்கணாம்பி மன்னர்களில் சங்கரை யன் மகன் மாதையன் என்ற மந்திரியின் கல்வெட்டும் உள்ளது. மன்னர்கள் மட்டுமல்லாமல் கோயிலுக்கு மக்கள் அளித்த நிவந்தங்கள் பற்றியும் பல கல்வெட்டு கள் பேசுகின்றன.

**இலக்கியத்தில் பேரூர்**: இவ்வூரின் பழமையான சிறப்பினை எடுத்துக் கூறும் பேரூர்ப் புராணம் கச்சியப்ப முனிவரால் எழுதப்பட்டதாகும். அருண கிரிநாதர் பேரூர்ப் பச்சைநாயகி அம்மனைப் பாடியுள் ளார். பிற்காலத்தில் முப்பதுக்கும் மிகுதியான பிரபந் தங்கள் எழுதப்பட்டுள்ளன. கிழக்கிந்திய வணிகக் குழுவினர் காலத்தில் கொங்கு நாட்டில் பயணம் செய்த புக்கானன் என்பார், பேரூர்க் கோயில் நிரு வாகம் பற்றிய பல குறிப்புகளை எழுதியுள்ளார். பேரூரில் கிடைத்த சில செப்பேடுகளும் உள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தின் தலைநகரான கோயம்புத்தூர் பண்டை நாளில் கோவன்புத்தூரான வீரகேரள நல்லூர் என்று பெயர் பெற்றிருந்தது. வெள்ளலூர் என்னும் இன்றைய ஊர் அந்நாளில் அன்னதான சிவபுரி என்றும், தேனூர் என்றும் குறிப்பிடப்பட்டது. போளுவாம்பட்டி 'நகரமான முட்டம்' என்றும், 'அமரபுயங்கரசு சதுர்வேதி மங் கலம்' என்றும் குறிப்பிடப்பட்டது. இவ்விடத்தில் 800 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட நாகேசுரசாமி கோயில், முத்துவாளி அம்மன் கோயில், வேங்கடேசப் பெருமாள் கோயில் முதலியன உள்ளன. கொற்ற மங் கலமான மஞ்சிப்புளித் தாவளம் என்னும் ஊர் பற்றிப் பேரூர்க் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. குனியன் புத்தூரான அமரபுயங்கர நல்லூர், கோப்பாடியான அம்மம் சதுர்வேதிமங்கலம், புகலிடம் கொடுத்த சோழச் சதுர்வேதி மங்கலம், குறிச்சி, சுண்டைக்கா பிரமதேசம், இடிகரை, திருவாலந்துறை, கோளரி போன்ற ஊர்கள், 800 ஆண்டுகளுக்கு முன்பே சிறப் புடன் விளங்கின்; பல ஊர்கள் இன்றும் உள்ளன; சில அழிந்துவிட்டன. இ.உ.

**துணை நூல்கள்:**

**இராமசாமி**, ஐ., தென்கைலாயம் என்னும் வெள்ளி யங்கிரித்தல வரலாறு, திருமதி அக்கம்மாள் இராமசாமி, இக்கரை போளுவாம் பட்டி, 1964 .

**இராமச்சந்திரன் செட்டியார், கோ.ம.**, கொங்கு நாட்டு வரலாறு (இருபகுதிகள்), தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி வெளியீடு, கோவை, 1972.

**கச்சியப்பமுனிவர்**, பேரூர்ப்புராணம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1969.

பேரூர்ப் புராணம்: இது, கவிராட்சச கச்சியப்ப முனிவரால் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி

யில், பேரூரிலிருந்து பாடப்பட்டது. பொழிப்புரை, குறிப்புரைகளுடன் சிரீ நமசிவாயமூர்த்தி அச்சகத்தில் அச்சேற்றப்பட்டு, திருவாவடுதுறை ஆதீன 244 –ஆம் வெளியீடாக 1969 – ஆம் ஆண்டு, திருப்பெருந்திரு அம்பலவாண தேசிக சுவாமிகளால் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்து, கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்தூருக்கு மேற்கே 5 கி.மீ. தூரத்தில் காஞ்சி யாற்றங்கரையில் உள்ளது. தட்சிண கைலாயம், பிப்பிலாரணியம், மேலைச் சிதம்பரம், ஆதிபுரி, தவசித்திபுரம், பத்திபுரம், ஞானபுரம், வன்மீகபுரம், மேருபுரம், தேனுபுரம், பசுபதிபுரம், குருசேத்திரம், பிறவா நெறித்தலம் என்ற காரணப் பெயர்கள் இத்தலத்திற்கு உண்டு. கோயிலுக்கு 'ஆன்பட்டி'என்பது பெயர். இறைவன் பெயர்: பட்டீசுவரன், அரசம்பலவாணர். அம்மை பெயர்: மரகதவல்லி, பச்சைநாயகி. தலவிநாயகர்: பட்டி விநாயகர். ஆடல்வல்லான் நிருத்தமிடும் அம்பலத்துக்கு வெள்ளியம்பலம், அரவம்பலம் என்பன பெயர். இந்த வைப்புத்தலத்தின் அருகினில் காலவேச்சுரம், அழகிய சிற்றம்பலம், வடகயிலாயம், தென்கயிலாயம், மருதமலை, வெள்ளிமலை (வெள்ளியங்கிரி), ஏமாசலம், திருமால்மலை என்ற தலங்கள் சிறப்புப் பெயர்களால் உள்ளன. மருத தீர்த்தம், கன்னிகை தீர்த்தம், பிரம தீர்த்தம், கந்த தீர்த்தம், அனுமதீர்த்தம், சரவணப் பொய்கை முதலிய தீர்த்தங்கள் உள்ளன. முளைக்க வைப்பினும் முளைக்காத இயல்புடைய இங்குள்ள புளிய மரத்துக்குப் 'பிறவாப்புளி' என்றுபெயர். பழங்காலந்தொட்டு, இறவாமல், ஓங்கி வளர்ந்துள்ள பனை மரத்துக்கு 'இறவாப் பனை' என்று பெயர். இங்குள்ள பிரமதீர்த்தத்தில் துலக்கிய பித்தளை, செப்புப்பாத்திரங்கள், பிற நீரில் துலக்கியபின் ஒளி குன்றுவது போல் குன்றுவதில்லை.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியன அமைந்துள்ள இடங்களையும், மலைகள், நதிகள், சிவலிங்க மூர்த்திகள் முதலானவற்றையும் காணப் பேரூருக்கு, முதன் முதலாகச் செல்பவர்கள் முதலில் இப்புராணத்தினைப் படித்துவிட்டுச் சென்றால், அவற்றை மிக எளிதாகக் காணலாம்.

பெரியபுராணம், மணிமேகலை, பதிற்றுப்பத்து, தொல்காப்பியச் சொல்லதிகார உரை, நன்னூல் உரை முதலான நூல்களில் இவ்வூர் எடுத்தாளப்பட்டுள்ளது. இக்கோயிலின் கனகசபையில் உள்ள சிற்பத் தூண்கள் கண்ணைக் கவர்வன. யானை உரித்த அண்ணல், ஊர்த்துவ தாண்டவம் எனப்படும் காலை மேலே தூக்கியாடும் ஆடற்கூத்து, சுழல் தாமரைப்பூ, அதன்கண் அமர்ந்திருக்கும் கிளிகள், கல் சங்கிலிகள் முதலியன வியக்கத் தக்கன.

பேரூர்ப்புராணத்தில் 2220 திருவிருத்தங்கள் 36 படலங்களாக உள்ளன.

எம்பெருமானுடைய ஊர்திகளான இரத்தினத்தா லிழைக்கப் பெற்ற தங்கச் சிவிகை, சந்திர மண்டலம், பூதம், புட்பக விமானம், காளை, யானை, இரதம், அன்னம், குதிரை, இந்திர விமானம் முதலானவை நிருத்தப்படலம் 54-ஆம் செய்யுளில் கூறப்பட்டுள்ளன.

முருகனை வழிபடுவதற்கான உபசாரங்கள், அபிடேகம், வழிபாடு, சந்தனம் பூசுதல், திருவிளக்கு, உணவூட்டல் முதலானவை மருதவரைப் படலத்து 29-ஆம் செய்யுள் முதல் கூறப்பட்டுள்ளன. கந்த புராணம் ததீசி உத்தரப் படலத்துக் கூறிய சிவபரத்துவம், இதன் கௌரி தவம்புரி படலத்துக் காணப்படுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்தை வணங்க வந்து கோயிலுட் புகுமுன், பயனைத் தரும் சிவபெருமான், இழிந்த பொருளும் தாமே எனக்காட்டப் பள்ளனாகியும் அம்பிகை மற்றைப் பரிவார தெய்வங்கள் எல்லாம் பள்ள உருக்கொண்டும் கோயிலில் இல்லாமல், அருகிலே உள்ள வயலில் நாற்று நடவுத் தொழில் செய்து கொண்டிருந்தனர். சுந்தரர், இறைவனைத் திருக்கோயிலில் காணாமல், வயலுக்குச் சென்று காண்கின்றார். இது, பள்ளுப்படலம் 23 முதல் 34 வரையிலான பாடலில் கூறப்பட்டுள்ளது. பல சிறப்புக்களைக் கொண்ட இந்நூல், 'கோமனு நீதி வாழ்க; குவலய முழுதும் வாழ்க' என்று நிறைவு பெறுகிறது.

வீ.சொ.

**பேரெயின் முறுவலார்**: பேரெயின் முறுவலார் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர். இவர் நம்பி நெடுஞ்செழியனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் (புறம். 239). அப்புறப் பாடலைத் தவிர இவர் பாடியுள்ள அகத்திணைப் பாடல் ஒன்றும் (குறுந். 17) கிடைத்துள்ளது.

முறுவலார் என்பது இவர்தம் இயற்பெயர். பேரெயில் சோழநாட்டிற் காவிரியாற்றின் தென் கரையில் உள்ள தேவாரம் பெற்ற தலம். இவர் பெயர் ஊராலும் உறுப்பினாலும் வந்த பெயர் போலும். அன்றிப் பெரிய மும்மதில்களைத் தம் முறுவலால் எரித்த பரமசிவனுடைய திருநாமம் இவருக்கு இடப்பட்டதென்று கொள்ளினும் பொருந்தும் என்று உ.வே. சாமிநாதையர் கருதுகின்றார்.

பேரெயில் என்றோர் ஊர் சோழநாட்டிலும் உளது. ஆயினும் முறுவலார் பாண்டித் தலைவனைப் பாடியிருப்பதாலும் பாண்டி நாட்டிலும் இப்பெயருடைய தோரூர் இருத்தலாலும் இவர் பாண்டி நாட்டினர் என்று கருதுவாரும் உளர்.

இவர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் 21 அடிகளை உடையது. எனினும் 18 அடிகளில் ஒவ்வோர் அடியின் இறுதியிலும் வினைமுற்றினை அமைத்துப் பாடியிருப்பதும், வஞ்சிப்பாவின் தூங்கலோசை பயின்று வருமாறு அமைத்திருப்பதும் இவர்தம் யாப்பியற் புலமையை நன்கு வெளிப்படுத்தும். இவருடைய பாடலடிகளைத் தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியரும் இளம்பூரணரும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர்.

தலைமகன் கூற்றாக இவர் பாடியுள்ள குறுந்தொகைப் பாடலில், ‘காமம் காழ்க்கொள்ளும்போது மடலும் ஊர்ப’ என்று கூறுவார். மடலூர்வார் எருக்கம் பூ மாலையைத் தலையில் சூடிக் கொள்வதனையும், பிறர் காணுமாறு வீதியில் பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையில் ஊர்ந்து வருவர் என்பதனையும் குறிப்பிட்டுக் கூறுவது எண்ணத்தகும். தொல்காப்பியக் களவியலில் (11) இளம்பூரணரும், மெய்ப் பாட்டியலில் பேராசிரியரும் இக் குறுந்தொகைப் பாடலை எடுத்தாண்டுள்ளமையினால் இதன் சிறப்பு இனிது புலனாகும். ந.சொ.

**பேரோ தீவு:** ஈசியன் கடலில் அமைந்துள்ள சைக்லேடுகள் (Cyclades) என்ற தீவுக் கூட்டத்தில் இரண்டாம் பெரிய தீவு பேரோ தீவு (Island of Paros) ஆகும். 20 கி.மீ. நீளமும், 15 கி.மீ. அகலமும் கொண்ட இத்தீவு ஒரு பெரிய மலையினால் ஆனது. ஏறத்தாழ 820 மீட்டர் உயரமுள்ள மலைத் தொடரில் இருபுறமும் சரிவாகவும் வடகிழக்கு, தென் மேற்குப் பகுதிகளில் அகன்றும் ஏனைய பகுதிகளில் குறுகலாகவும் இத்தீவு அமைந்துள்ளது. மலையின் இரு புறச் சரிவுகளிலும் விலையுயர்ந்த பளிங்குக் கற்களைக் கொண்ட பாறைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒரு சில பகுதிகளில் அப்பிரகம் (Mica) உலோகம் நிறைந்த பாறைகளும் காணப்படுகின்றன.

இத்தீவின் வடமேற்குத் துறைமுகப் பகுதியில் இதன் தலைநகரான பாரிகியா (Parikia) அமைந்துள்ளது. இதன் துறைமுகத்தின் நுழைவாயில் குறுகலாகவும் இடர் மிக்கதாகவும் காணப்படுகிறது. சிறிய கப்பல்கள் மட்டுமே, அதுவும் மிகவும் எச்சரிக்கையுடன்தான், இத்துறைமுகத்தினுள் நுழைய முடியும். இந்நகரின் கடற்கரையில் இடைக்கால வடிவமைப்பில் கட்டப்பட்ட கோட்டை ஒன்று காணப்படுகிறது. நகரின் வடபகுதியில் அப்போலோ (Apollo), ஆர்த்தமிசு(Arthamis) போன்ற கிரேக்கக் கடவுளர்களின் கோயில்கள் அமைந்துள்ளன. தென்புறத்திலும் சில கோயில்கள் உள்ளன. நகருக்கு வெளியில் ‘நூறு நுழை வாயில்களின் மாதா’ (Our lady of hundred doors) என்று பெருமையுடன் குறிப்பிடப்படும் தேவமாதாவின் திருக்கோயில் காட்சி அளிக்கின்றது. அக்கோயில்கள் யாவும் அயோனியக் கட்டடக் கலைப் பாணியில் அமைந்துள்ளன. இத்தீவின் வடபகுதி வளைகுடாவில் ஒரு சிறந்த துறைமுகமும், தென்கிழக்குப் பகுதியில் மற்றொரு துறைமுகமும் உள்ளன.

இத்தீவில் ஏராளமாகக் கிடைக்கும் பளிங்குக் கற்களே இத்தீவின் செல்வ வளத்திற்குக் காரணமாகும். பளிங்குக் கற்கள் கி.மு. 6 – ஆம் நூற்றாண்டிலிருந்தே இத்தீவிலிருந்து உலகின் பலபாகங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. சிலைகள் சமைப்பதற்கு ஏற்ற உயரிய தன்மை கொண்டு விளங்கியதே அதன் சிறப்பாகும். அத்தகு பளிங்குப் பாறைகள் தோண்டி எடுக்கப்பட்டதின் சின்னமாக ஏராளமான சுரங்கங்கள் இத்தீவின் வடபகுதியில் இன்றும் காணப்படுகின்றன. திராட்சை மது தயாரித்தல், ஒலிவ எண்ணெய் (Olive Oil) எடுத்தல், புகையிலை பயிரிடுதல் போன்றவை இக்காலத்தில் இத்தீவின் பொருளாதார வளம் பெருக்கும் தொழில்களாகும்.

இத்தீவு செப்பு உலோகக்கால நாகரிகமான ஈசியன் (Aegean) நாகரிகத்துடன் தொடர்பு கொண்டிருந்தது. முதன்முதலில் ஆர்க்கேடியர்களும், அவர்களைத் தொடர்ந்து அயோனியர்களும் இத்தீவில் குடியேறினர். இத்தீவு மக்கள் கி.மு. 7–ஆம்நூற்றாண்டின் தொடக்கத்தில் தேசாசு (Thesos) என்ற குடியேற்றத்தை அமைத்தனர்.

பாரசீகர்கள் கிரேக்கத்தின் மீது படையெடுத்த பொழுது இத்தீவு அவர்களுக்குப் படையுதவி அளித்தது. மாரதன் போரில் இத்தீவின் படைகள் பாரசீகர்களுக்கு ஆதரவாகப் போரிட்டன. கிரேக்கர்களுக்கு இப்போரில் வெற்றி தேடித்தந்த மில்டியடீசு (Miltiades) என்னும் படைத்தலைவர் பேரோ தீவின் மீது ஒரு படையெடுப்பை மேற்கொண்டார். ஆனால் அது வெற்றிபெறவில்லை. பின்னர்ப் பாரசீகப் பேரரசர் செர்செக்சு (Zerxes) படையெடுத்தபோதும் இத்தீவு அவருக்கு ஆதரவாகவும் கிரேக்கத்துக்கு எதிராகவும் போரிட்டது.


அதீனியக்கூட்டிணைவில் (Athenian Confederacy) கி.மு. 378 – ஆம் ஆண்டில் பேரோ தீவு இணைந்து

தனது தனித்தன்மையினையும் அரசியல் சிறப்பினையும் இழந்தது. பின்னர் எகிப்தியரின் ஆட்சிக் குட்பட்டும், அதையடுத்து உரோமானியப் பேரரசின் ஒருபகுதியாகவும் விளங்கிய பேரோ தீவு, தன் தனித்தன்மையினை முற்றிலுமாக இழந்தது. மேலும் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் துருக்கியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த இத்தீவு, கி.பி.19 – ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கிரேக்க விடுதலைப் போருக்குப் பின்னர்க் கிரேக்கத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது.

பேரோ தீவைப் பற்றி ஆராயும் பொழுது அத்தீவைச் சேர்ந்த ஆர்க்கிலோகசு (Archilochus) என்ற கி.மு. 7-ஆம் நூற்றாண்டுக் கவிஞனைப் பற்றிக் கூற வேண்டியது இன்றியமையாததாகும். நிதிவசதிக் குறைவு காரணமாகத் தாய்நாட்டை விட்டு வெளியேறிய ஆர்க்கிலோகசு தேசாசு குடியேற்றத்தில் குடிபுகுந்தான். ஆனால் அங்கும் அவனால் செல்வம் ஈட்ட இயலவில்லை. எனவே, மீண்டும் தாயகம் திரும்பினான். இலிகாம்பசு (Lycambes) என்ற அத்தீவின் மற்றொரு குடிமகனின் மகளைக் காதலித்து மணக்க விரும்பினான். அது தொடர்பாக அவனுக்கும் இலிகாம்பசுக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது. கவிதை மூலம் வசைபாடும் திறமையை அவன் பெற்றிருந்தான். அவன் நினைவாக அவனுக்கு கி.மு. 100 – ஆம் ஆண்டளவில் ஒரு சிலை எழுப்பப்பட்டது. அதன் அடிப்பகுதியில் அமைக்கப்பட்ட ஒரு கற்பலகையில் அவன் வாழ்க்கை வரலாறு பொறிக்கப்பட்டது. த.நா.வா.

பேலூர், கருநாடக மாநிலத்திலுள்ள ஆசன் மாவட்டத்தில் ஓடுகின்ற யாகச்சேர் என்ற ஆற்றின் கரையில் அமைந்துள்ள நகரமாகும். பெங்களூர்-பூனா தொடர்வண்டிப் பாதையில் பனவார் தொடர்வண்டி நிலையத்திலிருந்து 48கி.மீ. தூரத்தில் பேலூர் உள்ளது. இது ஒய்சளர்களின் தலைநகராக விளங்கியது. இந்த ஊரை இங்குள்ள கல்வெட்டுகள் பலவாறு வழங்கியுள்ளமை தெரிகின்றது. பெலுகூர், வேலூர், வேலபுர என்னும் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இப்பகுதி மக்கள் பேலூரைப் 'பூலோக வைகுண்டம்' என்றும் 'தென் வாரணாசி' என்றும் குறிப்பிடுகின்றனர்.

ஒய்சளர்களின் முதல் தலைநகராக விளங்கிய பேலூரில் ஒய்சள மன்னர்களில் நான்காம் அரசனான விட்டுணுவர்த்தனன் ஒரு கோயிலைக் கட்டியுள்ளான். முதலில் சமண மதத்தைச் சார்ந்திருந்த அவன் இராமானுசையா என்பவரால் பின்னர் இந்து மதத்திற்கு மாற்றப்பட்டான். இந்து மதத்திற்கு மாறியதன் நினைவாக கி.பி. 1117 – இல் அவனால் எடுக்கப்



பேலூர்

பட்ட கோயிலே சென்னகேசவன் கோயில். அக்கோயில் கி.பி.1141 – இல் அவன் இறப்பதற்கு முன்னரே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருமாலுக்காக எடுக்கப்பட்டுள்ள இக்கோயிலில் உள்ள இறைவனைக் கல்வெட்டுகள் 'விசயநாராயணன்' என்று கூறுகின்றன.

கலையழகு வாய்ந்த கேசவன் கோயில் ஒன்றும், அதனைச் சுற்றி ஐந்து சிறிய கோயில்களும் எடுக்கப்பட்டுள்ளன. அவையனைத்தும் ஒரே திருச்சுற்றின் உட்பகுதியில் உள்ளன. இக்கோயில் 130 மீ. நீளமும் 115 மீ. அகலமும் கொண்டது. இங்குள்ள கருவறை 54 மீ. நீளமும் 47 மீ. அகலமும் கொண்டது. இக்கோயிலில் கருவறை, அந்தராளம், மகாமண்டபம் ஆகிய பகுதிகள் உள்ளன. இக்கோயிலின் நுழை வாயிலில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. இந்தக் கோபுரங்கள் வாயிற்பகுதியில் தனித்தனியாக இரண்டு பக்கங்களிலும் காணப்படுகின்றன. கருவறையில் உள்ள இறைவன் (கேசவன்) உருவம் அழகும் வனப்புமுடையது. அதன் உயரம் 2 மீ. ஆகும். அச்சிலையின் மேல்பகுதியில் பிரபை காணப்படுகின்றது.

இக்கோயில் முற்றுப்பெறாமல் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. மகாமண்டபம், நட்சத்திரம் போன்ற அமைப்புடைய அடித்தளத்தைக் கொண்டது. இக்கோயில் அமைப்பு முழுவதும் தரைமட்டத்திலிருந்து 1 மீ. உயரத்தில் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்பு சாளுக்கியரின் கட்டடக் கலையின் அம்சமாகக் கருதப்படுகின்றது. மண்டபத்திலுள்ள தூண்கள் கலை நுணுக்கம் வாய்ந்தவை. கோபுரங்கள் இரண்டும் விட்டுணுவர்த்தனன் காலத்தில் எடுக்கப்பட்டவை. இந்தக் கோபுரத்தில் கிழக்கு வாயிலில் விட்டுணுவர்த்தனன் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அந்த மன்னன் காலத்தில் எடுக்கப்பட்ட விமானம், அந்தராளம், நவக்கிரகம் போன்றவை உன்னதமான கலை நுணுக்கம் வாய்ந்தவை. அவனுக்குப் பின் வந்த இரண்டாம் பல்லாளனின் காலத்தில் திருச்சுற்று, வடகிழக்கில் கிணறு, மண்டபத்திலுள்ள தூண்களுக்கிடையில் காணப்படும் சாளரப் பகுதிகள் போன்றவை எடுக்கப்பட்டன. மண்டபத்திலுள்ள கதவுகளும் அலங்கார வேலைப்பாடுகள் நிறைந்தவை.

கருவறை, அர்த்தமண்டபம், மண்டபம் ஆகியவற்றின் அதிட்டானங்களில் வரிச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மிருகங்களின் வரிச் சிற்பங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. மண்டபத்தின் கபோத வரிகளில் பல வகையான கோலங்களில் பெண்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கிழக்கு, வடக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் மண்டபத்தை அடையப் படிக்கட்டுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் படிக்கட்டுகளில் சிறிய விமான அமைப்பும் சேர்த்து எடுக்கப்பட்டுள்ளது. மண்டபத்திலுள்ள தூண்களில் கலையழகு வாய்ந்த சிற்பங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன. மண்டபத்தின் வெளிப்பகுதியில் உள்ள சிற்பங்கள் அழகானவையாகவும் உயிரோட்டமுடையனவாகவும் காணப்படுகின்றன.

இக்கோயிலில் 28 சாளர அமைப்புகள் உள்ளன. இந்தச் சாளரப் பகுதிகளில் நட்சத்திரங்களின் அமைப்பு, புராணக் கதைகள் போன்றவை நுணுக்கமான முறையில் காட்டப்பட்டுள்ளன. திருமாலின் அவதாரங்களான நரசிம்ம, வாமன அவதாரம் போன்றனவும் காணப்படுகின்றன. கிழக்கு வாயிலில் மகாபாரதச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து இராமாயணச் சிற்பங்களும் உள்ளன. மாபலிச்சக்கரவர்த்தியின் கதை, வாமன அவதாரம், இரணியன் வதை போன்றவற்றுடன் பல அவதாரக் காட்சிகள் உள்ளன. இங்குள்ள சிற்பத்தின் பீடத்தில் இக்கோயிலைக் கட்டிய சகன ஆச்சாரி என்னும் சிற்பியின் பெயர் உள்ளது. இக் கோயிலை 88 சிரீ வைணவக் குழு, கண்காணித்து வந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கோயிலிலுள்ள சிறிய, பெரிய சிற்பங்கள் மிருகங்களின் வரிச் சிற்பங்கள், இயற்கைக் காட்சிகள் போன்றவை ஒருகலைக்கூடமாக அமைந்துள்ளன.

தி.சு.

**பேறு கால உளப்பிணி**: உளச் சீர்கேடுகளில் சிலவற்றைப் பற்றுச் சார்ந்த சீர்கேடுகள் என்று வகைப்படுத்தியுள்ளனர். உணர்ச்சிப் பாங்கு (Mood) என்பது இயல்பிறழ்வான உளச் சோர்வு அல்லது உளக் கிளர்ச்சி நடத்தை, அறிவாற்றல் ஆகியவற்றில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களோடு தொடர்பு கொண்டுள்ள நிலைகளைக் குறிக்கின்றது. அவை உளக் கிளர்ச்சியும் உளச் சோர்வும்மாறி வரும் உளப்பிணியில் அடக்கப்பட்டுள்ளன. இது கடுமையிராத குறிப்பிட்ட உளச் சோர்வுகளின் ஒரு விரிவான வகையாகும். இது சில சமயங்களில் நரம்புப் பிணியாகக் குறிப்பிடப்படுகின்றது. சில பிணிகள் ஒரு குறிப்பிட்ட பின்னணியமைப்புகளில் நிகழுகின்றன. அதாவது, பேறு கால உளப்பிணி(Puerperal Psychosis)யாகவும் இயல்பிறழ்ந்த துக்க எதிர் வினைகளாகவும் நிகழுகின்றன. பற்று (Affect) என்ற சொல் ஒரு விரிந்த பொருளைக் கொண்டிருந்தாலும் மரபாகக் குறிப்பிடுவது என்ன வென்றால் பற்றுச் சார்ந்த சீர்கேடுகள் உணர்ச்சிப் பாங்குகளை முக்கியமாக உள்ளடக்கிக் கொண்டுள்ள துன்பங்களான சோர்வும் கிளர்ச்சியும் சூழ்ந்தகாக இருக்கின்றன என்பதாகும். எனவே பேறு கால உளப்பிணி ஒருபற்றுச்சார்ந்த பிணி. இது பிள்ளைப் பேற்றுக்கு முன்பும் பின்பும் தாயாரைத்

தாக்கலாம். பேறு கால உளப்பிணியில் உணர்ச்சிப் பாங்கு மாறுதல் மிகச் சாதாரணமாக நடைபெறுகின்றது. உணர்ச்சி மனப் பாங்குசார்ந்த துன்பங்கள், மற்ற பணிகளுக்கு அடுத்தவையாகும். உணர்ச்சிப் பாங்கின் மாறுபாடுகள் பொதுவாகவும் இயல்பாகவும் ஆராய்ச்சிக்குரியனவாக இருக்கின்றன. ஒருவருடைய மனவெழுச்சி வாழ்க்கையில் உண்மையில் அது ஒரு முக்கியமான ஆக்கக் கூறாக இருக்கின்றது. இந்த மாறுபாடுகள் எப்பொழுது இயல்பிறழ்ந்தவையாகக் கருதப்பட வேண்டும் என்று தெரிந்து கொள்வது எளிதன்று. பல காரணக் கூறுகளைக் கவனிக்க வேண்டும். உணர்ச்சிப் பாங்கு அலை அசைவின் காலம், அதனுடைய செறிவு, உணர்ச்சிப் பாங்குக்கும் வாயப்புகளுக்கும் இடையிலுள்ளகுணப்பண்பு, மாற்றத்தின் குறிப்பான இயல்பு முதலியவற்றைக் காண்போர் எந்தவித ஐயப்பாடுமின்றி, அது ஓர் இயல் பிறழ்ந்த நிலைதான் என்று கூறமுடியும்.

உணர்ச்சிப் பாங்கு அலை அசைவுகள், எதிர்வினைச் செயலாக வகைப்படுத்தப்படலாம். மாற்றுப் பெயராகத் தனியாளின்'நரம்புப் பிணி அல்லது சோர்வு திரிபுணர்ச்சிகளோடு கூடிய உளப்பிணி என்றும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் தனியாள் உட்காட்சியை இழந்து உலகியலோடு தொடர்பற்றுப் போகின்றார். உளச் சோர்வு அதனுடைய பல வடிவங்களிலும் ஒரு பொதுச் சீர்கேடாக இருக்கின்றது. ஐரோப்பியச் சமூகத்தில் இப்பிணி நான்கு சதவிகிதமாக இருக்கின்றது. பெரும்பாலும் பெண்கள் ஆண்களைவிட இரண்டு மடங்கு இதனால் பாதிக்கப்படுகின்றனர். பிள்ளைப் பேற்றுக்கு ஆளாகின்ற பெண்கள் பெரிதும் இப்பிணிக்கு ஆட்படுகின்றனர். அதனால்தான் இப்பிணியைப் பேறுகால உளப்பிணி என்று கூறுகின்றனர். பேறு கால உளச் சோர்வு (Puerperal depressions) என்றும் கூறுகின்றனர். உளப்பிணி சார்ந்த சோர்வு பெரும்பாலும் அறுபது வயதிலும், நரம்பு சார் சோர்வு முப்பது வயதிலும் உச்சக் கட்டத்தையடைகின்றன. இப்பிணி சில சமயங்களில் குழந்தைகளிடம் தாய்மார்கள் வெறுப்புக்காட்டும்படி செய்கின்றது.

இளமைக் காலத்தில் இன்ப விளையாட்டுகளில் சுதந்திரமாக ஈடுபட்டிருந்த பெண்கள் கருப்பம்தரித்தவுடன் சில கட்டுப்பாட்டுக்கு ஆளாக வேண்டியிருக்கின்றது. உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களும் மற்ற கட்டுப்பாடுகளும் அவர்களுக்கு ஒரு வகையான இன்னல்களாகவே தோன்றுகின்றன. நாளாக நாளாக பிரசவ வேதனை அவர்களுள் சிலருக்கு அச்ச எதிர்வினைகளை உண்டாக்குகிறது. அதிகமாகக் கற்பனை உலகத்தில் வாழ முற்படுகின்றனர். சிலருக்குத் திரிபுணர்ச்சிகளும் தோன்றக் கூடும். கருப்பக் காலத்தின் பிற்பகுதியில் எக்கழும் உளச் சோர்வும் சாதாரணமான அறிகுறிகளாகும். இந்த நிலைகள் பிறக்கப் போகின்ற குழந்தையிடமும் விளைவுகளை உண்டாக்கலாம். பிரசவம் நடைபெறுகின்ற போது அதிக வேதனைக்குச் சில தாய்மார்கள் இலக்காகின்றனர். அவர்களுள் சிலர் சிற்றின்ப நடவடிக்கையையும் வெறுக்கின்றனர். கணவன் மீதும் சினம் கொள்கின்றனர். பிரசவ வேதனைகள் சிலருக்கு மாற்று நரம்புத்தளர்ச்சி (Conversion Hysteria) அல்லது மாற்று உணர்ச்சி அதிர்ச்சி நோயை உண்டாக்கி, இரண்டு கால்களையும், தண்டு வடக்கோளாறுகளால் ஏற்படும் பக்கவாத நோய் (Paralysis) போல் இறுகப்பிணைத்து விடுகின்றன. பேறு காலப் பிணிகள் இவ்வாறு நரம்புப் பிணிகளாகவும் உளப்பிணிகளாகவும் பல நோய்களில் பரவியிருக்கின்றன. மு.இரா.

**துணை நூல்கள்:**


Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevalla Sons & Co., Private Limited , Bombay, 1972.

Morgan, C.T., King, R.A. and Robson, N.M., Introduction to Psychology, Tata-McGraw Hill Publishing Company Ltd., New Delhi, 1979.


**பேறு காலச் சலுகைகள்:** சருவ தேசத் தொழிலாளர் நிறுவனம் (I.L.O) சம ஊதியம், பணி வேறுபாட்டினைக் களைதல், பெண் தொழிலாளர்களுக்குச் சம நிலை ஆகியவற்றிற்கு ஆதரவளித்தது. அதைத் தொடர்ந்து, இரவில் பணியாற்றும் பெண்கள் தொடர்பாகவும், நிலத்தடியில் பணி செய்யும் பெண்கள் தொடர்பாகவும், பொதுவாகப் பணி செய்யும் பெண்கள் தொடர்பாகவும், அவர்களின் பேறு காலச் சலுகைகள் தொடர்பாகவும் பேராண்மைப்பேரவைகள் நடைபெற்றன. அத்தகைய பேரவைகளில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பெரும்பாலான நாடுகள் முடிந்த அளவு நிறைவேற்றின.

ஐக்கிய நாடுகள் சபையிலும், சருவ தேசத் தொழிலாளர் நிறுவனத்திலும் தீவிர உறுப்பினர் நாடான இந்தியா மேற்கண்ட பேராண்மைப் பேரவைகளில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிறைவேற்றியது. இந்தியாவின் அரசியல் சட்டத்தில், சமூக மாற்றம் ஏற்படத்தக்க வகையில் பல பகுதிகள் காணப்படுகின்றன. பெண்களின் தகுநிலை, அவர்களுக்குச் சம உரிமை ஆகியனவும் இதில் அடங்கும். சட்டத்தின் பல பகுதிகள் பெண்களின் நலனுக்காக இயற்றப்பட்டன. பெண்களின் நலனுக்காக இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள் பெண்களுக்குச் சம வாய்ப்பு

புகள், பொருளாதார உயர்வில் அவர்களது பங்கு ஆகியவற்றைத் தீவிரப்படுத்தின.

பெண்களுக்காக முன்னேற்ற நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்ட போதிலும், அவற்றின் முடிவு மன நிறைவளிப்பதாக இல்லை என்பது ஒரு புறமிருக்க, மறுபுறம், பெண்களின் துன்பங்கள் தொடர்கதை யாகிக் கொண்டிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சியில் கூட அவர்களது நிலை மிகவும் மோசமானதாகக் காணப்படுகிறது. பொது ஈடுபாட்டு விகிதமும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. தொழில் நுட்பம் மிகும்போது முதலில் வேலையிழப்பவர்கள் பெண்களாகத்தான் இருக்கின்றார்கள். இவ்விதத்தில் பெண்கள் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றனர். அரசியல் சட்டங் களும், பல்வேறு சட்ட நிருவாக நடவடிக்கைகளும் பெண்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவு பயனளிக்க வில்லை.

மேலும், பெண்கள் குழந்தை பெறுவதோடு, குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பையும் பெரு மளவு ஏற்றுக் கொள்கிறார்கள். அதனால், அவர் களின் வேலை வாய்ப்புகள் பாதிக்கப்பட்டு வருகின் றன. பேறு காலத்தில் சலுகைகள் கொடுப்பதால், இம்மாதிரிச் சலுகைகள் ஓரளவிற்குப் பெண்களுக்கு உதவுகின்றன. இம்மாதிரிச் சலுகைகள், குழந்தையின் நலத்தையும் தாயின் நலத்தையும் பாதுகாக்கின்றன. மேலும், இச்சலுகைகள் பெண் தொழிலாளிகளின் வேலைக்கும் பாதுகாப்பு அளிக்கின்றன.

தொழிலாளர்கள் ஈட்டும் இழப்பை ஈடுகட்டச் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் காணப்படுகின்றன. அதுபோன்று பெண்கள் குழந்தைப்பேறு சமயங்களில் வேலை செய்ய இயலாமல் இழப்பு ஏற்படும் சமயங் களிலும் அதற்கெனச் சமூகப் பாதுகாப்புத் திட்டங் கள் தேவைப்படுகின்றன. பேறு காலத்தில் வேலை இழப்பால் பெற முடியாத ஊதியத்திற்காகவும் தாய்-குழந்தை நலனுக்காகவும் அத்தகைய சமூகப் பாது காப்புத் திட்டங்கள் தேவையாக இருந்தன.

ஐரோப்பிய நாடுகளிலும், பொதுவுடைமை நாடுகளிலும், பேறு காலச் சலுகைகள் மீது மிகுதி யாகவே கவனம் செலுத்தப்பட்டது. இந்தியாவிலும் பேறு காலச் சலுகைகள் மீது ஓரளவு கவனம் செலுத்தப்பட்டது. பேறு காலச் சலுகைகளின் குறிக் கோள் என்னவெனில் கருத்தரித்த நிலையிலும் குழந்தை பெற்ற பின்னரும் தாயின் நலம் காத்திடு தல், குழந்தையின் நலத்தைப் பேணுதல், அக்காலக் கட்டத்தில் அவர்களது வருமானம் பாதிக்கப்படா மல் இருத்தல், கருத்தரிக்கும் சமயத்தில் மட்டுமன்றி, குழந்தையைப் பாதுகாக்கும் காலக் கட்டத்திலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் ஆகும்.

பொருளாதாரத்தில் பெண்களின் ஈடுபாடு, பெண்களின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி சமூகத்தில் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். இன்னும் சொல்லப் போனால், வேலையில்லாத் திண்டாட்டச் சூழ்நிலையிலும் பெண்களுக்கு வேலை என்பது இன்றியமையாத ஒன்றாகும். இதன் பொருள் அவர் களுக்குப் பேறு காலச்சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

இந்தியாவிலுள்ள பல மாநிலங்கள் 1930-ஆம் ஆண்டிலிருந்தே பேறுகாலச்சலுகைகள் அளிக்கச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டன. அந்தச் சட்டங்கள் தவிர மத்திய அரசிலிருந்தும் மூன்று சட்டங்கள் நிறை வேற்றப்பட்டன. அவை, 1941-ஆம் ஆண்டுச் சுரங்கத் தொழிலாளர் பேறு காலச் சட்டம் (Mines Maternity Benefit Act, 1941), 1948 - ஆம் ஆண்டு மாநிலத் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் (Employees State Insurance Act, 1948), 1951 - ஆம் ஆண்டுத் தோட்டத் தொழிலாளர் சட்டம் (Plantation Labour Act, 1951) என்பனவாகும். ஆனால், இச்சட்டங் களைப் பொறுத்தவரை ஒரே சீரான அமைப்பு முறை காணப்படவில்லை. ஒரே சீரான அமைப்புக்காக மத்திய அரசு 1961-இல் பேறு காலச் சலுகைகள் சட்டம் (Maternity Benefit Act,1961) எனத் தனி யாக ஒரு சட்டம் கொண்டுவந்தது.

பேறு காலச் சலுகைகள் சட்டம் இந்தியா முழுமைக்கும் அமலுக்கு வந்தது. தொழிற்சாலைகள், சுரங்கங்கள், தோட்டங்கள், அரசு சார்ந்த மற்ற நிருவாகங்கள் ஆகியவற்றுள் பணிபுரியும் பெண் தொழிலாளிகளுக்கு அது பொருந்தியது.

சில பகுதிகள் இந்த இரண்டு சட்டத்திலும் முரண்படுவதால், 1972-ஆம் ஆண்டில் பேறு கால்ச் சலுகைகள் சட்டம் திருத்தப்பட்டது. திருத்தப்பட்ட படிவத்தின்படி, மாநிலத் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்படி சலுகைகள் பெறும் பெண்களும், பேறு காலச் சலுகைகள் சட்டத்திற்குள் அடங்குவர். மேற்கண்ட இரண்டு சட்டங்களின்படி பெண் தொழி லாளர்கள் பேறு காலச் சலுகைகள் பெற வேண்டு மானால், அந்நிறுவனத்தில் 160 நாள்கள் வேலை செய்திருக்க வேண்டும். ஆனால், மாநிலத் தொழிலா ளர் இழப்பீட்டுச் சட்டத்தின்படி தகுதி பெற வேண்டுமானால், இழப்பீட்டிற்குத் தம்மைப் பதிவு செய்திருக்க வேண்டும். மேலும் குறைந்த அளவு 13 வாரங்கள் கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும்.

பேறு காலச் சலுகைகள் சட்டப்படி, பெண் தொழிலாளருக்கு அதிக அளவு 12 வாரம் வரை விடு

முறை கிடைக்கிறது. முதலில் குழந்தை பிறப்பதற்கு முன்னர் 6 வாரமும் குழந்தை பிறந்தபின்னர் 6 வாரமும் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்றிருந்தது. ஆனால், அண்மைக் காலத் திருத்தப்படி குழந்தை பெறுவதற்கு முன்னர்க் குறைவாகவும், குழந்தை பிறந்தபின்னர் மிகுதியாகவும் எடுத்துக் கொள்ளலாம் என்றாகியது.இக்காலக்கட்டத்தில் வழக்கமாகக் கிடைக்கும் ஊதியம் கிடைக்கும். இந்தக் காலத்தில் தாய் நோய் வாய்ப்பட்டாலோ, குழந்தை பிறப்பதில் சிக்கல் ஏற்பட்டாலோ, குறைப்பிரசவம் ஏற்பட்டாலோ மேலும் ஒரு மாதம் வரை விடுமுறை எடுத்துக் கொள்ளலாம். மகப்பேற்றின்போது தாய் இறந்து போனால், இறந்த நாளிலிருந்து, ஆறு வார காலம் வரை, முழுச் சம்பளம் பெறத் தகுதியுடையவர் ஆவார். அப்பெண் தொழிலாளரின் அதிகார முறையிலான ஆளிடம் அப்பணம் சேர்ப்பிக்கப்படும். பேறு காலச் சலுகைகள் சட்டப்படி இதனை முதலாளிகள் மீறினால், அவர்களுக்கு மூன்று மாதச் சிறைத் தண்டனையும், ரூ. 500 வரை பொருள் தண்டமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தைச் செயற்படுத்த மாநில அரசாங்கங்களே முழு அதிகாரம் பெற்றவையாகும். மத்திய அரசு அவ்வப்போது தகுந்த அறிவுரைகள் வழங்கலாம். இச்சட்ட விதிப்படி, ஒவ்வொரு ஆண்டும், நிருவாகத்தினர், தங்கள் நிருவாகத்தில் வேலை செய்யும் பெண்களில் எத்தனை பேருக்கு இச்சட்டம் பொருந்தும், எத்தனை பெண்கள் பேறு காலச் சலுகைக்காக மனுச் செய்திருந்தார்கள் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க வேண்டும். பின்னர் அவற்றை ஆண்டறிக்கையாக அரசு வெளியிடும்.

மாநிலத் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டப்படி சலுகை பெறுவோர், மருத்துவப் பரிசோதனை, மருந்துகள், பிரசவ காலத்தில் மருத்துவ சிகிச்சைகள் ஆகியவற்றை அவர்களால் நடத்தப்படும் மருத்துவ மனைகளில் இலவசமாகப் பெறலாம். இந்த மருத்துவ மனைகள் இல்லாத ஊர்களில் அதற்காகப் பணம் பெற்றுக் கொள்ளலாம்.

பேறு காலச் சலுகைகளுக்காகப் பொருத்தமான சான்றிதழ்களைப் பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகளிடமிருந்து பெற்று, குறிப்பிட்ட அதிகாரிகளிடம் அளிக்கவேண்டும். அவை போக 1948 – ஆம் ஆண்டுத் தொழிற்சாலைகள் சட்டப்படியும் பல சலுகைகளைப் பெண் தொழிலாளர் பெறுகின்றனர். அதன்படி பெண் தொழிலாளர்களுக்காகத் தனியாகக் குளியலறை, கழிவறை, தனியான ஓய்வறை ஆகியனவும் 30 பெண்களுக்கு மேல் பணி செய்தால், அவர்கள் குழந்தைகளுக்காகத் தனி வசதிகளையும் தொழிற்சாலைகள் செய்துதர வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, பிற மேலை நாடுகளைப் போலப் பெண்களுக்குப் பேறு காலச் சலுகைகள் வழங்கப்படுவதில்லை. இங்குச் சலுகைகள் குறைந்த அளவிலேயே வழங்கப்படுகின்றன. இது குறைந்த வேக வளர்ச்சியினாலோ பணப் பற்றாக் குறையினாலோ இருக்கலாம். எல்.ஜெ.

**துணை நூல்கள்:**

**Boserup Esther**, Women in the Labour Market, Research series No: 21, International Institute for Labour Studies, 1976.

Indian Council for Social Science Research ICSSR, Status of Women in India, A Synopsis of the Report of the National Committee, 1975.

**Mathrubutham, R.** and **Srinivasan, R.**, The Maternity Benefit Act, Wadhave & Co., New Delhi, 1980.

**Prakasa Rao, V.V.**, Marriage, The Family and Women in India, Heritage Publishers, New Delhi, 1985.

**பேறு முன்கால இன்னல்கள்:** எல்லாப் பண்பாடுகளிலுமே சில குழந்தைகள் பிறக்கின்ற போது சில உடல் குறைபாடுகளோடு பிறக்கின்றன. முன்னேற்றமடைந்துள்ள பண்பாடுகளிலும் சமூகங்களிலும் அதனுடைய வீதம் குறைவாக இருக்கலாம். ஆனால், பிற்போக்கான பண்பாடுகளிலும், வாழ்க்கை வசதிகளில்லாத சமூகங்களிலும் இந்த வீதம் மிகுதியாக இருக்கின்றன. அருவருப்பான உடலமைப்பும் உருத்திரிபும், முழுமையுறாத உடலமைப்புகளும் குறிப்பாக முடமானநிலை, கூனல்முதுகு, செவிடு, குருடு ஆகிய குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றிற்குக் காரணம் ஒன்று உள்ளார்ந்ததாக இருக்கலாம் அல்லது விபத்தாக இருக்கலாம். இந்த நிலைகள் பல மனிதர்களைச் சித்திரவதைக்கு ஆளாக்குகின்றன. அத்தகைய உடல் குறைபாடுகள் பிறப்பு மரபியல் சார்ந்த குறைபாடுகளிலிருந்தோ, சூழ்நிலை சார்ந்த நிலைமைகள் பிறப்புக்கு முன்னும் பின்னும் பாதகமாக இயங்குவதிலிருந்தோ விளையலாம். சோலமோன் (Solomon, 1973) என்பவரின் ஆராய்ச்சிப்படி 160க்கு 7 குழந்தைகள் அமெரிக்காவில் உடல் குறைபாடுகளோடு பிறக்கின்றன. அதில் மூன்றில்ஒன்று மரபு வழியாக ஏற்படுகின்ற குறைபாடுகளாலாகும். அவை உள்ளம் சார்ந்தனவும் உடல் சார்ந்தனவுமான குறைபாடுகளாகும். ஆறு குழந்தைகள் வெறி மயக்க

மருந்தினாலும் அல்லது நோயினாலும்,ஒருகுழந்தை இன்னதென்று தெரியாத காரணங்களாலும் குறைபாடுகளோடு பிறக்கின்றனர். இந்த விதமான பழுதான நிலைமைகள் சில பிறப்பினால்தான் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மற்றவற்றிற்கு உளக் குறைபாடு, நாளமிலாச் சுரப்பித் தொந்தரவுகள், இருதயக்கோளாறுகள் காரணம் என்றுதெரிகின்றது. சில மாதங்களுக்குப் பிறகு அல்லது ஓராண்டுக்குப் பிறகுதான் காரணம் கண்டுபிடிக்க முடியும். இப்படிப் பட்ட சீர்கேடுகள் சிறிதளவேயாகும். ஆனால், அவை மிகவும் கடுமையான கருமுதலமைவுடைய குறைபாடுகளாக அமைகின்றன. அது குழந்தைப் பருவத்தில் இறப்பை உண்டுபண்ணுகின்ற ஐந்து முக்கியகாரணங்களுள் ஒன்றாக அமைகின்றது. அமெரிக்காவில் மட்டும் ஐந்து இலட்சம் இறப்புகள் ஆண்டொன்றுக்கு இதனால் ஏற்படுகின்றன.

பேறு முன்கால இன்னல்கள் (Prenatal hazards) குழந்தைகளைக் குறைபாடுகளுடன் பிறக்கும்படி செய்துவிடுகின்றன. ஊட்டவளக் குறைவுகளினாலும் நோய்களினாலும், வெப்ப அலைகள் தாக்குவதனாலும், வெறி மயக்க மருந்தினாலும், மனவெழுச்சி இறுக்கத்தினாலும் பிறக்க வேண்டிய காலத்திற்கு முன்பே சில குழந்தைகள் பிறந்து விடுகின்றன. பிறப்பு இன்னல்களோடு மிகப் பொதுவாகத் தொடர்புடையவை தாமதித்த மனச்சீர்கேடுகளாகும். இந்தச் சீர்கேடுகள் பெரும்பாலும் பின்தங்கிய உள்ளம், அளவுக்கு மிஞ்சிய நடவடிக்கை, மனவெழுச்சி சார்ந்த இன்னல்கள் ஆகியனவாகும். இவை முதிர்ச்சியடையாத நிலையின் விளைவுகள். முதிர்ச்சியடையாத நிலை என்பது கருக்கொண்டிருந்த காலம் 280 நாள்களுக்குக் குறைவாக இருத்தலாகும்;அல்லது பிறக்கும் போது குழந்தையின் எடை இரண்டரைக் கிலோ கிராமிற்குக் குறைவாக இருத்தலாகும். கருவுற்றிருந்த காலத்தில் தாய்மார்கள் கடுமையான மனவெழுச்சி இறுக்கத்திற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டால் முதிர்ச்சியடைவதற்கு முன்பே குழந்தைகள் பிறந்து விடுகின்றன. முழுக் காலமும் கருவிலிருந்த குழந்தைகளின் வரலாற்றில்கூடத் தாய்மைக் காலத்தில் கடுமையான மன இறுக்கம் ஏற்பட்டிருந்தால் பிந்திய கருப்பக்காலத்தில் முதிர்ந்த கருவில் மிகுநடவடிக்கைகள் ஏற்படுகின்றனவெனத் தோன்றுகின்றது. பிறப்பிற்குப் பிறகு இவ்விதமான சிக்கல்கள்,உணவு கொள்ளும் இன்னல்கள், தூக்கச்சிக்கல்கள்,எரிச்சல் தன்மை, பொருத்தப்பாட்டில் மற்ற இன்னல்கள் ஆகியவைகளில் வெளிப்படுகின்றன. பெற்றோர்களின் சமூக, பொருளாதார நிலை, முதிர்ந்த கருவோடும் பிறப்பு இன்னல்களோடும் தொடர்புடையதாக இருக்க வேண்டுமென்று சிலர் எதிர் பார்த்தது உண்மையாக இருக்கின்றது. தாழ்ந்த சமூக, பொருளாதார நிலையிலிருக்கும் தாய்மார்களுக்கு இத்தகைய பிறப்புச் சார்ந்த இன்னல்கள் பல மடங்கு மிகுதியாக இருக்கின்றன. அதன் காரணமாக முதிர்ந்த கரு சரியான முறையில் பாதுகாக்கப்படுவதில்லை என்று தோன்றுகின்றது. பல்வேறுவகையான உடல் சார்ந்தனவும், உளவியல் சார்ந்தனவுமான நிலைமைகள் கருவுற்றிருக்கும் காலத்தில் தாய்மார்களைப் பாதிப்புறச்செய்கின்றன. இது குழந்தையின் வளர்ச்சியிலும் பொருத்தப்பாட்டிலும் ஆழமான விளைவுகளை உண்டாக்க முடியும்.

விபத்துகளும் நோய்களும் கூட மிக அதிகமான உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துகின்றன. விபத்துகளினால் ஏற்படுகின்ற உயிர்ச் சேதங்கள் இன்றைய நாகரிகத்தில் புறக்கணிக்கப்பட்ட நோயாக இருக்கின்றன. மேலும், இருதயக் கோளாறுகள் அல்லது கடுமையான உடல் சார்ந்த ஊறுபாடுகள் இளமைக் காலத்திலேயே மிகுதியான உயிர்ச் சேதங்களை விளைவிக்கின்றன. பிறப்பிற்குப்பின் ஏற்படுகின்ற அகாலமரணங்களுக்கடியில் பிறப்புக்கு முன்னான காரணங்கள் மறைந்திருக்கின்றன. நாள்பட்ட நோய்களும் மனிதர்களுடைய வாழ்க்கைக் காலத்தைக் குறைத்து விடுகின்றன.

வளர்ச்சி சார்ந்த உளவியல், பிறப்புக்கு முன்னான நிலைமைகளை நன்கு விளக்குகின்றது. பேற்றுக்கு முன் குழந்தையின் வளர்ச்சி, பிறப்பு மரபியலாலும் வளர்ச்சிச் செயல் முறையாலும் நிருணயிக்கப்படுகின்றது என்று அறிவியலார் ஒரு காலத்தில் நினைத்துக் கொண்டிருந்தனர். பிறக்கும் போதுதான் அனுபவமும், கற்றலும் வளர்ச்சியில் செல்வாக்குப் பெறுகின்றன என்றும் நினைத்தார்கள். ஆனால், இன்று இத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், பேற்றுக்கு முன்னான வளர்ச்சிதான் மிகச் சிக்கலான செயல்முறை என்றும்,பிறக்கப்போகின்ற குழந்தைக்கு அதனுடைய சூழ்நிலைதான் மிக ஆழமான விளைவை உண்டாக்குகின்றது என்றும் காட்டுகின்றது. கருவுற்று இரண்டு வாரங்கள் ஆனபிறகு குழந்தை தன் தாயாரோடும் வெளியுலகத்தோடும் அதனுடைய நஞ்சுக் கொடி (Placenta) மூலம் தொடர்பு கொள்ளுகின்றது. தாயின் உடலில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. உடல் வேதிமம் சார்ந்த ஊட்டச் சத்து, நச்சுமருந்துகள், நோய்கள், நாள்பட்ட அழுத்தம், கிளர்ச்சி முதலியவை கருவிலிருக்கும் குழந்தையை நேரடியாக நஞ்சுக்கொடி மூலமாகப் பாதிக்கச் செய்கின்றன.தேர்ந்தெடுத்த உயிரியல் சார்ந்த தடை, தாயின் உடலில் சில பொருள்கள் கருவிலிருக்கும் குழந்தையைச் சென்றடையாமலிருக்கும் பொருட்டு வைக்கப்படுகின்றது. ஆனால், அதனால் கருவிலிருக்கும் குழந்தைக்கு

உண்மையில் என்ன தேவையோ அந்தப் பாதுகாப்பை அளிக்க முடிவதில்லை. நல்ல ஊட்டச்சத்து கருவிலிருக்கும் குழந்தைக்கும் மக்களைப் போன்றே தேவைப்படுகின்றது. ஊட்டமின்மைதான் உலக முழுவதுமுள்ள சிக்கலாக இருக்கின்றது. ஊட்டச்சத்தின்மை குறிப்பாக வளர்ச்சியுற்று வருகின்ற நாடுகளில் விரிந்து பரவியுள்ளது என்றாலும், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் கருவுற்றிருக்கும் தாய்மார்களின் உணவு வகைகள் போதாக் குறையாகவே இருந்து வருகின்றன. பேறு முன்காலத்தில் ஊட்டச் சத்தின்மையின் உடல் சார்ந்த விளைவுகள், கருவில் வளர்ந்துள்ள குழந்தையின் மீது ஆழமான உளவியல் பாதிப்புகளை உண்டாக்க முடியும். கடுமையான ஊட்டச் சத்திழப்புக்கு ஆளான குழந்தைகள் சிறந்த ஊட்டச் சத்துப் பெற்ற குழந்தைகளை விடச் சிறிய அளவு மூளையுடனும் சிறிய உடலுடனும் பிறக்கலாம். இளங்குழவிகள் பேற்றுக்குமுன்னும் பேற்றுக்குப்பின்னும் ஊட்டச் சத்தின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மூளைகள் இயல்பான குழந்தைகளை விட 60 விழுக்காடு குறைவாக இருக்கின்றன. இது மேற்கொண்டு, உளவியல் செயல் முறைகளில் மிகவும் பரவலான பாதிப்புகளை உண்டாக்க முடியும். கரு முதிர்ந்த நிலையிலுள்ளபோது குழந்தைகள் புரதச் சத்தை இழந்திருக்குமானால் அவர்கள் இயல்பு நிலையிலிருந்த குழந்தைகளை விட நுண்ணறிவுச் சோதனைகளில் மிகக் குறைந்த கெலிப்பு எண்களையே பெறுகின்றனர். இந்தக் குறைவான கெலிப்பு எண்கள் பழுதான நுண்ணறிவுச் செயல்முறையாகும். இந்தப் பழுதைச் சரி செய்வது இயலாது.

இவைகளன்றி, நச்சு வெறிச் சரக்குகள் (Drugs) பேற்றுக்கு முன்னான குழந்தைக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியன. தாயார் மிக அதிகமாக மதுபானம் அருந்துபவராக இருந்தால், அவருக்குப் பிறக்கின்ற குழந்தை மந்த மூளையுடன் பிறக்கலாம்; இயல்புக்கு மேலாகச் சிறியதாக இருக்கும்; வளர்ச்சி மிகத் தாமதமாக இருக்கும்; மற்ற இயல்பிறழ்ந்த பண்புகளும் காணப்படும். பிறப்புக்கு முன் தாயார் மயக்க மருந்துச் சரக்குகளைப் பயன்படுத்துபவராக இருந்தால் அவருக்குப் பிறக்கின்ற குழந்தை அந்தக்கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகலாம். பிறந்த காலத்திலிருந்து பின்வாங்குதலின் அறிகுறிகள் காணப்படும். தாயார், பிறப்புக்கு முன்பு, தீவிரமாகப் புகை பிடிக்கின்றவராக இருந்தால் பிறக்கின்ற குழந்தை போதிய வளர்ச்சியின்றிப் பிறக்கும். அதாவது கருவில் முழு முதிர்ச்சியடைவதற்கு முன்பே பிறந்து விடும்.

சில நோய்களும் கருவிலுள்ள குழந்தைக்கு ஊறு விளைவிக்கலாம். குறிப்பாகக் கருவுற்ற முற்பகுதியில் இது நிகழலாம். செருமன் அம்மை (Rubella) மிகவும் ஆபத்தானது. இது பெரும்பாலும் கண்களைக் கெடுத்து விடுகின்றது. இருதயம் சரியாக அமைவதில்லை. செவிடும் உளக் குறைபாடும் ஏற்படும். மற்றநோய்களான சருக்கரை வியாதி, கிரந்தி நோய் முதலியனவும் முதிர்ந்த கருவிலுள்ள குழந்தைக்குக் கடுமையான பாதிப்புகளை உண்டாக்கலாம். நல்ல உடல் நலத்துடன் குழந்தை பெறவிரும்புகின்ற தாய் மிகுந்த புரதச் சத்துள்ள உணவைச் சமநிலையாக உட்கொள்ள வேண்டும். மருந்துச் சரக்கு எதையும் உட்கொள்ளக்கூடாது. இரண்டாம் உலகப் போரின் போது கருவிலுள்ள குழந்தையின் மீது தாயாரின் அழுத்த அனுபவங்கள் நேரடியாக எல்விதமான பாதிப்புகளை உண்டாக்குகின்றனவென்பது ஆராய்வில் காணப்பட்டது. சோண்டாசு (Sontagt, 1944) என்பவரின் ஆராய்ச்சிப்படி, கருவுற்றிருக்கும் தாய்மார்கள் அச்சமும் ஏக்கமும் சினமும் கொண்டிருப்பார்களானால், அவர்களுடைய குழந்தைகள் மிகுதியான இருதயத் துடிப்புள்ளவர்களாகவும், செரிமானச் சிக்கலுடையவர்களாகவும் இருப்பார்கள். மேலும் அக்குழந்தைகள் பிறக்கும்போது குறைவான எடையுடையவர்களாகவும் இருப்பர். சில மாதங்களுக்கு மிகு நடவடிக்கையுள்ளவர்களாகவுமிருப்பர். நஞ்சுக்கொடி மூலம் கருவிலுள்ள குழந்தைக்குப் பாதுகாப்புக் கொடுத்து உதவினால் பேறுமுன்காலக் குழந்தைகள் கடுமையான சிக்கல்களைச் சந்திக்காமல் பிறக்க முடியும். பெரும்பாலான முயற்சிகளில் பாதுகாப்பு முறைகள் நல்லமுறையில் செயற்பட்டிருக்கின்றன. அதனால் நல்ல உடல் நலமும் மன நலமுமுள்ள குழந்தைகள் பிறந்திருக்கின்றன. மு.இரா.

**துணை நூல்கள்:**

**Colemen**, J.C., Abnormal Psychology and Modern Life, D.B.Taraporevalla Sons and Co., Private Limited, Bombay, 1972.

**Darby**, J.M., **Glucksberg**.S., **Kinchla**, R.A., Psychology, Prentice - Hall, INC., New Jersey, 1986.

**McNeil**, E.B., **Rubin**, Z., The Psychology of Being Human, Canfield Press, San Francisco, 1977

**Morris**, C.G., Psychology, An Introduction, Prentice-Hall, INC., New Jersey, 1982.

**பை** உதடுகளைத் திறந்து வரும் பகர ஒலியை, வாயை நன்றாக இளித்து அடக்கி ஒலித்தால் பை என்ற ஒலி தோன்றும்.

ஓரெழுத்தொருமொழியாக, இது பசுமை, இளமை, அழகு, உடல் வலி, துணிப்பை, பாம்புப் படம், உடலுறுப்பு முதலிய பொருள்களைத் தரும். வினையாக வழங்கினால் படம் விரித்தல், பொங்குதல், மிகுதல், என்ற பொருள்களைத் தரும்.

**உருவம்:** இடப்புறம் இருகோடுகளைத் தொடங்கிய இதன் பழைய உருவம், குகைக் கல்வெட்டுகளில் கி.மு. 3 – ஆம் நூற்றாண்டு முதல் படிப்படியாக வளையத்தொடங்கி இரு கொம்புகளாக மாறின. ... ...





இவ்வெழுத்து கி.பி. 10 – ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சோழர் கல்வெட்டுகளில் அடுத்தடுத்து எழுதப்பட்ட இரு கொம்புகளோடு உருவாயிற்று ... ... ... ... ...



இப்படியே எழுதப்பட்ட இந்த எழுத்து மிகப் பிற்காலத்தில் இணைத்து எழுதப்பட்டது. ... ... .. ..



வட்டெழுத்தில் மேல்நோக்கிய வளைவாக வந்தபின் ஒரு சிறு கோடு பகரத்துடன் இணைக்கப்பெற்றது. ... ... ...



இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. அதுவே இறுதி வரை உள்ள வடிவம் ...

கே.ஜி.கி.

***பைக்கால் ஏரி*** உருசியா நாட்டுச் சைபீரியாவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மிகப் பெரிய ஏரி. இந்த ஏரி உலகிலேயே மிகுதியான தண்ணீர் அளவைக் கொண்ட மிக ஆழமான ஏரியாகும். பரப்பளவில் உலக ஏரிகளில் இது ஒன்பதாம் இடத்தையும் கொள்ளளவில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. 31500 ச.கி.மீ. பரப்புள்ள இந்த ஏரியின் நீளம் 636 கி.மீ. ஆகும். உலக மேற்பரப்பில் கிடைக்கும் மொத்த நன்னீரில் ஐந்தில் ஒரு பாகம் இந்த ஏரியில்தான் உள்ளது. உருசியாவில் கிடைக்கும் மொத்த நன்னீரில் ஐந்தில் நான்குபாகம் இந்த ஏரியின் மூலம் கிடைக்கிறது. இந்த நீரை செலெங்கா, பார்க்கசின் போன்ற 336 ஆறுகளும் சிற்றாறுகளும் இந்த ஏரியில் நிரப்புகின்றன.

பைக்கால் ( Baykal or Baikal) ஏரிப்பகுதி மிகத் தாழ்வான பள்ளத்தில் அமைந்த பகுதியாகும். இதைச் சுற்றி அமைந்துள்ளவை ஏறத்தாழ 2000 மீட்டர்

உயரமுள்ள மலைகளாகும். ஏரியின் அடிப்பகுதியான படிவுப் பாறை 610 மீட்டர் கனமுள்ளதாகும். ஏரிக்கரைப் பகுதியில் அழிந்த எரிமலைப் பகுதிகள் உள்ளன. பூமியின் அதிர்வுகள் இப்பகுதியை இன்றும் எப்போதாவது தாக்குவதுண்டு. கி.பி. 1862-ஆம் ஆண்டு ஏற்பட்ட பயங்கர நில அதிர்வு, செலேங்கா நதிக் கழிமுகப்பகுதியின் வட பகுதியில் 200 சதுர கி.மீ.க்குக் கட்டுமீறிய வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தியது. அது மட்டுமன்றி அவ்வதிர்வு, பைக்கால் பகுதியில் ஒரு புதிய விரிகுடாப் பகுதியையும் ஏற்படுத்தியது. இது புரோவல் விரிகுடா எனப்படுகிறது. காலப் போக்கில் உடைந்த இங்குள்ள பூமியின் மேற்பகுதியான பாறைப்பகுதிகளில், கனிமச் சத்துகள் கலந்த வெப்பமான நீரூற்றுகள் உண்டாகியிருக்கின்றன.

இந்த ஏரியின் சுற்றுக்கரைகள் மேற்குப் பக்கம் மிகச் செங்குத்தாகவும், கிழக்குப் பக்கம் ஓரளவு செங்குத்து அமைப்புக் குறைந்தும் காணப்படுகின்றன. இதன் அடிப்பாகத்தில் சில இடங்களில் 55 மீட்டர் ஆழமுள்ள சிறு சிறு பள்ளங்கள் உள்ளன. வளைந்து நெளிந்து செல்லும் ஏரிக்கரை ஏறத்தாழ 2080 கி.மீ. நீளமுள்ளது. அக்கரையின் சில பகுதிகள் பிளவுபட்டுக் காணப்படுகின்றன.

பைக்கால் பகுதி 27 தீவுகளைக் கொண்டிருக்கிறது. அவற்றில் ஐந்து தீவுகள் அவ்வப்போது நீரால் மூழ்கடிக்கப்படுகின்றன. இந்தத் தீவுகளில் மிகப் பெரியவை ஒல்கான், போல்சாய், உசுகனி ஆகியவையாகும். பொதுவாக ஏரியின் பெரும்பகுதி செலேங்கா நதியாலும், பூமிக்கடியில் உள்ள ஊற்று நீராலும் நிரப்பப்படுகிறது. ஏரியின் நீர் மட்டம் ஆண்டில் ஆகசுட்டு, செப்டம்பர் மாதங்களில் உயர்ந்தும், மார்ச்சு, ஏப்பிரல் மாதங்களில்3/4அல்லது 1 மீ. குறைந்தும் காணப்படுகிறது.

பைக்கால் ஏரிப்பகுதியின் வெப்ப நிலை சுற்றுப் புறப்பகுதியை விடக் குறைந்து உள்ளது. சனவரி, பிப்பிரவரி மாதங்களில் வெப்பநிலை சராசரியாக -2°பா. (-19°செ.) ஆகவும், ஆகசுட்டு மாதத்தில் சராசரியாக 52°பா. (11°செ.) ஆகவும் உள்ளது. ஏரி நீர் சனவரி மாதத்தில் உறைந்து மே மாதத்தில் உருகும் நிலையை அடைகிறது. ஆகசுட்டு மாதத்தில் ஏரியின் மேற்பகுதி நீரின் வெப்பநிலை 55°பா. ஆக உள்ளது. ஏரிக்கரைப்புறமுள்ள நீர்த் தொகுதிகளின் வெப்ப நிலை 68°பா. ஆகவுள்ளது. ஏரியின் அலைகள் சிலசமயங்களில் 5 மீட்டர் உயரம் எழும்புகின்றன. ஏரி நீர் ஏறத்தாழ 40 மீட்டர் ஆழம் வரை தெளிவாக இருக்கிறது. இந்நீரில் கனிமச்சத்துகள் ஓரளவு கலந்துள்ளன. இந்நீரில் உப்பின் கலப்பு மிகுதியாக இல்லை.

ஏரிக்கரையில் தாவரங்களின் வளர்ச்சியும், விலங்குகளின் வாசமும் மிகுதியாக உள்ளன. இப்பகுதியில் 600க்கும் மேற்பட்ட புதுமையான தாவரவினங்களும், 1200க்கும் மேற்பட்ட விலங்கினங்களும் உள்ளன. இந்த ஏரி நீரில் ஏழு வகை மீன் இனங்கள் வாழ்கின்றன. இதில் காளைத் தலை (Bull Head ) எனப்படும் கோட்டிடே குடும்பத்தைச் சார்ந்த மீன் இனங்கள் 25க்கும் மேற்பட்ட வகைகளில் உள்ளன. ஓமுல் சால்மன், கிரேலிங்கு, வெள்ளை மீன் ஆகிய மீன்கள் இந்த ஏரியில் மிகுதியாகப் பிடிக்கப்படுகின்றன. இவை தவிர மிகப்பெரிய மீனான சடர்செம், குட்டி போட்டுப் பால் கொடுக்கும் காமி போரிடே எனப்படும் பைக்கால் நீர் நாய்களும் இந்த ஏரியில் உண்டு. இவை தவிர இந்த ஏரிப்பகுதியில் 326க்கும் மேற்பட்ட பறவையினங்களும் உள்ளன.

பைக்கால் ஏரிக்கரையோரப் பகுதிகளில் அப்பிரகம் (Mica), சலவைக்கல் ஆகியவற்றை எடுக்கும் சுரங்கத் தொழிலும், காகித உற்பத்தித் தொழிலும், கப்பல் கட்டும் தொழிலும், மரம் அறுக்கும் தொழிலும் மீன் உற்பத்தித் தொழிலும் சிறப்பாக நடக்கின்றன. இந்தப் பகுதியில் கோர்யாசின்சுக்கு, காகுசி ஆகிய இடங்களில் கனிமச் சத்துகள் நிறைந்த நீரூற்றுகள் உள்ளன. நோய் தீர்க்கும் குணம் கொண்ட இந் நீரில் குளித்துப் புத்துணர்வு பெற மக்கள் பலரும் இங்கு வருகின்றனர். மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை இந்த ஏரியில் மரக்கட்டை அடுக்குகளை இணைத்துப் போக்குவரத்துக்குப் பயன் படுத்துகிறார்கள்.

இத்தகைய இயற்கையின் பரிசைக் காக்கவும், அதன் வளத்தைப் பேணவும் சோவியத்து அரசு அரிய முயற்சிகள் எடுத்து வருகிறது. தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களும், சுற்றுப் புறத்தூய்மைக் கேடுகளும், இந்த ஏரியைப் பாழ் படுத்தா வண்ணமிருக்க 1971-ஆம் ஆண்டு சூன் மாதம் உருசிய அரசு சட்டங்களை இயற்றியது.

பைக்கால் நல வாழ்வு நிலையம், ஏரிப்புற நிலை இயல்பு ஆராய்ச்சி நிலையம் போன்ற அறிவியல் நல வாழ்வு நிலையங்கள் இலிசுட்வியங்கா நகரத்தில் அமைந்துள்ளன. த.நா.வா.

**பைசாண்டியப்பேரரசு** உலகின் பழம்பெரும் அரசுகளுள் ஒன்றாகும். இது கிழக்கு உரோமானியப் பேரரசு எனவும் பெயர்பெறும். இப்பேரரசு கி.பி.330 முதல் கி.பி.1400 முடிய ஏறத்தாழ 1100 ஆண்டுகள் தொடர்ந்து நீடித்தது. பைசாண்டியப் பேரரசின் (Byzantine Empire) கலைத்தொண்டு உலகின் மற்ற பேரரசுகளின் கலைத் தொண்டைக் காட்டிலும்

பாராட்டுக்குரியது. இவர்களின் நுண்கலைத் தாக்கம் பிறநாடுகளிலும் பரவியது. இன்றும் இதன் தாக்கத்தைச் சோவியத்து நாட்டின் சில பகுதிகளில் காணலாம்.

உரோமானியப் பேரரசை கி.பி.284 முதல் கி.பி. 305 முடிய ஆண்ட தயோகிளீசியன் (Diocletian) என்பாரே முதன் முதலில் நிருவாக வசதிக்காகத் தம் பெரும் பேரரசைக் கிழக்குப் பகுதி, மேற்குப்பகுதி என இரு பகுதிகளாகப் பிரித்தார். பேரரசர் கான்சுடன்டைன் கி.பி.330-இல் இப்பேரரசின் தலைநகரத்தைக் கிழக்குப் பகுதியின் நகரான பைசாண்டியத்திற்கு (Byzantium) மாற்றினார். பைசாண்டியம் என்னும் பெயரையும் கான்சுடாண்டி நோபிள் என்று மாற்றினார். இன்றைய இசுத்தான்புல் நகரமே அன்றைய கான்சுடாண்டிநோபிள் ஆகும். கான்சுடன்டைன் இதற்குப் புதிய உரோம் எனப் பெயரிட்டார். பேரரசர் கான்சுடன்டைனுக்குப் பின்னர் இப்பேரரசை ஆண்ட மன்னர்களுக்குப் பரந்துபட்ட பைசாண்டியப் பேரரசைக் கட்டிக்காப்பது கடினமாயிற்று. எனவே, இப்பேரரசு கி.பி.395-இல் அதிகார முறையாகப்பிரிக்கப்பட்டது. கிழக்கில் உள்ள பகுதிகள் கான்சுடாண்டிநோபிளையும், மேற்கில் உள்ள பகுதிகள் உரோமையும் தலைமையிடங்களாகக் கொண்டு செயற்பட்டன. இவ்வாறு பிரிவினை செய்யப்பட்டு நூறு ஆண்டுகள் கழிந்ததும், உரோம் நகரம் மேற்குப் பகுதியில் பல இடங்களை இழந்தது. இத்தாலி, இசுபெயின், பிரான்சு, பிரிட்டன், வடமேற்கு ஆப்பிரிக்கா ஆகியவை இழக்கப்பட்ட பகுதிகளுள் குறிப்பிடத்தக்கவை ஆகும். இருப்பினும், கிழக்குப் பகுதியில் மட்டும் அரசர்கள் தம் பகுதிகளை இழக்காமல் ஆண்டு வநதனர். இவ்வாறு பைசாண்டியம் நகரில் உள்ள அரசர்களால் ஆளப்பட்டு வந்த உரோமானியப் பேரரசே, பைசாண்டியப் பேரரசு எனப்பட்டது. இவர்கள் தங்களை உரோமர்கள் என்றே கூறிக்கொண்டனர். எனவே, பைசாண்டியப் பேரரசு சிலகாலம், முன்பு போல் கிழக்கு உரோமானியப் பேரரசு என்றே கூறப்படலாயிற்று. கிழக்குப்பேரரசின் ஆட்சிமொழியும், பெரும்பாலும் கிரேக்க மொழியாகவே இருந்தது. உரோமர்களின் இலத்தீன் மொழி இவ்விடத்தை எக்காரணத்தாலோ பிடிக்க முடியவில்லை. இதற்குக் காரணம், பைசாண்டியம் கிழை நாட்டின் பண்பாட்டு மையமாகவும், கிரேக்கப் பண்பாட்டைக் கொண்டதாகவும் விளங்கியதேயாகும். 'இரண்டாம் உரோம்' எனப்பெற்ற கான்சுடாண்டிநோபிள், ஆசியா, ஐரோப்பாக் கண்டங்களின் வாயில் வழியில் அமைந்திருந்தது சிறப்பிற்குரியது.

பைசாண்டியப் பேரரசின் புகழ்மிக்க பேரரசர்களுள் சசுடீனியன் (Justinian, கி.பி. 527-565) மிகவும் குறிப்பிடத் தக்கவராவார். இவர் கி.பி. 527 – இல் அரியணையேறினார். இவர் மேற்குப் பகுதியையும் கிழக்குப் பகுதியையும் இணைப்பதில் வெற்றி கண்டார். படை வலிமையும் பேராற்றலும் கொண்ட இவர், திருச்சபையின் கோட்பாட்டுச் செயல்களில் கூடத் தலையிட்டு நிருணயிருக்கும் அதிகாரம் படைத்தவராக இருந்தார். கிரேக்க வைதிகத் திருச்சபையை இவர் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார். இப்பேரரசரது இறப்பிற்குப் பின்னர்ப் பைசாண்டியப் பேரரசு அண்டை அரசுகளின் தாக்குதலுக்கு இலக்காயிற்று. சுலாவு இனத்தவரும் துருக்கியரும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இப்பேரரசினைத் தாக்கினர். இருப்பினும், மாசிடோனிய வமிசத்தினரின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 867-1059) பைசாண்டியப் பேரரசு புகழின் உச்சக் கட்டத்தை எய்தியது. இதன் வலிமை யாங்கணும் பரவியது. கிரீட்டு, சைப்ரசு ஆகிய நாடுகள் வென்று கைப்பற்றப் பட்டன. தெற்கு இத்தாலி அரசுடன் இணைக்கப்பட்டது. பாலசுதீனத்தையும் செருசலத்தையும் மீட்டிடத் திட்டங்கள் தீட்டப் பட்டன. சுருங்கக்கூறின் இவர்களது ஆட்சிக்காலத்தில் பைசாண்டியத்தின் பெருமை பட்டொளி வீசிப் பறந்தது. கடலாதிக்கத்திலும் இவர்கள் மேம்பட்டு விளங்கினர்.

மேற்குப்பகுதி உலகிலேயே, கி.பி. 9,10,11- ஆம் நூற்றாண்டுகளில் பைசாண்டியம் வலிமை மிக்க, செல்வச் சிறப்பு மிக்க நாடாகத் திகழ்ந்தது. திறமையான பயிற்சியும் ஆற்றலும் மிக்க படை இப்பேரரசிடம் இருந்தது.மருத்துவப் பிரிவும் முதலுதவிப் பிரிவும் இருந்தன. வலிமைமிக்க கப்புற்படையும் இருந்தது. இவர்கள் அழகுமிக்க ஆடம்பரமான அரண்மனைகளில் வாழ்ந்தனர் என்பதனை அயல்நாட்டுத் தூதர்களின் குறிப்புகளால் அறியலாம். தங்கத்தாலும் சலவைக்கற்களாலும் ஆன சுவர்கள், தங்கச் சிங்கம் ஆகியவற்றைக் கண்டு வெளிநாட்டினர் வியப்புற்றனர். ஏகியா சோபியா (Hagia Sophia) என்னும் பேரழகும் கவர்ச்சியும் மிக்க மாதாகோயில் பற்றித் தூதுவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இம்மாதா கோயில் இன்றும்உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட இப்பேரரசும் காலப்புயலில் ஆட்டம் காணத் தொடங்கியது. பாரசீகர் இப்பேரரசை முற்றுகையிட்டனர். பலரது படையெழுச்சிகளை இவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. அவர்சு, பல்கர்சு, துருக்கியர் முதலான ஆசிய நாட்டினர் இப்பேரரசைக் கைக்கொள்ள முனைந்தனர். மாசிடோனிய வமிசத்தினருக்குப் பிறகு இப்பேரரசை ஆண்ட அரசர்கள் திறமையற்றவர்களாக இருந்த காரணத்தால் பேரரசு சிறுசிறு அரசுகளாகச் சிதைவுற்றது. வாரிசுரிமைப் போர்களினால் அரசு வலிமை

குன்றியது. அரசனுக்கெதிராக இளவரசன் கிளர்ச்சி செய்தான். இவ்வாறு நாடு வாரிசுரிமைப் போர்களில் அல்லற் பட்டபோதுதான் கி.பி. 1204-இல் சிலு வைப்போரில் ஈடுபட்டிருந்த மேற்குப்பகுதியினர் (Crusaders from the West) கான்சுடாண்டி நோபிளைக் கைப்பற்றிக் கொண்டனர். மேற்குப் பகுதியினரின் ஆதிக்கமும் கி.பி. 1261 வரை தான் நீடித்தது. ஆனால், பைசாண்டியம் மீண்டும் வலிமை பெறும் வாய்ப்பை இழந்தது. துருக்கியர்கள் சிறுகச் சிறுகக் கான்சுடாண்டிநோபிள் நகரைச் சுற்றியுள்ள பைசாண்டியப் பகுதிகள் அனைத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். உடலில்லாத தலை போன்று நாடற்ற தலைநகராகக் கான்சுடாண்டிநோபிள் விளங்கிற்று. இறுதியாக கி. பி. 1453-இல் செல்சுக்குத் துருக்கியர் கான்சுடாண்டிநோபிளையும் கைப்பற்றிப் பைசாண் டிய அரசினை அழித்துவிட்டனர். கான்சுடாண்டி நோபிள் எனும் பெயரும் மறைந்தது. இசுத்தான்புல் எனும் புதுப்பெயரும் இதற்கு இடப்பட்டது. பதி னொரு நூற்றாண்டுகள் தலைநிமிர்ந்து நின்ற இப் பேரரசு துருக்கியரின் பீரங்கிகளின் முன்பு சுக்கு நூறாகியது. இருப்பினும், பைசாண்டியப் பேரரசின் கலையும் இசையும் சாகாவரம் பெற்று விட்டன.

**வாணிகமும் தொழிலும்:** கான்சுடாண்டி நோபிளின் அமைவிடம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத் தின் அடிப்படையாக அமைந்தது. மத்தியதரைக்கடல், கருங்கடல் வழியே செல்லும் கப்பல்கள் கான் சுடாண்டிநோபிளைத்தாண்டியே செல்ல வேண்டி யிருந்தது. ஐரோப்பாவிலிருந்து மத்திய கிழக்கு நாடு களுக்குச் செல்லும் தலைமை வழி (Main Road) இதன் வழியே தான் சென்றது. எனவே, மன்னர் பொருள்களின் மீது வரிவிதித்து வருவாயைப் பெருக் கினர். வாசனைப்பொருட்கள், விலையுயர்ந்த கற்கள், மருந்துகள், மரங்கள் போன்றவை கீழ்த்திசை நாடு களிலிருந்து மேற்றிசை நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. பைசாண்டியத்தின் வழியாகக் கான் சுடாண்டிநோபிள், அந்தியோக்கு, தமாசுகசு, பெய் ரூட்டு, காரிந்த்து, சலோனிகா முதலான நகரங்கள் முன்னேற்றம் அடைந்தன. அணிகலன்களும், உலோகத் தொழிலும், தந்த வேலைப்பாடுகளும், ஆயுதங்கள் உற்பத்தியும் வளர்ச்சி பெற்றன. சீன நாட்டிலிருந்து பட்டுப் புழு கொண்டு வரப்பட்டுப் பட்டு நெசவுத் தொழில் வளர்ந்தது. வேளாண்மை, தொழில், வாணிகம் ஆகியன பெருகியதால் பைசாண் டியம் செல்வச் செழிப்புற்றது. ஆண்டொன்றுக்கு இதன் வருமானம் 600 மிலியன் தாலருக்குச் சமமானது என மதிப்பிடப்பட்டது.

**சமுதாயம்:** பைசாண்டியச் சமுதாயம் நகர சமு தாயத்தைக் கொண்டது. தலைநகரான பைசாண்டி யம் தொழில் வாணிகத்தில் மேம்பட்டு மத்திய கால வாணிக நகரங்களுள் புகழ் பெற்று விளங்கியது. வள மான சூழ்நிலையில் பிரபுக்களும் செல்வர்களும் நிலப் பிரபுக்களும் வணிகர்களும் நன்கு வாழ்ந்தனர். இவர் களுள் பலர் பண்பாடும் திறமையும் கொண்டு எடுத்துக்காட்டாக வாழ்ந்தனர். வணிகர்கள், உற்பத் தியாளர்கள் முதலான நடுத்தர வருக்கத்தினரின் வாழ்க்கை வளமுடையதாக அமைந்த போதிலும் பழைமைப் பண்பில் ஊறிக் கிடந்தது. உழவர்களின் நிலைமை சிறப்புடையதாக இல்லை. பைசாண்டியத் தின் வீழ்ச்சியின் போது இவர்கள் அடிமைகளாக மாறினர்.

**கலைச்சிறப்பு:கட்டடக்கலை:** பைசாண்டியப் பாணி யிலான கட்டடக்கலை உலகப்புகழ் மிக்கது. இவர்கள் கட்டடக்கலை வளர்ச்சியில் ஒரு பொற்காலத்தை உரு வாக்கினர். கட்டடக்கலையின் முதலாம் பொற்காலம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் பேரரசர் சசுடினியன் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. முதலாம் பொற்காலம் கி.பி. 527 – இல் முடிவடைகிறது. அக் காலத்தில் உருவாக்கப்பட்ட பேராயர் மாக்சி மிலிய னின் சிம்மாசனம் கலைப்பெட்டகமாகவே விளங்கு கிறது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டினதான அச் சிம் மாசனம் இராவென்னா தலைமைக் கோயிலில் (Cathedral of Ravenna) உள்ளது. சாண்டாசோபியா என்ற கலைக் கோயிலும் இராவென்னா முதலிய இடங்களில் எழுப்பப்பட்ட கோயில்களும் இன்றும் அழகுடன் உள்ளன. அணிகலன்களைப் பயன்படுத்து தல், மன எழுச்சிகளை உள்ளவாறே சித்திரித்தல், வளைவுக் கோபுரம் ஆகியவை கீழை நாடுகளின் மூலம் பெறப்பட்ட உணர்வு ஆகும். கிரேக்க உரோம நாகரி கம், கீழை நாகரிகம் ஆகியவற்றின் தாக்கத்தை இவை வெளிப்படுத்துகின்றன. கான்சுடாண்டிநோபிளில் உள்ள புனித சோபியா தேவாலயம் பைசாண்டியப் பண்பாட்டின் மேன்மைக்கோர் எடுத்துக்காட்டு. இது கி.பி. 1453 க்குப்பின் முகம்மதியரின் மசூதியாக மாற்றப்பட்டது. புறப் பகுதியைக் காட்டிலும் உட்பகுதியில் காணப்படும் அழகு பாராட்டுக்குரியது. சலவைக் கற்களாலும் வண்ணத்தாலும், பொன்னா லும் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளாலும், அழகு படுத்தப்பட்ட உட்சுவர்கள் கவர்ச்சியே உருவாகக் காட்சி தருகின்றன. தூண்களின் கீழ்ப்பகுதி உயர்ந்த நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்டதாக உள்ளது. பல வண்ண ஓடுகளின் அழகு, உலகின் வேறு எப்பகு தியிலும் காண இயலாத ஒன்றாகும். பைசாண்டியக் கட்டடக்கலையின் செல்வாக்கை, தாக்கத்தை இத் தாலி, பிரான்சு, இசுபெயின் முதலானநாடுகளில் காணலாம்.

சிலை பற்றிய கருத்து வேறுபாடுகளின் விளைவாகப் பல சிலைகள் உடைக்கப்பட்ட போதிலும் எஞ்சியுள்ளவை அவற்றின் கலைச்சிறப்பை எடுத்தியம்புகின்றன. அவற்றுள் சிற்பியின் கலைத்திறனைச் சித்திரிக்கும் சிற்பங்கள் உயிரோட்டம் உள்ளனவாக உள்ளன. சிலை உடைப்புக் காலத்தில் (கி.பி.726 – 867) கலை முன்னேற வில்லை. பல்வண்ண ஓவிய வேலை மட்டும் சிறப்பிடம் பெற்றது. எடுத்துக்காட்டாகத் தமாசுகசின் பெரு மசூதியைக் குறிப்பிடலாம் (கி.பி.8-ஆம் நூற்றாண்டு).

**இரண்டாம் பொற்காலம்** (**கி.பி**. 867 – 1204): இக்காலத்திய ஏசு கிறித்துவின் சிற்பத் தொகுதியும் முடிசூடும் நான்காம் உரோமனசுப் பேரரசர் (Emperor Romanus IV) அவர் இராணியார் யூடோக்சியா(Eudoxia) ஆகியோரின் உருவங்களும் போற்றத்தக்கன. தந்தச் சிற்பக் கலையும் கி.பி.10 – ஆம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிற்று. இக்காலத்தில் தீட்டப்பட்ட வண்ண வண்ண ஓவியங்களும் போற்றும் வண்ணம் உள்ளன. கல்லிற் செதுக்கப்பட்ட சவப்பெட்டி சிற்பக் கலையின் உயர்ச்சிக்கோர் எடுத்துக்காட்டு. இதில் உள்ள எழுத்துகளின் பின்னல்கள், மயில், திராட்சைக் கொத்து ஆகிய உருவங்கள் கண்டு களிக்கத் தக்கனவாகும். பிற்பகுதியில் ஓவியக்கலை, பல்வண்ண ஓவிய (Mosaic) வேலைகளில் விஞ்சி நின்றது.

பைசாண்டியர் காலத்துப் பழைமையான சுவடிகள் அவர்களது கல்விச் சிறப்பை எடுத்தியம்புகின்றன. அவற்றுள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியைச் சேர்ந்த (அல்லது கி.பி. 6–ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) வியன்னா தோற்றம் (Vienna Genesis), உரோசன்னா நற்செய்தி (The Rosanna Gospels), சினோபே நற்செய்தி ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கன. கி.பி. 10 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரிசு தோத்திரச் (Paris Psalter) சுவடிகள், கி.பி. 12–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மெலிச்செண்டா தோத்திரம் (Melissenda Psalter) ஆகியவை இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும். பிற்பகுதியில் இலத்தீனிய ஆதிக்கம் (கி.பி.1204 – 1261) இப்பேரரசிற்கு அழிவுக்காலமாக இருந்தது. கட்டடக்கலை வளர்ச்சி குன்றியது.

**சமயம், தத்துவம்**: பைசாண்டிய அரசு ஒரு கிறித்தவ அரசு. பைசாண்டியத் திருச்சபை கி.பி.866 – இல் உரோம் திருச்சபையிலிருந்து பிரிந்தது. கிறித்தவ சமயம் கீழை உரோமானியப்பேரரசில் தோன்றிய போதிலும் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் கோட்பாடுகள் பைசாண்டியத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏரியன்சு, சேக்கோபைட்சு முதலானோர் சமய முரண் கோட்பாட்டாளர் என முத்திரை குத்தப்பட்டனர். திரித்துவம் பற்றி ஒருமித்த கருத்து உருவாகவில்லை. போப்பாண்டவரின் மேலாண்மையைக் கான்சுடாண்டிநோபிளில் உள்ள பாட்ரியார்க்கு ஏற்றுக்கொள்ள மறுத்தார். உருவ வழிபாடு குறித்து இருதரப்பாருக்கும் இடையே நிலவிய கருத்துவேறுபாடு முழுமை பெற்றது. எனவே, கி.பி.1054 – இல் பாட்ரியார்க்கு திருச்சபையினின்றும் வெளியேற்றப்பட்டார். அதன் விளைவாகக் கிரேக்க வைதிகத் திருச்சபை (Greek Orthodox Church) தனியாகப் பிரிந்தது. உருசிய வைதிகத் திருச்சபையும் பைசாண்டியன் திருச்சபையிலிருந்து பிரிந்ததேயாகும்.

திருச்சபையின் அமைப்பு மாற்றியமைக்கப்பட்டது. குருமார்களின் மேல்மட்டத்தில் மேற்றிராணியார்கள், அதிமேற்றிராணியார்கள், தலைமை மேற்றிராணியார், உயர்படி முதல்வர் முதலானோர் மடாலயங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். கீழ்மட்டத்தில் பணியாற்றும் குருக்கள் மேல் மட்ட நிலைக்கு உயரமுடியாது. அதிகாரத்தை மையப்படுத்தும் முறை இங்கே பின்பற்றப்படவில்லை. எனவே, ஒவ்வொரு நாட்டிலும் உள்ள திருச்சபைகள் தம் விருப்பப்படி திருச்சபையின் கோட்பாடுகளுக்குப் பொருள் கொள்ளும் உரிமையைப் பெற்றன.

உத்தரிக்கும் தலம், பாவத்திற்கு வழங்கப்படும் சிறு மன்னிப்புகள் ஆகியவை இத்திருச்சபையினரால் எதிர்க்கப்பட்டன. அடுத்து இவ்வுலகின் கண் தேவ குமாரனாகிய இயேசுகிறித்துவின் பேராளராக எவரும் இருக்க இயலாது என்று கூறினர். போதனையும், மறைக்கல்வியும் பெரிதும் குறைக்கப்பட்டன. பாவிகள் தாம்புரிந்த பாவங்களுக்குக் கழுவாயாக விரதங்கள், தவங்கள் முதலானவற்றைச் செய்ய வேண்டும் என்பது பரிந்துரைக்கப்பட்டது. பலி பூசை நிகழ்த்துவது முக்கியத்துவம் உடையதாகக் கருதப்பட்டது. இறைவழிபாட்டில் இன்னிசை முழுமையாக ஒதுக்கப்பட்டது.

பைசாண்டிய நாகரிகம், உரோமானிய நாகரிகத்திலிருந்து பல கூறுகளில் வேறுபட்டது. கிழக்கு உரோமானியப் பேரரசில் அனைத்து அதிகாரங்களும் கொண்ட எதேச்சாதிகார அரசே நடைபெற்றுக் கொண்டிருந்தது. பைசாண்டியத்தின் நுண்ணறிவுச் செயல்களில் பெரும் அளவு கிரேக்கப் பண்பாட்டைக் காப்பதும், விரிவுபடுத்துவதுமே ஆகும். இப்போகிரீட்சு தொடங்கி வைத்த மருத்துவ இயலை, ஏட்டியசு, பவுல் ஆகியோர் தொடர்ந்து பின்பற்றினர். பைசாண்டிய நாகரிகம் கிரேக்க எல்லனிக்குப் (Hellenic)பண்பாட்டைக் காப்பதில் பேரார்வம் காட்டிய போதிலும், எல்லனிக்குப் பண்பாட்டில் எவ்விதமான முன்னேற்றத்தையும் உண்டாக்கவில்லை.

பைசாண்டியம் பிந்திய பழைமை மிக்க நாகரிகமும் கீழைநாகரிகமும் இணையும் மையமாக மாறி, அப்பண்பாடுகளை ஐரோப்பியர்கள் மற்றும் துருக்கியர்களின் பிடியில் சிக்காமல் பல நூற்றாண்டுகளுக்குக் கட்டிக் காத்தது.

பேரரசர் சசுடீனியனின் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட சட்டநூல்கள் உலகப் புகழ் பெற்றவை. பலரும் படித்துப் பயன் பெறும் வகையில் அவை மூன்று நூல்களாக (Code, Digest and Institutes) வெளிவந்துள்ளன.

பைசாண்டியப் பேரரசின் எழுச்சியும், வளர்ச்சியும் வீழ்ச்சியும் உலக வரலாற்றின் ஒரு சுவைமிக்க அத்தியாயமாகும். இப்பேரரசின் கலைத் தொண்டும் சமயத் தொண்டும் போற்றத்தக்கனவாகும். இரா.த.

**பைத்தியம்**: உணர்ச்சி சார்ந்த சீர்கேடுகளில் கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மனப்பிணியும் (Manic Depressive Psychosis), முதுமைச் சோர்வு உளப்பிணியும் (Involutional Melancholia.) முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. உணர்ச்சி சார்ந்த என்ற கருத்துச் சொல் பெரிதும் மனவெழுச் சிக்குச் சமமாகக் கருதப்படுகின்றது. உணர்ச்சி சார்ந்த சீர்கேடுகள் கோடி நிலையைச் சார்ந்ததும் பொருத்தமில்லாததுமான மனவெழுச்சித் துலங்கல்களாகும். குறிப்பாக, கோடி நிலை வெற்றிச் செருக்கு அல்லது சோர்வு நோய், நிவர்த்திக் குறிப்புகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. உணர்ச்சிசார்ந்த சீர்கேடுகளில் பெரிதும் சிந்தனைக் கலக்கங்கள் உருக்குலைந்த மனவெழுச்சியினால் தொடரப்படுகின்றன.

மனித இன வரலாற்றில் உணர்ச்சி சார்ந்த உளப்பிணிகள் புதியவையல்ல. உணர்ச்சி சார்ந்த சீர்கேடுகள் பண்டைய எகிப்து, கிரேக்க, ஈபுரு, சீன இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மனப் பிணிகள். அவை கோடி நிலையான வெற்றிச் செருக்கும் – அதிகப்படியான நடவடிக்கையும் அல்லது கோடி நிலையான சோர்வும் – மிகக் குறைந்த நடவடிக்கையும் ஆகியவற்றின் மூலம் வருணிக்கப்பட்டிருக்கின்றன. கிரேக்க நாட்டுப் புகழ் பெற்ற மருத்துவரான இப்போகிரேட்டசு (Hippocrates) என்பவர் எல்லா மனச் சீர்கேடுகளையும் மூன்று பெரும் வகைகளில் காட்டியுள்ளார். அவை, பைத்தியம்(Mania), அழுங்கு நோய் (Melancholia), மூளைக்கோளாறு (Phrenitis) என்பன. கி.மு.6 –ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மருத்துவரான அலெக்சாண்டர் திராலியனசு (Alexander Trallianus) என்பவர்தாம் முதன் முதலில் பைத்தியமும் (Mania) அழுங்கு நோயும் ஒருவரிடமே காணப்பட்டன என்று கூறினார். கிராபெலின் (Kraepelin) என்பவர் கி.பி. 1899-ஆம் ஆண்டில் கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மனப்பிணியை விளக்கம் செய்தார். இந்தச் சீர்கேடு தொடர்ச்சியான கிளர்ச்சியாலும் சோர்வாலும் நோயாளியை விட்டு விட்டுத் தாக்குதல் செய்கின்றது என்று கூறினார். உண்மையில் சிலர் கிளர்ச்சி எதிர் வினைகளாலும் (Manic Reactions), சிலர் சோர்வு எதிர்வினைகளாலும் தாக்கப்பட்டனர். முடிவாக, பெரும் வகையான கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மூன்று மனப்பிணிகளைப் பொதுவாகக் கண்டறிந்தனர். அவை, பைத்தியம் சார்ந்த வகை (Manic Type), சோர்வு சார்ந்த வகை (Depressed Type), சுற்று எதிர்வினைகள் (Circular Reactions) என்பன.

பைத்தியம் சார்ந்த எதிர்வினைகள் பல்வேறு படித்தரங்களைக் கொண்ட கிளர்ச்சியும் அதிகப்படியான உள இயக்க நடவடிக்கையும் கொண்டவை என்று விவரிக்கப்பட்டுள்ளன. அந்நோய்கள் மூன்று படித்தரங்களைப் பொதுவாகக் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்கள். அவை படித் தரத்தில் மாறுபட்டுக் காணப்படுவதைப்போலத் தனித்தனி விளக்கங்களைக் கொண்டிருக்கின்றன. அவை கடுமையிராத பைத்தியம் (Hypomania), கடுமையான பைத்தியம் (Acute Mania), சன்னி சார்ந்த பைத்தியம் (Delirious Mania) என்பன.

1. முதல்வகையான கடுமையிராத பைத்தியம் மிகவும் மென்னயமான எதிர்வினைகளைக் கொண்டது. ஓரளவு சீரான கிளர்ச்சியும், வேகமான போக்கும், அளவுக்கு மிஞ்சிய நடவடிக்கையும் முக்கியமாகக் காணப்படும். இதற்கு ஆட்பட்ட நோயாளி உலகத்தில் தான்தான் பெரியவன் என்று உணருகின்றான். தன்னுடைய திறமையிலும் அறிவிலும் எல்லையில்லாத நம்பிக்கை கொண்டுள்ளான். எதைப் பற்றியும் எந்தவிதமான தயக்கமுமின்றித் தன்னுடைய கருத்துகளை வெளியிடுகின்றான். அவனுடைய சிந்தனை மிகவேகமாகச் செயற்படுகின்றது. அவன் நகைச் சுவையாக நடந்து கொண்டு மற்றவர்களுக்கு மகிழ்வூட்டவும் செய்கின்றான். அவன் களைப்பின்றிக் காணப்படுகின்றான்; தூங்குவதில்லை; தனக்கு எதுவும் தேவையில்லை என்று கூறுகின்றான். அவன் வேலையில் ஈடுபட்டிருக்கும் நாட்களில் பேசுதல், மற்றவர்களைச் சென்று காணுதல், எழுதுதல், பல்வேறு திட்டங்களில் தீவிரமாக ஈடுபடுதல் முதலிய நடவடிக்கைகளில் முடிவில்லாமல் தன்னை ஆட்படுத்திக் கொள்கின்றான். எண்ணற்ற சந்திப்புத் திட்டங்களைப் போடுதல், தள்ளிப்போடுதல், நீக்குதல் ஆகியவற்றை அடிக்கடி செய்து கொண்டிருக்கிறான். அடிக்கடி அவனிடம் முழுமையாகத் தோன்றுகின்ற

நிலை, வலியத்தாக்கும் தன்மை, புத்திசாலித் தன்மை, சமூகவியல்பு முதலியன. தனிமனிதனாகக் காணும் போது பல பாராட்டுதல்களுக்குரியவனாகின்றான். ஆர்வமிக்கவனாகவும் அதிசயப்படும்படியான பல திட்டங்களையுடையவனாகவுமிருக்கின்றான். தொடக்கத்தில் ஒரு துடிப்புள்ள மனிதனாகத் தோன்றுகின்றான். ஆனால் உடனே, அவன் தன்னுடைய நலமே முக்கியம் என்பதை வெளிப்படுத்துகின்றான். ஆதிக்கம் கொண்டு உரையாடலைத் தனியுரிமையாக்கிக்கொள்கின்றான். எதைப்பற்றிப் பேச வேண்டுமோ அதை முற்றிலும் புறக்கணித்து விடுகின்றான். பிறர் அவனைப் பற்றிக் கூறுவதை அவன் தாங்கிக் கொள்வதில்லை. அவனுடைய திட்டத்தில் யார் எது கூறினாலும் அவன் உடனே அவர்களைக் கடுமையான சொற்களைக் கொண்டு தாக்கிப் பேசத் தயங்குவதில்லை. அவனுடைய திட்டங்கள் அரிதாகவே செயற்படுத்தவல்லன. அவனுடைய திட்டங்கள் எதுவும் நிறைவு பெறுவதில்லை. என்றாலும், அவன் தன்னுடைய நடவடிக்கைகளை எளிதில் அறிவுக்கொத்ததாக்குகின்றான். தன்னிடம் தவறு ஏதுமில்லை என்று கூறிக்கொள்கின்றான். தன்னுடைய பணத்தைக் கண்மூடித்தனமாகச் செலவுசெய்கின்றான். ஒழுக்கக் கட்டுப்பாடுகளை அவன் பின்பற்றுவதில்லை. ஒழுங்கற்ற சிற்றின்ப நடவடிக்கைகளில் வரையறையின்றி ஈடுபடுறான். அளவுக்கு மீறி மதுபானங்களை அருந்துகின்றான்.

இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளில் பின்னோக்கிப் பார்ப்பதில்லை. அறிவுரையோ கருத்துரையோ கூறினாலும் சினம் கொண்டு அவர்களைத் தகாத சொற்களினால் தாக்குகின்றனர். தம்முடைய செயலில் யாரேனும் தலையிட்டால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அச்சுறுத்துகின்றனர். இவர்கள் அரிதாகவே திரிபுணர்ச்சிகளையும், இல்பொருள் காட்சிகளையும் கொண்டுள்ளார்கள் என்றாலும் மிகவும் அற்பமான தீர்ப்புகளையே வெளிப்படுத்துகின்றனர். தங்களுடைய நிலைமைகளைப்பற்றி உள்ளொளி (Insight) பெற இயலாதவர்களாக இருக்கின்றனர்.

2. இரண்டாம் வகையான கடுமையான பைத்தியம் கொண்டோரிடம் காணப்படும் அறிகுறிகள் கடுமையிராத பைத்தியம் கொண்டோரிடம் காணப்பட்டவை போன்றே உள்ளன. ஆனால், இவர்களிடம் காணப்படும் அறிகுறிகள் மிகவும் முனைப்புடையவை. இந்த நிலைமை கடுமையிராத பைத்திய எதிர்வினைகளிலிருந்து வளர்ச்சியுறுகின்றது. அறிகுறிகள் திடீரென்றும் தோன்றும். உறக்கமின்மை (Insomnia), எரிச்சல், அமைதியின்மை ஆகியவை இவர்களிடம் வெளிப்படும். இத்தகையோரிடம் வீண்பெருமிதம் அல்லது வெற்றிச் செருக்கு, அழுத்தம் தரும் நடவடிக்கைகள் மிகவும் முனைப்பாகின்றன. இவன் அழுத்தம் தரும் நடவடிக்கையுணர்ச்சிக்கு மிகவும் ஆட்படுவதால் மற்றவர்களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் தானே வலிந்து சென்று செயற்படுவான். பேரிரைச்சலுடன் சிரிப்பதும் மிக உயர்ந்த தொனியில் பேசுவதும் பொதுவான நடவடிக்கைகளாகும். மிகவும் அதிகமாகப் பெருமை கொண்டு சருவாதிகாரி போல மற்றவர்களை அடக்கி ஆர்ப்பரிப்பதும், அருகிலுள்ளவர்களுக்கு ஆணையிடுவதும் இவனுடைய செயல்களாக இருக்கின்றன. இவன் மிக எளிதில் எரிச்சலுறுகின்றான். இவனுடைய மனவெழுச்சிப்பாங்கு (Mood) மிக விரைவில் களிமகிழ்ச்சியிலிருந்து சினத்திற்கு மாறுகின்றது. சிகிச்சைக்கு முன்னும் சிகிச்சையின் போதும் இவன் வன்முறை நடத்தையில் ஈடுபடுகின்றான். சுவர்களில் கண்டபடி கிறுக்குவதும், தட்டுமுட்டுப் பொருள்களைப் போட்டு உடைப்பதும், பணிபுரியும் பெண்களையும் மற்ற நோயாளிகளையும் அடிப்பதும் இவனுடைய வன்முறைச் செயல்களாகும். ஒழுக்கக் கட்டுப்பாடுகளை இவன் முற்றிலும் துறந்து விடுகின்றான். இவனைச் சுற்றியுள்ளவர்களிடமெல்லாம் சிற்றின்ப உறவு கொள்ள முனைகின்றான். கட்டுப்பாடில்லாதனவும் மூர்க்கத்தனமானவையானதுமான கருத்துகளை வெளியிடுவான். ஒரு சமயம் குற்றமான நடவடிக்கைகளில் ஈடுபடுவான். மறுசமயம், ஒழுக்கம் பற்றிச் சொற்பொழிவுகள் செய்வான். சுற்றியிருப்பவர்களைத் தவறாக அடையாளம் காண்பான். திரிபுணர்ச்சிகளும் (Delusions) இல்பொருட்காட்சிகளும் தோன்றுகின்றன. பெருமிதத்திரிபுணர்ச்சி நிலையில் செல்வத்தைப் பற்றியும் திறமைகளைப்பற்றியும் பேசுவான். இவனுக்கு எதிரில் யார் இருப்பதாக இவன் இல்பொருள்காட்சி கொள்கின்றானோ அவர்களுடன் உரையாடலில் ஈடுபடுகின்றான்.

ஏதோ ஒரு சில சமயங்களில் சிறிது நேரத்திற்கு அமைதியாகக் காணப்படுவான். அது சமயம் தன்னுடைய ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளைப் பற்றி உட்காட்சியில் ஈடுபட்டு வருத்தத்தையும் தெரிவிப்பான்.

3. மூன்றாம் வகையான சன்னி சார்ந்த பைத்திய நிலை முதலாம் நிலையிலிருந்தும், இரண்டாம் நிலையிலிருந்தும் விரிவடைகின்றது. இந்த நிலை மிகவும் கடுமையான பைத்திய எதிர்வினையைக் கொண்டது. இந்நோயாளி மிகவும் குழப்பமடைந்திருப்பான்; முரட்டுத்தனமான துடிப்புணர்ச்சியும் வன்முறையும் கொண்டவனாக இருப்பான். ஒருசில எச்சரிக்கை அறிகுறிகளுடன் இந்நோய் திடீரென்று தோன்றக்

கூடியது. இந்நோய்க்கு ஆட்பட்டவன் மிகவும் பொருத்தமில்லாத வகையில் நடந்து கொள்வான். இவன் மிகவும் தெளிவான பார்வை சார்ந்ததும் ஒலி சார்ந்ததுமான இல்பொருட்காட்சிகளின் அனுபவங்களைப் பெறுகின்றான். இவனுடன் உரையாடல் புரிவதோ இவனுடைய கவனத்தை ஈர்ப்பதோ முடியாது. மிகக் கடுமையான உளஇயக்க நடவடிக்கைகளாக இவனிடம் காணப்படுவன வன்முறையும் அழிவு சார்ந்ததுமாகும். இவன் பகல்நேரத்தையும் இரவு நேரத்தையும் அமைதியின்றிக் கழிக்கின்றான். பாடுதல், அலறுதல், உறுப்புகளை அசைத்து அவிநயக் கூத்தாடல், பொருத்தமற்ற கூச்சல்களை எழுப்புதல் ஆகியவற்றில் அளவுக்கு மீறி ஈடுபடுகின்றான். அடையாளம் காணமுடியாத அளவுக்கு இவனுடைய உறுப்புகளில் மாற்றம் காணும். ஒரு சமயம் உணவை வெறுத்தொதுக்குவான்; மறுசமயம் கிடைத்ததையெல்லாம் உண்டு தீர்ப்பான். இவனுடைய நடத்தை வெறுப்பூட்டக் கூடியதாகவும், வெட்கமற்றதாகவும், பழக்கவழக்கங்கள் மிகவும் தாழ்ந்த நிலையுடையனவாகவும் காணப்படும். மலசலத்தைச் சுவர்களில்தடவுவான். இவன் அருகிலிருப்பவர்களுக்கு ஆபத்தானவன். தன்னையே இவன் மிகவும் காயப்படுத்திக் கொள்வான். சுருக்கமாகச் சொன்னால் இவன் பொது மக்கள் மொழியில் கூறப்படுகின்ற 'சன்னிப் பைத்தியம்' என்ற சொல்லுக்குப் பொருத்தமாக அமைவான். உடல் சார்ந்த செயல்முறையில் இவன் எல்லோருக்குமே ஒரு பெரும் சுமையாக இருக்கின்றான். இவனுடைய எடை அளவுக்கு மீறிக் குறைந்து செல்லும். மிகவும் சக்தியிழந்து போவான். குருதியடைப்பு ஏற்பட்டு இருதய நோய்க்கும்ஆளாவான். உறவினர்கள் இப்படிப்பட்ட நோயாளிகளை வெளியில் அனுமதிப்பதில்லை. இவர்கள் உளமருத்துவ மனைகளில் ஏதாவது ஒரு வழியில் இறந்து போகின்றனர். இத்தகைய உளநோய்களுக்கு இடம் கொடுத்து விட்டுப் பிறகு சிகிச்சைக்காக உளமருத்துவர்களைத் தேடிச் செல்வதைவிட யாரும் இதற்கு ஆட்படாத சூழ்நிலைகளை உருவாக்குவதுதான் பெருகிவரும் இன்றைய அறிவியல் சாதனைகள் மனித இனத்திற்குச் செய்யும் நன்மையாக இருக்கமுடியும். மு.இரா.

**துணை நூல்கள்:**

Coleman, J.G., Abnormal Psychology and Modern Life, D.B.Taraporevala Sons & Co. Ltd., Bombay, 1976.

Morgns. C.T., King, R.A. and Robinson, N.M., Introduction to Psychology, TATA - McGraw Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

*பையம்பள்ளி:* இது வடஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள ஊர். புதிய கற்கால மக்களின் வாழ்விடமாகக் கருதப்படும் இவ்வூரில் இராவ் (S.R.Rao) அவர்களால் 1964-65, 1967-68 ஆகிய ஆண்டுகளில் அகழாய்வுகள்செய்யப்பட்டன. அவ்வகழாய்வுகளின்மூலம் தமிழகத்தில் புதிய கற்கால மக்களின் வாழ்க்கை நிலை பற்றிப் பல செய்திகளை அறிய முடிகிறது.

அவ்வகழாய்வு இவ்விடத்தில் புதிய கற்காலம் பெருங் கற்காலம் ஆகிய இரண்டு கட்டப்பண்பாட்டுக் கூறுகள் உள்ளன என்பதை வெளிப்படுத்தியுள்ளது. புதிய கற்காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் வீடுகள் கட்ட அறிந்திருந்தனர். அவை குழிவீடுகள் (Pit Houses) என்று அறியப்படுகின்றன. அவ்வீடுகளின் அமைப்பு வட்ட வடிவிலும், முட்டை வடிவிலும் உள்ளன. ஒரு வீட்டின் நடுவில் கற்காலச் சுவர் எடுக்கப்பட்டு இரண்டு அறைகளாகத் தடுக்கப்பட்டிருந்தது; தரை நன்கு மெழுகப்பட்டிருந்தது. வீடுகளைச் சுற்றிலும் காணப்பட்ட கால் ஊன்று குழிகள் (Post Holes) வீடுகளின் மேலாக மேற்கூரைக் கட்டுமானம் இருந்திருக்கலாம் என்பதைத் தெரிவிக்கின்றன. வீடுகளைச் சுற்றிலும் கற்களை அடுக்கி மழைநீர் உள்ளிறங்காமல் பாதுகாத்திருந்தனர். வீடுகளின் கூரை கூம்பு வடிவில் அமைந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இத்தகைய வீடுகள் நாகார்ச்சுன கொண்டாவில் நடத்தப்பட்ட அகழாய்விலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புதிய கற்கால மக்கள் இறந்தவர்களை எவ்வாறு அடக்கம் செய்தனர் என்பது பற்றி எவ்விதத் தடையமும் கிடைக்கவில்லை. இங்கு வாழ்ந்த புதிய கற்கால மக்களின் காலம், கரிமம் 14 காலக்கணிப்பு முறையில் ஆய்வு செய்யப்பட்டதன் மூலம் கி.மு.1500-ஆம் ஆண்டு என்பது நிருணயிக்கப்பட்டுள்ளது.


இங்குப் புதிய கற்காலப் பண்பாட்டினை அடுத்துப் பெருங்கற்காலப் பண்பாட்டுக் கூறுகள் கிடைக்கின்றன. அக்காலக்கட்டத்தைச் சேர்ந்த கருப்பு, சிவப்புப்பானை ஓடுகள் இங்குக் குறிப்பிடத்தக்க அளவில் கிடைத்துள்ளன. அவை கி.மு. 500 - ஆம் ஆண்டைச் சார்ந்தவை எனக் கணிக்கப்பட்டுள்ளன. இங்கு நடந்த அகழாய்வில் இருபத்து நான்கு கால்களுடன் கூடிய சுடுமண் ஈமப் பேழை (Sarcophagus) ஒன்று கிடைத்துள்ளது. சொ.சா.

*பைரவர்:* சிவபெருமானின் பல்வேறு திருஉருவங்களுள் பைரவர் என்னும் பெயர் பெறும் திருஉருவம்

குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நின்ற நிலையில் அனல் மகுடத்துடன் உருண்டு விழிக்கும் கண்களும், சினத்தைக் காட்டும் கோரைப் பற்களும் கொண்டு, உடுக்கை, சூலம் முதலான ஆயுதங்களுடன் கபால மாலை அணிந்து காணப்படுபவர்தம் உருவே பைரவர் என்னும் திருவுரு ஆகும். இவ்வுருவத்தின் பின்னால் நாய் ஒன்று நிற்கும்.

பைரவர் திருவுரு பற்றி வராகபுராணம், கூர்ம புராணம், சிரீதத்துவநிதி, சிவபுராணம், விட்டுணு தருமோத்தர புராணம் ஆகிய நூல்கள் பேசுகின்றன.

பைரவர் பற்றி வராகபுராணம் கூறும் செய்தி யாவது: ஆக்கும் கடவுளான பிரமன் சிவனை உருத்திரன் என்னும் பெயரில் படைத்து, அவனைக் கபாலி என அழைத்து, இவ்வுலகைக் காக்கும்படி வேண்டினான். கபாலி என்று தன்னைப் பிரமன் அழைத்



பைரவர்

ததைத் தனக்கு நேர்ந்த இழிவு எனக் கருதிய சிவன், பிரமனின் ஐந்தாம் தலையைத் தன் இடது கைப் பெருவிரல் நகத்தால் கிள்ளித் துண்டித்தான். ஆனால், துண்டிக்கப்பட்ட தலை சிவபெருமானின் கையைவிட்டு விழ மறுத்தது. அப்பாவ நீக்கம் வேண்டிச் சிவன் பன்னிரண்டு ஆண்டுகள் பல தலங்கட்கும் சென்று இறுதியில் வாரணாசியில் பாவம் நீங்கப் பெற்றுப் பிரமன் தலையை விடுத்தான். அந்தப் பன்னிரண்டு ஆண்டுக்காலத்தில் சிவன் உரோமத்தால் ஆன புரிநூல் அணிந்து, எலும்பு மாலை மார்பில் தவழ, சடைமுடியில் மண்டையோடு கட்டப் பெற்று ஒரு கையில் இரத்தம் நிரம்பிய மண்டையோடும் கொண்டு அலைந்து திரிந்தான் எனக் கூறப்பட்டுள்ளது.

'படைத்தான் தலையை உண்டங்கு அறுத்தது' என்னும் திருநாவுக்கரசர் தேவார அடியும் சிவன் பிரமன் தலையைக் கொய்ததைக் குறிக்கிறது. இச்செயல் தஞ்சை மாவட்டம் கண்டியூரில் நிகழ்ந்ததாகக் கதையும் உண்டு.

மேற்கூறப்பட்ட கதையைக் கூர்மபுராணம், சற்று வேறுவிதமாகக் கூறும். பிரமனுக்கும், சிவபெருமானுக்கும் உலகை ஆக்குவது யார் என்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பிரமன், தானே படைக்கும் கடவுள்; தானே பெரியவன் என, சிவபெருமான் தானே முழுமுதற் கடவுள் எனச் சினந்து பிரமனின் தலைகளில் ஒன்றைக் கிள்ளித் தன் வலிமையை நிரூபித்தான். இவ்வாறு தலையைக் கிள்ளிய திருவுருவே பைரவத் திருவுரு எனப்படும்.

இத்திருவுரு எவ்வகை இலக்கணப்படி அமையும் என்பதைச் சிரீதத்வநிதி கூறுகிறது. வெள்ளை நிறத்தில், மூன்று கண்களும் நான்கு கரங்களும் சடைமுடியும் கொண்டு வலக்காதில் ஓலைக் குண்டலமும், இடக்காதில் அரவக் குண்டலமும் அணியப் பெற்றவராயிருப்பார். வலக் கரங்கள் இரண்டிலும் வச்சிராயுதமும் பரசும் கொண்டும், இடக் கரங்கள் இரண்டிலும் மண்டையோடும், சூலமும் கொண்டும், அரையில் புலித்தோல் ஆடை அணிந்தும் இருப்பார்.

சிவபுராணம் பைரவரை முழுமை பெற்ற திருவுரு (பூரண ரூபம்) என்று கூறும். விட்டுணு தருமோத்தரம் என்னும் நூலில் உருவ இலக்கணம் கூறப்பட்டுள்ளது. சற்றே பருத்த வயிறு, மஞ்சள்நிறம், உருட்டிய விழிகள், வெளித் தெரியும் கடைப்பற்கள், பெரிய மூக்கு, மண்டையோட்டு மாலை ஆகியவற்றை உடையவர். மேலும் பாம்புகளை அணிகலன்களாகப் பெற்று இருப்பார். இவை தவிரப் பிற வழக்கமான அணிகலன்களும் உண்டு. கரிய நிறத்துடன், யானைத் தோல் போர்த்தியவராய்க் காணப்படுவார்.

வடுக பைரவர், சுவர்ணகர்சண பைரவர், கால பைரவர், கோரமுகர் எனப் பலபெயர்கள் பைரவத் திருவுருவிற்கு வழங்கப்படுகின்றன. சிற்சில மாறுதல்களுடன் 63 வகைப் பைரவர் பெயர்கள் நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. சேத்திரபாலர் என்னும் திருவுருவும் பைரவர் உருவுடன் பெரிதும் ஒப்புமை

கொண்டுள்ளது. நாய்வாகனம் மட்டுமே இதில் இடம் பெறாது அமையும்.

பைரவர் உருவிற்குச் சிறந்த சான்றாக எலிபெண்டாக்குகையில் உள்ள சிற்பத்தைக் காட்டுவர். பிரபோதசிவன் என்னும் மன்னனின் சந்திரிகே கல்வெட்டில் (கி.பி.973) பைரவர் பற்றிய குறிப்புக் காணக் கிடக்கிறது. தமிழ்க் கல்வெட்டுகள் சிலவும் சான்று பகர்கின்றன. தமிழகத்தில் பட்டீசுவரம், திருவலஞ்சுழி ஆகிய இடங்களில் குறிப்பிடத்தக்க சிற்பங்கள் காணக் கிடக்கின்றன. சொ.சா

துணை நூல்:

Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Vol. II part I, Motilal Panarsidass, Delhi, 1985.

**பைரன் பிரபு (கி.பி. 1788 – 1824):** செல்லியுடனும் கீட்சுடனும் (Shelly and Keats) வியப்புச் சுவைக்கவிஞர்கள் (Romantic poets) என்று சேர்த்துப் பேசப்படும் பைரன்பிரபு, கி.பி. 1788-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் காப்டன் சான் பைரனுக்கும் அவர் இரண்டாம் மனைவி காதரீன் கார்டன் (Catherine Gordon) அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். எதிர்பாராத விதமாக, மூத்த வாரிசுகள் இறந்து படவே, இவருக்குப் பைரன் பிரபுப் பட்டம் இவர்தம் பத்தாம் வயதிலேயே கிடைத்தது. ஆரோவிலும் (Harrow) கேம்பிரிட்சிலும் (Cambridge) தம் மேற்படிப்பைத் தொடர்ந்த பைரன் (George Gordon, Lord Byron) இளமையிலேயே குடி, சூதாட்டம் ஆகிய கேளிக்கைகளில் மிகுதியாக ஈடுபாடு கொண்டிருந்தாலும், கவிதை புனையும் ஆற்றலையும் பெற்றிருந்தார். இவரது 'வெறுமை நேரங்கள்' (Hours of Idleness கி.பி. 1807) என்ற கவிதைத்தொகுப்பு வெளியானபோது இசுகாட்லாந்து பத்திரிகை ஒன்று (Edinburgh Review) அதைக் கடுமையாகத் திறனாய்வு செய்தது. உடனே பைரன் அதைச் சாடி 'ஆங்கிலக் கவிகளும் இசுகாட்லாந்து திறனாய்வாளர்களும்' (English Bards and Scotch Reviewers) என்ற ஒரு கடுமையான மறுமொழியை எழுதியனுப்பினார்.

இசுபெயின், போர்ச்சுகல், கிரீசு போன்ற நாடுகளில் நீண்ட பயணம் செய்தபின், பைரன் 'குழந்தை எரால்டின் தீர்த்தப் பயணம்' (Child Harold's Pilgrimage) என்ற பெரியதொரு கவிதையை எழுதத் தொடங்கினார். பைரனின் புகழ் வேகமாகப் பரவியது. பைரன் பிரபுவின் வாழ்க்கையில் கி.பி. 1832 முதல் 1836 வரை நான்கு ஆண்டுகள் பரபரப்பான காலமாக அமைந்தது எனலாம். 'கடற் கொள்ளைக்காரன்' (The Corsair), 'அபிதாசு நகரத்து மண



பைரன்பிரபு

மகள்' (The Bride of Abydos), 'இலாரா' (Lara), 'கொரிந்து நகர முற்றுகை' (The Siege of Corinth) என்ற இவர்தம் கவிதைகள் வெளிவந்தவுடனே ஆயிரக்கணக்கில் விற்கத் தொடங்கி, இவருக்குப் பேரும் புகழும் பணமும் அள்ளித் தந்தன. ஆனால், அக்காலத்தில்தான் இவரது சொந்தவாழ்க்கையில் பரவலாக அறியப்பட்ட காதல் விவகாரங்களும் ஏற்பட்டன. இவரது அழகிய உருவமும், பிரபுப்பட்டமும், பகட்டான ஆடை மற்றும் வாழ்க்கை முறையும் பல பெண்களை ஈர்த்தன. இவர் முறைப்படி மணந்தது அன்னபெல்லா மில்பாங்கு (Annabella Milbanke) என்ற சீமாட்டியைத்தான். ஆனால், ஒரு பெண் குழந்தைக்குத் தாயான பின்னர், விரைவில் பைரனின் மனைவி அவருடன் வாழ விருப்பமில்லாமல் பிரிந்து சென்றுவிட்டார். இதற்குச் சொல்லப்படும் காரணங்களுள் முக்கியமான ஒன்று, பைரன் தம் சகோதரி முறையுள்ள அகசுடா லே (Miss Augusta Leigh) என்ற, தம் தந்தையின் முதல் மனைவியின் மகளிடம் கொண்ட கூடா நட்பு ஆகும். நாடே பைரனை

அலர் தூற்றவே, அவர் கி.பி. 1876-இல் இங்கிலாந்தை விட்டே சென்று விட்டார்.

இவர், உடன் கவிஞர்களான செல்லி (Shelley), இலே அண்ட்டு (Leigh Hunt)போன்றவர்கள் தங்கியிருந்த இத்தாலி நாட்டுக்குச் சென்றார். அவர்களுடன் இன்பமாகச் சங்கமிருந்து பல அருமையான வியப்புச் சுவைக்கவிதைகளை யாத்தார். அங்கும் செல்லியின் மைத்துனியான கிளார் கிளெரிமாண்ட்டு (Claire Cleremont) பைரனின் காதற் கிழத்தியானார். மேலும் ஒரு இத்தாலியப் பிரபுவின் மனைவியான குவிச்சியோலி சீமாட்டியும் (Countess Guiccioli) பைரனுக்கு நெருங்கிய காதலியானார். இவரது சிறந்த கவிதைப் படைப்புகளை அப்பொழுதுதான் பைரன் வெளியிட்டார். 'குழந்தை எரால்டின் தீர்த்தப் பயண'த்தின் எஞ்சிய காண்டங்களையும் எழுதி முடித்தார். பின் எழுதியவற்றுள் மான்பிரடு (Manfred – கி.பி. 1817), பெப்போ (கி.பி. 1818), மாசெப்பா (Mazappa – கி.பி.1819), சிலான் சிறைக் கைதி (The Prisoner of Chillon கி.பி. 1816) என்பவை குறிப்பிடத்தக்கவை ஆகும். 'தான் சுவான்' (Don Juan) என்னும் வியப்புச் சுவைக் காவியத்தை நான்கு வருடங்களில் (கி.பி.1819-1823) பைரன்பிரபு எழுதி முடித்தார்.

பிரபுவாக இருந்தபோதிலும் மனிதநேயத்திலும், மக்கள் சுதந்திரத்திலும் நம்பிக்கை கொண்ட இவர் கி.பி. 1822-இல் கிரேக்க நாட்டுப் புரட்சி வீரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர்களது விடுதலைப் போருக்குப் பொருளுதவி செய்தது மட்டுமல்லாமல், தாமே நேரில் சென்று அவர்களின் போராட்டத்தில் முக்கிய பங்கெடுத்தும் செயற்பட்டார். இவர் கி.பி. 1824-ஆம் ஆண்டு, கிரேக்க நாட்டில் மிசோலோங்கி (Missolonghi) என்ற ஊரில் விடக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுத் தம் முப்பத்தாறாம் வயதில் காலமானார். கே.ஜி.சே.

**பைராம்கான்:** இவ்வீரர் முகலாயப் பேரரசர்களின் படைத் தலைவர்களாக விளங்கியவர்களுள் தலைசிறந்தவராவார். இவர் முகலாயப் பேரரசர் ஆட்சியின்போது பல உயர் பதவிகளை வகித்தார். பைராம்கான், முகலாயப் பேரரசிற்கு வித்திட்டவரான பாபர் காலத்திலேயே முகலாயப் படையில் பணிபுரிந்தாலும், இவரது தனித் திறமையும் புகழும், உமாயூன், அக்பர் ஆகிய மன்னர்களின் காலத்தில்தான் உயர்ந்து காணப்பட்டன எனலாம். இவர் பிறந்த இடம் பாரசீகத்தில் உள்ள 'படாக்சான்'. இவர் 'சியா' வகுப்பைச் சார்ந்த பாரசீகத் துருக்கியர்.

பாபரின் மறைவுக்குப் பின் ஆட்சியைக் கைப்பற்ற அவர் மைந்தன் உமாயூனுக்குப் பைராம்கான் பெரும் உதவியாக விளங்கினார். இவர் கி.பி. 1540-ஆம் ஆண்டு நடந்த 'சூர்' (Sur) வமிசத்தைச் சேர்ந்த செர்சாவுக்கு எதிரான கன்னோசிப் போரில் உமாயூனுக்கு உறுதுணையாக விளங்கினார். அப்போரில் உமாயூன் தோல்வியுற்றுத் தப்பிச் சென்றார். பைராம்கான் செர்சாவினால் சிறைபிடிக்கப் பட்டார். ஆனால் பிறகு பைராம்கான் தப்பிச் சென்று மறைந்து வாழ்ந்த உமாயூனுடன் சேர்ந்தார். பைராம்கான் 'சியா' வகுப்பைச் சேர்ந்த பாரசீக சாதமாசுப்புவுக்கும் உமாயூனுக்கும் ஒரு நட்பை ஏற்படுத்தினார். அதன் விளைவாக, பைராம்கானின் தூண்டுதலின் பேரில் காந்தகாரை வெல்லும் பொருட்டு ஒரு படையை சாதமாசுப்பு உமாயூனுக்கு அனுப்பி உதவினார். அதன் உதவியுடன் உமாயூன் காந்தகாரைத் தமதாக்கிக் கொண்டு பைராம்கானை அப்பகுதிக்கு ஆளுநராக நியமித்தார்.

உமாயூன் கி.பி. 1554-ஆம் ஆண்டு இறுதியில், பெரும் படையுடன் முன்னதாக இழந்த இந்தியப் பகுதியைக் கைப்பற்றப் புறப்பட்டுப் போர் ஆர்வம் மிகுந்த பைராம்கானிடம் படையின் பெரும் பகுதியை ஒப்படைத்தார். சர்கிந்து என்னும் இடத்தில் கி.பி. 1555-ஆம் ஆண்டு வெற்றி பெற்றுப் பஞ்சாபில் அமைதியின்மை வளர்வதைத் தடுப்பதற்காக இளைஞரான அக்பரை ஆளுநராகவும், பைராம்கானை அவருக்குக் காப்பாளராகவும் நியமித்தார்.

இவ்வாறாகப் பைராம்கான் உமாயூன் இழந்த பகுதிகளை மீண்டும் பெறவும், அவரது ஆட்சியை நிலைபெறச் செய்யவும் அரும்பாடுபட்டார்.

உமாயூன் கி.பி.1556-ஆம் ஆண்டு மறைந்தபோது இருந்த நிலையற்ற தன்மையை உணர்ந்த பைராம்கான் சிறிதும் தாமதிக்காமல் 14 வயதே நிரம்பிய அக்பருக்கு கி.பி. 1556-ஆம் ஆண்டு பிப்பிரவரி 11-ஆம் நாள் கலனார் என்ற இடத்தில் முடிசூட்டினார். காப்பாளர் பணியையும் தாமே ஏற்றுக் கொண்டார். பைராம்கான் பல முனைகளிலிருந்தும் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் தம் காப்பாளர் பணியைத் தொடங்கினார். ஆகவே, இளைஞரான அக்பரின் ஆட்சியை நிலைநிறுத்தப் பல போர்களைப் புரிய வேண்டியிருந்தது. பைராம்கான் தலைமையிலான மொகலாயப் படை கி.பி. 1556 – ஆம் ஆண்டு இரண்டாம் பானிப்பட்டுப் போரில் வலிமை வாய்ந்த எமுவைத் (Hemu) தோற்கடித்துச் சிறைபிடித்தது. பிறகு மாங்கோட்டை, குவாலியர், சுனார் ஆகியவற்றையும் கைப்பற்றியது. அப்போர்களின் மூலம் பைராம்கான் முகலாயராட்சியை நிலை நிறுத்தினார்.

அக்பர் சலந்தரில் தங்கிய சமயம் பைராம்கானுக்கும், உமாயூனின் மைத்துனியான சலீமா சுல்தான்

பேகத்திற்கும் மணமுடித்து வைத்தார். பைராம் கானின் ஒப்பற்ற சேவையைப் பாராட்டியதன் அறிகுறியாக இத்திருமணம் அமைந்தது. பைராம்கான் வலிமைமிக்க குவாலியர் கோட்டையையும், வளமான கான்பூர் பகுதியையும் பேரரசுடன் இணைத்தார்; மாளவத்தைக் கைப்பற்றுவதற்கான திட்டத்தை மேற்கொள்ள முனைந்தார். இவ்வாறாகத் தம் காப்பாளர் பணியைத் திறம்படச் செய்து கொண்டிருக்கும் போதே இவரது வீழ்ச்சிக்குக் காரணமாய்ச் சூழ்ச்சிகளும் தொல்லைகளும் குறுக்கிடத் தொடங்கின.

பைராம்கானின் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்த நிகழ்ச்சிகள் பல உண்டு. பைராம்கான் 'சியா' பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் அரசவையிலிருந்த 'சுன்னிப்' பிரிவைச் சார்ந்தவர்கள் இவரை வெறுத்தனர். பதினெட்டு வயதை எட்டிய பேரரசர், பிறரைச் சார்ந்திருப்பதால் ஏற்படும் தவறுகளை உணரத் தொடங்கினார். பைராம்கானின் பாதுகாப்பை அவர் வெறுக்கத் தலைப்பட்டார். அக்பரின் அதிருப்தியை அவர்தம் பேரன்பிற்குரிய செவிலித் தாயாகிய மாகம் அனகா மேலும் தூண்டினார். பேரரசரின் ஆசானாகிய முல்லா பீர் முகமதுவை வேலையிலிருந்து நீக்கியது அவரது கோபத்தை மேலும் கிளறியது. அக்பர் தலைநகரில் இல்லாதபோது துரோகமான புரட்சி செய்வதற்கான திட்டங்களைத் தீட்டினார் என்று பைராம்கானை மாகம் அனகாவும் அவரது ஆதரவாளர்களும் குற்றம் சாட்டினர். இவ்வாறாகப் பலபகுதியிலிருந்தும் வந்த செய்திகள் அக்பர் மனத்தை மாற்றியது. எனவே, காப்பாளர் பணியிலிருந்து விடுவித்து பைராம்கான் வெகுநாள்களாக விரும்பி வந்த மெக்காவிற்கான புண்ணியப் பயணத்தை தொடங்கப் பணித்தார்.

இவரது கடந்த கால ஒப்பற்ற சேவைகளுக்கும், இவர் வகித்து வந்த உயர் பதவிக்கும் உகந்த வகையில் சாகீர்களும் மானியங்களும் இவருக்கு வழங்கப்பெற்றன. இராசபுதனம் வழியாகச் சென்ற பைராம்கான் இறுதியாகக் குசராத்திலிருந்த பத்தானை அடைந்தார். அந்நகரில் இருக்கும்போது ஆப்கானியக் கும்பல் ஒன்று இவரைத் தாக்கியது. மச்சிவாராவில் இவருடன் போரிட்டுக் கொல்லப் பெற்ற ஒருவரின் மகன் இவரைப் பழி வாங்குவதற்காகக் கொலை செய்தான். பைராம்கானின் கடந்த காலச்சேவையை மறக்காத அக்பர், இவரது குடும்பத்தாரை மிகுந்த மரியாதையுடன் தமது அரண்மனைக்குக் கொண்டு வருமாறு ஆணையிட்டார். பைராம்கானின் விதவையான சலீமா சுல்தான் பேகத்தைப் பேரரசர் மணந்து கொண்டார். இவர்தம் இளம் மைந்தர் அப்துர்ரகீம், அக்பரின் பாதுகாப்பில் வளர்ந்து தந்தையைப் போலவே கான்கானான் ஆக உயர்ந்தான். பைராம்கானின் பிற்காலச் செயல்கள் எவ்வாறு இருப்பினும், அவர் ஆற்றிய அரும்பணிகள் முகலாய ஆட்சி இந்தியாவில் நிலைபெற ஊன்றுகோலாக இருந்தன.

தா.எ.

**பொ** பகரமும் ஒகரமும் இணைந்து ஒலித்தலால் வரும் ஒலி. உதடுகளை மூடித்திறக்கும்பொழுது ஏற்படும் ஒலியை உதடுகளைக் குவித்துப்பின் சிறிதளவே உயர்த்தி வெளிப்படுத்தினால் இவ்வொலி தோன்றும். ... ... ...

ஓரெழுத்தொரு மொழியாக இது பொத்தல் அதாவது துளை, கொப்புளித்தல் என்ற பொருள்களைத் தரவல்லது. ... ...

**உருவம்:** இந்தியா முழுவதும் பொதுவாயிருந்த பழைய பகர வடிவத்திற்குத் தலைக்கட்டிலிருந்து இருபுறமும் சிறு கோடுகளைச் சேர்த்து எழுதிய பொகரமாகப் படித்தார்கள். இவ்வடிவத்தைப் புகழூர்க் கல்வெட்டில் (கி.மு. 3 – ஆம் நூ.) காணலாம். ... ..



காலப் போக்கில் இடப்புறக் கோடு மேல் நோக்கி வளைய, வலப்புறக்கோடு காலாக மாறத் தொடங்கியது. ... ..



இரண்டாம் பல்லவபரமேச்சுவரன் காலத்துத் (கி.பி. 8-ஆம் நூ.) திருவதிகைக் கல்வெட்டிற்கு முந்திய காலத்திலேயே கொம்பும் காலும் தோன்றிவிட்டன. ... ... ...


கொம்பும் காலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இராசேந்திரசோழன் காலக் கல்வெட்டுகளுக்கு முன்னாலேயே பிரிந்து வரத் தொடங்கின. ..

காலும் ஏறக்குறைய முழுவளர்ச்சி அடைந்துவிட்டது (கரந்தைச் செப்பேடுகள்). ... ... ...




பொ, போ இரண்டிற்கும் எழுத்தளவில் ஒரே உருவம். ஆகையால் தொல்காப்பியர் நூற்பாவை ஒட்டிப் பொகரக் குறுக்கத்திற்கு ஒரு புள்ளி வைக்கப்பட்டது. இந்த வழக்கத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்கவில்லை. மொழியறிவை ஒட்டியே இதைத் தெரிந்து கொள்ளலாயிற்று. ...

தந்திவர்மனின் மாற்பிடுகு ஏரிக்கல்வெட்டு (கி.பி. 8 – ஆம் நூ.), செந்தலை முத்தரையர் கல்வெட்டு, மதுரை சேந்தனின் வட்டெழுத்துக் கல்வெட்டு முதலியவற்றில் எகர ஒகர உயிர் மெய்களுக்கு மேல் புள்ளிகள் காணப்படுகின்றன. ... ... ...



வட்டெழுத்தில் பொகரக்குறி ஒரு விளங்காத புதிராகவே தோன்றுகிறது. முதல் முதலில் வேள்விக்குடிப் பாண்டியன் செப்பேட்டில் (கி.பி. 8 – ஆம்நூ.) இதன் வடிவம் தோன்றுகிறது. ... ... ...



இவ்வடிவத்தை விளக்க இயலாது. செப்பேட்டில் இதன் பிந்திய வடிவம் கேரளத்துக் கொல்லூர் மடத்தில் (கி.பி. 12 – ஆம் நூ.) காணப் படுகின்றது. ... ... ... 

இதன் இறுதி வடிவம் கேரளத்து (கி.பி. 18 – ஆம் நூ.) மிஞ்சிறை மடத்துச் செப்பேட்டில் காணப்படுகின்றது. ... ... 

கே.ஜி.கி.

**பொகாரோ:** இது எஃகுத் தொழில் நகரம். இது பீகார் மாநிலத்தில் அமைந்துள்ளது. இந்நகரம் பொகாரோ (Bokaro) ஆறும், தாமோதர் ஆறும் கூடுமிடத்திற்கு அருகில் பொகாரோ ஆற்றின் தென்கரையின்மீது அமைந்துள்ளது. எஃகுத்தொழிற் சாலையை இந்திய அரசாங்கம் சோவியத்துநாட்டின் தொழில் நுட்ப உதவியுடன் ஏற்படுத்தியுள்ளது. பிற சிறந்த தொழில் நகரங்களுக்கு இடையில் இந்நகரம் அமைந்துள்ளது. இந்நகரம், தொழில் நகரமாக அமைவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் பெற்றுள்ளது. அதனால், அத்தொழிற்சாலை மிகச் சிறப்பான முறையில் செயலாற்றி வருகிறது. இத்தொழில் நகரம் மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்டுத் தொடங்கப்பட்டது. இந்நகரம் கூகலி, பொகாரோ, சரியா ஆகிய நிலக்கரி வயல்களுக்கு அருகில் அமைந்துள்ளது. இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய இரும்புத் தாதுகள் தொலை தூர இடங்களில் இருந்து கொண்டு வரப் படுகின்றன. இந்நகருக்கு வேண்டிய தண்ணீர் பொகாரோ ஆற்றிலிருந்து கால்வாய் மூலமாகக் கொண்டு வரப்படுகின்றது.

பொகாரோ இந்தியாவின் மிகப் பெரிய நான்காம் தொழில் நகரமாகும். இந்நகரம் அமைய 1960 – ஆம் ஆண்டிலேயே திட்டமிடப்பட்டது. இதற்குச் சோவியத்து நாட்டு அரசாங்கம் தொழில் நுட்ப உதவி நல்க ஒத்துக்கொண்டது. எனவே, இந்திய – சோவியத்து நாட்டுக் கூட்டு முறையில் இத்தொழிற் சாலை 1960 – ஆம் ஆண்டு தொடங்கி 1964 – ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பொருள் உற்பத்தியைக் கொண்டு வந்தது. இந்தத் தொழிற்சாலைக்குப் 'பொகாரோ எஃகு நிறுவனம்' என்று அரசினால் பெயரிடப்பட்டது. இந்த நான்காம் பெரிய தொழிற் சாலை 'பொதுத் துறை'யின் (Public Section) அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நகரினை அமைக்கவும், தொழில் வளம் பெருகவும், முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றவும் வேண்டிய பொறுப்பினை எம்.என். தசுதூர் நிறுவனத்திடம் (M.N. Dasdur & Co.) அரசு ஒப்படைத்தது. அந்நிறு





பொகாரோ

வளம் ஓர் ஆலோசனையாளராகச் (Consultant) செயற்படுகின்றது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் எஃகுத் தேவையில் ஏற்பட்ட பற்றாக் குறையை ஈடுகட்டவே இந்நகரம் அமைக்கப்பட்டது. இந்நகரம் அமைப்பதற்கு பொருள் வசதி, தொழிலாளர்கள் பெருக்கம், போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி, சாதகமான வானிலை, தொழில் வல்லுநர்கள் எளிதில் கிடைத்தல்,எளிமையாக மூலப் பொருள் கிடைத்தல், விற்பனைச் சந்தை வசதி போன்ற பல நலன்கள் அமையப் பெற்றுள்ளன.

இத்தொழில் நகரத்தில் முதல் ஆண்டில் 4 மில்லியன் கண்டியும் இரண்டாம் ஆண்டில் 5 மில்லியன் கண்டியும் எஃகு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்கினை அரசு நிருணயித்தது. இந்தத் தொழில் நகரம் அமைப்பதற்கு 524 கோடி உருபாய் தேவைப்படும் என்று தொடக்கக் காலத்தில் திட்டமிடப்பட்டது. இப்பொகாரோ தொழிற்சாலை இந்தியப் பாணியில் (Indian Design) அமைக்கப்பட்டுள்ளது. இதில் முதன் முதலில் அமைக்கப்பட்ட இரண்டு கொதிகலன்கள் (Furnace) ஒவ்வொன்றும் நாள் ஒன்றுக்கு 2,000 இலிட்டர் கொள்ளளவினை ஏற்கக்கூடிய அளவிற்குப் பெரியதாகும். இத்தொழிற்சாலையில் முதல் சோதனை 1970-ஆம்ஆண்டு நடத்தப்பெற்றது. அந்தத் தொழிற் சாலையின்மூலம் செய்யப்பட்ட எஃகு முதன் முதலாக 1971-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் வெளி வந்தது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்ட இத்தொழிற்சாலை மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டு விரைவில் வளர்ச்சியடைந்து பெருநகரமாக மாறியுள்ளது. இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய இரும்புத் தாதுப் பொருள்கள் 32 கி. மீ. தூரத்திலுள்ள 'கிரிபுரு' என்னுமிடத்திலிருந்து சாலை வழியாகக் கொண்டுவரப்படுகின்றன. இதற்கு வேண்டிய நிலக்கரி, இத்தொழிற்சாலைக்கு எதிரே அமைந்துள்ள சிரியா, கிழக்குப் பொகாரோ ஆகிய நிலக்கரி வயல்களிலிருந்து கிடைக்கிறது. இந்நகரத்திற்கு வேண்டிய சுண்ணாம்புக் கற்கள் பவந்தபூர் மற்றும் தல்மேகஞ்சு என்ற இடங்களிலிருந்தும் கிடைக்கின்றன. மேலும் 'சுரியகிப்பாறை'கள் (Dolomite ) மத்தியபிரதேசத்தில் உள்ள பிலாசு பூரைச் சேர்ந்த 'கிர்ரி' என்னுமிடத்திலிருந்து கொண்டுவரப்படுகின்றன. வேண்டிய மங்கனம் வெளிச் சந்தையிலிருந்து வாங்கப்படுகின்றன. இத்தொழிற்சாலைக்கு வேண்டிய துறைமுக வசதியும், விற்பனைச் சந்தையும் கல்கத்தாவில் அமைந்திருத்தல் மிகச்சிறப்பான அமிசமாகும்.

பொகாரோ எஃகுத் தொழிற்சாலைக்குப் புதிய திட்டங்கள் போடப்பட்டுப் அது புதுமயமாக்கப்பட்டுள்ளது. சோவியத்து நாட்டுடன் இணைந்து செயற்பட்ட இந்தத் தொழில் நகரம் தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய நகரமாக விளங்குகிறது. இத்தொழிற் சாலைக்கு 1987 – ஆம் ஆண்டு வரை 3,500 கோடி உருபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.மேலும், இதனை விரிவுபடுத்த இன்னும் 1000கோடி உருபாய்க்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இப் பெரிய தொழிற்சாலை நகரம் இந்தியாவின் தொழில் துறையில் ஒரு வற்றாத நீரூற்றாக (Watershed) அமைந்துள்ளது. செருமானியர்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட 'உரூர்கேலா' தொழிற்சாலை, ஆங்கிலேயர்களின் உதவியுடன் கட்டப்பட்ட 'துர்காபூர்' தொழிற்சாலை ஆகியவற்றைவிட இத்தொழிற்சாலை மிகப் பெரிதாக அமைந்து அரிய சாதனைகளைச் செய்துவருகிறது. சி. மூ.

**துணை நூல்கள்:**

**Chaudhuri**, M.C., India Industries Development, Oxford & IBH Publishing Co., Calcutta, 1970.

**Chopra**, P.N., An Encyclopaedia Survey of India, S. Chand & Co., Delhi, 1982.

**Sivayya**, K.V., Indian Industrial Economy, S.Chand & Co., Delhi, 1987.

*பொகீமியா* செக்கோசுலோவாகியாவின் (Czechoslovakia) மேற்குப் பகுதியாகும். கிறித்து பிறப்பதற்கு ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன், அங்கு கெல்டிக்கு இனத்தைச் சார்ந்த பொயி (Boii) பழங்குடியினர் வாழ்ந்தனர். அதனால், இப்பகுதி பொகீமியா (Bohemia) என்று வழங்கலாயிற்று. இங்குத்தான் அந்நாட்டின் தலைநகரமாகிய பிராக்கு (Prague) அமைந்துள்ளது. பொகீமியாவின் பரப்பு ஏறத்தாழ 52,768 சதுரக் கிலோ மீட்டர். இங்கு 6 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இது அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 40 விழுக்காடாகும். பொகீமியா ஒரு பீடபூமி. இதனைச் சுற்றிக் குன்றுகளும், மலைகளும் அமைந்துள்ளன. பொகீமியாவின் வடக்கில் பாயும் எல்ப்பு (Elbe) நதியின் பள்ளத்தாக்கு வளமானதாகும். அங்குக்கோதுமை, கம்பு, ஓட்சு, உருளைக்கிழங்கு, பார்லி ஆகியவை பயிரிடப்படுகின்றன. பொகீமியா மக்கள் ஆடு, மாடு, பன்றி ஆகியவற்றினையும் வளர்க்கின்றனர்.

பொகீமியாவின் பெரும் பான்மையினர் இசுலாவு (Slav)இனத்தைச் சார்ந்த செக்க (Czech) மக்களாவர். இம் மக்கள் கி. பி. 500 – ஆம் ஆண்டிலிருந்து இங்குக்

குடியேறி, அங்கிருந்த பொயி பழங்குடிகளை வெளியேற்றினர். புனித உரோமானியப் பேரரசர் கி.பி. 1158-ஆம் ஆண்டு பிரெடரிக்கு பொகீமியப் பிரபுவுக்கு 'அரசன்'என்ற பட்டத்தினை வழங்கினார். அது முதல் பொகீமியாவின் அரசியல் புகழ் வளரலாயிற்று. நான்காம் சார்லசு என்ற பொகீமிய அரசர் புனித உரோமானியப் பேரரசராகப் பொறுப்பேற்ற போது (கி. பி. 1335), பொகீமியாவின் செல்வாக்கு ஐரோப்பிய அரசியலில் உச்ச நிலையை அடைந்தது.

பொகீமியாவில் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் ஓர் உள்நாட்டுப் போர் தொடங்கிற்று. பொகீமியாவைச் சார்ந்த சான் அசு (John Huss)என்ற திருச்சபைச் சீர்திருத்தவாதி கொலை செய்யப்பட்டதால் இப்போர் ஏற்பட்டது.எனவே,இதனை அசின்போர்கள் (Hussite Wars) என்றும் கூறுவர்.அசினைப் பின்பற்றியவர்களுக்கும் கத்தோலிக்கத் திருச்சபை ஆதரவாளர்களுக்குமிடையே நடந்த இப்போர் கி.பி.1436 - இல் முடிவுற்றது. இதனால், பொகீமிய மக்களிடையே சமயச் சீர்திருத்த இயக்கம் வேகமாகப் பரவியது. பொகீமிய மக்களுள் பெரும்பான்மையினர் கால்வினிய மற்றும் உலூதரின் பிரிவுகளைப் பின்பற்றலாயினர். ஆனால், கத்தோலிக்க சமயத்தினைச் சார்ந்த ஆப்சுபர்க்கு (Hapsburg) வமிசத்தின் கீழ்,பொகீமியா வந்ததால் மீண்டும் சமயப் பூசல்கள் ஏற்படலாயின.

பொகீமியாவில் கி.பி.1618-இல் ஆப்சுபர்க்கு ஆட்சிக்கு எதிராகக் கலகங்கள் தோன்றலாயின. இவ்வமிசத்தைச் சார்ந்த புனித உரோமானியப் பேரரசரான மத்தியாசு (Mathias) பொகீமியாவின் அரசராகவும் இருந்தார். அவருக்குக் குழந்தை இல்லாததால், பெர்டினாண்டு (Ferdinand)என்ற கத்தோலிக்கர் பொகீமிய அரசராகும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனைப் பொகீமியாவிலிருந்த பெரும்பான்மை மக்களான உலூதரின் சமயவாதிகளும் கால்வினிய சமயவாதிகளும் எதிர்க்கலாயினர். பொகீமியத் தலைநகர் பிராக்கில் பேரரசரின் பிரதிநிதிகளாகிய கத்தோலிக்கக் குருமார்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சு, கைகலப்பில் முடிவுற்றது. இரு கத்தோலிக்கக் குருமார்கள் மாளிகையின் மேலிருந்து கீழே தூக்கி எறியப்பட்டனர். இந்நிகழ்ச்சியே முப்பதாண்டுப் போர் ஏற்பட உடனடிக் காரணமாயிற்று.

இச் சமயப் போர் கி.பி. 1618 - இல் தொடங்கி ஐந்து கட்டங்களில் நடைபெற்றது. அதன் முதல் கட்டம் (கி.பி.1618 - 20) பொகீமிய நிகழ்ச்சிகள் ஆகும். புரட்சியைத் தொடங்கிய பொகீமியர் ஆப்சுபர்க்குகளுக்கெதிராகச் செருமானிய அரசுகளின் உதவியை நாடினர். பொகீமிய மக்களுக்குதவ முன்வந்தவர்களுள் முக்கியமானவர் பாலடினேட்டு நாட்டின் தேர்வாளர் பிரெடரிக்கு(Frederick, the Elector of Palatinate). அவரைத் தம் அரசராகப் பொகீமியப் புரட்சியாளர்கள் ஏற்றனர். இதற்கிடையில் பேரரசர் மத்தியாசு இறக்கவே, இரண்டாம் பெர்டினாண்டு பேரரசரானார். பெர்டினாண்டு, பவேரிய அரசர் மாக்சிமிலியனின் (Maximilian of Bavaria) உதவியுடன் பொகீமியா மீது படையெடுத்தார். பிராக்கு அருகில் கி.பி.1920-இல் நடைபெற்ற வெண்குன்றுப் போரில் (Battle of White Hill) பொகீமியப் படைகள் படுதோல்வியடைந்தன.பொகீமிய மன்னர் பிரெடரிக்கு, போர்க்களத்திலிருந்து தப்பி ஓடினார். பேரரசர் பெர்டினாண்டு பொகீமியாவைக் கைப்பற்றிப் புரட்சியார்களை ஒடுக்கினார். கத்தோலிக்க சமயம் மீண்டும் பொகீமியாவில் புகுத்தப்பட்டு முப்பதாண்டுப் போரின் முதல் கட்டத்தில் வெற்றி பெற்றது.

ஆப்சுபர்க்குகளின் ஆட்சியின்கீழ் வந்த பொகீமியா தன் அரசியல், சமய சுதந்திரத்தினை இழந்து தவித்தது. பொகீமியாவின் செக்கு இனத்தலைவர்கள் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தம் மக்களின் நாட்டுப் பற்றினையும் பண்பாட்டுப் பெருமையையும் தூண்டி விடலாயினர்.

பிரான்சுப் புரட்சியின் தாக்கத்தினை ஆசுத்திரியப் பேரரசிலும் காணலாம். இப்புரட்சியினால் உந்தப்பட்டு, கி.பி. 1848-ஆம் ஆண்டில் ஆசுத்திரியப் பேரரசிலிருந்த அங்கேரியின் (Hungary) மாகியர்களும் (Magyars), பொகீமியாவின் செக்கு மக்களும் ஆப்சுபர்க்குகளுக்கெதிராகப் புரட்சி செய்தனர். அப்புரட்சிகள் ஒடுக்கப்பட்ட போதிலும், மக்களின் தேசிய உணர்வுகளை முழுமையாக அகற்ற முடியவில்லை.



பொகீமியா

முதல் உலகப் போரில் (கி.பி.1914-18) ஆசுதிரியா தோல்வியடைந்தது. அப்போர் முடிவில் நேசநாடு களுக்கும் ஆசுதிரியாவிற்கும் புனித செருமெயின் (St. Germain) உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் விளைவாக ஆசுதிரியப் பேரரசு தன் பல பகுதிகளை இழக்க நேரிட்டது. அவற்றிலிருந்து ஒரு சில புதிய நாடுகள் கிழக்கு ஐரோப்பாவில் தோன்றின. செக் கோசுலோவாகியா அவ்வாறு தோன்றிய நாடாகும். அப்புதிய அமைப்பில் பொகீமியா என்ற பகுதி மறைந் தது. இன்று அது செக்கோசுலோவாகியாவின் ஓர் அங்கமாக விளங்குகின்றது; தொழில் வளத்தில் முன் னேறிய ஒரு நாடாகத் திகழ்கின்றது. பொகீமியா வின் வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள் (Glassware) உலகப் புகழ்பெற்றவை. த.ந.வா.

**பொகுட்டெழினி:** அதியமான் நெடுமானஞ்சி யின் மைந்தன் பொகுட்டெழினி. இவன் அதியர் குடியைச் சார்ந்தவன். ஒரு காலத்தில் இவன்தன் முன்னோர் அதிகை என்னும் ஊரில் வாழ்ந்திருந்து பின்னர்ச் சேரநாட்டில் குடியேறியிருத்தல் வேண்டும். எனவே, அதிகையராகிய இவர்கள் அதியர் எனப் பெயர் பெறுவாராயினர் என்று அறிஞர்கள் கருது கின்றனர். 'அதியர்' என்பது 'அதிகையர்' என்பதன் மரூஉ. 'மதியேர் வெண்குடை அதியர் கோமான், கொடும்பூண் எழினி...' (புறம்.392) என்பதனால் இவன் அதியர் மரபினன் என்பது உறுதியாகின்றது.

பொகுட்டெழினியைக் குறித்து ஔவையார் பாடியுள்ள மூன்று புறநானூற்றுப் பாடல்கள் (96, 102, 392) கிடைத்துள்ளன. 'மழவர் தலைவர் களான அதியன், எழினி என்போர் சேரரின் மற்றொரு கிளையினர்' என்று தி.வை. சதாசிவ பண்டாரத்தார் கருதுகின்றார்.

சேலம் மாவட்டத்தின் வடபகுதி, மைசூர் மாநிலத்தின் கோலார்ப் பகுதி ஆகியவிரண்டும் சேர்ந்து 'கங்கநாடு' என்று முன்பு வழங்கிற்று. அப் பகுதியை இடைக்காலச் சோழர் கைப்பற்றி அதனை 'நிகரிலி சோழ மண்டலம்' எனப் பெயரிட்டு வழங்கி னர். அதியர்கள் தகடூரைத் தலைநகராகக் கொண்டு சேலம் வடபகுதியை ஆண்டு வந்தனர். தகடூருக்கு இப்போது தருமபுரி என்று பெயர் வழங்குகிறது. சோழர்களின் ஆட்சியில் குறுநில மன்னர்களாக இருந்த அதியர்கள் கன்னடரை வென்று புகழ் பெற் றிருந்தனர். இவர்களைக் கன்னட நாட்டுக் கல் வெட்டுகள் 'அதியமா' எனக் குறிப்பிடுகின்றன. அதியமான்களின் வழித்தோன்றல்களாகிய எழினி, விடுகாதழகிய பெருமாள் முதலியோர் தம்மைச் சேரர் குடியைச் சார்ந்தவராகவே கருதிக்கொண் டனர் என்று கல்வெட்டுச் சான்றுகளை அடிப்படை யாக வைத்து ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை கருது கின்றார்.


பொகுட்டெழினியின் தந்தை அதியமானைப் பற்றிய குறிப்பு வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த போளூருக்கு அண்மையில் உள்ள திருமலைக் கல்வெட்டில் காணப்படுகின்றது. அக்கல்வெட்டு, செய்யுள் வடிவத்தில் அமைந்துள்ளது.

பொகுட்டெழினி அகன்ற மார்பும், திரண்ட தோளும், நீண்ட கைகளும் கொண்டு சிறந்தவனாக விளங்கினான் (புறம்.96). இவன், தன் தந்தை அதிய மான் நெடுமானஞ்சியைப் போன்றே கொடையுள் ளம் மிக்கவனாக விளங்கினான் என்பதனை, 'இசை விளங்கு கவிகை நெடியோய்' என்ற புறநானூற்றுத் தொடர் (102) விளக்கும். அப்பாடலில் சகடத்தின் கீழ் அச்சுமரத்தின் கண்ணே சேமவச்சுக் கூறப்பட்டது. இதனால் அதியமான் அஞ்சி இருப்பவும் பொகுட் டெழினி அவற்குத் துணையாய் இருந்தான் என்பது தெள்ளிதாம் என்று அறிஞர் கருதுவர்.

அதியமான் நெடுமானஞ்சி போர்க்களத்திற்குச் சென்றிருந்த போது பொகுட்டெழினி பிறந்தான். அஞ்சி,போர்க்களத்திலிருந்து நேரே தன் மைந்தனைக் காணவந்த செய்தி, 'செறுவர் நோக்கிய கண்தன், சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னாவே' (புறம்.100) என்ற பகுதியால் உறுதியாகின்றது.

பொகுட்டெழினியின் முன்னோர் கரும்புப் பயிரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தவர்கள் (புறம்.392). பகை மன்னர்களின் அரண்களை அழித்துக் கழுதை ஏர் கொண்டு உழுது அந்நிலத்தில் வெள்ளை வரகும் கொள்ளும் விதைத்துவிடும் பண்டைய போர்க்கள மரபினைப் பொகுட்டெழினியும் பின்பற்றியுள்ளான் என்பது புறப்பாடலால் உறுதியாகின்றது. மேலும் இவன், தன்னை நாடி வந்த இரவலர்களைக் கண்ட அளவிலேயே அவர்தம் கிழிந்த ஆடைகளை நீக்கிப் புதிய ஆடைகள் வழங்கி, விருந்து பேணும் பண்பின னாக விளங்கினான் (புறம்.392). ஔவையார், 'திங்கள் நாள்நிறை மதியத்தனையை' (புறம்.102) என்று பொகுட்டெழினியைக் கூறுவதனால், அறிவு, அருள் முதலாகிய குணங்கள் நிறைந்தவன் இவன் என்பது இனிது பெறப்படும். ந.சொ.

**பொங்கல் விழா:** உலகெங்கிலும் அறுவடை விழாவாகக் கொண்டாடப்பெறும் நிகழ்ச்சியே தமிழ்நாட்டில் பொங்கல் விழாவாக நிகழ்கின்றது. சாதி, மதம், இனம் ஆகிய பல பிரிவுகள் நிலைத்து விட்ட நிலையிலும் காலநிலை மாறி, உழவுத் தொழிலும் காலத்தில் நிகழாமல் பின்னடைவு பட்டு





விட்ட நிலையிலும் தைத்திங்கள் முதல்நாளில் பொங் கல் விழாக் கொண்டாடுவதிலிருந்து தமிழ்நாட்டி னர் நீங்கவில்லை.

சூரியன் தனுசு இராசியிலிருந்து மகர இராசிக்குத் தைத்திங்கள் முதல்நாள் பயணப்படுவதைச் சிறப் பித்து, இந்தியாவின் பெரும்பகுதி மக்கள் 'சங்கி ராந்தி' நாளாக அந்நாளைக் கொண்டாடுவது குறிப் பிடத்தக்கது.

ஆடிப்பட்டத்தில் தேடிவிதைத்து உழைத்து உணவுப்பொருள்களைத் திரட்டிய மக்கள் உத்தராய ணம் தொடக்கமுறும் தைத்திங்கள் முதல் நாளன்று நன்றியுணர்வுடன் மழைக்கும் வேளாண்மைப் பெருக் கத்திற்கும் காரணமான சூரியனை வழிபடுகின்ற னர்.

'சங்கிராந்தி'யன்று கடவுளுக்குச் சிறப்பான வழி பாடுகள், விழாக்கள் ஆகியன செய்யவேண்டு மென்று பிருகுசங்கிதை என்னும் நூல் கூறுகின்றது. ஒரு 'தேவநாள்' என்பது ஒரு மானிடஆண்டு என்றும். அத்தேவநாளின் பகற்பொழுதின் தொடக்கமே தை முதல்நாள் என்றும் அதுவே விழாவாகச் சிறப்பித்துச் செய்யப் படுகின்றது என்றும் ஆகமங்களிலிருந்து அறிய முடிகின்றது.

மார்கழி இறுதி நாள் முதல் தை மாத முதல் மூன்று நாள்கள் முடிய இவ்விழா பெரும்பாலும் நிகழ் கின்றது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. அதற்கேற்ப, 'புது வாழ்வு பூத்தது' என்னும் பொலிவு இந்நாளில் எல்லார் உள் ளத்தும் நிறைந்திருக்கின்றது.

மார்கழித் திங்கள் இறுதிநாளில் 'போகி' என்னும் பெயரில் பெரும் பொங்கலுக்குத் தொடக்கம் நிகழ் கின்றது. மறுநாள் சூரியன் பொங்கலைச் செய்யும் முன்பாகக் காப்புக்கட்டு நிகழ்ச்சிபோலப் போகி அமைவதைத் திருச்சி முதலிய மாவட்ட மக்கள் வாழ் விலிருந்து அறியமுடிகின்றது. போகி அன்று முன்னிர வில் மாரியம்மனுக்குப் படைக்கும் பழக்கம் தென் னார்க்காடு மாவட்டப் பகுதிகளில் காணப்படுகிறது. ஒரு சில பகுதிகளில் குல தெய்வத்திற்குப் பொங்க லிட்டுச் சாந்தி செய்யும் விழாவாகவும் இது நிகழ் கின்றது. ஆடி முதல் மார்கழி முடிய உழைத்துப் பெற்ற விளைவுகளைக் கொண்டு பழையன போக்கிப் புதியன திரட்டும் நாள் 'போகி' என்றாலும் 'பெரும் போகம்' துய்ப்பதில் வல்லவனான இந்திரனைக் கொண்டாடும் நாளே 'போகி' எனப்பெயர் பெற் றது என்று கொள்ளவும் இடமுள்ளது. போகியன்று, இரவு ஒரு சில இடங்களில் பொதுப்பொங்கல் வைத்து வணங்கும் வழக்கமும் இருந்து வருகின்றது. மழை பெய்தற்கேற்ற இரவுப்பொழுதில் பொங் கலிடும் வழக்கம் நிகழ்வதாலும் பழையனவற்றைத் தீயிலிட்டு அழித்து மகிழ்வதாலும் போகியின் சிறப்பு வெளிப்படுகின்றது.

மழை வளந்தரும் இந்திரனைத் தெய்வமாகக் கொண்டாடும் வழக்கம் பற்றிப் பழந்தமிழில் குறிப்பு கள் இருப்பினும் அவ்விழா சித்திரைத் திங்களில் நிகழ்வதாகவே அறிய முடிகின்றது. அறுவடை முடி யும் காலத்தில், மழை வளந்தந்த தெய்வத்தை நன்றி யோடு நினைவுகூர்ந்து போற்றும் பண்பாட்டுநிலை இதனால் விளக்கமாகின்றது.

தைத் திங்கள் முதல் நாள் 'பொங்கல்', அதா வது ஞாயிறு வழிபாட்டுத் திருநாள் ஆகும். ஞாயிற்று வணக்கம் என்பதால் வேய்ந்த கூரைக்கீழின்றி வெளியிடத்தில் புதுப்பானை வைத்துப் புத்தரிசி கொண்டு பொங்கலிட்டுப் புதியவாகக் கிடைக்கும் மஞ்சள், கரும்பு, வாழை போன்ற விளைபொருள் களைக்கொண்டு வணங்குவதே இன்றும் பெருவழக் காக உள்ளது.

பெரும்பானை வைத்துப் பொங்கலிடும் வழக்கத் தால் பெரும்பொங்கல் என்றும் இது பெயர்பெறும். பொங்கல் பானை உடைவதுபோன்ற இடையூறு களைத் தவிர்க்கவும் செல்வப்பெருக்கைக் காட்டவும் இன்று பித்தளை முதலான உலோகப் பாத்திரங் கள் புகுத்தப்பட்டுவிட்டாலும் மண்பானையில் கோல மிட்டு மஞ்சள் கொத்துக் கட்டிச்செய்யும் வழக்கமே தொன்மையானது. நீரும் பாலுமாக ஊற்றப்பெற்ற உலைநீர் பொங்கிவரும்போது 'பொங்கலோ பொங் கல்' என மக்கள் மனம் மகிழ்ந்து வாழ்த்துவர்.

சூரியன் பொங்கல் என்பதால் சூரியன் தோன் றும் முன்னமே விடியலில் பொங்கல் வைத்துச் சூரியன் எழும்பொழுது படைத்து வழிபடும் வழக் கமே உள்ளது. மாறாக, தைமாதம் பிறக்கும் சரி யான காலத்தைக் கணித்து அதற்கேற்ப நண்பகலி லும் பிற்பகலிலும்கூடப் பொங்கலிடுவதுண்டு.

புதுமணப்பெண்ணிற்குப் பொங்கல்சீர் வழங்கும் வழக்கம் தமிழ்நாட்டில் வேரூன்றியுள்ளது. மணப் பெண்ணிற்கு மட்டுமல்லாமல் தாய்வீட்டுச்சீர் ஒவ்வோராண்டுமே பொங்கல் விழாநாளில் பெண் களுக்கு வழங்கப் படுவதுண்டு. தாய்வீட்டிலிருந்து சீர் வந்தபிறகே பொங்கலிடும் மரபும் வழக்கில் இருக் கின்றது.

தைத்திங்கள் இரண்டாம் நாள் 'மாட்டுப்பொங்கல்' எனப்படும் உழவர் திருநாள் நிகழ்கின்றது. அந்த நாளில் வேளாண்மைக்குப் பெருந்துணைபுரியும்

கால்நடைகளை-சிறப்பாக மாடுகளை நன்றியோடு போற்றுகின்றனர். அன்று மாடுகளை நீராட்டிப் பலவகைக்கொடிகள், தளிர்கள், பூக்கள், கோத்த 'சல்லி'களைக் கொண்டு அழகுபடுத்துவர். மாலைப் பொழுதில் பொங்கலிட்டுப் படைத்து வழிபடுகின்றனர். பொங்கல் சோறூட்டிப் பின் குழம்பு போன்ற செவ்வண்ணம் குழைத்து அதனை வயிற்றின் இரு பகுதிகளிலும் தடவி அவையும் சோறுண்டனவாகக் கருதி மனநிறைவு பெறுவர். ஒவ்வோர் இல்லத்திலும் 'மாடுவிரட்டு' நிகழ்ந்த பின்னர், ஊரின் பொதுஇடத்தில் அனைத்து மாடுகளும் மந்தை செய்யப்படுகின்றன. காளைகள் வண்டிகளில் பூட்டப்பெற்று ஊர் வலமாக மந்தையை அடைகின்றன. பொது இடத்தில் வளைக்கப்பெற்ற இம்மாடுகளுக்குக் காட்சி கொடுக்கும் பழமரபு போற்றிக் கண்ணபெருமான் அலங்கரிக்கப்பெற்றுக் கொண்டுவரப்படுவதுண்டு.

தென்மாவட்டங்களில் 'மஞ்சுவிரட்டு' நிகழ்ச்சி நிகழ்கின்றது. ஊரிலுள்ள 'பொதிமாடுகள்' 'கோயில் காளைகள்' பொது இடத்தில் வளைக்கப்பட்டு ஒரே பொழுதில் விடப்பெறும். அக்காளைகளின் கொம்புகள் கூர்மையாக்கப்பட்டு அவற்றில் பட்டு வேட்டியும் பணமும் கட்டப்பட்டிருக்கும். அக்காளைகள் திறந்த வெளியில் அவிழ்த்துவிடப்பெறும். அவற்றை அடக்கியாளவரும் காளையரும், காளைகளும் எதிரெதிர் பொருதும் அவ்வீரவிளையாட்டில் உயிர் இழப்புகளும் நிகழ்ந்துவிடுவதுண்டு.

தை மூன்றாம் நாள் 'காணும்பொங்கல்'. இது 'கன்றுப்பொங்கல்', 'கன்னிப்பொங்கல்' எனவும் வழங்கப்படுகிறது. ஒருவரை ஒருவர் கண்டு மகிழும் நாளாதலால் காணும்பொங்கல் என்றும், கன்றுகளுக்குப் பொங்கலிட்டுப் படைப்பதால் கன்றுப் பொங்கல் என்றும், கன்னியர் ஒன்று சேர்ந்து பொங்கல் வைத்துக் கொண்டாடுவதால் கன்னிப் பொங்கல் என்றும் வெவ்வேறு காரணங்களால் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

மார்கழித்திங்கள் முழுவதும் கன்னிப்பெண்கள் அதிகாலை நோன்பு இயற்றுவதை நிறைவு செய்யும் வகையில் கன்னிப்பொங்கல் அமைவதாகக் கருத இடமுள்ளது. இந்நாளில் கன்னியர் ஒன்றுசேர்ந்து வீடுவீடாகக் கும்மிகொட்டிச் சென்று அரிசி முதலானவற்றைப் பெற்று ஆற்றங்கரையில் பொங்கல் வைத்துப் படைத்துப் பகிர்ந்துண்பர். சில இடங்களில் முதல்நாள் பொங்கிய பொங்கல் சோற்றையே வீடுவீடாகப் போய் பாடிப்பெற்றுவந்து கன்னிராசா தெய்வத்திற்குப் படைத்துவிட்டுப் பகிர்ந்து உண்டு மகிழ்வதும், ஆண்களும், பெண்களும் தனித்தனியே ஆடல்பாடல் நிகழ்த்தி விளையாடித் திரும்புவதும் உண்டு.

தமிழ்நாட்டுக் கிறித்தவர்களும் அவர்களின் சமய வழக்குப்படி பொங்கலைக் கொண்டாடுகின்றார்கள். அந்தோணியார் பொங்கல், செபசுடியார் பொங்கல் என்ற பெயர்களில் கிறித்தவத் தேவாலயங்களின் முன்பு கூடித் திருப்பலி செய்து, பொங்கல் வைத்து அனைவரும் உண்டு மகிழ்கின்றனர். இரண்டாம் நாளில், மாடுகள் வைத்திருப்போர் இந்துக்கள் கொண்டாடும் முறையை ஒட்டியே மாடுகளை நீராட்டி மலர்க்கொடிகளால் கோலஞ்செய்து தேவாலயங்களுக்கு ஓட்டிச்சென்று பாதிரியாரை மந்திரிக்கச்செய்வர். அவ்வாறு மந்திரிக்கப்பட்ட மாடுகள் பின்பு தொகுப்பாக விடப்படுகின்றன. தேவாலயங்களின் முன்பு பொங்கல்வைத்து அனைவருக்கும் கொடுப்பதோடு மாடுகளுக்குக் கொடுப்பதும் உண்டு. இந்துக்கள் கிறித்தவர்களை விருந்திற்கு அழைப்பதும், கிறித்தவர்கள் இந்துக்களை அழைப்பதுமாக ஒன்றுபட்டு உண்டுமகிழும் பெருவிழாவாகப் பொங்கல் திகழ்வது குறிப்பிடத்தக்கது. சி.வே.

**பொத்தப்பி நாடு**: இது பழங்காலத்திலிருந்த ஒரு நாடு. பொத்தப்பி நாடு என்னும் பெயர் அதன் தலைநகராய் விளங்கிய பொத்தப்பி என்னும் ஊரால் அமைந்தது என்பர். ஆந்திரத்தின் கடப்பை மாவட்டம் புள்ளம்பேட்டை வட்டத்தில் பொத்தப்பி என்னும் சிற்றூர் இன்றும் உள்ளது. அவ்வூர் தெலுங்குச் சோழர்களால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆந்திராலா, குண்டலூரு, கொத்தமல்லி, நந்தலூரு, தங்கரூரு என்னும் ஊர்கள் பொத்தப்பி நாட்டைச் சேர்ந்தவை என்பது கல்வெட்டுகள் மூலம் புலப்படுகிறது.

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டிருந்த சோழரின் காலத்தில் அவர்களாட்சிக்குட்பட்டிருந்த தெலுங்கு நாடு அதிராசேந்திர மண்டலம் எனப் பெயர் பெற்றிருந்தது. அதன் கிளைநாடுகளுள் ஒன்றான மேற்பாக்கை நாட்டின் ஒருபிரிவாகப் பொத்தப்பி நாடு இருந்தது.

பொத்தப்பி நாட்டை கி.பி.10 – ஆம் நூற்றாண்டு முதல் தெலுங்குச் சோழர் ஆண்டுவந்துள்ளனர். சோழர் என்னும் சொல்லே தெலுங்கு மொழியில் சோடர் என வழங்கியது. பொத்தப்பிச்சோழர் தங்களைக் கரிகாலன் வழிவந்தவர் என்றும், சூரிய வமிசத்துக்காசியப கோத்திரத்தைச் சார்ந்தவர் என்றும் கூறிக்கொண்டனர்.

இவர்கள், முதலாம் குலோத்துங்கன் காலம் முதல் சோழர்கட்குட்பட்ட சிற்றரசர்களாயிருந்தார்

கள். சோழ அரசு பலவீனம் அடையத் தொடங்கிய போது அவர்கள் காகதீயர்களுக்கு விசுவாசமானவர்களாக மாறினார்கள். அவர்கள் வசத்தில் இருந்த காஞ்சி நகரை மூன்றாம் குலோத்துங்கன் போரிட்டுக் கைப்பற்றினான். காஞ்சியையும், அதற்கு வடக்கில் இருந்த சில பகுதிகளையும் தங்கள் ஆளுகையின் கீழ்த் தெலுங்குச் சோழர்கள் கொண்டிருந்தனர். வடஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலும் அவர்களது ஆதிக்கம் இருந்தது என்பதற்கான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

சோழர்கட்குப்பின் முசுலிம் மன்னர்களாலும், விசயநகர மன்னர்களின் குறுநிலத் தலைவர்களான மாட்ல மன்னர்களாலும் இப்பகுதி ஆளப்பட்டது. இந்நாட்டில் உடுப்பூர் என்ற ஊரில் கண்ணப்ப நாயனார் பிறந்தார் என்று பெரியபுராணம் கூறும். உடுப்பூர் இன்று உடுக்கூர் என்று வழங்குகிறது. கண்ணப்பர் வழிபட்ட காளத்திநாதரின் திருத்தலம் உடுக்கூரிலிருந்து ஏறத்தாழ 64 கி.மீ. தொலைவிலுள்ளது. இன்றும் இப்பகுதி வேடர்கள் கண்ணப்பருக்கு மடம் அமைத்து வழிபடுகின்றனர்.

பொத்தப்பிச் சோழர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக மதுராந்தக பொத்தப்பிச் சோழன், விசயகண்ட கோபாலன், இராசகண்ட கோபாலன் என்பவர்களைக் குறிப்பர்.

சொ.சா.

**துணை நூல்கள்:**

**Sastri,K.A.N.,** The Cholas,University of Madras, 1975.

**Srinivasan, C.R.,** Kanchipuram Through the Ages, Agamkala Prakasan, Delhi, 1979.

**பொத்தியார்:** சங்க காலத்தில் வாழ்ந்த பொத்தியார் கோப்பெருஞ் சோழனுடைய உயிரனைய தோழர். இவர் உறையூரைச் சார்ந்தவர். சோழ வேந்தனுடன் இவர் கொண்டிருந்த நட்பின் ஆழத்தைப் புகழ எண்ணிய பிசிராந்தையார், '......கோப்பெருஞ் சோழன் பொத்தில் நண்பிற் பொத்தியொடு கெழீஇ' (புறம்.212) என்று வியந்து பாராட்டுவர். இவர் ஐந்து புறப்பாடல்களைப் (புறம்.217, 220, 221, 222, 223) பாடியுள்ளார். இவர் உண்மையும் நேர்மையும் உடைய நுண்ணறிவு நிறைந்த புலவராவார். இவர் கோப்பெருஞ் சோழனையும் பிசிராந்தையாரையும் பாடியுள்ளார்.

கோப்பெருஞ் சோழனிடம் இவர் அளவிறந்த மதிப்பும் மாண்பும் கொண்டிருந்தார். அவன் ஆடுநர்க்கும் பாடுநர்க்கும் வரையாது வழங்கும் செந்தண்மையினை உலகமே கண்டு வியந்து போற்றியது. அவன் இறந்தான் என்று கேள்வியுற்ற பொத்தியார், அவனுடைய உயிரைக் கொண்டு போன நிலையை எண்ணி, கூற்றுவனை, 'வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்' (புறம். 221) என்று உரக்கக் கூறினார். இதனால், அம்மன்னவன்பால் இவருக்கு இருந்த ஈடுபாடு நன்கு புலனாகும். கோப்பெருஞ்சோழனை இவர் 'கிள்ளி' (புறம்.220) என்றே குறிக்கின்றார்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கச் சென்றான். அப்போது பொத்தியாரும் அவனுடன் வடக்கிருந்து உயிர்துறக்க முனைந்தார். அந்நிலையில் பொத்தியாரின் மனைவி கருவுற்றிருந்தார். அதனை அறிந்திருந்த சோழ மனனன், 'நின் வெய்யோள் பயந்த புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வா'(புறம். 222) எனக் கூறிய அன்பினை நினைந்து போற்றியுள்ளார்.

பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ்சோழனுக்கும் இடையே ஏற்பட்ட நட்பின் ஆழத்தை உணர்ந்த பொத்தியாருக்குப் பெரும் வியப்பு ஏற்பட்டது. 'வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே' (புறம். 217) என்பது அவர்தம் புறப்பாடல்.

சிறந்த நட்புக்கு இவர் கூறும் உவமை எண்ணி மகிழ்தற்குரித்து. 'உடம்போடு இனியவுயிர் விரும்பு மாறுபோல, விரும்பும் உரிமையுடைய பழையதாகிய நட்பையுடையோர் தம்மிடத்தே செல்லின்' (புறம். 223) அளிப்பன் என்பது அதன் கருத்து. நடுகல்லாகியும் சோழன் இவருக்கென இடங்கொடுத்த பெற்றியை எண்ணி எண்ணிப் பொத்தியார் வியக்கின்றார்.

நச்சினார்க்கினியர், 'இதற்குக் கோப்பெருஞ் சோழன், துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும்போல்வார் துறந்தாரென்று கூறும் புறச் செய்யுட்கள் உதாரணம்'என்று (தொல். கற்பியல், 52) தம் உரையில் மேற்கோள் காட்டுவார். இதனால் இவர் தம் நட்பின் உறைப்பு இனிது பெறப்படும்.

ந.சொ.

**பொதிகை நிகண்டு:** அகராதிகள் தோன்றுவதற்கு முன்னர்த் தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் அறிய விரும்பியவர்க்குக் கருவி நூலாக இருந்தது நிகண்டு என்னும் நூல்வகையாகும். நிகண்டு நூலின் அடிப்படை தொல்காப்பிய உரிச் சொல்லிலேயே இடம் பெற்றிருப்பினும் திவாகரமே முதல் நிகண்டு நூலாக உருவெடுத்தது. திவாகரர் மகனார் பிங்கலர் பிங்கல நிகண்டு இயற்றினார். அதன் பின்னர்ச்சூடாமணி முதலிய நிகண்டு நூல்கள் தோன்றின.

அகராதிகளுள் முதற்கண் தோன்றியது சதுரகராதியே. அவ்வகராதி தோன்றிய பின்னரும் நிகண்டு நூல்கள் தோன்றின. அவ்வகையில் தோன்றிய ஒரு நிகண்டு பொதிகை நிகண்டு ஆகும்.

பொதிகை நிகண்டுக்கு முன்னர்ப் பலப்பல நிகண்டுகள் தோன்றியிருந்தன. ஆதலால், அவ்வளர்ச்சி நிலையும், சதுரகராதி தோன்றி விட்டமையால் அவ்வகராதி அமைப்பு வளர்ச்சி நிலையும் இப்பொதிகை நிகண்டுக்கு உதவியாக அமைந்தன. பின்னே நூல் செய்வார்க்கு, முன்னே நூல் செய்தார் செய்யும் நலப்பாடு இது.

பொதிகை நிகண்டின் ஆசிரியர் சாமிநாத கவிராயர் என்பார். அவர் கல்லிடை நகரைச் சேர்ந்தவர். அவர் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர். அவர்தம் மகனார் சிவ சுப்பிரமணியக் கவிராயர் என்பவர். அவரும் ஒரு நிகண்டு நூல் இயற்றினார். அதன் பெயர் 'நாம தீப நிகண்டு' என்பது. இதனை, 'எந்தை பொதிகை நிகண்டென்றோர் சொற் பல்பெயரே தந்தனன் காண்' என்று வரும் நாமதீப நிகண்டுப் பாயிரத்தால் அறியலாம்.

பொதிகை நிகண்டின் வளர்ச்சி நிலையையும் அதன் சிறப்பையும் அரும் பொருள் விளக்க நிகண்டுப் பதிப்புரையில் அறிஞர் ச. வையாபுரிப்பிள்ளை விளக்கியுள்ளார்.

மற்றை நிகண்டுகளில் வரும் பல்பொருள் ஒரு சொல் முதலிய பாகுபாடுகளும், அம்முதல் ஒரு பெயர், அம்முதல் இருபெயர் முதலிய பாகுபாடுகளும் வேண்டாதனவாம். இப் பொதிகை நிகண்டில் இப்பாகுபாடுகள் அறவே நீங்கிவிட்டன என்றும், அகராதி நிகண்டு முதலியன மொழி முதலெழுத்தின் முறையைக் கவனித்தனவேயன்றி இரண்டாவதெழுத்து முதலியவற்றின் முறையைச் சிறிதும் கவனித்தில என்றும் எடுத்துக் காட்டுடன் விளக்கியுள்ளனர்.

அகராதி நிகண்டின் முதல் மூன்று நூற்பாக்கள், 'அரனென் பதுவே சங்கரன் ஆகும்', 'அம்பிகை என்பதுமையவள் பெயரே'. 'அயனே வேத னாமென நுவல்வர்' என்பன. இவற்றுள் முதல் எழுத்துகள் அகரமாக அமைந்திருப்பினும் அகராதி முறையில் அம்பிகை, அயன், அரன் என்னுமாறு அமைந்திருத்தல் வேண்டும். இதனை நோக்க முதலெழுத்து மட்டும் அகராதி நிகண்டில் கருதப்பட்டது என்பது விளங்கும்.

பொதிகை நிகண்டில் இரண்டாம் எழுத்தும் கருதப்பட்டமை வெளியாகின்றது. 'அகம்தருவும் குறையும் வெற்பு மனையும், அகமும் உள்ளும் ஆன் மாவும் அகப்பொருளும், இடமும் பாவமும் அல்லவு மாகும்', 'அகைத்தல் அறுத்திடலும் ஒடித்திடலும் ஈர்தலும், வேதனை யும்மென விளம்பினர் புலவர்', 'அகப்பா உண்மதில் மேடையு மதிலும்'. இம் மூன்று நூற்பாக்களிலும் முதலெழுத்து அகரமாகவும் இரண்டாம் எழுத்து ககர வரிசையினதாகவும் இருத்தல் அறியத்தக்கது. இதன் அமைப்பிலும்அகம் (1) அகப்பா (2)அகைத்தல்(3)என்னும்முறைவைப்பில் அமைந்திருப்பின் அகராதி முறையை முற்றும் தழுவியதாகச் சிறந்திருக்கும். எனினும், பல்வேறு நிகண்டுகளையும் நோக்குவார் பொதிகை நிகண்டின் வளர்நிலையைத் தெளிவாகக் காண்பர்.

வேதகிரி முதலியார் தொகுத்த இலக்கியக் களஞ்சியத்தில் 'பொதிய நிகண்டு' என்பதொரு நிகண்டின் பெயர் கேட்கப்படுகிறது. அதில், பொன்னிலக்கணம் (கனக லக்கணம்) பற்றிய எழுசீர் விருத்தப் பாவொன்றைக் காட்டுகிறார். பொதிகை நிகண்டு, நூற்பா ஆசிரியத்தால் அமைந்துள்ளது ஆதலாலும், ஒருசொற் பல்பெயர் கூறும் அமைதியினதாதலாலும் எழுசீர் விருத்தத்தால்அமைந்ததும்,பொன் இலக்கணம் கூறுவதும் ஆகிய அப் பொதிய நிகண்டு, பொதிகை நிகண்டின் வேறொன்றாக இருத்தல் வேண்டும் என்பர். இரா.இ.

*பொதிகை முனிவர்* :இப் பெயர் பொதிய மலையில் வாழ்ந்த அகத்தியரைக் குறிக்கும். அகத்தியர் பொதியமலையில் வாழ்ந்தார் என்ற செய்தியைப் பல தமிழ் நூல்கள் எடுத்துரைக்கின்றன. அகத்தியன் என்னும் விண்மீன் தன்னிடத்தைக் கடந்து மிதுன ராசியைச் சேர்தலைக் குறிக்க, 'பொதியின் முனிவன் புரைவரைக் கீறி மிதுனமடைய' (பரி:11) எனப் பரிபாடலில் ஆசிரியர் நல்லந்துவனார் குறிப்பிடுகிறார். பொதிய மலை பற்றிய பாடல் ஒன்று, 'திங்கள் முடி சூடு மலை தென்றல் விளையாடுமலை, தங்குமுகில் சூழு மலை தமிழ் முனிவன் வாழு மலை, அங்கயற் கண் அம்மை திரு அருள் சுரந்து பொழிவதெனப் பொங்கருவி தூங்குமலை பொதிய மலையென் மலையே' எனக் குறிப்பிடுகின்றது. அகத்தியர் பொதிய மலையில்தமிழ்ச்சங்கமொன்று வைத்து நடத்திய செய்தி, 'தென்றமிழ் நாட்டகன் பொதியில் திரு முனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்' என்ற கம்ப ராமாயணப் பாடற் பகுதியால் அறியப்படுகிறது.

அகத்தியர் பற்றிப் பல புராணக் கதைகள் கூறப்படுகின்றன. சிவபிரான் உமையம்மையைத் திருமணம் செய்தபோது அத்திருமணக் காட்சியைக் கண்டு களிக்கத் தேவரெல்லோருங்கூடி வடதிசையிலிருந்ததால் மேருமலை தாழ்ந்தது; தென்திசை உயர்ந்தது. அதைச் சமப்படுத்த, சிவபெருமான் கட்டளைப்படி அகத்தியர் பொதிய மலை வந்தடைந்தார் என்பது கூறப்படுகிறது. இவர், முதற்சங்க காலத்து வாழ்ந்தவரென்றும் மகேந்திர மலையில் வேறு நான்கு முனிவர்களுடன் சேர்ந்து ஆகம நூலைக் கேட்டார்

என்றும், கிரவுஞ்சம், விந்தம் முதலிய மலைகளை அடக்கினாரென்றும், வாதாபி, வில்வலன் என்னும் அரக்கர்களை அழித்தார் என்றும் பல நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவர் விதர்ப்பர்கோன் மகளாகிய உலோபாமுத்திரையை மணந்து கொண்டார்.

அகத்தியருடைய கமண்டலத்திலிருந்து காவிரி வெளிவந்தது என்னும் செய்தி மணிமேகலை என்னும் நூலில் காணப்படுகிறது. 'அமரமுனிவன் அகத்தியன் தனாது கரகங் கவிழ்த்த காவிரிப்பாவை'(மணி: பதிகம் - 11,12). சிவபிரான் அகத்தியருக்குத் தமிழ் நூல் உணர்த்தினார் என்பது 'ஆதியிற்றமிழ் நூல் அகத்தியர்க்குணர்த்திய மாதொரு பாகனை' (சேனா வரையம்) என்ற அடிகளால் அறியப்படுகிறது. 'மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத் தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்' என்ற புறப் பொருள் வெண்பாமாலை அடிகளும் அகத்தியர் தென்பொதி கையில் வாழ்ந்த முனிவர் என்பதைச் சுட்டுகின்றன.

செ.இரெ.செ.

*பொதிய மலை*: பொதியில் என்னும் சொல் பொதிய மலையைக் குறிக்கும். இம்மலை மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகும். இது தமிழ் நாட்டில் திருநெல்வேலிக்கு அருகில் உள்ளது. இம் மலையில் அகத்தியர் வாழ்ந்தார் என்பதை, 'திங்கள் முடிசூடுமலை தென்றல் விளையாடுமலை, தங்குமுகில் சூழுமலை தமிழ் முனிவன் வாழுமலை, அங்கயற்கண் அம்மை திரு அருள் சுரந்து பொழிவதெனப் பொங் கருவி தூங்குமலை பொதியமலை யென்மலையே!' என்னும் பாடலால் அறியலாம். எனவே, இது அகத் தியர் மலை என்றும் கூறப்படுகிறது. இம்மலையில் தான் தண்பொருநை என்னும் தாமிரவருணி ஆறு தோன்றுகிறது. இது தமிழ்பிறந்த மலை எனவும் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவரின் புறநானூற்றுப் (புறம்.128) பாடலிலும், மோசிகீரனார் என்னும் புலவரின் குறுந்தொகைப் (குறுந்.84) பாடலிலும் வரும் 'ஆஅய் மழைதவழ் பொதியில்' என்னும் தொடரால் இம்மலை ஆய் என் னும் வள்ளலுக்கு உரியது என ஆய்வாளர் கருதுகின் றனர். முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் புறநானூற்றுப் (புறம்.2) பாடல் ஒன்றில், வடக் கேயுள்ள இமயமலை போன்று தமிழ் நாட்டில் பொதியமலை சிறப்பாக உள்ளது எனக் கூறியுள் ளார். படுமரத்து மோசிகொற்றனார் என்னும் புலவர் குறுந்தொகையில் (குறுந்.376) 'மன்னுயிரறி யாத்துன்னரும் பொதியில்' என இம்மலை பற்றிக் குறிப்பிடுகிறார்.

அகநானூறு என்னும் நூலில் பரணர் பாடி யுள்ள பாட்டில் (அகம்.322) 'ஏற்றரு நெடுஞ்சிமைப் புகலரும் பொதியில் போல' என இந்த மலையைப் பற்றிக் கூறுகிறார். ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் என்னும் அரசப்புலவன் அகநானூற்றில் (அகம்.25) இம்மலைபற்றி, 'வில்கெழு தடக்கைப் பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன்' எனப் பாடியுள் ளான். எழூஉப்பன்றி நாகன் குமரனார் என்னும் புலவர் அகநானூற்றில் (அகம்.138) 'திருந்திலை நெடுவேல் தென்னவன் பொதியில்' எனப் பொதிய மலையைச் சுட்டுகின்றார். மற்றொரு சங்க நூலான பரிபாடலில், அகத்தியன் என்னும் விண்மீன் உயர்ந்த தன் இடத்தைக் கடந்து மிதுன ராசியைச் சேர்தலைக் குறிக்க, 'பொதியின் முனிவன் புரைவரைக் கீறி மிதுனமடைய' (பரி.11) என ஆசிரியர் நல்லந்து வனார் இம்மலையின் பெயரைக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கிய ஏடுகளில் பல வகையாகப் போற்றப்படும் பொதியில், அகத்தியர் வாழுமிடமாகவும், தண்பொருநை தோன்றுமிடமாக வும், தமிழ் பிறந்த மலையாகவும் கூறப்படுவதுடன் சந்தன மரங்கள் மிகுந்து காணப்படும் மலை எனவும் சிறப்பிக்கப்படுகிறது. நன்னூல் மேற்கோள் பாட் டொன்றில் 'சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்' என வரும் தொடர் இக்கருத்தைத் தெரிவிக்கிறது. தெற்கிலிருந்து வீசும் தென்றற்காற்று பொதிய மலை யின் சந்தன மரங்களில் தோய்ந்து இனிமையும் நறு மணமும் பெறுகிறதென்பது பல நூல்களிலும் கூறப் படுகிறது. பாவேந்தர் பாரதிதாசன் தென்றல்பற்றிப் பாடுகையில் 'பொதிகை மலை விட்டெழுந்து சந்த னத்தின் புதுமணத்தில் தோய்ந்து...... செல்வம் ஒன்று வரும் அதன்பேர் தென்றற்காற்று' என நயந் தோன்ற எடுத்துரைக்கிறார். பொதியமலை 1867 மீட்டர் உயரமுள்ளது.

செ.இரெ.செ.

*பொது அரசு ஊழியர்*: அரசு ஊழியர் என்ப வர் அரசாங்கத்தில் தொழில் முறையில், முழுநேரப் பணியாளராகப் பணியாற்றுபவர். அவர் அரசியல் சார்பற்று, அரசின் விவகாரங்கள் தொடர்பான அலுவல்களில்செயற்படுவார். அவருடைய தகுதியைப் பொறுத்து நிருவாகத்தின் வெவ்வேறு நிலைகளில் அதிகாரமும் பொறுப்பும் வழங்கப்படும்.

**பெயர் உருவாகக் காரணம்:** மிகப் பழங் காலத் தில் அரசரின் வீட்டுப் பணியாளர்களாக அரசு ஊழி யர் பணியாற்றி வந்தனர். அவர்கள் அரசின் அந்த ரங்க ஊழியராகக் கருதப்பட்டனர். அப்பொழுதெல் லாம் அவர்கள் கடமையை மட்டுமே செய்ய வேண் டும். தங்கள் உரிமைகளைக் கேட்க இயலாது. அம் முறையில்தான் அவர்கள் அரசரின் ஊழியர்கள்

எனப்பட்டனர். நாளடைவில் மன்னர் ஆட்சி நலிவடைந்ததும், அமைச்சர்களான வலிமை வாய்ந்த அரசியல்வாதிகள் தங்கள் விருப்பத்திற்கேற்பப் பணியாளர்களை அமர்த்தினார்கள். அடுத்து வந்த காலங்களில் அரசின் தனி விவகாரங்களைக் கவனிப்பதற்காக அவர்கள் அரசு நிறுவனங்கள் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே, இவர்கள் அரசு ஊழியர்கள் எனப்பட்டனர். வளர்ந்து வரும் பொது நல அரசுக் கோட்பாட்டின் கீழ் அவர்களின் வேலை பொது மக்களின் நலன்களையே பெரிதும் பேணிக் காப்பதாக அமைக்கப்பட்டது. அதனாலும் அவர்கள் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட கொள்கைகளை வகிப்பதிலும் செயற்படுத்துவதிலும் ஈடுபடுவதாலும் பொது மக்கள் ஊழியர் (Public Servant) என அண்மைக்காலங்களில் சொல்லப்பட்டனர். இவ்வாறாக அரசரின் அந்தரங்க ஊழியராக இருந்த அரசு ஊழியர் என்னும் சொல் பொது மக்கள் ஊழியர் எனத் தேவைக்கேற்ப மாற்றம் பெற்றது.

**வேலையில் அமர்த்தும் முறைகள்:** அரசு ஊழியர்கள் அரசின் பல்வேறு அலுவலகங்கள் மூலமாக மக்களுக்காகப் பணியாற்றுகிறார்கள். அறிவுத்திறனைச் சோதிக்கும் தேர்வுகளை நடத்தி அதன் மூலமாக வேலைக்கு ஆள் சேர்க்கும் முறை பின்பற்றப்படுகிறது. பொதுவாக, எல்லா நாடுகளிலும் வேலை வாய்ப்புத் துறை அல்லது தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்வுகளை வைத்து, அறிவுத் திறனைச் சோதித்து, திறமையின் அடிப்படையில் வேலைக்கு ஆள் சேர்க்கும் முறை பின்பற்றப்படுகிறது.

**முதல் நிலைத் தேர்வும் பயிற்சியும்:** ஓர் அரசு ஊழியர் தேர்ந்தெடுக்கப்பட்டால் வேலைத் திறமையைப் சோதித்துப் பார்க்கக் குறிப்பிட்ட காலம் முதல் நிலைத் தேர்வுக்கு உட்படுத்தப்படுகிறார். அக்காலம் ஆறு மாதத்திலிருந்து இரண்டு ஆண்டு வரை நீடிக்கலாம். இப்பயிற்சிக் காலத்தில் அரசு ஊழியர் தம் வேலையைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றிப் பணியாற்றும் அரசின் துறைகளில் நடத்தப்படும் தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும். முதனிலைப் பயிற்சிக் காலத்திற்குமுன்போ பின்போ தொழிலைச் செம்மையாகக் கற்றுக் கொள்வதற்காகத் தனிப்பட்ட பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதற்குப்புகுமுகப் பயிற்சி (Pre Entry Training) அல்லது முதல்நிலைப் பின்பயிற்சி (Post Entry Training) என்று பெயர். பயிற்சிக் காலம் முடிந்தவுடன் ஆட்சிப் பணியில் அவர் நிலையான உறுப்பினராகச் சேர்க்கப்படுவார். ஓய்வு பெறும் வரை அவர் தொடர்ந்து அப்பதவியில் பணியாற்றலாம். தகுந்த ஆதாரமின்றி அவர் பணியிலிருந்து நீக்கப்படமாட்டார்.

**பகுப்புகள்:** அரசு ஊழியர்கள் சிறப்புத் தகுதியினர் என்றும் பொதுத் தகுதியினர் என்றும் இரு வகையாகப் பிரிக்கப்படுவர். பொது நிருவாகத்தின் குறிப்பிட்ட துறையில் கவனம் செலுத்தித் தம் திறமையைக் காட்டச் சிறப்புத் தேர்ச்சி பெறும் பலர், சிறப்புத் தகுதியுடையவராவர். சிறப்புத் தகுதி வணிகம், பொறியியல், மருத்துவத்துறை ஆகியவற்றில் கணிக்கப்படுகிறது. பொதுத் தகுதி உடையவர்கள் ஒரு குறிப்பிட்ட துறையில் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்பதில்லை. எடுத்துக்காட்டாக இந்தியாவில் இந்திய ஆட்சிப் பணியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவராகவோ, தலைமைச் செயலக துணைச் செயலராகவோ அரசின்வேறு துறைகளான தொழில் அல்லது வேளாண்மை போன்றவற்றின் இயக்குநர்களாகவோ பதவி வகிக்கின்றனர்.

**அலுவல்கள்:** அரசு ஊழியர், பொதுநிருவாகத்தின் ஏதாவதொரு குறிப்பிட்ட துறையில் பணியாற்றுபவராவர். உயர்மட்ட நிலையில் கொள்கைகளை உண்டாக்குபவர்களுக்குத் தொழில் முறையிலமைந்த ஆலோசகர்களாக அவர்கள் கருதப்படுவர். ஆளுங்கட்சியினரின் தலையீடு இருந்தபோதிலும், ஒருதலைச் சார்பின்றி அரசுப் பணிகளைச் செய்தல் வேண்டும். அரசுப் பணியாளர் அரசியல் தலைவர்களுக்குக் கொள்கை வகுப்பதில் ஊன்றுகோலாய் இருந்தாலும், அத்தகைய முடிவுகளுக்கு அரசியல் நிருவாகமே பொறுப்பாகும். ஆதலால் அவ்வரசு ஊழியர்கள் பொதுமக்களின் கண்டனத்திலிருந்து காக்கப்படுகிறார்கள்.

அரசு ஊழியர், பதவியில் இருக்கும்போது தம் நடத்தையைப் பற்றி எச்சரிக்கை உணர்வோடு இருக்க வேண்டும். பிரான்சு போன்ற மேலை நாடுகளில் அரசுப் பணியாளர்கள் மக்களுக்கு ஒரு முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். அரசுப் பணியாளர் நாட்டின் குடிமகனாவர் என்ற உண்மை இருந்தபோதிலும், அறப் பொறுப்பேற்றுத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்கள். இவை தவிர, ஆட்சிப் பணியாளர்கள் பொது விதியின்படி நேரடியாகவோ மறைமுகமாகவோ எவ்விதத் தொழிலிலும் ஈடுபடக்கூடாது. எவ்வித பரிசுப் பொருள்களையும் அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடாது என்று மற்றொரு பொதுவான விதியும் உள்ளது. இதிலிருந்து மேற்கூறிய நுட்பமான தகுதிகள் ஓர் ஆட்சிப் பணியாளருக்கு இன்றியமையாத்தேவை என்பது தெளிவாகத்தெரிகின்றது. அத்தகைய தேவை

கள் பற்றி விழிப்புணர்வோடு இருப்பதன் மூலமே, அவர் தம் பணியில் ஒழுக்கத்தோடும் விசுவாசத்தோடும் சிறப்பாகச் செயலாற்ற இயலும். அ. ம.

**பொது ஆட்சி இயல்** என்பது மக்களுடைய நல்வாழ்வுக்குகந்த காவற் பணி, பாதுகாப்பு, மராமத்து, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, வேளாண்மை, ஆராய்ச்சி, தேசிய பாதுகாப்பு முதலிய அடிப்படைப் பணிகளை இயற்றுதல் அல்லது ஆற்றும் செயல் ஆகும். அரசாங்கத்தின் பணி பல்வேறு வகையானது. அது ஒரு சுகாதார ஆய்வுக் கூடத்தில் ஓர் எக்சு கதிர் இயந்திரத்தை இயக்குவதாகவோ ஒரு நாணயச் சாலையில் நாணயங்களை அச்சிடுவதாகவோ இருக்கலாம். எதுவாயினும் அரசாங்கத்தின் பணியைச் செய்தலே பொது ஆட்சி இயல் (Public Administration) ஆகும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தக்க ஆட்களை ஒழுங்கு பெற அமைத்து, அவர்களை அதற்காகப் பயன்படுத்துதலே ஆட்சி எனப்படும். 'ஒரு தக்க அதிகாரியினால் எடுத்துக் கூறப்படுகின்ற அரசாங்கக் கொள்கையை அல்லது வேலைத் திட்டத்தை நிறைவேற்றிச் செயற்படுத்துதலைக் குறிக்கோளாகக் கொண்ட செயல்களெல்லாம் ஆட்சி இயலே ஆகும்' என்று எல்.டி.ஒயிட்டு என்னும் ஆசிரியர் கூறுகிறார்.

**ஆட்சி இயலின் பொருள் அடக்கம்:** ஆட்சி இயலில் ஆட்சி இயற் கோட்பாடு என்பதும், செயல் முறை ஆட்சி (Applied Administration) என்பதும் அடங்கும்.

ஆட்சி இயற் கோட்பாடு என்பது தேசிய, பிரதேச, உள்ளூர் நிலைகளிலமைந்துள்ள, நிருவாக ஆலோசனைப் பணிகளிலீடுபட்டுள்ள எல்லா வகையான அரசாங்கங்களின் அமைப்பு, பணிகள், செயற்படும் வகைகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறும். இதில் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற வணிக, தொழில், போக்குவரத்துக் கழகங்களும் அடங்கும். ஆட்சியின் மீதுள்ள பல்வேறு கட்டுப்பாடுகளும் கோட்பாடுகளில் கூறப்படுகின்றன. ஆட்சித்துறைகளின் மீது புறக்கட்டுப்பாட்டைப் (External Control) பாராளுமன்றமும் அமைச்சரவையும், உள்ளாட்சி அரசாங்கத்தை நடுவண் அரசாங்கமும், தொழில், வணிகக் கழகங்களை அமைச்சரவையும் கட்டுப்படுத்துகின்றன. நீதிமன்றங்களும், ஆட்சித்துறை நீதிமன்றங்களும் நிருவாகத்தைக் கட்டுப்படுத்துகின்றன. ஆட்சித் துறைகளின் மீது அகக் கட்டுப்பாடு என்பது, இணைப்பு (Integration), ஒருங்கிணைப்பு (Co-ordination), அதிகாரப் பரவல் (Extension), நிதிக் கட்டுப்பாடு முதலியவற்றின் வாயிலாகச் செயற்படுகின்றது. இவ்விரு வகைக் கட்டுப்பாடுகளும் ஆட்சி இயற் கோட்பாட்டில் அடங்கும். பொது ஆட்சி இயலில் அலுவல் செய்யும்பணியாளர்களைப் பணிக்குச் சேர்த்தல், வகைப்படுத்துதல், பதவி உயர்வு வழங்குதல், பணிப் பயிற்சி அளித்தல், பணியிலிருந்து ஓய்வு பெற விதிகளமைத்தல் முதலிய பணியாளர் பற்றிய கேள்விகளைப் பற்றிய செய்திகளும், ஆட்சி பற்றிய திட்டங்கள் வரைதல், ஆய்வுகள் செய்தல், செய்திகளைத் திரட்டுதல், பொது மக்கள் தொடர்பு, ஆட்சியாளர்களின் சமயோசித அதிகாரம் (Discretion) அல்லது தன் விருப்ப அதிகாரம் முதலியனவும் ஆட்சி இயற் கோட்பாட்டில் அடங்கும்.

செயல் முறை ஆட்சியில் பல்வேறு துறைகளெல்லாம் அடங்குவதால் அதன் பொருள்எல்லை மிகவும் விரிவானது. செயல்முறை ஆட்சியைக் கற்கும் போது வரலாற்று அடிப்படையிலும், பன்னாட்டு அடிப்படையிலும், ஒவ்வொரு நாட்டினடிப்படையிலும், ஒவ்வொரு பணியாணை அல்லது ஆட்சித் துறையினடிப்படையிலும், அரசாங்க அளவிலும் படித்தல் வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் இயங்குகின்ற ஆட்சித் துறையின் அமைப்பு, அதற்காதாரமாக அமைந்துள்ள தத்துவங்கள் முதலியனவும்; இன்று முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் உள்ள முக்கியமான பணித்துறைகளின் செயல்கள், செயல் முறைகள் முதலியனவும்; தேசிய அளவிலும், உள்ளாட்சி அளவிலும் உள்ள அரசாங்கங்களின் அமைப்பு,செயல் முறைகள் முதலியனவும்; உலகத்தின் பல்வேறு நாடுகளிலும், வரலாற்றின் பல்வேறு காலங்களிலும் காணப்படும் ஆட்சி அமைப்பு, செயல் முறைகள் முதலியனவும்; சமத்துவ அடிப்படையிலோ, கூட்டுறவு நிலையிலோ, ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு பின்பற்றும் பேரரசு ஆதிக்க முறையிலோ ஒரு நாட்டினால் மற்றொரு நாட்டின்மீது ஏற்படக்கூடிய தாக்கத்தின் (Impact) சிக்கல்கள் முதலியனவும் செயல் முறை ஆட்சியில் கற்கப்படும் செய்திகள் ஆகும்.

பா.சு.

**துணை நூல்கள்:**

White, L.D., Introduction to the Study of Public Administration, Macmillan, 1939.

Willoughly, F.W., Principles of Public Administration, The Brookings Institution, 1939.

**பொது ஆட்சித்துறை:** குடிமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இயங்கும் எவ்வகைப்பட்ட அரசியல் முறையாயினும் அதன் தொடர்ந்த செயற்படு நிலையே பொது ஆட்சித்துறை எனப்படும். அரசாங்கம் பல்வேறு சமுதாயப் படிநிலை

களுக்கேற்பப் பல பிரிவுகளைக் கொண்டதாகும். அப்பிரிவுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து அரசின் கொள்கைகளையும், செயல் முறைத்திட்டங்களையும் நடைமுறைக்குக் கொண்டுவரும் வகையில் அமைக்கப் பட்டுள்ளன. எனவே, பொது ஆட்சித் துறையானது அரசின் நடவடிக்கைகளைத் திட்டமிடுவது, உருவாக் குவது, நிருவகிப்பது, ஒன்று சேர்ப்பது, கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவது ஆகிய பணிகளை மையமாகக் கொண்டு செயற்படுகிறது. பொது ஆட்சித்துறை (Public Administration) என்பது அரசியல் அறிவிய லில் ஒரு பிரிவாகவும், சமூக அறிவியல்களில் ஒன்றாக வும் விளங்குகிறது.

**வரலாற்றுப் பின்னணி**: நாகரிக வரலாற்றைப் போலவே, பொது ஆட்சித்துறை வரலாறும் பழைமை மிக்கது. ஏனென்றால், தொன்றுதொட்டே கூட்டுவாழ்க்கை முறைநிலவியிருக்க வேண்டும். கூட்டு வாழ்க்கை முறை ஏதாவது ஒருவகை நிருவாகத்தை ஒட்டியே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படிப் பட்ட அமைப்புகள் இருந்தன என்பதற்குரிய ஆதா ரங்கள் தென்ஆசிய, சீன, எகிப்திய நாகரிக வரலாற் றில் தெளிவாகக் காணப்படுகின்றன.

தேசிய இனம், வாழ்க்கை நிலை ஆகியவை பற் றிய கருத்துகளின் விளைவே இன்றைய பொது ஆட்சித்துறை அமைப்பாகும். அத்தகைய அமைப்பின் வாயிலாகச் சிறந்த பொது ஆட்சித்துறை உரு வாயிற்று. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்சு, உருசியா, இந்தியா ஆகிய நாடுகள் தத்தம் தேசிய பண்பாட்டிற்கேற்பப் பொது ஆட்சி முறை யினை உருவாக்கிக் கொண்டன. அதன் விளைவால் பொதுஆட்சி அமைப்பு முறையில் நாட்டுக்கு நாடு வேற்றுமை காணப்படுகிறது.

**பொது ஆட்சித்துறை விளக்கக் கோட்பாடுகள்**: பொது ஆட்சித்துறை அறிஞர்கள் பொது ஆட்சித் துறை என்றால் என்ன என்பதை விளக்குவதற்குரிய கோட்பாடுகளை உருவாக்க முயற்சி செய்தனர். 'பொது மக்களுடைய செயல்திட்டங்களை நிறை வேற்றுவது, நடைமுறைக்குக் கொண்டுவருவது ஆகியவற்றுடன் தொடர்புடைய செயல்கள் அனைத் தும் பொது ஆட்சித்துறையில் உட்படும்' என்று அறிஞர் எல்.டி.ஒயிட்டு (L.D.White) கருதுகிறார். அவர் கருத்துப்படி 'சட்டமன்றம், நிருவாகம், நீதித் துறை ஆகிய அரசாங்கத்தின் சிறந்த மூன்று கிளை களின் செயல்கள் பொது ஆட்சித்துறையில் உட்படும். எனவே, இது பொது ஆட்சித்துறையின் 'முழுமை நோக்கு' (Integral View) எனக் கருதப்படுகிறது.

முன் கூறியதற்கு நேர் எதிராக அறிஞர்கள் எர் பர்ட்டு சைமன் (Herbert Simon), உலூத்தர் கலிக்கு (Luther Gulick) ஆகியோர் பொது ஆட்சித்துறை என்பது நிருவாகத்துடன் (அரசாங்கத்தின் சட்டம் நிறைவேற்றும் பகுதியுடன்) மட்டும் இணைந்து செயற்படுகின்ற அமைப்பு என்று கூறுகின்றனர். பொது மக்களின் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதே இத்துறையின் பணியாக இருப்பது தான் இதற்குக் காரணம் என்றும் குறிப்பிடுகின்ற னர். எனவே, அக்கருத்தானது பொது ஆட்சித்துறை யின் 'நிருவாக நோக்கு' அல்லது 'மேலாண்மை நோக்கு' (Managerial View) எனப்படும்.

**பொது ஆட்சித்துறை ஒரு செயல்முறை (Public Administration as a Process)**: பல்வேறுபட்ட மக் கள், பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருப்போர் ஆகியோ ரின் நோக்கங்களைத் தெளிவாக எடுத்துக்கூறி அவற்றை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருப்ப தால் பொது ஆட்சித்துறை என்பது ஒரு செயல் முறையாகும். அச்செயல்முறையானது, சட்டங்களை உருவாக்கும் அமைச்சர்களும் அரசியலாளர்களும் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவரும் அர சாங்க அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்புரி வதைச் சார்ந்ததாகும். இங்ஙனம் ஒருங்கிணைந்து சட்டவரம்பிற்குட்பட்டும், நீதித்துறையின் பாது காப்பைப் பெற்றும் செயலாற்றுபவர்கள் பல்வேறு வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பணியில் சேர்க் கப்படுகிறார்கள். சான்றாக, அமைச்சர்கள் நேர்முகத் தேர்தல் முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். அரசாங்க அலுவலர்கள் பல்வேறு போட் டிகளால் முடிவு செய்யப்படும் தேர்வுகளில் வெற்றி பெற்ற பின்னரே, அவ்வப்பணியில் அமர்த்தப்படுகின் றனர். அமைச்சர்கள் பணிபுரியும் காலம், வாக்காளர் களின் விருப்பப்படி வரையறுக்கப்படுகிறது. ஆனால், அரசாங்க அலுவலர்கள் நிலையாக ஒய்வு பெறும் வயது வரை பணிபுரியலாம் என அரசாங்கத்தால் நிருணயிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள், அரசாங்க அலுவலர் ஆகிய இரு சாராரின் கல்வித் தகுதி, செய்யும் பணி, ஊதியம்,பதவி, தகுநிலை, பொறுப்பு கள் ஆகியவை முற்றிலும் வேறுபட்டவை ஆகும்.

இவ்வளவு வேறுபாடுகள் இருந்த போதிலும், பொது மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு அமைச்சர்களும், அரசாங்க அலுவலர்களும் ஒன்றாக இணைந்து பணிபுரிய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். எனவே, பொது ஆட் சித் துறை என்பது, மக்கள் நலனுக்காக அமைச் சர்களும், அரசாங்க அலுவலர்களும் ஒருங்கிணைந்து பாடுபடும் ஒரு சில சிறந்த வளர் நெறியாகும்.

அ.ம.

***பொது ஆவணங்கள்***: ஆவணங்களைப் பொது ஆவணங்கள் என்றும், தனி ஆவணங்கள் என்றும்

இரு வகையாகப் பிரிக்கலாம். இந்தியச் சான்றியல் சட்டத்தின் 74-ஆம் பிரிவு கீழ்க்கண்ட ஆவணங் களைப் பொது ஆவணங்கள் (Public Documents) எனக் குறிப்பிடுகிறது.

1) இறைமை அதிகாரம் தொடர்பான செயல் களை அல்லது பதிவு செய்யப்பட்ட செயல்களைக் குறித்துநிற்கும் ஆவணங்கள், 2) ஆட்சி அமைப்பு கள் மற்றும் ஆயங்களின் செயல்களை அல்லது பதிவு செய்யப்பட்ட செயல்களைக் குறித்து நிற் கும் ஆவணங்கள், 3) இந்தியாவின் எந்தப் பகுதியிலு முள்ள அல்லது பொது நலஅரசு நாட்டுப் (Common Wealth) பகுதியிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள சட்டமியற்றும் நீதித்துறை சார்ந்த, சட்ட அமலாக் கத் துறை சார்ந்த அலுவலர்களின் செயல்களை அல் லது பதிவு செய்யப்பட்ட செயல்களை உள்ளடக்கிய ஆவணங்கள் அனைத்தும் பொது ஆவணங்கள் ஆகும்.

1-ஆம் பிரிவின் உட்பிரிவு 1- இன்படி அரசாங்கத் தின் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், அரசின் ஆவ ணங்கள், அரசிதழ்கள் அனைத்தும் பொது ஆவணங் கள் ஆகும்.

உட்பிரிவு 2-இன்படி ஒரு பஞ்சாயத்துச் சபை யின் நடவடிக்கைக் குறிப்புகள் கூட பொது ஆவணம் என்னும் தகுதியினைப் பெறும்.

3-ஆம் உட்பிரிவின்படி அயல்நாட்டு நீதிமன்றத் தீர்ப்புகள் பொது ஆவணமாகக் கருதப்படுகின்றன.

கடவுச்சீட்டு (Visa) தருகின்ற அதிகாரி வெளி நாட்டிலிருந்தாலுங்கூட அவர் இந்திய அரசாங் கத்தின் அதிகாரி என்னும் காரணத்தால் அவர் அளித்த கடவுச்சீட்டு பொது ஆவணமாகும்.

இப்பிரிவின் 2-ஆம் பகுதி அரசினால் பதிவு செய் யப்பட்ட எந்த ஒரு தனியார் ஆவணமும் பொது ஆவணம் என்று கூறுகிறது.

இதற்கு எடுத்துக்காட்டாகப் பதிவாளர் அலுவல கத்தில் வைத்திருக்கின்ற பதிவான ஆவணங்களைக் கூறலாம். விற்பனை தொடர்பாக இங்கே பதிவு செய்யப்படும் ஆவணங்கள் தனிமனிதர்களுக்கு இடையே உள்ள ஒப்பந்தத் தொடர்பினைக் குறித்தே நின்ற போதிலும் அரசு அலுவலகம் அவற்றினைப் பதிவு செய்வதால் அந்தத் தனி ஆவணங்கள் பொது ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. ம.கா.

**பொது உளவியல்:** மனிதர்களின் நடத் தையை ஒழுங்குமுறையாக ஆராய்கின்ற ஓர் அறிவியல்தான் உளவியல் என்று உளவியலார் வரை யறை செய்திருக்கின்றனர். இந்த வரையறை பொது வாக எல்லா உளவியலாரும் ஏற்றுக் கொண்ட தொன்றாகும். இன்று உளவியல் பலதுறைகளைக் கொண்டதாக வளர்ந்திருக்கின்றது. மனிதர்களின் சிக்கல்கள் எங்கெல்லாம் உள்ளனவோ அங்கெல்லாம் உளவியலின் பொது விதிகளைப் பயன்படுத்திச் சிக்கல் களை ஆராய்ந்தறிகின்றனர். எனவே, எந்தத் துறை யிலுள்ள சிக்கல்களை ஆராய்கின்றார்களோ அந்தத் துறையோடு உளவியலை இணைத்து, அத்துறை சார்ந்த உளவியல் என்று வழங்குகின்றனர். அம்முறை யில் இன்று வளர்ந்துள்ள உளவியல் துறைகள் பல இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, வளர்ச்சிசார் உளவியல், சமூக உளவியல், ஆளுமை உளவியல், பரி சோதனை உளவியல், உடற்கூற்று உளவியல், மருத் துவ உளவியல், பிறழ்வு உளவியல், உளநோய் நீக்கும் உளவியல், கல்வி உளவியல், தொழிற் சாலை உளவியல், அமைப்பு சார் உளவியல், வாழ்க்கைத் தொழில் உளவியல், சமுதாய உளவியல், சூழ் நிலைசார் உளவியல், மனிதப்பண்பு சார் உள வியல் என்பன போன்ற துறைகள் வளர்ச்சி யுற்றுப் பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்புகளின் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இவை களன்றி இன்னும் சில துறைகளும் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

மனித இனம் ஒவ்வோர் இடத்திலும் தனித்தனிக் குழுவாக வாழ்ந்து வருகின்றது. ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களும், செய்யும் தொழில் தொடர் பாகவோ, வாழ்கின்ற இடம் தொடர்பாகவோ தனித்து வாழும்போது வேறுவேறு சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர். எனவே, ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும் தொழிலாலோ வாழ்கின்ற இடத்தாலோ வேறுவேறு சிக்கல்களைக் கொண்ட வர்களாக இருக்கின்றனர். இச்சிக்கல்கள் மனித நடத்தை தொடர்பானவையாகையால் உளவியல் அவர்களின் சிக்கல்களை அலசி ஆராய்கின்றபோது உளவியல் நோக்கமும் முறைகளும் முடிவுகளும் வேறு படுகின்றன. எனவே, ஒவ்வொன்றுக்கும் தனித்துறை யோடு தனித்துறை வல்லுநர்களும் ஏற்பட வேண்டி யுள்ளனர். அதன் காரணமாக உளவியல் என்று கூறும் போது சிறப்பாக ஆராயப்பட்ட துறையையும் அதனுடன் சேர்த்துக் கூறவேண்டிய நிலை ஏற்பட் டது. அந்தச் சூழ்நிலையில் பொது உளவியலின் நிலை என்ன? அது என்ன தகுதியைப் பெற்றிருக்கின் றது என்றும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

உளவியல் துறையில் தொடக்கக் காலத்தில் எழுதப்பட்ட பாட நூல்களெல்லாம் 'உளவியல்', 'உளவியலுக்கு ஓர் அறிமுகம்' (An Introduction to Psychology), 'பொது உளவியல்', 'பொது உளவியல்

விதிகள்' (Principles of General Psychology) என்று தான் வெளியிடப்பட்டன. அந்தத் தலைப்புகள் எல்லாமே பொது உளவியலைக் குறிப்பதுதான். இந்த நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் வெளிவந்த உளவியல் நூல்களும் தனித்துறைத்தலைப் புகளைத் தாங்கி வந்திருக்கின்றன. வில்லியம் மெக்டு கல் (William McDougall) என்பவர் 1908 – ஆம் ஆண்டிலேயே சமூக உளவியலுக்கு ஓர் அறிமுகம் என்ற நூலையும் தௌலர்சு(R.H. Thoulers) என்பவர் 1937-ஆம் ஆண்டில் பொது, சமூக உளவியல் (General and Social Psychology) என்ற நூலையும் எழுதி வெளியிட்டனர். அதே சமயத்தில் பொது உளவியல் நூல்களும் பல வெளிவந்து கொண்டிருந்தன. வில்லியம் மெக்டுகல் 1912-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட நூல் தான் முதன் முதலாகப் பொது உளவியல் (General Psychology) என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு பொது உளவியல் என்ற நூலை 1933-ஆம் ஆண்டில் மர்பி (G.Murphy) என்பவர் எழுதி வெளியிட்டார். அதற்குப் பிறகுதான் பொது உளவியல் நூல்கள் 'பொது' என்ற தலைப்பைப் பெற்றோ பெறாமலோ மிகுதியாக வெளிவரத் தொடங்கின. ஏறத்தாழ அதே காலத்தில் பரி சோதனை உளவியல், சமூக உளவியல், பிறழ்வு உளவியல் என்ற துறைகளிலும் சில நூல்கள் வெளி யிடப்பட்டன. செயல் முறை சார்ந்த (Applied Psychology) உளவியல் நூல்களும் குறிப்பாகத் தொழிற்சாலைசார் உளவியல் துறையிலிருந்து வெளி யிடப்பட்டன. அவற்றின் அடிப்படையை வைத்துப் பொது உளவியலை நோக்கினால் எல்லாத் துறைகளி லும் வெளிவந்த நூல்கள் பொது உளவியலில் கையா ளப்பட்ட கருத்துகளையே பயன்படுத்தியிருக்கின்றன என்பது புலனாகும். பொது உளவியலின் விதிகள் ஒவ் வொரு துறையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பொது உளவியல் மிக அதிகமாகப் பயன்படுத்தும் விதிகள் கற்றல், நினைவு, கற்பனையும் சிந்தனையும், புலனுணர்ச்சிகள், கவனம், புலன்காட்சி, ஊக்கம், மனவெழுச்சி, நுண்ணறிவு, ஆளுமை, மரபுநிலையும் சூழ்நிலையும், மூளையும் நரம்பு மண்டலமும் ஆகிய வைகளைச் சார்ந்ததாகும். அவை பொது உளவியலுக் கேயுரியன. அவையும், அவற்றைச் சார்ந்து விரி வடைந்த விதிகளும், கருத்துச் சொற்களின்றி எந்தத் துறையைச் சார்ந்த உளவியலும் விரிவடைய முடி யாது. அக்கருத்துகளையும் விதிகளையும் கொண்டு தான் மற்ற துறைகளைச் சார்ந்த சிக்கல்களை ஆராயமுடியும். எனவே, பொது உளவியல் மற் றெல்லாத் துறைகளிலும் ஏதேனும் ஒரு வழியில் பரவி நிற்கின்றது. அது மற்றெல்லாத் துறைகளுக் கும் அடிப்படையாக அமைந்திருக்கின்றது. கிரேக்க நாட்டு மெய்ப் பொருளியல் மேதை அரிசுடாட்டில் எழுதிய 'உளவியல்' என்ற நூலும் பொது உளவியல் தான். பயன் படுமுறையில் கருத்துச் சொற்களுக்குத் தரப்படுகின்ற விளக்கங்கள் நாளுக்கு நாள் சிறிது மாறிவரலாம். ஆனால், கருத்துச் சொற்களின் அடிப் படைப் பொருள் மாறுவதில்லை.

அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட சில உள வியல் நூல்களில் பொது உளவியலின் செய்திப் பொருள்களை மற்ற துறையைச் சார்ந்த உளவியலின் செய்திப் பொருள்களுடன் (Subject Mater) ஒப் பிட்டுக் காட்டி, பொது உளவியல் மற்ற உளவியல் களிடமிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கின்றது என்று விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. பொது உளவியல் தனி மனிதர்களிடையேயுள்ள வேறுபாடுகளை அறிவ தில் தனிச் சிறப்புப் பெறுமாயின் அது வேற்றுமை உளவியலாகின்றது (Differential Psychology). பல் வேறு இனங்களின் நடத்தையை அறியப் பொது விதி களைப் பயன்படுத்தும்போது அது ஒப்புமை உள வியலா (Comparative Psychology) கின்றது. எடுத்துக் காட்டாக, கற்றல் விதிகளை மனிதர்களின் மீதும் மிருகங்களின் மீதும் பயன்படுத்தலாம். கற்றலின் முறைகளை மனிதர்கள் எவ்வாறு விளைவுள்ளதாகச் செய்கின்றனர்; எலிகள், பூனைகள், நாய்கள், குரங்கு கள் ஆகிய மிருகங்கள் எவ்வாறு விளைவுள்ளதாகச் செய்கின்றன என்று கண்டறிகின்றனர். இந்தப் புனை கொள்கையைப் பரிசோதித்துப் பார்த்ததிலிருந்து எழுந்தவைகளே முன்மாதிரியான ஆக்க நிலையிருத்த மும் (Classical Conditioning, Pavlov), கற்றல்கள் சார்ந்த ஆக்க நிலையிருத்தமும் (Operant Conditioning, Skinner). சமூகப் பண்பாட்டுக் கூறுகள் எவ் வாறு மனிதர்களின் தனி வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்று சமூக உளவியல் (Social Psychology, G.W. Allport) ஆராய்கின்றது.

ஊக்கமூட்டி (Motivation) சார்ந்த வேறுபாடு களுக்கடியில் ஆளுமைக் கூறுகள் செயற்படுகின்றன என்று ஆல்போர்ட்டு (Allport, G. W.) கூறுகின்றார். ஆனால், அதே செயல்முறைகளுக்கடியில் மனிதர் களின் இயல்பூக்கங்கள் (Instincts) செயற்படுகின்றன என்று மெக்டுகல் கூறுகின்றார். மர்ரே (Murray, H.A.) என்பவரும் அவரது கூட்டாளிகளும் அதே செயல் முறையை, ஆளுமை மையத்தை அடிப்படையாகக் கொண்ட முறையை உருவாக்கி ஆராய்ந்தனர். உள வியல் செயல்முறை ஊக்கமூட்டி என்ற ஒன்றுதான்; ஆனால், அணுகும் முறைகள் வேறுபடுகின்றன. பொது உளவியல் துறையில் பயன்படுத்தப்படும் எல்லா உள வியல் செயல் முறைகளும் மற்ற துறைகளிலும் பயன் படுத்தப்படுகின்றன. ஆராய்வதற்கு அணுகும்

முறைகள் வெவ்வேறாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அண்மையில் வெளியிடப்படுகின்ற பொது உளவியல் நூல்கள் சமூக உளவியல், பிறழ்வு உளவியல், தொழிற் சாலை உளவியல், வளர்ச்சிசார் உளவியல் ஆகிய துறைகளுக்கான சில தலைப்புகளை உள்ளடக்கி வெளியிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மார்க்கன் (Morgan, C. T). என்பவரும் அவரது கூட்டாளிகளும் வெளியிட்ட உளவியலுக்கு ஓர் அறிமுகம் என்ற நூலும், கில்கார்டும்(Hilgard,E.R.) அவரது கூட்டாளி களும் வெளியிட்ட உளவியலுக்கு அறிமுகம் என்ற நூலும், மாரிசு (Morris, C.G.) என்பவர் வெளியிட்ட உளவியல் ஓர் அறிமுகம் என்ற நூலும், கெண்ட்லர் (Kendler H. H.) என்பவர் வெளியிட்ட அடிப்படை உளவியல் என்ற நூலும், கேரட்டு (Garrett, H.E.) வெளியிட்ட பொது உளவியல் என்ற நூலும், இன்னும் மற்ற நூற்களும் இந்த அடிப்படையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஒரு விரிந்த நோக்கோடு எழுதப்பட்டவையாகும்.

மு. இரா.

**துணை நூல்கள்:**

**Morgan, G.T., King, R.A.** and **Robinson, N.M.,** Introduction to Psychology, ATA-McGraw-Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

**Radford, J. and Rose. D.,** The Teaching of Psychology John Wiley & Sons, New York, 1980.

**பொது ஊழியர்**: இந்தியத் தண்டனைச் சட்டத் தின் 21-ஆம் பிரிவு 'பொது ஊழியர்' (Public Servant) என்பவர் யார் என்னும் இலக்கணத்தைக் கூறுகிறது. இப்பிரிவிற் கண்ட இலக்கணமும் விளக்கங்களும் சட்ட விதிகளின் தொகுப்பே தவிர எல்லாச்சூழல்களுக்கும் பயன்படுகின்ற விதிகள் அல்ல. மேலும், இவ்விலக் கணத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எடுத்துக்காட்டுக்களே தவிர ஒரு பொது ஊழியரின் முழுப் பண்புகளைக்கொண்டனவாக அமையவில்லை. எனவே,இப்பிரிவில் அமைகின்ற வழக்கின் முடிவுகளை வைத்தே ஓர் ஆள் அரசு ஊழியரா அல்லரா என் பதைக் கண்டு கொள்ள இயலும்.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 21-ஆம் பிரிவின் படி கீழ்க்கண்டவர்கள் பொது ஊழியர் ஆவர்:1) இந்தியக் காலாட்படை, கப்பற் படை அல்லது விமானப் படையின் ஆணைத் தகுதி (Commission) பெற்ற அலுவலர்கள். 2) ஒவ்வொரு நீதிபதியும், தனியாகவோ ஒரு தீர்ப்பு ஆயத்தின் ஓர் ஆளாகவோ நீதி விசாரணை செய்யச் சட்டத்தின்படி அதி காரம் அளிக்கப்பட்ட ஆள். 3) புலனாய்வு செய்கின்ற அல்லது சட்டத் தொடர்பான அறிக்கையையோ (அல்லது) பொருண்மை சார்ந்த அறிக்கையையோ (அல்லது) எந்த ஓர் ஆவணம் உருவாக்கவோ (அல்லது) சான்று உறுதி செய்யவோ (அல்லது) பாதுகாக்கவோ (அல்லது) ஒரு சொத்தினை நிருவகிக்கும் உரிமை பெற்றோ (அல்லது) அவற்றின் உரிமையை மாற்று கின்ற உரிமை பெற்றோ (அல்லது) சட்டப்படியாக எந்த நீதிமுறைக்கும் அவற்றை உட்படுத்தவோ (அல்லது) ஆணையுறுதிவாங்கத்தக்க அல்லது பொருள் விளக்கம் கூற அல்லது நீதிமன்றத்தில் ஒழுங்கை நிலை நாட்டவோ பொறுப்புடைய (கலைப்பு அதிகாரி,வழக் குறு சொத்துப் பேணுநர் அல்லது ஆணையர் உள் ளிட்ட) எந்தஒரு நீதிமன்ற அலுவலரும், இதுபோன்ற செயல்களைச் செய்ய நீதிமன்றத்தால் பணிக்கப்பட்ட ஆள். 4) நீதிமன்றத்திற்கு அல்லது பொது ஊழியருக்கு உதவி புரியும் ஒவ்வொரு சான்றாயர் (Jury), தீர்ப்பு உதவியாளர் அல்லது பஞ்சாயத்து உறுப்பினர். 5) நீதிமன்றத்தாலோ (அல்லது) சட்ட அதிகாரத் தாலோ எவரின் தீர்வுக்கு (அல்லது) அறிக்கை அளிப் பதற்கு வழக்குமூலம் அல்லது தீர்வுக்கான பொருள் சுட்டி அனுப்பப்பட்டதோ அவர் அல்லது இசைவுத் தீர்ப்பாளர். 6) எந்த ஒரு மனிதரையும் காவ லில் வைக்கும் அதிகாரம் கொண்ட பணியிலிருக் கின்ற ஆள். 7) குற்றங்களைத் தடுத்து நிறுத்தும், குற்றம் குறித்த தகவல் அனுப்பும், குற்றம் இழைத் தோரை நீதிக்கு முன்பாக நிறுத்தும் அல்லது பொது சுகாதாரம், பாதுகாப்பு அல்லது பொது வசதிகளைப் பாதுகாக்கும் அரசுப் பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரி. 8) அரசுக்காகச் சொத்தினை எடுத்துக் கொள்ளவும், பெற்றுக் கொள்ளவும், பாதுகாக்கவும் அல்லது செலவு செய்யவும், அரசுக்காக நில அளவை செய்யவும், தீர்ப்புக்கு உதவி செய்யவும் அல்லது அரசுக்காக வருவாய் சேகரிக்கவும் அல்லது அரசின் பணவிவகாரங்களில் புலன் விசாரணை செய்யவும் அல்லது அறிக்கை அளிக்கவும் அல்லது அரசின் பணவிவகாரங்கள் தொடர்பான ஆவணங்களில் பங்கு பெறவும், அவற்றை அதிகார முறையாக மாற்றவும், அல்லது அத்தகைய பணவிவகாரங்கள் தொடர்பான ஆவணங்களைப் பாதுகாக்கவும் அல்லது அரசின் பணவிவகாரங்கள் பத்திரப்படுத்து தல் தொடர்பான சட்ட மீறலைத் தடுக்கவும் பொறுப்புடைய அதிகாரி. 9) ஓர் அதிகாரியின் பணி ஒரு கிராமத்தின் அல்லது நகரத்தின் அல்லது மாவட்டத்தின் சமயத் தொடர்பற்ற பொதுக் காரணங்களாகச் சொத்துகளை எடுத்துக் கொள் ளவோ, வாங்கவோ, பாதுகாக்கவோ, செலவு செய் யவோ, அளவை செய்யவோ (அல்லது) தீர்ப்புக்கு உதவவோ(அல்லது)சொத்துகள் மீது வரி விதிக்கவோ

அல்லது அந்தக் கிராமத்தில், நகரத்தில் அல்லது மாவட்டத்தில் வாழும் மக்களின் உரிமைகளை உறுதி செய்யும் ஆவணம் உருவாக்கவோ சான்றுறுதிப் படுத்தவோ (அல்லது)பாதுகாப்பதாகவோ அமையுமானால், அவ்வாறு பணி செய்கின்ற அதிகாரி. 10. தம் பணி காரணமாக வாக்காளர் பட்டியல் உருவாக்கவும், வெளியிடவும், அவற்றை அந்நிலையிற் காத்திடவும் அல்லது மாற்றி அமைத்திடவும் அல்லது தேர்தல்கள் நடத்தவும் அல்லது தேர்தல் நடத்துகின்ற வேலையில் ஒரு பகுதியைச் செய்யவும் அதிகாரம் பெற்ற அதிகாரி. 11. (அ) பொதுக்கடமைகளை ஆற்றிடப் பணியில் அமர்த்தப்பட்டிருக்கின்ற அல்லது அரசிடம் ஊதியம் வாங்குகின்ற அல்லது கட்டணம் வாங்குகின்ற அல்லது தரகு வாங்குகின்ற ஆள். (ஆ)மத்திய, மாகாண அல்லது மாநிலச் சட்டங்களால் உருவாக்கப்பட்ட கூட்டுருக்களில், உள்ளாட்சி நிறுவனங்களில் பணி செய்கின்ற அல்லது ஊதியம் பெறுகின்ற ஒவ்வொரு ஆளும், அல்லது 1956-ஆம் ஆண்டு நிறுமவியற் சட்டத்தில் வரையறை செய்தது போன்ற அரசு நிறுமத்தில் பணி செய்கின்ற அல்லது ஊதியம் பெறுகின்ற ஆளும். எ-டு: ஒரு நகராட்சியின் ஆணையர் பொது ஊழியர் ஆவர்.

**விளக்கம்:1** மேற்கண்ட விளக்கத்தின் கீழ் வருகின்ற எந்த ஓர் ஆளும் அரசால் பணிக்கு அமர்த்தப்பட்டநிலையிலோ பணிக்கு அமர்த்தப்படா நிலையிலோ பொது ஊழியர் ஆவார்.

**விளக்கம்:2** பொது ஊழியர் என்ற பதம் வரும் எல்லா இடங்களிலும் ஒவ்வொரு ஆளின் உண்மைப் பணிச் சூழ்நிலையை வைத்துப் பொருள் கொள்ள வேண்டும். சட்டப்படியாக அந்த ஆள் அந்தச் சூழ்நிலையில் இருக்கக் கூடியவரா என்பதைப் பார்க்க வேண்டிய இன்றிமையாமை இல்லை.

**விளக்கம்:3** 'தேர்தல்' என்ற சொல் சட்டம் இயற்றும் சபைக்கோ, நகரசபைக்கோ வேறு எந்தப் பொது அதிகாரமுள்ள சபைக்கோ உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்தும், அந்தத் தேர்தலில் சட்டப்படியாகக் கையாள வேண்டிய நடைமுறைகள் குறித்தும் நிற்கிறது.

பொது ஊழியர்கள் சில சட்ட விதிகளின் கீழ், சில சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாகக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 197 – ஆம் பிரிவினைக் கூறலாம். அதன்படி பொது ஊழியர் ஒருவரின் மீது குற்றவியல் வழக்குத் தொடுக்க உரிய அரசின் அனுமதி தேவை. அனுமதியில்லாத போது, எந்த ஒரு நீதிமன்றமும் 'பொது ஊழியர்' தொடர்பான குற்றவியல் வழக்கைக் கொள்தகு நிலைக்கு (Cognizance) எடுத்துக்கொள்ளக் கூடாது. எவ்வாறு சட்டத்தால், 'பொது ஊழியர்' களுக்குச் சில சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வாறு 'பொது ஊழியர்கள்' குற்றம் இழைக்கின்ற போது அவர்களுக்குச் சட்டம் தரும் தண்டனையும் அதிகமாக உள்ளது.

பொது ஊழியர்கள் என்னும் சொல்லிற்கான இலக்கணம் எடுத்துக்காட்டுகளை மட்டுமே கொண்டு விளங்குவதால், வழக்கின் தன்மைக்கு ஏற்பப் பொது ஊழியர்கள் என்பவர்கள் யாவர் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

அண்மைக் காலத்தில் தீர்வு செய்யப்பட்ட மு. கருணாநிதி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் முதலமைச்சரும் பொது ஊழியரே என்று நீதிமன்றம் கூறியது.

ம.கா.

**பொதுக்கடன்:** அரசு பெறும் கடன்பொதுக் கடன். அரசு அதன் நிதித் தேவையை ஈடுசெய்ய வரி விதித்தல், பற்றாக்குறை நிதியாக்கம், பொது நிறுவனங்களின் ஆதாயம் போன்ற பல வழிகளில் நிதியைப் பெறுவதைப்போன்று பொதுக் கடன் மூலமாகவும் நிதியைப் பெறுகிறது. வளரும் நாடுகளில் வரி விதித்தல், பற்றாக்குறை நிதியாக்கம் போன்றவற்றை எல்லை மீறிப் பயன்படுத்தல் இயலாது; பொது நிறுவனங்களிலிருந்து ஆதாயம் பெறும் வாய்ப்பும் மிகக் குறைவு. எனவே, பொதுக்கடன் (Public Debt) இக்காலத்தில் அரசுக்கு அதிக அளவில் பயன்படுகிறது.

**வரியும் பொதுக்கடனும்:** வரியில் கட்டாயச் சேமிப்பு உள்ளார்ந்திருக்கிறது. சமுதாயத்தின் செலவழிக்கத் தக்க வருமானத்தை (Disposable income) வரி குறைக்கிறது; கடன் மாற்றியமைக்கிறது. வேலை செய்யும், சேமிக்கும், முதலீடு செய்யும் திறனையும், விருப்பத்தையும் வரி பாதிக்கலாம்; கடன் பாதிக்காது. வருமான, செல்வ ஏற்றத் தாழ்வுகளை வரி முனைப்பாக்குவதில்லை; கடன் முனைப்பாக்குகிறது. அரசு பத்திரங்களிலும், வளர்ச்சிச் சொத்துகளிலும்(Development assets)முதலீடு செய்யும் பழக்கத்தை வரி ஏற்படுத்துவதில்லை; கடன் ஏற்படுத்துகிறது. பண வீக்கக்காலத்தில் அதிகமான வாங்கும் திறனைக் குறைக்க வரி உதவுகிறது. பண வாட்டக் காலத்தில் கடன்நிதி வளர்ச்சிக்கு உதவுகிறது. நடப்புச் செலவுகளை ஈடுகட்ட வரி வருவாயும் மூலதனச் செலவுகளுக்கு நிதியளிக்கக் கடன் நிதியும் பயன்படுகின்றன. இருப்பினும், வளர்ச்சிக்கு வரிப்பணத்தையும், பயன்படுத்தலாம்என்பது இக்காலக் கருத்து.

**பொதுக் கடன் பெருக்கத்திற்கான காரணங்கள்:** பொதுக் கடன் பெறுவதே தவறு என்று எண்ணியிருந்த காலம் மாறிப் பல்வேறு காரணங்களுக்காக இன்றைய அரசு கடன்களைப் பெறுகின்றது. அத்தகைய கடனின் அளவு நாள்தோறும் பெருகி வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1) **போர்க்காலக் கடன்கள்:** போர்க் காலங்களில் மிகுந்து வரும் போர்ச் செலவை ஈடு செய்ய அரசுகள் பெருமளவில் கடன்களைப் பெற்றன. இன்றைய போர் முறைகள் செலவு மிக்கவையாக இருப்பதால் இக்கடன்கள் பெருமளவில் இருக்கின்றன.

2) **பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்கள்:** வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ள நாடுகள் எல்லாவற்றிலும் பெரும்பாலும் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்கள் தீட்டப்படுவதால், பற்றாக் குறையைச் சமாளிக்கப் பெருமளவில் கடன்கள் பெறப்படுகின்றன.

3) **வளர்ச்சித் திட்டங்கள்:** வேலை வாய்ப்பைப் பெருக்கி, வருமானத்தையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்குப் பல வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்குப் பெருமளவில் நிதி தேவைப்படுவதால் பொதுக் கடனும் பெருகுகிறது.

4) **பொருளாதார மீட்சி:** பொருளாதாரம் மந்த நிலையில் இருந்த காலங்களில் மந்த நிலையிலிருந்து அதை மீட்டு,வளர்ச்சிப் பாதையில்திருப்பி விடுவதற்கு அரசுச் செலவுகளும், முதலீடுகளும் அதிகம் தேவைப் படுவதனால் பொதுக் கடன் பெருகுகிறது.

5) **அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சீராக்குதல்:** அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பாதகமான சூழ்நிலை நிலவுமானால், பணத்தின் புற மதிப்புக் குறைந்துவிடும். எனவே, நிலையைச் சீராக்கப் பெருமளவில் அரசுகள் பொதுக் கடனைப் பெறுகின்றன.

6) **பழைய கடன்களைத் தீர்த்தல்:** பழைய கடன்களைத் தீர்ப்பதற்குரிய உபரிப் பணம் அரசிடம் இல்லாதிருக்கும் சூழ்நிலைகளில் அல்லது உபரிப்பணத்தைப் பயன்படுத்த அரசுவிரும்பாத சூழ்நிலைகளில் பழைய கடன்களைத் தீர்ப்பதற்காகப் புதிய கடன்களை அரசுகள் பெறுவது வழக்கமாகி விட்டது.

7) **வழிவகைக் கடன்கள்:** வரித் தண்டல் மூலம் அரசு எதிர்பார்க்கும் வருவாயைப் பெறுவதற்குச் சிறிது காலமாகலாம். அந்த இடைவெளிக் காலத்தில் செலவுகளை ஈடு செய்ய மைய இருப்பு வங்கியிடமிருந்து இடைக்காலத்திற்காக வாங்கும் கடன்கள் வழிவகைக் கடன்களாகும் (Ways and means loans). இதன் அளவும் நாள்தோறும் பெருகி வருகிறது. பொதுக் கடன்களைப் பலவிதமாக வகைப்படுத்தலாம். அவை:

1) **உற்பத்திக் கடனும் உற்பத்தியற்ற கடனும்:** வருமானம் தரும் வழிகளில் செலவிடுவதற்காகப் பெறும் கடன்கள் உற்பத்திக் கடன்களாகும். போர் போன்ற வருமானம் தர இயலாத இனங்களில் செலவிடுவதற்காகப் பெறும் கடன்கள் ஆக்கமற்ற கடன்கள் (Dead - weight Debts) ஆகும்.

2) **தன்னிச்சையான கடனும் கட்டாயக் கடனும்:** கடன் கொடுக்கவேண்டும் என்று மக்கள் கட்டாயப் படுத்தப்படும்போது அவற்றைக் கட்டாயக் கடன்கள் என்றும், கட்டாயம் இல்லாத கடன்களைத் தன்னிச்சையான கடன்கள் என்றும் குறிப்பிடுகின்றனர்.

3) **உள்நாட்டுக் கடனும் வெளிநாட்டுக் கடனும்:** உள்நாட்டில் மக்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் கடன்களைப் பெற்றால் அவற்றை உள்நாட்டுக் கடன்கள் (Internal Debts) என்றும், வெளிநாடுகளிலிருந்தும், தனியார்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும், அரசுகளிடமிருந்தும் பெறும் கடன்களை வெளிநாட்டுக் கடன்கள்(External Debts) அல்லது அன்னியக் கடன்கள் என்றும் குறிப்பிடலாம்.

4) **நிதியுள்ள கடனும் நிதியற்ற கடனும்:** குறுகிய கால அளவில் மிக எளிதாக அரசு அதன் நடப்பு நிதியிலிருந்தே செலுத்துவதற்கான கடன்களை நிதியற்ற கடன்கள் (Unfunded Debts) அல்லது மிதக்கும் கடன்கள் (Floating Debts) என்றும், நீண்டகாலத்திற்குப் பிறகு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக ஏற்பட்ட நிதியிலிருந்து கடனைத் திருப்பிச்செலுத்தத் தக்க கடன்களை நிதியுள்ள கடன்கள் (Funded Debts) என்றும் குறிப்பிடலாம்.

**பொதுக்கடன் சுமையும், விளைவுகளும்:** பொதுக் கடனை முதலும் வட்டியுமாகத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதால் நிகழ்காலச் சமுதாயத்திற்கும் எதிர்காலச் சமுதாயத்திற்கும் இது ஒரு சுமையாகும். எதிர்காலத்தை ஒளிமயமாக, மகிழ்ச்சியான, வளர்ச்சியுடையதாக மாற்றியமைப்பதற்காகக் கடன்கள் பெறப்படுவதால் இச் சுமையை நிகழ்காலச் சமுதாயத்தினரும் எதிர்கால மக்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கருதுவது இயல்பு.

**உற்பத்தியற்ற வெளிநாட்டுக் கடன்கள்:** வெளிநாட்டினரிடமிருந்து எவ்வளவு கடன் வாங்கப்படுகிறதோ அந்த முதல் தொகையும் அதற்கான வட்டி

யையும் சேர்த்து வரும் மொத்தத் தொகையின் அளவு இக்கடன்களின் நேரடிப் பணச் சுமை (Direct money burden) ஆகும். இக் கடன்களையும் இவற்றிற்கான வட்டியையும் திருப்பிச் செலுத்துவதால் ஏற்படும் பொருளாதார நலனின் இழப்பு (Loss of Economic Welfare) இக்கடன்களின் நேரடி உண்மைச் சுமை(Direct real burden) ஆகும்.

**உற்பத்தியற்ற உள்நாட்டுக் கடன்கள்**: கடன் கொடுத்தவர்களும் அதனைத் திரும்பப் பெறுபவர்களும் உள் நாட்டிலேயே இருப்பதால் இக்கடன்களின் நேரடிப் பணச் சுமை இல்லையாகும். இக் கடன்கள் பெரும்பாலும் செல்வந்தர்களிடமிருந்து பெறப்படுவதாகும். இதற்கான வட்டி ஏழைகளிடமிருந்து பெறப்படும் தொகையிலிருந்து செலுத்தப்படுவதால் தோன்றும் வருமான ஏற்றத் தாழ்வுகள், இக்கடன்களின் நேரடி உண்மைச் சுமையாகும்.

**உற்பத்தியுள்ள வெளிநாட்டுக் கடன்கள்**: முதலையும் வட்டியையும் சேர்த்துச் செலுத்துவதற்குத் தேவையான அன்னியச் செலாவணியைப் பெற வேண்டிய தேவையும், தேசிய பாதுகாப்புப் பாதிக்கப்படலாம் என்ற அச்சமும் இவற்றில் உள்ளார்ந்திருக்கின்றன.

**உற்பத்தியுள்ள உள்நாட்டுக் கடன்கள்**: கடன்களைப் பயன்படுத்தும்போது வருமானம் தரத் தக்க சொத்துகள் உருவாக்கப்படுவதால் உள்நாட்டுக் கடன்களில் எவ்விதமான சுமையும் உள்ளார்ந்திருக்கவில்லை. இருப்பினும், இக் கடன்களினால் வருமான ஏற்றத் தாழ்வுகள் தீவிரமாகும். இது விரும்பத்தகாததாகும்.

**உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களின் மறைமுகச் சுமை**: முதலையும் வட்டியையும் செலுத்துவதற்கு வரி விதிக்க வேண்டும். இதனால் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தடை ஏற்படுகிறது. மேலும் வரி விதித்தலால் வேலை செய்யும் சேமிப்பு, முதலீடு முதலிய வற்றின் மீதுள்ள விருப்பம் பாதிக்கப்படலாம். பல நிலப் பகுதிகளுக்கிடையே மூல வளங்களின் பகிர்வும் பாதிக்கப்படலாம். எனவே, உள்நாட்டுக் கடன், வெளிநாட்டுக் கடன் ஆகிய இரு வகைக் கடன்களின் மறைமுகச்சுமை பொதுவானதே.

**பொதுக்கடனைத் திருப்பிச் செலுத்துதல்**: பொதுக் கடன் சுமை மிக்கது. இதிலிருந்து விடுபடுவதற்குக் கடன் மறுப்பு, கடனைத் திருப்பியளித்தல் என்ற இரு வழிகள் உள்ளன.

1) **கடன் மறுப்பு**:வாங்கிய கடனுக்கான வட்டியையும் முதலையும் திருப்பியளிக்க அரசு மறுத்துவிடலாம்; ஆனால், இம்முறை சிறந்ததன்று. இத்தகைய கடன் மறுப்பை (Repudiation) யாரும் விரும்புவதில்லை.

**அ) வெளிநாட்டுக் கடன் மறுப்பு**: வெளிநாட்டிலிருந்து பெற்ற கடனைத் திருப்பியளிக்க மறுத்தால் விரும்பத்தகாத பொருளாதாரச் சிக்கல்களை அன்னிய நாடு தோற்றுவிக்க முயல்வதோடு படையெடுத்து வருவதற்கும் வாய்ப்பைத் தோற்றுவித்துவிடும். இக் காலத்தில் 'கடன்மறுப்பு' என்ற கடும் சொல்லைத் தவிர்த்துச் செலுத்துதலை ஒத்திப்போடுதல் (Suspension of payments or Transfer moratorium) போன்ற மென்மையான சொற்றொடரைப் பயன்படுத்துகிறார்கள்.

**ஆ) உள்நாட்டுக் கடன் மறுப்பு**: வட்டிவிகிதத்தைக் குறைத்து, குறைந்த வட்டி விகிதத்திலான கடன்களுக்கு அதிக வட்டியிலான கடன்களைக் கட்டாயமாக மாற்றுவதன்மூலம் அல்லது சட்டத்தின் மூலம் வட்டி விகிதத்தைக் குறைத்து உள்நாட்டுக் கடன் மறுப்புச் செய்வர்.

2) **கடனைத் திருப்பிச் செலுத்தும் வழிகள்**: கடன் கழிவு நிதி, மூலதன வரி, எச்ச வருவாய் முதலிய வற்றின் மூலம் திரட்டப்பட்ட நிதியைக்கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்.

**அ) கடன் கழிவு நிதி**: கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக அரசின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஆண்டுதோறும் இந்நிதிக்குப் பணம் ஒதுக்கப்பட்டு இந்நிதி சேர்க்கப்படுகிறது. குறிப்பிட்ட தொரு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கென்று சேர்க்கப்படும் சிறப்புக் கடன் கழிவு நிதி (Special Sinking Fund) என்றும், எல்லாவிதமான கடன்களையும் திருப்பிச் செலுத்துவதற்கென்று சேர்க்கப்படும் பொதுக் கடன் கழிவு நிதி (General Sinking Fund) என்றும் இந்நிதியை இருவகைப்படுத்தலாம்.

**ஆ) மூலதன வரி**: கடன் மீட்சிக்காகத் தனியாக வரி விதிப்பதை மூலதன வரி (Capital Levy) என்பர். போர்க் காலங்களில் அல்லது பணவீக்கக் காலங்களில் சொத்துகளின் மதிப்புமிகுதியாவதால் மூலதன வரியை விதிக்கலாம் என்பது இதன் உள்ளார்ந்திருக்கும் கருத்து. பெரும் கடன்சுமையை நீக்குவதற்காக இம் மூலதன வரிகள் விதிக்கப்படுகின்றன.

மேலும், பற்றாக்குறை நிதியாக்கத்தை நாடி மிகுதியான காகிதப் பணத்தை வெளியிட்டு, அரசு தன் கடன் சுமையைக் குறைத்துக்கொள்ள முயலலாம். ஆனால், இம்முறையில் பணவீக்கம் தோன்றும் இடர் உண்டு.

**இ) எச்ச வருவாய்**: வரவு செலவுத் திட்டத்தில் செலவைக் குறைத்து எச்ச வருவாயைப் பயன்படுத்தி

அதனைக்கொண்டு வெளியிட்ட கடன் பத்திரங் களைத் திரும்பப் பெறுவதன் மூலமும் கடன்சுமையை அரசு குறைக்கலாம். என்.எஸ்.பா.

**துணை நூல்கள்:**

**பாலசுப்பிரமணியன், என்.எஸ்.,** பொது நிதி, உமா பப்ளிகேசன்சு, மதுரை, 1986.

**Tripathy, R.N. & Tripathy, M.,** Public Finance and Economic Development in India, Mittal Publication, Delhi, 1985.

**Tragi,** Public Finance, Jai Prakash Nath Publication, Meerut, 1985.

*பொதுக்கயத்துக் கீரந்தையார்*: இவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக் களுள் ஒருவர் ஆவார். கீரந்தை என்பது இப்புல வரின் இயற்பெயராகும். இப்பெயர் ஆர் விகுதியோடு சேர்ந்து கீரந்தையார் என்று ஆகியது. கீரந்தையார் என்ற பெயருடைய புலவர் சிலர் அக்காலத்தில் வாழ்ந்தனர். இவர் பொதுக்கயம் என்னும் ஊரில் வாழ்ந்தவர். கீரந்தையார் என்னும் பெயருடைய பிற புலவர்களினின்றும் இவரை வேறுபடுத்திக் காட்ட இவர் தம் இயற்பெயரோடு ஊர்ப்பெயரையும் சேர்த்து, பொதுக்கயத்துக் கீரந்தையார் என அழைக் கப்பட்டிருக்க வேண்டும்.

சங்க இலக்கியமான குறுந்தொகையில் 337 – ஆம் பாடல் இவரால் இயற்றப்பெற்றது. பிறசங்க நூல்களுள் இவர்தம் பாடல் இடம் பெறாமையால் இவர் வரலாறு பற்றி எதுவும் விரிவாக அறிந்து கொள்ள இயலவில்லை. குறிஞ்சித் திணையில் தலை வன் கூற்றாக அமைந்த அக்குறுந்தொகைப் பாடல், தோழியை இரந்து பின்னின்ற கிழவன், தனது குறையறியக் கூறியது என்னும் துறையின்பாற்படும். அதாவது, தலைவியைப் பெறத் தோழியின் பால் குறையிரந்த தலைவன் அவள் பருவம் வாய்த்தமை யும் தன்னை வருத்தினமையும் தோழி நன்கு உணர எடுத்துக் கூறியது.

'முலையே முகிழ் முகிழ்த்தனவே' எனத் தொடங் கும் அப்பாடலில், தலைவன் தோழியை நோக்கி, 'தலைவிக்கு முலைகள் அரும்பின; தலையில் கிளைத்த மெல்லிய கூந்தற்கொத்துகள் வளர்ந்துகீழே விழுந்து தொங்குகின்றன. நெருங்கி நிரல்பட்ட வெள்ளிய பற்களும் விழுந்தெழும்முறை நிரம்பப்பெற்றன. தேமலும் சிற்சில உண்டாயின. என்னை வருத் தும் அளவிற்கு அவள் உள்ளமையை யான் அறிந்த னன். அவளோ அதனை அறியாது உள்ளாள்' எனத் தலைவி பருவம் அடைந்து விட்ட நிலையைத் தலை வன் எடுத்துக் கூறுவதாகப் பொதுக்கயத்துக் கீரந் தையார் அமைத்துள்ளார். செ.இரெ.செ.

*பொதுக்கருவளச் செறிவு விகிதம்*: மக்கள் தொகை வளர்ச்சியில் கருவளச்செறிவு முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டு வருகின்றது. பெண்களுக்குக் கருவளச்செறிவை (Fertility Rate) மிகுதிப் படுத்தப் பலவிதப் பழக்க வழக்கங்கள் சமூகத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. வளச்செறிவை மிகுதிப் படுத்தச் சில சமூகங்களில் பெண்களுக்குத் தனிப்பட்ட உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. இதையும் மீறி கருவளச்செறிவு தோல்வியுறுமேயானால் அதற்கும் பல வழிவகைகளைச் சமூகம் தேடி வைத்துள்ளது. குடும்பத்தின் பரம்பரையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உந்துதலால் அவை சமூகத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டும் உள்ளன. உடன் பிறந்தா னின் விதவை மனைவியைத் திருமணம் செய்து கொள்வது, குழந்தைக்காக இன்னொருத்தியை வைப்பாட்டியாக வைத்துக் கொள்வது, பல பேரைத் திருமணம் செய்து கொள்வது போன்ற பல வழி வகைகள் சில சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள் ளன. எனவே, பெண்களின் கருவளச் செறிவு முக்கிய மான ஒன்றாகும்.

பொதுக்கருவளச் செறிவு (General Fertility Rate) மிகுதியாக மிகுதியாக மக்கள் தொகை பெருகு வதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இதனால், மக் கள் தொகையைக் குறைப்பதற்கு வழிகருவளச்செறி வைக் குறைப்பதுதான். கருவளச் செறிவைக் குறைக் கப் பொதுவான வழி கருச்சிதைவு செய்து கொள்வ தாகும். இம்முறை பொதுவாக எல்லாச் சமூகத்திலும் காணப்படும் ஒன்றாகும். குழந்தை பிறந்த பின்னர் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் கணவனை விட்டு அப்பெண்ணைப் பிரித்து வைப்பதும் சில சமூ கங்களில் நடைபெறுகின்றது. இதுவும் வளச்செறி வைக் குறைப்பதற்கான வழிமுறையே.

எனினும், கருவளச்செறிவைக் குறைக்கவியல வில்லை. அதனால், மக்கள் தொகைப் பெருக்கத்தை யும் கட்டுப்படுத்த இயலவில்லை. நாட்டில் பெருகும் கருவளச் செறிவைக் குறைக்க இயலாமைக்குப் பல காரணங்கள் உள்ளன. முதல் காரணம் சிசு மரணங் கள். பிறக்கின்ற குழந்தை அனைத்தும் உயிரோடு இருக்கும் என்ற உறுதி கிடையாது. அதனால், மக்கள் பல குழந்தைகளைப் பெற்று வைத்துக் கொள்கின்றனர். மக்களிடையே பெண் குழந்தை களைச் சாகடிக்கும் பழக்கம் ஆங்காங்கே கடைப் பிடிக்கப்படுகிறது. அதனால், பெண்களின் விகிதந் தான் குறைந்ததே தவிர, குழந்தை பெறும் விகிதம் குறையவில்லை. அடுத்து ஆண் குழந்தைகளுக்குச்சமூ

கத்தில் கொடுக்கப்படும் தகுநிலை; ஓர் ஆண்குழந்தை பிறக்கும் வரை எத்தனை பெண் குழந்தைகளை யும் பெற்றெடுக்கும் நிலை உள்ளது. இவற்றிற் கெல் லாம் சில சமூகப் பண்பாடுகளும் வழிவகுத்துக் கொடுத் துள்ளன. இவ்வாறு பொதுக்கருவளச் செறிவு அதி கரித்து அதனால் மக்கள் தொகை பெருகி அது சமூ கத்தின் நலனைப் பாதிக்கும் அளவிற்கு நிலைமை ஆகியிருக்கின்றது.

எந்தெந்தக் காரணங்களினால் கருவளச்செறிவு விகிதம் மாற்றமடைகின்றன? பெண்களின் திருமண வயதிற்கேற்பக் கருவளச்செறிவு விகிதமும் மாற்ற மடைகின்றது. ஒரு பகுதியிலுள்ள பண்பாடு மாற்ற மடைகின்றபொழுது, அப்பகுதியில் பிறப்பு விகிதமும் மாற்றமடைகின்றது. அப்பொழுது வளச்செறிவு விகிதத்தில் மாற்றமுண்டாகின்றது. சமூக மனோநிலை யிலுள்ள மாற்றத்தினாலும் கருவளச்செறிவு விகிதம் மாற்றமடைய வாய்ப்புகள் இருக்கின்றன. மக்கள் தொகை கணக்கெடுக்கும்போதும் வயது பற்றிய விவரத்தினைக் கேட்கும்பொழுதும் சமூக மனப்பான் மைக்கேற்ப வயது பற்றிய உண்மை நிலை கிடைப்ப தில் மாறுபடும்பொழுதும் கருவளச்செறிவு விகிதம் பாதிக்கப்படக்கூடும்.

மேலும், நாட்டில் நடக்கும் முக்கியமான நில வரங்களுக்கேற்பவும் கருவளச் செறிவு, விகிதத்தில் மாறுபாடு அடையும். எடுத்துக்காட்டாக 1909 – ஆம் ஆண்டிலிருந்து 1916 – ஆம் ஆண்டு வரை பிறப்பு விகி தம் படிப்படியாகக் குறைந்து கொண்டேதான் வந் திருக்கின்றது. பண்பாட்டு மாற்றத்தால் இது நிகழ்ந் தது என வல்லுநர்கள் கூறுகிறார்கள். படிப்படியாகக் குறைந்து வந்த பிறப்பு விகிதம் 1919 – ஆம் ஆண்டு திடீரென்று குறைந்திருக்கின்றது. காரணம் முதல் உலகப் போரின்போது பெரும்பாலான இளைஞர்கள் 1918-ஆம் ஆண்டு போர்க்களத்தில் இறந்திருக்கிறார் கள். இதனால், பல திருமணங்கள் தடைப்பட்டிருக் கின்றன. புதிதாகத் திருமணம் ஆனவர்களும் போரின் காரணமாகப் பிரிய நேரிட்டிருக்கின்றது. மேலும், 1918 – ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1919-ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் உலகத்தின் பல பகுதி களில் கொடிய தொற்றுநோய் பரவியிருந்திருக் கின்றது. இதனால், ஒரு கோடிப் பேர் மரணமடைந் தனர் என்று ஒரு கணக்குக்கூறுகின்றது. மரணமடைந் தவர்களுள் பலர் குழந்தை பெறும் தகுதியில் இருந்த தாய்மார்கள் ஆவர். நோயின் காரணமாகவும் பல திருமணங்கள் தள்ளிப் போடப் பட்டிருக்கலாம்.

ஆனால், 1921 – ஆம் ஆண்டு மீண்டும் பிறப்பு விகிதம் உயர்ந்து காணப்பட்டது. போர் முடிந்து ஆண்கள் வீடு வந்து துணையுடன் சேர்ந்ததால் இது நிகழ்ந்திருக்கலாம். போர்க் காரணத்தால் தள் ளிப்போடப்பட்ட பலதிருமணங்கள் நடை பெற்றிருக் கலாம். மேலும், பிறப்பு விகிதம் 1925 – ஆம் ஆண்டு முதல் 1940 – ஆம் ஆண்டு வரை படிப்படியாகக் குறைந்து வந்திருப்பதைக் காணலாம். பொருளாதா ரச் சீர்குலைவு இதற்கு ஒரு காரணம் என்றும் கூற லாம். இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதால் 1945 – ஆம் ஆண்டில் குறைவாக இருந்த பிறப்பு விகி தம் – 1946–ஆம் ஆண்டு மீண்டும் உயர்ந்தது. இவ் வாறு பிறப்பு விகிதம் மாற்றமடைவதற்கு நாட் டின் சூழ்நிலைகளும் காரணமாகின்றன. பிறப்பு விகிதத்தின் மாற்றம் வளச்செறிவு விகிதத்தையும் பாதிக்கிறது.

பிறப்பு விகிதத்திற்கும் பொதுக்கருவளச் செறிவு விகிதத்திற்கும் ஒரு சிறிய வேறுபாடு காணப்படு கிறது. பிறப்பு விகிதத்தில் மொத்த மக்கள் தொகை யைக் கணக்கில் எடுப்பது போலல்லாமல், பொதுக்கரு வளச் செறிவு விகிதக் கணக்குப்படி 15 வயதிலிருந்து 49 வயது வரை குழந்தை பெறும் தகுதி நிலையி லுள்ள பெண்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு பகுதியில் இவ்வயதுக்குட்பட்ட பெண்களில் 1000 பேருக்கு எத்தனை குழந்தைகள் பிறந்திருக்கின்றன என்று கணக்கிட்டால் பொதுக் கருவளச் செறிவு விகிதம் தெரிந்துவிடும். பொதுக் கரு வளச் செறிவுக் கணக்கு, பிறப்பு விகிதக் கணக்கை விட நான்கு அல்லது ஐந்து மடங்கு மிகுதியாகவே காணப்படும். காரணம், குறிப்பிட்ட வயது பெண் களை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்வதால் காணப்படும் வேறுபாடு ஆகும்.

பொதுக்கருவளச் செறிவைத் துல்லியமாகக் கணக் கிட 15 முதல் 49 வயது வரையுள்ள பெண்களை வயதுவாரியாக ஏழு குழுக்களாகப் பிரிக்கின்றார்கள். அவை, 15 – 19, 20 – 24, 25 – 29, 30 – 34, 35 – 39, 40 – 44, 45 – 49 என ஏழு குழுக்கள் ஆகும். எந்த வயது குழுவில் எத்தனை குழந்தைகள் பிறக்கிறார்கள் எனக் கணக்கிட்டு எந்த வயது குழுவில் கருவளச் செறிவதிகம் எனவும் கணக்கிடுகிறார்கள். மேலும், இம்முறையில் பெண்களுக்குத் திருமணம் நடை பெறும் வயதும், முதல் குழந்தை பெற்றுக்கொள்ளும் பொழுதுள்ள வயதும் குறித்துக் கொள்ளப்படும்.

அடுத்து எத்தனை பெண் குழந்தைகள் இவர் களுக்குப் பிறக்கின்றன எனவும் கணக்கிட்டுக் கொள் கிறார்கள். இதனால் 15 ஆண்டுகள் கழித்து எத் தனைப் பெண்களுக்குக் கருவளச்செறிவு விகிதம் எவ் வளவு காணப்படும் என்பதையும் ஓரளவு ஊகித்துக் கொள்கின்றார்கள். மேலும், ஒவ்வொரு ஐந்தாண்டு கடக்கும் பொழுதும் எவ்வளவுபேர் அடுத்து உயிரோடு இருக்கிறார்கள் என்பதையும் கணக்கிடு

கிறார்கள். எடுத்துக்காட்டாக, 15 - 19 வயது குழுவின் ஒரு பகுதியில் 12,214 பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால், அடுத்த ஐந்தாண்டுகளில் இவர்கள் 20-24 என்ற வயது குழுவில் வந்து விடுவார்கள். அதற்கிடையில் அவர்களில் 727 பேர் பல்வேறு காரணங்களால் மரணமடைய நேர்ந்தால் 20 - 24 என்ற வயது குழுவில் அப்பொழுது 11,487 பேர்களே இருப்பார்கள். இவ்வாறு ஐந்தாண்டுக் கொருமுறை கணக்கிட்டுக் கொள்கிறார்கள்.

அது போன்று 15 - 19 வயது குழுவில் உள்ள பெண்களில் எத்தனை பேருக்குக் கணவன்மார் உயிரோடு இருக்கிறார்கள், அடுத்த ஐந்தாண்டில் அவர்கள் எத்தனை பேர் உயிரோடு இருப்பார்கள் என 49 வயது வரை கணக்கிட்டுப் பார்த்துக் கொள்கிறார்கள். அது போன்று 15 முதல் 19 வயது வரை எத்தனை பெண்களுக்குத் திருமணம் ஆகியது என்பதையும் கணக்கிட்டுக் கொள்கிறார்கள். இக் கணக்கில் 49 வயதுக்கு மேல் பெண்களைப் பொதுவாகச் சேர்த்துக் கொள்வதில்லை.

சில காரணங்களால் பொதுக்கருவளச் செறிவு விகிதத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அத் தவறு 49 வயதுக்கு மேல் சில பெண்களுக்குக் குழந்தை பிறக்கும் பொழுதும், பிறக்கும்பொழுது இறந்து பிறக்கிற குழந்தை விவரத்தைக் கணக்கில் காட்டாமல் இருக்கும்பொழுதும் நேருகின்றது.

இரண்டாம் உலகப்போர் (1945-ஆம் ஆண்டு) முடிவுற்றது. அதன் பின்னர் 1947-ஆம் ஆண்டு முதல்தான் பிறப்பு விகிதம், கருவளச் செறிவு விகிதம் ஆகியவற்றைத் தெளிவாகக் கணக்கிட முடிந்தது. காரணம், இரண்டாம் உலகப் போரின் முடிவில் திருமணங்கள் குறைவாகவே நடைபெற்றன. காரணம் போரை ஒட்டிப் பல திருமணங்கள் ஒத்திப் போடப்பட்டன. பின்னர், 1945 - ஆம் ஆண்டின் இறுதியிலும் 1946- ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் திருமணம் செய்து கொண்டு 1947-ஆம் ஆண்டு முதல் குழந்தை பெறத் தொடங்கினர். இரண்டாம் உலகப் போரின் பின்னர், அது போன்ற ஒரு சூழ்நிலை இதுநாள் வரை வரவில்லை. ஆகவே, 1947-ஆம் ஆண்டிலிருந்து பொதுக்கருவளச் செறிவு விகிதம் தெளிவாகக் கணக்கிடப்பட முடிகிறது.

பல இளைஞர்கள் 1940 - இலிருந்து 1945 - ஆம் ஆண்டு வரை போர்க்களத்தில் இருந்தமையால் அப்பொழுது பிறந்த குழந்தைகளை வைத்துப் பொதுக் கருவளச்செறிவு கணக்கிடக் கூடாது. எல்.ஜெ.

**துணை நூல்கள்:**

**Benjamin, Bernard**, Elements of Vital Statistics, George Allen and Unwin Ltd., London, 1959.

**Freedmen, Ronald Etal**, Family Planning Sterility and Population Growth, McGraw - Hill Book Company, New York, 1959.

Great Britain, Census Office, Fertility and Marriage, H M. Stationary Office, London, 1917.

**Kuczynski, Robert R.**, The Balance of Births and Deaths, The MacMillan Company, New York, 1928.

**Sauvy, Alfred**, Fertility and Survival Population Problems from Malthus to Mao Tse Tung, Criterion Books, NewYork, 1961.

*பொதுத் துறைகள்*: பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியையும், பகிர்வையும் பொருளாதார நடவடிக்கைகள் என்பர். அவை தனி மனிதனாலோ தனியார் வாணிக நிறுவனங்களாலோ தனியார் தொழில்களாலோ மேற்கொள்ளப்படுமாயின் அவற்றைத் தனியார் துறைகள் (Private Sectors) என்றும், அரசு போன்ற பொதுவான அமைப்புகளால் மேற்கொள்ளப்படுமாயின் அவற்றைப் பொதுத்துறைகள் (Public Sectors) என்றும் குறிப்பிடுவர். இன்று பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படும் நாடுகளில், அவற்றின் பொருளாதார வளர்ச்சி வரலாற்றின் தொடக்க நிலைகளில், உள்நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துதல், வெளிநாடுகளிலிருந்து மேற்கொள்ளப் படும் படையெடுப்புகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல் போன்ற இன்றியமையாத காவற்பணிகளை (Police Functions) மட்டுமே அரசுகள் ஆற்றி வந்தன. எனவே, பொருளாதார நடவடிக்கைகள் யாவும் தனியார் துறையிலேயே இருந்து வந்தன. ஆனால், காலப்போக்கில் நிலைகள் மாறி இக்காலத்தில் தனியார் துறைக்குச் சமமாக அல்லது தனியார் துறைக்கும் மிகுதியான அளவில் பொதுத்துறை பல்கிப் பெருகி வளர்ச்சி பெற்றுள்ளது.

**வரலாற்றுப் பின்னணி**: செருமனி, ஆசுத்திரியா, பிரான்சு, இங்கிலாந்து, இசுபெயின், இசுகாட்லாந்து ஆகியநாடுகளில் கி.பி.17-ஆம் நூற்றாண்டில்பரவலாக வளர்ச்சி பெற்றிருந்த வணிகவாதிகளின் (Mercantilists) கருத்துப்படி எந்த ஒரு நாடு வணிகம் செழிப்பாக இருந்து செல்வம் மிகுதியாகச் சேர்க்கின்றதோ அந்த நாடே வளம்மிக்க நல்ல நாடு என்ற எண்ணம் நிலவியது. அதனையடுத்து வந்த இயற்கைவாதிகள்

(Physiocrats) இயற்கை நிகழ்ச்சிகளுக்கும், வேளாண்மைத் துறைக்கும் பன்மடங்கு சிறப்பிடம் தந்து, மனிதனால் மேற்கொள்ளப்படும் விதிகள் நன்மை பயப்பவை அல்ல என்றும், இயற்கை விதிகளே சாலச் சிறந்தவை என்றும், எனவே, மக்கள் யாவரும் இயற்கை விதிகளுக்கே சிறப்பிடம் தந்து ஒழுகவேண்டும் என்றும் வலியுறுத்தினர். அதன் அடிப்படையில் இயற்கை விதிகளுக்குப் புறம்பாக அரசு எப்பொழுதுமே செயற்படக்கூடாது என்பதை வலியுறுத்தித் தலையிடாக் கொள்கைக்கு (Laissez – faire policy) வித்திட்டனர். தொன்மைப் பொருளியல் அறிஞர்களுக்குத் தலைவரெனப் போற்றப்படும் பேராசிரியர் ஆதம் சுமித்து (Prof. Adam Smith) தாம் எழுதிய 'நாடுகளின் செல்வத்தின் இயல்பு பற்றியும், அதன் காரணங்கள் பற்றியும் ஆனதோர் ஆய்வு'(An Enquiry into the Nature and Causes of Wealth of Nations) என்ற நூலில் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடக் கூடாது என்ற கொள்கையை வலியுறுத்தினார். அவரது கருத்தை ஏற்றுக்கொண்ட தொன்மை அறிஞர்கள் யாவரும் அக்கருத்தை வலியுறுத்தியதால் தனியார் துறை ஓங்கிய நிலையும் பொதுத்துறை இல்லாத நிலையும் பல ஆண்டுகளாகக் காணப்பட்டன. ஆனால், 1930 – ஐச் சேர்ந்த ஆண்டுகளில் நிலவிய பொருளாதார மந்தமும், பொருளாதார மந்தத்தைத் தவிர்க்கத் தொன்மைப் பொருளியலார் கருத்துகள் பயன்பட வில்லை என்ற நிலையும் சான் மேனார்டு கீன்சு (John Maynard Keynes) என்பாரை அவரது 'பொதுக் கோட்பாடு' (General Theory) என்ற நூலை எழுதத் தூண்டின. தனியார் துறை எப்பொழுதுமே ஆதாய நோக்கத்துடன் செயற்படத் தக்கது; பொருளாதார மந்தநிலையில் வட்டி விகிதத்தை எவ்வளவு குறைத்தாலும் முதலீடு செய்யும் ஆர்வம் இருக்காது; மொத்தத் தேவையைப் பெருக்க அரசு அதன் முதலீட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்போன்ற பல கருத்துகளைப் 'பொதுக் கோட்பாடு' விளக்கியது. அதன்பிறகு பொதுத்துறை முதலீடுகள் பெருகத் தலைப்பட்டன. அரசியல் தன்னாட்சி பெற்ற ஒரு சில நாடுகள் 'சமதருமம்' (Socialism) எனப்படும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்ட நிலையில் விரைவான முன்னேற்றத்தைப் பெற்றன. அதுவும் பொதுத்துறை முதலீடுகள் பல்கிப் பெருகத் துணை செய்தது.

**பொதுத்துறைக்கு எதிரான கருத்துகள்**: பொதுத் துறைக்கு எதிரான கருத்துகள் பலப்பல. அவற்றுள் மிகுதியான முதலீடும் எச்சத் திறனும் இருத்தல், திட்டமிடுதலில் குறைகள் இருத்தல், பணவீக்க நிலையைத் தோற்றுவித்தல், அரசியல் தவறுகள் நேரும் வாய்ப்புகள் மிகுதியாக இருத்தல், நிருவாகக் குறைகள் இருத்தல் என்பன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாகும்.

1. **மிகை முதலீடும் எச்சத்திறனும்**: பொதுத்துறையில் மேற்கொள்ளப்படும் முதலீட்டு முயற்சிகளின் பயன்கள் சமுதாயம் முழுவதிற்கும் பரவலாகக் கிடைக்க வேண்டும் என்பதால் முதலீடுகளின் அளவுகள் பெரும அளவிலானவையாக அமையும். வளரும் நாடுகளின் ஈர்க்கும் திறன் (Absorption Capacity) பொதுவாகக் குறைந்த அளவிலேயே இருக்குமாதலால் எச்சத்திறன் பெருமளவில்இருக்கும்நிலை தோன்றலாம். இந்நிலை விரும்பத்தக்கதாகாது என்பர். பொதுவாக, மூலதனப் பற்றாக்குறை மிகுதியாக இருக்கும் நாடுகளில் இந் நிலை முற்றிலும் விரும்பத்தகாத ஒன்று என்பர்.

2. **திட்டமிடுதலின் குறைபாடு**: பொதுத்துறை நிறுவனங்களுக்கு மிகுந்த அளவில் மூலதனம் தேவைப் படுகிறது என்பதோடு, அவை நீண்டகால அளவில் பயன்தரும் வகையில் நீண்ட கருக் காலத்தை (Long Gestation Period) உடையவையாக இருப்பதால் அவற்றைத் திட்டமிடுவதில் பல குறைகள் தோன்றும் வாய்ப்புகள் உள்ளன.

3. **பணவீக்க நிலையைத் தோற்றுவிப்பவை**: நீண்ட கருக்காலத்தைக் கொண்டுள்ள பொதுத்துறை, முதலீட்டு முயற்சிகளை மேற்கொள்ளும்போது தொடக்க நிலைகளில் பொருளாதாரத்தில் பண வருமானம் மட்டும் பெருகுவதால் பணவீக்கம் தோன்றும் நிலை உருவாகலாம்.

4. **அரசியல் தவறுகள்**: விரைவான வளர்ச்சியைப் பெறும் ஆவலில் சரியான தொலைநோக்கமும், திட்டமும் இல்லாமல் அரசினர் பல தவறான கொள்கைகளைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புகளும், அவற்றால் பல தவறான விளைவுகள் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

5. **நிருவாகக் குறைகள்**: தனியார் துறை ஆதாய நோக்கத்தோடு செயற்படுவதால் எந்த ஒரு முயற்சியாக இருந்தாலும் அதன் விளைவுகளைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்துச் செயற்படும். ஆனால், நிலையான மாத ஊதியம் பெறும் பொதுத்துறையின் நிருவாகிகளுக்குத் தொழில்முனைவும், பேரார்வமும் இருப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்பதால் பல நிருவாகக் குறைகளும் முறைகேடுகளும் ஊழலும் பெருகுவதற்கான வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன.

**ஆதரவான கருத்துகள்**: எதிரான கருத்துகளை விட ஆதரவான கருத்துகள் வலிமைமிக்கனவாக இருப்பதால் பொதுத்துறை மேன்மேலும் வளர்ந்து வருகிறது.

1) **பொதுப் பயன்பாடுகளின் பெருக்கம்**: ஒரு நாட்டின் வேளாண்மைத் தொழில்களும் பிற துறைகளும் விரைந்து முன்னேறப் பொதுப் பயன்பாடுகள் (Public Utilities) பெருகுதல் இன்றியமையாதது. சாலை வழி, கடல் வழி, விண் வழி, இருப்புப்பாதை வழிப் போக்குவரத்துகள், அஞ்சல், தந்தி, தொலைபேசி, தொலைக்காட்சி வசதிகள், பல வகையான பொதுப் பயன்பாடுகளைப் பெருக்கும் முயற்சிகள் ஆகியவை பொதுத் துறையில்தான் விரைந்து மேற்கொள்ளப்படும்.

2) **இயற்கை மூல வளங்களின் பெருக்கம்**: வளரும் நாடுகளில் இயற்கையில் உள்ள மூலவளங்கள் முழு அளவில் பயன்படுத்தப் படாமலும் அல்லது தனியார் துறையினால் தவறான வழிகளில் பயன்படுத்தப் பட்டும் இருக்கலாம். இருக்கக்கூடிய மூலவளங்களை நல்லமுறையில் திட்டமிட்டுப் பயன்படுத்துவதற்கும், இதுவரை கண்டுபிடிக்கப்படாத மூலவளங்களைக் கண்டு பிடித்துப் பயன்படுத்துவதற்கும், இத்துறையில் பெரிய அளவில் மூலதனத்தைப் பயன்படுத்துவதற்கும், நெடுங்கால அளவிலான ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கும் பொதுத்துறைகளின் பணிகள் மிகவும் இன்றியமையாதவையாக இருக்கின்றன.

3) **இன்றியமையாத தொழில்களின் வளர்ச்சி**: இரும்பு எஃகு, கனரக மின்சாரம், கனரக இரசாயனங்கள், உரம், இயந்திர சாதனங்கள் ஆகியவை போன்ற பல தொழில்களின் வளர்ச்சி நாட்டின் பாதுகாப்பிற்கும் உறுதியான முன்னேற்றத்திற்கும் தேவையானதாகும். இத்தொழில்களுக்கு மிகப்பெரும் அளவில் மூலதனம் தேவைப்படுவதோடு, நீண்ட கருக்காலமும் வேண்டியிருக்கும். எனவே, தனியார் துறை இவற்றில் தலையிடத் தயக்கம் காட்டும் நிலை தொடக்கத்தில் காணப்படும். எனவே, தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளும் பொருளாதார முன்னேற்ற நிலையைப் (Self-sustained Growth Stage) பொருளாதாரம் பெற வேண்டுமானால் இத்தகைய தொழில்கள் யாவும் பொதுத்துறையில் தொடங்கி நடத்தப்பெறுவது இன்றியமையாததாகும்.

4) **தனியார் துறைக்கு உதவுதல்**: நிதிக் கழகங்கள், வங்கிகள், கடன் கழகங்கள், முதலீட்டு அமைப்புகள், இன்னும் இவைபோன்ற பல நிதிக் கட்டமைப்புகள் (Financial Infrastructure) ஆகியவற்றைத் தோற்றுவித்தால்தான் தனியார் துறை விரைவான வளர்ச்சியைப் பெறுதல் இயலும். இக் கட்டமைப்புகளைத் தோற்றுவிப்பதன் மூலம் தனியார் துறைக்கு உதவி செய்யப் பொதுத்துறைகளின் தலையீடு மிகவும் தேவை.

5) **இடைத்தரகர்களை ஒழித்தல்**: உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய கச்சாப் பொருட்களையும், பிற முதலீட்டுப் பொருட்களையும் சரியான, மலிவான விலைகளில் கிடைக்கவிடாமல் தொல்லை தரும் இடைத்தரகர்களின் தொல்லைகளை ஒழிக்கவும், அதேபோன்று முழுமை பெற்ற நுகர்வுப் பொருட்களையும், முற்றுப்பெறா நிலையில் உள்ள இடைப்பொருட்களையும் தகுதியான விலைகளில் கிடைக்கவிடாமல் செய்யும் இடைத்தரகர்களின் தொல்லைகளை ஒழிக்கவும், நாடு முழுவதிலும் ஒரே சீரான எடை, கணக்கு முறை போன்றவற்றைக் கொண்டுவரவும் பொதுத் துறைகளின் பணி மிகவும் இன்றியமையாததாகும்.

6) **மூலதனத் திரட்சி**: பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒரு காரணி மூலதனம். பொதுத்துறைகள் பொதுப் பயன்பாடுகளாக மட்டுமல்லாமல் ஆதாயம் தரத்தக்க கொள்கைகளின் அடிப்படையில் பயன்படுத்தப்படும்போது பேரளவு ஆதாயம் கிடைக்கிறது. அதில் ஒரு பகுதியை அவ்வத் துறைகளின் வளர்ச்சிக்காக மறு முதலீடுகளாகப் பயன்படுத்தினாலும், மிஞ்சியுள்ள பகுதியை நாட்டின் ஒருமித்த வளர்ச்சிக்கும், திட்டப் பணிகளுக்கும் பயன்படுத்தும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. இவ்வாறு மூலதனத்தைத் திரட்டிப் பயன்படுத்துவதனால் ஒரு புறம் பொருளாதார வளர்ச்சி விரைவானதாக் மாறும் வாய்ப்பும், மறுபுறம் வளர்ச்சித் திட்டங்களுக்கு வெளிநாட்டு மூலதனத்தைப் பெருமளவில் சார்ந்திராத நிலையும் தோன்றுகின்றன.

7) **மறைமுகமான நன்மைகள்**: வளர்ச்சி குறைந்த நாடுகளில் வேலையின்மை பெருமளவில் பெருகியுள்ளது; உற்பத்தித் திறன் குறைவாக இருக்கிறது; பயிற்சியும் ஆய்வும் குறைவான நிலையில் உள்ளன; துணைத் தொழில்களின் வளர்ச்சி குறைவாக இருக்கிறது; தனியார் துறையில் ஒருசில நிறுவனங்கள் அளிப்பைக் கட்டுப்படுத்தத்தக்க அளவிற்கு முற்றுரிமை அமைப்புகளாக உருவாகும் நிலை இருக்கிறது. பொதுத்துறையில் பல தொழில்கள் தொடங்கப்பெறுவதால் அந்நிலைகளில் விரும்பத்தக்க நல்ல மாற்றங்கள் நிகழ்கின்றன. அம் மாற்றங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவையாகும்.

சுருங்கக்கூறின், விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறவும், தேவையான தொழில் அடிப்படையை அமைத்துக்கொள்ளவும், நுகர்வின்

அளவைப் பெருக்கவும், செல்வ வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், எல்லாப் பிரிவு மக்களுக்கும், எல்லாப் பகுதி மக்களுக்கும் சமமான பொருளாதார வாய்ப்பு வசதிகளை நல்கவும், பொதுச் சேமிப்பை மிகுதிப்படுத்தவும் பொதுத்துறைகளின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாதது என்பது வலியுறுத்தப்படுகிறது.

**இந்தியாவில் பொதுத்துறை:** இந்தியப் பொருளாதாரம், முதலாளித்துவப் பொருளாதார அமைப்பையோ முழுமையான சமதருமப் பொருளாதார அமைப்பையோ பயன்படுத்தாமல், அவ்விரண்டின் நன்மைகளையும் பெறும் நோக்கத்துடன் கலப்புப் பொருளாதார (Mixed Economy) அமைப்பைப் பெற்றுள்ளது. எனவே, இந்தியப் பொருளாதார முன்னேற்றத்தில் தனியார் துறை, பொதுத்துறை ஆகிய இரு துறைகளும் இன்றியமையாத பங்கை வகிக்கின்றன. தனியார் துறையை ஊக்குவிப்பதாகவும் வழிநடத்துவதாகவும் அதேநேரத்தில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாகவும் இந்தியாவில் பொதுத்துறை பயன்பட்டு வருகிறது.

இருப்புப் பாதையைப் பயன்படுத்தும் தொடர் வண்டி, அஞ்சல் துறை, காகிதப் பண வெளியீடு, நாணயங்களின் வெளியீடு, காடுகள், நீர்மின் திட்டங்கள், பன்னோக்கு ஆற்றுப் படுகைத் திட்டங்கள் (Multi purpose River Valley Scheme), சாலைப் போக்குவரத்து, கப்பல்கள், தொடர்வண்டி இயக்கு பொறிகள் (Locomotives), எண்ணெய்க் கண்டுபிடிப்பு, எண்ணெய்ச் சுத்திகரிப்பு, மின்பொருள்கள், இயந்திரச் சாதனங்கள், இரசாயனங்கள், உரங்கள், சுரங்கங்கள் உலோகங்கள், வங்கிகள், காப்பீடுகள் (Insurances), விண்வெளிப் பயணச் சாதனங்கள் எனப் பல துறைகளில் இந்தியாவில் பொதுத்துறை பெருகியுள்ளது. காப்பீடு, வங்கி, கப்பல் கட்டும் தொழில் போன்ற ஒருசில அமைப்புகளைத் தனியார் துறையிலிருந்து பொதுத்துறைக்கு அரசு வலுக்கட்டாயமாக மாற்றிக்கொண்டாலும், மொத்தமாகப் பார்க்கும்போது பெரும்பாலான பொதுத்துறைகளை அரசே திட்டமிட்டுத் தொடங்கி நடத்தி வருகிறது.

இந்தியாவிலுள்ள பொதுத்துறை நிறுவனங்கள் மூவகைப்படும். முதலாம் வகை: அரசுத் துறைகளால் அல்லது அரசின் பதிலாண்மைகளால் நேரடியாக நடத்தப்படுபவை. புகைவண்டி, அஞ்சல்துறை போன்றவையும் இந்தியப் பாதுகாப்பு அச்சகம் (Indian Security Press), தில்லிப் பால் திட்டம் (Delhi Milk Scheme), கோலார் தங்கச் சுரங்கம் (Kolar Gold Mines) போன்றவையுமான பதினொரு நிறுவனங்கள். இரண்டாம் வகை: ஆயுள் காப்பீட்டுக் கழகம், மத்திய கிட்டங்கி நிறுவனம் (Central Warehousing Corporation), இந்தியப் பன்னாட்டு விமானப் போக்குவரத்து (Air India), இந்திய உள்நாட்டு விமானப் போக்கு வரத்து நிறுவனம் (Indian Airlines Corporation), எண்ணெய் இயற்கைவாயு பொறுப்பாண்மைக் குழு (Oil, and Natural Gas Commission), இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) மற்றும் இவைபோன்ற சட்ட அடிப்படையில் அமைந்திருக்கும் (Statutory) மற்ற கழகங்கள். மூன்றாம் வகை: 1956-ஆம் ஆண்டு இந்திய நிறுமச் சட்டத்தின்படி (Indian Companies Act, 1956) பதிவு செய்துகொண்டு செயற்படும் அரசு நிறுமங்கள்.

**பொதுத்துறையின் வளர்ச்சி:** இந்திய அரசின் 1985-86-ஆம் ஆண்டுப் பொதுத்துறை ஆய்வின் (Public Enterprises Survey, 1985-86, Govt. of India) மதிப்பீட்டின்படி மைய அரசுப் பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சியை எண்ணிக்கையின் அடிப்படையிலும், மொத்த முதலீட்டின் அடிப்படையிலும் பின்வரும் அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.

**அட்டவணை: மைய அரசுப் பொதுத்துறையின் வளர்ச்சி**

| ஆண்டுகள் | எண்ணிக்கை | மொத்த முதலீடு (உரூ. கோடியில்) | ஆண்டுகள் | எண்ணிக்கை | மொத்தமுதலீடு (உரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1950-51 | 5 | 29 | 1980-81 | 185 | 21,102 |
| 1955-56 | 21 | 81 | 1981-82 | 205 | 24,916 |
| 1960-61 | 48 | 953 | 1982-83 | 209 | 30,039 |
| 1968-69 | 85 | 3,902 | 1983-84 | 214 | 35,394 |
| 1973-74 | 122 | 6,237 | 1984-85 | 221 | 42,791 |
| 1977-78 | 174 | 13,389 | 1985-86 | 228 | 50,341 |

இந்தியாவில் மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்கள் பல செயற்படுகின்றன. அவற்றுள் பெரிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்உற்பத்தி, பேருந்துகள், மாநில நிதிக் கழகங்கள், மாநில மின்சாரக் கழகங்கள் போன்றவை மாநிலப் பொதுத்துறை அமைப்புகளாகச் செயலாற்றி வருகின்றன.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி, கிடைத்தற்கரிய மூல வளங்களைச் சிரிய முறையில் பயன்படுத்துதல், பல நிலப் பகுதிகளுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல், நிதி வளத்தைப் பெருக்குதல், சனநாயகப் பொதுவுடைமைச் சமுதாயத்தைப் பெறுதல், தனியார் துறையின் குறைகளைக் களைதல் போன்ற பல நோக்கங்களுடன் திட்டமிட்ட வளர்ச்சிக் காலத்தில் இந்தியாவில் பொதுத்துறை பன்மடங்கு பெருகிப் பயன்பட்டு வந்தாலும், பொதுத்துறைகளில் உள்ளார்ந்திருக்கும் பல குறைகளால் இந்தியாவில் பொதுத்துறையின் நன்மைகளை முழுமையாகப் பெற முடியவில்லை என்ற குறையைப் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். பேரளவில் நட்டத்தில் செயற்படுதல், நிறுவனங்களை நிறுவும் இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் பொருளாதாரக் காரணிகளைக் காட்டிலும் அரசியல் காரணிகளுக்கே சிறப்பிடம் தரும் போக்கு, திட்டங்களை நிறைவேற்ற ஏற்படும் கால தாமதத்தால் திட்டச்செலவுகளில் ஏற்படும் முனைப்பான அதிகரிப்பு, மிகுதியான அளவில் மூலதனத்தைப் பயன்படுத்தவேண்டிய கட்டாயம், விலைக்கொள்கை, தேவைக்கு மிகுதியான அளவில் மனித ஆற்றலைப் பயன்படுத்தும் போக்கு, எச்சத்திறன் மிகுதியாக இருத்தல், சரியான தொலைநோக்கும் திட்டமிடுதலும் இல்லாத கட்டுப்பாடுகள், திறமையற்ற நிருவாகம், முதலீட்டுச் செறிவுள்ள தொழில் முறைகள் போன்ற பல குறைகளை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். என்.எஸ்.பா.

**துணை நூல்கள்:**

**Charles Gide and Charles Rist**, A History of Economic Doctrines, George G., Harsap & Co. Ltd., London,1964.

**Hajela, T.N.** History of Economic Thought, Shiv Lal Agarwala and Co., Agra,1982.

**Ruddar Datt and Sundaram**, **K.P.M.**. Indian Economy, S. Chand&Co.Pvt.Ltd., New Delhi,1987.

**Thingan,M.A.**, The Economics of Development and Planning, Vikas Publishing House Ltd., Delhi, 1975.

*பொதுப் பயன்பாடுகள்*: மக்களின் தேவைகளுள் தண்ணீர், சுகாதாரம், மின்சாரம், எரிவாயு, தகவல் தொடர்பு, போக்குவரத்து போன்றவை இன்றியமையாதன. மக்கள் நல அரசு இத்தகைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் பொதுப் பயன்பாடுகளை உருவாக்குகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் இன்றியமையாத பண்டம் அல்லது பணியின் அளிப்பை முழுமையாகக் கட்டுப்படுத்துகின்ற அரசால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற நிறுவனம் என்பது பொதுப் பயன்பாடு என்பதன் பொருள். பொதுப் பயன்பாடுகள் (Public Utilities) எனப்படுபவற்றை இன்றியமையாத பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றை அளிப்பதில் முற்றுரிமை பெற்ற தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு என்றும் விளக்கலாம். அரசுத்துறைத் தொழில்களுக்கும் தனியார் துறைத் தொழில்களுக்கும் இடைப்பட்ட நிலையில் பொதுப் பயன்பாடுகள் செயற்படலாம் என்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(அ) இன்றியமையாத பண்டங்கள் பணிகள் ஆகியவற்றோடு தொடர்பானவை; (ஆ) முற்றுரிமைத் தன்மை பெற்றவை; (இ) மக்கள் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவை; (ஈ) அரசினர் ஒழுங்குபடுத்தும் கடப்பாடுடையவை என்பன பொதுப் பயன்பாடுகளின் இயல்புகள்.

'மக்கள் நலன்' ('இன்றியமையாப் பண்டங்கள்') போன்ற கருத்துகள் நாட்டுக்கு நாடும், காலத்துக்குக் காலமும் வேறுபடலாம். எடுத்துக்காட்டாக, இன்றியமையாதவை எனக்கருதப்பட்டுப் போக்குவரத்துப் பணிகள் சில நாடுகளில் அரசால் நடத்தப்படுவதையும், மற்ற சில நாடுகளில் தனியார் துறையில் நீடிப்பதையும் குறிப்பிடலாம். பெரும்பாலான தெற்காசிய நாடுகளில் பொதுப்பயன்பாடுகளில் அரசுகளே முதலீடு செய்து வருகின்றன என்பது குன்னர் மிர்தல் (Gunnar Myrdal) கருத்து. தொடக்கத்தில் தெற்காசியாவில் மேலை நாடுகளைப் போலவே, அரசு உதவியுடன் தனியார்களால் முதலீடு செய்யப்பட்டது. பின்னர்ப் போக்குவரத்து, மின்சாரம், நீர்ப்பாசனம், தகவல் தொடர்பு ஆகியவை அரசுத் துறைகளாயின. இந்தியா, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளில் தனியார் துறை முதலீடுகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. தெற்காசிய நாடுகளில் மின்விசை, தண்ணீர், தொடர் வண்டி, விமானப் போக்குவரத்து, ஒலிபரப்பு, தகவல் தொடர்பு ஆகியவை அரசுக்குச் சொந்தமானவையாகவும், சாலை மற்றும் கடல் போக்குவரத்துத் தனியார் வசமும் இருந்தன. பிலிப்பைன்சில் பயன்பாட்டுத்துறை முதலீடுகள் தனியார் துறைத் தொழில்களுக்கு நல்ல தூண்டுதலையும், உந்துதலையும் தந்தமையால், அவை அங்குத் 'தூண்டுதல் துறை' (Impulse Sector) எனப்படுகின்றன. பொதுப் பயன்பாடுகளைப் பொறுத்தமட்டில் அரசின் ஒழுங்கு நடவடிக்கைகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

பொதுப் பயன்பாடுகளைக் கீழ்க்காணுமாறு 4 வகைகளாகப் பிரிக்கலாம். அவை, 1) போக்குவரத்து-இருப்புப்பாதை, நெடுஞ்சாலை, உள்ளூர்ப் போக்குவரத்து, எண்ணெ எரிவாயுக் குழாய்கள், கடல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து; 2) தகவல் தொடர்பு - தொலைபேசி, தந்தி, வானொலி, தொலைக்காட்சி; 3) திறன், வெப்பம், ஒளி – எரிவாயு, மின்சாரம்; 4) சமூக வசதிகள் – குடிநீர், சுகாதாரம், நீர்ப்பாசனம் என்பனவாகும். விரிவாகப் பார்த்தால் கம்பிகள் (Wires), கடலடித் தந்திக் கம்பிகள் (Cables), குழாய்கள் (Pipes), தொடர் வண்டிப் பாதைகள் (Railways) ஆகியவை வாயிலாகப் பணி செய்யும் தொழில்களைப் பொதுப்பயன்பாடுகள் எனக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக மின்சாரம், தொலைத் தகவல் தொடர்பு, தண்ணீர், சமையல்வாயு, தொடர்வண்டிப் போக்குவரத்து ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**வரலாற்றுப் பின்னணி**: நாகரிகம் தொடங்கிய நாள் முதலே சமுதாய வாழ்க்கைக்கு இன்றியமையாத விருப்பங்களை நிறைவு செய்யும் பொருட்டு அவற்றில் அரசின் தலையீடு தொடங்கியது. பண்டைய பேரரசுகளில் வாணிகம் வளர வளரப் போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகிய வசதிகளை அரசு அளிக்கத் தொடங்கியது. எடுத்துக்காட்டாக, உரோமாபுரிப் பேரரசால் நிருவகிக்கப்பட்ட நெடுஞ்சாலைகளையும் (Highways), கால்வாய்ப் பாலங்களையும் (Aqueduct Systems) கூறலாம். நகரங்களில் மக்கள் நெரிசல் அதிகமானதால் சுகாதார நடவடிக்கைகள் இன்றியமையாதனவாயின. இவ்வாறு பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் வளரத் தொடங்கியதால் அரசே நேரடியாக அத்தேவைகளை நிறைவேற்ற வேண்டிய இன்றியமையாமையினை உணர்ந்தது. தொழிற்புரட்சியைத் தொடர்ந்துபொதுப்பயன்பாடுகள் அளவிலும் தன்மையிலும்பெருமளவில்சிறப்புப் பெற்றன. தொழிற்சாலை முறை தோன்றியதன் விளைவாக நகரங்கள் பெருகி, நீர், சுகாதாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, விளக்கு, மின்சாரம் ஆகியவற்றுக்கான தேவை பன்மடங்கு பெருகியது. தொடக்கத்தில் அரசின் தலையிடாக்கொள்கை (Laissez faire Policy) பொதுப் பயன்பாடுகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. பொதுமக்களின் இன்றியமையாத தேவைகளை அளிக்கும் பொறுப்பைத் தனியார் வசம் விட்டு வைப்பதால் ஏற்பட்ட குழப்பங்கள் கி.பி. 1840-ஆம் ஆண்டு முதல் தலையிடாக் கொள்கைக்கு எதிர்ப்பு உருவாக அடிகோலின. அதன் விளைவாக, ஏற்கனவே செயற்பட்டு வந்த பொதுப்பயன்பாடுகள் அரசு நிறுவனங்களாக மாறின; புதிய பணிகளில் அரசின் உதவியுடனும் மேற்பார்வையுடனும் தனியார் முயற்சிகள் அனுமதிக்கப்பட்டன. இவ்வாறு முழுக்க அரசுப்பணியாகவோ, முற்றிலும் தனியார் தொழிலாகவோ இல்லாத புதிய பொதுப் பயன்பாடுகள் என்ற அமைப்புகள் தோன்றின.

**பொருளாதாரக் கண்ணோட்டத்தில்**: பொதுப்பயன்பாடுகளின் அடிப்படைத் தன்மை முற்றுரிமை அமைப்பாகும். பொதுமக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே நிறைவு செய்து கொள்ள முயற்சி செய்வதால் வீண் செலவு மிகும். அதுபோலப் பல போட்டி நிறுவனங்கள் அப்பணியில் ஈடுபட்டாலும் மிகுந்த நன்மை கிடைக்காது. எடுத்துக்காட்டாக, மாநகராட்சி மூலம் நகர் முழுவதற்கும் தண்ணீர் பகிரப்படுவதே சிக்கனமான, வசதியான, வாய்ப்புள்ள நடவடிக்கையாகும். தனித்தனியே பல போட்டி நிறுவனங்கள் செயற்படுவதற்கு மாறாக அவற்றை ஒரு பொது நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதால் பொதுப் பயன்பாடுகளின் சமூக மதிப்பு உயர்வதுடன் செலவும் குறைகிறது. பொதுப்பயன்பாடுகளுக்குத் தொடக்க நிலைகளில் அதிகமான மூலதனம் தேவைப்படும். அவற்றின் மூலம் குறைந்த விலையிலும் சீரான முறையிலும் பண்டங்களும் பணிகளும் மக்களுக்கு அளிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அஞ்சல் கட்டணங்களையும், தொடர்வண்டிப் பாதைப் போக்குவரத்துக் கட்டணங்களையும் குறிப்பிடலாம். நுகர்வோர் நலனைப் பேணுவது இன்றியமையாதது என்பதோடு, பொதுப் பயன்பாடுகளில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்திற்குத் தக்க வருவாயும் கிடைக்கத் தக்க வகையில் அவை செயற்பட வேண்டும் என்பதும் இக்காலத்தில் வலியுறுத்தப்படுகின்றன. பொதுப் பயன்பாடுகள் தொடர்ந்து இழப்புகளைப் பெற்று வருமாயின் அவை மறைமுகமாக மக்களின் மீது வரிச்சுமையை மிகுதிப்படுத்தும். தொழிற்சாலையின் நலனுக்கும், பொதுமக்களின் நலனுக்கும் இடையே நல்லதொரு இணக்கத்தைக் கொண்டு வரும் பொருட்டே பொதுப் பயன்பாடுகளில் அரசின் முற்றுரிமை பரவலாக இருக்கிறது. பயன்பாடுகளைப் பொருள்வகை, பணிவகை என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவ்விரு வகைகளிலும் தேவைக்கும் அளிப்புக்குமிடையே சமன்பாட்டைக் கொண்டு வருவதில் வேறுபாடுண்டு. பொருளாதாரத்தில் தேவைக்கேற்ப அளிப்பை மாற்றும் தன்மை இல்லாவிட்டால் சிக்கல் தோன்றும். பணிவகைப் பயன்பாடுகளைப் பொறுத்தமட்டில் அவற்றின் அளிப்பு தேவைக்கு மிகுதியாக இருக்கும்போது பாதுகாத்து வைக்கமுடியாது. பணிகளுக்கான உச்சத் தேவையைக் கருத்தில் கொண்டு உற்பத்தித் திறனை உயர்த்தி வைப்பதனால் உற்பத்திச் செலவு மிகுதியாக வாய்ப்புண்டு.

தேவை குறையும்போது அளிப்பைக்குறைக்க முடியாத தால் சராசரிச் செலவு அதிகமாகும். எடுத்துக்காட்டாக மின்சாரம், தொலைபேசி, அஞ்சல், தந்தி ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். பொருள் வகைப் பயன் பாடுகளைப் பொறுத்தமட்டில் தேவை மந்தமாக உள்ள காலங்களில் அவற்றைச் சேமித்து வைத்து நுகர்வு மிகுதியாகும் போது பகிர்ந்தளிக்க முடியும்.
என்.எஸ்.பா.

**துணை நூல்கள்:**

**Arthur Pennance**, F.G.,Everyman's Dictionary of Economics, J.M.Deut & Sons Ltd., London, 1965.

**Gunnar Myrdal**, Asian Drama, Vol-II, Penguin Books, London, 1968.

*பொதும்பில்*: இது சங்க காலப்புலவர்களுடைய பெயர்களினால் அறியப் பெறும் ஊர்களுள் ஒன்று. நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இதனைப் பற்றிக் குறிப்பிடுங்கால் இது, மதுரை வட்டத்திலுள்ள ஓர் ஊர் என்றும், இக்காலத்தில் இவ்வூர் பொதும்பு என்று வழங்கப்படுகிறது என்றும் கூறியுள்ளார். இவ்வூர் சங்க காலத்தில் பல புலவர்களைத் தோற்றுவித்த சிறப்பினைக் கொண்டுள்ளது. பொதும்பில் கிழார் (நற். 57), பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் (நற்.375.387), பொதும்பில் கிழான் வெண்கண்ணனார் (அகம்.192), பொதும்பில் புல்லாளங்கண்ணியார்(அகம்.154)ஆகியபுலவர்கள் பொதும்பில் ஊர்த் தொடர்புடைய புலவர்களாக விளங்குகின்றனர். பொதும்பில் கிழார், பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் ஆகிய பெயர்களைக் காணுங்கால் தந்தையும் மகனும் ஆகிய இருவரும் சங்கத் தொகைநூல்களுள் இடம் பெறுமளவு சிறந்த பாடல்களை இயற்றும் கவிஞர்களாக விளங்கினர் என்பது புலனாகும். ஓரூரில் பல புலவர் தோன்றியமையும், ஒரு குடும்பத்தில் தந்தையும் மகனும் புலவர்களாகத் திகழ்ந்தமையும் ஆகிய சிறப்பினைப் பொதும்பில் என்னும் ஊர் பெற்று விளங்கியது குறிப்பிடத்தக்கது. அ.மா.ப.

*பொதும்பில் கிழார்* சங்கப் புலவர். பொதும்பில் என்பது பாண்டிய நாட்டில் மதுரை வட்டத்தில் உள்ளதோர் ஊரென்றும், இக்காலத்துப் பொதும்பு என்று அது வழங்கப் பெறுகின்றது என்றும் கூறுவர் நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். அவ்வூரினரான இப்புலவரைக் கிழாரென்பதனால் வேளாள மரபினர் என்று விளங்கிக் கொள்ளலாம். பொதும்பில் கிழார் வெண்கண்ணனார் (அகம். 192) என்று ஓர் அகநானூற்றுப் பாடலின்கீழ்க் காணப்பெறுவதால் இவரது இயற்பெயர் வெண்கண்ணனார் என்பதும் விளங்கும். பிற்காலத்தே பெயர் பரவிய நிலையில் இயற்பெயரே வேண்டாது ஊர்ப் பெயர் மரபுப் பெயர்களோடே இவர் பொதும்பில் கிழார் என்று (நற்.57,375,387) குறிக்கப் பெற்றார். அன்றி, வெண்கண்ணனார் என்ற அளவில் இயற் பெயரால் மட்டுமே குறிக்கப் பெற்றதும் (அகம்.130) உண்டு.

இப்பொதும்பில் கிழார் மகனாரும் புலவர். நற்றிணைப்பாடல்கள் இரண்டினைப் (375,387) பாடியவர். பெயர் பொதும்பில் கிழார் மகனார் என்றுள்ளமையால் இது புலனாகும். அவற்றுள் ஒன்று (நற்.375) பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் என்று அவரது இயற் பெயரையும் குறிப்பிடும்.

பொதும்பில் கிழார் இயற்றியனவாக மூன்று பாடல்கள் (அகம்.130,192;நற்.57) உள்ளன. கழறிய பாங்கனுக்குத் தலைவன் கழற்றெதிர் மறுத்தல், தோழி தலைவனுக்குச் செறிப்பறிவுறுத்தி இரவுக்குறி மறுத்தல், செறிப்பறிவுறுத்தி வரைவு கடாதல் ஆகிய துறைகளில் இவர் அப்பாடல்களை அமைத்துள்ளார். கழற்றெதிர் மறையில் தலைவன் கூற்றாகத் தலைவியின் நோக்கினைச் சிறப்பிப்பதும், செறிப்பறிவுறுத்தலில் தினைப்புனம் முற்றிக் கொய்தலால் பகற்குறிக்கு வாய்ப்பின்மை கருதிய தலைவியின் வருத்தத்தைப் புனைவதும் இவர் பாடல்களில் அழகுற அமைந்துள்ளன. 'மலைவேங்கை மரநிழலில் ஆமான் தன் கன்றுடனே துயிலும் பதம் பார்த்த மந்தி ஆரவாரம் மிக்க தன் சுற்றத்தைக் கையமர்த்திச் சென்று, அவ்வாமானின் பால் நிறைந்த மடியை அழுந்தும்படி பற்றியீர்த்து அதன் இனிய பாலைத் தன்குட்டியின் கையில் பிழிதற்கிடமான மலை நாடனே' எனத் தலைவனைத்தோழி விளிக்கும் புனைவிலே இவர் பொதிந்துள்ள உள்ளுறைப் பொருள் உணர்ந்தின்புறுதற்கு உரியதாம். வ.கு.

*பொதும்பிற் புல்லாளங் கண்ணியார்*: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். மதுரை வட்டத்திலுள்ள ஓர் ஊர் பொதும்பில். இது பொதும்பு என வழங்கப் பெறும். இவ்வூரில் சங்க காலத்தில் பல புலவர்கள் இருந்தனர் எனத் தெரிகின்றது. பொதும்பில் கிழார், பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் போன்றோர் குறிக்கத் தக்கவராவர்.

ஊரோடு தொடர்ந்த பெயர்கொண்ட புலவருள் ஒருவராக, பாண்டிய நாட்டுப் புலவராய்த் திகழ்ந்தவர் பொதும்பிற் புல்லாளங் கண்ணியார் ஆவார். இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றில் 154 - ஆம் பாடலாக அமைந்துள்ளது. முல்லைத் திணையிலமைந்த அப்பாடல், வினை முற்றிய தலை

மகன் தேர்ப்பாகற்குச் சொல்லியதாக அமைந்துள்ளது.

கார்ப்பருவத் தொடக்கத்தே மீண்டு வருவேன் எனத் தலைவியைத் தேற்றி வினைவயிற் பிரிந்த தலைவன், அப்பருவம் வந்துற்ற சின்னாளின் தான் சென்ற வினையும் முற்றத் தலைவியை நினைந்து கூறும் இப்பாடலின் மூலம் அக்காலக் கற்புநெறி வழுவாக் காதலைக் காட்டுகிறார் புலவர்.

முல்லை நிலக் காட்சிகளை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுவதுடன், தலைவன், தலைவி ஆகியோரின் கற்பு நெறிகளையும் விளக்கிக் கூறும் புலவரின் கவித்திறன் போற்றற்குரியதாம். இவ்வொரு பாடலைத் தவிர, வேறு பாடலேதும் இவர் பாடியதாகக் கிடைக்கவில்லை. வே.இரா.மா.

**பொது மக்கள் கருத்து**: பொது மக்கள் கருத்து' என்பது புதிய உலகின் செயற்பாட்டில் மிக இன்றியமையாத கூறாகிவிட்டது. பொருளாதாரம், அரசியல், சமூகம் பற்றிய நிறுவனங்களும் தத்தம் குறிக்கோள்களுக்காகப் பொது மக்கள் கருத்தை அறிய முற்படுகின்றன.

தனிமனிதனின் கருத்து என்பது தனிப்பட்ட அனுபவங்கள், நெறிகள், மனப்போக்கு, பங்கு கொள்ளும் குழுவின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து அமையும். பொது மக்கள் கருத்து (Public opinion) என்பது தனிமனிதர்களின் கருத்துக் கூட்டு மட்டுமன்று; அது தனிமனிதர் கருத்துகளுக்கும் அப்பாற்பட்ட சமூக உண்மையுமாகும். தனிமனிதர்களின் கருத்துகளினால் மட்டுமன்றி, சமுதாய மக்களின் இடைவினையாலும் (Interaction) உருவாவது பொது மக்கள் கருத்தாகும்.

பொது மக்கள் கருத்து பற்றி உலக நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் சில பொதுவான சிறப்புக் கூறுகள் பரவலாகக் காணப்பட்டன. முதலாவதாக, உலக அரசியல் புள்ளி விவரங்களையும், அரசியல் செய்திகளையும் பெரும்பாலான மக்கள் அறிந்து கொள்வதில்லை. உலக அளவில் விளையாட்டு வீரர்களையும், பொழுதுபோக்குத் துறை வல்லுநர்களையும் (இலக்கியம், திரைப்படம்) பற்றி மக்கள் ஓரளவு கவனம் கொண்டுள்ளார்கள்.

இரண்டாவதாக, சிறுபான்மையினரே பொதுக் காரியங்களில் ஈடுபாடு உடையவர்களாக இருக்கிறார்கள். எனவே, மக்களை 1) 'பொது மக்கள்', 2) 'கவனமுள்ள பொதுமக்கள்', (சில இன்றியமையாத செய்திகளை மட்டும் அறிந்தவர்கள்), 3) 'செய்திகள் அறிந்த பொதுமக்கள்' (செய்திகளை அறிந்து கொள்வதோடு அவற்றைப்பற்றி விவாதிக்கவும் செய்பவர்கள்) என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

மூன்றாவதாகத் தங்களை நேரடியாகப் பாதிக்காத செய்திகளில் மக்கள் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. அதாவது, தங்களுக்குப் பயன் அல்லது ஈடுபாடு இல்லாத செய்திகளை மக்கள் அறிந்து கொள்வதில்லை.

நான்காவதாக, கல்வியறிவு, மதச்சார்புடைமை, வசிக்கும் இடம், சமூக-பொருளாதார-பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றிற்கும் மக்களின் அரசியல் கருத்துகளுக்கும் வலுவான தொடர்புகள் உள்ளன. ஒருவரது சமூக-பொருளாதார நிலை, அவர் வாழும் இடம் (கிராமம் அல்லது நகரம்) அவரது மதம் பற்றிய செய்திகளிருந்தால் அவர் எப்படி, யாருக்கு வாக்களிப்பார் (Voting Behaviour) என்பதைக் கூடக் கணிக்கமுடியும் என்பது சில அமெரிக்க ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஐந்தாவதாக, நிலவும் பொதுச் சூழ்நிலைக்கேற்ப மக்கள் தங்கள் கருத்தை அமைத்துக் கொள்கிறார்கள். சான்றாக, ஒரு நாட்டு மக்கள் பிற நாட்டு மக்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்து, இரண்டு நாடுகளின் அரசாங்க உறவைப் பொறுத்தே பெரும்பாலும் அமையும்.

**பொது மக்கள் கருத்தின் உருவாக்கம்**: பெருந்திரளான மக்கள் சமுதாயத்தில் பொது மக்கள் கருத்து என்பது எப்படி உருவாகிறது? ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியோ, செய்தியோ பெருந்திரளான மக்களுள் சிலரது கவனத்தைக் கவர்கிறது. 'பொதுவான கவனத்தைக் கவருதல்' என்பது மட்டும் போதுமானதன்று. அந்நிகழ்ச்சியோ செய்தியோ முரண்பாடுகளுடையதாகவோ, உணர்ச்சிகளைத் தூண்டுவதாகவோ, தெளிவில்லாததாகவோ இருக்க வேண்டும். அதாவது, அது வரையறுக்கப்படாத நிகழ்ச்சியாக (Unstructured Event)இருக்க வேண்டும். ஆக, பெருந்திரளான மக்களுள் ஒரு சாரார் இத்தகைய மாறுபட்ட நிகழ்ச்சியினால் கவரப்படுதல் பொது மக்கள் கருத்து உருவாகும் தொடக்க நிலையாகும்.

போதுமான விவரங்கள் இல்லாத, தெளிவற்ற நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்ளச் சமுதாய வரைமுறைகளின் அடிப்படையில் மக்கள் பலவிதமான விளக்கங்களைத் தேடுவார்கள். சான்றாக, தொலைத் தொடர்பு சாதனங்களால் இன்றியமையாத ஒரு நிகழ்ச்சி வெளிப்படுத்தப்படுகிறது என்று வைத்துக் கொள்ளும் போது, அது வழக்கமான நிகழ்ச்சியாக இருந்தால் (பேருந்து விபத்து, சூறாவளிக் காற்று) வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். அத்தகைய நிகழ்ச்சிகள் பல முன்னரே நடந்திருப்பதால், மக்கள்

தம் தனிப்பட்ட கருத்துகளைப் பின்பற்றுவார்கள். வாகனங்களில் செல்வதின் இடர்களைப் பரிமாறிக் கொள்வார்கள்; சூறாவளியில் சிக்கியவர்களுக்காக இரக்கப்படுவார்கள். பிறகு அந்நிகழ்ச்சியை அவர்கள் மறந்துவிடக் கூடும். ஆனால், வேறுபட்ட பல புதிய கருத்துகளும், அணுகுமுறையும் தேவைப்படும். பெண்கள் கல்லூரியில் முதன் முறையாக வேலைநிறுத்தம் என்ற செய்தி வருமானால், அந்நிகழ்ச்சியை விளக்க மக்கள் பல சமூக வரையறைகளை நாடுவார்கள். பல திறப்பட்டவர்கள் வெவ்வேறு கருத்துகளை உடையவர்களாய் இருப்பதால் தெளிவான பொது மக்கள் கருத்து என்பது இருக்காது. அந்நிகழ்ச்சியைப் பற்றிய பலதிறப்பட்ட கண்ணோட்டங்களும் மக்களிடையே வளைய வரும். பழமைப் பற்றுடையவர்கள் (Conservatives) அதைக் கடுமையாக எதிர்ப்பார்கள்; பல கட்சிகளும் தம் கருத்துகளை வெளிப்படுத்தும். மாணவத்தலைவியர் தம் கூற்றை எடுத்துரைப்பர்; கல்லூரி நிருவாகமும் தனது பங்கை உரைக்கும். இவை எல்லாவற்றிற்கும் மேலாகப் பத்திரிக்கைகள் போன்ற தகவல் தொடர்புச் சாதனங்கள் செய்திகளை வெளியிடுவதோடு, சில கட்டங்களில் கருத்துகளையும் வெளிப்படுத்தும். ஒரு நிகழ்ச்சி பற்றிய பொது மக்கள் கருத்தைக் கேட்டறிந்து உருவாக்குவதில் தகவல் தொடர்புச் சாதனங்கள் பெரும் பங்கு வகிக்கும்.

விவாதங்கள், அறிவுரைகள், பரசுபரச் செய்தி மாற்றங்கள் ஆகியவற்றுடன் பத்திரிகைக் கட்டுரைக் கருத்துகளும், மக்கள் தலைவர்களின் கருத்துகளும், மக்களின் மனப்போக்கும் இணையும். அதனால் நிகழ்ச்சி பற்றி ஒரே கருத்துடையவர்கள் இணைவார்கள். தத்தம் கண்ணோட்டம் உடைய கருத்துக் கூட்டங்கள் உருவாகும். அவற்றுள் ஒரு சில கருத்துக் கூட்டங்கள் பலத்த ஆதரவைப் பெறும். முடிவு செய்யாத மக்கள் பல கருத்துகளுள் ஒன்றை ஒப்புக் கொள்வார்கள். அக்கருத்து வலுப்பெறும். மாறுபட்ட கருத்துகள் இருந்தாலும், இதற்குள் அவை எல்லாம் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கும். இவ்வாறு, நிகழ்ச்சியைப் பற்றிப் புதிதாக உருவான பொதுவான கருத்துகள் பலரால் பகிர்ந்துகொள்ளப்படும். இதுவே பொதுமக்கள் கருத்தாகும்.

ஒரே கண்ணோட்டத்தை உடையவர்களுக்கு, அவர்களின் கருத்துகள் புதிய வரையறைகளை ஏற்படுத்தும். சமூக நடத்தைக்கும், வாழ்வுக்கும் அவை வழிகாட்டிகளாகும். ஒருவகையில் பொதுமக்கள் கருத்தை 'முழுவதுமாக நிறுவப்படாத வரையறை' என்று சொல்லலாம்.

**பொது மக்கள் கருத்தின் பயன்கள்:** முழுமையாக உருவான பொதுமக்கள் கருத்து, சமூகக் கட்டுப்பாட்டிற்கு ஓர் இன்றியமையாத சாதனமாக இருக்கும். முன்னர் எதிர்கொள்ளாத நிகழ்ச்சிகளை ஏற்றுக்கொண்டு செயற்படவும், ஒரே கண்ணோட்டத்தை உடையவர்களிடையே ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் பொது மக்கள் கருத்துப் பயன்படுகிறது.

**பண்பாட்டு நெகிழ்வுத்திறன்:** முன்னர் வரையறுக்கப்படாத புதிய நிகழ்ச்சிகளை எதிர்கொள்ளும் அனுபவத்தைக் காலப்போக்கில் ஒரு சமுதாயம் பெற்றிருந்தால், அத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் ஏற்படும்போது அவற்றைக் கையாள வரைமுறைகளையும், அணுகுமுறைகளையும் அது பெற்றுவிடும். எனவே, அத்தகைய நிகழ்ச்சிகள் அன்றாட வாழ்வின் உறுப்புகளாக மாறிவிடும். பொதுமக்கள் கருத்தின் வரையறைகள் வலுப்பெற்று, பண்பாட்டின் ஒரு பகுதியாக மாறிவிடும். அவ்வகையில் பொதுமக்கள் கருத்து என்பது பண்பாட்டு நெகிழ்வுத்திறனுக்குத் (Cultural Adaptability) துணைபுரிகிறது. அதாவது, மாறுதல்களை, வேறுபட்ட நிகழ்ச்சிகளை எதிர்கொண்டு அதற்கு ஏற்றாற்போன்று இளகிப் பெரிய நிலை மாற்றங்களைத் தன்னுள் அடக்கிவிடுகிறது.

**சமூகக் கட்டுப்பாடு:** பொது மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படும் சமூகங்களில் பொதுமக்களின் கருத்து சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனமாக இரண்டு வழிகளில் செயற்படுகிறது. ஒன்று, தலைவர்களின் நடவடிக்கைகள் பொது மக்களின் கடுமையான விமரிசனத்திற்கு உட்பட்டு அத்தலைவர்களின் வீழ்ச்சியை உண்டாக்கலாம். இரண்டு, பொதுமக்கள் எதிர்ப்பிற்கு அஞ்சித்தலைவர்கள் தங்கள் திட்டங்களைப் பொருத்தமாக உருவாக்கலாம். தலைவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் தகவல் தொடர்புச் சாதனங்கள் பரவலாக உள்ள சமுதாயங்களில் அத்தகைய தலைவர்கள் மீது சமூகக்கட்டுப்பாடு ஏற்படுகிறது. அதே போல் எதிர்மறைப் பொது மக்கள் கருத்து (Negative public opinion) தனி மனிதர்களின் கட்டுப்பாட்டை நிருணயிக்கும் சாதனமாக உள்ளது. சட்ட முறையான தண்டனை இல்லாவிட்டாலும், சமுதாயத்தின் பகைக்கு ஆளாகக் கூடாது என்று பலர் தம் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வர். இது தொடர்ச்சியாக நிகழ்வதாகும். வெளிப்படையான பிறழ்வு நடத்தை சமுதாயத்தின் கவனத்தைக் கவர்ந்து, புதிய வரைமுறைகளை, கண்ணோட்டத்தை (அதாவது பொதுமக்கள் கருத்தை) உருவாக்கும். பிறழ்வு நடத்தை தொடர்ந்தால் அது வழக்கமான நிகழ்வாகி, முத்திரை பொறிக்கப்பட்டு விடும் (Labelling). மீண்டும், ஒரு புதிய பிறழ்வு நடத்தை கவனத்தைக் கவரக்கூடும். சமுதாய மாற்றங்களுக்கேற்ப வரையறைகளும் மாறிவரும்

ஆக, பிறழ்விலேயே ஈடுபட்டிருக்கும் சிறுபான்மை யினரைத் தவிர மற்றவர்களுக்குப் பொதுமக்கள் கருத்து நடவடிக்கையை வரையறுக்கும் சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனமாக உள்ளது.

**சமூக ஒருமைப்பாடு**: பொதுமக்கள் கருத்து ஒன்றியதாகவும், வலுவானதாகவும் இருக்குமானால், மக்களைப் பிணைக்கும் திறனை அது பெறும். புதிய உலகில் பல்கிக் கிடக்கும் வேறுபாடுகளில் மக்களை, ஒருமித்த குறிக்கோள்களை நோக்கிச் செலுத்தப் பொதுமக்கள் கருத்து பயன்படுத்தப்படுகிறது. சான்றாக, போர்க்காலத்தில், நாட்டு மக்களின் ஆதரவைத் திரட்டத்தகவல்தொடர்புச் சாதனங்கள் வாயிலாக அரசாங்கம் பொதுமக்கள் கருத்தை உருவாக்கும். மக்களின் உணர்ச்சிகளைத் தொட்டு, பகைவர் மீது வெறுப்பை ஏற்படுத்தி, ஆளும் அரசின் நிலையை நியாயப்படுத்தினால் மக்களது ஆதரவு கிடைக்கும். இதே போலப் பல சமயங்களில் அரசினுடைய நடவடிக்கைகளை நியாயப்படுத்த, கொள்கைப்பரப்பல் மூலம் பொதுமக்கள் கருத்துத் திரட்டப்படும். இவ்வாறு திரட்டப்படும் பொதுமக்கள் கருத்து, சமுதாயத்தில் சில நிகழ்ச்சிகளை நியாயப் படுத்தவும் வேறு சிலவற்றிற்கு ஆதரவாக மக்களைப் பிணைக்கவும் பயன்படுகிறது. பி.வி.

## பொது மக்கள் தொடர்பு

**பொது மக்கள் தொடர்பு** என்பது அதிகாரிகள் வகுப்புக்கும், குடிமக்களுக்கும் இடையே ஏற்படும் தொடர்புகளும், அவற்றால் உண்டாகும் தாக்கங்களும், நோக்கங்களும் சேர்ந்த தொகுப்பாகும். தொழில் துறையிலும், அரசாங்கத் துறையிலும் மக்கள் என்னும் காரணியைப் பற்றி ஆய்வு செய்தலும் பொது மக்கள் தொடர்பு (Public Relations) எனப்படும்.

குடியாட்சி அரசாங்க அமைப்பிலே மக்கள் தலைவரெனக் கொள்ளப்படுதலினால், அவ்வமைப்பில் மக்களுக்குத் தக்க மதிப்பும், கவனமும் தரும் வகையில் ஆட்சியினர் நடந்துகொள்ளுதல் வேண்டும். அரசாங்கம் தன் செயல்களைப் பற்றியும், கொள்கைகளைப் பற்றியும் மக்கள் என்ன எண்ணுகிறார்களென்றும் எது செய்யப்படுதலை மக்கள்விரும்புகின்றனரென்றும் அறிந்து செயற்படுதலே குடியாட்சி முறையின் சிறப்பியல்பாகும். எனவே, உண்மை நிலவரத்தைப் பற்றி அரசாங்கம் விளம்பரம் செய்தலும் (Publicity) இதிலடங்கும்.

**பொதுமக்கள் தொடர்பு காணப்படும் வழிகள்**: பொதுமக்கள் என்பது ஒரே மக்கள் கூட்டத்தாரைக் குறிப்பிடுவதன்று. பொதுமக்கள் பலவடிவங்களிலுள்ள குழுக்களாகக் காணப்படுகின்றனர். ஒவ்வொரு குழுவுடனும் ஆட்சித்துறை அதிகாரிகள் தொடர்பு கொள்ளுகின்றனர். ஆட்சியாளர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தோடு நேரடியாக அல்லாமல் மறைமுகமாகத் தொடர்பு கொள்ளுகின்றனர். பாராளுமன்றக் குடியாட்சி அமைப்பிலே ஆட்சித்துறை அதிகாரிகள் சட்டமன்றத்தின் மதிப்பீட்டுக்குழு (Estimates Committee), பொதுக் கணக்குக் குழு(Public Accconts Committee), செலவு ஒதுக்கீட்டுக் குழு(Appropriation Committee), அயல்நாட்டு உறவுகள் குழு (Foreign Relations Committee) முதலிய குழுக்களின் முன்வந்து, குழு உறுப்பினருக்கு மதிப்பளித்து, தத்தம் ஆட்சித்துறை பற்றிய செய்திகளை அவர்கள் கேட்கும்போது, அவர்களிடம் முழுச் செய்திகளையும் உள்ளவாறு தெரிவிக்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யும் விசாரணைகள், முறையீடுகள், விடுக்கும் வேண்டுகோள்கள் ஆகியவற்றை அதிகாரிகள் கேட்டு,இயன்ற வரை விரைவாகக் கவனித்து ஆவன செய்தல் வேண்டும். உடனே செய்ய இயலாததாயினும் அதிகாரிகள் விசாரணையின் கேள்வி கிடைத்துள்ளதென ஒப்புதலளித்துக் குறையை நீக்குதலும், விடுக்கப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றுதற்குச் சட்டம் இடம் தரவில்லையாயின் அதனைத் தெளிவாகவும், வணக்க இணக்கமாகவும் அதிகாரி உறுப்பினருக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

ஆட்சித்துறை தன் செயல்களை மக்களுக்கு நல்லமுறையில் எடுத்துக் கூறுதற்குச் செய்தியாளர்களுடன் (Press)தொடர்பு கொள்ளுதல் இன்றியமையாதது. தவிரவும் செய்தியாளர்களுடைய நன்மதிப்பையும் அரசாங்கம் பெறுதற்கு இத்தொடர்பு இருத்தல் வேண்டும். செய்தியாளர் தம் ஏடுகளில் அரசாங்கச் செய்திகளைப் போதிய இடம் தந்து வெளியிடுதல், அவற்றை நேர்மையான முறையில் விளக்குதல், தக்க காலத்துக்கு முன்னர்ச் செய்திகளை வெளியிடாதிருத்தல், அரசாங்கச் செய்திகளை மக்களுக்குப் பிடிக்காத வகையில் வெளியிடாதிருத்தல் ஆகிய செயல்களை மேற்கொள்ள வேண்டும்.

மற்றும், பொது மக்களுடைய விருப்பங்களை ஆட்சியாளர்கள் அறிந்து கொள்ளுதற்குச் செய்தித்தாள்களில் வரும் பதிப்பாசிரியருடைய தலையங்கங்கள், செய்தி விளக்கங்கள்,பொது மக்களுடைய கடிதங்கள், செய்திக் குறிப்புகள் முதலியவை உதவுகின்றன. குடிமக்களுள் எவரும் அரசாங்கக் கொள்கையைப் பற்றித் தம் கருத்தை ஓர் அஞ்சலட்டையில் அதிகாரிக்கு எழுதித் தெரிவிக்கலாம். எக் கொள்கையையும் பற்றிப் பொது மக்களுள் ஒரு சிலருடைய கருத்தை ஒரு வாக்கெடுப்பு நடத்தி (Gallup Poll) அறியலாம். ஆட்சித்

துறையில் பணி செய்பவர்களிடமே அரசாங்கம் கருத்துக் கேட்கலாம். ஆட்சியாளர்களே மாறுவேடத்தில் மக்களிடையே உலாவி அவர்களுடைய கருத்தை அறியலாம்.

**பொது மக்களுக்கு ஆட்சியாளர் ஆலோசனை வழங்குதல்**: பொது மக்களுடைய பாதுகாப்புக்கும், சுகாதாரத்துக்கும், வளர்ச்சிக்கும், உகந்த துறைகளிலெல்லாம் அரசாங்கம் அவர்களுக்கு வழிகாட்டி, ஆலோசனை வழங்குதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, பொதுமக்களுக்கு நோய்த் தடுப்புப் பற்றியும், சுகாதாரத்தைப் பற்றியும், வேளாண்மையிலும் தொழிலிலும் ஈடுபட்டோருக்குத் திருந்திய உற்பத்தி முறைகளைப் பற்றியும், சிறந்த சந்தை வசதிகளைப் பற்றியும் அரசாங்கம் ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும். ஆனால், ஆலோசனை கூறுவதில் பொய் கலவாமலும், அரசியல் ஆதிக்க நோக்கம் இல்லாமலும் ஆட்சியதிகாரிகள் பார்த்துக் கொள்ளுதல்வேண்டும்.

**தொடர்புக்குரிய சில வழிகள்**: 1) தனி ஆட்களுள் எவரும் அரசாங்க அதிகாரிகளை அலுவலகத்தில் நேரில் அணுகிச் செய்திகளை அறியலாம். இதில் அவர் எவரை அணுகுதல் வேண்டுமென்றறியாமல், எவரையேனும் அணுகும்போது, அவ்வதிகாரி வேறொருவரைப் பார்க்குமாறும், அவர் மற்றொருவரிடம் போகுமாறும் கூறித் தள்ளிவிடுகிறார். இதனைத் தவிர்ப்பதற்காகப் பொது அலுவலகங்களில் விசாரணை நிலையம் ஏற்படுத்துதல் பொது மக்கள் தொடர்புக்கு ஏற்றதாகும். வெளியார் அதிகாரிகளைக் காணுதற்குத் தக்க நாளும், காலமும் முன்னதாகத் திட்டம் செய்தலும் ஒரு வகை. இது எவரும் நெடும்பொழுது காத்திருத்தலைத் தடுக்க உதவும். பார்வையாளர்களுக்குத் தக்க இருக்கை வசதிகளோடு கூடிய அறை இருத்தலும் வேண்டும். 2) இயன்ற வரை அதிகாரிகள் மக்களுடைய இயல்பான விருப்பங்களுக்கு உகந்த ஆட்சிச் செயல் நெறியைப் பின்பற்றுதல் வேண்டும். பொது மக்களுடைய பாதுகாப்பு, சுகாதாரம், வசதி முதலியவற்றுக்காக அதிகாரிகள் மக்களுடைய சில இயல்பான செயல் முறைகளைத் தடுத்தல் சரியே. 3) கடிதப் போக்குவரத்தும் அதிகாரிகள் – மக்கள் தொடர்பில் உள்ள ஒரு வழி ஆகும். கடிதங்களில் நீண்ட வாக்கியங்கள் இல்லாமல், சிறிய வாக்கியங்கள் இருத்தல் நல்லது. அது நேரே, எளிய நடையில், தெளிவாக இருத்தல் வேண்டும். கடிதங்கள் இவ்வகையாகவும் பெறுபவருக்கு மதிப்பளிப்பனவாகவும் எழுதப்பட்டுள்ளனவா என்று ஒவ்வோர் அலுவலகத்திலும் அதிகாரி ஒருவர் ஆய்தல் வேண்டும். 4) பொது மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்து அதிகாரிகள் தீர்க்க முயற்சி செய்தலும் ஒரு வகைத் தொடர்பு ஆகும். குறைகளை அலுவலகத்தில் ஒரு பெட்டியில் சேகரித்து, ஆய்வு செய்து தீர்த்தலும், பொது மக்களே அலுவலகத்திலுள்ள ஒரு பதிவேட்டில் குறையை எழுதித் தீர்வு பெறுதலும் இக்காலத்தில் பின்பற்றப்படுகின்றன. குறைகளை, கிடைத்த 24 மணிக்குள் அதிகாரிகள் ஆய்தலும், எடுத்த நடவடிக்கையினை முறையிட்டோருக்கு அறிவித்தலும் வேண்டும். 5. அலுவலகக் கட்டடங்களும், அறைகளும், துப்புரவாகவும், அவற்றிலுள்ள பொருட்களும், இருக்கைகளும், பிறபொருட்களும் ஒழுங்காக அமைக்கப்பட்டிருத்தலும் வேண்டும். எவரிடத்தும் அதிகாரிகள் முரட்டுத்தனமாகப் பேசுதலோ பொது மக்களிடமிருந்து தங்களை வேறானவரென்று எண்ணி ஒதுங்குதலோ கூடாது. வெளியாருடைய பேச்சு சீற்றமூட்டினாலும், அதிகாரி பொறுமையுடனும், உறுதியுடனும் இருத்தல் வேண்டும். அலுவலாளருடைய நடத்தையே அவருடைய துறையின் நற்பெயருக்குக் காரணமாதலால், அவர்கள் அதன் நற்பெயரை அழிக்கக்கூடிய தீய செயல்களிலீடுபடாதவாறு தற்காத்தும், பேச்சில் மதிப்பளித்தும், சச்சரவுகளிலீடுபடாமலும் இருத்தல் வேண்டும்.

**விளம்பரம் அல்லது அறிக்கை செய்தல்**: பொது மக்கள் தொடர்புக்காக அரசாங்கம் விளம்பரப்பிரிவு (Publicity Department), செய்தி அலுவலகம் (Information Office) முதலியவற்றை அமைத்துள்ளது. இந்திய அரசாங்கத்தில் செய்தி, வானொலி அமைச்சகமே மக்களுக்கு அறிக்கை செய்யும் முழுப்பொறுப்பையும் ஏற்றுள்ளது. அது தனது பணியைச் செய்தற்காக, அ) அனைத்திந்திய வானொலி நிறுவனம், ஆ) திரைப்படத்துறை (Film Division), இ) நடுவண் திரைப்படத் தணிக்கையாளர் குழு (Central Board of the Film Censors), ஈ) விளம்பரப் பிரிவு (Advertising Branch), உ) அரசாங்கச் செயல்களையும் கொள்கைகளையும் சரியாகச் விளக்கிச் செய்தித் தாள்களின் வழியாகப் பொதுமக்களுக்கு அறிக்கை செய்தற்கு நாளேடுகள் செய்தித்துறை (Press Information Bureau) என்ற நிறுவனம், ஊ) மேற்கோள் ஆய்வுத்துறை (Reference and Research Division), எ) வெளியீட்டுத்துறை (Publications Division) முதலிய நிறுவனங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. பொருட்களைப் பார்த்தும், அவை பற்றிக் கேட்டும் மக்கள் அறிவு பெறுவராகையால், மக்கள்-அதிகாரிகள் தொடர்புக்கு இவ்வழிகள் பயன்படுகின்றன.

பொதுமக்களுடன் அரசாங்கம் தொடர்பு கொள்ளுதற்கு இவ்வழிகளையெல்லாம் பின்பற்றும்

போது, அது தனிப்பட்ட அதிகாரிகளைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும் மிகைப்பட விளம்பரம் செய்தற்காகவே விளம்பர முறைகளைப் பயன்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டுக்கும் ஆளாகிறது. குடியாட்சி அரசாங்க முறை கட்சிஅமைப்பினடிப்படையில் நடைபெறுவதாகையால், அரசாங்கமும் இத்தகைய குற்றச்சாட்டுக்கு இடமளிக்காதவாறு, தான் செய்யும் பணிகளுக்கே முக்கியத்துவமளித்து, அவற்றை மக்களுக்கு எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

பா.சு.

**துணை நூல்கள்:**


**Dimock, M.E.**, Public Administration, New york, 1961.

**Graves, W.B.**, Public Administration In a Democratic Society, Boston, 1950.


**பொது மன்னிப்பு**: பொது மன்னிப்பு என்பது குற்றவாளிகளுக்கு அரசினால் அருட்கொடையாக வழங்கப்படுகின்ற நிபந்தனையற்ற விடுதலையைக் குறிக்கும். பொது மன்னிப்பு என்பது ஒரு தனி மனிதனுக்கு வழங்கப்படுகின்ற ஒன்றன்று. மாறாக, குற்றம் செய்த ஒரு பிரிவினருக்கு (Class) அளிக்கப்படுவதாகும். இங்கிலாந்தில் இவ்வகைப் பொது மன்னிப்பு வழங்குகின்ற அதிகாரம் அரசன் அல்லது அரசியாருக்கு உண்டு.

ஒரு குற்றவியல் வழக்கு, விசாரணைக்கு வருவதற்கு முன்பே குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குப் பொது மன்னிப்புத் தரப்படலாம். பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற உரிமை மீறல் குற்றங்களைச் செய்தவர்கள்கூட அம்மன்றங்கள் தரும் பொது மன்னிப்பின் வாயிலாகக் குற்றக் கடப்பாட்டிலிருந்து விடுதலை பெறலாம். அரசியற் கைதிகளுக்குப் பொது மன்னிப்புத் தருவது என்பது இக்காலத்தில் அதிகமாகக் காணுகின்ற ஒன்றாகும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 72-ஆம் பிரிவின்படி, குடியரசுத் தலைவர் பொது மன்னிப்புத் தருகின்ற அதிகாரத்தைப் பெறுகிறார். இச் சட்டத்தின் 161 - ஆம் பிரிவின்படி மாநில ஆளுநர் தனது ஆள்வரை எல்லைக்குள் நடந்த குற்றங்களுக்குப் பொது மன்னிப்புத் தருகிறார்.

மேற்கண்ட இரு பிரிவுகளிலும் 'மன்னிப்பு' (Pardon) என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் இந்திய உச்சநீதிமன்றத் தீர்ப்புகளின்படி இந்தச் சொல் 'பொது மன்னிப்பு' (Amnesty) என்ற பொருளையும் கொண்டு விளங்குகிறது. ம.கா.

**பொதுவுடைமை** என்பது உடைமை முழுவதும் சமூகத்தினுடையதாக ஆக்கப்பட்டு ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான பொருளைப் பெற்றுக்கொள்ளுதற்கும், அவர் தமது திறமைக்கு ஏற்ற அளவுக்கு வேலைசெய்வதற்கும் வாய்ப்புள்ள சமூக அமைப்பைக் குறிப்பிடுவதாகும். பொதுவுடைமை (Communism) என்பது, மேற்கூறிய சமூகத்தை அமைப்பதற்கு முதலாளித்துவ முறையை ஒழித்துவிட்டுத் தொழிலாளருடைய வல்லாட்சியினை நிறுவும் நோக்கத்துடன் நடத்தப்படுகிற ஒரு புரட்சி இயக்கத்தையும் (Revolutionary Movement) குறிப்பிடுகிறது.

**கோட்பாட்டின் தோற்றமும், கூறுகளும்**: பொதுவுடைமை என்பதைக் சமநிலைக் கோட்பாட்டின் ஒரு புரட்சி வகையாகவே (Revolutionary Type of Socialism) அரசியலிற் குறிப்பிடுவர். அனைத்து நிலமும், தொழில்களும் கூட்டாக அரசாங்கத்தால் தன் சொந்த சொத்தாக ஏற்றுக் கொள்ளப்படும். இதுவே, சமநிலைக் கோட்பாடு ஆகும். தனியார் முதலாளித்துவக் கோட்பாட்டிலே, சமமாகப் பொருளாதாரம் பகிர்ந்து கொள்ளப்படாமையால், ஏற்றத்தாழ்வுகளும், அதனால் வறுமையும், ஒத்த வாய்ப்பின்மையும் தோன்றின. பணிப் பாதுகாப்பும் அதில் இல்லை. மேலும், முதலாளித்துவ முறையில் உழைப்பாளர் ஓர் அடிமை என்ற நிலைக்குத் தாழ்த்தப்படுகிறார். இத்தகைய தீங்குகள் நிறைந்த முதலாளித்துவ சமூக, பொருளாதார அமைப்புக்கு (Individualism) எதிர்ப்பாகத் தோன்றிய, மேற்கூறிய சமநிலைக் கொள்கையின் ஒரு பிரிவே பொதுவுடைமை ஆகும்.

பொதுவுடைமைக் கொள்கையினை இக்கால அறிவியல் சமநிலைக் கொள்லகயாக வகுத்தவர் காரல் மார்க்சு (Karl Marx, கி.பி 1818-1883) என்ற செருமனிய யூத சிந்தனையாளராவர். (காண்க: காரல் மார்க்சு). அவர் எழுதிய பொதுவுடைமைத் திட்டம் (Communist Manifesto-1848) என்ற நூலிலும், அவரைப் பின்பற்றி உருசியப் புரட்சித் தலைவர் விளாடிமிர் இலிச்சு இலெனின் (கி.பி. 1870 - 1924) என்பார் எழுதிய 'அரசும் புரட்சியும்' (The State and the Revolution 1920) என்ற நூலிலும் பொதுவுடைமைக் கொள்கையின் கூறுகள் காணப்படுகின்றன. அவற்றுட்சில: (அ) மனித வரலாறே பொருட்களை உற்பத்தி செய்யும் முறையினால்தான் உருவாக்கப்படுகிறது. உழைப்பாளர்களே பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். (ஆ) மூலதன வசதி படைத்த தனியார்கள் (முதலாளிகள்) பொருளுற்பத்திமுறை முழுவதையும் தாங்களே கட்டுப்படுத்துகிற காரணத்தால், பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்படுகிற கூடுதல் மதிப்பை

(Surplus value), தொழிலாளர்க்குக் கொடுக்காமல் தாங்கள் எடுத்துக் கொள்ளுகின்றனர். (இ) தொழிலாளர் இவ்வாறு சுரண்டப்படுவதனால், அளவிற்பெரிய தொழிலாளர் வருக்கத்துக்கும், அளவிற்சிறிய முதலாளி வருக்கத்துக்குமிடையே பகைதோன்றி, வருக்கப் போராட்டம் (Class war) தவிர்க்க இயலாததாக ஆகிறது. (ஈ) தொழிலாளர் சமநிலைப் புரட்சி செய்கின்றனர் (Socialist Revolution). (உ) சமநிலைப் புரட்சியில் தொழிலாளர் வெற்றி பெற்று, முதலாளிகளிடமிருந்து உற்பத்திக் காரணிகளைப் பறித்து, அவற்றைச் சமூகத்தின் உடைமையாக ஆக்குதற்காகத் தொழிலாளர் வருக்கத்தின் வல்லாட்சியை நிறுவுகின்றனர். (ஊ) தொழிலாளரின் சருவாதிகாரி எல்லா உற்பத்திக் கூறுகளையும் சமூக உடைமையாக ஆக்கி, ஒவ்வொருவருக்கும் அவரவருடைய ஆற்றலுக்கேற்ப உழைத்துப் பொருளை உற்பத்தி செய்து அரசுக்கு அளிக்குமாறு வேலை வாங்கியும், ஒவ்வொருவருடைய தேவைக்கு ஏற்பப் பொருட்களைப் பிரித்து வழங்கியும் ஆட்சி செய்கிறார். (எ) இவ்வாறு சமூக-பொருளாதார அமைப்பு சமநிலைக் கொள்கைக்கு ஏற்ப மாற்றப்பட்டபின்பு, அரசு என்ற அமைப்புக்குத் தேவை இல்லாமற் போகவே அது மறைந்துவிடும்.

**கொள்கை செயற்படுதல்:** பொதுவுடைமைக் கொள்கையை ஏற்ற இலெனினும், அவருடைய ஆதரவாளர்களும் பெரும்பாலானோருடைய ஆதரவு பெற்ற போல்சுவிக்குக் கட்சியை (Bolshevik Party) அமைத்து, 1917, அக்டோபர் - நவம்பரில் புரட்சி செய்து உருசியாவில் ஆட்சியைக் கைப்பற்றி, அங்கு வெளிநாட்டவர் போட்டிருந்த முதலீடுகளைத் தள்ளுபடி செய்து, நிலங்களையும் தொழில்களையும் பொதுவுடைமையாக்கி, மாற்றுக் கட்சிகளை அழித்து, இரகசியக் காவல் துறை உதவியுடனும், ஒற்றர்படை உதவியுடனும் தம் அரசாங்கத்தின் எதிரிகளை எல்லாம் ஒழித்தனர். தொழிலாளர் பாராளுமன்றமே (Soviet) நாட்டின் உயர் சட்டமன்றமாக, நாட்டின் ஒரே அரசியற் கட்சியான பொதுவுடைமைக் கட்சியின் கட்டுப்பாட்டில் செயற்பட்டது. அவர் செயலில் கொண்டுவந்த முழுமையான மார்க்சியப் பொதுவுடைமைக் கொள்கையின் விளைவாகப் பொருளுற்பத்தியும், வாணிகமும் சீராக நடைபெறவில்லை. எனவே, அவர் இக் கொள்கையை மாற்றி, ஓரளவு தனியார் சுதந்திரப் பொருளாதார முறையை ஏற்று, ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றினார். அவருக்குப் பின்னர் 1924 முதல் 1953 வரை உருசியாவின் வலுவான வல்லாட்சியாளராக ஆட்சி செய்த இசுடாலின் (Stalin) திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்து, உருசியப் பொருளாதார வலிமையை ஏற்படுத்தி, இராணுவ வலிமிக்க நாடாக அதனை ஆக்கி, அதற்கு இரண்டாம் உலகப் போரில் வெற்றி கிடைக்கச் செய்து, பொதுவுடைமைக் கொள்கைக்கு உலகமெங்கும் மதிப்பு ஏற்படச் செய்தார். எனினும், ஆட்சி வல்லாட்சியாகவே இருந்தது. அவருக்குப் பின்னர், இப்போது, கட்சிக்கு வெளியேயும் மக்கள் ஓரளவில் அரசாங்கத்தைக் குறைகூறுவதற்குச் சுதந்திரம் கொண்டு வரப்பட்டுள்ளது.

**மதிப்பீடு**: தனியார் முதலாளித்துவ முறையிலுள்ள பெருங்கேடுகளான பெருமளவு பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், தொழிலாளரின் அவல நிலையையும் எதிர்த்து ஒடுக்கிய அளவுக்கு, சமநிலைக் கொள்கையும், பொதுவுடைமை ஆட்சியும் பாராட்டத்தக்க பணி செய்தவை ஆகும். உருசியாவைப் பின்பற்றிச் சீனாவில் பொதுவுடைமை அரசாங்கம் தோன்றிற்று. உலக நாடுகள் பலவற்றிலும் பெருந்தொழில்களை அரசாங்க உடைமை ஆக்குதல், வேலை வாய்ப்பைப் பெருக்குதல், உயர் ஊதியம், வீட்டுவசதி, கல்வி வசதி, மருத்துவ வசதி முதலியன அளித்தல் ஆகியவற்றைக் கொள்கைகளாக ஏற்று அரசாங்கங்கள் செயற்படுகின்றன. ஆயினும், வரலாறு என்பது உற்பத்திப் பகிர்வு என்ற பொருளாதாரக் காரணிகளால் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளதென்ற மார்க்சின் ஊகமும், தொழிலாளர் - முதலாளி ஆகியோர் வருக்கப் போர் தோன்றுமென்ற ஊகமும், மனித உழைப்பு ஒன்றுதான் பொருளுற்பத்திக்கான காரணி என்ற கருத்தும், வருக்கப் போராட்டத்தினாலும் தொழிலாளர் சருவாதிகாரத்தினாலும் தான் தனியார் முதலாளித்துவத்தின் தீங்குகளை அகற்ற இயலுமென்ற கருத்தும், சமநிலைச் சமூகம் ஏற்பட்ட பின்னர் அரசு மறைந்து விடுமென்ற கருத்தும் ஆய்வுக்குரியன. ஓரளவு தனியார் சுதந்திர உரிமையை ஆதாரமாகக்கொண்ட குடியாட்சி முறையிலும் சமநிலைக் கொள்கையின் நற்பயன்களைப் பெறுதல் இயலுமென்பதை மேலைக் குடியாட்சி நாடுகளின் இக்கால வரலாறு எடுத்துக் காட்டுகிறது. பா.கு.

**துணை நூல்கள்:**

**Joad**, C.E.M., Introduction to Modern Political Theory, Oxford, 1924.

**Oakeshott**, M., The Social and Political Doctrines of Contemporary Europe, Cambridge, 1939.

*பொதுவுடைமைக் கட்சி*: பொதுவுடைமைக் கட்சியின் தோற்றத்திற்குக் காரல் மார்க்சு, ஏங்கல்சு ஆகியோரின் கருத்துகள் அடிப்படைக் காரணங்களாகும். காரல்மார்க்சின் சிந்தனைகளும் கருத்துகளும் முதலாளித்துவ அமைப்புகளையும், தத்துவங்

களையும் மாற்றத்திற் குள்ளாக்கியதோடு உழைப்பின் உயர்வையும், உழைப்பாளர்களின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தின. ஏழ்மையும் செல்வப் பெருக்கும் கொண்ட இன்றைய அமைப்பு முறைகள் மாற்றப்படாவிட்டால் அவை தொடரும் என மார்க்சு கருதினார். 'ஒவ்வொருவரும் தம் திறமைக்கேற்ப உழைக்க வேண்டும்; ஒவ்வொருவரும் தம் தேவையை நிறைவேற்றப் போதுமான பொருள்களைப் பெறவேண்டும் என்பது பொது உடைமையாளர்களின் (Communists) நோக்காகும்.

செல்வர்களும், பணம் படைத்தோரும், ஏழ்மையானவர்களையும், அவர்களின் உழைப்பையும் சுரண்டி வாழுகின்றனர். தனியார் உடைமை என்பது திருடுதலுக்குச் சமமானது; எந்தப் புனிதத் தன்மையும் உடையதன்று. எனவே, தனியார் சொத்துகள் யாவும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும். உலகம் எங்குமுள்ள உழைக்கும் வருக்கத்தினரின் சிக்கல்கள் ஒரே தன்மையுடையதால், உலகம் அவர்களுடையது; அவர்களுக்குத் தாய்நாடு என்றோ, தந்தையார் நாடு என்றோ ஒன்று கிடையாது. தங்களது இடர்கள் அகல அவர்கள் ஒன்றுபட வேண்டும். எனவே, காரல்மார்க்சு 'உலகெங்குமுள்ள உழைப்பாளர்கள் யாவரும் ஒன்று சேரவேண்டும்; அவர்கள் சங்கிலிகளைத் தவிர எதையும் இழக்க வேண்டியதில்லை' எனக் கூறினார்.

மார்க்சின் கருத்துப்படி இலாபம் என்பது உழைப்பாளருக்குக் கொடுக்கப்படும் ஊதியத்திற்கும், அவர்களிடமிருந்து சுரண்டப்படும் உழைப்பிற்கும் இடையே உள்ள வித்தியாசம் ஆகும். ஒவ்வொரு முதலாளியும் உழைப்பாளருக்குக் குறைவாக அளிப்புச் செய்துவிட்டு மீந்ததை இலாபம் என்று தனக்காக வைத்துக்கொள்கிறான். பாராளுமன்ற நிறுவனங்களும், குடியாட்சி அமைப்பு முறைகளும் முதலாளித்துவத்தையே ஆதரிக்கின்றன. உழைப்பாளர்கள் குடியாட்சி முறைகளால் அதிகாரத்திற்கு வரலாம் என எண்ண இயலாது. எனவே, பொதுவுடைமைக் கொள்கை தொழிலாளர் இனச்சருவாதிகாரத்தை வலியுறுத்தியது. பொது உடைமைக்கட்சி, உற்பத்திச் சாதனங்களைச் சமூகத்தின் பொதுவுடைமையாக்கவோ வருமானத்தைச் சமூக மக்களிடையே நியாயமான முறையில் பங்கீடு செய்யவோ முற்படும் சமூக அமைப்பை வலியுறுத்தும் கட்சியாகும்.

பொதுவுடைமைக் கருத்துகளின் விளைவாக முதலாளித்துவ அமைப்புகளுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. உழைக்கும் வருக்கத்தினர் படைமானிய, முதலாளித்துவ அமைப்புகளுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். உலகம் தழுவிய பொதுவுடைமைக் கருத்துகள் மூலம் தொழிலாளர்கள் தங்களது முக்கியத்துவத்தை அறிந்து கொண்டதோடு, அவர்களின் உழைப்பு இல்லையேல் பெரும் தொழிற்சாலைகள் பொருளற்றதாகிவிடும் என்பதையும் உணர்ந்து கொண்டனர். மூலதனமும் உழைப்பும் உற்பத்திக்கு ஒன்றுபோல் துணைபுரிவனவாகும். உழைப்பின் சருவதேச முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பொதுவுடைமையாளர்கள் உழைப்பாளர்களின் சிக்கல்கள் உலகெங்கும் ஒரு தன்மைத்தாக உள்ளன; எனவே, தேசிய எல்லைகள் செயற்கையானவையெனக் கருதுகின்றனர்.

சோவியத்துக் குடியரசில் அரசுக் கொள்கைகளை வகுத்துச் செயற்படுத்துவதில் மையக்குழுவின் 'பிரசீடியம்' எனப்படும் பொதுவுடைமைக் கட்சிதான் செல்வாக்குடன் திகழுகின்றது. அந்நாட்டு அரசியலமைப்பு விதிகளின்படி பொது உடைமைக் கட்சி மட்டுமே அங்குச் செயலாற்றமுடியும். 'பொதுவுடைமைக்கட்சி பாட்டாளி மக்களின் சமதரும முறையினை வலுப்படுத்தி, வளர்ச்சியுறுவதற்காக நடத்தப்பெறும் போராட்டத்தில் முன்னணியில் நிற்கும்'. மார்க்சிய லெனினியக் கருத்துகளைப் பற்றுக்கோடாகக்கொண்டு சோவியத்து நாட்டுப் பொதுவுடைமைக் கட்சி மிகச் சிறப்பாகப் பணிபுரிகிறது. அங்குக் கட்சியை அரசாங்கத்தினின்றும் வேறுபடுத்த இயலாது. அரசிற்குள் இன்னொரு அரசாகத் திகழும் பொதுவுடைமைக் கட்சிதான் நாட்டிற்குத் தேவையான முக்கிய தீர்ப்புகளை வழங்குகிறது. முடிவுகள் அனைத்தும் பாராளுமன்றத்தில் மக்கள் பேராளர்களால் எடுக்கப் பெறாமல் கட்சி ஆட்சிக்குழுவால் எடுக்கப்படுகின்றன.

கட்சிக் கட்டுப்பாடு சோவியத்து நாட்டில் கடுமையான அளவில் பின்பற்றப்படுகிறது. பாட்டாளி மக்களின் வல்லாட்சி என்பது உண்மையிலேயே பொதுவுடைமைக் கட்சியின் வல்லாட்சியேயாகும். உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளில் கடைப்பிடிக்க வேண்டிய பொதுக் கொள்கையைக் கட்சியே வகுக்கிறது.

'உயர்குழு' (Politburo) என்று அறியப்பட்ட அந்த உயர்குழு சோவியத்து நாட்டின் பொதுக் கொள்கைகளை வரையறுக்கும் பணியையும், நாட்டை நடத்திச் செல்லும் பொறுப்பினையும் நன்கு நிறைவேற்றுகிறது. நடைமுறையில் ஆட்சிக்குழு பொதுவுடைமைக் கட்சியை இயக்கும் உயர் மையக்குழுவாக உள்ளது. பணியாத உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள்மீது பொது உடைமைக் கட்சியின் கட்டுப்பாட்டுக் குழு ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும்.

சோவியத்துப் பொதுவுடைமைக்கட்சியில் மைய அதிகாரக் குவிப்பு மிகுதியாக உள்ளது. நாடெங்கும் அடித்தளத்தில் கட்சி நுண்ணியங்கள் உள்ளன. ஆலைகளிலும், தொழிற்கூடங்களிலும், பண்ணைகளிலும்,

உற்பத்தி நிலையங்களிலும், கடற்படை, தரைப்படை போன்றவற்றிலும் கட்சி நுண்ணியங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இம்முதல் கட்டத்தையடுத்து நகர அல்லது மாவட்டக் கட்சிக்குழுக்கள் உள்ளன. கட்சி நுண்ணியங்களின் அலுவல்களை மேற்பார்வையிடும் அதிகார வரம்பினை அவை பெற்றுள்ளன. இவற்றிற்கு மேல்நிலையில் வட்டாரக் கட்சிக் குழுக்கள் விளங்குகின்றன. அவற்றிற்கும் அடுத்த உயர்மட்டத்தில் பகுதிகள், நிலைப்பிரிவுகள், குடியரசுகள் ஆகியவற்றின் கட்சிக் குழுக்கள் விளங்குகின்றன. உச்சியில் கூட்டரசு ஒன்றிப்புப் பேராயம் கட்சிக் குழுக்கள் அனைத்திற்கும் இறுதிக் குழுவாக உள்ளது. இப்பேராயம் மையக்குழு ஒன்றினைத் தேர்ந்தெடுக்கிறது. இக்குழு ஆட்சிக்குழு, செயலகம், கட்சிக் கட்டுப்பாட்டுக்குழு ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கிறது.

இந்தியப் பொதுவுடைமைக்கட்சி மார்க்சியக் கோட்பாடுகளில் முழுதும் நம்பிக்கைகொண்டு சோவியத்து நாட்டில் செயற்படுத்தப்பட்ட பொதுவுடைமை முறையினையே ஊக்கம் தருவதாகக் கருதி அமல் படுத்த வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டதாகும். மார்க்சிய லெனினியக் கருத்துகளை வழிகாட்டியாகக் கொண்ட இக்கட்சி உழைப்பாளர்களுக்கு அதிகாரம்கிடைக்கப் பாடுபடுவதை நோக்காகக் கொண்டதாகும். இந்திய விடுதலைக்குப்பின் உழைக்கும் வகுப்பினரின் முன்னணியாகத் திகழ்ந்த இக்கட்சி, குறிக்கோள்களை அடைய வன்முறையைக் கையாள வேண்டியதில்லை என்ற கருத்தை ஏற்று அரசியலமைப்பு நெறிகளுக்கேற்ப இயங்கி வருகிறது. முழுக் குடியாட்சியையும் சமதருமக் கருத்துகளையும் அமைதியான முறையில் அடைய அறைகூவல் விடுக்கும் இக்கட்சி, முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை முழுமையாக ஆதரிக்கின்றது. வெளிநாட்டுக் காரியங்களில் இந்தியப் பொதுவுடைமைக்கட்சி வல்லரசுகளுக்கிடையே அமைதி ஒப்பந்தங்கள் ஏற்படுதல், அணுகுண்டு உற்பத்தியைத் தடை செய்தல் ஆயுதக் குறைப்புச்செய்தல் போன்றவற்றில் செயல்திட்டக் கருத்துகளைக் கொண்டுள்ளது. கேரள மாநிலத்தில் பொதுத் தேர்தலின் மூலம் 1957-இல் இக்கட்சி ஆளும் அதிகாரத்தைப் பெற்றது.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் ஏற்பட்ட கொள்கைக் கருத்து வேறுபாடுகள் இக்கட்சியை இடச்சாரி, வலச் சாரி என 1961-இல் இரண்டாகப் பிரித்து விட்டன. இப்பிளவின் காரணமாக முற்போக்குக் கருத்துகளைக் கொண்ட இக்கட்சிக்குழு அனைத்திந்திய முறையில் வல்லமை வாய்ந்த கட்சியாகப் பதவிக்குவர இயலவில்லை.

பொதுவுடைமைக் கட்சியின் இடச்சாரிப்பிரிவினரான மார்க்சிய வாதிகள் வலச்சாரியினரைத் 'திரிபு வாதிகள்' எனவும் 'பூர்சுவா' நிலவுடைமை அரசோடு சேர்ந்துள்ளனர் எனவும் குறை கூறுகின்றனர். சமதரும சமுதாயம் அமைக்கக்கூடிய ஒரே கட்சி தாங்கள்தாம் எனவும், அதை உழைப்பாளர்களின் ஒரு மக்கள் குடியாட்சி மூலமே அடையமுடியும் எனவும் இவர்கள் நம்புகின்றனர். வங்கிகளைத் தேசிய மயமாக்குதல், முற்றுரிமை அமைப்புகளையும் பெரும் தொழிற்சாலைகளையும் தேசிய மயமாக்குதல், பெரும் நிலக்கிழார்களின் நிலங்களை எடுத்து வேளாண்மை செய்யும் உழைப்பாளர்களுக்கு வழங்குதல் போன்ற நோக்கங்களை இக்கட்சி ஆதரிக்கிறது. தற்சார்பையும், சமூகப் பொறுப்பையும், தொழிலாளர் நலனையும் வலியுறுத்தும் இக்கட்சி பன்னாட்டு உறவுகளில் சுதந்திர வெளிநாட்டுக் கொள்கையை வலியுறுத்துகிறது.

நன்கு அமைக்கப்பட்ட பொதுவுடைமைக்கட்சி கீழ்மட்டத்தில் நுண்ணியங்களையும், அதற்கு மேல் கிராம, நகர, மாவட்ட, மாநிலச் செயற்குழுக்களையும் கொண்டுள்ளது. 'உயர்குழு' என்பது பொதுவுடைமைக்கட்சியின் உயர் நிருவாக மையக் கூட்டுக் குழுவாகும்.

மார்க்சிய லெனினியக் கட்சி என்ற பெயரில் 1969-இல் தொடங்கப்பட்ட பொதுவுடைமைக் கட்சி தீவிரவாதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 'துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது' என்ற கருத்தைப் பின்பற்றுவதாக இந்தியாவின் பல பகுதிகளில் இயங்குகிறது. இதன் தொண்டர்கள் பல கட்சிகளில் ஊடுருவி இருப்பது பொதுவுடைமைக் கட்சியாளர்களை மட்டுமன்றி மற்ற கட்சியினரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

பிரான்சில் அமைக்கப்பட்ட மிகத் திறமை வாய்ந்த அரசியல் கட்சிகளுள் பொதுவுடைமைக் கட்சியும் ஒன்றாகும். சமதருமக்கட்சியில் 1920 – இல் பிளவு ஏற்பட்டபோது இக்கட்சி தோற்றுவிக்கப்பட்டது. முதலாளித்துவ முறைக்குச் சாவு மணியடித்து உழைப்பாளி மக்களின் வல்லாட்சியைத் தோற்றுவிக்கவேண்டும் என்பதும் உற்பத்தி வழி வகைகளனைத்தையும் தேசிய மயமாக்க வேண்டும் என்பதும் இக்கட்சியின் நோக்கங்களாக இருந்தன. இக்கட்சியே 1945 – லிருந்து 1958 வரை அங்கு மிகப்பெரும் கட்சியாக விளங்கியது.

சீனப் பொதுவுடைமைக்கட்சி 1949-இல் ஏகாதிபத்தியம், படைமானியத்திட்டம், முதலாளித்துவம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடி இறுதியில் ஒரு மக்கள் குடியரசுச் சருவாதிகாரத்தை அங்கு ஏற்படுத்தியது. சீனாவில் அரசாங்கத்தை முன் நடத்திச்

செல்லும் பொறுப்பைப் பொதுவுடைமைக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது. சீனப் பொதுவுடைமைக்கட்சி காங்கிரசு, மைய உயர்குழு, அதன் நிலைக்குழு ஆகிய உயர் அமைப்புகளோடு இயங்கி வருகிறது. மாநிலக்குழுவும் செயலகமும் நிருவாக இயக்கப் பணிகளை மேற்கொள்ளுகின்றன. உயர்குழுவின் நிலைக்குழு உறுப்பினர்கள் அரசுக் கொள்கைகளை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்; செயலகமும், மாநிலக்குழுவும் எடுக்கப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஈ.ஜா.

**பொப்பண்ண காங்கெயர்கோன்**: இவர் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் காலத்தில் விளங்கிய ஒரு வள்ளல். காங்கெயர் என்ற மரபினர்; கொங்கு நாட்டில் வாழ்ந்தவராவர் என்று வரலாற்றறிஞர் கூறுவர். பண்டைய கொங்கு நாட்டதாகிய காங்கேயம் பகுதியில் வாழ்ந்தவர் என்னும் கருத்தில் காங்கெயர் என்னும் பெயர் வழங்கப் பட்டிருக்கலாம். அவர்களுக்குத் தலைவராக விளங்கியவர் காங்கெயர்கோன் எனப்பட்ட வள்ளல் ஆவார். இவர்தம் இயற்பெயர் பொப்பண்ணன் என்பதாகும். இவர் தமக்குப் பொருட்குறை, உணவுக் குறைமுதலியனநேராவண்ணம் புரந்தமையால்தான் தம்மால் முத்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரத்திற்கு உரை எழுத முடிந்தது என்னும் உண்மையை அடியார்க்கு நல்லார்தம் உரைச் சிறப்புப் பாயிரத்தின் ஈற்றில் அமைந்துள்ள ஒரு பாடல் விளக்குகிறது. 'கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோனளித்த சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்று உரை சொல்வித்ததே' என்னும் பாடற் பகுதி இதனை விளக்குகிறது. அ.மா.ப.

**பொம்மலாட்டம்**: இது, மரப்பாவைக் கூத்தைக் குறிக்கிறது. மரம் அல்லது களிமண்ணால் அமைந்த பாவையைக் கொண்டு மனிதர்களின் செயல்களை நடித்துக் காட்டலாம் என்பது, கீழை நாடுகளிலும் மேலை நாடுகளிலும் பரவியிருந்த கருத்தாகும். பண்டைய இந்தியாவில் பாவைக்கூத்து மிகவும் புகழ்பெற்று விளங்கி வந்துள்ளது. இந்தியப் பண்பாட்டின் தலைசிறந்த கூறாக விளங்கும் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற கருத்தைப் பரப்பப் பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இப்பொழுதும் கோயில் திருவிழாக்கள் பொருட்காட்சிகள் போன்ற இடங்களில் புராணக்கதைகளின் வாயிலாக நீதியை மக்கள் உணரும் வண்ணம் பொம்மலாட்டக்கலை பயன்படுத்தப் பட்டு வருகிறது.

உயிரற்ற பொருளாகிய பொம்மை உயிருள்ளமனிதனால் இயக்கப்பட்டு ஒருவகை நாடகக் காட்சியாக விளக்கம்பெறுகிறது. பொம்மைகளை ஊடகமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் அனைத்து நாடக நிகழ்ச்சிகளும் பொம்மலாட்டத்தின் பாற்படும். இவ்வரையறை பலவகையான பொம்மலாட்ட நிகழ்ச்சிகளையும், பல வகையான பொம்மைகளின் அமைப்புகளையும் உள்ளடக்கியதாக அமைதற்கு ஏற்றதாக வகுக்கப்பட்டுள்ளது.

பொதுவாகப் பொம்மலாட்டம், உலகின் பல்வேறு நாகரிகங்களிலும், எல்லாக் காலங்களிலும் இடம் பெற்று வந்துள்ளது. ஐரோப்பாவில் கிடைக்கும் எழுத்துச் சான்றாதாரங்கள் இக்கலை கி.மு. 5 – ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாகக் காட்டுகின்றன. அவை போன்ற தொன்மையான இலக்கியச் சான்றுகள் மற்ற நாடுகளில் காணப்படவில்லை. எனினும் சீனா, இந்தியா, சாவா போன்ற நாடுகளில் இக்கலை தொன்று தொட்டுப் பயின்று வந்துள்ளது. அங்கெல்லாம் இக்கலையின் தோற்ற வரலாற்றை அறுதியிட்டுச் சொல்வது கடினமானதாக உள்ளது. மிகப் பழமையான, எழுதப்பட்ட நாடகமாகப் பொம்மலாட்டம் விளங்கி வந்துள்ளது. இது மனித இனத்தின் மிகத் தொன்மையான இயல்புணர்ச்சிகளின் சின்னமாக விளங்குகிறது.

மனித நடிகர்களுக்கு மாறாகப் பொம்மைகளைப் பயன்படுத்தும் போக்கு மிகவும் அண்மைக்காலப் போக்காகவே காணப்படுகிறது. இலாகிரில்லே என்பவர் பாரிசில் மனாயசு என்னுமிடத்தில் நடத்திய பொம்மலாட்ட நிகழ்ச்சியில் இம்முயற்சி நடைபெற்றபோது நடிகர்கள் பெருத்த எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதனால், பொம்மலாட்டத்திற்கு நாட்டுப்புறச் சந்தைகளை நோக்கி ஓடும் நிலையே ஏற்பட்டதென்பர்.

ஐரோப்பாவில் இன்று தலைசிறந்து விளங்கும் புதிய பொம்மலாட்டம் இத்தாலியில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில்தான் தோன்றி படிப்படியாக மலர்ந்தது. அங்கு அவ்வூடகத்தில் மதச்சார்பு கொண்ட நாடகக் காட்சிகள் இடம்பெற்றன. அக்கலைஞர்கள் மற்ற நாடுகளுக்குப் பயணம் செய்தபோது இக்கலையும் அங்குப் பரவியது. சேக்சுபியர், பென் சான்சன் போன்ற இலக்கியக் கலைஞர்கள் படைப்புகளில் பொம்மலாட்டம் பற்றிய செய்திகள் இடம்பெறத் தொடங்கின. பொம்மலாட்டம் வழி நடத்தப்பெற்ற 'ஆதாம் ஏவாள்'க் கதையால் எழுச்சியூட்டப் பெற்றே மில்டன் தனது 'இழந்த சுவர்க்கம்' (Paradise Lost) என்ற காவியத்தைப் படைத்தார் என்று கூறுவர்.







**பொம்மலாட்ட நிகழ்ச்சியின் பொதுப் பண்புகள்:** பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் தொன்மையான நாடக அமைப்பாகக் கருதப்படுகின்றன. நாடகக்கலையின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தவை பொம்மலாட்ட நிகழ்ச்சிகளே என்ற கருத்தும் நிலவி வருகிறது. ஆனால், மனிதனின் நாடக அமைப்புகள் அனைத்தும் பொம்மலாட்டம் வாயிலாகவே எழுச்சியூட்டப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. ஆயின் தொடக்கக் காலந்தொட்டே பொம்மலாட்ட நிகழ்ச்சிகளும் மனிதனின் நாடக நிகழ்ச்சிகளும் அருகருகே அமைந்து வளர்ந்து வந்திருக்க வேண்டும்; ஒன்றன் வளர்ச்சியில் மற்றொன்றின் பாதிப்பும் இடம்பெற்று இருக்க வேண்டும்.

பொம்மலாட்டத்தின் தலையாய சிறப்புத் தன்மையாக விளங்குவது பொம்மைகள் தனிமனிதனைச் சுட்டாமல் பண்பைக் குறிப்பனவாக விளங்கும் இயல்பே ஆகும். பொம்மை ஒரு மனிதர் என்பதை விட ஒரு மாதிரிப்படிவம் என்ற நிலையிலேயே அமைந்து விளங்குகிறது. இதனால், இப்பொம்மைகள் தொன்று தொட்டு வழக்கில் இருந்துவரும் பொதுவான பாத்திரங்களோடு பெரிதும் உறவு கொண்டவையாக விளங்குகின்றன. தனி மனிதனைச்சுட்டாமல் பண்பு குறித்த நாடகத்தில் நடிகனுடைய ஆளுமையை உயர்த்திக் காட்ட வாய்ப்புக் குறைவாக உள்ளது. இத்தகைய செவ்விகளில் நடிகனுக்கும் பார்வையாளர்களுக்கும் உள்ள உறவு வேறு வகையில் வளர்க்கப்பட வேண்டும். இச் சூழலில் பார்வையாளர்கள் பெரிதும் உழைக்க வேண்டியுள்ளது. பார்வையாளர்கள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமன்றி அவர்தம் பரிவுணர்வுக் கற்பனையின் வாயிலாகப் பண்பு குறித்த முகமூடி அணிந்த நடிகரின் உணர்ச்சிகளைத் தாங்கி, முன்னிறுத்திக் காட்ட வல்லவராகவும் இருத்தல் வேண்டும். பொம்மலாட்ட நிகழ்ச்சியில் பார்வையாளர்கள்பல வேளைகளில் பொம்மைகளின் உணர்ச்சி வெளிப்பாட்டு மாற்றங்களைப் புரிந்து கொள்பவர்களாக விளங்குகிறார்கள். இத்தகைய காட்சி எதையும் அவர்கள் உண்மையில் பார்ப்பதில்லை. ஆனால், இத்தகைய உணர்ச்சி நிலையை அவர்கள் தம் கற்பனையால் அடைகிறார்கள். தங்களின் சொந்த அச்சம், சிரிப்பு, கண்ணீர் ஆகியவற்றைப் பொம்மைகளுக்குக் காணிக்கையாக்குகிறார்கள். நடிகர், பார்வையாளரிடையே காணப்படும் இந்த ஒருங்கிணைப்பு, நாடகக் கலையின் இதயம் மற்றும் ஆத்மாவுடன் கொண்ட ஒருங்கிணைப்பால் எழுவதாகும். நடிகன் பொம்மையாக அமைந்து விடுகிற நிலையில் இந்த ஒருங்கிணைப்பு ஒரு தனிப்பட்ட சிறந்த வழியில், சிறப்பாக உயர்த்தப் பட்ட முறையில் கை கூடுதல் சாத்தியமாகும்.

**பொம்மைகள் இயக்கப்படல்:** பொம்மைகளை இயக்கும் மனிதத்திறன் பாராட்டும்படியாக அமைந்துள்ளது. இத்திறன் பொம்மைகளைத் தயாரிப்பதிலும் இயக்கிக் காட்டுதலிலும் இடம் பெற்றுள்ளது. பொம்மைகளை இயக்குபவர் பார்வைக்குத் தெரிவதில்லை. அவருடைய கலை மறைத்துக் காட்டுவதில் தான் இடம் பெற்றுள்ளது. பார்வையாளர்கள் இதனை அறிவார்கள். இந்த அறிவு, நாடக முழுமைக்கும் உதவும் ஒரு கூறாக விளங்குகிறது.

**பொம்மலாட்டம் அல்லது பாவைக்கூத்தின் வகைகள்:** பொம்மலாட்டம் அல்லது பாவைக்கூத்தில் பல்வேறு வகைகள் காணப்படுகின்றன. இக்கலையில் காணப்படும் ஒவ்வொரு வகையும் அதற்குரிய தனிப்பட்ட பண்பியல்புகளைக் கொண்டு விளங்குகின்றது. அவை ஒவ்வொன்றனுக்கும் பொருத்தமான நாடகத் தன்மை சார்ந்த பொருட்கள் காணப்படுகின்றன. சில மாதிரிப் படிவங்கள் ஒரு குறிப்பிட்ட பண்பாடு மற்றும் நிலவியல் தொடர்பான சூழ்நிலைகளில் வளர்ச்சி கண்டுள்ளன. 1) கையுறைப்பொம்மைகள், 2) குச்சிப் பொம்மைகள், 3) தோற்பாவை நிழற் கூத்துகள், 4) கயிற்றுவழி ஆட்டப்படுகின்ற பொம்மலாட்டங்கள் அல்லது மரப்பாவைகள் என்னும் இவை மிகச் சிறந்த வகைகளாகும்.

**கை அல்லது கையுறைப் பொம்மைகள்:** துணியால் தைக்கப்பட்ட ஓர் உள்ளீடற்ற துணிக்கூடு பொம்மையை இயக்குபவரின் ஒரு கையில் போர்த்தப்பட்டிருக்கும். ஆட்டுபவரின் கைவிரல்கள் இந்தத் துணியிலான பையின் தலையிலும் கைகளிலும் செலுத்தப்பட்டிருக்கும். இப்பொழுது ஆட்டுபவரின் கைவிரல்கள் அசைந்து அந்தப் பொம்மைகளுக்கு இயக்கத்தைக் கொடுக்கின்றன. இந்தத் துணிப்பை உருவம் இடுப்பிற்கு மேல்காணப்படுகிறது. பெரும்பாலும் இப்பொம்மைகளுக்குக் கால்கள் வைக்கப்படுவதில்லை. தலையுருவம் பெரும்பாலும் மரத்தால் செய்யப்பட்டிருக்கும். இது காகிதக் குழம்பாலும் இரப்பராலும் செய்யப்படுவதுண்டு. இப்பாவைகளின் கைகள் பெரும்பாலும் மரத்தால் செய்யப்படுகின்றன. கையின் முதல் விரல் அல்லது பெருவிரல் பொம்மையின் தலையில் பொருத்தப்பட்டிருக்கும். சுட்டிக் காட்டும் விரலும் அதற்கு அடுத்த விரலும் பொம்மையின் கைவிரல் பகுதிகளில் பதிக்கப்படுகின்றன. ஆட்டுபவரின் கையின் முதல் மூன்று விரல்கள் மரத்தால் செய்யப்பட்ட பட்டைகளில் நுழைக்கப் பயன்படுகின்றன. பொம்மைகளை இயக்குபவர் பொதுவாகத் தம் தலைக்குமேல் கைகளை உயர்த்தி ஒரு குறுகலான சாவடியைக் கொண்டதாகவும் சிறிய அளவினதாகவும் அமைந்துள்ள திரையில் காட்சியை நடத்துகிறார். நிகழ்ச்சி முழுவதும் ஒரே

கலைஞரால் படைத்துக் காட்டப்படும். இந்த வகை யான கை அல்லது கையுறைப் பொம்மலாட்டம் திறந்த வெளியில் நடத்தப்படும் கலையாக ஐரோப் பாவிலும் சீனாவிலும் காணப்படுகிறது. ஆனால் இக் கலை, ஓர் இயக்குநரை மட்டும் கொண்டு நடை பெற வேண்டுமென்பதில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட இயக்குபவர்களைக் கொண்டும் இந்நிகழ்ச்சி நடத்தப் படுதல் உண்டு. இந்தக் கைப் பொம்மலாட்டத்தின் விரைவியக்கம் இக்கலையின் தனிச் சிறப்பாகும்.

திரை மறைவில் இருந்து கொண்டு பொம்மையை இயக்குபவர் தம் கை விரல்களை அசைத்துப் பொம் மைகளை இயக்குகிறார்.

**கம்பிவழிப்பொம்மலாட்டம்:** இந்தப் பொம்மலாட்ட மும் திரைக்குப் பின்புறம் அடிப்பாகத்தில் இருந்து ஆட் டப்படுகிறது. ஆனால், இப்பொம்மைகள் மிகவும் நீள மானவை. இப்பொம்மைகளின் உடலின் மத்தியில் கம்பிகள் புகுத்தப்பட்டு, தலை வரை செலுத்தப்பட்டி ருக்கும். இப்பொம்மைகளில் காலுக்கு என்றும் கைக்கு என்றும் தனித்தனியாகக் கம்பிகள் இணைக் கப்பட்டு அவையும் இயக்கப்படுதல் உண்டு. இந்தப் பொம்மைகள் மிக்க பருமனான கம்பியால் இணைக் கப்பட்டுத் தூக்கிப் பிடிக்கப் படுவதாக அமைக்கப்படு கின்றன. மிக மெல்லிய கம்பிகளைக் கைகள், கால் கள், தலை முதலிய பகுதிகளில் இணைத்துத் தனிப் பட்ட இயந்திர நுணுக்கத்தினால் இயக்கப் பட்டுத் தலை அசைவு, கை அசைவு, கால் அசைவுகள் கொடுக்கப்படுகின்றன.

**தோற்பாவை நிழற்கூத்து:** கைப்பொம்மலாட் டம் , கம்பி வழிப் பொம்மலாட்டம் போலவே தோற்பாவை நிழற்கூத்தும் திரையின் பின்புறத்தில் அடிப்பகுதியிலிருந்து கொண்டே ஆட்டப் பெறு கிறது. இத்தோற்பாவை நிழற்கூத்தில் காண்பிக்கப் படும் தோற்பாவை, தோல், மர அட்டை, தகரம் முதலியவற்றிலிருந்து தட்டையாக இணைப்புள்ள உருவங்களாக வெட்டியெடுக்கப்பட்டு வண்ணம் தீட்டப் பெற்றுச் செய்யப்படுகின்றது. ஒருநீண்ட கம்பியில் இதனை இணைத்துக் கையில் பிடித்துக் கொண்டு ஒரு திரைக்குப் பின்னாலிருந்து மேலும் கீழும், பக்கவாட்டிலும் ஆட்டி அதன் நிழல் திரைச் சீலையில் படுமாறு செய்தல் தோற்பாவை நிழற்கூத் தாகும். ஒரு விளக்கு திரைச்சீலைக்குப் பின்னால் வைக்கப்படுகிறது. இது பாவையின் உரு, திரையில் படு வதற்குப் பெரிதும் பயன்படுகிறது. இந்தத் தோற் பாவையின் கைகள் அல்லது தாடை மெல்லிய கம்பியி னால் தைக்கப்பட்டு இப்பகுதிகளைத் தனியாக இயக்குதற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளப்படுகிறது. நிழற்கூத்தில் பாவைகளின் நிழல்கள் மட்டுமன்றி மனிதர்களின் நிழல்களும் காட்டப்படுகின்றன. பாவைகளைத் திரைமறைவில் காட்டி நிழலாக் கிக் காட்டினால் அது தோற்பாவையாயினும் அது நிழற் கூத்தே என்று கருதப்படும்.

**பொம்மலாட்டம் அல்லது மரப்பாவைக் கூத்து:** பண்டைய இந்தியாவில் பாவைக்கூத்து மிகவும் புகழ் பெற்று விளங்கியுள்ளது. பொம்மைகளை வைத்து ஆட்டுவதைப் பொம்மலாட்டம் என்று கூறுகின் றனர். மரத்தாலான பொம்மைகளை நூல் அல்லது கயிற்றில் கட்டி ஆட்டுவதால் அது நூல் அல்லது கயிறு வழிப் பொம்மலாட்டம் என்று குறிப்பிடப் படுகிறது.

இவ்வகைப் பொம்மலாட்டத்தில் இடம்பெறும் பொம்மைகள் பெரியனவாகவும் மேலிருந்து இயக்கப் படக் கூடியனவாகவும் விளங்குகின்றன. இப்பொம்ம லாட்டம் பெரும்பாலும் கயிறு அல்லது நூலினால் பொம்மைகளைக் கட்டிக் கைகளில் தூக்கி ஆட்டி நிகழ்த்திக் காட்டப்படுகின்றது. பொம்மைகளுடன் இணைக்கப்பட்ட கயிறுகளைப் பொம்மைகளை இயக்குபவர் தம் இரு கைகளிலும் கட்டிக்கொண்டு, நூலைப் பிடித்துப் பொம்மையின் இயக்கத்தைக் கட் டுப்படுத்தியும், இறுக்கப் பிடித்துத் தூக்கியும் ஆட்டு வார். பொம்மைகளைக் கயிறுகளின் வாயிலாகத் திருப்பியும் ஆட்டியும் இயக்குகின்றனர். குறிப்பிட்ட உறுப்பில் அசைவினை உண்டாக்க அந்த உறுப்புடன் இணைக்கப்பட்ட மென்மையான கயிறு சுண்டி இழுக் கப்பட்டு அந்தக் குறிப்பிட்ட உறுப்பில் அசைவு ஏற் படுத்தப்படுகிறது. ஒரு சிறிய பொம்மை கூட ஒன் பதுக்கும் மேற்பட்ட கயிறுகளால் இணைக்கப்பட் டிருந்தது என்று கூறுகின்றனர். ஒவ்வொரு கைக்கும் ஒவ்வொரு கயிறு, ஒவ்வொரு காதுக்கும் ஒவ்வொரு இணைப்பு என்று தலையை இயக்குவதற்காகவும் தண்டுவடத்தின் அடிப்பகுதியில் இருந்து ஒரு கயிறும் இணைக்கப்பட்டுத் தலை வணங்குதற்கும் ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன. இதைக் காட்டிலும் இன் னும் சிறப்பான அசைவுகளை உண்டாக்க இன்னும் நுட்பமான முறையில் தனிப்பட்ட சிறப்புக் கயிறுகள் கோக்கப்பட்டுள்ளன. நிறைய கயிறுகள் கொண்ட பொம்மையை இயக்குவது சிறந்த பாவை இயக்கத் தைக் காட்டுவதாகும். இந்தப் பொம்மைகளைக் கீழிருந்து மேலாகவும் கிடைமட்டமாகவும், பக்க வாட்டிலும் திருப்பியும் அசையச் செய்கின்றார். பொம்மையை எந்தத் திக்கில் இயக்குவது எப்படி இயக்குவது என்பதைப் பாவையை இயக்குகின்றவர் கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள் கின்றனர்.

தென்னிந்தியப் பகுதிகளில் பொம்மைகள் கயிறு களால் கட்டப்பட்டு, அக்கயிறுகள் பொம்மையை

இயக்கும் கலைஞரின் தலையில் கட்டப்பட்ட இரும்பு வளையத்தோடு இணைக்கப்பட்டு இயக்கப் படுகின்றன. இப்பொம்மலாட்டத்தில் பொம்மை யோடு இணைக்கப்பட்ட கம்பிகள், இயக்குபவரின் கைகளைக் கட்டுப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

**தமிழகப் பொம்மலாட்டம்**: தமிழகத்தில் பொம்ம லாட்டத்தின் தோற்ற வரலாற்றை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. எனினும் கயிற்றில் இருந்து அறுந்து விழுகிற பாவையைப் பற்றிய செய்தி சங்க இலக்கியமாகிய குறுந்தொகையில் காணப்படுகிறது. திருக்குறளில் (குறள். 1020,1058) இரு இடங்களில் மரப்பாவைக் கூத்து உவமிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் இப்பொழுது கும்பகோணம், மயி லாடுதுறை, சேலம் போன்ற பகுதிகளில் மரப் பாவைக்கூத்து அல்லது கயிறுவழிப் பொம்மலாட்டம் நடைபெற்று வருகிறது.

ஒரு பொம்மலாட்டக் குழுவில் பொம்மைகளை இயக்க இருவரும், அவர்களின் உதவிக்கு ஒருவரும், உரையாடல்களைப் பேச, பாட இருவரும், 'ஆர் மோனியம்', 'தோலக்கு' வாசிக்க இருவரும் என ஏழு பேர் இடம் பெறுகின்றனர். குறைந்த தொகை கொடுக்கப்படும் நிகழ்ச்சிகளில் ஆர்மோனியக் கலை ஞரை அல்லது பொம்மையை இயக்குபவரை உரை யாடலையும் பேசச் செய்து ஆறு பேர்கள் கொண்ட குழுவே பொம்மலாட்ட நிகழ்ச்சியை நடத்துவ துண்டு. வள்ளி திருமணம், சீதா கல்யாணம் போன்ற பழைமையானகதைகளை நடத்தும்பொழுது குறைந்த எண்ணிக்கை கொண்ட கலைஞர்களை வைத்துக் கொண்டு நிகழ்ச்சியை நடத்த இயலும். ஆனால், குடும்பக் கட்டுப்பாடு போன்ற விளம்பர நாடகங்கள் நடத்த ஒரே காட்சியில் ஒரு பொம்மையை இயக்கு தற்குக் கூட இரு கலைஞர்கள் தேவைப்படலாம். பல பொம்மைகள் இடம்பெறும் காட்சிகள் அமைக்கக் குழுவில் மிகுதியான கலைஞர்கள் பங்கேற்பது தவிர்க்க முடியாமற் போகும்.

கும்பகோணம், மயிலாடுதுறைப் பகுதிகளில் அய் யர், சௌராட்டிரர், நாயர், மழவராயர், படை யாச்சி, பத்தர் எனப்படும் இனத்தவர்கள் இக்கலை யில் ஈடுபட்டுள்ளனர். சேலம் பகுதியில் வன்னிய இனத்தவர்களே இக்கலையில் மிகுதியாக ஈடுபட்டு வருகின்றனர்.

பொம்மலாட்ட நிகழ்ச்சி ஊர்த் திருவிழாக் காலங்களிலும் குடும்பத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் மக்கள் கூடும் வாரச் சந்தை நாள்களிலும் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சியில் கிடைக்கும் வரு வாயின் பெரும்பகுதி குழு உரிமையாளருக்குச் சென்று விடுகிறது.

பொம்மலாட்டக் கலைஞர்கள் அனைவரும் நிகழ்ச்சியின்போது திரைக்குப் பின்னால்தான் இருக் கின்றனர். பாடப்படும் பாடல், இசைக்கப்படும் பக்க இசை, பேசப்படும் உரையாடல் என்னும் இவற்றிற் கேற்பப் பொம்மையை இயக்குபவன் பொம்மைக்கு அசைவுகளைக் கொடுக்கின்றான். பொம்மை ஆட்டு கின்ற கலைஞர்களுள் சிலர் காலில் சலங்கையும், சுண்டு கயிற்றின் வளையத்தைத் தலையில் சூடிக் கொள்ளுதற்கேற்ற உருமாலையும் கட்டிக் கொள்கின் றனர்.

**மேடையமைப்பு**: இவ்வாட்டத்திற்கு 4மீ. அல்லது 5மீ. நீள அகலமுள்ள மேடையில் 3மீ. உயரத்திற்குக் கூரை வேயப்படுகிறது. மேடையின் முன்புறத்தில் பொம்மைகள் ஆடுதற்கு ஏற்ப இரண்டு ஒருமுழ இடைவெளி விடப்பட்டுக் கறுப்புத்திரை விரிக்கப்படு கிறது. பொம்மை ஆட்டுவோரின் மார்பு உயரத்தில் ஒரு மூங்கில், மேடையின் முன்புறத்தில் நீளவாக்கில் கட்டப்பட்டு அதில் அந்தக் கறுப்புத்திரை தொங்க விடப்படுகின்றது. கறுப்புத்திரையின் நீளம் 4மீ. ஆகும். அகல மேடையாக இருப்பின் 3 மீட்டராகவும் 5மீ. நீள, அகல மேடையாக இருப்பின் 4 மீட்டராக வும் இருக்கலாம். பொம்மையாட்டுவோரின் கழுத்து வரையான பகுதி கறுப்புத் திரையால் மறைத்துக் கொள்ளப்படுகிறது. பொம்மையை ஆட்டும்போது முகமும், இரு கைகளும் அவ்வப்போது திரையில் காணப்படுவதுண்டு. கறுப்புத் திரையின் மேலும் பக்கவாட்டிலும் உள்ள காலியான பகுதிகளை மேடையின் முன்புறக் கூரையிலிருந்து விரிக்கப்படும் நீலத்திரைகள் மறைத்துக் கொள்கின்றன.

மேடையின் பின் பகுதியில் நீளவாக்கில் கயிறு கட்டி அதில் அன்றைய நாடக நிகழ்ச்சிக்கு வேண்டிய பொம்மைகள் தொங்க விடப்படுகின்றன. மேடையில் ஒலி பெருக்கிகளும் வண்ண மின் விளக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு காட்சியின் இறுதியிலும் மூடித் திறக்கும்படி நகரும் திரை வசதி யும் செய்து கொள்ளப்படுகிறது.

**பக்க இசைக்கருவிகள்**: பொம்மலாட்ட நிகழ்ச் சிக்கு 'ஆர்மோனியம்', 'தபேலா', 'தோலக்கு', 'சால்ரா', சலங்கை ஆகிய இசைக்கருவிகள் பயன் படுத்தப் படுகின்றன. சாமி நாத குருக்கள் காலத் தில் துத்திசுரி, மத்தளம் என்ற இரு இசைக் கருவி கள் பயன்படுத்தப்பட்டு வந்தன என்றும் 'ஆர்மோனி யம்' வந்த பிறகு இக்கருவிகள் பயன்படுத்தப்பட வில்லை என்றும் தெரிகிறது. சிலவிடங்களில் நிகழும் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளில் சுதிப்பெட்டி, முக வீணை, மிருதங்கம், சால்ரா, காற்சலங்கை ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. ஆர்மோனியம் பயன்படுத் தப்படவில்லை.

**பொம்மைகள்**: பொம்மலாட்டத்திற்குப் பயன்படும் பொம்மைகளைப் பொம்மலாட்டக் கலைஞர்கள் செய்து கொள்வதில்லை. அதற்கெனச் செய்து கொடுப்பவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர். இப்பொம்மைகள் கல்யாண முருங்கை மரத்தால் செய்யப்படுகின்றன. எடை குறைவாகவும் துளைகள் சிதைந்து போகாமலும் இருப்பதால் இம்மரம் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலான பொம்மைகளுக்குக் கால்கள் வைப்பதில்லை. நாரதர், முருகன், கோமாளி போன்றசில பொம்மைகளுக்கு மட்டும் கால்கள் வைக்கின்றனர். பஞ்சகச்சம் போன்ற உடைகள் அணியும் பொருட்டுச் சில பொம்மைகளுக்கு மட்டும் கால்கள் அமைத்துச் செய்துள்ளனர். பொம்மைகளுக்கு ஓவியர்களே வண்ணம் தீட்டுகின்றனர். பொம்மைகளுக்கு உள் பாவாடைகள் அணிந்து அதன்மேல் ஆடைகளை அணிவிக்கின்றனர். மேல் பாவாடையாகப் பளபளப்பான பட்டுப் பாவாடை அணிவிக்கப்படுகிறது. நெற்றிச்சுட்டி, மூக்குத்தி, கம்மல், சிமிக்கி, கண்டசரம், கைசுத்து போன்ற நகைகள் அணிவிக்கப்படுகின்றன. முடி கறுப்பு வண்ணத்தால் தீட்டிக் குறிக்கப்படுகிறது.

பொம்மைகள் 1½மீ. முதல் 1மீ வரை நீளமும் எடை 3 கிலோ முதல் 10 கிலோ வரையும் உள்ளன. ஒரு பொம்மையின் விலை அதன் உடை, நகைகளைப் பொறுத்து அமைகிறது. நகை, ஆடையற்றபொம்மை 100 உருபாயிலிருந்து 200 உருபாய் வரை விலை போகிறது. புதிய பொம்மை அறிமுகத்தின் போது எலுமிச்சம் பழம் நறுக்கிக் கண்ணேறு கழிக்கப்படுகிறது. பொம்மைகளைப் பிணைத்துள்ள கயிறுகள் கட்டப்பட்ட இரும்பு வளையத்தைப் பொம்மை ஆட்டுவோர் தலை உருமாலையில் கட்டிப் பொம்மையாட்டும் வழக்கம் சில பகுதிகளில் காணப்படவில்லை.

பொம்மைகளில் சுண்டு கயிறு பொருத்தும் முறையில் இரண்டு வகைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பொம்மையின் மூலம் காட்டப்பட வேண்டிய அசைவுகளுக்கேற்பச் சுண்டு கயிறுகள் பொம்மைகளில் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றில் சுண்டு கயிறுகள் குச்சியில் கட்டப்பட்டுள்ளமை, சுண்டு கயிறுகள் வளையத்தில் கட்டப்பட்டுள்ளமை என்னும் இருவகைகள் காணப்படுகின்றன.

**நிகழ்ச்சி அமைப்பு**: பொம்மலாட்ட நிகழ்ச்சி அமைப்பினை 1) கடவுள் வழிபாடு, 2)நகைச்சுவைக் காட்சிகள், 3) கதைப்பகுதி என முப்பெரும்பிரிவுகளாக அமைத்துக் கொள்கின்றனர். நகைச்சுவைக் காட்சிகளில் மந்திர தந்திரக்காட்சி, பரதநாட்டியக்காட்சி, பூசாரி கரகமாடும் காட்சி, பூசாரி பேயோட்டும் காட்சி ஆகியவை இடம் பெறுகின்றன. மந்திர தந்திரக் காட்சியில் கூடுவிட்டுக் கூடு பாய்தல், அம்மானை ஆடுதல் போன்றவை இடம் பெறுகின்றன.

**பாடல்கள், உரையாடல்கள்**:பொம்மலாட்ட நிகழ்ச்சிகளில் கதைப்பாடல்கள் தவிர்த்துச் சங்கரதாசு சுவாமிகள் நாடகப் பாடல்களும், பல புகழ்பெற்ற பிற நாடகப் பாடல்களும் இடம் பெறுகின்றன. உரையாடல்களைப் பொறுத்தவரை கதைக்கான உரையாடல்களுடன் உளவியல் முறையில் அமைந்த உரையாடல்களையும் பெருமளவில் பயன்படுத்துகின்றனர்.

தமிழகப் பொம்மலாட்டத்தில் காணப்படும் பொம்மைகளின் இயக்கம் இக்கலையின் உயிர்நாடியான கூறாகும். பொம்மையில் உள்ள கண், பொம்மை திரும்பும்போது உயிர் பெற்று இயங்குவது போல் இருக்கிறது. தலையை மட்டும் அசைப்பதற்கு ஏதுவாகக் கழுத்திற்கும் தலைக்கும் இணைப்புள்ள (Joint) பொம்மைகள் இருக்கின்றன. நிற்கும் நிலை மாறும் போது பொம்மைகளின் முகபாவங்கள் மாறுகின்றன. பொம்மையின் அசைவுக்கு ஏற்பப் பொருள் மாறுபடுகிறது. ஆட்டுபவர் தம்மை இன்னொரு ஆத்மாவுக்குள் புகுத்திக் கொண்டு தாமதுவாகி இயக்குகிறார். பொம்மையை ஆட்டுபவர் தாம் பாடும் பாடல் பேச்சுகளுக்கேற்பப் பொம்மைகளின் வழி எவ்வளவு பொருள் பொதிந்த அசைவுகளைக் கொடுக்க இயலுமோ அவ்வளவு அசைவுகளையும் கொடுத்து இயக்குகிறார். இந்தப் பொம்மலாட்டக்காரர்கள் ஆகட்டும், நடிகர்கள் ஆகட்டும் இலகுத்தன்மை மிக்கவர்களாக இருக்க வேண்டும். இந்தப் பொம்மலாட்டக்காரர்கள் ஒரு சில வேடங்களில் பாத்திரத்தோடு இணைந்து போகிறார்கள். அதனால் நிகழ்ச்சி நன்றாக அமைந்து விடுகிறது.

இன்ன பொம்மைதான் பேசுகிறது என்பதை அப்பொம்மைகளுக்காகப் பேசப்படும் குரலை வைத்து அடையாளம் கண்டு கொள்கிறார்கள். ஆட்ட அசைவை வைத்துக் கொண்டும் இதனை முடிவு செய்யலாம்.பேசும் பொம்மைக்கு அசைவும், கேட்கும் பொம்மைக்கு அது 'ஆமாம்' போடும் போதும் அது மறுமொழி பேசும்போதும் அசைவு கொடுக்கப்படும்.

பொம்மைகளுக்குக் கால்வைத்துச் செய்தால் அவற்றை உட்கார வைத்தல் கடினம். ஆனால் ஆட்டப்பொம்மைகளுக்குக் கால்கள் உள்ளன. அப்பொம்மைகள் மரத்தால் செய்யப்படுகின்றன. ஒரே நிகழ்ச்சியில் பொம்மைகளுக்கு உடை மாற்றுதல் உண்டு. பொம்மைகள் செய்த பின் அப்பொம்மைகளுக்கு நல்லநேரம் பார்த்துத் தாலி கட்டி,நல்லநேரம் பார்த்துப் பூசை செய்து கண் திறந்து விடுவர். கு.மு.

**துணை நூல்கள்:**

**இரவிச்சந்திரன், சி. மா.,** 'தமிழ்நாட்டுப் பொம்ம லாட்டம்' கள ஆய்வுத் தகவல்கள், தமிழ்க்கலை, (தமிழ் – 1 : கலை-2), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், செப்டம்பர், 1983.

**இராமசாமி, மு.,** தோற்பாவை நிழற்கூத்து, பதிப் புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1983.

**பொய்க் கணக்குப் புனைதல்:** கூட்டுப் பங்கு நிறும உரிமையாளர்கள் பெரும்பாலும் அன் றாட நிருவாகத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளுவதில்லை. அதனால் கடன்பொறுப்பு வரை யறை செய்யப்பட்ட பொது நிறுமமாக இருந்தாலும் தனி நிறுமமாக இருந்தாலும் தகுதி பெற்ற தணிக்கையாளர்களைக் கொண்டுஅவற்றின் கணக்கு களைத் தணிக்கை(Audit)செய்து கொள்ளுதல் மரபு.

தணிக்கையின் நோக்கங்களை முதன்மை நோக்கம், துணை நோக்கம் என இருவகைப்படுத்தலாம். காண்க: தணிக்கை.

அதில் தணிக்கையின் துணை நோக்கங்களை 1. பிழைகளைக் கண்டுபிடித்து நடவாமல் தடுத்தல் (Detection and Prevention of Errors), 2. மோசடி களைக் கண்டுபிடித்து அவை நடவாமல் தடுத்தல் (Detection and Prevention of Frauds) என இரு வகைப்படுத்தலாம். அவற்றில் இரண்டாம் பிரிவின் ஒரு பகுதியாகப் பொய்க்கணக்குப் புனைதல் குறிப் பிடப்படுகிறது.

ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு செய் யப்படும் தவறுகளை மோசடி என்பர். உரொக்கத் தைக் கையாடல், சரக்கினைக் கையாடல், பொய்க் கணக்குப் புனைதல் என்று மூன்று வழிகளில் மோசடி செய்யப்படுவது இயல்பு.

அவ்வாறு மோசடி செய்யும் நோக்கத்தோடு கணக்குகளைத் திருத்தியும் மாற்றியும் எழுதுவதே பொய்க்கணக்குப் புனைதல் ஆகும். இதனைப் பெரும் பாலும் நிறுமத்தின் உயர்பதவியில் உள்ள நிறும நிரு வாகிகள்தான் செய்யக்கூடும். அவர்கள் அந்நிறு வனத்தின் இன்றியமையாத பொறுப்பாளர்களாக இருப்பதால், அவர்களின் மீது எவ்வித ஐயமும் எழுவ தில்லை. எனவே, தணிக்கையாளருக்கு இதனைக் கண்டுபிடித்துக் களைவது மிகவும் கடினமாக உள்ளது.

**நோக்கங்கள்:** பொய்க்கணக்குகள் பல்வேறு நோக்கங்களுடன் எழுதப்படுகின்றன. அவற்றைக் கீழ்க்காணும் இரு பிரிவுகளாகக் குறிப்பிடுவது வழக் கம்.

1. நிறுவனத்தின் ஆதாயத்தைத் தவறான நோக் கத்தோடுமிகுதியாக்கிக் காட்டுதல். அதற்கான நோக் கம்:

அ) ஆதாயத்தில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டு அளவைத் தரகாகவோ (Commission), ஊக்க ஊதிய மாகவோ (Bonus) உயர்நிலை நிருவாகிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற விதி இருப்பின், ஆதா யத்தை அதிகமாக்கிக் காட்டி அதிக அளவில் தரகை அல்லது ஊக்க ஊதியத்தைப் பெறும் நோக்கத்துடன் பொய்க்கணக்குப் புனையலாம்;

ஆ) தங்களுடைய திறமையினால்தான் நிறுமம் அதிக அளவிலான ஆதாயத்தை ஈட்டுகிறது என்று நிருவாகிகள் பங்குதாரர்களிடம் காட்டும் வகையில், தங்கள் ஆளுமையை நிலைநிறுத்திக்கொள்வதற்காகப் பொய்க்கணக்குப் புனையலாம்;

இ) உயர்பதவியில் உள்ள நிருவாகிகள் தங்கள் பங்குகளை அதிக விலைக்கு விற்பதற்குத் துணை யான நிலைகளைத் தோற்றுவித்துக் கொள்வதற் காகப் பொய்க்கணக்குப் புனையலாம்;

ஈ) பெரிய அளவிலான கடனுதவிகளைப் பெறுவ தற்காக உண்மை நிலையை மறைத்து மேம்பாடு அடைந்த நிலையில் இருப்பதாகக் காட்டிக்கொள்வ தற்காகப் பொய்க்கணக்குப் புனையலாம்;

உ) முதலீட்டாளர்களை முதலீடு செய்யத் தூண்டி, முதலீட்டாளர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதோடு முதலீட்டின் அளவையும் அதிகரிக் கும் நோக்கத்துடன் பொய்க்கணக்குப் புனைய லாம்;

2. குறைந்த அளவு ஆதாய நிலையைத் தவறான நோக்கத்தோடு காட்டுதல். அதற்கான நோக்கம்:

அ) ஆதாயம் குறைவான அளவில் இருந்தால், சிலநேரங்களில் வரித் தள்ளுபடிகள் அல்லது வரிச் சலுகைகள் போன்ற வசதிகளைப் பெற்றுப் பயனடை யலாம். எனவே, உண்மை நிலையை மாற்றிக் குறைந்த ஆதாயம்தான் கிடைக்கிறது என்று காட்டு வதற்காகப் பொய்க்கணக்குப் புனையலாம்;

ஆ) ஆதாயம் குறைவாக இருப்பின் அந்நிறுமத் தின் பங்குகளுக்கு அங்காடி விலை குறைந்துவிடும் ஆதலால், குறைந்த ஆதாயத்தைக்காட்டிக் குறை வான விலைகளில் பங்குகளைப் பெருமளவில் தாங்களே வாங்கிப் பயனடைவதற்காகவும் பொய்க் கணக்குப் புனையலாம்;

இ) வாணிகத்தில் வெற்றியைப் பற்றிய தவறான எண்ணத்தை அங்காடியில் உருவாக்குவதன் மூலம்

போட்டியாளர்களைக் குறைக்கும் அல்லது நீக்கும் நோக்கத்தில் பொய்க்கணக்குகளைப் புனையலாம்.

**பொய்க்கணக்குப் புனையும் முறைகள்:** பொய்க் கணக்குப் புனைய விரும்புவோர் கீழ்க்காணும் முறைகளில் ஏதாவது ஒன்று அல்லது பலவழிகளில் பொய்க் கணக்குப் புனைவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1) நிறுமத்தின் சொத்துகளுக்குத் தேய்மானத்தைக் (Depreciation) கணக்கிடாமல் விட்டுவிடுதல் அல்லது தகுதிக்குக் குறைந்த விழுக்காட்டளவில் கணக்கிட்டு அல்லது தகுதிக்கு அதிகமான அளவில் கணக்கிட்டுப் பொய்க்கணக்குப் புனைதல்;

2) உண்மையிலேயே கொள்முதலோ விற்பனையோ எதுவும் செய்யாமல், கொள்முதல் செய்ததாகவும் விற்பனை செய்ததாகவும் எழுதி அதன் மூலமாக ஆதாயம் அல்லது நட்டம் ஏற்பட்டதாகப் பொய்க்கணக்குப் புனைதல்;

3) சொத்துகளையும் (Assets), பொறுப்புகளையும் (Liabilities) அவற்றின் உண்மை மதிப்பிற்கு அதிகமாகவோ குறைத்தோ மதிப்பிட்டுப் பொய்க் கணக்குப் புனைதல்;

4) நிறுமம் அதற்குப் போதிய அளவுக்கு ஆதாயம் ஈட்டாத காலத்தில் பங்குதாரர்களுக்கு உண்மை நிலையைத் தெரிவிக்காமல் நிறுமத்தின் இரகசியக் கோப்பைப் (Secret Reserve) பயன்படுத்திப் பொய்க் கணக்குப் புனைதல்;

5) வருவாய்ச் செலவுகளை (Revenue Expenditure) மூலதனச் செலவுகளாக (Capital Expenditure) மூலதனக் கணக்கிலும், மூலதனச் செலவுகளை வருவாய்ச் செலவுகளாக வருவாய்க் கணக்கிலும் எழுதுவதன் மூலம் பொய்க்கணக்குப் புனைதல்;

6) ஆதாய நட்டக் கணக்கில் சேர்க்காமல் விட்டுவிட்ட ஒருசில வரவு இனங்கள் வந்து சேர்ந்திருக்கலாம். அவ்வரவுகளை வேண்டுமென்றே கணக்கில் சேர்க்காமல் விட்டுவிடுவதன் மூலம் பொய்க்கணக்குப் புனைதல்;

7) எதிர்காலத்தில் வந்து சேர்ந்து எதிர்காலக் கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டிய வருமான இனங்கள் முன்னதாக நடப்பு ஆண்டிலேயே வந்துவிடுவதுண்டு. அவற்றைத் தனியே எழுதிவைத்துக் கொண்டு நடப்பு ஆண்டின் கணக்கைக் கணிக்க வேண்டும். ஆனால் வேண்டுமென்றே அவ்வரவுகளையும் நடப்பு ஆண்டுக் கணக்கில் சேர்த்துக் கொண்டு பொய்க்கணக்குப் புனைதல்.

**தணிக்கையாளரின் கடமை:** நிறுவனத்தின் பங்குதாரர்களின் பதிலாள் (Agent) போல் தணிக்கையாளர்கள் செயற்படுதல் வேண்டும். தணிக்கையாளரின் ஒப்புதலையே பங்குதாரர்கள் முழுமையாக நம்புகின்றனர். எனவே இயக்குநர் அவையைப் (Board of Directors) பற்றிக் கவலைப்படாமல், இயக்குநர்களுடைய நடவடிக்கைகளை நன்கு சரிபார்த்தல் தணிக்கையாளரின் முதன்மையான பணியாகும். பொதுவாக, தணிக்கையாளர்கள் அறிவார்ந்த, மென்மையான விளக்கங்களைக் கேட்டு, அவற்றின் மூலம் மற்றவர்கள் மனதைப் புண்படுத்தாத அளவில், தகவல்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். பொய்க் கணக்குப் புனைவதைக் கண்டுபிடிப்பது தணிக்கையாளருக்கு ஒரு கடினமான பணியாக இருப்பது மெய்யாகவே இருப்பினும் அவர்தம் பணியின் சிறப்பு பொய்க்கணக்குப் புனைதலைக் கண்டுபிடித்துத் தவிர்ப்பதே ஆகும். ஏ.ர.

**துணை நூல்கள்:**

**Dinkar Pagare**, Principles and Practice of Auditing, Sultan Chand &Co.,Ltd., New Delhi,1974.

**Sharma,T.R.**, Auditing, Sahitya Bhavan, Agra, 1983.

**Tandon, B.N.**, A Handbook of Practical Auditing, Sultan Chand &Co., Ltd., New Delhi, 1981.

**பொய்க்கால் குதிரை ஆட்டம்:** கால்களில் ஏறத்தாழ 35 செ.மீ. உயரமுள்ள கட்டைகளைக் கட்டிக்கொண்டு, செய்தித்தாள், சாக்கு, காடாத் துணி, புளியங்கொட்டைப் பசை, பிரம்பு, இரும்புத் தகடுகள் என்னும் இவற்றால் ஆன பொய்க்குதிரைக் கூட்டை நாடாக்கயிற்றால் இணைத்துக் கட்டி ஆடுபவரின் இடுப்பு உயரத்தில் தொங்கும்படி தோளில் தொங்கவிட்டுச் சுமந்துகொண்டு, கோந்தளம் அல்லது நையாண்டி மேள இசைக்கேற்ப ஆடும் ஆட்டம் பொய்க்கால் குதிரை ஆட்டம் என்று கூறப்படுகிறது.

உண்மையான கால்களில் நின்று ஆடாமல், இரு கால்களிலும் கட்டைகளைக் கட்டிக்கொண்டு, பொய்யான காலில் அதாவது கட்டைக் கால்களில் நின்று கொண்டு, உண்மையல்லாத பொய்க்குதிரைக் கூட்டைத்தோளில் சுமந்துகொண்டு ஆடுவதால் இது பொய்க்கால் குதிரை ஆட்டம் என்று வழங்கப்படுகிறதெனலாம். பொய் என்னும் அடைமொழி முறையே கால், குதிரை என்ற இரண்டிற்கும் பொருந்துவதாக அமைந்து பொய்க்கால் குதிரை என வழங்கப்படுகிறது.

காலில் கட்டையைக் கட்டிக்கொள்ளாமல் வெறுங் காலில் சலங்கை கட்டிக்கொண்டு பொய்க்குதிரைக்

கூட்டைச் சுமந்துகொண்டு ஆடுவதும் உண்டு. மதுரைப் பகுதிகளில் இத்தகைய பொய்க்குதிரையாட்டம் இன்றும் வழக்கத்தில் உள்ளது. எனவே, அப்பகுதிகளில் இவ்வாட்டம் 'பொய்க்குதிரையாட்டம்' என்றே கூறப்படுகிறது. அப்பகுதிகளின் சில இடங்களில் இவ்வாட்டம் 'புரவியாட்டம்' என்றும் வழங்கப்படுகிறது.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) மாதவி ஆடிய 11 வகை ஆடல்களில் முன்பு துர்க்கை ஆடிய மரக்காலாடல் என்னும் ஒருவகை ஆடலும் இடம்பெற்றுள்ளது. 'மாயவ ளாடிய மரக்கா லாடலும்' என்பது அக்குறிப்பாகும்.

துர்க்கை, வஞ்சத்தால் பாம்பு, தேள் முதலிய விடப் பூச்சிகளாக உருவெடுத்துத் தனக்கு இன்னலை விளைத்துத் தன்னைக் கொல்லக்கருதிய அவுணர்களின் செயலை உணர்ந்து, தன் கால்களில் கட்டையைக் கட்டிக்கொண்டு அவர்கள் மிதிபட்டு மடியுமாறு ஆடிய ஆட்டமே மரக்கால் ஆடல் ஆகும். 'மரக்கால் கொண்டு ஆடுதலின் மரக்காலாடலாயிற்று' என்பது அடியார்க்கு நல்லார் உரை.

இவ்வாறு காலில் கட்டை கட்டி ஆடுதல் தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஆந்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், ஒரிசா போன்ற இடங்களிலும் காணப்படுகிறது.

**தமிழ்நாட்டுப் பொய்க்கால் குதிரையாட்டம்**: தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இப்பொய்க்கால் குதிரையாட்டம் முற்றிலும் பொழுதுபோக்கின் அடிப்படையில் தோன்றிய ஒரு கலையாகவே வழங்கி வந்துள்ளது. தமிழ்நாட்டில் பன்னெடுங்காலத்திற்கு முன்பே காலில் கட்டை கட்டிக்கொண்டு ஆடும் மரக்காலாடல் இருந்து வந்துள்ளதற்கான இலக்கியச்சான்று கிடைத்திருப்பதுபோல், காலில் கட்டைகளைக் கட்டிக் கொண்டு பொய்க்குதிரைக் கூட்டையும் சுமந்து கொண்டு பழங்காலத்திலிருந்தே ஆடி வந்துள்ளதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. தமிழ் மொழியின் தொன்மையான இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியத்தில் அகத்திணை இயலில் பெருந்திணைக்கு இலக்கணம் கூறும் நூற்பாவில் தலைவன் தான் விரும்பிய பெண்ணை மணக்கப் பெண்ணின் பெற்றோர் தடை விதித்த போது, பனை மட்டையால் குதிரைபோல் உருவம் செய்து அதனை உடலில் தாங்கிக் கொண்டு ஊர்த் தெருக்களில் வந்து தான் விரும்பும் பெண்ணைத் தனக்கு மணம் செய்விக்க வேண்டிய செயல் மடலேறுதல் என்னும் பெயரால் வழங்கப்பட்டுள்ளது. இது தொல்காப்பியத்தில் 'ஏறிய மடல்திறம்' என்று பேசப்படுகிறது. ஆனால், காலில் கட்டைகட்டிப் பொய்க் குதிரைக் கூட்டைச் சுமந்து ஓர் ஆடலாக ஆடப்பட்டதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. இன்றைக்கு 85 - ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழ் நாட்டில் இப்பொய்க்கால் குதிரையாட்டம் ஆடப்பட்டு வந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

**தமிழ்நாட்டுப் பொய்க்கால் குதிரையாட்டத்தின் தோற்ற வரலாறு**: தமிழகத்தில் தஞ்சையை அடுத்துள்ள திருவையாற்றில் வாழ்ந்த இராமகிருட்டிண நாயுடு என்பவர்தான் முதன் முதலில் பொய்க்கால் குதிரையாட்டத்தைக் கண்டுபிடித்து ஆடி வந்துள்ளார். அவர் முதலில் நாடகத்திற்குப் பயன்படும் மரத்தாலான புயக்கட்டை, மகுடம் போன்றவற்றைச் செய்து கொடுக்கும் கலைஞராக விளங்கினார். இதனால் நாகப்பட்டினத்தில் 1910 களில் அல்லா பிச்சை என்பவரால் எழுதப்பெற்று நடத்தப் பெற்ற அப்பாசு என்ற நாடகத்தை அவர் காணும் வாய்ப்பு ஏற்பட்டது.

அந்நாடகத்தில் வரும் அப்பாசு மன்னன் நாடு கடத்தப்பட்டுச் சிந்து தேசத்திற்கு வருகிறான். அவன் குதிரையில் வருவதாகக்காட்சியை அமைக்க, மூங்கில் சிம்புகளால் குதிரையின் உடல் போல் தோன்றும்படியான ஒரு கூட்டைத் தயாரித்தனர். கல்யாண முருங்கை மரத்தைச் செதுக்கிச் செய்த குதிரை முகத்தில் வண்ணம் தீட்டிக் கண்ணாடிகளைப் பதித்து, வண்ணத் தாள்கள் ஒட்டி ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டுள்ள குதிரைக் கூட்டில் பொருத்திக் கட்டி, குதிரைக்கூடு போல் தோன்றும் அதனை அப்பாசி மன்னன் இடுப்புயரத்திற்குத் தொங்குமாறு கழுத்தில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு அதன் மேல் அரச உடை அணிந்து வருவானாம். இராச உடையை மேலாடையாக அணிந்து கொள்வதால் குதிரைக் கூட்டை உடம்பில் கட்டி இருப்பது மறைக்கப்படுமாம். அதனால் அவன் குதிரை மேல் ஏறி வருவது போன்று தோன்றுமாம். அந்நாடகத்தில் அப்பாசு மன்னன் பொய்க் குதிரையில் தார்மால் நகருக்கு வந்து பகுபீர் மன்னன் மகள் ஞானரஞ்சித வள்ளியின் கேள்விகளுக்கு விடை சொல்லி அவளை வென்று மணந்து வருவதாக அமைந்த நாடகக் காட்சி பின்னர்த் தனிக்கலை நிகழ்ச்சியாகவே நடத்தப்பட்டு வந்தது. நாகப்பட்டினத்தில் இன்றும் இக்கலை நிகழ்ச்சி மொகரம் பண்டிகையின் 15 நாள் களிலும், திருமண நிகழ்ச்சிகளின் போதும் இடம் பெற்று வருகிறது.

அந்நாடக நிகழ்ச்சியில் இடம்பெற்ற குதிரை வடிவைக் கவனித்த இராமகிருட்டிண நாயுடு, மூங்கில் சிமிறால் குதிரைக் கூட்டையும் குதிரைத் தலையையும் பின்னி அதன்மேல் தாள்கள், துணி ஆகியவற்றை ஒட்டித் தங்கநிற'ரேக்குத்தாளை'க் குதிரையின் முகம்





உட்பட அனைத்துப் பகுதிகளிலும் ஒட்டி இருப்பார். குதிரையின் நெற்றியிலும் இரு காதுப் புறங்களிலும் சதுரக் கண்ணாடிகளைப் பதித்திருப்பார். குதிரை நெற்றியின் மத்தியில் சிவப்பு அல்லது பச்சைக் கண்ணாடி பதித்திருப்பார். குதிரையின் கழுத்தின் அடியில் பதக்கம் அணிந்து இருப்பது போல் சிவப்பு பச்சைக் கண்ணாடிகளால் கண்ணாடி வேலைப்பாடு களைச் செய்திருப்பார். கடிவாளப் பகுதிக்கும், கடைவாயிலிருந்து காது வரைக்கும் கண்ணாடிப் பட்டைகளைப் பதித்திருப்பார். கடைவாயின் இரு புறத்திலும் இரும்பு வளையம் போட்டுக் கயிற்றைக் கடிவாளம் போலக் கட்டிக் கையில் பிடித்து ஆடி யுள்ளார்.

குதிரைக் கூட்டின் நடு உடலில் ½ மீட்டருக்கு ½மீட்டர் சதுரத்துளை செய்து அதன் வழி யாகத்தான் புகுந்து கொண்டிருப்பார். குதிரைக் கூடு ஏறத்தாழ 8 மீ. நீளமும் 7½மீ. உயரமும் கொண்டதாக இருக்கும். குதிரையின் பின்புறம் வால் பகுதியில் பெண்கள் அணியும் சவுரிமுடியைக் குதிரை யின் வாலாகப் பயன்படுத்துவார். குதிரையின் அடிப்பாகத்தில் கால் கட்டை மறையத் துணி வைத்துத் தைத்திருப்பார். இராசா உடையணிந்து கடுக்கண், மணிமாலைகள் முதலியன அணிந்து, மன்னர் போல் பெரிய மீசை வைத்துக்கொண்டு ஆடி இருக்கிறார். சிவாசி மன்னன் வேடம் தவிர வேறு எந்தவேடமும் அவர் போடவில்லை. தஞ்சையில் குடி யேறி வாழ்ந்து கொண்டிருக்கும் மராட்டியர்கள் தங்கள் வீட்டுப் பூசைக் காரியங்களுக்கு இசைத்து வரும் கோந்தளம் என்னும் இசைக்கருவியின் இசை யைத் தம் பொய்க்கால் குதிரையாட்டத்திற்குப் பக்க இசையாகப் பயன்படுத்திக் கொண்டார். தஞ்சை கோந்தளக்காரத் தெருவில் வாழும் கோந்தளக் காரர் கள் இவருக்குப் பக்க இசை வாசித்துள்ளனர்.

இப்பொழுது பொய்க்கால் குதிரையாட்டத்தில் பயன்படுத்தப்படும் பொய்க்குதிரைக் கூடு களிமண் ணால் நிலத்தில் குதிரை படுத்திப்பது போல் அச்சு செய்து அதன்மேல் செய்தித்தாள், காடாத்துணி, சாக்கு, புளியங்கொட்டைப் பசை ஆகியவற்றால் பல அடுக்குகள் ஒட்டப்பட்டு அவை நன்றாகக் காய்ந்த பின் களிமண் அச்சிலிருந்து பிரித்தெடுத்து, கோந்தும் சாக்கு மாவும் கலந்த பசையால் மேடு பள்ளமின்றி நிரப்பப்பட்டுக் கண்ணாடி வேலைப் பாடுகள் செய்து குதிரையின் உடலாகிய - பொய்க் குதிரைக் கூடு தயாரிக்கப்படுகிறது. குதிரையின் தலை இவ்வாறே களிமண் அச்சிலிருந்து தனியாகத் தயாரிக்கப்பட்டுக் கண்ணாடி வேலைப்பாடுகள் செய்யப்படுகின்றன. பொய்க்குதிரை உடலுடன் பொய்க்குதிரைத் தலையை வேண்டும்போது இரும்பு இணைப்பால் இணைத்துக் கொண்டு, பயன்படுத்திய பின் தனியாகப் பிரித்தெடுத்து வைத்துப் பேணுகின் றனர்.

ஆட்டக் கலைஞர் பொய்க்குதிரைக் கூட்டில் சேணம் பொருத்தப்படும் இடத்தில் நீண்ட சதுர வடிவில் உண்டாக்கப்பட்டுள்ள இடைவெளி வழி யாகத் தம் தலையைப் புகுத்திக் குதிரைக் கூட்டிற்கு வெளியே கொண்டு வருகிறார். அதன்பின் அவ்விடை வெளியின் இரு பக்கவாட்டிலும் உள்ள மேற்புற விளிம்புகளில் பொருத்தப்பட்டுள்ள நாடா வளையங் களில் தலையை நுழைத்து இடப்பக்க நாடா வளை யம் வலப்புறத் தோளிலும், வலப்பக்க நாடா வளை யம் இடப்புறத் தோளிலும் படியும்படிச் செய்து பொய்க்குதிரைக்கூடு தம் இடுப்பிற்குக் கீழ்ப்பொருந் தும்படி தோள்களில் அணிந்து கொள்கிறார். நாடா வின் உதவியால் ½மீ. உயரமுள்ள கால்கட்டைகளை காலோடு சேர்த்துக் கட்டிக்கொண்டு ஆடுகிறார். இவ்வாறு பொய்க்குதிரைக் கூட்டைத் தோள்களில் சுமந்து ஆடுவது ஒருவர் குதிரை மேல் அமர்ந்து ஆடு வது போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது. கால் களில் கட்டப்படும் கட்டைகளின் அடிப்பாகத்தில் இரும்பாலான பூண்கள் பொருத்தப்பட்டிருப்பதால் ஆடும்போது அக்கால் கட்டைகளால் எழுப்பப்படும் ஒலி உண்மையான குதிரையின் குளம்பு ஒலியை ஒத்ததாகவே அமைந்துள்ளது. இவ்வாட்டக் கலைஞர் கள் கட்டைகள் கட்டப்பட்ட கால்களில் கணுக்கால் களுக்கு மேற்பகுதிகளில் சலங்கைகளைக் கட்டிக் கொண்டு ஆடுகின்றனர். அவர்கள் நடைபோட்டு ஆடும்பொழுது எழுப்பப்படும் சலங்கை ஒலி அவர்கள் ஆட்டத்திற்கு மெருகூட்டவும் நடையின் தாளத்தைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது .

குதிரைக்கூட்டின் கீழ்ப்புற விளிம்புகளில் இணைக்கப்பட்டுத் தொங்கவிடப்பட்டுள்ள துணி ஆட்டக்கலைஞரின் கால்களை மறைத்து மரக்கால் கள் மட்டும் தெரியும் வகையில் அமைந்து இருப்ப தால் ஆட்டக்கலைஞர் குதிரையில் அமர்ந்து சவாரி செய்து கொண்டு ஆடுவது போன்ற தோற்றத்தைக் கொடுப்பதற்கு மேலும் வாய்ப்பாக அமைந்துள்ளது. குதிரையைத் தாங்கியுள்ள நாடா தோளில் குறுக்கு நெடுக்காகக் கோக்கப்பட்டிருப்பினும் மேல் சட்டை போட்டவுடன் அது மறைக்கப்பட்டு விடுவதால் குதிரையில் அமர்ந்தாடுவது போன்ற தோற்றம் முழு மையாகக் கிடைத்து விடுகிறது. ஆண் கலைஞர் மராட்டிய மன்னர்போல் உடையணிந்து தலையில் தலைப்பாகை அணிந்து ஆடுகிறார். பெண்கலைஞர் மராட்டிய அரசி போல் உடையணிந்து ஆடுகிறார்.

இவ்வாட்டக் கலைஞர்கள் இதற்காக விலையுயர்ந்த தங்க வண்ணத் துணிகளில் 'சிகினா' இழைகளால் பின்னப்பட்ட பூ வேலைப்பாடுகள் கொண்ட துணிகளால் தைக்கப்பட்ட மேலாடைகள் அணிகின்றனர். நெகிழியாலான (Plastic) பல வண்ண மணிகளைக் கழுத்து மணிகளாக அணிந்து கொள்கின்றனர். அதனால் ஆண், பெண் குதிரையாட்டக் கலைஞர்கள் அரசன் அரசி போல் அழகாகக் காட்சியளிக்கிறார்கள். அதாவது மராட்டிய மன்னரும் அரசியும் குதிரைகளில் அமர்ந்து ஊர்வலம் வருவது போல் தங்களை அலங்கரித்துக் கொண்டு ஆடுகின்றனர்.

தமிழ்நாட்டில் முதலில் தஞ்சையில் தோற்றுவிக்கப்பட்டு ஆடப்பட்டு வந்த நடனத்தில் முதலில் ஒரு ஆண் குதிரையாட்டக் கலைஞர் மட்டும் இடம் பெற்று வந்தார். காலப்போக்கில் அரச வேடந்தாங்கிய ஆண் பொய்க்கால் குதிரையாட்டக் கலைஞருடன் அரசி வேடந்தாங்கிய பெண் பொய்க்கால்குதிரையாட்டக் கலைஞரும் சேர்ந்து ஆடத் தலைப்பட்டனர். அன்றிலிருந்து இன்று வரை தஞ்சையில் ஆடப்பட்டு வரும் பொய்க்கால் குதிரையாட்டத்தில் அரசன் அரசி வேடந்தாங்கிய ஆண், பெண் பொய்க்கால் குதிரையாட்டக் கலைஞர்கள் மட்டுமே பங்கு பெறுகின்றனர்.

**பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் ஊமைக் கூத்து:** பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் சில நாடகப் பாங்கான காட்சிகளை ஊமைக்கூத்து முறையாக நிகழ்த்தும் முறையும் உண்டு. பொய்க்கால் குதிரையாட்டத்தில் இராசா இராணியுடன் இளவரசன், இளவரசி உலா வருவதாகப் படைத்து இரண்டுக்கு மேற்பட்ட பொய்க்கால் குதிரைகளை இந்நிகழ்ச்சிகளில் புகுத்தியுள்ளனர்.

தமிழகப் பொய்க்கால் குதிரையாட்டத்தில் அரசனும் அரசியும் உலா வருவது போன்ற நிலையில் ஆடுகளத்தைச் சுற்றி அரச, அரசி நடையில் கம்பீரமாக மூன்று நான்கு முறை நடந்து வருகின்றனர்.

பொய்க்கால் குதிரையாட்டம் தமிழ்நாட்டில் திருவிழாக் காலங்களிலும், சிற்றூர்ப் பண்டிகைகளிலும், திருமண ஊர்வலங்களிலும், அரசியல் ஊர்வலங்களிலும், அரசியல் மாநாடுகளிலும் இடம் பெற்று ஆடப்பட்டு வருகிறது. கு.மு.

**பொய்கையார்** சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பாட்டில், 'கள் நாறும்மே கானலம் தொண்டி; அது எம் ஊரே' (புறம்.48) என்று வரும் சொற்றொடர் கொண்டு இவருடைய ஊர் மலைநாட்டிலுள்ள 'தொண்டி' என்பர் சிலர். இதனை, தாம்பாராட்டும் அரசனே தம் உறவினன், அவன் நாடே தம் நாடு, அவன் ஊரே தம் ஊர் என உரைத்தல் புலவருடைய வழக்கமாதலால், பொய்கையார் இவ்வாறு கூறுவது கண்டு அவர் ஊர் தொண்டி நகர் என்று கொள்ளுதல் பொருந்தாது என்று கூறி மறுத்து, இவருடைய ஊர் 'பொய்கை' என்பர் வேறு சிலர்.

இவர் சேரமான் கணைக்காலிரும் பொறையின் அவைக்களப் புலவராவார். சேரன் கணைக்காலிரும் பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் (கோச் செங்கட்சோழன்) பகைமை மேலிட்டதனால் இருவரும் வெண்ணிப் பறந்தலை (கோயில் வெண்ணி) என்னுமிடத்தில் கடும் போர் புரிந்தனர். அப்போரில் சோழன், சேரனைத் தோல்வியடையச் செய்து அவனைப் பிடித்துக் குடவாயிற் கோட்டத்தில் சிறையிட்டான். அதையறிந்த பொய்கையார் சோழனது வெற்றியைச் சிறப்பித்துக் 'களவழி நாற்பது' எனும் ஒரு நூலியற்றி அதனைச் சோழனது அவைக்களத்தில் அரங்கேற்றி அவ்வரசனை மகிழ்வித்துத் தம் அரசனை மீட்டுக் கொண்டார். பொய்கையாரின் நன்றி மறவாத இச்செயலைச் 'செய்கையரிய களவழிப்பா முன்செய்த, பொய்கை யொருவனாற் போந்தரமோ' (பழம்பாடல்) என்றும், 'களவழிக்காதை பொய்கையுரை செய்ய, உதியன் கால்வழித் தளையை வெட்டியரச சிட்டபரிசும்' (கலிங்கத்துப் பரணி) என்றும், 'இன்னருளின் மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப் பாதத்தளைவிட்ட பார்த்திபனும்' (விக்கிரம சோழனுலா) என்றும், 'பொறையனைப் பொய்கைக் கவிக்குக் கொடுத்துக் களவழிப் பாக் கொண்டோனும்' (குலோத்துங்க சோழனுலா) என்றும், 'பொய்கை களவழி நாற்பதுக்கு வில்லவன் காற்றளையை விட்டகோன்' (இராசராச சோழனுலா) என்றும் புலவர்கள் பாராட்டியுள்ளனர்.

இவரால் பாராட்டப்பெற்ற மற்றோர் அரசர் சேரமான் கோக்கோதை மார்பன் என்பவராவார் (புறம்.48,49). கோக்கோதை மார்பனுக்குரிய நாடு மருதவளம், நெய்தல் வளம் முதலான பல்வேறு வளத்தினைப் பெற்று விளங்குவதைப் பாராட்ட விரும்பிய புலவர், 'கோதையைக் குறிஞ்சி நிலத் தலைவனுக்குரிய பெயராகிய 'நாடன்' என்ற பெயரிட்டு அழைப்பேனோ? மருத நிலத் தலைவனைக் குறிக்க வழங்கும் 'ஊரன்' என்ற பெயரிட்டு அழைப்பேனோ? நெய்தல் நிலத் தலைவனுக்குரிய 'சேர்ப்பன்' என்ற பெயரிட்டு அழைப்பேனோ? என்று கூறிப் பாராட்டுகிறார். அவன் நாட்டில் குறிஞ்சி நிலக் குறமகளிர், தம் புனத்தில் விளைந்திருக்கும் தினையினை உண்ணவரும்பறவைகளை ஓட்டத் தம் கையில் உள்ள தட்டை என்ற கிளிகடி கருவியைத் தட்டி ஒலி செய்

தாராக, அவ்வொலி கேட்டு, கதிர்கள் முற்றித் தலை சாய்ந்து கிடக்கும் கழனிகளில் உள்ள பறவைகளும் கடலைச் சார்ந்த கழிகளில் உள்ள பறவைகளும் அஞ்சிப் பறந்து ஓடும் என்றும் நயம்படத் தம் பாட்டில் (புறம்.49) கூறியுள்ளார்.

தம் அரசன் கணைக்கால் இரும்பொறை, மூவன் என்ற பெருவீரன் ஒருவனை வென்று அவன் பல்லைப் பிடுங்கிக் கொண்டு வந்து தன் வெற்றிக்கு அறிகுறியாகத் தன்னுடைய தலைநகராகிய தொண்டி நகரின் கோட்டை வாயிற்கதவில் அழுத்தி வைத்த சிறப்பினைப் பொய்கையார், 'மூவன், முழுவலி முள் ளெயிறு அழுத்திய கதவின், கானலம் தொண்டிப் பொருநன் வென்வேல், தெறலருந் தானைப் பொறையன்...' (நற்.18) என்று பாராட்டியுள்ளார்.

கடைச்சங்கப் புலவரும், களவழி பாடியவரும் ஆகிய இப்பொய்கையாரும், 'முதலாழ்வார் மூவர்' எனச் சிறப்பிக்கப் பெறுவாருள் ஒருவராகிய பொய்கை யாழ்வாரும் ஒருவரே என்று ஒரு சிலர் கூறுவர். வேறு சிலர், மறந்தும் புறந்தொழா மாந்தராகிய ஆழ்வார்களுள் முதல்வராகிய பொய்கையாழ்வார் மக்களைப் பாடியிரார்; அதிலும், சோழன் செங்கணானாகிய சிறந்த சைவன் ஒருவனைப் பாடியிரார்; ஆதலின் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பொய்கையார் வேறு, முதலாழ்வார்களுள் ஒருவராகிய பொய்கையாழ்வார் வேறு என்று கூறி மறுத்துரைப்பர்.

இவர் பாடியனவாக யாப்பருங்கலவிருத்தியுரையில் சில வெண்பாக்களும், பன்னிரு பாட்டியலில் சில சூத்திரங்களும் காணப்படுகின்றன. பா.ந.

**பொய்கை யாழ்வார்**: சங்ககாலத்திலேயே வைணவத் தத்துவங்கள் இலக்கியங்களில் நிலைபேறு கொண்டுள்ளன. பரிபாடலில் வரும் திருமால்பாடல்கள் சங்கப் புலவர்கள்தம் பக்திக்குத் தக்க சான்றாம். எனினும், வைணவ பக்தி இயக்கத்திற்குக் கால்கோள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு ஆகும். வைணவம் சிறப்புறத் தொடங்கியதும் அப்பொழுதே. பல்லவர் காலத் தொடக்கமும் (கி.பி. 590 – 618: சிம்மவிட்டுணு) உறுதுணையாயிற்று. தொண்டைநாடுசான்றோருடைத்து என்ற வாக்கிற்கேற்பப் பல சான்றோர் தோன்றினர். உயிர்களின் அவலம் அழியும்பொருட்டு இறைவனின் துணைவி, பூணும் ஆயுதங்கள் பூமியில் ஆழ்வார்களாகவும் ஆசாரியர்களாகவும் அவதாரம் செய்தனர்.

சங்கின் கூறாகத் தோன்றியவர் பொய்கையாழ்வார். இவர் கி.பி. 6 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காஞ்சிபுரத்தில் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசி மாதம் வளர்பிறை எட்டாம்நாள் செவ்வாய்க்கிழமை திருவோண விண்மீனில் சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயிலை அடுத்துள்ள பொய்கைபூத்த தாமரைப் பூவில் தோன்றினார். பொய்கையிடமாகத் தோன்றியதால் பொய்கையார் என்ற பெயர் பெற்றார்.

இவர் பாடியது முதல்திருவந்தாதி; நூறு பாடல்கள் உடையது. பேராசிரியர், நச்சினார்க்கினியர் 'விருந்து' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை கூறும்போது 'முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலானோர் செய்த அந்தாதிச் செய்யுள்' என்று நான்முறை உதாரணம் காட்டுவர் (தொல். செய். 231-பேரா. நச்சி.உரை). வெண்பாவில் அமைந்த அந்தாதித் தொடை என்ற செய்யுள் மரபை நோக்கும்போது காலத்தால் முற்பட்டவர் என்பது பொருந்துவதாக உள்ளது.

இவர் உலக இயற்கையின்கண் இறைவனைக் கண்டவர்; புறக்காட்சி அமைப்பாகவே இறைவனை வழிபட்டார். இவர் வடவேங்கடத்தானிடம் ஆராக் காதல் கொண்டு திளைத்தவர். பக்திக்கு நெறியைச் சொன்னவர் (மு.தி. 5);அந்த உணர்வு வெளிப்படவும் பாடியவர். சிவன் திருமாலைப் பாடி அவர்களை ஓர் உருவாகக் காணும் சமயப் பொறையுடையார் (மு.தி. 4,5, 32,44,47,74,97,98). பக்திப்பாடலில் நீதி நூல் கருத்திட்டு நெறியும் படுத்தினார் (மு.தி.79). தம் நெஞ்சுக்குத் தாம் கூறுவதுபோல் கூறி, உலக நெஞ்சைத் தொட்டார் (மு.தி.99).

தாயை நாடும் கன்றாய் இறைவனை அடைந்தவர் (மு.தி.30). உள்ளமும் புறமும் அவனைப் பாடுதற்கே(மு.தி.63) என்ற மன உறுதிபடைத்தவர். கண்ணும் செவியும் இறைவனின் பெருமையைக் காணவும் கேட்கவும் உள்ளன வெனும் தீவிரப் பற்றாளர். பிணி, மூப்பு, சாக்காடு (மு.தி.71) என்ற மெய்நெறியை உணர்த்தியவர்.

இறைவனை ஐம்பூதமாகக் கண்டு (மு.தி.73) அதையே வழி பாட்டுப் பொருளாகவும் படைத்தார் (மு.தி.1). ஒவ்வோர் ஊரிலும் உள்ள கோயிலில் இறைவனின் தோற்றம் எந்த எந்த வண்ணம் உள்ளதெனப் பாடியவர் (மு.தி.77) பொதுவான அடியவர் போன்று இறைவனுக்கு மலர்சூட்டி வழிபடும் முறையில் நிறைவு பெறாத இவர், ஐம்பூதத்தையே வழிபாட்டுப் பொருளாக்கிச் சொன்மாலை சூட்டியவர். புறக்காட்சி வழியே அகத்துள் இறைவனைப் பெய்கின்றார். சமயக்காழ்ப்பு இல்லை; இருந்திருப்பின் சைன, பௌத்தத்தாக்கம் இருந்திருக்கும். பிற்காலமே இத்தாக்கத்திற்கு இலக்காயிற்று. இவர் காலப் பழமையுடையவர்.

பொய்கை யாழ்வாருடன் ஒருங்கு எண்ணத்தகுந்தவர்கள் பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும்

இருவர். இம்மூவரும் ஒரே காலத்தவர்; தொண்டை நாட்டவர்; வேதியர் குலத்தைச் சார்ந்தவர்கள். இருப்பினும் இவர்கள்தம் இயற்பெயர் மறைந்திட மக்கள் இட்ட காரணப்பெயரே நிலைத்து விட்டது. ஆழ்வார்களுள் பத்தி இயக்கம் தொடங்கியவர்கள் இவர்களே.

நான்முகனைப் படைத்தல்(மு.தி.28), யானையைக் காத்தல் (மு.தி.29), குன்றமெடுத்தல் (மு.தி.54), ஆன்மேய்த்தல் (மு.தி. 54), புள்வாய்கீண்டல்(மு.தி. 54), இரணியனை அழித்தல்(மு.தி.36), இராவணனை அழித்தல் (மு.தி.35), அரவம் விட்டிறுத்தல் போன்ற இறைவனின் செயல்களைப் பாடியவர். தம்மை ஆண்டவனுக்கே ஆள் என்று அறிவித்தவர் (மு.தி. 80).

பொய்கையாழ்வார் ஊர் தோறும் இறைவன் பெருமையைப் பரவிவருங்காலத்து ஒருசமயம் தென் பெண்ணை ஆற்றங்கரையில் உள்ள திருக்கோவலூர் வந்தார். இதே தொண்டு செய்து கொண்டு வரும் மற்ற இரு ஆழ்வார்களான பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் தங்களுக்கே அவ்லூர் வருவது அறியாதவர்களாய் வந்து அவ்லூர் இறைவனை வழிபட்டு வெவ்வேறு இடங்களில் எழுந்தருளியிருந்தார்கள். அன்றிரவு நெருங்கியதும் பொய்கையாழ்வார் ஒரு அடியவர் திருமாளிகைக்குச் சென்று அதன் இடைகழியில் படுத்துக் கொண்டிருந்தார். பிறகு பூதத்தாழ்வாரும் தங்குவதற்கு இடம் தேடி அங்கு வந்து, அடியேனுக்குப் படுக்க இடமுண்டோ என்று வினவ, ஒருவர் படுக்கவும் இருவர் உட்காரவும் ஏற்புடைத்து என்று சொல்ல இருவரும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டனர். அவ்வளவு நெருக்கமான இடம் அது. சற்று நேரம் கழித்துப் பேயாழ்வாரும் அவ்வாறே இடம்தேடி வந்து, அவ்விருவரும் இருக்குமிடம் வந்தடைந்தார். அவர்க்கும் ஒருவர் படுக்கவும் இருவர் உட்காரவும் மூவரானால் நிற்கவுமுமே வசதியுள்ளது என்று விடைபகர அம்மூவரும் சேர்ந்து அவ்வண்ணமே நின்றுகொண்டிருந்தனர்.

இதை அறிந்த இறைவன், அவர்கள் மூவரும் நிற்பதற்குக் கூட முடியாத அளவுக்கு மிகுந்த நெருக்கமுண்டாக்கினார். அம்மூவரும் இடநெருக்கடியைத் தாங்க முடியாதவர்களாய் இது என்ன காரணம் என்று ஞானத்தால் நோக்குங்கால் திருமால் இலக்குமியோடு திருக்காட்சி வழங்கினார்.

மூவரும் தங்கள் திருவடியை மறவாதிருக்கவும் சீரடியார்களுடன் கூடியிருக்கவும் கருணை அருள வேண்டி மகிழ்ச்சிக் கண்ணீர் மலைந்தனர். இறைவனும் உலக உயிர்கட்கு ஞானமேற்றி எம்மிடம் வாருங்கள் என்று கருணை சுரந்தார்.

உடனே பொய்கையாழ்வார் 'வையந்தகளி' என்று முதல் திருவந்தாதி தொடங்கினார். அவ்வண்ணமே பூதத்தாழ்வாரும் இனிய செந்தமிழில், 'அன்பே தகளி' என்று இரண்டாந் திருவந்தாதி தொடங்கினார். பேயாழ்வாரும் காண அரிதான இறைவனைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியால் வேதங்களை வெல்லும் இனிய செந்தமிழில் 'திருக்கண்டேன்' என்று மூன்றாம் திருவந்தாதி முழங்கினார்.

பிற்றைவரும் ஆழ்வார்கள் யாவர்க்கும் முதன்மையிற் தோன்றியதால் 'முதலாழ்வார்கள்' என்று சிறப்புற்றனர். நாக்கொண்டு மானிடம் பாடாது இறைவனுக்கெனப் பாடல் செய்து பரவியவர்களும் இவர்களே. க.ந.

**பொய் பேசுதல்**: பொய் என்ற சொல் நெறிமுறை (Ethics) சார்ந்த கருத்துச் சொல். தெரிவிக்கப்படும் கருத்து பார்த்ததொன்றையோ, உணர்ந்த தொன்றையோ கேட்டதொன்றையோ பற்றியதாக இருக்கலாம். என்ன ஒருவர் பார்த்தாரோ உணர்ந்தாரோ கேட்டாரோ அதை அப்படியே கூறுவதோ விவரிப்பதோ மெய்யாகும். ஆனால் அவர் அதற்கு மாறாகக் கூறுவாரானால் அது பொய்யாகும். மெய் தோன்றிய போதே பொய்யும் தோன்றியிருக்க வேண்டும். அல்லது மனிதன் பேசக் கற்றுக் கொண்ட போது தோன்றியிருக்க வேண்டும்.

பொய் பேசுதல் ஒருவரின் தேவையை ஒட்டி எழுந்த ஒரு கற்பனைத் துலங்கலாகும். மொழியின் மூலம் கல்வி கற்கின்றவர்களுக்குப் 'பொய் பேசு' என்று யாரும் கற்றுத் தருவதில்லை. 'பொய் பேசாதே' என்றும் 'திருடாதே' என்றுந்தான் கற்றுத் தரப்படுகிறது. எதைச் செய் என்று கற்றுத் தரப்படுகின்றதோ அதைவிட்டு, எதைச் செய்யாதே என்று கற்றுத்தரப்படுகின்றதோ அதை மனிதர்கள் செய்கின்றார்கள். உளவியல் பரிசோதனைக் கூடங்களில் கற்றலைப் பற்றிப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. எலி, பூனை, நாய், குரங்கு போன்ற மிருகங்களும் மனிதர்களும் பரிசோதனைக்கு ஆட்படுத்தப்படுகின்றனர். மிருகங்கள் விதிகளின் படி துலங்குகின்றன. மனிதன் விதிகளை மீறித் துலங்குகின்றான். ஒரு துலங்கலை ஒரு மிருகம் சரியாகச் செய்யுமானால் ஒரு பரிசு (உணவு) தரப்படுகிறது. எனவே, அந்தப் பரிசைப் பெறும் பொருட்டு அம் மிருகம் கற்றுத்தந்த விதிப்படியே துலங்கிக் கொண்டிருக்கிறது. உண்மைக்கு மாறான சொல்லும் செயலும் ஒன்றுதான். இங்குப் பொய் செயலுருவில் நடைபெறுகிறது. பொதுவாகக் கடமை தவறுகின்றவர்கள் (Delinquents) பொய் மிகுதியாகப் பேசுகிறார்கள். கற்பனை உலகத்தில் வாழ்ந்து வருகின்ற

வர்கள் மிகுதியாகப் பொய் பேசுகின்றனர். குமரப் பருவத்தினர் மிகுதியாகப் பகற்கனவுகள் காணு கின்றனர். இதனால் அவர்கள் பொய் பேசுவதைக் கலையாகக் கருதுகின்றனர்.

உளவியல் முறைப்படி பார்த்தால் பொய் பேசுதல் ஒரு வகையான உள நோயியலின் அறிகுறி என்று கூறுகின்றனர். எல்லோரும் எல்லா நேரங்களிலும் பொய் பேசுவதில்லை. ஆனால், சிலர் பெரும்பாலும் பொய்யே தான் பேசுகின்றனர். அவர்கள் நோய்க் குறியை வெளிப்படுத்துகின்றனர். சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) என்பவர் இப்படிப்பட்டவற்றை 'அன்றாட வாழ்க்கையின் உளநோயியல்' (Psycho-pathology of Everyday Life) என்ற நூலில் விளக்கியுள்ளார். இது ஒரு குற்றச் செயலாகக் கருதப் படுகிறது. பொய் பேசுவதன் மூலம் எவ்வளவோ தீமைகள் நடைபெறுகின்றன. இது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத நடத்தையாகும். எப்போதும் பொய் பேசுகின்றவனைச் சமூகம் புறக்கணிக்கின்றது; குற்றவாளியாக அவனைக் கருதுகிறது. எனவே, பொய் பேசுகின்றவர்கள் இரண்டு வகைகளில் அடங்கு கின்றனர். அவர்கள் சமூகவிரோத ஆளுமையினர் (Antisocial Personality) என்றும், உளநோயியல் சார் ஆளுமையினர் (Psychopathic Personality) என்றும் கூறப்படுவர். ஆனால், அண்மைக் காலத் தில் இந்த இரண்டும் ஒன்றுதான் என்று கருதப் பட்டதால் இரண்டையும் ஒன்றாக இணைத்துச் சமூக விரோத உளநோயியல் ஆளுமையினர் (Antisocial and Psychopathic Personality) என்று கூறுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் மனிதர் களிடையே ஏற்படும் தொடர்வுறவுகளில் கடுமை யான துன்பங்களுக்கு ஆளாகின்றனர். சமூகத்தோடு இவர்கள் தொடர்ந்து முரண்பாடுள்ளவர்களாக இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் குறை மனமு டையவர்கள் என்றோ நரம்புப் பிணியாளர் என்றோ உளப்பிணியாளர் என்றோ வகைப் படுத்தப் படவில்லை. ஆனால், இவர்களுடைய முக்கிய குணப் பண்புகள் நெறிமுறையின்மை, ஒழுக்கமின்மை, சமூ கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை முறை களைப் பின்பற்றத் தவறுதல் முதலியவையாகும். இவர்கள் சமூக ஒழுக்க முறைகளையும் சமூகப் பொறுப்புகளையும் ஏற்று நடப்பதில்லை. உறவினர் களிடமோ நண்பர்களிடமோ தங்களுடைய கூட்டத் தினரிடமோ சமூகத்தினிடமோ குறிப்பிடத்தக்க அள வுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள் வதில்லை. இத்தகைய நடத்தையில் மனிதர்களிடம் வேறுபாடு இல்லை. எந்த வகையான மனிதர் களாக இருந்தாலும் இந்தச் சமூக விரோத ஆளு மைக் குணப்பண்பு இயங்கலாம். சுயநலத்தை முன் னிட்டோ ஆளுமைக் கோளாறு காரணமாகவோ யாரும் எந்த அளவுக்கும் பொய்யைக் கற்பனை செய் யலாம். பொய் பேசுபவரின் கற்பனை கட்டுப்பாடில் லாதது; ஆக்கச் சிந்தனை நிறைந்தது; ஆனால், நெறி பிறழ்ந்தது. பொய் பேசுவோர் குற்றவாளிகளாக இருப்பதால் அவர்கள் தொடர்பு கொண்ட குற்றங் களைக் கண்டறியும் பொருட்டுப் பொய்மானி (Polygra-ph) என்ற கருவியொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். அது உளவியல் சோதனைக் கூடங்களில் பயன்படுத் தப்படுகின்றது. சோதனையின்போது ஒருவர் பேசுவது உண்மையான செயலோடு முரண்படுவதின் மூலம் பொய்யைக் கண்டுபிடிக்கின்றனர். கடமை தவறும் மனப் பாங்குதான் பொய் பேசுவதற்கு முக்கிய அடிப்படைக் காரணமாக இருக்கிறது. ஏனென்றால் கடமை தவறுவதை அவர் ஏற்றுக் கொள்வதில்லை. எனவே, மறைத்தாக வேண்டும். அவ்வாறு மறைக்கத் துணை செய்வது பொய் ஒன்றுதான். மு.இரா.

**துணை நூல்கள்:**

**Coleman, J.C.,** Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons & Co., Private Ltd., Bombay, 1976.

**Urdang, Lawrance, and Flexner, S.B. (Ed.).,** The Random House Dictionary of the English Language, Allied Publishers Private Limited, New Delhi, 1982.

**பொய்மானி:** உடற்கூறு சம்பந்தமான எதிர் வினைகளை அறிவதற்கும் அவற்றை அறிவியல் முறைப் படி பதிவு செய்து பொருளுள்ள முறையில் விளக்கம் தருவதற்கும் உளவியல் பரிசோதனைக் கூடங்களில் இப்பொழுது பயன்படுத்தப்படும் கருவிகளுள் ஒன்று பல படியமைவு (Polygraph) அல்லது பொய்மானி. இக்கருவி அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இது பெரும்பாலும் மருத்துவமனைகளிலும், உடற்கூற் றுப் பரிசோதனை நிலையங்களிலும், உளவியல் பரி சோதனைக் கூடங்களிலும் அவரவர் தேவைக்கேற்பப் பயன்படுத்தப்படுகின்றது. குற்றவியல்துறையினரும் (Criminology) இப்பொழுது இதைப் பயன்படுத்து கின்றனர்.

பலபடியமைவு அல்லது பொய்மானி ஒரு பல முனைப் பதிவுமானி. இது ஒரே சமயத்தில் பல எதிர் வினைகளைப் பதிவு செய்கின்றது. இக்கருவி, உடல் சார்ந்த அடையாளக் குறிகளான மின் மூளை சார்ந்த குறிகளையும் (Electro encephalogram), மின் இருதயம் சார்ந்த குறிகளையும் (Electro cardiogram), இருதயம் சார்ந்த நடவடிக்கைகளான குருதிக் குழாயில் குருதியழுத்தத்தையும், சுவாசித்தலையும், நச்சப்புகை உயிரிப்பொருள் மாறுபாட்டையும் (Gas metabolism) தோலின் வெப்பநிலையையும், தோலின்

எதிர்ப்புச் சக்தியையும், உடலசைவுகளையும், தசை நாரின் செயலாற்றல்களையும் பதிவு செய்கின்றது.

உளஉடற்கூற்றியலில் உடற்கூற்றியல் பண்புப் கூறுகளான எழுச்சியின் போது ஏற்படும் மாற்றங் களையும் மனவெழுச்சியின் போதும், அழுத்தம் ஏற்படும்போதும், உறங்கும் போதும் கனவு காணும் போதும் ஏற்படும் உடற்கூற்று மாற்றங்களையும் அசைவுகளையும் இக்கருவி பதிவு செய்கின்றது. பழைய கருவியில் புகைபடிந்த தாளை உருளையில் சுற்றி,எளிய ஒருமுனை அல்லது இருமுனைப் பதிவுகள் செய்யப்பட்டன. இப்பொழுது இக்கருவி மின்சக்தி கருவியாக உருவாக்கப்பட்டு மிகுந்த தொழில்நுட்பக் கருவியாகவும் பல முனைப்பதிவு மானியாகவும் ஆக் கப்பட்டுள்ளது. இக்கருவியில் மின்வாய்கள் (Electrodes),சோதனைத்துறையீடு, ஆற்றலை மாற்றும் அமைப்பு ஆகியவை உள்ளன. இவை அடிப்படை அறிகுறிகளைப் பதிவு செய்கின்றன. பதிவு செய்யப் பட்ட விவரத்தை விளக்குவது மிகவும் கடினமா கையால் தானே இயங்கி விளக்கும் முறையும் இதில் அமைக்கப்பட்டிருக்கிறது.

உளவியல் சோதனைக்கூடங்களிலும், குற்றவியல் துறையிலும் இக்கருவி பொய்மானியாகச் செயற்படு கின்றது. அதனால் இது பொய் கண்டுபிடிக்கும் கருவி (Lie Detector) என்று கூறப்படுகின்றது. பொய்யை இக்கருவி நேரடியாகக் கண்டு பிடிப்ப தில்லை. உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு முடிவுசெய்கின்றனர். மேலே காட்டிய உடல் சார்ந்த மாற்றங்களெல்லாம் ஒருவரால் கட்டுப்படுத்தக் கூடியன அல்ல.

ஒருமனிதன் வெளியில் காட்டிக் கொள்ளாமலே பொய் கூறலாம். ஆனால் அச்சம், ஏக்கம், பொய் பேசுவதனால் நிகழ்ந்த கைது செய்தல் ஆகிய வற்றைத் தொடர்ந்து துலங்குகின்ற எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாது. அதைப் பொய்மானி பதிவு செய்கிறது. பொய்மானி சோதனையில் மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களும் வினாக்களும் கொடுக்கப்படுகின்றன. அவை பொய் பேசுகின்றபோது மனவெழுச்சியைத் தூண்டவல் லவை. ஆனால், உண்மை பேசும் போது மனவெழுச் சியைத் தூண்டுவதில்லை.பொய்மானி ஒரு மனிதனிடம் பல வினாக்களைப் பதிவு செய்கின்றது. சில வினாக் கள் நடுநிலையானவை. உன்னுடைய பெயர் என்ன? எந்த ஊரில் படித்தாய்? என்பன எந்தவித மாற்றத் தையும் ஏற்படுத்துவதில்லை. அடுத்துக் கேட்கப்படு பவை குற்ற நடவடிக்கை சம்பந்தப்பட்டவை. அச் சத்தைத் தூண்டிக் குற்ற உணர்ச்சியை வெளிப்படுத் தும் சிக்கலான வினாக்களைக் கேட்டு முடிந்தவுடன் சோதனையாளர், பதிவு செய்யப்பட்ட படத்தில் நடுநிலையான வினாக்களுக்கும் சிக்கலான வினாக் களுக்குமிடையே என்ன வேறுபாடு என்று கண்டறி கிறார். மனவெழுச்சித் துலங்கல் சிக்கல் வினாக்களுக் குக் குறிப்பிடத்தக்க வகையில் உயர்வாக இருக்கும். இதிலிருந்து அந்த மனிதன் உண்மையிலேயே குற்றத் தோடு தொடர்புடையவனாக இருக்கின்றான் என்று கூறுகின்றனர். ஆனால், பொய்மானி எப்பொழுதும் இந்த உண்மையைக் கண்டறிவதில்லை. சில சமயங் களில் தொழில் நுட்பப் பிழை காரணமாகக் குற்ற மற்றவனைக்கூடக் குற்றவாளி என்று காட்டி விடுகி றது. கருவியின் சரிநுட்பமும் நம்பகமும் முதலில் சோதிக்கப்பட வேண்டும். மேலை நாடுகளில் இக் கருவியின் பயன் மிகவும் போற்றதற்குரியதாக இருக்கின்றது. மு. இரா.

**துணை நூல்கள்:**

**Morgan, C.T., King, R.A.** and **Robinson, N.M.**, Introduction to Psychology, TATA-McGraw-Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

**Sorris,C-G.**, Psychology: An Introduction 2nd Ed., Prentice Hall, INC., Englewood Cliffs, New Jersy, 1973.

**பொய்யடிமையில்லாத புலவர்**: மன்னுயிர்த் தொண்டே மகாதேவன் தொண்டு என்று எண்ணி வாழ்ந்த அடியார்களின் வாழ்க்கை வரலாறு இயம் பும் நூல் பெரியபுராணம். அது உடல் பொருள் ஆவி அனைத்தையும் வழங்கிய அறுபத்து மூன்று தனியடி யார்களையும் ஒன்பது தொகையடியார்களின் பெருமையையும் பாடும் தமிழ்த் தேசிய இலக்கியம். ஒன்பது தொகையடியார் வரிசையில் இப்புலவர் இடம்பெறுகிறார். தில்லைவாழந்தணர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச்சிவன் பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போ தும் திருமேனி தீண்டுவார், முழு நீறுபூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்று ஊர், குலம் அறிய இயலாத நிலையில் அமைந்தவர்களோடு இவரும் சேர்க்கப்பட்டு விளங்குகின்றார். இவர் மெய்யன்பு செலுத்திடும் இயல்பின் காரணமாகப் பொய்யடிமை யில்லாத புலவர் என்று குறிப்பிடப்படுகிறார். இவர் பலராவர்.

முதனூலாகிய திருத்தொண்டத் தொகையில் சுந்தரர், 'பொய்யடிமையில்லாத புலவர்க்கு அடி யேன்' என்று குறிப்பிடுவார். வழிநூலாம் திருத் தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி 'பொய்யடிமையில்லாத் தமிழ்ச் சங்கமதிற் கபிலர், நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல்புலவோர்' என்று குறிப்பிடுவார்.

பொய்யடிமையில்லாத புலவர் நாற்பத்தொன் பதின்மர் என்றும் அவர்கள் கபிலர், பரணர், நக்கீரர் முதலாக வரும் சங்கப் புலவர்கள் என்றும் கருதப்படு கின்றனர். இவரை ஒரு கூட்டத்தார் என்றும் ஒருவர் என்றும் ஐயப்படுகின்றனர். ஒருவரே என்று முடி வுரைப்போர், அவர் மாணிக்கவாசகர் ஆவார் என்று உரைக்கலாயினர். சிவக்கவிமணி சி.கே.சுப்பிர மணிய முதலியார், தம்முடைய பெரியபுராண உரையில் 'பொய்யடிமையில்லாத புலவர் என்பதாற் கொள்ளும் பொருள்தான் யாதோ எனின்? அது மாணிக்கவாசகரைக் குறிக்கும்' என்கிறார்.

பொய்யடிமை இல்லாத புலவரைப் பற்றிய செய்திகள் திருத்தொண்டர் புராணத்தில் மூன்று பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களில் இவர்தம் பணியாது? என்ற செய்தி இடம் பெறுகிறது. இவர்கள் கயிலைமேவும் கடவுளுக்கே ஆளானவர் கள். செய்யுட்களில் பயிலும் சொற்களுக்கு நன்கு தெளிவாகப் பொருள் செய்பவர்கள். அறிவு நிறைந்த பொது அடியார்களாகிய இவர்கள் கற்றவர்க்குத் தாம் வரம்பாக விளங்குவார்கள். நூல்பல கற்ற நுண்ணிய மதிபடைத்த இவர்கள் ஐயம் நீங்கிய மெய்யுணர்வு பெற்றவர்கள். சிவபெருமானை யன்றி வேறு ஒரு பொருளைப் பெரிதாக நினைந்து உணரா தவர்கள். மெய்யன்புடன் இறைவனுக்கு அடிமை பூண்டு பதிநூல்களை ஓதியுணர்ந்து உருகி ஒருமைப் பட்டு நிற்பவர்கள். இத்தகு செய்தியை மட்டுமே பொய்யடிமையில்லாத புலவர் பற்றிச் சேக்கிழார் எடுத்துரைத்துள்ளார்.

பெரியபுராணத்தில் பொய்யடிமையில்லாத புல வர் சருக்கம், எட்டாம் சருக்கமாக வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தை அடுத்து இடம் பெறு கிறது. கூற்றுவநாயனார் புராணத்தை அடுத்துப் பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம் தொடங்கு கிறது. 'பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம்' என்ற பெரும்பகுதிக்குள், இப்புலவரைப் பற்றிய செய்தி முதலில் இடம்பெறுகிறது. சி.சு.

**பொய்யாமொழிப் புலவர்**: செங்கை அண்ணா மாவட்டம் காஞ்சிபுரத்தை அடுத்த செங் காட்டுக் கோட்டத்தைச் சேர்ந்த அதிகத்தூரில் அமணபாக்கக் கிழார் மரபில் பிறந்தவர் பொய்யா மொழிப் புலவர். தொண்டை நாட்டைச் சேர்ந்த வயிரபுரம் என்னும் ஊரில் கல்வி பயின்று, கவிபாடும் வன்மை பெற்று, ஆசிரியரிடம் விடைபெற்றபோது ஆசிரியரால், 'பொதியில் அகத்தியனாய்ப் பொய்யா மொழியாய், அதிகவமண்பாக் கிழானாய்ச் சங்காத்தங் கொண்டிருப்பாய்' என்ற வாழ்த்தினைப் பெற்றார். இவர் வாக்கு வன்மையும், கவியாற்றலும், நற்பண்பும் பெற்ற புலவர்; மன்னர்களாலும் வள்ளல்களா லும் பாராட்டப் பெற்றவர்.

பொய்யாமொழி மங்கலம் என்னும் ஊர் இப் புலவரொடு தொடர்புடையது. அவ்வூரில் முத்தமிழ் ஆசிரியர் என்ற சிறப்போடு வாழ்ந்த இவர் சாத்த னார் என்று குறிப்பிடப்பெறுவதால் அதுவே இவர் தம் இயற்பெயராகும் எனலாம். வாக்குப்பலிக்கும் பெருமையைப் பெற்றதால் பொய்யாமொழியார் என்று குறிக்கப்பட்டார்; பிறகு இயற்பெயர் மறைந்திருத்தல் கூடும். பொய்யாமொழி என்பது திருவள்ளுவரின் பெயர்களுள் ஒன்று. இப்பெயர் சிவ பெருமானுக்கும் உண்டு; சத்தியவாகீசர் என்பது சிவ பெருமானுக்குரிய வடமொழிப்பெயர்.

வயிரபுரத்தில் ஆசிரியர் வயலில் மேய்ந்த குதிரையை '...கதிரை மாளத் தின்ற ...குதிரைமாளக் கொண்டு போ' என்று பாடி இறக்கச்செய்தார். இச் செய்தியைக் காளமேகப் புலவர் முதலியோர்மீது ஏற் றிக்கூறும் வழக்காறும் உண்டு. 'என்மீது ஒரு பாடல் பாடு' என்று கேட்ட முருகப் பெருமானுக்கு, 'நான் கோழியையும் பாடிக் குஞ்சையும் பாடுவேனோ' என்று கூறிப் பாட மறுத்துவிட்டார். மீண்டும் முருகப்பெருமான் வேட்டுவச் சிறுவனைப் போலத் தோன்றிக் காட்டு வழியில் அச்சுறுத்தித் தம் பெயர் 'முட்டை' என்று சொல்லிப் பாட வைத்தார் என் பர்.

மதுரையில் வணங்காமுடி என்ற சிறப்புப் பெயர்பெற்ற பாண்டிய மன்னனைச் சொக்கநாதர் ஆலயத்தில் கண்டு, 'இறைவன் முடிமீது விளங்கும் பெருமை வாய்ந்த மதிக்குலத்தில் தோன்றிய நீ அவ் விறைவன் திருவடியில் விழுவது அழகோ' என்று பாடித் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். அம் மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க, சங்கப் புலவர் களைப் புகழ்ந்தும், சங்கப் பலகை மிதக்கவும் பாடி மன்னனை வியக்கச் செய்தார். மன்னன் பாராட்டிய போது 'நானும் புலவன் எனில் இவ்வுலகம் பொறுக் குமோ' என்று தம் அடக்கம் தோன்றப் பாடினார்.

தமிழ்ச் சங்கத்தைப் புதுப்பிக்கக் கருதிய பொய்யாமொழியாரைச் சோதிக்கவே மன்னன் சங் கத்தார் திருவுருவம் தலையசைக்குமாறும், சங்கப் பலகை மிதக்குமாறும் பாடச்செய்தான் என்பதும் ஒரு வழக்கு.

ஆர்க்காட்டுக் கோட்டம், அரசூரில் வாழ்ந்த செல்வந்தனான சீநக்கன் தன்பொருட்டுக் கொண்டு வந்திருந்த புளிச்சோற்றைப் புலவருக்கு அளித்தான். மகிழ்ந்த புலவர், 'அளிகொளுந் தொடையான்' என் னும் பாடலைப் பாடி நட்புக்கொண்டார். சீநக்கன்

சோழ மன்னனைக் காணச் சென்றபோது, 'திறையின் முறை கொணர்ந்து' என்னும் பாடலை எழுதிக் கொடுத்தனுப்ப, அதன் பொருளுணர்ந்த இராசேந்திர சோழன் மகிழ்ந்து பாடியவருக்குச் சிற்றரசூர், தென் மாவை, பூந்துருத்தி, சுத்தமல்லி, கண்டி, குருகாவூர் முதலிய ஏழு ஊர் தந்து, 'மும்முடிச் சோழக் கண்டியூர் நாடாள்வான்' என்னும் சிறப்புப் பெயரையும் அளித்தான். பின்னர்ப் பொய்யாமொழியாரிடம் தான் கொண்ட பெருநட்பு விளங்கப் 'பொய்யாமொழி மும்முடிச் சோழக் கண்டியூர் நாடாள்வான்' எனத் தன் சிறப்புப் பெயரோடு புலவர் பெயரையும் சேர்த்துக் கொண்டான். சீநக்கனும் பொய்யாமொழியாருக்குக் 'குலோத்துங்கச் சாவகன்' என்ற பெயர் சூட்டிச் சிறப்பித்தான். இது 'குலோத்துங்கச் சாத்தன்' என்றிருத்தல் வேண்டும் என்பர்.

சீநக்கனின் பெருமனையிலேயே தங்கியிருந்த புலவரைப் பலவாறு தூற்றத் தொடங்கினர் ஊரார். அச்செயலறிந்த புலவர் 'தேரையார் தெங்கிளநீர் உண்ணார் பழிசுமப்பர்' என்னும் பாடலைப் பாடிக் 'கண்டியூரை வாய்மூட உரையறிந்தோமில்லையே' என்று வருந்தினார்.

பாண்டிநாடு சென்ற பொய்யாமொழியார் பாண்டி மண்டல, மாறை நாட்டுத் தஞ்சாக்கூரை அடைந்து, அங்கு மாறவர்மன் குலசேகர பாண்டியனிடம் அமைச்சராகவும், படைத்தலைவராகவும் விளங்கிய, மாவலிவாணர் மரபைச் சேர்ந்த 'சந்திரவாணன்' என்னும் வேளாளச் செல்வந்தரின் நட்பைப் பெற்றார். பிறகு அவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அக்காலத்து நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக 425 கட்டளைக் கலித்துறைகளால் தஞ்சைவாணன் கோவை என்னும் நூலை இயற்றி அரங்கேற்றினார். தஞ்சைவாணன் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு பொன் தேங்காய் உருட்டிப் புலவரைச் சிறப்பித்தான்.

'திருக்கானப்பேர்' என்னும் காளையார் கோயிலுக்குச் சென்று அங்குப் பார்வை இழந்திருந்த கூத்தாள் என்பவளின் இல்லத்தார் நால்வரும் கண்பெறுமாறு பாடியருளினார். அவ்வூரிலிருந்த தேவரடியார் எழுபதின்மர் பேரிலும் ஒரு வெண்பா பாடினார். கண்டியூரில் ஒரு வண்ணாத்தியைச் சிறப்பித்துப் பாடினார்.

'தண்ணீரும் காவிரியே', 'பத்தம்பிற் பாதியுடையான்' என்று தொடங்கும் இரண்டு வெண்பாக்களும் பொய்யாமொழியார் பாதி பாட, ஔவையார் பாதி பாடியவை என்பர்.

சீநக்கன் இறந்தபோது, அவனது பிரிவாற்றாது 'அன்றுநீ செல்லக் கிடவென்றாய்' என்னும் பாடலைப் பாடி அவனது சிதையில் இடம்பெற்று உடன் உயிர்நீத்தார். இவர் கி.பி. 13 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். பூ.சு.

**துணை நூல்கள்:**

**அருணாசலம்**, மு., தமிழ் இலக்கிய வரலாறு-13-ஆம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், மயிலாடுதுறை, 1970.

**இராகவையங்கார்**, மு., பெருந்தொகை, செந்தமிழ்ப் பிரசுரம்-62, மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை, 1935-36.

**நாற்கவிராச நம்பி**, அகப்பொருள் விளக்கம், கழக வெளியீடு, சென்னை, 1971.

## பொருட்டொகை நிகண்டு

பொருட்டொகை நிகண்டு என்னும் நூல் பொருள்களின் தொகைச் சொற்களை விளக்க எழுந்தது. இந்நூலாசிரியர் சுப்பிரமணிய பாரதி எனப்படுவார். இவர் புதுக்கோட்டையைச் சார்ந்த குடுமியாமலையில் தோன்றியவர். இவர் தந்தையார் வைத்தீசுவர தீட்சிதர் எனப்படுவார்.

இந்நூலாசிரியர் காலம் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டு எனக் கருதப் படுகின்றது. இந்நூல் 1920 – ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பாக வெளிவந்தது.

இதன் பதிப்பாசிரியர் இரா. சுப்பிரமணியக் கவிராயர் ஆவார். இந்நூலில் ஆயிரம் சொற்களுக்கு நன்கு விளக்கம் தரப்பட்டிருக்கின்றது. இந்நூலாசிரியர் பிங்கலம், சூளாமணி முதலிய நிகண்டு நூல்களை நன்கு பயின்றவர் எனத் தெரிகின்றது. இந்நூல் ஒன்று முதல் நூறு வரையிலுள்ள பொருள்களைத் தொகுத்துக் கூறுகின்றது. இவ்வாறு ஒரு பொருள், இரண்டு பொருள், மூன்று பொருள் என்று பொருள்களின் தொகைகளை விளக்கும் நிகண்டு நூலாகையால் இந்நூலுக்குப் பொருட்டொகை நிகண்டு என்னும் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சில தொகைச் சொற்களுக்கு இந்நூலில் நன்கு விளக்கங்கள் காணப் படுகின்றன. 'மூவரசர்' என்னும் தொகைச் சொற்கு, 'சேரர், சோழர், பாண்டியர் என்றும் பகருவர் புலவர்' என்று கூறுவதோடு அமையாது, சேரரின் நாடு, மலை, கொடி, மாலை, சோழரின் நாடு, மலை, கொடி, மாலை, பாண்டியரின் நாடு, மலை, கொடி, மாலை முதலிய வற்றையும் விளக்குகின்றது.

சோழரது நாடு புனல் நாடு. அவர்களது கொடி புலிக்கொடி. அவர்களது மாலை ஆத்திமாலை. அவ்வாறே சேரரது நாடு மலைநாடு. அவர்களது கொடி விற்கொடி; மாலை பனம்பூ. பாண்டியர் நாடு தமிழ் நாடு;கொடி மீன்; மாலை வேம்பு என்பதோடு ஆறு முதலியவற்றின் விளக்கங்களும் கூறப் படுகின்றன.

இந்நூலில் தொள்ளாயிரத்து எழுபத்தெட்டுப் பாக்களும், பிற்சேர்க்கையாக இருபத்தெட்டுப் பாக்களும் உள்ளன. இந்நூலில் சில வழுக்களாகவும், சில சேர்க்க வேண்டுனவாகவும் இருந்தன என்றும், பேரகராதியின் துணை கொண்டு பதிப்பிக்கப் பெற்ற தென்றும், சுப்பிரமணியக் கவிராயர் தம்முடைய பதிப்புரையில் கூறுகின்றார். சூளாமணி முதலிய வற்றில் காணப் பெறாத, ஆனால் அதன் பின் வழங்கிய தொகைப் பொருள்களும் இந்நூலில் வழங்கப்படுகின்றன.

சு.சு.

*பொருண்மை:* நீதிமன்றம், நீதிமன்றம் போன்ற அமைப்புகள் ஆகியவற்றால் அறுதியிட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கில் அமைந்த உண்மை பொருண்மை எனப்படும்.


இந்தியச் சான்றுச் சட்டம் (The Indian Evidence Act 1872) பிரிவு 3 பொருண்மை (Fact) என்றால் என்னவென்று இயம்புகிறது. இதன்படி புலன்களால் உணரக்கூடிய பொருள் நிலை, பொருள் தொடர்பு, ஒருவர் மனத்தில் அறிவுத் தெளிவு நிலையில் கொண்டுள்ள மனநிலை ஆகியவை பொருண்மை ஆகும்.

வழக்கின் இருதரப்பினர்களும் அவரவர்கள் ஐம்புலன்களால் அறிந்த உண்மைகளை நீதிமன்றத்தின் முன்பு அல்லது நீதி மன்றம் போன்ற தன்மை வாய்ந்த அமைப்புகள் முன்பு எடுத்துரைக்க வேண்டும். நீதிமன்றம் இந்தியச் சான்றுச் சட்டம் 1872, நடைமுறைச் சட்டங்கள் ஆகியவற்றைப் பின்பற்றி வழக்கின் பொருண்மைகளைக் கண்டறிய வேண்டும்; அறுதியிட வேண்டும்; அவ்வாறே, நீதிமன்றம் போன்ற தன்மை வாய்ந்த அமைப்புகள் இயற்கை நீதி விதிகளைப் பின்பற்றி வழக்கின் பொருண்மைகளைக் கண்டறிய வேண்டும். அறுதியிட வேண்டும். இவ்வாறு நீதிமன்றமும், நீதி மன்றம் போன்ற அமைப்புகளும் அறுதியிட்டுக் கூறும் பொருண்மைகள் மெய்ப்பிக்கப்பட்ட பொருண்மைகள் எனப்படும். அப்பொருண்மைகள் மீது சட்டத்தினை வைத்துப் பார்த்து அதன் தன்மைகள் அடிப்படையில் தீர்ப்புச் சொல்லப்படும்; நீதி வழங்கப்படும்.

ச.மோ.

*பொருண்மையியல்:* மக்கள் உள்ளத்தில் அமைந்துள்ள கருத்துகளைப் புலப்படுத்துவதே மொழி. மொழியில் இரு கூறுகள் உள்ளன. ஒன்று, பொருண்மை. அது உருவமுடைய சொன்மை வாயிலாகப் புலப்படும். 'சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் சொல்லின் ஆகும்' என்று தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. சொன்மை என்பது ஒலிக்கூறு. முன் அறியாத அயல் மொழியில் ஒருவன் பேசும்போது கேட்போனுக்குப் புலப்படுவது ஒலிகள் (சொன்மை) மட்டுமே. பொருண்மை புலப்படாது. அறிந்த மொழியில் பேசுவானேயானால் சொன்மைக்குச் சிறப்பளிக்காமல் பொருண்மையை நாடிப் பேசுவோன் கருத்துகளைப் புரிந்து கொள்ளலாம். மொழியை ஒருவன் பேசும்போது பொருண்மை நாடாமல் சொன்மைக்கு மட்டும் சிறப்பளித்தலும் உண்டு. பொருண்மையை மட்டும் கண்டால் சொன்மை தோன்றாது; சொன்மையை மட்டும் கண்டால் பொருண்மை தோன்றாது.

மொழியின் ஒரு கூறாகிய பொருண்மையைப் பற்றி ஆயும் இயலுக்குப் பொருண்மையியல் என்பது பெயர். பொருண்மை வேறு; பொருள் வேறு. மரம் என்ற சொல் சுட்டி நிற்பது ஒரு பொருளை. வேரும், தண்டும், கிளையும், இலையுமாய்க் கண்ணுக்குப் புலப்படும் பருப்பொருள் அது. அப் பொருளுக்கும் சொல்லுக்கும் இடையிலான தொடர்பு நேரடித் தொடர்பன்று. சொல்லுக்கும் (உலகப்) பொருளுக்கும் இடையேயான சரியான தொடர்பைப் பின்வரும் முக்கோணம் காட்டும்.




'சொல்', 'பொருள்' ஆகியவற்றுக்கிடையேயான புள்ளியிட்ட கோடு, சொல்லுக்கும் பொருளுக்கும் இடையேயான தொடர்பு நேரடியானதன்று; மறைமுகமானது என்பதைக் குறிப்பிடும்.

'பூனை' என்றால் என்ன என்று ஒருவன் கேட்டால் 'மியாவ்' என்று கத்தும் மிருகத்தைச் சுட்டிக் காட்டி 'இதுதான் பூனை' என்று கூறலாம். இதனைச் சுட்டிக் காட்டு விளக்கம் என்பர். இவ்வாறு சுட்டிக்

காட்டுதல் பூனை என்ற சொல்லின் பொருண்மை ஆகாது. பொருண்மை வேறு; சுட்டுமை வேறு. சொல்லுக்கும், உலகிலுள்ள பொருட்கள், நிகழ்வுகள், செயல்கள், பண்புகள் ஆகியவற்றுக்கும் இடையேயான உறவே சுட்டுமை எனப்படும். சுட்டுமை என்று கூறும்போது, ஒருசொல் சுட்டும் பொருள் இவ்வுலகில் உள தாம் தன்மை பெறப்படும். பொருண்மையைப் பற்றிப் பேசும்போது சுட்டும் பொருள் இருந்தாகவேண்டும் என்ற தேவையில்லை. சொற்களுக்கிடையே உள்ள உறவுகளின் அமைப்பில் பொருண்மைக்கு இடம் உண்டு. தமிழில் 'பழம்' என்ற சொல்லுக்கும் 'கனி' என்ற சொல்லுக்கும் பொருண்மை கிட்டத்தட்ட ஒன்றே. இது பொருண்மை உறவில் ஒருவகை. 'கணவன்' 'மனைவி' என்ற சொற்கள் ஒரு பொருண்மை உடையன அல்ல. ஆனால் 'கணவன்' என்ற சொல்லுக்கும் 'தயிர்' என்ற சொல்லுக்கும் இடையே காணப்படாத பொருண்மை உறவு 'கணவன்', 'மனைவி' என்ற சொற்களுக்கிடையே அமைந்து விளங்குவதைக் காணலாம். 'நன்மை' 'தீமை' ஆகிய சொற்கள் வேறுபட்ட பொருண்மை உடையனவெனினும் 'நன்மை'க்கும் 'கருமை'க்கும் இடையே உள்ள உறவைவிட நெருங்கிய உறவு 'நன்மை' 'தீமை' களுக்கிடையே உள்ளது.

ஒரு காலத்தில் பொருண்மையியலைப் பற்றிய ஆராய்ச்சி சொற்பொருளில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றியதாகவே இருந்தது. எடுத்துக்காட்டாகத் தமிழில் 'நெய்' என்ற சொல் ஒருகாலத்தில் எண்ணெயைக் குறித்துப் பின்னர் ஆவின் நெய்யைக் குறிக்கக் காணலாம். இதனைப் பொருட் குறுக்கம் என்பர். 'பொன்' என்ற சொல் பொதுவாக உலோகத்தைக் குறித்துப் பின்னர்ப் பசும்பொன்னாகிய தங்கத்தைக் குறித்ததும் இத்தகைய மாற்றமே. 'எண்ணெய்' என்ற சொல் பழங்காலத்தில் எள் நெய்யையே குறித்தது. அப்பொருள் மாறி இன்று எல்லா வகை எண்ணெயையும் குறித்து நிற்பதைப் பொருட் பெருக்கம் என்பர். 'தேவடியாள்' என்ற சொல் ஒரு காலத்தில் 'கடவுள் அடியாள்; பக்தை' என்ற உயர்ந்த பொருளைக் குறித்து இன்று இழிந்த பொருளைத் தருகிறது. இதனை இழிபொருட் பேறு என்பர். இவ்வாறு ஏற்படும் சொற்பொருள் மாற்றங்களை ஆராய்வது இன்றைய நோக்கில் வரலாற்றுப் பொருண்மையியல் என்பதில் அடங்கும். இன்று பொருண்மையியலை வரலாற்றுப் பொருண்மையியல், விளக்கப் பொருண்மையியல் என்று பாகுபடுத்தி ஆராய்கிறார்கள். விளக்கப் பொருண்மையியலில் ஒரு சொன்மை, பல பொருண்மை, ஒரு பொருண்மை, தொகைவகைப்பொருண்மை, பொருண்மைத் துகளாக்கம் ஆகியன இடம்பெறும்.

தொடர்பற்ற பல்வேறு பொருண்மைகள் ஒரு சொல்லாய் வெளிப்படுவதற்கு ஒரு சொன்மை என்பது பெயர். தமிழில் 'பொழுது சாயும் நேரம்' என்ற பொருண்மையும், 'மலர்களின் தொகுப்பு' என்ற பொருண்மையும், 'மாலை' என்ற சொல்லால் வெளிப்படுகின்றன. இவ்வாறு ஒரு சொல்லால் வெளிப்படும் பல்வேறு பொருண்மைகள் எவ்விதமான தொடர்பும் அற்றிருந்தால்தான் இதனை ஒரு சொன்மை என்பர்.

ஒரே சொல்லுக்குரிய பொருண்மைகள் தொடர்புடையனவாக இருந்தால் அதனைப் பல பொருண்மை என்பர். பழந்தமிழில் 'வான்' என்பது ஆகாயத்தையும், மேகத்தையும், மழையையும் குறிக்கக் காணலாம். 'ஆகாயம்' 'மழை' 'மேகம்' என்ற இப்பொருண்மைகள் தொடர்புடையன. இவ்வாறு ஒரு சொல், தொடர்புடைய பல பொருண்மைகளைக் கொண்டிருக்குமாயின் அதனைப் பல பொருண்மை என்று கூறுவர்.

'விரைவு', 'வேகம்' என்ற சொற்கள் வேறுபட்ட பொருண்மையன அல்ல. இதனை ஒரு பொருண்மை என்பர். 'குருடன்' என்ற சொல்லும், 'கண்ணில்லாதவன்' என்ற தொடரும் ஒரு பொருண்மையுடையன. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் சில, ஒரு பொருண்மை உடையனவாகத் தோன்றினும் முழு ஒரு பொருண்மை என்பது காணுதற்கு அரியது. 'காது' என்பதும் 'செவி' என்பதும் ஒரு பொருண்மை உடையனவேனும், காது பிந்திய இலக்கிய வழக்கைச் சார்ந்ததாகும். இவ்வாறு ஒரு பொருண்மை உடைய சொற்களும் வெவ்வேறு சூழல்களில் பயன்படுவதால்தான் அவற்றிற்கிடையே முழு ஒரு பொருண்மை இல்லை என்று கருதப்படுகிறது.

இரு சொற்களின் பொருண்மைகள் ஒன்றுக்கொன்று மறுதலையாக வருதலும் உண்டு. ஆண், பெண்; கருப்பு, வெள்ளை; உயரம், குட்டை; வாங்கு, கொடு முதலியன எடுத்துக்காட்டுகள். மறுதலை குறைந்தது மூன்று வகைப்படும். முதல்வகை மறுதலைக்கு உறழ் பொருண்மை என்று பெயர். ஒன்றன் எதிர்மறையால் மற்றதன் உடன்பாடும், ஒன்றன் உடன்பாட்டால் மற்றதன் எதிர்மறையும் பெறப்படுவதை உறழ்பொருண்மை என்பர். இதற்கு எடுத்துக்காட்டு ஆண், பெண். இதில் 'காமாட்சி ஆண் அல்லள்' என்றால் 'காமாட்சி பெண்' என்பது பெறப்படும். 'காமாட்சி ஆண்' என்றால் 'காமாட்சி பெண் அல்லள்' என்பது பெறப்படும்.

கருப்பு, வெள்ளை போன்ற மறுதலையில் ஒன்றன் உடன்பாட்டிலிருந்து மற்றதன் எதிர்மறையைப் பெறலாமே தவிர, அதன் எதிர்மறையிலிருந்து மற்ற


தன் உடன்பாட்டைப் பெற இயலாது. சான்றாக, 'குதிரை கருப்பு' என்றால் 'குதிரை வெள்ளை அன்று' என்பது பெறப்படும். ஆனால் 'குதிரை கருப்பு அன்று' என்றால் 'குதிரை வெள்ளை' என்பது பெறப்படாது. எனவே, உறழ் பொருண்மையில் இருவகை காண லாம். ஆண், பெண் தவிர வேறு பாகுபாடு இல்லா விட்டால் அது ஒருவகை உறழ்பொருண்மை. கருப்பு, வெள்ளை தவிரப் பச்சை, சிவப்பு முதலியன இருப்ப தால் அது ஒருவகை உறழ்பொருண்மை.

இரண்டாம் வகை மறுதலை எதிர்ப் பொருண்மை. இது மறுதலைகளில் மிக முக்கிய மானது. இதற்கு எடுத்துக்காட்டு உயரம், குட்டை. இவற்றை அளக்கலாம். 'அண்ணன் உயரம்' என்றும் கூறலாம்; 'அண்ணன் தம்பியைவிட உயரம்' என்றும் கூறலாம். ஒருவனை அல்லது ஒன்றனை இன்னொருவ னோடு அல்லது இன்னொன்றோடு ஒப்பிடுவதால் அளவு இடம் பெறுகிறது. வெம்மை, தண்மை; அதி கம், குறைவு முதலியன இதற்கு மேலும் எடுத்துக் காட்டுகள்.

மறுதலைகளில் மூன்றாம் வகை மாறு பொருண்மை. இதற்கு எடுத்துக்காட்டு வாங்கு, கொடு. எடுத்துக்காட்டு வாக்கியங்கள்: 'அவன் இவ னிடமிருந்து புத்தகத்தை வாங்கினான்'; 'இவன் அவ னிடம் புத்தகத்தைக் கொடுத்தான்'. எதிர்ப்பொருண் மைக்கும் மாறு பொருண்மைக்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவென்றால் எதிர்ப்பொருண்மையில் அளவு முக்கிய இடம்பெறும். இங்கே அளவுக்கு இட மில்லை.

இன்றும் தந்தை, மகன் போல உறவடி மறுதலை களும், தந்தை, தாய் போலப் பாலடி மறுதலைகளும் ஆகப் பலவகை மறுதலைகள் உள்ளன. அவற்றை விரிப்பிற் பெருகும்.

முல்லை, அல்லி, தாமரை முதலியன பூவின் வகைகள். எனவே 'முல்லை'க்கும் 'பூ'வுக்கும் இடையே யான தொடர்பைத் தொகைவகைப் பொருண்மை எனலாம். 'முல்லை'யின் பொருண்மை 'பூ'வின் பொருண்மையில் அடக்கம் எனலாம். இத்தொடர் பைப் பின்வரும் வரைபடத்தால் விளக்கலாம்.




அ) 'ஒன்று முல்லை' என்றால் 'அது அல்லி அன்று' என்பது பெறப்படும். 'ஒன்று அல்லி' என்றால் 'அது முல்லை அன்று' என்பது பெறப்படும்.

ஆ) 'ஒன்று முல்லை' என்றால் 'அது பூ' என்பது பெறப்படும். 'ஒன்று அல்லி' என்றால் 'அது பூ' என்பது பெறப்படும்.

இ) 'ஒன்று பூ' என்றால் 'அது முல்லை(அல்லது) அல்லி (அல்லது) ......' என்பது பெறப்படும்.

முல்லையும், அல்லியும் ஒன்றல்ல. அவற்றின் பொதுத் தன்மை அவை 'பூ' என்பதுதான். 'முல்லை'யும் 'அல்லி'யும் வகைச் சொற்கள்; 'பூ' என்பது தொகைச் சொல். தொகைவகைப் பொருண்மையில் 'ஒன்று முல்லை' என்றால் 'அது பூ' என்பது பெறப்படும். ஆனால் 'ஒன்று பூ' என்றால் 'அது முல்லை' என்பது பெறப்படாது.

பொருண்மைகளைத் துகள்களாகப் பிரித்துப் பார்க்கலாம். பின்வரும் சொற்றொகுதிகளைக் காண்க: 'எருது; பசு; கன்று; சேவல்; பெட்டை; குஞ்சு'. 'எருது' என்பதை 'விலங்கு' 'ஆண்' 'வயது வந்தது' எனப் பிரிக்கலாம். 'பசு' என்பதை 'விலங்கு' 'பெண்', 'வயது வந்தது' எனப் பிரிக்கலாம். 'கன்று' என்பதை 'விலங்கு', 'வயது வராதது' எனப் பிரிக்கலாம். 'விலங்கு', 'பறவை', 'ஆண்', 'பெண்', 'வயதுவந்தது', 'வயது வாராதது' ஆகியவை பொருண்மைத் துகள்கள். சொற்களின் பொருண்மை களைப் பொருண்மைத் துகள்வின் அடிப்படையில் விளக்கிப் பார்க்கலாம்.

பொருண்மைகளைப் பொதுவாக அகராதிப் பொருண்மை, இலக்கணப் பொருண்மை என இரு வகையாகப் பிரிக்கலாம். 'கல்', 'மரம்', 'நாள்', 'கால்', போன்ற சொற்களுக்குரிய பொருண்மையை அகராதிப் பொருண்மை என்பர். இலக்கணத்தில் திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம் போன்ற பாகுபாடுகள் உள்ளன. இவைதவிர வினா, ஏவல், எதிர்மறை போன்ற வாக்கியப் பாகுபாடுகளும் உண்டு. இவற்றின் பொருண்மைகள் இலக்கணப் பொருண்மை எனப்படும். தமிழ் மரபிலக்கணத்தில் வரும் இடைச் சொல் என்ற சொல்வகையின் பொருண்மை பெரும்பாலும் இலக்கணப்பொருண்மை ஆகும். ந.கு.

**பொருத்தப்பாடு**: மனிதர்கள் தங்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவு செய்து கொள்வ தற்கும் பிறரோடு சேர்ந்து ஒரு வேலையைச் செய்வ தற்கும், சமூகத்தில் சில கடமைகளை நிறைவேற்று வதற்கும் அவர்கள் தங்களைச் சூழ்நிலைகளோடும்

மற்றவர்களோடும் பொருத்தப்பாடு செய்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். பொருத்தப்பாடு என்பதை நல்லிணக்கம் (Adjustment) என்றும் கூற லாம். ஒருவர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்க்கை, அவர் விரும்பிய அல்லது கற்பனை செய்த வாழ்க் கையை விடக் குறைந்த அளவே அவருடைய தேவை களை நிறைவுசெய்யலாம். என்றாலும் அவர் அதனு டன் ஒத்துச் செல்லக் கற்றுக் கொள்கிறார். மக்கள் சிறுவர்களாக இருந்தபோது பள்ளிக்கூடச் சூழ்நிலை களுக்கும், வீட்டுச்சூழ்நிலைகளுக்கும் பொருத்தப்பாடு செய்து கொள்கிறார்கள். பெரியவர்களாக வளர்ந்த போது அவர்கள் வாழ்க்கைத் தொழிலின் தேவை களுக்கும், குடும்பப் பொறுப்புகளுக்கும் வாழ்க்கை வழி யிலுள்ள மகிழ்ச்சிகளுக்கும், துன்பங்களுக்கும், நோய் நிலையின் இறுக்கங்களுக்கும், பொருத்தப்பாடு செய்து கொள்கின்றனர். மனிதனுடைய ஒவ்வொரு முயற்சி யும் ஒரு பொருத்தப்பாடு தான். அது வெற்றியோ, தோல்வியோ சூழ்நிலையின் தேவைகளோடு சம நிலைப்படுத்துவதற்கு எது சாத்தியமோ அதனோடு பொருத்தப்பாடு செய்துகொள்ளப்படுகிறது. பொருத் தப்பாடு ஒரு வகையான உளவியல் கட்டுப்பாடு. பள்ளிக்கூட விளையாட்டுக் குழுவுக்கு தலைமைதாங்கும் வாய்ப்பிழந்த மாணவன் அதைத்துறந்து விட்டுச் சொற் போர் போட்டிக் குழுவில் பொதுவான இடத் தைப் பெற்றுத்தன் பங்கையாற்றலாம். அந்த மாண வன் செய்த இரண்டும் பொருத்தப்பாடுதான். சில பொருத்தப்பாடுகள் மற்றவற்றை விட ஆக்கச் சார் பானவையாக இருக்கலாம். சூழ்நிலையின் தேவை களை நிறைவு செய்வதற்குக் கடைப்பிடிக்கும் முயற்சி களைப் பொருத்தப்பாடு என்று கூறுகின்றனர். பொருத்தப்பாடு என்பது சமூகத்தின் தேவைகளையும் தனியாளின் தேவைகளையும் ஈடுசெய்கிற தனி மனிதனுடைய திறமையைக் குறிக்கிறது.

சூழ்நிலையின் தேவைகளை ஒருவர் ஈடு செய்ய முடியாத போதும் உடல் சார்ந்ததும் உளவியல் சார்ந்ததுமான துன்பம் வந்து அச்சுறுத்துகின்ற போதும் மன இறுக்கமும் மகிழ்ச்சியின்மையும் கொள் கிறார். இவ்வாறு ஒருவர் பெறுகின்ற உணர்ச்சி மன அழுத்தம், உளவியல் அழுத்தங்களோடு ஈடுசெய்யும் போது மிக்க பளுவை உணர வேண்டியிருக்கிறது. உடற் கூற்றியல் அழுத்தங்களோடும் ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. சில உள்ளியல்பான அழுத்தத் தைக் கொடுக்கின்றன. சான்றாக, போர்களும் இயற்கை விபத்துகளும் அப்படிப்பட்டவை. அவை உண்மையான ஆபத்துகளாக இருக்கின்றன; உயிர்கள் அச்சுறுத்தப்படுகின்றன. மக்கள் தங் களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முடியாத வர்களாக இருக்கின்றனர். சிலர் அத்தகைய சூழ் நிலைகளிலிருந்து விலகிச் சென்றுவிடுகின்றனர். சிலர் குழப்பமடைந்து விடுகின்றனர்; ஆனால் உடனே அதிலிருந்து மீண்டு விடுகின்றனர். மற் றும் சிலர் ஆபத்துகளை ஏற்றுக் கொள்ள மறுக் கின்றனர். மன அழுத்தம் வாழ்க்கையும் மரணமும் கொண்டுள்ள சூழ்நிலையோடு நின்று விடுவதில்லை. தன்னுடைய வேலையை இழந்த ஒரு மனிதனும், எதிரிகளின் எல்லையில் பிடிபட்ட போர்வீரனும் அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றனர். ஒருவர் பெறுகின்ற மன அழுத்தம் அவர் எதிர் பார்க்கும் ஆபத்தைச் சார்ந்திருக்கிறது. ஒருவர் தம்மை நோக்கி வருகின்ற அச்சுறுத்தலை ஈடுசெய்யத் தம் திறமையை எந்த அளவுக்கு வரையறை செய்கின்றாரோ அதைச்சார்ந் திருக்கின்றது அவர் பெறும் அழுத்தம். அழுத்தங் களுக்கு மக்கள் எவ்வாறு துலங்குகிறார்கள் என்பது, நிகழ்ச்சிகளின் மீது அவர்களுக்கு எந்த அளவுக்குக் கட்டுப்பாடு இருக்கிறது என்று நம்புகின்றார்களோ ஆதரவற்றிருப்பதாக உணருகின்றார்களோ அந்த அளவைப் பொறுத்திருக்கின்றது.

அழுத்தங்கள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத் துகின்றன என்பதைக் கண்டறியக் குரங்குகளின் மீதும் எலிகளின் மீதும் பரிசோதனைகளை நடத்தியிருக் கின்றனர். செயல் சார்புடைய (Executive) குரங்கு கள் அழுத்தத்தின் காரணமாகக் குடற்புண்ணுக்கு ஆளாயின. மற்ற குரங்குகளுக்கு அது ஏற்படவில்லை.

அழுத்தத்தைப் பற்றி உளவியலார் குறைவாகத் தான் அக்கறை காட்டுகின்றனர். ஏனென்றால் பொது வாக மக்கள் நம்பிக்கையுடனிருக்கும் காலத்தை விட நிலை குலைந்திருக்கும் காலத்தில் குறைவாகவே செயற்படுகின்றனர். ஒரு குழுவைச் சார்ந்த மாணவர் களிடையே இது எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை இலாசரசு என்பவரும் எரிக்சன் என்பவரும் (Lazarus and Erikson) ஆராய்ந்திருக்கின்றனர். எல்லா மாணவர்களுக்கும் ஒரு நுண்ணறிவுச் சோதனை தரப்பட்டது. அவர்கள் அதில் பெறுகின்ற கெலிப்பு எண்கள் (Scores) அவர்கள் கல்லூரியில் எப்படிப் படிக்கப் போகின்றார்கள் என்பதைக்காட்டு கின்றன என்று அறிவுறுத்தப்பட்டனர். சில நாள் களுக்குப் பிறகு அதே மாணவர்கள் மேற்கொண்டு பரிசோதனைக்கு மறுபடியும் அழைக்கப்பட்டனர். தாங்கள் சோதனையைச் சரியாகச் செய்யவில்லை என்றும் மற்றொரு வாய்ப்பு அளிக்கும்படியும் சில மாணவர்கள் கேட்டனர். மற்றவர்கள் நன்றாகச் செய்திருப்பதாகக் கூறினர். இந்தச் சோதனைகள் உண்மையில் அவர்களுடைய திறமையை அள விட்டதா என்று கண்டறியப் பரிசோதனையாளர்கள் விரும்பினர். இரண்டாம் முறை சோதனைகளைச்

செய்யும்போது முன்பு சோதனைகளைச் சரியாகச் செய்யவில்லை என்று அச்சம் கொண்ட மாணவர்கள் இம்முறை மிகுதியான பிழைகளைச் செய்தனர். முன்பு சரியாகச் செய்த மாணவர்கள் அவ்வளவு பிழைகளைச் செய்யவில்லை. முதல் குழுவைச் சார்ந்த மாணவர் கள் இரண்டாம் முறை சோதனைகளைச் சரியாகச் செய்ய முடியவில்லை. ஏனென்றால் மன இறுக்கம் (Stress) அவர்களுடைய இயல்பான செயலில் குறுக் கிட்டு விட்டது. இறுக்கம் ஒரு பொது செயல்முறை யாக இருந்து சூழ்நிலைகளிலும் உணர்ச்சிகளிலும் ஒரு பரப்பெல்லையை மறைத்து நிற்கிறது. இறுக்கத்தின் மிகப் பொதுவான நான்கு பிறப்பிடங்கள் அழுத்தம் (Pressure), ஏக்கம்(Anxiety),மனமுறிவு (Frustration), முரண்பாடு (Conflict) ஆகியனவாம். இவை எல்லாம் பொருத்தப்பாட்டைச் சிதைக்கும் உளச் செயல்முறைகளாகும்.

**அழுத்தம்:** ஒருவர் விரைவில் ஒரு மாற்றத்தைத் தழுவும் போதும் ஒரு குறிப்பிட்ட அளவு நடத்தையை அவர் மேற்கொண்டு வாழவேண்டுமென்று உணரு கின்ற போதும் அழுத்தம் நிகழ்கிறது. ஒருவருடைய உள்ளார்ந்த அழுத்தங்களெல்லாம் தன்மதிப்பைப் பாதுகாத்துக் கொள்ளுவதோடு மிகவும் தொடர் புடையனவாகஇருக்கின்றன. ஏனென்றால் ஒருவர் தம் நுண்ணறிவைப் பற்றியும், தோற்றம், புகழ் அல்லது செயல் திறமைகள் ஆகியவை பற்றியும் கொண்டுள்ள உணர்ச்சிகளினால் அவர் ஒரு மிக உயர்ந்த நிலை யான வாழ்வை அடைய வேண்டுமென்று தம்மைத் தாமே தள்ளுகிறார். உள்ளார்ந்த அழுத்தம் ஆக்கம் சார்ந்ததாக இருக்கலாம். அது, ஓர் இசைக் கருவியைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு ஒரு பொறுப்பு வாய்ந்த முயற்சிக்கு நடத்திச் செல்லலாம். அது இறுதியில் மிகுந்த மகிழ்ச்சியை அவருக்குத்தர லாம். ஆனால் அதே உள்ளார்ந்த அழுத்தம், ஒரு வருடைய குறிக்கோள்கள் அடைய முடியாதவை யாக இருந்தால் அழிவு சார்ந்ததாக இருக்கிறது.

புறவயமான அழுத்தங்கள் எல்லாத் திசைகளிலு மிருந்து ஒருவரைத் தாக்குகின்றன. மிகவும் குறிப் பிடத்தக்கதும் பொருத்தமிக்கதுமான அழுத்தங்களுள் போட்டிக்கான அழுத்தம், சமூகத்தில் விரைவான மாற்றத்தை ஒத்தமைக்கின்ற அழுத்தம்,ஒருவருடைய குடும்பமும் நெருங்கிய உறவினர்களும் தாம் எப்படி வாழ வேண்டுமென்று எதிர் பார்க்கிறார்களோ அப்படி வாழ வேண்டுமென்ற அழுத்தம் ஆகியவை முக்கியமாகும். தேர்வில் முதல் வகுப்புப் பெறு வதற்குப் போட்டியிடுகின்றனர்; வேலை தேடுவ தில் போட்டியிடுகின்றனர்; சிற்றின்பம் சார்ந்தசெயலி லும் திருமணத்திற்கான இணையைத் தேடுவதிலும் போட்டியிடுகின்றனர்; புகழுக்காகவும்,பதவிக்காகவும் போட்டியிடுகின்றனர். அப் போட்டிகளில் தோல் வியடைகின்றபோது அதை ஓர் அவமானமாகவும் மதிப்புக் குறைவாகவும் காணுவதற்குக் கற்றுத்தரப் பட்டிருக்கின்றனர். எனவே வெற்றிக்கான அழுத்தம் விரைப்பானதாக இருக்கலாம். இன்றைய நிலையில் எந்த ஒரு சமூகமும் சிக்கல் நிறைந்ததாகவே இருக் கிறது; மிகவிரைவில் மாறிக் கொண்டிருக்கிறது. எடுத் துக்காட்டாகப் பத்தாண்டுகளுக்கு முன்பு தொலைக் காட்சியைப் (Television) பற்றிச் சமூகம் அறிந் திருக்கவில்லை. ஆனால், இன்று சிற்றூர்களிலெல் லாம் அதைப் பயன்படுத்தும் நிலைஏற்பட்டிருக்கிறது. மாற்றத்தோடு ஒத்துச் செல்லுவதில் மக்கள் சிரமப் படுகின்றனர். அத்துடன் மாறாத்தன்மை, படர்ந்து ஊடுருவுகின்ற மாற்றத்தின் தன்மை ஆகியவற் றோடும் ஒத்துச் செல்ல மக்கள் துன்புறுகின்றனர். விரைவாக மாறிவருகின்ற சமூகத்தினிடையே வாழ்ந்து வருவதன் விளைவாக ஏற்படுகின்ற ஆழ மான மனவெழுச்சி அதிர்ச்சிப்புண் 'வருங்காலத்தின் அதிர்ச்சி' (Future Shock) என்று கூறப்படுகிறது.

**ஏக்கம்:** இறுக்கத்தின் மிகவும் கடினமானதும் புதிர் நிறைந்ததுமான ஒரு மூலமாக ஏக்கமிருக்கின்றது. இறுக்கத்தின் பிடியிலிருப்பவர்கள் அச்சுறுத்தப்பட்ட வர்களாகவும் நிலை குலைந்தவர்களாகவு மிருக் கின்றனர். ஏக்கத்திலிருக்கும் மக்கள் அந்த உணர்ச்சி யோடு ஏன் இருக்கிறோம் என்று அறிவதில்லை. அவர்கள் இறுக்கத்தின் எல்லா அறிகுறிகளின் அனுப வத்தையும் கொண்டிருக்கின்றனர். மேலீடான மூச்சு, தசைநார் விறைப்பு. தெளிவாகச் சிந்திக்கும் திறமை யின்மை ஆகியவை மிகவும் பொதுவான அறிகுறிகள். நண்பர்கள் யாரேனும் வணக்கம் சொன்னால் அவர் களுக்குக் கோபம் வருகிறது. பெற்றோர்களைச் சென்று பார்க்கவில்லையே என்ற குற்ற மனப்பாங்கு, எவ்வளவு இருந்தும் போதிய பணம் உணவுக்கு இல்லையே என்ற உணர்வு கொண்டிருப்பர். அவர் களுடைய சூழ்நிலையை அறிவுக்கேற்றவாறு மதிப்பீடு செய்வதற்கு அவர்களுடைய உணர்ச்சிமுரண்படுகிறது. இவ்வாறாக, ஏக்கம் ஒரு தனி மறைவானது; துன்பம் தருவது;எதிர்த்துச்சமாளிப்பது கடினமானது. ஏனென் றால் அதற்கான காரணத்தையோ குணப்படுத்தும் முறையையோ கண்டறிய முடியாது. பல உளவியல் வல்லுநர்கள் ஏக்கத்தை உளப்பாகுபாட்டுக் கோட் பாடுகொண்டு விளக்க முயன்றனர். அவர்களுடைய கருத்துப்படி, அது உள்ளார்ந்த அடிமன முரண்பாட் டின் ஓர் அறிகுறி என்பதாகும். ஒருவருடைய தெளி நிலை மதிப்பீடுகளோடு அவருடைய விருப்பம் முரண் பாடு கொண்டு மேல் நிலைக்கு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு பெண் தன்னுடைய தாயாரின் மீது சீற்றங் கொண்டிருக்கிறாள். ஆனால் ஒரு பெண் தன்னுடைய

பெற்றோர் மீது சினம் கொள்வது தவறு என்று உறுதியாக நம்புகிறாள். அவளுடைய உள்ளத்தில் தடைக்கட்டு உணர்ச்சி மிகவும் வலிமையாக இருக்கிறது. அவள் எவ்வளவு சினத்தோடிருக்கிறாள் என்பதை உணர்ந்தறிவதைத் தடுப்பதற்குத் தன்னுடைய எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்துகிறாள். அவள் சோர்வுணர்ச்சியும் களைப்பும் கொள்கிறாள். நண்பர்களை அடித்து விரட்டுகிறாள். இசுபையில்பர்சர் (Spielberger, 1966) போன்ற உளவியலார் ஏக்கக் குணப்பண்புக்கும் ஏக்க நிலைக்கும் வேறுபாடுண்டு என்று கூறுகின்றனர். குணப்பண்பு ஏக்கம் (Trait Anxiety) ஒரு நிலையான ஆளுமைக் குணப்பண்பு. அது ஒருவரிடம் என்றும் நிலைத்து நிற்கின்றது. ஏக்கத்தின் மட்டங்கள், நுண்ணறிவு மட்டங்களைப் போன்று தனியாள் வேறுபாடு கொண்டுள்ளன. ஒவ்வொருவரும் ஓரளவு ஏக்கத்தை ஒவ்வொரு சூழ்நிலையிலும் கொண்டு செல்கின்றனர். நிலைமை ஏக்கம் (State Anxiety) ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நிற்கிறது. அதனுடைய அழுத்த நிலையில் அடிக்கடி அதுமாறிக் கொண்டிருக்கலாம். அறுவைச்சிகிச்சை பெறுகின்ற நோயாளிகள் சிகிச்சைக்கு முன்பு பெரும் ஏக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். சிகிச்சைக்குப் பிறகு குறைவான ஏக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய குணப்பண்பு ஏக்கம் என்றும் நிலையாக இருக்கிறது.

**மனமுறிவு**: இறுக்கத்தின் மற்றொரு மூலம் மனமுறிவு (Frustration). ஒரு மனிதன் தன்னுடையகுறிக்கோளை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது தடைகளைச் சந்திப்பானானால் மனமுறிவு எய்துகிறான். ஒருவருடைய குறிக்கோள்கள் நிறைவேற முடியாமல் போனாலும் இலக்குகளை முயன்று அடைய முடியாமற் போனாலும் விளைவு மனமுறிவாகும். ஒன்று அவற்றை விட்டுவிட வேண்டும் அல்லது தடைகளை வெற்றிகொள்ள வேறு வழிகளைத் தேட வேண்டும். சில சமயங்களில் குறிக்கோளை அடைய முடியவில்லை என்றால் ஒருவர் தம் மீதே சினம் கொள்கிறார். கோல்மன் என்பவரும் ஆம்மன் (Coleman and Hamman, 1974) என்பவரும் மனமுறிவுக்கு ஐந்து அடிப்படை மூலங்களைக் கண்டறிந்திருக்கின்றனர். ஒன்று காலதாமதங்கள். கால தாமதங்களை ஒருவர் ஏற்றுக் கொள்வது மிகவும் கடினமாகும். எத்தனை வேலைகள் அதனால் கெட்டுப் போகின்றன. எல்லாப் பண்பாடுகளிலுமே காலத்தின் மதிப்பு மிகவும் வலியுறுத்தப்படுகிறது. அவசரமாக ஒருவர் எங்கேனும் போகின்றபோது அவர் செல்லும் வாகனம் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டு விடுமானால், ஏன் இப்படிப்பட்ட நெரிசல் என்று மனம் குமுறுகின்றார். புகைவண்டியைப் பிடிக்கவோ, விமானத்தைப் பிடிக்கவோ விரைவாகச் செல்கின்றவர்கள் இப்படிப்பட்ட நிலைகளில் மிகுந்த மனமுறிவடைகின்றனர். இரண்டாவதாக, வள ஆதாரம் குறைபாடுடையதாக இருந்தால் குறைந்த வருமானமுள்ளவர்கள் மனமுறிவடைகின்றனர். தங்களுடைய வாழ்க்கைத் தொழிலுக்கு வாய்ப்புகள் இல்லாமலிருக்கின்றனவே என்று அவர்கள் மனமுறிவடைகின்றனர். மூன்றாவதாக இழப்புகள் மனிதர்களை மனமுறிவுக்கு இட்டுச் செல்லுகின்றன. போற்றிக் காத்து வந்தது எதுவாக இருந்தாலும் அதை ஒருவர் இழந்து விட்டால் மனமுறிவு கொள்கின்றார். நான்காவதாக, இன்று சமூகத்தில் போட்டிகள் பெருகிவருகின்றன. அதனால் தோல்விகளும் அவற்றைத் தொடர்ந்து வரலாம். எனவே தோல்விகள் மனமுறிவின் நிலையான மூலங்களாக இருந்து வருகின்றன. இறுதியாகச் சிலர் வாழ்க்கையே பொருளற்றது என்று உணருகின்றனர். ஒருவர் தாம் எதிர்பார்க்கின்ற அளவு வாழ்க்கையை நிறைவு செய்து கொள்ளமுடியாது. பொருளுள்ளதும் முழுநிறைவானதுமான வாழ்க்கையை ஒருவர் அமைக்க முயற்சி செய்தால் அது தோல்விதான். எனவே அப்படிப்பட்ட வாழ்க்கை பொருளற்றது என்று அவர் உணருகிறார்.

**முரண்பாடு**: எல்லா வாழ்க்கைத் துன்பங்களிலும் முரண்பாடுகள்தாம் மிகவும் பொதுவானவை. இரண்டு தேவைகளை ஒன்றுக்கொன்று ஒத்துச் செல்ல முடியாதவற்றை ஒருவர் சந்திக்கும்போது முரண்பாடு ஏற்படுகிறது. முற்றிலும் சிக்கல் தீர்ந்த முரண்பாடுகளே இல்லை என்று சொல்லலாம். ஒன்று ஒருவர் தம் குறிக்கோள்களில் ஒன்றைவிட்டு விட வேண்டும்; அல்லது ஒன்றையோ இரண்டையுமோ மாற்றியமைக்க வேண்டும்; அல்லது ஒன்றைத் தாமதமாக முயலவேண்டும்; அல்லது இரண்டுமே நிறைவைத் தரப்போவதில்லை என்று நினைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். முரண்பாடுகளை இரண்டு எதிர்முனையான மனப்போக்குகளாக குர்ட் இலெவின் (Kurt Lewin, 1930) என்பவர் விவரித்துள்ளார். அவை அணுகுதலும் புறக்கணித்தலும் என்பன. கவர்ச்சியாக உள்ளதொன்றை ஒருவர் அடைவதற்கு அணுகுகின்றார். ஒருவர் தம்மை அச்சுறுத்திய தொன்றைத் தாம் புறக்கணிக்க முயலுகின்றார். இந்த இரண்டு மனப்போக்குகளும் மூன்று அடிப்படை வகையான முரண்பாடுகளை உருவாக்குகின்றன. அவை அணுகுதல் – அணுகுதல் முரண்பாடு, புறக்கணித்தல் – புறக்கணித்தல் முரண்பாடு, அணுகுதல்-புறக்கணித்தல் முரண்பாடு என்பன.

ஒருவர் ஒரே சமயத்தில் இரண்டு குறிக்கோள்களையும் அடைய முயலலாம். இரண்டும் கவர்ச்சி

யாகவும் இருக்கலாம். ஓர் இளம் பெண் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையில் ஈடுபட விரும்பலாம். அதே சமயத்தில் குடும்பத்தின் தேவை கருதி ஒரு வேலையில் சேரவும் விரும்பலாம். திருமணம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெற்றால், குழந்தை களைக் கவனிப்பதா வேலைக்குப் போவதா? இரண் டையும் செய்ய முடியாது. ஒன்றை விட வேண்டும் அல்லது இரண்டிலும் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டும். வீட்டில் ஒரு முழு நேர வேலைக்காரியை அமைத்துக் கொண்டு, பகுதி நேர வேலையொன்றை ஏற்றுக் கொள்ளலாம். இந்த மாற்றம் இரண்டு குறிக் கோள்களையும் பெற வாய்ப்புத் தருகின்றது. அதே சமயத்தில் மூலக்குறிக்கோள்களில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. இரண்டாம் வகை முரண்பாட்டில் ஒரு மனிதன் இரண்டு விரும்பத்தகாத அல்லது அச்சுறுத்து கின்ற நிலைகளைச் சந்திக்கின்றான். புறக்கணித்தல்– புறக்கணித்தல் முரண்பாட்டை மக்கள் சந்திக்கின்ற போது அதிலிருந்து தப்பிச் செல்லவே விரும்புகின்ற னர். தப்பிச் செல்லுதல் முடியாமலிருந்தால், மற்றக் கூறுகள் அவர்களை நிலைக்கச் செய்தால் பல்வேறு வழிகளில் முரண்பாட்டின் கடுமைக்கேற்ப ஈடுசெய்து கொள்ள முடியும். இத்தகைய முரண்பாடுகளில் அகப்பட்டுள்ளவர்கள் அடிக்கடி ஓர் அச்சுறுத்தலுக்கும் மற்றோர் அச்சுறுத்தலுக்குமிடையே தடுமாறுகின்ற னர். அணுகுதல் – புறக்கணித்தல் முரண்பாட்டில் ஒரு மனிதன் குறிக்கோளால் கவரப்படுகிறான். அதே சமயத்தில் அதே குறிக்கோளால் துரத்தப்படுகின் றான். குறிக்கோளை அடைய அணுகுகின்ற விருப்பம் குறிக்கோளின் அருகில் செல்லும்போது வலிமையடை கிறது. ஆனால் அதே விருப்பம் புறக்கணித்தலாக மாறுகிறது. புறக்கணித்தல் மனப்போக்கு, அணுகுதல் மனப்போக்கை விட விரைவாக மிகுகின்றது. சிக்க லான நிலைகளில் அணுகுதல் புறக்கணித்தல் முரண் பாடுகள் இணைக்கப்படுகின்றன. மு.இரா.

துணை நூல்கள்:

**Kendler, H.H.**, Basic Psychology, W.A. Benjamin, INC., London, 1975.

**Lazarus, R.S.**, Patterns of Adjustment, International Student Edition, Mcgraw-Hill Kogakusha Ltd., Tokyo, 1976.

**Morris, C.G.**, Psychology-An Introduction, Prentice-Hall, INC., Englewood Cliffs, New Jersey, 1982.

## பொருந்தில் இளங்கீரனார்

பொருந்தில் இளங்கீரனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் புறநானூற்றில் ஒரு பாடலும் (பாடல் எண்: 53) அகநானூற்றில் பாலைத் திணைப் பொருளாக இரண்டு பாடல்களும் (பாடல் எண்கள்: 19,351) ஆக மூன்று பாடல்களைப் பாடி யுள்ளார்.

சங்ககாலப் புலவர்களுள் இளங்கீரனார் என்ற பெயருடைய புலவர்கள் பலர் இருந்தமையால் இவர் பொருந்தில் இளங்கீரனார் எனப்பட்டார் என்றும், கிடங்கில், விளங்கில் என்பன போலப் பொருந்தில் என்பதும் ஓர் ஊர்ப்பெயர் என்றும், அவ்வூரே இவர் பிறந்த ஊர் என்றும் ஒரு சிலர் கூறுவர். வேறு சிலர், இளங்கீரனார் என்ற பெயருடைய பலருள் ஒருவர் அந்தி இளங்கீரனார் ஆவார். அவர் பெயரில் அடை யாக உள்ள 'அந்தி' எனும் சொல் அப்புலவர் பாடிய பாடல் ஒன்றன் உயிர்ச்சொல்லாக அமைந்து நிற்றல் போல் இப்புலவரது இப்பெயருக்கு அடையாக இருக் கும் 'பொருந்தில்' எனும் சொல்லும் ஊர்ப்பெயராக இராமல் கவிதையில் அமைந்த கலை நுட்பச்சொல் லாகவே இருந்திருக்க வேண்டும் என்றும், அகநானூறு 351-ஆம் பாடலில் வரும் 'பொருந்துழி' எனும் சொல் லின் திரிபாக அது இருக்கலாம் என்றும் கருதுவர்.

இவர், தம் போன்றுள்ள புலவர்கள் பால் பெரு மதிப்பு உடையவராவார். இப்பண்பால் இவர் கபி லரைச் 'செறுத்த செய்யுள் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' (புறம்.53) என்று பாராட்டுகிறார்.

இவரால் பாடப்பெற்ற அரசன் சேரன் மாந்தரஞ் சேரலிரும் பொறை ஆவான். மாந்தரஞ்சேரல் இரும் பொறை, பரணரும் பாராட்டும் பெருமை உடைய வன். அவனும், இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி யும் மேற்கொண்ட போரில் அவன் தோற்றுவிட் டான். தன் தோல்விக்குக் காரணம், பெருநற்கிள்ளி யின் பேராண்மையன்று; அவனுக்கு துணைவந்த தேர்வண்மலையனின் பேராற்றலே என அறிந்தான். அந்நிலையில், 'தேர்வண் மலையன் நம்முடன் நின்று போர் செய்து இருப்பின் நமக்கே அல்லவா வெற்றி! அவர் துணை நமக்குக் கிடைக்காமல் போயிற்றே! இவ்வேளை, கபிலர் இருந்திருப்பின் அவன் துணை யினைப் பெற்றிருப்பேன்; தேர்வண்மலையனும் கபிலரிடம் பெருமதிப்பு உடையவன். அவர் சொல் லிற்கு மறுசொல் கூறாமல் நமக்குத் துணைபுரிந் திருப்பான். வெற்றி நமக்கே உண்டாயிருக்கும். ஆனால் அந்தோ! இவ்வேளை அவர் இல்லாது போய்விட்டாரே! அவர் இருந்திருப்பின் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்' என்று எண்ணி வருந் தினான். இவ்வாறு வருந்திய மாந்தரஞ் சேரல் இரும் பொறையின் வருத்தத்தைப் புலவர் தம் புற நானூற்றுப் பாட்டில் (பாடல் எண்: 53)கூறியுள்ளார்.

இவ்வரசன் ஒரு காலத்தில் கடலன் என்பானுக்கு உரியது எனக் கருதப்பெறும் விளங்கில் என்ற விழுப்புகழ் நிறைந்த நகரத்திற்குப் பகைவரால் வந்த கேட்டினைப் போக்கிக் காத்தான். முற்றி முதிர்ந்த சிப்பிகளும், முத்துகளும் நிறைந்த, மகளிர்போந்து கைகோத்துக் குரவை ஆடிமகிழும் மாண்பும்நிறைந்த விளங்கில் நகர்ச்சிறப்பினையும், அதை அவன் காத்த ஆற்றற் சிறப்பினையும் புலவர் பொருந்தில் இளங்கீரனார், 'முதிர்வா ரிப்பி முத்த வார்மணற், கதிர்விடுமணியிற் கண்பொருமாடத் திலங்குவளை மகளிர் தெற்றி யாடும், விளங்கு சீர் விளங்கில் விழுமங் கொன்ற, களங்கொள் யானைக் கடுமான் பொறைய' (புறம்.53) என்று சிறப்பித்துக் கூறியுள் ளார். பா.ந.

**பொருநராற்றுப்படை**: இது பத்துப்பாட்டுள் இரண்டாம் பாட்டாகும். இது 248 அடிகளை உடையது. வஞ்சியடிகள் இடையில் வந்த ஆசிரியப்பா வாலாகியது. பொருநராற்றுப்படை என்றால் பொரு நரை ஆற்றுப்படுத்துவது என்பது பொருள். பரிசில் பெற்ற ஒரு பொருநன், பரிசில் பெறக்கருதிய பொருநனைச் சோழன் கரிகால் பெருவளத் தானிடத்து ஆற்றுப்படுத்தினான் எனக்கூறும் பாங்கில் அக்கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணி யார் பாடியதாகும்.

புகழ்ந்து பாடுவோர்க்குப் பொருநர் என்பது பெயர். இவர் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணிபாடுவோர் என மூவகைப்படுவர். அவருள், இங்கே குறிக்கப்படும் பொருநன் போர்க் களம் பாடுவோன் ஆவான். இப்பாட்டில் 'கைக்கச டிருந்த வென் கண்ணகன் றடாரி... ஒன்றியான் பெட்டா வளவையின்' (70-73) என வருவதால் இப் பொருநன் தடாரிப்பறை கொட்டுபவன் என்பது புலப்படும்.

இதன் ஆசிரியரான முடத்தாமக்கண்ணியார் இதைத்தவிர வேறு பாடல்கள் பாடியதாகத் தெரிய வில்லை. இவர் பெண்பாற்புலவர் என்றும் சிலர் கூறுவர்.

பாட்டுடைத் தலைவன் கரிகாற் பெருவளத்தான் உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னியின் புதல்வன். தம்முள் மாறுபட்டு வந்து தன்னை இளையன் என்று இகழ்ந்த முதியோர் பொருட்டுத் தான் முதியன் போல் வந்து அவர்கள் வழக்கைத் தீர்த்தான் என்றும், தான் கருவூரில் இருக்கையில் கழுமலம் என்னும் ஊரில் இருந்த யானையால் கொண்டு வரப்பட்டு அரசாட்சிக்கு உரியன் ஆயினான் என்றும், இளமையில் நெருப்பால் சுடப்பட்டு உயிர் பிழைத் தான் என்றும்,இரும்பிடர்த் தலையாரை அம்மானாக உடையவன் என்றும் கூறுவர். இவன் மிகச் சிறந்த வீரன். வெண்ணி என்னும் ஊர்ப்புறத்தேயுள்ள போர்க்களத்தில் சேரமான் பெருஞ்சேரலாதனோடு போர் செய்து அவனை வென்றான். அவனோடு அக்காலத்தில் ஒரு பாண்டியனையும் இவன் வென்றான் என்பது பொருநராற்றுப்படையால் விளங்குகிறது. இவன் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து அரசாட்சி செய்தான் என்றும், ஒரு காலத்தில் இமயமலை வரை சென்று இடையிலுள்ள அரசர் களை வென்றான் என்றும் கூறுவர்.

வறுமைப் பிணியால் வாடிய பொருநன் ஒருவன் தன் மனைவியாகிய பாடினியுடன் வள்ளல்கள் வாழும் இடந்தேடிப் புறப்பட்டான் எனவும், வழிநடந்து நடந்து அவனும்,அவன் மனைவியும் சோர்ந்தனர் என வும்,இருவரும் ஒரு மர நிழலிலே இளைப்பாறத் தங்கி வழிநடந்த களைப்புத் தீரப் பாடினி தன் யாழை வாசித்து இனிய கானம் பொழிந்தாள் எனவும், அச் சமயத்தில் கரிகாற் சோழனிடம் பரிசு பெற்று வந்த பொருநன் ஒருவன் அவர்களைக் கண்டு, 'பொரு நனே! நானும் உன்னைப்போல் வறுமையால் வாடி னேன்; கரிகாற் சோழனிடம் போனேன்; அவனைப் புகழ்ந்து பாடினேன்; அவன் என்னை அன்புடன் வர வேற்றான்; புத்தாடையளித்தான்; நன்றாய் உறங்கு வதற்கும் ஓய்வு பெறுவதற்கும் இடம் கொடுத்தான்; நல்ல கொழுப்பும் இனிமையுமுள்ள விருந்தளித்தான். இவ்வாறு என்னையும், என்னுடன் சேர்ந்தவர்களை யும் பல நாள்கள் எக்கவலைக்கும் இடமின்றிப் போற்றினான். இறுதியில் அவனிடம் விடைபெற்று வீடு திரும்பும் போது அவன் களிறுகளையும் பிடி களையும் கன்றுகளுடன் பரிசளித்தான். வறுமை நோய் எங்களை எக்காலத்தும் எட்டிப் பிடிக்காத படி ஏராளமான தேர்களை அளித்து உதவினான். ஆடைகள் அணிகலன்கள் அனைத்தும் அளித்தான். பொருநனே! நீயும் உன் சுற்றத்துடன் அந்தக் கரி காலனிடம் சென்று அவனைப் புகழ்ந்து பாடு. உன் குறை தீர உனக்குப் பரிசளிப்பான். நீயும் வறி யோர்க்குப் பரிசு வழங்கும் அளவுக்கு உனக்கு எண்ணற்ற செல்வங்களையும் நிலங்களையும் வழங்கு வான்' என்று கூறியதோடு காவிரிப்பூம்பட்டினத் திற்குச் செல்லும் வழிகளையும் சொல்லி வழியனுப்பி வைத்தான் எனவும் பொருநராற்றுப்படை என்னும் இப்பாடல் கூறுகிறது.

கரிகாற்சோழனின் வீரச்சிறப்பு, கொடைச் சிறப்பு,ஆட்சிச் சிறப்புப்போன்றவற்றை இப்பாடல்மிக அழகாக எடுத்தியம்புகிறது. உருவப்பஃறேர் இளஞ் சேட்சென்னியின் மகனான கரிகாற் சோழன் தாயின்

வயிற்றிலிருந்து பிறக்கும்போதே அரசனாகும் உரிமை யுடன் பிறந்தவன்; முருகனைப் போன்ற ஆற்றலும் அழகும் உடையவன் என்பதை, 'உருவப்பஃறேர் இளையோன் சிறுவன், முருகற் சீற்றத்து, உருகெழு குருசில், தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி' (130 – 132) என்ற பாடல் வரிகளால் உணரலாம். அவனது ஆட்சிச் சிறப்பைக் கூறுமிடத்து, உலகத்தை ஒரு குடையின்கீழ் வைத்து ஆண்டவன்; குடிமக்களின் பால் குறையாத அன்பு கொண்டவன்; அறங்கூறும் நூல்களை அறிந்து அம்முறையைப் பின்பற்றி ஆட்சி புரிந்தவன்; பகைவர்களை வெல்லும் வேற்படையை யுடைய சிறந்த வீரன் என்பதை, 'ஒரு குடையான் ஒன்று கூறப் பெரிதாண்ட, பெருங்கேண்மை, அறனொடு புணர்ந்த திறன் அறிசெங்கோல், அன்னோன் வாழி வெல்வேற்குரிசில்' (228 – 231) என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

காவிரியால் காப்பாற்றப்படும் சோழ நாட்டில் உள்ள நிலம் வேலி ஒன்றுக்கு ஆயிரம் கலம் செந்நெல் விளையும்படியான தன்மையுடையது என்று காவிரி யின் சிறப்பைக் கூறுகிறது இப்பாடல்.

பண்டைத் தமிழரின் பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும் இப்பொருநராற்றுப்படை நன்கு எடுத்தியம்புகிறது. பண்டைத் தமிழர்கள் பொன் னால் ஆகிய அழகிய நகைகள் அணிந்திருந்தனர் என் றும், செல்வர்கள் வீட்டிலே பொன்னால் செய்த பாத் திரங்கள் இருந்தன என்றும், விருந்தினர் விடைபெற் றுச் செல்லும்போது அவர்பின் ஏழடி நடந்து சென்று அன்புரை சொல்லி அனுப்பி வைப்பர் என்றும், இசை பாடுவோர் முதலில் தெய்வத்தை வாழ்த்திய பிறகே பாடத் தொடங்குவார்கள் என்றும், பிற வாறும் அக்காலத் தமிழரின் பழக்க வழக்கங்களைக் கூறுகிறது. மக்கள் சிறப்பாக மேற்கொண்டிருந்த உழவுத் தொழில், நெசவுத் தொழில் பற்றியும் நன்கு எடுத்துரைக்கின்றது. இம்மையிலே செய்த தவம் மறுமையிலே பயன் தரும் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடத்தில் இருந்ததாகவும் தெளிவுறுத்துகிறது.

இவை போன்ற இன்னும் பல செய்திகளும் பொருநராற்றுப் படையில் காணப்படுகின்றன. சிறப் பாகக் கரிகாற் சோழனுடைய பெருமையையும், அவன் ஆண்ட சோழநாட்டின் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதே இப்பாடலின் நோக்கம். சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு விளங்கும் பழந்தமிழ்ப் பாடல்களுள் இதுவும் ஒன்றாகும். பா.ந.

**பொருள் இணைத்தறி சோதனை:** ஆளுமைக் குணப்பண்புகளை மதிப்பிட்டறிய உளவி யலார் பல கருவிகளை உருவாக்கினர். அவை ஆளு மைச் சோதனைகள் (Personality Inventories)என்று சொல்லப்படுகின்றன. அவற்றுள் ஒன்று பொருள் இணைத்தறி சோதனையாகும். பொருள் இணைத்தறி சோதனை புறத்தெறி உத்தியின் அடிப்படையில் உரு வாக்கப்பட்ட மூலச்சோதனையாகும். இச்சோதனை மர்ரே (H.A.Murray, 1943) என்பவரும் அவருடைய கூட்டாளியும் சேர்ந்து ஆர்வார்டு உளவியல் கூடத் தில் உருவாக்கினார்கள். கதை உருவாக்கும் உத்தி யின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சோதனை களில் இதுதான் மிகுதியாகப் பயன்பட்டு வருகிறது. இதற்குப் பிறகு உருவாக்கப்பட்ட சோதனைகளுக்கு இது ஒரு மாதிரியாகவும் அமைந்தது.

பொருள் இணைத்தறி சோதனை மங்கலான படங்களைக் கொண்ட பத்தொன்பது அட்டைகளைக் கொண்டது. அப்படங்கள் கருப்பும் வெள்ளையு மானவை; அவற்றுள் ஓர் அட்டையில் படம் இருக் காது. பரிசோதிக்கப்படுவோர் அந்த அட்டையி லுள்ள படத்திற்கு ஏற்ப ஒரு கதை உருவாக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார். படத்தில் காட்டப் பட்டுள்ள நிகழ்ச்சி எப்படி இட்டுச் செல்லுகின்றது என்று கூறவேண்டும். அந்த நேரத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது? படத்திலுள்ள பாத்திரங்கள் என்ன உணர்ச்சியோடிருக்கின்றனர்? என்ன நினைக் கின்றார்கள்? முடிவு என்ன? என்று கூறவேண்டும். வெறும் அட்டையில் ஏதேனும் படத்தைக் கற்பனை செய்யும் படியும் அதை விவரித்துக் கூறும்படியும் அதைக் கொண்டு ஒரு கதை சொல்லும் படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மர்ரே உருவாக்கிய மூலச்செயல் முறைப்படி ஒரு மணி நேரம் கொண்ட இரண்டு சந்திப்புத் தொடர்கள் தேவை. ஒவ்வொரு சந்திப்புத் தொடருக்கும் 10 அடிப்படை அட்டைகள் அனுமதிக்கப்படுகின்றன. இரண்டாம் சந்திப்புத் தொடரின்போது கொடுக்கப்படும் அட்டைகள், வேண்டுமென்றே இயல்புக்கு மாறாகவும், நடக்கக் கூடாதனவாகவும், திடீரென்று நிகழக்கூடியனவாகவு முள்ள நிகழ்ச்சிகள் கொண்ட படங்களைக் கொண் டவை. கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு சோதிக்கப்படுபவர் படத்திலுள்ளனவற்றைப் பற்றிச் சுதந்திரமாகக் கற்பனை செய்து கதைஉருவாக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். சோதனையின் 20 பட அட்டைகளும் நான்கு வகைகளாக இருக்கின்றன. அவை சிறுவர்கள், சிறுமியர்கள், 14 வயதிற்கு மேற் பட்ட ஆண்கள், 14 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் என்பன. பெரும்பாலான நோய் நீக்கு வல்லுநர்கள் சுருக்கப்பட்ட வரிசையில் தேர்ந்தெடுத்த பட அட்டைகளைப் பயன்படுத்துகின்றனர். ஒருவருக்கு 10 பட அட்டைகளுக்கு மேல் பெரும்பாலும் கொடுப் பதில்லை.

பொருள் இணைத்தறி சோதனையின் கதைகளை விளக்குகையில் சோதனையாளர் காண்பது என்ன

வென்றால், கதையின் தலைவர் யார்?இரண்டு பாலினப் பாத்திரங்களில் யாரோடு சோதிக்கப்படுபவர் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார் என்று முடிவு செய்கிறார். அதன்பிறகு கதையின் பொருள், பாகுபாடு செய்யப்படுகின்றது. குறிப்பாக, மர்ரேயின் 'தேவைகள் — அழுத்தம்' என்ற பட்டியல் தொடர்பாகப் பாகுபாடு செய்யப்படுகிறது. அழுத்தம் என்பது சூழ்நிலைச் சக்திகள் தேவைகளை நிறைவேற்றுவதில் உதவியாக இருப்பவை அல்லது தலையிடுபவை பற்றிக் குறிக்கின்றது.

மற்றவர்களால் தாக்கப்படுதல் அல்லது குற்றங் கூறப்படுதல், அன்பைப் பெறல், வசதி பெறுதல், ஒரு கப்பல் உடைந்து உடல் சார்ந்த ஆபத்துக்கு உள்ளாதல் முதலியவை அழுத்தத்தின் சக்திகளுள் அடங்குகின்றன. ஒரு தனியாளின் ஒரு குறிப்பிட்ட தேவை அல்லது அழுத்தத்தின் வலிமை அல்லது முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்வதில், பல்வேறு கதைகளிலும் நிகழ்கின்ற செறிவு, கால நீட்டிப்பு, அடுத்தடுத்து நிகழ்நிலை குறிப்பிட்ட படத்தோடு இணைக்கப்படுகின்ற தனிப்பட்ட பண்பு ஆகியவற்றின் மீது சிறந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் உள்ளடங்கியுள்ள ஊகம் என்னவென்றால் இயல்புக்கு மாறான பொருள், ஒவ்வொரு படத்திற்கும் தரப்படுகின்ற பொதுவான துலங்கல்களிடமிருந்து மாறுபட்டுச் செல்லுதல், சம்பந்தப்பட்ட தனியாளுக்கு மிக முக்கியமானதாக இருக்கிறது. அப்பொருள் அந்த மனிதரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்று நம்புகின்றனர்.

பொருள் இணைத்தறி சோதனையின் கதைகளை மதிப்பீடு செய்வதற்கு மிகப்பல தொழில் நுட்ப முறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவை மூன்று குழுக்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை (அ) பொருள் மூலம் மதிப்பிடல், (ஆ) பொருளின் மீது அமைந்ததை முறையாக எண்ணல் முறைகள், (இ) தூய முறையாக எண்ணல் முறைகள் என்பன. பழக்கத்தில் முன்றாவதான தொழில் நுட்பமுறை தான் பெரிதும் பயன்படுகின்றது. முதல் முறையும், இரண்டாம் முறையும் ஆராய்ச்சிகளுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கின்றன.

பொருளின் மீது அமைக்கப்பட்ட மதிப்பீட்டு முறைகளைத்தாம்கின்சு (Tomkins, 1947),இசுடெயின் (Stein, 1955), இராப்பபோர்ட்டு (Rapaport, 1943), பெல்லாக்கு (Bellak, 1954),இரிவர்சு (Rivers, 1958), முதலியோர் அமைத்தனர். இச்சோதனை நெடுநாள்கள் கட்டளைச் சட்டம் (Norms) இன்றியே பயன்பாட்டிலிருந்து வந்தது. மர்ரே 1943 -ஆம் ஆண்டில் தேவைகள்,அழுத்தம் பாகுபாட்டிற்கு ஒரு கட்டளைச் சட்டம் வெளியிட்டிருந்தார். பிறகு இசுடெயின் என்பவரும் இராப்பபோர்ட்டு என்பவரும் கட்டளைச் சட்டங்களை அமைத்து வெளியிட்டனர். இச்சோதனை பெரிதும் நோய் நீக்குஉளவியல் துறையில் (Clinical Psychology) பெரிதும் பயனுடையதாக இருந்து வருகிறது. மு.இரா.

**துணை நூல்கள்:**

**Anastasi, A.,** Psychological Testing, MacMillan Company, New York, 1961.

**Cronbach, L.T.,** Essentials of Psychological Testing, Harper and Brothers Publishers, New York, 1960.

பொருள் ஏற்புடைமை: உளவியலார் தங்கள் தொழில் துறைகளுக்கு ஆள்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், பல்வேறு தொழில்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், மாணவர்கள் தங்கள் கல்விக்கு ஏற்ற பாடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், தனி மனிதர்கள் கொண்டுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உளவியல் சோதனைகளைப் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு சிக்கலுக்கும் தனித்தனிச் சோதனைகளை உருவாக்கியுள்ளனர். நுண்ணறிவை அளவிடவும், பல்வேறு இயற்கைத் திறமைகளையும், விருப்பங்களையும், கவர்ச்சிகளையும், பயிற்சித்திறமைகளையும், ஆளுமைக் கூறுகளையும் அளவிடவும் சோதனைகள் உள்ளன. ஒவ்வொரு சோதனையும் ஒரு தனிச் சிறப்பைக் கொண்டிருக்கின்றது. ஒரு சோதனையின் மதிப்பில் அதிக விளைவை உண்டாக்குகின்ற பண்பு அதனுடைய ஏற்புடைமையாகும். ஒரு சோதனை ஒரு பொருளைச் சரியாக அளவிடுமானால் அதன் ஏற்புடைமை உயர்வாக இருக்கின்றது எனக் கருதலாம். சோதனையாளர்களின் தேவை என்னவோ அந்த விவரத்தைக் கொடுக்குமானால் அதன் ஏற்புடைமை சிறப்பானதாகும். ஒரு முடிவைச் செய்வதற்கு ஒரு சோதனை உதவி செய்யுமானால் மற்றஎதற்கும் அது ஏற்றதன்று. ஒரு சோதனை எதனை அளவிடுவதற்கு உருவாக்கப்பட்டதோ அதனைச் சரியாக அளவிடுமானால் அது ஏற்புடைமையுள்ளது என்பது ஏற்புடைமையின் வரையறை. ஏற்புடைமை நான்கு வகைப்படும். அவைகளுள் ஒன்றுதான் பொருள் ஏற்புடைமை (Content Validity) என்பதாகும்.

பொருள் ஏற்புடைமை பெரும்பாலும் செயல் திறமையைச் சோதிப்பதற்கு மிகவும் பொருத்தமானது. செயல் திறமைச் சோதனை, பொருளைக் கையாளும் திறமையை மதிப்பீடு செய்கின்றது. அளவிடப்பட வேண்டிய நடத்தையின் பரப்பெல்லை

யின் ஒரு பகரமான மாதிரியை உள்ளடக்கியிருக்கின்ற சோதனையின் பொருளை ஒழுங்குமுறையாக அறிவது பொருள் ஏற்புடைமையாகும். இப்படிப்பட்ட ஏற்புடைமை பொதுவாகச் சாதனைச் சோதனைகளை (Achievement Tests) மதிப்பீடு செய்வதில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பயிற்சித்திறமையை(Skill) ஒருவர் எந்த அளவுக்குக்கை வரப் பெற்றிருக்கின்றார் என்பதை அளவிடுவதற்கு உருவாக்கப்பட்டது, இந்தச் சாதனைச் சோதனை. அது ஒரு திறமையாகவுமிருக்கலாம் அல்லது ஒரு பாடமாகவுமிருக்கலாம் அல்லது ஓர் இடுபணியாகவுமிருக்கலாம். சோதனையின் பொருளைப் பரிசோதித்துப் பார்த்து, அச்சோதனை உருவாக்கப்பட்ட குறிக்கோளுக்கு ஏற்புடைமையாக இருக்கின்றது என்று உறுதியளிக்கலாம். இங்குச் சோதனையின் பொருள் என்பது வரலாறு, புவியியல், பெருக்கல் கணக்கு, சொல்லின் எழுத்தாக்கம் (Spelling) முதலியவைகளைச் சார்ந்த சோதனை உருப்படிகள் (Items) பொருத்தமாக அச்சோதனைப் பட்டியலில் இருக்கின்றனவா என்று பரிசோதித்தல். இது அவ்வளவு எளிதான செயலன்று. இதில் பொருள் சார்ந்த மாதிரியின் (Sample) சிக்கல் அடங்கியிருக்கின்றது. சோதிக்கப்படுகின்ற பொருட் பரப்பு ஒழுங்குமுறையாகப் பாகுபாடு செய்யப்பட்டு, எல்லாப் பெரும்பாலான பண்புக் கூறுகளும் போதுமான அளவு சோதனை உருப்படிகளில் பரவியிருக்கின்றனவா என்று பார்த்து உறுதியளிக்கப்படவேண்டும். மேலும், அந்த உருப்படிகள் சரியான சம அளவு வீதம் (Proportion) கொண்டவையாகவும் இருத்தல் வேண்டும்.

சரியாக உருவாக்கப்பட்ட ஒரு சாதனைச் சோதனை, செயல் சார்ந்த கட்டளையின் குறிக்கோள்களைப் பரப்பியதாக இருக்க வேண்டும். செய்திப் பொருள்கள் மட்டுமிருந்தால் போதாது. பொருள் விரிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். முக்கிய குறிக்கோள்களான, விதிகளைப் பயன்படுத்தல், செய்திப் பொருள்களைச் சரியாக விளக்குதல், உண்மையைக் கொண்ட அறிவுப் பரப்பு முதலியவைகளாகும். குறிப்பிட்ட நடத்தை சார்ந்த பரப்புக்குத் தனியாளின் சோதனைத் துலங்கல்கள் எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கின்றனவோ அந்த அளவைச் சார்ந்திருக்கின்றது பொருள் ஏற்புடைமை. சாதனைச் சோதனையின் பொருள் ஏற்புடைமையைச் சோதிப்பதற்குப் பல பரிசோதனை முறைகளைப் பின்பற்றலாம். இவ்வாறு பரிசோதிக்கப்பட்ட பொருள் ஏற்புடைமை, கெலிப்புச் சோதனைகளை மதிப்பீடு செய்வதற்குப் போதுமான தொழில் நுட்பத்தை அளித்து உதவுகிறது. பொருள் ஏற்புடைமையும் தோற்ற ஏற்புடைமையும் (Face Validity) ஒன்றுதான் என்று சில சமயங்களில் குழப்பிக் கொள்ளப்படுகின்றன. தொழில் நுட்பமுறையில் பார்த்தால் தோற்ற ஏற்புடைமை ஓர் ஏற்புடைமை என்று கூறுவதற்கில்லை. அது, ஒரு சோதனை உண்மையில் எதை அளவிடுகின்றதோ அதைக் குறிப்பிடுவதில்லை. மேலோட்டமாக அது எதை அளவிடுவது போல் தோன்றுகின்றது என்று கூறுவதாகும். அச்சோதனையை யார் செய்கின்றார்களோ அவர்களுக்கு 'ஏற்றதாகத் தோன்றுகின்றது' என்று அதை நடத்துவோர் கருதுவதாகும். அடிப்படையாகப் பார்க்கும்போது, தோற்ற ஏற்புடைமை பொது மக்கள் தொடர்புகள், ஒத்திசைவு ஆகியவை தொடர்புடையதாக இருக்கின்றது. தோற்ற ஏற்புடைமை, சோதனைகளின் ஒரு விரும்பத்தக்க பண்புக் கூறாகவே இருக்கின்றது. எப்படியெனில் சோதனையின் பொருள் பொருத்தமற்றதாகவோ தொடர்பற்றதாகவோ இருக்குமானால் முடிவுகள் பயனற்றுப் போகும். தோற்ற ஏற்புடைமை, பொருள் ஏற்புடைமையின் அளவுக்குச் சில சமயங்களில் முக்கியத்துவம் பெறுவதுண்டு. ஒரு சோதனை பள்ளியிலுள்ள மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டிருந்தால், அதை வயது முதிர்ந்தோரிடம் செலுத்தும்போது கடுமையான எதிர்ப்புகள் கிளம்புகின்றன. அது தோற்ற ஏற்புடைமை செய்யப்படாமல் வயது முதிர்ந்தோரிடம் செலுத்தக்கூடாது என்பதாகும். இப்படிப்பட்ட சோதனை புறவயமாக ஏற்புடைமை செய்யப்பட்டால் போதாது. அது செயல்சார்பான சூழ்நிலைகளில் விளைவுள்ளதாகச் செயற்பட வேண்டுமானால் தோற்ற ஏற்புடைமை செய்யப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது.

பொருள் ஏற்புடைமை, சாதனைச் சோதனைகள், செயல் திறமைச் சோதனைகள் (Proficiency Tests) ஆகியவற்றில் பெரிதும் சோதிக்கப்படுகின்றது. ஆனாலும், இப்பொருள் ஏற்புடைமையை மிகவும் பரந்து பட்ட அளவுக்குச் சோதனைகளிடம் காண முயலுகின்றனர். உட்வொர்த்து (Woodworth) என்பவர் உருவாக்கிய தனியாள் தரும் செய்திக் குறிப்புத்தாள் (Personal Data Sheet) முதல் உலகப் போரின்போது மிகச் சிறந்த முறையில் பயன்பட்டது. அச்சோதனை உருவாக்குவதில் முக்கியமாக வலியுறுத்தப்பட்டது, பொருள் ஏற்புடைமை செய்ய வேண்டுமென்பதுதான். அண்மைக் காலத்தில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஆளுமைச் சோதனைகளுள் ஒன்று, மூனி சிக்கல் தணிக்கைப் பட்டியல் (Mooney Problem Check List) ஆகும். இது பொருள் ஏற்புடைமை கண்டறியப்பட்டதாகும்.

பெல் என்பவர் உருவாக்கிய ஆளுமைச் சோதனையான 'பெல் பொருத்தப்பாட்டுச் சோதனை' (Bell Adjustment Inventory)யும், கலிபோர்னியா ஆளுமைச் சோதனையும் (California Personolity Inventory) உருவாக்கப்பட்டமை, பொருள் ஏற்புடைமையின் அடிப்படையில்தான். இன்று உருவாக்கப்படுகின்ற சில ஆளுமைச் சோதனைகளும் பொருள் ஏற்புடைமையால் தணிக்கை செய்யப்படுகின்றன. மு. இரா.

**துணை நூல்கள்:**

**Anastasi, A.,** Psychological Testing, Mac Millan Company, New York, 1961.

**Cronbach, L.J.,** Essentials of Psychological Testing, Harper and Brothers, Publishers, New York, 1960.

**Morris, C.G.,** Psychology-An Introduction, Prentice Hall, INC., Englewood Cliffs, New Jersey, 1982.

**பொருள் நிலைப்பு:** புலன் காட்சி சார்ந்த வளர்ச்சி முறையிலுள்ள ஒரு செயல் முறை பொருள் நிலைப்பு என்பதாகும். இது வளர்ச்சி சார் உளவியலில் பெரிதும் விளக்கப்படுகிறது. ஒரு முறை புலன் காணப்பட்ட ஒரு பொருள் எப்பொழுதும் அடையாளம் கண்டுபிடிக்கப்படுகின்றது. அப்பொருளினுடைய தூண்டல் கட்டம் அல்லது இடம் சார்ந்த இடைவெளி மாறினாலும் அப்பொருள் அதுவாகவே புலன் காட்சி செய்யப்படுகிறது. ஒரு பொருளின் ஒரு பகுதி மட்டுமே தெரியக் கூடியதாக இருந்தாலும் அப்பொருள் அடையாளம் காணப்பெறுகின்றது. ஒரு பொருளின் இவ்விதமான நிலைப்பு அப்பொருளின் அமைப்பு, அளவு, நிறம் போன்ற வரையறுக்கப்பட்ட பண்புகளோடு புலன் காட்சி செய்யும் போது இருந்த நிலைப்பு எதுவோ அதைச் சார்ந்திருக்கின்றது. இந்தப் பொருள் நிலைப்பைக் கெசுடால்ட்டு உளவியலார் (Gestalt Psychologists) நன்கு விளக்குகின்றனர். அவர்கள் கூறுவது என்னவென்றால் புலன் காட்சி செய்யப்பட்ட பொருள்கள் அவற்றினுடைய சூழ்நிலைகளிலிருந்து தனித்து முழு உருவறைத் தோற்றங்களாக நிற்கின்றன என்பதாகும். அத்தகைய ஒரு தோற்றம் ஒரு முறை நினைவில் பதிவு செய்யப்பட்டால் எத்தகைய சூழ்நிலையிலும் மறுபடியும் அதனை அடையாளம் கண்டுகொள்ள இயலும்.

பொருள் நிலைப்பு குழந்தைகளிடம் எவ்வாறு ஏற்படுகின்றது என்று பியாசெட்டு (J.Piaget) என்பவர் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து சில முடிவுகளை வெளியிட்டார். வாழ்க்கையின் முதலாண்டுக் கட்டத்தில் குழந்தைகள் பொருள் நிலைப்பின் (Object Constancy) விதிகளைக் கண்டுபிடிக்கின்றனர். அதாவது, ஓர் உடல் சார்ந்த பொருள் கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டாலும், அதை அடைய முடியாவிட்டாலும் அது தொடர்ந்து நிலைத்து நிற்கின்றது என்பதாகும். வயது வந்தவர்கள் இந்த விதியை ஒப்புக் கொள்கின்றனர். மேசைக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் ஒருவர் தம் பார்வையைச் சிறிது நேரத்திற்கு வேறுபக்கம் திருப்பினாலும் அந்த மேசையும் அதனுடைய மேற்பரப்பும் அங்கேயே அப்படியே இருக்கின்றன.

பொருள் நிலைப்புக் கருத்தை ஒரு குழந்தை வளர்ச்சி செய்து கொள்வதற்கு முன்பு, அக்குழந்தை அக்கறை கொண்டுள்ள ஒரு சிறிய விளையாட்டுப் பொருளை ஒரு தலையணைக்குப் பின்னால் மறைத்து வைத்தால் அக்குழந்தை தலையணைக்கு அடியில் தேடுவதில்லை. அக்குழந்தையைப் பொறுத்த வரையில் கண்ணிலிருந்து மறைதல் மனத்திலிருந்து மறைதலாகும். அக்குழந்தைக்கு அந்த விளையாட்டுப் பொருள் அதற்குப் பிறகு நிலை பெறவில்லை என்பதாகும். ஆனால் அந்த விளையாட்டைச் சில மாதத்திற்குப் பிறகு திருப்பிச் செய்தால் அந்த விளையாட்டுப் பொருளுக்காக அக்குழந்தை உடனே தலையணைக்கடியில் அதனைத் தேடுகின்றது. அந்தச் சமயத்தில் அந்த விளையாட்டுப் பொம்மை தொடர்ந்து இருந்து வருகின்றது என்று அக்குழந்தைக்குத் தெரிகின்றது. அதை எங்கே காண முடியும் என்பதும் அதற்குத் தெரியும். இது எதைக் காட்டுகின்றது என்றால், குழந்தைகள் பொருள் நிலைப்புக் கருத்தை வளர்ச்சி செய்து கொள்ளுகின்றனர் என்பதைக் காட்டுகின்றது.

மேலும், அடிப்படைக் கருத்துகளான காரண காரியத்தொடர்பு, இடம் ஆகியவற்றையும் குழந்தைகள் வளர்ச்சி செய்து கொள்கின்றனர். ஒரு பொருளை ஒரு மனிதர் தம் கையினால் நகர்த்துகிறார் என்பதையும் அக்குழந்தை அறிகிறது. கையின் அசைவு பொருளின் அசைவு என்றும் குழந்தை அறிகிறது. குழந்தை காலத்தின் அடிப்படைக் கருத்தையும் புரிந்து கொள்கின்றது. ஒரு நிகழ்ச்சி மற்றொன்றுக்கு முன்னோ பின்னோ நடைபெறுகின்றது என்பதையும் அறிகின்றது. இந்த நிலையில் உலகத்தின் உடல் சார்ந்த செயல் முறைகளின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள முடிகின்றது. பவர் (Bower) என்பவரும் இத்துறையில் பல ஆராய்ச்சிகளைச் செய்து குழந்தைகளின் பொருள் நிலைப்புப் புலன் எவ்வாறு வளர்ச்சியடைகின்றது என்று கண்டறிந்திருக்கிறார். சில குணப் பண்புகளுடன் காணப்பட்ட பொருள் அதே குணப்பண்புகளுடன் இடமாறினாலும், காலம் மாறினாலும் நிலை பெறுகின்றது. இச் செயல் முறை

தான் பொருள் நிலைப்பு என்பதாகும். இதில் முக்கிய நிகழ்ச்சியாக இருப்பது புலன் காட்சியாகும்.

மு.இரா.

**துணை நூல்கள்:**

Morris, C.G., Psychology, An Introduction, Prentice Hall, INC., Englewood Cliffs, New Jersey, 1982.

Darby, T.M., Glucksberg, S. and Kinchla, R.A., Psychology, Prentice Hall INC., Englewood Cliffs, New Jersey, 1986.

McNeil, E.B. and Rubin, Z., The Psychology of Being Human, Canfield Press, Sanfrancisco, 1977.

**பொருள் மயக்கம்**: ஓர் ஆவணம் அல்லது ஒரு சட்டவிதி முறை மேலெழுந்தவாரியாக நோக்கின் முழுமையானதாகத் தோன்றும். ஆனால், அதன் உட்பொருள் என்ன அல்லது எப்படி நடக்க வேண்டும் என்று கூறுகிறது என்பதைப் பார்க்க முற்படும்போது பொருள் விளங்காத நிலையில் இருக்கக்கூடும். இருபொருள் கொள்ளும் நிலையை உண்டாக்குமானால் அல்லது ஐயப்பாட்டினைத் தோற்றுவிக்குமானால், அந்த ஆவணம் அல்லது சட்ட விதிமுறை பொருள் மயக்கத்தை ஏற்படுத்துவதாகக் கூற வேண்டும். அந்த ஆவணம் அல்லது சட்டவிதி முறையில் உள்ள பொருள் விளங்காநிலை, இருபொருள் வரும் நிலை அல்லது பொருள் ஐயப்பாட்டு நிலை பொருள் மயக்கம் (Ambiguity) எனப்படும்.

பொருள் மயக்கத்தை இரு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று, வெளிப்படைப் பொருள் மயக்கம் (Patent ambiguity) என்றும், மற்றொன்று உட்கிடைப் (Latent ambiguity) பொருள் மயக்கம் என்றும் கூறப்படும். ஆவணத்தை அல்லது சட்ட விதிமுறையினை ஒருவர் நோக்கும் பொழுதே அந்த ஆவணத்திற்கு அல்லது சட்ட விதிமுறைக்குப் பொருள் கொள்ள இயலா நிலை தோன்றுமானால் அது வெளிப்படைப் பொருள் மயக்கமாகும். வெளிப்படைப் பொருள் மயக்கம், ஆவணத்தின் அல்லது சட்ட விதிமுறையின் சொற்களிலிருந்தோ, அமைப்பு முறையிலிருந்தோ தோன்றும். வெளிப்படை மயக்கத்தை எவ்வித வெளி உதவியும் இன்றி எடுத்த எடுப்பிலேயே அறிந்து கொள்ள முடியும். அதனைக் கண்ணுறச் சட்டச் சிறப்பறிவு தேவையில்லை. உட்கிடைப் பொருள் மயக்க ஆவணத்தை அல்லது சட்ட விதிமுறையைப் பார்த்ததுமே அல்லது படித்ததுமே கண்டுபிடிக்க இயலாது. அதை ஆய்ந்து, நுட்ப அறிவு கொண்டுதான் காண இயலும். வேறு வெளி உதவியுடன் சிறப்பறிவின் மூலம்தான் உட்பொருளைக் காண இயலும். ஆவணத்தில், மற்றும் சட்ட விதிமுறையில் வெளி உதவி மற்றும் சிறப்பறிவினால் சுட்டிக் காட்டப்படும் பொருள் மயக்கத்திற்கு உட்கிடைப் பொருள் மயக்கம் என்பது பெயர்.

ச.மோ.

**பொருள் முதல் கொள்கை**: உலகத்தை விளக்கும் பல்வேறு கொள்கைகளுள் பொருள் முதல் கொள்கை (Materialism) ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இருமைக் கொள்கை (Dualism), பன்மைக் கொள்கை (Pluralism) என்னும் இக்கொள்கைகளுக்கு வேறாய்ப் பொருள் முதல் கொள்கை அமைகிறது. ஒருமைக்கொள்கை (Monism) என்னும் அமைப்பில் பொருள் முதல் கொள்கை, கருத்து முதல் கொள்கையுடன் (Idealism) தன் இடத்தைப் பெறுகிறது.

உலகத் தோற்றத்துக்கும் மூலத்துக்கும் அடிப்படையான பொருள் ஒன்றே என்னும் கொள்கை ஒருமைக் கொள்கை எனப்படும். அவ்வாறு அமையும் அடிப்படைப் பொருள் சடப்பொருளே (Matter) என்று பொருள் முதல் கொள்கை கருதுகிறது. கருத்து முதல் கொள்கையும் இவ்வாறு ஒருமைக் கொள்கையில் அடங்குமாயினும், அதன் கருத்துப்படி அடிப்படையாக உள்ள பொருள் மனம் அல்லது ஆன்மிகப் பொருள் என்று அமையும். ஆகவே, கருத்து முதல் கொள்கை, பொருள் முதல்கொள்கை ஆகிய இரண்டு கொள்கைகளும், பொருள் ஒன்றுதான் உலகத்துக்கு அடிப்படை எனக்கொண்டாலும், அந்தப் பொருள், மனம் அல்லது ஆன்மிகப்பொருளே (Mental or Spiritual thing) என்று கருத்து முதல் கொள்கை கொள்ள, பொருள் முதல் கொள்கையானது அடிப்படையாக உள்ள ஒரே பொருள் சடப்பொருளாக உள்ள பொருளே (Matter) என்று வலியுறுத்துகிறது. பொருள் முதல் கொள்கையின் படி, சடப்பொருளே அடிப்படைப் பொருளாக அமைய, மனம் அல்லது அறிவு (Mind or Consciousness) என்பது சடப்பொருளின் தோற்றமாக, குணமாக அமைகிறது. மனச் செயல்களெல்லாம் பௌதிக அல்லது புறச் செயல்களாக விளக்கப்படுகின்றன. இவ்வாறே கருத்து முதல் கொள்கையும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, சடப்பொருள்கள் எல்லாம் கருத்து (Idea) என்பதன் பல வடிவங்கள் அல்லது தோற்றங்களே என்று கூறும்.

மெய்ப்பொருளியலுக்கு அறிமுகம் (Introduction to Philosophy) என்னும் நூலில் கூல்பே (Kulpe) என்னும் அறிஞர் குணம் சார்ந்த பொருள் முதல் கொள்கை (Attributive Materialism), காரணம் சார்ந்தபொருள்முதல்கொள்கை (Casal Materialism), சமமான பொருள் முதல் கொள்கை (Equative

materialism) என்னும் மூவகையான பொருள் முதல் வாதங்களை விளக்குகிறார். குணம் சார்ந்த பொருள் முதல் கொள்கை மனத்தைச் சடப்பொருளின் குணமாக விளக்குகிறது. காரணம் சார்ந்த பொருள் முதல் கொள்கை மனத்தைச் சடப்பொருளின் காரியமாகக் கருதுகிறது. சமமான பொருள் முதல் கொள்கை மனத்தின் தன்மைகள் எல்லாம் உண்மையில் சடப் பொருளின் தன்மைகளே என்று விளக்கும்.

**வரலாறு:** உலூசிபசு (Leucippus), தெமாகிரிடசு (Democritus) என்னும் முற்கால அறிஞர்கள் விளக்கிய அணுக்கொள்கை (Atomism) பொருள் முதல் கொள்கையின் முதல் வடிவம் எனலாம். அவ்வறிஞர்கள் கருத்துப்படி உலகம் கண்ணுக்குத் தெரியாத சடப் பொருள் துகள்களால் அமைக்கப்பட்டதாகும். மனமும் இவ்வாறு சடப்பொருள்களால் அமைக்கப்பட்டதே. மனம் சிறியதாகவும் வட்டமாகவும் நகரக் கூடியதாகவும் உள்ளது. இக்கொள்கை எல்லா வகையான குணம் பற்றிய வேறுபாடுகளையும் (Qualitative difference) வெறும் அளவு பற்றிய வேறுபாடுகளாகக் (Quantitative difference) குறைக்கிறது. உலகத்துக்கு இறுதிக் காரணம் (Final cause), அல்லது அறிவுள்ள நோக்கம் (Intelligent purpose) ஆகியவற்றை இக் கொள்கை தவிர்த்துவிடுகிறது. ஆன்மா அழிவில்லாதது என்பதை நீக்கி, ஏற்கெனவே அமைக்கப்பட்ட, மாறாத விதிகளின் படி உலகம் இயங்குவதாகவும் கூறுகிறது. உலூசிபசு,தெமாகிரிடசு என்னும் கிரேக்க அறிஞர்களால் தொடங்கப்பட்ட பொருள் முதல் கொள்கை சில வேறுபாடுகளுடன் எபிகூரசு(Epicurus), உலூகிரிசியசு (Lucretius) ஆகிய அறிஞர்களால் விரிவாக்கி வளர்க்கப்படுகிறது. இக்கால உலகில் காசெண்டி (P.Gassendi), ஆப்சு (T.Hobbes), ஆல் பேக்கு (P.H.D. Holbach) என்பவர்கள் பொருள் முதல் கொள்கைக்கு முக்கியம் அளித்து அதனை வளர்த்தவர்களுள் முதன்மையானவர் ஆவர். இம் மானுவல் காண்டுக்குப் பிறகு தோன்றியவர்களுள் செருமனியில் தோன்றிய வோக்ட்டு (K.C. Vogt), சே. மோல்சாட்டு (J. Moleschott), புச்னர் (L. Buchner) என்னும் அறிஞர்கள், பொருள் முதல் கொள்கைக்கு அளவை இயல் அடிப்படை அமைத்து, கற்றோர் உலகில், அப்பொருள் முதல் கொள்கை சிறந்த கொள்கைகளுள் ஒன்று என்னும் மதிப்பைப் பெற உதவினர்.

**பொருள் முதற் கொள்கை மக்களால் விரும்பப்படுவதற்கான காரணங்கள்:** இயற்பியல் அறிவியலின் வியத்தகு வளர்ச்சி இக்கொள்கையின் மேம்பாட்டுக்கான முக்கிய காரணமாகும். இயற்பியல் அறிஞர்களை இக்கொள்கை இயற்கையாகக் கவர்கிறது எனலாம். மனிதன் அறிவியலின் மீது கொள்ளும் பற்று, மனத்தைப் பற்றி வேண்டிய அளவு புரிந்து கொள்ளாமை ஆகிய காரணங்கள் இக்கொள்கையின் கவர்ச்சிக்கு அடிப்படை எனலாம்.

'மெய்ப்பொருளியலில் உள்ள சிக்கல்கள்' (Problems of Philosophy, New York 1905,P.140) என்னும் நூலில் கோர்ப்டிங்கு (H. Horffding) என்னும் அறிஞர் உளஇயல் சிறிதே வளர்ச்சி பெற்றிருக்கிறது; உளவியல் ஆய்வில் சிரமங்கள் காணப்படுகின்றன; மேலும், உள இயல் மெய்ப்பொருளியலோடு மிக்க தொடர்புடையது; ஆனால், இயற்பியல் அறிவியலைச் சார்ந்துள்ள பொருள் முதல் கொள்கை முன்னரே நன்கு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது; மேலும், இயற்பியல் அறிவியல் அளத்தலை (Measurement) அடிப்படையாகக் கொண்டு விரைவாக வளர்ந்து வருகின்றது; உளவியலில் இப்படிப்பட்ட கணிதம் சார்ந்த அளவு முறைகள் ஏற்படாமையால், உரிய வளர்ச்சியை உளஇயல் பெற இயலவில்லை என்று விளக்கியுள்ளார்.

மேலும், பகுதிகளுக்குள்ள உறவை இயற்பியல் அறிவியல் தெளிவாகக் காட்டுகிறது. இப்படிப்பட்ட இயற்பியல் உலகில் காணப்படும் பகுதிகளுக்குள்ள உறவு (The Connectedness of the material world) மக்களின் சிந்தனைச் சக்தியை வளர்ப்பதுடன், அவர்களைப் பல வகைகளில் பாதிக்கவும் செய்கிறது. மனத்தில் இப்படிப்பட்ட உறவைக் காணுவது கடினமாக உள்ளது. மனத்தில் உள்ள உறவு தனிமனிதனுடைய மனத்தின் மூலம் உள்ளது. அதை வெளிப்படுத்துவதும் எளிதாக அமையவில்லை. மேலும், மனம் உடலோடு தொடர்புடையதாக மட்டுமே அறியப்படுகிறது. மக்களின் ஆய்வு செல்லும் அளவுவரை, உடலிலிருந்து வேறுபட்ட மனத்தின் தன்மைகளை அறிய இயலவில்லை. மனத்தைச் சாராமல் பொருள்கள் இருக்க இயலும் என்ற கருத்தும் மனிதனிடம் தோன்றுகிறது. மனிதன் உடல்கூறு பற்றிய ஆய்வு (Anatomy) போன்ற அறிவியல் உண்மைகள் சடப் பொருளின் மேன்மையைத் தெரிவிப்பனவாகச் சில ஆய்வாளர் கூறுகின்றனர். இவர்கள் அறிவு (Consciousness) என்பது சடப் பொருளின் விளைவு என்றும் கூறுகிறார்கள்.

**பொருள் முதல் வாதத்தின் மறுப்பு:** அறிவியல் தான் விளக்கும் அறிவு அகவயம் சாராத பொருள் தன்மை (Objective of its knowledge) உடையது என்று கூறும்போது, அனைத்தையும் குறிக்கும் உரை (Universal) என்பது எளிதாக உள்ளது போல் தோன்றுகிறது. இத்தகு அறிவில் அறிவானின் (Subject) தன்மையை விட்டுவிட்டே அறிவின் தன்மையை முழுமையாக அறியலாம் போலத் தோன்றும்.

அறிவியல் எவ்வளவுதான் அகவயம் சாராத உண்மையை (Objective truth) வெளிப்படுத்த முயன்றாலும், அறிவான் அறியும்போது அறிவில் பாதிப்பை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாது என்பதையும் உணரவேண்டும். எல்லா உயிர்களின் அனுபவத்துக்கும் உரிய சூரியன் போன்றவை, எந்த உயிரின் தனிப்பட்ட அனுபவத்தை மட்டும் சார்ந்திருப்பதில்லை. மனத்தை விடச்சடப்பொருளுக்கு முக்கியத் தன்மை கொடுத்தல், மனநிலைகள் எல்லாம் சடப் பொருளைச் சார்ந்திருத்தல் என்னும் செய்திகள் அறிவியலால் வலிமையாக, மனத்தில் பதியும்படி உரைக்கப்படுகின்றன. எண்ணம் அல்லது அறிவு சடப் பொருளின் பிற தன்மைகளில் இருந்து வேறுபட்டது என்று கூறுவதன் மூலம், பொருள் முதல் கொள்கையை மறுக்க இயலாது. வெப்பம், ஒளி, ஒலி, மின் சக்தி முதலியவை சடப்பொருளின் வெவ்வேறான தனித்தன்மைகளே.

அளவை இயல் அடிப்படையில் பொருள் முதல் கொள்கையானது மெய்ப்பொருளியல் உண்மையாகக் கொள்ளப்படுமானால், அது மக்களை முழுதும் அறியொணாக் கொள்கைக்கு (Absolute agnosticism) அழைத்துச் செல்லும். ஆகவே, பொருள் முதல் கொள்கையின் உண்மையை மக்கள் ஐயப்படும்படி செய்யும். ஏனெனில், எண்ணங்களும், அறிவோடு இருக்கும் எல்லா நிலைகளும் சடப்பொருள் காரணங்களால் மட்டுமே நிச்சயிக்கப்படுகின்றன என்று கூறினால், காரியங்கள் முழுமையாகச் சடப்பொருள்களால் மட்டுமே நிச்சயிக்கப்படுகின்றன என்று ஆகும். ஆகவே, மனித உரிமை, நோக்கம் ஆகியவற்றிற்கு இடமே இல்லாமல் போய் விடுகிறது. இந்நிலையானது உரிமையுடையவர்களாக மக்கள் எந்த உரையையும், ஏன் பொருள் முதல் கொள்கை தொடர்பான முடிவுகளையும் கூட, செய்ய இயலாது என்று ஆக்கிவிடுகிறது. உலகில் ஒருவகையான ஒழுங்கு இருக்கிறது என்ற உண்மையும், பொருள் முதல் கொள்கையை ஒத்துக் கொள்வதில் சில சிக்கல்களைத் தோற்றுவித்துவிடுகின்றது. உலகில் காணப்படும் ஒழுங்கின் அடிப்படை, ஒழுங்கு முறை ஆட்சியில் காணப்படும் நியதி என்னும் இவை போன்றவற்றுக்குப் பொருள் முதல் கொள்கையானது மக்களை (அக்கொள்கையைப் பின்பற்றுபவரின் விருப்பமில்லாமலே) அழைத்துச் செல்கிறது.

**பொருள் முதல் கொள்கையின் மறுப்பு:** 'அறிவியல் உண்மை அகத்தைச் சாராத புறப்பொருளின் மாறாத பொருள் தன்மையுடையது' என்று அறிவியல் பெருமையாகச் சொல்லும்போது எல்லா மனிதர்கட்கும் பொதுவானது பற்றி மட்டும் குறிக்காமல், மேலும், சில நிலைமைகளையும் அது தன்னிடம் கொண்டுள்ளது. மனம் தொடர்பான சிலவற்றை அக்கொள்கை தவிர்த்துவிடுகிறது. அறிவியல் எவ்வளவுதான் நுட்பமாக வளர்ந்துகொண்டே போனாலும், மனத்தின் சில அடிப்படைக் கூறுகளை விட்டு, அறிவு என்பது அமைய இயலாது. மனத்தின் மூலம் உண்டாகும் அறிவின் பங்கை ஒட்டு மொத்தமாகத் தவிர்க்க முயலும் பொருள் முதல் கொள்கையானது, அறிவின் தோற்றத்துக்கு மனத்தின் மாற்ற இயலாத பங்கை மறுக்க இயலாது.

அறிவியல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் பகுதிகள் தனி மனித நுகர்வுக்கு மட்டும் உரியன அல்ல. மேலும், பிறர் அனுபவத்துக்குட்படாது தனிமனிதனுடைய நுகர்வுக்கு மட்டுமே உரிமையுடையது என்று எந்தப் பொருளையும் அறிவியல் ஆராய்வதில்லை. பல மனிதர்களுக்கும் பொதுவாக அமையும் தன்மைகளைப் பற்றியே அறிவியல் ஆய்வு செய்கிறது. ஒருவருக்கும் உரிமையில்லாத பொருளைப் பற்றிய அறிவு, யாருக்குமே தொடர்பில்லாத 'வெறும் அறிவு', எந்த ஒரு மனிதனுடைய நுகர்வுக்கும் வாராத பொருள்களைப் பற்றிய அறிவு ஆகிய இவை கருத்தினால் எண்ண இயலாதவை, இருக்க இயலாதவை, பொருளற்றவை. அவை வறிதே மனத்தில் பதியும் பதிவு (Pure passive sensation) என்பதற்கு வேறாக இருக்கும். அறிவு (Knowledge) என்பது மனத்தின் தொழில்களையும், சுயமாக ஆக்கும் மனத்தின் பல்வேறு செயற்பாடுகளையும் குறிக்கிறது. ஆகவே, அறிவியல் வளர வளர, மனத்தின் ஆக்கம் குறித்த செயற்பாடுகள் (Creative elaboration) வளர்ந்து கொண்டே போவதைக் காணலாம்.

எந்த மனிதனின் அறிவையும் சாராமல் பொருள்கள் இருக்கின்றன என்பது ஆய்வுக்கு வசதியாகவும், கெடுதல் இல்லாததாகவும் உள்ளது. அளவை இயல் கண்ணோட்டத்தில், இவ்வாறு கூறுவது பொய் அல்லது அறிவுக்குப் பொருத்தமானதாக இல்லை என்று கூறலாம். ஆயினும், இத்தகைய அடிப்படையின் மேல், பொருள் முதல் கொள்கை அதன் பல்வேறு வடிவங்களில் வலிமையாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அனுபவம் என்பது அறிபவனும், அறியப்படு பொருளும் என்ற இரண்டின் கூட்டமே என்பதும், இரண்டில் ஒன்றைத் தள்ளி மற்றொன்றை மட்டும் கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாதது ஆகும் என்பதும் மறுக்க இயலாத உண்மைகள்.

பொருள்கள் என்பவை அறிபவனுக்கு அப்பாற்பட்டு இருப்பது போலப் பேசப்படுகின்றன. பொருள்கள் அறிபவனுக்கு அப்பால் நிலை கொள்வது, பொருள்களின் இன்றியமையாமை, தனித்த தன்மை போன்றவை பெரிதும் பேசப்படுகின்றன. அறிவியல் ஆய்வு தொடங்குமுன் அறிவாளி தம்மை ஆய்வில்

சேர்த்துக் கொள்ளவில்லையாயின், அறிவியல் ஆய்வின் முடிவில் அறிபவராகிய தம்மைக் காண இயலாது. ஆகவேதான், (அறிவியல் ஆய்வின் தொடக்கத்தில் தம்மை ஆய்வில் சேர்க்காதவர்) ஆய்வின் விவரங்களைச் சேகரிக்கப் பெரிதும் உதவிய தம் மனத்தை உண்மையில்லாதது (Illusion), நிழல் போன்றது என்ற முடிவுக்கு வருகிறார். அனுபவத்தின் தன்மை, அறிவின் அடிப்படைகள், அறிவால் ஏற்படும் விளைவுகள் போன்ற முதலில் கவனிக்க வேண்டியவற்றைக் கவனிக்காமல், ஆய்வில் ஈடுபடுவது, பொருள் முதல் வாத மறுப்புக்குத் தள்ளினால் அது வியப்புக்குரிய செயல் அன்று.

இவ்வாறு ஆய்வின் அடிப்படையை மனத்தில் கொள்ளாமல், அகவயம் சாராத பொருள்களின் தன்மையை(Purely objective facts)மட்டுமே நோக்கத் தொடங்கினால் மறுக்க வியலாத உண்மைகளையும் வாதங்களையும் பொருள் முதல் வாதி கூறுவதைக் காணலாம். மறுக்க முடியாதன போலத் தோன்றும் அவ்வாதங்கள் ஆய்வின் அடிப்படையை நோக்கும்போது அவை எளிதில் மறுக்கப்படுவதைக் காணலாம். பொருள் முதல் வாதத்தின் அடிப்படை இவ்வாறு மறுக்கப்படுவதுடன், பொருள் முதல் வாதம் கூறும் அறிவுக்குக் கொடுக்கப்படும் விளக்கமும் பொருத்தமில்லாமல் போகிறது. இவ்வகையில் அறிபவன், அறியப்படுபொருள் என்னும் இரண்டும் சேர்ந்த முழுமையான ஒன்றே மனித அனுபவம் என்பதைப் பொருள் முதல் வாதம் சரியான முறையில் புரிந்துகொள்ளவில்லை. சடம் (Matter) என்பது மனத்தால் அனுபவத்திலிருந்து தனித்து அறிவது ஆதலால், அப்படிப்பட்ட சடமே அனைத்து அனுபவத்துக்கும் அடிப்படையாக இருக்க இயலாது.

மேலும், இரண்டாம் தன்மையான குணங்கள் என்று கூறப்படும் நிறம், சுவை போன்றவை முதல் தன்மையான குணங்கள் ஆகிய அழியாத்தன்மை முதலியவற்றிலிருந்து வேறுபட்டது என்னும் பழைய கொள்கையையும் பொருள் முதல் வாதம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. சார்சு பர்க்கிலி(G.Berkeley) என்னும் தத்துவஞானி இரண்டாம் தன்மையான குணங்கள், முதல் தன்மையான குணங்கள் (Second -ary and Primary qualities) என்று குணங்களை இருவகையாகப் பிரிப்பது சரியன்று என்னும் உண்மையை நிறுவி யுள்ளார். இரண்டாம் தன்மையான குணங்கள் வெளியில் சடத்தில் (Matter)இல்லை, நம் மனத்தில் மட்டும் உள்ளன என்று பொதுவாகக் கருதப்படும். ஆழ்ந்து நோக்கும்போது முதல் தன்மையான குணங்களும் கூட மனத்தைச் சார்ந்து இருப்பதை அறியலாம். பொருளின் அளவு பற்றிய குணத்தைக் கண் அல்லது தொடு உணர்ச்சி மூலம் தான் அறிய இயலும். பொருளின் உருவம் அந்தப் பொருளை ஒருவன் எவ்வளவு தூரத்திலிருந்து பார்க்கிறான் என்பதை ஒட்டி அமைகிறது. பொருளை அறிவதில் ஐம்பொறிகளின் இன்றியமையாமையைக் குறைத்து மதிப்பிட முடியாது.

பொருள்களின் அளவு பற்றிய அறிதல், காட்சி அளவைக்குரிய விடயமாக அமையாமல், கருதல் அளவைக்குரிய விடயமாக அமைகின்றது. பொருள்களின், அளவு பற்றிய விவரத்திலிருந்து ஐம்பொறிகள் கொடுக்கும் விவரத்தை நீக்கிவிட்டால், எஞ்சியது ஒன்றுமில்லாமல் போகிறது. பொருள் முதல் வாதம் அளவுக்கு, உரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

**சீனாவிலும் இந்தியாவிலும் பொருள் முதல் வாதம்:** இந்தப் பொருள் முதல்வாதம் கன்பூசியனிசம் (Confucianism), தோயிசம்(Taoism), பௌத்தம் என்ற சமயக் கொள்கைகளைச் சார்ந்து சீனாவில் விளக்கப்படுகிறது. இந்தியாவில் பொருள் முதல் வாதம் சாருவாகம், உலகாயதம் என்னும் தலைப்பில் விளக்கப்படுகிறது. இந்தியாவில் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மாத்வாசாரியரால் அருளப்பட்ட சருவ தரிசன சங்கிரகம் என்னும் நூல் இந்தியாவில் தோன்றிய அனைத்துத் தத்துவங்களையும் விளக்கும் போது உலகாயதம் பற்றியும் விளக்குகிறது. தமிழில் கி.பி.3-அல்லது 4 – ஆம் நூற்றாண்டில் தோன்றிய மணிமேகலை என்னும் நூலில், முதன் முதலாக அமைந்த இந்தியத்தத்துவ தரிசனங்களின் தொகுப்பில் அடங்கும் உலகாயதமும் இடம் பெறுகிறது.

உலகாயதர் காட்சி என்னும் அளவையை மட்டும் நம்புகிறார்கள். கருதல் அல்லது அனுமானம் ஆப்த வாக்கியம் என்னும் பிரமாணங்களை நம்புவதில்லை. நிலம், நீர், தீ, காற்று என்னும் நான்கு பூதங்களை மட்டுமே நம்புகின்றனர். ஆகாயம் காட்சிக்கு எட்டாததால் அதை நம்புவதில்லை. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய இவற்றின் கூட்டத்தில் சிவப்பு நிறம் தோன்றுவது போலப் பூதங்களின் கூட்டத்தில் ஆன்மா தோன்றுகிறது. உடல் அழியும்போது உடலில் உள்ள பூதங்கள் வெளியில் உள்ள தத்தம் பூதங்களோடு ஒன்றிவிடுகின்றன.

உலகாயதர் ஆன்மா, ஆன்மாவால் செய்யப்படும் வினை, இந்த வினையின் பயனைச் செய்தவரே அடையுமாறு பார்த்துக் கொள்ளும் கடவுள் ஆகிய மூன்றும் உள்ளன என்று சொல்வது மலடி பெற்ற மகன் ஒருவன் முயல் கொம்பின்மேல் ஏறி, ஆகாயப் பூவைப் பறித்தல் என்பதுபோல இல்லாதது என்று கூறுவர். அதனை 'ஒப்பிலா மலடி பெற்ற மகன் ஒரு முயற் கொம்பேறித் தப்பில் ஆகாயப் பூவைப் பறித்தமை சாற்றினாரே' என்று கூறுவர். இது சிவஞான

சித்தியார் பரபக்கம் என்னும் பகுதியில் அருள்நந்தி சிவம் விளக்கும் பகுதி. ஊரின் சாலைப் பகுதியில் ஓநாயின் அடிச்சுவட்டைப் பார்த்து ஓநாய் காட்டிலிருந்து வீட்டுக்கு வந்திருக்கவேண்டும் என்று அறுதியிட்டுக் கூற இயலாது. ஓநாயைப் பற்றிய அச்சத்தை உண்டாக்க விரும்பிய ஒருவர் தம் கையால் ஓநாயின் அடிச்சுவட்டை உண்டாக்குவதன் மூலமும் செய்யலாம் என்று உலகாயதர் கூறுவர். மேலும், நம்பத் தகுந்த பெரியவரின் உரையை நம்ப வேண்டும் என்னும் இன்றியமையாமை இல்லை; ஐம்பொறிகளின் மூலம் கிடைக்கும் அறிவு மட்டுமே நிச்சயமானது என்று வாதிப்பர். ச.க.

**துணை நூல்கள்:**


Jange,F.A., History of Materialism, English (tr.) London, 1877 - 81.

Ward,J., Naturalism and Agnosticism, London, 1907.

Max Muller, Six Systems of Indian Philosophy, London, 1903.


**பொருளாதார அமைப்புகள்**: சொத்துரிமை, பண்டங்கள் பணிகள் ஆகியவற்றின் உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றையொட்டிப் பொருளாதார அமைப்பைத் (Economic System) தனியுடைமைப் பொருளாதார அமைப்பு, பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பு என இருவகைப்படுத்தலாம்.

**தனியுடைமைப் பொருளாதார அமைப்பு**: வேளாண்மை, தொழில்கள், உற்பத்திச் சாதனங்கள் ஆகிய எல்லாம் தனியார் உடைமைகளாக இருக்கும் அமைப்பைத் தனியுடைமைப் பொருளாதாரம், முதலாளித்துவப் பொருளாதாரம் எனப் பல பெயர்களால் குறிப்பிடுவர். எதை, எவ்வாறு, எப்படி, யாருக்காக, எந்த அளவில் உற்பத்தி செய்வது, பகிர்ந்தளிப்பது போன்ற பொருளாதார முடிவுகளை எந்த விதமான தடைகளும் இன்றித் தனியாரே மேற்கொள்வர். அங்காடியில் நிலவும் தேவை, அளிப்புச் சக்திகளின் அடிப்படையில் இப் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U.S.A.), இங்கிலாந்து முதலிய பல ஐரோப்பிய நாடுகள் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் (Capitalist Economic System) இயங்கி வருகின்றன.

**இயல்புகள்**: இவ்வகை அமைப்பில் தொழில்களில் பெரும்பாலானவை தனியார்களாலே நடத்தப்படுகின்றன. எத்தொழிலிலும் ஈடுபடத் தனி மனிதனுக்கு முழுச் சுதந்திரம் உண்டு. ஆதாயத்தை நோக்கமாகக் கொண்டு உற்பத்தியாளர்கள் போட்டியிடுவதால் நுகர்வோர் நன்மைபெறும் வாய்ப்புகள் உள்ளன. பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் விலைகள், அவற்றிற்கு அங்காடியில் நிலவும் தேவை அளிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிருணயமாகின்றன. தனியார் சொத்துரிமையைக் காக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. பணக்காரர்கள், ஏழைகள் என்ற பாகுபாடு இவ்வகை அமைப்பில் பல்கிப்பெருகும். நுகர்வோருக்காகவே எல்லாச் செயல்களும் நடைபெறுவதால் நுகர்வோரின் இறையாண்மை (Consumers Sovereignty) நிலவுகிறது. உற்பத்தியாளர்களிடையே கடும் போட்டி நிலவுவதால் வாணிகச் சுழல்கள் (Trade Cycles) தோன்றும் வாய்ப்புகள் உள்ளன. மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் முனைப்பாக இருந்துகொண்டிருக்கும்; வேலையின்மையும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கும்.

மேலும், தலையீடு குறைவாக இருத்தல், போட்டியினால் நுகர்வோருக்கு நன்மைகள், தானியங்கும் தன்மை (Automatic Functioning), திறன் அதிகரிப்பு மிகுதியான மூலதன ஆக்கம் (Capital formation) மூலவளங்களின் சிறப்பான பகிர்வு, மக்களாட்சி முறை, தொழில் துணிவு, பொருளாதார முன்னேற்றம் போன்ற நன்மைகள் தனியார் உடைமைப் பொருளாதார அமைப்பில் உள்ளன. அதே நேரத்தில் விரும்பத்தகாத கழுத்தறுப்புப் போட்டி (Cut Throat Competition), விற்பனைச் செலவால் மிகுதியான விலை, தொழில் வளர்ச்சி மந்தமாக இருத்தல், செல்வ வருமான ஏற்றத்தாழ்வுகள், முற்றுரிமை அமைப்புகள் தோன்றுதல், வருக்கப் போராட்டத்திற்கான (Class conflict) வாய்ப்புகள், வணிகச் சுழலையும், வேலையின்மையையும் தவிர்க்க முடியாமை போன்ற பல குறைகளும் இப் பொருளாதார அமைப்பில் தோன்றுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

**பொதுவுடைமைப் பொருளாதாரம்**: இதனை, சமதருமப் பொருளாதார அமைப்பு (Socialist Economic System), பொதுவுடைமைப்பொருளாதார அமைப்பு (Communist Economic System) என்ற பல பெயர்களால் குறிப்பிடுவர்.

**இயல்புகள்**: தனியார் சொத்துரிமை இல்லை. எல்லாம் நாட்டுக்கே சொந்தம். உற்பத்தியும் அதன் பகிர்வும் திட்டமிட்ட அடிப்படையிலேயே நிகழ்கின்றன. ஆதாயநோக்கு இல்லை. அரசே விலையை நிருணயம் செய்கிறது. விளம்பரமும் போட்டியும் இல்லை. வாணிகச் சுழல், பொருளாதார மந்தம், வேலையின்மை ஆகியவை இல்லை. வருக்கப்போராட்டமும் இல்லை. சமுதாய நன்மையே எல்லோருடைய நோக்கமாகவும் இருக்கிறது. 'திறனுக்கேற்ப உழைத்துத் தேவைக்கேற்பப் பெற்றுக் கொள்ளுதல்' என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

இவ்வமைப்பின் இயல்புகளையொட்டிப் பல நன்மைகள் இருக்கின்றன. ஆனால், இவ்வமைப்பின் குறைகளைக் காணும்போது மக்களில் ஒருசாரார், நன்மைகளைக்காட்டிலும் குறைகளின் விளைவு மிகுதி என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றனர். தனிமனிதன் ஆர்வமின்மை, காலதாமதம், திறமையின்மை, ஊக்கமும் உற்சாகமும் இன்மை, மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பின்மை, விருப்பப்படி தொழில்களைத் தொடங்க, தொடர, மூட வாய்ப்புகள் இன்மை போன்றவை இவ்வமைப்பில் காணப்படும் குறைகள் ஆகும். இக் குறைகள் இருப்பினும் அண்மைக் காலத்தில் விரைவான பொருளாதார வளர்ச்சியைக் காண விழையும் வளரும் நாடுகளில் சில இப்பொருளாதார அமைப்பை மேற்கொண்டிருக்கின்றன. உருசியாவும், சீனாவும் இவ்வமைப்பில் விரைவான முன்னேற்றத்தைப் பெற்றுள்ள நாடுகளாகும்.

**கலப்புப் பொருளாதார அமைப்பு**: முதலாளித்துவ, சமதருமப் பொருளாதார அமைப்புகளின் குறைகளைக் களைந்து நிறைகளைப் பெறப் பல நாடுகள் இவ்விருவகை அமைப்புகளிலும் உள்ள நன்மைகளைக் கொண்ட கலப்புப் பொருளாதார அமைப்பை (Mixed Economic System) நாடுகின்றன. இந்தியாவும், இந்தியா போன்ற பல நாடுகளும் கலப்புப் பொருளாதார அமைப்பைக் கொண்டிருக்கின்றன.

கலப்புப் பொருளாதாரத்தில் பொதுத்துறையும், தனியார் துறையும் சேர்ந்து இயங்குகின்றன; விலை அமைப்பும் (Price mechanism), அரசு ஆணைகளும் சேர்ந்து செயற்படுகின்றன; பொது நலன் கருதித் தனியார் துறை நடவடிக்கைகள் மீது அரசின் தீவிரமான கட்டுப்பாடுகள் இருக்கும்; நுகர்வோர் விருப்புகளுக்கேற்பத் தனியார்துறை உற்பத்தி செய்து வருமாதலால் நுகர்வோர் விருப்பங்கள் பெரும்பாலும் நிறைவேற்றப்படும்; தனியார் உடைமைப் பொருளாதார அமைப்பில் உள்ளதைப்போன்று முதலாளிகள் தொழிலாளர்களைச் சுரண்டும் வாய்ப்பு இவ்வமைப்பில் இல்லை என்பதால் தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்பு உண்டு; செல்வ வருமானப் பங்கீட்டின் ஏற்றத் தாழ்வுகள் இவ்வமைப்பில் குறைவாக உண்டு; ஏகபோக உரிமை வளர்வதைத் தடைசெய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் பொருளாதார அரசு செயற்படுகிறது. என். எஸ்.பா.

**துணை நூல்கள்:**

**பாலசுப்பிரமணியன், என். எஸ்.,** பொதுப்பொருளாதாரம், உமா பப்ளிகேசன்ஸ், மதுரை, 1986.

**Desai, S.S.M.,** Economic System, Himalaya Publishing House, Bombay, 1982.

**George, N. Haim,** Economic Systems, Oxford and IBH Publishing Co., U.S.A., 1968.

*பொருளாதார அளவையியல்*: பொருளாதார இயல் கடந்த இரு நூற்றாண்டுக்காலத்தில் வியத்தகு வளர்ச்சியைப் பெற்றிருப்பதோடு பல்வேறு புரட்சிகரமான மாற்றங்களையும் அவ்வப்போது கண்டுவந்திருக்கிறது. இம்மாற்றங்களுள் 1) கணக்குமயமாதல் (Mathematisation), 2) மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் (Estimation), 3) இயங்கு நிலைத் தன்மை மயமாக்குதல் (Dynamisation), 4) நேர்கோட்டுத் திட்டமிடுதல் (Linear Programming) போன்ற நான்கு தீவிரமான மாற்றங்கள் இங்குக்குறிப்பிடத்தக்கவையாகும். இத்தகைய தீவிரமான மாற்றங்களின் விளைவாகத் தோன்றியனவே கணக்கியல் பொருளாதாரமும் (Mathematical Economics), அளவையியல் பொருளாதாரம் எனப்படும் பொருளாதார அளவையியலும் (Econometrics) ஆகும்.

பொருளாதார அளவையியல் (Econometrics) என்ற சொல்லை முதன்முதலாக 1926 – ஆம் ஆண்டில் இராக்னர் பிரிசு (Ragnar Frish) என்ற நார்வே நாட்டுப் பொருளாதாரப் புள்ளியியல்அறிஞர் பயன்படுத்தினார். மெட்ரிக்சு (Metrics) என்பதற்கு அளவையிடல் என்பது பொருள். உயிரியல் அறிவியலில் (Biological Science) அளவையிடுதலைப் பயன்படுத்தி 'உயிரியல் அளவையிடுதல்'(Biometrics) என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது. அளவையிடுதலைப் பொருளாதார இயலில் பயன்படுத்தியபோது பொருளாதார அளவையியல் தோன்றியது. முதல் உலகப் பெரும்போர்க்காலத்தில் தோன்றிய இவ்வியல் மிக விரைவான வளர்ச்சியைப் பெற்றது. பன்னாட்டுப் பொருளாதார அளவையியல் சமுதாயம் (International Econometric Society) 1932 – இல் தோற்றுவிக்கப்பட்டு ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. முதலாளித்துவ நாடுகளிலும், பொருளாதார வளர்ச்சிபெற்ற நாடுகளிலும் விரைவான வளர்ச்சியைப் பெற்றுவரும் இவ்வியல் வளரும் நாடுகளிலும் மிகப் புகழ்பெறத் தொடங்கியுள்ளது.

பொருளாதாரக் கருத்துகளையும், விளக்கங்களையும், முன் கணிப்புகளையும், ஏனைய பல இயல்புகளையும் புள்ளியியலின் துணைக்கொண்டு அளவையிட்டுக் குறிப்பிடும் இயலெனப் பொருளாதார அளவையியலைக் குறிப்பிடலாம். எளிதாகக் குறிப்பிடுவதாயின் பொருளாதாரம், புள்ளியியல், கணிதம் ஆகிய மூன்று இயல்களின் ஒன்றிணைப்பால் தோன்றியது பொருளாதார அளவையியல் எனலாம்.

இவ்வியல் முன்னரே மக்களுக்குத் தெரிந்த பொருளாதார மாறிகளில் (Economic Variables)

அல்லது மக்களுக்குத் தெரியாத பல பொருளாதார மாறிகளில் அல்லது இருவகை | மாறிகளில் தோன்றத்தக்க மாற்றங்களை விளக்கும் எண்ணிக்கை அடிப்படையிலான கூற்றுகளைக் குறிப்பிடுவதை இன்றியமையாத குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. மேலும், எண்ணிக்கையின் அடிப்படையிலான கூற்றுகள் (Statements), சமன்பாடுகள் (Equations) வடிவத்திலும், கெழுக்கள் (Co-efficients) வடிவத்திலும் இருக்கின்றன. இத்தகைய சமன்பாடுகளுக்குக் கீழ்வரும் இயல்புகள் இருத்தல் நன்று என்பது குறிப்பிடப்படுகிறது.

1) இன்றியமையாத சிக்கல் ஒன்றைப் பற்றியதாகவோ, மக்களுக்கு ஆர்வத்தைத் தரத்தக்க சிக்கல் ஒன்றைப் பற்றியதாகவோ இச்சமன்பாடுகள் அமையப்பெறுதல் வேண்டும். அறிவுக்கு மட்டும் விருந்தளிக்கத்தக்கதாக அமைந்து வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமற்றதாக இருத்தல் கூடாது.

2) தருக்க அடிப்படையிலும், பகுத்தாய்வு அடிப்படையிலும் ஒவ்வொரு பொருளாதாரச் சமன்பாடும் எளிமையானதாக இருத்தல் வேண்டும்.

3) ஒரு பண்டத்தின் விலையை நிருணயித்தல் அல்லது சரியானதொரு வரிக் கொள்கையைத் தேர்ந்தெடுத்தல் போன்ற ஏதாவது உண்மையானதொரு பொருளாதாரச் சிக்கலைப் பற்றியதாகச் சமன்பாட்டின் நோக்கம் அமைந்திருந்தால், அச்சிக்கலோடு தொடர்புடைய பொருத்தமான பொருளாதாரக் கோட்பாட்டிற்கு இசைவானதாகச் சமன்பாடு அமைதல் வேண்டும். இடையே ஏதாவதொரு பொருளாதாரக் கோட்பாட்டைச் சோதிப்பதாக இருந்தாலும், அதற்கும் பயன்படத்தக்க வகையில் சமன்பாடு அமைதல் வேண்டும்.

4) கிடைக்கத்தக்க புள்ளி விவரங்களுக்குப் பொருத்தமானதாகச் சமன்பாடு அமைதல் வேண்டும். இத்தகைய சமன்பாடுகளே பெரிதும் விரும்பப்படுகின்றன.

5) சமன்பாட்டைப் பற்றி அனுமானித்திருக்கும் அறிவு பெரும்பாலும் துல்லியமானதாக இருத்தல் வேண்டும்.

**பொருளாதார அளவையியலின் சாதனங்களும், முறைகளும்:** பகுத்தறி முறையில்(Deductive Method) கற்பிதக் கோட்பாடுகளைக் குறிப்பிடுவதற்கும், அவற்றின் காரண காரிய (Logical) உள்ளார்ந்த தன்மைகளை (Implications)விளக்குவதற்கும், பொருளாதார அளவையியலில் கணிதம் ஒரு சாதனமாகப் பயன்படுகிறது. குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பெறப்படும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தொகுத்தறி முறையிலான (Inductive Method) பல்வேறுவிதமான உண்மைகளை அறிந்து கொள்வதற்கும், விளக்குவதற்கும் புள்ளியியல் ஒரு சாதனமாகப் பயன்படுகிறது. பொருளாதார அளவையியலில் ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண முயலும்போது கீழ்வரும் நான்கு நிலைகள் பொதுவாகப் பின்பற்றப்படுகின்றன.

முதலில் சிக்கல் என்ன என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, இச்சிக்கலைத் தீர்ப்பதற்காகப் பொருத்தமானதொரு மாதிரியை (Appropriate Model) அல்லது அமையப்பெற்ற கற்பிதக் கோட்பாட்டை (Maintained Hypothesis)அமைத்துக்கொள்ள வேண்டும். மூன்றாவதாக, பொருத்தமான, தேவையான புள்ளிவிவரங்களைச் சேகரித்துப் பயன்படுத்த வேண்டும். இறுதியாகப் புள்ளி விவரங்களின் பகுத்தாய்வைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட சிக்கலுக்குப் பல்வேறு அனுமானங்களை அமைத்துக்கொண்டு தீர்வுகாண முயலவேண்டும்.

மாதிரிகளோ, அமையப்பெற்ற கற்பிதக் கோட்பாடோ சரியானதாக அமைந்துவிட்டால் மேற்குறிப்பிட்ட வழிகளில் சிக்கலுக்குத் தீர்வுகாண முயலும்போது நல்ல விளைவுகள் கிடைக்கின்றன. பொருளாதார அளவையியலைப் பொறுத்தமட்டிலும் வழக்கத்திலிருக்கும் பொருளாதாரக் கோட்பாடுகளே (Economic Theories) இத்தகைய மாதிரிகளும், அமையப்பெற்ற கற்பிதக்கோட்பாடுகளும் ஆகும்.

**கணக்கியல் பொருளாதாரமும், பொருளாதார அளவையியலும்:** பொருளாதாரக் கோட்பாட்டைக் கணிதக் குறியீடுகளாலும், கணிதமொழியாலும் குறிப்பிட்டு, குறிப்பிட்ட எடுகோள்களின் (Assumptions) அடிப்படையில் மாறிகளுக்கிடையேயுள்ள தொடர்புகளைக் கணிதமுறை கொண்டு விளக்குவது கணக்கியல் பொருளாதாரம். அதாவது, பொருளாதாரமும் கணிதமும் இணையப்பெற்றுத் தோன்றுவது கணக்கியல் பொருளாதாரம். ஆசுகார் இலாஞ்சு (Oscar Longe) குறிப்பிடுவதைப் போன்று பொருளாதாரக் கோட்பாடுகளையும், பொருளாதாரப் புள்ளியியலையும் பொருளாதார அளவையியல் இணைக்கிறது. பொருளாதாரக் கோட்பாடுகளில் நிருணயிக்கப்பெற்றிருக்கும் பொதுவான விதிகளுக்குச் சரியான அளவை அடிப்படையிலான(Quantitative Basis)விளக்கத்தைக் கொடுக்கக் கணித முறையையும்,புள்ளியியல் முறையையும், பொருளாதார அளவையியல் நிபுணர்கள் பயன்படுத்துகிறார்கள்.

பொருளாதார அறிவியலின் பொதுவான துறையில் குறிப்பிட்டதொரு முறையைப் பயன்படுத்துவதே பொருளாதார அளவையியல் என்ற பொருள் படப் பேராசிரியர் சே. சும்பீட்டர் (J. Schumpeter) குறிப்

பிடுகிறார். எண்ணிக்கையின் அடிப்படையிலான முடிவு களைச் சாதிப்பதற்கும், பொருளாதாரக் கோட்பாடு களைச் சரிபார்ப்பதற்கும் பொருளாதார அளவை யியல் பயன்படுகிறது. எனவே,

1) பொருளாதாரம் + கணிதம்
= கணக்கியல் பொருளாதாரம்

2) கணக்கியல் பொருளாதாரம் + புள்ளியியல்
= பொருளாதார அளவையியல்

எனச் சுருக்கமாகக் குறிப்பிடுவர்.

**சிறப்பு:** பொருளாதாரக் கருத்து விளக்கங்களி லும் அணுகுமுறைகளிலும் பல்வேறு பழமைப் பொரு ளாதாரக் கோட்பாடுகள் புறக்கணிக்கப்படும் நிலை யும், புதிய புதிய கோட்பாடுகள் தோன்றிடும் நிலை யும் இயல்பாகிவிட்டன. எனவே, கணிதப் பொருளா தாரத்தையும், புள்ளியியல் பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அளவை யியல் மிகுந்த சிறப்பிடத்தைப் பெற்றிருக்கிறது. இரண்டாம் உலகப் பெரும்போர் நிகழ்ந்த காலத் திற்குப்பின் நாடுகள் அளவிலும்,பன்னாடுகள் அளவி லும், பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் ஏராளமான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டுப் பகுத்தாராயப்பட்டிருக்கின்றன. அதனோடு புள்ளியி யல் அணுகுமுறையிலும், விளக்கங்களிலும், கோட் பாடுகளிலும் வியத்தகு முன்னேற்றங்களும், மாற்றங் களும் தோன்றியிருக்கின்றன. கிடைக்கும் புள்ளிவிவ ரங்களை ஆராய்ந்து விரைவாகவும், தெளிவாகவும், துல்லியமாகவும் தேவைப்படும் முடிவுகளைப் பெறு வதற்குத் தேவையான அளவுக்கு மின்கணிப்பான் களும், கணிதப்பொறிகளும் (Computors), பொருளா தாரப் பகுத்தாய்வுகளிலும், ஆராய்ச்சிகளிலும் புரட்சி கரமான அளவுக்குப் பயன்படத் தொடங்கிவிட்டன. இயந்திரமயமாதல் புதியனகண்டுபிடித்தல்கள், புதி யன புகுத்துதல்கள்(Innovations) போன்றவைபொரு ளாதார அளவையியலை இன்றைய வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத தொன்றாக்கிவிட்டன.

மேலும், அன்றாடம் சந்திக்கும் நடைமுறைச் சிக் கலைத் தீர்ப்பதற்குரிய பல்வேறு முறைகளைக் கண்டுபிடிப்பதில் பொருளாதார அளவையியல் பேரள வுக்கு உதவுவதாம். நடைமுறைவாழ்க்கைக்கு மிக மிக உதவக்கூடியதொரு இயல் பொருளாதார அளவை யியல் என்றும் குறிப்பிடப்படுகிறது.

மேலும்,பணத்தின் பன்னாட்டுக் கொடுத்துவாங் கும் மதிப்பைக் குறைத்திட (Devaluation), விரும்பும் அரசுகள் ஏற்றுமதி, இறக்குமதி நெகிழ்ச்சிகளை (Export and Import Elasticities) அறிந்து செயற்பட இவ் வியல் உதவுகிறது. அரசு, அதன்பொதுச் செலவுகளை யும்,பொது வருவாயையும் மாற்றியமைக்க விரும்பும் போது அவற்றின் விளைவாகப் பொருளாதாரம் முழுவதிலும் மொத்த வேலைவாய்ப்புகள், மொத்தத் தேவைகள் ஆகியவற்றில் தோன்றத்தக்க மாற்றங் களையும் அறிந்து வெளியிட இவ்வளவையியல் பெரிதும் பயன்படுகிறது. இவற்றோடு பல்வேறுவித மான நிதிக் கொள்கைகளில் சிறப்பானதைத் தேர்ந் தெடுத்தலிலும், திட்டமிடுதலிலும், பொதுநலனைப் பெருக்கத்தக்க பலமுடிவுகளை மேற்கொள்ளுவதி லும், உச்ச அளவிலான நன்மைகளை அளந்தறியும் முயற்சி மேற்கொள்ளுதலிலும், பிறவற்றிலும் பொரு ளாதார அளவையியல் பெருமளவில்பயன்படுகின்றது.

**வரையறைகள்:** மேற்குறிப்பிட்ட பல்வேறு சிறப்பு களைப் பெற்றிருந்தாலும், பொருளாதார அளவை யியல் பல குறைகளையும் உடையதாக இருக்கிறது. தலைசிறந்த பொருளாதார மேதையர் பலர் கணித இயலின் உதவியின்றிப் பொருளாதார விளக்கங்களை அழகுற அமைத்துத் தந்திருக்கின்றனர். கணிதமும் பொருளாதாரமும் சேர்ந்து தோன்றிய கணிதவியல் பொருளாதாரமும், பொருளாதாரமும் புள்ளியியலும் சேர்ந்து தோன்றிய பொருளாதார அளவையியலும் துல்லியமான விளக்கங்களைப் பெற உதவுகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையே. ஆனால், பொருளாதார அளவையியலில் சிறப்புத் தேர்ச்சி பெறுபவர்கள் கணித இயலாலும் புள்ளியியலாலும் ஈர்க்கப்படும் வாய்ப்புகள் மிகுதியாக இருப்பதால் அடிப்படைப் பொருளாதார இயலுக்குரிய சிறப்பைத் தர அவர்கள் தவறிவிடுகிறார்கள் என்ற குறையைப் பெரும்பாலோர் குறிப்பிடுகின்றனர். மேலும், அள வுக்குக் கடினமான கணித முறைகள் பயன்படுத்தப் படுவதால் அரசியல் பொருளாதாரமாக (Political Economy) இருந்த பொருளாதார இயலை அளவை யிடும் கடினப் பொருளாதாரமாகப்(Difficult Economics) பொருளாதார அளவையியல் மாற்றிவிட்டது என்றும் பலர் குறிப்பிடுகின்றனர். என்.எஸ்.பா.

**துணை நூல்கள்:**

Goyal, J.K. and Saksena B.K., Mathematical, Economics and Econometrics, Goel Publishing House, Meerut, 1978.

Wane, E.J., Economic Statistics and Econometrics, Harper and Row Publishers, New york, 1968.

Tinter,G., Mathematics and Statistics for Economics, Holt, Rinehart and Winston, New york, 1964.

*பொருளாதார அறிகுறிகள்*: வேளாண்மை, காடுகள், மீன்வளர்ப்பு, சுரங்கங்கள், தாதுப்பொருள்கள் போன்றவற்றை உள்ளடக்கிய முதன்மைத் துறை (Primary Sector), குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், நடுத்தரத்தொழில்கள், கனரகத் தொழில்கள் போன்ற பலவகைத் தொழில்களை உள்ளடக்கிய இரண்டாம் துறை (Secondary Sector), இவ்விரண்டு துறைகளிலும் வாராதனவாகிய வாணிகம், செய்தித்தொடர்பு, போக்குவரத்து, மருத்துவம் கல்வி, பொதுச்சுகாதாரம், வங்கிகள், பொழுது போக்கு போன்ற பிறவற்றை உள்ளடக்கிய மூன்றாம் துறை (Tertiary Sector) ஆகிய மூன்று துறைகளிலும் உள்ள மக்களின் உற்பத்தி, பகிர்வு ஆகிய நடவடிக்கைகளைக் குறிப்பது பொருளாதாரம் (Economy)என்னும் சொல். ஒரு நாட்டின் உண்மைத் தனிஆளின் வருமானத்தை (Real Per Capita Income) அதிகரிப்பதன்மூலம் அம்மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு உறுதியாகவும், தொடர்ந்தும் நிகழ்ந்துகொண்டிருக்கும் போக்கைப் பொருளாதார முன்னேற்றம் (Economic Development) என்பர். பின்தங்கிய நிலையிலிருந்து கடுமையான முயற்சிகளுடன் அமைப்பு மாற்றங்களை (Structural Changes) ஏற்படுத்திக்கொண்டு பொருளாதாரம் மாற்றமடையும் போக்கைப் பொருளாதார முன்னேற்றம் (Economic Development) என்றும், முன்னரே ஓரளவுக்கு முன்னேறிய நிலையிலிருந்து மேன்மேலும் வளர்ச்சியடைந்து செல்லும் போக்கைப் பொருளாதார வளர்ச்சி (Economic Growth) என்றும் குறிப்பிடுவர். இத்தகைய பொருளாதார நிலை மாற்றங்களைச் சுட்டிக்காட்டுவனவே பொருளாதார அறிகுறிகள் (Economic Indicators). இத்தகைய அறிகுறிகள் பல உள. அவற்றுள் இன்றியமையாத ஒருசில அறிகுறிகளைப் பற்றிய சுருக்கமான விளக்கத்தைக் காண்பது இன்றியமையாததாகும்.

**மக்கள்தொகை**: ஒரு நாட்டிலிருக்கும் மக்களின் எண்ணிக்கை மக்கள்தொகை எனப்படும். நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் குறிப்பிட்ட காலஅளவில் இருக்கும் மக்களின் எண்ணிக்கையை இதன்மூலம் அறியலாம். பொதுவாகப் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள்தொகைக் கணக்கு எடுக்கப்படுகிறது. அக்காலத்தில் மொத்த மக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், பிறப்பு, இறப்பு, குழந்தைகள் மரண விகிதங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், ஆண், பெண் விகிதம், எழுத்தறிவுபெற்றோர் எண்ணிக்கை, வேலையில்இருப்போர் எண்ணிக்கை போன்ற பல அடிப்படைச் செய்திகளை இக்கணிப்பின் மூலம் பெறுவது இயல்பு.

**நாட்டு வருமானம்**: ஒரு நாட்டில் ஓராண்டுக் காலத்தில் உற்பத்தியாகும் பண்டங்களின், பணிகளின், மொத்தப் பண மதிப்பு நாட்டுவருமானம் (National Income) ஆகும். வருமான முறை (Income Method), செலவு முறை (Expenditure Method), உற்பத்தி முறை (Production Method) என்ற மூன்று முறைகள் மூலம் நாட்டு வருமானத்தைக் கணிப்பது இயல்பு. காரணிச் செலவின் அடிப்படையிலான மொத்த உள்நாட்டுவிளைவு (Gross Domestic Product at Factor Cost), அங்காடி விலைகளின் அடிப்படையிலான மொத்த உள்நாட்டுவிளைவு (Gross Domestic Product at Market Prices), தேய்மானம் நீங்கலாக உள்ள நிகர நாட்டு விளைவு (Net National Product) போன்ற பல விவரங்களை அறிய நாட்டு வருமானக் கணிப்புப் பயன்படுகிறது.

**உண்மை வருமானமும், உண்மை தனி ஆளின் வருமானமும்**: குறிப்பிட்ட கால அளவில் இருக்கும் நாட்டு வருமானத்தை அந்த நாட்டில் அக்கால அளவில் இருந்த மக்களின் எண்ணிக்கையால் வகுத்துப் பெறும் மதிப்பு தனி ஆளின் வருமானம் (Per Capita Income) ஆகும். நாட்டு வருமானமும், தனி ஆளின் வருமானமும், வருமானஅளவுக் குறியீட்டெண்களாகவும் கணிக்கப் படுவது மரபு. முந்திய ஏதாவதொரு ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு நடப்பு ஆண்டுக்குரிய நாட்டுவருமானம், தனி ஆளின் வருமானம் ஆகியவை கணக்கிடப்படுகின்றன. விலைகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளைத் தவிர்த்துப் பார்ப்பதால் இவை உண்மை நாட்டு வருமானம், உண்மைத்தனி ஆளின் வருமானம் (Real Per Capita Income) எனப்படுகின்றன. அடிப்படை ஆண்டு வருமானத்தை 100 எனக் கொண்டு நடப்பு ஆண்டு வருமானத்தின் விழுக்காடாக வருமான அளவுக் குறியீட்டெண் (Income Index) அமைக்கப்படுகின்றது.

**உற்பத்தி அளவுக் குறியீட்டெண்கள்**:ஒரு நாட்டில் பலபல பண்டங்களும், பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டாலும் பொதுவான பொருளாதார அறிகுறிகளாக வேளாண்மைப் பண்டங்கள் உற்பத்தி, தொழிற் பண்டங்கள் உற்பத்தி, உரஉற்பத்தி, மின் ஆற்றல் உற்பத்தி போன்ற உற்பத்தி அளவுகளும் அவற்றிற்கான அளவுக் குறியீட்டெண்களும் (Product Index) ஆண்டு தோறும் அமைக்கப்படுகின்றன. பண்டங்களின், பணிகளின் உற்பத்திப் பெருக்கம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பதால்இந்த அளவைகள் சிறப்பான பொருளாதார அறிகுறிகளாக விளங்குகின்றன.

**ஏற்றுமதியும், இறக்குமதியும்**: புலனாகும் பண்டங்களையும், புலனாகாப் பணிகளையும் வாணிகத்தின் பொருட்டு உள்நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதி என்றும், பிற நாடுகளிலிருந்து

உள் நாட்டிற்குள் கொண்டுவருவது இறக்குமதி என்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பலவிதமான மூலவளங்களில் (Resources) ஒன்றான அயற் செலாவணியைப் பெற்றுத் தருவதில் ஏற்றுமதி, இறக்குமதி (Exports and Imports) இன்றியமையாத பங்கு வகிக்கின்றன. மேலும், ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின், பணிகளின் தன்மையைக் கொண்டு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையை ஓரளவுக்கு ஊகித்தல் இயலும்.

**பொதுச் செலவு:** காவல் அரசுகளாக (Police State) இருந்த நிலை நீங்கி, இன்றைய அரசுகளில் பெரும்பாலானவை பொதுநல அரசுகளாக (Welfare States) மாறியுள்ள நிலையில், பொதுச் செலவுப் பெருக்கத்தின் மூலம் மொத்தத் தேவையைப் பெருக்கி, விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுதல் இயலும் என்ற கருத்து வலுப்பெற்றிருக்கும் நிலையில் பொதுச் செலவின் (Public Expenditure) அளவைப் பற்றிய செய்திகள் மிகவும் இன்றியமையாத பொருளாதார அறிகுறிகளாக அமைகின்றன.

**பொதுக்கடன்:** பெருகிவரும் மக்கள்தொகை, பணவீக்கம், பெருகிவரும் அரசுப் பணிகளின் அளவு, போர்ப் பயம், பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டிய தேவை போன்ற பல காரணங்களால் உள்நாட்டிலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும், பன்னாட்டு நிதி அமைப்புகளிடமிருந்தும் நாட்டின் அரசுகள் பெறும் கடன்களின் அளவுகளும், அதன் விளைவான பொதுக்கடன் (Public Debt) நிருவாகத்தின் தன்மையும் இன்றியமையாத பொருளாதார அறிகுறிகளாகத் திகழ்கின்றன.

**அயற் செலாவணி இருப்பு:** கண்ணுக்குப் புலனாகும், புலனாகாப் பண்டங்களின், பணிகளின் ஏற்றுமதி இறக்குமதிக்காக அயற் செலாவணிப்பற்று வரவுகள் ஏற்படுகின்றன. அவற்றின் விளைவாக ஒவ்வொரு நாடும் வைத்திருக்கும் அயற்செலாவணியின் இருப்பு அமைகிறது. தொடர்ந்து பலஆண்டுகள் பற்றாக்குறை நிலவுவது விரும்பத்தக்கதன்று என்பதாலும், அவ்விருப்பு அதிகரிக்க, அதிகரிக்க அந்நாட்டின் பன்னாட்டு மதிப்பு உயரும் என்பதாலும், சிறப்பானதொரு அறிகுறியாக அயற்செலாவணி இருப்புப் பயன்படுகிறது. சிறப்பு எடுப்பு உரிமைகளாகவும், (Special Drawing Rights - SDRS), தங்கமாகவும் (Gold), அயற்செலாவணியாகவும் இவ்விருப்புகள் வகைப்படுத்திக் குறிப்பிடப்படுகின்றன.

**பண அளிப்பு:** பணத்தின் வாங்கும் திறனாகிய பண மதிப்பு, பண அளிப்பினாலும் நிருணயிக்கப்படுகிறது என்பதாலும், மக்கட்பெருக்கம், பொருளாதார நடவடிக்கைகளின் பெருக்கம் போன்ற காரணங்களால் பண அளிப்பை அதிகரிக்கவேண்டிய அவசியம் இருப்பதாலும், பண அளிப்பு (Money Supply) இன்றியமையாததொரு பொருளாதார அறிகுறியாக இருக்கிறது. நாணயங்கள், காகிதப் பணம், வங்கிப் பணம் ஆகியவற்றை உள்ளடக்கிய பணஅளிப்பில் ஏற்படும் மாற்றங்கள் நாட்டின் பணவீக்க, பண வாட்ட நிலைகளைக் காட்டுகின்றன.

**வங்கிக் கடன்:** மொத்தப் பண அளிப்பில் வங்கிகளால் உருவாக்கப்படும் வங்கிக் கடன் பணம் சிறப்பான பங்கு வகிக்கிறது. பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நிலையிலுள்ள நாடுகளில் எல்லாவற்றிற்கும் பணத்தைப் பயன்படுத்தும் வழக்கம் இருக்குமென்பதால் மொத்தப் பண அளிப்பில் அரசு வெளியிடும் நாணயம், காகிதப் பணம் ஆகியவற்றின் அளவு மிகுதியாக இருக்கும். மாறாக, பொருளாதார நிலை மேம்படுகிறபோது வங்கிப் புழக்கம் பெருகி வங்கிப் பணத்தின் அளவு மிகுதியாக இருப்பது இயல்பு.

**மொத்தச் சேமிப்பு:** பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மூல வளங்களை உள்நாட்டுச் சேமிப்பிலிருந்து பெறுதல் நன்று என்பதால் மொத்தச் சேமிப்பு இன்றியமையாததொரு பொருளாதார அறிகுறியாகும். பழமை நிலையிலிருந்து பொருளாதாரம் முன்னேற்றத்தை அடைகின்றபோது மொத்த இல்லச் சேமிப்பு விகிதம் (Rate of Aggregate Domestic Savings) அதிகரித்துச் செல்வது இன்றியமையாதது என்பதோடு, நாட்டு வருமானத்தில் குறிப்பிட்டதொரு விகித அளவுக்கு மிகையாகச் சேமிப்பு விகிதமும் இருந்தால்தான் பொருளாதாரம் மேலெழு நிலையையும் (Take-off Stage), தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளும் நிலையையும் (Stage of Self - Sustained Growth) அடைதல் இயலுமென்பது உரோச்டோ (W.W. Rostow) என்பார் கருத்தாகும்.

**மொத்த முதலீடு:** மொத்தவருமானத்தைப் பெருக்க விரும்பும்போதும், தனியார் துறை முதலீடு முன்வராமல் இருக்கும்போதும் பொதுத்துறை முதலீட்டின் அளவை மிகுதியாக்குதல் மரபு. இது பெருக்கி (Multiplier), ஊக்கி (Acceleration) ஆகியவற்றின் விளைவுகளால் தொடக்க நிலை முதலீட்டைக் காட்டிலும் பல மடங்கு அளவிற்கு வருமானத்தையும், தொடரும் முதலீடுகளையும் மிகுதிப்படுத்தும்.

**மொத்த விலைக் குறியீட்டெண்:** உள்நாட்டுவிலையின் உறுதித் தன்மையை மொத்த விலைக் குறியீட்டெண்கள் (Wholesale Price Index) என்ற பொருளாதார அறிகுறிகள் காட்டுகின்றன.

**நுகர்வோர் விலைக் குறியீட்டெண்:** மக்களின் தனியாள் வருமானத்தை மிகுதியாக்குவதும் மேம் பாடு அடைந்துவரும் வாழ்க்கைத்தரத்தை மக் களுக்கு அமைத்துத் தருவதும் இன்றைய அரசுகளின் அடிப்படைக் குறிக்கோளாகும். வாழ்க்கைத்தரத்தை நிருணயிப்பதில் நுகர்வோர் பண்டங்களின் விலைகள் சிறப்பான பங்கு வகிக்கின்றன. நுகர்வுப் பண்டங் களின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை நுகர் வோர் விலைக் குறியீட்டெண்(Consumer Price Index) தெளிவாகக் காட்டுகிறது.

**வேலை நிலை:** உடல் வலிமையும், நலமும்,தகுதி யும், விருப்பமும் உடைய ஆண், பெண் அனைவருக் கும் வேலை வாய்ப்புகளை அளித்து முழு வேலை நிலையை (Full Employment Stage) அமைத்துத் தருவது இன்றைய அரசுகளின் குறிக்கோள்களுள் ஒன்று. வேலையற்றிருப்போரின் எண்ணிக்கை, வேலை தேடித்தரும் அலுவலகங்களில் உள்ள நடப்புப் பதிவேடுகளில் (Live Registers) பதிவு செய்திருப்ப வர்களின் எண்ணிக்கை, திட்டக் காலத்தில் தோற்று விக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை போன்றவை சிறப்பான பொருளாதார அறிகுறிகளாகும்.

என்.எஸ்.பா.

**துணை நூல்:**

David, W.Pearce, The Dictionary of Modern Eco-nomics, The Macmillan Press Ltd., London, 1983.

### பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென் பசிபிக்கு நிறுவனம்

**பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென் பசிபிக்கு நிறுவனம்:** பொருளாதார முன்னேற் றத்திற்கான கொள்கைகளை வகுப்பதிலும், அவற் றைச் செயற்படுத்துவதிலும் நாடுகள் தன்னிச்சை யாகச் செயற்படுவதால் ஏற்படத்தக்க பல சிக்கல் களைத் தவிர்ப்பதற்கெனத் தென் பசிபிக்கு வட்டார நாடுகள் இவ்வமைப்பை 1973 – ஆம் ஆண்டு ஏப்பி ரல் திங்கள் 17 – ஆம் நாள் உருவாக்கின. முன்னர், தென் பசிபிக்கு நாடுகளின் பொறுப்பாண்மைக் குழு (South Pacific Commission) ஒன்று 1971 – ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஆனால், அக்குழு பொருளாதாரத் திட்டங்கள், வாணிகக் கொள்கை கள் போன்றவற்றைப் புறக்கணித்ததால் இவற்றிற் கெனத் தனியொரு நிறுவனம் நிறுவப்படவேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அதன் விளைவா கவே இந் நிறுவனம் நிறுவப்பட்டது.

ஆசுத்திரேலியா (Australia), குக் தீவுகள் (Cook Islands), பிசி (Fiji), நவுரு (Nauru), நியூ சிலாந்து (New Zealand), தோங்கா (Tonga), மேற்குச்சமோவா(West Samoa), கிரிபாதி(Kiribate), நியூஇ (Niue), பாப்புவா (Papua), நியூ கினி (New Guinea), சாலமோன் தீவுகள் (Solomon Islands), துவாலு (Tuvalu), வானுனாட்டு (Vanunatu) ஆகிய நாடுகள் பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென் பசிபிக்கு நிறுவனத்தின் (South Pacific Bureau for Economic co-operation – SPEA) உறுப்பு நாடுகளாகும். இவ்வமைப்பிற் கான ஒப்பந்தம் மேற்குச் சமோவா நாட்டின் அபியா (Apia) நகரத்தில் எழுதப்பட்டதால் இதனை அபியா ஒப்பந்தம் என்றும் குறிப்பிடுவர்.

இந் நிறுவனத்தின் தலைமைச் செயலகம் பிசி நாட்டின் சுவா (Suva) நகரத்தில் இருந்து செயற் படுகிறது. இவ்வமைப்பைச் சேர்ந்த உறுப்பு நாடு களின் குழு ஆண்டிற்கு இருமுறை கூடி உறுப்பு நாடுகளின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிக் கலந்துரை யாடுகின்றது. உறுப்பு நாடுகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறப் பாடுபடுவதே இந் நிறுவனத் தின் சிறப்பான குறிக்கோளாகும்.

உறுப்பு நாடுகளிடையே வாணிகம், வேளாண்மை, தொழில், போக்குவரத்து, தொலைத் தகவல் தொடர்பு, சுற்றுப்புறச் சூழ்நிலை (Environment) ஆகிய துறைகளில் ஒற்றுமை நிலவவும், அவற்றின் வளர்ச்சிக்கான பொது நெறிமுறைகளை வகுக்கவும், பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தவும் பசுபிக்கு மண்டலக் கப்பல் மன்றம் (Pacific Regional Shipping Forum), தென் பசுபிக்கு விமானக் கூட்டமைப்பு (Association of South Pacific Airlines), தென் பசுபிக்கு மீன்வள முகவர் மன்றம் (South Pacific Fisheries Forum Agency), தென் பசுபிக்கு வாணிகப் பொறுப்பாண்மைக்குழு (Trade Commission of South Pacific), தென் பசுபிக்குமண்டலச் சுற்றுப்புறச் சூழ்நிலைத் திட்டம் (South Pacific Regional Environment Programme) என்ற பல தனி அமைப்புகளைத் தன் கட்டுப் பாட்டிற்குள் வைத்துச் செயற்படுத்தி வருகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலைத் திட்டம் மட்டும் ஐக்கிய நாடுகள் சபையின் (United Nations Organisation) சுற்றுப்புறச் சூழ்நிலைத் திட்டத்தோடு இணைந்து செயற்படுகிறது.

இவ்வமைப்பின் குழுக்கள் கூட்டாக மேற்கொள் ளும் முடிவுகளையும், கொள்கைகளையும், பரிந்துரை களையும் உலகின் பிற நாடுகளும், பன்னாட்டு அமைப்புகளும் கூர்ந்து கவனித்துச் செயற்படுகின் றன. அதன் விளைவாக இவ்வமைப்பின் உறுப்பு நாடுகளும் நல்ல பலன்களைப் பெறுகின்றன. எண்ணெய் விலை உயர்வால் 1970 – ஆம் ஆண்டு களில் தோன்றிய பன்னாட்டு நிதி நெருக்கடியைத்

தவிர்க்க இவ்வமைப்பு பாறை எண்ணெயை (Petrol) உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு பாறை எண்ணெய் விலை, ஏற்றுமதி அளவு ஆகியவற்றில் அடிக்கடிமாற்றங்களைச் செய்யவேண்டாம்என்ற வேண்டுகோளை விடுத்ததன் விளைவாக 1980 – ஆம் ஆண்டின் தொடக்கக் காலத்திலிருந்தே பாறை எண்ணெய் வாணிகம் உறுப்பு நாடுகளிடையே தடையின்றி நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

மீன்வளப் பெருக்கத் திட்டங்களை மீன்வள வளர்ச்சிக்கான முகவர் மன்றம் மூலமாக நிறைவேற்றி உறுப்புநாடுகள் பல பயன்களைப் பெற்று வருகின்றன. தென் பசுபிக்குத் தீவுகளின் மண்டல முன்னேற்ற நிதி நிறுவனம் (South Pacific Islands Regional Development Fund) என்ற அமைப்பை நிறுவிப் பன்னாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து எளிதாகவும், மலிவாகவும் நீண்ட காலத்திற்குப் பல நிதி உதவிகளைப் பெறும் முயற்சிகளை இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது. மேலும், உறுப்பினர்களிடையே தோன்றுகிற பல வாணிகச் சிக்கல்களையும் குழுக் கூட்டங்களில் விவாதித்துப் பல மாற்றங்களைச் செய்து தவிர்த்து வருகிறது. குறிப்பாக முதலீட்டுப் பற்றாக்குறை, போட்டி, திறமைக் குறைவு கப்பல்களைப் பாதுகாக்கும் செலவு ஆகியவற்றால் தென் பசுபிக்குக் கப்பல் மன்றம் தொடர்ந்து பல ஆண்டுகள் நிதி இழப்புக்கு உள்ளாகியது. அவ்விழப்பு தொடர்ந்து நீடித்ததால் 1983-இல் நியூசிலாந்திடமிருந்து ஏறத்தாழ 7 மில்லியன் தாலர் (Dollar) உதவித்தொகையைப் பெற்று இம் மன்றத்தைச் செம்மைப்படுத்தியது.

பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென் பசுபிக்கு நிறுவன முயற்சியின் காரணமாகத் தென் பசுபிக்கு மண்டல வாணிகப் பொருளாதாரக் கூட்டுறவுக்கான ஒப்பந்தம் (South Pacific Regional Trade and Economic Co-operation Agreement) எழுதப் பெற்றது. உறுப்பு நாடுகளின் வாணிக அமைச்சர்களின் குழுக் கூட்டத்தின் பரிந்துரைகளின்படி அவ்வொப்பந்தம் 1980-இல் கையெழுத்தாயிற்று. இதன்படி இவ்வமைப்பில் முன்னேற்றமடைந்த நாடுகளாகிய ஆசுத்திரேலியாவும், நியூசிலாந்தும் பிற உறுப்பினர் நாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. குறிப்பாக நிதி உதவிகள் வழங்குவதன் மூலமாகவும், தங்கள் அங்காடிகளில் பிற மண்டல நாடுகளின் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக்குத் தடை விதிக்காமலும், அவற்றை மிகுதியான சுங்க வரிவிதிப்பின் மூலம் கட்டுப்படுத்தாமலும் அந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணைசெய்தல் வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. முன்னேற்றமடையாத பிற உறுப்பு நாடுகளின் அகக் கட்டுமானப் (Infrastructure) பணிகள், தொழில் வளர்ச்சித் திட்டங்கள், வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றில் தொழில் நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல், முதலீட்டில் பங்கு பெறுதல் ஆகியன மூலம் மண்டலத்தின் பொது முன்னேற்றத்தை உயர்த்தவேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

எளிமையான சுங்கத்தீர்வை முறை, தொழிலாளர் இடப்பெயர்வு, அகக் கட்டுமானப் பணிகள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, மீன்வளம் போன்ற கூட்டு முயற்சித் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துதல் ஆகியவை பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென் பசுபிக்கு நிறுவனத்தின் இக்கால நடவடிக்கைகளுள் சிறப்பான இடம் பெற்றுள்ளன. அ.கு.சா.

**பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக் கழகம்**: கனடா, இசுபெயின், அமெரிக்கா ஆகியநாடுகள் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவுக் கழகத்தின் (Organisation for European Economic Co-operation) மூல உறுப்புநாடுகள். அந்நாடுகள் 1960-ஆம் ஆண்டில் பாரிசு (Paris) நகரத்தில் கையெழுத்திட்ட உடன்படிக்கையின் விதிகளின்படி ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவுக்கான கழகத்திற்கு மாற்றாகவும் அதனை விரிவுபடுத்தியதொரு அமைப்பாகவும் 1961-ஆம் ஆண்டில் பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக்கழகம் (Organisation for Economic Co-Operation and Development-OECD) தோற்றுவிக்கப்பட்டது. இப்பொழுது ஆசுதிரேலியா (Australia), ஆசுத்திரியா (Austria), பெல்சியம் (Belgium), கனடா, தென்மார்க்கு (Denmark), பின்லாந்து (Finland), பிரான்சு (France), செருமானியக் கூட்டரசுக் குடியரசு (The Federal German Republic), கிரீசு (Greece), ஐசுலாந்து (Iceland), ஐரிசுக் குடியரசு (The Irish Republic), இத்தாலி (Italy), சப்பான் (Japan) இலக்சம்பர்க்கு (Luxemberg), நெதர்லாந்து (Netherland), நியூசிலாந்து (New Zealand), போர்ச்சுக்கல் (Portugal), இசுபெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் இக்கழகத்தின் உறுப்பு நாடுகளாக இருக்கின்றன. இவற்றுடன் 'சிறப்பு உறுப்பினர்' என்ற தகுதியுடன் யூகோசுலேவியா (Yugoslavia) இக்கழகத்தின் சிறப்பான ஒரு சில நடவடிக்கைகளில் கலந்து கொள்கிறது.

**நோக்கங்கள்**: 1) உறுப்பு நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதையும், நிதி உறுதித் தன்மையை நிலை நிறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ள பொருளாதாரக் கொள்கைகளை அமைத்தல், ஒருங்கிணைத்தல், மேம்பாடு அடையச் செய்தல்.

2) இக்கழகத்தின் உறுப்பு நாடுகள் வளரும் நாடுகளுக்குக் கொடுக்கப்படத்தக்க நிதி மற்றும் பொறிநுட்ப உதவிகளுக்கான முயற்சிகளைத் தூண்டி விடுதல், முறைப்படுத்துதல்.

3) வேறுபாடுகள் அற்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படத்தக்க பன்முகப் பன்னாட்டு வாணிகத்தின் (Multilateral Trade) வளர்ச்சிக்காகத் துணை நிற்றல்.

உறுப்பு நாடுகளின் பேராளர்களைக் (Representatives) கொண்டதொரு குழு (Council) இக்கழகத்தை நிருவகிக்கிறது. இக்கழகத்தின் செயல்திட்டங்கள் 100க்கும் அதிகமான சிறப்புக் குழுக்களாலும் (Specialised Committees), செயற்படும் ஆட்களாலும் (Working Parties) நிறைவேற்றப்படுகின்றன. இக்கழகத்தின் பன்னாட்டுச் செயலகத்தோடு (International Secretariat)இச்சிறப்புக் குழுக்களும், செயற்படும் ஆட்களும் நெருக்கமான தொடர்பு கொண்டு தனித் தனித் திட்டங்களின் சிக்கல்கள், பயன்கள், நிறைவேற்றும் முறைகள் போன்ற பலவற்றைப் பற்றி ஆய்ந்தறிந்து கொள்கை அடிப்படையிலான பரிந்துரைகளை அமைத்துக் கொண்டு செயற்படுகின்றன. பொருளாதார முன்னேற்றம், பொறிநுட்பக் கூட்டுறவு, பன்னாட்டு வாணிகம், ஆற்றல் (Energy), சுற்றுச்சூழல் போன்ற சிலவற்றை இக்குழுக்களும் ஆட்களும் ஆய்வுக்கு மேற்கொள்வனவற்றுக்கான எடுத்துக்காட்டுகளாகக் குறிபிடலாம். மேலும், கலந்து கொள்ளும் நாடுகளுக்கிடையே எண்ணெய் இறக்குமதியைப் பொறுத்த மட்டிலும் இருக்கும் அதிகமான அளவிலான சார்ந்திருக்கும் இயல்பைக் குறைப்பதற்காகவும், சக்தியைப் பொறுத்தமட்டில் கூட்டுறவை ஊக்குவிப்பதற்காகவும் பன்னாட்டு ஆற்றல் பதிவாண்மை (Agency) ஒன்றை 1974-ஆம் ஆண்டில் இக்கழகம் தோற்றுவித்தது. மேலும் 1958-ஆம் ஆண்டில் ஐரோப்பிய அணு ஆற்றல் பதிவாண்மை (European Nuclear Energy Agency) என்று தோற்றுவிக்கப்பட்ட பதிவாண்மை, பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக் கழக அணு ஆற்றல் பதிவாண்மை (OECD Nuclear Energy Agency) என்ற புதிய வடிவில், பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக் கழக நாடுகளில் அமைதிப் பணிகளுக்காக அணு ஆற்றலைப் பயன்படுத்துவதற்கும் முன்னேற்றுவிப்பதற்காகவுமான பன்னாட்டுக் கூட்டுறவு முயற்சிகளைத் தோற்றுவித்து வளர்ச்சி பெறச் செய்து வருகிறது. பொருளாதார உதவிகள் பற்றிய பொதுவான கொள்கைகளை வகுப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஒரு வளர்ச்சி மையத்தை (Development Centre) 1962-இல் இக்கழகம் தோற்றுவித்தது. மேலும், கல்வி, ஆய்வு, புத்தாக்க மையத்தின் (Centre for Educational Research and Innovation) மூலமாக உறுப்பினர் நாடுகளில் கல்வி முறைகளை மேம்பாடு அடையச் செய்யும் முயற்சிகளிலும் இக்கழகம் ஈடுபட்டிருக்கிறது.

உறுப்பு நாடுகளின் பொருளாதாரச் செயல் திட்டங்கள், போக்குகள் (Trends), முன்மதிப்பீடுகள் (Forecasts) பற்றிய புள்ளி விவர ஆய்வறிக்கைகளையும், பன்னாட்டு முன்னேற்றம், உதவி பற்றிய கொள்கைகளைப் பற்றிய அறிக்கைகளையும் இக்கழகம் முறையாக வெளியிடுகிறது. தனிப்பட்ட முறையில் எப்போதாவது மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் பற்றிய நூல்களையும், முறைசாரா அடிப்படையிலான (Ad hoc) ஆய்வுகளைப் பற்றிய அறிக்கைகளையும் இக்கழகம் முறையாக வெளியிட்டு வருகிறது. என்.எஸ்.பா.

**பொருளாதாரக் கோட்பாடுகள்:** கோட்பாடு என்ற சொல் பல பொருள்களில் வழக்கில் பயன்படுகிறது. உறுதிப்படுத்தப்பட்ட (Confirmed) அல்லது உறுதிப்படுத்தப்படாத கருதுகோள்களைக் (Hypotheses) குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட அறிவுத் தொகுதியின் (Body of knowledge) பகுதி என எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தக்க அளவிற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருதுகோள்களைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்த அடிப்படையில் பொருளியலில் எல்லோராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் அமைந்துள்ள கூற்றுகளைப் பொருளாதாரக் கோட்பாடுகள்(Economic Theories) என்பர்.

கிடைக்கும் மூலவளங்களை (Resources) எவ்வெவ் வழிகளில் பயன்படுத்தினால் மக்கள் பெறுகின்ற மொத்தப் பயன்பாடு உச்ச அளவிலிருக்கும் அல்லது மொத்த ஆதாயம் உச்ச அளவிலிருக்கும் என்பதைச் சிந்தித்து மக்கள் செயற்படுகின்றனர். இச் செயல்களில் ஏற்றுக் கொள்ளத்தக்க பல கருத்துகளைப் பொருளாதாரக் கோட்பாடுகள் என்பர்.

**எடுகோள்கள்:** பொருளாதாரக் கோட்பாடுகள் பல எடுகோள்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவ்வெடுகோள்கள் 'பெரும்பாலும்' உண்மையானவையாக இருக்கலாம். 'பெரும்பாலும்' என்ற சொல் இருப்பதால் 'முற்றிலும்' இல்லை என்றாகிறது. நிகழ் உலகில் பல நிலைகளில் பல மாறுபட்ட சூழ்நிலைகள் உள்ளன. எனவே, முற்றிலும் பொருந்தக்கூடிய வகையில் கருத்துகளைப் பொருளாதார இயலில் குறிப்பிடுவது இயலாது. உலகின் சிக்கல்கள் பலப்பல; எல்லாவற்றையும் உள்ளடக்கிய உண்மைகளைக் காண முயல்வது எளிதன்று. எனவே, பொருளாதாரக் கோட்பாடுகள்

ஓரளவு உண்மை நிலைக்கு மாறுபட்டவை போலத் தோன்றும் வாய்ப்புகளும் உண்டு. இந்நிலையில், குறிப்பிட்ட எடுகோள்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிலைகளில் மனிதர்களுடைய நடவடிக்கைகளின் போக்குப் பற்றிய விளக்கங்களைப் பொருளாதாரக் கோட்பாடுகள் எனலாம். எடுத்துக் காட்டாக, நுகர்வோரின் வருமானம், பதிலிப் பொருட்களின் விலைகள், நுகர்வோரின் விருப்பு, வெறுப்புகள் போன்ற மாறிகளில் (Variables) மாற்றங்கள் எதுவும் இல்லாத நிலையில் விலை குறைந்தால் தேவை விரிவடையும்; விலை அதிகரித்தால் தேவை சுருங்கும் என்று விலை மாற்றத்திற்கும் தேவை மாற்றத்திற்கும் தேவை உள்ள எதிர்மறையான தொடர்பைத் தேவை விதி (Law of Demand) விளக்குகிறது.

**அடிப்படைகள்:** பொருளாதாரக் கோட்பாட்டை அமைக்கும்போது இரு அடிப்படைகள் கருத்தில் கொள்ளப்படுவது இயல்பு. முதலாவதாக, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பெரும்பான்மையான மக்கள் பொதுவாக எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதைப் பற்றிய பல கருதுகோள்களையும், எடுகோள்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும். இதில் மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகள், சமுதாயப் பொருளாதார அமைப்புகள் (Institutions), அவற்றின் தன்மைகள் பற்றிய கருத்துகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, அத்தகைய எடுகோள்களின் அடிப்படையில் மாறிகளின் (Variables) செயல்களைப் பற்றிய ஏதாவதொரு அல்லது ஒருசில முடிவுகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

பொருளாதாரக் கோட்பாடுகளில் உள்ள எடுகோள்களைப் பொதுவாக மூவகைப்படுத்துவர். முதலாவதாக, தனி ஆட்களின் செயலைப் பற்றிய எடுகோள்கள். நுகர்வோர் உச்ச அளவு பயன்பாட்டைப் பெறுவதிலும், உற்பத்தியாளர் உச்ச அளவு ஆதாயத்தைப் பெறுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்படுவர் என்பதைப் 'பகுத்தறிந்து செயற்படுவது பற்றிய எடுகோள்' (Rationality Assumption) என்பர். இரண்டாவது, நிகழ் உலகத்தின் புவியியல் உயிரியல், தட்பவெப்ப நிலைகளைப் பற்றியது. இவை மாறாதிருக்கின்றன என்பது எடுகோள். எடுத்துக் காட்டாக, வேளாண்மையில் அறுவடைக் காலம் இயற்கையால் நிருணயிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடலாம். இதன் அடிப்படையில்தான், பண்டங்களும் பணிகளும் தேவையோடு ஒப்பிடுகையில் பற்றாக்குறையாக உள்ளன என்னும் கருத்துப் பெறப்பட்டுள்ளது. மூன்றாவது சமுதாயப் பொருளாதார அமைப்புகளின் (Social and Economic Institutions) தன்மையைப் பற்றியது. நிலையான, உறுதியான அரசுகள் இருப்பது, மக்கள் தங்கள் வருமானத்தைக் கொண்டு பண்டங்களையும் பணிகளையும் நுகர்வது ஆகியவற்றையும் இன்னும் பல இயல்பான நிலைகளையும், பொருளாதாரம் அப்படியே ஏற்றுக் கொள்கிறது. அங்காடி அமைப்பு, விற்பவர்களின், வாங்குபவர்களின் நடவடிக்கைகள் எல்லாம் இயல்பானவையாகவும், நேர்மையானவையாகவும் பொருளாதாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் எடுகோள்கள் அமைக்கப் பட்டுள்ளன.

பொருளியல், நுண்ணினப் பொருளியல் (Micro), பேரியல் (Macro) அல்லது தொகையினப் (Aggregate) பொருளியல் என இருவகைப்படும். நுகர்வு, உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு பற்றிய கோட்பாடுகள் நுண்ணினப் பொருளாதாரத்திலும், நாட்டு வருமானம், வேலை, பணத்தின் மதிப்பு, பேரியல் பகிர்வு, வாணிகச் சுழல்கள், பொருளாதார வளர்ச்சி, நாடு தழுவிய நிலையிலான பொருளாதாரக் கருத்துகள் பற்றிய கோட்பாடுகள் பேரியல் பொருளாதாரத்திலும் விளக்கப்படுகின்றன.

**நுகர்வுக் கோட்பாடு:** பல அடிப்படை எடுகோள்களை அமைத்துக் கொண்டு மனிதன் எந்த அளவுக்குப் பண்டங்களையும் பணிகளையும் நுகரும்போது உச்சநிலை மொத்தப் பயன்பாட்டைப் பெறுவான் என்பதை விளக்கும் பகுதி நுகர்வுக் கோட்பாடு (Consumption Theory) ஆகும். ஒரு பொருளின் பல அலகுகளை (Units) நுகரும்போது பொருளின் இறுதி நிலைப் பயன்பாடும் (Marginal Utility), விலையும் (அதாவது, பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடும்) சமமாக இருக்கும் நிலையில் நுகர்வின் அளவை நிறுத்தி நுகர்வோர் உச்ச அளவு மொத்தப் பயன்பாட்டைப் பெறுகின்றனர். பல பண்டங்களை நுகரும்போது பண்டத்தின் விலைக்கு அதன் இறுதிநிலைப் பயன்பாட்டு விகிதங்கள் எல்லாப் பண்டங்களிலும் சமமாக இருக்கும் வகையில் நுகர்ந்து, நுகர்வோர் உச்சநிலை மொத்தப் பயன்பாட்டைப் பெறுகின்றனர். இக்கருத்துகளை (i) $P_A = MU_A$ என்றதொரு சமநிலையாகவும் (ii) $\frac{MU_A}{P_A} = \frac{MU_B}{P_B} \dots\dots \frac{MU_N}{P_n}$ என்றதொரு சமநிலையாகவும் நுகர்வுக் கோட்பாடு விளக்குகிறது. இவ்வாறு, நுகர்வோர் உச்சநிலை மொத்தப் பயன்பாட்டைப் பெறத் தம்மிடம் உள்ள மூலவளங்களை (Resources) எவ்வாறு பயன்படுத்திச் சமநிலையை அடைகின்றனர் என்பதை நுகர்வுக் கோட்பாடு விளக்குகிறது.

பயன்பாடு அளவிடத் தக்கது (Cardinal Utility) என்ற அடிப்படையில் அமைந்த மார்சலின் (Marshall) பயன்பாட்டுப் பகுத்தாய்வு (Utility Analysis), பயன்பாடு மதிப்பிடத்தக்கது (Ordinal Utility) என்ற

அடிப்படையில் அமைந்த ஆலன் (Allen), கிக்சு (Hicks) போன்றோரின் சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வு (Indifference Curve Analysis), சாமுவேல்சனின் (Samuelson) வெளிக்காட்டும் விருப்பப் பகுத்தாய்வு (Revealed Preference Analysis) என்ற பல அடிப்படைகளில் நுகர்வுக் கோட்பாடு விளக்கப் படுகிறது.

**உற்பத்திக் கோட்பாடு:** பயன்பாட்டைப் படைத்தல் உற்பத்தி ஆகும். அதாவது மக்களின் விருப்பங்களை நிறைவேற்றிடத் தேவைப்படும் பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்படுதல் வேண்டும். உற்பத்தியில் தொடர்புடைய காரணிகள் பற்றியும் அவற்றோடு தொடர்புடைய விதிகள் பற்றியும் விளக்கும் பகுதி உற்பத்திக் கோட்பாடு (Production Theory) ஆகும். பயன்பாட்டைப் படைக்க நிலம் (Land), உழைப்பு (Labour), மூலதனம் (Capital), அமைப்பு (Organisation) என்ற நான்கு காரணிகள் பயன்படுகின்றன. இயற்கையில் கிடைப்பது நிலம். வருமானம் கருதி உடலாலும் சிந்தனையாலும் மேற்கொள்ளப் படும் முயற்சி உழைப்பு. செல்வத்தை மேன்மேலும் பெருக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் செல்வப் பகுதி மூலதனம். இம் மூன்று காரணிகளையும் சரியான விகிதத்தில் இணைத்துப் பயன்படுத்தி,தொழில் இடர்களையும் ஏற்றுப் பணியாற்றுவது அமைப்பு. இக் காரணிகளுடன் தொடர்புடைய கோட்பாடுகள் உற்பத்திக் கோட்பாடுகள் ஆகும்.

உற்பத்திக் காரணிகளை எந்த அடிப்படையில் பயன்படுத்தினால் உற்பத்தியாளர் உச்ச அளவு ஆதாயத்தைப் பெற்றுச் சமநிலையை அடைவர் என்பது உற்பத்திக் கோட்பாட்டில் விளக்கப்படுகிறது. எல்லாக் காரணிகளின் அளிப்பையும் தேவைக்கேற்ப மாற்றி அமைக்க இயலாத கால அளவைக் குறுங் காலம் (Short Period) என்பர். ஒரு சில காரணிகளை மாறாமல் வைத்துக் கொண்டு மற்ற சில காரணிகளை மாற்றியமைத்துப் பயன்படுத்துவதால் மொத்த, சராசரி, இறுதிநிலை விளைவுகள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதையும், நீண்ட காலத்தில் எல்லாக் காரணிகளின் அளவுகளையும் மாற்றியமைக்கும் போது விளைவுகள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதையும் உற்பத்திக் கோட்பாடு விளக்குகிறது. உழைக்கும் சக்தியின் அளவை நிருணயிக்கும் மக்கள் தொகை அமைப்பு, அதன் வளர்ச்சி வேகம் மக்கள் தொகைப் பெருக்கத்தால் விளையும் பாதிப்புகளை விளக்கும் வகையில் மால்தசின் மக்கள் தொகைக் கோட்பாடும் (Malthusian Theory of Population), எட்வின் கானன் (Edwin Canan), கார் சாண்டர்சு (Carr Saunders) போன்ற பல அறிஞர்களின் உத்தம மக்கள் தொகைக் கோட்பாடும் (Optimum Theory of Population) விளக்கப்படுகின்றன.

**மதிப்புக் கோட்பாடு:** உற்பத்தியான பண்டங்கள் நிறைவுப் போட்டி அங்காடி (Perfectly Competitive Market), நிறை குறைப் போட்டி அங்காடி(Imperfectly Competitive Market), முற்றுரிமை அங்காடி (Monopoly Market), இருவர் முற்றுரிமை அங்காடி (Duopoly Market), ஒருசிலர் முற்றுரிமை அல்லது சில்லோர் முற்றுரிமை அங்காடி (Oligopoly Market), வாங்கல் முற்றுரிமை அங்காடி (Monopsony Market), இருமுக முற்றுரிமை அங்காடி (Bilateral Monopoly Market) என வகைப்படுத்தப்பட்டு பலவகை அங்காடிகளில் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. விலைக்கோட்பாடு (Price Theory) எனப்படும் இக்கோட்பாட்டில் பண்டங்களின், பணிகளின் அங்காடி மதிப்புகள் எவ்வாறு நிருணயிக்கப்படுகின்றன என்பது விளக்கப்படுகிறது. பயன்பாட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படும் நுகர்வோரிடமிருந்து பண்டங்களுக்கும் பணிகளுக்குமான தேவை (Demand) தோன்றுகிறது. செலவுக் கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படும் உற்பத்தியாளரிடமிருந்து பண்டங்களின், பணிகளின் அளிப்புத்தோன்றுகிறது. தேவையும் அளிப்பும் சமமாகும் நிலையில் விலைகள் நிருணயிக்கப்படுகின்றன. நிறைவுப் போட்டி அங்காடியில் விலைகள் நீண்ட காலத்தில் மிகக் குறைவான அளவில் அமைவதையும், அமைப்பாளர்கள் இயல்பு ஆதாயத்தை மட்டுமே பெறுவதையும், குறுங்காலத்திற்கும் நீண்ட காலத்திற்கும் வேறுபாடு முனைப்பாக இல்லாதிருக்கும் முற்றுரிமை அங்காடியில் முற்றுரிமை ஆற்றலின் (Monopoly Power) விளைவாக, அமைப்பாளர் எப்போதும் அளவிறந்த ஆதாயத்தைப் (Abnormal Profit) பெறுவதற்கு வாய்ப்பு இருப்பதையும், உற்பத்தியில் முழுத் திறனும் பயன்படுத்தப்படாமல் எச்சத் திறன் (Excess Capacity) இருப்பதையும் மதிப்புக் கோட்பாடு (Value Theory) விளக்குகிறது. ஏதாவதொரு காரணத்தால் நிருணயிக்கப்பட்டு நிலைபேறு கொண்டுவிடும் விலைகள் மாறாமல் இணக்கமற்றவையாக (Rigid) இருப்பதைச்சில்லோர் முற்றுரிமை அங்காடிக் கோட்பாடுகள் விளக்குகின்றன.

**பகிர்வுக் கோட்பாடு:** உற்பத்திக் காரணிகளை இணைத்துப் பயன்படுத்தியதால் விளைந்த பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பே நாட்டு வருமானம். எனவே, நாட்டு வருமானம் இக்காரணி உரிமையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். உற்பத்திக் காரணிகளின் விலை எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதைப் பகிர்வுக்கோட்பாடு (Distribution Theory) விளக்குகிறது. நில உரிமையாளர்களின் ஊதியமான வாரம்எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதை தேவிடு இரிக்கார்டோவின் (David Ricardo)வாரக்கோட்பாடும், இக்கால அறிஞர்களின் கோட்பாடுகளும், குறுங்காலப் போலிவாரக் கோட்

பாடும் விளக்குகின்றன. உழைப்பாளர்களின் ஊதியமான கூலி எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதைப் பற்றிய பிழைப்பூதியக் கூலிக் கோட்பாடு (Subsistence Theory of Wages), சே.எசு. மில் (J.S. Mill) அவர்களின் கூலி நிதிக்கோட்பாடு (Wage Fund Theory of Wages), வாக்கரின் (Walker) மிச்ச உரிமையர் கோட்பாடு (Residual Claimant Theory of Wages), இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாடு (Marginal Productivity Theory of Wages) தாசிக்கின் (Tausig) கழிவு நீக்கிய உற்பத்தித் திறன் கோட்பாடு (Discounted Marginal Productivity Theory), உழைப்பாளர்க்கான தேவை அளிப்புக் கூலிக் கோட்பாடு (Supply and Demand Theory of Wages) போன்ற பல கோட்பாடுகள் விளக்கப் படுகின்றன. மூலதனத்தின் ஊதியமான வட்டி பற்றிய உண்மைக் கோட்பாடுகள் (Real Theories) எனப் படும் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடுகள் (Classical Theories of Interest), இயற்கை வாதிகளின் (Physiocrats) உற்பத்தித் திறன் கோட்பாடு (Productivity Theory), சீனியரின் (Senior) துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு (Abstinence Theory), மார்சலின் (Marshall) காத்திருத்தல் கோட்பாடு (Waiting Theory), பாம் பாவர்க்கின் (Bohm Bawerk) காலக் கழிவுக் கோட்பாடு (Agio Theory), பிசரின் (Fisher) கால விருப்பக் கோட்பாடு (Time Preference Theory), வட்டியின் கடன் நிதிக் கோட்பாடு (Loanable, Funds Theory of Interest) எனப்படும் புதுமைத் தொன்மைக் கோட்பாடு (Neo-Classical Theory) பணவியற் கோட்பாடு (Monetary Theory) எனப் படும் கீன்சின் நீர்மை விருப்பக் கோட்பாடு (Keynesian Liquidity Preference Theory), உண்மைக் கோட்பாடு, பணவாக்கக் கோட்பாடுகளின் ஒன்றிணைப் பாகக் கருதப்படும் இக்காலக் கோட்பாடு போன்றவை விளக்கப்படுகின்றன. அமைப்பாளரின் பணிக்கெனக் கருதப்படும் ஆதாயம் எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதைப் பற்றிய வாக்கரின் ஆதாயத்தின் வாரக் கோட்பாடு (Rent Theory of Profit of Walker), தாசிக்கின் ஆதாயத்தின் கூலிக் கோட்பாடு (Wage Theory of Profit of Tausig) ஆதாயத்தின் இறுதி நிலை உற்பத்தித் திறன் கோட்பாடு (Marginal Productivity Theory of Profit), சே.பி. கிளார்க்கின் ஆதாயத்தின் இயங்கு நிலைக் கோட்பாடு (Dynamic Theory of Profit of J.B. Clark), சும்பீட்டரின் (Schumpeter) ஆதாயத்தின் புத்தாக்கக் கோட்பாடு (Innovation Theory of Profit), நைட்டின் (Knight) ஆதாயத்தின் உறுதியின்மை தாங்கும் கோட்பாடு (Uncertainty Bearing Theory of Profit), ஆலியின் (Hawley) ஆதாயத்தின் இடர் தாங்கும் கோட்பாடு (Risk Bearing Theory of Profit) போன்றவை விளக்கப்படுகின்றன.

**பேரியல் பொருளாதாரக் கோட்பாடு:** ஒவ்வொரு அளிப்பும் அதனதன் தேவையைத் தோற்றுவித்துக் கொள்ளும் என்று சே.பி.சே. (J.B. Say) கூறியுள்ளார். அவரது விதியை அடிப்படையாக ஏற்றுக் கொண்டால் முழு வேலை (Full Employment) நிலை இயல்பாகத் தோன்றவேண்டும். அதிகப் படியாகக் கிடைக்கும் வருமானம் முழுவதும் செலவழிக்கப்பட்டுவிடும் என்ற கருத்தின் அடிப்படையில் அங்காடி விதி விளக்கப்பட்டது. அதிகப்படியாகக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதி செலவழிக்கப் படாமல் சேமிக்கப்படலாம் என்ற கருத்தை விளக்கி, அதன் அடிப்படையில் நுகர்வின் உளவியல் விதியைப் (Psychological Law of Consumption) பேராசிரியர், கீன்சு விளக்கினார். அவர்தம் கோட்பாடு வேலைக் கோட்பாடு என்றும் வருமானக் கோட்பாடு என்றும் பேரியல் பொருளாதாரக் கோட்பாடு என்றும் பல வாறாகக் குறிப்பிடப்படுகிறது. குறை வேலைச் சமநிலையே (Under Employment Equilibrium) இயல்பான சமநிலை என்றும் முழுவேலை நிலையை அடைய நாடுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்றும் கீன்சு விளக்கினார். இக்கோட்பாட்டில் நுகர்வுச் சார்பு (Consumption Function), முதலீட்டுச் சார்பு (Investment Function), பெருக்கிக் கோட்பாடு (Multiplier Theory), முடுக்கிக் கோட்பாடு (Acceleration Principle) போன்ற பல கருத்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

**பணமதிப்புக் கோட்பாடு:** பண அளவில் தோன்றும் மாற்றங்கள் வருமானம், வேலை, விலைகள் ஆகியவற்றில் பல விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன. பண அளவை மாற்றும்போது மொத்தச் செலவு, மொத்தத் தேவை போன்றவை மாற்றம் அடைகின்றன. தோற்றுவிக்கப்படும் மொத்தத் தேவையின் மீதான விளைவுகள் மூலமாக நேரிடையாகவும், வட்டி விகிதங்கள் மீதும், தராதர விலைகள் மீதும் (Relative Prices) தோற்றுவிக்கும் விளைவுகளின் மூலமாக மறைமுகமாகவும் பண அளவு மாற்றங்கள் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் விளைவுகளை விளக்கப் பணக் கோட்பாடு(Monetary Theory) பயன்படுகிறது என்று, தான் பாட்டின்கின் (Don Patinkin) குறிப்பிடுகிறார். பண அளவுக் கோட்பாடுகளைக் கீழ் வரும் ஐந்து வகையில் பிரித்துக் குறிப்பிடலாம். (1) இர்விங்கு பிசரின் (Irwing Fisher) பண அளவுக் கோட்பாடு, (2) கேம்பிரிட்சுப் பள்ளியினரின் (Cambridge School of Economics) பண அளவுக் கோட்பாடு, (3) கீன்சின் (Keynesian) சேமிப்பு-முதலீட்டுக் கோட்பாடு (Savings-Investment Theory), (4) மில்ட்டன் பிரீடுமேனின் (Milton Friedman) பண அளவுக் கோட்பாட்டின் புதிய விளக்கம், (5) தான் பாட்

பாட்டின்கினின் உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு (Real – Balance Effect Theory).

**பேரியல் பகிர்வுக் கோட்பாடு**: பேரியல் பகிர்வுக் கோட்பாடு (1) தேவிட் இரிக்கார்டோவின் கோட்பாடு அல்லது தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடு, (2) காரல் மார்க்சின் கோட்பாடு, (3) புதுமைத் தொன்மைக் கோட்பாடு அல்லது இறுதி நிலை உற்பத்தித் திறன் கோட்பாடு, (4) கீன்சின் கோட்பாடு அல்லது கால்டாரின் (Kaldor) கோட்பாடு என்று விளக்கப்படுகின்றன. சில வருமாறு:

**இரிக்கார்டோவின் கோட்பாடு**: வாரம், கூலி, ஆதாயம் என்ற மூன்று பெரும் பிரிவுகளில் நாட்டு வருமானம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. வருமானமும் வேலையும் அதிகரிக்கும்போது, பிழைப்பூதிய நிலைக் கூலியின் தராதரமான பங்கு அதிகரிக்கிறது. அப்போது ஆதாயத்தின் பங்கு சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்து, இறுதியில் வெறுமை (Zero) நிலையை அடைகிறது. ஆதாயம் வெறுமையாகின்ற போது மூலதனத் திரட்சி நின்றுவிடுகிறது; பொருளாதாரம் இயங்காத் தன்மையைப் பெறுகிறது.

**காரல் மார்க்சின் கோட்பாடு**: உபரி மதிப்பு (Surplus Value) என்ற தத்துவத்தின் அடிப்படையில் காரல் மார்க்சின் கோட்பாடு அமையப்பெற்றுள்ளது. தொழிலாளர்களுக்குச் சேர வேண்டியதில் ஒரே யொரு பங்கை மட்டும் தொழிலாளர்களுக்குக் கொடுத்துவிட்டு மீதியை வாரம், வட்டி, ஆதாயம் என்ற வடிவங்களில் முதலாளிகள் அடைந்து கொள்கிறார்கள். அதோடு மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளை மேன்மேலும் பயன்படுத்தித் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் முயற்சிகளிலும் தொடர்ந்து ஈடுபடுவர். நிலை மூலதனத்தை மிகுதியாக்கிப் புதிய புதிய இயந்திரங்களையும், உற்பத்தி முறைகளையும் பயன்படுத்தும்போது மூலதனத்தின் அங்க அமைப்பு (Organic Composition of Capital) அதிகரித்து ஆதாய விகிதம் குறைந்து செல்கிறது. இந்நிலை தொடர்ந்து சென்று ஆதாயமே இல்லை என்ற நிலை தோன்றிக் குழப்பம் மிஞ்சும் என்று மார்க்சு கூறுகிறார்.

**கீன்சின் அல்லது கால்டாரின் பகிர்வுக் கோட்பாடு**: தொழிலாளர்கள் அதிகமான அளவில் சேமிக்கும் போது முதலீட்டில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டிலும் அதிகமான அளவில் ஆதாயம் குறைந்து, நாட்டு வருமானத்தில் கூலியின் பங்கு அதிகரிக்கிறது. இதற்கு மாறாக, தொழிலாளர்கள் குறைவாகச் சேமிக்கும்போது, முதலீட்டில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டிலும் அதிகமான அளவில் ஆதாயம் அதிகரிக்கிறது; நாட்டு வருமானத்தில் கூலியின் பங்கு குறைகிறது. (குறுங்காலத்தில் முதலீட்டு வருமான விகிதம் நிலையாக இருப்பதால் நாட்டு வருமானத்தில் கூலி, ஆதாயம் ஆகியவற்றின் பங்கும் மாறாமல் இருக்கிறது.)

**வாணிகச் சுழற்சிக் கோட்பாடுகள்**: முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நுகர்வுத் தேவை எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றிய உற்பத்தியாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் உற்பத்தி நிகழ்கிறது. நிகழ்வதற்கும், எதிர்பார்த்ததற்கும் உள்ள மாற்றங்களால் செழிப்பும் (Prosperity), இறக்கமும் (Recession), வீழ்ச்சியும் (Depression), மீட்சியும் (Recovery) எவ்வாறு மாறி மாறித் தோன்றுகின்றன என்பதைப் பற்றிய அறிஞர்களின் கருத்துகளை விளக்கும் கோட்பாடுகளை வாணிகச் சுழற்சிக் கோட்பாடுகள் (Theories of Trade Cycle) என்பர்.

**பன்னாட்டு வாணிகக் கோட்பாடு**: பண்டங்களும் பணிகளும் ஒரே நாட்டுக்குள் பரிமாற்றிக் கொள்ளப்படின் அது உள்நாட்டு வாணிகம்; பல நாடுகளுக்கிடையே பரிமாற்றிக் கொள்ளப்படின் அது பன்னாட்டு வாணிகம் எனப்படும். பன்னாட்டு வாணிகத்துடன் தொடர்புடைய தொன்மைப் பொருளாதாரஅறிஞர்கள், இக்கால அறிஞர்கள் ஆகியோரின் கருத்துகள் பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகள் (Theories of International Trade) என்று குறிப்பிடப்படுகின்றன.

**பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடுகள்**: பொருளாதார வளர்ச்சியைப் பெற வளர்ந்த, வளரும், பின்தங்கிய நாடுகள் எல்லாம் முயல்கின்றன. இவ்வளர்ச்சியைப் பெறச் சமச்சீர் வளர்ச்சிக் கோட்பாடு அல்லது ஒத்த நிலை வளர்ச்சிக் கோட்பாடு (Balanced Growth Doctrine), சமச்சீரற்ற வளர்ச்சிக் கோட்பாடு அல்லது ஒத்த நிலையற்ற வளர்ச்சிக் கோட்பாடு (Doctrine of Unbalanced Growth), பேரளவு உந்துக் கோட்பாடு (Theory of Big Push), குறைந்த அளவு தீவிர முயற்சிக் கோட்பாடு (The Theory of Critical Minimum Effort), காரல் மார்க்சின் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு போன்ற கோட்பாடுகள் குறிப்பிடப்படுகின்றன.

பொருளாதார உண்மைகளின் (Facts) இன்றியமையாத இயல்புகளை ஒழுங்குபடுத்தி விளக்கும் வகையில் பொருளாதாரக் கோட்பாடுகள் அமைந்துள்ளன. இவ்வுண்மைகளின் தொடர்புகளை மிகச் சுருக்கமாக, கணித இயலைப் பயன்படுத்தியும் பயன்படுத்தாமலும் குறிப்பிடுபவை பொருளாதார மாதிரிகள் (Economic Models) எனப்படும்.

நடைமுறை உலகில் நிகழ்ச்சிகள் எவ்வாறெல்லாம் இருக்கும் என்பதை மதிப்பிடும் அறிஞர்களுக்குப் பொருளாதாரக் கோட்பாடுகள் அடிப்படைகளை அமைத்துத் தந்திருக்கின்றன. கைகோள் பொருளாதாரம் (Applied Economics), கணக்கியல் பொருளாதாரம் (Econometrics) ஆகியவற்றிற்கும் பொருளாதாரக் கோட்பாடுகளே அடிப்படையாகத் திகழ்கின்றன.

என்.எஸ்.பா.

**துணை நூல்கள்:**

**Alfred, W. Stonier & Douglas, C.Hague**, A Text Book of Economic Theory, The English Language Book Society, London, 1982.

**David, W. Pearce**, The Dictionary of Modern Economics, MacMillan, Press Ltd., London, 1983.

**Koutsoyiannis**, Modern Micro Economics, MacMillan Company, London, 1982.

**பொருளாதாரச் சமூகவியல்:** கடந்த இரு நூற்றாண்டுகளாகப் பல சிந்தனையாளர்கள் பொருளாதாரச் சமூகவியலில் ஈடுபாடு காட்டி வருகின்றனர். ஐரோப்பியப் பொருளாதாரச் சிந்தனையில் கி.பி. 17,18 ஆகிய நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பல்வேறு எண்ணங்களால், பலதரப்பட்ட மக்களும் இதன்பால் ஈடுபாடு காட்டினர்.

பொருளாதாரச் சமூகவியலின் (Economic Sociology) அடிப்படைக்கருத்து சமூகத்தில் பொருளாதாரத்தைப் பற்றி ஆராய்வதாகும். பொருளாதாரச் செயல்கள் சமூகத்தில் எவ்வாறு முறைப்படுத்தப்படுகின்றன என்பதையும் இது ஆராய்கிறது.

மேலும், சமூகத் தன்மைகள் பொதுவாகப் பல்வேறு சூழ்நிலைகளில் மாற்றமடைந்து கொண்டேயிருக்கும். பொருளாதாரச் சூழ்நிலையிலும், பொருளாதாரமற்ற சூழ்நிலையிலும், சமூகத் தன்மைகள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதையும் பொருளாதாரச் சமூகவியலாளர் காண்கிறார்கள். எடுத்துக்காட்டாக, குடும்பத்தில் ஒருவருடைய பங்கு, பொருளாதாரத்திற்காகப் பணி செய்யும் இடத்தில் எவ்வாறு மாற்றமடைகின்றது, பின்னர் உறுப்பினராக இருக்கும் பொழுது அமைப்புகளில் அவரது போக்கு எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதாகும். இவ்வாறு பல்வேறு சூழ்நிலைகளில் மாற்றமடைந்து கொண்டே வந்தாலும், ஒன்றுக்கொன்று உறவுமுறை கொண்டதாகவே காணப்படும்.

பொருளியல் அறிஞர்களின் எண்ணம் பொதுவாக ஒருநாட்டின் செல்வத்தைச்சுற்றியே அமைந்திருக்கும். ஒரு நாட்டின் செல்வம் என்பது அந்நாட்டில் எவ்வளவு பணம் புழக்கத்தில் இருக்கிறது என்பதைக்குறிக்கும். பணம் என்பதில் பொருளியல் அறிஞர்களின் கூற்றுப்படி வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களும் அடங்கும். அவர்களின் எண்ணப்படி ஒரு நாட்டில் இறக்குமதியை விட ஏற்றுமதி மிகுதியாக இருக்குமானால், செல்வம் அந்நாட்டில் குவியும்.

ஒரு நாட்டின் செல்வம் பெருகப்பெருகத்தான் அந்நாட்டின் ஆதிக்கம் பெருகிக் கொண்டே வரும் என்பது சிந்தனையாளர்களின் கருத்தாகும். இதனால், தேசிய செல்வத்தைப் பெருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் இருவிதக் கருத்து இருக்க வியலாது. செல்வம் பெருகப் பெருக ஒரு நாட்டின் ஆதிக்கம் பெருகுவது ஒரு புறம் இருக்க, அவ்வாதிக்கத்தைப் பயன்படுத்தி மீண்டும் மீண்டும் செல்வத்தைப்பெருக்கிக் கொள்ளலாம் என்பது ஒரு கோட்பாடு. ஆக, செல்வத்திற்கும், ஒரு நாட்டின் ஆதிக்கத்திற்கும் நெருங்கிய உறவு முறை காணப்படுகிறது.

செல்வத்தின் மூலம் அதிகரிக்கும் ஆதிக்கத்தினால், அந்நாட்டின் வாணிகத்தையும், தொழிற்சாலைகளையும் ஒழுங்குபடுத்த முடியும். அதனால், ஏற்றுமதியையும் இறக்குமதியையும் அதிகப்படுத்தலாம். அவ்விதப் பொருளாதார மாற்றத்தினால் சமூகத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. சமூக வாழ்க்கை, அரசியல் ஆகியவற்றில் ஏற்படுகின்ற அவ்வித மாற்றங்களை ஆய்வு செய்வதுதான் பொருளாதாரச் சமூகவியல் ஆகும்.

இப் பொருளாதாரக் கொள்கையைப் பற்றிப்பல திறனாய்வுகள் உள்ளன. அத்திறனாய்வாளர்களுள் முக்கிய இடம் பெற்றவர் ஆடம் சுமித்து (Adam Smith) என்பவர் ஆவார். செல்வம் என்பதற்குப் பணம் என்ற வாதத்தை ஆடம் சுமித்து மறுக்கிறார். செல்வம் என்பதற்கு இவர் கொடுக்கும் விளக்கம் 'ஒரு நாட்டிலுள்ள மக்கள் வசதியாக வாழ்வதற்கும், தேவையானவற்றைப் பெற்று வாழ்வதற்குமான வழி வகைகளை உற்பத்தி செய்வதாகும்' என்பதாகும். மேலுமவர், பணம் என்பது இந்த வசதிகளைப் பெறுவதற்குக் கொடுக்கப்படும் ஒரு மாற்றுப் பொருள் மட்டுமே ஆகும் என்று கூறுகிறார்.

செல்வத்திற்காகத் தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களைச் சேர்த்துவைக்கும் எண்ணத்தையும் மறுக்கிறார். செல்வத்தைப் பெருக்குவதற்கு அவர் சொல்லும் கருத்து, உற்பத்திப் பொருள்களைப் பரவலாக்குவது; ஓர் இடத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் தங்கு தடையின்றி எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்வது என்பதாகும்.

ஒரு நாட்டின் ஆதிக்கம் அந்நாட்டின் செல்வத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்ற கொள்கை

யைச் சுமித்து மறுக்கவில்லையெனினும் அச்செல்வத்தை எப்படிப் பெருக்குவது என்பதில் மாறுபடுகிறார். அரசாங்கம் சில தொழிற்சாலைகளுக்கு ஆதரவு காட்டுவது, பொருள்களை நிருணயம் செய்வது போன்றவற்றை விடுத்து, அவற்றைக் கவனிக்கும் பொறுப்பை வணிகப் பொருளாதாரப் பேராளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிறார். எனினும் சமூகத்திற்கும், பொருளாதாரத்திற்கு மிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை அவர் மறுக்கவில்லை.

இதனைக் காரல் மார்க்சும்(Karl Marx) மறுக்கவில்லை. எனினும், இது தொடர்பான அவர்தம் சிந்தனை சிக்கலான ஒன்று. ஏனெனில் அவர்தம் சிந்தனைகள் செருமன் சிந்தனைகள், பிரான்சுப் பொதுவுடைமைக் கொள்கை, ஆங்கிலேயப் பொருளாதாரக் கொள்கை ஆகிய மூன்றின் கூட்டு அடிப்படையில் எழுந்தன ஆகும்.

மார்க்சின் கருத்து எந்த ஒரு வளர்ச்சி அடைந்த சமூகமாக இருந்தாலும், அது பொருளாதார அடிப்படையைச் சார்ந்துதான் உள்ளது என்பதாகும். ஏனெனில், சமூக வளர்ச்சிக்குப் பொருள்களின் உற்பத்தித்திறன் அடிப்படையாக அமைகிறது.

காரல் மார்க்சு உற்பத்தியின் அடிப்படையில் சமூகத்தை, முதலாளி வருக்கம் (Bourgeoisie) பாட்டாளி வருக்கம் (Proletariate) என இரு பிரிவுகளாகப் பிரிக்கிறார். முதலாளி வருக்கம் என்னும் பிரிவு, உற்பத்தியைத் தனக்கு உடைமையாக்கிக் கொண்டு, அதன் மூலம் கிடைக்கக் கூடிய ஆதாயத்தை அனுபவிக்கும் பிரிவு ஆகும். இதற்கு நேர்மாறானது பாட்டாளி வருக்கம் என்னும் பிரிவு ஆகும். அது உழைப்பைக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கி, அதன் பயனைப் பயன்படுத்தாமல், கூலிக்காக, அதை விற்கும் பிரிவுஆகும்.

இவர், சமூகத்திற்கும், பொருளாதாரத்திற்கு மிடையேயுள்ள உறவு முறையை மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார். இச்சமூகத்தின் பொருளாதார அமைப்பின் காரணமாக முதலாளி வருக்கத்தினர் ஆதிக்கம் பெறுகிறார்கள்; உற்பத்திப் பொருள்களுக்கு உரிமையாளர்களாக உள்ளார்கள். முதலாளி வருக்கத்திற்கும், உற்பத்திப் பொருள்களுக்கும் நெருங்கிய இணைவு காணப்படுகின்றது. ஆனால், இந்த உற்பத்திப் பொருள்களுக்கு மூலகாரணமாக இருப்பது பாட்டாளி வருக்கத்தின் உழைப்பே ஆகும். அவர்கள் கூலிக்காக உழைப்பை விற்று விடுகிறார்கள். கூலிக்காக மிகுதியான நேரம் உழைக்கிறார்கள். அவர்களுடைய மனைவியும், குழந்தைகளும் கூட உழைக்கிறார்கள். கூலி பெற்று விட்டவுடன் அவர்களுக்கும், அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்கும் தொடர்பு இல்லையென ஆகிவிடுகிறது. அதாவது, கூலி கொடுத்து உற்பத்தியைப் பெற்ற பின்னர் இரு பிரிவினருக்கும் உறவு முறை இல்லாமல் ஆகிவிடுகிறது. சில சமயங்களில் இவர்களது உழைப்புக்கும் விலை கிடைப்பதில்லை. சில சமயங்களில் இவர்கள் உழைப்பதற்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. காரணம் இவர்களுக்கு மாற்றாக இயந்திரங்கள் வேலை செய்து விடுகின்றன.

இதனால், செல்வம் என்ற போர்வையில் முதலாளி வருக்கத்தின் ஆதிக்கம் அதிகரிக்கிறது. எவ்வளவு ஆதிக்கம் செலுத்தினாலும் இவ்வகைப் பொருளாதார அமைப்பு அழிந்து விடும் என்கிறார், காரல் மார்க்சு. ஏனெனில் சமூகத்தில் ஒரு பிரிவினருடன் தொடர்பு வைத்துக் கொள்ளாமல் எந்த அமைப்பும் வெற்றி பெற இயலாது என்கிறார்.

ஆனால், உற்பத்திப் பொருள்கள் ஒரு பிரிவினரிடம் குவிக்கப்படும் பொழுது, விலைவாசியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவர்களிடம் வந்துவிடுகின்றது. சமூகத்தில் போட்டி இருக்குமேயானால் தான் விலைவாசியைக் குறைக்க வியலும். அவ்வாறு இல்லையெனில், விலைவாசியை யாரும் கட்டுப்படுத்த இயலாது. இதைத்தான் பொருளியல் அறிஞர்கள் குறைபாடான போட்டி என்கிறார்கள். இவ்வகைக் குறைபாடான போட்டியின் காரணமாக, சில சமயங்களில் உற்பத்திப் பொருள்கள் வீணாக்கப்படுகின்றன. பொருளாதாரம் தொடர்பாகச் சமூகத்தின் எல்லாப் பிரிவினருடனும் உறவு முறை கொண்டிருந்தால்தான் பொருளாதார அமைப்பு நிலையாக இருக்க முடியும் என்பதுதான் பொருளாதாரச் சமூகவியல் அறிஞர்களின் கூற்று ஆகும்.

சான் மேனார்டு கீன்சு (John Maynard Keynes) என்ற அறிஞரின் கூற்றுப்படி, பொருளாதார அமைப்பு நிலையாக இருக்க வேண்டுமெனில், மக்களின் பங்கு முக்கியமானதாகும். பொருளாதார அமைப்பில் சமூகத்தின் வருவாய் மிகவும் முக்கியமானது என்கிறார். தனி மனிதனைப் பொறுத்தவரை, அவன் செலவழிக்கும், மற்றும் சேமிக்கும் பணத்தின் கூட்டுத் தொகைதான் அவனது வருவாய் ஆகும். சமூகத்தின் வருவாய் என்பது, தனி மனிதர்கள் வாங்கப் போகும் பொருள்கள், தயாரிக்கப்படப் போகும் பொருள்களின் மீது செய்யும் முதலீடு ஆகியவையாகும். ஆகவே பொருளாதாரம் என்பதைத் தனி மனிதர்களிடமிருந்தும் சமூகத்திடமிருந்தும் பிரிக்கவியலாது என்பது இவரது கூற்று.

இரண்டு விதமான எண்ணங்கள் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் இறுதியில் பரவலாகக் காணப்பட்டன.

ஒன்று சமூகப் படிநிலை வளர்ச்சி, மற்றொன்று சமூகப் பொருளாதார வளர்ச்சி. படிநிலை வளர்ச்சியைப் பொறுத்தவரை, இசுபென்சர் (Spencer) இரு விதக் கருத்துகளைக் கொண்டிருந்தார். சமூகத்தை ஓர் உயிரினத்திற்கு இணையாக ஒப்பிடுகிறார். சமூகத்தில் ஏற்படுகின்ற வளர்ச்சியையும் குறிப்பிடுகின்றார். உடல் உயிரியலும் சரி, சமூக உயிரியலும் சரி இரண்டுமே வளர்ச்சியடைந்து வரக் கூடியவை.

அடுத்தது மனித வரலாற்றின் படிநிலை வளர்ச்சி. தொழில் வளர்ச்சியை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். பொருளாதாரச் செயல்கள் மட்டுமே இதன் மையப் பொருளாகக் கணக்கிடப்படும். பொருளாதார சமூகவியல் அறிஞர்கள் இவ் விதச் செயல்கள் எவ்வாறு முறைப்படுத்தப்படுகின்றன என்பதை ஆராய்கிறார்கள்.

சமூகவியலில் சில பிரிவுகளைப் பார்த்தால், பொருளாதாரச் சமூகவியலின் பிரிவாகத்தான் காணப்படும். பணிச் சமூகவியல், தொழிற்சமூகவியல் ஆகியவை பொருளியலை நன்றாகவே ஆராய்கின்றன. புதியமேலைநாட்டு வகை அமைப்பில் தொழில் சார் முதலாளித்துவம் வளர்ச்சியடைந்தது பற்றி மேக்சு வீபர் (Max Weber) நன்கு ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

சமூக வாழ்க்கை பலவிதமாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு பிரிவும் ஒன்றுக்கொன்று உறவு நிலையோடு இருப்பதோடன்றி, பொருளாதாரத் தோடும் நெருக்கமாக உறவு நிலை கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது. எல்.ஜெ.

**துணை நூல்கள்:**


**Firth Raymond**, Elements of Social Organization, Watts, London, 1951.

**Marx, Karl**, Critique of Political Economy, International Library, New york, 1904.

**Weber, Max**, The Methodology of the Social Sciences, The Free Press, Glencoe, Ill., 1949.

**Weber, Max**, The Theory of Social and Economic Organization, Oxford University Press, New York, 1947.


*பொருளாதார, சமுதாய முன்னேற்ற அரபு வங்கி*: அரபு நாடுகளின் பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்கு உதவி செய்யும் உயர்ந்த நோக்கத்துடன் 1968-ஆம் ஆண்டில் பொருளாதார, சமுதாய முன்னேற்ற அரபு வங்கி (Arab Fund for Economic and Social Development) என்னும் பன்னாட்டு அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. உறுப்பு நாடுகளிடையே முதலீடு செய்யும் ஆர்வத்தைத் தூண்டி விடுதல், வளர்ச்சித் திட்டங்களுக்கான மூலதனத்தையும் பொறியியல் நுட்ப உதவிகளையும் அளித்தல் போன்ற பல உயர்ந்த நோக்கங்களுடன் இந்த அமைப்புச் செயற்பட்டு வருகிறது.

என்.எஸ்.பா.

*பொருளாதாரத் திட்டமிடல்*: ஒரு நாட்டின் தேவைகள் பல. அவற்றை நிறைவேற்றுவதற்குரிய மூலவளங்களின் இருப்பு தேவைகளின் அளவோடு ஒப்பிடும்போது குறைவாக உள்ளது. அந் நிலையில் கிடைக்கும் மூலவளங்கள் எல்லாவற்றையும் முடிந்த அளவிற்குத் திரட்டி ஒருங்கிணைத்து ஒரு மைய அமைப்பின் மூலம் செயற்படுத்திச் சிறப்பாகப் பயன்படுத்தினால் எதிர்பார்க்கும் நல்ல விளைவுகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பெறுதல் இயலும். அந்த மைய அமைப்பு, வழி வகுத்துக் கொடுப்பது பொருளாதாரத் திட்டமிடல் (Economic Planning) எனப்படும். இது இக்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. இது அரசியல், பொருளாதார, சமுதாயக் குறைகளைக் களைந்து நல்வாழ்வு பெறச் சிறந்ததொரு வழிவகுக்கும்.

சோவியத்து உருசிய நாடு அதன் விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்காக கி.பி.1928-ஆம் ஆண்டில் திட்டமிடுதல் என்ற முறையைத் தொடங்கியதிலிருந்து எல்லாநாடுகளிலும் இம்முறை மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் பின்பற்றப்பட்டது. இரண்டாம் உலகப் பெரும் போரும், அதனையடுத்துத் தோன்றிய உலகப் பெருமந்தமும், விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறவேண்டுமென்ற பேரவாவும் திட்டமிடுதலை மிகவும் தேவையாக்கி உள்ளன.

இக்கருத்துக்குப் பலர் பல்வேறு விளக்கங்களைக் கூறியுள்ளனர். 'உற்பத்தி, பரிமாற்றம் ஆகியவைகளைப்பற்றிய தனியான நடவடிக்கைகளைக் கூட்டுக் கட்டுப்பாட்டில் அல்லது மேற்பார்வையில் செயற்படுத்துவதைத் திட்டமிடுதல் எனலாம்' என்கிறார் பேராசிரியர் இராபின்சு (Prof. Robins). 'பொருளாதார மூலவளங்களைப் பயன்படுத்துவதிலும், அமைப்பதிலும் பொதுத் துறை அதிகாரங்களின் செயல்களை விரிவாக்குதலே திட்டமிடுதலின் உள்ளார்ந்த கருத்து' என்கிறார் எப். சுவிகு (F.Zweig) என்பவர்.

எதை, எந்த அளவுக்கு, யாருக்காக, எம்முறையில் உற்பத்தி செய்ய வேண்டும், எம் முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பன போன்றவற்றில் நாடு முழுவதிலிருந்தும் பெறும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் மிகவும் சிறப்பான முடிவுகளை மேற்

கொள்வதைத் திட்டமிடுதல் என்று குறிப்பிடலாம் என்று திக்கின்சன் (Dickinson) குறிப்பிடுகிறார்.

மையக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்படுதல், கிடைக்கும் மூலவளங்களை நன்கு தெரிந்து விரும்பும் வழிகளில் பயன்படுத்துதல், உச்ச அளவு சமுதாய நலத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டிருத்தல், ஒன்றோடொன்று இணக்கமாக இணைந்து செயற்படுவதன் மூலம் வீணாவதைத் தவிர்த்தல், விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற முயலுதல், சீரான வருமானப் பகிர்வளித்தல் முதலியன பொருளாதாரத் திட்டமிடுதலின் அடிப்படைகளாகும்.

உறுதியின்மை, தானியங்கும் அங்காடி, இயந்திர அமைப்பின்மை, கால மாற்றங்களினால் எதிர் பாராத மாற்றங்களை ஏற்படுத்தும் காலக் - காரணி (Time Factor), அதிகார வருக்கம், சிகப்பு நாடா முறை தலை விரித்தாடும் நிலை, உற்சாகமும் ஊக்கமும் இன்மை, சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகள், அளவற்ற அதிகாரிகளின் தேவை, நாட்டுத் திட்ட நோக்கங்களுக்கும் பன்னாட்டு வளர்ச்சிக்கும் முரண்பாடு இருத்தல், முற்றுரிமைத் (Monopoly) தன்மையைத் தோற்றுவித்து விடுதல் போன்ற பல குறைகளைச் சுட்டிக் காட்டிப் பொருளாதாரத் திட்டமிடுதல் தேவையில்லை என்பர் சிலர். பொருளாதார வளர்ச்சி மிகவும் இன்றியமையாத ஒன்று. தனி ஆள் திறமையைக் காட்டிலும் அரசுக்கு மிகுதியான திறன் உண்டு. விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறவும், விரும்பத் தகாத விளைவுகளைத் தவிர்க்கவும், அரசு சீரிய முறையில் செம்மையாகச் செயற்படவும் திட்டமிடுதல் தேவையே என்பர் பலர். ஏற்றத் தாழ்வுகளை நீக்கிடவும் எல்லோருக்கும் வேலை வாய்ப்புகளை அளித்திடவும், பொருளாதார அமைப்புகளின் (Institutions) செயற்பாடுகளை வளர்ச்சிக்குத் துணையானவையாக மாற்றவும், அயல் வாணிகத்தையும், அந்நியச் செலாவணியையும் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும், நிதி வசதிகளைப் பெருக்கவும் திட்டமிடுதல் தேவையே என்பது அவர்கள் கருத்து.

திட்டமிடுதலின் நோக்கங்களைப் பொருளாதார நோக்கங்கள், அரசியல் நோக்கங்கள், சமுதாய நோக்கங்கள் என வகைப்படுத்துவது மரபு எனினும், பொருளாதார நோக்கங்களே மிகச்சிறப்பானவை என்னும் கருத்து வலிமை மிக்கதாக உள்ளது.

பொருளாதாரத் திட்டமிடுதலைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்துவர். முதலாவதாக, பொருளாதார அமைப்பின் (Economic System) அடிப்படையில் அமைப்புத் திட்டமிடுதலும் (Structural Planning), செயற்பாட்டுத் திட்டமிடுதலும் (Functional Planning) சமதருமத்திட்டமிடுதலும் (Socialist Planning), முதலாளித்துவத் திட்டமிடுதலும் (Capitalist Planning), மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலும் (Centralised Planning), பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலும் (Decentralised Planning) மக்களாட்சி முறைத் திட்டமிடுதலும் (Democratic Planning), ஒருமுகத் தனியாதிக்கத் திட்டமிடுதலும் (Totalitarian Planning) என அவ்வகைப்பாடு பலவாகும். இரண்டாவதாக, காலத்தின் அடிப்படையில் பொருளாதாரத் திட்டமிடலை நிலையான திட்டமிடுதலும் (Permanent Planning), அவசர நிலைத் திட்டமிடுதலும் (Emergency Planning), தொலை நோக்குத் திட்டமிடுதலும் (Perspective Planning), குறுகிய காலத் திட்டமிடுதலும் (Short Term Planning) என வகைப்படுத்தலாம். மூன்றாவதாக, பொருளாதார நிலப் பரப்பளவின் அடிப்படையில் வட்டாரத் திட்டமிடுதலும் (Regional Planning), நாட்டு நலத்திட்டமிடுதலும் (National Planning), பன்னாட்டுத் திட்டமிடுதலும் (International Planning) என்று வகைப்படுத்தலாம். நிதி, விளைவு ஆகியவற்றின் அடிப்படையில் பருப்பொருள் சார் திட்டமிடுதலும் (Physical Planning), நிதி சார் திட்டமிடுதலும் (Financial Planning) என்று வகைப்படுத்தலாம். தொடர் திட்டம் (Rolling Planning) என்ற வகையும் இக்காலத்தில் பரவலாகக் கையாளப்படுகிறது. இத் திட்டத்தில் நெகிழ்ச்சித் தன்மையும், வளர்ச்சி பற்றிய சரியான நோக்கும் இருக்கின்றன என்பதால் வளரும் நாடுகள் இம் முறையை விரும்பிப் பயன்படுத்துகின்றன.

பொருளாதாரத் திட்டத்தில் திட்டத்தை வரைதல் (Formulating a Plan), திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல் (Adopting a Plan), திட்டத்தை நிறைவேற்றுதல் (Implementing a Plan), திட்ட நடைமுறையை மேற்பார்வையிடுதலும் மதிப்பிடுதலும் (Supervision and Evaluation) என நான்கு பெரும் நிலைகள் உண்டு.

பொருளாதாரத் திட்டம் வெற்றி பெற நம்பிக்கையான, முழு அளவிலான புள்ளி விவரங்கள் கிடைக்க வேண்டும்; சரியான முறையில் அமையப் பெற்ற பொருளாதார அமைப்பு இருக்க வேண்டும்; நிலையான, வலிமைமிக்க அரசு செயற்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்; திறமையான ஊழலற்ற நிருவாகம் நடைபெற வேண்டும்; சரியான இலக்குகளையும் முதன்மை இடங்களையும் அமைத்து மன உறுதியுடன் கூடிய முயற்சியுடன் செயற்பட வேண்டும்; சரியான அளவில் சமநிலை வளர்ச்சி நிலை நாட்டப் பெறுதல் வேண்டும்; பொது மக்களின் ஒத்துழைப்பு இருக்க வேண்டும்; நல்லிணக்கத்துடன்

புதிய நுகர்வுக் கொள்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்; சிக்கனமாக நிருவாகம் இருக்க வேண்டும்; மக்களுக்குத் தகுந்த கல்வி அடிப்படை இருக்க வேண்டும். இவை பொருளாதாரத் திட்டம் வெற்றி பெறத் துணை செய்யும்.

**கட்டுப்பாடுகள்**: தனியார் துறைக்கு மாற்று அமைப்பு, அங்காடி அமைப்பைத் தவிர்க்க உதவும் அமைப்பு, வளரும் நாடுகளில் புரையோடிக் கிடக்கும் பல குறைகளைக் களைய முற்படும் அமைப்பு என்ற அடிப்படைகளில் பொருளாதாரத் திட்டமிடுதலில் கட்டுப்பாடுகள் என்பவை மிகவும் இன்றியமையாதனவாகும். அவற்றுள் நுகர்வுக் கட்டுப்பாடு, முதலீட்டுக் கட்டுப்பாடு, உற்பத்திக் கட்டுப்பாடு, இறக்குமதிக் கட்டுப்பாடு, ஏற்றுமதிக் கட்டுபாடு, பரிமாற்றக் கட்டுப்பாடு ஆகியவற்றை நேரடிக் கட்டுப்பாடுகள் என்றும், பணக் கொள்கை, நிதிக் கொள்கை, வாணிகக் கொள்கை மற்றும் பலவிதமான கொள்கைகள்மூலம் மேற்கொள்ளப்படும் பொதுவான கட்டுப்பாடுகளை மறைமுகக் கட்டுப்பாடுகள் என்றும் வகைப்படுத்துவது மரபு.

பொருளாதாரத் திட்டமிடுவதால் பொருளாதாரச் சுதந்திரம் கேடுறும் என்பர் சிலர். பொருளாதாரத் திட்டமிடுதலை மென்மையாகவும் முறையாகவும் நல்ல பலன் தரும் வகையில் பயன்படுத்தினால் மக்களின் தராதரமான சுதந்திரம் கேடுறாது என்பர் பலர்.

**திட்ட மதிப்பீடு**: ஒரு திட்டத்தின் பல நிலைகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து மதிப்பிடுவதைத் திட்ட மதிப்பீடு என்பர். அத்திட்டத்தின் பல கூறுகள், வெற்றி வாய்ப்புகள், தவறுகள் ஆகியவற்றை மதிப்பிடும்போது தவறுகளைத் திருத்தி அமைத்துக் கொள்ளவும் விரைவான முன்னேற்றம் பெறவும் வாய்ப்புகள் தோன்றுகின்றன. திட்ட மதிப்பீட்டைப் பொதுவாக நான்கு நிலைகளாகக் காண்பர். முதலாவதாக, திட்டம் தொடங்கப் பெறுவதற்கு முன்பு இருக்கும் சூழ்நிலைகளைப் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்; இரண்டாவதாக, திட்டங்களின் விளைவால் ஏற்படத் தக்க பலன்களைப் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், மூன்றாவதாக திட்டத்தைச் சிறப்பான முறையில்,நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைக் கண்டு ஒரு முறையைத் தேர்ந்தெடுத்தல்; இறுதியாக, திட்டம் நிறைவேறிக் கொண்டிருக்கும்போதும் நிறைவேறியபோதும் பலன்களை மதிப்பிடுதல்.

பொருளாதாரத் திட்டமிடுதலில் வெற்றி பலகண்டு, நாடுகள் பலவற்றிற்கும் முன்னோடியாகத் திகழ்வது சோவியத்து உருசியாவாகும்.

இந்தியாவில் 1951 முதல் 1956 வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டமும், 1956 முதல் 1961 வரையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டமும், 1961 முதல் 1966 வரையில் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டமும், 1966 முதல் 1969 முடிய மூன்று ஆண்டுகளுக்கும் தனித் தனியேயான ஓராண்டுத் திட்டங்களும், 1969 முதல் 1974 முடிய நான்காம் ஐந்தாண்டுத் திட்டமும்,1974 முதல் 1978 முடிய நான்காண்டுக் காலங்களில் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டமும் நிறைவேற்றப்பட்டன. பின்னர் 1978 முதல் 1983 முடிய உள்ள ஆண்டுகளுக்கெனச் சனதா அரசால் அமைக்கப்பட்ட ஆறாம் ஐந்தாண்டுத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் 1980 முதல் 1985 முடிய உள்ள ஆண்டுகளுக்கு மாற்றியமைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து 1985 முதல் 1990 ஆம் ஆண்டுவரையிலான ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது (காண்க: ஐந்தாண்டுத் திட்டங்கள்).
என்.எஸ்.பா.

**துணை நூல்கள்:**

**Chandrasekar.**, Readings in Public Economics and Planning, Chugh Publications, Allahabad,1985.

**Charles Bettelheim**, Studies in the Theory of Planning, Asia Publishing House, Bombay, 1957.

**Mamatha Patankar** , Economic Planning, Principles and Practice, Sultan Chand and Sons, New Delhi, 1981.

பொருளாதார நலன்: காண்க: நலப் பொருளியல்.

பொருளாதாரப் பின்னடைவு: பொருளாதார நடவடிக்கைகள் எப்போதும் ஒரே சீராக நடைபெறுவதில்லை. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அல்லது நாட்டில் பொருளாதார நடவடிக்கையில் ஏற்ற இறக்கங்கள் அவ்வப்போது தோன்றுகின்றன. சில காலங்களில் பொருளாதார நடவடிக்கைகள் சுறுசுறுப்பாகவும், மிகுந்த அளவிலும் நடைபெறுகின்றன. சில காலங்களில் பொருளாதார நடவடிக்கைகளில் தேக்க நிலை அல்லது மந்த நிலை காணப்படுகின்றது. இதனால் உற்பத்தி, விற்பனை ஆகியவை குறைகின்றன. இவ்வாறு மாறி மாறி வரும் பொருளாதார நடவடிக்கைகளின் ஏற்ற இறக்கங்கள் வாணிகச் சுழல்கள் எனச் சொல்லப்படுகின்றன.

இவ் வாணிகச் சுழல்கள் பெரும்பாலும் எல்லாப் பொருளாதாரங்களிலும் தோன்றுகின்றன. அதிக

மான கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் பொருளாதாரங்களில் இவற்றின் தீவிரத்தன்மை குறைவாக இருக்கும். கட்டுப்பாடு குறைந்த, முற்றிலும் முதலாளித்துவப் பொருளாதாரங்களில் இந்தச் சுழல்கள் மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றன.

வாணிகச் சுழல்கள் எனப்படும் இந்தப் பொருளாதார ஏற்ற இறக்கங்களில் பல நிலைகள் உள்ளன. இந்த நிலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன: 1) விரிவாக்கம், 2) உச்சநிலை அல்லது வீக்கம், 3) பின்னடைவு, 4) மந்தம்.

**பின்னடைவு**: பின்னடைவு என்ற நிலை பொருளாதாரம் செழிப்பு நிலையை அடைந்த பின்னர்த் தோன்றுகின்றது. பின்னடைவு (Recession) நிலையில் பொருளாதார நடவடிக்கைகளின் போக்கு, வேகம் குறைந்து காணப்படுவதால் பலவகையான பொருளாதார விளைவுகள் ஏற்படுகின்றன. அவற்றால் முதன்மையாக உற்பத்தி குறைகின்றது.பொதுவான தேவை அளவில் வீழ்ச்சி ஏற்படுவதால் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகின்றது. பலர் வேலையை இடைக்கால அளவில் இழக்கலாம். பல உற்பத்திக் காரணிகளை முழு அளவில் பயன்படுத்த வாய்ப்பு இருக்காது. அதனைத் தொடர்ந்து முதலீட்டு அளவும் குறைகின்றது. முதலீடு குறைவதால் வங்கிக் கடன்களுக்கான தேவை, வங்கிகள் அளிக்கும் கடன் அளவு ஆகியவை குறைகின்றன. மேற்கூறியவற்றின் மொத்த விளைவாக வருவாய் குறைகின்றது; வாணிக அளவு சுருங்குகின்றது. மொத்தத்தில் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதம் குறையத் தொடங்கிவிடுகிறது.

**பின்னடைவின் காரணங்கள்**: பின்னடைவு நிலைக்கான காரணங்கள்: பொருளாதாரம் விரிவடைந்து செழிப்பு நிலையை அடையும்போது விலை, கூலி ஆகியவை உயர்கின்றன. பொருளாதாரம் செழிப்பின் உச்சநிலையை அடையும்போது பலவகையான, நீடித்து உழைக்கும் அல்லது அழியாப் பொருள்களுக்கான தேவை அளவில் தேக்கம் ஏற்படுகின்றது. வீடுகள், பேருந்து வாகனங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியவை போன்ற பலவகையான வசதிப் பொருட்களின் தேவை அளவு தொடர்ந்து கூடுவதில்லை. அவற்றின் தேவையில் ஏற்படும் தேக்கத்தின் தொடர் விளைவாக அவற்றில் பயன் படுத்தப்படும் பொருட்களான இரும்பு, சிமெண்டு, உழைப்பு ஆகியவற்றிற்கான தேவை குறைகின்றது.

பல தொழில்களில் பொருட்களை உயர்ந்த விலைகளில் விற்க முடியாத நிலை ஏற்படுகின்றது. தேவையின் அளவு, அளிப்பின் அளவைவிடக் குறைந்துவிடுகின்றது. ஆனால், இந்த வேறுபாடு மிகக் குறைவாக இருப்பதால் தொடக்கக் காலத்தில் உற்பத்தியாளர்கள் இதனைச் சரியாகக் கவனிப்பதில்லை. ஆனால், தொடர்ந்து தேவையில் தேக்கநிலை தோன்றும்போது, உற்பத்தியாளர்கள் புதிய முதலீட்டினைக் குறைக்கின்றனர்.புதிய முதலீட்டுப் பொருட்களுக்கும் கச்சாப் பொருட்களுக்குமான தேவை குறைகின்றது. உழைப்புக்கான தேவை பாதிக்கப்படுகின்றது. பல தொழிலாளர்கள் வேலை இழக்கின்றனர். அதனைத் தொடர்ந்து சமுதாயத்தின் வருவாய் குறைகின்றது. நுகர்பொருட்களின் தேவையும் குறைகின்றது. அத்தகைய தொடர் விளைவுகளால் பொருளாதாரம் பின்னடைவு நிலையை அடைகின்றது.

இத்தகைய பின்னடைவு ஏதாவது ஒரு பெருந்தொழிலில் தோன்றிப் பின்னர்ப் பொருளாதாரம் முழுமைக்கும் பரவக்கூடும். சில வேளைகளில் ஒரு நாட்டில் ஏற்படும் பின்னடைவு மிகவும் தீவிரம் அடைந்து பொருளாதார மந்த நிலைக்கு இட்டுச் செல்லலாம். அம்மந்த நிலை பிற நாடுகளுக்கும் பரவக்கூடும். எடுத்துக்காட்டாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1930 – ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் மந்தம் உலகின் பல நாடுகளைப் பாதித்ததைச் சொல்லலாம்.

**கட்டுப்படுத்தும் வழி முறைகள்**: பொதுவாக வாணிகச் சுழல்களைக் கட்டுப்படுத்துவதைப் பொருளாதாரத்தை நிலைப்படுத்துதல் எனக் கூறுவதுண்டு. பொருளாதார ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்த இரண்டு வழிகளை அரசு பின்பற்றுகிறது. முதலாவது, ஓர் அரசு வரவு செலவுகளைச் செய்யும் முறைகளில், வரவு செலவு ஆகியவற்றின் அளவுகளை மாற்றுவதன் மூலம் ஏற்ற இறக்கங்களைச் சரி செய்வதாகும். இது நிதிக் கொள்கை (Fiscal Policy) என்று சொல்லப்படுகின்றது. இரண்டாவது, நாட்டிலுள்ள பண அளவினையும், கடன்களையும் கட்டுப்படுத்துவதாகும். இது பணக் கொள்கை (Monetary Policy) எனப்படுகின்றது.

இவ்வாறு வாணிகச் சுழலின் வெவ்வேறு நிலைகளைக் கட்டுப்படுத்த மாறுபட்ட நிதி, பணக் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன.

பொதுநிதிக் கொள்கை வழிமுறைகளாக, வரிகளைக் குறைப்பதன் மூலம் மக்களிடையே செலவிடத்தக்க வருவாயைக் கூட்டலாம். இது தேவையைக் கூட்ட உதவும். உற்பத்தி வரியையும், நிறுவனங்களின் மீதான வரியையும் குறைப்பதன் மூலம் முதலீட்டைத் தூண்டலாம். மேலும் புதிய முதலீடுகளுக்கு வரிச் சலுகைகள் அளிக்கலாம்.

அரசு, செலவுகளைக் கூட்டுவதன் மூலமும் தேவையைக் கூட்டலாம். நிருமாணப் பணிகளின்

மூலம் அரசு செலவைக் கூட்டினால் பல பொருள்களின் தேவை கூடி உற்பத்தி பெருகும். சுருங்கக் கூறின், மக்களிடமுள்ள செலவிடத்தக்க வருவாயைக் கூட்டும் முறையிலும், முதலீட்டிற்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் அரசு வரவு செலவுகளை அமைக்க வேண்டும்.

தவிர, மக்களிடையே புழங்கும் பண அளவைக் கூட்டும் வகையில் பணக் கொள்கையை அமைக்க வேண்டும். வங்கிகளின் வட்டி வீதத்தைக் குறைப்பது, பண அங்காடியில் புழக்கத்திலுள்ள அரசுப் பத்திரங்களைத் திரும்ப வாங்குவது, வங்கிகள் மைய இருப்பு வங்கியிடம் வைத்திருக்க வேண்டிய இருப்பு வீதத்தைக் குறைப்பது ஆகிய வழிகளின் மூலம் பணப் புழக்கத்தையும் கடன் அளவையும் தூண்டலாம். மிகுதியான பணப்புழக்கம் தேவையையும், எளிதான கடன்களையும், முதலீட்டையும் தூண்டும். தேவை கூடி முதலீடு கூடும் போது பொருளாதாரம் பின்னடைவு நிலையைவிட்டு மீட்சி அடையும்.

பொது நிதிக் கொள்கை, பணக் கொள்கை ஆகிய இரண்டையும் சரியான அளவில் இணைத்துச் செயற்படுத்துவதுதான் பின்னடைவைச் சரி செய்யச் சிறந்த முறையாகும். பா.அ.

**துணை நூல்கள்:**

**Alfred, W. Stonier & Douglas, C. Hague**, A Text Book of Economic Theory, Layman Group Ltd., London, 1982.

**David, W. Pearce**, The Dictionary of Modern Economics, The Macmillan Press Ltd., London, 1983.

**பொருளாதாரப் புவியியல்**: ஓர் இடத்தின் இயற்கையமைப்பு, அவ்விடத்தின் சமூகச் சூழ்நிலையையொட்டி அங்குக் கிடைக்கப் பெறும் பொருளாதார வளங்கள், அவற்றின் பயன்பாடுகள் ஆகியவற்றைப்பற்றி ஆராய்வது பொருளாதாரப் புவியியல் (Economic Geography) ஆகும். மேலும், இது ஒரு பகுதியின் பொருளாதாரத்தைப் பற்றியும், அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற உற்பத்தி, தொழில் ஆகியவற்றோடு தொடர்புடைய பல்வேறு காரணிகளைப் பற்றியும் ஆராய்கிறது.

ஒரேவகையான இயற்கைச் சூழலைக் கொண்ட பல்வேறு நாடுகள் இருக்கின்றன. ஆனால், அவையனைத்தும் ஒரே தன்மையான முன்னேற்றத்தை அடைவதில்லை. காரணம் நாட்டு மக்கள் வேறுபடுகின்றனர். கலை, இலக்கியம், பண்பாடு, தொழில் நுணுக்கம், சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவை அவர்களின் வாழ்க்கை முறையையும், பொருளாதார உற்பத்தி அமைப்பினையும் வேறுபடுத்துகின்றன. ஆதலால் வேறுபாடுகளற்ற இயற்கையமைப்பைக் கொண்ட நாடுகளுக்கிடையேயும் வளர்ச்சி வேறுபடுகிறது. எனவே, 'மக்களும்' பொருளாதாரப் புவியியலின் முக்கியகாரணியாக இருக்கின்றனர்.

**புவியியல் பொருளாதாரமும் பிற இயல்களும்:** அரசியல், பொருளாதாரம், சமூகவியல், வணிகவியல், போன்ற பல இயல்கள் (Subjects) புவியியல் பொருளாதாரத்தின் பல பகுதிகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளன. மேலும், புவியியல் பொருளாதாரம் பிற துறைகளுக்கு வேண்டிய கருத்துகளைத் தருகிறது. இவ்வாறு பொருளாதாரப் புவியியல் பிற துறைகளோடு இணைந்து செயற்படுகிறது.

எடுத்துக்காட்டாகப் பொருளாதாரத்திற்கும் புவியியல் பொருளாதாரத்திற்குமுள்ள தொடர்பினைப் பார்க்கும் பொழுது இவற்றிற்கிடையே மிகுதியான ஒற்றுமைகள் உள்ளன. பொருளாதாரம், பொதுவாக ஒரு நாட்டின் உற்பத்தி, நுகர்வு, பகிர்வு, மாற்றம் (Exchange) ஆகியவை பற்றிக் கூறுகிறது. புவியியல் பொருளாதாரம் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களைப் பற்றியும், உற்பத்தி செய்யப்படுகின்ற இடங்களைப் பற்றியும், அவற்றின் சூழ்நிலைகளைப் பற்றியும், வரன்முறைகளைப் பற்றியும் விளக்குகிறது. பொருளாதாரப் புவியியல் முழுவதும் புவியியல் பற்றியதும் அன்று; பொருளாதாரம் பற்றியதுமன்று. மாறாகப் பொருளாதாரமும், புவியியலும் இணைந்த ஓர் இயலாகப் பொருளாதாரப் புவியியல் அமைந்துள்ளது.

**தோற்றம்**: வாணிகத்தில் பற்றுக்கொண்டுள்ள அறிஞர்கள் பொருளாதாரப் புவியியல் என்னும் இயலைத் தோற்றுவிக்க வித்திட்டார்கள். இக்காலப் பொருளாதாரப் புவியியலின் தந்தைஎன்றுசொல்லப் படும் சிசோலம் (Chisholm) என்னும் அறிஞர் 'வணிகவியல் தொடர்பாகவே புவியியலை ஆராயவேண்டும்' எனக் கூறுகிறார். அவர் கருத்துப்படி, 'வாணிகம் ஒரு நாட்டின் புவியியல் அமைப்பையே பெரிதும் சார்ந்துள்ளது;புவியியல் காரணிகளின் அடிப்படையை ஒட்டியே வாணிக வளர்ச்சியினை ஆராய்ந்து மனக் கணிப்புச் செய்யமுடியும்'

சோன்சு, தார்க்கன் வால்ட்டு ஆகிய அறிஞர்கள் பொருளாதாரப் புவியியல், உற்பத்தி மற்றும் தொழில்களைப் பற்றி ஆராய்கிறது என்று கூறுகின்றனர். ஒரு சில பொருள்களின் உற்பத்தி ஏன் ஒரு சில நாடுகளில் மட்டும் மிகுதியாக இருக்கிறது என்பது பற்றியும், அப் பொருள்களின் உற்பத்தி பிற பகுதிகளில்

ஏன் குறைவாக இருக்கின்றது என்பது பற்றியும் ஆராய்கின்ற இயல் பொருளாதாரப் புவியியல் ஆகும்.

பொருளாதாரப் புவியியல் கீழ்க்காணும் முக்கிய பணிகளைத் தன்னகத்தே கொண்டு செயற்பட்டுவருகிறது. 1) ஒரு நாட்டின் இயற்கையமைப்புச் சூழ்நிலையையும், கிடைக்கின்ற இயற்கை வளங்களையும் கண்டுபிடித்து ஆராய்தல்; 2) கடந்த காலங்களில் உள்ள பொருளாதார, புவியியல் காரணிகளை இக்கால அமைப்போடு ஒப்பிட்டு ஆராய்தல்; 3) ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளை எல்லாம் ஒன்றுபடுத்தி மொத்தமாக நாட்டின் உற்பத்தியோடு ஒப்புமைப்படுத்தி ஆராய்தல்; 4) பல்வேறு நாடுகளுக்கிடையே நிலவியுள்ள முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளுக்கான காரணங்களை ஆராய்ந்து, அனைத்து நாடுகளும் ஒன்றுபோல வளர்ச்சியினைப் பெற வழிவகுத்தல்; 5) பன்னாட்டு வாணிகக் கூட்டுறவுக்கு வழிவகுத்தலும், ஒவ்வொரு நாடும் உற்பத்தியிலும் வாணிகத்திலும் மேன்மை பெற வழிவகுத்தலும்.

பொருளாதாரப் புவியியல் உலகம் முழுமைக்கும் பன்னாட்டு வாணிகமும் கூட்டுறவும் ஏற்படத் தருக்க அடிப்படையிலான காரண காரியங்களை எடுத்துரைக்கிறது. மேலும் இவ்வியல், ஒவ்வொரு நாடும் பிற நாடுகளைவிடப் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கான காரணங்களைப் புவியியல், பொருளியல் காரணங்களின் அடிப்படையில் ஆராய்ந்து, முன்னேற்றம் பெற வழிவகுக்கிறது.

**அணுகுமுறைகள்**: ஒரு நாட்டின் பொருளாதாரப் புவியியல் பற்றி ஆராய்ந்தறிய வேண்டுமாயின் கீழ்க்காணும் மூன்றுவகையான அணுகுமுறைகளைப் பயன்படுத்தலாம்.

1) **மண்டல அணுகுமுறை**: ஒரு நாடு அல்லது கண்டம் பற்றிய புவியியல் பொருளாதாரக் கூறுபாடுகளை அறிய வேண்டுமென்றால் முதலில் அந்நாட்டைப் புவியியல் அல்லது அரசியல் அடிப்படையில் சில மண்டலங்களாகப் பகுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, இந்திய நாட்டைப் பற்றிப் பயில வேண்டுமாயின் பல்வேறு மாநிலங்கள் பற்றித் தனித்தனியாக முதலில் ஆராயலாம்; அல்லது இயற்கையமைப்பினையொட்டிச் சமவெளிப் பகுதி, மலைப் பகுதி, பாலைவனப் பகுதி என்று பகுத்துக்கொண்டும் ஆராயலாம். இம் மண்டலமுறையில் பல்வேறு மண்டலங்களிடையே உள்ள வேறுபாடுகளையும், ஒருமைப்பாடுகளையும் ஒப்பிட்டு அறியமுடியும்.

2) **விளை பொருள்கள் அணுகுமுறை**: உற்பத்தி செய்யப்படுகின்ற விளை பொருட்களின் அடிப்படையில் ஒரு நாட்டைப் பல பிரிவுகளாகப் பகுத்துக் கொண்டு பொருளாதாரப் புவியியல் பற்றிப் பயில்வது விளை பொருட்கள் அணுகுமுறை எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நெல் விளையும் பகுதி, கோதுமை விளையும் பகுதி, பருத்தி விளையும் பகுதி, சணல் பயிரிடப்படும் பகுதி எனப் பயிர்களின் அடிப்படையில் பகுத்து அவற்றின் பொருளியல், புவியியல் கூறுபாடுகளை ஆராய்ந்தறிய முடியும். அது போல் நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகின்ற பகுதி என்று தொழில் வாரியாகப் பிரித்தும் அவ்விடங்களைப் பற்றிய, மனித வளங்களைப் பற்றிய இயல்புகளை ஆராயலாம்.

3) **கொள்கை அணுகுமுறை**: இது மூன்றாம் அணுகுமுறையாகும். இம் முறை (Principles Approach) ஏதேனும் ஒரு கொள்கையை அல்லது கோட்பாட்டினை அமைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் பொருளாதாரப் புவியியல் காரணிகளின் இயல்புகளையும், அவை செயற்படுகின்ற வகையினையும் பற்றி ஆராய்கிறது. எடுத்துக்காட்டாகக் காடுகளை அழித்தால் அது சுற்றுப்புறச் சூழ்நிலைக்குக் கேடு விளைவிக்கிறது; நாட்டின் மழை அளவு குறைகிறது என்ற கொள்கையை அடிப்படையாகக் கொள்ளலாம். பிறகு, இப்போது காட்டு வளங்கள் எந்த அளவிற்கு அழிக்கப்படுகின்றன என்பது பற்றியும், அதனால் ஏற்படுகின்ற கேடுகள் பற்றியும், பெய்கின்ற மழையின் அளவினைப் பற்றியும் ஆராய்ந்து, அக்கொள்கையினை உறுதிப்படுத்துவதோ தவறெனச் சுட்டிக் காட்டுவதோ கொள்கை அணுகுமுறை எனப்படும்.

இக்காலத்தில் மேற்கூறப்பட்ட மூன்று முறைகளைத் தவிர 'நாட்டு அணுகுமுறை' (National Approach) என்றும், 'பன்னாட்டு அணுகுமுறை' (International Approach) என்றும் இரு முறைகள் பின்பற்றப்படுகின்றன; நாட்டு அணுகுமுறையில் ஒரு நாட்டின் இயற்கை வளம் பற்றியும், அதன் பற்றாக்குறை பற்றியும் ஆராயப்பட்டுப் பொருளாதாரத் திட்டமிடலுக்கு அடிப்படை அமைக்கப்பெறுகிறது.

அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் சில நாடுகள் பிற நாடுகளைச் சார்ந்திருக்கலாம். அவற்றிற்கிடையே அரசியல் பொருளாதாரக் கூட்டமைப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. அத்தகைய கூட்டமைப்புகளின் பொருளாதாரப் புவியியல் இயல்புகளைப் பற்றி ஆராய்வது, பன்னாட்டு அணுகுமுறை எனப்படும்.

பொதுவாகப் பொருளாதாரப் புவியியல் என்பது, ஒரு நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுவதைப் பற்றியும், அவ்வுற்பத்திக்குக்

கேடாக அல்லது துணையாக இயங்கக்கூடிய சூழ் நிலைகள் பற்றியும் ஆராய்கின்ற இயல் ஆகும். அதனடிப்படையில் ஒரு நாட்டின் பொருளாதாரத் திட்டம் அமையப்பெற்றால் அந்நாடு எளிதாக வளர்ச்சியினை அடையும்.

**இந்தியாவின் சில அடிப்படைப் புவியியல் அலகு கள்**: இந்தியா பரப்பளவின் அடிப்படையில் உலகத் தின் ஏழாம் பெரிய நாடாகும். இதன் பரப்பளவு 32,87,782 ச.கி.மீ. மற்ற பெரிய நாடுகள் முறையே சோவியத்து உருசியா, கனடா, சீனா, அமெரிக்கா, பிரேசில், ஆசுத்திரேலியா ஆகும். இந்தியாவின் மக்கள் தொகை 1981 – ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 68.38 கோடி. மக்கள்தொகையின் அடிப்படையில் இந்தியா உலகில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. சீனா முதலிடம் வகிக்கிறது.

இந்தியா, ஆசியாக் கண்டத்தின் தென்கிழக்கில் அமைந்திருக்கிறது. இந்தியாவின் வடக்கில் இமய மலையும், தெற்கே இந்துமகா சமுத்திரமும் உள்ளன. இதன் கிழக்கே வங்காள விரிகுடாக் கடலும், மேற்கே அரபிக் கடலும் உள்ளன. இவ்வாறு முப்புறமும் கடலால் சூழப்பெற்றதால் இந்தியா ஒரு முந்நீரகம் எனப்படுகிறது.

இந்தியா 8.4° வடக்கு அட்சரேகையிலிருந்து 37.6° வடக்கு அட்சரேகை வரையிலும், 68.7° கிழக்குத் தீர்க்கரேகையிலிருந்து 97.25° கிழக்குத் தீர்க்கரேகை வரையிலும் பரந்திருக்கிறது.

இந்தியாவின் தென்கோடியில் மன்னார் வளை குடாவும் பாக்சு சலசந்தியும் அடுத்து இலங்கை என்ற தனி நாடும் அமைந்துள்ளன. இந்திய அரசின் ஆட்சிக்குட்பட்ட அந்தமான் நிக்கோபார்த்தீவுகளும், இலட்சத் தீவுகளும் அரபிக் கடலில் அமைந் துள்ளன.

நிருவாக வசதியினை முன்னிட்டு மொழிவாரி யாக இந்தியா இருபத்தைந்து மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ம.க.

**பொருளாதாரப் புள்ளிவிவரங்கள்**: ஒரு நாட்டின் உற்பத்தி, மக்கள்தொகை, விலை, கூலி, வேளாண்மை, தொழில், ஏற்றுமதி, இறக்குமதி, வேலைவாய்ப்பு ஆகியவை போன்ற பொருளாதாரம் தொடர்பான புள்ளி விவரங்கள் பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் (Economic Statistics) ஆகும். இந்தி யாவில் மிகவும் பழங்காலத்திலிருந்தே புள்ளிவிவரங் களைச் சேகரிக்கும் பணி நடந்து வருகிறது. கௌடில் யர் எழுதிய 'அர்த்த சாத்திரம்' என்ற நூலில் அக் கால மக்கள்தொகை, கூலி, விலைகள் தொடர்பான விவரங்கள் கிடைக்கின்றன. தொடக்கக்காலத்தில் போருக்குத் தேவையான வீரர்களைப் பெறுவதற்காக மக்கள் தொகை பற்றிய புள்ளி விவரங்களைப் பயன் படுத்தினர். சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில்தான் முறைப்படி புள்ளிவிவரங் களைச் சேகரிக்கும் பணி தொடங்கியது. முதலில் கி.பி. 1868–இல் வெளியான 'ஆங்கிலேய இந்தியா வின் புள்ளிவிவரச் சுருக்கம்' (Statistical Abstract of British India) சில அடிப்படைப் புள்ளிவிவரங்களைத் தொகுத்துத் தந்தது. புள்ளி விவரச் சேகரிப்பு அலுவ லகம் (Statistical Bureau) கி.பி. 1885-இல் நிறுவப் பெற்றது.

முதல் உலகப்போர்க் காலத்தில் இந்தியாவில் தொழில் வளர்ச்சி இல்லாமையையும், அதனால் தேவையான புள்ளி விவரங்கள் கிடைக்காமையையும் உணர்ந்தனர். ஆதலால் கி.பி. 1924-இல் சர் எம். விசுவேசுவரையா தலைமையில் அப்போதுள்ள புள்ளி விவரங்களின் இயல்பை ஆராய்ந்து அவற்றில் முன் னேற்றம் ஏற்படுத்துவது குறித்து ஆலோசனைகள் கூற 'இந்தியப் பொருளாதார விசாரணைக் குழு' (The Indian Economic Enquiry Committee) ஒன்றை அரசு அமைத்தது. அக்குழு தனது அறிக்கையில் மத்திய, மாநிலத் துறைகள் சேகரிக்கின்ற புள்ளி விவரங்களை மைய நிறுவனத்தின் மேற்பார்வைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், ஒவ்வொரு மாநில மும் தனிப் புள்ளிவிவரத் தகவல் நிலையம் அமைக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

இரண்டாம் உலகப்போர் 1939-இல் தோன்றிய பொழுது அரசுக்கு இராணுவ நடவடிக்கைகளோடு இராணுவத்தினருக்கும், பொது மக்களுக்கும் தேவை யான பொருட்களைப் பகிர்ந்தளிக்க வேண்டிய தேவை யும் ஏற்பட்டது. அப்போது கிடைக்கப்பெற்ற புள்ளி விவரங்கள் போதுமான அளவில் இல்லையென்பதை அரசு உணர்ந்தது. ஆதலால், அரசின் துறைகள் தங் கள் பணிகளில் ஒன்றாகப் புள்ளிவிவரங்கள் சேகரிப் பதைவிட அதற்கெனத் தனித்துறை இருப்பது தேவை என்று அரசு கருதிற்று.

தொழில் உற்பத்தித் தொடர்பான சரியான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கத் துணைசெய்யும் பொருட்டு 1942 – இல் 'தொழில் புள்ளி விவரச் சட் டம்' (Industrial Statistics Act) நிறைவேற்றப்பட் டது.

நாடு விடுதலை பெற்றபிறகு, அரசு புள்ளி விவரங்களின் தேவையை மிகவும் உணர்ந்தது. நாட் டின் பொருளாதாரக் கொள்கையை அறிவியல் முறை யில் தக்க அடிப்படையின்மீது உருவாக்கவும் நல்ல

நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் புள்ளி விவரங்கள் மிகவும் தேவைப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டங்களைத் திட்டிச் செயற்படுத்தப் புள்ளி விவரங்களின் தேவை மிகுதியாயிற்று.

பொருளாதார ஆலோசகர் அலுவலகம் 1947-இல் மொத்த விலைக் குறியீட்டெண்களைக் கணித்து வெளியிட்டது. அரசு 1949 - இல் 'நாட்டு வருவாய்க் குழு' (National Income Committee) ஒன்றை நிறுவியது. அக்குழு பல ஆண்டுகளுக்கு நாட்டு வருவாயை மதிப்பீடு செய்தது. அரசு முதன்முறையாக 1950-இல் 'தேசிய மாதிரிக் கணக்கெடுப்பைத்' (National Sample Survey) தொடங்கியது. அது இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

பேராசிரியர் பி.சி.மகலநோபிசு (P.C.Mahalanobis) என்பவர், 1949-இல் அமைச்சகத்தின் மதிப்புறு புள்ளிவிவர ஆலோசகராக நியமனம் செய்யப்பெற்றார். அதன்பின் மத்திய அமைச்சகத்தில் ஒரு புள்ளி விவரப் பிரிவினைத் (Statistical Unit) தொடங்கினர். அதுதான் 1951 - இல் 'மத்திய புள்ளிவிவர நிறுவனமாக' (Central Statistical Organisation) வளர்ந்தது. பின் 1961 - இல் தனியாகப் 'புள்ளியியல் துறை' (Statistical Department) ஒன்றை அமைத்தனர். அதன்பின் மத்திய புள்ளிவிவர நிறுவனம், புள்ளியியல் துறையின் ஓர் உறுப்பாகச் செயற்பட்டு வருகிறது.

மத்திய புள்ளிவிவர நிறுவனம் சில வார, திங்கள் ஆண்டு இதழ்களை வெளியிட்டு எல்லோருக்கும் முக்கிய புள்ளிவிவரங்கள் கிடைக்க ஆவன செய்கிறது. அவை: 1) வாரப் புள்ளிவிவர இதழ் (Weekly Bulletin of Statistics), 2) மாதப் புள்ளிவிவரச் சுருக்கம்-மாதஇதழ்(Monthly Abstract of Statistics), 3) இந்தியாவின் தெரிந்தெடுக்கப்பெற்ற தொழில்களின் உற்பத்தி பற்றிய மாதப் புள்ளி விவரங்கள் (Monthly Statistics of Production of Selected Industries of India), 4) இந்தியப் புள்ளிவிவரச் சுருக்கம்-ஆண்டு இதழ் (Statistical Abstract of India), 5) தொழில்களில் ஆண்டுக் கணக்கெடுப்பு விவரங்கள் - ஆண்டுஇதழ் (Annual Survey of Industries), 6) நாட்டு வருவாய் மதிப்பீடுகள் - ஆண்டு இதழ் (Estimates of National Income) என்பனவாகும்.

மேலும் கல்கத்தாவிலுள்ள இந்தியப் புள்ளி விவர நிறுவனமும் (Indian Statistical Institute), இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் (The Indian Council of Agricultural Research) இந்தியப் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதில் சிறப்பான பணிகளை ஆற்றுகின்றன.

பொருளாதாரப் புள்ளிவிவரங்களில் மக்கள் தொகைப் புள்ளிவிவரங்கள், வேளாண்மைப் புள்ளி விவரங்கள், தொழிற்றுறைப் புள்ளிவிவரங்கள், நாட்டுவருவாய்ப் புள்ளிவிவரங்கள் ஆகியவை இன்றியமையாதனவாகும்.

1) **மக்கள்தொகைப் புள்ளிவிவரங்கள்**: இக்காலத்தில் மக்கள்தொகைப் புள்ளிவிவரங்கள் (Population Statistics) மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஒரு நாட்டின் நிருவாகத்தைத் திறமுடன் நடத்தவும், தக்க பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கவும் இப்புள்ளிவிவரங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. ஆதலால், மக்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் மக்கள் பற்றிய பல்வேறு வகையான விவரங்களையும் சேகரிக்கின்றனர்.

இந்தியாவில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகை முழுக் கணக்கெடுப்பு (Population Census) நடைபெறுகிறது. முதலில் கி.பி.1872 - ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணிப்பு செய்யப்பெற்றது. பன்னிரண்டாம் மக்கள்தொகைக் கணிப்பு 1981-இல் நடைபெற்றது.

மக்கள்தொகை முழுக் கணிப்பினைத் தவிரப் பிறப்பு, இறப்பு பற்றிய புள்ளிவிவரங்களையும் சேகரிக்கின்றனர். பிறப்பு, இறப்புப் பதிவேடுகளின் மூலம் எந்த ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திலும் நிலவும் மக்கள் தொகையினைக் கணிக்கலாம்.

2) **வேளாண்மைப் புள்ளி விவரங்கள்**: நிலச் சாகுபடி, நில வருவாய், விளைச்சல், கால்நடை, நீர்ப் பாசனம், வேளாண்மைக் கூலி, விளைபொருட்களின் விலைகள், காடுகள், மீன்கள், கோழிகள் போன்ற எண்ணற்ற விவரங்களை வேளாண்மைப் புள்ளிவிவரங்கள் தருகின்றன. இப்பணி கி.பி.1884 - ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப் புள்ளிவிவரங்கள் ஆண்டுதோறும், 'ஆண்டு இந்திய வேளாண்மைப் புள்ளிவிவரங்கள்' (Annual Indian Agricultural Statistics) என்ற நூலில் வெளியிடப் பெறுகின்றன. உணவு, வேளாண்மைத் துறை அமைச்சகத்தின் கீழுள்ள பொருளாதாரப் புள்ளிவிவர இயக்குநரகம் இந்நூலை வெளியிடுகிறது. அவ்வியக்குநரகத்தின் வேளாண்மைப் புள்ளிவிவரங்கள் தொடர்பான பிற வெளியீடுகள் பின்வருவன: 1) இந்திய வேளாண்மை நிலை(Agricultural Situation in India), 2) நில அளவு மற்றும் இந்தியாவில் முக்கிய பயிர்கள் பற்றிய மதிப்பீடுகள் (Estimates of Area and Production of Principal Crops in India), 3) இந்திய நில வருவாய்ப் புள்ளி விவரங்கள்-ஆண்டு இதழ் (Indian Land Revenue Statistics),

4) உணவுப் புள்ளிவிவரங்களின் இதழ்(Bulletin of Food Statistics), 5) இந்தியாவிலுள்ள முதன்மைப் பயிர்களின் சராசரி விளைச்சல் (Average Yield of Principal Crops in India), 6) வேளாண்மைப் புள்ளி விவரங்களின் சுருக்கம் (Abstract of Agricultural Statistics). 7) இந்தியப் பயிர்களின் கால அட்ட வணை (Indian Crop Calender). 8) இந்திய வேளாண்மை வரைபடம் (Indian Agricultural Atlas).

இவைதவிர 'இந்தியப் புள்ளிவிவரத் தொகுப்பு' 'இந்திய இருப்பு வங்கியின் இதழ்' (Indian Reserve Bank Bulletin),'மாதாந்தர வாணிக நிலைக் கணிப்பு' ஆகிய இதழ்களிலும் வேளாண்மை பற்றிய புள்ளி விவரங்கள் கிடைக்கின்றன. மேலும் அண்மைக் கால மாகத் தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு விசாரணை மூலமும் வேளாண்மை பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிக்கின்றனர்.

மேலும், வேளாண்மைத் தொடர்பான, ஐந் தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கும் கால்நடைகள் பற்றிய புள்ளிவிவரங்களை 'இந்தியக் கால்நடை களின் கணக்கெடுப்பு' (Indian Livestock Census), 'இந்தியக் கால்நடைகளின் புள்ளிவிவரங்கள்-ஆண்டு இதழ்' (Indian Livestock Statistics) ஆகிய வெளியீடு களிலும் காணலாம்.

காடுகளைப் பற்றிய விவரங்களை உணவு, வேளாண்மை அமைச்சகத்திலுள்ள பொருளாதாரப் புள்ளிவிவர இயக்குநரகம் வெளியிடுகின்ற 'இந்தியக் காட்டு வளப் புள்ளிவிவரங்கள்' (Indian Forest Statistics) என்ற இதழ் மூலம் அறியலாம். காடுகள் இருக்கின்ற நிலத்தின் அளவு, மரம்-விறகுகளின் அளவு, காட்டுத்துறையினர் வழங்குகின்ற வேலை வாய்ப்பு, செலவு, வருவாய், காட்டுப் பொருள்களின் ஏற்றுமதி ஆகிய விவரங்களையும் அவற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

3) **தொழிற்றுறைப் புள்ளிவிவரங்கள்**: தொழில் நிறுவனங்களின் அளவு, எண்ணிக்கை, மூலதனம், மூலப்பொருள்கள், உற்பத்தி, இயக்கும் சக்தியினைப் பயன்படுத்துதல், அடக்கச்செலவு, தொழில், வேலை வாய்ப்பு, கூலி போன்ற புள்ளிவிவரங்கள் தொழில் புள்ளிவிவரங்கள் எனப்படும்.

தொழில் தொடர்பான புள்ளி விவரங்களை 1951 முதல் நடைபெற்றுவரும் தேசிய மாதிரிக் கணக் கெடுப்புச் சுற்றுகளில் சேகரிக்கத் தொடங்கினர். இந்தியாவின் தொழில்களைப் பற்றிய புள்ளிவிவரங் கள் கீழ்க்காணும் வெளியீடுகளில் கிடைக்கின்றன. 1) உற்பத்தி செய்கின்ற தொழில்கள் பற்றிய முழுக் கணக்கெடுப்பு (Census of Manufacturing Industries), 2) உற்பத்தி செய்கின்ற தொழில்கள் பற்றிய மாதிரி விசாரணை (Sample Survey of Manufacturing Industries), 3) தொழில்கள் பற்றிய ஆண்டு விசாரணை (Annual Survey of Industries), 4) இந்தியாவில் தெரிந்தெடுக்கப்பெற்ற தொழில்களின் உற்பத்தி பற்றிய மாதாந்தரப் புள்ளிவிவரங்கள் (Monthly Statistics of Production of Selected Industries in India), 5) புள்ளிவிவரங்களின் மாதாந்தரச் சுருக்கம் (Monthly Abstract of Statistics), 6) இந்தி யத் தொழிற்சங்கங்களின் ஆண்டுப் புள்ளிவிவரச் சுருக்கம் (Annual Abstract of Indian Union) என்பன அவ்வெளியீடுகளாகும்.

4) **நாட்டு வருவாய்ப் புள்ளிவிவரங்கள்**: ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பற்றி அறிந்துகொள்ள நாட்டு வருவாய்ப் புள்ளிவிவரங்கள் துணை செய்கின்றன. ஓராண்டுக் காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தியாகின்ற பணிகள், பொருள்களின் மொத்த மதிப்பு ஆகியவை நாட்டு வருவாய் (National Income) ஆகும். மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் காட்டும் அளவுகோலாக நாட்டு வரு வாய் விளங்குகிறது.

இந்தியா விடுதலை அடைந்த பிறகு நாட்டின் வரு வாய் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிக்க 'நாட்டு வருவாய்க் குழு' (National Income Committee) ஒன்றைப் பேராசிரியர் பி.சி. மகலநோபிசு தலைமையில் அரசு அமைத்தது. அக்குழு நாட்டு வருவாயையும், தலைவீத வருவாயையும் மதிப்பீடு செய்தது. மக் களின் தலைவீத வருவாயை வைத்து நாட்டின் ஏழ்மை நிலைமையைத் தெளிவாக்க முடிகிறது. மேலும் மக்களின் வருவாய்களில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும் நாட்டு வருவாய்ப் புள்ளிவிவரங்கள் தெளிவாக்குகின்றன. ம. க.

**துணை நூல்கள்:**

குருசாமி, மா.பா.,கம்சா முகைதீன், மு., கமல்ராஜ், ம., புள்ளியியல், குரு தேமொழி, திருச்செந்தூர், 1985.

Allen, R G.D., Statistics for Economists, Hutchinson's University Library, London, 1949.

Mithani, D.M., Introductory Economic Statistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1980.

*பொருளாதார மாதிரிகள்*: ஒரு சமுதாயத் தின் வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளுக் கிடையிலான சார்புடைய தொடர்பினைப் பற்றியது

பொருளாதார மாதிரியாகும் (Economic Models). சார்புடைய தொடர்பு என்பது, இரண்டு மாறிகளுக் கிடையிலான (Variables) தொடர்பாகும். அதாவது ஒரு மாறி, மற்றொரு மாறியைச் சார்ந்து நின்று அந்த 'மற்றொரு மாறி' யால் நிருணயிக்கப் படுமேயானால் அவற்றிற்கிடையிலான தொடர்பு 'சார்புடைய தொடர்பு' என அறிஞர்களால் கூறப் படும். எடுத்துக்காட்டாக வேலை வாய்ப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையிலான தொடர்பினைக் கூற லாம். இதில் 'வேலைவாய்ப்பு' என்னும் மாறியானது 'முதலீடு' என்னும் மாறியால் நிருணயிக்கப்படுவதால் இவற்றின் தொடர்பினைச் 'சார்புடைய தொடர்பு, எனலாம். இத்தகைய, சார்புத் தொடர்புடைய பொருளாதார மாதிரிகள், எண்கள் அல்லது கணிதக் கோட்பாடுகளினால் நன்கு வரையறுக்கப்பட்ட தாக இருக்கும். பொருளாதார மாதிரிகள், ஓர் அமைப்பானது எவ்வாறு செயற்பட வேண்டும் என் பதை விளக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட கருத்துருக்களாகும். பொருளாதார மாதிரியின் முன் நோக்கம் இரண்டு வகையானது. அவை, 1) ஓர் அமைப்பினைத் தெளிவாக வரையறை செய்ய வேண்டும்; 2) எதிர்காலம் பற்றிய உண்மைகளை முன்கணிப்புச் செய்யவேண்டும் என்பன.

மேற்கூறியவை தவிரச் சில வேளைகளில் சில நோக்கங்களை அடைவதைத் தீர்மானித்து, முடி வெடுக்கும் அமைப்புகளுக்கு வழிகாட்டியாகவும் மாதிரிகள் பயன்படுகின்றன.

**மாதிரிகளின் வகைப்பாடு**: தேக்கம், இயக்கம், திறந்த, மூடிய எனப் பலவகைகளில் பொருளாதார மாதிரிகள் வகைப்படுத்தப்படுகின்றன. இருப்பினும், நோக்கங்களின் அடிப்படையில் வகைப்படுத்தலே சிறந்ததாகும். அதனடிப்படையில் பொருளாதார மாதிரிகள் நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை, 1) மாறிகளுக்கிடையிலான அடிப்படைத் தொடர்பினை விளக்குபவை, 2) மாறிகளை முன் கணிப்புச் செய்பவை, 3) மாற்றுக் கொள்கைகளைத் தீர்மானிப்பதற்காகத் தேர்வு செய்பவை, 4) எதிர் காலத்தினைத் திட்டமிடுபவை என்பனவாகும். இந் நான்கு வகைப்பாடுகளில் இறுதி மூன்றிற்கிடையில் மிகுதியான வேறுபாடில்லை. சுருங்கக்கூறினால் அவற்றின் அளவைகளில்தான் வேறுபாடேயொழிய அவற்றின் நோக்கங்களில் அன்று.

'ஐரோப்பாவிற்கான பொருளாதாரக் குழு' பொருளாதார மாதிரிகளை மற்றொரு கோணத் தில் இரு வகைகளாகப் பிரிக்கிறது. அவை, 1) உத்தமக் கொள்கை மாதிரிகள், 2) வளர்ச்சி மாதிரி கள் என்பனவாகும்.

அவற்றில் உத்தமக் கொள்கை மாதிரிகள் என் பவை இடைக்கால, நீண்ட காலத் தொலைநோக் குடன், துல்லியமாகக் கணிதவியலின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட விருப்பத் தொடர்பினைக் கொண்டவையாகும். விருப்பத் தொடர்பு என்பது விரும்பித் தேர்வு செய்வதில் தொடர்புடையதாகும். எடுத்துக்காட்டாக, இரண்டு பொருட்கள் ஒரே இயல்பினதாயிருந்து, இரண்டில் ஏதாவதொன்றை ஒருவர் விருப்பத்திற்கிணங்கத் தேர்வு செய்தால் அவர் விருப்பத்திற்கும், அந்தப் பொருளின் தேர் விற்கும் தொடர்பு இருக்கும். இதுவே விருப்பத் தொடர்பு எனப்படுகிறது.

மாறாக வளர்ச்சி மாதிரிகள் எனப்படுபவை இக் காலப் பொருளாதார நிலையையும், வருங்காலப் பொருளாதார வளர்ச்சிப் பாதையையும் காட்டு பவையாக இருக்கும்.

மேற்கூறியவை தவிர மாதிரிகளைப் பகுதி யானவை, முழுமையானவை அல்லது பல்வேறு தொகுதிகளுக்கிடையிலானவை எனவும் பிரிக்கலாம். இவற்றில் எவற்றைப் பின்பற்ற வேண்டும் என்பதைக் கீழ்க்காணும் காரணிகள் முடிவுசெய்கின்றன. அவை, 1) தேவைகள், 2) பொருளாதார அமைப்பு முறை, 3) கிடைக்கப்பெறும் புள்ளி விவரங்கள், 4) கணக் கீடு செய்வதற்கான வாய்ப்புகள், 5) திட்டத்தின் தேவை, 6) நிருணயிக்கப்பட்ட அரசியல், சமுதாய, பொருளாதாரக் கட்டமைப்பு என்பனவாகும்.

**இயல்புகள்**: பொருளாதார மாதிரிகளைப் பயன் படுத்தும்போது அவற்றில் கீழ்க்காணும் இயல்புகள் இருக்கின்றனவா வென்பதை நோக்குதல் தேவை. 1) பயன்படுத்தப்படும் கருத்துகள் அ) தெளிவாகவும் பொருள் உள்ளனவாகவும், ஆ) தெளிவான கணித வியல் முறையில் வரையறுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். 2) தேவையான எடுகோள்கள் யாவும் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்க வேண்டும். 3) எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் எடுகோள்கள், ஒன் றிற்கொன்று தருக்க அடிப்படையாக நிலைப்பாடு கொண்டிருக்க வேண்டும். அப்படியானால்தான் பொருத்தமான முடிவுகளை உருவாக்க முடியும். 4) பயன்படுத்தும் புள்ளி விவரங்களுக்கு விடையளிக்கக் கூடிய வகையில் பொருளாதார மாதிரியானது இருக்கவேண்டும்.

**பல்துறை மாதிரி**: மேற்கூறிய காரணிகளைக் கருத்தில்கொண்டு பார்க்கையில் பல்துறை மாதிரியே சிறந்த பொருளாதார மாதிரியாகும். ஒரு துறை மாதிரியைக் காட்டிலும், பல்துறை மாதிரியானது பலவகையிலும் சிறந்தது. ஒரு துறை மாதிரி, பல்துறை மாதிரி என்பவை பயன்படுத்தப்படும் மாறிகளைக்

கொண்டு பகுக்கப்படுவதாகும். இரண்டு மாறிகளைக் கொண்டு மட்டுமே விளக்கப்படும் பொருளாதார மாதிரியானது ஒரு துறை மாதிரியாகும். மாறாக, இரண்டுக்கு மேற்பட்ட மாறிகளைப் பயன்படுத்தி விளக்கப்படும் பொருளாதார மாதிரியானது 'பல் துறை மாதிரி'யாகும்.

**கருத்து வளர்ச்சி:** பொருளாதார மாதிரிகள் என்னும் கருத்து, வளர்ச்சி பெற வேறுபட்ட பொருளியலறிஞர்கள் தத்தம் கோட்பாடுகளை அவ்வப்போது வழங்கியுள்ளனர். கெராடு – தோமர் (Harrod – Domar), கால்டர் (Kaldor), சான் இராபின்சன் (Joan Robinson), மீடு (Meade), சாலோவு, பெல்ட்மன் (Beltmen), மகலனோபிசு (Mahalanobis) போன்ற பல்வேறு பொருளியலறிஞர்கள் பல்வேறு மாதிரிகளை அளித்துள்ளனர். ஒவ்வொருவரின் 'மாதிரி'களும் வேறுபட்ட மாறிகளைத் தம்முள் கொண்டுள்ளன. இருப்பினும் கெராடு – தோமரின் 'வளர்ச்சி மாதிரி' ஏனையவற்றைக் காட்டிலும் புகழ் பெற்றது. இந்தியாவின் முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1951 – 56) பேராசிரியர் மகலனோபிசின் 'மாதிரி' பயன்படுத்தப்பட்டது.

**மாதிரிகளின் குறைபாடுகள்:** பொருளாதார மாதிரிகள், பொருளாதார வளர்ச்சியை முடிவு செய்வதில் முன்னணி வகித்தபோதிலும் சில குறைபாடுகளைக் கொண்டுள்ளன. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் இத்தகைய குறைபாடுகள் உணரப்பட்டன. அவற்றுள் சில: 1) குறியீட்டு மாறிகளுக்கிடையில் நிலைப்புத் தன்மை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பொருளாதார மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இருப்பினும் வட்டாரச் சமநிலையை அவை கருத்தில் கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாக நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கூறலாம். 2) உத்தம அளவில் பொருளாதார வளங்களைப் பயன்படுத்திச் சமச்சீரான பொருளாதார வளர்ச்சியை அடையவேண்டுமென்ற கருத்தைப் பெரும்பாலும் 'பொருளாதார மாதிரிகள்' வலியுறுத்துவதில்லை. 3) பொருளாதார மாதிரிகள், பொருளாதாரத்தில் குறுகிய காலத்தில் பொருள்களின் விலையில் மாற்றம் இருக்காதென்ற எடுகோளினடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், 'விலைகள்' குறுகிய காலத்திலும், நீண்ட காலத்திலும் நிலையாக இருப்பதில்லை. ஆகவே, 'பொருளாதார மாதிரிகள்' விலைமாற்றத்துடன் தொடர்பு படுத்தப்படாமல் பயனற்றதாகி விடுகின்றன. 4) பொருளாதாரத்தைத் திட்டமிடும் நிருவாகம் பெரும்பாலும் பொருளாதார மாதிரிகளை முடிவுசெய்யும் போது பொதுத்துறை, தனியார் துறை வளங்களைப் பற்றிக்கணக்கில் எடுத்துக்கொள்வதுண்டு. ஆனால், உண்மையில் அரசு தனியார் துறையின்மீது மிகுந்த அளவில் கட்டுப்பாட்டை விதிக்கமுடிவதில்லை.

ஆகவே, முன்மாதிரியான பொருளாதார மாதிரியானது, எளிமையாக, பொருத்தமானதாக, சமச்சீரானதாக, முழுமை பெற்றதாக, மாறிவரும் சூழ்நிலைக்கேற்றபடி மாறக்கூடியதாக இருக்க வேண்டும். இதற்குத் தெளிவாகப் புள்ளியியல் அடிப்படை தேவை. இல்லையேல், பொருளாதார மாதிரி ஒரு முன்மாதிரியான கோட்பாடாய் அமையாது.

பா.பி.

**துணை நூல்கள்:**

Chansarkar, B.A., Models for Planning in India, Himalya Publishing House, Bombay, 1983.

Meade, J. E., The Theory of Indicative Planning, Manchester University Press, Manchester, 1970.

*பொருளாதார முன்கணிப்பு:* பொருளாதார நடவடிக்கைகள், காரணிகள் ஆகியவற்றில் எதிர் காலத்தில் என்ன மாறுதல்கள் நிகழும் என்பதை முன்கூட்டியே கணிக்க முடியும். பொருளாதார முன்கணிப்பால் முன் கூட்டியே தக்க காப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம். இந்தியாவில் கி.பி.2000-இல் மக்கள்தொகை 100 கோடியை நெருங்கிவிடும் என்று முன்கணிப்புச் செய்கின்றனர். இதனால் 24 கோடி மக்களுக்கான தேவைகளை நிறைவு செய்ய அரசு முயற்சிகள் மேற்கொள்ளலாம்.


இதேபோன்று வருங்காலத்தில் நிகழ இருக்கின்ற பொருளாதார மாற்றங்களைக் கணக்கிட்டுப் பொதுப்படையாக அறுதியிட்டுக் கூறுவதைப் பொருளாதார முன்கணிப்பு (Economic Forecasting) என்பர்.

ஆனால் எதிர்காலத்தில் ஏற்படும் பொருளாதார மாறுதல்களை அறுதியிட்டுக் கூற முடியாது. கடந்த கால நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஊகம் செய்ய முடியும். கணக்கியல் முறையில் கணிப்பவை பெருமளவுக்குச் சரியாக இருக்கும். எனவேதான் எம்.சே. மார்னி என்பவர், 'பொருளாதார முன்–கணிப்புகள் இங்கிலாந்தின் பருவகால முன்கணிப்பைப் போன்று அடுத்த ஆறு மணித்துளிகள் வரைதான் மதிப்புள்ளவை; அதன் பின் வெறும் கற்பனையாகவே இருக்கும்' என்கிறார்.

**பயன்கள்:** 1) கடந்தகால விவரங்களின் தன்மையை ஆய்ந்து அதிலிருந்து எதிர்காலத்துக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம். 2) எப்பொழுதெல்

லாம் வாணிகத்தில் ஏற்ற இறக்கங்கள் தோன்றுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ளலாம். 3) விலைகள், மக்கள்தொகை, உற்பத்தி ஆகியவற்றின் போக்கை அறிந்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். எதிர்காலத் திட்டங்கள், கொள்கை ஆகியவற்றை அவற்றிற்குத் தக்கபடி மாற்றி அமைத்துக் கொள்ளலாம். 4) வணிகர்கள் பொருட்களின் விற்பனைப் போக்கை அறிந்து பொருட்கள் குறைவாக விற்கும் காலத்தில் விற்பனையைக் கூட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம். எடுத்துக்காட்டாக, மின்விசிறிகளின் விலையை மழைக்காலத்தில் குறைத்து விற்பனையைக் கூட்டுவதைக் காணலாம். பின்வரும் வரைபடத்தைக் காண்க.

வரைபடம்:1




உண்மை மதிப்புகளைக் கொண்டு போக்குமதிப்புகளைக் காணப் பலமுறைகள் உண்டு. போக்கு மதிப்புக்கான கோடு நீண்டகாலப் போக்கைக் காட்டுகிறது. இக்கோட்டை நீட்டித் தேவையான எதிர்கால உற்பத்தியைக் காண இயலும். வரைபடம் 1 - இன் மூலம் 1980-க்கு உற்பத்தியைக் காண இயலும்.

முற்காலத்தில் என்ன மாறுதல்கள் நிகழ்ந்தன, ஏன் அம்மாறுதல்கள் நிகழ்ந்தன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குக் காலத் தொடர் வரிசை புள்ளி விவரங்கள் (Time Series Data) பயன்படுகின்றன. கணக்கியல் முறையில் போக்குகளைக் கண்டுபிடித்து விடலாம். அதற்குப் புள்ளி விவரங்களைத் தக்கபடி ஆய்வு செய்திடல் வேண்டும்.


காலத் தொடர் வரிசைக்குப் போக்கு மதிப்புகளைக் காண வேண்டும். இப்போக்கு மதிப்புகளைக் குறைந்த வருக்க முறையில் காணலாம். ஆனால், அது கணக்கியல் முறையாகும். வேறு எளிய முறைகளான நகரும் சராசரிகள் (Moving Averages), பாதிச் சராசரிகள் முறை மூலம் போக்குக் கோட்டினைக் காணலாம். அவற்றை வரைபடத்தில் அமைக்க வேண்டும். படத்தில் 1980-இல் உற்பத்தி எவ்வளவாக இருக்கும் எனப் புறக்கணிப்பு மூலம் ஒய் (Y) அச்சுக்கு இணையாக நேர்கோடு போக்குக் கோட்டை வெட்டும்படி செய்து, அப்புள்ளியில் இருந்து ஒய் (Y) அச்சுக்கு ஒரு செங்குத்துக்கோடுவரைந்தால், 1990 – ஆம் ஆண்டின் உற்பத்தி அளவு கிடைக்கும். பிற புள்ளி விவரங்களுக்கும் இவ்வாறு போக்கு மதிப்புகள் கண்டு எதிர்கால மதிப்புகளைக் காணலாம்.

நீண்டகாலப் போக்கினை இம்முறைகளின் மூலம் எளிதாகக் கணக்கிட்டுவிடலாம். விலைப்போக்கு நீண்ட காலத்தில் ஏறுமுகமாக இருப்பதை நீண்ட காலப் போக்கு எனலாம். இறப்பு விகிதம் நீண்ட காலத்தில் குறைந்து செல்வதும் நீண்டகாலப் போக்காகும். குறுகிய காலத்தில் சிறு மாறுதல்கள் இருப்பினும் மிக நீண்ட காலத்தில் பொதுப்படையாக மதிப்புகள் மாறிச் செல்வதை நீண்ட காலப் போக்கு என்பர்.

பருவகால மாறுதல்கள் (Seasonal Variations) என்பவை ஓர் ஆண்டில் பருவகால மாறுதல்கள் காரணமாகப் பொருள்களின் விற்பனையில் ஏற்படும் மாறுதல்களாகும். திருமணக் காலங்கள், பண்டிகைக் காலம் முதலியவற்றில் பொருட்களின் தேவை மிகுதியாவதைக் காணலாம். இவற்றை எளிதாக முன் கூட்டியே கணித்து விடலாம். ஏனெனில் இவை ஓர் ஒழுங்கு முறையில் மாறி வருவனவாகும்.

வாணிகத்தில், தொழிலில் ஏற்படும் மாறுதல்கள் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழன்று ஒன்றன்பின் ஒன்றாக வருவது வாணிகச் சுழல் மாறுதல்கள் (Cyclical Variations) எனப்படும். பொருளாதார மந்தம், அதனைத் தொடர்ந்து மீட்சி, பின் வளர்ச்சி, பூரிப்பு நிலை, அதன்பின் பின்னடைவு எனப் பின்னோக்கி மந்தத்தை அடையும். பின்னர் மீட்டெழுச்சி பெறும். இப்போக்கினைப் பொருளாதார அறிஞர்கள் ஆய்ந்து தொழில் முறையாகவும், ஒட்டுமொத்தமாகப் பொருளாதார மாறுதல்களிலும் இவ்வாறு சுழல் மாறுதல்கள் நிகழ்வதைக் கண்டிருக்கின்றனர். புள்ளி விவரங்கள் இதற்குத் துணையாக உள்ளன. பன்னாட்டுத்தொடர்பு இருப்பின் ஒரு சுழல்கட்டத்தில் ஒரு நாடு இருந்தால் அது மற்ற நாட்டின் பொருளாதார நிலையையும் பாதிக்கும் எனச் சொல்கின்றனர்.

வாணிகச் சுழலை வரைபடம் 2 விளக்குகின்றது.




வரைபடம்: 2

சுழல் ஏற்ற இறக்கங்களைப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். அதனால் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் வீழ்ச்சி அல்லது தீங்கு விளைவிக்கும் பூரிப்பு ஆகியவற்றைத் தவிர்க்கலாம்.

பொருளாதார முன் கணிப்பு என்பது சிக்கலானது; அறுதியிட்டுக் கூற முடியாதது;ஏனெனில், எதிர்காலத்தில் பொருளாதார, சமுதாய மாறுதல்கள் நிகழலாம். அவை முன் கணிப்பைப் பொய்யாக்கி விடலாம். இருப்பினும் முன் கணிப்பு தேவையற்றது எனக் கூறிவிட முடியாது. அறிவியல் முறையில் ஆக்க வழி முறைகளைப் பின்பற்றி ஆய்வு செய்து கணிக்கப்படும் கணிப்புச் சிறந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மு.க.

**துணை நூல்கள்:**

**Copta**, S.P., Statistical Methods, Sultan Chand and Sons, New Delhi, 1982.

Mills, C.C., Statistical Methods, H. Holt, 1955.

**Simpson, G. & Kajka, F.,** Basic Statistics, W.W. Norton and Co. Inc., New York, 1957.

***பொருளாதார முன்னேற்றத்தில் பொருள் சாராக் காரணிகள்***: ஒரு நாட்டின் பொருளாதார நிலை முன்னேற வேண்டுமென்றால் அந்நாட்டின் வருவாய், வேலைவாய்ப்பு, உற்பத்தி போன்றவை பெருகவேண்டும். சாதகமான வாணிக நிலை, நியாயமான கூலி, நல்ல நிதிவசதி இவையெல்லாம் பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணைசெய்யும். இத்தகைய காரணிகள் 'பொருளியல் காரணிகள்' (Economic Factors) என்றுகூறப்படுகின்றன. இந்தக் காரணிகளில் ஏற்படும் மாற்றம் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும். ஆனால், கல்வி, சமயம், அரசியல், பண்பாடு (Culture), இனவழி (Race), குடும்பச் சூழ்நிலை போன்ற பொருள் சாராக் காரணிகளும் (Non - Economic Factors) நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தினைப் பாதிக்கும் என்பதில்தான் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது.

இ.இ.ஏகென் (E.F.Hagen) என்ற பொருளியலறிஞர் பண்பாட்டு மாற்றம் (Cultural Change) எவ்வாறு பொருளாதார முன்னேற்றத்தைத் தருகிறது என்பதை ஆராய்ச்சி செய்து உறுதிப்படுத்தியுள்ளார். உரோசுடோவு (W.W.Rostow) என்னும் பொருளியலறிஞர் மக்களுடைய போக்கு (Behaviour) பொருளாதார முன்னேற்றத்தை முடிவுசெய்யும் என்று கூறுகிறார். இர்மா அடல்மான் (Irma Adelman) அம்மையார், தம்முடைய உற்பத்திச் சார்புக் (Production Function) கோட்பாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கான காரணத்தைக் கூறுகையில் சமூகக் காரணிகளின் (Social Factors) முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இரேக்னர் நர்க்சு (Ragnar Nurkse) என்பவர் 'பொருளாதார முன்னேற்றம் என்பது மனித ஆற்றல், சமூகப் போக்கு, அரசியல் நிலை, வரலாற்றில் இடம்பெறத்தக்க இடர்கள் (Historical Accidents) போன்றவற்றோடு மிகவும் தொடர்புடையது' என்று கூறுகிறார்.

எனவே, பொருளாதார முன்னேற்றத்தின் மீது பொருள்சாராக் காரணிகளின் பாதிப்பு உள்ளது என்பது தெளிவு. அப்படிப்பட்ட பொருள்சாராக் காரணிகளைப் பற்றிக்கீழே காணலாம்.

**குடும்ப அமைப்பு:** கூட்டுக் குடும்ப முறை (Joint Family System) பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. இது சிலர் உழைப்பில் பலர் வாழ வழி செய்வதோடு, உழைப்பவர் உழைப்பின் பயனை முழுக்கத் துய்க்கவிடாமல் செய்துவிடுகிறது. மாறாகத் தனிக் குடும்ப முறை (Nuclear Family System), தனி மனித வளர்ச்சிக்கும், அமைதிக்கும் துணை செய்கிறது. இந்த முறையில் உழைப்பவன், உழைப்பின் பயனைத் தானும், தனக்கு மிக வேண்டியவர்களும் உடனிருந்து துய்ப்பதால் மேலும் மேலும் உழைக்க, பணந்தேட ஊக்கம் கிடைக்கிறது. பெண்களை வீட்டில் பூட்டி வைக்கும் போக்குடைய குடும்பம் முன்னேறுவது கடினம். வெளி உலக அறிவு பெண்களுக்குத் தேவை. எனவே, பெண்களுக்குச் சம உரிமை அளிப்பது இன்றியமையாதது. அவர்களுடைய உழைப்பையும், திறமையையும் பயன்படுத்தும்போது முன்னேற்றம் உறுதியாகிறது.

**தனி மனிதனும் அவன் சூழ்நிலையும்:** தனி மனிதனின் நடவடிக்கைகள் பொருளாதார முன்னேற்றத்தை முடிவு செய்கின்றன. உயர்ந்த எண்ணம், நேர்மையான நடத்தை உடையவர்களால் சமுதாயமும், பொருளாதாரமும் முன்னேறுகின்றன. நம்பிக்கையற்றவர்கள், சமுதாயத்தை வெறுப்போடு பார்ப்பவர்கள், தற்புகழ்ச்சிக்காரர்கள் போன்றோரால் நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. தனிப்பட்ட மனிதனின் நண்பர்கள் சோம்பேறிகளாக இருந்தால் அவன் முன்னேற்றமும், அவன் நாட்டின் முன்னேற்றமும் கேள்விக்குறியாகிவிடுகின்றன.சோதிடப் பலன் படித்துத்தான் தொழில் தொடங்குவேன் என்று சொல்லும் பிற்போக்குவாதியர் நிறைந்த நாட்டில் இடர்ப்பாடுகளை (Risks) ஏற்கும் போக்குக் குறைந்து முன்னேற்றம் தடைப்படுகிறது.

**வகுப்பு அமைப்பு:** ஏழை, பணக்காரன் என்ற வகுப்பு வேறுபாடுகள் உள்ள நாட்டில் சிக்கல்கள் மிகுதியாக உள்ளன. ஏழைகள் தாங்கள் நசுக்கப்படுவதாக நினைப்பதால் எப்போதும் அவர்கள் கொதித்துக் கொண்டிருக்கும் எரிமலையாக இருப்பார்கள். அவர்கள் சுரண்டப்படுவதால் உழைக்கும் எண்ணமும், ஆற்றலும் குறைந்துகொண்டேயிருக்கும். இது அரசியல், சமுதாய,பொருளாதாரச் சிக்கல்களாக உருவெடுக்கும். உலக வரலாறு இந்த உண்மையைக் காட்டுகிறது.

**இன வழித் தொடர்பு:** வெள்ளை இனத்தவர், கறுப்பு இனத்தவர், அடிமை இனத்தவர், பாரதஇனத்தவர், பாகிசுத்தான் இனத்தவர் என்று பல்வேறு வகையான இனங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இதனால், இணக்கமான உறவு நிலை பாதிக்கப்படுகிறது.போட்டியும், பொறாமையும் வளர்கின்றன. உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டு முன்னேற்றம் தடைப்படுகிறது.

**சமயம்:** பொருளாதார முன்னேற்றத்தை முடிவு செய்யும் மற்றொரு முக்கியகாரணி சமயம் ஆகும். பிற்பட்ட நாடுகளிலன்றி முன்னேறிய நாடுகளில் கூட இதனுடைய தாக்கம் உள்ளது. ஏழ்மைக்குக் காரணம் முன்னர்ச்செய்த பாவம்தான் என்று சமயம் போதிக்கிறது. பொருளியலாரைக் கேட்டால் அவர்கள் வேறு பல பொருளியல் காரணங்களைக் கூறுவார்கள். பிச்சை யெடுப்பதைச் சில சமயங்கள் ஆதரிக்கின்றன. ஆனால், இது சோம்பேறித்தனத்தை உருவாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் சமயம் உழைப்பையும், உண்மையையும் போற்றுகிறது. அவை பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். மொத்தத்தில் பிற்போக்கான சமயநம்பிக்கை பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்பது உறுதி.

**கல்வி:** மிகுதியாகக் கற்றவர்கள் உள்ள நாடு விரைவாக முன்னேறும். புதிய கண்டுபிடிப்புகளும், அறிவியலும் இணைந்த செயற்பாடு வேகமான முன்னேற்றத்தைக் கொடுக்கும். கல்வி ஒரு பொருள்சாராக் காரணியென்றாலும், அது பொருளாதாரத்தோடு நெருங்கிய தொடர்புடைய ஒன்றாகும். பின்தங்கிய நாடுகளில் கல்வி கற்பதில் ஆர்வம் இருப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் கல்வியின் தரம் குறைவாக இருக்கும். அதனால், முன்னேற்றம் தடைப்படும்.

**அரசியல்:** நல்ல ஆட்சி நடந்தால் நாட்டில் அமைதி நிலவும்; பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். ஊழல் ஆட்சி, தவறான நிருவாகம், நிலையற்ற அரசு போன்றவை பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கும்.

**பண்பாடு:** ஒரு நாட்டின் பண்பாடு என்பது பரம்பரை பரம்பரையாக வருவது. இந்தப் பண்பாடு நாடு முழுதும் பரவியிருக்கும். குழந்தை முதலே பண்பாடு என்பது மனத்தில் ஊறிப் போய்விடும். இதை மாற்றுவது கடினம். ஆனாலும், ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அந்த நாட்டின் பண்பாட்டை மாற்றுகிறது. மாறுகின்ற பண்பாட்டால் பொருளாதாரப் பாதிப்பு ஏற்படும். முன்னேறிய, முன்னேறும் நாடுகளில் ஏற்படும் பண்பாட்டு மாற்றம் இதற்குச் சான்றாகும்.

**நகரம், கிராமம் - வேறுபாடுகள்:** கிராமங்கள் நிறைந்த நாட்டில் மக்களின் மனப்போக்குப் பிற்போக்குத் தன்மையுடையதாக இருக்கும். பெண் விடுதலை இராது. கல்வி வளர்ச்சி, நாகரிக வளர்ச்சி இருக்காது; திறமையில் குறைவுகாணப்படும். ஆனால், நகரங்கள் நிறைந்துள்ள நாட்டில் அறிவியல் வளர்ச்சி, கல்வி கேள்வியில் திறமை, உழைப்பாற்றல் முதலியன மிகுதியாகக் காணப்படும். அவர்கள் தனிக் குடும்ப முறைப்படி வாழ்வார்கள். வகுப்பு வேறுபாடு, சாதி, சமய, இன வேறுபாடு குறைவாக இருக்கும். எந்த இடத்திலும் வேலை செய்ய ஆயத்தமாக இருப்பார்கள். பழக்கவழக்கங்கள் மாறி நாகரிகம் உடையவர்களாக விளங்குவார்கள். அது பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டுவதாக அமையும்.

இவ்வாறு, பொருளாதார முன்னேற்றத்தை நிருணயிப்பதில் பொருள்சாராக் காரணிகளின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

டி.ப.

**துணை நூல்கள்:**

**குருசாமி, மா.பா.,** திட்டமிடலும் வளர்ச்சியும், வண்ணன் வெளியீடு, திருச்செந்தூர். 1985.

**Kindelberger,** Economic Development Mcgraw

Kogakusha Ltd., London, 1965.

**Tandon B.C.**, Economic Planning – Theory and Practice Chaitanya Publishing House, Allahabad, 1972.

**பொருளாதார முன்னேற்றம்** என்னும் தொடர், ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற சில அடிப்படை மாற்றங்களைக் குறிக்கின்றது. இந்த மாற்றம் அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை புரியும். பொருளாதார முன்னேற்றம் (Economic development) என்பது ஒரு நாடு தன் இயற்கை வளங்களைப் புதிதாகக் கண்டு பிடித்துப் பயன்படுத்துதல், புதிய தொழில் நுட்பங்களை அறிந்து பயன்படுத்துதல், மூலதன ஆக்கம் செய்தல், மக்கள் வளத்தை நன்முறையில் ஆக்க நிலையாகப் பயன்படுத்துதல் போன்ற செயல்முறைகளைக் கடைப்பிடித்தலைக் குறிக்கிறது. பொருளாதார முன்னேற்றத்தின் மூலம் வேளாண்மை, தொழில் துறைகள் வளர்ச்சி அடைகின்றன. நாட்டின் உற்பத்தி பெருகுகிறது. நாட்டின் பொருளாதார நிலை மேம்பாடு அடைகிறது.

பொருளாதார முன்னேற்றத்திற்குப் பலரால் பல விளக்கங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் பொருளாதார முன்னேற்றம் அதனுடைய எழுச்சியில் முக்கியமான சமுதாய, நிறுவன, அமைப்பு மாற்றங்களைக் கொண்டுவருகிறது. நாட்டின் சராசரி உற்பத்தி கூடுவது பொருளாதார வளர்ச்சியில் அடங்கியுள்ளது என்று பிரைட்டு சிங்கு (Dr. Bright Singh) கூறுகிறார். செரால்டு மேயர், இராபர்ட்டு பால்டுவின் ஆகிய பொருளியல் அறிஞர்கள் 'பொருளாதார முன்னேற்றம் என்பது, நீண்ட காலத்தில் ஒரு நாட்டின் உண்மை நாட்டு வருவாய் அதிகரிக்கின்ற போக்கு' எனக் கூறுகின்றனர். மேலும், 'பொருளாதார முன்னேற்றம் என்பது வேளாண்மை, தொழில், வாணிகம், கல்வி, நீர்ப்பாசனம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற பல துறைகளில் ஏற்படுகின்ற வளர்ச்சியே' என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

**பொருளாதார முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும்**: 'பொருளாதார முன்னேற்றம்', 'பொருளாதார வளர்ச்சி' (Economic growth) என்னும் தொடர்கள் ஒரே பொருளை உணர்த்துவன போலத் தோன்றுகின்றன. ஆனால், சும்பீட்டார், உருசுலா இக்சு அம்மையார் போன்ற பொருளியலறிஞர்கள் 'பொருளாதார முன்னேற்றம்', 'பொருளாதார வளர்ச்சி' ஆகியவற்றிற்கிடையேயுள்ள நுட்பமான வேறுபாடுகளை விளக்கியுள்ளனர்.

பொருளாதார முன்னேற்றம் என்பது முன்னேற்றம் குறைந்த, பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரச் சிக்கல்களையும், வளர்ச்சியையும் பற்றி ஆராய்கிறது. பொருளாதார வளர்ச்சி என்பது முன்னேற்றம் பெற்ற நாடுகளின் முன்னேற்றம் பற்றி ஆராய்கிறது. அதாவது வளர்ச்சி குன்றிய நாடுகள் ஏழ்மை நிலையிலிருந்தும், பின்தங்கிய நிலையிலிருந்தும் விடுபட்டு வளர்ச்சியடைவதை 'முன்னேற்றம்' என்கின்றனர். வளர்ச்சி பெற்ற நாடுகள் மேலும் முன்னேறுவதை 'வளர்ச்சி' என்கின்றனர்.

சும்பீட்டரின் கருத்துப்படி 'வளர்ச்சி' என்பது நீண்ட காலத்தில் தொடர்ச்சியாக நிலையாக முன்னேற்றம் அடைவதைக் குறிக்கிறது. 'முன்னேற்றம்' என்பது புதிய கண்டுபிடிப்புகள் போன்ற காரணங்களால் திடீரென்று, தோன்றுகின்ற ஆக்க முறையான மாற்றங்களைக் குறிக்கிறது.

இக்சின் அம்மையார் கருத்துப்படி, 'வளர்ச்சி குன்றிய நாடுகளில் பயன்படுத்தப்படாத இயற்கை வளங்கள் இருக்கும்; அவற்றைப் பயன்படுத்தத் தெரிந்திருந்தும் பயன்படுத்த இயலாமல் இருப்பார்கள்; அவற்றை முறையாகப் பயன்படுத்தி நாட்டின் வருவாயையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது முன்னேற்றம்' ஆகும். வளர்ச்சி பெற்ற நாடுகள் அவற்றின் பெரும்பாலான வளங்களை முன்னதாகவே பயன்படுத்த வளர்ச்சி பெற்றிருக்கும். அவ்வளங்களை மேலும் மேலும் தக்க வழிகளில் பயன்படுத்தி முன்னேற்றம்பெறுவது 'வளர்ச்சி' ஆகும்.

மாடிசன் என்னும் அறிஞர், வருவாய் நிலைகள் கூடுவதைப் பொதுவாகச் செல்வச் செழிப்பான நாடுகளில் 'பொருளாதார வளர்ச்சி' என்றும், ஏழை நாடுகளில் 'பொருளாதார முன்னேற்றம்' என்றும் குறிப்பிடுவர் என்று கூறுகிறார்.

மேலும், பொருளாதார முன்னேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியைத்தான் குறிக்கிறது. வளர்ச்சிக்கேற்ற பொருளாதார, சமுதாய பிற மாற்றங்களையே முன்னேற்றம் என்ற சொல் சுட்டிக்காட்டுகிறது. வளர்ச்சி என்பது அளவிடத் தக்கதாகவும். காணக் கூடியதாகவும் இருக்கும். பொருளாதார முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துத் தருகிறது.

பொதுவாகப் பொருளாதார முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி ஆகிய தொடர்கள் ஏறத்தாழ ஒன்றுபோலப் பயன்படுத்தப்படுகின்றன.

பொருளாதார முன்னேற்றத்தைக் கீழ்க்காணும் முறைகளின்மூலம் அளவிடலாம்.

**1) உண்மை நாட்டு வருமானம்:** உண்மை நாட்டு வருமானம் (Real National Income) என்பது ஓராண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், பணிகள் ஆகியவற்றின் அளவாகும். அதாவது பொருட்கள், பணிகளின் பணமதிப்பைக் (Money Value) கணக்கிடாமல் அவற்றின் உண்மை மதிப்பைக் (Real Value) குறிப்பிடுவதாகும். ஒரு நாட்டின் உண்மை வருமானம் ஆண்டுதோறும் கூடிக்கொண்டிருந்தால் அந்நாடு பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று பொருளியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். உண்மை நாட்டு வருமானம் அதிகரித்துவிட்டால் மட்டும் அது முன்னேற்றம் என்று முழுமையாகக் கூறமுடியாது. மக்கள் தொகைப் பெருக்க வீதத்தைவிட உண்மை வருமானம் மிகுதியாகக் கூடினால்தான் அது மேம்பட்ட பொருளாதார நிலை ஆகும். மக்கள்தொகை உண்மை நாட்டு வருமானத்தைவிட வேகமாகக் கூடினால் நாட்டு மக்களின் சராசரி வருமானம் முன்பு இருந்ததைவிடக் குறைந்துவிடும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படாது. ஆதலால், உண்மை நாட்டு வருமானத்தைவிட உண்மைச் சராசரிவருமானம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை அளவிடும் சிறந்த அளவுகோல் ஆகும்.


**2) உண்மைச் சராசரி வருமானம்:** ஓர் ஆண்டின் மொத்த உண்மை நாட்டு வருமானத்தை, அந்நாட்டு மக்கள்தொகையால் வகுக்கக் கிடைப்பது சராசரி அல்லது ஆளின் உண்மை வருமானம் (Real Per Capita Income)ஆகும். நீண்டகாலத்தில் ஒரு நாட்டின் உண்மையான ஆளின் வருமானம் கூடுகின்றது எனில் அந்நாட்டுப் பொருளாதாரம்முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பது பொருள். அக்கருத்துப்படி மக்கள் தொகைப் பெருக்கத்தைவிட உற்பத்திவீதம் அதிகமாக இருக்கவேண்டும். அவ்வாறிருந்தால்தான் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

**3) பொருளாதார நலக்கண்ணோட்டம்:** ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைச் சரியாக அளவிட வேண்டுமாயின் முன்னேற்றத்தால் மக்கள் பெறுகின்ற பொருளாதார நலத்தை அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்று ஒகுன், இரிச்சர்டுசன் போன்ற பொருளியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். நாட்டு வருவாய் கூடுகின்றபோது மக்களின் வருவாய், நுகர்வு, வாழ்க்கைத்தரம் கூட வேண்டும். மக்களின் சொத்து, வருவாய் ஏற்றத்தாழ்வுகள் குறையவேண்டும். ஏழைகள், செல்வர்களாக மாறக்கூடிய நிலை வரவேண்டும். இதுதான் உண்மையான பொருளாதார முன்னேற்றம் என்று கூறுகின்றனர். ஆனால், 'பொருளாதார நலத்தினை' மற்ற இரண்டு முறைகளைப் போல் இம்முறையில் திட்டவட்டமாகக் கணக்கிட்டுக் கூறமுடியாது.

மொத்த உண்மை நாட்டு வருமானம், உண்மை ஆள் வருமானம், பொருளாதார நலன் ஆகிய மூன்று முறைகளிலும் உண்மை ஆளின் வருமானத்தின் அடிப்படையில் பொருளாதார முன்னேற்றத்தை அளவிட வேண்டும் என்று பெரும்பான்மைப் பொருளியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

**பொருளாதார முன்னேற்றத்தின் தடைகள்:** வளர்ச்சி குறைந்த நாடுகள் முன்னேற்றம் பெற முடியாமைக்குப் பல தடைக்கற்கள் உள்ளன. அவை:

**1) வறுமையின் நச்சுவட்டம்:** வளர்ச்சி குறைந்த நாடுகள் வறுமை என்னும் வட்டத்திற்குள் (Vicious circle of poverty) சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றன. 'ஒரு நாடு ஏழ்மையாக இருப்பதற்குக் காரணம் அதன் ஏழ்மைத்தனம்தான்' என்று பேராசிரியர் நர்க்சு (Prof. Nurkse) கூறுகின்றார். வறுமை என்னும் நச்சு வட்டத்தை உடைத்து வெளியே வரமுடியாமல் ஏழைநாடுகள் சிக்கிக் கொண்டிருக்கின்றன. வறுமைக் காரணங்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து அமைந்துள்ளன. வறுமைக்கான மூல காரணம் குறைவான உற்பத்தித்திறன். அதனால், குறைவான வருமானம் கிடைக்கிறது. ஆதலால், சேமிப்பு மிகவும் குறைவாக உள்ளது. எனவே, முதலீடும் குறைவாக உள்ளது. ஆதலால், மூலதனப் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனால், மீண்டும் உற்பத்தித் திறன் மிகவும் குறைவாக உள்ளது. இதனைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்குகிறது.




இவ்வாறு இந்த வறுமை வட்டம் வளர்ச்சி குறைந்த நாடுகளில் தொடர்ந்து நிலைபெற்று வருகின்றது.

**2) குறைவான மூலதன ஆக்கம்:** வளர்ச்சி குறைந்த நாடுகள் முன்னேற்றம் பெற முடியாமைக்கான அடுத்த முக்கிய காரணம் அந்நாடுகளில்

மூலதன ஆக்கம் மிகவும் குறைவாக உள்ளதேயாகும். குறைவான வருமானத்தின் காரணமாக மக்களின் சேமிப்புக் குறைந்து நுகர்வு மிகவும் அதிகமாக இருக்கின்றது. மூலதனம், சேமிப்பைச் சார்ந்துள்ளதால் மூலதன ஆக்கமும் பாதிக்கப்படுகிறது.

3) **சமூகத் தடைகள்:** வளர்ச்சி குறைந்த நாடுகளில் வாழும் மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களும் அவர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் தடையாக உள்ளன. சாதி, சமயப் பிரிவுகள், பழைமையான வேளாண்மை உற்பத்தி முறைகள், மூடப் பழக்க வழக்கங்கள், அறியாமை ஆகிய காரணிகள் மக்களின் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கின்றன. எடுத்துக்காட்டாகத் திருமணம், திருவிழா சமயச் சடங்கு போன்றவற்றிற்கு மிகவும் ஆடம்பரமாகக் கடன்வாங்கிச் செலவு செய்யும் போக்கு மக்களிடையே உள்ளது. வீண்வழக்குகளுக்காகப் பணத்தைச் செலவு செய்கின்றனர். ஆனால், குடும்பநலத் திட்டம்போன்ற அரசின் திட்டங்களுக்கு மக்கள் முழு ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை.

4) **பன்னாட்டுச் சக்திகள்**:வளர்ச்சி குறைந்த நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளோடு பன்னாட்டு வாணிகம் போன்றவற்றில் போட்டியிட்டு ஆதாயம் பெற இயலாது. ஆதலால், வளர்ச்சிபெற்ற உலக நாடுகள், வளர்ச்சி பெறாத பிற நாடுகள்மீது பொருளாதார ஆதிக்கம் செலுத்தி அவற்றை முன்னேற விடாமல் தடுத்துவிடுகின்றன. மேலும், வளர்ச்சி பெற்ற நாடுகள் வளர்ச்சி பெறாத நாடுகளுடன் வாணிகம் மேற்கொள்ளுகின்றபோது வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கே ஆதாயம் கிடைப்பதாகப் பேராசிரியர் மிர்தால் (Prof. Myrdal), உலூயி ஆகியோர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

**பொருளாதார முன்னேற்றத்திற்கு வேண்டியவை:** வளர்ச்சி குறைந்த நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையவேண்டுமானால் முன்னேற்றத்தைத் தடை செய்கின்ற முட்டுக்கட்டைகளை அகற்றினால் மட்டும் போதாது. முன்னேற்றத்திற்குத் தேவையான சில அடிப்படைக் காரணிகளைப் பெற்றிருக்கவும் வேண்டும். அவையாவன:

1) **வறுமை உணர்வும், வளர்ச்சி விருப்பமும்**: பின் தங்கிய நாட்டுமக்கள் வறுமையின் கொடுமையை உணர்ந்து அதனை ஒழிக்கப் பாடுபட வேண்டும். வளர்ச்சிபெற்ற நாடுகளைக் கண்டு அவற்றைப்போல் நாமும் முன்னேற வேண்டும் என்று விருப்பங் கொண்டு உழைக்கவேண்டும்.

2) **தொழில் நுணுக்க மேம்பாடு**: புதிய கருவிகளை உற்பத்தியில் பயன் படுத்தவேண்டும். பிற நாடுகளில் பின்பற்றப்படுகின்ற புதிய தொழில் நுணுக்கத்தை அறிந்து நடைமுறைப் படுத்தவேண்டும். ஆராய்ச்சியினை மேற்கொண்டு புதிய முறைகளைப் பயன்படுத்தி வேளாண்மை, தொழில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

3) **முழுமையான அங்காடி**: ஒரு நாட்டில் தொழில், வாணிகம் விரிவடைய நிறைவான சிறந்த அங்காடி தேவை. அங்காடி வளர்ச்சி பெற்றால் தான் உற்பத்தி, வாணிகம் விரிவடையும். வளர்ச்சி குறைந்த நாடுகளிலுள்ள அங்காடிகளின் குறைகளைப் போக்கி உற்பத்திக் காரணிகள் இடம்பெயர்ந்து உற்பத்தியைக் கூட்ட ஆவன செய்ய வேண்டும்.

4) **முதலாக்கம்**: மூலதனம் இன்றி ஒரு நாடு பொருளாதார முன்னேற்றம் பெறமுடியாது. ஆதலால் சேமிப்பைக் கூட்டி நிதி, கடன் வசதி ஆகியவற்றைப் பெருக்கி மூலதனத்தின் (Capital) அளிப்பை அதிகரிக்க வேண்டும். நுகர்வினைச் சுருக்கிச் சேமிப்பைப் பெருக்கலாம். வெளிநாடுகளில் கடன்பெற்று மூலதனத்தை உருவாக்கலாம்.

5) **முதலீடு**: பெற்ற மூலதனத்தை, சிறந்த முறையில் அதிக ஆதாயம் தருகின்ற வகையில் முதலீடு (Investment) செய்யவேண்டும். ஆக்கமுறையிலான முதலீடு செய்து உற்பத்தியைப் பெருக்கிப் பொருளாதார முன்னேற்றம் பெறலாம்.

6) **மனித மூலதனம்**: நாட்டு மக்கள் திறமுடன் செயற்பட்டால்தான் ஒரு நாடு முன்னேற முடியும். ஆதலால்தான் இக்காலப் பொருளியலறிஞர்கள் மக்களையே ஒரு மூலதனம் என்று கூறுகின்றனர். ஆதலால், நாட்டு மக்களின் திறமை, உழைப்புத்திறன் ஆகியவை அதிகரிக்க அவர்களுக்குத் தக்க கல்விப் பயிற்சி, சுகாதாரவசதி ஆகியவை செய்துதர வேண்டும்.

7) **பன்னாட்டு வாணிகம்**: பின்தங்கிய நாடுகள், தங்கள் பொருள்களுக்கு வெளிநாட்டில் தேவையிருப்பின், தங்கள் நுகர்வினை ஓரளவு கட்டுப்படுத்திப் பன்னாட்டு வாணிகம் மூலம் அந்நியச் செலாவணியைப் பெற்று முன்னேற்றமடைய முடியும்.

8) **சமுதாய நிறுவனங்கள்**: நாட்டிலுள்ள சமுதாய, சமய நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிப்பனவாக இருந்தால் அவற்றை மாற்றி அமைக்கவேண்டும்.

9) **அரசியல் அமைப்பு**: நாட்டிலுள்ள அரசியல் அமைப்பும், சூழ்நிலையும் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏற்றதாக இருக்கவேண்டும். அரசின் பொருளாதாரக் கொள்கைகள், தொழில் உற்பத்தி, வேலைவாய்ப்பு போன்றவற்றைக் கூட்டி நாட்டின் வளர்ச்சிக்குத் துணை செய்யவேண்டும். அரசின்

வரிக்கொள்கைகள் தொழில், வாணிகம் விரிவடைய உதவி புரிய வேண்டும். மேலும், அரசின் ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகள் பன்னாட்டு வாணிகத்தைச் சாதகமாக்கி வாணிகத்தை விரிவடையச் செய்ய வேண்டும். ம.க.

துணை நூல்கள்:

Misra, S.K. & Puri, V.K., Indian Economy, Himalaya Publishing House, Bombay, 1984.

Ruddar Datt Sundharam, K.P.M., Indian Economy, S. Chand & Company Ltd., New Delhi, 1984.

*பொருளாதார வளர்ச்சி:* பொதுவாகப் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் ஆகிய சொற்களைப் பொருளியல் அறிஞர்கள் ஒரே பொருளில் பயன்படுத்துகின்றனர். ஆனால், உருசுலா இக்சு அம்மையார் (Ursula Hicks), சும்பீட்டர் (Schumpeter) போன்ற பொருளியல் அறிஞர்கள் இரண்டு சொற்களுக்கும் இடையே நுண்ணிய வேறுபாட்டைக் கூறுகின்றனர். அதனை, பின்தங்கிய அல்லது வளர்ச்சி குறைந்த நாடு முன்னேற்றம் பெறுவதைப் 'பொருளாதார முன்னேற்றம்' என்றும், முன்னேற்றம் பெற்றநாடுகள் மேலும் முன்னேறுவதைப் 'பொருளாதார வளர்ச்சி' (Economic Growth) என்றும் விளக்கிக் கூறுகின்றனர்.

மேலும், காலின் கிளர்க்கு (Calin Clerk) என்னும் பொருளியல் அறிஞர் பொருளாதார வளர்ச்சியினைக் கீழ்க்காணும் மூன்று நிலைகளாகப் பகுத்து விளக்குகிறார். அவை: 1) முதனிலை உற்பத்தி, 2) இரண்டாம் நிலை உற்பத்தி, 3) மூன்றாம் நிலை உற்பத்தி என்பனவாகும். முதனிலை உற்பத்தி நடைபெறுகின்றபோது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட நிலையிலிருக்கும். முதனிலை உற்பத்தி என்பது வேளாண்மையும், அதைச்சார்ந்த துறைகளில் நடைபெறுகின்ற உற்பத்தியும் ஆகும்.

இரண்டாம் நிலை உற்பத்தி என்பது ஆலைத் தொழில் உற்பத்தி ஆகும். இந்நிலையில் ஆலைத் தொழில்கள் வேளாண்மையைவிட மேலோங்கி இருக்கும். இரண்டாம் நிலைஉற்பத்தியில் ஒரு நாடு மேலோங்கி இருக்கின்றபோது அது முன்பு இருந்த நிலையைவிட வளர்ச்சி பெற்றுள்ளது எனக் கூறலாம்.

மூன்றாம் நிலை உற்பத்தி என்பது அகக் கட்டுமானங்களைக் குறிக்கிறது. தொழில்மேலும் வளர்ச்சி பெற மின்சாரம், போக்குவரத்து, நீர் வசதி ஆகிய அகக் கட்டுமானங்கள் வளர்ச்சி அடையவேண்டும். இத்தகைய அகக் கட்டுமானங்களும் வளர்ச்சியடைந்துள்ள பொருளாதாரம் இரண்டாம் நிலையைவிட மேலும் வளர்ச்சி பெற்றது எனக் கூறலாம்.

இல்டே பிராண்டு என்னும் பொருளியலறிஞர் பொருளாதார வளர்ச்சி நிலையினை மூன்று பிரிவாகப் பிரித்து விளக்குகிறார். அவை, 1) பண்டமாற்றுப் பொருளாதாரம், 2) பணப் பொருளாதாரம், 3) கடன் பணப் பொருளாதாரம் என்பன. பணம் கண்டுபிடிப்பதற்கு முன்பு மனிதன் பண்டமாற்று முறையைப் பயன்படுத்தி வந்தான். அதற்குப் பண்டமாற்றுப் பொருளாதாரம் என்பது பெயர். தனக்குத் தேவைக்குமேல் உள்ள பொருள்களைக் கொடுத்துத் தனக்கு வேண்டிய பிற பொருள்களைப் பெற்று வந்தான். அது பொருளாதாரம் வளர்ச்சி அடையாத நிலை.

பணத்தின் பயனைக் கண்டுபிடித்த பின்பு, அது ஒரு பொது மாற்று மையமாக இருக்கிறது. அதனைப் பணப் பொருளாதாரம் என்பர். பணப் பொருளாதாரத்தில் கொடுக்கல், வாங்கல்கள் மிகவும் எளிதாயின. வாணிகம் விரிவடைந்தது. இந்நிலையை இரண்டாம் வளர்ச்சிக் கட்டமாகக் கூறுவர்.

இதன்பின்பு வங்கி முறை நடைமுறைக்கு வந்தது. காசோலை, மாற்று உண்டியல் போன்ற கடன் கருவிகளையும் பணமாகப் பயன்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டது. வங்கி முறை நன்றாக வளர்ச்சியடையப் பெற்ற பொருளாதாரம் மேலும் வளர்ச்சி பெற்றுள்ள பொருளாதாரமாகக் கருதப்படுகிறது.

காரல் மார்க்சு (Karl Marx) பொருளாதார வளர்ச்சியைச் சமுதாய, அரசியல், வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு விளக்குகிறார். கீழ்க்காணும் முறைகளில் பொருளாதார வளர்ச்சி தோன்றுமென்று கூறுகிறார். அவை, 1) படைமானியத் திட்டம், 2) முதலாளித்துவம், 3) சமதருமம், 4) பொதுவுடைமை என்பனவாகும்.

காரல் மார்க்சின் கருத்துப்படி ஒரு சமுதாயம் மேற்கண்ட நான்கு நிலைகளைக் கடந்து வளர்ச்சி பெறுகிறது. ஒவ்வொரு நிலையும் அதற்கு முற்பட்ட நிலையைவிடப் பொருளாதார வளர்ச்சியை மிகுதியாகப் பெறும். படைமானியத் திட்டத்தில் வேளாண்மை முக்கிய தொழிலாக இருக்கும். நிலப்பிரபுக்கள் ஆட்சி மேலோங்கியிருக்கும் முதலாளித்துவப் பொருளாதார முறையில் ஆலைத் தொழில்கள் வளர்ச்சி பெற்றிருக்கும். தொழிலாளர்கள் முதலாளிகளால் சுரண்டப்படுவார்கள். தொழிலாளர்கள் ஒன்றுபட்டுப் போராடுவதால் சமதருமப் பொருளாதாரம் அமையும். சமதருமப் பொருளாதாரத்தை அடுத்துப் பொதுவுடைமைப் பொருளாதாரம்

அமையும். இதுவே மார்க்சின் கருத்துப்படி மிகவும் வளர்ச்சி பெற்ற பொருளாதார நிலை ஆகும்.

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிப் போக்கை ஆராய்ந்த பேராசிரியர் உரோசுடோ (W. W. Rostow) பொருளாதார வளர்ச்சியில் ஐந்து நிலைகள் இருப்பதனைப் பகுத்து விளக்குகிறார். வளர்ச்சி பெறுகின்ற வளர்ச்சி பெற்ற உலக நாடுகள் இந்த ஐந்து நிலைகளில் ஒன்றிலிருக்கும் என்று பொருளியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

உரோசுடோ விளக்கியுள்ள ஐந்து வளர்ச்சி நிலைகள், 1) மரபுவழிச் சமுதாய அமைப்பு நிலை, 2) மேலெழுநிலைக்கு முந்திய நிலை, 3) மேலெழு நிலை, 4) முதிர்ச்சி நோக்கிய ஏற்ற நிலை, 5) உயர் அளவு நுகர்வுக் காலம் என்பனவாகும்.

மரபுவழிச் சமுதாய அமைப்பு நிலையில் தொழில் நுட்ப, அறிவியல் அறிவு மிகவும் குறைவாக இருக்கும். வேளாண்மை முக்கிய தொழிலாக இருக்கும். அரசியல் அதிகாரம் நிலப்பிரபுக்கள் கையிலிருக்கும். மரபுவழிச் சமுதாயம் மாறி அறிவியல் கண்டுபிடிப்புகளை அறிந்து பயன்படுத்திப் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய அடித்தளத்தை அமைத்துக் கொள்வது மேலெழுநிலைக்கு முந்திய நிலை எனப்படும்.

மேலெழு நிலையில் தொழில் நுணுக்க முன்னேற்றம் மிகவும் வேகமாக நடைபெறும். நாட்டு வருமானம் அதிகரிக்கும். மேலெழு நிலை என்பது சீரான வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாக இருந்த பழைய தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் இறுதியாக வெற்றி கொள்கின்ற இடைக்காலம். இதுவரை வரையறுக்கப்பட்ட நிலையில் விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டும், இக்கால நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டும் இருந்த பொருளாதாரச் சக்திகள் விரிவடைந்து சமுதாயம் முழுவதையும் ஆட்கொள்ளும். வளர்ச்சி அதனுடைய இயல்பு நிலையாகிவிடும்.

முதிர்ச்சி நோக்கிய ஏற்ற நிலையில் பொருளாதாரம் தொடர்ச்சியாக நிலையான முன்னேற்றத்தை அடைகின்ற வலுவான நிலைக்குச் செல்லும். நாட்டின் வருவாயில் பத்து விழுக்காடு முதல் இருபது விழுக்காடு வரை முதலீடு செய்வர். புதிய தொழில்கள் விரைந்து பெருகும். நாட்டின் இயற்கை வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படும். வேளாண்மையில் ஈடுபட்டவர்கள் எண்ணிக்கைகுறையும். நகரங்கள் பெருகும். மேலெழு நிலையிலிருந்து முதிர்ச்சி நோக்கிய ஏற்ற நிலையையடைய அறுபது ஆண்டுகள் வரை ஆகலாம்.

உயர்அளவு நுகர்வுக்காலத்தில் நாட்டின் உண்மையான தனியொருவர் வருமானம் கூடும். இதனால், மக்களின் நுகர்வு உச்சக்கட்டத்தில் இருககும். தொழிலாளர்கள் மிகுந்த தொழில் நுட்பத்தைப் பெற்றிருப்பார்கள். ஆதலால், மேலும் தொழில் நுட்ப மாற்றங்களுக்குத் தேவையிருக்காது. பொருட்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். மக்கள் நகரங்களில் மிகுதியாகச் சென்று குடியேறுவார்கள். தொழிலாளர்கள் தங்கள் நலனைக் காக்கத் தொழிற் சங்கங்களை அமைத்துக்கொள்வார்கள். இக்காலத்தில் சமுதாய நலத்திற்காக மிகுதியாகச் செலவிடுவார்கள்.

ம. க.

**துணை நூல்கள்**:

**Jhingan M. L.,** Macro Economic Theory, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1984.

**Patel I.G.,** Essays in Economic Policy and Economic Growth, The Macmillan Press Ltd., London, 1986.

**பொருளாதார வீக்கம்**: எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளிலும் ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன. ஒரு தொழிலில் அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அல்லது நாட்டில் இத்தகைய ஏற்ற இறக்கங்களைக் காணலாம். சிலநேரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றன. வேறு சில காலங்களில் இந்த நடவடிக்கைகள் வேகம் குறைந்து காணப்படுகின்றன. இத்தகைய ஏற்ற இறக்கங்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட கால அளவில் மாறி மாறித் தோன்றுகின்றன. இவை வாணிகச் சுழல்கள் என்று சொல்லப்படுகின்றன.

பலவகையான பொருளாதார அமைப்புகளிலும் இந்தச் சுழல்கள் தோன்றலாம். அரசின் கட்டுப்பாடுகள் மிகுதியாக உள்ள பொருளாதாரங்களில் இச்சுழல்களின் தீவிரத்தன்மை குறைவாகக் காணப்படுகின்றது. கட்டுப்பாடுகள் குறைந்த முதலாளித்துவப் பொருளாதாரங்களில் இச்சுழல்கள் தெளிவாகத் தோன்றுகின்றன.

இந்தப் பொருளாதார ஏற்ற இறக்கங்களில் பல நிலைகள் உள்ளன. ஒரு முழுமையான வாணிகச் சுழலில் கீழ்க்காணும் நான்கு நிலைகள் உள்ளன. அவை, 1) விரிவாக்கம், 2) உச்சநிலை அல்லது வீக்கம், 3) பின்னடைவு, 4) மந்தம் என்பன ஆகும்.

ஒருநாட்டில், பொருளாதார நடவடிக்கைகள் விரைந்து விரிவாக்கம் பெற்றுச் செழிப்பின் உச்சக் கட்டத்தை அடையும் நிலையை உச்சநிலை அல்லது வீக்கம் (Boom) எனலாம்.

உச்சநிலையில் வாணிகம், தொழில் ஆகியவை நன்கு விரிவாக்கம் பெற்றிருக்கும். எதிர் காலத்தைப் பற்றிய நல்ல நம்பிக்கையுடன் முதலீட்டாளர்களும், வணிகர்களும் செயற்படுகின்றனர். சுருக்கமாகக் கூறினால் இது விரிவாக்கம் அடைந்து வரும் பொருளாதாரத்தில் செழிப்பின் உச்ச நிலையாகும். இந்த நிலைக்குப் பின் பொருளாதாரப் பின்னடைவு தோன்றுகின்றது.

**பொருளாதாரச் சூழ்நிலை**: வீக்கம், விரிவாக்கத்தின் எல்லையாக உள்ளது. விரிவாக்கக் காலத்தில் நுகர்வு, உற்பத்தி, புதிய முதலீடுகள், நாட்டு வருவாய், தனிஆள் வருவாய் ஆகியவை விரைந்து பெருகுகின்றன; விலைகளும் கூடுகின்றன. விரிவாக்கத்தின் எல்லையான வீக்கத்தில் கடன், வட்டி, ஆதாயம் ஆகியவை மிகுதியாகக் கூடும். எல்லா வகையான பொருளாதார நடவடிக்கைகளும் எதிர் காலத்தைப் பற்றிய நல்ல நம்பிக்கையோடு நடக்கும்.

எனினும், அத்தகைய நிலை தொடர்ந்து நீண்டகாலம் நீடிப்பதில்லை. நீடித்து உழைக்கும் பொருட்களின் தேவையில் தேக்கம் ஏற்படுகின்றது. வட்டி அதிகமாவதாலும், தேவையில் விரிவாக்கம் இல்லாமையாலும் முதலீடு குறைகின்றது. எனவே, வீக்கம் அல்லது உச்சநிலை தொடர்ந்து நீடிக்காமல் பொருளாதாரத்தில் பின்னடைவுக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்குகின்றன.

**வீக்கம் ஏற்படும் விதம்**: நல்ல ஆதாயம் கிடைக்கும் என்ற சூழ்நிலையில் வாணிகத்திலும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளோரின் மனத்தில் எதிர்காலத்தைப் பற்றிய நல்ல நம்பிக்கை இருக்கும். முதலீடுகளைக் கூட்ட முயலுவார்கள். அதற்குச் சாதகமாக முதலீட்டிற்கான பணம் குறைந்த வட்டியில் கிடைத்தால் முதலீடுகள் வேகமாகப் பெருகும்.

இவ்வாறு முதலீடு பெருகும்போது வேலைவாய்ப்புகள் அதிகமாகின்றன. சமுதாயத்தில் வருவாய் கூடுகின்றது. மிகுந்த வேலைவாய்ப்பு, வருவாய் ஆகியவற்றின் விளைவாக மொத்தத் தேவை விரிவடைகின்றது. இது மேலும் முதலீட்டாளர்களுக்கும் வணிகர்களுக்கும் ஊக்கம் அளிக்கின்றது. முதலீடு தொடர்ந்துபெருகும். பணப்புழக்கம் கூடும். பணப்புழக்க வேகமும் பண அளவும் மிகுதியாகும். பொருளாதாரத்தின் உற்பத்திச் சாதனங்கள் யாவும் முழுமையாகப் பயன்படுத்தப்படும். சுருங்கக் கூறுவதாயின், பொருளாதாரத்தில் பலவகையான நடவடிக்கைகளும் விரைந்து பெருகுகின்றன; பொருளாதாரம் செழிப்பு நிலையை அடைகிறது எனலாம்.

அதே சமயம் இக்காலத்தில் கூலி, வாரம், வட்டி, ஆதாயம் ஆகியவை மிகுந்து இருக்கும். தொழில் முனைவோர்கள் தொடர்ந்து முதலீட்டைக் கூட்டுவார்கள். அந்த நிலையில் பொருளாதாரத்தில் அளவுக்கு அதிகமான முதலீடு ஏற்படுகின்றது. அந்நிலையில் மக்களிடையே எல்லா வகையான உற்பத்திப் பொருட்களுக்கும் தொடர்ந்து தேவை கூடுவதில்லை. எனவே, பொருளாதாரம் வீக்க நிலையை அடைகின்றது. ஒரு வகையில் செழிப்பு நிலையின் உச்சக் கட்டம் வீக்கம் எனலாம்.

**கட்டுப்படுத்த வேண்டிய தேவை**: வெளிப்படையாக நோக்கும்போது, பொருளாதாரத்தில் வீக்க நிலை, பெரும் தீங்கு விளைவிக்கக் கூடிய நிலையாகத் தோன்றுவதில்லை. ஏனெனில், அது செழிப்பின் உச்சக் கட்டமாக உள்ளது. ஆனால், பொருளாதார மந்தத்தைப் போலவே வீக்கமும் தீய விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடியதாகும்.

பொருளாதாரம் வீக்க நிலையை அடையும் போது தேவைக்கும், சக்திக்கும் மீறிய வளர்ச்சியை அடைகின்றது. செழிப்பின் காரணமாகத் தேவைக்கு மீறிய முதலீடு செய்யப்படுகின்றது. தொழில் மற்றும் வாணிகத்தில் கிடைக்கும் மிகை ஆதாயம் திறமையற்ற தொழில் முனைவோரையும் ஈர்க்கின்றது. தொடர்ந்து தேவையில் விரிவாக்கம் இருக்குமா என்பதை ஆராயாது முதலீடு பெருகும்போது தேவைக்கும் மிகுதியான உற்பத்தித் திறன் உருவாக்கப்படுகின்றது.

நல்ல ஆதாயம் கிடைத்து வந்தால் மிகுந்த வட்டி கொடுக்கப் பல முதலீட்டாளர்களும் வணிகர்களும் முன் வருவர். மேலும் முதலுக்குத் தேவை கூடுவதால் வட்டியும் கூடுகின்றது.

அவை எல்லாம் வீக்கத்தை ஒட்டித் தோன்றுபவையாகும். அவற்றின் விளைவாக வீக்கத்தில் தொடர்ந்து பின்னடைவு தோன்றுகின்றது. வீக்கத்தை நீர்க் குமிழுக்கு ஒப்பிடலாம். அது மிகக் குறுகிய காலத்தில் மறைந்துவிடுகின்றது. எனவே, பொருளாதாரத்தில் பின்னடைவுக்கான சக்திகளை வீக்கம் உள்ளடக்கியுள்ளது.

அதன் காரணமாக, பொருளாதார விரிவாக்கமும், செழிப்பும் வீக்கநிலையை அடையாதவாறு கண்காணிக்க வேண்டியது தேவையாகும்.

**வீக்கத்தைத் தவிர்க்கும் வழிகள்**: அரசு தனது 1) பணத்துறை நடவடிக்கை, 2) நிதித்துறை நடவடிக்கை, 3) நேரடியான சில கட்டுப்பாடுகள் ஆகியவற்றினால் பொருளாதார வீக்க நிலை நாட்டில் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

மைய வங்கிகள் மூலம் அரசு அளிக்கும் கடன்களின் அளவைக் குறைத்து முதலீடு கூடுவதைத் தவிர்க்கலாம். வட்டிவிதத்தை மிகைப்படுத்துதல், தேர்வுக் கடனளிப்பில் கட்டுப்பாடுகள் விதித்தல் ஆகியவற்றை அரசு மையவங்கி மூலம் கைக்கொள்ளலாம். அவற்றைக்கொண்டு மொத்தக் கடன் அளவு அல்லது ஒரு குறிப்பிட்ட துறைக்கு அளிக்கப்படும் கடன் அளவு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தலாம். அத்தகைய மைய வங்கியின் நடவடிக்கைகள் பொதுவாகப் பணத்துறை நடவடிக்கைகள் எனப்படுகின்றன.

அரசின் செலவுகளை முறையாக ஆராய்ந்து கட்டுப்படுத்துவதும் வீக்கத்தைத் தவிர்க்க உதவும். ஆனால், தனியார் துறையின் பங்குகள் மிகுதியாக உள்ள பொருளாதாரங்களில் அம்முறை நல்ல பயனை அளிக்காது. அத்தகைய நடவடிக்கைகள் நிதித்துறை நடவடிக்கைகள் எனப்படுகின்றன. பொதுவாக வீக்கத்தைத் தவிர்க்க நிதித்துறை நடவடிக்கைகளை விடப் பணத்துறை நடவடிக்கைகள் சிறப்பானவை எனக் கருதப்படுகின்றன.

அவைதவிர நுகர்வுக் கட்டுப்பாடு, விலைக் கட்டுப்பாடு, முதலீட்டை நெறிபடுத்துதல் போன்ற நேரடி நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளலாம். தேவைக்கு மிஞ்சிய நுகர்வைத் தொடக்கத்தில் கட்டுப்படுத்துவது வீக்கத்தைத் தவிர்க்கும். விலைகள் அளவு கடந்து கூடுவதைத் தவிர்ப்பதன் மூலமும் வீக்கம் தோன்றும் போக்கைக் கட்டுப்படுத்தலாம். முதலீடு அளவுகடந்து பெருகுவதை அரசு நேரடியாகக் கட்டுப்படுத்துவது வீக்கத்தைத் தவிர்க்கச் சிறந்த முறையாகும். பா.அ.

**துணை நூல்கள்:**

**Alfred, W. Stonier & Douglas, C.Hague.**, A Text Book of Economic Theory, Layman Group Ltd., London, 1982.

**David, W. Peare.**,The Dictionary of Modern Economics, The Macmilean Press Ltd., London, 1983.

*பொருளியல் கருத்துகளின் வளர்ச்சி*: பொருளியலைப் பற்றிய சிந்தனை இன்று நேற்று எழுந்ததன்று. நினைவிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே அது பேசப்பட்டு வருகிறது. ஏனெனில் மனித சமுதாயத்தின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் பொருளைச் சேர்த்துக் குவிக்கும் எண்ணம் மேலோங்கியிருக்கிறது. அதனால்தான் பழமை வாய்ந்த சமூக, மத, அரசியல் நூல்களில் ஆங்காங்கே பொருளியலைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle), சாக்ரடிசு (Socrates) போன்ற மாபெரும் அறிஞர்களும் பொருளியலைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, விரைவாகப் பரவும் அங்காடிப் பொருளாதாரத்தைச் (Market Economy) சாக்ரடிசு சாடுகிறார். இது பணம் சிலரிடம் குவிவதைத் தூண்டும் என்பது அவர் கருத்து. வணிகர்களின் ஆதாயம் சேர்க்கும் போக்கைப் பிளேட்டோ எதிர்க்கிறார். வட்டி வாங்குவது தவறு என்பது அரிசுடாட்டிலின் கருத்து. கௌடில்யரின் அர்த்தசாத்திரம் பொருளியலைப் பற்றிக் கூறுகிறது.

பகவத்கீதை, விவிலியம், குரான் போன்ற மத நூல்களும் பொருள் சார்ந்த கருத்துகளைக் கூறுகின்றன. உலக இலக்கியங்களில் பெரும்பாலானவை ஏழை-பணக்கார வேறுபாட்டைப் பற்றி எடுத்துரைப்பவையாக இருக்கின்றன. 'பொருட்பால்' என்ற தனிப்பெரும் பிரிவைக் கொண்டது வள்ளுவரின் திருக்குறள். இவை எல்லாம் பொருளைப் பற்றிய சிந்தனை எந்நாளும் இருந்து வந்திருக்கிறது என்பதற்குச் சான்றுகளாகும்.

ஆனால், இவை யாவும் பொருளியல் கருத்துகளை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சுட்டிக் காட்ட மட்டுமே செய்தன. அறிவியலடிப்படையில் முறைப்படி ஆராயப்பட்டு, உலகத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிலைத்து நிற்கும் அறிவியலாகப் 'பொருளியல்' சிறப்பாக வளர்ந்தது அண்மைக் காலத்தில்தான். 'பொருளியலின் தந்தை' எனக் குறிக்கப்படும் ஆதம் சுமித்து (Adam Smith) என்பவர் கி.பி. 1776-இல் 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) என்னும் நூலை வெளியிட்டார். அதுவே பொருளியலை முறைப்படி ஆராய்ந்த முதல் நூலாகும். அன்று முதல் கடந்த 200 ஆண்டுகளாகப் பொருளியல் கருத்துகள் முறைப்படி வளர்ந்து வருகின்றன.

பொருளியல் கருத்து என்பது பொருளாதாரச் சிக்கல்களையும், அவற்றின் தீர்வுகளையும், பொருளியல் தொடர்பான கோட்பாடுகள், விதிகள், ஆய்வுகள் ஆகியவற்றையும் குறிப்பிடுவது ஆகும். பொருளியல் கருத்துகள் என்றும் நிலையாக இருப்பவை என்று கூற முடியாது. அவை காலத்திற்குக் காலம் மாறக்கூடியவை. இதற்குத் தலையாய காரணம் பொருளியல் ஒரு சமூக அறிவியல் (Social Science) என்பதாகும். இந்த மாற்றமே பொருளியல் சிந்தனைகளின் வளர்ச்சி (Evolution of Economic Thoughts) என்று கூறப்படுகிறது. பொருளியல் சிந்தனையின் வளர்ச்சியால் புதுப்புதுக் கருத்துகளும், அணுகுமுறைகளும், ஆய்வு முறைகளும் ஏற்படுகின்றன.

**இக்கருத்துகளின் வளர்ச்சி வரலாறு:** பழங்காலத்தில் மனிதனுக்குத் தேவையானவை மிக்கசிரம

மின்றிக் கிடைத்தன. ஆற்றோரங்களிலும், வளமான இடங்களிலும் வாழ்ந்தவனுக்குப் பொருளாதாரச் சிக்கல்கள் அவ்வளவாக இல்லை. இடைக் காலத்தில் (Middle Ages) பொருளியல் கருத்துகள் பேசப்பட்டாலும் அவற்றை ஆராய்வதில் யாரும்நாட்டம் கொள்ளவில்லை.ஆனால் கலை,அரசியல்,மதம்,இனம் என்னும் உணர்வும், சிந்தனையும் அப்போது வளர்ந்திருந்தன. காலப்போக்கில் 'முதலாளித்துவம்' வளரத் தொடங்கியது. அது பணவீக்கம், அதிக உற்பத்தி, வேலையில்லாத் திண்டாட்டம் என்று பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களை உண்டாக்கிச் சமூக அரசியல் குழப்பங்களைப் பெரிதும் ஏற்படுத்தியது. இதைத் தீர்க்கப் பல்வேறு பொருளியல் ஆய்வுகளும், கருத்துகளும் உருவாயின. அவை உலகிலுள்ள பலவகைப் பொருளியல் பள்ளிகளின் (Schools of Economics) சிந்தனையாளர்களால் உருவாக்கப்பெற்றன. அந்தக் காலக் கட்டத்தில்தான் பொருளியல் கருத்துகளின் வளர்ச்சிக்கு ஓர் எழுச்சி கிடைத்தது. முதலாளித்துவத்திற்கு மாறாக பொதுவுடைமைக் கருத்துகளும், சமதரும சமுதாயக் கருத்துகளும் உதித்தன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 'திட்டம்' தொடர்பான பல ஆய்வுகள் எழுந்தன. அதன் பின்னர் ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் அரசின் பங்கு எவ்வாறெல்லாம் இருக்க முடியும் என்பது பேசப்பட்டது. இப்போது பொருளாதார முன்னேற்றம், வளர்ச்சி என்பன பற்றிப் பெரிதும் ஆராயப் பட்டுவருகிறது. இவ்வாறு பொருளியல் கருத்துகள் மாறிக்கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கின்றன.

**பொருளியல் கருத்து ஆய்வு முறைகள்:** பொருளியல் கருத்துகளை உருவாக்கப் பொருளியலறிஞர்கள் பல்வேறு ஆய்வு முறைகளைப் பயன்படுத்தியிருப்பதைப் பொருளியல் வரலாறு தெளிவுபடுத்துகிறது. அவற்றுள் குறிப்பாக தொன்மைஅணுகுமுறை(Classical Approach),(ஆ) புதிய தொன்மை அணுகு முறை (Neo-Classical Approach), (இ)புதிய முறை (Modern Approach) என்பவற்றைச் சொல்லலாம். அவை முறையே பழைய பொருளியல் கருத்துகளின் ஆய்வினையும், அந்த ஆய்வின் தொடர்ச்சியையும், இப்பொழுது காணப்படும் முன்னேற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளையும் குறிக்கும்.

பொருளியல் கருத்துகளின் வளர்ச்சிப் பாதையில் பல பழைய கருத்துகள் மறுக்கப்பட்டுப் புதியவை உறுதிப்படுத்தப் பெற்றிருக்கின்றன. எனவே அவற்றை அறிய வேண்டியதில்லை என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் பொருளியலின் அடிப்படைக் கருத்துகளைப் புரிந்து கொள்வதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் அனைத்துக் கருத்துகளையும் தெரிந்திருப்பது இன்றியமையாதது. டி.ப.

**துணை நூல்கள்:**

**குருசாமி,மா.பா.,** பொருளாதாரச் சிந்தனை வரலாறு, வண்ணன் வெளியீடு, திருச்செந்தூர், 1984.

**Bhatia, H.L.,** History of Economic Thought, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1978.

**William, Fellner,** Modern Economic Analysis, McGraw-Hill Book Company, London, 1960.

**பொருளியல்சார் மானிடவியல்:** ஒரு சமூகத்தின் பொருளாதார அமைப்பினை அச்சமூகத்தின் பொருள் உற்பத்தி, ஊழியம்(Service), பங்கீட்டுமுறை, நுகர்வு (Consumption) ஆகியவற்றைக் கொண்டு புரிந்து கொள்ள முடியும். இதையே வேறு வகையில் கூறவேண்டுமானால் மனித சமூகங்களில் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு ஆகியவற்றை ஒழுங்கு செய்யும் நிறுவனங்கள் சமூகத்தில் பல உள்ளன. அவை பழங்குடி, ஊரகம், புதிய சமுதாயம் ஆகிய மூன்று சமுதாயங்களிலும் பல்வேறு நிலைகளில் செயற்படுகின்றன.

பொருளியல்சார் மானிடவியல் என்பது மனித சமுதாயங்களின் பொருளாதார அமைப்பினை ஆராய்கிறது. குறிப்பாக, எளிய சமுதாய அமைப்பினைக் கொண்ட பழங்குடிச் சமுதாயப் பொருளாதார அமைப்புகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை ஆராய்கிறது. பொருள்சார் மானிடவியல் குறித்த தகவல்கள் ஆய்வுகள் மூலம் சேகரிக்கப்படுகின்றன. பொருள்சார் மானிடவியலின் ஆய்வு முறைகளும், கோட்பாடுகளும் பெரும்பாலும் நாட்டுப்புறச் சமூகம், பழங்குடிச் சமூகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஆனால், அண்மைக் காலத்தில் மானிடவியலார் தொழில் வளர்ச்சியுற்ற புதிய சமுதாயங்களின் பொருளாதார முறையையும் ஆராய்கின்றனர்.

பழங்குடி, நாட்டுப்புறப் பொருளாதார அமைப்புகள் தொழில் வளர்ச்சியடைந்த சமூகங்களின் பணம் சார்ந்த (Monetized), அங்காடிசார்ந்த (Market) முறைகளிலிருந்து வேறுபட்டுள்ளன. அவ்வேறுபாடுகளை விளக்குவதும் தெளிவாக்குவதும் பொருள்சார் மானிடவியலின் ஆய்வாகும். தொடக்கக் காலப் படிமலர்ச்சி அடிப்படையிலான விளக்கங்களோடும் களஆய்வு நோக்கோடும் (Field Observation View) பொருளாதார அமைப்பினை இப்பிரிவு விவரிக்க முற்படுகிறது.

பழங்குடிகளின் பொருளாதாரம், அடிப்படையிலேயே உற்பத்தி, செலவு ஆகிய பொருளாதார வகையைச் சேர்ந்தது. பொருளாதார உபரி (Surplus)

தொடர்ந்து கூடுவது தேவைகளை ஈடு செய்யும். உணவு, வாழ்விடம், பாலுறவு ஆகிய தேவைகளில் மிகுதியாக ஈடுபடுவது மக்களின் நடத்தை முறைகளை மாற்றமடையச் செய்கிறது. மேலே குறிப்பிட்டுள்ள மூன்று தேவைகள் தவிர அவற்றின் தொடர்ச்சியாய் வருகிற மேலும் சில வகைத் தேவைகளையும் உபரி நிறைவு செய்கிறது. அத்தகைய வகையிலான பொருளாதார முறை, உற்பத்தி-செலவு-பங்கீடு வகையில் அடங்கும்.

பொருள்சார் மானிடவியலின் ஆய்வுமுறை சமூகப் பண்பாட்டு மானிடவியலில் பயன்படுத்தப்படும் அடிப்படை ஆய்வுமுறைகளை ஒத்ததே. அதைவிடுத்துப் பொருளாதார ஆய்வுகளுக்குப்(Economic Research) பயன்படும் உத்திகளை முழுவதும் பின்பற்றுவது, பழங்குடியினர், மேலை நாட்டவர் அல்லாத சமூகங்களின் பொருளாதார முறைகளில் குறைந்த அளவுப் பயனையே அளிக்கிறது.

**பரிமாற்ற முறைகள்: பண்டமாற்றம்:** பண்டமாற்ற முறையில் பொருள், ஊழியம் ஆகியவற்றின் பரிமாற்றம் பணத்தைப் பயன்படுத்தாமலே நடைபெறுகிறது. தொன்மைக் காலங்களில் பணம் கண்டுபிடிப்பதற்கு முன் இம்முறை வழக்கத்தில் இருந்தது. இப்பொழுதும்கூடப் பல சமூகங்களில் பண்டமாற்று முறை உள்ளது. பணத்தின் பயன் இக்காலத்தில் உலகம் முழுவதும் பழங்காலப் பண்டமாற்றுப் பழக்கத்தினை ஒழித்துவிட்டது.

சந்தை வளர்ச்சியடைந்ததற்கான தொடக்க அடித்தளமே பண்டமாற்று முறைதான். இதன் மூலம் நியாயவிலை, சமமதிப்புப் போன்ற கருத்துகள் பரிமாற்றத்திற்கு ஒரு நிலையான செலாவணி இல்லாத நிலையிலும் உருவாயின. அதனால் பேரம் பேசுதல் போன்ற செய்கைகளின் மூலம் பொருள்கள் கட்டுபடியான, நியாயமான விலையில் பெறப்பட்டன. ஒரு மனிதன் தன்னிடம் உபரியாக உள்ள உருளைக் கிழங்குகளைப் பண்டமாற்று முறை மூலம் பரிமாறிக் கொள்ள விரும்புவானேயானால், முதலில் அவன் தன்னுடைய உருளைக்கிழங்குகள் தேவைப்படும் மற்றொருவனைக் கண்டறிய வேண்டும். அடுத்த நிலையில் பரிமாறிக் கொள்ள விரும்பும் பொருள் அவனிடம் இருக்கிறதா எனவும் கண்டறியவேண்டும். பிறகு இவ்விருவரும் பேரம் மூலம் அடுத்தவன் தரும் பொருளுக்கு எத்தனை உருளைக் கிழங்குகள் தர வேண்டும் என்பதை முடிவெடுக்க வேண்டும்.

மானிடவியலறிஞர்கள் ஒரு குழுவிற்குள்ளோ ஒரு பழங்குடிச் சமூகத்திற்குள்ளோ வெவ்வேறு பழங்குடிச் சமூகங்களுக்கிடையேயோ நடைபெறும் பண்டமாற்று முறைகளைக் கண்டுபிடித்துள்ளனர். பெரும்பாலும் உள்ளுக்குள் நடைபெறும் பரிமாற்றங்கள் சடங்குப் பரிமாற்றங்களாகவே (Ceremonial Exchange) உள்ளன. ஆனால் இருவேறு குழுக்களுக்குள்ளே நடைபெறும் பண்டமாற்றம் அச்சமூகங்களின்பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்கின்றது. பண்டமாற்ற வகைகளிலேயே மிகவும் குறிப்பிடத்தக்கது 'மௌனப் பண்டமாற்றம்' (Silent Trade) ஆகும். அவ்வகையில் பண்ட மாற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கிடையே நேரடியான தொடர்புகள் இருப்பதில்லை. ஒரு குழுவினர் பரிமாறிக் கொள்ளும் பொருள்களை ஓரிடத்தில் விட்டுச் சென்று விடுவர். மற்றக் குழுவின் உறுப்பினர்கள் அவ்விடத்திற்குச் சென்று தங்களுக்கு அந்தப் பொருள் தேவையானால் முந்திய குழுவினருக்குத் தேவையான தம் பொருள்களை வைத்து விட்டு, அப்பொருள்களை எடுத்துச் சென்றுவிடுவர். இத்தகைய பண்டமாற்று 'பகை உறவு' உள்ள குழுக்களுக்கிடையேயும், உறவே இல்லாத குழுக்களுக்கிடையேயும், வெவ்வேறு மொழிபேசும் குழுக்களுக்கிடையேயும் நடைபெறுகிறது.

கலிபோர்னியாவிலுள்ள சிவப்பிந்தியர்களுக்கிடையேயும், காங்கோவிலுள்ள பிக்மி (Pygmy), பண்டு (Bantu) பழங்குடி ஆகியோர்களுக்கிடையேயும், நியூகினியாவிலுள்ள பழங்குடிகளிடையேயும் இத்தகைய மௌனப் பண்டமாற்றம் நடைபெறுகிறது.

பழங்குடிகளுக்கிடையிலான பரிமாற்றம் பலசமயங்களில் தொழில் கூட்டாளிகள் (Trade Partners) உறவாவதில் முடிவடைகிறது. இவ்வுறவு பலகுழுக்களைச் சங்கிலித் தொடராய் இணைக்கிறது. இத்தொடர் பல நூறு கி.மீ. கடந்தும் செல்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக இக்காலங்களில் கூட ஆசுத்திரேலியப் பழங்குடிகளுக்கிடையே நிகழும் ஒரு பண்டமாற்றினைக் கூறலாம். ஆசுத்திரேலியாவின் தென் பகுதியிலுள்ள பழங்குடிகளிடமிருந்து கற்கோடரிகள் (Stone Axes) பல நூறு கி.மீ. கடந்து வட பகுதியைச் சென்றடைகின்றன.

**நேரடிப் பரிமாற்றம்:** பரிசளித்தல்-நிகழ்வில் பரிசை ஏற்றுக் கொள்பவர்க்கு அப்பரிசுப் பொருள் தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் அதை மறுப்பது அவ்வளவு எளிதன்று. அவ்வாறு மறுக்கப்படுமானால் பரிசளித்து அவமானப்பட்டவர் மறுத்தவருடைய பகைவராவார். பரிசளித்தலும் திரும்பப் பெறுதலும் முற்காலத்திலிருந்தே சமாதானத்தையும் நட்புறவையும் வலுப்படுத்தப் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. பரிசுபெறுபவர் பரிசினைப்பெற்றுக் கொள்வது மட்டுமன்றி, உடனடியாகவோ கால தாமதமாகவோ அப்பரிசுக்குச் சமமான மதிப்புள்ள வேறொரு பரிசுப்

பொருளினைத் திருப்பிக்கொடுக்கும் கடமையுடைய வராகிறார்.

பல பழங்குடிச் சமூகங்களில் பரிசளித்தல், பொருட்களைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற பழக்கங்கள் உள்ளன. அவர்களிடம் பெருந்தன்மை, தாராள குணம் போன்றவை மதிக்கப்படுகின்றன. எதிர்பார்ப்பின்றி அளிக்கப்படும் பரிசுப்பொருட்கள், தனித்தகுதியை வழங்கும் பரிசுப் பொருள்கள் ஆகியன இணைப்பை வலுப்படுத்துதற்கும், சமாதானத்திற்கும், சில சமயங்களில் அவர்கள் வாழிடங்களில் கிடைக்காத பொருட்களைப் பெறுதற்கும் அளிக்கப்படுகின்றன. இத்தகைய நேரடிப் பரிமாற்றம் தனி மனிதர்களுக்கிடையேயன்றிச் சமூகங்களுக்கிடையேயும் நிலவும். திருமணங்களில் பரிசளித்தல் சமூகத்தவரிடையே நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்துகிறது. தொழில் கூட்டாளிகள் என்னும் சமூகமுறை பல சமூகங்களில் காணப் படுகிறது. தொழில் கூட்டாளிகள் என்பவர்கள் ஒருவரோடொருவர் பரிமாற்ற முறைகளில் ஈடுபடுபவர்களாவர். அவர்களிடம் சிலநேரங்களில் உடனடியாகப் பரிசுப் பொருட்கள் திருப்பப்படுதல் இல்லாமலிருக்கலாம். ஆனால், காலப்போக்கில் பரிசளித்தவர் தம்தொழில் கூட்டாளி பரிசினைத் திருப்பியளித்து விடுவர் என எதிர்பார்ப்பர்.

**குலா வளையம்**: இது மானிடவியல் ஆய்வுகளில் சிறப்பிடம் பெற்றது. திரோபிரியாண்டுத் தீவுகளில் (Trobriand Islands) வசிக்கும் பழங்குடிகள் வள்ளிக் கிழங்கினைப் (Yams) பெருமளவு உற்பத்தி செய்யும் உழவர்களாவர். மீன் பிடித்தல் அவர்களுடைய மற்றொரு தொழில். அவை தவிர அத்தீவுகளில் தென்னை, பனை, ஈரப்பலா (Bread Fruit), மாமரம் ஆகியவையும் மிகுதியாக உண்டாகின்றன. தாங்கள் மீன் பிடிக்கப் பயன்படுத்தும் சிறு வள்ளங்களைக் கொண்டு அவர்கள் பிற தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றனர். அத்தகைய சுற்றுப்பயணங்கள் 'குலா வளையத்துடன்' (Kula Ring) தொடர்புற்றிருக்கின்றன.

குலா என்பது ஒரு வகையான சடங்குப் பரிமாற்றம் (Ceremonial Exchange). இது பல தீவுகளிலுள்ள வெவ்வேறு பழங்குடி மக்களிடையே நடைபெறுகிறது. இதில் இருவகையான மதிப்பு மிக்க பொருள்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. அவை சிவப்புக் கிளிஞ்சிற் சிப்பிகளாலான கழுத்தணிகள், வெள்ளைக் கிளிஞ்சிற் சிப்பிகளாலான கைவளையங்கள் ஆகியனவாம்.இதில் கழுத்தணிகள் வலத் திசையிலும் (Clock wise),கை வளையங்கள் அதற்கு எதிர்த் திசையிலும் (Anti-clock wise) பரிமாறிக் கொள்ளப் படுகின்றன. அவற்றோடு உணவுப் பொருட்களும், பிற இன்றியமையாப் பொருட்களும் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. ஒருவனிடம் தன் தொழில் கூட்டாளிக்குக் கொடுக்க வேண்டிய பொருளும்,அதே சமயம் தன் கூட்டாளியிடம் தனக்குத் தேவையான பொருளும் இருக்குமானால் பரிமாற்றம் தொடங்குகிறது. இத்தகைய தொழில் கூட்டாளியை ஒருவன் தன் தந்தையின் வழியிலோ தாய் மாமன் வழியிலோ பெறலாம். அரசகுடும்பத்தினர் நூற்றுக்கணக்கில் இது போன்ற கூட்டாளிகளை வைத்திருக்கின்றனர். ஆனால்,பொதுவான மனிதர்களுக்கு ஒருசில கூட்டாளிகளே உண்டு. இவ்வுறவுவாழ்க்கை முழுவதும்தொடர்கின்ற ஒன்று. இது மேலும் பல்வேறு மொழி பேசுகிற பல்வேறு தீவுகளைச் சேர்ந்த மனிதர்களை உள்ளடக்கியது. கழுத்தணிகளையும் கைவளையங்களையும் தங்களுக்கிடையே பரிமாறிக்கொள்கையில் பொருள்களையும் பரிமாறிக் கொள்கின்றனர். ஒரு மனிதன் ஒரு கழுத்தணியையோ கைவளையத்தினையோ நீண்ட நாள்கள் வைத்திருக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட ஒழுங்கான சுற்றுவழியில் அது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாறிக் கொண்டேயிருக்கும். இவ்வாறு ஈடுபட்டிருக்கும் சில கைவளையங்களுக்கும், கழுத்தணிகளுக்கும் நீண்ட வரலாறுகள் உண்டு. இவ்வளையம் பல நூறு கி.மீட்டர்களைக் கொண்டது. இப் பொருட்கள் பொதுவாகவே தான் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வர இரண்டிலிருந்து பத்து ஆண்டுகள் வரையிலும் ஆகின்றன. குலா பரிமாற்றத்தில் பொருள் மதிப்புப் பற்றிப் பேசுதல், பேரம் பேசுதல் ஆகியவை இல்லை. இது உடனடியான அல்லது சற்றுக் காலந் தாழ்த்திய பரிமாற்றத்தினைக் கணக்கில் கொண்டிருக்கிறது. இதனோடு பலவகையான மந்திரமும், சடங்குகளும் இணைக்கப் பட்டிருக்கின்றன. மேற்குறிப்பிட்ட குலா போன்ற முறையினை ஆசுத்திரேலியாவிலிருக்கும் பழங்குடிகளும் பின்பற்றுகின்றனர்.

**மறு பங்கீடு**: மறுபங்கீடு (Redistribution) என்பது ஒரு பொருளாதார வழி முறை. இதன் மூலம் பொருட்கள் ஒரு மைய இடத்தில் குவிக்கப்படுகின்றன. பிறகு அவை ஒரு மைய நிருவாகத்தின் மூலம் அனைவருக்கும் மீண்டும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

திரோபிரியாண்டு மக்கள் (Trobriand Islanders) திருமணமான தங்களின் சகோதரிகளுக்குத் தொடர்ந்து ஆண்டுதோறும் வள்ளிக்கிழங்குகள் (Yams) கொடுக்க வேண்டியது தம் கடமை என எண்ணுகின்றனர். பெரும்பாலான திரோபிரியாண்டு பழங்குடிகள் ஒருதுணை மண முறையைப்(Monogamy) பின்பற்றுகின்றனர். ஆனால் அரசன் அறுபது மனைவிகள் வரை கொண்டிருக்க அனுமதி உண்டு. இவ்விதம் மிக்க எண்ணிக்கையில் மனைவிகளைக் கொண்டிருப்

பதினால் அரசனுக்கு மிக்க எண்ணிக்கையுடைய மைத்துனர்கள் (Brothers - in-law) உள்ளனர். அவர்களனைவரும் தங்களின் கடமையான வள்ளிக் கிழங்குகளைத் தங்களின் சகோதரிகளுக்கு அளிப்பதன் மூலம் அரசனுக்கு மிக்க அளவில் இவ்வள்ளிக் கிழங்குகள் குவிகின்றன. மாலினோசுகியின் (Malinowski) ஆய்வுப்படி ஓர் அரசன் ஆண்டிற்கு 300 முதல் 350 கண்டி வரையிலான வள்ளிக்கிழங்குகளைப் பெறுகிறான். இது பிற சமயங்களில் அவர்களுக்கு விருந்தளிக்கவும் பகிர்ந்தளிக்கவும் வாய்ப்பினை அளிக்கிறது. சில ஆப்பிரிக்கப் பழங்குடிகள் விளையும் பொருள்கள் அனைத்தையும் தலைவனிடம் ஒப்படைக்க வேண்டும். அவன் பின்னர் அனைத்துக் கால்வழியினருக்கும் அவற்றை மறுபங்கீடு செய்து கொடுப்பான்.

**தகுதிகாட்டுச் சடங்கு**: இம்முறையில் பெரும் அளவில் பொருட்கள் வழங்கப்படுகின்றன. வடஅமெரிக்காவிலுள்ள, பிரிட்டிசு கொலம்பியாவின் கடற்கரையோரங்களில் வசித்து வரும் குவாக்யூட்டல்(Kwakiutal) இந்தியர்களிடையே இப்பழக்கம் நிலவி வருகிறது. மீன்பிடித்தல், கடல் விலங்குகளை வேட்டையாடுதல் போன்றவையே இவர்களின் முதன்மைத் தொழிலாகும். ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் உரோம வாணிகம் புகுத்தப்பட்டது. அதன் மூலம் உரோமக் கம்பளிகள் உருவாக்கப்பட்டன. இதுவே ஒரு வகையான செலாவணியாகவும் செயற்படுத்தப்பட்டது. மேலும் இவர்கள் மிக உயர்ந்த பொருளாக அலங்கரிக்கப்பட்ட தாமிரத் தகடுகளைக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு தாமிரத் தகடும் நூற்றுக்கணக்கான உரோமக் கம்பளிகளை விலையாகக் கொண்டது. தாமிரத் தகடுகளையும், உரோமக் கம்பளிகளையும் பகிர்ந்தளிக்கும்நிகழ்ச்சியே ஒருவகைத்தகுதி காட்டுச் சடங்கு (Potlatch) என்பதாகும். அந்நிகழ்ச்சி ஒரு பெண் பருவமடையும்போதும் திருமணம், இறுதி மரியாதை ஆகிய சமயங்களிலும் நடைபெறும்; மேலும் ஓர் அரசன் தன்னுடைய வாரிசினைத் தேர்ந்தெடுக்கும்போதும், ஒரு பழங்குடி மக்கள், மற்றொரு பழங்குடி மக்களுக்கு விருந்தளிக்கும் போதும் நடைபெறும். இச்சமயங்களில் ஆண்கள் தாங்கள் சேகரித்த மீன்களையும், பெண்கள் தாங்கள் சேகரித்த கிழங்குகள், பழங்கள் ஆகியவற்றையும் அரசனுக்கு அளிப்பர். இவ்விதம் சேரும் பொருட்களைக் கொண்டு ஒரு மாபெரும் விருந்தினை அளிக்க அரசன் முன்வருவான். மேற்சொன்னவற்றோடு உரோமக் கம்பளிகளும் சேகரிக்கப்பட்டு விருந்தாளிக்கு அளிக்கப்படும். இவ்வகை விருந்து சமயங்களில் பகிர்ந்தளிக்கப்படும் பொருட்களை யாரும் திருப்பித் தரவேண்டியதில்லை. இச்சமயங்களில் சொத்துகளை உடைத்தலும், எரித்தலும் நடைபெறும். மிக்க விலையுள்ள தாமிரத் தகடுகளை சிதைத்தலும், மிக்க எண்ணிக்கையில் உரோமக் கம்பளிகளை எரித்தலும், வாளி வாளியாக மீன் எண்ணெயை நெருப்பில் கொட்டுதலும் போன்றவை அரசர்களின் தகுதியினை உயர்த்தும். மிகுதியாக நாசமாக்குவோர் உயர்ந்த தகுதியுள்ளவராகக் கருதப்படுகிறார். அவற்றுள் தாமிரத் தகடுகளை சிதைப்பதுவே உச்சக்கட்டமாகும். தகுதிகாட்டுச் சடங்கு பின்காணும் மூன்று தலையாய வேலைகளைச் செய்கிறது. இச்சடங்குகள் தகுதி, உயர்நிலை ஆகியவற்றில் மாற்றங்களை வரையறை செய்கின்றன; பழங்குடிகளிடையே ஒற்றுமையை முதன்மைப்படுத்துகின்றன; அவர்களுடைய பொருட்கள் ஒரு மையத்திலிருந்து பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பழங்குடிக்குள்ளும் ஒருவர் அவரது தகுதியைக் காட்ட இவ்வகைச் சடங்கினை நிகழ்த்தி அனைவருக்கும் விருந்தளித்துப் பொருட்களைக் கொடுப்பதுண்டு.

**சந்தையும் வணிகமும்**: பல சமூகங்களில் பணம், சந்தை ஆகியவற்றின் குறுக்கீடின்றிப் பொருளாதாரம் நடைபெறுகிறது. அச்சமூகங்களிலுள்ள குடும்பங்கள், பெரும்பாலும் தன்னிறைவு உடையனவாய் இருப்பின் தமக்குத் தேவையான தானியங்களை விளைவிப்பதன் மூலமும் தேவையான விலங்கினங்களைக் கொண்டிருப்பதன் மூலமும், மேலும் தேவையான ஆடைகளை நெய்து கொள்வதன் மூலமும் சந்தையின் தேவை இல்லாமற் போய்விடும்.மேலும், சமயங்களில் தேவையான பொருட்களைப் பெறப் பண்டமாற்று முறை கையாளப்படுகிறது. ஆனால் தனித் துறைப் பயிற்சி, வேலைப்பங்கீட்டுமுறை(Division of Labour) ஆகியவற்றின் வளர்ச்சியினூடே பண்டமாற்று முறை நடைமுறைக்கு ஒவ்வாததாகிறது. இதைத் தொடர்ந்து உலகின் பல்வேறு இடங்களில் நாணயத்தினைக் கருவியாகக் கொண்டு பரிமாற்றமும் சந்தை முறையும் தோன்றலாயின.

சந்தை என்பது பொருட்கள் வணிகத்திற்குக் கொண்டு வரப்பட்டு விற்கும் இடமாகும். இங்கே விற்பனையாளர்களும், வணிகர்களும் குழுமுவர். இங்கே பொருட்களின் விலை, அளிப்பு (Supply), தேவை (Demand) ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பொருளை எவ்வளவு மக்கள் விரும்புகின்றனர் என்பதையும் அதற்கு மக்களால் எவ்வளவு விலை தர முடியும் என்பதையும் பொறுத்து விலை இருக்கும். இம்முறையில் ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளுதலோ மறுபங்கீடு செய்தலோ நிகழவில்லை என்பதால் வாங்குபவர் எவ்வளவு குறைவான விலைக்குப் பெறமுடியும் என்பதிலும், விற்பவர் எவ்வளவு மிகுதியான இலாபம் பெறமுடியும்

என்பதிலும் குறியாய் இருப்பர். இருதரப்பாருமே தேவையற்ற பரிமாற்றங்களைத் தவிர்த்துவிடுவர். விற்பவருக்கும் வாங்குபவருக்குமிடையே எவ்வகைத் தொடர்ச்சியான உறவும் இல்லை. அவர்கள் விருப்பப் படி பரிமாறிக் கொள்ளலாம். சந்தைமுறை அனைத்து வேளாண்மைச் சமூகங்களிலும் தோட்டச் சமூகங் களிலும் (Horticultural Societies) இல்லை; ஆனால், பெரும்பான்மையான சமூகங்களில் காணப்படுகிறது. பாலினீசிய சமூகங்களில் இல்லை.

சந்தை முறை ஒரு பொதுவான நாணயத்தைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்துகிறது. மைக்ரேனே சியப் பழங்குடிகள் கிளிஞ்சில், சிப்பிகள் ஆகியவற்றை யும், அசுடெக்குகள் (Aztec) ஒருவகைக் காயையும், வளர்ச்சியடைந்த சமூகத்தினர் நாணயச் செலாவணி யையும் பயன்படுத்துகின்றனர்.

பரிமாற்ற முறைகளில் நேரடிப் பரிமாற்றம் மறு பங்கீட்டு முறைக்கு (Redistribution) முந்தியதாகவும், அதுபோலவே மறுபங்கீட்டுமுறை சந்தை முறைக்கு முந்தியதாகவும் உள்ளன. ஆயினும், சந்தைமுறை நெடுங்காலத்திற்கு முன்பே நடைமுறையில் இருந்து வந்துள்ளது. முதன் முதலில் ஏற்பட்ட நகரச் சந்தை (City Market) கி.பி.5-ஆம் நூற்றாண்டில் ஏதென்சில் இருந்த அகோரா (Agora) என்பதாகும். அதில் நாணய முறை பழக்கத்தில் இருந்தது. அதுபோலவே சில அமெரிக்க இந்தியர்கள் ஐரோப்பியர்களின் வரு கைக்கு முன்னமேயே நாணய முறையை வழக்கத் தில் கொண்டிருந்தனர்.

**சந்தைகளின் வகைகள்:** முதன்மைப்படுத்திக் கூறவேண்டுமானால் இரு வகைச் சந்தைகள் உண்டு. இவ்விரு வகைகளிலும் அளிப்பும் தேவையும் (Supply and Demand) வெவ்வேறு வழிகளில் இயங்குகின்றன. முதல் வகையில் உற்பத்தியாளர் தம் பொருளைச் சந்தையில் வாடிக்கையாளர்கள் நிருணயிக்கும் விலைக்குக் கொடுப்பர். இரண்டாம் வகையில் விலை நிருணயம் உற்பத்தியாளர்களால் செய்யப்படும். அதை ஏற்று வாடிக்கையாளர்கள் பொருள்களைப் பெறு வர்.

**முதல்நிலை உற்பத்தியாளர்களின் சந்தை:** இவ் வகைச்சந்தை விலங்குகள், காய்கறிகள், பிறபொருள் கள் போன்றவற்றைச் சார்ந்திருக்கும். இவையனைத் தும் தேவையான நேரங்களில் ஆங்காங்கே சிறு குழுவினரால் உற்பத்தி செய்யப்படும். உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து தொலைவில் இருக்கும் நுகர்வோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும். உற்பத்தியாளரைவிட விற்பனையாளர் அனைத்து நிலையிலும் வலுவாக இருப்பர். வணிக முறை இவர் களால் பெரிதும் ஆக்கம் பெறுகின்றது.

**உற்பத்தியாளர்களின் சந்தை:** இவ்வகைச் சந்தை நிறைவுறாத சந்தை எனக் கூறப்படுகிறது. பொருட் கள் எங்கு உற்பத்தி செய்யப்படுகின்றனவோ அவ் விடத்தில் இவ்வகைச் சந்தை காணப்படுகிறது. ஒவ் வொரு நிறுமமும் (Company) தனக்கேயுரித்தான சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும். மொத்த வாணிகமன்றிச் சில்லறை வாணிகமும் வெவ்வேறு இடங்களில் நடைபெறும். அவர்களே இறுதிவிலையை நிருணயம் செய்பவர்.

**பொருள்சார் மானிடவியற் கோட்பாடுகள்:** அனைத் துச் சமூகங்களும் பல நிலைகளில் பிரிவுபட்டிருந்தா லும், அனைத்தும் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு ஆகிய வற்றிற்கான வடிவமைப்புகளைக் கொண்டிருக் கின்றன. இம்மூன்றுமே பொதுவான அடிப்படைக் கருத்துகளாக உள்ளன எலப் புதிய பொருளாதாரக் கோட்பாடு கூறுகிறது. இவ்வணுகுமுறை, சமூக வாழ்வின் பிற கூறுகளின் பாதிப்பு அச்சங்கத்தின் பல்வேறு பொருளாதார செயற்பாடுகள் மீதும், அச்சமூகத்திலுள்ள தனியார் மீதும் ஏற்படுவதைக் கணக்கில் கொள்வதில்லை. குறிப்பாக இக்கருத்தில் மானிடவியலாளர்கள் பொருளியல் அறிஞர்களிட மிருந்து மாறுபடுகின்றனர். மானிடவியலாளர்கள் மற்ற சமூக நிறுவனங்களான குடும்பம், அரசியல், சமயம் போன்றவற்றின் பாதிப்பைப் பொருளாதார அமைப்பின் மீதும், அதுபோலவே பொருளாதார அமைப்பின் தாக்கத்தை ஏனைய நிறுவனங்களின் மீதும் காணமுடியும் என்பதை விவரிக்கின்றனர். சுருக்கமாகச் சொல்வதாயின், மனிதனைப் பொருளி யல் மனிதன் (Economic Man) எனக் கருத முடியாது. மனிதன் எப்பொழுதும் தன்னுடைய இலாபங்கள், மதிப்பீடுகள், நடைமுறைப்பழக்க வழக் கங்கள், கடமைப் பொறுப்புகள் ஆகியவற்றையே மிகுதியாக விரும்புகிறான். அனைத்துச் சமூகங் களும் பொருளாதார அமைப்புகளைக் கொண்டிருக் கின்றன என்று இவர்கள் கூறுவர். ஆனால், எளிய சமூகங்களிலுள்ள பொருளாதார அமைப்பின் தன்மை, வளர்ந்த சமுதாயத்திலிருந்து மாறுபட்டது. இதன் அடிப்படையில் மானிடவியலாருக்கும் பொருளியலா ருக்கும் ஒரு வாதம் தீர்க்கப்படாமல் உள்ளது. அவ்வாதம், மரபுவழிப் பொருளாதாரக் கோட்பாடு (Formal Economic Theory) மூலம் எளிய, மேலை நாட்டவரல்லாதாரின் பொருளாதார முறை விளக் கப்பட முடியாத ஒன்று என மானிடவியலார் கூறு வதாகும். ஆனால் இதனைப் பொருளியலார் மறுக் கின்றனர். பொருளியலார் கருத்தை ஏற்றுக்கொண்ட மானிடவியலாரும் உண்டு.

பழங்குடிச் சமுதாயங்களில் பரம்பரைப் பழக்கங் கள், நம்பிக்கைகள், மதிப்பீடுகள் ஆகியவை யார்உண

வினை உற்பத்தி செய்யவேண்டும், எவ்விதம் அது பங்கிடப்பட வேண்டும், எவ்விதம் அது செலவழிக்கப்பட வேண்டும் என்பனவற்றை நிருணயிக்கின்றன. பல எளிய சமூகங்களில், தொழில் வளர்ச்சியடைந்த சமூகங்களில் நிலவும் பல பொருளாதார நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. எடுத்துக்காட்டாக ஓர் எசுக்கிமோ (Eskimo) அவன் வேட்டையாடிய கடல் நாயினைத் (Seal) தன் பரம்பரைப் பழக்கத்தின்படியேபிரித்துக் கொடுக்கிறான். மாறாக அவன் வேட்டையாடிய விலங்கினைச் சந்தைக்குக் கொண்டு செல்வதில்லை. விலங்கு உயிர் துறந்த மறு நிமிடத்திலிருந்தே யார் அதைப் பெற வேண்டும் என்கிற வழிமுறைகள் இருக்கின்றன. மேலும், அவ் விலங்கினை வேட்டையாடியவனுக்குக்கூட அவர்களின் முறைப்படி தனி உரிமை எதுவும் இல்லை. சுருங்கக்கூறின், இங்கே உணவைப் பங்கிடுதல், செலவழித்தல் ஆகியவை அனைவராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு முறையில் நடைபெறுகின்றன. இவ்வகையான மரபுச் சமுதாயங்களின் பொருளாதார முறையினைக் கொள்கை அளவில் விளக்கப் பொருளியல்சார் மானிடவியல் முற்படுகிறது.

பெ.த.

## பொருளியல் வரலாற்றுக் கருத்துகள்:

பொருளியல் சிந்தனையிலும் அணுகுமுறையிலும் தொன்மைப் பொருளியலறிஞர்களிடமிருந்து மாறுபட்ட ஒரு புதிய ஆய்வு முறையினைச் செருமனியில் (Germany) தோன்றிய பொருளியலாளர்கள் பின்பற்றினர். அவர்கள் வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள் (Historical School) எனப்படுகின்றனர். அவர்களின் கருத்துகளைப் பொருளியல் வரலாற்றுக் கருத்துகள் (Historical School of Economics) என்று கூறலாம்.

தொன்மைப் பொருளியலறிஞர்கள் பெரிதும் 'பகுத்தறி முறையைப்' (Deductive Method) பின்பற்றினர். வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள், மனித சமுதாயத்தின் முன்னேற்ற வரலாற்றை ஒட்டிப் பொருளியல் கருத்துகளையும் கொள்கைகளையும் உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்தினர்.

வரலாற்றுமுறைச் சிந்தனைக்கு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செருமனியில் இருந்த பொருளாதாரச் சூழ்நிலை ஆக்கமளித்தது. செருமனி பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியிருந்தது. அப்பொழுது இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பொருட்களைச் செருமனியில் விற்றனர். இது செருமனியின் தொழில்களைப் பாதித்தது. தொன்மைப் பொருளியலறிஞர்கள் கூறிவந்த தலையிடாக் கொள்கையும், வெளிநாட்டு வாணிகக் கொள்கையும் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சிக்குச் சாதகமாக இருக்கவில்லையென வரலாற்றுக் கருத்தாளர்கள் கருதினர். அதனால் புதிய அணுகு முறையைப் பின்பற்ற விரும்பினர்.

அப்பொழுது, செருமனியில் தோன்றிய பொருளியலறிஞரான எகலின் (Hegel) வளர்ச்சி பற்றிய கருத்து, சிந்தனையாளர்களிடம் செல்வாக்குப் பெற்றது. எகல், 'வளர்ச்சியே எல்லா உயிரிலங்களின் உயிர் நாடியாய்த் திகழ்கின்றது. இது இயற்கை விதி; இது உயிரினங்களுக்கு மட்டுமன்றி அரசியல், கலை, சமுதாயம், பொருளாதாரம் ஆகியவற்றிற்கும் பொருந்தும். எனவே, இந்த உலகில் உள்ள எல்லாம் மாறக் கூடியன; வளரும் இயல்புடையன' என்று கூறினார். இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்ட வரலாற்றுமுறைப் பொருளியலாளர்கள் மாறுகின்ற-வளர்கின்ற சமுதாயப் பின் புலத்தில் பொருளியல் கருத்துகளை உருவாக்க முயன்றனர்.

அப்பொழுது செருமனியில் வளர்ந்த நாட்டுப் பற்றும் வரலாற்று முறைச் சிந்தனைக்கு உரமளித்தது. மக்கள் ஒற்றுமையோடு செயற்பட்டு, இயற்கை வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியளவை மிகுதிப்படுத்த முயன்றனர். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள் கருத்துகளை உருவாக்கினர். மேலும், அக்குழுவினர் அரசின் கட்டுப்பாட்டிற்கு ஆதரவு அளித்தனர். ஆதலால் அவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு அரசு வழி வகுத்தது.

**இருவகைச் சிந்தனையாளர்கள்:** செருமானிய வரலாற்று முறைச் சிந்தனையாளர்களை 'முதியோர் குழுவினர்' (Older School) என்றும், 'இளையோர் குழுவினர்' (Younger School) என்றும் இருவகையாகப் பகுக்கலாம்.

உரோசுகர் (Roscher), கில்டிபிராண்டு (Hildebrand), நீசு (Knies) ஆகிய மூன்று அறிஞர்களும் முதியோர் குழுவைச் சேர்ந்தவர்கள். அக்குழுவினர், தொன்மைப் பொருளியலறிஞர்களின் ஆய்வுமுறையையும், கொள்கைகளையும் வன்மையாகச் சாடினர். ஆனால், அவர்கள் கூறிய குறைகளை நீக்குவதற்கான வழிமுறைகளைக் கூறவில்லை.

இளையோர் குழுவினர் சுமாலர் (Schmoller) என்னும் செருமானியப் பொருளியல் அறிஞரின் தலைமையில் செயற்பட்டனர். இவர்கள் தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் ஆய்வு முறையைக் குறை கூறியதோடு நின்றுவிடாமல், தொகுத்தறி (Inductive) முறையின் அடிப்படையில் தீர்வு வழிமுறைகளையும் சுட்டிக் காட்டினர்.

**சுட்டிக் காட்டிய குறைகள்:** வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள், தொன்மைப் பொருளியலில் கீழ்க்காணும் மூன்று குறைகளைச் சுட்டிக்காட்டினர்.

முதலாவது, தொன்மைப் பொருளியலறிஞர் பகுத்தறி முறையைப் பின்பற்றியமை. இம்முறை, உலகில் செயற்படுகின்ற பல்வேறு நோக்கங்களை விளக்குவதில்லை என்றும், உண்மையான நிலையைப் புறக்கணிக்கின்றதென்றும் வரலாற்று முறைக் கருத்தாளர் குறை கூறினர். மேலும், பகுத்தறி முறையைப் பின்பற்றி உருவாக்கிய கருத்துகள் நடைமுறைக்கு ஏற்றனவல்ல வென்று வாதிட்டனர்.

இரண்டாவது, தொன்மைப் பொருளியல் அறிஞர்கள், பொருளியல் விதிகளைப் பொதுமைப் படுத்தி, அவை எல்லாக் காலங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் பொருந்துமெனக் கூறினமை. ஆனால், வரலாற்று முறையாளர்கள், நாட்டிற்கு நாடு சூழ்நிலைகளில் வேறுபாடு இருப்பதால், பொருளாதார விதிகள் எல்லா நாடுகளுக்கும் ஒன்றுபோல் பொருந்தாவென்று வாதிட்டனர். பொருளியல் விதிகள் இடைக்காலத் தனவாகவும், கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டனவாகவும் இருக்கின்றனவென்று வரலாற்று முறைச் சிந்தனையாளர் கருதினர்.

மூன்றாவது, தொன்மைப் பொருளியலறிஞர் கொண்டிருந்த உளவியல் கருத்துகளையும் வரலாற்றுக் கருத்தினர் ஏற்காமை. தொன்மைப் பொருளியலாளர், மனிதன் தன்னல உணர்ச்சியால் தூண்டப்பெற்றுப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றான் என்ற எடுகோளின் அடிப்படையில் கருத்துகளை உருவாக்கினர். வரலாற்று முறைச் சிந்தனையாளர் இத்தகைய எடுகோள்களைத் தாக்கினர். அவர்கள், மனிதன் புகழ், நாட்டுப் பற்று, தியாக மனப்பான்மை, உற்றார் உறவினர் மீது கொண்ட அன்பு முதலிய உயர்ந்த நோக்கங்களாலும் தூண்டப்படுகின்றான்; ஆதலால், மனிதனைப் பிற நற்பண்புகள் இல்லாத 'பொருளாதார மனிதனாகக்' கருதுவது தவறு என மறுத்தனர்.

வரலாற்று முறைப் பொருளியலாளர்கள் வழங்கிய கொடையாக அமைந்த கருத்துகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

முதலாவது, வரலாற்று முறை ஆய்வாளர்கள் உயிரோட்ட அணுகு முறையைப் (Organic Approach) பின்பற்றியமை. ஒரு நாட்டின் செல்வ உற்பத்தி, பகிர்வு ஆகியவை புவியியல் அமைப்பு முறை, இயற்கை வளங்கள், மனித ஆற்றல்கள், அரசின் நடைமுறை எனப் பல்வேறு காரணிகளைச் சார்ந்து அமைவதை அவர்கள் சுட்டிக் காட்டினர். பொருளாதார, சமுதாய நிகழ்ச்சிகள் ஒன்றையொன்று சார்ந்து அமைகின்றன. ஆதலால், ஒன்றைப் புறக்கணித்து விட்டு மற்றதை ஆராய்ந்தால் சரியான முடிவுக்கு வர இயலாது. எனவே, பொருளாதாரத்தின் எல்லாக் கூறுகளையும் ஆராய்வது தேவையாகும் என்று அவர்கள் கருதினர்.

இரண்டாவது, மாற்றமுடைய வளர்ச்சி அணுகு முறையைப் (Evolutionary Method) பின்பற்றிச் சமுதாயத்தை ஆராய வேண்டுமென்ற கருத்தை வரலாற்று முறையினர் கூறினமை. இன்றுள்ள சமுதாயம் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி இன்றுள்ள நிலையை அடைந்திருக்கின்றது. ஆதலால் சமுதாய, பொருளாதாரச் சிக்கல்களைப் பற்றி ஆராய வரலாற்று அறிவு வேண்டும். இந்த அடிப்படையில் சார்பு நிலைக் கருத்தைப் பயன்படுத்துகின்றனர். ஒரு நாட்டிற்கு ஏற்றனவாக இருக்கின்ற கருத்துகள் மற்றொரு நாட்டிற்கு ஏற்றனவாக இருக்க இயலா. தொகுத்தறி முறையை வரலாற்றைச் சார்ந்தே பொருளியலில் பயன்படுத்தினர்.

மூன்றாவது, வரலாற்று முறை ஆய்வாளர்கள் நாட்டுப் பற்றுக் கருத்தைஆதரித்தமை. தொன்மைப் பொருளியலறிஞர் தனிமனித வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கினர். ஆனால், வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள் நாட்டுக்கு முதன்மையான இடத்தை அளித்தனர். ஆதலால்தான், தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் தலையிடாக் கொள்கையை ஆதரித்தபோது வரலாற்றுச் சிந்தனையாளர்கள் அரசின் தலையீட்டை வலியுறுத்தினர்.

வரலாற்று முறை ஆய்வாளர்கள் வரலாற்று முறைக்கு மிகுதியாகச் சிறப்பிடம் வழங்கிய போதிலும், ஆராய்ச்சிக்கு அவர்களது அணுகுமுறை மிகவும் பயன்பட்டது. தொகுத்தறிமுறையைப் புகழ்பெறச் செய்தவர்கள் அவர்களே. மா.பா.கு.

**துணை நூல்கள்:**

**Bhatia, H .L.,** History of Economic Thought, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1978.

**Lewis H., Haney,** History of Economic Thought, Surjeet Publications, New Delhi, 1977.

*பொருளியல் வரலாறு,* மிகவும் பழமையானது. ஆதம் சுமித்தின்(Adam Smith) 'நாடுகளின் செல்வம்'(Wealth of Nations கி.பி.1776) என்ற நூல் வெளிவந்தபிறகுதான் பொருளியல் வரலாற்றிற்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டது. பொருளியல் கோட்பாடுகளையும் விதிகளையும் உருவாக்கப் பொருளியல் வரலாறு (Economic History) துணை செய்கிறது.

கிராசு (N S.B.Grass) என்ற பொருளியல் அறிஞர் தம் நீண்ட ஆய்வுக்குப்பின் பொருளியல் வரலாறு என்பதைக் 'கால வரிசையின் (Time Sequence) அடிப்படையில் அமைந்த பொருளாதார நிகழ்ச்சிகள்' என்று கூறியுள்ளார். மேலும், அது ஒரு வளர்ச்சியின் வரிசையாக அமைந்திருக்கிறது. கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஏன் அவை ஏற்பட்டன என்ற வினாவை எழுப்பிக் காரண, காரியங்களை ஆராயும்பொழுது பொருளியல் வரலாறு உருவாகிறது என்றும் விவரிக்கிறார். அய்ட்கென் (H.G.J.Aitken) என்பவர், 'முன்னேற்றத்தைப் பற்றி ஆராயும் முறையில் உள்ள அடிப்படை ஆய்வுத் தளம் பொருளியல் வரலாறு ஆகும்' என்கிறார். எனவே, பொருளியல் வரலாறு என்பது கடந்த காலப் பொருளாதார நிகழ்ச்சிகளின் வரிசையான தொகுப்பு ஆகும் என்பது தெளிவு. பொருளியல் வரலாறு இதுதான் என வரையறுக்கமுடியாது என் பாரும் உளர்.

**பொருளியல் வரலாற்றின் தேவை:** பொருளியற் கோட்பாடுகளை (Economic Theories) உருவாக்கவும் சரிபார்க்கவும் மாற்றியமைக்கவும் விலக்கவும் பொருளியல் வரலாறு தேவையாகிறது. மில் (J.S.Mill) என்னும் பொருளியலறிஞர் 'உலகம் ஏற்கும் வகையில் வரலாற்று உண்மைகளைக் கோட்பாடுகளின் மூலம் இணைப்பது, சிந்திக்கும் ஆற்றல் பெற்ற அறிவியலறிஞர்களின் பொதுவான ஒரு குறிக்கோளாகும்' என்கிறார். பொருளாதாரக் கருத்துகளை விளக்கிக் கூறவும், பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும் பொருளியற்கோட்பாடுகள் தேவைப் படுகின்றன. அக் கோட்பாடுகளை உருவாக்கித் தரும் தளமாகப் பொருளியல் வரலாறு அமைந் திருக்கிறது.

எடுத்துக்காட்டாக முதல் உலகப்போரின் போதும் அதன் பின்னரும் ஏற்பட்ட தீவிர விலை மாற்றங்கள், பணத்தின் மதிப்பை ஆராயும் வகையில் கவனத்தை ஈர்த்தன. அதுபோன்றே 1929 - 33-இல் ஏற்பட்ட 'உலகப் பெருமந்தம்' புதுப் பொருளியல் (New Economics) என்ற கருத்துத் தோன்றக் காரணமாயிற்று. காலங் காலமாகத் தொடர்ந்த ஏழை – பணக்காரன் வகுப்புப் போராட்டமே காரல் மார்க்சுக்கு 'மூலதனம்' என்னும் நூலை எழுதத் தூண்டுகோலாகியது. இவ்வாறு பொருளியல் வரலாறு, பொருளியல் கருத்துகளை-கோட்பாடுகளை-உருவாக்கத் துணை செய்கிறது.

எனவேதான் சும்பீட்டர் (J.A.Schumpeter)என்ற பொருளியல் அறிஞர் பொருளியல் ஆய்வில் வரலாறு, புள்ளி விவரம், கோட்பாடு ஆகிய மூன்றும் தலைமைக் கூறுகள் ஆகும் என்றும், அம் மூன்றிலும் பொருளியல் வரலாறு மிகவும் சிறப்பான தாகும் என்றும், வரலாற்றை மறந்த பொருளியல் கருத்துகள் புரியாத புதிராகி விடும் என்றும், அவை சமூகத்தின் உண்மையை வெளிக்காட்டாமல் மேலும் தவறான முடிவைத் தருவதாகிவிடும் என்றும் கூறு கிறார்.

**பொருளாதார வளர்ச்சி வரலாறு:** இன்றைய பொருளாதார நிலையை மனிதன் எவ்வாறு அடைந் தான் என்று பார்க்கும் பொழுது, பொருளியல் வரலாறு மனித இனம், அ) வேட்டை நிலை, ஆ) மேய்ச்சல் நிலை, இ)வேளாண்மை நிலை, ஈ)வாணிக நிலை, உ)தொழில் நிலை, ஆகியவற்றைக் கடந்திருக் கிறது என்பது கணிக்கப்பட்டுள்ளது.

மிருகங்களை வேட்டையாடி வாழ்ந்துவந்த மனிதன் அதனைப் பழக்கும் நிலைக்கு உயர்ந்தான். அதனை வளர்த்து வயிற்றுப்பாட்டைக் தீர்த்துக் கொண்டான். காலம் மாறியது. வேளாண்மை செய்யத் தொடங்கினான். எஞ்சியவற்றை வாணிகம் செய்தான். பன்னாட்டு வாணிகத்தால் கலை, அறிவியல் பரவின. அதனால் தொழில் வளர்ச்சி தூண்டப்பட்டது. அதன் விளைவாக இன்று நாகரிக உலகில் அவனால் வாழ முடிகிறது.

இந்த வளர்ச்சி நிலைகளின், வரலாற்றின் அடிப் படையில் பல்வேறு பொருளியல் கருத்துகள் உருவாயின. பல்வகையான சிந்தனைகள் வரப்பெற்றன. சில பழைய பொருளியல் கருத்துகளுக்கு எதிர்ப்புத் தோன்றியது.புதிய கருத்துகள் அவற்றின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. சில வேளைகளில் மாறுபட்ட பொருளியற் கோட்பாடுகளும் விதிகளும் கூறப்பட்டன. வேறுசில காலங்களில் பழைய கருத்துகளுக்கு உரமூட்டி அவற்றைப் புதியனவாக மீண்டும் மாற்றினர். பொருளியலில் மேற்கண்ட நிகழ்ச்சிகளுக் குப் பல்வேறு எடுத்துகாட்டுகளைப் பார்க்கமுடியும். அவையெல்லாம் பொருளியலுக்கும், அதன் வரலாற்றிற்கும் உள்ள தொடர்பைப் பறை சாற்றுவனவாகவே கருத முடியும்.

ஒவ்வொரு நாட்டிலும் தோன்றும் பொருளாதாரச் சிக்கல்கள் பலவகைப்படும். அவற்றைத் தீர்க்க முதன்முதலில் செய்ய வேண்டியது அந்நாட்டின் பொருளியல் வரலாற்றைத் தெரிந்துகொள்வதே யாகும். டி.ப.

**துணை நூல்கள்:**

குருசாமி, மா பா., புகுமுகப் பொருளியல், வண்ணன் வெளியீடு, திருச்செந்தூர், 1972.

**Elia, H. Tunas.** Economic History and the Social Sciences, University of California Press Ltd., London, 1971.

*பொலநருவா:* வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரமான பொலநருவா (Polonnaruwa) இலங்கைத் தீவில் அமைந்துள்ளது. இது இலங்கையின் முதல் தலைநகரான அனுராதபுரத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது.இது இலங்கையின் இரண்டாம் தலைநகர மாக விளங்கியது. இதற்குப்புலத்திபுரம் (Pulathipura) என்று மற்றொரு பெயரும் உண்டு.

இலங்கைப் பகுதியை ஆண்ட ஐந்தாம் மகிந்தன் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான். அப்பொழுது முதலாம் இராசராசன் இலங்கையின்மீது படையெடுத்துச் சென்று ஐந்தாம் மகிந்தனை வென்று இலங்கையைக் கைப்பற்றினான். இலங்கையின் தலைநகரமான அனுராதபுரத்தை அழித்துவிட்டுப் 'பொலநருவா' என்ற நகரைப் புதிய தலைநகராக முதலாம் இராசராசன் மாற்றினான். இது இலங்கையின் நடுப் பகுதியில் அமைந்திருந்த தனால் இலங்கையின் மற்ற பகுதிகளை எளி தான முறையில் கண்காணிக்க முடியுமென்று தலை நகர் மாற்றப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இந் நகரம் இராசராசனால் கைப்பற்றப்பட்டுப் புதிய தலைநகராக மாற்றப்பட்டதால் இராசராசனின் பட் டப்பெயரான 'சனநாதன்' என்ற பெயரில் 'சன நாதமங்கலம்' என்று பெயரிடப்பட்டது. இங்குக் கிடைத்த கல்வெட்டுகளில் சனநாதமங்கலம் என்ற பெயர் காணப்படுகின்றது. முதலாம் இராசராச னுக்குப்பின் நீண்ட காலம் இலங்கையின் தலை நகராக இது விளங்கியது. இராசராசனின் கல்வெட்டு களும் அவனுக்குப்பின் வந்த சோழ மன்னர்களின் கல்வெட்டுகளும் பொலநருவாவில் கிடைக்கின்றன. பொலநருவா ஏறக்குறைய கி.பி. 993 – இலிருந்து கி.பி.1070 வரை, 77 ஆண்டுகள் சோழ மன்னர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது.

பொலநருவாவில் புத்தசமயக் கோயில்களும் இந்துக் கோயில்களும் கட்டப்பட்டன. இங்குள்ள கட்டடங்கள் கி.பி. 781-க்கும் கி.பி. 1200க்கும் இடைப் பட்ட காலத்தில் கட்டப்பட்டவை. 'தூபராமா' என்ற கட்டடம் முதலாம் பராக்கிரம பாகுவால் (கி.பி. 1164–1197) எடுக்கப்பட்ட கட்டடங்களுள் குறிப்பிடத் தக்க விகாரையாகும். திராவிடக் கட்டடக்கலையைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ள தூபராமாவை (Thupa rama) அழகுபடுத்த இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கட்டடக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர் என்று மகாவமிசம் என்னும்நூல் கூறுகின்றது.இந்த விகாரை செங்கல், சுதை ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட் டுள்ளது. தூபராமாவில் உள்ள வட்டவடிவச் சாளரங் கள் வடஇந்தியாவிலுள்ள புத்த கயாவில் உள்ளதைப் போலக் காணப்படுகின்றன.இதன் கூரைப் பகுதி படிப் படியாக உயர்ந்து மேல் பாகம் ஒரே மட்டமாக (Flat) அமைக்கப்பட்டிருக்கிறது. தூபராமாவின் வெளிப்பகுதிச் சுவர்களில் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த அளவில்காட்சியளிக்கின்றன. கட்டட அமைப் பில் திராவிடக் கலையுடன் சம்பா நாட்டின் கட்டடக்கலையும் பல இடங்களில் கலந்திருக்கின்றன.

வடக்குக் கோயில் என்று குறிக்கப்படுகின்ற தெமல மகா சேயா (Demala - Maha - Seya) என்ற விகாரை மற்றொரு குறிப்பிடத்தக்க புத்தவிகாரையா கும். இந்த விகாரையின் வெளிப்பகுதிகளில் உள்ள தேவ கோட்டங்களின் சுதை உருவங்கள் கண்களைக் கவருகின்றன. விகாரையின் உட்பகுதிகளில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. புத்த சாதகக் கதை களின் நிகழ்ச்சிகள் ஓவியங்களாகக் காணக் கிடக் கின்றன. இதில் நின்ற நிலையில் புத்தரின் உருவங்கள் உள்ளன. நகரின் கோடியில் கும்பலான கட்டடங்கள் உள்ளன. இங்குள்ள இலங்கா திலகா (Lanka Tilaka) என்ற விகாரையின் கூரை தூபராமாவைப் போல அமைந்துள்ளது. இங்குச் செங்கற்களால் அமைக்கப் பட்ட புத்தரின் சிலை ஒன்று உள்ளது. இலங்கையில் உள்ள மிக உயரமான புத்தரின் உருவம் இது.

முதலாம் பராக்கிரம பாகுவால் எடுக்கப்பட்ட மற்றொரு விகாரை போட்கல் விகாரை (Potgul Vihara) ஆகும். அழகுடன் திகழ்கின்ற இது வட்ட மான அமைப்புடையது. முதலாம் பராக்கிரம பாகு இங்குத் தங்கியிருந்த புத்தபிட்சுகளிடம் சாதகக் கதை களைப் படிக்கக் கேட்டார் என்று மகாவமிசம் கூறு கின்றது. இந்த விகாரையின் பல இடங்களில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. சாதகக் கதை களில் உள்ள சிறப்பான நிகழ்ச்சிகள் ஓவியங்களில் விளக்கப்பட்டுள்ளன. விகாரத்தில் முன் பக்கத்தில், மண்டபம் போன்றபகுதிகள் உள்ளன. ஏறத்தாழ3·3.மீ. உயரமுள்ள கற்சிலை ஒன்று இங்கு நின்ற நிலையி லுள்ளது. இங்குள்ள மக்கள் அதைப் பராக்கிரம பாகு என்று குறிப்பிடுகின்றனர். அச்சிலை தாடியுட னும் கையில் ஓலைச் சுவடியுடனும் விலங்குமாறு செதுக்கப்பட்டுள்ளது. முனிவனைப் போன்று காட்சி தரும் அந்தச் சிலையில் அரசனுக்குரிய அறிகுறிகள் ஏதும் இல்லாததால் இது முனிவராக இருக்கக் கூடும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

புத்த மதத்தைச் சார்ந்த நிசங்க இலாட மண்ட பம் (Nissanka Lata Mandapa) கி.பி. 1198 - கி.பி. 1207 - ஆம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. இலங்கையிலுள்ள புத்த கட்டடக்

கலைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த மண்டபத்தை எட்டுத்தூண்கள் தாங்கி நிற்கின்றன. அதன் மேல்பாகம் வட்டமான அமைப் புடையது. அந்த வட்டமான பகுதி 35 ச.மீ. களைக் கொண்டது. கற்கள் அந்த வட்டப் பகுதியில் பாவப்பட்டுள்ளன. அதன் உட்பகுதியில் சிறிய கோயில் ஒன்று உள்ளது. அக்கோயிலை இரண்டு உருண்டை யான தூண்கள் தாங்கி நிற்கின்றன. அமர்ந்த நிலையிலுள்ள புத்தரின் சிலை ஒன்று கோயிலில் உள்ளது. கோயிலின் முன்பகுதியில் இரண்டு நாக வாயிற்காப்பாளர்கள் இலங்கைக் கலைப்பாணியைத் தழுவிக் காணப்படுகின்றனர். அக்கோயிலும் முதலாம் பராக்கிரம பாகுவால் எடுக்கப்பட்டது என்று மகா வமிசம் கூறுகின்றது.

பொலநறுவாவில் உள்ள இந்துக் கோயில்கள் சோழ மன்னர்கள் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் எடுக்கப்பட்டவை. அக்கோயில்களில் திரா விடக் கலைப்பாணி பின்பற்றப்பட்டுள்ளது. முதலாம் இராசராசனால் சிவபெருமானுக்கு எடுக்கப்பட்ட கோயில் ஒன்று இன்றும் நல்ல நிலையிலுள்ளது. அக்கோயிலின் கட்டடக் கலை அமைப்பு தமிழ் நாட்டில் கி.பி. 10, 11 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டடக் கலை அமைப்பை ஒத்துக் காணப் படுகின்றது. அக்கோயிலில் கருவறை, மண்டபம் போன்ற பகுதிகளும், அதன் வெளிப்பகுதி களில் சிற்பங்களும் காணப்படுகின்றன. ‘வானவன் மாதேவியீச்சுரம்’ என்ற மற்றொரு கோயிலும் உள் ளது. வானவன்மாதேவி என்பது முதலாம் இராச ராசன் மனைவியின் பெயராகும். அக்கோயில் வானவன்மாதேவியாலோ வானவன்மாதேவியைச் சிறப்பிக்கும் பொருட்டுப் பின்வந்த மன்னர்களாலோ எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இராசராசனின் கல் வெட்டுகள் எதுவும் இக்கோயிலில் இல்லை. முதலாம் இராசேந்திரன், அதிராசேந்திரன் ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. எனவே, இக் கோயில் முதலாம் இராசேந்திரனால் எடுக்கப்பட்ட தாகவும் இருக்கலாம். இக்கோயில் முழுவதும் கல்லால் கட்டப்பட்டதாகும். கோயிலுள்ள அரைத் தூண்கள், சாளரம், கூட்டுப் பகுதிகள் முதலியவை பிற்காலச் சோழர்களின் கட்டடக்கலைப்பாணியை ஒத்துக் காணப்படுகின்றன.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் திருமாலுக்கு எடுக்கப்பட்ட மற்றொரு கோயில் பொலநறுவாவில் உள்ளது. அக்கோயிலும் திராவிடக் கலைப்பாணியைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ளது. நடராசர், பார்வதி, திருமால், இலக்குமி, பாலகிருட்டிணன், அனுமன் போன்ற செப்புத் திருமேனிகள் அக்கோயிலில் உள்ள குறிப்பிடத்தக்க திருமேனிகளாகும். அச் செப்புத் திருமேனிகள் தமிழ்நாட்டிலுள்ள செப்புத் திரு மேனிகளைப் போலவே காணப்படுகின்றன. நடராசர் செப்புத் திருமேனி அழகுடன் விளங்குகின்றது. அதன் ஆடை, அணிகலன்கள், படிவ அமைப்பு ஆகியன தமிழ்நாட்டுச் செப்புப் படிமக்கலையை நினைவு படுத்துகின்றன. சுந்தரர் படிமம் பக்திப் பெருக்குடன் காட்டப்பட்டுள்ளது. பொலநறுவா பழைய நகரைச் சுற்றி மேலும் நான்கு கோயில்கள் உள்ளன. அவற் றுள் மூன்று திருமாலுக்கு எடுக்கப்பட்டவை. அக் கோயில்கள் கல், செங்கல் ஆகியவற்றால் கட்டப் பட்டுள்ளன.

இலங்கை ஓவியக்கலையிலும் சிறப்புற்று விளங் கியது. பொலநறுவாவிலுள்ள ஓவியங்களில் தமிழ் நாட்டு ஓவியக் கலையின் சாயல் காணப்பட்டாலும் இலங்கையைச் சார்ந்த ஓவியக்கலையே அதிக அளவில் மிளிருகின்றது. திவம்கா (Tivamka) கோயிலிலுள்ள நீண்ட ஓவியம் வரலாற்றுச் சிறப்புடையது. அக் கோயில் முதலாம் பராக்கிரம பாகுவால் கட்டப் பட்டதாகும். அக்கோயிலில் பழைய ஓவியம் ஒன்றின் மேல் மற்றொருமுறை ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. அந்த ஓவியம் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாகும். இரண்டாம் பராக்கிரம பாகுவால் பிற்காலத் தில் அக்கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின் பல இடங்களில் ஓவியங்கள் பழுதடைந்துள்ளன. ஓவியங்களில் புத்தரின் சாதகக் கதைகள் வரிசையாகத் தீட்டப்பட்டுள்ளன. ஒரு பெண், தன்னுடைய கையில் பூ வைத்திருப்பது போன்ற ஓவியம் ஒன்றுள்ளது. அந்தப் பெண்ணின் உருவஅமைப்பு அசந்தா ஓவியத் திலுள்ள போதிசத்துவரை ஒத்துக் காணப்படு கின்றது. தி.சு.

**துணை நூல்கள்:**


**Ananda, K. Coomaraswamy.**, History of Indian and Indonesian Art, Munshiram Manoharlal, New Delhi, 1972.

**Pillay**, K.K., South India and Sri Lanka, University of Madras, 1975.

பொலிவியா: தென் அமெரிக்காவில் ஐந்தாவது பெரிய நாடான இது ஒரு குடியரசாகும். இசுபெயினி டம் அடிமைப்பட்டிருந்த இதன் விடுதலைக்காகப் போராடி, விடுதலை பெற்றதும் இந்நாட்டிற்கு ஓர் அரசியலமைப்பைத் தந்த சைமன் பொலிவர் (Simon Boliver) என்பவரின் நினைவாக இது பொலிவியா (Bolivia) எனப்படுகிறது. இந்நாட்டிற்கு இரு தலை நகரங்கள் உள்ளன. சுக்ரீ (Sucre) அரசியல் தலை நகரமாக உள்ளது. உலகிலேயே மிக உயர்ந்த இடத்

தில் உள்ள நகரம் இலா பாசு (La Paz). அது 3900 மீ. உயரத்தில் உள்ளது; நிருவாக மையமாக இருந்து வருகின்றது.

**இயற்கை அமைப்பு:** இயற்கை அமைப்பிற் கேற்ப இதனை (1) மேற்கு மேட்டுநிலப் பகுதி (2) உங்காசு எனப்படும் மலைப்பள்ளத்தாக்கு, (3) இலானோசு (Llanos) என்னும் தாழ்நிலங்கள் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.




பொலிவியா

மேற்கு மேட்டுநிலப்பகுதி தட்டையாக, மரங்கள் இல்லாமல், கடல் மட்டத்திலிருந்து 3810 மீ. உயரத்தில் உள்ளது. அதனுடைய நீளம் 640 கி.மீ; அகலம் 140 கி.மீ. கார்டில்லரா ஆக்சிடெண்டல் (Cordillera Occidental) எனப்படும் ஆண்டீசு மலைத் தொடர் (Royal Range of the Andes) அதன் கிழக்கு எல்லையில் இருக்கின்றது. அதனுடைய ஒரு சிகரமான இல்லம்பு மலை (Mount Illampu) 6550 மீ. உயரம் உள்ளது. தோகோர்புரி மலை (Mount Tocorpuri) பொலிவியா-சிலி எல்லையில் 6755 மீ. உயரத்தில் இருக்கின்றது. கடல் மட்டத்திலிருந்து 3812 மீ. உயரத்தில் அமைந்துள்ள திடிகாகா (Titicaca) ஏரியின் பரப்பளவு 8446 சதுர கி.மீ. அது பொலிவியா – பெரு எல்லையில் இருக்கின்றது.

உங்காசு (The Yungas) என்று குறிக்கப்படும் மலைப் பள்ளத்தாக்கு கார்டில்லராரியல் (Cordillera Real) மலைகளின் சரிவுகளில் அமைந்துள்ளது. அதன் கிழக்கில் மலைகள் குறைவு. அப்பகுதியில் அடர்ந்த காடுகள் உள்ளன.

பொலிவியாவின் ஏழில் ஐந்து பங்கு தாழ்நிலப் பகுதியாகும் அது கடல் மட்டத்திலிருந்து 30 மீ. முதல் 457 மீ. வரை உயரம் உள்ளது. அதனை வடக்கிலுள்ள மாமோர் (Mamore), பெனி ஆறுகள் (Beni River) பகுதி எனவும் தெற்கிலுள்ள சாக்கோ (Chaco), சாந்தா குரூசு (Santa Cruz) பகுதி எனவும் இரண்டாகப் பிரிக்கலாம். வட பகுதியின் பாதி வெப்பமண்டலக் காடுகளாகவும், செடிகள் அடர்ந்த தாகவும், மீதி புல்வெளிகளாகவும் இருக்கின்றது. சாக்கோ, சாந்தா குரூசு பகுதியில் புல்வெளிகளும், புதர்களும் நிறைந்துள்ளது. இத்தாழ் நிலப்பகுதியின் வடக்கு, மத்திய பகுதிகளில் பெனி (Beni), குவாபோர் (Guapore), மாமோர் (Mamore) போன்ற முப்பதுக்கு மேற்பட்ட ஆறுகள் பாய்கின்றன. தெற்குத் தாழ்நிலங்களைப் பராகுவே (Paraquay) ஆறும், அதன் கிளை ஆறான பில்கோமாயோவும் (Pilcomayo) செழிப்பாக்குகின்றன.

**பரப்பளவு:** இதன் பரப்பளவு 10,98,581 சதுர கி.மீ.

**எல்லைகள்:** இந்நாட்டின் வடக்கிலும், வடகிழக்கிலும் பிரேசிலும் (Brazil), தென்கிழக்கில் பராகுவேயும் (Paraguay), தெற்கில் அர்செண்டினாவும் (Argentina), மேற்கில் சிலியும் (Chile), பெருவும் (Peru) எல்லைகளாக அமைந்துள்ளன.

**மக்கள் தொகை:** இதன் மக்கள்தொகை60,25,225 (1984).

**மக்கள்:** இந்நாட்டு மக்கள் தொகையில் 55 விழுக்காட்டினர் இந்தியர்; 30 விழுக்காட்டினர் மெசிடிசோக்கள் (Mestizos) எனப்படும் இந்தியர் – வெள்ளையரின் கலப்பு இனத்தவர். கிரியோல்கள் (Criolls) என்றுகுறிக்கப்படும் வெள்ளையர், பெரும்பாலும் இசுபானியரின் வழி வந்தோர்; இந்நாட்டின் உயர்குடி மக்களாவர். அவர்கள் இந்நாட்டின் பொருளாதார, அரசியல், சமூக வாழ்க்கையில் பெரும் செல்வாக்குப் பெற்று நாகரிகமும், கல்வியறிவும், செல்வமும் மிக்கவர்களாக உள்ளனர். பெரும்பாலான இந்தியரும், மெசிடிசோக்களில் பாதிப்பேரும் கிராமங்களிலுள்ள பண்ணைகளில் வேலைசெய்து வருகின்றனர். மீதியுள்ள மெசிடிசோக்களும், பெரும்பான்மையான வெள்ளையரும் நகரங்களில் வாழ்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து கி.பி. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் இந்நாட்டில் குடியேறிய செருமானியர், இத்தாலியர், போலந்துக்காரர், சிரியர் ஆகியோரும் உள்ளனர். சப்பானியர் சிலர் இங்கு வந்து நெல் பயிரிடுவதில் ஈடுபட்டுள்ளனர். நீக்ரோக்களும், இந்தியரும் நீக்ரோக்களும் சேர்ந்த சம்போக்கள் (Zambos) என்றகலப்பு இனத்தவரும்; நீக்ரோக்களும் ஆங்கிலேயரும் இணைந்து அவர்கள் கால்வழி

வந்த மூலட்டோசுகளும் (Mulattoes) இந்நாட்டில் உள்ளனர்.

**மொழி:** இங்கு இசுபானிசு (Spanish) மொழியே அரசு மொழியாக உள்ளது. இந்தியர்களுள் 40 விழுக்காட்டினருக்கு அம்மொழி தெரியாது. அவர்கள் குசுவான் (Quechuan), ஐமரா (Aymara) போன்ற இந்திய மொழிகளுள் ஒன்றைப் பேசுகின்றனர்.

**சமயம்:** இந்நாட்டு மக்களுள் 90 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றுகின்றனர். இந்நாட்டு அரசு மக்களுக்குச் சமய சுதந்திரம் அளித்திருந்தாலும், உரோமன் கத்தோலிக்கச் சமயத்தை அரசு சமயமாக ஏற்றுக்கொண்டு, அதற்கு நிதியுதவி அளித்து வருகின்றது.

**பொருளாதாரம்: வேளாண்மை:** இந்நாட்டு மக்களுள் மூன்றில் இரு பங்கினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். இந்தியர்கள் வறண்ட, வளமற்ற,மேட்டு நிலப் பகுதியில் இரண்டு விழுக்காடு நிலத்தில் மட்டும் வேளாண்மை செய்கின்றனர். இயந்திரங்கள் வாங்கிடவும் மிகுந்த பரப்பளவுடையநிலத்தில் பயிரிடவும்அவர்களிடம் பண வசதியில்லை. வளமிக்க கிழக்குப் பொலிவியாவிற்குக் குடிபெயரவும் அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் பார்லி, மக்காச்சோளம், உருளைக் கிழங்கு, காப்பி ஆகியவற்றை விளைவிப்பதுடன் ஆடுகளையும், பன்றிகளையும் வளர்க்கின்றனர். செழிப்பான தாழ்நிலப்பகுதியில் கோதுமை, கரும்பு, நெல், உருளைக்கிழங்கு, காப்பி, மக்காச்சோளம் ஆகியவை பயிரிடப்படுகின்றன. இந்நாடு நெல், கரும்பு, புலால் முதலியவற்றில் தன்னிறைவு பெற்றிருந்தாலும், பிற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இந்நாட்டின் 40 விழுக்காடு நிலப் பகுதி, பெரும்பாலும் கிழக்குப் பகுதியில் காடாக இருந்தாலும், போக்குவரத்து வசதிகள் இன்மையால் முழுவதும் பயன்படுத்தப்படவில்லை. இவர்களால் வளர்க்கப்படும் இலாமா (Llama), அல்பாகா (Albaca) ஆடுகள் அதிக அளவு கம்பளத்தைக் கொடுக்கின்றன. அத்துடன் இலாமாக்கள் மேற்குப் பகுதியிலுள்ள பண்ணைகளில் பொதி சுமப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

**கனிமங்கள்:** சுரங்கத் தொழில் இந்நாட்டில் மிக முக்கியமான தொழிலாகும். இந்நாட்டு அரசு 1952 - இல் அனைத்துப் பெரிய சுரங்கங்களையும் நாட்டுடைமையாக்கியது. தகர உற்பத்தியில் சிறந்து விளங்கும் இது, உலக உற்பத்தியில் 13 விழுக்காட்டைப் பெற்று, உலகில் நான்காம் இடத்தை அடைந்துள்ளது. உலகில் அதிக அளவு அஞ்சனக்கல் (Antimony)உற்பத்தி செய்யும் நாடுகளில் இது ஒன்றாகும். மேலும், இந்நாட்டில் நிமிளை (Bismuth), தாமிரம், தங்கம், ஈயம், வெள்ளி, மின்னிழைமம் (Tungsten), துத்தநாகம் ஆகியவையும் வெட்டி எடுக்கப்படுகின்றன.

**தொழில்கள்:** இந்நாட்டில் இரும்பும் மின்சாரமும் கிடைக்காததால் தொழிற்சாலைகள் பெரும்அளவிற்கு வளரவில்லை. சருக்கரை சுத்திகரிப்பு, தோல் பொருட்கள், புகையிலையைப் பதப்படுத்துதல், சிமெண்டு, அணிகலன்கள், கண்ணாடி, தீப்பெட்டிகள், வெடி மருந்துகள் ஆகியவற்றைச் செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு உற்பத்தியாகும் பொருட்களில் மூன்றில் ஒரு பங்கு துணி வகைகளும், பதப்படுத்தப் பட்ட உணவுப் பொருட்களும், மதுவகைகளும் ஆகும்.

**வணிகம்:** அமெரிக்க ஐக்கிய நாடுகளுடனும், இங்கிலாந்துடனும் இந்நாடு நல்ல வாணிகத்தொடர்பைக் கொண்டுள்ளது. இது ஏற்றுமதி செய்வதை விட அதிக மதிப்புள்ள பொருட்களை இறக்குமதி செய்கின்றது. தனக்குத் தேவையான பொருட்களை இது அமெரிக்க ஐக்கிய நாடுகள், அர்செண்டினா, பெரு, பிற தென் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றிலிருந்து பெறுகின்றது. இந்நாட்டு ஏற்றுமதியில் 80 விழுக்காடு தகரமும், 17 விழுக்காடு செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய கனிமங்களும் ஆகும். பிற ஏற்றுமதிப் பொருட்கள்: வெள்ளி, அஞ்சனக்கல், ஈயம், மின்னிழைமம், இரப்பர், பாறைஎண்ணெய். பிறநாடுகளிலிருந்து இது உணவு வகைகள், பருத்தி, இயந்திரங்கள், உந்து வண்டிகள், கம்பளம், மின் சாதனங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்கின்றது.

**போக்குவரத்து, செய்தித்தொடர்பு:** இந்நாட்டின் மூன்றில் ஒரு பங்கு ஆண்டீசு மலைப்பகுதியாய் இருப்பதால் போக்குவரத்து மிகக் கடினம். இங்கு 11,000 கி.மீ. நீள நெடுஞ்சாலைகளும், 17,700 கி.மீ சாலைகளும் உள்ளன. 'பொலிவியன் தேசிய இரயில்வே' (Bolivian National Railways) - கிழக்குப் பகுதியில் 1386 கி.மீ. நீளத்திற்கும், மேற்குப் பகுதியில் 2152 கி.மீ. நீளத்திற்கும் இருப்புப் பாதைகளைப் பெற்றுள்ளது. உள்நாட்டிலுள்ள முக்கிய நகரங்களை இணைப்பதுடன், அர்சண்டினா, பிரேசில், சிலி, பெரு ஆகிய நாடுகளுடனும் போக்குவரத்தை ஏற்படுத்தியுள்ளது. சாலைகளும், இருப்புப்பாதைகளும் இல்லாத இடங்களுக்குச் செல்ல விமானப் போக்குவரத்துப் பயன்படுகிறது. 'இலாயிடு ஏரோ பொலிவியானோ' (Lloyd Aereo Boliviano) என்னும் இந்நாட்டு தேசிய விமானப் போக்குவரத்து, உள்நாட்டுப் போக்குவரத்தை நடத்துவதுடன், அக்கண்

டத்திலுள்ள பிற நாடுகளையும் இணைக்கிறது. இங்கு 1978 - இல் 458 அஞ்சல் அலுவலகங்களும், 445 தந்தி நிலையங்களும் இருந்தன. இங்குள்ள 119 வானொலி நிலையங்களில் 7 அரசுக்குச் சொந்தமானவை. தொலைக்காட்சி நிலையங்களுள் ஒன்றை அரசும், நான்கைத் தனியார் துறையும், ஒன்றைப் பல்கலைக் கழகமும் நடத்துகின்றன. செய்தித் தாள்கள் 1984 – இல் இலா பாசில் ஏழும் உருரோவில் (Ururo) இரண்டும் கோசபம்பாவில் (Cochabamba) ஒன்றும் வெளிவந்தன.

**கல்வி**: இங்கு 7வயது முதல் 14 வயது வரை உள்ளவர்களுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டு, கட்டணமின்றி வழங்கப்படுகிறது. இங்கு 21 வயதிற்கு உட்பட்டவர் பலர் எழுதப்படிக்கத் தெரியாதவராய் இருப்பதால் அவர்களும் பள்ளிக்குச் செல்ல வேண்டுமெனச் சட்டம் உள்ளது. இருப்பினும் இங்கு 40 விழுக்காட்டினர் கல்வியறிவு அற்றவர்களாய் உள்ளனர். இதற்குக் காரணம் அம்மக்களுக்குத் தேவையான பள்ளிகளும், ஆசிரியர்களும் இல்லை. பள்ளிகள் இருக்குமிடங்களிலும் குழந்தைகள் வேலை செய்ய வேண்டியிருப்பதால் அவர்கள் பள்ளிக்கு அனுப்பப்படுவதில்லை. இந்நாட்டில் 9 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றுள் கி.பி. 1624-இல் தொடங்கப்பட்ட புனித பிரான்சிசு சேவியர் பல்கலைக்கழகம் (Saint Francis Xavier University) அமெரிக்காவிலேயே மிகப் பழமையான பல்கலைக் கழகமாகும். இலா பாசில், கி.பி. 1830-இல் தொடங்கப்பெற்ற சான் ஆண்டர்சு பல்கலைக்கழகம் (The University of San Andres) இந்நாட்டின் மிகப் பெரிய பல்கலைக்கழகமாகும்.

**இந்நாட்டின் முக்கிய நகரங்கள்**: இந்நாட்டின் தலைநகரம் சுக்ரீ ஆகும். சர்காசு, சுகிசாகா (Chuquisaca), இலா பிளாடா (La Plata) என்ற வேறு பெயர்களும் இதற்குண்டு. இலா பாசு (La Paz) மற்றொரு தலைநகராகும். தகரம், வெள்ளிச் சுரங்கங்கள் நிறைந்த ஒருரோ (Oruro), சிறந்த வாணிக மையமும் பொழுதுபோக்கு இடமுமான கோசபம்பா, தகர, தாமிர, வெள்ளிச் சுரங்கங்கள் உள்ள பொடோசி (Potosi), நெல், கரும்பு, காப்பி ஆகியவை அதிகமாக விளையும் சாந்தா குரூசு (Santa Cruz) ஆகியவை இதன் முக்கிய நகரங்களாகும்.

**அரசு**: இங்கு 1947 – ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி குடியரசுத் தலைவரும், குடியரசுத் துணைத்தலைவரும் மக்களால் நான்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுடைய பதவிக்காலம் முடிந்தவுடன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. போர் அல்லது நெருக்கடி காலங்களில் குடியரசுத் தலைவரே ஆட்சியை ஏற்றுக் கொள்ளலாம். அவர் ஆளவை மன்றத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைச்சரவையை ஏற்படுத்த வேண்டும். இந்நாட்டில் திருமணமானவர்களில் 19 வயதும், அதற்கு மேற்பட்டவயதுடையவர்களுக்கும், திருமணமாகாதவர்களில் 21 வயதும், அதற்கு மேற்பட்ட வயதுடையவருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய காங்கிரசு (National Congress) எனப்படும் இந்நாட்டுப் பாராளுமன்றம் ஆளவை, பேராளர் அவை (Chamber of Deputies) என்னும் இரு அவைகளைக் கொண்டுள்ளது. இதன் உறுப்பினர்களை ஒவ்வொரு துறையும் மூவர் வீதம் தேர்ந்தெடுக்கிறது. பேராளர் அவைக்கு 117 பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பலமுறை படையினர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் 1985 சூலை 14 – இல் தேர்தல் நடத்தப்பட்டு, 1986 – இல் அமைச்சரவை பதவியேற்றது.

தல நிருவாகத்தின் பொருட்டு இந்நாடு துறைகள் எனப்படும் 9 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையையும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட அதிகாரி (Prefect) ஒருவர் நிருவாகம் செய்கிறார். அத்துறைகள் 98 மாநிலங்களாகப் (Provinces) பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றின் நிருவாகத்திற்கும் குடியரசுத் தலைவர் துணை அதிகாரியினை (Sub Prefects) நியமிக்கிறார். நாடு முழுவதும் 1272 சிறுபிரிவுகளாகப் (Cantons) பிரிக்கப்பட்டு, காரிகிடோர் (Corregidores) என்னும் அதிகாரிகளால் நிருவகிக்கப்படுகிறது.

**வரலாறு**: பண்டைக்காலத்தில் இப்பகுதியில் இந்தியர்கள் கி.பி.300 ஆண்டுகள் முதல் கி.பி.900 ஆண்டுகள் வரை வாழ்ந்து வந்தனர். இவர்கள் கற்களால் பெரிய கட்டடங்களைக் கட்டியும், அவற்றில் விலங்குகளின் உருவங்களைப் பொறித்தும், மனித உருவங்கள், பானைகள் ஆகியவற்றைச் செய்தும் வாழ்ந்தனர் என்பது தவிரப் பிற செய்திகள் தெரியவில்லை. இன்கா (Inca) மக்கள் கி.பி. 1200 – இலிருந்து தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இசுபானியர்கள் கி.பி. 1538-இல் இப்பகுதிகளைக் கைப்பற்றி இன்கா நாகரிகத்தை அழித்தனர்.

**இசுபெயினின் ஆதிக்கம்**: இன்கா பேரரசின் ஒரு பகுதியாகவிருந்த பொலிவியாவை கி.பி. 1538 எர்நாண்டோ பிசாரோ (Hernando Pizarro) என்ற இசுபானியர் கைப்பற்றினார். அவருடைய தமையனாரான பிரான்சிசுகோ பிசாரோ (Franscisco Pizarro) தான் பெருவில் இசுபானிய ஆதிக்கத்தை நிலைநாட்டியவர். இசுபானியர் விரைவில் சுக்ரீ, பொடாசி, இலா பாசு, கோசபம்பா ஆகியவிடங்களில் தங்கள் குடியேற்றங்களை நிறுவினர். அப்பொழுது பெருவை

ஆட்சிபுரிந்து வந்த இசுபானிய அரசப்பேராளரின் (Viceroy) ஆளுகையின்கீழ்ப் பொலிவியா வைக்கப்பட்டது. இசுபானியர்கள் சுகிசாகா (Chuquisaca), (இன்றைய சுக்ரீ) என்னுமிடத்தில் தல நிருவாகத்தை ஏற்படுத்தினர். அதில் இந்தியருக்கும், கிரியோல்களுக்கும் எவ்வித உரிமையும் கொடுக்கப்படவில்லை. இசுபானியரின் காட்டு மிராண்டித்தனமான அடக்கு முறைகளை எதிர்த்து இந்தியர்கள் கி.பி. 1600,1700 – ஆம் ஆண்டுகளில் பல முறை கிளர்ச்சிகள் செய்தாலும், அவை அனைத்தும் நசுக்கப்பட்டன.

**விடுதலை:** வெனிசூலா நாட்டவரான சைமன் பொலிவர், தென் அமெரிக்காவிலிருந்த இசுபானியக் குடியேற்றங்களை விடுவிக்க வேண்டுமென ஒரு படையைத் திரட்டினார். அவருடைய படைத் தளபதிகளில் ஒருவரான அந்தோனியோ சோசு தே சுக்ரீ (Antonio Jose de Sucre)கி.பி. 1824-இல் இசுபானியப் படைகளை ஐயாகுசோ (Ayacucho) என்றவிடத்தில் தோற்கடித்தார்.பின்னர்ப் பெருவில் இசுபானியருக்கு உட்பட்டிருந்தசார்காசு(Charcas) பகுதியை விடுவித்து கி.பி. 1825 ஆகசுட்டு 6-இல் அது இசுபெயினிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டதென அறிவித்தார். அப்பகுதியின் அரசியலமைப்பைத் தீட்ட உதவிய சைமன் பொலிவரின் நினைவாக அந்நாட்டிற்குப் பொலிவியா எனப் பெயர் சூட்டினார். பெருவும், பொலிவியாவும் இணைந்து ஒரே அரசாக இருந்து வந்தன. சுக்ரீ கி.பி.1826-இல் குடியரசுத் தலைவராகத்தேர்தெடுக்கப்பட்டு கி.பி.1828 – இல் பதவி விலகினார். அவருடைய நினைவாகத்தான் அந்நாட்டின் தலைநகரங்களுள் ஒன்று சுக்ரீ என்று வழங்கப்படுகிறது. பின்னர் அவருடைய சிறந்த தளபதியான ஆண்டர்சு சாந்தா குரூசு (General Andres Santa Cruz) குடியரசுத் தலைவராகப் பதவியேற்று 10 ஆண்டுகள் ஒரு வல்லாட்சியர் போல் ஆட்சி நடத்தினார். அவருடைய பெயரில் சாந்தா குரூசு என்ற நகரம் உள்ளது. அவருடைய மறைவுக்குப் பின் ஒருவர்பின் ஒருவராகப் பலர் பதவியேற்க உள்நாட்டுக் குழப்பங்களும், கலகங்களும் ஏற்பட்டன.

**எல்லைத் தகராறுகள்:** பொலிவியாவிற்கும், சிலிக்கும் இடையே உயர்ரக நைட்டிரேட்டு (Nitrate) உள்ள அடகாமா பாலைவனம் (Atacama Desert) குறித்து ஏற்பட்ட தகராறில் கி.பி. 1866, 1874 – ஆம் ஆண்டுகளில் உடன்படிக்கைகள் ஏற்பட்டன. அவற்றின் விளைவாக சிலி இப்பகுதியில் சில சலுகைகளைப் பெற்றிருந்தது. மீண்டும் அது குறித்து இவ்விரு நாடுகளிடையே போர் தொடங்கியபொழுது, பொலியாவிற்கு உதவியாகப் பெரு படையை அனுப்பியது. பசிபிக்குப் போர் (The War of the Pacific) எனப்படும் இப்போர் 4 ஆண்டுகள் நடந்த பின்னர் இறுதியில் அவ்விரு நாட்டுப் படைகளையும் சிலி வென்று, அடகாமா மாநிலத்தையும், பெருவின்தென்பகுதியையும் கைப்பற்றிக் கொண்டது. இதனால் பொலிவியா அடகாமா, ஆண்டோபகசுடா (Antofagasta) மாநிலங்களை இழந்தது. கடலுக்குச் செல்லும் வழி இன்றி, உள்நாட்டுப் பகுதியாக ஆனது. அதனால் பொலிவியா ஐக்கிய நாடுகளின் பொது அவையிலும், அமெரிக்க நாடுகள் நிறுவனத்திடமும் (Organisation of American States) தனக்குப் பசிபிக்குக் கடல் பகுதியில் ஒரு துறைமுகம் வேண்டுமென மனுச் செய்தது. எனவே, சிலி 1953-இல் அரிகா(Arica)துறைமுகத்தைச் சுங்கவரி அற்ற துறைமுகமாக அறிவித்து, பொலிவியாவுக்குச் சுங்கவரிச் சலுகையும், கிடங்கு வசதிகளும் அளித்தது.

பொலிவியாவிற்கும், பிரேசிலுக்கும் இடையே ஏக்கர் (Acre) வட்டாரத்தில் எல்லைத் தகராறு ஏற்பட்டபொழுது, பொலிவியா 1903-இல் பிரேசிலுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டு, அந்நாட்டிற்கு 1,80,000 சதுர கி.மீ. பரப்பளவுள்ள இடத்தை விட்டுக் கொடுத்தது.

இந்நாடு முதல் உலகப் போரில் நடுநிலை வகித்தது. இங்கு 1930-க்குப் பிறகு உள்நாட்டுக் கலகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டன. இது 1943-இல் இரண்டாம் உலகப் போரின்போது அச்சுநாடுகள் மீது போர் அறிவுப்புச் செய்தாலும், இதன் படைகள் எந்த இடத்திலும் போரில் ஈடுபடவில்லை.

**பாசு எசுடன்சோரோ:** பாசு எசுடன்சோரோ (Paz Estenssoro)பொலிவியாவிற்கு வெளியே இருந்தபோதிலும் 1951-இல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும், அப்பொழுது குடியரசுத்தலைவராக இருந்தவர் ஆட்சியைப்படைக் குழுவிடம் (Military Junta) ஒப்படைத்தார். பாசு பொலிவியாவிற்கு வந்து அதனை 1952 ஏப்பிரலில் தூக்கி எறிந்துவிட்டு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் தகரச் சுரங்கங்களை நாட்டுடைமையாக்கி, பறிக்கப்பட்ட நிலங்களை இந்திய உழவர்களுக்கு அளித்தார். உலகில் 1950,1960 – ஆம் ஆண்டுகளில் தகரத்தின் விலை வீழ்ச்சியடைந்ததால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. அமெரிக்கப் பொருளுதவியுடன் சாலைகள் போடப்பட்டு, மின்விசை நிலையங்கள் நிறுவப்பட்டு, பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பலவிதமான பொதுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எண்ணெய் உற்பத்தியும் அதிகரித்தது. அந்நாட்டு அரசியல் அமைப்பின்படி இவர் தொடர்ந்து அடுத்த முறையும் குடியரசுத்

தலைவராக இருக்க முடியாதாகையால் குடியரசுத் துணைத்தலைவர் சைலசு சுயசோ (Siles Zuazo) குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாசுவின் கொள்கைகளையே பின்பற்றினார். அதன் பின்னர் 1960-இல் பாசு மீண்டும் குடியரசுத் தலைவரானார். அவர் அரசியல் அமைப்பை மாற்றிக் குடியரசுத் தலைவரின் பதவிகாலம் முடிந்து மீண்டும் அவரைத் தேர்ந்தெடுக்கவும், அரசின் பொருளாதார அதிகாரத்தை விரிவுபடுத்தவும் வழிவகுத்தார். அதனால் இவர் மீண்டும் குடியரசுத் தலைவரானார்.

புரட்சியாளர்கள் 1964 நவம்பரில் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு 1966-இல் தேர்தல் நடத்தினர். அப்பொழுது அரசியலில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. அரசாங்கப் படைக்கும், பொதுவுடைமையாளரின் தலைமையிலான கொரில்லாப் படைக்கும் போர் நிகழ்ந்தது. பல அரசுகள் ஆட்சிக்கு வந்து, படையினரின் தலையீட்டால் அவை ஒன்றன்பின் ஒன்றாகக் கவிழ்க்கப்பட்டன. கர்னல் குவோ பென்சர் சுவாரசு (Col. Hugo Banzer Suarez) 1971-இல் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றார். நாட்டில் 1973-74-இல் பல கலகங்கள் ஏற்பட்டு அரசுப்படையினருக்கு ஆதரவாக மாறியது. அவர்கள் 1974 நவம்பரில் ஆட்சி முழுவதையும் கட்டுப்படுத்தலாயினர். பென்சர் 1978-இல் பதவி விலகியதால் 1978, 1980 ஆண்டுகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டும், படையினரின் குறுக்கீட்டால் அரசு ஏற்படவில்லை. அந்நாட்டிற்குத் தகரம் மூலம் வந்த வருமானம் 1982-இல் குறைந்து போனது. தேசிய காங்கிரசு 1985 சூலை 14-இல் நடத்திய தேர்தலில் டாக்டர் விக்டர் பாசு எசுடன்சோரோ (Dr. Victor Paz Esstenssoro) குடியரசுத் தலைவராகவும், டாக்டர் சூலியோ கேரட்டு ஐலான் (Dr. Julio Garret Ayllon) குடியரசுத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் புதிய அமைச்சரவை 1986 நவம்பரில் பதவியேற்றது. சி.இரெ.

**பொவாடா:** 'சாயர்' அல்லது 'சாயிர்' என்ற பார்சிமொழிச் சொல்லினின்று வந்ததே 'சாகிரி இலக்கியம்' என்பதாகும். 'சாகிரி' எனின் இட்டுக்கட்டிப் பாடும் பாடல் வகை. இட்டுக்கட்டிப் பாடும் கவிஞனைப் 'பாவலர்' எனத் தமிழில் குறிப்பிடலாம். நினைத்த மாத்திரத்துப் பாட்டியற்றும் திறனும், அதனை முறையாகப் பாடும் வல்லமையும் கொண்ட கவிஞனே 'சாகிர்' ஆவான். மராட்டியில் சாகிரி இலக்கியம் இருவகையாகக் காணப்படுகிறது. ஒன்று பொவாடா; மற்றது இலாவணி.

'பொவாடா' எனின் ஒருவர்தம் வீர தீரச் செயல், அறிவுக்கூர்மை, திறமை, குணம், செல்வ வளம் ஆகியவற்றைப் பற்றிய கவிவருணனையாகும். இது வாய்மொழியாக வழங்கப்பட்டுப் பிற்காலத்தில் எழுத்திலக்கியமாக மாறியது.

சிவாசி வெற்றி பெற்றதும், சீசாபாய், பொவாடா பாடும் சாகிரை அழைப்பித்ததாகச் செய்தி உண்டு. அரசன், குறிப்பிட்ட நிகழ்வு அல்லது குறிப்பிட்ட ஒருவரைப் பற்றிய சிறப்பைப் பாடுவதற்குப் பொவாடா சாகிர்களை அழைப்பதும் வழக்கமாக இருந்திருக்கிறது. புகழ்வது மட்டுமன்று; சில நேரங்களில் சில நிகழ்வுகளினால் பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பின் அதற்குக் காரணமானவர்களை இகழ்ந்து பாடுவதும் உண்டு.

பொவாடா பாடும் பாவலன் தன்னுடைய இரு பக்கப் பாட்டுக்காரர்களுடன் இதனை நிகழ்த்துவதால் இது நிகழ் கலை வடிவாக அமைந்துள்ளது; நாடக மயமானது என்று கூடச் சொல்லலாம். ஏனெனில், பொவாடாவில் வரும் முக்கிய பாத்திரமாகவும், சூத்திரதாரியாகவும் தானே மாறிப் பாடி நடிக்கின்றான். ஆங்காங்கே பாட்டை நிறுத்திவிட்டு உரைநடையிலும் கதை சொல்கின்றான்.

பொவாடாவைத் தொடங்கும்போது வழக்மாக ஏதாவதொரு கடவுள் வணக்கமும், பின்னர்ச் சொல்லப் போகின்ற கதைக்கு முன்னுரையும் அதன் பின் கதையில் புகுந்து, பாடி விளக்குதலும் இடம் பெறும். இறுதியாகப் பாடியவரின் பெயர், யார் மேல் பாடப்பட்டது, அதற்காக என்ன பரிசு கிடைத்தது போன்ற விவரங்களும் சேர்த்தே பாடப்பட்டிருக்கும். சிவாசி காலத்திய பொவாடாக்களில் பார்சிச் சொற்களின் தாக்கம் அதிகமிருந்தது. ஆனால், பிற்காலத்தில் வடமொழிச் சொற்கள் அவ்விடத்தைப் பிடித்துக் கொண்டன. மேலும், பழைய பொவாடாக்கள் 'ஒலி' யமைப்பையும், சந்தத்தையும் பெற்ற இருவரிப் பாடல்களாகத் திகழ்ந்தன. பிற்காலத்தில் நெடும் பாடல்களே நிலைபெற்றன.

பொவாடாவைப் பற்றிய குறிப்பு கி.பி. 12, 13 -ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட 'மகிகாவதியின் பக்கரி' என்ற இலக்கியத்தில் காணப்படினும், சிவாசி காலத்திய 'அக்ஞான் தாசா பொவாடா'வே இன்று கிடைக்கிறது. அவ்வாறு, இன்றைக்குக் கிடைப்பவை ஏறத்தாழ 300 பொவாடாக்களே.

பொவாடாக்களின் பாடுபொருளைக் கொண்டு அவற்றை மூன்று காலக் கட்டங்களில் அடக்கலாம். அவை சிவாசி காலம்; பேசுவா காலம்; ஆங்கிலேயரின் தொடக்கக் காலம்.

சமகாலத்தில் எழுதப்பட்ட பொவாடாக்கள் சில வரலாற்று நிகழ்வுகளுக்குச் சான்றாதாரங்களாக் அமைந்துள்ளன. மேலும், அவ்வக்காலச் சமூக அமைப்பு, சடங்குகள், நம்பிக்கைகள் ஆகியவற்றையும் பொவாடா மூலம் அறியமுடிகின்றது. அனந்த பந்தி, கோனாசிபாளா, பரசுராம், இராம் சோசி, பிரபாகர், சகனபாவு ஆகியோர் மிகச் சிறந்த மராட்டியப் பொவாடா சாகிர்கள் ஆவர். இதனாலேயே பொவாடாவைக் 'காட்சிக் காவியம்' என்பார் வி.கா. இராசவாடே. இரா.வி.

**பொற்கைப்பாண்டியன்**: இவன் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னர்களுள் ஒருவன். வறுமையில் வாடிய கீரந்தை என்னும் பார்ப்பனன் தன் மனைவியை வீட்டில் தனியே விட்டுவிட்டுப் பயணம் செல்லுமுன், அரசனுடைய காவல் உள்ளதால் அவள் அஞ்ச வேண்டாமெனக் கூறினான். இரவில் நகர்ச் சோதனைக்கு வந்த அரசன் அதனைக் கேட்டான். சில காலம் சென்றபின் ஒரு நாள் அவ்வீட்டில் ஆண் குரல் கேட்க, நகர்ச் சோதனைக்கு வந்த அரசன் கீரந்தை திரும்பி வந்ததை அறியாததால், அவ்வீட்டின் கதவைத் தட்டினான். கதவைத் தட்டியபின் கீரந்தை திரும்பி வந்துவிட்டதை அறிந்த பாண்டியன் அத் தெருவிலுள்ள அனைத்து வீடுகளின் கதவுகளையும் தட்டிச் சென்றான். மறுநாள் அரசவையில் அத்தெருவிலுள்ளோர் தங்கள் வீட்டுக் கதவைத் தட்டிச் சென்றவனைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்க வேண்டுமென்று முறையிட்டனர். அதுகேட்ட அரசன், அக்குற்றம் செய்தவன் தானே என ஒப்புக் கொண்டு தன் கையை வாளால் வெட்டிக் கொண்டான். வெட்டப்பட்ட கையிருந்த இடத்தில் பொன்னாலான கையொன்றைப் பொருத்திக் கொண்டதால், அவன் பொற்கைப் பாண்டியன் என்னும் பெயர் பெற்றான். இது பற்றியகுறிப்பு சிலப்பதிகாரத்திலும் (கட்டுரை காதை: 42-53), பழமொழி நானூறு என்னும் நூலிலும் காணப்படுகிறது. செ.இரெ.செ.

**பொற்றெக்காட்டு, எசு. கே.**, மலையாள மொழியில் ஞானபீடப்பரிசு (1981) பெற்றவர். இவர் இயற்பெயர் சங்கரன்குட்டி. இவர் 1913-ஆம் ஆண்டு கோழிக்கோட்டில் பிறந்தார். தந்தையார் குஞ்ஞிராமன். கல்லூரியில் இடைநிலை வரை பயின்றார். இவர் 'பிரபஞ்சம்' வார இதழின் ஆசிரியர்; கேரள சாகித்தியக் கழகத்தின் தொடக்கம் முதல் அதன் பொதுக்குழு உறுப்பினர்; ஒரு தடவை நீங்கலாக மற்ற காலங்களில் அதன் ஆட்சிக்குழு உறுப்பினர் போன்ற பல பதவிகளில் இருந்தார். அதன் துணைத்தலைவராக 1971-1974 -ஆம் ஆண்டுகளில் பணியாற்றினார். புதுதில்லி மேலவையில் 1962 முதல் 1967 வரையிலான கால அளவில் உறுப்பினராயிருந்தார். புதினம், சிறுகதை,பயணக் கட்டுரைகள், கவிதைத்தொகுப்பு,கட்டுரைத் தொகுப்பு நகைச்சுவைக் கட்டுரைகள் எனப் பல துறைகளில் படைப்புகள் வெளியிட்டுள்ளார். கவிதைகள் எழுத 'அருணண்' எனும் புனைப் பெயரைக் கொண்டார். மனைவி சயவல்லி; மக்கள் நால்வர். இவர், 1982-இல் இறந்தார்.

இராசமல்லி, புள்ளிமான், சந்திரகாந்தம், பத்மராகம், நிசாகந்தி, மணிமாளி, அரங்கமண்டபம் போன்ற பல சிறுகதைத்தொகுப்புகளும், விடகன்யக, மூடுபடம், நாடன் பிரேமம், பிரேமசிட்ச, ஒரு தெருவின்றெ கத, ஒரு தேசத்தின்றெ கத போன்ற பல புதினங்களும் எழுதியுள்ளார். உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் நடத்திய பயணங்கள் பற்றிய நூல்கள் பல எழுதியுள்ளார். காப்பிரிகளுடை நாட்டில், சிம்க பூமி (2 தொகுதிகள்), பாதிரா சூர்யன்றெ நாட்டில், சோவியத்து டயரி (இரண்டு தொகுதிகள்), காசுமீர், இந்நத்தெயூரோப்பு, பொகிமியன் சித்திரங்கள், பாலிதவீவு, இமாலய சாம்ராச்சியத்தில் எனும் நூல்கள் அவர்தம் பயண நூற்களுள் குறிப்பிடத்தக்கன. பயணியான பொற்றெக்காட்டின் கதைகளில் அவர் பயணம் செய்த பல இடங்களும், பொருள்களும் பின்னணியாக அமைகின்றன. மனித வாழ்க்கை நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்ட கதைகளையே எழுதியுள்ளார். இவர்தம் பிரேமசில்பி எனும் கவிதைத் தொகுப்பு குறிப்பிடத்தக்கது.

மரபுத்திரிபின்மையும் காதற்காவியப் பாங்கும் இவர் படைப்புகளில் கலந்து வரக் காணலாம். வெறும் வருணனைகளைவிட, வருணனை கலந்த விளக்கமே இவர் எழுத்தில் எதிரொலித்துள்ளது.வடமலபாரின் வனங்களில் குடியேறிய கிறித்தவக் குடும்பங்களின் வாழ்வினைப் படம் பிடிக்கும் விடகன்யக, தெருவில் நடக்கும் மனித உயிர்களைப் படம்பிடித்துக் காட்டும் ஒரு தெருவின்றெ கத போன்ற புதினங்களில் இவர் தனித்தன்மை பதியக் காணலாம். தன் வரலாறோ என எண்ணுமளவுக்குச் சிறப்பாக அமைந்துள்ள ஒரு 'தேசத்தின்றெ கத' எனும் புதினத்தின் கதைப்பொருள் ஆசிரியரின் தன்அனுபவங்கள் நிறைந்தது. இதற்கு 1981-இல் ஞானபீடப்பரிசு கிடைத்தது.

இவர், 1945 (சிறுகதை-யவனிகக்குப் பின்னல்) 1948 (புதினம் - விடகன்யக) ஆண்டுகளில் சென்னை அரசாங்கப் பரிசும், 1961-இல் (புதினம் - ஒரு தெருவின்றெகத)கேரளசாகித்தியக் கழகப் பரிசும்,1972-இல் (புதினம்-ஒரு தேசத்தின்றெகத)புதுதில்லி சாகித்தியக் கழகப் பரிசும் பெற்றார்.

இவர் எழுதிய ஒட்டகம் என்ற சிறுகதையும் (மலையாளச் சிறுகதைகள், புட்பவேணி, கோவி,

1971, சாகித்தியக் கழகம், புதுதில்லி) சங்கமம் என்ற படைப்பும் (மொ.பெ.சௌரி, 1957, தேனருவிப் பதிப்பகம்) தமிழில் வெளிவந்துள்ளன. ப.ப.

**பொறுப்பிணைக் கொடை** என்ற தொடர் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 127-ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் முதல் பத்தியின்படி, ஒருவருக்கு உரிமை மாற்றம் ஒன்றின் கீழ்க் கொடுக்கப்படும் கொடையொன்று பல பொருள்களைக் கொண்டிருந்து, அவற்றில் சில சுமை (Burden) யுடனும் மற்றவை சுமையின்றியும் இருப்பின், கொடை பெறுபவர் அவற்றை முழுமையாக ஏற்றாலொழிய எதையும் பெற முடியாது என்றுரைக்கிறது. இப்பிரிவில் கூறப்பட்டுள்ள சட்டக் கொள்கை, 'நற்பயன் ஒன்றினை ஏற்பவர் அதற்குரிய சுமையையும் ஏற்கவேண்டும்' (Quisenti Commodum sentire debet et onus) என்ற இலத்தீன் முதுமொழியை அடிப்படையாகக் கொண்டது. உரிமை மாற்றத்தின் கீழ்ப் பயனைப் பெறுவோர் அதில் கண்டுள்ள எல்லாச் சுமைகளையும் ஏற்க வேண்டும் என்பதே இதன் உட்கருத்து. கொடையின் நலனை மட்டும் பெற்றுக் கொண்டு சுமையை உதறிவிடக் கூடாது. இதே போன்ற சட்ட விதி சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 35-ஆம் பிரிவின் கீழும் கூறப்பட்டுள்ளது. இப்பிரிவு தேர்ந்து கொளல் கோட்பாடு பற்றி உரைக்கிறது. அதன்படி, ஒரு கொடையானது பல பொருள்களைக் கொண்டிருந்து, அவற்றில் சில கடப்பாடுகளையும் கொண்டிருக்கும்போது, கொடையைப் பெற இருப்பவர் ஒன்று எல்லாக் கொடைகளையும் முழுமையாக ஏற்க அல்லது எல்லாவற்றையும் தள்ளிவிடத் தேர்ந்துகொள்ளுமாறு விடப்படுகிறார். ஏற்பதாக இருப்பின் எல்லாவற்றையும் ஏற்க வேண்டும். நலம் பயக்கும் சில கொடைகளை மட்டும் பெற்றுக்கொண்டு சுமையுள்ள மற்ற கொடைகளைத் தள்ளிவிட முடியாது. இச்சட்ட விதியைத்தான் சொத்து உரிமை மாற்றுச் சட்டத்தின் 127-ஆம் பிரிவின் முதல் பத்தி கூறுகிறது. ஒரே உரிமை மாற்றத்தின் கீழ்க் கொடுக்கப்படும்போது இவ்விதி பொருந்தாது. இவ்விதிக்கான எடுத்துக்காட்டு இப்பிரிவின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளது.

A, செழிப்பு நிலையில் உள்ள X என்றவொரு கூட்டுத்தொழிற் கழகத்தில் பங்குகள் கொண்டிருக்கிறார். சிரம நிலையில் உள்ள Y என்ற ஒரு கூட்டுத்தொழிற் கழகத்திலும் அவர் பங்குகள் கொண்டிருக்கிறார். Y-யிலுள்ள பங்குகள் குறித்துச் சிரமமான சூழ்நிலைகள் தோன்றவிருக்கின்றன. A, கூட்டுத்தொழிற் கழகங்களில் தமக்கிருக்கும் எல்லாப் பங்குகளையும் B க்கு அளிக்கிறார். Y யிலுள்ள பங்குகளை ஏற்க, B மறுக்கிறார். அவ்வாறாயின் X-லுள்ள பங்குகளை அவர் பெற முடியாது.

விரும்பாவணம் பற்றிய இதைப் போன்ற விதி இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 122-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது.

அதிலுள்ள 127-ஆம் பிரிவின் இரண்டாம் பத்தி, ஒருவருக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனித்தனி உரிமை மாற்றங்கள் வாயிலாகப் பல பொருட்களைக் கொடையாக அளிப்பது பற்றிக் கூறுகிறது. இங்கு ஒவ்வொன்றும் தனித்தனி உரிமை மாற்றங்களாக இருப்பதால், பயனுள்ளவற்றை ஏற்றுக் கொண்டு சுமைகள் கொண்டதைத் தள்ளிவிடலாம். எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது தள்ளிவிடுதல் வேண்டியதில்லை. முதலாம் பத்தியில் கூறப்பட்டுள்ளவாறு இரண்டில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டியதில்லை. இப்பிரிவின் இரண்டாம் எடுத்துக்காட்டு இரண்டாவது பத்தியில் கூறப்பட்டுள்ள சட்ட விதியை நன்கு விளக்கும். இதைப் போன்ற சட்டவிதி இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 123-ஆம் பிரிவில் விரும்பாவணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆ.ச.

**பொறுப்புநிலை:** பொறுப்புநிலை (Liability) என்பது விரிந்த பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். இது எந்தப் பொறுப்புற்ற நிலையையும், கடப்பாட்டு நிலையையும், பொருள் அளிக்க வேண்டிய கடப்பாட்டு நிலையையும் மற்றும் கடனுற்ற நிலையையும் குறிக்கும். இந்தப் பொறுப்பு நிலையானது நிகழ்காலப் பொறுப்புடையதாக அல்லது வருங்காலத்தில் செய்ய வேண்டிய பொறுப்புடையதாக இருக்கலாம். நிபந்தனைக்கு உட்பட்ட பொறுப்பு நிலையாகவும் இருக்கலாம்.

சட்டப் பொறுப்பு நிலையானது. சட்டப் பொறுப்பு வாய்ந்த தன்மையையும் சட்டப்படி செய்து முடிக்க வேண்டிய கடப்பாட்டுத் தன்மையையும் குறிக்கும். சட்டப் பொறுப்புநிலையில் உள்ளவர் சட்டப்படி அல்லது நீதிக்கேற்ப அவரது பொறுப்பினைச் செய்து முடிக்க வேண்டும். அண்டர்சன்' சட்ட அகராதிப்படி (Andersons' Law Dictionary), சட்டப்படி அல்லது நீதியின் அடிப்படையில் செய்யப்பட வேண்டிய கடப்பாடுகளையும், கொடுக்கப்பட வேண்டியவற்றையும், ஈடு செய்ய வேண்டியவற்றையும் பொறுப்புநிலை குறிக்கும். நீதிபதி தேக் சந்து (Dek Chand), பொறுப்புநிலை என்பது எல்லாவற்றையும் உள்ளடக்கிய அதிகப் பொருள் கொண்டுள்ளது என்றும், வழக்கமான நடைமுறையில் அதன்பொருளைப் பார்க்கும் பொழுது சட்டத்தின் அடிப்படையில் அல்லது நீதியின் அடிப்படையில்

உள்ள கடப்பாட்டு நிலையைப் பொறுப்புநிலை குறிக்கும் என்றும் கூறுகிறார். ச.மோ.

**பொறுப்புரிமை அமைப்பு** சொத்துடன் சேர்க்கப்பட்ட ஒரு கட்டப்பாட்டில் இருந்து எழுவ தாகும். சொத்தின் உரிமையாளர் மற்றொருவரின் நன்மைக்கும் அல்லது சொத்தின் உரிமையாளர் நன்மைக்கும் மற்றும் ஒருவர் நன்மைக்கும் சொத் தின் மீது ஒரு கடப்பாட்டினை ஏற்றி அமைத்துச் சொத்தினை ஒருவர் மீது நம்பிக்கை வைத்து அவரிடம் விடுவாரானால் அந்த அமைப்பிற்குப் பொறுப்புரிமை அமைப்பு (Trust) என்பது பெயர். பொறுப்புரிமை அமைப்பை கி.பி. 1882-ஆம் ஆண்டு இந்தியப் பொறுப்புரிமைகள் சட்டத்தின் பிரிவு 3 வரையறை செய்கின்றது. பொறுப்புரிமை அமைப்பு ஒருவருடைய நன்மைக்கு அல்லது சிலருடைய நன் மைக்கு அல்லது பலருடைய பொது நன்மைக்கு அறக்கட்டளையாகவோ, சமயக் கட்டளையாகவோ அமைக்கப்படலாம். ஒரு பொறுப்புரிமை அமைப்பிற்கு வேண்டிய தகுதிகளாவன;1) பொறுப்புரிமை அமைப் பின் சொற்களில் அறுதியிட்ட நன்மை, 2) பொறுப்பு அமைப்பின் சொத்தின் அறுதியிட்ட நன்மை, 3) பொறுப்புரிமை அமைப்பின் மூலம் பயன் பெறு பவர்கள் பற்றிய அறுதியிட்ட தன்மை.

பொறுப்புரிமை அமைப்பை அமைப்பவர் பொறுப் புரிமை அமைப்பு ஆக்கியோன் எனப்படுவர். பொறுப் புரிமை அமைப்பில் சொல்லப்படும் நம்பிக்கையின்படி பொறுப்புரிமை அமைப்பை ஏற்றுச் செயற்படுபவர் பொறுப்பாட்சியாளர். பொறுப்புரிமை அமைப்பு மூலம் பயன் பெறுவோர் நன்மை பெறுவோர் ஆவார். பொறுப்புரிமை அமைப்பை ஏற்படுத்திய ஆவணம் பொறுப்பாவணம் என்று சொல்லப்படும். பொறுப்பாட்சியாளர் பொறுப்பாவணத்தில் சொல் லப்பட்டுள்ள நிபந்தனைகட்கு உட்பட்டுப் பொறுப் பாவணத்தில் சொல்லப்பட்டவாறே செயற்பட வேண்டும். அவருக்குத் தம் விருப்பம்போல் பொறுப் புரிமை அமைப்பைச் செயற்படுத்தும் உரிமை இல்லை. பொறுப்புரிமை அமைப்பு, யாருடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதோ அவருடைய நன்மையைக் கருத்திற்கொண்டு, அவர் செயற்படல் வேண்டும்.

பொறுப்புரிமை அமைப்பு இரண்டு வகையாகும். மேற்கோளாக ஒருவர் அவருடைய சொத்தை, நம்பிக் கையின் அடிப்படையில் பொறுப்புரிமை அமைப்பை ஏற்படுத்தி, அதனைப் பொறுப்பாட்சியாளரிடம் விட்டு, அவருடைய குழந்தைகள் பிள்ளைப் பருவத் தில் இருக்கையில், அக்குழந்தைகளைச் சொத் தின் வருமானத்திலிருந்து பொறுப்பாட்சியாளரைக் கவனித்து வரவேண்டலாம். குழந்தைகள் வயது அடைந்தவுடன் அவர்களிடம் சொத்தினைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் பொறுப்பாட்சி யாளரை வேண்டலாம். இது தவிர, குறிப்பிட்ட பொறுப்பாண்மை எனப்படுவதில் மற்றொருவர் தம்முடைய சொத்தினைப் பலருடைய பொது நன்மைக்காகப் பொறுப்புரிமை அமைப்பு ஏற்படுத்திப் பொறுப்பாட்சியாளரிடம் நம்பிக்கை அடிப்படையில் ஒப்படைக்கலாம். இவ்வாறு செய்வது பொதுப் பொறுப்பாண்மை (Public Trust) அமைப்பாகும். ஒரு பொறுப்புரிமை அமைப்பு, தனி மற்றும் குறிப் பிட்ட பொறுப்புரிமை அமைப்பா என்பது, பொறுப் புரிமை அமைப்பு ஆக்கியோனுடைய பொறுப்பா வணத்தில் வெளிப்படுத்திய அவருடைய எண்ணத் தின் மூலமே அறியப்படும். பொறுப்புரிமை அமைப்பு தொடர்ந்து காலவரையறை இன்றிப் பொறுப்பாட்சி யாளரால் பாதுகாக்கப்பட வேண்டின் அது முழுக் காலப் பொறுப்புரிமை அமைப்பாகும். ஒரு குறிப் பிட்ட காலத்திற்கு மட்டும் பொறுப்புரிமை அமைப்பு பொறுப்பாட்சியாளரால் பாதுகாக்கப்பட வேண்டின் அது இடைக்காலப் பொறுப்புரிமை அமைப்பாகும். ச.மோ.

**பொறுப்புறுதியின் மீது வங்கிக் கடன்:** வங்கிகள் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமானால் அவை தங்களிடமுள்ள வைப்புகளைத் திறமையாக முதலீடு செய்யவேண்டும். வங்கிகள் முதலீடு செய்யும் போது அவற்றிற்கு ஆதாயம் கிடைக்கும் வகையில் அம்முதலீடுகள் அமைவது தேவை. மேலும் முதலீடு கள் பாதுகாப்பு உள்ளனவாகவும், எளிதில் பணமாக்கக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும். வங்கிகளின் முதலீட்டில் அவை அளிக்கும் கடன்கள் முதலிடம் பெறுகின்றன. கடனளிக்கும் போது கடனில் பாது காப்பு இருக்கின்றதா என்பதை உறுதி செய்வது வங்கியின் கடமை யாகும். இப்பாதுகாப்பை உறுதி செய்ய வங்கிகள் சில முறைகளைப் பின்பற்றுகின்றன.

கடன் பெறுபவரிடமிருந்து தகுதியான மதிப் புள்ள ஈடுகளை வங்கிகள் எதிர்பார்க்கின்றன. அவை மதிப்புள்ள பொருட்களின் ஈடாக அல்லது அடைமானமாக இருக்கலாம். நகைகளை ஈடா கவும், நிலம், வீடு முதலானவற்றை அடைமானமாக வும் வைத்துக் கடன் பெறுவதை நடைமுறையில் காணலாம். சில வேளைகளில் இத்தகைய அடை மானம் அல்லது ஈட்டினைத் தரமுடியாதவர்களுக்கு வேறு ஒருவர் அளிக்கும் பொறுப்புறுதியின் மீது வங்கி கடன் கொடுக்கலாம் (Bank Loan on Guarantees).

வங்கியின் வாடிக்கையாளர் ஒருவருக்குக் கடன் தேவைப்படுகின்றது. அவரிடம் அடைமானமாக அல்லது ஈடாக அளிப்பதற்கு வேறு சொத்துகள்

அல்லது பொருட்கள் இல்லை. இந்த நிலையில் அவர் தமக்காக வங்கியிடம் பொறுப்பாளராக-அதாவது கடனுக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்பவராக நிற்பேன் என உறுதியளிக்கத் தம் நண்பர் அல்லது உறவினர் யாரையாவது வேண்டலாம். அவ்வாறு பொறுப்புறுதி அளிப்பவர், கடனாளி தாம் பெற்ற கடனைத் திருப்பித் தராவிட்டால், தாம் தருவதாக வங்கிக்கு ஓர் உறுதியளிக்கின்றார். பொறுப்புறுதி அளிப்பவர் தந்த வாக்குறுதியின் பேரில் தன் வாடிக்கையாளருக்கு வங்கி கடன் வழங்கும். இத்தகைய கடன்கள், 'பொறுப்புறுதி மீது வழங்கப்படும் வங்கிக் கடன்கள்' எனக் கூறப்படுகின்றன. பொறுப்புறுதி அளிப்பவர் அதற்கான பத்திரங்களில் கையெழுத்திட்டு வங்கிக்குத் தர வேண்டும்.

இதிலிருந்து பொறுப்புறுதி என்பது வங்கிக்கு உறுதியளிப்பவரால் எழுதித் தரப்படும் உறுதிமொழி என அறியலாம். உண்மைக் கடனாளி கடனைத் திருப்பித்தாராதபோது, பொறுப்புறுதி அளித்தவர் அக்கடனுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

**கடனின் தன்மைகள்**: 1) பொறுப்புறுதியைப் பெறுவது வங்கிகளுக்குப் பொதுவாக எளிதான செயலாகும். ஆனால், பொறுப்புறுதி அளிப்பவரின் நாணயத் தன்மையை முற்றும் தெரிந்து கொண்ட பின்னரே வங்கி கடனைத் தருகிறது. இருந்தாலும் இது ஒரு பாதுகாப்பற்ற கடன் என்பது குறிப்பிடத்தக்கது. 2) பொறுப்புறுதி அளிப்பவரை அவ்வாறு அளிக்குமாறு தூண்டுவது கடன் வாங்குபவரின் பணியாகும். வங்கி, ஒரு குறிப்பிட்ட ஆளைப் பொறுப்புறுதி அளிக்க அழைத்து வருமாறு கடன் கேட்பவரைத் தூண்டுதல் கூடாது. 3) மேலும், பொறுப்புறுதி அளிப்பவரை வங்கி அல்லது கடன்பெற விரும்பும் வாடிக்கையாளர் எவ்வகையிலும் கட்டாயப் படுத்தக் கூடாது. அவ்வாறு கட்டாயத்தின் பேரில் அளிக்கப்பட்ட பொறுப்புறுதி சட்டப்படி செல்லாது. 4) கடனாளி கடனைத் திருப்பித் தரத் தவறும்போது, பொறுப்புறுதி அளித்தவர் அக்கடனைத் திருப்பிச் செலுத்தி விட்டுக் கடனாளியின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். 5) பொறுப்புறுதி அளித்தவரின் ஒப்புதல் இல்லாமல், வங்கிக்கும் கடனாளிக்கும் இடையே உள்ள ஒப்பந்தத்தில் ஏதாவது மாறுதல் செய்யப்பட்டால், பொறுப்புறுதி அளித்தவர் அவர்தம் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப் படுகின்றார்.

**கடனின் சிறப்பு**: 1) அங்காடியில் ஏற்படும் விலை மாற்றங்களால் இத்தகைய பொறுப்புறுதிக் கடன்கள் பாதிக்கப்படுவதில்லை. பிற ஈடுகள் மற்றும் அடைமானங்களின் மீது வழங்கப்படும் கடன்கள் விலை ஏற்ற இறக்கங்களினாலும், அங்காடியின் பிற சூழ்நிலைகளினாலும் பாதிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, நிலத்தின் அடைமானத்தின்பேரில் வங்கி கடன் அளிக்கின்றது. கடன் பெற்றவர் கடனைத்திருப்பித் தர இயலவில்லை. வறட்சி காரணமாக நிலத்தின் விலை வீழ்ச்சியுற்றால், வங்கியால் எதிர்பார்க்கும் விலைக்கு நிலத்தை விற்க முடியாது. ஆனால், பொறுப்புறுதி அளிப்பவரின் கடன் தீர்வுத் திறன் உள்ளவரை கடனின் முழு அளவிற்கு அவர் பொறுப்பாகின்றார்.

2) இவ்வகைக் கடன்களைப் பெறுவதற்கான ஒழுங்கு முறைகள் மிகவும் எளிதானவையாகும். இவ்வகைக் கடன்களுக்கென வரைமுறைப்படுத்தப்பட்ட படிவங்கள் வங்கிகளிடம் உள்ளன. கடன் பெறுபவரும் பொறுப்புறுதி அளிப்பவரும் அவற்றில் கையெழுத்திட்டால் போதும்.

3) கடன் திருப்பித் தரப்படாத நிலையில், பொறுப்புறுதி அளித்தவரின் மீது எளிதாகச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க இயலும். கடன் பெற்றவர் அளித்திருக்கக் கூடிய பிற ஈட்டுறுதிகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன், பொறுப்புறுதி அளித்தவரின் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

**குறைபாடுகள்**: 1) பொறுப்புறுதி அளித்தவரின் கடன் தீர்வுத் திறனைச் சார்ந்து இக்கடனின் பாதுகாப்பு அமைகின்றது. எந்த ஒருவரின் கடன் தீர்வுத் திறனும் எப்போதும் ஒன்றுபோல் நிலைத்திருப்பதில்லை. 2) பல வேளைகளில் பொறுப்புறுதி அளிப்பவரும் அவ்வங்கியின் ஒரு வாடிக்கையாளராக இருப்பதுண்டு. பொறுப்புறுதியை நிறைவேற்றும்படி வங்கி அவரைக் கட்டாயப் படுத்த நேரிடலாம். இச் சூழ்நிலையில் வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள நல்லுறவு பாதிக்கப்படும். 3. பொறுப்புறுதி அளித்தவருக்கு எதிராகச் சட்டப்படி நடவடிக்கை எடுத்து நீதிமன்றத்திற்குச் சென்றால், அதன் முடிவைத் திட்டமாக முன்கூற முடியாது. திறமையான முறையில் ஒப்பந்தம் வரையப்பட்டிருந்தாலும் கூட சில வேளைகளில் வங்கிக்குப் பாதகமான தீர்ப்பு வழங்கப்படலாம்.

பொறுப்புறுதியின்மீது வழங்கப்படும் கடன்கள் முழுப் பாதுகாப்பு உடையன என்று கூறமுடியாது. அவ்வகைக் கடன்களின் பாதுகாப்பு, பொறுப்புறுதி அளிப்பவரின் திறனைச்சார்ந்துள்ளது. எனவே, வங்கி சில முன்னெச்சரிக்கைகளுடன் நடந்துகொள்கிறது.

பொறுப்புறுதி அளிப்பவரின் நிதி நிலையைப் பற்றி வங்கி முழுமையாகத் தெரிந்துகொண்டு செயற்படுகிறது. முழுப் பாதுகாப்பு அளிக்கும் வகை

யில் ஒப்பந்தம் அமைவதற்காக வரைமுறைப்படுத்தப் பட்ட படிவங்களை வங்கிகள் பயன்படுத்துகின்றன.

சில வேளைகளில் பொறுப்புறுதி அளித்தவர் ஓரளவு பணத்தைச் செலுத்தலாம். அவர் செலுத்திய பணம் கடனின் அளவுக்குக் குறைவாகவோ, கூடுத லாகவோ இருந்தால் அதைக் கடனாளியின் கடனுக் காக வரவு வைக்கக் கூடாது. அதைத் தனியாக 'பொறுப்புறுதிப் பாதுகாப்புக் கணக்கு' ஒன்றில் பற்று வைக்க வேண்டும். பொறுப்புறுதி அளித்தவரின் கடன் பொறுப்பின் சரியான அளவு நிருணயிக்கப் படும்வரை அவர் செலுத்தியது 'பகுதி செலுத்துதல்' என்றுதான் கருதப்படும் என்பதை வங்கி அவருக்குத் தெரிவிக்கிறது. முதன்மைக் கடனாளி இறந்து போனால் பொறுப்புறுதி அளித்தவரைக் கடனைத் தீர்க்கச் சொல்லலாம். கடனாளியின் சொத்துகளி லிருந்து வங்கிக்குக் கிடைத்த பணம், கடனின் அளவைவிட மிகுதியாக இருந்தால், பொறுப்புறுதி யாளருக்கு எஞ்சிய பணம் திருப்பித் தரப்படும்.

பா.அ.

**துணை நூல்கள்:**

Dinkar Pagare, Principles and Practice of Auditing, Sultan Chand & Co. Ltd., New Delhi,1974.

Tandon,B.N., A Handbook of Practical Auditing, S.Chand & Co. Ltd., New Delhi,1976.

*பொறையாற்று கிழான்*: தஞ்சை மாவட்டத் திலுள்ளது பொறையாறு என்னும் ஊர். நெய்தல் வளம் நிறைந்த இந்த ஊரில் குறுநில மன்னராகவும் சிறந்த கொடை வள்ளலாகவும் பண்டு வாழ்ந்தவர் பொறையாற்று கிழார் ஆவார். பரிசிலர்கள் எப் பொழுதும் இவரிடம் வந்து கொண்டே இருப்பர். இவரைப் புகழ்ந்து பாடிய பாடலொன்று புறநானூற் றில் காணப் பெறுகிறது. பாடியவர் கல்லாடனார்.

இப்பொழுது தஞ்சை மாவட்டத்திலுள்ள இருபது வட்டங்களில் 'பொறையாறு' ஒரு வட்டமாகும். கடற்கரையை ஒட்டிய பகுதியில் இப்பொழுது வளம் குறைந்துள்ளது. இவ்வட்டத்திலுள்ள பெருங் கிரா மங்கள் எழுபத்தெட்டு. 'அகர வல்லம்' முதல் 'விளாகம்' வரையிலுள்ள அவற்றில் பொறையாறு என்ற பெயரிலும் ஒரு கிராமம் உள்ளது. சங்க காலத்தில் இப்பகுதியை ஆண்ட பொறையாற்று கிழார் ஒரு வேளாளராகவும் இருக்கலாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் (புறம்.23,25,371) மற்றும் அம்பர் கிழான் அருவந்தை (புறம்.385) ஆகியோரைப் பாடிய கல்லாடனார் பொறையாற்று கிழாரையும் பாடி யுள்ளார். எனவே, இவரது காலம் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழி யன் காலமாதல் வேண்டும்.

பொறையாற்று கிழாரின் வாயிற்கடையிலே நின்று, பின்வருமாறு வேண்டுகிறார் கல்லாடனார்: 'வேங்கடமலைக்கு வடக்கேயுள்ள நாடுகள் வறட்சி கொள்ள, ஆங்கு நெற்களம் வாழ்த்திப் பெற்ற நெல்லுடனும், ஊனும் கள்ளும் உண்டு களிப் படைந்த சுற்றத்துடனும், இங்கே வந்து தங்கினேன். இங்கிருந்து நீங்கி, வேறு வளநாடு தேடிச் செல்ல எண்ணி, பழங்குடி நிறைந்த பழநகரிலே சென்று கேட்டேன். நின்னை உணர்ந்து, அறிந்தவ ரான சிலர், என்னைக்கண்டு, 'முன்பே வந்தான்;இன் னும் வறுமையுடையான்; அளிக்கத் தக்கவனே' என உணர்ந்து கூறினர். அது கொண்டு நின்னைக் காண வந்தேன். பெருமானே நீ நின் நெடுமனையின்கண் நின் இல்லாளோடு இனிதே வாழ்வாயாக! நின் நாட்டிலே பதம் அறிந்து மழை பொழிய, நின் நிலங் கள் வேலிக்கு ஆயிரமாக நெல் விளைக! எனக்கும் அருளிக் காப்பாயாக!'. இப்பாடலில் பொறையாற்று கிழாரின் வண்மை சிறப்பிக்கப்படுகிறது.(புறம்.391).

வள்ளலின் கொடைச் சிறப்பைப் பாராட்டும் புலவர் 'வேலிக்கு ஆயிரமாக நெல் விளைக' என்று வாழ்த்துவது மிகவும் பெருமிதத்தோடு கூறியதாகும். பொறையாற்றுக்கிழார் தம் நிலப்பகுதியில் வற்றாது வாரி வழங்கி வந்தவர் என்பது இதனால் அறியப் படுகிறது. இவ்வொரு பாடலைத் தவிர வேறு பாடல் ஏதும் இவரைப் பற்றிக் கிடைக்கவில்லை.

வே.இரா.மா.

*பொன் பரிமாற்றத் திட்டம்*: பல்வேறு நாடுகளில் பணப் பொருளாதாரம் வளர்ச்சி பெற்ற போது, வெவ்வேறு வகையான பணத்திட்டங்கள் பின்பற்றப்பட்டன. பொருளாதாரத்தில் பொன்னை அடிப்படையாகக் கொண்டு பணம் வெளியிடப்பட் டால் அது பொன் திட்டம் எனவும், வெள்ளியை அடிப் படையாகக் கொண்டு பணம் வெளியிடப்பட்டால் அது வெள்ளித் திட்டம் எனவும் குறிக்கப்பட்டன. இவ்வாறு பொன்திட்டம், வெள்ளித்திட்டம் ஆகியவை உலோகத் திட்டம் என குறிப்பிடப்பட்டன. சில நாடு களில் பொன், வெள்ளி ஆகிய இரண்டும் பண வெளி யீட்டிற்கு அடிப்படையாக அமைந்திருந்தன. இத் தகைய திட்டம் இரு உலோக முறை எனப்பட்டது. மாறாக இவற்றில் பொன் மட்டும் அல்லது வெள்ளி மட்டும் அடிப்படையாகப் பயன்படுத்தப் பட்டால் அது ஓர் உலோக முறை என்று குறிப்பிடப் பட்டது. நாட்டில் பொன், வெள்ளி ஆகியவற்றின் பற் றாக் குறையினால் காகிதப் பணத்திட்டம் தோன்றி யது. இக்காலத்தில் காகிதப் பணத்திட்டம் எல்லா நாடுகளிலும் பின்பற்றப்படுகிறது.

**பொன் திட்டத்தின் கூறுகள்:** பொன் திட்டத்தில் (Gold Standard) ஒரு நாட்டின் பண அலகு ஒரு குறிப்பிட்ட எடையுள்ள, குறிப்பிட்ட தூய பொன் னுக்குச் சமம் என வரையறை செய்யப்பட்டிருக்கும். அவ்வாறு குறிப்பிட்ட வீதத்தில் நாட்டின் பணத்திற் குப் பொன்னை வாங்கும் பணியையும், விற்கும் பணி யையும் அரசு செய்யும். இவ்வாறு வாங்கி விற்கும் பொன் அளவிற்கு வரையறை இருக்காது. சுருங்கக் கூறினால் பணம் வைத்திருப்பவர் யாரும் குறிப்பிட்ட வீதத்தில் எவ்வளவு பொன் வேண்டுமானாலும் வாங்கலாம்.

மேலும், பொன் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் எவ்விதத்தடையும் இருக்காது. நாட்டின் பண ஆட்சி யாளர்கள் நாட்டிலுள்ள பொன்னின் அளவிற் கேற்பப் பண அளவினைக் கூட்டிக் குறைக்கும் பணி யைச் செய்ய வேண்டும். பொதுவாகக் கூறினால், பொன் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டில் பொன் னுக்கும் நாட்டின் பண அலகிற்கும் ஒரு திட்டவட்ட மான தொடர்பு பண ஆட்சியாளர்களால்வரையறை செய்யப்பட்டிருக்கும்.

இங்கிலாந்து முதன் முதலாக கி.பி.1816-ஆம் ஆண்டில் பொன் திட்டத்தைப் பின்பற்றியது. ஆயி னும், பெரும்பாலான நாடுகளில் கி.பி.1870-க்குப் பின்னர் இத்திட்டம் புழக்கத்தில் வந்தது. முதலாம் உலகப்போருக்கு முந்திய இருபது ஆண்டுகளில் பொன் திட்டம் மிகவும் பரவலாகப் பல நாடுகளால் பின்பற் றப்பட்டது.

**பொன்திட்ட வகைகள்:** ஒரு குறிப்பிட்ட காலத் தில் பொன்திட்டம் பெரும்பாலான நாடுகளால் பின் பற்றப்பட்டாலும், எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரி யான முறையில் பின்பற்றப்படவில்லை. அடிப்படை யில் எல்லா நாடுகளிலும் நாட்டின் பண அலகு பொன்னுடன் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால், மற்ற வகைகளில் சில வேறுபாடுகள் இருந்தன. பொன்திட்டம் பலவகைகளில் செயற்படுத்தப்பட்டா லும் கீழ்க்காணும் மூன்று வகைகளில் அவைஅடங்கும்.

1. பொன் நாணயத்திட்டம்(Gold Currency Standard) 2. பொற் கட்டித் திட்டம் (Gold Bullion Standard) 3. பொன் பரிமாற்றத் திட்டம் (Gold Exchange Standard).

பொன் நாணயத்திட்டம் அல்லது பொற்காசுத் திட்டத்தில் நாட்டின் பணம் தங்கத்தில் வெளியிடப் பட்டது. யார் வேண்டுமானாலும் பண ஆட்சியாளர் கள் வரையறை செய்த தூய்மையுடைய அளவுள்ள பொன்னைக் கொடுத்து அதனைக் குறிப்பிட்ட மதிப் புள்ள பொன் நாணயங்களாக மாற்றிக் கொள்ள லாம். இத்திட்டம் கி.பி.1913 வரை பல நாடுகளில் பின்பற்றப்பட்டது.

**பொற்கட்டித் திட்டத்தில்** பொன் நாணயங்கள் வெளியிடப்படவில்லை. மாறாகப் பண ஆட்சியாளர் கள் ஒரு குறிப்பிட்ட எடையுள்ள பொற்கட்டிகளை வைத்திருந்தனர். பொன்னைப் பெற விரும்புவோர் அரசால் நிருணயிக்கப்பட்ட மாற்றுவீதத்தில் பணத் தைக் கொடுத்துப் பொற்கட்டிகளைப் பெறலாம். ஒரு குறிப்பிட்ட அளவு பொற்கட்டிக்கும் குறை வாகப் பொன்னைப் பெறமுடியாது. முதல் உலகப் போர் முடிந்த சில ஆண்டுகளுக்குப் பின் இத்திட்டம் பரவலாகப் பின்பற்றப்பட்டது.

பொன்பரிமாற்றத் திட்டத்தில் பொற்காசுகள் அல்லது பொன் இருப்பு இல்லாமல் பண அலகு பொன்னுடன் மறைமுகமாகத் தொடர்புபடுத்தப் படும் வகையில் உருவான திட்டம் பொன் பரிமாற் றத் திட்டமாகும்.

பொன் நாணயத்திட்டத்திலும், பொற்கட்டித் திட்டத்திலும் பொன் கையிருப்பின் தேவை மிகுதி யாக இருந்தது. பல நாடுகளில் பொன் இருப்புக் குறைவு பட்டதால் அவற்றால் இத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியவில்லை. ஆயினும், பொன்னுக்கும் பணத்திற்கும் இருக்கும் தொடர்பை முற்றிலும் நீக்கிவிட நாடுகள் விரும்ப வில்லை. மக்களுக்கு நாட்டின் பண அலகின் மீது நம்பிக்கை இருக்க வேண்டுமானால், ஏதாவது ஒரு வழியில் பொன்னுக்கும் நாட்டின் பணத்திற்கும் இணைப்பு இருப்பது தேவை என்று பண ஆட்சியாளர் கள் கருதினர். அதன் விளைவாகப் பொன் பரிமாற் றத்திட்டம் தோன்றியது.

இத்திட்டத்தைப் பின்பற்றும் நாட்டில், நாட்டின் பண அலகிற்கும் பொன்னுக்கும் மாற்று வீதம் குறிப் பிடப்படுவதில்லை. நாட்டில் பொற்காசுகள் புழக்கத் தில் இருப்பதில்லை. பொற்கட்டிகள் இருப்பு வைக் கப்பட்டிருக்கா. காகிதப் பணமும், பிறஉலோக நாணயங்களும் பணமாகப் புழக்கத்திலிருக்கும். உள்நாட்டில் பணத்திற்குக் குறிப்பிட்ட வீதத்தில் பொன் பெறமுடியாது. ஆனால், உள்நாட்டுப் பணம், பொற்காசுத்திட்டம் அல்லது பொற்கட்டித் திட்டத் தைப் பின்பற்றும் மற்றொரு நாட்டின் பணத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றது.

பொன் பரிமாற்றத் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டின் பணத்திற்கும், பொற்காசு அல்லது பொற் கட்டித் திட்டத்தைப் பின்பற்றும் மற்றோர் நாட்டின் பணத்திற்கும் இடையே திட்டவட்டமான மாற்று வீதம் நிருணயிக்கப்பட்டிருக்கும். பொன் பரிமாற்றத் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டிலுள்ள ஒருவர்

பொன்னைப் பெறவிரும்பினால் முதலில் உள்நாட்டுப் பணத்தைக் குறிப்பிட்ட மற்ற நாட்டின் பணத் திற்கு மாற்றிக்கொள்ள வேண்டும். பின்னர் அந்த நாட்டில் அப்பணத்திற்குக் குறிப்பிட்ட மாற்று வீதத் தில் பொன்னைப் பெற வேண்டும். இந்த முறையில் பொன்பரிமாற்றத் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டின் பணம் மறைமுகமாகப் பொன்னுடன் தொடர்பு படுத்தப்படுகின்றது.

**செயற்படும் விதம்:** இந்தியாவில் இத்திட்டம் 1900 முதல் 1914 வரை செயற்பட்டது. இந்தியாவில் பொற்காசுகள் அல்லது பொற்கட்டிகள் இருப்பாக வைக்கப்படவில்லை. ஆனால், இங்கிலாந்தில் பவுண்டு இசுடர்லிங்கு (Sterling) இருப்புக் கணக்கு ஒன்றும், இந்தியாவில் உரூபாய் இருப்புக் கணக்கு ஒன்றும் வைக்கப்பட்டன. இங்கிலாந்தில் அப்போது பொற்காசுத்திட்டம் செயற்பட்டது. இங்கிலாந்து நாட்டின் பணமான 'பவுண்டு இசுடர்லிங்குக்கும்' இந்திய உரூபாய்க்கும் இடையே திட்டவட்டமான மாற்று வீதத்தை நிருணயித்திருந்தனர். இந்த மாற்று வீதத்தில் உரூபாய்க்குப் பவுண்டு இசுடர்லிங்கை வாங்கவும் விற்கவும் இந்தியப் பண ஆட்சியாளர்கள் உறுதி அளித்திருந்தனர்.

இந்தியர் ஒருவர் ஆங்கிலேயருக்குப் பணம் தர விரும்பினால் இந்தியாவில் அதற்கீடான உரூபாயைச் செலுத்திப்'பவுண்டு இசுடர்லிங்கி'ல் ஒரு பேற்றுரிமைச் சீட்டைப் பெறலாம். அதை ஆங்கிலேயருக்கு அனுப்பினால் அவர் அதை அங்குள்ள இந்திய இருப்புக் கணக்கில் செலுத்திப் பவுண்டு இசுடர்லிங்கு பெறலாம். அதுபோல இங்கிலாந்திலுள்ள ஒருவர் இந்தியருக்குப் பணம் தர வேண்டுமானால், அங்குள்ள இந்தியக் கணக்கில் 'பவுண்டைச்' செலுத்தி அதற்கீடான உரூபாய்க்குப் பேற்றுரிமைச் சீட்டைப்பெற்று இந்தியருக்குத் தரலாம். இந்தியர் அதை இந்தியாவில் உரூபாயாக மாற்றிக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தியர் ஆங்கிலேயருக்குப் பணம்அனுப்பினால் இந்தியாவிலுள்ள உரூபாய் இருப்புக் கூடி, இங்கிலாந்தில் உள்ள இந்தியப் பவுண்டு இருப்புக் குறையும்; மாறாக ஆங்கிலேயர் இந்தியாவிற்குப் பணம் அனுப்பினால் அங்கு இந்தியா வைத்துள்ள பவுண்டு இருப்புக் கூடி இந்தியாவிலுள்ள உரூபாய் இருப்புக் குறையும். இங்கு பவுண்டு இங்கிலாந்தின் பண அலகு என்பதும், அங்கு அது பொன்னாக மாற்றிக் கொள்ளத்தக்கது என்பதும் வெளிப்பாடாகும்.

இந்த முறை 1931 செப்டம்பர் வரை செயற்பட்டது. பின்னர் இங்கிலாந்து பொன் திட்டத்தைக் கைவிட்டதால் இந்தியாவும் பொன் பரிமாற்றத் திட்டத்தைக் கைவிட வேண்டியதாயிற்று.

**போருக்குப்பின் பொன் பரிமாற்றத்திட்டம்:** இரண்டாம் உலகப் போருக்குப்பின்னரும்கூட இத்திட்டம் ஒரு வகையில் செயற்பட்டது எனலாம். ஏனெனில்,ஓர் ஒப்பந்தப்படி அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U.S.A.) தம் தாலரைக் (Dollar) கொடுத்துப் பொன்னைப் பெற விரும்பும் பிற நாடுகளின் மைய வங்கிகளுக்கு 35 தாலர்களுக்கு ஓர் 'அவுன்சு' என்ற வீதத்தில் பொன்னை விற்றுவந்தது. அமெரிக்காவில் 1970-க்குப் பின்னர்ப் பொன் கையிருப்பு விரைந்து வெளியேறியதால் 1971-இல் அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவதைக் கைவிட்டது.

**திட்டத்தின் சிறப்புகள்:** பொன் கையிருப்பு வைத்துக் கொள்ள இயலாத ஏழை நாடுகளும் இத்திட்டத்தைப் பின்பற்றலாம். பொன் கையிருப்பு இல்லாமலே பொன் திட்டத்தின் நன்மைகளைப் பெறமுடியும்.

1) பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் எளிதாக நடைபெற இத்திட்டம் துணை செய்கின்றது. 2) மற்ற வகைப் பொன் திட்டங்களைப் போலல்லாது பின்பற்றும் நாட்டின் பண அளிப்பு நெகிழ்ச்சியை இத்திட்டம் பாதிப்பதில்லை. ஏனெனில் நாட்டின் பண அளவுக்கு ஈடாகப் பொன் கையிருப்பு வைத்திருக்க வேண்டியதில்லை.

**இத்திட்டத்தின் குறைபாடுகள்:** 1) இத்திட்டத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை குறைவாகவே இருந்தது. ஏனென்றால், மக்கள் எந்த நிலையிலும் பொன்னைக் கையாள வாய்ப்பு இல்லை. எனவே, இத்திட்டத்தில் உள்நாட்டுப் பணத்திற்கும் பொன்னுக்கும் உள்ள தொடர்பை மக்கள் எளிதில் புரிந்து ஏற்றுக் கொள்ளவில்லை. 2) இத்திட்டம் தானாக இயங்கக் கூடியதன்று. தொடர்புடைய இரு நாடுகளிலும் பண ஆட்சியாளர்கள் இத்திட்டத்தைத் திறமையாகக் கண்காணித்துச் செயற்படுத்த வேண்டியது தேவையாயிருந்தது. 3) உள்நாட்டுப் பணம் வெளிநாட்டுப் பணத்துடன் இணைக்கப்படுவதால் வெளிநாட்டின் விருப்பு வெறுப்புகளும்,பொருளாதார ஏற்ற இறக்கங்களும் உள்நாட்டுப்பணத்தைப் பாதிக்கக் கூடியதாக இருந்தன. 4) பிறநாடுகளின் பணத்துடன் தங்கள் பணத்தைத் தொடர்புபடுத்துவதைப் பல பெரிய நாடுகள் இழுக்காகக் கருதின. எனவே, பல நாடுகள் இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பா.அ.

**துணை நூல்கள்:**

**Bhatia, H.L.,** Monetary Economics, Vani Educational Books, New Delhi, 1985.

Sethi, T.T., Monetary Economics, S. Chand & Co. Ltd., New Delhi, 1981.

**பொன்மணியார்** சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். குறுந்தொகையில் ஒரே ஒரு பாடல் மட்டும் (பாடல் எண். 391) இவர் பாடியதாக உள்ளது. சிலர் இவருடைய பெயரைக்கொண்டு இவர் பெண்பாற் புலவர் என்று கூறுவர். அவ்வாறு கூறுதற்குச் சான்றேதும் இல்லை என்று மறுத்துரைப்பர் வேறுசிலர். ஆசிரியர் பெயரறியாத நற்றிணைப் பாடல் ஒன்றில் (பாடல்எண்.166) தலைவியின் உடலுக்குப் பொன்னும் அவளது கருங் கூந்தலுக்கு மணியும் உவமையாக்கப் பெற்றுள்ளனவாகப் 'பொன்னும் மணியும்' என்ற தொடர் காணப்படுவதைக் கொண்டு அப்பாடலைப் பாடியவர் இப்புலவர் என்றும், அச்சொற்றொடரைப் பயன்படுத்தியமையாலேயே இவருக்குப் பொன்மணியார் என்ற பெயர் அமைந்தது என்றும் கூறுவர்.

இவர் மழை மாறிய கோடையின் கொடுமையினையும் மழைவளம் காக்க வரும் மாரிக்கால மாண்பினையும் நன்கு பாடியுள்ளார். அப்பாடலில் மழை வளமற்ற மேட்டு நிலத்தே, மானினங்கள் வெம்மையின் கொடுமை ஆற்றாது மயங்கி வீழ்ந்து கிடக்கும்; உழுதொழில் புரியும் எருதுகள், தம் தொழிலை வெறுத்துச் சோம்பிக் கிடக்கும் எனக் கோடையின் கொடுமையையும், 'மழைபெய்யக் கண்டு, மயில் முதலாகிய உயிர்கள் எல்லாம் மகிழ்ச்சி கொண்டு ஆடிப்பாடும்' எனக் கார்காலக் கவினையும் கூறியுள்ளார். அப்பாடல் மூலம் புலவர், மயில் முதலாகிய உயிர்களுக்கு மகிழ்ச்சி தரும் அம்மாரிக்காலமே, கணவரைப் பிரிந்து தனித்து வாழும் மகளிர்க்கு மனத்துயர் உண்டாக்கும் இயல்புடையது என்றும் உணர்த்தியுள்ளார். பா.ந.

**பொன்முடியார்:** கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர்களுள் இவரும் ஒருவர். இவர் மறக்குடியிற் பிறந்தவர். அதற்கேற்ப இவர் பாடியுள்ள பாடல்களும் வீரத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன. இவர் சேரநாட்டிலுள்ள குட்ட நாட்டில் வாழ்ந்தவர். இப்புலவர் பெயரால் இப்பகுதியில் பொன்முடி என்னும் ஓர் ஊரும் உள்ளது. இப்போது இந்தப்பகுதி வெள்ளாத்திரி நாடு எனவும் வழங்குகிறது.

இவர் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் காலத்தில் வாழ்ந்தவர் எனச் சிலர் கருதுகின்றனர். இவரும் அரிசில் கிழார் என்ற புலவரும் 'தகடூர் யாத்திரை' என்ற உரையிடையிட்ட பாட்டுடைக் காப்பியத்தை இயற்றியுள்ளனர். அக்காப்பியம், பெருஞ்சேரலிரும்பொறை தகடூரை முற்றுகையிட்டு அதியமானைக் கொன்றதைக் கூறுவதாகும்.

இவர் வாழ்ந்த காலத்தில் பேரரசன் ஒருவனுக்கும், சிற்றரசன் ஒருவனுக்கும் போர் மூண்டது. அப்போரின் முடிவில் பேரரசன் படைகள் தோல்வியடைந்தன. போரியல்பைக் கண்ட பொன்முடியார் வேந்தர்களின் போர் நிலையை, குதிரைகளின் மறப்பண்பை எடுத்துக் கூறுவதாகத் தம்பாடலை அமைத்துள்ளார் (புறம். 299). எளிய உணவு உண்டு வளர்ந்த சிற்றரசன் குதிரைகள் போர்க்களத்தை அடைந்ததும் கடல் அலைகளைப் பிளந்து செல்லும் தோணி போலப் பகைவர் படை வரிசைகளைப் போழ்ந்து சென்று போர் புரிந்தன. நெய்யுடன் கூடிய உணவு உண்டு வளர்ந்த பேரரசன் குதிரைகள் போர்க்களத்தில் பகைவர் படையைக் கண்டு அஞ்சி, முருகன் கோயிலில் தூய்மையற்ற மகளிர் கலந்தொட அஞ்சி ஒதுங்குதல் போல ஒதுங்கி ஒதுங்கிப் பின்வாங்கின என நகைச்சுவை தோன்றக் கூறியுள்ளார். பொன்முடியார் பெண்பாற் புலவராகையால் முருகன் கோயிலில் தூய்மையற்ற மகளிர் ஒதுங்கும் உவமையைக் கையாண்டுள்ளார். அப்பாடல் நொச்சித் திணையில் குதிரை மறம் என்னும் துறையில் பாடப்பட்டுள்ளது.

பொன்முடியாரின் மற்றொரு பாடலும் போர்க்களக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அப்பாடல் (புறம். 310) தும்பைத் திணையில் நூழிலாட்டுத் துறையில் அமைந்துள்ளது. அப்பாடலில் வீரமிக்க ஒரு தாயின் பெருமிதமான உள்ளத்தை எழுத்திலே வடித்துக் காட்டுகிறார் பொன்முடியார்.

பொன்முடியார் வீரச்சுவைமிக்க பாடல்களை இயற்றியதுடன் பலரும் ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றியும் ஒரு பாடலில் (புறம். 312) கூறியுள்ளார். வாகைத் திணையில் மூதின் முல்லை என்னும் துறையிலமைந்த அப்பாடலில், குழந்தை பெற்று வளர்த்தல் தாயின் கடமை; சான்றோனாக்கல் தந்தையின் கடமை; வேல் செய்து தருதல் கொல்லனின் கடமை; நன்னடை நல்கல் வேந்தனின் கடமை; வெஞ்சமரில் அஞ்சாது பல களிறுகளைக் கொன்று வருதல் காளையின் கடமை என அழகாக எடுத்துக் கூறுகிறார். செ.இரெ.செ.

**பொன்வண்ணத்தந்தாதி** என்னும் நூல் சேரமான் பெருமாள் நாயனாரால் இயற்றப்பட்டது. பதினோராந் திருமுறை நூல்களில் ஒன்றாக விளங்குவது. இந்நூல் செய்யப் பெற்ற வரலாறு பெரியபுராணம் கூறும் கழறிற்றறிவார் புராணத்தில் கூறப் பெறுகின்றது.

மகோதையை ஆண்ட கழறிற்றறிவார் என்னும் சேரமன்னர் நாள்தோறும் தம்முடைய சிவபூசையின் இறுதியில் நடராசப் பெருமானின் நடனச் சிலம்பொலி கேட்டுப் பூசையினை நிறைவு செய்வார். ஒரு

நாள் சிலம்பொலி கேட்கத் தாமதமாயிற்று; சேரமான் வருந்தினார். அப்பொழுது தில்லைக் கூத்தப் பெருமான், 'யாம் சுந்தரர் திருப்பாட்டைச் செவி மடுத்தோம்; அதனால் தாமதம்' எனக்கூற, அச்சுந்தரரின் நட்பைக் கருதிச் சேரமான் சிதம்பரம் வருகின்றார். அப்பொழுது தில்லைக்கூத்தன் மீது அருளிச் செய்ததே 'பொன்வண்ணத்தந்தாதி' யாகும். அதன் பின் திருவாரூரை அடைந்து சுந்தரரின் நட்பைப் பெற்று மகிழ்கின்றார்.

பொன்வண்ணம் என்னும் தொடரை முதற் பாட்டின் முதற்சீராகக் கொண்டு தொடங்கி இறுதிச் செய்யுளாகிய நூறாவது செய்யுளில் 'கனகமலை யருகே போயின காக்கையும் அன்றே படைத்தது பொன் வண்ணமே' என்று அமைத்து அந்தாதித் தொடை பொருந்துமாறு சேரமான் பெருமாள் இந் நூலை முடித்தமையால், இந்நூல் 'பொன்வண்ணத்தந்தாதி' என்ற பெயர் பெற்றது.

இவ்வந்தாதியில் அகத்துறைப் பாடல்களும், இறைவனுக்குத் தொண்டு செய்முறைப் பாடல்களும், அவ்வாறு தொண்டுபட்ட மெய்யடியார்களுடைய இயல்பை விரித்துரைக்கும் பாடல்களும் அமைந்துள்ளன. அகத்துறைப் பாடல்களில் அகச்சுவையோடு பக்திச் சுவையும் திகழ்வதைக் காணலாம்.

இதன்கண் அமைந்துள்ள செய்யுட்கள் யாவும், மோனை, எதுகை முதலிய தொடைநயங்களும் இயமகம், திரிபு முதலிய சொல்லணிகளும் அமையப் பெற்று விளங்குகின்றன. ஆழ்ந்து பயில்வோருக்கு இந்த நூல் பேருவகை அளிக்கும். பொன்வண்ணமாகிய இறைவனது திருமேனிச் சிறப்பு நன்கு விளக்கப்படுகின்றது.

பாற்கடலில் நஞ்சு வர இறைவன் அதனை உண்டு தேவர்களுக்கு அமுதளித்த வரலாறு, பிரமனின் சிரம் கொய்த செய்தி, காமனை எரித்த செய்தி, மதியம் அணிந்த மாண்பு முதலிய வரலாறுகள் நன்கு விளக்கப்படுகின்றன.

இறைவனுக்குத் தம்முடைய உறுப்புகளை எவ்வெவ்வாறு அமைத்தேன் என்று விளக்கும் திறம் சிந்தித்துச் சிந்தித்து மகிழற்பாலது. முதலில் மனத்திற்கு வேலை தருகின்றார். சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் என்கின்றார். அவன் புகழைச் சொல்லுதற்கு நாவமைத்தேன் என்கின்றார். தலையை இறைவனை வணங்குவதற்காக அமைத்தார். இறைவனைத்தொழுமாறு கைகளை அமைத்தேன் என்கின்றார். அன்பை இறைவனோடு தொடர்பு கொள்வதற்காக அமைத்தேன். விபூதி அணிந்த சிவபெருமானுக்கு என் உறுப்புகளை அமைத்த முறை இவ்வாறாகும் என்னும் கருத்தமைந்த பாடல் பத்திச்சுவை சொட்டச் சொட்ட அமைக்கப்பட்டுள்ளது. சு.சு.

*பொன்னம்பலம் பிள்ளை*, ந.ச.ச. (கி.பி. 1836 – 1897): இவர் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தவர். சைவ வேளாள குலத்தைச் சார்ந்தவர். தந்தையார் பெயர் சரவணமுத்து என்பது. இளமையிலேயே தந்தையை இழந்த இவரை மாமன்மார் ஆதரித்தனர். அவர்களுள் ஒருவரான ஆறுமுக நாவலரிடமும் நல்லூரிலேயே சிறந்த ஆசானாகப் போற்றப்பெற்ற கார்த்திகேய வாத்தியாரிடமும் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்றார். புராணச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் வல்லவரான இவர் தமிழ் நாட்டிற்கு வந்து, சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர் கல்லூரியிலே இருபத்து மூன்று ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிப் புகழ் பெற்றார். இவர் மயூரகிரிப் புராணத்திற்கும், பாரதம் ஆதி பருவத்திற்கும் உரை எழுதியுள்ளார். இவர் கி.பி. 1897-ஆம் ஆண்டு காலமானார். தி.லீ.

*பொன்னாகனார்*: இவர் சங்க காலத்தைச் சேர்ந்த புலவர். எட்டுத் தொகை நூலைச் சேர்ந்த குறுந்தொகையில் 114-ஆம் பாடலை இவர் பாடியுள்ளார். அப்பாடல் இடத்துய்த்து நீங்கும் தோழி தலைமகற்குக் கூறியது என்னும் துறையில் அமைந்துள்ளது. தலைவியைக் குறியிடத்தில் விட்டுவந்த தோழி அதனைத் தலைவனிடத்தில் தெரிவிக்கும் நயம், 'நெய்தல் பரப்பில் என் பாவையைக் கிடத்தி விட்டுக் குறியிடம் கூற உன்னிடம் வந்தேன்; என் பாவையின் நெற்றியை ஆரல் மீனை உண்ட நாரை மிதித்துவிடும்' என்பதில் புலனாகிறது. தலைவன் தலைவியை வரைந்து கொள்ள வேண்டியமுறையையும், செல்ல வேண்டிய நெறியையும் புலவர் நயம்படப் பாடியுள்ளார். இது ஒரு நெய்தல் நிலப்பாடல். கே.வி.தா.

*பொன்னுச்சாமித்தேவர்* (கி.பி. 1837-1870): இராமநாதபுரத்திற்குத் தென்கிழக்கே 25 கி.மீ. தொலைவில் உள்ள புதுமடம் என்னும் சிற்றூரில் வாழ்ந்த சிவஞானத்தேவர், முத்து வீராயி நாச்சியார் ஆகியோருக்கு கி.பி. 1837 – ஆம் ஆண்டு பொன்னுச்சாமித்தேவர் மகனாகப் பிறந்தார். நான்காண்டுகள் கழித்து இவருடைய தம்பி துரைராசா பிறந்தார். அக்காலத்தில் சேது மன்னர் இராமசாமி சேதுபதி ஆண் மக்கட் பேறில்லாமல் இறக்க, அவர் மனைவி பர்வதவர்த்தினி சேது நாட்டை ஆண்டு வந்தார். பர்வதவர்த்தினி நாச்சியார், பொன்னுச்சாமித் தேவரின் தாயாரான முத்து வீராயி நாச்சியாரின் தமக்கையாராவார். ஆண்மக்கட்பேறில்லாத பர்வதவர்த்தினி நாச்சியார், பொன்னுச்சாமித்தேவரின் இளவலான துரைராசாவைச் சேது மன்னராக ஆக்கினார். துரைராசா, முத்து இராமலிங்க சேதுபதி என்னும் பெயருடன் அரசரானார்; பொன்னுச்சாமித் தேவர் அவருக்கு உறுதுணையாக அரசியல் அலுவல்

களைப் பார்த்து வந்தார். இவர் தம் 20-ஆம் வயதில் 'பேசுகார்' என்னும் பதவியை ஏற்றார். இவர்கள் இவ்வாறு அரசியற் பொறுப்பு ஏற்றதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதி மன்றத்தால் இவர்கள் பக்கம் சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டது.

பொன்னுச்சாமித்தேவர் அரசியல் அலுவல்களில் ஈடுபட்டதுடன் அறிவு வளர்ச்சியிலும் பெரும் பொழுதைக் கழித்தார். தேவரும் சேதுபதியும் அருங் கலைகளை வளர்ப்பதிலும் தமிழ் நூற் பயிற்சியிலும் ஆர்வம் கொண்டிருந்தனர். திருக்குறள், கம்பரா மாயணம், பாரதம் முதலிய நூல்களில் இவர்களுக் குப் பற்றும் பயிற்சியும் உண்டு. எப்போதும் அர சவையில் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. தேவரும் சேதுபதியும் அவர்கள்மீது செய்யுள் நூல் கள் இயற்றி வருபவர்களின் ஏற்றத்தாழ்வுகளை இனிதுணர்ந்து நன்கொடை வழங்கினர். புலவர் களின் அறிவுத்திறமையைச் சீர்தூக்கிப் பார்ப்பதில் பொன்னுச்சாமித்தேவர் தலைசிறந்து விளங்கியமை யால் போலிப் புலவர்கள் ஏமாற்ற முடியாமல் இன்னலுற்றனர்.

பொன்னுச்சாமித்தேவரிடம் நூல்களைப் படிப் பதற்கு இராமலிங்கம் என்பவர் அலுவலராக இருந்தார். அவர் பாடல்களை இசையுடன் படிப் பதில் வல்லவர். இரவு 10 மணி வரை இருப்பார். ஒரு நாள் எட்டு மணிக்கே போய்விட்டார். அதைக் கண்ட பொன்னுச்சாமித்தேவர், 'எட்டு மணியோ இலைநீ எனையதற்குள் விட்டுப் பிரிந்த வித மென்னோ – இட்டமனை மாலா, மயலா, மடியா, மமதையா, சீலா இராமலிங்கம் செப்பு' என ஒரு வெண்பாவை எழுதி அனுப்பி வைத்தார். இராம லிங்கக் குருக்கள் என்பவர் நல்ல புலமையும் நாவன் மையும் அமையப் பெற்றவர். அவர் பொன்னுச் சாமித்தேவரிடம் எக்காரணத்தாலோ வெறுப்புக் கொண்டு அவருக்குப் பகையான ஒருவரிடம் சென்று பத்து ஆண்டுகள் வரை தங்கிவிட்டார். அக்குருக் களை மீண்டும் தம்மிடம் வைத்துக்கொள்ள வேண் டும் எனவிரும்பிய தேவர், 'அஞ்சி ரட்டி செய்வருடம் ஆளடிமையில் திரிந்தும் கஞ்சியன்றிக் காணாக் காவல னால் மிஞ்சியது பூணா, புதுமனையா, பூவாசொல் புத்தியில்லா,வீணா இராமலிங்கமே!' என்னும் வெண் பாவை எழுதி அவருக்கு அனுப்பி வைத்தார். அத னைப் பார்த்த குருக்கள் மீண்டும் பொன்னுச்சாமித் தேவரை அடைந்து பொன்னும் பொருளும் பெற்று நன்னிலையில் வாழ்ந்தார்.

உடன்பிறந்தோர்களாகிய அமைச்சரும் (பொன் னுச்சாமித்தேவர்) அரசரும் உரையாடுதல் கூடச் செய்யுள் வடிவிலேயே இருக்கும். ஒருகால் பொன்னுச் சாமித்தேவர் தம் இளவலைப் பார்த்து, 'ஊக்க மிலார் கைம்மீ துறைகழித்த வாளேந்திப் போர்க் கெழுதல் நாணன்றோ போர் வேந்தே' – என்று வின வினார். உடனே அரசர் தம் தமையனாரைப் பார்த்து 'நீக்கமறப் பக்க புகழ் நீயிருக்கப் புல்லி யேனுந்தமிழை மிக்குரைத்தல் குற்றமன்றோ விள்' என விடையிறுத்தார்.

ஒரு நாள் பொன்னுச்சாமித்தேவருடைய பேரவை கூடியிருந்தது. மாம்பழக்கவிச்சிங்க நாவலர் என்னும் புலவர் பொன்னுச்சாமித்தேவரைப் பார்த்துத் தம்புலமையைக் காட்டிப் பரிசு பெறுதற்கு வந்தார். அவர் அம்மை நோயால் கண்களை இழந் தவர். முருகன் திருவருளால் முத்தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்றவர். அவரை வாயிற் காவலர் தடுத் தனர். உடனே மாம்பழக்கவிராயர், 'தருமகிமைமிகு முனது சமூகமுறார் வறுமையெனச் சலிக்கக்காய்ந்து வருமிரவிவெயிலதனால் மயங்கியிங்கு யான் வருந்தி வந்தபோதில் அருமை தவிர்பாராச் சேவகர் தமது பெயர்ப்பொருளை அறியக் காட்டிக் கருவமொடு தடுப்பதென்னே காமர் பொன்னுச்சாமி யெனுங் கருணை மாலே!' என எழுதியனுப்பினார். உடனே பொன்னுச்சாமித்தேவர் அறிஞர் ஒருவரையனுப்பி மாம்பழக்கவியை உள்ளே அழைத்தார். அவருடைய செய்யுள்களைக் கேட்டு உளம் மகிழ்ந்து அவருக்குக் 'கவிச் சிங்கம்' என்னும் சிறப்புப் பெயரையும் கொடுத்தார்.

தில்லையம்பூர்ச் சந்திரசேகரக் கவிராயர் என் பவர் பழைய தமிழ்நூல்களைத் திருத்தமாகப் பதிப் பித்து வெளியிடப் பொன்னுச்சாமித்தேவரிடம் உதவிபெறச் சில செய்யுட்களை இயற்றிக் கொண்டு வந்தார். தேவர் தாம் திரட்டி வைத்திருந்த தனிப் பாடல்களை அவரிடம் கொடுத்தார். மேலும், அகப்படும் தனிப்பாடல்களையும் தொகுத்துத் தனிப்பாடல் திரட்டு என்னும் பெயருடன் வெளியிட வேண்டுமென்று கூறி அதற்காகப் பொருளுதவியும் செய்தார். இச்செய்கையால் பல புலவர்கள் பாடிய பாடல் வீணே அழிந்துபடாமல் உலகில் நிலைபெற லாயின. ஆறுமுக நாவலருக்கும் தேவருக்கும் சென் னையில் பழக்கம் ஏற்பட்டது. திருக்குறள் பரிமேலழ கர் உரை, திருக்கோவையார் உரை, இலக்கணக் கொத்து, பெரியபுராணம் முதலிய நூல்களை வெளி யிடுமாறு அவரை வேண்டியதுடன் பொருளுதவியும் செய்தார். அவ்வாறு பதிப்பிக்கப்பட்ட நூல்களில் நூற்றுக்கணக்கான படிகளைப் பெற்று அவற்றைத் தகுதியுடையாருக்கு வழங்கினார்.


தேவர் சமயக் கொள்கையில் பொதுநோக்குடை யவர். இவருக்கு மூன்று மனைவியரும் மூன்று ஆண் மக்களும் மூன்று பெண்மக்களும் இருந்தனர். பொன்னுச்சாமித்தேவர் கி.பி. 1870-ஆம் ஆண்டு, தம் 33 – ஆம் வயதில் உயிர்நீத்தார். செ.இரெ.செ.

**போ** பகரமும் ஓகாரமும் இணைந்து ஒலித்தலால் வரும். இந்த ஒலி உதடுகளை மூடித்திறக்கும்பொழுது ஏற்படும் ஒலியை உதடுகளைக் குவித்துப்பின் மேல் உயர்த்தி வெளிப்படுத்தினால் தோன்றும்.

ஓரெழுத்தாக இது வினையைக் குறிக்கவே பயன்படுகிறது. ஓர் இடத்திலிருந்து பிறிதோரிடத்துக்குப் போகின்றதை அடிப்படையாகக் கொண்டு பல கோணங்களில் இதன் பொருள் விரிகின்றது. உரியதாதல் (மரபிற் போந்தான்), நிரம்புதல், மேற்படுத்தல், நன்கு பயிலுதல், கூடிய தாதல், பிரிதல், ஒழிதல், நீங்குதல், கழிதல், மாறுதல், ஒலிஅடங்குதல் முதலிய பல பொருள்களைச் சூழ்நிலைக்கேற்பக் கொடுக்கின்றது. மூலச் சொல்லின் பொருளை அழுத்திக் கூறுமாற்றால் அசைநிலையாகவும் வழங்கப்படும் (எ-டு. ஒழிந்து போ).

**வடிவம்:** பொகரத்திற்குக் கொடுக்கப்பட்ட குறிப்பே இதற்கும் பொருந்தும். பொகரம், பகர ஓகாரம் இரண்டிற்கும் உருவ வேற்றுமை இல்லை. ... ... ... ...

இடப்புறக் கோடும் வலப்புறக் கோடும் முறையே கொம்பாகவும் காலாகவும் மாறி நிலை பெற்றன.... ... ...



கி.மு. 3-ஆம் நூற்றாண்டு... ... ...

கி.பி. 8 – ஆம் நூற்றாண்டுக்கு முன்... ... ...

கி.பி. 11 – ஆம் நூற்றாண்டுக்கு முன்... ... ...

புள்ளி இல்லாமல் எழுதப்பட வேண்டும். பொகரக் குறுக்கத்திற்கு வேண்டிய புள்ளி இதற்குத் தேவையில்லை.... ...

வட்டெழுத்திலும் இதே நிலை அமைந்துள்ளது. எகரக்குறி கீழ்நோக்கி வளைந்தது. ஆகாரத்திற்குரியகால் வெறுங் கோட்டிலிருந்து தமிழில் போல் இறங்காமல் நீட்டியே எழுதப்பட்டது. வட்டெழுத்து மறையும் வரை இது மாறவில்லை.... ... ...



கே.ஜி.கி.

**போ ஆறு:** இது வடஇத்தாலியிலுள்ள மிக நீண்ட ஆறு. பிரான்சு – இத்தாலியின் எல்லையிலுள்ள கட்டியன் ஆல்புசு (Cattian Alps) மலைப் பகுதியில் மாண்ட்டி விசோ (Monte Viso) வுக்கு அருகில் 2021 மீ.உயரத்தில்போ ஆறு (Po River)தோன்றுகின்றது. அங்கிருந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்து,

பின்னர் வடக்கு நோக்கிச் சென்று, இறுதியில் ஆட்ரியாட்டிக்குக் கடலில் (Adriatic Sea)கலக்கிறது. இதன் நீளம் 652 கி.மீ. பழங்காலத்தில் இது பாடசு அல்லது எரிடானசு (Padus or Eridanus) என்று குறிப்பிடப் பட்டது.

இவ்வாற்றின் வடக்கில் செசியா (Sesia), திசினோ (Ticino), அட்டா (Adda). ஒகிலியோ (Oglio), மின்சியோ (Mincio) ஆகியவையும், தெற்கில் தனரோ (Tanaro), திரேப்பியா (Trebbia), தாரோ (Taro), செக்கியா (Secchia), பனாரோ (Panaro), ஆகியவையும் இதன் கிளை ஆறுகளாக உள்ளன. மேலும், இவ்வாற்றில் மேக்கயர் (Maggoire). கோமோ (Como), இலெக்கோ (Lacco), இசியோ (Iseo), கர்தா (Garda) ஏரிகளின் நீர் வடிகின்றது. இது பாயும் பரப்பில் பீடுமாண்டு (Piedmont), இலம்பார்டி (Lambardy), எமிலியா-உரோமக்னா(Emilia-Romagna) ஆகியபகுதிகள் உள்ளன. இந்த ஆறு இதன் கிளை ஆறுகள் பாயும் பகுதியில் வட இத்தாலியின் முக்கிய நகரங்களான தூரின் (Turin), சிவசோ (Chivasso), பாவியா (Pavia), மிலான் (Milan), பியசென்சா (Piacenza), கிரிமோனா (Cremona), பார்மா (Parma), மண்டுவா (Mantua), மொடனா (Modena), பெர்ராரா (Ferrara) முதலியவை இருக்கின்றன. போ – ஆறு வெனிசுக்குத் தெற்கே 58 கி.மீ.தொலைவில் ஆட்ரியாட்டிக்குக் கடலில் கலக்கிறது. இது 91,000 சதுர கி.மீ. பரப்பளவிற்குப்பாய்கிறது. இதன்கழிமுகப் பகுதி (Delta) கிழக்கு நோக்கித் தொடர்ந்து விரிவடைந்து கொண்டேசென்று, பெர்ராராவுக்கு வடக்கே96 கி.மீ. நீளம் இருக்கின்றது. கடற்கரையில் இதன் கழிமுகப் பகுதியின் அகலம் 93 கி.மீ.

இந்த ஆறு செல்லும் வழியில் ஏற்படுத்தியுள்ள மிகப்பெரிய, வளம்மிக்க போ பள்ளத்தாக்கு, வட இத்தாலியில் முக்கிய தொழில், வேளாண்மை வட்டாரமாக உள்ளது. போஆறும் அதன் கிளை ஆறுகளும் அதிகமான நீரையும், வண்டலையும் கொண்டு வருவதால் வேளாண்மைக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. கோடைக்காலத்தில் ஆல்பைன் (Alpine) மலை ஆறுகளிலிருந்தும், குளிர்காலத்தில் அபென்னைன் (Apennine) மலை ஆறுகளிலிருந்தும்,இதற்கு நீர் வருவதால் பருவகால மாறுபாடுகள் சமன்செய்யப்பட்டு, எப்பொழுதும் நீர் ஓடுகின்றது. இவ்வாற்றின் வடக்குப் பகுதியில் இது மிக வேகமாக ஓடி வருவதால் அங்கு அதிகமாக மின்சாரம் எடுக்கப்படுகிறது. ஆனால், தென்பகுதியில் இதன் வேகம் குறைந்து கடலை அடைவதற்கு முன்னர் ஒரு சிறு ஓடையாகச் செல்கிறது. இவ்வாற்றுடன் பல்வேறு கிளை ஆறுகள் இணைக்கப்பட்டு, கால்வாய்கள் வெட்டப் பட்டு, கரைகள் எடுக்கப்பட்டு, வேளாண்மைக்கு மிகுந்தஅளவில் பயன்படுத்தப்படுகிறது. அடிக்கடி இதில் வெள்ளம் ஏற்படுவதால் மக்களுக்குத் துன்பமும், இழப்பும் உண்டாகின்றன. அவற்றுள் மிகக்கடுமையான பெருவெள்ளம் 1951-இல் ஏற்பட்டது. எட்ருசுகன்கள் (Etruscans) கி.மு.300 இலேயே இதற்குக் கரையை எழுப்பி, இதன் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தியிருந்தனர். அதன் பின்னர் அவ்வப்பொழுது கரைகள் உயர்த்தப்பட்டு வருகின்றன. எனினும், பெர்ராராவில் இவ்வாற்றின் மட்டம் வீடுகளின் மேல்கூரைக்கு மேல் உள்ளது. இப்பள்ளத்தாக்கில் தூரின் (Turin), மிலான் (Milan), பெர்ராரா முதலியன சிறந்த வாணிகத் தொழில் மையங்கள். இதில் 544 கி.மீ. நீளத்திற்குப் பெரிய கப்பல்கள் செல்வதால், வாணிகம் போக்குவரத்திற்கு மிகவும் பயனுடையதாக உள்ளது.

இப்பகுதியின் வளம் காரணமாக உரோமானியர் காலத்திற்கு முன்பிருந்து இரண்டாம் உலகப் போர் முடியும் வரை இப்பகுதியைக் கைப்பற்றப் பலர் விரும்பினர். பல்வேறு செருமானியக் குடும்பினர், ஒருவர்பின் ஒருவராக இராவன்னா (Ravenna), பாவியா அல்லது மிலானிலிருந்து இத்தாலி முழுவதிலும் ஆதிக்கம் செலுத்த முயன்றனர். இங்குள்ள இலம்பார்டிச் சமவெளியைக் கைப்பற்ற கி.பி.16-ஆம் நூற்றாண்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரை பிரான்சு, இசுபெயின், ஆசுதிரியா ஆகிய நாடுகள் கடுமையாகப் போட்டியிட்டன. இடைக்காலத்தில் மிலான் செல்வச் செழிப்புடன் விளங்கிச் சமய, பண்பாட்டுத் துறைகளில் சிறந்து விளங்கியது. இப்பகுதியில்தான் மறுமலர்ச்சி ஏற்பட்டு, மக்களுடைய சமூகப் பண்பாட்டு வாழ்க்கையில் மாறுதல்கள் தோன்றின. சி.இரெ.

**போக்குவரத்து**: மனித சமுதாய வளர்ச்சியில் போக்குவரத்து ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. பல பண்டைய நாகரிகங்கள் உலகெங்கும் பரவியதற்குப் போக்குவரத்தே அடிப்படைக் காரணமாகும். புதியனவற்றைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக மனிதன் இடம்விட்டு இடம் சென்றான். மிகப் பழங்காலத்தில் வாழ்க்கைக்கு அடிப்படையான உணவைத் தேடி நாடோடியாய் அலைந்த மனித இனம், பிற்காலத்தில் அரசியல் நோக்கத்தாலும், தீரச் செயல்புரியும் உந்துதலாலும் புதிய இடங்களை நாடியது. இவையே போக்குவரத்து (Transportation) வளர்ச்சிக்கு வித்திட்டன. பின்னர் வாணிகம் வளரத் தொடங்கிய பொழுது பல நிலையான நிலவழித் தடங்களும், நீர்வழித் தடங்களும் தோன்றின.

போக்குவரத்து வளர்ச்சியின் காரணமாக வாணிகம் மட்டுமன்றிப் பண்பாடுகளும், கலை, இலக்கியங்களும் பரவின; புதிய குடியேற்றங்கள் தோன்றின. வலிமை மிக்க நாடுகள் தொலைதூர நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தப் போக்குவரத்து வகை செய்தது. பல நாடுகளில் தொழில் வளரவும் இது உதவியாக இருந்தது. அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் போக்குவரத்துச் சாதனங்களும் அமைப்புகளும் பெரும் வளர்ச்சியுற்றன. குறிப்பாக, 20-ஆம் நூற்றாண்டில் போக்குவரத்து வியக்கத்தக்க அளவு முன்னேற்றமடைந்துள்ளது.

**வகைகள்:** பொதுவாகப் போக்குவரத்தை நிலவழி, நீர்வழி, வான்வழிப் போக்குவரத்துகள் எனப் பகுக்கலாம். நிலவழிப் போக்குவரத்தில் இப்போது சாலைப் போக்குவரத்தும் தொடர்வண்டிப் போக்குவரத்தும் குறிப்பிடத் தக்கவை. சாலைப் போக்குவரத்து பல வகைகளில் நடைபெறுகின்றது. மிருகங்களைப் பயன்படுத்துவது முதல் புதிய இயந்திர விசையைப் பயன்படுத்துவதுவரை பல வகைச் சாதனங்கள் உள்ளன. நீர்வழிப் போக்குவரத்தில் கடல்வழிப் போக்குவரத்து பெரும் பங்கு வகிக்கின்றது. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் பங்கு குறைந்து வருகின்றது. உள்நாட்டு நீர்த்தடங்கள் பெரும்பாலும் கால்வாய்கள் மூலம் அமைக்கப்படுகின்றன. ஏற்ற ஆறுகள் இருப்பின் அவையும் நீர்வழித் தடங்களாகச் செயற்படுகின்றன. வான்வழிப் போக்குவரத்து 20-ஆம் நூற்றாண்டில் விரைந்து வளர்ந்துள்ளது. மிகக்குறுகிய காலத்தில் மிகவும் சிறப்பாக வளர்ச்சியடைந்த பெருமை இதற்குண்டு. ஒவ்வொருவகைப் போக்குவரத்திலும் சில குறிப்பிடத்தக்க கூறுபாடுகள் உள்ளன.

**சாலைப் போக்குவரத்து:** இது மிகப் பழைமையானது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றிருந்தது. சீனாவுக்கும், இப்போதைய அரபு நாடுகளுக்கும் இடையே 'பட்டு வழித்தடம்' (Silk Route) என்று கூறப்பட்ட நிலையான சாலை வழித்தடம் இருந்தது. மேலும், மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பல நாடுகளுக்கு 'வாணிகத் தடங்கள்' இருந்தன. சாலைகள் அமைப்பதில் உரோமப் பேரரசு திறன் பெற்று விளங்கியது.



சாலைப் போக்குவரத்து

உரோம அரசு கி.பி. முதலாம் நூற்றாண்டில் அமைத்த சாலைகளை இன்றும் இங்கிலாந்திலும், பல ஐரோப்பிய நாடுகளிலும் காணலாம். 'எல்லாச் சாலைகளும் உரோம் நகரை நோக்கியே செல்கின்றன' என்ற பழமொழி உருவாக இவை காரணமாயிருந்தன.

இன்று, பன்னாட்டுப் போக்குவரத்திலுள்ளதைவிட உள்நாட்டுப் போக்குவரத்தில் சாலைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. குறிப்பாக நகரங்களைச் சிறு கிராமங்களுடன் இணைக்கும் பணியினை இவை செவ்வனே செய்கின்றன. பிற வகைப்போக்குவரத்தால் இணைக்க முடியாத மலைப்பகுதிகள், காட்டுப்பகுதிகள் ஆகியவற்றைச் சாலைகள் (Roads) இணைக்கின்றன.

**பயன்படும் விசை:** சாலைப் போக்குவரத்தில் மிருகங்கள் முதலில் பயன்படுத்தப்பட்டன. இப்போது இயந்திர விசையால் இயங்கும் பேருந்துகளும், சிறு வண்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சி பெற்ற பல நாடுகளில் பெருமளவு பொருள் போக்குவரத்து சாலைமூலம் நடைபெறுகின்றது. குளிர் பதனப்படுத்தப்பட்ட சரக்கு வண்டிகள் ஆயிரக்கணக்கான கி.மீ. தொலைவிற்குக் காய், கனிகளையும், பிற அழுகும் பொருட்களையும் சுமந்து செல்கின்றன. ஆயினும், இந்தியா உட்படப் பல நாடுகளில் கால் நடைகளைப் பயன்படுத்தி இழுக்கப்படும் சாலை வண்டிகள் நடைமுறையில் உள்ளன. இந்தியாவில் ஏறத்தாழ 15 இலட்சம் மாட்டுவண்டிகள் உள்ளன. ஆயினும், எரி எண்ணெயைப் பயன்படுத்தும் சாலை வண்டிகளின் எண்ணிக்கை பெருகிவருகின்றது.

பலர் பயணம் செய்யத்தக்க பேருந்துகளும், சிலர் பயணம் செய்யக்கூடிய நடுத்தர மற்றும் சிறிய வண்டிகளும், ஒன்று அல்லது இரண்டுபேர் பயணம் செய்யும் இரண்டு சக்கர வண்டிகளும் புழக்கத்தில் உள்ளன. இவையாவும் பாறை எண்ணெய் (Petrol) 'டீசல்' எண்ணெய் என்ற இருவகையான எரி எண்ணைகளைப் பயன்படுத்தி ஓட்டப்படுகின்றன.

**சிறப்புகள்:** 1) பொருள்களையும் பயணிகளையும் வீட்டு வாசலில் ஏற்றி அடையவேண்டிய இடத்தின் வாசலில் இறக்கிவிடும் பணியைச் சாலைப் போக்குவரத்து மட்டுமே செய்வது அதன் சிறப்பு அமிசமாகும். 2) நீர்வழித் தடங்களை அமைக்க முடியாத இடங்களுக்கும் சிறிய கிராமங்களுக்கும் இது ஏற்ற போக்குவரத்து முறையாகும். 3) நகர்ப்புறங்களில் பணி செய்வோரின் தேவைகளை இது நிறைவு செய்கின்றது. குறுகிய காலத்தில் சாலை வழிப் போக்குவரத்து வசதிகளைக் கூட்டவோ, குறைக்கவோ செய்யலாம். இத்தகைய நெகிழ்வுத் தன்மை பிற வகைப் போக்குவரத்துகளில் இல்லை.

**குறைகள்:** இக்காலத்தில் மிகவும் வேகமாகச் செல்லும் வண்டிகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. அதன் விளைவால் சாலைகளில் அதிக அளவு இடர்கள் ஏற்படுகின்றன. வளர்ந்துவரும் நாடுகளான இந்தியா போன்ற நாடுகளில் சாலை இடர்களால் உயிர் துறப்போரின் எண்ணிக்கை ஆண்டு தோறும் பெருகி வருகின்றது.

அடுத்து, இவ்வண்டிகளிலிருந்து வெளியேறும் புகையினால், பல இன்னல்கள் தோன்றுகின்றன. அப்புகையில் நச்சுப் பொருள்கள் கலந்திருப்பதால் அவை காற்றில் கலந்து மனிதரையும், தாவரங்களையும் பாதிக்கின்றன. அதனால் பல நாடுகளில் இயந்திர வண்டிகளிலிருந்து வெளியேறும் புகையில் நச்சுப் பொருளின் அளவினைச் சட்டத்தின் மூலம் வரையறுத்துள்ளனர்.

**தொடர்வண்டிப் போக்குவரத்து:** கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடர்வண்டிப்போக்குவரத்து (Rail Transport) தொடங்கியது. இங்கிலாந்தில் முதன்முதலாக நிலக்கரிச் சுரங்கங்களை இணைப்பதற்கு அவை பயன்படுத்தப்பட்டன. முதலில் மரத் தண்டவாளங்கள் பயன்படுத்தப்பட்டன. எல்லாத் தண்டவாளங்களும் இரும்பினால் கி.பி. 1767 – ஆம் ஆண்டில் செய்யப்பட்டன. பொது மக்களுக்காக கி.பி. 1825 – ஆம் ஆண்டில் தொடர் வண்டித் தடம் ஒன்று தொடங்கப்பட்டது. பின்னர் கி.பி. 1825 – க்குள் பல தடங்கள் அமைக்கப்பட்டன. அமெரிக்காவில் கி.பி. 1830 – ஆம் ஆண்டில் பொதுப்போக்குவரத்திற்கான முதல் தடம் திறக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல நாடுகளிலும் தொடர்வண்டிப் போக்குவரத்து வளர்ச்சி பெற்றது. இந்தியாவில், கி.பி. 1853 – இல் பம்பாய்க்கும் தாணாவுக்கும் இடையே முதல் தொடர்வண்டித்தடம் செயற்படத் தொடங்கியது.

**பயன்படும் விசை:** தொடக்கக் காலத்தில் தண்டவாளத்தில் ஓடிய வண்டிகள் குதிரைகளால் இழுக்கப்பட்டன. நீராவி விசை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் நீராவியால் இயங்கும் இழுவை இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

பின்னர், எரி எண்லணயைப் பயன்படுத்தும் இயந்திரங்களும், மின் விசையைப் பயன்படுத்தும் இயந்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இப்போது பெரும்பாலான நாடுகளில் மின்விசை அல்லது எரி எண்ணையைப் பயன்படுத்தும் வண்டிகள் புழக்கத்திலுள்ளன. தொடர்வண்டிப் போக்குவரத்தில் சப்பான் நாடு பல சாதனைகளைப் புரிந்துள்ளது. உலகத்திலேயே மிகவும் வேகமாகச் செல்லும்

தொடர்வண்டிகள் மணிக்கு ஏறத்தாழ 250 கி.மீ. வேகத்தில் செல்கின்றன.


இந்தியாவிலும் பெரும்பாலான தொடர் வண்டிகள் எரி எண்ணை அல்லது மின்விசையைப் பயன்படுத்துகின்றன. இங்கு அகலத் தொடர்வண்டித் தடமும் மீட்டர் தொடர்வண்டித் தடமும் உண்டு.

**சிறப்புகள்:** மக்களுக்கு விரைவாகவும் வசதியாகவும் பயணம் செய்யும் வாய்ப்பு தொடர்வண்டிப் போக்குவரத்தில் கிடைக்கின்றது. மேலும், சாலைப் போக்குவரத்தில் கிடைக்காத பல வசதிகள் தொடர் வண்டிகளில் உண்டு. இது பொருள் போக்குவரத்திற்கு ஏற்றதாக உள்ளது. நிலக்கரி, இரும்புத்தாது, பருத்தி, மரம், சிமெண்டு முதலான பளுமிக்க பொருள்களைப் பேரளவில் எடுத்துச் செல்லும் வசதி இதில் உண்டு.

பிறவகைப் போக்குவரத்துகளை விடத் தொடர் வண்டிப் போக்குவரத்துச் செலவு குறைவாக உள்ளது. புற நகர்ப்பகுதிகளை நகர மையத்திற்கு இணைக்க இதுவே பெருமளவில் பயன்படுகின்றது. நியூயார்க்கின் நிலத்தடித் தொடர்வண்டிகள், இலண்டனின் புறநகர்த் தொடர்வண்டிகள், மாசுகோவின் 'மெட்ரோ' ஆகியவை இப்பணியைச் செய்யும் குறிப்பிடத்தக்க தொடர் வண்டி அமைப்புகளாகும். இந்தியாவிலும், பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய பெருநகரங்களில் புறநகர்த் தொடர்வண்டிகள் நாள்தோறும் செல்லும் பயணிகளுக்குப் பெரும் உதவியாக உள்ளன. கல்கத்தாவிலுள்ள நிலத்தடித் தொடர்வண்டிப் போக்குவரத்து குறிப்பிடத்தகுந்தது.

**குறைகள்:** புதிய வழித்தடங்களை அமைக்க அதிகச் செலவாகின்றது. மேலும், சாலைப் போக்குவரத்திலுள்ள நெகிழ்வுத்தன்மை இதில் இல்லை. வளர்ச்சி பெற்ற பல நாடுகளில் விமானப் போக்குவரத்தும் சாலைப் போக்குவரத்தும் தொடர்வண்டித் தேவையைக் குறைத்து விட்டன. குறிப்பாக மக்கள் தங்கள் நெடுந்தூரப் பயணங்களுக்குத் தொடர் வண்டிப் போக்குவரத்தை விரும்புவதில்லை. ஆயினும், வளர்ந்து வரும் நாடுகளில் இவ்வகைப் போக்குவரத்தின் முக்கியத்துவம் குறையவில்லை.

**நீர்வழிப் போக்குவரத்து:** மிகப் பழங்காலத்தில் நாகரிகங்கள் பல கண்டங்களுக்குப் பரவுவதற்கு நீர்வழிப் போக்குவரத்து (Water Ways) அடிப்படையாக அமைந்தது. அண்மைக்காலம் வரை இங்கிலாந்து, இசுபெயின், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளின் பலம் அவற்றின் கடற்படையைச் சார்ந்து அமைந்திருந்தது. இப்போதும் கூட கடல் வழிகளின் தேவை குறைவுபடவில்லை. பழங்காலத்தில் உரோமானியரும், சீனரும் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கினர். தமிழரும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கடல் கடந்து வாணிகம் செய்துள்ளனர். கொலம்பசு, (Colambus), தாமசு குக்கு (Thomas Cook) ஆகிய திறமிக்க முன்னோடிகள் இக்காலக் கடல்வழித் தடங்கள் தோன்றக் காரணமாயினர்.



கடல்வழிப் போக்குவரத்து

உள்நாட்டுக் கால்வாய்ப் போக்குவரத்து (Internal Canal Transport) நீர்வழிப்போக்குவரத்தில் ஒன்றாகும். உலக நாடுகளில் இன்றும் கால்வாய்ப் போக்குவரத்து செயற்படுகின்றது.

**பயன்படுத்தும் விசை:** காற்றின் விசையினால் செலுத்தப்படும் மரக்கலங்கள் கரையோர வாணிகத்தில் பயன்படுகின்றன. ஆனால், பெரும்பாலான கப்பல்கள், படகுகள் எரிஎண்ணையினால் இயங்குகின்றன. நீராவி விசையினால் இயங்கும் கலங்களும் உள்ளன. அணுவிசையைப் பயன்படுத்தும் கப்பல்கள் பாதுகாப்புப் பணிக்காக மட்டும் பயன்படுகின்றன.

**சிறப்புகள்:** நீர்வழித்தடம் பெருமளவு பொருட்களை எடுத்துச்செல்ல ஏற்றதாகும். குறிப்பாகத் தானியங்கள், எண்ணை, நிலக்கரி, எரிவாயு, இயந்திரப் பொருட்கள் முதலானவற்றை நாடுகளுக்கிடையே எடுத்துச் செல்லும் பணியைச் செய்யக் கடல்வழித் தடம் ஏற்றதாகும். உள்நாட்டுக் கால்வாய்கள் மூலமும் பொருள் போக்குவரத்து நடைபெறுகின்றது.

பன்னாட்டு வாணிகத்திற்கு இது இன்றியமையாத தாகும். நெடுந்தூரம் எடுத்துச் செல்ல ஆகும் செலவு குறைவாக உள்ளது. பிற தொல்லைகள் இன்றி வசதியாக ஓய்வெடுக்க விரும்பும் பெரும் செல்வந்தர்கள் கப்பல் பயணத்தை மேற்கொள்ளுகின்றனர். இதற்கெனச் சில வழித்தடங்களில் மிகவும் புதிய வசதிகள் உள்ள கப்பல்கள் விடப்படுகின்றன.

சில குறுகிய வழித்தடங்களில் விரைந்தும் குறைந்த செலவிலும் பயணம் செய்ய இது ஏற்றதாக உள்ளது. எடுத்துக்காட்டாகப் பிரான்சுக்கும் இங்கிலாந்தின் கிழக்குப் பகுதிக்கும் இடையே நடைபெறும் கடல் போக்குவரத்தைக் கூறலாம். இந்தியாவில் இராமேசுவரத்திற்கும் இலங்கைக்கும் இடையேயும் இத்தகைய போக்குவரத்து உள்ளது.

**குறை:** நீர்வழியில் நெடுந்தூரம் விரைந்து பயணம் செய்ய இயலாது. எனவே, நெடுந்தூரப் பயணிகள் நீர்வழிப் போக்குவரத்தை விரும்புவதில்லை.

**விமானப் போக்குவரத்து:** விமானங்கள் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் வான்வழிப் போக்குவரத்து (Air Transport) விரைந்து வளர்ந்துள்ளது. இரைட்டு சகோதரர்கள் கி.பி. 1903 – ஆம் ஆண்டில் விமானத்தைக் கண்டுபிடித்தனர். முதல் உலகப் போரின் போது அவை போரில் பயன்படுத்தப்பட்டன. முதலில் அஞ்சல் போக்குவரத்துக்கு விமானங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவில் 1932 – இல் விமானப் போக்குவரத்து தொடங்கப்பட்டது.

இப்போது ஒலியைவிட வேகமாகச் செல்லும் பயணி விமானங்கள் புழக்கத்தில் உள்ளன. ஏறத்தாழ 560 பேர் வரை பயணம் செய்யக்கூடிய பெரும் விமானங்களும் உள்ளன. ஒன்றிரண்டுபேர் பயணம் செய்யவும், சிறுகுழுக்களாகப் பயணம் செய்யவும் ஏற்ற பலவகை விமானங்கள் தயாரிக்கப்படுகின்றன.

**சிறப்புகள்:** விமானம் உலகின் எந்த இடத்திற்கும் மிகக் குறைந்த நேரத்தில், பொருட்களையும் பயணிகளையும் எடுத்துச் செல்ல வல்லதாகும். மேலும், நாடுகளுக்கிடையேயான விரைவான அஞ்சல் போக்குவரத்துக்கு இது பெரிதும் துணைசெய்கின்றது. தொழில், வாணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோருக்குக் காலத்தை மிச்சப்படுத்த விமானப் போக்குவரத்து மிகவும் ஏற்றதாக உள்ளது. பயணிகளுக்கு மற்ற போக்குவரத்தில் இல்லாத புதிய வசதிகள் இதில் உள்ளன.

**குறைகள்:** விமானப் போக்குவரத்திற்குப் பெரிய தளங்கள் தேவை. அவற்றை அமைப்பதற்கு மிகுதியாகச் செலவாகும். அவ்விமான நிலையங்கள் நகரங்களுக்கு வெளியே அமைக்கப்படுகின்றன. இதனால் பயணிகள் ஊருக்குள் வந்து சேரக் காலதாமதம் ஆகின்றது. மேலும், விமானங்கள் புறப்படும்போதும், தரையில் இறங்கும் போதும் ஏற்படும் மிகுதியான பேரொலி இன்னல்களைத்தோற்றுவிக்கின்றது. ஒலியைவிட வேகமாகச் செல்லும் பயணிகள் விமானம் நியூயார்க்கு நகரில் இறங்கத் தடை விதிக்கப்பட்டதற்கு இந்த பேரொலி தான் காரணமாகும் (பின்னர் இத்




விமானப் போக்குவரத்து

தடை நீக்கப்பட்டது). எளிய வருவாய் உள்ள மக்கள் இதனைப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் விமானப் பயணத்திற்கு மிக அதிகமான கட்டணம் பெறப்படுகிறது.

**போக்குவரத்தும் பொருளாதாரமும்:** ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அகக் கட்டுமானங்களில் (Infra structure) போக்குவரத்தும் ஒன்றாகும். இங்கிலாந்தின் தொழில்புரட்சிக்கு அங்கு அமைந்துள்ள போக்குவரத்து வசதிகளும் ஒரு காரண மாகும். பல பெரிய நாடுகளில் எல்லாப் பகுதிகளும் சமமாக வளர்ச்சி பெறப் போக்குவரத்து அமைப்பு உதவுகின்றது. ஏற்ற சாலைகளும், தொடர்வண்டித் தடங்களும் இல்லாத இடங்களில் தொழில் செழித்து வளர முடியாது. வேளாண்மைப் பண்டங்களை அங் காடிகளுக்கு எடுத்துச் செல்லப் போக்குவரத்து தேவை. வளர்ச்சி பெற்ற நாடுகளில் எல்லா நகரங் களும் நில வழியாகவும், வான் வழியாகவும் இணைக் கப்பட்டுள்ளன. ஆப்பிரிக்கக் கண்டத்தில் பல நாடுகள் வளர்ச்சி குன்றியிருப்பதற்குப் போக்குவரத்துத் தொடர்பின்மை ஒரு காரணமாகும். பன்னாட்டு வாணிகத்திற்கும் போக்குவரத்து அடிப்படையாக உள்ளது. இங்கிலாந்து பல குடியேற்ற நாடுகளை உரு வாக்கியமைக்கு அதன் வாணிகக் கப்பல் போக்கு வரத்தின் வளர்ச்சிதான் அடிப்படைக் காரணமாகும். மேலும், போக்குவரத்தே இப்பொழுது ஒரு பெரிய தொழிலாக வளர்ந்துள்ளது. பலநாடுகளில் இத் தொழில் பொருளாதாரத்தின் அடிப்படையாக உள்ளது. பா.அ.

**துணை நூல்கள்:**

**Ghosh, B.B.**, Business Organisation, Mukherjee and Co. Pvt. Ltd., Calcutta, 1951.

**Sohrab, R.Davra**, Organisation of Commerce, Progressive Corporation Pvt. Ltd., Bombay, 1971.

**போகர்:** இவர் பதினெண் சித்தர்களுள் ஒருவர். போகர் வாழ்ந்த காலமும், இடமும் ஐயந்திரிபற விளங்கவில்லை. இவர் பெயரால் பல மருத்துவ நூல்கள் உள்ளன.

போகர் சீன நாட்டைச் சேர்ந்த மண்பாண்டத் தொழிலர் என்பர். இவரைப் பௌத்தத் துறவி என் றும், சீனப் பயணியாக 1600 ஆண்டுகளுக்கு முன் இப்பாரத நாட்டுக்கு வந்து புத்தகயா, பாடலிபுத் திரம் முதலான சில இடங்களைப் பார்த்து விட்டுத் தமிழ்நாட்டிற்கு வந்தவரென்றும் சிலர் கூறுவர். 'போ'(Fo) அல்லது போகி (Fohi) என்ற ஒருவர் கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீனாவுக்குச் சென்று புத்த சமயத்தைப் பரப்பினார். அவர்தான் இப் போகர் என்னும் கருத்தும் நிலவுகிறது.

போகருடைய பாட்டனார் திருமூலர் என்றும், இவருடைய புதல்வர் கொங்கணர் என்றும், புலிப் பாணி இவர் சீடரென்றும் போகர் நூல்வழி அறியக் கிடக்கிறது.

இவர் பல ஆண்டுக் காலம் தம் சீடருடன் பழனி மலையில் தங்கியிருந்து பல சித்து விளையாடல்கள் புரிந்துள்ளார் என்பதும், அக்காரணம்பற்றியேபழனிக் குச் 'சித்தன் வாழ்வு' என்னும் பெயர் உண்டாயிற்று என்பதும் செவிவழி வரலாறு. இவருடைய மருத்துவ வல்லமையைக் காட்டவேண்டிப் பல பாடாணங்களை யும் ஒருங்கு கூட்டி, நீர், நெருப்பு முதலியனவற்றால் கரைந்தும், புகைந்தும், உருகியும், ஆவியாகியும் போகாதவாறு திண்மையுறக் கட்டி, அக்கட்டைக் கொண்டே ஒரு பாலதண்டாயுதபாணி சுவாமி திரு வுருவச்சிலை செய்து வைத்தார் என்றும், அந்தப் படிவமே இப்போது பழனியில் மூலவராய்ப் பிர திட்டை செய்யப்பெற்றுள்ளது என்றும் கூறப்படு கிறது.

சிலர் போகர் கதிர்காமம், திருச்செந்தூர், திருத் தணிகை, திருப்பரங்குன்றம் என்னும் இடங்களில் சமாதி நிலையில் இருந்தார் என்று கூறுவர். பழனி மலையில் இவருக்குச் சமாதி உளது. புலிப்பாணி முனிவர் மரபினர் எனப்படுவோர் வழிவழியாக வழிபாடும் செய்து வருகின்றனர்.

போகர் 7000, நிகண்டு 1700, யோகம் 300 ஆகிய மூன்று நூல்களே இவர் இயற்றியனவாக அபிதான சிந்தாமணி கூறுகிறது. சித்த மருத்துவப் பாடநூல் இவர் இயற்றியனவாகப் போகர் நிகண்டு, போகர் கற்பம் 300, போகர் 7000, போகர் வரும் சூத்திரம், போகர் சரக்கு வைப்பு 800, போகர் வாசியோகம் என்னும் 6 நூல்களைச்சுட்டிக் காட்டிப் போகர் 700, போகர் சனன சாகரம் என்னும் இருநூலும் போகர் இயற்றியவை அல்ல எனப் பிரித்துக் கூறுகிறது. யோகி.சா.அ.அ. இராமையா அவர்கள் போகர் சனனசாகரம் 557, போகர் ஞானசூத்திரம் 1, போகர் சிவயோக ஞானம் 12, போகர் வைத்தியம் 700, போகர் சமாதி தீட்சை 10, போகர் ஞான சூத்திரம் 8, போகர் திருமந்திர ஞானம் 10, போகர் ஞான பூசா விதி 13, போகர் அட்டாங்க யோகம் 24, போகர் முப்பூ சூத்திர ஞானம் 51, போகர் ஞான கற்ப சூத் திரம் 54, போகர் ஞான சாராமிசம் 100, போகர் மெய்ஞ்ஞான போதகம் 2, போகர் கற்பம் 300, போகர் உபதேச ஞானம் 156, போகர் 7000, போகர் நாடி சாத்திரம் 11 ஆகிய 17 நூல்களை மூன்று தொகுதி களாகப் பதிப்பித்திருப்பதுடன், போகரின் நூல்

களாகப் போகர் நிகண்டு, போகர் மூலிகைத் தொகுப்பு, போகர் வரும நூல் என்ற மூன்றையும் குறிப்பிட்டுள்ளார். அவை தவிர மேலும் அச்சிடப் படாத 25 நூல்களின் பட்டியலும் தந்துள்ளார்.

போகர் பெயரில் சுவடிகள் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தஞ்சைச் சரசுவதி மகால் நூலகம், பாண்டிச்சேரிப் பிரெஞ்சு இந்திய ஆய்வுக்கழகம், சென்னைச் சித்த மருத்துவ மேம் பாட்டுக் குழு, சென்னை மத்திய ஆயுர்வேத, சித்த மருத்துவ ஆய்வு நிலையம், திருவனந்தபுரம் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகம், திருப்பதி சிரீ வெங்கடேசு வரா சுவடிகள் நூலகம், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகச் சுவடிகள் நூலகம், பாரிசு நாதெல்லா நூல கம் ஆகியவற்றோடு தனியாரிடத்தும் உள்ளன. சே.பி.

போசர்: இந்தியாவை ஆண்ட இராசபுத்திர மன்னர்களுள் போசர் என்ற பெயரைக் கொண்ட சிலர் இருந்தனர். அம்மன்னர்களுள் கீழ்க் காணுபவர் கள் சிறப்பு வாய்ந்தவர்கள்.

**போசர் (ஏறத்தாழ கி.பி. 840 - 885 அல்லது 890):** வடஇந்தியாவில் ஆட்சி புரிந்து வந்த புகழ்பெற்ற பிரதிகாரர் என்ற இராசபுத்திர வமிச மன்னர்களுள் புகழ் பெற்றவர் இவர்; இரண்டாம் நாகபட்டனின் பேரர். இவர் தம் பேரரசை விரிவாக்கினார். பஞ்சாபு, ஐக்கிய மாகாணங்கள், இராசபுதனம், குவாலியர் முதலிய பகுதிகள் இவர் பேரரசில் அடங்கும். இவருடைய வெள்ளி நாணயங்கள் வட இந்தியாவில் பல இடங்களில் கிடைக்கின்றன. இவரு டைய கல்வெட்டுகளிலிருந்து இவருடைய வரலாற்றை ஓரளவு தெரிந்துகொள்ள முடிகிறது. இவருக்குப் பிரபாகரன், ஆதிவராகன் என்ற பட்டங்களும் உண்டு. இவர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர்; போசபுரத்தை நிறுவியவர். வங்காள பாலர்களைத் தோற்கடித்து அவர்களின் வலிமையை ஒடுக்கினார். இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்து சென்ற சுலைமான் என்ற அராபியப் பயணி இவருடைய படை வலிமையையும், இவர் நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி வந்ததையும் புகழ்ந்து எழுதியுள்ளார். இவருடைய கல்வெட்டுகளிலிருந்து இவருடைய பேரரசு சட்லெசு நதியிலிருந்து தபதி நதி, புதியபீகார் மாநிலம் வரையிலும் பரவியிருந்தமை தெரிய வருகின்றது. இவரை மிகிர போசன் என்று குறிப்பிடுவர்.

**முதலாம் போசர்(கி.பி. 1010 - 1055):** தென்னிந் தியாவில் ஆட்சி செய்த பரமாரர் குலத்தின் மிகச் சிறந்த அரசரான முதலாம் போசர் என்பார் போர் வீரர். இவர் கல்யாணிச்சாளுக்கிய மன்னனைப் போரிட்டுத் தோற்கடித்தார். கலிங்க நாட்டுக் கங்கரின் கீழிருந்த ஒரு தலைவனையும், வட கொங் கணத்தின் அரசர்களையும், காங்கேய தேவ, கால சூரியையும் போசர் வென்றார். கன்னோசியை (Kanauj) பல ஆண்டுகள் இவர் ஆட்சி செய்த போதும் இவருடைய நாட்டின் பெரும்பகுதி மாளவப் பகுதியில் அமைந்திருந்தது. இவருடைய ஆட்சியின் போது இவருடைய தலைநகரமாக விளங்கிய தார் நகரமும் (Dhar), உச்சையினி (Ujjain) நகரமும் சிறந்த இந்து, சமணக் கல்வியின் சிறப்பிடங் களாக விளங்கின. போசர் ஒரு கவியாகவும், சிறந்த ஆசிரியராகவும் விளங்கினார். வானவியல், சோதிடம், கட்டடக் கலை ஆகியவை பற்றிய இவருடைய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. தார் என்ற இடத்தில் இவரால் கட்டப்பெற்ற சிறந்த வட மொழிக் கல்லூரி பின் மசூதியாக மாறியதெனத் தெரிய வரு கிறது. இவ்வரசர் போபால் நகரைத் தோற்றுவித்து அதனருகில் ஏறத்தாழ 650 சதுர கி.மீ. பரப்பளவு உள்ள ஓர் ஏரியையும் வெட்டினார். போசர், பல கட்டடங்களைக் கட்டினார்; பல அறிஞர்களை ஆதரித்தார்; சமண சமயத்திடம் அன்பு பூண்டிருந் தார்.

முதலாம் போசருக்குப் பின்பு அரசு கட்டிலேறி யவர் அவர் மகன் முதலாம் செயசிம்மன் ஆவார். பின் உதயாதித்தியன் என்பார் அரசுரிமையைக் கவர்ந்து கொண்டார். போசருக்குப்பின் சிதைவுற் றிருந்த தம் குலப் பெருமையை மீண்டும் இவர் நிலைநாட்டினார்.

**இரண்டாம் போசர்:** இவர் கி.பி. 1283 - இல் அரியணை ஏறினார். இவருடைய ஆட்சியில், மாளவம் சகமான கம்மிரா (Chahamana Hammira) என்ப வனாலும், சலால் உத்தீன் கில்சியாலும் கொள்ளை யடிக்கப்பட்டது. இரண்டாம் போசர் கில்சியிடம் தோற்றுப் போனதாக அறியக்கிடக்கிறது.

இவர் ஆட்சிக் காலத்தின்போது காலசூரியர் தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள முயற்சி செய்தனர். எனினும், அவர்கள் வெற்றி கொள்ளவில்லை. இரண்டாம் போசர் அவர்களுக்கு முறையாகச் சுதந்திரம் வழங்கினார்.

**போசர் (நேபாளம்):** நேபாளத்தில் கி.பி. 11 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குணகாம (Gunakama) வமிசம் ஆட்சி புரிந்தது. அவ்வமிசத் தின் நிர்பாய என்ற மன்னர், உருத்திரா என்பவருடன் ஒன்றாக இணைந்து கி.பி. 1007 - இல் ஆட்சி புரிந் தார். உருத்திர தேவாவிற்குப்பின்னர்ப் போசர் என்ப வர் அரியணை ஏறினார். பின்னர், கி.பி. 1015-இல் கிடைக்கப்பெற்ற ஓலைச் சுவடியின் கருத்துப்படி, போசரின் ஆட்சிக் காலத்தின்போது அவருடைய

இராச்சியத்தின் பெரும்பகுதியை இலக்குமிகாம தேவா அனுபவித்து வந்தார் எனத் தெரிகிறது. இதைக் கொண்டு சிலர் போசரும் இலக்குமிகாம தேவரும் ஒன்றாக ஆட்சி புரிந்தனர் என்று கூறுவர். ஆனால், நாள் காணப்பெறாத ஓலைச் சுவடி ஒன்று போசருடைய ஆட்சியை மட்டும் குறிக்கின்றது. கிடைக்கப்பெற்ற மற்றொரு ஓலைச் சுவடி (கி.பி. 1039) இலக்குமிகாமாவை மட்டும் குறிக்கிறது.

இரா.கி.

**போசன்**: இவன் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் விதர்ப்ப நாட்டை ஆண்ட வரலாற்றுச் சிறப்பிற்குரிய மன்னன். தந்தை இறந்த பின் சிறிய தந்தை அரசப்பொறுப்பேற்று ஆளுகையில் இவனைக் கொல்ல ஏற்பாடு செய்தபோது, கொலையாளிகளிடம், 'மாந்தாதா முதல் இதுவரை அரசாண்ட மன்னர் எவரும் தாம் ஆண்ட பூமியை உடன் கொண்டு சென்றாரில்லை' என்ற செய்யுளை எழுதி மன்னரிடம் கொடுத்தனுப்ப, மன்னன் மனம் மாறிப் போசனுக்குப் பட்டம் கட்டி வைத்துவிட்டுத் துறவு பூண்டதாக வரலாறு கூறுகிறது. நாடுகள் பலவற்றையும் வென்று மாமன்னனாக விளங்கிய போசன் சிறந்த கலைவிரும்பியாக விளங்கினான். இவன் அவைக்களத்தை மகாகவி காளிதாசர், பவபூதி, தண்டி மூவரும் பெருமைப் படுத்தினர் என்பது வரலாறு. காளிதாசக் கவிஞருடன் போசன் கொண்ட நட்பு சுவைமிக்கது. மற்ற புலவரின் சூழ்ச்சியால் மன்னன் காளிதாசனைப் பிரிய நேரிட்டபோது, கவிஞர் இருந்த ஊருக்கு வேற்றுருவம் கொண்டு சென்று, தான் மரணமடைந்ததாகச் செய்தி பரப்பிவிட்டான். மிக்க துயரில் ஆழ்ந்த காளிதாசன் சரமகவி பாடப்புக, போசன் மயக்கமடைந்து விழுந்தான். அரசன் என அறிந்த காளிதாசன் கவியை மாற்றிப் பாடி அரசனை உயிர்ப்பித்தான் என்பது வரலாறு.

தி.லீ.

**போட்டி**: ஓர் அங்காடியில் விற்பனையாளர் ஒருவராக இருந்தால், அந்த நிலை முற்றுரிமை (Monopoly) என்று கூறப்படும். ஒரு விற்பனையாளர் இருந்தால், அவர் விருப்பம் போல் விலையை நிருணயித்து மிகுதியாக ஆதாயம் அடைவார். நடைமுறையில், ஒருவர் மிகுதியாக ஆதாயம் பெற்றுக் கொண்டிருந்தால் மற்ற விற்பனையாளர்கள் அதனைக் கண்டு வாளா இருக்க மாட்டார்கள். அவர்களும் அந்த ஆதாயத்தில் பங்கு பெற அங்காடியில் நுழைவார்கள். இதனால் அங்காடியில் விற்பனையாளர்களுக்கிடையில் போட்டி (Competition) ஏற்படும்.

அங்காடியில் நிலவுகின்ற போட்டியை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, நிறைவுப் போட்டி (Perfect Competition); மற்றொன்று, நிறைகுறைப் போட்டி (Imperfect Competition).

முற்றுரிமைக்கு நேர் எதிராக இருப்பது நிறைவுப் போட்டி. முற்றுரிமையில் ஒரு விற்பனையாளர் என்றால், நிறைவுப் போட்டியில் எண்ணற்ற விற்பனையாளர் இருப்பர். முற்றுரிமையும் நிறைவுப் போட்டியும் அங்காடியின் இரு எல்லைக் கோடுகளாக இருக்கின்றன. பெரும்பாலும் நடைமுறையில், அங்காடியில் முற்றுரிமையோ, நிறைவுப் போட்டியோ நிலவுவதில்லை; இரண்டுக்கும் இடைப்பட்ட நிறைகுறைப் போட்டியே நிலவுகின்றது.

1) **நிறைவுப் போட்டியின் இயல்புகள்**: நிறைவுப் போட்டியுள்ள அங்காடியில் ஒரு பொருளுக்கு ஒரே விலைதான் இருக்கும். இந்த நிலை இருப்பதற்குக் காரணம் அங்காடியிலுள்ள சூழ்நிலைதான். நிறைவுப் போட்டியின் இயல்புகளாகக் கீழ்க்காணுமிவற்றைக் கூறலாம்.

நிறைவுப் போட்டி அங்காடியில் வாங்குவோர்களும், விற்பனையாளர்களும் எண்ண முடியாத அளவிற்கு மிகுதியாக இருப்பார்கள். இதனால் விற்பவர்கள் ஒவ்வொரு சிறிய அளவிலேயே விற்பார்கள். அதாவது ஒருவர் விற்பனை செய்யும் பொருள் அங்காடியில் விற்பனையாகும் மொத்தப் பொருளோடு ஒப்பிட்டால் மிகவும் சிறிய அளவினதாகவே இருக்கும். வாங்குபவர்களும் சிறிய அளவிலேயே பொருளை வாங்குவார்கள். ஆதலால், எந்தத் தனிப்பட்ட வாங்குபவராலோ, விற்பவராலோ அங்காடி விலையை மாற்றமுடியாது. அங்காடியில் பொருளை வாங்குகின்றவர்களின் மொத்தத் தேவையும், விற்பவர்களின் மொத்த அளிப்பும் விலையை நிருணயிக்கின்றன.

2) அங்காடியில் விற்பனை செய்கின்ற எல்லாப் பொருட்களும் ஒரே தரமான, சீரான பொருளாக (Homogenous Product) இருக்கும். ஆதலால், வாங்குகின்றவர்கள் எல்லாப் பொருட்களையும் ஒன்று போலச் சமமானவையாகக் கருதுவார்கள். அங்காடியில் ஒரே விலை நிலவுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

3) எந்தத் தனி நிறுவனமும் எப்பொழுதும் அங்காடியில் நுழையவோ, வெளியேறவோ உரிமை பெற்றிருக்கும். எந்த வகையான தடையும் இருக்காது. இதனால் எப்பொழுது வேண்டுமானாலும் புதிய நிறுவனங்கள் தோன்றும். இழப்பு ஏற்படக்கூடிய நிறுவனங்கள் தொழிலை விட்டு வெளியேறும். பெரும்பாலும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் சிறியவையாக இருக்கும்.

4) வாங்குபவர்களும் விற்பவர்களும் அங்காடியின் நிலவரங்கள் எல்லாவற்றையும் அறிந்திருப்பார்கள். ஆதலால், வாங்குபவர்கள் மிகுதியாக விலை கொடுத்துப் பொருட்களை வாங்க மாட்டார்கள். அங்காடியில் ஒரே விலைதான் இருக்க முடியும்.

5) நிறைவுப் போட்டி செம்மையாகச் செயற்பட உற்பத்திக் காரணிகள், மிகுதியாக வருவாய் கிடைக்கும் இடத்திற்கு இடம் பெயர்ந்து செல்ல எந்த விதமான தடையும் இருக்காது.

6) நிறைவுப் போட்டியில் போக்குவரத்துச் செலவுகள் இருத்தல்கூடாது. எல்லா நிறுவனங்களும் மிகவும் நெருங்கிய சூழ்நிலையில் செயற்படும். போக்குவரத்துச் செலவுகள் இருந்தால் அங்காடியில் விலை வேறுபாடுகள் தோன்றும். விலை வேறுபாடுகள் தோன்றுகின்ற அளவிற்குப் போக்கு வரத்துச் செலவுகள் ஏற்படக் கூடாது.

7) வாங்குகின்றவர்கள் குறைந்த விலைக்குப் பொருட்கள் கிடைக்குமிடத்திற்குச் சென்று பொருட்களை வாங்கவேண்டும். அவர்கள் சோம்பலின்றி எல்லா இடத்திற்கும் செல்ல வேண்டும். அப்பொழுது தான் அங்காடியில் ஒரே விலை நிலவும்.

8) எல்லா விற்பனையாளர்களும் வாங்குகின்றவர்களுள் யாருக்கும் எந்தவகையான சலுகையும் காட்டமாட்டார்கள். எல்லோரையும் ஒன்று போலவே நடத்துவார்கள். இதனால் வாங்குவோர் எந்த ஒரு தனி விற்பனையாளரிடமும் வாங்க வேண்டுமென்ற விருப்பத்தோடு இருக்கமாட்டார்கள்.

9) வாங்குவோரின் விருப்பு, வெறுப்புகள் மாறாமல் இருக்க வேண்டும். அவற்றை விற்பனையாளர்களால் மாற்றி அங்காடியில் விலையைக் கட்டுப்படுத்த முடியாது.

**நிறைகுறைப் போட்டி:** நடைமுறை அங்காடிகளில் நிறைவுப் போட்டியின் இயல்புகளும், முற்றுரிமையின் இயல்புகளும் கலந்து காணப்படுகின்றன. இந் நிலையை முதலில் சோன் இராபின்சன் (Mrs. Jhon Robinson) அம்மையார் 'நிறைகுறைப் போட்டி' என்று குறிப்பிட்டார். பேராசிரியர் சேம்பர்லின் (Chamberlain) இதனை 'முற்றுரிமைப் போட்டி' (Monopolistic Competition) என்று குறிப்பிட்டார்.

நிறைகுறைப் போட்டியின் இயல்புகளைத் தொகுத்துக் கூறலாம். அவை:

1) அங்காடியில் எண்ணற்ற நிறுவனங்கள், சிறிய அளவில் செயற்படும். ஒவ்வொன்றும் மொத்த உற்பத்தியில் சிறிய அளவே உற்பத்தி செய்யும். ஒன்றின் நடவடிக்கை மற்றவற்றைப் பாதிக்காது.

2) ஒவ்வொரு நிறுவனமும், தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள் மற்றையநிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களிலிருந்து மாறுபட்டதெனப் பொருளை வேற்றுமைப்படுத்திக் (Product Differentiation) காட்டும். பொருட்களை வேற்றுமைப்படுத்திக் காட்டப் பல வழிமுறைகளைப் பின்பற்றுவார்கள். தரத்தினாலும் தன்மையாலும் தங்கள் பொருள் சிறந்ததெனக் காட்டலாம். வாடிக்கையாளர்களுக்குச் சில துணைப் பணிகளைச் செய்வதின் மூலம் அவர்களைத் தங்கள் பொருள் சிறந்ததென நம்ப வைக்கலாம். புதிய விற்பனை முறைகளைப் பின்பற்றுதல், விளம்பரங்கள் செய்தல் போன்றவற்றாலும் தங்களுடைய பொருட்களை உயர்ந்தனவென வாங்குகின்றவர்களை எண்ணவைக்கலாம்.

3) அங்காடியில் எப்பொழுது வேண்டுமானாலும் புதிய நிறுவனங்கள் நுழையவோ பழைய நிறுவனங்கள் வெளியேறவோ வாய்ப்பிருக்கும். நிறுவனங்கள் வருவதாலும் போவதாலும் அங்காடி நிலையில் மாற்றமிருக்காது.

4) வாங்குகின்றவர்களுக்குச் சில விற்பனையாளர்களிடம் தனி ஈடுபாடு இருக்கும். ஆதலால் அவர்களிடம் பொருட்களை வாங்க விரும்புவார்கள். எடுத்துக் காட்டாக, அங்காடியில் பலவகையான சவர்க்காரம் (Soap) இருந்தாலும், நுகர்வோர் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் சவர்க்காரத்தைக் கேட்டு வாங்குவதைக் கூறலாம்.

5) வாங்குபவர்களும் விற்பனையாளர்களும் அங்காடியின் எல்லா விவரங்களையும் அறிந்து செயற்படமாட்டார்கள். அங்காடியில் பல்வேறுபட்ட பொருட்கள் இருப்பதால் அவற்றைப் பற்றி எல்லா விவரங்களையும் அறிய முடியாது. ஆதலால் அருகிலுள்ள விற்பனையாளர்களிடம் பொருட்களை வாங்குவார்கள்.

6) நிறைகுறைப் போட்டியில் விற்பனையாளர்கள் பொருட்களை விற்பனை செய்வதற்காக விளம்பரம் போன்ற விற்பனைச் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும். விற்பனைச் செலவுகளின் மூலம் தங்கள் பொருட்களைச் சிறந்ததென மக்களை நம்ப வைத்து விற்பனையைக் கூட்டலாம்.

7) ஒரே மாதிரிப் பொருளை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் அமைந்திருக்கின்ற தூரத்தை ஒட்டியும், அவற்றை எடுத்துச் செல்ல ஆகின்ற போக்குவரத்துச் செலவை ஒட்டியும் பொருளை வேறுபடுத்த இயலும். இதனால், அங்காடியில் விலையிலும் வேறுபாடு இருக்கும்.

8) நிறைகுறைப் போட்டியில் குறுகிய காலத்தில்

சில நிறுவனங்கள் மிகுதியாக ஆதாயம் பெறலாம். ஆனால், நீண்ட காலத்தில் புதிய நிறுவனங்கள் நுழைவதால் உற்பத்தி கூடும். எல்லா நிறுவனங்களுக்கும் இயல்பு ஆதாயம்தான் கிடைக்கும்.

9) ஒரு பொருளுக்கு அங்காடியில் பல விலைகள் நிலவும். பொருட்களை வேறுபடுத்திக் காட்டி ஒவ்வொரு நிறுவனமும் தனது பொருளைத்தனி விலையில் விற்க முயலும்.

**சிறப்புகள்:** முதலாளித்துவ அமைப்பு முறையில் அங்காடியில் போட்டியை ஆதரிக்கின்றனர். போட்டியினால் பல்வேறு நன்மைகள் கிடைப்பதனைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

1) போட்டி நிலவுகின்றபொழுது ஒவ்வொரு நிறுவனமும் தன் முழு ஆற்றலையும் பயன்படுத்தும். தொழில் முனைவோர்கள் தங்கள் திறமைகளை எல்லாம் தொழில் வளர்ச்சியில் ஈடுபடுத்துவர். போட்டியில் 'மண்ணும் பொன்னாக மாறும்' என்பது பழைய பொருளியல் மொழி. 2) போட்டி அங்காடியில் நிலவும் விலை, முற்றுரிமை விலையை விடக் குறைவாக இருக்கும். இதனால் வாங்குபவர்கள் பயனடைவார்கள். 3)நுகர்வோருக்கு ஒரே பொருள் பல்வேறு வகைகளில் கிடைக்கும். எனவே நுகர்வோர் விருப்பமானவற்றைத் தெரிந்தெடுத்து வாங்கலாம். 4) அங்காடியில் நுழையவும் வெளியேறவும் உரிமை இருப்பதால் தொழில், பொருளாதார சூழ்நிலைக்கேற்ப விரிவடையவோ, சுருங்கவோ வழி இருக்கின்றது. தனி நிறுவனங்களுக்குரிய உரிமை குறிப்பிடத் தக்கதாகும்.

**குறைகள்:** போட்டியில் சில குறிப்பிடத்தக்க குறைகளும் உள்ளன. 1) சில பெரிய நிறுவனங்களை எதிர்த்துச் சிறிய நிறுவனங்களால் போட்டி போட முடியாது. இதனால் காலப் போக்கில் மிகச் சிறிய நிறுவனங்கள் போட்டிக்கு ஈடு கொடுக்க முடியாமல் அழிந்து படுகின்றன. 2) போட்டி அங்காடியில் விளம்பரம் போன்ற வீணான செலவுகள் ஏற்படுகின்றன. இந்தச் செலவுகளையும் இறுதியில் நுகர்வோர்களே கொடுக்க வேண்டியுள்ளது. 3) பொதுவாக அங்காடியில் நிறைகுறைப் போட்டியே நிலவுகின்றது. இதனால் மிகப் பெரிய நிறுவனங்கள் முற்றுரிமையை நோக்கி வளர முடிகின்றது. 4) பொருட்களில் வேண்டுமென்றே செயற்கை வேறுபாடுகளை ஏற்படுத்தி, வேறுபட்ட விலைகளில் பொருட்களை விற்க முடிகின்றது. நுகர்வோர்கள் இதனால் ஓரளவு மிகுதியாக விலை கொடுத்துப் பொருட்களை வாங்குகின்றனர்.

இன்று நடைமுறையில் அங்காடியில் போட்டி நிலவுவதால், பொருட்களின் விலை நிருணயம் பற்றித் தெரிந்து கொள்ளப் போட்டியைப் பற்றிய தெளிவான அறிவு தேவை. இந்த வகையில் போட்டி பற்றிய ஆய்வு பொருளியலில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. மா.பா.கு.

**துணை நூல்கள்:**

**குருசாமி, மா.பா.,** நுண்ணினப் பொருளியல், குருதே மொழி, திருச்செந்தூர், 1984.

**Alred, W.Stonier & Dauglas, C.Hagul,** A Text Book of Economic Theory, Layman Group Ltd., London, 1982.

போட்டியாப் பழங்குடி:நேப்பாளம்,திபேத்து ஆகிய நாடுகளின் எல்லைகளையொட்டி உள்ள இமயமலைப் பகுதிகளில் போட்டியாப் (Bhotia) பழங்குடியினர் வாழ்கின்றனர். இவர்கள் மங்கோலியரை மிகவும் ஒத்துள்ளனர். திபேத்து, பூட்டான் நாடுகளிலிருந்து இப்பழங்குடியினர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே குடிபெயரத் தொடங்கினர் என்று கூறப்படுகிறது. இன்று இவர்கள் இமாசலப் பிரதேசத்திலும், நேப்பாள, திபேத்திய எல்லைப் பகுதிகளிலும், சிக்கிம் – பூட்டான் பகுதிகளிலும், அருணாசலப் பிரதேசத்தின் வடக்குப் பகுதிகளிலும் பரவிக் காணப்படுகின்றனர்.

இந்தியர்களும், நேப்பாள மக்களும் திபேத்தைப் 'போட்' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றனர். இப்பெயரிலிருந்து பெறப்பட்டதே 'போட்டியா' என்னும் சொல். இப்பழங்குடியினர் திபேத்திய-பர்மிய கிளைமொழியினைத் தங்கள் மொழியாகக் கொண்டுள்ளனர். புத்தசமயத்தைத் தங்கள் சமயமாக ஏற்றுக் கொண்டுள்ள இவர்களுள் சிலர் சிறந்த அறிஞர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் அரசியல், சமயச் செய்திகளைப் பொருத்த மட்டில் அதிகாரம் செலுத்த வல்லவராய் உள்ளவர். சிக்கிம் அரசு உருவானதில் போட்டியாப் பழங்குடியினரின் சமயக் குருக்கள் முக்கிய பங்கேற்றுள்ளனர் என்பது கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள இலப்சா (Lepcha) சமுதாயத்தினரிடையே இவர்கள் புத்தமடங்களைத் தோற்றுவித்துள்ளனர். வண்ணமிகு சுவர் ஓவியங்களோடு அமைந்துள்ள அம்மடங்களால் புத்த சமயத்தைப் பரப்பியதன் மூலம், இவர்கள் தம் அரசியல், சமய ஒற்றுமையினை நிலைநாட்டியுள்ளனர் என்றால் அது மிகையாகாது.

போட்டியாப் பழங்குடியினர், பெரும்பாலான காலங்களில் நிலையான இடத்தில் வாழ்ந்தாலும் சில காலங்களில் நாடோடிகளாகத் திரிந்து வாழ்கின்றனர். நிரந்தரமாகச் சிலகாலம் தங்குமிடங்களில் கல், மரங்கள் ஆகியவற்றால் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்கின்றனர்.

இப் பழங்குடியினரின் உணவில் கள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. வாற்கோதுமை (Barley), கோதுமை, உருளைக்கிழங்கு, முள்ளங்கி ஆகியவை இவர்களின் முக்கிய பயிர்களாக உள்ளன. இம்மக்கள் வாழும் பள்ளத்தாக்குகளில், பெரும்பான்மையான காலம் பனி படர்ந்துள்ளமையால் வேளாண்மை செய்வது இம்மக்களுக்குக் கடினமாக உள்ளது. இருப்பினும், ஏப்பிரல் முதல் அக்டோபர் வரை பயிர் செய்கின்றனர்.

போட்டியாப் பழங்குடியினர் வாழ்க்கையில் கால்நடைகள், மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. பாலிலிருந்து வெண்ணெய் கடைந்தெடுக்கின்றனர். அவ்வெண்ணெய் சமையல் செய்யவும், தேநீர் தயாரிக்கவும் சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் விளக்கின் திரிகளை எரிக்கவும் உதவுகிறது. மாட்டு இறைச்சியை இவர்கள் விரும்பி உண்கின்றனர். திபேத்தியக் காளையின் முடியினைக் கொண்டு கம்பள நெசவு செய்கின்றனர். வணிகத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்களைச் சுமக்க அவை பொதிமாடுகளாகப் பயன்படுகின்றன. நெல்லையும் உப்பு மூட்டைகளையும் சுமக்க இவர்கள் ஆடுகளைப் பயன்படுத்துவர். இதனை இறைச்சிக்கும் பயன்படுத்துகின்றனர். குதிரைகள் போக்கு வரத்துக்கு மட்டும் பயன்படுத்தப்படுகின்றன.

கால்நடைப் பாதுகாப்பிற்கு மேய்ச்சல் அவசியமானதால் இவர்கள் நாடோடி வாழ்க்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏறத்தாழ இரண்டல்லது மூன்று மாதங்கள் வெளியில் சென்று கால்நடைகளை மேய்க்கின்றனர். இவர்களின் குடியிருப்புகள் திபேத்திய மேட்டு நிலத்திற்கும், இமயமலையின் அடிவாரத்தின் செழுமையான பகுதிகளுக்குமிடையே அமைந்துள்ளன. இதுவே, இவர்களின் வணிக வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளது. இம்மக்கள் உப்பிற்கும் கம்பள இழைகளுக்கும் மாற்றாகத் தானியங்களையும் பிற வேளாண்மைப் பொருட்களையும் பண்டமாற்றம் செய்கின்றனர். பண்டமாற்றமே இவர்களின் பொருளாதாரத்தின் அடிப்படையாகத் திகழ்கிறது.

மேற்குத் திபேத்தின் வடக்கே மிகப் பெரும் உப்பு ஏரிகள் உள்ளன. அவற்றிலிருந்து உப்பு எடுக்கின்றனர். நேப்பாளத்தின் அம்லா (Humla) நகரில் வாழும் போட்டியாப் பழங்குடியினர் கி.பி.12,13-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே உப்பு வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். எல்லைப்புறத்திற்கு அருகிலுள்ள உயர்பள்ளத்தாக்கில் வாழும் இப்பழங்குடியினர் உப்பு வணிகத்தைச் சிறந்த முறையில் மேற்கொண்டுள்ளனர். இவர்கள் இமயமலைக் கணவாய்களிலுள்ள கடினமான, மிகக் குறுகிய பாதையில் பொருட்களைக் கொண்டு செல்வதற்கெனக் காளைகளைச் சிறப்பான முறையில் பழக்கி வைத்துள்ளனர்.

குளிர்காலப் பயிர்களை அறுவடை செய்த பின் ஒவ்வொரு சூன் திங்களும் அம்லாவில் வாழும் போட்டியாப் பழங்குடியினர், பண்டமாற்று முறையில் உப்பைக் கொடுத்துப் பார்லி, அரிசியைப் பெறுகின்றனர். இது போன்று கோடைப் பயிர்களின் அறுவடைக்குப் பின் இமயமலையின் நடுப்பகுதிகளுக்குச் (Middle-Range) சென்று உப்பைக் கொடுத்து நெல்லைப் பெறுகின்றனர்.

இப்பழங்குடியினர் பன்றிக் கறி உண்ணும் பழக்கமுடையவராயிருப்பதால், அங்கு வாழும் இந்துசாதி மக்களால் இவர்கள் தூய்மையற்றோராயும், தாழ்ந்த இனத்தவராயும் கருதப்படுகின்றனர். ஓர் ஆண்டில் பெரும்பான்மைப் பகுதியில் போட்டியா ஆண்கள் நாடோடி வாழ்க்கையை மேற்கொள்வதால் அவர்கட்குப் பதிலாகப் பெண்டிர் குடும்பப் பொறுப்பேற்க வேண்டியவராகிறார்கள். பண்ணையைக் கவனிக்கும் பணியும் இவர்களுடையதாகிறது. ஒரு பெண் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஆடவரை மணக்கும் பல கணவர் மணமும் (Polyandry) இப்பழங்குடியினரிடையே காணப்படுகிறது. வண்ணமிகு கம்பளத் துணிகளைப் போட்டியா ஆடவரும், பெண்டிரும் மிக நேர்த்தியாக அணிகின்றனர்.

புத்தசமயத்தைப் பின்பற்றும் போட்டியாப் பழங்குடியினர் புத்தமடங்களையும், குருக்களையும் கவனிக்க மிகுதியான தொகையினைச் செலவிடுகின்றனர். இப்பழங்குடியினர் மறுபிறப்பில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். சமயக்குருக்கள் திருத்தொண்டர்களின் (Saintly Personages) மறுபிறவியாகக் கருதப்படுகின்றனர். அக்குருக்கள் மிகுதியாக மதிக்கப்படுவதுடன், சமய நிகழ்ச்சிகளில் மிக முக்கிய பங்கேற்கவும் செய்கின்றனர்.

இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற சண்டையில் இந்தியா திபேத்திய எல்லைப்பகுதியில் செயற்பட்டு வந்த தொன்மையான வணிகத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதுவே, போட்டியாப் பழங்குடியினரின் பொருளாதார நிலையில் சிக்கலேற்படக் காரணமாகியது. அதனால், இப்பழங்குடியினர் வேறு பணி செய்து பொருளீட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். போக்குவரத்து முன்னேற்றத்தின் காரணமாக, குறிப்பாக மலையடிவாரத்தில், மத்திய பகுதிகளில் போடப்பட்ட சாலைகள் வழியாகவும் இந்தியாவிலிருந்து பெருமளவு உப்பு வரத் தொடங்கியது. போட்டியாப் பழங்குடியினர் சிரமப்பட்டுக் கடினமான மலைப் பாதை வழியே கொண்டு வந்த திபேத்திய உப்பைக்

காட்டிலும், இந்தியாவிலிருந்து வந்த உப்பு விலை மலிவாக இருந்தது. அதனால் இப்பழங்குடியினரின் உப்பு வணிகம் பெருமளவு பாதிக்கப்பட்டது. இமய மலையின் உயர் பள்ளத்தாக்கில் வாழும் இப்பழங்குடியினர் தங்கள் உப்பு வணிகத்தில் ஏற்பட்ட சரிவால் மலையின் கீழுள்ள வேறு இடங்களுக்குக் குடிபெயரும் நிலையிலுள்ளனர். ம.ந.பு.

போட்டி விலைக்கோட்பாடு: எண்ணற்ற வாங்குவோரையும் விற்பனையாளர்களையும் கொண்ட அங்காடி 'நிறைவுப் போட்டி அங்காடி' (Market of Perfect Competition) என்று சொல்லப் படுகிறது. நிறைவுப் போட்டியில், அங்காடி முழுவதும் ஒரு பொருளுக்கு ஒரே விலைதான் நிலவும். அந்த விலையை வாங்குபவர்களோ விற்பவர்களோ மாற்றமுடியாது. அந்நிலையில் நிறைவுப் போட்டியில் எவ்வாறு பொருளுக்கு விலை நிருணயிக்கப்படுகிறது என்பதைப் போட்டி விலைக் கோட்பாடு (Competi--tive Price Theory) விளக்குகிறது.

**எடுகோள்கள்**: இக் கோட்பாட்டின்படி போட்டியில் விலை நிருணயமாவதை விளக்கச் சில எடுகோள்கள் தேவைப்படுகின்றன. அவை: 1) உற்பத்தியாளர் அதாவது விற்பனையாளர் எப்பொழுதும் மிகுதியாக ஆதாயத்தைப் பெற முயல்வார். 2) ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் எல்லா நிறுவனங்களும் ஒரேமாதிரியான உற்பத்திச் செலவுகளைக் கொண்டிருக்கும். அதாவது, ஒரு தொழில் நிறுவனம் சமநிலையில் இருக்கின்றபொழுது எல்லா நிறுவனங்களும் சமநிலையில் இருக்கும். அப்பொழுதுதான் தொழில் சமநிலையில் இருக்கக் காணலாம்; 3) எல்லா உற்பத்திக் காரணிகளும் ஓரியல்பானவையாக இருக்கும். ஆதலால் அவை ஒரே விலையில் எல்லா நிறுவனங்களுக்கும் கிடைக்கும். 4) எல்லாத் தொழில் முனைவோரும் ஒரேமாதிரியான திறமையுடையவர்களாக இருப்பார்கள். இதனால் நீண்ட காலத்தில் எல்லாத் தொழில் முனைவோருக்கும் இயல்பு ஆதாயமே கிடைக்கும்.

**விலை நிருணயம்**: நிறைவுப் போட்டியில் ஒரு பொருளின் விலை அதனுடைய இறுதி நிலைச் செலவிற்கும் இறுதி நிலை வருவாய்க்கும் சமமாக இருக்கும் நிலையில் நிருணயிக்கப் பெறும். ஏனென்றால், ஒரு நிறுவனத்தின் இறுதிநிலைச் செலவும், இறுதி நிலை வருவாயும் சமமாக இருக்கும் பொழுதுதான் அந்த நிறுவனத்தின் ஆதாயம் உச்ச நிலையில் இருக்கும்.

ஏனென்றால் விற்பனை செய்கின்ற பொருட்களில் ஒரு பொருளை மிகுதியாக விற்கின்ற பொழுது கூடுதலாகக் கிடைக்கக் கூடிய வருவாய் இறுதி நிலை வருவாயாகும். நிறைவுப் போட்டியில் ஒரே விலைதான் நிலவும் என்பதனால் ஒரு நிறுவனம் அதே விலையில் எவ்வளவு பொருட்களை வேண்டுமானாலும் விற்க முடியும். ஆதலால், விலையும், இறுதி நிலை வருவாயும் எப்பொழுதும் சமமாக இருக்குமென்பது குறிப்பிடத்தக்கது. விலையில் மாற்றமில்லாமல் இருப்பதால், சராசரி வருவாயும், இறுதிநிலை வருவாயும் சமமாகவே இருக்கும்.


ஓரளவுக்குமேல் உற்பத்தி கூடுகின்ற பொழுது, உற்பத்தி, குறைந்து செல் விளைவு விதியின் அடிப்படையில் செயற்படுகின்றது. ஆதலால், உற்பத்தி கூடக்கூட இறுதிநிலைச் செலவும், சராசரிச் செலவும் உயர்ந்து கொண்டே செல்லும். இந்நிலையில், இறுதிநிலை உற்பத்திச் செலவை விட இறுதி நிலை வருவாய் மிகுதியாக இருக்குமானால், மேலும் உற்பத்தியைப் பெருக்குவது, அந்தத் தொழில் நிறுவனத்திற்கு ஆதாயத்தைக் கொடுக்கும். அதாவது, ஒரு தொழில் நிறுவனம், எந்த நிலையில் இறுதி நிலை உற்பத்திச் செலவு இறுதி நிலை வருவாய்க்குச் சமமாக இருக்குமோ அந்த நிலையில் உற்பத்தியை நிறுத்திக் கொள்ளும்.

மேலும், போட்டி விலை நிருணயத்தை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். ஒரு நிறுவனம் கட்டில் உற்பத்தி செய்வதாக வைத்து கொண்டால் அதன் உற்பத்திச் செலவு வருவாய்களைக் கீழ்க்காணுமாறு காட்டலாம்.

| உற்பத்திக் கட்டில்கள் | மொத்தச் செலவு ரூ. | சராசரிச் செலவு ரூ. | இறுதி நிலைச் செலவு ரூ. | விலை ரூ. | மொத்த வருவாய் ரூ. | இறுதி நிலை வருவாய் ரூ. | சராசரி வருவாய் ரூ. | நிகர ஆதாயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 100 | 100 | — | 400 | 400 | 400 | 400 | 300 |
| 2. | 300 | 150 | 200 | 400 | 800 | 400 | 400 | 500 |
| 3. | 600 | 200 | 300 | 400 | 1200 | 400 | 400 | 600 |
| 4. | 1000 | 250 | 400 | 400 | 1600 | 400 | 400 | 600 |
| 5. | 1500 | 300 | 500 | 400 | 2000 | 400 | 400 | 500 |
| 6. | 2100 | 350 | 600 | 400 | 2400 | 400 | 400 | 300 |

பட்டியலைக் கவனித்தால் நான்கு கட்டில்கள் உற்பத்தி செய்கின்ற பொழுது ஆதாயம் உச்ச நிலையில் இருப்பது புலனாகும். இந்த நிலையில், இறுதி நிலைச் செலவும், விலையும், இறுதிநிலை வருவாயும், சராசரி வருவாயும் சமமாக இருப்பதைக் காணலாம்.

**சமநிலைக்கான சூழல்கள்**: நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம் உச்ச அளவில் உற்பத்தி செய்து மிகுதியாக ஆதாயம் பெற்றுச் சமநிலையில் இருக்க வேண்டுமானால் இரண்டு சூழ்நிலைகள் அமைய வேண்டும். 1) ஒரு நிறுவனத்தின் இறுதி நிலைச் செலவும் இறுதி நிலை வருவாயும் சமமாக இருக்க வேண்டும். இறுதி நிலைச்செலவு இறுதி நிலை வருவாய்க்கு உயரும் வரை உற்பத்தியைக் கூட்டலாம். அதற்கு மேல் உற்பத்தியைக் கூட்டினால் ஆதாயம் பாதிக்கும். இதனை வரைபடம் 1-இன் மூலம் விளக்கலாம்.




வரைபடம் 1

வரைபடம் 1-இல் OX அச்சில் (படுக்கைக் கோட்டில்) பொருளின் அளவையும், OY அச்சில் (செங்குத்துக் கோட்டில்) வருவாயையும், செலவையும் அளப்பர். PD கோடு விலையையும் (சராசரி வருவாய் இறுதி நிலை வருவாய்), MC வளைகோடு இறுதி நிலைச் செலவையும் குறிக்கின்றன. இறுதி நிலைச் செலவுக்கோடு, வளர்ந்து செல் விளைவு விதி செயற்படுவதால் ஒரு குறிப்பிட்ட நிலைவரை குறைந்து சென்று, பின்னர்க் குறைந்து செல் விளைவு விதி செயற்படுவதால் கூடுகின்றது.

வரைபடம் 1-இன்படி OQ அளவு உற்பத்தி செய்யும்பொழுது தொழில் நிறுவனம் உச்ச நிலையில் ஆதாயம் பெறும். ஏனென்றால், OQ அளவு பொருள்களை உற்பத்தி செய்ய நிறுவனத்திற்கு OP VMSQ அளவு முதன்மைச் செலவு ஆகும். அப்பொழுது கிடைக்கின்ற வருவாய் OPSQ ஆக இருக்கும். அப்பொழுது கிடைக்கின்ற ஆதாயத்தின் அளவு VMS ஆகும். இந்த உற்பத்தியைக் கூட்டினாலோ, குறைத்தாலோ கிடைக்கின்ற ஆதாயத்தின் அளவு குறையும். இதனையும் வரைபடத்தின் துணையோடு விளக்கலாம். இப்பொழுது உற்பத்தி அளவை $OQ_1$ ஆகக் கூட்டுவதாக வைத்துக் கொண்டால், அதனால் இறுதி நிலை உற்பத்திச் செலவு $Q_1N$ ஆகக் கூடும். இறுதி நிலை வருவாயை விட இறுதிநிலைச் செலவு NT அளவு கூடுதலாக இருக்கும். அதாவது $OQ_1$ அளவு மிகுதியாக உற்பத்தி செய்வதால் STNஅளவு மிகுதியாக இழப்பு ஏற்படும். VMS அளவு ஆதாயத்தில் இழப்பினைக் கழித்தால் மொத்த ஆதாயம் குறையும். OQ அளவிலிருந்து உற்பத்தியைக் குறைத்தாலும் ஆதாயம் குறையும். உற்பத்தியை $OQ_2$ அளவிற்குக் குறைப்பதாக வைத்துக் கொண்டால், அந்நிலையில் VMR அளவுதான் ஆதாயம் கிடைக்கும். உற்பத்தியை OQ வரை கூட்டுவது ஆதாயத்தை மிகுதிப்படுத்தும். 2) ஒரு நிறுவனம் சமநிலையில் இருக்க, இறுதிநிலைச் செலவுக்கோடு இறுதிநிலை வருவாய்க் கோட்டைக் கீழிருந்து மேல் நோக்கி வந்து வெட்ட வேண்டும். வரைபடத்தில் இறுதி நிலைச்செலவுக் கோடு இறுதி நிலை வருவாய்க் (விலை) கோட்டை இரண்டு இடங்களில் (VS) வெட்டுவதைக் காணலாம்.

புள்ளியில் இறுதிநிலைக் கோடு மேலிருந்து கீழிறங்கி இறுதி நிலை வருவாய்க் கோட்டை வெட்டுகின்றது. இந்நிலையில் $OQ_3$ அளவு உற்பத்தி செய்யப்படும். ஆனால், நிறுவனத்திற்கு ஆதாயம் எதுவும் கிடைக்காது. உற்பத்தி $OQ_3$ அளவுக்கு மேல் கூடுகின்ற பொழுதுதான் ஆதாயம் கிடைக்கின்றது. இறுதி நிலைச் செலவுக்கோடு இறுதிநிலை வருவாயைக் கீழிருந்து மேலேறிச் சென்று வெட்டும். S புள்ளியில்தான் (OQ அளவு உற்பத்தியில்) உச்சநிலை ஆதாயம் கிடைக்கும்.

போட்டி விலை நிருணயக் கோட்பாட்டின்படி, போட்டி விலையில், இறுதிநிலை வருவாயும் இறுதி நிலைச் செலவும் சமமாக இருக்கின்றன. இறுதி நிலை வருவாயும் விலையும் சமமாக இருக்கின்றன. இதனைக் கீழ்க்காணுமாறு கூறலாம்.

இறுதி நிலைச் செலவு = இறுதி நிலை வருவாய்

இறுதி நிலை வருவாய் = விலை

இறுதி நிலைச் செலவு = விலை

மா. பா. கு.

**துணை நூல்கள்:**

குருசாமி, மா.பா., நுண்ணினப் பொருளியல், குரு தேமொழி, திருச்செந்தூர், 1984.

**Alfred, W., Stonier & Douglas C. Hague.**, A Text Book of Economic Theory, Layman Group Ltd.,London, 1982.

**போடின், சீன்** என்பவர் அரசின் இறைமை அதிகாரம் என்ற கொள்கையை முதலில் வகுத்த, கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பிரான்சு அரசியற் சிந்தனையாளர் ஆவர். இவர் ஆங்கர்சில் (Angers) கி.பி.1530-இல் பிறந்து, தூலூசு (Toulouse) பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வி பயின்று, அதிலேயே சில காலம் ஆசிரியராகப் பணி செய்த பின், பாரிசில் வழக்கறிஞராகத் தொழில் செய்தார். பின்னர் அரசாங்கத்தில் சிறிய நீதிபதிப் பதவியிலும், அரசரின் ஆலோசகர் பதவியிலும், கி.பி. 1575 – இல் அரசரின் செயலாளர் பதவியிலும், இவர் பணி செய்தார். அதே ஆண்டில் இவர் சில நாள் பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் (States General) இருந்தார். அரசருடைய பணியை விடுத்துப் போடின் (Jean Bodin), ஆஞ்சு பிரபுவின் (Duke of Anjou) பணியிலிருந்தார்.

இவர் எழுதிய நூல்களுள் ‘குடியரசு’ (De Republic) என்பது மிகவும் சிறப்பானதாகும். அதில் இவருடைய அரசியற் கருத்துகள் காணப்படுகின்றன.

**அரசியற் கருத்துகள்**: போடின் ஒரு வாணிகக் கொள்கையாளர் (Mercantilist) ஆவார். ஒரு நாட்டின் செல்வ வளம் அது வைத்திருக்கும் தங்கம் வெள்ளி முதலியவற்றாலளவிடப்படக் கூடியதன்று.

இறைமை அல்லது தலைமை அதிகாரம் என்பது திறமையான அரசாங்க முறைக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். தலைமையான அதிகாரம் உடையவரால் தான் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தவும், ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டவும் இயலும். அரசாங்கம் என்பது இறைமை அதிகாரத்தை உடைய, பல குடும்பங்களையும், அவற்றின் உடைமைகளையும் கொண்ட சட்டப்படியான ஓர் அமைப்பாகும். குடும்பமே இயற்கையில் தோன்றிய ஒரு கூறு ஆகும். அதில்தான் தனியார் சொத்து என்பது பிரிக்க இயலாத ஓர் உறுப்பாக அமைந்துள்ளது. இத்தகைய குடும்பம் என்ற கூறிலிருந்து தான் அரசும், மற்றெல்லா வகைச் சமூகங்களும் உருவாகின்றன. இவ்வகையிலே அரசு என்பது பல குடும்பங்களை ஆளும் ஓர் அரசாங்கம் ஆகும். பல குடும்பங்கள் தற்காப்புக்காகவும் பல நற்பயன்களுக்காகவும் இணைந்து, சிற்றூர்களாகவும் நகரங்களாகவும், பல்வேறு வகையான கழகங்களாகவும் உருவாக, அவையெல்லாம் ஓர் இறைமை அதிகாரியின்வாயிலாக இணைக்கப்பட அதனால் அரசு உருவாகிறது. பொதுவான ஓர் இறைமை அதிகாரியின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டுக் குடியாட்கள் வாழும் நிலையே அரசு என்ற அமைப்பு ஆகும். ‘இறைமை அதிகாரம் என்பது சட்டத்தினால் வரம்புபடுத்தப்படாததும், எல்லாக் குடியாட்கள் மீதும் செலுத்தப்படுவதுமான தலைமை அதிகாரம் ஆகும்.’ இறைமைஅதிகாரம் நிலையானது. அதுமாற்றப்பட இயலாத ஒன்று. அது வழக்கம் எதற்கும் உட்பட்டதன்று. அதற்கு எந்தச் சட்ட வரம்பும் இல்லை. ஏனெனில், அதுவே சட்டத்துக்குத் தோற்றுவாய் ஆகும். எல்லா அதிகாரங்களும் கடவுளிடத்திலிருந்தே தோன்றுவன. ஆதலால், இறைமை அதிகாரி கடவுளுக்கும், இயற்கைச் சட்டத்துக்கும்தான் பொறுப்புடையவரே தவிர, அவர் தம் குடி மக்களுக்குப் பொறுப்புடையவரல்லர். பாராளுமன்றத்தினுடைய பணி அரசருக்குச் சொல்லுதலோடு நின்று விடுதல் வேண்டும். அரசாங்க அதிகாரிகளும் கழகங்களும் செலுத்தும் அதிகாரங்களெல்லாம் அவர்களுக்கு இறைமை அதிகாரியினால் ஒப்படைக்கப்பட்டவை ஆகும். இறைமை அதிகாரிக்கே சட்டத்தைச் செய்யவும் விளக்கவும் செயற்படுத்தவும் இயலும். நாட்டின் பண்டைய மரபுகளையும் செயல்முறைகளையும் இறைமை அதிகாரி மதித்தல் வேண்டும். தனியார் உடைமை மிகவும் புனிதமானதாகையால், அதன் உரிமையாளருடைய இசைவு இல்லாமல், அதனை இறைமை அதிகாரி எடுத்துக் கொள்ளாமல் பாதுகாத்தல் வேண்டும். ஆகையால் நிலஉடைமையாளருடைய பேராளர்களைக் கொண்ட மன்றத்தின் இசைவின் பேரிலேயே இறைமை அதிகாரி வரிவிதிப்புச் செய்தல் வேண்டும்.அவ்வகையில் அவர் இறைமை அதிகாரத்துக்கு அதிலேயே ஒரு வரம்பை ஒப்புக் கொள்ளுகிறார்.

**மதிப்பீடு**: போடின் வகுத்த இறைமை அதிகாரக் கொள்கையில் சில முரண்பாடுகள் இருந்தாலும், இறைமையைப் பற்றி முதலில் முழுவடிவத்தில் ஒரு கொள்கையை வகுத்தவர் இவரே. தெய்வீக உரிமைக் கோட்பாடு (Divine Right Theory) கி.பி. 16 - ஆம் நூற்றாண்டில் வலியுறுத்தப்பட்டபோது, அரசரின் இறைமைக் கோட்பாடு என்பது தெய்விக எதேச்சாதிகார உரிமை (Divine Right Absolutism) என்று விரிவடைந்தது. போடின் இறைமைஅதிகாரத்தை ஆதரித்தாலும், அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்க முறையை ஒப்புக் கொண்டவர் ஆவார். இவர் இலேயோன் பட்டணத்தில் இருக்கும் போது அங்குக் கொள்ளை நோயினால் தாக்குண்டு இறந்தார்.

பா.கு.

**துணை நூல்கள்:**

**Allen,J.W.**, Political Thought in the Sixteenth Century, London, 1951.

Heavnshaw, F.J.C., The Social and Political Ideas of some great Thinkers of the Sixteen and Seventeenth Century, London, 1926.

*போண்டோப் பழங்குடி:* இக்குடியினர் ஒரிசாவில் மலைப் பாங்கான இடங்களில் வாழும் பழங்குடியினர் ஆவர். இவர்கள் கதபப் (Gadabas) பழங்குடியினரின் ஒரு பிரிவினராகக் கருதப்பட்டனர். கதபப் பழங்குடி வழி வந்தோரே போண்டோப் (Bondo) பழங்குடியினர் என்பதற்குப் பல கதைகள் கூறப்படுகின்றன. ஆனால், இவர்கள் தனிப் பழங்குடியினரே. இவர்களின் குடியிருப்புகள் மலைச்சரிவுகளில் அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் வீடுகள் ஒன்றுக்கொன்று அருகில் இருந்தாலும் சில இடங்களில் ஒவ்வொரு கால்வழியினருக்கென்று வீடுகள் தனித்தனிக் குழுக்களாக அமைந்துள்ளன. போட்நாயக்கு (Bodnaik), கிர்சானசு (Kirsanis), நாய்கோ ஆகிய குலப் (Clan) பிரிவுகள் இவர்களிடம் உள்ளன. ஒவ்வொரு குடும்பமும் இரண்டு அல்லது மூன்று குடிசைகளைக் கொண்டுள்ளன. ஒன்று பெற்றோருக்கும் மற்றொன்று மணமான மகனுக்கும், மூன்றாவது விருந்தினர் தங்குவதற்கும் ஆகும். மண், வைக்கோல் ஆகியவற்றைக் கொண்டு சுவர்கள் கட்டப்படுகின்றன. புதியதாக வீடு கட்டும் போது, மையப் பகுதியில் ஒரு தூண் நிறுவப்படுகிறது. அதில் மாவிலைகள் கட்டப்படுகின்றன. இது கடவுளையும், இறந்தோரையும் வீட்டிற்குள் கொண்டு வருவதற்குரிய சடங்காகும்.

போண்டோப் பழங்குடியினர் கவனத்தை ஈர்க்கும் உடலமைப்பும், முகப் பொலிவும் கொண்டவர்கள். போண்டோப் பெண்டிர் இடுப்பில் மட்டுமே ஆடையணிகின்றனர். பல்வேறு ஆபரணங்களால் மார்புப் பகுதியை மூடிக் கொள்கின்றனர். இப்பெண்டிர் பிறந்தது முதல் வாழ்நாள் முழுவதும் தலையை மொட்டையடித்துக் கொள்கின்றனர். இப்பழங்குடியினரிடையே பெண்களே மொட்டையடித்துக்கொள்கின்றனர்.

புறமணத் திருமணமே இவர்களிடம் நடைபெறுகிறது. இவர்கள் சமுதாயம் தந்தைவழிக் குல அமைப்பைக் கொண்டது. ஒரு குலத்தவர் வேறு குலத்தவரை மட்டுமே மணம் செய்து கொள்ளவேண்டும். நாகப் பாம்பைக் குறிக்கும் ஆண்டால் (Ontal), புலியினைக் குறிக்கும் கில்லோ அல்லது குகுசா (Killo or Kukusa) எனும் பெயரிடப்பட்ட இரு பெருங்கால்வழிப் பிரிவுகளும் (Phratries) உள்ளன.

மலைச் சரிவுகளில் நெல்லையும் காய்கறிகளையும் விளைவிக்கின்றனர். இம்மக்கள் காய்கறிகள், மூங்கில் தண்டுகள், காளான்கள் ஆகியவற்றை மிகுதியாக உண்கின்றனர். ஆடு, மாடு, பன்றி, பறவைகள் முதலானவற்றை இவர்கள் வளர்க்கின்றனர். சிறு பறவைகள், முயல்கள், எலிகள் ஆகியவற்றைப் பிடித்து உண்கின்றனர். மீன் இவர்களுக்குப் பிடித்தமான உணவு. கூடைகளைக் கொண்டு மீன் பிடிக்கின்றனர்.

சமுதாய வாழ்க்கையை முறைப்படுத்துவதற்கும், பொருளாதாரச் செயல்முறைகளை ஊக்குவிப்பதற்கும் இளையவர் கூடம் (Dormitory) பயன்படுகிறது. இளையவர் கூடத்திலிருக்கும் பெண்கள் பழங்கள், எலி வறுவல், சில பருப்பு வகைகளில் செய்யப்பட்ட உணவு முதலானவற்றைத் தயாரித்து இளையவர் கூடத்திற்கு வருவோரை உபசரிக்கின்றனர். இளைஞர்கள் மோதிரம், மணி, பாய் போன்றவற்றை அப்பெண்களுக்குப் பரிசளிக்கின்றனர். பாட்டுப்பாடி, நடனமாடி மாலைப் பொழுதை இனிமையாகக் கழிக்கின்றனர். திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின்னரும் பெண்கள் இக்கூடத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர். இரண்டாம் மனைவியைத் தேடும் ஆண்களும் இங்கு வருகின்றனர். 'இளையவர் கூடம்' திருமணம் செய்யச் சரியான துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் பயன்படுகிறது.

போண்டோப் பழங்குடியினரிடையே ஒரு ஆண், தான் விரும்பும் பெண்ணிற்கு வளையல் அணிவித்த பின்பே அவளைத் திருமணம் செய்து கொள்ள முடியும். பெரும்பான்மை இளைஞர்கள் தாம் விரும்பும் பெண்ணைக் கைப்பற்றி (Marriage by Capture) மணம் புரிந்து கொள்கின்றனர். பலமனைவி மணம் (Polygyny) இம்மக்களிடையே காணப்படுகிறது. பெரும் பாலும் மனைவி கணவனைக் காட்டிலும் வயதில் மூத்தவள். இதனால், வயதில் இளையவரான கணவன் பாலுணர்வு மிகுதியால் இளைய பெண்களை நாடுகின்றான். இதனாலேயே பல மனைவி மணம் இவர்களிடையே நிலவுகிறது. கணவன் தன் தம்பி மனைவியிடம் முழுஉரிமை கொள்ள இவர்கள் சமூகம் அனுமதிக்கிறது. மணவிலக்கு இவர்களிடம் மிகுதியாக இல்லை. இவர்கள் அன்பிற்குக் கட்டுப்படுகின்றனர். அதிகாரத்திற்குக் கட்டுப்படுவதில்லை.

பூமித் தாய்க்குப் புனிதமான பெருங்கல் நினைவுச் சின்னத்தை அமைத்து வழிபடுகின்றனர். இச்சின்னத்தைச் 'சிந்திபோர்' (Sindibor) எனக் கூறுகின்றனர். கல் மேடையான சிந்திபோரைச் சுற்றி அமைந்துள்ள சுவர் அமைப்பினை இரன்னுக்போர் (Runnukbor) என்னும் பெயரால் குறிப்பிடுகின்றனர். அதனைக் கடக்க நேரிடும் போதெல்லாம் அதன் மேல் ஓர் கிளையை வைத்து, போகின்ற இடத்தில் தாம் எவ்விதச் சிக்கலிலும் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்று வழிபடுவர்.

இறப்பினை, இயற்கைக்கு மாறான செயலாகவும், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்கும் வழியாகவும் கருதுகின்றனர். இறந்தபின் செய்யப்படும் நீத்தார் சடங்கினைச் சரிவரச் செய்யாவிடில் அவர்கள் ஆவியாக வந்து அழிவினை ஏற்படுத்துவர் என்று நம்புகின்றனர்.

போண்டோப் பழங்குடியினர் முன்கோபிகளாகவும், குடிகாரர்களாகவும், உணர்ச்சி வசப்படுபவர்களாகவும் உள்ளனர். இவர்கள் தங்கள் நிலத்தின் பால் கொண்டுள்ள பற்றின் காரணமாக, அந் நிலத்தை அடைமானம்வைத்தவரிடம் இழக்க நேரிடும் போது இவர்களுக்குச் சினம் மிகுகிறது. அவ்வாறான காரணங்கள் இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கும், கொலைகளுக்கும் காரணமாகின்றன. இருப்பினும் இப் பழங்குடியினர் தாம் செய்த குற்றத்தை மறைக்கவோ, மறுக்கவோ செய்யாமல் துணிவுடன் ஒப்புக் கொள்கின்றனர். ம.ந.பு.

**போத்தனூர் (கோவை மாவட்டம்):** போத்தனூர் என்னும் ஊர் தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூருக்கு அருகில் உள்ளது. இவ்வூர் கோயம்புத்தூர்— பாலக்காடு இருப்புப்பாதையில் கோயம்புத்தூரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் ஒரு சருக்கரை ஆலையும் அமைந்திருக்கிறது. கரும்பு மிகுதியாக விளையும் பசுமையான வயல் வெளிகளுக்கிடையில் இவ்வூர் அமைந்துள்ளது. விசயநகரப் பேரரசர் கிருட்டிண தேவராயர் கி.பி.1517-இல் கலிங்கநாட்டின் மீது படையெடுத்துச் சென்று இராசமகேந்திரபுரத்தையும் வேறு பல நகரங்களையும் கைப்பற்றிக் கொண்டார். விசயநகரப் படையின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்குக் கலிங்க மன்னர் கசபதி ஓரளவு முயன்றார். ஆனால், விசயநகரப் படை, வழியிற் கண்ட ஊர்கள் அனைத்தையும் அழித்துக் கொண்டே பொட்னூர், சிம்மாத்திரி வரையும் வெற்றியுடன் முன்னேறியது. அந்த இடத்தில் கிருட்டிணதேவராயர் ஒரு வெற்றிக் கம்பத்தை நாட்டிவிட்டு இராசமகேந்திரபுரத்தின் வழியாக கி.பி.1518-இல் தம்முடைய தலைநகருக்குத் திரும்பினார். பின்னர்த் தம் படைத் தளபதியான கோப்பய்ய தண்ட நாயகரைத் தமிழ்நாட்டில் அமைதியை நிலைநாட்ட அனுப்பினார். அவர் கலிங்கத்திலுள்ள பொட்னூரில் பெற்ற வெற்றியின் நினைவாகச் சேலம் மாவட்டத்தில் போத்தனூர் என்ற ஊரையும், அதன் பகுதிகளாகத் தேவராய சமுத்திரம், கோப்பண்ண பாளையம் என்ற ஊர்களையும் உண்டாக்கினார். அதேபோலக் கோவைக்கு அருகில் போத்தனூர் என்ற ஊரையும் ஏற்படுத்தினார். இந்தப் போத்தனூர் ஆங்கிலேயர் காலத்தில் முக்கிய இருப்புப்பாதைச் சந்திப்பாக அமைக்கப்பட்டது. கோயம்புத்தூர் இருப்புப்பாதைச் சந்திப்பு முதன்மை பெற்றவுடன் போத்தனூர் ஒரு சாதாரண இருப்புப் பாதைச் சந்திப்பாக விளங்குகிறது. சி.மூ.

**போத்தா, பால், எமில்,** பிரான்சு நாட்டுத் தொல்லியல் அறிஞர். போத்தா பால் எமில் (Paul Emile Botta) இத்தாலியில் தூரின் (Turin) என்னும் இடத்தில் கி.பி.1802 – ஆம் ஆண்டு பிறந்தார். இவர் அசிரியப் பேரரசர் இரண்டாம் சார்கோனின் அரண்மனையை ஈராக்கில் துர் சாரூக்கின் (Dur Sharru kin) (இன்றைய கோர்சாபாது) என்ற இடத்தில் கண்டுபிடித்துப் புகழ் பெற்றார். மெசபடோமியப் பகுதியில் மிகப் பெருமளவில் இவர் அகழாய்வுகளை மேற்கொண்டார். வரலாற்று ஆசிரியரின் மகனான இவர் மருத்துவக் கல்வி பயின்று பிரான்சு நாட்டின் அயலிட நாட்டுப் பேராளராகப் (Consul) பணியாற்றி வந்தார். இரண்டாம் சார்கோனின் மாளிகையைக் கண்டுபிடித்ததுடன் ஆப்புவடிவ எழுத்துப் பொறிப்புகளையும் பல விலையுயர்ந்த சிற்பங்களையும் இவர் கண்டுபிடித்தார். இவரது அக்கண்டுபிடிப்பை அறிந்த பிரான்சு அரசாங்கம் பிற பகுதிகளையும் குறிப்பாக நினிவே (Nineveh) என்ற இடத்தில் அகழாய்வு செய்யநிதி உதவி அளித்தது.இவர் கண்டெடுத்த அரும்பொருட்கள் இன்று பாரிசு நகரில் உள்ள உலூவர்அருங்காட்சியகத்தில் உள்ளன. இவர் கி.பி. 1870-இல் பிரான்சில் காலமானார். சு.இரா.

**போதிகை:** ஒரு கட்டுமானத்தில் இடம் பெறும் தூணின் தலைப்பகுதியே போதிகை என்பது. போதிகையின் மீது தான் கூரையின் மேல் தளவரிசைக் கற்கள் அமரும். இப்போதிகை அமைப்பு, காலங்கள் தோறும் சிற்சில மாறுதல்களும், வளர்ச்சியும் பெற்று வந்துள்ளது. தமிழகக் கலை வரலாற்றில் இது அடைந்த மாறுதல்கள் பல்லவர் காலக் குடை வரைக் கோயில்களில் தொடங்கி இக்காலக் கட்டு மானங்கள் வரை நுணுகி ஆராய்வோரால் அறியப்படும்.

போதிகையின் வடிவம் பொதுவாகக் கல்தச்சனின் கற்பனையின் படி வடிக்கப்பட்டது. பல்லவர் காலத்தில் இவ்வமைப்பு மிகவும் எளிமையானதாக இருந்தது. வளைவானவையாகவும், சதுர வடிவமுடையனவாகவும் அக்காலப் போதிகைகள் இருந்தன. போதிகையின் வளர்ச்சியை ஆராய்ந்த அறிஞர்கள் இதில் ஐந்து கட்ட வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றனர்.

முதல் கட்டமான பல்லவர் காலத்தில் (கி.பி.600 – 850) ஓரளவு வளைந்த போதிகையும், அதில் சில நேரங்களில் அலைகள் போன்ற வெட்டமைப்பும் இடம்பெறும். இதுவே, தரங்கப் போதிகை எனப் பெயர் பெற்றது. இது பல்லவர் காலத்திற்கே உரிய அமைப்பு எனலாம். இரண்டாம் கட்டம் முற்காலச்

சோழர் காலத்தைச் (கி.பி.850 - 1100) சேர்ந்தது. இக்காலப் போதிகை அமைப்பில் பல்லவர் கால வளைவு சற்றே மாறுபட்டு ஒருவகையான விரிகோண வெட்டுத் தோற்றம் காணப்படும். அவை இடம் பெறாமையும் குறிப்பிடத்தக்கது. மூன்றாம் கட்ட மான பிற்காலச் சோழர் காலத்தில் (கி.பி.1100-1350) முற்கூறிய அமைப்புச் சற்றே மாறுபட்டிருக்கும். நான்காம் நிலை விசயநகர் காலத்தைச் (கி.பி.1350 - 1600) சேர்ந்தது. இக் காலக்கட்டத்தில் போதிகை சற்றே வளைந்து மதலை, நாணுதல் என்ற பாகங் களைப் பெறுகிறது. அந்நிலையில் தாமரைப்பூ முனை போன்ற அமைப்பு சற்றே கீழ் நோக்கிக் காட்டப் படும். இறுதிக்கட்டமாக (கி.பி.17 - ஆம் நூற்றாண் டுக்கு மேல்) மேற்சொன்ன பூமுனை நன்கு வளைந்து வாழைப்பூப் போல் கீழ்நோக்கித் தொங்கும். இதுவே, புட்பபோதிகை எனவும் பெயர் பெறுகிறது.

தொடக்கத்தில் மர உத்திரங்களின் இணைப்பு களில் தோன்றிய ஓர் அமைப்பு, போதிகை என்று பெயர் பெற்று, காலந் தோறும் அடைந்த வளர்ச் சியை இன்றும் பல வரலாற்றுச் சின்னங்களில் காண முடிகிறது. சொ.ச.

**துணை நூல்:**

**Jouveau, Dubreuil G.,** Dravidian Architecture, Bharat-Bharati, Varanasi, 1920.

**போதிமரம்**: இது பௌத்த சமயத்தில் மிகவும் சிறப்பாகப் போற்றப்படும். போதிமரத்தின் அடியில் தான் புத்தர் ஞானம் பெற்றதாகக் கருதப்படுகிறது.



பார்கத்துச் (Bharhut) சிற்பம்.
போதிமர வழிபாடு (கி.மு. 2 - ஆம் நூ.).

இது பீகார் மாநிலத்தின் கயாவுக்கு அண்மையில் உள்ள புத்த கயா என்னுமிடத்தில் உள்ளது. இதைப் போ மரம் (Bo Tree) அல்லது போதி மரம் (Bodhi Tree) என்பர். ஆதிகாலப் பௌத்த கலைப் படைப்பு களில், புத்தரை, மனித உருவில் அல்லாமல் இந்தமர உருவத்தில் எடுத்துக்காட்டினர். இம்மரத்திலிருந்து வெட்டப்பட்ட ஒரு துண்டு கி.மு. 3 - ஆம் நூற்றாண் டில் அசோகமன்னரால், அனுராதபுரத்திற்கு (சிரீலங்கா) அனுப்பப்பட்டதாகவும், அது அங்கு மரமாக வளர்க்கப்பட்டதாகவும் ஒரு நம்பிக்கை நிலவுகிறது. அம்மரம் இன்றும் உளது.

தெ.பா.

**போதை மருந்துப் பழக்கம்**: மனிதனின் உடலிலுள்ள ஊன்மத்தைப்(Proto Plasm) பாதிக்கும் வேதியல் கலவை போதை மருந்து என்பதாகும். போதை மருந்துப் பழக்கத்தையும், போதை மருந்து அடிமையையும்மக்கள் ஒன்றாகக் கருதி வருகின்றனர். ஆனால், இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. உலகச் சுகாதாரக் கழகத்தின் (W. H. O.) படி போதை மருந்துப் பழக்கம் என்பது போதை மருந்தை மிகுதி யாக்காமல் வழக்கமாக உட்கொள்ளுதல் ஆகும். போதை மருந்துக்கு அடிமை (Drug Addiction) என்பது கட்டாயமாகப் போதை மருந்தை உட் கொள்ளும் நிலையில் இருப்பதோடல்லாமல் நாளுக்கு நாள் மருந்தின் அளவை அதிகரித்துக்கொண்டும் செல்வதாகும்.

போதை மருந்துப் பழக்கம் உடையவர்களுக்கும் போதை மருந்துக்கு அடிமை ஆனவர்களுக்கும் முடிவில் நரம்பு மண்டலம் பாதிக்கப்படக்கூடும் என மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

**போதை தரும் மதுபானம்**: போதை ஏற்படுத்து வதற்கு மதுபானத்தை உட்கொள்வது என்பது ஒரு முறையாகும். மதுபானத்தை மருந்திற்கும் பயன் படுத்துவதுண்டு. மதுபானத்தை மருந்துபோன்று தேவையான அளவிற்குப் பயன்படுத்துவது அத் துணைச் சிக்கல்களை ஏற்படுத்தாது. மதுபானத் திற்கு அடிமையாகும்பொழுதுதான் உட்கொள்ளும் மதுவின் அளவை அதிகரித்துக்கொண்டே செல்ல வேண்டியிருக்கும். மது உட்கொள்ளும் அளவினை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வது அவருக்கு மட்டுமன்றிச் சமூகத்திற்கும் கேடு விளை விப்பதாகும். மதுபானம் தேவையான அளவிற்கு உட்கொள்பவர் அல்லது மருந்துக்கு உட்கொள்பவர் களின் விழுக்காடு மிகவும் குறைவானதேஆகும். தேவையான அளவிற்கு மதுவை உட்கொள்ளும் பழக்கத்தில் இருப்பவர்கள்கூட நாட்கள் செல்லச்


செல்லத் தேவைக்கு அதிகமாகவே எடுத்துக் கொள்கிறார்கள்.

ஆக, மது உட்கொள்பவர்களை இருவகையாகப் பிரிக்கலாம்: தேவையான அளவிற்கு மது உட்கொள்பவர்கள்; அளவிற்கு மிகுதியாக உட்கொள்பவர்கள். அளவிற்கதிகமாக உட்கொள்பவர்கள் தமக்கும், சமூகத்திற்கும் ஒரு சிக்கலாக இருக்கிறார்கள். டாக்டர் தர்பீ (Dr. Durfee) என்பவர் இதைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, குடிப் பழக்கத்தின் முடிவு அவரது உடல்நிலையை முதலில் பாதிக்கிறது; உள்ளத்தின் அமைதியைப் பாதிக்கிறது; வீட்டு வாழ்க்கை மகிழ்ச்சியற்றதாகிறது; தொழில் நலிவடைகிறது; சமூகத்தில் அவருடைய புகழ் மங்குகிறது; எல்லாவற்றிற்கும் மேலாகக் 'குடி' என்னும் கொடிய நெருப்பு அவரது வாழ்க்கையோடு இணைந்து ஒன்றாகவே ஆகிவிடுகிறது என்று கூறுகின்றார்.

**போதை மருந்துகள்**: போதை மருந்துகள் என்பன குறிப்பாக அபினி (Opium), கஞ்சா, பங்கி என்ற போதை மருந்து (Bhang), ஊசி மூலம் உடலினுள் ஏற்றும் போதை மருந்து (Cocaine) ஆகியவையாகும். அவற்றுள் கஞ்சா, பங்கி போன்றவை ஒரு வகைச் செடியிலிருந்து தயாரிக்கப்படுவனவாகும்.

'அபினி' என்ற போதை மருந்து கி.பி 9-ஆம் நூற்றாண்டில் இசுலாமியர்களால் இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்டதாகும். பின்னர் இங்கும் அதை உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டார்கள். அப்போதைப் பொருளை ஏழைகளும், தொழிலாளர்களுமே மிகுதியாகப் பயன்படுத்துகிறார்கள். 'அபினி'யை மருந்தாகவும் பயன்படுத்தலாம். மருந்து என்னும் அளவில் செரிமானக் கோளாறுகள், இருமல், வலி ஆகியவற்றிலிருந்து விடுதலை கிடைக்கும். இந்தியாவில் சில கிராமங்களில் தாய்மார்கள் வேலைக்குச் செல்லும்பொழுது தங்கள் குழந்தைகளுக்கு 'அபினி' கொடுத்துவிட்டுச் செல்வர். தாய்மார்கள் வேலையை முடித்துவிட்டு வரும்வரை அக் குழந்தைகள் தூங்கியபடியே காணப்படும். அதனால், பலர் அதற்கு அடிமையாகிக் காணப்படுகிறார்கள்.

'அபினி'யைத் தண்ணீரில் கலந்து குடிக்கலாம்; மாத்திரையாகவும் விழுங்கலாம்; புகை பிடிப்பதுடன்



ஊசி மூலம் போதை ஏற்றுதல்

அபினியைக் கலந்து பயன்படுத்துபவர்களும் உண்டு. முன்பு சீனாவுக்கு இந்தியாவிலிருந்து 'அபினி'யை ஏற்றுமதி செய்து வந்தார்கள். அது தொடர்பாக 1907-ஆம் ஆண்டு இந்தியாவிற்கும், சீனாவிற்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அபினி ஏற்றுமதியைக் குறைப்பதே அந்த ஒப்பந்தத்தின் கருத்தாகும். அதைத் தொடர்ந்து 1913 – 14-ஆம் ஆண்டுகளில் 'அபினி' ஏற்றுமதி செய்வது முற்றிலும் நிறுத்தப் பட்டது.

சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவில் சுங்க வரியைப் பெற்றபின்னர் சில வரைமுறைகளுக்குட் பட்டு அபினியைப் பயன்படுத்தலாம் என்ற கொள்கை வகுத்திருந்தனர், சுதந்திரத்திற்குப் பின் 1948-ஆம் ஆண்டு அபினி புகைக்கும் சட்டம் (Opium smoking act of 1948) இந்தியாவின் பல பகுதி களில் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டம் 1953-ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் பின்பற்றப்பட்டது. 'அபினி' புகைக்கப் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் அச் சட்டத்தின் மூலம் விலக்கு அளிக்கப்பட்டது. பதிவு செய்தவர்களுக்கு வருடத்திற்கு இவ்வளவு அளவு என அரசாங்கம் நிருணயித்து வழங்கியது.

இந்திய அரசால் 1958 – ஆம் ஆண்டு புதுதில்லி யில் தீர்வை அமைச்சர்கள் (Excise Ministers) மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. அபினி நடமாட் டத்தைக் குறைப்பதற்காக அபினி உட்கொள்ளுத லுக்கு அம் மாநாட்டில் தடை விதிக்கப்பட்டது. அவ் விதி 1959-மார்ச்சு மாதத்திலிருந்து அமலுக்கு வந் தது. மாநிலங்களுக்கு அளிக்கப்படும் அபினியின் அள வில் ஒவ்வொரு வருடமும் 10 – விழுக்காடு வீதம் குறைக்கப்பட்டுக் கொண்டே வந்தது. அதனால், 10-ஆண்டுகளுக்குள் முழு அளவில் அபினியை நிறுத்த முடிந்தது. இப்பொழுது இந்தியாவில் எல்லா மாநிலங் களிலும் அபினி விலக்குக் கடைப்பிடிக்கப்பட்டு வரு கிறது.

கஞ்சா, பங்கி போன்ற போதைப்பொருட்கள் அதிகமாக ஏழை வகுப்பினராலேயே பயன்படுத்தப்படு கின்றன. கஞ்சா குறிப்பிட்ட செடியின் பூவிலிருந்தும், பங்கி அதன் காய்ந்த இலைகளிலிருந்தும் தயாரிக்கப் படுகின்றன. கஞ்சாவைப் புகைப்பதற்கும், பங்கியைப் பருகுவதற்கும் பயன்படுத்துவர். சிலர் சில நேரங் களில் பங்கியையும் புகைக்கிறார்கள். கஞ்சா ஏற்படுத் தும் தீமையைவிடப் பங்கி ஏற்படுத்தும் தீமைகள் குறைவானவை. இம் மாதிரிச் செடிகளை வளர்க்கு முன் தீர்வை அதிகாரிகளின் முன் அனுமதி பெற வேண்டும்.

தில்லியில் 1949 – ஆம் ஆண்டு நடந்த மாநாட் டில் கஞ்சாவைத் தடை செய்வது வற்புறுத்தப்பட் டது. மாநில அரசுகளும் அக் கொள்கையை ஏற்றுக் கொண்டன. அதன்விளைவாக அச்செடிகளை வளர்க்க நாடு முழுவதும் தடை விதிக்கப்பட்டது.

குற்றம் செய்பவர்கள், பரத்தையர், நகரத்தில் வாழும் ஏழைகள் ஆகியோர் போதைமருந்தை அதிகமாக உட்கொள்வர் என்பது ஆராய்ச்சியின் மூலம் தெளிவாகிறது. இப் பழக்கம் இப்பொழுது இளைஞர்களிடமும் மிக வேகமாகப் பரவி வருகிறது. போதை மருந்துப் பழக்கம் அதனை உடையவரை மட்டுமல்லாமல் அவரைச் சார்ந்த குடும்பத்திற்கும் கேடுவிளைவிப்பதாகும். எல்.ஜெ.

**துணை நூல்கள்:**

**Becker Howard, S.,** Outsiders: Studies in the Sociology of Deviance, The Free Press of Glencoe, New York, 1963.

**Isidor Chien, Donald L. Gerald, Robats, Lee and Era Rosepfeld,** The Road: Narcotics, Delinquency and Social Policy, Basic Books Inc. New York, 1964.

**Jellinek E.M.,** The Disease Concept of Alcoholism, Hill-House Press, New Haven, 1960.

**போந்தைப் பசலையார்**: இவர் கடைச்சங்க காலத்துப் புலவருள் ஒருவர். அகம் மட்டும் பாடிய புலவர்களுள் குறிப்பிடத் தக்கவர்; பெண்பாற் புலவர்.

சங்க காலத்தில், 'பசலை' என்ற பெயருடன் கூடிய பெண்பாற் புலவர் நால்வர். அவர், குமிழிஞாழ லார் நப்பசலையார், நப்பசலையார், மாறோக்கத்து நப்பசலையார், போந்தைப் பசலையார் ஆவர். அவருள், அகநானூற்றில் 110-ஆம் பாடலைப் பாடிய வர் போந்தைப் பசலையார்.

போந்தை என்பதற்கு இளம்பனை, பனை, அனுட நாள் எனப் பொருள் கூறுவர். எனவே, போந்தை என்பது இளம்பனையின் நிறத்தோடு தொடர்பு கொண்டும் வழங்கியிருக்கலாம். அல்லது, அனுட நாளில் பிறந்தவர் என்றும் வழங்கியிருக்கலாம்; அல்லது, போந்தை இவரது ஊராகவும் இருக்கலாம். எவ்வாறாயினும், இவர் நப்பசலையாரின் வேறான வர் என்பது தெளிவாகிறது.

அகநானூற்றில் நெய்தல் திணையிலமைந்த இவ ரது பாடல், தோழி செவிலித் தாய்க்கு அறத்தொடு நிற்கும் துறையிலமைந்துள்ளது.

பெண்பாற் புலவர் என்பதற்கேற்ப, இவர்தம் பாடலில், பெண்களின் மன இயல்புகளையும் செயல் களையும் மிகவும் அழகுபெறப் புனைந்துள்ளார். இவ்

வொரு பாடலைத் தவிர இவருடைய வேறுபாடலே தும் கிடைக்கப் பெறவில்லை. இவரது காலம் பற்றிய செய்திகளும் அறியக்கூடவில்லை.

வே.இரா.மா.

**போப் அலெக்சாந்தர்(கி.பி.1688-1744)**:இவர் தலைசிறந்த ஆங்கிலக் கவிஞர்களுள் ஒருவர். எள்ளி நகையாடும் கவிதைகள் இயற்றுவதில் புகழ் பெற்றவர். இவர்தம் கவிதைகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் எண்ணிறந்த மக்களால் படிக்கப்பட்டுப் பாராட்டப்பட்டன.

போப் அலெக்சாந்தர் (Pope Alexander) 21-5-1688-ஆம் நாள் இங்கிலாந்தில் உள்ள இலண்டன் மாநகரில் தம் இளமைக்காலத்தை விண்சர் காட்டில் உள்ள பின்பீல்டில் (Bin Field in Windsor Forest) கழித்தார். உரோமன் கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்ததால் பள்ளியில் படிக்காமல் வீட்டிலேயே கல்வி பயின்றார். இவரது ஆயுள் காலத்தில் உரோமன் கத்தோலிக்கர் பலவாறு அச்சுறுத்தப்பட்டதால் பெரும்பாலான ஆங்கிலேயருடன் இவர் தொடர்பு கொள்ள இயலவில்லை. தம் பன்னிரெண்டாம் வயதிலேயே நோய்வாய்ப்பட்டு உடற்குறை அடைந்தார். கல்வியில் பெரிதும் நாட்டம் கொண்ட இவர் சிறுவராக இருந்த போது கவிதைகள் இயற்றினார். இவர் 12,13 வயதிலேயே நாடகங்கள் இயற்றி உடன் மாணவர்களுடன் நடித்தார். 13 வயதிலேயே நாடகம் இயற்றியதுடன் ஓவிடினுடைய உருமாற்றத்தின்(Ovids' Metamorphosis) காற் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 16-ஆம் வயதிலேயே கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு மொழிகளைப் படிக்கக்கற்றுக் கொண்டார். தொடக்கத்தில் எட்மண்ட்டு இசுபென்சரின் கவிதைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். சர் வில்லியம் திரம்புல்,வில்லியம் வால்சு,என்றி கிராம்வெல், சார்சு கிரன்வில் முதலான நண்பர்களும் அண்டை வீட்டுக்காரர்களும் இவரைப் பெரிதும் ஊக்குவித்தனர். வாழ்வின் பெரும்பகுதியில் காச நோயாளியாக இருந்தார். இவரது உயரம் 1.5 மீ.

இவர் இயற்றிய கவிதைகள், கி.பி. 1706-ஆம் ஆண்டிலேயே இவர் நண்பர்களிடையே தவழ்ந்தன. இவர்தம் கவிதைகள் கி.பி. 1709-இல் முதன்முதலாகப் பத்திரிகைகளில் வெளிவந்தன. ஆங்கில இலக்கியம் என்னும் மகுடத்தில், பல வைரங்களைப் பதித்து அதனை அழகுபடுத்திய போப்அலெக்சாந்தரின் இலக்கியப் படைப்புகளை, மூன்று பெரும் பகுதிகளாகப் பகுத்து அறிவது நலம் பயப்பதாகும். இவற்றை கீழ்க்கண்டவாறு மூன்று காலக் கட்டங்களாகப் பகுக்கலாம். முதலாவது காலக்கட்டம் கி.பி. 1704 முதல் கி.பி. 1713 வரையிலான கவிஞரின் தொடக்க காலம் (Early Period). கி.பி. 1713 முதல் கி.பி.1725 வரை இரண்டாவது காலக்கட்டம். இது கவிஞர் வாழ்க்கையின் மத்திய காலப்பகுதி (Middle Period) யைச் சேர்ந்தது. மூன்றாவது காலக்கட்டம்— இது கவிஞர் போப்பு அவர்களதுவாழ்வின் பிற்பகுதி(கி.பி. 1725 முதல் கி.பி. 1740 வரை - Later Period) ஆகும். இதனைத் துவிக்கன்கேம் காலம் (Twickenham Period) அல்லது ஓரேசியன்காலம் (Horatian Period) எனவும் குறிப்பிடலாம். இக்கடைசிக் காலக் கட்டத்தில் தான் இவருடைய மாபெரும் உன்னதப்படைப்புகள் மலர்ந்தன.

**முதலாம் காலக்கட்டம்**: இக்காலக்கட்டத்தின் தொடக்கத்தில் கி.பி. 1711 - இல் இவரது 'இலக்கியத் திறனாய்வுக் கட்டுரை' (The Essay on Criticism) வெளியிடப்பட்டு, அறிஞர்கள் பலரின் பாராட்டுகளைப் பெற்றது. 'கூந்தற் களவு' (The Rape of the Lock) கி.பி. 1712-இல் வீர நிலைக் கேலிப் பாடல்கள் (Mock heroic poem) பெர்னார்டு விண்டாட்டால் பதிப்பிக்கப்பட்டன. இது போப்பிற்கு நல்ல புகழைத் தேடிக் கொடுத்தது. இக்காவியம் கி.பி. 1714 - இல் மறுபதிப்பைக் கண்டது. மிகவிரைவில் மூன்று மறுபதிப்புகளைக் கண்டது. இவர் கி.பி. 1712-இல் பல 'குறுங் கவிதைகள்' (Minor Poems) இயற்றினார். விண்சர் காடு (Windsor Forest), 'மேய்ப்பிடம்' (The Pastorals) முதலான குறுங் காப்பியங்களையும் உருவாக்கினார்.

**இரண்டாம் காலக்கட்டம்**: கி.பி. 1717-இல் ஓமர் (Homer)இயற்றிய இலியது (Iliad) என்னும் உலகப் புகழ்பெற்ற காவியத்தைக் கிரேக்க மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கத் தொடங்கி, கி.பி. 1720 - இல் முடித்தார். ஓமரின் ஒடிசி (Odyssey) என்னும் காவியத்தை கி.பி. 1725-26 -இல் மொழி பெயர்த்தார். இம்மொழி பெயர்ப்பு நூல்களால் போப்பு பெரும் புகழ் ஈட்டியதுடன், பெரும் பொருளையும் ஈட்டினார். சேக்சுபியரின் நாடகங்களைப் பதிப்பித்து கி.பி. 1725-இல் வெளியிட்டார்; பின்னர் பார்னெலின் (Parnell) கவிதைகளையும் வெளியிட்டார். 'உண்மைக்கவி' என்னும் புகழ் இவருக்குக் கி.பி. 1717-இல் கிடைத்தது. அதே ஆண்டில் தமது கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டார். அவற்றுள் 'நற்பேறில்லாத மங்கையின் நினைவாக ஓர் இரங்கற்பா' (The Elegy to the memory of an unfortunate Lady), அபெலாடுக்கு எலோசியாவின் வீரக்கடிதங்கள் (Elosia to Abelard) என்னும் இரு படைப்புகளும் இவருக்குப் பெரும்புகழ் தேடித்தந்தன. டாக்டர் சாமுவேல் சான்சனின் பாராட்டையும் இவர் பெற்றார்.

**மூன்றாம் காலக்கட்டம்:** கி.பி. 1725 முதல் 1740 வரையிலான கடைசிக் காலக் கட்டத்தில் இவர் பல மிகவுமுயர்ந்த படைப்புகளைப் படைத்தார். இக் காலக் கட்டத்தில் தம் பகைவர்களின் மீது கவி தைக்குண்டுகளை வீசினார். இவரது கவிதை நடை என்னும் இடியால், இவரைப் பகைத்துக் கொண்ட ஆங்கிலப் புலவர்கள் தாக்குண்டனர். அக்காலத்திய எழுத்தாளர்களை ஏளனம் செய்து தன்சியடு (Dunciad) என்னும் காவியத்தை கி.பி.1728 - இல் புனைபெயரில் வெளியிட்டார். தன்சியடு என்பது முட்டாள்களின் காவியம் எனப் பொருள்படும். தாம் பதிப்பித்த சேக்சுபியர் நூல்களைத் தாக்கிய தியோ பால்டு (Theobald) என்பவரே இந்நூலின் முக்கிய முட்டாளாக ஆக்கப்பட்டார். 'மீண்டும் சேக்சுபியர்' (Shakespeare Restored) என்னும் நூலை கி.பி.1726-இல் வெளியிட்டார். இது மற்றவர்களின் கோபத் தைக் கிளறும் தலைப்பாக அமைந்தது.

பல்வேறுபட்ட தம் நண்பர்களுக்கான கடிதங் களை கி.பி.1731-32-ஆம் ஆண்டுகளில் (Epistles) வெளி யிட்டார். 'செல்வங்களின் பயன்' (Use of Riches) பற்றிக் கவிதைகளும், கி.பி. 1733-இல் 'ஆண்களின் அறிவும், குண நலன்களும்'(Knowledge and Characters of Men) பற்றி இரு கவிதைகளும் வெளிவந்தன. கி.பி.1735-இல் 'பெண்களின் குண நலன்கள்' (The Characters of Women) வெளியிடப்பட்டது. இவை நான்கும் நீதிக்கட்டுரைகள் (Moral Essays) எனக் கூறப்பட்டன. 'மனிதனைப் பற்றிய கட்டுரை' (Essay of Man) கி.பி. 1732-34-இல் வெளியிடப்பட்டது.

ஒரேசு (Horace) படைப்புகளைத் தழுவி,கி.பி.18-ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றமுறையில் கவிதைகளை வெளியிட்டு, கி.பி.1733 – இல் பெரும் புகழ் தேடிக் கொண்டார். நான்காவதும், இறுதியானதுமான கடிதத்தை கி.பி. 1734 – இல் (Epistle) வெளியிட் டார். தமது 40 – 50 – ஆம் வயதுகளில் இவர் பெரும்புகழ் பெற்று விளங்கினார்; பல சிறப்பார்ந்த படைப்புகளையும் வெளியிட்டார். அவற்றுட்சில

'ஒரேசின் பின் பற்றுதல்கள்' (The Imitations of Horace), 'டாக்டர் 'ஆர்பத்நாட்'டுக்குக் கடிதம்' (The Epistle to Dr. Arbuthnot).

இவர் கி.பி. 1743 – இல் தமது தன்சியடு என்னும் நூலை மாற்றம் செய்து (Revised) புதிய பதிப்பாக வெளியிட்டார். இதுவே இவரது கடைசி இலக்கியப்பணியாகும். இவர்தம் கவிதைகளில் உயர்ச்சி குறைவாக இருப்பினும், நீரோட்டம் போன்ற கவிதைகள் இயற்றுவதில் திறமை மிக்கவ ராகவே திகழ்ந்தார்.

இவர் பல புத்துணர்ச்சி மிக்க இலக்கியங்களைப் படைத்துள்ளார்; பல இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். எனவே, இவர் பெருங் கவிஞராகவும் இலக்கியத் திறனாய்வாளரா கவும் விளங்கினார் எனக் கூறலாம்.இருப்பினும் இவர் ஓர் இலக்கியத்திறனாய்வாளர் என்பதைக் காட்டிலும் மாகவிஞர் என்பதிலேயே பெரும் புகழ் பெறுகிறார். இவர் பல திறனாய்வுக் கட்டுரைகளை இயற்றியுள்ள போதிலும், அவற்றுள் 'இலக்கிய விமரிசனக் கட்டுரை' (The Essay on Criticism) மட்டுமே போற்றத்தக்க தாக உள்ளது. எனவே, இவரை மாபெரும் கவிஞர் என்றே கூறுவது சிறப்பாகும்.

தேம்சு நதிக்கு அருகில் உள்ள துவிக்கன்கேமில் ஏறத்தாழ 25 ஆண்டுக்காலம் வாழ்ந்து, பல உயர்ந்த போற்றத்தக்க இலக்கியங்களைப் படைத்த இப்பெருங் கவிஞர் துவிக்கன்கேமிலேயே (Middlesex) கி.பி. 1744 – ஆம் ஆண்டு மே மாதம் முப்பதாம்நாள் இறந்தார். இவரது இறப்பிற்குப்பின் இவரது நண்பர் வில்லியம் வார்பர்ட்டன்(Bishop William Warburton) என்பார், கி.பி. 1751 – இல் இவர்தம் படைப்புகளை ஒன்பது தொகுதிகளாக வெளியிட்டார். சோசப் வார்டன் (Joseph Warton) என்பாரும் இவர்தம் கவிதைகளை கி.பி. 1797 – இல் ஒன்பது தொகுதி களாக வெளியிட்டார். இருப்பினும் இலண்டனில் விட்வெல் எல்வின் மற்றும் வில்லியம் சே. கோர்ட் கோப்பு (Whitwill Elwin & William J. Court Hope) ஆகியோரால் பத்துத் தொகுதிகளாக கி.பி. 1871 – 89 களில் வெளியிடப்பட்ட பதிப்பே மிகச் சிறப்பான பதிப்பாகும்.


இவரது மறைவிற்குப்பின், கி.பி. 18–ஆம் நூற் றாண்டில் இவர் புகழ் வானளாவி இருந்தது. பைரனைத் தவிர பிற புனைவியல்(Romantic)கவிஞர் கள் இவருடைய கவிதைகளைத் தாக்கினர்.ஆனால், புதிய காலத்தில் இவரது புகழ் மீண்டும் வளர்ந் தது. 19 – ஆம் நூற்றாண்டில் மாத்தியூஆர்னால்டு எனும் திறனாய்வாளர், இவரைப்பற்றிக் கூறும்போது, 'சான் திரைடன் மற்றும் போப்பு சொற்களால் கவிதை படைத்தார்கள்; அதே நேரத்தில் உன்னதமான கவிதை என்பது ஆத்மாவில் பிறந்து, உருப்பெறு வதே' என்றார். ம.சு.&.சௌ.ல.

**துணை நூல்:**

Raghakul Tilak., Literary and Social History of England, Raihans Prakhasam Mandir, Meerut, 1962.

போப்பு, சி.யு.: ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டார் பலர் கிறித்தவ சமயத்தைப் பரப்பு

வதற்காகத் தமிழ் நாட்டிற்கு வந்தனர். அவ்வாறு வந்தவர்கள் தமிழ் மக்களுடன் பழகுவதற்காகத் தமிழ் மொழியைக் கற்றார்கள். தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கிய அவர்கள், தமிழ் மொழியில் இருந்த இலக்கியங்களைக் கண்டு வியப்படைந்தார்கள். தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களைத் தமிழ் மக்கள் அறியாதும், போற்றாதும் இருந்த காலத்தில், அவற்றின் சிறப்பை எல்லாம் உணர்ந்து போற்றினார்கள். அதனோடு நில்லாது உலக மக்கள் தமிழ் இலக்கியங்களின் சிறப்பை உணரும் பொருட்டு வெளிநாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களின் சிறப்பை எடுத்துக் கூறினார்கள். ஆங்கிலத்திலும் பிற அயல் நாட்டு மொழிகளிலும் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்த்து வெளியிட்டார்கள். இவ்வாறு தமிழ் மொழியின் சிறப்பினை உலகம் அறியச்செய்தவர்களுள் ஒருவரே சி.யு. போப்பு (G.U.Pope) என்ற ஆங்கில நாட்டு அறிஞர்.



சி.யு. போப்பு

சி.யு. போப்பின் தந்தை சான் போப்பு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர் வணிகம் செய்வதற்காக வட அமெரிக்காவில் நோவாசுகோசியா என்ற இடத்தைச் சேர்ந்த 'பிரின்சு எட்வர்டு' என்ற தீவை அடைந்தார். சான் போப்பின் மனைவி பெயர் காத்தரின் உக்ளோ என்பதாகும். சான் போப்பிற்கும், காத்தரினுக்கும் கி.பி. 1820-ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவரே சி.யு. போப்பு என்பவர். சார்சு உக்ளோ என்பது அவருடைய இளைமைப் பெயர். சி.யு. போப்புடன் பிறந்தவர்களுள் அறுவர் ஆடவர் நால்வர் பெண்டிர் ஆவர்.

போப்பு தமது இளமைப் பருவம் முதல் பல மொழிகளையும் கற்பதில் ஆர்வம் காட்டி வந்தார். இவர் தம் ஆறாம் வயதில் (கி.பி.1826) பெற்றோருடன் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்குச் சென்றதும் ஈப்ரு மொழியிலிருந்த பழைய ஏற்பாட்டையும் (Old Testament), கிரேக்க மொழியிலிருந்த புதிய ஏற்பாட்டையும்(New Testament) கற்றார். கிறித்தவ சமயத் தொண்டிற்காக இந்தியாவிற்குச் செல்ல விரும்பிய போப்பு தமிழ் மொழியைக் கற்க விரும்பினார்.

போப்பு தம் 19 – ஆம் வயதில் (கி.பி.1839) சமயப் பணியின் பொருட்டுக் கடற்பயணம் மேற்கொண்டார். இங்கிலாந்திலிருந்து புறப்பட்ட கப்பல் சென்னைத் துறைமுகத்தை வந்தடைய எட்டு மாதங்களாயின. போப்பு கப்பல் பயணத்தின்போது தமிழ்மொழியை நன்கு கற்றார். சென்னையை வந்தடைந்ததும் சாந்தோம் கோயிலில் தமிழில் சொற்பொழிவாற்றினார்.

சமயப் பணிக்காகத் தென்னாட்டிற்கு வந்த போப்பு திருநெல்வேலி மாவட்டத்தில் (இப்போதைய சிதம்பரனார் மாவட்டம்) உள்ள சாயர்புரம் என்ற ஊருக்குச் சென்றார். சாமுவேல்சாயர் என்பவர் அவ்வூரை விலைக்கு வாங்கி நன்கொடையாகக் கொடுத்ததால் அவ்வூருக்குச் சாயர்புரம் என்ற பெயர் ஏற்பட்டது. சாயர்புரம் சென்றடைந்த போப்பு அங்கு ஒரு பள்ளியைத் தொடங்கினார். சிறந்த ஆசிரியர்களைக் கல்வி கற்பிப்பதற்கு அமர்த்தினார். தாமும் ஆசிரியராக இருந்து பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தார். அவருடைய விடா முயற்சியாலும் உழைப்பாலும் பள்ளி, கல்லூரியாக வளர்ச்சி பெற்றது. ஈப்ரு, இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளையும், வரலாறு, தருக்கம், தத்துவம், கணிதம் ஆகிய பாடங்களையும் போப்பு மாணவர்களுக்குக் கற்பித்தார்.

போப்பு கண்டிப்பு மிகுந்த ஆசிரியராக விளங்கினார். 'நல்ல உணவு, நல்ல கல்வி, நல்ல பிரம்பு' என்பது அவரது கொள்கை. ஒரு கையில் புத்தகமும் மற்றொரு கையில் பிரம்புமாக இருப்பாராம். இரவு பகல் ஆகிய இரு வேளைகளிலும் பாடம் சொல்லிக் கொடுத்தார். அக் கல்வி நிலையத்தின் புகழ் எங்கும் பரவியது. போப்பின் கல்வித்தொண்டினை உணர்ந்த ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் சாயர்புரத்தில் நூல் நிலையம் ஏற்படுத்துவதற்குப் பணம் கொடுத்து உதவியது.

தமிழ் மொழியில் சிறந்த புலமை பெற வேண்டும் என்பதற்காக மகாவித்துவான் இராமானுசக் கவிராயரிடமும் ஆரியங்காவு பிள்ளை என்ற புலவரிடமும் தமிழ் இலக்கியங்களைக் கற்றார்.

போப்பின் கண்டிப்பு, பலரின் வெறுப்பையும் தேடித் தந்தது. அவர் அல்லும் பகலும் உழைத்து

வந்ததால் அவருடைய உடல்நலம் கெட்டது. எனவே, கி.பி. 1849 ஆம் – ஆண்டு இங்கிலாந்திற்குத் திரும்பினார்.

இவர், கி.பி. 1850-இல் இந்தியாவிற்குத் திரும்பி வந்து தஞ்சாவூரை அடைந்தார். அங்கிருந்து கொண்டு சமயப் பணியும் தமிழ்ப்பணியும் செய்தார். தஞ்சாவூரில் இருந்த போது தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும், சமய நூல்களையும் கற்றார்.

தஞ்சாவூரிலும் இவரது ஆசிரியப் பணி தொடர்ந்தது. அங்கு இருந்த பள்ளி இவர் உழைப்பாலும் முயற்சியாலும் முதல் தரமான கல்லூரியாக மாறியது. அக்கல்லூரியின் முதல்வராக கி.பி. 1854-ஆம் ஆண்டு முதல் தொண்டு செய்தார். அது இன்று செயிண்ட்டு பீட்டர் மேனிலைப் பள்ளி என்ற பெயருடன் செயற்பட்டு வருகின்றது.

தொல்காப்பியம், நன்னூல் முதலியவற்றிலுள்ள இலக்கணங்களை எளிய முறையில் எழுதினார். இவர் இரு இலக்கண நூல்களை எழுதினார். அந்நூல்கள் வினா விடை முறையில் எழுதப்பட்டன. ஆங்கிலத் தமிழ் அகராதியும், தமிழ் ஆங்கில அகராதியும் தொகுத்தார். வரலாற்றுநூல் ஒன்றும் மாணவர்க்காக எழுதினார். 'தனிச் செய்யுட் கலம்பகம்' என்ற தொகை நூலும் செய்தார். 'திருநற்கருணை' என்ற நூலையும் எழுதினார்.

போப்பு அவர்களின் கடுமையான ஒழுக்க நெறிகளின் காரணமாகத் தஞ்சாவூரிலும் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை. தஞ்சாவூரிலிருந்து கி.பி. 1858 – ஆம் ஆண்டில் உதகமண்டலம் சென்றார். அங்கும் ஒரு பள்ளியைத் தொடங்கினார். தொடக்கத்தில் அப்பள்ளியில் மூன்று மாணவர்களே சேர்ந்தனர். மூவரில் ஒருவன் போப்பின் மகன்; மற்ற இருவரும் மாவட்ட ஆட்சித் தலைவரின் புதல்வர்கள். போப்பின் இடையறாத உழைப்பினால் மாணவர் எண்ணிக்கை கூடியது. ஐரோப்பியச் சிறுவர் பலர் அங்கு வந்து சேர்ந்து கற்றனர். இவருடைய முயற்சியால் புதிய பெரிய கட்டடம் கட்டப்பட்டது.

போப்பு உதகமண்டலத்தில் வாழ்ந்தபோது நூல் நிலையம் ஒன்றையும் ஏற்படுத்தினார்.

உதகமண்டலத்தில் ஐரோப்பியர் பலர் கைதிகளாக இருந்தனர். அக்கைதிகளுக்கு நல்ல அறிவுரை வழங்கினார். அதனால், அவர்கள் மனமாற்றம் பெற்றார்கள். போப்பின் பணியை உணர்ந்த காண்டர்பரி இவருக்கு 'டாக்டர்' பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

உதகமண்டலத்திலிருந்து பெங்களூர் சென்றார். அங்கு இருந்த ஆயர் காட்டன் பள்ளியில் ஆசிரியரானார். பின் அப் பள்ளியின் தலைமையாசிரியரானார். போப்பு தம்முடைய விடா முயற்சியால் கி.பி. 1873-ஆம் ஆண்டில் ஒரு வகுப்பு அறையையும், மாணவர் தங்கும் விடுதியையும் கட்டினார். இன்றும் பெங்களூரில் அக்கட்டடத்தைக் காணலாம். இவர் கி.பி. 1882-ஆம் ஆண்டு வரை பெங்களூரில் பணி செய்து வந்தார்.

இங்கிலாந்திற்கு கி.பி. 1882-ஆம் ஆண்டு திரும்பிய போப்பு, கி.பி. 1885-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கு இவர் தமிழ் மொழியைக் கற்பித்து வந்தார்.

இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டில் எம்.ஏ. பட்டம் பெற்றார். திருக்குறளை கி.பி. 1886-ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து முடித்து வெளியிட்டார். நாலடியாரை கி.பி. 1893-இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

தொடர்ந்து 1900-ஆம் ஆண்டில் திருவாசகம், மணிமேகலை ஆகிய இரண்டு நூல்களையும் மொழி பெயர்த்தார். திருவாசகம் இந்து சமய நூலாக இருந்தும் மிகவும் ஈடுபாட்டுடன் அப்பணியைத் தொடங்கிச் செய்து வந்தார். அப்பணி தம் வாழ் நாளுக்குள் முடிய வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டார். இவருடைய கவலையை அறிந்த இவருடைய ஆசிரியர் இவருக்கு ஆறுதல் கூறினார். திருவாசகம் வெளிவந்தபோது இவர்கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

போப்பின் தமிழ் இலக்கியத் தொண்டினை உணர்ந்து அரசு ஆசியக் கழகம்' இவருக்குத் தங்கப் பதக்கம் பரிசளித்தது (1906).

தமிழ் அகராதி ஒன்றை உருவாக்கும் பணியை கி.பி. 1886-இல் தொடங்கினார். ஆனால், அப்பணி முடியவில்லை. இவர் தொடங்கிய பணியைச் சென்னைப் பல்கலைக்கழகம், குழு ஒன்றை அமைத்துப் பல ஆண்டுகளுக்குப் பின் முடித்து வெளியிட்டது.

இவர் 1908-ஆம் ஆண்டு காலமானார். இவர் உடல் இங்கிலாந்தில் அடக்கம் செய்யப்பட்டது. தம் கல்லறையில் 'தமிழ் மாணவன்' என்ற பெயர் பொறிக்கப்பட வேண்டும் என்பது இவருடைய இறுதி விருப்பம். இவர் விருப்பப்படி கல்லறையில் 'தமிழ் மாணவன்' என்று பொறிக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். தமிழ் மொழியிடத்து இவர் கொண்டிருந்த அளவிட முடியாத பற்றினைப் புலப்படுத்திக் கொண்டு நிற்கின்றது இவரது கல்லறை.

போப்பு ஐயரின் நினைவாகச் சாயர்புரத்தில் இன்று ஒரு கல்லூரி இயங்கி வருகின்றது. தமிழில்

இவர் எழுதியதாக அறியப்படும் நூல்கள்: 1) கிறித் துவத் தத்துவத் தீபிகை, 2) இலக்கண வினா-விடை முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம், 3) வட்டார வழக்கு மொழி இலக்கணம், 5) தமிழ்க் கவிதைத் தொகுதி, 6) இந்து தேச சரித்திரம், 7) இங்கிலாந்து தேச சரித்திரம். மு.நி.

**போபால்**: மத்திய பிரதேசத்தின் தலைநகரான போபால் (Bhopal) மத்திய இருப்புப் பாதையின் பம்பாய்-தில்லி இருப்புப் பாதைப்பிரிவில் பம்பாயி லிருந்து 833 கி.மீ. தொலைவிலும், தில்லிக்குத் தெற் கில் 699 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இங்கு கி.பி.11-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த போசன் (Bhoja) என்னும் அரசர், ஒரு பெரிய அணையைக் கட்டினார். 'பால்' என்னும் சொல்லுக்கு அணை என்பது பொருளாகையால், இது போசு பால் (Bhojpal) எனப்பட்டு, பின்னர்ப் போபால் என்றாயிற்று. இன்றுள்ள புதிய நகருக்கு கி.பி.18-ஆம் நூற்றாண்டில் நவாபு தோசுது முகம்மதுகான் அடிக் கல் நாட்டினார். இந்திய விடுதலைக்கு முன்னர் இது சுல்தான்களின் ஆட்சியில் இருந்து வந்தது. இதன் பரப்பளவு 2722 சதுர கி.மீ. மக்கள் தொகை 672,000 (1981).

அரசர் போசன் ஏரிகளை மிகவும் விரும்பியதால் அரண்மனையைக் கட்டிய பொழுது ஒரு பெரிய செயற்கை ஏரியை உண்டாக்கினர். ஆசியாவிலேயே மிகப் பெரியதான இவ்வேரி, மிக அழகிய தொங்கு பாலம் ஒன்றால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொங்குபாலத்தின் வழியாகச் சென்றால் புதிய பொதுக் கட்டடங்களும், அரசுக் குடியிருப்புகளும் உள்ள இதன் தென்கரையை அடையலாம். இவற்றுள் ஓர் ஏரியின் நீளம் 7 கி.மீ.அகலம் 2½ கி.மீ. சிறிய ஏரி யின் நீளம் 3 கி.மீ. பெரிய ஏரியின் வடக்குக்கரையில் வெள்ளை அரண்மனை எனப்படும் அகமதாபாது அரண்மனை உள்ளது. இதன் பின்புறமுள்ள சிம்லா மலைகள் இதற்கு அழகு சேர்க்கின்றன. சூரியன் மறைந்த பின்னர் இவ்வரண்மனைகளில் ஒளி வீசிக் கொண்டிருக்கும் எண்ணிறந்த வண்ண விளக்குகள் இவ்வேரியில் எதிரொளிப்பது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

பழைய நகரில் மூன்று பெரிய மசூதிகளும், பல அழகிய தோட்டங்களும் உள்ளன. இந்நகரின் மையப் பகுதியில் குத்சியா பீகம் (Kudsia Begum) என்பவரால் கி.பி.1837-இல் கட்டப்பட்ட சுமா மசூதி (Jumma Masjid) மிக அழகிய கட்டடமாகும். அவர் இந்ந கரில் கி.பி. 1860-இல் முத்து மசூதியைக் (Moti Masjid) கட்டியுள்ளார். இவர்கள் இருவரும் பல பூங்காக்களையும் அமைத்துள்ளனர். கோட்டைக் குப் பின்புறம் சாசகான் பீகம் (Shahjahan Begam) தாசு-உல்-மசூதியைக் (Taj ul-Masjid) கட்டுவித் தார். இது இந்தியாவிலேயே மிகப் பெரிய மசூதி யாகும். மிகப்பெரிய அளவில் திட்டமிட்டுத் தொடங் கப்பட்ட இது இன்றும் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது. இந்நகரில் பலஅழகிய பூங்காக்கள் உள்ளன. அவற்றுள் 'ஆயிசு பாகு' (Aish Bagh) என்னும் மகிழ்ச்சிப் பூங்கா; பர்கதாபசு பாகு (Farhatafaz Bagh) என்னும் மகிழ்ச்சியைப் பெருக்கும் பூங்கா; நூர் பாகு (Nur Bagh) என்னும் ஒளிப் பூங்கா; கமலா பூங்கா (Kamala Bagh) ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இந்நகரிலுள்ள உயர்ந்த மரங்களாலும், கற்களாலும், மண்ணாலும் கட்டப் பட்டுள்ள தாழ்வான வீடுகள் பண்டைய இந்திய நகரத்தை நினைவூட்டுகின்றன.

இந்நகரிலிருந்து 21 கி.மீ. தொலைவிலுள்ள போசுபூரில் (Bhojpur) போசமன்னர் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோயில் ஒன்று உள்ளது. மிகப் பெரிய அளவிற்குத் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட இது இன்றும் முழுமைபெறவில்லை. இருப்பினும் இது ஒரு பெரிய கோயிலாகவே உள்ளது. இங்குக் கோயில் கொண்டிருக்கும் சிவலிங்கத்தின் உருவம் மிகப்பெரியது. இங்குள்ள சமணர் கோயிலில் 9 மீட்டர் உயரமுள்ள மகாவீரரின் சிலை உள்ளது.

வளர்ந்து வரும் தொழில் நகரமான இதில் அண்மைக் காலத்தில் பல தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கது இரண்டாம் திட்டக் காலத்தில் நிறுவப்பட்ட 'பாரத கனரக மின்சார'த்(Bharat Heavy Electrical) தொழிற்சாலையாகும். இந்தியாவில் நிறுவப்பட்ட முதலாவது கனரக மின்சாரத் தொழிற்சாலையும், இத்தகைய தொழிற்சாலைகளுள் ஆசியாவிலேயே மிகப் பெரியதுமான இதில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, கொண்டு செல்ல, பகிர்ந்தளிக்க, பயன் படுத்தத் தேவையான பெரும்கருவிகள் பல செய்யப் படுகின்றன.

இந்நகரிலுள்ள கரியகை நிறுவனத்தின் (Union Carbide) பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையில் 1984 திசம்பரில் மயக்கத்தை அளிக்கக்கூடிய நச்சு வாயு வெளியேறியதால் 2000 பேர் இறந்தனர். ஆயிரக்கணக்கானவர் பலதுன்பங் களுக்கும் ஆளாகியுள்ளனர். சி.இரெ.

**போயர் போர்கள்**(கி.பி. 1899-1902): தென் ஆப்பிரிக்காவில் உள்ள கேப்புக் குடியேற்றத்தில்வசித்து வந்த தச்சுக் (Dutch) குடியானவர்களே போயர்கள் (Boers). போயர்களின் பிரிவினை மனப்பான்மை,

ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய வெறி ஆகியவற்றின் மோதல்தான் போயர் போர்கள். இப்போர்கள் ஆங்கிலேயத் தென்னாப்பிரிக்க வரலாற்றில் மிகவும் சிறப்புப் பெற்றுள்ளன.

பிரான்சுப் புரட்சிப்போர்கள் நடைபெற்றபோது ஆங்கிலேயர்கள் தச்சுக்காரர்களிடமிருந்து கேப்புக் குடியேற்றத்தைக் கைப்பற்றினர். பல்வேறு காரணங்களால் போயர்கள் கேப்பில் இருந்து வெளியேறி நேட்டால், ஆரஞ்சு சுதந்திர அரசு, திரான்சுவால் ஆகிய இடங்களில் குடி அமர்ந்தனர். ஆங்கிலேயர்கள் நேட்டாலைத் தங்கள் ஆட்சியின் கீழ் விரைவில் கொண்டு வந்தனர்.

பின்னர், கி.பி. 1877 – இல் திரான்சுவாலைக் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால், ஆங்கிலேயப் பிரதமர் கிளாட்சுடன் திரான்சுவால் குடியரசுக்குத் தன்னாட்சி உரிமையை வழங்கினார்.

அக்குடியரசில் முழுச்சுதந்திரத்துடன் வாழ்வதற்கும், வாணிகம் செய்வதற்கும் குடியரசின் குடிமக்களைப் போலவே வரிகள் செலுத்தவும் ஆங்கிலேயர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. குடியரசில் பல்வேறு தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் ஏராளமான ஆங்கிலேயர்கள் திரான்சுவாலுக்கு வந்து, நிரந்தரமாகத் தங்கத் தொடங்கினர். திரான்சுவால் குடியரசு அரசாங்கம் அவர்களுக்குப் பலவிதங்களில் தொல்லைகளைத் தந்தது. எனவே,மிகவும் வெறுப்படைந்த ஆங்கிலேயர்கள் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு, அரசியல் அமைதியின்மையை ஏற்படுத்தினர்.

அக்காலத்தில் திரான்சுவால் குடியரசுத் தலைவராக விளங்கியவர் பால் குரூகர் ஆவார். மறுபுறத்தில் ஆங்கிலேயக் கேப்புக்குடியேற்றத்தின் முதலமைச்சராக இருந்த செசில்-ரோட்சு என்பவர் ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதையும் ஆங்கிலக் குடியேற்றமாக மாற்ற மிகவும் விருப்பம் கொண்டிருந்தார். இங்கிலாந்து நாட்டின் வலிமையை நன்கு நினைவில் கொண்ட ஆங்கிலேயர்கள் கி.பி. 1895-இல் திரான்சுவால் குடியரசுக்கு எதிராக வெளிப்படையான கலகத்தைத் தோற்றுவித்தனர். டாக்டர் சேம்சன் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஆங்கிலேயப் படைப்பிரிவொன்று திரான்சுவால் எல்லையைக் கடந்து குடியரசைத் தாக்கியது. எனினும், குடியரசுப்படை ஆங்கிலேயப்படையின் நடவடிக்கைகளை முறியடித்தது. இதை முதல் போயர் போர் என்று கூறுவர்.

குடியரசுத்தலைவர் குரூகர் செருமனியிடமிருந்து படை மற்றும் போர்த் தளவாடங்களைப் பெற்று ஆங்கிலேயருக்கு எதிராக முடிவான போர் ஒன்றை நடத்த முடிவு செய்தார். அதன் விளைவாக கி.பி. 1899-இல் இரண்டாம் போயர் போர் தோன்றி மூன்று ஆண்டுகள் நீடித்தது. ஆங்கிலேயர்கள் பலர் போர்க்களங்களில் போயர்களிடம் தோற்றனர். இங்கிலாந்திலிருந்து 1900-இல் ஆங்கில உதவிப்படைகள் தென் ஆப்பிரிக்காவுக்கு வந்து சேர்ந்தவுடன் ஆங்கிலேயர்கள் போயர்களைப் பல இடங்களில் முறியடித்தனர். அந்நிலையில் போயர்கள் எதிர்பார்த்த வெளிநாட்டு உதவிகளும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, போயர்கள் முழுமையாய்த் தோற்றுப்போயினர். திரான்சுவால் குடியரசு மற்றும் ஆரஞ்சுச் சுதந்திர அரசு ஆகிய போயர் அரசுகள் ஆங்கிலப் பகுதிகளுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. போயர்களை அமைதிப்படுத்தி, அவர்களுடன் நல்லிணக்க அடிப்படையில் உறவுகளை வளர்த்துக் கொள்வதே மிகவும் சிறந்தது என்று ஆங்கிலேய அரசாங்கம் எண்ணியது. எனவே, போயர்களின் புதுவாழ்வுப் பணிகளுக்கென ஒருகோடிப் பவுண்டுகளை ஆங்கிலேயப் பாராளுமன்றம் அளிக்க முன் வந்தது. போயர் குடியானவர்களுக்கு ஏற்பட்ட இழப்பையும் ஈடுகட்ட ஆங்கிலேய அரசு உதவியது. கனடாவைப்போல் விரைவிலேயே தன் ஆட்சி உரிமை போயர்களுக்கு அளிக்கப்படும் என்றும் ஆங்கிலேய அரசு உறுதி தந்தது. அவ்வுறுதிமொழியே 1906–இல் நடைமுறையானது. திரான்சுவால் மற்றும் ஆரஞ்சுச் சுதந்திரக் குடியரசுகள் தத்தம் பேராளர் அமைப்புகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டன. ஆங்கிலேயப் பாராளுமன்றம் 1909-இல் சட்டம் ஒன்றை நிறைவேற்றி அதன் மூலம் கேப்புக் குடியேற்றம், நேட்டால், திரான்சுவால், ஆரஞ்சு சுதந்திர அரசு ஆகிய நான்கு பகுதிகளையும் ஒன்றாக இணைத்து, தென்னாப்பிரிக்கத் தனி ஆணை ஆட்சி உரிமை( Dominion ) தோற்றுவித்தது. மு. உலோ.

**போர்**: போர் என்பது நாடுகளுக்கிடையில் வன்முறையில் ஏற்படும் மோதல் ஆகும். 'போர்' என்ற சொல்லை உள்நாடுகளுக்கிடையே ஏற்பட்ட மோதல், வருக்கங்களுக்கிடையேயான மோதல் ஆகியனவற்றைக் குறிக்க உள்நாட்டுப் போர், வருக்கப் போர் என்று பயன்படுத்தினாலும், நாடுகளுக்கிடையே ஏற்பட்ட மோதலே போர் ஆகும்.

சான் இரிச்சர்டு கிரீன் என்பவர், போரினை அறிவீனமான படுகொலை என்று குறிப்பிட்டார். அவ்வாறு அவர் குறிப்பிட்டபோதிலும் தனிமனிதனின் தனித்தன்மை அல்லது தனிமனிதன் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு அதில் இணைந்துள்ளது.

பல நூற்றாண்டுகள், வான்நிலை, நோய்கள் போலவே போரும் ஒன்று என்று மனிதன் கருதிவந்

தான். சமூக நடவடிக்கையின் மிகவும் ஒருங்கிணைக் கப்பட்ட நடவடிக்கையாகப் போரானது, சமூக, பொருளாதார அரசியல் மாறுதல்களை மிக விரைந்த வேகத்தில் ஊக்குவித்தது.

படைத்துறைத் தத்துவஞானியான கார்ல் வான் கிளாசுவிட்சு (கி.பி. 1780 – 1831) என்பவர் 'போர் பற்றி' (On war) என்னும் நூலைப் படைத்தார். அந் நூலில் அவர், பிறவழிவகைகளுடன் கலந்த, அரசியல் உறவின் தொடர்ச்சியே போர் என்று குறிப்பிட்டார். போரின் அடிப்படை வன்முறையே யாகும்.

'பாசிசக் கொள்கையர்' போன்ற சிலர் தேசிய உணர்வு பெருகிடப் போர் இன்றியமையாதது என்று கருதினர். போர் விருப்பம் என்பது ஆண்மைத் திறம் அதிகார வளர்ச்சியினைக் காட்டக்கூடியது.

அகசுடசு காம்டே முதலியோர் தவிர்க்க இயலா தது என்று போரினைக் கருதினர். மனித சமுதாயத் தின் வளர்ச்சி, இயல்பு, விதிகள் பற்றி ஆய்வோரும் மனித இன நூலாரும் போர் இயல்பானது, மனித இனத்திற்குக்கனங்கள் அடிப்படையிலான நோய் என் றும் கூறினர். தால்சுடாய் (Tolstoy), காந்தியண்ணல், முதலானோர், போர் செய்தல் பாவம் எனக் கருதினர். பேகன், எல்லாக் கேள்விகளும் இல்லாமல் அது ஆக்குகிறது; ஏனென்றால் பெரும்பாலும் சிறப்புகள் படைக்கலன்களிலேயே அடங்கியிருந்தன என்று கூறினார்.

எல்லா நாடுகளிலும் மாறாத நடவடிக்கையாகப் போரினைக் கடந்த கால வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது. போர் என்பது எதிரியை நம் விருப் பத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பணிய வைக்கும் வன்முறையிலமைந்த செயலாகும். இதனை அடைய எதிரியைப்படைக் கருவி இழந்தவனாகச் செய்யலாம். போர்ச் செயலின் நோக்கம் எதிரியைப் படைக்கலன் துறக்கச் செய்தல் எனலாம். ஆனால் பண்டைக் காலத்தைப் போல் இந்நாளில் அவ்வாறு செய்தல் இயலாது. ஏனெனில் தொழிற்புரட்சிக்குப் பின் தோன்றிய படைக்கருவிகள் போரின் இயல்பை மாற்றி விட்டன.

போரின் அடிப்படைக் கொள்கைகள் மாற வில்லையாயினும், தொழில் நுணுக்க முறைகள் மாறி விட்டன. போரினால் நாடுகளின் போர் செய்யும் எல்லை விரிவடைந்துவிட்டது எனில், அறிவியல் வளர்ச்சியே அதற்குக் காரணமெனலாம்.

சில சமூகங்கள் மற்றவற்றைவிட மிகுதியான போர்களை நிகழ்த்தியுள்ளன. சிலவற்றிற்குப் பெரும் போர்கள் ஏதும் நிகழ்த்திட வாய்ப்புக் கிட்டவில்லை. இசுபார்டா முதலியன போர் அடிப்படையில் தங்கள் சமூக வாழ்க்கையினை அமைத்துக் கொண் டன. அழிவு நேரிடும் நிலை ஏற்பட்ட போது ஏதென்சு முதலான பண்டைய நாடுகள் தேவைக் கேற்ப எழுச்சிபெற்றன. மங்கோலியர், ஊணர் தங்க டைய நாடோடி வாழ்க்கையின் போது, போரினைத் தங்கள் சமூக இயல்பாக மேற்கொண்டனர். எனவே, வரலாற்றில் அறியப் பெற்ற எந்தச் சமுதாயமும் போரை விட்டொழிக்கவில்லை.

இந்தியச் சிந்தனையாளர்களில் கௌடல்யர் எந்த இடத்திலும் போரைத் தடைசெய்யவில்லை. சமண, புத்த சங்கங்களே போருக்கு எதிரானவை. இத் தகைய நிலைக்குச் சங்ககாலம் முதலான தமிழ்ச் சமுதாயமும் விதிவிலக்கில்லை. தமிழ்ச் சமுதாயம் மக்களின் முதன்மைத் தொழில்களுள் ஒன்றாகப் போர்த் தொழிலினைக் கொண்டிருந்தது. பிற சமுதாயத்தவரிடம் போரே அரசனை உருவாக்கிற்று என்ற கருத்து நிலவியதைப் போல், பண்டைத் தமிழரிடத்தும் கருத்து நிலவியது.

போரின் தோற்றம் எங்கும் பொதுவான சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். குறித்த சில நாடுகளில், குறிப்பிட்ட சில சூழ்நிலை களில், தனிக் காரணங்கள் இருக்கும்.

வி.ஆர். இராமசந்திர தீட்சிதர், பண்டைய போருக்கான காரணங்களைத் தொகுத்து அளிக்கை யில், 1) சமுதாயத்தின் மனச் சூழ்நிலை சாதி அடிப் படையில் இருத்தல், 2) உளஇயல் அடிப்படையில் அமைதி பற்றிய வறட்சி இயல்பு, 3) பேராண்மை, வீரச் செயல்கள், 4) மனிதனின் போர்த்திறன், போர்த் தினவு, 5) பாதுகாப்பு வேண்டும் எனும் உணர்வு, 6) கோபத்துடன் கூடிய நடத்தை, பொறாமை உணர்வு 7) பேரார்வம் ஆகியனவே என்று குறிப்பிட்டார். அவர் சுட்டிக் காட்டியன வற்றுள் ஒன்றினுள் மற்றொன்று அடங்கலாம். இந்தியச் சமுதாயங்கள் போர் செய்ய வெட்கப்பட வில்லை.

போர்கள் நடைபெற்றதற்கான காரணங்கள் என்று ஒரு சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டலாம். ஆனால், இவையே முடிந்தமுடிவுகள் ஆகா என்பதும் குறிப்பிடத்தக்கது. இவை பொதுக் காரணங்கள் எனவும், சிறப்புக் காரணங்கள் எனவும் கொள்ளப் படும்.

1) போர் மனிதனுக்கு இயல்பானது என்னும் கருத்து, 2) மரபுப் பகைகள், 3) வெற்றி பெற்று அப் பகுதிகளை இணைத்திட வேண்டும் என்ற தணியாத வெறி, 4) பொறாமை, பிறருடைய ஏற்றம் கண்டு

சகித்திட இயலாமை, 5) போர் மரபினால் தூக்கி நிறுத்தப்படும் போர் உணர்வு, 6) போரில் மீண்டோர், 7) மண உறவுகள் ஏற்படாமை, 8) படை வலிமை, படை வெற்றிச் சிறப்புச் சேர்க்கும் என்னும் நம்பிக்கை, 9) வீரம் நிலையாகப் போற்றப்படும் நிலை, 10) தேசிய அவமதிப்பைச் சகியாமை, 11) எல்லைகள் வகுக்கப்பெறாமல் எல்லைகள் மீறப்படுதல், 12) போரே மற்றொரு போரை உருவாக்குதல், 13) இன உயர்வுச் செருக்கு, 14) வாணிகத்தடைகள், 15) சமயப் பரப்பு நோக்கம், 16) உலகைக் கட்டியாளும் ஆர்வம் ஆகியன குறிப்பிடத்தகு போர்க் காரணங்கள் ஆகும்.

தொடக்கக் காலத்தில் கூட்டம் கூட்டமாகவாழ்ந்த மனிதன் போர் நிகழ்த்துகையில் வேட்டைக் கருவிகளைப் பயன்படுத்தித் தரையில் போர் செய்தான். பின்னர்க் கலம் செலுத்திக் கடலில் போர் செய்தான். அதன் பின்னர் விண்ணில் போர் செய்தான். இன்று இருந்த இடத்திலிருந்தே பொறியைத் தட்டி ஏவுகணை வாயிலாக எதிரியை அழிக்கும் போர்த் திறம் பெற்றுவிட்டான். காலாட்படை, குதிரைப் படை, யானைப்படை, தேர்ப்படை என்பனவெல்லாம் அறிவியல் வளர்ச்சியினால் மாறிவிட்டன. எப்படி உழவுக் கருவிகளின் பெருக்கம் சமுதாய மாறுதலைத் தோற்றுவித்ததோ, அதுபோலவே படைக் கருவிகளில் தோன்றிய புதுமைகள் போரின் வகைகளை மாற்றிவிட்டதோடு உலகையும் மாற்றி விட்டன.

போர் மனிதனின் நாகரிக முதிர்ச்சியற்ற இயல்புகளை எடுத்துக்காட்டுகிறதேயன்றிப் பண்புள்ள நாகரிகம் வாய்ந்த சமுதாயத்தின் நடவடிக்கைகளை எடுத்துக்காட்டவில்லை. போர் சமூக, அரசியல், பொருளாதார மாறுதலுக்குத் துணை புரிந்துள்ளது. உருசியாவில் வாழ்ந்த இலியோ தால்சுடாய் (Leo Tolstoy – கி.பி. 1828-1910) "போரும் சமாதானமும்" என்ற நூலை எழுதினார். உலகில் பல காப்பியங்கள் தோன்றிடப் போர்கள் காரணமாயின. மனிதச் சட்டங்களும், பன்னாட்டுச்சட்டங்களும் போரின் விளைவால் வகுக்கப்பட்டன. பல நாடுகளின் பொருளாதாரச் சீரழிவிற்கும், வலிமையிழப்பிற்கும் போர்களே காரணமாகும். அறிவியல் வளர்ச்சி, போருக்குத் துணைபுரிந்தது போலவே, போர், அறிவியல் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தது. முன்பெல்லாம் ஒரு போரே மற்றொரு போருக்குக் காரணமாக விளங்கிற்று. ஆனால், இப்போது போரே, பெரும் அழிவுப் போர் ஏற்படாமல் காத்து நிற்கிறது.

முதல் உலகப் பெரும் போர், இரண்டாம் உலகப் பெரும் போரை உருவாக்கியது. ஆனால், இரண்டாம் உலகப் போர் மூன்றாம் உலகப் பெரும் போர் நடைபெறவிடாமல் தடுத்துள்ளது; இனி ஒரு போர் எனின் அழிவது 'நான்' அல்லது 'நீ' என்று இல்லாமல், 'நாம்' என்று காட்டியுள்ளது. இதனையே போரினால், ஏற்பட்ட பெரும் விளைவு எனலாம்.

வில்லியம் சேம்சு (கி.பி.1842-1910) என்னும் அறிஞர் அமைதி வழியிலான போட்டி மெல்ல மெல்லப் பூசல்களை விலக்கிடும் எனவும், சமுதாய நலத் திட்டங்களில் இளைஞர்களை இறக்கிவிடுவதன் வாயிலாக நாடுகள் போருக்கு மாற்றுக் காணும் எனவும் கூறுகிறார். வன்முறையிலான உணர்வுகளுக்கு வடிகால் காணுவதே போரைத் தடுக்கும் வழி என்று அறிவியலார் கருதுகின்றனர். வேலையில் ஈடுபாடு, விளையாட்டில் ஆர்வம், போர் அழிவு பற்றிய திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்வுகளைப் பற்றி விளக்கிக் கூறல், பார்த்தல் முதலியவற்றின் வாயிலாக வன்முறை உணர்வுகள் தடுக்கப்படலாம்.

வில்லியம் மெக்டக்கால் (கி.பி.1871-1928), வில்லியம் சேம்சு (கி.பி.1842-1910), இவான் பாவ்லோவ்சு (கி.பி.1849-1938) முதலான முன்னோடியான உளவியல் வல்லுநர்கள் இந்தச் சமூகக் கோட்பாட்டிற்கு உளவியல் முறையில் தீர்வுகாண முயன்றவர்கள் ஆவர்.

ஆயுதம் ஏந்திச் சமுதாயத்தை அழிக்கும் படைக் கருவிகள் கொண்டு போர் நிகழ்ந்ததன் விளைவாகக் கடந்த 45 ஆண்டுகளாக உலகில் பெரும்போர் நிகழா நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், போர்களோ நிகழவில்லை, மனித உயிர்கள் பலியாகவில்லை என்று கூறவியலாது. வியட்நாமிலும், பாலசுத்தீனத்திலும், இலங்கையிலும் இலட்சக் கணக்கில் உயிர்கள் பலியாயின. மனித மனத்தின் கொடுமைகள் மாறாத வரை, விட்டுக் கொடுத்து அமைதி வழியில் பேசித் தீர்ப்பதிலேயே முழு வெற்றி என்பதை உணராத வரை போரில்லா உலகைக் காண்பது அரிது எனலாம். உலக அமைதி நிறுவனம் வலிமை பெற்றால், உலகைக் கட்டுப்படுத்தும் திறன்மிகு நிறுவனமாக உண்மையிலேயே அமைந்தால் போர் உலகினின்று ஒழியும், மறையும் என்று நம்பலாம். ந.க.ம.

**போர்க் குற்றங்கள்** எனப்படுபவை பகை நாட்டைச் சேர்ந்த படைவீரரால் அல்லது பொதுவான குடிமகனால் செய்யப்படுவதும், அவர் சிறைப் பிடிக்கப்படும் போது தண்டனைக்குரியனவுமான செயல்களும் ஆகும். போர் பற்றிய சட்டங்களை அல்லது வழக்கங்களை மீறிச் செய்யப்படும் செயல்களெல்லாம் போர்க்குற்றங்கள் (War Crimes) எனப்படும். அத்தகைய ஒரு செயலை ஒருவர் தம் மேலதிகாரியின் ஆணையின் மீதுதான் செய்தாராயினும்,

அது போர்க் குற்றச் செயலாகவே கருதப்படும். இந்த ஆதார விதியின் பேரில்தான் இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன் 1945 – இல் பன்னாட்டு, தூரக்கிழக்கு இராணுவ நீதிமன்றங்கள் ஏற்படுத்தப் பட்டபோது, அவை பின்பற்றுவதற்கான பட்டயங் கள் (Charters of the International and Far Eastern Military Tribunals) வரையப்பட்டன. ஆயினும், இராணுவ நீதிமன்றம் ஒரு போர்க் குற்றச் செயலை ஒருவர் தம் மேலதிகாரியின் ஆணையின் மீதுதான் செய்துள்ளாரென்ற உண்மையை நீதிக்குப் பொருத்த மானதென்று கருதினால், அதனை அவருக்களிக்கப் படும் தண்டனையைக் குறைத்தற்காக எடுத்துக் கொள்ளலாமென்ற கருத்தும் ஒப்புக் கொள்ளப்பட் டது. நடைமுறையில், இராணுவ நீதிமன்றங்கள் போர்க் குற்றவாளிகளை விசாரிக்கும்போது, அவர்கள் தாங்கள் செய்த போர்க் குற்றச் செயல்களை மேலதி காரிகளின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்துச் செய்யாமலிருந்தால், அவர்கள் அம் மேலதிகாரி களின் கொடுந் தண்டனைக்கு உட்பட்டுத் துன்புற் றிருத்தல் கூடுமென்று கருதுவதற்குத் தக்க ஆதாரம் இருப்பதாகக் கருதினால், அப்போது அவர்களுக்குக் குறைந்த தண்டனையை அளித்தன. ஆனால், உயர் தரப் படை அதிகாரிகளுக்கு அத்தகைய தண்டனை ஏதும் இல்லையாயின், அப்போது அவர்கள் மேலதி காரியின் ஆணைகளை மறுக்காமல் நிறைவேற்றிப் போர்க் குற்றச் செயல்களைச் செய்திருந்தால், அவர் களுக்கு இராணுவ நீதிமன்றம் தண்டனையைக் குறைக்கவில்லை.

**வகைகள்**: இரண்டாம் உலகப் போரில் செரு மனியும் அதன் கூட்டாளிநாடுகளுமே பெருமளவில் போர்க்குற்றங்களைச் செய்தன. ஐரோப்பிய அச்சு நாடுகளைச் சேர்ந்த போர்க் குற்றவாளிகளின் மீது வழக்குத் தொடர்தற்கும், தண்டிப்பதற்கும், 1945 ஆகசுட்டு 8 – இல் பிரான்சு, பிரிட்டன், ஐக்கிய அமெரிக்க நாடு, சோவியத்து உருசியா முதலிய நாடு கள் ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாகச் செருமனியில் நூரம்பர்க்கில் (Nuremberg) ஒரு பன்னாட்டு இரா ணுவ நீதிமன்றத்தை (International Military Tribunal) நிறுவின. அவ்வொப்பந்தத்தின் பின்னிணைப் பான பட்டயத்தின் ஆறாம் பிரிவு இராணுவ நீதி மன்றத்தால் விசாரிக்கப்படுதற்குரிய போர்க் குற்றங் களை மூன்றாகப் பிரித்தது. அ) அமைதிக்கெதிரான குற்றங்கள்; இதில் முதலில் தாக்குதல், போர் செய் தல் (War of Aggression), அதற்கான ஆயத்தங்கள் செய்தல், பன்னாட்டு உடன்படிக்கை முதலியன அடங்கும். ஆ) போர்ச்சட்டங்களையும், வழக்கங் களையும் மீறிப் போர் செய்தல் முதலிய குற்றங்கள்; இவற்றுள் கைப்பற்றிய நிலங்களில் வாழும் பொதுக் குடிமக்களைக் கொல்லுதல், அவர்களை ஒடுக்கு தல், அடிமைகளாக நாடு கடத்துதல், போரில் சிறைப்பட்டோரையும், கடலில் செல்லுவோரையும், பணய ஆள்களையும் கொல்லுதல், தனியார், அர சாங்க உடைமைகளைக் கொள்ளையடித்தல், நகரங் களையும், ஊர்களையும் இராணுவக் காரணங்களுக் காக அல்லாமல், தம் விருப்பப்படி அழித்தல் முதலி யவை அடங்கும். இ) மனித இனத்துக்கெதிரான குற்றங்கள்; அதில் போருக்கு முந்தியோ, போர் நடைபெறும் போதோ, பொதுக் குடிமக்களைக் கொல்லுதல், அடிமைகளாக்குதல், நாடு கடத்துதல் முதலியவை அடங்கும்.

போர்க் குற்ற விசாரணை, நூரம்பர்க்கு இரா ணுவ நீதி மன்றத்தில் நடைபெற்று வந்தபோது, குற்றம் சாட்டப்பட்ட பிரதிவாதிகளின் சார்பாக, பன்னாட்டு இராணுவ நீதிமன்றத்தின் அதிகார எல்லையை வெற்றி பெற்ற நாடுகளின் போர்க் குற்ற வாளிகளையும் விசாரிக்குமளவுக்கு விரிவாக்குதல் வேண்டுமென்றும், போர்க் குற்றவாளிகளின் எண் ணிக்கை வென்ற நாடுகளைப் பொறுத்தவரையில் மிகக் குறைவேயாயினும், அவர்களும் தண்டிக்கப்படு தற்குரிய போர்க் குற்றங்கள் செய்தவர்களே ஆவர் என்றும் மறுப்புகள் கூறப்பட்டன. எனினும், அச்சு நாடுகளைச் சேர்ந்த போர்க் குற்றவாளிகளே பெரு மளவிலிருந்தமையால், அவர்களே விசாரித்துத் தண் டிக்கப்பட்டனர். சப்பானைச் சேர்ந்த போர்க் குற்ற வாளிகளை விசாரித்துத் தண்டிப்பதற்காக அங்கும் ஒரு பன்னாட்டு இராணுவ நீதிமன்றம் செயற்பட் டது. பா.சு.

**போர்க் குற்றங்கள்** என்பவை போர்ச்சட்டங்களை யும் விதிமுறைகளையும் மீறிப் போர் வீரர்களும், போரில் ஈடுபட்டுள்ள மற்றவர்களும் செய்யும் குற்றங் களாகும். நாடுகளிடையேயான சட்டம், போர் சில விதிமுறைகளின்படி நடத்தல் வேண்டும் என்று கூறுகிறது. ஆயுதம் தாங்கிய போர் வீரர்கள், போர் விதிகளை மீறி நடத்தல் போர்க்குற்றமாகும். ஆயு தம் தாங்கிய போர் வீரர்கள் அல்லாதவர்கள் மீதும் ஒற்றர்கள் அல்லாதவர்கள் மீதும் போரில் தொடர் பில்லாதவர்கள் மீதும் எதிரி நாட்டுப் போர்வீரர் களால் காட்டப்படும் பகையும், தாக்குதலும் போர்க் குற்றங்களாகும். மேலும், போர் வீரர்களும், போரில் ஈடுபட்டுள்ள மற்றவர்களும் பொது மக் களைக் கொன்று குவித்தல், ஆயுதமற்றவர்களையும் போரில் ஈடுபடாதவர்களையும் கொன்று குவித்தல், இனப்பகை காரணமாக ஓர் இனத்தை அழித்தல், மேலும் தனிப்பட்டவர்களையும் பொது மக்களையும் தாக்குதல், உடல் ஊனப்படுத்துதல், பெண்களைக் கற்பழித்தல், வன்புணர்ச்சி செய்தல், இன்ப வேட்டை

களில் ஈடுபடுதல், பொருள்களைச் சூறையாடுதல், கொள்ளையடித்தல், நாச வேலைகளில் ஈடுபடுதல், மக்கள் வாழும் இடங்களை அழித்தல் போன்ற யாவும் போர்க் குற்றங்களாகும்.

இன்று நாடுகளிடையேயான சட்டம், போர்க்குற்றங்களை யாரும் செய்யக்கூடாது எனவும் போர் வீரர்கள் அவர்தம் இராணுவ மேல் அதிகாரிகளால் அல்லது மற்ற தலைவர்களால் கட்டாயப் படுத்தப்பட்டால்கூடப் போர்க்குற்றங்களைப் புரியக் கூடாதெனவும் கூறுகிறது. போர்வீரர்களும், போரில் ஈடுபட்ட மற்றவர்களும் போர்க்குற்றங்கள் செய்யாமல் இருக்கக் கடமைப்பட்டவர்கள் என்றும் அது கூறுகிறது.

போர்க்குற்றங்களைச் செய்த ஒருவன் பின்னர்ப் பிடிபடுவானானால் அவன் செய்த போர்க்குற்றங்களுக்காகத் தண்டனையை அடைவான். அவனைப் பிடிக்கும் எந்த நாடும் அவன் எந்தநாட்டில் போர்க் குற்றம் செய்திருந்தாலும், அதற்காக, அவன் பிடிபட்ட நாட்டில் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டிக்கப் படுவான். போர்க் குற்றம் புரிந்தவனைத் தண்டிக்கும் சட்டஉரிமை எந்த நாட்டிற்கும் உண்டு.

**போர்க் கைதிகள்:** நாடுகளிடைப் போரில் ஒரு நாடு, எதிரி நாட்டின் போர் வீரர்களைச் சிறைப்பிடித்தால், அவ்வாறு சிறைப் பிடிக்கப்பட்ட எதிரி நாட்டு வீரர்கள் போர்க் கைதிகள் (Prisoners of Wars) ஆவார்கள். நாடுகளிடைச் சட்டம், சிறைப் பிடிக்கப் பட்ட எதிரி நாட்டு வீரர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. இதற்கென நாடுகளிடையே 1949 - ஆம் ஆண்டு, நான்கு செனிவா உடன்பாடுகள் கையெழுத்தாகி ஏற்றுக்கொள்ளப் பட்டன. அவை, 1) போர்க் கைதிகளை நடத்தும் முறை, 2) தரைப் போரில் காயமுற்ற உடல்நலம் குன்றிய போர் வீரர்களுடைய நலனைக் கவனித்து மேம்படச் செய்தல், 3) கடற் போரில் காயமுற்ற, உடல் நலம் குன்றிய போர் வீரர்களுடைய நலனைக் கவனித்து மேம்படச் செய்தல், 4) போரில் ஈடுபடாத பொதுமக்கள் நலனைப் போர்க் காலத்தில் பாதுகாத்தல் ஆகியவற்றைக் குறிக்கும். இந்த 1949-ஆம் ஆண்டைய செனிவா உடன்பாடுகள் எல்லா நாட்டிற்கும் பொருந்தும். இந்த உடன்பாடுகளை எல்லா நாடுகளும் போர்க் காலங்களில் ஏற்று நடக்க வேண்டும். அவை நடைமுறையில் உள்ளன.

போர்க் கைதிகளைப் பாச உணர்வோடு மனிதனுக்குரிய தேவைகள் எல்லாம் அளித்துப் பண்போடு நடத்துதல் வேண்டும். அவர்கள் விருப்பப் படி அவர்கள் வணங்க விரும்பும் தெய்வங்களை வணங்க அனுமதித்தல் வேண்டும். அவர்களை எக்காரணங்கொண்டும் கொலை செய்தல் கூடாது; துன்புறுத்துதல் கூடாது. ஆனால், தப்பி ஓட முயன்றால், வேறு வழியின்றி அமையுமானால் மட்டும் சுட்டுக் கொல்லலாம். காயமுற்ற உடல் நலம் குன்றிய போர்க் கைதிகள், நன்கு பாதுகாக்கப்படல் வேண்டும். வேண்டிய மருத்துவ வசதிகள் செய்து தர வேண்டும். போர்க் கைதிகளிடையே இனம், நாடு, பால், மதம் போன்ற இன்ன பிற காரணங்கள் கொண்டு வேற்றுமை காட்டக் கூடாது.

போர் நிறுத்தத்திற்குப் பிறகு அமைதிக் காலத்தில், போர்க் கைதிகளைப் பற்றிய விவரங்களை அவர்கள் சார்ந்த நாடுகளுக்குத் தெரிவித்து அவரவர்கள் பிடித்த போர்க் கைதிகளை மாற்றம் செய்து கொள்வது நாடுகளிடையே வழக்கம். ச.மோ.

**பதுங்குகுழிப் போர் முறை:** இது தரையில் பெரிய குழிகளைத் தோண்டி, அதற்குள் மறைந்து கொண்டு போரிடுதல் ஆகும். இது அகழிப்போர் முறை எனவும், பதுங்கற்கிடங்குப் போர்முறை எனவும் வழங்கப் படுகிறது. போர்முறைகளுள் ஒன்றான பதுங்குக் குழிப்போர் முறை (Trench Warfare) முதலாம் உலகப் போர்க்காலத்தில்(கி.பி.1914-18) செல்வாக்குப் பெற்றது.

குழிகளில் தங்கியுள்ள வீரர்கள், எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து எளிதில் தப்பிவிட முடியும். காரணம் துப்பாக்கி, பீரங்கிக்குண்டுகள் தரையின் மேல் உள்ளவர்களைத்தான் சாகடிக்கும். குழிகள் வீரர்கட்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் எதிரிகள் அறியாவண்ணம் எதிரிகளைத் தாக்கவும் உதவி புரிகின்றன. குழிகளில் பதுங்கியிருந்து தாக்குவதால் இப்போர் முறை பதுங்குகுழிப் போர் முறை என்று குறிக்கப்படுகிறது. பெரும்பாலும் இது ஒரு சலனம் அற்ற போர் நடவடிக்கை ஆகும். குழிகளைச் சுற்றிலும் பாதுகாப்பு அமைப்புகளை அமைத்து, காலத்தவணைகளில் எதிரிகளைத் தாக்கவும், தாக்குதலை முறியடிக்கவும் இப்போர் முறை பயன்படுத்தப் படுகிறது. இப்போர் முறையால் எதிரிகள் விரைந்து முன்னேறுவது தடுக்கப்படும். முதலாம் உலகப்போரில் செருமானியர் பதுங்குகுழிப் போர் முறையைப் பின்பற்றித்தான் சிறிது சிறிதாக முன்னேறினர். பள்ளங்களில் மறைந்து கொள்வதும், திடீரென்று குழிகளிலிருந்து வெளிப்பட்டு எதிரிகளைத் தாக்குவதும் அவர்களுக்குக் கைவந்த கலையாகும். குழிகளில் நின்று கொண்டு எதிரிகளின் மீது துப்பாக்கிகளாலும், இயந்திரத் துப்பாக்கிகளாலும் குறிபார்த்துச் சுடுவதும் எளிது.

கொரியப் போரின் இறுதிப் பகுதிகளிலும், வியட்நாம் போரின் போதும், பதுங்குகுழிப்போர்

முறை சில புதிய உத்திகளுடன் கையாளப்பட்டது. இன்றும் இப்போர்முறை பல நாடுகளால் பின்பற்றப் படுகிறது. குழிகளில் பதுங்கி இருப்போர் எதிரிகளின் கண்களுக்குத் தெரியாமல் இருப்பதால் பாதுகாப்பாக இருக்க முடிகிறது. கே. மு.

**போர்க்கருவிகள்:** பண்டைக்காலத்திலிருந்து இன்று வரை மனிதன் பலவிதமான போர்க்கருவி களைப் பயன்படுத்தியுள்ளான். இன்று போர்க்கருவி கள் பல்கிப் பெருகியுள்ளன. எதிரிகளைத்தாக்கவும் (Offensive) எதிரிகளின் தாக்குதலில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ளவும் (Defensive) மனிதன் பல கருவிகளைப் பயன்படுத்துகிறான்.

தொல் பழங்கால மனிதன் கல்லால் ஆன கருவி களைத்தயாரித்து அவற்றைப் பயன்படுத்தினான். பின்னர்ப் போர்க்கருவிகளை உலோகத்தில் தயாரித் தான். அவற்றுள் கத்தி, வாள், வேல், ஈட்டி, கோடரி, வில், அம்பு, கட்டாரி ஆகியன அடங்கும். இவை எதிரிகளைத் தாக்கப் பயன்படுத்தப்பட்டன. மெய்ம் மறை (Armour), கேடயம் (Shield) ஆகியன எதிரி களின் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் பயன்படுத்தப்பட்டன. எஃகால் தயாரிக் கப்பட்ட ஆயுதங்கள் ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைத்துள்ளன. பண்டைத்தமிழர்கள் பயன்படுத்திய போர்க்கருவிகளின் பல வகைகளை இலக்கியம், அகராதி, நிகண்டு முதலிய சான்றுகளால் அறியலாம். பண்டு இருபது வகையான வாள்கள் பயன்படுத்தப் பட்டன. அவற்றுள் உவணி, ஏதி, கடுந்தலை, துவட்டி, நவிர் (மட்டாயுதம், தூவத்தி), நாட்டம், வஞ்சம், வாள் (கட்கம், கரவாளம்), அரிவாள் (கத்தி), கூர் வாள் (சிறுவாள்), கொடுவாள் (குயம், புள்ளம்), ஈர் வாள் (கர பத்திரம்), உடைவாள் (சுரிகை, பத்திரம்), குத்துவாள், புல்லரிவாள் ஆகியன குறிப்பிடத்தக்கன வாகும்.

எதிரியின் யானையைக் குத்த வேல்கள் பயன் பட்டன. பண்டு எட்டு வகையான வேல்களைப் பயன்படுத்தினர் முன்னோர். அயில் (கைவேல், தோமரம்), அரணம், எஃகம் (எறி, ஆயுதம், பீலித் தண்டு), எஃகு, குந்தம், ஞாங்கர், உடம்பிடி, விட்டேறு ஆகியவை வேலின் வகைகள் ஆகும். மழு (பரசு), கணிச்சி, நவியம் (கோடரி), குந்தாலி, குளிர், தண்ணம் முதலான கோடரி வகைகளும் அன்று போரில் பயன்படுத்தப்பட்டன. வில் வில்வீரர்களின் முக்கிய கருவிகளுள் ஒன்று. இதில் கார்முகம், கோதண்டம், துரோணா, சராவசம், முதலான வகை கள் இருந்தன. வில்லில் அம்பை வைத்து நாண் ஏற்றி எதிரிகள் மீது எய்வர். பழந்தமிழர்கள் பதின்மூன்று வகையான அம்புகளைப் பயன்படுத்தினர். அவை அம்பு (பாணம், சரம்), கணை, கதிரம், கதிர், கோ, கோல், தொடை, தோணி, பகழி, பள்ளம், புடை, வண்டு, வாளி முதலான வகையினவாகும். நாணி, பூரம், ஆவல், கொடை, நாரி, நரம்பு, பூட்டு ஆகியன நாணின் வகைகள் ஆகும். முன்னோர்கள் பலவகை யான குறுவாள்களையும், வளைந்த வாள்களையும் பயன்படுத்தினர். வளைந்த வாளின் வகையில் கோணம் (அங்குசம், தோட்டி), கழுக்கடை ஆகியன குறிப்பிடத் தக்கனவாகும். குறுவாளும் மூன்று வகை யினதாக இருந்தது. வீரர்கள் சூலப்படைகளையும் பயன்படுத்தினர். இவற்றுள் சில முத்தலை கொண்ட னவாக இருந்தன. அவர்கள் கதை எனப்படும் தண்டங் களையும் போரில் பயன்படுத்தினர். அவற்றுள் தடி (தண்டம், தண்டாயுதம்), கதை, உலக்கைக் கோல், குறுந்தடி முதலான வகைகள் காணப்பட்டன. எதிரி களை முனைப்புடன் தாக்க வளைதடி என்னும் ஆயுதத் தையும் பயன்படுத்தினர். வளைதடி எறிவதில் முத் தரைய வீரர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர். பண்டு 'பூமராங்கு' போன்ற போர்க் கருவிகளும் பயன்படுத் தப்பட்டன. பட்டாக்கத்தி, சுருள் கத்தி முதலான தாக்கு கருவிகளும், மடுவு (மான் கொம்பு), கேடயம் போன்ற காப்புக் கருவிகளும் பண்டு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. கேடய வகைகளுள் தோலால் செய்யப்பட்ட கிடுகு, மரத்தால் செய்யப்பட்ட பலகை, தாதுப்பொருளால் செய்யப்பட்ட வேதிகை ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கன. எதிரிகளின் அம்பிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள கவசமும் அணிந்திருந்த னர். வெகுதூரத்தில் உள்ள எதிரியின் மீது கட்டாரி வீசப்பட்டது. ஈட்டி ஒரு வலிமை மிக்க போர்க்கருவி.

மேற்கூறப்பட்ட போர்க்கருவிகளே அன்றி வச் சிராயுதம், நாராசம், இலை மூக்கரி, கிளிகடி கருவி, பூங்கருவி, கவண், சிறுசவளம், பெருஞ்சவளம், சக்கரம், கைக்கட்டி, கைவிடுபடை, கைவிடாப்படை, முகண்டி, முசலம், பற்றிரும்பு, சங்கிலி, கன்னக்கோல், பாசம், கவசம், வல்லயம் முதலான நூற்றுக்கு மேற்பட்ட கருவிகளும் அன்று போரில் பயன்படுத்தப்பட்டன.

பண்டைக்காலத்தில் முறையான படைக்கலப் பயிற்சி (Weapon Training) அளிக்கப்பட்டது. தமிழர் கள் தங்கள் நகரங்களைச் சுற்றிலும் கோட்டைகள் கட்டினர். அவை புரிசைகள் எனவும் குறிக்கப் பட்டன. இப்புரிசைகளைப் பாதுகாக்க அவற்றின்மீது பலவகையான காப்புப் பொறிகள் வைக்கப்பட்டிருந் தன. சிலப்பதிகாரத்தில் வளைவிற்பொறி, எறிசிரல், கைபெயர் ஊசி, தொடக்கு, ஆண்டலை அடுப்பு, ஐய வித்துலாம், கருவிரல் ஊகம் முதலான இருபத்தேழு காப்புப் பொறிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

**புதிய காலப் போர்க்கருவிகள்:** பன்னெடுங்கால மாகவே ஒரு நாடு அண்டை நாடுகளுடன் போர் செய்வது வழக்கமாகவே உள்ளது. ஒரு நாடு அண்டை நாட்டுடன் கூட்டுச் சேர்ந்து மற்றொரு நாட்டுடன் போர் செய்வதும் இயல்பே. இப்போர் ஒரு சில நாடு களைத்தான் பாதிக்கும். இதுபோன்ற போர்களில் அவர்கள் மிகப்பெரிய அளவில் போர்க் கருவிகளைப் பயன்படுத்துவது இல்லை. நடைபெற்ற முதல் உலகப் பெரும் போர் உலகை உலுக்கிய முதல் பெரும்போர் ஆகும்.

**முதல் உலகப்போர்** (1914 - 1918): முதல் உலகப் பெரும்போரில்தான் முதல் முறையாக அதிக நாடுகள் கலந்துகொண்டு பலவிதமான புதிய போர்க் கருவிகளைப் பயன்படுத்தின. துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் (Grenades), தொலை தூரத்தில் உள்ள எதிரிகளைத் தாக்கும் சக்தி மிக்க துப்பாக்கிகள், பீரங்கிகள் ஆகியன இப்போரில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டன. எதிரிகளைத் திக்கு முக்காடச் செய்து, கொல்லக்கூடிய நச்சுப்புகை (Poison Gas) முதன் முதலாகப் பயன்படுத்தப் பட்டது.

முதன் முதலாகப போர் விமானங்கள் முதல் உலகப்போரில்தான் பறந்தன. எதிரிகளின் நட மாட்டங்களை வேவு பார்க்கவும், அவர்களது ஆயுத உற்பத்தி சாலைகளைப் படம் பிடிக்கவும் அவை பயன்பட்டன. செருமானியர் செப்ளின் (Jeplin) என்ற இராக்கத விமானங்களைக் கொண்டு பிரிட்டனைத் தாக்கினர். கடற்போரில் செருமானியர் போர்க்கப்பல்களுடன் 'யூ' படகு, நீர்மூழ்கிக்கப்பல்கள் ஆகியவற்றையும் பயன்படுத்தினர். இப்போரில் ஆங் கிலேயர்கள் கடற்கண்ணிகளை (Mines) அட்லாண் டிக்கு, பால்டிக்குக் கடற்கரையோரங்களில் தூவி செருமானியக் கப்பல்கள், துறைமுகங்களில் இருந்து வெளிவரா வண்ணம் தடுத்தனர். இதனால் செரு மானியர் அதிக அளவில் நீர்மூழ்கிக் கப்பல்களைப் (Submarines) பயன்படுத்தினர். நாசகாரிக் கப்பல் களும், வேவுபார்க்கும் கப்பல்களும் இப்போரில் பயன் படுத்தப்பட்டன. இப்போரில் 9,700,000 பேர் இறந்ததால் போர் ஆயுதங்களின் கொடுமையை அறியலாம்.

**இரண்டாம் உலகப்பெரும்போர்** (1939-1945): இப்போரில் பலவிதமான இராக்கத அழிவுக்கருவிகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. சக்திவாய்ந்த இயந்திரத் துப்பாக்கிகளும் எண்ணிறந்த அளவில் பயன்படுத்தப்பட்டன. கவசப் போர்வண்டி (Tanks) என்ற அரக்கப்பீரங்கிகள் இருதரப்பிலும் கையாளப் பட்டன. செருமானியர் தைகர், பாந்தர் போன்ற புதுவகைக்கவசப்போர்வண்டிகளை இப்போரில் பயன் படுத்தியமை குறிப்பிடத்தக்கது. செருமானியர் கவ சம் அணிந்த உந்துவண்டிப் படை, கவசப்போர்வண்டி, பீரங்கி, விமானங்கள் ஆகியவற்றைக்கொண்டு மின் னல் வேகத்தில் தாக்கும்முறையைக் (Blitzkreig)கைக் கொண்டதால் 1939 செப்டம்பரில் போலந்து வீழ்ந் தது. உருசிய வீரர்கள் வழுக்கு வண்டிகளில் ஏறிக் கொண்டு வழுக்குக் கருவிகளைப் பயன்படுத்தினர்.

இரண்டாம் உலகப்போரில் எண்ணிறந்த அளவில் போர் விமானங்கள் பறந்து கொண்டிருந்தன. செரு மானியர் 'இலப்ட்வேபே'(Luftwaffe) விமானங்களை யும், ஆங்கிலேயர் 'இராயல் ஆகாயப்படை' (Royal Air Force) விமானங்களையும் கொண்டு பேரழிவு களை நிகழ்த்தினர். செருமானியர் பிரிட்டிசு நகரங் களின் மீது வி-1, வி-2 (V-1, V-2) போன்ற ஏவு கணைகளைப் (Rocket Bombs) பொழிந்தனர். வல வன் ஏவாப் போர் விமானங்கள் (Pilotless Planes) குண்டுகளைக் கக்கின. செருமானிய இட்லர், நெருப் பிட்டுக்கொளுத்தும் குண்டுகளை (Incendiary Bombs) இப்போரில் எதிரிகளின் மீது வீசினான். ஆங்கிலக் கப்பல்களை அழிக்கச் செருமானியர் காந்தக் குண்டு களையும் (Magnetic Mines) வீசினர். உலகில் முதன் முறையாக 6-8-1945 -இல் அமெரிக்கா, சப்பானின் இரோசிமா (Hiroshima) நகரின் மீது அணுகுண்டை வீசியது. இரண்டாம் அணுகுண்டு 8-8-1945-இல் சப்பானின் நாகசாகி நகர் மீது வீசப்பட்டது. இப் போரில் 54,800,000 பேர்கள் கொல்லப்பட்டனர்.

உலகப் போர்களுக்குப் பின்னர் ஒவ்வொரு நாடும் அணு உற்பத்தியில் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுகின்றது. அமெரிக்காவும், சோவியத்து உருசியாவும் பல புதிய போர்க் கருவி களை உற்பத்தி செய்வதில் முனைந்து ஈடுபட்டுள்ளன. கணிப்பொறி, 'இலேசர்', 'இரேடார்' பொருத்தப்பட்ட மிகவும் கொடிய ஏவுகணைகளையும், உருவாக்கிப் பிற நாடுகளுக்கும் விற்பனை செய்கின்றனர். முப்படைகளும் அவை பயன்படுத்தும் போர்க்கருவி களும் பல்கிப் பெருகியுள்ளன.

**தரைப்படை:** துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் (Pistols), 'இசுடென்' துப்பாக்கி (Sten gun or C.Q.B.), 'பிரன்கன்' என்ற இயந்திரத் துப்பாக்கி (L.M. G.2), அதிவேகமாகவும் வெகுதூரத்திற்கும் செல்லும் இயந்திரத் துப்பாக்கி, கண்ணி வெடி, கைக்குண்டு, வெடிகுண்டு, பீரங்கி, விமான எதிர்ப்புப் பீரங்கி, ஏவுகணை, கண்டம் விட்டுக்கண்டம் பாயும் அணு குண்டு முதலான மிகவும் புதிய கருவிகள் தரைப்ப டையினரால் பயன்படுத்தப்படுகின்றன. இராக்கெட்டு செலுத்தும் கருவிகள் (Rocket Launchers) இன்று பல

நாட்டினராலும் பயன்படுத்தப்படுகின்றன. முன்பு நிலத்தில் மட்டும் செல்லும் கவச வண்டிகளே பயன் படுத்தப்பட்டன. இன்றோ நீரிலும் நிலத்திலும் செல்லக் கூடிய புதிய கவச வண்டிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இந்தியாவில் விசயந்தா, அர்சுன் முதலான புதிய வேகமிக்க கவச வண்டிகள் உள்ளன. தரைப்படையினருக்கு விமானப் படையும் பாது காப்பு அளிக்கிறது.

**கடற்படை:** கடற்போர் விமானங்கள், 'எப்' வகுப்பு நீர்மூழ்கிகள் (சோவியத்து நாடு), விமானந் தாங்கிக் கப்பல்கள், ஏவுகணைகளுடன் கூடிய நாசகாரி கள், சுற்றுக்காவல் கப்பல்கள்,கண்ணி அகற்றிக் கப்பல் கள், கடற்போர் கவச வண்டிகள், நீர்மூழ்கி எதிர்ப் புப்போர் விமானங்கள், கடற்கண்ணி வெடிகள் முத லான புதிய கருவிகள் கடற்படையைப் புதுமைப்படுத் தியுள்ளன. இந்தியா 1986-இல் சோவியத்து நாட்டி னிடமிருந்து எதிர்ப்பு நீர்மூழ்கிகளை வாங்கியுள்ளது. இந்தியா பிரிட்டனிடமிருந்தும் புதிய விமானங்களை வாங்கியுள்ளது. அவ் விமானங்கள் மிகக்குறுகிய தூரத்தில் ஓடி, மேலே கிளம்பவும், நேரே இறங்கவும், இறங்கும்போது கொக்கிகளால் நிறுத்தப்படும் வல்லமையும் கொண்டவை.

**விமானப்படை:** இக்கால உலகம், புதுப்போர் விமானங்கள் உற்பத்தி செய்வதில் பெரும் முன்னேற் றம் கண்டுள்ளது. பல புதிய 'செட்டு' (Jet) போர் விமானங்கள் இன்று பல நாடுகளில் உள்ளன. இந்தி யாவில் 'செட்டு டிரெய்னர் அசீத்'(Jet Trainer Ajeet), 'நாட்' போன்ற விமானங்கள் தயாராகின்றன. பிரிட்டன் காக் 200 (Hawk 200) விமானங்களையும், பிரான்சு 'ஆல்பா செட்டு' (Alpha Jet)விமானங்களை யும் தயார் செய்கின்றன. சோவியத்து நாடு பயன் படுத்தும் மிக் 23, மிக்-27, மிக்-29, 'சகுவர்' (Jaguar) முதலிய வியானங்களும், பிரான்சு பயன்படுத்தும் 'மிரேசு 2000,(Mirage 2000) விமானமும் பெரும் சக்தி வாய்ந்தவையாகும். இவை அமெரிக்காவின் 'F-16' விமானங்களைக்காட்டிலும் சிறந்தவை. அமெரிக்கா 'F – 17' விமானங்களையும் கண்டுபிடித்துள்ளது.

இன்று அமெரிக்கா தயாரித்துள்ள எச்சரிப்பு தரும் விமானம் (Airborne Early Warning- AEW) பல புதிய கருவிகளைக் கொண்டுள்ளது. அமெரிக் காவின் புதிய விமானம் ஒன்று எதிரிகளை வேவு பார்த்து எச்சரிக்கை தருவதுடன் ஆணையும் இடு கின்றது. இது போயிங் ஈ 3 எ (Boeing E 3 A) ஆகும். இதனை ஆவேக்சு (Airborne Warning and Control System; AWACS) எனவும் குறிப்பிடுவர். இவ்வகை விமானங்களில் கணிப்பொறிகள் மின்னணுக் கருவி கள் பொருத்தப்பட்டுள்ளன. எதிரி விமானம் வரும் வேகம், தூரம், உயரம் ஆகிய விவரங்களைத் துல்லிய மாக அறிவிக்கும் வல்லமை கொண்டவை. தன் நாட்டின் மீது பறந்து கொண்டே, எதிரிகளை வேவு பார்க்கும் இவ்வகை விமானங்கள் எதிரிகளைத் துல்லியமாகத் தாக்கும் திறனும் கொண்டவை. வெப் பம் தேடிப்பாயும் ஏவுகணைகளும் (Heat Seeking Rockets) இன்று பயன்படுத்தப்படுகின்றன. இவை எதிரிகளின் விமானங்களைப் பின் தொடர்ந்து தாக் கும் சக்தி கொண்டவை.


போர் விமானங்கள் இரு வகைப்படும். 1) போர் செய்யும் விமானங்கள் (Fighter) 2) குண்டு வீசும் விமானங்கள் (Bomber). 'சூப்பர்சானிக்' வகைப் போர் செய்யும் விமானங்கள் மின்னல் வேகத்தில் பறப்பதுடன் மிகக்குறைந்த உயரத்தில் பறந்து எதிரியின் இலக்குகளை மிகத் துல்லியமாகத் தாக்குகின்றன. இவை தாவுதல், குட்டிக்கரணம் அடித்தல், அசையாமல் திடீரென்று நிற்றல் முத லானவற்றைச் செய்து எதிரிகளைத் திணர அடிக் கின்றன. இவற்றுள் இயந்திரத் துப்பாக்கிகளும், ஏவு கணைகளும் பொருத்தப்பட்டிருக்கும். குண்டு எறி யும் விமானங்கள் உயரப் பறந்து, எதிரியின் இலக்கு களில் அதிக எடையுள்ள சக்தி வாய்ந்த குண்டு களைப் போட்டுவிட்டுத் திரும்பும் திறமை வாய்ந் தவை. இவை மிகுந்த எடைகளைச் சுமந்து அதிக உயரத்தில் பறந்து செல்லும் ஆற்றல் படைத்தவை.

அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விமானங்களில் தாக்குதற்கும் பாதுகாத்துக் கொள் வதற்கும் 'இரேடார்' பொருத்தப்பட்ட ஏவுகணை கள் உள்ளன. சீனாவின் பட்டுப்புழு ஏவுகணைகள் (Silk Worm Missiles) ஒரு புதிய தயாரிப்பாகும். இது நேரே செல்லாமல் வளைந்து வளைந்து சென்று தாக்கும் தன்மையது.

வெகுவேகமாக முன்னேறிக் கொண்டுள்ள அறிவியல் உலகில் மேலும் மேலும் பல புதிய போர்க்கருவிகள் உருவாகிய வண்ணம் உள்ளன. இவற்றால் மனித சமுதாயத்திற்கே பேரழிவு ஏற் படும் என்பதில் ஐயமில்லை. இரா.த.

**போர்ச்சுகல்:** இது ஐரோப்பாக் கண்டத்தின் மேற் குக் கோடியிலுள்ள ஐபீரிய முந்நீரகத்தில் (Iberian Peninsula), இசுபெயினை அடுத்து, அட்லாண்டிக்குக் கடற்கரையில் அமைந்துள்ள மிகச் சிறிய குடியரசா கும். அட்லாண்டிக்குப் பெருங்கடலிலுள்ள அசோர்சு (Asores) தீவுகளும், மெடேராத் தீவுகளும் (Madeira) தன்னாட்சி பெற்றிருந்தாலும் இக்குடியரசில் உள்ளன. இந்நாடு கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் புதிய கடல்வழிகளையும், நாடுகளையும் கண்டுபிடிப்பதில்

முக்கிய பங்கு பெற்றிருந்தது. எனவே, அயல்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்டுச் செல்வம் நிறைந்த நாடாகத் திகழ்ந்தது. இந்நாட்டில் 1974-இல் வல்லாட்சி ஒழிக்கப்பட்டது. இது 1976-இலிருந்து ஒரு குடியரசாக இருந்து வருகின்றது. இதன் தலைநகர் இலிசுபன் (Lisbon).




போர்ச்சுகல்

அசோர்சுத் தீவுகள் வடக்கு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் இலுசுபனுக்கு மேற்கில் 1600 கி.மீ. தொலைவில் உள்ளன. இவற்றின் பரப்பளவு 2278 சதுர கி.மீ. ஆகும். ஐரோப்பிய, ஆப்பிரிக்க, மேற்குப் பகுதிகளுக்குச் செல்லும் கடற்பயணிகள் இடையில் தங்குவதற்குச் சிறந்த இடமாக இருந்த இது, இன்றும் அவ்வாறு பயன்படுகிறது. இயற்கைக் காட்சிகள் நிறைந்த இது சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளது. மெடேராத் தீவுகள் வடக்கு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் இலிசுபனுக்குத் தென்மேற்கில் 960 கி.மீ. தொலைவில் இருக்கின்றன. ஐந்து தீவுகளைக் கொண்ட இக்கூட்டத்தில் மெடேரா பெரிய தீவாகும். இதன் பரப்பளவு 788 சதுர கி. மீட்டர்கள். இதன் தலைநகரான புஞ்சால் (Funchal) அவற்றுள் முக்கியமான தீவாகும். இதன் பரப்பளவு 732 சதுர கி.மீட்டர்கள். இயற்கைக் காட்சிகள் நிறைந்து, அழகுடன் திகழும் இத்தீவிற்கு ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். மெடேராத் திராட்சை மது (Wine) மிகவும் புகழ் பெற்றது.

**புவியியல் அமைப்பு:தட்பவெப்பம்:** மேலைக் காற்றுகளின் விளைவாக இதன் வடபகுதியில் குளிர்ந்த, ஈரமான அட்லாண்டிக்குப் பருவநிலையும், தென் பகுதியில் வெதுவெதுப்பான, வறண்ட மத்தியதரைக் கடல் பருவ நிலையும் நிலவுகின்றன. வெப்பமானது சனவரியில் 10 பாகை செல்சியசிலிருந்து, சூலையில் 21 பாகை செல்சியசு வரை மாறுபடுகின்றது. ஆண்டுச் சராசரி மழை 51 செ.மீட்டரிலிருந்து 100 செ.மீ. வரை பெய்கிறது.

**இயற்கை அமைப்பு:** இயற்கை அமைப்பின் அடிப்படையில் இந்நாட்டை மூன்று வட்டாரங்களாகப் பிரிக்கலாம். ஒன்று வடகிழக்கு மூலையிலுள்ள உயர் நிலப்பகுதி. இது இசுபெயின் நாட்டின் மத்திய பகுதியிலுள்ள மெசுடா (Mesta) உயர்நிலப்பகுதியின் நீட்சியேயாகும். இரண்டாம் பகுதி கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள தாழ்ந்த நிலப்பகுதி. இது இந்நாட்டின் தென்மேற்கு மூலையில் உள்நாட்டிற்குள் ஆற்றுப் பள்ளத்தாக்கு வரை செல்கிறது. இப்பகுதி வேளாண்மைக்கும், மீன் பிடிப்பதற்கும் ஏற்றதாக உள்ளது. முக்கிய நகரங்களான இலிசுபன், போர்ட்டோ (Porto) இரண்டும் இப்பகுதியில் அட்லாண்டிக்குக் கடற்கரையில் அமைந்துள்ளன. மூன்றாம் பகுதி மத்திய உயர் நிலப்பகுதி. இந்நாட்டின் முக்கிய ஆறான தாகசு அல்லது தாசோ (Tagus or Tajo) இதன் நடுவில் கிழக்கு, மேற்காக ஓடி இதனை இரு சமப் பகுதிகளாகப் பிரிக்கிறது. இவ்வாற்றின் வடக்கில் உள்ள பகுதி பொதுவாக மலைப் பாங்கானதாக இருக்கிறது. ஆற்றின் தெற்கில் உள்ளது சமவெளியாக இருக்கின்றது. இந்நாட்டில் ஓடும் பிற ஆறுகள் தூரோ (Douro), கௌடியானா (Gaudiana), மின்கோ (Minho) ஆகியவை.

**பரப்பளவு:** இதன் பரப்பளவு 91,985 சதுர கி.மீ. ஆகும்.

**எல்லைகள்:** இந்நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் இசுபெயினும், தெற்கிலும் மேற்கிலும் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் எல்லைகளாக உள்ளன.

**மக்கள் தொகை:** இதன் மக்கள் தொகை 1,01,90,000 (1985).

**மக்கள்:** இந்நாட்டில் முதன்முதலில் வாழ்ந்தவர்கள் ஐபீரியர்கள் (Iberians). பின்னர்ப் பொனீசியர்கள் (Phoenicians), கெல்டுகள் (Celts), கார்த்தசினியர்கள் (Carthaginians), கிரேக்கர்கள், உரோமானியர்கள், கோத்துகள் (Goths), மூர்கள் (Moors) ஆகியோர் படையெடுத்து வந்து, இந்நாட்டில் தங்கி ஐபீரியர்களுடன் கலந்து விட்டனர். இவர்கள் அனைவரும் எவ்வித வேறுபாடுமின்றிக் கலந்து போர்ச்சுகீசியர் என்றே கருதப்படுவதால் சிறுபான்மையினர் என்னும் சிக்கல் இல்லை. இவர்கள் அனைவரும் போர்ச்சுகீசிய மொழியையே பேசுகின்றனர். ஆப்பிரிக்கக் கண்டத்திலிருந்த இந்நாட்டின் குடியேற்றங்களிலிருந்து வந்த நீக்கிரோக்கள் இந்நாட்டில் குடியேறி வாழ்கின்றனர்.

**மொழி**: இவர்கள் எல்லோரும் போர்ச்சுகீசிய மொழியையே பேசுகின்றனர். எனவே, அது அரசாங்க மொழியாகவும் உள்ளது. இசுபானிசு மொழியைப் போன்று இதுவும் உரோமன் மொழிகளுள் ஒன்றான இலத்தீனிலிருந்து பிறந்ததாகும். இசுபானிய மொழிக்கும், போர்ச்சுகீசிய மொழிக்கும் ஒற்றுமைகள் பல உள்ளன.

**சமயம்**: இந்நாட்டு மக்கள் தொகையில் 94.5 விழுக்காட்டினர் (1981) உரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர்கள். மக்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் 1910-இல் வழங்கப்பட்டது. அதன் விளைவாக இந்நாட்டில் அரசும், சமயமும் பிரிக்கப்பட்டன. இங்குச் சீர்திருத்தக் கிறித்தவர்கள், யூதர், இசுலாமியர் ஆகியோரும் உள்ளனர்.

**வேளாண்மை**: ஐரோப்பாவிலேயே ஏழ்மையான நாடுகளில் ஒன்றான இதன் மக்களுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் தாழ்ந்து உள்ளது. மக்கள்தொகையில் 40 விழுக்காட்டினர் 1900க்கு முன் வேளாண்மையில் ஈடுபட்டு வந்தனர். இன்றுகூட இவர்கள் புதிய முறைகளைப் பின்பற்றாது பழைய முறைகளையே கடைப்பிடிக்கின்றனர். நாட்டின் மத்திய உயர்நிலப் பகுதியே வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது. இங்கு நெல், கோதுமை, பார்லி, ஓட்சு, உருளைக்கிழங்கு, பீன்சு, திராட்சை, எலுமிச்சை, ஆரஞ்சு, அத்தி முதலியன பயிரிடப்படுகின்றன. இவ்வுயர்நிலப்பகுதியின் ஊடே செல்லும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் திராட்சைத் தோட்டங்கள் மிகுதி. குறிப்பாகத் துரோ பள்ளத்தாக்குகளில் திராட்சைத் தோட்டங்கள் மிகுதி. துரோ பள்ளத்தாக்கு (Douro Valley), மெடேரா (Madeira) ஆகிய பகுதிகளில் விளையும் திராட்சையிலிருந்து மது (Wine) தயாரிக்கப்படுகிறது. இந்நாட்டின் தென் பகுதியில் விளையும் திராட்சைப்பழம் புதிதாக அல்லது உலர்ந்ததாக உண்பதற்கு ஏற்றது. நாடு முழுவதிலும் ஒலிவ மரம் வளர்க்கப்படுகின்றது. தாகசு ஆற்றுச் சமவெளியில் நெல் விளைவிக்கப்படுகிறது.

இந்நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு (3 மில்லியன் எக்டேர்) காடாக இருப்பதால் மரங்கள் மிக அதிகமாகக் கிடைக்கின்றன. பைன், ஓக்கு மரங்கள் மிக அதிகம். ஓக் மரத்தின் பட்டை தக்கை (Cork) செய்யப் பயன்படுவதால் உலகில் விற்பனையாகும் தக்கையின் அளவில் பாதி இந்நாட்டில் கிடைக்கின்றது. உலகிலேயே அதிகமான தக்கையை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இது முக்கியமானதாகும்.

**கனிமங்கள்**: இங்குக் கிடைக்கும் கனிமங்களில் மிக முக்கியமானது உலோக வகைத் தாது (Wolframite) ஆகும். இது மின்னிழைமம் (Tungsten) செய்யப் பயன்படுகின்றது. மேலும், இரும்புத்தாது, கந்தகம், நிலக்கரி, தகரம், தங்கம், விண்மம் (Uranium), ஈயம், தாமிரம் வெள்ளைக் களிமண் ஆகியவையும் கிடைக்கின்றன.

**தொழில்கள்**: இயந்திரங்கள், கப்பல்கள், உலோகப் பொருட்கள், பாறை எண்ணெய்ப் பொருட்கள், ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. துணிகள், தக்கை, தோல் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. உணவுப் பொருட்கள், மீன், ஒலிவ (Olive) எண்ணெய், மதுவகைகள் ஆகியவை உற்பத்திசெய்யப்படுகின்றன.

**ஏற்றுமதி**: இந்நாட்டிலிருந்து மதுவகைகள், மீன், தக்கை, மரக்கூழ் ஆகியவை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**இறக்குமதி**: இரும்பு, எஃகு, பருத்தி, உந்துவண்டிகள், பாறைஎண்ணெய் ஆகியவை இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன.

**கல்வி**: மேற்கு ஐரோப்பிய நாடுகளிலேயே இங்குத்தான் கற்றோர் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இந்நாட்டில் 1911-இல் பிறப்பிக்கப்பட்ட சட்டப்படி 6 முதல் 14 வயது வரையிலுள்ள குழந்தைகள் கட்டாயம் கல்வி கற்க வேண்டும். எனவே 7 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளில் 81 விழுக்காட்டினர் பள்ளிக்குச் செல்கின்றனர். ஆனால், ஏழ்மையின் காரணமாக 14 வயதில் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் சென்றுவிடுகின்றனர். இளஞ்சிறார்களுக்குப் பல்வேறு அரசாங்க, தனியார் பள்ளிகள் உள்ளன. இந்நாட்டிலுள்ள 11 பல்கலைக் கழகங்களில் கோயிம்பரா பல்கலைக் கழகம் (Coimbra University) மிகப் பழமையானது. இலிசுபனில் கி.பி.1290-இல் ஏற்படுத்தப்பட்ட இது கி.பி. 1537-இல் கோயிம்பராவிற்கு மாற்றப்பட்டது. இலிசுபனில் உள்ள 5 பல்கலைக் கழகங்களில் 1983-84-ஆம் ஆண்டில் 90,320 மாணவர் பயின்றனர்.

**முக்கிய நகரங்கள்** இந்நாட்டின் பெரிய நகரமும், தலைநகருமான இலிசுபன் (807,937), மெடேரா தீவுக்கூட்டத்தின் தலைநகரான புஞ்சால் (Funchal -44,111), வடமேற்குப்போர்ச்சுகலில் மிகவும் செழிப்பானதும், கோயில்கள் நிறைந்ததுமான பிரகா (Braga-63,033), துறைமுகப்பட்டணமான போர்ட்டோ (Porto-327,368), கோயிம்பரா (Coimbra-74,616), அரசர்கள் வாழ்ந்த இடங்களும், பண்டைய அரண்மனைகளும் நிறைந்த சித்தரா (Cintra), உரோமானியர்கள், மூர்கள் ஆகியோர் ஆட்சிக் காலத்தில் சிறந்து விளங்கிய இவோரா (Evora—34,851) ஆகியவை.

**அரசு**: இந்நாட்டின் அரசியல் அமைப்பு மாற்றப்பட்டு 1976-இல் புதியதாகக் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பு 1982 ஆகசுட்டு 12-இல் சட்ட

மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது புரட்சி அவையைக் (Council of Revolution) கலைத்துவிட்டு, நாட்டின் நிருவாக அதிகாரம் முழுவதையும் குடியர சுத் தலைவருக்கு அளித்தது. அவர் மக்களால் நேரடி யாக 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண் டும். இருமுறை அவர் தொடர்ந்து பதவியிலிருக்க லாம். அவர் பாராளுமன்றத்தில் அதிக இடங்களைப் பெற்றுள்ள கட்சியின் தலைவரைத் தலைமை அமைச்ச ராக நியமிக்க வேண்டும். மேலும், அமைச்சர்கள், செயலர்கள், கீழ்ச் செயலர்கள் ஆகியோரையும் குடி யரசுத் தலைவரே நியமிக்க வேண்டும். இந்நாட்டுப் பாராளுமன்றம் ஒரே அவையைக் கொண்டது. குடியரசின் அவை (Assembly of the Republic) என் னும் அதன் 250 உறுப்பினர்களும் (Deputies), 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

அசோர்சும், மெடேராவும் 1976-லிருந்து தன் னாட்சி பெற்ற வட்டாரங்களாக இருந்து வருகின் றன. அவற்றையும் சேர்த்து இந்நாடு 19 மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 305 நகராண் மைக் கழகங்களும் (Municipal Authorities), 4050 சிற்றூர்களும் (Parishes) அடங்கியுள்ளன. இவை ஒவ் வொன்றையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவை யும், அதற்குப் பொறுப்பான நிருவாகக் குழுவும் நிரு வாகம் செய்கின்றன.

**வரலாறு: பண்டைக்காலம்:** பழங்காலத்தில் இப் பகுதியில் ஐபீரியர்கள் வாழ்ந்து வந்தனர். பொனீசிய (Phoenicians), காத்தசினியக் (Carthaginian) கடற் பயணிகள் கி.மு. 800 – இல் இங்கு வந்தனர். கிரேக்கர்கள் கி.மு.500, 400-ஆம் ஆண்டுகளில் தாகசு (Tagus) ஆற்றின் முகப்பகுதியில், இப்பொழுது இலிசு பன் உள்ள இடத்தில், தங்கள் குடியேற்றத்தை ஏற் படுத்தினர். பின்னர் உரோமானியர் கி.மு. 100 – ஆம் ஆண்டுகளில் அதனை வென்று, குடியேற் றங்களை நிறுவி, இந்நாட்டிற்கு உலூசிதானியா (Lusitania) எனப் பெயரிட்டனர். செருமானிய காட்டுமிராண்டிக் கூட்டத்தைச் சேர்ந்த விசிகாத்து கள் (Visigoths) கி.பி. 400 – ஆம் ஆண்டுகளில் படை யெடுத்துவந்து இந்நாட்டில் வசிக்கத் தொடங்கினர். மூர்களும் (Moors) அரேபியர்களும் கி.பி. 700-இல் இதனைக் கைப்பற்றும் வரை விசிகாத்துகள் இப்பகுதி யில் அமைதியாக வாழ்ந்துவந்தனர்.

**இடைக்காலம்:** மூர்களின் ஆட்சியில் இந்நாடு செல்வம் நிறைந்ததாக இருந்தது. அவர்கள் கி.பி. 1000 – இல் வலிமையிழந்திருந்த காலத்தில் இசுபெயி னிலிருந்து கிறித்தவர்கள் இந்நாட்டின் மீது படை யெடுத்து வந்து கைப்பற்றினர். அவர்கள் முதன் முதலில் போர்ட்டோ அல்லது ஒபேர்ட்டோ(Porto or Oporto) வைக் கைப்பற்றினர். இதன் பெயர் இலத் தீன் மொழியில் போர்ட்டசு (Portus) என்பதால் இந் நாட்டிற்குப் போர்ச்சுகல் என்றபெயர் ஏற்பட்டது.

இசுலாமியர்களின் படையெடுப்பை எதிர்த்துப் போரிட்டவர்களுள் பர்கெண்டியின் என்றி (Henry of Burgundy) என்னும் பிரெஞ்சு வீரர் ஒருவராவர். எனவே, அவருக்கு இசுபெயின் நாட்டு மன்னர் ஆறாம் அல்பான்சோ (Alfonso VI), போர்ட்டோ, கோயிம் பரா (Coimbra) ஆகிய இரண்டையும் கொடுத்து, 'போர்ச்சுகலின் பிரபு' (Court of Portugal) என்னும் பட்டத்தையும் அளித்தார். என்றியின் மகன் அபோன் சோ என்றிக்சு (Afonso Henriques) மூர்களை எதிர்த் துப் போரிட்டுப் பல வெற்றிகளைப்பெற்றார். அவர் கி.பி. 1143-இல் முதலாம் அல்பான்சோ என்னும் பெயரில் போர்ச்சுகலின் அரசர் என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். அவர் இலிசுபனை கி.பி. 1147-இல் கைப்பற்றி, அதனைத் தம்முடைய தலைநகரா கக் கொண்டார். போப்பாண்டவர் கி.பி.1179-இல் அந்நாட்டின் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டார். போர்ச்சுகலுக்கு உரிமையான எல்லா இடங்களும் கி.பி. 1200-இல் விடுவிக்கப்பட்டன. முதலாம் சான் (John I) கி.பி. 1385-இல் போர்ச்சுகலின் அரசரா னார். அவருடைய ஆட்சிக்காலத்தில் போர்ச்சுகல் மிகவும் செழிப்பாக இருந்தது. அவர் இங்கிலாந் துடன் கி.பி. 1386-இல் ஏற்படுத்திக் கொண்ட நிலை யான ஒப்பந்தம் இன்றும் செயற்படுகின்றது. ஐரோப் பாவிலுள்ள மிகப் பழைய உடன்படிக்கை இதுவாகும்.

**புதியகாலம்:** புதிய காலம் தொடங்கியபொழுது புதிய கடல்வழிகளையும், கண்டங்களையும் கண்டு பிடிப்பதில் இந்நாடு முன்னணியில் இருந்தது. முத லாம் சானின் மகன் என்றி, மாலுமி என்றி (Henry the Navigator) என்று போற்றப்பட்டவர். கடற் பய ணங்களை மேற்கொள்ள முன்வந்தவர்களுக்கு எல்லா வகையிலும் ஊக்கமளித்தார். அப்பொழுது தான் மெடேராத் தீவுகள் (Madeira), அசோர்சுத் தீவுகள் (Asores) ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன. இரண்டாம் சான் ஆட்சியின் பொழுது (கி.பி.1481-95) பார்த்தலோமியோ தயசு (Bartolomeu Dias) என்ப வர் கி.பி. 1488-இல் தென்ஆப்பிரிக்காவில் புயல் முனை என்ற நன்னம்பிக்கைமுனை வரை சென்று திரும்பினார். அதன் விளைவாக முதலாம் இமானு வேல் ஆட்சியில் கி.பி. 1495-இல் வாசுகோடா காமா (Vasco da Gama) ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு இந்தியாவில் கள்ளிக்கோட்டையை கி.பி. 1498 – இல் அடைந்தார். எனவே, அல்போன்சோ தீ அல்புகர்க்கு (Alfonso de Albuquerque) இந்தியாவிற்கு சென்று, கி.பி. 1510 – இல் கோவாவைக் கைப்பற்றி, இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்கு வழி

வகுத்தார். பெட்ரோ ஆல்வரசு கேப்ரேல் (Pedo Alvares Cabral) கி.பி. 1500-இல் பிரேசிலை அடைந்ததால் அங்குப் போர்ச்சுகீசியரின் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் கி.பி.1511-இல் மலாகா (Malacca) விலும், கி.பி. 1512-14இல் மொலுக்கசு (Moluccas) எனப்பட்ட இந்தோனேசியாவிலும், கி.பி. 1515-இல் பாரசீக வளைகுடாவிலுள்ள ஆர்மசுத் தீவிலும் (Hormuz Island) தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். சீனாவுடன் வாணிகத் தொடர்பு ஏற்பட்டதுடன், எதியோப்பியா (Ethiopia) வுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. மூன்றாம் சான் காலத்தில் பிரேசிலில் அவர்களுடைய குடியேற்றம் வளர்ந்தது. இந்நாட்டு மன்னர் என்றி கி.பி. 1580-இல் மறைந்ததால் அவிசு (Aviz) மரபினரின் ஆட்சி முடிவுற்றது.

**கேப்சுபர்க்கு, பிரகன்சா மரபுகள்:** என்றி மன்னர் இறந்ததும், இசுபெயின் நாட்டு அரசர் இரண்டாம் பிலிப்பு கி.பி. 1580-இல் முதலாம் பிலிப்பு என்ற பட்டத்துடன் போர்ச்சுகலின் அரசரானார். எனவே, இந்நாட்டில் கேப்சுபர்க்கு மரபினரின் (Habsburg Dynasty) ஆட்சி தொடங்கியது. போர்ச்சுகல் கிழக்கிந்தியத் தீவுகளில் தான் பெற்றிருந்த ஆதிக்கத்தை கி.பி. 1600க்குப் பின்னர்த்தச்சுக்காரரிடமும், ஆங்கிலேயரிடமும் இழந்தது. முதலாம் பிலிப்பு ஆட்சியில் இந்நாடு சுதந்திரமாக இருந்து வந்தது. ஆனால், அவருக்குப் பின்வந்த இரண்டாம், மூன்றாம் பிலிப்புகளின் ஆட்சியில் இது இசுபெயினின் ஒரு மாநிலமாகவே நடத்தப்பட்டு வந்தது. எனவே, போர்ச்சுகீசியர் கி.பி. 1634, 1637-ஆம் ஆண்டுகளில் கலகம் செய்து தோல்வியடைந்தனர். ஆயினும், அவர்கள் பிரான்சின் உதவியுடன் கி.பி.1640-இல் சுதந்திரம் பெற்றனர். அதனால் அவர்களுடைய 60 ஆண்டுச் சிறைவாசம் (Sixty Year's Captivity) முடிந்ததுடன், அந்நாட்டில் கேப்சுபர்க்கு மரபின் ஆட்சியும் முடிவடைந்தது.

பிரகன்சாவின் கோமகன் (Duke of Bragansa)சான் தேர்ந்தெடுக்கப்பட்டு, நான்காம் சான் என்ற பட்டத்துடன், போர்ச்சுகலின் அரசராக ஆனதால் இந்நாட்டில் பிரகன்சா மரபினரின் (Bragansa Dynasty) ஆட்சி தொடங்கியது. இம்மரபினர் கி.பி. 1640 முதல் கி.பி. 1816 வரை ஆட்சி புரிந்தனர். பிரேசிலில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தங்கமும், வைரமும் கண்டுபிடிக்கப்பட்டதால் போர்ச்சுகலின் செல்வம் பெருகலாயிற்று. நெப்போலியன் போர்களின் பொழுது இந்நாடு பிரான்சிற்கு எதிராக இங்கிலாந்துடன் சேர்ந்து கொண்டது. நெப்போலியன் இந்நாட்டின் மீது படையெடுத்தபொழுது, கி.பி. 1807-இல் அரச குடும்பத்தினர் பிரேசிலுக்கு ஓடிவிட்டனர். நெப்போலியனால் கைப்பற்றப்பட்ட இதனைச் சர் ஆர்தர் வெல்லெசுலி, (பின்னர் வெல்லிங்டன் கோமகன் என்னும் விருதினைப் பெற்றவர்) கி.பி.1811-இல் விடுவித்தார்.

**அரசியல் அமைப்புக்குட்பட்ட முடியாட்சியும் குடியாட்சியும்:** போர்ச்சுகீசியப் படையினர் கி.பி. 1820-இல் அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி வேண்டுமெனக்கலகம் செய்யத் தொடங்கினர். ஆறாம் சான் மன்னர் கி.பி. 1821-இல் போர்ச்சுகலுக்குத் திரும்பி வந்து கி.பி. 1822-இல் தாராளமான அரசியல் அமைப்பு ஒன்றைத் தீட்டச்செய்தார். அதனால், மக்களுக்குப் பேச்சுச் சுதந்திரமும், சமய சுதந்திரமும் வழங்கப்பட்டன.வருக்கச் சிறப்புச் சலுகைகள் அனைத்தும் நீக்கப்பட்டு, அரசருடைய அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டது. பிரேசில் விடுதலை பெற்றுவிட்டதாக அறிவித்ததால், அரசர் இப்புதிய அரசியலமைப்பை நீக்கிவிட்டார்.

முதலாம் கார்லசு (Carlos) காலத்தில் குடியாட்சி (Republican), தீவிரவாத (Radical) இயக்கங்கள் தோன்ற, கி.பி.1908-இல் அவரும், அவருடைய மூத்த மகனும் கொல்லப்பட்டனர். அவர்தம் இரண்டாம் மகன் இரண்டாம் மேனுவல் பதவி ஏற்று, அரசியல் அமைப்புக்குட்பட்ட முடியாட்சியை ஏற்படுத்தினார். நாட்டில் ஊழல் பெருகி, நிருவாகச் சீர் அமைப்பு குலைந்தது. எனவே, படையினர் கலகம் செய்து, அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அதனை ஒரு குடியரசாக அறிவித்தனர். ஒரு தாராளமான அரசியலமைப்பு 1911-இல் கொண்டுவரப்பட்டு, அரசியலிலிருந்து திருச்சபை பிரிக்கப்பட்டது. மேனுவல் சோசு தி அர்ரியாகா (Manual Jose de Arriaga) அக்குடியரசின் முதல் தலைவரானார். அடுத்த 15 ஆண்டுகளுக்கு நாட்டில் அரசியல் குழப்பமே நிலவியது. பல்வேறு அமைச்சரவைகள், சராசரியாக 4 மாத கால அளவில், மாறிமாறி வந்தன.

**இரு உலகப் போர்களில்** முதல் உலகப் போரில் போர்ச்சுகல் இங்கிலாந்துடன் சேர்ந்து கொண்டு செருமனிக்கு எதிராகப் போரில் இறங்கியது. செருமனி 1916 மார்ச்சு 9-இல் அந்நாட்டின் மீது போரை அறிவித்தது. அப்பொழுது நாட்டில் குழப்பமும், அரசியல் நிலையற்ற தன்மையும் நிலவியதால் 1926 மே திங்கள் படைப்புரட்சி ஏற்பட்டு, 40-ஆம் அமைச்சரவை நீக்கப்பட்டு, தளபதி அண்டோனியோ தி பிரகாசோ கார்மோனா (General Antonio De Fragaso Carmona) புதிய அரசை நடத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் கி.பி. 1928-இல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஒலிவைரா சலாசாரை (Oliveira Salazar)நிதி அமைச்சராக நியமித்தார். இவர் 1932 - லிருந்து

தலைமை அமைச்சராக இருந்து அந்நாட்டு அரசியலில் முக்கிய பங்குவகித்தார்.

இரண்டாம் உலகப் போரில் போர்ச்சுகல் நடுநிலைவகித்தது. சப்பானியப் படைகள் 1942-இல் போர்ச்சுகீசியத் திமரை (Timor) ஆக்கிரமித்துக் கொண்டாலும், போர்ச்சுகல் போரில் ஈடுபடவில்லை. அச்சுநாடுகளின் நிலை மோசமடைந்த பொழுது நேசநாடுகளின் விமானங்களும், கப்பல்களும் அசோர்சுத் தீவுகளில் தங்குவதற்கு இசைவு அளித்தது. இங்கிலாந்துடனான வாணிகம் குறைந்தது, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி, மக்கள் வறுமையில் வாடினர். அப்பொழுது சலாசாருக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகள் அனைத்தும் நசுக்கப்பட்டன. 1947-மே திங்கள் ஏற்பட்ட கலகம் முறியடிக்கப்பட்டு, தொழிற் சங்கத் தலைவர்களும், படை அதிகாரிகளும் வெர்டி முனைத் தீவுகளுக்கு (Cape Verde Islands) நாடு கடத்தப்பட்டனர். மார்சல் கர்மோனா (Marshal Carmona) 1949 – பிப்பிரவரியில் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1951-இல் இறந்ததும், சலாசார் ஆதரவுடன் தளபதி பிரான்சிசுகோ லோபசு (General Franscisco Lopes) 1951-சூலைத் திங்கள் குடியரசுத் தலைவராக ஆனார்.

**போருக்குப்பின்**: இந்நாட்டின் பொருளாதாரம் இரண்டாம் உலகப் போரில் மிகவும் சீர்கேடடைந்ததால் 1953-இல் இந்நாட்டு அரசு தொழில்துறை, மின்சார உற்பத்தி, போக்குவரத்து, வேளாண்மை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு 6 ஆண்டுத் திட்டம் ஒன்றை வகுத்தது. அமெரிகோ தாமசு (Americo Tomaz) 1958,1965 – ஆண்டுகளில் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சலாசார் முதலமைச்சராகவிருந்தார். அயல்நாட்டுக் குடியேற்றங்களில் அப்பொழுது தொல்லைகள் தொடங்கின. இந்தியா 1961-இல் கோவா, தாமன், தியூ ஆகியவற்றை இணைத்துக் கொண்டது. ஆப்பிரிக்காவில் அதே ஆண்டு கிளர்ச்சி தொடங்கியது. பின்னர், 1962-இல் போர்ச்சுகீசியக் கினியாவிலும், 1964-இல் மொசாம்பிக்கிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன.

**குடியாட்சிச் சீர்திருத்தங்கள்**: மார்செலோ கேடானோ (Marcello Caetano) 1968 - செப்டம்பர் 29-இல் தலைமை அமைச்சராகி, கடும்நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனவே, படை அதிகாரிகள் 1974-ஏப்பிரல் 25–இல் அவர் ஆட்சியை நீக்கிவிட்டு உள்நாட்டில் குடியாட்சியையும், ஆப்பிரிக்காவில் அமைதியையும் நிலைநாட்ட வேண்டுமென்ற வேண்டுகோளுடன், தளபதிஅண்டோனியோதிஇசுபைனோலா (General Antonio de Spinola) தலைமையில் எழுவர் கொண்ட ஒரு குழுவை நியமித்தனர். கினி பிசு (Guinea-Bissau), மொசாம்பிக்கு (Mozambique), ஏவர்டி முனைத் தீவுகள், சாவோ தோமும் (Sao Tome), பிரின்சிபி (Principe), அங்கோலா (Angola) ஆகிய குடியேற்றங்களுக்கு 1974-75-ஆண்டுகளில் விடுதலை அளிக்கப்பட்டது. அதன் பின்னர்ச் சமஉடைமையாளர்களுக்கும்(Socialists), பொதுவுடைமையாளர்களுக்கும் இடையே போராட்டங்கள் தொடங்கி ஆட்சியில் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன. பிரான்சிசுகோ மேனுவல் தி கார்னெய்ரோ (Franscisco Manuel de Carneiro) தலைமையிலான குடியரசுக் கூட்டுக்கட்சி தேர்தலில் வெற்றிபெற்று, 1980-சனவரியில் அவர் தலைமை அமைச்சரானார். அவர் விமான விபத்தில் உயிர் இழந்ததால், பிரான்சிசுகோ பிண்டோ பால்சிமோ (Francisco Pinto Balsemao) 1981 – சனவரியில் தலைமை அமைச்சரானார். அவர் 1982 – இல் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்த புரட்சிப்படை அவையைக் (The Military Council of the Revolution) கலைத்தார். சி.இரெ.

**போர்ச்சுகீசிய கினி**: ஆப்பிரிக்கக் கண்டத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது போர்ச்சுகீசிய கினி (Portugese Guinea). போர்ச்சுகீசியரின் குடியேற்றமாக விளங்கிய இந்நாடு, இன்று கினி-பிசு (Guinea-Bissau) என்று குறிப்பிடப்படுகின்றது. இதன் வடக்கே செனகல் (Senegal) நாடும், கிழக்கு, தென்கிழக்கில் கினியக் குடியரசும் (Republic of Guinea) அமைந்துள்ளன. இதன் பரப்பளவு ஏறத்தாழ 36 – ஆயிரம் சதுரக்கிலோ மீட்டர்கள். கினியின் கணக்கெடுப்பின்படி 1980-ஆம் ஆண்டின் மக்கள் தொகை 5,73,000 ஆகும்.

இந்நாடு பெரும்பாலும் சமதளப் பகுதியாகவே உள்ளது. இந்நாட்டில் பாயும் ஆறுகள் கச்சேன் (Cachen), சீபா (Geba), கொருபால் (Corubal) ஆகியவை. இறுதி இருஆறுகளும் போக்குவரத்துக்கும் பயன்படுகின்றன. இந்நாட்டின் வண்டல்மண் பகுதிகள் மிக வளம் பொருந்தியவை. அடர்த்தியான காடுகளும் இங்குக் காணப்படுகின்றன. பெரும்பான்மை மக்களின் தொழில் வேளாண்மையே ஆகும். நாட்டின் பொருளாதாரமும் வேளாண்மையை நம்பியே உள்ளது. வேர்க்கடலை, தினை (Millet), நெல் ஆகியன பெருமளவு பயிர் செய்யப்படுகின்றன. கடலோரப் பகுதிமக்கள் மீன்பிடித்தலை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். அரிசியைத் தவிர மீன் இவர்களின் முக்கிய உணவாகும். உணவுப் பொருட்கள், கச்சாப் பொருட்கள், கொப்பரைத் தேங்காய், ஒருவகைப் பனங்கொட்டைப் பருப்பு

(Palm Kernel), தோல் போன்றவை முக்கிய ஏற்றுமதிகளாகும். தொழிற் பொருட்கள் அனைத்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் ஆப்பிரிக்கர். ஏறத்தாழ ஐந்து விழுக்காடு மக்களே ஆப்பிரிக்கர் அல்லாதவராவர். ஆப்பிரிக்கர் பாலண்டே (Balante), புலானி(Fulani), மாண்டியாகோ (Mandyako)ஆகிய குலப்பிரிவுகளைச் (Tribes) சார்ந்தவர்கள். பெரும்பான்மை ஆப்பிரிக்கர் தம் குலமரபுச் சமய வழிபாடு செய்கின்றனர்(Tribal Religion). இசுலாமிய சமயமும் சிலரால் பின்பற்றப் படுகின்றது. ஐரோப்பியரின் வருகைக்குப் பின் கிறித்தவ சமயமும் இங்குப் பரவலாயிற்று.

இருண்ட கண்டமெனக் கருதப்பட்ட ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியான இந்நாட்டினை வெளியுலகிற்கு நூனோ திரிசுதோவு (Nuno Tristao) என்ற போர்ச்சுகீசியர் அறிமுகப்படுத்தினார் (கி.பி. 1446). போர்ச்சுகீசியர் வசமான இந்நாட்டிலிருந்து, ஆப்பிரிக்க மக்கள் தென்அமெரிக்க நாடுகளில் அடிமைகளாக விற்கப்பட்டனர். போர்ச்சுகீசியரிடமிருந்த பகுதிகளைக்கவர ஆங்கிலேயரும், பிரான்சுக்காரர்களும் முயன்று தோற்றுப் போயினர். ஆப்பிரிக்கக் கண்டத்தில் இந்நூற்றாண்டில் ஏற்பட்ட சுதந்திர உணர்வு இப்பகுதியையும் பாதித்தது. கினி, வெர்டி முனைத் தீவுகளின் ஆப்பிரிக்கச் சுதந்திரக் கட்சி (The African Party of Independence for Guinea and Cape Verde Islands) போர்ச்சுக்கீசியர்களுக் கெதிராக விடுதலைப் போரினைத் தொடங்கியது. போர்ச்சுகீசியக் கினி 1973 – ஆம் ஆண்டுச் செப்டம்பரில் சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அதற்குக் கினி – பிசு என்ற புதிய பெயரும் சூட்டப்பட்டது. ஓராண்டுக்குப்பின் போர்ச்சுகீசியத் தலைநகர் இலிசுபனில் ஏற்பட்ட உடன்பாடு அதனை உறுதி செய்தது. அடுத்த ஆண்டு வெர்டி முனைத் தீவுகளும் சுதந்திரம் அடைந்தன. அச் சுதந்திர நாட்டின் தலைநகரம் பிசு, ஒரு முக்கிய துறைமுகப் பட்டினமாக விளங்குகின்றது.

மு. த.

**போர்ச்சுகீசிய மொழி**: இந்தோ – ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் அடங்கும் உட்பிரிவுகளுள் 'உரோமான்சு' மொழி (Romance Language) களும் ஒன்று. அம் மொழிகள் 1)இலத்தீன் 2) கிழக்குப் பிரிவு, 3) மேற்குப் பிரிவு என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன. போர்ச்சுக்கீசியமொழி மேற்குப் பிரிவு மொழிகளுள் ஒன்றாக அமைந்துள்ளது. அம்மொழி இன்று ஏறத்தாழ 8,50,00,000 மக்களால் பேசப்படுகிறது. அவர்களுள் ஏறத்தாழ 90,00,000 பேரே இதன் தாய்நாடாகிய போர்ச்சுக்கல் நாட்டில் உள்ளனர். மீதமுள்ளோருள் ஏறத்தாழ 7,20,00,000 பேர் தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாட்டிலும், ஏறத்தாழ 30,00,000 பேர் அங்கோலா, மொசாம்பிக்கு, கினி முதலிய ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளிலும் கோவா, தியூ, தாமன் ஆகிய இந்தியப் பகுதிகளிலும் ஏறத்தாழ 2,00,000 பேர் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் உள்ளனர்.

'உரோமான்சு' மொழிகள் அனைத்தும் இலத்தீன் மொழியிலிருந்து தோன்றியவையே. ஐபீரியத் தீவுகள் பத்தில் கி.பி. 5 – ஆம் நூற்றாண்டுவரை உரோமப் பேரரசு சிறந்திருந்த வேளையில் இலத்தீன் பேச்சு மொழியே பொதுவழக்காகக் கருதப்பட்டது. ஆனால், அதன் பின்னர் உரோமப் பேரரசின் செல்வாக்குக் குன்றிய வேளையில் இலத்தீன் பேச்சு மொழி பல கிளை மொழிகளாகப் பிரிந்து, கி.பி. 5 முதல் 8 – ஆம் நூற்றாண்டு வரை செருமானியரின் ஆதிக்கத்தின் கீழும், அராபியர்களின் ஆதிக்கத்தின் கீழும் அந்தக் கிளை மொழிகள் ஒவ்வொன்றும் தனித்தனி மொழிகளாக வளரத் தொடங்கின. அவ்வாறு வளர்ந்த 'உரோமான்சு' மொழிகளுள் ஒன்றே போர்ச்சுகீசிய மொழியாகும். இம்மொழி மேலும், வளர்ந்தவரலாறு பற்றி டாக்டர் அகத்தியலிங்கம் (1968) கீழ்க்காணுமாறு கூறுகின்றார். கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் (1143) அபன்சோ என்றிக்சு (Afanso Henrigues, 1106-85) என்பான், காசுடில்லியோன் மன்னனான அல்பான்சோவை (Alfanso VII) வென்று தன்அரசினைத் தாகூசு (Tagus) பள்ளத்தாக்கில் நிறுவினான். பின்னர் கி.பி. 1147–இல் அராபியர்களை வென்று இலிசுபனைக் கைப்பற்றிப் போர்ச்சுக்கல் அரசுக்கு வழி வகுத்தான். பிரெஞ்சு மொழியின் செல்வாக்குப் பரந்து காணப்பட்ட அப்பகுதியில் கி.பி. 10–ஆம் நூற்றாண்டு முதலே போர்ச்சுகீசு மொழியாக வளரத் தொடங்கியது. போர்ச்சுகீசின் முதல் எழுத்துச் சான்று கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

இவ்வாறு வளர்ந்து வந்த இம்மொழி, கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற்குள் இலக்கிய – இலக்கணங்களிலும் செழுமை பெற்றுப் போர்ச்சுகல் நாட்டிற்கே உரிய தனி மொழியாக நிலைபெற்றுவிட்டது. அந்நிலையில் இந்தியாவைக் கண்டறியப் புறப்பட்ட போர்ச்சுகீசியர்கள் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டிற்குள் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற கண்டங்களையும் கண்டுபிடித்தனர். அதனால் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டு முதலே தென்அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாட்டில் பெரும்பான்மை மொழியாக இது வளர ஆரம்பித்தது. இன்று ஏறத்தாழ 7,20,00,000 பேர்பிரேசில் நாட்டில் இம்மொழியைப் பேசுகின்றனர் என்றால் இவர்களின் ஆதிக்கம் எந்த அளவு வேரூன்

றியிருந்தது என்பதை உணரலாம். இதுபோன்று ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட குடியேற்ற ஆதிக்கத்தின் பலனாக மொசாம்பிக்கு, அங்கோலா, திமோர், மாகோ (Macao) போன்ற நாடுகளிலும் இம்மொழி பேசப்பட்டது. இதனால், தாய்நாடாகிய போர்ச்சுகல் நாட்டில் பேசும் மக்கள் தொகையைவிடப் பிறநாடுகளில் போர்ச்சுகீசு மொழி பேசுவோரின் தொகை பன்மடங்காகவுள்ளது.

மேலும், 'போர்ச்சுகீசு கிரியோல்' என்னும் தன்மையில் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளாகிய சான்சிபார் (Zanzibar), மொம்பசா (Mombasa), மெலிண்டா (Melinda) போன்ற இடங்களிலும் பேசப்படுகிறது.

இம்மொழி தாய்நாட்டில் பேசப்படுவதற்கும் பிறநாட்டில் குறிப்பாகப் பிரேசில் நாட்டில் பேசப்படுவதற்கும் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிரேசில் போர்ச்சுகீசிய மொழியில் பழைய பண்புகள் அதிகமிருப்பினும் சிவப்பிந்திய மொழிகளின் செல்வாக்கும் காணப்படுகிறது. பொதுவாகப் போர்ச்சுகீசிய மொழி, பிற மேற்கு உரோமான்சு மொழிகளைப் போன்றே அமைந்துள்ளது.

**மொழியின் பொது அமைப்பு**: இம்மொழியில் உள்ள 26- எழுத்துகளுள், ã,õ,e என்பன தவிர்த்து மற்ற 23 எழுத்துகளும் k,w,y என்பன நீங்கலாக ஆங்கில வரிசைப்படியே அமைந்துள்ளன. k,w,y என்ற மூன்றும் பிறமொழிச் சொற்களில் மட்டுமே வருகின்றமையால், போர்ச்சுகீசிய அகரவரிசையில் இவை இணைக்கப்படவில்லை. சொற்களில் உள்ள எழுத்தமைப்பு (Spelling) இப்பொழுது பெரும்பாலும் நிலையாக்கம் பெற்றிருப்பினும், சிறுபான்மை, மாறுபட்ட எழுத்தமைப்பு உடைய சொற்களும் உள்ளன.

இம்மொழியில் சிறப்புச் சுட்டு, பொதுச் சுட்டு என்று இருவகைச் சுட்டுகள் உள்ளன. இவை ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் வெவ்வேறு விதமாகவும் ஒருமை, பன்மை இரண்டிற்கும் தனிப்பட்ட விதத்திலும் அமைந்துள்ளன.

இம்மொழியில் உள்ள வினைச் சொற்கள் அர் ஈறு, எர் ஈறு, இர் ஈறு எனும் முப்பிரிவுகளுள் அடக்கப்படுகின்றன. வினைச் சொற்கள் இடம், காலம், எண், பால் போன்ற இலக்கணக் கூறுகளை இடைநிலைகளாலும் விகுதிகளாலும் காட்டுகின்றன.

இரா.பா.

**போர்ட்சுமவுத்து உடன்படிக்கை**: இந்த உடன்படிக்கை உருசிய-சப்பானியப்போரை (1904-5) முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்த உடன்படிக்கை 1905-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 5-ஆம் நாள் போர்ட்சுமவுத்து(Portsmouth) கப்பற்படைத் தளத்தில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தியோடோர் உரூசுவெல்ட்டு தலைமையில் நடந்த அமைதிப் பேச்சு நிகழ்ந்த கூட்டத்தில் கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் சிறப்பும் அருமையும் கருதி உரூசுவெல்ட்டிற்கு 1906-ஆம் ஆண்டு 'நோபல்' பரிசு வழங்கப்பட்டது.

மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் உருசியாவின் ஆதிக்கத்தைச் சப்பான் விரும்பவில்லை. அதுவே இப்போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது. உருசியாவின் கப்பற்படையைச் சப்பான் 1904 – ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 8-ஆம் நாள் எந்தவித முன்னறிவிப்பும் இன்றித் தாக்கியது. இந்தத் திடீர்த் தாக்குதலால் உருசியா பல இன்னல்களுக்கு உள்ளானது. மாசுகோவிலிருந்து 8,800 கி.மீ. தொலைவிலுள்ள 'திரான்சு-சைபீரிய' (Trans- Siberian) இருப்புப்பாதை வழியாகப் போர்க் கருவிகளைக் கொண்டு வருவது உருசியாவிற்கு மிகவும் கடினமாக இருந்தது. மேலும், உருசியா, போருக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால், சப்பான் நன்கு பயிற்சி பெற்ற போர் வீரர்களையும் சிறந்த தளபதிகளையும், அதிக எண்ணிக்கையிலான போர்க் கப்பல்களையும் கொண்டிருந்ததோடு, போருக்கு ஆயத்தமாகவும் இருந்தது.

உருசியப் படை 1904-இல் கொரியாவிலிருந்து மஞ்சூரியாவிற்கு விரட்டப் பட்டது. போர்ட் ஆர்தர் தவிர ஏனையவற்றை உருசியா இழந்து விட்டதால், அதைக்காக்கப் போராடியது. முக்டன் போர்க்களத்தில் (1905) உருசியர்களால் சப்பானியத் தாக்குதல்களைத் தடுக்க இயலவில்லை. இறுதியில் 1905-சனவரி 2-ஆம் நாள் போர்ட் ஆர்தர் சரணடைந்தது. அதற்குப் பின்னரும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த போர் மே திங்களில் முடிவுக்கு வந்தது. செப்டம்பரில் போரமைதி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

போர்ட்சுமவுத்து உடன்படிக்கையின்படி இலியோட்டுங்கு (Liaotung) பகுதியில் உருசியாவிற்கு இருந்த உரிமைகளையும் தெற்கு மஞ்சூரியாவையும், அங்குள்ள இருப்புப்பாதைகளையும், சுரங்கத் தொழிலையும், ஏனைய அனைத்து உரிமைகளையும் சப்பான் பெற்றுக் கொண்டது. சப்பானுக்குக் கொரியா மீதிருந்த பொருளாதார, இராணுவ, அரசியல் ஆதிக்கத்தை உருசியா ஒப்புக்கொண்டது.

உருசியா போர் நட்ட ஈட்டுத் தொகையும், சகாலின் (Sakhalin) தீவு முழுவதையும் தனக்குத் தரவேண்டும் எனச் சப்பான் வற்புறுத்தியது. இதை உரூசுவெல்ட்டு ஏற்றுக் கொள்ளவில்லை. சகாலின் முந்

நீரகத் தென்பகுதியில் பாதியட்டும் கொடுக்கப்பட்டது. உருசியா போர் நட்ட ஈட்டுத் தொகை ஏதும் தர மறுத்து விட்டது.

உருசியாவும், சப்பானும் மஞ்சூரியாவிலிருந்து தங்கள் படைகளைத் திரும்பிப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தன. மஞ்சூரியா இருப்புப் பாதையை வணிகப்போக்குவரத்துக்கன்றி அரசியல் காரணங்களுக்காக இரு நாடுகளும் பயன் படுத்தக்கூடாது என முடிவு செய்யப்பட்டது. சீன நாட்டின் தொழில் வணிக வளர்ச்சிக்கான செயல் திட்டங்களுக்கு உருசியாவும் சப்பானும் தடையாக இருத்தல் கூடாது என்பது உறுதியளிக்கப்பட்டது.

அப்போரில் வெற்றிக்குப்பின் சப்பான் தன் ஆதிக்க வளர்ச்சியை அதிகப்படுத்திக் கொண்டது. அதுவே, முதல்உலகப் போரில் சப்பானின் தோல்விக்கு வழிவகுத்தது. ஒரு சிறு நாடு ஒரு வல்லரசை வெற்றி கொண்டது, ஆசியாவில் தேசிய உணர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அப்போரினால் உருசியாவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக உள்நாட்டுக்குழப்பங்கள் ஏற்பட்டன. அத் தோல்விக்குப் பின் உருசியாவில் புரட்சிக் கருத்துகள் வலுப்பெற்று கி.பி. 1917 – இல் மாபெரும் புரட்சியொன்று ஏற்பட்டது. சப்பான் தன் ஆதிக்கத்தைப் படிப்படியாகச் சீனாவில் ஏற்படுத்தியதன் விளைவாகத் தோன்றிய சீர்திருத்த இயக்கங்கள் அன்னிய நாடுகளின் ஆதிக்கத்தைச் சீனாவிலிருந்து அடியோடு ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. அதனால், சீனாவில் 1911-இல் தோன்றிய பெரும் புரட்சி, சீனாவின் வளர்ச்சிக்கே அடிப்படையாக அமைந்தது. மு.ந.

**போர் நரம்புப்பிணி**: போரில் நேரடியாக ஈடுபட்டிருப்பவர்கள் அதிகப்படியான அச்ச எதிர் வினைகளாலும், ஏக்கத்தாலும் நரம்புப்பிணிகளுக்கு ஆளாகின்றனர். இதை முதல் உலகப் போரின் போது கண்டறிந்து அதற்குப் போர் நரம்புப்பிணி (War Neurosis) என்று பெயரிட்டனர். நரம்புப்பிணி என்பது ஒரு மனவெழுச்சி சார்ந்த இன்னல். பொறுப்புகளை புறக்கணிப்பதற்கு மிகையாகப் பயன்படுத்தப்பட்ட நடத்தை. ஏக்கத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்படும் பாதுகாப்புச் செயல்முறை நரம்புப்பிணியாக மாறுகின்றது. ஆனால், இது உளப்பிணிபோல் கடுமையானதன்று. இந்த நிலையில் இயல்பாக ஒரு மனிதன் ஏக்கம், மிகுந்ததுயரம், இன்னல்கள் ஆகியவை கொண்டு அவனுடைய வேலைக்குத் தகுதியற்றவனாகின்றான்; மற்றவர்களோடு தொடர்பு கொள்ளவும் தகுதியற்றவனாகின்றான். அப்படிப்பட்ட மனிதன் அடிக்கடி மிகைப்படுத்தப்பட்ட பாதுகாப்புச் செயல் முறைகளைப் பயன்படுத்திக் கவலை அல்லது ஏக்கத்தைப் போக்க முயலுகின்றான். பொது மக்களிடையே நரம்புப்பிணியாளர்கள் நடமாடிக் கொண்டிருந்தாலும், அது கடுமையான நிலைக்கு வந்தாலொழிய அடையாளம் காணமுடியாது. அதனுடைய காரணங்கள் பொதுவாக மனவெழுச்சிச் சீர்கேட்டில் காணப்பட்டாலும் கிடைக்கின்ற சான்றுகள் பல. பொதுச் சமுதாயத்தில் (Civil) நடைபெற்ற ஆராய்ச்சிகளிலிருந்தும், இராணுவப் பதிவேடுகளிலிருந்தும் கிடைப்பது என்னவென்றால், நரம்புப்பிணி வடிவங்களின் நிகழ்வுகள் நரம்புப்பிணிக்கு ஆட்பட்ட குடும்பங்களில்தான் மிகுதியாக இருக்கின்றன என்பதாகும். ஆனால், எந்த அளவுக்குப் பிறப்பு மரபுகளின் விளைவுகள் இதில் எதிரொலிக்கின்றன என்பது தெளிவாகவில்லை. இத்துறையில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் தருகின்ற புள்ளிவிவரங்கள் இராணுவத்தில் பணிபுரிகின்ற ஓரணு இரட்டையர்கள், ஈரணு இரட்டையர்கள் எந்த விகிதத்தில் நரம்புப்பிணிக்கு இலக்காகியிருக்கின்றனர் என்று காட்டுகின்றன. ஓரணு இரட்டையர்கள் ஈரணு இரட்டையர்களைவிட ஒன்றரை மடங்கு அதிகமான நரம்புப்பிணிக்கு ஆளாகின்றனர். சூழ் நிலைகளின் அடிப்படைகள் நரம்புக் கோளாறுகளுக்கான காரணங்களுள் ஒன்றாக இருக்கின்றன என்பதை இராணுவத்திலிருந்து கிடைக்கின்ற விவரங்கள் காட்டுகின்றன. பிறப்பு மரபியல் கூறுகளும் உடல் சார்ந்த கூறுகளும் எந்தச் சூழ்நிலையிலும் நோய்க்குறிகளை வெளிப்படுத்தும் என்றாலும், இராணுவச் சூழ்நிலை மட்டுமே மூல காரணமாக இருந்திருப்பதைப் போர்க் கைதிகளின் வாழ்க்கை வரலாறுகள் காட்டுகின்றன. போர் நரம்புப்பிணியால் பலர் வருந்தியிருக்கின்றனர்.

தனியாரின் வாழ்க்கைச் சுதந்திரமும் வளர்ச்சியும் தடைப்படுத்தப்பட்டால் அதற்கு ஆட்பட்டவர்கள் கடுமையான மன அழுத்தத்திற்குட்படுகின்றனர். வாழ்க்கையின் பொருளும் நம்பிக்கையும் முற்றிலும் அழிக்கப்படுகின்ற சூழ்நிலையில் ஒருவருடைய வாழ்க்கைச் சூழ்நிலை பொருத்தப்பாட்டையிழந்து மன அழுத்தமுள்ளதாகி விடுகின்றது. போர்க் காலத்தில் சிறைப்பிடிக்கப்பட்டுத்தனித்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் வாழ்க்கை வரலாறுகள் துயர்மிகுந்ததாக இருக்கின்றன. முதல் உலகப் போரின் போதும் இரண்டாம் உலகப் போரின் போதும் அண்டை நாடுகளுக்கிடையில் நடைபெறுகின்ற போர்களின் போதும் ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு மிகவும் கொடுமையாக நடத்தப்பட்டிருக்கின்றனர். எந்த விதமான வாழ்க்கை வசதியுமில்லாமலும், வெளியில் எங்கும் செல்ல முடியாமலும், சித்திரவதைகளுக்கு ஆட்படுத்தப்பட்டும், போர்க்

கைதிகள் நடத்துகின்ற வாழ்க்கை இறுதியில் நரம்புப் பிணிகளின் அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றது.

முதலாம் உலகப் போரின்போதுதான் போர் வீரர்கள் நரம்புப்பிணிக்கு ஆட்படுகின்றனர் என்பது கண்டறியப்பட்டது. அமெரிக்க உளவியல் வல்லுநர் உட்வொர்த்து (Woodworth, R.S.) என்பவர் போர் நரம்புப் பிணியை அடையாளம் காண்பதற்கு ஒரு சோதனையை உருவாக்கினார். புறஅதிர்ச்சிப்புண் நரம்புப்பிணி (Traumatic Neurosis) என்பதுதான் போர் நரம்புப்பிணியாகக் கருதப்படுகின்றது. இந்தப் புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணி பெரும்பாலும் இடர்களாலும், அதிர்ச்சிகளாலும் நிகழுகின்றது. இது ஒரு திடீர் உணர்ச்சிநிலை. இந்தச் சீர்கேட்டை உண்டாக்குகின்ற முக்கியமான காரணக்கூறு புற நிலையான இயல்பையுடையது. அதனால் இதை முன் கூட்டியே கூறுகின்ற கூறுகள் இல்லாமலில்லை. ஆனால், அவை இதில் அவ்வளவு முக்கியத்துவம் பெறுவதில்லை. இப்பிணிக்கு ஆளானவர்களுள் பலர் இயல்பு நிலையில் உள்ளவர்கள் என்றும், முன்பெல்லாம் இயல்பு நிலையில்தான் இருந்தார்கள் என்றும் நம்பப்பட்டது. புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணி சாதாரணமாக உணர்ச்சி அதிர்ச்சி (Hysteria) வடிவம் கொள்ளுகின்றது. இது மாற்று உணர்ச்சி அதிர்ச்சி (Conversion Hysteria), ஏக்கம் சார்ந்த உணர்ச்சி அதிர்ச்சி (Anxiety Hysteria) அல்லது அந்நோயின் தாக்குதல் வடிவமாகவுமிருக்கலாம். புறஅதிர்ச்சிப்புண் நரம்புப்பிணியுடையவர்கள் ஆயிரக்கணக்கிலிருக்கின்றனர். அவர்கள் தலைவலி, வலிகள், சோர்வு முதலியவற்றால் துன்புற்று வருந்துவதாக முறையிடுகின்றனர்.

ஒரு வரலாற்று நிகழ்ச்சி இதை விளக்க முடியும். நார்வே நாட்டில் முதல் உலகப் போரின் போது காயமடைந்து சிகிச்சை பெறுவதற்காக வந்த ஒரு இராணுவ அதிகாரி தலைவலி, ஏக்கம், சோர்வு, அச்சத்தை உண்டாக்கும் கனவுகள், களைப்பு ஆகியவற்றால்வருந்திக்கொண்டிருந்தார். பின்வாங்கிக் கொண்டிருந்த படைவீரர்களுக்குப் பாதுகாப்பாக, அவர்கள் கடற்கரைக்கு வெற்றிகரமாக வந்து சேருகின்ற வரையில் பின்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். அங்கு அவர்களுக்குப் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால், அங்கு ஓர் ஏற்பாடுமில்லாததால் ஏமாற்றமடைந்தார். அங்கு அவர் ஓர் குண்டு வெடித்ததால் தூக்கி எறியப்பட்டு உணர்விழந்தார். நினைவு திரும்பப் பெற்ற அவர் தம் கைகளும் முகமும் எரியும் பாறை எண்ணெய்த் தீயினால் சுடப்பட்டுச் சித்திரவதைக்கு ஆளாகியிருப்பதைக் கண்டார். ஒரு விமானத்தில் எடுத்துச்செல்லப்பட்டபோது, அவ்விமானம் குண்டு வீச்சுக்கு இலக்கானது. இறுதியாக அவர் கடுமையான அதிர்ச்சியுற்ற நிலையில் இசுகாட்லாந்துக்குக் (Scotland) கொண்டு செல்லப்பட்டார். ஆறுமாதங்கள் மருத்துவ விடுதியில் மருத்துவம் அளிக்கப்பட்டார். குணமடைந்து மறுபடியும் தம் கடமையைச் செய்வதற்குத் திரும்பிச் சென்றார். ஆனால், பொறுப்பான வேலை தரப்படவில்லை. ஏனென்றால் அந்தக் குண்டு வெடித்து ஏற்பட்ட அதிர்ச்சியில் அவர் தம் நினைவை இழந்துவிட்டார். சிகிச்சையில் அவர் படிப்படியாக அவர் தம் நினைவைத் திரும்பப் பெற்றார். நடைபெற்ற துன்பியல் நிகழ்ச்சிகளை விரிவாக ஒன்றன் பின் ஒன்றாகக் கூறினார். இந்த நிகழ்ச்சி வரலாறு புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணிக்கு (போர் நரம்புப் பிணிக்கு) ஒரு மிகச்சிறந்த எடுத்துக் காட்டு.

இதிலுள்ள திடீர் நிகழ்ச்சிக் காரணம் ஒரு புற நிலையான இயல்பைக் கொண்டிருக்கின்றது. இது அந்த அதிகாரியினுடைய பிணியின் காரணத்தை நிருணயம் செய்கின்றது. அவர் எப்பொழுதும் இயல்பான நிலையிலேயே இருந்திருக்கிறார். அவருடைய உடல் சார்ந்த அதிர்ச்சி முக்கியமான காரணமாக அமைகிறது. ஏனென்றால், அது அவரைச் சூழ்நிலையில் அப்போதைக்குப் பொருத்தப்பாடு செய்து கொள்ள முடியாமற் செய்து விடுகின்றது. உடல் சார்ந்த அதிர்ச்சி, இந்தப் புற அதிர்ச்சிப்புண் நரம்புப் பிணியில் முக்கியமாகிறது. இந்த விதமான அதிர்ச்சி நிகழ்ச்சிகள் போர் நரம்புப்பிணிகளில்தான் காணப்படுகின்றன என்பது உண்மை என்றாலும், பொதுச் சமுதாயத்திலும் நடைபெறுகின்றன. எடுத்துக் காட்டாகப் போக்குவரத்து விபத்துகள், சுரங்க விபத்துகள் ஆகியவை அதிர்ச்சிகளைத் தோற்றுவித்து நரம்புப் பிணிகளை உண்டாக்குகின்றன. ஆனால், அனுபவத்தின் புறநிலை, திடீர் நிகழ்ச்சி, அவற்றின் கடுமைநிலை ஆகியவை புறஅதிர்ச்சியின் புண் நரம்புப்பிணியிலிருந்து சாதாரண நரம்புப்பிணியைப் பிரித்தறிய உதவுகின்றன. இந்தச் சீர்கேட்டை அதிர்ச்சி மட்டுமே உண்டாக்குகின்றது என்று கருத வேண்டியதில்லை. பலர் இத்தகைய விபத்துக்களிலிருந்து பின் விளைவுகள் ஏதுமின்றியும் குணமடைந்திருக்கின்றனர்.

சான்றாக, மது அருந்துபவர்கள் மிகுதியாக அருந்திவிட்டு, விழுந்து, தாக்குதலுக்கு ஆளாகின்றவர்கள் நரம்புப்பிணிக்கு இலக்காவதில்லை. மின்சார அதிர்ச்சிகளுக்கு ஆளானவர்களும் அதிர்ச்சி பெற்று மயக்கமடைகின்றனர். ஆனால், நரம்புப்பிணிக்கு இலக்காவதில்லை. எனவே, அதிர்ச்சியால் தனியாளின் எதிர்வினை என்னவோ அதுதான் நரம்புப்பிணியை நிருணயம் செய்கிறது. அதுவும் அவருடைய முந்திய ஆளுமை நிலையைப் பொறுத்தது. எனவே, புற

அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணிக்கு (போர் நரம்புப்பிணி) இலக்கானவர் ஏற்கெனவே மனவெழுச்சிச் சிக்கல்களைக் கொண்டவராக இருக்கவேண்டும். அதை அவர்தெரிந்து கொண்டிருக்கவில்லை. போர் வீரர்களிடம் மிகவும் பொதுவாகக் காணப்படுவது முரண்பாடாகும். போர் முனையில் ஏற்படப் போகின்ற ஆபத்தினால் தூண்டப்பட்ட அச்சத்திற்கும் கடமையுணர்ச்சிக்குமிடையிலுள்ள முரண்பாடு அவர்களிடமுள்ள மனவெழுச்சிச் சிக்கலாகும். ஒரு போர் வீரன் சாவைக் கண்டு அச்சப்படுகின்றான். ஆனால், சாவைவிட அதிகமாக அச்சப்படுவது ஒரு கோழையாக இறந்துவிடக்கூடாது என்பதுதான். மேலே காட்டிய நிகழ்ச்சி வரலாற்றில் இராணுவ அதிகாரி, வெறுப்பும் ஏமாற்றமும் கொண்டதற்குக் காரணம் வாக்களித்தபடி போக்குவரத்துச் சாதனம் அங்கில்லாததாகும். புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணியில் இப்படிப்பட்ட கூறுகள் முக்கிய பங்கேற்கின்றன. ஒரு சாதாரண போர் வீரன் இராணுவத்திற்கு எதிராகக் குறைகளைக் கொண்டிருக்கின்றான். தளபதி மீதுள்ள கோபத்தை அழுத்திவைத்துள்ளான். வீட்டிலுள்ளவர்கள் மீது ஏக்கம். அவர்கள் குண்டு வீச்சுக்கு இலக்காகி இறந்தாலும் இறக்கலாம். தாம் விட்டு வந்த தொழில் என்னவாயிற்றோ? மனைவியும், குழந்தைகளும் எப்படியிருக்கின்றார்களோ என்ற கவலை. இவை ஒரு போர் வீரரின் ஒழுங்குணர்வை வீழ்த்துகின்றன. அதனால் இறுதி அதிர்ச்சிக்கு அவர் எளிதாகப் பலியாகி விடுகின்றார். இவையெல்லாம் மனவெழுச்சிச் சிக்கல்களாக இயங்குகின்றன. அச்சம், ஏக்கம், கவலை, சினம், வெறுப்பு, ஒழுங்குணர்வு, வீரம் ஆகியவை பல்வேறு படித்தரங்களில் இயங்குகின்றன.

மேலே காட்டிய நிகழ்ச்சி வரலாற்றில் அந்த இராணுவ அதிகாரியின் கடமையுணர்ச்சியும் ஒழுங்குணர்வும் மிகவும் உயர்ந்த நிலையினவாகும். புற அதிர்ச்சிப்புண் (போர்), நரம்புப்பிணியினால் துன்புறுகின்றவர்களிடம் காணப்படும் மிகவும் குறிப்பிடத்தக்க அறிகுறியாகும் இது. அவர்கள் அஞ்சியவர்களோ, கோழைகளோ,வலிமையற்றவர்களோ அல்லர். அவர்கள் ஒழுக்கத்திற்கும், சமூகத் தேவைகளுக்கும் ஒரு வலிமைமிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கின்றனர். அதனால்தான் போர் நரம்புப்பிணிகள் அடிக்கடி இடைநிலையிலுள்ள அதிகாரிகளையும், அவர்களுக்கு மேலுள்ள அதிகாரிகளையும் மிகவும் தாக்குகின்றன. அவர்களே சிப்பாய்களின் தரத்திலுள்ள இராணுவ வீரர்களை விட மிகவும் அதிகமான பொறுப்புகளை வகிக்கின்றனர். அவர்கள் தங்கள்கீழுள்ள வீரர்களின் முன் ஓர் உயர்ந்த வகையான வீரத்தை நிலைநாட்ட வேண்டியவர்களாக இருக்கின்றனர். மிகுந்த வீரத்தோடு வாழ்வதற்குக் காட்டுகின்ற மன இறுக்கங்கள் நரம்புப்பிணிகளில் வெளிப்படலாம். இவ்விதமான கடமையுணர்ச்சியும் உயர்ந்த ஒழுங்குணர்வும் உளநரம்புப்பிணியாளர்களைக் கோழைகளிடமிருந்தும் அச்சப்படுகின்றவர்களிடமிருந்தும் பிரித்துக் காட்டுகின்றன.

கடமையுணர்ச்சியில் மிக்க ஈடுபாடுடையவர்களாக இருப்பதால் நரம்புப் பிணியாளர்கள் மிகச் சிறந்த போர் வீரர்களாக இருக்கின்றனர். இந்த நிகழ்ச்சி வரலாறுகளில் காணப்படும் துணிவு அல்லது வீரம் இயற்கையானது என்று கூறமுடியாது. இது சில பழைய அச்சத்திற்கோ, உணர்ச்சி நிறைவின்மைக்கோ காட்டுகின்ற ஈடு நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. ஒரு துணிவான மனப்பான்மையை ஏற்றுத் தாழ்வு மனப்பான்மையைச் சரிசெய்து விடுகின்றனர். அச்ச உணர்ச்சி தைரியமான நடவடிக்கைகளால் ஈடு செய்யப்படுகின்றது. முதல் உலகப் போரின் போதும் (1914–18) இரண்டாம் உலகப் போரின் போதும் (1939 – 45)மனவெழுச்சிச் சிக்கல்களால் போர் வீரர்கள் போர் நரம்புப்பிணிகளுக்கு இலக்கானார்கள். மேலும், சிறைப் பிடிக்கப்பட்டவீரர்கள் இருதரப்பிலும் புற அதிர்ச்சி நிகழ்ச்சிகளால் தூண்டப்பட்ட அதே மனவெழுச்சிச் சிக்கல்களான, அச்சம், கவலை, ஏக்கம் முதலியவற்றால் போர்ச்சிறைகளில் நரம்புப் பிணிகளால் தாக்கப்பட்டிருக்கின்றனர். போர்நடந்துகொண்டிருக்கும் போது குண்டுவீச்சுக்கு மிகவும் அஞ்சிய பொதுமக்களும் அதே போன்ற புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணிகளுக்கு ஆளாயினர். போரின் கால நீட்டமும் போர் நரம்புப்பிணிகளை உண்டாக்குகின்றன. நீண்ட நாள்கள் நடைபெற்ற கொரியாப் போரும், வியட்நாம் போரும் அமெரிக்க இராணுவத்தினர் கலந்து கொண்ட போர்களாகும். நீண்ட நாள்கள், நாடு, குடும்பம், உறவினர், தனிநலம் ஆகியவற்றைத் துறந்த அமெரிக்க வீரர்கள் பலர் மிக எளிதில் புற அதிர்ச்சிகளால் தூண்டப்பட்டுப் போர் நரம்புப்பிணிக்கு ஆட்பட்டனர். எனவே, போர் நரம்புப்பிணிகளுக்கடியில் புற நிலையான அதிர்ச்சி தரும் நிகழ்ச்சிகளும் மனவெழுச்சி சார்ந்த எதிர்வினைகளும் காரணங்களாக இயங்குகின்றன. மு.இரா.

**துணை நூல்கள்:**

**Burrow, T.**, The Neurosis of Man, Routledge & Kegan Paul Limited, London, 1949.

**Coleman, J.C.**, Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons & Co., Private Limited, Bombay, 1972.

**Hadfield, J.A.**, Psychology and Mental Health, George Allen and Unwin Ltd., London, 1952.

Sargent,S.S., and Williamson, R.C., Social Psychology, The Ronald Press Company, New York, 1958.

போர்பந்தர் குசராத்து மாநிலத்தில் உள்ள ஒரு கடற்கரைப் பட்டணம். இது கத்தியவார் முந்நீரகத்தில், அரபிக் கடற்கரையில், அகமதாபாதிலிருந்து 475 கி.மீ. தூரத்திலும், இராசுகோட்டிலிருந்து (Rajkot) 213 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இது காந்தியடிகள் பிறந்த ஊராகையால் புகழ்பெற்றுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியின் பொழுது செத்வா (Jethwa) இராசபுத்திர அரசின் தலைநகரமாக இருந்தது. சிறந்த கடல் வாணிக மையமான இந்நகர் கொங்கணத்துடனும், மலபார்க் கடற்கரையுடனும் வாணிகம் செய்ததுடன், பலுசிசுத்தானம், பாரசீக வளைகுடா, அரேபியா, கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுடன் வாணிகத் தொடர்பும் கொண்டிருந்தது. இந்நகர் முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டது. இதனைச் சுற்றிலும் ஒரு கோட்டை பழங்காலத்தில் இருந்தது. அது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இடிக்கப்பட்டது. பழங்காலத்தில் இது சுதாமாபுரி என்றும் குறிப்பிடப்பட்டது. பகவத் கீதையில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வம் கிருட்டிணனின் நண்பனான சுதாமனின் நினைவாக இப்பெயர் வைக்கப்பட்டிருந்தது. இதன் மக்கள் தொகை1,33,307 (1981).

காந்தியடிகள் பிறந்த இடமாகையால் அவர் வாழ்ந்த வீடு, அவர் பிறந்த அறையுடன் ஒரு தேசிய நினைவுச் சின்னமாகப்'புகழ்க்கோயில்'(Kirti Mandhir) என்னும் பெயரில் மிகச் சிறந்த கட்டடமாக எழுப்பப்பட்டுள்ளது. அதில் காந்தியடிகள் பயன்படுத்திய பொருட்கள், அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள், நூற்பதற்கும் வழிபாட்டிற்கும் என அமைந்த பெரிய அறையினில் உள்ளன. காந்திய இலக்கியங்களைக் கொண்ட நூலகம் ஒன்றும் இருக்கின்றது. நுழைவாயிலில் உள்ள அறையில் பளிங்குக் கற்களில் அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவர் 79-ஆம் வயதில் மறைந்ததை நினைவுகூரும் வகையில் இங்கு ஏறத்தாழ 26 மீட்டர் உயரமுள்ள கோபுரம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அவ்விடத்தில் ஒவ்வொரு நாளும் 79 – விளக்குகள் ஏற்றப்படுகின்றன. அங்குச் சிறுவர் பள்ளி (Nursery School) ஒன்றும் உள்ளது.

சிறந்த தொழில் மையமான இங்குப் பருத்தித் துணிகள், சிமெண்டு, ஓடுகள், உப்பு, தாவரஎண்ணெய், வேதியல் பொருட்கள் முதலியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இது வெண்ணெய்க்கும் பாலிலிருந்து பெறப்படும் பிற பொருட்களுக்கும் சிறந்த இடமாக விளங்குகின்றது. மீன்பிடித்தல் முக்கிய தொழிலாகும். இதன் தட்பவெப்ப நிலை கோடைக் காலத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்றதாக உள்ளது.

**போர் பந்தர் சிற்றரசு**:இந்திய விடுதலைக்கு முன்னர்ப் போர்பந்தரைத் தலைநகராகக் கொண்டு செத்வா (Jethwa) இராசபுத்திரர்கள் 'இராணா' (Rana) என்ற பட்டத்துடன் ஆண்டு வந்தனர். ஒரு சிற்றரசான போர்பந்தர், கத்தியவார் முந்நீரகத்தில், அரபிக் கடற்கரையில், 1627-சதுர கி.மீ. பரப்பளவு கொண்டிருந்தது. இதில் போர்பந்தர் நகருடன் 97-கிராமங்கள் அடங்கியிருந்தன. இதன் மக்கள் தொகை 1901-இல் 82,640. அவர்களுள் இந்துக்கள் 71,642, இசுலாமியர் 9,741, சமணர்கள் 1,158, எஞ்சியோர் பிற சமயத்தவர். இங்கு ஒரு வகைச் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு சாந்து எதுவும் இன்றிக் கட்டடங்களைக் கட்டினர். மழைக்காலத்தில் அச்சுண்ணாம்புக் கற்கள் இறுகி, இணைப்புகள் அடைபட்டு, ஒரே கல்லாக மாறிவிடும். இங்கு வளமிக்க கருப்பு மண்ணும் சில இடங்களில் வளம் குறைந்த சிவப்பு மண்ணும் உள்ளன. இச்சிற்றரசில் பாதர் (Bhadar), சோர்டி (Sorti), வர்து (Vardu), மின்சார் (Minsar), ஓசாது (Ojat) ஆகிய ஆறுகள் உள்ளன. ஆண்டில் 50-இலிருந்து 75 செ.மீ. வரை மழை பெய்கிறது. கோதுமை,பருத்தி, சோளம், கம்பு, நெல், பருப்பு வகைகள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. கடற்கரையிலுள்ள உப்புநீர் பாயும் சதுப்பு நிலங்களில் நாணலும், புற்களும் மட்டும் இருந்தன. பருத்தி, பட்டு, ஆகியவற்றாலான துணிகள் நெசவிற்கு இது புகழ் பெற்று விளங்கியது. கடலிலிருந்து பலவகை மீன்கள் பிடிக்கப்படுகின்றன. சி.இரெ.

போர்வைக் கோப்பெருநற்கிள்ளி, உறையூரிலிருந்த சோழன் தித்தன் என்பவன் மகன். இவன் ஆமூர் மல்லனோடு மற்போரிட்டுவெற்றி பெற்ற நிலையினைச் சாத்தந்தையார், நக்கண்ணையார் ஆகிய இருவரும் போற்றிப் பாடுகின்றனர்.

'பசித்துப் பணைமுயலும் யானை போல் இருபுறமும் முறியமோதி மல்லனை வென்ற நிலையைப் போரரும் தித்தன் காண்க' என்று சாத்தந்தையார் (புறம்.80)பாடுகின்றார். மேலுமவர்'கடலினும் பெரிது அவன் படை; இடிபோலக் களிறு முழங்கும்; யார் கொல் மள்ளன் கைப்பட்டோரே; அளியர் தாமே' என்று பகைவர் நிலைக்கு வருந்திப் பாடுகிறார் (புறம்.81). பொருநனோடு நெடுந்தகை செய்த போரின் விரைவையும், சிறப்பையும் அழகிய உவமை ஒன்றால் விளக்கியுள்ளார். விழாக்காலம்.பெண்,மகப்

பேறடைந்திருக்கிறாள். மழை பொழிகிறது. மாலை நேரமாயிற்று. அச்சூழலில் வீட்டுக்கு விரைந்து திரும்பும் நோக்கத்தோடு கட்டிலுக்கு வாரினைப் பொருத்துபவன் கையிலுள்ள ஊசிபோல விரைந்து செயற்பட்டான் என உவமை கூறப்படுகிறது (புறம்.82).

நக்கண்ணையார் பெருநற்கிள்ளிமேல் காதல் கொண்ட பெண்ணாக நின்று பாராட்டுகின்றார். 'அவன்மேல் காதல் கொண்டதால் தொடி கழல்வதை அஞ்சுகிறேன். அவன் தோளை அணைக்கவும் அஞ்சுகிறேன்' என்று தன் தடுமாற்றத்தை எடுத்துரைக்கிறாள் (புறம்.83). வீட்டில் இருந்தும் தன்மேனி வாடிய நிலையையும், வறுமையில் வாடினாலும் தலைவன் தோள் சிறப்புடன் உள்ள நிலையையும் ஒரு பாடலில் பாடுகிறார். 'தலைவன் வெற்றி பெற்றான் என்று ஒரு சாராரும், அன்று என்று ஒரு சாராரும் கூறுவர். நான் அவன் வெற்றி பெற்றதைக் கண்டேன்' என மற்றொரு பாடலில் பாடுகிறார். (புறம்.85). நக்கண்ணையார் இம்மூன்று பாடல்களையும் உண்மையில் காதல் கொண்டு பாடினாரா அல்லது அகப்பொருளமைப்பில் காதலி கூற்றாகப் பாடினாரா என்று திறனாய்வாளரிடையே கருத்து வேறுபாடு உள்ளது.

நா.செ.

**போர்ன்மத்து** இங்கிலாந்தில் தென்மேற்கு ஆம்சயரில் உள்ள (Hampshire) போர்ன் ஆற்றின் கழிமுகத்தில் இருக்கும் பட்டணமாகும். போர்ன் மத்து (Bournemouth) புதிய கால நகரமாக விளங்குகிறது. இந்நகரத்தின் வளர்ச்சி கி.பி.1841-இல் மந்தமாகவே காணப்பெற்று, ஏறத்தாழ 26-கட்டடங்களையே கொண்டு விளங்கிற்று. இந்நகரம் கி.பி. 1870-இல் ஏற்பட்ட இருப்புப்பாதை அமைப்பிற்குப் பின்பு மிகுதியாக முன்னேற்றம் அடைந்தது. குழாய்கள் மூலமாகக் குடிநீர் வசதி செய்யப் பெற்றுப் பெருமளவிலான வீடுகள் புதிய வடிகால் அமைப்புடன் விளங்குகின்றன. இது, வேளாண்மையில் மிகவும் பின்தங்கியுள்ளது. பைன் மரங்கள், மணற்பாங்கான பகுதியில், பூலி துறைமுகத்தின் கிழக்குப் பகுதிவரை பரவியுள்ளது. இந்தப் பயனற்ற நிலப்பகுதி சிறிய ஆற்றுச் சமவெளிப் பகுதிகளால் துண்டிக்கப்படுகின்றது. இங்கு ஓடும் சிறிய ஓடைகளில் ஒன்றான போர்ன் (Bourne) ஓடை அலங்கரிப்புடன் கூடிய பல பூங்காக்கள் வழியாகச் சென்று கடலில் கலக்கின்றது. இதன் கழிமுகப்பகுதியில் முக்கிய வாணிக மையமும், கலை அரங்கம், மக்கள் மன்றம் (Assembly Hall) ஆகியவற்றைக் கொண்ட பொழுதுபோக்கு மையமும் வளர்ச்சியடைந்துள்ளன. இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் நிலவும் மிகவும் விரும்பத்தக்க வெப்பநிலை கோடைக்காலச் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்கின்றது. போர்ன்மத்து பதவி ஓய்வு பெறும் மக்களின் இன்பவாழ்வு மையமாக விளங்குகின்றது. கடற்கரையோரமாக நிறைய உணவருந்தகமும், தங்கும் விடுதிகளும், அமையப் பெற்றுள்ளன. புரோமிநேடு (Promenade) கடற்கரைப் பகுதி ஏறத்தாழ 8 கி.மீட்டர் நீளம் வரை பரவியுள்ளது. கடற்கரையின் பின்பகுதியில் தங்கும் வசதிகளுடன் கூடிய பெரிய கட்டடங்களும், வாணிக மையங்களும் நிறைந்துள்ளன. உட்பகுதியில் அமைந்துள்ள சிறிய தொழிற்சாலைகள் இந்நகரத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றன. பல நாட்டு மக்களின் வருகை காரணமாகப் போர்ன் மத்து இங்கிலாந்தின் மாநாடுகள் நடைபெறும் மையமாகவும் விளங்குகின்றது. ஆயிரக் கணக்கில் பயணிகள் இந்நகருக்கு வந்து போகின்றனர். அழகிய பூங்காக்கள், கலைக் கூடம், கல்லூரிகள், நூல் நிலையம் மற்றும் அருங்காட்சியம் ஆகியவை நிறைந்து போர்ன்மத்து இயற்கை எழிலோடு காணப் பெறுகின்றது. இதன் மக்கள் தொகை 1,45,100(1983).

இரா.கி.

**போர்னியோ**, கிழக்கு இந்தியத் தீவுகளில் உள்ள 2000 தீவுகளுள் ஒன்றாக அமைந்திருப்பது. இது உலகில் மூன்றாவது மிகப்பெரிய தீவு ஆகும். போர்னியோ (Borneo) 3,00,000 சதுர கி.மீ. பரப்பளவு உடையதாகும். இது மிகவும் அடர்ந்த காடுகளைக் கொண்டுள்ள தீவு ஆகும். பூமத்தியரேகையால் இத்தீவு இரு பெரிய சமமான . பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. போர்னியோவின் வடபகுதி ஆங்கிலேயருக்குச் சொந்தமானது. அவற்றுள் இலாபுவான் என்ற சிறிய தீவு உட்படப் பல வடபோர்னியோக் குடியேற்றங்கள் சாராவாக்கு,புருனெய்(Brunai)என்ற பாதுகாப்பரசு ஆகிய பகுதிகள் உள்ளன. செசுசெல்டன், வடபோர்னியோவின் தலைநகர் ஆகும். அத்தலைநகர் சிங்கப்பூர், மணிலா, ஆங்காங்கு, தார்வின் (ஆசுதிரேலியா) ஆகிய நகரங்களுடன் வான வழியாக இணைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள அனைத்துப் போர்னியோப் பகுதிகளும் இந்தோனேசியக் குடியரசினுள் அடங்கியுள்ளன.

போர்னியோவைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகளில் பச்சைப் பசேல் என்ற அடர்ந்த மரங்களும், புதர்களும் உள்ளன. உயர்ந்த மழை அளவும், இதமான தட்பவெப்ப நிலையும் இங்கு இருப்பதால் தான், ஆண்டு முழுதும் பசுமையான மரங்களும், செடிகொடிகளும், புதர்களும் உள்ளன. பெரும்பாலான இடங்களில் விந்தையான உருவ அமைப்புகளைக் கொண்ட தாவரங்கள் உள்ளன. அத்தாவரங்கள் புழு, பூச்சிகளை வளைத்துப் பிடித்துத் தின்னும் ஆற்றல் பெற்றவையாகும். இந்தியா, பர்மா ஆகிய

நாடுகளில் காணப்படும் விலங்குகளே போர்னியோ விலும் காணப்படுகின்றன. அரிசி, தேங்காய், இரப்பர் போன்றவை இங்கு முக்கிய விளைபொருள் களாகும். புருனெய்யில் பல எண்ணெய்க் கிணறு கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்க அமிசமாகும்.

சாவாவைப் போன்று எட்டு மடங்கு பெரியதாக உள்ள போர்னியோத் தீவின் மக்கள்தொகை குறை வாகவே உள்ளது. பண்பாட்டு மரபும், வரலாற்று முக்கியத்துவமும் வாய்ந்ததாகப் போர்னியோ உள்ளது. இந்தியப் பண்பாடு போர்னியோவில் ஆங் காங்கே, இன்றும் நின்று நிலவுவதை அனைவரும் காணலாம். கிழக்குப் போர்னியோவில் உள்ள கோம் பெங்கு என்ற இடத்தில் மரத்தால் கட்டப்பட்ட ஆலயம் ஒன்று உள்ளது. தவிரவும் சிவன், புத்தர் ஆகியோர்க்குஏறத்தாழ கி.பி. 4 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல் உருவங்களும் அங்கு உள்ளன. மேற்குப் போர்னியோவில் நடத்தப்பட்ட அகழ் வாராய்ச்சிகளின் விளைவாகப் போர்னியோ பண் டைக்காலத்தில் இந்தியாவின் குடியேற்ற நாடாக இருந்திருக்க வேண்டும் என்று கருத இடம் உள்ளது.

மு.உமா.

துணை நூல்கள்:

Jasper, H. Stembridge., The World Oxford University Press, London, 1953.

Sathianatha Iyer, R., A Political and Cultural History of India, Vol.I, S. Viswanathan Printers & Publishers Private Limited, Madras, 1972.

**போரசு (கி.மு. 4-ஆம் நூற்றாண்டு):** வடமேற்கு இந்தியாவில் சீலம் நதிக்கும் (விதசுதா அல்லது கைடாசுபசு – Vitasta or Hydaspes) சீனாபு (அகிகைன்சு) நதிக்கும் இடைப்பட்ட அரசினை ஆண்டு வந்தவன் போரசு (Porus). இவன் அஞ்சா நெஞ்சம் கொண்ட மாபெரும் வீரன். பௌரவ வமி சத்தைச் சேர்ந்த இவன் மூத்த போரசு எனவும் குறிக்கப்பட்டான். இவன் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்த கிரேக்க மாவீரன் அலெக்சாந்தரை எதிர்த்து வீரத்துடன் போரிட்ட மாவீரன்; ஏறத்தாழ 2 மீ. உயரமும் கட்டான உடலும் கொண்ட மாமன்னன்.

தட்சசீலத்தில் அம்பி என்னும் மன்னன் அலெக்சாந் தருக்குப் பணிந்தபின், போரசைத் தனக்குப் பணிபுரி யும்படி, தூது அனுப்பினான் அலெக்சாந்தர். தன் மானமும் தன்னம்பிக்கையும் மிக்க போரசு, அலெக் சாந்தருக்கு அடிபணிய மறுத்துப் போருக்கு ஆயத்த மானான். சீலம் நதியில் பெருவெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. கிரேக்கப்படைகள் ஒருகரையிலும், போரசின் படைகள் மறு கரையிலும் அணிவகுத்து நின்றன. சில நாள்கள் சென்ற பின், கிரேக்கப் படை இரவில் மறைமுகமாகச் சீலம் நதிக்கரை ஓர மாகவே 20 கி.மீ. தொலைவு சென்று, குறுகிய வளைவைக் கடந்து எதிர்க்கரையில் உள்ள காரிச் சமவெளியை அடைந்து, போரசின் படைகளைத் தாக்க முன்னேறியது. அதனைக் கண்டு அதிர்ச்சியுற்ற போரசு தன் மகனின் தலைமையில் 2000 வீரர் களையும் 120 தேர்களையும் அனுப்பிக் கிரேக்கப் படைகளுடன் போரிடச் செய்தான். தேர்ந்தெடுக்கப் பட்ட 11,000 வீரர்களைக் கொண்ட கிரேக்கப்படை யின் முன்பு, இந்தியப்படை தோல்வி கண்டது. போரசின் மகனும் போரில் இறந்தான்.

பின்னர்ப் போரசின் தலைமையில் இருதிறத் தாருக்கும் போர் நடைபெற்றது. போரசின் படை யில் 50,000 போர் வீரர்களும், 3000 குதிரைகளும், 13,000 தேர்களும், 130 போர் யானைகளும் இருந்தன என்று கிரேக்கக் குறிப்புகள் கூறுகின்றன. யானைப் படை முன்வரிசையிலும், விற்படை பின் வரிசையி லும், காலாள் படைகள் இருமருங்கிலும் நின்று கிரேக்கரை எதிர்த்தன. கடும் போர் கி.மு. 326-ஆம் ஆண்டு சூலை மாதம் நிகழ்ந்தது. பெருமழையின் காரணமாகப் போர்க்களம் சேறு மிகுந்ததாக இருந் தது. எனவே, இந்திய யானைகளின் கால்களும் தேர்ச் சக்கரங்களும் ஆழப்புதைந்து தடுமாறின. இந்திய வீரர்கள் வில்லைத் தரையில் ஊன்றி நாண் ஏற்ற முடியவில்லை. கிரேக்க வீரர்கள் ஈட்டி முனை களில் தீப்பந்தங்களைக் கட்டி யானைப் படைக்குள் எறிந்தனர். தீயைக்கண்ட யானைகள் ஓட்டம் எடுத் தன. இந்தியப்படை தோல்வி கண்டது. வீரத்துடன் போரிட்ட போரசு ஒன்பது காயங்களுடன் மயக்க முற்ற நிலையில் சிறைப் பிடிக்கப்பட்டான். சிறைப் பட்ட பின்னும் தன்னைச் சுதந்திர மன்னனா கவே மதிக்க வேண்டுமென்று அலெக்சாந்தரிடம் பகன்றான். போரசின் வீரத்தால் கவரப்பட்ட அலெக்சாந்தர் போரசின் அரசைப் போரசிற்கே திரும்ப வழங்கியதுடன், தான் வென்ற பதினைந்து குடியரசுகளையும் வழங்கினான். போரசின் அஞ்சா நெஞ்சமும் வீரமும் கிரேக்கர்களாலும் போற்றப் பட்டன.

இரா.த.

**போராபுதூர்:** இந்நகரம் சாவாவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரங்களுள் ஒன்று. போராபுதூர் (Borabudur), சோக்கியா கர்தா (Jokya karta) என்ற இடத்திலிருந்து 56 கி.மீ. தொலை வில் அமைந்துள்ளது. இங்கு உள்ள தூபி உலகக் கலை வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

சாவா, சுமத்திரா, மலேசியா ஆகிய பகுதிகளை

ஆண்ட சைலேந்திர அரச வமிசத்தினரால் போரா புதூர்த் தூபி எடுக்கப்பட்டது. இந்த அரச வமிசத்தினர் கி.பி.7-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.10-ஆம் நூற்றாண்டு வரை இந்தப் பகுதியை ஆண்டனர். இவர்களுடைய காலம் சாவாவின் பொற்காலம் என்று போற்றப்படுகின்றது. போரா புதூர்த் தூபி கி.பி.850-இல் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. கேது (Kedu) என்ற இடத்தில் இயற்கையாக அமைந்த ஒரு வட்டமான மலையைத் தேர்ந்தெடுத்துக் கூம்புக்கோபுரம் போன்ற அமைப்பில் சிறிய, பெரிய அளவில் தூபிகளை எடுத்துள்ளனர். தூபிகள் அடிப்பாகம் அகன்றும் மேலே செல்லச் செல்ல குறுகியும் காணப்படுகின்றன. கூம்புக்கோபுரம் போன்ற அமைப்புடைய இத்தூபி ஒன்பது தளங்களைக் கொண்டது. அதன் அடிப்பாகம் ஆறு தளங்களைக் கொண்டது. அத்தளங்கள் ஆறும் 'சதுர' அமைப்புடையன. அதற்கு மேல் உள்ள மூன்று தளங்கள் வட்டமான அமைப்புடையன. அதன் உச்சிப் பகுதியில் ஒரு தூபி எழுப்பப்பட்டுள்ளது. வட்டமான அந்தத் தூபியின் விட்டம் 14 மீ. ஆகும். அந்தத் தூபி இந்தியத் தூபியின் அமைப்பை ஒத்துக் காணப்படுகின்றது.

நான்கு சதுர அமைப்புடைய தளங்களைச் சுற்றிக் கற்களால் கட்டப்பட்ட கைப்பிடிச் சுவர் போன்ற அமைப்பு எடுக்கப்பட்டுள்ளது. அவற்றின் மேல் பகுதியை அடைய உயர்ந்த படிக்கட்டுகள் எடுக்கப்பட்டுள்ளன. சதுர அமைப்புடைய அடித்தளங்களின் அடிப்பகுதியிலிருந்து தளத்தின் மேல் பகுதிக்குச் செல்லப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் படிக்கட்டுகளின் சுவர்ப்பகுதிகளில் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. நான்கு வகையான தியான நிலையில் உள்ள புத்தச் சிற்பங்கள் நான்கு பகுதிகளிலும் காணப்படுகின்றன. இங்குள்ள 92 தேவ கோட்டங்களில் 92 புத்த உருவங்கள் உள்ளன. அவற்றுடன் 64 புத்தர் சிற்பங்கள் சதுரமான பகுதியின் மேல் மட்டத்தில் காட்சி தருகின்றன.

வட்டமான அமைப்புடைய மூன்று தளங்களில் சிறிய தூபிகள் பல எடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்திலும் முறையே 32, 24, 16 ஆகிய எண்களில் சிறிய தூபிகள் (மொத்தம் 72 தூபிகள்) அமைந்து காட்சி தருகின்றன. அந்தத் தூபிகளின் உட்பகுதிகள் மணி போன்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளன. அத்தகைய தூபிகள் வேறு எங்கும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு தூபியிலும் புத்தரின் சிலைகள், அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. மேல்பகுதியில் நான்கு திருச்சுற்றுகளும், நான்கு தூபிகளும் உள்ளன. அவற்றிற்குச் செல்ல உள்ளே தனித்தனி நுழைவாயில்கள் மைய வழியுடன் இணைக்கப்பட்டுள்ளன. அந்தப் படிக்கட்டுகளின் இரண்டு பகுதிகளிலும் சிற்ப வரிகளும், சிற்பங்களும் நிறைந்துள்ளன.

ஏறத்தாழ 1500 சிற்பங்களைச் சிற்ப வரிகளாக வடித்துள்ளனர். அத்தகைய சிற்பங்கள் சுவர்களிலும், கைப்பிடிச்சுவர்களிலும் உள்ளன. வரிச்சிற்பங்களில் மனிதர்கள், யானை, குரங்குகள் போன்ற விலங்குகளும் இயற்கைக் காட்சிகளும் செதுக்கப்பட்டுள்ளன. சிலசிற்பங்கள் இயல்பான நிலையிலும் சிலசிற்பங்கள் உயிரோட்டமுள்ளவையாகவும் காணப்படுகின்றன. ஏராளமான அணிகள், ஆடை முதலியவற்றைத் தரித்து நிற்கின்ற மனிதர்களின் சிற்பங்கள் அரசர், இளவரசர், தேவர்கள் போன்றவர்களுடையனவாக இருக்கக்கூடும்.

'இலலிதவிசுதார' என்ற நூலில் கூறப்பட்டுள்ள புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், 120 வரிச்சிற்பங்களில், முதலில் உள்ள பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன. போதிசத்துவர் காட்டில் அலைந்து திரிதல், கடவுள், தத்துவமேதை ஆகியோரைச் சந்தித்தல், மற்ற போதிசத்துவருடன் உரையாடல் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். புத்தரின் வாழ்க்கையில் நடந்த பல முக்கிய நிகழ்ச்சிகளும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

தூபியில் நான்கு பெரிய அரங்குகள் உள்ளன. அவற்றில் மூன்று அரங்குகளுக்கு 36 பக்கங்களும், அதற்குமேல் உள்ள அரங்கிற்கு 20 பக்கங்களும் உள்ளன. அந்த அரங்குகள் ஒன்றின் மீது ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன. அவற்றின் உள், வெளிப்பகுதிகளில் உலகப் புகழ்பெற்ற புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. அவற்றில் புத்தரின் அவதாரங்கள், சாதகக் கதைகள் போன்றவை சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. தி.சு.

**துணை நூல்:**

Coomaraswamy, Ananda, K., History of Indian and Indonesian Art, Munshiram Manoharlal, New Delhi, 1972.


**போல்சுவிக்குக் கட்சி:** உருசியப் பொதுவுடைமை அரசாங்கத்தின் முதல் தலைவராகிய இலெனின் 1903-இல் உருவாக்கிய பொதுவுடைமைக் கட்சியே போல்சுவிக்குக் கட்சி எனப்படும். அப்போது இருந்த உருசிய சமநிலைக் குடியாட்சிக் கட்சியின் (Russian Social-Democratic Party) உறுப்பினர்களிடையே, 1903-இல், உருசியாவில் சமநிலைக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருதற்குத் தீவிரமான (Radical) புரட்சி முறையைப் பின்பற்றுதல் வேண்டுமா, அல்லது நிதானமாக அமைதி முறையைப் பின்பற்றுதல் வேண்டுமா?

என்ற கேள்வி எழுந்தபோது, கட்சியில் பிளவு தோன்றிற்று. அதில் தீவிரமான புரட்சி முறையை ஆதரித்தவர்கள் இலெனினைத் தலைவராக ஏற்று, கட்சியின் மாநாட்டில் (Party Congress) தங்களுடைய கருத்துக்குக் கட்சியினரின் பெரும்பாலான வாக்கு களைப் பெற்றனர். உருசிய மொழியில் பெரும் பாலானவருக்கு 'போல்சின்சுட்வோ' (Bolshinstvo) என்று பெயராதலால், புரட்சிப் பொதுவுடைமைக் கட்சியினர் போல்சுவிகி (Bolsheviki) என்று சொல்லப்பட்டனர். நிதானப் போக்கை ஆதரித்த சமநிலையாளர் மென்செவிகி (Mensheviki) அல்லது சிறுபான்மையாளர் (Minority) எனப்பட்டனர்.

**போல்சுவிக்குகளின் ஆட்சி**: முதல் உலகப் போரில் செருமனிக்கெதிராகப் பிரிட்டனின் பக்கத்தில் சேர்ந்திருந்த உருசிய அரசரின் படைகள், 1917-இல் செருமனியால் தோற்கடிக்கப்பட்டவுடன், மென்செவிக்குகள் தங்களுடைய தலைவர் கெரென்சுகியின் (Kerensky) தலைமையில் புரட்சி செய்து, அரசரை நீக்கித் தம் ஆட்சியை நிறுவினர். ஆனால், செருமனியுடன் போர் தொடர்ந்து நடந்தது. உருசியாவுடன் போரை நிறுத்திக் கொள்ள விரும்பிய செருமானிய அரசர், சுவிட்சர்லாந்திலிருந்த இலெனினைப் பாதுகாப்புடன் மாசுகோவுக்குப் போகுமாறு விடுவிக்கவும், அங்கு அவர்தம் கட்சியினரின் உதவியுடன் தம் ஆட்சியை நிறுவவும், பின் உருசியாவைச் செருமானியப் போரிலிருந்து விலக்கும் ஒப்பந்தத்தைத் தம்முடன் செய்யவும் ஏற்பாடு செய்தார். இவ்வாறு உருசியாவுக்குத் திரும்பிய இலெனின் (அக்டோபர், 1917) அங்குப் போல்சுவிக்கு களால் ஆதரவளிக்கப்பட்டு, வன்முறைப் புரட்சி செய்து, மென்செவிக்குகளை விரட்டித் தம் ஆட்சியை நிறுவி, உருசியாவைப் போரினின்று விலக்கினார். அவர் சமநிலை அரசாங்கத்தை நிறுவி, அதற்கெதிராக உள்நாட்டுப் போரை நடத்திய வெண் படையைத் தோற்கடித்தார். அவர் பொதுவுடைமைக் கொள்கையைச் சில மாற்றங்களுடன் செயற்படுத்தினார் (காண்க: பொதுவுடைமை). போல்சுவிக்கு அரசாங்கம் பாதுகாப்பாக இருப்பதற்காக, அவர் செம்படை (Red Army), ஒற்றர்படை, மறைமுகக் காவல் படை முதலியவற்றை நிறுவினார். அவற்றினுதவியால் அவர் சோவியத்து அரசாங்கத்தை எதிர்த்தவர்களையெல்லாம் ஒழித்தார். அவருக்குப் பின் அக்கட்சியின் பொதுச் செயலாளரான இசுடாலின் வல்லாட்சியாளராக (1924-1953) இருந்தார்.

பா.சூ.

**போலந்து**: இது மைய ஐரோப்பாவில் கிழக்குச் செருமனியை அடுத்துள்ள ஒரு குடியரசு நாடு. இதற்கு வடக்கில் பால்டிக்குக் கடலும், கிழக்கில் சோவியத்து ஐக்கிய நாடும், தெற்கில் செகோசுலோவாகியாவும் உள்ளன.





இந்நாட்டின் தலைநகர் வார்சா; மக்கள் தொகை 36.4 மிலியன் (1983). இந்நாட்டின் தெற்குப் பகுதி மலைப் பாங்கானது. மற்ற பகுதிகள் தாழ்வான அமைப்பைக் கொண்டுள்ளன. தெற்குப் பகுதியில் கார்பேத்தியன் மலைகளும், சூடேடன் (Sudeten) மலைகளும், மாலோபோல்சுகா (Malopolska) குன்றுகளும் இருக்கின்றன. அப்பகுதி மலைகளின் மிகுந்த அளவு உயரம் 2500 மீட்டர். இந்நாட்டின் குறிப்பிடத்தக்க ஆறுகள் விசுடுலா (Vistula), ஓடர், வார்ட்டா (Warta), மேற்குப்பெக்கு (Western Beg) முதலியன வாம். போலந்து நாட்டு ஆறுகள் பால்டிக்குக் கடலில் சேர்கின்றன. போக்குவரத்துக்கு அவை மிகவும் பயனுடையவாம். இந்நாட்டின் முக்கிய பால்டிக்குத் துறைமுகங்களாவன:- தான்சுகு (Gdansk), கிடினியா (Gdynia), செசீன் (Szczecin) ஆகியன. போலந்து நாட்டில் இருப்புப்பாதையின் பயன்பாடு மிகவும் விரிந்துள்ளது. இந்நாட்டின் வடக்குப் பகுதியில் பல ஏரிகள் உள. நாட்டில் பாதி அளவு வேளாண்மைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் நான்கில் ஒரு பங்கில் காடுகள் செறிந்துள்ளன.

போலந்து, 22 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் ஐந்து நகர மாநிலங்களாகும். இந்நாட்டின் தொழில்களை அரசாங்கமே பெரும்பாலும் நடத்துகிறது. பயிர்த்தொழில், தனியார் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. தேசிய உற்பத்தியில் ஏறத்தாழப் பாதிப்பங்கு, பயிர்த்தொழிலைச் சார்ந்துள்ளது. இங்கு விளையும் முக்கிய வேளாண் பொருட்கள் உருளைக்கிழங்கு, சருக்கரை வள்ளிக்கிழங்கு, புல்லரிசி (Rye), கோதுமை, வாற்கோதுமை ஆகியனவாம். இரும்பு – எஃகுத் தொழிலும், இயந்திர உற்பத்தியும்,



போலந்திலுள்ள அரண்மனை




தத்ரா மலை

மின்சாரக் கருவிகள் உற்பத்தியும் சிமெண்டுத் தொழிலும் இந்நாட்டில் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்கு நடக்கும் மற்ற தொழில்களாவன வேதிப் பொருள் உற்பத்தி, ஆடை வகை செய்தல், உணவு பதம் செய்தல் முதலியனவாம். நிலக்கரி, இரும்பு, பாறை எண்ணெ, கந்தகம் முதலிய கனிப்பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. நிலத்திலிருந்து கிடைக்கப் பெறும் வாயு (Natural Gas) இங்கு மிகுதியாக உண்டு. இந்நாடு நிலக்கரி, பதனம் செய்யப்பட்ட புலால் உணவு, கப்பல்கள், இருப்புப்பாதை இயந்திரங்கள், உலோகப்பொருட்கள் முதலியவற்றை ஏற்றுமதி செய்கிறது; பருத்தி, உர வகைகள், உலோகத்தாலான பொருட்கள் முதலியவற்றை இறக்குமதி செய்கிறது.

**வரலாறு**: போலந்து நாட்டின் பரப்பளவு, வரலாற்றில் பலமாறுதல்களுக்கு உட்பட்டு வந்துள்ளது. போலந்து மக்கள், கி.பி. 9, 10 – ஆம் நூற்றாண்டுகளிலேயே இப்பகுதியில் தனி அரசை நிறுவியிருந்தனர். அவர்கள் கி.பி. 10 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். இலிதுவேனியர் (Lithuanians) என்னும் மக்களினத்தவர், கி.பி. 14 – ஆம் நூற்றாண்டில் தம் ஆதிக்கத்தைப் போலந்தில் நிறுவினர். போலிசு-இலிதுவேனியப் பேரரசு (Polish Lithuanian Empire), கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பால்டிக்குக் கடல் முதல் கருங்கடல் வரை உள்ள பகுதியில் சிறப்புற்றோங்கியது. அக்காலம் போலந்தின் பொற்காலம் என்று வரலாற்றறிஞர்கள் போற்றுவர். போலந்து நாட்டு அரசர்களை, கி.பி. 1572–ஆம் ஆண்டுக்குப் பிறகு, பிரபுக்களே தேர்ந்தெடுத்தனர். அதனால், அரசகுலத்தில் மரபுப் பிரிவுகளும் சச்சரவுகளும் பெருகின; வலிமையான முடியாட்சி அமைய இயலவில்லை. மேலும், உள்நாட்டு நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, போலந்தின் அண்டை நாடுகளான உருசியா, சுவீடன், துருக்கி ஆகியன போலந்தின்மீது படையெடுத்தன. அப்படையெடுப்புகளால் போலந்து அரசுமேலும் வலுவிழந்தது. உருசியா, பிரசியா, ஆசுத்திரியா ஆகிய வல்லரசுகளின் தாக்குதல்கள் காரணமாகப் போலந்து நாடு, கி.பி. 1772, 1793,1795 ஆகிய ஆண்டுகளில் மூன்று பிரிவினைகளுக்கு (Partitions) உட்பட்டது. போலந்து மன்னர் தம் நாட்டின் பல பகுதிகளை இழந்தார். இறுதியாக ஏற்பட்ட கி.பி. 1795–ஆம் ஆண்டுப் பிரிவினையால் ஐரோப்பாக் கண்டத்திலேயே போலந்து மறைந்துவிடும் நிலை

ஏற்பட்டுவிட்டது. பின்வந்த முதலாம் நெப்போலியன், தம் விருப்பத்திற்கு ஏற்பப் புதிய போலந்து நாட்டை உருவாக்கினார். அவ்வாறு கி.பி. 1807-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட புதிய நாடு, வார்சா கோமக நாடு (Duchy of Warsaw) என்னும் பெயரைப் பெற்றது. நெப்போலியனின் மறைவுக்குப் பிறகு, வியன்னா மாநாட்டுத் தலைவர்கள், புதிய சுதந்திரப் போலந்தை அமைத்தனர். ஆனால், அதன் சுதந்திர நிலை பெயரளவுக்குத்தான் இருந்தது. உண்மையில் உருசியப் பேரரசனின் ஆதிக்கம் அங்குக் காணப் பட்டது. அதை எதிர்த்து கி.பி. 1830-இல் போலந்து மக்கள் தீவிரமாகக் கலகம் செய்தனர். அக்கலகத்தை உருசியா அடக்கிவிட்டுப் போலந்தின் பெரும்பகுதியைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. ஆசுத்திரியப் பேரரசின் கீழிருந்த போலந்துப் பகுதியிலும் பிரசியாவின் கீழிருந்த போலந்துப் பகுதியிலும் ஏற்பட்ட மக்கள் கலகங்கள் யாவும் கடுமையாக அடக்கப் பட்டுவிட்டன. அவ்வல்லரசுகள் மூன்றும் முதலாம் உலகப் போரில் தோல்வியுற்ற பின்னரே போலந்தின் வரலாற்றில் புதிய கட்டம் தொடங்கியது. போலந்து நாட்டுத் தேசிய தலைவர் சோசபு பில்சுட்சுகி (Joseph Pilsudski) என்பாரின் தலைமையின்கீழ் 1918-ஆம் ஆண்டு நவம்பர் ஒன்பதாம் நாள் போலந்து, குடியரசு அரசியல் அமைப்பைப் பெற்றது. செருமனி 1939-ஆம் ஆண்டில் போலந்தின்மீது படையெடுத்தது. இரண்டாம் உலகப் போருக்கு இந்நிகழ்ச்சியும் ஒரு காரணமாகும். அப்போரில், போலிசு (Polish) மக்களின் எதிர்ப்பு அடக்கப்பட்டு அந்நாடு, சோவியத்து உருசியா, செருமனி ஆகிய இரு வல்லரசுகளாலும் பங்கிட்டுக்கொள்ளப்பட்டது. செருமனி, சோவியத்து உருசியாவைத்தாக்கி, அதன்கீழிருந்த போலந்துப் பகுதியைத் தான் கைப்பற்றிக்கொண்டது. இவ்வாறு போலந்து, போர்க் காலத்தில் ஆற்றொணாத்துயரங்கட்கு ஆளாகியது. அப்போரில் 6 மிலியன் போலிசு மக்களும், 3 மிலியன் யூதர்களும் கொலையுண்டனர். சோவியத்து உருசியா, 1944-இல் போலந்து நாட்டிற்குள் தன் படைகளை அனுப்பி, அந்நாட்டின் பல பகுதிகளை மீட்டுக் கொண்டது. அடுத்த ஆண்டில் செருமானியப் படைகள் அங்கிருந்து முழுவதுமாக விரட்டப்பட்டன. சோவியத்து உருசியா சார்பான புதிய அரசு போலந்தில் அமைக்கப்பட்டது.


பாட்சுடேம் (Potsdam) என்ற இடத்தில், 1945-இல் ஏற்பட்ட ஐரோப்பிய உடன்படிக்கைப்படி, புதிய போலந்தின் எல்லைகள் வரையறை செய்யப்பட்டன. சோவியத்து உருசியாவுக்கும் போலந்துக்குமிடையே இப்பொழுது உள்ள எல்லைக்கோட்டையும் பாட்சுடேம் மாநாடு உறுதி செய்தது.



வார்சா நகரம்

**அரசியலமைப்பு**: போலந்தில் இப்பொழுதுள்ள அரசியலமைப்பு, 1952 – ஆம் ஆண்டு ஏற்பட்ட அமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். அதன் படி, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் ஓரவைப் பாராளுமன்றம் (Unicameral Parliament) சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அப்பாராளுமன்றத்திற்குப் போலிசு மொழியில் சேசம் (Sejm) என்பது பெயர். அதனால் நியமிக்கப்படும் அமைச்சர் குழு, நிருவாக அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அரசியலில் பொதுவுடைமைக் கொள்கையை ஒட்டிய அமைப்பு நிலவுகிறது. நாட்டிலுள்ள 'போலிசு ஐக்கியத் தொழிலாளர் கட்சி' (Polish United Workers' Party) தனக்கு எதிர்ப்பு எதுவுமின்றி ஆதிக்கம் செலுத்துகிறது. அதன் தலைமைச் செயலாளரிடம்தான் நாட்டின் அனைத்து அதிகாரங்களும் குவிந்துள்ளன. போலந்து, ஐக்கிய நாடுகள் சபையிலும் வார்சா ஒப்பந்தத்திலும் உறுப்பு நாடாக உள்ளது. தெ.பா.

**போலிவர், சைமன் (கி.பி. 1783–1830):** தென் அமெரிக்காவில் இசுபானிய ஆதிக்கத்தை எதிர்த்து மிராண்டா, சான் மார்டின் போன்ற தலைவர்கள் தொடங்கிய விடுதலை இயக்கத்தை முற்றுப் பெறச் செய்து, தென் அமெரிக்காவின் விடு



போலிவர் சைமன்

தலைக்கு வழிவகுத்தவர் சைமன் போலிவர்(Bolivar, Simon) ஆவார். விடுதலை இயக்கத்தின் தந்தை மிராண்டா இறந்தவுடன் சான் மார்டினும், போலிவரும் இணைந்து அப்பணியில் ஈடுபட்டனர். ஆனால், கருத்து வேறுபாடு காரணமாகச் சான் மார்டின் விலகிக் கொள்ளவே, போலிவர் முழுப் பொறுப்பையும் ஏற்றார். அவர் நடத்திய போராட்டத்தின் விளைவாகப் பொலிவியா, கொலம்பியா, ஈகுவடார், வெனிசுலா, பெரு ஆகிய நாடுகள் சுதந்திரம் பெற்றன.

போலிவர் கி.பி. 1783 – ஆம் ஆண்டு வெனிசுலாவிலுள்ள காரகாசு (Caracas) என்ற நகரில் ஓர் இசுபானியப்பிரபுக் குடும்பத்தில் பிறந்தார். இசுபெயினில் கல்வி பயின்று, அரசியல் புரட்சியின் பிறப்பிடமான பிரான்சு நாட்டில் சில காலம் தங்கியிருந்த போலிவர் தாயகம் திரும்பியதும் அவருடைய மனைவியை இழந்தார். மீண்டும் ஓர் ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு உரோம் நகரில் இருந்த பொழுது, இலத்தீன் அமெரிக்க நாடுகளை இசுபானிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார்.

வெனிசுலா திரும்பியவுடன் தம் ஆதரவாளர்களைத் திரட்டி இசுபெயினின் மேலாதிக்கத்தை எதிர்த்து விடுதலைப் போரைத் தொடங்கினார். விடுதலை இயக்கத்தினர் கி.பி.1810-இல் காரகாசு நகரைக் கைப்பற்றினர். தென் அமெரிக்காவின் வட மேற்குப் பகுதியில் ஒரு சுதந்திரக் கூட்டாட்சிக் குடியரசை உருவாக்க கி.பி. 1811-இல் ஒரு சுதந்திர அறிக்கையை வெளியிட்டார். ஆனால், இவருடைய விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி தடைப்பட்டது. விடுதலை இயக்கத்தினர் கைப்பற்றிய இடங்கள் இசுபானியப் படைகளால் மீட்கப்பட்டன. தோல்வியைக் கண்டு மனமுடைந்த போலிவர் சமைகா (Jamaica) தீவிற்குத் தப்பிச் சென்றார்.


தாயகம் திரும்பிய போலிவர் கி.பி. 1819-இல் நியூ கிரானடா மீது படையெடுத்து இசுபானியப் படைகளைப் பாயகா (Bayaca) என்ற இடத்தில் தோற்கடித்தார். அதை அடுத்து ஈகுவடார், கொலம்பியா, பனாமா,வெனிசுலா ஆகிய நாடுகளடங்கிய கொலம்பியக் குடியரசு என்ற ஒரு சுதந்திர அமைப்பு உருவாகியது. போலிவர் கி.பி. 1819-ஆம் ஆண்டு அக்குடியரசின் முதல் தலைவராகப் பொறுப்பேற்றார். அயாகுசோ (Ayacucho) போரில் கி.பி. 1824 – இல் பெற்ற வெற்றியின் மூலம் எஞ்சியிருந்த இசுபானிய ஆதிக்கத்தை ஒழித்தார். தென் அமெரிக்காவின் ஒரு பகுதியான மேல் பெரு (Upper Peru) இவர் நினைவாகப் பொலிவியா எனப்பெயரிடப்பட்டது. அந்நாட்டிற்கு ஒரு சிறந்த அரசியலமைப்பை வரைந்து கொடுத்த பெருமை இவரைச் சாரும்.

இவரால் உருவாக்கப்பட்ட கொலம்பியாக் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு, கூட்டமைப்பை விட்டு விலகத் தொடங்கின. கூட்டமைப்பு சிதைவதைக் கண்டு இவர் மனம் வருந்தினார். நாளடைவில் இவருடைய தலைமைக்குப் பலத்த எதிர்ப்பு உருவாயிற்று. இவரைக் கொல்லவும் சூழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றையெல்லாம் கண்டு மனமுடைந்த போலிவர் கி.பி. 1830 – இல் பதவி துறந்து அவ்வாண்டிலேயே இறந்தார்.

தென் அமெரிக்காவின் சார்சு வாசிங்டன் என்று மக்களால் குறிக்கப்பட்ட போலிவரின் நினைவாகப் பொலிவியா என்ற நாடு மட்டுமன்றித் தென் அமெரிக்காவில் பல்வேறு நகரங்களும் இவர் பெயருடன் விளங்குகின்றன. இவர் பிறந்த நாடான வெனிசுலாவின் நாணயத்திற்கும் 'போலிவர்' என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மு. த.

**போவாசு, பிரான்சு** (**கி.பி. 1858-1942:**) அமெரிக்க மானிடவியலின் தந்தை எனப் போற்றப்படுவர்;மானிடவியலின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். போவாசு (Franz Boas) பிறந்ததும் கல்வி பெற்றதும் செருமனியில் ஆகும். தொடக்கத்தில் இவர் இயற்பியல்சார் புவியியல்(Physical Geography)பயின்றார். அதன் பின் கடல் நீரின் நிறத்தை ஆராய்ந்து கீல் (Kiel) பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். கடல் நீரினை ஆய்வு செய்த போது எசுக்கிமோக்கள் (Eskimos)வாழும்பகுதியில் தங்கியிருந்தார். அப்போது அம்மக்கள் வடதுருவ அமைப்பிற்கேற்ப ஏற்படுத்திக் கொண்டிருந்த தகவமைப்புகளையும்

அவர்களின் வியத்தகு வாழ்க்கையையும் கண்டு மிகவும் வியந்தார். அதில் ஏற்பட்ட ஆர்வமே இவர் புவியியல் துறையை விடுத்து மானிடவியல் துறையில் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாயிற்று.



பிரான்சு, போவாசு

போவாசின் நீண்ட கால மானிடவியற் பணி கி.பி.1883-84-இல் பப்பின் தீவுகளுக்கு (Baffin Island) மேற்கொண்ட புத்தாய்வுப் பயணம்மூலம் தொடங்கியது. அப் பயணத்திற்குப் பின் பல்வேறு பண்பாடுகளைப் பற்றி மிக விரிவாக ஆராய வேண்டுமென்ற ஆவல் இவருக்கு உண்டானது. இவரது ஆர்வத்திற்கேற்பப் பெர்லின் இனக்குழுவியல் அருங்காட்சியகத்திலும் பெர்லின் பல்கலைக் கழகத்தில் புவியியல் துறையிலும் பணியாற்றும் வாய்ப்புகள் கிடைத்தன. அதன் பின் கி.பி.1886-இல் வான்கூவர் (Vancouver) தீவில் ஆய்வு செய்து திரும்பியபோது நியூயார்க்கிலேயே தங்கி விட்டார். அமெரிக்காவில் கி.பி.1889-இல் கிளார்க்குப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். இவரது திறமையின் மூலம் கொலம்பியாப் பல்கலைக் கழகம், அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் போன்ற நிறுவனங்களில் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் பல மானிடவியல் துறைகளை ஏற்படுத்துவதற்கு அரும்பாடு பட்டார். அமெரிக்க மானிடவியலில் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் அரை நூற்றாண்டுக் காலம் வரை பெரும் சிறப்புடன் விளங்கிய அனைத்து அறிஞர்களும் போவாசின் மாணவர்களாவர்; அல்லது அவருடைய மாணவரின் மாணவர்களாக இருந்தனர்.

அமெரிக்க மானிடவியலின் வளர்ச்சியில் போவாசின் பங்கு மிகவும் போற்றத்தக்கது. அதனால், அமெரிக்க மானிடவியலில் இவருடைய செல்வாக்கு இவரது வாழ்நாள் மட்டுமல்லாது இன்று வரை நிலைபெற்றுள்ளது. இவரது முதல் பங்கு பண்பாட்டை ஆராயும் முறை பற்றியது. இவர் காலத்திய அறிஞர்களின் பண்பாட்டுப் படிமலர்ச்சிக் (Cultural Evolution) கருத்துகளைப் போவாசு குறை கூறினார். உயிரினங்களின் படிமலர்ச்சியினை அறிவியல் முறைப்படி அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க முறையில் உயிரியலார் வகுத்துள்ளபடி பண்பாட்டுப் படிமலர்ச்சியினை வகுக்க வேண்டுமென்று போவாசு கூறினார். பண்பாட்டுப்படிமலர்ச்சியினை வகுத்தவர்கள் போதிய தரவுகளைச் சேகரிக்காமல் குறைந்த அளவு தரவுகளைக் கொண்டு மிகவும் சுருக்கமாகப் பொதுமைப் படுத்தி விட்டனர் எனக் குறை கூறினார். ஆகவே, பண்பாடுகளைப் பற்றி மிக நுணுக்கமாக அறிய வேண்டுமானால் எந்த அளவிற்குத் தரவுகளைச் சேகரிக்க இயலுமோ அந்த அளவிற்குச் சேகரித்த பின்னரே பொதுமையாக்கத்தினையோ ஒப்பிடுதலையோ மேற்கொள்ள வேண்டுமென்று போவாசு தம்முடைய மாணவர்களுக்கு அறிவுரை கூறி வந்தார். இவரது கருத்தினை ஒட்டியே பிற்காலப் படிமலர்ச்சிக் கொள்கைகளான உலகளாவிய படிமலர்ச்சிக் கொள்கையும் (Universal Evolutionism), பலவழிப் படிமலர்ச்சிக் கொள்கையும் (Multilinear Evolutionism) அமைந்தன எனலாம்.

பண்பாட்டைப் பற்றிப் புரிந்து கொள்வதில் அச் சமுதாயத்தின் முந்தைய வரலாற்றினையும் நன்கு அறிய வேண்டுமென்று வலியுறுத்தியவர் போவாசு. அமெரிக்க மானிடவியலின் தனிப்பாணி ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற வேட்கையினால் விளைந்ததே முழுதளாவிய அணுகுமுறையாகும் (Holistic Approach). இன்றைய மானிடவியலுக்குத் தனிப்பெருமையைத் தருவது முழுதளாவியம் (Holism) என்னும் கோட்பாடேயாகும். மானிடவியல் ஆய்வுகளில் வரலாற்றுக்கு முந்தைய கால அறிவையும், உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) அறிவையும், மொழியியல் அறிவையும், பண்பாட்டு மானிடவியல் அறிவையும் ஒருங்கிணைத்து ஆராயும் முறையை முழுதளாவியம் குறிக்கிறது.

போவாசு மானிடவியலுக்காற்றிய அடுத்த பங்கு பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கையாகும் (Cutural Relativism). அக் கொள்கையின்படி ஒவ்வொரு பண்பாட்டின் மதிப்புகள் (Values), கருத்துகள் (Ideas), நெறிமுறைகள் (Norms) போன்ற அனைத்தும் அந்தந்தப் பண்பாட்டோடு சார்புடையன. அனைத்துப் பண்பாட்டிலுமுள்ள மதிப்புகளையும் பிற கூறுகளையும் அளவிடப் பொதுவான அளவுகோல் ஏதுமில்லை. அவ்வாறே ஒரு சமுதாயம்

மற்றொரு சமுதாயத்தை விட உயர்ந்தது என்றோ தாழ்ந்தது என்றோ கூறுமளவிற்கு அனைத்துப் பண்பாடுகளையும் கடந்த பொதுக் கூறுகள்(Culture-Free Means)இல்லை; நல்லது, கெட்டது; உயர்ந்தது, தாழ்ந்தது; தேவையானது, தேவையற்றது என்பவை ஒரு பண்பாட்டிற்குள் கையாளப்பட வேண்டிய சொற்கள். ஆகவே, அச் சொற்களைக் கொண்டு பண்பாடுகளை ஒப்பிட்டுக் கூறமுடியாது என்பார் போவாசு. இனவெறியுடைய ஆட்சியாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் போவாசின் கொள்கை பெரும் தாக்குதலாக அமைந்தது.

போவாசு 1911-இல் தொன்மை மனிதனின் மனம் (The Mind of Primitive Man) என்னும் நூலினை வெளியிட்டார். அந்நூல் வெளிவந்த உடனேயே பெரும் வரவேற்பைப் பெற்றது. அமெரிக்க அரசின் இன உணர்வுடைய புதிய குடியமர்வுக் கொள்கையினை 1920 – களில் எதிர்த்துப் பேச முற்பட்டவர்கள் போவாசின் கருத்துகளை மிகுதியாகப் பயன்படுத்தினர். அதனால், செருமனியில் நாசியினர் (Nazis) அந்நூலைத் தீயிட்டுக் கொளுத்தினர். கீல் பல்கலைக் கழகம் இவருக்களித்த டாக்டர் பட்டத்தைத் தள்ளுபடி செய்தது. அதன் பின்னர் அமெரிக்காவில் 1950-களில் நடந்த குடியுரிமைப் (CivilRights) போராட்டங்களின் போதும் போவாசின் கருத்துகள் பெருமளவு பேசப்பட்டன. போவாசு 1942 – ஆம் ஆண்டு நியூயார்க்கில் காலமானார். சீ.ப.

**போளுவாம் பட்டி**: இது கோயம்புத்தூருக்கு மேற்கே 20 கி.மீ. தொலைவில் நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள ஒரு பழம்பெரும் ஊராகும். நொய்யலாற்றின் இரு கரைகளிலும் அமைந்து இக்கரைப் போளுவாம்பட்டி, அக்கரைப் போளுவாம்பட்டி என்ற இரு பெயர்களில் இவ்வூர் அமைந்துள்ளது.

இக்கரைப் போளுவாம்பட்டிப் பகுதியில் முட்டம் என்ற பெயரில் பழம்பெரும் ஊர் இருந்தது. கொங்கு 24 நாடுகளில் ஒன்றான ஆறை நாட்டு ஊர்களில் முட்டம் ஒன்றாகும். முட்டம் என்றால் மலையைச் சார்ந்த ஊர் என்பது பொருள். 'நாடும் நகரும் நளி மலை முட்டமும்' என்பது பெருங்கதை அடியாகும். சோழன் பூருவ பட்டயம் இவ்வூரை வெள்ளியங்கிரி முட்டம், வெள்ளியங்கிரி அடிமுட்டம் எனக் கூறும்.

முட்டத்தின் ஒரு பகுதி விழுமிப்பட்டி என்று வழங்கப்பெற்றது. அப்பெயரே போளுவாம்பட்டி என மருவியது. பூவிலுவர் என்னும் மக்கள் இங்குக் குடியேறியமையால் பூவிலுவப்பட்டி, பூலுவப்பட்டி, போளுவாம்பட்டி என்று மருவியது என்று சிலர் கூறுவர்.

இவ்வூரிலுள்ள நாகீசுவரர் – முத்துவாளி அம்மன் கோயிலில் 20 கல்வெட்டுகள் உள்ளன. அவை இராசராசன், வீரராசேந்திரன், விக்கிரம சோழன் என்னும் கொங்குச்சோழர் கல்வெட்டுகளும், சடையவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டும், ஒய்சள மன்னன் மூன்றாம் வீரவல்லாளன் கல்வெட்டும் ஆகும்.

ஆறை நாட்டின் ஒரு பகுதி பேரூர் நாடு, மூலை நாடு எனப் பிரிந்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இரவிவர்மச் சதுர்வேதி மங்கலம், அமரபுயங்கர நல்லூர், முட்டத்து நல்லூர் என்பன பழம் பெயராகும்.

போளுவாம்பட்டிக் கணவாய் மேற்கு மலைத் தொடர் வழியாகச் சேர நாடு வரை அமைந்திருப்பதால் பழங்காலத்தில் இவ்வழியாக வணிகப் போக்குவரத்து நடைபெற்றது. முட்டத்தில் பல வணிகச் சக்கரவர்த்திகள் இருந்தனர் என்பதை முட்டம், பேரூர், அவிநாசிக் கல்வெட்டுகள் கூறுகின்றன. பல மன்றாடிகள் பெயர்களும் முட்டம் கல்வெட்டில் காணப்படுகின்றன.

தேவன் சேரமானான தம்பிரான் தோழன், சம்பந்தப் பெருமாள், தனபாலன், காவன் கூத்தன், தேவரடியாள் ஏலவார் குழலி என்பவர்கள் இங்குத் திருப்பணி செய்த சிலராவர். சடையவர்மன் சுந்தர பாண்டியனின் பிறந்தநாள் 'சுந்தர பாண்டியன் திருநாள்' என்ற பெயரில் வைகாசிச் சுவாதியில் கொண்டாடப் பெற்றது. கொங்குச் சோழர் சிலர் இங்கு நேரில் வந்து திருப்பணி செய்தனர்.

நொய்யலாற்றில் உள்ள 32 அணைகளில் முதல் அணை இங்குத் தான் உள்ளது. இங்குள்ள நீலி வாய்க்காலின் பழம்பெயர் உத்தம சீலி வாய்க்கால் ஆகும். ஏரியைக் கல்வெட்டு, அதிசயச்சோழர் பேரேரி என்று குறிக்கிறது. இங்குள்ள திருமால் கோயிலின் பெயர் வெங்கடேச விண்ணகரம்.

கோட்டைக்காடு என்னும் பகுதியில் 54 ஏக்கர் பரப்பளவில் தொல்பொருட்கள் கிடைக்கும் மேட்டுப் பகுதி உள்ளது. தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் 1980, 1987 ஆகிய இரு ஆண்டுகள் இங்கு அகழாய்வு மேற்கொண்டனர். அகழாய்வில் சேர சோழ பாண்டியர் சின்னமும் பெயரும் பொறித்த சுடுமண் முத்திரை கிடைத்தது. ஓலையில் வைக்க அம் முத்திரை பயன்பட்டிருக்கலாம்.

புதிய கற்கால ஆயுதங்கள், பல வண்ணப் பாசிகள், சங்கு வளையல்கள், சுடுமண் காதணிகள், சதுரங்கக் காய்கள், அம்பு நுனி, வாள் போன்ற இரும்புக் கருவிகள், தங்க அணிகலன் துண்டுகள்,

குறியீடுகள் உள்ள பானை ஓடுகள், வண்ணம் பூசப் பெற்ற மட்கலயங்கள், விளக்குகள், அம்மி ஆகியவை அகழாய்வில் கிடைத்துள்ளன.

இங்குக் கிடைக்கும் செங்கற்கள் 60 செ.மீ. நீள மும், 30 செ.மீ. அகலமும், 20 செ.மீ. உயரமும் கொண்ட மிகப்பெரிய செங்கற்களாகும். அழகிய தலைப்பாகையும், சிரித்த முகமும், நீண்டு தொங்கிய காதுகளும் உடைய சுடுமண் பொம்மைகள் சில கிடைத்துள்ளன. அவற்றுள் சில உரோமானியச் சாயல் உள்ளவை.

பொன் ஏர் பூட்டி உழும் வெண்கல எருதுப் பொம்மைகளும் வெள்ளியாலும், செம்பாலும் செய்யப்பட்டு முத்திரை பதிக்கப்பெற்ற காசுகளும் கிடைத்துள்ளன. புத்த மைத்திரேயர், சமண இயக்கர் ஆகியோர் உருவங்கள் கிடைத்திருப்பது மிகச் சிறப்பான தாகும். 'சதகணிச' என எழுதப்பெற்ற சாதவாகனர் காசுகளும், சேரர், சோழர் காசுகளும் இங்குக்கிடைத்துள்ளன. '...ரன் கொற்றி', '...ங்குசபை விற்றிக்குழி' எனப் பிராமியில் எழுதப் பெற்ற ஓட்டுச் சில்லுகள் கிடைத்துள்ளன.

தொல்பொருட்கள் கி.பி.5-ஆம் நூற்றாண்டுவரை உள்ள பெருமைகளைக் கூறுகின்றன. கல்வெட்டுகள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை உள்ள வரலாற்றைக் கூறுகின்றன. பின்னர் இவ்வூர் பழம் பெருமையை இழந்தது.

செ.இரா.

**போனசு அயர்சு** தென் அமெரிக்காவிலுள்ள அர்செண்டினாவின் தலைநகரம். இது போனசு அயர்சு மாநிலத்தின் தலைநகராகவும் உள்ளது. நாட்டின் கிழக்கே கடலிலிருந்து 275 கி.மீ. தொலைவிலுள்ள இரியோடிலா பிளாட்டா (Riodela Plata) பகுதியில் இது அமைந்துள்ளது. போனசு அயர்சு (Buenos Aires) துறைமுகம் அமெரிக்காவின் சிறந்த இரண்டாம் துறைமுகம்.

அமெரிக்காவில் இசுபெயின் குடியேற்றம் முதலில் கி.பி. 1580-ஆம் ஆண்டில் போனசு அயர்சில் ஏற்படுத்தப்பட்டுப் பின்னர் மற்ற பகுதிகளுக்கு விரிவு படுத்தப்பட்டது. அடிமைகள் அமெரிக்காவிற்குக் கொண்டுவரப்பட்ட காலத்தில் போனசு அயர்சு ஒரு முக்கியமான அடிமை வாணிகத் தலமாக இருந்தது. இது கி.பி. 1776-இல் மிகச் சிறந்த துறைமுகமாக மாற்றப்பட்டது. வெள்ளிக் கட்டிகள் போனசு அயர்சு வழியாகத்தான் இசுபெயினுக்கு அனுப்பப்பட்டன. போனசு அயர்சு மக்கள் தொகை கி.பி. 1750-இல் 12,000 ஆக இருந்தது. இது கி.பி. 1800-இல் 50,000 ஆக உயர்ந்தது. இதன் மக்கள் தொகை 1980-இல் 29,08,000.



போனசு அயர்சு


ஆங்கிலேயர் கி.பி. 1806, 1807 – ஆம் ஆண்டுகளில் போனசு அயர்சின் சிறப்பினை உணர்ந்து கொண்டதன் விளைவாக அதைக் கைப்பற்ற முயற்சி செய்து தோல்வி அடைந்தனர். போனசு அயர்சு, பெரு போன்ற நகரங்கள் கி.பி. 1816-இல் இசுபெயினிடமிருந்து விடுதலை பெற்ற பின்னரும் போனசு அயர்சு தலைமையிடத்தைத் தொடர்ந்து பெற்று வந்தது. ஆங்கிலேயர்களின் உதவியுடன் கி.பி. 1821-இல் போனசு அயர்சுப்பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. இப்பொழுது இது மிகப்பெரிய பல்கலைக் கழகமாகச் சிறப்புடன் விளங்குகிறது.

பதின்மூன்று மாநிலங்களைக் கொண்ட அர்செண்டினா ஐக்கியத்துடன் கி.பி. 1862 - இல் போனசு அயர்சு பதினான்காம் மாநிலமாக இணைந்து கொண்டது. பல உள்நாட்டுப் போர்களுக்குப் பின்னர் கி.பி 1880-ஆம் ஆண்டில் போனசு அயர்சு நகரம் நாட்டின் தலைநகராக ஏற்றுக் கொள்ளப்பட்டது. போனசு அயர்சு மாநிலத்தின் பரப்பு 3,07,804சகி.மீ.


போனசு அயர்சு நகரம் நிருவாகம், வாணிகம், தொழில் துறை ஆகியவற்றில் சிறப்புற்று மிளிர்ந்தது. நாகரிக வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் போனசு அயர்சில் தோன்றிய செய்தித் தாள்களான இலா பிரன்சா (La Prensa, கி.பி. 1869), இலா நேசியன் (La Nacion, கி.பி. 1870) ஆகியவை பரந்த நோக்குள்ள எண்ணங்களை உருவாக்க உதவின. போனசு அயர்சு அர்செண்டினாவின் முக்கிய போக்குவரத்துச் சாலைகள், இருப்புப்பாதைகள், உற்பத்தித் திறன் வாய்ந்த தொழிலகங்கள், கப்பல் கட்டுதல், வாணிகம் ஆகியவற்றின் தலைமையிடமாக அமைந்துள்ளது. போனசு அயர்சு விளையாட்டரங்கம், 1,00,000 மக்கள் அமருவதற்கு வசதி கொண்ட, உலகின் மிகப்பெரிய விளையாட்டு அரங்குகளுள் ஒன்றாக அமைந்



நாடாளுமன்றம்



இலாபோக்கா குடியிருப்புப் பகுதி



படகுத் துறைமுகம்



பல்கலைக்கழக மாணவர்கள்

துள்ளது. இது மிகச் சிறந்த ஏற்றுமதி இறக்கு மதித் தலமாகவும் விளங்குகிறது. மு.ந.

**போனபார்ட்டு**: பிரான்சு நாட்டில் ஆட்சி புரிந்த நெப்போலியனின் குடும்பப் பெயர் போன பார்ட்டு (Bonaparte) என்பதாகும். இக் குடும்பம் கார்சிகாத் தீவில் தோன்றியது. இக்குடும்பத் தோன் றல்கள், இடைக் காலத்தில் பிளாரன்சு (Florence), பார்மா, பாதுவா (Padua), சார்சனா முதலிய பகுதி களில் அதிகாரிகளாக இருந்தனர். முதல் கார்சிகன் போனபார்ட்டின் பெயர் சார்சனாவைச் (Sarzana) சேர்ந்த காப்ரியல் (Gabriele) என்பதாகும். இவர், கி.பி.1567-இல் கார்சிகாத் தீவுக்குச் சென்றார். அவ் வமையம் அத்தீவு சினோவா (Genoa) வின் ஆதிக்கத் திற்குட்பட்டிருந்தது. காப்ரியலின் கால்வழியில் வந்த போனபார்ட்டுக் குடும்பத்தினர், அரசியலிலும் நீதித் துறையிலும், சமய நிலையங்களிலும் சிறந்த பணி களை ஆற்றிவந்தனர். அவர்கள் பொதுவாகப் போர் வீர வாழ்க்கையை விரும்பியதில்லை. பின்னர், கி.பி. 18 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போனபார்ட்டுக் குடும்பத்தினரிடம் போர் வீர வாழ்க்கையில் விருப் பம் ஏற்பட்டிருந்தது. (காண்க: நெப்போலியன்.)


தெ.பா.

**பௌ** பகரமும் ஔகாரமும் இணைந்து ஒலிப்பது இந்த ஒலி. உதடுகளை மூடித் திறக்கும் பொழுது ஏற்படும் ஒலியை உதடுகளைக் குவித்துப் பின் அழுத்தி இளித்தலால் தோன்றும்.

**உருவம்:** இதன் வடிவம் மிகவும் பிற்காலத்தில் (கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டில்) காணப்படுகிறது.... .. ...

'பௌ' வும், 'பவ்' வும் ஒன்றாகச் சிலரால் கொள்ளப்பட்டாலும் எழுத்து உருவத்தில் பௌ தோன்றவே இல்லை. கல்வெட்டுகளிலும் (நெல்லூர்க் கல்வெட்டுகள்-கி.பி. 13-ஆம் நூற்றாண்டு) பவ்வத்திரிக் கோட்டம் என்ற சொல்லாட்சியில் பௌ என்பது பவ் என்றுதான் காணப்படுகிறது... ... ...

இதன் இக்கால வடிவம் பகரத்துக்கு முன்னால் கொம்பிட்டு, பகரத்தை அடுத்துக் கால்வாங்கி அதனை இரண்டாகப் பிரித்து வளைத்து எழுதப்படுகிறது... ... ...



இந்தக்காலின் குறி உயிரெழுத்துகளில் ஊகாரத்தில் உள்ளே எழுதப் படும் ளகரக் குறி போலவே இருத்தலைக் கவனித்தல் வேண்டும். அதன் வளர்ச்சியை ஒட்டி இதுவும் கி.பி. 11-ஆம் நுற்றாண்டிலிருந்து தோன்றியதாகக் கொள்ளலாம். ஆனால், கல்வெட்டுகளில் எடுத்துக்காட்டு கிடைக்கவில்லை.

வட்டெழுத்திலும் இதே நிலைதான்.... ... ...

கே.ஜி.கி.

*பௌச்சர் டி பெர்த்சு:* இவர் பிரான்சு நாட்டின் தொல்லியல் அறிஞர் ஆவார். இவர் கி.பி. 1788-ஆம் ஆண்டு பிரான்சிலுள்ள இரீதல் (Rethel) என்னும் இடத்தில் பிறந்தார். பௌச்சர் டி பெர்த்சு (Boucher de Perthes) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித வரலாற்றில் (Pre-history) பெரிதும் ஆர்வம் காட்டினார். இவர் நிலவியல் கூறுகளின் அடிப்படையில் தம் ஆய்வை நிகழ்த்தினார். கற்கால மனிதனின் தொழிற்கூடமான பிரான்சு நாட்டிலுள்ள அபிவில்லியில் இவர் இயக்குநராக நியமிக்கப்பட்டார். அப்பகுதியில் கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டன. அப்பகுதி முழுவதும் ஆய்வு செய்த இவர், கற்காலக் கருவிகளுள் சில தொன்மை எலும்புப் புதைபடிவங்களையும் கண்டுபிடித்தார். அவை பனிக்காலத்தைச் சார்ந்தவை எனக் கண்டறிந்தார். கற்கால மனிதனின் வரலாற்றை அறிவியல் முறையில் ஆய்வு செய்த இவ்வறிஞர் பல அறிவியலறிஞர்களுடன் தொடர்பு கொண்டு விளங்கினார்; பல நூல்களையும் எழுதியுள்ளார். இவர் அபிவில்லியில் கி.பி.1868-ஆம் ஆண்டு இறந்தார். சு.இரா.

*பௌதிக ஒலியியல்:* 1) **ஒலி:** பொருட்கள் அதிரும்போது ஒலிகள் பிறக்கின்றன. அவ்வொலிகள்

காற்றில் பரவி மனிதனின் செவிப்பறையைத் தாக்குகின்றன. அத்தாக்குதல்கள் செவி வழியாக மூளையை அடைந்து மறுபடியும் ஒலிகளாக உணரப்படுகின்றன. ஒலிகள் காற்றில் பரவும்போது அலைகளாகச் செல்கின்றன. அதாவது, ஒலிகள் பரவும் போது காற்றுத் துகள்களின் அடர்வில் (Density) மாற்றம் விளைகின்றது. அம்மாற்றமே, ஒலிகளை அவை தோன்றிய இடத்தினின்று கடத்திச் செல்ல உதவுகின்றது. காற்றுத் துகள்களில் ஏற்படும் அம்மாற்றத்தை அதன் அடர்வு மாற்றத்திற்கு ஏற்ப வரைபடம் (Graph) ஒன்று தயார் செய்தால் அது ஓர் அலைவடிவைத் தரும். அந்த அலைவடிவு காற்றுத் துகள்களின் அடர்வு மாற்றத்தையும் ஒலிபரவும் வேகத்தையும் காட்டும். அடர்வு மாற்றம், ஒலியின் செறிவு (Intensity of



அ1 அ2

படம்-1



ஈ ஐ ன் த ர ல ச

படம்-2

Loudness), ஒலியின் பண்பு (Quality of Timbre) ஆகியவற்றையும், வேகம், ஒலியின் அதிர்வு (Frequency) அல்லது இசுதாயி (Pitch) யையும் குறிக்கும். அதிர்வு, செறிவு, பண்பு ஆகியவை ஒலியின் பௌதிகக் (Physical) கூறுகளாகும். பேச்சொலிகளின் அக்கூறுகளைப் பற்றிய அறிவியல் படிப்பு பௌதிக ஒலியியல் (Acoustic Phonetics) எனப்படும். எனவே, பேச்சொலிகளின் பௌதிகக் கூறுகளைப் பற்றிப் படிக்கும் அறிவியலே பௌதிகப் பேச்சொலி இயல் அல்லது இயங்கொலியியல் ஆகும்.

2) **ஒலிகளின் வகை**: இரண்டு ஒலிகள் ($அ_1$, $அ_2$) காற்றில் பரவும் விதத்தைப் படம் 1 மிகவும் எளிய முறையில் விளக்குகின்றது.

படம்-1-இல் உள்ள அலைகள் $அ_1$, $அ_2$ என்ற ஒலிகள் பௌதிகப் பண்புகளைக் காட்டுகின்றன. $அ_1$ தனி ஒலியும் (Monotone), $அ_2$ கூட்டொலியும் (Complex tone) ஆகும். அவ்வலைகளின் உயரம் ஒலிகளின் செறிவையும், வடிவு ஒலிகளின் பண்பையும் காட்டும். ஒரு நொடிப் பொழுதில் உண்டாகும் அவ்வலைகளின் எண்ணிக்கை அவற்றின் அதிர்வையும் குறிக்கும். பேச்சொலிகளைப் பொறுத்தவரை ஒலியின் செறிவு அவற்றின் உரப்பு (Loudness) ஆகும்; அதிர்வு இசுதாயி ஆகும்; பண்பு இசைக்குணம் (Timbre) ஆகும். இசுதாயி குரல்வளை மடல்களின் (Vocal Cords) அதிர்வைப் பொறுத்தும், உரப்பு மூச்சுக்காற்றின் அடர்வு, வேகம் ஆகியவற்றைப் பொறுத்தும், இசைக்குணம் பேச்சுக்குழலில் உண்டாக்கப்படும் காற்று அறைகளைப் பொறுத்தும் அமையும்.

3) **வாயறையும் பேச்சொலியும்**: இதழ், தாழ்வாய், நா ஆகியவற்றின் இயக்கங்களினால் வாயறையின் வடிவம் மாறுபடுகின்றது. எனவே, அவ்வாறு உண்டாகும் வாய்வடிவினால் பல்வேறுபட்ட காற்றறைகள் தோற்றுவிக்கப்படும். அவ்வறைகளில் உள்ள காற்று அதிர்வதால் பல்வேறு பட்ட பேச்சொலிகள் உண்டாகின்றன. வாயறையின் ஒவ்வொரு அமைப்பிற்கும் ஏற்ப உண்டாகும் ஒவ்வொரு காற்றறையும் அவ்வவற்றிற்கு ஏற்புடைய ஒலிகளை உண்டாக்குகின்றது. அவ்வாறு உண்டாகும் பேச்சொலிகளை அவற்றின் இசைக்குணம் அடிப்படையில் உயிரொலி, உடம்படுமெய், அதிரொலி, மருங்கொலி, உரசொலி, அடைப்பொலி என்று பிரிக்கலாம். அவ்வொலிகள் அனைத்தும் வாயறையில் ஏற்படும் மாற்றங்களினால் விளைபவையே.



4) **ஒலிகளின் தன்மை:** பொதுவாக, மக்கள் கேட்கும் ஒலிகள் அனைத்தும் ஒன்றற்கு மேற்பட்ட அதிர்வுகளை உடையவையாகும். அவ்வதிர்வுகள் தம்முள் ஒத்தும் மாறுபட்டும் இருக்கும். தம்முள் ஒத்த அதிர்வெண்களை உடைய ஒலியை இசை ஒலி அல்லது சுரம் என்றும், மாறுபட்ட அதிர்வெண்களை உடைய ஒலியைச் சத்தம் என்றும் கூறுவர். இசை ஒலி செவிக்கு இனிமை பயப்பது; சத்தம் செவிக்கு இனிமையாக அமையாது. ஓர் ஒலியின் அதிர்வெண்கள் ஒரு பொதுவான எண்ணால் வகுக்கப்படக் கூடியதாக இருந்தால் அவ்வொலி ஒத்த அதிர்வெண்களை உடையது எனலாம். அவ்வதிர்வெண்கள் இசைவிகள் (Harmonics) எனப்படும். எடுத்துக்காட்டாக 120, 240, 360, 480, 600 ஆகிய அதிர்வெண்களை உடைய ஒலி இசையொலியாகும்; 240, 343, 457, 607 என்ற அதிர்வெண்களை உடைய ஒலி சத்தமாகும். ஏனெனில், அவற்றை எந்த ஓர் எண்ணும் மீதமின்றி வகுக்காது. ஓர் ஒலியின் இசைவுகள் எவ்வளவுக்கெவ்வளவு நெருக்கமாகவும் அதிகமாகவும் உள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு அந்த ஒலியின் இசைக்குணம் மிகுந்து காணப்படும்.

5) **பேச்சொலிப் பண்பு:** உயிர், உடம்படுமெய், அதிர்வொலி, மருங்கொலி, மூக்கின ஒலி ஆகியவை இசையொலிகள். உரசொலி, அடைப்பொலி ஆகியவை சத்தங்கள். உடம்படுமெய், அதிர்வொலி, மருங்கொலி, மூக்கின ஒலி ஆகியவற்றை அவற்றின் பௌதிகத் தன்மையின் அடிப்படையில் உயிர் போன்ற ஒலிகளாகக் கொள்ளலாம்.

6) **ஒலிமாலை வரைவி:** ஒலிமாலை வரைவி (Sonograph) மூலம் அவ்வொலிகளின் பௌதிகத் தன்மையைக் கண்டறியலாம். இது பேச்சொலிகளைப் படமாக்கித் தரும். அவ்வொலிகளின் வரை படம் பேச்சொலிகளின் இசுதாயி, இசைவு, உரப்பு, காலம் ஆகியவற்றைக் காட்டும்.

7) **ஒலிமாலை வரைவு:** ஒலிமாலை வரைவியின் மூலம் கிடைக்கும் படம் ஒலிமாலை வரைவு (Sonogram) எனப்படும். ஒலிமாலை வரைவில் உயிர், உயிர்போன்ற ஒலிகள் ஆகியவை ஒழுங்கான கிடைப் பட்டைகளின் அடுக்குகளாகவும், சத்தங்கள் ஆங்காங்கே தென்படும் ஒழுங்கற்ற புள்ளிகள் அல்லது குத்துப்பட்டைகள் ஆகவும் கிடைக்கும்.

முன்பக்கத்தில் உள்ள ஒலிமாலை வரைவுகள் ஈ, ஐ, ன், த, ர, ல, ச ஆகியவற்றின் பௌதிகப் பண்புகளைக் குறிக்கும் படங்களாகும். க.முரு.

ம ஒட்டிய உதடுகளைத் திறந்து மூக்கொலியாக வெளிப்படுத்தப் படும் ஒலியே மகரமாகும். பகரத்தோடு இணைந்த மெல்லொலி யாக இது வெளிப்படுகின்றது.

இசைத்துறையில் ஏழு சுர நிலைகளுள் இடைப்பட்ட அதாவது மத் திய ஒலியாக மத்தியமம் என்ற பெயர் கொண்ட இசைக்குறி 'ம' என்று ஒலிக்கப்படும். ஓரெழுத்து ஒருமொழியாகச் சந்திரன், சிவன், இயமன், பிரமன், விட்டுணு, நஞ்சு ஆகிய பொருட்களைக் கொடுக்க வல்லது. மகர மெய்யெழுத்தை மஃகான் என்று இலக்கண மரபில் சொல்வதுண்டு.

வடிவம்: தமிழ் எழுத்துகளில் மகரத்தின் உருவம் தனிச் சிறப்பு உடை யதாகக் காணப்படுகின்றது. முதலில் காணப்படும் உருவம் பாண்டி நாட்டுக் குகைக்கல்வெட்டுகளில் கிடைக்கின்றது. இது குதிரைக் குளம்பு போல் இடையில் ஒரு கோட்டுடன் எழுதப்பட்டது. இதுவே கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் அமைந்த உருவம். .. ... ...



வடநாட்டில் காணப்படும் மகர உருவத்துடன் இதனை இணைத்துப் பேசுவாரும் உண்டு. வடநாட்டு உருவம், மேல் ஓர் அறைவட்ட உருவமும் கீழ் ஒரு முழுவட்டமும் கலந்ததாகும்.... ...



மகரத்தின் பிற்கால வளர்ச்சியைப் பார்க்கும்பொழுது இரண்டும் வேறு விதமாக எழுதப்படுவனவாகத் தோன்றுகின்றன. அது அம்புக் குறி களில் விளக்கப்பட்டிருக்கிறது.... ...



தமிழ்நாட்டு உருவத்தில் இடப்புறம் மேல் தொடங்கிக் கீழ்நோக்கி வந்து வளைந்து, வலப்புறம் மேல்நோக்கிச் செல்லும் கோட்டை மேல் பகுதியில் கோடு இணைக்கும்.... ... ...




வடநாட்டு உருவத்தில் குறுக்காக வந்து இடப்புறம் திரும்பிப் பின் வலப்புறம் குறுக்காக வந்து மேல் செல்லும். இந்தப் போக்கில்தான் தமிழ்நாடு அல்லாத மற்ற இந்தியப் பகுதிகளில் மகரம் வளர்ந்தது என் பது அதைக் கூர்ந்து நோக்குவார்க்குப் புலப்படும்....

மேலும், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் எழுத்துகளின் உரு வங்களைச் சொல்லுமிடத்து மகரத்தைக் குறிப்பிடும் பகுதியில் 'உட்பெறு புள்ளி உருவாகும்மே' என்று ஒரு நூற்பா காணப்படுகின்றது. உரையாசிரி யர்கள் இந்த நூற்பாவைப் 'போன்ம்' என்பது போன்ற இலக்கிய வழக்கில் வரும் சொற்களில் இந்த 'ம்' என்ற எழுத்தைச் சொல்வதாகக் கொள்வர்.

உண்மைநிலையில் 'மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்' என்ற அடுத்த நூற்பாவுக்கு முன்பாக இந்நூற்பாவை அமைத்ததிலிருந்து மகரத்தின் உருவத்தில் புள்ளி ஒரு பகுதி ஆகும் என்பது தெளிவு.

ஆக 'ம்' என்ற மெய்க்கு உள்ளேயும் வெளியேயும் புள்ளிகள் இடப் பட்டன. கல்வெட்டு வழக்கில் மெய்களுக்கு உரிய புள்ளியைக் கோடாக இடுவர். அதை ஒட்டியே மகரத்தின் இன்றியமையாப் பகுதியான புள்ளியைத் தெளிவாகக் காட்ட வேண்டிக் கோடாக எழுதினர். ...



அடுத்த நிலையில் கோட்டையூர் (செங்கம் வட்டம்) சோமாசி திரு மாறனின் கி.பி.5-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் மகரத்தின் உட்கோடு வலப்புறம் மட்டும் காணப்படுகிறது. ... ... ...



இந்தநிலை வரை தமிழ், வட்டெழுத்து இரண்டிற்கும் பொதுவான உருவம். பின்னர்ப் பல்லவ மகேந்திரவர்மனின் (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு) வல்லம் கல்வெட்டில்-தமிழ் எழுத்துக் கல்வெட்டில் மகரத்தின் உருவம் மாறுதலோடு காணப்படுகிறது. ... ... ...

உட்கோடு வலப்புறக் கோட்டில் இணைக்கப்பட்டு முழு உருவமும் வளைந்த நிலையை அடைந்தது. ... ... ...

இரண்டாம் பல்லவ பரமேச்சுர வர்மனின் திருவதிகைக் கல்வெட் டில் (கி.பி. 8-ஆம் நூற்றாண்டு) இக்காலத்திய வடிவத்தின் முன்னோடி யாக வளைவு தன்னிலையில் அமைந்தது. ... ...



சோழன் முதல் இராசேந்திரனின் கரந்தைச் செப்பேட்டில் (கி.பி. 11 - ஆம் நூற்றாண்டு) இவ்வுருவத்தில் வளைவு கீழ்நோக்கிச் செல்லத் தலைப்பட்டது. ... ... ... ...



மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் (கி.பி.13-ஆம் நூற் றாண்டு) முற்றிலும் அடிக்கோட்டை வளைவு தொட்டு நிற்கும் நிலையை அடைந்தது. ... ... ... ...





வட்டெழுத்தில் உட்கோடு வலக்கோட்டின் மேல்நின்ற நிலையில் கி.பி. 5 - ஆம் நூற்றாண்டு வரை மாறாமல் இருந்தது. ...



அதற்குப்பின் திருநாதர் குன்றுக் கல்வெட்டில் (கி.பி.6-ஆம் நூற் றாண்டு) மகரம் வளைந்து, உட்கோடும் வலப்புறக் கோட்டின் தொடர்ச்சி யாக வளைந்து காணப்படுகின்றது. ... ... ...



அடுத்த நிலையில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடக்கத்தில் ஒரு கொக்கி சேர்க்கப்பட்டது. ... ... ...



இந்த உருவமே கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டிலி ருந்து வட்டெழுத்து மறையும் வரை காணப்படுகிறது. ... ...

கே.ஜி.கி.

*மக் ஆர்தர்* (*கி.பி.* **1880 - 1964**): இவர் அமெ ரிக்காவின் தலைசிறந்த இராணுவத் தளபதிகளுள் ஒருவர். இவர் பிறந்த ஆண்டு கி.பி. 1880. 'வெசுட்டு பாயிண்டு' (West Point) படைக்கலப் பள்ளியில் 1903-இல் பட்டம் பெற்றார். அமெரிக்க இராணுவத்தில் இளநிலைப் பொறிஇயல் அதிகாரியாக 1903-ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார். அமெரிக்கத் துருப்புகள், மெக்சிகோவில் வெராகுருசை 1914-இல்

கைப்பற்றியபோது மக்ஆர்தரும் (Mac Arthur) அங்குச் சென்றார். முதல் உலகப்போரில் இராணு வத் தலைவர்களுள் ஒருவராகப் பணியாற்றினார். இவர் வெசுட்டு பாயிண்டில் கண்காணிப்பாளராக இருந்தபோது பல சீர்திருத்தங்களைச் செய்தார். பின்னர் 1936-இல் அமெரிக்கப் படைகளின் தலை



மக் ஆர்தர்

மைத் தளபதியாகவும் பணியாற்றினார். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் (1929) அமெரிக்க இராணுவத்தைச் சீர்குலைக்காமல் இருப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற் கொண்டார். இவர், 1935-41-ஆம் ஆண்டுகளில் பிலிப்பைன்சில் இராணுவ ஆலோசகராகப் பொறுப் பேற்றார். இரண்டாம் உலகப் போரில் 1941-1945-ஆம் ஆண்டுகளில் சப்பானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆசுதிரேலியா வில் 1942-இல் நேசப்படைகளின் தென்மேற்குப் பசிபிக்குக் களத்தின் தலைமைத் தளபதியானார். நியு கினியாவில் சப்பானியர்களுக்கு எதிரான நட வடிக்கைகளில் 1943-இல் தீவிரமாக ஈடுபட்டார். தம் மேலதிகாரிகள் இரண்டாம் உலகப்போரில் ஐரோப்பியக் களத்திற்கு ஆசியக்களத்தைவிட மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்றும், ஆசியா வில் மத்திய பசிபிக்குக் களத்திற்குத்தாம் தலைவராக இருக்கும் தென்மேற்குப் பசிபிக்குக் களத்தை விட மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்றும் குறைகூறினார். தென்பிலிப்பைன்சையும், போர்னி யோத் தீவினையும் 1945-இல் வெற்றி பெற்றார். நேச நாடுகளின் படைகள் அனைத்திற்கும் பசிபிக்குக் கேந் திரத்தின் தலைமைத் தளபதியாக 1944-இல் நிய மிக்கப்பட்டார். சப்பானின் சரணாகதியை 1945-இல் மேற்பார்வையிட்டார். சப்பானில் அமெரிக்கத் தளபதி யாகச் சிறப்பாக ஆனால், கடுமையுடன் செயற்பட் டார். சப்பானியப்படைகளின் போர்க் கருவிகள் பறி முதல் செய்யப்பட்டன. இராணுவ வெறியர்களும் அதிதீவிரத் தேசியவாதிகளும் சப்பான் அரசின் பல பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டனர். புதிய அரசியல் அமைப்பு ஏற்பட்டு மக்கள் உரிமைகள் வரையறுக்கப்பட்டன. இந்த அரசியல் அமைப்பு ‘மக் ஆர்தர் அரசியல் அமைப்பு’ என்று கூறப்படுகிறது. நிலம், கல்வி, தொழிலாளர் நலன், பெண்ணுரிமை, மக்கள் நலன் முதலியவற்றில் வியத்தகு மாறுதல் களை ஏற்படுத்தினார். சப்பானில் இவர் சருவாதி காரியாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டும் உண்டு. பின்னர் 1950-இல் கொரியாவில் உலகநாடுகள் நிறுவனத்தினுடைய அமைதிப்படையின் தளபதியாகப் பணியாற்றினார். வடகொரியர்கள் தென்கொரியா வின் மீது படை எடுத்தபோது பூசன் அருகில் அவர் களைத் தடுத்து நிறுத்தினார். சீனர்கள் வடகொரியா விற்கு ஆதரவாகப் படை எடுத்தபோது சற்றுப் பின் வாங்கினார். அமெரிக்கக் குடியரசுத்தலைவர் மக் ஆர்தரை 1951-ஆம் ஆண்டு இவரது கீழ்ப்படியாமை யையும் சிறிய பிராந்தியப் போருக்கு விருப்பம் இல்லாமையையும், காரணம் காட்டி இராணுவத்தின் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் விடுவித்தார். குடி யரசுக் கட்சியினர் 1944, 1948, 1952 - ஆம் ஆண்டு களில் இவரைக் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கான வேட்பாளராகப் போட்டி இடும்படி வலியுறுத்தினர். ஆனால், இவர் மறுத்துவிட்டார்.

மக் ஆர்தர் 1964-ஆம் ஆண்டு மறைந்தார். இவ ருடைய இராணுவப் பணிகளை விட இவர் சப்பா னில் அரசியல் அமைப்பிற்கு ஆற்றிய பணி தலை சிறந்தது. இராணுவத் தளபதிக்குரிய நற்குணங்கள் அனைத்தையும் இவர் பெற்றிருந்தார். அ.வெ.பெ.

**மக்ஐவர், இராபர்ட் மாரிசன் (கி.பி.1882-1970)** புகழ் பெற்ற சமுதாயவியலார். இவர் இசு காட்லாந்தில் இசுடோர்னவே (Stornoway) என்னு மிடத்தில் கி.பி. 1882 - ஆம் ஆண்டு பிறந்தார். இவர் சமூகவியல், தத்துவவியல், அரசியல், நிருவா கம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார். இவரு டைய சொந்த நாட்டிலும், கனடாவிலும் ஆசிரியரா கப் பணியாற்றினார். பிட்ரிம் சரோக்கின் (Pitrim Sorokin), தால்காட் பார்சன்சு (Talcott Parsons) போன்ற தலைசிறந்த சமுதாயவியலாரைப் போல இவரும் அமெரிக்கச் சமூகவியல் சங்கத்தின் தலைவ ராக இருந்திருக்கிறார்.

மக்ஐவர் (Robert Morrison Mac Iver) அரசியல் கோட்பாடு, பொருளாதாரம், பயன்முறைச் சமூக அறிவியல்கள் (Applied Social Sciences), தத்துவ வியல், சமூகவியல் ஆகிய துறைகளில் பல நூற்றொ



மக்ஜவர், இராபர்ட் மாரிசன்

குதிகளை எழுதியுள்ளார். குறிப்பாகச் சமூகவியலில் இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிட்டுச் சொல்லப்படுவன சமூகம் (Community – 1927), சமுதாயம் (Society - 1931), சமுதாயக் காரணிகள் (Social Causation- 1942) ஆகியனவாகும்.

மக்ஜவரின் மேலான திறனாகச் சொல்லப்படுவன அவருடைய ஒருங்கிணைத்துச் (Synthesis) சொல்லும் திறனும், மொழிபெயர்த்துச் சொல்லக் கூடிய திறனும், சமூக அறிவியலில் காணப்படுகின்ற மாறுபட்ட கருத்துகளை மறுபடியும் ஒருமைப்படுத்தும் (Reintegrate) திறனும், தெளிவான சமூகவியல் கோட்பாடுகளை உண்டாக்கிய தன்மையுமாகும். இவர், வளர்ச்சியடைந்த சமூகவியலுக்குத் (Mature Sociology) தேவையானது அதன் அடிப்படைக் கருத்துகளை (Concepts) நன்றாகப் புரிந்து கொள்வது ஆகும் என வலியுறுத்துகிறார். அத்தகைய முக்கியமான கருத்துகளான சமூகம் (Society), சமுதாயம் (Community), சங்கம் (Association), நிறுவனம்(Institution), மனப்பான்மையும் விருப்பங்களும் (Attitudes and Interests), சமுதாய முறைமைகள் (Social codes), சமுதாய வகுப்பு (Social class), கூட்டம் (Crowd), பண்பாடு (Culture), நாகரிகம் (Civilization) போன்றவற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விவரித்துக் கூறியுள்ளார். இக் கருத்துகளையும் பிற கருத்துகளையும் அவருடைய நூல்கள் முழுவதிலும் ஆங்காங்கே மாறான தொடர்களில் பயன்படுத்தியுள்ளார். அவற்றிற்கு மேலாக மிகவும் நுட்பமான கருத்துகளின் வேறுபாடுகளை (Conceptual Differences) இவருடைய சமுதாய அமைப்பும், சமுதாய மாற்றமும் (Social Structure and Social Change) என்ற கோட்பாட்டில் கையாண்டுள்ளார். அவற்றில் குறிப்பாகத் தனி ஆள் விருப்பத்திற்கும் பொது விருப்பத்திற்கும், அரசிற்கும் சமுதாயத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறலாம்.

இவர் கையாண்ட அடிப்படைக் கருத்துகளை (Concepts) இவருக்கு முந்திய சமூகவியலறிஞர்களிடமும் காணலாம். ஆனால், அவற்றை மக்ஜவர் பயன்படுத்தியுள்ள முறையும், அவற்றை ஒன்றோடு ஒன்று இணைத்துக் கூறியுள்ள முறையும் மாறுபட்டன. ஆகவே, சமுதாயத்தைப் பற்றி இவர் கூறிய 'சமுதாயம் என்பது சமுதாய உறவுகளின் மொத்த கூட்டு' என்ற விளக்கம் சார்சு சிம்மலும் (George Simmel) மற்றவர்களும் கூறிய விளக்கத்தைப் போலவே காணப்படுகிறது. பெர்டினாண்டு தானிசு (Ferdinand Toennies) என்ற சமூகவியலறிஞர் சமுதாயத்தைச் 'சமூகம்' (Gemeimschaft) என்றும், 'சமுதாயம்' (Geellschaft) என்றும் இரண்டு வகையாகக் கூறியுள்ளதை அடிப்படையாக வைத்து மக்ஜவர் சமுதாயத்திற்கும், சங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளை எடுத்துக் கூறியுள்ளார். அதேபோல மக்ஜவரின் சமுதாய விருப்பம் (Social Interest) எர்பர்ட் இசுபென்சர் (Herbert Spencer), பிராங்லின் கிட்டிங்சு (Franklin H. Giddings), அல்பின் சுமால் (Albion W Small), எமைல் தர்க்கிம் (Emile Durkheim) போன்ற சமூகவியல் அறிஞர்களின் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்தது. இருப்பினும், சமுதாய விருப்பத்தை இவர் வகைப்படுத்தியுள்ள முறையும் அதனால் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளும் வேறுபட்டனவாகும்.

மக்ஜவரின் கருத்துகள் பிற சமூகவியல் அறிஞர்களின் கருத்துகளை ஒத்திருப்பதுடன் அவர்களின் ஆய்வு முறைகளையும் ஒத்திருக்கின்றன இவருடைய கருத்துகளில் சில குறைபாடுகள் உள்ளன என்று சிலர் குறிப்பிட்டுக் கூறினாலும், இன்றைய முறையான சமூகவியலில்(Systematic Sociology) இவர் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றார் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர்.

மக்ஜவரின் நூல்களுள் இனவேறுபாட்டைக் கட்டுப்படுத்துதலைப் பற்றி 1948 – ஆம் ஆண்டு எழுதிய 'மிகவும் சரியான கூட்டு' (The Perfect Union) என்ற நூலும், உயர் கல்வியைப் பற்றி 1955 – ஆம் ஆண்டு எழுதிய 'நமது காலத்துக் கல்விச் சுதந்திரம்' (Academic Freedom in our Time) என்ற நூலும், பன்னாட்டு உறவுகளைப் பற்றி 1959 – ஆம்

ஆண்டு எழுதிய 'நாடுகளும் ஐக்கிய நாடுகளும்' (The Nations & the United Nations, 1959) என்ற நூலும், சக்தியின் (Power) தன்மையையும் உபயோகத்தையும் பற்றி 1964 – ஆம் ஆண்டு எழுதிய 'சக்தி மாற்றப்பட்டது'(Power Transformed) என்ற நூலும், சிறு குற்றவாளிகளைப் பற்றி 1966 – ஆம் ஆண்டு எழுதிய 'சிறு குற்றங்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும்' (The Prevention and Control of Delinqency) என்ற நூலும் சிறப்புடையன. மக்ஐவர் நியூயார்க்கில் 1970 – இல் காலமானார் கோ.இரா.

**மக்கள் அழிப்பு:** வேண்டுமென்றே ஒருகுறிப்பிட்ட இனத்தவரை அல்லது சமய, அரசியல் குழுவினரை முறையாகப் பூண்டோடு அழித்தல் மக்கள் அழிப்பு (Genocide) எனப்படும். மக்கள் அழிப்பு என்பதன் ஆங்கிலச்சொல் இனத்தைக் குறிக்கின்ற கிரேக்கச் சொல்லிலிருந்தும், கொலை செய்வதைக் குறிக்கின்ற இலத்தீன் சொல்லிலிருந்தும் உருவானதாகும். ஐரோப்பாவில் கி.பி. 1933 - 45 – இல் நடந்த இனப்படுகொலையின்போது இச்சொல் நிலைபெற்றது எனலாம்.

சமூகத்தில், சிறுபான்மைச்சமூகத்தினர் செல்வாக்கு மிகுந்த பெரும்பான்மைச் சமூகத்தினரால் வேண்டுமென்றே கொலை செய்யப்படுகின்ற கொடுமைகள் உலகெங்கிலும் நடைபெற்றுவருகிற நிகழ்ச்சிகளாகும். இனம், சமயம், சாதி ஆகியவற்றின் அடிப்படையில் இக்கொடுமைகள் நடைபெறலாம். இம்மக்கள் அழிப்பு உலகின் பல்வேறு நாடுகளிலும் நடைபெறாமல் இல்லை. சிறுபான்மையினரைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் பின்வரும் வேறுபட்ட முறைகளில் ஏதேனுமொன்றின் மூலம் அனைத்துச் சமூகங்களிலும் சிறுபான்மையினர் பாதிக்கப்படுவதாகக் கூறுகின்றனர். அவை: 1) மக்கள் அழிப்பு, 2) வெளியேற்றப்படுதல் (Expulsion), 3) தனியாகப் பிரித்துவைத்தல் (Segregation), 4) அடக்கி வைக்கப்படுதல் (Subordination), 5) இணைக்கப்படுதல் (Amalgamation), 6) தன்மயமாக்குதல்(Assimilation). மேலும், சிறுபான்மையினர் அடியோடு ஒரு நாட்டில் அழிக்கப்படும்போதே பெரும்பான்மையினருக்கும் இவர்களுக்கும் இடையிலான வெறுப்புகள் முழுவதுமாகக் குறைகின்றன என்றும் ஆய்ந்து கூறியுள்ளனர்.

எனவேதான், குறிப்பிட்ட சிறுபான்மையினர் சிக்கல்களுக்குத் தீர்வாக இரக்கமற்ற செயலான மக்கள் அழிப்பே எங்கும் நடைபெறுகிறது. எடுத்துக் காட்டாக, தாசுமானியா (Tasmania) தீவில் ஆங்கிலேயரின் குடியேற்றநாட்டு ஆதிக்கம் நடைபெற்றபோது அந்நாட்டு ஆதி குடிமக்களை அழிக்கின்ற செயலில் ஆங்கிலேயர் ஈடுபட்டபோது இத்தகு படுகொலைகள் நடைபெற்றன. தாசுமானியர்கள் விலங்குகளைப் போல் நாய்களால் கடிக்கச்செய்தும் துப்பாக்கியால் சுடப்பட்டும் வேட்டையாடப்பட்டனர். சிலர் நச்சுக் கலந்த உணவைக் கட்டாயப்படுத்தி உண்ணச்செய்து கொல்லப்பட்டனர். அவர்கள் குறைந்த அளவு 75-ஆண்டுகளுக்கு உயிர்த்தெழ முடியாதவாறு செய்யப்பட்டனர். அங்கு இறுதியாக உயிர்வாழ்ந்த துருகானியா (Trugania) என்ற பெண் கி.பி. 1876 - இல் இறந்ததாக வரலாறு கூறுகிறது.

இதேபோன்றதொரு நிகழ்ச்சி உலகின் மேற்குப் பகுதி முழுவதிலும் ஐரோப்பியக் குடியேற்ற நாட்டு ஆதிக்கம் நடந்துகொண்டிருந்தபோது, ஆதிகுடிகளான இந்தியர்களை எதிர்த்து அங்குக் குடியேறிய ஆங்கிலேயர்கள் சண்டையிட்டுக்கொண்டபோது நடைபெற்றது. இந்தியர்களைப் பூண்டோடு அழிப்பதற்கு ஐரோப்பியர் சூழ்ச்சி செய்ததற்கான ஆதாரம் இல்லை. எனினும், குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தவரின் கொள்கைகள் பெரும்பாலும் இதுபோன்ற விளைவையே ஏற்படுத்தியுள்ளன. நேரடியாகக் கொல்வதைத் தவிர்த்து மறைமுகமாக இந்தியர்களின் வாழ்க்கையை அவர்கள் கெடுத்தனர். அதாவது அங்குக் குடியேறிய ஆங்கிலேயர்கள் காடுகளை அழித்து அனைத்து நிலங்களிலும் மக்களை மிகுதியான அளவில் குடியேற்றினர். எனவே, வேளாண்மையை மட்டுமே தொழிலாகக் கொண்டிருந்த இந்தியர்கள் வாழுவதற்கு இயலவில்லை. பட்டினியால் பலர் மாண்டனர்; நோயினால் பலர் இறந்தனர்.

ஐரோப்பாவில் இட்லரின் (Hitler) நாசிக் கட்சி (Nazi) ஆட்சியிலிருந்தபோது சிறுபான்மையினத்தவரான யூதர்களில் 60 விழுக்காட்டினர் (6-மிலியன் மக்கள்) இவ்வாறே நச்சுக் காற்றின் மூலம் ஒரே இடத்தில் அடைக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். உகாண்டா அதிபர் இடிஅமீனும் (Idi Amin) இம்மக்கள் அழிப்புக் கொள்கையையே பின்பற்றினார் என வரலாற்று நிகழ்ச்சிகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பல மக்கள் அழிப்பு வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்த போதிலும் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரே உலகச் சமுதாயம், மக்கள் மொத்தமாகப் படுகொலை செய்யப்படுவதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிற்று. நியூரம்பர்க்கில் (Nurumburg) கி.பி. 1946 – ஆம்ஆண்டு நடைபெற்ற போர்க் குற்றவாளி விசாரணைக் குழுவினால் வெளியிடப்பட்ட உண்மைகளின் விளைவாக ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை (General Assembly of the United Nations) சருவதேசச் சட்டப்படி மக்கள் அழிப்பு ஒரு மாபெரும் குற்றம் எனக் கூறியது. மேலும், அதனை மீறுபவர்

கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதையும் உறுதிப் படுத்தியது. பின்னர், கி.பி. 1948 - இல் அப் பொதுச் சபை அக் குற்றத்தைத் தடுப்பதற்கும், தண்டிப்பதற் குமான ஆணைக்கு ஒப்புதல் அளித்தது. அச் சட்டம் கி.பி. 1951ஆம் ஆண்டு முதல் நாட்டில் நடை முறைக்கு வந்தது.

நியூரம்பர்க்கில் கூடிய சருவதேச இராணுவ நீதி விசாரணைக் குழு, அமைதிக்காலம், போர்க்காலம் ஆகிய இரு காலங்களில் எக்காலத்தில் செய்யப்பட் டாலும், மக்கள் அழிப்புக் குற்றமே எனக் கூறியது. அவ்விசாரணைக் குழுவின் ஆணைப்படி பின்வரும் எந்த நிகழ்ச்சியைச் செய்தாலும் அது மக்கள் அழிப் பாகவே கருதப்படும். அவை, 1) ஒரு நாடு, இன அல்லது சமயக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரை அல்லது பகுதியினரை அழித்தல், 2) அக்குழுவின் உறுப்பினர்களுக்கு உடல் அல்லது மன அளவில் கடு மையான பாதிப்பை ஏற்படுத்துதல், 3) வேண்டு மென்றே குழுவின் உறுப்பினர்களின் வாழ்க்கை நிலையைப் பாழ்படுத்தி அங்கு இயற்கை அழிவை ஏற்படுத்துதல், 4) அக் குழுவின் குழந்தைகள் பிறப் பதைத் தடுக்கின்ற செயல்களைச் செய்தல், 5) ஒரு குழுவிலுள்ள குழந்தைகளைப் பிரித்து அடுத்த குழு வினருடன் வலுக்கட்டாயமாகச் சேர்த்தல் போன் றவையாகும்.

மேலும், அச் சட்டப்படி மக்களை மொத்தமாக அழிப்பதற்கு 1) இரகசியமாகத் திட்டமிடுதல் (Conspiracy), 2) தூண்டுதலாக இருத்தல் (Incitant), 3) சிக்கலாக்குதல் (Complicity), 4) முயற்சி செய்தல் (Attempt) போன்ற காரியங்களில் ஈடுபட்டாலும் குற்றமெனக் கருதித் தண்டிக்கப்படலாம். இத்தீய செயலில் ஈடுபடுபவர்கள் அரசாளுபவராகவோ, அரசு அதிகாரிகளாகவோ தனி மனிதர்களாகவோ இருப்பினும் அவர்கள் தண்டிக்கப்படலாம்.

இது தொடர்பாக அமைக்கப்பட்ட மாநில நீதி மன்றத்தின் மூலமாகவோ சருவதேசக் குற்றவியல் நீதியன்றத்தின் மூலமாகவோ பாதிக்கப்பட்டோர் நீதி விசாரணைக்கு முயற்சி செய்யலாம். மேலும், உறுப்பினரான எந்த நாடும் மக்கள் அழிப்புத் தொடர்பான கொடுமையில் ஐ.நா. சபையைத் தலையிடக் கோருவதற்கு உரிமையுண்டு. பூ.த.

**துணை நூல்:**

**King, David, C., and Merrin, R. Koller,** Foundations of Sociology, Rinehart Press, San Francisco, 1975.

***மக்கள் உரிமைகள் நாள்:*** ஆண்டுதோறும் திசம்பர்த் திங்கள் பத்தாம் நாள் உலக மக்கள் உரிமை கள் நாளாகக் கொண்டாடப்படுகிறது. மக்கள் தம் உரிமைகளுக்காகப்பல நாடுகளில் பற்பல போராட்டங் களைப் பல்வேறு ஆண்டுகளில் நிகழ்த்தியதை வரலாறு காட்டுகிறது. பின்னர் கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட்டபிறகு, அது இந்த முக்கிய செய்தி பற்றி ஆய்ந்து முடி வெடுக்க ஒரு பொறுப்பாண்மைக் குழுவை (Commission) அமர்த்தியது. அக்குழு தீவிர ஆய்வுக்குப் பின் 1948-ஆம் ஆண்டு, சூன் திங்களில் மக்கள் உரிமை கள் பற்றிய ஓர் உலக அறிக்கையை ஐ.நா.விடம் வழங்கியது. ஐ.நா. பொதுக்குழு, தனது பாரிசு நகரக் கூட்டத்தில் 1948-திசம்பர் 10-ஆம் நாள், சில மாறுதல்களுடன் அந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டது. உலக மக்கள் யாவருக்கும் பொதுவான அந்த உரிமைகள் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததானதால், அந்த நாளை உலக மக்கள் உரிமைகள் நாளாகக் கொண்டாடி வருகின்றனர். அந்த அறிக்கை, ஐ.நா. சபையில் ஒரு மனதாக அனைத்து நாடுகளின் உறுப் பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், கருத்து வேற்றுமை காரணமாகச் சோவியத்துப் பிரிவைச் சார்ந்த ஆறு நாடுகள், சௌதிஅரேபியா, தென்னாப்பிரிக்க ஒன்றி யம் ஆகியன அக்கூட்டத்தில் பங்குகொள்ள வில்லை.

அந்த அறிக்கையின் முன்னுரை, 'உலக நாடு களின் மக்கள் யாவருக்கும் இயற்கையிலேயே அவர் களிடமிருந்து பிரிக்கமுடியாத உரிமைகள் உள்ளன; உலக மக்கள் குடும்பத்தைச் சேர்ந்த யாவருக்கும் அவ்வுரிமைகள் சமமாகும்; இந்த அடிப்படையில் தான் உலகத்தில் சுதந்திரமும் நீதியும் அமைதியும் நிலவும்' என்று கூறுகிறது. இந்த உரிமைகள், புறக்கணிக்கப் பட்ட நாகரிகமற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் மானிட சமுதாயத்தின் மனச்சான்றுக்குப் பெரிய ஊறு விளை விப்பனவாகையால், உரிமைகள் வரையறுக்கப் பட வேண்டியது இன்றியமையாத தாகும் என்பதையும் முன்னுரை எடுத்துக்காட்டுகிறது. பொதுவாகப் பேச்சு உரிமை, வழிபாட்டு உரிமை, வறுமையை அகற்றிக் கொள்ளும் உரிமை, அச்சமற்று வாழும் உரிமை முதலியனவற்றை எவ்விதக் கருத்துவேறு பாடுமின்றி உலக மக்கள் யாவரும் நாடுகின்ற காரணத்தால், அவ்வுரிமைகள் இந்த அறிக்கையில் தொகுத்தும் விரித்தும் வகுத்தும் குறிப்பிடப்பட்டுள் ளன. முப்பது பிரிவுகளைக் கொண்ட இந்த அறிக்கை உலகமக்கள் நாகரிகத்துறையில் முன்னேறி வரு வதைக் காட்டா நிற்கும். தெ.பா.

'மக்கள் தொகை' என்ற சொற்றொடர் 'மக்களின் எண்ணிக்கை' என்ற பொருளை எளிதில்

தந்து விடுகிற போதிலும் 'எம்மக்கள்?' என்ற வினாவையும் அது தானாகவே எழுப்பி விடுகிறது. எனவே, 'மக்கள் தொகையில்' குறிப்பிடப் பெறும் 'மக்கள்' பற்றிய தெளிவான வரையறைகளை முதலிலேயே செய்து கொள்ள வேண்டும். புவியியல், அரசியல், சமூகவியல், பொருளியல், பண்பாடு ஆகிய பல அடிப்படைகளில் அந்த வரையறை செய்யப்படலாம். உண்மையில், அந்த அடிப்படைகள் அனைத்துமே மக்கள் தொகைக் கணிப்புகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்து ஓர் எண்ணிக்கை என்ற நிலையில் அவ்வெண்ணிக்கையை நிருணயிக்கும் காரணிகள், குறிப்பிட்ட மக்கள் தொகையின் முக்கிய கூறுகளாகக் கருதப் பெற்று விடுகின்றன.

புவியியல் அடிப்படையில், உலகளாவிய ஒரு பெரியஎல்லையும், ஊர், பேரூர், நகரம், மாநகரம், மாவட்டம், மாநிலம், நாடு எனப்பல சிற்றெல்லைகளும் மக்கள் தொகைக்கு உள்ளன. பிற்குறிப்பிட்ப் பெற்றுள்ளவை அரசியல், அல்லது நிருவாக அடிப்படையில் இயற்றப்பட்டுள்ள வகுப்புகள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மக்கள் தொகை பற்றிய அறிவு, பொருளியல், சமூகவியல் நடைமுறைகளை ஆயவும் கொள்கைகளை வகுக்கவும் பயன்படுத்தப் பெற்று வருகிற நிலையில், இவ்விரு அடிப்படைகளிலும் மக்கள் தொகையை வகை தொகை செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவே, செய்புந் தொழில், ஈட்டும் வருமானம், சாதி, சமயம், இனம், மொழி போன்ற அடிப்படைகளிலும் மக்கள் தொகை கணிக்கப் பெற்றாக வேண்டும். மேலும், மக்கள் தொகைப் போக்கினைக் கணிக்க முற்படுவோர்க்காக, ஆண்-பெண் விகிதங்கள், அவர்கள் வயதுநிலை, திருமணநிலை போன்றவை தொடர்பான செய்திகளும் தொகுக்கப் பட வேண்டும். மக்களுடைய கல்வி நிலையைப் பற்றித் தெரிய முடிந்தால், அவர்களுடைய பண்பாட்டுத் தரத்தையும் முன்னேற்றத்தையும் அளவிட்டறிய முடியும். அந்நிலையில், 'மக்கள் தொகை' என்பது குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்வோருடைய கூடுதல் எண்ணிக்கையைக் குறிப்பது மட்டுமன்று, அவ்வெண்ணிக்கையைப் பல வழிகளில் வகை தொகை செய்து தருவதுமாகிறது. மொத்தத்தின் தொகுதியை விட, அத்தொகுதியின் பகுதிகளே இங்கு அதிக சிறப்புத்தன்மை உள்ளனவாகின்றன.

மக்கள் தொகையை நிருணயிக்கும் காரணிகள் பிறப்பு, இறப்பு, குடிப்பெயர்ச்சி, சமுதாய நிலை பெயர்ச்சி ஆகியவையே என ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஆகவே, மக்கள் தொகைக் கணிப்புகள் வெறும் மொத்த எண்ணிக்கையை மட்டுமன்று; பிறப்பு இறப்புப் பற்றிய விவரங்களுடன், குடிபெயர்ச்சி, சமுதாய நிலைபெயர்ச்சி, ஆகியவை பற்றிய செய்திகளையும் தந்து நிற்கின்றன. தே.வே.

**துணை நூல்:**

Asha, A. Bhende & Tara Kanitkar, Principles of Population Studies, Himalaya, 1985.

**மக்கள் தொகை இயல்:** மக்கள் தொகை பற்றிய சிந்தனை மிகவும் பழமையானதே. 'வேற்று நாட்டிலிருந்து மக்களைக் கொணர்ந்தும், தன்நாட்டில் மிகுதியான மக்களை வேற்றிடம் உய்த்தும், நாட்டினை அமைத்தல் வேண்டும்' என்பது கொளடலியம். பத்தாயிரத்துக்குக் குறையாமலும், நூறாயிரத்துக்கு மிகாமலும் குடிமக்கள் இருக்கும் போதுதான் ஒரு நாடு தன்னிறைவு பெற்று ஒருமைப்பாட்டுணர்வுடன் நிலைத்திருக்க முடியும் என்பார் அரிசுடாட்டில். நாட்டின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு, வரித்தண்டல் ஆகிய கோணங்களிலிருந்து மக்கள் தொகையை அணுகி ஆராய்ந்தனர் பழங்கால ஆசிரியர்கள். ஆனால், கழிந்த சில நூற்றாண்டுகளாக, மக்கள் தொகையின் பொருளியல், சமூகவியல், உடலியல் கூறுகள் ஆகியவை வலியுறுத்தப் பெற்ற 'மக்கள் தொகை இயல்' என்ற தனியொரு துறையே உருவாகி வளர்ந்துகொண்டிருக்கிறது. தொழிற் புரட்சியைத் தொடர்ந்து தோன்றிய சில பொருளியல், சமூகவியல் ஆகியவற்றின் சிக்கல்கள் இவ்வியல் கருக்கொள்ளக் காரணமாயினவெனில், இரண்டாம் உலகப் பெரும்போரின், பின் விளைவாகிய பிற்பட்ட நாடுகளின் பொருளியல் வளர்ச்சிகள், இவ்வியலுக்குப் புதிய பரிமாணமொன்றையே தந்துள்ளன என்று சொல்லலாம்.

மக்கள் தொகை பற்றிய ஆய்வுகளுக்கெல்லாம் முன்னோடியாகவும் தந்தையாகவும் கருதப்பெறுபவர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சான் கிராண்டு என்பவராவர். இவர் கி.பி. 1662 – இல் வெளியிட்ட 'சாவு அறிக்கைகள் மீதான இயற்கை, அரசியல் பார்வைகள்' என்ற சிறுநூல் ஒரு முன்னோடி நூலாக மதிக்கப்பட்டு வருகிறது. கிறித்தவ ஆலயங்கள் பாதுகாத்து வந்த சாவு அறிக்கைகளிலிருந்து இலண்டன் நகரில் கி.பி. 1604–முதல் 1661–வரை நிலவிய மக்கள் தொகை பற்றிய பல தகவல்களை இவர் ஆய்ந்தளித்துள்ளார். பிறக்கும் குழந்தைகளில் ஆண் குழந்தைகள் எண்ணிக்கை அதிகமாயுள்ளது. இலண்டன் நகரில் பிறப்புகளைவிட இறப்புகள் மிகுதியாக உள்ளன. இருந்தும், அங்கு மக்கள் தொகை வளர்ந்து செல்லக் காரணம் நகரில் குடியேறுவோர் தொகை வளர்ந்து செல்வதுதான் என்று கிராண்டு நிறுவியுள்ளார். இவரைத்

தொடர்ந்து, வில்லியம் பெற்றி, எட்மண்டு, காலி ஆகியோரும் மக்கள் தொகை தொடர்பாகப் புதிய சில கோணங்களில் சிந்திக்க முற்பட்டனர். காலி முதன்முதலில் வாழ்நாள் அட்டவணையொன்றை இயற்றித் தந்துள்ளார்.

மகா பிரடெரிக்கின் காலத்தில் சோகன்பீட்டர் சூசுமில்சு என்ற ஒரு பாதிரியார் 1200 - பக்கங்களும் 68 அட்டவணைகளுங் கொண்ட ஒரு பெரிய நூலைக் கி.பி. 1761-62 – இல் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய மக்கள் தொகைத் தொடர்பான சிக்கல்களை விளக்கும் வகையில் எழுதியுள்ளார். வயது வந்த பருவத்தில் பெண்கள் எண்ணிக்கை, ஆண்களைவிட மிகுதியாக உள்ளது என்பது அவருடைய கண்டுபிடிப்புகளுள் ஒன்று. மக்களின் இனப்பெருக்க வளம் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். ‘தெய்விக ஒழுங்கு’ என்ற தம்முடைய நூலில் (கி.பி. 1765) உலக மக்கள் தொகையைக் கணக்கிடவும் அவர் முதன் முதலாக முயன்றுள்ளார்.

மக்கள் தொகை வளர்ச்சிக்கும், உணவுப் பொருள் அளிப்புக்கு மிடையேயுள்ள தொடர்பை நுணுகியாய்ந்து மக்கள் தொகையில் ஒரு புதிய அணுகு முறையையே தொடங்கி வைத்தவர் தாமசு ராபர்ட்டு மால்தசு (கி.பி 1766-1834) ஆவார். மக்கள் தொகை, பெருக்கல் வாய்பாடு போல வளர்ந்து செல்லும்போது, உணவு உற்பத்தி, கூட்டல் வாய்பாடு போலவே பெருகிச் செல்லும் என்பார் அவர். இதனால், மக்கள் குலத்தின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க வழியில்லை என்பது அவருடைய முடிவு.

மக்கள் தொகை இயல் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஆழ்ந்தகன்று வளர முதன்மையான ஊக்கிகள் மூன்று எனலாம். புள்ளியியல் ஆய்வு, நிகழ் திறம் பற்றிய பல நுட்பங்களை வெளிப்படுத்தியது. அவற்றால், மக்கள் தொகைக்கணிப்பு, வளர்ச்சி ஆகியவை பற்றி அழகாக ஆய்ந்தறிய முடிந்தது. அக்காலத்தில்தான் பல நாடுகள் மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளை முறையாக நடத்தத் தொடங்கின. அமெரிக்காவில் கி.பி. 1790 - இலும், பிரான்சில் கி.பி.1801-இலும், முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. மேலும், இங்கிலாந்து போன்ற நாடுகள் பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்வதற்கான நியதிகளைச் செயற்படுத்த முன்வந்தன. அவற்றின் விளைவாக, மக்கள்தொகை பற்றிய ஆய்வுக்கு வேண்டிய தரவுகளும் பெருகலாயின. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பல ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், உள்ள பல்கலைக் கழகங்களில் மக்கள் தொகை இயலுக்கென்று தனியாகத் துறைகளும் தோற்றுவிக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் பெரும்போருக்குப் பின்னர் மக்கள் தொகை பற்றிய ஆய்வுகள் பிற்பட்ட நாடுகளுக்கும் பரவின. அந்நாடுகளில் இறப்பு விகித வீழ்ச்சி பல்வேறு சிக்கல்களைக் கொண்டு வந்தது. அண்மையில் விடுதலை பெற்ற அந்நாடுகள், தம்முடைய திட்டமிட்டு முன்னேறும் முயற்சிக்கு மக்கள் தொகை வளர்ச்சி ஒரு தடையாக இருப்பதை உணர்ந்து, அதனைக் கட்டுப்படுத்துவதற்குதவும் வழிமுறைகளைத் தேட முற்பட்டன. அதன் எதிரொலியாகவும் மக்கள் தொகை இயல் வளர்ச்சி கண்டது.

ஐக்கிய நாடுகள் நிறுவனமும் தொடர்ந்து இவ்வியலின் வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறது. இதன் பிரிவுகளில் ஒன்றாக ஒரு மக்கள்தொகை ஆணைக்குழு செயற்பட்டு வருகிறது. அது 1954 முதல் பத்தாண்டு இடைவெளிகளில், உலகமக்கள் தொகை மாநாடுகளைக் கூட்டி வருகிறது. ஐ.நா. அவை உலக மக்கள் தொகை ஆண்டாக 1974-ஆம் ஆண்டினைக் கொண்டாடியது. வட்டார மக்கள் தொகைப் பயிற்சி ஆய்வு நிலையங்களை அது பல நாடுகளில் நடத்தி வருகிறது. அத்தகைய நிலையம் ஒன்று 1956 – இல் பம்பாயிலும் நிறுவப்பட்டது என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

மக்கள் தொகை இயல், குறிப்பாக மூன்று துறைகளை ஆய்ந்து வருகிறது என்று சொல்லலாம். அவை, மக்கள் தொகையின் அளவு, அமைப்பு, பகிர்வு என்பன ஆகும். மக்கள் தொகையின் அளவு என்ன, அதில் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் என்ன, அதற்கான காரணங்கள் என்னென்ன என ஆய்வது மக்கள் தொகை இயல் ஆய்வின் ஒரு பகுதியாகும். பிறப்பு, இறப்பு, குடியேற்றம், இறக்கம் ஆகியவை அப்பகுதியின் முதன்மையான உட்பகுதிகள் எனலாம். மக்கள் தொகையின் அமைப்புத் தொடர்பான இரண்டாம் பகுதியில் முக்கியமான பால், வயது ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் தொகை அமைந்துள்ள விதமும், அதில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள், அதன் காரணங்கள், விளைவுகள் ஆகியவையும் ஆயப்படுகின்றன. இனம், மொழி, தொழில் போன்றவையும் மக்கள்தொகை அமைப்புத் தொடர்பான பகுத்தாய்வுக்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப் பெறலாம். மக்கள் தொகை இயலில், மற்றொரு பகுதி, குறிப்பிட்ட மக்கள் தொகை குறிப்பிட்ட நாட்டில் எவ்வாறு பகிர்ந்து கிடக்கிறது, அப்பகிர்வு எவ்வாறு மாறிக் கொண்டிருக்கிறது என்பவை தொடர்பானது ஆகும். மக்கள் தொகையின் இடச்செறிவு, தொழில் பகிர்வு முதலியவை அப்பகுதியின் உட்பகுதிகள்.

மக்கள் தொகை இயல், பல நிலைகளில், ஒத்த பிற இயல்களுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. மக்கள் தொகை என்பதே ஒரு குறிப்பிட்ட எண்ணாதலால், அவ்வியல் கணிதம், புள்ளியல் ஆகிய இயல்கள் தருகிற கருத்துகளையும், கருவிகளையும் மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்தி வருகிறது. வீதங்கள், விகிதங்கள், சமன்பாடுகள், வாய்பாடுகள் முதலியன இவ்வியலில் பரவலாகக் கையாளப் பெற்று வருகின்றன. மனிதனும் உயிரினங்களின் ஒரு பகுதி என்ற நிலையில், இவ்வியல் உயிரியல் கருத்துகளா லும் வளப்படுத்தப் பட்டு வருகிறது. மக்கள் தொகை பற்றிய ஓர் உயிரியல் கோட்பாடே உள்ளது. இனப்பெருக்க வளம் என்பதுஅடிப்படையில் உயிரியல் காரணிகளால் நிருணயிக்கப் பெறுகிற ஒன்றாகும். மக்கள் தொகைச் செறிவு, இனக்கூறுகள் முதலியவற் றுக்கும் புவியியலுக்கும் இடையேயுள்ள தொடர்பும் மிகத்தெளிவாகத் தெரிகிற ஒன்றேயாகும். மக்கள் தொகைக்கும், பொருளியல் சமூகவியல் ஆகியவற்றின் நிலைகளுக்கும் இடையேயுள்ள தொடர்பினை இக் காலக் கோட்பாடுகளும் நடைமுறைகளும் மிக நன்கு வலியுறுத்தி வருகின்றன. முன்னேறும் நாடுகளின் மக்கள் தொகை தொடர்பான சிக்கல்கள், அந்நாடு களின் பொருளியல் சமுதாயச் சிக்கல்களாகவும் விளங்கி நிற்பதை இங்கு நினைவுகூரலாம்.

இவ்வியலறிவின் பயன்களும் பலப்பல. பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் தொடர்பான விவரங்கள், பொது உடல் நலம், மருத்துவத் துறை ஆகியவற்றில் மிகவும் பயன்படுகின்றன. இறப்புகளின் காரணங் களையும் அவை எப்பாலரிடம் எவ்வயதில் ஏற்படு கின்றன என்பதையும் பற்றிய அறிவுதான், ஆயுள் காப்பீட்டுக்கு அடிப்படையாகத் திகழ்கிறது. வணிக இயல் தொடர்பான அங்காடி ஆய்வுகளுக்கு மக்கள் தொகை இயலறிவு உதவும். மக்கள் தொகை வளர்ச்சி, அதன் பரப்பு, நாட்டின் பல்வேறு பகுதி களில் அது கூடுதல், குறைவாகச் செறிந்து கிடக்கும் நிலை ஆகியவற்றைப் பற்றிய அறிவு, வீடுகள், மருத் துவம், கல்வி, போக்குவரத்து முதலிய பொதுநல வசதிகளை ஏற்படுத்தித் தருபவர்க்கு இன்றியமை யாது வேண்டும். நாட்டுப் பொருளாதாரத்தின் பல இசைவு குறைவுகளையும் எதிரிட்டகற்ற மக்கள் தொகை இயலறிவு இந்நாடுகளில் மிகவும் இன்றிய மையாதது. தே.வே.

**மக்கள் தொகை இறக்கம்:** இயற்கையின் சீற்றங்களும், கடும் போர்களும் நாடுகளின் மக்கள் தொகையை இறக்கி விடத்தக்கன. இவற்றாலேயே, வரலாற்றுப் புகழ்மிக்க சிந்து சமவெளி, சுமேரிய நாகரிகப் பகுதிகள், பிற்காலத்தில் மக்கள் குடியேற் றமே அற்ற பகுதிகளாக மாறிவிட நேர்ந்தன. அயர்லாந்தில் ஏற்பட்ட உருளைக்கிழங்குப் பஞ்சம், 1920-இல் வாட்டிய சளிக்காய்ச்சல்(Influenza) நோய், 1940 – இல் தோன்றிய வங்காளப் பஞ்சம் ஆகியவற் றால், குறிப்பிட்ட இடங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள்தொகை குறைய நேர்ந்தது. மக்கள் தொகை இறக்கம், உழைப்பின் அளிப்பை வெட்டிக் குறைத்து, பொருளுற்பத்தியைப் பெரிதும் பாதித்தது.

மக்கள் தொகை வளர்ச்சியை, மருத்துவ வசதி கள் வளர்ச்சி, இருபுறமுமிருந்து தாக்குகிறது. அது இறப்பு வீதத்தைவெட்டிக் குறைப்பதோடு, பிறப்பு வீதமும் குறைந்து செல்ல வழி வகுக்கிறது. பிறப்பு வீதம், பெரிய அளவில் குறைந்து செல்லும் போது ஒரு கட்டத்தில் மக்கள் தொகையின் ஒட்டு மொத்த வளர்ச்சி நின்று விட நேர்கிறது. அதனை யடுத்து மக்கள் தொகை இறங்கவும் முற்படும் என்று ஆசிரியர் பலர் குறிப்பிட்டுள்ளனர். இவ் விரண்டாம் நிலையை மக்கள் தொகை இறக்கம் என அவர்கள் கூறுகின்றனர்.

பிரான்சு, மேற்குச் செருமனி, உருமேனியா, பெல்சியம், இசுவீடன் ஆகிய நாடுகளில் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருந்திருக்கிறது. இக்காலக் கட்டங் களில் மக்கள் தொகை வளர்ச்சி மிகக் குறைவாகவே இருந்துவிடும். பொதுவாக அந்நாடுகளில் ஏற் பட்டுள்ள மருத்துவ வசதிப் பெருக்கமும், சிறு குடும் பங்களை வரவேற்கும் வகையில் குடும்பக் கட்டுப் பாட்டு முறைகளை ஏற்று ஆதரிக்கும் சமூக ஒழுங் குமே இதற்குக் காரணங்கள் எனலாம். மக்கள்தொகை மேலுங் குறைந்து விடலாகாது என்ற நோக்கில் மக்கள் தொகை வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு கொள்கையை அந்நாடுகள் அண்மைக் காலங்களில் பின்பற்றி வருகின்றன. தே.வே.

**துணை நூல்கள்:**

Srivastava, S.C., Studies in Demography, S.V. Nath, 1980.

Asha A. Bhende & Tara Kanitkar Principles of Population Studies, Himalaya, Publishing House, Bombay, 1985.

**மக்கள்தொகை உயர்வளர்ச்சி வீதம்:** மக்கள்தொகை அளவுக்கு அதிகமாக வளர்கிறது என்பதைக் குறிப்பிடப் பல கணிதக் குறியீடுகளை யும், கோட்பாடுகளையும் ஆசிரியர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். பெருக்கல் வாய்பாடு போல மக்கள் தொகை பெருகிச் செல்லும் என மால்தசு குறிப் பிட்டார். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்டதொரு

தொகை அதன் குறிப்பிட்ட அளவு வளர்ச்சியடைவதை உயர்வளர்ச்சி வீதம் என்று குறிப்பிடுவர். குறிப்பிட்ட தொகை எக்கால அளவில் இரண்டு மடங்காகப் பெருகும் என்ற அடிப்படையில் இவ்வீதம் அறிவிக்கப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 0.25 விழுக்காடாக இருந்தால் 278 ஆண்டுகளிலும், 1 விழுக்காடாக இருந்தால் 70 ஆண்டுகளிலும், 2 விழுக்காடாக இருந்தால் 35 ஆண்டுகளிலும், 3 விழுக்காடாக இருந்தால் 23 ஆண்டுகளிலும், 4 விழுக்காடாக இருந்தால்16 ஆண்டுகளிலும் அது இரட்டிக்கும்.

பத்து இலட்சம் ஆண்டுகளில் உலக மக்கள் தொகை10 கோடி ஆகியது. அடுத்த 10 கோடி உயர்வு நூறு ஆண்டுக் காலத்திற்குள்ளும் (கி.பி. 1830-1930), அதற்கடுத்த 10 கோடி உயர்வு 35 ஆண்டு காலத்திற்குள்ளும்(1930-65) ஏற்பட்டது. அடுத்த 10 கோடி உயர்வு ஏற்பட 12 ஆண்டுக் காலமே போதுமாயிற்று. இந்தப் போக்கு மக்கள்தொகை உயர்வானது உயர் வளர்ச்சி வீதத்தில் பெருகிச் செல்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. தே.வே.

**மக்கள் தொகைக் கட்டுப்பாடு**: மக்கள் தொகைக் கட்டுப்பாடு ஓர் இயக்கமாக கி.பி. 18-ஆம் நூற்றாண்டளவில் இங்கிலாந்து நாட்டில் தொடங்கியது. தொன்மைக் காலங்களில் மக்கள், கருச்சிதைவு, சிறு குழந்தைகளைக் கொல்லுதல், தன்னடக்கம் போன்ற முறைகளைப் பின்பற்றி மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தப் பல முயற்சிகள் எடுத்தனர் என்பதும், சமூகத்திற்குச் சமூகம் பல வகைகளில் அம்முறைகள் வேறுபட்டுக்காணப்பட்டன என்பதும் சமூகவியல் நூல்களிலிருந்து அறியப்படுகின்றன. மக்கள் தொகைக் கட்டுப்பாடு, சிறு குடும்பங்கள், தனிக்குடும்பங்கள் ஆகியவற்றின் நலனுக்கும், சமுதாயம், நாட்டு முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றிற்கும் இன்றியமையாதது என்ற கருத்தை வலியுறுத்தும் சமூக இயக்கம் (Social Movement) கி.பி.18,19-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் தோன்றி மக்களின் ஆதரவைப் பெற்றது. அவ்வியக்கத்தின் தொடக்கக் காலத்தில் குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்தல் என்பது பெண்களின் உடல் நலனைப் பாதுகாத்தல், அவர்களின் தன் உரிமைகளுக்கு அனுமதி வழங்கல் போன்ற சமூகச் சீர்திருத்தங்களுள் அடங்கும் ஒரு கூறாகக் கருதப்பட்டு, அதனை எதிர்த்தும் ஆதரித்தும் மக்களிடையே பல கருத்துகள் நிலவின. குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கருத்தைச் சோசப்பு டவுண்செண்ட்டு (Joseph Townshend), செரிமி பெந்தாம் (Jeremy Bentham), பிரான்சிசு பிளேசு (Francis Place) போன்ற சமய சமூகச் சீர்திருத்த வல்லுநர்கள் பரப்பினர். பிரான்சிசு பிளேசு தொழிலாளர் இயக்கத் தலைவராகத் தொழிலாளரிடையே சிறு குடும்பங்களின் சேவையை விளக்கிப் பரப்பினார். அவர் குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்துவதினால், குறைந்த வேலைநேரம், ஊதிய உயர்வு போன்றவற்றைத்தொழிலாளர் பெறுவர்; அவரது வாழ்க்கைத் தரம் உயரும் என்பதனை வலியுறுத்தினார். அ.கு.சா.

**மக்கள் தொகைக் கணிப்பும் திட்டமிடலும்**: திட்டங்கள் மக்களுக்காக இடம்பெற்று, மக்களைக் கொண்டேநிறைவேற்றப் படுகின்றன. எனவே, மக்கள் தொகையின் அளவு, தன்மை பற்றிய தரவுகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே திட்டமிடல் முடியும். திட்டமிடுதலுக்கு இன்றியமையாத் தரவுகளைத் திரட்டித்தரும் வகையில் மக்கள் தொகைக் கணிப்புகள் நடத்தப்படல் வேண்டும் என்பது இந்நிலையில் தெளிவாகிறது.

திட்டமிடல் என்பதே ஒரு வகைச் சமநிலைக் கணக்குத் தயாரிப்புதான். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட குறிக்கோள்களை, எய்குறிகளை-அடையத் தேவைப்படுகிற பொருட்கள் எவ்வளவு? அப்பொருட்களின் இயல்பான அளிப்புஎவ்வளவுஇருக்கும்? இவ்விரண்டினையும் சமன்படுத்த என்னென்ன செய்ய வேண்டும்? என்பதை முன் கூட்டியே கணித்துக் கொண்டு செயற்படுவதுதான் திட்டமிடல். இங்குத் தேவைப்பக்கத்தில் மக்கள் தொகைக் கணிப்புதான் தேவையான செய்திகளைத் திரட்டித்தர முடியும். இதுபோன்றே, அளிப்புப் பக்கத்திலும் அடிப்படையான மனிதவள ஆற்றல் பற்றிய செய்திகளையும் மக்கள் தொகைக் கணிப்புதான் திரட்டித் தந்து உதவுகிறது.

திட்டக் காலத்தில் மக்கள் தொகை குறிப்பிட்ட வீதத்தில் வளரும் என்பதைக் கருத்திற் கொண்டு, அவ்வளவு மக்களுக்கும் தேவைப்படுகிற பொருட்களின் உற்பத்திக்குத் திட்டமானது வகைசெய்தாக வேண்டும். இங்கு மக்கள் தொகை வளர்ச்சித்தொடர்பான பிறப்பு, இறப்பு வீதங்கள், குடியேற்றம் இறக்கப் போக்குகள் ஆகியவற்றைப் பற்றியஅறிவு திட்டமிடுவோனுக்கு இன்றியமையாததாகும். இது போன்றே, மக்கள் தொகையின் வயதுப்பகிர்வு, இடப்பகிர்வு, பால்பகிர்வு, தொழிற்பகிர்வு முதலியனவும் கணித்துத் தரப்படல் வேண்டும். அவற்றின் அடிப்படையிலேயே கல்வி வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, வேலை வாய்ப்புகள் முதலியவை தொடர்பான திட்டங்கள் வரையப் பெறுகின்றன.

குறிப்பிட்ட காலத்தில், பொருள் அளிப்பைப் பெருவாரியாகப் பெருக்க முடியாதபோது, தேவைப்

பக்கத்தில் தேவையான கட்டுப்பாடுகளைப் பரிந்துரைப்பதும் திட்டமிடலின் இன்றியமையாத ஒரு கூறாகும். இங்கு மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் திட்டமிடுதலின் கூறுகளாகி விடுகின்றன. அந்நிலையிலும், மக்கள் தொகைக் கணிப்புகளே இன்றியமையாத் தரவுகளைத் தந்து தவுதல் வேண்டும்.

இதுகாறும் கண்டவற்றிலிருந்து திட்டமிடுதலுக்கு உண்மையில் உதவ முடிகிற ஒரு மக்கள்தொகைக் கணிப்பு, வெறும் தலை எண்ணிக்கையாக இல்லாமல் மக்கள் தொகையின் பல்வேறு தன்மைகளை, குறிப்பாக, பொருளியல் கூறுகளைப் பற்றிய ஒரு கணிப்பாகவும் அமையவேண்டும் என்பது தெளிவாகிறது. இந்திய மக்கள் தொகைக் கணிப்பு ஏற்பாடுகளில், திட்டக் காலத்தில் இத்தகைய ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மக்களின் சாதி, சமயம், மொழி போன்றவற்றையே முதன்மையாகக் கருத்தில் கொண்ட முந்திய கணிப்புகளுக்கு மாறுபட்ட நிலையில் திட்டக் காலம் தொடங்கிய 1951 முதல், இந்திய மக்கள் தொகைக் கணிப்புகள் பல புதிய செய்திகளையும் திரட்டித் தந்து கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, 1951-இன் கணிப்பு, மக்களை வேளாண்மையில் ஈடுபட்டிருப்போர், பிற தொழில்களில் ஈடுபட்டிருப்போர் என வகைப்படுத்தி, வேளாண்மை செய்வோரில் சொந்தச் சாகுபடி செய்வோர், குடியானவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் எனப் பகுத்துக் கணித்தது. அப்பாகுபாடு, அக் காலத்திய நிலச்சீர்திருத்தங்களுக்குத் தேவையான தரவுகளைத் தந்து உதவியது. மேலும், இக்கணிப்பு மாவட்ட அளவிலும், குறிப்பிட்ட சில சிற்றூர்கள் அளவிலும் பல செய்திகளைத் திரட்டி அளித்து, அடிமட்ட அளவில் திட்டங்களிட இன்றியமையாச் சில தரவுகளைத் தந்து உதவியது. தொழில் நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் ஆற்றல் பற்றியும், வேலை செய்யும் தொழிலாளர் பற்றியும் சில செய்திகளை 1961-இன் கணிப்புத் திரட்டியது. மக்கள் குடியிருக்கும் வீடுகளின் நிலை, 200 பரம்பரைத் தொழில்கள்-கைவினைகள், பட்டியல் வகுப்பினர்-மலைவாழ்நர் வாழ்க்கைநிலை, நகரங்களிலும் - கிராமங்களிலும் ஏற்படும் குடிப்பெயர்ச்சி, தொழில்நுட்பப் பயிற்சி பெற்றுள்ளவர் முதலியன பற்றியும், இக்கணிப்பு செய்திகளைத் திரட்டித் தந்தது. முதன்முறையாக, இனப் பெருக்க வளம் பற்றிய தரவுகள் சேர்க்கப்பட்டன. தொழில் நிறுவனங்களின் தன்மை, வேலை வாய்ப்பு, வேலை நிலைகள், உற்பத்தி முதலியவை பற்றிய செய்திகளை 1971-இன் கணிப்பு திரட்டியளித்தது. குடும்பக் கட்டுப்பாடு பற்றிய செய்திகளும் திரட்டப்பட்டன. மக்களுடைய குறைந்த அளவுத் தேவைகளைக் கணித்தறியும் நோக்கத்தில், வீட்டு வசதி, குடிநீர் வசதி ஆகியவை பற்றிய தரவுகளை 1981-இன் கணிப்புத் திரட்டியுள்ளது. இவ்வாறு திட்டங்களைத் தொடர்ந்து, இந்திய மக்கள் தொகைக் கணிப்புகள் திரட்ட முயலும் தரவுகளின் தன்மையில் குறிப்பிடத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டு வருவதைப் புரிந்து கொள்ள முடியும். தே.வே.

**மக்கள் தொகைக் கொள்கை:** மக்கள் தொகையின் அளவும், தன்மையும் தொன்று தொட்டே அரசின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளன. வணிக மரபினர், மால்தசு, மார்க்சு ஆகிய பலர் இக்கொள்கையைப் பின்பற்ற அரசுகளுக்கு வழிகாட்டிகளாக இருந்துள்ளனர். அவ்வப்போது நிலவும் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு அரசுகளும் தத்தம் கொள்கைகளை வகுத்து வந்துள்ளன. அக்கொள்கைகளின் குறிக்கோள்கள் பொருளியல், அரசியல், சுற்றுப்புறச்சூழல், சமுதாய அமைப்பு முதலியவற்றையே சார்ந்துள்ளன. இந்திய அரசும், நாடுவிடுதலை பெற்றபின் தனக்கென ஒரு மக்கள்தொகைக் கொள்கையை வகுத்துச் செயற்படுத்திக்கொண்டு வருகிறது.

பிறப்பு, இறப்புகளும் குடிப்பெயர்ச்சியுமே மக்கள் தொகை தொடர்பான முதன்மையான மாறிகள். அந்த மாறிகளின் அளவு, விகிதம், பகிர்வு, அமைவு ஆகியவை மக்கள்தொகை அளவைக் கட்டுப்படுத்தி வருகின்றன. அவை நாட்டின் பொருளியல், அரசியல், சுற்றுப்புறச்சூழல் முதலிய சமுதாய அமைப்பைத் தாக்கத்தக்கனவாயுள்ளன. ஆகவே, மக்கள்தொகைக் கொள்கையானது நாட்டின் பொருளியல், அரசியல், சுற்றுப்புறச் சூழல் முதலிய சமுதாய அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்புள்ளதாக அமைந்து விட நேருகிறது.

தனிஆள் வருமானத்தை உயர்த்துவது, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது, மக்களுடைய நல்வாழ்வு, கல்விப்பெருக்கம், உற்பத்தி உயர்வு ஆகியவை மக்கள்தொகைக் கொள்கையின் பொருளியல் தொடர்பான நோக்கங்கள். மக்கள்தொகை அளவையும், அதன் வளர்ச்சி வேகத்தையும் குறைப்பதன்வழியாக அந்தக் குறிக்கோள்களை அடையமுடியும். அதற்காகப் பிறப்பு, இறப்பு விகிதங்களைக் குறைப்பது, குடியேற்றத்தை ஒழுங்குபடுத்துவது, மக்கள்நெருக்கம் குறைவான பகுதிகளில் மக்களைக் குடியேற்றுவது போன்ற பல வழிகள் உள்ளன.

அமைதி, சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகியவற்றை வழங்குவதே மக்கள்தொகைக் கொள்கையின் அரசியல் நோக்கம். மக்களாட்சியின் செயல்

முறைகல்வியறிவுள்ள மக்கள்தொகையைஎதிர்நோக்கு கிறது. மக்கள்தொகை நாடு முழுவதும் பரவலாகப் பகிர்ந்திருந்தால்தான் அரசியலில் சமத்துவம் காண முடியும். அதற்காகக் குடியேற்ற இறக்கங்களை அரசு கட்டுப்படுத்த வேண்டும்.

ஒரு சில தொழிற்சாலைப் பகுதிகளில் மட்டும் மக்கள் நெருக்கம் மிகுதியாக இருந்தால் அந்தச் சூழல் எளிதில் மாசுறுகிறது. மக்கள்தொகைப் பெருக்கம் வளங்கள் சிதைந்தழியவும் காரணமாகிறது. இங்கும் அரசு, பொருத்தமான குடியேற்ற இறக்கக் கொள் கைகளைக் கடைப்பிடித்துச் சிக்கல்களைத் தீர்க்க உதவலாம்.

மக்கள்தொகைக் கொள்கையின் குறிக்கோள் களை நிறைவேற்றிக்கொள்வதற்குரிய வழிகள் ஐந் தாக வகைப்படுத்தப்பட்டு வருகின்றன. தேவை யான செய்திகளையும், கல்வியறிவினையும் மக்களுக் குத் தருவதன் வழியாகச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவது ஒரு வழி. விளம்பரங்கள், மக்கள் தொகை, உடல்நலக்கல்வி முதலியவற்றால் பிறப்பு, இறப்பு விகிதங்களை மாற்றியமைக்கலாம். இது போன்றே வேலைவாய்ப்புகள் பற்றிய விளம்பரங்கள் குடியேற்ற இறக்கங்களுக்கு உதவலாம்.

மக்கள், தாமாகவே குறிப்பிட்ட வழிமுறை களைக் கடைப்பிடிக்க முன்வருகிற சூழ்நிலையை உரு வாக்கித் தருவது இரண்டாம் வழியாகும். குடும்ப நலத் திட்டங்கள், கருக்கலைப்பைச் சட்டவழிப்படுத்து வது, அரசு சார்பிலான உடல்நலத் திட்டங்கள், பிறப்பு - இறப்பு விகிதங்களைக் கட்டுப்படுத்தல், குடியிருப்புகளை உருவாக்குதல், போக்குவரத்து வசதிகளைச் செய்துதருதல் ஆகியவற்றின் வழியாக வும் மக்கள் தாமாகச் செயற்பட உதவமுடியும்.

சமுதாய அமைப்புகளை மாற்றுவதன் வழியாக வும் குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைய அரசு வழிவகுக்கலாம். பெண்ணுரிமைகளை உறுதிப்படுத் தல், நாட்டைத் தொழில்மயமாக்கல், குடும்ப அமைப்புச் சட்டங்களை மாற்றியமைத்தல், குடி யிருப்பு, தொழிலாளர் சட்டங்களை இயற்றுதல் ஆகியவை இவ்வகைப்படும்.

தூண்டுதல்கள் மற்றும் தடைகளைத் தருவதன் வழியாகக் குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவது என்பது நான்காம் வழியாகும். குடும்ப உதவித் தொகைகள், வரிச்சலுகைகள், வேலைவாய்ப்புகள், பதவி உயர்வுகள் முதலியன இவ்வழியின.

இறுதியாக, குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்காகச் சில கட்டாய நடைமுறைகளை யும் அரசு மேற்கொள்ளலாம். திருமண வயது, கருக்கலைப்பு, குழந்தைகள் எண்ணிக்கை முதலிய வற்றை அரசு சட்டமியற்றிக் கட்டுப்படுத்தலாம். சில நோய்த்தடுப்பு முறைகளை மக்கள்மீது கட்டாயப் படுத்துவதன் வழியாக இறப்பு விகிதங்களைக் கட்டுப் படுத்த முடியும். இது போன்றே பன்னாட்டுக் குடிப் பெயர்ச்சிகளையும் ஆசுத்திரேலியாவைப் போலச் சட்டமியற்றிக் கட்டுப் படுத்தலாம்.

மக்கள்தொகையின் அளவு தொடர்பான மக்கள் தொகைக் கொள்கைகளைப் பிறப்பை ஊக்குவிப்பன, பிறப்பைக் குறைப்பன என்று இருவகைப் படுத்த லாம். பிறப்பை ஊக்குவிப்பதே மிக நீண்டகாலமாக அரசின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. இறப்பு விகிதம் மிக உயர்வாக இருந்த அக்காலத்தியச் சூழ்நிலைகளுக்கு இக் கொள்கை மிகவும் பொருந்து வதே. இந்தியக் கோயில்களில் காணப்படும் உட லுறவுத் தொடர்பான சிற்பங்கள் இக்கொள்கையின் எதிரொலிப்பே என்று கருதப்பட்டு வருகிறது. செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகளில் 1914க்கும் 1944க்குமிடையே இக் கொள்கையே பின்பற்றப்பெற்றது. சுவீடன் ஆகிய பிரான்சு நாடு கள் பிறப்பை ஊக்குவிக்கும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றன.

இதற்கு மாறாக மக்கள்தொகை வளர்ச்சியால் துன்பங்களை அடைந்துவரும் நாடுகள் பல,பிறப்பைக் குறைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. சீனா 1979 முதல் ஒரு குழந்தைக் குடும்பத்துக்கு ஆத ரவு தெரிவித்து வருகிறது. ஒரேயொரு குழந்தை யுடன் அமைவதாக உறுதிமொழி தருபவர்களுக்கு அரசு ஒரு சான்றிதழ் வழங்குகிறது. அச் சான்றிதழ் அடிப்படையில், கல்வி நிறுவனங்களில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. கொரியாவில் இரண்டு குழந்தைகளுடன் நிறுத்திக் கொள்பவருடைய கல்விச் செலவு, வருமான வரியிலிருந்து குறைத்துக் கொள்ளப்படுகிறது. தான்சானியா, இலங்கை, நேப்பாளம் ஆகிய நாடுகளில் பெற்றோரைச் சார்ந்திருக்கும் குழந்தைகளுக்கு வரிவிலக்கு தரப் படுவதில்லை. சிங்கப்பூரில் இரண்டுக்குமேல் குழந்தை பெறாதவர்களுக்கு அரசு குடியிருப்புகளில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பேறுகாலச் சலுகை கள் பிலிப்பைன்சில் முதல் நான்கு குழந்தைகளுக்கும், கானா, ஆங்காங்கு, மலேசியாவில் முதல் மூன்று குழந்தைகளுக்கும், தென்கொரியாவில் முதல் இரண்டு குழந்தைகளுக்குமே தரப்படுமெனக் கட்டுப்படுத் தப்பட்டுள்ளது. குழந்தைப் பேறுகளிடையேயுள்ள கால இடைவெளியைக் கட்டுப்படுத்தும் நோக் கத்தில் தான்சானியாவில் வேலை பார்க்கும் பெண் களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறையே சம்பளத் துடன் பேறுகால விடுமுறை தரப்படுமென விதிக்கப்

பட்டுள்ளது. தாய்லாந்திலும், இந்தோனேசியாவிலும் குழாய்க் கிணறுகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் முதலிய வசதிகள் செய்துவருவதில் சிறு குடும்பங் களைக் கொண்ட சமுதாயங்களுக்கே முன்னுரிமை தரப்பட்டு வருகிறது.

நாட்டளவில் தனியாக ஒரு மக்கள்தொகைக் கொள்கையை அறிவித்த ஒரே நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு உண்டு. தேசிய மக்கள் தொகைக் கொள்கை 1976, ஏப்பிரல் திங்களில் அறிவிக்கப்பெற் றது. அதன் சிறப்புக்கூறுகள் கீழ்வருவன: 1) திருமண வயதை மகளிர்க்குப் பதினெட்டாகவும், ஆடவருக்கு இருபத்தொன்றாகவும் நிருணயித்தல், 2) திருமணங் களைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்குதல், 3) இளைஞர்களிடத்தில் மக்கள்தொகைச் சிக்கலைப் பற் றிய உணர்வை ஏற்படுத்துவதுடன் பெண்களின் கல் வித் தரத்தை உயர்த்தவும் கல்வியமைப்பைப் பயன் படுத்தல், 4)கிராம மக்களிடம் குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான செய்திகளைப் பரப்புவதற்காகச் செய்திக் கருவிகளைப் பயன்படுத்தல், 5) நிலையான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைமேற் கொள்பவர் களுக்கு நிதியுதவி செய்தல், 6)அரசின் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்தால் மாநிலங்களின் சில அரசியல், நிதிநிலைகள் பாதிக்கப்படாமலிருப் பதற்காக 1971 மக்கள்தொகை அடிப்படையிலேயே பாராளுமன்றத்தில் மாநிலங்களுக்குரிய இடங்கள் தொடர்ந்து நிருணயிக்கப்படும் என்றும் அதே அடிப் படையிலேயே மாநிலங்களுக்கு மைய அரசின் நிதி உதவிப் பங்கீடு நிருணயிக்கப்படும் என்றும் விதி செய் தல் என்பன. தே.வே.

**துணை நூல்:**

Asha A. Bhende & Tara Kanitkar, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1985.

**மக்கள் தொகைக் கோட்பாடுகள்:** மக்கள் தொகை பற்றிய சிந்தனை மிகப் பழங்காலந் தொட்டே நிலவி வருகிற ஒன்றேயாயினும், மால்த சின் (Malthus) கோட்பாடு அங்கு மையமாக இடங்கொண்டு நிலவி வருகிறது. மக்களுடைய சிந்தனைகளில் ஒரு பெருந் திருப்பம் உண்டாவதற்கு அவர் காரணமாக இருந்தார். பின்னர், அவருடைய சிந்தனையே பல திருப்பங்களுக்குக் காரணமாகி விட்டது. இன்று, மக்கள்தொகையை வெவ்வேறு கோணங்களிலிருந்து அணுகியவர்களாகச் சிந்தனை யாளர்கள் வெவ்வேறு கோட்பாடுகளைப் படைத் துள்ளனர்.

இந்திய 'அருத்த சாத்திரம்' நாட்டின் பாதுகாப் புக் கண்ணோட்டத்திலும், உழைப்பின் அடிப்படை யிலான உற்பத்திக் கண்ணோட்டத்திலும் உயர்ந்த அளவு மக்கள்தொகையை ஒரு நாடு பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகிறது. கிரேக்கப் பேரறிஞர் பிளேட்டோவும் நாட்டின் பாதுகாப்பு, நிருவாகம் ஆகிய கண்ணோட்டங்களில் சிந்தித்தவராக, ஒரு நகர அரசு 5040 - குடிமக்களையே கொண்டிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். மக்கள்தொகை அளவுக்கு மீறியிருந்தால் அது வறுமைக்கு வழிகோ லும் எனக் கூறுகிறார். சீனப் பேரறிஞர் கன்பூசியசு ஒரு நாட்டின் மக்கள்தொகைக்கும் பயிரிடப்படும் நிலப்பரப்புக்குமிடையே ஒரு சமநிலை பேணப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இவ்வாறு பழங் காலக் கோட்பாடுகள் பெருமளவில் அரசியல், பாது காப்பு அல்லது நிருவாக அடிப்படையில்கட்டுரைக்கப் பட்ட போதிலும் ஒருசிலர் பொருளியல் கண் ணோட்டத்திலும் அதனை அணுகிவந்தனர் என லாம்.

இடைக்காலத்தில் குறிப்பாகக் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட பல மாறுதல்கள், மக்கள்தொகை பற்றிய சிந்தனைகளிலும் எதிரொலி க்க் கேட்கலாம். அக்காலத்தில்தான் புதிய கடல்வழி கள், புதிய கண்டங்கள், புதிய தொழில்கள், புதிய நாடுகள் முதலியன தோன்றின. அக்காலத்தில் தோன்றிய 'வணிக மரபினர்' (Mercantilists) என்று கூறப்படும் சிந்தனையாளர்கள் மக்கள் தொகையே ஒரு நாட்டின் ஆற்றலைக் கட்டுப்படுத்து கிறது என்று கருத்துத் தெரிவித்தனர். நாட்டின் செல்வம் அங்குக்கிடைக்கும் பொன்,வெள்ளி முதலிய மதிப்பரிய கனிமங்களின் அளவைச் சார்ந்துள்ளது என வலியுறுத்திய அவர்கள், நாட்டில் உற்பத்தியைப் பெருக்கி அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அங் கிருந்து பொருட்களைத் தேடி வருவதன் வழியாகச் செல்வத்தைப் பெருக்கி நாட்டைவலிமைப்படுத்தமுடி யும் எனவும் சுட்டிக் காட்டினர். மக்கள்தொகை ஏராளமாக இருந்தால் உழைப்புப் பெருகும், உற் பத்தி மிகும். அதே நேரத்தில் கூலி அளவு வீழ்ந்து உற்பத்திச் செலவு குறைந்து பொருள்விலை மலிந்து, ஏற்றுமதி பெருகும் என அவர்கள் வாதிட் டனர். அவ்வாறு மக்கள்தொகையை வெறும் பொருளியல் நோக்கில் அணுகி ஒரு புதிய மக்கள் தொகைக் கோட்பாட்டை உருவாக்கித் தந்தனர் அவ் வணிக மரபினர். அவர்களுக்கு எதிராகத் தோன்றிய 'இயற்கை மரபினர்' (Physiocrats) என்று கூறப்பட்ட பிரான்சு நாட்டுப் பொருளியலறிஞர் களோ, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பாதிக் கும் அளவுக்கு மக்கள் தொகை வளர்ச்சி ஏற்பட்டு விடலாகாது என்ற கருத்தை வலியுறுத்தியவர்கள் ஆவர். அவ்வாறு, மக்கள்தொகை வளர்ச்சி ஒரு

நிலைக்கு அப்பால் தீங்கிழைக்கத் தக்கதே என்பதை அறிவுறுத்தியவர்கள் இயற்கை மரபினர்.

இத்தகைய சூழ்நிலையில்தான் மால்தசு தோன்றினார். 'சமூகத்தின் எதிர்கால முன்னேற்றத்தைத் தாக்கும் வகையிலான மக்கள்தொகைக் கோட்பாடு பற்றிய ஒரு கட்டுரை' என்ற நூலின் வழியாக அவர் தம்முடைய கருத்துகளை கி.பி. 1798 – இல் முதன்முதலாக வெளியிட்டார்.

தம்முடைய இனத்தைப் பெருக்கவேண்டும் என்ற நாட்டம் உயிரினங்கள் அனைத்துக்குமே பொதுவானது. இருப்பினும் இருப்பிடமும் ஊட்டப்பொருட்களும் கிடைக்கும்வரை உயிரினங்கள் தம்முடைய இனத்தைப் பெருக்குவது இயற்கை. அதற்கு மனித இனமும் விதிவிலக்கன்று. இருப்பிடமும் ஊட்டப் பொருட்களும் கிடைக்கும்வரை மனித இனமும் பெருகிச் செல்லத்தக்கது. இவ்வாறு, உணவு உற்பத்தியையே மக்கள்தொகை சார்ந்திருப்பதால் இவ்விரண்டிற்குமிடையே ஒரு நெருங்கிய பிணைப்பு இருப்பதாக மால்தசு நிறுவுகிறார்.

அடுத்து இவ்விரண்டும் கால அளவில் எவ்வாறு மாறும் என்பதை மால்தசு விளக்க முனைகிறார். மக்களிடையே மாறுதலின்றி நிலைத்திருக்கும் பாலுணர்ச்சியின் விளைவாக மக்கள் தொகையானது கால அளவில் மிகவேகமாக வளரத்தக்கது. ஆனால் வளர்ந்துசெல்லும் மக்கள்தொகையைப் பேணுவதற்கு வேண்டிய உணவுப்பொருள் உற்பத்தியோ, அவ்வளவு வேகமாக வளரத்தக்கதன்று. மக்கள் உழைப்புக் கேற்ப, நிலத்தின் விளைவு இருப்பதில்லை. இந்த உண்மையை விளக்குவதற்காக உணவு உற்பத்திக் கூட்டல் வாய்பாடு போலவும், மக்கள்தொகை, பெருக்கல் வாய்பாடு போலவும் பெருக முற்படும் என்பார் அவர். கீழ்வரும் பட்டியல் இந்தக் கணிதத் தொடர்பினை விளக்கும்.

| கால அளவு | 0 | 25 | 50 | 75 | 100 | 125 | ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மக்கள் தொகை | 2 | 4 | 8 | 16 | 32 | 64 | எண் |
| உணவுப் பொருள் | 2 | 4 | 6 | 8 | 10 | 12 | கண்டி |

ஒரு நாட்டின் மக்கள்தொகை குறிப்பிட்ட ஆண்டில் 2 ஆகவும், உணவு உற்பத்தி 2 கண்டியாகவும் இருந்தால் 25 ஆண்டுகளுக்குப்பின் மக்கள் தொகை 4-ஆகப் பெருகும்போது உணவும் 4 கண்டி எனப் பெருகும். ஆனால் 75 ஆண்டுகளில் மக்கள் தொகை 16 ஆகும் போது உணவு 8 கண்டி மட்டுமே ஆகும். 125 ஆண்டுகளில் மக்கள் தொகைக்கும் உணவு உற்பத்திக்கும் இடையேயுள்ள வீதத் தொடர்பு 64:12 என்றும், இரு நூற்றாண்டுகளில் 512:18 என்றும், மூன்று நூற்றாண்டுகளில் 8192: 26 என்றும் பெருக முற்படும்.

இவ்வாறு முயல் வேகத்தில் மக்கள்தொகையும் ஆமை வேகத்தில் உணவுப்பொருள் உற்பத்தியும் வளருமெனில் அவ்விரண்டுக்குமிடையே சமநிலை பெரிதும் இல்லாது போகும். அப்போது தடைகள் சில தோன்றி இழந்த சமநிலையைப் பேண உதவும் என்பார் மால்தசு. அவை இறப்பு வீதத்தைக் கூட்டி மக்கள் தொகையை உணவுப்பொருள் அளவுக்குக் குறைத்துவிடுகின்றன. அவற்றைத் தீச்செயல்கள், துன்பங்கள் என வகைப்படுத்துகிறார் அவர். மனிதன் ஈடுபடும் நலக்கேடான தொழில்கள், வாழ்க்கை வசதிக் குறைவு, ஒழுக்கக்கேடு, போர்கள் முதலான தீச்செயல்களையும், இயற்கை விதிகளால் தோன்றும் பஞ்சம், கொள்ளை நோய்கள் முதலான துன்பங்கள் ஆகிய தடைகளையும், ஒழுக்கக் கட்டுப்பாடு என்ற வேறொரு தடையையும் அவர் தம் நூலின் பிந்திய பதிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். ஒழுக்கக் கட்டுப்பாடு என்பது மணமின்றித் தனி வாழ்க்கை நடத்துதல், வயதானபின் மணம்புரிதல், மணமான பின்னும் கட்டுப்பாட்டுடன் வாழ்தல் ஆகியவற்றைக் குறிக்கும். அவை பிறப்பு விகிதத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் மனிதனால் தன் பகுத்தறிவைக் கொண்டு கடைப்பிடிக்கப்படுவன ஆகும்.

இந்த விளக்கங்களின் அடிப்படையில் மால்தசு இன்றியமையாத ஒரு முடிவுக்கு வருகிறார். அது பிறப்பைத் தவிர்க்கும் தடைகளைக் கடைப்பிடிக்கத் தவறினால் உணவுப்பொருள் உற்பத்தியை விஞ்சிய தொரு வேகத்தில் மக்கள்தொகை வளர முற்பட்டுத் தீச்செயல்களும், துன்பங்களும் இயல்பாகவே தோன்ற வழிவகுக்கும் என்பதாகும்.

ஆசிரியர் பலர் மால்தசின் கோட்பாட்டில் பல குற்றங்குறைகளைச் சுட்டியுள்ளனர். அறிவியல் முன்னேற்றத்தைத் தொடர்ந்து ஏற்படும் பசுமைப்புரட்சி உணவுப்பொருள் உற்பத்தியைப் பல்கிப் பெருகச் செய்து வளர்ந்து செல்லும் மக்கள்தொகையைப் பேண உதவும் என்பது அவர்களின் கருத்து. மேலும், தேவையான உணவுப்பொருட்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ள முடியும் என்பதும் இங்குச் சிந்திக்கத்தக்கது. மக்கள்தொகை பெருகும் போதெல்லாம் மனங்கவல்வதில் பொருளில்லை; வாயொன்று தோன்றும்போதெல்லாம் இருகரங்களும் வெளிப்படுகின்றன; அக்கரங்கள் தருகிற உழைப்பால் உற்பத்தியும் பெருக வாய்ப்பிருக்கிறது; மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர உயர அவர்களிடையே பாலுணர்ச்சியும், அதன் எதிரொலியாக மக்கள்தொகை வளர்ச்சி வேகமும் குறைந்துவருகின்றன என்ற உண்மையையும் மால்தசை மறுப்போர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மால்தசின் கோட்பாட்டில் உணவு உற்பத்திக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் வழங்கியிருப்பதில் குறை கண்ட சிந்தனையாளர்கள் ஒரு நாட்டின் மக்கள்தொகை, உணவு உற்பத்தியைப் பொறுத்தன்றி, மொத்த உற்பத்தியையே பொறுத்துள்ளது எனக் கருதத் தலைப்பட்டனர். மேலும், சில நாடுகளில் தொடர்ந்து மக்கள்தொகை பெருகிக்கொண்டிருந்த போதிலும் பொருளியல் நிலை சற்றும் பாதிக்கப்படவில்லை என்பதும், ஆனால், வேறு சில நாடுகள் மக்கள் தொகைப் பெருக்கத்தால் நலிந்து கொண்டிருக்கின்றன என்பதும் சிந்தனையாளர் கவனத்துக்கு வந்தன. அந்தச் சூழ்நிலையில் ஒவ்வொரு நாட்டுக்கும் உத்தமமான மக்கள்தொகை ஒன்றிருப்பதாகவும், அத்தொகை அந்தந்த நாடுகளின் மொத்த உற்பத்தியைச் சார்ந்திருப்பதாகவும் ஆசிரியர்கள் சிந்திக்கலாயினர். அச்சிந்தனை முடிவைக் கானன் (Cannan), கார் சாண்டர்சு (Carr Saunders) போன்றோர் ஒரு கோட்பாடாக்கித் தந்துள்ளனர். கார் சாண்டர்சு மிகவுயர்ந்த அளவு பொருள்சார் நலந்தருகிற மக்கள் தொகையே உத்தமமான மக்கள்தொகை என்பார். ஒவ்வொரு வரும் அடைகிற பொருள் சார் நலத்தின் அளவு அவரவர் உண்மை வருமானத்தைப் பொறுத்தது. எனவே, எந்த மக்கள்தொகை அளவில் நாட்டின் ஆள் வருமானம் மிக உயர்ந்த அளவினதாக அமைகிறதோ அந்த அளவு மக்கள்தொகை, அந்நாட்டிற்கு உத்தமமான அளவு மக்கள்தொகையாக அமைந்துவிடுகிறது. பிற அளவுகளில் ஆள் வருமானம் குறைவாகவே இருக்கும் என்பது இங்கு நினைவு கொள்ளத் தக்கது.

ஒரு நாட்டில் உண்மையாக நிலவும் மக்கள் தொகை, உத்தம அளவைவிடக்குறைவாக இருந்தால் அந்நாட்டின் செல்வ வளங்களைப் பயன்படுத்தப் போதுமான தொழிலாளர்களோ, உற்பத்தியாகும் பொருள்களை வாங்குவதற்கான ஆள்களோ இல்லை என்றாகும். அதனால் உற்பத்தியும் ஆள்வருமானமும் குறைவாகவே இருக்கும். அந்நிலையில் மக்கள் தொகை பெருகினால் வளங்கள் நன்கு பயன்படுத்தப் பெற்று அங்காடியும் விரிவடைந்து உற்பத்தியும் அதைத் தொடர்ந்து வருமானமும் பெருகும். ஓரளவுக்குமேல் மக்கள்தொகை பெருகுவதில் பொருளில்லை.ஏனெனில், நாடுகளின் வளத்துக்கு இயல்பான ஒரு வரையறை இருக்கிறது. இப் புதிய கோட்பாடு, சில சூழ்நிலைகளில் மக்கள்தொகைப் பெருக்கம் வரவேற்கத்தக்கதே என்று நிறுவுவது குறிப்பிடத்தக்கது.

மக்கள்தொகை மாறுதல்களுக்கு உணவு உற்பத்தி, இயற்கை வளங்கள் போன்ற பொருளியல் காரணிகளுக்கு மாறாக இனப்பெருக்க வளம் (Fertility) ஆகிய உயிரியல் காரணியே அடிப்படையாக இருக்க முடியும் என்ற கருத்தைச் சாட்லர்(Sadler), தபுள்தே (Doubleday), இசுபென்சர் (Spencer), கினி (Gini), காசுட்ரோ (Castro), பேர்ல் (Pearl) போன்றோர் தெரிவித்துள்ளனர்.

மால்தசின் சமகாலத்தவரான சாட்லர், மக்கள் செறிவு மிகுதியாகும்போது இனப்பெருக்க வளம் குறைந்து செல்லும் என்றும், மக்கள் மிகவுயர்ந்த அளவு மகிழ்ச்சி பெறும் கட்டத்தில் மக்கள்தொகையின் அளவு மேலும் வளராது, ஒரு முடிவுக்கு வரும் என்றும் கருதுகிறார். கடும் உழைப்பும், தனிமையும் இனப்பெருக்க வளத்தைப் பெருக்குகின்றன. மக்கள் தொகை சிதறிக் கிடக்கும்போது அவ்விரண்டும் இயல்பாகவே ஏற்பட்டுவிடுகின்றன. வேளாண்மைச் சூழலிலிருந்து மேலும் முன்னேறும்போது வேலைப் பகுப்பு ஏற்பட்டு, வேலைப்பளு குறைந்து, ஓய்வு நிறையக் கிடைத்து, அறிவுத் தொடர்பான செயல்களில் மக்கள் ஈடுபடும்போது மிகவுயர்ந்த அளவு மக்கள் மிகவுயர்ந்த அளவு மகிழ்ச்சியைப் பெறுகிறார்கள் என அவர் முடிவு கட்டுகிறார்.

உணவு அளிப்புக்கு நேரெதிர் வீதத்தில் மக்கள் தொகை அளவு உள்ளது என்பார் தபுள்தே. அவர், உணவு அளிப்பு உயர்ந்த அளவிலிருந்தால் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் குறைந்து செல்லும் என்பார். 'உருவில் பருமனான விலங்குகளும், பறவைகளும் குறைந்த அளவே இனம் பெருக்குகின்றன; மிகுதியாக உரமிட்டால் மரங்களும், செடிகளும் குறைந்த அளவில் தானே காய்கறிகளைத் தருகின்றன?' என்று வினவுகிறார் அவர். காசுட்ரோ என்ற மற்றொரு அறிஞரும் உணவில் உயர்ந்த அளவு புரதச்சத்து இருந்தால் இனப்பெருக்க வளம் குறைவாக இருக்கும் எனக் கருதுகிறார்.

ஒருவன் தன்னுடைய சொந்த முன்னேற்றத்திற்காகத் தீவிரமாகப் பாடுபடும்போது அவனுடைய இனப்பெருக்க நாட்டம் குறைந்துவிடும் என்றும், படித்த உயர்வகுப்புப் பெண்கள் மூளைக்கு அதிகம் வேலை கொடுக்கிற காரணத்தால் பிள்ளையைத் தாங்கவும், பெறவும், குறித்த காலம் வரை பாலூட்டவும் இயலாத நிலையிலேயே இருப்பார்கள் என்றும் இசுபென்சர் கூறுகிறார். அதனால் அவர்களுடைய இனப்பெருக்க வளம் குறைவாகவே இருக்கும் என்பது அவருடைய முடிவு.

இத்தாலிய அறிவியலாளராகிய கினி, ஒரு நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சி முற்றிலும் ஓர் உயிரியல் நிகழ்ச்சியே என்று கருதுகிறார். மக்கள் தொகை வளர்ச்சி தனிமனிதனுடைய வாழ்க்கைச் சகடத்துடன் ஒப்பிடப்படுகிறது. தொடக்கத்தில் மிகவுயர்ந்த வேகத்தில் மக்கள்தொகை வளர்கிறது. அடுத்து

வேகம் குறைந்து ஒரு முதிர்ச்சி பெற்ற சாதனைக் கட்டம் வருகிறது. தொடர்ந்து ஓர் இயலா நிலை தோன்றுகிறது; எண்ணிக்கை குறைந்து செல்கிறது; மக்கள் தொகையின் தன்மையும் தரம் குறைகிறது. இந்தப் போக்குகளுக்குக் காரணம் உயிரியல் மாறுதல் களே என்பார் கினி. மக்கள் தொகை வளர்ச்சியில் ஏற்படும் இந்தச் சகடப்போக்கு வரைபடமாக்கப் பட்டால் ஆங்கில 'எசு' (S) எழுத்தைப் போலத் தோன்றும் என்பார் பேர்ல்.

மக்கள்தொகையின் செறிவு, உணவு ஆகியவையும் உயிரியல் காரணிகளுமே மக்கள்தொகை மாறுதல் களைக் கொணர்கின்றன என்று கூறும்போது, மனித னால் எதுவும் செய்ய முடியாத நிலை தோன்றிவிடு கிறது. இக் கருத்துகளை இக்கால ஆசிரியர்கள் ஒப்புக் கொள்வதில்லை. அவர்களுடைய கருத்துப்படி, சமூகமும் பண்பாட்டுக் காரணிகளுமே இனப்பெருக்க வளத்தையும் மக்கள் தொகையினையும் கட்டுப்படுத் துகின்றன எனத் தெரிகிறது.

பிரான்சு நாட்டறிஞர் தூமாண்டு (Dumount) கூறு கிற ஒரு கோட்பாடு இங்குக் குறிப்பிடத்தக்கது. சமூக ஏணியின் உயர்மட்டத்தை ஏறியடைய வேண் டும் என்ற துடிப்புப் பொதுவானது. அந்தத் துடிப்பை நுண்துளை ஈர்ப்பாற்றலுடன் (Capillary Act-ion) ஒப்பிடலாம். அவ்வாற்றலால் நுண்ணிய மேற் குழாயில் திரவம் மேலேறுகிறது; திரியில் எண்ணெய் ஏறுகிறது; மரத்தில் நுண்ணுயிர்ச்சத்து ஏறுகிறது. அகன்ற குழாயுடன் ஒப்பிடும்போது நுண்ணிய குழா யில் திரவமானது மிகுந்த உயரத்துக்கு ஏறமுடிகிறது. இதுபோன்றே, பிற சுமைகளில்லாத அதாவது பெரிய குடும்பச் சுமையில்லாத மனிதனால் சமூக ஏணியில் மிக வேகமாக ஏற முடிகிறது. அதனால் சிறு குடும் பத்தின் சிறப்பு உணரப்படுகிறது. இயல்பாகவே கருவளம் குறைத்துக்கொள்ளப்படுகிறது. கிங்சுலி தேவிசு (Kingsley Davis), பொருளியல் மாறுதல் களுக்கேற்ப, மக்கள் தம்மை மாற்றிக்கொள்ளவேண்டி வரும்போது தொழில் வளர்ச்சியின் முழுப் பயனையும் துய்ப்பதற்காகத் திருமணங்களைத் தள்ளிவைக்கவும், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்க வும், இடம்பெயர முன்வருகிறார்கள் என்று சுட்டிக் காட்டுகிறார்.

காரல் மார்க்சும் பிற சமதருமச் சிந்தனை யாளர்களும் மக்கள் தொகைச் சிக்கல், அடிப்படை யில் ஒரு முதலாளித்துவச் சிக்கலே என்று கூறுகின்ற னர். தொழிலாளியை முதலாளி சுரண்டுவதாலேயே வாழ வழியற்று ஒரு மக்கள்தொகை மிகுதி தோன்று கிறது. ஒவ்வொருவருக்கும் வேலையும், கூலியும் உறுதிப்படுத்தப்பெற்ற ஒரு சமதரும அமைப்பில், மக்கள்தொகை என்பது ஒரு சிக்கலாகவே இருக்க வழி யில்லை. அங்கெர்ன் இசுடெர்ன்பெர்க்கு (Ungern-Sternberg) என்ற சமதரும அறிஞர் 'முதலாளித்துவ மனப்பான்மை' மக்களிடம் ஒரு பகுத்தறிவுச் சிந்த னையை ஊக்குவிக்கும் என்றும், தன்மதிப்பையும் சமத்துவத்தையும் பேண விரும்பும் பெண்ணுக்குக் காதல் உறவு வாணிக உறவாகவே படுவதால் தன் னுடைய அடுத்த குழந்தையைப் பற்றி அவள் ஆழ மாகச் சிந்திக்க முற்படுகிறாள் என்றும் குறிப்பிடு கிறார்.

மேலே கண்ட பல்வேறு கோட்பாடுகளையும் ஆராயும்போது மக்கள்தொகையைக் கட்டுப்படுத் தும் காரணிகள் மிகப்பல என்பது தெளிவாகிறது. ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் ஓராய்வும் (1965) ஆள் வருமானம், நகர்மயமாதல், வாழ்நாள் எதிர்பார்ப்பு, மணமான பெண்கள் விகிதம், பெண் கல்வி, செய் தித்தாள், வானொலி, திரைப்படங்களில் நாட்டம், பொருளியல், சமூக நிலைகள் முதலியன மக்கள் தொகை அளவைக் குறிப்பாக அதன் வளத்தைக் கட்டுப்படுத்துகின்றன என்று நிறுவியுள்ளது. தே.வே.

**துணை நூல்கள்:**

Asha, A. Bhende & Tara, Kanitkar, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1985.

Srivastava, S.C., Studies in Demography, Jai Prakash Nath & Co., Meerut, 1985.

*மக்கள் தொகைச் செறிவு:* எந்தவொரு மக்கள் தொகையையும் அடிப்படையில் பேணி நிற்பது குறிப்பிட்ட அளவு நிலப்பரப்பேயாகும். அதே நேரத் தில் நிலப்பரப்புகளிலெல்லாம் மக்கள் தொகை சரிசம மாகப் பகிர்ந்து இருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்க ஓர் உண்மையாகும். மக்கள்தொகைக்கும், நிலப்பரப்புக்கும் இடையேயுள்ள இந்த விகிதத்தைத் தான் மக்கள்தொகைச் செறிவு என்கின்றனர். இந்தச் செறிவை அளவிட்டறிவதற்குப் பலமுறைகள் கையா ளப்பட்டு வருகின்றன. ஆய்வாளர்கள் இந்தச் செறிவை நிருணயிக்கும் காரணிகளையும் புலப்படுத்தி யுள்ளனர்.

குறிப்பிட்ட அளவு மக்கள்தொகை, குறிப்பிட்ட அளவு நிலப்பரப்பில் வாழ்கிறதெனில், அவ்விரண்டு அளவுகளுக்குமிடையேயுள்ள விகிதம் கணக்கியல் செறிவின் அளவு எனக் கொள்ளப்படும். எடுத்துக் காட்டாக, 1981 - இல் இந்திய மக்கள் தொகையின் அளவு 685.18 மிலியன். அந்நாளில் நாட்டின் பரப் பளவு 3.29 மிலியன் சதுர. கி.மீ. என்றிருந்ததால்

அன்றைய மக்கள்தொகைச் செறிவு சதுர.கி.மீ. க்கு 221 எனக் கணிக்கப்பட்டுள்ளது. மக்கள்தொகைச் செறிவை அவ்வாறு கணக்கிடுவதில் சில தவறுகளுள்ளன. அந்த ஆகமொத்தச் சராசரி, நாட்டின் பல்வேறு உட்பகுதிகளின் சிறப்புக் கூறுகளைப் புறக்கணித்துவிடுகின்றன. எடுத்துக்காட்டாகப் பம்பாய் போன்ற பெருநகர்களில் பெருந்திரளாக மக்கள் செறிந்து வாழ, கட்சு போன்ற பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளே இல்லாமலுள்ளது. எனவே, ஒட்டு மொத்தச் சராசரியைக் கணக்கிடுவதற்குப் பதிலாகச் சிறிய சிறிய பகுதிகளின் மக்கள்தொகைச் செறிவைத் தனித்தனியாகக் கணக்கிட்டறிவதே பயனுடையதாக இருக்கும்.

மொத்த நிலப்பரப்புக்குப் பதிலாக மொத்தச் சாகுபடியாகும் நிலப்பரப்பை மட்டும் எடுத்துக் கொண்டு அத்துடன் மொத்த மக்கள்தொகையை ஒப்பிட்டு அவற்றின் விகித உறவைக் கணக்கிடுவது சற்று உயர்வான முறை என்று கருதப்படுகிறது. அதனை 'உடலியல் செறிவு' என்று கூறுவர். சற்றே வேறுபட்ட நிலையில் மொத்தம் சாகுபடியாகும் நிலப்பரப்புக்கும், மொத்தம் சாகுபடி செய்யும் மக்களுக்கும் இடையேயுள்ள விகிதத்தை மட்டும் கணக்கிட்டால் அதனை 'வேளாண்மைச் செறிவு' என்பர். அதிலும் குறைபாடொன்றுள்ளது. காடுகள், மேய்ச்சல் நிலங்கள், சுரங்க நிலங்கள் போன்ற வற்றைக் கணக்கிலெடுக்கத் தவறிவிட்டதே அக் குறைபாடாகும். மேலும், பல்வேறு நிலங்களுடைய உற்பத்தித் திறன் சரிசமமாக இருப்பதில்லை. ஆகவே, மக்கள் தொகைச் செறிவினை உற்பத்தித்திறன் வேறுபடும் ஒவ்வொரு நிலப்பரப்புக்கும் தனித்தனியாக அளந்தறிவதே பயனுள்ளதாயிருக்கும் எனக் கருதப் படுகிறது.

மக்கள் தொகைச் செறிவைப் பாதிக்கும் காரணிகள் பல. புவியியல் காரணிகள், சமூகப் பொருளியல் காரணிகள் என அவற்றைப் பகுத்து ஆராயலாம். தட்பவெப்பநிலை தொன்றுதொட்டே குறிப்பிட்ட நிலப்பரப்புகளின் மக்கள் தொகைச் செறிவைப் பாதித்து வருகிறது. துருவப் பகுதிகளில் மக்கள் தொகைச் செறிவு மிகக் குறைந்த அளவில் இருப்ப தற்குக் காலநிலையன்றி வேறு காரணங்கள் இல்லை. மக்கள் உயிர் பிழைத்திருக்க இன்றியமையாது வேண்டிய நீர் ஓடும் ஆற்றங்கரைப் பகுதிகளில் தொன்றுதொட்டே மக்கள் தொகை மிகச் செறிந்து காணப்பட்டு வருகிறது. மலைப் பகுதிகளில் மக்கள் தொகைச் செறிவு குறைந்திருக்கக் காரணம் அப்பகுதிகளில் பிழைப்பு வாய்ப்புகள் குறைவாக இருப்பது தான். மண்ணின் இயல்பும், இதுதொடர்பான மற்றொரு இயற்கைக் காரணியாகும். வண்டல்மண் பகுதிகளில் மக்கள் மிகச் செறிந்து வாழ்கின்றனர்.

பொருளியல் மாறுதல்களும் மக்கள்தொகைச் செறிவைப் பாதிக்கின்றன. நகர்ப்புறங்கள் பல் தொழில் மையங்களாகத் திகழ்வதால் மக்கள் தொகைச் செறிவுமிக்க மையங்களாகத் திகழ்கின்றன. குறிப்பிட்ட சில தொழில்கள் குறிப்பிட்ட சில இடங்களில் தோன்றும்போது அவ்விடங்களில் மக்கள் தொகை செறிய முற்படுகிறது. குடிப்பெயர்ச்சி மற்றொரு முதன்மையான காரணியாகும். பம்பாய் போன்ற நகர்ப்புறங்களில் பேரளவு மக்கள்தொகை செறிந்திருக்கக் குடியேற்றமும் ஒரு காரணமாகும்.

தே.வே.

**துணை நூல்:**

**Asha, A.Bhende & Tara, Kanitkar.,** Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1985.

**மக்கள் தொகைப் பதிவேடு:** ஒருவனுடைய வாழ்வில் பிறப்பும் சாவும் முதலும் முடிவுமாகிய நிகழ்ச்சிகள். அவற்றைப் பதிவு செய்து வைத்துக் கொள்வது தனி மனிதனுக்கு மட்டுமன்று. சமுதாயத் துக்கும் நாட்டுக்கும் பயன்பல விளைவிப்பதாகும். பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் ஒருவனுடைய அடையாளத்தை, குடியுரிமையை, குறிப்பிட்ட சமுதாய உறுப்பினர் என்ற வகையில் அவனுடைய கடமைகளை, உரிமைகளை நிறுவ உதவுகின்றன. இப்பதிவுகள் பிறப்பு இறப்பு விவரங்களைத் தருவதன் வழியாக நாட்டின் உடல்நிலைத் தரத்தைப் பற்றிய அறிவைத் தருகின்றன. நாட்டின் கல்வி, உணவு உற்பத்தி போன்றவற்றிற்காகத் திட்டம் தீட்டும் போதும், நடப்புகளை நன்குணர இப்பதிவேடுகள் இன்றியமையாத செய்திகளை அளித்துதவுகின்றன.

ஐக்கிய நாடுகள் நிறுவனம், எவ்வெவற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு பட்டியலே தந்துள்ளது. பிறப்பு, திருமணம், இறப்பு ஆகிய மூன்றும் பதிவு செய்யப்பெறல்வேண்டும் என்பது ஐ.நா. நிறுவனத்தின் கருத்து. பிறப்பைப் பதிவு செய்யும்போது, பிறந்த இடம், காலம், அன்னையின் வயது, அவருக்கு அது எத்தனையாவது குழந்தை என்பது, பேறு காலத்தில் பெற்ற உதவி ஆகியவை விளக்கமாகக் குறிப்பிடப்படல்வேண்டும். இறப்பைப் பதிவு செய்யும்போது இறந்த இடம், இறந்தவரின் இடம், காலம், இறப்புக்குக் காரணம், பால், வயது போன்ற விவரங்களைப் பதிவு செய்தல் வேண்டும். இறந்தது குழந்தையாக இருந்தால், தாயின் இடம், குழந்தையின் பால், வயது, இறப்புக்குக் காரணம் ஆகியவற்றையும் பதிவு செய்தல் வேண்டும். இது போன்றே திருமணத்தையும் பதிவு செய்தல் வேண்டும் என்பது ஐ.நா. நிறுவனத்தின்

கருத்து. இங்கு ஆண்டு, திங்கள், மணமக்கள் வயது, பிறந்த இடம், உறையும் இடம், தொழில் முதலியன பதிவு செய்துகொள்ளப்படல் வேண்டும்.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இவ்வாறு பதிவு செய்வதற்கு வழிகோலப் பட்டுள்ளது. மேற்கூறிய செய்திகள் அனைத்தையும் பதிவு செய்ய 1973 – இல் 36 ஐரோப்பிய நாடுகளுள் 35 நாடுகள் ஏற்பாடுகள் செய்திருந்தன. வடஅமெரிக்காவில் 36 நாடுகளுள் 25 நாடுகளும், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் முறையே நான்கிலொன்றும், ஐந்திலொன்றும் ஆகிய நாடுகளும் அந்நிலையிலிருந்தன. இசுவீடன், பின்லாந்து, பெல்சியம், இசுரேல், தைவான், கொரியா ஆகிய நாடுகள் இத்துறையில் முன்னணியில் உள்ளன. அந்நாடுகளில் மக்கள் ஒவ்வொருவர் பெயரும் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரவர் வாழ்வில் நிகழும் பிறப்பு, இறப்பு, திருமணம் குடியேற்ற இறக்கம் ஆகிய பல்வகை நிகழ்ச்சிகளும் அவ்வேடுகளில் பதிவு செய்யப் பெறுகின்றன.

இந்தியாவில் கி.பி. 19–ஆம் நூற்றாண்டிலேயே, குறிப்பாக இறப்புகளைப் பதிவு செய்து வைக்க வேண்டியதன் தேவை உணரப் பெற்றிருந்தது. நாட்டின் பொது உடல்நல மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இறப்புகளைப் பற்றிய அறிவு இன்றியமையாததாகும். வங்காளப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் கி.பி. 1873 – ஆம் ஆண்டில் முதன் முதலில் நிறைவேற்றப் பட்டது. இந்திய அரசும் பிறப்பு, இறப்புத் திருமணப் பதிவுச் சட்டங்கள் கி.பி. 1886-இல் கொணர்ந்தது. அச்சட்டங்கள் பதிவு செய்வதைக் கட்டாயப்படுத்தாது, அவரவர் விருப்பத்திற்கே விட்டுவிட்டன. அதனால் இயல்பாகவே, பதிவு செய்வதில் போதிய அளவு முன்னேற்றம் காண இயலாது போயிற்று. இரண்டாம் உலகப் போரின் போது இந்தப் பதிவு ஏற்பாடுகள் மிகவும் சீர்குலைந்து விட்டன. இதனிடையே நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் மக்கள் தொகை பற்றிய செய்திகளின் முக்கியத்துவத்தை நன்குணர்த்தின. அந்தச் சூழ்நிலையில் தான் 1969-இல் பிறப்பு இறப்புப் பதிவு செய்யும் சட்டமொன்று நிறைவேற்றப் பட்டது. அச்சட்டம் பிறப்பு இறப்புகளைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் என விதித்தது. பதிவுசெய்யத் தவறுவோருக்குத் தண்டனையும் உண்டு. பதிவு செய்யும் அலுவல் துறை சில இடங்களில் காவல் அல்லது பொது உடல்நலத் துறைகளாகவும், வேறுபல இடங்களில் நிலவரி அல்லது ஊராட்சித் துறைகளாகவும் இருந்து வருகிறது.

இருந்த போதிலும் இந்தியாவில் இத்துறையில் போதிய அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூற முடியவில்லை. சென்னை நகரில் 1966 – இல் நடந்த ஆய்வொன்று 27 விழுக்காடு இறப்புகள் பதிவு செய்யப்படவில்லை என்று சுட்டிக் காட்டியுள்ளது. கல்வியறிவின்மையும் பாமரத் தன்மையுமே இதற்குக் காரணமாக இருக்கலாம். மேலும், இந்நாட்டில் திருமணத்தைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டுமென்றில்லை என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.
காண்க: அடிப்படைப் புள்ளிவிவரம். தே.வே.

**துணை நூல்:**

Asha, A. Bhende & Tara, Kanitar., Principles of Population Studies, Himalaya, Publishing House, Bombay, 1985.

*மக்கள் தொகைப் புறத்தேற்றம்*: மக்கள் தொகையின் கடந்தகாலப் போக்குகளின் அடிப்படையில் அதன் எதிர்காலத்தையும் கணித்தறிய முடியும். கணிதவியல் அதற்கு உதவுகிறது. இவ்வறிவு நாட்டின் வருங்காலத்திற்காகத் திட்டமிடும்போது மிகவும் உதவியாக இருக்கும்.

காலஅளவில் மக்கள்தொகை மாறுகிறது. அதனால் காலத்திற்கும் மக்கள்தொகைக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது. கடந்த ஆண்டுகளில் மக்கள் தொகை குறிப்பிட்ட விகிதத்தில் மாறியிருக்கிறது என அறியும்போது, குறிப்பிட்ட சூழ்நிலைகள் மாறாதிருந்தால், குறிப்பிட்ட ஆண்டில் மக்கள்தொகை இவ்வளவினதாக இருக்கும் எனக் கணித்தறிய முடியும். அந்தக் கணிப்பும் இருவகையில் செய்யப்படலாம். மக்கள்தொகையின் அளவு 1931,41,51,61 ஆகிய குறிப்பிட்ட ஆண்டுகளில் இவ்வளவு என்று தெரியும் என்பதாக வைத்துக்கொண்டால் அதிலிருந்து அவ்வாண்டுகளுக்கு இடையில் வருகிற ஓர் ஆண்டின் (எடுத்துக்காட்டாக 1953) மக்கள் தொகையைக் கணிக்க முயலுவதை உள் புறத்தேற்றம் என்று சொல்வார்கள். மாறாக மேற்படித் தரவிலிருந்து 1975 – ஆம் ஆண்டின் மக்கள்தொகையைக் கணிக்க முயலுவதைப் புறப் புறத்தேற்றம் என்று சொல்வார்கள்.

கிங்சுலி தேவிசு (Kingsley Davis) என்பார் ‘இந்தியா பாகிசுத்தான் மக்கள்தொகை’ என்ற தம் புகழ்பெற்ற நூலில் (1949) சில இந்திய மக்கள்தொகைப் புறத்தேற்றங்களைக் (Population Projection) கணித்துத் தந்துள்ளார். பிரிக்கப்படாத இந்தியாவில் 1931-41 – இல் நிலவிய 1.2 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டு கி.பி. 2001 – இல் அவ்விரண்டு நாடுகளின் மக்கள்தொகை எவ்வளவாக இருக்கும் என்று அவர் கணிக்கிறார். அடுத்து கி.பி. 1871 முதல் 1941வரை நிலவிய வளர்ச்சி விகிதத்தை எடுத்துக்கொண்டு கி.பி. 2001 – இல் வளர்ச்சி விகிதம் 0.6 விழுக்காடு என்று கணிக்கிறார்.

மக்கள் தொகை வளர்ச்சியின் மொத்த விகிதத்தை மட்டும் கருதாமல் அதனை நிருணயிக்கும் பல்வேறு காரணிகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களின் அடிப் படையில் மக்கள் தொகைப் புறத் தேற்றங்களைக் கணிப்பதே சிறந்தது என்ற கருத்து இக் காலத்தில் வலியுறுத்தப்பட்டுவருகிறது. மக்கள்தொகை, பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், குடியேற்ற இறக்கம் ஆகிய மூன்றினையும் சார்ந்துள்ளது. எனவே, அம்மூன்றின் வளர்ச்சிப் போக்கைத் தனித்தனியாகக் கணித்து அவற்றின் அடிப்படையில் புறத்தேற்றுவது சிறப்பாயிருக்கும். மக்கள்தொகையின் வயது அமைப்பு, மணம் புரிந்துகொள்பவர் விகிதம் ஆகியவற்றையும் அடிப் படையாகக் கொள்ளலாம்.

மக்கள்தொகைப் புறத்தேற்றங்களின் துல்லியத் தன்மை, கிடைக்கிற தரவுகளின் நம்பகத் தன்மையையே பெரிதும் சார்ந்துள்ளது. மேலும், வெவ்வேறு எடுகோள்கள் வெவ்வேறு கணிப் புகளைத் தரும் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. கால அளவில் மக்கள் தொகை மாறுதல்களி னால் பிறப்பு, இறப்பு விகிதங்கள் முதலியன மாறத் தக்கன. ஆதலால், பெரும்பாலும் புறத்தேற்றங்கள் உண்மைக்குப் புறம்பாகவே அமைந்துவிடுவதுண்டு. அதுபோன்றே கால அளவில் எரிபொருள் வளம், நிலம் முதலிய இயற்கை வளங்கள், சாகுபடியாகும் நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் போன்றவற்றின் அளவும் உற்பத்தித்திறனும் மாறுகிற காரணத்தால், அவை மாறாதுள்ளன என்ற அடிப்படையில் வழக்கமாகக் கணிக்கப்பெறும் புறத்தேற்றங்கள் பொருளற்றுப் போவதுண்டு. தே.வே.

துணை நூல்:

Davis Kingsley., Population of India and Pakistan, Russel and Russel, New York, 1968.

*மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கை:* பழங்காலத்தில் மக்கள் தொகைப் பெருக்கம், பொதுவாக வரவேற்கப் பெற்றே வந்தது. பெரிய அளவிலான மக்கள் தொகை, குறிப்பிட்ட நாட்டை வலிமைப்படுத்தும், வளப்படுத்தும் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணம். 'மக்களைப் பெற்று, இனம் பெருக்கி, மண்ணின் குறைநிரப்பு' என்பதை இறைவனின் கட்டளையாகவே யூதர்கள் கருதினர். 'வணக்கத்துக்குரிய முன்னோர்களைச் சந்ததியற்றுப் போகச் செய்வது, அவர்களுக்கு எதிராகச் செய்யும் பாவம்' என்பார் சீனப் பேரறிஞர் கன்பூசியசு. இசுபார்ட்டாவில் மணம் புரியாதிருப்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. இந்திய நாட்டுச் சிற்பங்கள், குறிப்பாகக் கசுராகோ, கோனாரக்குச் சிற்பங்கள். இணைவிழைவை ஊக்குவிப்பனவாகவே உள்ளன.

இரு உலகப் பெரும் போர்களுக்கும் இடைப் பட்ட காலத்தில் செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகள் மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கையை மிகவும் ஆர்வத்துடன் கடைப்பிடித்து வந்தன. போரின் பிற்காலத்திலும், பிரான்சு, சுவீடன் இசுரேல் போன்ற நாடுகள் இக்கொள்கையை ஆதரித்து வருகின்றன. இசுரேல் நாட்டைப் பொறுத்தவரை, அரபியர்களின் எண்ணிக்கையை விட மிகுதியாகத் தம்முடைய தொகை அமைய வேண்டும் என்ற ஆர்வமே அந்நாடு கடைப்பிடித்து வரும் மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கைக்கு அடிப் படைக் காரணமாயுள்ளது. சப்பானில் பொதுவான மருத்துவ வசதிகளின் விளைவாக, மக்கள் தொகையில் முதியவர்களின் விகிதம் பெருகி வருகிறது. அதனால் நாட்டுத் தொழிலாளர்களுள் இளையவர்களின் விகிதம் குறைந்து வருகிறது. அதனை எதிர்கொள்ளும் வகையில், அந்நாடும் அண்மைக் காலங்களில் மக்கள் தொகைப் பெருக்கத்தை வரவேற்று வருகிறது.

மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கையானது, பொதுவாக மூன்று முறைகளில் வகுத்துச் செயற் படுத்தப்பட்டு வருகிறது எனலாம். நிலவியிருக்கிற சமுதாய மதிப்பீடுகளையும், நோக்குகளையும் குலைக்காமலேயே மிகுதியான அளவு குழந்தை களைப் பேணுவது தொடர்பான பொருளியல் சுமைகளைக் குறைப்பதற்கு உதவுதல் ஒரு முறை. மிகுதியான அளவு குழந்தைகள் பெறுவது நல்லது என்று அனைவரும் கருதும் வகையில், சமுதாய மதிப்பீடுகளை மாற்றியமைத்தல் மற்றொரு முறை. குழந்தைப்பேறு தொடர்பான அறநியதிகளையே தளர்த்தி விடுதல் மூன்றாம் முறை. இட்லர் இம் மூன்று முறைகளையுமே கடைப்பிடித்தார் எனச் சொல்வதுண்டு.

குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாடுகள், மக்கள் தொகையைப் பெருக்குவதற்காகக் கடைப்பிடித்து வரும் சில முறைகள் குறிப்பிடத்தக்கன. பிரான்சில், ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளுடையவர்கள், ஒரு வளர்ந்து செல் வீதத்தில் குடும்ப உதவித்தொகை பெறுகின்றனர். வேறு தொடர்பான செலவுகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மணமானவர் களுக்கு அரசுக் கடன்கள், வரிச் சலுகைகள், விலைச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. கல்வி நிலையங் களிலும் தாராளமான உதவித் தொகைகள் தரப் படுவதால் கல்வித் தொடர்பான செலவுகள் குறைக் கப்படுகின்றன. ஊதியத்துடன் பேறுகால ஓய்வு தரப்

படுகிறது. சுவீடனில், பேறுகால ஓய்வு கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது.

பிரான்சில் கருக்கலைப்பு சட்டவிரோதமாக்கப் பட்டு, கருத்தடைச் சாதனங்கள் வழங்குவதும் தடுக் கப்பட்டிருந்தது. ஆனால், 1967-க்குப் பின் அவ் விதிகள் ஓரளவு தளர்த்தப்பட்டு விட்டன.

இசுரேல் 1959-ஆம் ஆண்டுவரை பத்தாம் குழந் தையைப் பெறும் பெண்மணிக்குப் பண வெகுமதி வழங்கி வந்தது. சோவியத்து நாட்டில் மிகுதியாகக் குழந்தைகளைப் பெற்ற அன்னை, 'அன்னை வீராங் கனை,' என்னும் பட்டமளித்துச் சிறப்பிக்கப் பெறு கிறாள்.

குடிப்பெயர்ச்சியைத் தடுப்பதன் வழியாகவும், நாட்டின் மக்கள் தொகையைப் பெருக்க முடியும். திருமண வயதைக் குறைத்தல், மனைவி மலடு என்ற காரணங்காட்டி மணமுறிவு பெற வழிவகுத்தல் ஆகி யவை மக்கள் தொகைப் பெருக்கத்தை ஊக்குவிக்க உதவுகிற மற்றும் சில வழிகள். தே.வே.

**துணை நூல்கள்:**

**Asha, A. Bhende & Tara, Kanitkar.**, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1985.

**Srivastava,S.C.**, Studies in Demography, Jai Prakash Nath & Co., Meerut, 1980.

**மக்கள் தொகைப் பெருக்கம்:** மக்கள்தொகை தொடர்ந்து பெருகிச்செல்லும். குறிப்பிட்டவொரு கட்டத்தில் அது தாங்க இயலாத நிலையையும் அடையலாம். அந் நிலையையும் ஏற்றுச் செயற்பட முடியும் எனப் பலர் நம்புகின்றனர்.

வளரும் ஒவ்வொரு நாடும் மக்கள்தொகையைப் பொறுத்தவரை மூன்று நிலைகளை ஒவ்வொன்றாகக் கடந்து செல்வதாக மக்கள்தொகை மாறுபாட்டு நிலைக் கோட்பாடு (த.க.) கூறுகிறது. முதல்நிலை யில் பிறப்பு, இறப்பு விகிதங்கள் இரண்டுமே உயர் வாக உள்ளன. அதனால், சாண் ஏற முழம் சறுக் கினாற்போல மக்கள்தொகை மாறா அளவின தாகவே இருந்து வருகிறது. ஆனால், நாடு வளரும் போது மக்களுடைய வாழ்க்கைத் தரத்தில் முன்னேற் றம் ஏற்படுகிறது. கல்வி மெல்லப்பரவுகிறது; பொது உடல்நலம் மேம்படுகிறது; மருத்துவ வசதிகள் பெருகுகின்றன. கொள்ளை நோய்கள் ஒழிக்கப்பட்டு விடுகின்றன. அவற்றால், இறப்பு விகிதம் குறைய நேர்கிறது. அதே நேரத்தில் வேளாண்மையையே பெரிய அளவில் தொடர்ந்து சார்ந்திருக்கும் மக்கள், பெரிய குடும்பமாக இருப்பதில் பல நன்மைகளை எதிர்பார்க்கிறார்கள். சமுதாயத்தின் குறிப்பிட்ட சில பிரிவினரிடம் மட்டுமே கல்வி புகுந்துள்ள காரணத்தால் கல்வியறிவும் சிறு குடும்பங்களின் சிறப்புகளை அனைவருக்கும் எடுத்துரைக்கத் தவறி விடுகிறது. அவற்றால் பிறப்பு விகிதம் தொடர்ந்து உயர்ந்த அளவிலேயே இருக்கிறது. அந்நிலையில் மக்கள்தொகை மிகப் பெரியதொரு விகிதத்தில் வளர முற்படுகிறது. பொதுவாகப் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு நாற்பது என்ற அளவில் இருக்க, இறப்பு விகிதம் ஆயிரத்துக்குப் பதினைந்து என்ற அளவில் அமைந்து விடுகிறது. அதனால், மக்கள்தொகை ஆண்டுக்கு 2.5 விழுக்காடு என்ற கணக்கில் பெருகிச் செல்ல, அதனை மக்கள்தொகைப் பெருக்கம் எனச் சிறப்பாக ஆசிரியர்கள் எடுத்துரைத்து வருகிறார்கள். பொதுவாக ஆண்டுக்கு 2.0 விழுக்காடு அளவில் மக்கள்தொகை வளர்ந்து செல்லுமானால் அதை மக்கள்தொகைப் பெருக்கம் என்று சொல்கிறார்கள்.

இவ்விதப் பெருக்கம் மேய்ச்சல் நில அழிவு, காடு கள் அழிவு, மண்ணரிப்பு, மீன்வள இழப்பு போன்ற வற்றில் சென்றுமுடியும். அதனால் தனிப்பட்டவர் உற்பத்திக் குறைவு, வேலையின்மை, விலையுயர்வு முதலியவை ஏற்படும். பொதுவான ஒழுக்கச் சிதைவு, கட்டாயக் குடிப்பெயர்ச்சி, உயர்விகிதக் குழந்தை இறப்பு, வாழ்க்கை எதிர்பார்ப்புக் குறைப்பு ஆகிய வையும் ஏற்படலாம்.

இந்த அளவிறந்த பெருக்கத்தையும், அது தொடர்பான சிக்கல்களையும் ஏற்றுச் செயற்பட வழிகள் சில இல்லாமலில்லை. தொழில் வளர்ச்சியை யும் அதைத் தொடர்ந்து நகர்மயமாகும் போக்கை யும் ஊக்குவித்துக் கல்வியறிவினையும் பரவச்செய் தால் சிக்கல்களை ஏற்றுச் செயற்பட வகையுண்டு. நகர வாழ்க்கை கிராம வாழ்க்கையிலிருந்து முற்றி லும் வேறுபட்டது. வேலை தேடி நகரங்களுக்குச் செல்வோர் இருப்பிட வசதி கிடைக்கப்பெறாத நிலையில் சிறு குடும்பங்களின் சிறப்பைத் தாமாகவே புரிந்துகொள்கின்றனர். நகரங்களில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு எளிதில் கிடைத்துவிடமுடியாது. புதிதாகத் தோன்றும் ஆலைகளில் வேலை செய்வதற் குத்தேவையான தொழில்நுட்பப் பயிற்சியினை அனை வரும் பெற்றுவிட முடியாது. வேலை வாய்ப்பில் லாத நிலையில் குழந்தைகள் வெற்றுச் சுமைகளாகவே கருதப்படுகிறார்கள். தொழில் வளர்ச்சியினை யொட் டிப் பெண்கள் அனைத்து வேலைகளிலும் ஈடுபடும் போது குழந்தைகளைப் பேணுவது அவர்களுக்குச் சிரமமாகவே இருக்கும். பொதுவான கல்வியறிவு சிறுகுடும்பத்தின் சிறப்புகளை உணர வைக்கிறது. இந்தப் பல்வேறு காரணங்களால் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு நாற்பது என்ற படியிலிருந்து ஆயிரத் துக்கு இருபது என்றவாறு குறைய முற்படும்போது

மக்கள் தொகைப் பெருக்கம் தொடர்பான பல சிக்கல்களுக்குத் தீர்வு காணப்பட்டு விடுகிறது.

தே.வே.

**துணை நூல்:**

Asha, A. Bhende & Tara, Kanitkar., Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1985.

*மக்கள் தொகை மாற்றம்:* மக்கள் தொகை வளர்ச்சியில் ஓர் ஒழுங்கினை – அது முதலில் ஏறி, பின்னர் இறங்கிச் செல்லநேரும் என்பதை—சுட்டிய அறிஞர்கள், ஏறிச் செல்லும் கட்டத்தில் மக்கள் தொகை வெடித்துப் பெருகுவது போல, இறங்கிச் செல்லும் கட்டத்திலும் அது உள் வாங்கிச் சுருங்க நேரும் என்று கருதுகின்றனர். மருத்துவத் தேவைகள் பெருகும் போது, இறப்பு வீதம் குறையும். அதே நேரத்தில் பிறப்பு வீதமும் குறைந்து செல்ல முற்படும். பொதுவான வாழ்க்கைத் தர உயர்வால், பிறப்பு வீதத்தைக் குறைப்பதற்குச் சாதகமான சமுதாயச் சூழ்நிலையும் உண்டாகி விடும். அந்நிலையில் பிறப்பு வீதம் மிக வேகமாகக் குறைந்து செல்வது நிகழத்தக்கதாகிறது. அதனால், மக்கள் தொகையும் மிகவேகமாகக் குறைந்து செல்ல நேரும். இதுவே மக்கள் தொகை மாற்றம் எனப் பெறுகிறது.

தே.வே.

**துணை நூல்:**

Srivastava, S.C., Studies in Demography, Jai-Prakash Nath & Co., Meerut, 1980.

*மக்கள் தொடர்பு சாதனம்:* செய்தி, தகவல், விவரம், கருத்து, நோக்கம் ஆகிய இவற்றை ஒருவரிடமிருந்து மற்றவருக்கு அனுப்பும் செயலே தொடர்பு எனப்படும். தொடர்பு (Communication) என்பது மனிதன், மிருகம், தாவரம் முதலிய அனைத்து உயிர்களிடத்தும் காணப்படும் செயற்பாடு ஆகும். உயிரினங்கள் வாழ இத்தொடர்பு இன்றியமையாதது.

மனிதனுக்கு உணவு, உடை, இருப்பிடம் தவிர மற்ற சில அடிப்படைத் தேவைகளும் உள்ளன. அவற்றுள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவையும் முக்கியமான ஒன்றாகும். தொடர்பு எல்லாச் சமுதாயத்திற்கும் குறிப்பாக இக்காலப் புதிய சமுதாயத்திற்கு மிகவும் இன்றியமையாதது.

தேனிசு மெக்குவெயல் (Denis Mcquail)என்பவர் மனிதத் தொடர்பு (Human Communication) என்பது ஒரு மனிதர் மற்றொரு மனிதருக்குப் பொருளுள்ள செய்திகளை அனுப்புவது என்கிறார்.

ஒருவர் தம் கருத்தைத் தெரிவிக்க நேரடியாகச் சிலருடன் தொடர்பு கொள்ளலாம். இதையே அவர் செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற சாதனங்களின் மூலம் பரப்பினால், அது பல்லாயிரக்கணக்கான மக்களை விரைவில் சென்றடையும். இதுவே, மக்கள் தொடர்பு சாதனம் (Mass Media Communication) எனப்படும். இவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் செய்தித்தாள், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் மக்கள் தொடர்பு சாதனங்கள் என்று கூறப்படுகின்றன.

**தொடர்பின் இன்றியமையாமை:** மனிதனுக்கு உணவு, தூக்கம் முதலியவை எவ்வாறு இன்றியமையாதனவோ அந்த அளவிற்குத் தொடர்பும் இன்றியமையாதது.மனிதனுக்குத் தனிமையாக இருப்பதும், தொடர்பு இல்லாமல் இருப்பதும் மிகவும் கடினமானவை. குறைந்த அளவு நேரமே மனிதன் தொடர்பின்றி இருக்க முடியும். இக்காலத்திய மனிதனுக்கு மக்கள் தொடர்பு சாதனமின்றி வாழ முடியாது. அது அவனுடைய வாழ்க்கையின் மிக முக்கியமான கூறாக விளங்குகின்றது. அது இன்றைய நாகரிக வளர்ச்சியின் முக்கியமான பகுதியாகும்.

தொடர்பு சுற்றுப்புறச் சூழ்நிலையுடன் சம்பந்தமுடையது. அவ்விதமான தொடர்பின்றி, மக்கள் தாம் பாதுகாப்பாக இருக்கிறோமா, இடரில் இருக்கிறோமா, வெறுக்கப்படுகிறோமா, நேசிக்கப்படுகிறோமா என்பனவற்றையும் பிறர் பசியின்றி இருக்கிறார்களா பசியுடன் இருக்கிறார்களா என்பனவற்றையும் அறிய முடியாது.

தொடர்பிற்கான அடிப்படைத் தேவையை மனிதனுடைய படிமுறை வளர்ச்சியிலிருந்து அறிந்து கொள்ள முடியும். பூச்சிகளும், விலங்கினங்களும், உணவுக்காகவும், பாதுகாப்பிற்காகவும், இனவிருத்திக்காகவும் ஒவ்வொன்றும் மற்றொன்றோடு தொடர்பு கொள்கின்றது. அது புலன்சார்ந்த தொடர்பு (Sensory Communication) எனப்படும். ஆனால், மனிதன் அந்தப் புலன்சார்ந்த தொடர்பு கொண்டு மட்டும் வாழமுடியாது. அதனால், மொழி என்னும் குறியீட்டுத் தொடர்பைக் (Symbolic Communication) கண்டுபிடித்தான்.

இன்றைய உலகில் மக்கள் தொடர்பு சாதனத்தின் தாக்கம் அளவிடற்கரியது. பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர்களுக்கு அப்பால் வாழும் மக்களுடன் கூட நொடிப்பொழுதில் செயற்கைக்கோள்

உதவியுடன் தொடர்பு கொள்ள வாய்ப்புள்ளது. நேருக்கு நேர் அறிமுகம் இல்லாத பல துறை மக்களைத் தொடர்புகொள்ள வைக்கும் சாதனம் அது. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் அதன் பங்கு இன்றியமையாதது. நூல்கள், செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகிய இவற்றின் மூலமாகச் செய்திகள் கிடைக்கின்றன. மக்கள் தொடர்பு சாதனம் திடீரென்று செயலற்றுப் போனால், பெரும் குழப்பமும் உலக நாகரிக வளர்ச்சியில் பெரும் பாதிப்பும் ஏற்படும்.

**குழுத் தொடர்பு:** தனி மனிதர்களிடையே உள்ள தொடர்பு பெரும்பாலும் நேரடித் தொடர்பு மூலம் ஏற்படும். இது ஒருவருக்கொருவரிடையே ஏற்படும் உரையாடல் ஆகும். நேருக்கு நேர் சந்திக்கும் பொழுது இது ஏற்படும். இதற்கு எவ்விதமான சாதனங்களின் உதவியும் தேவையில்லை.

ஓரிடத்தில் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுதுகூட அவர்கள் ஒருவருக்கொருவர்தொடர்பு கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். இதுதான் குழுத்தொடர்பு (Group Communication) எனப்படுகிறது. ஆனால், குழுத் தொடர்பில் நேரடித் தொடர்பு (Face to face Communication) குறைகிறது. குழுத் தொடர்பு, தனி மனிதர்களிடையே உள்ள தொடர்பைவிட (Inter-personal Communication) மிகவும் சிக்கலானது. தனிமனிதர்களிடையே உள்ள தொடர்பில் ஒருவர் மற்றொருவரை நன்கு புரிந்துகொள்ளலாம். முகபாவத்திலும், அங்க அசைவுகளிலுமிருந்து பிறரின் எண்ணங்களையும், மனநிலையையும் அறிய முடியும். அதன்படி எண்ணங்களையும் ஒருவருக்கொருவர் அறிவிக்க இயலும்.

எல்லோரும் ஓரிடத்தில் குழுமியிருக்கும் பொழுது குழுத் தொடர்பு கொள்ள வாய்ப்பு உண்டு. அவ்வாறு எல்லோரும் ஓரிடத்தில் கூட வாய்ப்பில்லாத பொழுது எழுத்து மூலமாகத் தொடர்புகொள்ளலாம். அதன் மூலமாகச் செய்தி சரியாகச் செல்லும். ஆனால், மெதுவாகச் சென்றடையும். இப்பொழுது குழுத்தொடர்பு செய்தித்தாள், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**மக்கள் தொடர்பு:** பொதுமக்கள் அனைவரும் நேரடியாகத் தொடர்பு கொள்வது என்பது கடினம். அதனால், வெவ்வேறு சாதனங்கள் மூலம் தொடர்பு கொள்கின்றனர். அதற்கு மக்கள் தொடர்பு (Mass Communication) என்பது பெயர். மக்கள் தொடர்பு என்பது மின்னியல் சாதனங்கள் மூலமாக அடையும் தொடர்பை மட்டுமல்லாமல், சொற்கள், பாட்டு, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம் ஆகியவற்றின் மூலமாக அடையும் தொடர்புகளையும் குறிக்கும்.

**தொடர்பு ஏற்படும் முறை:** தொடர்பு ஏற்படும் முறையில் ஐந்து வழிகள் உள்ளன. அவை செய்தி அனுப்புபவர், செய்தி (Message), வழி (Channel), செய்தி பெறுபவர், பெறுவரிடம் அச்செய்தி ஏற்படுத்தும் விளைவு ஆகியன ஆகும்.

தொடர்பு கொள்பவர், ஒருவராகவோ பலராகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாகத் தொலைக்காட்சியில் செய்தி படிப்பவருக்கு உறுதுணையாகப் பலபேர் உதவிபுரிகின்றனர். செய்தி என்பது சொற்களாகவோ, படமாகவோ, குறியீடாகவோ இருக்கும். அதை ஒரு வழியின் (Channel) மூலமாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்பட்ட செய்தி, செய்தி பெறுபவரை அடைகிறது. பெரும்பாலும் செய்தி பெறுபவர் பலராகவே இருப்பர்.

**தொடர்பு கொள்வதில் உள்ள தடைகள்:** பண்பாடுகள், மொழிகள் ஆகியவற்றால் ஏற்படும் தடைகள் முக்கியமானவையாகும். வெவ்வேறு பண்பாடுகளினாலும், சில நேரங்களில் ஒரே பண்பாட்டிலேயே காணப்படும் வெவ்வேறு உட்பிரிவுகளின் வேறுபாடுகளினாலும், மொழியின் வேறுபாட்டினாலும், பல பொருள் கொண்ட ஒரு சொல்லினாலும், ஒரு சொல்லுக்குப் பல பொருள் உண்மையாலும் தொடர்பு பாதிக்கப்படுகிறது.

உளவியல் காரணங்களாலும் தடை ஏற்படும். ஒவ்வொருவரும் தங்கள் கண்ணோட்டத்திலேயே இவ்வுலகைக் காண்கின்றனர். அதன்படியே மக்களையும், நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் எடைபோடுகின்றனர்.

ஒழுங்கற்ற நிகழ்ச்சியளிப்பு, தொடர்பில் ஏற்படும் தடைக்கு மற்றொரு காரணமாகும். சரியான சொற்கள் தேர்ந்தெடுக்காமல் இருப்பது, தொடர்பில்லாத விவரங்களைச் சேர்ப்பது, செய்திகளைக் கோவை இல்லாமல் கொடுப்பது போன்றவை ஒழுங்கற்ற நிகழ்ச்சியளிப்பு எனப்படும். அதனால், தேவையற்ற குழப்பமும், செய்தியைச் சரியானபடி புரிந்து கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்படும்.

செய்தி பெறுபவரிடமுள்ள குறைபாடுகளும் மற்றொரு தடையாகும். செய்தியைப் பெறுபவர் அல்லது கேட்போர் நீண்ட நேரம் கவனம் செலுத்த முடியாது. அதேபோன்று, கேட்பவர் செய்தி பெறுபவர் ஆகியோருடைய புத்திக்கூர்மை, அறிந்துகொள்ளும்திறன் ஆகியவற்றைப் பொறுத்துத் தொடர்பில் வெற்றியோ தோல்வியோ இருக்கும்.

**மக்கள் தொடர்பு சாதனத்தின் செயல்கள்:** பழஞ் சமுதாயத்தில் காணப்படும் மரபுவழித் தொடர்பு சாதனங்களைப் போலவே புதிய காலத்தில் மக்கள் தொடர்பு சாதனங்களும் பல செயல்களைப் புரிகின்றன.

அரோல்டு லாசுவெல் (Harold Lasswell) என்பவர் மூன்று முக்கிய செயல்களைக் குறிப்பிடுகிறார். அவை 1. தம்மைச்சுற்றியுள்ள சூழ்நிலையைக் கவனித்தல் (Surveillance), 2. செய்தியை விளக்கி எவ்வாறு நடக்க வேண்டும் என்று அறிவுறுத்தல், 3. பாரம்பரியத்தைக் கடத்துதல் ஆகியனவாகும்.

சமுதாயத்தின் அன்றாட நடப்புகளைச் செய்திகளாக அறிவிப்பதால் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நன்கு அறிய முடிகிறது. பொதுமக்கள் தொடர்பு கொண்ட சாதனம் நாட்டிற்கு நன்மை பயப்பதாகும். இக்காலத்திய புதிய தொழிற்சாலைச் சமுதாயத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கு மக்கள் தொடர்பு சாதனம் பெரிதும் உதவுகிறது. மக்களாட்சிச் சமுதாயத்தில் அரசியல் அமைப்பிலும், வளர்ச்சியிலும் மக்கள் தொடர்பு சாதனத்தின் பங்கு அளவிடற்கரியது. மேலும் அது, பொது மக்கள் கருத்தை (Public Opinion) உருவாக்கவும், பண்பாட்டை வளர்க்கவும் உதவுகிறது.

மக்கள் தொடர்பு சாதனத்தின் மற்றொரு முக்கிய செயல் பொழுதுபோக்கு அமிசமாக அது பயன்படுவதாகும். மக்கள் தொடர்பு சாதனங்களின் மூலமாக விளம்பரம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. அதன் மூலம் பொருள்களின் உற்பத்தியும் விற்பனையும் அதன் மூலமாகப் பொருளாதார வளர்ச்சியும் பெருகியுள்ளன.

உளவியல் சமூகவியல் தேவைகளை நிறைவேற்றச் சிலர் இதனைப் பயன்படுத்துகின்றனர். பால் உறவு, வன்முறை பற்றிய செய்திகள், நிகழ்ச்சிகள் ஆகியவை மிகுதியாக உள்ளன. சமூக, உளவியல் சிக்கல்களைப் பற்றிய விவரங்களும் உள்ளன. மக்கள் இவற்றைத் தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்தும் சூழ்நிலையும் நிலவுகிறது.

மற்றொரு முக்கியமான செயல் கல்வியறிவை வளர்ப்பதாகும். இப்பொழுது வானொலி, தொலைக்காட்சி மூலமாகக் கல்வியைப் பரப்ப அரசு பல முயற்சிகளை எடுத்துவருகிறது. அதன் மூலம் பாடங்கள் விளக்கப்படுகின்றன. செய்தித் திரைப்படமும், செய்தித் தாள்களும் கல்வியறிவு வளர இன்று உதவுகின்றன.

மக்கள் தொடர்பு சாதனம், மக்களின் – குறிப்பாக இளைஞர்களின் உணவு, உடை, அழகு தொடர்பான உணர்வுகளை ஊக்குவிக்கிறது. மேலும், இது மக்களுடைய நோக்கம், செயல், எண்ணம், நடத்தை ஆகியவற்றைப் பெரிதும் முடிவுசெய்கிறது.

மக்கள் தொடர்பு சாதனத்தின் செயல்கள் கூறப்பட்டன. இனி, மக்கள் தொடர்பு சாதனங்களில் முக்கியமான செய்தித்தாள், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றினால் உண்டாகும் பயன்கள் கூறப்படும்.

**செய்தித்தாள்:** செய்தித்தாள் உடனடி வரலாறு என்று கூறலாம். செய்தித்தாள் என்பது அவ்வப்போது மாறும் நிலைமைகளையும், மக்களைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதையும் தெரிவிக்கும் ஓர் அறிக்கை ஆகும்.

இதனுடைய முக்கியமான செயல்கள் இரண்டாகும். ஒன்று, மாநிலம், தேசியம், உலகம்ஆகியவற்றின் செய்திகளை உடனுக்குடன் அறிவிப்பது. மற்றொன்று, அச்செய்தியை அடிப்படையாகக் கொண்டு விளக்கங்களும் கருத்துகளும் தெரிவிப்பது. அவையன்றி, மக்களின் கல்வியறிவை வளர்ப்பதிலும், பண்பாட்டு வளர்ச்சியிலும் பெரும்பங்கு ஆற்றுகின்றது.

செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாசிரியர்கள், துணைப் பதிப்பாசிரியர்கள், பத்திரிகை நிருபர்கள், கட்டுரையாளர்கள், நிழற்படக்காரர்கள், ஓவியர்கள், கருத்துப்பட ஓவியர்கள் (Cartoonists) செய்தித்தாளுடன் தொடர்புகொண்டோர் ஆகியோர் பத்திரிகையாளர்கள் (Journalists) எனக் கூறப்படுகிறார்கள்.

செய்தித்தாளில் செய்தி, தலையங்கம், விளம்பரம் ஆகிய இவை மூன்றும் முக்கிய பகுதிகளாக விளங்குகின்றன. செய்திப் பகுதியில் உலகில் நடக்கும் நிகழ்ச்சிகள் உடனுக்குடன் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. அதனால், மக்களுக்குப் பெரும்பயன் விளைகிறது. தலையங்கத்தில் அப்போதைய சமூகம், பொருளாதாரம், அரசியல், மதம், அறிவியல் பற்றிய செய்திகளும், மேலும் பல சிக்கல்களும் ஆராயப்படுகின்றன. அதனால், பொதுமக்கள் அவற்றைப் படித்து அறிந்து ஒரு முடிவுக்கு வர ஏதுவாகிறது. செய்தித்தாளில் வரும் விளம்பரங்கள், செய்தித்தாளின் வருமானத்தைப் பெருக்குவதுடன் வளமான பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகின்றன.

இக்காலத்திய செய்தித்தாள் தொழிற்புரட்சியின் படைப்பாகும். ஒரு புறம் தொழில்நுட்பம் அச்சுத் துறையை விரிவடையச் செய்தது. மறுபுறம் அதிகப் பொருள் உற்பத்திக்கு விளம்பரம் இன்றியமையாததாகிறது. அதனால் செய்தித்தாளைத் தொழிற்புரட்சியின் படைப்பு என்று கூறுவதில் தவறு இல்லை.

வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி முதலிய சாதனங்களைவிட செய்தித்தாள் விலையில் மலிவாக இருப்பதால் அது பொது மக்களை எளிதில் சென்றடையும் சாதனமாக விளங்குகிறது.

செய்தித்தாள் சில நாடுகளில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. பல நாடுகளில் இது தனியார் கைகளில் இருந்தாலும் ஒரு சிலரின் ஆதிக்கமே அத்துறையில் ஓங்கியுள்ளது. அதனால், அந்த ஒரு சிலரின் கருத்தையே அது எதிரொலிக்கிறது.

மேலும், இக்காலச் செய்தித்தாள்கள் குற்றங்கள், வன்முறைகள் பற்றிய செய்திகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து வெளியிடுகின்றன. இது தவிர்க்கப் படல் வேண்டும்.

**வானொலி:** மக்கள் தொடர்பு சாதனங்களில் வானொலி முக்கியமான ஒன்றாகும். முதலாம் உலகப் போரின்போது போருக்காக அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட சாதனமிது. பின்னர்ப் பொது மக்கள் தொடர்பில் இன்றியமையாத சாதனமாக விளங்கத் தொடங்கியது. பெரும்பாலான நாடுகளில் வானொலி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அமெரிக்கா போன்ற நாடுகளில் தனியாரிடம் வானொலி விரும்பியவண்ணம் செயற்பட இசைவளிக்கப்பட்டுள்ளது.

வானொலியில் பெண்களுக்கு, சிறுவர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, உழவர்களுக்கு, மாணவர்களுக்கு என்று ஒவ்வொரு பிரிவினருக்கும் நிகழ்ச்சிகள் உள்ளன. அவை தவிர இசை, நாடகங்கள், உரையாடல்கள், பட்டிமன்றங்கள், வினா-விடை நிகழ்ச்சிகள், நேர்முக நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகளும் உள்ளன. அவற்றிற்கிடையே செய்தி அறிவிப்பு காலை, மதியம், மாலை, இரவு நேரங்களில் உண்டு. அச்செய்திகள் மக்களுக்கு மிகவும் பயனுள்ளனவாக உள்ளன.

இப்பொழுது, வானொலி கல்வி வளர்ச்சியில் அரும்பங்கு ஆற்றுகின்றது. காலை நேரங்களிலும், இரவு நேரங்களிலும், பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வித் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கும் பல விரிவுரைகளை ஒலிபரப்பிப் பயனளிக்கின்றது.

வானொலி ஒரே நேரத்தில் பல இலட்சக்கணக்கான மக்களைச் சென்றடைகிறது. மேலும், குறுகிய நேரத்தில் பல்லாயிரக்கணக்கான கிலோ மீட்டர் தொலைவினைக் கடந்து செல்லும் தன்மையுடையது. அதனால், இது மிகவும் ஆற்றல் வாய்ந்த தொடர்பு சாதனமாகும்.

**திரைப்படம்:** திரைப்படம் மற்றொரு ஆற்றல் வாய்ந்த தொடர்பு சாதனமாகும். பொழுதுபோக்கு, கல்வி, விளம்பரம் ஆகியவற்றிக்குத் திரைப்படம் பெரிதும் பயன்படுகிறது. ஒலியின்றி ஓடிய திரைக்காட்சிகள் முதலில் மக்களை வியப்படைய வைத்தன. பிறகு பேசும் திரைப்படக் காட்சி வந்தபிறகு அது மிகவும் பெருமை அடைந்தது. கேட்கவும் பார்க்கவும் (Audio - visual) முடிவதால் இதனுடைய தாக்கம் பெரிய அளவில் உள்ளது. படித்தவர்களை மட்டுமன்றிப் பாமர மக்களையும் சென்றடையும் ஓர் அரிய ஆற்றல் வாய்ந்த சாதனமிது.

பெரும்பாலும் இளம் வயதினரே மிகுதியாகத் திரைப்படங்களுக்குச் செல்கின்றனர். விடுமுறை நாள்களிலும், பண்டிகை, திருவிழாக் காலங்களிலும் திரைப்படம் பார்க்கப் பெரும் கூட்டம் கூடுகிறது. நகரம், சிற்றூர் என்ற வேறுபாடு இல்லாமல் மக்களைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் திரைப்படத் திற்குண்டு. அதனால், இது ஒரு ஒரு சிறந்த பொழுது போக்குச் சாதனம் என்று கருதப்படுகிறது.

பொழுதுபோக்கிற்கான திரைப்படங்கள் வாணிக நோக்கத்துடன் தயாரிக்கப்படுவனவாகும். ஆனால், அறிவு வளர்ச்சிக்கான படங்கள் வாணிக நோக்கத்துடன் தயாரிக்கப்படுவதில்லை. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றின் சிக்கல்களை மையமாகக் கொண்ட திரைப்படங்களும் தயாரிக்கப்படுகின்றன. இது ஒரு விளம்பர சாதனமாகவும் பயன்படுகிறது. அதனால், பொதுமக்கள் கருத்து உருவாவதற்கும் பெரிதும் துணைபுரிகிறது.

அனைத்து நாடுகளிலும் படங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன. அதற்கென்று ஒரு குழு உள்ளது. இக்காலத் திரைப்படங்களில் பாலுணர்வு, வன்முறைக்காட்சிகள் பெருகுவதால் அத்தணிக்கை மிகவும் தேவையாகிறது.

**தொலைக்காட்சி:** தொலைக்காட்சி இந்நூற்றாண்டின் மிக முக்கியமான கண்டுபிடிப்பாக விளங்குகிறது. திரைப்படம் போன்று தொலைக் காட்சி கேட்கவும் பார்க்கவும் கூடிய சாதனமாக விளங்குவதால் இதனுடைய தாக்கம் அளவிடற்கரியது. மேலும், திரைப்படம் திரையரங்கு சென்றுதான் காணமுடியும். அதிலும் குறிப்பிட்ட திரைப்படம் மட்டுமே பார்க்க முடியும். ஆனால், தொலைக்காட்சி வீட்டிலேயே பல்வேறு நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க உதவுகிறது.

வானொலி போலவே இதனிலும் பல்வேறு பிரிவினருக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் காண்பிக்கப்படுகின்றன. பெண்கள், சிறுவர்கள், உழவர்கள், தொழி

லாளர்கள், மாணவர்கள், ஆகியோருக்கான பல நிகழ்ச்சிகளின் நேர்முக வருணனைகள், பாட்டு, இசை, நடனம், நாட்டியம், நாடகம், திரைப் படப் பாடல்கள், திரைப்படங்கள், வினா-விடை நிகழ்ச்சிகள், விளம்பரம் செய்வோர்தம் எண்ணற்ற நிகழ்ச்சிகள், பட்டிமன்றம், உரையாடல் போன்ற பல நிகழ்ச்சிகள் மக்களைக் கவர்கின்றன.

வானொலியைப் போலவே தொலைக்காட்சியும் சில நாடுகளில் தனியாரிடமும், பல நாடுகளில் அர சாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளது. இதன் மூலம் உலகில் நடக்கக்கூடிய அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம் ஆகியவற்றின் பல நிகழ்ச்சி களை மக்கள் உடனே காணும் வாய்ப்புக் கிட்டு கிறது.

தொலைக்காட்சியின் மூலம் விளம்பரம் பெருகி யுள்ளது. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி யும், அதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானமும் பன்மடங்கு பெருகியுள்ளன. தொலைக்காட்சியில் கல்விக்கான நிகழ்ச்சிகள் உள்ளன. இதனால் மாண வர்கள் கல்வியறிவுபெறும் வாய்ப்பு மிகுகின்றது. இதற்கென்று முயற்சிகளையும் அரசு எடுத்துவரு கிறது.

தொலைக்காட்சியில் சில குறைபாடுகள், குறிப் பாக வளரும் நாடுகளில் உள்ளன. மற்ற மக்கள் தொடர்பு சாதனங்களைவிட இதன்விலை மிகவும் மிகுதி. அதனால், இது எல்லோரையும் சென்றடை வதில் தடையுள்ளது. அடுத்து, பல்வேறு மக்களின் தேவைகளுக்கேற்ப நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிக்க மேலும் பலவழிகள் (Channels) இல்லாதிருக் கிறது. இக்குறைகள் நீக்கப்படின் தொலைக்காட்சி எல்லாவித மக்களுக்கும் அவரவர்களுக்குத் தேவை யான செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் கொண்டு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

மக்கள் தொடர்பைப் பற்றிச் சுருக்கமாகக் கவனித்தால் ஒவ்வொன்றும் மக்களுக்குச் செய்தி களைப் புகட்டுவதில் முன்னணியில் உள்ளமை புல னாகும். இவ்வாறு பல சாதனங்கள் மூலமாகவும் தொடர்பு பெருகியுள்ளதால், இன்றைய மனிதன் இதற்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த மக்களை விட மிகுதியான விவரம் தெரிந்தவனாக, உலகறிவு உள்ளவனாக இருக்கின்றான். மக்கள் தொடர்பு சாதனம் ஒவ்வொன்றும் மற்றொன்றைச் சார்ந்துள் ளது. வானொலி வந்த புதிதில் செய்தித்தாள் பாதிக் கப்படும் என்னும் எண்ணம் இருந்தது; அதேபோல் தொலைக்காட்சி வந்த புதிதில் திரைப்பட வளர்ச்சி பாதிக்கப்படும் என்னும் நிலை இருந்தது. ஆனால், இன்று அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்களுமே ஒன்றை ஒன்று சார்ந்து நிலைத்து நின்று சிறப்பாகச் செயற்படும் வாய்ப்பில் உள்ளன. எஸ்.சொ.

**துணை நூல்கள்:**

Agee, Warren, K., Ault, Philip H. & Emery, Edwin, Introduction to Mass Communication, Harper & Row, New York, 1979.

Agee, Warren, K., (ed) Mass Media in a Free Society, Oxford & IBH Publishing Company, New Delhi, 1969.

Knmar, Keval J., Mass Communication in India, Jaico Publishing House, Bombay, 1981.

*மக்கள் முன்னணி* என்பது, இரண்டாம் உலகப் போருக்கு முற்பட்ட காலத்தில், மூன்றாம் பிரான்சுக் குடியரசின் அரசியலமைப்பு நடைமுறையி லிருந்தபோது, பிரான்சுப் பொதுவுடைமைக் கட்சியும், சமநிலைக் கட்சியும்,பல அரசியற் கட்சிகளும் ஒன்றாக இணைந்து, பிரான்சில் 'பாசிச' வல்லாட்சி (Fascist Dictatorship)தோன்றாதபடி தடுத்தற்கு ஏற்படுத்திய ஓர் இணைப்பு அல்லது கூட்டமைப்பு ஆகும். இத்தா லியிலும், செருமனியிலும், முறையே முசோலினியின் பாசிச வல்லாட்சியும் இட்லரின் 'நாசிச' வல்லாட்சி யும் (Nazist Dictatorship) தோன்றிய சூழ்நிலையில், பிரான்சிலும் அத்தகைய சூழ்நிலை உருவாகுமோ என்ற ஐயப்பாடு பிரான்சு அரசியல்வாதிகளிடையே தோன்றவே, பாசிச வல்லாட்சி எழுச்சியைத் தடுக்கும் பொருட்டு மக்கள் முன்னணி (Popular Front) தோன்றிற்று,

இத்தகைய கூட்டு ஒன்று ஏற்படுதல் நல்லதென்று 1935-இல் நடந்த அனைத்துலகப் பொதுவுடைமை மாநாட்டில் (Communist International) ஒரு கருத்து உருவாயிற்று.

பிரான்சில் மக்கள் முன்னணி, இலியோன் புளூம் (Leon Blum) என்பவருடைய தலைமையில் 1936 முதல் 1937 வரையிலும், 1938-இல் சில மாதங்களிலும் அரசாங்கத்தை அமைத்து நடத்திற்று. எனவே, பிரான் சில் பாசிசக் கொள்கை (Fascism) தோன்றாதவாறு தடுக்கப்பட்டது. இசுபெயின் (Spain) நாட்டில் மக் கள் முன்னணி அமைத்த அரசாங்கம் வெற்றியாகச் செயற்படவுமில்லை; அது நிலைத்திருக்கவுமில்லை. ஏனெனில் அந்நாட்டில் குடியரசுத் தலைவராக இருந்தவரே மக்கள் முன்னணித் தலைவர் ஆனார். அவர் 1936 – இல் மே மாதத்தில் ஓர் அரசாங்கத்தை அமைத்தார். அது மக்கள் முன்னணி அரசாங்கம் (Popular Front Government) என்று கூறப்பட்டது.

அது பெருமளவில் சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு விரும்பியது. ஆனால், அதில் சமநிலைக் கட்சியைச்சேர்ந்த உறுப்பினரோ, பொது வுடைமைக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரோ ஒரு வர்கூட இல்லை. ஆகையால்,அதனைப் படைத்தலை வர் பிராங்கோவின் தலைமையில், பாசிசக் கொள் கையர் எதிர்த்து அவ்வாட்சியை ஒழித்துத் தங்களு டைய ஆட்சியை நிறுவினர். இவ்வாறு மக்கள் முன் னணி அரசாங்கம் பிரான்சிலும், இசுபெயினிலும் ஒரு சில காலமே பதவியிலிருந்தது.

பிரான்சின் மக்கள் பொதுவாகத் தம் கருத்து களைப் பொதுநலனுக்காக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இன்றிக் கொள்கையொன்றையே பற்றி நிற்கும் இயல்பினராதலாலும், பிரான்சில் கடந்த 150 ஆண்டுகளாகக் குடியரசு, முடியாட்சி, குடியாட்சி முதலிய ஏறக்குறைய 11 வகை அரசியல மைப்புகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் செயற்படுத்தப்பட்டமையாலும், அங்குத் தோன்றிய பல அரசியற் கட்சிகளிடையே, ஒருமித்த கருத்து ஏற்படாமையாலும், எந்த அமைச்சரவையும் நிலைத்து நிற்க இயலாமற் போயிற்று. அதனால், அங்குப் பாசிசக் கொள்கைக்கு எதிராகத் தோன்றிய மக்கள் முன்னணி அரசாங்கம் வீழ்ந்தது. இசுபெயி னில் மக்கள் முன்னணி அரசாங்கத்தில் சமநிலைக் கட்சியாளர் ஒருவர்கூட இல்லாத காரணத்தாலும், பாசிசக் கொள்கையர் படைவலிமையோடு செயற் பட்டதனாலும், அங்கு மக்கள் முன்னணி அரசாங் கம் நிலைக்கவில்லை. பா.சு.

**துணை நூல்கள்:**

**Munro,W.B.**, The Governments of Europe, Macmillan, London, 1938.

**Pickles,D.**, The Fifth French Republic, Methuen, London, 1962.

**மக்களாட்சி**: ஒரு நாட்டில் வாழும் குடிமக்கள் தங்களைத் தாங்களே நேரடியாகவோ, தங்களால் அவ்வப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பேராளர்களின் வாயிலாகவோ, அதாவது மறைமுகமாகவோ,ஆண்டு கொள்ளக்கூடிய அரசாங்க அமைப்புக்கு மக்களாட்சி அல்லது குடியாட்சி (Democracy) என்று பெயர். பண்டைக்காலத்தில் கிரேக்க அரசியல் அறிஞர் அரிசுடாட்டில் மக்களாட்சியை ஒரு சிதைந்த வடிவ மாகும் என்று கருதியிருப்பினும், இக்காலத்தில் அவ் வாறு கருதப்படாமல், அது ஒவ்வொரு நாகரிகமுள்ள மனித சமூகத்தாலும் பின்பற்றக் கூடிய ஒன்றாகக் கருதப்படுகிறது.

**மக்களாட்சியின் வரலாறு**: இக்கால அரசு முறைக்கு ஏற்ற மறைமுக மக்களாட்சி முறை முதன் முதலில் இங்கிலாந்தில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் படிப்படியாக, அமைதியான முறையில் வளர்ந்தது. அதற்குப் பாராளுமன்ற மக்களாட்சி (Parliamentary Democracy) என்பது பெயர். இங்கிலாந்து நாடும் மற்ற நாடுகளைப் போலத் தொடக்கத்தில் மன்ன ராட்சியை ஏற்றிருந்தாலும், தன்னாட்சி உணர்வும், செயலுணர்வும் மிக்க ஆங்கில மக்கள் தங்களுடைய குடிமை உரிமைகளை மன்னராட்சி அழித்து விடாத படி காத்துக் கொள்ளுதலில் மிகவும் கவனமாயிருந் தார்கள். மன்னரின் கீழ் வலுவான, நாடு முழுவதற் கும் பொதுவான ஓர் அரசாங்கம் நார்மானிய அரசர் கள் காலத்தில் அமைக்கப்பட்டது. ஆயினும், அவர் களுக்குப் பின் வந்த அரசர்கள் ஆட்சி அதிகாரத்தைத் தவறாகக் கையாண்டு வல்லாட்சி ஆள முயன்ற போது, ஆங்கில மக்கள் மன்னர்களின் அப்போக்கைத் தடுத்தனர். மன்னரால் கி.பி. 1215 - இல் ஒப்புக் கொள்ளப்பட்ட மாபெரும் பட்டயமும்(Magna Carta) (இது மன்னர் நாட்டின் சட்டத்தை மதித்தும், மக்களுள் பேராளர்களின் ஒப்புதலைப் பெற்றும் ஆளுதல் வேண்டுமென்று கூறிற்று), கி.பி. 1265-இல் தோன்றிய ஆங்கிலப் பாராளுமன்றமும் (Parliament) மக்களின் விழிப்புணர்ச்சியைக் காட்டு வனவே ஆகும். மாபெரும் பட்டயத்தில் கூறப்பட்டது போல் மன்னர் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று வரிவிதிப்பு, வரிப்பொருளைச் செலவிடுதல், அமைச்சர்களை அமர்த்துதல், அயல்நாட்டு உறவுக் கொள்கைகளை வகுத்தல் முதலிய செயல்களைச் செய்யவும் வழக்கம் தோன்றிற்று.

பின்னர், கி.பி. 1714 - இல் தற்செயலாகத் தோன்றிய ஒரு வழக்கத்தின் வாயிலாகத் தலைமை அமைச்சரின் கட்டுப்பாட்டில் ஓர் அமைச்சரவை மன்னர் பெயரில் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாக இருந்து அரசாங்கத்தை நடத்துதல் என்ற வழக்கம் தோன்றிற்று. இதுவே இக்காலத்தில் காணப்படும் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சரவை முறை (Cabinet Excutive Responsible to the Legislature) ஆகும். அரசியல் கட்சிகள் தோன்றின. அவை பாராளுமன்றத் தேர்தல்களில் மக்களுடைய ஆதர வைப் பெற்று ஆட்சியை நடத்தின. அவை பொறுப் புத் தவறிப் பாராளுமன்றத்தின் நம்பிக்கையையும், ஆதரவையும் இழக்கும் போது பதவி நீங்க, மாற்றுக் கட்சி ஆட்சிக்கு வந்தது. இங்கிலாந்தில் கி.பி. 1832, 1867, கி.பி. 1884 - 85, 1911, 1918, 1928 - ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேய நாட்டுப் பாராளுமன்றத் தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் விளைவாக வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு, இங்கிலாந்தில் முழுவளர்ச்சி பெற்ற பாராளுமன்ற மக்களாட்சி தோன்றிற்று.

பிரான்சு நாட்டிலும், ஐக்கிய அமெரிக்க நாட்டிலும், அமைதியான முறையில்லாமல் வல்லந்தப் புரட்சிகளுக்குப் பின்னர்த்தான் மக்களாட்சி முறை தோன்றியது. பிரான்சில் ஏறக்குறைய ஆங்கில நாட்டை ஒத்த பாராளுமன்ற மக்களாட்சி முறை தோன்ற, ஐக்கிய அமெரிக்க நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே தலைமை நிருவாக அதிகாரியை உடைய குடியரசுத் தலைவரின் குடியாட்சி முறை (Presidential Democracy)தோன்றியுள்ளது. இருவகைகளிலும் மக்களால் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்குப் பொறுப்புள்ள ஆட்சியாளர்களே உள்ளனர். உலக வரலாற்றில் கி.பி. 1850 – ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏறக்குறைய எல்லா நாகரிக நாடுகளும் மக்களாட்சி அரசாங்க முறையை ஏற்றுக் கொண்டுள்ளன.

மக்களாட்சி, சுவிட்சர்லாந்து நாட்டில் 'நேரடி மக்களாட்சி முறையில்' என்னும் பெயரில் இயங்குவதைக் காணலாம். இது மக்களாட்சியில் மற்றொரு வகையாகும். அந்த நாட்டில், சட்டசபை மட்டுமன்றி, வாக்காளர்களும், சிற்சில சூழ்நிலைகளில் தாங்களே சட்டங்களை முன்மொழியும் உரிமை பெற்றுள்ளனர். மேலும், சட்டசபை இயற்றிய எந்தச் சட்டத்தையும், இறுதி முடிவுக்கு, மக்களுக்கே அனுப்ப வேண்டும் என்றுவேண்டும் உரிமையையும் அவர்கள் பெற்றுள்ளனர். இவ்விரண்டு முறைகளின் மூலம் சுவிட்சர்லாந்து நாட்டில் நேரடி மக்களாட்சி நிலவுகிறது.

**பேராளர் மக்களாட்சியின் கூறுகள்**: அவை 1.நாட்டில் வயதுவந்த குடிகள் யாவருக்கும் தேர்தல்களில் வாக்களிக்கவும், வேட்பாளராகக் கலந்து கொள்ளவும் சம உரிமைகள், 2. அவ்வப்போது தேர்தல்கள், 3. நிருவாக, நீதித்துறைப் பணிகளைச் செய்வதற்குத் தகுதி உடையோருக்கு அத்துறைப் பதவிகளைப் பெறுவதற்குச் சமமான உரிமை, 4. ஒவ்வொருவருக்கும் பொதுப் பணிகளைப் பற்றிய தம் கருத்துக்களைப் பேசுதற்கும், எழுதி வெளியிடுதற்கும், அவற்றுக்காகக் கூட்டங்களை அமைத்தற்கும் உரிமைகள் முதலியனவாகும். அவை இருந்தால்தான் அவர்களால் நாட்டின் அரசாங்கத்தில் பங்கு கொள்ளுதல் இயலும்.

**மக்களாட்சியின் நிறைகள்**: மக்களாட்சி வல்லாட்சியைப் போல விரைந்தும், திறமையாகவும் செயற்பட இயலாவிட்டாலும், மக்களாட்சிதான், அரிசுடாட்டில் சுட்டிக் காட்டிய 'சுதந்திர விருப்பம்' என்ற மனித இயல்பை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க வகை ஆகும். சான் இசுடுவர்ட்டு மில், மக்களாட்சி ஒன்றில்தான் ஒவ்வொருவரின் உரிமைகளும், நலன்களும் புறக்கணிக்கப்படாதவாறு பாதுகாப்பாக உள்ளனவென்றும், அவற்றுக்காக ஒவ்வொருவரும் எப்போதும் ஆயத்தமாக இருக்கின்றனரென்றும் கூறுகிறார். மற்ற ஆட்சி வகைகளில் அரசியலதிகாரம் வரம்பின்றியும், பொறுப்பில்லாமலும் கையாளப்படுதற்கு வாய்ப்புண்டு. ஆனால், மக்களாட்சி ஒன்றில் தான் மக்கள் நலன் என்ற ஒரே காரணத்துக்காகவே அதிகாரம் கையாளப்படுதல் வேண்டுமென்ற பொறுப்பு நிலை (Trust) இருப்பதாலும், எல்லா அரசாங்க முடிவுகளும் அமைதியான ஆய்வு, உரையாடல், முதலிய வழிகளில் எடுக்கப்படுவதாலும், இவ்வாட்சி முறை கருத்து வளர்ச்சியைத் தூண்டுகிறது. நடைமுறைக்கேற்ற சிந்தனையாளர் எவரும் மக்களாட்சியே மிகச் சிறந்த, குறிக்கோள் அரசாங்க முறை என்று கூற மாட்டாராயினும், நடைமுறையில் செயற்படக்கூடிய அரசாங்க வகைகளுள் மக்களாட்சியே மறுப்புக்கு உள்ளாகாத ஓர் அரசாங்கம் என்று கூறுவார். மக்களாட்சி வல்லந்தத்துக்கு முதல் இடம் கொடுக்காமல் மக்களுடைய சுதந்திரமான ஒப்புதலுக்கே முதலிடம் அளிக்கிறது. இதுவே இவ்வாட்சி முறையில் தனிச்சிறப்பு ஆகும். பா.சு.

**துணை நூல்கள்:**

Burns,C.D., Democracy, Its Defects and Advant – ages, Allen & Unwin, London, 1929.

Lindsay, A.D., The Essentials of Democracy, Oxford Press, London, 1935.

Mill, J.S., Representative Government, Oxford Press, London, 1912.

**மக்களாட்சிச் சமநிலைக் கொள்கை**: மக்களாட்சிச் சமநிலைக் கொள்கை அமைதியான வழிகளின்மூலம் நாட்டின் பொருளாதாரத்தை முதலாளித்துவத்திலிருந்து (Capitalism) மாற்றிச் சமத்துவத்தை ஏற்படுத்துவதாகும். ஒரு மக்களாட்சி நாட்டின் மக்கள் தங்கள் அரசின் வாயிலாக உற்பத்தித் துறைகளைக் கைப்பற்றி, அதன் வாயிலாக நாட்டில் பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்துவதே இத்தத்துவத்தின் அடிப்படையாகும். மக்களாட்சி வழியைப் பின்பற்றும் ஒரு நாட்டில்தான் இம்முறை செயற்பட இயலும். எந்த ஒரு முதலாளித்துவ நாட்டிலும் செல்வம் ஒருசிலரின் கைகளிலேயே குவிந்துள்ளது. அதனால், வறுமையில் வாடுபவர்களே நாட்டில் பெரும்பான்மையினராக உள்ளனர். ஆனால், ஒரு மக்களாட்சி நாட்டில் இந்நிலை நீண்ட காலம் நீடிக்க இயலாது. ஏனெனில், ஏழ்மையில் உழலும் பெரும்பான்மை மக்கள்,அரசைத் தேர்தல்களின் வாயிலாகக் கைப்பற்றி, அதனால் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்திப் பொதுவுடைமைச் சீர்திருத்தங்கள் வாயிலாகவும், சமூக நலத்திட்டங்கள் வாயிலாகவும்,

செல்வத்தை நாட்டு மக்களிடையே சமமாகப் பங்கிட்டு மக்களாட்சி முறைக்கு வழி செய்கிறார்கள். ஆகவே, மக்களாட்சியும், முதலாளித்துவமும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவையாகும்.


மக்களாட்சிச்சமநிலைக் கொள்கை வழியாக ஏற்படும் சீர்திருத்தங்களும், சமுதாய மாற்றங்களும் ஒரே நாளில் ஏற்பட்டு விடுவதில்லை. அவை அமைதியான வழிகளால் படிப்படியாக ஏற்படும் திருத்தங்கள். ஆதலால் அதற்கு மிகுதியான காலம் தேவைப்படுகின்றது. புரட்சிகரமான சமநிலைக் கொள்கையில் ஒரு சிறுபான்மைக் குழுவே ஆயுதப் புரட்சியின் மூலம் அரசைக் கைப்பற்றித் தன் முனைப்பதிகார (Dictatorship) முறைகளின் மூலம் மாற்றங்களைப் பெரும்பான்மை மக்களின் மீது திணிக்கின்றது. ஆனால், மக்களாட்சிச்சமநிலைக் கொள்கையில், பெரும்பான்மை மக்களே தங்கள் ஈடுபாட்டின் மூலம் சட்ட முறைகளில் அம்மாற்றங்களைக் கொண்டு வருகின்றனர். மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையில் பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கொண்டுவரும் பொருட்டு நாட்டின் பொருளாதாரத்தைப் பல வழிகளில் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், அத்தகைய கட்டுப்பாடுகள் நாட்டின் மக்களாட்சிக்கோ, மக்களின் உரிமைகளுக்கோ எவ்விதத்திலும் ஊறு விளைவிக்காமல் இருத்தல் வேண்டும்.

மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையின் முக்கிய குறிக்கோள் சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்து, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்குச் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்துவதாகும். அதிலும், குறிப்பாக ஏழ்மை, வேலையின்மை ஆகியவற்றை ஒழிக்கச் சமுதாய நலப்பணிகளை மேற்கொள்ளுதல் முதன்மையான குறிக்கோளாகும். மேலும், சமயம், இனம், மரபுவழி போன்றவற்றின் மூலம் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல், எல்லோருக்கும் கல்வி வழங்குதல் ஆகியவையும் மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையின் குறிக்கோள்களாகும்.

பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துபவரே அரசையும் கட்டுப்படுத்துகின்றார் என்பது மார்க்சியக் கோட்பாடு. ஆதலால், ஆயுதப் புரட்சியின் மூலம் அரசை வீழ்த்துவதே பொதுவுடைமை ஏற்படுவதற்கு ஒரேவழி என்று மார்க்சியக் கொள்கையர் நம்புகின்றனர். அதற்கு மாறாக, மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையாளர் மக்களாட்சி முறையின் வாயிலாக மக்கள் அரசைக் கைப்பற்றி, அரசின் மூலம் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்த முடியும் என நம்புகின்றனர். மேலும், அவர்கள் வருக்கப் போர்க் (Class Struggle) கொள்கையையும், தனி உடைமைகள் முழுவதுமாக மறுக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்வதில்லை. இரும்பு-நிலக்கரி, பிறகனிமங்கள், வேதிப்பொருள், மின்சாரம், மின்னணு (Electronics) போன்ற முக்கியமான தொழில்துறைகள், வங்கிகள், தொடர்வண்டி, வானஊர்தி முதலிய போக்குவரத்துத் துறைகள் ஆகியவையே தேசியமயமாக்கப்படுகின்றன. தனியார் நிறுவனங்களும் பல துறைகளில் அனுமதிக்கப்படுகின்றன.

இந்திய நாடும் மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையையே பின்பற்றுகின்றது. இந்திய அரசியல் சட்டமும், 'இந்தியா ஒரு மக்களாட்சிச் சமவுடைமைக் கொள்கை நாடு' என்று முகவுரையிலேயே (Preamble) அறிவிக்கின்றது. எஸ்.சுத.

**மக்கன்சி, சர் அலெக்சாந்தர்** இசுகாட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓர் ஆய்வுப் பயணி. இவர் இசுடோர்நோவே (Stornoway) என்னும் நகரில் கி.பி. 1764 - இல் பிறந்தார். இளமையிலேயே இவர் வட அமெரிக்காவுக்குச் சென்று மென்மயிர்த் தோல் (Fur) வாணிகத்தில் ஈடுபட்டிருந்தார். அதபாசுக்கா (Athabasca) ஏரியைச் சுற்றியுள்ள இடங்களுக்கு கி.பி. 1788 - இல் வாணிகத் தொடர்பாகச் சென்ற இவருக்கு அங்குள்ள நிலவழி, நீர்வழி ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டுமென்ற ஆர்வம் மிகுந்தது. மக்கன்சி, அலெக்சாந்தர் (Mackenzie, Alexander) சிப்பிவைன் கோட்டையிலிருந்து (Fort Chipewyan) புறப்பட்டு, பெரிய அடிமை ஏரியில் (Great Slave Lake) கலக்கும் ஓர் ஆற்றின் வழியாக ஆர்ட்டிக்கு மாக்கடலை அடைந்து, பின்னர்த் தம் இருப்பிடம் திரும்பினார். இவர் சென்ற ஆற்றுக்கு இவர் பெயரான மெக்கன்சி என்னும் பெயர்



சர் அலெக்சாந்தர் மக்கன்சி

பின்னர் ஏற்பட்டது. மீண்டும், கி.பி. 1793-இல் இராக்கி மலைத் தொடரைக் கடந்து மென்சீசு முனைக்கு (Cape Menzies) அருகில் பசிபிக்கு மாக் கடலை அடைந்தார். மெக்சிகோவுக்கு வடக் குப்புறத்தில் நிலவழியாகப் பசிபிக்குக் கடலில் பயணம் செய்த முதல் ஆய்வுப் பயணி இவரே. இவருடைய பயண அனுபவ நூல் கி.பி. 1801 – இல் வெளியிடப்பட்டது. அதன் தலைப்புப் பெயர், 'மாண்டிரியாலிலிருந்து வடஅமெரிக்காவில் பனி உறைந்த ஆர்ட்டிக்கு மாக்கடலிலும் பசிபிக்கு மாக் கடலிலும் கி.பி. 1789, 1793 ஆண்டுகளில் செய்த பயணங்கள்' (Voyages from Montreal Through the Continent of North America to the Frozen Arctic and Pacific Oceans in 1789 and 1793) என்பது. இவருடைய சாதனைகளுக்காக இவருக்கு கி.பி. 1802-இல் வீரத்திருத்தகைப் பட்டம் (Knighthood) வழங்கப் பட்டது. இவர் கி.பி. 1805-இல் கனடா நாட்டுச் சட்ட மன்றத்துக்கு ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார். தமது வாணிகத்தொழில் மூலமும் இவருக்கு வருவாய் கிடைத்தது. தமது தாய் நாடான இசு காட்லாந்துக்கு கி.பி. 1808-இல் திரும்பிய மக் கன்சி, கி.பி. 1820-இல் உயிர்நீத்தார். தெ.பா.

**துணை நூல்கள்:**

Wade, Mark, S., Mackenzie of Canada, Edinburgh, U.K., 1927.

Woolf Cott, Arthur, P., Mackenzie and His Voyageurs, London, 1927.

*மக்காசர்*: இது இந்தோனேசியாவில் உள்ள தெற்குச் சூலவெசுட்டு (South Sulawest) மாநிலத் தின் தலைநகர். மக்காசர் (Makasar) செலிபீசுத் தீவு களுக்குத் தென் மேற்கில் உள்ள ஒரு முக்கிய துறை முகம். இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களுள் காப்பிக்கொட்டை, நறுமணப் பொருட்கள், கொப் பறை, இரப்பர், தேக்குமரம், பிரம்பு, மரப்பிசின், சந்தனமரம், கோந்து முதலியன குறிப்பிடத்தக் கவை. பல வாணிக வழிகள் கூடும் சிறந்த வாணிக மையமாக இது விளங்குகிறது. உந்து வண்டிகளுக் குரிய கருவிகள், காகிதம், 'சிமெண்டு' முதலியன இங்குச் செய்யப்படுகின்றன. மீன்பிடிக்கும் தொழி லும் நடைபெறுகிறது. போர்ச்சுகீசியர், கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் இப்பகுதிக்குச் சென்ற பொழுதே இந்நகர் நறுமணப் பொருட்கள் காரண மாகச் சிறப்புப் பெற்றிருந்தது. கள்ளக்கடத்தல் தொழிலும் இங்கு நடைபெற்றது. போர்ச்சுகீசியரை யும் உள்நாட்டுச் சுல்தானையும் தோற்கடித்துவிட்டு, கி.பி. 1667 – இல் தச்சுக்காரர் (Dutch) தமது ஆதிக் கத்தை நிறுவினர். மக்காசர் நகரம் கி.பி. 1848-இல் சுங்கவரி தவிர்த்த ஒரு துறைமுகமாகியது.

**மக்காசர் கடற்கால்,** இந்தோனேசியாவில் போர் னியோத் தீவுக்கும் செலீபிசுத் தீவுக்கும் இடையில் உள்ளது. இது சாவாக் (Java) கடலைச் செலீபிசுக் கடலுடன் இணைக்கிறது. இதன் அகலம் சராசரி ஏறத்தாழ 248 கி.மீ., நீளம் 720 கி.மீ. இதன் வட கோடி 104 கி.மீ. அளவுக்குக் குறுகியுள்ளது. இப்பகுதி யில் இலெயெட்டுத்தீவும் (Laoet) பாலாபாலாகான் (Balabalagan) தீவும் உள்ளன. தெ.பா.

*மக்கார்த்தி, சோசபு*: ஐசனோவர் அமெரிக் கக் குடியரசுத் தலைவராக இருந்தபோது ஆளவை மன்ற அரசுச் செயற்பாட்டுக் குழுவின் (Senate Committee on Government operation) தலைவராகச் சோசபு மக்கார்த்தி (Mecarthy Joseph) நியமிக்கப்பட்டார். அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் சோவியத்து உருசி யாவுக்கும் பனிப்போர் (Cold War) தீவிரமாக நடந்த நேரம். அமெரிக்காவில் அரசுத் துறைகளில் குறிப்பாகப் படை, வெளிவிவகாரத்துறைகளில் பொது வுடைமைவாதிகளின் ஊடுருவல் பற்றிப் பேச்சு நடந்து வந்தது.

மக்கார்த்தி 1953-1954-இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளி விவகாரத்துறையிலும் தற்காப்புத் துறையிலும் நடந்தனவாகக் கூறப்படும் சதித்திட்டங் களை விசாரிக்கும் குழுவிற்குத் தலைவராக்கப்பட் டார், ஒன்றும் அறியாத மக்கள் பலரையும் அலுவலர் களையும் பொதுவுடைமைவாதிகள் எனக் குறை கூறி னார். அவர்கள் செயலுக்குச் சாட்சியாக முன்னாள் பொதுவுடைமையாளரை (Ex-Communists) மக் கார்த்தி ஆளவை மன்றத்தின் முன் நிறுத்தினார். விசாரணைகளையும் எவ்வளவு பரபரப்பாக்க முடி யுமோ அவ்வளவு பரபரப்பாக்கினார். மக்கார்த்தி, 'பொதுவுடைமைவாதிகள் பொது மக்கள் பணத்தில் வெளிவிவகாரத் துறை, அறிவியல் ஆராய்ச்சித்துறை இராணுவத்துறை ஆகியவற்றில் இருந்துகொண்டு அமெரிக்காவைக் காட்டிக் கொடுக்கிறார்கள்' என்ற குற்றச்சாட்டை மீண்டும் மீண்டும் பரப்பினார். மக்கார்த்தியின் விசாரணைகள் தொலைக்காட்சியில் காட்டப்பட்டன.

அரசாங்கமோ ஆளவை மன்ற உறுப்பினர்களோ மக்கார்த்தியின் வளர்ச்சியைச் சிறிதும் தடைசெய்ய முடியவில்லை. மக்கார்த்தியின் உதவியாளர்கள் இராய்கோனும், தேவிடு இசுகீனும் உலகெங்கும் பய ணம் செய்து அமெரிக்கத் தூதரகங்களில் உள்ள நூல கங்களில் பொதுவுடைமைச்சார்புப்புத்தகங்கள் என்று ஏராளமான நூல்களை நீக்கினார்கள். அமெரிக்க இராணுவத் தலைமைத் தளபதிகளும் பொது



மக்கார்த்தி, சோசபு

வுடைமைவாதிகளே என மக்கார்த்தி குறை கூறிய போது மக்கள் மக்கார்த்தியின் நோக்கங்களை ஐயுற்றனர். தம் அரசியல் எதிரிகளைப் பொது வுடைமையாளர் என்று பழிவாங்குகிறார் என்றும் அவரது செயலுக்கு உள்நோக்கம் இருக்கிறது என்றும் மக்கள் நினைத்தனர்.

மக்கார்த்தியின் உதவியாளரான தேவிட்டு இசுகினின் நியூயார்க்கு இரவுவிடுதி நடவடிக்கைகள் விளம்பரமானவுடன் அமெரிக்கா மக்கார்த்தி மாயையிலிருந்து விடுதலை அடைந்தது. இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் மக்கார்த்தியின் அகந்தையையும், ஆணவத்தையும் புரிந்து கொண்டனர். ஆளவை மன்றத்தில் வெர்மாண்ட்டு மாநிலத்தைச் சேர்ந்த மன்ற உறுப்பினர் இரால். பு. ஈ. பிளாண்டர்சு மக்கார்த்தியின் செயல்களைக் கடுமையாக எதிர்த்தார். மக்கார்த்தியின் நடவடிக்கைகளை விசாரிப்பதற்கு ஊட்டா மாநில (Utah) ஆளவை மன்ற உறுப்பினர் ஆர்தர். வி. இவாட்கின்சு தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழு மக்கார்த்தியைக் கடுமையாகக் கண்டனம் செய்தது.ஆளவை மன்ற உறுப்பினர்களுள் 67 பேர் மக்கார்த்திக்கு எதிராகவும் 22 பேர் ஆதரவாகவும் வாக்களித்தனர். விரைவில் மக்கார்த்தி அரசியல் வானிலிருந்து மறைந்தார். இவர் 1956-இல் காலமானார். மக்கார்த்தி மறைந்தாலும் மக்கார்த்தி எழுப்பிய வினா இன்னும் அமெரிக்காவில் விவாதிக்கப்படுகிறது.குடிஉரிமைகளைப் பாதிக்காமல் பொதுவுடைமைச் சார்பாளர்களை எப்படி அடக்குவது என்பதே அந்த வினா. மக்கார்த்தியின் செயலால் 3614 ஆட்கள் நாட்டிற்கு இடர்விளைப்பவர் எனக்கருதப்பட்டு வேலை இழந்தனர். அவர்களுள் ஒருவர் கூட உண்மையில் பொதுவுடைமைவாதி அல்லர் என்பது மக்களாட்சிக் கட்சியினரின் (Democratic Party) வாதமாகும்.

மக்கார்த்தியின் நடவடிக்கைகளால் வேண்டாதவர்களைப் பொதுவுடைமைவாதிகள் எனப் பழி வாங்கும் போக்கிற்கு 'மக்கார்த்தியம்'(Mecarthyism) என்ற சொல் ஆங்கில அகராதியில் ஏற்பட்டுவிட்டது.
அ.வெ.பெ.

**மக்காரா சர் சார்லசு ரைட் (கி.பி. 1845-1929):** இவர் ஓர் ஆங்கிலேய வாணிகச் செல்வர். இவர் 1911-ஆம் ஆண்டில் 'சர்' என்னும் பட்டம் அரசினால் அளிக்கப்பட்டுப் பெருமைப்படுத்தப்பட்டார். இசுகாட்லாந்து பகுதியில் பிறந்த இவர் எடின்பரோ நகரில் உயர்கல்வி பயின்றார். இவர் பருத்தி வாணிகத்தில் பெரும் செல்வம் ஈட்டினார்; மான்செசுட்டர் பகுதிப் பருத்தி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவராய் முப்பத்துநான்கு ஆண்டுகள் (கி.பி. 1892 லிருந்து) இருந்தார். நீண்டநாள் நடைபெற்று வந்த பருத்தித் தொழிலாளர் வேலைநிறுத்தத்தை முடித்து வைத்துப் புரூக்லாந்து ஒப்பந்தம் ஏற்படுவதற்கு இவர் பணியும் ஒரு காரணமாயிற்று. பருத்தித் தொழில் தொடர்பான பல்வேறு சங்கங்களில் தலைவர் பதவியில் பணியாற்றியுள்ளார். இங்கிலாந்து அரசு 1911-இல் நிறுவிய தொழில் ஆலோசனை அவை உருவாவதற்கு இவர்தம் முயற்சிகளே காரணம். அவ்வவையின் செயல்களில் இவர் மிகுதியாகப் பங்கு ஏற்றார். 'தொழிலாளர்க்கு வேலையளிப்போரின் பாராளு மன்றச் சங்கம்' என்ற அமைப்பிற்கு 1912 முதல் 1916 வரை தலைவராக இருந்தார். இவர் 1922-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் அரசு நிறுவிய பண்டைக்காலப் பருத்தி நெருக்கடிக்குழுவின் தலைவரானார். பருத்தி வாணிகத்தில் அப்போது ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அக்குழு நிறுவப்பட்டது. மக்காரா 1929-ஆம் ஆண்டு இறந்தார்.

இவர் சமுதாய,தொழில் துறைத் தொடர்பான பல நூல்களையும் எழுதியுள்ளார். 'சமுதாய,தொழில் துறைச் சீர்திருத்தம்' (1918), 'நினைவுகள்' (1921), 'உலகத்தை வேலை செய்ய வைத்தல்'(1922), 'வணிக உறுதித் தன்மையும், அதனை அடையும் வழியும்' (1925), 'இக்காலத் தொழில்துறைப் போக்குகள்' (1926) என்பன இவருடைய நூல்களுள் குறிப்பிடத் தக்கவை ஆகும்.
பி.வி.

**மக்டனால்டு, சேம்சு இராம்சே:** இவர் இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினராகவும், தொழிலாளர் கட்சியின் தலைவராகவும், நாட்டின் தலைமை அமைச்சராகவும் சிறப்புப் பெற்றவராவார்.

இங்கிலாந்தில் 1900 – ஆம் ஆண்டு தொழிற்கட்சி உருவாக்கப்பட்டது. அதன் தொடக்ககாலத் தலைவர்களுள் சிறந்து விளங்கிய பெருமை இசுகாட்லாந்து இளைஞரான இவருக்கு உண்டு. தொழிற்கட்சியின் முக்கிய நோக்கம் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க உழைப்பதாகும்.

சேம்சு இராம்சே மக்டனால்டு (Macdonald, James, Ramsay) தலைமையில் 1924 – ஆம் ஆண்டு சனவரி மாதம் தொழிற்கட்சி அமைச்சரவை முதன் முதலாக ஏற்பட்டது. ஆனால், அதற்குப் பொதுமக்கள் அவையின் பெரும்பான்மை ஆதரவில்லாததால் தாராளவாதக் கட்சியின் (Liberal) ஆதரவை நம்பியே அது வாழவேண்டியதாயிருந்தது. சில மாதங்கள் வரை அத்தகைய ஆதரவை அக் கட்சியினர் வழங்கினர். மக்டனால்டு ஆட்சியின்போது சோவியத்து உருசியாவை இங்கிலாந்து அங்கீகரித்தது. எனவே தாராளவாதியினர் மக்டனால்டின் உருசியக் கொள்கையை ஐயுற்றுத் தங்கள் ஆதரவை நிறுத்தி விட்டனர். எனவே, 1924-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இராம்சே மக்டனால்டின் தொழிற்கட்சி அமைச்சரவை வீழ்ச்சியுற்றது.

தொழிற்கட்சி 1929 பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று அரசாங்கத்தைக் கைப்பற்றியது. எனினும், தாராளவாதக் கட்சியின் ஆதரவின்றி இயங்க முடியாத நிலையிலே அது இருந்தது. இவர் 1929 முதல் 1931 வரை இரண்டாம் முறையாகப் பிரதமரானார். ஆனால், இவர் அமைச்சரவை, பொருளாதார நெருக்கடி காரணமாகப் பதவி விலக நேரிட்டது. தொடர்ந்து அமைக்கப்பட்ட தேசிய அரசுக்கு இவர் தலைமை தாங்க ஒப்புதலளித்தார். இவர் காலத்தில் பன்னாட்டு அளவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைச் சமாளிக்க விரைவு நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன. இங்கிலாந்து தங்கப் பாதுகாப்பையும் (Gold Standard), சுதந்திர வணிகத்தையும் கைவிட்டது. அது தொடர்பாக 1932-இல் ஒட்டாவாவில் ஒரு பொருளாதார மாநாடு கூட்டப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றப் பல அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



மக்டனால்டு சேம்சு இராம்சே

இந்தியர்களை உயர் பதவியில் நியமிக்கத் தேர்வு நடத்தும் முறையை வலியுறுத்திய உயர்நிலைக் குழுவின் உறுப்பினராக இவர் 1912-இல் சேவை செய்துள்ளார். இந்திய இந்து, இசுலாம் தலைவர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இசுலாமியர்களுக்குச் சில சலுகைகளை அளித்த இவர், புகழ்மிக்க வகுப்புவாதத் தொகுதிகள் ஏற்பட ஆதரவளித்தார்.

எல்லாத் தன்னாட்சிப் பகுதிகளுக்கும் முழுமையான சம நிலைமையை 1931–இல் இயற்றப்பட்ட வெசுட்டு மினிசுடர் சட்டங்கள் வழங்கின.

சேம்சு இராம்சே மக்டனால்டு 1935-இல் நடந்த பொதுத் தேர்தலில் மக்களின் நம்பிக்கையை இழக்கவே பழமைப்பற்றுக் கட்சி ஆட்சிக்கு வந்தது.

இந்தியாவில் நிலவிய பஞ்சம் பற்றிய இவர் கருத்துகள் பல அரிய உண்மைகளைப் புலப்படுத்துகின்றன. 'உணவுத்தானியங்கள் இல்லையென்பதால் பஞ்சம் ஏற்படவில்லை. மாறாக வேலையில்லாத் திண்டாட்டமும், விலை உயர்வும் குறைந்த ஊதியமும், மூலதனப் பற்றாக்குறையுமே அதைத் தோற்றுவித்தன்';'வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட பஞ்சம், உணவு பொருட்கள் இருந்தும் ஏற்பட்ட பஞ்ச நிலையிலிருந்து வேறுபட்டதாகும்'. வில்லியம் அண்டரையும், சார்லசு எலியட்டையும் மேற்கோள் காட்டிக்கூறும் இவர் 1909–இல் நிலவிய இந்தியாவின் பஞ்சநிலையை ஓர் எண்ணமன்று; மாறாக ஓர் உண்மைதான் என்பதை ஒத்துக் கொண்டுள்ளார். ஈ.ஜா.

**மக்டனால் மலைத்தொடர்**: இம்மலைத்தொடர் ஆசுத்திரேலியக் கண்டத்தில் உள்ள ஒரு சிறு மலைத்தொடர் ஆகும். அது அந்நாட்டின் வடபிரதேச (Northern Territories) மாகாணத்தின் தென்பகுதியில் உள்ளது; மகரரேகை என்னும் 23.5 பாகை தென்அட்சரேகையை ஒட்டி அமைந்துள்ளது. இதுஆலிசு ஊற்று (Alice Springs) என்னும் நகருக்கு மேற்கிலும் கிழக்கிலும் ஏறத்தாழ 160 கி.மீ. நீளத்திற்குப் பரவியுள்ள ஒரு மலைத்தொடர். 'குவார்ட்சு' (Quartz) எனப்படும் பாறைக் கற்களும், மணற்பாறைகளும் கலந்து உருவானது. கடல் மட்

டத்திலிருந்து சராசரியாக 600 மீட்டர் உயரமுள்ள மேட்டு நிலங்களில் இம்மலைத்தொடர் அமைந்திருக்கின்றது. சீல் முடி என்பது இம்மலைத்தொடரின் மிக உயர்ந்த சிகரம். இம்மலைத் தொடரில் அதிகமாகச் செடி, மரம் போன்ற தாவரங்கள் காணப்படுவது இல்லை. பிங்கு, இடாட்டு என்ற இரு ஆறுகளும் சிற்சில நீரோடைகளும் இம்மலைத்தொடரில் தோன்றுகின்றன. இவ்வாறுகளும் ஓடைகளும் மலைத் தொடரை ஊடறுத்துப் பாயும்போது காண்போரை வியப்பில் ஆழ்த்தும் எழில் நிறைந்த செங்குத்தான பள்ளத்தாக்குகள் உண்டாகியுள்ளன. இம்மலைத் தொடர் வறண்ட பாறைகளால் ஆனது. எனினும், இப்பள்ளத்தாக்குகளில் மிக நெருக்கமாக வளர்ந்துள்ள பல் வகைத் தாவரங்களைக் காணலாம். பொதுவாக வடதிசை மாகாணம் வறண்ட பகுதி தான் எனினும், அப்பகுதியில் அதிக நீர்வளம் உள்ள பகுதி மக்டனால் மலைத்தொடர்ப் (Macdonall Range) பகுதியே.

மக்டுவால் இசுடுவர்ட்டு என்ற புவியியல் கண்டு பிடிப்பாளர் கி.பி. 1860-ஆம் ஆண்டு இம்மலைத் தொடரைக் கண்டு பிடித்து உலகுக்கு அறிவித்தார். அவர் கி.பி. 1855 முதல் 1862-ஆம் ஆண்டுவரை தென் ஆசுத்திரேலியாவின் ஆளுநராய் இருந்த சர் இரிச்சர்டு மக்டனால் என்பாரின் பெயரை இம்மலைத் தொடருக்கு இட்டார். பி.வி.

**மக்டுகல், வில்லியம் (கி.பி. 1871-1938)** ஆங்கிலேய உளவியல் அறிஞர். இங்கிலாந்தில் இலங்காசயர் என்னுமிடத்தில் கி.பி. 1871-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம் 17-ஆம் வயதில் மான்செசுடர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் அன்றைய மருத்துவப் படிப்பாக விளங்கிய உடலியலைக் (Physiology) கற்றார். எனினும், இவர் உடலியல் வல்லுநராகப் பணிபுரிய விரும்பவில்லை. இருப்பினும், சிறிது காலம் உடலியல் ஆராய்ச்சி செய்தார். அதன் பின் மீண்டும் கேம்பிரிட்சுக்கு வந்தார்.

கேம்பிரிட்சுக்கு வந்தவுடனேயே தாரசு நீர்ச்சந்தி (Torres Strait) என்னுமிடத்திற்குச் சென்ற ஆய்வுப் பயணக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அப்போது கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த இரிவர்சு (W.H.R.Rivers) மக்டுகலை உளவியல் முறையில் உற்று நோக்கி (Psychological Observation) ஆராயுமாறு கேட்டுக்கொண்டார். அதனால் மக்டுகலுக்கு மானிடவியலிலும் ஆர்வம் ஏற்பட்டது. தார்வினின் கோட்பாடுகளே நாளடைவில் மக்டுகலின் சிந்தனைக்குக் கருவூலமாகத் திகழ்ந்தன.

தாரசு நீர்ச்சந்தி ஆய்வுப் பயணத்தில் பங்கேற்ற தாவரவியலறிஞர்களும் விலங்கியலறிஞர்களும் எவ்வாறு உயிரினங்களும் தாவர இனங்களும் சுற்றுச்சூழலுடன் தகவமைந்து காணப்படுகின்றன என்பதையும் அவற்றிற்கிடையே தொடர்புகள் எவ்வாறு உள்ளன என்பதையும் கண்டு பிடித்துக் கூறினார்களோ, அவ்வாறே உளவியலிலும் மக்களின் நடத்தைமுறைகளை விளக்கச் செயற்பாட்டுக் கோட்பாடு (Functionalism) உண்டு என்றும் நம்பினர்.

கேம்பிரிட்சுக்குத் திரும்பி வந்த பின் மக்டுகல் அவர் காலத்தில் வாழ்ந்த செருமன், பிரிட்டிசு நாட்டுத் தத்துவ உளவியலறிஞர்களை மாதிரியாகக் கொண்டு அவருடைய எண்ணங்களை வெளிப்படுத்தத் தொடங்கினார். ஊண்டு (Wundt) கருத்தை விட உலோட்சின் (Lotze) கருத்துகளே மக்டுகலை மிகவும் கவர்ந்தன. பின்னர்க் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் ஒழுக்க நெறித்தத்துவத் (Moral Philosophy) துறையின் தலைவராக இருந்த சேம்சு வார்டு (James Ward) என்பவரின் அறிவுரைப்படி காட்டிங்கன் (Gottingen) சென்று அங்கு முல்லர் (George E. Muller) என்பவரிடம் மாணவராகச் சேர்ந்துபடித்தார். அந்தச் சமயத்தில்தான் புகழ் மிக்க கேரிங்கு (Hering), கேம்கோட்ல்சு (Helmholtz) போன்றவர்களின் கோட்பாடுகளை மறுத்துப் புதிய கோட்பாடுகளைக் கூறினார். இருப்பினும், மக்டுகல் தம் கோட்பாடுகளை வேறு வகையில் கூறியிருந்தால் அவை இப்போதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும்.

மக்டுகல், ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்தில் 1904 - இல் மனவியல் தத்துவம் (Mental Philosophy) பயிற்றுவிக்கும் பொறுப்பேற்றார். இவர் 1905-ஆம் ஆண்டு உடலியல் உளவியல் (Physiological Psychology) என்ற நூலை எழுதினார். ஆனால், அதற்குப் பின் எழுதப்பட்ட நூல்களால் அந்நூல் பயனற்றதாகி விட்டது. எனினும், அந்நூலில் மக்டுகலின் தொடக்கக் கால அறிவுத்திறனைக் காணலாம்.

மக்டுகல் 1908-ஆம் ஆண்டு 'சமூக உளவியலுக்கு ஓர் அறிமுகம்' (An Introduction to Social Psychology) என்ற நூலை எழுதி அதன் மூலம், அவருக்குப் பெயர் சேர்த்த இயல்பூக்கக் கோட்பாட்டைக் (Instinct Theory) கூறினார். அந்நூல் 30 பதிப்புகளுக்கு மேல் வெளியிடப்பட்டது. இவர் 1912-ஆம் ஆண்டு பேரரசுச் சமூகத்தில் உறுப்பினராகத் (Fellow of the Royal Society) தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்தகைய உயர்ந்த பதவியைப் பெற்ற சில உளவியல் அறிஞர்களுள் இவரும் ஒருவராவார்.

முதலாம்உலகப் போர் மக்டூகலின் அணுகுமுறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. வெறும் ஆராய்ச்சியிலும் ஊக்கங்களிலும் காலத்தை வீணாக்காமல் அவற்றை நடைமுறையில் பயன்படுத்த வேண்டுமெனக் கூறினார். முதல் உலகப் போரினால் மனநிலை பாதிக்கப்பட்ட போர் வீரர்களுக்கு மருத்துவம் செய்வதற்கு இவர் கையாண்ட முறை வெகுவாகப் பாராட்டப்பட்டது. அதன்பின்னர் 1920-ஆம் ஆண்டு 'குழு உள்ளம்' (The Group Mind) என்ற நூலை எழுதினார். அவரது நிலையற்ற தன்மையினால் ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்திலிருந்து ஆர்வர்டுப்பல்கலைக் கழகத்திற்கு மாறினார். ஆர்வர்டில் இருந்தபோது 'உளவியலின் சுருக்கம்' (Outline of Abnormal Psychology) என்ற நூலையும் எழுதினார்.

சில ஆண்டுகளுக்குப் பின் ஆர்வர்டில் நிலவிய சிற்சில தொந்தரவுகளினால் அங்கிருந்து வடக்குக் கரோலினாவில் (North Carolina) உள்ள தியூக்குப் (Duke) பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அப்பல்கலைக்கழகம் அப்போதுதான் புதிதாகத் தொடங்கப்பட்டிருந்ததால் அந்த இடம் மக்டூகலுக்குத் தேவையான உற்சாகத்தையும்,தனிமையையும்,சுதந்திரத்தையும், பண வசதியையும் கொடுத்தது. அவருக்குக் கிடைத்த அமைதியான சூழ்நிலையை நன்கு பயன்படுத்தி ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டார். அவருடைய பொறுமையின்மையினாலும் தேவையில்லாத இடங்களில் வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டமையாலும் வாழ்க்கையில் தாம் தோல்வியடைந்தவராகவே எண்ணியிருந்தார். ஆனால், உளவியலில் இவருக்கு ஏற்பட்ட புகழ் அளவிட முடியாததாகும். இவர், 1939-ஆம் ஆண்டு வடக்குக் கரோலினாவிலுள்ள தர்காமில்(Durham) காலமானார். கோ.இரா.

**மக்மாகன்கோடு:** இந்தியாவின் வடகிழக்குக் குப் பகுதியில், சீனநாட்டிற்கும் இந்தியாவுக்கும் எல்லையை வரையறுக்கும் கோடே 'மக்மாகன் கோடு' (Macmahan Line) எனப்படும். ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்டு வந்த காலத்தில் அசாம் மாநிலத்தின் ஒரு பகுதியான வடகிழக்கு எல்லைப்புறப் (North East Frontier Agency) பகுதிக்கும் அதன் வடக்கே அமைந்துள்ள திபெத்து நாட்டுக்கும் இடையே உள்ள எல்லையைத் திட்டமாக வரையறை செய்வதற்குச் சிம்லாவில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாடு 1913-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் 1914-ஆம் ஆண்டு சூலை வரை நடைபெற்றது.

**மாநாட்டின் நோக்கம்:** நலிவடைந்து வீழ்ச்சியுறும் நிலையில் இருந்த சீனநாட்டு மஞ்சுவமிசப் பேரரசை எதிர்த்துத் திபெத்தில் 1912-இல் கலகம் நிகழ்ந்தது. அதனை அடுத்துத் திபெத்துப் பகுதியின் அரசியல் பெருமையை உறுதி செய்யும் நோக்கத்துடன் சிம்லா மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் ஆங்கிலப் பேரரசின் பேராளர்கள், புதிதாக நிறுவப்பட்டிருந்த சீனக் குடியரசின் பேராளர்கள், திபெத்து நாட்டின் பேராளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆயினும், சீனக்குடியரசின் பேராளர்கள், திபெத்து ஒரு தனியுரிமை கொண்ட தனிநாடு அன்று என்றும், அது சீனாவின் ஒரு பகுதியே என்றும் ஆகவே, திபெத்தின் பேராளர்கள் எந்த ஒப்பந்தத்திலும் கையொப்பம் இட உரிமையுள்ளவர் அல்லர் என்றும் கூறி அம்மாநாட்டின் முடிவுகளை ஏற்கவும் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடவும் மறுத்து விட்டனர்.

**எல்லை வரையறுக்கப்படுதல்:** ஆயினும், மாநாடு தனது பணியைச் செய்து முடித்தது. ஆங்கிலப் பேரரசின் தலைமைப் பேராளராய் அம்மாநாட்டில் கலந்துகொண்ட சர். என்றி மக்மாகன் என்பவரின் பெயரை எல்லைக் கோட்டுக்கு இட்டனர். இக்கோடு பூட்டான் நாட்டின் கிழக்கு எல்லையில் தொடங்கித் திபெத்தில் இட்சாங்போ என்றும் இந்தியாவில் பிரம்மபுத்திராஎன்றும் கூறப்படும் பெரும் நதி தெற்கு நோக்கித் திரும்பும் இடம் வரை உள்ள பகுதியில் திபெத்துக்கும், இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் புறப் பகுதிக்கும் உள்ள எல்லையை வரையறுக்கின்றது. வடகிழக்கு எல்லைப் புறப்பகுதி இப்போது அருணாசலப் பிரதேசம் என்னும் பெயரில் தனி மாநிலமாய் உள்ளது.

**மக்மாகன் கோட்டைப் பற்றி எழுந்த இந்தியச்சீனச் சிக்கல்:** இந்தியச் சீன நாட்டுறவு ஒப்பந்தம் 1954-ஆம் ஆண்டு ஏற்பட்டது. பஞ்சசீலக் கொள்கையை இரு அரசுகளும் ஏற்றுக்கொண்டன. இருப்பினும் சீனா, 'மக்மாகன்கோடு ஆங்கில ஏகாதிபத்தியத்தின் வலிந்து கவர்கையால்' ஏற்பட்டது என்று கூறி அதனைச் சட்டப்படியான கோடு என்று ஏற்றுக்கொள்ள மறுத்தே வந்தது. இந்தியாவும் சீனாவும் இணைந்து புதியதோர் எல்லைக் கோட்டை வகுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியது. இதற்கு இந்தியப் பிரதமர் பண்டித சவகர்லால் நேரு ஒப்புக்கொள்ளவில்லை. பல்லாண்டுகளாக நடைமுறைக்கு வந்து விட்ட மக்மாகன் கோடே சட்ட முறையான எல்லை என்று நேரு கூறிவிட்டார்.

**போர் ஏற்படுதல்:** இருதரப்புப் பேச்சுகளினால் பயன் ஏற்படவில்லை. சீனா இந்தியாவின் மீது 1962-ஆம் ஆண்டு படையெடுத்து மக்மாகன் கோட்டுக்குத் தெற்கே தம் படைகளை அனுப்பியது. அப்போரில் இந்தியா எதிர்பாராத நிலையில் தாக்கப்பட்டதால் இந்தியப்படைகள் பின்வாங்க நேர்ந்தன. திடீரெனச்

சீனா போரை 1962 அக்டோபர் 22-ஆம் நாள் நிறுத்தி மக்மாகன் கோட்டுக்கு வடக்கே தன் படைகளைப் பின்வாங்கிக் கொண்டது.

**இப்போதைய நிலை:** சீனா இப்போதுகூட மக்மாகன் கோட்டைச் சர்வதேச எல்லையாக ஏற்றுக் கொள்ளாமல் அருணாசலப் பிரதேசம் (முன்பு வடகிழக்கு எல்லைப்பகுதி என்று வழங்கப்பட்ட பிரதேசம்) முழுவதும் தன்னைச் சார்ந்தது என்று கூறி வருகின்றது. அருணாசலப் பிரதேசம் மைய அரசுப் பொறுப்பில் இருந்த நிலை மாறி அதற்கு முழு மாநிலப் பெருமை 1986-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இது சட்ட விரோதமானது என்று சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. பி.வி.

**மகதம்:** வட இந்தியாவில் கி.மு.6-ஆம் நூற்றாண்டில் விளங்கிய அரசுகளில் கோசலம், அவந்தி, மகதம், வத்சம் ஆகியன குறிப்பிடத் தகுந்தன. அவற்றுள் மகதம் அரசியல் வானில் ஒளிவிட்டு விளங்கத் தொடங்கியதும் பிற அரசுகளின் புகழ் மங்கத் தொடங்கி விட்டது. இக்காலப் பீகார் மாநிலத்தின் பாட்னா, கயா மாவட்டப் பகுதிகள் அக்காலத்தில் மகதப் பேரரசில் அடங்கியிருந்தன. வடக்கே கங்கை ஆறும், மேற்கே சோண் ஆறும் தெற்கே விந்திய மலைக் குன்றுகளும், கிழக்கே சம்பா நதியும் மகதத்தின் எல்லைகளாக விளங்கின. கயாவிற்கு அருகிலுள்ளகிரி விராசம் என்ற இராசக் கிரகமே அதன் பண்டைத் தலைநகரமாகும். அதற்கு மகத புரம், பிருகத்ரத புரம், வசுமதி, குசுகிரபுரம், பிம்பிசாரபுரம் என்ற பெயர்களும் உண்டு.

மகதப் பேரரசின் தொடக்கக்கால மரபுகளைப் பற்றி அறிந்து கொள்ளப் போதிய சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. பண்டைய கிழக்கு இந்தியாவில் புகழ் பெற்று விளங்கியது மகதமாகும். இங்கு கி.மு. 3, 4-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மௌரியப் பேரரசும், கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டில் விளங்கிய குப்தப் பேரரசும் மகதத்தை ஆண்ட புகழ் பெற்ற அரசுகளாகும்.

அரியங்க குல மன்னரான பிம்பிசாரரின் ஆட்சிக் காலத்திலிருந்துதான் மகதத்தின் உண்மையான வரலாறு தொடங்குகிறது எனக்கூறலாம். இருக்குவேதத்தில் கைகதா என்ற நாட்டைப் பிரம்ம கந்தா என்ற மன்னன் ஆட்சிபுரிந்தானெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கைகதா நாடும் மகதநாடும் ஒன்றே எனக் கருதப்படுகிறது. அதருவண வேதத்திலும் யசுர் வேதத்திலும் மகத நாட்டின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாபாரதமும், புராணங்களும் வாசுவின் புதல்வரான பிரிகத்ரதன் என்பவனை மகத நாட்டின் முதல் மன்னன் எனக் கூறுகின்றன. இராமாயணம், பிரிகத்ரதனின் புதல்வனான வாசு என்பவரை இராசகிரகத்தின் முதல் மன்னன் எனக் கூறுகிறது. இம்மன்னர்களின் வமிசாவளியினரைப் பற்றிப் புராணங்களும் குறிப்பிடுகின்றன. பிரிகத்ரதனுக்குப் பின் 16 முதல் 32 மன்னர்கள் 700 ஆண்டுகள் முதல் 1000 ஆண்டுகள் வரை மகதத்தை ஆட்சி புரிந்தனரெனப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. அவை குறிப்பிட்ட வமிசாவளிப் பட்டியல்களை (Genealogy) அப்படியே உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில், அவை ஒன்றுக்கொன்று முரண்பாடாயுள்ளன. சமணசமய ஆசிரியர்கள் விசயா, கயா என்ற இரு மன்னர்களை மகத நாட்டின் பண்டைய மன்னர்கள் எனக் குறிப்பிடுகின்றனர்.

மகத மன்னர் பிம்பிசாரர் அரியங்க வமிசத்தின் முதல் மன்னராகக் கருதப்படுகின்றார். அவர் திருமண உறவுகள் மூலமும் போர்கள் மூலமும் தம் அரசை விரிவு படுத்தினார். கோசல இளவரசியைத் திருமணம் செய்து கொண்டதால் காசியின் ஒரு பகுதி சீதனமாகக் கிடைத்தது. அதன் பின் வைசாலி இளவரசியையும், பஞ்சாபு இளவரசியையும் மணம் முடித்துக் கொண்டார். அந்தத் திருமண உறவுகளால் பிம்பிசாரர் கிழக்கிலும் மேற்கிலும் தம் பேரரசை விரிவு படுத்திக் கொள்ள முடிந்தது. மாளவ, காந்தார மன்னர்களுடன் நட்புறவு கொண்டிருந்தார். அங்க நாட்டை வென்று அதைத் தம் மகன் அசாதசத்துருவின் பொறுப்பில் விட்டார். பிம்பிசாரர் ஒரு மிகச் சிறந்த ஆட்சியாளர். இவர் சைன சமயத்தவரா அல்லது புத்த சமயத்தவரா என்பதை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. பிம்பிசாரரை அவர்புதல்வர்களுள் ஒருவரான அசாதசத்துரு கொன்று ஆட்சியைக் கைப்பற்றியதாக சைன சமய நூல்கள் கூறுகின்றன. இவர் ஆட்சிக்காலம் பற்றியும் மாறுபட்ட கருத்துகள் உண்டு. வி.ஏ.சுமித்து கருத்துப்படி பிம்பிசாரர் கி.மு. 582 முதல் 544 வரை மகதத்தை ஆட்சி புரிந்தார் என அறியலாம்.

**அசாதசத்துரு:** இவர் ஒரு சிறந்த வெற்றி வீரர். இவர் கோசலம் வைசாலி நாடுகளுடன் 16 ஆண்டுகள் போராடி அவற்றை அடிபணிய வைத்தார். இவர் சமயம் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. சைன சமய நூல்கள் இவரை ஓர் உண்மையான சைனர் என்றும் இவர் மகாவீரரை நேரில் கண்டு அவர் வாழ்த்துகளைப் பெற்றார் என்றும் கூறுகின்றன. ஆனால், புத்த சமய நூல்கள் அசாதசத்துரு தொடக்கத்தில் புத்தர் மீது வெறுப்புக் கொண்டிருந்தார் என்றும் தம் இறுதிக் காலத்தில் அவர் புத்தரைத் தரிசித்துத் தம் பாவங்களை எல்லாம் மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டார் என்றும் கூறுகின்றன. புத்தர் இயற்கை எய்தியபின் அவர் நினைவாக

இராச கிரகத்தில் ஒரு தூணை எழுப்பியதாக மகா வமிசம் கூறுகிறது. இவர் தந்தை பிம்பிசாரருக்குப் பின் இவர் 25 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார் எனக் கூறப் படுகிறது.

**தர்சகா**: அசாதசத்துருவிற்குப் பின் அவர்தம் புதல் வர்களுள் யார் மகத நாட்டின் மன்னராகப் பட்ட மேற்றார் என்பதில் மாறுபட்ட கருத்துகள் உண்டு. சிலர் தருசகா என்றும் மற்றும் சிலர் உதயன் என் றும் புராண ஆதாரங்களை வைத்துக் கூறுகின்றனர். எல்லோருமே தந்தையைக்கொன்று ஆட்சியைக் கைப் பற்றியவர்கள் என்பது கூறப்படுகிறது. உதயனுக்குப் பின் பட்டமேற்றவர் யார் என்பதிலும் ஒரே மாதிரி யான கருத்து இல்லை.

தந்தையைக் கொன்று பட்டமேற்கும் கொடிய முறையைப் பின்பற்றி வந்த அரியங்க மன்னர் பரம்பரையை வெறுத்த மக்கள் சிசுநாகர் என்ற அமைச்சரை மகத மன்னராகப் பதவியில் அமர்த்தி னர் என்று சில இலங்கை வரலாற்றுக் குறிப்புகள் கூறு கின்றன. அவருக்குப் பின் மகத நாட்டின் அரியணை யைக் கைப்பற்றியவர் காகவருணன் என்று புராணங் களும் காலசோகன் என்று இலங்கை நூல்களும் கூறு கின்றன. மகா போதிவமிசம் என்ற நூல் காலசோக னுடைய 10 புதல்வர்கள் ஒரே சமயத்தில் மகதத்தின் பல்வேறு பகுதிகளை ஆட்சி புரிந்தனர் என்று கூறு கிறது. ஆனால், புராணங்கள் காலசோகனுக்குப் பின் அவர் 10 புதல்வர்களுள் ஒருவரான நந்திவர்த்தனன் என்பவனே மகதத்தை ஆண்டான் எனக் குறிப் பிடுகின்றன.

சிசு நாகர்களுக்குப் பின் மகதத்தை நந்தர்கள் ஆட்சி புரிந்தனர் எனத்தெரிகிறது. புராணங்கள் நந்த வமிச மன்னர்கள் 9 பேர்களைக் குறிப்பிட்டு அவர் கள் மகதத்தை 100 ஆண்டுகள் ஆண்டனர் எனக் கூறுகின்றன. மகா போதி வமிசமும் அதை உறுதிப் படுத்துகிறது. ஆனால், மகா போதி வமிசம் நந்த வமிசத்தை ஆண்ட முதல் மன்னன் பெயர் உக்கிர சேனன் என்றும் புராணங்கள் அவனை மகா பத்மன் என்றும் கூறுகின்றன. கலிங்க மன்னன் காரவேலனின் அதிகும்பா கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'நந்த ராசன்' யார் என்பதை அறுதியிட்டுக் கூற இயல வில்லை. நந்தவமிசத்தின் முதல் மன்னர் கீழ்க்குலப் பெண்ணிற்கும் சிசுநாக வமிச இறுதி மன்னருக்கும் பிறந்தவர் என்று புராணங்களும், ஓர் அரசு நடன மாதிற்கும் நாவிதன் ஒருவருக்கும் பிறந்தவர் என்று சைன சமய நூல்களும் கூறுகின்றன. அதே சமயம் அலெக்சாண்டரின் இந்தியப் படையெடுப்பின் போது இந்தியாவிற்கு வந்த கிரேக்க எழுத்தாளர் 'குருதியசு' (Curtius) அப்போதிருந்த நந்த மன்ன னின் மகாராணிக்கும், நாவிதன் ஒருவனுக்கும் மக னாகப் பிறந்தவன் எனக் குறிப்பிடுகிறார். குருதியசு குறிப்பிடும் அகரம்சு (Agrammes) என்ற நந்த மன்னன்தான் முதல் நந்த வமிச மன்னன் எனஉறுதி யாகக் கூற இயலாது.

மகாபதும நந்தன் சத்திரிய மன்னர்கள் அனை வரையும் கொன்றவன் என்றும் அவன் இரண்டாம் பரசுராமன் என்று கூறப்பட்டான் எனவும் புராணங் கள் கூறுகின்றன. கிரேக்க ஆசிரியர் பிளினி, மகா பத்ம நந்தன் பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்ட மிகப் பெரிய பேரரசை ஏறத்தாழ 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறுகிறார்.

மகாபோதி மரபு, தன நந்தன் என்பவனை நந்த வமிசத்தின் இறுதி மன்னன் எனக் குறிப்பிடுகிறது. மகா வமிசம் தனநந்தனை அளவு கடந்த செல்வத் தைப் புதைத்து வைத்திருந்தவன் எனக் குறிப்பிடு கிறது. அலெக்சாண்டருக்குச் சந்திரகுப்த மௌரியன் கொடுத்த தகவல்களின்படி தனநந்தன் ஆட்சியை அவனுடைய மக்கள் அடியோடு வெறுத்தனர் என்று கூறுவர். நந்தர்களுக்கும் மௌரியர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போரில் மௌரியர் கள் வெற்றியடைந்ததாகப் புராணங்கள் குறிப்பிடு கின்றன. விசாகதத்தரின் முத்ரா இராட்சசம் என்ற நாடகம், சந்திரகுப்தர் கௌடல்லியரின் உதவியுடன் நந்தர்களை அழித்து மௌரியப் பேரரசை உருவாக்கி னார் என்பதைக் கூறுகிறது. அதன் பின் புகழ்மிக்க மௌரிய வமிசம் மகதநாட்டை கி.மு. 4 – ஆம் நூற் றாண்டின் தொடக்கம் முதல் ஏறத்தாழ 140 ஆண்டு கள் ஆட்சி புரிந்தது. சந்திரகுப்தரும், அசோகரும் மௌரிய வமிசத்தின் தலைசிறந்த மன்னர்களாகத் திகழ்ந்தனர். புராணங்களும் பாணரின் அர்சசரிதம் என்ற நூலும் பிருகத்ரதன் என்ற இறுதி மௌரிய வமிச மன்னனை அவனுடைய படைத் தளபதியான புசிய மித்திரசுங்கன் என்பவன் கொன்று ஆட்சி யைக் கைப்பற்றியதாகக் கூறுகின்றன.

மகதத்தை மௌரியருக்குப் பின் சுங்க மரபின ரும், அதன் பின்னர்க் கன்வ மரபினரும் ஆண்டனர். அவர்கள் ஆட்சிக்காலம் ஏறத்தாழ கி.மு. 188 முதல் கி.மு. 31 வரை எனக் கூறலாம்.

மகதத்தில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் தோற்று விக்கப்பட்ட குப்த அரசு மீண்டும் பேரரசு ஒன்றை அமைத்தது. மகதத்தின் வரலாறு பற்றிய செய்திகள் கி.மு. 3-ஆம் ஆண்டிற்கும் கி.பி. 3 – ஆம் நூற்றாண்டின் இறுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் தெளிவாக இல்லை. குப்தப்பேரரசு மகதநாட்டை மையமாகக்கொண்டு வடஇந்தியாவில் பெரும்பகு

தியை வென்று ஆண்டு வந்தது. அதன் முக்கிய அரசர்கள் முதலாம் சந்திரகுப்தன், சமுத்திரகுப்தன், இரண்டாம் சந்திரகுப்தன் (இவர் விக்கிரமாதித்தன் என்ற சிறப்புப் பெயரும் பெற்றவர்) ஆகியோர். குப்தப்பேரரசு ஏறத்தாழ கி.மு. 500-ஆம் ஆண்டு அளவில் ஹுணர்களின் படைபெடுப்பினால் அழிவுற்றது. பெ.து.

*மகதி ஏரி*: இது கிழக்கு ஆப்பிரிக்காவில் தெற்குக் கென்யாவிலுள்ள ஒரு பெரும் பள்ளத்தாக்கில் இருக்கும் ஏரி. இதன் நீளம் 30 கி.மீ. எரிமலை ஊற்றுகளால் இது ஏற்பட்டது. இதற்குத் தொடர்ந்து நீர்செலுத்திக் கொண்டிருப்பதும் இந்த ஊற்றுகளேயாகும். இந்த ஏரியில் கரியகக் காடியின் உப்பு (Soda Corbonate) அமைந்துள்ளது. சுத்திகரிப்பு ஆலைகளுக்கு இந்நீர் செலுத்தப்பெற்று, அங்கு உவர்க்காரம் (Soda) செய்யப்படுகிறது. தெ.பா.

*மகபத்கான்*: இவர் இந்தியாவில் ஆட்சி செய்த முகலாயப் பேரரசர் சகாங்கிர் ஆட்சிக்காலத்தில் உயர் பதவிகளை ஏற்றிருந்த ஒரு திறமையாளர். இவர் இயற்பெயர் சமானா பேகு (Zamana Beg). இவர் ஓர் எளிய குடியில் பிறந்தவர்; தம் இயற்கையான திறமையால் முன்னேறியவர்.

சகாங்கிர் கி.பி. 1605 – ஆம் ஆண்டு பேரரசராக முடி சூட்டிக் கொண்டபோது சமானாபேகுக்கு மகபத்கான் (Mahbatkhan) என்றவிருதும் அரசவையில் உயர்பதவியும் அளித்தார்.

**மகபத்கானும் இராசபுத்திரர்களும்**: அக்பர் காலத்தில் முழுவதும் வெல்லப்படாதிருந்த மேவார் அரசு இராசபுத்திரர்களை வெல்லும் பணி மகபத்கானிடம் கி.பி. 1609-இல் ஒப்படைக்கப்பட்டது. நேரடிப்போரில் ஈடுபடாமல் இராசபுத்திரத்தலைவர் இராணா அமர்சிங்கு கொரில்லாப் போர் முறையைக் கையாண்டதால் மகபத்கான் ஏதும் அதிகமாகச் சாதிக்க இயலவில்லை.

**தக்காணப் போர்களும் மகபத்கானும்**: அக்பர் காலத்தில் தொடங்கிய தக்காணப்போர்கள் சகாங்கீர் காலத்திலும் தொடர்ந்தன. கான்-இ-கானான் என்ற படைத்தலைவர் சதித்திட்டங்களில் ஈடுபட்டார் என்று ஐயுற்ற சகாங்கீர் அவரைச் சிறைப்படுத்தித் தலைநகருக்குக் கொண்டுவரும் பொறுப்பை நம்பிக்கைக்குரிய மகபத்கானிடமே ஒப்படைத்தார். மகபத்கான் அப்பணியைச் செய்து முடித்தார்.

**நூர்சகான்-சகாங்கீர் திருமணமும் மகபத்கானின் செல்வாக்கு மங்குதலும்**: இந்திய வரலாற்றில் புகழ் பெற்றபேரழகி நூர்சகான் கி.பி.1611-இல் சகாங்கீரின் மனைவியானார். அந்நாள் முதல் நாட்டின் உண்மையான ஆட்சியதிகாரம் நூர்சகானின் கையில் வந்தது எனலாம். சகாங்கீர் மது அருந்துவதிலும் மற்ற கேளிக்கைகளிலும் பொழுது போக்கிக்கொண்டு பொறுப்பு முழுவதையும் நூர்சகானிடம் விட்டு விட்டார். நூர்சகான் தம் தந்தை, உடன்பிறந்தோர் ஆகியோரை உயர் பதவிகளில் நியமித்தார். மகபத்கானின் செல்வாக்கு குறையத் தொடங்கியது. அடுத்த 12 ஆண்டுகளுக்கு மகபத்கானுக்கு எவ்விதப் பதவி உயர்வும் அளிக்கவில்லை. நூர்சகானுக்கு எதிரான சிறு குழு உருவானபோது இயல்பாகவே மகபத்கான் அதில் பெரும் பங்கு ஏற்றார். இவரைக்கண்டு அஞ்சிய நூர்சகான் தொலைதூர மாநிலமான காபூல் மாநிலத்துக்கு இவரை ஆளுநராக நியமித்தார்.

**சாசகான் தம் தந்தை சகாங்கீருக்கு எதிராகக் கலகம் செய்தலும் மகபத்கானும்**: பேரரசி நூர்சகானின் அரண்மனைச் சூழ்ச்சிகளால் சகாங்கீரின் மக்களிடையே சச்சரவு மூண்டது. சகாங்கீரின் இரண்டாம் மகன் குர்ரம் ஆவர் (அவர் பிற்காலத்தில் சாசகான் என்ற பெயருடன் அரியணை ஏறினார்). அவர் தம் தந்தைக்கு எதிராகவே போர்க்கொடி உயர்த்தும் நிலைக்கு ஆளானார். அவரை அடக்கும் பொறுப்பு மகபத்கானிடமே ஒப்படைக்கப்பட்டது. மகபத்கான் தயக்கத்துடன்தான் அப்பொறுப்பை ஏற்றார். ஆயினும், தம் போர்த்திறமையை இவர் விரைவில் தெளிவாக்கினார். ‘பிலோச்பூர்’ என்ற இடத்தில் கி.பி. 1623 – ஆம் ஆண்டு இவர் குர்ரம் இளவரசரை முறியடித்தார். குர்ரம் முதலில் தக்காணத்துக்குச் சென்றார். அங்கு நீண்டநாள் நிலைக்கமுடியாமல் வங்காளம்சென்றார். அங்கு அவருக்கு ஆதரவு திரண்டது. அவர் தலைநகர் ஆக்ராவை நோக்கி வரும்போது அலகாபாது அருகே ‘தாம்டாமா’ என்ற சிற்றூருக்கருகில் மகபத்கானால் இரண்டாம் முறையாகத் தோற்கடிக்கப்பட்டார். குர்ரம் மீண்டும் தக்காணத்துக்கு ஓடிச் சென்றார். மகபத்கான் மூன்றாம் முறையாக அவரைப் புர்கான்பூரில் தோற்கடித்தார். குர்ரம் தந்தையிடம் சரண் அடைந்து மன்னிப்புக் கேட்க வேண்டியதாயிற்று.

**மகபத்கான் நூர்சகான் சூழ்ச்சிகளில் சிக்குண்டமை**: மகபத்கானின் செல்வாக்கு வளர்வதை விரும்பாத நூர்சகான் இவரை வங்காளத்தின் ஆளுநராக நியமிக்கச் செய்தார். அம்மாகாணத்தின் ஆளுநர் பதவி இடர்ப்பாடு நிறைந்தது. இவர்மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

**மகபத்கான் பேரரசரைச் சிறைப்படுத்தல்**: அரசியாரின் சூழ்ச்சிகளைக் கண்டு சினம் அடைந்த மகபத்

கான் கி.பி. 1626- இல் பேரரசரை நேரில் சந்திக்க விழைந்தார். அப்பொழுது பேரரசர் காபூல்நகர் நோக்கிப் பயணம் மேற்கொண்டிருந்தார். சீலம்நதிக் கரையில் அவர் தங்கியிருந்தபோது மகபத்கான் அங்குச் சென்றார். ஆயினும், இவர் பேரரசரைச் சந்திக்க அனுமதிக்கப் படவில்லை. மேலும், மகபத் கான் தம் மகனுக்குப் பேரரசரின் அனுமதி பெறா மல் மணமுடித்தார் என்றும் குற்றம் சாற்றப்பட்டது. இவர் மகன் அவமானப்படுத்தப்பட்டார். இதனால் பெரிதும் கோபம்கொண்ட மகபத்கான் பேரரசரைத் திடீரென்று தாக்கி எதிர்பாராத வகையில் சகாங் கீரைச்சிறை செய்தார். அப்போது நூர்சகானோ அரசரின் ஆதரவாளர்களோ அங்கு இல்லை. பின்னர் நூர்சகான் பேரரசரை விடுவிக்கச் செய்த தாக்குதல் கள் பயனற்றுப்போயின.வேறு வழியின்றி நூர்சகான் சரண் அடைந்து தம் கணவருடன் சேர்ந்து கொண் டார். நூர்சகானின் ஆதரவாளரில் பலர் மரண தண்டனைக்குள்ளாயினர். அடுத்த ஆறு திங்கள் களுக்குக் காபூலில் மகபத்கான்ன் பொறுப்பில் இருந்த பேரரசர், மகபத்கானின் சொற்படி நடந்து கொண்டார்.

**மகபத்கான், சூழ்ச்சிக்கு இரையாதல்:** மகபத்கான் திறமையான போர்வீரர். ஆனால், அரசியல் சூழ்ச்சி களையும்அரண்மனைச் சூழ்ச்சிகளையும் அறியாதவர். விரைவில் நூர்சகானின் சூழ்ச்சிகளுக்கு இலக்கானார். பேரரசரிடம் இவருடைய செல்வாக்குக் குறைந்து கொண்டே வந்தது. அதனை அறிந்த இவர் தமது மண்டிலமான வங்காளத்திற்கு விரைந்தார். இவருக் குப் பல இன்னல்கள் விளைவிக்கப்பட்டன. அந் நிலையில் தக்காணத்திலிருந்து குர்ரம் இளவரசர் தம் தந்தை மகபத்கானின் கையில் சிறைப்பட்டிருப் பதை அறிந்து தம் தந்தையை விடுவிக்க விரைந்தார். அவர் வடமேற்கு மண்டிலங்களை அடைவதற் குள் நிலைமை மாறியது. மகபத்கானின் செல்வாக் குக் குறைந்து நூர்சகானின் செல்வாக்கு ஓங்கியது. நூர்சகானின் அறிவுரைப்படி பேரரசர், மகபத்கா னுக்குக் குர்ரத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கும்படி ஆணையிட்டார். ஆனால், மகபத்கான் அவ் வாணையை மதிக்கவில்லை. மேவார் நாட்டு இராச புத்திரர்களிடம் அடைக்கலம் புக மகபத்கான் முயன் றார். அது நிறைவேறவில்லை. மகபத்கான்இறுதியில் தம் பழைய பகைவரான இளவரசர் குர்ரத்தையே நாடி அவருடன் சேர்ந்து கொண்டார்.

**மகபத்கானின் இறுதிக்காலம்:** இந்நிலையில் பேரரசர் சகாங்கீரின் உடல் நலம் குன்றி வந்தது. இளவரசர்களுள் பதவிப்போட்டி தொடங்கியது. சகாங்கீர் கி.பி. 1627-ஆம் ஆண்டு காலமானார். அப்போட்டியில் மகபத்கான் குர்ரத்தை ஆதரித்தார். குர்ரம், சாசகான் என்னும் பெயரோடு அரசுகட்டில் ஏறினார். மகபத்கான், அரசவையில் செல்வாக்கும் பெற்றார். சாசகானுக்கு உதவியாக இவர் பண்டேல் கண்டுப் பகுதியில் ஏற்பட்ட கலகத்தை கி.பி.1628-இல் அடக்கினார். மகபத்கான் கி.பி.1632-இல் தக்காணப் போரை நடத்தும் தலைமைத் தளபதியாக நியமிக் கப்பட்டார்.புகழ்மிகு கோட்டையான தவுலதாபாத்து இவரால் வெல்லப்பட்டது. அகமதுநகர் அரசு சாச கானுக்குப் பணிந்தது. அதன் நினைவாக மகபத்கான் இ – காணான் (தலைவர்க்கெல்லாம் தலைவர்) என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றார். ஆயினும், புர்கான்பூர்க் கோட்டையை வெல்ல இவர் செய்த முயற்சி தோல்வியுற்றது. சாசகான் இவரைக் கண்ட னம் செய்தார். வயது முதிர்ந்த மகபத்கான் கி.பி.1634 -ஆம் ஆண்டில் இறந்தார்.

ஈ.ஜா.

**மகம்:** வானமண்டிலத்தில் உள்ள இராசிமண்டில வட்டத்தில் சிங்கராசியில் 120 பாகை முதல் 133 பாகை வரையிலான தூரத்திற்கு 'மகம் விண் மீன்' என்பது பெயர். முடக்கம் போலத் தோற் றம் காட்டும் இந்த விண்மீன் மண்டிலத்தில் ஆறு விண்மீன்கள் உள்ளன. இது இடவோட்ட விண்மீன் ஆகும். ஒவ்வொரு சந்திரமான மாதத்திலும் சந்திரன் ஏறத்தாழ ஐம்பத்து நான்கு நாழிகை நேரம் தங்கிச் செல்லும். மாசித் திங்களில் சந்திரன் மக விண்மீனில் செல்லும்போது 'மாசிமகம்'திருவிழாவும்,பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை வியாழன் தங்கும் போது மகா மகம் (மாமாங்கம்) திருவிழாவும் கொண்டாடப்படு கின்றன. இந்த விண்மீனுக்கு அசுர கணம், ஆண்பால், எலியோனி, பாதரச்சு, சிலேத்தும நாடி முதலிய பெயர்களைச் சோதிட நூலார் வகுத்துள்ளனர். மகம் மண்டிலத்தில் சந்திரன் செல்லும் போது பிறந் தவன் நியாயவான், நீராடற்பிரியன், இசைப்புலவன், அழகன், பொன்னுடையவன், பல திசையிலும் அலை யப் பிரியம் கொள்பவன், பரிமளகந்தப் பிரியன்,அற்ப நித்திரையன், வலப்புறம் மறுவுடையவன் ஆகிய தன்மைகளையுடையவனாக இருப்பான் என்று சோதிட நூலார் கணித்துள்ளனர். மக விண்மீன் தூரத்தை நான்காகப் பிரித்தால் முதற்காலில் பிறந் தவன் யாரும் அஞ்சும் செங்கண்ணன், யூகி, சிவப்பு நிறம் உடையவன், சிவந்த மயிரன் என்றும், இரண் டாங் காலில் பிறந்தவன் போலித்தனமானவன், புத்திமான், அனல் வடுவுடையவன், செலவாளி, மகிழ்ச்சி மீதூர்பவன், பொன்னிறக் கண்ணன், காது நோயன் என்றும், மூன்றாம் காலில் பிறந்தவன் பல வான், நோயாளன், சாது, பொல்லாதவன், கடின மனத்தன், அவாவுடையவன், தூயன் என்றும், நாலாங் காலில் பிறந்தவன் சீலவான், பெண்பேச்சுக்

கேட்பவன், சிரங்கு நோயன், சிந்தை நோயன், மதுர மாகப் பேசுபவன் என்றும் கணித்துள்ளனர்.
பொன்.பா.

**மகர்**: காண்க: முகம்மதிய மணக்கொடை.

**மகரம்**: வானமண்டிலத்தில் இராசி மண்டில வட்டத்தில் 270 பாகை முதல் 300 பாகை வரையுள்ள விண்மீன் தொகுதிக்கு 'மகர இராசி' என்பது பெயர். இது சுறாமீன் போன்ற தோற்றம் காட்டுவதால் இப்பெயர் பெற்றுள்ளது. இராசி மண்டில வட்டத்தில் தென்கோடியில் மகர இராசியின் தொடக்கப் புள்ளி உள்ளது. அந்தப் புள்ளிக்குச் சூரியன் வந்ததும் சூரியன் உத்தராயணத்தைத் தொடங்குவான். அதற்கு 'மகர சங்கிராந்தி' என்பது பெயர். தை மாதம் முழுவதும் மகர இராசியில் சூரியன் சஞ்சரிப்பான். மகர இராசியில் உத்திராட விண்மீனின் பின் மூன்று பாதங்களும், திருவோண விண்மீனின் நான்கு பாதங்களும், அவிட்ட விண்மீனின் முன்னிரண்டு பாதங்களும் உள்ளன. மகர இராசியில் சனிக்கோள் ஆட்சி பெறும்; வியாழன் நீச்சம் பெறும்; செவ்வாய் உச்சம் பெறும். மகர இராசியில் சந்திரன் சஞ்சரிக்கும்போது பிறந்தவன் காவியம் தெளிவான், கஞ்சன், காமி, சுகவான், கேடான சொல் புகல்வான், தோள்வலியன், சோம்பித் திரிபவன், மிகுந்த இச்சையுடையவன், பெண்களால் புகழப்படுபவன், அழகன், கருணை இல்லாதவன், மனைவி மக்களைப் புகழ்ந்து பேசித் திரிபவன் என்று சோதிட நூல்கள் பலன் கணித்துள்ளன. மகரலக்கினத்தில் பிறந்தவனுக்குக் காணாத இடத்தில் மறுவிருக்கும், கண்கள் நீண்டிருக்கும், மலர்ப் பிரியன், நிலைத்த புத்திசாலி, அன்புடையோன், சுகவான், சிவந்த மெய்யன், மனையாளுக்கு இனியான், பறவைகளைக் கொல்வான் என்று சோதிடநூல்கள் பலன் கணித்துள்ளன. பொன்.பா.

**மகரயாழ்**: தமிழகத்தில் சங்க காலம் முதற்கொண்டு வழக்கில் இருந்த நால்வகை யாழுள் மகர யாழும் ஒன்றாகும். சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதியுள்ள அடியார்க்கு நல்லார் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்னும் நால்வகை யாழ்களைப் பற்றிக் கூறிவிட்டு ஒவ்வொரு யாழின் நரம்புகளின் எண்ணிக்கையையும் குறிப்பிடுகிறார். மகரயாழ் பத்தொன்பது நரம்புகள் கொண்டது என்று கூறியுள்ளார். (அரங் கேற்று காதை - அடி - 26–அடியார்க்கு நல்லார் உரை). சீவக சிந்தாமணி இயற்றப்பட்ட காலமாகிய கி.பி.-9-ஆம் நூற்றாண்டு வரையில் மகரயாழ் வழக்கில் இருந்தது. அதன்பின் நாளடைவில் அது மறைந்துவிட்டது எனத்தெரிகிறது.

சீவக சிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் 608–ஆம் செய்யுளில் வரும் மகர வீணை என்னும் சொல்லிற்கு நச்சினார்க்கினியர் உரையெழுதும்போது 'பத்தொன்பது நரம்பு கட்டின மகரயாழ் இவள் வாசிக்கின்றதென்பது தோன்ற "மகர வீணை" என்றார்' என்று கூறியிருக்கிறார். மணிமேகலையில் 'மகரயாழ்' என்றும் 'மகர வீணை' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மகர யாழ் மகரவீணை என்றும் சொல்லப்பட்டது எனத்தெரிகிறது.

கிரேக்க அரசர் அலெக்சாந்தர் பாரதத்தில் சீலம் நதிக்கரைப் பகுதியை ஆண்டுவந்த போரசு மன்னரை கி.மு. 326 – இல் வென்றார். அது முதல் இரு நாடுகளுக்கும் இடையே வாணிகம் மிகுந்த அளவில்நடைபெற்றதோடல்லாமல் கலைகள், நாகரிகம், பண்பாடு முதலியவற்றின் கலப்பும் ஏற்பட்டது. அருங்கலைகளுள் சிறந்ததான இசைக் கலையின் பரிமாற்றமும் இரு நாடுகளுக்குமிடையே அக்காலத்தில் இருந்தது.

யவனரால் இயற்றப்பட்ட மகர வீணையும் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டது எனத் தெரிகிறது. மகரவீணை 'யவனக் கைவினை' என்று பெருங்கதையில் கூறப்பட்டுள்ளது (பெருங்கதை, மகத காண்டம் 15, யாழ் நலந்தெரிந்தது-அடிகள் 22,23).

மகரமீன் எனப்படும் சுறாமீனின் தலை, வாய் முதலிய உறுப்புகளின் தோற்றத்தை ஒத்ததாயிருந்ததால் இதனை மகரயாழ் என்றனர் போலும் (டாக்டர் ஆ. வரகுண பாண்டியன் இயற்றிய 'பாணர் கைவழி'–பக்கம் 70). சுறா = மகரமீன் (பி. இராமநாதன் தமிழகராதி). மகரமீன் = சுறாமீன்; சுறா = மகரமீன் (வே. நமச்சிவாய முதலியார் தமிழகராதி).

சிலர் மகரமச்சமென்பது முதலையின் தலையையும் நாயின் உடலையும் நான்கு கால்களையும் பெற்ற ஒரு புராண கால விலங்கு என்றும், அவ்விலங்கின் தோற்றத்தைப் போல் இவ்வியாழும் இருந்ததென்றும் கூறியுள்ளனர் (யாழ் நூல், பக்கம் 50; பாணர் கைவழி, பக்கம் 71).

ஓவியக்கலையிலும் இசைக் கலையிலும் வல்லுநராயிருந்த யவனர் செய்த இந்த அழகிய இசைக் கருவி, அரசகுமரர் முதலிய செல்வர் வீட்டிலே மகளிராலே வாசிக்கப்பட்டதெனத் தெரிகிறது (சீவக சிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம்- செய்யுள் 608). து.ஆ.த.

**மகர ரேகை**: புவி, தன் அச்சில் மணிக்கு 1600 கி.மீ. வேகத்தில் சுற்றுகிறது. ஒரு முறை சுற்றுவதற்கு ஏறத்தாழ 24 மணி நேரம் ஆகின்றது. அந்த அச்சு ஒரு கற்பனைக் கோடாகும். அந்த அச்சின் இரு முனைகளும் வடதுருவம், தென்துருவம் எனக் குறியிடப்படுகின்றன. இரு துருவங்களுக்கும் நடுவே

நிலநடுக் கோடு உள்ளது. மார்ச்சு 21–ஆம் நாளும், செப்டம்பர் 23–ஆம் நாளும் கதிரவனின் கதிர்கள் புவியின் எந்தப் புள்ளியில் செங்குத்தாக விழுகிறதோ, அதுவே நிலநடுக் கோடு என்று குறிப்பிடப்படு கிறது. திசம்பர் மாதம் 22–ஆம் நாள் கதிரவனின் ஒளிக்கதிர்கள் நிலநடுக்கோட்டுக்குத் தெற்கில் 23½°-இல் செங்குத்தாக விழுவதால், இது மகரரேகை (Tropic of Capricorn) என்று குறிப்பிடப்படுகிறது. இந்த 23½° மகரரேகைக்குத் தெற்கில் உள்ள பகுதி களில் கதிரவனின் ஒளிக்கதிர்கள் செங்குத்தாக விழுவ தில்லை. அதுவே கதிரவனின் பெயர்ச்சிக்குத் தென் எல்லையாக அமைந்துள்ளது. 23½° மகர ரேகையும் கதிரவனின் ஒளிக்கதிர்கள் செங்குத்தாக விழும் போது 66½° தெற்கு மகரரேகையில் கதிரவனின் ஒளிக்கதிர்கள் 47° சாய்வாக உள்ளது. அச்சமயத்தில் அப்பகுதிகளில் ஒரு நாள் முழுவதும் பகலாகவோ, இரவாகவோ இருக்கும். துருவப் பகுதிகளுக்கு எல்லையாக அமையும் இந்த மகர ரேகையை அண் டார்டிக்கு (66½ – Antarctic Circle) வட்டம் என் றும் குறிப்பிடுகின்றனர். இந்த இரேகைக்கு அப்பால் கதிரவனின் கதிர்களின் கோணம் குறைந்துகொண்டே சென்று துருவத்தில் 23½° ஆகின்றது. அப்பகுதியில் கதிரவனின் ஏற்றக்கோணம் 24 மணி நேரமும் மாறு படுவதில்லை. கடக ரேகைக்கும், மகர ரேகைக்கும் இடைப்பட்ட பகுதியை வெப்ப மண்டலம் என்று கூறுவர். அண்டார்டிக்கு வட்டத்திற்கு அப்பாலுள்ள பகுதி கடுங்குளிர் மண்டலம் எனக் குறிப்பிடப்படு கிறது. மகரரேகைப் பகுதியில் நீண்ட பகற்பொழுது திசம்பர் 22 – ஆம் நாளும் நீண்ட இரவு சூன் 21-ஆம் நாளும் ஆக இருக்கும். மகரரேகை ஆசுத்திரேலியா, மடகாசுக்கர், தென்னாப்பிரிக்கா, தென்பிரேசில், பராகுவே, அர்செண்டினா முதலிய நாடுகளின் வழியே செல்கிறது. சு.ஆ.

**மகலநோபிசு, பிரசந்தா சந்திரா** (கி.பி. 1893 - 1972): கணிதவியல், பொருளியல் ஆகியவற் றில் வல்லுநராகத் திகழ்ந்த மகலநோபிசு பிரசந்தா சந்திரா வங்காளத்தில் கி.பி.1893–ஆம் ஆண்டு பிறந் தார். கல்கத்தா மாநகர, மாகாணக் கல்லூரியில் கல்வி கற்று 1912–இல் இளங்கலைப் பட்டம் பெற் றார். மேற்படிப்பிற்காக அயல்நாடு சென்று கேம் பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் 1915–ஆம் ஆண்டில் கணிதவியலில் முதுகலைப் பட்டம் பெற்றார். இந்தியா திரும்பிய மகலநோபிசு பிரசந்தா சந்திரா (Mahalanobis Prasanta Chandra) கல்கத்தாவில் சிறந்து விளங் கிய மாகாணக் கல்லூரியில் பேராசிரியராகப் பணி யாற்றினார். அக்காலத்தில் இரவீந்திரநாத தாகூ ருடன் இணைந்து செயலாற்றி விசுவபாரதி (Visva Barati) என்னும் பல்கலைக்கழகத்தை உருவாக்க உறு துணையாயிருந்தார்.

இளம் பேராசிரியராக, கேள்வி ஞானம், ஆய்வு நுட்பம் ஆகியன மிக்கவராய்த் திகழ்ந்த மகலநோபி சிடம் பல இளம் நண்பர்கள் கூடித் தங்கள் கணித, அறிவியல் கருத்துகளைப் பரிமாற்றம் செய்துகொள் வர். அவ்வாறு உருவாகிய கருத்துகள் 1920–ஆம் ஆண் டளவில் (1920–1930) பல புதிய கோட்பாடுகள் உரு வாக அடிப்படையாக விளங்கின. அவற்றை உணர்ந்த மகலநோபிசும் அவர் நண்பர்களும் 17.12.1931-இல் பொதுக்கூட்டம் ஒன்றைக் கல்கத்தா மாநகரில் ஒழுங்கு செய்து, அதனைச் சிறப்பாக நடத்தினர். அக்கூட்டத்தில் இந்தியப் புள்ளிவிவர அமைப்பு (Indian Statistical Institute) ஒன்றை நிறுவுவதற் கான முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி அவ் வமைப்பு மகலநோபிசின் தலைமைப் பொறுப்பில் 1932, ஏப்பிரல் 28–இல் நிறுவப்பட்டது. இந்தியப் புள்ளிவிவர அமைப்பு, நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஒரு நிறுவனம் என அறிஞர்களா லும், அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பிற அர சுத்துறைகள் போன்று அரசு உதவிகள் அனைத்தை யும் பெற்றது. இந்தியப் புள்ளிவிவரச் சட்டம் 1959-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அச் சட்டப் படி இந்தியப் புள்ளிவிவர அமைப்பு அளிக்கும் சான் றிதழ்களும் பட்டங்களும் பிற பல்கலைக்கழகச் சான் றிதழ்களுக்கு ஒப்பாகக் கருதப்படுகின்றன. அந் நிறு வனம் நாட்டின் பலதுறைப் புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றை முறையாகத் தொகுத்து அரசும், மக்களும் பயனடையும்வகையில் பல நுட்ப ஆய்வு வெளியீடுகளை அவ்வப்போது வெளியிடுகிறது. மேலும், அவ்வமைப்பு நாட்டின் பல ஆய்வு மையங் களுக்கு முன்னோடியாகவும், மூல வளமாகவும் விளங்குகிறது எனக் கூறலாம்.

கணித இயலில் வல்லுநராக விளங்கிய மகல நோபிசு அறிவியல் அறிஞராக மட்டும் திகழாமல் அறிவியல் கணிதத்தைப் பொருளியலிலும் நாட்டுப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களிலும் பயன் படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தறிந்தார். இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், நூல்களை யும், அறிக்கைகளையும் எழுதி வெளியிட்டார். அவற் றுள் இங்குக் குறிப்பிடத்தக்க சில தலைப்புகளாவன: 1) நாட்டு வருமான வளர்ச்சி முன்னேற்றம் ஆகியன குறித்த சில கருத்துகள் (Some Observations on the Progress and Growth of National Income) 2) இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட மாதிரிப் படிவத் திற்கான பரிந்துரைகள், 3) இந்தியப் பொருளியல் திட்டங்களின் செயற்பாட்டு ஆய்வுக்கான (Operational Research) அணுகுமுறைகள்.

நாடு விடுதலை பெற்றபின்னர் மகலநோபிசு இந்தியாவின் பேராளராகப் பல பன்னாட்டு மாநாடு

கள், கருத்தரங்குகள், குழுக்கள் ஆகியவற்றில் பங்கேற்று நாட்டின் வளர்ச்சிப் பணிக்குத் தேவையான பன்னாட்டு ஒத்துழைப்பு, நிதியுதவி, தொழில்நுட்ப உதவி போன்றவற்றைப் பெற அரசுக்குப் பேரளவில் உதவினார். இந்தியத் திட்டக் குழுவின் அறிவுரையாளராக (Advisor to the Planning Commission) 1955-ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார்.

இந்திய இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படைத் திட்ட மாதிரியை (Plan Model) இவர் உருவாக்கினார். அது நான்கு துறை சார்ந்த பொருளியல் கணித வளர்ச்சி மாதிரி (Mathematical Growth Model) எனப்படுகிறது. இவரது கணித வளர்ச்சி மாதிரி, செயல்முறை ஆராய்ச்சிநுட்ப (Operational Research) அணுகு முறையைக் கொண்டது. இவர் 1952-இல் நாட்டு வருமானம், முதலீடு ஆகிய மாறிகளின் (Variables) அடிப்படையில் ஒரு துறை மாதிரியை முதன்முதலில் உருவாக்கினார். பின்னர் அதனை 1953 – இல் இரு துறை மாதிரியாக மாற்றியமைத்தார். அதில் நாட்டின் மொத்த உற்பத்தியை, முதலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் துறையும், நுகர்பொருட்களை உற்பத்தி செய்யும் துறையும் உற்பத்தி செய்கின்றனவெனக் கருதினார். அதனையே பின்னர் நான்கு துறை மாதிரியாக உருவாக்கி வழங்கினார்.

நாட்டில் பரவலாகக் காணப்படும் வறுமைச் சிக்கலை ஒழிக்கத் தேவையான பொருளாதாரக் கோட்பாடுகளை ஆராய்ந்து தன் திட்ட வளர்ச்சி மாதிரியை மகலநோபிசு உருவாக்கினார். அரிதான மூல வளங்களைப் பயன்படுத்தி நலப்பணிகளை எவ்வாறு செயற்படுத்துவது என்பதை அவர் தம் ஆய்வு முடிவுகள் விளக்க முயலுகின்றன. மகலநோபிசின் ஆய்வு அணுகுமுறைகளில் காணப்படும் கணிதவியல் சார்ந்த கருத்துருக்கள் (Concepts), அளவுகோல்கள் (Parameters), எடுகோள்கள் (Assumptions) போன்றவற்றில் தெளிவின்மை காணப்படுகின்றதெனக் குறைகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. எனினும் அவர் தம் ஆய்வு முடிவுகளும் வழிகாட்டல்களும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் சிறப்பான முறையில் தக்கவாறு அமையவும், பிற்காலத்தில் திட்டங்கள் பேரளவில் நுட்பமுறையில் வகுத்துச் செயற்படவும் வழிகாட்டியாக அமைந்தன என்றால் மிகையாகாது.

மகலநோபிசு நுட்ப அறிவுமிக்கவராயும், சொல்லிலும் செயலிலும் பண்பு மிக்கவராயும் விளங்கினமையால் உலகின் பல பகுதிகளிலிருந்தும் அவருக்குப் பணிகளும், பாராட்டுகளும் தகைமைப் பட்டங்களும் வந்து குவிந்தன. அவருடைய சிறந்த நாட்டுப் பணிகளைப் பாராட்டி இந்திய அரசு 1968-ஆம் ஆண்டில் நாட்டின் உயர்ந்த தகைமைச் சிறப்பு விருதான 'பத்ம விபூசண்' (Padma Vibhusan) என்னும் பட்டத்தை அளித்தது. மகலநோபிசு 1972-ஆம் ஆண்டு சூன் திங்கள் 28-ஆம் நாள் கல்கத்தா மாநகரில் மரணம் அடைந்தார்.

அ.கு.சா.

*மகவேற்பு:* ஒருவர் மற்றொருவருடைய மகனையோ மகளையோ தம் வழித்தோன்றலாக ஏற்கும் செயல் மகவேற்பு (Adoption) எனப்படும்.

**மகவேற்பு அல்லது தத்தெடுத்துக் கொள்வதற்கான நிபந்தனைகள்:** பின்வரும் பாங்கில் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலையிலன்றி எந்த மகவேற்பும் செல்லுபடியாகாது.அவை, 1)மகவேற்புச் செய்து கொள்பவருக்கு மகவேற்புச் செய்து கொள்ளத் தகுதியும் உரிமையும் இருக்க வேண்டும். 2) மகவேற்பு அளிப்பவருக்கு அங்ஙனம் மகவேற்பளிக்கத் தகுதி இருத்தல் வேண்டும். 3) மகவேற்புச் செய்து கொள்ளப்படும் குழந்தைக்கு மகவேற்புப் (Adoption) போகத் தகுதி இருத்தல் வேண்டும். 4) மகவேற்பானது, இந்து மகவேற்பு-வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம் 1956 – இன்படி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**மகவேற்புப் பெறத் தகுதியுள்ள ஆண் இந்துக்கள்:** அறிவு தன்வயமுள்ள–இளவர் அல்லாத வயது வந்த இந்து ஆண் எவரும், ஓர் ஆண் மகனையோ, பெண் மகளையோ மகவேற்புப் பெற உரிமையும் தகுதியுமுடையவராவார்.

இந்து ஆண் ஒருவர் ஓர் ஆண் மகனையோ, பெண்மகளையோ தத்தெடுத்துக் கொள்ளும்போது மனைவியோ, மனைவியர்களோ உயிருடன் இருந்தால் அவர்களது இசைவைப் பெறுதல் வேண்டும். மனைவி வாழ்க்கையைத் துறந்துவிட்ட நிலையிலும் சமயம்மாறிப் பிற சமயந் தழுவிய நிலையிலும், புத்தி சுவாதீனமற்றவர் என அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்ற நிலையிலும் அவன் அத்தகைய இசைவைப் பெறத் தேவையில்லை.

**மகவேற்பு அல்லது தத்தெடுத்துக் கொள்ளத் தகுதியுள்ள இந்துப்பெண்கள்:** பின்வரும் நிலையிலிருக்கும் ஓர் இந்துப்பெண் தத்தெடுத்துக்கொள்ளத் தகுதியுள்ளவளாக இருப்பாள். 1) அறிவு தன்வயமுள்ளவளாகவும், 2) வயது வந்தவளாகவும், 3) திருமணமாகாதவளாகவும், திருமணமாகியிருப்பின் சட்டப்படி மணமுறிவு செய்து கொண்டவளாகவும் கணவனை இழந்த விதவையாகவும் இருக்கும் பெண் தத்தெடுக்கத் தகுதியுள்ளவளாவள்.

கணவன் ஒருவன் உயிருடன் இருந்தும் அவன் இல்லற வாழ்க்கையைத் துறந்துவிட்டிருக்கும்போதும்

சமயம்மாறி பிற சமயந் தழுவியிருக்கும்போதும் அறிவு தன்வயமற்றவரென அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றபோதும் பெண்ணொருத்தி ஆண் மகன் ஒருவனையோ பெண்மகள் ஒருத்தியையோ தத்தெடுத்துக் கொள்ளலாம்.

**மகவேற்பளிக்க அல்லது தத்துக் கொடுக்கத் தகுதியுடையவர்கள்:** குழந்தையொன்றைத் தத்துக் கொடுக்க, அக் குழந்தையின் தந்தை, தாய் மற்றும் காப்பாளர் மட்டுமே தகுதியுடையவர்களாவார்கள். குழந்தை யொன்றைத் தத்தெடுத்துக் கொண்ட தாயோ தந்தையோ அக்குழந்தையை வேறு எவருக்கும் தத்துக் கொடுத்திடுதல் முடியாது.

தந்தை தாய் இருவரும் உயிருடன் இருந்து குழந்தையொன்றைத் தத்துக் கொடுக்கும்போது, குழந்தையைத் தத்துக்கொடுக்கும் உரிமை தந்தைக்கு மட்டுமே உண்டு.எனினும், அவன் தாயின் இசைவைப் பெறுதல் வேண்டும். தாய் இல்லற வாழ்க்கையைத் துறந்துவிட்ட நிலையிலும் சமயம்மாறிப் பிறசமயந் தழுவிய நிலையிலும் புத்திசுவாதீனமற்றவளென அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்ற நிலையிலும் அவன் அவளிடமிருந்து அத்தகைய இசைவைப்பெற வேண்டிய தேவையில்லை.

**மகவேற்பளிக்க அல்லது தத்துக் கொடுக்கத் தாய்க்குள்ள உரிமை;** குழந்தையின் தந்தை இறந்து விட்ட நிலையில் அல்லது முற்ற முழுமையாக இல்லற வாழ்க்கையைத் துறந்துவிட்ட நிலையில் அல்லது புத்திசுவாதீனமற்றவன் என அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்ற நிலையில் தாயொருத்தி குழந்தையொன்றைத் தத்துக்கொடுக்க உரிமையுடையவளாவாள்.

**மகவேற்பளிக்க அல்லது தத்துக் கொடுக்கக் காப்பாளருக்குள்ள உரிமை:** குழந்தை யொன்றின் தாய், தந்தை இறந்துவிட்ட நிலையிலும் இருவரும் முற்ற முழுமையாக இல்லற வாழ்க்கையைத் துறந்து விட்ட நிலையிலும், அவர்கள் அறிவு தன்வயமற்றவர்கள் என அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்ற நிலையிலும் காப்பாளர் ஒருவர் அதிகாரமுள்ள நீதிமன்றத்திடமிருந்து முன் அனுமதியைப் பெற்றுத் தான் அக் குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்ளவோ பிறருக்குத் தத்துக் கொடுக்கவோ செய்யலாம்.

**மகவேற்பு அல்லது 'தத்தேற்பு' — போகத் தகுதியுள்ளவர்:** பின்வரும் நிலையில் உள்ளவர்கள் சுவீகாரம் போகத் தகுதியுள்ளவர்களாவார்கள். சுவீகாரம் போகிறவர்கள், 1) இந்துவாக இருத்தல் வேண்டும், 2) முன்னரே தத்தெடுக்கப்பட்டவராக இருத்தல் கூடாது, 3) திருமணமானவராக இருத்தல் கூடாது, 4) பதினைந்து வயது நிறைவடைந்திருத்தல் கூடாது.

**மகவேற்பில் மேலும் சில வரையறை:** தாயோ தந்தையோ ஆண் குழந்தையொன்றைத் தத்தெடுத்துக் கொள்ளும் காலத்தில், குருதி உறவினாலோ மகவேற்பினாலோ வேறு எந்தஓர்ஆண் மகனையோ, மகனின் மகனையோ, மகளின் மகனின் மகனையோ உயிருடன் பெற்றிருத்தல் கூடாது.

தாயோ தந்தையோ பெண் குழந்தையொன்றைத் தத்தெடுத்துக் கொள்ளுங் காலத்தில் குருதி உறவினாலோ, தத்தெடுப்பினாலோ வேறு எந்த ஒரு பெண் மகளையோ, மகனின் மகளையோ உயிருடன் பெற்றிருத்தல் கூடாது.

**வயது நிலை:** தத்து எடுப்பவர் ஓர் ஆணாக இருந்து அவர் ஒரு பெண்ணைத் தத்தெடுப்பாராயின். அவர் அந்தப் பெண்ணைவிட 21 வயது மூத்தவராக இருத்தல் வேண்டும்.

தத்தெடுப்பவர் பெண்ணாக இருந்து அவர் ஓர் ஆண்மகனைத் தத்தெடுத்துக்கொள்வாராயின் அவர் அந்த ஆண்மகனைவிட 21 வயது மூத்தவராக இருத்தல் வேண்டும்.

ஒரே குழந்தையை இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டவர் ஒரே சமயத்தில் தத்தெடுத்துக் கொள்ளுதல் முடியாது.

**மகவேற்பு அல்லது தத்தெடுப்பில் நடைமுறை:** குழந்தையொன்றைத் தத்துக் கொடுக்கும் பெற்றோர் அல்லது காப்பாளர், 'தத்த ஓமம்' எனும் சடங்கை மேற்கொண்டு தத்தெடுத்துக் கொள்பவரிடம் குழந்தையை மாற்றிக்கொடுக்கும் எண்ணத்துடன்கொடுத்திடுதல் வேண்டும்,

'தத்த ஓமம்' இல்லாது மேற்கொள்ளப்படும் தத்தெடுப்பும் சட்டப்படி செல்லுபடியாகத் தக்கதேயாகும்.

தத்தெடுப்பு நடைமுறையில் ஆவணமெழுதிப் பதிவாளர் அலுவலகத்தில் அதைப் பதிய வேண்டும் என்ற கட்டாயமில்லை. விரும்பின் தரப்பினர்கள் அவ்வாறு ஆவணமெழுதிப் பதிந்து கொள்ளலாம்.

**மகவேற்பு அல்லது தத்தெடுப்பால் ஏற்படும் விளைவு:** சட்ட முறையில் ஏற்பட்ட தத்தெடுப்பு ஒன்றைத் தந்தையோ தாயோ வேறு எவருமோ நீக்கஞ் செய்திடுதல் இயலாது. தத்தெடுப்பு மூலம் வந்த குழந்தை, தத்தெடுப்பு நாள் தொடக்கத்திலிருந்து தத்தெடுத்த தாயையும் தந்தையையும் தன்னுடைய சொந்தத் தாயும் தந்தையுமாகக்

கொண்டொழுகுவதால், அது தத்தெடுக்கப்பட்ட இடத்திலிருந்து தன் உறவுகளை அறுத்துக்கொண்டு பழையபடி தான் பிறந்த இடத்திற்குச் செல்லுதல் இயலாது.

குழந்தை யொன்றைத் தத்தெடுக்கும் காலத்தில் தத்தெடுப்பவர் மறுபயனாக எந்தத் தொகைகளை யும் பொருட்களையும் கொடுக்கவோ, எதிர்காலத் தில் கொடுப்பதாக உறுதியளிக்கவோ கூடாது. தத் துக் கொடுப்பவரும் எந்தத் தொகைகளையும் பொருட்களையும் பெறவோ, பெற்றுக் கொள்வதாக இசைவளிக்கவோ கூடாது. சட்டம் விதிக்கும் இந்த நிபந்தனைகளை மீறுவோர், ஆறு திங்கள் வரை நீடிக்கக் கூடிய கால அளவுக்குச் சிறைத் தண்டனை அல்லது தண்டவிதிப்பு அல்லது அவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்கள். பு.வே.

**மகளிர் விடுதலை இயக்கம்:** நாகரிகம் மிகவும் சிறந்துவந்த பண்டைக் காலத்தில் பெண்கள் சமூகத்தில் மிகவும் சிறப்புடையவர்களாகக் கருதப் பட்டனர். கலை. இலக்கியம், மொழி ஆகியவற்றின் வரலாறுகள் பெண்டிர் எவ்வாறு சிறந்திருந்தனர் என்பதை உணர்த்துகின்றன. பண்டைத் தமிழகத்தில் நிலவிய அரசுகட்குப் பின் ஆண்ட அரசுகள், அவற்றின் தாக்கங்கள், சமயப் பண்பாடுகள், மற்றும் பலவகைச் சமூகப் பழக்க வழக்கங்கள், தாக்கங்கள் ஆகியவற்றி னால் உயர்ந்திருந்த பெண்டிர் நிலை தாழத் தொடங் கியது. ஆங்கிலேயர் ஆட்சியில் பெண்டிர் விழிப் புணர்வு விடுதலையுணர்வு மெல்லத் தளிர்விட்டு வளர்ந்தது. இந்திய சமூக நலப் பெரியோர்களால் மேன்மேலும் வளர்க்கப்பட்டுப் புது மெருகு கண்டது.

மேலை நாட்டுத் தாக்கத்தால் கி.பி. 1888-ஆம் ஆண்டு, கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் மூலம் இரு பெண்டிர் பட்டம் பெற்றனர். இருபது ஆண்டு களில் 177 பெண்டிர் கலையியல் பட்டமும், 87 பேர் தொழிற்பட்டமும் பெற்றனர். இவ்வாறு இரு பெண் பட்டதாரிகளால் உண்டான விழிப்புணர்வால் பெண் களுக்கென்றே ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று எண்ணிய அறிஞர் கார்வே, பம்பாயில் பெண்களுக் கான பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவிப் பெண் விடு தலையை வளர்த்தார்.

பெண்கள் எழுத்தறிவு கி.பி. 1891-ஆம் ஆண்டு அரை விழுக்காடாக இருந்தது. அது பெண் கல்வி எத்துணை அளவிற்கு மிகவும் பின்தங்கியிருந்தது என்பதைச் சுட்டுகின்றது. எழுத்தறிவு வீதம் கி.பி. 1891 – ஆம் ஆண்டு முதல் 1931 வரை எவ்வாறு மிகமிகக் குறைவாக முன்னேறியுள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. ஆனால்,

**பெண்டிர் எழுத்தறிவு வளர்ச்சி(கி.பி.1891-1941)**

| ஆண்டு | மக்கள் | ஆடவர் | பெண்டிர் |
|---|---|---|---|
| 1891 | 6.1 | 11.4 | .5 |
| 1901 | 6.2 | 11.5 | .7 |
| 1911 | 7.0 | 12.6 | 1.1 |
| 1921 | 8.3 | 14.2 | 1.9 |
| 1931 | 9.2 | 15.4 | 2.4 |
| 1941 | 15.1 | 27.4 | 6.9 |

அதே சமயத்தில் ஆடவர் எழுத்தறிவு வீதம் குறிப்பிடத் தக்க அளவில் பெண்களை விட மிகுந்து வந்துள்ளது. அக்காலச் சூழ்நிலையில் எழுத்தறிவு வேண்டும் என்ற எண்ணம் பெண்டிரிடம் பரவாத காரணத்தாலும், சமுதாயம் பெண்டிர் முன்னேற்றத் தில் மிகுந்த அக்கறை காட்டாத தன்மையாலும், பெண்டிரை ஊக்குவிக்கும் முனைப்பாடு இல்லாத காரணத்தாலும் பெண்டிரிடம் எழுத்தறிவு வளர்ச்சி பெருகவில்லை. இவ்விதமாக எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய நிலைதான் பெண்டிரைச் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் வைத்தது.

கீழ்க்காணும் அட்டவணை நாட்டு விடுதலைக்குப் பின்னர்ப் பெண்டிர் அடைந்த கல்வி எழுத்தறிவின் நிலையை விளக்கும்.

**கல்வி எழுத்தறிவு நிலை**

| ஆண்டு | ஆடவர் | பெண்டிர் | மக்கள் |
|---|---|---|---|
| 1961 | 34.40 | 12.90 | 24.20 |
| 1971 | 39.41 | 18.44 | 24.88 |
| 1981 | 46.74 | 24.88 | 36.00 |

இந்திய விடுதலைக்குப் பின்னர் 1961-ஆம் ஆண்டு 12.90 ஆக இருந்தது. 1981-இல் ஏறக்குறைய இரு மடங்காக உயர்ந்துள்ளதை அறியலாம். ஆடவர், பெண்டிர் ஆகிய இரு பிரிவினர் பாலும் எழுத்தறிவுத் தன்மை உயருவதால் நாட்டின் எழுத்தறிவு வீதம் மிகுவதைக் காணலாம். பெண்களை விட ஆண்களின் எழுத்தறிவு வீதம் மிகுந்து வருகிறது. ஏனெனில், ஆண்களின் மனித வளம் வேளாண்மை மற்றும் கட்டு மான வேலைகளில் பயன்படுத்தப்படுவதைக் காண லாம். எனவே தான், ஆண்களின் கல்வி மனித வளம் நிறைந்து காணப்படுகிறது.

| மனித வளமும் வேலைப் பங்கீடும் | | | | |
|---|---|---|---|---|
| பிரிவு | இந்தியா | | தமிழ்நாடு | |
| | ஆடவர் | பெண்டிர் | ஆடவர் | பெண்டிர் |
| வேளாண்மை மற்றும் கட்டுமான உற்பத்தி வேலைகள் | 63.30 | 79.40 | 55.00 | 75.90 |
| வீட்டு வேலைகள் மற்றும் பிற வேலைகள் | 36.70 | 20.60 | 45.00 | 24.10 |

ஆண்களின் மனித வளத்தை விடப் பெண்களின் மனித வளமே பெரும்பாலும் இந்தியநாட்டளவிலும், தமிழ் நாட்டளவிலும் வேளாண்மை மற்றும் கட்டு மானஉற்பத்தி வேலைகளில் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.இவ்வாறு பெண்டிரின் மனித வளம் பெரும் பாலும் வேளாண்மை மற்றும் கட்டுமான வேலை களில் பயன் படுத்தப்படுவதால் எழுத்தறிவின்மை பெருகுகிறது. இவ்வகைப் பிரிவினை மேம்பாடு அடையச் செய்வதற்கென்றே முதியோர் கல்வித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசும் மாநில அரசும் சமூக சேவை நிறுவனங்களும் இவ் வகைப் பிரிவினருக்கென்றே பலவகைத் திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றன.

பெண்களின் எழுத்தறிவு நிலை 1971, 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி குறைந்திருத்தலைக் காணலாம். பெண்டிரின் எழுத் தறிவு நிலை 1971-ஆம் ஆண்டு 26. 36 ஆக இருந்தது. 10 ஆண்டுகளில் 34. 12 ஆக உயர்ந்துள்ளது. இவ் வுயர்வு நிறைந்த அளவில் இல்லை என்பது குறிப் பிடத் தக்கது. பெண்டிரின் எழுத்தறிவு நிலை உய ராத வரை உண்மையான விடுதலையை அடையவில் லை என்று கருதலாம். மிகுதியான பெண்களின் மனித வளம் வேளாண்மையிலும் கட்டுமானம் போன்ற பிறவற்றிலும் பயன்படுவதால் கல்வித் துறையில் குறைந்து விடுகிறது. ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் சம உரிமைகள், சமவாய்ப்புகள் அளிக்கப்பட்டபோதிலும் பெண்கள் விடுதலை இன்னும் முழுமையாக ஏற்பட வில்லை. எந்த ஒரு நாட்டின் கல்வி மேம்பாடும் பொது மேம்பாடும் ஒன்றோடொன்று மிகவும் இணைந் துள்ளன என்பதை இந்திய நாட்டு ஆராய்ச்சிகளும் பன்னாட்டு ஆராய்ச்சிகளும் சுட்டுகின்றன.

பண்டைத் தமிழகத்தில் பெண்டிர் நிலை உயர்ந் திருந்தமை புத்த சமணச் சார்புடைய இலக்கியங்கள் மூலமாகப் புலப்படுகிறது. தமிழர் பண்பாடு, நாகரி கம் ஆகியவற்றில் வேற்று மொழி, இனம், சமுதாயம், நாகரிகம் போன்றவற்றின் தாக்கங்கள் மிகுந்தமை யாலும், பெண்களிடையே விட்டுக் கொடுக்கும் மனப் பான்மை பெருகி இருந்ததாலும், 'அடுப்பூதுதல் பெண் டிர் தொழில்' என்ற கண்மூடித்தனமான போக்கும், 'அடுப்பூதும் பெண்டிர்க்குப் படிப்பெதற்கு' என்ற பயனில் மொழிகளும் வேரூன்றத் தொடங்கியதாலும் பெண்டிர் நிலை தாழ்ந்தது. மனுவின் கூற்றுப்படி பெண்டிர் பிறப்பு முதல் இறப்புவரை பெற்றோர்க் கும், துணைவர்க்கும், குழந்தைகட்கும், சார்ந்துள் ளோருக்கும் வெவ்வேறு காலங்களில் அடிமையாக இருக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். பெண் டிர்க்கு மேன்மேலும் சமுதாயக் கட்டுப்பாடுகள் மிகுந்தன. அவர்கட்கு இருந்த சமஉரிமைகள் சிறிது சிறிதாகப் பறிக்கப்பட்டன. சொத்து உரிமைகள், திருமணச் சுய உரிமைகள், விதவை மறுமணம் போன்ற உரிமைகள் சிறிது சிறிதாக நீக்கப்பட்டன.

அறிஞர் இராதாகிருட்டிணனின் 'பெண்கள் கல் லாத நிலை இருக்கும் வரை கற்றறிந்த மாந்தர் என்று எவரையும் குறிப்பிட முடியாது. பொதுக் கல்வி என்று ஒரு பிரிவினர்க்கு மட்டும் ஒதுக்கப் படு மேயானால், அது பெண்கட்கு என்று மட்டும் ஒதுக்கப் பட வேண்டும். அப்பொழுதுதான் சமுதாயம் முன் னேறும்; அப்பொழுதுதான் முன்னேற்றம் அனைவர்க் கும் பொதுவில் ஏற்படும்' என்னும் பொன்மொழிகள் எக்காலத்தவர்க்கும், எந்நாட்டவர்க்கும், எச் சமயத்தவர்க்கும் பொருந்தும். அவ்வாறே சீனப் பழமொழியும், பெண்டிர் கல்வி நலன் பற்றிக் குறிப்

| மக்கள் எழுத்தறிவு நிலை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | தமிழகம் | | | இந்தியா | | |
| | ஆடவர் | பெண்டிர் | மக்கள் | ஆடவர் | பெண்டிர் | மக்கள் |
| 1971 | 51.76 | 26.36 | 34.40 | 39.41 | 18.44 | 24.88 |
| 1981 | 57.19 | 34.12 | 39.46 | 46.74 | 24.88 | 36.00 |

பிடுகிறது. ஓர் ஆண் கல்வி கற்றால் தனியாள் முன்னேற்றம் ஏற்படுகிறது. ஆனால், ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பமே முன்னேறுகிறது. எனவே, ஆண் கல்வியைவிடப் பெண் கல்வி இன்றி யமையாததாகக் கருதப்பட்டு ஊக்கப்படுத்தப் படவேண்டும்.

பெண்கள் மேம்பாடு அடைதல் வேண்டும். அப் பொழுதுதான் சமுதாயம் மேம்பாடு அடையமுடியும். பண்டைத் தமிழர் பண்பாடு, ஆங்கிலேய ஆட்சியின் தாக்கத்தால் இன்று மீண்டும் புத்துயிர் பெற்றது. அதன் மூலம் தான் குழந்தை மணம், உடன்கட்டை யேறல்,பல பெண்களை மணத்தல், சீதனக் கொடுமை போன்ற சமுதாயப் பிணிகளிடமிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வு தோன்றி யது. இராசாராம் மோகன் ராய் போன்ற பல பெரி யோர்கள் பெண்கள் விடுதலை பெற வழிவகுத்தனர்; பெண் கல்வி மூலம்தான் அப்பிணிகளைப் போக்க முடியும் என்று ஆய்ந்து, பெண் கல்வி மேம்பாடு அடையச் செய்யப் பெரிதும் முயன்றனர்; ஓரளவு வெற்றியும் கண்டு பெண்களின் விடுதலை வேட் கையை எழுப்பி, அனைவரும் உணரச் செய்தனர். இவ்வாறு சிறிது சிறிதாகப் பெண்கள் விடுதலை பற்றி ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, பெண்கள் முன்னேற்றம் ஏற்பட அடிகோலியது. தங்கள் உரிமைகளைப் பெறப் போராடவும் பெண்கள் தயார் என்ற மறுமலர்ச்சி தோன்றியது. அவ்வகையில்தான் அனைத்துலகப் பெண்கள் ஆண்டாக 1975-ஆம் ஆண்டு கொண்டா டப்பட்டு உலகளாவிய கருத்து உருவாக்கப்பட்டது. பெண்கள் முன்னேற்றத்திற்காக ஐக்கிய நாடுகள் அவையில் தீர்மானம் கொண்டு வரப் பெற்று, பெண் கள் விடுதலை பெற வழிவகைகள் செய்யப்பட்டுச் செயல்கள் தொடங்கப்பட்டன. ஆண் பெண் வேறு பாடுகளைக் களையவும், பெண்கள் மேம்பாடு அடையச் செய்யவும், வீடு, நாடு,மற்றும் உலக அமை தியில் பெண்கள் பங்கு பெறவும் வழிவகைகள் காணப்பட்டன.

இன்றைய உலக மக்கள் தொகையில் ஏறத்தாழ 50 விழுக்காட்டிற்குமேல் பெண்டிர் மக்கள்தொகை யாகும். பெண்டிர் விடுதலை பற்றிய இத்துணை முயற்சிகட்குப் பின்னரும், இந்திய நாட்டில் மட்டு மன்றி, வளர்ந்து வரும், முன்னேறியுள்ள நாடு களிலும்கூடப் பெண்கட்கு முழு உரிமை தரப்பட வில்லை. அவர்கள் நிலை பின்னுக்குத் தள்ளப்பட் டுள்ளது. பெண்களின் பெண்ணியல் உரிமைகள் காக் கப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் மூன்று கருத்துகள் முகிழ்த்துள்ளன. அவையாவன: 1) அடிப் படைப் பெண்ணியல் (Radical Feminism), 2) சமத் துவப் பெண்ணியல் (Socialistic Feminism), 3) நடுத் தரப் பெண்ணியல் (Moderate Feminism).

சமுதாயம் பால் அடிப்படையில் பகுக்கப்பட்டுள் ளது. பாலினப் பாகுபாட்டின்படி பெண்கள் ஆண் களுக்கு அடிமைப்பட்டுள்ளனர். ஆண்கள் பெண்களை விட உயர்ந்தவர்கள் என்பது தொன்றுதொட்டு வரும் சமுதாயமரபுவழிஎன்றுகூறுகிறது. அடிப்படைப்பெண் ணியல். பெண்கள் பெண்மை என்ற தளையினின்று எப்பொழுது விடுபடுகின்றதோ அப்பொழுதுதான் முழு விடுதலை பெற முடியும் எனவும் கூறுகிறது. இப் பெண்மை என்ற தளை நீங்கும் வரை ஆண்மையின் மேலாதிக்கத்தைப் போக்குவது இயலாது எனவும் கூறுவர். அக்கொள்கை, ஆண்மை பெண்மை என்ற பால் பாகுபாடு இல்லாமலிருந்தால்தான் பெண் களின் தாழ்வுநிலை அகலும் என்றும் கூறுகிறது. இந் நிலை இயலுவதன்று. எனினும், ஆண் பெண் என்ற பாகுபாடு அற்ற சமுதாயத்தைக் காண்பது நல்ல நோக்கமாகும்.

சமத்துவப் பெண்ணியல் கொள்கை, பெண் களைத் தாழ்த்தும் நிலையுடைய குடும்பங்களில் இருந்துதான் தொடங்குகிறது என்றும், குடும்பத்தில் உள்ள தனிப்பட்ட பெருஞ் சொத்துகளால்தான் சிக்கல்கள் உருவாகின்றன என்றும், அதனால்தான் பெண்கள் சொத்துரிமை பறிக்கப்பட்டு உரிமை அற்ற வர்களாக ஆக்கப்படுகின்றனர் என்றும் கூறுவர். எனவே,சொத்துரிமை, தனியுடைமை ஆக்கப்படாமல், நாட்டுடைமை ஆக்கப்பட்டால் சமத்துவம் நிலவும் என்றும், ஆண் பெண் என்ற வருக்க பேதம் அகற்றப் படும் என்றும் கூறுவர். எனவேதான் சமதரும நாடு களில் மற்ற நாடுகளைவிடப் பெண்ணுரிமை மிகுதி யும் பாதுகாக்கப்பட்டுள்ளது எனவும், மற்ற நாடு களில் அந்த அளவிற்குப் பெண் விடுதலை பெற வில்லை எனவும் குறிப்பிடுவர். அக்கூற்றுகளில் ஓரளவு உண்மை உள்ளது எனினும், உண்மையான முழுமை யான விடுதலை சமதரும நாடுகளிலும் பெறப்பட வில்லை என்பது தெளிவு.அச் சமதரும நாட்டுப் பெண் கள் கூட்டத்தில் பேசிய சோர்படுகல் (1987) 'எந்த ஒரு நாட்டின் முழுச் சுதந்திரத்தையும் அளவிடும் ஒரு சாதனம், பெண்களின் நிலையை, விடுதலையை அளவிடும் அளவீடுதான் என்றும், அதன் மூலம்தான் மனித உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப் படுகின்றன என்பதை அறிய முடியும்' என்றும் கூறினார். சோவியத்து நாட்டுப் பெண்கள் வாழ்வு பற்றி நடத் திய ஆய்வு முடிவுகள், பெரும்பாலும் பெண்களே மணவிலக்கைக் கேட்டுப் பெறுகின்றனர் எனவும் கணவன்மார், பெண்டிரின் ஆர்வங்களை மதிக்காத தன்மையும், குடிப்பழக்கமும் தலையாய காரணங்கள்

எனவும் குறிப்பிடுகின்றன. அம் மணவிலக்குக்குப் பின் நிகழும் திருமணங்களும் நிலைப்பதில்லை என்றும் குறிப்பிடுவர். ஏறத்தாழ 7,00,000 உருசியக் குழந்தைகள் மணவிலக்கால் பாதிக்கப்பட்டுப் பெரும்பாலும் தாய்மார்களுடன் வாழ்கிறார்கள். அவ்வாறு மணவிலக்கினால் பாதிக்கப்படும் குழந்தைகள் பெரும்பாலும் தத்தம் தாய்மார்களுடன் வாழ்கின்றனர் என்பது உலகெங்கணுமுள்ள செய்தியாகும். இத்தகைய சமதருமப் பெண்ணியல் கொள்கைக் கிணங்கப் பொருளாதார வல்லுநர் கோசாகோவ் (Kossakov) 'பெண்கள் தங்கள் தொழில், குடும்பம் ஆகிய இரண்டையும் சிறப்பாகக் கவனிக்கும் வகையில் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிடுவார்.

நடுத்தரப் பெண்ணியல், பெண்களின் தாழ்வு நிலை, பண்பாடு,உளவியல் காரணிகள் ஆகியவற்றால் அமைவது என்பது மரபுவழியாக வளர்ந்ததொன்றாகும். எனவேதான், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த சமுதாயப் புரட்சிகளில் பங்கேற்கப் பெண்கள் அழைக்கப் பட்டனர். கல்வியறிவு பெற்ற பெண்களும் பெறாத பெண்களும் ஆண்களுடன் நிறைந்த அளவில் பங்கேற்று நாட்டின் அடிமைத் தளையைப் போக்கினர். நாட்டின் அடிமைத் தளையை அகற்றிய பெண்களுக்கு முழு விடுதலை வழங்கச் சமுதாயம் முன்வர வேண்டும்.

அனைத்துத் துறை அறிவியல் ஆய்வுகளும் பெண்ணினம் உடலாலும் உள்ளத்தாலும் ஆடவர்க்குச் சிறிதும் சளைத்ததன்று என்று சுட்டுகின்றன. ஆணினத்தை விடப் பெண்ணினம் தாழ்ந்தது என்பது இயற்கைக்கு மாறாக வளர்க்கப்பட்ட சமுதாய அநீதியாகும். உலகளாவிய நாடுகளில் பெண்களினம் சமூகப் பொருளாதார வசதிகள் பெற வாய்ப்புகள் அளிக்கப்பட்ட போதிலும் முழு உரிமைகள், சம உரிமைகள் இன்றும் பெறவில்லை.

இத்தகு சூழ்நிலைகளில், வளராத, வளர்ந்து வரும், வளர்ந்திட்ட நாடுகளில் பெண்ணினம் இன்னும் சமஉரிமைகளைப் பெறவில்லை. இச்சம உரிமைகளைப் பெறுவதற்கு ஆணின வருக்க பேதம், அடக்கு முறைவாதம், புரையோடிப்போன பழக்க வழக்கங்கள், சாதி சமய ஏற்றத் தாழ்வுகள், சீதனக் கொடுமை ஆகியவை தடைக் கற்களாக இருந்து வருகின்றன. 'பெண் கல்வி' என்ற ஒரே வழியின் மூலமே, நல்ல உணர்வுகளை வளர்த்து, வேறுபாடுகளை அகற்றிப் பெண்விடுதலை பெறமுடியும். பெண் கல்வி பற்றித் தேசிய குழு குறிப்பிட்டது போன்று, பெண்களை விழிப்புணர்வுடன், திறன் மிக்க புதுமைப் பெண்டிராக மாற்றுவதே கல்வியின் தலையாய பணி என்று உணர்ந்து, பெண் கல்வியைப் போற்றி வளர்த்து, சமூக, பொருளாதார, அரசியல், ஆகிய அனைத்து முடிவு எடுத்தல் நிலைகளிலும் சம உரிமைகளைப் பெண்கள் அடையச் செய்யும் அன்றுதான் பெண் விடுதலை முழுமையடையும். எஸ்.மோ.

**மகாகாவியம்**: மிகவும் தொன்மை வாய்ந்த இலக்கிய வகைகளுள் மகாகாவியம் ஒன்று. இது பழம்பெருங்கதையைக் கவிதை நடையில் கூறும் பேரிலக்கியம். இது இலக்கியக் கலைக்குரிய நுட்பங்களையும் நயங்களையுங் கொண்டு சிறந்து விளங்குகிறது.

மகாகாவியம் முதன்முதலில் வீரயுகத்தில் தோன்றியதாகத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். அந்தக் காலத்தில் இணையற்ற உடல் வலிமையும் அழகும் பெருமிதத் தோற்றமும், வீரமும், வள்ளன்மையும் வாய்ந்த ஒருவன் ஏனையோரினும் செல்வாக்குடையவனாக விளங்கினான். அவன் தனிப்பட்ட பெருமையைக் குறித்துப் பலரும் பெரிதும் புகழ்ந்து பாராட்டலாயினர். கவிஞர் அவனுடைய அரும்பெருந் தன்மைகளைப் பல பாடல்களாகப் பாடினர். நாளடைவில் அப்பாடல்கள் இணைக்கப் பெற்றுக் கதைவடிவங்களாகத் தோன்றி முடிவில் மகாகாவியங்களாக உருப்பெற்றன. அவை தொடக்கத்தில் வீர உணர்ச்சியையும் மேலாண்மைத் தன்மையையும் தம் முதன்மையான பண்புகளாகக் கொண்டு தோன்றின. பின்னர்த் தோன்றிய காவியங்களில் செயற்கைக் கூறுகள் ஊடுருவலாயின.

தண்டியலங்காரம் மகாகாவியத்தைப் பெருங்காப்பியம் எனக் குறிப்பிடுகிறது. அப்பெருங்காப்பியம் வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் ஆகியவற்றுடன் தொடங்கும்; அறம், பொருள்,இன்பம்,வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களையும் வலியுறுத்தும்; தன்னிகரில்லாத் தலைவனைப் பெற்றிருக்கும்; மலை, கடல், நாடு, நகர்,பருவங்கள் ஆகியவற்றையும் கதிரவன், சந்திரன் ஆகியவற்றின் தோற்றத்தையும் அவைபற்றிய வருணனைகளையும்கொண்டிருக்கும். திருமணம் புரிதல், முடிசூடுதல், சோலையின்கண் நீர்விளையாடல், புதல்வரைப் பெறுதல், ஊடல் கொள்ளுதல், சிற்றின்பம் நுகர்தல் முதலியவற்றையும் புனைந்துரைக்கும்; அரசவை, அமைச்சு, தூது, படையெடுத்தல், போர் புரிதல், வெற்றி ஆகியவற்றையும் விளக்கும்.

கதை நிகழ்ச்சிகள், பாத்திரங்கள் ஆகியவை மகாகாவியத்தின் முக்கிய கூறுகள் ஆகும். தண்டியலங்காரத்தில் பெருங்காப்பிய இலக்கணத்தின் ஒரு சில நிகழ்ச்சிகள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், கதை, பாத்திரங்கள் பற்றிய இலக்கணம் அதில் இடம்பெறவில்லை. தன்னிகரில்லாத் தலைவன் எனத் தலைவனைப்பற்றி மட்டும் குறிப்பிடுகிறது.

ஒரு நாட்டில் பன்னெடுங்காலமாகச் செவி வழக்காக வழங்கிவரும் கதையே காப்பியக் கதையாகக் கொள்ளுதற்குரியது. இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, சூளாமணிபோன்ற தமிழ்க் காவியங்களின் கதைகள் நெடுங்காலமாக இந்திய நாட்டில் வழங்கிவந்தவையாகும். தமிழ்க் காவியங்களில் மட்டுமன்றி உலகக் காவியங்கள் அனைத்திலும் இத்தகைய பழங்கதைகளே அமைந்திருத்தலைக் காணலாம். பல தலைமுறைகளாக ஒரு நாட்டில் வழங்கி வரும் கதையில் ஆழ்ந்த மனித அனுபவங்கள் நிறைந்திருக்கும். அக்கதையில் அந்நாட்டின் பண்பாடு இடம்பெற்றிருக்கும். அக்கதை பலருக்கும் தெரிந்திருப்பினும் அதைப் படிக்குந்தோறும், கேட்குந்தோறும் அதன்பால் ஈடுபாடு ஏற்படும். அதற்குக் காரணம் நாட்டின் சீரிய பண்பாடு அதில் நிறைந்திருத்தலேயாகும்.

கதையை விளக்குதற்குப் பல நிகழ்ச்சிகள் காவியத்தில் அமைந்திருக்கும். அந்நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் கதையைப்போலப் பழைமையானதாக இருத்தல் வேண்டும் என்பதில்லை. அந்நிகழ்ச்சிகள் கற்பனையாகவும் இருக்கலாம். கதையை இடத்திற்கேற்பப் பொருத்தமுற விளக்குவதே காவிய நிகழ்ச்சிகளின் தலையாய செயலாம்.

காவியங்களில் அவற்றின் முதன்மையான கதைகளோடு ஆங்காங்கே கிளைக்கதைகளும் இடம்பெறுகின்றன. அக்கிளைக் கதைகள் சீரிய நோக்கங்கள் உடையவை. சில கிளைக் கதைகள் காவியக் கவிஞரின் கொள்கைகளை வலியுறுத்துவனவாயிருக்கும்; சில நீதியை உணர்த்தும்; சில முதன்மைப் பாத்திரங்களுக்குப் பின்னர் நேரப்போகும் விளைவை உணர்த்தும். முதன்மைப் பாத்திரங்களின் சிறப்பியல்பைச் சில கிளைக் கதைகள் குறிக்கும்.

காவியத்திற்கு மிகவும் உயர்வும் பொலிவும் தருவன பாத்திரங்களேயாகும். அப்பாத்திரங்கள் காவியத்திற்குப் பொருத்தமானவையாகவும், எண்ணிக்கையில் மிகுதியாகவும் பல்வேறு திறத்தனவாகவும் இருக்கும். வெறும் கதையையும் நிகழ்ச்சிகளையும் மட்டும் கூறிச் செல்வது சுவை பயக்காது. காவியத்தின் பல்வகைத் திறனும் வாழ்க்கை உண்மையும் பாத்திரங்கள் ஒன்றோடொன்று நாடகப்பாங்கில் சந்திப்பதனாலேயே தோன்றுவனவாகும்.

தண்டியலங்காரத்தின் பெருங்காப்பிய இலக்கணம் குறிப்பிடும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப்பொருள்களுக்கேற்ப மகாகாவியங்களில் நிலைபேறுடைய பல உண்மைகளும் உயர்ந்த கருத்துகளும் பொருந்தியுள்ளமையைக் காணலாம். அவ்வுண்மைகளும் கருத்துகளும் அக்காவியங்களுக்குத் தனிச் சிறப்பை நல்கி, அவை என்றும் நிலைத்திருக்கும் தன்மையைத் தருகின்றன. தா.ஏ.ஞா.

**மகா சங்கிகா:** இச்சொற்றொடரின் பொருள் மகா சங்கத்தைச் (மாபெரும் அவையை) சார்ந்திருத்தல் என்பது ஆகும். பௌத்த சமயத்தின் மிகத் தொன்மையான குழுக்களில் ஒன்று கி.மு. 3 – ஆம் அல்லது 4-ஆம் நூற்றாண்டில் இப்பெயரால் வழங்கப் பட்டது.

புத்தர் பரிநிருவாணம் அடைந்த ஆண்டிலிருந்து நூறு ஆண்டுகட்குப் பின் இரண்டாம் பௌத்தப் பேரவை வைசாலி நகரில் கூடியது. முதற் பேரவை புத்தர் பரிநிருவாணம் அடைந்த ஆண்டில், அதாவது கி.மு. 487 – இல் இராசகிருகம் நகரில் கூடிப் புத்தரின் போதனைகளை மூன்று தொகுதிகளாகத் தொகுத்தது. இரண்டாம் பேரவை கூட்டப் பட்டதன் நோக்கம் பௌத்த சங்கத்தைச் சார்ந்த துறவிகள் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய நெறிமுறைகளைப் பற்றித் தோன்றிய கருத்து வேற்றுமைகளைக் களைவதாகும். வைசாலியைச் சார்ந்த துறவிகள் குறிப்பாகப் 'பத்து நடைமுறை'களைக் கூறி அவை பௌத்தத் துறவிகளால் பின்பற்றத் தக்கவை என்று அறிவித்தனர்.

அப்பத்து நடைமுறைகளில் சில பின்வருவன: –

1) புளிக்காத கள் பருகத் தக்கது. 2) பொன்னையும் வெள்ளியையும் துறவிகள் ஏற்கலாம். 3) துறவிகள் பாய்களில் படுத்து உறங்கலாம். இரண்டாம் பேரவை இவற்றைக் குறித்துத் தருக்கம் நடத்தியது. நிறைந்த எண்ணிக்கையில் துறவியர் இதில் பங்கேற்றனர். எட்டுப்பேர் கொண்ட துறவிகள் குழு ஒன்று இறுதியாகத் தீர்ப்பு வழங்குவதற்காக நிறுவப் பட்டது. அவர்களுள் வைசாலியைச் சேர்ந்த சப்பகாமி என்பவரும், இரேவதர், யசர் என்ற மற்றிருவரும் குறிப்பிடத் தக்கவர்கள். நீண்ட வழக்கெதிர் வழக்குகளுக்குப் பின் வைசாலித் துறவிகள் கூறிய 'பத்து நடைமுறைகள்' புத்தர் அருளிய 'வினய பிடகம்' என்ற நூலுக்கு முரணானவை என்று அறிவிக்கப் பட்டது. அம்முடிவை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பௌத்த சங்கத்தினின்று பிரிந்து சென்று தனிச்சங்கம் அமைத்தனர். அவர்கள் தம்மை 'மகா சங்கிகள்' (உண்மையான பேரவையினர்) என்று கூறிக் கொண்டனர். பிற்காலத்தில் மகாயான பௌத்தம் என்ற பௌத்த சமயப் பிரிவு ஏற்படுவதற்கு இத்தகைய அவை ஒரு தொடக்கக்கட்டமாக அமைந்தது. இம்மகாசங்கமும் பிற்காலத்தில் பல உட்பிரிவுகளாகப் பிரிந்தது. பி.வி.

**மகா சதிக்கல்:** காண்க: நடுகல்.

**மகாசாசனம்** இங்கிலாந்தில் கி.பி. 1215 – இல் மன்னனால் கையொப்பமிடப்பட்ட, மன்னனைக் கட்டுப்படுத்தும் ஒரு மாபெரும் பட்டயம். மகா சாசனம் (The Great Charter) எனப்படும் இப்பட்ட யத்தை ஏற்றுக் கொண்டு கையொப்பமிட்ட மன்னர் சான் (John) ஆவார்.

இங்கிலாந்தில் கி.பி. 1199 முதல் 1216 வரை சான் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் கொடுங் கோல் ஆட்சியாளராகவும் திறமையற்றவராகவும் இருந்தார். அவருடைய பலக்குறைவைப் பயன் படுத்திப் பிரபுக்கள் வளர்ச்சியுற்றனர். இங்கிலாந் தின் அரசியலமைப்பு வளர்ச்சியில் இவருடைய ஆட்சிக்காலம் முக்கிய இடம் பெற்று விளங்குகிறது.

சான் மன்னரின் திறமையற்ற கொடுங்கோல் நிறைந்த ஆட்சியைக் கண்ணுற்ற பிரபுக்களும், திருச்சபை ஊழியர்களும் ஒன்றுகூடி, சான் மன்ன ரைக் கி.பி. 1215-ஆம் ஆண்டு சூன் மாதம் 15-ஆம் நாள் தேம்சு நதிக்கரையில் இரன்னிமீடு (Runnymede) என்ற திடலில் சந்தித்துத் தங்கள் வேண்டு தல்களை முன்வைத்தனர். அதில் கையெழுத்திடுமாறு அரசரை வற்புறுத்தினர். அதற்குச் சில நாள்களுக்கு முன்னர்த்தான், மன்னர் சான் ஐரோப்பிய வரலாற் றில் திருப்புமுனையாய் அமைந்த போர்களில் ஒன்றான 'பூவைன்சு'ப் போர்க்களத்தில் பிரான்சு மன்னர் பிலிப்பு அகசுட்டசு (Philippe Augustus) என்பாரிடம் படுதோல்வியுற்றுத் திரும்பி இருந்தார். சானின் தோல்வியைப் பிரபுக்கள் பயன்படுத்திக் கொண்டனர். மறுப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்த சான் சாசனத்தில் கையெழுத்திட்டார். அதுவே பெரும்பட்டயம் (Magna Carta) ஆகும். அது ஆங்கிலநாட்டு மக்களின் உரிமைகளைக் காத்த ஒன் றாகும்.

இந்தப் பெரும் பட்டயத்தில் அறுபத்து மூன்று உட்பிரிவுகள் உள்ளன. அதில் நான்கு, பன்னிரெண்டு, பதினான்கு, முப்பத்தி ஒன்பது, நாற்பது போன்ற உட்பிரிவுகள் மிக்க சிறப்புப் பெற்று இங்கிலாந்து அரசியல் அமைப்பு வரலாற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்தின. காண்க: மாபெரும் பட்டயம். செ.ஐ.

**மகா சிவராத்திரி:** காண்க: சிவராத்திரி.

**மகாத்மா காந்தி:** காண்க: காந்தியடிகள்.

**மகாதேசி சிந்தியா(கி.பி.1773 – 1794):** பானிப் பட்டுப் போரில் கி.பி. 1761-இல் மராட்டியர் ஆங்கி லேயரிடம் தோல்வியுற்ற பின் மராட்டியப் பேரரசில் நான்கு தலைவர்கள் முதன்மையிடம் பெற்றனர். அவர்கள் 1) இந்தூர் நகர் ஒல்கார், 2)குவாலியர் நகர்-சிந்தியா, 3. நாக்பூர் நகர்-பான்சுலே, 4. பரோடா நகர் கெய்க்குவார் என்பவர் ஆவர். அவர் கள் பேசுவாவைத் தலைவராக ஏற்றுக்கொண்டா லும் தனியரசர்கள் போலவே நடந்து வந்தனர்.

மராட்டிய மாவீரர் மகாதேசி சிந்தியா குவாலி யர் நகரின் தலைவர்; மூன்றாம் பானிப்பட்டுப் போரில் (கி.பி. 1761) முன்னின்று போரிட்டுக் காலில் காயமடைந்தவர். மேலைநாட்டுப் போர் முறையையும் வடஇந்தியாவில் மராட்டியர் செல் வாக்கின் இன்றியமையாமையையும் உணர்ந்தவர். தம் நாட்டு எதிரிகளும், வஞ்சகர்களும், ஆங்கிலே யரும், அச்சம் அடையும் அளவிற்குக் குவாலியர் அரசின் செல்வாக்கை வளர்த்தவர். தம்படை களுக்குக் 'கவுண்ட்டு டீ பொய்ன்'(Count De Boigne) என்ற பிரான்சு வீரரைக்கொண்டு பயிற்சி அளித்தார்.

வார்கான் (கி.பி.1779) உடன்படிக்கைப்படி ஆங்கிலேயர்கள் மகாதேசிசிந்தியாவின் இறைமையை ஏற்றுக் கொண்டு புரோச்சுப் பகுதியில் ரூ 4100க்கு வரி வாங்கும் உரிமையை அவருக்கு அளித்தனர். ஆனால், முதல் ஆங்கிலேய-மராட்டியப் போரின் விளைவாக உருவாகிய 'சால்பை உடன்படிக்கையால் (கி.பி. 1782) ஏற்பட்ட ஆங்கிலேயரின் வளர்ச்சியை அவரால் தடுக்க இயலவில்லை. ஆங்கிலேயர்களைத் தம்மால் கட்டுப்படுத்த இயலாது என்று அறிந்தவுடன் தம் செல்வாக்கை முகலாய அரண்மனையிலும் (கி.பி. 1789) இராசபுதனத்திலும் (கி.பி. 1791) விரிவுபடுத் தினார். சட்லசு நதிக்கு அப்பால் சீக்கியர்களையும் தம் செல்வாக்கு மண்டலத்தில் கொண்டுவர முயன் றார். இவரது இராசபுதனப்படையெடுப்பிற்கு பிரெஞ்சுத் தளபதி 'தி பொய்ன்' உதவி செய்தார்.

மற்றொரு மராட்டியத் தலைவர் நானாபட் னாவிசு திப்புவுடன் போரிட்ட போது மகாதேசி தம் உதவியை அளிக்க முன்வந்தபோது அவர் மறுத்து விட்டார். பூனாவில் மீண்டும் பேசுவாவை முக லாயர்களின் பேராளராக அறிவிப்புச் செய்யப் பெரும் விழா ஒன்று எடுத்தார் (கி.பி. 1792). வட இந்தியாவில் மகாதேசியின் செல்வாக்கைக் குறைக்க நானாபட்னாவிசு இந்தூரின் மன்னரான துக்கோசி ஒல்காருடன் சேர்ந்து எடுத்த முயற்சி பலனளிக்க வில்லை. பூனாவில் கி.பி. 1794 -இல் மகாதேசி காலமா னார்.

இராபர்ட்சு (Roberts) என்ற வரலாற்று ஆசிரியர் மகாதேசியை ஒரு சிறந்த அறிவுக் கூர்மையுடைய மனிதர் எனச் சிறப்பிக்கின்றார். இவர் அக்காலக் குழப்பமான அரசியல் சூழ்நிலைகளில் தமக்கெனத் தனிப்பாதையை வகுத்துக் கொண்டார். மராட்டியக் கூட்டு அரசில் இருந்த குவாலியரைச் சுதந்திர அரசாக மாற்ற விரும்பினார். இவர் மற்றொரு

மராட்டியத் தலைவரான நானா பட்னாவிசுடன் ஒத்துழைத்திருந்தால் அல்லது நானா இவருடன் ஒத்துழைத்திருந்தால் மராட்டிய அரசு ஒரு பலமுள்ள அரசியல் சக்தியாக விளங்கியிருக்கும். அவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையும் பிற குறைகளும் மராட்டியர் ஏற்றம் பெறுவதைத் தடுத்து விட்டன.

முதல் ஆங்கிலேய-மராட்டியப்போர் முடியும் வரை (கி.பி. 1782) மகாராட்டிரப் பொது நலனுக்குப் பாடுபட்ட மகாதேசி, கி.பி. 1782-க்குப் பிறகு குவாலியரின் பெருமைக்குப் பாடுபட்டார்.

அவர் வெற்றிக்கு அவரது இராணுவத் தலைமையும் வாரன் ஏசுடிங்சுவின் அரசியல் நெருக்கடிகளும், காரன்வாலிசின் தலையிடாக் கொள்கைகளும் காரணமாயின. அ.வெ.பெ.

மகாதேவ மலை: பாரதப் பெருநாட்டில் சிறப்புடன் விளங்கும் தெய்வத் தலங்கள் பலவாகும். தேவர்களுக்கெல்லாம் முதல்வனாகவும் முழு முதற் கடவுளாகவும் விளங்கும் சிவபெருமான் 'மகாதேவர்' என்ற திருப் பெயருடன் மலைமீது கோயில் கொண்டு விளங்கும் திருத்தலம் 'மகாதேவ மலை' எனப்படும்.

**அமைவிடம்**: இம்மலை வட ஆர்க்காடு மாவட்டம் குடியேற்றம் வட்டத்திலுள்ள கீழ் வழித்துணையாங் குப்பத்திற்கு அருகிலுள்ள காங்குப்பம் சிற்றூரின் வடக்கிலுள்ளது. மேலும், பாலாற்றுக்கு வடக்குப் பகுதியிலும் அமைந்துள்ளது. சென்னை, பெங்களூர் இருப்புப் பாதை வழியில் மேல் காவனூர் தொடர்வண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ. வடக்கில் அமைந்துள்ளது.

**கோயில்**: மலையடிவாரத்தில் இருந்து ஏறத்தாழ 305 மீட்டர் உயரமுடைய மலையுச்சியில் கோயில் அமைந்துள்ளது. யானையின் மேல் அம்பாரி அமைந்திருப்பதுபோல் மலையின்மேல் கோயில் அமைந்துள்ளது. சுவர்கள் கருங்கற்களாலும், கோபுரங்கள் சுட்ட செங்கற்களாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்டுள்ளன. கோயிலைச் சுற்றி மதிலும் மேற்கில் நுழைவாயிலும் அமைந்துள்ளன. சிவபெருமான் இலிங்கவடிவில் 'மகாதேவர்' என்ற திருப்பெயரில் காட்சி தருகிறார். இந்த இலிங்கம் இயற்கையாகவே தோன்றியதாகவும் அடிப்பீடம் மட்டும் செதுக்கிப் பொருத்தப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இக்கோயிலின் முன் ஒரே கல்லில் 'நந்தி' ஒன்று படுத்திருக்கும் நிலையில் செதுக்கப்பட்டிருக்



மகாதேவமலை

கிறது. சிவபெருமான்கோயிலுக்குச் சற்று வடமேற்கில் அம்மன் திருக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் 'காமாட்சியம்மன்' என்ற திருப்பெயருடன் அடியவர் களுக்கு அருட்காட்சி தருகிறார். சிவன் கோயிலுக் குப் பின்புறத்திலும் அம்மன் கோயிலுக்குத் தென் புறத்திலும் விநாயகர் திருக்கோயிலும், முருகன் வள்ளி தெய்வானையுடன் வேலேந்தி மயில் மீதில் கோலங்கொண்டு காட்சி கொடுக்கும் திருக்கோயி லும் அமைந்துள்ளன.

சிவன் கோயிலின் முன் மண்டபத்தின் தென் கிழக்குப் பகுதியில் 'சமய குரவர் நால்வர்' எனப் போற்றப்படுகின்ற சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வருக்கும் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோயில் நுழைவாயிலுக்குச் செல்லும்படிகளின் கீழ்ப் பகுதியில் ஓர் இணைபாதங் கள் உள்ளன. ஒரு சிவராத்திரி நாளில் இறைவன் கோயிலுக்கு வெளியே வந்து வணிகன் ஒருவனுக்கு காட்சி தந்தார் எனவும், அதன் அடையாளமாகப் பாதங்கள் அமைந்து விட்டன எனவும் தலபுராண வரலாறு கூறுகிறது. அவ்விடத்தில் வட்டெழுத்து களால் ஆன கல்வெட்டு ஒன்று பாறையில் செதுக்கப் பட்டுள்ளது.

இம்மலையில் மூன்று பெரிய சுனைகளும் பல சிறிய சுனைகளும் ஒரு குகையும் உள்ளன. அதில் சூரியன் பார்க்காத சுனை ஒன்று பெரிய குன்று ஒன்றினால் மூடப்பட்டுச் சூரிய ஒளி படாமல் இருப்பது வியப்பிற்குரியதாகும்.

மலையடிவாரத்திலிருந்து கோயிலுக்குச்செல்ல, சமாதியடைந்த தவத்திரு தேவானந்த சுவாமிகள் பெரு முயற்சியால் சீரிய முறையில் ஏறத்தாழ 800 படிகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இடை இடையே ஐந்து சிறிய மண்டபங்களும் மலையின் மேல் பதினாறுகால் மண்டபம் ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளன. இம்மலையில் பிணிகள் பல தீர்க்கும் மூலிகைகள் பல உள்ளன. மலையடிவாரத்தில் உள்ள குளத்தில் மழைக்காலங்களில் மட்டும் நீர் தேங்கி நிற்கும். இம்மலைமீது விமானம் மூலம் விதைகளைத் தூவி காடு வளர்க்கும் பணி வனத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு நவக்கிரக சந் நிதியும் உள்ளது. ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் தவத்திரு தேவானந்த சுவாமிகளின் உருவச் சிலை உள்ளது. அவர் பயன் படுத்திய பொருட்களும் காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மலைக்கோயிலில் ஒவ்வொரு நாள் காலையும் மாலையும் இறைவனுக்குப் பூசைகள் நடைபெறு கின்றன. மக்கள் மாதந்தோறும் கார்த்திகை நாளில் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர். இம் மலையில் ஆடிக் கார்த்திகைப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. அது தவிர நவராத்திரி, சிவராத் திரி விழாக்களும், நிறைமதி நாள் தோறும் பூசையும் நடைபெறுகின்றன. இலட்சார்ச்சனைப் பெருவிழா 1987-ஆம்ஆண்டு முதல் ஆங்கிலப்புத்தாண்டு நாளன்று நடைபெறுகிறது. திருக்கழுக் குன்றத்தில் கழுகுகள் பகல் பொழுதில் வருவது போலவே இம்மலையிலும் நண்பகல் பொழுதில் இரு வெண்ணிறக் கழுகுகள் வந்து கோயிலைச் சுற்றிச் செல்கின்றன. அதைக்காண் பது நல்ல அறிகுறியாகக் கருதப்படுகிறது.

முற்காலத்தே முத்துதாசர் என்ற சான்றோர் ஒருவரால் ஓலைச் சுவடியிலிருந்து படி எடுக்கப் பட்ட 507 விருத்தப் பாக்களில் அமைந்த மகாதேவ மலைப் புராணத்தைத் தவத்திரு தேவானந்த சுவாமி கள் நூல் வடிவில் 1955- ஆம் ஆண்டில் வெளியிட் டார். இம் மலைக்கு வேலூர், குடியேற்றம் ஆகிய நகரங்களிலிருந்து பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

அ.கா.

**மகாதேவன், டி.எம்.பி.:** தொடர் தத்துவ மானது உலகின் வேறெந்தப் பகுதியையும் விட இந்தி யாவில் சிறப்பாகவும் இடைவெளி இல்லாமலும் சிந் தனையிலும் செயலிலும் விளங்கிவருகின்றது. அது, சமயத்திற்கும், அறிவியலுக்கும், உடலுக்கும், மனத்திற் கும், உணர்ச்சிகளுக்கும் ஆளுமையின் உயர் பண்புகளுக்கும் இடையே, ஓர் இரு வழிப் பாதையை உருவாக்கியுள்ளது. புதிய ஐரோப்பிய சிந்தனையில் உள்ளதைப்போலப் போதாமை என்ற எண்ணமோ, விலக்க நடைமுறைகளினால் ஏற்படும் மனவுளைச் சலோ குறிப்பிட்ட மதிப்பீடுகளைத் தாழ்த்துவது அல்லது மறுப்பது போன்றவையோ இந்தியத் தத்து வத்தில் இல்லை. ஆன்மாவின் வலிமைகளைத் துணைக்கழைப்பதன் மூலம் இருநிலை நோக்குமுறை தொடர்ந்து வலிவற்றதாக்கப் படுகிறது. இதனால் நிலைத்து நிற்கும் சமாதானம், அல்லது தொடரும் சாந்தி ஆகியவற்றின் இரகசியம் மனிதனிடமிருந்து எப் பொழுதும் விலக்கப்படுகிறது. எனவே, உயர்நிலை உண்மையின் முழுமையான பார்வை இழுக்கப்பட வில்லை. இம்மரபின் வழி வந்தவர் டாக்டர் மகா தேவன் ஆவார்.

டாக்டர் மகாதேவனின் கல்விப்பணியும், தத்துவ நிலையும், 'அறிவு முதிர்ச்சியும் தத்துவச் செயல்முறையும் ஒன்றிணையக் கூடியவையே' என் னும் கருத்துக்கு உயிரூட்டக் கூடியவை.

இவர் 1911-ஆம் ஆண்டு பிறந்தார். சென்னையில் இராமகிருட்டிண சங்கம் நடத்தும் உயர்நிலைப்



டி.எம்.பி. மகாதேவன்

பள்ளியில் பயின்றார். இவர் சிறு வயதிலிருந்தே இராமகிருட்டிணர் வழிவந்த சமயப் பரப்புநர்களின் தாக்கத்திற்கு ஆட்பட்டார். மேலும் இராமகிருட்டிணரின் நேரடி ஆன்மிகப் பயிற்சியைப் பெறும் அரும் பேறு பெற்றார். இவருக்கு இந்து சமயத்தின் அடிப்படையான வேதங்களும், உபநிடதங்களும், பகவத் கீதையும் கற்பிக்கப்பட்டன. அப்பொழுதே இவர் அந்த வேதங்களின் உட்பொருட்களால் ஈர்க்கப்பட்டார். ஆன்மிகச் செய்திகளில் குறுகிய எண்ணத்திலில்லாமல் விடுதலையையும், நடைமுறை வழக்கங்களில் முடங்காமல் தெய்விக வாழ்க்கையின் வற்புறுத்துதலையும், உலக மக்கள் அனைவருக்குமான நம்பிக்கைச் செய்தியையும் அப்புத்தகங்களில் இவரால் காண முடிந்தது. அவ்விளம் பருவத்திலேயே சங்கரரின் பெயர் அவருக்குக் கவர்ச்சி மிக்கதாக இருந்தது. பின்னர், தம்முடைய பிற்காலத்தில் அந்தப் பெரும் தத்துவவாதி குறித்து ஒரு கட்டுக்கோப்பான ஆய்வினை நிகழ்த்தினார். அறிவு முறையாகவும் உணர்ச்சி முறையாகவும் சங்கரரின் 'அத்துவைத வேதாந்தம்' இவர் மனத்தை ஈர்த்தது.

மகாதேவன் தம் மேற்படிப்பினைச் சென்னை மாநிலக்கல்லூரியிலும் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்றார். இவர் 1933-ஆம் ஆண்டு தத்துவத்திற்கான இளங்கலைப்(சிறப்பு) பட்டத்தை முதல் வகுப்பில் முதல் தரத்தில் பெற்றார். அதற்கு இவர் சாமுவேல்சத்தியானந்தன் தங்கப் பரிசினைப் பெற்றார். பட்டப்படிப்பை முடிப்பதற்கு முன் இவர் சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கும் செருமானிய மொழிப் பட்டயத்தைப் பெற்றார். இவர் 1933-இல் தம் சிறப்புப் (Hons.) பட்டத்தைப் பெற்ற உடனேயே, சென்னைப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறைக்குப் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் சிறப்பாகப் பணிபுரிந்த பேராசிரியர்எசு.எசு. சூரியநாராயண சாத்திரியின் கீழ் டாக்டர் பட்ட ஆய்விற்குச் சேர்ந்தார். ஆய்வுரை 1936-ஆம் ஆண்டு அளிக்கப்பட்டு 1937-ஆம்ஆண்டில் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. அப்பட்டம் பெறுமுன், மகாதேவன் தென்னிந்தியாவில் உள்ள புதுகோட்டை மகாராசா கல்லூரியில் 'தருக்கவியல்' துறை விரிவுரையாளராக ஆகிவிட்டார். இவர் 1937-இல் அப்பதவியிலிருந்து நீங்கிச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தத்துவத்துறை இணைப் பேராசிரியராகச் சேர்ந்து 1940-இல் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் ஆகி 1949 வரை கல்லூரிப் பணிபுரிந்தார்.

பின்னர், மகாதேவன் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றுத் தொடர்ந்து அப்பதவியிலிருந்து வந்தார். அப்பொழுதிலிருந்தே இவரது கல்விப் பணி விரிவடைந்து உலகளாவி வளர்ந்துநின்றது. இவர் 1948 – இல் இதாகாவிலுள்ள கார்னெல் பல்கலைக்கழகத்தில் இந்தியத் தத்துவம் குறித்து உரையாற்றினார். கொலம்பியாப் பல்கலைக்கழகம், தெக்சாசுப் பல்கலைக்கழகம் அரோராவிலுள்ள வெல்சுக் கல்லூரி, வாசிங்டனிலுள்ள அனைத்து நாடுகள் மாணவர் இல்லம், இலாசு ஏஞ்சல்சிலுள்ள நகரமன்றம், சான்பிரான்சிசுகோவிலுள்ள உலக நடப்புகள் அமைப்பு, இராமகிருட்டிணா சங்கத்தின் பல்வேறு மையங்கள், இந்துசுத்தான் கூட்டமைப்பின் பல்வேறு பிரிவுகள் ஆகிய இடங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் பேசினார்.

சார்லட்சுவில்லெ எனுமிடத்தில் உள்ள வர்சினியாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அமெரிக்கத் தத்துவக் கூட்டமைப்பு-கிழக்குப் பிரிவின் ஆண்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு 1948-திசம்பரில் உரையாற்றினார். இவர் 1949 மே 29 – ஆம் நாள் பெர்க்லி கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில், பார்சுபர் அடிப்படைச் சொற்பொழிவாக, 'உயிரின் அழியாமை' பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். மகாதேவன் 1947 சூலையில் கொலராடோ ஆசுபெனில் நடைபெற்ற கதே பட்டமளிப்பு விழாவில் ஆர்வார்டு பேராசிரியர் ஆக்கிங்குத் தலைமையில், 'கிழக்கு, மேற்குச் சிந்தனை' என்ற தலைப்பில் பேசினார்.

இரண்டாம் கிழக்கு மேற்குத் தத்துவ அறிஞர்கள் ஆய்வுக் கூட்டம், அவாய்ப் பல்கலைக்கழகத்தில்1949 சூன் 20 முதல் சூலை 29 வரை நடத்தப்பட்டது. இந்தியாவிலிருந்து மகாதேவன் இம்மாநாட்டில்

கலந்து கொள்ள அழைக்கப்பட்டார். இந்தியத் தத்துவம் பற்றிய கணக்கெடுப்பு நடத்தி, கருத்தரங்குகளிலும் குழுப்.பேச்சுகளிலும் கலந்துகொண்ட இவர், 'இந்தியத் தத்துவத்தில் சமூக, நீதி, ஆன்மிக மதிப்பீடுகளின் அடிப்படை' என்ற தலைப்பில் உரையாற்றினார். இவர் மீண்டும் மூன்றாம் கிழக்கு மேற்குத் தத்துவ அறிஞர்கள் மாநாட்டில் 1959 - இல் கலந்து கொண்டார். இவர் நிகழ்ச்சி அமைப்பாளராக அதில் பணியாற்றினார். காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் 'தவத்திரு அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் சிவஞான சித்தியார்ச்சொற்பொழிவு'களை 1953-இல் நிகழ்த்தினார். இவர் இந்தியாவிலுள்ள மாபெரும் சமய ஆய்வுமன்றம் என்ற அமைப்பின் உட்புறச் செயலராக விளங்கினார். இவர் 1955 – இல் பெங்களூரிலும் 1956 – இல் சென்னையிலும் நடத்திய, அகில இந்தியக் காங்கிரசுச் சொற்பொழிவுகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. தருமபுரம் ஆதீனத்தின் 25-ஆம் தலைவராகிய கயிலை தவத்திரு. சுப்பிரமணியதேசிக ஞான சம்பந்த பரமாசாரியரால் டாக்டர் மகாதேவனுக்கு, 'வேதாந்த வித்தகர்' என்ற பட்டம் வழங்கப் பெற்றது. காசி வித்யா பீடத்தினால் 1961 திசம்பரில் நடத்தப்பட்ட அகில பாரதிய தருண பரிசத்திற்குத் தலைமையேற்றார்.

'இரண்டல்லாத உயிரே முழு உண்மையானது; நாமே அதுவாக இருக்கிறோம் என்று கூறப்படும் அழியா உண்மைக்கு இரமணர் போன்ற ஆசிரியர்கள் சாட்சியாக உள்ளனர்' என்பது இவர்தம் கருத்து. டாக்டர் மகாதேவனின் வரையறைப்படி அத்துவைதமானது உண்மையைப் புரிந்துகொள்ளச் செய்யப்படும் எந்த முயற்சிக்கும் முரண்பட்டதன்று; அது முழு அனுபவத்தின் அல்லது வரையறையற்ற புரிதலின் தத்துவம். மேலும், அது இனம் அல்லது நிறம், சூழ்நிலை அல்லது நாடு ஆகிய வேறுபாடுகளை அறிவதில்லை. சங்கரரின் மேலுள்ள தம் பக்தியின் காரணமாக, அவருடைய சிந்தனைகளை, பல்வேறு ஆன்மிகக் கொள்கைகள் மூலம் பரப்ப டாக்டர் மகாதேவன் சென்னையில் சங்கரருக்கு ஒரு கோயில் கட்டியுள்ளார்.

ஆனால், இயற்கையாக எதிர்பார்க்கப்படுவது போலவே மகாத்மா காந்தி, டாக்டர் மகாதேவனின் வாழ்க்கையில் ஓர் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தினார். காந்தி அகிம்சைத் தத்துவத்தைத் தமக்கே உரிய பாணியில் சமூக அரசியல் நிகழ்வுகளில் பயன்படுத்திய பாங்கு மகாதேவனைக் கவர்ந்தது. இவருக்குக் காந்தியிடம் மிகவும் பிடித்தது அவரது உண்மைக்கான இடைவிடாத் தேடல் ஆகும். டாக்டர் மகாதேவன் பின்வருமாறு எழுதியுள்ளார். 'நான், நியூயார்க்கு ஐந்தாம் தெரு அல்லது தைம்சுச் (Times) சதுக்கத்தில் நடந்து செல்லும்போது அங்குள்ள வானளாவிய கட்டடங்கள் அல்லது வாங்கும் கூட்டங்கள், உந்து வண்டிகள் ஆகியவற்றினால் வியப்படையாமல் போக முடிகின்றது என்றால், மேலும் வாழ்க்கையில் விடுமுறையைக் கழிப்பவர்கள், சூரியக்குளியல் புரிபவர்களைத் தாண்டி நீலக்கடல் நீரையும் வெள்ளை நுரையையும் வைர எதிரொளியையும் காணமுடிகிறதென்றால் அதற்கெல்லாம் காரணம், இந்தியாவில் 'காந்தியடிகள் மக்களைத் தங்களது பண்டைய ஆன்மிகக்குறிக்கோளுக்குத் தட்டி எழுப்பியதே ஆகும்'.

டாக்டர் மகாதேவனின் பெரிய மனிதர்களின் நட்பிற்கான விருப்பம் அவர் தமது துறையான தத்துவத்தின் மேலுள்ள ஆர்வத்திற்கு ஈடானதாகும். அவர் தம்நிலையில் சரியாக நின்று கல்லூரியில் தத்துவக் கல்வியைத் தேர்ந்தெடுத்தார். இவருக்கு இயல்பாகவே தத்துவத்தின்பால் ஓர் ஈர்ப்பு இருந்தது. 27 ஆண்டுகளுக்கு முன்பு, தம் மாணவர்களுக்குச் சற்றும் வேறுபாடில்லாத வயதில் பேராசிரியரான மகாதேவன் அன்றிலிருந்து இறுதிவரை தம் மாணவர்களின் அன்பிற்கும் உற்சாகத்திற்கும் உறைவிடமாகவே இருந்துவந்தார்.

டாக்டர் மகாதேவன் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணனின் சொற்களில் மிகவும் ஆர்வம் உள்ளவர். இந்தியத் தத்துவத்திற்காகவும், அத்துவைதத்திற்காகவுமே தம்மை ஒப்படைத்த இவர் 5-11-83-இல் காலமானார்.

சுபா. இரா.

**மகா நதி**: இந்தியத் துணைக் கண்டத்தில் தக்காணப் பகுதியில் பாய்கின்ற பேராறுகளில் மகாநதி ஒன்றாகும். இந்த ஆறு மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்ந்து வங்கக்கடலில் கலக்கின்றது. இப்பேராறு மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள பசுதார் குன்றுகளில் (இராய்ப்பூர் மாவட்டம்) தோன்றுகிறது. கிழக்குச் சட்டிசுகார் மேட்டு நிலங்களில் இருந்து வருகின்ற நீர் அனைத்தும் இவ்வாற்றுக்கு வந்து சேருகின்றது. இந்தஆறு தொடக்கத்தில் சிறிது தொலைவு வடதிசை நோக்கி ஓடுகின்றது. சிவநாத்து ஆறு இதனுடன் கலக்குமிடத்தில் இவ்வாறு கிழக்குத் திசையில் திரும்புகின்றது. திரும்பும் இடத்தில் பலோடாபஜார் என்னும் சிற்றூர் உள்ளது. இதன் பின்னர் இந்தஆறு ஒரிசா மாநிலத்தில் நுழைகின்றது. இந்தப் பகுதியில் இருபக்கங்களிலும் குன்றுகளைக் கொண்ட பள்ளத்தாக்கு வழியே செல்லுகின்றது. இக்குன்றுகளில் பொழியும் நிறைந்த அளவிலான மழைநீர் இவ்வாற்றில் சேருகின்றது. சம்பல்பூர் என்னுமிடத்தில் இவ்வாற்றின் குறுக்கே இராகுட்டு அணை கட்டப்பட்டுள்ளது. சம்பல்பூர் நகரைத்

தாண்டியபின் இவ்வாறு சற்றுத் தெற்கே திரும்பிக் கிழக்குத் தொடர்ச்சி மலைகளினூடே பாய்கின்றது. பின் மீண்டும் கிழக்கு நோக்கித் திரும்பிக் காடுகள் அடர்ந்த பகுதி வழியே சென்று கட்டாக்கு, பூரி நகரங்களைத்தாண்டி 'திவி முனை' என்ற இடத்தில் கடலில்கலக்கின்றது.

இந்த ஆற்றின் மொத்த நீளம் ஏறத்தாழ 570 கி.மீ. ஏறத்தாழ 1,32,000 சதுர கி.மீபரப்பளவுள்ள நிலம் இந்த ஆற்றின் வடிநிலம் ஆகும். மழை அதிகம் பெய்யும் பகுதிகள் வழியாகச் செல்வதால் இவ்வாற்றில் தண்ணீர் மிகுதி. சிற்சில சமயங்களில் நிமிடத்திற்கு 4,860 க.மீ. தண்ணீருக்கும் அதிகமாகவே இவ்வாற்றில் பாய்கின்றது. இந்திய ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் மிக அதிக அளவில் வண்டல் மண்ணைச் சுமந்து செல்லும் ஆறு இதுவே.

இந்த ஆற்றின் கழிமுகத்தில் கட்சுரி என்ற இடத்தில் ஒரு பழைய அணை உண்டு. மகாநதியின் துணை ஆறான பிருபாவில் சாந்த்வார் என்ற இடத்தில் ஓர் அணை உள்ளது. சிறு அணைத்திட்டங்கள் படி அவ்விருஅணைகளால்ஒரிசா மாநிலத்தில் பூரி, கட்டாக்கு மாவட்டங்களில் இரண்டு இலட்சம் ஏக்கருக்கும் அதிகமான பகுதியில் பாசனம் செய்யப் படுகின்றது. ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாகச் சம்பல்பூருக்குச் சற்றுக் கிழக்கே இவ்வாற்றின் குறுக்கே ஒரு பெரும் புதிய பலநோக்கு அணை கட்டப்பட்டுள்ளது. கல், மண் இவற்றைக்கொண்டு கட்டப்பட்ட இவ்வணை இவ்வகையில் உலகிலேயே மிகநீளமானது. இவ்வணையினால் தேக்கப்படும் நீர் ஏறத்தாழ 50 கிலோமீட்டர் நீளத்துக்கு ஒரு செயற்கை ஏரியை உண்டாக்கியுள்ளது. நீர்ப்பாசனத்துக்கு மட்டுமன்றி இவ்வணை மின் உற்பத்திக்கும் பயன் படுகின்றது. இவ்வணையிலிருந்து பாயும் நீர் விசையினால் உற்பத்தி செய்யப்படும்மின்னாற்றல் 2,70,000 கிலோவால்டு ஆகும். இவ்வணை இராகுட்டு அணை என்று பெயர் பெற்றது. ஒரிசா மாநிலத்தின் வேளாண்மைச் செழிப்புக்கு இவ்வாறே காரணம் என்பது உண்மை.

இந்தியாவின் இரு முக்கிய நகரங்கள் இவ்வாற்றின் கரையில் அமைந்துள்ளன. ஒரிசா மாநிலத்தின் தலைநகர் கட்டாக்கு பெரும் புனிதத்தலமான பூரி என்பவை அவை. பூரியில் அமைந்த சகந்நாதர் ஆலயம் உலகப் புகழ்பெற்றது. செ.ஐ.

**மகாநாமன்:** இலங்கை வரலாற்றில் மகாநாமன் என்ற பெயரில் இருவர் இடம் பெறுகின்றனர். மன்னர் மகாநாமன் என்பவர் ஒருவர். அதே பெயருடைய அவர் சிற்றப்பன் (அல்லது மாமன்) மற்றொருவர்.

மன்னர் மகாநாமன், இலம்பகருண (நீண்ட காது?) அரச மரபினைச் சேர்ந்தவர். இவர் ஆட்சிக் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. ஏறத்தாழ கி.பி. 412-இலிருந்து 428 வரை எனக் கோட்ரிங்டன் (H.W.Codrington) வரைகின்றார் (இலம்பகருண அரச வமிசம் கி.பி. 248-இலிருந்து கி.பி. 428-ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஆண்டு வந்தது). மகாநாமன் ஆட்சியின்போது தென்னிந்தியாவிலிருந்து பாண்டியர் படையெடுப்பு இலங்கை மீது நிகழ்ந்தது. மன்னர் மகாநாமன் தலைநகர் அனுராதபுரத்தை விட்டு ஓடி இலங்கையின் தென்பகுதியில் உள்ள உரோகண மலைகளில் ஒளிந்துகொண்டார். மன்னர் மகாநாமன், பிற இலங்கை மன்னர்களைப் போலவே, புத்த மதத்தில் பற்றுக்கொண்டவர். இவர் ஆட்சிக்காலத்தில் புகழ்பெற்ற புத்த சமயப் பெரியார் புத்தகோசர் என்பவர் இந்தியாவினின்று இலங்கைக்கு வருகை தந்தார். பாலி மொழியில் உள்ள பௌத்த புனித நூல்களுக்கு அவர் சிங்கள மொழியில் உரைகள் எழுதினார். புத்த கோசர் மகாநாமனால் ஆதரிக்கப்பட்டார் என்று கொள்ளுவது தவறாகாது (புத்த கோசரின் மற்றொரு நூல் விசுத்திமார்க்கம்). இலங்கையில் புத்த சமயத்தின் ஒரு பிரிவான ஈனயானம் நிலை பெற்றதற்குப் புத்தகோசரின் பரப்புதல் காரணமாகும்.

**துறவி மகாநாமன்:** இலங்கையின் வரலாறு கூறும் மகாவமிசம் என்ற நூலின் ஆசிரியர் இவரே. மன்னர் மகாநாமனின் நெருங்கிய உறவினர்.

மகாவமிசம் நூல் கற்பனைகள் மிகுந்தது; நம்பத்தகாதது என்று புகழ் பெற்ற இந்திய வரலாற்று ஆசிரியர் வி.ஏ சுமித்து முதலில் கருதினார். பிற்காலத்தில் தம் கருத்தினை அவர் மாற்றிக்கொண்டார். துறவி மகாநாமன் கி.பி. 5-ஆம் அல்லது 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம்.

கீகர் என்னும் ஆராய்ச்சியாளர் மகாவமிசத்தை நுணுகி ஆராய்ந்து அதில் பல வரலாற்றுச் செய்திகள் உள்ளன என்று அறிவித்தார். இலங்கையின் வரலாற்றுக்கு மட்டும் அன்றி வட இந்தியாவின் வரலாற்றுக்கும் பயன்படும் பல செய்திகள் அதில் உள்ளன. மகாவமிசம், பிற்கால அரசர்கள் பலரது ஆணையினால் தொடர்ந்து எழுதப்பட்டு கி.பி.18-ஆம் நூற்றாண்டு மன்னர்களுடன் முடிகின்றது. பி.வி.

**மகாபரிநிருவாண சூத்திரம்:** இது பாலி மொழியிலமைந்த புத்த சமய நூல். இது நிருவாண

நிலையை அடைவதைப் பற்றிய மாபெரும் சமய நூலாகும். மோட்ச நூல், சுவர்க்க நூல் என்ற பெயர்களாலும் இந்நூல் போற்றப்படுகிறது. புத்த சமயத்தின் நூல்களுள் தலையானவை மூன்று பிடகங்கள். அவை முறையே விநய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என்பன. பிடகம் என்ற சொல் 'தொகுப்பு' என்று பொருள்படும். வினய பிடகம், புத்த துறவிகள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைக் கூறுவது. சுத்த பிடகம் புத்தரின் பல்வேறு சொற்பொழிவுகளின் தொகுப்பு. அபிதம்ம பிடகம் சில குறிப்பிட்ட செய்திகளைப் பற்றிய விரிவுரைகள் கொண்டது. இவை அனைத்தும் பாலி மொழியில் உள்ளன. ஒவ்வொரு பிடகமும், 'நிகாயங்கள்' என்ற உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுத்த பிடகத்தினுள் அடங்கிய நிகாயங்களில் திக நிகாயம் ஒன்று ஆகும். இந்நிகாயத்தில் புத்தரின் நீண்ட சொற்பொழிவுகளுள் 34 உள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது மகாபரிநிருவாண சுத்தா என்பதாகும் (சுத்தா என்ற பாலி மொழிச்சொல், சூத்திரம் என்னும் சமசு கிருத மொழிச்சொல்லின் திரிபாகும்).

மகாபரிநிருவாண சூத்திரம், புத்தரின் இறுதி நாள்களைப் பற்றிய விரிவான விவரங்களை அளிக்கின்றது. இதில் புத்தர் பரிநிருவாணம் அல்லது பிறவியற்ற நிலையை அடைய மனிதன் முயல வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றார். அனைத்து உயிரினங்களிலும் பொருள்களிலும் புத்தரின் இயல்பு ஊடுருவிப் பரவியுள்ளது என்ற கோட்பாட்டை இந்நூல் வலியுறுத்துகிறது. பி.வி.

*மகாபலி*: இவன் புராணங்களில் இடம் பெற்றுப் பேரரசனாக விளங்கிய ஓர் அசுரன். இம்மன்னன் முன்னைப் பிறவியில் எலியாக இருந்தான். அப்போது ஒரு நாள் சிவாலயம் ஒன்றின் விளக்கில் திரி மங்கியபோது அதன் மீது தாவி ஓட, விளக்கின் திரி தூண்டப்பெற்று எரியத் தொடங்கியது. தான் அறியாமலே கோவில் விளக்கைத் தூண்டி எரியச் செய்தது ஒரு நல்வினையாக ஆயிற்று. அதனால் அந்த எலி நல்வினைப் பயனாக அடுத்த பிறவியில் மன்னனாகப் பிறக்கும் பேறு பெற்றது.

மகாபலி, வீரசேனன், தேவி ஆகியோருக்கு மகனாகத் தோன்றினான். பிரகலாதனின் பேரனாக இம்மாவீரன் கருதப்படுகிறான். இம்மன்னனுக்குப் பிரகலாதன் வீரக்கவசம் ஒன்றையும், அசுரர் குருவான சுக்கிராச்சாரி சங்கொன்றையும் பரிசாக நல்கினர். அப்பொருட்களின் வலிமையால் இவன் சுவர்க்கலோகத்தையும் வென்றான்; தேவர்களை அடிமைப் படுத்தினான். துன்புற்ற தேவர்கள் தங்களைக் காக்கும் பொருட்டுத் திருமாலை வேண்டினர்.

திருமால் காசிபரிடத்தில் குறுகிய வடிவமாக வாமனன் என்னும் பெயரில் அவதாரம் செய்தார். திருமால் மகாபலி மன்னன் செய்யும் வேள்விச் சாலைக்கு அந்தண வடிவில் சென்று அவனிடம் இரந்து தாம் வேண்டியதைப் பெற எண்ணினார்.

சுக்கிராச்சாரியார், திருமாலின் மாயைத் தன்மையை மகாபலிக்கு எடுத்துரைத்தார். இல்லை என்னாது கொடுக்கும் தன்மை கொண்ட மகாபலி, குருவின் உரையைப் புறக்கணித்து, அந்தண வடிவில் வந்த திருமாலுக்கு என்ன தேவை என்றான். அந்தண வாமனராக வந்த திருமால் தம் காலால் மூன்று அடி மண் வேண்டுமென்றார். மகாபலி தருவதாகக் கூறியவுடன், அதனை நீர் வார்த்து உறுதிசெய்து கொடுக்குமாறு திருமால் கேட்க, அதனை ஏற்ற மன்னனும் கமண்டல நீரால் தாரைவார்த்து உறுதி செய்ய முற்பட்டான். தம் சீடனான மகாபலி மன்னனைக் காக்கும் பொருட்டுச் சுக்கிரன், கமண்டலத்தில் நீர்விழும் துளையினுள் வண்டாகச் சென்று அடைக்க, அதனை அறிந்த திருமால் அதனை அகற்றி, மகாபலியின் கொடை உறுதியைப் பெற்றார். தம் சொல்லைக் கேளாத மகாபலியை நோக்கிச் சுக்கிராச்சாரி 'நும் செல்வங்கள் அழியட்டும்' என்று சாபமிட்டார்.

குறுகிய வடிவில் வந்த திருமால் விசுவரூபம் எடுத்து இரண்டடிகளால் மூவுலகையும் அளந்தபின் மற்றுமோரடிக்கு இடம் கேட்க, மகாபலி, தன் தலையைக் காட்ட, அதில் தம் காலை வைத்து அழுத்திச் சாவர்ணி மன்வந்தரம் என்னும் பாதாள உலகத்தில் இருக்கும்படி செய்து, அவனுக்கு இந்திரப் பதவியும் அளித்தார்.

பாதாள உலகத்தில் மகாபலிக்குக் காவலாகத் திருமால் வீற்றிருந்தார். அங்குத்தான் பிரகலாதனும் இருந்தான். சிரஞ்சீவிப் பட்டம் பெற்றவர்களுள் மகாபலியும் ஒருவனாவான். அவன் விந்தியாவலி என்ற மனைவியின் மூலம் நூறு பிள்ளைகளைப் பெற்றான். அவர்களுள் வாணாசுரன் என்பவன் மூத்தவன்.

மகாபலி பாதாள உலகத்திலிருந்தபோது, தேவகியிடம் பிறந்த மக்கள் அனைவரும் இவனிடமே விடப்பட்டனர். கண்ணன் கட்டளை இட அவர்களை மீண்டும் அனுப்பிவைத்தான்.

இறைவனாகிய திருமால், மகாபலிக்கு அருள் கொடுக்கவே ஓர் அவதாரம் எடுத்தார் என்று கருதும் அளவில் அமைந்த மகாபலி வரலாறு குறிப்பிடத்தக்கது. இரந்தோர்க்கு இல்லை என்று சொல்லாது ஈந்து, மறைந்தும் மறையாமல் வாழும் பேறு மகாபலிக்குக் கிடைத்தது. இரா.குரு.

*மகாபலேசுவர்*: இது இந்தியாவில் மகாராட்டிர மாநிலத்தில் சதாரா மாவட்டத்தில் உள்ள ஓர் இந்து சமய புண்ணியத்தலம். இதற்கு அருகில் கிருட்டிணா ஆறு செல்கிறது. இவ்வூருக்கு வடமேற்கில் 128 கி.மீ. தொலைவில் பம்பாய் நகரம் இருக்கிறது. இவ்விடம், மேற்கு மலைத் தொடரைச் சேர்ந்த உச்சி ஒன்றில் 1372.5 மீ. உயரத்தில் அமைந்துள்ளது. மழை இங்கு மிகுதி. உடல்நல இல்லம் ஒன்று இங்கு கி.பி. 1828-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. தெ.பா.

*மகா பாகவதம்*: வடமொழியில் இதிகாசம், புராணம், சம்மிதை, உபசம்மிதை, விட்டுணு இரகசியம், விட்டுணுயாமளம், கௌதம சம்மிதை என ஏழு வகைப் பாகவதங்கள் உள்ளன. அவை மொத்தம் 40,000 செய்யுட்களைக் கொண்டுள்ளன. இவற்றுள் இதிகாச பாகவதமும் புராண பாகவதமுமே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

வடமொழி இதிகாச பாகவதம் வியாசரால் பாடப்பட்டது. அது 18,000 செய்யுட்கள் உடையது. பகவானுடைய வாழ்க்கை வரலாறு, பெருமை, பெருங்கருணைத்திறன் முதலியவற்றைக் கூறுவதால் அது பாகவதம் என்னும் பெயர் பெற்றது.

செவ்வைச்சூடுவார், வடமொழி இதிகாச பாகவதத்தைத் தழுவித் தமிழில் செய்யுள் வடிவில் ஒரு நூலை எழுதினார். அவர் பாண்டிய நாட்டிலுள்ள வேம்பத்தூர் என்ற ஊரில் பிறந்தார். அவர் சோழியப்பார்ப்பன இனத்தைச் சேர்ந்தவர். ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். அவர் வடமொழிச் செய்யுட்களைத் தழுவி எழுதிய இதிகாச பாகவதம் 4970 செய்யுட்களைக் கொண்டுள்ளது. அது பன்னிரண்டு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் பல அத்தியாயங்களையுடையது. அப்பாகவதம் திருமால், கலைமகள், சுகமுனிவர் ஆகியோர் மீது பாடிய கடவுள் வாழ்த்துகளோடு தொடங்குகிறது. திருமால் எல்லாம் வல்ல பரம்பொருள் என்பதையும், உலகில் அறத்தை நிலை நிறுத்தும் பொருட்டுப் பல பிறவிகளை எடுத்தார் என்பதையும் முதல் அத்தியாயம் சுருக்கமாக உரைக்கிறது. செவ்வைச்சூடுவார் பாகவதத்தின் முதல் ஒன்பது அத்தியாயங்களில் கீழ்வரும் முக்கியமான கதைகள் கூறப்பட்டுள்ளன: 1) போரில் கௌரவர்களை வெற்றி கண்ட பிறகு தருமர் அத்தினாபுரத்திற்கு அரசனாதல், 2) கண்ணபெருமான் துவாரகைக்குத் திரும்புதல், 3) பரீட்சித்துப் பிறப்பு, 4) திருமால் நான்முகனைப் படைத்தல், 5) திருமால் வராக உருவெடுத்தல், 6) தேவர்கள் பிறத்தல், 7) வீரபத்திரர் தக்கன் வேள்வியை அழித்தல், 8) துருவனின் தவம், 9) பிருது, பரதன் ஆகிய மன்னர்களின் கதைகள், 10) திருமால் நரசிங்க உருவெடுத்ததும் இரணியனை அழித்ததும், 11) தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைதல், 12) வாமன உருவும் மீனுருவும் எடுத்தல், 13) அரிச்சந்திரன், சகரன், பகீரதன் இராமன், சந்தனு ஆகியோரின் கதைகள்.

மேற்குறிப்பிட்ட 12 பிரிவுகளுள் 10 – ஆம் பிரிவே மிகப்பெரியதாகும். இந்தப் பிரிவு,கண்ணன் பற்றிக் கூறுகிறது. கோகுலத்தில் அவன் அசோதை, நந்தகோபன் ஆகியோரால் வளர்க்கப் பெறுதல், கம்சன் அசுரர்களைக் கொண்டு கண்ணனைக் கொல்லுதற்காகச் செய்த பல முயற்சிகள், கண்ணன் தன் தெய்வ ஆற்றலால் அவ்வசுரர்களைக் கொல்லுதல், கண்ணன் ஆயமகளிரொடு செய்த விளையாட்டுகள், கண்ணன் கம்சனைக் கொல்லுதல், கண்ணன் உருக்குமணியை மணத்தல், க்ண்ணன் சிசுபாலனைக் கொன்று அவன் முத்தியடையுமாறு செய்தல் ஆகிய இக் கதைகளைப் பத்தாம் பிரிவு கூறுகிறது. பிரிவுகள் 11,12 – ஆகியவை அருச்சுனன் கண்ணனின் தங்கை சுபத்திரையைத் திருமணம் செய்து கொள்ளுதல், பதுமாசுரன் தன்னுடைய கையாலேயே தானே இறக்கும்படி கண்ணன் செய்யும் சூழ்ச்சி, திருமால் சத்துவகுணக் கடவுள் என்ற உண்மையைப் பிருகு முனிவர் உணர்தல், உத்தவர் முத்தி எய்தக் கண்ணன் உபதேசம் செய்தல், கலியுகம் தொடங்கியதால் பலராமனும் கண்ணனும் வைகுந்தத்திற்கு மீளுதல், மார்க்கண்டேயரின் தவமும் திருமாலின் அருளால் அவர் மாயையின் தன்மையை உணர்தலும், பாகவதம் படிப்பதால் எய்தப்பெறும் தெய்வ உணர்வு ஆகியவற்றை விளக்குகின்றன.

புராண பாகவதமே மகா பாகவதம் எனப் போற்றப்படுகிறது. இப்பாகவதமும் வியாசரால் முதன் முதல் இயற்றப்பட்டது. இது 36,000 வடமொழிச் செய்யுட்களைக் கொண்டுள்ளது. இது 600அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்கு முன்பு மதுரகவி வரதராச ஐயங்கார் இவ் வடமொழி மகாபாகவதத்தைத் தழுவித் தமிழில் செய்யுள் வடிவில் எழுதினார். இத் தமிழ் மகாபாகவதம் இரண்டு தொகுதிகளாக உள்ளது. இவ்விரண்டு தொகுதிகளிலும் மொத்தம் 9147 விருத்தப் பாடல்கள் உள்ளன. முதல் தொகுதியில் எழுபத்தெட்டுப் படலங்களில் 4664 விருத்தப் பாடல்கள் உள்ளன. அது தி.வி. சிங்கிரி நாயக்கரால் பதிப்பிக்கப்பட்டு 1923 –ஆம் ஆண்டில் சென்னை வித்தியா ரத்தினாகர அச்சகத்தாரால் வெளியிடப் பட்டது. இரண்டாம் தொகுதி 78 படலங்களும் 4483 விருத்தப்பாடல்களும் உடையது. இது முத்துசாமி ஐயர், திருச்சிற்றம்பலம்பிள்ளை, திருமலை கொண்ட நாயக்கர்

ஆகிய மூவராலும் இணைந்து பதிப்பிக்கப்பெற்று வித்தியா இரத்தினாகர அச்சகத்தாரால் 1928 – ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது.

இம் மகாபாகவதம் கடவுள் வாழ்த்தினைக் கூறும் ஆறு விருத்தப்பாடல்களுடன் தொடங்குகிறது. இப் பாடல்களில் திருமாலும் ஏனைய கடவுளர்களும் பாடப்பெற்றுள்ளனர். கடவுள் வாழ்த்தை அடுத்துத் திருவரங்கப்படலம் அமைந்துள்ளது. இப்படலம் 155 செய்யுட்களைக் கொண்டுள்ளது. இப்படலத்தில் திரு வரங்கப்பெருமானின் பெருமையும், ஆழ்வார்களால் புனிதமாகப் போற்றப்பட்ட காவிரியாறும், இராச மன்னார்குடி, திருமுட்டம், திருநாராயணபுரம் ஆகிய இடங்களும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளன. அதற்கு அடுத்துள்ள நைமிசாரணியப்படலத்தில் 130 செய்யுட்கள் உள்ளன. ஆறு, நாடு, நகர் ஆகியவற்றை வருணிக்கும் ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகர்ப் படலம் ஆகியவற்றுள் முறையே 20,28,67 செய்யுட்கள் உள்ளன. திருவரங்கப் படலம் என்ற ஒன்றும் இப் பாகவதத்தில் உண்டு. இந்நான்கும் செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் இல்லை. புராண மரபுப்படி இந்நான்கு படலங்களும் வரதராச ஐயங்காரால் சேர்க்கப்பட்டன என்பது தெளிவாகிறது. முதல் தொகுதி 78-ஆம் படலமாகிய துவாரகபுரிப் படலத்தோடு முடிவுறுகிறது.

செவ்வைச்சூடுவார் தம் பாகவதத்தில் விளக்கியுள்ள தத்துவம் விசிட்டாத்துவிதமாகிய வைணவ தத்துவத்துக்குப் பொருந்தியதாக இல்லை. ஆனால், வரதராச ஐயங்கார் பாகவதத்தில் காணும் தத்துவம் அவ்வைணவ தத்துவத்திற்குப் பொருந்தியுள்ளது.

கடவுளும் உயிரும் வெவ்வேறானவை; எனினும் அவை எப்போதும் இணைந்தே உள்ளன. உடல்உயிரின் உறைவிடமாக உள்ளதுபோல் உயிர் கடவுளின் உறைவிடமாக உள்ளது. இதுவே வைணவ தத்துவத்தின் சாரம். வரதராச ஐயங்கார் பாகவதத்தின் 124 – ஆம் படலமாகிய உபதேசப்படலத்தில் இத் தத்துவம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆனால், செவ்வைச்சூடுவார் பாகவதத்தின் 12 – ஆம் பிரிவு 4-ஆம் அத்தியாயம் கூறும் தத்துவம், வைணவ தத்துவத்திற்கு மாறுபடுகிறது. உண்மையில் அது அத்துவைத தத்துவத்தின் பிழிவாகும். வரதராச ஐயங்கார் பாகவதத்தைவிடச் செவ்வைச்சூடுவார் பாகவதத்தில் இலக்கிய நயம் மிகுந்துள்ளது. தா.ஏ.ஞா.

**மகாபாரதம்**: இது வடமொழியில் வியாசரால் எழுதப்பெற்றது. இது ஆதிபருவம், சபாபருவம், வன பருவம், விராடபருவம், உத்தியோக பருவம், வீடுமபருவம், துரோண பருவம், கருணபருவம், சல்லியபருவம், சௌப்திக பருவம், இசுதிரிபருவம், சாந்தி பருவம், அனுசாசன பருவம், அசுவமேத பருவம், ஆசிரமவாசிக பருவம், மௌசல பருவம், மகாபிரத்தானிகபருவம், சுவர்க்க ஆரோகண பருவம் எனப் பதினெட்டுப் பருவங்களையுடையது.

**ஆதிபருவம்**: சந்தனு குரு வமிசத்தின் மூதாதையாவன். அவன் கங்காதேவியை மணந்து வீடுமரைப் பெற்றான். சந்தனு செம்படவனின் மகள் சத்தியவதியை இரண்டாம் மனைவியாகத் திருமணம் செய்து கொண்டான். சத்தியவதிக்குப் பிறக்கும் மகனுக்கே அரசாட்சி உரியதாக வேண்டும் என்ற செம்படவனின் கட்டுப்பாட்டின் விளைவாக வீடுமர் இறுதிவரை திருமணமின்றி வாழச் சூளுரை மேற்கொண்டார். சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்ற இரண்டு ஆண்மக்கள் பிறந்தனர். சித்திராங்கதன் அம்பிகா என்பவளையும் விசித்திர வீரியன் அம்பாலிகா என்பவளையும் மணம் புரிந்து இருவருமே மகப்பேறு இன்றியே இறந்துவிட்டனர். சத்தியவதி கன்னியாய் இருந்தபோது பராசர முனிவர் அவளை யமுனை நதிக்கரையில் கூடி வியாசர் பிறந்தார். பராசரமுனிவர் கொடுத்த வரத்தால் சத்தியவதி மீண்டும் கன்னியாகிச் சந்தனுவை மணந்தாள். இவ்வுண்மையை அறிந்த வீடுமர் குரு வமிசம் தழைக்கும் பொருட்டு விதவைகளாகிய அம்பிகையையும் அம்பாலிகையையும் கூடிப் புதல்வர்ப் பேறளிக்குமாறு வியாசரை வேண்டினார். அதற்கு, வியாசர் இசைந்தார். அவருக்கும் அம்பிகைக்கும் திருதராட்டிரன் என்ற மகன் பிறவிக்குருடனாய்ப் பிறந்தான். வியாசருக்கும் அம்பாலிகைக்கும் பிறந்தவன் பாண்டு.

திருதராட்டிரன் காந்தார நாட்டு மன்னன் மகள் காந்தாரியைத் திருமணம் புரிந்தான். பாண்டு, குந்தி போசன் மகள் குந்தியை மணம்செய்து கொண்டான். திருதராட்டிரன் கண்ணற்றவனாய் இருந்ததால் வீடுமர் பாண்டுவை அத்தினாபுரத்திற்கு அரசனாக்கினார். குந்தி சிறுமியாய் இருந்தபோது துருவாச முனிவர் அவளுக்கு ஒரு மந்திரத்தைக் கற்பித்தார். அந்த மந்திரத்தின் முழுவிளைவை அவள் அறியாது ஒரு நாள்அதற்குரிய தேவனை நினைத்து அம்மந்திரத்தை ஓதினாள். உடனே சூரியதேவன் தோன்றி அவளைத் தழுவிக் கூடினான். அவளுக்குக் குழந்தை ஒன்று பிறந்தது. சூரியன் அருளால் அவள் மீண்டும் கன்னியாயினாள். குந்தி தனக்குப் பிறந்த குழந்தையை எவருக்கும் தெரியாமல் ஒரு பெட்டகத்தில் வைத்து ஆற்றில் விடுத்தாள். அக் குழந்தையை அதிரதன் என்ற தேர்ப்பாகன் எடுத்துக் கன்னன் என்று பெயரிட்டு வளர்த்துவந்தான். பாண்டு, மாத்திரி என்ற மற்றொருத்தியை இரண்டாம் மனைவியாக மணம் புரிந்தான். மாத்திரி சல்லியனுடைய தங்கை. பாண்டு

காமவயப்பட்டு ஒரு பெண்ணைத் தழுவினால் அவனுக்கு மரணம் ஏற்படும் என்ற சாபம் இருந்தது. அதனைக் குந்தி அறிந்து மகப்பேறு பெறுதற்காகப் பாண்டுவின் இசைவு பெற்றுத் தான் அறிந்த மந்திரத்தை ஓதி, தருமதேவன் மூலமாக உதிட்டிரனையும், வாயுதேவனைக் கொண்டு வீமனையும், இந்திரனைக் கொண்டு அருச்சுனனையும் ஈன்றாள். பின்பு அம்மந்திரத்தை மாத்திரிக்கு உபதேசித்தாள். மாத்திரி மந்திரத்தின் சக்தியால் இரட்டையர்களாகிய அசுவினிகளின் மூலமாக நகுலன், சகாதேவன் ஆகிய இருவரைப் பெற்றாள். இவ்வாறு பாண்டவர் ஐவராயினர்.

திருதராட்டிரன் மனைவி காந்தாரி இரண்டாண்டுகள் மகப்பேறின்றிப் பின் கருத்தரித்துத் துரியோதனன் முதலிய நூறு ஆண்மக்களையும் ஒரு பெண்மகவையும் ஈன்றாள். அவர்கள் கௌரவர்கள் எனப்பட்டனர்.

பாண்டவர்கள் கௌரவர்களோடு கிருபாச்சாரியாரிடத்தும் துரோணரிடத்தும் விற்பயிற்சி பெற்றனர். பாண்டவர்கள், தன்னைவிடப் பலவகையிலும் ஆற்றலுடையவர்களாய் இருத்தலைக் கண்டு துரியோதனன் அவர்கள்மீது பொறாமை கொண்டான். பாண்டு தன் மனைவி மாத்திரியைத் தழுவ முற்பட்ட போது அவனுக்கிருந்த சாபத்தின் விளைவாய் இறந்துவிட்டான். ஆகவே, வீடுமர் உதிட்டிரனை அத்தினாபுரியின் இளவரசனாக்கினார்.

இது திருதராட்டிரனுக்கும் துரியோதனனுக்கும் மேலும் பொறாமையை மிகுவித்தது. திருதராட்டிரன், துரியோதனின் சூழ்ச்சிப்படி பாண்டவரையும் குந்தியையும் வாரணாவதம் என்ற இடத்தில் ஓய்வு பெறும் பொருட்டு அனுப்பிவைத்தான். அங்குப் பாண்டவர் தம் தாய் குந்தியோடு அரக்கு மாளிகையில் உறங்கிக் கொண்டிருந்தபோது அதற்குத் தீ வைக்கப்பட்டது. பாண்டவர் தம் தாயோடு அதற்குள் இருந்த சுரங்க வழியாகத் தப்பிச் சென்றனர். பின்பு அவர்கள் நெடுந்தூரம் நடந்து சென்று ஏகசக்கரம் என்ற நகரத்தை அடைந்து தாங்கள் இன்னார் என்று எவரும் அறியாதபடி துறவுக்கோலம் பூண்டு வாழ்ந்து வந்தனர்.

பாஞ்சால நாட்டில் திரௌபதிக்கு ஏற்ற கணவனைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு நடந்த விற்போட்டியில் அருச்சுனன் வெற்றிபெற்றுத் திரௌபதியைப் பரிசாகப்பெற்றான். தாய் குந்தியின் விருப்பப்படி திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவியாயினள். அதை அறிந்த திருதராட்டிரன் சீற்றமெய்தினும் அதை வெளிக்காட்டாமல் வீடுமர் முதலியோர் அறிவுரைப்படி பாண்டவரை அழைத்து இந்திரப்பிரத்த நகருக்கு உதிட்டிரனை அரசனாக்கினான். அருச்சுனன் ஓராண்டு 'தீர்த்தயாத்திரை' செய்து முடிவில் துவாரகைக்குச் சென்று அங்குக் கிருட்டிணன் தங்கை சுபத்திரையைக் காதலித்து அவளுடன் இந்திரப்பிரத்தத்துக்கு வந்து அவளைத் திருமணம் புரிந்துகொண்டான். சுபத்திரைக்கு அபிமன்யு என்ற மகன் பிறந்தான். துரியோதனன் கன்னனுடைய வில்லாற்றலை வியந்து, அவனை அங்க நாட்டுக்கு அரசனாக்கி அவனுக்கு உற்ற நண்பனாக விளங்கினான்.

**சபாபருவம்:** இந்திரப்பிரத்தத்தில் பாண்டவர்கள் அழகுமிக்க அவைக்களம் அமைத்துச் சிறப்போடு விளங்குவதைத் துரியோதனன் பொறுக்க இயலாமல், சகுனியோடு சிந்தித்துப் பாண்டவர்களை அத்தினாபுரிக்கு அழைத்து அங்குப் புதிதாகக் கட்டிய அவைக்களத்தில் உதிட்டிரனைச் சகுனியோடு சூதாடும்படி செய்தான். சூதாட்டத்தில் உதிட்டிரன் தன் மனைவி திரௌபதி உட்பட அனைத்தையும் இழந்தான். துரியோதனன் தம்பி துச்சாதனன் திரௌபதியை மானக் குறைவு செய்யும் பொருட்டு, அரசவைக்கு இழுத்துவந்து அவள் துகிலை உரிந்தான். கிருட்டிணன் அருளால் துகில் வளர்ந்து கொண்டே இருந்தமையால் துச்சாதனன் அயர்ந்து கீழே விழுந்தான். பின்பு, பாண்டவர் ஐவரும் திரௌபதியோடு பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ வேண்டும் என்றும், பின்பு ஓராண்டு யாரும் அறியாமல் மறைந்து வாழ வேண்டும் என்றும் திருதராட்டிரன் இட்ட கட்டளையை உதிட்டிரன் ஏற்றுக்கொண்டான்.

**வனபருவம்:** பாண்டவர் ஐவரும் திரௌபதியோடு காமியக வனத்துக்குச் சென்று அங்கு வாழ்ந்து வந்தனர். சூரியதேவனால் வழங்கப்பெற்ற அமுதசுரபியைக்கொண்டு அவர்கள் உணவு அருந்தியதோடு தம்மிடம் விருந்தினராக வந்த முனிவர்கள் பலருக்கும் விருந்தளித்து வந்தனர். அருச்சுனன் இமயமலைக்குச் சென்று அங்குச் சிவனை நோக்கித் தவமியற்றிச் சிவனிடமிருந்து பாசுபதம் என்ற தெய்விக அம்பைப் பெற்றான்; பின்பு விண்ணுலகம் சென்று இந்திரனின் ஆதரவால் தெய்விகப் படைக்கலங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். அருச்சுனன் இந்திர உலகத்தில் இருந்தபோது ஏனைய பாண்டவரும் தீர்த்த யாத்திரை புரிந்து பல நன்மைகளை எய்தினர். பின்பு அருச்சுனன் அவர்களை அடைந்தான். அவர்கள் அனைவரும் காமியக வனத்துக்குத் திரும்பினார்கள். அவர்கள் வனத்தில் வாழவேண்டிய பன்னிரண்டு ஆண்டுக் காலம் முடிவுற்றது. அவர்கள் மறைந்து வாழ்தற்குரிய ஓராண்டுக்காலத்தைப்பற்றிச் சிந்திக்கலாயினர்.

**விராடபருவம்:** பாண்டவர் திரௌபதியோடு விராட நகரம் சென்றனர். உதிட்டிரன் அந்நகர மன்னனிடம் சென்று தன் பெயர் கனகன் என்றும், பகடை விளையாட்டில் வல்லவன் என்றும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். மன்னன் தன் ஓய்வு நேரங்களில் தன்னுடன் பகடை விளையாடக் கனகனைப் பணியில் அமர்த்திக் கொண்டான். வீமன் வல்லாளன் என்ற பெயரில் அம் மன்னன் அரண்மனையில் சமையல்காரனாகப் பணியேற்றான். அருச்சுனன் பேடியாக வடிவந்தாங்கிப் பிருகன்னளை என்ற பெயருடன் உத்தரை என்ற விராட மன்னன் மகளுக்கு ஆடல் பாடல் முதலிய கலைகளைக் கற்பிக்கும் பணியில் அமர்ந்தான். நகுலன் தன் பெயர் தாமக்கிரந்தி என்று அறிவித்துக் குதிரைகளைப் பழக்கும் பணியிலும், சகாதேவன் தந்திரி பாலன் என்ற பெயரில் மாட்டுக்காரன் பணியிலும் அமர்ந்தனர். திரௌபதி, அரசியின் அந்தப்புரத்தில் அவளுடைய வண்ணமகளாகப் பணிபுரிந்தாள். இவ்வாறு பாண்டவர்கள் தம் பன்னிரண்டு ஆண்டுக் காடுறைவுக்குப் பின்னர், கட்டளைப்படி ஓராண்டுக் காலம் மறைந்து வாழ்ந்தனர்.

**உத்தியோக பருவம்:** துரியோதனன் கட்டளைப்படி பாண்டவர்களின் பன்னிரண்டாண்டுகள் காடுறைவும் ஓராண்டு மறைந்து வாழும் வாழ்க்கையும் முடிந்த பிறகு கிருட்டிணன் பாண்டவர்களின் தூதுவனாகக் கௌரவர்களிடம் சென்று பாண்டவர்க்குரிய நாட்டைத் திருப்பித் தருமாறு கூறினான். அதற்குத் துரியோதனன் ஐந்து ஊசிமுனை இடங்கூடத் தரமுடியாது என மறுத்துரைத்தான். எனவே, பாண்டவர்க்கும் கௌரவர்களுக்கும் போர்மூண்டது.

**வீடும பருவம்:** பாண்டவர் படைக்குத் துருபதன் மகன் திட்டத்துய்மன் படைத் தலைவனாகவும் கௌரவர் படைக்கு வீடுமர் முதல் படைத்தலைவராகவும் பொறுப்பேற்றனர். முதல்நாள் போரில் கௌரவர் படைகள் வெற்றி பெற்றன. அருச்சுனனின் கடுமையான தாக்குதலினால் இரண்டாம் நாள் போரில் பாண்டவருக்கு வெற்றி கிடைத்தது. மூன்றாம் நாள் முதல் ஒன்பதாம் நாள்வரை நடந்த போரில் இருதிறத்தார் படைகளும் பெரிதும் அழிந்தன. வீடுமரை அருச்சுனன், வீமன், அபிமன்யு போன்ற பெரும் வீரர்களால் அழிக்க முடியவில்லை. இறுதியில், ஒரு பேடி வீடுமரை எதிர்த்துப் போரிட்டால் அவருடைய படைக்கருவிகள் பயனற்றுப்போகும் என்ற உண்மை வீடுமர் வாயிலாகவே பாண்டவருக்குத் தெரிந்தது. எனவே, அவர்கள் துருபதனுக்குப் பிறந்த சிகண்டி என்ற பேடியை வீடுமரை எதிர்க்குமாறு செய்தனர். அச்சமயத்தில் அருச்சுனன் வீடுமர் மீது அம்புமாரி பொழிந்தான். வீடுமர் வலிமை குன்றிச் சாய்ந்தார்.

**துரோண பருவம்:** பதினோராம் நாள் போரில் துரோணர் படைத் தலைவராக்கப்பட்டார். அன்றைய போரில் துரோணரின் திட்டம் தோல்வியுற்றது. பன்னிரண்டாம் நாள் போரில் உதிட்டிரனைச் சிறை செய்யும் துரோணரின் முயற்சி அருச்சுனனால் முறியடிக்கப்பட்டது. பதின்மூன்றாம் நாள் போரில் துரோணர் அமைத்த பத்மவியூகத்துள் அபிமன்யு புகுந்ததும் ஏனைய பாண்டவப்படை வீரர்கள் அதற்குள் புகாதபடி அவர்களைச் சயத்திரதன் தடுத்தான். பதுமவியூகத்துக்குள் புகுந்த அபிமன்யு, போர் நியதிக்கு மாறான முறையில், துரோணர், கன்னன் முதலியோரால் தாக்கப்பட்டு இறந்தான். பதினான்காம் நாள் போரில் அருச்சுனன் தன் சூளுரைப்படி சயத்திரதனைக் கொன்றான். கன்னனுக்குப்பாதுகாப்பாக இருந்த அவனுடைய கவசத்தையும் குண்டலங்களையும் இந்திரன் அவனை இரந்து பெற்றான். அவற்றிற்காகப் பேராற்றல் வாய்ந்த படைக்கலத்தைக் கன்னன் இந்திரனிடமிருந்து பெற்றான். வீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்த மகனாகிய கடோத்கசன் கௌரவர்களோடு கடுமையாகப் போரிடுங்கால் கன்னன், இந்திரனிடமிருந்து பெற்ற ஆற்றல் மிக்க படைக்கலத்தை அவன்மீது எய்து அவனை அழித்தான். பதினைந்தாம் நாள் துரோணருக்கும் அருச்சுனனுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. இடையில் தருமன் புகுந்து அசுவத்தாமா (என்ற யானையை) வைக்கொன்று விட்டதாக உரத்துக் கூவினான். துரோணர் தம் மகன் அசுவத்தாமனே கொல்லப்பட்டான் என்று நினைத்துச் சோர்வுற்று ஆழ்ந்தார். அப்போது திட்டத்துய்மன் வாளால் அவரைக் கொன்றான்.

**கன்ன பருவம்:** பதினாறு, பதினேழாம் நாள்கள் நடந்த போருக்குக் கன்னன் படைத் தலைவனாக இருந்தான். போர் இருதிறத்தாரிடையே மிகக் கடுமையாக நிகழ்ந்தது. திரௌபதியை அரசவைக்கு இழுத்துவந்து அவளை மானக் குறைவு படுத்திய துச்சாதனனைவீமன் கொன்றான். முடிவில் அருச்சுனனுக்கும் கன்னனுக்கும் நடந்த கடும் போரில் அருச்சுனனுடைய தெய்விக அம்பால் கன்னன் கொல்லப்பட்டான்.

**சல்லிய பருவம்:** பதினெட்டாம் நாள் போருக்குக் கௌரவர் படையின் தலைவனாகச் சல்லியன்அமைந்தான். இருதிறத்துப் படைகளுக்கும்போர் நிகழ்கையில் உதிட்டிரன் சல்லியன் மீது வேலை விடுத்து அவனைக் கொன்றான். வீமன் துரியோதனன் துடைகளைத் தன் கதையைக் கொண்டு வன்மையாகத் தாக்கினான். துரியோதனன் தரையில் வீழ்ந்தான்.

சௌப்திக பருவத்தில் வீமனின் கதையால் அடிபட்டு உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த துரியோதனனிடம் அன்றிரவு பாண்டவர்களைத் தான் அழிப்பதாக அசுவத்தாமன் கூறிப் பாண்டவரின் பாசறை

யில் உறங்கிக் கொண்டிருந்த திட்டத்துய்மனையும் திரௌபதியின் செல்வர் ஐவரையும் கொன்றான். அவ்வமயம் அங்கில்லாத கிருட்டிணனும் பாண்டவர் ஐவரும் செய்தி அறிந்து கங்கைக் கரையில் வியா சருக்குப்பின் மறைந்திருந்த அசுவத்தாமன் தலையில் அணிந்திருந்த மணியைப் பறித்து எடுத்துவந்து திரௌபதியிடம் கொடுத்து அவளை அமைதிப்படுத் தினர். அசுவத்தாமன் திக்கற்றவனாய் உலகெங்கும் அலைந்து திரியவேண்டும் என்ற சாபத்தை முனி வரும் கிருட்டிணனும் அவனுக்குக் கொடுத்தனர். இச்செய்திகள் யாவும் விளக்கப்பட்டுள்ளன.

பாண்டவர் கிருட்டிணனோடு அத்தினாபுரிக்கு வருதலும், திருதராட்டிரன், காந்தாரி ஆகியோருக் குக் கிருட்டிணன் ஆறுதல் கூறிப் பாண்டவர்களைத் தம் மக்களாக ஏற்றுக் கொள்ளும்படி செய்தலும் இசுதிரி பருவத்திலும், பாண்டவர்கள் போரில் இறந்த தம் உறவினர் அனைவருக்கும் ஈமக்கடன் ஆற்றுவதும் உதிட்டிரன், தம் உடலில் உயிரைத் தாங்கியபடி அம்புப் படுக்கையில் படுத்திருக்கும் வீடுமரிடம் கேட்ட கேள்விகளுக்கு அவர் விடை கூறுவதும் சாந்தி பருவத்திலும், வீடுமர் தம் உயிர் விடுதல் அனுசாசன பருவத்திலும், அத்தினாபுர மன்னனாகிய உதிட்டிரன் குதிரைவேள்வி செய்வது அசுவமேத பருவத்திலும், பாண்டவர் தம் பெரிய தந்தை திருதராட்டினனிடம் பேரன்பு பூண்டு ஒழுகு வதும், திருதராட்டினனுடன் விதுரன், சஞ்சயன், காந்தாரி, குந்தி ஆகியோர் காட்டிற்குச் சென்று தெய்வசிந்தனை மேற்கொள்வதும், அங்கு அவர்கள் உடல் தீயினுக்கு இரையாதலும் ஆசிரமவாசிக பரு வத்திலும், மூன்று முனிவர்களின் சாபத்தால் கிருட்டிணனுடைய குலத்தவராகிய விருட்டிணிகள் அழிவதும், பலராமன் புலனடக்கஞ்செய்து வீடுபேற் றையடைவதும், வேடன் ஒருவன் தன் பாதத்தில் எய்த அம்பால் கிருட்டிணன் தன் உடலை விட்டு மேலுலகம் எய்துவதும் மௌசல பருவத்திலும், பாண்டவர் அபிமன்யுவின் மகன் பரீட்சத்தை அத் தினாபுரிக்கு அரசராக்கிவிட்டுத் தாங்கள் ஐவரும் திரௌபதியோடு நாட்டைவிட்டு நீங்கி விண்ணுலகம் செல்லுதல் சுவர்க்க ஆரோகண பருவத்திலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

அறம் வெல்லும் மறம் அழிவினைத் தரும் என் பதும், அவரவர் நல்வினை தீவினைக் கேற்ப நன்மை தீமைகள் விளையும் என்பதும், தீமையைக் கொண்டு தீமையை அகற்ற இயலாது என்பதும் மகாபாரதம் உணர்த்தும் தலையாய அறங்களாகும்.

தா.ஏ.ஞா.

*மகா பீட்டர்*: காண்க: பீட்டர், மகா.

*மகாபுராணம்*: புராணம் என்ற சொல் பழமை வாய்ந்தது எனப் பொருள்படும். பழமையான கதை களைக் கூறுவது புராணம் என்று சொல்லப்படும். வேதங்களில் கூறியுள்ளவற்றை விளக்குவதற்காகப் புராணங்கள் ஏற்பட்டன என்பர். புராணங்கள் அனைத்தையும் ஒரு வகை இலக்கியம் என்று மனு தரும சாத்திரம் கூறும். புராணங்கள் என்ற பெய ரில் பல இருப்பினும், வியாசமுனிவரால் தொகுத்து எழுதப்பட்ட 18 புராணங்கள் மட்டும் பொதுவாக 'மகாபுராணம்' என்று சொல்லப்படுகின்றன. அப்பதி னெட்டுப் புராணங்களும் அவற்றில் காணப்படும் செய்யுட்களின் எண்ணிக்கைகளும் பின்வருவனவா கும் 1) பிரும்ம புராணம் 10,000 செய்யுட்கள் 2) பத்ம புராணம் 55,000 செய்யுட்கள், 3) விட்டுணு புராணம் 23,000 செய்யுட்கள், 4) சிவபுராணம் 24,000 செய்யுட் கள், 5) பாகவத புராணம் 18,000 செய்யுட்கள், 6) நாரத புராணம் 25,000 செய்யுட்கள், 7) மார்க் கண்டேய புராணம் 9,000 செய்யுட்கள், 8) அக்கினி புராணம் 15,400 செய்யுட்கள், 9) பவுடிய புராணம் 14,500 செய்யுட்கள், 10) பிரும்ம வைவர்த்த புராணம் 18,000 செய்யுட்கள், 11) இலிங்க புராணம் 11,000 செய்யுட்கள், 12) வராக புராணம் 24,000 செய்யுட் கள், 13) கந்த புராணம் 81,100 செய்யுட்கள், 14) வாமன புராணம் 10,000 செய்யுட்கள், 15) கூர்ம புராணம் 17,000 செய்யுட்கள், 16) மத்சய புராணம் 14,000 செய்யுட்கள், 17) கருட புராணம் 19,000 செய்யுட்கள், 18) பிரும்மாண்ட புராணம் 12,000 செய்யுட்கள்.

இப்புராணங்கள், சாத்துவிகம், இராசதம், தாமதம் என்று மூன்று பிரிவாகக் கூறப்படுகின்றன. விட்டுணு, பாகவத, நாரத, கருட, வராக, பத்ம ஆகிய ஆறு புராணங்கள் சாத்துவிக புராணங்கள் என்றும், பிரும்ம, பிரும்மவைவர்த்த, மார்க்கண்டேய, பவுடிய, வாமன, கூர்ம என்று கூறப்படும் ஆறும் இராசத புராணம் என்றும், சிவ, இலிங்க, கந்த, அக்கினி, வாயு, மத்சய ஆகியவை தாமச புராணங் கள் என்றும் சொல்லப்படும்.

பிரும்மவைவர்த்த புராணம், மகாபுராணங்கள் பொதுவாகப் பத்து செய்திகளைப் பற்றியும், உபபுரா ணங்கள் என்று சொல்லப்படும் ஏனைய புராணங்கள் ஐந்துசெய்திகளைப் பற்றியும் கூறும் என்று சொல்லு கிறது. மகாபுராணத்தில் கூறப்படும் பத்து செய்திகளில் படைப்பு, இடைக்காலப் படைப்புகள், சூரிய சந்திர வமிசங்கள், மனுக்களும் அவர்களின் காலங்களும், அரசவமிசங்களின் சரித்திரம், பிரளயம், வாழ்க்கை முறை, காப்பாற்றும் முறை, இடைவெளி, மோட்சத் திற்கான வழிகள், தேவர்களையும், விட்டுணுவையும்

பற்றித்தோத்திரம் செய்தல் போன்றவை அடங்கும். மேற்கூறியவை யாவும் பிரும்மவைவர்த்த புராணத்தில் சொல்லப்பட்டுள்ளன. பதினெண் பெரும் புராணங்களைத் தவிரப் பல உப புராணங்களும் காணப்படுகின்றன. மேற்கூறிய மகாபுராண இலட்சணங்களுள் முதல் ஐந்து மட்டும் உப புராணங்களில் சொல்லப்படுகின்றன.

பொதுவாகப் புராணங்கள் எல்லாம் நைமிசாரணியத்தில் சூத முனிவரால் சனகருக்கும் ஏனைய பல முனிவர்களுக்கும் சொல்லப்பட்டன. இவை நீதி நெறிகளைப் போதிப்பதுடன் பல தெய்வங்களின் உபாசனைகளைப் பற்றியும் கூறும். புராணம் என்ற சொல் பழமையைக் குறித்தாலும் சில புராணங்களில் புதிய கதைகளும், புதிய செய்திகளும் காணப்படுகின்றன. பொதுவாக வேதங்களில் கூறியவற்றை விளக்குவதன் பொருட்டே புராணங்கள் தோன்றியுள்ளன என்பர்.

புராணங்கள் எல்லாம் ஒரே காலத்தில் தோன்றி இருத்தல் இயலாது. எல்லாப் புராணங்களுக்கும் வியாச முனிவரே ஆசிரியர் என்று கூறப்படினும், வரலாறு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. விட்டுணு புராணத்தை மிகப் பழையபுராணம் என்றும், முதற் புராணம் என்றும் கூறுவர். பொதுவாகப் புராணங்களின் காலம் கி.மு. 200 இலிருந்து கி.பி. 500 வரை என்று சொல்லப்படுகிறது.

**ஒவ்வொரு புராணத்திலும் கூறப்படும் செய்திகள்:**

1. விட்டுணு புராணம்: இப்புராணம் பராசரரால் மைத்திரேயன் என்ற அவருடைய சீடனுக்குச் சொல்லப்பட்டது. விட்டுணுவின் பல அவதாரங்கள் இங்கே சொல்லப்படுகின்றன. மௌரிய வமிசம் பற்றி இப்புராணம் கூறுவதால் இதன் காலம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டு என்று கூறலாம்.

2. நாரத புராணம்: இதில் சனத்குமாரரும் மற்ற முனிவர்களும் விட்டுணு பக்தி பற்றி நாரதருக்குக் குறிப்பிடுகின்றார்கள். விட்டுணு பக்தர்கள் ஈடுபடும் பலவிதமான நோன்புகளும் சடங்குகளும் இப்புராணத்தில் குறிப்பிடப்படுகின்றன.

3. பத்ம புராணம்: இதில் ஆறு காண்டங்களில் உலகப் படைப்பு, பல புண்ணியத்தலங்கள் போன்றவையும், விட்டுணு பக்தியின் மகிமையும், பிரமன் பத்மம் என்ற தாமரையிலிருந்து தோன்றிய வரலாறும் குறிப்பிடப்படுகின்றன.

4. கருட புராணம்: இது விட்டுணுவினால் கருடனுக்குக் கூறப்பட்டது. விட்டுணுவுக்குரிய பல சடங்குகளும், ஏனைய பல செய்திகளும் காணப்படுகின்றன. இதன் இரண்டாம் பாகம் ஆன்மாக்கள் பற்றியும் ஈமச் சடங்குகளின் இன்றியமையாமை பற்றியும் கூறும்.

5. பாகவத புராணம்: இது மிகவும்புகழ்பெற்ற புராணம். 12 அத்தியாயங்களில் கிருட்டிணபகவானின் திருவிளையாடல்கள் பற்றிக் குறிப்பிடுகிறது.

6. வராகபுராணம்: பன்றி அவதாரத்தில் விட்டுணு பூமிதேவிக்குக் கூறியதாக இப்புராணம் சொல்லப்படுகிறது. இது விட்டுணு பக்தர்களின் ஒவ்வொரு நாள் வாழ்க்கை பற்றிப் பெரும்பாலும் வருணிக்கிறது.

7. பிரும்ம புராணம்: இது பிரமன் தட்சபிரசாபதிக்குக் கூறியது. புராணங்களில் பொதுவாகக் கூறப்படும் செய்திகளைத் தவிரப் புனிதத்தலங்கள் பற்றிய செய்திகளையும் கூறுகிறது.

8. பிரும்ம வைவர்த்த புராணம்: இது பிரம காண்டம், பிரகிருதி காண்டம், கணேச காண்டம், கிருட்டிண சன்ம காண்டம் என்ற நான்கு காண்டங்களுடன் கூடியது. புராணத்தின் பெயருக்குத் தகுந்தபடி, உலகமானது பிரமத்தினிடம் காணப்படும் ஒரு தோற்றமே (விவர்த்தம்) என்று சொல்கிறது.

9. பிரும்மாண்ட புராணம்: இது சிவன் பார்வதி ஆகியோரின் உரையாடல் மூலம் பல புனிதத் தலங்கள் பற்றிக் கூறுகிறது. இதன்கண், தங்க முட்டையிலிருந்து எவ்வாறு உலகம் தோன்றியது என்ற வரலாறு சொல்லப்படுகின்றது.

10. மார்க்கண்டேய புராணம்: படைப்பு, பிரளயம் ஆகியவை பற்றிய மிகவும் விரிவான செய்தியும், வேதகாலத் தெய்வங்களாகிய சூரியன், அக்கினி போன்ற தெய்வங்கள் பற்றிய கதைகளும் இங்கே சொல்லப்படுகின்றன.

11. பவுடிய புராணம்: கலியுகத்தில் நடக்கவிருக்கும் செய்தி பற்றியும், சூரியன், அக்கினி, நாகர்கள் ஆகியோர் உபாசனை பற்றியும், நான்கு வருணத்தாரின் கடமைகள் பற்றியும் இப்புராணம் கூறும்.

12. வர்மன புராணம்: விட்டுணுவின் வாமனாவதாரம் பற்றியும், இலிங்க வடிவத்தில் இருக்கும் சிவபெருமானின் உபாசனை குறித்தும் இது கூறும்.

13. சிவபுராணம்: இது வாயு புராணத்தின் ஒரு பகுதியாகும். ஆகவே, சிவபுராணத்திற்குப் பதிலாக வாயு புராணம் உள்ளது என்றும் கூறுவர். சிவபெருமானின் மேன்மை வாயுபகவானால் இங்கே சொல்லப்படுகிறது.

14. இலிங்க புராணம்: இலிங்க வடிவத்தில் உள்ள சிவபெருமானைப் பற்றியும், சிவபெருமானுடைய 28 திருமேனிகள் பற்றியும் இது கூறுகின்றது.

15. கந்த புராணம்: இது மிகப் பெரிய புராணமாகும். இது ஆறு காண்டங்களுடன் கூடியது. இது முருகப் பெருமானின் பிறப்பு, விளையாடல்கள் ஆகியவற்றைக் கூறுகிறது. சூதசம்கிதையும், வாரணாசி முதலிய புனிதத் தலங்களின் மேன்மை பற்றிக் கூறும் காசிகாண்டமும் இதில் காணப்படுகின்றன.

16. அக்கினி புராணம்: இது அக்கினி தேவனால் வசிட்ட முனிவருக்குச் சொல்லப்பட்டது. இது சிவ பெருமான், துர்க்காதேவி ஆகியோரின் உபாசனை பற்றிக் கூறுவதுடன், ஆயுர்வேதம், சிற்பசாத்திரம், சோதிடம் ஆகியவற்றையும் கூறுகிறது.

17. மத்சய புராணம்: இது மீன் உருவத்தில் இருந்த விட்டுணு பகவானால் மனுவிற்குச் சொல்லப்பட்டது. சைவர்களாலும் வைணவர்களாலும் கொண்டாடப்படும் பல விழாக்கள், சடங்குகள் ஆகியன பற்றியும் தென் இந்தியக்கட்டடக் கலைகள் பற்றியும் இது கூறுகிறது.

18. கூர்ம புராணம்: இது ஆமை வடிவத்தில் இருந்த விட்டுணுவினால் சொல்லப்பட்டது. சிவ பெருமான் உபாசனையின் மேன்மையைப் பற்றியும் இது கூறுகிறது.

**மகாபுராணம்**[2]: இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்ததாகும். இது கி.பி. 10 – ஆம் நூற்றாண்டில் புசிபதந்தன் என்ற கவியினால் அபப்பிரம்ச மொழியில் எழுதப்பட்ட நூல். இந்து சமயத்தில் புராணங்கள் உள்ளமை போன்று சமணசமயத்திலும் உள்ளன. ஆனால், சமணசமய புராணங்கள் ஒரு சிறந்த சமண ஆடவனைப் பற்றியோ, சமணத் துறவியைப் பற்றியோ கூறுபவை. பழமையான கதைகளை அல்லது வரலாறுகளைக் கூறுவதால் அவை புராணங்கள் எனப்பட்டன. மகாபுராணத்தில் 63 சமணத் துறவிகளின் வரலாறுகள் கூறப்படுவதால் அது மகாபுராணம் என்று சொல்லப்படுகிறது.

இந்து சமயத்தில் புராணங்களுக்காகக் கூறப்படும் ஐந்து செய்திகளும் சமண மகாபுராணத்திற்கும் பொருந்தும். அவர்கள் கூறும் 'ஐந்து இலட்சணங்கள்' என்பது ஐந்துவிதமான சமணத் துறவிகளைப் பற்றிச் சொல்வது. அவர்களின் மகாபுராணத்தில் ஐந்து விதமான சமணத் துறவிகளின் வரலாறு சொல்லப்படுவதால் அதையும் புராணம் என்று சொல்கிறார்கள். புசிபதந்தன் என்ற அம்மகாபுராணத்தின் ஆசிரியருக்கு முன்பு இருந்த 'சினசேனன்' என்ற சமணத் துறவி ஐந்து வகையான சமணத்துறவிகளைக் குறிப்பிடுகிறார். அவர்கள் 1) தீர்த்தங்கரர்கள், 2) சக்கரவர்த்திகள், 3) பலதேவர்கள், 4) வாசுதேவர்கள், 5) பிரதிவாசு தேவர்கள் எனப்படுவர். இந்த ஐந்து விதமான சமணத்துறவிகளின் வரலாறு கூறப்படுவதால், இது(பஞ்ச இலட்சணம்)ஐந்து இலட்சணங்களோடுகூடியதுஎன்பதால் புராணம் என்று சொல்லப்படுகிறது. இதற்கு மகாபுராணம் என்று பெயர் வந்ததற்குக் காரணமும் சிலரால் கூறப்படுகிறது. சமண சமயத்திலுள்ள மிகப் பெரியவர்கள் அல்லது சிறந்த சமண முனிவர்கள் பற்றிக் கூறுவதால் 'மகாபுராணம்' என்பர் சிலர். மனிதர்கள் இறுதியில் அடைய வேண்டிய பெரிய முத்தியைப் பற்றி இது கூறுவதால் 'மகாபுராணம்' என்பர் சிலர். வேறு சிலர் பழைய முனிவரிடமிருந்து தோன்றியதால் புராணம் என்றும், மிகப்பெரியதாக இந்நூல் இருப்பதால் மகாபுராணம் என்றும் கூறுவர்.

இம்மகாபுராணத்தில் கூறப்படும் 63 சமணப் பெரியார்கள் 24 தீர்த்தங்கரர்கள், 12 சக்கரவர்த்திகள், 9 பலதேவர்கள், 9 வாசுதேவர்கள், 9 பிரதிவாசுதேவர்கள் ஆகியோராவர்.

இந்நூல் சமண சமயத்தின் மிகப்பெரும் நூல் ஆகும். பிராகிருத மொழியின் ஒரு பிரிவைச் சேர்ந்த 'அபப்பிரம்ச' மொழியில் இது எழுதப்பட்டுள்ளது. இந்து சமயத்தில் மகாபாரதமும் இராமாயணமும் எந்த முக்கிய இடங்களைப் பெறுகின்றனவோ அதைப் போன்ற முக்கிய இடத்தைச் சமண சமயத்தில் இம்மகாபுராணம் பெறுகிறது. இது 'சந்திகள்' என்ற பெயரைக் கொண்ட 102 சருக்கங்களோடு கூடியது. இது செய்யுள் வடிவத்தில் உள்ளது.

இதை எழுதிய மகாகவி புசிபதந்தன். இவன் காசியப கோத்திரத்தில் சிவபெருமானிடம் பக்தி கொண்ட ஒரு பார்ப்பன குடும்பத்தில் பிறந்தவன். தொடக்கத்தில் இந்து சமயத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் பிறகு சமண சமயத்தைத் தழுவி இந்நூலை எழுதினான் என்று தெரிகின்றது. எஸ்.ஜெ.

**மகாபோசர்கள்**: புகழ்மிகு இந்திய வரலாற்று ஆசிரியர் வி.ஏ.சுமித்து (V.A.Smith) தம் 'பண்டைய இந்தியாவின் வரலாறு' (Early History of India) என்னும் நூலில் மகாபோசர்கள் என்பவர் மேற்கு இந்தியப் பகுதியில் இருந்த உயர்குடி மக்களுள் ஒரு பிரிவினர் என்று குறிப்பிடுகின்றார். பெரும்பாலும் இவர்கள் வடக்குக் கொங்கணப் பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்றும் அவர் கருதுகின்றார்.

அசோகரின் பாறைக்கல்வெட்டு ஆணை எண். 5 பற்றிக் குறிப்புரைகள் வரையும்போதும் வி.ஏ. சுமித்து மகாபோசர்கள் என்பவர் மகாமாத்திரர் முதலிய உயர்பதவியுள்ள அரசு அலுவலர்களோடு வைத்து எண்ணத்தக்கவர் என்றே வரைந்துள்ளார். பேராசிரியர் பண்டார்க்கர் அசோகருடைய 13-ஆம் பாறைக் கல்வெட்டு ஆணை பற்றி விரித்துரைக்கும்போது அதில் வரும் போசாப்பெடேனிகர் என்பது அசோகரின் பேரரசுக்கு உட்பட்ட ஒரு பகுதியை, வரையறைக்குட்பட்ட சுதந்திரத்துடன் ஆண்ட குறுநிலத் தலைவர்களைக் குறிக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இவர்கள் மகாராட்டிர மாநிலத்திலுள்ள தாணா, கொலாபா மாவட்டங்களில் ஆட்சியுரிமை பெற்றிருக்கலாம் என்று கருதுவதற்கு அசோகர் கல்வெட்டுச் செய்திகள் இடமளிக்கின்றன. தம் கருத்துகளுக்கு ஆதரவாகப் பண்டார்க்கர் ஆந்திர, சாதவாகனர் கல்வெட்டுகளில் சமூகத்தில் உயர் பதவியில் இருந்தவர்கள் மகாபோசர், மகாரதிகள் போன்ற பெயர்களால் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். பி.வி.

**மகாமகம்:** இந்துக்கள் தமக்கு நலன் விளைவிப்பனவாகக் கருதும் நாள்கள் பலவற்றில் மகாமகமும் ஒன்றாகும். ஒன்பது கோள்களில் (Navagrabas) ஒன்றான குரு எனப்படும் வியாழன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சிம்ம இராசியில் நிலை பெறும் நாளான மாசித் திங்கள் மதிநிறைநாள் மகாமக நாளாகும். இது சிறப்புமிக்க பெருவிழா நாளாகக் கொண்டாடப்படுகிறது. மாமாங்கம் என்பது இதன் திரிபு ஆகும்.

இந்துக்கள் நன்மைதரும் காலங்களில் நீராடு தலைச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகக் கருதுகின்றனர். ஐப்பசித் திங்கள், கார்த்திகைத் திங்கள், வைகாசித் திங்கள், மாசித் திங்கள் ஆகியவற்றில் விளங்கும் மக விண்மீன் வளர்பிறையிலும், தேய் பிறையிலும் அமைந்தாலும் மதிநிறைநாளில் நீராடுதல் சிறப்பானதாகும். அதிலும் மாசிமக மதிநிறை நாளில் நீராடுதல் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பது அது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவதனாலாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்ற திருக்கோயில்களின் குடமுழுக்கு நாள்களில் கலந்து கொண்டு இறைவனை வழிபட்டால் இடைப்பட்ட காலம் முழுவதும் வழிபட்டதன் பயனை அது அளிக்கும் என்பதைப் போன்று மகாமக நாளில் நீராடுதல் சீரிய பயன்களை விளைவிப்பதாகும் என்பது நம்பிக்கை. வடநாட்டில் கங்கை, யமுனை, சரயு முதலாக எண்ணப்படும் தூய்மையான ஆறுகளில் திருக்குடவிழாக்கள் (Kumbhamelas) நடத்தப்படுவது இந்த நன்னாளிலேயே ஆகும். வியாழன் சிம்ம இராசியில் நிலைபெறுதலை மகா சிறப்பு அல்லது மகா மாகீ என்று பிரம்ம புராணமும் பவுடிய புராணமும் குறிப்பிடுகின்றன.



மகாமகக் குளம்.

தமிழ்நாட்டில் திருக்குடந்தை எனப்படும் கும்பகோணம் மகாமகத்தினால் சிறப்புப் பெற்ற நகரமாகும். திருக்குடந்தைப் புராணத்தில் மகாமகத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது. அந்நகரிலுள்ள மகாமகக்குளம் சிவன் அருளால், பிரமன் படைப்பு அடிப்படையை வைத்துக் காத்த திருக் குடத்திலிருந்து அதன் இனிய நீரினால் ஏற்பட்டது. கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சரயூ, தாமிரபரணி ஆகிய நதித் தெய்வங்கள் தாங்கள் நீராடுவோரிடமிருந்து பெறும் பாவத்தைப் போக்கிக்கொள்ள மகாமகக் காலத்தில் மகாமகக் குளத்தில் நீராடுவர் என்பது மரபுவழிச் செய்தியாகும். எனவே, திருக்குடந்தை மகாமகக் குளத்திற்குக் 'கன்னி தீர்த்தம்' என்ற பெயரும் உண்டு. இதில் அனைத்து நலன்களையும் விளைவிக்கும் நீர்த்துளிகளும் இலங்குகின்றன. பிரமன் தமக்கு அருள்புரிந்த கும்பேசுவரருக்கு மாசித் திங்களில் விழா நடத்தி, மகாமகத்தன்று இக்குளத்தில் நீராடல் செய்வோர் நிலைபேறு அடைதல் வேண்டும் என வேண்டினார். சிவனும், பிரமனின் வழிபாட்டிற்கு இணங்கி அக் குளத்தில் மகாமக நாளன்று நீராடுவோர் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் நீங்கி நிலைபேறு அடைவர் என்று அருள் புரிந்தார். பி.ஆர்.ந.

*மகா மாத்திரர்*: வட இந்தியாவில், பண்டைக் காலத்தில் மகத நாட்டில் மௌரியர் ஆட்சி முறையில் பணியாற்றிய அலுவலர்கள், மகா மாத்திரர் (Mahamatras) எனப்படுவர். இந்த உயர் அலுவலர்கள் அரசனுக்குக் கட்டுப்பட்டு அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருந்தனர். மன்னர்கள் மகா மாத்திரர்களை மிகுந்த கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். கடமை தவறிய மகாமாத்திரர்கள் உடனே பதவி நீக்கம் செய்யப்படுவதும், திறமையானவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுவதும் மரபு ஆகும்.

ஆட்சித் துறையில் கி.மு. 3 – ஆம் நூற்றாண்டில் அகரம், விடயம், சனபாதம் என்ற மூன்று முக்கிய பிரிவுகள் இருந்தனவென்றும் அவற்றை நிருவகிக்க மகா மாத்திரர்கள், இராசுகர்கள், பிரதேசிகர்கள், இராட்டிரியர்கள் என்ற பல்வேறு அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் என்றும் கூறுவர். மௌரியர் காலத்தில் மகா மாத்திரர்கள் மிகுந்த செல்வாக்குடன் இருந்தவர். மௌரிய காலத்திய ஆட்சி முறையை, குறிப்பாகச் சந்திரகுப்தரின் ஆட்சி முறையை நன்கு படம் பிடித்துக் காட்டும் கௌடில்யரின் 'அருத்த சாத்திரம்' என்னும் நூலில் மகாமாத்திரர்களின் கடமைகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. அதேபோல் அசோகரின் கல்வெட்டுகளும் மகா மாத்திரர்களின் பணிகள் பற்றி ஓரளவு விளக்கம் தருகின்றன. பொதுவாக மாநில உயர் அலுவலர் அனைவருமே மகாமாத்திரர்கள் என வழங்கப்பட்டனர். அசோகரின் 5 – ஆம் கல்வெட்டுப்படி மகாமாத்திரர்களுக்குப் பல உயர் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன எனத்தெரிகிறது. அசோகப் பேரரசர் காலத்தில் 'தரும மகாமாத்திரர்கள்' என்ற புதிய அலுவலர்கள் ஏற்படுத்தப்பட்டனர் என்பதை அவரது 5 – ஆம் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. தருமத்தை நிலைநாட்டுவதற்கு என்று நியமிக்கப்பட்டதால் அவ்வதிகாரிகள் தருமமகாமாத்திரர்கள் என வழங்கப்பட்டனர். அவர்கள் நாட்டின் பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்களிடையே தருமத்தை நிலைநாட்டவும், மக்கள் மகிழ்ச்சியாக வாழவும் வழி வகுத்தனர். அவர்கள் பிராமணர்கள், வைசியர்கள், வேலைக்காரர்கள், எசமானர்கள், அனாதைகள், முதியவர்கள் முதலிய பல தரப்பட்ட மக்களின் இன்னல்களைத் தீர்க்கும் அலுவலர்களாக விளங்க வேண்டுமென அசோகர் கட்டளையிட்டிருந்தார். அத்துடன் தரும மகாமாத்திரர்கள் பல்வேறு வழக்கு மன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்புகளை மறுபரிசீலனை செய்து, நீதி வழங்குவதில் தவறு இழைக்கப்பட்டிருந்தால் அவற்றை மாற்றவோ தண்டனையைக் குறைக்கவோ நீக்கவோ செய்யலாம். இதைத் தவிர தரும மகாமாத்திரர்கள் அரச குடும்பத்தின் நலன்களையும் கண்காணித்து அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும். பொதுவாக நாட்டில் நற்பண்புகளை வளர்த்து மக்கள் ஒழுக்கமாக வாழ்வதை மேற்பார்வை செய்ய வேண்டுமென்பதே அவர்களின் தலையாய கடமையாகும்.

அசோகரின் 7-ஆம் கல்வெட்டு தரும மகாமாத்திரர்களின் பல்வேறு பணிகள் பற்றி விளக்கம் கூறுகிறது. அசோகர் கீழ்க்காணுமாறு தம் 7-ஆம் கல்வெட்டில் கூறுகிறார். 'அவர்களில் (தரும மகா மாத்திரர்கள்) சிலரைப் புத்த சங்கங்களின் நலன்களில் கவனம் செலுத்துமாறும்,அதேபோல் சிலரைப் பிராமணர்கள், அசுவிகர்கள், நிர்கிரந்தகர் ஆகியோர் நலன்களைக் கவனித்துக் கொள்ளுமாறும், மற்றும் சிலரைப் பிற சமயத்தினர்களின் நலன்களில் அக்கறை கொள்ளுமாறும் பணித்தேன்'. இக்கல்வெட்டு அசோகரின் சமயப் பொறையுடைமையை வெளிப்படுத்துவதோடு தரும மகாமாத்திரர்களின் பல்வேறு பணிகளையும் எடுத்துக் கூறுகிறது. இவர்களைத் தவிர தோசாலி, சம்பா போன்ற நகரங்களின் பல்வேறு பணிகளை மேற்பார்வையிடுவதற்கெனத் தனிப்பட்ட மகாமாத்திரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் 'நகர – வியவகாரிகள்' என்று குறிக்கப்பட்டனர். அத்தகைய அதிகாரிகளைக் கௌடில்யர் 'பௌரவ்ய வியவகாரிகள்', (Pourauya Vyavaharikas) எனக் குறிப்பிடுகிறார். இராசுகர்கள் சிற்றூர்களில் நீதி வழங்கி வந்ததைப் போலப் பௌரவ்ய வியவகாரிகள் நகரங்களில் நீதிபதிகளாகப் பணியாற்றினர். அவர்கள் நீதி வழங்குவதில் எவ்வித விருப்பு வெறுப்பும் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தாகும். இவர்களைத் தவிர 'அண்ட (Anta) மகா மாத்திரர்கள்' என்ற அலுவலர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.அவர்கள் மௌரியப் பேரரசின் எல்லை நாடுகளில் வாழும் மலை வாழ் மக்களை நல்வழிப்படுத்தித் தருமத்தை நிலைநாட்டி வந்தனர் எனத் தெரிகிறது. 'பெண் அத்யட்ச – மகாமாத்திரர்கள்', என்ற அதிகாரிகள் பெண்களின் நலன்களைப் பேணிக் காத்தார்கள் என்றும், அவர்கள் அருத்த சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'கணிக அத்யட்சகர்'களுக்கு இணையானவர்கள் என்றும் கருதப்படுகிறது.

மகாமாத்திரர்கள் அடிக்கடி சந்தித்துப் பொதுவான செய்திகள் பற்றிக் கலந்துரையாடி அவற்றைச் சிறப்பாகச் செயலாற்றும் வழிமுறைகளையும் ஆராய்ந்தனர். தங்கள் கீழ்ப் பணியாற்றும்'யுக்தர்கள்' என்ற கணக்குப் பிரிவு அதிகாரிகளைச் சிக்கன நடவடிக்கைகளைப் பின்பற்றி அரசாங்க வருவாயைப் பெருக்கிடுமாறு ஆணைகள் பிறப்பித்து வந்தனர். சட்டமியற்றுவது குறித்து மகாமாத்திரர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் அது

அசோகரின் கவனத்திற்கு உடனே கொண்டு வரப் பட வேண்டுமென ஆணையிட்டிருந்தார். அவர் வாய்ச் சொற்களைச் சட்டத்திற்குச் சமமாகக் கருதி அவற்றை மகாமாத்திரர்களும் மற்ற அலுவலர் களும் நிறைவேற்றி வைக்க வேண்டும். பெ.து.

*மகாயானம்:* புத்தர் தோற்றுவித்த பௌத்த சமயத்தில் நாளடைவில் இரு பிரிவுகள் தோன்றின. அவை ஈனயானம், மகாயானம் என்பன. ஈனயானம் என்ற சொல் 'சிறுவழி' என்றும், மகாயானம் என்ற சொல் 'பெருவழி' என்றும் பொருள்படும்.

புத்தருடைய போதனைகளைத் தொகுக்கும் நோக்கத்துடன் அவர் இறந்தவுடன் இராசகிருகம் என்னுமிடத்தில் ஒரு பேரவை கூட்டப்பட்டது. அப் போது அவருடைய போதனைகள் மூன்று தொகுதி களாகத் தொகுக்கப்பட்டன. இரண்டாம் பௌத்தப் பேரவை வைசாலிநகரில் புத்தர் இறந்த நூறு ஆண்டுகட்குப் பின் கி.மு.387-இல் கூடியது. அப் பேரவையின் நோக்கமே பௌத்த சங்கத் துறவிகள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நெறிமுறைகளைப் பற்றிய கருத்து வேறுபாடுகளைக் களைவதேயாகும். ஆயினும், கருத்தொற்றுமை ஏற்படவில்லை. மகா சங்கிகள் என்று தம்மைக் கூறிக் கொண்ட சிலர் தம் கருத்தையே வலியுறுத்தி, சமயத்தில் பிளவு ஏற்படக் காரணமாயிருந்தனர்.

பேரரசர் கனிசுகர் காலத்தில் (கி.பி.78 - 120) மகாயானம் தனியொரு சமயமாகவே வளர்ந்து விட்டதைக் காணலாம். மகாயானம் கனிசுகர் காலத் துக்கு முன்பே தோன்றியது என்பது தாரநாதர் என்ற பௌத்த ஆசாரியர் கூற்றிலிருந்து தெரிகின் றது. நாகார்ச்சுனர், அசங்கர் முதலான தத்துவ அறி ஞர்கள் மகாயானம் வளர்ச்சியடைவதற்குப் பெரிதும் உதவினர். அவர்கள் வழக்குரைகள் ஈனயானம் வலுவிழக்கவும் மகாயானம் வலுப்பெறவும் பயன் பட்டன.

மகாயான புத்தசமயத்தில் புத்தர் கடவுள் எனக் கருதப்படுகின்றார். போதிசத்துவக் கோட்பாடு மகாயானத்துக்கே உரியது. ஒவ்வொரு மனிதனும் பல நூறு பிறவிகளில் நல்வாழ்க்கை வாழ்ந்தால் போதிசத்துவர் ஆகலாம். போதி சத்துவர் ஆவது புத்தர் ஆவதற்கு ஒருபடியே. ஆகவே, ஒவ்வொரு மனிதனும் புத்தர் என்ற நிலையை அடைவது இயலக் கூடியதே. போதிசத்துவர் ஆனவர்களும் புத்தர் ஆனவர்களும் மற்றோர் அந்நிலைகளை அடைய உதவக்கூடும். இதற்கு அப்போதிசத்துவர் களையும் புத்தர்களையும் மலரிட்டு வணங்குதல், விளக்குகள் ஏற்றுதல் முதலிய வழிபாட்டு முறை களைச்செய்யவேண்டும். உருவ வழிபாட்டுக்கு இவை வழிவகுத்தன எனலாம் (ஈனயானத்தில் புத்தருடைய எலும்புகள், பல் முதலியன போற்றப்பட்டுப் பாதுகாக்கப்பட்டனவே அன்றி, உருவ வழிபாடு இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது). உருவ வழிபாட்டில் மக்கட்கு இருந்த நம் பிக்கை மகாயான பௌத்தம் தோன்றுவதற்கு ஒரு காரணமாய் இருந்திருக்கலாம். போதி சத்துவர்களும், புத்தர்களும் தாங்கள் செய்த நற் செயல்களின் பயனைத் தம்மை வணங்குவோர்க்கு மாற்ற இயலும். புண்ணியத்தை இவ்விதம் மாற்றக் கூடும் என்பது மகாயானத்தின் ஒரு தனிக் கொள்கை யாகும். புத்தருக்கு மூன்று வடிவங்கள் உண்டு என் றும் மகாயானம் கூறுகின்றது.

தன்முயற்சியின் வழியாகவே ஒவ்வொருவனும் நிருவாணம் என்னும் முக்தி நிலையை அடைய இய லும் என்று ஈனயானம் கூறும். ஆனால், போதி சத்துவர்களின் உதவியினாலும், சடங்குமுறைகளைத் தீவிரமாகப் பின்பற்றுவதாலும் நிருவாணத்தை அடையலாம் என்கிறது மகாயானம். போதிசத்துவ நிலையை அடைந்தவர் நிருவாணநிலையை அடை வதைத் தாமதப்படுத்திப் பிறர்க்குப் போதிசத்துவ நிலையை அடைய உதவ வேண்டும் என்கிறது மகா யானம். புத்தர் தத்துவ சாத்திர வழக்குகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. மகாயானத் தைச் சார்ந்தவர் தத்துவ வழக்கெதிர் வழக்குகளில் மிகுந்த ஈடுபாடு காட்டினர். ஈனயானம் பாலிமொழி யையே தன் நூல்களில் பயன்படுத்தியது. மகா யானம் சமசுகிருத மொழிக்கு முதன்மை அளித்தது.

பரிநிருவாண சூத்திரம் என்னும் நூல் மகாயான புத்த சமயத்தின் காலத்தால் முந்திய நூல் எனலாம். தூபிகள், சைத்தியங்கள் அமைத்தலைப் பற்றிய விவரங்களை இந்த நூல்களில் காணலாம். பிரஞ் ஞான பரமித்தா, சத்தரும புண்டரீகம், இலலிதவிசுத் தாரம் ஆகிய வடமொழி நூல்களும் மகாயான சமயத்தின் முக்கிய நூல்கள் ஆகும்.

சீனா, சப்பான், இந்தோ சீனா, தென்கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகளில் மகாயானம் பரவியது. ஆனால், தன்னைத் தோற்றுவித்த இந்தியாவில் புத்த மதம் செல்வாக்கு இழந்தது (ஈனயானம் இலங்கை யில் ஊன்றிக் கொண்டது). அ.வெ.பெ.

*மகாராசாத் துறவு:* குமாரதேவர் இந்நூலின் ஆசிரியர். அவர் கன்னட நாட்டு அரசராயிருந்து பின் துறவு பூண்டு பேறையூர்ச் சாந்தலிங்க சுவாமி களை ஆசிரியராகக் கொண்டு முதுகுன்றத்தில் தங்கி அரிய செயல் பல புரிந்தவர். அவர் இந்நூல் முதல்

16 சாத்திரங்கள் இயற்றியுள்ளார். இவர் கி.பி. 17 -ஆம் நூற்றாண்டினர். மகாராசாத் துறவின் பாயிரம் குமாரதேவ மாமுனி என இவரைக் குறிக்கும். வீர சைவம் பற்றி விரிவாகக் கூறுவது இந்நூல், பாயிரம் உட்பட 129 செய்யுட்களை உடையது. இந்நூல் அச்சாகியுள்ளது. கன்னட நாட்டரசரான மகாராசா என்பவர் வீடு பேறடைய விரும்பி ஒரு குருவையடைந்து வழி வினவினார். அவர் துறவுபூண்டாலல்லது வீடுபேறு அடையமுடியாது என்று கூற, அவர் மனைவியையும் மக்களையும் அரசாட்சியையும் துறந்து வனம் சென்று தவம் புரிந்து வீடு பெற்றார் என்பதை இந்நூல் அழகுறக் காட்டுகிறது. த.ரா.

**மகாராட்டிரம்**, இந்தியாவின் 25 மாநிலங்களுள் ஒன்றான இது உத்தரப் பிரதேசத்துக்கும், பீகாருக்கும் அடுத்தபடியாகக் கூடுதலான மக்கள் தொகையுள்ள மாநிலம். இராசசுத்தானுக்கும், மத்திய பிரதேசத்துக்கும் அடுத்தபடி அதிகப் பரப்பளவுள்ள மாநிலம் இது ஆகும். இதன் பரப்பளவு 3,07,690 சதுர கிலோ மீட்டர். மக்கள் தொகை 6,27,84,171 (1981). இவருள் எழுத்தறிவு பெற்றோர் 47.37 விழுக்காடு. இதன் மேற்கே அரபிக் கடலும், வடமேற்கில் குசராத்து மாநிலமும், வடக்கிலும் கிழக்கிலும் மத்திய பிரதேசமும், ஆந்திரப் பிரதேசமும், தெற்கில் கருநாடகமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் குறுகிய கடற்கரைப் பகுதி கொங்கணம் எனப்படும். இதன் கிழக்கில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் (சகயாத்திரியில்) கோதாவரி, பீமா, கிருட்டிணா ஆகிய ஆறுகள் தோன்றிக் கிழக்கு நோக்கிப் பாய்கின்றன. வடக்கே விந்திய மலையில் தபதி ஆறு தோன்றி மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக் கடலில் சேருகிறது. இவை பாயும் சமநிலங்களின் மக்களுள் 64 விழுக்காட்டினர் வேளாண்மைத் தொழிலிலீடுபட்டுள்ளனர். நெல், பருத்தி, வேர்க்கடலை, எண்ணெய் விதைகள், கரும்பு முதலியவை முக்கிய விளை பொருட்களாகும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு பலதொழிற் சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 97 பஞ்சாலைகளும், 26 சர்க்கரை ஆலைகளும், பல எண்ணெய் ஆலைகளும் இருக்கின்றன. மேற்குக் கடலோரத்தில் மீன் பிடித்தலையும் ஒரு தொழிலாகக் கொண்டுள்ளனர். இம்மாநிலத்தில் பேசப்படும் ஒரேமொழி மராத்தி. இதன் தலைநகரம் பம்பாய். இதில் 30 மாவட்டங்கள் உள்ளன.

**வரலாறு**: இம்மாநிலம் தொடக்கத்தில் மௌரியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. பின்னர்ச் சாளுக்கியர், இராட்டிர கூடர், யாதவர் முதலிய இந்துக் குடும்பங்களாலாளப்பட்டு, கி.பி. 1294 – ஆம் ஆண்டிலிருந்து அலாவுதீனின் முயற்சியால் முசுலிம் ஆட்சியாளராலும் ஆளப்பட்டது. சிவாசி அரசர் (கி.பி. 1630 – 1680) தம் முயற்சியால் இந்து அரசை மீண்டும் நிறுவினார். அவருக்குப்பின்னர் கி.பி.1818-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இந்நாட்டைக் கைப்பற்றினர். அவர்களுடைய ஆட்சியில் மகாராட்டிரம் குசராத்தோடு இணைந்து பம்பாய் மாகாணமாக இருந்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர், மொழி அடிப்படையில் மாநிலங்கள் மாற்றி அமைக்கப்பட்டபோது, 1960 – ஆம் ஆண்டின் பம்பாய் மாநில அமைப்புச் சட்டத்தின்படி, 1960, மே 1-இல் மகாராட்டிரமும், குசராத்தும்தனித்தனி மாநிலங்களாக நிறுவப்பட்டன. இம்மாநிலத்தில் அசந்தாவிலும், எல்லோராவிலும் உள்ள குகைகளும், குகை ஓவியங்களும், சிற்பங்களும், எலிபெண்டா தீவில் உள்ள குகை மும்மூர்த்திச் சிற்பங்களும், கானேரி, கார்லே முதலிய இடங்களிலுள்ள குகைக் கோயில்களும், சிற்பங்களும், சிவனார் கோட்டையும், பிரதாப்காட் கோட்டையும் வரலாற்றுச் சிறப்புடையவை. பா.சு.

**மகாலிங்கம், டி.வி.**: இவர் தமிழ்நாட்டின் சிறந்த வரலாற்று அறிஞர்களுள் ஒருவராவார். தேரழுந்தூர் வேங்கடராம சடாவல்லபர் மகாலிங்கம் தென்னிந்திய வரலாற்றில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பல அரிய நூல்களை எழுதிப் புகழ் பெற்றுள்ளார்.

இவர், 1907 – ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்திலுள்ள தேரழுந்தூரில் வேங்கடராம சடாவல்லபருக்கும், சாவித்திரி அம்மாளுக்கும் மகனாய்த் தோன்றினார். இவர் 1929 – ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டப் படிப்பில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று அண்ணாமலைச் செட்டியார் பரிசினை வென்றார். சென்னைப் பல்கலைக்கழக முதுகலைப் பட்டத்தேர்வில் 1931 – ஆம் ஆண்டில் முத



மகாலிங்கம், டி.வி.

லிடம் பெற்று, அண்ணாமலைச் செட்டியார் பரிசினை அடைந்தார். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1939 – 42-ஆம் ஆண்டுகளில் வரலாற்று ஆராய்ச்சி மாணவராகவும், உதவியாளராகவும் இருந்த பொழுது, 1940–ஆம் ஆண்டில் சங்கர பார்வதி பரிசு பெற்றார். ஆய்வின் முடிவில் 1942–ஆம் ஆண்டில் 'விசயநகரப் பேரரசின் நிருவாகமும், சமூக வாழ்க்கையும்' (Administration and Social Life Under the Vijayanagar) என்னும் ஆய்விற்காக டாக்டர் பட்டத்தைச் (Doctor of Letters) சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்கு வழங்கிற்று. இவர் 1942-47 – ஆம் ஆண்டுகளில் மதுரை மாநகரிலுள்ள மதுரைக் கல்லூரியிலும், புதுக்கோட்டையிலுள்ள மன்னர் கல்லூரியிலும் வரலாற்று விரிவுரையாளராகப் பணி புரிந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாறு தொல்பொருளியல் ஆகிய துறைகளில் 1947 – ஆம் ஆண்டு முதல் 55-ஆம் ஆண்டு வரை இணைப் பேராசிரியராகவும், 1956 – ஆம் ஆண்டு முதல் 1971–ஆம் ஆண்டு வரை பேராசிரியராகவும் இருந்தார்.

தமிழ்நாட்டில் காவிரிப் பள்ளத்தாக்கிலும் பாலாற்றுப் பகுதியிலும் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டார். காவிரி ஆற்றின் கீழ்ப் பள்ளத் தாக்கில் திருக்காம்புலியூர், அழகரை ஆகிய இடங் களில் நடத்திய ஆய்வு பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தமிழ்நாட்டில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட இவர் நான்கு இடங்களில் அகழாய்வு களை நடத்தினார். வரலாறு, வரலாற்று வரைவியல், தொல்பொருளியல், கலையும் கட்டடக்கலையும், கல்வெட்டியல் (Epigraphy), நாணயவியல் (Numismatics), சமயமும் தத்துவமும் ஆகியவை குறித்து நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். மேலும், பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் வரலாறு பற்றிய சொற்பொழிவு களை நிகழ்த்தியுள்ளார். இவர் சங்கர பார்வதி (1951), சுப்பிரமணியர் (1954), சர் வில்லியம் மேயர் (Sir William Meyer, 1963) ஆகியோர் அமைத்துள்ள அறக்கட்டளைச் சொற்பொழிவுகளைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது. வரலாற்று ஆராய்ச்சிக்கான இந்தியக் கழகம், (Indian Council of Historical Research), பல்கலைக் கழக மானியக்குழு ஆகியவற்றிற்காகப் பல ஆராய்ச் சித் திட்டங்களையும் மேற்கொண்டார்.

வரலாறு பற்றிய பல்வேறு மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு தென்னிந்திய வரலாற்றின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றினார். செய்ப்பூரில் 1951–ஆம் ஆண்டில் நடந்த இந்திய வரலாற்று மாநாட்டிலும் (All India History Congress) அகமதாபாதில் 1953-ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்து இந்தியக் கீழ்த்திசை மாநாட்டிலும், கௌகாத்தியில் (Gauhati) 1965 – ஆம் ஆண்டில் நடைபெற்ற அச்சங்க மாநாட்டிலும் நிகழ்ந்த கருத்தரங்கு களுக்குத் தலைமை தாங்கினார். பின்னர், நாகபுரியில் 1970-ஆம் ஆண்டில் நிகழ்ந்த அனைத்து இந்திய நாணயவியல் மாநாட்டிற்கும், பம்பாயில் 1972-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியத் தொல்பொருளியல் சங்க ஐந்தாம் ஆண்டு மாநாட்டிற்கும், 1976-ஆம் ஆண்டில் நிகழ்ந்த இந்தியக் கல்வெட்டியல் சங்கத்தின் மூன்றாம் மாநாட்டிற்கும் தலைவராக விளங்கினார்.

இவர் படைத்துள்ள 12 உயரிய நூல்களுள் கீழ்க் கண்டவை குறிப்பிடத்தக்கவை. அவை 1) விசய நகரப் பேரரசின் நிருவாகமும் சமூக வாழ்க்கையும் (Administration and Social Life under the Vijayanagar), 2) தென்னிந்திய அரசியல் (South Indian Polity), 3) தொடக்கக்காலத் தென்னிந்திய வரலாற்றில் காஞ்சிபுரம் (Kanchipuram in Early South Indian History), 4) தென்னிந்திய வரலாற்றில் பாணர்கள் (Banas in South Indian History) ஆகியனவாகும்.

வரலாற்றுத் துறையில் இவர் ஆற்றியுள்ள பணி களுக்காக இவருக்கு இந்தியஅரசு 1969-இல் 'தாமரைத் திரு' (Padma Sri) விருதினை வழங் கியது. இவர் 1982-ல் மறைந்தார். இவர் தாம் திரட்டிய 1934 நூல்களைத் தஞ்சைத் தமிழ்ப் பல் கலைக்கழக நூலகத்திற்கு வழங்கியுள்ளார். சி.இரெ.

**மகாலிங்கையர், மழவை:** இவர் மதுரைக் குக் கிழக்கேயுள்ள மழவராயனேந்தல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். வீரசைவ நெறியாளராக இவர் பெரிதும் மதிக்கப்படுகின்றார். அந்நாளில் புலமைச் சிறப்பு வாய்ந்த பெருங்கல்வியாளர்களாகத் திகழ்ந்த திருத்தணிகை சரவணப்பெருமாளையர், விசாகப் பெருமாளையர் முதலியோரிடம் இவர் கல்வி கற்றார். கம்பராமாயணம், தணிகைப் புராணம் முதலிய காப்பியங்களில் இவர் பெரும்புலமை படைத்தவராக விளங்கினார். அன்றியும் இவர் சிறந்த இலக்கணப் புலமையும் பெற்று விளங்கினார். இவ்வாறு காப்பியப் புலமையும், இலக்கணப் புலமையும் ஒருங்கே இவரிடத்து அமைந்திருந்தமையால் ஆசுகவி பாடுதலிலும் இவர் வல்லவராக விளங்கினார். இவர் இசைப்பயிற்சியிலும் சிறந்தவராக விளங்கினார். சென்னைப் பல் கலைக்கழகத்தில் தலைமைத் தமிழ்ப் புலவராகச் சில காலம் இவர் விளங்கினார். இவர் திருவாவடுதுறைத் தாண்டவராயசாமிகளுக்கு முற்பட்டவர். மீனாட்சி

சுந்தரம் பிள்ளை, சந்திரசேகர கவிராய பண்டிதர் முதலியோருக்கு இவர் நண்பராக விளங்கினார். அட்டாவதானம் சபாபதிப்பிள்ளை இவர் மாணாக்கராவார்.

முதன் முதலாகத் தொல்காப்பிய எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரையை இவர் பதிப்பித்துள்ளார் (கி.பி. 1848). அப்பதிப்பே தொல்காப்பியப் பதிப்புகளுக்கு முன்னோடியாக அமைந்தது. மகாலிங்கையர் இலக்கணம் என்னும் சிறந்த இலக்கண நூல் (கி.பி. 1879) ஒன்றையும் இவர் இயற்றியுள்ளார். அருணாசலப் புராணத்திற்கு இவர் உரையும் எழுதியுள்ளார் (கி.பி. 1898). போதவாசகம் என்னும் ஒரு நூலும் இவரால் செய்யப்பட்டது. மேற்குறித்தவற்றினால் இவர் பதிப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும், பயிற்றாசிரியராகவும், படைப்பாசிரியராகவும், இசையறிஞராகவும் விளங்கினார் எனத் தெளியலாம்.

இவர் அறிஞர்களிடையேயும், திருமடங்களின்தலைவர்களிடமும் நன்மதிப்புப் பெற்றுப் புகழடைந்திருந்தார் என்று டாக்டர் உ.வே.சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். திருவாவடுதுறைத் திருமடத்தின் தலைவர் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர் சாமிநாதையரைச் சென்னைக்கு அனுப்பும்போது ‘தாண்டவராய முதலியாரும், மகாலிங்கையரும், விசாகப் பெருமாளையரும் போல நல்ல புகழ் அடைந்து விளங்க வேண்டும்’ என்று குறிப்பிட்டதாகச் சாமிநாதையர் குறிப்பிடுவதால் மகாலிங்கையர் சமுதாயத்தில் சிறப்புற மதிக்கப் பெற்றமை புலனாகும்.

மகாலிங்கையர் போன்ற அறிஞர்களின் முன்னோடிப் பதிப்புகளும், வழிமுறைகளும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் தலைசிறந்த பதிப்பாளராக விளங்கத் துணை புரிந்தன எனலாம். இவ்வாறு இவர் பல துறைகளில் தமக்கெனத் தனியிடம் ஒன்றைப் பெற்றுத் திகழ்கின்றார். ப.கொ.

**துணை நூல்கள்:**

**கந்தையா பிள்ளை, ந.சி.**, தமிழ்ப்புலவர் அகராதி, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960.

**வேங்கடசாமி, மயிலை, சீனி.**, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், சாந்தி நூலகம், சென்னை, 1962.

**சகந்நாதன், கி.வா.** (சுருக்கியவர்), உ.வே. சாமிநாதையரின் ‘என்சரித்திரம்’, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 1978.

*மகா வக்கா*: வக்கா என்னும் சொல் பாலி மொழிச் சொல்லாகும். அது நூலின் அல்லது சுவடியின் உட்பிரிவு என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மகா வக்கா என்பது ‘பெரியபிரிவு’ என்னும் பொருள் தருகின்றது. பாலி என்னும் மொழியிலுள்ள புத்தசமயப் புனித நூல் மூன்று தொகுதிகளாக உள்ளது. அவை முறையே விநய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என்பன. தொகுதி ஒவ்வொன்றும் பல பகுதிகளாகவும், பகுதிகள் உட்பிரிவுகளாகவும் உட்பிரிவுகள் உட்பகுப்பு உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

விநய பிடகத்தின் மூன்றாவது பகுதி கண்டகா (காண்டம்) என்பது. அதில் இரு உட்பிரிவுகள் உள்ளன. அவை முறையே மகா வக்கா (பெரும்பிரிவு) சுள்ள வக்கா (சிறுபிரிவு) என்பன. பெரும் பிரிவாகிய மகாவக்கா மீண்டும் பத்துக் குறும்பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. மகாவக்காவின் பத்துக் குறும்பிரிவுகள் பல செய்திகளைக் கூறுகின்றன. புத்த சங்கம் என்னும் துறவிகள் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட வரலாற்றை இதிலிருந்து அறியலாம். உபசோதா என்னும் சடங்கு (துறவியாக ஒருவரை ஏற்றுக் கொள்ளும் நடைமுறை) எவ்விதம் நிகழ்த்தப்பட வேண்டும், மழைக்காலத்தில் துறவியர் எவ்வித வாழ்க்கை நெறியை மேற்கொள்ள வேண்டும்,காலணிகள் அணிவது, இருக்கைகளை அமைப்பது, ஊர்திகளைப் பயன்படுத்துவது, உடையணிவது, மருந்துகளை உட்கொள்வது, நீதிமன்றங்களின் நடைமுறை, புத்த சங்கத்தில் ஒழுங்குக் கட்டுப்பாட்டைக் காப்பது போன்ற பல பொருட்களைப் பற்றிய விவரங்கள் இப்பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன. வரலாற்று ஆசிரியர்க்கு இச் செய்திகள் மிகவும் பயன்படுவனவாகும். பொது மக்கள் வாழ்க்கை பற்றிய பல குறிப்புகள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. ஆகவே, வரலாறு எழுதும் ஆதாரங்களாக அக்குறிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

சுத்த பிடகத்தின் பகுதிகளில் முதலாவதான திகநிகாயம் என்பது மூன்று உட்பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டாம் உட்பகுதி ‘மகா வக்கா’ என்று குறிப்பிடப்படுகின்றது. இம்மூன்றில் அளவில் நீண்டதாக இருப்பதால் இது மகா வக்கா அல்லது ‘பெரிய பிரிவு’ என்ற பெயரைப் பெற்றிருக்கலாம். இவ்வண்டம் தோன்றிய விதம், மறுபிறவி, தன்னடக்கம், துறவு முதலிய பல தொடர்பில்லாத பொருட்கள் இதில் கூறப்பட்டுள்ளன.

சுத்த பிடகத்தின் மூன்றாவது பகுதியான கம்யுத்த நிகாயம் ஐந்து உட்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வைந்து உட்பிரிவுகளில் ஐந்தாவது மகா வக்கா என்ற பெயர் உடையது. இதில் புத்தருடைய போதனைகளில் நன்னடத்தை பற்றியவை விளக்கப்பட்டுள்ளன.

சுத்த பிடகத்தின் ஐந்தாம் பகுதி குத்தக நிகாயம் எனப்படும். அதன் உட்பகுதிகளுள் ஒன்று தம்மபதம் என்பது. அதன் பிரிவு ஒன்று 'சத்தநிபாதா' என்பது. சத்தநிபாதாவின் குறும்பிரிவுகளுள் ஒன்று 'மகா வக்கா'. இதில் புத்தசமயத்தின் நெறிமுறைகள் வேத சமயத்தின் நெறிமுறைகளோடு ஒப்பிடப்பட்டு, புத்தமதத்தின் நெறிகளே உயர்ந்தவை என்பது கூறப்கின்றது. உண்மையான பிராமணன் பிறப்பினால் வருபவனல்லன்; மாறாக நன்னடத்தையே ஒருவனைப் பிராமணன் என்ற நிலையை அடைய வைக்கும் என்ற கருத்து இதில் விளக்கப்பட்டுள்ளது.

'மகா வக்கா' (விநய பிடகத்தின் பகுதி) அசோகர் காலத்துக்கு முந்தியது என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஏனெனில் அசோகர் காலத்தில் கூட்டப்பட்ட மூன்றாம் புத்தப் பேரவை பற்றிய குறிப்பு ஏதும் அதில் காணவில்லை. அதேபோன்று சுத்த பிடகமும் அசோகர் காலத்துக்கு முந்தியதாகும் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இவை அனைத்தும் கி.மு.350 – ஆம் ஆண்டுக்கு முன்னமே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். பி.வி.

மகா வாக்கியங்கள்: வேதங்களின் உட்கிடையாக விளங்கும் உபநிடதங்கள் அனைத்தும் இரு நூற்றுக்கு மேற்பட்டவை எனினும், எழுதப்பட்டுள்ள பத்து உபநிடதங்களே மிக்க இன்றியமையாதனவாகும். உபநிடத இலக்கியங்களின் அனைத்துக் கருத்துகளும் அப்பத்து உபநிடதங்களில் அடங்கியுள்ளன எனக் கூறலாம். அதனினும் மேலாக அப்பத்து உபநிடதங்களின் கருத்துகள் அவற்றில் ஆங்காங்குள்ள சில வாக்கியங்களில் அடங்கியுள்ளன என்று குறிப்பிடுவர். அவ்வாறு உபநிடதங்களின் பிழிவு முழுவதும் கொண்டு விளங்கும் வாக்கியங்களே 'மகா வாக்கியங்கள்' எனக் கூறப்படுகின்றன.

அனைத்து உபநிடதங்களிலும் காணப்படும் அறிவுரைகளின் பிழிவாக இருப்பது, உள்ளவை அனைத்திற்கும் அல்லது படைப்பு முழுமைக்கும் அடிப்படையாக உள்ளது ஒரேயொரு 'பரம்பொருள்' எனப்படும் ஒருமைக் கொள்கையும் (Monism), அவ்வடிப்படைப் பொருளும் உணர்வு மயமானது என்னும் கருத்துக் கொள்கையும் (Idealism) ஆகும். உணர்வு மயமான ஒரேயொரு பரம்பொருளை உபநிடதங்கள் பிரமம் (Brahmam), ஆத்மா (Atma) என்னும் இரு சொற்களால் குறிப்பிடுகின்றன. 'இந்திய மெய்ப்பொருளியல் சிந்தனை என்னும் கட்டடத்தைத் தாங்கி நிற்கும் இரு தூண்கள்' என அவ்விரு சொற்களும் கருதப்படுகின்றன. அவற்றுள் ஆத்மா என்னும் சொல் முதலில் மூச்சைக் (Breath) குறிப்பதாக இருந்தது. பின்னர் எதிலும் இன்றியமையாப் பகுதியாக உள்ளதற்கு, அதிலும் குறிப்பாக மனிதனின் இன்றியமையாப் பகுதியாகிய அகத்திற்கு ஆத்மா என்ற பெயர் வழங்கப்பட்டது. அது மனித உடலில் இருந்து அதனை இயக்கும் சக்தியாகும்.

மனித உடலிலிருந்து அதனை இயக்கும் சக்தியாக ஆத்மா கருதப்படுவதைப் போன்று, படைப்பு முழுமையில் அல்லது புற உலகில் இருந்து அதனை இயக்கும் சக்தி அல்லது அடிப்படைப் பொருள் ஒன்று இருக்க வேண்டும் என்ற உண்மை பெறப்படுகிறது. புறஉலகின் அடிப்படைப் பொருளை உபநிடதங்கள் பிரமம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றன. அச்சொல் முதலில் 'வழிபாடு' (Prayer) என்னும் பொருளுடையதாக இருந்தது. பின்னர், அது வளர்வது அல்லது வெளிக் கிளம்புவது என்னும் பொருளுடைய பிருச்சு (Brh) என்னும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததால், அதனை உபநிடதங்கள் படைப்பு முழுமையின் முழுவடிவத்தில் தானாகவே வெளிக் கிளம்பியும், அதன் உள்ளிருந்து அதனை இயக்கியும் வரும் சக்தியாகிய பிரமம் என்று கூறின.

பிரமம் என்பது இயற்கையையும், மனிதனையும் உள்ளிட்ட படைப்பு முழுமையின் என்றுமுள்ள அடிப்படைப் பொருள் என விளங்குகிறது. இவ்வகையில் அகவயமான அடிப்படைப் பொருளாகிய ஆத்மாவும் புறவயமான அடிப்படைப் பொருளாகிய பிரமமும் ஒரேயொரு பரம்பொருளை அல்லது உள்பொருளைக் குறிப்பதால் ஆத்மா பிரமம் என்றாகிறது. இந்த முழுமையான ஒருமையைக் குறிப்பனவே மகா வாக்கியங்கள். 'தத்துவம் அசி' (Tattvamasi) அல்லது 'அது நீ ஆனாய்'; 'அகம் பிரமம் அச்மி' (Aham Brahma Asmi) அல்லது 'நானே பிரமம் ஆனேன்' என்பன போன்ற வாக்கியங்கள் பிரமத்துக்கும் ஆத்மாவிற்கும் உள்ள முழுமையான ஒருமையை அல்லது சமநிலையைக் குறிப்பதாலேயே அவை மகா வாக்கியங்கள் எனப்படுகின்றன. ஆத்மாவே பிரமம் என்று கூறும் இம் மகாவாக்கியங்கள் இரண்டு பேருண்மைகளை வலியுறுத்துகின்றன. அவை 'மனிதனுக்கு ஆத்மா உண்டு என்பது எத்துணை உறுதியோ அத்துணை உறுதியானது படைப்பு முழுமைக்கும் பிரமமாகிய ஆத்மா உண்டு' என்பதும், படைப்பு முழுமைக்கும் அடிப்படையானது பருப்பொருள் அன்று; உணர்வுப் பொருள் என்பதும் ஆகும். உணர்வுப் பொருளாகிய பிரமத்திலிருந்தே பருப்பொருள்களாய்ப் படைப்பு முழுமையும் வெளிக் கிளம்பி வருகின்றன. மனித உடலாகிய பருப்பொருளுக்கும் அடிப்படையானது உணர்வுப் பொருளாகிய ஆத்மா என்பதால், ஆத்மா

வும் பிரமமும் ஒன்று என மகா வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இம்மகா வாக்கியங்களுக்கு இந்திய மெய்ப் பொருளியல் சிந்தனையாளர்கள் பல வகையான விளக்கங்களைக் கொடுக்கின்றனர். ஆத்மாவும் பிரமமும் ஒரே பொருள் என்றும், இரு வகையான பொருட்கள் என்றும் கூறுகின்றனர். பல்வேறு வகையான விளக்கங்கள் தருகின்றனர். கொடுக்கப்படுகின்ற விளக்கங்களைப் பொறுத்து அச்சிந்தனை முறைகள் அத்துவைதம், விசிட்டாத்துவைதம், துவைதம், சைவ சித்தாந்தம் எனப் பல்வேறு வகையான பெயர்களைக் கொண்டுள்ளன. பி.ஆர்.ந.

**மகாவீரர்**: சமண சமயம் தனது வரலாற்றுடன் தொடர்பு கொண்டதாகக் குறிப்பிடும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களில் இறுதியானவர் மகாவீரராவார். முதல் தீர்த்தங்கரரான இடபதேவர் சமண சமயத்தை நிறுவியவர் எனக் கருதப்படுகிறார். இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் அறவுரைகள் அடங்கியதே சமணம் எனக் கருதப்பட்டாலும் அச் சமயத்தின் கொள்கைகளை முறைப்படுத்தியவர் மகாவீரராவார்.

மகாவீரரின் இயற்பெயர் வர்த்தமானர் என்பதாகும். இவா மகதநாட்டுப் பாடலிபுத்திரத்தில் வைசாலி என்னும் பகுதியின் குறுநில மன்னரான சித்தார்த் தருக்கும் அவர் மனைவியான திரிசலைக்கும் இரண்டாம் மகனாக கி.மு. 599 – ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் வளர்பிறை பதின்மூன்றாம் நாள் குண்டலபுரம் என்னும் இடத்தில் பிறந்தார். இவர் தாயார் இவரது பிறப்பைப் பற்றியும் இவர் பெறக்கூடிய அழியாத புகழைப் பற்றியும் பதினான்கு கனவுகள் கண்டார் என ஒரு செவிவழிச் செய்தி உண்டு. அக்கனவுகள் சமணக் கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

வர்த்தமானர் தம் பெற்றோர்களுடன் அவர்கள் இறக்கும் காலம் வரை வாழ்ந்தார். அக்காலத்தில் இவர் யசோதை என்ற பெண்ணை மணந்து கொண்டாரெனவும், அவர்களுக்குப் பிரியதர்சனா என்ற பெண்மகவு பிறந்ததெனவும் சமணத்தின் ஒரு பிரிவான சுவேதாம்பரர்கள் கருதுகின்றனர். ஆனால், சமணத்தின் மற்றொரு பிரிவான திகம்பரர்கள் வர்த்தமானருக்கு இளமையிலிருந்தே துறவு பற்றிய உந்துதல் இருந்ததெனவும், பெற்றோர்களின் மறைவிற்குப் பின்னரே துறவு பூணுதல் சிறந்தது எனக் கருதி, அவர்களின் மறை



மகாவீரர்

விறகுப்பின் துறவு பூண்டார் எனவும் இவ்வாழ்க்கையில் ஈடுபடவில்லை எனவும் கருதுகின்றனர். இரு பிரிவினரும் வர்த்தமானர் தம் முப்பதாம் வயதில் உடன்பிறந்தாரின் அனுமதியுடன் துறவு நிலை மேற்கொண்டார் என்பதில் ஒன்றுபடுகின்றனர்.

அக்காலத்தில் வர்த்தமானருக்கு இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இருபத்து மூன்றாம் தீர்த்தங்கரரான பார்சுவநாதர் என்பவரின் கொள்கைகளைப் பின்பற்றி வந்த ஒரு துறவியர் குழு, வைசாலியின் புறப்பகுதியின் அமைந்திருந்த சுந்தரவனம் என்னுமிடத்தில் தங்கியிருந்தது. வர்த்தமானரின் சிந்தனை அவர்களின் கொள்கைகளில் பற்றுக் கொண்டது. வர்த்தமானர் துறவறம் பூண்டபின் பன்னிரண்டு ஆண்டுகள் பல இடங்களில் சுற்றி அலைந்தார். இவர் பிறவியிலேயே சமணம் குறிப்பிடும் ஐவகை அறிவு நிலைகளுள் புலன் உறுப்புகளின் செயற்பாட்டினால் பொருள்களைப் பற்றி உயிர் அறிகின்ற அறிவாகிய 'மதிஞானத்தையும்', முற்றுணர்ந்தவர்களின் உரைகளினால் கிடைக்கின்ற தெளிந்த அறிவாகிய 'சுருதி ஞானத்தையும்', முற்காலத்தில் நிகழ்ந்த குறிப்பிட்ட இயற்கை நிகழ்ச்சிகளை மீளவும் உணர்கின்ற அறிவாகிய 'அவதி ஞானத்தையும்' பெற்றிருந்தார் எனக் குறிப்பிடுவர். பின்னர்த் தம் துறவு வாழ்வில் அனைத்து உயிரினங்களின் எண்ணங்களை அறியும் அறிவாகிய 'மனப் பரியாய ஞானத்தை' வர்த்தமானர் பெற்றார். தம் பன்னிரண்டு ஆண்டுத் தவ வாழ்வின் முடிவில் இரிசுபாலிகா என்னுமிடத்தில் சால் என்னும் மரத்தின் அடியில் அறிவின் இறுதி நிலையாகிய கேவல ஞானத்தைப் (முற்றறிவை) பெற்றார். அதனால் பழைய வினைகளை அழித்து 'சினர்' என்றும் பெயர் பெற்றார். சினர் என்னும் சொல்லிலிருந்தே சமணம் என்ற பெயரை அச்சமயம் பெற்றது. எண்வகை வினைகளையும் தம் மனத்தையும் பொறிகளையும் அடக்கி வெற்றி கண்டதால் மகாவீரர் என்னும் பெயர் பெற்றார்.

முற்றறிவைப் பெற்ற மகாவீரர் முதன் முதலில் பார்சுவநாதர் கற்பித்த நான்கு போதனைகளான உயிர்களைத் துன்புறுத்தாமை (அகிம்சை), பொய்யாமை அல்லது வாய்மை (சத்தியம்), கள்ளாமை (அச்தேயம்), உடைமைகள் பெற்றிருத்தலின்மை (அபரிக்கிரகம்) ஆகியவற்றுடன் தன்னடக்கத்தையும் (பிரமசரியம்) இணைத்து ஐந்து பெரும் நோன்புகளை அறிவுறுத்தினார். அவை பின்னர் அணு விரதங்கள் என்னும் பெயர் பெற்றன. மகாவீரருக்குக் கௌதம இந்திரபூதி என்னும் பிராமணர் முதல் மாணவரானார். தம் மாணவருக்குத் தாம் கண்ட உண்மைகளைக் கற்பித்த பின்னர் மகாவீரர் நாட்டின் பிறபகுதிகளில் சமண சமயக் கருத்துகளை எடுத்துரைக்கத் தொடங்கினார்.

முற்றறிவை அடைந்த மறு ஆண்டில் மகாவீரர் தீர்த்தங்கரர் ஆனார். மக்களை நன்னெறியில் செலுத்துபவர் என்பதே தீர்த்தங்கரர் என்னும் சொல்லின் பொருளாகும். மகாவீரர் காட்டிய நன்னெறி என்பது, சமண சமயத்தின் நான்கு குழுக்களான ஆண்துறவி, பெண்துறவி, சமயப் பற்றுள்ள பொது நிலை ஆண், சமயப் பற்றுள்ள பொது நிலைப் பெண் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பிரிவில் உறுப்பினராவது ஆகும். மகா வீரர் சமண சமயத்தை ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் பரப்பியதன் பின்பு தம் எழுபத்திரண்டாம் வயதில் பாட்னா மாவட்டத்திலுள்ள ஒரு சிறிய கிராமமான பாவா என்னுமிடத்தில் உயிர் நீத்தார். இறப்பதற்கு முன் (கி.மு. 527) மகாவீரர் வினைப்பயன்களை விவரிக்கும் ஐம்பத்தைந்து விரிவுரைகளையும், எழுப்பப்படாத முப்பத்தாறு வினாக்களுக்கு விடைகளையும் அளித்தது மட்டுமன்றி மருதேவர் பற்றிய நீண்ட சொற்பொழிவையும் ஆற்றினார் என்பது கூறப்படுகிறது.

பி.ஆர்.ந.

**மகாவீரர் பிரசாத்து துவிவேதி**: இவர் இன்று வட இந்தியாவில் பேசப்படும் இந்தி மொழியினை (கடிபோலி வடிவம்) உருவாக்கி வளர்த்தவர். இவர் கி.பி. 1868-ஆம் ஆண்டு முதல் 1938-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவராவார். இந்தியில் புதிய கவிதை நடையையும் உரைநடையையும் வளப்படுத்தியவரும் இவரே. இவர் வாழ்ந்த காலத்தைத் 'துவிவேதி யுகம்' என்றே இந்திமொழி அறிஞர்கள் கூறுகின்றனர்.

'கடிபோலி' இந்தி மொழியைப் பாரதேந்து அரிச்சந்திரர் என்னும் அறிஞர் அறிமுகப்படுத்தினார். துவிவேதிதான் அதனைச் செப்பம் செய்து வளப்படுத்தினார். அலகாபாது நகரிலிருந்து, வெளியிடப்பட்ட, 'சரசுவதி' என்னும் இலக்கியத் திங்களிதழின் ஆசிரியராக 1903 – ஆம் ஆண்டு முதல் 1920 – ஆம் ஆண்டு வரை பணியாற்றிய இவர் அவ்விதழில் பல்வேறு வகையான கட்டுரைகளையும் இடம்பெறச் செய்து இந்தி மொழியை வளர்த்தார்; அறிவு வளர்ச்சிக்குரிய கட்டுரைகளுக்கும், சிறந்த கவிநலம் கொண்ட பாடல்களுக்கும் சிறப்பிடம் தந்தார். புதிய எழுத்தாளர்கள் பலரை உருவாக்கினார்.

மராத்தி மொழிக் கவிதைகளின் இயல்புகளைக் 'கடிபோலி' இந்திமொழிக் கவிதைகளில் ஊடுருவச் செய்து விருத்தப் பாக்களை இயற்றி வெளியிட்டார். இவர் இயற்றிய 'விதி விடம்பனா', 'குமார சம்பவ

சாரம்' முதலியன உயர்ந்த கவிதை இயல்புகளைக் கொண்டனவாகும். அவை பிற்கால இந்திமொழிக் கவிஞர்களுக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின் றன. சிறந்த தேசிய கவிஞராகிய மைதிலி சரண் குப்தா (கி.பி. 1886-1966) 'சாகேத்து', 'யசோதரா' போன்ற காப்பியங்களை இயற்றத் துவிவேதியே காரணமாக இருந்தார்.

மக்களின் மனத்துக்கு மகிழ்ச்சியூட்டுவனவாக மட்டுமல்லாமல், அவர்களுடைய அறிவை வளர்க்கக் கூடியனவாகவும், சிந்தனையைத் தூண்டக் கூடியன வாகவும் இலக்கியம் அமையவேண்டும் என்பதில் ஆர்வங்கொண்டு உழைத்த இவர் தம்வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார். இந்தி மொழியின் இலக்கிய வரலாற்றில் இவர் இவ்வாறு சிறப்பான இடம் பெற்றுள்ளமையால் இவர் வாழ்ந்த காலக் கட்டத்தை இந்திமொழி வரலாற்றில் 'துவிவேதி யுகம்' என்று குறிப்பிடுகின்றனர். சி.ஆர்.நா.

*மகா வைத்தியநாதையர்* (**கி.பி. 1844 – 1893**): இவர் தஞ்சாவூருக்கருகிலுள்ள வையைச் சேரி என்னும் கிராமத்தில் பிறந்தவர். இவர் தந்தை யார் பஞ்சநாதையர் ஆவார். இவர் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில், இசையுலகில் சிறப்புற்று விளங்கிய வர். இனிய செம்மையான குரல்வளம் இவர் பெருஞ் செல்வமாக விளங்கியது. மூன்று ஓங்கியங்களிலும் (இசுதாயி), மூன்று காலங்களிலும் மிக எளிதாகப் பாடக்கூடியவர். 'கந்தர்வ கானம்' என்று இவர் இசையை எல்லாரும் போற்றினார்கள். இவர் தம் ஏழாம் வயதிலேயே பண், பல்லவி பாடும் திறனைப் பெற்றிருந்தார். தம் பத்தாம் வயதில் பாவரங்குகளில் பாடத் தொடங்கினார்.

இவர் ஆனைஐயா என்பவரிடத்திலும், தியாகைய ரின் மாணவராகிய மானம்புச்சாவடி வேங்கடசுப்பை யரிடத்திலும் இசை பயின்றார். இவரைச் 'சிவன் வாள்' என்று எல்லாரும் பெருமையாக அழைப்பது வழக்கம். சிறந்த அடியாராக விளங்கிய இவர், தினந் தோறும் சிவபூசை செய்து முடித்த பின்னரே உணவு அருந்துவார். வழிபாட்டின் இறுதியாக இரண்டு தேவாரப் பதிகங்களைப் பாடுவார். அதனைக் கேட் கத் தெருவில் பலர் நின்று கொண்டிருப்பது வழக்க மாகும்.

இவர் பொதுமக்களுக்குப் பக்தி உண்டாகுமாறு ஓய்வுநேரங்களில் மாலை நேரத்தில் வீட்டுத்திண்ணை யில் இருந்துகொண்டு அறுபத்து மூன்று நாயன்மார் களின் வரலாறுகளைப் பற்றி இசைச்சொற்பொழி வாற்றுவார். தமையனார் இராமசாமி சிவன் இயற் றிய பெரியபுராணக் கீர்த்தனைகளையும், விருத்தங் களையும் அப்போது பாடிக் காட்டுவார். இவ ருடைய தமிழறிவு மேன்மையடைவதற்கு, இவர் தம் தமையனார் முதற்காரணமாக அமைந்திருந்தார். இவரைச் 'சங்கீத வைத்தி' என்று இவர் குடும்பத்தினர் அழைப்பதுண்டு.

இவர் கி.பி. 1856 – இல் கல்லிடைக்குறிச்சியில் ஆதீனக் குருபூசை நடைபெற்ற போது பாடினார். அப்போது பாடிய புலவர்களுள், இவருடைய குரலின் மேன்மையும் இசைத்திறமையும் பிறருடைய குரலை யும் இசையையும் விடச் சிறப்பாக இருந்தன. அத னால் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர் இவருக்கு 'மகா' என்னும் பட்டத்தை வழங்கினார். துணைக்கருவிகள் இல்லா மலே இவர் சிறப்பாகப் பாடக் கூடியவர். பாடல் பாடும்போதே பொருள் தெளிவாகும் வண்ணம் பாடும் சிறப்பினையும் இவர் பெற்றிருந்தார். ப.கொ.

*மகிசாசுரமர்த்தினி*: தீமை எந்த உருவங் கொண்டு எதிர்த்து வந்தாலும் தாய்மைச் சக்தி சீறி எழுந்தால் தீமை தீர்த்துக் கட்டப்படும் என்ற தத்து வத்தை விளக்கும் புராணக் கதையின் நாயகியே, மகிசாசுர மர்த்தினியாவாள். அக்கதையின்படி அசுரன் ஒருவனிடமிருந்து தேவர்களைக் காக்கக் கடவுளர் மூவர் உருவாக்கிய இந்தச் சக்தியானவள் பல்லவச் சிற்பியின் கைகளில் கலையின் விளக்கமாகப் பரிணமித்தாள். மகிசாசுரமர்த்தினியின் சிற்பம் காலந் தோறும் புதிய பொலிவுகளைப் பெற்றுத் தமிழ் நாட்டின் எல்லைகளைக் கடந்தும், கடல் கடந்தும் சிற்ப வடிவங்களாகப் பரவியது. ஆயினும், தமிழ் நாட்டில் உள்ள மாமல்லபுரத்து மகிசாசுரமர்த்தினிச் சிற்பமே சிற்பக்கலையின் உன்னத சிகரத்தைப் பிடித்து விட்ட ஒன்று எனப் போற்றப்படுகிறது.

துர்க்கையாகிய கொற்றவை மகிசாசுரனைக் கொல்ல எடுத்த கோலமே மகிசாசுரமர்த்தினி எனும் உருவாகும். புராணக்கதையின்படி, அரம்பன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவனுக்கும் ஓர் எருமைக்கும் ஏற்பட்ட உறவில் உதித்தவனே மகி சாசுரன். எருது எனப் பொருள்படும் மகிசம் எனும் சொல்லின் அடிப்படையில் அவனுக்கு அப்பெயர் ஏற்பட்டது. அவன் கடுமையான தவம் செய்து வரங்களைப் பெற்றுத் தன் வலிமையைப் பெருக்கிக் கொண்டான். தன் வலிமையால் தேவர்களைப் போரில் வென்றான். அடுத்துத் தேவர்களையே தேவருலகினின்றும் துரத்த முயன்றான். அதனை உணர்ந்த தேவர்கள் முப்பெருங்கடவுளரிடம் முறை யிட்டனர். சிவன், திருமால், பிரமன் ஆகிய மூவரும் கூடி மகிசாசுரனைக் கொல்லவென்றே துர்க்கையாம்





மகிசாசுரமர்த்தினி

கொற்றவைக்குப் புதுவடிவம் தந்தனர். மூண்டெழுந்த சினத்தால் தங்கள் வாய்களிலிருந்து வெளிப்பட்ட அக்கினிப் பிழம்பிலிருந்து அவளைப் படைத்தனர். சிவனின் திரிசூலமும், திருமாலின் சக்கரமும் அவளிடம் தரப்பட்டன. அதைப் பின்பற்றி வாயு வில்லும், கதிரவன் அம்பறாத் தூணியும், எமன் தண்டாயுதமும், இந்திரன் இடிமுழக்கமும், குபேரன் கதாயுதமும், அனைத்துத் தேவரும் அரிமாஒன்றும் தந்து தேவியை ஆயுதபாணியாக்கினராம். முழுப் போராளியாக அரி மாவின் மீதமர்ந்து துர்க்கை விந்தியத்தை அடைந் தாள். அங்குள்ள மகிசாசுரனின் இருப்பிடத்தை அடைந்தபோது அவ்வசுரன் அவளைப் பிடிக்க முயன்றான்; முடியவில்லை. தன் படைத்தலைவர் களைத் துர்க்கையிடம் போருக்கனுப்பினான். மீண்ட வர் ஒருவருமில்லை எனத் தெரிந்ததும் தானே புறப் பட்டான். முதலில் மன்மதனையொத்த ஆணழகன் உருவங்கொண்டு போரிட வந்தான். பின்னர்ச் சிங்க உருவங்கொண்டு சக்தி ஏறியிருந்த சிங்கத்தினைத் தாக்கினான். தேவியின் சிங்கம் திருப்பித் தாக்கத் தாங்க மாட்டாமல், யானை உருவமாயினான். உடனே, தேவி தன் வாகனத்தை யானை உருவமாக மாற்றினாள். அசுரன் பாம்பாக மாறிச் சீறினான். தேவி வாளால் வெட்ட முற்பட, தன் உண்மை உருவான எருதின் கோலம் ஏற்றான். தேவி சண்டிகை யாக உருக்கொண்டு துரத்திச் சக்கரத்தை அசுரன் மீதெறிந்து அவனை மாய்த்து மகிசாசுரமர்த்தினி என்று போற்றப்பட்டாள்.

மகிசாசுரமர்த்தினியின் மகிமையைப் போற்றும் 'தேவி மகாத்மியம்' தரும் புகழை விடப் பன்மடங்கு பெருமையை அத்தேவிக்குச் சேர்த்துவிட்டது மாமல்லபுரத்து மகிசாசுரமர்த்தினிச் சிற்பம். பல்லவ ஆட்சியில் கி.பி. 7 – ஆம் நூற்றாண்டில் செதுக்கப் பட்ட அச்சிற்பம் மாமல்லபுரத்தில் அமைந்திருப்பது சிற்பக்கலை அரங்கில் தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தந்துள்ளது.

மாமல்லபுரக் குடைவரைகளில் இச்சிற்பம் அடங்கி யுள்ள குடைவரையை 'எமபுரிக் குகை' என்று மக்கள் கூறுகின்றனர். 10மீ. நீளமும் 4.6.மீ. அகலமும் கொண்ட இந்தக் குடைவரையின் மண்டபத்தின் வடபுறச் சுவர் முழுமையும் பெரிய சுவரொட்டியில் (Wall Paper) ஓவியம் வரைந்தாற்போல, ஒரு முழுப் போர்க்களக் காட்சி, புடைப்புச் சிற்பமாகப் படைக் கப்பட்டுள்ளது.

துர்க்கையாகிய கொற்றவை பெருத்த வயிறும் குட்டை உருவமும் கொண்ட பூதகணங்கள் ஆகியோர் ஒருபுறமும், மகிசாசுரனும் அசுரர்களும் ஒருபுறமும் எதிர்எதிர் நின்று போரிடுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திக் காட்டியுள்ளது சிற்பியின் திறமையாம். உருவங்கள் அங்கங்களுடைய அழகு, சுறுசுறுப்பு, வீரம் ஆகியவை வெளிப்படும்படி செதுக்கப்பட்டுள்ளன. அக்காட்சி உறுமிக் கொண்டு உலவிடும் சிங்கத்தின் மீதமர்ந்து கால்கள் இரண்டையும் இருபக்கமும் தொங்கவிட்டு, எட்டுக்கைகளிலும், தனித்தனி படைக் கலன் ஏந்தி மகிசாசுரனைத்தாக்கப் போராளியாகத் துர்க்கை புறப்பட்டு வருவது போலுள்ளது. இட மேற்கையில் ஏந்திய வில்லில் நாணைத் தன் காதளவு இழுத்து,வல மேற்கையில் அம்பு தரித்து,இடக்கையை முன்னால் நீட்டி, வலக்கையைப் பின்னே நீட்டிச்

செதுக்கியிருப்பது தேவி வில்லை வளைத்து அம்பை எய்வது போன்ற ஒரு தோற்றத்தைத் தோற்றுவிக்கிறது. ஒரு வலக்கையில் கதாயுதமும் பிற வலக்கைகளில் சக்கரமும் மற்றோர்படைக்கலமும் மற்ற மூன்று கைகளில் குறுவாள், சங்கு, பாசக்கயிறு ஆகிய படைக்கலங்களும் தாங்கி எவ்வகைப் போருக்கும் தயாராகக் காட்சி அளிக்கும் தோற்றம் கண்ணைக் கவர்கிறது.

சக்தியானவள் வேறு சிற்பங்களில் பொதுவாகக் காட்டப்பட்டுள்ளதுபோல, பெரிய மார்பகங்களையும், சிறுத்த இடையையும் உடையவளாக இந்தச் சிற்பத்தில் காட்டப்படவில்லை. போருக்கென்றே படைக்கப்பட்டவளாதலால், நெடிய தோற்றமும் ஒல்லியான உறுதியான உடலும் உடையவளாகச் சிற்பி படைத்திருப்பதைக் கலைவல்லுநர்கள் பாராட்டுகின்றனர்.

நல்ல கலைகளுக்கு இனம், நாடு என்ற எல்லைகள் இல்லை. கி.பி. 7 – ஆம் நூற்றாண்டுப் பல்லவர் கால மகிசாசுர மர்த்தினிச் சிற்பத்தின் புகழ் தமிழ் நாட்டைத் தாண்டிப் பரவத் தொடங்கியது. எடுத்துக்காட்டாக, அடுத்த நூற்றாண்டில் எல்லோரா கைலாசநாதர் கோயில், இராமேசுவர் குகை ஆகியவற்றில் மகிசாசுரமர்த்தினி மகிசாசுரனைச் சினங்கொண்டு உக்கிரமாகத் தாக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. கிதாப் தௌலாத்தில் கி.பி. 1000 – ஆம் ஆண்டைச் சேர்ந்த மகிசாசுரமர்த்தினிச் சிற்பம் உள்ளது.

தென்னாட்டில் கருநாடகத்தில் ஒய்சளர் காலத்தில் அளபீடு எனுமிடத்தில் (Halebid) உள்ள மகிசாசுரமர்த்தினிச் சிற்பம் கி.பி. 1150 – ஆம் ஆண்டிற்குரியது. இது தவிர ஈராசு ஆய்வகத்தில் (Heras Institute) உள்ள, கருநாடகத்தில் கிடைத்த 15.3 செ.மீ. உயர மகிசாசுரமர்த்தினி வடிவான உலோகச் சிலை கலை நுணுக்கம் மிக்கது. அரிமா மீதமர்ந்து வலக்கரத்தில் திரிசூலம் கொண்டு மகிசாசுரனைக் குத்திக் காலில் போட்டுத் துவைத்தெடுக்கும் காட்சி இயல்பாக உள்ளது.

கடல் கடந்தும் இச்சிற்ப வடிவம் சாவாவில் வெண்கலச்சிலையாக வடிக்கப்பட்டுள்ளது. அங்கு கி.பி. 11 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்துசமயச் சிலை இந்தோனேசியாவில் காணப்பட்டுள்ளது. மகிசாசுரனைப் பலி வாங்கும் சக்தி கொடூர மற்ற தன்மையில் தோன்றும்படி அச்சிற்பம் வார்க்கப்பட்டுள்ளது.

பிற்காலத்தில் மகிசாசுரமர்த்தினியின் சிலைகள் ஏராளமாய் உருவாயின. நவராத்திரி விழா நாள்களில், ஒரு நாள் சிறப்பாக வங்காளத்திலும், பொதுவாக இந்தியாவின் பல பகுதிகளிலும் மகிசாசுரமர்த்தினி உற்சவ அம்மனாக உலா வருகிறாள்.

நிலையான அழகு(Aesthetic Beauty)அங்கங்களின் தோற்றப் பொலிவில் இல்லை; உணர்வு வெளிப்பாட்டில்தான் உள்ளது என்று காட்டும் மாமல்லை மகிசாசுரமர்த்தினியைக் 'கல்லில் கண்ட சிற்ப அற்புதம்' என்று பன்னாட்டுக் கலைவல்லுநர்களும் போற்றி வருகின்றனர். மீ.ம.

**துணை நூல்கள்:**

**நவரத்தினம், க.**, தென் இந்தியச் சிற்ப வடிவங்கள், கலாநிலையம், யாழ்ப்பாணம், 1941.

**Ananda Coomarasamy**, The Dance of Shiva, Asia Publishing House, Bombay, 1952.

**Kalpana Desai Dr.**, Treasures of The Heras Institute, The Abhinau Publications, New Delhi,1975.

**Thomas, P.**, Epics, Myths, Legends of India., D.B., Tharaporevala & Sons Ltd., Bombay, 1950.

## மகிசாசுரன்

*மகிசாசுரன்* என்பவன் எருமைத் தலையும் மனித உடலும் கொண்ட ஓர் அரக்கன். அரக்கர், அசுரர் என்றும் கூறப் பெறுவர், சுரர்களாகிய தேவர்கட்குப் பகைவர்கள் அசுரர்கள். அவர்களுக்கு இராக்கதர்கள் என்ற பெயரும் உண்டு.

மகிசாசுரன் தோற்றம், வரலாறு பற்றி இரு வேறுபட்ட புராண மரபுகள் வழங்குகின்றன. தேவர்கட்கும் தைத்தியர் என்ற அசுரனுக்கும் போர் நடந்தது. அப்போரில் அசுரனான தைத்தியர் தோல்வியுற்றான். அதைக்கண்டு பொறுக்காத அவன் தாய் திதி, சுபார்சுவ முனிவருடன் கூடி மகிசாசுரனைப் பெற்றாள். மகிசாசுரன் தவம்செய்து வரம் பெற்றான். தாய் திதி, அவனைத் தேவருடன் போருக்கு அனுப்பினாள். மகிசாசுரன் மிகுந்த வலிமையுடையவன். தேவர்களால் அவனை வெல்ல முடியவில்லை. இந்திரனை வென்று மகிசாசுரன் இந்திரப்பதவியைப் பெற்றான்.

இறுதியில் சக்தி, காளியை ஏவினாள். மகிசாசுரன் காளிக்குப் பயந்து ஒரு தடாகத்தினுள் புகுந்தான். காளி தான் ஏறியிருந்த சிங்கத்தைத் தடாகத்தினுள் ஏவினாள். சிங்கம் தடாகநீர் முழுவதையும் பருகியது. காளி மகிசாசுரனைக் கொன்றாள். இவ்வரலாறு காசி காண்டத்தால் அறியப் படுவது ஆகும். தேவி பாகவதம் என்னும் நூல் இதற்கு வேறுபட்ட வரலாற்றைக் கூறுகிறது.

மகிசாசுரன் அரம்பன் என்னும் அரக்கனுடைய மகன். அரம்பன் அக்கினியிடம் வரம்பெற்று ஒரு நாள்

ஒரு மரத்தினடியில் இருந்தான். அப்போது அங்கிருந்த எருமை ஒன்றைக் கண்டான். ஆவல் கொண்டு அரம்பன் அந்த எருமையுடன் கூடினான். எருமைக்குக் கருவுண்டாயிற்று. அரம்பன் வேறு எருமைக் கடாக்கள் அந்த எருமையிடம் போகாத வாறு காவல் புரிந்து வந்தான். ஒருநாள் ஓர் எருமைக் கடா அந்த எருமையின் அருகே போனது. அரம்பன் அந்த எருமைக் கடாவைத் துரத்தினான். அப்போது எருமைக் கடாவால் குத்துண்டு இறந்தான். அரம்பன் உடலைச் சிதையில் வைத்தபோது எருமையும் சிதையில் வீழ்ந்து இறந்தது. அந்த நேரத்தில் எருமையிடமிருந்து மகிசாசுரன் தோன்றினான்.



மகிசாசுரன்

மகிசாசுரன் நகர் அடைந்து பல சேனைத் தலைவர்களைக் கொண்டு அரசு செய்தான். தேவிக்கும் மகிசாசுரனுக்கும் போர் மூண்டது. சட்சுரன், மகாவீரன், மகோத்கடன், தனாத்யட்சன், தாம்பரன், அசிலோமன், உதாக்கன், பிடரவாக்கியன், பாசுகலன் திரிநேத்திரன், காலன், பந்தகன் முதலிய மகிடாசுரனின் தானைத் தலைவர்கள் பலர் தேவியோடு செய்த போரில் உயிரிழந்தனர். இறுதியில் மகிசாசுரன் மன்மதனை ஒத்த அழகிய ஆண் வடிவில் போரிட்டான். பின் யானை உருவம் தாங்கிப் போர் செய்தான். அப்போது தேவியின் வாகனமும் யானை உருக் கொண்டு போரிட்டது. மகிசாசுரன் பாம்பு வடிவங் கொண்டு போரிடத் தேவி இவனை வாளினால் வெட்டினாள். அசுரன் எருமை உருக்கொண்டு போரிட்டான். தேவி சண்டிகை வடிவங் கொண்டு துரத்திச் சக்கரத்தை அவன் மீது ஏவிக் கொன்றாள். அதனால் மகிசாசுரமர்த்தினி எனப்பட்டாள்.

மகிசாசுரனைப் பற்றி மார்க்கண்டேய புராணத்தின் ஒரு பகுதியாகிய தேவி மான்மியத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. மகிசாசுரனை அழித்த தேவி எருமைத் தலையின்மீது நிற்பதுபோல் பல சிற்பங்கள் பல்லவர் காலத்தில் கி.பி.7,8, ஆம் நூற்றாண்டுகளில் செதுக்கப்பட்டன. அவ்வமைப்பில் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பெற்ற பல தேவியர் சிற்பங்கள் தமிழகமெங்கும் பரவலாகக் கிடைக்கின்றன. பல்லவர் காலத்தில் மகிசாசுரன் சிற்பத்தோற்றம் கிழக்காசிய நாடுகளுக்கும் பரவிற்று. செ.இரா.

**மகிந்தர்**: மகிந்தர் என்னும் பெயரினை இலங்கையினை ஆண்ட பல மன்னர்கள் கொண்டிருந்தனர். இவர்கள் தவிர, மௌரியப் பேரரசர் அசோகரால் இலங்கைக்கு அனுப்பப்பட்டு அங்குப் புத்தசமயத்தைப் பரப்பியவர் மகிந்தன் ஆவார்.

**மகிந்தர் (அசோகருக்கு மகன்)**: இவர் இலங்கை மன்னர் தேவனாம் பிரிய திசா என்ற மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கைக்கு அசோகரால் அனுப்பப்பட்டவர். இவர் அங்குப் புத்தமதத்தைப் பரப்பினார். இவர் போதனைகளால் தேவனாம் பிரிய திசாவும், இலங்கை மக்கள் பலரும் புத்த மதத்தைத் தழுவினர். மன்னர் திசா, மகிந்தலேக் குன்றின் மீது நிறுவிய விகாரத்தில் மகிந்தரின் படுக்கை என்று ஓரிடம் இன்னும் சுட்டிக்காட்டப் படுகின்றது.

**இலங்கை மகிந்தர்**: மகிந்தர் என்ற பெயருடைய ஆறு மன்னர்கள் இலங்கையில் ஆட்சி செய்துள்ளார்கள்.

**முதலாம் மகிந்தர்**: இவர் கி.பி.738–முதல் 741 வரை ஆண்டு வந்தார். இவருடைய தலைநகர் அனுராதபுரமாய் இருந்திருக்கக்கூடும்.

**இரண்டாம் மகிந்தர்** என்ற மன்னர் கி.பி. 787 முதல் 807 வரையும், மூன்றாம் மகிந்தர் என்ற மன்னர் கி.பி.812 முதல் 816 வரையும் ஆண்டனர்.

**நான்காம் மகிந்தர்** கி.பி. 975-இலிருந்து 991வரையும் ஆண்டார் என இலங்கை வரலாறு எழுதிய கோட்ரிங்கன் கூறுகிறார். இக்கருத்துத் தவறாகலாம். ஏனெனில் சுந்தரசோழரின் காலம் கி.பி. 956 முதல் 973 வரை என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

**ஐந்தாம் மகிந்தர்** என்ற மன்னரது ஆட்சிக் காலம் ஏறத்தாழ கி.பி.991 முதல் 1001 வரை என்று கோட்ரிங்கன் குறிப்பிடுகின்றார். இவரது ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுக் கலகம் ஒன்று ஏற்பட்டது. அப்போது சோழநாட்டை ஆண்டு வந்த பேரரசர் முதலாம் இராசராசன் அந்நிகழ்ச்சியைப் பயன் படுத்தி இலங்கையில் படை நடத்தி அதன் பெரும் பகுதியை வென்றார். இலங்கையின் தென்பகுதியில்

மலைகள் நிறைந்த உரோகணத்தில் மகிந்தர் ஒளிந்து கொண்டார். வடபகுதி முழுவதும் சோழர்வசம் ஆயிற்று. அடுத்த சோழப் பேரரசர் முதலாம் இராசேந்திரன் காலத்தில் இலங்கை முழுவதும் சோழர்வசம் ஆயிற்று. உரோகணத்தில் ஒளிந்து கொண்டிருந்த நான்காம் மகிந்தரும் சிறைப்பட்டார். அவர் சோழர்களின் விருந்தினராகத் தமிழகத்தில் சில ஆண்டுகள் இருந்தபின் தமிழகத்திலேயே இறந்தார்.

**ஆறாம் மகிந்தர்** என்ற மன்னர் கி.பி. 1187-இல் ஆண்டார். இவர் அரண்மனைப் புரட்சி ஒன்றில் கொலையுண்டிருக்கலாம். பி.வி.

**மகில்மோசியப் பண்பாடு**: இது இடைக்கற் காலத்தினை ஒட்டி உருவானதொரு பண்பாடாகும். இப்பண்பாட்டு மக்கள், சதுப்பு நிலப்பகுதிகளிடையே வாழ்ந்திருந்ததால், இப்பெயர் அதையொட்டி ஏற்பட்டதென்பர். வேட்டையாடுதலில் தொடங்கி உணவு உற்பத்திக்கு வித்திட்ட காலக் கட்டத்தினைச் சார்ந்தது, இம் மகில்மோசியப் பண்பாடு. நுண்கற் கருவிகள் இக்காலக் கட்டத்தின் தனிச் சின்னங்களாகும். இப்பண்பாட்டு மையங்கள் பிரிட்டனிலும், வட ஐரோப்பாவிலும் கண்டறியப்பட்டுள்ளன.

மகில்மோசு (Maglemose) என்பதற்குத் தேனிசு மொழியில் பெருஞ்சதுப்பு நிலம் என்பது பொருள். அச்சொல் சுட்டுவது போலவே, இப்பண்பாட்டினைக் கைக்கொண்டு விளங்கிய ஆதிமக்கள் பெரும்பாலும் கடல் மட்டத்திற்குமேல் 183 மீ. மட்டத்தில் உள்ள தாழ்ந்த பகுதிகளிலேயே வாழ்ந்தனர். சிறு தீவுகளிலோ ஆறுகள், ஏரிகள் நிறைந்த தீபகற்பங்களிலோ இப்பண்பாட்டு மையங்கள் அமைந்திருந்தன.

மகில்மோசியப் பண்பாடு பொதுவான வழக்கில் இடைக்கற்காலம் (Mesolithic Age) பண்பாட்டினைக் குறிக்கவும் பயன்படுகிறது. இடைக்கற்காலப் பண்பாட்டினைப் பற்றி அறிந்து கொண்டுவிட்டால், மகில்மோசியப் பண்பாடு என்றால் என்ன என்று தெரிந்து விடும். இப்பண்பாடு ஐரோப்பியச் சமவெளிகளில் மட்டும் கி.மு. 800-க்கும் கி.மு. 500-க்கும் இடையில் நிலவியதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இடைக் கற்காலம் என்பது பேரூழிப் பெரும் பனிக் காலமான மிகுதி தோன்றூழிக்கும் (Pleistocene epoch) புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்டு அவற்றை இணைப்பதாகவும் அமைந்த காலப் பெருவெளியாகும்; ஐரோப்பியச் சமவெளிகளில் இதன் காலம் கி.மு. 500 முதல் கி.பி. 500 என்றாலும் பொதுவாக இக்காலம் ஏறத்தாழ கி.மு. 10,000 அளவில் தொடங்குவதாகக் கொள்ளப்படுகிறது. பழைய கற்காலத்தின் தொடர்ச்சி இதுவென்றும் கூறுவார்கள். உணவுப் பொருட்களைச் சேகரித்தல், வேட்டையாடல் நிலைகளிலிருந்து உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொடக்க நிலைக்கு ஆதி மக்கள் வந்தடைந்த காலக் கட்டமே இடைக்கற்காலம் என்றும் சொல்வார்கள்.

இடைக்கற்காலத்தின் தனிச் சின்னங்களாக விளங்குபவை நுண்கற்கருவிகள் (Microliths) ஆகும். இடைக்கற்காலப் பண்பாட்டின் சாயலில் காட்சியளிக்கும் அதன் மறுபதிப்பே மகில்மோசியப் பண்பாடு எனலாம்.

மகில்மோசியப் பண்பாடு செழித்த பல இடங்கள் ஆலந்து (Holand) நாட்டின் தென் மேற்கு மாநிலமான சீலந்துத் (Zealand) தீவில் அமைந்திருந்தன. செருமனியில், தூவென்சி (Duvensee) எனுமிடத்தில் பனி, மழையில்லாத காலங்களில் இப்பண்பாட்டினர் வாழ்ந்துள்ளனர். மகில்மோசியப் பண்பாட்டுக் காலத்தில் ஐரோப்பாவில், பிரிட்டனின் தாழ்ந்த பகுதியில் தொடங்கி வடக்கே போலந்து, உருசியா, தெற்குச் சுவீடன் வரையிலுமான பகுதி முழுமையும் நீர் குறுக்கிடாத ஒரே சமவெளி அல்லது கானகமாக விளங்கியது. அப்பகுதியின் நடுவிடமான தென்மார்க்கு நாடும் தெற்குச் சுவீடனுமே மகில்மோசியப் பண்பாட்டு மக்கள் நெருக்கமாக வாழ்ந்திருந்த பூபாகங்களாகும். அதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது முன்பு குறிப்பிட்ட வடகடலில் உள்ள சீலந்துத் (Zealand) தீவாகும். அந்தப் பகுதியில்தான் மிகுதியாக மகில்மோசியன் பண்பாட்டுக்காலக் கற்கருவிகள் கிடைத்துள்ளன. தெற்குப் பின்லாந்து (Finland) கடற்கரையினை ஒட்டியுள்ள எசுதோனியா (Estonia), சுவீடன், போலந்து, பெல்சியம், செருமனி, தென் கிழக்குப் பிரிட்டன் ஆகிய நாடுகளில் உள்ள சில இடங்களில் மகில்மோசியப் பண்பாடு நிலவியதற்கான சான்றுகளாக அக்காலம் சார்ந்த கற்கருவிகள் ஓரளவு கிடைத்துள்ளன.

மகில்மோசிய மக்களின் பொருளியல் வாழ்வு மீன் பிடித்தல், வேட்டையாடல் ஆகிய தொழில்களைச் சார்ந்தே இருந்தது. அப்பண்பாடு நிலவிய நிலங்களின் அடி மட்டத்தில் ஈட்டிகள், வன விலங்குகளின் மக்கிய சடலங்கள் கிடைத்துள்ளன. வீட்டு விலங்குகளோ மட்பாண்டங்களோ அவர்களிடம் இருந்திடவில்லை. எனவே, அவர்களுடைய பொருளாதாரம் பெரிய சமூகங்களைத் தாங்குவனவாக விளங்கவில்லை. மாறாக, சிறிய குடியேற்றங்களையே அவர்கள் அமைத்துக் கொண்டிருந்தனர். அவையும் நிலையானவையாக இருந்திடவில்லை. ஆண்டுதோறும் தாமறிந்த சில இடங்களுக்குக் குடிபெயர்ந்தும், வேனில்

இலையுதிர் காலங்களில் மட்டுமே மகில்மோசியப் பண்பாட்டு மையங்களில் அவர்கள் வாழ்ந்தும் வந்துள்ளனர்.

மகில்மோசியரின் புதைக்குழிகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இம் மக்கள் வாழ்ந்த இடங்களில் உள்ள இடிபாடுகளில் மனித எலும்புக் கூடுகள் அங்குமிங்கும் சிதறிக் காணப்படுவது அவர்கள் மனித மாமிசம் புசித்தவர்களோ என்று எண்ணத் தூண்டுகிறது. அவர்கள் வசித்து வந்த இடங்களின் நீர்ச்சூழல், கானகம் ஆகியவற்றுக்கேற்ற கருவிகள் அவர்களிடம் இருந்தன. அவை எளிதில் அழியக்கூடிய மான் கொம்பு, எலும்பு ஆகியவற்றினால் ஆனவை. எனினும், ஈரஞ்செறிந்த தாழ்ந்த பகுதிகளில் புதையுண்டு கிடந்ததால் அழிவுக்குள்ளாகாமல் இன்று கிடைத்துள்ளன.

ஆலந்து நாட்டில் சீலாந்தில் உள்ள ஓம்கார்டு (Homegard) எனுமிடத்தில் நெருப்பில் வாட்டி வலுவாக்கப்பட்ட, கூர்மை மிகுந்த நான்கு பட்டை உள்ள மரத்தடிகளும், மரத்தட்டுகளும், 'பந்தடி மட்டை' செய்ய உதவும் மரக்கட்டைகளினாலான துடுப்புக்களும் கிடைத்துள்ளன. இசுகாட்லாந்தின் பெர்த்து (Perth) எனுமிடத்தில் 3 மீட்டர் ஆழ வண்டலைத் தோண்டியதில் தேவதாரு மரத்தினால் செய்யப்பட்ட தோணியின் ஒரு பகுதி அகப்பட்டது. பின்லாந்து நாட்டின் ஒரு பகுதியில் செடி நார்களால் ஆன மீன் வலையின் சிதைவுகள் கிடைத்தன. மான் கொம்புகள் கற்கருவிகளுக்கும் மரம் செதுக்க உதவுகிற வாச்சிகளுக்கும் கைப்பிடிகளாகப் பயன்பட்டன. மான் கொம்புகளில் நுண்சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. எலும்புகளிலிருந்து ஊசிகள் உருவாக்கப்பட்டன. மகில்மோசியப் பண்பாட்டினைப் பறைசாற்றும் கருவிகள் எனும்படி எலும்பு அல்லது மான் கொம்பு முனைகள் அப்பண்பாட்டு மையங்களில் ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவை ஒரு பக்கம் செதுக்கப்பட்டும் கூரான முனைகளைக் கொண்டும் விளங்கின. அவற்றிற்குத் 'திமிங்கில ஈட்டிகள்' எனப் பெயர் தரப்பட்டிருந்தாலும், மீன் குத்திகளாகவும் பறவை பிடிக்கும் கருவிகளாகவும்கூட அவை பயன்பட்டன.

மகில்மோசிய மக்கள் சக்கிமுக்கிக் கற்களினால் ஆன கருவிகளைப் பெரிதும் கையாண்டனர். அவற்றுள் நுண்கற்கருவிகள் (Microliths) இப்பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்நுண்கற்கருவிகள் முக்கோண வடிவமாகவும் வளைதடிகளைப் போலப் பிறைவடிவமாகவும் சில குறுக்குக் கட்டைகள் போலவும் செய்யப்பட்டிருந்தன.

காடுகளுக்கு ஈடு கொடுக்கவென்றே செய்யப்பட்ட கற்கருவிகள் மகில்மோசியப் பண்பாடு ஒன்றிற்கே உரிய தனித் தன்மையானவையாகும். நெருப்புக்கல், கோடரிகள், வாச்சிகள், உளிகள் ஆகியன மான் கொம்பு அல்லது மரத்தினாலான உறைகளில் காணப்பட்டன. அக்கருவிகள் பளபளப்பாக்கப்பட்டிருக்கவில்லை.

மகில்மோசியக் கலை அவர்களின் அன்றாடப் பயன்படு கருவிகளின்மேல் செதுக்கப் பெற்றுள்ள சிற்பங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவை எப்படிப்படைக்கப்பட்டனவெனில், கூர் எலும்புகள், வாச்சிகள், கோடரிகள் கொண்டு செதுக்கப்பட்டன. இயற்கை சம்பந்தப்பட்ட வடிவங்களைச் செதுக்குவதில் சிறப்பாக முயன்றிருக்கின்றனர் என்றறிய முடிகிறது.

இப்பண்பாட்டின் தோற்றம் பற்றி ஆராய்ந்தவர்கள் இதனை வட ஐரோப்பியச் சமவெளியில் உதித்ததொரு உள்நாட்டுப் பண்பாடு எனக் குறித்துள்ளனர். மகில்மோசியக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் மட்டுமே இப்பண்பாட்டின் செல்வாக்கிலிருந்து பிரிட்டன் வட கடலால் துண்டிக்கப்பட்டது. ஆனால், மகில்மோசியப் பண்பாட்டின் பழமையான எடுத்துக்காட்டாக இன்றளவும் அமைந்திருப்பது பிரிட்டனில் உள்ள இசுடார்கேர் (Star Care) எனுமிடமே. இங்குத்தான் இடைக்கற்காலப் பண்பாட்டு மையம் ஒன்று முதன்முதலாகக் கண்டறியப்பட்டது. இங்கிருந்த மகில்மோசியப் பண்பாடு இதுவென்று உலகினுக்கு உரக்கக் கூவிடும் உயிரினத் தடயங்களும் கற்கருவிகளும் கிடைத்துள்ளன.


பிரான்சு நாட்டில் 'இலே மாக்தலீன்' (Le Magdeleene) எனுமிடத்தில் ஆதிபழங்கற்காலக் கருவிகள் கண்டறியப்பட்டதிலிருந்து அக்காலத்தினை மாக்தலேனியக் காலம் (Magdalenian Age) என ஆய்வாளர் குறிப்பிடுவாராயினர். மகில்மோசியப் பண்பாட்டின் சில கூறுகள் இந்த மாக்தலேனியப் பண்பாட்டுக் காலத்திற்கே இட்டுச் செல்கின்றன. வட ஆப்பிரிக்காவில் கிடைத்துள்ள சில நுண்கற்கருவிகள் இக்காலக் கட்டத்திற்கே உரியன.

கடைசிப் பனியுகத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட, பனிப்பாறைகளின் பின் வாங்கலினால் திட்டுத் திட்டாக எழுந்த நில எழுச்சிகளின் காரணமாகப் புதிய பண்பாட்டுக் குழுக்கள் இசுகாண்டிநேவியாவின் (Scandinavia) கடலோரங்களில் நிலைபெறத் தொடங்க, மகில்மோசியப் பண்பாட்டினர் இசுகாண்டிநேவியாவின் நடுப்பகுதிக்குத் தள்ளப்பட்டனர். அந்த நிலையிலும் மகில்மோசியப் பண்பாடு முற்றிலும் அழிந்து போய் விடவில்லை. புதிய பண்பாட்டு மாளிகையின் அடித்தளமாக, மகில்மோசியப்

பண்பாடு உயிர்ப்புடன் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் மண்ணுக்குள் வாழ்கிறது. மீ.ம.

**மகுடி:** இது மிகப் பழங்காலத்திலிருந்து பாம்பாட்டிகளால் பயன்படுத்தப்பட்டு வரும் ஓர் இசைக் கருவி. வாயினால் ஊதி இசை பெருக்கப்படும் இக்கருவியைச் சிலர் மூக்கின் துவாரத்திற்கு அடியில் வைத்து ஊதியும் இசை எழுப்புவார்கள். ஆதலால் இது 'நாச ஐந்தரம்' என்றும் சொல்லப்படும்.

இக்கருவி ஏறத்தாழ 45 செ.மீ.|நீளமுள்ளதாய் சுரைக்காயாலும், சிறிய நீளமான இரண்டு மூங்கிற் குழாய்களாலும் செய்யப்படும். சுரைக்காயின் அடிப் பாகத்தின் நடுவில் ஒரு துளையிட்டு அதன் வழி இரண்டு மூங்கிற் குழாய்களும் செலுத்தி மெழுகினால் பொருத்தப்பட்டிருக்கும். மூங்கில் குழாய்களின் உட்பகுதி சீவாளி போல் வெட்டப்பட்டிருக்கும். அவற்றில் ஒரு குழாய் சுருதிக்காகவும், மற்றையது இசைப்பதற்காகவும் பயன்படும்.



மகுடி

சுரைக்காயின் ஒடுங்கிய குழல் பகுதியின் நுனியில் ஒரு துளையிட்டு அதன் வழியாகக் காற்று ஊதப்படும். அப்பொழுது ஒரு துவாரமுள்ள மூங்கிற் குழாய் ஆதாரச் சுருதியைத் தர, மற்றைய மூங்கிற் குழாயிலுள்ள துவாரங்களைக் கைவிரல்களால் மூடியும் திறந்தும் இசைக்கும் பொழுது கருநாடக இசையின் இனிமையான சுரங்கள் கேட்கும். மூங்கிற் குழாயின் சீவாளிக்கும், ஊதுபவரின் வாய்க்கும் நேரடித் தொடர்பு இல்லாததால் இக்கருவியில் ஓர் இயக்கு அல்லது ஒரு தாயிக்கு மேல் இசையெழுப்ப இயலாது. ஆதலால், மகுடியில் எழும் இசை நிசரிகமபதநி-நித பமகரிசநி என்ற ஆரோசை அமரோசை கொண்ட புன்னாகவராளி இராகமாக அமையக் காணலாம். வாய் நிறையக் காற்றை வைத்துக் கொண்டு ஊதும் பொழுது மகுடியில் இசை தொடர்ச்சியாகக் கேட்கும்.

மகுடியின் இசை மிக எளிமையாக இருப்பினும் இதற்கு மிகுந்த கவர்ச்சியுண்டு. பாம்பிற்குச் செவி இல்லையானாலும் மகுடி இசை தரையில் உண்டாக்கும் அதிர்வாலோ என்னவோ கொடிய நச்சுப் பாம்புகள் மகுடியின் இசைக்கு வயப்பட்டு விடுகின்றன. பாம்புகளைப் பிடிப்பதற்கும், அவற்றைப் படமெடுத்து ஆட வைப்பதற்கும் பாம்பாட்டிகள் மகுடி இசையைப் பயன்படுத்துவார்கள்.

வட இந்தியாவில் மகுடியைப் 'புஞ்சி' என்றும் 'பீன்' என்றும் கூறுவர். அதில் எழும் இசை இந்து-சுத்தானி இராக முறையில் ஆசாவரிதாட்டு எனப்படும். அது நடபைரவி மேளமாகும். புன்னாகவராளி இராகத்தில் 'சதுச்ருதி ரிசபம்' அயற் சுரமாக வருவதனால் இதற்கும் அசாவேரி மேளத்திற்குமுள்ள ஒற்றுமையைக் கண்டுணரலாம்.

ஆந்திராவில் நாகசுரம் என்னும் பெயர் மகுடியைக் குறிக்கும். தமிழ்நாட்டு நாகசுரத்தை அவர்கள் 'சனாய்' என்பார்கள். ஞா.கு.

**துணை நூல்கள்:**


**Bandyopadhyay**, S., Musical Instruments of India, Delhi, 1980.

**Sambamoorthy**, P., A Dictionary of South Indian Music and Musicians, Vol. III, Madras, 1971.

**மகேசுவர்**, என்பது மத்திய இந்தியாவில் நருமதை நதிக்கரையில் உள்ள அழகியதொரு நகரத்தின் பெயராகும். இந்துக்களின் கடவுளான பரமசிவனுக்கு மகேசுவரன் அல்லது மகேசுவர் என்றும் பெயருண்டு என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. அக்கடவுளின் சிற்பமொன்று பம்பாய்க்கருகில் உள்ள தீவு ஒன்றில் காணப்படுகிறது. அந்தப் புகழ் பெற்ற மூன்று முகச் சிற்பத்தினை மகேசுவர் என்றே குறிப்பிடுகின்றனர்.

**மகேசுவர் (நகரம்):** மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். இது முன்னாள் இந்தூர் சமசுதானத்தின் நிமார் மாவட்டத்தில் அடங்கியது. நருமதை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இது நருமதை ஆற்றங்கரை நகரங்களுள் தனிச் சிறப்புடைய நகரம் என்று போற்றப்படும் பெருமையுடையது.

'மகிசா' எனும் வடமொழிச் சொல்லுக்கு எருமை என்பது பொருள். முன்பு இந்த நகரை ஒட்டிய பகுதியில் எருமைகள் நிறைய இருந்ததால் மகிசாமதி என்று பெயர் ஏற்பட்டு மகேசுவர் என்று மருவியதாகக் கூறுகின்றனர். இராமாயணம், மகாபாரதம்





முதலிய இந்துக் காப்பியங்களிலும், பௌத்த சமய நூல்களிலும் இந்த மகிசாமதியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

மத்திய இந்தியா கி.பி. 9 முதல் 12 – ஆம் நூற்றாண்டு வரை 'சேடி' யின் 'காலசூரிகள்' வசம் இருந்து வந்தது. அந்தக் காலசூரிகளின் முன்னோரே ஆதியில் மகேசுவரை ஆண்ட எய்கயர்கள் (Haihayas) என்பவர்களாவர். அவர்களுள் புகழ்பெற்ற பழைய அரசன் எனக் கருதப்படுவோன் கார்த்தவீரியார்ச்சுனன். ஆனால், கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் கீழைச் சாளுக்கிய அரசன் விசயாதித்தனால் எய்கயர்கள் வீழ்த்தப்பட மகிசாமதி சாளுக்கிய அரசின் ஒரு பகுதியாயிற்று. பின்னர் கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் மால்வா பரமாரர்களால் வெல்லப்பட்டபோது, மகிசாமதி அவர்கள் அரசின் சிறந்த நகரமாகத் திகழ்ந்தது. பின்னர் மால்வாவை இசுலாமியர் வென்றதும் அந்தச் சிறப்பினை இந்நகரம் இழக்க நேர்ந்தது. மால்வாவின் இசுலாமிய மன்னர்கள் இதை ஓர் எல்லை நகரமாகக் கருதினார்கள். அதன் பின் குசராத்தினை ஆண்ட முதல் அகமதுவின் படையெடுப்புக்கு இந்நகரம் இலக்காயிற்று. பின்னர் கி.பி. 1730 முதல் இந்நகரம் புகழ்பெற்ற ஒல்கார் அரச பரம்பரையைச் சேர்ந்த மாதவராவு வசமாயிற்று. அப்பரம்பரையின் புகழ்பெற்ற இராணி அகல்யாபாய் காலத்தில் கி.பி. 1767 முதல் இந்நகரம் சமசுதானத்தின் தலைநகரமாக்கப்பட்டு மேலும் ஏற்றம் பெற்றது. இது அந்த இராணிகாலத்தில் வணிக முறைகளில் வளர்ச்சிகள் கண்டதோடு, இந்நகரத்தில் எங்குப் பார்த்தாலும் பல அரண்மனைகளும் உயர்ந்த கோபுரங்களுடன் கூடிய பல கோயில்களும் கட்டப்பட்டுப் புதிய தோற்றமும் அடைந்தது. பின்னர் கி.பி. 1795-இல் ஆட்சிக்கு வந்த ஒல்கார் துகோசி ராவு காலத்தில் மகேசுவர் தலைநகரமாகவே இருந்து வந்தது. பின்னர் கி.பி. 1798 – இல் ஆட்சிக்கு வந்த சசுவந்தராவு ஒல்கார் ஆட்சியின் பெரும்பகுதிக் காலம் இங்குத் தங்காததால் மகேசுவர் நகரின் செல்வாக்கு மங்கத் தொடங்கியது. பின்னர் கி.பி. 1818 – இலிருந்து அப்பகுதிமுழுமைக்கும் இவ்வூரே தலைநகரமாயிற்று.

இந்நகரிலுள்ள கட்டடங்கள் பழமையானவை என்று சொல்ல முடியாவிட்டாலும்,பார்க்கத்தக்கவையாம். இங்குள்ள கோட்டை இசுலாமியரால் கட்டப்பட்டது. இங்கே கி.பி. 1564,1682,1712 ஆகிய ஆண்டுகளில் கட்டப்பட்ட மசூதிகள் உள்ளன. இராணி அகல்யாபாய் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடம் வழிபாட்டுக்குரியதாகத் திகழ்கிறது. சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட கோயிலாக அது உருவாக்கப் பெற்றுள்ளது. ஆற்றிலிருந்து படிக்கட்டுகள் அக்கோயிலை நோக்கி அமைக்கப் பெற்றுள்ளன.

நருமதையாற்றினில் படகிலமர்ந்து பார்த்தால் இந்நகரின் அழகை முழுமையாகக் கண்டுகளிக்க முடியும்.நருமதையின்அழகு ஆட்சி செய்யும் முழுக்காட்சிக் கூடமாக இந்நகர் விளங்குகிறது. ஆற்றங்கரையெங்கும் 'விளையாட்டரங்கின் ஏற்ற முறையிலான இருக்கை வரிசைகள்' (Gallery) போலப் படிக்கட்டுகள் நெடுகிலும் அமைந்துள்ளன. அவற்றை நீராடும் கட்டங்கள் என்று குறிப்பிடுவர். அந்தப் படிக்கட்டுகள் மேலே கோட்டையைச் சென்றடையும்படி கட்டப்பட்டுள்ளன. கரைநெடுகக் கலையழகு சொட்ட அமைந்துள்ள கோபுரங்களும் மகாராணி அகல்யாபாயின் மகோன்னத அரண்மனையும் நருமதை ஆற்று நீரில் எதிரொளி செய்வது கண்களுக்கு இனிய விருந்தாகும். இதனால்தான் இந்நகரினை ஆண்ட எய்கய மரபு மன்னர்கள் 'நகரங்களில் நனி சிறந்த மகிசாமதியின் மன்னர்கள் நாங்கள்' என்று தம்மைப் பற்றிப் பெருமையாகக் கூறிக் கொண்டதாகச் செய்தி உண்டு. வனப்புமிக்க இந்த நகரத்திலிருந்து வண்ணப் புடவைகளும், பட்டுக்கரை வேட்டிகளும் ஏற்றுமதியாகின்றன.

**மகேசுவர்**[2] **(கடவுள்)** வெண்ணிறம் உடையவர். மேனியில் அரவப் பூணூல் அணிந்து, திருக்கரத்தில் மழு, சூலம், மணிமாலை, கமண்டலம், பதுமம் கொண்டு, அரித்தோலும், யானைத்தோலும் உடுத்து, அபய, வரத கரங்களுடன் விளங்குபவரே மகேசுவர் என்று புராணங்கள் சித்திரிக்கின்றன. பிரமன், மகாவிட்டுணு, இந்திரன் ஆகிய மூவரும் கூட ஒரு காலக் கட்டத்தில் மகேசுவரின் மறு உருவான சிவலிங்கத்தை வழிபட நேர்ந்ததால் இவரை மகாஈசுவரர் அல்லது மகேசுவர் எனக் குறிப்பிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

**மகேசுவர்**[3] **(சிற்பம்)**: இந்திய அரசின் அஞ்சல் தந்தித்துறை, நாடு விடுதலை பெற்ற தொடக்க ஆண்டுகளில் வெளியிட்ட அஞ்சல் தலைகளில் இடம் பெற்ற தொன்மை மிகு சிற்பங்களுள் ஒன்று 'திரிமூர்த்தி'எனப்படும் மகேசுவர் சிற்பம். பம்பாய்த் துறைமுகத்தருகில் உள்ள தீவொன்றின் குகையில் உள்ளது இச்சிற்பம். பம்பாய் நகரத்தில் இருந்து 10 கி.மீ. தொலைவில் ஒரு தீவு உள்ளது. 'யானைத்தீவு' என்று பொருள்படும்படியான 'எலிபெண்டா தீவு' (Elephanta Island) எனப்படும் அத்தீவின் உண்மையான பெயர் காராபுரி என்பதாகும். அது 8.ச.கி.மீ. பரப்புடையது. அத்தீவில் மொத்தம் ஐந்து குகைக் கோயில்கள் உள்ளன. எல்லோராவிலும், மாமல்லபுரத்திலும் எவ்வாறோ, அவ்வாறே அங்கும் பாறைகளைக்

குடைந்து விந்தையான கோயில்களும், அவற்றினுள் அழகிய தூண்களும் எழில் உருவங்களும் வியத்தகு முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

அர்த்தநாரீசுவர், நடராசர், கலியாணசுந்தரர், கங்காதரர், இலகுலீசர், மூர்த்தி, கைலாசநாதர் முதலிய உருவச் சிற்பங்கள் மற்ற குகைகளில் காணப்படுகின்றன. சிவனுக்குரிய குகைக் கோயிலில் இந்த மகேசுவர் சிற்பம் காணப்படுகிறது. அத்தீவுக் குகைகளிலேயே இதுதான் பெரியது. நீளம் 39 மீட்டர்; அகலம் 38.5 மீட்டர்; உயரம் 5.1. மீட்டர். இங்குள்ள சிற்பங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள கார்வே, பாசா என்னும் குகைக் கோயில்களில் உள்ளவை போல் அமைந்துள்ளன. சிவன், இராவணனின் செருக்கை அழிப்பதைச் சித்திரிக்கும் சிற்பம் இங்குள்ள மற்றொரு சிறந்த சிற்பமாகும். ஆயினும்,கலை வல்லுநர்கள் கண்டு வியக்கும் சிற்பம் கேசமூர்த்தி அல்லது திரிமூர்த்தி எனப்படும் மகேசுவரின் சிற்பமாகும். மூன்று தலைகள் இருப்பதால் அதனைத் திரிமூர்த்தி என்றும் குறிப்பிடுகின்றனர். இச்சிலை உள்ள குகையில் ஒவ்வொன்றும் 5 மீ. உயரமுள்ள இரு வரிசைத் தூண்கள் கொண்ட பெரிய அறையின் உட்கோடியில் 7 மீ. உயரமும் 6 மீ. அகலமும் உள்ள ஒரு மாடத்தில்தான் இது அமைக்கப்பட்டுள்ளது; மார்பளவுச் சிலையாகவே செதுக்கப்பட்டுள்ளது; கிட்டத்தட்ட 3 மீ. உயரம் உள்ளது. அந்தச் சிலை 1 மீ. உயரமுள்ள கூடத்தில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. சிலைக்கு வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் 4 மீ. உயரமுள்ள துவாரபாலர்கள் நிற்கிறார்கள். தூண்களில் பிரம்பு போன்ற செதுக்கு வேலைப்பாடு சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது.

தென் இந்தியச் சிற்பக் கலைப்பாணியைத் தழுவியே எல்லோரா, பட்டடக்கல் சிற்பங்கள் அமைந்துள்ளன. ஆனால், அந்தச் சிற்ப மரபு இங்கு வந்தடையவில்லை. மாறாக, இத்தீவின் குகைகளில் உள்ள மகேசுவர் முதலான மிகச்சிறந்த சிற்பச் சாதனைகள் மேற்கிந்திய மரபின் மேதகு வெற்றி எனக் கலைத் திறனாய்வாளர் கருதுகின்றனர்.

புகழ்பெற்ற இம்மகேசுவர் சிற்பத்தின் மூன்றுதலைகளிலும் வழக்கமான சடா மகுடங்கள் காணப்படுகின்றன. இடப்பக்க முகத்தில் மீசை தாடியுடன் கடுமையான பார்வையும், வலப்பக்க முகத்தில் அமைதியும் தவழ்கின்றன.

பாறைச் செதுக்குச் சிற்பமான (Bas - relief) இம்மகேசுவர் சிலை கி.பி. 7அல்லது 8-ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டதாகும். அதாவது இராட்டிரகூடர் ஆட்சிக் காலத்தினைச்சார்ந்ததாகும். மீ.ம.

**மகேந்திர பாலர்**: வடஇந்தியாவில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கூர்ச்சரப் பிரதிகார மரபினைச் சேர்ந்த மன்னர் மகேந்திர பாலர். இவ்வரசைத் தோற்றுவித்த முதலாம் நாகபட்டர் என்ற மன்னரிலிருந்து (கி.பி. 725-740) எட்டாவது மன்னர் மகேந்திர பாலர் ஆவார்.

மகேந்திரபாலர் ஆட்சிக்காலம் ஏறத்தாழ கி.பி. 890 முதல் 908 வரை எனலாம். இவர் தம் தந்தையார் மிகிரபோசன் விட்டுச் சென்ற பிரதிகாரப் பேரரசை மேலும் விரிவாக்கினார். இவருடைய 8-ஆம் ஆட்சியாண்டிலும் 10-ஆம் ஆட்சியாண்டிலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளிலிருந்தும், இவர் தந்தையார் கல்வெட்டுகளிலிருந்தும் இவர் காலத்தில் கூர்ச்சரப் பேரரசின் எல்லைகளை ஒருவாறு அறியலாம். கிழக்குப் பஞ்சாபு, உத்தரப் பிரதேசம், இராசசுதானம், குவாலியர் நகரைச் சார்ந்த பகுதிகள் (மத்திய பிரதேசம்), மாளவம், குசராத்து, கத்தியவார் பகுதிகள் ஆகியவை இவர் தந்தையார் காலத்துப் பேரரசில் அடங்கியவை. அவற்றோடு இவர் மகதம் (இக்கால வடக்குப்பீகார்), வடக்கு வங்காளம் ஆகியவற்றையும் வென்று இணைத்துக் கொண்டார். இவரது தலைநகர் கன்னோசி நகரம் (பிரதிகாரர்களின் பழைய தலைநகர் பின்மால்).

**இவர் காலத்தில் வாழ்ந்த பிற அரசர்கள்**: வங்காளத்தில் அரசோச்சிய பாலவமிசத்தைச் சார்ந்த நாராயண பாலர் இவரோடு போரிட்டுத் தோற்றுச் சில பகுதிகளை இழந்தார். இதற்குப் பீகார் மாநிலம் கயா மாவட்டத்திலும், வங்காளமாநிலம் இரசசாகி மாவட்டத்திலும் காணப்படும் மகேந்திர பாலரின் கல்வெட்டுகளே சான்றுகளாகும். தக்காணத்தில் ஆண்ட இராட்டிர கூட மரபினரான இரண்டாம் கிருட்டிணன் மகேந்திர பாலருக்குச் சமகாலத்தவர். இராட்டிரகூடர், கூர்ச்சரப் பிரதிகாரர், பாலவம்சத்தினர் ஆகிய இம்மூன்று அரச மரபினரும் கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் ஒருவரோடு ஒருவர் பொருத வண்ணம் இருந்தனர். மகேந்திர பாலருக்குப்பின் வந்த இரு அரசர்கள் காலத்தில் கூர்ச்சரப் பிரதிகார அரசு நலிவுற்றது.

**புலவர்க்குப் புரவலர்**: வடமொழியிலும், பிராகிருத மொழியிலும் பெரும் புலமை வாய்ந்த இராசசேகரர், மகேந்திர பாலருக்கு ஆசிரியர் ஆவர்;இவரால் ஆதரிக்கப்பட்டவர். ஈ.ஜா.

**மகேந்திரவாடி**, வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் அரக்கோணம் வட்டத்தில் அமைந்துள்ளது. இது,சென்னைக்காட்பாடிப் புகைவண்டிப்பாதையில் சோளிங்கர் என்னும் புகைவண்டி நிலையத்தி

லிருந்து 5.கி.மீ. தூரத்திலுள்ளது. இங்குப் பல்லவர் காலத்தில் எழுப்பப்பட்ட குடைவரைக் கோயில் ஒன்றுள்ளது. அந்தக் குடைவரைக் கோயில் பல்லவ மன்னனான மகேந்திரவர்மனால் எடுக்கப்பட்டது.

மகேந்திரவாடியிலுள்ள குடைவரைக் கோயில் திருமாலுக்காக எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் குடைவரையில் உள்ள தூணில் ஒரு கல்வெட்டு காணப்படுகின்றது. அக்கல்வெட்டு பல்லவ கிரந்தம் எனப் படும் எழுத்துகளில் வடமொழியில் வெட்டப்பட்டுள்ளது. நான்கு வரிகளுடன் உள்ள அக்கல்வெட்டில் அக்கோயில் எழுப்பித்தது பற்றிக் கூறப்படுகின்றது. 'மகேந்திரபுரம் என்னும் பெருநகரில் மகேந்திர தடாகம் என்னும் குளத்தின் கரையில் முராரி எனப் படுகின்ற திருமாலுக்காக அந்தக் குடைவரை பார்ப்பவர்கள் கண்களுக்கு அழகாக இருக்குமாறு, குணபரன் எனப்படும் முதலாம் மகேந்திரவர்மன் என்பவரால் எடுக்கப்பட்டது' என்று அக்கல்வெட்டில் காணப் படுகிறது. அதன் துணைகொண்டு இந்த ஊருக்குப் பல்லவர்கள் மகேந்திரபுரம் என்னும் பெயர் வைத்துள்ளனர் என்பதும் இது ஒரு முக்கிய நகரமாகத் திகழ்ந்துள்ளது என்பதும் புலனாகின்றன. மகேந்திர வர்மனின் பெயரைக் கொண்டு இந்த ஊருக்கு மகேந்திரபுரம் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது.

திருமாலுக்காக எடுக்கப்பட்ட இந்தக் குடைவரை ஏறத்தாழ 5 மீட்டர் உயரமும் 7.6 மீட்டர் அகலமும் கொண்டு, தனியாக நிற்கும் பெருங்கல்லைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பெரிய கல்லின் பின்புறம், கல்லின் இரண்டு பக்கங்களிலும் சிறிய அளவிலுள்ள கல்லைத் தவிர மற்ற எல்லாப் பகுதிகளையும் குடைவரையாகக் குடைந்துள்ளனர். குடைவரையின் மேல்பகுதி மழைத்தண்ணீர் உள்ளே வராமல் தடுக்கும் பொருட்டு முன்பகுதியின் மேல் பகுதியில் பள்ளம் ஒன்று வெட்டப்பட்டு அதன் வழியாகத் தண்ணீர் சென்று விடுமாறு குடைந்துள்ளனர்.

மகேந்திரவாடி குடைவரை, கருவறை, அருத்த மண்டபம், முகமண்டபம் ஆகிய மூன்று பகுதிகளுடன் வெட்டப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டு தூண்களும், இரண்டு அரைத்தூண்களும் வடிக்கப்பட்டுள்ளன. அவற்றில்தான் வடமொழி கல்வெட்டு காணப்படுகின்றது. தூண்களின் அடிப்பாகமும், மேல்பாகமும் சதுர அமைப்பிலும், மத்திய பாகம் எண்பட்டை வடிவத்திலும் அமைந்துள்ளன. தூண்களின் அடிப் பகுதியிலும் மேல்பகுதியிலும் காணப்படும் சதுரங்களில் அழகான தாமரை மலர்கள் வடிக்கப்பட்டுள்ளன. மற்றப்பகுதிகளில் பூ வேலைப் பாடுகளும் உள்ளன. எல்லாத் தூண்களிலும் போதிகைகள் உள்ளன. போதிகைகள் இயல்பான நிலையில் வடிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள அரைத்தூண்களில் சதுர அமைப்புகள் காணப்படவில்லை.

முகமண்டபத்திலுள்ள வாசனம் என்ற பகுதி எந்த விதமான வேலைப்பாடுகளுமின்றி வெட்டப்பட்டுள்ளது. முகமண்டபத்தில் எந்தவிதமான பூவேலைப் பாடுகளும் காணப்படவில்லை. இம்மண்டபம் சற்றுத் தாழ்த்தி வடிக்கப்பட்டுள்ளது. ஆனால், அர்த்த மண்டபத்தின் அடித்தளம் சற்று உயர்த்தி வடிக்கப் பட்டுள்ளது.

அர்த்த மண்டபத்தின் உட்பகுதியில் கருவறையினைக் குடைந்துள்ளனர். அக்கருவறை 3.5 மீட்டர் நீளமுடையது. கருவறைக்கென்று ஒருதனி அதிட்டானம் கீழ்ப்பகுதியில் வடித்துள்ளனர். அந்த அதிட்டானத்திலுள்ள அங்கங்கள் சிறப்பான முறையில் வடிக்கப்பட்டுள்ளன. ஆனால், உபானத்திற்கும் குமுதத்திற்கும் இடையே காட்டப்பட்டுள்ள வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கனவாகும். கருவறையின் உள்ளே செல்ல இரண்டு படிக்கட்டுகள் 'சந்தரசிலா' என்ற அமைப்பில் வடிக்கப்பட்டுள்ளன. கருவறை, அர்த்த மண்டபத்தைக் காட்டிலும் உயர்ந்துள்ளது.

கருவறையின் நுழைவாயிலில் இரண்டு வாயிற் காப்போர் இரண்டு தேவகோட்டங்களில் வடிக்கப் பட்டுள்ளனர். இச்சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. இரண்டு வாயிற்காப்போர்களும் ஒரே அமைப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். இரண்டு கரங்களுடன் காணப்படும் அவர்களுடைய இடக் கைகள் 'கட்டியவலம்பிதா' அமைப்பிலும், வலக்கைகள் கருவறையைச் சுட்டிக் காட்டுவனவாகவும் உள்ளன. கரண்ட மகுடம், பத்மாசனம், நிவித் யக்யோபவீதம் போன்றவை வாயிற் காப்போரை அழகு செய்கின்றன. கருவறையில் ஓவியங்கள் தீட்டப் பட்டுள்ளன. அந்த ஓவியங்கள் நன்றாகத் தெரியவில்லை. ஆனால், சில இடங்களில் மட்டும் காணப் படுகின்றன. ஆகவே, கருவறையில் வரையப்பட்டுள்ள ஓவியங்களைத் தவிர மற்றச் சிற்பங்கள் முதலில் வடிக்கப்படவில்லை.

பிற்காலத்தில் நரசிம்மர் சிற்பம் ஒன்று கருவறையில் வைக்கப்பட்டுள்ளது. அதன்பின்பகுதியில் சுதையாலான நரசிம்மர் உருவம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தச் சுதைஉருவம் பழுதடைந்து காணப் படுகின்றது.

மகேந்திரவர்மன் கி.பி.590 – ஆம் ஆண்டு முதல் கி.பி. 630 – ஆம் ஆண்டு வரை ஆண்டவன். அவன் தன்னுடைய பெயரில் திருமாலுக்கு ஒரு கோயில் எடுக்க விரும்பி இந்தக் குடைவரையை எடுத்துள்

ளான். ஆகவே, இக் கோயிலுக்குத் தன்னுடைய பெயரையும் சேர்த்து மகேந்திரவிட்டுணுக் கிரகம் என்று பெயரிட்டுள்ளான். அதனருகிலேயே மகேந்திர தடாகம் என்னும்குளம் ஒன்றையும் வெட்டியுள்ளான் என்பதை அங்குள்ள கல்வெட்டு கூறுகின்றது. தி.சு.

மகோதை,மேற்குக் கடற்கரையில் இருந்தபண்டைச் சேரர் தலைநகர். கோதை என்பது சேரரைக் குறிக்கும். கோதை ஆண்ட நகரம் மகோதை ஆயிற்று. சுந்தரர் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடிப் பரவிய திரு அஞ்சைக் களத்தப்பன் சிவாலயம் இங்கு உள்ளது. சுந்தரர் தேவாரத்தில், 'அந்தண் கடலங் கரைமேல் மகோதை, அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே' என்று பாடுகின்றார். கொடுங்கோளூர் அல்லது கிராங்கனூர் என்று கூறப்படும் சேரர் கோநகரமும் இதுவே யாகும்.

பண்டைய சிறியன் (Syrian) கிறித்தவர் எழுத்துச் சான்றுகளிலும் மகோதை, மகோதைப்பட்டினம் எனக் குறிக்கப்படுகிறது. இங்குப் பெரியாறு கடலுடன் கலக்கும் இடத்தில்தான் முசிறி இருந்தது. இன்று முசிறி இருந்த பகுதி அழிக்கோடு என்று கூறப்படுகிறது. முசிறி, 'வளங்கெழு முசிறி' (அகம்.149), 'முதுநீர் முன்றுறை முசிறி' (அகம்.57), 'முழங்கு கடல் முழவின் முசிறி' (புறம்.343) என்று சங்க இலக்கியங்களில் சிறப்பிக்கப்படுகிறது. இங்கு யவனர் கப்பல் பொன்னொடு வந்து மிளகொடு பெயரும். மாக்கோதை, பெருமாக்கோதை என்றும் இவ்வூர் கூறப்படும்.

சுந்தரர் வெள்ளை யானையின் மீதும், சேரமான் பெருமாள் நாயனார் குதிரையின் மீதும் அமர்ந்து கயிலை சென்றது இங்கிருந்துதான் என்று நம்பப்படுகிறது. திருவஞ்சைக் களத்தில் அவர்களின் உற்சவத் திருமேனிகள் இருக்கின்றன.

இன்று கொடுங்கோளூர், திருவஞ்சைக் களம், முசிறி (அழிக்கோடு) ஆகியவை அருகருகேயுள்ள வேறு வேறு ஊர்களாக இருப்பினும் முன்னொரு காலத்தில் இவையனைத்தும் ஒன்றாக இணைந்து சேரர் கோநகராகத் திகழ்ந்தன. கிரேக்க நிலநூல்ஆசிரியர்கள் இவ்வூரைப் பற்றித் தங்கள் குறிப்புகளில் கூறியுள்ளார்கள். பெரிய புராணத்திலும் மகோதை பற்றியசெய்திகள் உள்ளன. செ.இரா.

**மங்கம்மாள் (கி.பி. 1689-1706):** தென்னிந்தியாவில் இடைக்காலத்தில் ஆண்ட விசயநகரப்பேரரசு அழிந்தபின் தோன்றிய சிற்றரசுகளில் மதுரை நாயக்க அரசும் ஒன்று. மதுரை நாயக்க அரசு தமிழகத்தில் ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகள் ஆட்சி செய்து வந்தது.

**மங்கம்மாள் ஆட்சிப் பொறுப்பேற்றல்:** மதுரை நாயக்கர் பரம்பரையின் பத்தாம் மன்னர் சொக்கநாத நாயக்கர் என்பவர். அவர் மனைவி மங்கம்மாள். மங்கம்மாளின் புதல்வர் அரங்ககிருட்டிண முத்துவீரப்ப நாயக்கர் கி.பி. 1689-ஆம் ஆண்டு இறந்தபோது அவர் மனைவி முத்தம்மாள் கருவுற்றிருந்தாள். ஆண்மகவு ஒன்றைப் பெற்றபின் முத்தம்மாள் தற்கொலை செய்து கொண்டாள். அம்மகவு விசயரங்கச் சொக்கநாத நாயக்கர் என்று பெயரிடப்பட்டு மதுரைச் சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டது. அக்குழந்தைக்குப் பாதுகாவலராக (Regent) பாட்டி மங்கம்மாள் அரசுப் பொறுப்பை ஏற்றார். விசயரங்க சொக்கநாதருக்கு வயது வந்து பொறுப்பேற்றுக் கொள்ளும் வரை மங்கம்மாள் ஆட்சி செய்து வந்தார். இவரே இராணி மங்கம்மாள் என்று வரலாற்றில் குறிக்கப்பட்டார். தமிழக வரலாற்றில் முழுப் பொறுப்பேற்ற முதல் அரசியார் இவரே.

**முகலாயர் படையெடுப்பு:** மங்கம்மாளின் ஆட்சிக் காலத்தில் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பு இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் வெல்லும் எண்ணம் கொண்டு தென்னாட்டின் மீது படைநடத்தி வந்தார். தென்கோடியில் இருந்த அரசுகளை அடிபணிய வைக்கத் தம் தளபதி சுல்பிகர் கான் (Zulfikar Khan) என்பவனை அனுப்பினார். முகலாயரின் வலிமையை எதிர்ப்பது வீண் என்று உணர்ந்த மங்கம்மாள் முகலாயருக்குப் பெரும்பொருள் கொடுத்துத் தம் அரசைக் காப்பாற்றிக் கொண்டார். முகலாயர்க்கு ஆண்டு தோறும் திரை செலுத்தவும் ஒப்புக் கொண்டார். முகலாயரின் உதவிகொண்டு தம்மரசின் வட பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றியிருந்த மைசூர்ப் படைகளை விரட்டினார். அப்போது தென்னாட்டில் மராட்டியர் மீண்டும் மீண்டும் புகுந்து கொள்ளையிட்டு வந்தனர். அவர்களுக்குக் கையூட்டுகள் அவ்வப்போது அளித்துத் தம்மரசைக் காத்துக் கொள்ள நேர்ந்தது.

**மைசூர்தாக்குதல்:** மைசூர் மன்னர் சிக்கதேவராயன் பாரமகல் (இப்போதைய சேலம், தருமபுரி மாவட்டங்கள்), கோவைப் பகுதிகளைத் தாக்கி கி.பி. 1690-இல் திருச்சி நகரையும் முற்றுகையிட்டார். நல்லூழால் மைசூர், மராட்டியரின் தாக்குதலுக்கு உட்பட்டது. மைசூர்ப்படைகள் திருச்சிராப்பள்ளியை விட்டு விலகிச் சென்றன.

**திருவிதாங்கூர்ப் போர்:** திருவிதாங்கூர் மன்னன் மதுரைக்குத் திறை செலுத்தி வந்தான். மதுரைப் படைகள் கி.பி. 1696-ஆம் ஆண்டு திறை வாங்கச் சென்றபோது திருவிதாங்கூர் மன்னன் இரவிவர்மன் தனக்குப் பெரும் தொல்லை தந்து வந்த எட்டு

வீட்டுப் பிள்ளைமார் என்ற குழுவினரை அடக்கும் படி வேண்டினான். அதற்கு ஈடாகத் தம் நாட்டில் பாதியையும், வலிய அரணுடைய கல்குளம் கோட்டையையும் மதுரைக்குக் கொடுத்து விடுவதாகவும் கூறினான். மதுரைப் படைகள் எட்டுவீட்டுப் பிள்ளைமாரை அடக்கின. ஆனால், திடீரெனத் திருவிதாங்கூர்ப் படைகள் மதுரைப் படைகளைத் தாக்கிப் பலரைக் கொன்றன. இரவிவருமனைப் பழிவாங்க மதுரையின் பிரதம படைத்தலைவர் தளவாய் நரசப்பையர் அனுப்பப்பட்டார். நரசப்பையர் திருவிதாங்கூர்ப் படையினை கி.பி. 1697-இல் முறியடித்து மதுரையின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்தினார்.

**தஞ்சையுடன் போர்:** தஞ்சை மராட்டிய மன்னர் சாசி (கி.பி. 1684 – 1712)யுடன் கி.பி.1700-இல் போர் ஏற்பட்டது. தளவாய் நரசப்பையரின் தலைமையில் சென்ற மதுரைப் படைகளின் தாக்குதலை எதிர் ஏற்க முடியாமல் தஞ்சை மன்னர் பெரும் பொருளை நரசப்பையருக்குக் கையூட்டாகக் கொடுத்துத் தம் தலைநகரைக் காப்பாற்றிக் கொண்டார்.

**காவிரிக்கு மைசூர் மன்னர் அணை அமைத்தல்:** மைசூர் மன்னர் சிக்கதேவராயன் காவிரிக்குக் குறுக்கே சீரங்கப்பட்டணத்தில் அணை ஒன்று அமைத்ததால் தமிழகம் வறட்சியடைந்தது. மதுரையும், தஞ்சையும் தம்வேற்றுமைகளை மறந்து ஒன்றிணைந்து காவிரி அணையை உடைக்கும் பொருட்டு மைசூரை நோக்கிச் சென்றன. ஆனால், பெருமழை பெய்து வந்த காவிரி வெள்ளத்தால் சீரங்கப்பட்டணம் அணை உடைந்தது. படையெடுப்புக்குத் தேவை இல்லாமற்போயிற்று.

**சேதுபதியுடன் மோதல் (கி.பி. 1702):** மதுரைக்கு அடங்கிய சிற்றரசர்ளாகஇராமநாதபுரத்தில் ஆட்சி செய்து வந்தவர்கள் சேதுபதிகள். இராணிமங்கம்மாள் காலத்தில் கிழவன் சேதுபதி என்று சிறப்புப் பெயர் பெற்றிருந்த இரகுநாத சேதுபதி தனியுரிமையுடன் இராமநாதபுரத்தை ஆளமுற்பட்டார். மதுரைக்கும் தஞ்சைக்கும் போர் ஏற்பட்டபோது தம் மேலரசான மதுரைக்குச் சேதுபதி உதவவில்லை. கிழவன் சேதுபதிக்குப் பாடம் கற்பிக்கும் பொருட்டு கி.பி. 1702-இல் தளவாய் நரசப்பையர் தலைமையில் ஒருபடை அனுப்பப்பட்டது. ஆனால், இப்படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. நரசப்பையர் போர்க்களத்தில் கொல்லப்பட்டார். மதுரைப்படைகள் சிதறடிக்கப் பட்டன.

**சமயப்பொறை:** இவர் ஆட்சிக்காலத்தில் தென்னாட்டில் இருந்த பாதிரியார்களின் சமயப் பரப்புதல் தீவிரமாக நடைபெற்று வந்தது. இராமநாதபுரத்திலும், தஞ்சையிலும் கிறித்தவப் பரப்புதல் தடைசெய்யப்பட்டிருந்தபோது மங்கம்மாள் தம் பகுதியில் பாதிரிமார்களுக்குத் தடை ஏதும் விதிக்கவில்லை. புகழ்பெற்ற பாதிரியார் தி பிரிட்டோ, கிழவன் சேதுபதியினால் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டபின் மதுரைப் பகுதிக்கு ஓடிவந்த கிறித்தவர்கட்குப் புகலிடம் அளிக்கப்பட்டது. இந்துக் கோயில்கட்கு அளிக்கப்பட்டதைப்போன்று மசூதிகளுக்கும், கிறித்தவ ஆலயங்கட்கும் மங்கம்மாள் மானியங்கள் வழங்கினார்.

**அறப்பணிகள்:** பல அன்ன சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் இவரால் நிறுவப்பட்டன. மதுரைநகரில் இன்றும் காட்சியளிக்கும் மங்கம்மாள் சத்திரம், தமுக்கம் விடுதி, மத்திய சந்தை ஆகியவை இவரால் அமைக்கப்பட்டவையே. புண்ணியத்தலங்களுக்குப் பயணம் செய்யும் மக்கள் தங்கும் பொருட்டு நாட்டின் பல பகுதிகளிலும் சத்திரங்களை நிறுவியுள்ளார். சாலைகளில் நிழல் தரும் மரங்களும் வளர்க்கப் பட்டன. அந்தணர்க்கு நிறைந்த அளவில் தானங்களும், நில மானியங்களும் அளித்தார். மதுரை மீனாட்சி திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளார்.

**இறுதிக்காலம்:** இவர் இறுதிக்காலம் அமைதியாக இல்லை. தம் தலைமை அமைச்சருடன் கள்ள நட்புக் கொண்டுள்ளார் என மக்கள் ஐயுற்றனர். மேலும், வயது வந்து விட்டபின்னும் தம் பேரன் விசயரங்க சொக்கநாதனுக்கு அரசுரிமையை மாற்றித்தராமல் காலம் கடத்தினார். இதனால், தன்னலம் மிக்கவர் என்ற பெயரை அடைந்தார். மங்கம்மாள் கி.பி. 1706 – இல் இயற்கை எய்தினார். வரலாற்று ஆசிரியர்கள் மங்கம்மாளின் ஆட்சியைப் புகழ்ந்தே எழுதியுள்ளனர். வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த மதுரை நாயக்க அரசைத் தம் இராசதந்திரத்தால் 18 ஆண்டுகள் நிலை நிறுத்தினார். இவர் இறந்த 30 ஆண்டுகளில் மதுரை நாயக்கர் அடியோடு மறைந்து விட்டனர் என்பதை நோக்கும்போது, மங்கம்மாளின் ஆட்சித்திறன் எத்தகையது என்பதனை உணரலாம். செ.ஜ.

*மங்கலவள்ளை* என்பதுதொண்ணூற்றாறு சிறு பிரபந்த வகைகளுள் ஒன்றாகும். இதனை வெண்பாப்பாட்டியலும் இலக்கண விளக்கப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை முதலிய நூல்களும் மங்கல வள்ளை என்றே குறிப்பிடுகின்றன. பன்னிரு பாட்டியல் மாத்திரம் மங்கலவெள்ளை என்று இப்பிரபந்த வகையின் பெயரைச் சிறிது மாற்றிக் கூறுகிறது. உயர்ந்த குடி

யில் பிறந்த பெண் ஒருத்தியின் சிறப்பியல்புகளைப் பல்வேறு விதமாகப் புகழ்ந்து ஒன்பது வெண்பாக் களினால் பாடும் பிரபந்தத்திற்கு மங்கல வள்ளை என்று பன்னிருபாட்டியல் தவிரப் பிறபாட்டியல் நூல்கள் யாவும் ஒருமுகமாகக் கூறுகின்றன. பன்னிரு பாட்டியல் மாத்திரம் ஒன்பது வகைச் சந்தங்களி னாலோ ஒன்பது வெண்பாக்களினாலோ ஒருகலி வெண்பாவினாலோ இப்பிரபந்தத்தைப் பாடலாம் என இலக்கணம் கற்பிப்பதோடு மங்கல வெள்ளை எனப் பெயரையும் மாற்றிக் குறிப்பிடுகிறது. நல்ல குடிப் பிறந்த பெண்ணொருத்தியைப் புகழ்ந்து பாட வேண்டும் என்பதில் எல்லாப் பாட்டியல் இலக்கண நூல்களும் ஒத்த கருத்துடையனவாகவே விளங்கு கின்றன. இப்பிரபந்த வகைகள் பிற்காலத்துத் தோன்றியனவாகவே காணப்படுகின்றன. 'மாசில் குலமகளுக்கு வகுப்பு வெண்பா வருபொருள் ஒன்பான் ஒன்பானாகப் பாடின் தேசுயர் மங்கலவள்ளை' என்று சிதம்பரப்பாட்டியல் கூறுவதிலிருந்து அத்தலைவியின் ஒன்பது புகழத்தக்க வேறுபட்ட சிறந்த பண்புகளை ஒன்பது வெண்பாக்களினால் பாடவேண்டும் என்னும் உண்மையும் தெரிகிறது. மங்கல வெள்ளை என்பதற் குச் சந்தவக் குழம்பு என வேறு ஒரு பொருளும் உண்டு. 'மங்கல வெள்ளை வழித்து' என வரும் சீவக சிந்தாமணித் தொடருக்குச் (சீவக சிந்தாமணி, 1477) சந்தனக் குழம்பை மெழுகி என ஆசிரியர் நச்சினார்க் கினியர் உரை கூறுகிறார். மங்கலம் என்பது நன்மை யைக் குறிப்பிடத்தக்க ஒரு சிறந்த சொல்லாகும். வெள்ளை என்பது வெண்பாவுக்குரிய வேறொரு பெயர். ஆகவே வெண்பாவால் ஒரு தலைவியின் சிறப்புகளைக் குறிப்பிடத்தக்க நூல் என்பதே மங்கல வெள்ளை என்பதன் உண்மைப் பொருளாகும். மங்கல வெள்ளை என்பதே மங்கல வள்ளையெனப் பிற் காலத்தாரால் திரித்துக் கூறப்பட்டது போலும். சீவக சிந்தாமணியில் மங்கல வெள்ளை என்றே காணப் படுகிறது. மணப்பொருளாய சந்தனத்தையே மங்கல மாகக் குறிப்பிடுவது மரபு. ஆகவே இது பெண்ணி னல்லாளாய தலைவி ஒருத்தியின் மேம்பாட்டினைக் கூறத்தக்க சிறந்த ஒரு பிரபந்தவகை எனக் கூறலாம். இத்தகைய நூல் இப்பொழுது விளக்கமுறக் காணப் படவில்லை. இரா.ச.

*மங்கள் பாண்டே:* இவர், இந்தியாவில் கி.பி. 1857-ஆம் ஆண்டு மூண்ட சிப்பாய்கள் கிளர்ச்சிக்கு வித்திட்டவர் ஆவார். உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள பைசாபாது (Faizabad) நகரத்தைச் சேர்ந் தவர். ஆங்கிலேயக்கிழக்கிந்திய வணிகக் குழுவின் 34-ஆம் பிரிவு தேசிய காலாட்படையில் (Native Infantry) பணிபுரிந்த போர் வீரர். இவர் பணிபுரிந்த பிரிவு கி.பி. 1857-இல் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள பாரக்பூரில் (Barrackpur) நிறுத்திவைக்கப்பட்டு இருந்தது. அப்பொழுது போர் வீரர்களுக்குப் புதிய என்பீல்டு (Enfield) துப்பாக்கிகள் வழங்கப்பட்டன. அதன் குண்டுகள் பசு, பன்றி ஆகியவற்றின் கொழுப்பால் பூசப்பட்டன என்ற வதந்தி போர் வீரர்களிடையே விரைவாகப் பரவியது. அந்த வதந் தியில் ஓரளவு உண்மை இருந்தது. இந்த வதந்தி சமயப்பற்றுள்ள இந்து, இசுலாம் ஆகிய சமய வீரர் களைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

கல்கத்தாவிற்கு மேற்கே 200 கி.மீ. தொலைவில் உள்ள பெர்காம்பூரில் (Berhampore) கி.பி. 1857-ஆம் ஆண்டு 19-ஆம் பிரிவு தேசிய காலாட்படை வீரர்கள் கலகம் செய்தனர். அதனால் அந்தப் பிரிவில் பணி புரிந்த வீரர்கள் அனைவரும் வேலை நீக்கம் செய்யப் பட வேண்டுமென உயர் அலுவலர் முடிவு செய்த னர். இதைப்பற்றி அறிந்த 34-ஆம் பிரிவு தேசிய காலாட்படையின் வீரர்கள் கொதிப்படைந்தனர். அப்பிரிவில் பணியாற்றிய ஆழ்ந்த சமயப்பற்றுள்ள மங்கள் பாண்டே தன் கொதிப்பைச் செயல்முறைப் படுத்தத் திட்டமிட்டார். அதற்கேற்ப கி.பி. 1857-ஆம் ஆண்டு 34-ஆவது பிரிவு தேசிய காலாட்படையின் அன் றாட அணிவகுப்பு நடைபெற்றது. அப்பொழுது ஆங் கில இராணுவ அதிகாரி தண்டுத் தளபதி (Sergeant General) அக்சன் (Hughson) என்பவரை மங்கள் பாண்டே தம் துப்பாக்கியால் சுட்டார். அதன் பின் னர் மற்றொரு அலுவலராகிய சர் சான் பென்னட்டு எர்சி (Sir John Bennet Hearsey) என்பவரையும் சுட்டார். உடனே மங்கள் பாண்டேயும் அவருக்கு உதவியாக இருந்த இராணுவ வீரர் ஈசுவர் பாண்டே யும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொலை முயற்சிக் குற்றம் சாட்டப்பட்டு கி.பி. 1857 – ஆம் ஆண்டு தூக்கில் இடப்பட்டனர். மேலும், 34-ஆம் பிரிவு காலாட்படையில் இருந்த அனைத்து வீரர் களும் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். அவர்கள் வட இந்தியாவின் பல பகுதிகளில் பசு, பன்றிக் கொழுப்பு வதந்தியையும் ஆங்கிலேயரின் அட்டூழியங் களையும் மக்களிடையே விரிவாக எடுத்தோதினர். அதன் விளைவாக கி.பி. 1857–58-ஆம் ஆண்டுச் சிப் பாய்க் கலகம் எனப்பட்ட முதல் சுதந்திரப்போர் நடைபெற்றது. ஆட்சியில் மாறுதல் ஏற்பட்டது. அந்த மாறுதலுக்கும் இந்திய சுதந்திர இயக்கத்திற் கும் வித்திட்டவர் மங்கள் பாண்டே ஆவார்.

நா.ப.

**துணை நூல்கள்:**


Majumdar, R.C., British Paramountcy and Indian Renaissance, Part I, Bombay, 1970.

Savarkar, F.D., The Indian War of Independence, Bombay, 1947.

**மங்களூர்** தென்மேற்கு இந்தியாவில் கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த ஒரு துறைமுகப்பட்டினம். அரபிக் கடலோரத்தில் தென் கன்னட மாவட்டத்தில் நேத்திராவதி ஆற்றின் வடகரையில் உள்ள மங்களூர் (Mangalore) வரலாற்றில் மங்களபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ கி.பி.600-ஆம் ஆண்டு முதல் 1300-ஆம் ஆண்டு வரை, கடலோரப் பகுதியை ஆண்டு வந்த அலுபர்கள் (Alupas) மங்களூரைத் தம் தலைநகராக்கியிருந்தனர். மங்களூருக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையே வாணிகத்தொடர்பு இருந்தது என்பதைப் பெரிபுளூசின் எரித்திரியப்பெருங்கடல்(Periplus of ErythraeanSea)மூலமும்,தாலமியின் நிலநூல் (Ptolemy's Geography) வழியாகவும் அறியலாம். தென்னிந்தியாவில் விசயநகர ஆட்சி ஏற்பட்டிருந்தபோது (கி.பி.1336 - 1565), 'மங்களூரு இராச்சியம்' என்னும் ஒரு மாநிலத்தின் தலைநகராக இது விளங்கியது. விசயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு கேளடி நாயக்கர்கள் (Keladi Nayaks) ஆட்சி மங்களூரில் நிலவியது பின்னர் இங்கு ஏற்பட்ட ஐதர்அலி, திப்புசுல்தான் ஆட்சிக் காலங்களில் இது புகழ்பெற்ற துறைமுகமாக விளங்கியது. திப்புசுல்தானுக்கும், ஆங்கிலேயருக்குமிடையே நடந்த இரண்டாம் மைசூர்ப் போரில், மங்களூரைத் தம் வசப்படுத்த ஆங்கிலேயர் செய்த முயற்சியை, முன்னவர் முறியடித்து அவர்களை, கி.பி. 1784 - இல் மங்களூர் உடன்படிக்கைக்கு இணங்குமாறு செய்தார். ஆனால், பிறகு கி.பி. 1799-இல் நான்காம் மைசூர்ப் போரில் திப்புசுல்தான் இறந்தபின், மங்களூர் உட்பட்ட தென் கன்னடம் முழுவதும் ஆங்கிலேயருக்கு உரித்தாயிற்று. இந்தியா சுதந்திரம் அடைந்தபின், தென்கன்னட மாவட்டத்தின் (இக்கால தட்சிண கன்னடம்) தலை நகராக மங்களூர் விளங்குகிறது.

மங்களூரில் பல தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளன. இங்குச் செய்யப்படும் ஓடுகள் பல இடங்களுக்கும் ஏற்றுமதி ஆகின்றன. இங்கு வாணிகம் செய்யப்படும் பொருட்களில் சிறப்பாக, முந்திரி, நறுமணப் பொருட்கள், அரிசி, காப்பிக்கொட்டை, கொட்டைப் பாக்கு, மீன், மீன்உரம் முதலியன குறிப்பிடத் தக்கவை. மங்களூர் வேதிமத் தொழிற்சாலை சிறப்புப் பெற்றுள்ளது. ஓர் எண்ணெய்ச் சுத்திகரிப்புஆலை இங்கு நிறுவப்பட இருக்கிறது. துறைமுகத்தின் வளர்ச்சி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இயற்கைக் காட்சிகள் நிறைந்த இவ்வழகிய நகரத்திற்கு அருகில் கேரள மாநிலத்தின் எல்லை அமைந்துள்ளது. சென்னையிலிருந்து கோயம்புத்தூர் வழியாகச் செல்லும் தென்னக இருப்புப்பாதை மங்களூரில் முடிவடைகிறது. இங்குள்ள கோயில்களில் சிறப்பாக, மங்களா தேவி ஆலயம், மிகப் பழமை வாய்ந்தது. மங்களூரில் கத்திரி என்னுமிடத்தில்உள்ள மஞ்சுநாதர் கோயிலுக்குப் பக்தர்கள் மிகுதியான அளவில் வந்து போகின்றனர். சக்கரபாணி கோயில்,சோமநாதேசுவர் கோயில், சரவு கணபதி ஆலயம் முதலிய கோயில்களும் இங்குள்ளன. இங்கு விளங்கும் அலாய்சியுசு (Aloysius) திருக்கோட்டத்தில் (Chapel) வியக்கத்தக்க ஓவியங்கள் உள்ளன. வெளிநாட்டுக் கிறித்தவ



சமயப் பரப்புக்குழுவினர் இங்குவரத் தொடங்கிய பிறகு, அச்சுத்தொழிலும் கல்வியும் பெருக்கமடைந்தன. பல கல்வி நிலையங்கள் இங்குள்ளன. பழைய கல்வி நிலையங்களில் புனித அலாய்சியுசு (St.Aloysius) கல்லூரி, புனித அக்கினீசுக் கல்லூரி (St. Agnes College), கத்தூரிபாய் மருத்துவக் கல்லூரி, மீன் பண்ணைக் கல்லூரி முதலானவை குறிப்பிடத் தக்கன. மங்களூர்ப் பல்கலைக்கழகம் கி.பி. 1980-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. அதில் 19 உயர் கல்வித்துறைகளும், 67 கல்லூரிகளும் அடங்கும்.

பி.செ. & தெ.பா.

*மங்யைர்க்கரசியார்:* இவர் மணிமுடிச் சோழனுக்கு மகளும், பாண்டியனுக்கு மனைவியுமாவார் என்பதை 'மண்ணெலாம் புகழும் மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன் தன் மகளாம் பண்ணின்நேர் மொழியார் பாண்டிமாதேவி' என்றும் 'செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்... பந்தணை விரலாள் பாண்டிமாதேவி' என்றும் வரும் ஞானசம்பந்தர் வாக்குகளால் அறியலாம். இவருக்கு மானி என்னும் பெயரும் உண்டு. மணிமுடிச் சோழன் பழையாறையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் என்றும், நின்ற சீர் நெடுமாறன் பாண்டிய நாட்டை ஆண்ட கூன்பாண்டியன் என்றும் கருதுவர்.

கூன்பாண்டியனை மணந்து பாண்டிய நாடு சென்ற இவர்,அரசன் ஆதரவில் சமண சமயம் செல்வாக்குப் பெற்றிருப்பதை அறிந்து மனம் வருந்தினார். பாண்டிய மன்னனின் அமைச்சரான குலச்சிறையார் சைவராக இருப்பது கண்டு ஆறுதலடைந்து அவரின் துணையோடு அரசனைச் சைவனாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். மதுரைக் கோயிலைக் குலச்சிறையாரைக் கொண்டு திறக்கச் செய்து, தாம் நாள் தோறும்பூமாலை தொடுத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று இறைவனுக்குச் சாத்தி வழிபாடு செய்தார்.

திருஞான சம்பந்தர் திருமறைக்காட்டில் (வேதாரணியம்) தங்கியிருப்பதை அறிந்த மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்தார்; தூது அனுப்பினார். ஞானசம்பந்தர் அரசி, அமைச்சர் ஆகியோர் வேண்டுகோளை ஏற்று மதுரை வந்தார்.

மங்கையர்க்கரசியார் விருப்பப்படி குலச்சிறையார் ஞான சம்பந்தரை எதிர்கொண்டு அழைத்து வேண்டுவன செய்தார். அரசியாரும் இறைவனை வழிபடச் செல்வதாகக்கூறி அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு, தம்முடன் கூடிய கூட்டத்தாருடன் ஆலலாய்க் கோயிலை அடைந்தார். ஞானசம்பந்தரை வணங்கி வரவேற்று நாட்டு நிலையை விரிவாக விளக்கினார்.

செய்தியறிந்த சமணர்கள் சீற்றமடைந்து, சம்பந்தர் தம் உடன் கூட்டத்தாரொடு தங்கியிருந்த மடத்திற்குத் தீயிட்டனர். சமணர்களின் சூழ்ச்சியறிந்த ஞான சம்பந்தர், சமணர்கள் வைத்த தீயையவே சென்று பாண்டியனைப் பற்றுக என்று கூறினார்.

அரசன் வெப்பு நோயின் கொடுமையால் துடித்தான். மருத்துவர், மந்திரம் செய்வோர், சமணர்கள் ஆகிய பலர் முயன்றும் மன்னனின் நோய்தீரவில்லை. அரசியும், அமைச்சரும் இதுவே தக்க வேளையென்று உணர்ந்து, சமணர்கள் சம்பந்தருக்குச் செய்த தீங்கு மன்னனைப் பாதித்துவிட்டதாகவும், ஞானசம்பந்தரே நேரில் வந்தால்தான் நோய் தீரும் என்றும் கூறினர். சமணர்களால் போக்க முடியாத அந்நோயை யார் போக்கினாலும் அவரை ஆதரிப்பதாக அரசன் சொல்ல, மங்கையர்க்கரசியார், ஞானசம்பந்தரை முத்துப் பல்லக்கில் வீதி வலமாக அழைத்து வந்தார். ஞானசம்பந்தரின் பெயரைக் கேட்ட அளவிலேயே தன் நோய் சற்றுத் தணிந்ததாக உணர்ந்த அரசன், அவரைப் பொன்னாசனத்தில் அமரச் செய்ய, சம்பந்தர் 'மந்திரமாவது நீறு' என்னும் பதிகத்தைப் பாடித் திருநீற்றைப் பாண்டியன் உடலில் தடவ அவன் நோய் நீங்கியது என்பர்.

ஞானசம்பந்தர் அருளால் பாண்டியனின் கூன் நிமிர்ந்து பாண்டி நாட்டில் சமணம் ஒடுக்கப்பட்டுச் சைவம் மலர மங்கையர்க்கரசியார் எடுத்த முயற்சிகள் சிறப்பிற்குரிய வரலாறுகளாகும். ந.பி.

**துணை நூல்:**

**நீலாம்பிகை அம்மையார்,** முப்பெண்மணிகள் வரலாறு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1956.

*மங்கோபார்க்கு:* இவர் இசுகாட்லாந்தைச் (Scotland) சேர்ந்த நாடாய்பவர். மங்கோபார்க்கு (Mungopark) இசுகாட்லாந்தில் உள்ள செல்கிரிக்கு (Selkirk) என்னும் ஊருக்கருகில் கி.பி.1771-ஆம் ஆண்டில் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே இவருக்கு இயற்கைப் பொருட்களை ஆய்வு செய்யும் நாட்டம் வளர்ந்திருந்தது. எடின்பர்க்குப் பல்கலைக் கழகத்தில் இவர் கி.பி.1789-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1791-ஆம் ஆண்டு வரை மருத்துவக்கல்வி பயின்றார். பிறகு இலண்டனுக்குச் சென்று இயற்கோட்பாட்டாளர் (Naturalist) சர் சோசபு பேங்சு (Sir Joseph Banks) என்பாருடன் தொடர்பு கொண்டார். ஒரு கப்பலில் துணை மருத்துவராக இவர் பணிக்கு


அமர்த்தப் பெற்றார். அக்கப்பலில் இவர் சுமத்திராத் தீவுக்குச் சென்று வந்த பின், நாடாய்வு செய்யும் நாட்டம் இவரிடம் மிகுந்தது. அக்காலத்தில் ஆப்பிரிக்காவின் உள்பகுதிகளை ஆராய 'ஆப்பிரிக்கக் கழகம்' ஒன்று இங்கிலாந்தில் அமைக்கப்பட்டிருந்தது. சர் சோசபு பேங்சின் முயற்சியால் நிறுவப்பட்டிருந்த அக்கழகத்தில் மங்கோபார்க்கும் சேர்ந்து கொண்டார். இவர், கி.பி.1795 - இல் ஆப்பிரிக்காவில் நைசர் ஆற்றங்கரையை ஆராய்ச்சி செய்வதற்காகப் புறப்பட்டார். அந்த ஆற்றுப் பகுதியை ஆய்வு செய்கையில் இவருக்குப் பல இடையூறுகளும் துன்பங்களும் ஏற்பட்டன. அங்குக் குடியேறியிருந்த அரேபியர்கள் இவருக்குப் பல இன்னல்களைச் செய்தனர். அங்கு ஆட்சி புரிந்து கொண்டிருந்த எமிர் அலி என்னும் மன்னன் இவரைச் சிறைப்படுத்தினான். மலேரியாக் காய்ச்சலினால் மங்கோ மூன்று மாதங்கள் துயருற்றார். குடிக்கநீர் கிடைக்காமல், ஆடு மாடுகள் நீரருந்தும் தொட்டித் தண்ணீரை இவர் அருந்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. அனைத்துஇடையூறுகளையும் பொருட்படுத்தாமல் இவர் தம் ஆய்வுப் பணியை நடத்தினார். அங்கு வழக்கிலிருந்த மண்டிங்கோ மொழியை இவர் ஐந்து மாதங்களில் கற்றுக் கொண்டார். நைசர் ஆற்றோரமாகக் குதிரையின் மீது 128 கி.மீ. பயணம் செய்து அப்பகுதியை ஆய்வு செய்தார். இங்கிலாந்துக்கு கி.பி. 1797 -இல் திரும்பிய பின் இவர், கி.பி.1799-இல் 'ஆப்பிரிக்காவின் உட்பகுதிப் பயணங்கள்' (Travels in the Interior of Africa) என்னும் நூலை வெளியிட்டார். ஒரே ஆண்டில் அந்நூலின் மூன்று பதிப்புகள் வெளிவந்தன. மக்கள் அதைப் படித்துவிட்டு மங்கோபார்க்கை மிகவும் புகழ்ந்தனர். மறுபடியும் இவர் கி.பி.1805-இல் தம் ஆய்வைத் தொடர்வதற்காக, அரசுப்பணியை மேற்கொண்டு, 37- விருப்பார்வத் தொண்டர்களுடன் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். ஆய்வுப்பணி நடந்து கொண்டிருக்கையில் நைசீரியாவில் பசா என்னுமிடத்தினருகில், அந்நாட்டு மக்களால் கி.பி.1806- இல் மங்கோபார்க்கு கொல்லப்பட்டார். இவருடன் சென்ற பலரும் உயிரிழந்தனர். பல இன்னல்களைப் பெற்றும் விடாமுயற்சியுடன் தம் பணியைச் செய்து, தம் உயிரையும் கொடுத்து உலகுக்கு உதவிய புகழ் இவருக்கு உண்டு. தெ.பா.

**மங்கோலியக் குடியரசு:** ஆசியாக் கண்டத்தில் சீனாவுக்கும் உருசியாவுக்குமிடையே மங்கோலிய மக்கள் குடியரசு என்னும் நாடு உள்ளது. பொதுவுடைமை நாடாகிய இக்குடியரசின் தலைநகரம் உலன் பாட்டர் (Ulan Bator) என்பதாகும். இந்த நாட்டின் மொத்த நிலப்பரப்பு 15,66,000 ச.கி. மீட்டர். மக்கள் தொகை 20 இலட்சம். இந்நாட்டில் 18 சிறிய மாநிலங்கள் உள்ளன. அரசாங்க மொழி மங்கோலிய மொழியாகும்.

**நிலவியல்:** மங்கோலிய மக்கள் குடியரசின் பெரும்பாலான நிலப்பகுதி கடல் மட்டத்திலிருந்து 520 மீட்டருக்கு மேல் உள்ளது. மேற்கேயுள்ள அல்டாய் (Altai) மலைகள் 4300 மீட்டர் உயரம் வரை உள்ளன. தென்கிழக்கே கோபிப் பாலைவனம் உள்ளது. இது வறண்ட பரந்த பகுதியாகும். இந்நாட்டின் வெப்பத்தில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. குளிர் காலத்தில் – 49° செல்சியசு வரை குறைகிறது; கோடையில் 36° செல்சியசு வரை உயர்கிறது. பனி வீழ்ச்சியும் மழையும் மிகுதியாக இருப்பதில்லை. சூலையிலும், ஆகசுட்டிலும் மழை மிகுதியாகப் பெய்கின்றது. மங்கோலியாவில் சில நேரங்களில் கடுமையான நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன.

**மக்கள்:** இந்நாட்டில் வாழ்கின்ற மக்களில் பெரும் பகுதியினர் மங்கோலியர். மற்றவர்கள் சீனரும் உருசியரும் ஆவர். இலாமா புத்த சமயம் (Lamaist Buddhism) நாட்டின் முக்கிய சமயமாகும்.

**பொருளாதாரம்:** மங்கோலிய மக்கள் குடியரசு பொதுவுடைமை நாடாதலால் நாட்டின் எல்லாத் தொழிற் சாலைகளையும் பண்ணைகளையும் அரசாங்கமே நடத்துகின்றது. கால்நடைப் பண்ணைகளும் கூட்டுறவு முறையிலேயே நடத்தப்படுகின்றன. ஒட்டகங்கள், மாடுகள், ஆடுகள், குதிரைகள் முதலானவை இந்நாட்டில் மிகுதியாக உள்ளன. செம்மறி ஆடுகள்




மங்கோலியக் குடியரசு

மட்டும் ஒரு கோடிக்கு மேல் உள்ளன எனக்கூறப்படுகிறது. நாட்டின் மொத்த ஏற்றுமதியில் கால்நடைகளின் ஏற்றுமதி 35 விழுக்காடும் மயிர் ஏற்றுமதி 40 விழுக்காடும் ஆகும். மேலும், பால் பண்ணைப் பொருட்கள், மென் மயிர் (Fur), தோல் வகைகள், இறைச்சி வகைகள் ஆகியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. குறிப்பிடத்தக்க பெருந்தொழில்கள் இந்நாட்டில் இல்லை. கட்டடங்களுக்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மட்டுமே உள்ளன. உருசியாவுடன்தான் மிகுதியான வாணிகம் நடைபெறுகிறது. நிலக்கரி, தாமிரம், இரும்பு, தங்கம், மண்ணெண்ணெய் ஆகிய இயற்கைச் செல்வங்கள் நிறைந்துள்ளனவென்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவை இன்னும் நிலத்தடியிலிருந்து எடுக்கப்படவில்லை.

**வரலாறு**: மங்கோலியருள் பல பிரிவினர் இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் செங்கிசுகானும், குப்ளாய்கானும் இணைத்து ஓர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். அவர்கள் அமைத்த பேரரசு கொரியாவிலிருந்து ஐரோப்பா வரையிலும் மங்கோலியாவிலிருந்து திபெத்து வரையிலும் பரவியிருந்தது. அவர்கள் அமைத்த பேரரசு கி.பி. 1300 -ஆம் ஆண்டுக்குப்பின் அழிந்தது. மீண்டும் மங்கோலிய அரசர்கள், மங்கோலியர்கள் அனைவரையும் இணைத்து கி.பி. 1500 - ஆம் ஆண்டிற்குப்பின் அவர்களை இலாமா புத்தசமயத்திற்கு மாற்றினார்கள். மஞ்சூரியாவைச் சேர்ந்த மஞ்சு அரசர்கள் கி.பி.1600 -ஆம் ஆண்டிற்குப் பின் மங்கோலியாவை வென்றார்கள். அதன் பின்னர்ப் பல ஆண்டுகள் கழித்து 1911 -ஆம் ஆண்டு மங்கோலியர்கள் சீனர்களைத் தங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றினார்கள். அதே ஆண்டு மங்கோலியர்கள் 'வாழும் புத்த பெருமான்' (Living Buddha) என்ற சமய குருவைத் தங்கள் அரசராக நியமித்தார்கள். அந்த நேரத்தில் உருசியாவும் மங்கோலியர்களுக்கு உதவி செய்தது. உருசியாவும் சீனாவும் 1913 – ஆம் ஆண்டு மங்கோலியாவைத் தன்னாட்சி பெற்று இயங்கும் நாடாக அனுமதித்தன. 'வாழும் புத்த பெருமான்' 1920 - ஆம் ஆண்டு காலமானார். உருசியாவின் உதவியுடன் அதே ஆண்டு மங்கோலிய மக்கள் குடியரசு, பொதுவுடைமை நாடாக மாறியது.

**அரசு**: இந்நாட்டில், மங்கோலிய மக்கள் புரட்சிக் கழகம் என்ற ஒரே கழகம்தான் உள்ளது. குரல் (Khural) என்பது தேசிய சட்டமன்றமாகும். அதன் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகள். அந்தக் குரல் என்ற தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்கள், ஏழுபேர் கொண்ட உயர்மட்டக் குழுவைத் (Presidium) தேர்ந்தெடுக்கின்றனர். அந்த உயர்மட்டக் குழுவின் தலைவரே அரசாங்கத்தின் தலைவராவார். உள்நாட்டு, அயல்நாட்டுக் கொள்கைகளை வகுப்பதும் நடைமுறைப்படுத்துவதும் அந்த உயர்மட்டக் குழுவேயாகும். குரல் உறுப்பினர்கள் அமைச்சர்களையும் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்கள் வெவ்வேறு துறைகளை நிருவாகம் செய்கின்றனர். நா.ப.


**மங்கோலிய மொழி**: மங்கோலியப்பழங்குடி மக்களால் பேசப்படுவது மங்கோலிய மொழி. இது பல உட்கிளை மொழிகளை உள்ளடக்கியது. அல்டாய்க்கு (Altaic) மொழிக்குடும்பத்தைச் சார்ந்த இம்மொழி, துருக்கி (Turkish), உசுபக்கு (Usbek) கசக்கு (Kazakh), மஞ்சு (Manchu), கோல்தி (Goldi), எவங்கி (Evenki) போன்ற பிற அல்டாய்க்கு மொழிகளுடன் மிகுந்த தொடர்புடையதாக உள்ளது. கொரியன் மொழியுடனும் இதற்குத் தொடர்பு உண்டென்பர். இம்மொழியை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். 1) மேற்கு மங்கோலியன் அல்லது ஒய்ரத்து (Oirat). இதில் முக்கியமாக கல்மைக்கு (Kalmyk) என்ற மொழி அடங்கும். 2) கிழக்கு மங்கோலியன். இதில் ஒர்தொசு (Ordos), சக்கர் (Chakhar), கர்ச்சின் (Kharchin), புரியத்து (Buryat), கல்கா (Khalkha) ஆகிய மொழிகள் அடங்கும்.

மங்கோலிய மொழியைப் பேசும் இனத்தினர் சீனர், சப்பானியர், தாய் மக்கள் மட்டுமன்றி 'மஞ்சள் இனம்' என்ற பிரிவைச் சார்ந்த பழங்குடியினரும் ஆவர். அவர்களது ஆதி இருப்பிடம், மத்திய ஆசியாவில் பாயும் ஓனன் (Onon) ஆற்றுக்கும் குருலென் (Kurulen) ஆற்றுக்கும் இடையே பைக்கால் ஏரிவரை பரந்து காணப்படுகிறது. அங்குப் புதான்சார் (Budantsar) பரம்பரையில் தோன்றி வீரச்செயல்கள் புரிந்து வந்த பழங்குடியினரே மங்கோலியர்களாவர். அவர்களது வரலாறு கி.பி. 1206 இல் முடிசூட்டிக் கொண்ட செங்கிசுகானது எழுச்சிக்குப் பின்னரே தெளிவாகத் தெரிகிறது. செங்கிசுகான் முடிசூட்டிக் கொண்டதும் ஆங்காங்கே சிதறி வாழ்ந்த மங்கோலியப் பழங்குடியினர் அனைவரையும் ஒன்று திரட்டி மங்கோலியப் பேரரசை நிறுவினான். அவனது பேரரசு கிழக்கே சப்பான் முதல் மேற்கே புடாபெசுட்டு (Budapest) வரை பரவியிருந்தது. அவன் ஆட்சிக்காலத்தில் மங்கோலிய மொழி பேச்சு மொழியாக மட்டுமே இருந்தமையால், துருக்கியர்களுள் ஒரு பிரிவினராகிய உகுர் (Uighur) என்பவர்களது மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டான். உகுர் மொழி எழுத்துகள் ஈரானியர்களுள் ஒரு பிரிவினராக இருந்த சொக்தியன் (Sogdians) மக்களுடையது. அது ஆதிகாலச் செமிட்டிக்கு எழுத்து முறை அதா

வது அராமிக்கு (Aramaic) முறையிலிருந்து உருவானது. செங்கிசுகான் ஆட்சிக்காலத்திலேயே மங்கோலிய மொழிக்கு உகுர் மொழி எழுத்துகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். மங்கோலியமொழி முதல் கல்வெட்டாக கி.பி. 1224/25-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கல்வெட்டே அமைந்துள்ளது. செங்கிசுகானுக்குப் பின்னர் அவனுடைய நான்கு பிள்ளைகளுக்காக மங்கோலியப் பேரரசு வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு எனப் பிரிக்கப்பட்டது. அவற்றுள் கிழக்கு மங்கோலியாவும் மேற்கு மங்கோலியாவும் கி.பி. 16, 17 - ஆம் நூற்றாண்டுகள் வரை செயற்பட்டன. அல்டன் கான்(Altan Khan) என்னும் அரசன் கி.பி. 1571-இல் சீனாவுடன் அமைதி ஒப்பந்தம் செய்ததோடு கி.பி. 1571 முதல் புத்த மதத்தைப்பரப்புவதில் தீவிரம் காட்டினான். பின்னர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை அப்பகுதி மஞ்சு அரசர்களிடம் இருந்தது. அதுபோன்று மேற்கு மங்கோலியாவும் படிப்படியாக வலுவிழந்தது. உள் மங்கோலியாவும் வெளி மங்கோலியாவும், 20-ஆம்நூற்றாண்டில் சீனாவின் ஓரங்கமாக மாறிய நிலையில் மஞ்சு அரசு வீழ்ச்சியுற்றது. அந்நிலையில் 1924-இல் உருசியர்களின் ஆதரவுடன் ‘மங்கோலிய மக்கள் குடியரசு’ என்னும் நாடு உதயமானது.

இன்று மங்கோலிய மொழியை ஏறத்தாழ முப்பத்தைந்து இலட்சத்திற்கும் மிகுதியானோர் பேசி வருகின்றனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் மங்கோலிய மக்கள் குடியரசினுள் வாழ்கின்றனர். ஏறத்தாழ 18 விழுக்காட்டினர் சீன மக்கள் குடியரசினைச் சார்ந்த உள் மங்கோலியாவிலும் இன்னும் சிலர் சிகியாங்கு (Sikiang), சிங்கை (Tsinghai), திபெத்து, மஞ்சூரியா, சைபீரியா போன்ற இடங்களிலும் வாழுகின்றனர். பைக்கால் ஏரியின் பக்கமுள்ள சோவியத்து ஒன்றியப் பகுதிகளில் வாழும் மங்கோலியர்கள் புரியத்து (Buryat) எனவும், வோல்கா ஆற்றங்கரையிலுள்ள மங்கோலியர்கள் கல்மைக்கு (Kalmyk) எனவும் கூறப்படுகின்றனர். அவர்கள் பேசும் மொழிகளும் அப்பெயர்களைக் கொண்டே சொல்லப்படுகின்றன. இவ்வாறு புரியத்து, கல்மைக்கு, ஒய்ரத்து, தகூர், மொங்கூர், மொகுல், கல்கா எனப் பல்வேறு மொழிகளாக வெவ்வேறு இடங்களில் வழங்கப்படினும், மங்கோலிய மக்கள் குடியரசு நாட்டில் பேசப்படும் கல்கா (Khalkha) மொழியையே மங்கோலிய மொழி எனக் குறிப்பிடுவர். இம்மொழியைப் பேசுவோராக ஏறத்தாழ 15 இலட்சம் மக்கள் உள்ளனர்.

செங்கிசுகான் காலத்திலிருந்து உகுர் எழுத்துகளைப் பயன்படுத்திய இம்மொழியினர் 1941-லிருந்து சிரிலிக்கு எழுத்துகளைப் பயன்படுத்தி வருகின்றனர். அகர வரிசையை மேலிருந்து கீழ்ப்புறமாக எழுது




கின்றனர். இம்மொழியின்கண் /a,e,i,o,u,ö,ü/ ஆகிய ஏழு உயிரெழுத்துகளும் /n,b,kh,gh.g, k,m,l,r,d,t,y,j, ch,s,sh,w,ai,oi/ ஆகிய 19 மெய்யெழுத்துகளும் பயன்படுகின்றன. /w/ என்ற எழுத்து பிறமொழிச் சொற்களில் மட்டுமே பயன்படுகிறது. எழுத்து மொழியில் இவ்வொலிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்கள் உள்ளன. ஒரு சொல்லின் முதலில், இடையில், கடையில் என வருகின்ற ஒலிகள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறு ஒலியெழுத்து முறையில் (Alphabetic System) 74 வடிவங்களும், அசை எழுத்து முறையில் (Sylla - bic System) 7 வடிவங்களும் ஆக 81 எழுத்து வடிவங்கள் இம்மொழியில் பயன்படுகின்றன. அவ்வெழுத்து வடிவங்களைக்கீழ்வரும் அட்டவணையில் தெளிவாகக் காணலாம்.

இம்மொழிச் சொற்களின் உச்சரிப்பு (Pronun- ciation) மிகவும் எளிமையானது. உயிரெழுத்துகளில் குறில் நெடில் வேறுபாடு தெளிவாக உள்ளது. எ-டு. தெர் (Der) 'தலையணை', தேர் (Deer) 'மேலே', தொசொ (Toso) 'வெண்ணெய்', தோசோ (Tooso) 'காசு', கன (Khana) 'சுவர்', கான(Khaana) 'எங்கே'. உயிர்ஒருமைப்பாடு (Vowel Harmony) இம்மொழியின் ஒரு பண்பு. ஒரு தனிச் சொல்லில் பின்னுயிர்கள் அ,ஒ,உ மட்டுமோ முன்னுயிர்கள் e,o,u, மட்டுமோ தாம் வரும். மேலும், ஒலி அழுத்தம் (Accent) ஒரு சொல்லை உச்சரிக்கும் பொழுது தொடக்க நிலையில் மிக இன்றியமையாததாக இருக்கின்றது.

இது ஓர் ஒட்டுநிலை (Agglutinative) மொழி. வினைச்சொற்களுடன் ஏறத்தாழ 30 வகையான ஆக்க உருபுகள் இணைந்து இலக்கணக் கூறுகளை உருவாக்குகின்றன. பெயர்ச் சொற்களுடன் ஏழு வகையான வேற்றுமைப் புணர்ச்சி ஏற்படுகிறது. ஒரே வகையான வேற்றுமை உருபுகளே எல்லா வகைப் பெயர்ச்சொற்களுடனும் இணைக்கப்பட்டாலும், பெயர்ச் சொல்லில் உள்ள உயிர் எழுத்துகளுக்கேற்ப வேற்றுமை உருபுகளில் உயிர் ஒருமைப்பாடு ஏற்படும். இடவேற்றுமைக்கும் குறிவேற்றுமைக்கும் ஒரே உருபே உள்ளது. (எ - டு).

| | |
|---|---|
| கர் (gar) | — 'கை' |
| கர்ன் (gar - iin) | — 'கையின்' |
| கர்த (gar - ta) | — 'கையில், கைக்கு' |
| கரிக் (gar - iig) | — 'கையை' |
| கராசு (gar - aas) | — 'கையிலிருந்து' |
| கரார் (gar-aar) | — 'கையால்' |
| கர்தய் (gar-tay) | — 'கையோடு' |




MONGOLIAN ALPHABET: ¹USED ONLY IN FIRST SYLLABLE; ²USED BEFORE VOWELS; ³USED BEFORE CONSONANTS; ⁴USED ONLY IN FOREIGN WORDS

இம்மொழியில் இலக்கணப் பால்பகுப்பு இல்லை. ஆனால், எண் வேறுபாடு மட்டும் உண்டு. (எ-டு).

| ஒருமை | பன்மை |
|---|---|
| பி (bi) 'நான்' | பித் (bid) 'நாங்கள்' |
| த (ta) 'நீங்கள்' | தத் (tad) 'நீங்கள்' |
| சி (ci) 'நீ' | பித (bida) 'நாம்' |
| தெர் (ter) 'அவன், அவள், அது' | தெத் (ted) 'அவர்கள், அவை' |
| சபி (shabi) 'மாணவன்' | சபிநர் (shabinar) 'மாணவர்கள்' |
| தெங்கே (tenge) 'கடவுள்' | தெங்கெநெர் (tengener) 'கடவுளர்' |

திராவிட மொழிகளைப் போன்று வேற்றுமை உருபுகள் பன்மை காட்டும் ஒட்டினை அடுத்தே இம்மொழியில் இடம் பெறுகின்றன. (எ-டு). அக்கநர்தன் (akka-nar-ta-n) 'அவனுடைய அண்ணன்களுக்கு'. இங்கு அக்க 'அண்ணன்' என்ற பொருளையும், நர் பன்மையையும், த நான்காம் வேற்றுமையினையும், -ன் உடைமைப்பொருளினையும் குறித்து நிற்கின்றன.

மேலும், 'மேல்', 'கீழ்' போன்ற பொருள்படும் உருபுச்சொற்கள் பின்னுருபாக (Preposition) வாராமல் முன்னுருபாக (Post - position) மட்டுமே வரும். (எ - டு).

ஊல தேர் (uula deer) 'மலை மேல்'
(ஊல - மலை, தேர் - மேல்)

உசன் தொதொரொ (usan dotoro) 'தண்ணீரின் உள்'
(உசன் -தண்ணீர், தொதொரொ - உள்ளே)

வினைமுற்றுச் சொற்கள் காலம் காட்டும். ஆனால், எண், பால் காட்ட எவ்வித விகுதிகளையும் பெறுவதில்லை. ஏவல் வினைமுற்றில் முன்னிலைப் பன்மை காட்டுவதற்கு விகுதி உள்ளது. அது போன்று செயவென் எச்சங்காட்டவும் அக என்ற விகுதி இருக்கிறது. (எ-டு).

யப் (yab) 'போ'

யபாரை (yab - aarai) 'போங்கள்'

யபக (yab - aga) 'போக'

பி யபன (bi-yab - ana) 'நான்போவேன்/ போகிறேன்'

பி யப்லே (bi-yab-lee) 'நான் போயிருக்கிறேன்'

பி யப்பே (bi - yab - bee) 'நான் போயிருந்தேன்'

பியப்ப (bi-yab - ba) 'நான் போனேன்'

இம்மொழியின் வாக்கிய அமைப்பு திராவிட மொழிகளிலுள்ளது போன்று, எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்றே அமைந்திருக்கிறது. (எ - டு).

1. ஆவ நமைக் சர்கூலித் யவூலவ
(aava) (namaig) (sarguulid) (yavuulava)
அப்பா என்னைப் பள்ளிக்கு அனுப்பினார்

2. சி யவவல் பி கனிலச்சு யவயீ
(ci) (yavavwal) (bi) (hanilaj) (Yawajii)
'நீ' 'போனால்' 'நான்' '(உன்) உடன்' 'போவேன்'.

இரா.பா.

**துணை நூல்:**

**அகத்தியலிங்கம், ச.,** உலகமொழிகள் (மூன்றாம் பகுதி), சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர், 1972.

**மங்கோலியர்:** மத்திய ஆசியாவின் வடபகுதியில் நாடோடிகளாக மங்கோலியர் இருந்தனர். பல நூற்றாண்டுகளாக அவர்கள் வெவ்வேறு பிரிவினராகப் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். செங்கிசுகானும் மற்ற தலைவர்களும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மங்கோலியர் அனைவரையும் ஒன்றாக இணைத்தனர். அவர்கள் ஆசியாவின் பெரும் பகுதிகளையும் கிழக்கு ஐரோப்பாவையும் வென்றனர். மங்கோலியரின் ஆட்சி கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் வீழ்ச்சியடையத் தொடங்கி கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக்குள் முழுமையாக மறைந்தது.

**செங்கிசுகான்:** மங்கோலியர் சிறந்த குதிரை வீரர்கள். வேட்டையாடுவதிலும், கால்நடைகளை மேய்ப்பதிலும் வல்லவர்கள். பைக்கால் ஏரிக்குத் (Lake Baikal) தெற்கே குளிர்மிகுந்த மலைப்பகுதிகளில் அவர்கள் பெரும்பாலும் வாழ்ந்தனர். இம் மங்கோலியர் அனைவரையும் அவர்களின் தலைவர் செங்கிசுகான் (கி.பி.1167–1227) ஒன்றாக இணைத்தார். முதலில் அவர்களில் தாடார் (Tatar) பிரிவினரைச் செங்கிசுகான் வென்றார். பின்னர் கி.பி. 1206-ஆம் ஆண்டு மங்கோலியாவையும் வென்றார். அதன் பின்னர்ச் சீனாவை ஆட்சி செய்து வந்த சின் மரபு அரசரைத் தோற்கடித்தார். பீகிங்கு நகரத்தை கி.பி. 1214-ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்டார். அதை யடுத்துச் சீனா முழுவதையும் வென்றார். சீனாவுக்கு மேற்கேயுள்ள துருக்கிசுத்தான், பாரசீகம், சோவியத்து உருசியாவிலுள்ள கீவு (Kiev) அரசு முதலானவற்றையும் கி.பி. 1219 - ஆம் ஆண்டு அவர் வென்றார். அவருடைய பேரரசு ஆமூர் ஆறு, மஞ்சள் கடல் பகுதிகளிலிருந்து பாரசீக வளைகுடா, கருங்கடல் வரை பரவியிருந்தது.

செங்கிசுகானின் மகன் ஒக்டாய் கான் (Ogdai Khan), சார்சியா (Georgia), ஆர்மேனியா, பல்கேரியா, அங்கேரி (Hungary), போலந்து முதலான நாடுகளையும் உருசியாவின் பெரும் பகுதியையும் வென்றார். ஒக்டாய் கானின் மறைவிற்குப் பின்னர் ஐரோப்பாவில் மங்கோலியரின் ஆதிக்கம் மறைந்தது. செங்கிசுகானின் பேரன் உலாகு (Hulagu) கி.பி. 1256 – ஆம் ஆண்டு பாக்தாது நகரத்திலிருந்த கலிபாவின் ஆட்சியை அழித்துவிட்டு அந்நகர மக்களைக் கொன்று குவித்தார். மெசபடோமியா, சிரியா போன்ற பகுதிகளில் தம் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். அவர் நிறுவிய இல்கான்சு (Ilkhans) என்ற மரபு அரசர்கள் பாரசீகத்தை கி.பி. 1353 - ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர்.

**குப்ளாய் கான்:** குப்ளாய் கான் (கி.பி.1216-94) உலாகுவின் உடன்பிறந்தார் ஆவார். அவர் கி.பி.1260 ஆம் ஆண்டு அரசரானார். அவர் சீனா முழுவதையும் வென்றார்; யுவான் (Yuan) அல்லது மங்கோலிய



மங்கோலியர்

மரபை நிறுவினார். அம்மரபு அரசர்கள் கி.பி. 1368 -ஆம் ஆண்டு வரை சீனாவை ஆட்சி செய்தனர். அவர் காலத்தில்தான் மங்கோலிய அரசர்களும் அவர்களின் குடிமக்களும் புத்த சமயத்தைத் தழுவினர். குப்ளாய் கானிடம் பணிபுரிந்த அமைச்சர்கள், படைத் தலைவர்கள், ஆளுநர்கள், தூதர்கள், மருத்துவ வல்லுநர்கள், வானியல் வல்லுநர்கள் போன்றவர்கள் உலகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெனிசு நகரத்திலிருந்து வந்த வாணிகர் மார்க்கோ போலோ குப்ளாய்கானின் பேரரசில் பல ஆண்டுகள் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். குப்ளாய்கானுக்குப் பின்னர் அவருடைய பேரரசு பிளவுபட்டது. தைமூர் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் ஆசியாவின் பலபகுதிகளாகிய துருக்கிசுதானம், பாரசீகம்,ஆப்கானிசுதானம், வடமேற்கு இந்தியா, மெசபடோமியா, ஆசியா மைனர் முதலான பகுதிகளை வென்றார். இந்தத் தைமூர், செங்கிசுகான் ஆகியவர்களுடைய வழிவந்தவர்கள்தாம் மொகலாயப் பேரரசர்கள். மங்கோலியர் வழிவந்த பாபர் இந்தியாவில் மொகலாயர் ஆட்சியை(கி.பி.1526-இல்) நிறுவினார்.

இப்போது மங்கோலியர் கிழக்கு மங்கோலியர், மேற்கு மங்கோலியர், புரியத்துகள் என மூன்று பெரும் பிரிவுகளாக உள்ளனர். கிழக்கு மங்கோலியர் இன்றைய மங்கோலியாவிலும் திபெத்துப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மேற்கு மங்கோலியர் மங்கோலியாவிலும் சைபீரியாவிலும் வாழ்கின்றனர். மற்றொரு பிரிவினராகிய புரியத்துகள் (Buriats) பைக்கால் ஏரிப்பகுதிகளிலும் சைபீரியாப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மங்கோலியர் புத்த சமயம், இசுலாமிய சமயம், சாமா (Shamnism) சமயம் ஆகியவற்றைப் பின்பற்றுகின்றனர். நா.ப.

**மச்சபுராணம்**: வடமொழிப் புராணங்கள் மகா புராணங்கள் என்றும், உபபுராணங்கள் என்றும் இரு வகைப்படும். மகாபுராணங்கள் அனைத்தையும் இயற்றியவர் வேதவியாசர். உபபுராணங்களை இயற்றியவர் பலர். புராணங்கள் மச்சம் முதலாகப் பிரமாண்டம் ஈறாகவுள்ள பதினெட்டு என்பதைப் பிங்கலந்தையாலறியலாம். அவற்றுள் சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடியம், மச்சம் மார்க்கண்டம், பிரமாண்டம் என்னும் பத்தும் சைவ புராணங்களாய்ச் சைவர்களாற் பயிலப்பட்டு வருகின்றன. இப்புராணங்களைச் சாத்துவித, புராணம், இராசத புராணம், தாமத புராணம் என மூன்று வகையாகப் பிரிப்பர். மச்ச புராணம் தாமத புராணம் என்னும் வகையுள் வைத்து எண்ணப்படுகிறது.

மச்ச புராணம் வடமொழியில் மொத்தம் பதினான்காயிரம் செய்யுட்கள் கொண்டது. வேதவியாசர் இதை இரண்டு பகுதிகளாகப் பாடியிருக்கிறார். பூர்வ காண்டம் என்ற முதற்பகுதியில் நூற்றுப் பதினான்கு அத்தியாயங்களும், இரண்டாம் பகுதியான உத்தர காண்டத்தில் ஐம்பத்தெட்டு அத்தியாயங்களும் ஆக மொத்தம் நூற்றெழுபத்திரண்டு அத்தியாயங்கள் உள்ளன. இதனை வடமலையப்பப் பிள்ளை என்பவர் கி.பி.1706–1707–இல் தமிழில் மொழிபெயர்த்துச் செய்யுள் வடிவில் பாடியுள்ளார். அவர் நாயக்க மன்னர்களுக்குப் பேராளராகத் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்தவர். தமிழ் நூலாகிய மச்ச புராணம் முதனூல்போலவே பூர்வகாண்டம், உத்தர காண்டம் என இரு பெரும் பிரிவுகளையும் முறையே 114,58 அத்தியாயங்களையுமுடையது. புராணத்தின் தொடக்கத்தில் பாயிரம், நைமிசாரணியச் சிறப்பு, அநுக்கிரக மணியென வரும் மூன்றும் தமிழ் நூலாசிரியரே செய்தவை. செய்யுட்கள் இனிய ஓசையுடையன; கற்பனையும் பொருட்செறிவும் உடையன.

இப்புராணத்தில் காசிபர், சூரியன் முதலியோர் மரபும்; வசுருத்திரர், சந்திரன், சோமவமிசம், யயாதிபுத்திரர், நாரசிங்கர், வயிரவர், தாரகாசுரன், குமாரசுவாமி முதலியோர் உற்பத்தியும்; மதனத் துவாதசி, ஆதித்த சயனம், கிருட்டிணாட்டமி, வீமத் துவாதசி, கலியாண சத்தமி முதலிய சத்தமி பேதங்கள், சிவசதுர்த்தசி, சங்கராந்தி, விபூதித் துவாதசி, சட்டி முதலிய விரத நியமங்களும், சிரார்த்த வகைகளும் அவற்றைப் பின்பற்றும் முறையும்; தெய்வயானை, யயாதி இரணியகசிபு, பிரகலாதன், திரிபுரத்தசுரர், தாரகன் முதலியோருடைய பூரணசரிதமும், போசன், பவுரவன், அக்கினி முதலியோர் வமிசவரலாறும்; நவக்கிரகங்கட்குரிய விரத நியமமும்; தீர்த்த சிரார்த்தம், சந்திர சூரிய கிரகண தானம், தீர்த்த யாத்திரை, சாந்தி கிரகயாகங்களும் முதலியவற்றிற்குரிய விதிகளும்; மேரு, இமயம், பாரத ஆண்டு, முதலியவற்றின் வருணனைகளும்; பரமேசுவர தோத்திரம் முதலிய தோத்திரங்களும், பிற புராணங்களில் வரும் கதைகள் சிலவற்றிற்கான காரணங்கள் பற்றிய விவரங்களும் சொல்லப்பட்டுள்ளன. எம்.சீ.

**மச்சமுனி**: பதினெண் சித்தர்களுள் ஒருவர் எனக் குறிக்கப் பெறும் இவர் மச்சர், மச்சேந்திரர், மச்சநாதர், மச்சமுனி என்றும் வழங்கப் பெறுவார். இவரைப் பதினெண் சித்தர்களுள் ஒருவராகக் கொள்ளாதவரும் உளர். இவரது வாழ்க்கை வரலாறு தெளிவாகத் தெரியாத நிலையில் போகரின் ஏழாயிரம் தரும் சில செய்திகள் பயனுடையனவாக இருக்கின்றன.

இவர் ஆடித்திங்களில் உரோகிணி நாளில் பிறந்தார். இவர் மச்ச வடிவுடனும் முகம் மட்டிலும் மனித வடிவுடனும் அமைந்து காலாங்கி மலையோரம் உள்ள சுனையில் தவமிருந்தார். இவர் கல்லுடைக்கும் சாதியினைச் சார்ந்தவர். முன்னூறு ஆண்டுகள் இறைவனைத் துதி செய்து இவ்வையகத்தில் வாழ்ந்து, காயகற்பம் கொண்டு, சமாதி செல்ல வேண்டும் என்ற பெரு விருப்பில் தீவிரமாக மூன்று ஆண்டுகள் சமாதி பூண்டு இறைவனையே தியானம் செய்து காசினியை விட்டொழித்துக் கயிலையினை அடைந்தவர். மச்சமுனி உற்பவம் எனும் பகுதியில் புத்தியுள்ள சித்து, வராககிரி மலையில் சமாதியிருக்க எண்ணி வந்தார். சீடர்களின் உதவியுடன் குழிதோண்டி அவர்கட்கு உபதேசம் செய்து மனோன்மணியைக் காணவேண்டும் என்ற எண்ணத்துடன் சிவயோகத்தில் நின்று குழியினிலே படுத்தார். பாறை வைத்துக் குழியினை மூடும்படி சொல்லிப் பன்னிரெண்டு ஆண்டுகள் சமாதியிருந்தார். வெளிவரும் காலம் வந்ததும் ஆயிரக் கணக்கான மக்கள் அச் சித்தொளியைக் காண வந்தனர். அவர்களுக்கு உபதேசம் செய்து பல கவிதைகளை அவர்களுக்குக் கூறினார். மற்றும், 'புலவர் சரித்திரதீபகம்' என்னும் நூல் இவர் அகத்தியர் காலத்தவர் என்றும், இரசவாத வித்தையும், ஞான நூலும் தேர்ந்தவர் என்றும், வாத நிகண்டு, மச்சமுனி வைப்பு என்னும் இரு பிரபந்தங்களை இயற்றியவர் என்றும் கூறுகிறது. இவரைப் போகரின் மாணாக்கர் என்றும், திராவகம் 800, வைத்தியம் 800 முதலிய நூல்கள் செய்தவர் என்றும் கூறுவர். குலால புராணத்தின் மூலம் இவர் செம்படவர் என்று தெரிகிறது என அபிதானசிந்தாமணி கூறும்.

இவரது பெயரில் எழுபத்தாறு சுவடிகட்கு மேல் கிடைக்கின்றன. அவற்றில் நாற்பத்து நான்கு, சென்னையிலுள்ள கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகத்தில் உள்ளன. பிற தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்திலும், தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் உள்ளன. சில சுவடிகள் நூல்களாகவும் வெளிவந்துள்ளன. 'மச்சமுனி ஞானம்' என்ற தம்நூலில் 'குரு' வின் அடையாளங்களையும் மேன்மையினையும் விளக்குவார்.

'திருமந்திரம் 800' எனும் சுவடியில் பதி, பசு, பாச உண்மைகளை விளக்குவார். அ-சிவம், உ-உயிர், ஓம்-உடல் என்பதையும், சிவன், வாலை வயிரவி முதலான தெய்வங்களின் பூசை முறைகளையும் சில வைப்புகளையும் விவரிப்பார். இவரே வடமொழி நூலைப் பார்த்து எழுதினேன் என்பதால் இவர்

வடமொழிப் புலமையும் வாய்ந்தவர் என்பது தெரிகிறது.

இச்சோதிட நூலில் சோதிடம் பார்ப்போன் தன்மை, அவன் அறிய வேண்டியவை, செய்ய வேண்டிய நவ காயத்திரி செபம், இராசிக் கேற்ற குணம் முதலானவற்றைக் குறித்துச் செல்வார். ஞானப்பகுதிகளில் உப்பின் வகைகள் (கல்லுப்பு, கடலுப்பு, கவுடஉப்பு முதலானவை),பாடாண வகைகள், சிங்கி வகைகள், காயாதிகற்ப வகைகள், ஞானக் கூறு, யோக தியான முறைகள், வைப்புகள் முதலான பலவற்றையும் விளக்கி உரைப்பார்.

காகபுசுண்டரின் நாடி சாத்திரத்தில் கோரக்கரும், மச்சமுனியும் உரையாடுகின்ற தன்மை பேசப்பட்டுள்ளது. அதன் வழி மச்சமுனியின் மாணவர், கோரக்கர் என்பதும், காகபுசுண்டரின் மாணவர் மச்சமுனி என்பதும் வெளியாகின்றன. இவர் கொங்கணரையும், அவர் எழுதிய கடைக் காண்டத்தையும் புகழ்ந்து பாடுவர். கொங்கணர் மச்சமுனியினை வாழ்த்தியமை தெரிவதால் இருவரும் சமகாலத்தவராய் இருத்தல் வேண்டும். போகரின் மாணவர் என்று கூறுவது ஏற்புடையதாக இல்லை. போகர் எவ்விடத்திலும் மச்சமுனியைத் தம் மாணவராக உரைக்கவில்லை. தம் குருவான காலாங்கி நாதர் கூறியே மச்சமுனியின் உற்பவம் முதலான பிற வற்றைத் தாம் தருவதாக எழுதுகின்றார்.

மச்சமுனியின் நூல்கள் அனைத்தும் அவரைத் தெளிந்த 'ஞானி' யாகக் காட்டுகின்றன. சமுதாய மக்களின் மீதும், அவர்களின் உயர்வின் மீதும் அவர் கொண்டுள்ள பற்று மிகவும் உயர்ந்தது. உண்மையினையும் போலியினையும் விளக்கமாக வேறுபடுத்திக் காட்டுகின்றார். மக்கள் நன்மைகளைச் செய்ய வேண்டும்; நல்லவர்களாக நோயற்று வாழவேண்டும் என்று வேண்டுவது குறிப்பிடத்தக்கது. க.இ.

*மச்சேந்திர நாதர்*: இவர் நவநாத சித்தர்களுள் ஒருவர். சாத்திரக் குப்பையிலும் கோத்திரக் கோளாற்றிலும், ஈடுபடாமல் அவற்றினை இகழ்ந்து தள்ளி, மக்களிடம் பரிவு கொண்டு அவர்களிடையே வாழ்ந்து, அவர்களை யெல்லாம் நல்வழிப்படுத்த முயன்றவர்கள் நவநாத சித்தர்கள். அவர்களைப்பற்றி வட நாட்டில் பேசி வருகின்றனர். அவர்கள் பெயரையும் தமிழ்ச் சித்தர்கள் வரிசையில் காணலாம். மச்சேந்திரர், கோரக்கர் முதலானவர்களின் சமாதிகள் அங்கே காட்டப்படுகின்றன. மச்சேந்திரர் மாணவரான கோரக்கரே கஞ்சாவை மருந்துக்கு முதன் முதலில் பயன்படுத்தியவர். அதனால், கஞ்சாவைக் கோரக்கர் மூலிகை எனக் கூறுவதுண்டு. எண்வகைச் சித்திகளையும் பெற்றவர்கள் பதினெண்மர் என்பர். அவர்களுள் ஒருவர் பெயர் மச்ச முனி எனப்படுகிறது. வடநாட்டில் 84 சித்தர்கள் இருந்தனரெனச் சொல்லுகிறார்கள்.

சிவபெருமான் கடற்கரையில் பார்வதிக்குத் தாரக மந்திரம் உபதேசிக்கையில் அவளுக்கு நித்திரை உண்டாக, அம்மந்திரத்தை மீன் வயிற்றிலிருந்த பிள்ளை கேட்டு ஆண் உருக்கொண்டு வெளி வந்தது. அதைக்கண்ட சிவபெருமான் மச்சேந்திரர் எனப்பெயர் கொடுத்தார். இவர் கோரக்கருடன் கூடி ஒரு பார்ப்பனக் குடியிருப்புக்குச் சென்று ஒரு பார்ப்பனி வீட்டில் உணவுகேட்டார். அவள் ஒரு வடை கொண்டு வந்து கொடுக்க வடையைக் கோரக்கர் மச்சேந்திரருக்குக் கொடுத்தார். அதை உண்ட மச்சேந்திரர் அதன் சுவையை எண்ணி மறு நாளும் வேண்டுமென்ன, அவ்வாறே கோரக்கர் அப்பார்ப்பனியிடம் போய் உணவு கேட்டார். அவள் தானியங்கொண்டு வந்து இட கோரக்கர் அதை மறுத்து வடை வேண்டுமென்றார். பார்ப்பனி இல்லை என்று மறுக்கப் பிடிவாதமாய்க் கோரக்கர் வடையே வேண்டுமென்றார். பார்ப்பனி உம் கண்ணைக் குரு கேட்டால் கொடுப்பீரோ, அதுபோல் இயலாதது கேட்கின் எவ்வாறு தர இயலும்; அவ்வாறு நீர் தருவீரேல் வடைதரலாகுமென்றாள். உடனே கோரக்கர் தம் கண்ணைப் பெயர்த்து அவளுக்குக் கொடுக்க, பார்ப்பனி பயந்து நெய்யில் வடைசெய்து கொடுக்க அதைக் கொணர்ந்து குருவின் முன் வைத்தார். மச்சேந்திரர் கோரக்கரிடம் ஒரு கண் நீங்கியதற்குக் காரணம் வினவ, அவர் நிகழ்ந்ததைக் கூற, அதைக் கேட்டு அவர் மனவுறுதிக்கு உளமகிழ்ந்து கண்ணளித்து அவரை மகிழ்விலாழ்த்தினார். பின்பு மச்சேந்திரர் மலையாள நாட்டை அடைந்து பிரேமளா என்பவளை மணந்து மீனநாதன் என்னும் புதல்வனைப் பெற்றார். துறவியாக இருந்து இல்லறத்தில் ஈடுபட்ட இவரை மீண்டுந் துறவியாக்கினவர் இவர் மாணவர் கோரக்கராவார்.

மச்சேந்திரர் பல இடங்களில் திரிந்து வருகையில் ஒருத்தி ஐயமிட்டு இவரிடம் புத்திரப்பேறு வேண்டினாள். சித்தர் அவள் மீது கருணை கொண்டு திருநீறு அளித்து உட்கொள்ளச் சொன்னார். தம் அண்டை வீட்டுக்காரியிடம் அதனைச் சொல்ல அவள் தடுத்து விடுகிறாள். திரு நீற்றைக் உட்கொள்ளாது துப்பிவிட்டு இவள் இருக்கையில், சில காலம் பொறுத்து மீண்டும் அவ்வழி வந்த சித்தர், அவள் பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்றும் அழைத்து வருமாறும் கூறினார். திருநீறு பெற்றவள் அண்டை வீட்டுக்காரி சொல்லால் தான் செய்ததையனைத்தும் ஒழியாது கூறினாள். சித்தர் அவ்வடுப்புச்

சாம்பல் எங்குற்றதென, அதனை வாரி வழக்க மாய்க் கொட்டும் வீட்டின் புழக்கடையில் உள்ள குப்பையைக் காட்டினாள். சித்தர் அவ்விடம் சென்று கோரக்கா என, ஏன் என்னும் ஒரு ஓசை உண்டா யிற்று. பலரும் கண்டு வியக்கச் சித்தர் குப்பையை அகற்றக் கூற, அதில் சித்தர் தாம் திருநீறு கொடுத்த காலம் முதல் பிள்ளையைக் கண்ட காலம்வரை உள்ள ஆண்டுகள் நிரம்பப் பெற்றவனை அப்பெண் ணிற்குக் கொடுத்தார். அவரைக் கோரக்கர் என்பர். இச்செய்தி மகா பக்த விசயம் என்னும் நூலில் காணப்படுகிறது. எம்.சீ.

*மசாய்ப் பழங்குடி*: கிழக்கு ஆப்பிரிக்காவில் தான்சானியா, கென்யா ஆகிய நாடுகளில் வாழும் ஒரு குடியினரே மசாய்ப் (Masai) பழங்குடிகளாவர். இவர்கள் கி.பி.17,18 – ஆம் நூற்றாண்டுகளில் மேலை நைல் (Upper Nile) பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து, 'பெரிய பிளவு'ப் (Great Rift) பள்ளத் தாக்குப் பகுதிகளுக்குக் குடியேறினர். இங்குக் குடிபெயர்ந்த காலத்தில் இவர்கள் சிறந்த போர் வீரர்களாகக் காணப்பட்டனர். இவர்களின் எண் ணிக்கை 1980-களில் 10,000க்கும் மேற்பட்டிருந்தது. அதில் ஏறக்குறைய பாதியளவினர் கென்யாவிலும், மற்றவர்கள் தான்சானியாவிலும் வாழ்கின்றனர்.

மசாய்ப் பழங்குடியினர் பொருளாதார அடிப் படையில் இரு பிரிவுகளாகப் பாகுபடுகின்றனர். ஒரு பிரிவினர் கால்நடை வளர்ப்பதோடு, ஓரளவு வேளாண் தொழிலிலும் ஈடுபடுவதால் அவர்கள் வேளாண் மசாயினர் எனப்படுவர். மற்றொரு பிரி வினர் ஆயர் வாழ்க்கையில் பெரிதும் ஈடுபடுவதால் அவர்கள் ஆயர் மசாயினர் (Pastoral Masai) எனப் படுவர். ஆயர்குடியினரே தம்மை அம்மண்ணின் மைந்தர்கள் எனவும், முதுகுடி எனவும் கூறிக்கொள் வர். இரண்டு பிரிவினரும் மேலும் பல குலத்தவர் களாகப் பாகுபடுகின்றனர்.

மசாய்ப் பழங்குடியினர் மாடுகள், வெள்ளாடு கள், செம்மறியாடுகள் ஆகிய மூன்றையும் வளர்த்து அதன்மூலம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். இருப்பினும் பால் கொடுக் கும் பசுக்களையே இவர்கள் பெரிதும் நம்பி வாழ் கின்றனர். எருதுகளைச் சமயச் சடங்குகளின் போது இறைச்சிக்காகப் பயன்படுத்துகின்றனர். சமுதா யத்தில் ஒருவரின் தகுதி அவர் கொண்டிருக்கும் கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே கணக்கிடப் படுவதால் எருதுகளைப் பெருமள வில் வளர்க்கின்றனர். ஆடுகள் இறைச்சிக்காகப்



மசாய்ப் பழங்குடியினர்



மசாய்ப் பெண்

பயன்படுகின்றன. கால்நடைகளை இளம் சிறார்களே மிகுதியாக வளர்க்கின்றனர். மூன்று நான்கு ஆண்டுகள் கழித்து மேய்ச்சல் இடத்தை மாற்றுவதற்காக வேறு இடம் தேர்ந்தெடுத்து அங்குச் செல்கின்றனர். அதனால் இவர்கள் கிராமங்களும் குடிசைகளும் நிலையானவையாக ஓரிடத்தில் அமைதலில்லை.

வயது வந்த ஒவ்வொரு ஆண்மகனும் இளையோர் கூடத்தில் (Dormitory) உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவ்வமைப்புப் பெரும்பாலும் போராளிகள் (Warriors) அமைப்பு என்றே கூறலாம். ஆண்கள் பதினாறு வயதடையும்போது பாலுறுப்பின் நுனித் தோலை நீக்கம் செய்யும் சடங்கு (Circumcision) நடந்த பின்னர், மோரன் (Moran) என்னும் அந்த இளையோர் கூடத்தில் உறுப்பினராகச் சேர்க்கப்படுவர். அதில் 7 முதல் 14 ஆண்டுக் காலம் உறுப்பினராக இருக்கலாம். அதன்பின்னர் முதிர்ச்சியடைந்த ஆண்மக்களின் குழுவான இல்தர்கயானி (Iltereke-yani) என்னும் குழுவில் சேர்ந்துவிடுவர். அதில் சேர்ந்த பின்னர்த்தான் எவரொருவரும் மூக்குப் பொடி போடுதல், புகையிலை போடுதல் போன்றவற்றைச் செய்யமுடியும். இல்தர்கயானி அமைப்பிற்கு மேல், ஓடி ஆடி வேலை செய்ய முடியாத முதியோர்கள் அடங்கிய குழு உள்ளது. அவர்கள் கடுமையாக உழைத்து வாழ முடியாவிட்டாலும், சமுதாயத்தில் ஒவ்வொரு பொதுச் செயலுக்கும் அவர்களின் கருத்துகளே முடிவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இருப்பினும் சமுதாய வாழ்வில் ஒவ்வொரு குழுவும் கட்டுப்பாடின்றி அவரவர் விருப்பத்திற்கேற்பச் செயற்பட அனுமதிக்கப்படுகின்றது.

மசாய்ச் சமுதாயத்தில் 'மோரன்' என்னும் இளையோர் அமைப்பு, தற்காப்புப் படையாகச் செயற்படுகிறது. அவர்கள் அயலார் மீது வீணாகச் சண்டையிடுவது இல்லை. அவர்களின் நிலப்பரப்பைக் காத்துக் கொள்ளவே இவ்வாறான ஒரு படையை ஏற்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு குலத்தினரும் படைப் பிரிவில் இடம் பெற்றிருப்பர்.

பல்வேறு குலத்தவர்களுக்கிடையே அடிக்கடி



முதியோர் குழு

சண்டை மூளுவதுண்டு. அதோடு வெவ்வேறு குலத்தைச் சேர்ந்தவர்கள் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவர். அதில் ஏற்படும் வெற்றி தோல்விகளை எளிமையாக எடுத்துக் கொள்வதில்லை. அதனாலும் இவர்களிடையே பகைமை உணர்ச்சி அடிக்கடி ஏற்படுகிறது.

மசாய்ச் சமுதாயத்தில் பருவமடைந்தவுடன் ஆண்களும் பெண்களும் இனக்குறிகளின் நுனித்தோல் நீக்கும் சடங்குகளைச் (Circumcision rites) செய்த பின்னரே திருமணம் செய்துகொள்ள முடியும். மணத்துணையை அவர் சார்ந்த குலத்திற்குள்(Clan) எடுக்காமல் பிற ஐந்து குலங்களுள் ஏதாவதொன்றிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்வர். திருமணத்திற்கு முன் ஆண் பிள்ளைகள் அவர்களுக்கு விருப்பமான பெண்களுடன் பழகலாம். அப்போதுங்கூடப் குலப்புறமணக் (Clan Exogamy) கட்டுப்பாட்டைப் பின்பற்றவேண்டும்.

இம்மக்களின் சொத்து மரபுரிமையும் பெற்றோர்களைக் கவனிக்கும் பொறுப்பும் குறிப்பிடத்தக்கவை. தாய் இறந்தபிறகு கால்நடைகள் அனைத்தும் இளைய மகனுக்குச் சேரும். அதனை ஈடு செய்யும் வகையில் முதுமைக் காலத்தில் தாயாரைக் கவனிக்கும் பொறுப்பு இளைய மகனுடையது. தந்தையை மூத்தமகன் கவனித்துக் கொள்ள வேண்டும். இவர்களிடையே பரிமாற்றப் பொருட்கள் சிறப்பிடம் பெறுகின்றன. உறவினர்கள் ஒருவருக்கொருவர் ஆண்டுதோறும் பரிசுப்பொருட்களைப் பரிமாறிக் கொண்டு அன்பை வெளிப்படுத்துவர். அது அவர்களின் உறவையும் பிணைப்பையும் வலுவடையச் செய்கிறது. பரிசுப் பொருட்கள் பெரும்பாலும் கால்நடைகளாக இருக்கும். பரிசு கொடுத்தவரின் பெயராலேயே அது கூறப்படும்.

மசாய்ப் பழங்குடியினர் ஆடு, பசு ஆகியவற்றின் பாலை உண்டே வாழ்கின்றனர். வறண்ட காலங்களில் பசுவின் இரத்தத்தோடு பாலினைக் கலந்து, ஒரு வகை உணவாக மாற்றி உண்கின்றனர். வெளியாரிடமிருந்து தானிய வகைகளையும், தேனையும் பெறுகின்றனர். கால்நடைகளின் ஒவ்வொரு பொருளையும்

அன்றாட வாழ்வில் பயன்படும் பொருளாகச் செய்து கொள்கின்றனர்.

நகாய் (Ngai) என்னும் தெய்வம் இவர்களின் கடவுளாகும். நகாய் என்னும் சொல்லுக்கு ஆகாயமும் வளிமண்டலமும் என்பது பொருள். கருவளம் பெருகவும் உடல்நலன் பெறவும் அத் தெய்வத்திற்குச் சிறப்பு வழிபாடு செய்கிறார்கள். மழை வேண்டும் காலங்களில் பெண்கள் மட்டும் சிறப்புச் சடங்குகளைச் செய்து வழிபடுகின்றனர்.

தான்சானியா, கென்யா ஆகிய இரண்டு அரசுகளுமே மசாய்ப் பழங்குடியினரை மேம்படுத்துவதில் நாட்டம் செலுத்துகின்றன. அவை, பல நலவாழ்வுத் திட்டங்களை இவர்களுக்காகச் செயற்படுத்துகின்றன. சீ.ப.

*மசாவா*, ஆப்பிரிக்காவின் வடக்கு எதியோப்பியாவில் எரிட்ரியா மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். இதனை மெசாவா எனவும் குறிப்பிடுவர். இதுசெங்கடலைச் சேர்ந்த ஒரு துறைமுகம். மசாவா (Massawa) வடக்கு எதியோப்பியப் பகுதிக்கு ஒரு முக்கியமான துறைமுகமாக விளங்குகிறது. அசுமாரா (Asmara) நகருடன் இது இருப்புப்பாதை மூலம் இணைக்கப்படுகிறது. தோலும் காப்பிக் கொட்டையும் இங்கிருந்து பல இடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. ஒரு பகுதி தீவுகளிலும், மற்றொரு பகுதி மசாவா விரிகுடாக் கரையிலுமாக அமையப் பெற்றுள்ள இந்நகரில் முத்துக்குளிக்கும் தொழில் நடைபெறுகிறது. தெ.பா.

*மசுக்காட்டு*: இது ஓமன் சுல்தானிய நாட்டின் தலைநகரம். அரேபியாவின் தென்கிழக்கில் ஓமன் வளைகுடாவில் உள்ள மசுக்காட்டு (Muscat) நகரம் நெருக்கமான மலைகள் நிறைந்தது. இதன் துறைமுகம் சிறப்பு வாய்ந்தது. போர்ச்சுகீசியர், இதனை கி.பி.1508-இல் கைப்பற்றிக் கொண்டனர். போர்ச்சுகல் நாடு இதனை கி.பி.1648-ஆம் ஆண்டு வரை தன்னிடம் வைத்திருந்தது. பிறகு இங்குப் பாரசீகச் சிற்றரசர்கள் ஆதிக்கம் கி.பி.1741-ஆம் ஆண்டு வரை ஏற்பட்டிருந்தது. இது வாணிகத் துறையில் மிகச்சிறநது விளங்கியது. ஆனால், பிற்காலத்தில் இதன் அருகில் முத்திரா (Mutrah) என்னும் புதிய துறைமுகம் ஏற்பட்டதால், மசுக்காட்டின் வாணிகச் சிறப்புக் குன்றியது. இரு துறைமுகங்களின் மொத்த மக்கள்தொகை 80,000 (1982). ஓமன் சுல்தானியம், 1970-ஆம் ஆண்டு வரை மசுக்காட்டு – ஓமன் சுல்தானியம் என்ற பெயரிலேயே வழங்கப்பட்டது. இப்பகுதியில் வாழ்பவர்கள், அரேபியர், இந்தியர், பாகிசுத்தானியர், நீக்கிரோக்கள் முதலானவர்களாவர். இங்கு விளையும் பொருட்களில் பேரீச்சையும், கடற்பொருட்களில் மீன்வகைகளும், முத்துச்சிப்பிகளும் முக்கியமானவை. இவை யாவும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தெ.பா.

*மசுதான் சாகிபு*: தாயுமானவரை அடியொற்றித் தமிழில் இசுலாமிய ஞானப் பாடல்கள் பாடியவருள் ஒருவர் மசுதான் சாகிபு. இவர்பள்ளித் தோழரான காயற்பட்டினம் புலவர் நாயகம் செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம்புலவர் வாயுறை வாழ்த்தாகப் பாடியுள்ள ஆசிரியப்பா மசுதான் சாகிபின் வரலாற்றைத் தொகுக்க வகை செய்கிறது. அழுத்தமான ஆன்மிக உணர்வும், ஆழ்ந்த கருத்துகளைக் கொண்ட அருந்தமிழ்ப்பா இயற்றும் திறமையும் மசுதான் சாகிபைத் தமிழ்ச் சித்தர்கள் பட்டியலில் சேர்த்துள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தொண்டிக்கு அருகிலுள்ள குணங்குடி என்னும் ஊரில் நைனா முகம்மது – பாத்திமா ஆகியோரின் புதல்வராக கி.பி.1788 – ஆம் ஆண்டில் பிறந்த மசுதான் சாகிபுக்குச் 'சுல்தான் அப்துல் காதிர்' என்று பெற்றோர் பெயரிட்டனர். இவர் 'பொன்னரிய மாலை' என்னும் சொல்லரிய தமிழ்ப்பா மாலை தொடுத்த மதுரை மின்னா நூருத்தீன் புலவர் வழிவந்தவர் அவருக்குத் தந்தையார் ஆவார். அன்னையார் அண்ணல் நபி அவர்கள் வழிவந்தவர். எனவே, இறையுணர்வில் மேலோங்கிய நிலையும், இன்தமிழ்ப்பா புனையும் திறனும் இயல்பாகவே மசுதான் சாகிபுக்கு அமைந்து விட்டன.

தம் பதினேழாம் அகவைக்குள்ளே இசுலாம் சமயக் கல்வித் துறைகளில் தேர்ச்சி பெற்று அதற்குரிய பட்டத்தைப் பெற்றார். புலனின்ப நுகர்ச்சிகளைப் புறந்தள்ளும் போக்கமைந்த இவர், தமக்கென வளர்ந்த தம் மாமன் மகளைத் திருமணம் செய்ய மறுத்துத் தம் இளவலுக்கு மணம் செய்து வைத்தார். உள்ளத்தில் பற்றின்மை தொடரச் சமய ஞானமும் தவத்தின் வழிமுறையும் கற்றுணரக் கீழக்கரை சென்று, செய்குஅப்துல் காதிரி லெப்பை ஆலிம் என்பவரின் மாணவரானார். தொடர்ந்து திரிசிபுரம் மௌலவி சாம் சாகிபு என்பவரிடம் 'தீக்கை பெற்று' ஞான யோக நெறியில் ஆழ்ந்திருந்தார்.

ஞானம் பெற்ற துறவியான மசுதான் சாகிபு பகலெல்லாம் நோன்பிருந்தார்; இரவெல்லாம் தொழுதார். தனிமைத் தவம் நாடி மலைகளுக்கும் காடுகளுக்கும் சென்றார். சிக்கந்தர் மலை, சதுரகிரி, பிரான்மலை, நாகமலை, ஆனைமலை ஆகியன அவர் தவம் செய்த இடங்களாகும். அவ்வேளைகளில், சருகும், கிழங்கும், தழையும், குழையும், கனியும், காயும் புசித்து வந்தார். இயற்கை இடங்கள் மட்டு

மன்றிக் குப்பை மேடுகளும் இந்தத் தவசிக்குத் தங்குமிடங்களாயின. நாளுக்கு நாள் இவர் இறைக் காதல் மீதூரப்பெற்று, பித்தராகவே மாறி நின்ற நிலை கண்டதாலேயே மக்கள் இவரை 'மசுதான்' என்று கூறினர். 'மசுத்' என்பது ஒரு பாரசீகச் சொல். போதை அல்லது வெறி என்பது அதற்குப் பொருள். எனவே, இறைக்காதல் போதையில் வெறி பிடித்த 'சுல்தான் அப்துல் காதிர்', மசுதான் சாகிபாக மாறினார்.

ஞானநெறி விளக்கம் சொல்ல வடபுலம் சென்று திரும்பி, வடசென்னை இராயபுரத்தில் தங்கி, யோக நிட்டையில் ஆழ்ந்தார். முகியித்தீன் அப்துல் காதிர் சீலானியை (ரகு) ஞான குருவாக ஏற்றுப் பக்திச் சுவை சொட்டும் பாக்கள் பலவற்றைப் பாடினார். பலர் இவரிடம் வந்து தீக்கை பெற்றனர். இசுலாமியர் அன்றிப் பிறரும் இவர் சீடர் ஆயினர். பிற சமயத்தாரால் 'மசுதான் சாமி' என்றே மதிப்புடன் சொல்லப் பெற்றார். இவர் தங்கியிருந்த ஆன்மிகக் கூடம், அனைத்துச் சமயத்தவரும் கூடும் அரங்கமாயிற்று. எனவே, 'சமரசம்' போற்றும் சான்றோராகவே மசுதான் சாகிபு போற்றப் பெற்றார்.

சென்னையில் வாழும்போது, தாம் சார்ந்திருந்த 'காதிரிய்யா தருக்கா' முறைப்படி சமயத் தொண்டு ஆற்றித் தம் கையால் தச்சு வேலை செய்து கிடைத்த வருமானத்தால் ஏழை எளியோர் வறுமையைத் துடைத்தார். வெளிப்படையாகச் சில நாளும், மறைவாக யோக நிலையில் சில நாளும் வாழ்வது இவரது வழக்கமாயிற்று. அப்போதெல்லாம் தம் கருத்தைச் 'சுட்டிக்காட்டியும், எண்ணில் தொகுத்தும், எட்டிக் காட்டியும், எழுதிக் காட்டியும்' விளக்கினார் என்பர்.

இறைக் காதலில் தம்மை முற்றிலும் உட்படுத்திக் கொண்டு, தம் முழு உரிமையாளனாக இறைவனை வரித்துக்கொண்டு வாழ்ந்த ஞானிகளை, சூபி ஞானி என்பர் இசுலாமியர். அந்த வகையில் மசுதான் சாகிபும் ஒரு சூபி ஞானியே என்பர். சூபி மரபுப்படி தீக்கை பெற்றமையும், 'கல்வத்து' என்னும் யோக நிட்டையில் ஆழ்ந்திருந்தமையும், முகியித்தீன் ஆண்டகையைக் குருவாய்க் கொண்டு 'காதிரிய்யா' நெறிப்படி வாழ்ந்தமையும், மசுதான் என்ற சூபி ஞானிக்குரிய பெயர் கொண்டமையும், கம்பளி உடை தரித்து அலைந்தமையும் மசுதான் சாகிபு சூபி ஞானி என்பதற்குச் சான்றுகள் என்பர். இவருடைய பாடல்கள் எல்லாம் சூபி ஞானத்தின் சுடர் ஒளிகள் என்று போற்றுவர்.

மசுதான் சாகிபு பாடிய பாடல்கள் அனைத்தும் அவர் பெயராலேயே வெளிவந்துள்ளன. தமிழில் ஞானக் கருத்துகளை விளக்கும் அருட்பாக்களாக அவை விளங்குகின்றன. இசுலாமிய நெறி சொல்வன வாயினும் எல்லோரும் படித்து இன்புறும் தகுதி பெற்றவை அவர் பாடல்கள். பாடல்களின் யாப்பு முறையும், தலைப்புகளும், தத்துவக் கருத்தோட்டமும் தாயுமானவரை நினைவிற்கொள்ள வைக்கின்றன. 'மதபேதம் ஓதி மதிகெட்டவர்' என்ற இவரின் இடிப்புரை சமய ஒருமைப்பாட்டில் இவர் கொண்ட பற்றினைக் காட்டும். இருபதுக்கும் மேற்பட்ட இசைப்பாடல்களைப் பாடித் தம் இசைத்தமிழ் புலமையை வெளிப்படுத்தி உள்ளார்.

குணங்குடியில் பிறந்ததால் மசுதான் சாகிபைக் 'குணங்குடியார்' என்றும் மக்கள் குறிப்பர். அது, எவ்வளவு பொருத்தமான பெயர் என்பதை ஐயாச் சாமி முதலியார், 'மறைபுகல் ஞான வளமினி தருளும் குறைவரு நற்குணங் குடிகொண்டி ருத்தலால், உன்பெயர் காரணத் துறுபொருள் உணர்ந்தனம்' என்று பாடிப் போற்றுவார். அதுபோலவே, மசுதான் சாகிபைப் பணிந்து, 'நீயே ஈன்ற தாய் தந்தை, நீயே குருவி னொரு தெய்வம், நீயே அடியார்க் குதவுபொருள், நீயே ஞான நெறிவிளக்கம் நீயே விளங்கும் குணக்குன்றம்' என்று வேங்கடராயப் பிள்ளை கவிராயர் பாடியிருப்பதும் மசுதான் சாகிபின் பெருமைக்குச் சான்றாகும்.

தொண்டியிற் பிறந்ததால் 'தொண்டியார்' என்று கூறப்பெற்ற மசுதான் சாகிபு மறைந்த பின்னரும் சென்னையில் அவர் வாழ்ந்த இடம் 'தொண்டியார் பேட்டை' என்றே சொல்லப் பட்டது. அதுதான் இப்போது தண்டையார்பேட்டை என்று மருவி உள்ளது என்பர். அ.ர.

**மசுதி வேங்கடேச ஐயங்கார்** என்பார் கன்னடமொழி இலக்கிய மேதை. இவர் கருநாடக மாநிலம் கோலார் மாவட்டம் மசுதி (Masti) என்னும் ஊரில் கி.பி. 1891 – ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தை இராமசாமி ஐயங்கார்; தாயார் திருமாலம்மாள். இவர் பங்கசம்மா என்பாரை மணந்து கொண்டார். இவருக்கு ஐந்து பெண்மக்கள். முதுகலைப் பட்டம் பெற்ற இவர் மைசூர் அரசுப்பணியில் சேர்ந்தார். துணை ஆணையராகவும், பின்னர் இணை ஆணையராகவும் பொறுப்பு வகித்த இவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர்த் தலைசிறந்த இலக்கிய மேதையாக மாறினார். இவர் வெளியிட்ட முதல் நூலுக்குக் 'கேளவு சன்ன கதைகளு' (Kelavu Sanna Kathegalu) என்று பெயர். சீவனா (Jivana) என்னும் திங்களிதழின் ஆசிரியராகவும், பதிப்பாளராகவும் இவர் பல்லாண்டுகள்

பணிபுரிந்தார். கன்னட சாகித்தியக்கழகத்தின் தலைவராகப் பெல்காம் என்னும் ஊரில் நடைபெற்ற இலக்கிய மாநாட்டின் தலைவரானார். பின்னர்த் தென்னிந்திய மொழிகள் மாநாட்டின் தலைவராகச் சென்னையில் பதவியேற்றார். பம்பாயில் கூடிய அகில இந்திய எழுத்தாளர்கள் மாநாட்டின் தலைவராகவும் பொறுப்பு ஏற்றார். கன்னட சாகித்திய பரிசத்தின் துணைத் தலைவராகவும், பின்னர் அதன் தலைவராகவும் ஆனார். இவருக்கு 'இராச சேவ பிரசக்தா' (Rajasevaprasakta) என்னும் விருதுவழங்கப்பட்டது. கருநாடகப் பல்கலைக்கழகமும் மைசூர்ப் பல்கலைக் கழகமும் வேங்கடேச ஐயங்காருக்கு முனைவர் பட்டம் வழங்கிப் பெருமை செய்தன. இவர் எழுதிய சிறுகதைகளுக்குச் சாகித்தியக் கழகம் விருது வழங்கியது. இறுதியாக இவருக்கு ஞானபீட விருதும் கிட்டியது. சாகித்தியக் கழகத்தின் உறுப்பினராக மசுதி வேங்கடேச ஐயங்கார் நியமிக்கப் பெற்றார். இவர் 1986 - ஆம் ஆண்டில் காலமானார். இரா.அ;.

**மசும்தார், தீரேந்திரநாத்து (1903-1960).** இந்திய மானிடவியலை வளர்த்த மூத்த அறிஞர்களுள் ஒருவர். இவர் தாயார் குசும் குமாரி (Kushum-Kumari); தந்தை இரேபதி மோகன் மசும்தார். அவர்களுக்கு மூத்த மகனாக 1903-இல் பீகாரில் பிறந்தார். தீரேந்திரநாத்து மசும்தார் (Dhirendra Nath Majumdar) 1924 - இல் கல்கத்தாவில் மானிடவியல் முதுகலைப் படிப்பை முடித்தார். அப்படிப்பை முடித்தவுடன் 1928 - இல் இலக்னோ பல்கலைக்கழகத்தின் தொன்மைப் பொருளியல் (Primitive Economics) விரிவுரையாளராகச் சேர்ந்தார். ஐந்தாண்டுகள் கழித்துக் (1933) கேம்பிரிட்சு சென்று படித்து முனைவர் பட்டத்தை 1935 - இல் பெற்றார். அங்குப் பயின்றபோது மாலினோசுக்கியின் (Malinowski) செயற்பாட்டியல் அணுகுமுறையில் (Functional approach) ஆழ்ந்த பற்றுடையவரானார். கேம்பிரிட்சில் தங்கியிருந்த போது மசும்தார் இந்தியப் பழங்குடிகள் பற்றியும் இந்தியப் பண்பாடு பற்றியும் பல தொடர்ச் சொற்பொழிவுகளை ஆற்றினார். அவ்வாறான சொற்பொழிவுகளை வியன்னாவிலும் பல முறை நிகழ்த்தினார். 'கிரேட் பிரிட்டன், அயர்லாந்துப் பேரரசு மானிடவியல் நிறுவனம்' மசும்தாரை 1936-ஆம் ஆண்டு சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது.

மசும்தார் 1938-இல் இந்தியா திரும்பி இலக்னோ பல்கலைக்கழகத்தில் மானிடவியல் துறையில் சேர்ந்து பணியாற்றினார். மசும்தாரின் தொடக்கக் கால ஆய்வுகள் இனக்குழுவியல் (Ethnography) பற்றியதாக அமைந்தன. குறிப்பாக ஓ (Ho), கொரவா, கோண்டு, காசிப் பழங்குடி, உத்திரப் பிரதேசத்தின் குற்றவாளிப் பழங்குடிகள் (Criminal Tribes) போன்ற பல பழங்குடிகளை ஆய்வு செய்தார். காசிப் பழங்குடிகளைப் பற்றிய மிகச்சிறந்த வல்லுநர் என்றுகூட இவரைக் கூறலாம். இவர் எழுதிய இமயமலையில் பலகணவர் மணம் (Himalayan Polyandry) என்னும் நூல் மிகவும் புகழ் பெற்றது.

மசும்தார் தொடக்கத்தில் ஆங்கிலேய மானிடவியலின் அணுகுமுறையைச் சார்ந்திருந்தாலும் பின்னர் அமெரிக்க மானிடவியலின் அணுகுமுறையிலும் தேர்ச்சி பெற்றார். அதனால் இவரின் எழுத்துகள் இவ்விரண்டு அணுகுமுறைகளையும் சார்ந்தனவாக அமைந்தன. பெரும்பான்மையில் இவர்தம் எழுத்துகளில் மனித நடத்தை உளவியல் பாங்குகள் பெற்றிருக்கும் முதன்மைக்கூறுகள் சிறப்பாக வெளிப்படும். இவர்தம் முதல் நூலான 'ஒரு பழங்குடி மாற்றம் பெற்றுக்கொண்டிருக்கிறது' (A Tribe in Transition, 1937) என்னும் நூலிலும் 'ஒரு பழங்குடியின் விவகாரங்கள்' (The Affairs of a Tribe, 1950) என்னும் நூலிலும் அதனைக் காணலாம். 'தொன்மைப் பழங்குடியின் நற்காலம்' (Fortunes of a Primitive Tribe) என்னும் நூலிலும் அதனையடுத்து இவர் எழுதிய பிற நூல்களிலும் அமெரிக்கப் பெண் மானிடவியலறிஞரான உருத் பெனிடிக்டின் தாக்கத்தைக் காணலாம். உருத் பெனிடிக்டு பண்பாட்டை உளவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து புகழ்பெற்றவர். மசும்தாரின் அனைத்து இனக்குழுவியல் (Ethnography) ஆய்வுகளும் மிகவும் நேர்த்தியான முறையில் தரவுகளைப் பயன்படுத்தி ஆராயப் பெற்றனவாகும்.

புகழ்மிக்க மானிடவியல் நிறுவனங்களுள் ஒன்றான இனக்குழுவியல், நாட்டார் பண்பாட்டுக்கழகம் (Ethnographic and Folk Culture Society) என்னும் அமைப்பை 1947 - இல் தொடங்கினார். இன்று இந்தியாவில் புகழ்பெற்ற மானிடவியல் ஆய்விதழ்களுள் ஒன்றான 'கிழக்குப்பகுதி மானிடவியலார்' (Eastern Anthropologist) என்னும் ஆய்விதழை அதே யாண்டு மசும்தார் தொடங்கி அதன் முதல் பதிப்பாசிரியராகவும் பணியாற்றினார். இவர் பல நிறுவனங்களில் உறுப்பினராகவும் சிறப்புத் தகைஞராகவும் பணியாற்றினார். இவர் ஏராளமான நூல்களையும் கட்டுரைகளையும் படைத்து இந்திய மானிடவியலில் அழியா இடம் பிடித்தார். இந்தியாவில் இன்றைய முன்னணி மானிடவியலாருள் பெரும்பான்மையோர் மசும்தாரின் மாணவர்கள் அல்லது அவரின் மாணவரின் மாணவராவர். மசும்தார் 1960-இல் காலமானார். இவர் இறக்கும்போது இலக்னோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்.

சீ.ப.

*மசுலின்* என்பது ஒருவகைத் துணியாகும். வெண்ணிறமானதும், சலவை செய்யப்படாததுமான பருத்தித் துணியை மசுலின் என்பர். இது மிக நெருக்கமாக நெய்யப் பெற்றிருக்கும். ஈராக்கு நாட்டிலுள்ள மோசுல் (Mohul) என்னும் நகரால் மசுலின் (Muslin) என்னும் பெயர் பிறந்தது என்பர். அந்நகரில்தான் மசுலின் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. வெறும் பஞ்சாடைகளைக்கூட ஆங்கிலேயர் மசுலின் என்கிறார்கள். ஆனால், அமெரிக்காவில் மசுலின் என்பது அன்றாடம் பயன்படும் உறுதியான துணியைக் குறிக்கிறது. மெத்தை, தலையணை போன்றவற்றுக்கான உறைகள் மசுலினால் தைக்கப்படுகின்றன.

இந்தியாவில் மசுலின்-மிக மெல்லிய ஆடை-நெய்து பயன்படுத்தப்பட்டதாக மொகலாயர் வரலாற்றால் அறியலாம். மொகலாயப் பேரரசர்கள் மசுலின் ஆடைகளை அணிந்து மகிழ்ந்தார்கள். மென்மையும் நுண்மையுமுடைய மிக நீண்ட மசுலின் ஆடை தீப்பெட்டியில் அடக்குமளவிற்கு இருந்ததாகக் கூறப்படுகிறது.

இரா.அ.

*மசூதி* என்பது இசுலாமியரின் தொழுகைக்குரிய இடமாகும். தமிழ்நாட்டில் மசூதிகள் பள்ளி வாசல்கள் என்றே குறிப்பிடப்படுகின்றன. இவை தொழுகையிடங்களாக மட்டுமல்லாமல், இந்திய - இசுலாமியக் கட்டடக்கலைப் பண்பாட்டின் சின்னங்களாகவும் விளங்குகின்றன. இந்தியாவில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு தொடங்கிப் பல அழகிய புகழ்பெற்ற மசூதிகள் கட்டப்பட்டுள்ளன. மசூதிகள் வகுபு (Waqf) எனும் அறக்கட்டளைகள் மூலம் பேணப்படுகின்றன.

மச்சிது எனும் அரபுச் சொல்லின் அடிப்படையில் உருவானது மசூதி எனும் சொல். பல பெரிய மசூதிகளை அடுத்து அரபு மொழி பயிற்றுவிக்கும் பள்ளிகளும் இருந்தமையால் தமிழ்நாட்டில் மசூதிகளைப் பள்ளிவாசல்கள் என்று அழைக்கும் பழக்கம் ஏற்பட்டது. சலாத்து என்றால் அரபு மொழியில் தொழுகை என்று பொருள்படும். நமாசு எனப்படும் தொழுகை புரிவதற்கும் 'துஆ' எனப்படும் வேண்டுதல் செய்வதற்கும் உரிய இடமாக இசுலாமியர் தாம் வசிக்கும் ஊர்களில் பள்ளி வாசல்களைக் கட்டினார்கள். உலகமெங்கும் வாழும் இசுலாமிய மக்கள் புனிதத் தலமாகப் போற்றும் மக்காவில் உள்ள கபா மசூதி மிகப் பெரியது. அதில் ஒரே நேரத்தில் 35 ஆயிரம் பேர் இருந்து தொழுகை புரியலாம்.

கெய்ரோவில் உள்ள சுலைமானில் மசூதியும் துருக்கியில் உள்ள இபன் தூலூன் மசூதியும் இசுலாமியக் கட்டடச் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். சிரியாவின் தலைநகரமான தமாசுகசு நகரின் மாபெரும் மசூதி பழைய மதீனா மசூதியின் மறு வடிவமாய் உமையத்து கலீபா (கி.பி.704 - 715) வினால் கட்டப்பட்டது.


மிக நுட்பமான 'கணித வடிவக்' கற்செதுக்கு அலங்கார வேலையும், உயர்ந்த மாடத்தூபியும் (Minar), பலவகைக்கூரிய 'குதிரைலாட' வடிவக் 'கமான்'வளைவுகளும் இசுலாமியக் கட்டடக் கலையின் தலையாய பண்புகளாகும். இசுலாமிய மன்னர்கள் இப்பண்புகளைத் தாங்கள் ஆதிக்கம் செலுத்திய நாடுகளின் கலைப்பண்புகளுடன் இணைத்துப் புதிய கலைப்பண்பாட்டினை மலரச் செய்துள்ளனர்.

பொதுவாகப் பள்ளிவாசல்களில் ஒரு திறந்த முற்றமும், அதைச்சுற்றித் தூண் வரிசையும், தலைவாசலில் மாடத்தூபிகளும் இருப்பது வழக்கம். எல்லாப் பள்ளிவாசல்களிலும் மக்காவில் உள்ள கபா அமைந்துள்ள திக்கை (கிப்லா) நோக்கித் தொழுகை முற்றம் அல்லது மண்டபம் அமைந்திருக்கும். ஐந்து காலமும் ஒரு தலைவரின் (இமாம்) கீழ்த் தொழுகை நடத்துவதற்கு, அந்தத் தலைவர் நிற்பதற்காக ஒரு மாடச்சுவர் அமைந்திருக்கும். அதனை 'மிகுராபு' என்பர். அவர் எழுந்து உரை நிகழ்த்துவதற்காக, அதன் பக்கத்தில் 'மிம்பர்' என்னும் சிறிய மேடை (Dais) அமைந்திருக்கும். மரப்பலகையாலான அம்மேடை மூன்று அல்லது நான்கு படிகளுடன் கூடியது. வெள்ளிக் கிழமை பகல் தொழுகையின் போதும் மற்றும் பெரு நாள்களின் போதும் அதன் மீதேறி நின்றுதான் இமாம் உரை நிகழ்த்துவார். பள்ளிவாசலின் உட்புறம் எவ்வித உருவச் சிலைகளும் ஓவியங்களும் இடம் பெற முடியாது. எனவே சித்திர, சிற்ப வேலைப்பாடுகள் தூண்களிலோ முகப்பில்நிற்கும் தூபியின் கோபுரப்பகுதியிலோதான் இடம் பெற்றுள்ளன.

மசூதியின் உட்புற மண்டபத்திற்குச் செல்லும் நுழைவாயில் வளைவுகளை (Arches) உடையதாயிருக்கும். மண்டபம் அகன்றதாய் இருந்தால் வாசல்கள் பலவாக இருக்கும். முதன்மையான வாயிலின் நேர் எதிரே சுவரில் உள்ள உட்குழிந்த 'மிகுரபு' எனும் மாடம் கிப்லாவை நோக்கி அமைந்திருக்கும். இமாமுக்குப் பின்புறம் மற்றவர்கள் நிற்க வேண்டும். அவர் முதல் வரிசையில், அந்த மாடத்தினுள் நின்று தொழுகை நடத்துவார். உட்குழிந்த அமைப்புடன் அம்மாடம் இருப்பதால் அது இமாம் ஓதும் வசனங்களை எதிரொலித்து ஒலி அலைகளை எழுப்புவதாக அமைந்துள்ளது.

பெரிய மசூதிகளில், தொழுகை மண்டபத்தின் மேற்கூரையாக அமைந்திருப்பது தாமரைமொட்டு





வடிவ கும்பம் (Dome) ஆகும். மொட்டுருவக் கும்பத்தின் முகட்டில் பிறையுருவப் பித்தளை வளைவுகள் பொருத்தப்பட்டிருக்கும். பொதுவாக இத்தகைய தாமரை மொட்டுருவக் கும்பங்கள் (Domes) பெரிய மசூதிகளில் மூன்று வரைஅமைந்திருக்கும். தொழுகை மண்டபத்திலிருந்து வெளிமுற்றத்தை நோக்கி இருபுறமும் கண்ணறைச் சுவர்கள் மூடிய பாதைகள் (Arcades) அமைந்திருக்கும்.

இந்த நடைபாதையின் முடிவில் நாற்புறமும் கூர்கோபுரத்தூபிகள் (Minars) மாடங்களுடன்அமைந்திருக்கும். தொழுகை நேரம் நெருங்கியதும் இந்த தூபிகளின் மாடங்களிலிருந்து 'பாங்கு' எனும் அழைப்பொலி எழுப்பப்படும். இப்பொழுது ஒலி பெருக்கி பயன்படுத்தப்படுகிறது. முன்பு ஒலி பரவ வேண்டும் என்பதற்காக, அம்மாடத் தூபிகளை உயரமானவையாகக் கட்டினார்கள்.

இந்த மாடத்தூபிகளை மினார்கள், மனோராக்கள், மனாராக்கள் என்று பல பெயர்களால் குறிப்பிடுகிறார்கள். அடி பெருத்து மேலே போகப் போகச் சிறுத்து அமைக்கப்பட்டவை சில; ஒடுக்கமாக ஒரே சுற்றளவில் அமைந்தவை சில. தென்னிந்திய மசூதிகளின் முன் முகப்பில் இருபுற மூலைகளிலும் மனோராக்கள் அமைந்துள்ளன. அவற்றின் உச்சியில் பித்தளைக் கலசங்கள் பொருத்தப்பட்டுக் கதிரவன் ஒளியில் ஒளி வீசித் திகழும்.

இந்திய நாட்டில் உள்ள உயர்ந்த மனோரா உலக அதிசயங்களுள் ஒன்றான, தில்லியில் உள்ள குதுப் மினார் ஆகும். இது இந்தியாவின் மிகப் பழைய மசூதி இருந்த இடத்தில் உள்ளது என்பர். அது முதல் முசுலிம் சுல்தானான குத்புதீனால், அவர் அரசப் பேராளராக இருக்கும் போது கி.பி. 1193-1198 க்குள் கட்டப்பட்டது. அப்பழைய மசூதி தில்லி மாநகரில் இருந்து 18-கி.மீ. தொலைவில் அமைந்திருந்தது. குத்புதீயனின் வெற்றித் தூணுக்கருகில் இம்மினார் அமைந்திருக்கிறது. இது 375 சுருள் படிக்கட்டுகளுடன் குர்ஆன்மொழிகள் பொறிக்கப்பட்டு, ஐந்து நிலைமாடங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 78 மீ. அடிப்பாகத்தில் 120 மக்கள் சுற்றி நிற்கலாம். மேற்சிகரம் 10மீ. அகலம் கொண்டது. இதற்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள துறவி குத்புதின் உசி என்பவர் நினைவாகவே இது குதுப்மினார் எனப்படுகிறது. அரசர் குத்புதீன் நினைவாக அன்று. இதேபோல், கும்பகோணத்திற்கு வடக்கே திருப்பனந்தாளுக்குச் செல்லும் வழியில் உள்ள சோழபுரம் மசூதியின் ஒற்றை மனோரா 50 மீ. உயரமுள்ளது. இம்மனோராக்களே பள்ளிவாசல்களையும் ஊரையும் அடையாளம் காட்டுபவை. தொலைவில் வரும் போதே பள்ளிவாசலின் தூபியைக்கண்டு 'அதோ தெரிகிறது அபிராமம் பள்ளிவாசல்' என்று மக்கள் உற்சாகமாகக் கூவும்படி, தாம் அமைந்த ஊரை அருகில் கொண்டு வருபவை இத்தூபிகள்.

தொழுகை இடம் வழவழப்பான பளிங்குக் கற்களால் தள வரிசையிடப்பட்டிருக்கும். அதன் மீது விரிப்புகள் விரிக்கப்பட்டிருக்கும். சுவர்கள் கூட பளபளப்பாக்கப் பட்டிருக்கும். கை கால் முகம் கழுவிப் புறத்தூய்மை செய்து கொள்ள ஒரு தடாகம்

அல்லது நீர்த்தொட்டி அமைக்கப்பட்டிருக்கும். தில்லியில் கி.பி. 12 – ஆம் நூற்றாண்டிலேயே முதல் மசூதி கட்டப்பட்டுவிட்ட போதிலும், கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் மசூதிகள் பெரும் அளவு இந்தியாவில் கட்டப்பட்டன. இந்தியக் கலை மரபுடன் இணைந்து இந்திய – இசுலாமியக் கலைமரபாக மலர்ந்ததொரு கலைப்பண்பின் அடிப்படையில் இவை காட்டப்பட்டன.

பேரரசர் அக்பர் (கி.பி. 1556 – 1605) பத்தேபூர் சிக்ரி நகரில் கட்டிய மசூதியில், இந்தியாவில் எங்கும் இல்லாத அளவில், கும்பம் அமைக்கப்பட்டது. இப்பொழுது பாகிசுதானில் உள்ள இலாகூரில் சகாங்கீர் மன்னர் இந்திய – இசுலாமிய-பாரசிகக்கலை மரபில் ஒரு பெரிய மசூதியைக் கட்டினார்.

தில்லியில் உள்ள சமி – ஆ மசூதி இந்தியாவில் மிகப்பெரிய மசூதியாகும். பேரரசர் சாசகானால் (கி.பி.1627-1658)கட்டப்பட்டது. வெண்நிறச்சலவைக் கற்கள் மசூதிகளில் பெரும்அளவு பயன்பட்டமை சாசகான் காலத்திலிருந்துதான். அது 10 மீ. உயரமண் மேட்டில் 90 மீ. சுற்றளவுக்குச் செங்கருங்கற்களால் கட்டப்பட்ட-கம்பீரமிகு கட்டடமாகும். சமி ஆ மசூதியில் பல படிக்கட்டுகள் ஏறிச் சென்றால், படிக்கட்டுகள் கொண்ட தடாகம் வரும்; தடாகத்தைக் கடந்தால் 87 மீ. நீளத் தொழுகை மண்டபம் வரும். சுற்றிலும் கம்பீரமான மேடை 900 வெள்ளைப்படிகக்கற்களினால் பாவப்பட்டிருக்கும். குர்ஆன் வாசகங்கள் அரபியில் செதுக்கப்பட்டுள்ளன. இந்த மசூதியின் இரு பக்கங்களிலும் உயரமான இரு வெள்ளைப் பளிங்குக் கும்பங்கள் (Domes) உள்ளன. அந்த வெள்ளைக் கலசங்கள் கருப்புப் பளிங்குக் கற்களால் கோடிட்டு மீதி செம்மணற் கற்களால் பதிக்கப்பட்ட வெள்ளைப் பளிங்குக்கற்கள் கொண்டவை. அதன் மீது ஏறிப்பார்த்தால் தில்லி மாநகரின் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாகும். அதைக்கட்டப் பத்துஇலட்ச உரூபாய் ஆயிற்று; ஆறு ஆண்டுக்காலம் பிடித்தது. அம்மசூதி தொல்பொருளாய்வுத்துறைக் கட்டுப்பாட்டில் இருப்பதால் தொழுகை மசூதிக்கு வெளியிலேயே நடத்தப்படுகிறது. அதற்கு அருகில் உள்ள கருப்பு மசூதி (Khala Masjid)அரபியச் சிற்ப முறையில் ஆப்கானிய அரசர்களால் கட்டப்பட்டதென்பர். தில்லிக்கருகில் ஆக்ராவில் அக்பர் கட்டிய கோட்டை வளாகத்திற்குள் சாசகான் கட்டிய முத்து மசூதி (Motee Masjid) புகழ் பெற்றது; முழுமையும் பளிங்குக் கற்களினால் ஆனது. பக்கத்தில் உள்ள பட்டிப்பூர் மலையின் சிவப்புக் கற்களால் வெளிச்சுவர் கட்டப்பட்டுள்ளது. வாசலுக்கு இரு புறமும் தடாகங்கள் உள்ளன. அதை அடுத்துத் தூபிக் கோபுரங்கள் உள்ளன. அவற்றின்மேலே வாழைப்பூ வடிவஅமைப்பு உள்ளது. உச்சியில் தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. தில்லி செங்கோட்டைக்குள்ளும், இராசியிலும் பேரரசர் அவுரங்கசீபு மசூதிகளைக் கட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் நெல்லை, இராமநாதபுரம், பசும்பொன் தேவர்திருமகனார் முதலிய தென் மாவட்டங்களில் இசுலாமியர் கீழ்த்திசை நாடுகளுடன் வணிகத்தொடர்பால் செல்வர்களாக விளங்கிய போது பல மசூதிகள் உருவாயின. அவை கருங்கல்லினால் கட்டப்பட்டு,தூண்களில் பாண்டி நாட்டுச் சிற்பக் கலை வேலைப்பாடுகள் கொண்டுள்ளன.

மசூதிகளுக்கு மானியம் அல்லது நன்கொடைகள் வழங்கப்பட்டவுடன் அது அறக்கட்டளை ஆகிவிடுவதில்லை. மசூதி கட்டப்பட்டிருக்கும் நிலம் அதைக் கட்ட நன்கொடை வழங்கியவரின் பிற நிலங்களில் இருந்து பிரிக்கப்பட்டு, போக்குவரத்திற்கும் மசூதிக்கும் பாதைகள் ஒதுக்கப்பட்ட பிறகே நன்கொடை வெறும் நன்கொடையாக இல்லாமல் அறக்கட்டளை 'வகுபு' (Wakf) எனும் மதிப்பைப் பெற்று முழுமையடைகிறது.

பொது மசூதியாக அறிவிக்கப்பட்ட இடத்தில் 1) சியா, 2) சன்னி, 3) அனபி, 4) இராபி, 5) மாலிகி முதலிய பிரிவுகள் எவ்வித பேதமுமின்றித் தொழலாம்.

ஒரு மசூதி பாழடைந்து போனாலும் அதை இடித்து, அதன் சேகரிப்பிலிருந்து புது மசூதிதான் கட்டலாம். தர்கா தோற்றத்தில் மசூதிபோல் இருந்தாலும் வேறுபட்டதாகும். இசுலாமியத் துறவிகள் நல்லடக்கம் ஆன இடங்களே அவை. மீ.ம.

**துணை நூல்கள்:**

**Lady Hartog**, Living India, Blackie & Son Limited, London, 1935.

**Titus Burckhardi**, Art of Islam, World of Islam Festival Publishing Company Ltd., Kent, England, 1976.

**Vincent A. Smith**, The Oxford Student's History of India, Oxford University Press, London, 1951.

**மசூலிப்பட்டணம்**: கிழக்கு இந்தியாவில் வங்காள விரிகுடாவை ஒட்டியுள்ள ஒரு துறைமுக நகரம். மசூலிப்பட்டணத்திற்குப் (Masulipatinam) பந்தர் என்றும், மசிலிப்பட்டினம் என்றும் வேறு பெயர்கள் உண்டு. இது ஐதராபாதிற்குக் கிழக்கே தென்கிழக்கில் 240 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள கிருட்டிணா

மாவட்டத்திற்கு இது தலைநகராக உள்ளது. முற்காலத்தில் இது சமுக்காளம், பல்வண்ண அச்சுத் துணி முதலியவற்றிற்கு மிகவும் பெயர் பெற்ற இடமாக இருந்தது. இப்பொழுது இங்கு அறிவியல் கருவிகள் செய்யப்படுகின்றன. நூல் நூற்பு, நெல் லரைத்தல் முதலிய தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. கிருட்டிணா ஆற்றின் கழிமுகத்தின் வட பகுதியில் உள்ள இந்நகருக்கும் சென்னைக்குமிடையே உள்ள தொலைவு ஏறத்தாழ 344 கி.மீ. ஆகும்.

ஆங்கிலேயர் கி.பி. 1611 - இல் முதன் முதலாக இங்குக் குடியேறினர். சோழமண்டலக் கரையில் அவர்கள் வாணிக மையத்தை ஏற்படுத்திய முதல் இடம் இதுவே. வாணிகச் சிறப்பை மிகுதியாகப் பெற்றிருந்த இந்நகரில் கி.பி. 1864-இல் கடும்புயலும் வெள்ளமும் ஏற்பட்டுப் பேரழிவு உண்டாயிற்று. அப்போது ஏறத்தாழ 30,000 மக்கள் மாண்டனர். இதன் மக்கள்தொகை, 1,38,525 (1981). தெ.பா.

*மசெண்டா* இத்தாலி நாட்டிலுள்ளதோர் ஊர். மசெண்டா (Magenta) இலம்பார்டியில் மிலானோ மாநிலத்தில் உள்ளது. மிலான் நகருக்கு 24 கி.மீ. மேற்கில் அமைந்துள்ள இந்நகரம் நெல் விளையும் பகுதியாகும். இங்குப் பட்டு நெசவாலை, சாராயம் காய்ச்சும் தொழிற்சாலை, மரச்சாமான்கள், தீக்குச்சி முதலியன செய்யும் தொழிற்சாலைகள், இரும்புத் தொழிற்சாலைகள் ஆகியன உள்ளன. இங்கு நடைபெற்ற போர் ஒன்று வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அப்போர் கி.பி. 1859 - ஆம் ஆண்டு சூன் மாதம் 4-ஆம் நாள் மூன்றாம் நெப்போலியன் பிரான்சுப் படை வீரர்களுக்கும் ஆசுத்திரிய நாட்டுப் படைத் தலைவர் பிராங்கு குயிலாய் (Frang Gyulai) என்பாருக்கும் இடையே நடைபெற்றது. அதனை ஆசுத்திரிய-சார்டீனியப் போரின் பகுதியாகக் கருத வேண்டும். அப்போரின்போது பிரான்சு-சார்டீனியப் படைகள் ஆசுத்திரியப் படைகளைத் தோற்கடித்தன. திசினோ (Ticino) ஆற்றைக் கடக்கப் பிரான்சுப் படைகளுக்கு உதவுவதே அப்போரின் நோக்கமாகும். கதிரொளி வீசத் தொடங்குமுன்னர் அப்போர் தொடங்கி அந்திப்போதில் ஆசுத்திரியர்கள் புறமுதுகிட்டு ஓடியதுடன் முடிவுற்றது. அப்போரில் துப்பாக்கிப் படைகளோ குதிரைப் படைகளோ பங்கேற்கவில்லை. பிரான்சுப் படைகளின் காலாட்படையின் மாபெரும் திறனே வெற்றிக்கு வழிவகை செய்தது. அப்போரில் 4,600 பிரான்சுப் படைவீரர்களும் 10,200 ஆசுத்திரியப் படைவீரர்களும் கொல்லப்பட்டனர். பிரான்சுப் படைத் தலைவர் 'காம்டி பாட்ரிசு டி மக்மகான், (Comte Patrice de Mac Mahon) என்பார் வெற்றிபெற்றார். பின்னர், இவர் பிரான்சு நாட்டின் பெருந்தளபதியாகவும்(Marshal) மசெண்டாவின் பிரபுவாகவும் ஆக்கப் பெற்றார். இரா.அ.

*மசோதா:* நாட்டின் சட்டங்களை இயற்றும் சட்டமன்றம், அவற்றுக்கு வாக்கெடுப்பின் வழியாக ஒப்புதலளிக்கு முன்பு, அவை பரிசீலனை நிலையிலிருக்கும்போது, அவற்றுக்கு மசோதாக்கள் (Bills) என்பது பெயர். மசோதாக்கள் சட்டங்களாக நிறைவேற்றப்படுமுன் அவை சட்டமன்ற உறுப்பினர்களாலோ, ஆங்கில நாட்டைப் போன்ற பாராளுமன்றக் குடியாட்சி முறையை உடைய நாடுகளில், தலைமை அமைச்சராலோ, அமைச்சர்களாலோ சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன.

சட்டங்கள் எனப்படுபவை சமூக நடக்கையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு அரசாங்க நிறுவனங்களால் வகுக்கப்படுகின்ற விதிகளை உடையவை.

**மசோதாக்களின் வகைகள்:** ஆங்கில நாட்டில் உள்ளது போலப் பாராளுமன்ற மக்களாட்சிமுறையை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகளிலெல்லாம், அவற்றின் நிருவாக உறுப்பாகிய மந்திரிசபை சட்டமன்றததின் பகுதியாக அல்லது ஒருபாகமாக இருப்பதால், சட்ட மசோதாக்களைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதில் அமைச்சர்கள் பெரும் பங்கு கொண்டுள்ளனர். ஆனால், ஐக்கிய அமெரிக்க நாட்டைப் போன்ற சில நாடுகளில் குடியரசுத்தலைவர் நிருவாக முறை (Presidential type of Executive) பின்பற்றப்படுகிறது; அவற்றில் நிருவாக அதிகாரியாகிய குடியரசுத்தலைவர் சட்டமன்றத்தின் உறுப்பினரல்லர். எனவே, அவர் சட்டமன்றத்தில் தாமே நேரடியாக மசோதாக்களைத் தாக்கல் செய்தல் இயலாது. ஆகையால், ஆங்கிலநாடு போன்ற பாராளுமன்றக் குடியாட்சி நாடுகளில் பெரும்பாலானவை அரசாங்க மசோதாக்களாகவும் (Government Bills), சில தனி உறுப்பினர் மசோதாக்களாகவும் (Private Member's Bills) இருக்கின்றன. அமெரிக்காவில் சட்டமன்றத்தில் (Congress) தாக்கல் செய்யப்படுகிற எல்லா மசோதாக்களுமே (அவை குடியரசுத் தலைவர்தம் கட்சி உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும்), தனி உறுப்பினர் மசோதாக்களே; அரசாங்க மசோதா என அங்கு எதுவும் இல்லை.

மேலும், ஆங்கிலநாட்டில் பொது நலமசோதா (Public Bill) எனவும் தனிநலமசோதா எனவும் (Private Bill) மசோதாக்கள பாகுபாடு செய்யப்படுகின்றன. பொதுநலமசோதா என்பது மக்கள் யாவருடைய நலனையும், அல்லது பெரும்பாலானவருடைய நலனையும் குறிப்பிடுவதாகும். எடுத்துக்காட்டாக, கட்டாயக் கல்வி மசோதா பெரும்பாலான மக்களைப் பற்றியதாகையால் அது பொதுநல

மசோதா ஆகும். தனிநலமசோதா என்பது ஏதேனு மொரு குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியைப் பற்றிய சட்டத்தை மாற்றுவதாகவோ, அல்லது ஒரு சில ஆள்களுக்குச் சில உரிமைகளை வழங்குவதாகவோ இருக்கும். எடுத்துக்காட்டாக, ஓர் இருப்புப்பாதை நிறுவனத்தாருக்குக் கட்டாயமாக நிலம் வாங்கும் உரிமையை வழங்கும் மசோதா ஒரு தனி நல மசோதா ஆகும்.

எல்லா அரசுகளிலும் அரசாங்கத்துக்கு இன்றி யமையாத நிதி வழங்குதலைக் குறிப்பிடும் மசோதா நிதிமசோதா அல்லது பணமசோதா (Money Bill) எனப்படும். ஆங்கிலநாட்டில் பாராளுமன்ற மக்க ளாட்சி முறையைத் தோற்றுவித்து, வளர்த்ததே, அந்நாட்டின் பாராளுமன்றம் பணமசோதாவின் மீது தன் முழுக்கட்டுப்பாட்டையும் நிறுவியதிலிருந்து தான் தொடங்குகிறது. பணமசோதாக்களும், பொது நல மசோதாக்களே என்றாலும், அவற்றுக்குச் சில சிறப்புகள் உள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 110-(1), 'வரி ஏதேனும் விதிப்பதற் கும், இந்திய அரசாங்கத்தின் சார்பாகக் கடன்களை வாங்குதற்கும், இந்தியத் திரள் நிதியிலும் இந்தியத் திடீர்ச்செலவின நிதியிலும் (Contigency Fund) பணத் தைச்செலுத்துதற்கும், அல்லது அதிலிருந்து செலவுக்கு எடுத்துக் கொள்ளுதற்கும், திரள்நிதியில் சாட்டப் படும் செலவினங்களுக்கும், நடுவண், மாநிலக் கணக்கு களைத் தணிக்கை செய்தற்கும், மேற்கூறிய யாவற் றுக்கும் அல்லது ஏதேனும் ஒன்றுக்கும் அதிகாரங் களை வழங்கும் மசோதா பணமசோதா ஆகும்' என்று கூறுகிறது. எல்லா நாடுகளிலும் பணமசோதா என்பதற்கு ஏறக்குறைய இதுவே பொருளாகும். பணமசோதாவின் ஆற்றல் மிகமுக்கியமானது. இதனை ஆங்கில நாட்டில் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையாகிய பொது மக்கள் சபையில்தான் தாக்கல் செய்தல் வேண்டும். அங்கு இதனைக் கொண்டுவந்து தாக்கல் செய்யும் உரிமைநிதி அமைச்சருக்கே உண்டு. இதனை அமைச்சருடைய விருப்பத்துக்கு மாறாகத் திருத்தவோ, தள்ளுபடி செய்யவோ சட்டமன்றம் முடிவெடுத்தால் அமைச்சரவை முழுவதும் பதவி நீங்குதல் வேண்டும். கீழ்ச் சட்டமன்றம் நிறை வேற்றிய பணமசோதாவில், 'நான்இந்த மசோதாவை ஒரு பண மசோதா என்று சான்றுரைக்கிறேன்' என்று ஒரு சான்றுரையைக் கீழ்ச் சட்டமன்றத் தலைவர் வழங்கி, அதனோடு இணைத்து மேல்சபையின் பரிசீல னைக்கும் ஒப்புதலுக்கும் விடுத்தல் வேண்டும்; மேல் சபை ஒரு மாத காலத்துக்குள் அதை ஒப்புக் கொண் டாலும், அல்லது ஒப்புக் கொள்ளாமல் இருந்தாலும் அது சட்டமாகிவிடும். இந்தியாவில் 14 நாள்கள் தவணை கொடுக்கப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவ ராலமர்த்தப்படும் வரவு செலவுத் திட்ட இயக்குநர் என்ற அதிகாரி (Director of the Bureau of the Budget) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை வரைந்து கீழ்ச் சபையாகிய பேராளர் மன்றத்தில் கொடுத்து விடுகிறார். அவரோ, குடியரசுத் தலைவரின் நிதி அலுவலரோ பேராளர் மன்ற உறுப்பினருமல்லர், ஆளவை மன்ற (Senate) உறுப்பினருமல்லர். ஆகை யால், அவரளிக்கும் பணமசோதாவை இரண்டு மன்றங்களும், அவற்றின் குழுக்களும் உருத்தெரியாத அளவுக்கு மாற்றி நிறைவேற்றுகின்றன. மற்றெல்லா நாடுகளிலும், ஆங்கில நாட்டிலுள்ளது போன்றே பணசோதா வரையப்பட்டுத் தாக்கல் செய்யப் பட்டு, நிறைவேற்றப்படுகிறது.

**மசோதாக்கள் சட்டங்களாக நிறைவேற்றப்படும் நிலைகளும், குழுக்களும்:** ஆங்கில நாட்டுப் பாராளு மன்றத்தில் மசோதாக்கள் 3 வாசிப்பு நிலைகளைக் கடந்தால்தான் சட்டங்களாக நிறைவேறுதலியலும் முதல் வாசிப்பில் மசோதா மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதும், அதன் தலைப்பை அவர் உரக்கச் சொல்லுகிறார். இயல்பாக, இந்த முதல் வாசிப்புக் கட்டத்தில் எந்த உறுப்பினரும் மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை. மசோதா அச்சிடப்படு கிறது. இரண்டாவது வாசிப்பு நிலையில் மசோதா வைத் தாக்கல் செய்த உறுப்பினர் அதை இரண்டா வது வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளலாமென்று கூற வும், உறுப்பினர்கள் மசோதாவின் விவரங்களைப் பற்றி எதுவும் சொல்லாமல், அதன் கொள்கைகளை மட்டும் விவாதித்து வாக்கெடுப்பின் வழியாகக் கொள்கைகளை ஒப்புக் கொள்ளுதல் வேண்டுமா, வேண்டாமா என்று முடிவுசெய்கின்றனர். மூன்றாவது நிலைக்குழு ஆய்வு நிலை ஆகும். பணமசோதாவாயின் அது முழுமன்றக் குழுக்களாகிய நிதிவழங்கு குழு, நிதி வாங்கும் குழு ஆகியவற்றின் ஆய்வுக்கும், திருத் தங்களுக்கும், திரும்பவும் பொதுமன்றத்துக்கு அறிவிப் புக்காகவும் அனுப்பப்படுகிறது. பொதுநல மசோ தாக்கள் நிலைக்குழுக்களின் பரிசீலனைக்கும், சில தனிப்பட்ட பொருட்களைப் பற்றிய மசோதாக்கள் தேர்வுக் குழுக்களின் ஆய்வுக்கும், தனிநலன் பற்றிய மசோதாக்கள் அவற்றுக்கென்றே அமைக்கப்பட்ட நால்வரடங்கிய சட்டமன்றக்குழுவுக்கும் அனுப்பப்படு கின்றன. எவ்வாறாயினும் மன்றக் குழுவின் பரி சீலனைக்கு அனுப்பப்பட்ட மசோதாவை, அது பரி சீலனை செய்து, மசோதாவையும், அதன் மீதான தனது அறிக்கையையும் மன்றத்துக்குத் திருப்பி அனுப்புதல் வேண்டும். ஐக்கிய அமெரிக்க நாட் டுச் சட்டமன்றக் குழுக்களோ தமக்கு அனுப் பப்பட்ட மசோதாவைப் பரிசீலனை செய்யவும்,

முழுவதும் மாற்றி அமைக்கவும், மசோதாவை மன்றத்துக்குத் திரும்பி அனுப்பாமல் விட்டு விடவும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. ஆங்கில நாட்டுப் பொதுமக்கள் மன்றத்தில் மசோதா கடந்து செல்ல வேண்டிய நான்காவது நிலை அறிக்கை நிலை ஆகும். இதில் குழுவிடமிருந்து மசோதாவின்மீது கிடைக்கப்பெற்ற அறிக்கையின் விவரங்களைப்பற்றி உறுப்பினர்கள் விவாதம் செய்கின்றனர். மசோதா வின் மீது திருத்தத் தீர்மானங்களை உறுப்பினர் கொண்டுவர, அவை இந்த அறிக்கை நிலையில் ஏற்றுக் கொள்ளப்படலாம்; அல்லது தள்ளுபடி செய்யப் படலாம். இறுதியான ஐந்தாம் நிலையில் மசோதா மூன்றாவது வாசிப்பு நிலையில் மன்றத்தின் வாக் கெடுப்புக்கு விடப்பட்டு, பெரும்பான்மை வாக்கு களால் ஏற்றுக் கொள்ளப்படலாம் அல்லது தள்ளுபடி செய்யப்படலாம். ஏற்றுக் கொள்ளப்பட்டால், அது மேல் சபைக்கு அனுப்பப்பட்டு, அங்கும் குழு ஏதேனு மொன்றின் பரிசீலனைக்கு உள்ளாகி நிறைவேறி, அரசி அல்லது அரசரின் ஒப்புதலைப் பெற்றுச் சட்ட மாக வெளிவருகிறது. இவ்வாறு மசோதாக்கள் சட்டங்களாக நிறைவேற்றப்படுமுன் ஆங்கிலநாட்டுப் பாராளுமன்றத்தில் பல நிலைகளைக் கடந்து செல்லு தல் வேண்டும். பா.சு.

**துணை நூல்கள்:**

Hanson, H.H and Wiseman, H.V., Parliament at Work, Stevens & Sons, London, 1962.

Ilbert, C., Parliament, Home University Library, Oxford, 1948.

*மஞ்சட்கடல்*: இது பசிபிக்குப் பெருங் கடலின் ஒருபகுதியாகும். இது சீனாவுக்கும் கொரியாவுக்கு மிடையே உள்ள நீர்ப்பகுதி. இதன் மிக்க அளவு ஆழம் 152.5 மீ. இதில் உள்ள முக்கிய கடற்கூம்புகள் போ காய் (Po Hai), கொரியா விரிகுடா, இலியோ -தங்கு (Liao-tung) வளைகுடா ஆகியனவாம். கொரியா முந்நீரகத்திற்குத் தெற்கில் இது கிழக்குச் சீனக்கடல் என்ற பெயரைப் பெறுகிறது. மஞ்சட் கடலின் (Yellow Sea) நீளமும் அகலமும் தனித் தனி 640 கி.மீ. இதில் கலக்கும் முக்கிய ஆறுகள் மஞ்சள் ஆறு, குவாய் ஆறு, இலியாவோ (Liao) ஆறு, பாய் நதி, யாலு ஆறு, ஆன் (Han), உவாங்கோ (Hwang go), சாங்கு (Shanghu) முதலியனவாம். இக்கடலின் மொத்தப் பரப்பு 12,43,194 ச.கி.மீ. இதில் கலக்கும் உவாங்கு(Huang) ஆறு மஞ்சள் நிற வண்டல் மண் ணைக் கடலுக்குக்கொண்டு வருவதால் இக்கடல் மஞ் சட்கடல் எனக் குறிப்பிடப்படுகிறது. தெ.பா.

*மஞ்சரிப்பா*: மறைந்துவிட்ட தமிழ் நூல்களுள் இந்நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தொண்டை மண்டல சதகம், 'வானப்ரகாச புகழ்க்கிருட்டிண ராயர்க்கு மஞ்சரிப்பா' என்று இந்நூலைக் குறிப்பிடு கிறது. காஞ்சிபுரத்தில் ஞானப்பிரகாசர் மடத்தின் தலைவராக இருந்த கச்சிக் கலம்பக ஆசிரியர் ஞானப் பிரகாசர்தான் விசயநகரத்து அரசர் கிருட்டிணரா யர் மீது மஞ்சரிப்பா எனும் நூலை இயற்றினார் என்று கூறுவர். எனவே, கிருட்டிண தேவராயர் ஆட்சிக் காலமான கி.பி.1509-க்கும் கி.பி. 1529-க்கும் இடையே இந்நூல் இயற்றப்பட்டிருக்கக் கூடும் என லாம். இந்நூல் புறத்திணையும் அகத்திணையும் விரவிவந்த செய்யுட்களைக் கொண்டது என்பர். இந்நூல் குறித்து வேறு குறிப்புகள் கிடைக்கவில்லை. சா.உ.

*மஞ்சி விரட்டு*: காண்க: ஆட்டங்களும் விளை யாட்டுகளும்.

*மஞ்சுகோ*: சேய்மைக் கிழக்கில் இருந்த முன்னா ளைய நாடு. சீனாவுக்கு உரியனவாக இருந்த மஞ்சூரி யாவும், செகோல் மாநிலமும் இதில் அடங்கியிருந் தன. சப்பானியர் கி.பி.1931-இல் மஞ்சூரியாவில் படை யெடுத்து மஞ்சுகோ(Manchukuo)என்னும் புதிய நாட் டைக் 1932-இல் உருவாக்கினர். இது பெயரள வில் ஒரு சுதந்திர நாடு. ஆனால், உண்மையில் இது சப்பானியரின் கைப்பாவையாகவே இருந்தது. இதன் ஆட்சி முறையைச் சப்பானிய இராணுவம் கட்டுப்படுத்தி வந்தது. உள்நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்புகளைச் சமாளிக்கச் சப்பான், தொடர்ந்து கொரில்லாப்போர் முறையைக் கையாண்டது. இப் பகுதியை ஒரு வலிமை மிக்க போர்த் தளமாக்க வேண்டுமென்பதே சப்பானின் நோக்கமாக இருந்தது. ஆதலால், இங்குத் தொழில்கள் இருப்புப் பாதை வசதிகள் முதலியன வளர்ச்சியடைந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ச் சப்பானியர் தோல்வி யடைந்ததின் விளைவாகச் சீனாவின் ஆதிக்கம் மீண்டும் இங்கே ஏற்படுத்தப்பட்டது. தெ.பா.

*மஞ்சூரிய நெருக்கடி* (1931 - 32): பொது வுடைமைச் சீனாவின் வடகிழக்கே மஞ்சூரியா உள் ளது.இது இப்பொழுது சீனாவின் ஒரு பகுதியாகும்.இப் பகுதியில் 1931 - 32 - ஆம் ஆண்டுகளில் சப்பான் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. அதனால், பல பன் னாட்டு விளைவுகள் ஏற்பட்டன. இந்த நிகழ்ச்சியே மஞ்சூரிய நெருக்கடி என்று கூறப்படுகிறது.

முதல் உலகப்போர் நடைபெற்றபோது சீனா மிகவும் வலிமை குன்றிய நாடாக இருந்தது. அப் போது அந்நாட்டின் பல பகுதிகளைத் தன் ஆதிக் கத்தின் கீழ்க் கொண்டுவரச் சப்பான் விரும்பியது.

எனவே, 1915-ஆம் ஆண்டு சனவரி மாதம் சப்பான் இருபத்தொரு வேண்டுகோள்களைச் சீன அரசிடம் கொடுத்தது. அவற்றுள் பெரும்பாலானவற்றைச் சீன அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய அவல நிலையில் இருந்தது. அதன் விளைவாக மஞ்சூரியாவின் தென் பகுதி சப்பானின் பொருளாதார ஆதிக்கத்தின் கீழ் வந்தது. அதற்கடுத்த ஆண்டுகளில் சப்பான் தென் மஞ்சூரியாத் தொடர்வண்டிப் பாதையை வலுப்படுத்தியது. மஞ்சூரியாவில் பொதுவுடைமை உருசியாவின் ஆதிக்கம் ஏற்படுவதைச் சப்பான் தடுக்க முயன்றது. மஞ்சூரியா முழுவதிலும் தன் வணிகப் பொருள்களை விற்கச் சப்பான் விரும்பியது. எனவே, 1931-ஆம்ஆண்டு செப்டம்பர் மாதம் மஞ்சூரியாவிலிருந்த சீனப்படைகளைச் சப்பான் தாக்கியது. 'முக்டென்' (Mukden) என்னும் இடத்தில் போர் தொடங்கியது. எல்லா இடங்களிலும் சப்பானியப் படைகள் வெற்றிகளைக் குவித்தன. சீனப்படைகள் படுதோல்வி அடைந்தன. சப்பானியப் படைகளை முறியடிக்க, சீனாவை ஆட்சி செய்து வந்த சியாங்கை – சேக்கின் படைகளினால் இயலவில்லை. சீன மக்கள் சப்பானின் ஆக்கிரமிப்புகளை எதிர்த்து நாடு முழுவதும் சப்பானுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். மேலும், கொதிப்படைந்த சப்பான் 1932-ஆம் ஆண்டு சனவரி மாதம் சீனாவின் முக்கியமான நகரமாகிய சாங்கையைக் கடுமையாகத் தாக்கியது. அந்த நேரத்தில் இங்கிலாந்தும், ஐக்கிய அமெரிக்க நாடும் தங்கள் வாணிக நலன்களைக் காக்கப் படைகளை அனுப்பின. அந்த நிலையில் சப்பான் சாங்கையிலிருந்து விலகிக் கொண்டது.

மஞ்சூரியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்ட சப்பான் 1932–ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் மஞ்சூரியாப் பகுதியில் மஞ்சூகோ என்ற அரசாங்கத்தை அமைத்தது. சப்பானின் ஆதிக்கத்திற்குட்பட்ட தனி நாடாக மஞ்சூகோ செயற்படத் தொடங்கியது.

இதற்கிடையில் சப்பானின் ஆக்கிரமிப்புகளை எதிர்த்துச் சீனா சருவதேச சங்கத்திடம் முறையிட்டது. சருவதேச சங்கம் 1932–ஆம் ஆண்டின் இடைப் பகுதியில் இலிட்டன் குழுவை அனுப்பியது. அக்குழு மஞ்சூரியாவிற்குச் சென்று, மஞ்சூரியச் சிக்கலை ஆய்ந்தறிந்து, சப்பானின் ஆக்கிரமிப்புகளை வன்மையாகக் கண்டித்தது. மஞ்சூரியாவிலிருந்து சப்பான் வெளியேற வேண்டுமென அக்குழு கூறியது. சப்பான் அக்கண்டனத்தையும் ஆணையையும் புறக்கணித்தது. மேலும், பன்னாட்டுச் சங்கத்தின் உறுப்பு நாடாக இருந்த சப்பான் அதிலிருந்து விலகியது (பிப்பிரவரி 1933).

இந்த மஞ்சூரிய நெருக்கடி பல பன்னாட்டு விளைவுகளை ஏற்படுத்தியது. சப்பான் ஒரு வலிமை பொருந்திய நாடு என்பதும் அதன் ஆக்கிரமிப்புகளைத் தடுப்பது எளிதன்று என்பதும் தெளிவாயின. சப்பான் சருவ தேசச் சங்கத்திலிருந்து விலகியதால் அதைத் தொடர்ந்து செருமனி, இத்தாலி, முதலான நாடுகளும் அச்சங்கத்திலிருந்து விலகின. அதற்கடுத்த ஆண்டுகளில் அச்சங்கம் வலிமைகுன்றி இறுதியாக அழிந்தது.

இரண்டாம் உலகப் போரில் தோல்வியடைந்த சப்பானிடமிருந்த மஞ்சூரியா கைப்பற்றப்பட்டு 1945-ஆம் ஆண்டு சீனாவிற்குக் கொடுக்கப்பட்டது.

நா.ப.


**மஞ்சூரியா** சீன மக்கள் குடியரசின்(பொதுவுடைமைச் சீனா)வடகிழக்கே உள்ள பெரு நிலப் பகுதியாகும். இப்பகுதியில் இப்பொழுது சீனாவின் மூன்று மாநிலங்கள் உள்ளன. அவை வடக்கே எய்லுங்கியாங்கு (Heilungkiang), மத்தியில் கிரின் (Kirin), தெற்கே இலையோனிங்கு(Liaoning) ஆகியவை. மஞ்சூரியாவின் நிலப்பரப்பு ஏறத்தாழ 15,54,000 ச.கி.மீ.

மஞ்சூரியாவில் பெரிய கிங்கான் (Great Kinghan), சிறிய கிங்கான் (Little Kinghan), சேகோல் (Jehol) முதலிய மலைத்தொடர்கள் உள்ளன. அவற்றுக்கு இடையே பெரும் மத்திய சமவெளி உள்ளது. மஞ்சூரியாவின் பெரும்பாலான மக்கள் அச்சமவெளியில்தான் வாழ்கிறார்கள். இலியா (Lia), சுங்காரி (Sungari) முதலிய ஆறுகள் இங்கே பாய்கின்றன. யாலு (Yalu), ஆமுர் (Amur) அதன் கிளை ஆறு உசூரி (Ussuri) ஆகியவை மஞ்சூரியாவிலுள்ள ஏனைய ஆறுகள் ஆகும்.

இங்குக் குளிர்காலம் கடுமையானதாகவும், நீண்டதாகவும் இருக்கும். ஆண்டில் ஆறுமாதம் பனி வீழ்ச்சி உள்ளது. குளிர் காலத்தில் வெப்பநிலை 0° க்குக் கீழே குறைகிறது. கோடைக் காலமாகிய சூலை – ஆகசுட்டு மாதங்களில் வெப்பம் 90 பாகை பா. வரை உயர்கிறது. கோடைக்காலம் குறுகியதாகவே உள்ளது. மஞ்சூரியாவின் மத்தியிலுள்ள பெருஞ் சமவெளி வேளாண்மைக்கு ஏற்ற வளமான பகுதியாகும். இங்குள்ள மக்களில் 75 விழுக்காட்டினர் குடியானவர் ஆவர். இங்கு உற்பத்தி செய்யப்படும் கேயோலியாங்கு (Kaoliang) என்னும் தானியம் மஞ்சூரியாவில் வாழும் மக்களின் முக்கிய உணவாகும். சோயாமொச்சை, கோதுமை, தினை ஆகியவையும், தெற்கில் அரிசி, பழவகைகள், காய்கறிகள் முதலானவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மஞ்சூரியாவின் மேற்குப் பகுதியில் ஆடு, மாடுகளை மேய்த்தல் முக்கியமான தொழிலாகும்.

விரிவான தொடர்வண்டிப் பாதைகள் இங்குப் போடப்பட்டுள்ளன. அவை உருசியா, சப்பான்,

சீனா ஆகிய நாடுகளால் அமைக்கப்பட்டவை. இரும்பு, எஃகு, மிகுதியாக இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. தெற்கே உள்ள அன்சன் (Anshan) என்ற நகரம் இரும்பு, எஃகு உற்பத்திக்குப் புகழ்பெற்ற நகரமாகும். இங்கிருந்து முக்டென் (Mukden), ஆர்பின் (Harbin), தெய்ரன் (Dairan) ஆகிய நகரங்களுக்கு இரும்பும் எஃகும் அனுப்பப்படுகின்றன. நிலக்கரியும் மஞ்சூரியாவில் மிகுதியாகக் கிடைக்கின்றது. ஆர்பின் நகரத்திற்கருகே தாசிங்குப் பகுதியில் சீனாவின் எண்ணெய் உற்பத்தியில் பாதிக்குமேல் கிடைக்கின்றது. உயர்ந்தவகை மரம் மஞ்சூரியாவில் மிகுதியாக வளர்கிறது. தெய்ரன் முக்கிய துறைமுகமாகும். அதன் அருகில் உள்ள போர்ட்டு ஆர்தர் (Port Arthur) வரலாற்றுச் சிறப்பு மிக்க கப்பல் படைத்தளம் ஆகும்.





மஞ்சூரியா

இத்தனைச் சிறப்புகள் மிக்க மஞ்சூரியா பழங்காலத்தில் மஞ்சுப் பழங்குடியினரால் ஆட்சிசெய்யப்பட்டது. நூர்காசி (Nurhachi) என்ற மஞ்சுப் பழங்குடியினரால் ஆட்சிசெய்யப்பட்டது. தலைவன் எல்லாப் பழங்குடியினரையும் ஒற்றுமைப் படுத்தி ஆட்சி செய்தான். அவன் சீனாவையும் வென்றான். மஞ்சு வமிசம் கி.பி. 1644-1912 வரை சீனாவை ஆட்சி செய்தது. உருசியா 1900-ஆம் ஆண்டு முதல் மஞ்சூரியாவில் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றது. அதேநேரத்தில் சப்பானும் மஞ்சூரியாவின் இயற்கைச் செல்வங்களைச் சுரண்டுவதற்காக அதைக் கைப்பற்ற முயன்றது. அதன் விளைவாக 1904-1905 -ஆம் ஆண்டுகளில் உருசியா-சப்பானியப் போர் நடைபெற்றது. போரில் உருசியா தோற்கடிக்கப்பட்டது. எனவே, மஞ்சூரியாவில் சப்பானின் செல்வாக்குப் பெருகியது. எனினும் சீனாவின் ஒரு பகுதியாகவே மஞ்சூரியா இருந்தது. பின்னர் 1931 – ஆம் ஆண்டுச் சப்பான் சீனப்படைகளைக் கடுமையாகத் தாக்கித் தோற்கடித்து மஞ்சூரியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டது. அதன் பின்னர் 1931-45 – ஆம் ஆண்டுகளுக்கிடையில் மஞ்சூரியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டது. சப்பானின் ஆதிக்கத்திற்கு (1931-45) உட்பட்டிருந்தது. இரண்டாம் உலகப் போரில் சப்பான் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அப்பகுதி கைப்பற்றப்பட்டு மீண்டும் சீனாவுக்கே வழங்கப் பட்டது. நா.ப.

**மட்டக்களப்பு**: இது சிரீலங்காவில் மட்டக்களப்பு (Batticaloa) மாவட்டத்தின் தலைநகர். இது ஒரு துறைமுகப் பட்டினம். இதன் பரப்பு 7476 ச.கி.மீ. இதை கி.பி. 1622 – இல் போர்ச்சுகீசியர் கைப்பற்றினர். பின்னர்த் தச்சுக்காரர் (Dutch) கி.பி. 1638-இல் இதைத் தம்வசப்படுத்தினர். ஆங்கிலேயருக்கு இது கி.பி. 1796-இல் சொந்தமாயிற்று. சிரீலங்காவில் தமிழர் மிகுதியாக வாழும் மாவட்டங்களுள் இது குறிப்பிடத்தக்கது. சுதந்திர சிரீலங்காவில் முக்கிய துறைமுகங்களுள் ஒன்றாகிய மட்டக்களப்பு, ஒரு தீவின் கழி ஒன்றில் அமைந்து தலைநிலத்துடன் பாலத்தினால் இணைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒருவகை ஒட்டு மீன் இரவில் இனிய ஒலி எழுப்பி வந்ததாகக் கூறப்படுகிறது. விபுலானந்த அடிகளார் பிறந்த ஊர் இதுவே. இங்கு வானாராய்ச்சி நிலையம் ஒன்று உளது. இம் மாவட்டத்தில் தென்னை மரங்களும் காய்கறித் தோட்டங்களும் மிகுதியாக உள்ளன. தெ.பா.

**மடகாசுகர்** உலகத்திலுள்ள தீவுகளில் நான்காம் மிகப்பெரிய தீவாகும். இது இப்பொழுது மக்களாட்சிக் குடியரசாகச் செயற்பட்டு வருகிறது. தென்கிழக்கு ஆப்பிரிக்காவின் கிழக்கே 400 கி.மீ. க்கப்பால் இந்தியப் பெருங்கடலில் இந்தத் தீவு அமைந்துள்ளது. இதன் தலைநகரம் அண்டனானாரியோ (Antananario). இந்தத் தீவு வடக்குத் தெற்காக 1550 கி.மீ. நீளமும், கிழக்கு மேற்காக 575 கி.மீ. அகலமும் கொண்டது. இதில் மலைத்தொடர்களும் பள்ளத்தாக்குகளும் ஆறுகளும் வெப்பமண்டலக் காடுகளும் மிகுதியாக உள்ளன.

மடகாசுகரில் (Madagascar) வாழும் மக்கள் மலகாசி (Malagasy) என்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் ஆப்பிரிக்க மக்களினின்று முழுதும் மாறுபட்டு இருக்கின்றனர். மொழியிலும் பண்பாட்டிலும் இவர்கள் இந்தோனேசியர்களோடு (Indonesians) தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர்.





மடகாசுகர்

உடல் தோற்றத்தில் மலாயர்களைப் (Malayans) போல் தோன்றுகின்றனர். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இவர்கள் அங்குச் சென்றிருக்கக்கூடுமென்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மலகாசி அந்நாட்டின் அரசாங்க மொழியாகும். அது இந்தோனேசிய மொழியோடு தொடர்புடையதாக உள்ளது. இங்கு ஆங்கிலமும், பிரெஞ்சு மொழியும் பேசப்படுகின்றன. நாட்டின் பெரும்பாலான மக்கள் கிறித்தவ சமயத்தைப் பின்பற்றுகின்றனர். மற்றவர்கள் இசுலாமிய சமயத்தையும் வேறு பல பிரிவுகளையும் பின்பற்றுகின்றனர். இந்நாட்டின் மக்கள் தொகை ஏறத்தாழ ஒரு கோடி ஆகும்.

இந்நாட்டின் முக்கியமான தொழில் வேளாண்மை. அரிசி மிகுதியாக இங்கு விளைவு செய்யப்படுகிறது. காப்பி, சருக்கரை, இலவங்கம், அரிசி முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கால்நடைகளும் மிகுதியாக இந்நாட்டில் உள்ளன. காரீயம், அபிரகம், செம்பு, நிக்கல் முதலான கனிப்பொருட்களும் இங்குக் கிடைக்கின்றன.

முதன்முதலில் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் அராபிய வணிகர்கள் இத்தீவிற்கு வந்தார்கள். பின்னர் கி.பி. 1500-ஆம் ஆண்டில் போர்ச்சுகீசியர்கள் வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து பிரான்சுக்காரர்களும், தச்சுக்காரர்களும் இங்கு வந்து வாணிகம் செய்தனர். இத்தீவு முழுவதும் கி.பி. 1695-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது.

அந்நாட்டின் குடியேற்றமாக 1958-ஆம் ஆண்டு வரை மடகாசுகர் இருந்தது. இத்தீவு 1958-ஆம் ஆண்டு தன்னாட்சி பெற்று 1960-ஆம் ஆண்டு முழுச் சுதந்திரம் பெற்றது. அதே ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடாகவும் சேர்ந்தது. இத்தீவு 1960-இல் மலகாசிக் குடியரசு என அறிவிக்கப்பட்டது.

இந்நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து 1972-வரை பிலிபெர்ட் திசிரானானா (Philibert Tsiranana) என்பவர் குடியரசுத் தலைவராக இருந்தார். அவர் ஆட்சிக்காலத்தில் நடுவண் அரசு வலிமை பெற்றது. பிரான்சுக் கலைப்பண்புகள் மிகுதியாகப் பரவின. உள்நாட்டு மக்களைவிடக் கடலோரப் பகுதி மக்கள் மிகுதியான நன்மைகளைப் பெற்றனர். தென்னாப்பிரிக்காவில் நிலவிய வெள்ளையர் அரசுடன் நெருங்கிய பொருளாதார உறவுகள் ஏற்பட்டன. பிரான்சு நாட்டின் பொருளாதாரச் செல்வாக்கு, மலகாசிக் குடியரசில் மிகுந்தது. திசிரானானாவின் கொள்கைகளை எதிர்த்து உள்நாட்டில் எதிர்ப்புகள் வலிமையடையவே இவர், 1972 – இல் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும், தளபதி காப்ரியேல் (Gabriel) இராமனன்டோசாவைத் (Ramanantosa) தலைமை அமைச்சராக்கி, அவரிடம் ஆட்சி அதிகாரங்களை ஒப்படைத்தார். தேசிய கருத்தறிவாக்கெடுப்பு, (National Referendum) 1972-அக்டோபரில் நடைபெற்றது. அதன்படி காப்ரியேல் இராமனன்டோசா ஆட்சி அமைப்பு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. திசிரானானா பதவியிலி

ருந்து விலகினார். இராமனன்டோசாவின் கொள்கை திசிரானானாவின் கொள்கையினின்று முற்றிலும் வேறுபட்டது. பிரான்சு இராணுவமும் கடற்படைக ளும் நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டன. மலகாசி, பிராங்கு மண்டலத்திலிருந்து (Franc Zone) விலகி யது. சோவியத்து நாடுகளுக்கும் மலகாசிக்குமிடையே நட்புறவு ஏற்பட்டது. நாட்டில் மீண்டும் அமைதி யின்மை பெருகவே, 1975-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் இராமனன்டோசா பதவியிலிருந்து விலகினார். உடனே பதவிப் பொறுப்பேற்ற இரிச்சர்டு இராட்சி மந்திரவா (Richard Ratsimandrava) ஆறு நாள்கள் தான் பதவியிலிருக்க முடிந்தது. சில இராணுவ வீரர்கள் இணைந்து அவரைக் கொலை செய்துவிட் டனர். பின்னர் திதியர் இராட்சிராகா (Didier Ratsiraka) 1975, சூன் மாதம், நாட்டுத் தலைவ ராகப் பதவி ஏற்றார். அதன் பிறகு பொது உடைமை நாடுகளுடன் மலகாசி நெருங்கிய உறவுபூண் டது. பின்னர் 1975, சூன் 21-ஆம் நாள் நடத்தப்பட்ட கருத்தறி வாக்கெடுப்பில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் இராட்சிராகா குடியரசுத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவர் 1976-ஆம் ஆண்டு சனவரி 4-ஆம் நாள் குடியரசுத் தலைவராகப் பதவி உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார். அவர் இராம னன்டோசாவின் கொள்கையைப் பின்பற்றி வங்கி கள், சுரங்கங்கள் ஆகியனவற்றைத் தேசிய மயமாக் கினார். புரட்சியைப் பாதுகாக்கும் பொருட்டு 1977- இல் தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது. இது முன்னர்ச் சட்ட விரோதமாக்கப் பட்ட அரசி யல் கட்சிகளின் கூட்டமைப்பாகும். இதற்கு இராட்சி ராகா தலைமை ஏற்றார். அதன் விளைவாக மலகாசி யின் அரசில் குடியரசுத் தலைவர் கொண்டிருந்த செல்வாக்கு மிகுதியாக்கப்பட்டது.

இக்குடியரசின் மக்களுள் பெரும்பாலோர் வேளாண்மையை மேற்கொண்டுள்ளனர். நெல் மிகு தியாகப் பயிரிடப்படுகிறது. சோளம், வாழை, கரும்பு, காப்பி, தேயிலை, உருளைக்கிழங்கு ஆகியன வும் பயிரிடப்படுகின்றன. மக்களுள் 10 விழுக்காட்டி னருக்குக் குறைவானவர்கள் தொழிலில் ஈடுபட்டுள் ளனர். புகைப்பூஞ்சுருள், துணி ஆகியவை தயாரிக்கப் படுகின்றன. பலர் கட்டுமானத் தொழிலில் ஈடுபட் டுள்ளனர். சிலர் சுரங்கங்களில் வேலை செய்கின்ற னர். ஆடு மாடு மேய்த்தல், பன்றிவளர்ப்பு, மீன் பிடித்தல், மரம் அறுத்தல் ஆகியவை மற்றத் தொழில்களாகும். இங்குள்ள நீர்வீழ்ச்சிகள் மின் உற் பத்திக்குப் பேருதவியாக உள்ளன. மக்களுள் சிலர் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இங்கு 8500 கி.மீ. நீளத்திற்குப் பெருவழிகள் உள்ளன. இங்கு 880 கி.மீ.நீள இருப்புப் பாதை உள்ளது. 50 விமான நிலையங்கள் உள்ளன. தானதாவே (Tanatawe) முக்கிய துறைமுகமாகும். சிமெண்டு, துணிவகைகள், பாறைஎண்ணெய், குடி வகைகள், பதனிடப்பட்ட உணவு வகைகள் ஆகியவை இறக்கு மதி செய்யப்படுகின்றன. காப்பி, புகையிலை, பதனி டப்பட்ட மீன் போன்றவை ஏற்றுமதி செய்யப்படு கின்றன. நா.ப.& அர.இரா.

*மடங்கள்*: காண்க: திருமடங்கள்.

*மடல்*: மடல் என்பது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

மடலூர்தல், தொல்காப்பியம், கலித்தொகை, குறுந்தொகை, திருக்குறள் முதலான நூல்களில் காணப்படுகின்றது. மடல் என்ற சொல் படிப்படியாக மடலேறுதலாகிப் பின்னர்அது பிரபந்தத்திற்காயிற்று. இது கோவைகளிலும் காணப்படுகின்றது. மடல் தனி நூலாகவும் உள்ளது. பன்னிரு பாட்டியல், இலக்கண விளக்கம், வெண்பாப் பாட்டியல், முத லான நூல்கள் வளமடலுக்கு இலக்கணம் கூறுகின் றன.

மடல் என்னுந் துறையை விரிவாக்கித் திரு மங்கையாழ்வார், 'சிறிய திருமடல்' என்ற பெயரால் ஒரு பிரபந்தம் பாடியுள்ளார். இது நாலாயிரத் திவ்வி யப்பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளது. அதனை அடுத் துப் பெரிய திருமடல் ஒன்றையும் அவரே பாடி யுள்ளார். திருமால் மீது காதல் கொண்ட ஆழ்வார் அவரைஅடைய இயலாத நிலையில், மடலூர்வன் என் னும் கருத்துப் பட, நாராயணன் என்றசொல்லுக்கு எதுகை வருமாறு அமைத்துச் சிறிய திருமடலையும், கண்ணன் என்ற சொல்லுக்கு எதுகையாகச் சொற் களை அமைத்துப் பெரிய திருமடலையும் பாடியுள் ளார். 'உலாமடல்' என்பது ஒன்றுண்டு. அப்பிரபந் தம் உலாவிற்குரிய இலக்கணத்தினையும், மடலுக் குரிய இலக்கணத்தினையும் கொண்டது.

'வருண குலாதித்தன் மடல்' என்னும் நூல், நாகப் பட்டினத்தே சீரும் சிறப்புமாக வாழ்ந்த வள்ளல் வருணகுலாதித்தனைப் பாட்டுடைத் தலை வனாகக் கொண்டு பாடப்பட்டது; கலிவெண்பா வினால் 470 கண்ணிகளைக் கொண்டு விளங்குவது. அதில், தலைவி வருணனை, தலைவன் வருணனை, அவர்கள் ஒருவரை ஒருவர் காதலித்தல், மையல் கொள்ளல், அவர்தம் மெய்ப்பாடு, பிரிதல், அவள் சென்றபோது அவள் காலடி மண்ணில் பதிந்துள்ள தைக் கண்டு அச்சுவடுகள் அனைத்தையும் கண்ணில் ஒற்றிக் கொள்ளுதல், நனவில் கலவியின்பம் பெற மாட்டாது, கனவில் பெற்றுத் துயிலுணர்ந்து ஏமாறு தல், பின் மடலேறுவதே ஆன்றோர் வகுத்த வழி

என்று துணிதல் முதலியன கூறப்பட்டுள்ளன. இடை யிடையே நல்ல வருணனைகள் காணப்படுகின்றன.

'சித்திரமடல்' என்பது காளமேகப் புலவரால் பாடப்பட்டது. அதன் முழுப்பெயர் 'பாவை தெய் வங்கள் பெருமாள் சித்திரமடல்' என்பதாகும். அது 348 அடிகளைக் கொண்டது.

மடலூர்ந்து, பின்னர்த் தலைவியை அடைவதும் உண்டு. கலித்தொகை நெய்தற்கலி 138 – இல் அது பேசப்படுகிறது. மடலூர்ந்து, பின்னர்த் தலைவியை அடைந்த தலைவன், தான் மடலூர்ந்ததையும், அவளை அடைந்ததையும் அதில் கூறுகின்றான். மேலும் கலித்தொகை, 139, 140, 141 – ஆம் பாடல்களிலும் மடல்திறம் பற்றிய செய்திகளைக் காணலாம். வீ.சொ.

**மடல் பாடிய மாதங்கீரனார்**: இவர் குறுந் தொகையில் ஒன்றும் (182) நற்றிணையில் ஒன்றும் (377) ஆக இரு பாடல்களைப் பாடிய சங்கப்புலவர். இவர் இயற்றிய இரு செய்யுட்களிலும் மடல் ஏற் றத்தைச் சிறப்பித்துப் பாடிய காரணத்தால் இயற் பெயருக்கு முன்னாக 'மடல் பாடிய' என்னும் அடை சேர்த்துச் சொல்லப்படுகிறார்.

மடல்பாடிய மோதங்கீரனார் என்ற பாடபேத மும் உண்டு. மோதம் என்பது ஓர் ஊரின் பெயரெனத் தெரிகிறது. அது மோதகம் என்னும் பெயருடன் வழங்கி வருகிறது. அச்சுப் படியில் மாதங்கீரனார் என்றே காணப்படுகிறது.

இவர், குறுந்தொகையில் காமம் மிகுந்த தலைவன், தோழியால் குறை மறுக்கப்பட்டுத் தன்நெஞ்சுக்கு உரைப்பதான பாடல் ஒன்றை அமைத்துள்ளார். நற்றிணைப் பாடலிலும் இச்சூழ்நிலையே காணப் படுகிறது. சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய தலை மகன் தோழி கேட்பத் தன்நெஞ்சிற்குச் சொல்லிய தாக நற்றிணைப்பாடலின் துறை விளங்குகிறது.

தலைவி அசைந்த நடையுடையவள். அவள் நெஞ்சம் எனக்காக நெகிழவில்லை. அதற்காக அனுப்பிய தூது, நாணமிழந்து தெருவின்கண் மடல் ஊர்வதாக முடிந்துவிடுமோ எனத் தன்நெஞ்சிற்கு உரைக்கிறான். குறுந்தொகையில் காணப்படும் இப் பாடல் கருத்தில் மடலூரும் இயல்பினைப் புலப் படுத்துகிறார் மாதங்கீரனார்.

பனைமடலால் செய்யப்பட்ட குதிரைக்கு மணி மாலை அணிவித்து, அதன்மேல் வெள்ளெலும்பு அணிந்து கொண்டு தலைவன் வருவதை மடல்ஏறிய தாகக் கருதுகிறார். நெஞ்சை நோக்கிக் கூறுவதாக அமையினும் தோழி அறியவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு கழறியுரைக்கிறான் தலைவன். இப்பாடலி னும் அழகிய நலம் வாய்ந்த பாடல் நற்றிணையில் உள்ளது.

'பனைமடலால் குதிரை செய்து எருக்கம் பூமாலை அணிந்து அதன்மேலேறி நாடும் ஊரும் அறிய, என் காதலைக் காட்டி நாணழிவு குறித்து இறந்து படுவதே இனிக் கொள்ளத் தக்கது' எனத் தலைமகன் தோழி அறியும்படியாக உரைக்கிறான்.

குறுந்தொகைப் பாடலில் தலைவியின் நடை யியல்பைக் காட்டியவர், நடையைச் சிறப்பிக்கும் கூந் தல் அழகை நற்றிணையில் அழகுறக் காட்டியுள்ளார். 'அகலிரு விசும்பின் அரவுக்குறை படுத்த, பசுங்கதிர் மதியத் தகனிலாப் போல, அளகம் சேர்ந்த சிறுநுதல், கழறுபு மெலிக்கும் நோயாகின்றே' என்ற அடிகளில் உவமை செவ்விய நீர்மையாய்ச் செறிந்துள்ளது. பாம்பு கவ்விய மதி போலக் கூந் தலால் கவ்வப்பட்ட ஒளி பொருந்திய நுதல் என விளங்கும் இவ்வுவமையில் பாம்பு கூந்தலுக்கும் மதி நுதலுக்கும் உவமைகளாக வந்துள்ளன.

இவ்விரண்டு பாடல்களிலும் மடல் ஏறுவதையே பொருளாக வைத்துப் பாடியுள்ளமையால் மடல் பாடிய என்ற அடைமொழி இவருக்குப் பொருந்து வதாயிற்று. இராம.கு.

**மடலேறுதல்**: தமிழிலக்கியத்தில் மடல்ஏறுதல் என்னும் செய்தி காணப்படுகிறது. இது அகத்திணைத் தொடர்புடையது. தலைவன் தான் விரும்பிய தலைவியை அடைய இயலாத சூழ்நிலையில், மட லேறுதலை நிகழ்த்துவான் என்னும் குறிப்பினைச் சங்க இலக்கியத்தில் காணலாம். மடல் ஏறுதலைப் பெருந்திணைக்கு உரியதாகத் தொல்காப்பியர் கருது வர். இது உலகியல் வழக்கு என்பது தொல்காப்பியத் தால் தெரியவருகிறது. கலித்தொகை மடலேறும் வழக்கம் இருந்தமையைச் சில இடங்களில் சுட்டு கிறது.

தலைவியைப் பெறாத தலைவன், காமம் மிகுந்த நிலையில், பனை மடலால் குதிரையைப் போல ஓர் உருவம் செய்து, அதன் கழுத்தில் மணி, மாலை முத லியவற்றைப் பூட்டி அணி செய்வான். தன் உருவத் தையும், தலைவியின் உருவத்தையும், படமாக வரைந்து கையில் ஏந்தி, குதிரை மீது பலரும் அறியுமாறு ஊர்ந்து வருவான். இதனையே மட லேறுதல் என்பர். தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள அன்பின் நெருக்கத்தைப் பலரும் அறிய இத னால் வாய்ப்புண்டு. இக்காட்சி கண்ட பலரும்

அதனை வெளிப்படக் கூறிப் பழிப்பர். அதுகேட்டுத் தலைவியைச் சார்ந்தவர்கள் மணம் புரிவிப்பர் என்பதாக இவ்வழக்கினை எடுத்துக்காட்டுவர்.

மடல் பல பொருள் தழுவிய ஒரு சொல். ஈண்டு அது பனை, பனங்கருக்கு என்பவற்றையே குறிக்கும். இலக்கியத்தில் மடல் ஏறுவேன் என்பதான குறிப்பு ஓரளவு விரவியுள்ளது. தலைவன் மடலேறித் துன்புறுவதாகக் கூறாமல், அவன் மடலேற முயல்வதாகக் குறிப்பிடுவதே மடற்கூற்று எனப்படும். மடற் கூற்று அன்பின் ஐந்திணையைச் சார்ந்ததாகும்.

மடலேறுதல் என்பது அன்பின் ஐந்திணையில் அடங்காது, பெருந்திணையில் அடங்குவதாகும். மடலேறியதைப் பார்த்துக் கண்டோர் கூறியதாக நல்லந்துவனார் கலித்தொகையின் ஒரு பாடலில் காட்டுவர். மடலேறுவது ஆண்களுக்கு உரிய செயலாகும். பெண்கள் மடல் ஏறுதல் வழக்கமன்று.

இலக்கிய வழக்கில் மடல்ஏறுதல் பற்றிய குறிப்பு மிகுதியும் வரவில்லை. எனவே, இலக்கிய, இலக்கண வல்லார் இதனை மிகுதியாகச் சிறப்பித்துக் கூறவில்லை. சங்க இலக்கியத்தில் நற்றிணையில் மூன்றும் குறுந்தொகையில் ஐந்தும், கலித்தொகையில் ஐந்தும் ஆகப் பதின்மூன்று பாடல்கள் மடல் பற்றிக் குறிப்பிடுகின்றன.

சங்க இலக்கிய வாயிலாக மடலேறுதலைப் பற்றி அறியலாம். நாணம் மிகுந்த மகளிர்க்கு மடல் ஏறுதல் சிறப்பன்று; தலைவன் மடலூர்தலை ஊரில் உள்ளோர் அறியின் அலர் தூற்றுவர். நெஞ்சினை நோக்கித் தோழியைக் குறையிரந்த தலைவன் மடலேறுவதாகக் கூறுகிறான். மடலூர்ந்த தலைவன், தன் நோக்கம் நிறைவேறியதைத் தன்னைச் சார்ந்தவர்களிடத்தும், சான்றோரிடத்தும், சந்தித்தவர்களிடத்தும் உரைக்கிறான். சங்க இலக்கியத்தில் இவ்வாறான குறிப்புகள் உள்ளன.

குறளில் மடல் பற்றிய அகத்திணைச் செய்திகள் காமத்துப்பாலில் இடம் பெறுகின்றன. 'நாணுத் துறவுரைத்தல்' என்ற அதிகாரத்தில் ஆறு பாடல்கள் மடல் பற்றி அமைந்துள்ளன. மடல் ஏறுதல் நாணம் துறக்கும் செயலாக இருத்தலின் இவ்வாறு அதிகாரத் தலைப்பு அமைந்தது போலும். காமத்தைச் சுட்டி மடலேறப் போவதாகத் தலைவன் கூறும் கூற்றுகள் இவ்வதிகாரத்தின்கண் உள்ளன.

தலைவி காமம் மிகுவதால் மடலூர எண்ணுவதனைச் சீவகசிந்தாமணியில் காணலாம். அதில் சீவகனிடம் கொண்ட காதலால் குணமாலை மடலூர எண்ணுகிறாள். அதனடிப்படையில் பிற்காலச் செய்யுட்களான பெரிய திருமடல் சிறிய திருமடல் ஆகியவற்றில் நாயகி மடலூரத் துணிவதாக அமைந்துள்ளது. அவை சங்க இலக்கியத்திலிருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளமை புதுமையானது.

பெரியவாச்சான்பிள்ளை உரை மடலேற்றத்தின் பிற்கால மாறுதலைக் குறிக்கிறது. மடலேறுகைதான் 'உண்ணாதே, குறியாதே, உகந்த விடயத்தை ஒரு படத்திலே அதனைக் கொண்டு திரிகையும்,அறவிளைத்தல் அதன் காற்கிடையில் விழுகையும், விழுந்தால் அங்ஙனே செல்லரிக்கை கிடக்கையும், அங்ஙனே முடியுமாம்' என்று உரை எழுதியிருப்பது சங்க இலக்கியம் காட்டும் மடலேறுதலினின்றும் வேறுபடுகிறது. மடல் ஏறப்போகும் தலைவி, 'இன்ன படுபாவி என்னைக் காக்க மாட்டாதே கைவிட்டான்; அவன் கண்ணற்றவன்; அவனிலும் விஞ்சிய கொடியன் இல்லை; பல தலங்களிலே அவன் சந்நிதி பண்ணி அடியாரைக் காக்கின்றான் என்பதும், இராம கிருட்டிணாதி அவதாரங்களினால் பலரைக் காத்தான் என்பதும் முழுப்பொய்யான பேச்சுகள் என்று தெருவில் கதறிக்கொண்டு கேட்டாரெல்லாரும் நடுங்கும்படியும் இரங்கும்படியும் திரிந்துழல்வதுதான் மடலூருகையாவது', என மடல் ஏறுதலின் விளக்கத்தை விளக்கியுரைப்பர்.

மடல் பற்றிய செய்திகள் சிற்றிலக்கியங்களான கோவை, கலம்பகம், உலா ஆகியவற்றில் காணப்படுகின்றன. தழை என்ற உறுப்பின் பகுதியாக இது கலம்பகத்தில் இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியத்தில் பெரிதும் விரவாத மடற் செய்திகள் பிற்காலத்தில் மாற்றமும் வளர்ச்சியும் அடைந்துள்ளன. கோவை நூல்களில் இது விரிந்த துறையாகக் காணப்படுகிறது. பக்தி இலக்கியத்தில் நாயக நாயகி பாவனையாக இது இடம் பெற்றுள்ளது.

பிற்காலத்தில், மடல் தனிச் சிற்றிலக்கிய வகையாக வளர்ந்துள்ளது. இது இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இடைக்காலத்தில் வளர்ந்தது; அதன்பின்னர்ச் செங்கோலோச்சும் மன்னர்கள், பெருநிலக்கிழார் முதலியோரைப் பாடிப் பொருள் பெற்றதாக மாறியமைந்தது.

இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெறும் மடல் இலக்கியத்தில் இருவகைகள் உள்ளன. அவை உலாமடல் எனவும், வளமடல் எனவும் பெயர் கூறப்படும். தலைவன் தலைவியைக் கண்டு காமுற்றுக் கனவில் அவளைக் கூடிப் பின் விழித்தெழுங்கால் அவளைக் காணப் பெறாமையால் தலைவன் மடல்மா ஊருதலைப்பொருண்மையாகக் கொண்டது உலா மடல் ஆகும். மடல் இலக்கியம் உலா இலக்கியத்தோடு இணைந்தநிலையில் இப்பெயர் பெற்றுள்ளது. அறம், பொருள், இன்பம் ஆகிய பயன்

களைப் புறக்கணித்து, மங்கைமேல் கொண்ட காதலின்பத்தை மட்டுமே சிறப்பித்துப் பாடப்படுவது வளமடலாகும். இராம.கு.

*மடியரா*: அட்லாண்டிக்கு மாக்கடலின் கிழக்கில் உள்ள தீவுக்கூட்டங்களுள் முக்கியமானதான மடியரா (Madeira) 56 கி.மீ. நீளமும் 21 கி.மீ. அகலமும் கொண்டது. போர்ச்சுகல் நாட்டு ஆட்சிப்பகுதி மாவட்டமான பூன்சால் (Funchal) பகுதியில் இத்தீவுகள் அடங்கும். இவை ஆப்பிரிக்காவின் மேற்கில் மொராக்கோவுக்கு எதிர்ப்புறத்தில் 576 கி.மீ. தொலைவில் உள்ளன. இலிசுபன் (Lisbon) நகருக்கும் மடியராவுக்குமிடையே உள்ள தொலைவு 856 கி.மீ. இதன் தலைநகர் பூன்சால் ஆகும். மடியராத் தீவின் பரப்பு 792 ச.கி.மீ. எரிமலைகளும் மலைகளும் இத்தீவில் உள்ளன. இங்கு மிதமான தட்பவெப்பம் இருப்பதால் உடல் நலங்கருதிப் பலர் இத்தீவுக்கு வந்து தங்குகின்றனர். இங்கு உற்பத்தியாகும் பொருள்களுள் வாழைப்பழம், கரும்பு, வெப்ப மண்டலப் பழங்கள், மிதமண்டலத் தானியங்கள், சருக்கரை, வள்ளிக்கிழங்கு, வெங்காயம் முதலியவை குறிப்பிடத்தக்கன. மீன்பிடித்தல், ஆடுமாடு வளர்த்தல், உயர்வகை மது தயாரித்தல், பின்னல் வேலை, சருக்கரை ஆலைத் தொழில், வண்ணக் கூடைகள் தயாரித்தல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன.

**வரலாறு**: பண்டைய உரோமானியர்கள் இத்தீவினை அறிந்திருந்தனர். ஆனால், நீண்ட காலத்திற்குப் பின், கி.பி. 1418-இல் போர்ச்சுகீசியர் இவற்றை மீண்டும் கண்டுபிடித்தனர். போர்ச்சுகீசிய கடற் பயணி சார்க்கோ (Zarco) கி.பி. 1421 – இல் பூன்சால் நகரை நிறுவினார். மரங்கள் அடர்ந்த காடுகள் இங்கு மிகுதியாக இருந்ததால், போர்ச்சுகீசியர் மடியரா என்று இதற்குப் பெயரிட்டனர். இத்தீவுகளும் போர்ச்சுகல் நாடும், கி.பி. 1580 முதல் 1640 வரை இசுபெயின் நாட்டின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இத்தீவுகளை கி.பி. 1801க்குப் பின், கி.பி. 1807-இலும் கி.பி. 1814-இலும் பிரிட்டன் கைப்பற்றியிருந்தது. மது தயாரிக்கும் தொழிலை ஆங்கிலேயர் இங்குத் தொடங்கினர். மடியராவின் மக்கள் தொகை 252,844 (1981).

**மடியரா ஆறு**: இது பிரேசில் நாட்டில் ஓடுகிறது. அமேசான் (Amazon) ஆற்றின் துணையாறுகளில் இது மிகவும் முக்கியமானது. இதன் நீளம் ஏறத்தாழ 3360 கி.மீ. தெ.பா.

*மடிவால மாச்சையர்*: வண்ணார் குலத்தில் தோன்றிய சிறந்த சிவ பக்தரான மாச்சையர் என்பவர் 'இப்பரிசு' என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார். சிவபெருமானை மட்டுமன்றிச் சிவனடியார்களையும் வணங்கும்இயல்புடையவரான இவர் தம் குலத்தொழிலுக்கு ஏற்பச் சிவபக்தர்களின் ஆடைகளைத் துவைத்துத் தூய்மை செய்து கொடுப்பதையே சிவத்தொண்டாகக் கருதிப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவரது அளவு கடந்த சிவ பக்தியைக் கண்டு வியந்த 'பசவர்' என்னும் பெரியவர் இவரை மனமாரப் பாராட்டிப் புகழ்ந்தார்.

ஒருநாள், மாச்சையர், சிவனடியார்களின் ஆடைகளைச் சுமந்து சென்று கொண்டிருந்த போழ்து அவருக்கு எதிரே வந்தவன் அவ்வாடைகளைச் சேதப்படுத்திவிட்டான். சிவத் தொண்டர்களின் ஆடைகளை வேறு யாரையும் தொடக்கூட அனுமதியாத மாச்சையர் அவன் மீது பெருங்கோபங்கொண்டார்; அவனை அடித்துக் கொலை செய்துவிட்டார்.

இச்செய்தி அந்நாட்டு மன்னன் வல்லபனுக்கு எட்டியது. இத்தகைய கொலையாளி மரண தண்டனைக்கு உரியவன் என்று மன்னன் தீர்மானித்தான். எதையும் ஆராய்ந்து உண்மை தெரிந்த பிறகே தீர்ப்பளிக்க வேண்டும் என மன்னனுக்குப் 'பசவர்' என்பவர் உரைத்தும் அதனை மன்னன் ஏற்காமல்,யானை ஒன்றை ஏவி மாச்சையரைக் கொன்று விடுமாறு பணியாட்களிடம் கட்டளையிட்டான். மாச்சையரைக் கொல்ல யானையைக் கொண்டு சென்றபோது, தம் பக்தியின் சிறப்பால் அவர் அந்த யானையை மட்டுமன்றி அதன்பாகனையும் கொன்றுவிட்டார்.

இச்செய்தியை அறிந்தபோது மன்னன் திடுக்கிட்டான். மாச்சையர் மடிவால (வண்ணார்) குலத்தவராக இருப்பினும் அவர் சிறந்த சிவபக்தர் என்றும் அவர் சிவபெருமானாகவே மதிக்கத்தக்கவர் என்றும் மன்னனுக்குப் பசவர் எடுத்துரைத்தார். எனவே, மன்னன், தன் தவற்றை உணர்ந்து தன்னை மன்னிக்குமாறு மாச்சையரிடம் வேண்டினான்.

சிறந்த சிவத்தொண்டராகிய மாச்சையர், செய்த தவற்றுக்கு வருத்தம் தெரிவித்துத் திருந்திய மன்னனிடம் அருள்கூர்ந்தார். திருநீற்றினைத் தூவி, இறந்துபோன யானையையும் பாகனையும் உயிர்ப்பித்தார். அக்காட்சியைக் கண்டோர் வியந்தனர்.

'பசவர்' போன்றோர் இறைவனுக்குச் செலுத்தும் சிறந்த விலையுயர்ந்த காணிக்கையைவிடத் தம்காணிக்கை சிறந்தது என்பதை மாச்சையர் மெய்ப்பித்தார். இறைவன் மீது அவர் தெளித்த தண்ணீர் வைரக் கற்களாக மாறி நின்ற காட்சியை 'பசவர்' கண்டபோழ்து, அவர் மாச்சையரின் காலிலே வீழ்ந்து வணங்கி, 'மாச்சையர் வெறும் சிவ

பக்தரல்லர் சிவபெருமானேயாவார்' என்று கூறி மாச்சையரின் பெருமையை உலகறியப் பாராட்டிப் புகழ்ந்தார்.
ஆர்.ம.

**மண் சிற்பங்கள்:** காண்க: சுடுமண் பொம்மைகள்.

**மண்டல ஆய்வு** என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் மண்டலத்தைப் பற்றி நிகழ்த்தப் பெறும் ஆய்வு ஆகும். இந்த ஆய்வு, மொழி, இனம், பண்பாடு, வரலாறு, மேம்பாடு பற்றிய ஆய்வுகளின் புதிய விரிவாக்க ஒருங்கிணைப்பு வடிவம் என்றும், பல்துறையும் இணைந்த ஓர் அணுகு நெறியின்பால் நிகழப் பெறுவது என்றும் திறனாய்வாளர் கூறுவர். இம்மண்டல ஆய்வுகள் (Area Studies) முதன் முதலில் மத்தியதரைக் கடல் பகுதியினைச் சார்ந்த கிரேக்க, உரோமானிய மண்டல நாகரிகங்களைப் பற்றிய ஆய்வுகளின் தொடக்கம் என்பர். மேலும், ஒரு சாரார் இவ்வாய்வு பழமைசார்ந்த கீழ்த்திசை நாடுகளைப் பற்றியும், அவற்றின் இலக்கியங்களைப் பற்றியும் தொடங்கியது என்பர். எது எவ்வாறு இருப்பினும் பண்டைய பண்பாடு, நாகரிகம், மொழி, இனம் பற்றிய ஆய்வுகளை மண்டல ஆய்வுகளின் தொடக்கநிலை என்பர். மேலும், பழமையான காலங்களில் மண்டல ஆய்வுகள் வரலாறு, மொழி, இலக்கியம், சமுதாயப் பண்பாடு ஆகியவை பற்றியே எழுந்தன; மேலும், ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியை மட்டும் ஆய்வு எல்லையாகக் கொண்டன.

பண்டைய உரோமானிய, கிரேக்க மண்டல ஆய்வுகள் சிறந்து விளங்கின எனினும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே முழு வளர்ச்சி பெற்றன. பின்னர், 1958 – ஆம் ஆண்டு அமெரிக்கத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி இவ்வகையான ஆய்வுகட்கு நிதி ஒதுக்கீடு செய்த பின்னரே, அவை முழு வளர்ச்சி அடையத் தொடங்கின. ஏறத்தாழ அதே சமயத்தில் ஏடர் (Hayter)குழுவின் பரிந்துரையின்படி 1959-ஆம் ஆண்டு முதல் இவ்வகையான ஆய்வுகள் பெருகலாயின. பின்னர் 1961-ஆம் ஆண்டு இங்கிலாந்துப் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின்படி இவ்வாய்வுகள் பெருகின. மேலும், இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களில்,கீழ்த்திசை நாட்டாய்வுகள்,கிழக்கு ஐரோப்பா, ஆப்பிரிக்க நாட்டு ஆய்வுகள் போன்றவை பெருகின. இவ்வாய்வுகள் அந்நாடுகளின், அம்மண்டல அரசியல், நாகரிக, வாணிகச் சமூகச் சூழ்நிலைகளைப் பெரிதும் தாக்கம் செய்தன. இவ்வகை ஆய்வுகள் இப்பொழுது இந்திய நாட்டளவில் பல பல்கலைக்கழகங்களிலும், பிறநாடுகளின் பல்கலைக்கழகங்கள் அளவிலும் பெருகிவிட்டன.

மண்டல ஆய்வுகள் நிகழ்த்தப் படுவதற்கு அரசியலும், வாணிகமும் பெரிதும் துணை செய்கின்றன. ஒரு நாடு அல்லது கண்டத்தின் மேல் நிகழ்த்தப்பெறும் மண்டல ஆய்வுகள், மற்ற நாடுகள் அவற்றின் வேண்டுதல், தேவைகள் ஆகியவற்றை அறியவும் அவற்றோடு உறவு கொள்ளவும் அடித்தளமாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக அமெரிக்க நாட்டில் மற்ற மண்டலங்களைப் பற்றி நிகழ்த்தப் பெற்ற ஆய்வுகள், கிழக்கு ஆசிய,தென் கிழக்கு ஆசிய நாடுகள், பழமையை மிகவும் விரும்புதலையும் பழமையை மாற்றாத பான்மையையும் சுட்டுகின்றன. இதே காலத்தில் இங்கிலாந்து, கனடா நாடுகளில் நிகழ்த்தப்பட்ட மண்டலஆய்வுகள் நாட்டின் ஒருங்கிணைப்பையும், இணக்கத்தையும் சுட்டுவனவாக அமைந்துள்ளன. இவ்வகையான ஆய்வுகள் தன்னாடு, தன்மொழி, தன்மக்கள் என்ற எல்லையினின்றும் வெளிவந்து பன்னாட்டு மக்கள், பன்னாட்டு நாகரிகம், சமூகப் பன்னாட்டுச் சகோதரத்துவம் ஆகிய கருத்துகளை எதிரொலிக்கும் வகையில் அமைந்துள்ளன.

இம்மண்டல ஆய்வுகள் பலதுறை ஆய்வுகள் பெருகவும் வழி வகுக்கின்றன. ஒரு மண்டலத்தில் ஆய்வுகள் நிகழ்த்தும்போது, எல்லாநிலைகளிலும், ஒன்றோடு ஒன்று உறவாகி இணையும் நிலைகளிலும், ஒன்றோடு மற்றொன்றின் தாக்கம் எந்த அளவிற்கு உள்ளது என்பதை அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது. ஒரு துறையின்பாற்பட்ட அறிவும் செய்திகளும் அத்துறைக்கு மட்டும் என்று அல்லாமல் அதனோடு தொடர்புடைய மற்றத் துறைக்கும் பொருந்துவதைக் காட்டுகின்றன. மேலும், இவ்வகை ஆய்வுகள் பல்துறைகள் ஒன்றொடு ஒன்று இணைந்து தனித் தாக்கமும் கூட்டுத்தாக்கமும் தருவதை வெளிக் கொணர்கின்றன.

சமூக அறிவியல்கள் சிறந்த முறையில் பெருகியதாலும், புதிய புதிய அறிவியல் ஆய்வு நோக்குகள், இச் சமூக அறிவியல்களில் மேம்பட்டதாலும், இம் மண்டல ஆய்வுகள் சிறப்புடன் வளரலாயின. இம் மண்டல ஆய்வுகள் பல்துறை ஆய்வுமுறைகளை வெளிக் கொணர்ந்த போதிலும் அதில் இடர்ப்பாடுகளும் அதிகம் உள்ளன. எடுத்துக்காட்டாக, 'தமிழ் மண்டலம்' என்னும் பொருள் பற்றிய ஒரு துறை ஏற்படுமானால் அத்துறையோடு சார்ந்த மொழி, மொழியியல், சமூகவியல், வரலாறு, பண்பாடு, இலக்கியம், கல்வி போன்ற துறைகளின் பங்கின்றி எவ்வாறு அத்துறை இயங்க முடியும் என்றும், அப்படியே இயங்கினாலும், அத்துறைகளின் தனித்தன்மை எவ்வாறு இதில் சிறந்து விளங்க முடியும் என்றும் வினவுவர் திறனாய்வாளர். இத்துறையில் ஆய்வு நிகழ்த்த விரும்பும் ஒருவர்க்கு, இதனோடு தொடர்

புடைய மற்ற எல்லாத்துறைகளிலும் எவ்வாறு திறமை இருக்க முடியும் என்றும் திறனாய்வாளர் சுட்டுவர். மேலும், இத்துறைகளை எவ்வாறு ஒருங்கிணைக்க இயலும் என்றும் திறனாய்வாளர் காட்டுவர். எனவே, மண்டல ஆய்வுகள் பற்றிப் படிக்கும் பொழுதோ, ஆய்வுகள் நிகழ்த்தும் பொழுதோ, அதனோடு தொடர்புடைய ஒரு துறையை மட்டும் அடித்தளமாகக் கொண்டு, மற்றத் துறைகளை அவற்றோடு உறவாக்கிக் கொண்டு செல்லலாம். எல்லாத் துறைகளையும் ஒரே சமயத்தில் உறவாக்காமல், ஒன்றை அடிப்படையாகக் கொண்டு மற்றவற்றை அதனோடு தொடர்புபடுத்திக் கொண்டு செல்லலாம்.

மண்டல ஆய்வுகள் தொடர்பான பாடப்பகுதிகளை இளங்கலை வகுப்புகள் அளவில் பாடமாகப் புகுத்தாமல் முதுகலை வகுப்புகளில் பாடமாகவோ முதுகலை வகுப்புகளுக்கு மேற்பட்ட வகுப்புகளின் ஆய்வுப் பாடங்களாகவோ கலைத்திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

எஸ்.மோ.

**மண்டல சதகங்கள்**: சதகம் என்பது நூறு செய்யுட்களைக் கொண்டது. இது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. ஒரு மண்டலத்தின் (நாட்டின்) வரலாற்றினைக் கூறும் பாடல்களைக் கொண்டமைவது மண்டல சதகம் எனப்படும். இதுவும் பெரும்பான்மை நூறு செய்யுட்களைக் கொண்டதே. இதில், மண்டலத்தின் எல்லை, நாடு, நகர், ஊர், சிற்றூர், அரசியல், அரசர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள், சான்றோர்கள், புலவர்கள், சமயச் சான்றோர்கள், மலை, ஆறு, குளம், வளங்கள், தெய்வம், வீரர்கள், மக்கள், பழக்க வழக்கங்கள் முதலானவை பாடப்பெறும். இவ்வாறு பாடப்பெறுவது வரலாற்று ஆய்வுக்கு உறுதுணையாகும்.

மண்டல சதகங்கள் பலவற்றுள் கி.பி. 11 – ஆம் நூற்றாண்டில் விளங்கிய ஆறை கிழாரால், 107 கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் பாடப்பட்ட 'கார்மண்டல சதகமே' முற்பட்டதாகும். இது அச்சாகியுள்ளது.

'தொண்டை மண்டல சதகம்', 101 கட்டளைக் கலித்துறைகளால் கி.பி. 17,18 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த படிக்காசுப் புலவரால் பாடப்பட்டது. கத்தூரிரங்க முதலியார் மாவண்டூரில் பெருஞ் செல்வராக விளங்கினார். அவர்தம் மகனார் கறுப்புமுதலியார் விருப்பத்தின்படி அதனைப் பாடினார். கரிகால் பெருவளத்தான் (கி.பி. 2 – ஆம் நூ.) எல்லாக் குண நலன்களும் கொண்ட சான்றோர்களாகிய வேளாளர்களைத் தொண்டைநாட்டில் குடியேற்றிச் சிறக்கச் செய்தான் என்பதனையும், நூலாசிரியர் தம் ஆசிரியரின் பரம்பரையினையும், வேளாளர் பெற்ற பட்டப் பெயர்களையும் இன்னும் பல அரிய செய்திகளையும் எடுத்துக் கூறியுள்ளார்.

'சோழமண்டல சதகம்', 103 விருத்தப்பாக்களில் ஆத்மநாத தேசிகரால் (கி.பி. 1650 – 1728) பாடப்பட்டது. அது அச்சாகியுள்ளது. அது, சித்தாமூரில் வாழ்ந்த அருணாசலம் எனப்படும் வேளாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பாடப்பட்டதாகும்.

'கொங்குமண்டல சதகம்', 103 கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கார்மேகக் கவிராயரால் பாடப்பட்டது. அதில், சான்றோர் பலருடைய சிறப்பியல்புகள் உரைக்கப்படுகின்றன. இது அச்சான நூல். வாலசுந்தரக் கவிராயர் இயற்றியதாகக் 'கொங்கு மண்டல சதகம்' என்றொரு நூல் குறிப்பிடப்படுகிறது.

'நந்தமண்டல சதகம்', கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தெய்வநாயகப் பெருமாள் கவிராயரால் பாடப்பட்டது. இதில், 'கோவர்த்தனம் யமுனாநதி' எனத் தொடங்கும் பாடலில் மன்னர்களுக்கு உரித்தான பத்து அங்கங்கள் கூறப்பட்டுள்ளன. அது அச்சாகியுள்ளது. அதே பெயரால் காஞ்சிபுரம் மாத்ருநாதையரால் அதே நூற்றாண்டில் பிறிதொரு நூல் பாடப்பட்டுள்ளது. அது அச்சான செய்தி அறிய இயலவில்லை.

'ஈழமண்டல சதகம்', கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் கணபதிப்பிள்ளையால் பாடப்பட்டது. க.வேற்பிள்ளை அவர்களால் கி.பி. 19,20 – ஆம் நூற்றாண்டில், பாடப்பட்ட ஈழமண்டல சதகம் அச்சில் உள்ளது. இதற்கு, 'சந்திர மௌலீசர் சதகம்' என்ற வேறு பெயரும் உண்டு.

'சேரமண்டல சதகம்', கி.பி. 19,20-ஆம் நூற்றாண்டில் ஆறுமுகம்பிள்ளையால் பாடப்பட்டது என்பதைத் தவிர வேறு செய்திகள் கிடைக்கவில்லை.

'பாண்டிமண்டல சதகம்', ஐயம்பெருமாள் கவிராயரால் பாடப்பட்டது. இந்நூல் அச்சாகியுள்ளது. 'மழவ சதகம்' என்ற சதகமும் மண்டல சதகங்களுள் அடங்கும். மழவநாடு என்பது திருச்சி மாவட்டத்தைச் சார்ந்தது என்று கூறப்படுகிறது.

இவ்வாறான மண்டல சதகங்கள் எல்லாம் அவ்வம் மண்டலங்களின் சிறப்பியல்புகளையும், பெருமைக்குரிய செய்திகளையும் எடுத்தியம்புவனவாக உள்ளன.

வீ.சொ.

**மண்டல புருடர்**: இவர், தொண்டை மண்டலத்தில் உள்ள குன்றையூரில் பிறந்தார். இவர்,

பெருமண்டூர் எனப்படும் வீரையூரில் வாழ்ந்ததால், இவரை, வீரை மண்டலபுருடர் என்பர். இவர், குன்றையூர்க் குணபத்திரரின் மாணவர்; விசய நகரை அரசாண்ட கிருட்டிணதேவராயர் காலத்தவர் (கி.பி.16-ஆம் நூ.); சைன சமயத்தவர். இவர் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கினார். திவாகர நிகண்டு, பிங்கலந்தை எனப்படும் பிங்கல நிகண்டு ஆகியவற்றைச் சுருக்கித் தம் ஆசிரியராகிய குணபத்திரரின் கட்டளைக்கேற்ப, விருத்தப் பாவால் 'சூடாமணி நிகண்டு' எனும் நிகண்டு நூலைச் செய்தார். இது தெய்வப் பெயர்த் தொகுதி முதல் பன்னிரண்டு தொகுதிகளையுடையது. 'சூடாமணி உள்ள முடையான்' என்னும் சோதிட நூலையும் செய்துள்ளமையால் இவர் சோதிடத்திலும் வல்லவர் என்பது தெரிகின்றது. வீ.சொ.

**மண்டையளவைமானி**: உடல் அளவுகளையும் எலும்புகள் அளவுகளையும் அளக்க உதவும் மானிட உடலளவைமானியைப் (Anthropometer) போன்றே, தலை, மண்டையோடு ஆகியவற்றின் அளவுகளை அளக்க, மண்டையளவைமானி (Craniometer) பயன்படுகிறது. இக்கருவி விரியும் இருக்கு மானி (Spreading Caliper), நகரும் இருக்குமானி (Sliding Caliper) ஆகிய இருவகைகளில் உள்ளது. இவை இரண்டும் எளிய முறையில் அமைக்கப்பட்டிருப்பினும் ஒருசில வகைகளில் மாறுபட்டிருக்கின்றன.

விரியும் இருக்கு மானியின் அமைப்பு இரு உலோகக் கால்களைக் கொண்டது. அவ்வுலோகக் கால்கள் அளவு பொறிக்கப்பட்ட ஒரு சட்டத்தில் மறு முனைவரை நகரக் கூடிய வகையில் பொருத்தப்பட்டுள்ளன. ஆகவே, கணக்கு எடுக்கவேண்டிய மண்டையோட்டின் அளவிற்கேற்ப இக்கருவியை நன்கு பயன்படுத்தவியலும்.

மண்டையளவைமானியின் மற்றொரு வகை நகரும் இருக்குமானியாகும் (Sliding Caliper). அந்தக்கருவியில் தட்டையான அளவுகோல் ஒன்றும் அதன்மேல் விளிம்பில் உறுதியாகப் பதிக்கப்பட்ட ஒருகாலும், அடுத்த முனையில், முன்னும், பின்னும் நகரக் கூடிய மற்றொரு காலும் அதனுடன் சேர்ந்த கைப்பிடியும் அமைக்கப்பட்டுள்ளன. மேல்காலும், கீழ்க்காலும் எப்பொழுதும் ஒன்றோடொன்று இணை நிலையில் (Parallel) இருக்கும். இருகால்களின் ஒருபக்க முனைகள் கூராக்கப் பட்ட நிலையில் உள்ளன. அடுத்த பக்க முனைகள் தட்டையாக மழுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் மண்டையோட்டின் பாகங்களை நுணுக்கமாக அளக்கக் கூராக்கப்பட்ட முனைகளும், மனிதனின் தலைப்பாகங்களை அளக்கும்போது தலையில் குத்திக் கொள்ளாமலிருக்க மழுக்கப்பட்ட முனைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

நகரும் இருக்கு மானியின் அமைப்பிலிருந்து சற்று முன்னேற்றமடைந்தவகையில் உள்ள மற்றொருகருவி 'பிளவர் மானி'(Flower's type Caliper) ஆகும். இதில் இருகால்களின் ஒருபுறத்திலுள்ள முனைகளில் மட்டும் மாற்றங்கள் உள்ளன. அவை முள்ளைப்போல நேராக இல்லாமல், சற்று விரிந்தும், திரும்பவும் உட்புறம் நோக்கியவாறு வளைந்தும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்விதம் விரிக்கப்பட்ட கூரான முனைகளால் மண்டை ஓட்டின் பாகங்களை நுணுக்கமாகவும், துல்லியமாகவும் அளக்கமுடியும்.

தலை, முகம் போன்ற பல பாகங்களையும், மண்டை ஓட்டின் அனைத்துப் பாகங்களையும், அளந்து ஆய்வு செய்ய மண்டையளவைமானி பெரிதும் உதவுகிறது. மானிடவியல் துறையில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் இக்கருவி மருத்துவத் துறையிலும் பெரிதும் பயன்படுகின்றது. நே.தே.

**மண்டோதரி**: இவள் அசுர, தச்சன் மயன என்பானின் மகள். இவளை இராவணன் மணந்தான். இவள் பேரழகு வாய்ந்தவள்; அக்ககுமரன், இந்திர சித்து என்ற இரண்டு வீரர்களை ஈன்றவள். அனுமன் சீதையைத் தேடி இலங்கை புகுந்தபோது மண்டோதரி அரம்பை, மேனகை, திலோத்தமை, உருப்பசி ஆகியோர் அடிவருடியும், சாமரை வீசியும், யாழ்மிழற்றியும் துயிற்றக்கண்டு, அவள் பேரழகால் சீதையென்று அயிர்த்துப் பின் அவளிடம் நிகழும் கூந்தல் அவிழ்தல், வாய்வெருவல், போன்ற மெய்ப்பாட்டால் அவள் மண்டோதரியென்று துணியுமாறு தடுமாறச் செய்தவள்.

அனுமனால் அக்ககுமரன் கொல்லப்பட்டதைக் கேட்டதும் வயிறலைத்து அலறி மாழ்கியவள். இலக்குவனால் இந்திரசித்து இறந்த செய்தி கேட்டுத் தலைமேற் சுமந்த கையளாய்ப் போந்து அம்பேறுண்ட மயில்போல் தலையிலா மகன் உடல் மீது வீழ்ந்து, உயிர்ப்பு நீங்கி உணர்விலாது போகி ஒன்றும் பேச்சில்லாது வியர்க்காது விம்மாது கிடந்து, இந்திரசித்து வில்லாற்றலால் திருமாலை வெல்வதைக் காணத் தவம் புரிந்திருந்ததான் தலையிலா உடற்குறை காணற்கு நொந்து, அவன்குழவிப் பருவத்துத் திங்களைப் பெற்று மகிழ்ந்து அதன்கண்ணுள்ள முயலைப் பற்றியதையும், கோளரி இரண்டு பற்றி வந்து விளையாடியதையும் நினைந்து, அணுவொன்று முட்ட மாமேரு சாய்ந்தது என்றாற்போல மனிதன் ஒருவன் கொல்ல அவன் துஞ்சலாயிற்றே என்று புலம்பியவள். முக்கணன் முதலியோரை வென்ற தன்மகன் அரக்கர் கூட்டமெல்லாம் பஞ்சில் தீப்பற்றி அழிந்ததுபோல அழிந்தது

காணும்போது இது சீதையால் விளைந்த வெற்றியே யன்றி வேறில்லை யாதலால் நாளை இராவணனும் இந்நிலையன் ஆவானே என்று புலம்பி நொந்தவள்.

இராவணன் இராமனால் கொல்லப்பெற்ற செய்திகேட்டுப் புலம்பிப் போந்த அரக்கிமார்களோடு வந்த மண்டோதரி கடற்பரப்பில் மின்னல் வீழ்ந்தா லென்ன இராவணன் மேனிமிசை வீழ்ந்து, மரங்களும் மலைகளும் உருகுமாறு, கணவனுக்கு முன்னர் இறக்கும் கருத்தைக் கொண்டதான், பின்னர் இறப்பது என்னே என்று கேட்டுப் புலம்பியவள். இராமன் அம்பு, உடல் முற்றும் எள்ளிருக்க இடமில்லாது, மறைத்து வைத்த சீதை இருக்குமிடந்தேடித் துளைத்ததோ? என்றும், மனிதன் விட்ட ஒரம்போ இராவணன் உயிர்பருகிற்று என்று எண்ணிப் பின், இராவணன் கற்புடைப் பெண்களுக்கெல்லாம் அணியாய சீதையின் கற்பும் அவள் பால் கொண்ட பிழைபட்ட ஆறாத காதலும் சூர்ப்பணகை மூக்கிழந்து போந்து செய்த சூழ்ச்சியும் தயரதன் பணிப்ப இராமன் காடுபுகுந்ததும் இந்திரன் தவம் முதலிய செயல்களும் இராவணனைக் கொன்றன என்று கூறிப் புலம்பியவள். அதோடு நில்லாமல் இராவணன் தேவர்களை. திசைக் களிறுகளை, சிவனை, அயனை, செங்கண்மாலை விட வலி படைத்திருந்தும் அவனுக்கு ஒரு மானுடன் வலியனாய் நின்று கொன்றதையும், பெற்ற முக்கோடி வாழ்நாளும், எத்தகையோராலும் அளந்துரைக்க வொண்ணாத வீரஆற்றலும், கடலன்ன வரமும் சீதை காரணமாக அழியும் என்று எண்ணவில்லை என்றும், காமனின் ஆற்றல் எவர் ஆற்றலினும் விஞ்சியது போலும் என்றும் கூறி அன்னேயோ அன்னேயோ! என்று அழைத்துப் புலம்பி இராவணன் மார்பினைத் தழுவி உயங்கி உயிர் துறந்து பின்னர் வீடணனால் தனக்கு ஈமக்கடன் இயற்றப் பெற்றவள்.

கு. தி.


**மண்ணடுக்காய்வு**: பழமையான நாகரிகங்களைப் பற்றி ஆய்வு செய்யப் பல வகையான ஆய்வு முறைகளை ஆய்வாளர்கள் கையாளுகின்றனர். அத்தகைய ஆய்வுமுறைகளுள் ஒன்று மண்ணடுக்காய்வு முறையாகும். மண்ணடுக்காய்வு முறையைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் எத்தகைய பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தனர் என்பதையும், அவர்கள் எக்காலத்தில் வாழ்ந்தனர் என்பதையும் கண்டறிய முடிகின்றது.

மேற்பரப்பாய்வு (Exploration), அகழாய்வு (Excavation)ஆகிய இரண்டு முறையான ஆய்வுகளைத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர், நாகரிகங்களின் தொன்மை நிலையை அறிந்துகொள்ள மேற்கொள்கின்றனர். மேற்பரப்பாய்வில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பழமையான மக்கள் வாழ்ந்ததற்கான தடையங்களைக் கண்டறிந்தபின், அதே இடத்தில் குழிகளை வெட்டி, அதில் கிடைக்கின்ற தொல்பொருட்களைக் கொண்டு அப்பண்பாட்டின் உண்மை நிலையைப் பற்றி ஆய்வர். அவ்வாறு செய்யப்படுகின்ற அகழாய்வுக்குழிகளில் பல மண்ணடுக்குகள் கிடைக்கின்றன. அந்த மண்ணடுக்குகளின் நிறம், உயரம், தன்மை ஆகியன மாறுபட்டுக் காணப்படும். அத்தகைய மண்ணடுக்குகளின் தோற்றம், அதனுடைய பருமன் ஆகியவற்றைப் பற்றி ஆய்வதே மண்ணடுக்காய்வு எனப்படும்.

சென்னைக்கு அருகிலுள்ள கொர்தலையாற்றுப் படுகையில் மேற்கொள்ளப்பட்ட மேற்பரப்பாய்வு அப்பகுதியில் தொல்பழங்காலத்தில் தோன்றிய மண் படிவங்களை ஆராய உதவின. கொர்தலையாற்றுப் படுகை உருவாவதற்கு முன்னர்த் தென்னிந்தியாவில் பெருமழையும், அதனைத் தொடர்ந்து வறட்சியான நிலையும் ஏற்பட்டுள்ளன. அதனால் செவ்வண்ண இரும்பகக்களிமண் (Laterite) உருவாகியுள்ளது. அதன் பின்னரும் பெருத்த மழை, வறட்சி நிலை ஆகியன மாறி மாறி ஏற்பட்டுள்ளன. அந்தப் பெரு மாற்றத்தின் காரணத்தால் கொர்தலையாற்றின் கரையில் மூன்று மண்படிவங்கள் காணப்படுகின்றன. அந்தப்படிவங்கள் இப்பொழுது ஓடுகின்ற ஆற்றின் நீர் மட்டத்திலிருந்து 30.5 மீ. உயரத்தில் தென்படுகின்றன. மேலும், இந்த மண்படிவங்களில் 18.3 மீ. உயரம், 2.4 மீ. உயரம் ஆகிய உயரங்களில் காணப்படுகின்ற மண்படிவங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

வடமதுரை, அத்திரம்பாக்கம், சோழவரம், எருமை வெட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் கிடைக்கின்ற மண்படிவங்களில் கற்காலமக்கள் இருந்ததற்கான தடயங்கள் கிடைக்கின்றன. கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளைத் தண்ணீர் அடித்துக் கொண்டு வந்துள்ளது. அவ்வாறு கொண்டுவரப்பட்ட கற்கருவிகள் மண்படிவங்களில் கிடைக்கின்றன. இந்த மண்ணடுக்குகளின் காலத்தை ஆய்ந்து, அதில் கிடைக்கின்ற கற்கருவிகளின் காலம் கணிக்கப்படுகின்றது.

வடமதுரையில் கிடைக்கின்ற கற்கருவிகள் மேல் மட்ட மண்ணடுக்கில் காணப்படுகின்றன. மேலும் அக்கருவிகள் கரடுமுரடான தோற்றமுடையவை. இந்தக் கரடுமுரடான கற்கருவிகள் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. கற்கருவிகள் அத்திரம்பாக்கம் மண்ணடுக்கில் அதாவது இரண்டாம் மண்படுகையில் உள்ளன. எனவே, அவை அதற்குப்பின் வந்த மக்கள் பயன்படுத்தியன என்பது தெளிவாகின்றது. இந்தப் படுகைகள் மூன்றாம் பனிப்படர்வு காலத்திலும், புத்துயிரூழியின் ஈற்றயற்பகுதியின் இடைக்காலத்திலும்



மண்ணடுக்காய்வு

(Middle Pleistocene) அதன் கடைக் காலத்திலும் ஏற்பட்டுள்ளன. அதாவது ஏறக்குறைய 2,00,000 ஆண்டுகள், 1,00,000ஆண்டுகள், 50,000 ஆண்டுகளுக்கு முன்னர் அந்த மண்ணடுக்குகள் ஏற்பட்டுள்ளன என்று காலம் கணிக்கின்றனர். அதைப் போலவே அதில் கிடைக்கின்ற கற்கருவிகள் அந்த அந்தக் காலத்தைச் சார்ந்தவை என்பது அறியமுடிகின்றது.

அகழாய்வு செய்யப்பட்ட குழியின் நான்கு பகுதிகளிலும் மண்ணின் நிறம் மாறுபட்டிருக்கும். ஒவ்வொரு மண்ணடுக்கிற்கும் ஒவ்வொரு நிறமிருக்கும். அந்த மண் அடுக்குகளின் பருமனை மற்ற மண்ணடுக்குகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த மண் அடுக்கு எவ்வளவு காலத்தில் ஏற்பட்டிருக்கும் என்று கணிக்கலாம். சில இடங்களில் மண் அடுக்குகள் அதிகமின்றி ஒரே வகையாகக் காணப்படும். அவ்வாறு கிடைக்கின்றபோது அங்கு ஒரு பண்பாட்டைச் சார்ந்த மக்கள் மட்டும் வாழ்ந்துள்ளனர் என்று அறியலாம். சில இடங்களில் பல பண்பாட்டைச்சார்ந்த மக்கள், பல காலங்களில் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகின்றது. அகழாய்வுக் குழிகளில் காணப்படும் மண்ணின் நிறம், தரம் ஆகியவற்றைக் கொண்டு மண்ணடுக்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பர். பின்னர் அந்த அடுக்குகளுக்கு மேலிருந்து கீழாக எண்ணிக்கை இடப்படும். இந்த அடுக்குகளின் துணையுடனும், கிடைக்கின்ற தொல்பொருட்களின் துணையுடனும் என்னென்ன நாகரிகத்தைச் சார்ந்த மக்கள் இருந்தனர் என்று கூறுவர். ஆனால், நாகரிகத்தைக் கூறும் போது கீழிருந்து மேலாக எண்ணிக்கை இடப்படும். அடிப்பாகத்திலிருக்கும் மண்ணடுக்கு காலத்தால் முற்பட்டது. அதற்கு மேல் இருக்கும் அடுக்குகள் பிற்காலத்தவை என்பதை அறிய இந்த மண்ணடுக்குகள் பயன்படுகின்றன. சில மண்ணடுக்குகள் பருத்தும் சில மண்ணடுக்குகள் சிறுத்தும் காணப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் அமைந்துள்ள மிகவும் பருத்திருக்கும் மண்ணடுக்கு, அதில் வாழ்ந்த குறிப்பிட்ட நாகரிகத்தைச் சார்ந்த மக்கள் மற்ற மண்ணடுக்கில் வாழ்ந்த மக்களைக்காட்டிலும் நீண்ட காலம் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துரைக்கின்றது. எடுத்துக்காட்டாகப் புதிய கற்கால மக்களின் காலத்திற்குப் பின்னர், பெருங்கற்கால மக்கள் இருந்தனர். அகழாய்வின் அடிப்பகுதியில் புதிய கற்காலமக்களின் தொல்பொருட்களும், அதற்கு மேலே உள்ள மண்ணடுக்குகளில் பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய தொல்பொருட்களும் கிடைக்கின்றன. எனவே, புதிய கற்கால மக்கள் காலத்தால் முற்பட்டவர்கள் என்பது தெளிவாகின்றது.

சில இடங்களில் பெருங்கற்கால மக்களின்

தடயங்கள் மட்டும் கிடைக்கும். அத்தகைய குழிகளில் மண்ணடுக்குகளில் அதிகமாற்றம் கண்டறிய முடியாது. எனவே, பெருங்கற்கால மக்கள் மட்டும் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்று அறியலாம். சில இடங்களில் மண்ணடுக்குகளைக் கண்டறிவது கடினம். அத்துடன் முற்காலத்திய பொருட்கள் பிற்காலத்திலும் பிற்காலத்திய பொருட்கள் முற்காலத்திலும் கிடைக்கும். அவ்வாறு ஏற்படுகின்ற நிலையில் மண்ணடுக்குகளைக் கவனித்தால் உண்மை நிலை விளங்கும். அதாவது, இப்பகுதியைப் பிற்காலத்தில் வந்தவர்கள் வேளாண்மை போன்ற காரணத்திற்காகத் தோண்டி எடுத்துள்ளனர் என்பதைத் தெரிவிக்கும்.

சில இடங்களில் சவக்குழிகள் கிடைக்கின்றன. அந்தச் சவக்குழிகள் எந்த வகையைச் சார்ந்த மக்களுடையன என்பதையும் கூறலாம். (எ.கா.) மூன்று மண்ணடுக்குகளில் மூன்றாம் மண்ணடுக்கில் சவக்குழி கிடைத்தால் அந்தக்குழி எந்த மண்ணடுக்கிலிருந்து வெட்டப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். இரண்டாம் மண்ணடுக்கிலிருந்து அந்தக் குழி வெட்டப்பட்டிருந்தால் அந்தச் சவக்குழி இரண்டாம் மண்ணடுக்கில் வாழ்ந்தவர்களுக்கு உரிமையானது. என்று கணிக்கலாம். முதல் அடுக்கில் வாழ்ந்தவர்களுக்கு இது தொடர்புடையது இல்லை. ஏனெனில் முதல் மண்ணடுக்கில் இந்தக்குழி வைத்ததற்கான தடயங்கள் ஏதும் கிடைக்கவில்லை எனவே, இம்மக்கள் இறந்தவர்களைப் புதைக்க அறிந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. சில இடங்களில் சாம்பல், மணல் ஆகியன சில மண்ணடுக்குகளின் மேல் காணப்படும். அத்தகைய சூழ்நிலையில் சாம்பல் எந்த அடுக்கில் கிடைக்கிறதோ அந்த அடுக்கில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை தீயால் அழிக்கப்பட்டிருக்கும் என்றும், மணல் காணப்படும் அடுக்கில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை தண்ணீரால் அழிக்கப்பட்டிருக்கும் என்றும் அறிய இவ்வாய்வு பயன்படுகிறது. தி.சு.


**மண்ணரிப்பு:** 'போரைத் தவிர்ப்பதற்கு அடுத்தபடியாக, மேலேயுள்ள ஒரு சில அங்குல மண்ணின் வளத்தைக் காப்பதுதான் மனித குலத்தை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சிக்கல்' என்றார் வார்டு பாயிடு ஆர் (Vord Boyd Orr). இந்த மண் வெப்ப தட்பங்களாலும், காற்றாலும், மழையாலும், அலையாலும் அரித்துச் செல்லப்படுவதைத் தான் மண்ணரிப்பு என்பர். இயற்கைக் காரணிகள் ஒரு புறமிருக்க மனிதனும் இதற்கு ஒரு காரணமாகவே இருக்கிறான். இந்த மண்ணரிப்பின் விளைவுகளை நினைவு கூர்ந்தால், அதனைத் தவிர்ப்பதற்குரிய வழிமுறைகளைத் தேர்ந்து செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

சூரிய வெப்பத்தில் சூடாகி, இரவு நேரத்தில் குளிரும்போது, மேல் மண் இயல்பாகவே பொடியாகிப் போகிறது. காற்றும், புயலும் அப்பொடியை வாரிச் சென்று விடுகின்றன. இதுபோன்றே, பேய் மழையும் பெரு வெள்ளமும் மேல் மண்ணைக் கரைத்தெடுத்துச் சென்று விடுகின்றன. கேரளம் போன்ற பகுதிகளில் கடலலைகள் கரைகளை அரித்துச் சென்று விடுகின்றன. நீரால் ஏற்படும் மண்ணரிப்பு மூவகைப் படுத்தப்படுகிறது. மேல் மண் சமச்சீரான அடுக்குகளாக அரித்துச் செல்லப்படுவது தகட்டரிப்பு எனப்படும். அவ்வகை அரிப்புப் புறக்கணிக்கப் பட்டால், நீரொழுக்கு சிறு சிறு ஓடைகளை மேற்பரப்பெங்கும் உண்டு பண்ணி விடுகிறது. அதனை ஓடையரிப்பு எனலாம். அதனையும் சரிப்படுத்தத் தவறினால் சிற்றோடைகள் பேரோடைகளாக, வடிகால்களாக, தாரைகளாக உருவெடுத்து விடுகின்றன. இதனைத் தாரை அரிப்பு என்றே சொல்லலாம்.

மண்ணரிப்புக்கு மனிதனே பலவகைகளில் காரணமாகி விடுகிறான். மரங்களுடைய வேர்களும் அவற்றின் இலைச்சருகுகளும் உண்மையில் மேல் மண்ணின் கவசங்களேயாகும். எனவே, கண்மூடித்தனமாகக் காடுகளை அழிக்கும்போது புறமண் வெறுமையாகி, வீசு காற்றாலும், ஓடு நீராலும் எளிதில் அரிக்கப்பட்டுவிடுகிறது. இது போன்றே, கன்று காலிகள், குறிப்பாக, ஆடுகள் புற்றரைகளை மேய்ந்து துவைத்துத் தூசிப்பரப்புகளாக மாற்றும்போது மேல் மண் அரித்துச் செல்லப்படுவது மிக எளிதாகிறது. மண்ணைத் தகுந்த முறையில் பண்படுத்திப் பயன்படுத்தாவிட்டாலும் மண்ணரிப்பு ஏற்பட்டு விடும். எடுத்துக்காட்டாகச் சரிவான நிலங்களைக் குறுக்கு வரப்புக் கட்டாதவாறு மேல் கீழாக உழுது பயிரிடுவதைச் சொல்லலாம்.

மண்ணரிப்பினால் வளம் மிக்க மண் அகன்று விடுவதால், மண்ணின் உற்பத்தித் திறன் குறைந்து செல்ல நேரும். ஓடைகளும், தாரைகளும் தோன்றும் போது, அப்பகுதிகள் சாகுபடிக்குத் தகுதியற்றவையாகி விடுகின்றன. அரித்துச் செல்லப்படும் மண் கால்வாய்களையும் அணைகளையும் தாழ்நிலப்பகுதிகளையும் மேடுறுத்துகிறது. அதனால் அணைகள் தூர்ந்து விடுகின்றன (கங்கை நதிக்குட்பட்ட இராமகங்கை அணையின் கொள்ளளவு, திட்டமிட்டதில் நான்கிலொரு பங்காகச் சுருங்கி விட்டதற்கு இந்த மண்ணரிப்பே காரணமாகச் சொல்லப்பட்டுள்ளது). அணைகளின் பராமரிப்புச் செலவு தொடர்ந்து வளர்ந்து செல்கிறது. மண்ணரிப்பால் ஏற்படும் பயிரிழப்பு உணவு, கால்நடைத் தீவனம், விறகு மரம் ஆகியவற்றின் அளிப்பைச் சுருக்குகிறது. மழை குறைதல், பெருவெள்ளங்களால் போக்குவரத்துப் பாதிக்





மண்ணரிப்பு

கப் படுதல், வன விலங்குகள் அருகுதல் போன்ற பிற வும் மண்ணரிப்பால் ஏற்படுகின்றன. எனவே, தான் மண்ணரிப்புக்குக் காரணமாவதால், மனிதகுலம் தற்கொலை செய்து கொள்கிறது என்றார் அறிஞர் தட்லி இசுடாம்ப்பு (Dudley Stamp).

இந்தியாவில் 200 மிலியன் ஏக்கர் நிலப்பரப்பு மண்ணரிப்பு ஆபத்துக்கு ஆளாகியுள்ளதாக இந்திய மூன்றாம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை குறிப்பிட்டுள்ளது. உத்தரப்பிரதேசம், வங்காளம், பஞ்சாபு போன்ற மாநிலங்களில் நிலைமை கவலை தருவ தாகவே உள்ளது. பஞ்சாபில் ஓசியாப்பூர் மாவட்டத்தில் சாகுபடி நிலத்தில் நான்கிலொரு பங்கு பயிரேற்ற முடியாத அளவுக்கு மலை ஓடைகளால் அரித்துச் செல்லப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. உ.பி.மாநிலத்தில் ஒரு மாவட்டத்தில் ஓர் இலட்சம் ஏக்கர் நிலம் ஓடைகளாகவும் தாரைகளாகவும் ஆகிவிட்டன என்றும், ஆண்டுதோறும் ஆயிரம் ஏக்கர் நிலம் இவ்வாறு சீர்கேடு அடைந்து கொண்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இராசசுதான் பாலைவனம் ஆண்டுக்கு 1 கி.மீ. அளவு, கடந்த 50-60 ஆண்டுகளாக விரிந்து 130 ச.கி.மீ. பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ஏறக்குறைய 6,000 மிலியன் கண்டி மண் அரித்துச் செல்லப்படுவதாகவும், அத்துடன் சேர்ந்து தழை, மணி, சாம்பல் சத்துகள் ஏறக்குறைய 8 மிலியன் கண்டி இழந்து கொண்டிருப்பதாகவும் அண்மைக் கால அறிக்கை யொன்று குறிப்பிடுகிறது. இதில் ஏறத்தாழ 2,000 மிலியன் கண்டி ஆறுகளிலும், 500 கண்டி அணைகளிலும் எஞ்சியது கடலிலும் சென்று கலக்கின்றன.

மண்ணரிப்புச் சிக்கலை எதிரிடுவதற்கான வழிகள் பொதுவாக, மண்வளப் பாதுகாப்பு முறைகள் என்றறியப் படுகின்றன. குறிப்பிட்ட சில சாகுபடி முறைகள் மண்ணரிப்பைத் தடுக்கத்தக்கன. சரிவுக்குக் குறுக்குவாட்டில் நிலத்தை உழ வேண்டும். பயிர்ச் சால்களும் சரிவுக்குக் குறுக்காகவே இருக்க வேண்டும். ஒவ்வொரு சாகுபடிக்கும் பயிர்களை மாற்றிச் சாகுபடி செய்ய வேண்டும். நிலத்தைச் சரிவு வாக்கில் கண்டங்கண்டமாகப் பிரித்து இரண்டு அல்லது மூன்று வகைப் பயிர்களைக் கண்டம் மாற்றிப் பயிரிட வேண்டும். அரிப்பை ஊக்குவிக்கும் உருளைக் கிழங்கு, புகையிலை, பருத்தி முதலியவற்றை ஒரு கண்டத்திலும், நெருக்கமாக வளர்ந்து மண்ணை மூடிப் பாதுகாக்கும் பயிறு வகைகளை அடுத்த கண்டத்திலும் பயிரிடும்போது, ஓடும் நீரின் வேகம் கட்டுப்படுத்தப்படுகிறது.

நிலத்தின் சரிவுக்கு எதிர்த்திசையில், சம உயரப் புள்ளிகளை இணைத்து, அதாவது சரிவின் ஒரே உயரத்தை ஒட்டி, சமமேட்டுவரப்புகள் (Contour) அமைப்பது மண்ணரிப்பைத் தடுக்கவழிசெய்யும். இதுபோன்ற ஒருவகை இயந்திரக்கலப்பையைக் (Basinlister Plough) கொண்டு நிலத்தை உழுதால் நிலத்தில் இடம் விட்டு விட்டு அந்தக் கலப்பை உழுது கொண்டு செல்லும். அவ்வாறு உழும்போது, நிலத்தில் பெய்யும் மழை நீர் அந்தந்தப் பள்ளங்களில் அப்படியே தேங்கி நின்று மண்ணரிப்பு ஏற்படாமல் நிலம் பாதுகாக்கப்படும். மலைச் சரிவுகளிலுள்ள நிலங்களில் படிக்கட்டுகள் போன்று வெட்டி அமைத்து அவற்றில் பயிர் செய்ய வேண்டும். தேவையான வடிகால்களை அமைத்தல், கரைகளைக் கட்டுதல், தாரைகளை நிரப்புதல், தடுப்புச் சுவர்களை எழுப்புதல் போன்ற வேறு வழிகளாலும் மண்ணரிப்பைத் தடுக்கலாம்.

காற்றினால் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்கத் தனியாகச் சில வழிகள் உள்ளன. நிலத்தின் மேற்பரப்பு காற்றினால் தாக்காதவாறு நிலம் முழுதும் மூடிப் பரவும் பயிர்களைச் சாகுபடி செய்ய வேண்டும். காற்றின் எதிர்த்திசையில் உயரமான அடர்த்தியான சீமைக்கருவேல், வாகை, முந்திரி, புளி, புங்கம், கருவேல், வேம்பு, பூவரசு, சவுக்கு முதலிய மரங்களை நட்டுக் காற்றின் வேகத்தைக் குறைக்கலாம்.

இந்த நாட்டில் முதல் ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களில் 29.37 மிலியன் எக்டேர் பரப்பில் உரூ.1200.82 கோடி செலவில் மண் வளப்பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தப் பரப்பு மண்ணரிப்புகளாகியுள்ள மொத்த நிலப்பரப்பின் 16.8 விழுக்காடு மட்டுமேயாகும். இந்த வேகத்தில் சென்றால், மண்ணரிப்புப் பிற இடங்களுக்கு இனிப்பரவாது என்று வைத்துக் கொண்டால், சிக்கலை முற்றிலும் புறங்காண மேலும் 180 ஆண்டுகள் ஆகும்.

தே.வே.

**துணை நூல்கள்:**

தமிழ்நாடு அரசாங்கம் நவீன சாகுபடிக் குறிப்புகள், தமிழ்நாடு விவசாயச் செய்தி நிலையம், 1962.

**Basu, J.K., Kaith, D.C., Rama Rao,** M.S.V., Soil Conservation in India, Directorate of Extension, Ministry of Food and Agriculture, 1960.

**மண்மேடு:** வரலாற்றுக்கு உதவக் கூடிய பழம் பொருட்கள் மண்மேடுகளில் கிடைத்திருப்பதால் அவை மதிக்கப்படுகின்றன. மிகப் பழமையான மண்மேடு நெல்லை மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் உள்ளது. அது ஆதித்த நல்லூர் எனவும் கூறப்படும். அங்குக் கிடைத்த மட்பாண்டங்கள், எலும்புக் கூடுகள், பல உலோகங்களால் ஆன பொருட்கள் ஆகியவை தமிழ்நாட்டில் திகழ்ந்த மிகப் பழமையான பண்பாட்டின் சுவடுகளாகக் கருதப்படுகின்றன.

மண்மேடுகளின் உள்ளே எதுவும் மதிப்புள்ளவை இல்லையெனில் அவை வெறும் குப்பை மேடுகளாகத் தான் கருதப்படும். அவற்றினுள்ளே ஏதாவது பழம் பொருள் கிடைக்குமென்ற சிறு தடயம் கிடைத்தாலும் தேடுதலில் ஈடுபாடுள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு அந்த மேடுகள் ஈடு இணையற்ற செல்வங்களாகும். மண்மேடுகள் பொதுவாக ஊருக்கு வெளியேதான் காணப்படும். அந்த இடத்தில் குடியிருப்பு இருந்ததற்கு அடையாளமாக மேல்மட்டத்தில் ஓட்டுச்சில்லுகள், மட்பாண்டச் சிதைவுகள் காணப்படும்.

பல வெளிநாட்டுத் தொல்பொருளாராய்ச்சி அறிஞர்களுக்கு விருந்தாக விளங்கி வந்துள்ள மண்மேடு ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது; குமரி முனைக்கு வடக்கே ஏறத்தாழ 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது; நெல்லைச்சந்திப்புத் தொடர் வண்டி நிலையத்திலிருந்து பாளையங்கோட்டை வழியாகச் செல்லும் திருச்செந்தூர் சாலையில், பாளையங்கோட்டையிலிருந்து கிழக்கே 11.6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தாமிரவருணி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள அந்த மண்மேட்டை 'ஆதித்தநல்லூர் பறம்பு' என்பர். பறம்பின் பரப்பு 114 ஏக்கராகும். ஆதித்தநல்லூர் என்னும் சிற்றூரையும் உள்ளடக்கியதே இந்தப் பறம்பு. இது ஆற்றின் தென்கரையில் தொடங்கி தென்வடக்காக நீண்டு செல்கிறது. வடபகுதி உயர்ந்தும் தென்பகுதி தாழ்ந்தும் உள்ளன.

இறந்து போனவர்களைப் புதைக்கும் ஈமக்காடாக இந்தப் பறம்பு பயன்பட்டு வந்துள்ளது. ஆதித்தநல்லூர் மணல்மேட்டினில் டாக்டர் சாகோர் (Jagore), அறிஞர் உலூயி இலா பிக்யு (M. Louis La pique), அலெச்சாந்தர் ரீ (Alexander Rea) போன்றோர் பல முறை அகழாய்வுகள் செய்து தமிழகத்தின் மிகப் பழைமையான முதுமக்கள் தாழிப் பண்பாட்டுக்கூறுகளை (Urn – burial culture) உலகுக்கு வெளிப்படுத்தினர்.

நெல்லை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட சிதம்பரனார் மாவட்டத்தில் 'தேரிகள்' எனப்படும் மணற்குன்றுகள் பல ஊர்களில் உள்ளன. அவற்றில் வேட்டைக்குப் பயன்படுத்திய கற்களாலான சிறிய கருவிகள் கிடைத்துள்ளன. குதிரைமொழி, குளத்தூர், கூட்டாம்புளி, குரங்குடி, நாசரேத்து, புத்தன் தருவை, மாநாடு, மெய்ஞ்ஞானபுரம் ஆகிய ஊர்

களின் மணற்குன்றுகளில் கற்காலக் கருவிகள் கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்தில் மேலும் சில மணல் மேடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள கோட்டைமேடு, காஞ்சியிலுள்ள பல்லவமேடு, தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள செங்கமேடு முதலிய மண்மேட்டுப் பகுதிகள் ஆய்வுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அகழாய்வுகள் செய்யப்பட்டன. அதனால் அக்காலக் கட்டடங்கள், மக்கள் பயன்படுத்திய ஏராளமான பொருட்கள் முதலியவற்றை வெளிக்கொணர முடிந்தது.

இது போன்று சிந்து சமவெளியில் ஆரப்பா (Harappa), மொகஞ்சதாரோ, காலிபங்கான் போன்ற பல இடங்களும் மண்மேடுகளாகத்தான் விளங்கின. மொகஞ்சதாரோ என்றால் 'இறந்தோரின் மண்மேடு' (Mound of the Dead) எனப் பொருள் படும். மேற்கூறிய பகுதிகளில் விரிவான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதால் சிந்து சமவெளி நாகரிகம் உலகிற்குத் தெரியலாயிற்று.

மண்மேடுகள் காணப்படும் எல்லா இடங்களும் முன்பு மக்கள் வாழ்ந்த பகுதிகளாகும் என்று உறுதியாகக் கூற முடியாது. மீ.ம.

**துணை நூல்:**

**ஏகாம்பர நாதன், ஏ., அரங்க பொன்னுசாமி,** தொல்லியல் அகழாய்வு நெறிமுறைகள், உரோகிணிப் பதிப்பகம், சென்னை, 1983.

*மணக்கால் நம்பி*: இவர் நாதமுனிகளை அடுத்து ஆசாரியராய் விளங்கிய உய்யக் கொண்டாரின் மாணாக்கர். அவருக்குப்பின் ஆசாரிய பதவியில் இருந்தவர். இவருடைய இயற்பெயர் இராமன் என்பதாகும்.

இவர் உய்யக்கொண்டார் பிறந்து, நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு கி.பி. 929-ஆம் ஆண்டில் தோன்றினார். இவர் காவிரிக்கரையில் திருத்தவத்துறைக்கு (இலால்குடி) அருகில் உள்ள ஓர் ஊரில் பிறந்தார். அவ்வூர் இன்று இவர் பெயரால் மணற்கால் என்று குறிக்கப்படுகிறது. இவர் வேதியர் குலத்தைச் சார்ந்தவர்.

இவர் தம் ஆசிரியரான உய்யக்கொண்டாருக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் எல்லா வகைத் தொண்டுகளும் புரிந்து வந்தார். உய்யக்கொண்டாரின் மனைவி ஆண்டாள் மறைந்த பின் அவ்வீட்டின் அனைத்து வேலைகளையும் தாம் ஒருவராகவே செய்து கொண்டிருந்தார். அக்காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இவருடைய ஆசிரியப் பற்றுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. ஒருநாள் இவர் உய்யக்கொண்டாரின் மக்களான சிறுமியர் இருவரை நீராட்டி வர அழைத்துச் சென்றார். நீராடித் திரும்பும் வழியில் வாய்க்கால் சேறாய் இருத்தல் கண்டு அச்சிறுமியர் திகைத்து நின்றனர். உடனே இவர் படியாய்க் கிடந்து அவர்களைத் தம் முதுகின்மேல் அடிவைத்துக் கடந்து போகச் செய்தார். இச்செய்தியை உய்யக்கொண்டார் கேட்டு மிகவும் மகிழ்ந்தார். தம் ஆசிரியர் புதல்வியரின் மணற்கால் பொலிய நின்ற திருமேனியை உடையவராய் இருந்தமையால் அன்று முதல் இவர்க்கு மணக்கால் நம்பி என்னும் பெயர் வழங்கலாயிற்று. இவர் பிறந்த இடமும் மணற்கால் என்னும் பெயரைப் பெற்றது என்று பெரியோர் கூறுவர்.

உய்யக்கொண்டார் தம் இறுதி நேரத்தில் இவரை அழைத்து, 'வாரீர், இங்குள்ள பெரியோர்களைச் சேர்த்துக் கொண்டு நம் சமயத்தை நடத்திக் கொண்டு செல்வீர். நாதமுனிகளுக்குப் பேரர் ஒருவர் பிறப்பார். அவருக்கு யமுனைத்துறைவர் என்று பெயரிடுவித்து, எல்லாச்சமய உண்மைகளையும் நுண்பொருள்களையும் அவருக்குச் சொல்லிவைக்க வேண்டும்' என்று சொன்னார். அவ்வாறே இவர் செய்தார்.

தம் ஆசிரியர் கட்டளையை முயன்று நிறைவேற்றிய பெருமை இவருக்கு உண்டு. நாதமுனிகளுக்குப் பேரர் பிறந்து அவர் அரண்மனையில் வாழும் பேறு பெற்றார். மணக்கால் நம்பியால் அவரை எளிதில் சந்திக்க முடியவில்லை. ஆளவந்தாரைச் சந்திப்பதற்காக அவருக்குப் பிடித்தமான தூதுவளைக் கீரையினைத் தொடர்ந்து ஆறு திங்கள் கொண்டு சென்று அரண்மனைச் சமையற்காரனிடம் கொடுத்து வந்தார். அப்படியும் அவரைச் சந்திக்க இயலாமற் போயிற்று. மனம் சோர்ந்து கீரை கொடுப்பதனைத் தவிர்த்தார். ஆளவந்தார், உணவில் தூதுவளை இல்லாதது கண்டார்; சமையற்காரனிடம் வினவிச் செய்தியறிந்தார். சில நாள்களுக்குப் பின் மீண்டும் அரண்மனைக்குக் கீரை கொண்டு சென்ற போது மணக்கால் நம்பி ஆளவந்தாரைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றார். மணக்கால் நம்பி ஆளவந்தாரின் முன்னோர்கள் தமக்குரைத்த மெய்ப்பொருள்களை அவருக்கு உணர்த்துவதற்காகவே அவரைச் சந்திக்க முயன்றதாகத் தெரிவித்தார். அன்றுமுதல் ஆளவந்தாருக்குக் கீதையின் உட்பொருள் தொடக்கமானவற்றை விளக்கினார். ஆளவந்தார் உலக வாழ்வில் பிடிப்பற்று இறைவன்பால் நாட்டம் மிக்கவரானார். மணக்கால் நம்பி அவரைத் திருவரங்கத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு வீற்றிருக்கும் பெருமானின் முன்பு அவரை நிறுத்தி, 'இது காணும் உம் முன்னோர்கள் தேடி வைத்த பெருஞ்செல்வம்' என்

றார். ஆளவந்தார் அன்று முதல் திருவரங்கத்தில் நிலையாகத் தங்கினார். இவ்வரலாற்றினை 'ஆளவந்தார்க்குப் பச்சையிட்ட மணக்கால் நம்பிபடியும் போலே இருந்தது உங்கள்படி' (திருவாய்மொழி 6:8:1 ஈட்டுரை) என்றும், 'இரந்து சொல்லுகைக்கு மணக்கால் நம்பியோடு ஒப்பர் காணும்' (திருவாய்மொழி 9:3:5 ஈட்டுரை)என்றும் வரும் உரைக்குறிப்புகள் சுட்டுகின்றன.

இவர் பிறந்த ஊரில் உள்ள வரதராசப்பெருமாள் கோயிலில் காணப்படும் இவர் திருவுருவத்தில் இவர் திரிதண்டத்துடன் காட்சி தருகிறார். அதுகொண்டு இவர் தம் வாழ்வின் பிற்பகுதியில் துறவு நிலை மேற்கொண்டார் என்பது விளங்குகிறது.

இவருடைய மாணாக்கர்கள் ஆளவந்தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், வங்கிபுரத்தாச்சி முதலியோர் ஆவர்.

இவர் நூல் ஏதும் எழுதவில்லை. இவர் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு. தெ.ஞா.

**துணை நூல்:**

**கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், எஸ்.,** ஸ்ரீவைஷ்ணவ சபையின் பொன்விழா மலர், ஸ்ரீநிவாஸம் பிரஸ், திருச்சி, 1978.

**மணக்குடவர்:** திருக்குறளுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்கள் பதின்மருள் இவரும் ஒருவராவார். இவரே குறள் உரையாசிரியர்களுள் காலத்தால் முற்பட்டவர் என்று சிலர் கருதுகின்றனர். இவர் தம் உரையில் வேறுசிலர் உரையையும் குறிப்பதால் இவர்க்கு முன் சில உரைகள் தோன்றியிருந்தன என்பது பெறப்படும். மணக்குடி என்னும் ஊரினராதலின் மணக்குடியர் என்று வழங்கப்பட்டுப்பின் மணக்குடவர் என இவர் பெயர் மருவியது என்று சிலர் கூறுவர். சிலர் மணக்குடி என்பதைக் குடிப்பெயராகக் கொள்வர். இளம்பூரணரும் மணக்குடவரும் ஒருவரே எனக் காரணங் காட்டிச் சதாசிவ பண்டாரத்தார் விளக்கியுள்ளார்.

திருக்குறளுக்குத் தோன்றிய பழைய உரைகளுள் பரிமேலழகர் உரைக்கு அடுத்துச் சிறப்புடன் திகழ்வது மணக்குடவர் உரை என்னலாம். இவர் உரை தெளிந்த நடையில் சுருக்கமாக அமைந்துள்ளது. சில இடங்களில் விளக்கங்கள் காணப்படுகின்றன. இவரிடம் ஆரவாரமோ புலமைச் செருக்கோ காணப்படவில்லை என்றும், கற்றறிந்தடங்கிய அறிஞராகக் காணப்படுகிறார் என்றும் ஆய்வாளர் கூறுவர்.

'மலர்மிசை ஏகினான்' (3) என்பதற்கு மலரின் மேல் நடந்தான் என்றும், 'தாமரைக் கண்ணான் உலகு' (1103) என்பதற்கு இந்திரனது சுவர்க்கம் என்றும் கூறுவது கொண்டு இவரைச் சமண சமயத்தினர் என்னலாம். ஒவ்வொரு பாலுக்கும் இயல்விளக்கம், அதிகாரவிளக்கம் ஆகியவற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுகிறார். பரிமேலழகர் கொண்ட குறள்வைப்பு முறையும் மணக்குடவர் கொண்ட குறள் வைப்புமுறையும் பல இடங்களில் வேறுபடுகின்றன. குறள்வைப்பு முறைக்கும் காரணங்காட்டி எழுதுதல் இவர் உரையியல்பாகும். தம் உரைகளை விளக்கும் போது மேற்கோள் காட்டியும் பழைய கதைகளைக் காட்டியும் எழுதுதல் இவர் இயல்பு. 'கற்றதனாலாய பயனென்கொல்' (2) என்னுங் குறளுக்குக் 'கற்பக்கழிமடம் அஃகும்' எனும் நான்மணிக்கடிகை (29) அடியைக் காட்டி விளக்குவர். 'கூற்றங் குதித்தலுங் கைகூடும்' (269) என்பதனை விளக்க மார்க்கண்டேயன் தப்பிய கதையைக் காட்டுவர். இலக்கணக் குறிப்புத் தந்து பொருள் விளக்கஞ் செய்தலும் இவர் உரையில் காணப்படும். 'தொல்வரவும் தோலும் கெடுக்கும்' (1043) என்பதிலுள்ள தோல் என்பதற்கு வடிவழகு என்று பொருள் எழுதி ஆகுபெயர் எனக் குறித்துள்ளார். பரிமேலழகர் கொண்ட பாடத்தினும் மணக்குடவர் கொண்ட பாடம் சிலவிடங்களில் சிறப்பாக உள்ளது. 'தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும் விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்' (256) என்னுங் குறளில் கொல்லாது எனக்கொண்ட பரிமேலழகர் பாடத்தினும் கொள்ளாது எனக் கொண்ட மணக்குடவர் பாடம் பொருட் பொருத்த முடையது. உலகியல் முறையை எடுத்துக்காட்டிப் பொருள் விளக்கந்தருதலை இவர் உரையில் காணலாம்.

'மாறல்ல துய்க்க துவரப்பசித்து' (944) என்பதால் உண்ணுங்கால் ஒன்றினோடொன்று மாறு கொள்ளாத உணவினை மிகவும் பசித்துண்க என்பது பெறப்படும். 'மாறுகோளாவது நெய்யுந்தேனும் இனிய வாயினும் தம்மில் அளவொக்கு மாயின் கொல்லும்; அதுபோல்வதாம்' என விளக்குவர். 'மாறுபாடில்லாத உண்டி மறுத்துண்ணின், ஊறுபா டில்லை உயிர்க்கு' (945) என்னும் குறளிற் கூறப்பட்ட மாறுபாடு என்பதைப் பலாப்பழம் தின்றால் சுக்குத்தின்றல் என்று விளக்கியுள்ளார். இவ்வாறு, வழக்கில் கண்ட காட்டுகளால் விளக்குதலின் உரை தெளிவாக எளிதிற் புலனாகின்றது. 'சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' (412), 'வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா' (1179) என்னுமிடங்களுக்கு மணக்குடவர் எழுதிய உரையைத் தழுவியே பரிமேலழகர் உரை வரைந்துள்ளார். த.ரா.

**மணவாளதாசர்:** அழகிய மணவாளதாசர் என்று இவர் குறிக்கப்பட்ட போதிலும், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்னும் பெயராலேயே பல

ருக்கும் தெரிந்தவர். இவர் 'திவ்யகவி' என்றும் பட்டம் பெற்றவர். இவர் இராமானுச நூற்றந்தாதி பாடிய திருவரங்கத்தமுதனாரின் மைந்தர்; சிலர் அவருடைய பேரர் என்றும் கூறுவர். இவர் பிறந்த ஊர் திருமங்கை என்பதாகும்.

இப்பெருந்தகை கூரத்தாழ்வான் மைந்தரான பராசரபட்டர் என்னும் வைணவ ஆசாரியரின் மாணாக்கர்களுள் ஒருவர். அவருடைய அருளால் அருங்கலை பயின்றவர். தீவிரத் திருமால் அன்பராகிய இவர் தென் மொழியும் வடமொழியும் கற்றுத் தேர்ந்த பெரும்புலவர். தம் வாழ்நாளில் பெரும்பகுதியைத் திருவரங்கத்திலேயே போக்கியவர். 'பல்நோக்கு மணவாளர்' (திருவரங்கக் கலம்பகம்), 'திருகு அவிமங்கை மணவாள வள்ளல்' (அழகர் அந்தாதி), 'ஏற்ற மணவாளர்' (நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி) என்று வரும் சிறப்புப் பாயிரத் தொடர்கள் இவரது பெருமைக்குச் சான்றுகள் ஆகும்.

இவர் திருமலை நாயக்கருடைய அரசாங்கத்தில் பணிமேற்கொண்டிருந்தார் என்பது செவிவழிச் செய்தி. அது பொருந்தாது. இவர் காலம் விக்கிரம சோழன், அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன் ஆகியோர் காலம் ஆகும்.

இவர் தம் கவிதைத் திறனை மனிதர்களைப் பாடுவதில் கழிக்காமல் பெருமாளைப் பாடுவதற்கே பயன்படுத்தினார். 'மனிதக்கவி மொழியா மங்கை வாழ் மணவாள வள்ளல்' என்பது இவருக்குரிய சிறப்பாகும்.

இவரது தீவிர திருமால் பத்தியைக் குறிக்கும் சில வியத்தகு நிகழ்ச்சிகள் இவருடைய வரலாற்றில் காணப்படுகின்றன. ஒருநாள் அரண்மனைப் பணியில் ஈடுபட்டிருக்கும்போது தம் தோளில் கிடந்த மேல் துண்டை இரு கையிலும் கொண்டு 'கிருட்டிண, கிருட்டிண' என்று தேய்த்தார். அருகிலிருந்தவர் வினவியபோது, திருவரங்கத்தில் நம்பெருமாள் தேர் ஏறி வீதியில் எழுந்தருளும்போது பக்கத்தில் பிடித்த தீப்பந்தத்தின் தீக்கொழுந்து தாவியதனால் பற்றி எரிந்த திரையைத் தாம் அவித்ததாகத் தெரிவித்தார். அவர்கள் ஐயங்காருக்கு அறிவுமயக்கம் நேர்ந்தது என்று கருதி நடந்ததனை அரசனிடம் தெரிவித்தனர். இது இவ்வாறாகத் திருவரங்கத்தில்தேரில் தீப்பிடித்துக்கொள்ள ஐயங்கார் கைகளால் திரையைத் தேய்த்துத் தீயை அவித்ததைக் கோயிற் பணியாளர்கள் கண்டனர். அங்கு நிகழ்ந்த தீங்குக்குக் கழுவாய் தேடிப் பின்பு விழாவை நடத்தினர். இத் திருவரங்கத்து நிகழ்ச்சியைக் கேட்ட அரசன் வியப்படைந்தான். அவன் ஐயங்காரிடம் அவர் எவ்வாறு திருத்தேர் விழாவுக்குச் சென்றார் என்று வினவினான். அதற்கு அவர், தாம் மனத்தால் திருத்தேர் விழாவில் கலந்து கொண்டதாகத் தெரிவித்தார். அன்றிரவு அரசன் கண்ட கனவு ஒன்றினால் அவருடைய இறையன்பினை உணர்ந்தான். அவரைப் பணியிலிருந்து விடுவித்துத் திருவரங்கத்தில் நிலையாகத் தங்கியிருக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்து தந்தான்.

மற்றொரு நிகழ்ச்சி இவர் அரங்கனிடம் கொண்டிருந்த ஆரா ஈடுபாட்டைக் காட்டுகிறது. இவரால் பாடல் பெற விரும்பிய திருவேங்கடமுடையான் இவர் கனவில் தோன்றித் தன்னைப் பாட வேண்டினான். இவர் அதற்கு இணங்காமல் 'அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் (குரங்குகளுடன் மலையில் வாழ்தலால் திருவேங்கடமுடையான் குரங்கன் எனப்பட்டான்) பாடேன்' என்றார். அவன் இவர்க்குக் கண்டமாலை என்னும் கொடிய நோய் உண்டாகும்படி செய்தான். அந்நோயினால் பெரிதும் துன்புற்றுப் பின் தம் பிழையை உணர்ந்து திருவேங்கட மாலை, திருவேங்கடத்தந்தாதி என்னும் நூல்களை இயற்றினார். திருவேங்கடமுடையான் இவர்க்குக் காட்சிதரக் கண்டு நோய் நீங்கினார்.

இவர் எழுதிய எட்டுநூல்கள் 'அட்டப் பிரபந்தம்' என்னும் பெயரால் குறிக்கப் பெறுகின்றன. அவை 1) திருவரங்கக் கலம்பகம், 2) திருவரங்கத்து மாலை, 3) திருவரங்கத்தந்தாதி, 4) சீரங்க நாயகர் ஊசல், 5) திருவேங்கட மாலை, 6) திருவேங்கடத்தந்தாதி, 7) அழகர் அந்தாதி, 3) நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என்பன.

இந்த எட்டு நூல்களைத் தவிரத் திருநறையூர் நம்பி மேகவிடு தூது, பரப்பிரம்ம விவேகம் என்னும் இரு நூல்களும் இவர் செய்தவை எனப் பலரும் கருதுவர். பரப்பிரம்ம விவேகம் இவர் செய்ததன்று என்று கூறுவோரும் உளர். இவர் இயற்றியனவாகச் சில தனிப்பாடல்களும் வழங்குகின்றன.

சிற்றிலக்கியங்களுள் இவர்தம் நூல்கள் சிறந்து விளங்குகின்றன. அவற்றின் பயிற்சி தமிழ்ப்புலமைக்கு அளவுகோலாகக் கருதப்படுகிறது. 'அட்டப் பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்' என்பது உலக வழக்காகும். அவற்றில் அந்தாதிச் செய்யுட்களும், யமகம், திரிபு, சிலேடை முதலான சொல்லணிகளும் நிறைந்துள்ளன.

அவை திவ்வியப் பிரபந்தத்தின் சாரமாகவும், இதிகாச புராணச் செய்திகளின் களஞ்சியமாகவும் திகழ்கின்றன. இவர் பாக்களில் அங்கங்கே கலந்து கிடக்கும் ஆழ்வார்களின் ஈரத் தமிழ்ச் சொற்கள் அவர்கள்பால் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டினைக் காட்டுகின்றன. 'பாதியாய் அழுகிய கால், கைய

ரேனும், பழிதொழிலும், இழிகுணமும் படைத்தா ரேனும், ஆதியாய் அரவணையாய் என்பர் ஆகில் அவர் அன்றோ யாம்வணங்கும் அடிகள் ஆவார்' என்று பாடியுள்ளது, 'அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோயராய்' என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தையொட்டி அமைந்துள்ளதனை நோக் கும் போது இத்தீவிர வைணவர் சைவ நூல்களை யும் படித்தறிந்தவர் என்பது விளங்குகிறது. தெ.ஞா.

**துணை நூல்:**

**பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்**, அட்டப் பிரபந்தம், மர்ரே கம்பெனி, சென்னை, 1957.

*மணவாள மாமுனிகள்*: ஆசாரிய மரபில் கடைக்குட்டியாக விளங்கியவர்இவர். இப்பெருந்தகை திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரி என்று வழங்கப்பெறும் திருக்குருகூரில் அந்தண மரபில் தோன்றியவர். இவர் திகழ்க்கிடந்தான் திருநாவீறு டையான் தாதர் அண்ணருக்கும் சீரங்கநாச்சியாருக் கும் மைந்தராவார். அழகிய மணவாளன் என்பது இவரது இயற்பெயர். இவர் தம் தந்தையாரிடம் ஆழ் வார்களின் அருளிச்செயல்களையும், அவற்றின் சார மான சமய நுண்பொருள்களையும் (இரகசியங்களை யும்)ஓதியுணர்ந்தார். இவருக்குச் சிக்கல் கிடாரத்தில் திருமணம் நடைபெற்றது. இவருக்கு ஆசிரியராய் விளங் கியவர் பிள்ளைலோகாச்சாரியரின் சீடரும், நம்மாழ் வார் திருவாய்மொழியில் மிகவும் ஈடுபாடு கொண்டு அதில் ஈடுபட்டு விளங்குவதே தம் பொழுது போக் காகக் கொண்டிருந்தமையால் திருவாய்மொழிப் பிள்ளை என்று சிறப்புப்பெயர் பெற்றவருமான ஆழ்வார் திருநகரி திருமலையாழ்வார் ஆவர்.

இவர் இராமானுசரிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தம் ஆசிரியர் பணித்தவாறு இவர் திருக் குருகூரில் இராமானுசருக்குக் கட்டிய கோயிற் பொறுப்பை ஏற்று நடத்தியவர். திருவாய்மொழிப் பிள்ளை தம் கடைசி நேரத்தில் இவரைப் பார்த்து, 'வடமொழியில் உள்ள சாத்திரங்களிலே பலகாலும் கண்வையாமல், இராமானுசரின் மாபாடியத்தை ஒரு முறை கேட்டு, நமக்கும் எம்பெருமானாருக்கும் விருப்பமான திருவாய்மொழி முதலானஅருளிச் செய லிலே எப்பொழுதும் ஆராய்ச்சி செய்துகொண்டு, முன் னோர்களைப் போலே பெருமாளுக்குப் பல்லாண்டு இசைத்துக்கொண்டு திருவரங்கத்திலேயே குடியாக எழுந்தருளியிரும்' என்று பணித்துச் சென்றார். ஆத லின் தம் ஆசிரியரின் ஆணைப்படி இவர் திருவரங்கம் சென்று குடியேறினார்; திருவரங்கமே இருப்பாகக் கொண்டு தங்கியிருந்தமையால் கோயில் மணவாள மாமுனிகள் என்று கூறப்பெற்றார். தமது வாழ்வின் பிற்பகுதியில் இவர் துறவு மேற்கொண்டார்.

திருவரங்கத்தில் பழுதடைந்த நிலையில் இருந்த சமய நுண்பொருள் நூல்களைப் (இரகசிய கிரந்தங் களை) புதிதாக ஏட்டில் எழுதிக் காத்த பெருமையும் இவருக்கு உண்டு.இவர் வழியிலுள்ள திருப்பதிகளைப் போற்றிப் பாடியவாறு இருமுறை திருவேங்கடத்துக் குச் சென்று மீண்டதோடு தென்னாட்டுத் திருப்பதி களையும் சென்று வழிபட்டவர்.காஞ்சியில் சிலகாலம் தங்கி அங்கு வாழ்ந்த கிடாம்பி நாயனாரிடம் 'சிரீ பாடியம்' கேட்டறிந்தவர்; பல திருக்கோயில்களைப் புதுப்பித்துத் தக்கவர்களைப் பொறுப்பில் அமர்த்தி யவர்.

இவர் திருவரங்கத்தில் ஓராண்டு முழுவதும் திரு வாய் மொழி ஈடு முப்பத்தாறாயிரப்படியை விளக்கிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதனால் இவர் 'ஈடு முப்பத்தாறாயிரப் பெருக்கர்' என்று போற்றப் பெற் றார். இவர் திருவாய்மொழி ஈடு விளக்கச் சொற் பொழிவு நிறைவு நாளன்று பெருமாளே அரங்க நாதன் என்னும் சிறுவன் வடிவில் வந்து இவர் மேல், 'சைலேச தயா பாத்திரம்' என்னும் ஒரு தனியன் (செய்யுள்) சொல்லி மறைந்தார் என்பது வரலாறு. இவர் எழுபத்துமூன்று ஆண்டுகள் வாழ்ந்தவர்.

இவர் சொற்பொழிவாளராக மட்டுமன்றிக் கவிஞ ராகவும் உரையாசிரியராகவும் தொகுப்பாசிரியராக வும் திகழ்ந்தவர். இவர் முதன் முதலில் எழுதிய நூல் 'எதிராசவிம்சதி' என்பதாகும். இது திருக்குருகூரில் கோயில் கொண்டுள்ள இராமானுசர் பற்றிச் செய் யப்பட்ட வடமொழி நூல்; இருபது செய்யுட்களைக் கொண்டது. எதிராசர் – துறவிகளுக்கு அரசர், இரா மானுசர்; விம்சதி–இருபது. இவரால் காஞ்சி வரதரா சப் பெருமாள்மீது பாடப்பட்ட மற்றொரு வடமொழி நூல் 'சிரீதேவராச மங்களம்' என்பது. உபதேச இரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி பிரபந்தம் என்பன இவர் தமிழில் செய்த நூல் களாகும். இவர் பிள்ளை உலோகாசாரியரின் முமுட் சுப்படி, தத்துவத்திரயம், சிரீவசனபூசணம், அவர் தம்பி அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் ஆசாரிய இருதயம், அமுதனாரின் இராமானுச நூற் றந்தாதி, அருளாளப் பெருமாள் எம்பெருமானாரின் ஞானசாரம், பிரமேய சாரம், பெரியாழ்வாரின் திரு மொழியில் முதல் நானூற்றொரு பாசுரங்கள் ஆகிய வற்றிற்கு விளக்கவுரை செய்துள்ளார். தத்துவத் திரயம், ஈடு ஆகியவற்றிற்கு மேற்கோள் (பிரமாணம்) திரட்டித் தொகுத்துள்ளார்.

இராமானுசரைப் போன்றே இப்பெரியாரும் திரு வரங்கத்தில் வாழ்ந்த காலத்தில் இவரை ஆசாரிய ராக ஏற்றுக் கடைத்தேறியவர்கள் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் எண்மர். அவர்கள் 'அட்டதிக் கயங்கள்' என்று சிறப்பித்துப் பேசப்படும் வான மாமலை சீயர், பட்டர்பிரான்சீயர், திருவேங்கடசீயர்,

கோயில் அண்ணன், பிரதிவாதி பயங்கரம் அண்ணன், எறும்பியப்பா, அப்பிள்ளை, அப்பிள்ளார் ஆகியோர் ஆவர்.

இப்பெருந்தகையைப் பெரியசீயர், வரவரமுனிகள், யதீந்திரப்பிரவணர் என்றும் குறிப்பர். வைணவர்கள் இவரைத் திருவனந்தாழ்வான் என்னும் அரவரசின் மறுபிறப்பாகவும், இராமானுசருடைய பிறிதொரு பிறப்பாகவும் கருதிப் போற்றுவர். தெ.ஞா.

**துணை நூல்கள்:**

**அண்ணங்கராசார்யர், பூர்வாசார்ய வைபம்**, சென்னை ரத்னம் ராஞ்சு அச்சுக்கூடம், சிரீராமானுசன் வெளியீடு, 1970.

**கிருஷ்ணசாமி ஐயங்கார், எஸ்., ஸ்ரீவைஷ்ணவ சபை**யின் பொன் விழா மலர், ஸ்ரீநிவாசம் பிரஸ், புத்தூர், திருச்சி, 1978.

**ரங்கநாத முதலியார், ஆ.** (பதிப்பாசிரியர்), ஸ்ரீவைஷ்ணவம், சுவர்ணவிலாஸ், சென்னை, 1937.

*மணி ஐயர், பாலக்காடு*: இவர் தமிழகத்தே மிருதங்க இசைக்கருவி வாசிப்பவர்களுள் சிறந்தவர். இவர் பாலக்காடு டி.ஆர். சேசபாகவதருக்கு மகனாக 1926 – ஆம் ஆண்டு பிறந்தார்; தம் ஐந்தாம் வயது முதல் இசைப் பயிற்சியில் ஈடுபட்டார். இசையை விடத் தாளக்கருவிகளில் இவரது நாட்டம் சென்றது. இசையறிந்த மணி ஐயரின் பெற்றோர் இவரை பாலக்காடு சுப்பையரிடம் மிருதங்கப் பயிற்சிக்காக அனுப்பிவைத்தனர். எந்நேரமும் இவர் மிருதங்கப் பயிற்சியில் தான் காணப்படுவார். தமது இடைவிடாத பயிற்சியினால் இவர் குறுகிய காலத்திற்குள் மிருதங்கப் பயிற்சி சிறக்கப் பெற்றார்.

தம் தந்தை பாலக்காடு டி.ஆர். சேசபாகவதரின் அரிகதைக்கு முதன்முதலில் இவர் மிருதங்கம் வாசித்தார். மணிஐயர் தம் 8 அல்லது 10 வயதிலேயே மிருதங்க வாசிப்பின் சிறப்பைக் காட்டினார்; கல்வியைப் பள்ளிப்படிப்போடு நிறுத்திவிட்டார்.

சிவராமகிருட்டிண பாகவதருக்கு இவர் முதன் முதலில் மிருதங்கம் வாசித்தாரெனக் கருதுவோரும் உண்டு. செம்பை வைத்தியநாத பாகவதருக்கு இவர் மிகுதியாக வாசித்துள்ளார்.

பாடுபவரின் பாடலோடு இணைந்து இவர் வாசிக்கும் நயம் குறிப்பிடத்தக்கதாகும். பிரமன், மிருதங்கத்தைப் படைத்தபோதே மணி ஐயரையும் படைத்தான் என்பர்.

திருவாங்கூரில் நாதமணி என்னும் பட்டம் 1940 -இல் மணி ஐயருக்குக் கொடுக்கப்பட்டது. பாடல் போலவே மிருதங்கத்தை இசைத்த கலைஞர் மணி ஐயர் 1986 -- ஆம் ஆண்டு தம் அறுபதாம் வயதில் இயற்கை எய்தினார். இரா.குரு.

*மணி ஐயர், மதுரை*: இவர் தமிழகத்தே சிறந்து விளங்கிய வாய்ப்பாட்டு இசைக் கலைஞர்களுள் ஒருவர். மதுரை இராமசாமி ஐயரின் மகனாக 1912-ஆம் ஆண்டு பிறந்தார். ஆறாம் வகுப்புவரை படித்து, கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்த இவர், இசையில் கவனம் செலுத்தி இராசம் பாகவதரிடம் குருகுல முறையில் இராண்டாண்டு இசைப் பயிற்சி பெற்றார். எசு. முத்தையா பாகவதர் நடத்திய இசைப் பயிற்சி நிலையத்திலும் இசை பயின்றார். தம் பன்னிரண்டாம் வயதில், முதல் இசை நிகழ்ச்சி நடத்தினார்.

ஒரு கட்டைச் சுருதியில் பாடும் இயல்புடைய மணி ஐயரால் இரஞ்சினி, சனரஞ்சினி, வாசசுபதி, இலதாங்கி ஆகிய இராகங்கள் சிறப்புற்றன எனலாம். காம்போதியும், தோடியும் மணி ஐயரைக் கவர்ந்த இராகங்கள். இவர் பாடிய, காம்போதி இராகத்திலமைந்த 'காணக் கண்கோடி வேண்டும்' என்ற பாடல் புகழ் மிக்கதாகும். மேலும், இவர் பாடிய மோகன ராகத்தில் அமைந்த, 'கபாலி', சித்திர ரஞ்சினி இராகத்திலமைந்த, 'நாதுதனு மனிச' போன்ற பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

இவருக்கு 1943-ஆம் ஆண்டு தஞ்சையில், 'கான கலாதர' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இவர் தேசியப் பற்றுமிக்கவர். இவர் 1944-ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டுப் பின்னர் நலமுற்றார்.

இராகங்களுக்குரிய சுரங்களைச் சுருதி பேதமின்றி நுணுக்கமாகப் பாடுவதில் மதுரை மணி ஐயர் சிறப்புற்றவராவார். மணவாழ்க்கையில் ஈடுபடாத மணி அய்யர் தம் 55-ஆம் வயதில் 1967 – ஆம் ஆண்டு காலமானார். இரா.குரு.

*மணிக்கிராமம்* என்பது ஏதோ ஒரு சிற்றூரின் பெயர் போலத் தோன்றினாலும் உண்மையில் அதன் பொருள் அதுவன்று. பண்டைத் தமிழ் நாட்டில் குறிப்பாக, பல்லவர், பிற்காலச் சோழர் ஆட்சிக் காலங்களில் வணிகச் சமுதாயம் தம்முள் கூட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு பல குழுக்களாக இயங்கி வந்தது. அது பற்றிய கல்வெட்டுகள் தமிழகத்திலும் வெளிநாட்டிலும் பல இடங்களில் கிடைத்துள்ளன.

இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டுகள், ஆளுங் கணத்தார், சாத்த கணத்தார், காளிகணத்

தார், மணிக்கிராமத்தார், வளஞ்சியர் போன்ற சில குழுவினர் பெயர்களைக் குறிப்பிடுகின்றன.

மணிக் கிராமத்தார், வளஞ்சியர் என்போர் சிற்றூர்களில் மட்டுமே இருந்தவரல்லர். கல்வெட்டறிஞர்கள் மணிக்கிராமம் என்றால் வணிகக் குழுவில் ஒரு பிரிவு என்றும், அது அவர்கள் வாழும் நகரம் என்றும் பொருள் கண்டுள்ளனர். எனவே, நகரங்களிலும் மணிக்கிராமத்தினர் இருந்துள்ளனர். அது மட்டுமன்று; தலைநகரத்திலும் துறைமுகப்பட்டினங்களிலும் கடல் கடந்த நாடுகளிலும் இவர்கள் இருந்துள்ளனர்.

மணிக்கிராமத்தார், நாநாதேசி திசையாயிரத்தைஞ் நூற்றுவர் (க.வெ.எண் 1934-400/1939 – 40), நகரத்தார், வளஞ்சியர், அஞ்சு வண்ணத்தார் என்று பல வணிகர் குழுவினர் இருந்திருப்பது, கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றால் தெரியவரும் செய்தியாகும். ஆனாலும், அவற்றுள் ஓர் அமைப்புச் சிறந்து விளங்கியதென்றால் அது மணிக் கிராமம் ஒன்றே என்று வரலாற்றறிஞர் கூறுவர்.

பண்டைக் காலத்தில் வணிகர்கள் தம்மைக் குழுக்களாகவோ (Guilds), இணையங்களாகவோ (Corporations) அமைத்துக் கொண்டு செயற்பட்டுள்ளனர். தனி ஆளை விட, நிறுவனமாகச் செயற்பட்டால் வலு அதிகம் என்னும் உத்தியை அந்த நாளிலேயே உணர்ந்து கொண்ட சமுதாய மக்கள் உண்டென்றால் அவர்கள் மணிக்கிராம வணிகர் பெருமக்களே ஆவர். அதனால், மணிக்கிராம அமைப்பு சக்தி மிக்கதாகவும் செல்வாக்கு மிக்கதாகவும் விளங்கியது. உள்நாட்டில் அதன் ஊர்ப்பெயரைச் சேர்த்து இன்ன ஊர் மணிக்கிராமம் என அறியப்பட்டது.

கொடும்பாளூரில் இயங்கி வந்த வணிகர் குழு 'கொடும்பாளூர் மணிக்கிராமம்' எனக் குறிப்பிடப்பட்டது. தஞ்சை மாவட்டம் தில்லைத்தானத்தில் முதற் பராந்தக சோழனின் 27 – ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் (க.வெ.எண் 33/1815) அவ்வூர்க் கோவிலில் விளக்கேற்றுவதற்காகத் திருநெய்த் தானத்தைச் சேர்ந்த 'ஆதித்தபுர மணிக்கிராம' வணிகர் ஒருவர் பொன் கொடுத்தது குறிப்பிடப்பட்டுள்ளது. சேலத்துக் கோயில் அந்தணர்களுக்கு உணவு அளிப்பதற்காகக் கொடும்பாளூர் மணிக்கிராமம் சார்ந்த வணிகர் ஒருவர் 5 கழஞ்சு பொன் கொடுத்ததைச் சேலம் கல்வெட்டு (க.வெ.எண் 47/1888) உறுதிப்படுத்துகிறது. கொடும்பாளூர் மணிக்கிராமம், உறையூர் மணிக்கிராமம் (க.வெ.எண். 512/1905) காவிரிப்பூம்பட்டினத்து மணிக்கிராமம், இளங்கோப்பட்டினத்து மணிக்கிராமம் (க.வெ.எண் 474/1926) என்ற தொடர்களால் நாட்டுத் தலைநகரங்களிலும் மணிக்கிராம அமைப்புகள் சிறந்து விளங்கியிருந்ததை அறிய முடிகிறது.

மணிக்கிராம உறுப்பினர்களுக்கு அரசர்களால் மணிக்கிராமப்பட்டம் வழங்கப்பட்டது. இசுத்தானு ரவியின் கோட்டயம் செப்பேடுகளாலும் வீரராகவ மாமன்னரின் கோட்டயம் செப்பேடுகளினாலும் வணிகர்களுக்கு மணிக்கிராமப் பட்டம் அரசர்களால் அளிக்கப்பட்டதை அறிய முடிகிறது.

இவ்வாறு மதிநுட்பத்துடன் கூட்டமைப்பாகச் செயற்பட்டதால் செல்வத்தில் சிறந்து விளங்கி, பல அறச்செயல்களை மணிக்கிராம வணிகர்களால் ஆற்ற முடிந்தது. அதன் காரணமாக அவர்கள் 'தர்ம செட்டி' என்றும் கூறப்பட்டனர். நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டொன்றில் குற்றாலத்துப் பெருமாளுக்கு 23 ஆடுகள் விட்ட மணிக்கிராம வணிகர் மணிக்கிராமத் 'தரும செட்டி' என்று குறிப்பிடப்பட்டுள்ளார் (க.வெ.எண். 439, 1917). காவிரிப்பூம்பட்டினத்தில் இன்றும் ஒரு பகுதி 'மணிக்கிராமம்' என்னும் பெயரில் தனி ஊராக இருந்துவருகிறது. இந்தக் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து வணிகக் குழுக்கள் வெளிநாடுகளுக்கும் சென்று வந்தன.

இவ்வாறு சென்றவர்களைப் பற்றிய குறிப்புகள் சுமத்ரா, சயாம், பர்மா முதலான வெளிநாடுகளில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. குறிப்பாகச் சயாம் நாட்டில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டொன்று இதனை மெய்ப்பிக்கிறது. அது தெள்ளாறெறிந்த நந்திவர்மன் ஆட்சிக் காலத்தில், (கி.பி. 9 -ஆம் நூற்றாண்டு) சயாம் நாட்டில் மணிக்கிராம வணிகர் குழு, பெருஞ்சிறப்புடன் விளங்கியதை உணர்த்துகிறது.

அக்கல்வெட்டு, தகுபா (Takupa) அல்லது தக்கோலம் என்னுமிடத்தில் சயாம் நாட்டில் கண்டறியப்பட்டுள்ளது. காவிரிப்பூம்பட்டினத்து மணிக்கிராமத்தினரே தக்கோலத்துத் தமிழ்க்கல்வெட்டில் குறிக்கப்படும் வணிகக் குழுவினர் என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். புகழ்பெற்ற மணிக்கிராம வணிகக் கூட்டமைப்பு வங்கக் கடலின் மறுகரையில் நிறுவப்பட்டதை அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஒரு துறைமுகத்தையும் அது குறிப்பிடுகிறது.

மணிக்கிராமத்தார் கடற் கொள்ளைக்காரர்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளப் படைகளையும் உடன் கொண்டு சென்றுள்ளனர். இப்படி வழிவழியாகக் கடல் கடந்த நாடுகளில் நடந்து வந்த வாணிகத்திற்கும் மணிக்கிராமக் குழுவினருக்கும் அவர்கள் படைகளால் பாதுகாப்புப் போதிய அளவு

கொடுக்க முடியாமல் போனதுதான் சோழர்காலத்தில் கடல் கடந்த படையெடுப்புகள் நடத்துவதற்கான காரணங்களுள் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

மீ.ம.

**துணை நூல்கள்:**


**சதாசிவ பண்டாரத்தார், தி.வை.,** பிற்காலச் சோழர் சரித்திரம் (மூன்றுதொகுதிகள்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1961.

**நாகசாமி, இரா.,** கல்லும் சொல்லும், சேகர் பதிப்பகம், சென்னை, 1977.

**Nilakanta Sastri, K.A.,** Foreign Notices of South India, University of Madras, Madras, 1930.

**Nilakanta Sastri, K.A.,** The Colas, University of Madras, Vol. I-II, 1937.


*மணிகள்*: நவமணிகள், நவமணிகள் அல்லாத புது மணிகள், பாசி மணிகள், ஒலிதரும் மணிகள், கடிகார மணிகள் என மணிகள் பல வகைப்படும். மணிகளுள் பெரும்பாலன படிவங்களாகப் பாறை இடுக்குகளில் கிடைப்பன. செயற்கை மணிகளையும் அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். மணிகளின் அருமை காரணமாக அவற்றை வைத்திருப்பது பெருமையாகக் கருதப்படுகிறது.

ஆதியில் முத்து, வைரம், மரகதம், நீலம், மாணிக்கம் என்பன பஞ்சரத்தினம் அல்லது ஐவகை அருமணிகள் என்பது இந்திய நாட்டில் அறியப்பட்டிருந்தது. அதன்பின், புட்பராகம், பவளம், வைடூரியம், கோமேதகம் ஆகியவற்றையும் சேர்த்துக் கொண்டு, அவற்றை ஒன்பான் மணிகள் அல்லது நவமணிகள் என்று குறிப்பிட்டனர். நிறத்தை வைத்து மணிகளைப் பெயரிட்டு வந்த நிலைமாறி, அவற்றில் அடங்கியுள்ள வேதிமப் பொருட்களைக் கண்டறிந்தபின், அதன்படி 85 வகை மணிகளைக் கண்டறிந்தனர். நுட்பமாக, அம் முறையில் வகைப்படுத்தினால், 2400 வகை மணிகள் வரை கண்டறியலாம் என்கின்றனர். அவற்றுள் நூறு வகை மணிகள் குறிப்பிடத்தக்கனவாம்.

நவமணிகளில் முத்து, பவளம் தவிர மற்றவை கனிமப் பொருள்களாம். அவற்றின் மூலப் பொருட்கள் எரிமலை நெருப்பில் கற்கள் உருகிக் குளிர்ந்த பொழுது, படிகமாகி அடுக்குகள் தேய்ந்து போக அழகிய ஒளியுடைய மணிப் படிவங்கள் உருவாயின. இது நிகழ்ந்தது 5 முதல் 100 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் என்பர்.

ஆதி மனிதன் மந்திரச் சடங்குகளில் மணிகளைப் பயன்படுத்தினான். முன்பு விலையுயர்ந்த மணிகள் அரசர்களிடம் இருந்தன, இக்காலத்தில் அருங்காட்சியகங்களில் இடம் பெற்றுள்ளன. தொடக்கத்தில் நகைகளுக்காகவும் மருத்துவக் குணங்களுக்காகவும் பயன்பட்ட மணிகளின் பயன் விரிவடைய இன்று அவை மின் அணுக்கருவிகளிலும் மணிப்பொறிகளிலும் இடம் பெறுகின்றன.

தங்கத்தைப் போல, மணிகளும் பணத்தை முதலீடு செய்யப் பயன்படும் கருவிகளாய் விளங்குகின்றன. மணிகள் நிறம் கவர்ச்சிக்காகவும் ஒளிவீசும் குணத்திற்காகவும் கடினத்தன்மைக்காகவும் கிடைத்தற்கரியனவாக இருக்கும் காரணத்திற்காகவும் உலக அளவில் விரும்பப்பட்டும், விலை உயர்ந்தும் விளங்குகின்றன.

நகைகளில் பதிக்கப்பட்டுள்ள மணியின் ஒளியைக் குறித்துப் பேச்சு வழக்கில் 'தால் (டால்) அடிக்கிறது' என்பார்கள். அந்த ஒளி மணிகளுக்கு எப்படிக் கிடைக்கிறது?

ஒளி வினாடிக்கு 3,00,000 கி.மீ. வேகத்தில் செல்கிறது. நீரிலோ திடப் பொருளிலோ இந்த வேகம் ஒளி வக்கரித்தல் (Refraction) காரணமாகக் குறைகிறது. தாதுப் பொருளில் ஒளிக்கதிர்கள் செல்லும் வேகத்தைக் குறிக்கும் ஒளிக் கோட்டுக் குறியீட்டெண் அல்லது வக்கரித்தல் புள்ளியைச் (Refractory Index) சரியாக அறிந்து பட்டை தீட்டும்போது வைரம் போன்ற மணிகள் ஒளி அடைகின்றன. ஒளிச் சிதறல் (Dispersion) காரணமாக இந்த ஒளி கிடைக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு முப்பட்டைக் கண்ணாடி (Prism) யால் பல நிறங்களைப் பிரித்துக் காட்ட முடியும் என்று நியூட்டன் மெய்ப்பித்தமையைக் கூறலாம்.

மணிகளுக்கு வண்ணம் எவ்விதம் கிடைக்கிறதெனில், பல நிற அலை வரிசைகளினால் அதனதற்குரிய வண்ணம் கிடைக்கிறது. மணியில் ஊடுருவும் நிறங்களில் வெள்ளை அல்லது குறிப்பிட்ட நிறம்-தவிர மற்ற நிறங்கள் உட் கொள்ளப்பட்டு எஞ்சியுள்ளனவே மக்கள் கண்களை அடைகின்றன. எடுத்துக்காட்டாக, மாணிக்க மணி சிவப்பாகத் தோன்றுவதற்குக் காரணம், சிவப்புத் தவிர அதனுள் உள்ள பிற நிறங்களை அது வெளித்தள்ளுவதில்லை. மணிகள் போன்ற ஒளி ஊடுருவும் ஊடகங்களில் ஒளிக்கதிர் கடந்து செல்லும் போது ஏற்படும் ஒளிச் சிதறலினால் எவ்வாறு நிறமாற்றம் நிகழ்கிறது என்பதை விளக்கும் கோட்பாட்டைக் (இராமன் விளைவு) கண்டு பிடித்ததற்காகத்தான் 1930 – இல் இந்தியாவின் அறிவியல் அறிஞர் சி.வி. இராமன் அவர்களுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு கிட்டியது.

மணிகளின் கடினத்தன்மையை அளந்தறியும் முறையை ஆசுத்திரிய நாட்டின் கனிமவியலாளர்

பிரடரிக்கு மோ (Frederich Moh) கண்டறிந்தார். மோவின் அளவுகோல் (Moh's Scale) எனப்படும் அதன்படி, மணிகளின் கடினத்தன்மை 1 முதல் 10 எண்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. கடினத்தன்மை ஏழுக்குக் குறைந்த எண் கொண்ட மணிகள் நகைகளுக்குப் பயன்படா. எடுத்துக்காட்டாக, வைரத்தின் கடின எண் 10. மணிகளின் எடை 'காரட்' (Carat) எனக் குறிப்பிடப்படுகிறது. தங்கத்தின் மாற்றுந்தான் காரட்டில் குறிப்பிடப்படுகிறது. மணிகளின் எடையைக் குறிப்பிட்டும் காரட்டு என்பது 0.35 அவுன்சு அல்லது 200 மில்லி கிராம் ஆகும். மணிகளில் முத்து மட்டும் தானியங்களால் (Grains) குறிக்கப்படுகிறது. முத்து நிறுவையில் ஒரு 'காரட்டு' என்பது 4 தானியங்கள் ஆகும்.

முன்பு மணிகளின் தாயகமாக இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய கீழ்த்திசை நாடுகளே புகழ் பெற்று விளங்கின. இக்காலத்தில் பிரேசில், ஆசுத்திரேலியா, சோவியத்து ஒன்றியம் ஆகிய நாடுகள் மணிகள் உற்பத்தியில் முன்னணியில் உள்ளன. இலங்கையில் ஆதாம் குன்றின் அடிவாரத்துக்கு அருகில் உள்ள இரத்தினபுரம் மாணிக்கம், நீலம், மரகதம், நிலாக்கல், பூனைக்கண்கல் (வைடூரியம்) ஆகிய பல மணிகள் கிடைக்கக் கூடிய பகுதியாகும். இங்குப் பௌத்த சமய விழாவான 'பெராஆரா' ஆண்டுதோறும் நிகழும் போது மணிச்சந்தையும் நடக்கிறது. தமிழ் நாட்டில் காங்கேயத்திலும் கரூரிலும் வாரச் சந்தையில் மாணிக்க மணிகள் விற்கப்படுகின்றன. அழகர்கோயில் பெருமாள் கோயிலில் ஒன்பான் கோள்களுக்குப் (நவக்கிரகங்கள்) பதிலியாக நவமணிகள் வைக்கப்பட்டுக் கருவூலத்தில் பாதுகாப்பாக உள்ளன.


தமிழ்நாட்டில் மாணிக்கம், கடல் நீலம், காக்கை நீலம், நிலாக்கல், மின்மினிக் கல், சூரியக்கல், நாமக் (கட்டி) கல், கறுப்புநூல்மணி முதலிய மணிக்கற்கள் கிடைக்கின்றன. இந்திய நாட்டில் மணிகளின் பெயர்களைச் சொல்லியே குழந்தைகளைக் கொஞ்சுவர். மணிகளின் பெயர்களைக் குழந்தைகளுக்கும் உற்பத்திப் பண்டங்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் திரையரங்குகளுக்கும் விரும்பி வைத்து வரும் வழக்கம் மணிகளின் பால் தொன்று தொட்டு ஏற்பட்டுள்ள ஈடுபாட்டினை உணர்த்துகிறது. இலக்கிய மறுமலர்ச்சி காண வ. இராமசாமி, டி.எசு. சொக்கலிங்கம்,இசுடாலின் சீனிவாசன் ஆகிய மூவரும் தொடங்கிய இதழின் பெயர் 'மணிக்கொடி' என்பதாம். 'சுப்பிரமணியன்' என்று குமரக் கடவுளின் பெயர் வைக்கப்பட்டிருந்தாலும் கூப்பிடுவது 'மணி' என்றுதான். மணிகளின் மீது மாந்தருக்குள்ள விருப்பத்தின் அடையாளமே இவையெல்லாம்.

மேலைநாட்டினரிடமும் மணிகளைப் பற்றிய பல நம்பிக்கைகள் நிலவுகின்றன. இன்ன திங்களில் பிறந்தவர் இன்ன மணியை அணிந்தால் நற்பேறு விளையும் என்ற நம்பிக்கை நிலவுவதால் நகை வணிகர்கள், சனவரித் திங்கள் என்றால், 'இந்த மாதம் பிறந்தவர்கள் கோமேதக மணியை வாங்கி விட்டீர்களா?' என்று விளம்பரம் செய்வர். சனவரிக்குக் கோமேதகமும், பிப்பிரவரிக்குச் செவ்வந்திக் கல்லும், மார்ச்சிற்குக் கடல் நீலமும், ஏப்பிரலுக்கு வைரமும், மே மாதத்திற்கு மரகதமும், சூனிற்கு முத்தும், சூலைக்கு மாணிக்கமும், ஆகசுட்டிற்குப் 'பெரிடோட்டு' எனும் மணியும், செப்டம்பருக்கு நீல மணியும், அக்டோபருக்கு 'ஓப்பல்' மணியும் நவம்பருக்குப் புட்பராகமும், திசம்பருக்கு 'சிர்கான்' எனும் ஒருவகைக் கோமேதகமும் உரிய மணிகள் என்றும், குறிப்பிட்ட மாதத்தில் பிறந்தவர் அதற்கான மணியை அணிய வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளனர். இதனைப் போலவே, எந்தெந்தச் செயற்கை மணியை, எந்தெந்த மாதத்தில் பிறந்தவர்கள் அணிந்தால் நன்மை பயக்கும் என்ற பட்டியலும் தந்துள்ளனர்.

நகைகளுக்காக மட்டுமே அல்லாது, அவற்றின் பயன் விரிவடைந்திருப்பதால் மலிவான விலையில் மணிகளை ஏராளமாய் உற்பத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. பெரும்பாலான மணிகளுக்கும் அறிவியலார் செயற்கை மணிகளைக் (Synthetic Gems) கண்டுபிடித்துள்ளனர். இவை தவிர போலி மணிகள் (Imitation Gems) என்பனவும் வந்துவிட்டன. இயற்கை மணிகளின் மறுபதிப்பாக உருவாக்கப்பட்டவையே செயற்கை மணிகள். போலி மணிகளில் சில விரும்பத்தக்க அமிசங்கள் மட்டும் உள்ளன. செயற்கை, இயற்கை மணிகளின் வேறுபாட்டை அறியும் முறையை வியன்னா அறிவியலறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். மணிகளின் தரத்தைக் கண்டறியும் வல்லுநரை மணிக்கணியார் (Gemmologist) என்பர்.

ஐக்கிய அமெரிக்காவில் மணிசெதுக்குக்கலையை (Lapidary) ஒரு பயனுள்ள பொழுது போக்குக் கலையாகப் போற்றுகின்றனர். மணிசெதுக்குக்கலை ஆர்வலர்களுக்காகத் தனியாக இதழ்கள் (Lapidary Hobby Magazines) பல அந்நாட்டில் வெளியிடப்படுகின்றன. மணிகளைப் பற்றிய அறிவைப் பரப்ப அந்நாட்டின் பெரியநகரங்களில் மணி மன்றங்கள் (Gem Clubs) நிறுவப்பட்டுச் சிறப்பாகச் செயற்படுகின்றன. கள ஆய்வுப்பயணங்கள், சொற்பொழிவுகள், மணி கண்காட்சிகள் என்று பல நிகழ்ச்சிகளை அம்மன்றங்கள் நடத்துகின்றன.

தமிழ்நாட்டில் மணித்தொழிலில் ஈடுபட்டிருப்போர் இரண்டு இலட்சம் மக்களாவர். மணிகளைக்




**பலவகைப் பட்டைகள்**



கன்மணி கல்

கொண்டு நகைகள் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப் போர் மேலும் மூன்று இலட்சம் மக்களாவர்.

**நவமணிகள்:** முத்து, வைரம், மரகதம், நீலம், மாணிக்கம், புட்பராகம், பவளம், வைடூரியம், கோமேதகம் ஆகியவையே நவமணிகளாம். சில மணி களில் அந்தந்த வகையைச் சேர்ந்த பல்வகை மணி கள் இனம் கண்டறியப்பட்டுள்ளன. பலவற்றுக்குச் செயற்கை மணிகளும் வந்துவிட்டன. நகைகளுக்கு மட்டுமல்லாது அறிவியலுக்கும் பயன்படுவதால் இவை இன்றியமையாதனவாகிவிட்டன.

**1. முத்து:** மணிகளின் பேரரசியாகப் போற்றப் படும் முத்து (Pearl) கடலிலிருந்து கிடைக்கிறது. இதன் சிறப்பு நிறம் வெண்மையாகும். இது ஐயா யிரம் ஆண்டுக்காலமாக மனிதன் அறிந்துள்ள மணி யாகும். ஆங்கிலத்தில் இதன் பெயரான 'பேர்ல்' (Pearl) என்பது இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். அந்த இலத்தீன் மொழிச் சொல் தமிழில் உள்ள 'பரல்' எனும் பெயரிலிருந்து பெறப் பட்டிருத்தல் கூடும். பாண்டிய மன்னன் நெடுஞ் செழியன் தேவி 'முத்துப் பரல்' கொண்ட சிலம்பி னைக் கால்களில் அணிந்திருந்தாள் எனச் சிலப்பதி காரம் தரும் செய்தி மூலம் இதனை உறுதி செய்ய லாம்.

தமிழ்நாட்டை உலக அரங்கில் புகழ்பெற வைத் ததில், முத்திற்குப் பெரும் பங்கு உண்டு. கொற்கை முத்துப் பற்றி கி.பி. முதல் நூற்றாண்டளவிலேயே உரோமானியர் அறிந்திருந்தனர். அந்நாட்டு அரசி யரும் ஏனைய நங்கையரும் தமிழ்நாட்டு முத்து களையே விரும்பி அணிந்தனர். அதன் காரணமாக உரோம் நாட்டுச் செல்வம் விரையமானதாகப் பிளினி எனும் நூலாசிரியர் வருந்திக் குறிப்பிட்டுள்ளார். 'பெரிப்ளுசு' நூலும் கொற்கை முத்தினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. உரோமானியப் பேரரசர் சூலியசு சீசர் எகிப்து நாட்டு எழில் அரசி கிளியோபாத்ராவிற் குத் தமிழ்நாட்டு முத்துகளைப் பரிசாகஅளித்தாராம். மொகலாயப் பேரரசின் தளபதி மாலிக்காபூர் கி.பி. 1310 – இல் தென்னக மீது படையெடுத்து வந்து திரும்பும் போது கொற்கையிலிருந்து 315 யானை களின் மீது முத்துகளைக் கொண்டு சென்றானென்பர்.

நத்தை இனத்தைச் சேர்ந்த கடல் வாழ் உயிரின மான முத்துச்சிப்பியிலிருந்து முத்து கிடைக்கிறது. முத்துச் சிப்பிக்குள் ஆளி (Oyster) என்னும் ஒரு விதப் புழு இருக்கிறது. எப்படியோ ஒரு பொடிமணல் உட்புகுந்து அந்த ஆளினை உறுத்த, அந்தப் புழு உறுத்தல் இல்லாமல் இருக்க ஒருவகையான நீரைச் சுரக்கிறது. அந்நீர் மணல் துகளைச் சூழ்ந்து கொள்கிறது. அந்த நீர் காய்ந்ததும், மறுபடியும் உறுத்தல் ஏற்பட, மறுபடி நீர் சுரந்து படிகிறது. இப்படி அடுக்கடுக்காகக் கெட்டிப்பட்டு வருகிறது. பளபளப்பும் வழவழப்பும் உள்ள சுண்ணாம்புச் சத் துடன் கூடிய கெட்டிப் பட்ட நீர்ப்படலங்களால் ஆன போர்வையே முத்து ஆகிறது. வெதுவெதுப் பான நீரோட்டமுள்ள கடலில்தான் முத்துச்சிப்பிகள் வளரும். பாரசீக வளைகுடாவிலும் தமிழ் நாட்டில் மன்னார் வளைகுடாவிலும் முத்துகள் கிடைத்து வந்துள்ளன. முத்தெடுப்போர் 15 முதல் 20 மீட்டர் ஆழத்தில் கடலுள் மூழ்கி முத்துச் சிப்பிகளை வெளியில் கொண்டு வருவார்கள். சிப்பிகளைப் பிளந்து முத்து எடுக்கும்போது அனைத்திலும் நன் முத்துக்கள் இருப்பதில்லை. தூத்துக்குடியில் 1960-இல் முத்துக்குளிப்பு நடந்தது. அங்கு 1961-இலிருந்து முத்துக் குளிப்பு நடக்கவில்லை. அதன்பின்னரும் பாரசீக வளைகுடாவில் முத்துக்குளிப்பு நடந்து வந் தது. அந்த முத்துகள் பம்பாய் கொண்டுவரப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டுப் பாரிசிற்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன.

உலகத்திலேயே பெரிய முத்து (23 செ.மீ. நீளமும் 14 செ. மீட்டர் குறுக்களவும் உடையது) பிலிப் பைன்சுக் கடலில் இருந்து கிடைத்துள்ளது. சறுப்பு முத்துகள் கலிபோர்னியாவிலும், தேன்நிற முத்துகள் மெக்சிகோவிலும் கிடைக்கின்றன. நல்ல முத்து 300 ஆண்டுகள் வரை ஒளி குன்றாமலிருக்கும்.

முத்துகளை அனைத்துலக முத்து வணிகர்கள் ஏழு வகையாகப் பகுத்துள்ளனர். அவையாவன: 1) கீழ்த்திசை (பாரசீகவளைகுடா) முத்துகள், 2) இலங்கை அல்லது சென்னை முத்துகள், 3) வெனி சுலா முத்துகள், 4) தாகித்தி முத்துகள், 5) ஆசுத் திரேலிய முத்துகள், 6) பனாமா முத்துகள், 7) நன்னீர் முத்துகள்.

மேலே கண்ட நாடுகள் தவிர, சப்பான் நாடு விளை முத்துப் பெற்றுத் தருவதில் முன்னணியில் உள்ளது. இயற்கை முத்து தந்து கொற்கை தமிழகத் திற்குப் புகழ் பெற்றுத் தந்தது போல, கோகிச்சி மிக்கிமோட்டோ (Kokichi Mikimoto) தாம் கண்டு பிடித்த செயற்கை முத்தால் சப்பானுக்குப் புகழ் பெற்றுத் தந்துள்ளார். அவர் கி.பி.1984 – இல் கண்டு பிடித்த முறை மூலம் கிடைக்கும் முத்துகளுக்கு விளைமுத்து அல்லதுவளர்ப்பு முத்து (Cultured Pearl) என்பது பெயர்.

முத்துச்சிப்பியின் உட்புறம் அழகான ஒரு பொருளால் மூடியிருக்கும். அதனை ஆங்கிலத்தில் 'நேக்கர்' (Nacre) என்பர். அதனால் செய்த சிப்பிப் பொத்தான்கள் யாவரும் அறிந்தவையே. அந்த

நேக்கரில் பாசிமணி போல் செய்யப்பட்ட ஒரு மணியை, முத்துச் சிப்பியைப் பிடித்து, சிப்பிக்கும் சிப்பி ஆளியின் (Oyster) திசுவுக்கும் இடையில் திணித்து, அதே போலப் பல சிப்பிகளைச் சேர்த்து ஒரு கூண்டினுள் வைத்து, வெதுவெதுப்பான கடல் நீரில் அமிழ்த்தி வைப்பர். அவற்றிலிருந்து 4 ஆண்டுகள் ஆனதும் இயற்கை முத்துகளின் தரத்திற்குக் குறையாத விளை முத்துகள் (Cultured Pearls) கிடைக்கின்றன.

விளைமுத்து உற்பத்தியில் முன்னணியில் உள்ள சப்பானியரின் முறைப்படி இந்தியாவிலும் உற்பத்தி செய்யும் முயற்சியில் தமிழ்நாடு மீன் வளத்துறையும் 'இசுபிக்கு' நிறுவனமும் நடுவணரசு உதவியுடன் ஈடுபட்டுள்ளன. அதன்படி மணப்பாடு முதல் வைப்பாறு வரை கிடைக்கும் சிப்பிகளைத் தூத்துக்குடிக்குக் கொண்டு வந்து, அங்கிருந்து பாம்பன் அருகில் உள்ள குருசடித் தீவுக்குக் (Crusade Island) கொண்டு செல்கிறார்கள். அவற்றை அத்தீவில் கம்பி வலைப் பெட்டிகளில் அடைத்துக் கடல் நீரில் மூழ்கும்படி மூங்கில்களில் கட்டித் தொங்கவிடுகின்றனர். குருசடித்தீவிலிருந்து அவை மீண்டும் எடுக்கப்பட்டு மண்டபம் கொண்டு போகப்படுகின்றன. அங்குச் சிப்பியைப் பிடித்து அவற்றுக்குள் 'சுண்ணக்கரியகை' (Calcium Carbide) எனும் வேதிமப் பொருளால் ஆன ஒரு சிறு குண்டுவைக்கப்பட்டு, மீண்டும் குருசடித் தீவிற்குக் கொண்டுவரப்பட்டு மிதக்க விடப்படுகிறது. மூன்று மாதத்திற் கொருமுறை வெளியில் எடுக்கப்பட்டு மெத்தால் கலந்த நீரால் சுத்தி செய்து கடலில் விடுவர். அவைநான்கு ஆண்டுகளில் முத்துகளாக உருவாகும். அங்குள்ள வெதுவெதுப்பான கடல் நீரோட்டமே அங்கு முத்துப்பண்ணை நிறுவக் காரணமாயிற்று. விளை முத்து தவிர போலி முத்துகளும் செய்யப்படுகின்றன. மீன் செதில்களிலிருந்து சாறு வடித்து, அச்சாற்றைக் கண்ணாடி மணி மீது பூசி, உலர்த்திப் போலி முத்துகள் செய்யப்படுகின்றன. நெகிழியாலும் (Plastic) முத்துகள் செய்யப்படுகின்றன. அதிலும் சப்பானே முன்னணியில் உள்ளது. நன்னீர் முத்துகள் என்பன ஆறுகளில் விளையக் கூடியவை. யானைத்தந்தத்தினுள் கூட முத்து விளைவதாகச் சொல்லப்படுகிறது. உலகின் முத்துச் சந்தையாக விளங்கக் கூடியவை இத்தாலி நாடும், பாரிசு நகரமுமேயாகும். இந்தியாவில் பம்பாயும் சூரத்தும் முத்து வணிக நகரங்களாகும். முத்து தானியங்களால் (Grains) எடை போடப்படுகிறது. நான்கு தானிய எடை ஒரு 'காரட்டு' என்று கணக்கிடப்படுகிறது.


முத்துகளைப் பட்டை தீட்ட முடியாது. துளையிட்டு மாலையாகக் கோக்கலாம். ஐதராபாது, சூரத்து ஆகிய நகரங்களில் அத்தொழில் நடக்கிறது. முத்துகள் அணிகலன்களாக மட்டும் அல்லாமல், முகப்பூச்சுக்களிம்பு செய்வதிலும் நாட்டு மருந்து செய்வதிலும் பயன்படுகின்றன. பழந்தமிழகத்தில் பல்லாங்குழி விளையாடுவோர் காய்களாக முத்துகளைப் பயன்படுத்தியதன் காரணமாகவே, இன்றைக்கும் பல்லாங்குழி விளையாட்டில் பயன்படும் புளியங் கொட்டைகளை முத்துகள் என்கின்றனர்.

**2. வைரம்:** இது மணிகளிலேயே கடினமானது. கடின எண் 10. எக்சு கதிரும் (X-Ray) மற்ற ஒளியும் ஊடுருவக்கூடியது. எதிலும் கோடு கிழிக்கவல்லது. இது நொறுங்கும்; ஆனால் உடையாது. இதன் சிறப்பு நிறம், நிறமற்ற நிறம் அல்லது வெண்மை வண்ணம். வேறு நிறங்களிலும் கிடைப்பதுமுண்டு. அதன் விலை மிக மிக அதிகம். வைரங்கள் 'கிம்பர்லைட்டு' (Kimberlite) என்னும் பாறைப்படிவுகளில் காணப் படுகின்றன.


பண்டைக் காலத்தில் இந்தியா மட்டுமே வைரத்திற்குப் பெயர் பெற்ற நாடாக இருந்துவந்தது. இந்தியாவில் கி.மு.800-ஆம் ஆண்டிலேயே ஆற்றுப்படுகைகளில் வைரம் எடுக்கப்பட்டது. இந்தியாவிற்கு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வந்த ஐரோப்பியப் பயணி தாவர்ணியர் இந்தியாவின் வைர உற்பத்தி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கோல்கொண்டா, பன்னா, சுமல்பூர் முதலிய வைரச்சுரங்கங்களில் இருந்து புகழ்பெற்ற வைரங்கள் கிடைத்தன.

பிரேசிலில் கி.பி. 1725-இல் வைரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் இந்திய வைரத்தின் புகழ் மங்கவில்லை. பிரேசில் வைரங்கள் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டு, 'இந்திய வைரங்கள்' என்ற பெயரில்தான் விற்க முடிந்தன என்னும் அளவுக்கு இந்தியா வைர உற்பத்தியில் தன்னிகரற்று விளங்கியதாக, மணி வல்லுநர் டாக்டர் சோயல் ஆரெம் குறிப்பிடுகிறார்.

உருசியாவில் கி.பி. 1829-இல் தான் வைரம் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், இன்று சோவியத்து ஒன்றியம் வைர உற்பத்தியில் முன்னேறிய நிலையில் உள்ளது. உலக வைர இருப்பில் பாதி சோவியத்து ஒன்றியத்தில் புதைந்து கிடப்பதாய் அறியப்பட்டுள்ளது. தரத்தில் சிறந்த வைரம் தென் ஆப்பிரிக்காவில் இருந்து கிடைக்கிறது. இங்கிருந்துதான் 599 காரட்டு எடையுள்ள உலகில் இரண்டாம் பெரிய வைரம் ஒன்று அண்மைக்காலத்தில் எடுக்கப்பட்டது. உலகின் முதலாவதான 1½ பவுண்டு எடையுள்ள மிகப் பெரிய வைரமும்(Cullinon) இங்கிருந்துதான் கிடைத்தது. உலக வைர உற்பத்தியில் முதல் நிலை வகித்து வந்தபோதிலும், கரிய நிறமுள்ள கரியிலிருந்துதான் வைரம் உருவாகிறது என்பதை உணராத, தென்




**மேலும் சில பட்டைகள்**



நன்னீர் முத்துக்கள்

ஆப்பிரிக்காவின் நிறவெறிக் கொள்கை காரணமாக மேலை நாட்டு மகளிர் அந்நாட்டு வைரங்களைப் புறக்கணிக்கத் தொடங்கி உள்ளனர்.

வைர விற்பனையில் உலகின் தலைமையிடமாக விளங்குவது பெல்சியமே. அங்கு இறக்குமதியாவதில் முதலிடம் பெறுவது இந்திய வைரமே. இந்திய வைர வணிகத்தின் தலைநகரம் பம்பாய் ஆகும். உலகின் புகழ் பெற்ற 'கோகினூர்' வைரம் கோதாவரிக் கரையில் ஓர் உழவனால் கண்டெடுக்கப்பட்டு இந்திய மன்னர்கள் பலரிடமும் கைமாறி முடிவில் ஆங்கிலப் பேரரசி விக்டோரியாவின் முடியில் போய்ச் சேர்ந்தது. அளவு, நிறம், தெளிவு, வெட்டு நேர்த்தி, அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்து வைரம் மதிப்பிடப்படுகிறது.

பலகோடி ஆண்டுகளுக்கு முன் மக்கிப் போன கரிமப் பொருள், மண் உருகிக் குழம்பானபோது திரவ உருவில் சேர்ந்திருந்து, மண் குளிர்ந்து அழுத்தம் மிகுந்தபோது, படிகமாகி வைர வடிவம் பெற்றது.

மண்ணிலிருந்து மட்டுமல்ல, விண்ணிலிருந்தும் வைரம் அரிதாகக் கிடைத்ததுண்டு. மெக்சிகோவில் 1968 – இல் விழுந்த விண்தாது (Meteorite) ஒன்றில் மிகமிக நுண்ணிய வைரப்படிவங்கள் இருப்பதைக் கண்டறிந்தனர் அறிவியலார். ஒரு மில்லி மீட்டரில் பத்துலட்சத்தில் ஒரு பங்கே வைரம் பொதிந்துள்ள அத்தாது, விண்மீன்களின் தோற்றம் பற்றிய ஆராய்ச்சிக்கு உதவக் கூடியது என்ற வகையில் அரியதாக மதிக்கப்படுகிறது.

மண்ணுக்கடியில், வைரம் இருப்பதாகக் கருதப்படும் இடத்தில் 80 கி.மீ. ஆழத்திற்கு நீண்ட குழாய்களைச் செலுத்தி, மண்ணைக் கொணர்ந்து, அலசி வைரம் எடுக்கிறார்கள். ஒரு கண்டி (Ton) மண்ணைச் சலித்தால் ½ காரட்டு வைரம்தான் கிடைக்கும்.

'முடிசார்ந்த மன்னரெல்லாம் முடிவில் ஒரு பிடி சாம்பல் ஆவர்' என்பது அவர் தம் முடியில் இடம் பெறும் வைரத்திற்கும் பொருந்தும். வைரம் என்பது கரியே என்று அறிவியலார் கண்டுபிடித்தனர். வைரத்தை 1800 கெ. (Kelvin) வெப்ப நிலையில் உருக்கினால் கரியமிலவாயு ஆகிறது. வைரம் கரியைப் போல எரியக் கூடியது என்று கி.பி.18 – ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. அது வெறும் கரி (Carbon) என்று இலவாய்சியர் என்னும் விஞ்ஞானி அறிவியல் முறையில் மெய்ப்பித்தார்.

வைரத்தில், கரி அணுக்கள் எண்முகப்படிவங்களாக அமைந்துள்ளன. இந்த உண்மையை அறிந்ததும் அறிவியலார் செயற்கை வைரத்தை உருவாக்க முயன்றனர். ஜே.பி. அன்னாய் எனும் ஆங்கிலேய அறிவியலறிஞரால் கி.பி.1880-இல் செயற்கை வைரம் சோதனைச்சாலையில் கண்டுபிடிக்கப்பட்டது. நோபல் பரிசு பெற்ற மூவாசான் (கி.பி.1852 – 1907) கரித் துண்டுகளை 2400° செ. (Centigrade) வெப்பத்திற்குச் சூடுபடுத்தி மீண்டும் குளிர வைத்து அவற்றை வைரத்துண்டுகளாக்கிக் காட்டினார். கரிமமும், இரும்பும் சேர்ந்த கலவையை 130 கிலோ பார் (Kilobar) அழுத்தத்தில் 3000 கெ. வெப்பநிலைக்கு உட்படுத்தி, அதை 80 கிலோ பார் அழுத்தத்தில் 1500 கெ. வெப்பநிலைக்குக் குளிரச் செய்து, படிக வளர்ச்சி மூலம் செயற்கை வைரம் இக்காலத்தில் உருவாக்கப்படுகிறது. செம்மையான செயற்கை வைரம் 1955-ஆம் ஆண்டிலிருந்து உருவாகத் தொடங்கியது. செயற்கை வைரம் (Synthetic Diamond) 'இரங்கூன் கமலம்' என்றும் குறிப்பிடப்படும். இந்தியாவில் செயற்கை வைரத்தினைத் தொழில் அடிப்படையில் தமிழ் நாட்டு மேட்டுப்பாளையத்தில் உள்ள 'இந்திய சுவிசு செயற்கை வயிரக் குழுமம்' (Indo Swiss Synthetic Company) என்ற நிறுவனம் உற்பத்தி செய்கிறது.

இயற்கை வைரம் மட்டுமல்லாது செயற்கை வைரமும் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுவதால் வைரம் பட்டை தீட்டும் தொழில் விரிவடைந்துள்ளது. பண்பட்ட வைர வெட்டு முறை கி.பி.17-ஆம் நூற்றாண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. இன்று இயந்திரங்கள் பெருமளவு இத்தொழிலில் புகுத்தப்பட்டுவிட்டாலும், குடிசைத் தொழிலாகவே இத்தொழில் நீடிக்கிறது.

இன்று வைரமே கிடைக்காத இசுரேலிலும் இலங்கையிலும் கூட வைரப்பட்டை தீட்டும் தொழில் நடக்கிறது. எனினும், வைரப்பட்டை தீட்டும் தொழிலில் இந்தியாவே முதலிடம் பெறுகிறது. சூரத்தில் இத்தொழில் விரிவாக நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் வைரப்பட்டை தீட்டுவதிலும் வைரங்கள் செய்வதிலும் ஐந்து இலட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். வைர வணிகர்கள் திருச்சியில் இருந்தாலும் பட்டை தீட்டல் நடைபெறுவது பெரும்பாலும் புதுக்கோட்டை மாவட்டத்தில்தான். பட்டை தீட்ட மூலப் பொருளாக வழங்கப்படும் சிறு வைர உருளைகளுக்குத் 'தளம்' என்பது பெயராகும்.

வைரப்பட்டை தீட்டுதலில் முதல் கட்டம், வெட்டுதலாகும். வெட்ட, ஏறத்தாழ 4 செ.மீ.நீளம் 1½ செ.மீ. அகலம் உடைய பொடி உருளையாக உள்ள (வைரத்) தளத்தை அரைக்குதிரைச் சக்தி கொண்ட இயக்கி (½ H.P. Motor) பயன்படுகிறது. வைரத்தூள், நாமக்கட்டி, தேங்காய் எண்ணெய்

கலந்த பசையினை 'பிளேடு' களில் தடவி அவற்றை ஓடவிட்டு வெட்டுவார்கள். அந்தக் கட்டம் வரையிலும் திருச்சியில் நடைபெறும். இவ்வாறு வெட்டப்பட்டவற்றை, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புதுக்கோட்டை மாவட்ட ஊர்க்காரர்கள் வாங்கிச் செல்வர். இரண்டாம் கட்டம் கடசரப்பு (Coning) என்பதாகும். உப்புத்தாளில் உள்ள தூள், அரக்கு இரண்டையும் கலந்து செய்யப்பட்ட உரை சக்கரத்தினை (Country Grinding Wheel) கையால் உருட்டி, வெட்டப்பட்ட தளத்தினைச் சிறிய குச்சியின் முனையில் ஒட்டவைத்து, உரசி உரசி உருவம் கொடுப்பர். மூன்றாம் கட்டம், உருட்டு அல்லது வண்டிகை (Faceting) என்பதாகும். திட்டமான உருவம் கொடுக்கக் காரீயச் சக்கரத்தில் வைத்துத் தேய்த்து எடுப்பர். நான்காம் நிலை மெருகேற்றுதல் (Polishing) ஆகும். மெருகேற்றுவதற்குக் கால் மூலம் இயக்கும் கால் சாணையும், ½ குதிரைச் சக்தி கொண்ட மின் இயக்கியும் பயன்படுகின்றன. இம்முறையில் 2/3 பங்கு சேதாரமடைகிறது.

திருச்சியில் நூறு முதல் நூற்றம்பது எண்ணிக்கையிலுள்ள வணிகர்கள், தரகர்கள் மூலமே வைர விற்பனையை நடத்துகின்றனர். மெருகிடப்பட்ட வைரக்கற்கள் 20,50,100 ஆகிய எண்ணிக்கையைக் கொண்ட கட்டுகளாகக்கட்டப்பட்டு மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தியாவின் பெரும் பங்கு வைரம் இங்குத்தான் மெருகிடப்படுகிறது. ஒரு ஆண்டிற்கு 2 கோடி உரூபாய் அளவுக்கு வாணிகம் நடைபெறுகிறது. இப்பகுதியில் 50 ஆண்டுகளாக இத்தொழில் நடைபெறுகிறது.

திருச்சி நகரத்திலும் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர், விராலிமலை, பரம்பூர், திருவப்பூர், மலைக்குடிப்பட்டி ஆகிய ஊர்களிலும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் கண்டனூரிலும் ஆண் பெண் இருபாலரும் ஈடுபட்டுள்ள குடிசைத் தொழிலாக வைரப்பட்டை தீட்டல் நடைபெறுகிறது. இலுப்பூரில் வட இந்தியாவில் சூரத்தில் உள்ளது போன்ற வைர வெட்டுத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வைரம் இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா, மத்திய ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, சோவியத்து ஒன்றியம், கானா கினி, ஐவரிகோசுட்டு, உலொகோ, சிராலியோன், நமீபியா, தான்சானியா, இந்தோனேசியா, ஐக்கிய அமெரிக்கா, கயானா, சியர், வெனிசூலா, சீனா ஆகிய நாடுகளில் கிடைக்கிறது. இந்தியாவில் ஆந்திர மாநிலம், மத்திய பிரதேச மாநிலம் (பன்னா) ஆகிய பகுதிகளில் கிடைப்பதுடன் புதிதாக இராசசுத்தான் மாநில கேசர்புரத்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

**3. மரகதம்:** இதன் சிறப்பு நிறமான பச்சை வண்ணம் கருதி இதனைப் பச்சை என்றும் குறிப்பிடுவர். 'பச்சை' எனப்பொருள்படும் பாரசீகச் சொல்லில் இருந்து இதன் ஆங்கிலப் பெயரான 'எமரால்டு' (Emerald) என்னும் பெயர் உருவாயிற்று. திருமாலின் மேனி வண்ணத்தை, தொண்டரடிப்பொடியாழ்வார் 'பச்சை மாமலைபோல் மேனி' என்று பாடிப்பரவசமடைகிறார்.

விலை உயர்ந்த மணிகளுள் ஒன்றாக இது மதிக்கப்படுகிறது. வேறுநிறக்கலப்பற்ற தூய பச்சை நிற மரகதம் ஒரு காரட்டு விலை இருபதாயிரம் தாலர் வரை விற்றுள்ளது.

எரிமலைப்பாறை அடுக்குகளின் இடுக்குகளில் மட்டுமே பச்சைக் கற்கள் கிடைக்கும். பாறைகளைப் பக்குவமாக உடைத்துப் பச்சை மணியை எடுக்க வேண்டும். பச்சை மணி மிருதுவானது. 'மத்தளம் அடிபட மரகதம் உடைபடும்' என்பது பழமொழி. எனவே, பச்சை மணியைப் பட்டை தீட்டுவது மிகக் கடினமான பணியாகும். பெரும்பாலும் பட்டை தீட்டாமல் அப்படியே அணிந்து கொள்வர். இருந்த போதிலும் இத்தகைய கடினமான, நுட்ப மிகுவேலையில் சிறந்து விளங்குபவர்கள் இந்தியாவில் செய்ப்பூரில் இருக்கிறார்கள். உலகில் கிடைக்கும் 80 விழுக்காடு பச்சைக் கற்கள் பட்டைதீட்டுவதற்காகச் செய்ப்பூருக்கு வந்து சேருகின்றன.

பண்டைக் காலத்தில் கிரேக்கரால் வீனசு தேவதைக்குப் பச்சை மணி காணிக்கை யாக்கப்பட்டதாகப் பெருமைப்படப் பேசப்படுகிறது. கி.மு. முதல் நூற்றாண்டிலேயே எகிப்தின் எழில் மிகுபேரரசி கிளியோபாத்ராவிற்கு மரகதச் சுரங்கம் இருந்தது என்பர். பாண்டிச்சேரி மாநிலத்தின் திருநள்ளாறு சனீசுவரன் கோயிலிலும் இன்னும் சில தஞ்சை மாவட்டக் கோயில்களிலும் மரகத இலிங்கங்கள் உள்ளன. திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலில் எழுந்தருளும் பெருமாளின் அணியிலும் மரகதக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. சிவகங்கைச் சீமையின் ஆட்சியாளர்களாக (கி.பி. 1780 – 1801) விளங்கிய மருது பாண்டியர் மதுரை அருகில் உள்ள திருப்பாச் சேத்தியில் உள்ள சுந்தரவல்லியம்மன் கோவிலுக்கு மரகதச் சிவலிங்கம் செய்தளித்தனர். மொகலாய மன்னர் சகாங்கீர் மரகதக் கிண்ணங்களைப் பயன்படுத்தினார்.

தென் அமெரிக்காவில் உள்ள கொலம்பியா நாடு தான் உலகில் மரகதத்திற்குப் புகழ் பெற்றது. இந்த நாட்டையும் பெரு (Peru)வையும் பிற நாடுகளையும் உள்ளடக்கிய ஒரு பேரரசை, கொலம்பசு அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதற்கு முன்பே, ஏறத்

தாழ ஐந்து நூற்றாண்டுகள் (கி.பி. 1100-1533) கட்டியாண்ட பேரரசர்கள் செவ்விந்தியரான 'இன்கா' எனும் பெயர் கொண்ட பரம்பரையினர். கொலம்பியாவில் கிடைத்த கோழி முட்டையைப் போல் 12 மடங்கு பருமனுள்ள நெருப்புக்கோழி முட்டை அளவுள்ள மரதகம் ஒன்றினை இன்கா மன்னர் தம் குலதெய்வத்தின் கோயிலில் வைத்திருந்தனர். 'பெரு' நாட்டின் மீது படையெடுத்து வந்த இசுபானிய தளபதி பிசாரோ, (கி.பி. 1533) பொன் மற்றும் விலையுயர்ந்த மணிகளைக் கொள்ளை அடித்ததுடன் இந்த மரகதத்தையும் கவர்ந்து ஐரோப்பாவிற்குக் கொண்டு சென்றான்.

மரகதம் கி.பி. 1650-ஆம் ஆண்டிலிருந்து பிரேசிலிலும் கி.பி. 1830-ஆம் ஆண்டிலிருந்து உருசியாவிலும் கிடைக்கத் தொடங்கிற்று. அந்நாடுகள் தவிர, வட அமெரிக்கா (கரோலினா), தென் ஆப்பிரிக்கா, உரொடீசியா, தான்சானியா, போட்சுவானா, கென்யா, மடகாசுகர், சாம்பியா, நார்வே, ஆசுத்திரேலியா, ஆசுத்திரியா, பாகிசுத்தான், இந்தியா ஆகிய நாடுகளிலும் மரகதம் கிடைக்கிறது.

**4. நீலம்**: குருவிந்தக் கல்வகையில் இதுவும் ஒன்று. இதில் படிந்துள்ள இரும்பு, திட்டானியம் கசடுகளே இதற்குரிய நிறத்தைத் தருகின்றன. இதன் சிறப்பு நிறம் நீலம். நீல மணிகளில் (Sapphire) கடல் நீலம் (Aquamarine), வான் நீலம்(Lapis Lazuli)எனும் இரு வகை குறிப்பிடத்தக்கவை.

கடல் நீலம் கடலின் நீல வண்ணத்தில் உட்புறம் சற்று வெளிறியிருக்கும். வைடூரியத்தின் ஒருவகையாகவும் வகைப்படுத்தப்படுகிறது. இது மரகதத்திற்குச் சமமாக விலை உயர்ந்த மணியாகும். கொங்கு நாட்டுக்கடல் நீலத்தை உரோமபுரி அரசியர் விரும்பி அணிந்தனர். பிரேசில், இந்தியா, தென்மேற்கு ஆப்பிரிக்கா, மலகாசி, சோவியத்து ஒன்றியம் ஆகிய நாடுகளில் கடல் நீலம் கிடைக்கிறது.

வான் நீலம், 'இந்திர நீலம்' என்றும் குறிப்பிடப்படுகிறது. ஒரு குவளைப் பாலில் இந்நீலமணியைப் போட்டால் பால் நீல நிறமாகத் தெரியும். மாதவி அணிந்திருந்த காதணியில் இந்திர நீலம் பதிக்கப் பட்டிருந்ததாகச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. இந்த வகை மணிகளில் சிறந்தவை ஆப்கானிசுத்தான் நாட்டிலிருந்து தான் கிடைக்கின்றன.

நீலமணிகள் சுண்ணாம்புப் பாறைகளிலும் ஆற்றுப்படுகைகளிலும் இருந்து மற்ற கற்களுடன் கலந்து கிடைக்கின்றன. திரைப் படச்சுருளில் ஒலித்தடத்தை வெட்டும் கருவிகள் போன்றவற்றைச் செய்வதிலும் நீலமணிகள் பயன்படுகின்றன.

காசுமீர்ப் பள்ளத்தாக்கிலிருந்தும் நீலம் கிடைக்கிறது. பல வண்ணங்களிலான நீலமும், 'பத்மாரட்சை' எனப்படும் ஆரஞ்சு நிற நீலமும் இலங்கை இரத்தினபுரியிலிருந்து கிடைத்து வந்துள்ளன.

உலகின் தலைசிறந்த நீலம் பர்மாவிலிருந்துதான் கிடைத்தது. ஆனால், உலகின் பாதி உற்பத்தி ஆசுத்திரேலியாவிலிருந்து செய்யப்படுகிறது. இவை தவிர நீலமணிகள், இந்தியா, பிரேசில், தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, கென்யா, உரொடீசியா, தான்சானியா, பின்லாந்து ஆகிய நாடுகளிலும் கிடைக்கிறது.

நீர் நீலம் எனப்படும் காக்கை நீலம் (Iolite) நீலத்தின் சாயத்தில் தோற்றமளிக்கும். இவ்வகை மணிகள் இந்தியா, இலங்கை, பர்மா, பிரேசில் ஆகிய நாடுகளில் கிடைக்கின்றன.

அடர்த்தி நீலம் (Turquoise) எனப்படும் ஒருவகை நீலமணியைப் பண்டைய எகிப்திய மகளிர் அணிந்திருந்தனர். பண்டைச் செவ்விந்திய அரச பரம்பரையினரான மெக்சிகோவின் அசுத்தெக்கு (Aztecs)களும் பெருநாட்டின் இன்கா (Incas)க்களும் இம்மணிகளை நாணயங்களாகப் பயன்படுத்தினர். இவ்வகை மணியை ஐக்கிய அமெரிக்காதான் மிக்கஅளவில் உற்பத்தி செய்கிறது. நகைகளுக்காகவே இந்த மணிகள் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

விசயநகர பரம்பரையைச் சேர்ந்த பெங்களூர் வைத்தியராசு என்பவரிடம் 1370 காரட்டு உள்ள உலகின் மிகப் பெரிய நீலம் உள்ளது என்று டாக்டர் ஐயூபு தெரிவிக்கிறார்.

**5. மாணிக்கம்**: கெம்பு, சிகப்பு என்றும் மாணிக்கத்தைக் குறிப்பிடுவர். சங்ககாலத்தில் குருந்தம் (Corundum) எனக் குறிப்பிடப்பட்டதென்பர் பி.எல். சாமி. இக்காலத்தில் கூட 'சிவப்புக் குருவிந்தக் கல்'எனும் பெயரில் குறிப்பிடுகின்றனர். வடமொழியில் இரத்தினம், பதுமராகம் (செந்தாமரை மணி) என்றும் இதற்குப் பெயர்களுண்டு.

மாணிக்கத்தின் (Ruby) சிறப்பு நிறம் சிவப்பு. இருந்தபோதிலும் மஞ்சள், நீலம், இளஞ்சிவப்பு ஆகிய வண்ணங்களிலும் மாணிக்கமணி கிடைக்கிறது. புறாவின் இரத்த நிறத்தில் அமைந்த மாணிக்கம் சிறந்ததென்பர். அது பர்மாவிலிருந்து கிடைக்கிறது. மாணிக்கச் கல்லினுள் படிந்துள்ள 'குரோமிய'த்துகளே அதற்குச் செந்நிறம் கிடைக்கச் செய்கிறது. மாணிக்கம் படிந்துள்ளதாகக் கருதப்படும் ஆற்றுப் படுகைகளில் மணலைத்தோண்டி, சல்லடை கொண்டு சலித்து, மாணிக்கத்தை எடுக்கிறார்கள்.

பர்மாவில் 700 ஆண்டுகளாக ஐராவதி நதிக்கரையில் உள்ள மோகோக்கு மாவட்டத்தில் (Mogok District) மாணிக்கம் எடுக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலேயர் ஆட்சியின் போது அம்மாவட்டம், 'மாணிக்க மாவட்டம் (Ruby Mines District) எனும் பெயர் கொடுக்கப்பட்டுத் தனிமாவட்டமாக விளங்கிற்று. மேற்பகுதி மழமழப்பாக்கப்பட்ட, அவரை துவரை அளவில் உள்ள மாணிக்கங்கள் 'குச்சை' எனும் பெயரில் விற்கப்படுகின்றன.

சிதம்பரம், உத்தரகோசமங்கை ஆகிய தலங்களில் உள்ள கோயில்களில் இடம் பெற்றுள்ள நடராசர் சிலைகள் மாணிக்கத்தால் ஆனவை. இராசேந்திர சோழன் தஞ்சைப்பெருவுடையார் கோயிலுக்கு எட்டு மாணிக்கக் கற்களை அளித்தான்.

மாணிக்கம், கடிகாரம் மற்றும் மின்கருவிகளில் பயன்படுகிறது. உலகிலேயே சிறந்த மாணிக்கங்கள் தமிழ்நாட்டில் உள்ள நாமக்கல், காங்கேயம், கரூர்ப் பகுதிகளில் கிடைப்பவை என்றும், ஆங்காங்கு, பாங்காக்கு, சிங்கப்பூர், கொழும்பு, நியூயார்க்கு, இலண்டன், பாரிசு ஆகிய நகரங்களில் தமிழர்கள் மாணிக்க வாணிகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், ஆங்காங்கில் மணி வணிகம் புரியும் டாக்டர் அ. ஐயூப் தெரிவிக்கிறார். 'சரக்கு மலிந்தால் சந்தைக்கு வரும்' என்பர். ஆனால், மலிவற்ற விலை உயர்ந்த மாணிக்க மணிகள் கரூர்ச் சந்தையில் விற்கப்படுவதைக் காணலாம்.

இந்த நூற்றாண்டில் பாரிசு நகரைச் சேர்ந்த எட்மண்டு பிரெமி செயற்கை மாணிக்கம் கண்டுபிடித்தபின்னர், ஒரு காரட் 10,000 தாலர் என்ற விலையில் விற்கப்பட்ட மாணிக்கம், செயற்கை மாணிக்கம் எனில் காரட் ஒன்று 10 தாலரில் கிடைக்கிறது.

மாணிக்கமணிகள் பர்மா,இலங்கை (இரத்தினபுரி), பிரேசில், ஆசுத்திரேலியா, தாய்லாந்து, கம்போடியா, மலகாசி, உரொடீசியா, கென்யா, மொசாம்பிக்கு, சிராலியோன், சுவிட்சர்லாந்து, இந்தியா (ஆந்திரம், கேரளம், கர்நாடகம், பீகார், காசுமீர், தமிழ்நாடு) ஆகிய நாடுகளில் கிடைக்கின்றன.

**6. புட்பராகம்**: மலரில் உள்ள மகரந்த நிறமான மஞ்சள் கருதி (புட்பம்=மலர், ராகம்=நிறம்) வடமொழியில் இதற்குப் புட்பராகம் எனப்பெயர் ஏற்பட்டது. இதன் சிறப்பு நிறமான மஞ்சளை எண்ணி மஞ்சள் மணி எனத்தமிழில் குறிப்பிடுவர். ஆதியில் மஞ்சள் நிறமாக உள்ள எந்த மணியையும் புட்பராகம் (Topaz) என்று கூறும் பழக்கம் இருந்துள்ளது. ஆனால், புட்பராகம் இப்போது பச்சை, நீலம், சிவப்பு, 'செர்ரி' ஆகிய நிறங்களிலும் கிடைக்கிறது.

மலைப்பாறைகளைப் பிளந்து மரகதப் படிவங்களை எடுக்கும்போது இதுவும் கிடைக்கிறது. இலங்கையில் மட்டும் ஆற்றுப் படுகைகளில் கிடைக்கிறது. பிரேசில் நாட்டில் கிடைப்பனவே சிறந்தவை. இதன் கடினத் தன்மை அளவு எண் 8 ஆகும். எனினும் எளிதில் நொறுங்கக்கூடியது. எனவே எச்சரிக்கையுடன் பட்டை தீட்ட வேண்டும். நகைகளில் பதிக்கப்பயன்படும் மணியாகும் இது.

பிரேசில், இலங்கை, சோவியத்து ஒன்றியம், சப்பான், இங்கிலாந்து, அயர்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகள், பர்மா, ஆசுத்திரேலியா, ஆப்கானிசுத்தான், நேபாளம், மெக்சிகோ, மடகாசுகர், நமீபியா, சிம்பாப்வே, மலகாசி, நைசீரியா, உரொடீசியா ஆகிய நாடுகளில் புட்பராகம் கிடைக்கிறது. செயற்கைப் புட்பராகம் என்னும் பெயரில் செயற்கைக் குருவிந்தம் மிக்க அளவில் வந்துவிட்டது.

எலுமிச்சை மணி (Citrine)என்று ஒருவகை மணி பிரேசிலில் கிடைத்தது. அது இப்போது அருகிவிட்டது. அது பார்வைக்குப் புட்பராகம் போலவே தோன்றும். இப்போது இவ்வகை மணிகள் செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்றன.

**7. பவளம்**: சங்க காலத்தில் 'துகிர்' எனப்பெயர் வழங்கப்பட்டது. இதன் சிறப்பு நிறம் சிவப்பு. இருந்தாலும் இப் பவளம் (Coral) இளஞ்சிவப்பு, நீலம், மஞ்சள், கருப்பு நிறங்களிலும், வெள்ளை நிறத்திலும் கிடைக்கிறது.

ஆழமில்லாத வெதுவெதுப்பான கடலில் ஒரு வகைப்பூச்சி உள்ளது.இதற்குப் பலகால் பூச்சி (Polff) என்று பெயர். இப்பூச்சி கடலில் உள்ள சுண்ணாம்புச் சத்துப் போன்ற சாந்துப்பொருளை உறிஞ்சி எடுத்து, தரையில் கரையான் புற்றுக்கட்டுவது போல, கடலில் புற்றுக்கட்டுகிறது. இது மான் கொம்பு போல கோணல்மாணலாகக்கொடி போல வளர்வதால் 'பவளக்கொடி' எனப்படுகிறது. பவளக்கொடி மூன்று மீட்டர் நீளம் வரை வளரும். அவை படர்ந்து, பாறையாக, திட்டுக்களாக, தீவுகளாகவும் கூட உருவாகிவிடும். இலட்சத்தீவுகள், மாலத்தீவுகள், பசிபிக் குப்பெருங்கடலில் 3,01,600 சதுர கி.மீ. அளவு பரந்து கிடக்கும் 'பெரியபவளத்தீவு' (Great Barrier Reef) ஆகியவை பவளத்தீவுகளே.

'பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்' என்று அப்பர் பாடிப் பரவி இறைவன் மேனிவண்ணத்தைப் பவள வண்ணமாகக்காண்கிறார். சத்திமுற்றப் புலவர் 'பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்' என்று விளித்து நாரையின் வாய் வண்ணம் பவள வண்ணம் என்பதை உணர்த்துகிறார். அருச்சுனனுக்குப்

பாண்டிநாட்டு அரசி மூலம் பிறந்த புலந்திரன் தந்தையிடம் பவளத்தேர் கேட்க அருச்சுனன் பவளம்தேடிப் புறப்பட்ட கதையான 'பவளக்கொடிமாலை' நாட்டுப்புற மக்கள் விரும்பிக்கேட்கும் ஊரகக் கதைப் பாடலாகும்.

இலங்கையிலும் (காலிப்பகுதி) மாலத்தீவுகளிலும் சுற்றுலாப் பயணிகளைக் கண்ணாடிப் படகுகளில் கூட்டிச் சென்று பவளக்கொடிகளைக் காட்டி, வருமானம் தேடிக்கொள்கிறார்கள். நன்கு விளைந்த பவளக்கொடியின் குச்சிகளை வெட்டி, பட்டைத் தீட்டி விற்கிறார்கள். தரமான பவளம் கிலோ 2000 தாலர் வரை விலையாகிறது.

சித்த மருத்துவத்தில் இது 'பவள பசுபம்' தயாரிக்க உதவுகிறது. அது மன நோய், வயிற்றுப்புண், மிகைக்கொழுப்பு ஆகியவற்றை அகற்ற உதவுகிறது.

இராமேசுவரத்தில் கிடைக்கும் பவளம் நிறம் கருதிச் சீதைமஞ்சள் என வழங்கப்படுகிறது. சிறந்த பவளம் மத்தியதரைக்கடலில் இத்தாலி நாட்டின் மூலம் கிடைக்கிறது. பவளம் 84 நாடுகளில் கிடைத்தாலும் வணிக அடிப்படையில் எடுக்கப்படுவது சப்பான், தைவான், மலேசியா, நைசீரியா, துனீசியா, அவாய், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து மட்டும்தான்.

8. **வைடூரியம்**: இதற்குரிய 'பெரில்' (Beryl) எனும் ஆங்கிலப் பெயர் கிரேக்கத்திலிருந்து வந்ததாகும். ஆங்கிலத்தில் பூனைக்கண் (Cat 's Eye)எனப் பொருள்படும் பெயராலும் இது வழங்கப்படுகிறது. இது எளிதில் நொறுங்கக் கூடியது. இதன் சிறப்பு நிறம் வேப்பம்பழ நிறம். நடுவில் ஒரு வெள்ளிக்கம்பி போன்ற ஒளிக் கோடு நூலிழையாக ஓடுகிறது. வைடூரிய மணியை அசைத்தால் அந்த ஒளிக் கோடும் அசையும். 'கிருட்டிண வைடூரியம்' என்று ஒரு வகை வைடூரியம் உண்டு. அதில் இந்த ஒளிக்கோடு கருப்பு நிறத்தில் இருக்கும். தேன் நிற வைடூரியத்திற்கு விலைமதிப்பு மிகுதி.

தங்க வைடூரியம் எனப்படும் மஞ்சள் நிற வைடூரியங்கள் (Heliodar, Goshenite, Morganite) அரிதாகக் கிடைப்பன.

சங்க காலத்தில் தமிழ்நாட்டில் வைடூரியம் கிடைத்து வந்தது. 'தீதறுகதிர்' எனச் சிலப்பதிகாரம் இதனைக் குறிப்பிடுகிறது. ஈரோடுக்கருகில் நொய்யல் ஆற்றங்கரையில் கொடுமணல் எனும் சிற்றூரில் வைடூரியத் தொழில் நடந்து வந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. தென் மைசூருக்கும் கொங்கு நாட்டுப்பர் கூருக்கும் இடையில் வைடூரியம் கிடைத்து வந்ததை உரோம நாட்டு நூலாசிரியர் பிளினி குறிப்பிட்டுள்ளார். பண்டைக்காலத் தமிழகத்தில் வைடூரியம் என அறியப்பட்ட மணியும் இன்று வைடூரியம் என வழங்கும் மணியும் ஒன்றுதானா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

வைடூரியம் இலங்கை, பிரேசில், இந்தியா, தென் ஆப்பிரிக்கா, சோவியத்து ஒன்றியம், பர்மா, மலகாசி, உரொடீசியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் கிடைக்கிறது.

பிரேசிலில் மட்டுமே கிடைக்கும் ஒரு வகை வைடூரியம் 'பிரேசியனைட்டு' (Brazionite) எனக் குறிப்பிடப்படுகிறது.

9. **கோமேதகம்**: இதனை ஆங்கிலத்தில், கொட்டை எனப் பொருள்படும் 'கார்னட்டு' (Garnet) எனும் பெயரிலும், 'சார்டோனிக்சு' (Sardonyx) எனும் பெயரிலும் குறிப்பிடுவர். இராசி ரத்தனம், தமோ மணி, பிங்கசுபடிகம், இரேகா மணி, காமதேனு ரத்னம் என்ற பெயர்களும் கோமேதகத்திற்குக் கூறப்படும். இதன் சிறப்பு நிறம் பசுவின் சிறுநீர் (கோ-மயம்)நிறமாகும். சில கோமேதகங்கள் நிறம் தேன் சொட்டு நிறமாகவும் இருப்பதால் 'தேன் மணி' எனும் பெயரும் இதற்குண்டு. இவ்விரு நிறங்களிலும் கிடைப்பதால் சிலப்பதிகாரம் இதனை 'இருவேறுருவம்' எனக் குறிப்பிட்டுள்ளது. இந்த இரு நிறங்கள் தவிர நீலம் தவிர்த்த மற்ற நிறங்களிலும் கிடைப்பதுண்டு. விவிலிய ஆதி ஆகமத்தில் இதைப்பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

நெருப்புத் துண்டு (கங்கு) போன்ற நிறமுள்ள கோமேதகத்தைப் 'பர்மா மாணிக்கம்' என்பர். இன்னும் ஐந்து வகைக் கோமேதகங்கள் உள்ளன. கோமேதகம் தணலில் காட்டினால் நிறம் மாறக் கூடியது. இது கருங்கற் பாறை இடுக்குகளில் இருந்து வெட்டி எடுக்கப்படுகிறது; பெரிய அளவினதாகக் கிடைப்பதில்லை; கடினமானது.

இந்தியா (ஒரிசா, ஆந்திரா, இராசசுத்தான்), பர்மா, இலங்கை, பிரேசில், மெக்சிகோ, ஆசுத்திரேலியா, தான்சானியா, தென்ஆப்பிரிக்கா, மடகாசுகர், சோவியத்து ஒன்றியம், இத்தாலி, சுவிட்சர்லாந்து, மலேசியா, பாகிசுத்தான், கென்யா, அரேபியா, உருகுவே, இங்கிலாந்து(இசுகாட்லாந்து), சிம்பாப்வே, கனடா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், அயர்லாந்து ஆகிய நாடுகளில் கோமேதகம் கிடைக்கிறது.

பார்ப்பதற்கு வைரம் போலத் தோன்றும் 'சிர்கான்' (Zircon) எனும் மணியை ஒருவகைக் கோமேதகம் என்றே குறிப்பிடுவர். விண்வெளி அறிவியலுக்கான கலப்பு உலோகத்தில் இது பயன்படுத்தப்படுகிறது. தாய்லாந்து மற்றும் கம்போடியாவில் இது கிடைக்கிறது.

'ஆல்மண்டினி' (Almandine) என்பது ஒருவகை சிவப்புக் கோமேதகமாகும். 'தேமண்டாய்டு' (Demantoid) எனப்படும் மிக அரிய வகைக் கோமேதகம் உருசியாவிலிருந்து கிடைக்கிறது.

அலைஅலையாய் வெள்ளை, சிவப்பு வண்ண அடுக்குகள் கொண்ட மணியைச் (Agate) சேர்ந்ததாகக் கோமேதகத்தை வகைப்படுத்துவதும் உண்டு.
மீ.ம.

**அணிகளில் மணிகள்:** எழில் மிகு வண்ண ஒளியால் கண்ணைக் கவரும் சிறப்புடைய மணிகள், அவற்றின் ஒளி அழகு காரணமாக மக்கள் விரும்பி அணியும் அணிகளில் இடம்பெறலாயின. மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ் மக்கள் மணிகளின் மதிப்பினை உணர்ந்து அவற்றைப் பொன்னிடைப் பதித்து அணிந்து வந்துள்ளனர். முத்து, பவளம், மணி, பொன் போல்வன தாம் தோன்றுமிடங்களால் வேறுபட்டனவாயினும் அருவிலை நன்கலம் அமைக்கும் போது ஒருங்கு கூடி இன்புறுத்தும் எனப் பொருள்படும் சங்க கால உவமை ஒன்றினால் இந்த உண்மை நன்கு புலனாகிறது. மணிகளைத் தனித்தனியே அணிகளாக்கி அணிந்ததோடு, பலவற்றை நிரல்பட அடுக்கி, அமைத்து அணிகள் செய்தும் அணிந்துள்ளனர். 'மணிமிடை பவளம்' என்னும் தொடராலும் இதனை உணரலாம்.

மணிகளில் வைரம் முதலிய ஒன்பது வகைகள் மிக்க சிறப்பினவாகக் கருதப்பட்டன. நவமணிகள் என்னும் அவை 'நவரத்தினம்' எனவும் கூறப்படும். நவமணிகளுள் வைரம், முத்து, மாணிக்கம், நீலம், மரகதம் ஆகிய ஐந்தும் 'பஞ்ச மகாரத்தினம்' என்று சிறப்பித்துக் கூறப்படும். ஏனைய பவளம், கோமேதகம், புட்பராகம், வைடூரியம் ஆகியன 'உபரத்தினம்' எனப்படும். இந்த நவமணிகளையும் முறைப்பட இணைத்துத் தொடுத்து 'நவரத்தினமாலை'யாக அணியும் வழக்கம் உண்டு. இம்மணிகளை, மோதிரங்களில் பதித்து அணிவதும் உண்டு. அத்தகு மோதிரங்கள் 'நவரத்தின மோதிரங்கள்' எனப்படும்.

நவமணிகளுள் ஒவ்வொன்றும், நவகோள்களுள் அமைந்துள்ள ஒவ்வொரு கோள்களுக்கு உரியதாகக் கூறப்பட்டுள்ளது. குற்றம் நீங்கிக் குணமிக்க நவமணிகளை மாலையாக, மோதிரமாக, பிற அணியாகச் செய்து அணியும்போது, நவகோள்களால் உண்டாகும் இடர்கள் நீங்கி, இன்பம் மிகும் என்னும் நம்பிக்கை பழங்காலந்தொட்டே இருந்து வருகிறது. நவமணிகளைக் குறிப்பிட்ட முறையில் அமைத்துப் பூசை செய்தால் நவகோள்களை வழிபடும் பயன் உண்டாகும் என்பது பழைய நூல்களில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு வழிபடும்போது ஒவ்வொரு மணிக்கும் உரிய கோளுக்கு உகந்த மலர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. தாமரை மாணிக்கத்திற்கும் (சூரியன்), சிறுசண்பகம் முத்திற்கும் (சந்திரன்), செவ்வல்லி பவளத்திற்கும் (செவ்வாய்), காந்தள் மரகதத்திற்கும் (புதன்), மல்லிகை புட்பராகத்திற்கும் (குரு), நூற்றிதழ்த் தாமரை வைரத்திற்கும் (சுக்கிரன்), கருங்குவளை கோமேதகத்திற்கும் (இராகு), வெண்டாமரை வைடூரியத்திற்கும் (கேது), கருவிளம் நீலத்திற்கும் (சனி) உரியனவாகும். அம்மலர்களை இட்டு நவமணி வழிபாடு செய்வது சிறந்த நவகோள் வழிபாடாக அமைந்து நற்பயனளிக்கும் என்பது ஆன்றோர் நம்பிக்கை. நவகோள் வழிபாட்டிற்குரிய நவமணி அமைப்புமுறையும், நவரத்தின மோதிரத்துக்குரிய நவமணி அமைப்பு முறையும் பின்வருமாறு அமையும்.

**நவகோள் வழிபாட்டில் நவமணி அமைப்பு:**

| | | |
|---|---|---|
| சனி<br>நீலம்<br>(வடமேற்கு) | இராகு<br>கோமேதகம்<br>(வடக்கு) | கேது<br>வைடூரியம்<br>(வடகிழக்கு) |
| சுக்கிரன்<br>வைரம்<br>(மேற்கு) | சூரியன்<br>மாணிக்கம்<br>(நடுவிடம்) | சந்திரன்<br>முத்து<br>(கிழக்கு) |
| குரு<br>புட்பராகம்<br>(தென்மேற்கு) | புதன்<br>மரகதம்<br>(தெற்கு) | செவ்வாய்<br>பவளம்<br>(தென்கிழக்கு) |

**நவரத்தின மோதிரத்தில் நவமணி அமைப்பு:**

| | | |
|---|---|---|
| புட்பராகம்<br>குரு | வைடூரியம்<br>கேது | மரகதம்<br>புதன் |
| நீலம்<br>சனி | மாணிக்கம்<br>சூரியன் | வைரம்<br>சுக்கிரன் |
| கோமேதகம்<br>இராகு | பவளம்<br>செவ்வாய் | முத்து<br>சந்திரன் |

இந்த அமைப்புமுறை சில பத்ததிகளில் சிறிய மாறுபாடுகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் என்றும் நூல்கள் கூறுகின்றன.

நவமணியின் சிறப்புணர்ந்த இலக்கிய ஆசிரியர்கள் ஒன்பது வகையான பாடல்களாக உருவாகும் ஓர் இலக்கிய வகையினை அமைத்துள்ளனர். மகாகவி பாரதியாரும், 'பாரதமாதா நவரத்தின மாலை' என்று ஒரு சிற்றிலக்கியம் படைத்துள்ளார். அதன் ஒவ்வொரு பாடலிலும் நவமணியிலுள்ள ஒவ்வொரு மணியின் பெயர் அதன் இயற் பொருளிலோ,

சிலேடைப் பொருளிலோ அமையுமாறு பாடியுள் ளமை குறிப்பிடத்தக்கது. அ.மா.ப.

**புதுமணிகள்**: நவமணிகள் அல்லாத, அவற்றிற் குத் தரத்தில் சற்றேகுறைந்த மணிகள் (Semi-precious Stones) பல உள்ளன. அவற்றைப் புதுமணி கள் என்று குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். ஏனெனில், ஏராளமாகக் கண்டறியப்பட்டுள்ள புது மணிகள் அவற்றுள் அடங்கும். அவற்றுள் குறிப்பிடத் தக்க சில மணிகள் மட்டும் இங்குக் குறிப்பிடப்படு கின்றன.

'ஒப்பல்' (Opal) எனப் பெயருள்ள கல்மணி, மணிகளின் அரசி எனப் போற்றப்படுவதாகும். பல நிற வண்ணத்துப்பூச்சிகள் பறப்பது போன்ற எழில் வண்ணம் காட்டுவது இதன் சிறப்பு. எரிமலைப்பாறை களில் இருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. பல நாடு களில் இது கிடைத்தாலும் பட்டை தீட்டப்படுவது ஆங்காங்கில் தான். உரோமானியர்களால் கருவூல மாகக் கருதப்பட்ட இம்மணி கி.பி. 17-ஆம் நூற் றாண்டு வரை புகழுடன் விளங்கியது. அக்டோபர் மாதத்தில் பிறந்தவர்களுக்கு நலம்பயக்கும் கல்லாக விளங்கிய இதன் விற்பனை, சர் வால்ட்டர் இசுகாட்டு தன் 'சியர்சுடீன் அன்னி' (Anne of Ceierstein) என் னும் புதினத்தில் இதனை நற்பேறில்லாததென வருணித்ததால் குறைந்து, விலையும் ஓரளவு வீழ்ச்சி அடைந்தது என்பர். ஆசுத்திரேலியா, செக்கோசுலோ வாகியா, ஆண்டுராசு, அங்கேரி, மெக்சிகோ, பிரேசில், ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் 'ஒப்பல்' கிடைக்கிறது.

செவ்வந்திக்கல் (Amethyst)என்னும் மணி முன்பு தமிழ்நாட்டில் காங்கேயம் பாடியூர் அடுத்த பட் டாலையில் கிடைத்தது. அதன் நிறம் சிவப்பு அல்லது பழுப்பு ஆகும். மதுக்குடியை எதிர்த்த கிரேக்க சீர்திருத்தவாதிகள் இதை அணிந்து வந்ததால், கிரேக்கத்தில் மதுக்குடியாதவர் எனப்பொருள்படும் 'அமெத்துசுதசு' என்பதிலிருந்து இதன் ஆங்கிலப் பெயர் வந்துள்ளது. தமிழில் 'மதுவிலக்கு - மணி' என்று கூறலாம்.

'சிலிகா' வாகிய குவார்ட்சு (Ouartz) ஆற்றுமண லிலும் கடல் மணலிலும் கிடைக்கிறது. முன்பு காங் கேயம் பாடியூர் அடுத்த பட்டாலையில் கிடைத்தது. அது வானொலி, கைக்கடிகாரங்களிலும், ஏனையமின் அணுச்சாதனங்களிலும் பயன்படுகிறது. இந்த மணி கிரேக்கர்களால் பளிங்குக்கட்டி (Crystal) மணி எனக் குறிப்பிடப்படுகிறது.

நிலாக்கல் (Moonstone) என்பது வெள்ளை அல்லது ஊதா நிறத்தில் பளபளப்பாகத் தோற்ற மளிக்கும்; 'பெல்ட்சுபார்' (Feldspar) எனும் மணி வகையைச் சேர்ந்தது, நிலாக்கல், இலங்கையிலும் இந்தியாவிலும் கிடைத்து வந்துள்ளது. கி.பி.1799-ஆம் ஆண்டில் சிரீரங்கப்பட்டண வீழ்ச்சியின் பின் (கி.பி. 1799) திப்பு சுல்தானின் குத்துவாளில் பதிக்கப்பட்டி ருந்த நிலாக்கல் ஆங்கிலேயப் படைவீரர்களால் கவர்ந்து கொள்ளப்பட்டு இங்கிலாந்து போய்ச் சேர்ந்தது.

கட்டளைக்கல் என்று வள்ளுவரால் குறிப்பிடப் படும் உரைகல் (Touch Stone) ஒருவகை மணியே யாகும். திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே கிடைக்கும் ஒரு வகைக் கருப்புக் கல்லே உரைகல்லாகப் பயன்படுகிறது.

'அம்பர்' (Amber) கடலில் கிடைப்பது. ஐந்து கோடி ஆண்டுகளுக்கு முன் மண்ணுக்குள் சிக்கிய மரக்கோந்து அம்பராக உருப்பெற்றுள்ளது. தமிழில் இதன் பெயர் 'நிமிளை' என்பதாகும். பால்டிக்குக் கடற்கரையில் மிகுதியாகக்கிடைக்கிறது. மின் சாதனங்களிலும் வண்ணப்பூச்சு எண்ணெய் (Paint) தயாரிப்பிலும் பயன்படுகிறது. யாழ் (Violin) வில்லின் கம்பியைச் சொர சொரப்பாக்கிக் கொள்ள இசைக் கலைஞர் 'அம்பரை'ப் பயன்படுத்துவர். இலெனின் கிராடிலுள்ள புசுக்கின் அரண்மனையின் ஓர் அறைச் சுவர் முழுமையும் அம்பரினால் அமைக்கப்பட் டுள்ளது. அதற்குப்பயன்பட்டுள்ள அம்பரின் மதிப்பு ஓர் இலட்சம் பவுன் ஆகும்.

மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழர் அறிந்தது சங்கு மணி. அது, கடலில் இருந்து கிடைப்பது; ஒலி எழுப் பவும் வளையல் செய்யவும் பயன்படுகிறது. வலம்புரிச் சங்கு விலைமதிப்பு மிக்கதாகும். பண்டைத் தமிழ் நாட்டில் சங்கு அறுக்கும் தொழில் செய்தவரைச் 'கீரன்' என்றழைத்தனர். அத்தொழில் அறிந்தவர்கள் இப்பொழுது தமிழ்நாட்டில் இல்லாததால் சங்குகள் கீழக்கரையில் இருந்தும் தூத்துக்குடியில் இருந்தும் வளையல் செய்வதற்காக மேற்கு வங்கத்திற்கு அனுப் பப்படுகின்றன.

காரீயகம் (Graphite) எனும் கரிமம் வைரத்தின் இளவல் எனக்குறிப்பிடத்தக்கது. ஏனெனில் வைரமும் கரிதான்; இதுவும் கரிதான். கரிம அணுக்கள் இத னுள் அணுமுகப்படிவங்களாக அமைந்துள்ளன. உயிர் வளியில் (1300 செ.) வெப்பநிலையில் வைரம் கொளுத் தப்பட்டால் அது 'காரீயம்' ஆகமாறும். அதே போலக் காரீயகமும் கொளுத்தப்பட்டால் கரியமில வாயு ஆகும். ஒரே எடையுள்ள வைரம், காரீயம், கரி, ஆகிய மூன்றையும் கொளுத்தினால் அதே எடை யுள்ள கரியமில வாயு கிடைக்கும்.

காரீயம் எனப்படும் 'கிராபைடு' மிருதுவான பிசு பிசுப்பு போன்ற தன்மையுடன் கூடிய உலோகங் களுக்கே உரிய மினுமினுப்புடன் விளங்கும் கனிமம் என்றாலும், வைரத்தைப் போலவே இதனையும் ஒரு மணியாகவே கருதுகின்றார் மணி வல்லுநர் சோயல் ஆரம்.

எழுதுகோலின் (Pencil) கூர் இதில் செய்யப் படுகிறது என்பது மட்டுமே பரவலாகக் தெரிந்த இதன் பயன் ஆகும். இதுதவிர, இரும்புக்கு மெரு கேற்றுவதிலும், இரும்பு துருப்பிடிக்காமல் இருக்கச் செய்யவும், தங்கத்தை உருக்கவும் பயன்படுகிறது. இதையும் மணலையும் சேர்த்து அதிகம் சூடு தாங்கும் மூசைகள் (Cubicles) செய்கிறார்கள். மசகு எண் ணெய் (Lubricant), வண்ணப்பூச்சு எண்ணெய் (Paint), அடுப்புத் துலக்கி (Stove Polish), விமானக் காற்றாடி (Propeller), வார்ப்பு அச்சுகள், தண்ணீர்க்குழாய், மின்பூச்சு, சவர்க்காரம், மின்சாதனங்கள், மின்சக்தித் திட்டங்கள் ஆகியவற்றிலும் இது பயன்படுகிறது.

இது இலங்கை, மடகாசுகர், சைபீரியா, செக் கோசுலோவாகியா, கனடா, மெக்சிகோ, இங்கிலாந் தில் கம்பர்லாந்துப்பகுதி, இந்தியாவில் ஒரிசா மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு ஆகியவற்றில் கிடைக் கிறது. தமிழ்நாட்டில் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் மாவட்டத்தலைநகரமான சிவகங்கை யிலிருந்து 28 கி.மீ. தொலைவில் உள்ள கோமாளிப் பட்டி எனும் சிற்றூரைச்சுற்றி 900 ஏக்கர் பரப்பில் 15 முதல் 100 மீட்டர் ஆழத்தில் 25 இலட்சம் கண்டி (Ton) காரீயப் படிவங்கள் உள்ளன என்று கண்டறிந் துள்ளனர். தமிழ்நாடு அரசின் கனிம நிறுவனம் (TAMIN) அதை வெளிக் கொண்டுவரும் ஏற்பாட்டி னைச் செய்யவுள்ளது.

மேலே குறிப்பிட்டவை தவிர மின்மினிக்கல் (Spinel), சாணைக்கல் (Corundum), இடுப்புக்கல் (Jade), உருத்திராட்சமணி, நாமக் (கட்டி) கல் கருப்பு நூல்மணி போன்ற மணிகளும் உள்ளன.

**பாசிமணிகள்:** நவமணிகளுடன் ஒப்பிடும் போது, மதிப்பில் குறைந்தவைதாம் பாசிமணிகள் (Beads). எனினும், பொதுமக்கள் விரும்பி அணியும் மணிகள் பாசி மணிகளேயாகும்.

நூலில் கோக்கும்படி துளைஅமைத்துக் கண்ணா டியில் செய்த மணிகளைப் பொதுவாகப் பாசிமணி கள் என்பர். அவற்றில் கருநிற மணிகளைக் கரு(க) மணி என்பர். கண்ணாடிதவிர எலும்பு, தந்தம், கல், மரத்துண்டுகள், சங்கு, பீங்கான், களிமண், சிப்பி ஆகியவற்றிலும் பாசி மணிகள் செய்யப்படுவதுண்டு. சிந்துவெளிப் பண்பாட்டு மையங்களான அரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் சங்கு, சிப்பி, பீங்கான் ஆகியவற்றால் ஆன பல நிற மணிகள் கொண்ட மணிமாலைகள் கிடைத்துள்ளன. அவற்றில் அறுகோண, எண்கோண வடிவில் வெட்டப்பட்ட மணிகளும் அடங்கும். பாசிமணிகளை, பண்டைக் காலத்தில் நாணயமாகக்கூடப் பயன்படுத்தியுள்ளனர்.

எகிப்தியக் கல்லறைகளில் பாசிமணிகள் கிடைத் தன. இத்தாலி நாட்டு வெனிசு நகர வாசிகள் கி.பி. 14 – ஆம் நூற்றாண்டில் கண்ணாடி மணிகளை முதன் முதலாகப் புழக்கத்தில் விட்டனர். கண்ணாடி மணிகளை இக்காலத்தில் மிகுதியாக உற்பத்தி செய் வது செகோசுலோவாகியா நாடாகும். சித்திரச் செதுக்கு வேலைப்பாடுகளுடன் பாசி மணிகள் தயாரிப்பதுண்டு. இந்தியாவில் துளசி மணிமாலைகள் உருத்திராட்ச மாலைகள் போன்றவற்றை ஒவ் வொரு மணியாக உருட்டித் துறவியர் செபம் செய் தல் போல இங்கிலாந்தில் குருமார்கள் கண்ணாடி மணிப்பாசி மாலைகளை உருட்டி வழிபாடு நடத் துவார்கள். இவ்வாறு மணிகளை உருட்டிச் செபம் செய்து வேண்டுதல் செய்யுமாறு விரும்புபவர்களுக் காகக் குருமார்கள் அவ்வாறு செய்வார்கள். இப்படி நியமிக்கப்பட்ட குருமார்களை மணி மனிதர்கள்(Bead-esmen)என்று குறிப்பிட்டனர். இசுகாட்லாந்தில் இங்கி லாந்தின் மன்னர்களுக்கு இந்த முறையில் வழிபாடு செய்யச் சிறப்பு அனுமதியின் பேரில் மணி மனிதர் தர்கள் நியமிக்கப்பட்டனர்.

பவளம் மணியாக இழைக்கப்படும்போது துளை புடன் கூடியதாகச் செய்யப்படுவது போல, பாசி மணிகளும் துளையுடன் செய்யப்படுவதால், பாசிபவ ளம் என்று சேர்த்துச்சொல்லும் மரபு உள்ளது. மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் பாசி மணியையும் அதைக் கோக்கப் பயன்படும் ஊசியையும் குருவிக் காரப் பழங்குடியினர் 'ஊசிப்பாசி' என்று கூவி விற்பதன் மூலம் பொருள்ஈட்டி வாழ, பாசிமணிகள் உதவுகின்றன.

**ஒலி மணிகள்:** வெண்கலத்தால் ஆன, கவிழ்த்த கோப்பை வடிவ, ஒலி தரும் மணிகள் (Bells) ஆலயங் களிலும் அரண்மனைகளிலும் பயன்பட்டு வந்துள்ளன. ஒலிதரும் மணிகள் வெண்கலத்தால் ஆனவை. துத்த நாகமும் தாமிரமும் சேர்ந்த கலப்பு உலோகமே வெண்கலம். நாதம் பெறுவதற்குரிய விகிதத்தில் அவ் வுலோகத்தில் கலப்பு விழுக்காடு அமைகிறது. அக் கலப்பு உலோகத்தின் பெரும்பகுதி மணிகள் செய்யப் பயன்படுவதால் இதனை மணி உலோகம் (Bell Metal) என்றும் குறிப்பிடுவர்.

மணிகள் கவிழ்த்து வைக்கப்பட்ட கோப்பை

வடிவில் செய்யப்பட்டு, நடுவில் நாக்கு போன்ற வடிவம் அசையும்படிப் பொருத்தப்பட்டு, இருபுறம் அசைந்தால் மோதியதும் ஒலி எழுப்பும்படி அமைக்கப் பட்டிருக்கும். பூசை நிகழ்வதைத் தெரிவிக்க ஆலய மணிகள் பயன்பட்டன. இறைவனை ஒலி வடிவினனா கக் காண்பதன் அடையாளமாகத் தமிழர் மணி களைக் கோயில்களுக்குக் காணிக்கையாக்கினர்.

மணி பல நூற்றாண்டுக் காலமாக உலகம் முழுவதும் போற்றப்படும் கலைப்பொருளாக விளங்கி வருகிறது. மூவாயிரம் ஆண்டுகள் பழமை யான மணி பாபிலோனில் கண்டுபிடிக்கப்பட்டது. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில், குருமார் தங்கள் அங்கிகளில் ஒலி எழுப்பும் மணிகளைப் பொருத்தியி ருந்ததைப் பற்றிய குறிப்பு உள்ளது. சீனாவில் கி.மு. 2000 – ஆண்டிலேயே பெரிய, பெரிய மணிகள் இருந் தன. அதே போல் பர்மா, சப்பான் நாட்டுக் கோயில் களில் கலையழகு மிக்க மணிகள் பல நூற்றாண்டு களுக்கு முன்பே இடம் பெற்றுவிட்டன.

ஐரோப்பாவில் இத்தாலி நாட்டு மாதாகோயில் களில்தான் முதன் முதல் மணிகள் இடம் பெற்றன. அமெரிக்காவில் ஐரோப்பியர் அடியெடுத்து வைக்கு முன்பே அங்கு வாழ்ந்து வந்த செவ்விந்தியர்கள் வெண்கல மணிகளை வைத்திருந்தனர்.

மணிகளின் மன்னன் என்று சிறப்பித்துக் கூறப் படும் மாமணி சோவியத்து ஒன்றியத்தின் தலைநகர மான மாசுகோவிலுள்ள கிரம்லின் மாளிகையில் உள்ளது. அது கி.பி. 1654 – ஆம் ஆண்டில் 130 கண்டி எடையில் உருவாக்கப்பட்டது. அதை கி.பி. 1733–ஆம் ஆண்டில் 198 கண்டி எடையில் பெரிதாக்கி ஒரு பெரிய பீடத்தின் மேல் எடுப்பாக அமைத்துள்ளனர்.

ஓசைதரும் மணிகள் பெருமணி, சிறுமணி, கை மணி எனப்பல வகைப்படும். ஆலயங்களில் மட்டு மல்லாமல் முற்காலத்தில் அரண்மனைகளிலும் மணி கள் இடம் பெற்றிருந்தன. முறை செய்யும் நீதிபதி யாகவும் மன்னன் விளங்கியதால், குறை உரைக்க வரும் மக்கள் ஒலி மூலம் அறிவிக்கத் தன் மாளிகை வாயிலில் மணிகளைக் கட்டியிருந்தான். அவற்றுக்கு ஆராய்ச்சி மணி என்பது பெயர். சங்ககால முதலே தமிழ்வேந்தர் ஆராய்ச்சி மணிகட்டி ஆண்டிருந்த தாகத் தெரிகிறது. திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்ட மனு நீதிச்சோழன் காலத்தில் பசு ஒன்று தன் கன்றை யாரோ கொன்றதை முறையிடத் தன் கொம்பால் ஆராய்ச்சி மணியை ஆட்டியது. அக்கன்று தன் மகன் ஓட்டிய தேரின் சக்கரத்தில் அடிபட்டிறந்தது என்றறிந்ததும், மகன் என்றும் பாராமல் அவனை அதேபோலத் தேர்க் காலில் இட்டுக்கொன்று மனிதருக்குப் போலவே மாட்டுக்கும் ஆராய்ச்சி மணி ஒலி மூலம் செய்தி அறிந்து நீதி வழங்கினான், மனு நீதிச்சோழன்.





முத்துமாலை

ஆடைகளில் மணிகளைக் கோத்துத் தைத்துக் கொள்ளும் பழக்கம் செருமனியில் இருந்திருக்கிறது. கைமணிகள் இல்லங்களில் பூசை அறைகளிலும் கோயில்களில் பூசையின் போது கருவறைகளிலும் பயன்படுகின்றன. காணாமல் போவதைத் தடுக்கக் கால்நடைகளுக்குக் கழுத்து மணிகள் அணிவிக்கப் படுகின்றன. புகைவண்டி நிலையத்தில் வண்டி வரு வதற்கு அடையாள ஒலி எழுப்ப மணிகள் பயன்படு கின்றன. மிதி வண்டியில் எச்சரிக்கை ஒலி செய்ய மணிகள் பொருத்தப்பட்டுள்ளன.

கால அறிவிப்பிற்கான வெண்கலமணி வேறு வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும். மின்சார ஒலிச் சங்கு வரும் முன்பு, கடிகாரம் மக்களிடம் அதிகம் புழக்கத்தில் இல்லாதபோது, குறுநிலமன்னர் ஆட்சிக் காலத்தில் அரண்மனைகளில் காலை 8 மணி பகல் 12 மணி இரவு 8 மணி என்று குறிப்பிட்ட நேரங் களை மக்களுக்குத் தெரிவிக்க அரண்மனைப் பணி யாள் மணி அடிப்பார். வட்டமான தோசைக்கல் வடிவில் வெண்கலத்தால் செய்யப்பட்ட மணியைக் கயிற்றில் தொங்கவிட்டு மரம் அல்லது இரும்புச் சுத்தி கொண்டு அடிப்பதன் மூலம் மணியைத் தெரி வித்தனர். பள்ளிகளில் உடைந்த தண்டவாளமும் உடைந்த கம்பியும் கால அறிவிப்பு மணியாகப் பயன் படுவதுண்டு.

வீடுகளில் உள்ளிருப்போரை அழைக்க மின்சாரத் தால் இயங்கும் மணிகள் (Busser) பயன்படுகின்றன. கப்பல் புறப்படுமுன் பயணிகளை அழைக்க, அல்லது கப்பல் மேல்தளத்தில் பயணிகளைக் கூடுமாறு அழைக்க மணிகள் பயன்பட்டிருக்கலாம் என்று நம் பத்தகும் சான்று கிடைத்துள்ளது. அந்தச் சான்று தமிழ்நாட்டைச் சேர்ந்த மணி மூலம் கிடைக்கிறது. அந்த மணி கி.பி. 1836 – ஆம் ஆண்டில் ஒரு பாதிரி யாரால் நியூசிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டு அந் நாட்டுத் தலைநகர் வெலிங்டனில் உள்ள தொமி னியன் அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளது. நியூசிலாந்தின் கரியோரக் கிராமத்தில் கரை ஒதுங்கி உடைந்துபோன கப்பலுக்கு உரியது அந்த மணி என்று பின்னர்க் கண்டறியப்பட்டது. அந்தக் கப்பல் 500 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு வந்திருக்கவேண்டு மென்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். அது தேக்குமரத்தால் செய்யப்பட்டுப் பித்தளைத் 'தாழ்' (Bolts) களால் இணைக்கப்பட்டிருந்தது. அது, கி.பி. 15 - ஆம் நூற்றாண்டில் பசிபிக்குக் கடலைக் கடக்க முயன்ற தமிழ் நாட்டவரின் கப்பல் என்று சோவியத்து இதழ் 'இசுநானி சிலா'(Znanie Sila)குறிப் பிட்டது.

கப்பலுக்குரியதான ஏறத்தாழ 18 செ.மீ.உயரம் 15 செ.மீ. விட்டமுள்ள அந்தச் சிறிய மணியின்மேல் 'மொகிதீன் வக்கூசின் மணி' என்று தமிழ் எழுத்து கள் பொறிக்கப்பட்டுள்ளன. மணி இருந்த கப்பலுக்கு உரியவர்(வக்கூசு)இசுலாமியர் என்பதால் அந்த மணி பூசைக்குப்பயன்பட்டதன்று; கப்பலின் அழைப்புமணி யாகப் பயன்பட்டதாக இருக்கலாம் என்று நம்ப இட மிருக்கிறது.

**கடிகாரமணி:** நாளின் ஒரு கூற்றினைச் சுட்டும் காலஅளவும் 'மணி' (Hour) என்று குறிப்பிடப்படு கிறது. பூமிதன்னைத்தானே சுற்றிவரும் காலம் ஒரு நாள் எனப்படுகிறது. நாளின் இருபத்து நான்கில் ஒருபங்கே மணி என்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

மணிப் பொறியாகிய கடிகாரம் கண்டுபிடிக்கப் படும் வரை விடியலில் இருந்து கதிரவன் மறையும் வரை உள்ள பகல் நேரத்தை 30 நாழிகை நேரமாகவும் கதிரவன் மறைவிலிருந்து அதிகாலையில் கதிரவன் தோன்றும்வரையிலான இரவு நேரத்தினை 30 நாழிகை நேரமாகவும் வகுத்திருந்தனர். அந்தக் கணக்கீட்டில் பகல் இரவு இரு பொழுதும் சரிசமமாக இல்லாமல் வேறுபாடு இருக்கத்தான் செய்தது.

பண்டைக்காலத்தில் பூமியில் செங்குத்தாகக் குச் சியை ஊன்றி அதன் நிழலைக்கொண்டு பகலில் காலத்தைக் கண்டறிந்தனர். பாத்திரத்தில் நீர் நிரப்பி அதிலிருந்து சொட்டுச்சொட்டாக, சீராக நீர் விழுவதைக்கொண்டு, இரவில் காலத்தைக் கணக்கிட் டனர். நாழிகை வட்டில் பற்றிச் சிலப்பதிகார உரை யாசிரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார். மணிப்பொறி வந்த பின்னர் நாழிகை போய், மணி நேரம் வந்தது. மணிப் பொறிகளில் சிறிய முள் மணி காட்டும் முள்ளாக இயங்குகிறது. முன்பு கடிகாரங் களில் ஒவ்வொரு மணிநேரம் ஆனதும் ஓசை எழுப் பும்படி ஊசல் (Pendulum) அமைக்கப்பட்டிருந்தது.

கடலில் கப்பல்கள் தீர்க்கரேகைகளைக் கடக்க வேண்டியிருப்பதால் கப்பல்களின் கடிகாரங்களில் நடுப்பகல் 12 மணிகாட்டுமாறு முன்னிரவிலேயே திருப்பிவைத்து விடுவர். இதற்குக் 'கப்பல் மணி' என் பது பெயர். உலகப்பெரும் போர்க்காலத்தில் பணிகள் விரைவாக நடக்கக் கடிகாரத்தில் ஒரு மணி நேரம்முள் ளைத் தள்ளி வைத்தனர். காலை 10 மணிக்கு அலுவல கம் போக வேண்டியவர் 9 மணிக்கெல்லாம் சென்ற டைந்து மாலையில் இரவுவரும் முன் விரைவாக வீடு திரும்ப வாய்ப்பாகப் போர்க் காலத்திற்குத் தக்கபடி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீ.ம.

**துணை நூல்கள்:**

**அய்யூப், அ.,** நவமணிகள், நவமணிப் பதிப்பகம், சென்னை, 1987.

சாமி, பி.எல்., சங்க நூல்களில் மணிகள், சேகர் பதிப்பகம், சென்னை, 1980.

வைத்தியநாதன், டி.எஸ்., நவமணிகள், எழில்மணி பதிப்பகம், திருச்சி, 1969.

Alfred Clark. Ceylon, Macmillan Co. Ltd., London, 1928.

Joel, E Arem, Gems and Jewellery, Benjam Book Inc., Newyork, 1975.

Subramania Sastri, S.M., (Ed). Ratna Pariksa, The Tanjore Maharaja Serfoji's Saraswathi Mahal Library, Tanjore, 1980.

Wilkie Collins, The Moonstone, The Macmillan Co. of India, Madras, 1972.

**மணிப்பிரவாள நடை**: தமிழிலக்கிய வரலாற்றில் இடைக்காலத்தில் பெருவழக்கிலிருந்து காலப் போக்கில் அருகிவிட்ட ஒருவகைத் தமிழ் நடையே 'மணிப் பிரவாள' நடை ஆகும்.

மணிப் பிரவாளம் என்பதற்கு மூவகையான விளக்கங்கள் காணப்படுகின்றன. 1) மாணிக்கமும் பவளமும் ஒரு கோவையாகக் கோக்கப்பட்ட மாலையில் அவ்விரண்டும் செந்நிறமுடையவாதலின் சேய்மை நோக்கில் ஒன்றுபட்டிருக்கின்றன; எனினும், நெருங்கி நோக்கும்போது வேறுபட்டுத் தோன்றுகின்றன. அதுபோலத் தென்மொழியும் வடமொழியும் விரவி, மேற்போக்கில் பார்க்கும்போது அவை ஒன்றுபட்டன போலத் தோன்றினும், ஊன்றிப் பார்க்கும்போது வேறுபட்டுத் தோன்றுகின்றன. 2) முத்தும் பவளமும் கலந்து கோத்த மாலை நிற வேறுபாட்டால் காண்பதற்கு அழகாக இருத்தல் போல வடமொழியும் தென்மொழியும் கலந்த நடை செவிக்கின்பம் பயக்கின்றது. 3) நீலமணியும் பவளமும் கலந்து செய்யப்பட்ட மாலை போலச் செந்தமிழும் வடமொழியும் கலந்து இந்நடை உருவாக்கப்பட்டது.

இவ்வாறு மணி என்பதற்கு முறையே மாணிக்கம், முத்து, நீலமணி என்று பொருள்கொண்டு மூவகை விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறினால், தமிழும் வடமொழியும் கலந்த நடையே மணிப் பிரவாளம் ஆகும். மணிப்பிரவாளம் என்னும் பெயரே இதனை உணர்த்தும். மணி – தமிழ்ச்சொல்; பிரவாளம் (பவளம்) – வடசொல். இந்நடையினை வீரசோழியமுடையார் விரவியல் நடை என்பர்.

மணிப்பிரவாள நடை கி.பி. 3 - ஆம் நூற்றாண்டுக்குப் பின் பல்லவர்கள் ஆட்சிக் காலத்தில் தோன்றியது. சமணத்துறவிகள் தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காகத் தமக்குத் தெரிந்த வடமொழியையும் தமிழையும் கலந்து உருவாக்கிக்கொண்ட நடை இது என்று கருதப்படுகிறது. ஆனால், இதனை வலியுறுத்தத் தக்க சான்றுகள் இல்லை. இந்நடையின் வரலாறு குறித்து அறிஞர் வையாபுரிப்பிள்ளை சிரீ புராணத்திற்குத் தாம் எழுதியுள்ள ஆங்கில முன்னுரையில் கீழ்வரும் கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

மணிப்பிரவாள நடை கி.பி. 13 – ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 17 – ஆம் நூற்றாண்டு வரை சமணம் வைணவம் சைவம் ஆகிய சமயநூல்களின் உரைகாரர்களிடம் வழக்கிலிருந்தது. தமிழ்உரை நடை வரலாற்றில் ஓர் இன்றியமையாக் காலக்கட்டத்தை இந்நடை ஏற்படுத்தியது. இந்நடை பற்றிக் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீரசோழிய நூல் குறிப்பிட்டுள்ளது. முதலாம் இராசராசனின் 3 - ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்ட செம்பியன் மாதேவி கல்வெட்டில் வரும் செய்யுள் ஒன்று இந்நடையில் அமைந்துள்ளது. எனவே, அந்நடை கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று கருதுவது பொருத்தமுடைத்து. இந்நடையின் பயனாகத் தமிழில் சமய தத்துவச் சொற்கள் குறிப்பிடத்தக்க வகையில் பெருகின.

நாத முனிகளுக்குப் பின்னர் கி.பி. 10 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவருடைய பேரர் ஆளவந்தார், ஆழ்வார் பாசுரங்களுக்கு விளக்கங்கள் அளித்துள்ளார் என்பது உரைகள் தெரிவிக்கும் தெளிவான செய்தி. எனவே, அக்காலத்திலேயே மணிப்பிரவாள நடை இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவு. மேலும், கி.பி. 8 அல்லது கி.பி. 9 - ஆம் நூற்றாண்டிலேயே மணிப்பிரவாளநடை வழக்கில் இருந்தமைக்கான சான்று கிடைக்கிறது. பெருந்தேவனார் தமிழில் அமைந்த பாக்களும், மணிப்பிரவாளத்தில் இயன்ற உரைப் பகுதிகளும் கொண்ட பாரத வெண்பா என்னும் நூலினை எழுதியுள்ளார். அவர் காலம் கி.பி. 8 அல்லது 9 – ஆம் நூற்றாண்டு ஆகும் என்பது அறிஞர் முடிவு. ஆதலால், கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்கும் 9 – ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியது இந்நடை எனலாம்.

வைணவ உரைகள் அனைத்தும் மணிப்பிரவாள நடையில் அமைந்தன. அவ்வுரைகள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து தோன்றலாயின.

சிவாக்கிரயோகிகள் கி.பி. 14 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். அவர் சிவஞான சித்தியாருக்கு இந்நடையில் ஓர் உரை வரைந்தார். அக்காலத்தில் சிரீ புராணம் என்னும் சமண நூலும் இந்நடை

யில் எழுதப்பட்டது. அக்காலத்திற்குப்பின் இந்நடை செல்வாக்கினை இழந்துவிட்டதாகத் தெரிகிறது.

மணிப்பிரவாள நடையினைச்சமணரும், சைவரும், வைணவரும் மேற்கொண்டு நூல்கள் எழுதியிருந்தாலும் அவர்கள் நடையினைக் கூர்ந்து நோக்கினால், சில வேறுபாடுகள் இருத்தல் காணலாம். சைவ, சமண சமயத்தவர்கள் மணிப்பிரவாள நடையில் பயன்படுத்தும் வடசொற்கள் தமிழ் மயக்க விதிகளுக்கு ஏற்பத் திரித்திக் கையாளப்பட்டுள்ளன ஆனால், இம்முறை வைணவர் கையாண்ட மணிப்பிரவாள நடையில் எங்கும் காணப்படவில்லை. வைணவ நூல்கள் நீங்கலான பிற மணிப்பிரவாள நடை நூல்களில் தமிழ் வடமொழி இலக்கிய வழக்குகளே இடம் பெற்றுள்ளன. வைணவ உரைகளில் காணப்படும் பேச்சு வழக்குகள், இலக்கிய மரபு மீறல்கள் முதலான நடைக்கூறுகள் காணப்படவில்லை. அதனால், வைணவர் மேற்கொண்ட மணிப்பிரவாள நடை தனித்தன்மை கொண்டது எனலாம்.

சமயவாதிகள், தமிழ்ச்சொற்கள் சிலவற்றிற்கு நிகரான வடசொற்களும், வடசொற்கள் சிலவற்றிற்கு நிகரான தமிழ்ச் சொற்களும், கிடைப்பது அரிதாக இருந்தமையால் இந்நடையினை மேற்கொண்டனர் என்று கருதுவர். வைணவ உரையாசிரியர்கள் வடசொற்களுக்கு நிகராகப் பயன்படுத்தியுள்ள நல்ல தமிழ்ச் சொற்களை நோக்கும்போது, அவ்வாறு கருதுவதினினும் இருமொழிகளிடத்திலும் கொண்ட ஈடுபாட்டினால் இந்நடையினை மேற்கொண்டனர் என்று கருதுவது பொருத்தமாகும். தெ.ஞா.

**துணை நூல்:**

**கோபால கிருஷ்ணமாசாரியர், வை.மு.,** மணிப்பிரவாளம், செந்தமிழ், பன்னிரண்டாம் தொகுதி, மதுரை, 1913 – 1914.

**மணிப்புரி நடனம்:** மணிப்பூர் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு மாநிலம் ஆகும். இதற்கு முன்னர் இது இந்திய அரசின் நாட்டாட்சி எல்லைப் பகுதியாக விளங்கி வந்தது. வடக்கே நாகாலாந்தையும், மேற்கே அசாமையும், தென் மேற்கில் மிசோராமையும், தெற்கேயும் கிழக்கேயும் பர்மாவையும் எல்லைகளாகக் கொண்ட ஒரு சிறிய மாநிலமாக விளங்கும் மணிப்பூர் இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாகும்.

இப்பகுதியின் நடனங்கள் இந்தியாவின் மற்றப் பகுதி நடனங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டுத் தனிச்சிறப்புக் கொண்டனவாக விளங்குகின்றன. புகழ் பெற்ற இந்திய நடனக் கலைஞர்கள் இந்நடனத்தின் சிறப்பான உத்திமுறைகளைக் கற்று அவற்றைத் தங்கள் நடனங்களில் புகுத்தி, இந்தியா முழுவதும் ஆடி வருகின்றனர். தென்னிந்தியப் பண்பாட்டு மையங்கள் தோன்றிய பின் இப்பகுதி நடனங்களை இந்தியாவின் ஏனைய பகுதி மக்களும் கண்டுகளிக்கும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. புராணக் கதைகளும் பழங் கதைகளும் மணிப்புரி நாட்டில் பெருவழக்காக உள்ளன. இக்கதைகள் இந்நாட்டின் கலைகளிலும் பண்பாட்டிலும் இரண்டறக் கலந்துள்ளன. பழங்காலந்தொட்டே இந்நாட்டு மக்கள் தங்கள் உணர்ச்சிகளையும் சமயத்தொடர்பான மிகுவிருப்பங்களையும் கலையழகுடன் வெளிப்படுத்துதற்குரிய உள்ளார்ந்த ஆர்வத்தையும், அதற்கான ஆற்றலையும் இயற்கையின் கொடையாகப் பெற்று விளங்குகிறார்கள். அவற்றை நடனம் இசை முதலியன வாயிலாக வெளிப்படுத்துகிறார்கள். சமயஞ்சார்ந்த விழாக்களிலும் சமயஞ்சாராத சமுதாய விழாக்களிலும் இந்நடனங்கள் இடம்பெறுகின்றன. நிலாவொளி நிறைந்த இரவுக் காலங்களில் இளைஞர்கள் கூட்டங்கூட்டமாக ஒரு கிராமத்திலிருந்து மற்ற கிராமங்களுக்கு இந்நடனங்களை ஆடிக்கொண்டே செல்கின்றனர். ஆங்காங்கே புதிய ஆட்டக்காரர்களும் சேர்ந்து கொள்வதால் இந்நடனக் கூட்டம் பெருகிக் கொண்டே செல்லும்.

மணிப்புரி நடனத் தோற்றம் பற்றி இப்பகுதியில் வழங்கும் புராணக்கதை ஒன்று பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது. ஒருசமயம் சிவனும் பார்வதியும் பூமியில் அழகான இப்பகுதிக்கு வந்தார்களாம். இப்பகுதியில் தனிப்பட்ட ஓர் ஆன்மா இறைவனோடு கலப்பதற்காக ஏங்கி ஆடுவதான தத்துவக் கருத்தை உள்ளடக்கிய நாட்டியத்தை, கிருட்டிணனும் இராதையும் இணைந்து ஆடிக் கொண்டிருந்தார்களாம். அவர்களின் இந்நடனத்தைக் கண்ணுற்ற பார்வதி தானும் சிவனுடன் சேர்ந்து இவ்வாறு ஆடவிரும்பித் தன் விருப்பத்தைச் சிவனிடம் தெரிவித்தாளாம். அதற்கான ஒரு தனியிடத்தை உருவாக்க விரும்பிய சிவன் இப்பகுதியில் உள்ள மலையைக் குடைந்து நீரை வெளிவரச்செய்து ஓர் அழகு மிக்க அருமையான நீர்வளம் மிக்க பள்ளத்தாக்கை உண்டாக்கினாராம். அதனால், இந்த மலை மற்ற மலைகளிடையே மாணிக்கம் போல் அமைந்ததாம். இப்பகுதியில் சிவன் பார்வதியுடன் பல இரவுகள் பேரானந்தம் தோன்றும்படி நடனம் ஆடினாராம். அவர்களின் இந்நடனத்திற்குத் தேவர்கள் பக்க இசை இசைத்தார்களாம். இந்நடனத்திற்கு நாகதேவன் என்னும் பாம்புத்தலைவன் தனது மாணிக்கக் கல்லை உமிழ்ந்து ஒளி வழங்கினானாம். இந்நிகழ்ச்சியிலிருந்து இப்புனித

இடம், மணி என்பது மாணிக்கம் எனவும், புர் அல்லது புரி என்பது இடம் எனவும் பொருள்பட்டு மாணிக்க பூமி என்னும் பொருளில் மணிப்புரி என்று கூறப்பட்ட தாம். நாங்-போக் நீங்தெள எனப்படும் சிவனுக்காக வும் பந்தோயிபி எனப்படும் பார்வதிக்காகவும் சமயச் சடங்காகப் பல நடனங்களை இந்நாட்டுமக்கள் ஆடி வந்தனர். இத்தகைய நடனங்களைப் பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே புனைந்து ஆடி வருகின்றனர். நாட்டிய நாடகங்களுள் மிகவும் புகழ் பெற்ற நாடகமாக விளங்குவது இலய் கரோபா (Lai-Haraoba) எனப்படும் நாட்டிய நாடகமாகும். இது சிவன்-பார்வதியின் இராச லீலையை ஒட்டி அமைந்த நாட்டிய நாடகமாகும். மொய்ரங்கு பார்பா (Moirang Parba) எனப்படும் மணிப்புரி நாட்டின் புகழ்பெற்ற காப்பியம் துயரமுடிவைக் கொண்ட காதல் காப்பியம் ஆகும். இதில் சாகாவரம் பெற்ற காதலர்களாகிய கம்பாவும் (Khamba) மொய்ரங்குப் பேரரசின் இளவரசியாக விளங்கிய தொய்பியும் (Thoibi) இறையருள் வாய்க்கப்பெற்ற தலைசிறந்த காதலர்களாகவும் நடனக் கலைஞர்களாகவும் விளங்கினர். இவர்கள் ஒருவர்பால் ஒருவர் கொண்ட அன்பால் சாகாவரம் பெற்ற காதலர்களாக விளங்கினர். இவர்தம் காதல் சிறப்பால், மனித உருத்தாங்கிய சிவன்-பார்வதியாகவே இவர்களை மக்கள் நம்பி வழிபட்டு வந்தார்கள்.

**இலெய்சம் சாகோய்:** தொடக்கக் கால மணிப்புரி நடனங்களுள் மிகவும் புகழ்பெற்ற நடனமாக இலெய்சம் சாகோய் (Leisem Jagoi) எனப்படும் நடனம் விளங்கியது என மணிப்பூரின் வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன. இது தேவலோகத்திலிருந்து ஒன்பது ஆண் கடவுளர்களால் கொண்டுவரப் பட்ட பொருள்களைக் கொண்டு, ஏழு பெண் தெய்வங்களால் வடிவமைக்கப்பட்டு, இப்பூமி உருவாக்கப் பட்டது என்னும் பழங்கதையை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்ததாம். இது இலெய் அரோபா நடனத்தின் ஒரு பிரிவான இலெய் பௌவு என்னும் நடனமாகத் தொடர்ந்து வருகிறது. இந் நடனத்தில்தான் தொன்மையான மணிப்புரி நடனங்களாகிய சப்பா, கொங்லெயி, மொய்ரங்கு என்னும் நடனங்களின் கூறுகள் காணப்படுகின்றன. இந்த இலெய்பௌவு நடனம் கடவுளால் மனித இனம் படைக்கப்பெற்றது பற்றியும் அதன் தொடர்ச்சி பற்றியும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

இப்பழமையான மணிப்புரி நடனங்களைத் தொடர்ந்து இன்று சிறந்த மணிப்புரி நடனங்களாக இலெய் அரோபா, இராச லீலா, கர்த்தல் சோலம், மஞ்சிர சோலம், குபாகிசெயி, புங்சோலம், அரக்கவால், உதுக்குல், கீர்த்தன் போன்ற நடனங்கள் விளங்கி வருகின்றன.

**இலெயி அரோபா நடனம்:** தொன்மையான மணிப்புரி நடனங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இந் நடனம், அடியவர்கள் இறைவனை வழிபடுவதன்வாயிலாக அவனை மகிழ்ச்சியுறச் செய்வதை அடிப்படையாகக் கொண்ட நாட்டிய நாடகமாக அமைந்துள்ளது. மணிப்புரி நாட்டு மக்கள் முதலில் சைவ சமயத்தைத் தழுவியவர்களாக விளங்கினர். அதனால் முதலில் சிவபெருமானையும் பார்வதியையும் வழிபட்டு வந்தனர். ஆனால், காலப்போக்கில் வைணவ சமயம் இப்பகுதியில் பரவத் தொடங்கியதால் இப்பகுதி மக்கள் பிற்காலத்தில் வைணவ சமயத்தைத் தழுவி, கிருட்டிணனையும் இராதையையும் முதன்மையான கடவுளராகக் கொண்டு வழிபடத் தொடங்கினர்.

இலெயி அரோபா நடனம், சிவனையும் பார்வதியையும் அடிப்படையாகக் கொண்டு ஒவ்வோராண்டும் மே மாதத்தில் 10 நாள்கள் தொடர்ந்து ஆடப்பட்டு வரும் நாட்டிய நாடகம் ஆகும். இது சைவ சமயச் சடங்கு சார்ந்த நடனமாகும். இந் நடனத்தில் கடவுளரை வழிபடும் முறை, மனிதப் படைப்பு, பிறப்பு, இளமை, வயது வந்த வாழ்க்கை, திருமணம், கலைகளைப் பயிலல், கல்வி பயிலல் போன்ற பொருட்கள் இடம் பெற்றுள்ளன. இந்நடனம் செவ்வியல் நடனத்திற்குரிய நிரலொழுங்குமுறைகளையும் அபிநயங்களையும் தெளிவும் விளக்கமும் கொண்ட கைமுத்திரைகளையும், பாடல்களையும் பக்க இசையையும் பெற்று விளங்குகிறது. இக்கூறுகளே பின்னர்த் தோன்றிய பாங்கி பாரெங்கு (Bhangi Parengs) எனப்படும் பிற்கால வைணவ இராசலீலைகளில் இடம் பெறலாயின.

இலெயி அரோபா சமயச்சடங்கு சார்ந்ததாக இருப்பதால் இந்நடனத்தை மெய்பா எனப்படும் சமய ஆண் குருவும் மெய்பி எனப்படும் சமயப் பெண் குருவும் இயக்கவும் வழிநடத்தவும் செய்கிறார்கள். தமிழகத்தில் ஆடற்பாடற் கலைகள் வாயிலாகத் தெய்வப் பணிகள் செய்வதற்கென்றே இருந்து வந்த தேவதாசி மரபைப் போல் இவர்களும் தெய்வப் பணிகளுக்காகவும் இந்நடனத்திற்காகவும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களாவர். இந்த நடன நிகழ்ச்சி ஒரு பெரிய ஊர்வலத்துடன் தொடங்குகிறது. நடன அஞ்சலியாக அமையும் இந்நடன நிகழ்ச்சியைக் கண்டு களிக்க வருமாறு சமய ஆண் குருமார்களும் பெண் குருமார்களும் தெய்வங்களை வருந்தி அழைக்கின்றனர். பின்னர் இச்சமய குருமார்கள், தெய்வங்கள் நடனத்தைக் காண வந்துவிட்டதாக அறிவித்து





நடனத்தைத் தொடங்குகிறார்கள். மெய்பா, மெய் பிகளின் நடனம் சமயத்தின் மேலுள்ள மிகு விருப் பம் காரணமாக எழுச்சியூட்டப்படுவதால் நடனம் முழுதும் உணர்ச்சிமிக்கதாக அமைகிறது. நடனப் பெண்களின் பல குழுக்களும் ஒன்றன்பின் ஒன்றாகக் கிராமத் தெய்வக் கோயிலின் முன்நின்று, குறியீட்டுரு வாகப் படைப்பின் பெருஞ்சிறப்பையும் ஒருகுழந்தை யின் பிறப்பையும் பற்றிக் கூறும் பாடல்களைப் பாடிக் கொண்டே ஆடுகின்றனர். ஒவ்வொரு குழுவும் இப் படியும் அப்படியும் அசைந்து அசைந்தும் வட்டமிட்டும் அழகான வெளிப்பாடு மிக்க கை முத்திரைகளைப் படைத்துக் காட்டியும் ஆடுகின்றது. இதற்குமுன் ஆடிச்சென்ற குழு அந்த இடத்தைவிட்டு நகர்ந்ததும் கால இடைவெளியின்றி அடுத்த குழு அந்நடனத்தைத் தொடர்ந்து ஆடிச் செல்லும். அந்த ஒவ்வொரு மகளிர் குழுவின் முன்னரும் அவர்தம் எதிர்ப்புறத் தில் ஆண்களின் குழுக்கள் நின்று பாடல் பாடிக் கொண்டு ஆடத்தலைப்படுகின்றன; கடவுளைப் புகழ்ந்து பாடிக்கொண்டே ஆடுகின்றன.

இந்நடனம் அவ்வாறு சென்று கொண்டிருக்கும் பொழுது மூன்று மெய்பாக்களும் (ஆண்சமய குருமார் கள்) மூன்று மெய்பிகளும் (பெண் சமய குருமார்கள்) நடனமாடத் தொடங்குவர். பெரிய வட்டத்தில் உள்ள பெண்கள் புதிய வாழ்க்கையின் பிறப்பைக் குறியீட்டுருவாக வசந்த காலத்தின் தோற்றத்தைக் காட்டும் துள்ளிக் குதித்தாடும் நடனத்தை ஆடத் தொடங்குகின்றனர். அதைத் தொடர்ந்து நடன ஊர் வலம் ஒன்று தொடங்கப்பட்டு, வழிபாட்டிற்கும் ஆட்படுத்துதலுக்கும் உரிய அடையாளங்களைத் தூக்கிச் செல்கிறது. வாழ்க்கையின் நடப்பை வெளிப் படுத்தும் சமயச்சடங்கு நடனத்துடன், இந்நடன ஊர்வலம் முடிவடைகிறது. சடங்கு சார்ந்த கருப் பொருட்களாகிய கருவளம், பிறப்பு, வாழ்க்கை என் னும் பொருட்களை விளக்கிக் காட்டுவதுடன், நூற்பு, நெசவு, விதைத்தல், அறுவடை, பந்து விளையாட்டு, மீன்பிடித்தல் போன்ற பல ஆர்வமூட்டும் நடனப் பகுதிகளையும் இலெய் அரோபா நாட்டிய நாடகம் பெற்றுள்ளது. அந்நடனத்தைக் காண வந்திருந்த கடவுளர்கள் ஒருபடகில் தெய்வலோகத்திற்குத் திரும்பிச் செல்வதாகக் காட்டும் நடனப் பகுதியுடன அந்நடனம் முடிவடைகிறது. மொய்ரங் பார்வா எனப்படும் கம்பா-தொய்பியின் சோக முடிவைக் கொண்ட காதல் கதையை அந்நடனக்காரர்கள் இணை இணையாகப் பாடி ஆடி நிகழ்த்துகின்ற பகு தியே அந்நாட்டிய நாடகத்தின் மிக அழகான பகுதி யாகும். அந்த இலெய் அரோபா நாட்டிய நாடகம் காதல் அல்லது மென்மையுடன் அமையும் நடனம், தாண்டவம் அல்லது வீரம் செறிந்த ஆற்றலுடன் கூடிய நடனம் என இருவகை நடனங்களைக் கொண்டுள்ளது. ஆனால், அந்நாட்டிய நாடகத்தின் நகர்வுகள் அல்லது இயக்கங்கள் அழகியனவாகவும் ஆற்றொழுக்கானவையாகவும் அமைந்து, மணிப்புரி நாட்டு மக்களின் பழைமையான நம்பிக்கைகள், புனித மான பழங்கதைகள் ஆகியவற்றின் சின்னங்களாக விளங்குகின்றன.

**இராசலீலா:** மணிப்பூரில் கி.பி.15-ஆம் நூற் றாண்டில் வைணவ சமயம் பரவத் தொடங்கியது. இங்கு கி.பி. 18- ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்ட பாக்கிய சந்திரா என்னும் மன்னன் வங்காளத் திலிருந்து வந்த சைதன்னிய கோபிரபுவின் அறிவுரை களால் மிகச் சிறந்த விட்டுணு பத்தனாகவும் கலைகளில் ஆர்வம் மிக்கவனாகவும் விளங்கினான். அம்மன்னன் முன் கண்ணன் தோன்றி இராசலீலா நடனத்தைச் சொல்லிக் கொடுத்து அந்நடனத்தை மணிப்பூரின் தலைநகரான இம்பாலில் உள்ள கோவிந்த ஆலயத்தின் முன் உள்ள இராச மண்டபத் தில் ஆடப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யக் கேட்டுக் கொண்டான் என்ற செய்தி சொல்லப்படுகிறது. அத னால் பாக்கிய சந்திரா, இராசலீலா நடனத் தோற் றத்திற்குக் காரணமாக அமைந்தார். அவர் பல சிறந்த நடன ஆசிரியர்களைக் கொண்டு மணிப்பூரின் பலவகை நடனங்களில் காணப்படும் சிறப்பான கூறு களை இணைத்துப் பல இராசலீலா நடனங்களை அமைத்தார். அவருடைய காலத்தில் தான் மகா ராசலீலா, வசந்த ராசலீலா, குஞ்சிராசலீலா என் னும் இராசலீலா நடன வகைகளும், அனைத்து இராச லீலா நடனங்களுக்கும் உரிய மிக முக்கியமான தும் நுட்பமானதுமாகிய நடன உத்திமுறைகளை உள்ளடக்கிய 'அசௌபா பாங்கி பரேங்கு' எனப்படும் இராசலீலா நடன வகையும் புனையப்பட்டன.

இராசலீலா நடனங்களில் கண்ணன், இராதை, பலராமன், ஆயர்கள், கோபியர்கள் ஆகியோர் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ள பிருந்தாவனத் தில் வாழ்ந்ததும் நடனமாடியதுமான நிகழ்ச்சிகளே இடம் பெற்றன.

இராசலீலா உள்ளிட்ட பல மணிப்புரி நடனங் களில் வளமான ஆட்ட அமைப்புகளுடன், சீரிய சந்த ஒழுங்கும் வணங்குதற்குரிய சமயச் சடங்குகளும் இடம் பெற்றுள்ளன. இந்நடனங்களின் ஒவ்வொரு முத்திரை யும், ஒவ்வொரு நுட்பமான உடல் அசைவும் கணக் கிடப்பட்டு உணர்ச்சிகளின் உட்பொருளை வெளிப் படுத்துவனவாக அமைக்கப்பட்டுள்ளன. இந்நடன வகையில் பாவம் எனப்படும் மனநிலை, இராகம் எனப்படும் பாடல், தாளம் எனப்படும் கால ஒழுங்க மைதி, நாட்டியம் எனப்படும் நாடகம் ஆகியவை

மிகச் சிறந்த ஒழுங்கமைவில் இணைக்கப்பட்டு, அவற்றின் ஆன்மிக வேட்கையும் அவற்றின் வெளிப்பாட்டில் காணப்படும் கவித்துவ இயக்கங்களும் மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. செவ்வியல் நடனக்கலைக்குரிய தாளம், சந்த ஒழுங்கமைவு, உள்ளத்துணர்ச்சிகளின் பொருளை வெளிப்படுத்தும் அபிநயம் எனப்படும்கூறுகள் ஆகியவற்றை இராசலீலா போன்ற மணிப்புரி நடனங்கள் பெற்றுள்ளன. கருநாடக இசையுடன் உறவுடைய இந்துசுத்தானி இசை மரபு அதில் பின்பற்றப்படுகிறது. தாளங்கள் 4,6,7,8,10,12, 14 மாத்திரைகள் அல்லது உட்பிரிவுகளைக் கொண்ட முதன்மையான பல தாள வகைகளைக் கொண்டுள்ளன. இந்தக் கணக்கு 64 மாத்திரைகள் அல்லது உட்பிரிவுகளைக் கொண்ட தாள அடிகள் வரை கணக்கிடப்படுகின்றன. பல கடுஞ்சிக்கலான சந்த அமைப்புகளில் அசைகளைப் பின்னி வரிசை மாற்று ஒழுங்கமைவு முறையில் இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட பல நூறு தாள வகைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. பரத நாட்டியத்தில் காணப்படும் சொல்லுக் கட்டுப்போல், நிருத்த அலங்கார் எனப்படும் சொல் கட்டுமுறை மணிப்புரி நடனங்களிலும் இடம் பெற்றுள்ளது. இந்நடனங்கள் பரத நாட்டியத்தில் உள்ளது போலவே விளம்ப, மத்திம, துரித காலங்கள் என மூன்று வேக நிலைகளில் இயங்குகின்றன.

**கர்த்தல் சோலம்:** ஆண்கள் கடுமையான சிக்கல் மிக்க தாளக் கருவிகளைத் தங்கள் கரங்களில் ஏந்திப் பெரிய தாளங்களைச் சரியான சந்த ஒழுங்குடன் இசைத்து ஆடுகின்றனர். நடனக்காரர்கள் நிற்கும் அழகான இருப்புநிலைகள், அரைவட்டநிலை, குதிப்பு, தசை, நாண்களின் அசைவுகள், சுழற்சி, வல இடப்பக்கம் திரும்புதல் என்னும் இந்நிகழ்ச்சிகளைக் கதையைச் சொல்லப் பாடப்படுகின்ற பாடலுக்கும் மத்தள அடிகளுக்கும் ஏற்ப நிகழ்த்துகின்றனர். இந் நடனம் தாண்டவ நடனத்திற்கு வேண்டுவதான விறுவிறுப்பு, வேகம், ஆவேசமிக்க நகர்வுகள் ஆகியவையும், தொய்வான உந்தி நின்று அலைபாயும் கைகளும் உடலும், ஊசலாடவும் திரும்பவும் செய்கின்ற தலையின் அசைவும், தாளங்களில் கட்டப்பட்டுள்ள வண்ணக் குஞ்சங்களின் தாளத்திற்கேற்ற அசைவுகளும் ஒருங்கிணைந்து கண்ணைக் கவரத்தக்க காட்சியாக அமைந்துள்ளது. நடனக்காரர்கள் தங்கள் ஆட்ட வேகத்தைத் தங்குதடையற்ற மிக உயர்ந்த உணர்ச்சி வேகத்திற்கு ஏற்ப உயர்த்துகிறார்கள். அவர்கள் வலமாக நேரே முன்னால் சென்றும் பின்னால் வந்தும், இயற்கையில் கரும்பு மயில் யானை வாத்து ஆகியவை முன்னும் பின்னும் அசைவது போல் அசைந்தும் அழகூட்டுகின்றனர். பொதுவாக இந்தக் கர்த்தல் நடனக்குழுவில் நடனக்காரர்கள், இரு மிருதங்க இசைக்கலைஞர்கள், பாடகர்கள் எனக் கலைஞர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்நிகழ்ச்சியில் செயதேவர், வித்யாபதி, சாந்திதாசு, கோவிந்ததாசு போன்றவர்களின் பக்திப் பாடல்கள் பாடப்படுகின்றன.

**மஞ்சிரா சோலம்:** சிலான் யாத்திரை எனப்படும் பண்டிகையில் இந்நடனம் இடம்பெறுகிறது. பெயரே குறிப்பிடுவது போல் சிறிய தாளங்களை இசைத்துக் கொண்டு ஆடிப்பாடுவதால் இந்நடனம் இப்பெயர் பெற்றது. நீருற்றுகளின் அருகில் நன்கு அலங்கரிக்கப் பட்ட சிறிய மேடைகளில் கண்ணன்-இராதை உருவச்சிலைகள் வைக்கப்பட்டுஅதனைச் சுற்றி நின்று நடனக்காரர்கள் கோபியர்களைப் போல் சிறிய தாளங்களை இசைத்துப் பாடவும் ஆடவும் செய்கின்றனர்.

**குபாகிசி (தேரோட்டவிழா):** இது இரத யாத்திரையின்போது இடம் பெறுகிறது. இது அலங்கரிக்கப்பட்ட கோயில் தேரில் பூரி செகந்நாதரின் சிலையை வைத்து ஊர்வலமாக இழுத்துச் செல்லும் போது பக்தர்கள் கும்மியடித்து ஆடும் நடனம் ஆகும்.

**அரக்கவால்:** இது கண்ணன் இடைச் சிறுவர்களுடன் ஆடும் நடனமாகும். கண்ணன் நண்பர்களுடன் விளையாடுதற்குப் பசு மேய்க்கப் போவதாகத் தாயிடம் அனுமதி பெறுவதுடன் இந்நடனம் தொடங்குகிறது. மேச்சல் நிலத்தில் கண்ணன் நண்பர்களுடன் செய்யும் தந்திரச் செயல்கள் எல்லாம் இந்நடனத்தில் ஆடிக் காட்டப்பெறும்.

**புங் சோலம்:** இந்தத் தாண்டவ நடனம் முரசை அடித்துக்கொண்டே ஆடப்படும் நடனம் ஆகும். முரசில் அடிக்கப்படும் பல தாள வகைகளுக்கும் அதற்கு ஏற்பக் காலில் அமைக்கப்படும் அடவுகளுக்கும் இடையே நல்ல ஒருங்கிணைவு காணப்படுகிறது. பெரிய முரசு அல்லது மிருதங்கம் ஆடற்கலைஞரின் வலத் தோள்பட்டையில் தொங்கவிடப்பட்டுள்ளது. ஆட்டக்காரர்கள் அரைவட்டத்தில் நின்று கொண்டு அசைந்தும், சுழன்றும், சுருள் வட்ட நகர்வுகளைச் செய்து குதித்தும், நீண்ட இடைவெளிகளைக் கடந்தும் முரசறைந்து கொண்டே ஆடுகின்றனர். ஒருதிசையில் இருந்து எழும்பி முரசை அறைந்து கொண்டே சுழன்று, தொடங்கிய திசைக்குத் திரும்பிக் கால்களைத் தரையில் ஊன்றிக் குதிப்பர். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இவ்வாறு சுழன்று குதித்து ஆடுகின்றனர்.

கர்த்தல் சோலம், புங்சோலம் என்னும் இந் நாட்டுப்புற ஆட்டக் கலைஞர்கள் இடுப்பில் வெள்ளை வேட்டி அணிந்திருப்பர். தலையில் தலைப்

பாகை கட்டி இருப்பர். இடப்புறத் தோளில் தொங்கும்படியாக நீண்ட துண்டுகளை அணிந்திருப்பர். உடம்பில் மேலாடை அணிதல் இல்லை. காலில் சலங்கை அணிதல் இல்லை.

**தாகௌசபா, தாங்ககோய் நடனங்கள்:** போர்க் கலையில் அமையும் இவ்விரு நடனங்களும் வீர நடனங்களாகும். தாகௌசபா எனப்படும் ஈட்டி நடனம் ஈட்டியைக் கொண்டு எதிரிகளைத் தாக்கவும் எதிரிகளின் தாக்குதலில் இருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் உதவும்படியான ஆட்ட அடவுகளைப் பெற்று விளங்குகிறது. ஈட்டியை வைத்துக் கொண்டு இக்கலைஞர்கள் இந்நடனத்தை நிகழ்த்துகையில் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது. தாங்ககோய் எனப்படும் வாள் நடனமும் இவ்வகையில் அடங்கும்.

**கீர்த்தனைகள்:** கீர்த்தன் என்பது பல நடனக்காரர்கள் ஒன்று சேர்ந்து சாலரா போன்ற கரதாளத்துடன் (Kartal) முரசு போன்ற கோல் (Khol) என்ற தாள வாத்தியத்தை இசைத்துக்கொண்டு, இரண்டு நடனக் காரர்களைச் சூழ்ந்து கொண்டு, கண்ணனின் புகழ் பாடும் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு ஆடும் ஆட்டமாகும். பாடுவோர் தனியாக அமைவதும் ஆடும் கலைஞர்களே பாடிக்கொண்டு ஆடுவதும் உண்டு.

**பக்க இசை:** மணிப்புரி நடனங்களுக்குப் பக்க இசைக்கருவிகளாக மிருதங்கம், முரசு போன்ற கோல், சாலரா போன்ற பெரிய கைத்தாளமான கர்த்தல், சிறிய கைத்தாளமான கஞ்சிரா, புல்லாங்குழல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. சில நேரம் நான்கு அல்லது ஆறு பெண்கள் சேர்ந்து கூட்டாகப் பாடும் குழுப் பாடலும் பக்க இசையாக அமையும். கோல் எனப்படும் முரசு அறைவோர் துமென் (Dhumen) என்று குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் 15 பேரிலிருந்து 40 பேர் வரை சேர்ந்து இசைப்பார்கள்; இசைத்துக் கொண்டே ஆடவும் செய்வார்கள்.

**உடைகளும் ஒப்பனைகளும்:** மணிப்புரி நடனக் கலைஞர்கள் அணியும் உடையலங்காரம் கலையளவிலும் கருத்தளவிலும் மணிப்பூருக்கே உரியதாக அமைந்துள்ளது. பழமையான மணிப்பூர்ப் புராணக் கதைகளின் தாக்கம் அவ்வுடைகளில் காணப்படுகிறது.

பெண்கள் 'குமீர்' எனப்படும் ஒரு துண்டுத் துணியைப் பாவாடை போல் தைத்து இடையில் கட்டியிருப்பர். இதில் சிறிய கண்ணாடித் துண்டுகள் வைத்துத் தைத்திருப்பர். அவ்வாடைகளில் தங்க நிறக் கோடுகள் கரும்பச்சை அல்லது கருஞ்சிவப்பு நிறம் பின்புலத்தோடு அமைந்திருக்கும் அவ்வாடைகளின் அடிப்பகுதி பூவேலைப்பாடுகள் செய்யப்பட்டு அழகாக அமைந்திருக்கும். அவ்வாடைகளுக்கால் தெரியுமளவிற்குத் தொங்கிக் கொண்டிருக்கும். குமீர் எனப்படும் அந்தப் பாவாடைக்கு மேல் முழங்கால் வரை 'பசுவால்' எனப்படும் ஓர் உடையை அணிகின்றனர். அதுவும் வெள்ளியிழைகளால் அழகாகப் பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். அதனை நீண்ட மடிப்புகள் கொண்ட பாவாடையின் மேல் அழகான இடுப்புக் கச்சைத் துணியாகக் கட்டியிருப்பர். அத்துணியின் அடிப்புறத்தில் கண்ணாடித் துண்டுகளைப் பதித்துத் தொய்வில்லாமல் அமைத்திருப்பார்கள். அதன் அடிப்பகுதியிலும் அவ்வாடையின் மேற்பகுதியிலும் பல சிறிய வண்ணக் கண்ணாடி மணிகள் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும். 'மைதாக்கு' எனப்படும் சித்திர வேலைப்பாடு கொண்ட பட்டியை இடையில் கட்டியிருப்பர்.

பெண்கள் 'வெல்வெட்டு'த் துணியால் குறைந்த உயர அரைக்கைகள் வைத்து இறுக்கமாகத் தைக்கப்பட்ட மேலாடையை அணிந்திருப்பர். நல்ல கரும் பச்சை, நீலம் அல்லது சிவப்பு நிறத்தில் அமையும் இந்த மேலாடையில் 5செ.மீ. அகலமுள்ள தங்க நிற நூல் வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கும். அதன்மேல் உயர்ந்த 'வெல்வெட்டுத்' துணியில் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டு ஒரு பட்டி போல் அமையும் மேலாடையைப் பூணூல் அணிந்திருப்பது போல் வல இடமாக அணிந்திருப்பர். பெண்கள் 'வெல்வெட்டுத்' துணியால் சிறிய கூம்பு போல் அமைந்தசிறிய தொப்பியை அணிந்திருப்பர். அத்தலையுறையில் முத்துகள் பதிக்கப்பட்டிருக்கும். தலையுறையின் அடிப்பகுதியில் முத்துகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். பெண்கள் பகட்டான அணிகலன்களை அணிந்திருப்பர்; கழுத்து மணிகள் கைவளைகள், மோதிரங்கள் ஆகியவற்றை அணிந்திருப்பர். காலில் சிலம்பம் எனப்படும் 'கொலுசு' அணிவது இல்லை.

ஆண்கள் வெள்ளை அல்லது வண்ண வேட்டிகளை இடையில் கட்டியிருப்பர்; மேலாடை எதுவும் அணிவதில்லை; வெற்றுடம்பாகவே இருப்பர். ஆனால், கழுத்து மணிகள், கைவளையல்கள், மோதிரங்கள் ஆகியவற்றை அணிந்திருப்பர். பெண், ஆண் ஆட்டக்கலைஞர்களின் ஆடை அலங்காரமே கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பக்க இசைக்கேற்ப ஆடும்போது வெள்ளி, கண்ணாடி, வேலைப்பாடுகளில் ஒளி பட்டுப் பல திசைகளிலும் சிதறி அழகூட்டுகிறது. கு.மு.

**துணை நூல்கள்:**

**Enakshi Bhavani**, The Dance of India, Taraporevala's Treasure House of Books, Bombay, 1979.

**Kapila Vatsyayan**, The Tradition of Indian Folk Dance, Indian Book Company, New Delhi, 1977.

**Projesh Banerji**, The Folk Dance of India, Kitabistan, Allahabad, 1959.

***மணிப்புரி மொழி***: இந்தியாவில் நான்கு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த மொழிகள் பேசப்படுகின்றன. திராவிட மொழிக் குடும்பம், ஆரிய மொழிக் குடும்பம், முண்டா மொழிக் குடும்பம், திபெத்தோ - பர்மன்மொழிக் குடும்பம் ஆகியவை அந்நான்கு மொழிக் குடும்பங்கள் ஆகும். அவற்றுள் 'திபெத்தோ - பர்மன்' மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியே மணிப்புரி. சீனோ-திபெத்திய மொழிக் குடும்பத்தின் நான்கு கிளைமொழிக் குடும்பங்களுள் ஒன்றுதான் இந்தத் 'திபெத்தோ-பர்மன்' மொழிக் குடும்பம். அக்கிளை மொழிக் குடும்பத்தின் குக்கி-சின் (Kuki-Chin) குழுவில் ஒன்றுதான் மணிப்புரி மொழி. மணிப்புரிமொழி திபெத்திய மொழிகளுக்கும் பர்மிய மொழிக்கும் இடையே ஒரு பாலம் போல அமைந்துள்ளது. மணிப்புரியின் உடன்பிறப்பு மொழிகளான சீன மொழி, பர்மியமொழி, திபெத்திய மொழி ஆகிய மொழிகளிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கின்றது இந்த மணிப்புரி மொழி.

மணிப்பூர் மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் இம்மொழி இருக்கின்றது. இந்தியாவிற்குள் ஏறத்தாழ 10 லட்சம் மக்களும், இந்தியாவுக்கு வெளியே பர்மா, பங்களாதேசம் ஆகிய நாடுகளில் ஏறத்தாழ 4½ இலட்சம் மக்களும் இம்மொழியைப் பேசுகின்றனர்.

மேலும், அசாம் திரிபுரா போன்ற மாநிலங்களிலும் மணிப்புரிமொழி பேசுபவர்களுடைய தொகை கணிசமாக இருக்கின்றது. மணிப்பூரைச் சுற்றியுள்ள மலைவாழ்மக்களின் தொடர்பு மொழியாக (Lingua Franca) மணிப்புரி இருக்கின்றது. தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி வரையில் இம்மொழி கற்பிக்கப்படுவதோடு கல்லூரிக் கல்வியில் மணிப்புரி பயிற்றுமொழியாகவும் இருக்கின்றது.

ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும், தொடர்பு மொழியாகவும் இருக்கின்ற மணிப்புரி நீதிமன்ற மொழியாகவும் விளங்கிவருகின்றது. சேயிரப்பு, குச்சு, கரோத்து, பாச்சா போன்ற மணிப்புரி நீதி மன்றங்களின் அலுவல்களில் மணிப்புரி இடம் பெற்றிருக்கின்றது.

இம்மொழி பேசப்படுகின்ற வட்டாரச் சூழல், வரலாற்றுச் சூழல், பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் மணிப்புரி மொழியில் ஆரிய மொழிகளின் தாக்கம் பெரிதும் இருந்து வந்திருக்கிறது. இவ்வாறு பல வகையில் முக்கிய இடம் பெற்றிருக்கும் மணிப்புரி மொழிக்கான விளக்க இலக்கணம் இன்னும் தெளிவாக எழுதப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும்.

மணிப்புரியில் எட்டு உயிரொலிகளும் இருபத்தாறு மெய்யொலிகளும் மூன்று சொல்லழுத்தங்களும் (Tone) இருக்கின்றன. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஓ ஆகிய எட்டும் மணிப்புரி உயிரொலிகளாகும். மெய்யொலிகளைக் கீழ்வருமாறு காட்டலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| p | · | t | c | K | |
| $p^h$ | — | $t^h$ | $c^h$ | $k^h$ | |
| b | -- | d | j | g | |
| $b^h$ | -- | $d^h$ | $j^h$ | $g^h$ | |
| s | — | | $S^h$ | | h |
| m | — | N | | ṅ | |
| | | l | | | |
| | | r | | | |
| w | — | y | | | |

மணிப்புரி மொழியின் எழுத்துகள் பிராமி எழுத்துகளின் ஒரு கிளையாகும். அவை அசாமிய மொழி, வங்கமொழி எழுத்துகளைப் போலுள்ளன. மணிப்புரிஎழுத்துகள் கி.பி.799-இலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது தெரிகிறது.

மணிப்புரி இலக்கியங்களுக்கு இந்திய இலக்கியங்களில் சிறப்பானதொரு இடமுண்டு.

மற்ற இந்திய மொழிகளிலுள்ளவை போன்று சமய இலக்கியங்கள் மணிப்புரியிலும் பெரிதும் வளர்ந்துள்ளன. ஔக்ரி (Ougri) என்னும் செய்யுள் ஞாயிற்றைப்போற்றும் இலக்கியமாகும். நொங்டா லைரென்பக்கங்பா என்னும் அரசனின் (கி.பி.33) முடிசூட்டு விழாவில் பாடப்பட்டதாகக் கூறப்படுகின்ற பாடலொன்று இலைசுரபாம் என்னும் இலக்கியத்தில் வருகின்றது. 'நுமிடத் கப்பா' ஒரு நீண்ட பாடல். அது ஞாயிற்றைப் போற்றிப் பாடப்பட்டதாகும். அது மணிப்புரி இலக்கியத்தின் தொடக்கத்தை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது.

சமய இலக்கியங்கள் வளர்ந்திருப்பது போன்றே சமயச் சார்பற்ற இலக்கியங்களின் உருவாக்க வளர்ச்சியையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

கிசன் கிராவோ என்னும் செய்யுள் 'உலுவாங் நிங்தௌ புன்சிபா' என்னும் (கி.பி.568 - 658) தலைவனின் மன்னர்பட்டக்குப் போட்டி பற்றிக் கூறுகிறது. மணிப்புரியில் பல சமயச் சார்பற்ற இலக்கியங்களின் உருவாக்கத்திற்கு கி.பி. 12- ஆம் நூற்றாண்டு அடிப்படையாகிறது. அக்காலக்கட்டத்திலேயே தனிப் பாடல்களும் ஏராளமாக எழுதப்பட்டுள்ளன. அகப் பொருளைக் கருவாகக் கொண்ட மொய்ரான் சையோன் கதைகள் மணிப்புரியில் மிகவும் புகழ்பெற்றவை. 'கம்பா' வைத் தலைவனாகவும் 'தோய்பி' யைத் தலைவியாகவும் கொண்ட அக்கதை ஒரு மணிப்புரிக் காப்பியமாகக் கொள்ளப்படுகின்றது.

போரைக் கருவாகக் கொண்டதொரு புற இலக்கியம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உருவானது. அகோங்லோன், நிங்க்தௌலோல் என்னும் கவிதைகள் நாட்டுப்புறப் பாடல்களாகும். புற இலக்கியக் கூறுகளைக் கொண்ட அக்கவிதைகள் போருக்குச் சென்று, வாகை சூடிப் பொன்னும் பொருளும் கொண்டு வருவதைக் கூறுகின்றன.

உரைநடை இலக்கியம் வளர்ந்ததற்கான சான்றுகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்தே உள்ளன. பந்தோய்பிக் கதைகள் காதலையும் சமயக் கருத்துகளையும் கொண்டவை. அவ்வகையான கதைகள் மீண்டும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பொம்பிலுவாவோபா கதைகள் மணிப்புரி மொழியின் சிறப்புகளுள் ஒன்றாகும்.


இம்மொழியில் கமல், மினகேதன், சுர்ச்சந்த் சர்மா போன்றோரின் கவிதைகள் சிறப்பானவை. பழைய காதல் கவிதைகளைக் கொண்ட நாடகங்கள், கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மாதபி, இலபங்கா (வரலாற்றுப் புதினம்) போன்ற புதினங்கள், மொழிபெயர்ப்புப் புதினங்கள், சிறுகதைகள், இலக்கியத் திறனாய்வு போன்றவை மணிப்புரிமொழியில் கி.பி.20 – ஆம் நூற்றாண்டின் இலக்கிய வளத்திற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன. இந்திய அரசியல் சட்டத்தில் இடம்பெறாவிட்டாலும் சாகித்தியக் கழகத்தால் ஓர் இலக்கியமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது மணிப்புரி மொழி. என்.ந.

**துணை நூல்கள்:**

**Inder Singh.**, Manipuri Phonetic Reader, CIIL, Mysore, 1975.

Manipur Sahitya Parishad, Glimpses of Manipuri Language, Literature and Culture, 1970.

*மணிப்பூர்*: இது இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஒரு சிறிய மாநிலம். இதன் வடக்கே நாகாலாந்தும், தெற்கே மிசோரமும், மேல் பர்மாவும் (Upper Burma), மேற்கே அசாம் மாநிலத்தின் கச்சார் மாவட்டமும், கிழக்கே பர்மாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் பரப்பளவு 22,237 ச.கி. மீட்டர்; மக்கள்தொகை 14,33, 691 (1981). அவருள் 41 % எழுத்தறிவுடையோர். இங்குப் பேசப்படும் மொழிகள் மணிப்புரியும் ஆங்கிலமும் ஆகும். இதன் தலைநகரம் இம்பால்(Imphal).




மணிப்பூர்

பொருளாதார வளர்ச்சியில் இது முன்னணியில் நிற்கிறது. இது மழை மிகுதியான மாநிலமாகையால், பயிர்த் தொழிலுக்கு ஏற்றதாகவுள்ளது. குன்றுகளின் அடிவாரங்களில் நெல்லும் சோளமும் பயிரிடப்படுகின்றன. கூடுதல் விளைச்சலுள்ள நெல்வகை இங்குப் பயிரிடப்படுகிறது. கைத்தறி நெசவும், ஆலை நெசவுத்தொழிலும் இங்கு நடைபெறுகின்றன. ஏறக்குறைய 3310 சிறு தொழில் அலகுகள் இருக்கின்றன. மின்னியல் (Electronics) தொழிற்சாலையும், தொலைக்காட்சிப் பெட்டி இணைப்புத் தொழிற்சாலையும் இருக்கின்றன. பட்டுப்புழு வளர்ப்பில் (Sericulture) மணிப்பூர் முன்னணியில் நிற்கிறது. பழங்குடியினர் முசுக்கட்டை மரம் வளர்ப்பிலீடுபட்டுள்ளனர். பட்டு உற்பத்தித் தொழிலிலும் இம்மாநிலம் வளர்ச்சி அடைந்துள்ளது.

மணிப்பூர் முதலில் ஒரு சிறிய அரசாக இருந்தது. இது கி.பி. 1891-இல் ஆங்கிலேயராட்சியின் கீழ் வந்தது. அரச குடும்பத்தார் இதனை ஆட்சி செய்தனர். அரசியலமைப்புச் சட்டத்தின்படி (1947), இதன் அரசரே இதன் நிருவாகத் தலைவராக இருந்தார். வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்றம் இருந்தது. அது 1949-இல் இந்திய ஒன்றியத்துடன் இணையவும், சட்டமன்றம் கலைக்கப்பட்டுச் சிறிது காலம் தலைமை

ஆணையர் மாகாணமாக (Chief Commissioner's Province) இருந்தது. பின் 1950 - இல் இந்திய அரசியலமைப்பின்படி இது 'சி' பிரிவு மாநிலமாக ஆளப் பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 30 உறுப்பினர்களை யுடைய பிரதேசக் குழு 1957-இல் அமைக்கப்பட்டது. இதன் ஆட்சியாளர் துணை ஆளுநராக உயர்த்தப் பட்டார். இது 1972-இல் ஒரு மாநிலமாக (State) ஆக்கப்பட்டது. இது 8 மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டது.

இம் மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகள் இதன் தலைநகரமான இம்பாலையும், இதன் உலோக்டாக்கு என்னும் பெரிய தூய நீர் ஏரியையும், உலகிலேயே இங்குத்தான் காணப்படுகின்ற கெய்பூல் லாம்சோ என்னும் மிதக்கும் பூங்காவையும் காண்பதற்கு வருகின்றனர். இம்மாநில மக்கள் மணிப்புரியர், மெய்தியர், நாகர், குக்கியர் ஆகிய பல இனங்களைச் சேர்ந்தவர்கள். இந்நாட்டவர் வளர்த்துள்ள நடனக் கலை வகைகள் சிறப்புடையன. அவற்றுள் கண்ணன் இராசலீலை என்பது புகழப்படும் ஒரு நடன வகையாகும். இங்கு ஒரு பல்கலைக்கழகம் உள்ளது.

பா.சு.

**மணிபல்லவம்**: இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயிருந்த ஒரு தீவு மணிபல்லவம். இது காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கில் முப்பது யோசனை தொலைவில் இருந்ததென்பர். சிறப்புமிக்க புத்த பீடிகை இத்தீவில் இருந்தது. இத்தீவைப் புத்த சமயத்தவர் அடைந்து, புத்த பீடிகையை வழிபட்டனர். இத்தீவையடைந்தோர் இதிலுள்ள புத்த பீடிகையாலும் பொய்கையாலும் தம் பழம்பிறப்பு அறிவர் என்பர். இத்தீவில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளை மணிமேகலையில் காணலாம்.

மணிமேகலை சுதமதியுடன் மலர்வனஞ் சென்றபோது அங்குவந்த மணிமேகலா தெய்வம், உதய குமரனுக்கு மணிமேகலைபால் உள்ள விருப்பம் தணியாமையை எடுத்துக் கூறி, அவ்விடம் விட்டு நீங்கிச் சக்கரவாளக் கோட்டத்தை அடையுமாறு கூறியது. பிறகு மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தழுவியெடுத்து, வான்வழியே முப்பது யோசனை தொலைவு தெற்கே சென்று, கடல் சூழ்ந்த மணிபல்லவத் தீவில் அவளை வைத்து விட்டுச் சென்றது. பின் மீண்டும் உவவனஞ் சென்று சுதமதியை அடைந்து, மணிமேகலைக்குப் புத்தர் அற நெறியிற் செல்லுதற்குரிய நற்காலம் வந்துற்றதால் அவளை எடுத்துச் சென்று மணிபல்லவத் தீவின்கண் வைத்துள்ளதாகவும், ஏழாம்நாள் மீண்டும் அவள் உவவனம் வந்து சேர்வாள் என்றும், அவள் வரும் போது பற்பல வியத்தகு செயல்கள் நிகழும் என்றும் அது கூறிச் சென்றது.

புகார் நகரில் சுதமதி செயலற்றிருப்ப, மணிபல்லவத்தில் கடலருகே மணலில் தூங்கிய மணிமேகலை துயில்நீங்கி எழுந்து தான் முன் காணப் பெறாத புதிய பொருள்களைக் கண்டாளாதலின், அவற்றைப் பார்த்துத் திகைப்புற்றாள். சுதமதியைக் காணாது கலக்கமுற்ற மணிமேகலை அத்தீவின் நீர்த் துறைகளிலும் மணற்குன்றுகளிலும் சென்று அவளைத் தேடி ஒருவரையும் காணாதவளாய் அழுது கொண்டிருந்தாள். அப்போது அவள் முன்னர், இந்திரனால் இடப்பட்டுக் கண்டு வணங்கியவர்கட்குத் தம் பழம்பிறப்பை அறிவிப்பதாகிய புத்தபீடிகை தோன்றியது. அதைக் கண்டவுடன் மணிமேகலை வியப்புற்றாள். கை குவித்து வணங்கி, மும்முறை அதனை வலம்வந்து பணிந்து எழுந்தாள். அதன் காட்சியால் தம் பழம் பிறப்பின் நிகழ்ச்சிகளை உணர்ந்தாள் மணிமேகலை.

அங்கு வந்த மணிமேகலா தெய்வத்தைச் சந்தித்த மணிமேகலை, பின்னர் அங்குள்ள மணற் குன்று முதலியவற்றைப் பார்த்துக் கொண்டிருக்குமிடத்து, தீவதிலகை என்பாள் அங்குத் தோன்றினாள். அவள், இந்திரன் ஏவலால், அப் பீடிகையைக் காத்துக் கொண்டிருப்பவள். "புத்த தேவர் அருள் நெறியில் நடப்போரே இப்பீடிகையைக் காண்டற்கு உரியர். கண்டவர் தம் பழம் பிறப்பை உணர்வர். இப் பீடிகைக்குமுன் 'கோமுகி' என்னும் பொய்கையொன்றுள்ளது. அதனுள்ளிருந்து 'அமுதசுரபி' என்னும் அட்சய பாத்திரம் ஒவ்வோர் ஆண்டும் வைகாசித் தூய முழு மதி நாளில் தோன்றும். அதில் இட்ட அமுதம் கொள்ளக் கொள்ளக் குறையாது வளர்ந்து கொண்டே இருக்கும்" என அவ்விடத்தைப் பற்றி விளக்கிக் கூறினாள் தீவதிலகை.

மணிமேகலை முறைப்படி அத்தீவிலுள்ள பீடிகையைத் தொழுதபோது, அப்பொய்கையிலிருந்து 'அமுதசுரபி' பாத்திரம் அவள் கையில் வந்தடைந்தது. பின்னர் வானிலே எழுந்து சென்ற மணிமேகலை நாகபுரஞ் சென்று ஆங்குள்ள புண்ணிய ராசனைக் கண்டு, பழம் பிறப்பிலே 'நீயே ஆபுத்திரன்' என்று அவனுக்கு உணர்த்தி, மணிபல்லவஞ் சென்று தரிசித்தால் பழம்பிறப்பை உணரலாம் என்றும் உணர்த்தினாள். பின்னர் அவளும் மணிபல்லவம் வந்து புத்த பீடிகையைத் தரிசித்தாள்.

மணிமேகலை வஞ்சிநகர்க்கண் இருந்து பல் வகைச் சமயக் கணக்கர்களைக் கண்டபின், தவம் மேற்கொண்டிருந்த மாசாத்துவானை அடைய,

அவன் தன் வரலாற்றைக் கூறியதுடன், கச்சிமாநக ருக்குச் செல்லுமாறு மணிமேகலையிடம் கூற அவ ளும் சென்றடைந்தாள். அங்கே இளங்கிள்ளி என் பான் அமைத்திருந்த புத்த சயித்தியத்திற்குத் தென் மேற்கிலுள்ள ஒரு பொழிலையடைந்தாள். காஞ்சி மன்னன், தனக்குத் தெய்வமொன்று தோன்றி மணிமேகலையைப் பற்றி அறிவித்ததைக் கூறி, அது மணிபல்லவத்திலுள்ள கோமுகிப் பொய்கை, பொழில் முதலியன போலத் தன்னை இங்கே சமைக்குமாறு பணித்தமையும் அவ்வாறே தான் செய்தமையும் தெரிவித்து, அவ்விடத்தையும் அவட் குக் காட்டினான். மணிமேகலையும், அதைக் கண்டு வழிபட்டுக் காணார் கேளார் கால்முட மானோர், பேணாமாக்கள், பேசார், பிணியுற்றோர், படிவ தோன்பியர், பசியுற்றோர், முதலிய பல் லோரையும் வருவித்துத் தன் அமுதசுரபியால் இனிய அமுதுண்பித்தாள். வே.இரா.மா.

துணை நூல்:

மணிமேகலை - உரை, வேங்கடசாமி நாட்டார், ந.மு., துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., கழக வெளியீடு, சென்னை, 1985.

**மணிமுத்தாறு:** இது தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள நெல்லை கட்டபொம்மன் மாவட்டத் தில் பாயும் ஆறு. இது தாமிரவருணி நதியின் துணை யாறாகும். இது தோன்றும் மலைக்கு அகத்திய மலை என்று பெயர். அம்மலையின் உயரம் ஏறத்தாழ 1830 மீ. அதன் வட சரிவில் செங்கல்தேரிச்சோலையில் மணி முத்தாறு தோன்றுகிறது. சிங்கம்பட்டிப்பகுதியில் வரட்டாறு, கூசன்மதி ஆறுகளின் நீரை இது பெற்றுக் கல்லிடைக் குறிச்சிக்கு மேற்கே தாமிரவருணி யுடன் கலக்கிறது. மணிமுத்தாற்றினை அடுத்துள்ள அடர்த்தியான காடுகளில், பாம்பு, முயல், கீரிப் பிள்ளை முதலிய விலங்குகள் மிகுதியாகக் காணப்படு கின்றன. கல்லிடைக்குறிச்சியிலிருந்து 6 கி.மீ. தொலை வில் மணிமுத்தாறு அணை கட்டப்பட்ட பின் 1963-இல் மணிமுத்தாறு அணை நகரமைப்பு எனப்படும் ஒரு நகரியம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து 48 கி.மீ. தொலைவில் திருக்குற்றாலம் உள்ளது. திருக்குற்றால மலைமீது மணிமுத்தாறு அருவி உள்ளது. அங்கு நீரா டும் வசதி உண்டு. ஆண்டு முழுவதும் அருவியில் நீர் விழுகிறது. அருவியின் உயரம் ஏறத்தாழ 8 மீ. குளிக் கும் இடத்தில் அருவியின் உயரம் ஏறத்தாழ 5 மீட்டர். அருவிக்குக் கீழே ஏறத்தாழ 25 மீ. ஆழத்துக்கு நீச்சல் குளத்தைப் போன்ற அமைப்பு உள்ளது. சுற்றுலாப் பயணிகள் அந்த இடத்தை மிகவும் விரும்பி அங்கு வந்து போகின்றனர். மணிமுத்தாறு அணைக்கட்டு மூலம் இந்த ஆற்றின் நீர் வேளாண்மைக்கு மிகுதி யாகப் பயன்படுத்தப்படுகிறது.

**மணிமுத்தாறு நீர்த்தேக்கம்:** இது தமிழ்நாட்டில் நெல்லைகட்டபொம்மன் மாவட்டத்தில் கல்லிடைக் குறிச்சி என்னும் ஊருக்குத் தென்மேற்கில் ஏறத்தாழ 6கி.மீ. தொலைவில் உள்ளது. தாமிரவருணியின் துணை ஆறான மணிமுத்தாற்றின் குறுக்கே, அம்பா சமுத்திரத்திற்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ 6 கி.மீ. தொலைவில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் மிகுதியாகத் தேக்கப்படும் நீர் அப்பகுதியின் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இந்த அணையின் உயரம் 76.8மீ., நீளம் 2930 மீ. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படும் இந்நீர்த்தேக்க அமைப்பு வேலை 1950-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்று 1958-இல் முடிவுற்றது. இவ்வ ணைக்கட்டு,36 மீ. மண்ணினாலும் 40. 8மீ. கல்கட்ட டத்தாலும் ஆக்கப் பெற்றுள்ளது. அணையின் மொத்த நீளம் 2930 மீட்டரில் 2555 மீ. மண்ணி னாலும் 375மீ.கல்கட்டடத்தினாலும் ஆக்கப் பெற்றுள் ளன. இந்நீர்த்தேக்கத்திலிருந்து 45 கி.மீ. நீளமுள்ள வாய்க்கால் மூலம் பாயும் நீர் 20,000 ஏக்கர் நிலங் களுக்குப் பயன்படுகிறது. மேலும், தாமிரவருணித் திட்டத்தின்கீழ் முன்பே நீர்ப்பாசன வசதி பெறும் 83,000 ஏக்கர் நிலங்களும், இப்புதிய நீர்த்தேக்கத் தால் மிகுதியான பயன்களைப் பெறுகின்றன. இந் நீர்த்தேக்க வேலை நிறைவேற்றுவதற்கு 5.05 கோடி உருபாய் செலவாகியது என்று கணக்கிட்டுள்ளனர்.

இந்நீர்த்தேக்கத்திலிருந்து நாங்குநேரி வட்டத் துக்கு உயர்மட்டக் கால்வாய் ஒன்று வெட்டப்பட் டுள்ளது. தெ.பா.

**மணிமேகலா தெய்வம்**, பல தீவுகளில் வாழ் வோரை அரக்கர்களின் கொடுமையினின்றும் காக் கும் பொருட்டு இந்திரன் ஏவல் வழிச் செயற்பட்டு வந்ததாகும். இது கோவலனின் குல தெய்வமாகும். இத் தெய்வம் கோவலன் குலத்து முன்னோன் ஒரு வன் உடைகலப்பட்டு வருந்தியபோது அவனைக் கடலினின்றும் உய்வித்தது. இத் தெய்வம் ஆண்டு தோறும் நடக்கும் இந்திர விழாவைக் காண்பதற்கு அப்பதிவாழ்மகள் வடிவெடுத்து வரும். ஓராண்டு அவ்வாறு வந்த தெய்வம் உவவனத்திலுள்ள பளிக் கறையிலிருந்த பீடிகையை வலங்கொண்டு புத்ததேவ னைப் பலலாறு போற்றி வணங்கி மணிமேகலையை உதயகுமரனுக்கஞ்சிப் பளிக்கறையுள் புகுத்தித் தனித்து நின்ற சுதமதியிடம் அவள்தனித்து நிற்கும் காரணம் கேட்டது. அவள் உற்றது கூறியதும் உதய குமரன் மணிமேகலை மீது தணியாக் காதலால்

அவளை இவ்வனத்தின்கண் பற்றானாயினும் வீதி வாய்த் தொடர்ந்து பற்றுவானாதலால் அவ்வனத்துக்கு மேற்பால் உள்ளதொரு சிறுபுழை வழியாகப் போகித் தவத்தோர் வாழும் சக்கரவாளக் கோட்டம் புகுமாறு அவளைப் பணித்தது. சுதமதி அத்தெய்வத்திடம் சக்கரவாளக்கோட்டம் என்று பெயர் வந்த காரணம் கேட்க, அது விளக்கிக்கூறிற்று. அதனைக் கேட்டுக் கொண்டிருந்த சுதமதி தூங்கியபின், மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணிபல்லவத் தீவில் விட்டு விட்டுக் காவிரிப் பூம்பட்டினத்திற்குப் போந்து, உதயகுமரனுக்குப் பல அறிவுரைகளைக் கூறிய பின், சுதமதியிடம் சென்றது. அத்தெய்வம்' தான் மணிமேகலையை மணிபல்லவத் தீவில் உய்த்த செய்தியைக் கூறி, அவள் தன்னுடைய முற்பிறப்பின் வரலாறு உணர்ந்து வேற்றுருவங்கொண்டு வருவாளாயினும் அவட்கு மறையாள் என்றும், அவள் நகர் புகும்போது காவிரிப்பூம்பட்டினத்தில் பல அற்புதங்கள் நிகழுமென்றும், அச் செய்தியை மாதவிக்குக் கூறுமாறும், கோவலன் தன் மகட்கு 'என் பெயரை' வைத்த போது மாதவியின் கனவில் தோன்றிக் 'காமன் செயலற்று ஏங்கும் வண்ணம் ஆசையை முழுதும் ஒழித்த தவமகளைப் பெற்றாய்' என்று யான் கூறியதை நினைவு படுத்துமாறும் கூறிப்போயிற்று.

மணிபல்லவத் தீவில் மணிமேகலை துயிலெழுந்து தான் வேறிடம் புகுந்தது உணர்ந்து புலம்புகையில் வணங்கியோர்க்குப் பழம்பிறப்பறிவிக்கும் பீடிகை கண்டு, பிறப்புணர்ந்து தன்னை அந்தவனத்துய்த்த தெய்வம் வாராதோ என்று எண்ணியிருந்தாள். அப்போது, மணிமேகலா தெய்வம் தோன்றிப் புத்த தேவனை வணங்கியபோது, மணிமேகலை அதனிடம் தன் பழம் பிறப்பில் கணவனாக ஆங்கிருந்த இராகுலன் எங்குள்ளான் என்றுகேட்க, அத்தெய்வம் இராகுலனே உதயகுமரனாகப் பிறந்துள்ளான் என்றும், அதனால்தான் அவன் மனம் அவளிடம் புக்கது என்றும், அவ்வெண்ணத்தை மாற்றற்கே தான் அவளை அத் தீவிற்குக் கொணர்ந்ததாகவும் கூறியது. மேலும், அத் தெய்வம், தாரை வீரை என்ற அவள் தமக்கையர் அறவணவடிகள் கூறியாங்கு பாதபங்கய மலையைத் தொழுது மாதவியாகவும், சுதமதியாகவும் பிறந்துள்ளனர் என்றும் அவள் பிற சமயவாதிகளோடு வாதிட நேருமென்றும் கூறி,வேற்றுருக் கொள்ளற்கும், பசியா திருத்தற்கும் விண்வழியியங்கற்கும் உரிய மூன்று மந்திரங்களை மணிமேகலைக்குக் கூறிச் சென்றது.

நாக நாட்டரசன் மகள் பீலிவளை, தான் பெற்ற குழந்தையை அங்குப் போந்த கம்பளச் செட்டிவழிக் காவிரிப்பூம்பட்டினத்து அரசனிடம் அவன் மகன் என்று கூறி ஒப்படைக்குமாறு கூறிக் கொடுத்தாள். அங்ஙனமே அவன் கொடுப்பதாக உடன்பட்டுப் பிள்ளையோடு வரும்போது உடைகலப்பட்டுக் கடலில் ஆழ்ந்ததை அரசனிடம் கூற அவன் மகனைத் தேடி அலைந்ததால் இந்திரவிழாவை மறப்ப, அது பொறாத மணிமேகலா தெய்வம் காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளுமாறு சபித்தது. கடலும் ஊரை மூழ்கடித்து அழித்தது. இவ்வாறு சாபமிட்டழித்தது மணிமேகலா தெய்வமேயாகும். கு.தி.

*மணிமேகலை*: இது ஒரு பௌத்த சமய நூல். இதனை மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்னும் புலவர் 'மணிமேகலை துறவு' என்ற பெயரில் இயற்றினார். பிற்காலத்தவர் இதனைப் பெருங் காப்பியத்துள் ஒன்றாக்கி வழங்கினர். இதனைச் சிலப்பதிகாரத்தோடு சேர்த்து இரட்டைக் காப்பியமென்று குறிப்பிடுவாருமுளர். காப்பியம் காமவெரியெழ விகற்பித்துப் பேசப்பெறுவது. சிலம்பும் மேகலையும் வேறு வேறு சமயங்களைச் சார்ந்து அறமுரைக்கும் நூல்களாகும். காப்பியத்துள் பேசப்பெறும் உறுப்பினர்களின் பெயர்களும் சில செய்திகளும் ஒன்று போல் கூறப்பெற்றிருப்பினும் வேறுபாடுகள் மிகுதி. பதிகச் செய்திகொண்டு இரண்டு நூலும் ஒருசேர ஒருகாலத்துப் பாடியதாகக் கொள்ளின் மாறுபாடுகள் பல நிகழும்.

சோழ மரபின் பழையோன் தூங்கு எயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழாத் தொடங்கப் பெற்றது. அது சோழமரபினரால் ஆண்டுதோறும் விடாது நடைபெற்று வருவதாகும். அந்த விழாவில் மாதவி நடனமாடப் போகாமையால் நகர மக்கள் பழிகூறியது கேட்ட மாதவியின் தாய் சித்திராபதி வயந்த மாலையின் வாயிலாக ஊரவர் கூறும் பழியைக் கூறி வரப் பணித்தாள். அதுகேட்ட மாதவி தான் துறந்த தோடன்றிக் கற்புக் கடவுள் கண்ணகியின் மகள்முறையுடைய மணிமேகலையும் கணிகைத் தொழில் பூணாள் என்று கூறியனுப்பினாள். வயந்தமாலையும், மாதவியும் பேசிக் கொண்டிருந்த செய்தியைக் கேட்டுத் தன் தந்தை கோவலனுக்கும் தாய் கண்ணகிக்கும் நிகழ்ந்த கேட்டினை எண்ணிக் கண்ணீர் உகுத்தாள். அக்கண்ணீர் அவள் தெய்வத்துக்குத் தொடுத்துக்கொண்டிருந்த பூமாலையில் விழுந்து தூய்மையைக் கெடுத்துவிட வேறு பூக்கொண்டு மாலை தொடுக்கப் பணித்தாள். அப்பொழுது அவள் தோழி சுதமதி என்பாள் மணிமேகலை தனித்து மலர்கொய்யச் செல்வது பொறாது அவளுடன் செல்கின்றாள்.

அவர்கள் உவவனம் என்ற பூந்தோட்டத்தில் பூக்கொய்து கொண்டிருந்தபோது உதயகுமரன் என்ற அரசிளங்குமரன் மணிமேகலை உவவனம் புகுந்தது அறிந்து அவளைத் தேடிப் போனான். உதயகுமரன்

தன்னை விரும்புவதை முன்னமே அறிந்த அவள் தான் பூண்ட துறவுக்கு ஏலாவகை அவன் விருப்பம் இருப்பதற்கஞ்சி அவள் அவ்வனத்திருந்த பளிங்கறை யொன்றில் புகுந்து தாளிட்டுக் கொண்டாள். அப் பொழுது உதயகுமரன் சுதமதியிடம் அவள்புக்க இடம் கேட்டான். அவளும் யாக்கையின் புன்மை பலவற்றைக் கூறிக்காமங் கூடாதென்னவும் அவன் கேளானாய்ப் பளிங்கு மண்டபத்துள் இருந்த மணி மேகலையைப் பளிங்குவழி வெளிப்படக்கண்டு அக லாதவனாய் நின்றான். அவள்வெளிப்படுமாறிலாதது கண்டு அவளைச் சித்திராபதியின் துணையால் பெற லாம் என்று போய்விடுகின்றான்.

பின் மணிமேகலை வெளியில் வந்து சுதமதியிடம் தன்மனம் தன்னை அறியாது அவன்பால் செல்லும் காமத்தியற்கையைக் கூறி அங்குப் பொழுது கழிந்த தால் தங்கி உறங்கிவிடுகின்றனர். மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு உதயகுமரனால் துன்பம் வருமென்பதை அறிந்து அதனை அவர்களிடம் கூறிச் சக்கரவாளக் கோட்டம் புகுமாறு கூறியது. சுதமதி சக்கரவாளக் கோட்டம் பற்றிய செய்தியைக் கேட்டுக் கொண்டே உறங்கியதும் அத்தெய்வம் மணிமே கலையை மணிபல்லவத் தீவிற்கு எடுத்துச் சென்று அங்கு விட்டுவிடுகின்றது. பின், அத் தெய்வம் காவிரிப் பூம்பட்டினம் போந்து உதயகுமரனுக்கு அறிவுரை கூறிவிட்டு உவவனத்தில் உறங்கிக் கொண்டிருந்த சுதமதியிடம் மணிமேகலை மணிபல்லவத்தீவில் இருக் கும் செய்தியைக் கூறிப்போய்விடுகின்றது. சுதமதி சக்கரவாளக் கோட்டம் புகுந்து அங்குள்ள தெய்வத் தின் வாயிலாகத் தன் பழம்பிறப்பை அறிந்து நிகழ்ந் தவற்றையெல்லாம் மாதவியிடம் கூறித் துன்புற்றிருந் தாள்.

மணிபல்லவத்தில் உறங்கி விழித்த மணிமேகலை தான் புதியவிடம் ஒன்றில் இருப்பதுணர்ந்து திகைத் துத் தன்தாய் மாதவி தன்னைக்காணாது உழல் வாளே என்று உளைந்து ஆண்டுப் பலவிடங்களில் திரிந்து, இறந்த கோவலனை நினைந்து அவன் பெயரைச் சொல்லிப் புலம்பியதும் தன்னை வழி பட்டோருக்குப் பழம் பிறப்பை அறிவிக்கும் தரும பீடிகை தோன்றக் கண்டு வணங்கினாள். அப்பொழுது அவள் பழம்பிறப்புணர்ச்சியைப் பெற்றாள். அவள் சென்ற பிறப்பில் இலக்குமி என்னும் பெயரில் இராகுலனை மணந்து வாழ்ந்து வருங்கால் இராகுலன் திட்டிவிடமென்னும் பாம்பினால் இறந்தான். அது பொறுக்கலாற்றாது அவள் எரிபுகுந்து உயிர் துறந் தாள்.

மணிபல்லவத்தில் மணிமேகலையின் முன் மணி மேகலா தெய்வம் தோன்றிப் புத்ததேவனை வணங்க மணிமேகலையும் அதனை வணங்கித்தன் பழம்பிறப் பினைக் கேட்டாள். மணிமேகலை பழம்பிறப்பில் இலக்குமி என்னும் பெயரில் இருந்து இராகுலன் என்பானை மணந்து அவர்களிடம் போந்த சாது சக்கர முனிவனை இராகுலன் சினக்க அவனை வாளா இருக்கச் செய்து உண்பித்தாள். அந்த இராகுலனே இப்பிறப்பில் உதயகுமரனாகப் போந்துள்ளான். அதனால்தான் அவள் மனம் அவன்பால் போந்தது என்றும் அவ்வாறு அவன்பால் மனம் போக்கிப் பிறப் பறாது உழலாவண்ணம் மணிபல்லவத்திற்குக் கொண்டு போந்தது என்றும் கூறிற்று.

முற்பிறப்பில் தாரை, வீரை என்ற இருவர் அவளுக்குத் தமக்கையராய் இருந்து அறவண அடிகள் அறிவுரையின்படி பாதபங்கய மலையைத் தொழுது, இப்பிறப்பில் முறையே மாதவி என்றும் சுதமதி என்றும் பிறந்துள்ளனர் என்றும் கூறியதோடு பழம் பிறப்புணர்ந்த அவள் சமயவாதிகள் பலருடைய கொள்கைகளைக் கேட்டுப் பிறப்பறுதற்கு மாற்று வேடம் பூணவேண்டுமென்றும் வான்வழி இயங்க வேண்டுமென்றும் பசித்திருக்க நேருமென்றும் கூறி அவற்றைப் போக்க மூன்று மந்திரங்களைக் கூறி யகன்றது. பின் மணிமேகலை அத்தீவில் புத்தபீடிகை யைக்காத்துவரும் தீவதிலகை என்பவளைக்கண்டாள். அவள் அத்தீவிலுள்ள கோமுகி என்னும் பொய்கை யைப் பற்றியும் ஆழ்ந்து கிடக்கும் அட்சய பாத்திரம் ஆண்டுக்கு ஒருமுறை வெளிப்படுவது பற்றியும் அந்த நேரமும் அடுத்தமைபற்றியும் கூறப் பாத்திரமும் தோன்றி அவள் கையகத்ததாயிற்று. அப்பாத்திரத்தி லிட்ட உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் எல்லோ ருடைய பசியையும் போக்கும் என்று கூற, மணிமே கலையும் உலகவர் பசி தணிக்கும் வேட்கை கொண்டு தீவதிலகையிடம் விடைபெற்று, முன்னரே அறிந்த மந்திர ஆற்றலால் வான் வழியாகக் காவிரிப்பூம் பட்டினம் அடைந்து, தாய் மாதவியையும் சுதமதியை யும் கண்டு நிகழ்ந்ததுரைத்து அறவணடிகளைத் தொழச் சென்றாள். சுதமதியும் உடன்செல்ல அடி களைக் கண்டு நிகழ்ந்ததுரைத்து, கோமுகிப் பொய் கையில் அமுதசுரபியை இட்ட ஆபுத்திரன் வரலாற் றினைக் கூறுமாறு வேண்டிக் கொண்டதோடு மாதவி, சுதமதி ஆய இருவர்தம் பழம்பிறப்புச் செய்தியையும் கேட்டாள். புத்த தேவர் உலகில் பிறக்கும் காலத்தில் நிகழ்வனவற்றைக் கூறிப் பசி தீர்த்தல் ஒன்றே தலை யாய அறமென்று கூறி ஆபுத்திரன் வரலாற்றினையும் கூறினார். காசியில் அபஞ்சிகன் என்ற அந்தணனுக்கு வாய்த்த மனைவி சாலி என்பவள் தீய ஒழுக்கமுடைய வளாக இருப்பதைக் கண்ட அந்த அந்தணன் அவ ளைக் கருவுற்ற நிலையில் விலக்க அவள் தான்புரிந்த பாவத்தைப் போக்கக் குமரித்துறையில் நீராடச் சென்றாள். செல்லும் வழியில் குழந்தையை ஈன்று

நடுவழியில் விட்டுவிட்டாள். அந்தக் குழந்தையைப் பசு ஒன்று கண்டு அருளோடு பால் ஊட்டி ஏழுநாள்கள் வளர்த்தது. அவ்வழியே சென்ற இளம்பூதி என்னும் அந்தணன் அவ்வாண் மகவை ஆபுத்திரன் என்று பெயர்சூட்டி வளர்த்தான். ஆபுத்திரன் பசுக்களிடம் பேரன்பு பூண்டவனாதலால் ஓரந்தணன் வீட்டில் யாகத்தில் கொல்லக் கட்டி வைத்திருந்த பசுவை யாரும் அறியாதவாறு கட்டவிழ்த்துப் புறம்போகக் கண்ட அந்தணர்கள் அவனை நன்கு புடைத்தனர். அப்போது அப்பசு அவ்வந்தணருள் ஒருவரைக் குடல் வெளிப்படக் குத்திக் கிழித்து ஓடிவிட்டது. ஆபுத்திரன் பசுவுக்கு ஊறு விளைக்கக் கூடாதென்று வாதிட அவ்வந்தணர்கள் அவனை ஊரினின்றும் விரட்டி விட்டனர். பின் ஆபுத்திரன் தென்மதுரைக்குப் போந்து சிந்தாதேவியின் கோயில் அம்பலத்துத் தங்கிக் கொண்டு அன்றாடம் ஐயமேற்றுத் தானும் உண்டு பிறர்க்கும் வழங்கிவந்தான்.

மதுரையில் வாழ்ந்த சிந்தாதேவி என்ற தெய்வம் எடுக்க எடுக்கக் குறையாது உணவு தரும் அமுதசுரபி என்னும் உண்கலத்தைத் தர அவன் அதுகொண்டு பசித்தோரை அமுதூட்டிப் பேணினான். அதனால், அவனுக்கு அறச்சிறப்பு மிகுவது கண்ட இந்திரன், அவனுக்கு வரங்கொடுக்க வந்ததும் ஆபுத்திரன் அதனை மறுத்ததும் அதுகண்டு சினந்த இந்திரன் உலகில் பசியே இல்லாமற் போகும் வண்ணம் மழை பொழிந்து வளம் பெருக்கினான். பசித்தோர் இன்மையால் ஆபுத்திரன் வேறு நாடு செல்லும் போது மணிபல்லவத் தீவில் தனித்து விடப்பட்டதும் அங்கு அவன் தன் கைகளில் இருந்த அமுதசுரபியைக் கோமுகிப் பொய்கையில் இட்டு உயிர் துறந்தான் என்றும், அந்த அமுதசுரபியே மணிமேகலையின் கையில் வந்துற்றது என்றும் கூறி, ஆபுத்திரன் சாவக மன்னனிடம் வளர்ந்து அரசனாக இருக்கும் செய்தியையும் கூறி அப்பாத்திரத்தின் துணையால் உலகவர் பசியைப் போக்கு மாறும் அவளிடம் கூறினார். மணிமேகலையும் பிக்குணிக்கோலம் பூண்டு அமுதசுரபியோடு வீதிவாய்ப் போந்தாள். அவளை மக்கள் சூழ்ந்து நின்று வியக்க, ஆண்டுப் போந்த யானைத் தீ யென்னும் அடங்காப் பசிநோயுடைய காயசண்டிகை தன் பசியைப் போக்கக் கற்பிற் சிறந்தாளும் வித்தியாதர உலகத்தாளுமாய ஆதிரையிடம் பிச்சை ஏற்று உண்பிக்குமாறு கூறினாள்.

ஆதிரை என்பவளின் கணவன் சாதுவன் என்ற வணிகன் தீய வழியில் தன் பொருள்களை இழந்து மீண்டும் பொருளீட்ட மரக்கல மிவர்ந்து வேற்று நாட்டுக்குப் புகும் போது கலமுடையப் பெற்றான். அவன் கடலில் மிதந்து சென்று நாகர் நாடடைந்தான். ஆதிரை தன் கணவன் இறந்தான்என்று எண்ணித் தீயிற் பாய்ந்து உயர்விடத் துணிந்தபோது அவள் கணவன் உய்த்து மீள்வான்என்று விண்ணொலி பிறந்தது. அது கேட்ட ஆதிரை, கணவன் வருவான் என்ற நம்பிக்கையோடு அறம்பலபுரிந்து வாழ்ந்தாள்.

நாகர்களிடம் அகப்பட்ட சாதுவன் அவர் மொழியில் பேசி அவர்தம் தலைவன் அன்பைப் பெற்று அவன் தந்த பரிசில் பலவற்றோடு ஊர்திரும்பினான். இத்தகைய கற்புடையவள் கையில் ஐயமேற்று ஊட்டுதல் சிறந்தது என்று காயசண்டிகை கூறியாங்குச் செய்தாள். பாத்திரத்திட்ட உணவு பெருக அதனைக் காயசண்டிகை பெற்று உண்டு தன் பசிநோய் தணிந்து அந்த யானைத் தீயென்ற பசிநோய் தனக்குற்ற செய்தியைக் கூறினாள். பின் காயசண்டிகையின் வேண்டுகோளின்படி சக்கரவாளக் கோட்டத்திலுள்ள உலக அறவி என்னுமிடத்திலிருந்துகொண்டு ஆண்டு வருவோர் பசியைப் போக்குமாறு கூறித் தன்னூருக்குப் போய்விடுகின்றாள். மணிமேகலையும் அவ்வாறே செய்தாள்.

மணிமேகலை உலக அறவியில் இருப்பது அறிந்த சித்திராபதி உதயகுமரனிடம் அவளைச் சேர்ப்பதாகக் கூறி மணிமேகலை இருக்குமிடத்தை அவனிடம் கூறி அவளைப் பெற்றுக் கொள்ள அனுப்புகின்றாள். உதயகுமரன் மணிமேகலையைக் கண்டு அவள் பிக்குணிக் கோலம் பூண்ட காரணம் கேட்க அவள் அவனை வணங்கி உள்ளே புகுந்து மாற்றுருவெடுத்து வெளியே போய்விடுகின்றாள். அதனை அறியாத உதயகுமரன் அவளைப் பெறுதற்குச் சம்பாபதித் தெய்வத்தை வேண்டித் தனக்கு அத்தெய்வம் மணிமேகலையைக் கூட்டித் தாராது போனால் உயிர்விடுவதாகப் பாடுகிடந்தான். அப்பொழுது அம்மண்டபத்துத் தூண் ஒன்றில் இருந்த கந்திற்பாவை அவன் அவ்வாறு சூளிடுவது பயனற்றதாகும் என்றது. அது கேட்ட அவன் மணிமேகலையை எவ்வாறேனும் காணும் கருத்தோடு சென்றுவிடுகின்றான். மணிமேகலை தான்பூண்ட காயசண்டிகையின் வடிவத்தை மாற்றாமல் அவ்வடிவிலேயே இருந்து உணவளித்து வந்தாள். ஒரு நாள் அவ்வூர்ச் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ளோர்க்கு உணவளிக்க அங்குள்ளோர் அச்செய்தியை மன்னனுக்குரைத்தனர். அது கேட்டு வியந்த அரசன் அவளை அழைத்துவரப் பணித்தான். காயசண்டிகை வடிவிலிருந்த மணிமேகலை அவ்வடிவிலேயே சென்று தான்பெற்ற அமுதசுரபியின் பெருமையைக் கூறிச் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றினாள்.

மணிமேகலையை மறவாத உதயகுமரன் காயசண்டிகை வடிவில் இருப்பவள் மணிமேகலை என்று அவளைக் காணச் சென்றான். அப்போது காயசண்டி

கையின் கணவன் காஞ்சனன் அவளைத் தேடிக் கொண்டு அங்கு வந்தான். காயசண்டிகை வடிவில் மணிமேகலை இருப்பதை அறியாது அவளே தன் மனைவி என்று அவளோடு உரையாட அவள் அவனை அறியாதவளாதலால் அவனை மதியாது பழம்பிறப் பில் தன்கணவனான உதயகுமரனிடம் பலதிறப்பட்ட அறிவுரையை அன்பு மலியக் கூறினாள். அதுகண்ட காஞ்சனன் உதயகுமரனிடம் காதல்கொண்டதால் தன் மனைவி தன்னை மதிக்கவில்லை என்று பிழை பட உணர்ந்து, சினம்கொண்டு மறைந்திருந்து உதய குமரனை வாளோச்சிக் கொன்று விடுகின்றான். பின் காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலையிடம் சென்றபோது அங்கிருந்த தெய்வம் காயசண்டிகை வடிவத்தில் இருப்பவள் மணிமேகலை என்றும் காய சண்டிகை தன் பசிநோய்நீங்கி ஊர்திரும்பிவிட்டாள் என்றும், சென்ற வழியில் விந்தமலையைக் காக்கும் விந்தாகடிகை என்ற தெய்வத்தால் விழுங்கப்பட்டாள் என்றும் கூறியது. அது கோட்ட காஞ்சனன் தான் ஆராயாது கொன்றமைக்குப் பெரிதும்வருந்தித் தன் னூர் புகுந்தான்.

உதயகுமரன் வெட்டுண்டு இறந்தது கண்ட மணி மேகலை பலவாறு புலம்பி,நொந்து அவனைத் தழுவ முற்பட்டபோது கந்திற்பாவையாக இருந்த தெய்வம் அவளைத் தடுத்து அவள் கணவன் முற்பிறப்பில் திட்டிவிடமென்ற பாம்பாலும் இப்பிறப்பில் காஞ்சன னாலும் கொல்லப் பெற்றதற்குரிய காரணம் முற் பிறப்பில் இராகுலன் என்ற பெயரில் வாழ்ந்து சமை யற்காரன் ஒருவனை வெட்டிக்கொன்ற தீவினையால் பாம்பு கடித்திறந்ததாகவும், அப்பாவத் தொடர்ச்சி யால் இப்பிறப்பில் காஞ்சனனால் வெட்டுண்டு இறந் ததாகவும் கூறிற்று.அதனோடும் நில்லாமல் அவளை அரசன் சிறை செய்வான் என்றும், பின் சிறைவீடு பெற்று மணிபல்லவம் புகுவாள் என்றும், அதன் பின் வஞ்சி புகுவாள் என்றும் அங்குப் பல சமயவாதிகளின் கொள்கைகளைக் கேட்டறிவாள் என்றும் கூறியது. அதுகேட்ட மணிமேகலை கலக்கம் நீங்கியிருந்தாள்.

சக்கரவாளக் கோட்டத்தில் உதயகுமரன் வெட் டுண்ட செய்தியை முனிவர்கள் அரசனிடம் சென்று, பத்தினிப் பெண்டிருக்குத் தீங்கு செய்வோர் ஒறுக்கப் பெறுவர் என்று பொதுவாகக் கூறஅரசன் அவ்வாறு ஒரு நிகழ்ச்சி தன்னுடைய நாட்டில் நடந்ததுண்டோ என்று கேட்க அவர்கள் உதயகுமரனுக்கு நிகழ்ந்த செய்தியைக் கூறினர். அது கேட்ட அரசன், மகன் இறந்ததற்குக் கையாறுகொள்ளாது தன்குல முன்னை யோர் ஆட்சி முறையை நினைவுகூர்ந்து மகனுக்கு இறு திக் கடனாற்றினான். பின் மணிமேகலையையும் சிறை செய்தான். இச்செய்தியனைத்தும் கேட்டறிந்த அர சமாதேவி மணிமேகலையின் மீதுகடுஞ்சினங்கொண்டு அவளை வஞ்சித்துக் கொல்லக்கருதி அவளைச் சிறை வீடுசெய்து தன் அந்தப்புரத்தில் இருக்கச்செய்து அவ ளுக்குப் பல தீங்குகளைச் செய்தாள். மணிமேகலை முன்னமே கற்றிருந்த மந்திர வலிமையால் துன்ப மின்றி உய்ந்ததால் அதுகண்ட அரசமாதேவி அஞ்சி மணிமேகலையை வணங்கிப் பிழை பொறுக்க வேண்ட, மணிமேகலையும் தனக்கு நிகழ்ந்த செய்தி களைக் கூறினாள்.

மணிமேகலை சிறைப்பட்டது அறிந்த சித்திரா பதி அரச மாதேவியிடம் போந்து மணிமேகலையும் மாதவியும் குலத்தொழில் புரியாது துறந்தது குறித்து ஊரவர் பழிமொழிவதையும் மணிமேகலையால் இளவரசன் மாண்டதோடன்றி இந்நகரத்திற்கு அவளால் துன்பம் சூழப்போவதையும் கூறியதோடு சாரணன் ஒருவன் அவளிடம் இந்திரவிழா மறக்கப் பெற்றதால் நகர் அழியும் என்று கூறியதையும் மணி மேகலா தெய்வம் சினங்கொண்டு நகருக்குத் தீங்கு செய்யுமென்பதையும் கூறி மணிமேகலையைத் தன்னி டம் ஒப்படைக்குமாறு வேண்டினாள். மணிமேகலை யின் பெருமையை நன்கறிந்த அரசமாதேவி அவளு டன் அனுப்ப மறுத்தபோது மாதவி அறவண அடிக ளோடு அங்கு வந்தாள். அடிகள் அரசிக்குப் பல அறி வுரைகூறினார். மணிமேகலை,ஆபுத்திரன் நாடடைந்து அவனுடன் மணிபல்லவம் சென்று அங்குள்ள புத்த பீடிகையை வணங்கினாள். அப்பொழுது தீவதிலகை என்ற தெய்வம் தோன்றி ஆபுத்திரன் வரலாற்றோடு காவிரிப் பூம்பட்டினம் கடல்கொண்ட செய்தியையும் கூறக் கேட்டு அங்கிருந்து வஞ்சிமாநகர் புகுந்தாள். வஞ்சியில் கோவலன் கண்ணகி என்ற இருவருக்கும் அமைக்கப் பெற்றிருந்த கோயிலுக்குள் சென்று அவர்களை வழிபட்டு நின்றாள். அவளுக்குக் கண்ண கிக் கடவுள் காட்சி தந்து தனக்குற்றது கூறி அற வுரை பல பகரக் கேட்டாள்.

வஞ்சியில் முனிவர் உருக்கொண்டு மணிமேகலை சமயவாதிகள் பலரைக்கண்டு அவரவர் கொண்ட சமயக் கொள்கைகளைக் கூறக் கேட்டாள். பின் அங்குள்ள தவப்பள்ளியில் துறவியாய் இருந்த கோவ லன் தந்தை மாசாத்துவானைக் கண்டு வணங்கி விட்டுக் காஞ்சிமாநகர் புகுந்தாள். அங்குத் தன் அமுதசுரபி கொண்டு பசிப்பிணியகற்றினாள். மாத வியும் சுதமதியும் அங்குவர மணிமேகலை தன் உண்மை உருவில் அவர்களோடு அறவண அடி களைக் கண்டு வணங்கினாள். அவர் அவளுக்குக் காவிரிப்பூம்பட்டினம் அழிந்த காரணத்தைக் கூறிப் புத்ததருமத்தினை விரிவாகக் கூறக்கேட்டுத் தெளிந் தாள். பின் அத்தெளிவால் தவநிலையில் உறுதி பெற்ற அவளுக்கு அறவணவடிகள் உலகத் துன்பத் திற்கும் பிறப்புக்கும் காரணமாக உள்ள காமம்,

வெகுளி, மயக்கம் என்ற மூன்றையும் விளக்கிப் பிறப்புத் துன்பம் அறுமாறு நோற்கப் பணித்தார். மணிமேகலையும் அவ்வாறே நோற்றாள். கு.தி.

**மணிலா உடன்படிக்கை,** பிலிப்பைன்சு நாட்டின் தலைநகரான மணிலாவில் 1954-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கையெழுத்தாயிற்று. உருசியாவின் அரசியல் செல்வாக்கைக் கட்டுப்படுத்த அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையில் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரண் என இதனைக் கூறுவர். இதன் உறுப்பு நாடுகளாக ஆசுத்திரேலியா, பிரான்சு, நியூசிலாந்து, பாகிசுத்தான், பிலிப்பைன்சு, தாய்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவை இருந்தன. தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை எனவும் மணிலா உடன்படிக்கை குறிப்பிடப்படுகிறது. இதை வல்லரசுக் கூட்டணி என்றும் கூறலாம். இக் கூட்டணியைச் சார்ந்த எந்தவொரு நாடேனும் தாக்கப்பட்டால் ஏனைய நாடுகள் அதற்கு உதவ வேண்டும் என்று தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பின் 4-ஆம் பிரிவு தெளிவாகக் கூறுகிறது. மேலும், கூட்டணியைச் சார்ந்த எந்தவொரு நாட்டிற்கேனும் அச்சம் ஏற்படுமாயின், கூட்டணி நாடுகள் கலந்து, அதற்கு உதவ வேண்டும் என்னும் விதியும் இதன் வழி உருவாகியது. அயல் நாடுகளின் ஆக்கிரமிப்புத் தாக்குதல்களிலிருந்தும் உள்நாட்டிலேயே ஏற்படும் அரசினைக் கவிழ்க்கும் சதிகளிலிருந்தும் நாடுகளைக் காக்க இவ்வமைப்பு உதவி செய்தது.

வட அட்லாண்டிக்கு உடன்படிக்கை அமைப்பினைப் போல் தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பு இருந்தாலும், இது அதனை விட வலுக் குறைந்தது.

இவ்வமைப்பின் தலைமையகம் தாய்லாந்து நாட்டின் தலைநகரமான பாங்காக்கு ஆகும். இதன் நிருவாகக் குழுவாக உறுப்பு நாடுகளின் அமைச்சர் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. வெளியுறவு அமைச்சர்கள் அல்லது அவர்களின் துணைவர்கள் இக்குழுக் கூட்டங்களில் பங்கேற்றனர். இக்குழுக்கூட்டம் ஆண்டிற்கொருமுறை கூடியது.

இவ்வமைப்பின் செல்வாக்கு 1966-ஆம் ஆண்டளவில் சீர்குலையத் தொடங்கியது. அதற்குக் காரணம் வியட்நாம் போரே ஆகும். பாகிசுத்தானும், பிரான்சும் வியட்நாமில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் குறுக்கீட்டை ஏற்றுக் கொள்ளவில்லை; எதிர்த்தன.

இங்கிலாந்தும் ஆசியாவிலிருந்து தன்படையைத் திரும்பப் பெற்றுக். கொண்டது. மேலும் கெடுபிடி நெருக்கடி நிலையும் தளரலாயிற்று. பாகிசுத்தான் 1972 – ஆம் ஆண்டில் தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பிலிருந்து விலகிக் கொண்டது. இறுதியாக இவ்வமைப்பு 1977 – ஆம் ஆண்டு சூன் மாதம் 30-ஆம் நாள் கலைக்கப்பட்டது. எனினும், பெயரளவில் இது இன்னும் செயற்படுவதாகக் கருதப்படுகிறது. போர்த் தொடர்பற்ற நிகழ்ச்சிகள் பற்றி நாடுகள் தமக்குள் பேசித் தீர்த்துக் கொள்ளும் அமைப்பாக இன்றும் இது தொடர்கிறது. இரா.அ.

**மத்த விலாசப் பிரகசனம்** என்பது மகேந்திர வர்ம பல்லவப்பெருமன்னரால் வடமொழியில் எழுதப்பட்ட நூல். மகேந்திரவர்மன் கி.பி. 600 முதல் 630 வரை அரசாண்ட பல்லவப் பேரரசர். இவருக்குப் பல பட்டப் பெயர்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று 'மத்த விலாசா' என்பதாகும். மத்த விலாசப் பிரகசனம் என்று வடமொழியில் எழுதப் பெற்றுள்ள இந்நூல் புத்தபிட்சுகளையும், கபாலிகர்கள், பாசுபதர்கள் போன்ற சைவசமய இரவலர்களையும் எள்ளி நகையாடும் நையாண்டி நூல் என்றால் மிகையாகாது. புத்த, சமண, பாசுபத, காபாலிக பிட்சுகள் பல்லவர் தலைநகரான காஞ்சியில் நிறைந்து காணப்பட்டனர் என்றும், அவர்களின் சமயங்கள் இழி நிலைக்குச் சென்றிருந்தன என்றும் மத்தவிலாசப் பிரகசனம் குறிப்பிடுகின்றது. இந்நூல் பல்லவர் வரலாற்றையும், அக்காலத்தில் நிலவிய சமயச்சடங்குகளின் இழிநிலையையும், சமூக ஊழலையும் அறிய உதவும் மூலச்சான்றுகளுள் ஒன்றாகும். 'மத்த விலாசப் பிரகசனம்' முதலாம் மகேந்திரவர்மன் மாபெரும் அரசர் என்றும் வீரத்தில் இந்திரனுக்குச் சமமானவன் என்றும் குறிப்பிட்டுள்ளது. பல்லவர்களின் நீதிமன்றங்கள் காஞ்சிமாநகரில் இருந்தன என்பதையும், அவை அதிகரணங்கள் (Adhikarana) எனப் பட்டன என்பதையும் இந்நூல் கூறுகிறது.

'மத்த விலாசப் பிரகசனம்' பல்லவர் காலத்தில் உருவாக்கப்பெற்றிருந்த மடங்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. காபாலிகர், பாசுபதர் போன்ற சைவசமய உட்பிரிவுகளைச் சார்ந்தவர்கள் சிவாலயங்களில் தங்கி உணவுண்டு வாழ்ந்தவர்கள். மத்த விலாசப் பிரகசனம் காபாலிகர்கள் ஏகாம்பரேசுவர ஆலயத்தைச் சார்ந்த மடத்தில் தங்கி வாழ்ந்தனர் என்பதைக் கூறுகிறது. மேலும், காஞ்சியில் இருந்த விகாரங்களுக்குப் புத்த சமய வணிகர்கள் நிறைய நன்கொடைகளை வழங்கினர் என்றும் பல்லவப் பெருமன்னர்களும் விகாரங்களைக்கட்ட பொருள் கொடுத்து ஆதரவு நல்கினர் என்றும், அத்தகைய விகாரங்களுள் ஒன்று 'இராசகிருகம்' எனறும், அவ் விகாரம் செல்வச் செழிப்பு மிக்கது என்றும், அதற்கு நன்கொடை வழங்கியவர் தனராசர் என்னும் பெயர் கொண்ட காஞ்சியைச் சார்ந்த புத்த சமய வணிகர்

என்றும் 'மத்த விலாசப் பிரகசனம்' கூறியுள்ளது. பல்லவப் பெருமன்னர்கள் கல்வி கேள்விகளில் தலைசிறந்து விளங்கினர் என்பதையும், வடமொழியில் கவிதையியற்றும் புலமை பெற்றிருந்தார்கள் என்பதையும் இதனால் அறியமுடிகிறது. சமூக வாழ்வில் புத்த பிட்சுகள் பல விவகாரங்களைக் கொண்டிருந்தார்கள். என்பதையும், அவர்கள் மயக்கும் கள்ளையும், இறைச்சியையும் உண்டு நெறிகெட்ட முறையில் வாழ்ந்தனர் என்பதையும், மன்னர்களும் மக்களும் இத்தகைய இழிநிலையை எள்ளி நகையாடினர் என்பதையும் இந்நூல் சுட்டிக் காட்டுகிறது. காஞ்சியில் கட்டப்பெற்றிருந்த புத்த சமய மடத்தை 'இராச விகாரம்' என்று புத்த சமயத் துறவியர் குறிப்பிடுகிறார். பல்லவ மன்னர்கள் கொடுத்த மானியத்தால் அவ்விகாரம் கட்டப்பட்டதென்றும், பல்லவப் பெருமன்னர்கள் புத்த சமயத்தினரைப் பொறுமையுடன் நடத்தினர் என்றும் காஞ்சியிலும் அதனைச் சுற்றிலும் இருந்த பல புத்த சமய மடாலயங்களுள் முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் இராச விகாரம் தலைமைஇடத்தைப் பெற்றிருந்ததென்றும் மத்த விலாசப் பிரகசனம் விளக்குகிறது. பிரகசனம் என்பது பரிகாசத்திற்குரியது என்று பொருள்படும். இரா.அ.

மத்தி: இவன் சங்க காலக் குறுநில மன்னன். மத்தியென்பதே இவன் இயற்பெயர். 'பரதவர் கோமான் பல்வேல் மத்தி' (அகம்.226) எனப் பரணரால் குறிக்கப் பெறுவது கொண்டு இவனை, நெய்தல் நிலத்து மக்களான பரதவக் குடியினர்க்கு மன்னன் எனத் தெளியலாம். 'பல்வேல் மத்தி கழாஅர்' (அகம். 6,226) எனவும், 'கைவண் மத்தி கழாஅர்' (ஐங்.61) எனவும் வந்துள்ளமையால் இவனூர் கழார் என்பது விளங்கும். 'பல்வேல் மத்தி கழாஅர் முன்றுறை ... விடியல் வந்த பெருநீர்க் காவிரி' (அகம்.226) என்பதனால் இவனுடைய கழார், காவிரிக் கரையில் அமைந்திருந்தமையும் அறியப்படும். காவிரி கடலொடு கலக்குமிடம் காவிரிப்பூம்பட்டினமான புகாராதலின், இப்பரதவர் கோமான் மத்தியின் கழாஅர் அப்புகாரினும் உள்ளடங்கி நெய்தல் சார்போடே நிலவியிருத்தல் வேண்டும். புகார், கழார் என்ற பெயர்களின் ஒற்றுமையும் இவ்வுண்மையை உணர்த்தும்.

மத்தியின் கழார் நீர்வள நிலவளங்களாற் பொலிந்து, மகளிர் இளமை நலத்திற்கு உவமையாகப் பரணராலும், ஓரம்போகியாராலும் காட்டப்படுகின்றது. தீப்போலும் செந்தாமரைப் பூக்களையுடைய நீர் நிறைந்த வயலில், வள்ளைக் கொடிகளை உழக்கி வாளை மீன்களை மேய்ந்த நீர்நாய், அருகிலேயுள்ள பழைய பிரப்பந்தூறுகளில் தங்கியிருக்கும் இடங்களையுடையது என்றும் (அகம்.6), அகன்றஊரிடத்தே தழையுடையினையும் குறுந்தொடிகளையும் அணிந்த மகளிர், புனலிடத்தே விளையாடி வெறுத்தால், பைஞ்சாய்க் கோரைகளைக் கோதி, கழனியில் மீன்களை மேயும் வெண்ணாரைகளை ஓட்டி விளையாடும் இடங்களையுடையது என்றும் (அகம். 226), அவ்வூரைப் புனைவர் பரணர். அதன் துறை முன்னிடத்தே வளர்ந்து நிற்கும் நெடிய வெண்மருத மரங்களோடே வஞ்சி மரங்களும் வேர்பறிந்து சாயுமாறு காவிரியிலே பெருவெள்ளம் வருமென்றும் (அகம். 226) அவர் குறிப்பிடுவர். 'நறுமணமுடைய வடுக்கள் காய்த்த மாமரத்திலிருந்து பழுத்து உதிரும் தீம்பழங்கள் நெடுநீர்ப் பொய்கையிலே துடுமென்று விழுகின்ற வளமுடைய கழார்' (ஐங்.61) என்று ஓரம் போகியார் புனைவர்.

வலிய வில்லையேந்திய, வலிய தோள்களையுடைய பல்வேல் மத்தி என்று அடையோடே குறிக்கப் பெறுதலால் இம்மத்தியின் விற்படை, வேற்படைச் சிறப்பும் வெற்றிச் சிறப்பும் தோளாற்றலும் விளங்கும். ஒருபோது, யானைகளைப் பிடிக்கும் பூசலுக்கு அழைப்பினையேற்று வருதலை அறியாத எழினியென்பான் வாராதொழிந்தமையால், பெருஞ்சின முற்ற வேந்தன் ஏவலிற்சென்று இம்மத்தி, நெடுந்தொலைவிலுள்ள அவன் நாட்டின் கண்ணே தன் தூசிப் படையிலே அகப்பட்ட அவ்வெழினியின் பல்லை யெறிந்து கொணர்ந்து கதவிலே பதித்தமைத்த வெண்மணி வாயில் என்னும் தன் கடல் துறைமுகத்தே அவ்வெற்றியைக் குறித்து ஒரு கற்றூணும் நாட்டினான் என்ற செய்தியை மாமூலனார் குறிப்பிடுவர் (அகம்.211). அதனால், இவன் தன் வேந்தனொடு கொண்டிருந்த அணுக்கத் தொடர்பும், அவன் ஏவலுக்கேற்புடைய இவன் ஆற்றலமைதியும் விளங்கும். 'கைவண் மத்தி' எனவரும் ஓரம்போகியார் குறிப்பினால் இவன் வள்ளன்மையும் விளங்கும். வ.கு.

**மத்திய அரசுத் தலைமை வழக்கறிஞர்:** மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் பதவி இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட பதவி ஆகும். இவர் இந்திய அரசாங்கத்தின் முதற் சட்ட அதிகாரி ஆகிறார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 76-ஆம் பிரிவின்படி இவர் தம் கடமைகள் இரு திறத்தில் அமையும். அவை யாவன: 1) குடியரசுத் தலைவரால் இவருக்கு அனுப்பப்படுகின்ற சட்டஞ்சார்ந்த பொருண்மைகளில் அவருக்கு அறிவுரை (Advise) வழங்குதலும் குடியரசுத் தலைவரால் கொடுக்கப்பட்ட சட்டஞ் சார்ந்த பணிகளை நடத்துதலும் ஆகும். 2) அரசமைப்புச் சட்டத்தின்கீழும் ஏனைய அமுலில் இருக்கின்ற சட்டத்

தின் கீழும் இவருக்கு இடப்பட்ட பணிகளை இவர் நிறைவேற்றுவது.

இவர் மந்திரி சபையில் ஒரு அங்கத்தினர் அல்லர் என்ற போதிலும் இவருக்கு நாடாளுமன்றத்தின் அவைகளிலும், நாடாளுமன்றக் குழுக்களிலும் பேசுகின்ற உரிமை உண்டு. ஆனால், இவர் ஒட்டெடுப்பில் கலந்து கொள்ள முடியாது. இவரது பணியின் நிமித்தமாக இந்திய எல்லைக்குள் இருக்கும் எந்த ஒரு நீதிமன்றத்திலும் இவர் தோன்றி வாதிடலாம்.

இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் பதவி குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறது. இவ்வாறு நியமனம் செய்யப்படுகின்ற ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமனம் செய்யப்படத் தகுந்த தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். இவர் குடியரசுத் தலைவர் விரும்பும் வரை பதவியில் நீடிப்பார். இவரது ஊதியம் குடியரசுத் தலைவரால் அவ்வப்போது முடிவு செய்யப்படும். இப்போது இப்பதவிக்கான கட்டணம் (Retainer fee) உரூ. 4000 ஆகமுடிவு செய்யப்பட்டிருக்கிறது. ம.கா.

**மத்திய ஆசியா,** என்னும் சொற்றொடர் இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் இருந்த போதிலும், நிலஅமைப்பு முறையில் நோக்கும் போது இதைத் தெளிவாக வரையறுத்துக் கூற இயலாது. பொதுவாக, திபெத்து, சீனாவின் தன்னாட்சிப் பகுதிகளில் சில பகுதிகள், மங்கோலியாவின் சில பகுதிகள், தெற்கு மத்திய சைபீரியா முதலிய நாடுகள் மத்திய ஆசியாவில் அடங்கும். இதில் பெரும்பகுதி பாலைவனமாகவும் மலைவெளியாகவும் உள்ளது. உலகின் கூரை எனப்படும் பாமீர் பீடபூமி இதில் உள்ளது. சில சோவியத்து உருசிய சமஉடைமைக் குடியரசுகளும் இதில் அடங்கும். தெ.பா.

**மத்திய கிழக்கு,** என்பது தென்மேற்கு ஆசியாவிலும் வட கிழக்கு ஆப்பிரிக்காவிலும் அமைந்துள்ளதொரு புவியியல் பிரிவு. இங்குப் பெரும்பாலும் இசுலாமியச் சமயத்தவர் வாழ்கிறார்கள். இதனை ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களையும் இணைக்கும் பாலமாகக் கருதுவர். மத்திய கிழக்கு (Middle East) என்னும் போது அது கீழ்க்காணும் நாடுகளைக் கொண்ட புவியியல் பிரிவினைக் குறிக்கும். அவை 1) துருக்கி – ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமுள்ள துருக்கி நாட்டின் பகுதிகள், 2) ஈரான், 3) ஈராக்கு, 4) இசுரேல், 5) சோர்டான் (Jordan), 6) இலெபனான் (Lebanon), 7) சிரியா, 8) சவூதி அரேபியா, 9) ஏமன், 10) தென் ஏமன், 11) மசுகட்டு (Muscat), 12) ஓமன் (Oman), 13) உடன் படிக்கையால் உருவாக்கப்பட்ட ஓமன் (Trucial Oman), 14) கட்டார் (Qatar), 15) குவையத்து (Kuwait), 16) பகரீன் (Bahrain), 17) எகிப்து, 18) சூடான் ஆகிய நாடுகளாகும். இவற்றைத் தவிர ஐரோப்பாவில் கிரீசு (Greece), பால்கன் நாடுகள், சைப்ரசு, கிரிமியா முதலிய பகுதிகளையும், ஆசியாவில், ஆப்கானிசுத்தானம், மேற்குப் பாகிசுத்தான், காகசசுப்பகுதி, துருக்கிசுத்தானம், ஆகியவற்றையும், ஆப்பிரிக்காவில் மொராக்கோ, அல்சீரியா, துனிசியா இலிபியா, எத்தியோப்பியா, சோமாலியா ஆகியவற்றைச் சிற்சில சமயங்களில் மத்திய கிழக்கு என்று கூறுவோருளர். எனினும், புவியியல், பண்பாடு முதலிய ஏனைய வேறுபாடுகளினால் மேற்கூறிய ஐரோப்பிய, ஆசியா, ஆப்பிரிக்கப் பகுதிகள், மத்திய கிழக்கு என்னும் பகுதியில் அடங்கமாட்டா என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

முற்காலத்தில் இதனை அண்மைக் கிழக்கு (Near East) என்று பெயரிட்டனர். இத்தொடர் குறிப்பாக நடு நிலக் கடலையொட்டியிருந்த பகுதிகளைக் குறித்தது. இரண்டாம் உலகப்போரின் போது மத்திய கிழக்கு என்னும் தொடரை ஆங்கிலேயப் படையினர் வெகுவாகப் பயன்படுத்தினர். அதன் விளைவாக இதன் பண்டைப் பெயர் மறக்கடிக்கப்பட்டுவிட்டது.

மத்திய கிழக்குப் பகுதி ஏறத்தாழ 80 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. இப்பகுதியில் சற்றேறக் குறைய 15 கோடிக்கும் மிகுதியான மக்கள் வாழ்கிறார்கள். மத்திய கிழக்கில் மக்கள் தொகையின் அடர்த்தி சீராக இல்லாமல் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டுள்ளது.

**மத்திய கிழக்கு** மக்கள் தொகை நைல் ஆற்றுக் கழிமுகத்தில் மிக நெருக்கமாக உள்ளது. ஆனால் பாலைவனங்கள் சூழ்ந்த எகிப்து, அரேபியா, ஏமன், கிழக்குச் சிரியா, மேற்கு ஈராக்கு, முதலிய பகுதிகளில் மக்கள் தொகை மிகக் குறைவாக அமைந்துள்ளது.

மத்திய கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்கள் தொகையில் 90 முதல் 93 விழுக்காடு வரை முசுலிம்கள், 6 விழுக்காடு மக்கள் கிறித்தவர். எஞ்சியவர்கள் யூதர்களும் ஏனைய இனத்தவர்களுமாவர். இப்பகுதியின் பெரும் நகரம் எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோ (Cairo) வாகும். தெகரான் (ஈரான்), அலாக்சாந்திரியா (எகிப்து), இசுதான்புல் (துருக்கி), பாக்தாது (ஈராக்கு), பெய்ரூட்டு (இலெபனான்), அங்காரா (துருக்கி) தமாசுகசு (Damascus) (சிரியா), காலப்போ (சிரியா), தெல்அவீவு இசுரேல், தப்ரீசு



பாலைவனம்



இசுதான்புல்

(Tabriz) (ஈரான்), இசுமர் அல்லது இசுமிர்னா (துருக்கி), இசுபகான் (ஈரான்) முதலியவை ஏனைய நகரங்களாகும்.

மத்திய கிழக்கில் அரசியல் அமைப்பின் அடிப் படையில் பார்த்தால் கீழ்க்காணும் பிரிவுகளைக் காணலாம். இலெபனானும், இசுரேலும், குடியரசு

நாடுகள். சோர்டானும், ஈரானும் அரசியலமைப்புக் குட்பட்ட முடியாட்சி நாடுகள். ஈராக்கு, சூடான், துருக்கி, சிரியா, எகிப்து, ஏமன், என்பவை பெயரள வுக்குக் குடியரசு நாடுகள். எனினும், அவை படைக் கட்டுபாட்டுக்குள் அடங்கியவை. சவூதி அரேபியாவும், மசுகட்டு – ஓமன் சுல்தானியப் பகுதிகளும் சமயச் சட்ட திட்டங்களின் ஆட்சிக்குட்பட்டவை. தென் ஓமன் ஒருவகையான குடியரசு நாடு. பாரசீக வளை குடாவில் உள்ள சில பகுதிகளைச் சேக்குகள் ஆட்சி நடத்துகின்றனர். குவையத்து சுதந்தர நாடு, பக்ரீன், கட்டார், உடன்படிக்கையால் உருவாக்கப் பெற்ற ஓமன் போன்றவை ஒன்றிணைந்துள்ளன. காசாப் பகுதி (Gaza Strip) இப்போது இசுரேலின் ஆதிக்கத் தில் உள்ளது.

இது மூன்று கண்டங்களை இணைக்கும் பாலம் போன்று அமைந்துள்ளமையால் மைய கிழக்கு அரசி யலில் சீரிய இடத்தைப் பெற்றுள்ளது. மத்தியதரைக் கடல், செங்கடல், கருங்கடல், காசுபியன் கடல், பாரசீக வளைகுடா, இந்தியப் பெருங்கடல் ஆகிய கடல்களின் அலைகள் இப்பகுதியை அலம்பிக் கொண் டுள்ளன என்பது இதன் சிறப்புகளுள் ஒன்றாகும். அண் மைக்காலத்தில் இங்குக் கிடைத்து வரும் பாறை எண் ணெய்யும், வானவூர்திப் போக்குவரத்துச் சாதனங் களும் இதன் சிறப்பினை மேலும்கூட்டியுள்ளன இங் குக் கிடைக்கும் பாறை எண்ணெய்ப்பொருள்கள் உலக இருப்பில் மூன்றில் இரண்டு பங்கிருக்கக் கூடும் என்று கணக்கிடப்பட்டு உள்ளது. இப்பாறை எண்ணெய்ப் பொருட்கள் மேற்கு ஐரோப்பியத் தொழில் வளர்ச் சிக்குப் பெரிதும் உதவிவருகின்றன. ஆசிய, ஆப பிரிக்க நாடுகளின் வளர்ச்சிக்கும் இவை உதவக்கூடும்.

இங்கு வாழும் மக்களில் பெரும்பாலோர் முசுலிம் களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். முசுலிம் மக்களைச் சமய அடிப்படையில் இணைக்க இந்நாடு கள் பெருந்தொகைகளை வாரி வழங்குகின்றன.


மேலும், இங்கு நிலவும் சிலவகைப் பொதுத்தன்மை கள் குறிப்பிடத்தக்கவை. அவை (1) கடுங்கோடை யைக் கொண்ட தட்பவெப்பநிலை, (2) விரிவாக்கப் படும் குடும்ப அமைப்பு முறை, (3) நாடோடி மக்கள் ஆங்காங்கே காணப்படுதல், (4) சமூக, பொருளாதார அமைப்பில் இக்காலத்திலும் குறைந்த வாழ்க்கைத் தரம் உள்ளமை, (5) மக்களில் பெரும்பாலோர் இன் றும் வேளாண்மையைச் சார்ந்து நிற்றல், (6) தொழிற் சாலைகள் படிப்படியாக முன்னேறும் சூழல், (7) மக் களை வழி நடத்தும் தலைமை நகரப் புறமக்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளமை, (8) படிப்படியாகப் பெருகி வளரும் கல்வித்தரம், (9) ஐரோப்பிய நாடு களின் பிடிப்புக்குள் அகப்பட்டுள்ள நிலைமை, (10) விடாப்பிடியான தேசியத்திற்கு ஆட்பட்டுள்ளமை ஆகி யவை. இப்பகுதியில்தான் மிகத் தொன்மையான காலத்தில் வேளாண்மை செய்யும் முறை உருவாகி யதாகக் கருதுவர். உலோகப்பொருட்கள் முதன் முதலில் இங்குத் தான் செய்யப்பட்டன. மனித இனத் திற்குப் பயன்படும் விலங்குகள் முதன் முதலாகப் பழக்கப்பட்டு வீட்டு விலங்குகளாக்கப் பட்டமையும், மட்பாண்டங்கள் வனையும் சக்கரங்கள் செய்யப் பட்டமையும், செடி, கொடிகள் முதலியன பயிராக்கப் பட்டதும் இங்குத்தான். எழுத்து வடிவம் உருவாக்கப் பட்டதும், இலக்கியங்கள் உருவானதும், கவின் கலை களில் ஏற்பட்ட சிறப்பும் இங்குத்தான். நிறைவாகக் கூற வேண்டுமெனில் பல சமயங்கள் தோன்றியதும் இங்குத்தான். யூடோ மதம் (Judaism), கிறித்தவம், இசுலாம் முதலிய சமயங்களின் பிறப்பிடமும் மத்திய கிழக்கேயாகும். எனவே, மத்திய கிழக்கைச் சம யப்பண்பாட்டு மையம் என்றால் மிகையாகாது.

இக்காலத்தில் மத்திய கிழக்கு என்னும் சொற் றொடர் கைவிடப்பட்டு, மேற்கு ஆசியா (West Asia) என்னும் தொடர் பயன்படுத்தப்படுகிறது. இரா.அ.

**மத்தியதரைக்கடல்:** உலகத்தின் உட்பகுதிக் கடல்களில் மிகவும் பெரியது மத்தியதரைக்கடல் (Mediterranean Sea). இதன் பரப்பு ஏறத்தாழ 2,49,935 சதுர கி.மீ. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்கள் இக்கடலைச் சூழ்ந்துள்ளன. இதன் நீளம் 3,860 கி.மீ.; அகலம் 1610 கி.மீ.; ஆழம் 4405 மீ. இந்த அளவு ஆழம், கிரீசு நாட்டின் மடபன் (Matapan) முனைக்கு அண்மையில் காணப்படும். சிப்ரால்டர் (Gibraltar) நீர் இணைப்பு இக்கடலை அட்லாண்டிக்கு மாக்கடலுடன் சேர்க்கிறது. டார்ட னெல்லசு (Dardanelles) கருங் கடலுடன் இதை இணைக்கின்றது. செங்கடலும், மத்தியதரைக் கடலும், சூயசுக் கால்வாயின் மூலம் இணைக்கப்படுகின்றன. மத்தியதரைக் கடலில் நான்கு பகுதிகள் உள. அவை திர்ரேனியன் (Tyrrhenian) பகுதி, ஆட்ரியாடிக்குத் (Adriatic) கடற்பகுதி, அயோனியக் கடற்பகுதி, ஏசியன் (Aegean) கடற்பகுதி ஆகியனவாம். சிசிலித் தீவுக்கும், பான் முனைக்கும் (Cape Bon) இடையில் உள்ள மேலீடான பகுதி, மத்தியதரைக் கடலை இரண்டு நீள்வட்டப் பள்ளத்தாக்குகளாகப் பிரிக் கின்றது. இக்கடல் அட்லாண்டிக்குமாக்கடலை விட மிகுதியான உப்புத்தன்மை கொண்டுள்ளது. அலைகள் கொந்தளிப்பும் அட்லாண்டிக்குக்கடல் போல் அதிக மில்லை. மத்தியதரைக்கடற்கரைகள் மலைப்பாங் கானவை. நிலநடுக்கமும், எரிமலை வெடிப்பும் அடிக்கடி இங்கு நிகழ்கின்றன.

மிகப் பழைமையான உலக நாகரிகங்களிற் சில மத்தியதரைக்கடலைச் சுற்றி ஏற்பட்டிருந்தன. பண்





மத்தியதரைக் கடல்

டைக் காலத்தில் பொனீசியர் (Phoenicians) இக்கடல் வழியாக வாணிகம் செய்யத் தொடங்கினர். பிறகு, கார்த்தேசு (Carthage), கிரீசு, சிசிலி, உரோம் ஆகிய நாடுகளுக்கிடையே இக்கடல் வாணிக ஆதிக்கத் திற்காகப் போட்டிகளும் போர்களும் ஏற்பட்டன. உரோமப் பேரரசு, இக்கடலைத் தன்கு உட்பட்ட ஒரு ஏரியாகவே பயன்படுத்தி வந்தது. பிறகு, இப்பகு தியில் பைசாண்டியப் பேரரசும், அரேபியரும் ஆளுமை செலுத்தினர். ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்ல கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் புது வழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அக்காலம்வரை மத்திய தரைக் கடல் வழியாகவே கீழ்நாட்டுப் பொருட்கள் ஐரோப்பாவுக்குச் சென்றன. சூயசு கால்வாய், கி.பி. 1869-ஆம் ஆண்டில் திறந்துவிடப் பட்ட பிறகு, கீழ் நாட்டு வாணிகம் மீண்டும் மத்தியதரைக் கடல் மூலம் சிறப்புறலாயிற்று. இரண்டாம் உலகப்போர்க் காலத்திலிருந்து, மத்தியதரைக் கடல் பகுதி அமெரிக் காவுக்கும் உருசியாவுக்கும் போர்த்திற நடவடிக்கை களுக்கு மிகவும் பயனுள்ளதாக வளர்ச்சி அடைந் துள்ளது. தெ.பா.

**மத்திய பிரதேசம்** இந்திய மாநிலங்களுள் ஒன்று. இந்தியாவின் நடுப்பகுதியில் உள்ள இம் மாநிலம், 1956-ஆம் ஆண்டு இந்திய மாநிலப் புனர மைப்புச் சட்டப்படி உருவாக்கப்பட்டது. இது இதே பெயரைப் பெற்ற முந்திய மாநிலத்தின் 17 இந்தி மாவட்டங்களையும், முன்னாளைய மத்திய இந்திய மாகாணத்தையும் (சுனேல்–Sunel–நீங்கலாக), முன் னாளைய போபால் சிற்றரசுப் பகுதியையும், விந்தியப் பிரதேசத்தையும் கோட்டா மாவட்டத்தின் சிரோஞ்சு (Sironj) பிரிவையும் தன்னுட் கொண்டுள்ளது. இதன் பரப்பு 4,42,841 ச.கி.மீ. இதற்கு வடக்கில் இராசசுத் தான், உத்தரபிரதேச மாநிலங்களும், கிழக்கில்பீகார், ஒரிசா மாநிலங்களும், தெற்கில் ஆந்திரப் பிரதேசம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களும், மேற்கில் குச ராத்தும் எல்லைகளாக உள்ளன. பரப்பில் இந்திய மாநிலங்கள் யாவற்றிலும் இதுவே மிகவும் பெரியது. மக்கள்தொகையைப் பொறுத்த வரை, இந்திய மாநிலங்களில் இது 6-ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. இதன் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப் படி 5,21,38,467. இதன் தலைநகர் போபால். இங்குள்ள முக்கிய நகரங்கள் துர்க்-பிலாய் நகர், குவாலியர், இந்தோர், சபல்பூர், இராய்ப்பூர், உச்ச யினி, சாகர், பிலாசுபூர், இரத்திலம், பர்கான்பூர் காண்டுவா, இரேவா முதலியனவாம். இம்மாநிலத் தில் போதுமான மழை இருந்து வருவதாலும் மண் வளமானதாக இருப்பதாலும் வேளாண்மை சிறப் புற்று வளர்ந்துள்ளது. தானியங்களில் சிறப்பாகக் கோதுமை, இங்குப் பயிராகிறது. மாநிலத்தின் தென் கிழக்கில் நெல்லும், தென்மேற்கில் பருத்தியும் மிகுதி யாக உற்பத்தியாகின்றன. நூல் நூற்றலும் நெசவுத் தொழிலும் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன. இங் குக் கிடைக்கும் தாதுப் பொருட்களில் மங்கனம்,

அலுமினிய மண் வகை, இரும்பு, நிலக்கரி ஆகியவை முக்கியமானவை.

**வரலாறு:** இப்பகுதி கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் முகலாயப் பேரரசுக்கு உட்பட்டிருந்தது. மராட்டியர் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டில் இங்கு ஆட்சி புரிந்தனர். ஆங்கிலேயர் ஆதிக்கம் இங்கு கி.பி. 1820 – இல் ஏற்பட்டது. இம்மாநிலம், கி.பி. 1903 முதல் 1950 வரை மத்திய மாகாணங்களும் பேராரும் (Central Provinces and Berar) என்ற பெயரைப் பெற்றிருந்தது.

சுதந்திர இந்திய மாநிலமாக வரையறுக்கப்பட்ட பின், இது ஆட்சிமுறைக் காரணங்களுக்காக 11 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 45 மாவட்டங்கள் உள்ளன. தெ.பா.

**மத்துவாச்சாரியார்:** வேதாந்தச் சிந்தனையின் துவைதப் பிரிவினை நிறுவியவரான மத்துவாச்சாரியார், மத்தியகேச பட்டருக்கும் வேதவதிக்கும், கருநாடக மாநிலத்தில் உடுப்பி நகரத்திற்கு அருகிலுள்ள பாசகசேத்திரம் என்னுமிடத்தில் பிறந்தவராவார். இவர் இயற்பெயர் வாசுதேவர் என்பதாகும். வேதக் கல்வி நிலையத்தில் கற்றுக் கொடுக்கப்படாமலேயே வேதமனைத்தையும் கூறியதாலும், முழுமையான கட்டற்ற நிலையிலிருப்பதால் பேரமைதிக்கு உறைவிடமாக உள்ள பிரமமாகிய ஆனந்தத்தை அடையுமாறு செய்யும் வேதாந்தத்தை விளக்கியதாலும், இவருடைய ஆசிரியரான அச்சுதப் பிரேக்சர் இவருக்குப் பூரணபிரக்ஞர், ஆனந்த தீர்த்தர் என்ற பெயர்களைச் சூட்டியதுடன், வேதாந்த அறிவிற்கு மன்னர் என்று பாராட்டவும் செய்தார். ஆதிசங்கரரின் பிரம சூத்திரத்தை ஆராய்ந்து அதிலுள்ள முரண்பாடுகளை விளக்கியதுடன், அவருடைய நூல்களின் அடிப்படையில் விவாதித்த அத்வைதிகளையும் வென்று அனுமான தீர்த்தர் என்ற பெயரையும் பெற்றவர் மத்துவாச்சாரியார். இவருக்குச் 'சர்வக்ஞர்', 'அனைத்தும் அறிந்தவர்' என்ற பெயருமுண்டு. விட்டுணுவின் ஆயிரம் பெயர்களில் ஒன்றிற்கே பாதராயணருடைய பிரம சூத்திரத்தின் அடிப்படையில் நூறு பொருள்கள் உரைக்கும் திறன் பெற்றவர் மத்துவாச்சாரியார் என்பதிலிருந்து இவருடைய புலமையை அறிந்து கொள்ளலாம்.

மத்துவாச்சாரியாரின் துவைத வேதாந்த சிந்தனைக்கு முன்னோடிகள் எவரும் இல்லை. மத்துவாச்சாரியாரே அச்சிந்தனையைத் தொடங்கியவர். இவர் வேதவியாசரையே ஆசிரியராகக் கொண்டவர். ஏனெனில் இவருக்குத் தாம் வாயுவினின்று தோன்றி வந்த வடிவம் என்ற உணர்வு இருந்தது. விட்டுணு மண்ணுலகில் தோன்றிய காலங்களில் வாயுவும் உடன் தோன்றி வந்தவர். திரேதாயுகத்தில் அனுமனாகவும், துவாபர யுகத்தில் பீமனாகவும், கலியுகத்தில் மத்துவராகவும் வாயு தோன்றி, விட்டுணுவில் தோன்றி வந்த வடிவங்களாக இராமர், கிருட்டிணர், வியாசர் போன்றோருக்குப் பணிபுரிந்தார் என்று சில நூல்கள் கூறுகின்றன. இக்காரணம் பற்றியே வித்தியாசங்கரர், இராமானுசர் ஆகியோரின் மாணாக்கர்கள் மத்துவரிடம் பிரம சூத்திரத்திற்கு உரை எழுத வேண்டியவுடன் தம் ஆசிரியரான வியாசராகிய பாதராயணரிடம் சென்று இசைவு பெற்று வந்து அச்செயலை முடித்தார். மத்துவரின் மாணாக்கர் மத்துவாச்சாரியரைத் திரிவிக்கிரமாச்சாரியார் என்றும், வாயுவின் மூன்று வடிவங்களையும் நேரில் கண்டவர் என்றும் குறிப்பிடுவர்.

மத்துவாச்சாரியார் பிரமசூத்திரத்திற்கு நான்கு விளக்கவுரைகளும், முதன்மையான உபநிடதங்களுக்கு விளக்கவுரைகளும், பகவத் கீதைக்கு இரு விளக்கவுரைகளும், இருக்கு வேதம், பாகவத புராணம், மகாபாரதம் ஆகியவற்றிற்கு அரும்பதவுரைகளும் எழுதியுள்ளார். அறிவாய்வியல், புலன் கடந்த பொருளியல் ஆகியவற்றின் இன்றியமையாத கருத்துகளைப் பற்றித் தனி நூல்களும் மத்துவாச்சாரியார் இயற்றியுள்ளார். தம்மைப் பின்பற்றுவோரின் சமய வாழ்வுக்கென நடைமுறை, பக்தி, சடங்கியல் பற்றிய நூல்களையும் மத்துவர் எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள நூல்களின் எண்ணிக்கை முப்பத்தேழு ஆகும்.

மத்துவாச்சாரியார் காட்சிப் பொருள் உண்மைக் கொள்கையையும், இவ்வுலகின் பன்மையிலான உண்மையியல்பையும் ஏற்று அவற்றை விளக்குவதுடன், அவற்றின் முடிவாக இறையியலை வலியுறுத்தவும் செய்கிறார். இவருடைய இறையியல், புனித நூல்களின் வெளிப்பாடுகளின் அடிப்படையில் அமைந்ததாகும். இவர் பழமையான கிருட்டிண படிமத்தை உடுப்பியில் நிறுவிப் பிரமத்தை அறிவதையே நோக்கமாகக் கொண்ட வைணவக் கோட்பாட்டினை வளர்த்தார். மத்துவாச்சாரியார் தம் எண்பதாம் வயதில் மாணாக்கர்களுக்குக் கற்பித்துக் கொண்டிருக்கும் பொழுது மறைந்து, தம் ஆசிரியரான பாதராயணரிடம் சென்று விட்டாரெனக் கூறுவர். இவரது காலத்தைப்பற்றி இரு வேறு கருத்துகள் நிலவுகின்றன. சிலர் மத்துவர் கி.பி. 1198 க்கும் 1278 க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்றும், வேறு சிலர் கி.பி. 1238 க்கும் 1318 க்குமிடையே வாழ்ந்தவர் என்றும் கருதுகின்றனர். பி.ஆர்.ந.

**துணை நூல்கள்:**

Narain, K., An Outline of Madhva's Philosophy, Allahabad, 1962.

Sharma, B. N.K., The Philosophy of Sri Madhva-charya, Bombay, 1962.

*மதங்க சூளாமணி:* இது சுவாமி விபுலானந்த அடிகளால் எழுதப்பட்ட நூலாகும். இதில், ஆங்கில நாடக ஆசிரியர் சேக்சுபியரின் நாடகங்கள் சில வற்றை, நாடக விலக்கண முடிபுகளை அடிப்படை யாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளார். சிலப்பதிகாரத் தில் கூறப்பட்டுள்ள நாடகவிலக்கணங்களும், தொல் காப்பிய மெய்ப்பாட்டியல் செய்திகளும், தசரூபம் என்னும் நாடகவிலக்கண நூலும் இவ்வாசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது 'செந்தமிழ்' இதழில் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

மதங்கர் என்பதற்குக் கூத்தர் என்பது பொருள். சூளாமணி என்பது சிறப்புக் கருதி இடப்பெறும் பெயர். எனவே, கூத்தருள் தலைசிறந்தவன் என்னும் பொருள்படும் இத்தொடரை நூலின் பெயராக அமைத்துக் கொண்டுள்ளார். சேக்சுபியர் நாடகங் களில் சுவாமிகள் ஆழ்ந்த பற்றும் பயிற்சியும் கொண் டிருந்த காரணத்தால் அவற்றைத் தமிழ்ப்படுத்தித் தமிழரனைவரும் உணரும் வண்ணம் செய்ய நினைத் தார். உலகம் என்பது நாடக மேடை; அதனுள் உலக ஆடவரும் பெண்டிருமே கூத்தர் கூத்தியர் என்ற சேக் சுபியரின் தத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளார். மத லைப்பருவம், பாலப்பருவம், இளமைப் (யௌவனம்) பருவம், வீரப்பருவம், நீதிப்பருவம், வயோதிகப் பருவம், இறுதிப்பருவம் என அவர் கூறிய ஏழு பகுப் புகளையும் எடுத்துரைத்து அவற்றை எட்டு விருத்தச் செய்யுட்களில் எடுத்து மொழிந்துள்ளார். அத்தகு கவி வல்லாரை நாயகராகக் கொண்டு இந்த நூலினை அமைத்துச் சென்றுள்ளார்.

நூலின் தலைவனுக்குச் சுவாமிகள் இட்டபெயர் செகசிற்பியார் என்பதாகும். அவருடைய நாடகங் களுள் அமைந்துகிடக்கும் வனப்புகளை ஆராய்வதும் நாடக விலக்கண முடிவுகளை அடிப்படையாக வைத்து அவர்தம் நாடகங்களை இலக்கியமாக ஆராய் வதும் தம் வாராய்ச்சியின் நோக்கங்கள் எனச் சுவாமி களே குறிப்பிட்டுள்ளார்.

தம் ஆய்வைச் சுவாமிகள் உறுப்பியல், எடுத்துக் காட்டியல், ஒழிபியல் என மூன்றியல்களாகப் பகுத் துக் கொண்டுள்ளார். உறுப்பியலுள் நாடகவுறுப்புகள் இவையிவையென ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியத்துள் கூறப்படும் ஒன்பான் சுவைகள் விளக்கப்பட்டுள்ளன. நாடகம் என்பதன் பொருள், நாடகவுறுப்புகள், பொருள், சாதி, யோனி, விருத்தி போன்றவை தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. தொல் காப்பியத்துள் கூறப்படும் முப்பத்திரண்டு மெய்ப் பாடுகளன்றியும் நாடக நூலில் கூறப்படும் அவிநயங் களையும் மெய்யப்பாடுகளெனச்சுட்டியுள்ளார். களித் தோனவிநயம், தெய்வ முற்றோனவிநயம், வெப்ப முற்றோனவிநயம் என்பன அவற்றுள் சிலவாம். சொல், சொல்வகை, வண்ணம், விரி என்னும் நான் கையும் கூறியுள்ளார். உட்சொல் புறச்சொல் ஆகாயச் சொல் என்று சொல்லை மூன்றாகவும், சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம், என்று சொல்வகையை நான்காகவும் பாகுபாடு செய்துள்ளார். அவற்றுள் சுண்ணம் என்பது நான்கடியான் வருவது; சுரிதகம் எட்டடியான் வருவது; வண்ணம் நானான்கடியான் வருவது, வரிதகம் முப்பத்திரண்டு அடியான் வருவது.

இன்பவியல் (Comedy) நாடகங்களை வேத்தியல் என்றும், துன்பவியல் (Tragedy) நாடகங்களைப் பொதுவியல் என்றும் குறித்துள்ளார். நகைச்சுவையும் உவகைச் சுவையும் நிறைந்த நாடகங்களாகிய வேத் தியல் பகுதியைச் சிறுகுடிப்பாட்டு என்றும் பண்ணைப் பாட்டு என்றும் சுட்டியுள்ளார்.

எடுத்துக்காட்டியல் என்னும் பகுதியில் செகசிற்பி யார் இயற்றிய நாடகங்களுள் பன்னிரண்டனை எடுத்து அவற்றைத் தமிழ்ப்படுத்திச் சந்தியும் சுவை யும் நோக்கி ஆராய்ந்துள்ளார். அதனுள் அவர்தம் வாழ்க்கை வரலாற்றையும் சுருங்க உரைத்துள்ளார். செகசிற்பியார் கி.பி. 1564-இல் இங்கிலாந்திலுள்ள இசுடாட்போர்டு-ஆன்-அவான் (Stratford-on-avon) என்னும் ஊரில் பிறந்தவர். தந்தையின் பெயர் சோன் சேக்சுபியர். அவர் வாழ்ந்த காலத்தில் அரசாண்ட வர் அரசி எலிசபெத்து இராணியாவார். சேக்சுபியர் தம் 27 – ஆம் வயதுமுதல் நூல் எழுதத் தொடங்கி னார். அவர் எழுதிய முதல் நாடகம் 'காதல் கைம் மிக்க காவலன் கதை (Loves Labour Lost) என்ப தாகும். அவர் எழுதிய நாடகங்கள் 45. பிற்காலத் தார் இவர் நூல்களுள் சில இவர் பெயரால் பிறர் இயற்றியவை என்று கருதுவர் என்பது போன்ற வாழ்க்கை வரலாற்றுண்மைகளைச் சுவாமிகள் குறிப் பிட்டுள்ளார். நாடகப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தி யுரைத்துச் சிலவற்றை நாடகவிலக்கணத்திற்கேற்பப் பெயர்த்தும் தந்துள்ளார். 'கிங் லியர்' (King Lear) என்பதை ஆகுலராசன் சரிதை என்றும் 'உரோமியோ சூலியட்' (Romeo and Juliet) என்பதை இரம்மியன் சுசீலை சரிதை என்றும், 'தைமன் ஆப் ஏதன்சு' (Timon of Athens) என்பதைத் தீ நட்பஞ்சிய தீமோன் சரிதை என்றும், 'தி டெம்பசுட்டு, (The Tempest) என்பதைப் பெரும்புயற் சரிதை என்றும், 'மாக்பத்' (Macbeth) என்பதை மகபதி சரிதை என் றும், இவ்வாறே பிறவற்றையும் தமிழ்ப்படுத்தியுள் ளார்.

இம்மொழிபெயர்ப்பில் கவிச்சுவை நிறைந்த பகுதிகளைச் செய்யுள் வடிவில் தந்துள்ளார். செகசிற்பியார் வழங்கிய ஊர்ப்பெயர், மக்கட்பெயர், தெய்வப்பெயர் போன்றவற்றைத் தமிழ் மரபுக்கியைய வேற்றுமைப்படுத்தியுள்ளார். சான்றாக இலியர் அரசன் கதையில் வரும் மூன்று மகளுக்கும் மாணிக்கமாலை, கனக மாலை, குணமாலை எனப் பெயரிட்டுள்ளார். இருப்பினும், சூலியசு சீசருடைய சரிதையும், சேனாதிபதி சரிதையும் இதிகாசத்தின் பாற்பட்டனவாதலின் அவற்றில் வருகின்ற சிறப்புப்பெயர்களை வேறுபடுத்தாது அவ்வண்ணமே வழங்கியுள்ளார். இறுதியில் இரம்மியன் சுசீலை சரிதை, பெரும்புயற் சரிதை, வணிகத்தேய வர்த்தகன் சரிதை, சூலியசு சீசர், வேனிற்காதை, கூதிர்க்காதை, கருதியது எய்திய காதலர் சரிதை என்னும் ஏழுமே நாடக இலக்கணம் பொருந்தியவை என்றும், ஏனைய பிரகரணம், நாடிகை என்னும் வகைகளுள் சேர்ந்தவை என்றும் ஆய்ந்துரைத்துள்ளார்.

மூன்றாவதாக அமைந்த ஒழிபியலுள் தசரூபம் என்னும் நாடக இலக்கணத்தின் செய்திகள் விரித்துரைக்கப் பட்டு அவை செகசிற்பியாரின் நாடகங்களோடு பொருத்திக் காட்டப்பெற்றுள்ளன. தசரூபம் என்பது ஒரு நாடகவிலக்கண நூல். இது தசரூபகம் எனவும் வழங்கப்படும். அது முஞ்சராகன் சமசுதான வித்துவானாகிய தனஞ்செயன் என்பவரால் செய்யப்பெற்றது. அது நான்கு அதிகாரங்களைக்கொண்டது.

முதலதிகாரம் பொருள், சந்தி, சொல் என்பவற்றை ஆராய்ந்துரைக்கின்றது. இரண்டாமதிகாரம் யோனி விருத்தி பற்றி விளக்குகின்றது. மூன்றாமதிகாரம் சாதி (நாடக வகை), அசேதம் என்னும் உறுப்புகளை ஆராய்கிறது. நான்காமதிகாரம் சுவை, குறிப்பு, சத்துவம், அவிநயம் என்பவற்றை விரித்துரைக்கிறது. இவ்வாறு நூற்செய்திகள் பற்றித் தெளிவுபடுத்தி அவை நாடகங்களுள் பொருந்தும் தன்மையைச் சுவாமிகள் எடுத்துக்காட்டியுள்ளார். இவையன்றியும் தமிழ்நூல்களுள் பரந்துகிடக்கும் நாடக முடிபுகளுள் இயற்றமிழ் ஆராய்ச்சிக்கு இன்றியமையாத செய்திகளையும் இறுதியில் தொகுத்துக் கூறியுள்ளார்.

**மதங்க சூளாமணி**[2]: இது பெரியபுராண நாயன்மார்களுள் ஒருவராகிய திருநீல கண்ட யாழ்ப்பாணருடைய துணைவியாரின் பெயராகும் என்பது மரபுவழிச் செய்தி. இவர் மதங்க சூளாமணியார் என்றும் கூறப்பெறுகிறார். இவர்கள் இருவரும் தீண்டத் தகாத வகுப்பைச் சேர்ந்தவர்கள். திருஞான சம்பந்தருக்கு யாழிசைத்துக் கொண்டு, அவரோடு இறைவன் புகழைப் பாடித் தலப்பயணம் மேற்கொள்பவர் இந்நாயனார். நடுமனை வேதிகைப் பக்கத்தில் இரவு தங்குதற்குத் திருநீலநக்கநாயனார் இவர்களுக்கு இடமளித்தார். ஞானசம்பந்தர், நீலகண்டயாழ்ப்பாணர் ஆகிய இருவரிடத்தும் வேற்றுமை பாராட்டாது விருந்தோம்பல் செய்து திருநீலநக்கர் பேறுபெற்றார். திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய துணைவியார் பெயர் மதங்க சூளாமணியார் எனப் பெரிய புராணம் சுட்டவில்லை. சா.கி.

**மதன்பாய் தேசாய்**: இவர் கி.பி.1899 முதல் 1969 வரை வாழ்ந்த ஒரு குசராத்தியப் பெருமகனார்; மகாத்மா காந்தியடிகள்தம் நெருங்கிய நண்பர். குசராத்துப் பல்கலைக் கழகத்தினை நிறுவியவர்களுள் ஒருவர். இவர் அதன் ஆட்சிக் குழுவில் 1957 முதல் 1960 வரை உறுப்பினராக இருந்தார். பகவத்கீதை காந்தியடிகளின் வாழ்க்கை நெறி, சத்தியாக்கிரகம் பற்றிய குறிப்புரை ஆகிய நூல்களை இவர் வெளியிட்டார். பி.வி.

**மதன்லால் திங்ரா**, இந்திய விடுதலைப் போரில் ஆர்வமும், நாட்டுப் பற்றும் மிக்கவர்; இந்தியாவினின்றும் ஆங்கிலேயரை விரட்ட வேண்டுமென்பதில் முனைந்து செயற்பட்டவர்; ஆங்கிலேயரான கர்சான் வைலியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றவர்; இந்தியச்சுதந்திரப் போராட்டத் தியாகிகள் வரலாற்றில் இடம் பெற்றவர்; தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டவர்.

இவர் 1906 – இல் பொறியியல் படிப்பை மேற்கொள்ள இங்கிலாந்து சென்றார். அங்குப் புரட்சி இயக்கத்தில் பயிற்சி பெற்றுப் பயங்கரவாதியாகத் திகழ்ந்தார். மதன்லாலின் உடன்பிறந்தவர் அதனைக் கேள்விப்பட்டு, தம் குடும்ப நண்பரான கர்சன் வைலிக்குக் கடிதம் எழுதி, தம் உடன்பிறந்தவனுக்கு அறிவுரை கூறக் கேட்டுக் கொண்டார். அக்கடிதத்தைக் கண்ட கர்சான் வைலி, மதன்லால் திங்ராவைப் பயங்கரவாதத்தில் ஈடுபட வேண்டாமென்று அறிவுரை கூறினார். அதனைக் கேட்ட மதன்லால் திங்ரா தம் அண்ணனின் அச்செயலைக் கண்டனம் செய்தார். அதனை எதிர்க்கும் வகையில் அமிர்தசரசில் இருக்கும் தம் உடன்பிறந்தவரை விடுத்து, கர்சான் வைலியைப் பழிவாங்க எண்ணினார். இலண்டனில் உள்ள ஒரு கட்டடத்தின் மாடிப்படியில் தம்முடன் பேசிக் கொண்டு இறங்கி வந்த கர்சான் வைலியின் முகத்தில் தம் கைத்துப்பாக்கியால் ஐந்து தடவைகள் சுட்டார். அத்துப்பாக்கிச் சூடு 1909-ஆம் ஆண்டு நடைபெற்றது.

அதன் விளைவாகத் திங்ரா கைது செய்யப்பட்டு 1909-இல் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். அவர், தாய் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்ய

வாய்ப்பினை அளித்த நீதிபதிக்கு நன்றி தெரிவித்தார் திங்ரா.இவர்தம்வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் படிக்க ஒப்புதல் கேட்டார். ஆனால் மறுக்கப்பட்டது. அவ்வாக்குமூலம், இந்தியத் தேசிய இயக்கத்தை ஆதரித்த ஐரிசுத் தினத்தாள்களில் வெளியிடப்பட்டது. அதனைப் படித்த அனைவரும் மதன்லால் திங்ராவின் நாட்டுப் பற்றைப் பாராட்டினர். ஆங்கில அரசின் தலைவர்கள் சிலரும் அதனைப் பாராட்டிப் பேசினர்; எழுதினர். அந்த வாக்குமூலமாவது:

'நாட்டுப்பற்றுமிக்க இளைஞர்கள் தூக்கிலிடப்படுவதையும், நாடு கடத்தப்படுவதையும் எதிர்த்துப் பழி வாங்குவதற்காக நான் வெள்ளையனைக் குருதி சிந்தும் படி செய்தேன். என் மனச்சாட்சியின்படி நடந்தேன். யாரையும் கலந்து சிந்திக்கவில்லை'.

'கடவுளிடம் நான் வேண்டுவது ஒன்றே ஒன்று உண்டு. என் தாய் நாட்டிலேயே நான் மீண்டும் பிறக்க வேண்டும். இதே புனிதச் செயலுக்காக நான் மீண்டும் இறக்க வேண்டும். எடுத்த செயல் வெற்றிகரமாக முடியும் வரை இவ்வாறே நிகழ வேண்டும். மனித குலத்தின் நலத்திற்காகவும் கடவுளின் பெருமைக்காகவும் பாரதத்தாய் விடுதலை பெற வேண்டும்'.

ஆங்கிலேய அரசியல் தலைவர்களான இலாயிடு சார்சும், சர்ச்சிலும் திங்ராவின் வாக்குமூலத்தில் கனன்ற நாட்டுப்பற்றை வியந்து பாராட்டினர். கிரேக்க வரலாற்றின் முடிமணியான புளூடார்க்கின் அமர வீரர்களோடு திங்ராவை ஒப்பிட்டு இலாயிடு சார்சு பேசினார். 'நாட்டுப் பற்றின் பெயரால் இது வரை கூறப்படாத, அற்புதமான சொற்களாகும் இவை எனத் திங்ராவின் வாக்குமூலத்தில் ஒளிவீசிய இறுதிச் சொற்களைத் தமது உரையில் மேற்கோளாக எடுத்துக் கூறிச் சர்ச்சில் பாராட்டினார்.

ம.இரா.

**மதனபள்ளி**, தென் இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். இது 'ஆர்சிலி'க் (Horsely) குன்றுகளுக்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ 12 கி.மீ. தொலைவில், சித்தூர் மாவட்டத்தில் உள்ளது. சென்னை நகருக்கும் இதற்கும் இடையே உள்ள தொலைவு ஏறத்தாழ 250 கி.மீ. மதனபள்ளி வட்டத்தின் தலைநகரும் மதனபள்ளியே. வட்டத்தின் பரப்பு ஏறத்தாழ 2170 சதுர கி.மீ. நகருக்கு ஏறத்தாழ 10 கி.மீ. தொலைவில் மதனபள்ளி இருப்புப்பாதை நிலையம் உள்ளது. இப்பகுதி, கடல் மட்டத்திற்கு 610 முதல் 915 மீ. வரை உயரமுள்ள பீடபூமியில் அமைந்திருப்பதாலும், ஆர்சிலிக் குன்றுகள் ஏறத்தாழ 1250 மீ. உயரத்துடன் இருப்பதாலும், இப்பகுதி, கோடைக் கால வாசத்திற்கு ஏற்றதாக உள்ளது. இதன் தட்பவெப்பமும் உடலுக்கு நன்மை செய்யக்கூடியதாகவே இருக்கிறது. மதனபள்ளி நகரின் அருகில் காசநோய் மருத்துவ இல்லம் உள்ளது. சந்தன மரங்களைக் கொண்ட காடுகள் இவ்வட்டத்தில் இருக்கின்றன. அங்கிருந்து விறகுகள் மிகுதியாக வெளிப்புறங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு விளையும் பொருட்களில் முக்கியமாக வேர்க்கடலை, கம்பு; சோளம், நெல், கேழ்வரகு முதலியவை குறிப்பிடத்தக்கவை. புகழ்பெற்ற இருடிப் பள்ளத்தாக்கு இப்பகுதியின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. நகரில் கல்லூரிகளும் மேல்நிலைப் பள்ளிகளும் நடைபெறுகின்றன.

தெ.பா.

**மதிப்பின் கோட்பாடு**: பொருளியல் அறிஞர்கள் தொன்றுதொட்டே விடை காண ஆர்வங்காட்டி வரும் ஒரு முதன்மையான வினா, பொருட்களின் மதிப்பு எவ்வாறு முடிவாகிறது என்பதாகும். அறிஞர்கள் வெவ்வேறு கோணங்களிலிருந்து அவ்வினாவை அணுக, விடைகளும் வெவ்வேறாகவே அமைந்து விட்டன. பொருளை மாற்றிக் கொள்ளும் போதுதான் அதன் மதிப்புத் தெரியவருகிறது. பொருளின் அளிப்புக் கண்ணோட்டத்திலிருந்து மதிப்புத் தொடர்பான சிக்கலை அறிஞர்கள் சிலர் தொடக்கத்தில் அணுகினர். தேவைக் கோணத்திலிருந்து சிக்கலை அணுகினர் வேறு சிலர். இவ்விரு வேறு கோணங்களிலிருந்தும் ஒரு சேர அணுகி ஒரு சமரசக் கோட்பாட்டை உருவாக்கினார் மார்சல் (Marshall). அந்தக் கோட்பாடும் தொடர்ந்து பல விளக்கங்களையும் திருத்தங்களையும் இப்போது பெற்று வருகிறது.

ஆடம் இசுமித்து, இரிக்கார்டோ போன்ற தொன்மை மரபினர், ஒரு பொருளின் மதிப்பு அதில் செலவிட்டுள்ள உழைப்பைப் பொறுத்துள்ளது என்று கருதினர். உழைப்பே மதிப்பின் தோற்றுவாய். இயற்கை தரும் காற்று, நீர் போன்றவை இலவசப் பொருட்களாக இருக்கக் காரணம் அவை மனித உழைப்பால் உருவாக்கப் பெறாமைதான். மேலும், உழைப்பே மதிப்பளவையாகவும் செயற்படுகிறது. பொருட்களின் தராதர மதிப்பு, அவற்றில் செலவிட்டுள்ள உழைப்பையே பொறுத்திருக்கிறது. ஓர் எடுத்துக்காட்டுடன் இதனை விளக்கலாம். வேடர் சமுதாயம் ஒன்றில் ஒரு நாள் உழைப்பில் ஒரு மானையோ இரண்டு முயல்களையோ பிடிக்க முடியுமெனக் கொண்டால், ஒரு மான் இரண்டு முயல்களுக்குச் சமம் என்ற வீதத்தில் மாற்று நடக்கும்.

இக்கோட்பாட்டின் குறைபாடுகள் பல. ஒரு பொருளின் உற்பத்திக்கு உழைப்பு மட்டுமன்றி

முதல், அமைப்பு போன்ற பிறவும் காரணமாகின்றன. உழைப்பை ஒரு மதிப்பளவையாகக் கொள்வதிலும் பல சிக்கல்களுள்ளன. உடலுழைப்பு, மன உழைப்பு, நுட்பத் தேர்ச்சி பெற்ற உழைப்பு, நுட்பத் தேர்ச்சி பெறாத உழைப்பு எனப் பலவகை உழைப்புகளுள்ளன. அவற்றுள் எதனைப் பொது அளவையாக ஆள்வது என்பதுதான் சிக்கல். மேலும், உழைப்பு செலவிடப்படும் போதெல்லாம் மதிப்பு உண்டு பண்ணப்படுகிறது என்றும் சொல்ல முடியாது. பெண்கள் நகைகளை அழித்தழித்துச் செய்யும் போதெல்லாம் அதில் மேலும்மேலும் உழைப்புச் செலவிடப்பட்டுள்ளபோதிலும் அவற்றின் மதிப்பு மிகுவதில்லை. மேலும், குறைந்த உழைப்பிலே உருவாகி உயர்ந்த மதிப்புடன் திகழும் வைரம் போன்ற அரிய பொருட்களின் மதிப்பை இக்கோட்பாடு விளக்கும் நிலையிலில்லை. குறிப்பிட்ட அளவு உழைப்பால் ஏற்கனவே உருவாகியுள்ள பொருளின் மதிப்பு, கால அளவில் மாறுவதற்கும் இக்கோட்பாடு விளக்கந்தரவில்லை. எடுத்துக் காட்டாக, நேற்றைய நாளிதழின் இன்றைய மதிப்பு, வெறும் காகித மதிப்பு மட்டுமேயாகும்.

இந்நிலையில், உழைப்பு மட்டுமன்று, முதலும் அமைப்புங்கூட மதிப்பை இயற்றுகின்றன என்ற ஒரு கருத்து உருவாயிற்று. ஆடம் இசுமித்தும் சில இடங்களில் அக்கருத்தை ஆதரிப்பதாகத் தோன்றுகிறது. சீனியர் (Senior) உழைப்பு மட்டுமன்று, நுகர்வுத் தவிர்ப்பும்(முதல்) உற்பத்திக்குக் காரணம் என்றார். மில் (Mill) உழைப்பும், முதலும் மதிப்புக்குத் தோற்றுவாயாக விளங்குகின்றன என்றார். அவ்வறிஞர்கள் கருத்துப்படி, ஒரு பொருளின் மதிப்பு அதன் உற்பத்திச் செலவால் (உழைப்புக்குத் தருகிற கூலி, நிலத்துக்குத்தருகிற வாரம், முதலுக்குத் தருகிற வட்டி, அமைப்புக்குத் தருகிற இலாபம் ஆகியவற்றின் கூட்டுத்தொகையால்) நிருணயிக்கப்படுகிறது.

அக்கோட்பாடு உழைப்பைத் தவிரப் பிற காரணிகளையும் கருதுகிறது என்பது ஒரு சிறப்பு. ஆனால், அதிலும் பல குறைபாடுகள் உள்ளன. பொருளின் மதிப்பு அதன் உற்பத்திச் செலவுக்குச் சமம் என்று சொல்லும் போது, அவ்வுற்பத்திச் செலவை முடிவு செய்யும் சிக்கல் அங்குத் தோன்றுகிறது. பருத்தி, பருத்திவிதை போன்ற கூட்டுவிளை பொருட்கள் ஆகிய ஒவ்வொன்றின் தனித்தனி உற்பத்திச் செலவை எவ்வாறு பிரித்தறிவது? உற்பத்திச் செலவு மாறாது இருந்தாலும், மல்லிகை மொக்குகளின் மதிப்பு காலையிலும் மாலையிலும் இரவிலும் மாறி மாறி அமைந்துவிடுகிறது. மேலும், ஒரே மதிப்புள்ள இரு பொருட்களின் உற்பத்திச் செலவு வெவ்வேறாகவும் இருக்கலாம். குறிப்பிட்ட செய்தியைத் தாங்கிக் கொண்டு குமரியிலிருந்து சென்னை செல்லும் அஞ்சல் அட்டையின் மதிப்பும், தில்லி செல்லும் அஞ்சல் அட்டையின் மதிப்பும் சமம். ஆனால், இரண்டையும் வெவ்வேறிடங்களில் சேர்ப்பதற்குரிய செலவில் வேறுபாடு உள்ளது. மேலும், குறுங்காலத்தில் ஒரு பொருளின் மதிப்பு அதன் உற்பத்திச் செலவுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்றில்லை.

ஆக, மேலே கண்ட இரு கோட்பாடுகளின் அடிப்படைக் கோளாறு, அவை மதிப்புத் தொடர்பான சிக்கலைப் பொருளின் அளிப்புக் கோணத்திலிருந்து (அதன் பின்னாலுள்ள உற்பத்திக் காரணிகளை) மட்டுமே அணுகியதுதான். அக்கட்டத்தில்தான் செவான்சு (Jevons) போன்ற ஆசிரியர்கள் பொருளுக்குத் தேவை இருப்பதால்தான் மதிப்புத் தோன்றுகிறது என்ற கருத்தைத் தெரிவிக்கலாயினர். பொருளின் தேவை அதன் பயன்பாட்டையும் மனித விருப்பங்களை நிறைவேற்றும் ஆற்றலையும் சார்ந்துள்ளது. இவ்வாறு, பயன்பாட்டைப் பொறுத்தது மதிப்பு என்ற ஒரு கோட்பாடு உருவாயிற்று. அக்கோட்பாடு, காற்று, நீர் போன்ற பயன்பாடு மிக்க பொருட்கள் மாற்று மதிப்பு இல்லாதிருக்கக் காரணம் என்ன என்பதை விளக்க இயலாத நிலையிலேயே இருந்தது. ஆனால், பிற்கால ஆசிரியர்கள் இறுதிநிலைக் கருத்தை ஆண்டு அக்குறைபாட்டை அகற்றினர். ஒரு பொருளின் மதிப்பு அதன் இறுதிநிலைப் பயன்பாட்டைச் சார்ந்திருக்கும் என அவ்வாசிரியர்கள் விளக்கலாயினர். பொருளின் இறுதிநிலைப் பயன்பாடு அதன் அளிப்பைச் சார்ந்திருக்கும். அளிப்பு மிகுதியாக இருந்தால் இறுதிநிலைப் பயன்பாடு குறைவாக இருக்கும் என்பது குறைந்து செல் பயன்பாட்டு விதி. எனவே, காற்று, நீர் போன்ற பொருட்களின் அளிப்பு எச்சமாக இருப்பதால் அவற்றின் இறுதிநிலைப் பயன்பாடு இலதாகி, அதனால் மாற்று மதிப்பும் இலதாகி விடுகிறது என்று விளக்க முடிகிறது.

இந்தச் சூழ்நிலையில்தான், மதிப்புப் பற்றிய தம் கோட்பாட்டை விளக்க மார்சல் முன்வந்தார். முன்னோர் மொழிந்த உற்பத்திச் செலவுக் கோட்பாடு, பயன்பாட்டுக் கோட்பாடு ஆகிய இரண்டிலுமே உண்மை இருப்பதை உணர்ந்த அவர், அவையிரண்டையும் இணைத்து இரட்டைக்கோட்பாடு ஒன்றை உருவாக்கித் தந்துள்ளார். அக்கோட்பாட்டின்படி பொருளின் தேவை, அளிப்பு ஆகிய இரண்டும் அதன் மதிப்பை முடிவு செய்வனவாகின்றன. அவ்விரண்டின் இயக்கமும் பொருட்களின் இயல்பையும், ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள காலத்தையும் பொறுத்துள்ளது என்பார் மார்சல்.

பொருட்களை மூவகைப்படுத்துகிறார் மார்சல்.

முதலில், மறுபடியும் உருவாக்க முடியாத பொருட்களை எடுத்துக்கொண்டால், அவற்றின் மதிப்பு முழுக்க முழுக்கத் தேவையையே சார்ந்துள்ளது எனலாம். மகாகவி பாரதியின் கையெழுத்துச் சுவடியொன்றின் மதிப்பு, அதன் தேவையையும் தேவைப்படுபவரின் ஆர்வத்தையும் மட்டுமே பொறுத்துள்ளது. அதனை மறுபடியும் உருவாக்க இயலாத நிலையில் சுவடியின் உற்பத்திச் செலவு பற்றிய சிந்தனை எழுவதற்கு இடமேயில்லை.

இரண்டாவதாகத் தடையின்றி மறுபடியும் உருவாக்க முடிகிற பொருட்களை எடுத்துக்கொண்டால், அவற்றின் மதிப்பு உற்பத்திச் செலவுக்குச் சமமாயிருத்தல் வேண்டும். இல்லையேல் அவை உற்பத்தியாகா.எனவே உற்பத்திச் செலவு மிகுதியாயிருந்தால் அவ்வகைப்பொருட்களின் மதிப்பும் உயர்வாயிருக்கும்.

மூன்றாவதாக, இவ்விருவகைகளுக்கும் இடையேயுள்ள பொருட்கள் வருகின்றன. அவற்றை மறுபடியும் உருவாக்க முடியுமென்றாலும், அது அவ்வளவு எளிதன்று. அங்காடியில் வழக்கமாக வாங்கி விற்கிற பொருட்கள் இவ்வகைப்படும். அவற்றின் மதிப்பு தேவை, அளிப்பு ஆகிய இரண்டினையும் பொறுத்துள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் பொருளினது தேவை, அதன் அளிப்பினை விட மிகுதியாக இருந்தால், தேவைப்படுபவர் மதிப்பீடு உயர்கிறது. அது பொருளின் அளிப்பைப் பெருக்க ஊக்கந்தருகிறது. அதனால், அளிப்பு தொடர்ந்து பெருகித் தேவைக்குச் சமமாக முற்படுகிறது. பொருளின் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கிற ஒரு மட்டத்தில் உருவாகிற மதிப்பு, சமநிலை மதிப்பு என்று கூறப்படுகிறது. தேவையின் பின்னால் இறுதிநிலைப் பயன்பாடும், அளிப்பின் பின்னால் இறுதிநிலை உற்பத்திச் செலவும் செயற்படுவதால் சமநிலை மதிப்பு இறுதிநிலைப் பயன்பாட்டினாலும் இறுதிநிலை உற்பத்திச் செலவினாலும் முடிவாகிறது என்றும் சொல்லலாம்.

தேவையோ அளிப்போ தனியாகப் பொருளின் மதிப்பை முடிவு செய்யவில்லை என்று மேலும் வலியுறுத்தினார் மார்சல். காகிதத் துண்டொன்றைக் கத்தரிக்கக் கத்தரிக்கோலின் இரு அலகுகளும் வேண்டும். இதுபோலத் தேவை, அளிப்பு ஆகிய இரண்டும் சேர்ந்தே மதிப்பை நிருணயிக்கின்றன. கத்தரிக்கோலின் ஓர் அலகை அசைக்காது வைத்துக் கொண்டாலும் அடுத்த அலகு காகிதத் துண்டைக் கத்தரிப்பதாக வைத்துக்கொள்ளலாம். ஆனால், இங்கும் முதல் அலகு இருப்பதால்தான் இரண்டாம் அலகால் கத்தரிக்க முடிகிறது என்பதை மறந்துவிட முடியாது. இது போன்றே, அளிப்பு மாறாமலிருந்தால், தேவை மாறுதல் பொருளின் மதிப்பை மாற்றலாம். ஆனால், அந்த மாறுதலுக்குக் காரணம், தேவை மாறுதல் மட்டுமன்று, அளிப்பு மாறாமையுமாகும். ஆகவே, காகிதத் துண்டைக் கத்தரித்தது மேலலகா, கீழலகா என்று வாதிடுவதில் எவ்வளவு பொருளுண்டோ அவ்வளவு பொருளுடையது, மதிப்பை முடிவு செய்வது பயன்பாடா அல்லது உற்பத்திச் செலவா என்று சொல்வது ஆகும் என்று குறிப்பிடுவார் மார்சல்.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள காலத்தைப் பொறுத்தும் தேவை, அளிப்பு ஆகியவற்றின் தரங்களின் முக்கியத்துவம் வேறுபடுகிறது என்கிறார் மார்சல். குறுங்காலத்தில் தேவையும், நெடுங்காலத்தில் அளிப்பும் மதிப்பை முடிவு செய்வதில் சிறப்புப் பங்கு வகிக்கின்றன என்பது அவர் முடிவு. குறுங்காலத்தில், உற்பத்திச் செலவை முழுவதும் ஈடுகட்டாத மதிப்பினையும் ஏற்று கொண்டு பொருளை விற்றாக வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். ஆனால், நெடுங்கால மதிப்பு உற்பத்திச் செலவை ஈடுகட்டத் தவறுமானால் தொடர்ந்து உற்பத்தி செய்வதில் பொருளில்லை எனல் வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் அங்காடிக்குக் கொணர்ந்த பொருளை ஏற்பாரில்லையென்றால் இயல்பாகக் குறைகிற மதிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். தொடர்ந்து இதுவே நிலையென்றால் உற்பத்தியை நிறுத்திவிடுவது தான் சிறந்ததாகும்.

மார்சல், தேவையும் அளிப்புக் கோட்பாடும் பொருளியல் சிந்தனைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருந்து வருகின்றன என்கின்றார். எந்தவொரு பொருளியல் சிக்கலையும் அதன் தொடர்பான தேவைகளையும் அளிப்புக் கோணங்களையும் ஆழ்ந்து ஆராய்ந்தால் சிக்கலின் மையத்தைச் சென்றடைந்து விடலாம் என்று சொல்வதுண்டு. உண்மையில் தேவையும், அளிப்புத்தொடர்பான தொடர் ஆய்வுகளும் பொருளியலுக்குப் புதிய எல்லைகளையும் பரிமாணங்களையும் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. தேவை பற்றிய ஆய்வுகள், பல்வேறு பொருட்களின் தேவைகளுக்கிடையே நிலவும் சார்புநிலையை வெளிப்படுத்தி, அவற்றின் அடிப்படையில் ஒரு பொருளாதாரம் முழுதும் சமநிலைஅடைவது பற்றிய (பொதுச் சமநிலை பற்றிய) சிந்தனையாக உருவாகியுள்ளன. இதுபோன்றே அளிப்புத் தொடர்பான சிறப்பு ஆய்வுகள், அளிப்பு அங்காடிகளில் நிலவும் நிறைவு குறைவுகளை வெளிக்கொணர்ந்து, பொருட்களில் மதிப்பு எவ்வாறு அங்காடிகளின் இயல்பினையும் சார்ந்துள்ளது என்பதை விளக்கி நிற்கின்றன. தே.வே.

**மதிப்பீடு**: சீனா, கி.மு. 2200-ஆம்ஆண்டுக்கு முன்னர் அரசுப் பணிகளுக்கு அலுவலர்களைத் தேர்ந்தெடுக்க நாடு முழுவதும் பரவலாக ஆற்றல்

சோதனைகளை நடத்தி வந்தது. அதன் பிறகு வரலாற்றில் தெரிந்து கொள்ளுமாறு பணியாள், வீரன், அலுவலர் ஆகிய அளவில் மக்களைப் பாகுபடுத்த நேர்முகத் தேர்வுகளைக் கிரேக்க நாடு நடத்தியது. அம்முயற்சி பிளாட்டோவின் பரிந்துரையால் நிகழ்ந்தது. பின்னர் கி.பி. 1219 – ஆம் ஆண்டில் பாரிசு நகரப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்வுகளை நடத்தினர். எழுத்து வடிவில் மட்டும் தேர்வு என்பதை கி.பி. 1702-ஆம் ஆண்டில் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகம் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தியது.

இங்கிலாந்தில், அருள் தந்தை சார்சு பிசர் என்பவர் ஆசிரியராக இருந்தபோது அளவு நூல்கள் என்ற பெயரில் கையெழுத்து, கணிதம், இலக்கணம், படகு செலுத்துதல் போன்ற தலைப்புகளில் ஓரளவிற்கு நம்பகமான சோதனைகளை உருவாக்கினார். அமெரிக்காவில் இரைசு என்பவர் கி.பி. 1894-ஆம் ஆண்டில் எழுத்துப் பிழைகளைக் கண்டறியச் சோதனைகளை உருவாக்குவதில் முயன்றார். தார்ன்டைக்கு என்பவர் (1904) கல்வியில் அளவீடு என்ற நூலை எழுதினார். அவருடைய மாணவர் 1908-ஆம் ஆண்டில் கணிதச் சிந்தனை பற்றிய நல்லதோர் சோதனையை உண்டாக்கினார். வரலாற்றின்படி இதுதான் முதல் முறையாகத் தரமாக்கப்பட்ட சோதனை என்பர்.

**அளவீடா மதிப்பீடா?:** இவ்வுலகத்தில் ஏதேனும் ஒன்றுஇருக்குமாயின் அது ஏதாவதோர்உருவில் தான் இருக்க முடியும். இருக்கும் பொருளை அளக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இவ்வாறுதான் எடை, நீளம், பரிமாணம், வெப்பம், நுண்ணறிவு, ஆளுமை, மனப்பாங்கு போன்ற அளவுகள் ஏற்பட்டன. மழை என்பது இருக்கிறது. ஆகவே, அதனை அளக்க மனிதன் முயன்றான். மழைமானி என்ற கருவி உருவாகியது. எல்லா அளவுகளும் சரியானவை என்று கூற முடியாது. நீளத்தை முழமாக அளந்தால் இது ஆளுக்கொரு முழமாக இருக்கும். முழத்திற்கும் 45 செ.மீ. என்ற அளவீடு வந்ததும் அடிக்கோல் கசக்கோல், மீட்டர் முதலியவை வந்தன. இந்த நீளத்தைக்கூட அது சிறிய அளவில் இருக்கும்போது மேலும் நுட்பமாக அளக்க வர்ணியர் காலிபாசு போன்றவை வந்தன. இன்று ஒரு செ.மீட்டரைப்பல இலட்சம் பிரிவுகளாகப் பாகுபடுத்தி அறிய முடிகிறது. ஆனால் அளவீட்டில் குறைபாடே இல்லை என்று கூற முடியாது. அளப்பதில் தவறுவது பல செ.மீ. களாக இருந்தன. பின்னர், ஒரு செ.மீட்டரில் பல்லாயிரங்களில் ஒரு பகுதி என ஆகியுள்ளது. இது, மேலும் திருத்தப்படலாம்.

வெப்பத்தை அளக்க முயன்றவர்கள் வெப்ப அளவைகளில் வெப்பத்தைக் குறைத்துக் கொண்டே வந்தனர். நீரைப் பனிக்கட்டியாக்கும் போது வெப்பம் இல்லாதாகி விடும் என்றெண்ணி அந்நிலையில் வெப்பம் சுழி அல்லது 0° செண்டிகிரேடு என்றனர். அந்தச் சுழி நிலையில் நீர் பனிக்கட்டியாக மாறுகிறது என்பது உண்மைதான் எனினும் அதன் பிறகு வெப்பம் பனிக்கட்டியில் இருப்பதையும் அறிந்தனர். ஆகவே 10° செண்டிகிரேட்டுக்குக் குறைவான வெப்பம், நீர் பனிக்கட்டியாக உறைந்த பின்னரும் இருக்குமானால் அதனை – 10° செண்டிகிரேடு என்று குறிப்பிட்டனர். அறிவியலறிஞர்கள், வெப்பமானியைச் சுற்றிலும் உள்ள வெப்பத்தைக் குறைத்துக் கொண்டே வந்தனர். அவ்வாறு செய்ததில் – 273° செண்டிகிரேடு அளவிற்கு மேலும் குறைக்க முடியவில்லை. ஆகவே, அந்நிலையில் வெப்பமே இல்லாததால் அதனை முழுமையான சுழி என்றனர். பொதுவாகத் தெரிந்த சுழியில், அதாவது 0° செண்டிகிரேடு என்றபோது வெப்பமே இல்லாதது போலன்று. அதற்கு மாறாக – 273° செண்டிகிரேடு நிலையில்தான் வெப்பமே இல்லை எனலாம்.

கணிதச் சோதனையில் ஒரு மாணவனுக்குச் சுழி மதிப்பெண் கொடுத்தால் அவனுக்குக் கணிதமே தெரியாது என்ற பொருள் ஏற்பட வேண்டும். குறிப்பிட்ட கணிதச் சோதனையில் சுழி வாங்கினாலும் அவனுக்கு வேறுபல கணக்குகள் தெரியும். கணிதச் சோதனை அல்லாது வேறெந்தக் கல்விச் சோதனையிலும் முழுமையான சுழி இல்லை. ஆகவே, ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சுழித்து விட்டு அதற்கு அறியாமை அல்லது இல்லாமை என்ற பொருளைத் தர முயலுவது அறிவியல் அறிவு இல்லாமையாகும்.

சோதனைகள் அல்லது அளவு கருவிகள் அளக்கத்தான் செய்யும். அடிக்கோல் ஒரு மேசையின் அகலம், நீளம், உயரம் ஆகியவற்றை அளந்து காட்டும். அவ்வாறு அறிந்த உயரம் நல்லதா, அகலம் பொருத்தமானதா என்பவற்றை அளவீடு காட்டாது. மேசையின் அளவு போதவில்லை, அல்லது உயரம் சரியானது அன்று என்பதைக் கூறுவதுதான் மதிப்பீடு. மதிப்பீட்டின்படி பின்னர்த் தவற்றை நீக்கவும் செப்பனிடவும் முடியும். இத்தகு முயற்சிதான் அளவீட்டை மதிப்பீடாக மாற்றும்.

ஆசிரியர் தகுதி, மாணவர் எண்ணிக்கை, நூல் நிலைய அளவு, கட்டட வசதி, இறுதி வகுப்பில் மாணவர்களின் வெற்றி ஆகியவற்றை வைத்துப் பள்ளியின் சிறப்பை மதிப்பிடுவதுண்டு. அவை மேல் வாரியானவை; ஆழமற்ற கணிப்புகள் ஆகும்.

இவற்றிற்கு மாறாகப் பள்ளியின் கல்வித் திட்டம், மாணவர்கள் செயலில் ஈடுபட்டிருத்தல், நூல் நிலையச் செயற்பாட்டு வசதிகள், நெறிப்படுத்தும் வாய்ப்புகள், கற்பித்தல் முறை, பணியிடைப் பயிற்சிக்கான வாய்ப்புகள், மாணவ ஆசிரிய ஆளுமை வளர்ச்சி போன்றவை தேவை எனினும் அவற்றின் வளர்ச்சி பற்றிய வாய்ப்புகளையும் ஆய்வுகளையும் செய்ய வேண்டுமென்ற தேவை கூட உணரப்படவில்லை. கல்வி நிறுவனங்களில் தேவையைத் தெரிந்த பிறகு, சரியாக அளவிட முடியுமா என்ற முனைப்பிலும் கல்வியைப் பற்றித் தொடர்பு கொண்டுள்ளோர் நினைத்துச் செயற்படுவதில்லை (இராசு இசுடான்லி-1955). சமூகத்துடன் பள்ளிக்கான நேரிடைத் தொடர்பைக்கூட மதிப்பீடு செய்ய முடியாத நிலை உள்ளது. அத் தொடர்பானது அரசியல் தொடர்பாகி விடுமோ என்ற அச்சத்துடன் இயங்கும் கல்வி நிறுவனங்களும் உள்ளன.

எழுத்தறிவை அளவிடுவது போலவே ஆளுமை, உடல்நலம், மனவளம், சமூக உறவு போன்றவற்றையும் மதிப்பீடு செய்தல் கல்வியின் முழுவளர்ச்சிக்கும், மறைமுகமாக நாட்டின் உயர்விற்கும் இன்றியமையாததாகும்.

ஆராய்ச்சியைக் கூட மதிப்பீட்டு ஆராய்ச்சியாக அமைக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் காலமும் பொருளும் வீணாகும் என்பதைத் தடுக்க முடியாது. மாணவர்கள், நிறுவனங்கள், சமூகம் போன்றவை இணைந்து இயங்கும்போது சரியான ஆராய்ச்சியை நடத்த முடிவதில்லை. ஆராய்ச்சியின் எல்லாக் கட்டங்களிலும் மதிப்பீட்டைப் புகுத்திக் கொண்டால் ஆராய்ச்சி நெறிப்பட்டுப் பயனளிப்பதாக அமையும்.

**மதிப்பீட்டின் கருத்து**: மதிப்பீடு (Evaluation) வாழ்நாள் முழுவதும் நிகழக் கூடியது. அளவீடும் மதிப்பின் திறனாய்வும் சேர்ந்ததே மதிப்பீடு. கற்றல் என்பது குறிக்கோள்கள், கல்விப்பட்டறிவு, மதிப்பீட்டு முறைகள் ஆகிய மூன்றுடனும் தொடர்பு கொண்டது. கற்றல் நிகழ்ந்தது என்பது நடத்தையில் மாற்றத்தை அறிவிப்பதாக இருத்தல் வேண்டும். அம்மாற்றங்கள் உடல் உளச் செயல்களாகவோ உணர்வுகளைச் சார்ந்தனவாகவோ இருக்கலாம். அவை அனைத்தும் செய்திகளாகவோ திறன்களாகவோ இருக்கலாம் (தமயந்தி பாக்கியநாதன் – 1970).

**கல்வித் திட்ட மதிப்பீடு**: பள்ளிகளில் நிகழ்த்தும் மதிப்பீட்டிற்கும் கல்லூரிகளில் நிகழ்த்தும் மதிப்பீட்டிற்கும் மிகுந்த வேறுபாடு இருந்து வருகின்றது. பள்ளிகளில் பாடங்களின் தொடர்பு, நிரல்முறை, ஒருமைப்பாடு, கால அளவு, விரும்பும் மாற்றங்கள், தேவையான தேர்ச்சி ஆகியவை அடிப்படையாக அமைகின்றன. கல்லூரிகளில் பாடங்களின் தொடர்பு அந்த அளவிற்குத் தெளிவாக இருக்காது. கல்லூரிகளில் மாணவர் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும்படி கல்வித்திட்டம் அமைந்து அதற்கேற்ப மதிப்பீடு இருக்க வேண்டும். தொழிற் கல்வியின் நோக்கங்கள் பெரும்பாலும் மிகவும் தெளிவாக இருக்கின்றன.

கல்வித் திட்டத்தைப் பொறுத்த மட்டிலும் மாணவர்களின் வளர்ச்சியை மனத்தில் கொண்டிருக்கும் போது மதிப்பீட்டைச் சில புதிய அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணைத்து அமைத்துக் கொள்ளுதல் வேண்டும் (கூலி, உலோனசு – 1976).

1) கற்பிக்க வேண்டிய செய்திகளைச் செயல்கள் அடிப்படையில் விவரித்துக் கொள்ளவேண்டும். 2) கற்பிப்பதற்கு முன்பிருக்கும் கல்வியின் தரத்தை ஆராயும்பேர்து குறையறிதல் அடிப்படையில் தவறுகள் சுட்டப்படல் மிகமிக இன்றியமையாதது, 3) பாடத்திட்டத்தை அமைக்கும்போது சூழ்நிலையை உட்படுத்தி, செயல்திட்டங்களாகப் போதனைஅமைத்தல் வேண்டும் 4) தேர்ந்தெடுத்த நோக்கங்களை அளவிடும்படி சோதனைகளை அமைத்தல் வேண்டும், 5) இறுதிக் கட்டத்தில் விரும்பிய அடைவு நிகழ்ந்துள்ளதா என்றறிய மதிப்பீடு தேவை.

மதிப்பீடானது செயல்முறை முடிவுகளை எடுப்பதற்காக உதவ வேண்டுமே அன்றிப் பெயருக்காக மதிப்பீடு செய்வது கூடவே கூடாது என்றாகி வருவது இன்றைய புதிய மதிப்பீட்டுக் கொள்கை.

ம.பெ.

**துணை நூல்கள்:**

Cooley, W.W. and Lohnes, P.R., Evaluation Research in Educations, Irvington Publishers, New York, 1976.

Dressel, P.L., Handbook of Academic Evaluation, Jossey - Bass Publishers, San Francisco, 1976.

Ross, C.C. & Stanley, J.C., Measurement in Today's Schools, Prentice - Hall, Inc. New York, 1955.

**மதிப்பு** மனிதனுடைய விருப்பங்களுக்கு வரையறையில்லை. ஆனால், அவ்விருப்பங்களை நிறைவேற்றப் பயன்படுகிற பொருட்களோ வரையறைக்குட்பட்டன. இந்நிலையில், எந்தெந்த விருப்பங்களை நிறைவேற்ற எவ்வெப்பொருட்களைப் பயன்படுத்துவது என்ற தெரிவுச் சிக்கல் தோன்றுகிறது. அதனால், பொருட்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதாவது பொருட்களுக்கு மதிப்புச் சூட்டப்படுகிறது. இந்த

மதிப்புதான் பொருளியல் கருத்துகள், செய்கைகள், கொள்கைகள் ஆகியவற்றின் மையக் கூறாகக் கருதப் பெற்று வருகிறது. ஆடம் சுமித்து (Adams Smith) பொருட்களுக்கு இருவகைமதிப்புகள் உள்ளனவென்று குறிப்பிட்டார். அந்தக் குறிப்பை மையமாகக் கொண்டுதான் காரல் மார்க்சு (Karl Marx) தம் முடைய முதலாளித்துவச் சுரண்டல் கோட்பாட்டை விளக்கினார்.

ஆடம் சுமித்து 'மதிப்பு' என்னும் சொல்லை இரு வேறு கருத்துகளில் ஆண்டுள்ளார். சில நேரங்களில் அது ஒரு பொருளின் பயனைக் குறிக்கிறது. அதனைப் 'பயன் மதிப்பு' (Value in Use) எனலாம். அதற்கு மாறாக, அது ஒரு பொருளின் மாற்று மதிப்பைக் குறித்து நிற்பதுமுண்டு. 'மாற்று மதிப்பு' (Value in Exchange) எனப்படுவது, ஒரு பொருளை வேறொரு பொருளுக்கு ஈடாக மாற்றும் விகித மதிப்பாகும். பிறவற்றை ஈடாகப் (அல்லது மாற்றாக) பெறுவ தற்கு ஒரு பொருளுக்கு இருக்கும் ஆற்றலே அதன் மதிப்பு; ஒரு பொருளை வாங்குஞ் சக்தியே அதன் மதிப்பு. ஒரு வேட்டி கொடுத்தால் நான்கு துண்டு கள் கிடைக்குமென்றால் ஒரு வேட்டியின் மதிப்பு நான்கு துண்டுகள் (அல்லது துண்டின் மதிப்பு நான் கிலொரு வேட்டி) எனப்படும். பொருளியலில் மதிப்பு என்பது மாற்று மதிப்பை மட்டுமே குறிக்கிறது.

உயிர்வாழ இன்றியமையாத காற்று,நீர் போன்ற பொருட்களுக்குப் பயன்மதிப்பு மிகவுண்டு. ஆனால், மாற்று மதிப்போ அறவேயில்லை. நேர்மாறாக, வைரம் போன்ற பயன்மதிப்புக் குறைந்த பொருள் களுக்கோ மிகவுயர்ந்த அளவு மாற்று மதிப்பு உள்ளது. மதிப்பை இயற்றுவது உழைப்பேயெனக் கொண்டு, பொருட்களின் தராதர மதிப்பு அவற்றின் உற்பத்தியில் ஈடுபடுத்தப் பெற்றுள்ள உழைப்பின் அளவைப் பொறுத்தது என நிறுவி, காற்றும் நீரும் மாற்று மதிப்பின்றியிருக்கக் காரணம் அவற்றின் உற் பத்தியில் உழைப்பு ஈடுபடுத்தப்படாமைதான் என்றும், வைரம் மதிப்பு மிக்குள்ள பொருளாகத்திக ழக் காரணம் அதன் உற்பத்தியில் உழைப்புச் செல விடப்பட்டுள்ளமை தான் என்றும் சுமித்து குறிப்பிட் டார்.

காரல் மார்க்சும் உழைப்பு மட்டுமே மதிப்பை உண்டு பண்ணத் தக்கது என்கிறார். ஒரு முதலாளித் துவச் சமூகத்தில், தொழிலாளர் தம் உழைப் பாற்றலை மாற்ற (விற்க) முன்வருகிறார். எல்லா மதிப்புகளையும் போல, இந்த உழைப்பு ஆற்றலின் மதிப்பும், அதனுடைய உற்பத்தியில் செலவிடப் பெற்றுள்ள உழைப்புக்குச் சமமாக இருக்கும். உழைப்பாற்றலின் உற்பத்தி, உழைப்பவருக்கு இன்றி யமையாத உணவு முதலியவற்றைச் சார்ந்துள்ளது. ஆகவே இந்த உழைப்பாற்றலின் மதிப்பு, குறிப்பிட்ட தொழிலாளர் உழைப்பதற்குத் தேவையான உணவு முதலிய பொருட்களின் மதிப்புக்குச் சமமாக இருக் கும். ஆனால், முதலாளித்துவ நடைமுறையுலகில், இந்த அளவு பொருட்களைப் பெறுவதற்கு, அவர் உண்மையில் வேலை செய்கிற நேரத்தைவிடக் குறை வாக வேலை செய்தால் போதும். ஆகவே, அந்த அதிகப்படியாக உழைக்கும் நேரத்தில் தொழிலாளர் ஓர் எச்ச மதிப்பை உற்பத்தி செய்கிறார். அம்மதிப்பை முதலாளி தமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறார். ஒரு தொழிலாளர் 10 மணி நேரம் வேலை செய்வ தாக வைத்துக் கொண்டால் அவர் தமக்குத் தேவையான உணவு முதலியவற்றை வாங்குவதற் காக 6 மணி நேரம் வேலை செய்தால் போதுமென இருந்தால், அவர் அதிகப்படியான வேலை செய்யும் அந்த 4 மணி நேரத்தில் உற்பத்தி செய்வதை யெல்லாம் முதலாளி பறித்துக் கொள்ள நேர்கிறது. இதுதான் முதலாளித்துவச் சுரண்டல் என்பார் காரல் மார்க்சு.

ஆயிரமாயிரம் பொருட்கள் உலகில் வழங்கு கின்றன. பல்லாயிரம் பொருட்களுக்கிடையில் ஒரு பொருளின் மாற்று மதிப்பை, அத்தனை பொருட் களிலும் கூறுவது அவ்வளவு எளிதன்று. வேட்டியின் மதிப்பு அதற்கு ஈடாகக் கிடைக்கும் துண்டில் மட்டு மல்லாது, பிற பல்வேறு பொருட்களிலும் அதனைக் கணித்துச் சொல்ல வேண்டுமெனில், ஒரு மிக நீண்ட பட்டியலை அல்லவா இயற்ற வேண்டி வரும். அந்தத் துன்பத்தைத் தவிர்க்கவே, பொது மதிப்பளவையா கப் 'பணம்' என்னும் பொருள் பயன்படுத்தப் படு கிறது. ஒரு பொருளின் மதிப்பை இவ்வாறு பணத்தின் வாயிலாகச் சொல்லும்போது, அது அதன் 'விலை' எனப்படும். விலை என்பது ஒரு பொருளின் பண மதிப்பு. பணத்துக்கும் ஒரு பொருளுக்குமுள்ள விகி தமே விலை. ஒரு வேட்டி இரண்டு உரூபாய் விகிதத் திலும் ஒரு துண்டு அரை உரூபாய் விகிதத்திலும் கிடைக்குமானால்,இந்த உரூபாய் விகிதங்களை விலை என்று சொல்வர்.

முக்கியமான ஒன்றை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். விலைகள் பொதுவாக ஏறலாம்; இறங் கலாம். போர்க்காலத்தில் ஏற்படுவது போல, எல்லாப் பொருட்கள் விலையும் ஒரு சேர ஏறலாம்; அல்லது பொருளாதார மந்த காலங்களில் ஏற்படுவது போல அது இறங்கலாம். ஆனால், எல்லாப் பொருட்கள் மதிப்பும் இதுபோன்று ஒருசேர ஏறவோ இறங்கவோ இயலாது. ஏனெனில், 'மதிப்பு' என்பதே ஒரு தொடர்பு குறிக்கும் சொல்தான். ஒரு பொருளின்

மதிப்பு மற்றொரு பொருளின் அளவில் சொல்லப் படுகிறது. எனவே, ஒரு பொருளின் மதிப்பு ஏறுகிற தென்றால் அடுத்ததன் மதிப்பு இறங்கித்தானாக வேண்டும் (முன் கண்ட எடுத்துக்காட்டில், வேட்டியின் மதிப்பு ஏறுகிறதென்றால் ஒரு வேட்டிக்கு மாற்றாக நான்கு துண்டுகளுக்குப் பதில் ஐந்து துண்டுகள் கிடைத்தாக வேண்டும். அப்போது, துண்டின் மதிப்பு இயல்பாகவே நான்கிலொரு வேட்டி என்ற படியி லிருந்து ஐந்திலொரு வேட்டியாக இறங்கி விடுகிறது). இரண்டின் மதிப்பும் ஒரே நேரத்தில் ஏறவோ இறங் கவோ முடியாது.

ஒரு தடையிலாப் பொருளியல் அமைப்பில் விலை ஏற்பாடு, பொருளியல் செய்கைகளையெல்லாம் தானாகவே கட்டுப்படுத்தி வருகிறது என்பது தொன்மை மரபின் கருத்து. நுகர்வோருடைய விருப் பத்தெரிவு பொருள் விலையில் எதிரொலிக்கிறது. இந்த எதிரொலிப்பிற்குத் தக்கவாறு, உற்பத்தியாளர் தம்முடைய உற்பத்திப் போக்கை ஒழுங்குபடுத்திக் கொள்கின்றனர். உற்பத்தியாளர் முடிவுகள், உற்பத் திக் காரணிகள் தேவையில், அவற்றின் ஊதிய அளவு களில் எதிரொலித்து, அவற்றின் ஆட்சியை ஒழுங்கு படுத்தி விடுகின்றன. இவ்வாறு நுகர்வு, உற்பத்தி, வளங்களின் ஆட்சி ஆகிய அனைத்தையுமே கட்டுப் படுத்துவது விலை ஏற்பாடு என்பது நிறுவப்படுகிறது.

தே.வே.

**மதிப்புணர்வுக் கல்வி**: மதிப்புணர்வு என்பது உள்ளத்திலிருந்து எழும் உணர்வு, நடத்தை ஆகிய வற்றையும், அந்த உணர்வும் நடத்தையும் மற்றவர் களாலும் மதிக்கப்படுகின்றனவா, ஏற்றுக் கொள்ளப் படுகின்றனவா என்பதையும் குறிக்கின்றது. சிறந்த மதிப்புணர்வு மற்றவர்களாலும் ஏற்றுக் கொள்ளப் படல் வேண்டும்; மற்றவர்களுக்கும் நன்மைபயக்கக் கூடியதாக அமைந்திடல் வேண்டும்; மனித சமுதா யத்தை வழிநடத்திச் செல்லக் கூடியதாகவும் இருத் தல் வேண்டும்.

மதிப்புணர்வைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்த லாம்: 1) தனி மனித மதிப்புணர்வு (Personal value), 2) சமுதாய மதிப்புணர்வு (Social value), 3) ஆன்மிக மதிப்புணர்வு (Spiritual value), 4) நன்னடத்தை மதிப்புணர்வு (Moral value), 5) அறிவாற்றல் மதிப் புணர்வு (Intellectual value), 6) உடல்நல மதிப் புணர்வு (Health value), 7) இன்ப மதிப்புணர்வு (Pleasure value), 8) பொழுதுபோக்கு மதிப்புணர்வு (Recreational value), 9) பொருளாதார மதிப்புணர்வு (Economic value), 10) அழகு மதிப்புணர்வு (Aesthe- tic value).

மதிப்புணர்வுகள் வகைப்படுத்தப் பட்டிருப்பினும் அவை ஒவ்வொன்றும் தொடர்புடையனவே ஆகும். ஒவ்வொன்றும் மற்றவற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது. அவற்றைத் தனித்துப் பார்ப்பதோ தனித்தனியாகக் கற்பிப்பதோ கடினமாகும். ஏனெ னில், மனித வாழ்க்கையும், வாழ்க்கைத் தத்துவமும் பிரித்துணர முடியாதவையாகும். மதிப்புணர்வும் மனித வாழ்க்கையோடு இணைந்ததே.

இந்த மதிப்புணர்வுகளை இருபெரும் பகுதி களாகப் பிரிப்பதனால் அவற்றை தனிமனித மதிப் புணர்வு, சமுதாய மதிப்புணர்வு என்று கொள்ள லாம். நெகிழ்வுறும் திறன், தன்னலமின்மை, துணிவு, மனநிறைவு, ஒழுக்கம், காலம் தவறாமை, நாணயம், நேர்மை, முழு நிறைவு, விடாமுயற்சி, எதிர்காலத் தின் மீது நம்பிக்கை, தலைமைப் பண்பு, பணிவு, தன்னடக்கம், தன்னம்பிக்கை, எளிமை, தோழமை, சாதிக்கும் திறன், நீதி, உருவாக்கும் திறன், உண்மை யுடைமை, ஒத்துணர்வு, அருளுடைமை, அன்பு, பரிவு, அழகுணர்வு, மன்னிக்கும் பண்பு, கடவுள் பக்தி, துறவு, பற்றற்ற வாழ்வு முதலியன மதிப்புணர்வுகளுள் தனிமனிதச் சார்புடையவை என்று கூறலாம்.

தியாகம், சிறந்த பழக்கவழக்கங்கள், வாய்மை, தவறு செய்யாமை, நன்றியறிதல், நகைச்சுவை உணர்வு, நட்பு, பெருந்தன்மை, தாராள மனப் பான்மை, நன்றியுணர்வு, விருந்தோம்பும் பண்பு, இன்னா செய்யாமை, பொறுத்துக்கொள்ளும் திறன், நாட்டுப் பற்று, குடியுரிமை உணர்வு, சுதந்திர உணர்வு, சுற்றுப்புறச் சூழல் பற்றிய உணர்வு, நீதி, அமைதியில் நாட்டம், சமநிலை, சமயச் சார்பின்மை, வகுப்பு ஒருமைப்பாட்டுணர்வு, கூட்டுறவு ஆகிய மதிப் புணர்வுகளைச் சமுதாய மதிப்புணர்வுகள் என்று வகைப்படுத்தலாம். தனிமனித மதிப்புணர்வுகளும் சமுதாய மதிப்புணர்வுகளும் ஒன்றை ஒன்று சார்ந் திருப்பவை. ஏனெனில் தனிமனிதனே சமுதாயமாக வளர்ச்சியடைகிறான்.

**மதிப்புணர்வுக் கல்விப் பாடத்திட்டம்**: மதிப்புணர்வு களை வீட்டிலும், சுற்றுப்புறச் சூழலிலும் கிடைக்கும் வாய்ப்புகள் மூலமாகக் குழந்தை கற்றுக் கொள் கின்றது. அது கல்விக் கூடங்களுக்கு வரும்போது கற்றவற்றை ஊக்குவிக்குமாறும், அவை நிலைத்திருக்கு மாறும் கற்பிக்கும் பல்வேறு பாடங்களில் மதிப் புணர்வுக் கல்விக்குக் கல்வி நிறுவனங்களில் இடமளிக் கப்படல்வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் மறைமுக மாக (Hidden Curriculum) மதிப்புணர்வுக் கல்விக் கான கருத்துகளைப் புகுத்திடல் வேண்டும். தனியாக மதிப்புணர்வுக் கல்வியை ஒரு பாடமாகக் கற்பிப் பதை விடக் கற்பிக்கப்படும் பாடங்கள், துணைப்

பாடச் செயல்கள் ஆகியவற்றில் மதிப்புணர்வுக் கல்விப்பகுதியாக அமைவதுதான் இயற்கையானதாக, மாணவர்களின் மனத்தில் எளிதாகப் பதியக்கூடிய தாக அமையும்.

எடுத்துக்காட்டாக, அறிவியல், வரலாறு, மொழி, கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் போது அவற்றின் ஒவ்வொரு பாடத்திலும் பல்வேறு மதிப் புணர்வுகளை மறைமுகமாக மாணவர்களுக்குப் புகட்டிடல் வேண்டும். அறிவியல் வளர்ச்சி மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்துக் காகவும் ஏற்பட்டது. அதன் பயனாய் உலகில் அமைதி நிலவ வாய்ப்புண்டு. அப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அவ்வுணர்வோடும் குறிக் கோளோடும் பாடங்களைக் கற்பித்திடல் வேண்டும்.

**துணைப் பாடச் செயல்களும் புறப்பாடச் செயல் களும்:** இவற்றின் மூலமாக எளிதாக மதிப் புணர்வுக் கல்வியை அளித்திடல் முடியும். எடுத்துக் காட்டாக, விளையாட்டு, நாட்டு நலப்பணித்திட்டம், வயது வந்தோர் கல்வி, வாதங்கள், பயணங்கள், பாடி வாழ்க்கை (Camps), கதை, பாட்டு, நாடகம், சாரண சாரணியர் இயக்கம், குடிமைப் பயிற்சி, மாணவர் மன்றங்கள், அனைத்துச் சமய வழிபாடு போன்ற செயல்கள் மூலமாக எளிதாக மதிப்புணர் வுக் கல்வியை மறைமுகமாகவும், நேர்முகமாகவும் அளிக்கலாம்.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை ஒரே தன்மைத்தாக ஏற்றுக் கொள் ளும் மனம், ஒற்றுமை, அமைதி, பணிவு, தன்னம் பிக்கை, ஒழுக்கம், தன்னடக்கம், வாய்மை, அகிம்சை, தன்னலமின்மை, உடல் உழைப்பின்பெருமை, பிறருக்கு உதவும் பண்பு, காலம் தவறாமை, நாட்டுப் பற்று, தேசிய ஒருமைப்பாடு, விருந்தோம்பல், இயற்கைச் சூழலின் மீது அக்கறை, கடவுள் பக்தி, சமய ஒற் றுமை, பிற சமயங்களுக்கு அளிக்கும் மதிப்பு, சகோதரத்துவம், நீதி, கடமையுணர்வு, மன்னிக்கும் பண்பு, பெற்றோர், ஆசிரியர், பெரியோர்களுக்குக் காட்டும் மரியாதை போன்ற பண்புகளைத் துணைப் பாடச் செயல்கள் வழியே மாணவரிடையே உரு வாக்க இயலும்.

கல்வி நிறுவனங்களில் துணைப் பாடச் செயல் களுக்கும் (Co-Curricular activities) புறப்பாடச் செயல்களுக்கும்(Extra Curricular activities)முதன்மை அளிப்பதோடு அவற்றின் வழியே மாணவர் சமுதாயத் துக்கு வழிகாட்ட வேண்டும் என்ற உணர்வும் ஆசி ரியர்களிடையே ஏற்படல் வேண்டும். துணைப் பாடச் செயல்களை மாணவர்கள் எப்பருவத்தினராக இருப் பினும் விரும்பி ஏற்கின்றனர். அதில் விருப்பத்தோடு ஈடுபடவும் செய்கிறார்கள். ஆகவே, எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் துணைப் பாடச் செயல்களுக் கென்று ஒதுக்கப்பட்ட பாட வேளைகளை முழுமை யாகப்பயன்படுத்தல் வேண்டும். பாடங்களில் தேர்ச்சி பெற வேண்டும், மாணவர்கள் தேர்வில் சிறந்த மதிப் பெண்கள் பெற வேண்டும் என்ற குறுகிய வட்டத் திலிருந்து விலகி மனித ஆற்றலும், வலுவும் முழுமை யாக வளர்ச்சியுற வழிவகுக்க வேண்டும் என்ற குறிக் கோளினை மேன்மையாகக் கொண்டு கல்வி அமை தல் இன்றியமையாதது.

மதிப்புணர்வுக் கல்விக்கான கல்வித் திட்டம் அணுகுமுறை, மதிப்புணர்வுக் கல்வியின் குறிக்கோள் ஆகியன வெறும் அறிவுத் திறனைப் பெறுதல் மட் டும் அன்று. நடத்தையிலும் பழக்கவழக்கங்களிலும் அம் மதிப்புணர்வுகள் தென்படுதல் வேண்டும். மதிப் புணர்வுக் கல்விக்கான பாடத்திட்டம்வகுக்கும்போது ஒருவர் மனத்தில் கொள்ள வேண்டிய சில அணுகு முறைகள் உள்ளன. அந்த அணுகுமுறைகள் மேற் கூறிய குறிக்கோள்களை எய்தும் வகையில் அமைந் திடல் வேண்டும்.

1) மதிப்புணர்வுகளைப் பற்றிய பல்வேறு கருத்து கள் பற்றிய அறிவு, 2) வாழ்க்கையில் ஏற்படும் சிக் கல்களுக்குத் தீர்வு காணல், 3) ஆளுமை வளர்ச்சி, 4) கல்வியின் குறிக்கோள்களும் பாடத்திட்டத்தின் பங்கும், 5) மதிப்புணர்வுகளை வகைப்படுத்தி அவற் றின் இன்றியமையாமையை உணர்தல், 6) மதிப் புணர்வுகளைப் பெறுவதற்கான அனுபவ அறிவு, 7) மதிப்புணர்வு பற்றிய சட்டதிட்டங்களை வகுப்பதில் மாணவர்களை ஈடுபடுத்துதல், 8) ஆன்மிக உணர்வை வளர்ப்பதற்கான வாய்ப்பு, 9) மற்ற பாடங்கள், துணைப் பாடச் செயல்கள் வழியே மதிப்புணர்வை உண்டாக்குதல் ஆகிய ஒன்பது அணுகுமுறைகளை மதிப்புணர்வுக் கல்வியை அளிப்பதற்கான பாடத்திட் டம் வகுக்கும்போது கடைப்பிடிக்க வேண்டும். மாண வர்கள் மனத்தில், மதிப்புணர்வுக் கல்வியும் ஒரு தேர் வுக்கான பாடமே என்ற உணர்வினை எழுப்பாது, அதுவாழ்க்கைக்கான கல்வி, வாழ்க்கையில் ஒவ்வொரு வரும் நாள்தோறும் கையாள வேண்டிய கருத்துகள் பொதிந்தது என்னும் உணர்வை எழுப்ப வேண்டும்.

**ஆசிரியர்களின் பங்கு:** மதிப்புணர்வுக் கல்வியை அல்லது பல்வேறு மதிப்புணர்வுகளை மாணவர்களி டையே கற்பிக்கவும், உண்டாக்கவும் வேண்டும் என்ற உணர்வு முதலில் ஆசிரியர் சமுதாயத்தில் ஏற்படல் வேண்டும். நம்பிக்கை உள்ளவர்களும், மதிப்புணர்வு உள்ளவர்களும் மட்டுமே மாணவர்களுக்குமதிப்புணர் வுக் கல்வியைக் கற்பிக்க இயலும். ஏனெனில், சுடர்

விட்டு எரியும் விளக்கினால்தான் மற்றொரு விளக்கை ஏற்ற முடியும்.

ஆகவே, ஆசிரியப் பயிற்சியில் மதிப்புணர்வுக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். கல்வியியல் கல்லூரிகளிலும், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலும் மாணவ ஆசிரியர்களுக்கு மதிப்புணர்வுகள் வளர்வதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். பாடத்திட்டத்திலும், துணைப் பாடச் செயல்களிலும் மதிப்புணர்வுக் கல்விக்கு முதலிடம் அளிக்கவேண்டும். ஆசிரிய மாணவர்கள் கற்பிக்கும் பயிற்சியில் (Teaching practice) ஈடுபடும் போதே மதிப்புணர்வுக் கல்வியை அவர்கள் எவ்வாறு பல்வேறு பாடப்பகுதிகளில் இணைத்துக் கற்பிக்கிறார்கள் என்பதும் மதிப்பிடப்படல் வேண்டும்.

ஏற்கனவே, கல்வி நிறுவனங்களில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கும், மதிப்புணர்வுக் கல்வி கற்பிக்கும் முறைகள் பற்றிய பணியிடைப் பயிற்சிகள் (Inservice training) ஏற்படுத்தப்படல் வேண்டும். அவர்களின் உள்ளத்திலும், மதிப்புணர்வுகளை உண்டாக்கி, மதிப்புணர்வுக் கல்வியின் இன்றியமையாமையை உணர்த்திடக்கூடிய விதத்தில் பணியிடைப் பயிற்சிகள் அமைந்திடல் வேண்டும். அவர்கள் தாமாகவே கதைகள், பாட்டுகள், நாடகங்கள் ஆகியவற்றை எழுதவும், அவற்றின் வழியே மதிப்புணர்வுக் கல்வியைக் கற்பிக்கும் திறனைப் பெற்றிடவும் வழி செய்ய வேண்டும்.

**சமுதாயத்தின் பங்கு**: மதிப்புணர்வுகளை வளர்ப்பது சமுதாயத்தின் பெரும் பொறுப்பு. பெற்றோர், உறவினர், சகோதர, சகோதரிகள், நண்பர்கள், அயலார் போன்றோரிடமிருந்து நேர்முகமாக ஒவ்வொருவரும் மதிப்புணர்வுகளைக் கற்றுக் கொள்கின்றனர். சமுதாயத்தில் உள்ளோரின் நடத்தை, குறிப்பாகக் குழந்தைப் பருவத்தினைப் பாதிக்கின்றது. அந்த இளம் குழந்தைகளின் மனத்தில் ஏற்படும் தாக்கம் அவர்கள் சமுதாயத்தில் ஒரு பொறுப்புள்ளவர்களாக அங்கம்வகிக்கும் வரை தொடர்கிறது. அரசு எவ்வழியோ குடியும் அவ்வழியே என்பதற்கேற்ப வயது வந்தோர்களே வழிகாட்டியாக அமைகிறார்கள். ஆகவே, மதிப்புணர்வுகளை வயது வந்தோரும் மதித்து நடக்க வேண்டும். சமுதாயத்தில் நடக்கும் தீமைகள் தொடராதவாறு அவர்கள் அரணாக அமைந்தால்தான் இளம் மனத்தில் மதிப்புணர்வுகள் வளர்வதற்கு அது உறுதுணையாக அமையும்.

மதிப்புணர்வு என்பது மனத்தில் ஏற்படும் மாற்றமும், அதன் பயனாய்த் தனிமனித வாழ்க்கை முறையில் மாறுபாட்டினை ஏற்படுத்துவதுமேயாகும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பதுபோல இளம்சிறார் மனத்தில் பதியும் கருத்துகள் வாழ்நாள் முழுமைக்கும் பயனுள்ளவையாக அமையும். ஆகவே, மதிப்புணர்வுகளை ஊட்டுவதில் வீடும், சமுதாயமும் முழுமையாக ஈடுபடல் வேண்டும். அதே போன்று பள்ளிமுன் பருவக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை மாணவர்களுக்கு மதிப்புணர்வுக் கல்வியைக் கற்பிக்க வேண்டும். மதிப்புணர்வுகள் வளர்வதற்கான வாய்ப்புகளையும் அளிக்க வேண்டும். பாடத் திட்டங்களும், பாடப்புத்தகங்களும் மதிப்புணர்வுக்கல்வியை மாணவர்களுக்கு ஊட்டுமாறு மாற்றியமைக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் இக்கருத்துகளையும் கூறல் வேண்டும். மதிப்புணர்வுகளை வாழ்க்கைத் தத்துவமாக இன்றைய இளைய சமுதாயம் ஏற்றுக் கொண்டால் வருங்காலம் ஒளிமிக்கதாக அமைந்திடும் என்பதில் ஐயமில்லை. ஜி.ப.

## மதிப்பெண் வழங்கும் முறைகள்:

மாணவர்களின் ஆற்றலையும், ஆளுமையையும் ஊக்குவிப்பது தான் கல்வியின் குறிக்கோள். அதனை ஊக்குவிப்பதும், தூண்டுகோலாக விளங்குவதும் ஆசிரியரின் கடமை. அப்பயன்களை, குறிக்கோளை எந்த அளவினதாக மாணவர்கள் அடைந்துள்ளார்கள் என்பதை அளவிடவும் (Measurement), மதிப்பிடவும் (Evaluation) கருவி தேவை. அந்தக் கருவி குறிக்கோளினை எத்துணையளவில் மாணவர்கள் அடைந்துள்ளார்கள் என்பதைத் துல்லியமாக (Accuracy), எளிதாக, வழக்கில் உள்ள முறைகளைக் கையாண்டு அளவிட, மதிப்பிட வேண்டும்.

**மதிப்பெண்கள்**: பொதுவாக மதிப்பீட்டு முறைகளில் மதிப்பெண்கள் வழங்கும் முறையே வழக்கில் உள்ளது. அவ்வாறு மதிப்பீடு செய்யும்போது சுழி (Zero) முதல் நூறு வரை மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. அம்முறை முழுமையாக ஒரு மாணவனின் திறமையை அளப்பதாக எண்ணப்படுகிறது. அம்மாணவன் பல்வேறு பாடங்களில், எடுத்துக்காட்டாக, கணிதம், மொழி, அறிவியல், சமூகவியல் போன்ற பாடங்களில் பெறும் மதிப்பெண்களுக்கு மொத்தமாகச் சராசரி கண்டு, அவன் தரம் முதல் வகுப்பு (I Class), இரண்டாம் வகுப்பு (II Class), மூன்றாம் வகுப்பு (III Class), தோல்வி (Failure) என்று கொண்டு முடிவெடுக்கப்படுகிறது. ஆனால், அப்பாடங்களுக்கு அளிக்கப்படும் மதிப்பெண்களின் அளவு, பாடங்களுக்குத் தகுந்தாற்போல் வேறுபடும். மொழியில் 50 முதல் 55 வரை விழுக்காடுள்ள மதிப்பெண்கள் வாங்கும் மாணவன், கணிதத்தில் 95 அல்லது 100 விழுக்காடு மதிப்பெண்கள் வரையும் பெறுகிறான். அந்த மதிப்பெண்களிலிருந்து அவனுக்கு

மொழியில் தேர்ச்சியில்லை அல்லது திறமை இல்லை என்றும், கணிதத்தில் மிகச்சிறந்த ஆற்றல் உண்டு என்றும் மதிப்பிட இயலாது.

மொழித் தேர்வில் 50 முதல் 55 வரை விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவன் திறமை மிக்கவனே. ஆனால், மொழித்திறனை அளவிடப் பயன்படுத்தும் அளவுகோல் வேறு, கணிதத்தில் அல்லது அறிவியலில் திறனை அளவிடப் பயன்படுத்தும் அளவுகோல் வேறு. ஆகவே, இந்த மூன்று பாடங்களின் மொத்த மதிப்பெண்களுக்குச் சராசரி காண்பது, அதன் அடிப்படையில் அவனுடைய தரத்தை முடிவெடுப்பது என்பது சரியன்று.

ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண்ணுக்கும், கடைசி மதிப்பெண்ணுக்கும் இடையேயுள்ள வேறுபாடு வெவ்வேறாக இருக்கும். மொழி, சமுதாயவியல் போன்ற பாடங்களில் 20 குறைந்த மதிப்பெண்ணாகவும் (Minimum), 60 அல்லது 70 அதிக மதிப்பெண்ணாகவும் (Maximum) இருக்கலாம். ஆனால், கணிதத்தில் '0' முதல் '100' வரை மதிப்பெண்களின் அளவு இருக்கலாம். ஆகவே, மதிப்பெண்களின் மதிப்புப் பாடத்திற்கேற்றாற் போல் வேறுபடுகின்றது.

**மதிப்பெண்கள் வழங்குவதில் உள்ள குறைபாடுகள்:** 1) பல்வேறு பாடங்களில் 60, 59, 55, 35 போன்று மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. பொதுவாக33,34 போன்ற மதிப்பெண்களைக் காண்பது அரிது. ஏனெனில், 35 மதிப்பெண் பெற்றால் தேர்ச்சி என்றும், அதற்குக் குறைவானால் தோல்வி என்றும் கூறுவர். மதிப்பீடு செய்பவர்க்கு 33, 34 மதிப்பெண்கள் பெறுவோர்க்கும் 35 மதிப்பெண்கள் அளித்துத் தேர்ச்சி பெறச் செய்ய வேண்டும் என்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. எனவே, இந்த மூன்று மதிப்பெண்கள் பெற்றவர்களும் ஒரே தரமாகக் கருதப்படுகிறார்கள். 2) 60, 59, 55 ஆகிய மதிப்பெண்கள் பெறும்மாணவர்கள் பல்வேறாகப் பிரிக்கப்படுகிறார்கள். 60 மதிப்பெண் பெறும் மாணவர் முதல் வகுப்பிலும், 59, 55 மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள் இரண்டாம் வகுப்பிலும், தேர்ச்சி பெற்றார்கள் என்பது கருதப்படுகிறது. ஆனால், அதனைச் சரியான மதிப்பீட்டு முறை என்றோ துல்லியமானது என்றோ கூறமுடியாது. இம்முறையில் பொதுவாக 5 முதல் 7 மதிப்பெண்கள் வரை ஒருவர் கூடுதலாக அல்லது குறைவாகப் பெறுவதற்கு வாய்ப்புள்ளது. இருவேறு மதிப்பீட்டாளர்களின் மதிப்பெண்களில்கூட இந்த வேறுபாட்டினை உணரமுடியும். எனவே, ஒருவர் பெறும் 59 என்ற மதிப்பெண் 55-க்கும் 65-க்குமிடையில் இருக்க வாய்ப்புள்ளது என்பதைப் பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆகவே, 59 என்ற மதிப்பெண், குறிப்பாக வாழ்வியல், மொழி போன்ற பாடங்களில் 55 - க்கும், 65க்கும் இடைப்பட்ட மதிப்பெண்களாகவும் இருக்கலாம். 3) மதிப்பெண்கள் வழங்கும் முறை பாடங்களுக்கேற்ப மாறுபடுவதோடுகூட, மதிப்பிடுவோரின் எதிர்பார்ப்பு, மனநிலை போன்றவற்றிற்கேற்பவும் மாறுபடும். அதனோடுகூடக் கல்லூரி, பல்கலைக்கழகங்களுக்கிடையேயும் மாறுபட வாய்ப்புள்ளது. ஆகவே, ஒரு பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் மதிப்பெண் அதே மதிப்பினை வேறு பல்கலைக்கழகத்தில் பெறுவதில்லை. இறுதியாக, 4) மதிப்பெண்களின் அடிப்படையில் பணிக்கு அல்லது பல்வேறு பல்கலைக் கழகங்கள் வழங்கும் படிப்பிற்குத் தேர்வு செய்யும்போது அங்கே மதிப்பெண்களின் வேறுபாடுகளைக் காணலாம். தேர்வு முறை, மதிப்பீட்டுமுறை, மதிப்பெண்கள் வழங்கும் முறை போன்றவை வேறுபடுவதால் எல்லோரையும் அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியான முறையாக இருக்க முடியாது. சில பல்கலைக்கழக மாணவர்கள் அதிகமான மதிப்பெண்களையும், சில பல்கலைக்கழக மாணவர்கள் குறைவான மதிப்பெண்களையும் பெற்றவர்களாக இருப்பினும் அவர்கள் திறமையில் வேறுபாடுகள் மிகுதியாக இருப்பதில்லை.

**தரச்சின்னங்கள்:** மதிப்பெண்கள் வழங்குவதினால் ஒருவரின் திறனை மதிப்பிடும்போது ஏற்படும் குறைபாடுகளைக் களையத் தரச்சின்னம் (Grading) வழங்கும் முறை கையாளப்படுகிறது. தரச்சின்னம் வழங்குவதில் இருமுறைகள் கையாளப்படுகின்றன. ஒன்று மதிப்பெண்களைத் தரச்சின்னமாக மாற்றுவது; மற்றொன்று நேரிடையாகவே தரச்சின்னம் வழங்கும் முறை.

**மதிப்பெண்ணைத் தரச்சின்னமாக மாற்றும் முறை:** இம்முறையில் முதலில் மதிப்பெண்கள் ஒவ்வொரு தாளுக்கும், ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்படுகின்றது. மூன்று ஆண்டு வினாத்தாள்கள் மதிப்பெண்களின் அடிப்படையில் அதிக மதிப்பெண்ணிலிருந்து, குறைவான மதிப்பெண் என்ற முறையில் ஆண்டுவாரியாக அடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டின் பரவலும் (Range) கணக்கிடப்பட்டு, 3 ஆண்டுக்கான சராசரி கணக்கிடப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் இந்தச் செவ்வெண் பரவல் (Normative scale) கணக்கிடப்பட வேண்டும். அதன் அடிப்படையில் கீழ்க்காணுமாறு வழங்கப்படுகிறது.

**நேரிடையாகத் தரச்சின்னம் வழங்குதல்:** நேரிடையாகத் தரச்சின்னம் வழங்கும் முறையில் ஒவ்வொரு

விடைக்கும் மதிப்பெண் கொடுக்காமல் அவற்றின் தன்மையை, தரத்தைக் கொண்டு தரச்சின்னங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு தாளுக்கும் மொத்தத் தரச்சின்னம், தரச்சின்னங்களின் எண்களைக் (Points) கூட்டி வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக,

| வ.எண். | தரச் சின்னம் | தரச் சின்னத்தின் குறிஎண் | விளக்கம் |
|---|---|---|---|
| 1. | O | 6 | தலைசிறந்தது |
| 2. | A | 5 | மிகச் சிறந்தது |
| 3. | B | 4 | சிறந்தது |
| 4. | C | 3 | சாதாரணம் |
| 5. | D | 2 | சாதாரணத்துக்குக்கீழ் |
| 6. | E | 1 | கீழானது |
| 7. | F | 0 | மிகவும் கீழானது |

குறுகிய விடை, கட்டுரை ஆகியவற்றிற்கு எளிதாக நேரிடையாகத் தரச்சின்னங்களை வழங்கிவிடலாம். ஆனால் புறவய (Objective type) விடைகளுக்கு மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டு மொத்தத்தைக் கண்டு, பின் அதனைத் தரச்சின்னங்களாக மாற்ற வேண்டும். 30 வினாக்கள் கேட்கப்பட்டால் மொத்தம் 30 குறியீட்டு எண்கள் (Points) கிடைக்க வாய்ப்புண்டு. அவ்வாறு கணக்கிடும்போது கீழ்க்காணுமாறு தரச்சின்னங்கள் வழங்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 27 – உம் அதற்கு மேலும் | O |
| 24 – 26 | A |
| 21 – 23 | B |
| 18 – 20 | C |
| 15 - 17 | D |
| 12 – 14 | E |
| 12 – உம் அதற்குக் கீழேயும் | F |

**தரச்சின்னங்களை நிறுவும் முறை:** தரச்சின்னங்களும், தரச்சின்னங்களின் குறிஎண்களும் வழங்குவதற்குச் சில விதிமுறைகள் தேவை. அந்த விதிமுறைகள் ஒவ்வொரு பாடத்தையும் கற்றலின் குறிக்கோள்களைப் பொறுத்து அமையும். புளூம்(Bloom) என்பாரின் முறைப்படி கற்றலின் குறிக்கோள்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தரச்சின்னங்கள் வழங்கும்போது ஒவ்வொரு விடையிலும் கீழ்க்காணும் குறிக்கோள்களை அவை நிறைவு செய்கின்றனவா எனக் கண்டறிந்து வழங்க வேண்டும்.

| | |
|---|---|
| O தலை சிறந்தது | 1. படைப்பாற்றல் (Creativity)<br>2. முதிர்ச்சி/அறிவு/கற்பனை (Maturity/intelligence/imagination)<br>3. ஏற்புடைமை (Relevance)<br>4. திறன் (Skills)<br>5. சரியானது (Correctness)<br>6. முறை (Form)<br>7. பாடப்பகுதி (Content) |
| A மிகச் சிறந்தது | 1. தேர்ச்சி/அறிவு/கற்பனை<br>2. ஏற்புடைமை<br>3. முறை<br>4. திறன்<br>5. சரியானது<br>6. பாடப்பகுதி |
| B சிறந்தது | 1. சரியானது<br>2. ஏற்புடைமை<br>3. திறன்<br>4. முறை<br>5. பாடப்பகுதி |
| C சாதாரணம் | 1. சரியானது<br>2. பாடப்பகுதி<br>3. ஏற்புடைமை<br>4. திறன் |
| D சாதாரணத்துக்கும் கீழ் | 1. சரியானது<br>2. பாடப்பகுதி |
| E கீழானது | 1. ஓரளவுக்குச் சரியானது<br>2. ஓரளவுக்குப் பாடப்பகுதி |
| F மிகவும் கீழானது | 1. தவறு<br>2. மிகவும் கீழான பாடப்பகுதி |

ஒரு தேர்வுத் தாளில் 10 குறுகிய வினாக்கள் ஒரே மதிப்புள்ளவையாக இருந்து ஒரு மாணவன்

அந்த 10 வினாக்களுக்கும் கீழ்க்காணுமாறு தரச்சின்னங்கள் பெறுகிறான்.

| கேள்வி எண்: | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தரச்சின்னம்: | O | A | A | B | A | B | B | C | B | B |

இந்நிலையில் அந்த மாணவனின் மொத்தத் தரச்சின்னம் கீழ்க்காணுமாறு மதிப்பிடப்பட வேண்டும்.

$$6+5+5+4+5+4+4+3+4+4=\frac{44}{10}=4.40 \text{ — B.}$$

அந்தக் குறிப்பிட்ட தாளுக்கு அந்த மாணவனுக்கு அளிக்கப்படும் தரச்சின்னம் B (4.40) ஆகும்.

ஒவ்வொரு கேள்வியின் விடைக்கும் வெவ்வேறு மதிப்பு (Weight) அளிக்கப்பட்டால் அந்த மதிப்புக்கு அளிக்கப்படும் தரச்சின்னங்களையும், குறியீட்டு எண்களையும் கண்டறிந்து அந்தத் தாளுக்குரிய தரச்சின்னம் வழங்கப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் தாங்களாகவே சில குறிக்கோள்களையும், தகுதியையும் மாணவன் ஒருபாடத்தைக் கற்றபின் பெறவேண்டும் என முடிவு செய்து, அவற்றை மாணவன் பெற்றுள்ளானா என்பதையும் முடிவு செய்யலாம். பாடத்தின் தன்மைக்கேற்ப எதிர்பார்ப்புகளும் மாறுபடும். ஆகவே, ஆசிரியர் அப்பாடங்களுக்கேற்ப மதிப்பெண் வழங்க வேண்டும். மதிப்பெண் வழங்கும் முறையைத்தான் இதுவரை பெரும்பாலும் ஆசிரியர்கள் பின்பற்றியுள்ளனர். தரச்சின்னங்கள் வழங்குவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு அதன்பின் மாற்றத்தைக் கொண்டு வந்தால் தரச்சின்னம் வழங்குதல் ஒரு சிறந்த முறையாகும். ஜி.ப.

**மதிப்பேற்ற வரி**: உற்பத்தி விலைகள் பொருளின் மதிப்பை ஏற்றிவிடுகின்றன. இவ்வாறு ஏறியுள்ள மதிப்பையே வரி விதிப்பின் அடிப்படையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்து அண்மை காலத்தில் பலராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு விதிக்கப்படும் வரி வழக்கமான விற்பனை வரி, ஆயங்கள் (Excises) ஆகியவற்றை விடச் சிறந்தது என்றும் கருதப்படுகிறது. பிரான்சில் (1954 – இல்) முதன் முதலில் விதிக்கப்பட்ட இவ்வரி, அந்நாட்டுடன் வரலாற்றுத் தொடர்புடைய பல தென்னமெரிக்க நாடுகளிலும், ஐரோப்பியப் பொது அங்காடி உருவாகியபின் பல ஐரோப்பிய நாடுகளிலும் விதிக்கப்பட்டு வருகிறது. இவ்வகைப் பட்ட வரியொன்று இந்தியாவிலும் 1986 ஏப்ரல் முதல் நடப்பிலுள்ளது.

ஐந்நூறு உருபாய் மதிப்புள்ள வித்து, உரம் உழைப்பு முதலியவற்றைக் கொண்டு உழவன் ஒருவன் ஆயிரம் உருபாய் மதிப்புள்ள பருத்தியை உற்பத்தி செய்வதாக வைத்துக்கொண்டால் இந்த மட்டத்தில் மதிப்பு உரூ.500/- அளவு ஏறியுள்ளது. அடுத்து இந்த உரூ.1000 மதிப்புள்ள பருத்தி, பஞ்சாக மாறும்போது உரூ.1200 – உம், நூலாக மாறும்போது உரூ.1800-உம், துணியாக மாறும்போது உரூ.2,500-உம் ஆக மதிப்புப் பெறுவதாக வைத்துக் கொண்டால், அந்த ஒவ்வொரு மட்டத்திலும் முறையே உரூ.500, 200,600,700 என மதிப்பு ஏறியுள்ளது. வரி விதிக்கும் போது, அம்மட்டத்தில் மொத்த மதிப்பு எவ்வளவு நிலவுகிறதோ (உரூ.1000 பருத்தி, உரூ. 1200 பஞ்சு, உரூ.1800 நூல், உரூ. 2500 துணி என)அதன் மீது வரி விதிப்பதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. இதற்கு மாறாக வரிவிதிக்கும்போது, குறிப்பிட்ட மட்டத்தில் எவ்வளவு மதிப்பு ஏறியுள்ளதோ (பருத்தி உரூ.500, பஞ்சு உரூ. 200, நூல் உரூ.600, துணி உரூ.700 என) அதன்மீது மட்டுமே வரி விதிப்பதுதான் மதிப்பேற்ற வரி (Value added Tax) எனப்படுகிறது.

நடைமுறையில், ஒவ்வொரு மட்டத்திலும் வரி செலுத்துவோர் மொத்த மதிப்புக்குமே வரி செலுத்தி வரலாம். ஆனால், ஒருவர் தாம் ஆண்ட கச்சாப் பொருள் முதலியவற்றிற்கு முன்னரே தாம் செலுத்தியுள்ள வரிகளுக்குக் கணக்குக் காட்டும்போது, அரசு அவற்றைத் திருப்பித் தந்து விடுகிறது. மேலே சொன்ன எடுத்துக்காட்டைத் தொடர்ந்தால், நூற்போர் தாம் செய்து விற்கிற உரூ. 1800 மதிப்புள்ள நூலுக்குக் குறிப்பிட்ட வீதத்தில் உரூ.180 வரி செலுத்திவிடுகிறார் என்று வைத்துக் கொண்டால் அப்போது, அவர் உரூ. 1200 க்குப் பஞ்சு வாங்கும் போது, அந்த உரூ.120 அவருக்குத் திருப்பித் தரப் பெற்று விடும். இதனால் அவரது நிகர வரிச்சுமை உரூ. 60 மட்டுமே என்றாகிறது.

மதிப்பேற்ற வரி ஒவ்வொரு கட்டத்திலும் சிறுகச் சிறுக வசூலிக்கப் படுவதால், அதனை மறைக்க வேண்டும் என்ற எண்ணம் வளர வழியில்லை. பல முனை விற்பனை வரி, அதற்கு மாற்றான உயர்வீத ஒருமுனை விற்பனை வரி ஆகியவற்றின் பளு மிகுதியாக இருப்பதால் அவற்றை மறைக்கும் எண்ணம் இயல்பாகவே ஏற்பட்டு விடுகிறது. மேலும், வழக்கமான பொருள் வரிகள், பொருள்களிடையே வரி விகிதத்தில் வேறுபாடு காட்டுவதுண்டு. மதிப்பேற்ற வரி இவ்வாறு வேறுபாடு காட்டாத நிலையில், அதன் விளைவுகள் ஓரஞ்சாராதிருக்கும். பொருளுற்பத்தியின் பல்வேறு மட்டங்களைத் தனியொரு நிறுவனம் செங்குத்தாகத் தொகுத்து முற்றுரிமைகளை

(Monopoly) வளர்க்கும் போக்கிற்கும் மதிப்பேற்ற வரி ஒரு முடிவு காண்கிறது. ஏனெனில், அத்தகைய தொழில் தொகுப்புகளின் வழியாக வரிகளை மறைக்க இப்போது வழியில்லாமல் போகிறது. மேலும், தாம் முன்னரே செலுத்திய வரிகளைத் திருப்பிப் பெற முடிவதால், அது சேமிப்பு, முதலாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. புரள் முதல் (Circulating Capital) செலவு குறிப்பிட்ட அளவு குறைவதால் உற்பத்திச் செலவும் குறையலாம்.

எல். கே. சா என்பவரின் (L.K.Jha) மறைமுக வரி விதிப்பு விசாரணைக் குழு தன்னுடைய பரிந்துரைகளிடையே, இந்தியாவிலும் மூன்று நான்கு தொழில்களில் மதிப்பேற்ற வரிகள் விதித்துச் சோதித்துப் பார்க்கலாம் எனக் குறிப்பிட்டிருந்தது. பொருள்செய் (Manufacturing) மட்டத்தில் அத்தகைய வரி ஒன்று விதிப்பது பற்றி ஆழ்ந்து சிந்திக்குமாறும் குழு கேட்டுக் கொண்டது. அதனால் கச்சாப் பொருட்கள், பிற உள்ளிடுபவை (Inputs) ஆகியவற்றின் மீது விதிக்கின்ற வரியால் உற்பத்திச் செலவு ஏறுவதைத் தவிர்க்கலாமெனக் குழு கருதியது.

பின்னர், 1986 ஏப்ரலில் ஒரு திருந்திய (Modified) மதிப்பேற்ற வரி முதன் முதலாக அறிமுகப் படுத்தப்பட்டது. மைய ஆய விகிதங்கள் சட்டத்தின் 37–ஆம் அதிகாரத்தில் வருகிற அனைத்துப் பொருட்கள் மீதும் மதிப்பேற்ற வரி விதிக்கப் பெற்றது. குறிப்பிட்ட பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நிறுவனங்களும் இவ்வகை வரி விதிப்பு வரம்பினுள் வருவிக்கப்பட்டன.

மதிப்பேற்ற வரிகள் முன்னேறும் நாடுகளின் சூழ்நிலையில் செயற்படச் சில தடைகள் இல்லாமலில்லை. முன் செலுத்திய வரியைத் திரும்பப் பெற வேண்டுமெனில் உற்பத்தியாளர் ஒவ்வொருவரும் திருத்தமான உற்பத்திச் செலவுக் கணக்கு வைத்திருக்க வேண்டும். மேலும், இந்தியா போன்ற கூட்டாட்சி நாடுகளில் பொருட்கள் மீது மைய அரசும், மாநில அரசுகளும் தனித்தனியாக வரிகள் விதிக்க உரிமை இருக்கும்போது நடைமுறைச் சிக்கல்கள் பல தோன்றி விடுகின்றன. தே.வே.

**துணை நூல்:**

Singh,S.K., Public Finance in Developed and Developing Countries, S.Chand & Company Ltd., Delhi, 1982.

*மதிய உணவுத் திட்டம்*: பள்ளி செல்லும் குழந்தைகள் மதிய உணவு இல்லாமல் அல்லலுற்று அதனால் பள்ளியிலிருந்து விலகாமலிருக்க இந்தியாவில் பல மாநிலங்களில் மதிய உணவுத் திட்டம் செயற்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ்ப் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக மதிய உணவு தரப்படுகிறது. இதனால் அவர்களுக்கு மதிய உணவுச் சிக்கல் எழாமல் கல்வியில் நாட்டம் செலுத்த முடிகிறது.

குசராத்து மாநிலத்தில் 1984 – ஆம் ஆண்டு நவம்பர் 19 – ஆம் நாளிலிருந்து தொடக்கநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் செயற்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் ஏறத்தாழ 30 இலட்சம் குழந்தைகள் இத் திட்டத்தின்மூலம் இலவசமாக மதிய உணவு பெற்று வருகிறார்கள். இதற்காக மாநில அரசு ஆண்டு தோறும் ஏறத்தாழ 43 கோடி உரூபாய் செலவிடுகிறது. பீகாரிலும் இத்தகைய திட்டம் 1984 நவம்பர் 14 – ஆம் நாளிலிருந்து செயற்பட்டு வருகிறது. தொடக்கநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

ஆந்திரப் பிரதேசத்திலும் தொடக்கநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு தோறும் ஏறத்தாழ 37 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள். இத் திட்டத்தில் சில காலம் குழந்தைகளுக்கு முட்டையும், பாலும் வழங்கப்பட்டு வந்தன. இதனால், திட்டத்தின் செலவினம் அதிகரித்ததால் மாநில அரசு இவ்விரண்டு பொருள்களையும் அளிப்பதை விட்டு விட்டு இப்பொழுது வெறும் அரிசிச் சோறு, காய்கறிகள் ஆகியவற்றை மட்டும் அளித்து வருகிறது.

கேரளாவிலும்தொடக்கநிலைப் பள்ளிக்குழந்தைகளுக்கு மதிய உணவுத்திட்டம் செயற்பட்டு வருகிறது. மகாராட்டிர மாநிலத்தில் 1988 அக்டோபர்த் திங்களிலிருந்து மதிய உணவுத் திட்டம் செயற்படத் தொடங்கியுள்ளது. இதற்காக மாநில அரசு உரூ.200 கோடி செலவழிக்கத் திட்டம் தீட்டியுள்ளது. தொடக்க நிலைப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கான இந்த வசதியில் பால், பழம், முட்டை கலந்த உணவு மதியத்தில் அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலும் மதிய உணவுத் திட்டம் செயற்பட்டு வருகிறது. மற்றெல்லா மாநிலங்களையும் விடத் தமிழ்நாட்டில்தான் மதிய உணவுத்திட்டம் சிறப்பாகவும், முனைப்பாகவும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி, ஐ.நா.அனைத்துலகக் குழந்தைகள் அவசரகால நிதியம் முதலிய அனைத்துலக அமைப்புகள் தமிழ்நாடு அரசின் மதிய உணவுத் திட்டத்தை வெகுவாகப் பாராட்டியிருக்கின்றன.

இப்பொழுது தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் மதிய உணவுத் திட்டம் 'முதலமைச்சர் கல்வி சத்துணவுத் திட்டம்' என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் முதலில் காமராசர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத்தில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் 1956-ஆம் ஆண்டளவில் தொடங்கப்பட்டது. அதற்கு முன்னரேயே சென்னை மாநகரில் 1930 முதலான ஆண்டுகளில் சர் தியாகராயர் சென்னை மாநகராட்சித்தலைவராக இருந்த காலத்தில் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கிடும் திட்டம் செயற்பட்டிருந்தது. சில ஆண்டுகளே அத்திட்டம் அமலில் இருந்தது. பின்னர் நிருவாகச் செலவு கருதி அத்திட்டம் கைவிடப்பட்டது.

ஏழைக் குழந்தைகள் மதிய உணவு இல்லாமல் பள்ளிக்கூடம் செல்ல இயலாமல் இருப்பதைக் கண்டறிந்த காமராசர் 1956-இல் மதியஉணவுத்திட்டத்தைக் கொண்டுவந்தார். இத்திட்டம் மாணவர்கள் பசியின்றிப் படிப்பதற்கும், அவர்களிடையேயுள்ள சாதி, சமய வேறுபாட்டை மறந்து வாழவும், உணவிற்காகப் பிழைப்பைத் தேடிச் செல்லாமல் பள்ளியில் பயிலவும், நாட்டின் கற்றோர் எண்ணிக்கை மிகுதியாகவும் வழிவகுக்கும் என்று காமராசர் உணர்ந்தார். தொடக்கத்தில் இது மக்கள் திட்டமாகச் செயற்பட்டது. முழுக்க முழுக்க ஊர்க்காரர்களே தண்டல் செய்து பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளித்தார்கள். தொடக்கத்தில் 4,400 தொடக்கநிலைப் பள்ளிகளில் 1,20,000 மாணவர்களுக்கு ஊர்மக்கள் உணவு அளித்தார்கள். பிறகு அரசே பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. ஒரு குழந்தைக்குப் பதினைந்து காசு என்ற கணக்கில் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்த மதிய உணவுத் திட்டத்தின் விரிவாக்கமாக 1982 சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து எம்.ஜி. இராமச்சந்திரன் அரசு 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்' என்றொரு திட்டத்தைக் கொண்டுவந்தது. இத்திட்டத்தின் பெயர் 1986-இல் 'முதலமைச்சர் கல்வி சத்துணவுத் திட்டம்' என்று சற்று மாற்றம் செய்யப்பட்டது.

இத் திட்டம் முதலில் (1982 – இல்) கிராமப்புறங்களில் தொடங்கப்பெற்றது. பிறகு 1982-செப்டம்பர் 15 – ஆம் நாளிலிருந்து நகர்ப்புறங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

இத் திட்டம் மூன்று கட்டங்களில் குழந்தைகளுக்காகச் செயற்படுத்தப் படுகிறது. முதல் கட்டத்தில் இரண்டு வயதிலிருந்து ஐந்து வயது வரைக்குட்பட்ட பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகளுக்கு மதிய உணவு தரப்படுகிறது. இந்த உணவு குழந்தை நல மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மையமும் ஒரு பெண் அமைப்பாளரின் பொறுப்பில் இயங்குகிறது. அமைப்பாளருக்கு உதவிட ஒவ்வொரு மையத்திலும் இரண்டு பெண் உதவியாளர்கள் (ஒருவர் சமையற்காரர், மற்றொருவர் செவிலியர்) உள்ளனர்.

இரண்டாம் கட்டத்தில் ஆறு முதல் பத்து வயதுக்குட்பட்ட பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு அந்தந்தப் பள்ளிகளைச்சேர்ந்த உணவு மையங்களின் மூலம் மதிய உணவு தரப்படுகிறது. இம் மையங்கள் சத்துணவு மையங்கள் என்று கூறப்படுகின்றன. அவை சமூகநலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அவை பெண் பணியாளர்களின் பொறுப்பில் செயற்படுகின்றன.

மூன்றாம் கட்டத்தில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. இத் திட்டம் 1982 – இல் தொடங்கப்பட்டபோது இரண்டு வயதிலிருந்து பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே மதிய உணவு தரப்பட்டது. உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படவில்லை. அவர்களும் 1984, செப்டம்பர் 15 -ஆம் நாளிலிருந்து இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டு அவர்களுக்கும்மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அவர்களுடைய பள்ளிகளைச் சேர்ந்த சத்துணவு மையங்களின்மூலம் மதிய உணவு வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ் இப்பொழுது (1988 சூன் முதல் நாள் நிலவரப்படி) 38, 855 மதிய உணவு மையங்கள் பள்ளிக்கூடங்களில் செயற்பட்டு வருகின்றன. அம்மையங்களின் மூலம் 1 முதல் 10-ஆம் வகுப்பு வரையிலான பிள்ளைகளில் 68.43 இலட்சம் பேர் மதிய உணவு பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

இத் திட்டம் தொடங்கப்பட்டபோது (1982) மதிய உணவு (சத்துணவு) ஓராண்டில் 200 நாள்களுக்கு மட்டுமே குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டது. பின்னர் ஆண்டு முழுவதும் 365 நாள்களிலும் மதிய உணவு வழங்கும் ஏற்பாடு அமலுக்கு வந்து, இப்பொழுது நாள்தோறும் மதிய வேளையில் உணவு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும் தரப்படும் மதிய உணவில் 80 கிராம் அரிசிச் சோறும், 10 கிராம் பருப்பும், 50 கிராம் காய்கறிகளும், மசாலைப்

பொருட்களும், 5 கிராம் எண்ணெயும் அடங்கியிருக்கின்றன. இந்த அளவு உணவின் அடக்கச்செலவு 44 காசு ஆகிறது.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்குப் பெரிதும் சிறப்பிடம் கொடுத்துச் செயற்படுத்தி வருகிறது. இதனை ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கென அரசு ஒதுக்கிடும் நிதியளவைக் கொண்டு அறியலாம். திட்டம் தொடங்கப்பட்ட 1982-ஆம் ஆண்டில் அரசு இதற்கென உரூ. 120 கோடி ஒதுக்கீடு செய்து செலவிட்டது. இந்தச் செலவினம் இப்பொழுது (1988) உரூ. 200 கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இத்திட்டத்தின் செயற்பாட்டைக் கண்காணிக்க அரசு, மாநில அளவில் ஓர் உயர்மட்டக் குழுவையும், மாவட்டங்கள் அளவில் மாவட்டக் குழுக்களையும் நியமித்துள்ளது. அக் குழுக்கள் திட்டத்தின் செயற்பாட்டை நெறிப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்றன.

சி.என்.ந.

**மதிவாணனார்:** இவர் நாடகத் தமிழ் நூல் ஒன்றைப் படைத்தவர். இவர் பற்றிய முழுமையான வரலாறு கிட்டவில்லை. உரையாசிரியர்களின் குறிப்புக் கொண்டு இவர் குறித்து ஓரளவு அறிய முடிகிறது. அடியார்க்குநல்லார் பழந்தமிழ் நூல்களின் பெயர்களையும் அவற்றைச் செய்தாரையும் பற்றி விளக்கும்போது, 'கடைச்சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக் கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க் கூத்தியன்ற மதிவாணர் நாடகத் தமிழ் நூல்' என்று குறிப்பிடுகின்றார். இத்தொடர் கொண்டு மதிவாணனார் கடைச்சங்க காலத்துப் பாண்டிய மன்னருள் ஒருவர் என்றும், இவர் புவியரசராக மட்டுமன்றிக் கவியரசராகவும் திகழ்ந்தார் என்றும் அறியமுடிகின்றது.

அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் கடலாடு காதை 35-ஆம் வரி உரையில், மதிவாணனார் செய்த நாடகத் தமிழ் நூல் சூத்திரம் ஒன்றை மேற்கோளாகக் காட்டுகின்றார். அதில் ஆடல் அல்லது நாடகம் தொடங்குமுன் தெய்வத்தை வணங்கிப் பாடப்படும் பாட்டு தேவபாணி எனப்படும் என்றும், தேவபாணியில் தேவர், வருணப்பூதர் ஆகியோர் அவரணியும் தார், ஆடை, நிறம், கொடி முதலியவற்றையும் அவரால் பெறவேண்டுவன பற்றியும் கூறித் துதிக்கப் படுவர் என்றும், மதிவாணனார் கூறுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

மதிவாணனார் நாடகத் தமிழ் நூலில் அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை ஆகிய பதினோரு ஆடல்களும் கூறப்பட்டிருந்தன. நாடக நூல்கள் எழுதவேண்டிய முறைகள், நடிகரின் நடிப்பு, நடிப்பில் காட்டவேண்டிய சுவை, குறிப்பு முதலிய வற்றைப் பற்றியும் அந்நூலில் சொல்லப்பட்டிருந்தன எனக் கருதுவர்.

இர.ஆ.

**மதிவாணனார் நாடகத்தமிழ்:** மதிவாணனார் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னர்களுள் ஒருவராவார். அவரால் இயற்றப்பட்ட நாடகத் தமிழ்நூல் 'மதிவாணர் நாடகத் தமிழ்நூல்' என்ற பெயரால் வழங்கப்பட்டுள்ளது. இந்நூல் புகழ் பெற்ற சிறந்த நாடக நூலாகத் திகழ்ந்ததெனினும் இறந்துபட்ட தமிழ் நூல்களுள் ஒன்றாயிற்று. இச் செய்தி சிலப்பதிகாரம் உரைச்சிறப்புப் பாயிரத்தில் இக்காப்பியத்திற்கு உரையெழுதியுள்ள அடியார்க்கு நல்லாரால் குறிக்கப் பெற்றுள்ளது.

மறைந்துபோன இசைத்தமிழ் நூல்கள், நாடகத் தமிழ்நூல்களைப் பட்டியலிட்டுக் காட்டும் அடியார்க்கு நல்லார், 'இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலாவுள்ள தொன்னூல்களும் இறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாவுள்ள தொன்னூல்களும் இறந்தன' என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்நூல்கள் சிலப்பதிகார நாடகக் காப்பியக் கருத்தை அறிந்த நாடக நூல்கள் அல்லவெனினும் ஒருபுடை ஒப்புமை காட்டும் நோக்கத்துடன், மறைந்துபோன நாடக நூல்களின் ஆசிரியர் பெயர்களையும், அவர்களால் இயற்றப்பட்ட நாடக நூல்களின் பெயர்களையும் குறிப்பிடுகிறார். அதில் மதிவாணனார் எழுதிய மதிவாணர் நாடகத்தமிழ் நூலும் இடம்பெற்றுள்ளது.

'பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திர காளியமும்' அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரத சேனாபதீயமும், கடைச் சங்கம் இரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக் கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்து இயன்ற மதிவாணர் நாடகத் தமிழ் நூலுமென இவ்வைந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒருபுடை ஒப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க' என்பது அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகாரஉரைப் பாயிரப் பகுதி.

இவ்வுரையினின்றும் பாண்டியன் மதிவாணனார் வசைக்கூத்துகள் அடங்கிய முதனூல்கள் பல

வற்றைச் செய்தவராகத் தெரிகிறார். அவ்வசைக் கூத்துகளுக்கு மறுதலையான புகழ்க்கூத்து இடம் பெறும் மதிவாணர் நாடகத்தமிழ் நூலை எழுதியவரும் இவரா? மதிவாணர் என்னும் பெயருடைய மற்றொருவரா? என்பது ஐயத்திற்கு இடமாயுள்ளது. பாண்டியன் மதிவாணனார் செய்தது 'வசைக்கூத்த டங்கிய முதனூல்கள்' எனில், பின்னவர் செய்தது அவற்றிற்கு மறுதலையான புகழ்க்கூத்து அடங்கின மதிவாணர் நாடகத்தமிழ் என்பது வழிநூலாக இருக்கவேண்டும். இவ்வடிப்படையில் பின்னதை எழுதிய மதிவாணர் வேறு ஒருவராக இருக்க வேண்டும். முன்னவரான 'பாண்டியன் மதிவாணனார்' என்பதில் உள்ள சிறப்பு 'ஆர்' விகுதிக்கும், பின்னவரான, 'மதிவாணர்'என்பதில் உள்ள 'அர்' விகுதிக்கும் உள்ள வேறுபாடும் ஆசிரியர்கள் வெவ்வேறானவர் என்பதை வலியுறுத்தும். மேலும், அடியார்க்கு நல்லார் 'இவ்வைந்தும்' என எண்ணிக்கை சொல்வதால் நான்காம் நாடக நூலாசிரியர் பாண்டியன் மதிவாணனாராகவும் ஐந்தாவதாக அமையும் நாடகத் தமிழ்நூல் ஆசிரியர் வேறொரு மதிவாணராகவும் இருக்கவேண்டும். எவ்வாறாயினும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார அரங்கேற்று காதை உரையில், பாண்டியன் மதிவாணனார் இயற்றிய நாடகநூலில் இருந்தே நாடக இலக்கணப் பாடலை எடுத்து மேற்கோள் காட்டியுள்ளார். இவர் காலத்திற்கு முன்பே இந்நூல்கள் மறைந்து போயிருத்தல் வேண்டும். இந்நூல்களின் பாடல்கள் ஒன்றிரண்டு மட்டும் இவர் காலத்தில் வழக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும்.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் மாதவி, தான் கற்ற நடனத்தை மன்னன் முன்னிலையில் அரங்கேற்றி ஆடினாள். அப்போது தேசி, மார்க்கம் என்ற இருவகைக் கூத்துகளை இலக்கணத்துடன் ஆடினாள். அதன்பின் நகைக்கூத்து முதலாகப் பல வகைப்பட்ட நாடகங்களையும், வேந்து விலக்கும் படைவிலக்கும் ஊர் விலக்குமென்று சொல்லுகின்ற விலக்குகளாகிய பாட்டுகளுக்கு உறுப்பாய் வருவனவற்றுடன் பொருந்த ஆடினாள். அதனை இளங்கோவடிகள் 'சூழ்கழல் மன்னற்குக் காட்டல்வேண்டி, இருவகைக் கூத்தின் இலக்கணமறிந்து, பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து' எனப்பாடியுள்ளார்.

இப்பாடலடிகளில் வரும் விலக்குறுப்பிற்குப் பொருள் எழுத வரும் அடியார்க்கு நல்லார், விலக்குறுப்பாவன, பதினான்கு வகைப்படும்; அவை, பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதம் எனப்படும் என்று எழுதியுள்ளார்.

இந்தப் பதினான்கு விலக்குறுப்புகளில் முதலாவதாக அமையும் பொருள் பற்றிக் குறிப்பிடும் அடியார்க்கு நல்லார் அறம், பொருள், இன்பம், வீடு எனப் பொருள் நான்கு வகைப்படும் என்று கூறுகிறார். அவை நான்கும் நாடகத்தில் பிரிந்தும் கூடியும் வருங்கால் பெயர் வேறுபடும் என்றும், அவை நாடகம், பிரகரணப் பிரகரணம், பிரகரணம், அங்கம் என நான்கு வகைப்படும் என்றும் கூறுகிறார். அதற்கு எடுத்துக்காட்டுப் பாடலாக பாண்டியன் மதிவாணனாரின் நாடக இலக்கணப் பாடலைத் தம் உரையில் எடுத்தாண்டுள்ளார். இதனை, 'அவைதாம், நாடகம் பிரகரணப்பிர கரணம், ஆடிய பிரகரண மங்கமென்றே, ஓதுப நன்னூ லுணர்ந்திசி னோரே' என்றார் மதிவாணனாரும்' என்னும் இவர் உரைப்பகுதியில் காணலாம்.

சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படும் இச்செய்திகளைத் தவிர வேறு எங்கும் பாண்டியன் மதிவாணனார் குறித்தும் அவர் எழுதிய நாடக இலக்கணநூல் குறித்தும், மதிவாணர் நாடகத் தமிழ் குறித்தும் செய்தியேதும் காணப்படவில்லை. கு.மு.

**துணை நூல்:**

**சாமிநாதையர், உ.வே.,** (பதிப்பு) சிலப்பதிகாரம், மூலமும் அரும்பத உரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1968.

**மதீனா:** ஏற்றுக் கொண்ட இசுலாமிய நெறியின் காரணமாய்ச் செந்நீர் சிந்த வேண்டியிருக்கும் என்று தெரிந்த பின்னரும் பின்னடையாத வீரஞ்செறிந்த மக்களின் மாநகரம் மதீனாவாகும். மக்காவில் நபிகள் பெருமானின் தலைமையில் பதின்மூன்று ஆண்டுகள் இயங்கி வந்த இசுலாம் இயக்கத்திற்கு மதீனா புதிய மையமாயிற்று. அரபுநாடு முழுவதும் பரவிக் கிடந்த அந்த இயக்கத்தவரை ஒருங்கிணைக்க இசுலாம் வேரூன்றி விட்ட மதீனாவே பொருத்தமான இடமாகக் கருதப்பட்டது. பெருமானார் பிறந்தது மக்கா. எனினும், இறுதி நாள்களைக் கழிக்க அவர் விரும்பி ஏற்ற இடம் என்பதால் மனத்திற்குகந்த மதீனா என்று வரலாற்றில் இந்நகரம் இடம் பெற்றுள்ளது. மதீனாவின் இயற்பெயர் யாத்ரிபு. நபிகள் வருகைக்குப் பிறகு மதீனத்துன் நபி (நபியின் பட்டணம்) ஆகிவிட்டது.

இம்மதீனா நகரம் முகம்மது நபியவர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்ததாகும். வரலாற்றாசிரியர்கள் நபிகள் நாயகத்தின் வாழ்க்கையை இரு கூறாகப் பிரிக்கிறார்கள். ஒன்று மக்கா வாழ்க்கை. இன்னொன்று மதீனா வாழ்க்கை. அவ



செங்கடலிலிருந்து மெக்கா, மெதினாவுக்குச் செல்லும் மலைப்பாதை

ரிடத்தில் மக்காவில் ஒரு தீர்க்கதரிசியையும் மதீனாவில் ஓர் ஆட்சியாளரையும் சந்திக்க முடிகிறது. மக்காவில் தொடங்கிய இவர்தம் புனித வாழ்க்கை மதீனாவில் நிறைவு எய்துகிறது.

முகம்மது நபியவர்கள் அப்துல்லாவிற்கும் ஆமினா பீவிக்கும் கி.பி. 571-இல் சவுதி அரேபியாவில் எராசு மாவட்டத்தின் தலைநகரமான மக்காவில் குறைசிகள் வகுப்பில் பிறந்தார்கள். பிறக்குமுன்பே தந்தையையும் பிறந்த பின் தாயையும் இழந்த முகம்மது (நபிகள் நாயகம்) பெரிய தந்தை அபூத்தாலிப்பின் அரவணைப்பில் வளர்ந்தார். அவர் வணிகத்தொழிலில் நல்லபயிற்சி பெற்றுச் சிரியா முதலிய நாடுகளுக்கும் சென்று வாணிகம் செய்து வந்தார். அவர் 25 வயது வரை இவ்வாறு பல இடங்களுக்கும் சென்று வந்தார். தம் 25-ஆம் வயதில் கதீசா என்னும் 40 வயதுப் பெண்ணை மணம் புரிந்து கொண்டார். இவருடைய 40 - ஆம் வயதில் மக்காவுக்கு அருகில் உள்ள 'இரா' என்னும் மலைக்குகையில் பல நாள்கள் உண்ணா நோன்பினை மேற்கொண்டு உள்ளொளி பெருக்கித் தனிமைச் சிந்தனையில் ஈடுபட்ட காலத்தில் 'ஓது வீராக' என உரத்த ஒலி எழுந்த போது அவருள்ளத்தில் புதிய நெறி சித்தித்தது.

அதன் பயனாக ஏக தெய்வ வணக்கம், உலக சகோதரத்துவம், உயிர்களிடத்தில் அன்பு, விதவைகளுக்கு மறுவாழ்வு என்று முகம்மது (நபிகள் நாயகம்) முழங்கினார். இது நிகழ்ந்தது, கி.பி. 600 இல் ஆகும். அதன் பின்னரே அவர் எல்லாம் வல்ல அல்லாவின் கடைசித்தூதர் (நபி) என்று போற்றப்பட்டார்.

நபிகள் நாயகம் உருவ வழிபாடு கூடாது என்று உரைத்ததே அவர் மூலம் வெளிப்பட்ட உன்னதமான அமிசமாகும். மக்காவில் மட்டுமே 360 உருவச் சிலைகளைத் தெய்வங்களாக வணங்கி வந்த குறைசிகள் நபிகள் நாயகத்தின் உரையைக் கேட்டு கொதித்து எழுந்தனர். பிறந்த குலத்தில் எதிர்ப்புக் கிளம்பிய அதே சமயத்தில் 480 கி.மீ.களுக்கு அப்பால் இருந்த மக்கள் அவரையும் அவர் நெறியையும் ஆதரிக்க முன் வந்தனர். மதீனா மக்களே அந்த நன் மக்கள்.

இசுலாம் எழுச்சி ஏற்படுமுன் அரேபியாவில் நகரங்கள் என்று மதிப்பிடப்பட்டவை மக்காவும் மதீனாவுமே. மதீனா மக்காவிலிருந்து வடக்கே 480 கி.மீ. தொலைவில் உள்ளது. மதீனாவில் அவுசு(Aus), அசுரசு (Kazraj) எனும் இருவகுப்பினரே செல்வாக்குள்ளவர்கள். ஆனால், அங்குள்ள யூதர்களால் இவ்விரு வகுப்பினர்களுக்குள் அடிக்கடி சண்டை மூட்டப்பட்டது. இந்நிலையில் அமைதியும் அன்புமே தம் நெறியாகப் பரப்பி வந்த அருளாளர் நபிகள் நாயகம் அவர்கள் அம்மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றினார். அவர் வந்தால் தங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு, வாழ்வில் உயர்வு கிட்டும் என்று மதீனா மக்கள் கருதினர். அண்ணலார் 'நபிகள் பட்டம்' பெற்ற 12 – ஆம் ஆண்டில் ஆமீனாவின் அருள்

மைந்தருக்கு மதீனாவிலிருந்து அழைப்பு வந்தது. பரா இப்து மஅரூர் என்னும் பெரியவரைத் தலைவராகக் கொண்ட 73 மதீனா வாசிகள் மக்கா வந்து, தங்கள் நகருக்கு வந்துவிடுமாறு அழைத்தனர். கல்லடியும் சொல்லடியும் பட்டுத் தங்கள் நெறியைப் பரப்பி வந்த நபிகளுக்கும் அவர்தம் தோழர்களுக்கும் மதீனா போய்ச்சேர்ந்ததிலிருந்து புதிய காலம் தொடங்கிற்று.

இந்த மதீனா நகரம் ஆதியில் அமலக்கு வமிசத்தைச் சேர்ந்த ஒரு தலைவன் உருவாக்கியதால் அவன் பெயரால் யாத்ரிபு என வழங்கப்படலாயிற்று. இன்றைக்கு ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பு மதில் சூழ்ந்த மாநகரமாக அது திகழ்ந்தது. மதீனா எனும் அரபுச் சொல்லுக்குப் பட்டணம் அல்லது நகரம் என்பது பொருள். நபிகள் பெருமான் குடியேறியதால் 'மதீனா முனல்வரா' (பேரொளி பெற்ற பெருநகர்), 'மதீனத்துன்' நபி (நபிகளின் நன்னகர்)என்றெல்லாம் யாத்ரிபு நகர் போற்றப்பட்டு 2-7-622 முதல் (அதாவது இசுரி, இரபி உல் அவ்வல் பிறை 16 – இல் இருந்து) மதீனா என்றே பெயர் வழங்கலாயிற்று.

நபிகள் நாயகம் மதீனா மக்களிடம் ஒற்றுமையை உருவாக்கினார். முழு மதுவிலக்கை நடைமுறைப் படுத்தினார். பல சீர்திருத்தங்களைக்கொண்டு வந்தார். அன்று இசுலாம் நெறியினை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மதீனா பாலையிடையே ஒரு சோலையாக விளங்கிற்று.

நபிகள் நாயகம் மக்கா சென்று அங்கு இசுலாம் நெறியைப் பரப்பி வந்தார். அங்கே எதிரிகளான குறைசிகளின் தொல்லை மிகுந்தது. அவருடைய தோழர்கள் பலர் மதீனா நோக்கித் தப்பிச்சென்றனர். அவர்கள் சென்றதையறிந்து நபிகள் தாமும் புறப்பட்டார். எதிரிகள் துரத்திச் சென்றனர். ஆனால், அவர் நேராக மதீனா செல்லாமல் இடையில் ஒரு குகையில் தங்கி விட்டதால் இறையருளால் எதிரிகளிடமிருந்து தப்பினார். அவரைத் தேடிய எதிரிகள் திரும்பிப் போய்விட்டபின் அவர் குகையை விட்டுப் புறப்பட்டு, மதீனா போய்ச்சேர்ந்தார். அவர் கி.பி. 27 – 6 – 622 – ஆம் நாள் மேற்கொண்ட பயணமே 'இசுரத்' எனப்படுகிறது. அதிலிருந்துதான் இசுலாமிய ஆண்டு தொடங்குகிறது.

அருளாளரான நபிகள், விரும்பவில்லை எனினும், பத்று பள்ளத்தாக்குப்போர், உகத்குன்றுப் போர், மதீனா அகழிப் போர் ஆகிய போர்களை குறைசிகளுடன் நிகழ்த்த நேர்ந்தது. தங்கள் முயற்சிகள் தோற்றுப்போவதால் ஆத்திரம் அடைந்த குறைசிகள் 24,000 பேரைத் திரட்டிக் கொண்டுவந்து மதீனாவை நெருங்கி வந்தனர். நபிகள் பக்கம் 3000 மக்களே இருந்ததால், அவர் ஒரு போர் உத்தியைக் கையாண்டார். மதீனா கோட்டையைச் சுற்றிப் பெரும் அகழியைத் தோண்டச் செய்தார். அது சிறந்த அரண் ஆயிற்று. குறைசிகள் தம் எதிரிகள் எங்கிருக்கிறார்கள் என்று அறிந்து சண்டையிட முடியாமல் தோற்று ஓடினார்கள். அனைத்து அரபு நாடுகளிலும் மக்களைத் திருத்த எண்ணி நபிகள் 10,000 வீரருடன் சென்று மக்காவைப் பிடித்தார். மக்காவில் இசுரி 9 – இல் உருவ வழிபாடு கூடாது என்ற நியதியைக் கொண்டு வந்தார். இசுலாம் நெறியைத் தாம் பிறந்த மக்காவில் நிலைபெறச் செய்தார். சலாம் என்றால் சாந்தி அல்லது அமைதி என்று பொருள். சலாம் என்பதில் இருந்து பிறந்ததே இசுலாம். நபிகள் மூலமாகத் தெரிவிக்கப்பட்ட இறையறிவிப்பின் திரு வசனங்களின் திரட்டே 'திருக்குர் ஆன்' எனும் மறை. இசுலாம் மக்காவில் வேரூன்றியது. மக்கள், நபிகளை மக்காவிலே தங்கி இருக்க வேண்டினர். அந்திய காலம் வரை மதீனாவில் தங்கிட வாக்களித்துவிட்டபடியால், மக்காவிலிருந்து மதீனா சென்றடைந்தார்.

மதீனாவில் கி.பி. 632 – இல் (இசுரி 11-இல் ரபி உல் அவ்வல் திங்கள் 12 – ஆம் நாளில்) நபிகள் நாயகம் காலமானார். அவர் மனைவி ஆயிசாவின் இல்லத்தினை ஒட்டி மதீனா மசூதிக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டார். பல ஆண்டுகளுக்குப் பின் கி.பி. 706-715-ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஊமையாது கலிபாவானவர் அந்த மசூதியை விரிவுபடுத்தினார்.



மதீனா

அண்ணலின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படுத்திய மதீனா பற்றித் தமிழில் காப்பியம் ஒன்றும் சிற்றிலக்கியம் ஒன்றும் படைக்கப்பட்டுள்ளன. வள்ளல் சீதக்காதியின் பேராதரவில் நபிகள்பெருமானாரின் வரலாற்றைச், சிந்தையள்ளும் காப்பியமாகச் 'சீறாப் புராணம், என்னும் பெயரில் மூவாயிரம் கவிதைகளாக உமறுப்புலவர் (கி.பி. 1665 – 1717) படைத்தார். அதில் மூன்றாம் காண்டமான இசுரத்துக் காண்டத்தில் மதீனா பற்றிய மனம்கவர் வருணனைகள் உள்ளன. இரண்டாம் சர்க்கரைப் புலவர் (கி.பி. 18 – ஆம் நூ.) மதீனா பேரில் 'மதீனத்தந்தாதி' எனும் அந்தாதிச் சிற்றிலக்கியம் படைத்துள்துள்ளார். மீ.ம.

**துணை நூல்கள்:**

**அப்துல் ஜப்பார், என்.பி.,** நபிபெருமானார் வரலாறு, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978.

**தாவூத்ஷா, பா.,** நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும், தாருல் இஸ்லாம் ஆபிஸ், தம்புச்செட்டித் தெரு, சென்னை,1927.

**மௌலானா சையீத் அபுல் அபா மௌதூதி,** தாஃப் ஹுமுல் குர்ஆன், தமிழ்நாடு இஸ்லாமிய நிறுவனம், சென்னை, 1972.

**Macklean, C.D.,** Glossary of the Madras Presidency, Asia Educational Service, New Delhi, 1982.

**Titus Burakhardt,** Art of Islam, World of Islam Festival Publishing Company Ltd., Kent, England, 1976.

**மது சூதன தத்தர் மைக்கேல்:** இவர் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் தோன்றிய புகழ் வாய்ந்த வங்கமொழிக் கவிஞர். மேற்கு வங்க மாநிலத்தில் செசுரூர் மாவட்டத்திலுள்ள சாகர்தாரி என்னும் சிற்றூரில் இராச நாராயணதத்தர் என்ற வழக்கறிஞர் மகனாக இவர் கி.பி. 1828–இல் பிறந்தார். தொடக்கக் கல்வியைத் தாய்மொழியில் கற்ற இவர், உயர்நிலைக் கல்வியைக் கல்கத்தாவிற்கு அருகில் உள்ள சித்தர்ப்பூரில் ஓர் ஆங்கிலப்பள்ளியில் கற்றார். இவர் கி.பி. 1837-இல் இந்துக் கல்லூரியில் சேர்ந்தார்; பிற மாணவர்களைவிட ஆங்கிலத்தில் சிறந்து விளங்கினார்; அப்பொழுதே ஆங்கிலத்தில் செய்யுள் இயற்றிப் பல இதழ்களில் வெளியிட்டு வந்தார். அதன் விளைவாக இவர் ஆங்கிலக் கவிதையில் மிகுந்த மோகங் கொள்ளத் தொடங்கினார்.

இவர் கி.பி. 1843-ஆம் ஆண்டுக் கிறித்தவ சமயத்தில் சேர்ந்தார். இவருடைய மதமாற்றத்தைக் குடும்பத்தாரும் உற்றார் உறவினரும் கடுமையாக எதிர்த்தனர். இருப்பினும், இவர் ஒரே மகன் என்பதால் இவருடைய தந்தையார் தொடர்ந்து அன்பு காட்டி ஆதரித்து வந்தார்; இவர் பிசப்பு (Bishop) கல்லூரியில் கிறித்தவ மாணவராகச் சேர்ந்த பின்பும் படிப்பிற்காகப் பணம் அனுப்பி வந்தார். இவர் அக்கல்லூரியில் கி.பி. 1848–ஆம் ஆண்டு வரை மாணவராக இருந்து ஆங்கிலத்துடன் இலத்தீன், கிரேச்கம், ஈபுரு, பாரசீகம், வடமொழி ஆகிய மொழிகளையும் கற்றுக் கொண்டார்.

தந்தையார் பணம் அனுப்புவதை நிறுத்திய பிறகு இவர் தம்மோடு கல்வி கற்ற சில தென்னிந்திய மாணவர்களோடு சென்னைக்கு வந்தார். சென்னையிலிருந்த கிறித்தவர்கள் இவருக்குத் துணை நின்று ஓர் அனாதை ஆசிரமத்தைச் சேர்ந்த பள்ளியில் இவரை ஆசிரியராக நியமித்தனர். அந்த ஆண்டிலேயே இவர் நீலகிரியில் தேயிலைத் தோட்டப் பண்ணைக்காரரான ஓர் ஆங்கிலேயரின் மகளான ஆங்கில இந்தியப் பெண்ணை மணந்துகொண்டார்.

சென்னையிலிருந்து வெளிவந்த சில இதழ்களில் சிலகாலம் இவர் ஆசிரியராகப் பணியாற்றினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் உயர்தரக் கல்விப் பகுதியில் கி.பி. 1852-இல் இரண்டாம்நிலை ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். இவருடைய தந்தையார் கி.பி. 1856-இல் மறைந்தபின் தந்தையின் மதிப்புள்ள சொத்துகளைக் காப்பாற்றவும், அவற்றைத் தமக்கு உரிமையாக்கிக் கொள்ளவும் இவர் கல்கத்தா திரும்பிச் செல்ல நேரிட்டது. அதே ஆண்டில் இவர் முதல் மனைவியை மணமுறிவு செய்துவிட்டு பிரான்சு மரபைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் ஒருவரின் மகளான என்றி யெட்டாவை மணந்தார். கல்கத்தாவில் நண்பர்கள் உதவியுடன் நீதிமன்றத் தலைமை எழுத்தர் பணி கிடைத்தது. விரைவிலேயே பதவி உயர்வு பெற்று நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராக ஆனார்.

இவர் கி.பி. 1862-இல் இங்கிலாந்து சென்று சட்டக் கல்லூரியில் பயின்றார். படிப்பைப் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு நடுவே நிறைவு செய்து கி.பி. 1866-ஆம் ஆண்டுக் கல்கத்தா திரும்பி வந்து உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரியத் தொடங்கினார்.

இவர் சென்னையிலிருந்தபோது 'இரிசியா' என்னும் செய்யுள் வடிவமான ஆங்கில நாடகததை எழுதிப் பழகினார். அந்த நாடகம் வெளியிடப்படவே இல்லை. அவர் பழைய யாப்புக் கட்டுப்பாடுகளை மீறிக் கவிதை எழுதிவந்தார். அதற்கு 'எதுகையில்லா யாப்பு முறை' என்று பெயர் சூட்டினார்.

அவ்வகையில் தம்முடைய இரண்டாம் கவிதை நாடகமான பதுமாவதியை எழுதி வழங்கினார். இவருடைய திலோத்தமா - சம்பவு, மேகநாத் -வத்து, பீராங்கனா முதலிய கவிதை நூல்கள் யாப்பு மீறிய கவிதைகளால் ஆனவை. செய்யுள் இயற்றுவதில் இவருக்கிருந்த திறனைப் ‘பிரசாங்கனா’ என்னும் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள இன்னிசைப் பாடல்கள் காட்டுகின்றன.

இவர் கி.பி. 1848-இல் வெளியிட்ட ‘சிறைப்பட்ட சீமாட்டி’ (The Captive lady) எனும் ஆங்கிலக் காவியம் குறிப்பிடத்தக்கது. கானோசு மன்னருக்கும் தில்லி மன்னருக்கும் ஏற்பட்ட மோதலை மறைமுகமாக வெளிப்படுத்தும் இக்காவியமே, இந்தியாவை இசுலாமியர் கைப்பற்றிய நிகழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட முதல் கவிதை நூலாகும் என்பர்.

இவர் கி.பி. 1858-இல் இரத்தினாவளி என்ற வடமொழி நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஆங்கிலப் புலவர்களும் இவர்தம் திறமை கண்டு வியந்தனர். அதன் பின்னர்த் தாம் வங்க மொழியில் எழுதிய ‘சன்மிசுடை’ என்னும் நாடகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இறுதியில் இவர் செய்த நாடகம் ‘கிருட்டிண குமாரி’ என்பதாகும். இவர் எழுதிய ‘எக்டர் - வத்து’ ஓர் உரைநடை நூலாகும். அந்நூலில் பண்டைக்கால வங்க மொழிநூல்களின் சொற்களையும் கற்பனைகளையும் வரம்பின்றி அப்படியே எடுத்தாண்டுள்ளார். இவர் இயற்றிய கடைசி நூல் 14 அடிச்செய்யுட்கள் 102 அடங்கிய ஒரு தொகைநூலாகும். கலைப்படைப்பு என்னும் வகையில் இவருடைய 14 அடிச்செய்யுட்களே மிகச் சிறந்தவை என்று திறனாய்வாளர் மதிப்பிடுகின்றனர்.

இவர் தம்நண்பர் போசுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தாமே கூறிக்கொண்டவாறு இலக்கியத்துறையில் மிகப் பெரிய புரட்சியாளராக விளங்கினார். காலங்காலமாக இருந்து வந்த மரபுகளை எதிர்த்து, இலக்கியப் படைப்புகளை மனம் விரும்பிய போக்கில் செல்ல அனுமதிக்காத கட்டுப்பாடுகளைக் களைந்து இவர் உருவாக்கிய புரட்சிப்பண்பாடு வங்க இலக்கியத்தில் புதிய திசையைத் தோற்றுவித்தது எனலாம். தம் மனைவி மறைந்த மூன்றாம் நாளில் இவரும் கி.பி.1873-ஆம் ஆண்டு காலமானார். சா.உ.

**மதுசூதனராவ்**: இவர் ஒரியா மொழியின் ஒப்பற்ற கவிஞர். இவர் ஒரிசா மாநிலத்திலுள்ள பூரியில் கி.பி.1853-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பள்ளி நாள்களிலேயே கவிதையார்வம் கொண்டு அத்துறையினரோடு தொடர்பு கொள்ளத் தொடங்கினார். அக்காலத்தில் புகழ்பெற்ற கவிஞராய்த் திகழ்ந்து வந்த இராதா நாத்துடன் இவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார், ஆன்மிகத் துறையிலும் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டு பேராசிரியர் அரநாத் பட்டாச்சாரியாவின் அறிவுரைகளில் ஈடுபட்டுப் பிரம சமாச சபையில் சேர்ந்தார்.

இவர் அறிவார்ந்த ஆசிரியராகவும் திறன் நிறைந்த பள்ளி ஆய்வாளராகவும் பணியாற்றினார். இவருடைய பணி அனுபவங்கள் இவர்தம் பாடல்களில் எதிரொலித்தன. ஈரேழ்வரிப் பாடல் (Sonnet)என்னும் ஆங்கில யாப்பு முறையில் இவர் ஒரியாவில் கவிதை எழுதினார். அம்முறையில் எழுதிய கவிதைத் தொகுப்பு ‘வசந்த காதா’ என்னும் பெயரில் வெளி வந்தது. ‘குசுமாஞ்சலி’, ‘உத்தல காதா’ என்னும் இவர்தம் கவிதை நூல்கள் ஆன்மிகவுணர்வையும் நாட்டுணர்வையும் கலந்து செய்யப் பட்டவை. இன்னிசைப் பாடல்கள் புனைவதிலும் இவர் வல்லவர். ‘இரிசி பிராண தேவாதரணம்’, ‘இமாசல உதய உற்சவம்’ போன்ற நெடுங்கவிதைகளில் உபநிடதங்களின் உயர்ந்த தத்துவங்களை விளக்கியுள்ளார். ஆன்மிகத் துறையில் இவருக்கிருந்த வேட்கையினை அப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

இவர் சிறந்த மொழி பெயர்ப்புப் பணிகளையும் செய்துள்ளார். வடமொழியிலும் ஆங்கிலத்திலும் உள்ள செய்யுட்கள் சிலவற்றை இவர் ஒரியாவில் மொழிபெயர்த்துள்ளார். இவர்தம் மொழி பெயர்ப்பு நூல்களுள் ‘சீதை வனவாசம்’, ‘உத்தரராம சரிதம்’ ‘நிர்வாசித விலாபம்’ போன்றவை குறிப்பிடத் தக்கவை.இவர் தனியாக உரைநடை நூல் எதுவும் எழுதவில்லை. இவருடைய உரைநடையைப் பெரும்பாலும் பாடநூல்களிலும் கட்டுரைகளிலும் காணலாம்.

இவர் ஒரு சிறந்த குழந்தைக் கவிஞராகவும் விளங்கினார். இவருடைய கனவுகளையும் நோக்கங்களையும் எளிய, இனிய நடையில் சிறுசிறு கவிதைகளாக எழுதினார். கவிதா பலி (Kavitha bali), சாந்தமாலா (Chanda mala), பிரபந்த மாலா (Prabhandamala), வர்ணபோதம் (Varna bodha), அபதான பந்து (Abadhan Bandhu) ஆகியவை இவருடைய குறிப்பிடத்தக்க குழந்தை இலக்கிய நூல்களாகும். தூய்மை, இலட்சியம், நல்வாழ்வு போன்ற உயர்ந்த எண்ணங்களோடு வாழ்ந்த இவர் 1912-ஆம் ஆண்டு மறைந்தார். சா.மு.

**மதுப்பழக்கம்**: மதுவையும் போதையை ஏற்படுத்தக்கூடிய பிற போதைப் பொருட்களையும் (Intoxicating Drugs) பயன்படுத்துகின்ற பழக்கம் இந்

நாட்டில் பழங்காலந்தொட்டேவழக்கத்திலிருந்து வரு கிறது. எனினும், அவற்றைப் பயன்படுத்துவதை இந்து சமுதாயமும் இந்து சமயக் கோட்பாடுகளும் வன்மை யாகக் கண்டித்து வந்துள்ளன. இப் பழக்கம் இடைக் காலங்களில் (Mediaeval times) மிகுதியாயின. அதற் குக் காரணம் அன்றைய அரசர்களும், அவர்களு டைய அமைச்சர்களும் ஆவர். அவர்கள் மது அருந் தும் பழக்கமுடையவர்களாக இருந்தனர். எனினும், இக் கெட்ட பழக்கத்திற்கு எதிராக வெவ்வேறு சம யங்களில் பல்வேறு வழிகள் கையாளப்பட்டுக் குறிப் பிட்ட அளவு வெற்றியும் காணப்பட்டது.மதுவெறிப் பழக்கம் அதைக் கடைப்பிடிக்கக் கூடியவருக்கு மட்டு மன்றி அவருடைய குடும்பத்திற்கும், சமுதாயத்திற் கும் தீங்கு விளைவிக்கக்கூடியது.

இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி ஏற்பட்டபிறகு மது அருந்தும் பழக்கம் மிகுதியாயிற்று. ஆங்கிலேயர் கள் இந்திய மரபுவழிப் பழக்கங்களைப் பின்பற்ற வில்லை. மாறாக அவர்கள் நாட்டின் மது அருந்தும் பழக்கத்தை இந்தியாவில் பரவவிட்டனர். அதோடு இப் பழக்கத்திற்கு ஒரு சமுதாயத் தகுதியும் வழங் கப்பட்டது. ஆகவே, முன்பு இருந்ததைவிட இப்பழக் கத்திற்கு அடிமையாகும் பல வாய்ப்புகள் வழங்கப் பட்டன. குறிப்பாகத் தொழில்மயமாதலும், நகர மயமாதலும் பெரிய நகரங்களில் மதுவெறிப் பழக்கம் பரவக் காரணமாயின.

மது அருந்தும் பழக்கம் ஒரு குறிப்பிட்ட அள விற்குள் இருந்திருக்குமேயானால் இப்போது நாடு காணுகின்ற அளவிற்கு ஒரு பெரிய சமுதாயக் கேடாக அது ஆகியிருக்காது. மது வகைகளை ஒரு குறிப்பிட்ட அளவு அருந்துவாராயின் அதனால் சில நன்மைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. பொதுவாக மதுவைக் குறிப்பிட்ட அளவு அருந்தி னால் சிக்கல்கள் நிறைந்த அன்றாட உலக வாழ்க் கையைச் சகித்துக் கொள்ளக்கூடிய மன வளத்தைப் பெற இயலும் என்பது பொதுக் கருத்தாகும். நோய் வாய்ப்பட்டிருப்பவர்களுக்குக்கூட மது ஒரு மருந் தாகப் பயன்படுகிறது. ஆனால், அளவிற்கதிகமாக அதனை அருந்தும்போது அது தனி ஆளுக்கு மட்டு மன்றிச் சமுதாயத்திற்கே தீங்கு விளைவிக்கக் கூடிய தாக மாறுகிறது. குடிப்பழக்கம் உள்ளவர்களை ‘அள வான குடிப்பழக்கம் உடையவர்கள்’ (Moderate Drinkers), சிக்கல் குடிப்பழக்கம் உடையவர்கள் (Problem Drinkers) என இருவகையாகப் பிரிப்பர்.

இங்கு மதுவெறி என்று சொல்லும்போது ‘சிக்கல் குடிப்பழக்கம்’ உடையவர்களை மட்டுமே அது குறிக்கும். எவருடைய குடிப்பழக்கம் அவருக் கும் அவருடைய சமூகத்திற்கும் சிக்கலாக மாறு கிறதோ அவரையே சிக்கல் குடிகாரர் எனக் கூற லாம். தருபி (Dr.Durfee) என்பவர் எவன் ஒருவன் மது அருந்துவதால் பாதிக்கப்படுகிறானோ; எவன் ஒருவனுடைய குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லா மல் போகிறதோ; எவன் ஒருவனுடைய தொழில் சீர்குலைந்து போகிறதோ; எவன் ஒருவனுடைய பெயருக்கும் புகழுக்கும் களங்கம் ஏற்படுகிறதோ; எவன் ஒருவன் குடிப்பதையே தன்னுடைய நிலை யான பழக்கமாகக் கொள்கிறானோ அவனையே சிக்கல் குடிப்பழக்கம் உடையவன் எனக் கூறுகிறார்.

**மதுவெறிக்கான காரணங்கள்**: தச்சு நாட்டுக் குற்ற வியல் அறிஞர் போங்கர் (W.A. Bonger) வாழ்க் கையின் சீர்குலைந்த நிலைகளே ஒருவனைக் குடி வெறியனாக மாற்றுகின்றன என்று கூறுகிறார். எடுத்துக்காட்டாகத் தொழிலாளர்களிடையே காணப் படுகின்ற சமுதாயப் பொருளாதார நிலைகளைக் குறிப்பிட்டுக் கூறும்போது தொழிலாளர்களின் வேலை, வேலை நேரம், தேவைக்குக் குறைவான உணவு, மோசமான வீடு, நிலையற்ற பொருளா தார நிலை, அறியாமை முதலான சூழ்நிலைகளைக் குறிப்பிட்டுக் கூறுகிறார். அவர் மேலும் தொழிலாளர் களின் வேலையைப் பற்றிக் கூறும்போது சில வேலை களில் தொழிலாளர்கள் அளவிற்குக் கூடுதலான வெப்பத்திற்கு அல்லது குளிர்நிலைக்குத் தங்களை ஆட்படுத்திக்கொள்ள வேண்டியிருப்பதால் தொழி லாளர்கள் அத்தகைய இன்னல்களிலிருந்து விடுவித் துக்கொள்ளும்பொருட்டு மதுவெறிக்கு ஆளாகிவிடு கிறார்கள் எனக் கூறுகிறார். மிகுதியான நேரம் வேலை செய்வதால் ஏற்படும் களைப்பிலிருந்து விடு படுவதற்காகச் சில சமயங்களில் தொழிலாளர்கள் மது அருந்துவதாகக் கூறுகிறார். வேறுசில தொழி லாளர்கள் தங்களுடைய குறைந்த வருமானத்தில் போதுமான உணவுப்பொருட்களையும் விதவிதமான உணவு வகைகளையும் வாங்கமுடியாததால் ஒரு மாற்றத்திற்காகவும், ஒரேவிதமான உணவு வகையி லிருந்து சற்று வேறுபட்டு இருக்கவேண்டும் என்பதற் காகவும் மது அருந்துகிறார்கள் என்று போங்கர் கூறுகிறார்.

சமுதாயப் பற்றாக்குறைகளே (Social Inade-quacy) மதுவெறிக்குரிய காரணம் எனச் சிலர் கூறு வர். மிகுதியான வேலை, சுற்றுப்புறச் சூழ்நிலையில் திடீர் மாற்றம், சமுதாய அளவில் ஏற்படக்கூடிய திடீர் உயர்வு, தாழ்வு மனப்பான்மை போன்றவை மனத்தில் குறைகளை ஏற்படுத்துகின்றன. நண்பர் களுக்கிடையேயும் காதலர்களுக்கிடையேயும் ஏற் படும் மனத்தாங்கல், கணவன் - மனைவி உறவில் ஏற்படும் இடைவெளி, காதல் தோல்வி போன்

றவை மனிதனின் மனத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தித் தீங்கு விளைவிக்கக்கூடியவ. அதனால், பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய துயரத்தைப் போக்க மதுவை அருந்துகிறார்கள். அதன் விளைவாக ஏற்படக்கூடிய தொடக்கநிலை மயக்கத்தை மிகவும் விரும்பி அனுபவிக்கிறார்கள். அதன்பிறகு வாழ்க்கையில் எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்நோக்க இயலாமல் மதுவெறிக்கு நிரந்தரமாக அடிமையாகிவிடுகிறார்கள் எனக்கூறுகிறார்.

கால்டின் என்பவர் தோழமையும் (Companionship), நட்புந்தான் (Friendship) மதுவெறிக்கான முக்கிய காரணிகள் எனக் கூறுகிறார். மனிதன் பொதுவாகத் தோழமைக்காகவும், வேடிக்கைக்காகவும் மது அருந்தத் தொடங்குகிறான்; ஆனால், அதன் பின்னர் மதுவிற்கு அடிமையாகி விடுகிறான் எனக் கூறுகிறார்.

உடலை வருத்தி வேலை செய்வதற்கு மது அருந்தினால் மேலும் மிகுதியான ஆற்றலுடன் வேலை செய்து வருமானம் ஈட்டலாமென மனிதன் நம்புகிறான். அவ்வறியாமையினால் மனிதன் மது வெறியனாக ஆகிவிடுகிறான். சிலர் தங்களுடைய பிறவி இயல்புகளால் தாமாகவே உலக நடப்பை எதிர் நோக்க இயலாமல் வாழ்கிறார்கள். அதுபோன்ற மகிழ்ச்சியற்ற மனிதர்கள் மதுவை நாடுகிறார்கள். உலக இயல்புகளிலிருந்து விடுபட அவர்கள் மதுவிற்கு அடிமையாகிவிடுகிறார்கள். அவர்களைப் பிறவிக் குடிப்பழக்கம் உடையவர்கள் எனக் கூறலாம்.

அடுத்த நிலையில் மனிதன் பொதுவாக மது அருந்துவதை ஒரு நாகரிகப் பழக்கமெனக் கருதி அருந்துகிறான். ஆனால், அதன்பின்னர் இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுகிறான். தன்னுடைய சக இனத்தினருடைய நட்பையும் அன்பையும் பெறுவதற்காக அவர்களுடன் மது அருந்திக் கடைசியில் அந்த மதுவிற்கே அடிமையாகி மதுவெறிக்குப் பலியாகிறான்.

இறுதியாகத் தொழில்மயமாதலும் நகரமயமாதலும் மதுவெறிக்கு முதன்மைக் காரணிகளாகக் கூறப்படுகின்றன. அவற்றால் ஏற்பட்ட புதிய வாழ்க்கை முறையினாலும் மனிதன் மதுவெறிக்கு ஆளாகிறான்.

**மதுவெறியின் விளைவுகள்:** மதுவெறியினால் ஏற்படக்கூடிய விளைவுகள் தனிஆளின் சீர்குலைவு, குடும்பச் சீர்குலைவு, சமுதாயச் சீர்குலைவு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. தனிஒருவன் மது வெறிக்கு ஆளாகும்போது அவன், ஏற்றுக்கொள்ளப்பட்ட சமுதாய உறவுமுறையிலிருந்து மாறுபடுகிறான். உண்மையான சமுதாய மதிப்புகளிலிருந்து (Social Values) மாறுபட்டுத் தனிஆளின் கருத்துகளுக்கும், எண்ணங்களுக்கும் முதன்மையிடம் கொடுக்கிறான். அளவிற்கதிகமாகக் குடிப்பதால் அவன் தன் வீட்டையும், குடும்பத்தையும், வாணிகத்தையும், தொழிலையும் மறந்துவிடுகிறான். மதுவின் ஆதிக்கத்தால்அவன் மிகுதியாகப் பேசுகிறான் அல்லது மௌனமாகி விடுகிறான்; சில சமயங்களில் இழிவுபடுத்தும் சொற்களைப் பயன்படுத்துகிறான். பொய் பேசுபவனாதலோடு சில சமயங்களில் கொலைசெய்பவனாகவும் மாறுகிறான்.

தனிஆளின் சீர்குலைவுடன் இணைந்து ஏற்படக் கூடியது குடும்பச் சீர்குலைவு. வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மணவிலக்குச் செய்பவர்கள் எண்ணிக்கை மிகுதியாவதற்கு முக்கிய காரணமாக மதுப்பழக்கம் இருக்கிறதென ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. குடிப்பழக்கம் தான் குடும்பங்களில் ஏற்படுகின்ற பல சிக்கல்களுக்குத் தூண்டுகோல். கணவனும் மனைவியும் குடிப் பழக்கம் உடையவர்களாக இருப்பின் அவர்கள் மதுவின்னால் தூண்டிவிடப்பட்ட பொழுதுபோக்கில் திளைத்திருக்கும்போது வேறு ஆள்களின் மீது அவர்களின் கவனம் செல்லுகிறது. அதனால், குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பொதுவாக மது உண்மையான அன்பிற்கும் நிலையான திருமணவாழ்க்கைக்கும் நிலையான எதிரியாக உள்ளது. குடிப்பழக்கத்தையே வழக்கமாகக் கொண்டவர்கள் பிறபெண்களுடன் பேசுவதற்கும், பழகுவதற்கும் அஞ்சமாட்டார்கள். அதனால், குடும்பத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றன.

நாகரிகத்தின் விளைவால் குடிப்பழக்கம் பெண்களிடையே குறிப்பாக மேலைநாட்டுப் பெண்களிடையே மிகுந்துள்ளது. பெண்கள் குடிப்பழக்கம் உடையவர்களாக இருப்பின் அதன் விளைவு ஆண்களினால் ஏற்படக்கூடிய விளைவுகளைவிட மிகுதியாகும். கணவன் – மனைவி இருவரில் யாரேனும் ஒருவரிடம் இந்தக் குடிப்பழக்கத்திற்குக் கடுமையான எதிர்ப்பு இருக்குமேயானால் குடும்பம் இரண்டாகி மணவிலக்கில் முடியும். குடிகாரத் தந்தையிடமிருந்து குழந்தைகள் காப்பாற்றப்பட மணவிலக்குப் பெற்றுத் தனியே வாழும் தாய்மார்களைச் சமுதாயத்தில் காணலாம். வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பத்தில் இந்த மதுவெறியினால் ஏற்படக்கூடிய விளைவுகள் அதைவிட மிகவும் கடுமையானதாகும். அறியாமையினாலும்மதுவிலக்கு, மணவிலக்கு போன்ற சட்டங்களைப் பற்றித் தெரியாததாலும் ஏழைக் குடும்பங்களில் மதுவெறியினால் ஏற்படும் தீமைகள் அதிகமாகின்றன.

மதுவெறியின் விளைவாகச் சமூகச்சீர் குலைவு ஏற்படுகிறது. சமூகத்தில் மதுவெறி தலைவிரித்தாடும் போது அதனுடன் இணைந்து கேளிக்கை, நடனங்கள், பரத்தைமைத் தொழில், சூதாட்டம் போன்றசமூகச் சிக்கல்களும் தோன்றுகின்றன. அத்தகைய கொடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மதுவெறியைக் கட்டுப்படுத்த இந்நாட்டில் மதுவிலக்குச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இருப்பினும், மது விற்பனையால் அரசுக்குக் கிடைக்கக்கூடிய வரி வருவாயைக் கருத்தில்கொண்டு சில மாநிலங்கள் மது அருந்துவதைத் தடை செய்யாமல் இருக்கின்றன. மதுவிலக்குச் சட்டம் நடைமுறையில் உள்ள மாநிலங்களில் கள்ளச் சாராயம், அவற்றின் உற்பத்தி, கடத்தல் போன்றனவும் உள்ளன. அரசும், சமய அமைப்புகளும், சமூகநல அமைப்புகளும் இத் தீய பழக்கத்திற்கெதிராகக் கருத்துகளைச் சொல்லுகின்றன. எனினும், இந்தத் தீய பழக்கம் சமூகத்தில் ஒழியாமல் இருப்பது வருத்தத்திற்குரியது. கோ.இரா.

**மதுபன் கல்வெட்டு**: வட இந்தியாவில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த அர்சர் (Harsha) என்னும் சிறப்பு வாய்ந்த பேரரசரைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் சான்றுகளுள் மதுபன் (Madhuban) கல்வெட்டும் ஒன்றாகும். இக்கல்வெட்டுக் குறிப்பு கி.பி. 631-ஆம் ஆண்டுக்கு உரியது. அர்சர், பிற்காலத்தில் பௌத்த சமயத்தவராக மாறியபோதிலும், அவருடைய வாழ்க்கையின் முற்பகுதியில், அவர் ஒரு சிவ பக்தராக விளங்கினார் என்பதை மதுபன் கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. இக் கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறது. 'மகேசுவர பக்தரான அர்சர், அம்மகேசுவரரைப் போலவே, படைக்கப்பட்ட எல்லா உயிர்களிடத்தும் கருணையுள்ளம் கொண்டிருந்தார்; நன்கொடைகொடுத்தல், பிறர் புகழைப்பாதுகாத்தல் ஆகியன ஒருவருக்கு நல்வாய்ப்பின் காரணமாகக் கிடைக்கின்றன. அந் நல்வாய்ப்பு மின்னலைப் போலவும், நீர்க்குமிழியைப் போலவும் நிலையற்றது; உயிர்வாழும் யாவரும் மன, வாக்கு, காயத்தினால் செயல்களில் ஈடுபட்டுத்தத்தம் கடமைகளைச் செய்ய வேண்டும். ஆன்மிகச் சிறப்புப்பெறத் தடையற்ற வழி அதுவே என்று அர்சர் அறிவித்துள்ளார்.' அர்சர் வரலாற்றில் கி.பி. 631 – ஆம் ஆண்டுக்குரிய இக் கல்வெட்டு ஒரு திருப்பு முனையாகும் என்பது வரலாற்றறிஞர் சிலரின் கருத்தாகும். தெ.பா.

**மதுரகவியாழ்வார்**: இவ்வாழ்வார் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். இவர் கி.பி. 9 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். நம்மாழ்வார் காலத்தவர். இவர், திருக்கோளூரில் கருடனது கூறாகத் தோன்றியவர் என்பர். இவர் சாமவேதம் மனப்பாடம் செய்யும் வேதியர் குலத்தில் பிறந்தவர். இவர் 14 வித்தைகள் கற்றுத் தேர்ந்தவர். இறைவன் திருத்தலங்களைச் சேர்ந்து வணங்கி வருதலே உயிர்க் கொள்கையாய்ப் பெற்றவர்.

மதுரகவியாழ்வார் 'புனித நீராடு பயணம்' செய்து வருங்காலத்துக் கங்கைக் கரையில் ஒருநாள் இரவு தங்கியிருந்தார். அன்றிரவு காலைக் கதிரவன் போல ஒளிவெள்ளம் தென்திசையில் தோன்றியது. அதனை ஐயுற்று மறுநாளும் தென்திசை நோக்க ஒளிவெள்ளம் தோன்றவே அத்தென்திசை நோக்கி. ஆழ்வாரும் தொடர்ந்தார். ஆழ்வார் திருநகரி வந்ததும் ஒளிவெள்ளம் தெரிந்திலது. ஒளிவெள்ளம் காணாமையால் 'இவ்வூரில் ஏதேனும் புதுமைகள் உண்டோ' என்று ஆழ்வார் வினவினார். அவ்வூரில் நம்மாழ்வார் எழுந்தருளியிருக்கின்றார் என்ற செய்தி அறிந்தார். உடனே அவர் நம்மாழ்வார் திருமுன்செல்லும்போது நம்மாழ்வார் தவத்தில் இருந்தார். அவருடைய ஆற்றல்தான் ஒளிவெள்ளம் காணாமைக்குக் காரணம்என்று எண்ணினார். தாம்வந்ததையும் அறியாது தவத்தில் இருக்கின்ற நம்மாழ்வாருக்கு உணர்ச்சிகள் உண்டோ இல்லையோ என்றறிய ஒரு கல்லை எடுத்துத்திருமதில் மீது வீசினார். ஆங்கெழுந்த ஓசையைக்கேட்டு நம்மாழ்வார் திரும்பப் பார்த்தார். அவர்தம் ஆற்றலை அறியவேண்டி மதுரகவி, 'செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?' என்று வினாவிடுத்தார். அறிவற்ற பொருளான புவியில், அணுவான உயிர் உடல் எடுத்தால் அதற்கு நுகர்ச்சியும் வாழ்விடமும் எவைஎன்பது வினாவின் கருத்தாகும். நம்மாழ்வாரும் 'கானலோடிய காட்டில் சிறியது பிறந்தால் அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்று பதிலிறுத்தார். அதன் பொருளாவது, கானல்நீர் போன்ற இன்பத்திற்காக வாழ்க்கைக் காட்டில் தோன்றியிருக்கின்ற உயிர், அந்தப் புவி நுகர்ச்சியையே நுகர்ந்து அப்புவியிடமே இருக்கும் என்பதாம்.

மதுரகவி, நம்மாழ்வாரின் பேரறிவைக் கண்டு 'அடியேனை ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்டினர். தாம் பிறவி அறுக்கப் பகரும் பாசுரங்களைப் பட்டோலை கொள்ளும் என அவரும் அருளினார். மதுரகவியும் அவரைக் குருவாக ஏற்றார்.

மதுரகவியாழ்வார் பாடிய பாசுரங்கள் பதினொன்றே. அவை அந்தாதித் தொடையில் அமைந்தவை; 'கண்ணிநுண் சிறுத்தாம்பினால்' எனத் தொடங்குகின்றன. நாதமுனிகளால் முதலாயிரத்தின் இறுதியாக இவர் பாடல்கள் தொகுக்கப்பட்டன.

இவர் குருபக்தி நெறியுடையவர். அருளாசிரியர் பெருங்கருணைத் திறத்தில் அந்நெறி ஒடுங்கி அவரையே புகலிடமாகக் கொண்டு நிற்றலைக் குறிக்கும். அதுவே இவர்தம் பக்திநெறி. அது மற்றவரினும் வேறுபாடுடையது. தம் குருவையே இறைவனாகக் கண்டவர்; பாடலும் செய்தவர். அவரது பெயரை நினைத்தாலே தம் நாவுக்கு அமுதூறும் என்ற கொள்கையாளர். நம்மாழ்வார் பாசுரங்களைப் பாடித் திரிதலே தமக்குப்பேரின்பம் என்ற நம்பிக்கையினர். அவர்தம் பாசுரங்களைப் பாடித்திரிந்தமையால் மதுரகவி எனும் பெயர் பெற்றார்.

குருகூர் நம்பியிடம் அடிமையாகிய அப்பரிசே இறைவன் திருக்காட்சிக்குக் காரணமாயிற்று என்று நினைப்பவர். பொருளும் மடவாரும் உடைய பழைய வாழ்க்கை அகன்றது. ஏழ்பிறப்பும் இனி ஆள்பவன் நம்மாழ்வாரே என்று கருதினார். ஆசான் வழி ஆண்டவனையே கண்டார். 'மிக்க வேதியர் வேதத்தினும் பொருள் நிற்கப்பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்' என்பது இவர்தம் வாழ்க்கை நெறியைப் புலப்படுத்தும்.

பாட்டனுபவத்தால் பிறிதோர் பாடல் செய்வதும், அடியாரை ஆண்டவனாகவே காண்பதுவும், பத்தியின் முடிந்தநிலை என்பதற்கு மதுரகவியாழ்வாரின் பாசுரங்கள் தக்க சான்றுகளாம். திருவாய்மொழியைத் தொடரும் போதும் முடிக்கும்போதும் இவர்தம் அந்தாதி பாடப்பெறுதல் வழக்கு. க.ந.

**துணை நூல்:**

**இராகவையங்கார், மு.**, ஆழ்வார்கள் காலநிலை, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981.

**மதுரா (வட மதுரை):** தென்னிந்தியாவில் உள்ள மதுரையைப் போலவே வட இந்தியாவில் உள்ள மதுரா ஒரு பழமை மிக்க நகரமாகும். கண்ணன் பிறந்து வளர்ந்த இடம் இதுவெனப் போற்றப்படுவதால் இந்துக்கள் ஆண்டு முழுவதும் இங்கு வந்த வண்ணம் உள்ளனர். சிறிது காலம் இங்குச் சமணம் தழைத்த பின்னர், இந்நகர் பௌத்த சமயத்தின் மாபெரும் மையமாக விளங்கியது. இந்நகரம் இசுலாமியப் படையெடுப்பாளரின் தாக்குதலுக்குப் பலமுறை உள்ளாகியுள்ளது. மதுரா சிற்பங்கள் கலைவரலாற்றில் குறிப்பிடத்தக்க மரபைச் சார்ந்தவையாகும். அத்தகைய மரபைச் சார்ந்த சிற்பங்கள் இடம் பெற்ற அருமையான அருங்காட்சியகம் ஒன்று இங்குள்ளது. கண்ணனின் பிறப்பு வளர்ப்புத் தொடர்பான கோகுலம், பிருந்தாவனம், கோவர்த்தனம் முதலிய இடங்கள் மதுராவைச் சுற்றி அமைந்துள்ளன.

மதுரா நகரம் இந்தியாவின் வடபாகத்தில் இருப்பதைக் கருதித் தென்னக மதுரையினின்றும் வேறுபடுத்திக் காட்ட வட மதுரை என்று தமிழ்நாட்டார் இதனைக் குறிப்பிடுவர். வட மதுரையைத் தலைநகரமாகக் கொண்ட மதுரா மாவட்டம் உத்தரப் பிரதேச மாநிலத்தின் தென்மேற்குக் கோடியில் இராசசுத்தான் எல்லையோரத்தில் அமைந்துள்ளது. அம்மாவட்ட மக்கள் பார்சியும் சமசுகிருதமும் கலந்த இந்தி மொழி பேசுகின்றனர். அம்மாவட்டத்தின் வடக்கே அலிகார் மற்றும் குர்காவனும், கிழக்கே அலிகார் – மணிபுரி – ஈத்தா ஆகியவையும் தெற்கே ஆக்ராவும், வடக்கே பரத்பூரும் எல்லைகளாக உள்ளன.

மாவட்டத்தின் தென்மேற்கு மூலையில் ஏராளமான சுண்ணாம்புக்கல் குன்றுகள் உள்ளன. தென்மேற்குப்பகுதியில் பழம்பெருமை மிக்க பல இடங்கள் இருந்த போதிலும் முன்பு அப்பகுதி செழிப்புடன் விளங்கவில்லை. கிழக்குப் பகுதி சிறப்பான நீர்ப்பாசன வசதியுடன் நிலம் எப்போதும் செழிப்பாகவே விளங்கி வந்துள்ளது. கோதுமை, கரும்பு, பார்லி, பருத்தி ஆகியவை பயிர் செய்யப்படுகின்றன. மாங்கனி உற்பத்தி இங்கு அதிகம். பித்தளை உலோகக் கலைப் பொருட்களுக்கு மதுரா புகழ் பெற்றதாகும்.

ஆரியர்கள் இந்தியா வந்தடைந்த காலத்தில் மதுராப்பகுதிக்குச் 'சூர்சேனதேசம்' என்று பெயரிட்டிருந்தனர். வரலாற்று அடிப்படையில் மதுராப்பகுதியின் பழமை கி.மு. 600 ஆகும். இங்கு கி.மு. 600-ஆம் ஆண்டிலேயே மக்கள் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. பின்னர் கி.மு. 2 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராகிருதக் கல்வெட்டு ஒன்று இங்குக் கிடைத்துள்ளது. அந்நூற்றாண்டில் நடு ஆசியாவிலிருந்து புறப்பட்டு வந்த சக இனத்தவர் தட்சசீலம், கத்தியவார் ஆகிய இடங்களில் மட்டுமன்றி மதுராவிலும் தங்கள் அரசை நிறுவினர். மதுராப் பகுதியை ஆண்ட சக இன அரசன் இராசவுலா என்பவன் நாணயங்கள் வெளியிட்டுள்ளான். அதே போல் கி.பி. முதல் நூற்றாண்டின் கடைசிக் காற்பகுதியில் நடு ஆசியாவிலிருந்து புறப்பட்டு வந்த இன்னொரு குழுவினரான குசாணர் (Kushans) புருசபுரத்தில் (பெசாவர்) தலைநகர் ஏற்படுத்தி அரசாண்டனர். பெசாவர் அவர்களின் தலைநகரமாக விளங்கிய போதிலும் மதுராவே அவர்களின் கலை நகரமாக விளங்கியது. கனிசுகர் முதலிய குசாண மன்னர் வரிசையில் கனிசுகர் புகழ் வாய்ந்தவர். தொடக்கத்தில் சமணராயிருந்த அவர் தம் வாழ்வின் பிற்பகுதியில் பௌத்தரானார். இவர் மதுராவில் புத்ததூபி ஒன்றை நிறுவியுள்ளார். பல புத்த மடங்களைக் கட்டியுள்ளார். பின்னர் கி.பி. 150 – 153-இல் பதவிக்கு வந்த உவிச்கர் மதுராவில்











வடமதுரைச் சிற்பங்கள்

ஒரு புத்த சைத்தியம் கட்டச் செய்தார். கனிசுகர் முதலான குசாண மன்னர்கள் கிரேக்க, இந்தியச் சிற்பிகளைக் கொண்டு புதிய கலை மரபை உருவாக்கினர். வடமேற்கு எல்லைப்புறத்தில் மலர்ந்த அச் சிற்பக் கலையை 'காந்தாரக்கலை' என்பர். புத்தரை முதன் முதலில் கல்லில் வடித்தவர்கள் அக்கலை விற்பன்னர்களே.

இரண்டாம் சந்திரகுப்த மாமன்னர் காலத்தில் இந்தியாவிற்கு வந்து ஆறு ஆண்டுகள் தங்கிய சீனப் பயணி பாகியான் (Fa Hien-கி.பி.399-413) மதுரா நகருக்கு கி.பி. 400-இல் வந்தார். அவர் வந்திருந்த போது மதுரா நகரம் 5 கி.மீ. சுற்றளவு இருந்தது என்றும் அதில் 20 மாபெரும் புத்த மடங்கள் இருந்தனவென்றும் அம்மடங்களில் 3,000 பௌத்தத் துறவிகள் தங்கியிருந்தனரென்றும், உபகுப்தர் அவர்களின் பெரிய குருவாக விளங்கினார் என்றும், அசோகர் நிறுவிய மூன்று நெடிதுயர்ந்த தூபிகளை இங்குக் கண்டார் என்றும், இந்நகரம் பௌத்த சமயத்தின் மாபெரும் மையமாக விளங்கிற்றென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாமன்னர் அர்சவர்த்தனரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்த மற்றொரு சீனப்பயணியான உவாங்சுவாங்கு (Hiuen Tsang-கி.பி. 629-645) இந்தியாவிலே 16 ஆண்டுகள் தங்கியிருந்தவர். மதுராவில் 20 பௌத்த சைத்தியங்களையும் ஐந்து இந்துக் கோயில்களையும் கண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட இந்தியாவில் வேறு எந்த நகரத்தையும் விட இசுலாமியரின் படையெடுப்பால் மிகுதியும் பாதிக்கப்பட்ட நகரம் ஒன்று உள்ளது என்றால் அது மதுரா நகரமே. இந்நகர் மீது கி.பி.1012-1018 ஆண்டுகளுக்கிடையில் படையெடுத்து வந்த கசினிமுகமது இந் நகரைத் தீக்கிரையாக்கித் தரைமட்டமாக்கினான். அப்போது இந்நகரை ஆண்டு வந்த குலச்சந்திர மகாராசனின் 185 யானைகளையும் ஏறத்தாழ 30 இலட்சம் உரூபாய் மதிக்கத்தக்க பொன்னையும் மணிகளையும் இங்கிருந்து கசினிக்கு எடுத்துச் சென்றான். பின்னர் கி.பி. 1246 – இல் தில்லியை ஆண்டுவந்த சுல்தான் நசிருதின் முகமதுவின் வரலாற்றாசிரியர் மின்காசு – இ-சிராசு (Minhaj – i – Siraj, the Chief Kazi) எழுதிய ''தபகத்-இ-நசிரி' (Tabakat-i-Nasiri) எனும் நூலில், 'மதுராவில் ஆயிரக்கணக்கான அரண்மனைகளும் தங்கச் சிலைகள் உள்ள பல கோயில்களும் உள்ளன. அந்தச் சிலைகளில் கண்கள் இருக்குமிடத்தில் கண்களுக்குப் பதிலாக நீலம்(Saphire),மாணிக்கம் (Ruby) ஆகிய அரும் மணிகளைப் பதித்துள்ளனர். அவற்றைப் போல உருவாக்கிட ஆயிரமாயிரம் தினார் நாணயங்கள் செலவழித்து இருநூறு ஆண்டுகள் முயன்றாலும் முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

தில்லியிலிருந்து சிக்கந்தர் லோடி படையெடுத்து வந்து கி.பி.1500-இல் பல கோயில்களை இடிபாட்டுக்குள்ளாக்கினான். மொகலாயப் பேரரசரின் முதல் அரசப் பேராளராக மதுராவிற்கு வந்த அப்தன் அன்நபி தில்லியிலிருப்பது போலவே இங்கும் ஒரு சமிஆ மசூதியைக் கட்டினான். அவன் கி.பி. 1661-இல் கட்டிய அம்மசூதிக்கு ஏறத்தாழ $27\frac{1}{2}$ இலட்சம் உரூபாய் ஆகியிருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அம்மசூதி நகரின் நடுவில் உள்ளது. அது அமைந்துள்ள இடத்திலிருந்து முக்கிய சாலைகள் நகரின் நான்கு பக்கங்களுக்கும் பிரிகின்றன. அம்மசூதி கி.பி.1803-இல் ஏற்பட்ட நில நடுக்கத்தில் சிறிது சிதைவு அடைந்தது. பின்னர்ச் செப்பனிடப்பட்டது. இங்குகி.பி. 1669-இல் அவுரங்கசீபும் ஒரு மசூதி கட்டினார்.

இங்கு கி.பி. 1669 இல் அசன் அலி என்பவன் மொகலாயரின் பவுசுதாராக இருந்தபோது யாதவ குலத்தைச் சார்ந்த வன்மை மிக்க மரபினரான சாத்து (Jat) களின் எழுச்சி தோன்றியது. சாத்து அரசன் கோகிலராசன் அதன் காரணமாகத் தூக்கிலிடப்பட்டான். இங்கு, கி.பி. 1676 – இல் ஆண்ட சுல்தான் தூலிகான் ஆட்சியுடன் இசுலாமியர் ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது. எனினும், கி.பி. 1707-இல் தான் மதுரா முற்றிலும் இந்துக்கள் வசமாயிற்று. சாத்துகள் பெரும்பாலும் மதுராவிற்கு அருகில் உள்ள பரத்பூரில் இருந்தே மதுராவை ஆண்டனர்.

ஆப்கன் நாட்டிலிருந்து கி.பி. 1756 – இல் 25,000 படைவீரருடன் வந்த அகமதுசா மதுராவைத் தாக்கிப் பெரும் அழிவு செய்தான். பின்னர் கி.பி. 1768 –இல் மராட்டிய வழியினரான சிந்தியா மன்னரின் தாக்குதலுக்குள்ளாகியது. அது முதல் மதுராவில் சிந்தியா பரம்பரை ஆட்சி ஏற்பட்டது.

மராட்டியருக்கும் தில்லி பாதுசா படைக்கும் ஏற்பட்ட போரில், தில்லி பாதுசா சார்பில் ஆங்கிலேயப் படைத்தலைவர் இலேக்கு(Lake)என்பவன் தவுலத்ராவ் சிந்தியாவை முறியடித்ததற்காக,மதுராவின் ஒருபகுதி ஆங்கிலேயருக்குத் தரப்பட்டது. அங்கு ஆங்கிலேயர் கி.பி.1803-இல் படை வீடு (Cantonment) அமைத்துக் கொண்டனர். ஆங்கிலேயர் இந்நகரை 'மத்ரா' என்று குறித்தனர். பின்னர் கி.பி.1804 – இல் மதுரா முழுமையும் ஆங்கிலேயர் கையதாயிற்று. ஆரின்சு, கார், கோசிம், மாது, நோகிசிலி, மகாவனம், அகாபாது-சால்சர் ஆகிய ஏழு வட்டங்கள் அடங்கிய மதுரா மாவட்டத்தினை ஆங்கிலேயர் கி.பி. 1832 – இல் உருவாக்கினர். யமுனையின் இருபுறமும் பரந்திருந்த அம்மாவட்டத்தின் பரப்பு 2,000 சதுர கி.மீ. ஆகும்.

மதுரா, பிருந்தாவனம், கோசிம் ஆகிய மூன்று நகராட்சிகள் உருவாயின. சமணம், பௌத்தம், இந்து, இசுலாம் ஆகியவற்றையே கண்டுவந்த மதுரா நகரில் கி.பி. 1856-இல் முதன் முதலாகக் கிறித்தவ சமய மாதா கோயில் கட்டப்பட்டது. பின்னர் கி.பி. 1861-இல் இங்கு மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்தப் பட்டது. ஆங்கிலேயரை எதிர்த்து கி.பி.1857-இல் ஏற்பட்ட மக்கள் எழுச்சி இங்கு உச்சக்கட்டத்தை எட்டியது. இங்கிருந்தால் ஆபத்து எனக் கருதி, மதுரா கருவூலப்பணத்தை ஆக்ராவுக்குக் கொண்டு செல்ல முற்பட்ட துணைத்தளபதி தால்டன் கொல்லப்பட்டார். மாவட்ட நடுவர் மன்றம் தீக்கிரையாக்கப் பட்டது. அரசு ஆவணங்கள் கொளுத்தப்பட்டன. சிறை உடைக்கப்பட்டது. கிளர்ச்சியாளர் தேவி சிங்கு என்பவரை மதுரா மன்னராக அறிவிப்புச் செய்ய முயன்ற நிலையில் கிளர்ச்சி தோல்வியுற்றது. மதுரா நகரில் கி.பி. 1857 மே 14-ஆம் நாள் தொடங்கிய கிளர்ச்சி நவம்பரில்தான் முடிந்தது.

மதுரா மாவட்டத்தின் ஒரு பகுதி வளமற்றதாய் இருந்ததால் கி.பி. 1813-14, கி.பி. 1825-26, கி.பி. 1860-61 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சத்தைக் கண்ட ஆங்கிலேய ஆட்சியாளர் கி.பி. 1873-75-இல் மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் யமுனை ஆற்றிலிருந்து 200 கி.மீ. நீளமுள்ள ஆக்ராக் கால்வாயை வெட்டுவித்தனர். அது முதல் மதுரா மாவட்டம் முழுமையும் செழிப்பாயிற்று.

சித்திரை தொடங்கி ஆண்டு முழுவதும் மதுராபுரிக் கோயில்களில் விழாக்கள் தொடர்ந்து நிகழ்வதால் நாடுமுழுவதிலிருந்தும் பக்தர்கள் வந்துகுழுமிய வண்ணம் உள்ளனர். இங்குள்ள 5 மலைகள், 11 குன்றுகள், 4 அருவிகள், 84 மடுக்கள், 12 தடாகங்கள், 12 வனங்கள், 24 துணைவனங்கள், பல நீராடு துறைகள் ஆகியவை இந்து சமயத்தினரால் புனிதமாகப் போற்றப்படுகின்றன.

மதுராவின் மாபெரும் ஆலயமாக விளங்கி வந்திருப்பது கேசவ தேவர் கோயிலாகும். அது கி.பி. 1669-இல் அவுரங்கசீபால் இடிபாட்டுக்குள்ளாயிற்று. அங்கு கி.பி. 1650 -ஆம் ஆண்டில் வந்த ஐரோப்பியப் பயணி தாவர்ணியர் (Tavernier) அக்கோயில் ஊருக்கப்பால் 10-கி.மீ வரும்போதே தெரியும் என்றும், இரண்டு உயர்ந்த கோபுரங்கள் இருந்தன என்றும், அவற்றின் உச்சிவரை செல்லப் படிக்கட்டுகள் இருந்தன என்றும், யமுனை நதிக்கரையில் உள்ள படிக்கட்டுகளில் ஏறிக் கோயில் வாயிலை அடையலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். நதியின் போக்கு மாறியதால், இன்று அக்கோயில் நதியிலிருந்து 1 கி.மீ. தொலைவில் கோட்டை மதிலுக்குப் பின்புறம் உள்ளது. அங்கிருக்கும் இராமர், சீதை, இலக்குவன் சிலைகள் பளிங்குக் கற்களினால் ஆனவை. பின்னர் கி.பி.1664 – இல் மதுராவிற்கு வந்து போன பிரான்சு நாட்டுப்பயணி-மருத்துவர்–பெர்னியர் (Bernier) அக்கோயிலைப் பற்றி வியந்து பாராட்டியுள்ளார். அக்கோயிலுக்குப் பின்புறம் உள்ள போத்ர குண்டம் பக்தர்களால் மிகுதியும் போற்றப்படுவதாகும். அது குவாலியர் மன்னரால் செப்பனிடப்பட்டது. அதன் அருகில் உள்ள பழைய கட்டடம் ஒன்றில்தான் கண்ணன் பிறந்தான் எனச் சொல்லப்படுகிறது. இங்குள்ள துவாரகநாதர் கோயிலும் பெரியது. ஏகாதசி தோறும் இராசலீலை விழா நடைபெறும்.

மதுராவின் மன்னர்கள் மட்டுமல்லாமல் செய்ப்பூர், பரக்பூர் மன்னர்களும் கலையழகு மிக்க மாளிகைகளை இந்நகரில் உருவாக்கி இதனை எழில் நகரமாக்கியுள்ளனர். செய்ப்பூர் மன்னர் செய்ப்பூரில் கட்டியது போலவே இங்கும் ஒரு வானியல் ஆய்வுக்கூடம் (Observatory) கட்டியுள்ளார். யமுனையின் கரையோரம் 2 கி.மீ. நீளம் நிறைந்துள்ள மாளிகைகளின் காட்சி கரையிலிருந்து பார்க்கக் கண்ணுக்கு இனிய விருந்தாகும்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றின் அருகே அருங்காட்சியகம் அமைந்துள்ளது. அது கி.பி.–1874-இல் தொடங்கப் பட்டது. அதனை 1900–இல் மதுரா நகராட்சி ஏற்றது. உத்தரப்பிரதேச மாநில அரசு 1912 – இல் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. புகழ் பெற்ற பல சிற்ப வடிவங்கள் அக்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன. குசாணர் காலக் கலையை முழுமையாக அறிவதற்கு உலகில் உள்ள ஒரே அருங்காட்சியகமாக அறிஞர்கள் இதனைக் கருதுகின்றனர். அதைகி.மு.300 -இல் தொடங்கி மௌரியர், சுங்கர், குசாணர், குப்தர் ஆகியோர் ஆண்ட மத்திய காலத்திய சிற்ப வடிவங்களும் அருங்கலைப் பொருட்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. சமண தீர்த்தங்கரர் சிலைகளின் பாணியில் புத்தரின் சிலையை இங்கு இருந்த குசாணர் காலச் சிற்பிகள் உருவாக்கினர். அவர்களின் சிற்பங்கள் சாஞ்சி, பாரூட்டு சிற்பங்களினின்றும் வேறுபட்ட தனித் தன்மைவாய்ந்தவை. சாஞ்சியில் உள்ள இயக்சி (Yakshi) யின் சிலை உறுப்புகளில் மார்பகம், பிட்டம் மட்டும் அழகுணர்ச்சி மிகும்படி தூக்கலாகப் படைக்கப்பட்டிருக்க, மதுரா சிற்பங்களில் மொத்த உருவமும் சதைப் பிடிப்புடன் முழுமையும் அழகுணர்ச்சி ததும்புவதாகப் படைக்கப்பட்டுள்ளது. இங்கு கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, மதுவருந்திய மங்கை ஒருத்தியின் நிலை குலைந்த நிலையினை இயல்பாகச் சித்திரிக்கும் சிலை ஒன்று உள்ளது. மதுராச் சிற்பி

களின் கலைத் திறனுக்கோர் எடுத்துக் காட்டாக அதனைச் சொல்லலாம். சிற்பக் கலை உலகில் அச் சிற்ப மரபை, மதுராக்கலை மரபு (Mathura School) என்று பெயரிட்டுக் கூறுகின்றனர்.

பின்னர் கி.பி. 1853-இல் படைத்தலைவர் கன்னிங் காம் மதுராவில் கேசவதேவர் கோயிலருகே அகழாய்வு செய்த போதும் கி.பி. 1860-இல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே தோண்டிய போதும் இந்நகரின் தொன்மையைக் காட்டும் பல சின்னங்கள் கிடைத் தன. பின்னர் 1913-இல் மதுராவுக்கு அருகில் உள்ள மாது என்னுமிடத்தில் மாமன்னர் கனிசுகரின் தலை யற்ற சிலை கிடைத்தது. மேலும், 1933-இல் கர்சான் (Curzon) தொல்பொருள் அருங்காட்சியகம் இங்குத் திறக்கப்பட்டது.

**கோகுலம்:** கண்ணன் வளர்ந்து இன்பத் திரு விளையாடல்கள் பல புரிந்ததாகப் போற்றப்படும் கோகுலம் மதுராவிலிருந்து 7-கி.மீ. தொலைவில் யமுனைக் கரையில் உள்ளது. இங்குள்ள மதுர நாதர் கோயில் செங்கருங்கற்களினால் கட்டப்பட்ட மாபெரும் கோயிலாகும்.

**பிருந்தாவனம்:** கண்ணனின் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத பிருந்தாவனம் மதுராவிலிருந்து 8 கி.மீ. தொலைவில் யமுனையின் மறுகரையில் அமைந்துள் ளது. பிருந்தம் என்றால் துளசி என்று பொருள்படுவ தால், துளசிச்செடிகள் அடர்ந்து காடுபோலிருந்த அப் பகுதி பிருந்தாவனம் எனப் பெயர் பெற்றது. அங் குள்ள கோவிந்த தேவர் கோவில் கிரேக்கப் பாணி யில் கட்டப்பட்டுள்ளது. பின்னர் கி.பி. 1754-இல் அங்கு வந்த திபின் தாலர் (Father Tiffen Thaler) என்னும் பாதிரியார் ஒரே வீதியில் மட்டுமே பல மாபெரும் கோயில்களும் மாளிகைகளும் மண்ட பங்களும் இருந்தன எனக் குறிப்பிட்டுள்ளார். அதன் பின் கி.பி. 1820-இல் அங்கு வந்த விக்டர் சாக் மாண்டு (Victor Jacaumont) என்ற பயணி இது பெரும் புனிதத்தலமாக விளங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். இங்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களும் 32 நீராடுதுறைகளும் 2 புனிதத் தடாகங்களும் இருந்தன. இசுலாமியர்கள் இந்நகரைப் பிடித்து, இதற்கு முமீனா பாது எனப் பெயர் வைக்க முயன்றார்கள். கண்ணன் காளிங்க நர்த்தனமாடியது குறித்த தலமும் இது தான். காஞ்சியிலிருந்து வந்த சிரீரெங்காச்சாரியர் என்ற வைணவக்குரு முயற்சியில் செல்வர்கள் உதவி யுடன்இங்கு அரங்கநாதர் கோயில் உரூ. 45 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. இங்குள்ள மதன மோகனர் கோவிலும் புகழ் பெற்றது. மீ.ம.

**துணை நூல்:**

**Purushottam Chandra Jain,** Socio Economic Exploration of Mediaeval India, B.R. Publishing Corporation, Delhi, 1976.

**மதுரா விசயம்** என்னும் இந்த வடமொழி நூலிற்கு வீரகம்பராயசரிதை (Virakamparaya Charita) என்னும் பெயரும் உள்ளது. இது கி.பி.14-ஆம் நூற்றாண்டில் குமார கம்பண்ணன் எனும் விசயநகர அரசன் தமிழகத்தின் தெற்கு மாவட்டங்களில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த இசுலாமியர்களை வென்ற வீரவரலாற்றைக் கருவாகக் கொண்டது. இந்நூல் குமார கம்பண்ணனின் மனைவி கங்காதேவி என்பவ ரால் எழுதப்பட்டுள்ளது. எழுதியவர், எடுத்துக் கொண்ட பொருள், எடுத்தியம்பும்முறை ஆகிய பல் வேறு அடிப்படைகளிலும் இந்நூல் சிறப்புற்று விளங்கு கிறது.

கணவனின் வீரத்தைப் பாராட்டி மனைவி காவி யம் எழுதியிருப்பது இலக்கிய வரலாற்றில் புதுமை யானதாகும். வேத காலத்திலிருந்து வடமொழி இலக்கிய வரலாற்றில் பெண்பாற் புலவர்கள் எழுதி யுள்ள இலக்கியங்களாக வெளிப்படுபவை சிலவே. அவற்றுள் தலைசிறந்து நிற்பது மதுரா விசயமாகும்.

இந்து சமயத்தை மீண்டும் நிலைப்படுத்தத் தோன்றிய விசய நகரப்பேரரசின் சிறந்த அரசர் வரிசையில், ஒருவராக எண்ணக் கூடிய குமார கம் பண்ணன் என்பவர் கி.பி.1367-இல் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தியவர். அவ ரின் வெற்றியே இந்நூலின் பாடுபொருளாகும்.

விசய நகர அரச வரிசையில் சங்கம வழித் தோன்றலில் ஆட்சி புரிந்துவந்த அரிகரரின் உடன் பிறப்பாகிய புக்கர் காலத்திலிருந்து நூல் தொடங்கு கிறது. அவர்தம் ஆட்சிச் சிறப்பு, படைவலிமை, கொடைத்தன்மை ஆகியவை பாராட்டப்படுகின்றன. அவருடைய மனைவியருள் தேவாயி என்பவருக்குப் பிறந்த மூன்று புதல்வர்களுள் மூத்தவன் கம்பண்ணன் ஆவான். தந்தையின்வளர்ப்பிலிருந்த கம்பண்ணனைத் தீய பழக்கங்கள் தீண்ட அஞ்சின.

வளர்ந்த பின்னர்த் தந்தையின் அறிவுரைப்படி தெற்கு நோக்கிப் படையெடுத்து, தொண்டை மண்ட லத்தை ஆண்டுவந்த சம்புவராயரைக் கொன்று காஞ்சியைத் தலைநகராக்கிக் கொண்டான். மக் களுக்கு வரிகளைக் குறைத்து வசதிகளைப் பெருக்கித் தந்து ஆட்சிபுரிந்து கொண்டிருந்தான்.

ஒருநாள் அவன்முன் ஒரு வீரப் பெண் தோன்றி தமிழகம் இசுலாமியர்களின் ஆட்சியால் படும் அவல நிலையையும், இந்துசமயக்கோயில்கள் இடிக்கப்பட்டுக் கிடப்பதையும், காவிரியாறு கட்டுப்பாடின்றி, கரை

களை உடைத்துக்கொண்டு ஓடுவதையும், பார்ப்பனச் சேரிகளில் புலால் நாற்றம் வீசுவதையும், மிருதங்க இசை நிறைந்த தெருக்களில் ஆந்தையின் அலறல் கேட்பதையும், இளம்பெண்களின் மார்பில் உள்ள சந்தனச் சேற்றைக் கவர்ந்து வெண்மையாக ஓடி வந்த தாமிரவருணி ஆறு, இசுலாமியர்களால் கொல் லப்பட்ட பசுக்களின் குருதியால் செந்நீராகி ஓடிவரு வதையும் எடுத்துரைத்துத் தன் கையிலிருந்த ஆற்றல் மிக்க வாளையும் அவன்முன் வைத்துப் படையெடுக்க வேண்டினாள்.

கம்பண்ணன் சிறிதுகாலம் கழித்து மதுரை நோக் கிப் படையெடுத்து, இசுலாமியர்களை வென்றான். மற்ற இந்து அரசர்கள் வாழ்த்தத் தேவர் பூமாரி பொழிந்தனர். மேலும், இந்நூலிலிருந்து விசய நகர அரசின் தோற்றத்தை அடுத்துள்ள காலப்பகுதியை யும், சம்புவராயரைக் கம்பண்ணன் போரில் கொன்ற தையும், முதலாம் புக்கரின் மனைவியருள் தேவாயி ஒருவர் என்பதையும், அவர் கம்பண்ணனுக்குத் தாய் என்பதையும், இசுலாமியர் ஆட்சிக்காலத்தில் இந்து சமயக் கோயில்களின் நிலையையும், திருவரங்கக் கோயிலிலிருந்த அரங்கநாதரின் செப்புப் படிமம் இசுலாமியர்களுக்கு அஞ்சி, திருநாராயணபுரம் எனும் மேலக்கோட்டை, திருமாலிருஞ்சோலை, கோழிக் கோடு, புங்கனூர் வழியாகத் திருப்பதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இசுலாமியரை வென்ற பிறகு மீண்டும் திருவரங்கக் கோயிலிலே வைக்கப்பட்டதையும் அறிய முடிகிறது.

காவிய மரபிலும் வருணனை, உவமை போன்ற உத்திகளிலும், கங்கா தேவி காளிதாசனைப் பின்பற்றியுள்ளார். காளிதாசன் இரகுவம்சத் தில் கருவுற்ற பெண்ணைச் சிறப்பிப்பதைப் போன்றே கங்காதேவியும், மதுரா விசயத்தில் சிறப் பித்துள்ளார். அவர் காளிதாசனைப் பின்பற்றியிருந் தாலும் பின்னர்வந்த கவிஞர்கள் இவரைப் பின் பற்றி எழுதியுள்ளனர். இராகவேந்திர விசயம் என் னும் நூல் அதற்குச் சான்றாகும். பருவகாலங்களும் நிலாத் தோற்றம் போன்ற காட்சிகளும் சிறப்பாக நூலில் கூறப்பட்டுள்ளன. ம.இரா.

**துணை நூல்கள்:**


**வேணுகோபாலன்,** மதுரா விஜயம், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1980.

**Harihara Sastri, G. & Srinivasa Sastri, V.** (Editors), Madura Vijaya or Virakamparaya Charita-An Historical Kavya by Ganga Devi, The Sridhana Power Press, Trivandrum, 1956.


மதுரை: 'வரலாறு' என்று தோன்றியதோ அன்றுமுதல் இன்றுவரை மதுரை தனக்கென்று ஒரு வரலாற்றினைக் கொண்டு விளங்குகிறது. இந்நகர் வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. சென்னை யிலிருந்து ஏறத்தாழ 350 கி.மீ. தொலைவில் உள் ளது.

இந்நகரத்தின் தொன்மையான வரலாற்றிற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அவை இலக்கியம், தொல்பொருள் சின்னங்கள், கல்வெட்டுகள், வெளி நாட்டவர் குறிப்புகள் போன்றவை ஆகும். சங்ககால இலக்கியத்தில் இவ்வூர் கூடல், நான்மாடக்கூடல், மதுரை, ஆலவாய் எனப் பல பெயர்களில் குறிப் பிடப்பட்டுள்ளது. அக்காலத் தமிழகம் மூன்று பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுத் (சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு) தனித்தனி அரசாட்சி கொண்டு விளங்கியது. மீன்கொடியைத் தங்கள் சின்னமாகக் கொண்டு அரசாட்சி செலுத்திய பாண்டிய மன்னர் களின், பாண்டிய நாட்டின் தலைசிறந்த தலைநக ராக மதுரை கி.மு. 5 – ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 11 – ஆம் நூற்றாண்டின் இறுதிவரை விளங் கியது.

'சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மாமதுரை' என்னும் அடைமொழிக்கேற்பத் தொன்மைக்காலத் திலேயே தமிழுக்காகச் சங்கங்கள் கண்டதும் இவ் வூரே. ஆனால், காலத்தால் அச்சங்கங்கள் அழிந்து போயின என்பது பழைய வரலாறு. தன் கணவனைக் கொலை செய்ததால் மன்னன் நீதி தவறினான் என் பதையும் தன் கணவன் குற்றமற்றவன் என்ற உண் மையினையும் ஒரு சிலம்பின் மூலம் மெய்ப்பித்த கண் ணகி என்னும் பெண்ணின் வஞ்சினவுரையால் மதுரை முற்றிலும் எரிந்து சாம்பலானதும், நீதிக்காகப் பாண் டிய மன்னன் நெடுஞ்செழியனும், கணவனுக்காக அரசி கோப்பெருந்தேவியாரும் உயிர்துறந்ததும் இவ் வூர் மண்ணிலேதான் என்பதை இளங்கோவடி களின் சிலப்பதிகாரம் கூறுகிறது. மதுரையில் 'கோவ லன் பொட்டல்' என்னும் ஒரு மேடு உள்ளது. அங்குத்தான் கண்ணகியின் கணவன் கோவலன் கொல்லப்பட்டான் என்பது வழிவழிவந்த செய்தி ஆகும். இங்குத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் துறையினர் அகழாய்வு செய்து பழைய வரலாற்றிற்கு உகந்த சான்றுகள் பலவற்றையும் கண்டுபிடித்துள்ள னர். முத்துக்குளித்தல் என்னும் தொழில் பாண்டிய நாட்டின் கொற்கைத் துறைமுகத்தில் நடைபெற் றது. மிகவும் விலைஉயர்ந்த நல் முத்துகளைப் பெறுவதற்காகப் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரைக்கு, யவனர்கள் என்று கூறப்பட்ட கிரேக்கர் கள் முதல் அனைத்து வெளிநாட்டவர்களும் வந்து சென்றனர் என்பதற்கும், வெளிநாட்டோடு இவ்வூர்



மீனாட்சிஅம்மன் கோயில்



கோயில் குளமும் முகப்பு மண்டபமும்



இரதி சிலை



மதுரை மீனாட்சியம்மன் கோயில் சிற்பம்

அக்காலம் முதலே வாணிகத் தொடர்பு கொண்டு விளங்கிய தென்பதற்கும் சான்றுகள் உள்ளன. இசுலாமியர்களின் படையெடுப்பு நிகழ்ந்த கி.பி. 14 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நகரம் அழிக்கப்பட்டாலும், விசயநகர அரசின் படைத்தலைவர் கம்பண ராயரால் கி.பி. 1371 – இல் இசுலாமியர்கள் அடக்கப்பட்ட பின்னர் இது இந்து அரசர்களின் கீழ்ச் சிறப்புடன் விளங்கியது. பின்னர் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து கி.பி. 18–ஆம்-நூற்றாண்டு வரை நாயக்க மன்னர்களின் கீழும், கருநாடக நவாபுகளின் கீழும், அதன் பின்னர் ஆங்கிலேய ஆட்சியின் கீழும் இருந்தது.

இத்தகைய சிறப்புவாய்ந்த மதுரை எங்கு அமைந்திருந்தது என்பதில் வரலாற்று அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளபோதிலும், இப்போதைய மதுரைநகரின் அமைப்பு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நாயக்கர்களால் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. அவர்கள் காலத்தில்தான் இந்நகரில் மீனாட்சிஅம்மன் கோயில் விரிவாக்கப்பட்டது. அக்கோயிலில் உள்ள ஒன்பது கோபுரங்களும், ஆயிரங்கால் (தூண்) மண்டபமும் புகழ்வாய்ந்தவையாகும். அக்கோயிலில், நாயக்கர் ஆட்சியைத் தோற்றுவித்த 'விசுவநாத நாயக்கர்' என்னும் மன்னரின் காலத்தில் அவருடைய அமைச்சரும் படைத் தலைவருமான அரியநாத முதலியால் திருப்பணி செய்யப்பட்டது. அக்கோயில் ஏறத்தாழ 290 மீ. நீளமும், 230மீ. அகலமும் உடையது. அக்கோயில் அனைத்துபிரிவு மக்களாலும் போற்றப்படுவதுடன் நாயக்கர்களின் கட்டடக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது. இந்நகரின் மற்றொரு சிறப்பு நாயக்கர்கால அரண்மனை ஆகும். அவ்வரண்மனை கி.பி. 1623 – ஆம் ஆண்டு முதல் 1659 – ஆம் ஆண்டு வரை மதுரையை ஆட்சி செய்தவரும், நாயக்க மன்னர்களுள் சிறந்த இடத்தைப் பெற்றவருமான திருமலை நாயக்க மன்னரால் கட்டப்பட்டது. ஆதலால், அவ்வரண்மனையும் அவர் பெயரினால் 'திருமலை நாயக்கர் மகால்' என்றுகூறப்படுகிறது. கூர்மாடக் கட்டடப்பாணியில் அமைந்துள்ள அவ்வரண்மனை இப்போது தமிழக அரசின் தொல்பொருள் துறையின் கீழ்ப்பாதுகாக்கப்பட்டு வருகிறது. அக்காலக்கட்டத்தில் உண்டாக்கப்பட்டது 'வசந்த மண்டபம்' அல்லது 'புதுமண்டபம்' என்ற ஒன்றாகும். அந்த மண்டபம் சொக்கநாதக்கடவுள் வேனிற்காலத்தில் வீற்றிருப்பதற்காகக் கட்டப்பட்டுள்ளது. அம்மண்டபம் ஏறத்தாழ 100 மீ. நீளமும் 33 மீ. அகலமும் கொண்டது. அம்மண்டபத்தின் தூண்கள் இந்துக் கோட்பாடுகளைவிளக்கக் கூடியவையாக அமைந்துள்ளன. மன்னர் திருமலைநாயக்கர் காலத்தில் கட்டப்பட்டு, சிறப்புப் பெற்றவற்றுள் இங்கு அமைந்துள்ள 'தெபபக்குளமும்' ஒன்று ஆகும். அது சதுரவடிவ அமைப்பு கொண்டதாகவும் பக்கத்திற்கு 366 மீ. நீளம் கொண்டதாகவும் அமைந்துள்ளது. அங்கு முற்றிலும் கருங்கல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தெப்பக் குளத்தின் நடுவில் ஒருசிறிய கோயில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் – அத்தெப்பக்குளம் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுப் பக்திப்பொலிவுடன் விழாக் கோலம் கொள்ளும் சிறப்புடையது.

இக்காலத்தில் பல புகழ்மிக்க தொழிற்சாலைகளையும், கல்விக் கூடங்களையும் பெற்று விளங்கும் நகரமாகக் காணப்படுகிறது மதுரை. இந்நகரின் முக்கிய தொழில் நெசவு ஆகும். அதில் சௌராட்டிர மரபினர் மிகுதியாக ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் வேளாண்மைத் துறையிலும் இதற்கு முக்கிய பங்கு உண்டு. இந்நகரம் கி.பி.. 1866–ஆம் ஆண்டு நகராட்சியாக மதிப்புயர்வு பெற்றது. இப்போது மாநகராட்சியாக உயர்ந்துள்ளது. இன்றைய தமிழகத்தில் அனைத்து வகையிலும் சிறந்த இடத்தைப் பெற்றுச் சென்னைக்கு அடுத்துச் சிறந்த நகரமாக விளங்குவது மட்டுமல்லாமல், மக்கள் தொகையாலும் தமிழகத்தின் இரண்டாம் பெரிய நகரமாக விளங்குகிறது. இந்நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிய மாவட்டம் அண்மையில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட, ஒருபகுதி திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு திண்டுக்கல் காயிதே மில்லத்து மாவட்டமாக உருப் பெற்றது. இந்நகரில் தென்னக இருப்புப் பாதையின் மிகப் பெரிய சந்திப்புகளில் ஒன்றும், அரசுமருத்துவமனையும், 'தமுக்கம்' என்னும் பெயர் கொண்ட பெரியவிளையாட்டுத்திடலும் உள்ளன. மேலும், இந்நகருக்குச் சிறப்புச் சேர்ப்பதுபோல் மதுரை காமராசர் பல்கலைக் கழகமும், ஒரு விமான நிலையமும், ஒரு வானொலி நிலையமும் உள்ளன. இந்நகரத்திற்கு ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு நடத்தப்பட்ட பெருமையும் உண்டு. தமிழுக்காகப் புதிய தமிழ்ச்சங்கம் ஒன்று 1901-இல் பாண்டித்துரைத் தேவரால் இங்குத் தோற்றுவிக்கப்பட்டு, சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. இந்து, இசுலாம், கிறித்தவம் ஆகிய சமயத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ்கின்றனர். இருப்பினும், கள்ளர், மறவர், அகம்படியர் என்று கூறப்படுகின்ற முக்குலத்தோர் வழியினர் மிகுதியாக வாழ்கின்றனர்.

மதுரை மூன்று திசைகளில் திருப்பரங்குன்றம் மலை, அழகர்மலை, ஆனை மலை என்னும் மலைகளின் இயற்கையமைப்பைப் பெற்று விளங்குகிறது. அம்மலைகளுள் சில இந்துக் கடவுளர்களின் இருப்பிடமாக உள்ளன. இந்நகரில் பல திருவிழாக்கள்

கொண்டாடப்பட்டாலும் சித்திரை மாதத்தில் கொண்டாடப்படும்சித்திரைத் திருவிழா மிகுந்த சிறப்புடையதாகும். அதில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடி அவ்விழாவுடன் தொடர்புடைய சொக்கநாதர், மீனாட்சி, அழகர் போன்ற தெய்வங்களை வழிபடுவர். இத்தகைய சிறப்புடைய நகரம் பல புராணங்கள், காவியங்கள், மரபுக்கதைகள் முதலானவை உருவாவதற்குத் தொடர்புடைய மையமாக விளங்குகிறது. பா.ஜெ.

**மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்:** இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். சங்க நூல்களில் இப்பெயருடன் அம்மள்ளனார் என்ற பெயரிலும், மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் என்ற பெயரிலும், பாடல்கள் காணக்கிடக்கின்றன. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் என்பவரே இப்பெயர்களால் சுட்டப் பெறுகின்றார் எனக் கருதத் தோன்றுகின்றது. அளக்கர் ஞாழல் என்பது ஓர் ஊர் என்றும், மள்ளர் என்பது வீரரைக் குறிக்கும் சொல் என்றும், உ.வே. சாமிநாதையர் கருதுகின்றார். மேலும், மள்ளர் என்ற பெயரில் பலர் உள்ளமையால் அவர்களினின்றும் இவரை வேறுபடுத்திக் காட்ட, அம்மள்ளனார் என வழங்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. மள்ளனாருடைய தந்தையார் பெயர் அளக்கர் ஞாழார் எனப்படுவதைக் காணுமிடத்து அவர் சிறந்த நல்லிசைப் புலவர் எனவும் கடலிடும் எக்கர்க்கண் நின்ற ஞாழலை அளக்கர் ஞாழல் என்று சிறப்பித்துப் பாடியமையால் அளக்கர் ஞாழலார் என அழைக்கப்பெற்றார் எனவும் விளக்கங்கள் அளிக்கப் பெறுகின்றன. மள்ளர் என்பதை இவர் இயற்பெயராகக் கொள்வர். மதுரைஅளக்கர், ஞாழலார் மகனார் மள்ளனார் என்ற பெயரில் இவரது பாடல் புறநானூற்றில் (388) காணப்பெறுகின்றது. அப்பாடலில் ஆசிரியர் மள்ளனார், சிறுகுடி கிழான் பண்ணன் கிணைமகனுக்கு வழங்கிய கொடைகளையும், புலவர்களுக்கு அவன் செய்த உதவிகளையும் எடுத்துப் போற்றி, இறுதியில் அவன் நன்மையைப் பாராட்டா வழி, நன்றி கொன்ற குற்றத்திற்காகப் பாண்டியன் தம்பால் அருள் கண் மாறுக என உரைக்கின்றார். நற்றிணையில் அம்மள்ளனார் என்ற பெயரில் (82)குறிஞ்சித் திணையில் தோழியிற்புணர்ச்சிக்கண் தன்னிலை கொளீஇயது என்ற துறையிலும், மதுரைஅளக்கர் மகனார் மள்ளனார் என்ற பெயரில் குறிஞ்சித் திணையில் தோழி சிறைப்புறமாகத் தலைமகட்கு உரைப்பாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது என்ற துறையிலும் (297) முல்லைத் திணையில் வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது என்ற துறையிலும் (321) பாடியுள்ளார். குறுந்தொகையில் பருவங்கண்டழிந்த கிழத்தி தோழிக்கு உரைப்பதாகவும்(188), பிரிவிடைத்தோழி வற்புறுத்தியதாகவும் (215) பாடல்களை இயற்றியுள்ளார். அகநானூற்றில் பாலைத் திணையில் தலைவன் இடைச் சுரத்தில் தன்நெஞ்சிற்குச் சொல்லியதாகவும் (33), முல்லைத் திணையில் வினை முற்றிய தலைவன் தன் நெஞ்சிற்கு உரைப்பானாய்ப் பாகற்குச் சொல்லியதாகவும் (144), பாசறைக்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாகவும் (174), வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியதாகவும் (244,344), வினை முற்றிப் புகுந்த தலைமகற்குத் தோழி சொல்லியதாகவும் (314), முன்னொரு காலத்துப் பொருள் வயிற் பிரிந்த தலைமகன் பொருள் முற்றி வந்திருந்த காலத்து மீண்டும் பொருள் கடாவின நெஞ்சிற்குச் சொல்லியதாகவும் (353) பொருள் அமையப் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் பாடல்களில் உவமை நலம் சிறந்து விளங்கு மாற்றையும், இவரது புலமை நலம், வானநூல் ஆகியன சிறந்து விளங்குமாற்றையும் அறிய முடிகின்றது. தா.ஈ.

**மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்:** காண்க: அறுவை வாணிகன் இளவேட்டனார்; இளவேட்டனார்.

**மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனார்:** குறுந்தொகை 144 – ஆம் பாடலைப் பாடிய புலவர் இவர். மதுரை நூலாசிரியன் என்றும், மதுரைப் பாலாசிரியன் என்றும் இப்பாடல் பாடிய ஆசிரியர் பெயரில் பாடவேறுபாடுகள் உள்ளன. மதுரை ஆசிரியர் கோடங்கொற்றனார் என்பவரும் இவரேயாவர்.

புலவர் பெயரால் இவர் மதுரையினர் என்பதும், ஆசிரியப் பணி செய்தவர் என்பதும், கோடன் என்பார்க்கு மகனார் என்பதும் அறிய வருகின்றன. கோடன் என்பது சிறப்பாகக் கற்றவன் என்னும் பொருளதாகலாம். ‘கோடன் மரபு’ என்பதில் கோடல் என்பது கொள்ளுதல் என்னும் பொருளது. மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியதாக இவர்தம் பாடல் அமைந்துள்ளது.

கழியில் காவிமலரைப் பறித்தும், கடலலையில் புகுந்து விளையாடியும், தன் ஆயத்தார் தத்தமக்குரியவாறு மகிழ்ந்திருக்க, அவர்களைப் பிரிந்தறியாத தலைவி, முகில் தவழ்கின்ற உச்சியையுடைய உயர்ந்த மலைத் தொடர்களைக் கடந்து தன் அடியைத் துன்புறுத்தும் பாலைநிலத்துப் பிரிந்து சென்றனள். ‘நேற்று வரை அவள் கொண்டிருந்த மெல்லியல் தான் என்ன? இன்று அவள் கொண்ட வல்லியல்

தான் என்ன? இது தான் கொண்ட அறக்கடனால் உண்டாயது போலும்' எனக் கருதுகிறாள் செவிலித் தாய்.

பிரியா ஆயத்தையும், ஆயத்துடன் ஆடலையும் பிரிந்து சென்றமை, உரிய கடமையைத் தவறாது ஆற்றல் வேண்டுமென்னும் வழிவழி வந்த அறமுறை என்பதை உணர்ந்த செவிலி, நற்றாய்க்கு உணர்த்தி அறத்தொடு நின்றது இது. இரா.இ.

**மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்:** சங்கப் புலவராகிய இவர் பாடல் ஒன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது (309). இவர் மதுரையில் வாழ்ந்தவர் என்பதும், கௌசிகனார் என்பது இவர் பெயர் என்பதும் விளங்கும். கௌசிகனார் என்னும் பெயருடையவர் பிறரும் இருந்தனர்என்பது மதுரை இளங்கௌசிகனார் என்னும் பெயரால் (அகம். 381) விளங்குகிறது. இவர் பெயர் கோசிகனார் என்றும், இவர் தந்தையார் பெயர் இளங் கண்ணி யார் என்றும் ஔவை. சு.துரைசாமிப் பிள்ளை கூறுவர்.

இக்கௌசிகனார், தும்பைத் திணையில் 'நூழிலாட்டு' என்னும் துறையில் பாடிய பாடல் கிடைத்துள்ளது. நூழிலாட்டு என்பது போர்க்களத்திற்கு வந்த படைகள் கெடுமாறு, தன் மார்பில் தைத்து நின்ற வேலைப் பறித்து எறிதல் என்னும் கருத்தினதாகும் (பு.பொ.வெ. 142).

பகைவர்களுடைய படைக்கலங்களின் கூர்மழுங்குமாறு தங்கள் படைக்கலங்களை ஏவி வெற்றி கொள்ளுதல் வீரமிக்க பிறர்க்கும் உரியதேயாகும். ஆனால், நல்ல பாம்பு குடியிருக்கும் புற்றைப் போலவும் நெருங்கி வந்தாரைக் கொல்லுதற்காகக் காளை சுழன்று திரியும் ஊர்மன்றம் போலவும், மாற்றுதற்கு அரிய வலிமையுடன் பகைவர் பாசறையில் உள்ளான் என்ற அளவில் அஞ்சுமாறு ஒப்பற்ற வேற்படையுடைய எம் தலைவனிடத்தே ஒளி உள்ளது என்பது இவர் பாடிய பாடலின் பொருளாகும்.

பாசறையில் உள்ளான் என்ற அளவானே பகைவர் அஞ்சத்தக்க ஒளியுடையவன் எனத் தலைவனின் வீரச்சிறப்பை வெளிப்படுத்தியது இது. பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பது பழமொழியாகப், பாம்புப் புற்றை-திட்டவட்டமாகப் பாம்பு இருக்கிறது என்று அறிந்துகொண்ட புற்றை-அணுக எவருக்கும் துணிவுண்டோ என்னும் தெளிவால் அவ்வாறு கூறினார். இரா.இ.

**மதுரை இளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார்:** சங்கப் புலவராகிய இவர் பாடிய பாடல்கள் அகநானூற்றில் இரண்டும் (102, 348) நற்றிணையில் ஒன்றுமாக (273) மூன்று கிடைத்துள்ளன. இளம்பாலாசிரியர், பாலாசிரியர், ஆசிரியர், பேராசிரியர், கணக்காயர், எழுத்தாளர் எனப் பல நிலை ஆசிரியர்கள் இருந்தனர் என்பது பாட்டு, தொகை ஆகியவற்றால் அறிய வருகின்றது. அவ்வகையில் மழலையர்க்கு ஆசிரியராக இருந்த இப்பெருமகனார் இளம்பாலாசிரியர் எனப்பட்டாரா கலாம். இவர் தந்தையார் பெயர் சேந்தன். இவர் பெயர் கூத்தன். இவரூர் மதுரை. இவ்வெல்லாச் செய்திகளும் ஒருங்கே அமையும் வண்ணம் சான்றோர் இப்பெயரால் இவரை வழங்கினர்.

இவர் பாடியனவாகக் கிடைத்துள்ள பாடல்கள் அனைத்தும் அகப்பொருள் பற்றியன; அன்றியும் குறிஞ்சித் திணையே சார்ந்தன. தினைக் கதிரைத் தின்னவந்த யானை, தலைவி பாடிய குறிஞ்சிப் பண்ணைக் கேட்டுத் தினைக்கதிரையும் தின்னாமல், மூடாக் கண்ணையும் மூடி உறங்கியதாக இவர் பாடும் அழகும் (அகம்.102), மணங்கமழும் மாம் பழச் சாற்றில் பலாச்சுளைகளைத் தெரிந்தெடுத்துக் கலந்து, அக்கலவையுடன் முதிர்ந்த தேனைச் சேர்த்து வடித்துதெடுத்த பிழிவை, மூங்கில் குழாயில் அடைத்து நெடுநாள் வைத்திருந்துஉண்டாக் கப்படும் தோப்பிக்கள்ளைப் பற்றிச் செய்ந்நேர்த்தியுடன் கூறும் பகுதியும் (அகம்.348)முறையே இவர்தம் இசைக் கலைத்திறம், மடைத் தொழில் திறம் ஆகியவற்றை விளக்கும்.

தலைவன் பண்பாளனாகவும் நல்லனாகவும், இருந்தும் அவன் திருமணம் செய்து கொள்ளாமல் களவை மேலும் விரும்பி வருதலால், தலைவிக்கு உண்டாகிய துயரைப் 'பண்புதருபடர்' என்றும் (நற்.273), 'நிலையா நன்மொழி' என்றும் (அகம். 348) கூறிய திறம் இப்புலவர்தம் சொல்லாட்சித் திறனுக்குச் சான்றாம். இரா.இ.

**மதுரை ஈழத்துப்பூதன் தேவனார்:** காண்க: ஈழத்துப் பூதன் தேவனார்.

**மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார்:** மதுரை எழுத்தாளன் சேந்தன் என்பார்க்கு மகனாராகிய இவர் பூதனார் என்னும் பெயரினர். சங்கப் புலவர்களுள் ஒருவர். சேந்தம் பூதனார் (சேகம் பூதனார்), மதுரை எழுத்தாளனார் என்பார் இவரின் வேறானவர்.

இவர் பாடிய பாடல்களாகக் குறுந்தொகையில் இரண்டும் (90, 226) அகநானூற்றில் ஒன்றும் (207) ஆக மூன்று பாடல்கள் கிடைத்துள்ளன. பூதனார் என்னும் பெயர் சங்க நாளிலும் அதனை அடுத்த நாளிலும் பெருவழக்குடையதாகும். மதுரை ஈழத்துப்

பூதன் தேவனார், மதுரைக் கவுணியன் பூதத்தனார், பூதத்தாழ்வார் என்பன போன்ற பெயர்களால் அது உறுதியாகும்.

அகநானூற்றுப் பாடல் பாலைத்திணையில், மகட்போக்கிய தாய் (செவிலித்தாய்) கூற்றாக அமைந்தது; அருமை மிக்கது.

'தேன்கலந்த பாலைக் கிண்ணத்தில் ஏந்திக் கொண்டு கூந்தலை என் விரலால் கோதிக்கொண்டே அவள் விரும்பும் சொற்களைச் சொல்லி உண்ணென்று வேண்டவும் உண்ணாதவள், கடலிலே விளைந்த உப்பை அள்ளிக் கழுதைமேல் பொதியாக ஏற்றிக் கருமலைக்குக் கொண்டு செல்லும் பருக்கைக் கற்கள் சிதறிக்கிடக்கும் வழிகள் அமைந்த பாலை நிலத்தில் யானைகள் மிதித்து உழக்கியதனால் தூர்ந்து போன நீர்நிலையைத் தோண்டிக் குறை குடமாக முகக்கப்பட்ட உவர் நீரை, அறநோக்கில்லாத தலைவன் ஊட்டப் பெருமூச்செறிந்து வியர்வையுண்டாகப் பருகினள் போலும்' என்பது அப் பாடற் பொருள்.

உப்பு வணிகத்திற்குச் செல்வோர் நன்னிமித்தம் பார்த்துக் கொண்டும், படைக்கருவிகளை அமைத்துக் கொண்டும்செல்வர் என்பதை இவர் குறிப்பிடுகிறார். கழுதையை, 'நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதை' என்பதும் (அகம்.207), தாழம்பூவை, 'தயங்கு திரை பொருத தாழை வெண்பூக், குருகென மலரும்' (குறு.226) என்பதும் இவர்தம் நுண்ணியல் நோக்கைத் தெரிவிக்கும். இரா.இ.

**மதுரை எழுத்தாளனார்:** மதுரையைச் சார்ந்த இப்புலவர் சங்க காலத்தவர். இவர் புலவர்கள் அவையில் இருந்து அவர்கள் பாடல்களைப் படியெடுத்துத் தரும் பணியை மேற்கொண்டவராகலாம். இவரும் புலவராகலின் இவர் பாடிய பாடல்களும் பல இருந்திருக்கலாம். அவற்றுள் ஒன்று அகநானூற்றில் உள்ளது (84).

மதுரை எழுத்தாளன் என அச்சிட்ட நூல்களில் இவர் பெயர் இருப்பினும், சங்ககாலப் புலவர்களின் பெயரமைதிப்படி, எழுத்தாளனார் என்று உறுதி செய்யலாம். ஏடு பெயர்த்தெழுதினார் 'ஆர்' என்னும் சிறப்பு இறுதியை விட்டிருத்தல் வேண்டும்.

இவர் பாடிய அகப்பாடல், முல்லைத்திணையில், தலைமகன் பாசறை இருந்து சொல்லியது என்னும் துறையில் உள்ளது. அது போர் மேற்கொண்டு சென்ற வேந்தன் போர்முடிந்த பின்னும் தன் சினம் தணியாது பாசறையில் இருப்பானாக அவனுக்குத் துணையாகச் சென்ற தலைவன் தன் தலைவியை நினைந்து தன்னுள் வருந்திக் கூறுவதாக அமைவது.

'கார் திரள்கிறது; கடுமழை பொழிகிறது; சிறு செடி கொடித் தூர்களின் கீழே படுத்திருக்கும் பன்றியின் கரிய உடல் மறைய வெண்முல்லை மலர் உதிர்கின்றது; அக்காட்டகத்துச் சிற்றூரின் வீட்டகத்தே தலைவி பிரிவுந் துயர் தாங்காது எதிர்பார்த்திருப்பாள்; யானோ, மருத வளமிக்க ஊரையே கப்பமாகப் பணிந்து கொடுக்கவும் ஏற்றுக் கொள்ளாமல் போரிலே கருத்துச் செலுத்தும் வேந்தன் பாசறைக் கண்ணே உள்ளேன்; அவள் நிலை யாதாகுமோ' என்பது எழுத்தாளனார் பாடிய பாடலின் கருத்து ஆகும். இரா.இ.

**மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார்:** சங்கப் புலவராகிய இவர் பெயர், மதுரை ஓலைக்கடைக் கண்ணம்புகுந்த நராயத்தனார் என்னும் பாடத்துடனும் உள்ளது. இவர் பாடியது புறநானூற்று 350 – ஆம் பாடலாகும்.

'ஓலை-ஓலையால் இயற்றப்பட்ட குடை; தாழை முதலியவற்றின் ஓலையுமாம். இதனால், இவர் வணிகம் செய்பவர் என்று தெரிகிறது. இவர் பாடிய மகட்பாற்காஞ்சி இன்சுவையுடையது' என்னும் குறிப்புகளைப் புறநானூற்றுப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர் பாடினோர் வரலாற்றில் தெளிவு படுத்திக் காட்டியுள்ளார்.

இனி, இவர் பெயர் ஏடு எழுதினோரால் இவ்வாறு பிழைபட்டது என்றும், மதுரை மேலைக்கடைக் கண்ணம்புகுந்தராயத்தனார் என்பது பெயர் என்றும் ஔவை துரைசாமிப்பிள்ளை கூறுவார். அவர் கருத்து வருமாறு:

மேலைக்கடையம் என்பது தென்பாண்டி நாட்டிலுள்ளதோரூர். அவ்வூர் நல்லிசைச் சான்றோர் பலர் பிறந்த சிறப்புடையது. கடையம் என்பது கடையெனச் சுருங்கிற்று. இப்போதுள்ள மேற்கடையம், கீழ்க்கடையம் என்னும் ஊர்கள் இடைக்காலத்தே கோனாட்டு விக்கிரம பாண்டிய நல்லூரான கடையம் என்றும் கோனாட்டுக் கடையம் என்றும் வழங்கியதைக் கல்வெட்டுகளால் (522,525- 1916) அறியலாம். மேலைக்கடையத்தார் எனற்பாலது மதுரை ஓலைக் கடையத்தார் என ஏடெழுதினோரால் பிழைக்கப் பட்டுள்ளது. அக்கடையத்தைச் சார்ந்த ஒரு குடியினர் மதுரையில் தங்கி இருந்தமையின் அவர் மதுரை மேலைக் கடையத்தார் என வழங்கப் பட்டார். மதுரை மேலைக் கடையத்தாரான நல்வெள்ளையார் என்ற சான்றோர் ஒருவர் நற்றிணை பாடிய ஆசிரியன்மாருள் ஒருவராகக் காணப்படுகின்றார். மதுரைக் கடையத்தார் மகனார் வெண்ணாகனார் என்றொருவர் குறுந்தொகையில் காணப்படுகின்றார். ஆக,கடையத்தில் இருந்து வந்து மதுரை

யில் தங்கி வாழ்ந்த கடையத்தார் குடி சிறந்த நல்லிசைப் புலவரைப் பெற்று மேன்மையுற்று விளங்கினமை தெளிவாகும். இவர் இயற்பெயர் ஆயத்தனார் (புறம். 350) என்பது. இவர் பாடிய புறப்பாடல் காஞ்சித் திணையில் மகட்பாற் காஞ்சி என்னும் துறையதாகும். இரா.இ.

**மதுரை ஓலைக் கடையத்தார் நல்வெள்ளியார்**: இவர் பெயரில் நல்வெள்ளையார் என்ற பாடம் உண்டு. இவர் பெயர் கொண்டு இவர் பெண்பாற் புலவரென்று ஊகிக்கிறார் நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்.

இப்புலவர் பெயர் மதுரை மேலைக் கடையத்தார் நல்வெள்ளையார் என்பது என்பார் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை (காண்க: மதுரை ஓலைக் கடைக் கண்ணம்புகுந்தாராயத்தனார்.

இவர் பாடிய பாடல்கள் இரண்டு நற்றிணையில் இடம் பெற்றுள (250, 369). முதற் பாடல் மருதத் திணையில், புதல்வனொடு புகுந்த தலைமகன் ஆற்றானாய்ப் பாணற்குரைத்தது என்னும் துறையினதாகும். அடுத்த பாடல் நெய்தல் திணையில் பட்ட பின்றை வரையாது பொருள் வயிற்பிரிந்தது ஆற்றாளாகிய தலைமகள் வன்பொறை எதிரழிந்தது என்னும் துறையது.

'உயர்ந்த இமயத்தின் உச்சியிலிருந்து இறங்கி ஓடிவரும் கங்கையாற்று நீர், கூடிய விரைவாலும் நீர்ப் பெருக்காலும் கரையை உடைத்துச் செல்வது போன்று, நிறையென்னும் கற்புக்காவலை அழித்துச் செல்லும் காம வெள்ளத்தை நீந்தத் தெரியாத யான் எவ்வாறு தப்பிப் பிழைப்பேன்' எனத் தலைவி தோழியிடம் கூறும் பொருளில் அப்பாடல் அமைந்துள்ளது.

பகற்பொழுது கழிதற்கே பெருந்துயராக உள்ளது; மிகமிக மெல்லென நகர்கின்றது. இந்நிலையில் இரவுப் பொழுதை எவ்வாறு கழிப்பது என்னும் கருத்தில் இச்செய்யுள் இயற்றப்பெற்றது. இரா.இ.

**மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார்**, சங்ககாலப் புலவருள் ஒருவர். இவர் மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனாரின் வேறாவர். இவர் பாடியதாகக் கிடைத்துள்ளது குறுந்தொகை 223 – ஆம் பாடல் ஒன்றேயாம். வரைவிடை வேறுபட்ட தலைவியின் மேனி வேறுபாடு கண்டு வற்புறுத்தும் தோழியிடம் கிழத்தி உரைத்ததாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவியும் தோழியும் பெரிய ஊரிடத்து நடந்த விழாவிற்குச் சென்று தலைவனை எதிர்ப்பட்டு அளவளாவினர் என்றும், அதன் பயனாகத் தாய் ஓம்பிய பெண்மை நலமிழந்து தலைவி உழந்தாள் என்றும் அப்பாடல் கூறும். ஊர்க்குப் புறப்படும்போது வாய்ச்சொல் (விரிச்சி) கேட்கும் வழக்கத்தையும், மகளிர் மேனியில் தளிரை அப்பிக்கொள்ளும்வழக்கத்தையும்கிள்ளையை ஓட்டுதற்குத் தழலும் தட்டையும் பயன் படுத்தப் பெற்றன என்பதையும் இப்புலவர் தம் பாடலில் குறித்துள்ளனர். த.ரா.

**மதுரைக் கண்டர தத்தனார்**: மதுரையை சார்ந்த இப்புலவர் சங்கச் சான்றோருள் ஒருவர். இவர் பாடிய பாடல் ஒன்று குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது (317). இவர் பெயரில் மதுரைக் கண்டாகத்தன் என்னும் பாடவேறுபாடுண்மை அறியவருகின்றது.

தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றாளாகிய தலைவியை நோக்கித் தலைவன் குறித்த பருவத்தே வருவான் என்று தோழி வற்புறுத்திக் கூறும் துறையில் இவர் பாடல் அமைந்துள்ளது.

'மெல்லியல் வாய்ந்த மரையானின் வலிய நல்ல ஆண், இனிமையும் புளிப்பும் அமைந்த நெல்லிக் கனியைத் தின்று அடுத்துள்ள சுனையில் பரவிக் கிடைக்கும் இனிய மலர்கள் தன் மூச்சுக் காற்றால் விலகிச் செல்லுமாறு மூச்சுவிட்டு நீரைப் பருகுகின்ற நாட்டின் தலைவன், வடதிசையில் இருந்து வரும் வாடைக் காற்றுக்கு அகன்ற முகில் தென் திசையை நோக்கிச் செல்லும் குளிர்ந்த பனிக்காலத்தில் நம்மை விட்டுப் பிரிந்து அங்குத் தங்கியிரார்; விரைந்து வருவார்; கவலையை விட்டு விடுக' என்று தோழி தலைவிக்கு எடுத்துரைக்கிறாள்.

மரையான் மகிழுமாறு நல்லேறு நடந்து கொள்வது போல், அவரும் உரிய பருவம் தவறாமல் வந்து உவகையளிப்பார் என்பது குறிப்பாகும்.

நெல்லி முதற்கண் புளிப்பும் பின்னர் இனிப்பும் உண்டாக்குதலால் 'தீம்புளி நெல்லி' என்னும் ஆட்சி அருமையானது. மூச்சுக் காற்றால் நீரில் படிந்த மலர்களை விலக்கி நீரைக் குடித்தலைக் குறித்தது நுண்ணிய பார்வையாகும். இரா.இ.

**மதுரைக் கண்ணத்தனார்**: இவர் மதுரையைச் சார்ந்த சங்க காலப் புலவர். கண்ணத்தனார் என்ற பெயர் கண்ணன் அத்தனார் (கண்ணன் தந்தையார்) எனப் பொருள்படும் என்பர். மகன் பெயரோடு சேர்த்துத் தந்தை பெயரை வழங்குவது சங்க கால மரபு. அவ்வகையில் கண்ணன் அத்தனார் கண்ணத்தனார் எனப் பெயர் பெற்றாரென்பது பொருந்துவதாகலாம்.

மதுரைக் கண்ணத்தனார் பாடியனவாகச் சங்கத்தொகை நூல்களுள் அகநானூற்றில் 360 – ஆம்

பாடலொன்றும், நற்றிணையில் 351 – ஆம் பாடலொன்றும் ஆக இரண்டுள.

இவர் அகப்பாடலில் மாலைப் பொழுதை அழகுறப் புனைகின்றார். ஓராழித் தேரூரும் கதிரவனை, ஒரு கால் ஊர்திப் பருதியஞ் செல்வன்' என்று குறிப்பிடும் இவர், அந்தி வானத்தின் அழகோடு கடலின் அழகையும் கொண்டு வந்த மாலைத் தோற்றத்திற்குச் சிவபெருமானும் திருமாலும் ஆகிய இருபெருந் தெய்வத்தின் உரு உடனியைந்த ஒரு பெருந் தோற்றத்தை (செந்நிறமும் கருநிறமும் இயைந்த சங்கர நாராயண வடிவத்தை) உவமித்துள்ள நயம் உணர்ந்தின்புறத் தகுவதாகும். வ.கு.

**மதுரைக் கண்ணனார்:** இவர் சங்க காலப் புலவர்; மதுரையைச் சேர்ந்தவர். கண்ணனாரென்பதே இவர்தம் இயற்பெயர். கண்ணன் என்னும் இப்பெயர் இக்காலத் தமிழரிடையே மட்டுமன்றிப் பழந்தமிழரிடையேயும் மிகப்பயின்று வழங்கிய ஒன்றாகும். இளங்கண்ணன், பெருங்கண்ணன், நக்கண்ணன், நெடுங்கண்ணன், பல்கண்ணன், பூங்கண்ணன், வெண்கண்ணன் என்றெல்லாம் பலவாறு அடையடுத்த கண்ணனார் சங்கப் புலவருள் மட்டுமே முப்பத்து நால்வர் உள்ளனர் என்பதை வையாபுரிப் பிள்ளையின் சங்க இலக்கியப்பதிப்பு வகுத்துக் காட்டுகின்ற புலவர்களின் பெயர்வகை கொண்டு காணலாம்.

கண்ணன் என்னும் இப்பெயரைக் கரியவன் என்ற பொருளையுடைய கிருட்டிணன் என்னும் வடமொழிப் பெயரின் திரிந்த வடிவமென்பர் சிலர். அவர் கூற்று மிக வலிந்த கூற்றாகும். கண்ணிற் சிறந்த உறுப்பில்லையாதலால் அவ்வுறுப்பின் சிறப்புக் குறித்து அமைந்ததே இப்பெயர். அழகிலே நல்ல கண்களையுடைய ஒருவனை நக்கண்ணன் என்றழைப்பதும், பூப்போன்ற கண்களையுடைய ஒருவனைப் பூங்கண்ணன் என்றழைப்பதும் இயல்பாகும். நக்கண்ணை என்றும் பூங்கண்ணி என்றும் அவற்றிற்கு நேரான, பெண்பாற் பெயர்களும் உள்ளன. அவற்றிற்கெல்லாம் கரியவன், கரியவள் என்ற பொருள் பொருந்தாது. அன்றியும் கண்போல் அன்புடைய, விருப்புடைய பிள்ளைகளை ஆண்பெண் பால் வேறுபாடின்றிக் 'கண்ணா' எனக் கனிந்தழைப்பது இக்காலத்து மட்டுமன்றி எக்காலத்தும் இயல்பேயாகும். திருமாலுக்கும் கூடக் கண்ணன் என்ற பெயர் அவனது கண்ணழகு குறித்ததேயன்றிக் கருநிறம் குறித்ததாகாது.

இப்புலவர் பெயர் குறுந்தொகையில் 107 – ஆம் பாடலின் கீழ் மதுரைக் கண்ணனார் என்றுள்ளது. ஆயினும், 244 – ஆம் பாடலின் கீழ்க் கண்ணனார் என்ற மட்டிலேயே இவர் பெயர் காட்டப்பட்டுள்ளது. வையாபுரிப் பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பு அவ்விரு பாடல்களையும் கண்ணனார் பெயரிலேயே அடக்கியுள்ளது. பாடல்களும் ஒருவர் பாடல்களாகவே ஒற்றுமைப் படுகின்றன. 'குவியிணர்த் தோன்றி ஒண்பூவன்ன, தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்' (குறு.107) என்ற கோழிப் புனைவையும், 'ஓரி முருங் கப்பீலி சாய நன்மயில் வலைப்பட் டாங்கு' (குறு.244) என்ற மயில்புனைவையும்ஒத்து நோக்கலாம்.'நள்ளிருள் யாமத்து' (குறு.107), 'நள்ளென் யாமத்து' (குறு.244), என இரு பாடல்களிலும் வருகின்ற இரவு குறித்த சொல்லாட்சிகளும் துயில் செய்திகளும் கூட ஒத்துள்ளன. எனவே, அவ்விரு பாடல்களையும் இவருடையனவாகவே கொள்ளலாம்.

பிரிந்து பொருள் முற்றி மீண்ட தலைவனுடன் கூடி ஏம இன்துயில் எய்தியிருக்கும் தலைவி, தம் பொழுதிடை தெரியாப் புணர்ச்சிக்கு முடிவுகாட்டிப் பொழுது புலர்ந்ததைக் குரலெடுத்து அறிவித்துத் துயிலெழுப்பிய கோழிச் சேவலைப் பூனைக்கிரையாகுமாறு வெறுத்துக் கூறும் காமம் மிக்க கழிபடர் கிளவியை இவர் உணர்ச்சியழகோடே பாடியுள்ளார் (குறு.107). பலரும் துஞ்சுகின்ற நள்ளென் யாமத்திலே இரவுக் குறிக்கு வந்த தலைவன், மனைக் கதவைத் திறக்க முயன்ற ஓசை கேட்டும் வலையினுட் பட்ட மயில்போல் அன்னையின் அணைப்பினுட்பட்டு எழமாட்டாதேயிருந்த தலைவி நிலையைத்தோழி மறுநாள் அவனிடம் கூறி வரைவு கடாவும் திறத்தையும் இவர் பாடலில் (குறு.244) காணலாம். வ.கு.

**மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்:** மதுரையில் அமைந்த கடைச்சங்கத்திலிருந்து தமிழாய்ந்த புலவர்களுள் தலைமைக்கண் நின்றோர் நக்கீரர், கபிலர், பரணர் என்ற முப்பெரும் புலவராவர். அவர் மூவருள்ளும் முதற்கண் வைத்துப் போற்றப்பெறும் பெருமையுடையவரும், தமிழ்ச் சங்கத்தலைவர் என்ற தகுதிப்பாட்டைப் பெற்றவரும் ஆகிய பெரும் புலவர் நக்கீரர்.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் எனக் கூறப் பெறுவதினால், இவர் மதுரையில் பிறந்தவர் என்பதும், கணக்காயனார் மகன் என்பதும் அறியப்படுகின்றன. மதுரைக்கணக்காயனார் பாடியதாக அகத்திலும் புறத்திலும் பாடல்கள் காணப்படுவதால், கணக்காயனார் தொல்கேள்வித்துறை போகிய நல்லாசிரியராக விளங்கினார் என்பது புலப்படும். அதனால், வழிவழிவந்த அறிவாற்றல் பெற்றவராய் நக்கீரர் விளங்கினார். 'ந' என்பது சிறப்புப் பொருளைத்தருவதோர் இடைச்சொல்.கீரன் என்பது இவர் இயற்பெயராகவோ, சிறப்புப் பெயராகவோ

இருக்கலாம். இவர் முருகப் பெருமானிடம் பேரன்பு பூண்டவர்.

நக்கீரரால் பாராட்டப் பெற்றவராகவும்,அவர் பாக்களில் இடம் பெற்றோராகவும் உள்ளவர்கள் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறன், பிடவூர் கிழான் பெருஞ்சாத்தன், பாண்டியன் நெடுஞ்செழியன், கரிகாலன், கிள்ளிவளவன், தித்தன், திதியன், எவ்வி, அன்னி, திரையன், பழையன், எருமையூரன், தழும்பன், முசுண்டை ஆகிய பதினான்கு பேராவர்.

நக்கீரர் இயற்றியனவாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் காணப்படுவன முப்பத்தேழு பாடல்களாகும். அவை நற்றிணையில் 7, குறுந் தொகையில் 8, அகநானூற்றில் 17, புறநானூற்றில் 3, பத்துப்பாட்டில் (திருமுருகாற்றுப்படை, நெடுநல் வாடை) 2 ஆகும்.

பத்துப்பாட்டின் முதற்பாட்டான திருமுருகாற்றுப் படை நக்கீரரின் சிறந்த இறை இலக்கியப் படைப்பாகும். வீடுபேறு அடைதற்குரிய நல்லூழ் உடையான் ஒருவனை, அவ்வீடு பேற்றினைப் பெற்றான் ஒருவன், முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவதாக அந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. மற்ற ஆற்றுப்படை நூல்கள் பொருள் பெறுவோர் பெயரால் வழங்க, திருமுருகாற்றுப்படை பொருளையும் அருளையும் தரும் தலைவன் பெயரால் வழங்குதல் சிறப்புடைத்து. இதற்குப் புலவராற்றுப்படை என்ற பெயரும் உண்டு. இச் சங்கநூல் சமயநூல் தொகுதியான பதினோராந் திருமுறையிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

பத்துப்பாட்டின் ஏழாம் பாட்டாக அமைந்த நெடுநல்வாடை, தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நக்கீரர் பாடிய பாட்டு. அதன்கண் கார்காலக் காட்சிகளும், மாறும் தட்பவெப்ப நிலைகளுக்கேற்ப மக்கள் தங்கள் வாழ்விடங்களையும் வாழும் வகைகளையும் மாற்றிக் கொள்ளும் இயல்பும், தமிழ்நாட்டுப் பண்டைக்கால நாகரிகச் சிறப்பை நனிவிளக்கும் நகர்அமைப்புகளும், அந்நகர் வாழ் மக்களின் செல்வ வாழ்வும், தலைவனைப் பிரிந்து தனித்துத் துயர்உறும் தலைவியின் துன்பநிலைகளும், நள்ளென் யாமத்தும் உறங்காது, படைவீரர்க்கு ஊக்கமூட்டும் அன்புரை வழங்கிக்கொண்டு பாசறைக்கண் இருக்கும் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இயல்பும் இனிது விளக்கப்பட்டுள்ளன. சோ.ந.க.

**மதுரைக் கலம்பகம்:** தெய்வத்தின் பெயரால் வழங்கப்படாத தில்லைக் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், திருவெங்கைக் கலம்பகம், திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் போன்று அத்தெய்வங்கள் எழுந்தருளியுள்ள ஊர்ப்பெயரொடு சார்த்தி வழங்கப்படும் கலம்பகங்களுள் மதுரைக் கலம்பகமும் ஒன்று. இது மதுரையைப் பற்றிய கலம்பகம் என விரிவடையும். மதுரையின்கண் விளங்கும் சோமசுந்தரக் கடவுளைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டது.

கலம்பகங்களுள் காலத்தால் முற்பட்டது நந்திக் கலம்பகம் என்பர். அது தெள்ளாறெறிந்த நந்திவர்மன்(கி.பி.9-ஆம் நூ.) காலத்தது. மதுரைக் கலம்பகம் திருமலை நாயக்கர் காலத்தில் (கி.பி.1623 - 1659) அவர் மதுரையைத் தலைநகரமாக ஏற்றுக்கொண்ட பின்னர் (கி.பி.1635-க்குப் பின்) இயற்றப்பட்டதாகும்.

மதுரைக் கலம்பகத்தைச் சதுரப்பாட்டுடன் பாடியளித்தவர் குமரகுருபரர். இவர் தாமிரவருணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள சிரீவைகுண்டத்திற்கு வடக்கே விளங்கும் திருக்கைலாயம் எனும் சிற்றூரில், சண்முகசிகாமணிக் கவிராயருக்கும், சிவகாமசுந்தரிக்கும் தோன்றியவர். ஐந்தாண்டுகள்வரை பேச்சாற்றல் தோன்றாதிருந்த இவருக்குத் திருச்செந்தூர் முருகன் அருளால் நாவன்மை கிட்டிற்று என்பர். பின்னர் மதுரையில் சில காலம் தங்கியிருந்தார். பிறகு சோழநாட்டின் திருவாரூர், தருமபுரம் வைத்தீசுவரன்கோவில், சிதம்பரம் ஆகிய திருத்தலங்களின் தெய்வச் சிறப்புகளைக் கண்டின்புற்றார். அப்பொழுது தருமபுர ஆதீனத்தில் குருமூர்த்தியாக விளங்கிய மாசிலாமணி தேசிகரை ஞானாசிரியராக ஏற்றுக் கொண்டார். பின்னர் இவர் வடநாடு சென்று கங்கைக் கரையிலுள்ள காசிமாநகரில் குமாரசாமி மடத்தை அமைத்துச் சைவத்தொண்டு புரிந்து சிவனடி சேர்ந்தார்.

மதுரையில் இருந்தபோது நாயக்க மன்னரின் அன்பையும், காசியில் தொண்டாற்றிய போது தில்லி பாதுசாவின் மதிப்பையும் பெற்றவர் என்பது நோக்கத்தக்கது. பண்டைத் தமிழ்ப் புலவர்களுள் வடநாட்டுக்குச் சென்று தங்கியிருந்து தமிழ்நூல்கள் பாடியவர் இவர் ஒருவரே. பல தலங்களுக்கும் செல்கையில் ஆங்காங்குத் தங்கியிருந்து பிரபந்தம் இயற்றுவது இவர் இயல்பு.

குமரகுருபரரால் இயற்றப்பட்ட பிரபந்தங்களாக இப்பொழுது எண்ணப்படுவன பதின்மூன்று நூல்களாகும். அவை: 1) கந்தர் கலிவெண்பா, 2) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், 3) மதுரைக் கலம்பகம், 4) நீதிநெறி விளக்கம், 5) திருவாரூர் நான்மணிமாலை,

6) முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், 7) சிதம்பர மும்மணிக்கோவை, 8) சிதம்பரச் செய்யுட்கோவை, 9) பண்டார மும்மணிக்கோவை, 10) காசிக்கலம்பகம், 11) சகலகலாவல்லி மாலை, 12) கைலைக் கலம்பகம், 13) காசித்துண்டி விநாயகர் பதிகம்.

மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனாட்சியம்மை குறம், சிவகாமியம்மை இரட்டைமணி மாலை ஆகியவை இவரால் பாடப்பட்டன என்று சிலரும், இவரால் பாடப்பட்டன அல்ல என்று சிலரும் கொள்வர் எனக் குமரகுருபரர்பிரபந்தத் திரட்டிற்கு ஆராய்ச்சியுரை எழுதியுள்ள டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுவர்.

மதுரைக் கலம்பகம் காப்புச் செய்யுளுடன் 103 பாடல்களால் ஆகி, 526 அடிகளைக் கொண்டுள்ளது. நூலின் முதல் மூன்று பாடல்களும் முறையே மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகியவற்றால் இயன்றுள் ளன. திருப்பனந்தாள் சிரீ காசிமடம் வெளியிட்டுள்ள பதிப்பின்படி மதுரைக் கலம்பகத்தில் 21 வகையான பாவகைகள் கையாளப்பட்டுள்ளன என அறிய முடிகின்றது. நூல் முற்றிலும் அந்தாதித் தொடையால் தொடுக்கப்பட்டுள்ளது. பாட்டியல் இலக்கண நூல் களுள் வரையறுக்கப்பட்டுள்ள 18 உறுப்புகளைக் கொண்டு மட்டும் பாடாமல், 21 உறுப்புகளை அமைத்துப் பாடியுள்ளார் குமரகுருபரர். கலம்பகத்தில்பொதுவாக எண்ணப்படும் 18 உறுப்புகளுள் தவம், இரங்கல், வண்டு ஆகியன கைவிடப்பட்டுப் பிச்சியார், மடல், கொற்றியார், ஊர், இடைச்சியார், வலைச்சியார் ஆகியன இணைக்கப்பட்டுள்ளன.

மதுரைத் திருநகரில் சோமசுந்தரக் கடவுள் இயற்றிய திருவிளையாடல்களை அகத்துறைச் செய்திகளோடு பொருத்தி உரைப்பதே மதுரைக் கலம்பகத்தின் பாடுபொருளாகும். மதுரைக் கலம்பகத்துத் தலைவன் பனைமடலைக் குதிரையாக்கி மடலேறப் புகுகின்றான். அச்செயலை நரியைப் பரியாக்கிய திருவிளையாடலுக்கு உவமையாக்கிப்பாடியுள்ளார். இவ்வாறு, சோமசுந்தரக் கடவுள் அங்கம் வெட்டியது, இந்திரன் பழி தீர்த்தது, உலவாக் கோட்டை அருளியது, கரிக்குருவிக்கு அருள் செய்தது, கல்லானைக்குக் கரும்பருத்தியது, கால் மாறி ஆடியது, நரியைப் பரியாக்கியது, பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தது, பாண்டியன் சுரந்தீர்த்தது, பாணபத்திருக்குக் பலகையிட்டது, பிட்டுண்டது, மண் சுமந்தது, மாபாதகந் தீர்த்தது, யானை எய்தது, வலை வீசியது, வளைவிற்றது, விறகு விற்றது, வெள்ளையானை சாபந்தீர்த்தது முதலிய திருவிளையாடற் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இவர், தமிழின் பெருமையைத் தம் பாடல்கள் நெடுகிலும் விரவிப் பாடும் இயல்புடையவர். 'புத்தமுதம் வழிந்தொழுகும் தீந்தமிழ்' (2), 'தருசுவை அமுதெழ மதுரம தொழுத பசுந்தமிழ்'(12), 'மும்மைத் தமிழ்' (24), 'தலைச்சங்கம் பொங்கும் பண்முத்தமிழ்' (46) என்றெல்லாம் சிறப்பிப்பார்.

குமரகுருபரர் செய்யுள்களின் தனிச்சிறப்பு இன்னோசை என்றும், அவை பொருநை ஆற்றின் ஓட்டம் பெற்றன என்றும், விருத்தங்களிலும் வெண்பாக்களிலும் இவருக்கே உரிய ஓசைநயம் உண்டு என்றும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் ஆராய்ச்சியுரை வழங்கியுள்ளார். மதுரைக் கலம்பகத்திற்கு டாக்டர் உ.வே. சாமிநாதையரின் குறிப்புரையும், வை.மு. சடகோப ராமாநுசாச்சாரியார் உரையும் உள்ளன. நூலின் முதற்பதிப்பு கி.பி. 1889-ஆம் ஆண்டில் பூண்டி அரங்கநாத முதலியாரால் வெளிவந்துள்ளது என அறியமுடிகின்றது. கி.செ.

**மதுரைக் கவுணியன் பூதத்தனார்:** இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். மதுரையைச் சார்ந்த இவர் கௌண்டின்னிய கோத்திரத்துப் பார்ப்பனர் என்று தெரிகிறது. கௌண்டின்னிய கோத்திரத்துப் பார்ப்பனர் கௌணியர் எனப்படுகின்றனர் என்பர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை. சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பான் வேள்விசெய் முறையைப் புறம் 166-இல் ஆவூர்மூலங்கிழார் சுட்டியுள்ளார். அவன் பெயராலும் கௌணியன் என்பது பார்ப்பனக் கோத்திரத்தைச் சுட்டும் என்றறியலாம். இவர் பாடியதாக அகநானூறு 74 - ஆம் பாடல் ஒன்றே காணப்படுகின்றது. அது தலைவன் பிரிவின்கண் அழிந்த கிழத்தியை வற்புறுத்துந் தோழிக்குச் சொல்வதாக உள்ளது. முல்லைத் திணைக் காட்சியினை 'மழை பொழிந்த பசியமுல்லை நிலத்தே குருதி நிறமுடைய தம்பலப் பூச்சிகள் நிறைந்து அழகு செய்கின்றன; பைங்கொடி முல்லையின் மென்மலர்கள் வீழ்ந்து மணல்மீது பரவிக் கிடக்கின்றன; வண்டு காடுகளில் போதுகளின் வாயினைத் திறக்கின்றன; ஆண்மான்கள் பிணையோடு காதல் நோக்கோடு ஓடித் திரிகின்றன; மாலைப்போதில் கோவலர் குழலிசைக்கின்றனர்' என்று தன்மை நவிற்சியணிபடக் கூறியுள்ளார். த.ரா.

**மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்:** கள்ளில் என்னும் ஊரினரான கடையத்தன் என்பவருக்கு மகனாராய வெண்ணாகனார் என்னும் புலவர், மதுரையில் வாழ்ந்து வந்தமையின் மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் எனப் பெயர் பெற்றார். இவர் பாடியனவாகப் புறநானூற்றில் ஒன்றும் (316), அகநானூற்றில் ஒன்றும்

(170) ஆக இரு பாடல்கள் கிடைத்துள்ளன. புறப்பாட்டில் இப்புலவர், பெயர் அறியாத் தலைவனொருவனின் கைவண்மையைப் புகழ்ந்துள்ளார். 'விடியலில் கள்ளுண்ட மயக்கத்தால் வீட்டு முற்றத்தில் துஞ்சும் தலைவன் நேற்றுவந்த விருந்தினரைப் பழைய வாளை ஈடுவைத்து அதன் வருவாயினைக் கொண்டு ஓம்பினான்; அவன்பால் செல்லின் நிறைய அணிகலன் பெற்று வரலாம்; ஐயுற வேண்டா; இன்று போரில் வெற்றி பெற்றமையால் கள்ளும் உணவும் பொருளும் நல்குவன்; நான் யாழைப் பணையம் வைத்துக் கூறுகிறேன்' எனப் பாணன் கூற்றில் இப்பாடலை அமைத்துள்ளார். அகப்பாடல் (170) தலைவி காமமிக்க கழிபடர் கிளவியாற் கூறிய துறையில் உள்ளது. தலைவி நண்டை நோக்கிக் 'கானலும் தூதியம்பாது; கழியும் உதவாது; புன்னையும் மொழியாது; உன்னையன்றிப் பிறிது துணையில்லா எனக்கு நீயே தலைவன்பால் சென்று நள்ளிரவில் பல்காலும் நின் துயரினைக் களைந்தோள் நின் பிரிவால் எய்திய அல்லலைக் கடக்க வல்லளோ எனக் கூறி, அவன் என்னிடம் வருமாறு உதவ வேண்டும்' என வேண்டுவதாக அப்பாடலைப் பாடியுள்ளார். கடற் சிறுகாக்கை தன் பெடையொடு வெள்ளிய இறால்மீனை உண்பதாகக் கனாக்காண்பதைக் குறிப்புப் பொருள்பட அமைத்துள்ளது நயம் பயப்பதாகும்.

த.ரா.

மதுரைக்காஞ்சி: இந்நூல் சங்க இலக்கியங்களுள் ஒன்றான பத்துப்பாட்டு என்னும் தொகையில் ஆறாம் பாட்டாக அமைந்ததாகும். இது மதுரையினிடத்து அரசனுக்குக் கூறிய காஞ்சி என விரிந்து, மதுரையை ஆண்ட அரசனுக்குக் காஞ்சி என்னும் புறத்திணைப் பொருளில் கூறிய பாட்டு எனப் பொருள்படும்.

வீடுபேறு அடைதலை நிமித்தமாகக் கொண்டு, உயிர், உடம்பு, செல்வம், இளமை முதலியவை நிலையாதன எனக்கூறி, அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப் பொருள்களைச் சான்றோர் எடுத்துக்கூறுவது காஞ்சித்திணையாகும். 'பாங்கருஞ் சிறப்பின் பல்லாற்றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே' என்பது தொல்காப்பியம் (புறத்திணை. 23). மதுரைக் காஞ்சி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னனைப் பற்றி மாங்குடிமருதனார் பாடியதாகும்.

மாங்குடி மருதனார்க்கு மாங்குடிகிழார் என்னும் பெயரும் உள்ளது. இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் அவைக்களப் புலவர் தலைவராக வீற்றிருந்தவர். இவர் பாடிய மதுரைக் காஞ்சியின் சிறப்பால் காஞ்சிப்புலவன் என்றும், மதுரைக் காஞ்சிப்புலவன் என்றும் வழங்கப் பெற்றார். இவர் இப்பாட்டு அன்றி, நற்றிணையில் இரண்டும், குறுந்தொகையில் மூன்றும், அகநானூற்றில்ஒன்றும், புறநானூற்றில் ஆறுமாகப் பன்னிரண்டு பாட்டுகள் இயற்றியுள்ளார். வேள் எவ்வி என்னும் மன்னனது மிழலைக் கூற்றமும்,வேளிரது முத்தூற்றுக் கூற்றமும், குன்றூரும் இவரால் குறிக்கப்படுகின்றன.

மதுரைக்காஞ்சியே பத்துப்பாட்டுள்ளும் நெடும் பாட்டாகும். இது 782 அடிகளான் வந்த ஆசிரியப் பாவாகும். பத்துப்பாட்டுள் திணைப் பெயரான் அமைந்த நான்கு பாட்டுகளுள் இதுவொன்றே புறத்திணையான் அமைந்தது. இப்பாட்டு ஐந்திணை வளங்களையும், அழகுடன் பாடுகின்றது. அவ் வருணனையுள் 'களிறு மாய்க்குங் கதிர்க் கழனி' என்பது, மருதத் திணையின் மாண்பினைக் கூறுகிறது. நெய்தல் நில வருணனையில், பாண்டியநாட்டுத் துறைமுகம் எதுவும் குறிப்பிடப் படவில்லை எனினும், தமிழகத்துக் கடல்வணிகர், புளி, உப்பு, கருவாடு, அணிகலன்கள் முதலியவற்றை யவனம் முதலிய நாடுகட்குக் கொண்டுசென்று, விற்று அங்கிருந்து குதிரைகளை வாங்கிவந்த செய்தி கூறப்படுகின்றது.

மதுரைநகரின்கண் சிவன் கோவிலும், பிற தேவர்களுக்குரிய கோயில்களும், பௌத்தப் பள்ளியும், சமணப் பள்ளியும் இருந்தமை கூறப்படுகின்றது. இந்நகரை, 'கங்கையம் பேரியாறு கடற்படர்ந்தாங்கு, அளந்து கடையறியா வளங்கெழு தாரமொடு, புத்தேள் உலகம் கவினிக் காண்வர மிக்குப் புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை' என்று இப்பாட்டுச் சிறப்பிக்கின்றது. தேவர்களே வந்து கண்டு மகிழும் வண்ணம் அழகாற் புகழெய்திய பெருஞ்சிறப்புடைய மதுரை, கங்கைப் பேராறு அகன்ற நிலப்பரப்பில் பல கிளைகளாய் ஓடிப் பலபொருள் குவித்துக் கடலை நோக்கிச் சென்றது போல் இருந்தது என்பது இவ்வடிகளின் பொருள்.

இவ்வளங்கெழு திருநகரை 354 அடிகளில் இப்பாட்டு வருணிக்கின்றது. பிற்காலக் காப்பியங்களின் நகர வருணனைக்கு முன்னோடியாக இது அமைகிறது. புலவர் ஒருவரைத் தம்மொடு அழைத்துக் கொண்டு முதல்நாள் காலையில் தொடங்கி மறுநாள் காலை வரை, இந்நகரைச் சுற்றிக் காட்டுதல் போல் அவ் வருணனை அமைந்துள்ளது.

இந்நகரில் நாளங்காடி, அல்லங்காடி என்னும் இருவேறு கடைத்தெருக்கள் இருந்தமையை இப்பாட்டு குறிப்பிடுவதோடு, பல்வேறு தொழில் செய்வோரும் பல்வேறு மொழி பேசுவோரும் இங்கு வாழ்ந்தமையையும் கூறுகின்றது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் போரில் பெருவிருப்பம் கொண்டு, போர்க் களத்தில் பலகாலம் கழித்தமையால், மாங்குடிமரு தனார் அவனுக்கு அறிவுரை கூறுதற்காக, பாண்டிய குல முன்னோர் பல மன்னரை வென்று சிறப்புடன் ஆட்சி புரிந்திருப்பினும், பிறவி நீங்குதற்கு முயற்சி செய்யாமல் கழித்தமையை எடுத்துக்காட்டி, 'இவ் வாழ்வில் பெரியதாக உள்ள ஒரு பொருளை யான் கூறுவேன். அதைப்பற்றி நல்லாசிரியரிடத்தில் கேட்டு, அதன்படி இன்பமாக வாழ்வாயாக' என்று வாழ்த் தும் பொருளையுடையது இப்பாட்டு.

இமயமுதல் குமரிவரை ஒரு நாடாக விளங்க வேண்டும் என்று அன்றே பேரரசர்கள் விரும்பிய மையை, 'தென்குமரி வடபெருங்கல் குணகுடகடலா எல்லைத் தொன்று மொழிந்து தொழில் கேட்ப' என, இப்பாட்டில் வரும் அடிகள் புலப்படுத்தும். 'அரசியல் பிழையாது அறநெறி காட்டிப் பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது' என்னும் பகுதி, சங் கப் பாட்டுகள் மன்னர்க்கு அறநெறி காட்டும் பான் மையின என்பதற்குச் சான்றாகும். 'அச்சமும் அவல மும் ஆர்வமும் நீக்கிச் செற்றமும் உவகையும் செய்யாது காத்து, ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகிச் சிறந்த கொள்கை அறங்கூறவையமும்' என்னும் அடிகள் மதுரை நகரத்து நீதிமன்றத்தின் நடு நிலைமையை எடுத்துக்காட்டும்.

தொல்காப்பியத்திற்குப் பாயிரம் இயற்றிய பனம் பாரனார், அதனுள் குறிப்பிடும் நிலந்தரு திருவின் நெடியோன் என்னும் பாண்டிய மன்னனை, இப் பாட்டு, 'நல்வேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர் புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின் நிலந்தரு திருவின் நெடியோன்' என்று குறிப்பிடு கின்றது. 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப் பனம்பாரனார் குறிப்பிடுவதையும், இவ்வடிகளை யும் ஒப்புநோக்கினால், தமிழும் வடமொழியும் வல்ல பெரும் புலவர்கள் வீற்றிருந்த அவையாக அப்பாண் டியனின் அவை விளங்கியது என்பதை உணரலாம். அந்த அவையில் அதங்கோட்டாசானும் தொல் காப்பியரும் இருந்தமையைத் தொல்காப்பியப்பா யிரம் வெளிப்படையாய்க் கூற, இப்பாட்டுக் குறிப் பிற் கூறுகின்றது எனலாம்.

மதுரைக்காஞ்சி உள்ளிட்ட பத்துப்பாட்டுக்கும் நச்சினார்க்கினியர் உரை உள்ளது. உரையுடன் கூடிய பத்துப்பாட்டு நூலை டாக்டர் உ.வே. சாமிநாதை யர் கி.பி 1889 – ஆம் ஆண்டில் முதன் முதலில் பதிப்பித்தார்.

சுப.அ.

**துணை நூல்:**

**இராசமாணிக்கனார், டாக்டர் மா.,** பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை, 1970.

**மதுரைக் காஞ்சிப் புலவர்:** இப்பெயரும், மாங்குடிகிழார், மாங்குடி மருதனார் என்னும் பெயர் களும் ஒருவரையே குறிப்பன போலும் என்றும், தலை யாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மீது மதுரைக் காஞ்சி பாடிய காரணத்தால் மாங்குடி மருதனார் இப்பெயர் பெற்றார் என்றும், பெயர் கூறாது இங்ஙனம் கூறுவது சிறப்புப் பற்றி என்றும் உ.வே.சாமிநாதையர் கூறுவர். வேளாளர் மரபினரா தலின் மாங்குடிகிழார் என அழைக்கப்பெற்றார். இவர் நெடுஞ்செழியனால் நன்கு மதிக்கப்பெற்றவர். நற்றிணை (123) காஞ்சிப் புலவன் என்னும் பெய ரோடும், குறுந்தொகை (173) அகநானூறு (89) மதுரைக்காஞ்சிப் புலவன் என்னும் பெயரோடும், குறுந்தொகை (302), புறம்.(24,26, 313, 335, 372, 396), நற்றிணை (120) ஆகியவை மாங்குடி கிழார் என்னும் பெயரோடும் காணப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள மாங்குடி, மருதவனம் என்ற இரு ஊர்கள் ஒன்றை யொன்று அடுத்துள்ளன. அவற்றுள் முன்னது இவர் ஊரும் பின்னது இவரால் நாட்டப்பட்டது போலும் என்பர் பி.நாராயணசாமி ஐயர். வாட்டாற்றெழினி யாதனையும் இவர் பாடியுள்ளார் (புறம் 396). போரிலே ஈடுபட்டிருந்த நெடுஞ்செழியனை அதன் வழியே ஒழுகாது தடுத்து நிறுத்த, நிலையாமை யுணர்த்தி நல்லாற்றுப்படுத்த, இவர் பாடியது மது ரைக் காஞ்சியாகும். அப்பாடல் நெடுஞ்செழியனின் பண்பு நலன்களையும் மதுரையின் வளங்களையும் இலக்கிய நயங்கள் கெழும விளக்குகின்றது. இவர் பாடிய அகப்பாடல்கள் தலைவி விருந்தோம்ப உணவு அமைத்தல், வேடர்கள் கொள்ளை கொண்ட பொருட்களைப் பாறையின் மேல் வைத்துப் பங்கிட் டுக் கொள்ளுதல் முதலிய செயல்களைப் புலப்படுத்து கின்றன.

இரா.சா.

**மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்:** பாலத்தன் என்பது இவர்தம் இயற்பெயர். 'ந' என் னும் அடை, சிறப்புக் கருதி நப்பூதனார், நப்பண்ண னார் எனும் புலவர்களுக்குச் சேர்க்கப்பட்டது போல, நப்பாலத்தனார்க்கும் சேர்க்கப்பட்டுள்ளது. மதுரை சார்ந்தவர். இவர் பாடியதாக அகநானூற்றின் 204-ஆம் பாடல் ஒன்றே உள்ளது. இப்பாடலை முல்லைத் திணையில் வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியதாகப் பாடியுள்ளார். உலக முழுவதனை யும் தன் வெண்கொற்றக் குடையால் நிழல்செய்த வனும் கடல்போல் பெருந்தானையையும் செருக்கிய குதிரையையுமுடையவனுமான மன்னவன் வழுதி என்றும், வெண்ணெல் அரிபவர் முழக்கும்தண்ணுமை

ஒலி பொய்கை மலரில் தங்கிய பறவைகளை ஓட்டு தற்கிடனான நெல்வயல் சூழ்ந்த வாணனது சிறு குடியிலுள்ள சோலைபோல் மணம்கமழும் கூந்தலை யுடையவள் தலைவி என்றும் இப்பாடல் குறிப்பிடும். 'மழையை ஏற்றுத்தழைக்கும் இனியகாட்டில், வண் டின்கூட்டம் மணம்கமழ் முல்லைமலரில் மாலைக் காலத்தே ஆர்ப்பரிக்கக் கார்ப்பருவம் வந்துவிட்டது; நாமும் வினைமுடித்து விட்டோம்; தேரை விரைந்து செலுத்துக' எனத் தலைவன் பாகற்குக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. த.ரா.

**மதுரைக் காருவிலயங் கூத்தனார்:** இவர் ஒரு சங்க காலப்புலவர். இவரைத் தொழிலாற் பெயர் பெற்றவர்களைக் கூறும் வரிசையில் வையா புரிப்பிள்ளை குறிப்பிடுவர். ஆதலால், கூத்துத் தொழிலால் இவர்பெயர் பெற்றார் என்பது போத ரும். வேறு குறிப்பொன்றும் இவரைப் பற்றி அறிய வியலவில்லை. இவரது ஓரேபாடல் நற்றிணையில் இடம் பெற்றுள்ளது (நற்.325). அது பாலைத்திணை யில் தோழி செலவழுங்குவித்தது என்னும் துறையில மைந்தது. ஆண் கரடி இரைதேடும் வேட்கையால் இரவிற் சென்று கறையான் எடுத்த பாம்புவாழ் புற் றில் உள்ள சோற்றை நகங்களால் பறித்து, உறிஞ்சும் அருஞ்சுர வழியே, தலைவியின் பூப்போன்ற அழகிய மையுண்டகண் புதுநலங்கெட நீர்வடிக்கக் கண்டும் கடந்து செல்லுதல் தகுமோ; நும்செலவு தவிர்க எனத் தோழி தலைவனிடம் கூறுவதாக அப்பாடல் அமைந்துள்ளது. கரடி இரைதேர் வேட்கையால் புற்றைப் பெயர்த்து இரவிலுண்ணும் என்பதால், தலைவியின் காமம் தலைவனைக் கூடும்வேட்கை மிகுதலால் அவளுயிரை உண்டொழிக்கும் என்னும் செய்தியைக் குறிப்பின் உணர்த்தும் திறம் நயமிக்கது. த.ரா.

**மதுரைக் கூத்தனார்:** தொழிலாற் பெயர் பெற்றவர் வரிசையில் வையாபுரிப்பிள்ளை இப்புலவ ரைச் சேர்த்திருத்தலின் கூத்துத் தொழிலால் பெயர் பெற்றவர் என்பது பெறப்படும். இவர் மதுரையம் பதியைச் சார்ந்தவர். இவர் பெயருக்கு மது ரைக் கடாரத்தனார், மதுரைக் கந்தரத்தனார், மதுரைக் கோடரத்தனார் என்று வேறுபாடங்களும் காணப்படுகின்றன. இவர் பாடிய ஓரேபாடல் அக நானூற்றில் 334-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அது முல்லைத்திணையைச் சார்ந்தது. போரில் பின் வாங்காத காளையின் தோலை முரசிற்குத் தோலா கப் போர்த்தல் வழக்கம் என்பதை இவர் பாடல் உணர்த்தும். பிடிகளின் கூட்டம்போல் மேகங்கள் ஒன்றுசேர்ந்து, ஒலி முழங்கும் கடல்போல் இடிமுழக் கம் செய்து, யானையின் பெரிய கைபோல் கால் இறக்கி, மகளிர் ஆடும் கழங்கினையொத்த பனிக் கட்டியுடன் துளிகளைச் சிதறின என மழைபொழிதல் சித்திரிக்கப் பட்டுள்ளது.

தலைவன் பாகனிடம், 'நாடு திறைகொண்ட லம்; வானம் மழைபெய்யத் தொடங்கியது; ஆத லால், தலைவியைக் காண்டற்கு அன்னக் கூட்டம் போன்ற வெண்குதிரைகள் நான்கு பூட்டியதேரை, மழைபொழியும் முல்லை நிலத்தே இருளைக்கிழித்துச் செல்லுமாறு விரைந்து செலுத்துக' எனக்கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. த.ரா.

**மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார்:** சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் சீத்தலைச் சாத்தனார் என்றும் மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் என்றும் பலவாறு காணப்படு கிறது. சாத்தனார் என்னும் பெயரில் பல புலவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர். அழிசி நச்சாத்த னார், அந்துவஞ்சாத்தனார், ஆடுதுறை மாசாத்த னார் முதலிய பெயர்கள் சுட்டுதற்குரியன. சாத்து என்ற சொல் வணிகர் திரளைக் குறித்தலின், சாத்த னார் என்ற சொல்லும் வணிகக் குடியில் தோன்றிய புலவரைக் குறிப்பதாகக் கருதுதற்கு இடமுண்டு. மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரும் சீத்தலைச் சாத்தனாரும் வேறு வேறானவர் என்பது ஆராய்ச்சி யினால் அறியப்படுகின்றது. இவருள் முன்னவர் மணி மேகலைக் காப்பியத்தைப் பாடியவர், சங்கம் மருவிய காலத்தில் வாழ்ந்தவர்; பௌத்த நெறியினர்; உணவு தானிய வணிகர்; மதுரையில் தோன்றியவர். சீத் தலைச் சாத்தனார் என்பவர் சங்க காலத்தில் வாழ்ந்த சான்றோர். சீத்தலை என்பது குளித்தலை, தண்டலை என்பது போல் ஊர்ப்பெயரைக் குறிக்கும். அந்த ஊரில் வாழ்ந்த காரணத்தால் சீத்தலைச் சாத் தனார் என்ற பெயர் இவருக்கு ஏற்பட்டது. திருவள் ளுவ மாலையில் இவரைப் பற்றிய ஒரு கதைக் குறிப் புக் காணப்படுகிறது. போலிப்புலவர்களின் பிழை மலிந்த பாடல்களைக் கேட்கும்படி நேரிட்டதே என்று உள்ளம் உளைந்து தம் தலையில் அடிக்கடி குத்திக் கொண்டதால் புண்பட்டுச் சீழ்ப் பிடித்தமையின் சீத் தலைச் சாத்தனார் என்று வழங்கப் பெற்றார் என் றும், திருக்குறளைக் கேட்டபிறகுதான் தலையில் குத்திக்கொள்வதை நிறுத்திக் கொண்டார் என்றும் செவிவழிச் செய்தி உணர்த்துகிறது. ஒருவேளை சீத் தலை என்ற சொல்லிற்குக் கல்லார் மொழியியல்பின் படி விளக்கம் காண முற்பட்டோரின் மாறுபட்ட விளக்கமே இக்கதையாக விளைந்திருக்கலாம்.

சீத்தலைச் சாத்தனார் பாடிய பத்துப் பாடல் கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. அக நானூற்றில் பாலைத் திணையில் இரு பாடல்களும்

(53, 229), முல்லைத் திணையில் ஒரு பாடலும் (134), மருதத் திணையில் ஒரு பாடலும் (306), நெய்தல் திணையில் ஒரு பாடலும் (320) இவர் பாடியவை. குறுந்தொகையில் பாலையிலமைந்த ஒரு பாடலும் (154), நற்றிணையில் குறிஞ்சித்திணையில் அமைந்த இரு பாடல்களும் (136, 339), நெய்தல் திணையில் ஒரு பாடலும் (127) இவர் பாடியுள்ளார். எனவே, அகப்பொருள் பற்றிய ஐந்திணைகளையும் இவர் பாடுவதில் வல்லவர் என்பது சுட்டுதற்குரியது. பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் புறநானூற்றில் ஒரு பாடலில் இவர் பாராட்டியுள்ளார் (59). பூவை நிலையில் அமைந்த அப்பாடலில் பகைவர்க்கு இப்பாண்டியன் ஞாயிற்றைப் போன்றவன் என்றும், புலவர்களுக்குத் திங்களைப் போன்றவன் என்றும் போற்றியுள்ளார். இப்பத்துப் பாடல்களின் நடையமைப்பும் சொல்லமைதியும் உள்ளடக்கமும் இவரை மணிமேகலை ஆசிரியரினின்றும் வேறு பிரித்துக் காட்டுவன ஆகும். சோ.ந.க

**மதுரைக் கொல்லன் புல்லன்:** இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். புல்லன் என்பது இவர்தம் இயற்பெயர். இதனைச் சிலர் புலவன் என்பதன் திரிபாகக் கருதுவர். மதுரையம்பதியைச் சார்ந்த இவர் கொற்றொழில் செய்தமையின் மதுரைக் கொல்லம் புல்லன் என்றழைக்கப் பெற்றார். மதுரைக் கொல்லம் புல்லன், மதுரைக் கோலம் புல்லன், மதுரைக் கொலம்புல்லன் என்றெல்லாம் இவர் பெயருக்குப் பாடவேறு பாடுகள் உள்ளன. மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், மதுரைப் பெருங்கொல்லன் ஆகியோர் மதுரையில் கொல்லுத் தொழில் புரிந்த வேறு புலவராவர். இவர் பாடிய பாடல் ஒன்றே. அது குறுந்தொகையில்373 – ஆம் பாடலாக உள்ளது. அலர் மிக்கவிடத்து வருந்திய தலைவியை நோக்கித் தோழி, நிலம் இடம் மாறினாலும், நீரும் தீயும் பிறழ்ந்தாலும், கடலுக்கு எல்லை தோன்றினாலும், மலைநாடனொடு அமைந்த நட்புக் கெடாது என்றும் நிலைத்து நிற்கும் என்று கூறித் தேற்றுகிறாள். அலர் கூறும் பெண்டிரை 'வெவ்வாய்ப் பெண்டிர்' என உரைப்பது நயமுடையது. த.ரா.

**மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்:** மதுரை நகரைச் சார்ந்த வெண்ணாகனார் என்னும் இப்புலவர் கொல்லுத்தொழில் செய்தமையின் மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் என வழங்கப் பெற்றார். திருத்தண்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் என்பவரும் இவராயிருக்கலாம் என்பது ஊகிக்கப் படுகின்றது என்பர் பி. நாராயண சாமிஐயர். பொற்கொல்லன் வெண்ணாகனார் என அவர் வழங்கப் பெறுதலின் அவரை இவரினும் வேறாகக் கொண்டனர். இவர் பாடியதாக நற்றிணை 285-ஆம் பாடலொன்றே காணப்படுகின்றது. வையாபுரிப்பிள்ளை மதுரைப் பொற்கொல்லன் வெண்ணாகனாரையும், இவரையும் ஒருவராகவே கொண்டுள்ளார் என்பது இருவர்தம் பாடலையும் (நற்.285, அகம். 363) மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் என்னும் தலைப்பின் கீழ் அமைத்திருப்பதால் அறியலாம். தலைவன், பாம்பு இரைதேடும் நள்ளிரவில் வருதலன்றியும், அயலோர் கூறும் அம்பலைக் கேட்டும் அகலானாகித் தினைப்புனத்திற்குப் பகலிலும் வருகிறான்; அவனுடைய கேண்மை நன்றன்று என்று தோழி சிறைப்புறமாகத் தலைவிக்குச் சொல்வது போலத் தலைவன் கேட்பக் கூறுவதாக இப்பாடலுள்ளது. கானவன் எய்து பெற்ற ஆண்முள்ளம்பன்றியொடு, உவகையனாய், நாய்கள் வீட்டில் எதிர் வந்து குரைத்து மகிழ்தற்கிடனான சேரியுட் செல்லும் குன்றநாடன் என்பதால் தலைவன் தான் களவொழுக்கதிற் பெற்ற தலைவியை இரவில் உடன் கொண்டு தன்னூர் சென்று தன் தமர் மகிழ மணம் செய்வானாக எனக்குறிப்பாற் கூறியது நயமானது. காண்க: மதுரைப் பொற்கொல்லன் வெண்ணாகனார். த.ரா.

**மதுரைக்கோவை:** ஒரு திணைக்குரிய பல்வேறு துறைகளுக்குரிய பாடல்களும் ஒருங்கே அமையுமாறு இயற்றப்பெறும் இலக்கிய வகையே கோவை எனப்படும். இவ்விலக்கிய வகையில் எழுந்த நூல்களுள் 'மதுரைக் கோவை' யும் அடங்கும்.

மதுரைக் கோவை என்னும் பெயரில் நிம்பைச் சங்கர நாராயணன் என்பவரும், குலாம் காதிர் நாவலர் என்பவரும் நூல்கள் இயற்றியுள்ளமை தெரியவருகிறது.

நிம்பைச் சங்கர நாராயணன் என்பவர் இற்றைக்கு ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாண்டிவள நாட்டைச் சார்ந்த வேம்பத்தூரில் வாழ்ந்தவர் எனக் கருதப்பெறுகின்றார். தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய திருவாலவாயானுக்கு அழகிய தமிழில் நிம்பைக் காவலன் சங்கர நாராயணன் கோவை செய்தான் என்பது காப்புச் செய்யுள் தரும் செய்தியாகும். அதனால், மதுரையில் கோயில் கொண்டருளிய சொக்கநாதரைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்ட நூலே மதுரைக் கோவை என்பது புலனாகின்றது. இந்நூலுக்குக் 'கூடற்கோவை' என்னும் வேறு பெயரும்உண்டு. இந்நூலில் காப்புச்செய்யுள், வாழ்த்துச் செய்யுள்களுடன் 401-பாடல்கள் காணப்படுகின்றன. இந்நூல் களவு, கற்பு என்னும் இருபிரிவுகளைக் கொண்டது. பிற

கோவை நூல்களில் இடம்பெறும் 'காட்சி' என்னும் துறை அமையவில்லை. அத்துறையை 'இயற்கைப் புணர்ச்சி' என்னும் துறையுள் அடக்கியுள்ளார். களவு என்னும் பகுதியுள் 23 கிளவித் துறைகளும், கற்பு என்னும் பகுதியுள் 9 கிளவித் துறைகளும் காணப்பெறுகின்றன. இந்நூலின் மூலப்பகுதி மட்டும் எசு. வையாபுரிப் பிள்ளையால் 1934 – ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம் என்பது வையா புரிப் பிள்ளை கருத்தாகும்.

மற்றொரு மதுரைக் கோவை நூலை இயற்றிய குலாம் காதிர் நாவலர் சோழ வளநாட்டைச் சார்ந்த நாகூரில் தருகாப் புலவராக இருந்தவர். அவர் காலத்தில் இரங்கூனில் பெரும்செல்வராக வாழ்ந்த பெ.மா. மதுரைப் பிள்ளை என்பவர்மீது குலாம் காதர் நாவலர் இயற்றிய கோவை நூல் மதுரைக் கோவை எனக் குறிக்கப்படுகின்றது. அந் நூலில் 420 பாடல்கள் காணப்படுகின்றன. தா.ஈ.

**துணை நூல்:**

**செயராமன், ந.வீ.,** சிற்றிலக்கியத் திறனாய்வு, இலக் கியப் பதிப்பகம், சென்னை, 1980.

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்:** மதுரை மாநகரில் ஆராய்ச்சி, பயிற்றுதல் துறை களுடன் ஒரு நூலகத்தையும் கொண்ட சென்னைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையம் செயற்பட்டு வந்தது. அது 1955-58-இல் சென்னைப் பல்கலைக் கழகப் பொதுக் கண்காணிப்புக்குழு மதுரையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென அளித்த அறிக்கையில் மையப் பல்கலைக்கழக நிலைக்கு உயர்த்துமளவுக்கு வளர்ந்து விட்டதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழக அரசு 1965-சூலை 27-இல் சட்டப் பேரவையின்முன் வைத்த அறிக்கை இணைத்தேர்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டு திசம்பர் 7-இல் மதுரைப் பல்கலைக்கழகச் சட்டம் என்ற பெயரில் 23 – ஆம் சட்டமாக ஆளுநர் ஒப்புதல் பெற்றது. பின்னர் 1966-பிப்பிரவரி 6-இல் தொடங் கப்பட்ட இப்பல்கலைக்கழகம், 1978 – ஆம் ஆண்டில் 38-ஆம் சட்டத்தின்படி மதுரை காமராசர் பல்கலைக் கழகம் என அமையலாயிற்று.

தென்மாவட்டங்களான மதுரை, இராமநாத புரம், பசும்பொன் தேவர்திருமகன், காமராசர், திருநெல்வேலி (இன்றைய சிதம்பரனார், கட்ட பொம்மன் மாவட்டங்கள்), கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் உயர்கல்விப் பொறுப்பை இப்புதிய பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டது. மதுரை–தேனி சாலையில் மதுரை மாநகரிலிருந்து 14-கி.மீ.தொலை வில் புதிய வளாகம் ஒன்று அமைக்கப்பட்டு, எல்லாப் பகுதிகளும் அங்குச் செயற் படுகின்றன. பாளையங் கோட்டையில் ஒரு பட்டமேற்கல்வி விரிவுமையமும், மதுரையில் ஒரு கல்வி மையமும், மதுரை, சென்னை, நாகர்கோயில் ஆகிய இடங்களில் செய்திதரும் மையங்களும் கொண்டுள்ள இப்பல்கலைக்கழகம் 110 இணைப்பு அல்லது ஒப்புதல் கல்லூரிகளை உள்ளடக் கியது. இதன் மைய நூலகத்தில் 1,83,390 நூல்களும் 500-பருவ ஏடுகளும் உள்ளன. 16.9 இலட்ச உருபாய் நிதித் திட்டத்திலமைந்த இந்நூலகம் நுண்படப் பெட்டி, வாசிப்புப்பொறி ஆகியவற்றைக் கொண்டு குறிப்பளிக்கும் தொண்டினையும் செய்து வருகிறது. மாதம் உரூ.60- கொண்ட 100 – கல்வித் துணைத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு 3 -ஆண்டுகள் பணியிலுள்ள ஆசிரியர்களும், நூலகர்களும், பல்கலைக்கழக எல்லைக்குள் பணியாற்றுவார்களா யின் இளங்கலை,முதுகலை, கணக்கியலில் இளநிலை, முதுநிலைத் தேர்வுகளுக்கு நேரடியாகச் செல்ல வாய்ப்புண்டு;நாட்டுப் பாதுகாப்புத் துறையினருக்கும் இச்சலுகை உண்டு. ஆசிரியர்கள் கணக்கியலில் எம்.பில். தேர்வுக்கும் செல்லலாம். ஆசிரியர்களும், பட்டதாரி களும் காந்தியச் சிந்தனை, பகுத்தறிவுச் சிந்தனை, மார்க்சியச் சிந்தனை ஆகியவற்றில் சான்றிதழ், பட் டயம் தேர்வுகளில் சேரலாம். பல்கலைக் கழக எல் லைக்குள் வாழும் பட்டதாரிகள் எம்.ஏ., கணிதத்தில் எம்.எசுசி. தேர்வுகளில் தனிமாணவராகக் கலந்து கொள்ள முடியும். கீழை மொழித் தேர்வுகளில் 20 வயது முடிந்தவர்கள் தனிமாணவர்களாகச் சேர முடி யும்.

மாலை நேரக்கல்லூரியும் அஞ்சல்வழிக் கல்வி நிறுவனமும் இப்பல்கலைக்கழகத்தில் உள்ளன. திறந்தவெளிப் பல்கலைக்கழக வகுப்புகளில் 21-வயது நிறைந்த எவரும் எசு.எசு.எல்.சி. வரை படித்திருந் தால் முன் அடிப்படை வகுப்பிலும், பல்கலைக்கழகச் சான்றிதழ் கொண்டவர்கள் 2-ஆண்டு அடிப்படை வகுப்புகளிலும் கலந்து கொண்டு, அதன்பின் 3 ஆண்டுப் பட்டப்படிப்பு வகுப்புகளில் சேர்ந்து கொள் ளலாம்.

உள்மதிப்பீடு இப்பல்கலைக்கழகத் தேர்வுகளில் உள்ள சிறப்புக் குறிப்பாகும். கலை, அறிவியல், வணிகவியல், வணிகநிருவாகம், மனையியல், பொறி யியல் ஆகிய துறைகளின் முதுநிலை வகுப்புகளிலும் உள்மதிப்பீடு உள்ளது. பெரும்பாலான இளநிலை, முதுநிலை வகுப்புகளிலும் பருவ முறைத் தேர்வுத் திட்டம் நடைமுறையிலுள்ளது. பதினோரு இணைப் புக் கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாக இயங்கி வருகின்றன.

நடமாடும் ஊடுகதிர்–மருத்துவச் சோதனை அலகும், முழுவசதியுள்ள உடல்நல மையமும் இங்



மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

குள்ளன. இணைப்புக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் மருத்துவச் சோதனை நடத்தப்படுகிறது. வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் ஆலோசனை அரங்குத் தகவல் திரட்டு ஒன்றை மாதந்தோறும் வெளியிடுவதன்மூலம் பணியாளர்களுக்கும், வேலைவாய்ப்பற்ற பட்டமேற்கல்வி பயின்றோருக்கும் துணை புரிந்து வருகிறது. பட்டமேற்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் 410 அறைகள் கொண்ட 3 மாணவர் விடுதிகளும், 210 பேருக்கு இடமுள்ள 2 மாணவியர் விடுதிகளும் இங்குள்ளன. ஆராய்ச்சிப் பட்டங்களான எம்.பில்., எம்.லிட்டு., பிஎச்.டி., டி.லிட்டு.,டி.எசுசி. ஆகியவற்றிற்கான வசதிகளும் உள்ளன. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழி கல்வித் துறை, கல்வி நிறுவனங்களில் சேர்ந்து முழு நேரக் கல்வி பயில இயலாதவர்களுக்கும், தங்களது கல்வியைத் தொடர எண்ணுவோருக்கும் சிறந்த வாய்ப்புகளை அளிக்கின்றது.

மாநில ஆளுநரை வேந்தராகவும், கல்வி அமைச்சரை இணைவேந்தராகவும் கொண்டியங்கும் இப்பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தர், பதிவாளர், தேர்வுகளின் கட்டுப்பாட்டாளர், விளையாட்டு இயக்குநர், நூலகர் முதலிய பொறுப்பாளர்களும் உள்ளனர். எஸ்.சு.

**மதுரைச் சிவப்பிரகாசர்**, கி.பி.15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சிறந்த உரையாசிரியர். இவர் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கினுள் சிவப்பிரகாசத்துக்கும் இருபா இருபஃதுக்கும் சிறந்த உரை எழுதியுள்ளார். இவர் அந்நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரையில் வாழ்ந்த மதுரை ஞானப் பிரகாசர் என்னும் ஞானியின் மாணவராவார். அதனை, உரை வரலாறு எழுதப் புகுமிடத்தில் உள்ள பகுதிகளால் அறியலாம். ‘இது மதுரையில் ஞானப் பிரகாசத் தம்பிரானார் திருவடியாரில் சிவப் பிரகாசர் செய்த வியாக்கியானம் என அறிக’ என்னும் பகுதி அதனை விளக்குகிறது. மேலும், ஞானப் பிரகாசர் சிவப்பிரகாசத்துக்கு எழுதியது பொழிப் புரையாகும். அதையொட்டிச் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் பேருரை ஒன்றினை எழுதினார். இவ்வுண்மையையும் உரை வரலாற்றுப் பகுதியால் காண இயல்கின்றது. ‘இந்தச் சிவப்பிரகாச நூலுக்கு முன்னோர்களும் வியாக்கியானம் செய்திருக்க இப்பொழுது இந்த வியாக்கியானம் செய்ய வேண்டும் காரணமேதெனில் முன்னுள்ள தம்பிரான்கள்... பொழிப்புரையாக எழுத... என் தம்பிரான் ஞானப்பிரகாசத் தம்பிரானார் எழுதின வியாக்கியானத்தின் வழியே... வியாக்கியானம் செய்ததென அறிக’ என்னும் பகுதி சிவப்பிரகாச உரை எழுந்த

காரணம் பற்றி விளக்குகின்றது. இவர்உரையில் காட்டிய மேற்கோள்கள் அடங்கிய நூல்கள் பல. அவை சாத்திர நூல்களேயன்றி இலக்கிய இலக்கண நூல்களாகவும் உள்ளன. அம்மேற்கோள்கள் இன்னின்ன நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன என்று நூற்பெயர்களையும் கொடுத்திருக்கிறார். அதிலிருந்து இவர் காலம் பற்றித் தெரிந்து கொள்ளவும், இன்னின்னார் காலத்துக்கு இவர் பிற்பட்டவரென்பதைத் தெரிந்துகொள்ளவும் ஏதுவாகிறது. இவர் திருப்புகழையும் மேற்கோளாகக் காட்டியிருப்பதால் அருணகிரிநாதருக்கும் பிற்பட்டவர் என்பது அறிய முடிகிறது. சைவ சித்தாந்தக் கருத்துகளுக்குகந்த நூல்களையே தம் மேற்கோளில் குறிப்பிட்டிருக்கிறார். சிறிது வேறுபட்ட கொள்கையுடையவர்களாயிருந்தாலும் அவர்கள்இயற்றிய நூல்களை மேற்கோளாகக் காட்டுவதேயில்லை. அத்தகைய அழுத்தமான சைவசித்தாந்தப் பற்றுடையவர். இவர் உரையிலிருந்து கி.பி.15-ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னும் உள்ள சாத்திர நூல் பலவற்றின் பெயர்களையாவது அறியமுடிகிறது. இவர் மேற்கோள் காட்டிய நூல்கள் பல, இப்போது இறந்தொழிந்தன என்றும் தெரிகிறது. இவர் வடமொழிப் பயிற்சி மிக்கவர். பல வடமொழிநூல்களின் கருத்துகளும் இவர் உரையில் இடம் பெற்றுள்ளன. இவர், இருபா இருபஃதுக்குத்தான் முதலில் உரை எழுதியிருக்கிறார். அதனை நூல் வரலாறு எழுதிய உண்மையிலிருந்து தெரிய முடிகிறது. இவ்விருபா இருபஃது உரை இப்போது அச்சானதாகத் தெரியவில்லை. இவர் சிவப்பிரகாசத்துக்கு உரை எழுதிய சிறப்புக் குறிப்பிடத்தக்கது. முதலில் அந்தப்பாவுக்குரிய முகவுரைகூறிவிருத்தப்பாவின் பின்,காவை அம்பலநாதத் தம்பிரான் இயற்றிய கொளுவைக் கூறி, அப்பால் சொல் விளக்கம் தந்து, இறுதியில் நுட்பம் விசேடம் என்னும் தலைப்புகளில் தம் உரை பொருந்துமாறு கூறி முதனூல், வழியில், திருமுறை நூல் மேற்கோள்களுடன் பொருத்திக் காட்டும் திறம் சிறப்பாயுள்ளது. சிவாக்கிர யோகிகள், சிவஞான முனிவருக்கு முன்னர் ஒரு சிறந்த பேருரை எழுதிய சான்றோர் மதுரைச் சிவப்பிரகாசரே எனக் கூறுகிறார். இவர் சீடவருக்கம் பின்னும் தொடர்ந்து வந்துளதைச் சில நூல்களின் பாயிரங்களிலிருந்து தெரிய முடிகிறது. இரா.ச.

**மதுரைச் சுள்ளம் போதனார்:** இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். இவரது ஓரேபாடல் நற்றிணை215-ஆம் பாடலாக அமைந்துள்ளது. தோழி ஒருத்திக்கு இக்கட்டானநிலை ஒன்று ஏற்படுகிறது. தலைவனுக்கு நெறிமுறையை நினைவூட்டும் தேவை தோழிக்கு எழுகிறது. தலைவியிடம் கொண்ட ஆழ்ந்த அன்பினால் அவன் அவளை நாள்தோறும் சந்தித்துப் பேசிச்செல்கிறான். தலைவிக்கோ மறுநாள் அவனைக் காணும்வரையிலான இடைக்காலப் பிரிவு பொறுக்கவியலாத் துயரைத் தருகிறது. தலைவனைப் பிரியாமல் உடனுறையவேண்டும் என்பது அவள் விருப்பம். அது நிறைவேற வேண்டுமானால் திருமணம் முடிந்து ஓர் இல்லத்தில் வாழும்நிலை ஏற்படவேண்டும். ஆனால் தலைவனோ அதுபற்றிய எண்ணமே எழாதவனாய் வந்து வந்து செல்கிறான். தலைவனோ வினையிலும், நட்பிலும், வேட்டத்திலும் என வேறுவேறு வகைகளில் பொழுதைப் போக்கவியலும். எனவே, தலைவியின் மனநிலையை அவனுக்கு உணர்த்தி விரைவில் அவன் மணமுடிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.தன் மணம் பற்றித் தானாக யாரிடமும் பேசுதல் தலைவிக்கு அழகன்றாதலின் அது தோழியின் கடமையாகிறது. தோழி நேரே தலைவனிடம் சென்று, 'இதோபார், நீ இப்படி ஊரும் உறவும் யாரும் அறியாமல் அவ்வப்போது தலைவியைச் சந்தித்துச் செல்லல் முறையன்று. மணம் செய்து அழைத்துச் செல்' என்று சொல்ல முடியுமா? அது முறையும் அன்றே. எனவே. குறிப்பாகத்தான் உணர்த்தவேண்டும்.

தலைவன் தலைவியை சந்திக்க வரும்போது அவனிடம் சுற்றி வளைத்துப் பேசுகிறாள். 'தலைவனே, கதிரவன் மலைவாயிலில் விழுகின்ற மாலைப் பொழுதை மங்கையர் தத்தம் மாளிகையில் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள். பகலெல்லாம் பணிசெய்த கணவருடன் இனித்தாம் பேசிக்கலக்கலாம் என்று எதிர்பார்த்து நிற்பார்கள். என் தலைவியோ நீ சிறிது நேரமே வந்து செல்வதால் உன்பிரிவால் கலங்கி நிற்பாள். அத்தகைய நிலையை அவளுக்குத் தருதல் அவளிடம் அன்பு கொண்ட உனக்கு அழகாகுமா? ஆகாதன்றோ? நீ ஏன் பிரிந்துசெல்ல வேண்டும்?இங்கேயே தங்கிவிட்டால் என்ன? எம்வீட்டார் வந்து விடுவார்களோ என்றும் அஞ்சவேண்டாம். அவர்கள் சுறா மீன் வேட்டையாடச் சென்றிருக்கிறார்கள். அது கிடைக்காமல் வெறுங்கையுடன் திரும்பிவரமாட்டார்கள். அது அவ்வளவு விரைவில் கிடைப்பதும் அன்று. எனவே, நீ இங்கே தங்கி என் தலைவியின் துயர் தீர்க்கலாம்' என்கிறாள்.

இது இயலாதசெயல் என்பது இருவர்க்கும் தெரியும். எனவே, அச்சத்துடன் சந்தித்துத் துயருடன் பிரியும் இந்த அவலநிலை மாறத் திருமணமொன்றே வழி என்பதைக் குறிப்பாக உணர்த்திவிடுகிறாள். அத்துடன், குறித்துச் சென்ற வேட்டைப்பொருள் கிடைத்தாலன்றித் தன் வீட்டார் திரும்பார் என்று கூறிய தன் மூலம், தலைவனும் அவன் குறித்த செயலாகிய தலைவியின் உறவை அடைவதில் தீவிரம் காட்டித் திருமண ஏற்பாடுகளில் முனைந்து அது நிறைவேறா

மல் தலைவியைச் சந்திக்காத மனவுறுதியுடன் செயற் படல்வேண்டும் என்பதையும் சுட்டுகிறாள். இப் பாடல், தலைவன் தலைவியரின் பிரிவுத்துயர் மிகுதி சுட்டுவதும், கடல்சார்ந்த கருப்பொருட்களைப் பாடு வதுமாகிய நெய்தல் திணையில், 'இரவுக்குறி மறுத்து வரைவு கடாயது' என்னும் கூற்றில் இடம் பெற்றுள் ளது. மீ.மு.

**மதுரைச் செங்கண்ணனார்:** அகநானூறு 39 – ஆம் பாட்டின் ஆசிரியர் மதுரைச் செங்கண்ண னார். தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று பொரு ளீட்டி வந்த பிறகு ஊடல் கொள்ளும் தலைவியை நோக்கி 'நின்னையான் ஒருபோதும் மறந்ததில்லை' என்று கூறும் வகையில் அமைந்தது அப்பாடல். பாலைத் திணைக்குரிய அப்பாடலைச் 'சென்ற தேஎத்து உழப்பு நனி விளக்கி, இன்றிச் சென்ற தன் னிலை கிளப்பினும்' என்ற தொல்காப்பியக் கற்பியல் துறைக்குரிய விளக்கமாக இளம்பூரணரும் நச்சினார்க் கினியரும் காட்டுவர்.

'முயற்சியில்லாமையைப் பழித்த நெஞ்சத்தால் பொருளீட்டச் சென்ற நீர் எம்மை நினைத்துப் பார்த்தீரோ என்று வினவித் துன்பமிகக் கொண்டு என்னையும் வருத்தாதே. நின் பேரழகினை மறவேன். மூங்கில் மரங்கள் உராய்ந்து பற்றும் தீ காடெங்கும் ஓடும். அதற்கு அஞ்சி வணிக மக்கள் ஓடுவர். அவ ரொடு புலிகண்டஞ்சிய யானைக்கூட்டம் ஓடிவந்து விரவும். அத்தகைய காட்டிடத்தே என் பாயலில் மானென வந்து, நிலத்திற்படிந்த நோக்கோடு வளை களைச் செறித்து நின்றாய். நினக்கு இந்நிலையில் ஊடல் எவ்வாறு வந்தது என யான் நின்னுடைய வளைந்த புருவங்களையும் சிறிய நெற்றியையும் கையால் தடவிய காலத்துக் கண்விழித்து எல்லாம் கனவென உணர்ந்தேன். இதனை அறியாய் ஆகலின் எம்மோடு நீ ஊடல் கொள்கிறாய்' என்பது மதுரைச் செங்கண்ணனாரின் பாடற் கருத்து.

இப்பாட்டிற் கனவுநிலை உரைத்தலும், உருவெளி யிற் கண்ட காட்சியின்பமும் அது பொய்யாகிய காலத்து உண்டான ஏக்கமும் நன்கு காட்டப் பெற் றுள்ளன. கு.வெ.பா.

**மதுரை ஞானப்பிரகாசர்:** இவர் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரையில் வாழ்ந்தவராவார். காவை அம்பலநாதத் தம்பிரான் வழிவந்த சத்தியஞான பண்டாரம் என்னும் துறவி யின் மாணவராவார். ஞானப்பிரகாசத் தம்பிரான் என்றே அக்காலத்து இவர் குறிப்பிடப் பட்டி ருப்பதால் சிறந்த துறவு நிலை மேற்கொண்டவர் எனவும் அறிய முடிகிறது. இவர் சிவப்பிர காசத்துக்குப் பொழிப்புரை எழுதியுள்ளார். மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய சிவப்பிரகாசப் பேருரைக்கு இந்த ஞானப்பிரகாசரின் பொழிப்புரையே அடித் தளமாய் அமைந்தது என்று கூறலாம். மேலும், ஞானப்பிரகாசர் பிரசாத அகவலுக்கும் உரை எழுதி யிருக்கிறார் என்று தெரிகிறது. அவ்வுரையால் நூலில் கூறப்படும் பலயோக நெறிமுறைகளைப் பற்றி அறிய ஏதுவாகிறது. மதுரை ஞானப்பிரகாசருடன் பயின்றவர் களந்தை ஞானப்பிரகாசர் என்ற ஞானி ஒருவரும் உளர் என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்ற னர். நான்குவகைச் சத்தி நிபாதம், முத்தி பேதங்கள் கூறும் 'அரிவையர் இன்புறும் முத்தி' (சிவப்பிரகாசம் 50) என்ற பாடலின் உரை போன்ற பல இடங்களில் இவர் உரை மிகச் சிறப்பாக உள்ளது. ஒரு பாடலின் உரையில் 'இவற்றின் வரவைப் பரபக்கத்தின் வியாக் கியிலே கண்டு கொள்க' என்று இவர் எழுதியிருப்ப தால் இவர் சிவஞான சித்தியார் பரபக்கத்துக்கும் உரை எழுதியிருக்கிறார் என்பது தெரிகிறது. இவரது சிவப்பிரகாச உரை அச்சானதாகத் தெரியவில்லை. சூரியனார் கோயிலாதீன ஏடு' வேலம்பாளையம் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களிட மிருந்தது.இப்போது எங்குற்றதோ என அறியக்கூட வில்லை. அது வெளிவரின் பல உண்மைகள் தெரிய வாய்ப்புண்டு. இரா.ச.

**மதுரைத் தத்தங்கண்ணனார்:** மதுரைப் புலவராகிய இவர் தத்தன் என்பார்க்கு மகனாராவர். சங்கப் புலவருள் ஒருவர். இவர் பாடல் ஒன்று அக நானூற்றில் (335) இடம் பெற்றுள்ளது.

பாலைத்திணையில் தலைமகன் பொருள் கடைக் கூட்டிய நெஞ்சினைக் கழறிச் செலவழுங்கியது என்னும் துறையில் அப்பாடல் அமைந்துள்ளது. தலைவியைப் பிரிந்துபோய் நிரம்பப்பொருள் தேடிக்கொண்டு வருதல் வேண்டும் என்று தன்னை இடையறாமல் வற்புறுத்திக் கொண்டிருந்த தன் நெஞ்சினைவெறுத்து இடித்துரைத்தது என்பது இத்துறை விளக்கமாகும்.

பிறர் படுகின்ற வறுமைத் துயரைக் கண்டு உருகும் அருளுடையவராக இருந்தால் என்ன பயனாம்? அவ்வறுமையைத் தீர்த்தற்குரிய பொருள் இல்லாமல் எப்பயனும் இல்லை என்பதை, 'இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும், அருள்நன் குடையர் ஆயினும் ஈதல், பொருள் இல்லோர்க்கு அஃது இயையாது ஆகுதல்' என்கிறார்.

பொருள்தேடுதற்குச் செல்லும் வழியின் இயல்பை 'ஆண்யானை தன்கொம்பு ஒடியுமாறு சினங்கொண்டு குத்தி யாமரத்தின் பட்டையைப் பிளந்துஅதன் நீரைப் பெண்யானைக்கு ஊட்டும் நீரில்லா நெடுநிலம்' என்று

குறிக்கிறார். அத்தகு வழியிலும் தான் செல்வதற்கு அரிது இல்லை என்று துணியும் தலைவன் 'தலைவியும் உடன் வருவளாயின் அந்தக் கொடிய பாலை நிலத்தைக் கடத்தலும் எளியதே' என நினைக்கின்றான். ஆனால், அவள் உடன் வருதல் அரிதாயிற்றே எனத் திகைத்துச் செல்லுதலை அப்பொழுதில் மேற்கொள்ளாமல அமைந்தான். அவ்வாறு செல்லாது அமைதல் செல்லாது இருத்தற்கு அன்று; தலைவிக்கு ஆறுதல் உண்டாக வேண்டுமென்னும் கருத்திலேயாகும். இதனைச் 'செலவழுங்குதல்' என்பர். இரா.இ.

**மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார்:** மதுரைத் தமிழ்க்கூத்தன் கடுவன் என்பார் மகனாராக இம்மள்ளனார் இருத்தல் கூடும். மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன் தேவனார் என்பாரும் சங்கப் புலவருள் ஒருவராவர். தமிழ்க் கூத்து, ஆரியக் கூத்து என்னும் இரண்டனுள் இவர் தமிழ்க் கூத்தில் திறம் பெற்றோராக விளங்கியவர் என்பது பெயரால் அறிய வரும். அது தமிழக் கூத்து எனவும் படும். இவர் பாடிய பாடல்கள் அகநானூற்றில் இடம் பெற்றுள்ளன (70,256,354).

நெய்தல் திணையில், தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது என்னும் துறையிலும் (70), மருதத்திணையில் தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது என்னும் துறையிலும்(256), முல்லைத் திணையில் வினை முற்றிய தலைமகற்கு உழையர் சொல்லியது, (354) என்னும் துறையிலும் இவர் பாடல்கள் உள.

தலைவன் களவுக் காலத்தில் தலைவியை நாடி வந்ததால் அலர் எழுப்பிய ஊர், அவன் மணஞ்செய்து கொண்டபின் அமைதியாக வாய்மூடிக்கிடந்தமை இராமன் இலங்கை செல்லுதற்கு அமைதியாக எண்ணிக் கொண்டிருந்தபோது, கோடிக்கரைப் பகுதியில் இருந்த ஆலமரத்துப் பறவைகள் ஒலியெழுப்ப, அவ்வொலியடங்குமாறு இராமன் கைகவித்த அளவில் அடங்கினாற் போன்றது என்று உவமை கூறுமுகத் தான் இராமகாதைச் செய்தியொன்றை அமைத்துக் காட்டுகிறார் (70).

தான் செய்த தவற்றை மறைத்துப் பொய்கூறிய ஒருவனை ஊரவையினர் பற்றி, ஒரு மரத்திலே கட்டி வைத்து அவன் தலையில் நீற்று (சுண்ணாம்பு)நீரைக் கொட்டினர் என்றும், கூடிய அவையினர் 'தக்க தண்டம்' என ஆர்த்தனர் என்றும் கூறுகிறார். அவையினை 'வீறுசால் அவையம்' என்பது அறிந்து இன்புறத்தக்கது (256). இரா.இ.

**மதுரைத் தமிழக் கூத்தன் நாகன் தேவனார்:** மதுரைப் புலவராகிய இவர் தமிழக் கூத்தில் வல்லார் என்றும், நாகன் என்பார் மைந்தர் என்றும், தேவன் என்னும் பெயரினர் என்றும் அறிய முடிகின்றது. கூத்து வகைகளுள் தமிழக் கூத்து (தமிழ்க் கூத்து), ஆரியக் கூத்து என நாட்டியல் வழக்காக இரு வகை இருந்தமை அறியவருதலால் இவர் 'தமிழக் கூத்தன்' என்பது தெரிகின்றது. இவர் பாடிய பாடலொன்றும் அகநானூற்றிலேயே இடம் பெற்றுள்ளது (164).

மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் என்பாரும் சங்கப் புலவர்களுள் ஒருவர் என்பது அவர் பாடிய அகநானூற்றுப் பாடல்களால் (70,256,354) அறிய வருகின்றது.

முல்லைத் திணையில், பாசறைக்கண் இருந்த தலைமகன் தன்நெஞ்சிற்குச் சொல்லியது என்னும் துறையில் இவர் பாடல் அமைந்துள்ளது. 'மதிக் குடைக்கீழ் வழிமொழிந்து மன்னரெலாம் மறந்துறப் பவும், பதிப்பெயரான் மறவேந்தன் பாசறை இருந் தன்று' என்பது பாசறைநிலை(பு.பொ.வெ.).கோடைக் கொடுமையை, ஞாயிறுதன் கதிர்களாகிய கைகளால் நிலத்து நீரினைக் கவர்ந்துகொண்டு அறவே பசுமை அற்றுப் போகுமாறு செய்வதாக உருவகிக்கிறார். வெப்பத்தால் நிலம்வெடித்துக்கிடத்தலை 'விடுவாய்ப் படுதல்' என்கிறார். கோடைக் கொடுமையைக் கூறிய இவர் கார்காலக் கவினையும் அழகுறக் கூறுகிறார். 'காடு கவின் எய்தக் கனைபெயல் பொழிகின்றது; வண்டினம் ஆர்க்கின்றது; முல்லையும் தோன்றியும் மலர்கின்றன; காடே கமழ்கின்றது' என்பது அது.

கார்த்துளி கண்ட தலைவன், தன்காதற்கிழத்தியின் கண்ணீர்த்துளியை நினைந்து, அவள் பண்டை நலத்தைக் காண்பதற்குப் பகைவினை முற்றுப் பெற்றும் வேந்தன் வினை விட்டிலனே என நினைவு கூர்கிறான். இரா.இ.

**மதுரைத் தமிழ்ச் சங்கம்:** தமிழ்நாட்டில், தமிழ் மக்களுக்குத் தனித்தமிழ் உணர்வையும், நாட்டுப்பற்றையும் ஊட்டித் தமிழ்மொழி, பிற மொழியின் உதவியின்றித் தானே தனித்தியங்கவும், செழித்தோங்கவும் வல்லது என்பதனை உலகிற்கு அறிவித்த பெருமை இரண்டு சங்கங்களுக்கு உள்ளது. அவை: 1) மதுரைத் தமிழ்ச் சங்கம், 2) கரந்தைத் தமிழ்ச் சங்கம்.


முச்சங்கங்கள் வைத்து, முத்தமிழை வளர்த்தோர் பாண்டியர் ஆவர். முதல் இரு சங்கங்களைக் கடல் கொண்டுபோக, மூன்றாம் சங்கத்தைக் காலம் கொள்ளை கொண்டது. அந்நிலையில், 'பாவேந்தர் காற்றில் இலவம் பஞ்சாய்ப் பறக்கையிலே, தேவேந்திர தாருவொத்தாய்' என்று புலவர்களால் பாராட்டப் பெற்ற சேதுபதிகளின் மரபினரும், சென்ற நூற்

றாண்டில் தூய தமிழ்த் தொண்டாற்றிய பெருந் தகையும், இராமநாதபுரம் சீமையை மேற்பார்த்து ஆட்சிபுரிந்தவருமான பொன்னுச்சாமித் தேவரின் அருந்தவச் செல்வராய்த் தோன்றிய பாண்டித்துரைத் தேவர், தமிழ் வளர்க்கும் நோக்கத்தால், நான்காம் தமிழ்ச் சங்கம், எனத்தக்க தமிழ்ச் சங்கத்தை மதுரை மாநகரில் நிறுவினார்.

ஒருசமயம் இவர், மதுரையில் நடந்த அரசியல் மாநாட்டில் பேசவந்தபோது, திருக்குறள், கம்ப ராமாயணத்திலிருந்து மேற்கோள்கள் காட்ட விரும்பி, அவ்விரு நூல்களையும் வாங்கிவர ஆள் அனுப் பினார். ஆனால், அவை கிடைக்கவில்லை. சங்கம் வளர்த்த தமிழ் மதுரையில் 'தமிழுக்குக் கதி' (க-கம்ப ராமாயணம்; தி-திருக்குறள்) எனப்படும் அவ்விரு நூல்களும் கிடைக்காமைகண்டு மனங்கவன்ற தேவர், அம்மாநாட்டிலேயே மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன் றைத் தொடங்கப் போவதாக அறிவித்தார். அவர் தம் அரிய முயற்சியால், மதுரையில் 1901-இல், 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' தோற்றுவிக்கப் பட்டது. அதற்குப் பேருதவி புரிந்த வள்ளல், இராமநாதபுரம் அரசரா வார்.

இச்சங்கத்தின் நோக்கங்களில் குறிப்பிடத்தகு வன: மாணவர், செந்தமிழ் கற்கும் வண்ணம் ஒரு கலாசாலை அமைத்தல், அச்சு நூல்களும், ஏட்டுச் சுவடிகளும் அடங்கியதொரு நூல் நிலையம் உருவாக்கல், அச்சகம் ஒன்றை நிறுவித் தமிழ்த் திங்கள் இதழ் நடத்தல், அரிய நூல்களுக்கு உரை எழுதுவித்தல், பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல், பழைய கல்வெட்டு, செப்பேடு ஆகியவற்றைத் தேடி வெளிக்கொணர்தல், ஆண்டு தோறும் புலவர்களை வரவழைத்து இலக்கிய, சமயச் சொற்பொழிவாற்றச் செய்தல், தமிழ்ப் புலமை யாளரைப் பெருமைப்படுத்துதல், சிறந்த நூல்களை அரங்கேற்றச் செய்தல், தமிழ்நூல் அல்லது உரை எழுதுவோர்க்கு உதவித் தொகை தருதல், தமிழின் பெருமையை அனைவரும் அறிய, மதுரையில் மட்டு மன்றித் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் கூட்டங் கள் கூட்டி இலக்கியச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தல் முதலாயின ஆகும்.

சங்கச் செயன்முறைகள் முறையாகவும் ஒழுங் காகவும் எக்காலத்தும் நடைபெற வேண்டுமென்பது பாண்டித்துரைத் தேவர் கருத்து. எனவே, சங்கத் திற்கெனச் சட்டதிட்ட விதிமுறைகள் வகுக்கப்பட் டன. சங்கத்தை நிருவகிக்க 'ஆட்சிக்குழு' ஒன் றும் அமைக்கப்பட்டது. அதில் சாதி, சமய வேறு பாடின்றித் தமிழ்ப் பற்றாளர், செயற்குழுவினராக ஆக்கப்பெற்றனர். அவ்வாட்சிக் குழுத் தலைவராகப் பாண்டித்துரைத் தேவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். சங்கத்தில் நடைபெறும் எந்தவொரு செயலும், அந்த ஆட்சிக்குழுவின் முடிவின்படியே நடத்தப்பட்டது. அதன் செயன்முறைகள் அனைத்துமே தமிழ்ப் பெரு மக்களுக்குச் 'செந்தமிழ்' இதழ் மூலம் அறிவிக்கப் பட்டன. அத்தகையதொரு ஆட்சிமுறையை வேறெந் தத் தனியார் மன்றத்திலோ, சங்கத்திலோ காண்டல் அரிது. பாண்டித்துரைத் தேவர், தமது வாழ்நாள் வரை (1911) சங்கத்தின் ஆட்சிக்குழுத் தலைவரா யிருந்து அருந்தொண்டாற்றினார். அவர் இறந்தபின், சங்கத்துத் தலைமைப் பொறுப்பு, இராமநாதபுரத்து அரசருக்கு உரியதாயிற்று.



மதுரைத் தமிழ்ச்சங்கம்

தமிழகத்தின் பல்வேறு அறிஞர்களும், தமிழன்பர் களும் இச்சங்கத்தின் உறுப்பினர்களாயிருந்துள்ளனர். முறையாக உறுப்பினர் கட்டணம் கட்டத் தவறி யோர், 'சங்க உறுப்பினர்' என்னும் தகுதியை இழப் பர்.

சங்கத்தை நிறுவிய பின்னர் 15.9.1901 – இல் 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' தொடங்கப்பட் டது. பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம் என் னும் வகுப்புகள் வாயிலாகத் தனித்தமிழ்த் தேர்வு கள் நடத்தப்பட்டன. அவை, செய்யுளியற்றல் முத லான பாடத் திட்டங்களைக் கொண்டு விளங்கின. அவற்றில் வெற்றி பெறுவோர்க்குத் தங்கப்பதக்கங்கள் முதலான பரிசுகள் அளிக்கப்பட்டன. அத்தேர்வு களைச் சங்கக் கலாசாலையிற் சேர்ந்து பயின்று எழுத லாம். தனியாகப் படித்தும் எழுதலாம். அங்குச்

சேர்ந்து படித்தோர்க்கு உண்டி, உடை, உறையுள் ஆகியவை தரப்பட்டன. 'பிரவேசம்' மட்டுமே தேறியோர், கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்களாகப் புகழ்பெற்று விளங்கியுள்ளனர். பண்டிதத் தேர்வோ, மிகமிகக் கடுமையானது. அச்சடிக்கப்பட்ட வினாத் தாள்களில், அவற்றைத் தயாரித்துத் திருத்துபவரின் பெயர்களும் அச்சடிக்கப்பட்டிருக்கும். செந்தமிழிலும் வடமொழியிலும் பெரும்புலமை பெற்ற திருநாரணையங்கார் போன்றோர், அக்கலாசாலை ஆசிரியர்களாவர்.

சங்கப் பணிகளுள் குறிப்பிடத் தக்கது மற்றொன்று உண்டு. 'உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்க்குத் தமிழ் அறிவு இருத்தல் வேண்டும்', என்ற நோக்கத்தால் 'ஆங்கிலக் கலாசாலைத் தமிழ்ப் பரீட்சை' என்ற பெயரில் தேர்வுகள் நடத்தப்பட்டன.

சங்கச் சார்பில் 'பாண்டியன் புத்தகசாலை' ஒன்று அமைக்கப்பட்டது. அதில் அச்சான நூல்கள் தவிர, அரிய ஏட்டுச் சுவடிகளும் தொகுக்கப்பட்டு, வைக்கப்பட்டிருந்தன. ஏடு தேடுதற்கும், பரிசோதித்தற்குமெனத் தனித்தனிப் புலவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். ஒருமுறை சங்கக் கட்டடம் தீப்பற்றி எரிந்து போனதில், ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகள் நெருப்பிற் கிரையாயின.

சங்கம், 'செந்தமிழ்' என்னும் திங்கள் இதழை வெளியிட்டது. அதில், அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம்பெற்றன. இன்றைய ஆராய்ச்சியாளர்களுக்கும் அக்கட்டுரைகள் பயன் தருவன எனலாம். புலமை நலம் சான்ற திருநாரணையங்கார், கி. இராமாநுசையங்கார் போன்றோர் அவ்விதழின் பதிப்பாசிரியர்களாக இருந்தனர்.

சங்கத்தின் ஆண்டுவிழாக்கள், மதுரையில் மட்டுமன்றித் தமிழகத்தின் பல்வேறு தலைநகரங்களிலும் நடத்தப்பட்டன. அதன் பயனாய்ப் பல்வேறு தமிழ்ச் சங்கங்கள் உருவாயின. இச்சங்கத்தின் 9-ஆம் ஆண்டு விழா தஞ்சையில் நிகழ்ந்தது. அதன் விளைவாகத் தோன்றியதே 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' (1911) ஆகும்.

பாண்டித்துரைத் தேவரின் மறைவுக்குப்பின் (1911), இச்சங்கப் பணிகளில் தளர்ச்சி ஏற்பட்டது. சங்கத்துப் பொன்விழா, 1956-இல் மிகச் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் தூண்டுதலால், சங்கத்தில், 'செந்தமிழ்க் கல்லூரி ஒன்று, சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைப்புப் பெற்று, 1957-இல், தொடங்கப்பட்டது. மதுரைப் பல்கலைக்கழகம் 1966-67-இல் தொடங்கப்பட்டபோது, இக்கல்லூரி அதனுடன் இணைக்கப்பட்டது. பின்னர், 1968-69-இல் இத் தமிழ்க் கல்லூரியுடன் புகுமுகம், இளங்கலை ஆகிய வகுப்புகளும் இணைக்கப்பட்டன. இப்போது தமிழ் முதுகலை வகுப்பும் நடைபெறுகிறது. ச.சா.

**மதுரைத் தமிழ் நாகனார்:** இவர், திருக்குறளைப் போற்றும் பாமாலையாக அமைந்துள்ள 'திருவள்ளுவமாலை' என்னும் தொகுதியிலுள்ள பாடல்களைப் பாடிய புலவர்களுள் ஒருவராவார். இவர்தம் பெயரிலிருந்து, மதுரை இவர்தம் ஊராக இருத்தல் கூடும் என்பதையும், நாகன் இவர் இயற்பெயராகும் என்பதையும் உய்த்துணர முடிகிறது. திருக்குறள் எல்லா மக்களுக்கும், அவர்தம் வாழ்க்கையின் பல நிலைகளுக்கும் உரியனவான செய்திகளைக் கூறும் நூலாகும் என்பதனை, 'எல்லாப் பொருளும் இதன் பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்று கூறிப் பாராட்டியிருப்பது சிறப்பாக உள்ளது. உடன்பாடு, எதிர்மறை என்னும் இருவகை வாசகத்தாலும் திருக்குறளின் சிறப்புக் கூறியிருப்பது நயமிக்கதாக உள்ளது. அ.மா.ப.

**மதுரைத் தமிழக் கூத்தனார்:** புறநானூறு 334 – ஆம் பாடலின் ஆசிரியர் மதுரைத் தமிழக் கூத்தனார். 'ஆரியக்கூத்து முதலியவற்றைப் போலத் தமிழ்மொழிக்கேயுரிய கூத்தாற் பெயர் பெற்றவர் இவர்' என்பர் உ.வே. சாமிநாதையர். அகநானூற்றின் 70 – ஆம் பாடலைப் பாடியவர் மதுரைத் தமிழக் கூத்தனார் கடுவன் மள்ளனார் என்பதும் 164 – ஆம் பாடலைப் பாடியவர் மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார் என்பதும், 354 -ஆம் பாடலைப் பாடியவர் மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் என்பதும் அறியப்படுகின்றன. கடுவன் மள்ளனாரையும் நாகன் தேவனாரையும் தமிழக் கூத்தனாரின் புதல்வரென்பர் உ.வே.சாமிநாதையர்.

'அழகிய நீர்நிலைகளில் வளர்ந்திருக்கும் சண்பங்கோரையின் கதிர் போன்ற தூய மயிரடர்ந்த குறுகிய கால்களையும் நெடிய காதுகளையுமுடைய குறுமுயல், புல்லிய தலையையுடைய சிறுவர்கள் மன்றத்தின்கண் ஆரவாரிக்க, அதற்கஞ்சி வைக்கோற் போருக்குள்ளே பதுங்கும்; அத்தகைய ஊரிடத்தே மனையோள் பாணர்களை உண்பிக்கவும், பரிசிலரை வரவேற்கவும் ஆரவாரம் மிகுதியான சூழலில் விருந்தோம்புதலில் ஓய்வற்றவளாக இருப்பாள், வலிமிக்க வேலேந்திய காளையாகிய தலைவனும், பரிசிலர்க்கு யானை முதலிய பொருட்களை வழங்குதலில் ஓய்வற்றவனாக இருப்பான்' என்னும் கருத்துடையது தமிழக் கூத்தனாரால் இயற்றப்பட்ட புறநானூற்றுப்

பாடல். வாகைத்திணையில் மூதின் முல்லைத்துறைக் குரியதாக அப்பாடல் அமைந்துள்ளது. கு.வெ.பா.

*மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க் கிழார்*: இவர் திருக்குறளைச் சிறப்பித்துப் பாடிய பாடல்களின் தொகுப்பாகிய, 'திருவள்ளுவமாலை' யைப் பாடிய புலவர்களுள் ஒருவர். மதுரையைச் சேர்ந்த இவர் தமிழாசிரியராகத் திகழ்ந்தமையினை இவர்தம் பெயர்கொண்டு அறியலாம். செங்குன்றூர்க் கிழார் என்பதனால் இவர் பிறந்த ஊர் செங்குன்றூராதல் வேண்டும். அங்ஙனமாயின், பிறந்த ஊரால் பெயர் பெற்ற இவர், மதுரையில் ஆசிரியப் பணி புரிந்து சிறப்பெய்தியவராவர் எனக் கொள்ளலாம். புலவர் என்று கூறினால் அது திருவள்ளுவரையே சிறப்பாகக் குறிக்கும் என்னும் கருத்தில் 'புலவர் திருவள்ளுவர் அன்றிப் பூமேல், சிலவர் புலவர் எனச் செப்பல்' தக்க தன்று எனக் கூறித் திருவள்ளுவரைப் பாராட்டியுள்ளார். அ.மா.ப.

*மதுரை நாயக்கர்கள்*: கி.பி.1336-ஆம் ஆண்டு விசயநகரப் பேரரசு துங்கபத்திரா ஆற்றின் தென் கரையில் நிறுவப்பட்டது. அது கி.பி. 1500-ஆண்டுக் குள்ளாகக் கிருட்டிணா ஆறு முதல் கன்னியாகுமரி வரை தென்னகம் முழுவதும் விரிவடைந்தது. அப் பேரரசில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி, வேலூர், சந்திரகிரி, மைசூர் முதலான இடங்களில் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வாளுநர்கள் பேரரசு வீழ்ச்சி யடையத் தொடங்கிய காலத்தில் தங்களைச் சுதந் திர அரசர்களாக அறிவித்துக்கொண்டு, தனி அரசு களை ஆட்சி செய்யத் தொடங்கினர். அவ்வாறு மதுரையில் தனியரசு ஆட்சி செய்தவர்களே மதுரை நாயக்கர்கள் ஆவர். அவர்கள் கி.பி. 1529-முதல் கி.பி. 1736-வரை மதுரையைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தின் பெரும்பகுதிகளை ஆண்டனர். அவர்கள் தமிழகத்துடன் நிற்காமல் இன்றைய கேரளம், கருநாடகம் முதலான பகுதிகளை ஆண்ட சிற்றரசர்களோடும் போரிட்டனர். சமயம், கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அவர்கள் அரும்பாடு பட் டனர். இலக்கியங்களை வளர்த்தனர். தமிழர்களின் பண்பாட்டு வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பணி யினைச் செய்தனர்.

**அரசியல் வரலாறு:** விசயநகரப் பேரரசர் கிருட் டிணதேவராயர் கி.பி. 1529-ஆம் ஆண்டு இறந்த வுடன் மதுரையில் நாயக்கராக இருந்த விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529-1564) தம்மைச் சுதந்திர அரச ராக அறிவித்துக் கொண்டார். அவருக்குப் பல துறை களில் உதவி செய்த தலைமை அமைச்சர் அரிய நாதர் குறிப்பிடத்தக்க மனிதராவார். விசுவநாத நாயக்கரின் அரசு திருச்சி முதல் கன்னியாகுமரி வரை பரவியிருந்தது. அவர் காலத்தில் பாளைய முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. அதன்படி பாளையக்காரர்கள் சிறுசிறு நிலப்பகுதிகளை ஆட்சி செய்து நாயக்கரின் மேலாதிக்கத்தை ஏற்றுச் செயற் பட்டனர்.

முதலாம் கிருட்டிணப்ப நாயக்கரும்(கி.பி. 1564-1572) தந்தையைப் போலவே சிறந்த ஆட்சியாளராக விளங்கினார். திருவாங்கூர், இலங்கை, ஆகியவற்றின் மீது போர் தொடுத்து வெற்றி கண்டார். தலைக் கோட்டைப் போர் கி.பி. 1565-இல் நடந்தது. அப் பொழுது விசயநகரப் பேரரசருக்கு உதவியாகப் படைகளை அனுப்பினார். அவருக்குப்பின் அவருடைய மகன் முதலாம் வீரப்ப நாயக்கர் (கி.பி. 1572-1595) அரசரானார். அவர் காலத்தில் கி.பி. 1592-ஆம் ஆண்டு மதுரையில் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் ஏசு திருச்சபையை (Jesuit Mission) அமைத்தனர். அவரு டைய மகன் இரண்டாம் கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1595-1601) காலத்தில் 72 பாளையக்காரர்கள் இருந்தார்கள். அவருக்குப்பின் மூன்றாம் கிருட்டி ணப்ப நாயக்கர் (கி.பி. 1601-1609)ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் காலத்தில் இராமநாதபுரம் அரசு சேதுபதிகளின் ஆட்சியின் கீழ் கி.பி.1605 முதல் தனி யரசாக இயங்கத் தொடங்கியது. இத்தாலியக் கத் தோலிக்கக் குரு இராபர்ட்-டி-நொபிலி (Robert-de Nobili) கி.பி. 1606-ஆம் ஆண்டு முதல் தமிழ், தெலுங்கு, முதலான மொழிகளைக் கற்று மதுரைப் பகுதியில் கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்புவதில் பெரும் வெற்றி கண்டார். இரண்டாம் வீரப்ப நாயக் கர் (கி.பி. 1609-1623) காலத்தில் விசயநகரப் பேரர சர், தஞ்சாவூர், மைசூர் நாயக்கர்களுடைய தாக்கு தல்களை எதிர்க்கத் தம் தலைநகரை மதுரையிலி ருந்து திருச்சிக்கு மாற்றினார்.

மதுரை நாயக்கர்களுள் திருமலை நாயக்கர் (கி.பி. 1633-1659)மிகவும் புகழ் பெற்றவர் ஆவார். அவர் கி.பி. 1633-இல் மைசூர் அரசோடு போர் தொடுத்தார். தம் தலைநகரத்தை கி.பி. 1634-இல் மதுரைக்கே மாற்றி னார். அவர் கி.பி.1634,35-ஆம் ஆண்டுகளில் திருவாங் கூர் அரசு மீது போர் தொடுத்து வெற்றி பெற்றார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இராமநாதபுரம் சேதுபதிமீது படையெடுத்து வெற்றி பெற்றார். விச யநகரப் பேரரசர் மூன்றாம் சீரங்கனுடனும் திருமலை நாயக்கர் மோதினார். திருமலை நாயக்கர் கி.பி. 1656-1659-ஆம் ஆண்டுகளில் மைசூர் அரசருடனும் போரிட்டார். அப்போர்கள் இரு அரசுகளின் மக்களை யும் பெரிதும் பாதித்தன. அப்போர்களில் இராமநாத புரம் சேதுபதி திருமலைக்கு உதவினார். திருமலை வெற்றி பெற்றார். திருமலை, கிறித்தவர்களிடம் நல் லுறவு வைத்திருந்தார்.

திருமலை நாயக்கரின் பேரன் முதலாம் சொக்க நாதர் (கி.பி. 1659-1682) தலைநகரை கி.பி.1665-இல் திருச்சிக்கு மாற்றினார். அவர் தஞ்சையை வென்றா ரென்றாலும் பின்னர் அங்கு மராட்டிய அரசு அமைக்கப்பட்டது. மைசூர் அரசரின் தாக்குதல் களால் சேலம், கோவை ஆகிய இடங்களை அவர் இழந்தார். இவர் காலத்தில்தான் இராமநாத புரத்தை ஆண்ட கிழவன் சேதுபதியின் உறவினர் இரகுநாதர் புதுக்கோட்டை அரசை நிறுவினார். நான்காம் வீரப்ப நாயக்கர் (கி.பி. 1682-1689) நற் குணங்கள் அமைந்த பண்பாளராக ஆட்சி செய்தார்.

நான்காம் வீரப்பரின் மகன் இரண்டாம் சொக்கநாதருக்குப் பாதுகாவலராக மங்கம்மாள் (கி.பி. 1689 – 1706) சிறப்பாக ஆட்சி செய்தார். அவ ருக்கு உதவியாகத் தலைமை அமைச்சர் நரசப்பையர் சிறப்பாகச் செயற்பட்டார். மங்கம்மாள் அவுரங்க சிபின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார். மைசூரின் படைகள் திருச்சியைத் தாக்கியபோது அவற்றை மங்கம்மாள் விரட்டியடித்தார். திருவாங் கூர் (கி.பி. 1697) தஞ்சாவூர் (கி.பி. 1700) ஆகியவற் றின் மீது மேற்கொண்ட போர்கள் வெற்றி பெற்றன. கிறித்தவர்களைத் துன்புறுத்தாமல் நல்லமுறையில் நடத்தினார். பொதுமக்களின் பொது நலத்திற்காக மங்கம்மாள் பல நற்பணிகளையும் செய்தார். மதுரையின் வரலாற்றில் அரசி மங்கம்மாளுக்குச் சிறப்பான இடம் உள்ளது.

**இரண்டாம் சொக்கநாதர்**: (கி.பி. 1706-1732). இவர் சமயப்பற்று மிக்கவர். எனவே, ஆட்சிப் பொறுப்பு களை அமைச்சர்களிடம் விட்டுவிட்டார். அதனால் அரசில் பல முறைகேடுகள் நடைபெற்றன. ஆட்சி முறை சீர்குலைந்தது. இவருக்குப் பின் இவருடைய மனைவி மீனாட்சி (கி.பி. 1732-1736) ஆட்சி செய் தார். ஆர்க்காட்டு நவாபு சந்தாசாகிபு நம்பிக்கைத் துரோகம் செய்து அவரைச் சிறையிலடைத்தார். மீனாட்சி சிறையில் நஞ்சுண்டு இறந்தார். இவ்வாறு மதுரை நாயக்கர் ஆட்சி முடிவுற்றது.

**மதுரை நாயக்கர்களின் சமயம், கலைத்தொண்டு:** மதுரை நாயக்கர்கள் இந்து சமயத்தைப் பேணிக் காத்தவர். கோயில்களைச் சீரமைத்தனர்; விசுவ நாத நாயக்கர் திருவரங்கம் கோயிலுக்காகப் பெரும் பொருள் செலவு செய்தார். திருச்சியில் கோட் டையைக் கட்டித் தெப்பக்குளம் அமைத்தார். முத லாம் வீரப்ப நாயக்கர் அருப்புக் கோட்டையில் ஒரு கோட்டையைக் கட்டினார். திருச்சிக் கோட்டைச் சுற்றுச்சுவர் எழுப்பினார். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் திருப்பணிகளைச் செய்தார். மூன்றாம் கிருட்டிணப்ப நாயக்கர் பல புதிய கோயில்களைக் கட்டினார். கிருட்டிணாபுரம் என்ற புதிய நகரத்தை அமைத்தார். அவர் சமயப்பொறை கொண்டிருந்தார். திருமலை நாயக்கரின் பெருமையை அனைவரும் அறிவர். அவர் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக் குப் புதிய கலைக் கூடங்களைக் கட்டினார். அவற்றுள் புது மண்டபம் குறிப்பிடத்தக்கதாகும். அங்குள்ள கலையழகு மிக்க சிற்பங்கள், நாயக்கரின் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அவர் கட்டிய திருமலை நாயக்கர் மகால் என்னும் அரண்மனை அவர் நினைவைப் பறைசாற்றி வரு கின்றது. அதேபோல் அரசி மங்கம்மாள் பல கோயில் களைப் புதுப்பித்தார். சத்திரங்கள் பலவற்றைக் கட்டினார். அவற்றுள் மதுரையில் உள்ள மங்கம்மாள் சத்திரம் குறிப்பிடத்தக்கதாகும். பல அறப்பணிகளை யும் பொதுப்பணிகளையும் செய்தார். தமிழக மக்கள் மதுரை நாயக்கர்களின் இந்து சமயப் பணியை யும் கோயில் கலைத் தொண்டையும் என்றும் மறக்க மாட்டார்கள்.

**மதுரை நாயக்கர்களின் இலக்கியப் பணி**: மதுரை நாயக்கர்கள் காலத்தில் வடமொழி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் இலக்கியங்கள் ஆக்கப்பட்டன. திருமலை நாயக்கர் காலத்தில் நீலகண்ட தீட்சிதர் வாழ்ந்தார். அவர் கங்காவதாரம், நளசரித நாடகம், நீலகண்ட விசயம் முதலான வடமொழி இலக்கியங்களை இயற்றினார். அவரைத் திருமலை நாயக்கர் ஆதரித்தார். மேலும், மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், கந்தர் கலிவெண்பா முதலான தமிழ் இலக்கியங்களைப் படைத்த குமரகுருபர அடி களும் திருமலை நாயக்கரால் ஆதரிக்கப்பட்டார். திருமலை நாயக்கரின் படைத்தலைவர் இராமப் பையன் என்பவரின் போர் வெற்றிகளைப் பற்றி இராமப்பையன் அம்மானை என்னும் தமிழ் நூல் கூறுகிறது. தெலுங்கு மொழியில் தேனு மாசாத்யமு, உருக்மணி பரிணயமு, சத்தியபாமா சாந்தவனமு முதலான நூல்களை எழுதிய காமேசுவரக்கவி திரு மலை நாயக்கராலும் முதலாம் சொக்கநாத நாயக்க ராலும் ஆதரிக்கப்பட்டார். திருமலை நாயக்கரால் ஆதரிக்கப்பட்ட நீலகண்ட தீட்சிதர் கங்காவதா ரணம், நளசரித நாடகம் முதலிய வடமொழி நூல் களை எழுதியுள்ளார். இரண்டாம் சொக்கநாத நாயக்கர் காலத்தில் மேலும் பல தெலுங்கு இலக்கியங்கள் எழுதப்பட்டன.

இங்ஙனம் அரசியல் ஏற்றத்திற்கும் இந்து சமயப் பணிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் மதுரை நாயக்கர் கள் போற்றத்தக்க பணியினைச் செய்துள்ளனர்.

நா.ப.

**மதுரைப் படைமங்க மன்னியார்**: சங்கப் புலவர்களுள் ஒருவராகிய இவர் மதுரையைச் சார்ந்தவர். இவர் பாடலொன்று புறநானூற்றில் உள்ளது (351). இவர்பெயரை ஆய்ந்த ஔவை சு.துரைசாமிப் பிள்ளை 'ஒருகால் ஓரிடத்தே நிகழ்ந்த போரின்கண் தானைத் தலைவன் ஒருவன் தான் ஏந்திய படை முழுதும் கெட்ட பின்னரும் பகைவரொடு பொருது வென்றியாற் புகழ் நிறுவினானாக. அவனைப் படைமங்க மன்னினான்' என்று சிறப்பித்துப் பாடிய நலங் கருதிச் சான்றோர் இந்த ஆசிரியரைப் படைமங்க மன்னியார் என்று வழங்கினார் போலும் என்கிறார்.

காஞ்சித் திணையில் மகட்பாற் காஞ்சி என்னும் துறையில் அப்பாடலை இவர் பாடியுள்ளார். தலைவியின் நலத்தை 'வண்கை எயினன் வாகை அன்ன இவள் நலம்' என்கிறார். வளமிக்க கொடைத் தன்மையனாகிய எயினன் என்பானின் வாகை என்னும் ஊரின் அழகும் அமைவும் நலமும் போன்றவள் தலைவி என்று குறித்தாராம்.

இவளை இவள் தந்தை தாராத போது யானையும் தேரும் குதிரையும் படையும் கொண்டு போரிட நிற்கும் வேந்தரை எண்ணி இரங்கும் இப்புலவர், ஊரின் அழிவுக்காக, 'என்னாவது கொல் தானே' என்று அவலச் சுவையை வெளிப்படுத்துகிறார். தலைவியிருக்கும் ஊரின் வளத்தைக் குறிப்பாய்த் 'தெண்ணீர்ப் பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை... காமரு காஞ்சித் துஞ்சும் ஏமஞ்சால் சிறப்பின்இப் பணைநல் ஊரே' என்கிறார். 'தெளிந்த பொய்கையில் மீனை மேய்ந்த நாரைகள், தேன் பொருந்திய மருதமரத்தின் பூ மிக்ககிளைகளில் தங்குவதில் வெறுப்படைந்ததால், அழகிய காஞ்சி மரத்தின்கண் உறங்கும் காப்பமைந்த சிறப்புடைய வயல் வளமிக்கநல்ல ஊர்' என்பது அதன் பொருளாகும். அதனால், இவ்வூர் வளம் இனி என்னாமோ? என்னும் குறிப்பை வெளிப்படுத்துகிறார். இரா.இ.

**மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்**: மதுரை மருதங்கிழார் என்பார் ஒரு சங்கப் புலவர். அவரின் வேறொருவர் என்பது விளங்க, மதுரைப்பள்ளி மருதங்கிழார் என ஒரு புலவர் அழைக்கப்பட்டார். அவர் மகனார் சொகுத்தனார் என்பார். இச்சொகுத்தனார் போலவே, மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் என்பார் ஒருவரும் உளர்.

பள்ளி என்பது இடப் பெயர்; குராப்பள்ளி, சிராப்பள்ளி என்னும் பெயர்களால் இப்பொருள் விளங்கும். இச்சொகுத்தனார் பாடிய பாடல் நற்றிணையில் உள்ளது (352). அது பாலைத்திணை சார்ந்தது. பொருள் வயிற்பிரிந்த தலைமகன் இடைச்சுரத்துக்கண் ஆற்றானாய்த் தன்னுள்ளே சொல்லியது என்னும் துறையது.

வழிப்பறியாளர் கொன்றொழித்த பிணத்தை, கழுகு தின்னாதவாறு அலைக்கழித்து, நரி தின்று வியர்த்து நீர்பருக விரும்பிக் கானல் நீரை நீரென அலைந்து, வெயிலுக்கு ஒதுக்கிடமின்றித் திரியும் எனப்பாலை நிலத்தை இவர் கூறுகிறார். இதனால், 'ஊழால் தரப்பெற்ற தலைவியைப் பசலை தோன்றாதவாறு கூடி மகிழ்ச்சியுற்ற தலைவன், ஈதல் முதலியவற்றுக்கு உரிய பொருள்பெறாமல் பெறுதற் குரிய இடமும் தெரியாமல் வருந்தாநின்றான் என்னும் உள்ளுறைப் பொருளை அறியுமாறு செய்கின்றார். கொலைஞரை 'அன்பில் ஆடவர்' என்றும், சிவந்த செவியை யுடைய கழுகின் ஆணினை 'அழல்போல் செவிய சேவல்' என்றும், 'கானல் நீரைத்தேர்' என்றும் இவர் குறிப்பிடுகிறார். செல்கின்றவரை மயங்கச் செய்யுமாறு பிரிந்து செல்லும் வழிகளை 'அருஞ்சுரக் கவலை', 'அஞ்சுவரு கவலை' என இருவகையாக வழங்குகிறார். இரா.இ.

**மதுரைப்பாலாசிரியர் சேந்தன் கொற்றனார்**: இவர் சங்க காலப் புலவருள் ஒருவர். மதுரையைச் சார்ந்த இப்புலவரின் ஒருபாடல் நற்றிணையில் இடம்பெற்றுள்ளது (நற்.322). இளம்பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் பாலாசிரியர் என அழைக்கப்படுவார் என்பர். சேந்தன் என்னும் பெயர் இவர்தம் தந்தை பெயராய் இருக்கலாம்.

குறிஞ்சித் திணையில் தோழி கூற்றாக அமைந்துள்ள இவரது பாடலில் தலைவன் விரைவில் மணந்து கொள்ளாததால் தலைவி பசலைநோயினால் வருந்துவதும், அன்னை அறியின் வெறியாட்டு எடுப்பார் என்று அஞ்சுவதும் புலப்படுத்தப்படுகின்றன. தலைமகளின் மலைநாட்டில் பெண்புலியின் பசி தீர்க்க ஆண்புலி இரைதேடும் அன்புறு காட்சியைக் காணலாம். தோழி உள்ளுறைப் பொருள்படக் குறிப்பிட்டுத் தலைவனும் உரிமையுடன் தலைவியை மணக்க வேண்டுமென வற்புறுத்துகின்றாள். தி.லீ.

**மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்**: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். அகநானூறு மணிமிடை பவளம் என்னும் தொகுதியில் இவர் பாடல் அமைந்துள்ளது (அகம்.172). திணை குறிஞ்சி. தோழி தலைவனை வரைவு கடாவுகின்றாள். தலைமகன் அன்புடையன் அல்லன் என முன்னரே தெரிந்திருந்தால், தலைமகள் அழகு சிதையப்பசலை நோய்ப்பட்டு வருந்தும் வருத்தம் இன்று தோன்றியிராது எனக் குறிப்பாகத் தலைவனுக்கு உணர்த்தும் தோழி

தலைவனின் மலைநாட்டுக் காட்சி ஒன்றை உள்ளுறைப் பொருட்பட எடுத்துரைக்கின்றாள். கானவன் யானைத் தந்தத்தை முறித்து வந்து தன்குடிசையில் நட்டுப் பலாப்பழ மதுவுடன் ஊன்சோற்றினை உறவுடன் உண்டு களிப்பான். அரியளாகிய தலைவியை எளியளாக நினைந்து களவொழுக்கினைத் தலைவன் நீட்டிக்கின்றான் போலும் என வருந்திப் பேசுவாள் தோழி. தி.லீ.

**மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்**: இவர் சங்கப்புலவர்களுள் ஒருவர். இவர்தம் ஒரே பாடல் அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது (அகம். 92). களிற்றியானை நிரையில் அமைந்துள்ள அப்பாடல் இரவுக்குறி சென்று மீளும்தலைவனைப் பகற்குறி நேர்ந்த முறையில் தோழி வரைவு கடாவுவதாக அமைகிறது. அப்பாடலில் ‘மழை பொழிந்த நடு இரவில் யானையைத் தாக்கும் புலிக்கூட்டம் நிறைந்த மலைச்சாரல்வழி வாராது இருப்பாயாக. இவளும் யானும் நாளைப் பகற்பொழுதில் தினைப்புனம் காக்க வருவோம், அங்குக்காந்தள் மலரும் அருவிச் சாரலில் பாம்பு உமிழ்ந்த திருமணி விளக்கொளியில் தலைவியுடன் இன்புற வருக’ எனக் கூறி, ஆண்டும், காந்தள் மலர் கொய்யவும் அருவியாடவும் வருவர் பலராதலால், பகற்குறியும் அரிதெனக் கூறி வரைவு கடாவுகின்ற திறம் எண்ணி இன்புறத்தக்கது. தி.லீ.

**மதுரைப் பாலாசிரியனார்**: இவர், திருக்குறளைப் பாராட்டி அமைந்த பாக்களடங்கிய ‘திருவள்ளுவமாலை’ என்னும் தொகுப்பினைப் பாடிய புலவர்களுள் ஒருவர். இவர் மதுரையைச் சார்ந்த புலவராவார். வெள்ளி, வியாழன், கதிரவன், திங்கள் ஆகியன உலகிற்படியும் புறத்திருளை மட்டுமே நீக்குவன; ஆனால், வள்ளுவர் செய்த குறள் வெண்பா, உலகமாந்தர் அனைவர்தம் அகத்திருளைப் போக்கும் சிறப்புடையது என்று இவர் திருக்குறளைச் சிறப்பித்துள்ளார். அ.மா.ப.

**மதுரைப் புல்லங்கண்ணனார்**, சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயரிலுள்ள புல்லன் இவர்தம் தந்தை பெயராகலாம்; கண்ணன் என்ற இயற்பெயருக்கு முன் ஒட்டுப் பெயராகவும் அமையலாம். இவரது ஒரேபாடல் அகநானூறு மணிமிடை பவளப் பகுதியில் இடம்பெற்றுள்ளது (அகம்.161). அப்பாடல் பாலைத் திணையில் தலைமகனைச் செலவு விலக்குவதாகத் தோழி கூற்றில் அமைகிறது.

‘மறவர், வழியிடைச் செல்வோரை அம்பினால் மாய்க்க, பருந்து தன் சுற்றத்துடன், கொத்தித் தின்னும் அச்சம் தரும் பாலை வழியில் நீர் பிரிய இருப்பதைத் தலைவி முன்னரே அறிந்து விட்டாளா? இப்போது, தலைவி தன் அழகிய மார்பகம் நனையக் கண்ணீர் உகுத்து வருந்துதலைப் பார். நீர் எண்ணிய படி பிரிதல் என்பது இயலுமா? செலவு தவிர்வாயாக’ எனத் தலைவியின் அன்பின் திறத்தையும் பாலைக் கொடுமையையும் ஒருசேர எடுத்துரைத்துத் தலைவன் செலவினைத் தவிர்க்கும் தோழியின் நாவன்மை பாராட்டற்குரியது. தி.லீ.

**மதுரைப் பூதனிள நாகனார்**, சங்கப் காலப் புலவர். மதுரையைச் சேர்ந்த பூதனென்பார்க்கு மகனாரான இளநாகனார் என்று இவர் பெயருக்கு விளக்கம் காணலாம். இவர் பாடியதாகப் புறநானூற்றில் 276 – ஆம் பாடல் மட்டும் உள்ளது. தும்பைத் திணையுள் தானை நிலைத் துறையில் இவர் அப்பாடலை இயற்றியுள்ளார். ‘நறுமணப் பொருட்களைத் துறந்த நரைவெண் கூந்தலையும் இரமரத்து விதைபோன்ற திரங்கிய கண்கள் பொருந்திய வறுமுலைகளையும் கொண்ட செம்முது பெண்டின் காதலஞ் சிறுவனாகிய மறவன், ஆய்மகள் குடப்பாலிலே விரல் நகத்தால் தெறித்த சில்லுறை (மோர்த் துளி) போலப் பகைப்படை முழுமைக்கும் தானொருவனே நோயாயினன்’ எனச் சுருக்கமும் தெளிவும் அமைய இவர் அத்துறையைப் புனைந்துள்ள அழகும் நுண்மையும் அறியத்தகும். அப்பாடலில் அமைந்த இவரது உவமை நயமும் உணர்ந்தின்புறத் தகுவதொன்றாகும். வ.கு.

**மதுரைப் பூவண்டல் நாகன் வேட்டனார்**, சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயரை இவ்வாறே கொண்டு பூவண்டல் என்பதை ஓர் ஊரென்பார் நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். இவர் பெயரை மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனார் எனக் குறிப்பிடும் பதிப்புகளும் உள. மதுரையைச் சார்ந்த பூவண்டல் என்னும் ஊரினரான நாகன் வேட்டனார் என்று இவரது பெயருக்கு விளக்கம் காணலாம். நாகன் என்பதைத் தந்தை பெயராகக் கொண்டு வேட்டனார் என்பதையே இவர்தம் இயற்பெயராகக் கொள்ளவும் கூடும். நல்வேட்டனார், இளவேட்டனார் என்று ஏனைப் புலவர்க்கும் இப்பெயர் அமைந்துள்ளமை காணலாம். ‘பூவண்டல் என்னும் ஊரினராய இவர், மதுரை சென்று வாழ்ந்தமையால் மதுரைப் பூவண்டல் நாகன் வேட்டனார் என்றழைக்கப் பெற்றார்’ என்பார் புலவர் கா. கோவிந்தன். இப்புலவர் பாடியதாக நற்றிணையில் 317-ஆம் பாடலொன்றே உள்ளது. வ.கு.

**மதுரைப் பெருங்கொல்லனார்**: இவர் சங்க காலப் புலவர். மதுரையைச் சேர்ந்தவர். பெருங்கொல்லன் என்பது இவர்க்குத் கொல்லுத்

தொழிலால் வாய்த்த பெயராகும். இவர் பாடிய தாகக் குறுந்தொகையில் 141-ஆம் பாடல் ஒன்று மட்டும் உள்ளது. இற்செறிக்கப்பட்டு வருந்தும் தலைவி, இரவுக் குறியில் சிறைப்புறமாக நிற்கும் தலைவன் கேட்குமாறு, தோழியிடம் அவன் வரும் வழியின் ஏதத்தைப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டு டனே பொருந்தக் கூறி அவனுக்கு அறிவிக்குமாறு அவளை வேண்டுகின்ற முறையில் அப்பாடலை இவர் பாடியுள்ளார். களிற்றியானையின் கடும்பகை யினால் வருந்திய குறுங்கை இரும்புலி செந்நாய் அகப்படுதற்குரிய செவ்வியை எதிர்பார்த்திருக்கும் ஆரிருள் நடுநாள் என்று தலைவன் வரும் பொழுதை யும் அப்பொழுதின் ஏதத்தையும் இவர் தலைவி கூற் றிலே புனைந்துள்ளமை சிறப்பாக உள்ளது. வ.கு.

**மதுரைப் பெருமருதனார்**, சங்கப் புலவர் களுள் ஒருவர். இவர்தம் ஒரே பாடல் நற்றிணை 241-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அப்பாடல் பாலைத்திணையில் 'தலைமகன் வன்பொறை எதிர ழிந்தது' என்னும் துறையில் உள்ளது.

'பாலைப் பெருவழியில் நீர் வற்றிய மணல் இடங்கள் அமைய, கதிரவன் மறைந்து இருள்சூழ விருக்கும் மாலையொடு இரவு வரும் நேரம். பனி விழுந்து துன்பம் தரும் நடுயாமத்தில் தலைவன் கண் ணீர் பெருக்கி நிற்கும் என்னை நினைந்திருப்பின் புரையேறல், தும்மல் முதலிய குறிகள் எனக்குத் தோன்ற விரைவில் வருவர் என ஆற்றியிருப்பேன். ஆயின், அவை தோன்றாமையின் என்னை நினைந் திரார் போலும்' எனத் தலைவி நொந்து பேசுவது அவலச் சுவையின் சாரமாக அமைகிறது. வலிதிற் பொறுத்தல் வேண்டுமென ஆற்றுவிக்கும் தோழிக் குத் தன் பொறுமை கடந்த நிலையைத் தெளிவுபடுத் தும் தலைவி திறம் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. தி.லீ.

**மதுரைப் பெருமருதிள நாகனார்**: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். மதுரையைச் சார்ந்த இப்புலவர் பெருமருதனுக்குப் புதல்வனார் போலும் என்பர் பி. நாராயணசாமி ஐயர். இவர் பாடியதாக நற்றிணை 251-ஆம் பாடலொன்றே கிடைத்துள்ளது. குறிஞ்சித் திணையில் களவொழுக்கத் தலைவன் சிறைப்புறமாக உள்ளதையறிந்த தோழி தலைவியை இற்செறிப்பறிவுறுத்துவாளாய்த் தினையை நோக்கி, 'யாம் நாடனை விரும்பியதால் நின்னைப் பாதுகாத் தோம்; இப்பொழுது எம்மை இற்செறித்து அன்னை வெறியாட்டயர்ந்ததால் நின்னைக் காப்பாரின்மையின் பறவைகள் நின் கதிரைக் கவருமாதலின், நீ இப் பொழுது விளையாது பிற்காலத்தே விளைக' எனக் கூறுவதாக அப்பாடலுள்ளது. 'அருவியொலிக்குமிடத் துள்ள வாழையின் கனியை மந்தி கவரும் நாடன்' என்றதால் வெறியாட்டெடுத்து முழங்குமிடத்தும் தலைவன் அஞ்சாது வந்து தலைவியின் நலம் துய்ப் பான் என்னும் கருத்தை உள்ளுறையாக இப்பாடல் அறிவிக்கும். த.ரா.

**மதுரைப் பேராலவாயர்**: இவர் பேரால வாயர் எனவும் குறிப்பிடப் பெறுவர். மதுரைச் சொக்கநாதர் பெயராகிய பேராலவாயர் என்னும் இறைவன் பெயர் இவருக்கு இடப்பட்டுள்ளது. இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டும் (51, 361), அகநானூற்றில் இரண்டும் (87, 296), புற நானூற்றில் இரண்டும் (247, 262) ஆக 6 பாடல்கள் கிடைத்துள்ளன. தலைவன் பரத்தையுடன் பொழி லில் துயின்று, பின் பெருநீர் வையையில் புனலாடிய தால் எழுந்த அலருக்குப் பரதவர் மீன்பிடிக்கும் போது அகப்பட்ட சிப்பிகளை நாரரி நறவின் விலை யாகக் கொடுக்கும் பேரிசைக் கொற்கைக்குத் தலை வனாகிய நெடுந்தேர்ச் செழியன் மலை ஒத்த நெடு நகர்க் கூடலின் வெற்றிக் களிப்பால் ஆடியதனா லெழுந்த ஆரவாரத்தை உவமை கூறியுள்ளார் (அகம். 296). சிற்றூரின் இல்லத்தே முற்றத்தில் தொங்கும் தயிர்கடைந்த மத்தைக் கன்று சுவைப் பதையும், கடுங்கண் மறவர் விடியலிற் சென்று மலை வழியில் இசைக்கும் தண்ணுமைஒலி அருஞ்சுரஞ் செல்வோரை அச்சுறுத்துவதையும் (அகம்.87) அழகுறக்குறிப்பிட்டுள்ளார். குறிஞ்சித்திணையில் வழி யின் துன்பங்கண்டு அஞ்சி வேறுபட்ட தலைவி வெறி யாட்டு எடுக்குமிடத்துத் தலைவன் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லிய துறையில் நற்றிணை 51-ஆம் பாடலையும், முல்லைத்திணையில் வாயில்களோடு தோழி உறழ்ந்து சொல்லியது என்னும் துறையில் நற்றிணை 361 - ஆம் பாடலையும் அமைத்துள்ளார். பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு கணவன் மாய்ந்தது கண்டு தீப்பாய்ந்ததை இப்புலவர் நேரிற் கண்டு பாடியுள்ளார். தன் கணவனைச் சிறிது நேரம் பிரிந்தாலும் இன்னுயிர் நடுங்கும் இயல்பின ளாய தேவி, தன்இளமையைப் புறங்கொடுத்துக் காட்டில் காடுகிழாள் கோயிலுக்கு முன், யானை கொணர்ந்த உலர்ந்த விறகால் மூட்டிய தீயில் நீர் வார் கூந்தல் முதுகில் தாழ்ந்து கிடப்பத் துன்பம் மிக்கக்கண்ணினளாய்ச் சுழன்று வந்தாள் என, அத் தேவி தீப்பாயப் போகும் நிலையைச் சித்திரித்துள் ளார் (புறம். 247). ஆநிரை கவர்ந்து மறவருடன் மீண்ட தலைவனை வரவேற்கும் முறை புறம். 262-இல் கூறப்பட்டுள்ளது. த.ரா.

**மதுரைப் பொன்கொல்லன் வெண்ணாக னார்**: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். இவரை

மதுரைக் கொல்லன் வெண்ணாகனாரின் வேறாக மர்ரே பதிப்புக் கருதும். ஆனால், வையாபுரிப் பிள்ளை இருவரையும் ஒருவராகக் கொண்டுள்ளார். மதுரையில் நகை வேலை செய்தமையின் வெண்ணாக னார் எனும் இப்புலவர் மதுரைப் பொன்கொல்லன் வெண்ணாகனார் என அழைக்கப்பெற்றார். வேங் கட விளக்கு மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார் எனக் கொண்டுள்ளது. பின்னத் தூர் அ. நாராயணசாமி ஐயர் இவரைத் திருத்தண் காலைச் சேர்ந்தவராகக் கருதுவர் என்பர். இவர் பாடியதாக உள்ள ஒரே பாடல் அகநானூற்றில் 363 -ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. பாலைத்திணை யில் பிரிவிடை வேறுபட்ட தலைவிக்குத் தோழி கூறியது எனும் துறையில் அப்பாடல் அமைந்துள் ளது. இப்புலவர் தம் தொழிலுக்கேற்பப் பாலைநில வழியில் சூறாவளியலைக்க நெல்லிக்காய் வீழ்ந்து பரந்து கிடப்பதற்குப் பொற்காசு பரவிக் கிடப்ப தனை உவமை கூறியுள்ளார். மேலும், பிரிவில் பொலிவின்றி மெலியும் தலைவிக்கு மாலையிற் குவி யும் மலர் உவமையாக வந்துள்ளது. கொலைத் தொழில் புரியும் ஆறலை கள்வர் பாலை வழியில் காத்திருந்து வழிப்போக்கரின் மார்பில் வேலைப் பாய்ச்சி வீழ்த்த, அப்பிணங்களைத் தின்னச் சேவற் பருந்து தன் இனத்தை அழைக்கும் இன்னாத வெஞ் சுரத்தே தலைவன் சென்றான் என்று கூறிப் பாலை நிலக் கொடுமையை இப்புலவர் உணர்த்துவர். காண்க: மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்.

த.ரா.

**மதுரைப் போத்தனார்:** சங்கப் புலவருள் ஒருவரான இவர் மதுரையைச் சேர்ந்தவராதலின், மதுரைப் பேராலவாயர் என்பது போல, மதுரைப் போத்தனார் என்றழைக்கப் பெற்றார். இவர் பாடிய ஒரே பாடல் அகநானூற்றில் 75-ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. ஆடவர் ஆள்வினையையே பொருளாக மதித்து அருளின்றி வலிமைமிக்க உள் ளத்தோடு மடிந்திராமல் நீரற்ற அருஞ்சுரங்கடந்து பொருளீட்டச் செல்வர். அங்ஙனம் செல்வதால் தாம் விரும்பிய மகளிரொடு முயங்கி இன்பம் பெறாது அதனையிழந்து பின்னர் இளமையோடு கூடிய அழகு மாய்ந்துவிட்டதே என்று வருந்தி இரங்குவதல்லது அவ்வழகை மீட்டுத் தருவார் உல கில் யாருமில்லை எனத் தலைவி பொது நிலையில் பலபுலந்து கூறிப் பெரிதும் வருந்தினாள். அதனைக் கண்ட தலைவன், 'அரிதிற் பெறும் சிறப்பினை யுடைய நின்னைப் பிரியக் கருதுவேனோ; ஆதலின் யான் பிரிவேன் என்று கவலையுறாதே' என்று கூறிப் பொருள்வயிற் பிரிவரென வேறுபட்ட தலைவிக்கு எடுத்துக்கூறித் தெளிவித்துச் செலவழுங்கினான் எனப் பாலைத்திணையில் மதுரைப் போத்தனார் அப்பாடலை அமைத்துள்ளார்.

த.ரா.

**மதுரை மருதங்கிழார் மகனார் இளம் போத்தனார்:** குறுந்தொகை 332-ஆம் பாடலைப் பாடிய இவர் பெயர், மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன் எனப் பாட வேறுபாடு கொண்டுள் ளது. தலைவன் திருமண முயற்சியை மேற்கொள்ளா மல் தலைவியைக் காணவந்த ஒருநாள் அவன் வேலிப் புறத்தில் நிற்கத் தலைவியிடம் 'தலைவனுக்கு நின் துயர் நிலையைக் கூறினால் என்ன?' என்று தோழி கூறும் துறையில் இவர் பாட்டு அமைந்துள்ளது.

பெண்யானையைத் தழுவி, ஆண்யானை குன் றத்தமைந்த சிற்றூரில் இறங்கிச் செல்லும் மன்றங் கள் அமைந்த மலைநாட்டுத் தலைவனுக்கு, வாடைக் காற்றொடு கூடிய மழைத்துளியால் உண்டாகும் துன்பத்தை நீ விரும்பிக் கூறினால் என்ன? என்பது அப்பாடலின் கருத்து. ஆண் யானை, பெண் யானை யைக் காட்டை விட்டு ஊர்க்குச் செல்லும்போதும் தழுவிச் செல்லும் அவன் மலைநாட்டுக் காட்சியை உரைத்தது அவ்வாறு தலைவியை மணந்து தழுவிச் செல்லவேண்டும் என்னும் குறிப்பினதாகும்.

இரா.இ.

**மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத் தனார்:** இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். மதுரை மருதங்கிழார் மக்கள், தந்தையாரைப் போலவே புலமை நலஞ்சிறந்து விளங்கியுள்ளனர். அவர் மக்களுள், இளம்போத்தனார், பெருங்கண்ண னார், சொகுத்தனார் என்பார் மூவர் புலமைச் செல் வர்களாக விளங்கியமை தொகைநூல்களால் அறிய வருகின்றது. சொகுத்தனார் என்னும் பெயருடையார் இருந்தமை, மதுரைப் பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் என்னும் புலவர் பெயரால் விளங் கும். இருவரையும் ஒருவராகக் கருதுவாருமுளர். இச் சொகுத்தனார் பாடிய பாடல் ஒன்று நற்றிணையில் உள்ளது (329).

பாலைத்திணை சார்ந்த அப்பாட்டு, பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற் புறுத்தியது என்னும் துறையினது ஆகும். தலைமகன் வினைவயின் பிரிதலால் மெலிவடைந்த தலைமகள் வருந்துதலும் அதுகண்ட தோழி நெருங்கிக் காதலர் நம்மைப் பிரிந்து சென்றார் எனினும், சென்ற இடத்தே தங்கியுறையார்; வருவேன் என்று அவர் கூறிய கார்காலம் இப்பொழுதுதான் தொடங்குகின் றது; ஆதலால், உடனே வந்து சேருவார்; நீ வருந் தாதே என்று வற்புறுத்திக் கூறுவாள் என்பது இத் துறை விளக்கமாகும்.

தலைவன் அளவுகடந்த நயனுடையான் என்றும், அவன் மறந்தும் குற்றம்புரியான் என்றும் கூறுமுகத்தால், 'வரையா நயவினர் நிரையம் பேணார்' என்கிறார். பிணத்தின் நாற்றத்தைத் தாங்கமாட்டாமல் அதனைத் தின்ன விரும்பிய கழுகு, அப்பாலே சென்று இருக்கும் என்று கூறுவதன் வழியாகத் தலைவியைப் பற்றியுள்ள பசலைநோய், தலைவன் குறித்த நாளிலே தவறாமல் வருதல் உறுதியால் நீங்கிப் போதல் உறுதி என்று உள்ளுறை வைத்துப் பாடியுள்ளார். இரா.இ.

**மதுரை மருதங்கிழார் மகனார் பெருங் கண்ணனார்**: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். மதுரை மருதங்கிழார் மக்களாக இப்பெருங்கண்ணனாரும், மதுரை மருதங்கிழார் மகனார் இளம்போத்தனாரும் மதுரை மருதங்கிழார்மகனார் சொகுத்தனாரும் கருதப்பெறுவர்.

இப்பெருங்கண்ணனார் பாடிய பாடல்களாக நற்றிணையில் ஒன்றும் (388), அகநானூற்றில்இரண்டுமாக (247,364) மூன்று கிடைத்துள்ளன. நற்றிணைப் பாடல் நெய்தல் திணையில் வரைவுநீட ஆற்றாளாகிய தோழிக்குத் தலைமகள் சிறைப்புறமாகச் சொல்லியது என்னும் துறையில் அமைந்ததாகும். இதற்கு மனையுள் வேறுபடாது ஆற்றினாய் என்றாற்குத் தலைமகள் சொல்லியதுமாம் என்னும் துறையும் கூறுவர்.

பெரிய மீன்களைப் பற்றுதற்குப் பரதவர் வலிய கயிற்றில் கட்டப்பட்ட உளியை எறிவர் என்றும், இரவு வேட்டைக்குத் திமிலில் விளக்கேற்றி வைத்துக் கொண்டு செல்வர் என்றும் பரதவர் வழக்கங்களை இப்பாடலில் குறிக்கிறார்.

அகம் 247-ஆம் பாடல் பாலைத்திணையில், தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடுகண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது என்னும் துறையினது. கண்ணீரை 'மண்ணா முத்தம்' (கழுவாத முத்து) என நயமாகக் குறிக்கிறார். கரடி, இருப்பைப் பூவை விரும்பித் தின்னுமென்றும், அதில் வெறுப்படைந்தால் புற்றாஞ்சோற்றைத் தோண்டித் தின்னுமென்றும் கூறுகிறார்.

அகம் 364-ஆம் பாடல் முல்லைத்திணையில், பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது என்னும் துறையினது. மழை பொழிதலால் தவளை செய்யும் ஒலியைக் கழைக்கூத்து ஆடுவோர் பறையொலிக்கு ஒப்பிடுகிறார். தோன்றிப் பூ மலர் தலை விளக்கு ஏற்றிவைத்தாற் போன்றது என்கிறார். மாலைப்பொழுது பிரிந்தவர்க்கு ஆக்கும் துன்பத்தைக் குறிப்பாராய்க் 'கொலை குறித்தன்ன மாலை' என்கிறார். இரா.இ.

**மதுரை மாதெய்வம்**: இது பாண்டிய மன்னர்க்குக் குலதெய்வமாகவும், மதுரை நகரத்தின் காவல் தெய்வமாகவும் விளங்கியது. கண்ணகி காரணமாக அழற்கடவுள் மதுரையைத் தீப்படுத்திய போது அவள் முன்னர்ச் செல்லுதற்கு அஞ்சிப் பின்னிருந்து பேசியது இத்தெய்வம். சிலப்பதிகாரத்தில் அழற்படு காதையிலும் கட்டுரை காதையிலும் இத்தெய்வம் பற்றிய செய்திகள் உள்ளன.

மதுராபதி என்னும் மாபெருந்தெய்வத்தின் தோற்றம் கட்டுரை காதையிற் கூறப்படுமாறு: பிறை தங்கிய சடையுடைய தலையினள், கருங்குவளை மலர் போலும் கண்ணள், ஒளிபொருந்திய முகத்தள், கடைவாய்ப்பல் வெளிப்படத் தோன்றும் பவளநிற வாயள், வாயிடத்தே முத்துக்கோவை போலும் பல் வரிசையுடையவள், இடைப்பகுதி நீல நிறமும் வலப் பகுதி பொன்னிறமும் அமைந்த மேனியள், இடைக் கையில் பொற்றாமரையும் வலக்கையில் கொடுவாளும் ஏந்தியவள், வலக்காலில் வீரக்கழலும் இடக்காலில் சிலம்பும் அணிந்தவள். இவ்வருணனை மாதொரு பாகரின் தோற்றத்தை நினைவூட்டுவது எண்ணத் தக்கதாகும்.

மதுரை மாதெய்வம் கண்ணகியின் பின் நின்று 'நங்கையே நின் துன்பம் அறிந்தேன். யான் மதுராபதி. என் கட்டுரையைக் கேட்பாயாக. எம் அரசனுக்கு ஊழ்வினைவந்த வகையையும், உன் கணவனுக்குத் தீது விளையக் காரணமான பழைய வினையையும் கேட்கக் கூறுவேன். பாண்டியர்குடி செங்கோன்மை தவறாத நற்குடி. அக்குடிப்பிறந்தோன் ஒருவன், கீரந்தை என்ற அந்தணன் வீட்டுக் கதவைத் தட்டியதற்காகத் தன் கை குறைத்துக் கொண்டான். வார்த்திகன் என்ற அந்தணனை அவன் செய்யாத குற்றத்திற்குச் சிறை செய்தபோது இந்நகரில் ஐயை கோயில் கதவு மூடிக்கொண்டது. பின்பு மன்னவன் முறைசெய்தபின் கதவு திறந்தது. அத்தகு நற்குடியினன் ஆன பாண்டியனால் ஆளப் பெறும் இம்மதுரை நகரை ஆடிமாதத் தேய்பிறைப் பகுதியில் கார்த்திகை நாளில் குறையுடைய எட்டாம் நாளான வெள்ளிக்கிழமையன்று தீயுண்ணும் என்றும், அரசுக்கும் கேடு உறுமென்றும் ஓர் உரையுண்டு', எனத் தெரிவித்தது. அதனோடு, கோவலன் முற்பிறவியில் சங்கமன் என்ற வாணிகன் கொலைப்படக் காரணமாயினன் என்றும், அவ்வாணிகன் மனைவி நீலி கணவனை இழந்து புலம்பிப் பதினான்கு நாள் கழிந்த பின்னர் நெடிய மலையேறிக் கணவனைக் கூடினள் என்றும் அதுபோலவே வானோன் உருவில் நீயும்

பதிநான்கு நாள் கழித்துக் கணவனைக் காணப்பெறு குவை என்றும் இத்தெய்வம் உரைத்தது.

கு.வெ.பா.

**மதுரை மாவட்டம்** காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

**மதுரை யமக அந்தாதி**: பாடல்கள் அந்தாதித்து வருமாறு இயற்றுதல் என்பது ஒருவகை இலக்கிய நெறி ஆகும். மனப்பாடம் செய்யும்போது அடுத்து வரும் பாடலை நினைவில் கொள்ளும் பொருட்டு அந்தாதி அமைப்பில் செய்யுட்கள் இயற்றப்பட்டன. அந்தாதி என்னும் பொது இலக்கிய அமைப்பிலிருந்து, காலப் போக்கில் பாவகை, எண்ணிக்கையால் வேறுபட்டனவும் சொல் அலங்காரத்துடன் கூடியனவும் ஆகிய நூல்கள் இயற்றப் பட்டன. அவற்றுள் யமக அந்தாதி என்பதும் ஒன்றாகும். வந்த சொல்லும் தொடரும் மீண்டும் மீண்டும் வந்து அடிதோறும் பொருள் வேறுபட்டு அந்தாதி யாப்பில் வருவதே யமக அந்தாதி ஆகும்.

'மதுரை யமக அந்தாதி' என்னும் பெயரில் பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர், ஆறுமுகம் பிள்ளை, சிறிய சரவணக் கவிராயர், வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார், மு.கோபாலபிள்ளை ஆகிய புலவர்கள் நூல்கள் இயற்றியமை தெரியவருகின்றது.

பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர் மதுரையில் கணக்கர் வேலை புரிந்த சொக்கலிங்கம் பிள்ளையின் மகன் என்பது மதுரை யமக அந்தாதிச் சுவடியின் இறுதிக் குறிப்பால் தெரியவருகின்றது. அவர் இராமநாதபுரம் விசயரகுநாத சேதுபதி காலத்தவர் (கி.பி 1711 – 1725) எனக் கருதுவர். அவர் மதுரையில் கோயில் கொண்டருளிய சொக்கநாதர் மீது இயற்றிய நூலே மதுரை யமக அந்தாதி ஆகும். இந்நூலில் இடம்பெறுவது அடிமுதல் மடக்கு ஆகும். இந்நூல் சென்னை ஓலைச் சுவடி நூலக வெளியீடாக வந்துள்ளது. காப்புச் செய்யுள் நீங்கலாக 101 செய்யுட்களைக் கொண்டது. அதில் மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரன், அங்கயற்கண்ணி அம்மை ஆகியோரின் அருள் திறத்தையும், அவர்களை வழிபட வேண்டியதன் இன்றியமையாமையும்,வழிபடுதலினால் விளையும் நன்மைகளும் தமிழ் நயமும் சிவ பக்தியும் வெளிப்படும் வகையில் கூறப்பட்டுள்ளன.

பாண்டிய நாட்டில் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகம் பிள்ளை இயற்றிய 'சோடசப் பிரபந்தம்' என்னும் தொகுதியுள்ளும் மதுரை யமக அந்தாதி என்ற நூல் இடம் பெறுகின்றது. அன்பு முதிர்ச்சியும், பக்திச் சுவையும் தோன்ற அந்நூலை இயற்றியுள்ளார். இது கலாரத்நாகரம் அச்சுக் கூடத்தில் கி.பி.1899 – இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இவை தவிர, சோழ நாட்டில் அருணாசலக் கவிராயரின் மகனாகப் பிறந்த சிறிய சரவணக் கவிராயர் என்பவராலும், செட்டி நாட்டு அமராவதிப் புதூரில் பிறந்த வயிநாகரம் இராமநாதன் செட்டியார் என்பவராலும் தனித்தனியே மதுரை யமக அந்தாதி இயற்றப் பெற்றமையை அறிய முடிகின்றது.

தா.ஈ.

**துணைநூல்கள்:**

**சந்திரசேகரன்.தி**. (ப.ஆ), அந்தாதிக்கொத்து, தமிழ்நாடு அரசு ஓலைச்சுவடி நூலக வெளியீடு சென்னை, 1956.

**செயராமன், ந.வீ**., சிற்றிலக்கியத் திறனாய்வு, இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1980.

**மதுரை வீரன்**, தமிழகத்தில் ஐயனார், அம்மன்கோயில்களில் சிறு தெய்வமாக இடம் பெற்று வணங்கப்படும் வீரன். மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் மாவீரனாகத் திகழ்ந்த ஒருவன் உயர்சாதிப் பெண்ணை விரும்புகிறான். அவன் மாவீரனாக இருந்தாலும் தாழ்ந்த சாதிக்காரன் என்பதால் தண்டிக்கப்படுகிறான். என்றாலும், பொது மக்கள் அவனைத் தெய்வமாக வழிபடுகின்றனர்.

இந்த வீரன் கதையைப் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. மதுரை வீரனின் வரலாற்றை அறிவதற்கு 'மதுரை வீரன் சாமி கதை' என்னும் நூலும் மக்கள் கூறும் கதைகளும் சான்றுகளாக உள்ளன. காசிராசனுக்கு மகனாகப் பிறந்து சக்கிலி ஒருவனால் வளர்க்கப்பட்டவன் வீரையன் என்று சொல்கிறது மதுரை வீரன் சாமி கதை. அவன் பிறவியிலேயே சக்கிலி என்னும் கருத்தும், பாண்டியர்களுக்குக் கப்பங்கட்டிக் கொண்டிருந்த சிற்றரசன் என்னும் கருத்தும் உள்ளன.

பொம்மி என்னும் அரசகுமாரியைத் தூக்கிச் சென்று மணந்த வீரன். பின்னர் வேறு ஓர் அரண்மனையிலிருந்த வெள்ளையம்மாள் என்ற பெண்ணை விரும்பிய காரணத்தால் தண்டிக்கப்பட்டான். ஆனால், பொம்மியின் தந்தை வீரனைச் சிறைப் பிடித்துத் தண்டித்ததாகக் கூறுவாரும் உளர். மக்கள் அவனைச் சிறு தெய்வமாக வணங்குகின்றனர் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை.



மதுரை வீரன்

மதுரை நாயக்கர்களின் காலத்தில்தான் மதுரை வீரன் வழிபாடு தோன்றியது. அக்காலத்தில் மதுரையில் கொலை, கொள்ளை முதலிய தொல்லை கொடுத்து வந்த கள்ளர்களைக் கருவறுத்து நன்மை செய்த காரணத்தால் மக்கள் அவனைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இவன் திருமலை நாயக்கர் காலத்தில் இருந்திருக்கலாம் என்பது கருதப்படுகின்றது. மதுரை வீரனைக் கருப்புசாமி என்று அழைப்பதும் உண்டு. ஐயனார், அம்மன் கோயில்களில் சிறு தெய்வமாக வணங்கப்படும் வீரனுக்குத் தனிக் கோயில் இல்லை. சில இடங்களில் மதுரை வீரன் பதினெட்டாம்படிக் கருப்பன் என்று அழைக்கப்படுவதாகவும் தெரிகிறது.

தஞ்சை மாவட்டத்தில் பல ஊர்களில் உள்ள ஐயனார் கோயில்களில் வீரனுக்குத் தனிக்கோயில்கள் உள்ளன. தலையில் கொண்டை, கனத்த மீசை, கட்டான உடல் கொண்ட வீரனின் வலக்கையில் வாள், இடக்கையில் கதை, அவனுக்கு முன்பாக ஒரு வேட்டை நாய், எதிரில் ஒன்று அல்லது பல மண் குதிரைகள். இந்த நிலையில் சிலைகள் காட்சி அளிக்கின்றன. சேலம் மாவட்டத்திலுள்ள சில வீரன் கோயில்களில் பெரிய குதிரைகளின் மேலும் குதிரைகளுக்குப் பக்கத்திலும், வாளும், கதையும் வைத்துள்ள பெரிய வீரன் சிலைகளைக் காணமுடியும்.

ந.பி.

**துணை நூல்கள்;**

**சோம. லெ.,** தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, 1975.

**பரந்தாமனார், அ.கி.,** மதுரை நாயக்கர் வரலாறு, பாரிநிலையம், சென்னை, 1960.

மதுரை வேளாசான்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். மதுரையில் பார்ப்பனரிடையே வேள்வித் தொழிற்கு ஆசானாக இருந்ததனால் மதுரை வேளாசான் எனப்பெயர் பெற்றார் என்பர் ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை. இவர் பாடியதாகக் கிடைத்த ஒரே பாடல் புறநானூற்றில் 305 –ஆம் பாடல். அது வாகைத்திணையில் பார்ப்பன வாகைத் துறையில் பாடப் பட்டுள்ளது. ஒரு வேந்தனிடமிருந்து மற்றொரு வேந்தன் பால் அந்தணன் தூது செல்லுதற்குரியன் என்பது இவர் பாடலால் தெரிய வருகின்றது என்பர் உ.வே. சாமிநாதையர். இவர் பாடலை அந்தணன் தூது சென்றதற்கு மேற்கோளாக இளம்பூரணரும் (தொல். அகத்திணை. நூற்பா 28) தூதருரை கேட்ட அகத்துழிஞையோன் திறம் கண்டோர் கூறியதற்கு மேற்கோளாக நச்சினார்க்கினியரும் (தொல். புறத்திணை. நூற்பா 12) காட்டியுள்ளனர்.

'பசலைக் கொடி போன்ற வாடிய மருங்குலையுடைய நடைமெலிந்த பார்ப்பான் இரவிலே சென்று வாயிற் காவலனிடம் சொல்லி விடாது நேரே புகுந்து அரசனிடம் சொல்லிய சொற்கள் சிலவே. அதன் பயனாக ஏணியும் சீப்பும் மாற்றி மாண்வினை யானையும் அணிகளைந்தன'. போர் தொடங்காமல், அமைதி மேற்கொள்ளப்பட்டது என்பதுவே இப்புலவர் பாடிய பாடலின் கருத்தாகும். இப்பாடலின் துறை பார்ப்பன வாகை என்றுள்ளது. அது, பார்ப்பனமுல்லை என்றிருப்பது பொருத்தமாகும் என்பர் சிலர்.

இரா. ச.

மதுரை வேளாதத்தர்: மதுரைப் புலவராகிய இவர் சங்க காலத்தவர். தத்தர் என்னும் பெயர் சங்ககாலந் தொட்டு இடைக்காலத்தும் பிற்காலத்தும் வழக்கில் இருந்து வருகின்றது. கணக்காயன் தத்தனார் என்பார் சங்கப் புலவருள் ஒருவர் (குறுந். 304). பெரியபுராணத்தில் மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் 'தத்தன்' என்பான் செய்தி இடம்பெற்றுள்ளது.

இவர் பாடிய பாடல் குறுந்தொகையில் அமைந்துள்ளது (315). தலைவன் திருமணத்தைச் சிறிது நாள் தள்ளிவைத்து, அத்திருமணத்திற்கும், அதன்

பின்னர் நடத்தும் அறவாழ்வுக்கும் வேண்டும் பணம் தேடுவதற்காகப் பிரிய நினைத்தான். அப்பிரிவை நீ பொறுத்துக்கொண்டு இருப்பாயோ என்று தோழி தலைவியினிடம் கேட்டாள். அதற்குத் தலைவி 'தலைவன் விருப்பப்படியே நடக்கும் தன்மையுடையேன் ஆதலால் பொறுத்துக் கொள்வேன்' என்று கூறுந் துறையில் அப்பாடலை இயற்றியுள்ளார்.

ஞாயிறு எத்திக்கில் இருக்கிறதோ அத்திக்கை நோக்கியே நெருஞ்சி மலர் இருத்தல் இயற்கை. அதே போல் தலைவனை நோக்கியே தலைவியின் வாழ்வு அமையும் என்று கூறும் உவமை நயமிக்கதாக உள்ளது. இரா.இ.

**மதுவிலக்கு:** உலகில் மது அருந்தும் பழக்கம் மனிதனிடம் வெகு காலமாகவே இருந்துவருகிறது. இப்பழக்கம் எப்போது தோன்றியது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. இருப்பினும், இந்நாட்டில் இத் தீய பழக்கத்தை இந்து சமுதாயமும் இந்து சமயக் கோட்பாடுகளும் வன்மையாகக் கண்டித்து வந்துள்ளன. ஆனால், மதுவிலக்கு அரசியல் சட்டப்படி பண்டைய சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை. மதுவிலக்கும் கி.பி. 19 - ஆம் நூற்றாண்டில் தான் முறையாகக் கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் ஆங்கிலேயரின் வரவிற்குப்பின் மது அருந்தும் பழக்கத்திற்கு ஒரு சமுதாயத் தகுதி வழங்கப்பட்டது. மக்கள் பெருமளவில் இப் பழக்கத்திற்கு அடிமையாயினர். அதற்குப் பிறகுதான் மக்கள் மதுவிலக்கின் இன்றியமையாமையை உணர்ந்தனர். ஆனால், 1905 - ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்திய அரசாங்கத்தின் வரிக்கொள்கை (Excise Policy) மது அருந்துபவர்களின் செயல்களில் தலையிடுவதில்லை என்றும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்வது இன்றியமையாதது என்றும் உணர்த்தியது. அதேசமயம் குடிப் பழக்கம் இல்லாதவர்களிடையே குடிக்கவேண்டும் என்ற ஆசையைத் தூண்டிவிடுவதைக் குறைப்பதும், அளவுக்கு மிகுதியாகக் குடிப்பவர்களின் ஆர்வத்தைக் குறைப்பதும்தான் கொள்கையின் நோக்கம் எனக் கூறியது.

இக் கொள்கைதான் இந்தியாவில் 32 ஆண்டுகள் (1937 வரை) அமலிலிருந்தது. சில மாகாணங்களில் 1938-ஆம் ஆண்டுக்குப் பிறகு மதுவிலக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த இடைப்பட்ட 32-ஆண்டுகளில் பல சமுதாய, சமய, அரசியல் அமைப்புகள் இந்திய அரசின் வரிக்கொள்கையினால் குடிப்பழக்கம் குறையவில்லை எனச் சுட்டிக் காட்டி வந்தன. இறுதியாக 1920 - ஆம் ஆண்டு இந்தியத் தேசிய காங்கிரசு நாட்டிலுள்ள அனைத்து மதுக்கடைகளையும், போதை மருந்துக் கடைகளையும் ஒழிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. அதன் பிறகுதான் இவ்வேண்டுகோள் மக்களிடையே சிறப்பிடம் பெற்றது.

மாண்ட்போர்டு சீர்திருத்தங்கள் (Montford Reforms) 1921 - ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, மாகாணங்கள் பல தனிப்பட்ட சட்டங்களை இயற்றிக்கொள்ள அனுமதிக்கப்பட்டன. அச்சமயம் அந்தந்தப் பகுதிகளின் சூழ்நிலைக்கேற்பப் போதை ஏற்படுத்தக்கூடிய மதுவகைகளின் உற்பத்தி அல்லது விற்பனைகளைக் கட்டுப்படுத்திச் சட்டம் இயற்றிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், அத்தகைய சட்டங்களினால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மது அருந்துவது இல்லாமல் போனாலும், அதன் அருகினிலுள்ள பகுதியில் மது அருந்தும் பழக்கம் மிகுதியாக இருந்தது. மேலும், கள்ளச் சாராயம் காய்ச்சுதலினாலும் கடத்துவதினாலும் மதுவிலக்குச் சட்டங்கள் தோல்வி அடைந்தன.

காந்தியடிகள் 1930 - ஆம் ஆண்டு அரசப் பேராளர் (Viceroy) அவர்களிடம் கொடுத்த 11 வேண்டுதல்களில் மதுவிலக்கு மிகமுக்கியமானதாக வலியுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 1937 - ஆம் ஆண்டு மாகாணத் தன்னாட்சி(Provincial Autonomy) வழங்கப்பட்டதும் காங்கிரசு அமைச்சரவைகள் ஆட்சிப்பொறுப்பை ஏற்று மதுவிலக்கை அமலுக்குக் கொண்டுவர உண்மையான முயற்சிகள் எடுத்தன. அதன்மூலம் 1937 முதல் 1939 - க்குள் சென்னை, மத்திய பிரதேசம், பீகார், ஒரிசா முதலிய மாகாணங்களில் மதுவிலக்குச் சட்டங்கள் இயற்றப்பட்டன. சென்னை மாநிலத்தில்தான் இச்சட்டம் முதன் முதலாக அமலாக்கப்பட்டது. முதன்முதலில் சேலம் மாவட்டத்தில் 1937 அக்டோபர் மாதமும் ஏனைய பகுதிகளில் அதன்பிறகும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது.

பிறகு இந்தச் செயல்திட்டம் 1946-ஆம் ஆண்டு பல மாநிலங்களில் மீண்டும் அமல்படுத்தப்பட்டது. சென்னை, ஆந்திரம், பம்பாய் ஆகிய மூன்று மாநிலங்களில் மதுவிலக்கு முழுவதுமாக 1955 - இல் அமல்படுத்தப்பட்டது. அசாம், கேரளம், மத்தியபிரதேசம், பஞ்சாபு, உத்தரப்பிரதேசம், மைசூர், இமாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சில குறிப்பிட்ட பகுதிகளில் (Partial) மட்டும் மதுவிலக்கு அமல் செய்யப்பட்டது. ஏனைய மாநிலங்களில் மதுவிலக்கு அமல் செய்யப்படவில்லை.

இந்திய அரசின் திட்டக்குழு (Planning Commission) 1954 - இல் 'மதுவிலக்கு விசாரணைக் குழு ஒன்றை 1954 - 55 - இல் நிறுவியது. அக்குழுவின் தலைவராக நாராயணன் என்பவர் நியமிக்கப்

பட்டார். மதுவிலக்குக் கொள்கையை அமல் படுத்துவதில் தொடர்புடைய மாநில அரசுகளுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் நிருவாகம், பொருளாதாரம் போன்ற துறைகளில் ஏற்பட்ட இடையூறுகளையும் ஆராய்ந்து மதுவிலக்கை நாடு முழுவதும் அமல்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பரிந்துரை செய்ய அக்குழு அமைக்கப்பட்டது.

அக்குழு அதன் அறிக்கையில் மதுவிலக்கு அமல் படுத்தப்பட்டதால் ஏற்பட்ட நன்மைகளையும், மது விலக்கை நிறைவேற்றுவதிலுள்ள சிக்கல்களையும் குறித்துச் சில பரிந்துரைகளை வழங்கியது. மது விலக்கை நிறைவேற்றாத மாநிலங்கள், சிறிதளவு (Partial Prohibition) நிறைவேற்றிய மாநிலங்கள், முழு அளவில் நிறைவேற்றிய மாநிலங்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரித்து அதற்குத் தகுந்தாற்போல் சில பரிந்துரைகளை வழங்கியது.

மதுவிலக்கை அமல்படுத்தாத மாநிலங்களில் விடுதிகளிலும் கடைகளிலும், விழாக்களிலும், பொழுது போக்குமிடங்களிலும் மது அருந்துவதைத் தடை செய்யவேண்டுமென்று குழு பரிந்துரை செய்தது. மேலும், மதுவிளம்பரங்களையும், மதுக்கடைகளின் எண்ணிக்கைகளையும் குறைக்கவேண்டும்; மதுக்கடைகளின் விடுப்பு நாள்களை அதிகப்படுத்த வேண்டும்; மதுவின் ஆற்றலைக் குறைத்து, மதுக்கடைகளைத் தொழிற்சாலைகளின் அருகிலும் குடியிருப்புகளின் அருகிலும் திறக்காமல் இருக்கவேண்டும் என்று பரிந்துரை செய்தது.

மதுவிலக்கைச் சிறிதளவு நிறைவேற்றியுள்ள மாநிலங்கள் அதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முழு அளவில் அமல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது. அவ்வாறு முழுஅளவில் மதுவிலக்கு நிறைவேறியுள்ள மாநிலங்களிலுள்ள வெளிநாட்டவர்கள் மதுவை அவர்கள் வீட்டில் மட்டும்தான் அருந்த வேண்டுமேயன்றிப் பொது இடங்களில் அருந்தக் கூடாது எனத்தடை விதிக்கவேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

இதனையடுத்து 1963-ஆம் ஆண்டு சனவரி மாதம் சர் தெக் சந்த்து (Sir Justice Tek Chand) என்ற நீதிபதியின் தலைமையின்கீழ் மதுவிலக்கைப் பற்றி அறிய ஒரு குழு அமைக்கப்பட்டது. அக் குழு மதுவிலக்குச் சட்டத்தையும் கள்ளச்சாராயம் மதுவிலக்குச் செயல்திட்டத்தினால் ஏற்படக்கூடிய வருமானம் ஆகியவற்றையும் ஆராய்ந்து ஓர் அறிக்கையைக் கொடுத்தது.

அக் குழுவின் பரிந்துரைகளைத் திட்டக்குழு ஏற்றுக்கொண்டு மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அவற்றைநான்கு நிலைகளில் நிறைவேற்ற ஒரு செயல் திட்டம் வகுத்தது. அதன்படி, முதல்நிலையில் மதுவின் திறனைக் குறைக்கமுடிவெடுக்கப்பட்டது. இரண்டாம் நிலையில் மதுவின் திறனை மேலும் குறைக்கவும் விடுதிகளுக்கும் கடைகளுக்கும் வழங்கப்பட்ட உரிமைகளைத் (Licences) திரும்பப் பெறவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால், 40 வயதிற்கு மேற்பட்ட மது வெறியர்களுக்கு மது அருந்த அனுமதி வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. மூன்றாம் நிலையில் மதுவின் திறனை மேலும் குறைத்து அதன் திறனை ஐந்து விழுக்காடாக வைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இந்த மூன்றாம் நிலையை 1975-76-ஆம் ஆண்டுகளுக்குள்ளாக அடையப் பரிந்துரை செய்யப்பட்டது. நான்காம் நிலையில் அனைத்து மாநிலங்களும் மதுவிலக்கை அமல்படுத்த முன்வரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

திட்டக்குழுவின் செயல் திட்டம் முழுமையாக வெற்றியடையவில்லை. மதுவிலக்கினால் ஏற்படக் கூடிய வருமான இழப்பை ஏற்றுக்கொள்ளவியலாத மாநிலங்கள் மதுவிலக்கை நிறைவேற்றவில்லை. தமிழ்நாட்டில் மதுவிலக்கு ஒரு நிரந்தரமற்ற நிலையில் பின்பற்றப்படுகிறது. இங்கு, 1937-இல் இயற்றப்பட்ட 'மதுவிலக்குச் சட்டம்' பலமுறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அச்சட்டம் மது வகைகளை உற்பத்தி செய்பவர்கள், வைத்திருப்பவர்கள், கடத்துபவர்கள், அருந்துபவர்கள் எனத் தனித்தனியாகப் பிரித்து வெவ்வேறு வகையான தண்டனைகளை வழங்க வழிசெய்துள்ளது. கோ.இரா.

**மந்திரம்**; 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திரம் என்ப' என்பார் தொல்காப்பியர். 'மந்திரமாவது நீறு' என்றும், 'மந்திரம் நான்மறை ஆகி' என்றும் கூறுவார் திருஞானசம்பந்தர். 'மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி' என்பார் அப்பரடிகள். 'மனசா திராயதே இதி மந்திரகா' என்பது வடமொழி. இது, மனத்தால் எண்ணுபவர்களைக் காப்பாற்றுவது என்றும், மனனஞ் செய்பவர்களைக் காப்பது என்றும் பொருள்படும்.

உதடும் நாக்கும் அசையாமல் மனத்தால் நினைப்பது மந்திரம். தக்க குருவிடம் பெற்ற மந்திரத்தினை நியமத்துடன் இருந்து அவ்வாறு எண்ணி மனனஞ்செய்யின் எல்லாச் சித்திகளும் உண்டாகும். குருவிடம் பெறும் மந்திரம் மகாமந்திரம் அல்லது மூலமந்திரம் எனப்படும். அது பலவகைப்படும். அவை 'சி' ஆகிய ஓரெழுத்து மந்திரம், 'ஓம் சரவணபவ', ஆகிய ஆறெழுத்து மந்திரம், 'நமசிவய,' 'சிவயநம' ஆகிய ஐந்தெழுத்து மந்திரம், 'ஓம் நமோநாராயணாய' என்னும் எட்டெழுத்து மந்திரம் முதலியன

ஆகும். சமணம் முதலிய பிறசமயங்களிலும் இத்தகைய மந்திரங்கள் உள்ளன.

குரு மூலம் பெற்ற மூல மந்திரங்களை ஓதுமுன் சில அனுட்டான மந்திரங்கள் ஓதுதல் வேண்டும். அவை, 'ஓம்நிவிர்த்தி கலாயை நம' எனத் தொடங்கும் கலாமந்திரங்கள் ஐந்தும், 'ஓம் ஈசான மூர்த்தியே நம' எனத் தொடங்கும் பிரம்ம மந்திரங்கள் ஐந்தும், 'ஓம் இருதயாய நம' எனத் தொடங்கும் அங்க மந்திரங்கள் ஆறும் ஆகும். இவை பதினாறும் சேர்ந்து 'சம்கிதா மந்திரம்' என்று பேசப்படும். சிவகாயத்திரி, விட்டுணு காயத்திரி முதலான காயத்திரி மந்திரங்களும் உள்ளன. மாலா மந்திரங்கள் ஒருவகை. கணேசர், சுப்பிரமணியர், சக்தி, துர்க்கை, நீலகண்டர், தட்சிணாமூர்த்தி, சரபர், வீரபத்திரர், திரிபுரசுந்தரி, பிரமன், நாராயணன், சூரியன், இலக்குமி, சாரதாம்பாள், சேத்திரபாலர் முதலானவர்களை வணங்கத் தனித்தனியாக மந்திரங்கள் உள்ளன. மரணபயம் நீங்க 'மிருத்யுஞ்சய' மந்திரம் ஓதுவதுண்டு. நல்வாழ்வு வாழ அன்னபூரணேசுவரி மந்திரம் உச்சரிக்கப்படும்.

'ஏழுகோடி மந்திரங்கள்' என்பர் ஆன்றோர். இத்தொடரை, நமகா முதலான ஏழு முடிவுகளைக் கொண்ட மந்திரம் எனவும் விளக்குவர். மூல மந்திரங்களின் இறுதியில், அதாவது கோடியில் உச்சரிப்பதால் அதனை ஏழு கோடிமந்திரம் என்பர். மற்றொரு சாரார் ஏழு கோடி எண்ணிக்கையுடையது என்பர்.

'காம்' பீசம் கணேசருக்குரியது. எனவே, கணேச மந்திரம் உச்சரிக்கும்போது, 'ஓம் காம் (Gaam) கணேசாய நம' என்று உச்சரித்தல் வேண்டும்; சிந்தித்தல் வேண்டும். மற்றவையும் இவ்வாறே ஆகும். இவை முதலானவை சாந்த மந்திரங்கள் எனப்படும். தேவதைகளை அழைத்து, தம்பனம், உச்சாடனம், மாரணம் முதலானவற்றைச் செய்வது 'உக்கிர மந்திரங்கள்' எனப்படும். இம்மந்திரங்களை முறைப்படி உருவேற்றல் வேண்டும். முறையற்ற உருவேற்றல், தவறான உருவேற்றல் முதலியன ஆயுளைக் கெடுத்தல் அதாவது தன்னையே கொல்லுதல், வியாதியைத் தருதல், செல்வத்தைத் தேய்த்தல், மனைவி மக்களை அழித்தல் முதலான கேடுகளை விளைவிக்கும் என்பர்.

விடம் நீக்குவதற்கும், பயத்தினால் ஏற்பட்ட விளைவுகளைப் போக்குவதற்கும், சுரம் நீக்குவதற்கும், இவை போன்ற பிறவற்றிற்கும் மந்திரங்கள் பயன்படுவதுண்டு. அவற்றைச் செய்பவர்கள் மந்திரவாதிகள் எனப்படுவர்.

மந்திரங்கள் 108, 1008 முதலான எண்ணிக்கையில் நினைக்கப் படுவதுண்டு. அந்த எண்ணிக்கைக்குப் பலவகைப் பொருட்கள் பயன்படுவதுண்டு. அவ்வவற்றால் எண்ணும்போது தனித்தனிப் பலன்களும் உள்ளன. நாப்புடை பெயராது, கைவிரல்களினாலே எண்ணிக்கொண்டு மூல மந்திரங்களைச் செபித்தால் ஒருபங்கு பலன் உண்டெனில், அதனையே விரல்களின் கணுக்களிலுள்ள இரேகைகளினால் எண்ணினால் எட்டு மடங்கு பலனுண்டாகும். சங்கு மணிகளினால் எண்ணினால் நூற்றெட்டு மடங்கும், தாமரை மணிகளினால் எண்ணினால் ஆயிரம் மடங்கும், படிக மணிகளால் எண்ணினால் முப்பதினாயிரம் மடங்கும், தருப்பைப்புல் முடிச்சுகளினால் எண்ணினால் கோடியே கோடி மடங்கும், உருத்திராக்க மணிகளினால்எண்ணினால் எல்லையே இல்லாத அளவும் பலன் உண்டு என்று கூறுகின்றனர். எனவே, எண்ணிக்கையில் மிகுந்த பலனை அடைய உருத்திராக்கமணி மாலையைக் கொண்டு எண்ணி (நினைத்து) நடுமணி எனும் நாயக மணி வரும்போது நிறுத்தி 108 எண்ணிக்கையினை முடிப்பர்.

மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருத்தலால், 'மந்திரமே கடவுள்' எனச் சாதிப்பது 'மந்திரவாதி மதம்'ஆகும். 'புத்தம் சரணம் கச்சாமி', 'சங்கம் சரணம் கச்சாமி', 'தர்மம் சரணம் கச்சாமி' என்பன பௌத்த சமயத்தவர்க்கு மந்திரங்களாயமைந்துள்ளன. வீ.சொ.

**மந்திரம்**[2] என்பது அறிவியல் சிந்தனை தோன்றுவதற்கு முன்னர் ஏற்பட்ட ஒரு கலையாகும். இப்பழங்கால நம்பிக்கையின்படி, இயல்பிறந்த ஆற்றல்களை (Supernatural Powers) வயப்படுத்தி அவற்றைச் சூத்திரங்கள் வாயிலாக உச்சரிப்பதாலும் அவற்றைப் பயன்படுத்துபவரின் சொந்த சக்தியினாலும் அவர் நினைக்கும் செயலை நிறைவேற்ற இயலுகிறது. நாகரிகமடைந்த, அறிவியலில் வளர்ந்த சமூகங்களிலும் மந்திரம் (Magic) மறைந்து விடவில்லை. நடைமுறை வாழ்வில் மந்திரம் பல்வேறு வகையான நன்மைக்கும் தீமைக்கும் பயன்படுத்தப் படுகிறது.

உண்மையில் ஆதிமனிதன் தன்னுடைய உடல் உழைப்பு மூலம் மட்டுமே அவன் தேவைகளை ஈட்டிக் கொண்டான். அத் தொடக்கக் காலங்களில் இயற்கையின் சீற்றங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் போதிய அறிவுவளர்ச்சியினை அவன் பெற்றிருக்கவில்லை. அத்தகைய சூழ்நிலையில், தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையையும் மீறிய சக்திகள் இருக்கின்றன என நம்பிய அவன் அவற்றின் துணையுடன் இயற்கையின் பலனைப் பெற முயன்றான்; அழிவு ஏற்படுத்தும் செயல்களைக் கட்டுப்படுத்த எண்ணினான். அந்நம்பிக்கையின் வெளிப்பாடாக மந்திரம் ஏற்பட்டது. இது உண்மையில் அவர்களிட

மிருந்த தொழில் நுட்பப் பற்றாக் குறையினைப் போக்கத் தோன்றிய ஒரு கற்பனைத் தொழில்நுட்ப மாகும்.

மனிதனை இயக்குவிக்கும் அடிப்படைக் கூறு களுள் நம்பிக்கையும் ஒன்று. ஆவியுலக நம்பிக்கையும் (Animism), தெய்விக ஆற்றலில் நம்பிக்கையும் இயற்கையைக் கடந்த சக்திகளில் மனிதன் கொண்டி ருக்கும் நம்பிக்கையைத் தெளிவுபடுத்துகின்றன. மனி தனின் கட்டுப்பாட்டுக்கு உட்படாத அச்சக்திகளிடம் தொடர்பு கொள்ள வழிபாடு, மந்திரம் ஆகிய இரண்டு முதன்மையான வழிமுறைகளை மனிதன் கையாளத் தொடங்கினான். இவற்றில் இரண்டாம் மந்திரத்தை மனிதன் சில இடங்களில், சில சூழல் களில், இயற்கைக்கும் தனக்கும் ஆட்படாத ஒரு சக்தி யைக் கட்டுப்படுத்த அல்லது ஆதிக்கம் செலுத்தப் பயன்படுத்தும் வழிமுறையாகக் கொண்டான். இங்கு மந்திரவாதி, செயல் தொடர்பு கொள்ளப்போகும் சக்திக்கு மேலான ஒரு சக்தியைப் பெற முயன்றான். அச்சக்தி மூலம் தான் எண்ணியதைச் செய்ய இய லும் என்ற நம்பிக்கையைப் பெற்றான். அவனுடைய சூத்திரமும் செய்கையும் முறையாய் இருப்பின், அவன் செயல் தொடர்பு கொள்ளப் போகும் பொருளின் ஆற்றல் அவனுக்கு அடங்கிப் போவது தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்படுகிறது.

மந்திரத்தின் தோற்றம் குறித்து ஆராய்வதில், கி.பி.19-ஆம் நூற்றாண்டு மானிடவியல் சிந்தனை யாளர்களான தைலர் (E.B. Tylor), மெக்லீனன் (Maclennan), இசுபென்சர் (Spencer), பிரேசர் (Frazer) ஆகியோர் ஈடுபாடு கொண்டனர். ஆதி கால மனிதன் தன்னுடைய கவனிப்பு (Observation) செயற்காரணம் (Reasoning) ஆகியவற்றால் எவ் வாறு மந்திர ஆற்றலை வளர்த்துக் கொண்டான் என்பதை ஆராய்வதில் தொடங்கிய அவர்களின் ஆர்வம் படிப்படியாக வளர்ந்து பல உண்மைகளைக் காண உதவியது. குறிப்பாக, பிரேசர், மந்திரம் குறித்துப் படிமலர்ச்சி முறையிலான ஆய்வுகளின் மூலம் சேகரித்த தகவல்களின் அடிப்படையில், பொது வாய் மந்திரம் இரண்டு கொள்கைகளை அடிப்படை யாகக் கொண்டுள்ளது என்கிறார்.

**பிரேசர் பின்வருமாறு மந்திரத்தின் அமைப்பினை விவ ரிக்கிறார்**

ஒத்துணர்வு மந்திரம் (Sympathetic Magic)
(ஒத்துணர்வு விதி—Law of Sympathy)

| ஒத்த மந்திரம் (Homoeopathic Magic) | தொத்து மந்திரம் (Contagious Magic) |
|---|---|
| (ஒத்த விதி—Law of Similarity) | (தொடர்பு விதி (Law of Contact) |

1. ஒத்தது ஒத்ததை உருவாக்குகிறது (Like produces like)

2. ஒருமுறை தொடர்பு கொண்டிருந்தது தொடர்ந்து தொடர்பு கொண்டிருக்கும் (Once in contact always in contact).

பிரேசர், முதல் கோட்பாட்டின் அடிப்படையில் ஒத்த மந்திரமும், இரண்டாம் கோட்பாட்டின் அடிப் படையில் தொத்து மந்திரமும் இயங்குகின்றன என் றார்.

ஒத்த மந்திரத்தின்படி ஏற்படப் போகும் விளை வும், அதற்காகச் செய்யப்படுகிற செயலும் ஒத்திருக் கும். இரண்டாவதான தொத்து மந்திரத்தின்படி ஏற்கனவே ஒரு மனிதன் அல்லது ஓர் உயிரியுடன் ஒட்டியிருந்த பொருளை எவ்வளவுதான் வேறாகப் பிரித்தாலும் அவை என்றும் ஒன்றாகவே இருக்கும். எனவே, பிரிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு மந்திரம் செய்வதின் மூலம் அது ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்தவரைப் பாதிக்கும்.

பிரேசரின் ஆய்வுக்குப் பிறகு தொன்மைச் சமயம் குறித்த ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த பல மானிடவிய லார் மந்திரம் குறித்து ஆராய்வதிலும் ஈடுபட்டனர். எடுத்துக்காட்டாக, தர்கைம் (Durkheim) என்னும் சமூகவியலாளர் சமயத்தினையும் மந்திரத்தினையும் வேறுபடுத்திக் காட்டுவதில் ஆர்வம் கொண்டார். மாலினோசுகி (Malinowski), 'மந்திரம் அறிவியல் சமயம்' என்னும்தம் கட்டுரையில் மந்திரத்தின் முறை களைப்பிரேசர் முறைப்படி வேறுபடுத்திக் காட்டினா லும்,அது படிமலர்ச்சிக் கொள்கைச் சாயலில் அமைய வில்லை. அவர்தம் கூற்றுப்படி மந்திரம் என்பது கவலையுடனும் குழப்பத்துடனும் தொடர்புடையது. அன்றாட நடைமுறை வாழ்வில் மந்திரம் பொது வாகக் காணப்படுவதில்லை. மாறாக உறுதியற்ற நிலை, இடர்களை எதிர்நோக்குகிற நிலை ஆகியவற் றின்போது மக்கள் மந்திரத்தினை நாடுகின்றனர். மாலினோசுகி தம்முடைய கருத்தினைப் பல சான்று களுடன் விளக்கினார்.

மந்திரம் சில கூறுகளில் அறிவியலை ஒத்திருக் கிறது. ஒரு மந்திரவாதி அவனுடைய சூத்திரத்தி னைச் செயற்படுத்துவதன்மூலம், ஒரு விளைவினை ஏற்படுத்த முடியும் என்கிற நம்பிக்கையில் செய் கிறான். இது ஓர் அறிவியல் அறிஞரின் செயலுக்கு இணையானதாக உள்ளது. ஒரு மந்திரவாதியின் செய்முறையும், கற்பனைச் சூத்திரங்களும் அறிவியல் அறிஞரின் செய்கைகளிலிருந்து பல வகையில் வேறு

பட்டனவாயிருப்பினும் சில வகையில் ஒன்றுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**மந்திரத்தின் வகைகள்**: பொருளாதாரப் பலனே தொடக்கக் கால மந்திரங்களின் நோக்கமாயிருந்தது. விலங்கு வேட்டையிலும் மீன்பிடித்தலிலும் நல்ல பலன் கிடைக்கவும், பயிர்கள் செழித்து வளரவும், கால்நடைகள் பெருகவும் மந்திரம் பயன்படுத்தப் பட்டது. அவற்றோடு இயற்கைகளின் சீற்றங்களிலிருந்து தப்பவும் தொடக்கக் காலத்தில் மனிதன் மந்திரத்தைப் பயன்படுத்தினான். இம்மந்திரங்கள், கற்பனையுடனும் மக்கள் தம் அனுபவங்களில் கண்டறிந்த இயற்கை நிகழ்வுகளுடனும் கலந்திருந்தன.

மந்திரம் பின்வருமாறு வகை படுகின்றது: 1) தூய மந்திரம் (White Magic). இது ஒரு தனிமனிதன் அல்லது ஒரு சமூகத்தின் நலனுக்குப் பயன்படுத்துவதாகும். 2) தீய மந்திரம் (Black Magic). இதன் மூலம் கெட்ட ஆவி, பேய் ஆகியவை ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு அல்லது ஒரு சமூகத்திற்கு எதிராக ஏவப்படுகின்றன. பில்லி சூனியம், ஆவிகளை ஏவுதல் இவ்வகையினுள் அடங்கும்.

இயற்கையின் கொடூரங்களிலிருந்தும் மனித எதிரிகளிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ளப் பாதுகாப்பு மந்திரமும் (Protective Magic), தங்களிடமுள்ள குறைகள், தீமைகள் ஆகியவற்றைப் பிற உயிரிகளுக்கோ பொருட்களுக்கோ மாற்றிவிட, மாற்றுவிக்கும் மந்திரமும் (Transference of Evil) பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர வேட்டைச்சமூகத்திலும் வேளாண் சமூகத்திலும் வேறு வகையான சில மந்திரங்கள் உற்பத்தியினைப் பெருக்கவும், பயிர்களையும் கால்நடைகளையும் பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

மக்கள் தங்களுக்குத் தேவையான பலன்களை அடையவும் இயற்கைகளிடமிருந்தும் எதிரிகளிடமிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ளவும் மந்திரம் இன்று உலகின் அனைத்துச் சமூகங்களிலும் பயன்படுத்தப் படுகின்றது.

போதிய அறிவியல் அறிவு இல்லாமையே பழங்காலத்தில் மந்திரம் தோன்றக்காரணம் என எண்ண இடமுண்டானாலும் இக்காலத்தில் அறிவியல் வளர்ச்சி உள்ளபோதும் மந்திரம் தனக்கான இடத்தினை நிலைநிறுத்திக் கொண்டுள்ளதைக் காண முடிகிறது. தொழிற்சாலைகள் கட்டுமுன்பு அங்கிருக்கிற ஆவிகளை அகற்றவும், இடர்களைத் தவிர்க்கவும் மந்திரங்களும் சடங்குகளும் நடத்தப்படுகின்றன. வருங்காலத்தில், மந்திரம் சமூகங்களில் கொண்டிருக்கும் பிடியினைத் தளர்த்தப் பொருளாதார மேம்பாடும், பகுத்தறிவும், அறிவியல் அடிப்படையிலான சிந்தனை வளர்ச்சியும் இன்றியமையாதனவாகும்.

பெ.த.

**மந்திரி சபை**: காண்க: அமைச்சரவை.

**மயக்கம்**: ஒரு சொல் அல்லது ஒரு தொடர் அல்லது ஒரு வாக்கியம் ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களைத் தரும் சூழ்நிலையில் அதன் பொருள் எதுவென முடிவு செய்ய முடியாத நிலை மயக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக, மாலை என்ற சொல் 'மாலைவேளை', 'மலர்மாலை' ஆகிய இரு பொருட்களைத் தரக்கூடியது. ஒருவர் மாலை வந்து விட்டது என்று கூறும்போது மாலை என்ற சொல்லை 'மாலைவேளை' என்ற பொருளில் கூறுகிறாரா அல்லது 'மலர் மாலை' என்ற பொருளில் கூறுகிறாரா என்று மயங்கி நிற்க நேரிடுகிறது. இந்நிலையே மயக்கம் (Ambiguity) என்று கூறப்படுகிறது.

மயக்கம் பலவகை நிலைகளில் பலவகைக் காரணங்களினால் எழக்கூடும். சொல்நிலையில் ஒரே சொல் பல பொருட்களைச் சுட்டி நிற்பதால் எழும் மயக்கம் சொல்நிலை மயக்கம் (Lexical Ambiguity) எனப்படும். இலக்கணநிலையில் ஒரே அமைப்பு பல பொருட்களைத் தரும் சூழ்நிலையில் எழும் மயக்கம் இலக்கண நிலை மயக்கம் (Grammatical Ambiguity) அல்லது அமைப்புநிலை மயக்கம் (Structural Ambiguity) எனப்படும். இலக்கணநிலை மயக்கம், தொடர்நிலைமயக்கம் (Phrase Structure Ambiguity), மாற்று நிலை மயக்கம் (Transformational Ambiguity) என இரு வகைப்படும்.

சொல்நிலை மயக்கம் பொதுவாக மொழிகளில் எங்கும் காணக்கூடியது. பல பொருள் தரும் சொற்களை மொழிகளில் மிகுதியாகக் காணலாம். எடுத்துக்காட்டாக, படி என்ற சொல் வாசற்படியையும், அளக்கும் படியையும் குறிக்கும். அதுபோன்றே மதி என்ற சொல் பெயராக வரும் போது 'நிலவு', 'அறிவு' ஆகிய பொருள்களையும் வினையாகவரும் போது 'மதிப்புக்கொடு' என்ற பொருளையும் தருகிறது.

சொல் நிலை மயக்கத்தில் மற்றொரு வகை சந்திநிலை மயக்கம் (Juncture Ambiguity) ஆகும். ஒரே சொல்லை வெவ்வேறு வகையில் பிரிக்கும்போது வெவ்வேறு பொருளைத் தரும் நிலை சந்திநிலை மயக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக, அருந்தேன் என்ற சொல்லை அருந்+தேன் என்று சந்தி பிரித்து 'அருமையான தேன்' என்ற பொருளையும், அருந்தேன் என்பதை இவ்வாறு பிரிக்காமல் ஒரே சொல்லாகக் கொண்டு 'உண்ணமாட்டேன்' என்ற பொரு

ளையும் பெறக்கூடும். அவ்வாறே பலகை என்ற சொல்லும் பல+கை என்று பிரிக்கையில் ஒரு பொருளும், பலகை என்பதை ஒரே சொல்லாகக் கொள்ளின் வேறொரு பொருளும் தரும். அவ்விருவகையான சொல்நிலை மயக்கங்களையும் கவிஞர்கள் தம் இலக்கியப் படைப்புகளில் மிகுதியாகப் பயன்படுத்துவதைக் காணலாம்.

இலக்கணநிலை மயக்கம் என்பது வாக்கியத்தில் சொற்கள் அமையும் முறையின் அடிப்படையில் எழுவது. முன்னர்க் குறிப்பிட்டபடி அது தொடர்நிலை மயக்கம் எனவும், மாற்றுநிலை மயக்கம் எனவும் இரு வகைப்படும். ஒரே தொடர் வெவ்வேறு வகையில் பகுக்கப்படும்போது வெவ்வேறு பொருளைத் தரும் நிலையில் உண்டாவது தொடர்நிலை மயக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக, 'அழகிய மலர்களும் செடிகளும்' என்ற தொடரை அழகிய, மலர்களும் செடிகளும் என்று பகுக்கும்போது அழகிய என்னும் பெயரடை மலர்கள், செடிகள் இரண்டுக்கும் உரியதாக 'அழகியமலர்களும்', 'அழகிய செடிகளும்' எனப் பொருள் தரும். ஆனால் இதே தொடரை அழகிய மலர்களும், செடிகளும் என்று பகுக்கும்போது அழகிய என்ற பெயரடை மலர்களுக்கு மட்டுமே உரியதாக 'அழகியமலர்களும், செடிகளும், (மலர்கள் மட்டுமே அழகியவை) என்ற பொருளைத் தரும். அதுபோன்றே, அவள் தங்கை வீட்டுக்குப் போனாள் என்ற வாக்கியத்தை அவள், தங்கை வீட்டுக்குப் போனாள் என்று பகுக்கும்போது 'அவள் தன்னுடைய தங்கை வீட்டுக்குப் போனாள்' என்ற பொருளையும், அவள்தங்கை வீட்டுக்குப் போனாள் என்று பகுக்கும் போது 'அவளுடைய தங்கை, வீட்டுக்குப் போனாள்' என்ற பொருளையும் தருவதைக் காணலாம்.

ஒரு தொடரில் உள்ள சொற்கள் தம்மிடையே வெவ்வேறு உறவுநிலைகளைக் கொண்டு வெவ்வேறு பொருளைத் தரும் நிலை மாற்று நிலை மயக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக, உண்ணும் பறவை என்னும் தொடர் 'உண்ணுகின்ற பறவை' எனவும், 'உண்ணப்படுகின்ற பறவை' எனவும் இருவேறு பொருள்களைத் தருவதைக் காணலாம். முதல் பொருள் பறவை உண்ணுகின்றது என்ற வாக்கியத்திலிருந்து வருவது. அதில் பறவை எழுவாயாக விளங்குகின்றது. இரண்டாம் பொருள் யாரோ பறவையை உண்கிறார்கள் என்ற வாக்கியத்திலிருந்து வருவது. அதில் பறவை செயப்படுபொருளாக உள்ளது. அது போன்றே, கொன்றபுலி என்ற தொடர் 'கொன்ற புலி' என்ற ஒரு பொருளையும் 'கொல்லப்பட்ட புலி' என்ற ஒரு பொருளையும் தருவதைக் காணலாம். முதல் பொருள் 'புலி எதையோ கொன்றது' என்ற வாக்கியத்திலிருந்து வருவது. அதில் புலி எழுவாயாக உள்ளது. இரண்டாம் பொருள் 'யாரோ புலியைக் கொன்றார்கள்' என்ற வாக்கியத்திலிருந்து வருவது. அதில் புலி செயப்படு பொருளாக விளங்குகிறது. இவ்வாறு இருவேறு உறவு நிலைகளில் உள்ள சொற்கள் ஒரே அமைப்பினைக் கொண்ட இருவேறு பொருட்களை உணர்த்தி நிற்றல் மாற்று நிலை மயக்கம் என்று கூறப்படுகிறது.

இக்கால இலக்கணக் கொள்கைகளில் ஒரு முக்கிய பிரிவான மாற்றிலக்கணக் கொள்கையின் அடிப்படைக் கருத்துகளுள் ஒன்று ஒவ்வொரு வாக்கியமும் ஒரு அகநிலை அமைப்பையும் ஒரு புறநிலை அமைப்பையும் கொண்டுள்ளது என்பது. அக்கருத்துக்கு ஒரு முக்கியமான அடிப்படையாக அமைவது இலக்கண நிலை மயக்கம் தரும் அமைப்புகள் ஆகும். அகநிலை அமைப்பில் இருவேறு வாக்கிய அமைப்புகளாக உள்ளவை புறநிலையில் ஒரே வாக்கியமாக உருவாவதே அத்தகைய மயக்கங்கள் எழுவதற்குக் காரணம் என்பது மாற்றிலக்கண அறிஞர்கள் கருத்து. ஒரே அமைப்பு இருவேறு பொருட்களைத் தருவதற்கு வேறு தகுந்த விளக்கம் எதுவும் இல்லை என்பது அவர்கள் கூற்று. இருவேறு அகநிலை அமைப்புகள் ஒரு சில மாற்றங்களின் காரணமாக ஒரே புறநிலை அமைப்பைக் கொண்டு மயக்கம் தருவதால் அது மாற்றுநிலை மயக்கம் என்று கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, மீன் விழுங்கிய பையன் என்ற ஒரே புற நிலைத் தொடர் பையன் மீனை விழுங்கினான் என்ற ஒருநிலை அமைப்பையும், மீன் பையனை விழுங்கியது என்ற ஓர் அகநிலை அமைப்பையும் கொண்டு இருவேறு பொருள் தருவதைக் காணலாம்.

மாற்றுநிலை மயக்கம் விளங்குவதற்குச் சற்றுக் கடினமானது. ஓர் அமைப்புக்கு இருவேறு பொருள்கள் உள்ளனவா, அது மயக்கம் தரும் அமைப்புத்தானா என்று கண்டறிவது சற்றுக்கடினமானது. எனினும், மொழியில் இவ்வகையான மயக்கங்கள் அடிக்கடி காணப்படுகின்றன என்றே கூறவேண்டும். எடுத்துக்காட்டாக, முல்லை தன் புத்தகத்தை எடுத்துச் சென்று விட்டதை தாமரை அறிந்தாள் என்ற வாக்கியத்தில் 'தன் புத்தகம்' என்ற தொடர் 'முல்லையின் புத்தகம்' என்ற ஒரு பொருளையும் 'தாமரையின் புத்தகம்' என்ற ஒரு பொருளையும் தருகின்றது. அவ்வாறே, அவன் இரண்டு மணி வரை படிக்கவில்லை என்ற வாக்கியம் 'அவன் இரண்டு மணிக்குப் பிறகே படிக்கத் தொடங்கினான்' (பயனிலையில் எதிர்மறை) எனவும், 'அவன் படித்தான்; ஆனால் இரண்டு மணிக்கு முன்னரே படிப்பதை

நிறுத்தி விட்டான்' (காலம் காட்டும் வினையடையில் எதிர்மறை) எனவும் இருவேறு பொருட்கள் தருவதைக் காணலாம்.

ஒரு சொல் அல்லது அமைப்பு இரண்டுக்கும் மேற்பட்ட பொருட்களைத் தரும் நிலையில் அது பல்வகை மயக்க (Multiple Ambiguity) அமைப்பு எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உடைக்கும் கல் என்றதொடர் 'எந்தக் கல்லால் உடைக்கிறார்களோ அந்தக் கல்' எனவும், 'எந்தக்கல்லில் வைத்து உடைக்கிறார்களோ அந்தக் கல்' எனவும், 'எந்தக் கல்லை உடைக்கிறார்களோ அந்தக் கல்' எனவும் மூன்று வெவ்வேறு பொருள்களைத் தரக்கூடியது. ஆகவேதான், இவை போன்ற அமைப்புகள் பல்வகை மயக்க அமைப்புகள் என்று கூறப்படுகின்றன.

மொழியில் மயக்கம் என்பது பலவகைக் காரணங்களினால் ஏற்படுகிறது. சொல்நிலை மயக்கம் ஒரே சொல் பல பொருட்களைக் கொண்டிருப்பதால் ஏற்படுகிறது. சொற்களைப் பயன்படுத்தும் சூழ்நிலை (Context) மயக்கத்தை நீக்கி அந்தச் சொல்லுக்குரிய பொருளை முடிவுசெய்ய உதவுகிறது அல்லது மயக்கம் தாராத மாற்றுச்சொல் ஒன்றைப் பயன்படுததுவதாலும் மயக்கம் நீக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மாலை என்ற இரு பொருள் தரும் சொல்லை நீக்கிப் பூமாலை என்றோ மாலைப் பொழுது என்றோ கூறும்போது மயக்கம் நீங்கிவிடுகிறது. சந்திநிலை மயக்கம் சொற்களைச் சரியான முறையில் ஒலிக்கும் போது நீங்கிவிடுகிறது. எடுத்துக்காட்டாக, மலைத்தேன் என்பது 'மலையில் பிறந்த தேன்' என்று பொருள்படும்போது மலை+த்+தேன் என்று பிரித்தும், 'வியந்தேன்' என்று பொருள்படும்போது மலைத்தேன் என்று சேர்த்தும் கூறும்போது மயக்கம் நீங்கிவிடு வதைக் காணலாம். மாற்றுநிலை மயக்கங்களிலும் ஒரு சிலவற்றைத் தவிர்த்துப் பிற மயக்கங்களை எளிதாக நீக்கக்கூடும். மாற்றுநிலை மயக்கங்கள் பெரும்பாலும் ஒரு தொடரில் உள்ள சில சொற்களையோ அல்லது இலக்கணக் கூறுகளையோ நீக்கிவிடுவதாலேயே (Deletion) உண்டாகின்றன. அவற்றை இட்டு நிரப்பினால் மயக்கமும் நீங்கிவிடுகிறது. எடுத்துக்காட்டாக, மீன் விழுங்கிய பையன் என்ற தொடரில் உள்ள மயக்கம் மீனை விழுங்கிய பையன் என்று—ஐ வேற்றுமையிட்டுக் கூறுகையில் நீங்கிவிடுகிறது. ஆயினும், ஒருசில தொடர்களில் மயக்கம் தரும் அமைப்புக்கு இணையான வேறு ஒரு தொடரைப் பயன்படுத்தியே மயக்கத்தை நீக்க நேரும். எடுத்துக் காட்டாக, கொன்றபுலி என்ற மயக்கம் தரும் தொடரை 'எந்தப் புலி கொன்றதோ அந்தப் புலி' எனவும், 'எந்தப் புலியைக் கொன்றார்களோ அந்தப்புலி' எனவும் வெவ்வேறு தொடர்களைப் பயன்படுத்தியே மயக்கமற்ற நிலையில் கூற இயலும்.

இலக்கியங்களில் மயக்கம் தரும் அமைப்புகள் மிகுதியாக உள்ளமையைக் காணலாம். பல பொருள் தரும் ஒரு சொல்லைப் பயன்படுத்துவதால் உண்டாகும் சொல்நிலை மயக்கங்களும், சந்திநிலை மயக்கங்களும், புலி கொல்யானை (புலியைக் கொன்ற யானை, புலியால் கொல்லப்பட்ட யானை) போன்ற இரு வேறு பொருள் தரும் தொடர்களும் நிறைந்து காணப்படுகின்றன. கவிஞர்கள் இரட்டுற மொழிதல் என்ற இலக்கிய நடையாக இதனைக் கொண்டு தம் இலக்கியப் படைப்புகளில் பெருமளவில் பயன்படுத்துவதைக் காணலாம்.

ஒரு மொழியில் உள்ள இலக்கியத்தை மற்றொரு மொழியில் மொழிபெயர்க்கும்போது இந்த மயக்கம் தரும் சொற்களும் அமைப்புகளும் பெரும் சிக்கல் விளைவிப்பவையாக உள்ளமையைக் காணலாம். மயக்கம் என்பது ஒரு மொழியில் சொற்களையும், அவை அமையும் முறையினையும் அடிப்படையாகக் கொண்டு எழுதுவது. ஆகவே அது ஒரு மொழியின் தனிப்பட்ட பண்பாக (Language Particular Feature) விளங்குகிறது. ஒரு மொழியில் உள்ள அத்தகைய சொற்களையும், தொடர்களையும் மொழி பெயர்க்கும்போது அவை உணர்த்தும் பொருளைமட்டுமே மொழிபெயர்க்க முடியும். ஆகவே அத்தகைய தொடர்களை அவை தரும் மயக்கத்தோடு மொழி பெயர்க்கும் மொழியிலும் மயக்கம் தருபவையாக மொழிபெயர்த்தல் இயலாது. எம்.சு.

**துணை நூல்கள்:**

Agesthialingom, S., 'Structural Ambiguities in Tamil,' Indian Linguistics, 1965.

David Crystal, A First Dictionary of Linguistics and Phonetics, Cambridge, 1980.

மயங்கொலியன்: **வேற்றுநிலை வழக்கு:** இது ஒலியன்களைத் தேரும் கொள்கை. ஒரு மொழியின் ஒலியன்களைத் (Phonemes) தேர்வதற்கு வேற்றுநிலை வழக்கு (Contrastive Distribution), துணைநிலை வழக்கு (Complementary Distribution), உறழ்ச்சி வழக்கு (Free Variation) ஆகிய மூன்று கொள்கைகளைக் கையாளுவர். அலை- ஆலை, கலை- காலை, பல- பலா என்ற மூன்றும் முரண் இணைகள் (Contrastive pair). அதாவது அந்த இணைகளில் உள்ள அகரமும், ஆகாரமும் ஒலிவேற்றுமை உடைய ஒலிகள். அவை இவ்விணைகளில் முறையே சொல்லுக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் வந்து அவ்விணைகளில் உள்ள சொற்களின் பொருள்

வேறுபாட்டிற்குக் காரணமாக அமைந்துள்ளன. எனவே அ, ஆ ஆகிய இரு ஒலிகளும் தமிழில் வேற்று நிலை வழக்கில் வந்து ஒலியன்களாக அமைந்துள்ளன என்பதை அறியலாம். அவை வேற்றுநிலை வழக்கால் நிறுவப்பட்ட ஒலியன்களாகும்.

**துணைநிலை வழக்கு**: கடல், பக்கம், பங்கு, பகல் என்ற சொற்களில் உள்ள ககரம் மூன்று வேறுபட்ட ஒலிகளாக ஒலிக்கப்படுகின்றது. கடல், பக்கம் என்ற சொற்களில் உள்ள ககரங்கள் (k) பின்நா, முன்னண்ணக் குரலில் (Voiceless) அடைப்பியாக ஒலிக்கப்படுகின்றன. பங்கு என்ற சொல்லில் உள்ள ககரம் (g) பின்நா, பின்னண்ணக் குரல் அடைப்பியாக ஒலிக்கப்படுகின்றது. பகல் என்ற சொல்லில் உள்ள ககரம்(x) பின்நா பின்னண்ணக் குரலில் உரசியாக ஒலிக்கப்படுகின்றது. ககரத்தின் இந்த வேற்று ஒலிப்புமுறை அது வரும் சூழலால் அமைவதாகும். அதனைப் பின்வருமாறு வரையறைப்படுத்தலாம். அதாவது சொல்லுக்கு முதலிலோ இரட்டித்தோ வரும் ககரம் (k) என்றும், மெல்லினத்தை அடுத்து வரும் ககரம் (g) என்றும், ஈருயிர்கட்கு இடையில் வரும் ககரம் (x) என்றும் ஒலிக்கப்படுகின்றன. எனவே, ககரத்திற்கு மூன்று வேறுபட்ட ஒலிவடிவங்கள் இருந்தபோதும் ஒவ்வொன்றும், தனக்கென உரிய தனித்த சூழ்நிலையில், அதாவது ஒன்று வரும் சூழலில் ஏனையவை வாராத நிலையில் அமைந்துள்ளது என்பதை அறியலாம். இவ்வாறான வரன்முறை துணைநிலை வழக்கு ஆகும். இவ்வாறு துணைநிலை வழக்கில் வரும் ஒற்றுமை உடைய ஒலிகள் மாற்றொலிகளாகும். மாற்றொலிகளாக வரும் இவை ஒரே ஒலியனின் துணை ஒலிகளாகும். எனவே, (k, g, x) ஆகிய மூன்றும் ககரத்தின் மாற்றொலிகள். அவை வேறுவேறு வடிவங்களால் எழுதப்படா. அவற்றைக் குறிக்கக் ககர வடிவம் ஒன்றே போதும். அதுவே ககர ஒலியனாகும். அது துணைநிலை வழக்கால் நிறுவப்பட்ட ஒலியனாகும்.

**உறழ்ச்சி வழக்கு**: கல்-கள், கலம்-களம், காலை-காளை என்ற இணைகளில் லகர, ளகரங்கள் வேற்றுநிலை வழக்கில் வந்து ஒலியன்களாகின்றன. ஆனால், மங்கலம்-மங்களம், மதில்- மதிள் என்ற இணைகளில் வரும் லகர, ளகரங்கள் பொருள் வேற்றுமையைத் தரவில்லை. எனவே, அச்சொற்களில் வரும் மருங்கொலிகளை ஏதாவது ஒரு வரி வடிவத்தைக் கொண்டு மட்டுமே எழுதலாம். அவ்வாறு ஒன்று மற்றொன்றாக உறழ்ந்து வரும் அவ்வொலியன்களின் வழக்கு ஒலியன் உறழ்ச்சி வழக்கு (Phonemic Free Variation) ஆகும்.

சட்னி, சின்ன, சட்டை போன்ற சில சொற்களில் வரும் சகரம் (சில வழக்கில்), (s) நுனிநா, நுனி அண்ணக் குரலில் உரசியாகவோ, இடை (č) அண்ணக் குரலில் அடைப்புரசியாகவோ ஒலிக்கப்படுகின்றது. அதாவது s அல்லது č யாக வேறு இடங்களில் துணைநிலை வழக்கில் உள்ள இச்சகரம் இங்கு உறழ்ந்து ஒலிக்கப்படுகின்றது. எனினும், அதனைச் சகரமாகவே எழுதவேண்டும். இவ்வாறு ஒன்று மற்றொன்றாக உறழ்ந்து வரும் இவ்வொலிகளின் வழக்கு ஒலி உறழ்ச்சி வழக்கு (Phonetic Free Variation) ஆகும்.

**மயங்கொலியன்**: வேற்றுநிலை வழக்கு, துணைநிலை வழக்கு, உறழ்ச்சி வழக்கு ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் ஒலியன்கள் தேரப்படும் முறை பற்றிக் கூறப்பட்டது. அவற்றில் துணைநிலை வழக்கில் வரும் ஒலிகள் காலப்போக்கில் உச்சரிப்பு மாற்றத்தாலோ பிற மொழிக் கலப்பாலோ சில சூழலில் மட்டும் வேற்றுநிலை வழ்க்கமைப்பைத் தோற்றுவித்துவிடுவதுண்டு. அவ்வாறு வரும்போது இந்த ஓர் ஒலியனின் துணை ஒலி (Allophone) யாக இருந்த ஒன்று, வேறு ஒரு சூழ்நிலையில் மற்றொரு ஒலி கொள்ளும் இரு ஒலியன்களும் தம்முள் மயக்கம் (Over-lapping) பெறுகின்றன. இவ்வாறு மயக்கம் பெறும் ஒலியன்கள் மயங்கு ஒலியன்கள் (Overlapping Phonemes) ஆகும். இது உண்மையில் ஒலியின் மயக்கம் ஆகும். மயங்கொலியன்களுக்குத் துணையொலியாகும் ஒலி அவ்விரு ஒலியன்களுக்கும் பகுதித்துணை வழக்கில் (Partial Complementation) அமைந்த பகுதி இணை ஒலியாகும்.

**பகுதி மயங்கொலியன்**: உயிர், குறிப்பு, குறும்பு, கரும்பு என்ற நான்கு சொற்களையும் கவனமாக ஒலித்து அவற்றில் உள்ள உகர உயிர்களை நோக்கினால் முதல் இரண்டு சொற்களிலும் உள்ள உகரங்களில் முதல் அசையில் உள்ள உகரம் மேல்பின் குவி குறில் ஆகவும் [U], இரண்டாம், சொல்லில் உள்ள இறுதி உகரம் மேல் நடு குவியில் குறில் [i̇] ஆகவும் ஒலிக்கப் படுவதைக் காணலாம். மூன்றாம் சொல்லில் உள்ள முதல் இரண்டு உகரங்கள் [U] ஆகவும், மூன்றாவது [i̇] ஆகவும் ஒலிக்கப்படுகின்றன. நான்காம் சொல்லில் வரும் இரண்டு உகரங்களுமே [i̇] ஆகும். முதலசையில் வரும் உகரமும் இடையில் வரும் அசையில் உகரத்தைத் தொடர்ந்து வரும் உகரமும் குவி உகரங்கள் என்றும், ஏனையவை குவியிலிகள் என்றும் கொள்ளலாம். இருக்கு, இடுப்பு என்ற சொற்களைக் கவனமாக ஒலித்துப்பார்த்தால் இவற்றில் உள்ள இகரம் இதழ் குவியாது ஒலிக்கப்படும் உகரம் [i̇] போன்றே இருத்தலை உணரலாம். அவ்வொலியை ஏனைய இடங்களில் எடுத்துள்ளது போன்றே உகரத்தின் துணை ஒலியாகக் கொண்டால் உருக்கு, உடுப்பு என்ற சொற்களே போன்றா

கிப் பொருள் கொள்வதில் தடுமாற்றம் விளையும். எனவே, அவ்விடத்தில் இந்த ஒலியை இகரத்தின் துணை ஒலியாகத்தான் கொள்ளவேண்டும். அந்த அமைப்பால் இதழ் குவியா உகரம் [ṫ], உகரம் இகரம் ஆகிய இரண்டு ஒலியன்களுக்குமே துணை ஒலியாக வருகிறது. எனினும், அதன் வரன்முறை வரையறை பெற்றுள்ளதால் ஒரு சொல்லில் வரும் கூர்நுனி நா (அண்பல்), வளைநா ஒலிகளைத் தொடர்ந்து வரும் உகரத்தை முந்திய முதலசை இகரமும் குவி உகரம் முந்தாத மொழி இடை உகரமும் குவியிலிகளாக ஒலிக்கப்படும். ஈண்டுக் குவியல் உகரம் [ṫ], உகரம் இகரம் ஆகிய இரண்டிற்குமே துணை ஒலியாக வந்துள்ளது. அதாவது உகரத்தின் ஒரு துணை ஒலியும், இகரத்தின் ஒரு துணை ஒலியும் ஒன்றாகவே உள்ளன. எனவே உகரம், இகரம் ஆகிய இரண்டு ஒலியன்களும் அவை குவியல் உகரத்தைத் துணை ஒலியாகக் கொண்டுள்ள இடங்களில் மயங்கி வருகின்றன எனலாம். அவ்விடங்களில் வரும் உகரமோ இகரமோ ஒன்று மற்றதற்கு மயங்கொலியாகும். அவ்வகை மயக்கம் உச்சரிப்பு மாற்றத்தால் விளைந்ததாகும்.

க,ச,ட,த,ப ஆகிய வல்லொலிகளின் துணை ஒலிகளாகிய குரலிகள்(g,y,ḍ,d,b) இன்றைய தமிழில் ஒலியன்களாகி விட்டன. அதாவது (g,v,r,ṫ), (j∧nn∧l) 'சன்னல்', (ḍá:kṭ∧r) 'டாக்டர்',(d∧n∧m) 'தினம்', (ba:v∧m)'பாவம்' போன்ற சொற்களில் சொல்லின் முதலில் வந்து வல்லினக் குரலிலிகளோடு வேற்று நிலை வழக்கில் வருகின்றன. ஆனால், மெல்லின ஒலிகளை அடுத்துக் குரலிகள் மட்டுமே வருவதால் இங்கு இன்னமும் இணை குரலிகளுடன் துணை நிலை வழக்கிலேயே உள்ளன. எனவே, மெல்லினத்தைத் தொடர்ந்து வரும் வல்லின ஒலி, சொல்லின் முதலில் வரும் குரலிகளோடோ, சொல்லின் முதனிலும் மெல்லினத்தை அடுத்த சூழலைத் தவிர்த்த மற்ற இடங்களிலுமே வரும் குரலிலிகளோடோ துணை நிலை வழக்கில் அமையும். ஆகவே, மெல்லினத்தைத் தொடர்ந்து வரும் குரல் அடைப்பிகளை ஏனையிடங்களில் வரும் குரல் அடைப்பிகளோடோ, அல்லது குரலில் அடைப்பிகளோடோ, துணைநிலை வழக்கில் கொண்டு அவ்விரண்டு ஒலியன்களுக்குமே மற்றொலிகளாகக் கொள்ளலாம். அச்சூழலில் அதாவது மெல்லினத்தை அடுத்த சூழலில் வரும் அடைப்பொலியைக் குரலில் அடைப்பொலியனாகக் கொண்டால், அவ்வாறு கொள்வது ஏனைய இடத்தில் வரும் குரல் அடைப்பொலியனும் பகிர்ந்து கொள்வதாகும். எனவே, அந்த இடத்தில் இவ்விரு ஒலியன்களும் மயக்கமுற்று வருவதால் அதாவது இரண்டு அடைப்பொலியன்களின் துணை ஒலியும் ஒன்றாக இருப்பதால் குரலிலியாக எழுதப்படும் முறையில் அவ்வொலியன் மயங்கொலியனாகும்.

மேலே கண்டவற்றில் வரும் மயக்கம் பகுதி மயக்கம் (Partial Overlapping). ஏனெனில் இங்கு வரும் துணையொலிதான் உறுப்பாக வரும் இரு ஒலியன்களில் ஒன்றற்கு வேற்றுநிலை வழக்காகுமிடத்தில் அது மற்றதற்குத் துணைநிலை வழக்காகின்றது. அவ்வாறின்றித் துணைநிலை வழக்கில் வரும் இவ்வொலி அவ்விரு ஒலியன்களுக்கும் எல்லா இடத்திலுமே வேற்றுநிலை வழக்கில் வருமாயின் அது முற்று மயக்கம் (Complete Overlapping) ஆகும். ஈண்டு அவ்வொலியை ஒலியனாக அமைத்துத் தனி வரிவடிவம் தரல் வேண்டும்.

**முழுமயங்கொலியன்:** சில கிளைமொழியாளரிடை திரிப்பு, திருப்பு, துருப்பு என்ற சொற்களில் முதலசையில் உள்ள உயிர்கள் மூன்று வெவ்வேறு ஒலிகளாக உச்சரிக்கப்படுகின்றன. முதல் சொல்லில் உள்ள முதலசை இகரம் (I) மேல்முன் குவியில் குறிலாகவும்; இரண்டாம் சொல்லில் உள்ள முதலசை இகரம் (ṫ) மேல்நடு குவியில் குறிலாகவும்; மூன்றாம் சொல்லில் உள்ள முதலசை உகரம் (U) மேல்பின் குவி குறிலாகவும் ஒலிக்கப்படுகின்றன. எனவே, ஈண்டு (I,ṫ,U) ஆகியமூன்றும் வேற்றுநிலை வழக்கில் வந்த தனித்தனி ஒலிகளாகின்றன. சில சூழலில் உகரத்திற்கும், சில சூழலில் இகரத்திற்கும் துணை ஒலியாக வந்த மேல்நடு குவியல் குறிலாகிய (ṫ) இப்பொழுது தனக்கு ஒரு புதிய வரவிடத்தைப் பெற்று அவ்விடத்தில் இவ்விரு ஒலியன்களோடும் வேற்றுநிலை வழக்கைத் தோற்றுவித்துள்ளது. எனவே (ṫ) உகரம் இகரம் ஆகிய இரண்டிலிருந்தும் வேறுபட்ட ஒலியனாகிறது. அதாவது உகரம், இகரம் ஆகிய இரண்டின் ஒரு துணையொலி அவற்றின் ஏனைய துணையொலிகளுடன் மாறுபட்டு முழுமயக்கத்தை உண்டாக்குகின்றது. அவ்வாறு முழுதுமாக மயங்கிவரும் மாற்றொலியும் மயங்கொலி எனப்படும். இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கிளைமொழி வழக்கின்படி திரிப்பு, திருப்பு, துருப்பு என்ற சொற்கள் முறையே (t Irtppi), (t trippi) (turuppi) என்று ஒலிக்கப்படுவதால் மேல்நடு குவியல் குறில் (ṫ) தனியொலியனாகி முழுமயக்கம் பெற்ற ஒலியனாகின்றது. எனவே தமிழின் இந்தக் கிளைமொழியில் (ṫ) முழு மயங்கொலியனாகும். க.மு.

**துணை நூல்:**

**Bloch,B.**, Phonemic Overlapping, Readings in Linguistics, Baltimore, 1958.

*மயன்*: அசுரர்களின் தச்சன்; இவனைத் தானவர்களின் சிற்பி என்றும் கூறுவதுண்டு. புராண

மரபுகளின்படி இவன் காசியப முனிவருக்குத் திதி என்பாள் வயிற்றில் பிறந்தவன். காசியப முனிவருக்கு அதிதி வயிற்றில் பிறந்தவர்கள் இந்திரன் முதலிய தேவர்கள். தேவர்களுக்குக் குருவாக வியாழனும், சிற்பியாக விசுவகர்மாவும் விளங்கியது போன்று, அசுரர்களுக்குக் குருவாக வெள்ளியும் (சுக்கிராச்சாரியார்), சிற்பியாக மயனும் விளங்கினர். நினைக்கும் முன்பே படைக்கும் திறன் பெற்றவன் மயன் என்று நூல்கள் கூறுகின்றன. கந்த புராணத்தில் பேசப்படும் சூரபன்மாவுக்கும், திரிபுர அசுரர்களுக்கும் வேண்டியவற்றை மயன் நிருமித்துக்கொடுத்தான் என்பர். மயனுக்கு மாயாவி, துந்துபி என்னும் ஆண் மக்களும் மண்டோதரி என்ற மகளும் பிறந்தனர். அம்மாயாவி, துந்துபியரே வாலியுடன் போரிட்டு மடிந்தவர்கள். இராமனுடைய ஆற்றலைச் சோதிக்க எண்ணிய வானரர் ஏழு மராமரங்களையும் ஒரே அம்பால் துளையிடுமாறு வேண்ட, அவன் அவ்வாறு செய்தான் என்றும், இலக்குவன் கால் பெருவிரல் கொண்டு துந்துபியின் எலும்புக்கூட்டைத் தூக்கியெறிந்தான் என்றும் கதையமைத்துள்ளார் கம்பர். இராவணன் மனைவி மண்டோதரி, மயன் மகள்; கற்புக்கரசியர் எழுவருள் ஒருவராகப் போற்றப் பெறுபவள்.

மயனைப் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. 'மயன் விதித்தன்ன மணிக்கால் அமளி' (சிலப். 2:12) எனக் கோவலன் -கண்ணகியர் துயின்ற பள்ளியறைக் கட்டில் புகழ்ந்து பேசப்படுகின்றது. இந்திரவிழவூர் எடுத்த காதையில் திருமாவளவனுக்கு வச்சிரநாட்டு வேந்தன் கொடுத்த கொற்றப் பந்தரும், மகத நாட்டிறைவன் அளித்த பட்டி மண்டபமும், அவந்தி வேந்தன் உவந்து கொடுத்த தோரணவாயிலும் மயனால் அவ்வவ் வேந்தரின் முன்னோர்க்கு நிருமித்துத் தரப்பட்டவை (சிலப்.5:99-108) என்பது கூறப்படுகின்றது. மயமதம் என்னும் நூலைப் பற்றிய குறிப்பும் 'நூலோர் சிறப்பின் முகில்தோய் மாடம்' (சிலப்.14:97-98) சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகின்றது. சக்கரவாளக் கோட்டம் என்னும் சுடுகாட்டுக் கோட்டத்தைத் தேவர்கள் வேண்டுகோளின்படி மயன் நிருமித்துக் கொடுத்தான் என மணிமேகலை கூறுகின்றது (மணிமேகலை: காதை-6:200 - 201).

இத்தகைய குறிப்புகளிலிருந்து பாரத நாடு முழுவதும் பரவிய சிற்ப, ஓவிய, கட்டடக்கலை மரபுகளுக்கு மயன்மரபே பழமையானதும், மூலமானதும் எனத் தெளியலாம். மயமதம் என்னும் பெயரில் தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையம் இரண்டு பகுதிகளாக (1966 முதல் பகுதி, 1968 இரண்டாம் பகுதி) ஒரு நூலை வெளியிட்டுள்ளது. நூலாசிரியர் மயமுனிவர் என்று இப்பதிப்பில் குறிக்கப்படுகின்றது. பழந்தமிழ்ச் சிற்பி, மயன் என்று குறிக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் வெளியீடான நூலில் காணப்படும் நூற்பா அமைப்பு, நூலின் தொன்மையைக் கூறும் முறையில் அமையவில்லை. மயமதம் தென்னாட்டு ஆகம, சிற்பக் கட்டடக் கலை மரபு என்றும் அது திராவிட மரபுகளுக்குரியது என்றும் கூறலாம். அ.பா.

மயில் நடனம்: விலங்குகளின் அசைவுகளைப் போலவே தானும் செய்து பார்க்க முற்பட்ட மனிதனின் செயலே நடனக்கலையின் தோற்றத்திற்கான அடிப்படையாக அமைந்திருக்கலாம் என்பர். மயில் தோகைவிரித்து ஆடும் காட்சி கண்ணுக்கு விருந்தளிப்பதாகும். ஆண் மயிலே தோகை விரித்தாடும். மயில் தோகையிலுள்ள இறகுகளில் பச்சையும் நீலமும் கலந்து அமைந்துள்ள கண்கள் பார்ப்பவர் உள்ளங் கவரும் இயற்கை அழகைக் கொண்டுவிளங்குகின்றன. நல்ல சோலைப் பகுதிகளில் இளவேனிற் காலத்தில் மேகம் திரண்டு மழை பொழியத் தொடங்குமுன் மயில்கள் அகவித் தோகை விரித்தாடும் அழகுக் காட்சியைத் 'தண்டலை மயில்களாட' எனக் கம்பரைப் போன்ற காப்பியப் புலவர்களும் வருணித்துப் பாடியுள்ளனர்.

இந்தியாவின் பல பகுதிகளிலும் 'மயூர் நாட்டியம்' என்னும் பெயரால் வழங்கப்பட்டு வரும் இந் நடனம் பரதநாட்டியம் போன்ற செவ்வியல் நடனங்களில் இடம்பெற்று வருவதுடன் தமிழக நாட்டுப்புற நடனங்களில் ஒரு நடனமாகவும் விளங்கி வருகின்றது.

**மயில் நடன வரலாறு**: தமிழக நாட்டுப்புற நடனங்களுக்குப் புகழ்பெற்ற இடமாகக் கருதப்படும் தஞ்சையில் இந்நடனம் முதன்முதலாக ஆடப்பட்டது என்று கூறுகிறார்கள். தொடக்கநிலையில் மயில் தோகை சுருங்கி விரிய வசதி இல்லாதிருந்த நிலையை மாற்றி, ஆடுபவர் குனிந்தால் தோகை விரியவும் நிமிர்ந்தால் தோகை சுருங்கிக்கொள்ளவும் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டன. தஞ்சையிலிருந்து இந்நடனம் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவியது.

**பரதநாட்டியத்தில் மயில் நடனம்**: முதலில் நாட்டுப்புறக் கலையாகப் புகழடைந்த பின்னரே பரதநாட்டியத்தில் மயில் நடனத்தைப் புகுத்தி ஆடும் நிலை ஏற்பட்டது எனத்தெரிகிறது. பரதநாட்டியத்தில் பரதமாடும் பெண் கலைஞர் இம்மயில் நடனத்தைச் செவ்வியல் பக்க இசைக்கேற்ப நளினமான உடலசைவுகள் மூலம் ஆடிக் காட்டுவது காணுதற்கு இனிய

காட்சியாக விளங்குகிறது. இதில் மயில் நடனம் ஆடும் பெண் தலையில் மயில் கூட்டை அணிந்து கொள்வதில்லை. உடை மட்டுமே பச்சையும் நீலமும் கலந்த உடையாக அணிந்து இடுப்பில் விரிந்து சுருங்கும் மயில் தோகையைக் கட்டிக்கொண்டு ஆடுகிறார். இரு கைகளையும் மயிலின் மூக்கு போல் அமைத்துக் கொண்டு ஆடுகின்றனர். மயில் தயங்கித் தயங்கி நடத்தல், எகிறிக் குதித்து ஆடுதல், மகிழ்ச்சியால் தோகையை விரித்தாடுதல், பாம்பைத் தாக்கப் பம்முதல், பின்னர்த் திடீரெனத் தன் அலகால் பாம்பைத் தாக்குதல் போன்ற பாவனைகளைச் செய்து ஆடுகின்றனர்.

வாய்ப்பாட்டு, புல்லாங்குழலிசைக்கு ஏற்ப அமையும் மிருதங்கம், தாளம் போன்ற பக்க வாத்திய இசை ஆகியவற்றிற்கு ஏற்ப மயில் நடனம் ஆடும் பெண்ணின் காலடவுகளும் உடலசைவுகளும் நிகழ்த்தப் பெறும்.

இந்நடனம் ஆடும் பெண்டிர் காலோடு ஒட்டிக் கொண்டுள்ள காலுறைகளை அணிந்தும், முழுக்கையும் மறையும்படியான மேலாடை அணிந்தும், தலையில் சிறிய மயில் தோகைக் கொத்தை மயில் கொண்டை போல் அணிந்தும் ஆடுகின்றனர்; காலில் சதங்கை அணிந்தும் ஆடுகின்றனர்.

**நாட்டுப்புறக் கலையாக மயில் நடனம்:** நாட்டுப்புறக் கலையாக இந்நடனம் விளங்குகையில் பெரும்பாலும் ஆண் கலைஞர்களாலேயே ஆடப்பட்டு வருகிறது. அவ்வாறு ஆடப்படும்பொழுது செவ்வியல் கலையிலிருந்து உடை, பயன்படும் கருவிப் பொருள் பக்க இசை, ஆட்ட அடவுகள் என்ற பல நிலைகளிலும் இந்நடனம் முற்றிலும் வேறுபட்ட அளவில் காணப்படுகிறது.

**மயில் கூடு:** இந்நடனத்தை ஆடும் நாட்டுப்புறக் கலைஞர் மயிலின் உடல் போன்ற கூட்டை, களிமண் அச்சின்மேல், தாள், காடாத்துணி, சாக்கு, போன்றவற்றை ஒன்றன்மேல் ஒன்றாகப் பல அடுக்குகளாகப்பசையால் ஒட்டி, அவை காய்ந்து உலர்ந்தபின் இரண்டாகக் கத்தியால் அறுத்துப் பிளந்தெடுத்துப் பின் அவற்றை இணைத்து நூலினால் தைத்துத் தையல் மறைய மேலும் தாள், காடாத்துணி ஒட்டிய பின், மேடு பள்ளங்கள் போகச் சுண்ணத்தூள் கோந்து, வச்சிரம், நீர் கொண்டமைத்த கலவையை அக்கூட்டின் மேல் பரப்பில் மேடு பள்ளமின்றிப் பூசி, அவை உலர்ந்தபின் மயிலின் உடம்பு போல் தோன்றும்படியாகப் பச்சை, நீல வண்ணங்களில் எழுதித் தயாரித்துக் கொள்கின்றனர். அந்த மயில் உடம்புக் கூட்டை, ஆடுபவர் தம் தோளில் சுமக்கும்வண்ணம் கழுத்தில் அணிந்து கட்டிக் கொள்வார். கெட்டியான காகித அட்டையில் மயிலின் இறகுகள் போல் வெட்டப்பட்ட இரு அட்டைகளின் மேலும் தாள், காடாத் துணி ஒட்டி, முற்கூறப்பட்ட பசை கலந்த சாக்குத்தூள் கலவையைப் பூசி, மயிலின் இறக்கைகள் போல் தோன்றும்படி வண்ணமும் சித்திர வேலைப்பாடுகளும் வரையப்படும். ஆடுபவர் தம் இரு தோள்பட்டைகளிலும் பக்கத்திற்கு ஒன்றாக இதனைக் கட்டிக் கொண்டு ஆடுவார்.

**மயிலின் தலைக்கூடு:** மயிலின் தலையும் மேற்கண்ட முறையிலேயே களிமண் அச்சிலிருந்து தாள், காடாததுணி, சரக்கு முதலியவற்றைக் கொண்டு ஒட்டிச் செய்து கொள்ளப்படுகிறது. அம்மயிலின் தலையில் மயிலிறகு கோக்கப்பட்ட கம்பிகள் கொண்டை போல் அமைக்கப்படுகின்றன. இரு குவி கண்ணாடிகளைப் (Convex Lens) பொருத்திக் கண் அமைக்கப்படுகிறது. மயிலின் மூக்குப்போல் இரண்டாகப் பிளந்து மூடத்தக்கவகையில் இரும்புத் தகட்டில் மயில் மூக்குச் செய்யப்பட்டு அத்தலைக்கூட்டில் பொருத்தப்படுகிறது. மயிலின் அலகு மூடித்திறக்கும் வகையில் அத்தகடுகளுக்கடியில் பொருத்தப்படும் சிறியகயிற்றை மயிலின் தலைக்குள் செலுத்தி அக்கூட்டைத் தலையிலணிந்து ஆடும்ஆட்டக்கலைஞர் தம் கைகளில் அக்கயிற்றை இழுத்து மயில் தன் அலகைத் திறந்து மூடுவது போல் இயக்குகிறார்.

மயிலின் தலைக்கூட்டின் மேற்புறம் மயிலின் தலையைப் போலவே வண்ணக் கலவைகளால் சித்திர வேலைப்பாடுகள் வரையப்பட்டு அலங்கரிக்கப்படுகிறது. அக்கூட்டின் வட்ட வடிவக் கழுத்துப் பகுதியில் உள்ள உள்ளீடற்ற பகுதியை ஆடும் கலைஞர் தம் தலையில் பொருத்திக் கொண்டு ஆடுகிறார். கழுத்துப் பகுதியின் விளிம்போடு நீலத்துணி இணைக்கப்பட்டுத் தொங்கவிடப்படுகிறது. அத்துணி ஆடும் கலைஞனின் முகத்தைக் கழுத்துவரை மறைத்துக் கொள்ள உதவுகிறது.

மயிலின் உடல் கூட்டின் அடிப்புறத்தில் ஒரு சிறிய அரைவட்டத் தகட்டின் மேல் பக்கவாட்டில் இயங்கும் வண்ணம் பொருத்தப்பட்ட பல சிறிய தகரக் குழல்களில் மயிலிறகுக் கட்டுகள் செருகப்பட்டிருக்கும். அக்குழல்களை இணைத்து ஒரு கம்பி செருகப்பட்டிருக்கும். அது மயிலின்உடல் கூட்டின் அடிப்புறத்தில் அமையும்படி இணைத்துக் கட்டப்பட்டிருக்கும். அக்கூட்டை அணிந்து ஆடும் கலைஞர் நிமிர்ந்து ஆடும் போது, மயில் இறகுகள் குவிந்தும் குனிந்து ஆடும் போது தோகை விரிந்தும் தோன்றும்படி அந்த மயில் தோகை அமைக்கப்பட்டிருக்கிறது.





மயிலின் உடல் கூட்டின் விளிம்புடன் பொருத்தப் பட்ட பச்சைநிறத் துணி கலைஞரின் கால்வரை அவரை மறைத்துக்கொண்டு தொங்கும். அதனால் ஆடும் கலைஞரின் சலங்கை அணிந்த கால் மட்டுமே வெளியில் தெரியும். அம்மயில் கூட்டை அணிந்து ஆடும்போது உண்மையான மயில் ஆடுவது போன்ற தோற்றம் காணப்படும்.

நாட்டுப்புற நடனமாக விளங்கும் மயில் நடனத் திற்கு நையாண்டி மேளமே பக்க இசையாக விளங்கு கிறது. இரு நாகசுரங்கள், இரு தவில்கள், இரு பம்பைகள், ஒரு கிடுகிட்டி முதலிய பக்க இசைக் கருவி களின் கூட்டொலியே நையாண்டி மேளப் பக்க இசை யாக விளங்குகிறது.

அப்பக்க இசைக் கேற்ப மயில் ஆட்டக் கலைஞர் மயிலின் நடை, ஓட்டம், அசைவுகளைத் தாளத்திற்கேற்ப நிகழ்த்திச் சிறந்த காட்சிக் கலை யைப் படைத்தளிக்கிறார். இந்நடனக்கலையின் வெற்றி இக்கலைஞர் உண்மையான மயிலின் செய் கைகள் பலவற்றை இந்நடனத்தில் தம் அசைவுகள், நடைகள், தலையசைப்பு, தோகை விரித்தல் போன் றவை மூலம் வெளிக் கொணர்வதில்தான் அங்கி யுள்ளது. காலில் கட்டப்பட்டுள்ள சலங்கைகளின் கூட் டொலியோடு பக்க இசைக்கேற்ப மயிலாட்டம் நடை பெறும்பொழுது அது கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது.

நாட்டுப்புற மயில் நடனத்தில் மயிலாட்டக் கலைஞர் மயில் தன் அலகால் சிலருக்கு மாலை போடுவது, தரையில் வைக்கப்பட்ட பணத்தாளை மயில் தன் அலகால் கொத்தி எடுப்பது, மயிலின் வாயின் உட்பகுதியில் முன்னரே மறைவாகப் பொருத்தப்பட்டுள்ள சிறிய இரப்பர்க் குழாயின் நீட்சியைக் கலைஞர் தம் வாயில் வைத்துக்கொண்டு மயில் தன் அலகால் நீரை உறிஞ்சிக் குடிப்பது போன்ற பல வியக்கத்தக்க காட்சிகளைச் செய்து காட்டுவதையும் தம் மயிலாட்ட நிகழ்ச்சியில் சேர்த் துக் கொண்டுள்ளார். சில வேளைகளில் மயிலாட்டக் கலைஞருடன் ஒரு கரகாட்டப் பெண் கலைஞரும் சேர்ந்து ஆடுவதும் உண்டு.

இன்றைய நிலையில், மயில் நடனம் தனித்த ஆட்டக்கலையாக எங்கும் இடம்பெறுவது இல்லை. கரகம், காவடி, பொய்க்கால் குதிரை முதலான பல நாட்டுப்புற நடனங்களுடன் இதுவும் ஒரு நடன வகையாகச் சேர்த்து ஆடப்பட்டு வருகிறது. கு.மு.

*மயில் ராவணன்*: ஒரு நிலைக் காவியம் என வும் வளர்நிலைக் காவியம் எனவும் காவியம் இரு வகைப்படும். இராமாயணம் வளர்நிலைக் காவியம் ஆகும். வளர்நிலைக் காவியம் நாளுக்கு நாள் புதுப் புது வடிவம் எடுக்கும். அதில் புதிய பாத்திரங்கள் தோன்றும்; பழைய பாத்திரங்கள் புதிய கோலம் கொள்ளும்.

வளர்நிலைக் காவியமான இராமாயணத்தில் புதிய புதிய பாத்திரங்கள் தோன்றுகின்றன. வால் மீகத்திலோ, கம்பனிலோ இருக்குமிடம் தெரியாமலி ருக்கும் இலக்குவனின் மனைவி ஊர்மிளை, ஒரு காவிய நாயகியாக மாறுகின்றாள். இராமாயணத்தில் சிறு பாத்திரமாக இருந்த அகலிகை, அகலிகை வெண்பா வில் காவிய நாயகியாக விளங்குகிறாள். அவ்வாறே, கம்பனோ வால்மீகியோ அறியாத மயில்ராவணன் இராமகதையில் புகுந்து, பாமர மக்களின் இத யத்தைக் கொள்ளை கொள்கிறான்.

மூல பலச் சேனை அழிந்தபின் இராவணன் பாதாள இலங்கையில் வாழும் மயில் ராவணன்பால் தன்நிலையைக் கூறுகிறான். மயில் ராவணன் இராமனையும், இலக்குவனையும் காளிக்குப் பலி யாக்குகிறேன் என்று சபதம் செய்கிறான். மயில் ராவணன் செய்த சபதம் அறிந்த அனுமன் இரா மனையும் இலக்குவனையும் பெட்டியில் வைத்து மூடி, அதன்மேல் தன் வாலையே கோட்டையாகக் கட்டிக்கொண்டு அதன் உச்சியில் அமர்ந்துவிடுகிறான்.

மயில்ராவணன், தன்னுடைய சதுரன், சாத்தியன் என்னும் அமைச்சர்களை இராமனையும், இலக்கு வனையும் கவர்ந்துவர அனுப்புகிறான். அவர்கள் இலங்கை சென்று அனுமன் வாலையும் அசைக்க முடியாதபடியால் சோர்வுடன் மீண்டு வந்து தம் இயலாமையைக் கூறுகின்றனர்.

சூழ்ச்சிமிக்க மயில் ராவணன் இலங்கை சென்று வீடணன் போல் வடிவம் கொண்டு, அனுமன் வாய் வழியே சென்று இராமனையும் இலக்குவனையும் கவர்ந்து பாதாளலோகம் சென்று விடுகின்றான்.

இச்சூழ்ச்சியைப் பின்பு உணர்ந்த அனுமன் கடலின் நடுவில் உள்ள தாமரைத் தண்டின் வழி யாகப் பாதாள இலங்கை சென்று மயில் ராவணன் அரண்மனைக்குள் புகுகின்றான்.

அக்கோட்டையைக் காப்பவன் மச்ச வல்லபன்; பெருவலி படைத்தவன். அவனை எவராலும் வெல்ல வியலாது. அனுமன் கடல்தாவும்போது அவனுடைய வேர்வையை அருந்திய திமி என்னும் மீனின் வயிற்றிற் பிறந்தவன் மச்ச வல்லபன்.

அவன் அனுமன் இன்னான் என்று அறிந்து கோட்டைக்குள் செல்ல வழிவிடுகிறான். பாதாள உலகின்கோட்டை கல், பித்தளை, செம்பு, வெண்

கலம், பொன், பவளம், முத்து முதலியவற்றால் கட்டப்பட்டது. மதிலையெல்லாம் உடைத்துச் சென்ற அனுமன்அங்கே மயில் ராவணனின் சகோதரி யாகிய தாரகண்டியைக் காண்கின்றான். அவருடைய கணவர் காலதத்தன்; மகன் நீலமேகன். சோதிடர் மயில்ராவணனுக்குப் பின் நீலமேகன் ஆட்சிக்கு வருவான் என்று கூறியதால் மயில் ராவணன் நீல மேகனைக் காளிக்குப் பலியிட எண்ணியுள்ளான். இச்செய்தியறிந்த அனுமான் தாரகண்டிக்கு அபயம் கொடுக்கின்றான். மயில் ராவணனைக் கொன்று நீல மேகனுக்கு முடிசூட்டுவதாகக் கூறி மயில் ராவண னைக் காணப் போகின்றான்.

அனுமனும் மயில்ராவணனும் போர் புரிகின்றனர். ஆனால், ம்யில் ராவணன் இறக்கவில்லை. அவன் உயிர்நிலை ஒரு குகையில் உள்ள வண்டில் இருப்ப தாகத் தெரிந்து அனுமான் அதைப்பற்றிக் கொல் கிறான். உடனே மயில்ராவணன் இறக்கிறான். அனு மான் நீலமேகனுக்கு முடிசூட்டி இராமனையும் இலக்குவனையும் வைத்த பெட்டியுடன் இலங்கை திரும்புகின்றான். வானர வீரர்கள் மகிழ்கின்றனர். இராவணன் கவலைப்படுகின்றான். இக்கதை இராம னுக்குப் புகழ் தரவில்லை. அனுமனுக்குச் சிறப்பை வழங்குகின்றது.

இராமாயணத்தை நாடகமாக இயற்றிய அருணாசலக் கவிராயர் அனுமார் பிள்ளைத் தமிழில் இவ்வரலாற்றைச் சிறுபறைப் பருவத்தில் ஆறு பாடலில் கூறுகின்றார்.

கவிராயர் மயில்ராவணன் பெயரை மயிரா வணன் என்று கூறுகிறார். இலங்கையில் இராமலக்கு வணரைக் கவரச் சென்ற வீரரைக் கந்தவத்திரன், சிசுவத்திரன் என்கிறார். மச்சவல்லபனை, 'கடல் பாயும் நாள்... வேர்வைத்துளி விழுங்கி மகரம் பெற்ற பெருமச்ச வல்லபன்' என்று அறிமுகப்படுத்து கின்றார். மயில் ராவணனையும் வண்டுகளையும் அனுமான் கொன்றதையும், நீலமேகனுக்கு முடி சூட்டியதையும், 'மயில் ராவணனும் வண்டு ஏழும் படப்பட நொறுக்க வைத்துத் தூரத்தண்டி மகன் நீலமேகனுக்கு அரசு பட்டமும் கட்டி வைத்து' என்று குறிப்பிடுகின்றார். செயற்கரும் செயல் செய்த அனு மான் செருக்கில்லாமல், இராமனையும் இலக்கு வனையும் மீட்டான் என்றும், பேராயிரம் கொண்ட பெருமானையும் துணைப்பெருமானையும் மகிழ்ச்சித் திறலார் கரம் குவித்து அயல் நின்ற சேவகன் என்று கூறிப் போற்றினர் என்றும் குறிப்பிட்டுக் கதையை நிறைவு செய்கின்றார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், இளம் பருவத்தில் மயில் ராவணன் கதையைக் காவியமாகப் பாடியதாக ஐயர் அவர்கள் மீனாட்சி சுந்தரம்பிள்ளை வரலாற் றில் குறித்துள்ளார். எஸ்.கே.இரா.

**மயில்வாகனப் புலவர்**: ஈழ நாட்டின் முப் பெரும் புலவர்கள் 'மயில்வாகனம்' எனப் பெயர் பெற்று விளங்கினர். மாதகல் என்னும் ஊரினைச் சார்ந்த மயில்வாகனப் புலவர் என்பவரும், தெல்லிப் பழையில் வறுத்தலைவிளான் என்னும் ஊரினைச் சார்ந்த க. மயில்வாகனப் புலவர் என்பவரும் யாழ்ப் பாணத்தைச் சார்ந்தவர்களாவர். மட்டக்களப் பினைச் சார்ந்த காரைத்தீவு என்னும் ஊரில் பிறந்த விபுலானந்த அடிகளின் இளமைக் காலப் பெயர் மயில்வாகனன் என்பதே.

**மயில்வாகனப் புலவர்** (மாதகல்): யாழ்ப்பாணத் தைச் சார்ந்த மாதகல் என்னும் ஊரில், வையா என்னும் புலவரது மரபிலே தோன்றியவர் இவர். இவர் கண்டி மன்னன் மீது 'கிள்ளை விடு தூது' என்னும் நூலினை இயற்றிய மாதகல் சிற்றம்பலப் புலவரின் மருமகன் என்றும் தெரிகின்றது.

சைவ சமயத்தைச் சார்ந்தவரான இவர் கூழங் கைத் தம்பிரானிடத்தில் தமிழிலக்கிய இலக்கணங் களைக் கற்றார். வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலைப் புதிதாகக் கட்டுவித்த வைத்தியலிங்கச் செட்டியாரும் இவரும் ஒருசாலை மாணாக்கர் என்பர்.

இவர் கி.பி. 1779 முதல் 1816 வரை வாழ்ந்தார். இவர் இயற்றிய நூல்கள் நான்கு. அவை, 1) யாழ்ப் பாண வைபவ மாலை, 2) புலியூர் யமக அந்தாதி, 3) காசியாத்திரை விளக்கம், 4) ஞானாலங்கார ரூப நாடகம் என்பனவாம்.

**மயில்வாகனப் புலவர், க.**, யாழ்ப்பாணத்தைச் சார்ந்த தெல்லிப் பழையில் கி.பி. 1875-இல் வறுத் தலைவிளான் என்னும் ஊரில், இலங்கை நாத முதலி யார் மரபிலே கணபதிப்பிள்ளை என்னும் ஆசிரியருக் குப் புதல்வராகத் தோன்றியவர். இவர் இளமைக் காலத்தில் அவ்வூரிலுள்ள அமெரிக்கத்திருச்சபைதமிழ்ப் பாடசாலையிற் கல்வி பயின்றார். பின்னர், பன்னி ரண்டு வயதில் தெல்லிப் பழையிலமைந்த அமெரிக்கத் திருச்சபை ஆங்கிலப் பள்ளியில் ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். அதன்பின், யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் கல்லூரிக்குச் சென்று படித்து வந்தார். ஓய்வு நேரங்களில் தமிழிலக்கண இலக்கியங்களைத் தாமே கற்றுத் தேர்ந்து, ஐயங்களை அக்கல்லூரித் தமிழ்ப் புலவர் ஆ. சோமாசுகந்த பிள்ளையிடம் கேட்டுத் தெளிந்தார்; கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவரிடமே தமிழிலக்கண இலக்கியங்களைத் தனிப் பட்ட முறையில் கற்றார்.

இவர் தம் இருபத்திரண்டாம் வயதில் இந்திய நாட்டிற்கு வந்தபோது, இராமநாதபுரத்திலிருந்த உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவருடன் சென்று சேதுபதி மன்னரைக் கண்டார். அம்மன்னரின் விருப்பத்திற்கேற்ப ஒரு கவி பாடி மன்னரின் பாராட்டையும் பெற்றார்.

இவர் தெல்லிப்பழையிலும் மல்லாகத்திலுமுள்ள ஆங்கிலப் பள்ளிகளில் ஆங்கில ஆசிரியராக இருந்த போது தேர்வுகளில் வெற்றி பெற்றுப் பத்திரம் எழுதிப் பதிவு செய்பவராக நியமனம் பெற்றார். இவர் வட்டுக் கோட்டையிலும் மயிலிட்டியிலும் அப்பணியை மேற்கொண்டிருந்தார். மயிலிட்டியில் இருந்த காலத்தில் 'இந்து பரிபாலன சபை' என ஒரு சபையை நிறுவி அதற்குத் தலைவராகவும் இருந்தார்.

இவர் இயற்றிய நூல்களாவன; 1) இணுவைப் பதிற்றுப் பத்தந்தாதி, 2) மயிலை மும்மணி மாலை, 3) விநாயகரகவல், 4) மயிலைச் சுப்பிரமணியர் விருத்தம் 5) ஊஞ்சல், 6) வைரவர் தோத்திரம், 7) மாவைப் பதிகம், 8) இணுவைப் பதிகம், 9) துணுவைப் பதிகம், 10) கீரிமலை நகுலேசுவரர் மீது வினோத சித்திர கவிப் பூங்கொத்து, 11) திருநீலகண்ட நாயனார் சரித்திரம் (நாடகம்).

நாற்பத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்த இவர் 1918-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

**பண்டிதர் மயில்வாகனன்**: ஈழநாட்டில் கி.பி. 1892-ஆம் ஆண்டு பிறந்த விபுலானந்த அடிகளின் இயற்பெயர் மயில்வாகனன் என்பதாகும். இவரை 1924-ஆம் ஆண்டு வரை 'பண்டிதர் மயில்வாகனன்' என்றே வழங்கினர். இராமகிருட்டிண மடாலயத் தலைவர் சுவாமி சர்வானந்தர் 1924-ஆம் ஆண்டு சித்திரை மாதம் முழுமதி அன்று இவருக்குக் குருப்பட்டஞ் சூட்டிய பின்னரே இவர் 'சுவாமி விபுலானந்தர்' என அழைக்கப் பெற்றார்.

இவரைப் பற்றிய பிற விவரங்களை விபுலானந்த அடிகள் என்னும் தனிக்கட்டுரையில் காணலாம்.

வே.இரா.மா.

**துணை நூல்கள்:**

**இராமசாமிப் புலவர், சு.அ.,** தமிழ்ப்புலவர் அகர வரிசை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960.

**கணபதிப்பிள்ளை, மு.** தென்புலோலியூர் ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள், பாரிநிலையம், சென்னை, 1967.

***மயில் விருத்தம்***: இது கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் அருளிய நூல்களுள் ஒன்று. குமாரக்கடவுளின் ஊர்தியாகிய மயில் பற்றி, விருத்தயாப்பில் அமைந்தது. இந்நூலுள் காப்புச் செய்யுள் ஒன்றும், நூற்பாடல்கள் பத்தும், நூற்பயன் ஒன்றும் ஆகப் பன்னிரண்டு செய்யுட்கள் உள்ளன. திருமுருகன், அருணகிரிநாதருக்குத் திருவண்ணாமலையில் காட்சி தந்தருளப் பெரிதும் துணைநின்றது மயில். சக்தியுபாசகனாகிய சம்பந்தாண்டான் திருவண்ணாமலையில் பெரும் மந்திரச் சித்தி பெற்றமையால் செருக்குற்று, அருணகிரிநாதரைப் பலவாறாகத் தூற்றித் திரிந்தான். அக்காலத்தில் அரசாண்ட பிரபுடதேவராயன் முன்னிலையில் சம்பந்தாண்டானிடம் செய்துகொண்ட அறைகூவலையேற்றுக்கந்தவேளிடம் காட்சியருளுமாறு வேண்டி நின்றார் அருணகிரிநாதர். எளிதில் காட்சி கிடைக்கவில்லை. சம்பந்தாண்டான் காரணமாக, அம்பிகை தன்மகன் கந்தனை மடிமிசைஇருத்தி அருணகிரிநாதரிடம் செல்லாதிருக்கத் தடைசெய்து விடவே, அவர் திருப்புகழைப்பாடி மயிலை நெஞ்சுருகி, வேண்டினார். அம்பிகைமுன் மயில் அழகுற நடனம் புரிந்தது; நடனக்காட்சியில் அவள் ஈடுபட்டு மகிழ்ந்திருந்த வேளையில் தாயின் மடியிலிருந்து நழுவித் திருக்கோயில் தூணில் காட்சியளித்தருளினான் கந்தன். நன்றியுடன் மயில்விருத்தம் எனும் நூலைச் செய்தார்.

மயில் விருத்தம் காப்புச் செய்யுளில் விக்கினம் களையும் விநாயகருக்கு அஞ்சலி செலுத்தி, முதற்பாடலில் முருகன் ஏறிவரும் மயில் விநாயகருடன் நடந்த போட்டியில் உலகங்களை ஒரு நொடியில் வலம்வந்த சிறப்புடையது என்று பாராட்டுகிறார் அருணகிரிநாதர். இரண்டாம் பாடலில் திருத்தணிகை முருகன் ஏறும்மயில்தான் ஆதிசேடன் அஞ்சவும் சூராதியவுணர் திடுக்கிடவும் ஆடி வந்தது எனவும், மூன்றாம் பாடலில் அசுரர்கள் அழியவும் பாதாளவுலகம் அசையவும் எட்டுத்திக்கு யானைகள் இடம்பெயரவும், நடராசப் பெருமான் மிக விரும்பவும் உமாதேவி உற்றுப் பார்த்து உவகை கொள்ளவும் தோகை விரித்தாடியது மயில் எனப்போற்றுகிறார். நான்காம் பாடலில் மயில் தன்அடியை மிடுக்குடன் எடுத்து வைத்ததால் கடல் வற்றி நிற்கவே, கோடிக் கணக்கான தேவருலகங்களும் பாதாளலோகமும் பலகோடி மலைகளும் நொறுங்கி விண்ணிற் பறந்தன எனக் கூறுகிறார். ஐந்தாம் ஆறாம் பாடல்களில் முருகப்பெருமானது வெற்றிமயில் எல்லா அண்டங்களையும் முட்டைகளை அணைப்பதைப்போலத் தன்விரிந்த சிறகால் அணைக்க வல்லது எனவும், ஏழாம் பாடலில்நாகங்கள் நடுங்கவும் மலைகள் துகள்படவும் மயில் அசைந்து அசைந்து ஒய்யாரமாக நடந்து வரும் இயல்பினது எனவும், எட்டாம் பாடலில் பேராற்றலுடைய வாசுகியெனும் பாம்பையே எடுத்து உதறவல்லது கந்தனின் மயில் எனவும், ஒன்பதாம் பாடலில் மழைமேகம்

போன்ற மயில் பல வண்ணங்களுடன் கூடிய தன்கலாபத்தை வீசி நிமிருந்திறமுடையதாகவும் அரக்கர்களை நடுநடுங்கச் செய்வதாகவும் உள்ளது எனவும், பத்தாம் பாடலில் ஆறுமுகன் நடத்தும் மயில் உலகெல்லாம் உலவி மகிழும் பெருமையுடையது எனவும் தெய்வநலக் கற்பனையுடன் கூறிச்செல்கிறார். அருணகிரியார் தாம் பாடிய மயில் விருத்தத்தை அன்புடன் ஓதுபவர்கள் பிரமபதம், திருமால்பதம், இந்திரபதம் முதலிய பல பதவிகளையும், பரகதியையும் பெற்றுச் சிறப்புறுவர்; உலகியலில் செல்வ வளத்துடன் ஆயிரம் பிறை தொழுது சதாபிடேகம் பெறுவர் என்று இயம்புகிறார். மயில் விருத்தம் இறுதிப் பாடலில், 'அருணகிரிநாதன் பகர்ந்த அதிமதுரச் சித்திரப்பாடல்' என வந்துள்ளமையால் இதனை அருணகிரியார் உலக நினைவுடன் தம்மியல்பில் பாடியிருத்தல் இயலாது என்பர். செ.வை.

*மயிலம்*: இது, தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலம் புகைவண்டி நிலையத்தினின்றும் 4 கி.மீ. தூரத்தில் இவ்வூர் உள்ளது. திண்டிவனத்தினின்றும் நகரப் பேருந்து வசதி இருக்கிறது. இவ்வூரில், ஒரு குன்றின்மீது முருகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான். மயில் வழிபட்டுப் பேறு பெற்றதால் இவ்வூர் 'மயிலம்' எனப் பெயர் பெற்றது என்பர்.

திருமுது குன்றம் தியாகராசக் கவிராயர் இயற்றிய 'மயூராசல புராணம்' என்னும் தலபுராணம் இதற்கு இருக்கிறது. அதனைத் திருப்பெருந்திரு சிவஞான பாலைய சுவாமிகள் 1931 – இல் பதிப்பித்தார்கள். 'மயிலையங்கிரி மான்மியச் சுருக்கம்' என்ற நூலும் இதற்கு உண்டு. அதனை இயற்றியவர் ரா.சுப்பராமய்யர். அது 1940 – இல் அச்சாகியுள்ளது. அந் நூலாசிரியரே 'திருமயிலையங்கிரி முருகனலங்காரம்' என்ற நூலையும் இம்முருகன் மீது பாடியுள்ளார்.

அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற தலம் இது. முருகதாச சுவாமிகள் என்னும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், 'மயிலாசலக் கலம்பகம்' என்னும் நூலைப் பாடியருளியுள்ளார். அது 100 பாடல்களைக் கொண்டது; திருவாமாத்தூர்க்கௌமார சபையாரால் அச்சிடப்பட்டுள்ளது. முருகதாச சுவாமிகள், இம்முருகன் மீது 11 திருப்புகழ்ப் பாடல்களையும், இரண்டு மயிலாசனப் பதிகங்களையும், பல தனி வெண்பாக்களையும் பாடியுள்ளார். சிவஞானபாலைய சுவாமிகள் பதிகமும், சிவப்பிரகாச மூர்த்தி பதிகமும் இவர் பாடியனவேயாகும். இவர் மயிலம் குமரவேள் பதிகம், மயிலம் குமரேசன் வகுப்பு, மயிலம் வினாப்பதிகம், மயிலம் முருகன் பதிகம், மயிலம் படைவீட்டுப் பதிகம், மயிலம் படைவீட்டுத் திருப்புகழ் முதலியவற்றைப் பாடியுள்ளார்.

இங்குத் திருப்பெருந்திரு சிவஞானபாலைய சுவாமிகளின் திருமடமும், சிவஞான பாலைய சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியும் உள்ளன. மயிலம் திருக்கோயிலின் நாள்பூசையும் விழாக்களும் பிறபணிகளும் இச் சிவஞான பாலைய சுவாமிகள் மடத்தின் ஆதரவில் நடைபெற்று வருகின்றன.

இக்கோயிலில் நிகழும் பங்குனி உத்திரப் பெருவிழாவும் தேர்த்திருவிழாவும் சிறப்புடையனவாகும். பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்விழாக்களைக்காண வந்து கூடுவர். மாசிமகத்தின் போது, இம்முருகன் இங்கிருந்து புதுவை சென்றடைந்து, அங்குள்ள கடற்கரையில் அமர்ந்து கடல்நீராடித் தீர்த்தமருளிப் பின்னர், புதுவையில் உள்ள தவத்திரு சிவஞான பாலைய சுவாமிகள் மடத்தில் எழுந்தருளிச் சில நாள்கள் தங்கி, விழாக்கள் கொண்டாடிய பிறகு, மயிலம் எழுந்தருளுவது இன்றும் வழக்கமாக உள்ளது.

மிகப் பெரிய கால்நடைச் சந்தை இங்குக் கூடுவது குறிப்பிடத்தக்கதாகும். வீ.சொ.

*மயிலாப்பூர்* என்பது தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற 32 தலங்களுள் இருபத்து நான்காவதாகும். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய 'மட்டிட்ட புன்னை' என்னும் சீகாமரப் பண்ணுள்ள பதிகம் ஒன்று மாத்திரம் உள்ளது. அத்தலம் இப்போதுள்ளதற்குக் கிழக்கே கடற்கரைப் பக்கம் இருந்ததென்றும், போர்ச்சுகீசியர்கள் படையெடுப்பின்போது அது தகர்க்கப் பெற்றதென்றும், பின்னர்ச் சைவப்பெருமக்கள் இப்போதுள்ள இடத்தில் புதுக்கோயில் கட்டி நகர் அமைத்தனரென்றும் தெரிகிறது. ஆகையால், இக்கோயிலில் கல்வெட்டுகள் ஒன்றும் காணப்படவில்லை. சில கல்வெட்டுகள் சிதைந்து அங்கங்குச் சுவர்களில் காணப்படுகின்றன. அது ஒழுங்குபெறக் கற்களை அடுக்கிவைக்காததால் ஏற்பட்ட நிலையாகும். இத்தலத்திற்குத் திருமயிலை நர்தமுனி முதலியாரியற்றிய 806 பாக்கள் கொண்ட ஒரு புராணம் உண்டு. அமிர்தலிங்கத்தம்பிரான் என்பவரியற்றிய வேறு ஒரு தலபுராணமும் இருப்பதாகத் தெரிகிறது.

உமையம்மையார் மயிலுருக் கொண்டு புன்னையடி நிழலில் இறைவனை வழிபட்டுத் தம் உருவம் பெற்றுப் பெருமானைத் திருமணம் புரிந்து கொண்டதாகத் தல வரலாறு கூறுகிறது. இத்தலத்தில் சிவநேசர் என்னும் வணிகர் ஒருவர் தம் ஒரே பெண்ணாகிய பூம்பாவை என்பவளைத் திருஞானசம்பந்தருக்கு வாழ்க்கைத் துணையாக்க எண்ணி வளர்த்து

வந்தார். பூம்பாவை பாம்பு கடித்து இறக்கவே அவளுக்குரிய ஈமக் கடனாற்றி அவள் எலும்புகளை ஒரு குடத்தில் சேமித்துப் பூசித்து வந்தார். சம்பந்தர் திருவொற்றியூருக்கு வந்ததைத் தெரிந்து அவரை மயிலாப்பூருக்கு வரவழைத்தார். திருக்கோயில் வழிபாடு முடிந்ததும் சிவநேசர் எலும்புக்குடத்தைச் சம்பந்தர் முன்னர் வைத்து பூம்பாவை பற்றிய வரலாற்றினை விளக்கினார். அது கேட்ட சம்பந்தர் பாடி இறையருளால், எலும்பைப் பெண்ணுருவாக்கினார். இப்பெருமை வாய்ந்தது இத்தலம். இத்தலப் பதிகத்திலிருந்து அக்காலத்துத் தமிழகத் திருக்கோயில்களில் நிகழ்த்தப்பெற்ற விழாக்களையும் அவற்றின் பெருமை, காலம் முதலியவற்றையும் தெள்ளிதின் உணரலாம். தமிழ் மறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் பிறந்த தலமும் மயிலாப்பூரே எனக் கூறுகின்றனர். அவர் திருக்கோயிலும் இங்கு இப்பொழுதும் சிறந்து விளங்குகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய வாயிலார் நாயனார் தோன்றி அகப்பூசை யாற்றி முத்தி பெற்றதலமும் இதுவே. மேலும் ஏழு இருடிகள் முதலிய பலரும் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

மயிலாப்பூர்க் கோயிலை மையமாகக் கொண்டு வெள்ளீசுரர், காரணீசுரர், தீர்த்தபாலீசுரர், வாலீசர், மல்லீசர், விருபாட்சீசர் ஆகியோர்க்குரிய திருக்கோயில்கள் சூழ்ந்து விளங்கி, இவ்வூரை அணி செய்கின்றன. இத்தலத்துக்குரிய பெருமான் பெயர் கபாலீசுரர், அம்மை பெயர் கற்பகவல்லி என்பதாம். 'கற்றார்களேத்தும் கபாலீச்சரம்' எனவும், இன்னும் பல்லாற்றானும் சம்பந்தரால் இப்பதி போற்றப்படுகிறது. திருமயிலை உலா, திருமயிலைக் கலம்பகம், திருமயிலைக் கற்பகவல்லியந்தாதி, திரிபந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி முதலிய நூல்களும் இத்தலச் சிறப்பை விரித்துக் கூறுகின்றன. இரா.ச.

**மயிலேறும் பெருமாள் பிள்ளை:** இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் பாண்டிய நாட்டில் உள்ள திருநெல்வேலியில் பிறந்தவர்; தந்தையார் தாண்டவமூர்த்தி. இவரும் 'பிரயோக விவேகம்' இயற்றிய திருக்குருகூர் சுப்பிரமணிய தீட்சிதரும் ஒரே காலத்தினர் ஆவர்.

சைவ சமயத்தில் மிகுந்த பற்றுக் கொண்ட இவர் திருவாவடுதுறை ஆதீனத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 'இலக்கணக் கொத்து' இயற்றிய சாமிநாத தேசிகரின் ஆசிரியர் இவரே.

சாமிநாத தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்தில் சேர்ந்திருந்த காலத்தில், வழக்கம்போல் மயிலேறும் பெருமாள் பிள்ளை ஆதீனத்திற்குச் சென்றபோது சாமிநாத தேசிகரின் அறிவு நுட்பத்தைக் கண்டு, அவருக்குக் கல்வி புகட்டின் மிகுந்த சிறப்பெய்துவார் என உணர்ந்தார். அதன் பொருட்டு ஆதீனத் தலைவரின் இசைவு பெற்றுத் தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் போதித்தார். வடமொழிப் புலவரைக் கொண்டு வடமொழிப் பயிற்சியும் அளித்தார். மயிலேறும் பெருமாள் பிள்ளை எதிர்பார்த்தவாறே சாமிநாத தேசிகரும் கல்வியில் தேர்ந்து விளங்கினார்.

மயிலேறும் பெருமாள் பிள்ளை தொல்காப்பியம் முதலான இலக்கண நூற்புலமையும் சங்க இலக்கியப் புலமையும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்தார்.

கல்லாடர் இயற்றிய 'கல்லாடம் என்னும் நூல் கடிய நடையில் அமைந்திருப்பதனைக் கருத்தில் கொண்டு அந்நூலுக்கு உரை எழுதத் தொடங்கி, முப்பத்தேழு பாடல்களுக்குப் பதவுரை எழுதியுள்ளார். மற்றைய பாடல்களுக்கு உரை எழுதும் முன்னர் இவர் காலமானர். பெ.கோ.

**மயிலை நாதர்:** பவணந்தி முனிவர் இயற்றியருளிய நன்னூல் என்னும் இலக்கண நூலுக்கு உரை கண்ட உரையாசிரியருள் ஒருவர் மயிலைநாதர். தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவராகிய இளம்பூரணரைப் போல நன்னூல் உரையாசிரியருள் இவர் காலத்தால் முற்பட்டவர். இவரே நன்னூலின் முதல் உரையாசிரியர்என்பது சிலர் கருத்தாகும். இவர் உரையுள் சில நூற்பாக்களை விளக்குமிடத்து, இதற்குஇவ்வாறு கூறுவாருமுளர், உரைப்பாருமுளர் என்று காணப்படும் தொடர்களால் இவருக்கு முன்பே நன்னூலுக்குச் சிலர் உரைகண்டு கூறியுள்ளனர் என்பது புலனாகின்றது. எனினும், நூல் முழுமைக்குமாகக் காண்டிகையமைப்பிற் சீராகக் கிடைக்கும் உரைகளுள் இவர் உரையே முந்தியதாகக் காணப்படுகிறது.

மயிலைநாதர் என்னும் பெயர், சென்னை மயிலாப்பூரில் முன்பு அமைந்திருந்த சினாலயத்தில் வழிபடு கடவுளாக எழுந்தருளியிருந்த சைன சமய தீர்த்தங்கரருள் ஒருவரான நேமிநாதருக்கு வழங்கிய திருநாமமாகும். இவருக்கு அப்பெயர் அமைந்துவழங்கியுள்ளமை இவர் தமிழ் நாட்டவர் என்றும் தமிழர் என்றும் கருதுவதற்கு இடமளிக்கின்றது. நன்னூல் சிறப்புப் பாயிரத்திற்கு இவர் எழுதியுள்ள உரையும், சூத்திர விளக்கங்களுள் பல இடத்திற் காணப்படும் சமண சமயக் கருத்துகளும், சமண சமய நூல்களிலிருந்து காட்டப்படும் மேற்கோள்களும், எடுத்துக்காட்டுகளும் இவர் சமண சமயத்தை மேற்கொண்டொழுகியவர் என்பதைப் புலப்படுத்துகின்றன. ஆங்காங்கே அருகதேவனை இவர் புகழ்ந்து பேசுவதும் அதனை உறுதி செய்கின்றது.

நன்னூலைப் பவணந்தி முனிவரைக் கொண்டு ஆக்குவித்த அமராபரணன் சீயகங்கன் என்னும் குறுநில மன்னனை இவர் சிறப்புப் பாயிர உரையுள் மிகவும் பாராட்டிக் கூறியுள்ளமையாலும், 267-ஆம் நூற்பாவுரையுள் 'கங்கன் அகன் மார்பன் கற்றோர்க்கினி தளிக்கும், செங்கனக வெள்ளைச் செழுமணிகள்- எங்கும், தெறித்தனவே போல்விளங்கும் மீன்சூழ்ந்த திங்கள் எறிக்குநிலா வன்றோ இனி' என்னும் செய்யுளை எடுத்தாண்டுப் புகழ்வதாலும் இவர் சீயகங்கனைப் பெரிதும் மதித்துப் போற்றியுள்ளமை விளங்குகிறது. அதனால் இவர் சீயகங்கன் வாழ்ந்த காலத்தை ஒட்டி வாழ்ந்திருக்கலாம் என்றும், அவன் மரபினரால் ஆதரிக்கப் பெற்றிருக்கலாம் என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர். அங்ஙனமாயின் இவருடைய காலம் கி.பி. 13,14-ஆம் நூற்றாண்டினைச்சார்ந்ததாகக் கொள்ளலாம். சமணப் பெரியோர்களால் இயற்றப்பட்ட யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலிய நூல்களுக்கு உரை எழுந்த காலத்தில் இவர் வாழ்ந்திருக்கலாம் என்பதும், அச்சூழலில் நன்னூலுக்கு இவர் உரை வரைந்திருக்கலாம் என்பதும் சிலர் கருத்து. 'நுந்தை உகரம் குறுகி மொழி முதற்கண், வந்ததெனின் உயிர்மெய் யாமனைத்தும் – சந்திக் குயிர்முதலா வந்தணையும் மெய்ப்புணர்ச்சி யின்றி, மயலணையும் என்றதனை மாற்று' இவற்றை விரித்துரைத்து விதியும் விலக்கும் அறிந்துகொள்க (நூ-105) என வரும் இவர்தம் உரைக் குறிப்புகள் யாப்பருங்கலவிருத்தி உரைப் போக்கினை ஒத்துள்ளமை அக்கருத்துக்குத் துணை புரிவதாகும். இவருடைய உரை எளிமையும் தெளிவும் உடையதாய்ச் சுருக்கமாக அமைந்துள்ளது. எனினும், ஒருசில இடங்களில் சிறிது விளக்கமாக விருத்தியுரை போல அமைந்துள்ளமையையும் காணலாம். நன்னூல் பழந்தமிழ் இலக்கண நெறியினின்று ஓரளவுக்கு மாறிச் செறிவாகவும் சுருக்கமாகவும் அமைந்திருப்பதுடன், தானாட்டித் தனாது நிறுப்பாக வடமொழி மேற்கோளாகப் புதிய கோணத்தில் பதவிலக்கணக் கோட்பாட்டினை வகுத்துக் கூறியுள்ளது. நன்னூலுக்கு அவ்வாசிரியர் கருத்தையுணர்ந்து தமிழ் மரபையும் பேணி உரை காண்பது என்பது எளிமையான செயலன்று. பழந்தமிழ் இலக்கண அறிவும் புதிய கருத்துகளைச் சிந்தித்துணரும் திறனும் வடமொழிப் பயிற்சியும் ஓரளவு வாய்த்திருத்தல் வேண்டும்.

நன்னூலின் நூற்பா அமைப்பும் கருத்துகளைச் சொல்லும் முறையும் தொல்காப்பிய மரபினின்றும் பெரிதும் முரண்பட்டிருப்பதைப் பயில்வோர் அறியாதபடி முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துச் செய்யப் பெற்ற வழிநூலே என்று ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உரை காண முற்பட்டு அம்முயற்சியில் வெற்றி பெற்றுள்ளமை நோக்கத் தக்கதாகும். பின் வந்த உரைகள் யாவும் இவர்தம் அடிப்படைக் கொள்கையை ஏற்றுப் புதிய விளக்கங்கள் மட்டுமே கூறியுள்ளமையைக் காணலாம்.

இவர் தொல்காப்பிய மரபினை ஓரளவு நன்கு அறிந்தவர் என்பதை 'அவன் அவள் அவர் என்றற்றொடக்கத்தன ஈறுபகுக்க வேறுபால் காட்டலின் பகுபதமாம் எனின் பிற அவை ஒன்றாய் நின்று ஒரு பொருளாவதல்லது ஈறுபிரித்தால் பகுதி வேறு பொருள் படாமையின் அவற்றிற்குப் பகுதி விகுதித் தன்மையின்மையின் ஆகா என்க' எனக் கூறியுள்ள உரைப்பகுதி நன்கு புலப்படுத்துகின்றது.

இவர் இலக்கண நோக்கினும் சமய நோக்கு மிக்குடையவர் என்பதற்குப் பின்வரும் கருத்துச் சான்றாக உளது. அதாவது 'அகரம் தானே நடந்தும் நடவா உடம்பை நண்ணியும் நடத்தலானும், அரன் அரி அயன் அருகன் என்னும் பரமர்திருநாமத்திற்கு ஒரு முதலாயும், அறம் பொருள் இன்பம் என்னும் பொருட்களின் முதற்பொருட்கும், அருள் அன்பு அணி அழகு முதலாயின நற்பொருட்கு முதலாயும் வருதலானும் அகரம் முன் வைக்கப்பட்டது' என்பதாகும். மேலும், 'ஒருவரான் அரியதவம் பெற்றேன் என்றக்கால் ஆண்பால் என்பதும், ஒருவரால் அரிய மடல் பெற்றேன் என்றக்கால் பெண்பால் என்பதும் குறிப்பால் விளங்கும். அரிய தவமும் பெண்பாலாற் பெறல் அரியவோ எனின் 'நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே' எனச் சான்றோர் சொல்லுப ஆகலான் அரிய என்க' எனவரும் கருத்துகள் இவரது சமய நூற் பற்றினை நன்கு காட்டுவனவாகும்.

இவரது உரையமைப்புப் பெரும்பான்மையும் இளம்பூரணரது போக்கினை ஒத்துள்ளது. இவர், உரையுள் பழைய செய்யுள் இலக்கியங்களிலிருந்து பாடற் பகுதிகளை உரைநடையாக்கி மேற்கோள் தருதலையும் நயமான எதுகை மோனைகளொடு தொடர்களை அமைத்துச் செல்லுதலையும் காணலாம். உடலுயிர்த் தொழிற்குணம் (நூ. 452), உயிரில் பொருட்குணம் (நூ.453) போன்ற நூற்பாத் தொடர்களுக்கு எழுதியுள்ள விளக்க உரைகள் இவரது பரந்த நூற்பயிற்சியைக் காட்டுவனவாக உள்ளன.

நல்லிசைப் புலவோர்தம் பெயர்களைக் குறிப்பிடுமிடத்து மிகத் தெளி கேள்வி அகத்தியனார், ஒல்காப் புலமைத் தொல்காப்பியனார், அளவறு புலமை அவிநயனார், உளங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும் ஏதமிலிமாதவர் எனக் கூறுவதனால் அச் சான்

றோர்களிடத்து இவர் கொண்டிருந்த பெருமதிப்புப் புலனாகின்றது.

இவரது உரையினால் நன்னூலிற் காணப்படும் பாயிரம் பற்றிய நூற்பாக்கள் பவணந்தியார் செய் தவை அல்ல என்பது வலியுறுகின்றது. மற்றும் நன் னூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என் னும் ஐந்திலக்கணங்களையும் கொண்டிருந்ததாகக் கருதவேண்டியுளது. மேலும், மறைந்துபோன சில இலக்கண நூல்களைப் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவர் காலத்துச் சமுதாய வழக்குச் சிலவற்றை அறிந்து கொள்ள இவர் உரை பெரிதும் துணையாக விளங்குகிறது. ச.பா.

**மயூர கிரிக் கோவை:** கோவை இலக்கிய வகை நூல்களில் 'மயூரகிரிக் கோவை'யும் ஒன்றாகும். மருதுபாண்டியன் என்ற மன்னன் தமக்குற்ற இராசபிளவை என்னும் நோயைத் தீர்த்தருளிக் குன்றக்குடியில் கோயில்கொண்டருளும் முருகப்பெரு மான் மீது கோவை நூல் இயற்றுமாறு சாந்துப் புலவரிடம் வேண்டினார். மன்னனின் வேண்டு கோளுக்கிணங்கப் புலவரும் 'மயூரகிரிக் கோவை'யை இயற்றி அம்மன்னன் தலைமையிலேயே அரங்கேற் றம் செய்தார். குன்றக்குடி என்னும் இத்தலத்திற்கு மயூரகிரி, கண்ணபுரம், அரசவனம், மயூரபுரம் என்னும் பெயர்களும் உள்ளன.

இந்நூலில் 536 செய்யுட்கள் காணப்பெறுகின் றன. அனைத்துச் செய்யுட்களும் ஒரே விகற்பத்தால் வந்த எதுகையை உடையன. பாட்டுடைத் தலை வனாகிய முருகப் பெருமானின் பெருங்கருணைத் திறன்கள், புராண, இதிகாசச் செய்திகள், நீதிக்கருத்து கள், சிவகங்கையை ஆண்ட மருதுபாண்டியனின் நோயைக் குணப்படுத்தியருளிய முருகப்பெருமானின் கோயிலுக்கு அவர் செய்த திருப்பணிகள் போன்றவை அழகுற எடுத்துரைக்கப் பெறுகின்றன. இதில் சொல்நயம், பொருள்நயம், ஓசைஇனிமை, மடக்கு, தொனி, சித்திர கவிகள், பிறநூற் கருத்துகள் முத லியன காணப்பெறுகின்றன. இந்நூலுக்குச் சருக்கரை இராமசாமிப் புலவரால் அரும்பதவுரை எழுதப் பட்டுள்ளது. தா.ஈ.

**மயூர சந்தேசம்:** யாரேனும் ஒருவர் தம் உள்ளக் கருத்தை உயர்திணை அல்லது அஃறிணை யிடம் கூறி மற்றொருவரிடம் தூது சென்று வா என வேண்டும் பொருளமைதியில் இயற்றப் பெறு வதே தூது என்னும் இலக்கிய வகை ஆகும். அவ்வி லக்கிய வகை மலையாளத்திலும் வடமொழியிலும் 'சந்தேச காவியங்கள்' எனக் கூறப்படுகிறது. அவ் வகையில் எழுந்ததே 'மயூர சந்தேசம்' ஆகும்.

வடமொழியில் மயூர சந்தேசம் என்னும் பெய ரில் சில நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் உதய ராசா என்பவரால் இயற்றப் பெற்ற மயூர சந்தேச மும் ஒன்று ஆகும். அது டாக்டர் சி.குன்கன் ராசா என்பவரால் பதிப்பிக்கப்பட்டு வடமொழி முன்னு ரையும் எழுதப்பட்டுள்ளது. உதய ராசா, அபினவ குப்தாவினுடைய 'துவன்யாலோக லோசனா' விற்கு (Dhvanyaloka Locana), 'கௌமுதி' (Kaumudi) என்னும் உரை எழுதியவர் ஆவார். அவர் மணக் குளம் குடும்பத்தைச் சார்ந்தவர்.

இந்நூல் கேரளக் கவிஞர்களால் எழுதப்பெற்ற வடமொழி நூல்களுள் ஒன்றாகும். இது தன் உயர் இலக்கியச் சிறப்பால் மட்டுமன்றி, இடைக்காலக் கேர ளத்தின் வரலாறு, புவியியல் ஆகிய நிலைகளை வெளிப்படுத்திக்காட்டும் சிறப்பாலும் உயர் இடத் தைப் பெற்றுள்ளது.

இந்நூலில் தூது விடுந் தலைவனாக விளங்கு பவர் இந்நூலை இயற்றிய புலவரேயாவார். அவர் அரச குடும்பத்தைச் சார்ந்தவர். தூதுபெறும் தலை வியான உமா, மாரச மந்திகா (Marace mantika) என வருணிக்கப் பெறுகிறாள். உமா, திருச்சூரிலிருந்து 13கி.மீ. வடக்கிலுள்ள தசப்பில்லியைச் சேர்ந்தவள்.

அரண்மனை மாடியில் நாயகனும் நாயகியும் அமர்ந்திருப்பதைக் கண்ட விண்வழிச்செல்வோர் அவர்களைக் கடவுளர்கள் என மயங்கி வணங்கவே, நாயகன் அவர்களை எள்ளி நகையாடினான். அத னால், தலைவன், அவர்களின் சாபத்தால் மனை வியை ஒரு மாதம் பிரிந்திருக்கும் நிலைக்கு உள்ளா னான். தண்டனைக்குரிய இடமாகிய திருவனந்த புரத்திலிருந்து தன் மனைவியிடம் மயில் ஒன்றைத் தூது விடுக்கின்றான். அம்மயிலானது வர்க்கலை, கொல்லம், காயங்குளம், கண்டியூர், கோட்டயம், ஏற்றுமானூர், மூவாற்றுப்புழை, கொச்சி, திருப் பணித்துறை, ஆல்வாய், செண்டமங்கலம், இரிஞா லக்குடா ஆகிய வழியே தசப்பில்லி வந்தடைந்து தலைவியிடம் தூதுச் செய்தி கூறுகிறது.

இந்நூலாசிரியர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் எனக் கருதுகின்றனர். இந் நூலைத் தவிர, கேரளவர்மன் வலியகோயில் தம் புரானால் இயற்றப் பெற்ற மயூர சந்தேசம் என்னும் மலையாள நூலும் உள்ளதாகத் தெரிய வருகின்றது. தா.ஈ.

**துணை நூல்கள்:**

**Kerala Varman Valiya Koil Thampuran,** Mayoora Sandesam, Kamalalaya Book Depot, Trivandrum, 1963.

**Kunjunni Raja**.K., The Contribution of Kerala to Sanskrit Literature, University of Madras, Madras, 1980.

*மயேச்சுரர்* : இவர் தொல்காப்பியருக்குப் பின் வாழ்ந்த யாப்பிலக்கண ஆசிரியர்களுள் ஒருவர். இவர் மயேச்சுரனார் என்றும், நல்லாசிரியர் என்றும், பேராசிரியர் என்றும், கவிஞர் என்றும் வழங்கப்படுகிறார். இவர் எழுதியநூல் 'மயேச்சுரர் யாப்பு' என்பதாகும். அந்நூல் எடுத்துக்காட்டுகளோடு அமைந்த நூலாகும். அதனை, 'மயேச்சுரர்யாப்பே போல் உதாரணம் எடுத்தோதி' (காரிகை. தற்சிறப்புப்பாயிரம் 1-உரை)என்ற தொடரால்அறியலாம். யாப்பருங்கலக் காரிகை போல அமைந்திருந்த அந்நூல் இதுகாறும் கிடைத்திலது.

யாப்பருங்கலவிருத்தி, வீரசோழிய உரை, யாப்பருங்கலக் காரிகையுரை போன்றவற்றில் மயேச்சுரர் யாப்பின் நூற்பாக்கள் நிரம்பவும் மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் யாப்பருங்கல விருத்தியில்தான் குறிக்கத்தக்கவளவிற்கு நூற்பாக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. மயேச்சுரர் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரால் மதிக்கத்தக்கவராக இருந்திருக்கிறார். இவர் சிவபெருமானைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர் என்பது புலனாகின்றது.

'பெண்ணொரு பாகன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்', 'காமவேளைக் கறுத்த புத்தேள் நாமம் தாங்கிய நல்லாசிரியர்', 'பிறைநெடுமுடிக் கறைமிடற்றினார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்' 'நீர்மலிந்த வார்சடையோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர்', 'வாமமேகலை மாதையோர் பாகனார் நாமம் மகிழ்ந்த நல்லாசிரியர்', 'உயரும் புரம் நகரச் செற்றவன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்', 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் திருப்பெயர் மகிழ்ந்த தொன்னூற் கவிஞர்' என யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் இவரைச் சிறப்பித்துரைக்கிறார். 'காமவேளைக் கடுத்த புத்தேள் நாமம் தாங்கிய நல்லாசிரியர்' (நூ.42) என யாப்பருங்கலக் காரிகையுரையாசிரியரும் மிகுத்துரைக்கிறார். வீரசோழியவுரையாசிரியர் இவரை 'மயேசுவரனார்' (நூ.123) என்று குறிக்கிறார்.

மேற்காட்டிய மேற்கோள்களிடத்து ஆளப்படுகின்ற நூற்பாக்களை நோக்குகின்றபொழுது அவை, எழுத்து அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாவினம் என யாப்பிலக்கணம் முழுமைக்குமாக அமைந்திருப்பதைக் காணமுடியும். எனவே, 'மயேச்சுரர்யாப்பு' என்னும் அந்நூல் முழுமை பெற்ற யாப்பிலக்கண நூலாக இருந்திருக்கவேண்டும் என்று கருதலாம்.

இவர்தம் நூல், நூற்பா யாப்பிலேயே அமைந்துள்ளது. நூற்பாக்கள் எளிமையும் தெளிவுமுடையனவாகக் காணப்படுகின்றன. மயேச்சுரர் சீர் மூன்று வகைப்படும் என்ற கொள்கையுடையவர். அவை, இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என்பன. காக்கைபாடினியார், சிறுகாக்கை பாடினியார், அவிநயனார் போன்று இவரும் தாழிசை, துறை, விருத்தம் எனப் பாவுக்கு இனங்களைக் கூறியுள்ளார். ஆசிரியப்பா ஏ,ஓ, ஆய் என்று முடியும் என்று கூறுகிறார். ஏனையோர் போல ஈ என்றும், ஐ என்றும் முடியும் என்பதைச் சேர்த்துக் கூறவில்லை.

ஆசிரிய விருத்தம் அறுசீர் முதலாக எண்சீர் காறும் வரவேண்டும் என்று கருத்துரைத்துள்ளார். வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா, 'விண்ணோர் விழுப்பமும் வேந்தரது புகழும், வண்ணித்து வருதலின் வண்ணகம் என்ப' என இரண்டு பொருளில் வரும் என்று உரைக்கின்றார். தன் சீராலும் தன் தளையாலும் வருபவை 'தலையாகு இன்பா' எனவும், தன்சீரும் தன்தளையும் பிறபாவின் சீரோடும் தளையோடும் மயங்கி வருபவை 'இடையாகு இன்பா' எனவும் பாக்களை இனப்படுத்துகிறார். சிந்தியல் வெண்பாவை 'ஈரடி முக்கால்' (யாப்.கா.32 உரை) என எளிமைப் படுத்தியுள்ளார். இலக்கணம் செய்தாரை ஆசிரியர் என்றும், இலக்கியம் செய்தாரைக் கவிஞர் என்றும் வழங்குதல் பண்டையோர் மரபு. அவ்வகையில் இவர் 'கவிஞர்' (ப.312) என்று அழைக்கப்படுதலால் அவ்விலக்கண நூலன்றி வேறு இலக்கியமும் இவர் செய்திருப்பார் என்று கருதலாம். எனவே, மயேச்சுரர் எளிமையும் தெளிவும் உடைய யாப்பிலக்கண ஆசிரியராக விளங்கினார் என்பது புலனாகின்றது. சா.கி.

*மயோரிகள்*: இவர்கள் நியூசிலாந்தின் ஆதிக்குடியினர். நியூசிலாந்தில் வாழும் பாலினீசிய மக்கள் என்றும் இவர்கள் சிறப்பாகக் குறிக்கப்படுவர். மயோரிகள் (Maori) கி.பி. 1150 – ஆம் ஆண்டையொட்டிப் பாலினீசியப் பகுதிகளிலிருந்து இப்போது வாழும் நியூசிலாந்துப் பகுதிக்குக் குடியேறினர் என்றும், கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் பெருமளவு குடியேறினர் என்றும் இருவகை மரபுவழிக் கருத்துகள் நிலவுகின்றன. ஆனால், தொல்லியலாரின் ஆய்வுப்படி இம்மக்கள் கி.பி. 800 – ஆம் ஆண்டளவிலேயே நியூசிலாந்துப் பகுதிக்கு வந்து விட்டனர் என அறியமுடிகிறது.

இன்றைய நியூசிலாந்தின் தேசிய இனங்களுள் மயோரிகளும் குறிப்பிட்டுக் கூற வேண்டிய இனத்த



வராவர். இவர்கள் அந்நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 11 விழுக்காட்டினராவர். பாலினீசியாவி லிருந்து இங்குக் குடிபெயர்ந்ததால் ஏற்பட்ட சூழ் நிலை மாற்றம் இவர்களைப் பெரிதும் மாற்றம் பெறச் செய்தது. பசிபிக்குக் கடற்பகுதியில் (பாலினீசியா) வாழ்ந்தபோது உடுத்திய மரவுரிகளை விடுத்துக் கைநெசவு உடைகளை அணிய முற்பட்ட னர். வீடுகளை வேறுவிதமாகக்கட்டத் தொடங்கினர். ஆயினும், அவர்கள் தம் பண்டைப் பண்பாட்டைக் குறித்துப் பெருமை கொண்டாடி வந்தனர்.

நியூசிலாந்துப் பகுதிக்குக் குடியேறிய போது மயோரிகள் வேட்டையாடுதல், காட்டுப் பொருட் களைச் சேகரித்தல், பறக்கவியலாத ஒருவகைப் பறவையான ஈமு (Emu) இனத்தை ஒத்த பறவை களைப் பிடித்தல், 'குமாரா' (Kumara), 'தாரோ' (Taro) ஆகிய பயிர்களை விளைவித்தல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களைச் செய்துவந்தனர். ஆங்கி லேயப் புத்தாய்வாளரான கடற்படைத் தலைவர் குக்கு (Cook) கி.பி. 1769-இல் நியூசிலாந்துப் பகுதிக் குச் சென்றார். அவரைத் தொடர்ந்து ஐரோப்பியர் கள் நியூசிலாந்திற்குக் குடியேறினர். மயோரிகள் அவர்களின் குடியேற்றத்தைக் கடுமையாக எதிர்த் தார்கள். அவ்வெதிர்ப்பு கி.பி. 1872 - ஆம் ஆண்டு ஓய்ந்தது. அதன்பின்னர், மயோரிகள் ஐரோப்பியர் களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றத் தொடங்கி னர். ஆனால், அவர்களுள் ஒரு சிறு பிரிவினர் பண்டைய மரபுகளிலிருந்து மீளாமல் தனித்தன்மை யுடன் வாழ்ந்து வந்தனர். அதனால் இன்றைய மயோரிகள் நகரவாசிகள், பழங்குடிகள் என இரு பிரிவினராகக் காணப்படுகின்றனர்

நியூசிலாந்தின் மொத்த மக்கள் தொகையில் மயோரிகளின் அளவு 11விழுக்காடு மட்டுமே. ஆனால், அவற்றுள் 75 விழுக்காட்டினர் நகர வாசிகளாகவும் ஏனையோர் பழங்குடிகளாகவும் உள்ளனர். மயோரி களின் சமுதாயத்தில் விரிந்த குடும்பங்களே(Extended Family) சிறப்பான கூறாக விளங்குகின்றன. விரிந்த குடும்பம் என்பது, பெற்றோர் மக்கள் ஆகியோரை மட்டும் கொண்ட தனிக் குடும்பத்துடன் (Nuclear

Family) நேர்வழி உறவினர்களோ கிளைவழி உறவினர்களோ சேர்ந்து வாழும் குடும்பமாகும். பல விரிந்த குடும்பங்கள் ஒரு பொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றின எனக் கருதுகின்றனர். அவ்வகைத் தொடர்புடைய குடும்பங்கள் அப்பு (Hapu) எனப்படும் குழுவாகக் கருதப்படுகின்றன. அவர்களின் சமுதாயத்தில் பல அப்புகள் உள்ளன. சமுதாய வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு மரபுவழியில் வரும் தொகுங்கா (Tohunga) எனப்படும் தலைவர் உள்ளார்.

மயோரிகளின் சமய நம்பிக்கை சற்று மாறுபட்டது. மனிதன் எனப்படுபவன் உடல், ஆவி (Spirit), உயிர் ஆற்றல் (Life Force) ஆகிய மூன்றையும் கொண்டவன். அவற்றுள் ஆவி உடலிலிருந்து வெளியே சென்று உலக நிகழ்ச்சிகளோடு தொடர்புகொண்டு, பின் மீண்டும் உடலுக்குள் உறையும் தன்மை கொண்டது. ஆனால், உயிர் ஆற்றல் உடலுக்குள் மட்டுமே உறையக் கூடியது. அது உடலைவிட்டு வெளியே சென்றால் உயிர்பிரிந்து இறப்பு நேரிடும் என நம்புகின்றனர்.

நியூசிலாந்துப் பகுதிக்கு ஐரோப்பியர்கள் குடியேறியதால் மயோரிகள் பண்பாட்டில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. அம்மாறுதல்கள் வளர்ச்சிக்கும் அழிவுக்கும் காரணமாக அமைந்தன. தொடக்கத்தில் துப்பாக்கி பற்றி அறியாத இவர்கள் ஐரோப்பியர்கள் மூலம் அதனைப் பெருமளவு பயன்படுத்தத் தொடங்கினர். அதனால் அண்டைப் பழங்குடிகளுக்கிடையே அடிக்கடி நடைபெற்ற சண்டையில் பெரும் உயிரிழப்பு ஏற்பட்டது. குறிப்பாக கி.பி. 1814 – இல் மயோரிகளின் எண்ணிக்கை 1,00,000க்கும் மேல் இருந்தது. ஆனால், கி.பி. 1820 களுக்குப் பிறகு அவ்வெண்ணிக்கையில் பெரும் சரிவு ஏற்பட்டது. ஐரோப்பியர்களின் வருகை ஓரளவு அழிவுக்குக் காரணமானாலும்,பெரும் வளர்ச்சிக்கும் உதவியது. அவர்கள் வந்தபிறகு அவர்கள் தொடங்கிய தொழில் துறைகளில் புதிய புதிய பணிகளைச் செய்யத் தொடங்கி இன்று பெரும்பாலானவர்கள் நகரவாசிகளாக உள்ளனர். இன்றைய மயோரிகளுள் 75 விழுக்காட்டினர் நகரவாசிகளாகவும் ஏனையோர் பழங்குடியினராகவும் உள்ளனர்.

சீ.ப.

*மர்க்காரா:* இது தென்மேற்கு இந்தியாவில், கருநாடக மாநிலத்தில் உள்ள குடகு மாவட்டத்தின் தலை நகரமாகும். மர்க்காரா (Mercara) நகரை, மடிக்கரை என்றும், மது-கேரி (Madhu-keri) என்றும் கூறுவர். மேற்கு மலைத்தொடரில், 1160 மீ. உயரத்தில் உள்ள பீடபூமியில் மைசூர் நகரிலிருந்து மங்களூர் செல்லும்வழியில் இது அமைந்துள்ளது. குடகு நாட்டிற்குத் தலைநகராக இதை, கி.பி. 1681 – இல் முத்த ராசா (Mudda Raja) தேர்ந்தெடுத்தார். இலிங்க ராசா (Linga Raja) என்பவர், கி.பி. 1812 -இல் இங்கு ஒரு கோட்டையைக் கட்டினார்.இப்பகுதியில் ஓங்கேசுவரர் (Onkeshwara) கோயில் அமைந்துள்ளது. இந்நகரில் கோட்டை, மகாதேவப்பேட்டை என இருபகுதிகள் உள்ளன. கோட்டைக்குள் அரண்மனையும், அலுவலகங்களும் இருக்கின்றன. அரச இருக்கைத் தோட்டம் வண்ணக்காட்சி நிறைந்ததாக மிகவும் அழகாக உள்ளது. இங்குள்ள அரசுக் கல்லூரியும், சட்டக் கல்லூரியும் மைசூர்ப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதன் மக்கள் தொகை 24,724 (1981).

தெ.பா.

*மர்சியா:* இங்கிலாந்தை ஆண்ட ஆங்கிலோ-சாக்சன் அரசுகளில் ஒன்று மர்சியா. அது மேலாதிக்க நிலை பெற்றிருந்த காலத்தில், தேம்சு ஆற்றிலிருந்து அம்பர் ஆறு வரையிலும்,மேற்கில் வேல்சு எல்லை வரையிலும் பரவியிருந்தது. மியர்சு (Mierce) என்னும் வனவாசிகள் இனப்பெயரிலிருந்து மர்சியா (Mercia) என்னும் தொடர் மருவி வந்ததாகக் கருதுவர். மர்சியா என்ற சொல்லுக்கு எல்லைப் புற மக்கள் (Boundary People)என்பது பொருள். வேல்சு எல்லைப் புறத்தில் இம்மக்கள் வாழ்ந்தமையால் இப்பெயர் வந்திருக்க வேண்டும்.

மரபுவழிச் செய்திகளின் படி இவ்வரசை நிலை நாட்டியவர் ஐசல் (Icel) என்பாராவர். இங்கு கி.பி. 6–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கிலேய இனத்து மக்கள் குடியேறினர். மர்சிய அரசில் கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் 12,000 குடும்பத்தினர் இருந்திருக்க வேண்டும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. வரலாற்றுச் சான்றுகளுடன், இதனை ஆட்சி செய்த முதல் மர்சிய அரசரைப் பெண்டா (Penda) என்று கூறுவர். இவர் கி.பி. 626 முதல் 655 வரை அரசாண்டார். ஆங்கில நாணயங்களில் ஒன்றைப் பென்னி என்பர். பென்னி என்னும் சொல் பெண்டிங்கு (Pending) என்ற சொல்லிலிருந்து பிறந்தது. மர்சியா நாணயமான பென்னி பெண்டாவின் பெயரிலிருந்து வந்தது. உல்பியர் (Wulfhere), எதல்பால்டு (Ethelbald), ஆபா (Offa), எக்பிரீத்(Ecgbrith), சென்வுல்பு (Cenwulf) போன்றவர்கள் மர்சியாவின் சிறந்த மன்னர்கள் என்று போற்றப்படுகின்றனர். வெசக்சைச் (Wessex) சார்ந்த எக்பர்ட்டு (Egbert) என்பார் மர்சியாவை கி.பி. 829-ஆம் ஆண்டில் வென்றார். ஏழாண்டுகளுக்குப் பின்னர் மர்சியா மீண்டும் விடுதலை பெற்றாலும் கூடத்தென் இங்கிலாந்தில் அதன் மேலாதிக்கம் தகர்ந்து போய்விட்டது. இலண்டன் நகரம் மர்சிய நகரங்களுள் ஒன்றாகவே இருந்தது.

தேனியர் படையெடுத்த கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நிலை நிலவியது. மர்சியா கி.பி. 918-ஆம் ஆண்டு வரை நிலைத்திருந்தாலும் அதனை வெசக்சு இணைத்துக் கொண்டது. இரா.அ.

மர்ரே: என்றி அலெக்சாண்டர் மர்ரே கி.பி. 1893 – ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டிலே நியூயார்க்கு நகரிலே இப்போது இராக் பெல்லர் மையம் உள்ள இடத்தில் பிறந்தார். பிறந்த உடன் அவரிடம் இருந்தது குறை மாற்றுப்பார்வை (Cross Eye) ஆகும். தம் 19 - ஆம் ஆண்டில் அந்தக்குறையை அறுவை மருத்துவ முறையினால் போக்க முயன்றபோது அவர் கண்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. அவர் தம் ஒரு கண்பார்வையை இழந்தார். ஆனால், அக்குறையைப் பொருட்படுத்தாமல் வரலாறு, மருத்துவம், உளவியல் என்ற மூன்று துறைகளிலும் பட்டம் பெற்றார். பிராய்டின் (Sigmund Freud) உளவியல் பாகுபாட்டினால் (Psychoanalysis) ஈர்க்கப்பட்டுப் பிரான்சு அலெக்சாண்டர் (Franz Alexander) எனும் புகழ் பெற்ற உளப்பாகுபாடு அறிஞரிடம் தனிப்பயிற்சி பெற்றார். இரண்டாம் உலகப் பெரும் போரில் வீரர்களைச் சோதனை செய்யும் பணியில் துணைப் படைத்தலைவராக இராணுவத்தில் பணியாற்றினார். இராணுவத்தில் இவர் செய்த ஆராய்ச்சிகளை 1948 – ஆம் ஆண்டு மனிதர்களை அளவிடுவது (Assessment of Men) என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக வெளியிட்டார்.



மர்ரே

மர்ரே (Murray Henry Alexander) ஒரு புதுவகை ஆளுமை இயலைத் தோற்றுவிக்க முயன்றார். அதற்கு ஆளுமை இயல் (Personology) எனப் பெயரிட்டார். இவர் ஆர்வாட்டு பல்கலைக்கழகத்தில் 1928 -இலிருந்து 1932 வரை தம்முடைய துணைவர்களான மார்கன் (Morgan), இராப்பபோர்ட்டு (Rappaport), மக்லிலேண்டு (Mc Leland) ஆகியவர்களோடு அரிய ஆராய்ச்சிகள் செய்தார். மர்ரேயின் முக்கிய குறிக்கோள், மக்துகல் (William Mc Dougall) தோற்றுவித்த ‘உந்தாற்றல்’ (Hormism) எனப்படும் உளவியல் கோட்பாடுகள், பிராய்டு தோற்றுவித்த உளப்பாகுபாட்டுக்கோட்பாடுகள், கோலர் (Kohler), கோப்கா (Koffka) போன்றவர்கள் உருவாக்கிய முழுமை (Gestalt) உளவியல் அடிப்படைக் கருத்துகள் ஆகியவற்றை ஒன்று படுத்தியும் ஒழுங்குபடுத்தியும் ஒரு புதுமை ஆளுமை இயலை உருவாக்குதல் ஆகும்.

‘ஆர்மிசம்’ என்பதில், மனிதனுக்கு அடிப்படையாக உந்துதல் (Horme) எனும் உளச்சக்தி உண்டு என்றும், அந்த உளச்சக்திப் பதினான்கு இயல்பூக்கங்கள் வழியாக வெளிப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. பிராய்டும் மனிதனுக்கு அடிப்படையாக உளச்சக்தி உண்டு என்றார். ஆனால், அவர் அடிப்படையாக உள்ள இயல்பூக்கங்களை இரண்டாகக்கருதினார். முக்கியமாக பிராய்டு உளச் சக்தியான விலங்கியல்பு விடாய் இயல்பு வாய்ந்தது என்றும், அதை நிறைவு செய்வதற்குச் சமூகம் தடையாக உள்ள நிலையில் நிலைமனம் (Ego) அல்லது மிகை நிலை மனம் தோன்றுகின்றது என்றும் விவரித்துள்ளார். மக்துகல், பிராய்டு ஆகியோர் கருத்துகளிலும் அடிப்படை உண்மை உளச் சக்தி நடத்தையைத் தூண்டுகிறது என்பதில் ஒற்றுமை உள்ளதைக் காணலாம். மர்ரே அவர்களிடையே உள்ளப் பொதுக் கருத்துகளைத் தம் ஆளுமையியலுக்கு அடிப்படையாகக்கொண்டார். ஆனால், பிராய்டின் மனித வளர்ச்சியைப் பற்றிய கருத்துகளைத்தான் தம் ஆளுமையியலுக்கு முக்கியமானவை எனக்கருதினார். மேலும், முழுமை உளவியலாரின் (Gestalt Psychologists) முழுமைக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு மனிதனுடைய ஆளுமையைப் புரிந்துகொள்வதற்கு அவனுடைய கடந்தகால, நிகழ்கால அனுபவங்களையும் வருங்காலத்திற்கு என்ன குறிக்கோள்கள் (Goals) கொண்டுள்ளான் என்பதையும் முழுமையாக அறிந்து கொள்ளவேண்டும் என எண்ணினார். மேலும், மர்ரே ஆளுமையில் (Dynamic Process), உடல்சார் விடாய்கள், உள்ளம்சார் விடாய்கள், தூண்டுதல்கள் ஆகியவற்றிற்கு முக்கிய பங்கு உள்ளது; ஆங்காங்கு புலன்காட்சி (Perception) ஆளுமையை அறியும்போது, அவனது கடந்த, நிகழ்கால அனுபவங்களோடு வருங்

காலக் குறிக்கோள் (Goal) முக்கியமாக அமைகிறது என எண்ணினார். அதனால் அந்த முழுமைக் கொள் கையில் உண்மை உள்ளது என்று புரிந்துகொண்டு மர்ரே தம்முடைய ஆளுமைஇயலில் அந்தக் கருத்தை யும் புகுத்தினார். அதனோடு கிரிசுமர் (Krestmer) எனும் செருமானியர் வலியுறுத்திய உடலமைப்புக்கும் ஆளுமைக்கும் தொடர்பு உள்ளது எனும் கருத்தை யும் தம் ஆளுமை இயலில் புகுத்தினார். முடிவாக அவர் வெளியிட்ட ஆளுமையின் அடிப்படைக் கருத்து களாவன 1) ஒருவன் நடத்தைக்கு அடிப்படையாக உள்ளவை விடாய்கள் (Needs); அவை உடல்சார் விடாய்கள் (Viscerogenue Needs),உள்ளம் சார்விடாய் கள் (Psychogenue Needs) என இரண்டு வகைப்படும்; உள்ளம் சார்விடாய்கள் மனித வளர்ச்சியில் சூழ்நிலை யோடு பரசுபர ஈடுபாட்டில் தோன்றுவதாகும்; அந்த விடாய்களுக்கெல்லாம் அடிப்படையாக நேர்முகமாக வோ மறைமுகமாவோ உள்ளது மூளை ஆகும். உடல் சார் விடாய்களின் எண்ணிக்கையைப் பன்னிரண்டா கவும் உள்ளம் சார் விடாய்களின் எண்ணிக்கையை இருபத்தெட்டாகவும் மர்ரே கொண்டார். 2) மனித ஆளுமையில் வேறுபாடுகள் ஒவ்வொரு மனிதனிடத் துள்ள விடாய்களும், அவற்றின் செறிவு, செறிவுக் காலம், அவற்றைத் தூண்டும் சூழ்நிலை, அழுத்தங் கள் (Presses), அவற்றின் செறிவு, கால அளவு ஆகிய வற்றைப் பொறுத்து அமைவனவாகும். மனிதனின் ஆளுமையைக் கூறுபடுத்தி அக்கூறுகளுக்குத் 'தீமா' (Thema) என்று பெயர் அளித்தார். ஒவ்வொரு கூறும். விடாய் ஒன்றும், சூழ்நிலை அழுத்தம் (Press) ஒன்றும் கொண்டதாகும். 3) வால்ட்டர் கானனுடைய (Walter Cannon) 'ஓமியோசுடேசு' (Homeostasis) கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு மனி தனுடைய ஆளுமை ஓர் இயக்கச் செயல்முறை (Dynamic Process) எனக் கருதினார். அதற்குச் சான்றாக ஓர் ஓடும் நதியைக் குறிக்கலாம். நதியின் நீர் வேறாக இருந்தாலும் நதி ஒரே பெயரில் குறிக்கப் படுகிறது. மேலும், நதியின் நீரைப் பற்றிய அறிவு பெற வேண்டுமானால் ஆங்காங்குச் சிறு சிறு அளவு பதம் எடுத்து ஆராய்ந்து அறியலாம். அவ்வாறே மனிதனுடைய ஆளுமையை அவனுடைய வாழ்க்கைக் கூட்ட நிகழ்ச்சிகளை ஆராய்ந்து அறியலாம். அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு உருவானது பொருள் செறிவு முன்னறிவுடன் அறிதல் சோதனை யாகும் (Thematic Apperception Test). தா.ஏ.ச.

**மரணம் விளைவிக்கும் குற்றம்:** இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 299 வது பிரிவு மரணம் விளைவிக்கும் குற்றம் என்றால் என்ன என்பதைக் கீழ்க்காணுமாறு கூறுகிறது.

மரணம் விளைவிக்கும் உட்கருத்துடன் மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடல் காயத்தை விளைவிக்கும் உட்கருத்துடன், மரணத்தை அநேக மாக விளைவிக்கக்கூடும் என்ற அறிவுடன், ஒரு செயலைச் செய்து மரணத்தை ஏற்படுத்துவது மர ணத்தை விளைவிக்கும் குற்றமாகும் (பி.299.இ.த ச).

ஒருவருக்கு 'மரணம் விளைவிப்பதை' எத்த னையோ முறைகளில் செய்யலாம். அது துப்பாக்கி யால் சுடுவதன் மூலமாக இருக்கலாம்; தண்ணீரில் மூழ்கடிப்பதன் மூலமாக இருக்கலாம்; கோபுரத்தி லிருந்து தள்ளுவதன் மூலமாக இருக்கலாம்; கழுத்தை நெரிப்பதன் மூலமாக இருக்கலாம்; நஞ்சூட்டுவதன் மூலமாக இருக்கலாம்; தீயிட்டுக் கொளுத்துவதன் மூலமாக இருக்கலாம்; கத்தியால் குத்துவதன் மூல மாக இருக்கலாம்; உலக்கை கொண்டு அடிப்பதன் மூலமாக இருக்கலாம்; வாள் கொண்டு வெட்டுவதன் மூலமாக இருக்கலாம்; இன்னும் எத்தனையோ எண் ணிப்பார்க்க முடியாத வழிமுறைகளில் செய்து முடிக் கலாம். இப்படித்தான் மரணத்தை விளைவிக்க வேண்டும் என்று இல்லை; எப்படி வேண்டுமானா லும் மரணத்தை விளைவிக்கலாம். அவ்விதம் விளை விக்கப்படுகின்ற மரணம் சட்டத்தால் குற்றமாகக் கருதப்படுகிறது.

சட்டம் வெறும் செயலையும் விளைவையும் மட் டிலும் பார்ப்பதோடு நின்று விடாது. அச்செயலைச் செய்த நேரத்தில் 'குற்றமான' செயலைச் செய்ய வேண்டுமென்று அவருடைய மன நிலை கருதியதா என்ற கேள்வியை எழுப்பி விடையை ஆய்கிறது. மனத்தால் முடிவு கட்டிய பின்னரே ஒருவன் செய லால் அதை நிறைவேற்றுகிறான். எனவே, அவனு டைய செயலை மட்டிலும் பாராது, மனநிலையை யும் ஆராய்ந்து பார்த்து அச்செயலின் விளைவிற் கான தண்டனையைக் கொடுக்க வேண்டும் என்பது குற்றச் சட்டவியலின் கொள்கையாகும்.

தன்னுடைய மனைவியை வேறொருவன் கற் பழிக்க முயல்கிறான். கணவன் அதைப் பார்க்க நேரிடுகிறது. பக்கத்தில் கிடந்த கத்தியை எடுத்து அவனைக் குத்துகிறான். அது நெஞ்சில் பாய்கிறது. அச்செயலைச் செய்யும் பொழுது அவனுக்கு மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்தில் தான் செய்கிறான். அவனுடைய மனநிலையில் மரணத்தை விளைவித்தேனும் மனைவியைக் காப் பாற்ற வேண்டும் என்ற உட்கருத்து இருக்கத்தான் செய்யும். காயம்பட்டவன் மரணமடைகிறான். எனவே, அது மரணம் விளைவித்த குற்றமாகக் கருதப்படுகிறது. கற்பழிக்க முயன்ற நிகழ்ச்சி நிகழ்ந்த ஓராண்டு கழித்துக் கற்பழிக்க வந்தவனைக் கத்தி யால் குத்திக் கொல்கிறான் கணவன் என்றால் அது,

பழிவாங்கும் நோக்கத்தோடு திட்டமிட்டுச் செய்யப் பட்டது என்பது தெளிவாகிறது. இங்கேயும் மரணத் தையே விளைவிக்கிறான். ஆயினும், அது கொலைக் குற்றமாகக் கருதப்படுகிறது. செயல் ஒன்றேயாயி னும் மனநிலை வேறுபடுவதால் வெவ்வேறு குற்ற மாகக் கருதப்படுகிறது. உயிர் போக்கப்பட்ட ஒரே செயல், சினம் கொண்ட நிலையில் மரணம் விளை வித்த குற்றமாகக் கருதப்படுகிறது. சினம் கொள் ளாத பொதுவான மனநிலையில் கொலைக் குற்றமாகக் கருதப்படுகிறது. மரணம் விளைவித்த குற்றம் சில சமயங்களில் கொலைக் குற்றமாகக் கருதப்படலாம். கொலைக் குற்றமென முடிவுக்கு வந் தால், தண்டனை கடுமையாகக் கொடுக்கப்படல் வேண்டும். மரணம் விளைவித்த குற்றமாகக் கருதி னால் தண்டனை அந்த அளவுக்குக் கடுமையாகக் கொடுக்க வேண்டியதில்லை. உயிர் போக்கப்படுகின்ற குற்றம் மரணம் விளைவித்த குற்றமாகவோ, கொலைக்குற்றமாகவோ இருக்கலாம். மரணம் விளைவித்த குற்றமா கொலைக்குற்றமா என்று முடிவு கட்டுவதற்கு இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு – 299, 300 ஆகியவற்றின் விதித்துறைகளின்படி ஆராய வேண்டும். குற்றம் இழைத்தவர் பிரிவு 299 -இல் கூறப்பட்டுள்ள மூன்று உட்பிரிவுகளின்படி குற்ற வாளி என்று முடிவு செய்யப்பட்டால் அவர் மரணம் விளைவித்த குற்றத்தைச் செய்தவராவார். அதே போல் பிரிவு 300-இல் கூறப்பட்டுள்ள விதிவிலக்கு களின் கீழ் நிவாரணம் பெறத் தகுதியுடையவராயி னும் மரணம் விளைவித்த குற்றம் (Culpable Homicide) செய்தவராகத்தான் கருதப்படுவார்.

ஒருவர் தம்முடைய வீட்டு முற்றத்தில் ஒரு கிணறு வெட்டுகிறார். அதை மூடாமல் அப்படியே விட்டுவிடுகிறார், அல்லது சிறு தகரத்தை வைத்து மூடுகிறார். அவ்விதமாக மூடாதிருப்பதும், தகரத்தை வைத்து மறைப்பதும் தம்முடைய வீட்டிற்கு வருகின் றவர் அதில் விழ வேண்டும் என்ற உட்கருத்தில் செய்வது குற்றமாகும். அவர் கருதியது போலவே வீடு தேடி வந்தவர் அதில் விழுந்து மரணமடை கிறார். அவர் மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாகிறார். மரணமடைந்தவர் அந்த இடத் திற்கு வாரா திருந்தாலோ, கிணறு மூடாதிருப் பதை அறிந்திருந்தாலோ, தகரத்தில் கால் வைக் காதே என்று வேறொருவர் எடுத்துச் சொல்லியி ருந்தாலோ அவர் மரணமடைவதிலிருந்து தப்பித் துக் கொள்ள வழி இருக்கிறது. ஆயினும், அது மரணம் விளைவித்த குற்றமாகக் கருதப்படுகிறது. கிணறு வெட்டியவருக்கு எவரேனும் வந்து விழ வேண்டும் என்ற கருத்துத்தான் இருக்க வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. அவ்விதம் வெட் டிய கிணற்றைத் திறந்து போட்டால் எவரேனும் வந்து அதில் விழுந்து இறக்கநேரிடும் என்று தெரிந் திருப்பதே போதுமானது. அச்செயலை செய்வதன் மூலம் எவருடைய மரணத்தையேனும் விளைவிக்கும் அல்லது விளைவிக்கலாம் என்ற கருத்தோ, அறிவோ அவருக்கு இருந்தால் அந்த மனநிலை காரணமாக அவர் அக்குற்றத்திற்கு ஆளாகிறார்.

'சுப்பன்' ஓங்கி வளர்ந்த புதர் ஒன்றன் பின் நின்று கொண்டிருக்கிறான் என்பது கண்ணனுக்குத் தெரியும். ஆனால், வேட்டையாடச் சென்று கொண் டிருக்கிற வேடனுக்குத் தெரியாது. கண்ணன் வேட்டு வனிடம் அப்புதரை நோக்கிச் சுடுமாறு வேண்டு கிறான். அவனும் அவ்விதமே சுடுகிறான். சுப்பன் மீதுகுண்டு பாய்கிறது. அது அவனுக்கு மரணத்தை விளைவிக்கிறது. வேடுவனின் மனநிலையையும் கண் ணனின் மன நிலையையும் சீர்தூக்கிப் பார்த்தால் யார் குற்றவாளி என்பது புலனாகும். சுட்டது வேட்டுவன்தான். அவன் செயல்தான் 'சுப்பனுக்கு' மரணத்தை விளைவித்தது. வேடனுக்கு அவனைக் கொல்லவேண்டும் என்ற மனநிலை இல்லாததால் அவன் குற்றவாளி ஆகாமல் இருக்கலாம். ஆனால், கண்ணன்தானே அவனைச் சுடுமாறு தூண்டினான். கண்ணனுடைய மனநிலை சுப்பனுடைய மரணத்தை விளைவிக்க வேண்டும் என்பதே. கண்ணன் எச்செய லையும் செய்யவில்லை யாயினும், வேடனைத் தூண்டியதன் மூலம், எதை விளைவிக்க வேண்டும் என்று விரும்பினானோ, அதை வேடனுடைய செயல் மூலம் விளைவித்து விட்டான். கண்ணன் கருத்தில் கொண்டது, வேடனின் செயல் மூலம் நிறை வேற்றப்பட்டு விட்டது. எனவே, கண்ணன்தான் அக்குற்றத்திற்குப் பொறுப்பாளி ஆகிறான்.

கண்ணன் வேட்டைக்குச் செல்கிறான். மாடப் புறா ஒன்று புதரின் மறைவில் காணப்படுகிறது; சுடுகிறான். புதருக்குப் பின் இருந்த சுப்பனின் மரணத்தை அது விளைவிக்கிறது. கண்ணனுக்குச் சுப்பனைச் சுட வேண்டும் என்ற கருத்துக் கிடை யாது. சுப்பன் புதரின் பின்னால் இருக்கிறான் என்றும் தெரியாது. எனவே, குற்றமான உட்கருத்துடனோ சுப்பனின் மரணத்தை விளைவிக்கப் போகிறோம் என்று தெரிந்தோ, கண்ணன் அதைச் செய்யாததால் மரணம் விளைவித்த குற்றத்திற்குப் பொறுப்பாளி ஆகமாட்டான். கண்ணனுக்கு மாடப்புறா, மாற்றா னுடையது என்று தெரிந்திருக்குமென்றால் அது சட்டத்திற்கு எதிரான செயலாகக் கருதப்படலாமே ஒழிய, எக்காரணத்தைக் கொண்டும் மரணம் விளை வித்த குற்றமாகக் கருத முடியாது.

கண்ணன் ஒரு மருத்துவர். அவருடைய தந்தை, தள்ளாமையாலும், மூப்பு பிணி ஆகியவற்றாலும் துன்புற்றுக் கொண்டிருக்கிறார்; இன்றோ, நாளையோ என்று நாள்களை எண்ணிக் கொண்டிருக் கிறார் என்பது கண்ணனுக்கு நன்கு தெரியும். அவர் அவதிப்படுவதைக்கண்டு மனம் பொறாமல் அவருடைய மரணத்தை விரைவுபடுத்தும் கருத்துடன் ஊசி ஒன்று போடுகின்றார் என்றாலும், மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாக நேரிடும். ஏனெனில், அவருடைய கருத்து தந்தையின் மரணத்தை விரைவு படுத்துவதே ஆகும். நல்ல நோக்கத்துடன் அச்செய லைச் செய்தாலும் அது குற்றமாகவே கருதப்படும்.

கண்ணன் ஒருவரை மாடியிலிருந்து தள்ளி விடு கிறான். தலையில் காயம் ஏற்படுகிறது. நெடு நேரம் வரை யாரும் அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவில்லை. நேரம் கழித்து மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் அங்கேயே மரணமடைகிறார். கொஞ்சம் முன்னதாகக்கொண்டு வந்திருந்தால் காப்பாற்றி இருக்கலாம் என்று மருத் துவர் கூறுகிறார். தக்க நேரத்தில் மருத்துவம் அளித்திருந்தால் மரணம் விளைந்திருக்காது என்று வாதிடுவதோ, திறமை வாய்ந்த மருத்துவரிடம் கொண்டு சென்றிருந்தால் பிழைத்திருப்பார் என்று வாதிடுவதோ, குற்றப் பொறுப்பிலிருந்து கண்ணனை விடுவிக்கப் போதுமான காரணமாகாது. அவன் அவரை மாடியிலிருந்து தள்ளிய நேரத்தில் அச் செயல் அவருக்கு மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடனோ, மரணம் விளையலாம் என்ற தெரிந்தோ செய்யப்பட்டிருந்தால் அதுவே போது மானது.

குழந்தை தாயின் கருப்பையில் வளரும் நிலை யில் சாவு விளைவிப்பது மரணம் விளைவித்த குற்ற மாகாமல் இருக்கலாம். ஆனால், அக்குழந்தை தலை, கால், கை போன்ற உறுப்புகள் ஒன்றோ பல்வோ வெளிவந்த பிறகு, சாவு விளைவிப்பதானது மரணம் விளைவித்த குற்றமாகலாம்.

கழனி சென்றிருந்த பழனி வீடு திரும்பினான். கையில் நுகத்தடி இருந்தது. மனைவி வழக்கமாகச் செய்கிற பிழை ஒன்றைச் செய்வதைக் கண்ணுற்ற அவன் சட்டென நுகத்தடியால் ஒரு தட்டுத் தட்டி னான். திடீரென மயங்கி மூர்ச்சையுற்று அவள் கீழே விழுந்தாள். அடி பலத்த அடி இல்லையாயினும் பொருத்தில் பட்டு இறந்து விட்டாள் என்று கருது கிறான். உடன் தானே அவள் கழுத்தில் கயிற்றை மாட்டி மேலிருந்து உத்திரத்தில் தொங்கவிடுகிறான். அவள் தானே தூக்கிட்டுக்கொண்டதாகப் பிறரை நம்ப வைக்க வேண்டும் என்ற நினைப்பால் அதைச் செய்கிறான். மருத்துவச் சோதனையில் தூக்கில் தொங்கவிடப்பட்ட நேரத்தில் அவள் மயங்கிய நிலை லேயே இருந்தாள் என்பதும், கயிற்றில் தொங்க விடப்பட்ட பின்னரே சங்கறுந்து மரணம் ஏற்பட்டது என்பதும் தெளிவாயின. பழனி நுகத்தடியால் அவளை அடிக்கும் பொழுது அவளுக்குக் காயம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தில்தான் செயற்பட்டான். அவளைக் கொல்ல வேண்டும் என்ற கருத்துடன் அவன் அடிக்கவில்லை என்ற முடிவுக்கு வந்ததால் கொடுங் காயத்திற்கான தண்டனை கொடுக்கப்பட்டது. அவளைக் கயிற்றில் கட்டித்தூக்கில் இடுகின்ற சமயத்தி லும் அவளைக் கொல்ல வேண்டும் என்ற கருத்து அவ னுக்கில்லை. எனவேதான், அவன் அவளுக்கு மரணம் விளைவித்திருந்த போதிலும், அந்தச் செயலைச் செய்த நேரத்தில் மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்தோ, மரணம் விளையும் என்ற உணர்வோ இருந்து செயற்படவில்லை என்று முடிவுகட்டிக் கொடுங்காயம் விளைவித்ததற்கான தண்டனை கொடுக்கப்பட்டது. வழக்கின் பெயரே பழனிக்கவுண்டன் வழக்கு என்று கூறப்படுகிறது (1919-42 Madras 547 F. B.).

மரணம் விளைவிக்கும் உட்கருத்துடன் மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடல் காயத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் மரணத்தை அநேக மாக விளைவிக்கக் கூடும் என்ற அறிவுடன் ஒரு செயலைச் செய்து மரணத்தை ஏற்படுத்துவது மரணத்தை விளைவித்த குற்றமாகும் (பி.299.இ.த.ச.)

எச்.எம்.அ.

*மரணவரி*: உலகில் தவிர்க்க முடியாதவை மர ணமும் வரிகளுமே எனச் சொல்வதுண்டு. ஆனால், மரணத்தின்போது கூட வரியொன்று விதிக்கப்பட்டு வருகிறது. தனியொருவன் மரணத்திற்குப் பின் அவனுடைய சொத்துகள் சந்ததியினர்க்குச் செல் லும்போது, அவற்றில் ஒரு பகுதியை (அதன் மதிப்பை) அரசு வரியாக எடுத்துக்கொள்கிறது. அந்த உரிமை அரசுக்கு உண்டு என்பதற்கு இரு காரணங்கள் தரப் படுகின்றன. மக்களின் வாரிசுரிமைகளைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் அரசுக்கு உண்டு என்பது ஒரு காரணம். அனைத்து நிலங்கள் மீதும் முதல் உரிமை அரசுக்கே உண்டு என்பது மற்றொரு காரணம். தனியொருவனின் சொத்தில் ஒரு பகுதி பொதுப்பணி களில் செலவிடப்பட இது வழிவகுக்கிறது. மேலும், நிலவியிருக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க இவ்வரி பெரிதும் உதவி செய்வதாகிறது. வழக்கமான வருமானவரியை விட இது சில வகை களில் சிறந்தது என்றும் கருதப்படுகிறது.

இவ்வரி இருவகைகளில் விதிக்கப்படுகிறது. இறந்தவருடைய சொத்துகளின் மீது விதிக்கப்படும்

போது 'சொத்துவரி' (Estate Duty) எனப்பெறும்; மாறாக, அச்சொத்தினை அடையும் வாரிசுகள்மீது வரி விதிக்கப்படும்போது 'வாரிசு வரி' (Inheritance Tax) எனப்பெறும். வாரிசுகளுள் ஒவ்வொருவரும் பெறும் சொத்தின் அளவையும் அவரவருடைய செல்வ நிலையையும் பொறுத்து வாரிசு வரி விதிக்கப்படும். இறந்தவனுடைய சொத்துகள் வாரிசுகளிடையே பங்கிடப்படுமுன் சொத்துவரி விதிக்கப்படுகிறது. அப்பங்கீடு நிகழ்ந்தபின் வாரிசு வரி விதிக்கப்படுகிறது என்றும் சொல்லலாம். சொத்து வரியின் தனிச்சிறப்பு அது மிகஎளிமையானதாகவும் மிகுதியான தொகை தருவதாகவும் இருப்பதே ஆகும். ஆனால், வாரிசு வரியோ, வரி செலுத்துபவனுடைய வரி செலுத்தும் ஆற்றலைக் கருத்தில் கொள்வதாகிறது. சொத்தினைப் பெறுபவன் தூரத்து உறவினனாக இருந்தால் உயர்வீதத்தில் வாரிசு வரியை விதித்துக்கொள்ள முடியும்.

மரணவரி, பொதுவாக, ஏறுமுக முறையிலேயே விதிக்கப்பட்டு வருகிறது; சொத்தின் மதிப்பு உயர உயர வரியின் விகிதமும் உயர்ந்து செல்லும். இங்கு இத்தாலியப் பேரறிஞர் இரிக்னானோ (Rignano) என்பவரின் திட்டம் நினைவு கூரத்தக்கது. அவர் கருத்தின்படி, ஒருவன் இறப்பைத் தொடர்ந்து அவன் சொத்தின் மூன்றிலொரு பங்கு உடனடியாக வரியாக வாங்கப்படல் வேண்டும். எஞ்சிய இரண்டிலொரு பங்கைப் பெறும் அக்குறிப்பிட்ட வாரிசு இறக்கும்போது, அச்சொத்தில் இரண்டிலொரு பங்கு வரியாக வாங்கப்படல் வேண்டும். இன்னும் எஞ்சியிருக்கும் அச்சொத்தை மூன்றாம் தலைமுறையினர் பெற முன்வரும்போது குறிப்பிட்ட சொத்து முழுவதையுமே வரியாகப் பெற்றிடல் வேண்டும். அம்முறையில் மூன்று தலைமுறைகளுக்குள் தனியொருவன் சொத்து முழுவதும் அரசைச் சென்றடைய இரிக்னானோ திட்டம் வழிவகுக்கிறது.

மரணவரி உயர்விகித வருமானவரியை விடச் சிறந்ததெனச் சொல்லப்படும். அத்தகைய வருமான வரி மக்களுடைய சேமிக்கும் உணர்வைத் தடைப்படுத்தலாம். ஆனால், மரண வரியோ அத்தகையதன்று. இறந்தவன் வரி செலுத்தப் போவதில்லை. ஆதலால், அவனுடைய சேமிக்கும் உணர்வு பாதிக்கப்படுவதற்கு வழியில்லை. மாறாக, தன் வாரிசு, வரிபோகக் கூடுதலாகத் தொகைபெற வேண்டுமென அவன் விரும்பினால் (மரணவரிக்கும் சேர்த்து) கூடுதல் சொத்துச் சேர்த்து வைப்பதற்காகக் கூடுதலாக உழைத்துச் சேமிக்க அவன் முயலலாம். அது போன்றே, வரித்தொகை போகக் கிடைக்கிற சொத்தின் அளவு குறைவாக இருப்பதால், போதிய அளவு ஈட்டுவதற்காக அவ்வாரிசும் மிகுதியாக உழைத்து மிகுதியாகச் சேமிக்க முயலலாம். மேலும் எளிதில் வருமானம் ஈட்டியவனும், உழைத்துக் களைத்து அதேயளவு வருமானம் ஈட்டியவனும் ஒரே வீதத்தில்தான் வரி செலுத்த நேர்கிறது. மரணவரி அக்குறைபாட்டை அகற்றுகிறது. எளிதாக வருமானம் ஈட்டியவனின் நிலைத்த சொத்துகள் தாம், இறுதியில் மரண வரிக்கு ஆளாகின்றன. சில நேரங்களில் நல்ல ஓவியங்கள், நூலகங்கள் முதலிய வற்றைப் போற்றுவதன் வழியாகச் சிலர் மிகுதியான இன்பம் துய்த்திருக்கலாம். அப்பொருட்களை வருமான வரியால் அண்ட முடியாது. ஆனால், மரண வரிக்கோ அவையும் இலக்காகும். இறுதியாகச் சொத்துகளின் மதிப்புயர்வில் வருமான வரி, பங்கு கேட்பதில்லை. மரண வரியோ, அத்தகைய மூலதன ஆதாயங்களிலும், பங்கீட்டிலும் தன் வழியாகத் 'தொட்டில் சமத்துவம்' தோன்ற வாய்ப்பாக உள்ளது. ஒரு சிலர் பிறப்பிலேயே செல்வந்தராகத் தோன்றி வாழ்க்கைப் பந்தயத்தில் சில சலுகைகளுடன் கலந்து கொள்ளுகிறார்கள். வேறுபலர் பிறக்கும் போதே ஏழையாகப் பிறந்து, வாழ்க்கைப் பந்தயத்தில் கட்டிப் போடப்பட்ட கால்களுடனேயே கலந்து கொள்கிறார்கள். மரணவரி அந்தச் சமத்துவமின்மையை அகற்றி, வாழ்க்கைப் பந்தயத்தின் தொடக்கத்திலேயே அனைவரையும் சமன்படுத்தி விடுகிறது. ஒவ்வொரு தலைமுறையும் கடந்த கால ஏற்றத் தாழ்வுகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுகின்றது.

மரணவரியில் குறைபாடுகள் சிலவுள்ளன. குறிப்பிடப்பட்ட குடும்பத்தில் அடுத்தடுத்து மரணங்கள் நேர்ந்தால் சொத்தின் அளவு மிக விரைவில் தேய்ந்து விடுகிறது. அக்குறைபாட்டைத் தவிர்ப்பதற்காக முதல் மரணத்தையடுத்த மூன்று மாதங்களுக்குள் இரண்டாம் மரணம் நிகழ்ந்தால் வரியெதுவுஞ் செலுத்த வேண்டியதில்லை என்றும், அது ஓராண்டிற்குள் நிகழ்ந்தால், நிருணயித்துள்ள விகிதத்தில் பாதியளவு சலுகை தரப்படும் என்றும் வகுக்கப்பட்டிருந்தது.

சொத்துகள், பொதுவாக அவற்றின் அங்காடி விலையையொட்டி மதிப்பிடப்பட்டு, அம்மதிப்பின் அடிப்படையில் வரி விகிதம் நிருணயிக்கப்படும். அந்நிலையில், விலைவாசி இடிந்துள்ள காலத்தில் இறப்பவன் மிகுந்த சொத்துச் சேர்த்து வைத்திருந்தாலும் குறைந்த விகிதத்திலேயே மரணவரி விதிக்கப்படும். மாறாக, விலைவாசி உயர்ந்துள்ள காலத்தில் இறப்பவனுடைய சொத்துகள் மீதே உயர் விகிதத்தில் வரி விதிக்கப்படும். இறந்தாலும் வேளை பார்த்து இறந்தாக வேண்டிய விந்தை நிலை இங்குத் தோன்றி நிற்கிறது.

அடிக்கடி வரி விகிதங்களை மாற்றிக் கொண்டிருப்பது தொல்லை தருவதாகவே அமைந்துவிடும். நாளைக்கு ஒரு விகிதமாக இருந்தால், நேற்றுக் காலமாகியவன் ஒரு தொகையையும் இன்று இறப்பவன் வேறொரு தொகையையும் ஓரேயளவு சொத்துக்குச் செலுத்த வேண்டியநிலை ஏற்படும்.

இவ்வரி, விதை நெல்லைக் குற்றிச் சாப்பிடுவது போல, முதலைக் கரைத்துச் சிதைத்துவிடலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. சில நேரங்களில் பெரிய தொழில்நிறுவனங்கள் துண்டுபட்டுச் சிதறிப் போவதற்கு மரணவரிகள் காரணமாகியுள்ளன.

இந்திய நாட்டில் இவ்வரி 1953-இல் விதிக்கப்பட்டது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதும், பொருளியல் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதுமே வரியின் நோக்கங்கள். இறந்தவரது முழுச் சொத்தின் மீதும் (பணம், நகை, உந்துவண்டிகள், ஏனைய பொருட்கள் உட்பட) வரி சுமத்தப்பட்டது. மாநில அரசுகள் இணங்கினால் விளை நிலங்களும் வரிக்கு ஆளாகும் சொத்துகளின் வரம்பினுள் கொண்டுவரப்படும். அதற்கு இணங்காத மாநிலங்களில் விளைநிலங்கள் சொத்துவரி வரம்புக்கு அப்பாற்பட்டேயிருந்தன. முன்பே அளித்த நன்கொடைகளுங்கூட வரிக்கு இலக்காகும். ஆனால், அறச் செயல்களுக்காக, இறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு தரப்பெற்ற நன்கொடைகளுக்கு வரி விலக்குண்டு.

மரண வரியைச் செயற்படுத்துவதில் பல சிக்கல்கள் இருந்தன. ஆக மொத்த வருவாய் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் மட்டுமே ஆகும். சொத்துகளை மதிப்பீடு செய்வது எளிதன்று. சொத்துகளை வேறொருவர் பெயருக்கு மாற்றிக் கொடுப்பது (Benami), ஒளித்து வைப்பது போன்ற வரி ஏய்ப்புச் செய்கைக்கும் குறைவில்லை. மொத்த வருவாயில் செலவோ வளர்ந்து கொண்டிருந்தது. அந் நிலையில் 1986 – இல் இந்திய அரசு இந்த வரியையே ஒழித்து விட்டது. தே.வே.

**துணை நூல்கள்:**

Batia, H.L., Public Finance, Vikas Publishing House Pvt. Ltd., Delhi, 1982.

Singh, S.K., Public Finance in Developed and Developing Countries, S. Chand & Company Ltd., Delhi, 1982.

*மரண வாக்குமூலம்:* இறக்கும் தறுவாயில் ஒருவர் தமக்கு மரணம் விளைவிக்கும் காயங்கள் ஏற்பட்டதைப் பற்றியோ, அத்தகைய காயங்கள் இழைக்கப்பட்ட சூழ்நிலைகளைப் பற்றியோ கொடுக்கும் வாக்குமூலம் மரணவாக்குமூலம் (Dying Declaration) எனப்படும்.

மரண வாக்குமூலம் வாய்மொழியாகவோ, வரைமொழியாகவோ, பிறரை எழுத வைப்பதன் மூலமாகவோ, சைகை அல்லது குறியீடுகளின் வழியினதாகவோ இருக்கலாம்.

**மரண வாக்குமூலம் பதிவு செய்வதில் நடைமுறை:** மரண வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்யுங்கால் இதுதான் நடைமுறை என்று சட்டம் எந்தவித நடைமுறையையும் வகுத்துரைக்கவில்லை.

மரணவாக்கு மூலத்தை நடுவரும், அவர் உடனடியாகக் கிடைக்காத நிலையில் மருத்துவரும், காவற்றுறை அலுவலரும் பிறரும் பதிவு செய்ய உரிமையுடையவராவார்கள்.

மரண வாக்குமூலம் பெறப்படும் போது நடுவரோ, பிறரோ ‘மரணவாக்குமூலம்’ அளிப்பவருக்குச் சத்தியப் பிரமாணம் செய்து வைப்பதோ முன்னறிவிப்பு எதையும் செய்து வைப்பதோ இல்லை.

மரண வாக்கு மூலத்தை ஒருவரிடமிருந்து பெறுவதற்கு முன்பாக அவர் அவ்வாக்குமூலத்தை அளிக்கக் கூடிய நிலையிலுள்ளாரா என்பதை ஒரு மருத்துவரைக் கொண்டு ஆராய்ந்தறிதல் வேண்டும்.

மரணவாக்கு மூலம் பொதுவாகக் கேள்வி-பதில் முறையிலேயே அமைந்திருக்கும். மரண வாக்கு மூலத்தில், வாக்குமூலம் பெறுபவர் தாம் வாக்கு மூலம் அளிப்பவரைக் கேட்ட கேள்விகளையும அதற்கு அவர் அளித்திட்ட பதில்களையும் அவ்வவ்வாறே குறிப்பிட்டிருத்தல் வேண்டும். கேள்விகளை விட்டு விட்டு இறந்தவர் அளித்திட்ட மறுமொழி மட்டும் குறிப்பிடுவது போதாது. அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் மரணவாக்கு மூலம் எடுத்தவர் கேட்ட கேள்வி என்ன, அதற்கு மரண வாக்கு மூலம் கொடுத்தவர் அளித்த மறுமொழி என்ன என்பது தெரியாமற் போய்விடும்.

மரண வாக்குமூலத்தை உரிய முறையில் பெற்ற பின், அதனை மரணவாக்கு மூலம் கொடுத்தவருக்குச் சரியாக உள்ளதா? எனக் கண்டறிவதற்குப் படித்துக் காட்டுதல் வேண்டும். மரணவாக்கு மூலம் சரியாக உள்ளதென அவர் ஒப்புகின்றபோது அதில் அவரின் கைரேகை அல்லது கையொப்பத்தைப் பெறுதல் வேண்டும்.

மரணவாக்கு மூலத்தை நடுவரும் பிறரும் பதிவு செய்கின்றபோது அவர்கள் தம் கையொப்பத்தையும் இடுதல் வேண்டும். மரண வாக்குமூலம் பெற்றவர்

நடுவரல்லாத மற்றையோராக இருக்கும்போது, அவர்தம் கையொப்பத்தை உறுதி செய்கின்ற வகையில் சான்றாளர் இருவர் கையொப்பங்களைப் பெறுதல் வேண்டும்.

**மெய்ப்பிப்பு**: மரண வாக்கு மூலத்தைக் கேட்டவர் அல்லது பதிவு செய்தவர் அதை ஐயத்திற்கு இடமின்றி நீதிமன்றத்தில் மெய்ப்பிக்க வேண்டும். மரண வாக்குமூலம் பெற்றவர் நடுவராக இருக்கும் போதுங்கூட அவரும் நீதிமன்றத்தில் சான்றாளராகத் தோன்றிச் சாட்சியமளித்திடுதல் இன்றியமையாதது.

**சான்றுறுத்தம்**: மரணமுற்றவர் தம் இறுதிக் காலத்தில் தம்மைக் கொன்றவன் யாரெனத் தெரியாதபோது, தவறாக எவரையும் குறிப்பிடவோ, பழி வாங்கவோ அந்தக் கடைசி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதால், மரண வாக்குமூலம் சான்றுறுத்தம் (Corroboration) பெறாத போது நீதிபதிகள் நீண்ட நெடுங்காலமாக அதைச் சான்றாக ஏற்கத் தயக்கங்காட்டி வந்தார்கள்.

மரணவாக்கு மூலம் ஒன்று உண்மையானதும் நம்பத் தக்கதுமாக உள்ளதென நீதிமன்றம் கருதுகின்றபோது அத்தகைய மரணவாக்கு மூலத்தைச் சான்றாக ஏற்கச் சான்றுறுத்தம் தேவையில்லை. மரண வாக்குமூலம் ஐயமுடையதாகவும் முரண்பாடுகள் நிறைந்ததாகவும் இருக்கும்போது அதை மெய்ப்பிக்கச் சான்றுறுத்தம் இன்றியமையாததாகும்.

**சான்றுத் தன்மை**: மரணவாக்கு மூலம் ஒன்றை நீதிமன்றம் சிறந்த சான்றாகக் கொள்ளுதல் அது கொடுக்கப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்ததாகும்.

மரணவாக்கு மூலம் ஒன்று, பிறர் சொல்லச் சொல்லி சொல்லியதாகவன்றித் தானாகவே எவரது தூண்டுதலுமின்றிக் கொடுக்கப் பட்டிருக்கும்போது அது சிறந்த சான்றாகும்.

ஒரே நிகழ்ச்சித் தொடர்பாக இரண்டு, மூன்று மரணவாக்கு மூலங்கள் அளிக்கப்பட்டிருக்கும்போது, முதல் மரணவாக்குமூலமே முக்கியத்துவம் பெறும். முதல் மரணவாக்கு மூலத்தில் கொலையாளி ஒருவரெனக் குறிப்பிட்டுவிட்டு இரண்டாம் மரணவாக்கு மூலத்தில் கொலையாளிகள் மூவரெனக் குறிப்பிடும் போது, (இரண்டாம் மரணவாக்கு மூலத்தில்) கூடுதலாகச் சேர்க்கப்பட்டவர்கள் இருவரும் ஐயப்பலனை அடிப்படையாகக் கொண்டு விடுதலை பெறுவர்.

**நீதிமன்றக் கடமை**: மரணவாக்குமூலம் ஒன்றை நீதிமன்றம் சான்றாகக் கொள்வதற்கு முன்னர்ப் பின்வருவனவற்றைக் கவனித்தல் வேண்டும்.

1. மரண வாக்குமூலம் அடுத்தவர் ஒருவரின் தூண்டுதலின் பேரில் அளிக்கப்பட்டதா என்பதையும் வேறு எந்த வழியிலேனும் மரண வாக்குமூலத்தில் குறுக்கீடு இருந்ததா என்பதையும் பார்க்க வேண்டும்.

2 மரண வாக்குமூலம் கொடுக்கும் நிலையில் மரண வாக்குமூலம் அளித்தவர் தம்நினைவோடு இருந்தாரா என்பதைப் பார்க்க வேண்டும்.

3. மரண வாக்குமூலம் பழிவாங்குதலின் அடிப்படையில் கொடுக்கப்பட்டதா என்பதைப் பார்க்க வேண்டும்.

4. மரண வாக்குமூலம் உண்மையும் நடுநிலைமை தவறாத தன்மையும் கொண்டுள்ளதா என்பதையும் அறிதல் வேண்டும்.

5. பொருண்மை உள்ளார்ந்து மெய்ப்பிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

6. மரண வாக்குமூலம் தெளிவாகவும் நம்பக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

7. ஏதேனும் ஒரு பகுதியில் பொய்ம்மையுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும்.

8. கொலையாளியைக் கொலை செய்யப்பட்டவர் பார்ப்பதற்குப் போதிய வாய்ப்பிருந்ததா என்பதைப் பார்க்க வேண்டும்.

9. மரண வாக்குமூலத்தில் ஒரு சில செய்திகள் விடுபட்டிருந்தால் நீதிமன்றம் அவ்வாக்குமூலம் முழுவதையும் புறக்கணித்தல் கூடாது. பு.வே.

**மரபுத் தொடர் உருவாக்கம்**: ஒரு மொழியின் இலக்கணக் கூறுகளில் ஒன்று மரபுத் தொடர் ஆகும். இதனைப் பொருண்மை நிலையிலும், வாக்கிய அமைப்பு நிலையிலும் கட்டுண்ட சொற்களின் கூட்டு என்றும் கூறுவர். மரபுத் தொடர் ஒரு தொகுதியாகவே செயற்படும். மரபுத் தொடரில் உள்ள சொற்களின் தனித்தனிப் பொருட்கள், முழுத் தொடரின் பொருளாக அமையா. அமைப்பு முறையிலும் ஒரு பெரிய உறுப்பின் ஒரு பகுதியாக வாராமலும் இருக்கும். எடுத்துக்காட்டாக 'வெள்ளை மாளிகை' என்பது மரபுத் தொடர் நிலையில் அமெரிக்க அதிபர் குடியிருக்கும் இடத்தின் பெயராகும். ஆனால், சொற்களின் தனித்தனிப் பொருளில் வெள்ளை நிறமான ஒரு வீடுஎன்றே பொருள் தரும். எனவே, மரபுத் தொடரில் உள்ள சொற்களின் மொத்தப் பொருள் மரபுத் தொடரின் பொருள் ஆகாது.

அதேபோல அமைப்பு நிலையிலும், மரபுத் தொடர் ஒரு பெரிய உறுப்பாகவே வருமன்றி அதன் ஒரு பகுதியாக வாராது (எ-டு.) 'கம்பி நீட்டினான்' என்ற மரபுத் தொடர் ஏமாற்றுதல் என்ற பொரு

ளைத் தரும். இதில் உள்ள சொற்களின் தனிப் பொருட்கள் மரபுத் தொடர் காட்டும் பொருளைத் தாரா. இது ஒரு தொகுதியாகவே இருக்கும். இதை 'ஒரு தங்கக் கம்பி நீட்டினான்' என்று கூறினால் மரபுத் தொடர் ஆகாது. எனவே மரபுத் தொடர் என்பது ஒரு பெரிய தொகுதியின் ஒரு உறுப்பாக அமையாது.

**மரபுத் தொடர் உருவாக்கம்:** ஒரு குறிப்பிட்ட சூழலில், பேசுபவர் ஒரு தொடரைக் கூறுவர். அதைக் கேட்பவரும் அந்தச் சூழலில் புரிந்து கொள்வார். அந்தத் தொடரை இதற்கு முன்னர் இருவருமே பயன்படுத்தியிருக்கமாட்டார்கள். அவர்கள் பயன்படுத்திய தொடர், அடிக்கடிப் பேசிய சொற்களினால், தெரிந்த மொழியமைப்பினால் ஆக்கப்பட்டதாக இருக்கும். அவ்வாறு பழக்கப்பட்ட சொற்கள் புதிய சூழலில் புதிய பொருளைக் கொடுத்து நிற்கும். இத்தகைய தொடர்கள்,ஆக்கப்பட்ட விதத்திலேயோ, ஆக்கப்பட்ட சூழ்நிலையிலேயோ, இவ்விரு நிலையிலேயோ முக்கியத்துவம் பெறுவதால் அவை நிலைத்து நின்று மரபுத் தொடர்கள் ஆகின்றன.

எடுத்துக்காட்டாக, 'காக்கா பிடிக்கிறான்' என்று ஒருவர் கூறினால், ஒரு சூழலில் அதைக் கேட்பவரும் புரிந்து கொள்கிறார். இதில் பேசுபவரும் காக்காவாகிய பறவையைப் பிடிக்கிறான் என்ற பொருளில் கூறவில்லை. கேட்பவரும் அந்தப் பொருளை எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக, 'தன்னுடைய சுயநலத்திற்காக ஒருவரிடம் பழகுதல்' என்ற பொருளை அந்தத் தொடர் ஒரு குறிப்பிட்ட சூழலில் தருகிறது. அந்தப் பொருளின் சிறப்பினால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு மரபுத் தொடராகிறது. எனவே, மரபுத் தொடர்கள், சூழலைப் பொறுத்தும் உரையாடுபவர்கள் பயன்படுத்திப் புரிந்துகொள்ளும் சொற்களைப் பொறுத்தும் அவை அமையும் முறையினைப் பொறுத்தும் உருவாகும் அதுபோலவே ஒரு குழந்தை தன் தாயிடம் 'மம்மு' என்று கூறத் தாயும் புரிந்து கொண்டு உணவு ஊட்டுவாள். இதுதொடர்ந்து பயன்படுத்தப்படுவதால் மரபுத் தொடராகியது என்று ஆக்கட் (Hocket) என்பவர் கூறுவார்.

வருணனை மொழியியல், வரலாற்று மொழியியல் ஆகிய இரு மொழியியலை ஆராய்வதற்கு உதவும் ஒரு இலக்கணக் கூறு மரபுத் தொடர் ஆகும். ஒருசில மரபுத் தொடர்கள் ஒருமுறை பயன்படுத்தப்பட்டுப் பின்னர் வழக்கிழந்து விடலாம். புதிதாக உருவாக்கப்படும் மரபுத் தொடர்கள், உறுதியாக மொழி அமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். எனவே, அத்தகைய தொடர்சியான மாற்றங்கள் மொழி அமைப்பை எவ்வாறு பாதிக்கின்றன என அறிய மரபுத் தொடர்கள் உதவும்.

மரபுத் தொடர்கள் ஆக்கும் முறைகளில் சில எல்லா மொழிகளுக்கும் பொதுவானவையாகவும், சில குறிப்பிட்ட மொழியைச்சார்ந்தனவாகவும் இருக்கும்.

தமிழ் மொழியில் மரபுத் தொடர் பல வழிகளில் ஆக்கப் படுகின்றன. அவற்றைப் பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம். எடுத்துக்காட்டாக மண்ணைக் கவ்வினார், நாமம் போட்டான், காதைக் கடித்தான், தண்ணீர் காட்டினான், கம்பி நீட்டினான் என்பன போன்ற மரபுத் தொடர்கள் அமைப்பு முறையில் பெயர்ச் சொல்லை அடுத்து ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிகின்றன.

கூட்டுப் பெயர்களும் சில நேரங்களில் மரபுத் தொடராக அமைகிறது. (எ-டு) வெள்ளை மாளிகை, மஞ்சள் கடிதம். சில சமயங்களில் சிறப்புப் பெயர்களையும் மரபுத் தொடர்களாகக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாகப் புதுமைப்பித்தன் என்ற பெயர் ஒரு மனிதனைக் குறிக்கும் ஒரு மரபுத் தொடர் ஆகும். இதைப்போலவே கம்பதாசன், சிலம்பரசன், மலர்க்கொடி, கயல்விழி போன்ற சிறப்புப் பெயர்களை மரபுத் தொடர்கள் என்று கூறுவர்.

மரபுத் தொடர் உருவாக்கத்திற்கு அதிகம் பயன்படும் முறை சுருக்கக் குறியீடுகள் செய்யும் முறை என்று கூறுவர். எடுத்துக்காட்டாக மின்சார வாரியம் என்பதை 'மிவா' என்று சுருக்கி அதே வடிவத்தை எல்லா இடங்களிலும் பயன்படுத்தி வருவதைக் கூறலாம். அதை மரபுத் தொடர் என்று கூறுவர். (எ-டு) ஐ.நா. சபை-ஐக்கிய நாடுகள் சபை; இ.அ.ப.-இந்திய அரசுப்பணி. இவற்றைத்தவிர சில கொச்சை வழக்குகளையும் (Slang) மரபுத் தொடர்களாகக் கொள்வார்கள். எல்.இரா.

**துணை நூல்கள்:**

**David Crystal**, A First Dictionary of Linguistics and Phonetics, Audre Deutsch, 1980.

Hocket, C.F., A Course in Modern Linguistics, The Macmillan Company, New York, U.S.A. 1958.

*மராட்டியத் துறவியர்*, பத்தி இயக்கத்தை மராட்டியத்தில் பரப்ப அரும்பாடுபட்ட பெரியோர்கள் ஆவர். இவர்கள் பெரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். இறைவன் ஒருவனேயென்றாலும், பக்தியால் இன, மொழி, சமய வேறுபாடின்றி அவனை அடையலாம் என்று கொண்ட அனுபூதிமான்கள். இவர்கள் எல்லாச் சாதியிலும் பிறந்தவர்

கள். உயர்வு தாழ்வு பாராட்டாது பக்தி இயக்கத்தைத் தாம் வாழ்ந்த பகுதியில் பரப்பிய ஞானிகள். இவர்களைச் சமூகச் சீர்திருத்தவாதிகள் என்று கூறினாலும் அது மிகையாகாது. இந்தத் துறவிகள் தம் தாய்மொழியான மராத்தி மொழியில் கவிதைகளைப் புனைந்து உள்ளம் உருகப் பாடி மக்களைத் திரட்டிய மகான்கள். ஞான இலக்கியங்கள் வடமொழியில் இருந்த காலத்தில், எளிய மக்களும் உய்த்துணரும் வண்ணம் தாய்மொழியின் வாயிலாக இறையின்பத்தைப் பருகிப் பிறமக்களையும் பருக வைத்தனர்.

மராட்டியத் துறவியர் கி.பி. 12 முதல் 17-ஆம் நூற்றாண்டுவரை வாழ்ந்தவர்கள் ஆவர். அவர்கள் (1)முகுந்த ராசர், (2) ஞானேசுவரர், (3) நாம தேவர், (4) ஏக நாதர், (5) முக்தேசுவரர், (6) இராம தாசர், (7) வாமன் பண்டிதர், (8) துக்காராம், (9) செய ராம் சுவாமி, (10) அரங்கநாதசாமி என்பவராவர்.

**முகுந்த ராசர்**: இவர் கி.பி. 1200 க்கும் 1300க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்; முதன் முதலாகத் தூய மராத்தி மொழியில் கவிதைகளை எழுதியவர். இவர் எழுதிய நூல்கள் பரமாமிந்தம்; விவேக சிந்து என்பனவாம். வீடுபேறு அடையும் வழிவகைகளை இவர்கவிதைகள் கூறுகின்றன.

**ஞானேசுவரர்,** கி.பி. 1271-ஆம் ஆண்டு முதல் 1296 – ஆம் ஆண்டு வரை வாழ்ந்த பெரியார். இவருடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியுமாவர். இவர்கள் அனைவரும் தூயவாழ்வு வாழ்ந்து துறவு நிலையை அடைந்தவர்கள். இவர்கள் ஆழ்ந்த ஞானியர். இவர்கள் அனைவரும் முப்பது ஆண்டுகளுக்குள்ளேயே மாண்டுபோனவர்கள். ஞானேசுவரர் எழுதிய சிறந்த நூலுக்கு ஞானேசுவரி என்று பெயர். அது மராத்தி மொழியில் எழுதப்பட்டுள்ள பகவத் கீதையின் விளக்கமாகும்.ஞானேதேவரும் அவருடைய சகோதரர்களும் ஆலந்தி என்னும் ஊரில் பிறந்தவர்கள். பைத்தான் என்னும் ஊரில் வாழ்ந்த வைதிக அந்தணர்கள் அவர்களுக்குச் சொல்ல முடியாத தொல்லைகளைத் தந்தனர். தொல்லைக்குக் காரணம் அவர்களுடைய தந்தை துறவியாக இருந்து மீண்டும் குடும்ப வாழ்வை மேற்கொண்டதேயாகும். குழந்தைகளையும் பெற்றுக் கொண்டது வைதிகத்திற்குப் புறம்பானதாகக் கருதப்பட்டது.

**நாமதேவர்,** கி.பி. 1275-ஆம் ஆண்டளவில் வாழ்ந்தவர். இவர், தையற்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர்தாம் பாடின கவிதைகளை அபங்கம் என்னும் வடிவில் அமைத்தார். கோடிக்கணக்கான அபங்கப் பாடல்களை இவர் இயற்றினார் என மக்கள் நம்பினர். பாண்டுரங்க விட்டலநாதன் மீது பக்திப் பரவசத்துடன் பாடிய நாமதேவர், பொய் புரட்டு, சூதுவாது போன்ற குறைகளைத் தம் பாடல்களில் கடுமையாகச் சாடினார்.

**ஏகநாதர்,** கி.பி. 1528 முதல் 1599 வரை வாழ்ந்தவர். இவர் பாகவதத்தின் பதினொன்றாம் பிரிவை ஓவிய வடிவ விளக்கத்துடன் வெளியிட்டார். இவர், சனார்த்தன் சுவாமி என்பாரின் சீடர். சனார்த்தன் சுவாமி தேவகிரி அல்லது தௌலதாபாத்தை ஆண்ட சுல்தான்களிடம் தேவகிரிக் கோட்டையின் ஆளுநராக இருந்தவர்.

**முத்தேசுவரர்,** கி.பி.1609 முதல் 1653 வரை வாழ்ந்த பெரியார். இவர் ஏகநாதரின் பேரராவார். ஓவியவடிவில் கவிதைகளைப் புனைவதில் வல்லுநர். இவர் மகாபாரதத்தின் சில பகுதிகளை மொழி பெயர்த்தார்.

**இராமதாசர்,** கி.பி. 1608 முதல் 1682 வரை வாழ்ந்த பெரியார். இவரைச் சமர்த்த இராமதாசர் என்றும் கூறுவர். இவர் சிவாசி மாமன்னரின் ஆத்திகக் குருவாகக் கருதப்படுகிறார். இவர் எழுதிய நூலுக்குத் 'தாசபோதம்' என்பது பெயர். அந்நூலில் கூறப்பட்டுள்ள கவிதைகள் மராத்தி மொழியில் ஈடு இணையற்றவையாகத் திகழ்கின்றன. ஆன்ம நேய ஒருமைப் பாட்டுடன் அரசியல் கருத்துகளை இரண்டறக்கலந்து எழுதப்பட்டுள்ள அரிய நூல். அதன் பயனாகச் சிவாசி மாமன்னர் மாபெரும் வெற்றிகளைப் பெற்றார். சிவாசிக்கும் இராமதாசருக்கும் நெருக்கமான உறவு இருந்தது. சமர்த்த இராமதாசர் சச்சன் காடு (Sajjangad) என்றும் ஊரில் வாழ்ந்து வீடு பேறுற்றவர்.

**வாமன் பண்டிதர்,** கி.பி. 1636 முதல் 1696 வரை வாழ்ந்தவர். இவர் சிறிது காலம் இராமதாச சுவாமியின் சீடராக இருந்தவர் என்பது கூறப்படுகிறது. இவர் வடமொழியில் சிறந்த புலமைபெற்றவர். சுலோகம் என்னும் வடிவத்தில் இவர் விதவிதமாக எழுதியுள்ளார்.

**துக்காராம்,** கி.பி.1568 முதல் 1649 வரை வாழ்ந்தவர். புனே நகருக்கு அண்மையில் உள்ள தெகு (Dehu) என்னும் ஊரில் பிறந்தவர். இவர் மராட்ட சத்திரிய வகுப்பைச் சார்ந்தவராயினும் வணிகராகத் தொழில் புரிந்தவர். தம் தந்தையாரின் பலசரக்குக் கடையில் வாணிகத்தைத் தொடர்ந்த இவருக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. மகாராட்டிரத்தில் சொல்ல இயலாத இடர்பாடுகளைக் கொண்டு வாழ்ந்தவரெனினும், மக்களால் பெரிதும் பாராட்டப் பெற்ற கவிஞராவார். இவர் சிவாசி மன்னரின் சம காலத்தவர். சிவாசி மன்னர் துக்காராமின் சங்கீர்த்தனங்களைக்

கேட்க வந்தார் என்றும், அவரைப் பிடிக்கவந்த மொகலாய வீரர்களிடமிருந்து தந்திரமாகத் தப்பினார் என்றும் கதைகள் உண்டு. இவர் அபங்கம் வடிவில் ஞானேசுவரரைப் போன்றும், நாமதேவரைப் போன்றும் கவிதைகள் புனைந்தார். 'பண்டரிபுர விட்டல நாதனை'ப் பாடிய பெருமைபெற்ற பெருமகனார் இவர்.

**செயராம் சுவாமி**, இராமதாசரின் சீடர்களில் ஒருவர். கி.பி. 1672–ஆம் ஆண்டில் காலமானவர்.

**அரங்கநாத சுவாமி**, நாசிக்கு என்னும் ஊருக்கு அருகில் கி.பி. 1608 – ஆம் ஆண்டளவில் பிறந்தவர். பகவத் கீதைக்கு விளக்க உரை எழுதியவர். இதே பெயரைக் கொண்ட பிறிதொரு சுவாமி பண்டரிபுரத்திற்கு அருகில் நசாரே (Nasare) என்னும் ஊரில் பிறந்தவர். இவர் பிற்காலத்தில் வந்த சிரீதரர் என்பாரின் மாமனார்; சிறந்த கவிஞருமாவார். இவரும் கேசவ சாமியும் இராமதாசரின் சீடர்கள். இரா.அ.

**மராட்டியப் போர்கள்**: இந்தியத் துணைக் கண்டத்தில் வாணிகம் செய்ய வந்து பின்னர் இங்கு அரசு அமைத்துக்கொண்ட ஆங்கிலேயக்கிழக்கிந்தியக் குழுமத்தினருக்கும் இந்திய அரசுகள் பலவற்றிற்கும் கி.பி.18 – ஆம் நூற்றாண்டுகளில் பல போர்கள் ஏற்பட்டன. அவ்விதம் ஏற்பட்ட பூசல்களில் மராட்டியப் போர்களும் அடங்கும். மராட்டியத் தலைவர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் மூன்றுமுறை போர்கள் ஏற்பட்டன. அவை முறையே கி.பி. 1775 முதல் 1782 வரையும், கி.பி. 1803 முதல் 1806 வரையும், மீண்டும் கி.பி. 1817 முதல் 1819 வரையிலும் நிகழ்ந்தன.

**முதல் மராட்டியப் போர்** (கி.பி. 1775 – 1782): இப்போர் பேசுவா மாதவராவ் அவர்களின் மரணத்துக்குப்பின் பேசுவாக்களின் குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவினால் உண்டானது எனலாம். பேசுவா மாதவராவ் கி.பி. 1772-இல் இறந்தபின் தமக்கு அப்பதவி வேண்டும் என்று அவருடைய சிற்றப்பன் இரகுநாதராவ் விரும்பினார். ஆனால்,மராட்டியப் பெருந்தலைவர்கள் மாதவராவின் தம்பி நாராயணராவ் என்பாரையே பேசுவா ஆக ஏற்றுக் கொண்டனர். இரகுநாதராவ் சூழ்ச்சி செய்து கி.பி. 1773–இல் நாராயணராவைக் கொல்வித்தார். ஆயினும், இறந்துபோன நாராயணராவின் மனைவி அவர் மறைந்த சில நாள்களுக்குப்பின் ஓர் ஆண் மகவை ஈன்றார். அக்குழந்தைக்கு மாதவராவ் நாராயண் என்று பெயரிட்டுப் பேசுவாப் பதவியில் அமர்த்தினர். அக்குழந்தையின் உரிமையை மராட்டியத் தலைவர்களுள் ஒருவரான மகதாசி சிந்தியாவும், பேசுவா நிருவாகத்தில் பெரும் பதவி வகித்த மதியூகியான நானாபர்நாவிசு என்பவரும் ஆதரித்தனர். அதனால், பெரிதும் ஏமாற்றம் அடைந்தார் இரகுநாதராவ். அவர் தம் உயிருக்கும் ஆபத்து வரும் என்று அஞ்சினார். ஆகவே, பேசுவாக்களின் தலைநகரான புனாவிலிருந்து ஓடிச்சென்று பம்பாயில் இருந்த ஆங்கிலேயக் குழும ஆளுநரிடம் அடைக்கலம் புகுந்தார். தம்மைப் பேசுவா பதவியில் அமர்த்த ஆங்கிலேயர் உதவினால் அதற்கு ஈடாகச் சால்செட்டுத்தீவு, பசீன் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயருக்குத் தந்து விடுவதாகவும், ஆங்கிலேயரின் நிலையான நண்பராக இருப்பதாகவும் உறுதியளித்தார். அவ்வொப்பந்தம் கி.பி. 1775-இல் சூரத்து நகரில் கையொப்பம் ஆயிற்று. பம்பாயிலிருந்த ஆங்கிலேய அதிகாரிகள், கல்கத்தாவிலிருந்த தலைமை ஆளுநரின் முன் அனுமதியின்றியே அவ்வொப்பந்தத்தைச் செய்துகொண்டதோடு செயலிலும் இறங்கி ஆங்கிலப் படையொன்றை இரகுநாதராவுக்கு உதவியாக அனுப்பினர். புனாவிலிருந்து வந்த மராட்டியப் படையைப்பம்பாயிலிருந்து சென்ற ஆங்கிலேயப்படை முறியடித்தது. கல்கத்தாவில் இருந்த ஆங்கிலேயத் தலைமை ஆளுநர், பம்பாய் ஆங்கிலேயரின் செயலை ஒப்புக்கொள்ளாமல் புனா பேசுவா அரசுடன் ஓர் நட்பு ஒப்பந்தம் செய்துகொண்டார். அது புரந்தர் ஒப்பந்தம் என்று பெயர்பெறும். ஆனால், இலண்டன் நகரில் இருந்த கிழக்கிந்தியக் குழுமத்தின் உயர் நிருவாகிகள் பம்பாய் ஆங்கிலேயர் செய்ததையே ஆதரித்துப் புரந்தர் ஒப்பந்தத்தை மறுத்தனர். ஆகவே, மராட்டியருக்கு எதிராக ஆங்கிலேயரின் போர் தீவிரமாக கி.பி. 1778-இல் தொடங்கியது. ஆங்கிலேயரின் முன்னுக்குப் பின் முரணான அச்செயல்களைக் கண்டு வெகுண்ட குவாலியர்ப் பகுதியை ஆண்டு வந்த மகதாசி சிந்தியா என்ற தலைவர், பம்பாய்ப் படைகளை முறியடுத்து, கி.பி.1779 – இல் 'வராகன்' என்ற இடத்தில் ஆங்கிலேயரைத் தோல்வியை ஒப்புக்கொள்ளச் செய்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பம் இடச்செய்தார். ஆயினும், கல்கத்தாவிலிருந்த தலைமை ஆளுநர் வராகன் 'ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துப் போரைத் தொடர்ந்தார். நானா பர்நாவிசு, மைசூர் மன்னர் ஐதர் அலி, ஐதராபாது மன்னர் நிசாம் ஆகியோருடன் இணைந்து கூட்டணி அமைத்து ஆங்கிலேயருடன் போர் செய்தார். ஆயினும், மராட்டியர் தோல்வியையே கண்டனர். இறுதியில் கி.பி. 1782-இல் போர் முடிவுற்றுச் 'சால்பை' என்ற இடத்தில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. நானாபர்னாவிசும் மகதாசி சிந்தியாவும் ஆங்கிலேயரின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியவராயினர். இந்தியாவின் மேலைப் பகுதியில் சால்செட்டுத் தீவு உட்படப் பல இடங்கள் ஆங்கிலேயர் வசம் ஆயின. மீண்டும் ஆங்கிலேயர் மராட்டியரின் உள்விவகாரங்

களில் தலையிடும் வாய்ப்பு உண்டாயிற்று. இரகுநாத ராவ் தம் விருப்பம் நிறைவேறாமல் ஏமாந்தார். சால்பை ஒப்பந்தம் அடுத்த 20 ஆண்டுகள் அமைதி காத்தது.

**இரண்டாம் மராட்டியப் போர்** (கி.பி. 1803-1806): இப்போர் வெல்லெசுலி பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது நடைபெற்றது. அப்போது பேசுவா பதவியில் இருந்தவர் இரண்டாம் பாசிராவ் என்பவர் (பேசுவா பதவிக்கு ஆசைப்பட்டு நிறைவேறா மற்போன இரகுநாதராவின் மகன்). அவர் பசீன் நகரில் ஒப்பந்தம் செய்துகொண்டு வெல்லெசுலி பிரபுவினால் ஏற்படுத்தப்பட்ட துணைப்படை உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார். மற்ற மராட்டியத் தலைவர்கள் அச்செயலை எதிர்த்தனர். குறிப்பாகக் குவாலியர் நகரில் ஆண்ட சிந்தியாவும், இந்தூரில் ஆண்ட ஒல்காரும் இணைந்து பாசிராவைப் பேசுவா பதவியினின்று நீக்கிவிட முயன்றனர். வெல்லெசுலி பிரபு விடுத்த எச்சரிக்கைகளை அவர்கள் புறக்கணிப்புச் செய்தனர். மராட்டியருடன் போர் ஏற்படுவதை வெல்லெசுலி வரவேற்றார். ஏனெனில் மராட்டியத் தலைவர்கள் பிரான்சு அலுவலர்களைக்கொண்டு தம் படைகட்கும் பயிற்சி அளித்து வந்தனர். அதனால், மேற்கு இந்தியாவில் பிரான்சின் செல்வாக்கு ஓங்கிவிடும் என வெல்லெசுலி அஞ்சினார். போரிடுவதன் மூலம் மராட்டியத் தலைவர்களை அடக்கிப் பிரான்சின் செல்வாக்கை ஒழித்துவிட அவர் திட்டமிட்டார். மேலும், இராசபுதனத்தில் மராட்டியத் தலைவர்கள் தம் ஆதிக்கத்தை விரிவாக்கி வந்ததையும் இப்போர் வழியே தடுத்துவிடவும் தலைமை ஆளுநர் எண்ணினார். அது தவிர மராட்டியத் தலைவர்களுள் ஒருவரான இரகோசி பான்சுலே (நாக்பூரில் ஆண்டவர்) ஒரிசாக் கடற்கரைப் பகுதியில் பெற்றிருந்த சில பகுதிகளை வெல்லுவதன் மூலம் சென்னைக்கும் கல்கத்தாவுக்கும் இடையே நேர்வழி ஆங்கிலேயர் வசம் வந்துவிடும் என்றும் வெல்லெசுலி நினைத்தார். அன்றிருந்த நான்கு மராட்டியப் பெருந்தலைவர்களும் (1. குவாலியரில் ஆண்ட சிந்தியா மரபினர், 2. இந்தூரில் ஆண்ட ஒல்கார் மரபினர், 3. நாக்பூரில் ஆண்ட பான்சுலே மரபினர், 4. பரோடாவில் ஆண்ட கெய்க்வார் மரபினர்) பேசுவாவைத் தத்தம் செல்வாக்குக்கு உட்படுத்தப் பல சூழ்ச்சிகள் செய்து வந்தனர். புனா ஒரு சூழ்ச்சிக் களமாக இருந்தது. ஆங்கிலேயரின் பாதுகாப்பில் இருந்த சில சிற்றரசுகளில் மராட்டியர் கொள்ளையிட்டு வந்தனர்.

போர் கி.பி. 1803-இல் தொடங்கியது. வட இந்தியாவிலும் தக்காணத்திலும் பலஅரங்குகளில் போர் நிகழ்ந்தது. வட இந்தியாவில் ஆங்கிலேயப் படைகளுக்குத் தலைவர் இலேக்கு பிரபு. தக்காணத்தில் ஆர்தர் வெல்லெசுலி(தலைமை ஆளுநர் வெல்லெசுலி பிரபுவின் தம்பி; சில ஆண்டுகட்குப்பின் வாட்டர்லூப் போர்க்களத்தில் நெப்போலியனைத் தோற்கடித்து வெல்லிங்டன் பிரபு என்ற உயர் பட்டத்தைப் பெற்றவர்) தலைமை ஏற்றார். இரு அரங்குகளிலும் மகாராட்டிரப்படைகள் தோல்வியுற்றன. பல தோல்விகளைக் கண்டு துவண்ட நாக்பூர்ப் பான்சுலே, மராட்டியக் கூட்டணியிலிருந்து விலகித் துணைப்படை உடன்படிக்கையில் கையெழுத்திட்டு ஆங்கிலேயருக்கு நண்பர் ஆனார். சிந்தியாவின் படையும் (பிரான்சுக்காரரால் பயிற்றுவிக்கப்பட்டது) தோல்வியைக் கண்டது. தொடக்கத்தில் போரில் சேராமல் ஒதுங்கியிருந்த இந்தூர் நகர் ஒல்கார் கி.பி.1804 - இல் போரில் குதித்து ஒருமுறை ஆங்கிலேயப் படைகளைத் தோற்கடித்தார். ஆயினும், அடுத்தடுத்த போர்களில் தோல்வியடைந்து பஞ்சாபுக்குத் தப்பியோடி இரஞ்சித்சிங்கின் உதவியை நாடினார். அது கிடைக்காமற்போகவே ஆங்கிலேயருடன் அமைதி ஒப்பந்தம் செய்துகொண்டார். பரோடா கெய்க்வாரும் ஆங்கிலேயரின் நண்பரானார். இவ்விதம் இரண்டாம் மராட்டியப் போரும் ஆங்கிலேயருக்குப் பெருவெற்றியாகவே முடிந்தது.

**மூன்றாம் மராட்டியப் போர்** (கி.பி. 1817 - 1819): இப்போர் ஏசுடிங்சு பிரபு (Lord Hastings) தலைமை ஆளுநராக இருந்தபோது நிகழ்ந்தது. இதற்கு முக்கிய காரணம் பேசுவா இரண்டாம் பாசிராவின் சூழ்ச்சிகளேயாகும். இரண்டாம் போரில் ஆங்கிலேயருடைய உதவியைக்கொண்டு தம் பதவியை நிலைநிறுத்திக்கொண்ட பாசிராவ், ஆங்கிலேயருக்கு எதிராகவே சூழ்ச்சியில் இறங்கினார். பழைய நிலைக்கு மராட்டிய அரசைக் கொண்டுவரவும், பேசுவாவின் மேலாண்மையை மீண்டும் நிலைநாட்டவும் அவர் திட்டமிட்டார். அதற்காக அவர் ஒல்கார், சிந்தியா, பான்சுலே ஆகியோருடன் சதித்திட்டம் தீட்டி வந்தார். அத்திட்டத்தில் பரோடா கெய்க்வார் சேரவில்லை. கெய்க்வார் மன்னரின் தலைமை அமைச்சர் கங்காதர் சாத்திரி, பேசுவாவைச் சந்திக்கப் புனா நகருக்கு வந்தபோது கொலை செய்யப்பட்டார். அக்கொலைக்குப் பாசிராவின் நண்பரும் அமைச்சருமான திரியம்பாக்சி என்பவரே காரணம். அவர் சிறை செய்யப்பட்டாலும் தப்பியோடிச் சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர். பாசிராவின் துரோகச் செயல்களை ஒற்றர்களின் வழி அறிந்த ஆங்கிலேயர் பாசிராவை நெருக்கி ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்தனர். அப்புதிய ஒப்பந்தம் திரியம்பாக்சி ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்படவும், பாசிராவ் மராட்டியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை விட்டு விலகவும் கொங்கணப்

பகுதி ஆங்கிலேயருக்கு உடைமையாக்கப்படவும் வழி செய்தது.

அதன் பின்னரும் பாசிராவ் தம் சூழ்ச்சிகளை நிறுத்தவில்லை. பிண்டாரிகளை அடக்க ஆங்கிலேயர் நடவடிக்கை எடுத்தபோது புனாவில் குழப்பம் ஏற்பட்டு ஆங்கிலேயப் பேராளரின் அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டது. இதற்குப் பேசுவாவின் சூழ்ச்சியே காரணம் என்று ஆங்கிலேயர் புனா நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயப்படைகளிடம் அகப்படாமல் இடத்துக்கு இடம் ஓடிய பாசிராவ் இறுதியில் வேறு வழியின்றி சர் சான் மால்கம் என்ற ஆங்கிலேயத் தளபதியிடம் அடைக்கலம் புகுந்தார். நாக்பூர் மன்னர் அப்பாசிராவ் பான்சுலேயும் ஆங்கிலேயரிடம் தோல்வியடைந்தார். அவர் சிறைப்படுத்தப்பட்டார். தப்பியோடிச் சீக்கிய மன்னர் இரஞ்சித் சிங்கிடம் அடைக்கலம் புகுந்தார். நாக்பூர் அரசு பான்சுலே வமிசத்துச் சிறுவன் ஒருவனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனுடன் ஓல்கார் அரசுப் பாதுகாவலராய் இருந்த துளசிபாய் என்ற பெண்மணி ஆங்கிலேயரிடம் நட்புடன் இருக்க விரும்பினாலும், இந்தூர் மராட்டியப் படைகள் ஆங்கிலேயருக்கு எதிர்ப்பாகவே இருந்தன. அவர்கள் துளசிபாயைக் கொலை செய்தனர். ஆங்கிலேயர் இந்தூர் அரசுமீது படை நடத்தி வெற்றி கொண்டனர். குவாலியரில் ஆண்ட சிந்தியா வமிசத்து மன்னர், தௌலத்ராவ் போரில் பங்கு ஏற்க இயாலதபடி ஆங்கிலேயர் தடுத்துவிட்டனர். இவ்விதம் மூன்றாம் மராட்டியப் போர் ஆங்கிலேயருக்குப் பயனுள்ளதாகவே முடிந்தது.

பெயரளவுக்கேனும் மராட்டியக் கூட்டரசு என்ற அமைப்பின் தலைமைப் பதவியான பேசுவா ஒழிக்கப்பட்டது. கடைசிப் பேசுவா ஆன இரண்டாம் பாசிராவ் ஓய்வூதியம் அளிக்கப்பட்டுத் தம் எஞ்சிய வாழ்நாளைக் கங்கைக்கரையில் பிதூர் என்னும் இடத்தில் கழித்தார். அது நாள் வரை பேசுவாக்களின் பிடியில் இருந்த (சிவாசியின் பரம்பரையைச் சேர்ந்த) மன்னர் பிரதாப்சிங்கு, சதாரா சிற்றரசுக்குத் தலைவர் ஆக்கப்பட்டார். நான்கு மராத்தியத் தலைவர்களின் அரசுகளும் பரப்புக் குறைக்கப்பட்டன. ஆங்கிலேயருக்கடங்கிய சிற்றரசர்கள் ஆயினர். ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் வலிமையாக ஊன்றிக்கொண்டது.

செ.ஐ.

மராத்தான்: கிரேக்க நாட்டில் உள்ள ஆதென்சு நகரத்திற்கு வடகிழக்கே நாற்பது கிலோ மீட்டருக்கு அப்பால் மராத்தான் (Marathan) சமவெளி உள்ளது. அங்கே 12 மீட்டர் உயரத்திற்கு ஒரு மண்மேடு இருந்தது. அதற்குக் கீழே 192 வீரர்களின் எலும்புக் கூடுகள், கி.பி. 1890 ஆம்-ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. அவை கி.மு. 490-ஆம் ஆண்டு நடைபெற்ற மராத்தான் போரில் இறந்த ஆதென்சு நகர வீரர்களின் எலும்புக்கூடுகள் என அறியப்பட்டன. மராத்தான் போர் கிரேக்கருக்கும் பாரசீகருக்கும் இடையே நடைபெற்றது. அப்போரில் பாரசீகப் பேரரசன் தரையசு (Darius – கி.மு. 521 – 485) கிரேக்கரை மிகக் கடுமையாகத் தாக்கினான். மிகச் சிறப்பாகப் போரிட்ட கிரேக்கர்கள் இறுதியில் வெற்றி பெற்றனர். அந்த வெற்றிச் செய்தியைப் பெய்டிப்பெடிசு (Pheidippides) என்ற கிரேக்க வீரன் ஆதென்சு நகரத்திற்குக் கொண்டுவந்து, 'நாம் வென்றுவிட்டோம், மகிழ்ச்சியடையுங்கள்' என்று முழங்கி விட்டு இறந்துவிட்டான். அந்த பெய்டிபெடிசைச்சிறப்பிக்கின்ற முறையில், கி.பி. 1896-ஆம் ஆண்டு ஆதென்சு நகரத்தில் நடைபெற்ற ஒலிம்பிக்குப் பந்தயங்களில் மராத்தான் ஓட்டப் பந்தயம் ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறு மராத்தான் ஓட்டப்பந்தயம் உலகப்புகழ் பெற்றது. மராத்தான் ஓட்டப்பந்தயத்தின் நீளம் 1924-ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ 45 கி.மீ. என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

நா.ப.

மராத்தி: இம்மொழி இந்தியாவிலுள்ள மகாராட்டிர மாநிலத்தில் ஏறத்தாழ நான்கு கோடி மக்களால் பேசப்படுகிறது. இது மகாராட்டிர அரசின் ஆட்சி மொழியாக உள்ளது. மத்தியபிரதேசம், குசராத்து, ஆந்திரப்பிரதேசம், கருநாடகம், கோவா, தமிழ் நாடு, கேரளம் போன்ற மாநிலங்களிலும் மராத்தி பேசுவோர் உள்ளனர்.

இந்தோ ஆரிய மொழியான மராத்தி வழங்குகின்ற இடமான மகாராட்டிர மாநிலத்தின் கிழக்கிலும் தெற்கிலும் முறையே தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகள் சூழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும். மேற்கிலும் கிழக்கிலும் குசராத்தியும் இராசசுத்தானியும், வடகிழக்கில் இந்தியும் பேசப்படும் இடங்கள் உள்ளன.

**மராத்தியின் தோற்றம்:** இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளை வடக்குப்பிரிவு, மத்திய பிரிவு, கிழக்குப் பிரிவு, மேற்குப் பிரிவு, தெற்குப் பிரிவு என்னும் பிரிவுகளாக வகைப்படுத்துவர். தெற்குப் பிரிவிலுள்ள ஒரே மொழி மராத்தியாகும். இது முன்பு மகாராட்டிரி (Maharastri) என்று வழங்கப்பட்டு வந்தது. ஒரு காலத்தில் விந்திய மலையிலிருந்து கிருட்டிணா நதி வரை பரந்து கிடந்த பெரிய காடாக விளங்கிய மகாராட்டிரத்தில், சமசுகிருதத்தின் ஒரு பிரிவான பிராகிருதம் வழங்கி வந்தது. இதனையே மகாராட்டிரி என்ற பெயரில் வடமொழி ஆசிரியர்கள் குறிப்பிட்டதாகக் கூறுவர். பிராகிருதத்திலிருந்து சௌரசேனி, மகா

ராட்டிரி என்ற இரு பிரிவுகள் தோன்றினவென்றும் அவற்றிற்கிடையே மொழி அமைப்பில் குறிப்பிடத் தக்க அளவு வேறுபாடுகள் காணப்பட்டன வென்றும் கூறுவர். இம்மகாராட்டிரி, மகாராட்டிரி பிராகிருத மாக முதலில் வளர்ந்து முடிவில் இப்போதைய மராத்தியாக ஆயிற்று என்பர்.

**மராத்தியின் வளர்ச்சி:** மராத்தி கி.பி. 12 – ஆம் நூற்றாண்டுக்கு முன் வரை இலக்கியங்களை ஆக்கு வதற்குரிய மொழியாக மதிக்கப்படவில்லை. சமசு கிருதம் அல்லது பிராகிருதமே இலக்கியம் ஆக்கும் மொழிகளாகக் கருதப்பட்டு இலக்கியங்கள் அம்மொழி களில் மட்டுமே படைக்கப்பட்டு வந்தன. மராத்தி கி பி. 12–ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இலக்கிய மொழியாகக் கருதப்படும் நிலையை எய்தியது. மராத்திய இலக்கியத்தின் தொடக்கக்காலம் கி.பி. 1188-இலிருந்து கி.பி. 1350 வரையுள்ள காலமாகும். மராத்தி கி.பி. 12 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யாதவ வமிசத்து அரசர்களின் ஆட்சியில் இலக்கிய மொழியின் மதிப்பைப் பெற்று வளர்ந்து வந்தது. மகானுபாவ, வரகரிபந்தா என்ற இருபிரிவைச் சேர்ந்த துறவியர் இயற்றிய சமய நூல்கள் அக் காலத்தைச் சேர்ந்தவையாகும். அவர்கள் இயற்றிய நூல்களே மராத்தி மொழியிலுள்ள மிகப் பழைய இலக்கியங்களாகும்.

மகாராட்டிரத்தில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சமயக் குழுக்கள் பல இயங்கி வந்தன. அவற்றைச் சார்ந்தோர் தங்கள் மெய்ஞானக் கருத்துகள் பாமர மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கு டன், மக்களின்மொழியான மராத்தியைத் தங்கள் கருத்தை வெளியிடும் மொழியாகத் தேர்ந்தெடுத்த னர். அதுதான் மராத்தி முதன்முதலாக இலக்கிய மொழியாக வளர்ந்த நிலையாகும். அக்காலத்தில் சமூகத்தின் எல்லா நிலையிலிருந்தும் அடியார்களும் இலக்கியப் படைப்பாளர்களும் தோன்றினர். சமுதா யத்தின் வெவ்வேறு பிரிவைச் சேர்ந்தவர்களான பொற்கொல்லர், குயவர், தோட்டக்காரர் போன்ற எல்லோருமே மராத்தி இலக்கிய வெளியீட்டில் முக்கிய பங்கு கொண்டனர். புகழ்பெற்ற இலக்கியப் படைப்பாளர்களான ஞானதேவர், நாமதேவர், இரகும்பர் போன்றவர்கள் அக்காலத்தைச் சேர்ந்த வராவர். அதனால், அக்காலத்தை மராத்தியில் ஏற் பட்ட சீர்திருத்தக் காலம் என்று குறிப்பிடுவர்.

‘விவேக சிந்து’ என்னும் நூல் கி.பி. 1188-இல் எழுதப்பட்ட புகழ்பெற்ற மராத்தி நூலாகும். ஞான தேவர் இயற்றிய ஞானேசுவரி என்னும் நூல் மராத்தி யில் வெளிவந்த புகழ்பெற்ற முதல் இலக்கிய நூலா கும். நாமதேவர் இயற்றியுள்ள பக்திப் பாடல்கள் இந்தியா முழுவதிலும் பரவியுள்ளதைக் காணலாம். அவருடைய பாடல்களுள் சில சீக்கியர்களின் புனித நூலான ‘ஆதிகிரந்தத்தில்’ இடம் பெற்றுள்ளன.

ஆனால், கி.பி. 14, 15 – ஆம் நூற்றாண்டுகளில் இசுலாமியர் ஆட்சி ஏற்பட்ட காரணத்தால் மராத்தி மொழியை ஆதரிப்பார் இல்லாத நிலை உண் டாயிற்று. எனவே, மராத்திய இலக்கிய வரலாற்றில் அது ஓர் இருண்ட காலமாகக் கருதப்படுகிறது. அக் காலத்தில் 14 விழுக்காடு மராத்திச் சொற்கள் மட் டுமே பயன்பட்டன என்பர். அதிலிருந்து 300 ஆண்டு களாக இருந்து வந்த இசுலாமியர் ஆட்சியில் பாரசீக மொழியின் செல்வாக்கினைக் காணலாம்.

பாரசீகத்திற்கு எதிரான இயக்கம் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் எழுந்தது என்பர். அக்காலத்தில்தான் சத்திரபதி சிவாசி, அதுவரை ஆட்சி மொழியாக இருந்த பாரசீகத்திற்குப் பதிலாக மராத்தியை அந் நிலைக்கு உயர்த்தினார். அது மட்டுமன்றி மராத்தி யில் அரசியல் கலைச்சொற்களின் பட்டியலை உரு வாக்கவும், மாதிரி அலுவலகக் கடிதங்களைத் தயாரிக்கவும் ஊக்குவித்தார்.

மராத்தி கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பேசுவாக்களின் ஆட்சியிலும் போற்றுவார் இன்றித் தாழ்நிலையை எய்தியது. மராத்தியின் நிலையில் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டிற்குப் பின்புதான் மாற்றம் ஏற்பட்டு மறுமலர்ச்சி உண்டாயிற்று.

**மொழித்தூய்மை இயக்கம்:** நெடுங்காலமாக இலக்கிய மராத்தியில், சமசுகிருதம், பிராகிருதம் முதலியவற்றின் செல்வாக்கு மட்டுமன்றிப் பாரசீக மொழியின் செல்வாக்கும் மிகுதியாக இருந்துவந்தது. மராத்தியின் தனித் தன்மையைக் காக்கும் இயக்கங் கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முடிவில் தோன் றின. அதன் காரணமாகச் சமசுகிருதம், பிராகிரு தம், பாரசீகம் முதலியவற்றின் கலப்பின்றித் தனி மராத்தியில் எழுதும்போக்கு வளர்ந்தது.

அடுத்துத் தோன்றிய முக்கியமான இயக்கம் மராத்தி மொழியில் தோன்றிய மொழிச் சீர்திருத்த இயக்கமாகும். ஆங்கில மொழியில் உள்ளது போல், மராத்தி மொழியின் சொற்கள் பலவற்றை எழுதி யிருப்பது போல் படிப்பது இல்லை. அதனால் எழுத் துக்கும் ஒலிப்புக்கும் தொடர்பின்றி இருந்தது. அந் நிலையைச் சீர்படுத்திச் சொற்களைச் சரியான எழுத்துகளில் எழுதவைத்த பெருமை ஆங்கிலேய ரான படைத்தலைவர் காண்டி(Candy) என்பவரைச் சாரும். மராத்தி மொழியில் முறையான நிறுத்தக் குறியீடுகளை ஏற்படுத்தித் தந்தவரும் அவரேயாவர்.

**வரலாற்றடிப்படையில் மொழி அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்:** இக்கால மராத்தி பழைய மராத்தியின் அமைப்பிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. சான்றாக நான்காம் வேற்றுமை உருபு பழைய மராத்தியில் -'ச' (-S) ஆக விளங்க, இக்கால மராத்தியில் -'ல' ஆக விளங்குகிறது. பழைய மராத்தியின் பன்மை விகுதி – 'எ' இக்கால மராத்தியில் 'அ' வாக மாறியுள்ளது.

| பழைய மராத்தி | இக்கால மராத்தி |
|---|---|
| சிவிதாச (jivitā sa) | சிவிதாலா (Jivitā lā) சிவால (jivāla) 'வாழ்க்கைக்கு' |
| மசீ (majasī) | மல எனக்கு (mala) |
| மனுசயெ (manuṣye) | மன்ச மனிதர்கள் (manṣa) |

**மராத்தியின் தனித்தன்மை:** இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மராத்தி மொழி, இந்தியாவின் தெற்கே பேசப்படுகிறது. புவியியல் அமைப்புப்படி இம்மொழி பேசப்படும் இடம் மற்ற ஆரிய மொழிகள் வழங்கும் இடத்திலிருந்து ஒதுங்கியுள்ளது. விந்திய மலைக்குத் தெற்கே பேசப்படுகிறது இம்மொழி. அதோடு மட்டுமன்றி மராத்தி பேசப்படும் இடம் தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகளால் சூழவும்பெற்றுள்ளது. இக்காரணங்களால், மராத்தி, இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றாலும், மற்ற ஆரிய மொழிகளிலிருந்து மொழி அமைப்பின் பல நிலைகளில் வேறுபட்டு நிற்கிறது.

பெரும்பான்மையான ஆரிய மொழிகளில் உள்ள சகர உரசொலி (Spirant) மராத்தியில் காணப்படவில்லை. பிற ஆரிய மொழிகளில் உள்ள உயிர்ப்பு ஒலிகள் (Aspirated Sounds) பேச்சுவழக்கு மராத்தியில் மறைந்துவிட்டது. பெரும்பாலான ஆரிய மொழிகளில் ஆண்பால் பெண்பால் என்னும் வேறுபாடு மட்டும் காணப்பட, மராத்தியில் அஃறிணை வேறுபாடும் உள்ளது. மராத்தியைச் சுற்றித் தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகள் உள்ளதால் அவற்றின் செல்வாக்கு மராத்தியில் ஏற்பட்டுள்ளதாகக் கூறுவர். அதற்குச் சான்றாக சில திராவிட மொழிப் பண்புகளை மராத்தியிலிருந்து எடுத்துக்காட்டுவர். மராத்தியில் 1) நாவளை மருங்கொலியும் (ள) (Retroflex lateral), அண்பல் மருங்கொலியும் (ல) (Alveolar lateral), வேற்று நிலை வழக்கில் (Contrast) அமைந்திருத்தல், 2) மொழி முதலில் வரும் உயிரொலிகள் 'இ'யும் 'உ'வும் முறையே யகர வகர உடம்படுமெய் (Off glide) பெறுதல், 3) திராவிட மொழிகளில் உள்ளது போன்ற அசையமைப்பு அமைந்திருத்தல், 4) தன்மையில் உளப்படாத் தன்மையோடு (ām hī நாங்கள்) உளப்பாட்டுத் தன்மையும் (ā paṇ நாம்) அமைந்திருத்தல் முதலிய மொழிப் பண்புகள் பிற ஆரிய மொழிகளில் காணப்படாதவை. இவை திராவிட மொழிகளின் செல்வாக்கால் ஏற்பட்டிருக்கலாம் என்று மொழியியல் அறிஞர்கள் கருதுவர். ஒரு காலத்தில் மராத்தியின் முக்கிய கிளைமொழியாயிருந்த கொங்கணி, திராவிட மொழிகளின் செல்வாக்கின் மிகுதியாலேயே தனிமொழியாயிற்று என்று கூறுவர்.

**கிளை மொழிகள்:** மராத்தியின் எழுத்து வழக்கிற்கும், பேச்சு வழக்கிற்கும் வேறுபாடுகள் இல்லை என்று கூறமுடியாது. எழுத்து வழக்கு மராத்தியில் சமசுகிருதம், பிராகிருதம் போன்ற மொழிகளின் செல்வாக்கு நெடுநாள்களாக இருந்து வருகிறது. பேச்சு வழக்கில் இவற்றின் செல்வாக்கு மிகக் குறைவு. எழுத்து வழக்கிலுள்ள மராத்தியின் உயிர்ப்பொலி (Aspirated sound) பேச்சு வழக்கில் இல்லை என்பர்.

| எழுத்து வழக்கு | பேச்சு வழக்கு |
|---|---|
| ஜீப்பா (jī bhā) | ஜீப் (jīb) 'நாக்கு' |

எழுத்து வழக்கிலுள்ள – 'எ' என்னும் பன்மை விகுதிக்கு (gā:ve கிராமங்கள்) இணையாகப் பேச்சு வழக்கில் – 'அ' (gā:va கிராமங்கள்) பயன்படுகிறது.

மராத்தியின் பேச்சு வழக்கில் பல கிளைமொழிகள் உள்ளன. இன்று வடக்குக்கொங்கணம், மத்திய கொங்கணம், முந்தைய தக்காணம், மத்தியபிரதேசம், இரத்தினகிரி போன்ற இடங்களில் இதன் வட்டார வழக்குகள் வழங்கி வருகின்றன.

கந்தேசி (Khanteshi), வைதர்ப்பி, தேசி (Deshi), நாகபுரி, இராசபுரி, வரகாடி, கொங்கணி (இது மகாராட்டிரத்தின் உள் மாவட்டங்களில் வழங்குவது; தனிமொழியாகிவிட்ட கொங்கணியிலிருந்து வேறுபட்டது) முதலியன மராத்தியின் கிளைமொழிகளாகக் குறிக்கப்படுகின்றன. மகாராட்டிரத்தின் கிழக்கு ஓரத்தில் மராத்தியும் இந்தியும் கலந்த 'அல்பி' (Halbi) என்னும் வழக்குக் காணப்படுகிறது. கடற்கரையோரப் பகுதியில் வழங்கப்படும் கொங்கணி மராத்தியின் கிளைமொழியாக இருந்து இப்பொழுது தனிமொழியாக ஆயிற்று.

பொதுப் பேச்சுவழக்கு, பொது இலக்கிய வழக்கு என்னும் இரு பிரிவுகள் மராத்தியில் உள்ளன.

பொது இலக்கிய வழக்கு இலக்கியங்களிலும் அரசு ஆவணங்களிலும் பயன்படுகிறது. பொதுப்பேச்சு வழக்கு அன்றாடப் பேச்சில் பயன்படுவதோடு, இக் கால இலக்கியங்களிலும் கையாளப்படுகிறது. புனேயில் பேசப்படும் 'தேசி'க் கிளைமொழி மராத்தியின் நிலைபேறு பெற்ற (Standard) பேச்சு வழக்காகக் கருதப்படுகிறது.

**மராத்தி எழுத்து:** மராத்தி மொழி முற்காலத்தில் நாகரி எழுத்தின் கூட்டெழுத்து வடிவமான 'மோடி' என்ற எழுத்தில் எழுதப்பட்டது. ஆனால், இது அரசு ஆவணங்களில் மட்டும் பயன்பட்டது. இது சிவாசி மன்னரின் செயலாளராக இருந்த பாலாசி ஆவாசி (கி.பி.17-ஆம் நூற்றாண்டு) என்பவரால் உருவாக்கப் பட்டது. தஞ்சையை ஆண்டுவந்த மராத்திய மன்னர்களின் காலத்தில் இம்மோடி எழுத்து பயன்பட்டு வந்ததை, இப்போது சரசுவதிமகால் நூலகத்திலுள்ள மோடி ஆவணங்களால் அறியலாம்.

இன்று மராத்தி மொழி தேவநாகரி வரிவடிவத்தில் எழுதப்படுகிறது. இதனைப் 'பால் போத்' (Bal Bodh) 'குழந்தைகளுக்குப் புரியக் கூடியது'அதாவது மிக எளிதானது என்று மராத்தியர் குறிப்பிடுவர்.

**ஒலியனியல்:** பொதுவாகப் பிற ஆரிய மொழிகளில் உள்ளது போன்றே மராத்தியின் ஒலி அமைப்பு இருப்பினும், அண்பல் மருங்கொலியோடு (ல) நாவளை மருங்கொலி (ள) காணப்படுதலும், /c/, /c/, /z/, /z/ என்னும் பல் உரசொலிகளின் தொடர்ச்சி (Series of Dental Affricates)காணப்படுதலும் இதன் சிறப்புக் கூறுகளாகும். மேலும், மூக்கின ஒலிகள் (Nasalized Sounds) காணப்படுதலும் குறிப்பிடத்தக்கதாகும்.

முன்பு சொல் இறுதியில் வந்த அ,இ,உ ஆகிய உயிரெழுத்துகள் இப்பொழுது மறைந்து விட்டனவாகக் கூறுவர். சொல் நடுவில் வரும் 'அ' அழுத்த அசையை அடுத்து வரும்பொழுது நெடிலாக ஒலிக்கப்படுகிறது. குறில் 'அ' வும் நெடில் 'ஆ'வும் பெரும்பாலும் ஏகாரத்துடன் மயங்கி வருகின்றன. சான்று: பா பா ன (ம்) (bā pā-nā) பாபானெ (bā pā-n̄) 'தந்தையால்'

முன்னர்க் குறிப்பிட்டதுபோல் மொழி முதல் 'இ'யும், 'உ'வும் முறையே யகர, வகர உடம்படு மெய்கள் பெற்று வருகின்றன.

எ-டு.: யிக்கடெ (Yikkade) இந்தத் திசையில்

வுத்யா (Ŭdhya) நாளை

மராத்தியில் 'ஐ''ஔ'என்னும் சந்தியகரங்கள் உள்ளன.

**சொல்லியல்:** மராத்தியில் ஆண்பால், பெண்பால், அஃறிணை என்னும் வேறுபாடு உள்ளது. அவ்வேறுபாடு தமிழில் உள்ளது போன்று இயற்கையாய் அமைந்தது அன்று. சான்றாகத் தமிழில் அஃறிணை என்று குறிக்கப்படும் பளா (Pha ḷā) 'கரும்பலகை', குர்சீ (Khurcī) நாற்காலி, டேபல் (tēbal) 'மேசை' முறையே ஆண்பால், பெண்பால், அஃறிணை என்று மராத்தியில் குறிக்கப்படுகின்றன. பெயர்ச்சொல்லின் பால் அடிப்படையில் விகுதிகள் சேர்த்துப் பன்மை வடிவத்தைப் பெறுகின்றனர். 'ஆ' இறுதி ஆண்பால் ஒருமைப் பெயர்ச்சொற்கள் 'ஏ' இறுதியைப் பெற்றுப் பன்மையாகின்றன.

எ-டு.:

| | | |
|---|---|---|
| கோடா | (ghōdā) | குதிரை |
| கோடே | (ghōdē) | குதிரைகள் |

ஆனால் 'ஆ' இறுதிப் பெண்பாற் பெயர்ச்சொற்கள் பன்மையில் எந்த விகுதியும் பெறுவதில்லை.

சாலா (sālā) பள்ளி, பள்ளிகள்

இதுபோலவே 'ஈ' இறுதிப் பெண்பாற் சொற்கள் 'யா' என்னும் பன்மை விகுதியைப் பெற, 'ஈ' இறுதி ஆண்பாற் சொற்களும், அஃறிணைச் சொற்களும் பன்மையில் விகுதி எதையும் ஏற்பதில்லை.

எ-டு.:

| ஒருமை | பன்மை |
|---|---|
| பிசுவீ (pisvī) 'பை' (பெ.பா) | பிசுவ்யா(piśvyā) |
| அத்தீ (hattī) 'யானை' (ஆ.பா.) | அத்தீ |
| பாணீ (paṇī) (அஃறிணை) 'தண்ணீர்' | பாணீ |

பெயருக்கு முன்வரும் பெயரடை, பெயர்ச்சொல்லின் பால், எண் வேறுபாடுகளுக்குத் தகுந்தவாறு மாறுகிறது.

| | |
|---|---|
| எ-டு.: பாத்ரா கோடா (pāthrā ghōdā) (ஆ.பா.) | வெள்ளைக் குதிரை |
| பாத்ரீ காய் (pāthrī gāy) (பெ.பா.) | வெள்ளைப் பசு |
| பாத்ரே கோடே (pāhṭrē ghōdē) (பன்மை) | வெள்ளைக் குதிரைகள் |

பெயர்ச் சொற்களின் வேற்றுமை ஏற்கும் வடிவங்களும் பெயர்ச் சொற்களின் பால், எண் வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு அமைகின்றன.

ஆம்பா (ā bā) மாம்பழம்
(ஆ.பா.)

ஆம்ப்யாசி கிம்மத் (ābyācī Kimmat) மாம்பழத்தின் விலை

நதீ (nadi) நதி (பெ.பா.)

நதிசெ நாவ் (nadicē nāv) ஆற்றின் பெயர்

**இடப்பெயர்கள்:** மராத்தியில் தமிழில் உள்ளது போன்று தன்மையில் உளப்பாட்டுத் தன்மை இருப்பது குறிப்பிடத்தக்கது.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை | மீ (mī) நான் | ஆம்கீ (āmhī) நாங்கள்<br>ஆபண் (ā paṇ) நாம் |
| முன்னிலை | தூ (tū) நீர் | தும்கீ (tumhī) நீங்கள் |
| படர்க்கை | தோ (tō) (ஆ.பா.) | தே (tē) |
| | தீ (tī) (பெ.பா.) | த்யா (tyā) |
| | தே (tē) (அஃறிணை) | தீ (tī) |

இவை தவிரச் சுட்டுப் பெயர்களாக கா (இது) தோ (அது) ஆகிய இரண்டும் பயன்படுகின்றன

மராத்தியில் நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்கள் உள்ளன. தமிழில் ஆகு என்னும் வினை, அவன் அரசன் ஆவான் என்று பெயர் வாக்கியத்தின் முடிவாக வருவது போல் மராத்தியிலும் 'ஆகு' என்னும் வினை பயன்படுகிறது.

**நிகழ்காலம்**

மீ பாரதிய ஆகே நான் இந்தியன் (ஆகிறேன்)
(mī bhāratiya āhē)

கே ஆம்சே கர் ஆகே இது என் வீடு (ஆகிறது)
(hē āmcē ghar āhē)

மராத்தியில் இறந்தகாலம் அம்மொழியில் அமைந்துள்ள சிறப்புக் கூறாகும். 'ல' என்னும் நடு ஒட்டு (infix) சேர்க்கப் படுவதால் இவ்வமைப்பு உண்டாகிறது.

மீ ஆம்பா கால்லா நான் மாம்பழம் தின்றேன்
(mi āba Khāllā)

எதிர்காலம் – 'ஈல்' – 'ஈன்' போன்ற விகுதிகள் சேர்ப்பதால் உண்டாகிறது.

தீ பத்ர லி கீல் அவள் கடிதம் எழுதுவாள்
(tī patra lihil)

எதிர்மறை நாகீ (nā hi) என்ற சொல்லைச் சேர்ப்பதன் மூலம் உண்டாகிறது.

தோ பாரதீய நாஹீ அவன் இந்தியன் அல்லன்
(tō bhāratiya nā hi)

உத்யா பாவூசு பட்ணார் நாகீ நாளை மழை பெய்யாது
(udhyā pāūs padṇar nā hi)

**தொடரியல்:** மராத்தி வாக்கியத்தில் எழுவாய் பயனிலை இயைபு காணப்படுகிறது.

| | |
|---|---|
| மீ மும்பயீலா கேலோ<br>(mī mumbaī la gē lō) | நான் பம்பாய்க்குப் போனேன். |
| தூ கேலே<br>(tū gē lē) | நீ போனாய் |
| தீ கேலீ<br>(tī gē lī) | அவள் போனாள் |
| ஆம் கீ கேலோ<br>(ām h igē lō) | நாங்கள் போனோம் |
| தும் ஹீ கேலாத்<br>(tumhī gelāt) | நீங்கள் போனீர்கள் |
| தே கேலே<br>(tē gē lē) | அவர்கள் போனார்கள் |

ஆனால், இறந்த காலத்தில் வினை, செயப்படு பொருள் குன்றா வினையாக அமையும்போது செயப்படுபொருளின் எண், பாலுக்கேற்றவாறு வினை மாறுபடுகிறது.

| | |
|---|---|
| மீ ஆம்பா கால்லா<br>(mi āba Khā llā) | நான் மாம்பழம் தின்றேன் |
| மீ ஆம்பே கால்லே<br>mi ābē Khi llē | நான் மாம்பழங்கள் தின்றேன் |

மராத்தியில் பெயரெச்சத் தொடர் தமிழில் உள்ளது போன்று அமைந்துள்ளது; பெயருக்கு முன் பெயரெச்சம் வருகிறது. ஆனால், பெயரெச்சம், பெயரின் எண், பாலுக்கேற்றவாறு மாறுபடும்.

| | |
|---|---|
| வாசணாரா முல்கா<br>(vācaṇārā mulgā) | படிக்கும் பையன் |
| காணாரீ முல்கீ<br>(gāṇāri mulgi) | பாடும் பெண் |
| பள்ணாரங் வாசரூ<br>palṇārā vāsarū) | ஓடும் கன்றுக்குட்டி |

**சொற்களஞ்சியம்:** மராத்தி, தெலுங்கு போன்ற மொழிகளால் சூழப்பட்டிருப்பதன் காரணத்தால் அளவற்ற திராவிட மொழிச்சொற்கள் மராத்தியில் வழங்குவதைக் காணலாம்.

சான்றாக

ஆயி (āi) தாய் (தமிழ் பேச்சு வழக்கில் 'ஆயி' என்ற சொல் இதே பொருளில் வழங்குகிறது)

ஆசி (āji) பாட்டி (கன்னடத்தில் 'அச்சி' என்ற சொல் இதே பொருளில் வழங்குவதைக் காண்க).

ஆத்யா (ātyā) அத்தை

அங்கண் (aṅgaṇ) முற்றம் கோ.ச

**துணை நூல்கள்:**

**Beames, J.**, A Comparative Grammar of the Modern Aryan Languages of India, Munshiram Manoharlal, New Delhi, 1970.

**Berntsen, M. & Nimbkar, J.**, A Marathi Reference, Grammar, South Asia Regional Studies, Philadelphia, 1975.

**Bloch, J.**, The Formation of the Marathi Language (Translation: Dr. Dev Raj Chanana), Motilal Banarsidas, Delhi, 1970.

**Grierson, G.A.**, Linguistic Survey of India, Vol. II, Delhi, 1967.

**Kale, K.** and **Somen, A**, Learning Marathi, Vishakha Prakashan, Pune, 1986.

*மரியநாயகம் பிள்ளை*: இவர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த தருமநாதபுரம் என்னும் ஊரினர். இவர் கி.பி. 1832 – ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தை சவரிமுத்துப் பிள்ளை என்பவர். பிரான்சு நாட்டைச் சேர்ந்த கிறித்தவ சமயகுரு ஒருவர் ஞானப்பிரகாசர் என்ற பெயரில் தமிழகத்தில் பணி புரிந்து வந்தார். அவரிடத்தில் மரியநாயகம் பிள்ளை நான்கு ஆண்டுகள் சீடராக இருந்தார். தம் 26 – ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார். பின்னர், அரசுப் பணியில் சேர்ந்து பல ஊர்களில் பணியாற்றினார். தம் சொந்த ஊருக்கு கி.பி. 1876-ஆம் ஆண்டு திரும்பிவந்து வாழ்நாளைக் கழித்தார். அக்காலங்களில் வாணிகம் செய்து பொருளீட்டினார்.

வாழ்க்கையில் தாம் உணர்ந்த அனுபவ உண்மைகளை மரியநாயகம் பிள்ளை ஒரு நூலாக எழுதினார். அந்நூலுக்கு 'மரண சாசனம்' என்று பெயரிட்டார். அந்நூல் 10 தலைப்புகளில் 53 பிரிவுகளைக் கொண்டதாக அமைந்தது.

கிறித்தவர்களின் செபமாலை 53 மணிகளை உடையது. அம்மணிகளின் எண்ணிக்கைக்கேற்ப மரண சாசனம் 53 பிரிவுகளை உடையது என்று நூலாசிரியர் கூறுகிறார். நூலின் 53-ஆம் பிரிவு மரண சாசனம் என்ற பெயருடையது. அதன் இறுதியில் அவ்வைம்பத்து மூன்று பிரிவுகளையும் கடவுள் தமக்கு அருளியதாகக் கூறுகிறார். மேலும், அதனைத் தம் மகனும் அவனுடைய பின்னோரும் பின்பற்ற வேண்டுமெனச் சொல்வதுபோல் அமைத்துள்ளார். அதனால் தான் அந்நூலுக்கு மரண சாசனம் என்ற பெயர் அமைந்துள்ளது. அந்நூலினை மரியன்னைக்குக் காணிக்கையாக்குகின்றார். கிறித்தவ ஆன்மிகத் தலைவர்களின் அனுமதியுடன் கி.பி. 1891-ஆம் ஆண்டு அந்நூல் முதல் பதிப்பாக வெளிவந்தது.

பக்தி விசயம், நல்லொழுக்கம், பிள்ளைகள் கடமை, பெற்றோர் கடமை, அனுபோக விருத்தாந்தம், தொழில் முறை, பெண் பாதுகாப்பு, மங்கலோற்சவம், வாழ்க்கை நலம், கடைசிப் பாகம் என்பன மரண சாசனத்தில் அமைந்த பத்துத் தலைப்புகள் ஆகும்.


மரண சாசனம் இலக்கியத் தரமிக்கது. சான்றோர்களின் நல்லுரைகளைத் தன்னகத்துக் கொண்டது. அறநெறிகள், பழமொழிகள், சமயக் கருத்துகள் ஆகியவற்றை ஏற்ற இடங்களில் பெற்று மிளிரும் உரைநடை நூலாக விளங்குகிறது. இர.ஆ.

*மரியம்மை*: இவர் இயேசுநாதரின் தாய். சுவக்கிம், அன்னம்மாள் ஆகியோர் இவர்தம் பெற்றோர். அவர்கட்கு நீண்டகாலம் குழந்தைப் பேறு இல்லை. இறையருளால் முதுமையில் பிறந்த மகளே மரியம்மை. யூதர்கள் பேசிவந்த கல்தேய மொழியில் 'மரியம்' என்ற சொல்லுக்கு எழுபது பொருள் உண்டு என்பர். அவற்றுள் சிறந்தனவாகக் கருதப்படுவன 'தலைவி', 'அன்பு மிக்கவள்', 'கடலின் விண்மீன்' என்பவை.

எருசலேம் நகருக்கு அருகில் 'பெத்சாயிதா' என்னும் காரணப் பெயருள்ள 'மந்தக்குளம்' என்ற இடத்தின் அருகிலுள்ள ஒரு வீட்டில் மரியம்மையின் பெற்றோர் வாழ்ந்து வந்தனர். மரியம்மை அவ்வீட்டில் பிறந்து வளர்ந்தாள் எனக்கருதப்படுகிறது. அவ்வில்லத்தில் ஒரு பேராலயம் எழுப்பப்பட்டு, அதற்கு 'மரியம்மாள் பிறந்த ஆலயம்' என்னும் பெயர் வழங்கப்பட்டது.

உலகின் முதல்பெற்றோர் ஆதாம், ஏவாள் என்று கிறித்தவ மறை கூறுகிறது. அவர்தம் வழி வருவோர் கருவிலேயே மாசு படிந்தவர்களாகின்றனர். ஆனால், மரியம்மை மட்டும் அதற்கு மாறுபட்டுப் பாவவினையின்றிப் பிறந்தாள் என்று நம்பப்படுகிறது





மரியம்மை

மரியம்மையை அவளுடைய பெற்றோர் மூன்றாம் வயதிலேயே தேவாலயத்துக்குக் கொண்டு போய்க் கடவுளுக்குக் காணிக்கையாக்கினர். அதை உறுதிப்படுத்தவே காணிக்கை மாதா திருநாள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது

தச்சுவேலை செய்து எளிய வாழ்க்கை நடத்தி வந்த சூசை என்பவருக்கும் மரியம்மைக்கும் திருமணம் உறுதி செய்யப்பட்டது. இருவரும் தாவீது மன்னன் வழி வந்தவர்கள். யூத சட்டத்தின்படி ஒரு பெண் திருமணத்திற்கு முன், தான் பூண்டுள்ள நோன்பு குறித்துத் தன் வருங்காலக் கணவனுக்குத் தெரிவிக்க வேண்டியது கடமையாயிருந்தது. எனவே, மரியம்மையும் தான் கொண்டுள்ள கன்னிமை நோன்பைச் சூசையிடத்தில் கூறினாள். தானும் அத்தகையதொரு நாட்டம் கொண்டிருப்பதாகச் சூசையும் கூறினார். பின்னர், இருவருக்கும் திருமணம் நடந்தேறியது. மணவாழ்வில் ஒருவருக்கொருவர் அன்பும் நம்பிக்கையும் கொண்டு ஆன்ம ஒன்றிப்பில் இன்பம் கண்டு இருவரும் தூய வாழ்வு நடத்தினர்.

மரியம்மை, சூசை ஆகியோர் மணவாழ்வின் ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்ற பெயருடைய வானதூதன் மரியம்மையின் முன் தோன்றினான். தூய ஆவியின் ஆற்றலால் அவன் 'இறைமகனைக் கருவாகத் தாங்கி ஒரு மகனைப் பெறுவாய்' என்று அறிவித்தான். அதன்படி பெத்தலகேம் என்ற ஊரில் மரியம்மை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கணவனை அறியாது கடவுள் அருளால் குழந்தை பெற்றதால் மரியம்மை 'கன்னித்தாய்' என்று போற்றப்படுகிறாள். 'அருள் நிறைந்த மரி என்றும் கூறப் படுகிறாள். இறைவனின் திருவுள்ளத்திற்குக் கீழ்ப்பணிந்த வினாடி முதல் புனிதத்தொண்டு அலுவல்களோடும் அவள் பிணிக்கப்பட்டாள்.

ஏரோது மன்னனின் கொடுமைக்கு அஞ்சி மரியம்மையும் சூசையும் இயேசு குழந்தையை எகிப்து நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். அவன் இறந்த பின்னர், மீண்டும் இசுராயேல் நாட்டிற்குத் திரும்பி வந்து நாசரேத்தூரில் வாழ்ந்து வந்தனர். கானாவூர் என்ற இடத்தில் நடந்த திருமணத்தில் மரியம்மையின் சொல்லுக்கு இணங்கியே இயேசுநாதர் தண்ணீரைத் திராட்சைச் சாறாக மாற்றினார்.

தன்மகன் இயேசுநாதர் சிலுவை சுமந்து எருசலேம் வீதி வழியே கல்வாரிமலை நோக்கிச் செல்லுகையில் மரியம்மை துயரம் நிறைந்த தாயாக

அவரைப் பின்பற்றிச் சென்றாள். அவர் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீப்பதற்குமுன் தாயாகிய மரியம்மையைத் தம் அன்புச் சீடர் அருளப்பரிடம் 'இதோ உன் தாய்' என்று கூறி ஒப்படைத்தார். அதுமுதல் மனிதகுலம் முழுமைக்கும் அவள் தாயானாள்.

இயேசுநாதருக்குப் பின் சிறிதுகாலம் மரியம்மை உயிர் வாழ்ந்து திருச்சபையைப் பேணி வளர்த்தார். இறந்த மூன்றாம் நாள் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுலகம் சென்றார் என்று, கிறித்தவ சமயம் கூறுகிறது. மரியம்மை விண்ணுலகம் சென்ற நாளாகிய ஆகசுட்டு பதினைந்தாம் நாளை, கத்தோலிக்கக் கிறித்தவர்கள் இன்றியமையாத் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். மே மாதம் மரியம்மைக்குரிய மாதமாகக் கொண்டு கத்தோலிக்கர் வழிபடுகின்றனர். செப்டம்பர் மாதம் 8-ஆம் நாள் மரியம்மை பிறந்தநாளாகக் கொண்டாடப்படுகிறது.

அடைக்கலமாதா, அமலோற்பவ மாதா, ஆரோக்கியமாதா, காணிக்கை மாதா, சகாயமாதா, தேவமாதா, பனிமாதா, மகிமைமாதா, வியாகுல மாதா போன்ற பற்பல பெயர்களில் மரியம்மை கூறப்படுகிறாள். அவள் உருவத் தோற்றத்தை நற்செய்தியாளர்களுள் ஒருவரான தூய உலூக்காசு ஓவியமாக வரைந்தார் என்பர். இயேசுநாதரின் சீடர்களுள் ஒருவரான தூயதோமையார் வழி, தமிழகத்திற்கு அவ்வோவியம் கொண்டுவரப்பட்டது என்றும், இப்போது சென்னையருகிலுள்ள பறங்கிமலையில் உள்ள தேவாலயத்தில் அது பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறுவர். கத்தோலிக்கக் கிறித்தவர்கள் மரியம்மையைத் தாயாக வணங்குகின்றனர். வீரமாமுனிவர், மாயூரம் வேதநாயகம்பிள்ளை போன்றோரும் மரியம்மையைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு பல இலக்கியங்களைப் படைத்தனர். இக்காலக் கவிஞர் சிலரும் படைக்கின்றனர். இர.ஆ.

*மரியா தெரசா*: (கி.பி. **1717 - 1780**): ஆசுத்திரியாவை ஆட்சி செய்த ஆப்சுபர்க்கு வமிசப்புனித உரோமானியப் பேரரசன் ஆறாம் சார்லசின் (கி.பி. 1711 - 1740) ஒரே மகள் மரியா தெரசா (Maria Teresa). தாம் இறந்த பின்னர்த் தம் மகள் அரசி ஆக வேண்டுமென ஆறாம் சார்லசு விரும்பினார். அவருடைய பேரரசில் ஆசுத்திரியா, அங்கேரி, பொகிமியா, இலம்பார்சு, பெல்சியம் முதலான பகுதிகள் இருந்தன. மரியா தெரசா அரசி ஆவதற்கு மற்ற நாடுகளின் அரசர்களும் ஒப்புதல் அளித்தனர். அதற்குப் பொது வாழ்வு ஒப்புதல் (Pragmatic sanction-கி.பி. 1724) என்று பெயர்.

ஆறாம் சார்லசு கி.பி. 1740 - இல் இறந்தார். மரியா தெரசா ஆசுத்திரியாவின் அரசியானார். ஆனால், அதே ஆண்டுப் பிரசியாவின் அரசர் மகா பிரெடிரிக்கு ஆசுத்திரியாவின் மீது போர் தொடுத்து அதன் மாநிலமான சைலீசியாவைத் தாக்கினார். அப்போரில் பிரான்சும் இசுபெயினும் பிரெடரிக்குக்கு உதவின. அப்போர் ஆசுத்திரிய வாரிசு உரிமைப் போர் (கி.பி. 1740-1748) என்று கூறப்படுகிறது. போரின் இறுதியில் சைலீசியாவைப் பிரசியாவே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே மரியா தெரசாவின் கணவர் முதலாம் பிரான்சிசு புனித உரோமானியப் பேரர்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (கி.பி. 1745).

போருக்குப் பின்னர் மரியா தெரசா ஆசுத்திரியாவில் பல நிதிநிலைச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். பிரசியாவிற்கு எதிராகப் பிரான்சுடன் நல்லுறவுகளை வைத்துக் கொண்டார். ஏழாண்டுப் போர் (கி.பி. 1756 - 1763) தொடங்கிய போது ஆசுத்திரியா, பிரான்சு, உருசியா ஆகிய நாடுகள் இங்கிலாந்தையும் பிரசியாவையும் எதிர்த்துப் போரிட்டன. போரின் இறுதியில் மரியா தெரிசா நிலப்பகுதிகள் எவற்றையும் இழக்கவில்லை.

மரியா தெரசாவின் கணவராகிய புனித உரோமானியப் பேரரசர் முதலாம் பிரான்சிசு கி.பி. 1765-ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அதையடுத்து மரியா தெரிசாவின் மகன் இரண்டாம் சோசபு (கி.பி. 1765 - 1790) புனித உரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலில் மரியா முக்கிய பணியினைச் செய்தார். அதன் பின்னரும் தம் மகனுக்குப் பலவிதங்களில் உதவி செய்தார். மரியா தெரசா கி.பி.1780-ஆம் ஆண்டு இறக்கும் வரை ஐரோப்பிய வரலாற்றில் மிக முக்கியமானவராக விளங்கினார். அவருக்கு16 குழந்தைகள் பிறந்தன. அவர்களில் 10 பேர், அவர் மறைவுக்குப் பின்னர் வாழ்ந்தனர். பிரான்சு நாட்டின் அரசர் 16 - ஆம் உலூயியின் மனைவி மேரி அண்டாய்னெ இந்த மரியா தெரசாவின் மகள் ஆவார். இவருடைய பேரன் பேத்திகள் பலர் ஐரோப்பிய அரச குடும்பங்களில் திருமணம் செய்துகொண்டனர். நா.ப.

**துணை நூல்:**

**Wallbark, T.W. and Taylor, A.M.,** Civilisation Past and Present, Chicago, 1955.

*மரியானாசுத் தீவுகள்*: பசிபிக்கு மாக்கடலின் மேற்கில் உள்ள மரியானாசுத் தீவுகள் (Marianas

slands) ஐக்கிய அமெரிக்காவின் பொறுப்பாட்சிக்கு விடப்பட்ட பகுதிகளாகும் (Trust Territory).அமெரிக்க மாவட்டமாக அமைந்த இவை, பிலிப்பைன்சுத் தீவுகளுக்குக் கிழக்கிலும், சப்பானுக்குத் தெற்கிலும் உள்ளன. இத்தீவுக் கூட்டத்தின் நீளம், வடக்குத் தெற்காக 563. கி.மீ. இவற்றின் வடக்குத் தீவுகள் மட்டும் 478 ச.கி.மீ. பரப்பு உடையன. இவற்றில் பெரும்பகுதி எரிமலைப் பாறைகள் நிறைந்தது. இவற்றின் மக்கள்தொகை 16,780 (1980). தென் தீவுகளில் சுண்ணாம்புக் கற்பாறை வகைகள் மிகுதி. மரியானாசுத் தீவுகளில் கரும்பு, காப்பிக் கொட்டை, தேங்காய் முதலியன சிறப்பாக விளைகின்றன. எரியகி (Phosphate), கந்தகம், மங்கனம் முதலிய தாதுப்பொருட்கள் இங்கே கிடைக்கின்றன.

வரலாறு: பெர்டினாண்டு மெகல்லன், இத்தீவுக் கூட்டத்தை கி.பி. 1521 – ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். அவர் இதற்கு வைத்த பெயர் இலேட்ரோன்சு (Ladrones) தீவுகள் என்பதாகும். இசுபானிய ஏசு சங்கத்தினர், கி.பி. 1668 – ஆம் ஆண்டில் அங்கு வந்து, மரியானாசுத் தீவுகள் என்று பெயரை மாற்றினர். இவை, கி.பி. 1898 – ஆம் ஆண்டு வரை இசுபெயினின் (Spain) ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. இத்தீவுகளில் குவாம் (Guam) தீவைத் தவிர மற்றையன செருமனிக்கு கி.பி. 1899 – ஆம் ஆண்டில் விற்கப்பட்டன. குவாம்தீவை அமெரிக்கா பெற்றது. இசுபெயினுக்கும், அமெரிக்காவுக்கும் கி.பி. 1898-ஆம் ஆண்டில் நடைபெற்ற போரில் இசுபெயின் தோல்வியுற்றதால் ஏற்பட்ட விளைவுகளே இவை. செருமனி பெற்றுக் கொண்ட மரியானாசுத் தீவுகளைச் சப்பான், 1914–ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்டது. சருவதேசசங்கம், 1920 – ஆம் ஆண்டில் இவற்றைச் சங்கத்தின் ஆணைக்கு உட்பட்ட சப்பானியப் பொறுப்பாட்சியின்கீழ்க் (Japan's Mandates) கொண்டு வந்தது. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில், 1944 – ஆம் ஆண்டில் அமெரிக்கா மரியானாசுத் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டது. போருக்குப் பின்னர் 1947-இல் குவாம் நீங்கலாக மற்றைய தீவுகள் யாவும் அமெரிக்கப் பொறுப்பாட்சியின் கீழ் இருப்பது என்பது ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தெ.பா.

**மருங்கூர்கிழார் பெருங்கண்ணனார்:** இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். 'கிழார்' என்பது உரிமையாளர் என்று பொருள்படும். மருங்கூர் என்ற ஊர்க்குரிய பெருங்கண்ணனார் என்பவர் மருங்கூர்கிழார் என்று அடைகொடுத்து அழைக்கப்பட்டார். இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு பாடல் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. அதுவும் சில சுவடிகளில் நக்கீரர் பாடியதாகச் சுட்டப்பட்டுள்ளது. எனினும், பெரும்பான்மை வழக்குப்பற்றி அப்பாடலை (அகம். 80) மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் பாடியதாகவே கொண்டு குறித்துள்ளனர் அகநானூற்றுப் பதிப்பாசிரியர்கள்.

தலைவியைச் சந்திக்க இரவில் அவள் குறித்த இடத்திற்கு வந்து நிற்கிறான் தலைவன். தலைவியை மணந்து வாழும் நினைவெழாமல் களவுவாழ்வில் காலம் கடத்தும் அவன் போக்கை மாற்ற வேண்டித் தலைவன்,தலைவியைச் சந்திக்க இயலாத வண்ணம் தடைகளை ஏற்படுத்திப் பிரிவு பொறாமல் அவனே திருமண ஏற்பாட்டில் முனையும் நிலைக்குக் கொண்டு வருவதற்காகத் தோழி திட்டமிடுகிறாள். எனவே, அவனிடம், 'குளிர்ந்த அலைகள் வீசும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தின் தலைவனே, முதலைகளும், சுறா மீனும் வாழுகின்ற கடற்கழியையும் கடத்தற்கரிய குறுகிய காட்டு வழியையும் கடந்து இரவில் வருகிறாயே. எங்களுக்கு அது எவ்வளவு கவலைதரும் என்று எண்ணிப் பார்த்தாயா? அப்படியென்ன அடைதற்கரிய பொருள் இங்கிருக்கிறது என்று நீ இவ்வளவு இடர்களைப் பொருட்படுத்தாமல் வருகிறாய்? உன் செயல் தலைவிக்குப் பொறுக்க முடியாத துன்பம் தருகிறது. எனவே, அவள் அஞ்சும் வகையில் நீ இப்படி இரவில் வாரா்தே. எங்கள் தந்தை கடலிற் சென்று வலைவீசிப் பிடித்துவந்த மீன்களின் வற்றல் காயுமிடத்தில் பறவைகளை ஓட்டிக் காவல் காப்பதற்காக நாங்கள் கடற்கரைக்குப் பகலில் வருவோம். ஆம்பற்கொடிகளை அறுத்துக் கொண்டு உருண்டோடும் உன் தேரில், புன்னை மரங்கள் பூக்களை உதிர்க்கும் கடற்கரைச் சோலைக்குப் பக்கத்தில் வந்து பார்' என்கிறாள்.

உடன்வாழும் உரிமைதரும் திருமணம் தலைவியைத் தலைவன் அடைதற்கெளிய பொருளாக்கும் என்னும் குறிப்பை உள்ளடக்கி 'நினக்கெவன் அரியமோ யாமே' எனக் கேட்கும் தோழியின் சொல்லாற்றல் சிறப்பானது. மீ.மு.

**மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார்:** இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் முல்லைத் திணையைத் தம் பாடுபொருளாய்த் தேர்ந்தெடுத்துள்ளார். இவர்தம் ஒரே பாடல் நற்றிணை 289-ஆம் பாடலாக அமைந்துள்ளது.பிரிந்து சென்றிருந்தான் தலைவன் ஒருவன். தலைவியும் காத்திருந்தாள். கார்வந்தும் அவன் தேர் வரவில்லை. எனவே, மனம் வருந்திப் பேசுகிறாள். 'பிரிவிடைப் பருவம் கண்டு சொல்லியது' என்ற கூற்றில் அமைந்தது அப்பாடல் (நற்.289).

தலைவி 'தோழியே, தலைவர் சொன்ன சொல் தவறாது நடப்பவர்; நிலமே பெயர்ந்தாலும் அவர் சொல்லின் நிலை பிறழாது. அவ்வாறிருக்க, அவர் இன்னும் வாராத போது, அவர் வருவதாய்க் கூறிச் சென்ற மழைக்காலம் வந்துவிட்டதே. கார்கால மேகங்கள் கடலில் நீர் முகந்து எழுந்து வானில் இருள் கவியச் சேர்ந்து நின்று இடியுடன் பெருமழையாய்ப் பொழிகின்றனவே. என் மனம் எப்படி நோகிறது தெரியுமா? முல்லை நிலத்துக் கோவலர்கள் வெட்டிய பெருமரத்தின் வேரடிக் கட்டையில் இரவில் தீக் கொளுத்திவிட்டுத் திரும்பிவிடுவார்கள். அவிப்பாரின்றி அது அப்படியே வெந்து தணியும். தலைவனைப் பிரிந்து வாடும் என் நெஞ்சின் துயர் நெருப்பையும் ஆற்றுதற்கு யாரும் இன்மையால் அது வேகிறது' என்கிறாள்.

குறித்த காலத்தில் திரும்பி வாராத தலைவனைக் குறை கூற மனமில்லாத தலைவி, அவன் வருமுன் மழை வந்ததே என மேகத்தைக் குற்றஞ் சாட்டுகிறாள். தலைவன் அருளென்னும் நீரே அவள் நெஞ்சக் கனலை ஆற்றவல்லது. அவன் அருளைப் பெறாததால், புறத்தில் மழைபெய்து புனமெல்லாம் குளிர்ந்திருக்க, அகத்தில் துயர் நெருப்பு ஆறாமல் சுடுகிறது என்ற நிலையில் தலைவி இருந்தாள். மீ.மு.

**மருங்கூர்ப்பாகைச் சாத்தன் பூதனார்:** சாத்தன் பூதனார் என்ற இயற்பெயர் கொண்ட இவர் மருங்கூர்ப்பாகை என்னும் ஊரைச் சேர்ந்தவராதல் வேண்டும். மருங்கூர்ப்பட்டினம் என்ற பெயராலும் அவ்வூர் வழங்கப்படும் என்பது சிலர் கருத்து. மருங்கூர்ப்பட்டினம் பற்றி நக்கீரர் (அகம். 227) குறிப்பிட்டுள்ளார். தழும்பன் என்பவனுக்குரிய ஊணூர்க்கும் அப்பாலுள்ளதென்றும் உப்பங்கழிகள் நிறைந்த வளமான ஊர் என்றும் குறிக்கிறார். ஊர் எதுவாயினும் இவர் பாடிய பாடல் ஒன்றே ஒன்றுதான் (அகம். 327).

பாலைத் திணையில் தலைவன் கூற்றாக அமைந்த பாடல் அது. பொருளீட்டச் செல்ல வேண்டிய சூழலில் கடமையும் காதலும் இருவேறு புறம் ஈர்க்கச் செல்லவேண்டிய வழியின் கொடுமை மனத்தை மருட்டப் பொருளீட்டி வருமாறு தன்னைத் தூண்டிய நெஞ்சைக் கடிந்துரைக்கிறான். 'நெஞ்சமே, கூடிவாழும் இன்பமும் பிரிவின் துன்பமும் பகலும் இரவும்போல் முரண்பட்டவை. பிரிவென்பது துன்பம் தருவது. தலைவியுடன் இன்புற்றிருக்கும் என்னை அதற்கு நேர்மாறான துன்பநிலை அடையும் வழியில் துரத்துகிறாயே. இது முறையா? இச்செயலை நீ நன்றாக எண்ணித்தான் துணிந்தனையா? செல்ல வேண்டிய வழியின் தன்மை எத்தகையது என்று உனக்குத் தெரியுமா? கானலை நீரென்று கருதி விலங்குகள் அந்த மாயையின்பின் ஓடிக்கொண்டிருக்கும். பாலைநில வெம்மைக்குப் பழக்கப்பட்ட மரல் செடிகூட வாடிக்கிடக்கும். நிலம் களர்பரந்து வெடித்துக் கிடக்கும். மலையிலிருந்து விழும் அருவி போன்று பாறைமேல் நீண்ட பாம்புத் தோல்கள் அசைந்தாடிக் கிடக்கும். மரங்களின் அடியில் புற்றுப் படர்த்திருக்கும். வறண்ட கிளைகளில் காக்கைகள் அமர்ந்திருக்கும். வழிப்பறிக் கள்வரால் கொலை செய்யப்பட்டு வீழ்ந்துகிடக்கும் பிணங்களின் நிணங்களைக் கொத்திக்கொண்டிருக்கும். மேலும் அங்குப் பொருள் பெறும் ஆசையால் கொன்ற கள்வர்கள் ஏதும் கிடைக்காததால் ஏமாந்து, எறிந்த அம்புகள் வீணாயினவே என்று வருந்தி நிற்பர். அத்தகைய காட்டுவழியைக் கடக்கத் துணிந்தாயே. கடந்து சென்றபின் எம்மை நினைக்கவும் உன்னால் முடியுமோ' என்கிறான்.

இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவது வாழ்வின் இயற்கை. எனவே, இப்போது தலைவியுடன் இன்புற்று இருந்தாலும் ஏதேனும் ஒரு வகையில் தானாக ஒரு துயரம் வரத்தான் செய்யும். அதைத் தவிர்க்கவும் இயலாது; தாங்கியே ஆக வேண்டும் என்று கூறும் உலகியற்கருத்து நயமிக்கதாகும். மீ.மு.

**மருட்கை:** தொல்காப்பியம் கூறும் எட்டுவகை மெய்ப்பாடுகளுள் மருட்கை ஒன்று. ஏனைய மெய்ப்பாடுகளாவன, நகை, அழுகை, இளிவரல் (இழிவு) அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பனவாகும். மெய்ப்பாடாவது உள்ளத்தில் எழும் உணர்ச்சி மெய்யின்கண் புலப்படத் தோன்றுதல் ஆகும். மருட்கை என்பது வியப்பு. இதனை 'மதிமை சாலா மருட்கை' என்பர் தொல்காப்பியர். அறிவினைத் திரித்து வியப்பூட்டுவது என்பது இதன் பொருள். புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகிய இவை நான்கு பற்றி வியப்புத் தோன்றும்.

புதுமையாவது முன்பு காணாத புதியதொன்றைக் காணும்போது ஏற்படும் வியப்பினைக் குறிக்கும். குன்றக் குறவர்கள் செங்குட்டுவன் முதலியோரிடம் சென்று பொன்போன்ற பூக்களையுடைய வேங்கை மரநிழலில் ஒரு முலை இழந்துவந்து நின்ற ஒரு பத்தினிக்கு, விண்ணிலிருந்து இறங்கிய தேவர்கள், அவள் தன் கணவனைக் காட்டி அவளோடும் அவர்கள் விண்ணுலகம் போனது தங்களுக்கு மிகவும் வியப்பாக இருந்தது என்ற கருத்தமைந்த சிலப்பதிகாரப் பதிகத்தின் அடிகளில் புதுமைபற்றி வரும் வியப்பினை உணரலாம்.

பெருமை என்பது இதுவரை கண்டனவற்றைக் காட்டிலும் மிகப் பெரியதாக உள்ளமையை

உணர்ந்து வியத்தல். தலைவி தன் தலைவன்பால் கொண்டிருக்கும் நட்பு இந்நிலவுலகினும் பெரியது, வானினும் உயர்ந்தது, கடலைக் காட்டிலும் ஆழமானது என்று கூறுவதைக் குறிக்கும் குறுந்தொகை மூன்றாம் பாடலில் பெருமை வியப்பு அமைந்துள்ள தெனலாம். சிறுமை என்பது மிக நுண்ணியவற்றைக் கண்டுவியத்தல். 'அது கடுகின்கண் பல துளைகள் போல்வன' என இளம்பூரணர் சிறுமையை விளக்கு கிறார். கரிய பெரிய கண்களையுடைய நங்கையின் இடையைவிடச் சிறியது வேறொன்றில்லை என்னும் பொருளமைந்த, 'கடையிற் சிறந்த கருநெடுங்கண் பேதை, இடையிற்சிறிதொன்றில்' என்னும் அடிகளில் சிறுமை வியப்புப் புலனாவதை உணரலாம். ஆக்கம் என்பது, ஒன்றன் வளர்ச்சியைக் கண்டு வியத்தல். மரம் முதலாயின தம் அளவுமீறி வளர்ச்சியுறுதலும், மிகவும் வறுமையுடையவன் செல்வமிக்கவனாகிய தற்குக் காரணம் அறியாதவன் அதுகண்டு வியத்தலும், இளையவன் ஒருவன் வீர மிக்கவனாய்த் திகழ்தலும் இவைபோன்ற பிறவும் ஆக்கத்தின் பாற்படும். மிகச் சிறிய ஆலம் வித்தை நிலத்தில் இடின், அது நாளடைவில் முளைத்துக் கிளைத்து வானளாவிய மரமாக வளர்தல் போல அறத்தின் பயன் மிகச் சிறியதாயினும் அதை நல்லவர் அடைவாராயின், அது வானம் சிறிதாகும்படி பெரிதாக வளர்ச்சியுற்று அதனால் பலரும் பயனடைவர் என்னும் கருத்துடைய நாலடியார்ப் பாடல் (அறன் வலியுறுத்தல் – 8) ஆக்கம் பற்றி வரும் வியப்புக்குத் தக்க எடுத்துக் காட்டாகும். இவற்றினின்று புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகியன பற்றித் தோன்றும் மருட்கை மெய்ப்பாட்டின் திறம் தெளிவாகிறது. தா.ஏ.ஞா.

**மருட்பா**: வெண்பா முதலாகவும் ஆசிரியம் ஈறாகவும் அமையப் பெறுவது மருட்பா எனப்படும். மருள் மயக்கம், சேர்க்கை எனப் பொருள்படும். இரு பாக்கள் சேர்ந்து அமையப் பெறுவது மருட்பாவாகும். 'ஒரு பார்ப்பனக் குமாரனும் அரச கன்னியும் கூடி வாழ்தல் போல வெண்பாவும் ஆசிரியப்பாவும் மருள் பூண்டு கூடி நிற்றலால் இது மருட்பா எனப்பட்டது' என்பர் சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளை.

நால்வகைப் பாக்களுக்கும் அமையும் ஓசைகள் அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் எனப்படும். மருட்பாவுக்குத் தனி ஓசை கூறப்படவில்லை. 'மருட்பா ஏனை இருசாரல்லது தானிது என்னும் தன்மை இன்றே' (தொல்.செ.85) என இதன் நிலையைத் தொல்காப்பியர் குறிப்பர்.

பாநிலையில் இப்பா தொல்காப்பியத்தில் பேசப் படவில்லை. வெண்பாவின் பொருண்மையாகிய கைக்கிளையைப் பற்றிப் பேசுமிடத்தே, 'கைக்கிளை தானே வெண்பா ஆகி ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே' (தொல்.செ.119) என இதன் வடிவம் மட்டும் குறிக்கப்பட்டது.

பிற்கால இலக்கணங்கள் மருட்பாவுக்கு வடிவும் பொருண்மையும் வகுத்தன. தொல்காப்பியம் தரும் செய்தியே இப்பொருண்மைப் பகுப்புக்கு அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும். வடிவநிலை தொல்காப்பியத்தில் தரப்பட்டதைவிடத் தெளிவாகவும் விளக்கமாகவும் பிற்காலத்தில் தரப்பட்டுள்ளது.

மருட்பாவில் வெண்பா முதலாகவும் அகவல் இறுதியாகவும் வரும் என்பது, 'வெள்ளை முதலா ஆசிரியம் இறுதி கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும், (காக்கை பாடினியம் – 86) எனக் காக்கைபாடினியத்திலும், 'வெண்பா முந்தி இறுதி அகவலது ஆகி முடியும் ... மருட்பா என்று இயம்புவரே' (வீரசோ. 119) என வீரசோழியத்திலும், 'மருட்பா, வெள்ளை வந்தபின் அகவல் ஈற்றில் மருளும் இயல்புடைத் தென்பது' (தொன்.விள.238) எனத் தொன்னூல் விளக்கத்திலும், 'புறநிலை என்று இப்பொருள்மிசை வெண்பா முதல் வந்து அகவல் பின் வருவது, மருட்பா எனப் பெயர் வைக்கப்படுமே' (மு.வீ.யா. செ.62) என முத்து வீரியத்திலும் கூறப்பட்டுள்ளது,

'பண்ணும் திறமும்போல் பாவும் இனமுமாம் வண்ண விகற்ப வகைமையால்-பண்மேல், திறம் விளரிக் கில்லதுபோல் செப்பல் அகவல், இசைமருட்கும் இல்லை இனம்' என மருட்பாவிற்கு இனமில்லாத் தன்மையை யாப்பருங்கல விருத்தி (யா.வி.55 மேற்.) விளக்குகிறது.

'பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை ஊனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்
வண்பால் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே'
(யா.கா.35)

என மருட்பா நால்வகைப் பொருள் பற்றி வரும் என யாப்பருங்கலக்காரிகையும், இலக்கண விளக்கமும், இலக்கண சூடாமணியும் கூறுகின்றன.

மருட்பாவில் வரும் வெண்பா இன்னிசை வெண்பாவாக இருப்பினும், வெண்பா முடியும்இடத்தில், அதாவது வெண்பாவின் ஈற்றடியின் இறுதியில் அவ்வழியின் எதுகை பெற்ற தனிச்சீர் வரும். சுவாமி

நாதம் மருட்பாவை ஆசிரிய வகையாகவே அடக்கிக் கூறுகிறது.

வெண்பா அடியும் ஆசிரிய அடியும் ஒத்து வருவன சமனிலை மருட்பா எனவும், ஒவ்வாது வருவன வியனிலை மருட்பா எனவும் பெயர் பெறும். அவை கூட்டி வழங்கும்போது, புறநிலை வாழ்த்துச் சமனிலை மருட்பா, புறநிலை வாழ்த்து வியனிலை மருட்பா, வாயுறை வாழ்த்துச் சமனிலை மருட்பா, வாயுறை வாழ்த்து வியனிலை மருட்பா, செவியறிவுறூஉச் சமனிலை மருட்பா, செவியறிவுறூஉ வியனிலை மருட்பா, கைக்கிளைச் சமனிலை மருட்பா, கைக்கிளை வியனிலை மருட்பா என அமையும்.

மேலும், காரிகை ஆசிரியர் கூறிய பா இலக்கணங்களுள் மருட்பா ஒன்றிற்கே இப்பொருள் வரையறை கூறி இருப்பதும் குறிக்கத்தக்கது.

திருவலங்கல் திரட்டு, பிற்காலக் கலம்பக இலக்கியங்கள் போன்றவற்றில் மருட்பாக்களைக் காணலாம். வே.இரா.மா.

**மருத்துவச் சட்டவியல்:** நீதிமன்றங்கள் சட்டப்படியான நீதியை வழங்குவதைத் தலையாய குறிக்கோளாகக்கொண்டு விளங்குகின்றன. அக்குறிக்கோள் சிறந்த முறையில் செயற்பட வேண்டுமாயின் நீதிமன்றத்திற்கு வரும் வழக்குகள் தொடர்பான பொருண்மைகளின் மெய்ம்மைத் தன்மைகளை நீதிமன்றம் நுணுக்கமாக ஆராய வேண்டும். முரண்பாடான சான்றுகள் நீதிமன்றத்தின் முன்பு அளிக்கப்படும் போதும், சந்தர்ப்பச் சான்றுகள் மட்டுமே வழக்கின் ஆதாரமாகக் கொள்ளுகின்ற போதும், ஒரு செயலுக்குப் பலவிதமான ஆனால்தருக்க முறையாக ஒப்புக் கொள்ளக்கூடிய காரணங்கள் மெய்ப்பிக்கப்படும் போதும் நீதிமன்றம் அறிவியலின்படி ஒத்துக் கொள்ளத் தகுந்த பொருண்மைகளை ஆதாரமாக வைத்தே முடிவினைத் தரும். அத்தகைய தருணத்தில் மருத்துவர் சான்று என்பது இன்றியமையாத ஒன்று. அவ்வகைச் சான்று எந்த அடிப்படையில் தரப்படுகிறது என்பதையும் அது எந்த முறையில் தரப்பட வேண்டும் என்பதையும் சட்ட அமலாக்கத்திற்கு அதன் பயன்பாடுகள் யாவை என்பதையும் விவரிப்பதே மருத்துவச் சட்டவியல் ஆகும். இதனைச்சட்டஞ் சார்ந்தநோய் நொடிநூல் (Forensic Pathology), நஞ்சூட்டாய்வு நூல்(Toxicology), விரல் பதிவு ஆய்வு நூல் (Finger Print), நெஞ்சுத் துடிப்பளக்கும் கருவி (Cardiograph), ஊடுகதிர் நிழற்படம் (X-ray Photo), ஊடுகதிர்-கதிரியக்க ஆய்வு நூல் (Radiology) என்று பல வகையால் பாகுபடுத்தலாம்.

காயம், மரணம், கற்பழிப்பு முதலான குற்றங்களை உறுதிப்படுத்துவதற்கான சாட்சியம், வல்லுநர் கருத்தாகக் கருதப்படுகிறது. அவருடைய அறிக்கையையோ, சாட்சியத்தையோ மட்டிலும் வைத்து நிகழ்ந்த குற்றமோ, சம்பவமோ மெய்ப்பிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லி விட முடியாது. ஆயினும், மருத்துவரின் சாட்சியமும், அறிக்கையும் மிக முக்கிய பங்கை, குற்றச்சாட்டு வழக்குகளில் வகிக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. எனவே, மருத்துவர், நம்பத்தகுந்த, விருப்பு வெறுப்பற்ற சாட்சியாக இருப்பதாலும், அவர் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட இருப்பதாலும், ஒருவர் குற்றவாளியா, குற்றவாளி அல்லரா என்பதை முடிவுசெய்யவல்ல முக்கிய சாட்சியாகக் கருதப்படுவதாலும், அவரால் நோட்டமிடப்படுகிற கருத்தில் கொள்ளப்படுகிற முடிவு ஒவ்வொன்றும் நன்றாக ஆராய்ந்து சோதனை செய்யப்பட்ட முடிவாக இருக்க வேண்டும். அவருடைய சொந்தக் கருத்துரைகளையோ, விருப்பு, வெறுப்புத் தொடர்பான உரைகளையோ கூறக் கூடாது. மேலும், அவர் செய்கின்ற ஒவ்வொரு செயலையும், காணுகின்ற காட்சிகளையும், விளைவுகளையும், அவ்வப்போது குறிப்பு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மருத்துவ அறிக்கையின்றி மரணம் எதனால் நிகழ்ந்தது என்பதனைக் கூறமுடியாது என்பதைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டு விளக்கும்.

ஒரு சமயம் மருத்துவ வல்லுநரும், மருத்துவச் சட்ட நிபுணருமான மோடி என்பாருக்கு இராசாராம் என்பவரின் பிணம் ஆய்வுக்காக அனுப்பப்பட்டது. அதனோடு அனுப்பப்பட்ட காவலரின் அறிக்கையில், 'இடப்புறத் தாடை வெட்டப்பட்டிருக்கிறது; இடப்புற விலாவில் கூரிய கருவி துளைத்துச் சென்றிருக்கிறது; மேலும், இடுப்பிலும், நெஞ்சிலும், காலிலும், சிராய்வுக் காயங்கள் உள்ளன' என்று எழுதப்பட்டிருந்தது. அவையெல்லாம், பிண ஆய்வின் போது காவலதிகாரி கண்டுபிடித்த உண்மைகள். மோடி பிணத்தை ஆய்வு செய்து பார்த்ததில் அவ்விதமாகச் சொல்லப்பட்ட எந்தக் காயமும் காணப்படவில்லை. மேலும், தொடர்ந்து ஆய்வை நிகழ்த்தினார். அதன் பலனாக, கழுத்தில் சுற்றப்பட்டிருந்த கயிறு நெருக்க, சங்கறுபட உயிர் போக்கப்பட்டிருப்பதாகக் கண்டு, தம் பிண ஆய்வு அறிக்கையில் அதைக் குறிப்பிட்டார். உண்மையைக்கண்டு பிடிப்பதில் மருத்துவர் எவ்வளவு உன்னிப்பாகச் செயற்பட வேண்டும் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

**மருத்துவச்சான்று:** மருத்துவச் சட்டத்தின் ஒரு பகுதி மருத்துவச் சாட்சியம் (Medical Evidence).

காயப்படுத்தப்பட்டவரை ஆய்வு செய்கின்ற மருத்துவர், அவருடைய பெயரையும், அவரோடு வந்த காவலரின் எண்ணையும், அவரை அடையாளம் கண்டு கொள்ளத்தக்க குறிகளையும் குறிப்பிட வேண்டும். பின்னர், ஆய்வு செய்த நேரம், நாள், மாதம், ஆண்டு முதலானவற்றையும் நுட்பமாகக் குறிப்பிட வேண்டும். அதற்கெனத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிற தனியான படிவங்கள் வழங்கப்படும். அவற்றில் அக்குறிப்புகளைக் குறித்தனுப்ப வேண்டும்.

காயத்தின் தன்மையைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். வெட்டுக் காயமா, உராய்வா,சிராய்ப்பா, எரிகாயமா, முறிவா, மூட்டு நெகிழ்வா என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். எத்தனை காயங்கள் காணப்பட்டன, கூரிய கருவிகளால் ஏற்பட்ட காயமா, மொட்டை, மழுங்கல், கட்டைக் கருவிகளால் ஏற்பட்டதா என்ற கருத்தையும் தெரிவிக்க வேண்டும். காயத்தின் நீள, அகல, ஆழத்தையும் குறிப்பிட வேண்டும். வேற்றுப் பொருள் ஏதேனும் காயத்தில் காணப்பட்டால் அதையும் குறிப்பிட வேண்டும். உடம்பின் எப்பகுதியில் காணப்பட்டன என்றும் நுட்பமாக அளந்து குறிப்பிட வேண்டும். காயம் ஏற்படுத்தப்பட்டது, எலும்பையும் பாதித்து இருக்குமானால் அதையும் குறிப்பிட வேண்டும். சிறு காயமா பெரியகாயமா, உயிருக்கு அபாயம் விளைவிக்கும் காயமா என்றும் குறிப்பிட வேண்டும். பயன்படுத்தப்பட்ட ஆயுதமெனக் கருதப்படுபவற்றைக் காவல் அலுவலர், அனுப்பியிருந்தால் அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் இரத்தக்கறை, உதிர்ந்தமயிர், துண்டுத்துணி, நூல் முதலியவற்றைக் கவனமாக ஆய்ந்தறிந்து பின்னர், அவற்றை உறையிட்டு, இடுகுறியிட்டுக் காவலரிடம் கொடுக்க வேண்டும். உடுத்தியிருந்த துணி, அதில் காணப்படும் வெட்டு, கரைசல், கண்ணீர்த்துளி, இரத்த அடையாளங்கள் முதலியவற்றையும் ஆய்வு செய்த பின்னர்க் காவல் அலுவலரிடம் கொடுத்துவிட வேண்டும். அவை மேல் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்படும். பயன்படுத்தப்பட்ட கருவியால் ஏற்படுத்தப்பட்ட காயம் மரணத்தை விளைவித்திருக்க முடியுமா என்பதை முடிவு கட்ட மருத்துவச் சாட்சியம் பெரிதும் பயன்படுகிறது. ஏற்படுத்தப்பட்ட காயம் மரணத்தை விளைவிக்கப் போதுமானதா, அதிர்ச்சியால் மரணம் ஏற்பட்டதா, இரத்த நாளங்கள் தடைபட்டு மரணம் ஏற்பட்டதா என்பனவற்றைக் குறிப்பிடுவதோடு, விளைவிக்கப்பட்ட காயம்தான் மரணத்திற்குக் காரணமா, அன்றி வேறு ஏதேனும் காரணமா என்பதையும் குறிப்பிட வேண்டும். மரணம் இயற்கையானதா, தற்கொலையா, கொலையா, தற்செயல் நிகழ்ச்சியா என்னும் உண்மையை முடிவுசெய்வதற்கு நீதிமன்றங்களில் மருத்துவரின் உதவி நாடப்படும். அப்பொழுது தவறின்றி ஒழுங்குபட உண்மையை அறிவியல் முறைப்படி எடுத்துரைக்கும் வல்லுநராக மருத்துவரின் சாட்சியம் கருதப்படுகிறது. மருத்துவரின் அறிக்கை, காவல் அலுவலரின் புலனாய்வு அறிக்கை, சாட்சிகளின் கூற்றுகள், ஆகிய அனைத்தும் ஒப்பு நோக்கப்பட்டு அவற்றிற்கிடையேயான முரண்பாடுகள் பற்றிக் குறுக்குக் கேள்விகள் கேட்டு உண்மையை வெளிப்படுத்தி நீதிவழங்குகிறது.

மருத்துவச் சட்டத்தின் ஒரு பகுதி இனம் காட்டுதல் அல்லது அடையாளங் கண்டுகொள்ளுதல் (Identification) ஆகும். குற்ற வழக்குகளில் தலைமறைவான குற்றவாளிகளையும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு ஆகிய கொடிய குற்றங்களில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களையும், அடையாளங்காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதுபோலவே பிறந்த குழந்தை மருத்துவமனையில் மற்றைய குழந்தைகளுடன் கலந்து விடும்பொழுது அடையாளம் காட்ட வேண்டிய நிலை ஏற்படும். காணாமற் போன குழந்தை, தன்னை யார் என்ற விவரம் கொடுக்க முடியாத நிலையிலும், வயது வந்தோர் நினைவாற்றலை இழந்து திரியும் நிலையிலும் அடையாளம் காட்ட நேரிடும். அதுபோலவே, இறந்து போனவரின் உடலை அடையாளங் காட்ட வேண்டிய நிலையும் ஏற்படலாம் அப்பொழுது மருத்துவர் இனம், வயது, கால், அங்க அவயவ அமைப்பு, மயிர், விரல் அடையாளங்கள், தழும்புகள், பச்சை குத்திய குறிகள், பயன்படுத்தப்பட்ட பொருட்கள், மோதிரம், காதணி போன்றவை, துணியில் இருந்த அடையாளக் குறிகள் முதலியவற்றைச் சோதித்து அடையாளங்காட்டுவார்.

மருத்துவச் சான்று தருகின்ற மருத்துவரையும் ஏனைய சான்றாளர்கள் போலக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியதிருப்பதனால் வழக்குரைஞர்களும் மருத்துவச் சட்டவியலில் தேர்ச்சி பெற்றுத் திகழ வேண்டியது அவசியமாகும். மருத்துவர் செய்ய வேண்டிய சோதனைகளைச் செய்யாது, மருத்துவச் சான்றிதழ் வழங்குவது என்பது முடியாத செயல் அன்று. எனவே அவற்றைக் குறுக்கு விசாரணை செய்வதின்மூலம் உண்மையை வெளிக்கொண்டு வந்து குற்றமற்றவரைக் காக்க இயலும். எனவேதான், மருத்துவச் சட்டவியலில் மிகத் தேர்ச்சி கொண்ட வழக்குரைஞர்கள் மட்டுமே புகழ்பெற்ற குற்றவியல் வழக்குரைஞர்களாக விளங்குகிறார்கள்.

எச்.எம்.அ.

**மருத்துவச் சமூகவியல்**,பொதுச் சமூகவியலின் சிறப்புத்துறைகளுள் ஒன்றாகும். இது 20-ஆம் நூற்றாண்டில் தோன்றிய துறை; அமெரிக்கச் சமூக அறி

வியலில் தனித்துறையாக இந்நூற்றாண்டின் இடைக் காலத்தில் ஏற்கப்பட்டது. இத்துறையின் அணுகு முறைகளும் கருத்துகளும், சித்தமருத்துவம், ஆயுர் வேத மருத்துவம் முதலான இந்திய மருத்துவத் துறைகளிலும், மேல்நாட்டு மருத்துவத் துறைகளி லும் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்திருக்கின் றன. இத்துறைக்கு நல்வாழ்வுச் சமூகஇயல் (Health Sociology) என்னும் புதிய பெயர் 1986 - இல் இந்தி யாவில் கூடிய உலகச் சமூகவியல் கூட்டத்தில்(World Congress of Sociology) ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மருத்துவச் சமூகவியல்(Medical Sociology) தனித் துறையாக அமைந்ததற்கு, மேல்நாட்டு மருத்துவத் துறைகளில் தோன்றிய புத்தம்புதிய மாற்றங்களை யும், ஐரோப்பியத் தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றிய முதலாளித்துவ உற்பத்தி முறையையும், சோவியத்து ஒன்றியம்,சீனாஆகிய நாடுகளில் தோன் றிய புதிய சமத்துவச் சமுதாய அமைப்பையும் காரணங்களாகக் கூறலாம்.

பழங்கால மருத்துவ முறைகளில், நோயின்றி வாழ்பவரை நல்வாழ்வு வாழ்பவரென்றும், நோயு டன் வாழ்பவரைப் பிணியாளர் என்றும் கருதி, நல்வாழ்விற்குத் தேவையான உணவு, உடை, சுற்றுப் புறச் சூழ்நிலை, சுகாதாரம், உடற்பயிற்சி, பொழுது போக்கு முதலியவற்றை வற்புறுத்தினர். நல்வாழ்வை ஒவ்வொருவரும் அடையவேண்டும் என்றும், அதை அடைவதற்குரிய அமைப்பையும், சூழல்களையும் அமைத்துத் தருவது அரசனின் கடமையென்றும் கூறினர். நோய்வாய்ப்பட்டவர் தம் முயற்சியால் உடல்நலம் திரும்பப்பெறுவதும், அது இயலாதபோது மருத்துவரின் உதவியுடன் உடல்நலம் அடைவதும் கடமைகளாகக் கருதப்பட்டன. அக்காலத்தில் மருத்து வம் மதத்தோடு இணைக்கப்பட்டுச் சமய குருமார்கள் மருத்துவர்களாக இருந்தனர். சமய குருக்களாகிய மருத்துவர்கள் அரசர்களிடம் செல்வாக்குப் பெற்று அரசனின் உதவியால் தம் மருத்துவ அறிவைப் பரந்து பட்ட மக்களுக்கும் பயன்படுமாறு செய்தனர். அந் நிலையில் நோயாளிகள் மருத்துவரிடத்திற்குச் செல் வதும், மருத்துவர்கள் நோயாளிகளின் வீடுதேடிச் சென்று சேவை செய்வதும் பொதுவாகக் காணப் பட்டன.

இங்கிலாந்தில் கி.பி. 18 - ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தோன்றிய தொழிற்புரட்சியின் விளைவாக அறிவியலிலும் மருத்துவத்திலும் பல புதிய கண்டு பிடிப்புகள் நிகழ்ந்தன. அவை நோயைக் கண்டறிவதி லும், நோயைக்குணப்படுத்துவதிலும், தொற்றுநோய் களைக் கட்டுப்படுத்துவதிலும் புரட்சிகர மாற்றங் களைத் தோற்றுவித்தன. அதன் காரணமாக இறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்தது. அதனால் நோயைக் கண்டறியும் போதும், நோயைக் குணப்படுத்தும் போதும், குணமடைந்தபின் குடும்பம் சமுதாயத் தோடு ஒருங்கிணையும் போதும் தோன்றுகின்ற சமு தாய உளவியல் சிக்கல்களை அறிந்து செயற்படுகின்ற முறை மேல்நாட்டு மருத்துவ முறைகளில் குறையத் தொடங்கியது. அச்சமயத்தில் மேலை நாடுகளிலும், குடியேற்ற நாடுகளிலும், மருத்துவமனைகள் தோன் றத் தொடங்கின. நோய்வாய்ப்பட்ட மனிதன் வீட்டி லிருந்து மருத்துவ மனைக்குச் சென்று, புதிய சூழ் நிலையில் மருத்துவர், செவிலியர் உதவியுடன் மருத்து வம் செய்து கொள்ளும் பொழுது புதிய சிக்கல்கள் தோன்றின. நோய்வாய்ப்பட்ட மனிதன், முழு மனித னாக இல்லாமல், நுண்கிருமிகளால் தாக்கப்பட்ட விலங்காகக் கருதப்பட்டான். அத்தகைய அணுகு முறை நுண்கிருமிகளின் காலத்தில் (Bacteriological Era) வெகுவாகக் காணப்பட்ட அணுகுமுறையாகும்.

சிக்மண்டு பிராய்டின்(Sigmund Freud) கருத்துகள் சிறப்பிடம் பெறத்தொடங்கிய பொழுது, மனி தனின் நோய்களுக்குச் சமூகக் காரணிகள் உள்ளன என்பது சான் சுனோ (John Snow) போன்றோரின் கொள்ளை நோய் இயல் (Epidemiology) அணுகு முறைகளின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

இதனிடையே, உலகெங்கிலும் உற்பத்தி முறையி லும் மாபெரும் மாற்றங்கள் தோன்றியதன் காரண மாகத் தொழில் மயமாதலும், அதன் காரணமாக, நகர்மயமாதலும் முக்கிய சமுதாய நிகழ்ச்சிகளாக அமைந்தன. முதலாளித்துவத் தொழில் முறையின் காரணமாக நகரங்கள் தோன்றின. நகர மக்களின் வாழ்க்கை முறைகள் பரம்பரை வாழ்க்கை முறைகளி லிருந்து மாறுபட்டன. கூட்டுக் குடும்பங்கள் தனிக் குடும்பங்களாக மாறின. குடும்பங்கள் செய்துவந்த பல்வேறு செயலாக்கங்களை, இரண்டாம் நிலைக் குழுக்கள் செய்யத்தொடங்கின. அவற்றில் மிக முக்கிய மான ஒன்று உடல் நலனைப் பேணுகின்ற மருத்து வப் பணி வீட்டிலிருந்து மருத்துவ மனைக்கு மாற்றப் பட்டதாகும்.

குடும்ப மருத்துவர் பேணுதல் போய் மருத்துவ அலுவலர்களின் கண்காணிப்பில் செவிலியர்கள் பேணு வது வழக்கமாகிவிட்டது. அம்மாற்றத்தில் நோயி னால் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கும், மருத்துவருக் கும் இடையில் பெரிய இடைவெளி இருப்பதைக் கண்டு ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாத நிலை யில் எப்பொழுதும் செவிலித்தாயையோ, வேறு ஒரு வரையோ, நாடுகின்ற நிலை உண்டாயிற்று. நோய்க் கான சமூகக் காரணிகள் ஒதுக்கப்பட்டதன் காரண மாக நோயை முழுவதும் குணப்படுத்துவதும், திரும்ப

வும் வாராமல் தடுப்பதும், பெரிய சிக்கல்களாயின. குறிப்பாக உளநிலை நோயாளிகள் சமூகத்தில் மீண்டும் சேர்ந்து நோய் திரும்பாமல் இருக்குமாறு செய்ய வேண்டியதுகடனாயிற்று. அக்குறைகளைச் சரிசெய்யச் சமூகவியலின் அறிவும், அனுபவமும் தேவையாயின.

அதைப் போல, மருத்துவமனைகள், பல துறைகளையும், பகுதிகளையும் கொண்ட ஒரு சிக்கலான அமைப்பாயிற்று. மேலும், மருத்துவர், செவிலியரைத் தவிர, ஊடு கதிர் (X-ray) படம் எடுப்பவர், சோதனைச் சாலை அறிஞர்(Laboratory Scientists), தொழிற்பயிற்சிச் சிகிச்சையாளர் (Occupational Therapists), பயிற்சிமுறைச் சிகிச்சையாளர் (Phisiotherapists) ஆகிய பல்வேறு நிபுணர்கள் அந்த நிலையை மேலும் சிக்கலாக்கினார்கள். அதனுடன், நோயாளி ஒருமருத்துவரைப் பார்த்து மருத்துவம் பெறுவதற்குப் பதிலாக, பல்வேறு சிறப்புத்துறை மருத்துவர்களிடம் வெவ்வேறாகச் சோதனை செய்து தங்கள் மருத்துவம் பெற வேண்டியதாயிற்று. அதன் விளைவாக நோயாளி, மருத்துவருக்கிடையேயுள்ள உறவிலும் நோயாளி செவிலியர்களுக்கிடையேயுள்ள உறவிலும், நோயாளிகளுக்கும் மற்ற நிபுணர்களுக்குமிடையேயுள்ள உறவிலும் சிக்கல்கள் தோன்றின. அது போலவே, மருத்துவர்களுக்கு இடையேயும், மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் இடையேயும், மருத்துவர்களுக்கும் மற்ற நிபுணர்களுக்குமிடையேயும் சிக்கல்கள் தோன்றின. அச் சிக்கல்கள் அனைத்தையும் தீர்த்து, நோயாளிக்கு மருத்துவர்களின் சேவைகளையும் மருத்துவ மனைகளின் சேவைகளையும், பெற்றுத்தர சமூகவியல் அறிஞர்களின் அறிவும், அனுபவமும் தேவைப்பட்டன.

ஒரு சமுதாயம் குறிப்பிட்ட உற்பத்தி இலக்கை அடைய வேண்டும் என்றால், உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் உடல் நலத்துடன் இருக்கவேண்டியது மிக முக்கியமானதாகும். அதனால்தான் முதலாளித்துவ நாடுகள் பொதுச்சுகாதாரத்தையும், உடல்நலத்தையும் பேணுவதில் ஆர்வம் காட்டின. சிறந்த உணவு, இருக்க இடம், உடுக்க உடை, தொற்று நோய்கள் வாராது தடுக்கப்பட்ட பாதுகாப்பான சுற்றுப்புறச் சூழல் திட்டம் ஆகிய செயல்களின் மூலம் மக்கள் நலனைக்காக்கத் தொடங்கினர். பன்னாட்டு வாணிகத்தின் மூலம் பெற்ற உபரி வருமானத்தின் ஒரு பகுதியைப் பொழுது போக்கு, விளையாட்டு ஆகிய நலவாழ்வுத் திட்டங்களுக்குச் செலவிட்டு உடல் நலத்தையும், நல்வாழ்வையும் பேணிக் காத்தனர். அச் செயல்களில் பின்னடைவும், முன்னேற்றமும் ஏற்படும் பொழுதும், ஒவ்வொருவருக்கும் சமவாய்ப்பும் சமவசதிகளும் கிடைக்காத பொழுதும் அதற்கான காரண, காரியங்களையும் சரி செய்யும் வகைகளையும் அறிவதற்குச் சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் தேவைப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், அக்டோபர்ப் புரட்சியின் விளைவாகத் தோன்றிய பொதுவுடைமைச் சோவியத்து ஒன்றியத்திலும், அதன்பின் தோன்றிய பிற பொதுவுடைமை நாடுகளிலும் மக்களின் நல்வாழ்வு முன்னேற்றமடைந்தது. அதன் விளைவாக, முதலாளித்துவ நாடுகளிலும், வளரும் நாடுகளிலும் இருந்து வரும் நல்வாழ்வுச் சிக்கல்கள் சமத்துவ நாடுகளில் இல்லாமல் போயின. அவை முதலாளித்துவ நாடுகளுக்கும், பின்தங்கிய நாடுகளுக்கும் சமுதாயப்புரட்சி அச்சுறுத்தல்களைத் தோற்றுவித்தன. அந்நிலையில் மக்கள் நல்வாழ்விற்கு அடிப்படையான உணவு, உடை, வீடு, கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய அடிப்படைத் தேவைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சமூகவியலாரின் ஆய்வுகள் வெளிக்கொணர்ந்ததால், அவ்வேறுபாடுகளைப் போக்கியாக வேண்டுமென்ற சமத்துவ அச்சுறுத்தல்கள் முதலாளித்துவ நாடுகளுக்கு ஏற்பட்டன. அவ்வச்சுறுத்தல்களை முதலாளித்துவ நாடுகளிலும், பின்தங்கிய நாடுகளிலும் போக்குவதற்குச் சமூகவியலாரின் அறிவும் ஆற்றலும், அனுபவமும் தேவைப்பட்டன. மேலும், சமத்துவ நாடுகளில் முன்னரே உள்ள வசதிகளையும், வாய்ப்புகளையும் பெருகச் செய்வதற்குச் சமூகவியல் அறிஞர்களின் அறிவு தேவைப்பட்டது. மேலே குறிப்பிட்ட சூழல் அல்லது சூழல்களின் காரணமாக மருத்துவச் சமூகவியல் சிறப்பிடம் பெற்றது உலகெங்கிலும் இன்று பல்வேறு ஆராய்ச்சிகள் அத்துறையில் நடைபெற்று வருகின்றன.

**பிரிவுகள்**:மருத்துவச்சமூகவியல் நல்வாழ்வையும் நோயையும், அடிப்படைக் காரணங்களாகக் கொண்டிருந்தபோதிலும், ஆராய்ச்சி வசதிக்காகவும், ஆராய்ச்சியாளர்களின் அணுகு முறைக்காகவும் இத்துறையை பின்வருமாறு இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1) மருத்துவத்தில் சமூகவியல்(Sociology in Medicine), 2) மருத்துவத்தைப் பற்றிய சமூகவியல் (Sociology of Medicine). மருத்துவச் சமூகவியலில், நோய்க்கான சமூகக்காரணிகள், நோய் பரவுவதற்கான சமூக இயக்கங்கள், நோயைக் கண்டு அறிவதற்கான சமூக அணுகு முறைகள், நோயைத் தீர்ப்பதற்கான சமூக வழிகள் முதலியவை அடங்கும். இதில் செய்யப்படும் ஆராய்ச்சிகளும் அவற்றின் பயன்களும் பெரும்பாலும் மருத்துவர்களுக்கும், மருத்துவமனைகளுக்கும், பொது வாழ்வு மருத்துவத்திற்கும் (Public Health) துணை செய்கின்றன. இருப்பினும் தால்காட் பார்சன்சு (Talcott Parsons), இராபர்ட்டு

கே. மெர்ட்டன் (Robert K. Merton), இரனே பாக்சு (Rene Fox) ஆகியோர் இப்பிரிவில் செய்த ஆராய்ச்சிகள் சமூகவியல் கோட்பாடுகளையும், புதிய கருத்துகளையும் தோற்றுவித்தன.

இரண்டாம் பிரிவாகிய மருத்துவத்தைப் பற்றிய சமூகவியலில் மருத்துவச் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற குழுக்களாகிய மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள் (Pharmacists), இன்னபிற நிபுணர்கள் எப்படித் தங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள், அவர்கள் எந்தச் சமூகப்பிரிவில் இருந்து வருகிறார்கள், ஒரு சமூகப்பிரிவில் இருந்து வந்தால் ஏன் அப்படி வருகிறார்கள், அவர்கள் கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் தங்கள் துறைப் பயிற்சி பெறும் பொழுது வயது வந்தோர் சமூகமயமாதல் (Adult Socialisation) எவ்வாறு நிகழ்கின்றது என்பன முக்கிய ஆராய்ச்சிகளாகும். அத்துடன், இந்தக் குழுக்களுக்குள்ளே இடைவினைகள் (Interaction) எவ்வாறு நிகழ்கின்றன, அவற்றில் ஏதேனும் தனித்தன்மை உண்டா, அவை என்ன வடிவங்கள் எடுக்கின்றன என்பன போன்ற ஆராய்ச்சிகளும் செய்யப்படுகின்றன. அவ்வாராய்ச்சிகளின் மூலம் சமூகவியல் கோட்பாடுகள், கருத்துப் படிவங்கள், ஆராய்ச்சிக் கருவிகள் ஆகியவை திருத்தவோ, செம்மைப் படுத்தவோ, மாற்றவோ படுகின்றன. அப்பிரிவின் மூலம் அதிகம் பயனடைபவர்கள் சமூகவியலார் ஆவர். இருப்பினும் அவ்வாராய்ச்சிகளின் மூலம் மருத்துவர்களுக்கும், மருத்துவத்துறைக்கும், பொதுவாழ்வு மருத்துவத்திற்கும் மிகுதியான பயன்கள் உண்டு. ஒரு குறிப்பிட்ட மாறுதலை, புதிய முயற்சியை மருத்துவத்துறை அமைப்பில் யார் வரவேற்பார்கள், யார் வரவேற்க மாட்டார்கள் என்பதையறிந்து அம்முயற்சிகளை அவர்கள் ஏற்கும் வண்ணம் மேற்கொள்வது வெற்றியைத்தருவதாகும்.

**அணுகுமுறைகள்:** இத்துறையில் நடைபெறுகின்ற ஆராய்ச்சிகளில் இரண்டுவித அணுகு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை i) அமைப்பியல் செயற்பாட்டியல் அணுகுமுறை (Structural-Functionalism), ii) இயக்கவியல் பொருள் முதல் வாத அணுகுமுறை (Dialectical Materialism) என்பனவாகும்.

முதல் அணுகு முறையில் உடல்முதல் மருத்துவம் (Bio – medicine), இனக்குழு மருத்துவம் (Ethno-medicine) என்னும் வகைகள் அடங்கும். உடல் முதல் மருத்துவத்தில் நோயின் காரணங்கள் உடலியல் (Anatomy), நிணநீர் இரத்தச் சுற்றுகள் ஆகியவை அடங்கும். நோய்க்கிருமிகள், ஒட்டுண்ணிகள் போன்றவை இடம் பெற்று விளங்கும். அவற்றை மருந்தின் அடிப்படையில் சரிசெய்து போக்கலாம் என்பது ஓர் அணுகுமுறை. இவ்வணுகு முறையைச் சார்ந்த அறிஞர்கள் எட்வர்டு ஜென்னர் (Edward Jenner), இலாங்கு வில்லியம்சன் (Williamson Long), உலூயி பாசுடர்(Louie Pasteur) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இனக்குழு மருத்துவத்தில் ஒவ்வொரு குழுவிலும் பரம்பரையாக வருகின்ற நோயும் [எ-டு. உணவினால் ஏற்படும் நோய்கள், கால மாற்றத்தினால் ஏற்படும் நோய்கள், பில்லி சூனியத்தினால் வரும் நோய்கள், பேய் போன்றவற்றினால் தோற்றுவிக்கப்படும் நோய்கள்] அவற்றைத் தீர்க்கும் முறைகளும் சிறப்பான இடம் பெறுகின்றன. இங்குப் பண்பாட்டின் பங்கு முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்த அணுகுமுறைக்குக் குறிப்பிடத்தக்கவர்கள் பெஞ்சமின் டி.பால். (Benjamin.D. Paul), மெக்கிம் மேரியட்டு (Maccim Marriot), ஓவார்டு பெக்கர் (Howard Becker), மார்கிரட்டு கிளார்க்கு (Margaret Clark) ஆகியோர் ஆவர்.

அமைப்புச் செயலாக்க அணுகு முறையில் சமூக அடுக்கமைப்பு, குடும்பம், கல்வி போன்ற நிறுவனங்களின் இணைப்பு, வேலை, விளையாட்டு, பொருளாதார இயக்கங்கள் முதலியவற்றின் பாங்கு, நல்வாழ்வையும், நோய்களையும் எவ்வாறு பாதிக்கின்றன என்று கண்டறிவதாகும். அதன் அடிப்படை ஒவ்வொரு சமுதாய அமைப்பும், ஒவ்வொரு சமுதாயத் தேவைக்காக ஏற்படுத்தப் பட்டுள்ளது என்பதாகும். உடல் நலமும், மருத்துவமும் சமுதாயத்தின் அமைப்புகளுக்குத் துணைபோய் அச்சமுதாயத்தின் உறுப்பினர்களை நலமுடன் இருக்கச் செய்யவேண்டும். சமுதாயத்தின் உறுப்பினர்கள் நலமுடன் இருப்பதால் உற்பத்திச் செயலாக்கங்கள் செவ்வனே நடைபெறுகின்றன. அதன் பயனாக உற்பத்தி இலக்குகளை எட்டிப் பன்னாட்டு வணிகத்தைப் பெருக்கி இலாபத்தை உபரியாகக் கொள்வதற்கு வழிசெய்யவேண்டும் என்பது அணுகுமுறையாகும். அக்கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தவர்கள் தால்காட்டு பார்சன்சு, இராபர்ட்டு கே. மெர்ட்டன் போன்றவர்கள் ஆவர்.

இயக்கவியல் பொருள் முதல் வாத அணுகுமுறையில் மனிதன் இயற்கையின் பொருள் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றான். எனவே, சமூகப் பொருளாதார நிலைமைகள் அவனுடைய செயல்களைக் கட்டுப்படுத்துகின்றன. சமுதாயத்தின் அடிப்படை, உற்பத்தியும் மறு உற்பத்தியும் ஆகும். இந்த உற்பத்தி முறைகள் சமூகமயமாக இருக்கும் பொழுது அவன் மனிதனாக நடத்தப்படுகின்றான். அங்குள்ள

உற்பத்தி முறைகள் முதலில் அவன் தேவையை நிறைவு செய்வனவாகவும், பிறகு தன்னுடைய சக்தியையும், திறனையும், அறிவையும் சமுதாயத்திற்குப் பயன்படச் செய்யும் வகையினவாகவும் இருக்கவேண்டும்; அதனால் அவன் உடல் நலனுடன் நல்வாழ்வையும் பெறவேண்டும். இவ்வணுகு முறையைப் பின்பற்றுகின்ற அறிஞர்கள் விசெந் நவரோ (Viccnte Navarro), சாண்டர் கெல்மென் (Sander Kelman) போன்றோர் ஆவர்.

**இந்தியாவில் மருத்துவச் சமூகவியல்:** இந்தியாவில் இத்துறை அண்மைக் காலத்தில் 1960 – ஆம் ஆண்டுகளின் பின்பகுதியில் தோன்றியதாகும். இத்துறை ஐதராபாது மத்திய பல்கலைக் கழகத்திலும், தமிழ் நாட்டில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறையிலும், தில்லியில் சவர்கர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் சமுதாய மருத்துவத் துறையிலும் உள்ளது. இதைத்தவிரப் பல்வேறு பொது நலக் குழுக்கள் (Voluntary Agencies) பல்வேறு நிலைகளில் செயலாக்க ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றன.

இந்திய மக்களில் ஏறக்குறைய 70 விழுக்காட்டினர் நாட்டுப் புறங்களில் வசிக்கிறார்கள். ஆனால், இந்நாட்டிலுள்ள மேல்நாட்டு மருத்துவப் பட்டம் பெற்ற மருத்துவர்களில் 80 விழுக்காடு மருத்துவர்கள் நகரங்களில் இருக்கின்றார்கள். நாட்டுப்புற மக்கள் சொந்தமாகக் கைவைத்தியமோ பாட்டிவைத்தியமோ செய்து கொள்கின்றனர்; அல்லது சித்த, ஆயுர் வேத, ஓமியோபதி வைத்தியரிடம் மருத்துவ உதவி பெறுகின்றனர். ஆனால், நல்வாழ்வுக்கு ஏற்ற உணவு, உடை, இருக்க இடம், கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய அடிப்படைத் தேவைகள் குறைவாகவே உள்ளன. சிறு குழந்தை இறப்பு விகிதம் உயர்ந்த பல்வேறு நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. தாய் இறப்பு விகிதமும் இங்குத்தான் அதிகம். மொத்த இறப்புக்களில் 48 விழுக்காடு தடுக்கக் கூடிய தொற்று நோய்களினாலேயே ஏற்படுகின்றன. மேல் நாட்டு மருத்துவத்தில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் உடல் நல மேம்பாட்டு முறைகளையும், நோய்த்தடுப்பு முறைகளையும் புறக்கணித்து நோய்நீக்கு முறைக்கு மட்டுமே முதலிடம் அளிக்கிறார்கள். எனவே, பரந்துபட்ட மக்கள் நலிந்து நோயுற்று வாழ்கிறார்கள். மருத்துவக் கல்வியும் பொதுவாகச் சமுதாயத்தின் மேல்தட்டு மக்களுக்கே கிடைக்கிறது. மருத்துவக் கல்வியும் நோயை நீக்குவதற்கே முதலிடம் அளிக்கிறது. மேல்நாட்டு மருத்துவ முறைத்தாக்கத்தால், சித்தம், ஆயுர்வேதம், யுனானி ஆகிய மருத்துவமுறைகள் புறக்கணிக்கப்படுவதால், மக்களுக்குப் பயன்படும் வகையில் அவற்றால் செயற்பட இயலவில்லை. இக்குறைகளைப் போக்கச் சமூகவியல் ஆராய்ச்சிகளும், சமூக அறிவியல் (Social Science) ஆராய்ச்சிகளும் தேவைப்படுகின்றன. இரா.வே.

**மருத்துவ மானிடவியல்**: இது மானிடவியலின் ஓர் உட்பிரிவு. மக்களின் உடல்நலனும் நோயியலும் அவர்களின் உயிரியலோடு மட்டும் தொடர்புடையனவல்ல; சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளோடும் தொடர்புடையன. இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் ஒரு மானிடவியல் பிரிவே மருத்துவ மானிடவியலாகும் (Medical Anthropology).

பொதுவாக இது வரையில் உள்ள மருத்துவ வரலாற்றினைப் பார்ப்போமானால், பொது உடல்நலத்தின் அனைத்து முறைகளும் அந்தந்த மக்களின் சூழ்நிலைகளையும் பழக்கவழக்கத்தையும் சார்ந்தே அமைந்திருக்கின்றன. அதனால் நோயின் சமூக, பண்பாட்டுக் காரணிகளை ஆராய்வது கி.பி.19-ஆம் நூற்றாண்டில் மேலை நாடுகளில் தீவிரமடைந்தது. குறிப்பாகத் தொழிற்புரட்சியினால் உண்டான பொது உடல் நலச் சீரழிவுகளை ஆராய்வதில் தீவிரம் காட்டப்பட்டது. இதில் குறிப்பிடத்தக்கவர்கள் பிரான்சு நாட்டின் வில்லர்மே (Villerme) என்பவரும், செருமனி நாட்டு விர்சோவ் (Virchow) என்பவருமாவர். அவர்கள் உடல்நலம் குறித்த சமூக, பொருளாதார நிலைமைகளை அறிவியல் அடிப்படையில் ஆராய்வதற்கு மட்டும் சிறப்பிடம் தாராமல், ஒரு சமூகம் அதன் உறுப்பினர்களின் உடல்நலத்தை மேம்படுத்தவும், நோய்களை நீக்கவும் எத்தகைய கடமைகளைக் கொண்டுள்ளது என்பதற்கும் சிறப்பிடம் கொடுத்தனர்.

மருத்துவ மானிடவியலின் வளர்ச்சி வளரும் நாடுகளில் மேலைநாட்டு மருத்துவத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயன்றபோது தொடங்கியது. மருத்துவ மானிடவியலின் நோக்கம், நல்வாழ்வு நோய் ஆகியவைகளுடன் எவ்விதம் சமூகப் பண்பாட்டுக்கூறுகள் தொடர்பு கொண்டுள்ளன என்பதை அறிவதாகும். இவ்வகை, அறிவு மருத்துவப் பயனுக்கு மட்டுமன்றிச் சமூக நலனுக்கும் உதவும்.

எளிய பண்பாட்டைக் கொண்ட சமுதாயங்களில் மந்திரம், சூனியம், விலக்குகள் (Taboos) ஆகிய அனைத்தும் அச்சமுதாயங்களின் மருத்துவ முறைகளோடும் நல்வாழ்வு பற்றிய நம்பிக்கைகளோடும் பெரிதும் தொடர்பு கொண்டுள்ளன. எனவே, மருத்துவத்தில் சமூகப் பண்பாட்டு நிகழ்வுகளில் மருத்துவக் கூறுகளின் பாதிப்புகளையும் முழுமையாக அறிய வேண்டியது இன்றியமையாததாகிறது. இவ்வனைத்

தையும் ஆராய்வதே மருத்துவ மானிடவியவின் ஆய்வுப் பரப்பாகும்.

மருத்துவ மானிடவியல் மிகப்பரந்த எல்லைகளைக் கொண்டுள்ளதால் அதனைச் சூழ்நிலையும் நல்வாழ்வும், நாட்டார் மருத்துவம் (Folk Medicine), சமூக அமைப்பும் மருத்துவமும், மருத்துவமும் பண்பாட்டு வேறுபாடுகளும் ஆகிய நான்கு பெருந் தலைப்பின் கீழ் ஆராய்வர். அவை தவிர மனநலக் கோளாறுகளுக்கான உளவியல் காரணங்களும், அவற்றிற்கான மருத்துவ முறைகளும் அச்சமுதாயங்களின் பண்பாட்டுப் பின்னணியில் ஆராயப்படும்.

**சூழ்நிலையும் நல்வாழ்வும்**: பல்வேறு மனித இனத்தவர்கள் வாழுமிடங்களில் நன்கு தகவமைவதற்கும் தகவமையாமல் போவதற்கும் அவர்களின் பண்பாட்டுக் கூறுகள் காரணமாகின்றன. ஒரு சூழல் அமைப்பில் காணப்படும் நோய்களில் அச்சூழலில் வாழும் மக்களின் பண்பாட்டுக் கூறுகள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதைச் சான் விட்டிங்சு (John Whitings) வெப்ப நாடுகளில் புரதச்சத்துக் குறைவால் வரும் ஒருவகை நோய் (Kwashiorkor) மூலம் விளக்குகிறார். இந்நோய் மிகுதியான வெப்பமும், ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் காணப்படுகிறது. இப்பகுதியில் உள்ள நிலங்கள் புரதச்சத்துக் குறைவான கிழங்கு, பழவகைகள் ஆகியவை மட்டுமே பயிரிட ஏதுவானவை. இத்தகைய புரதச்சத்துக் குறைவாயிருக்கும் உணவுப் பொருட்களை நம்பியிருக்கும் பகுதிகளில் இளங்குழந்தைகள் எவ்விதம் இந்நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர் என்கிற ஆய்வில் விட்டிங்சு ஈடுபட்டார். பொதுவாக இப்பகுதிகளில் வாழும் பெண்களின் தாய்ப்பாலில் உள்ள புரதச்சத்துக் குறையாமலிருக்கக் கருத்தரிப்பதைத் தள்ளிப் போடுகின்றனர். இதற்காக எவ்விதக் கருத்தடைச் சாதனங்களையும் பயன்படுத்தாமல் தங்களின் பண்பாட்டு மரபாகச் சில காலம் உடலுறவில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் முறையைக் கடுமையாகக் கடைப்பிடிக்கின்றனர். இதனோடல்லாமல் தாய்ப்பால் கொடுக்கும் கால அளவை நீடிப்பதன் மூலமும் இந்நோயின் அளவினைப் பெருமளவில் குறைக்கின்றனர்.

மக்கள் தொகை அளவுக்கும், நோய்களை உருவாக்கும் ஒட்டுண்ணிக்கும் இடையிலான உறவினைச் சில சமயங்கள் பண்பாட்டு உயிரியல் கூறுகள் அறுதியிடுகின்றன. மக்கள்தொகை மிகுதியாக இருக்கும் பகுதிகள், குறைவாயிருக்கும் பகுதிகளைவிட மிகவும் எளிதில் தொற்றுநோய்களால் பாதிக்கப்படுகின்றன. மேற்கு ஆப்பிரிக்காவில் வெப்பக்காடுகள் அழிக்கப்பட்டுப்பயிர்த்தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டதால் ஏராளமான சக்தி உருவாயிற்று. கூடவே மக்கள் தொகைப் பெருக்கமும் நிகழ்ந்தது. அதனால் முறைக் காய்ச்சலைப் (Malaria) பரப்பும் கொசுக்களின் வளர்ச்சியும், அந்த நோயின் அளவும் மிகுதியாயின.

தொற்றுநோயியல், நோய்கள் பரவும்விதம் ஆகியன குறித்து அந்தந்தச் சூழலியலின் பின்னணியில் மருத்துவ மானிடவியல் ஆராய்கிறது. அது மருத்துவச் சூழலியல் (Medical Ecology) எனவும் கூறப்படும். நோயின் தோற்றமும், அது பரவும் நிகழ்வுகளில் வயது, பால், தொழில், வகுப்பு, இனம் ஆகியவைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. பெரும்பாலான கடுமையான நோய்கள் குழந்தைப் பருவத்திலேயே பாதிக்கின்றன. அதே போல இறப்பு விழுக்காடு ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே மிகுதியாகவும், பிறகு 14 வயதுவரை மிகக் குறைவாகவும், 14 வயதுக்குப் பிறகு ஏறக்குறைய ஒரே அளவிலும், 60 க்குப் பிறகு சற்றுக் கூடுதலான அளவிலும் உள்ளது. இறப்பு விழுக்காடு, வயது வேறுபாடு ஆகியவற்றோடு உணவு, நல்வாழ்வு, மருத்துவப் பராமரிப்பு ஆகியவையும் தொடர்பு கொண்டுள்ளன. நைசீரியாவின் பெடுயின் (Bedouin) மக்களிடம் காணப்படும் சத்துக் குறைவு நோய்கள் பெண்களிடையே, குறிப்பாய்க் கருத்தரிக்கும் பெண்களிடையே காணப்படுவதற்குக் காரணம், அவர்கள் சூரிய ஒளியினைத் தவிர்க்கும்பொருட்டுப் பயன்படுத்தப்படும் ஆட்டு மயிர்க் கூடாரங்களும், கருப்பு நிறத்திலமைந்த மேலங்கிகளும், வைட்டமின் ஏ,டி சத்துகள் குறைவான உணவுகளுமே ஆகும்.

ஒருவருடைய தொழில் எவ்விதம் ஒரு நோய்க்குக் காரணமாக அமைகிறது என்பது குறித்த ஆய்வுகள் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மிகுதியான மன அழுத்தங்களுடன் (Stress) உடலசைவுகள் குறைவாக உள்ள தொழில் புரிபவர்களிடையே இதய நோய்கள் மிகுதியான அளவில் காணப்படுகின்றன. இங்கிலாந்தில் பேருந்து நடத்துநரைவிடப் பேருந்து ஓட்டுநர்கள் மிகுதியாக இதய நோயினால் பாதிக்கப்பட்டனர். நோய் பரவுவதில் சமூக ஏற்றத் தாழ்வுகளும் இனவேறுபாடுகளும் சில சமயம் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் கொள்ளை நோய் பெருமளவு தாக்கிய சமயத்தில் சாதி ஏற்றத் தாழ்வு என்கிற கூறு எவ்விதம் பங்குபெற்றது என்பது கண்டறியப்பட்டது. நாட்டுப்புற, நகர்ப்புற வேறுபாடுகளும் ஒரு நோய்க்கான காரணங்களை உள்ளடக்கியிருக்கின்றன. இசுகாட்சு (Scotch) என்பவர் சூலு (Zulu) மக்களுள் நாட்டுப்புற நகரவாசிகளை ஒப்பிட்டு ஆராயும்போது நகரவாசிகளிடையே இரத்த அழுத்த நோய், பால், வயது வேறுபாடு

களின்றிப் பெருமளவில் இருப்பதைக் கண்டார். அதற்குக் காரணம் அவர்களின் பழைய நாட்டுப்புறப் பழக்க வழக்கங்கள், புதிய நகர்ப்புற வாழ்க்கையோடு இணையாமையாகும்.

**நாட்டார் மருத்துவம்:** இன்று பெரும்பான்மை மக்களுக்குப் பயன்படும் மருத்துவ முறையாக இக்கால மருத்துவம் உள்ளது. ஆனால், நாட்டார் மருத்துவத்தில் (Folk medicine) ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மருத்துவ முறை அச்சமுதாய அமைப்பு மட்டுமே பயன்பெறத்தக்க வகையில் உள்ளது. ஆப்பிரிக்காவில் இருக்கும் மனோமக்களும் (Mano), எகிப்தியச் சிற்றூர் மக்களும் நோயினை எப்போதும் உடல் வலியுடனேயே பொருத்திப் பார்க்கின்றனர். அதேபோல, ஆப்பிரிக்காவில் உள்ள தோங்காப் (Thonga) பழங்குடிகள் சிறுகுடலில் உள்ள புழுக்கள், செரிப்பதற்கு இன்றியமையாதன என நம்புகின்றனர். மேற்கூறிய எடுத்துக்காட்டுகளால், இது போன்ற மக்களிடையே நிலவும் நாட்டார் மருத்துவத்தின் நோய் காணல் (Diagnosis) முறை, புதிய மருத்துவ முறையினை விடக் குறைந்த நுட்பமுடையது எனச்சொல்லிவிட முடியாது. சுபானுன் (Subanun) மக்கள் தோல் நோய்களுக்கான அறிகுறிகளைக் காணும் முறை புதிய மருத்துவ முறைகளைக் காட்டிலும் சிறப்பாக உள்ளதாக நாட்டார் மருத்துவ அறிஞர் பிரேக்கு (Frake) விளக்குகிறார்.

நாட்டார் மருத்துவ நோய் நீக்கல் முறைகளில் மந்திரம், சூனியம், இயற்கை வேதிம முறை ஆகியன பெரும்பங்கு வகிக்கின்றன. பொதுவாக, மனித இனத்தின் வெற்றிக்கும், அதன் நிலைபேறுடைமைக்கும் மருத்துவத் துறையின் பங்கினை எளிதில் தள்ளிவிட முடியாது. இதில் எளிய சமுதாயத்தினரிடம் (Simple Societies) நிலவும் மருத்துவ முறைகளும் அடங்கும். வடதுருவப் பகுதியில் வாழும் எசுகிமோக்கள் (Eskimos) பெரும்பாலான இன்றைய புதிய மருத்துவ முறைகளை நாட்டு மருத்துவ முறைகளில் கையாள்கின்றனர்.

**சமூக அமைப்பும், மருத்துவமும்:** தவறிழைப்பவர்களுக்குத் தண்டனையாக நோய் வருகிறது என்கிற நம்பிக்கை பல சமூகங்களில் வேரூன்றியுள்ளது. அந்நம்பிக்கையே தொடக்கக் காலத்தில் சமூகஒழுங்கினை (Social Control) நிலைநிறுத்த உதவியது. யூதக் கிறித்தவர்கள் தங்களின் பாவச்செயல்களுக்கெல்லாம் தண்டனையாக நோயினைப் பெறுகின்றனர் என்கிற நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இன்றைக்கும் மேலை நாட்டுப் பண்பாடுகளைத் தவிரப்பிற பண்பாடுகளில், நோய் என்பது உடல் நலக் குறைவினால் மட்டும் வருவதில்லையென்றும், அவரவர் செய்யும் நன்மை தீமைகளுக்கேற்ப ஏற்படுவதாகும் என்றும் கருதப்படுகிறது. விருந்தளிப்பவர் அருள்சார் மனப்பான்மையுடன் இல்லையாயின் நோய்க்கு ஆளாக நேரிடும் என்கிற நம்பிக்கை நிலவுகிறது. அதேபோல ஆப்பிரிக்காவில் வாழும் ஒபுகோ (Obuko) பழங்குடியினரிடையே மாமனார் மாமியாரோடு மருமகன் மருமகள், சரிசமமாய் அமர்ந்து உண்பதினாலும், ஓர் இளைஞர் தம் முறைப்பெண்ணைத் தொடுவதினாலும் நோய் ஏற்படுகிறது என்கிற நம்பிக்கை இருக்கிறது. நைசீரியாவில் வசிக்கும் இரிக்குவே (Irigwe) மக்களில் பெரும் பகுதி ஆண்கள் உறக்க நோயினால் (Sleeping sickness), பாதிக்கப்பட்டிருந்ததை அறியச் சங்ரீ (Sangree) செய்த ஆய்வில் அதற்குக் காரணம், உறக்க நோயினைப் பரப்பும் சீ சீ ஈக்கள் (Tse Tse) அம்மக்கள் வாழும் தென்பகுதியில் மிகுதியாய்க் காணப்படுவதேயாகும் எனக் கண்டறிந்தமையாகும். அப்பகுதிகளில்தான் ஆண்கள் சடங்குகள் செய்ய வேண்டிய தெய்வங்கள் இருந்தன. பெண்கள் சடங்குகள் புரிவதற்கு அனுமதிக்கப்படாததால், ஆண்கள் மட்டுமே சீ சீ ஈக்களினால் கடிக்கப்பட்டு உறக்க நோய்க்கு ஆளாகின்றனர் என்பது கண்டறியப்பட்டது.

மந்திரம் செய்யும் ஒரு மனிதன், அதனால் பாதிக்கப்படும் மற்றொரு மனிதன் ஆகிய இருவரையுமே அச்சமூகத்தில் நிலவும் மாயமந்திரம், பில்லி சூனியம் ஆகியன அவற்றில் நம்பிக்கை கொள்ளச்செய்கின்றன. மாந்திரிகம், பில்லி சூனியம் ஆகியவை குறித்துப் பல பழங்குடியினரிடையே இசுவான்சன் (Swanson) 1960 – இல் நடத்திய ஆய்வில், அத்தகைய செயற்பாடுகள், சட்டமுறையிலான சமூக ஆளுகை, ஒழுக்க நியதிகள் ஆகியவற்றின் கடுமையின்மையாலும், சிலசமூகங்களில் அவை முழுவதுமே இல்லாமையாலும், அதிக அளவில் காணப்படுவதைக் கண்டறிந்தார். மேலும், அரசியல் அதிகார அமைப்புகளின் வளர்ச்சியினூடே இவை போன்ற செய்கைகள் நாளடைவில் குறைந்து போவதும் ஆய்வில் தெரிய வருகிறது.

ஒரு சமூகத்தின் நிலைமையை அறிய அச்சமூக மக்களின் நல்வாழ்வுமுறை ஓர் அளவீடாகும். தொன்மைக்காலங்களில் தத்துவவாதிகள் திறமையான ஆட்சி நடக்கும் சமூகத்திற்கு அதிக மருத்துவர்கள் தேவையில்லை என நம்பினர். பிளேட்டோ, ஒரு நகருக்கு எந்த அளவுக்கு மிகுதியான மருத்துவ நிலையங்களும், மருத்துவர்களும் தேவைப்படுகின்றனரோ, அந்த அளவுக்கு அது ஓர் இழிவான நகரம் என்றார்.

**பண்பாட்டு வேறுபாடுகளும் மருத்துவமும்:** உலகம் முழுமையிலும் புதிய தொழில்நுட்பம், அதைச் சார்ந்திருக்கிற சமூகங்களிடையே பெரும் பண்பாட்டு மாற்றங்களை உருவாக்கியிருக்கிறது. வளரும்நாடு

களில் ஏற்பட்ட அவ்வகை மாற்றங்களுள் புதிய மருத்துவ நல்வாழ்வு முறையும் ஒன்று. அதனால் பெருமளவில் நோயும், இறப்பும் குறைக்கப்பட்ட போதிலும், தொழில்துறை சாராச் சமூகங்களில் நாட்டார் மருத்துவத்தின் முக்கியத்துவமும் குறைய வில்லை. பல சமூகங்களில் பொருளாதார நிலை குறைவானவர்கள் இன்னும் முழுமையாக நாட்டார் மருத்துவத்தினைச் சார்ந்திருக்கின்றனர். புதிய மருத் துவ மயமாக்கலுக்கு உள்ள எதிர்ப்பினாலும், நாட்டார் மருத்துவத்தில் இருக்கும் குருட்டு நம்பிக் கையினாலும் சில இடங்களில் புதிய மருத்துவத்தின் இன்றியமையாமை ஏற்றுக் கொள்ளப்படாமல் உள் ளது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் நிலவும் சமூக அமைப்புகளான அதிகாரம், வகுப்பு, சாதி, மதம், குடும்பம், உறவுமுறை ஆகியவை அச்சமூக மக்களின் மருத்துவ முறையைப் பாதிக்கவோ அறுதியிடவோ செய்கின்றன. பெ.த.

**மருத்துவன் தாமோதரனார்**: காண்க: உறையூர் மருத்துவன் தாமோதரனார்.

**மருத்துவன் நல்லச்சுதனார்**: இவர் சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடற் செய்யுள் களுக்கு இசை வகுத்த இசைப் புலவர்களுள் ஒருவர். நல்லச்சுதனார் என்னும் பெயரில் மற்றுமொரு புல வர் பரிபாடலில் ஒருபாடலைப் (பரி.21) பாடியவராக வும், பரிபாடலிலுள்ள 16,17,18,20 ஆகிய பாடல் களுக்கு இசை அமைத்தவராகவும் உள்ளார். இரு வரும் வேறுபட்டவர் என்பதை உணர்த்தும் வகை யில் இப்புலவர் பெயர்க்கு முன்னர் மருத்துவன் என் னும் அடை சேர்க்கப்பட்டு வழங்கப்படுகிறது. இவர் பரிபாடல் 6,8,9,10,15,19-ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவராக மட்டும் அறியப்படுகிறார். இவர் பெயர் கொண்டு, சங்க காலத்தில் இசைப் புலமை மிக்கு அதனால் சிறப்புப் பெற்ற புலவர்களும் இருந்துள் ளமை புலனாகிறது. அ.மா.ப.

**மருதம் பாடிய இளங்கடுங்கோ**, சங்க காலப் புலவருள் ஒருவர். கடுங்கோ என்பது சேர மன்னர் மரபினருடைய பெயர். பாலை பாடிய பெருங்கடுங்கோவின் தம்பியென இவரைக் கருதுவர். இவர் மருதத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ள தால் 'மருதம் பாடிய இளங்கடுங்கோ' என வழங்கி யுள்ளனர். இவர் பாடியவை மூன்று பாடல்கள் (அகம்.96,176, நற்,50). அம்மூன்றும் தோழி வாயில் மறுத்த துறையில் உள்ளன. தலைமகனுக்கு வாயில் மறுத்ததாக இரு பாடலும், பாணனுக்கு வாயில் மறுத்ததாக ஒரு பாடலும் உள. ஒரு பாடலில் சோழர் பருவூர்ப்பறந்தலையில் இரு பெருவேந்தரும் பொருது களத் தொழிந்தசெய்தியினை உவமையில் கூறுகிறார் (அகம்.96). மருதநிலக்காட்சி வருணிக்கப்படுகிறது. நா.செ.

**மருதமலை**: தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் புகழ் பெற்றமை போலவே, கொங்குநாடும் புகழ்பெற்ற ஒரு பகுதியாகும். அக் கொங்கு நாட்டில் ஒருபகுதி ஆறைநாடு என்பதாகும். கோவை, அவிநாசி வட்டங்களையும், பல்லடம் வட்டத்தின் ஒருபகுதியையும் உள்ளடக்கிய பகுதி ஆறைநாடு என்று வழங்கப்படும். அந்த ஆறைநாட் டின் எல்லையாக மேற்குத்தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக மருதமலை உள்ளது. இது கோவை நகரிலி ருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

**பெயர்க்காரணம்**: இத்தலத்தின் தலமரமாக மருதமரம் அமைந்துள்ளது. மருதமரம் இருந்ததால் இம்மலை 'மருதமலை' என்னும் பெயர் பெற்றது என்பர். பல ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பெரு மழையால் இத்தலத்தில் இருந்த பெரிய மருதமரம் பாறை ஒன்றால் அழிக்கப்பட்டது என்பது கூறப் படுகிறது.

இம்மலைப்பகுதியில் மருந்து மரங்களும், மூலி கைகளும் காணப்படுவதால் மருந்துமலை என்றிருந்து மருதமலை என்று மாறியதாகக் கொள்ள வாய்ப்புள் ளது. நானிலப் பிரிவுகளுள் மருதமும் குறிஞ்சியும் இணைந்து 'மருதமலை' என்றிருப்பது குறிக்கத் தக் கது.

**தீர்த்தங்கள்**: தலமரமான மருதமரத்தின் வேரிலி ருந்து ஊற்றாகப் பெருகிவரும் நீரே மருதத் தீர்த் தம் என்பர். இது 'அருச்சுன தீர்த்தம்' என்றும் குறிப்பிடப்படுகிறது. கோயிலுக்கு நேர்மேற்கே 1½ கி.மீ. தூரத்தில் ஒருசுனை உள்ளது. அது 'புற்றுக் கண்சுனை' என்றும், 'புற்றுச்சுனை' என்றும் குறிப் பிடப்படுகிறது. 'சரவணப் பொய்கை' என்றும் சொல் லப்படுகிறது. அங்கிருந்து பச்சை மூங்கிலில் நீர் எடுத்து வந்து மூலவர்க்கு நீராட்டுச் செய்யும் பழக் கம் இருந்துவந்தது. இப்போது அங்கிருந்து குழாய் மூலம் நீர்கொண்டு வரப்படுகிறது.

ஏழுகன்னியர் உருவங்களுக்கு அருகே கன்னிகைத் தீர்த்தம் ஒன்று இருந்ததாகச் சொல்லப்படுகிறது. 'பாம்பாட்டிச்சுனை', 'வக்கணாத்து' ஆகிய தீர்த்தங் களும் கூறப்படுகின்றன.


**கோயில் அமைப்பு**: தனிக்குன்றாக இல்லாமல் மலைத்தொடராக உள்ள இப்பகுதியில் மலைத்தொ டரின் நடுவே தரைமட்டத்திலிருந்து ஏறத்தாழ 180 மீட்டர் உயரத்தில் உள்ள சமவெளியில் கோயில் அமைந்துள்ளது. மலைக்குச் செல்வதற்கு 837 படிகள்

உள்ளன. கோயிலைச்சென்றடைய 837 படிகள் கொண்ட நடைவழியும்,2.5 கிலோ மீட்டர் நீளமுள்ள வாகனவழியும் அமைந்துள்ளன. மலையடிவாரத்தில் வள்ளிக்கும், அருணகிரிநாதருக்கும் தனித்தனியே கோயில்கள் உள்ளன. மலைப்பாதை தொடங்குமிடத்தில் மண்டபம் ஒன்று இருக்கிறது. அம்மண்டபத்தைக் கடந்து சென்றதும் தான்தோன்றிப் பிள்ளையார் மேற்குநோக்கி விளங்கக்காணலாம். அடுத்துப்பிள்ளையார்சிலை ஒன்று இருக்கிறது. படிவழியில் நடுவே இடும்பன் கோயில் காணப்படுகிறது. இடும்பன் நின்ற நிலையில் தன் இருகைகளால் காவடியை ஏந்தியபடி உள்ளான். அகத்திய முனிவருக்காகப் பூர்ச்ச வனத்திலிருந்து சத்திமலை, சிவன்மலை ஆகிய இரண்டையும் காவடியாகக் கட்டிக் கொணர்ந்தான் என்பதும், முருகன் பழனியில் அவற்றை நிலைபெறச் செய்துவிட்டான் என்பதும் கூறப்படுகின்றன. முருகனுக்குக் காவடி ஏந்திப் பல்வேறு பொருட்களையும் கொண்டு செல்லும் மரபு இதன் அடிப்படையிலேயே வந்ததாகும்.

குதிரைக் குளம்பு அடிச்சுவடு அமைந்த மண்டபம் இருக்கிறது. முருகனின் குதிரைக் குளம்பின் அடிச்சுவடு அது என்னும் நம்பிக்கை நிலவிவருகிறது. அடுத்து மலைவாசிகளான இருளர் வாழுகின்ற பகுதி அமைந்துள்ளது. அது 'இருளர் பதி' என்றும் 'மருதைப்பதி' என்றும் குறிப்பிடப்படுகிறது.

இருளர் இனத்தின் குலதெய்வமாக 'மலையரசியம்மன்' கூறப்படுகிறது. மலையின் மற்றொருபுறம் கோயில்கொண்டுள்ள அம்மனுக்கு ஆண்டுக்கொரு முறை திருவிழா நடைபெறுகிறது. வாகனப் பாதையும், மலைப்பாதையும் சந்திக்கும் இடத்தில் திறந்த வெளி ஒன்று அமைந்துள்ளது. அதன் எதிரே திருமண மண்டபம், முடிக் காணிக்கை செலுத்துமிடம் ஆகியவை உள்ளன.

**திருக்கோயில்,** கருவறை, அந்தராளம், மகாமண்டபம், திருச்சுற்று என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளது. கருவறை சதுரமாக உள்ளது. கருவறை மீது சிறிய விமானம் அமைந்துள்ளது. கருவறையில் மூலவர் சிலையும் சிறிய பாம்பாட்டிச் சித்தர் சிலையும் உள்ளன. மகாமண்டபத்தில் கருவறையையொட்டித் தென்புறம் விநாயகர் சிலை உள்ளது. அதன் இருபுறமும் இரு சிவ லிங்கங்கள் அமைந்துள்ளன. வீரபாகு சிலையும், சிறிய கந்தசண்டிகேசுவரர் சிலையும் அப்பகுதியுள் அமைந்துள்ளன. அதற்கு நேரே வடபுறம் உற்சவ மூர்த்திகளாக முருகன், வள்ளி, தெய்வயானை, பிள்ளையார், சூலதேவர், வீரபாகு ஆகியோரின் சிலைகள் அமைந்துள்ளன.



மருதமலை

திருச்சுற்றில் கருவறைக்கு வலப்புறம் பட்டீசுவரர் கோயிலும், இடப்புறம் மரகதாம்பாள் கோயிலும் உள்ளன. அம்பாள் கோயிலையடுத்து நவக்கிரகங்கள் உள்ளன. வெளிமண்டபத்தில் இடப்புறம் வரதராசப் பெருமாள் சந்நிதி உள்ளது. கோயிலுக்குமுன் கொடி மரமும், கருட கம்பமும் உள்ளன. அடுத்து வெளிச் சுற்றும் அமைந்துள்ளது.

**பழைய கோயில்:** இக்கோயிலுக்குத் தென்புறம் பழைய கோயில் உள்ளது. அதில் உருவமற்ற மூன்று சிலைகள் முருகன், வள்ளி, தெய்வயானை என்னும் பெயருடன் அமைந்துள்ளன. ஒருசிறு திருச்சுற்று, கொடிமரம் ஆகியவற்றுடன் இககோயில் உளது. 'ஆதி மூலத்தானம்' என்று அது கூறப்படுகிறது. அந்தப் பழைய கோயிலே பாம்பாட்டிச் சித்தர் வழிபட்டது என்பர். அதற்கு முதல் வழிபாடு செய்த பின்னரே புதியகோயிலுக்கு வழிபாடு நடைபெறுகிறது. பழைய கோயில் புதிய கோயிலுக்கு மாற்றப்பட்டதற்குக் குறிப்பிடத்தக்க காரணம் கூறப்படவில்லை. கொடி மரத்துக்குத் தென்புறம் மேடையில் அரசு, ஆல், நுரைவேம்பு, வக்கணை முதலிய ஐந்து மரங்கள் ஒன்று சேர்ந்து வளர்ந்துள. அதனடியில் பிள்ளையார் சிலை அமைந்துள்ளது.

**மூலவரும் பிறதெய்வங்களும்:** மூலவர் சுப்பிரமணியம் என்றே அழைக்கப்படுகிறார். மருதாசல மூர்த்தி என்று தலப்பெயரை இணைத்து அழைப்பதும் உண்டு. தலையில் பின்குடுமியுடன் கண்டிகை அணிந்து ஒருகாலை நேராக வைத்து மற்றொரு காலைச் சற்று வளைத்து முன்வைத்த நிலையில் சிலை உள்ளது. பழனிமுருகன் போல் கையில் தண்டு ஆயுதமாக ஏந்தியுள்ளது. வேல் கையில் தனியே வைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. இடக்கையை இடுப்பில் வைத்துள்ள இச்சிலை ஏறத்தாழ 1½ மீட்டர் உயரமுள்ளது. பட்டீசுவரரும் மரகதாம்பாளும் பேரூரின் செல்வாக்கால் இடம்பெற்றிருக்கக் கூடும்.

இச்சிலை விட்டுணுவால் நிறுவப்பட்டது என்றும், அதனால்தான் வரதராசப் பெருமாள் சந்நிதி அமைந்துள்ளது என்றும் கூறப்படுகிறது. ஆயின் முருகன் கோயிலில் பெருமாள் இடம்பெற்றிருப்பது ஆய்வதற்குரியது. இங்கு ஒரு சிறிய தேரும் ஒரு பெரியதேரும் உள்ளன. விழா நாள்களில் தேரோட்டம் நடைபெறும்.

**பாம்பாட்டிச் சித்தர்:** ஆதிமூலத்தானத்திற்குப் பின்புறம் மலைப்பாதையின் கீழே பாம்பாட்டிச் சித்தரின் சமாதி அமைந்துள்ளது. பாம்பாட்டிச்சித்தர்தான் இக்கோயிலை நிறுவி முருகனை வழிபட்டுவந்தார் என்பது கூறப்படுகிறது. இன்றும் மூலவருக்கு வழிபாடு முடிந்தபின் பாம்பாட்டிச் சித்தருக்கு வழிபாடு நடைபெறுகிறது. மூலவருடன் பாம்பாட்டிச் சித்தர் சிலை இருப்பது குறிக்கத்தக்கது.

**வரலாற்றுக் குறிப்பு:** திருமுருகன் பூண்டியில் உள்ள இருகல்வெட்டுகளில் 'மருதமலையனான குலோத்துங்கசோழ' என்னும் தொடர் காணப்படுகிறது. இங்குக் குறிக்கப்படும் மன்னன் கி.பி. 1149-ஆம் ஆண்டு முதல் 1183-ஆம் ஆண்டு வரை ஆண்டவனாவான். எனவே, அக்காலத்திலேயே மருதமலையன் என்று பெயரிட்டுக் கொண்டமை புலனாகிறது.

**மருதமலைத் தொடர்பான இலக்கியங்கள்:** 'அரவணை துயிலும் அரிதிரு மருகா, அணிசெயு மருதமலையானே' என்று அருணகிரிநாதர் மருதமலையானைப் பாடிப் பரவுகிறார்.

கச்சியப்பர் பாடிய பேரூர்ப் புராணத்திலும், திருத்துடிசைப் புராணத்திலும் மருதமலை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. மருதமலை மீது சதகம், பிள்ளைத்தமிழ், அம்மானை முதலிய சிற்றிலக்கியங்கள் பல அண்மைக்காலப் புலவர்களால் பாடப்பட்டுள்ளன.

**திருவிழாக்கள்:** இங்குத் தைப்பூசத் திருவிழா, பத்து நாள்கள் நடைபெறும். இறுதிநாள் தேரோட்டம் நடைபெறும். ஐப்பசி மாதம் சூரசம்காரத் திருவிழா நடைபெறும். கார்த்திகை மாதத்தில் தீபத்திருவிழா நடைபெறும். சித்திரைக் கடைசி ஏழுநாளும் வைகாசி முதல் ஏழுநாளும் அக்கினி நட்சத்திரக் கழிவு கொண்டாடப்படும். வைகாசி விசாகத்தன்று முருகன் பிறந்தநாள் விழா நடைபெறும். பங்குனி உத்திரத் திருவிழாவும் நடைபெறும் நா.செ.

**மருதனிள நாகனார்:** இளநாகனார் என்னும் இயற்பெயர் கொண்ட இப்புலவர் மதுரையைச் சார்ந்தவராதலின் மதுரை மருதனிளநாகனார் என்றும் கூறப்பெற்றார். மருதன் என்பானுக்கு மகனாதலின் மருதனிளநாகனார் என்று பெயர் வந்திருக்கலாம் எனக்கருதுவர் துரையரங்கசாமி. மருதத் திணையை மிகுதியாகப் பாடியிருத்தலின் இப் பெயர் பெற்றார் என்பர் உ.வே.சாமிநாதையர். மேலும், மதுரை மருதனிள நாகனார் என்று பாடவேறுபாடும் இவர் பெயருக்குக் காணப்படுவதாகச் சுட்டுவர். மதுரை மருதனிளநாகனாரை மருதனிள நாகனாரிலும் வேறாக உ.வே.சாவின் புறநானூற்றுப் பதிப்பும் மர்ரே பதிப்பும் கருதும். இவர் பாடியனவாக அகநானூற்றில் 23, கலித்தொகையில் (மருதத் திணை) 35, குறுந்தொகையில் 4, நற்றிணையில் 12, புறநானூற்றில் 5 ஆக 79 பாடல்கள் உள்ளன. இவர் மருதத் திணையை மிகுதியாகப் பாடியிருந்தாலும் இவர்

பாடல்களில் ஏனைத் திணைகளும் நுட்பமாக அழகுறச் சித்திரிக்கப்பட்டுள. இறையனார் அகப்பொருள் என்ற நூலுக்கு உரை செய்தவர்களுள் ஒருவர் இவர் என்பது இறையனார் அகப்பொருள் முதல் நூற்பா உரையிலிருந்து அறியப்படும். புனலாடிய மகளிர்க்காகக் கண்ணன் யமுனை யாற்றங்கரையில் குருந்த மரத்தை வளைத்தமை (அகம்.59), முருகன் சூரனையும் அவன் சுற்றத்தையும் அழித்தமை (அகம்.59), அரசர் குலத்தை அழித்த மழுவாள் நெடியோனாகிய பரசுராமன் அரிதின் முயன்று வேள்வி முடித்தமை (அகம். 220), கறைமிடற்றண்ணலாகிய சிவன் மலையை வில்லாக வளைத்துப் பாம்பை நாணாகக் கொண்டு ஓரம்பை விடுத்து மூவெயிலை அழித்து அமரர்க்கு வெற்றி தந்தமை (புறம்.55), கடல் அலைக்கும் செந்திலில் முருகன் இருந்தமை (புறம். 55), ஆலமர் செல்வன் மகனுக்கு விழா வயர்ந்தமை (கலி. மருதம். 18) முதலிய தெய்வச் செய்திகளை இவர் குறிப்பிட்டுள்ளார். பரிபாடலில் அந்துவன் தண்பரங்குன்றத்து முருகனைப் போற்றிப் பாடியிருத்தலை இப்புலவர் வியந்து பாராட்டுவர் (அகம்.59). நாஞ்சில் வள்ளுவனிடம் 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்; மெய்கூறுவல்' (புறம்.139) என்று உரைத்தலின், இவர் வாய்மையை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டமை பெறப்படும். தம் அகநானூற்றுப் பாடல்களில் 'வானவன் மறவன் வணங்குவில் தடக்கை, ஆனாநறவின் வண்மகிழ்பிட்டன்' என்று பிட்டனையும் (77), 'இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்' என்று கோசரையும் (90), அம்பு தொடுத்தலில் வல்ல மழவர் வெஞ்சுரத்தில் ஆனிரை கவர்ந்து செல்வர் என்று மழவரையும் (131), வீரைநகர்க்குரியவர் என்று வேளிரையும் (206), மகளிர்குரவை அயரும் கானல் தழுவிய இருக்கையையுடையவன் என்று வாணனையும் (269), ஒடு புறங்கண்டு போரில் வாகை சூடியவன் என்று வழுதியையும் (312), காமூர்க்குரியவனும் வண்மையுடையவனுமாவான் என்று கழுவுளையும் (365), இடுப்பில் மணிகட்டிக் கொண்டு உள்ளி விழாவில் தெருவிடத்து ஆர்ப்பரித்து ஆடுவர் என்று கொங்கரையும் (368) பற்றிய செய்திகள் குறிக்கப்பட்டுள. நற்றிணையில் பகைவரது முரசு கொண்டு அரண் கடந்து வென்றவன் செழியன் என்றும் (39), ஏதிலாளன் கவலை கவற்ற ஒருமுலையறுத்தவள் திருமாவுண்ணி என்றும் (216) இவர் கூறியுள்ளார். பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சியமாறன் வழுதி வடபுல மன்னர் வாடப் பொருதழித்ததைக் கூறியும் அவனைப் பகைப்போர் நாடு காடாகி விளியும் என்று கூறியும் அவன் வீரத்தைப் புறநானூற்றில் (52) சிறப்பித்துள்ளார். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனை, 'நமரெனக் கோல் கோடாது பிறரெனக் குணங்கொல்லாது, ஞாயிறு போன்ற வெந்திறலாண்மையும், திங்கள் போன்ற தண்பெருஞ் சாயலும், வானம் போன்ற வண்மையும் கொண்டு நீடுவாழ்க' என வாழ்த்தியுள்ளார் (புறம்.55). நாஞ்சில் வள்ளுவனின் கொடைச் சிறப்பையும் மறமாண்பையும் (புறம்.138,139) பாராட்டியுள்ளார். செல்லூர், நியமம், ஊணூர், சாய்க்கானம், காமூர், கூடல், செந்தில் முதலிய ஊர்கள் இவர் பாக்களில் பாராட்டப்பட்டுள்ளன. மகளிரிடம் பெறும் இன்பத்திலும் ஈதல் இன்பம் சிறந்தது (அகம்.131), காமம் கைம்மிகின் தாங்குதல் அரிது (நற்.39), கண்ணுறு துன்பத்தை நீக்கக் கைசென்றுதவுதல் போல் நட்டார் துயர் போக்க வேண்டும் (நற்.216), நால்வகைப் படைச் சிறப்பிருப்பினும் அரசன் வெற்றி அறநெறியையே முதன்மையாகக் கொண்டுள்ளது (புறம்.5) என்பன போன்ற நீதிக் கருத்துகளை இவர் பாடல்கள் புலப்படுத்தும். எலும்பைத்தின்று ஓட்டகம் பசிதீர்தல், கள் விலைக்காகயானைத் தந்தம் கொடுத்தல், நடுகல்லுக்கு மஞ்சள் பூசிச் செம்பூங்கரந்தைக் கண்ணிசூட்டி வழிபடல், பல்லி ஒலி கேட்டுப் பயணத்தைத் தொடராமல் மீளல் முதலிய செய்திகளை இவர்தம் பாடல்களால் அறியலாம். குடத்திலிருந்து ஆவண மாக்கள் ஓலையை எடுப்பதற்குப் போரில் மாய்ந்தோரது குடரைப் பருந்து ஈர்ப்பது உவமையாக வந்துள்ளது (அகம்.34). இதனைப் போன்ற அழகிய உவமைகள் இவர் பாடல்களில் (அகம்.206, புறம்.349, மருதக்கலி 4, 6, 27) பல உள்ளன. மருதக்கலியில் பரத்தைமைத் தலைவனையும் பரத்தையையும் காட்டுவதன் வாயிலாகத் தலைவியினுடைய கற்பின் மாண்பைப் புலப்படுத்தியுள்ளார். தலைவன் தலைவியர்க்கிடையே தோன்றும் கருத்துப் பூசலைத் தவிர்க்கப் புதல்வன் துணையாதல் மருதக்கலியில் நன்கு காட்டப் படுகின்றது. தலைவி விருந்தெதிர்கொள்ளும் போதும், தலைவனின் பொய்ச்சூளுக்கு அஞ்சும் போதும், தலைவன் மகனை முயங்கக் காணும் போதும், தலைவி புலவி நீங்குவதை இப்புலவர், செவ்விதிற் பாடியுள்ளார். புலவிக் காலத்துத் தலைவன் பணி தலைச் சுட்டித் தலைவியின் உயர்வு காட்டுவர். தான் இல்லம் புகாமைக்குக் காரணமாகக் 'கடவுளை இறைஞ்சச் சென்றேன்; புதிய யானையைக் காணப் போந்தேன்; குதிரை ஊர்ந்து வந்தேன்' எனத் தலைவன் கூறும்போது கடவுள், யானை, குதிரை ஆகியவற்றைப் பரத்தையாக உருவகம் செய்து தலைவி அவனிடம் உரையாடுவதாக இப்புலவர் மருதக்கலியில் நயமுற விளக்கியுள்ளார். த.ரா.

மருதி: காந்தன் என்பவன் காவிரிப்பூம் பட்டினத்தை அரசாண்டு வந்த பழைய மன்னர்களுள் ஒருவன். அரசர்களுடைய பரம்பரையை வேரறுக்கும்

முயற்சியில் ஈடுபட்டிருந்த பரசுராமன் காந்தனை எதிர்த்து வரத் தலைப்பட்டான். அதனை அறிந்த துர்க்கை காந்தனை நோக்கி அவன் பரசுராமனோடு போர் செய்வது தகுதி அன்று என்று அறிவுறுத்தினாள். அவள் அறிவுரையை ஏற்றுக் காந்தன் வேறிடம் செல்ல முடிவு செய்தான். தான்திரும்பி வரும்வரை தன் நகரைப் பாதுகாக்க வல்லவன் ககந்தன் என்பவனே ஆவன் எனத்தேர்ந்து தெளிந்தான். ககந்தன் காவற்கணிகையின் மகன்; வீரருள் வீரனாகத் திகழ்ந்தவன். அவன் அரசபரம்பரையைச் சேராதவனாகலின் அவனைப் பரசுராமன் எதிர்க்கமாட்டான் என்ற உண்மையை உணர்ந்தே காந்தன் அவனைத் தன் நகரைக் காக்கும் பொருட்டு அரசனாக்க நினைத்தான். அவன் ககந்தனை வருவித்து, 'அரசாளும் உரிமை உனக்கில்லாமையால் அரசகுலத்தை வேரறுப்பதையே தன் விரதமாகக் கொண்டுள்ள பரசுராமன் உன்னை எதிர்த்துப் போர் செய்யான். அகத்தியமுனிவரின் கட்டளை பெற்று நான் திரும்பிவரும்வரை நீ இந்நகரைக் காப்பாயாக. உன்னால் காக்கப்படுதலின் இந்நகர் காகந்தி என்ற பெயர் பெறுக' என்று கூறி வேற்று வடிவங்கொண்டு நீங்கினான்.

காந்தன் சென்றபிறகு காவிரிப்பூம்பட்டினம் ககந்தனால் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஒருநாள் மருதி என்னும் பார்ப்பனி காவிரியில் நீராடிவிட்டுத் தனியே வந்து கொண்டிருந்தாள். ககந்தனின் இளைய மகன் அவளை ஆற்றின் அருகில் கண்ணுற்றான்; அவள்பால் அவனுக்குக் காமம் பெருகியது; அவளைத் தன்னிடம் வரும்படி அழைத்தான். அதைக் குறித்து அவள் மனம் மிகவும் வேதனையுற்றது. பத்தினிப் பெண்டிர் பிறர் நெஞ்சில் புகமாட்டார்கள். அவள் மன்னன் மகனின் நெஞ்சில் புகுந்ததனால் தனக்குக் களங்கம் ஏற்பட்டதென நினைத்துப் பெரிதும் வருந்தினாள். அதனால் அந்தணனுடைய முத்தீயைப் பேணும் தகுதியைத் தான் இழந்து விட்டமையைக் கருதி நெஞ்சம் நொந்தாள். அவள் தன் வீட்டுக்குச் செல்லாமல் பூதசதுக்கம் புகுந்தாள்; அங்குள்ள சதுக்கப் பூதத்தை நோக்கி, 'தெய்வமே என் கணவனுக்கு நான் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை. அப்படியிருந்தும் பிறனுடைய நெஞ்சில் எளிதாகப் புகுந்துவிட்டேன். இதனால், மழையைத் தரவல்ல கற்போடு இல்லறத்திற்குத் துணையாக நிற்கும் தன்மையை இழந்தேன் நான். செய்த தவறு என்னவென்று எனக்குப் புலப்படவில்லை. குற்றம் புரியும் தீயவர்களை உன் பாசக்கயிற்றால் கட்டி இழுத்து அறைந்து உண்பாய் என்று நான் கேட்டிருக்கின்றேன். இப்போது என்னை அவ்வாறு செய்யாமையால், நீ இங்கிருப்பது பொய்யோ, என்று புலம்பி அரற்றினாள். அப்போது சதுக்கப் பூதம் தோன்றி, 'பெண்ணே! தெய்வத்தைத் தொழாமல், தன் கணவனே தெய்வம் என்று தொழுகின்றவள் பெய்யெனக் கூறின் பெருமழை பெய்யும் என்று திருவள்ளுவர் கூறிய பொருள் நிறைந்த சொற்களை நீ நன்கு உணராமல், பொய்க்கதைகளையும் நகையை விளைவிக்கும் மொழிகளையும் பிறர் சொல்லக்கேட்டு, முழவொலியோடு நடைபெறும் விழாக்களைவிரும்பித் தெய்வங்களை வழிபடும் கொள்கையைக் கொண்டிருந்தாய். ஆகையால், உன் ஏவலால மேகம் மழையைப் பெய்யாது, உத்தமப் பத்தினிப் பெண்களைப் போலப் பிறர்மனத்தைச் சுடும் தன்மையும் உனக்கு இல்லாமல் போய்விட்டது. மேற்கூறிய செயல்களை நீ விட்டுவிடின் மேகம் உன்சொற்படி ஒழுகும். மனம் போனவாறு ஒழுகும் பெண்களைக் கட்டுவது போல, உன்னை என்பாசம் கட்டாது. குற்றம் செய்தவரை ஏழு நாள்களுக்குள் தண்டிப்பது அரசனது முறைமை. அவன் அக்கால வரம்புக்குள் தண்டிக்கத் தவறின், பின்பு தண்டிப்பது என்கடமையாகும். அவ்வேழு நாள்களுக்குள் ககந்தன் இச்செய்தியைக் கேட்டு உன்பால் காமமுற்றவனைத் தன் வாளால் வெட்டி விடுவான் என்றுரைத்தது. சதுக்கப்பூதம் கூறியவாறே ஏழு நாள்களுக்குள் மருதிபால் காமங்கொண்டு மயங்கியவன் வாளால் வெட்டுண்டான்.

மருதியின் இக்கதை மணிமேகலையில் சிறைசெய்காதையில் உள்ளது. ஒரு வித்தியாதரனால் இளவரசனாகிய உதயகுமரன் வெட்டுண்ட செய்தியை அரசனுக்குக் கூற வந்த முனிவர்கள் அதனை வெளியிடுவதற்கு முன்பு இம்மருதியின் கதையைக் கூறுகின்றனர். தா.ஏ ஞா.

**மருது பாண்டியர்** தமிழ் நாட்டைச் சார்ந்த வீர மறவர்கள். இன்றைய பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள சிவகங்கையை மையமாகக் கொண்டு கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்டவர்கள் ஆவர். மருது பாண்டியர் என்னும் சொற்றொடர் பெரிய மருது, சின்ன மருது என்று பெயர் கொண்ட இரு வீர மறவர்களைச் சுட்டும் தொடராகும். இவர்கள் கிழக்கிந்திய வணிகக் குழுவினர் தென்னாட்டில் கால் கொள்ளத் தொடங்கிய போது ஆங்கிலேய ஆதிக்கத்தைக் களைய உறுதி பூண்டு எதிர்த்தனர்.

மறவர்கள் ஆண்டமையால் அப்பகுதியை மறவர் நாடு என்றும் குறிப்பிடுவர். சேதுவை ஆண்டவர்கள் சேதுபதிகள் எனப்பெற்றனர். இன்றைய இராமநாதபுர மாவட்டம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், காமராசர் மாவட்டம், புதுக்

கோட்டை மாவட்டம், தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகியன சேதுபதிகளின் ஆட்சிக்குட்பட்டவை என்பர்.

மருதுபாண்டியர்களின் மூதாதையர்களுள் ஒருவரான சசிவருணத்தேவர் கி.பி. 1730 – ஆம் ஆண்டில் சிவகங்கைச் சீமையைத் தனி அரசாக ஆளத்தொடங்கினார். அவர் வழித் தோன்றல்களே இம் மருது [illegible]யார்[illegible]



மருது ப[illegible]மொக்கை பழனியப்பன் சேர்வை; தாயார் ஆனந்தாயி அம்மையார். மருதுபாண்டியர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பிறந்தார்கள் என்று வரலாற்றுச் செய்தி குறிப்பிடுகிறது. மருதப்ப சாமியின் நினைவாக இப்பெயர் இவர்கட்கு இடப்பட்டதென்பர்.

மருது பாண்டியர்களின் தந்தையார் இராமநாதபுரம் சீமையை ஆண்ட முத்து விசய இரகுநாதனின் படைத்தலைவர்களுள் ஒருவர்.

கிழக்கிந்திய வணிகக் குழுவின் படைத்தலைவர்களுள் ஒருவரான படைப் பகுதி முதல்வர் இசுமித்து (Colonel Smith) என்பாரை எதிர்த்து நடைபெற்ற போரில் சிவகங்கை மன்னர் முத்துவடுகர் உயிர்துறந்தார். அரசருக்கு உறுதுணையாக நின்றவர்கள் முத்து வடுகரின் துணைவியார் வேலு நாச்சியார் என்பாரும், படைத்தலைவர்களாயிருந்த மருதுபாண்டியர்களுமேயாவர்.

காலப்போக்கில் சிவகங்கைச் சீமையை ஆளும் உரிமையை மருதுபாண்டியர் பெற்றனர். பெரிய மருது வேட்டையாடுவதில் வல்லவர். சின்ன மருது நிருவாகத்திறமை கொண்டவர். மீண்டும் போர் மூண்டது. மருதுபாண்டியர் நாட்டைக் கட்டிக்காத்தனர். காளையார் கோயில் கோபுரத்தை மருதுபாண்டியர் கட்டியதாகக் கூறுவர். பல கோயில்களில் மருதுபாண்டியரின் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் சிவகங்கைச் சீமையை அழிக்கத் திட்டமிட்டு இருமுறை முயன்றும் பயனில்லை. ஆனால், கி.பி. 1801 – ஆம் ஆண்டில் மூண்ட போரில் சிவகங்கைச்சீமை அழிவுறலாயிற்று. அப்போது நெல்லை மாட்டத்திலுள்ள பாஞ்சாலங்குறிச்சியை வீரபாண்டிய கட்டபொம்மன் தம்பி ஊமைத்துரை ஆண்டு வந்தார். வீரபாண்டிய கட்டபொம்மன் கி.பி. 1799 – ஆம் ஆண்டு கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கிலிடப்பட்டு மாண்டார். ஆங்கில ஆதிக்கத்தை ஏற்க ஊமைத்துரை மறுத்தார். ஆங்கிலேயப்படைகள் அவரை விரட்டின போது ஊமைத்துரைக்கு மருது பாண்டியர் அடைக்கலம் கொடுத்தனர்.

பாஞ்சாலங்குறிச்சி வீழ்ந்தவுடன் ஆங்கிலேய ஆதிக்கம் சிவகங்கைச் சீமையின்மீது படையெடுத்தது. அப்போர் கி.பி. 1801-ஆம் ஆண்டில் ஐந்து மாதங்கள் நடந்தது. சிறுவயல் போரும், காளையார் கோயில் காட்டில் நடைபெற்ற போரும் சிறப்பானவையாகக் கருதப்படுபவை. மருது பாண்டியர் உண்மையான அரசர்கள் அல்லர் என்று காரணம் காட்டிக் கிழக்கிந்திய வாணிகக் குழுவினர் வேறு ஒருவரை அரசராக்கினர். அதனை ஏற்றுக்கொள்ளாத மருது பாண்டியர் போரைத் தொடர்ந்தனர்.

காட்டிக்கொடுக்கும் இயல்பினன் ஒருவனால் காளையார் கோயிலும் கைப்பற்றப்பட்டது. அதைப்போல் மருது பாண்டியரும் காட்டிக்கொடுக்கப்பட்டு, இறுதியில் பிடிபட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர்க் கோட்டையில் மருது பாண்டியர் கி.பி. 1801 - ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டனர். இவர்களின் உடல்கள் திருப்பத்தூரிலேயே அடக்கம் செய்யப்பட்டன.

இரா.அ.

**மருந்துகள் (கட்டுப்பாடு) சட்டம், 1950:** மருந்துகள் (கட்டுப்பாடு) சட்டம், 1950-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7 – ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டம் மருந்துகளைக்கட்டுப்பாட்டுடன் விற்பனை செய்யவும், பங்கீடு செய்யவும் வழிவகை செய்துளது.

இந்தச் சட்டத்தில் விற்பனையாளர், வணிகர் என்னுஞ்சொற்கள் தாமாகவோ, வேறு ஒருவர் மூலமாகவோ, மருந்துகளை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பவரைக் குறிக்கும்.

இந்தச் சட்டம் மத்திய அரசு அரசாங்க அறிக்கை (Govt. Gazette) மூலம் அறிவிப்புச் செய்யப்பட்ட மருந்துகளுக்கு மட்டும் பொருந்தும்.

தலைமை ஆணையாளர் (Chief Commissioner) அரசாங்க அறிக்கை மூலம் ஒரு வணிகர் அல்லது உற்பத்தியாளர், ஒரே சமயத்தில் ஒரு மருந்தை அதிகப்படியாக எவ்வளவு அளவு தம்மிடம் வைத்துக் கொள்ளலாம் என்றும், ஒருவருக்கு அதிகப்படியாக எவ்வளவு அளவு மருந்தை விற்கலாம் என்றும், எவ்வளவு அதிகப்படியான விலைக்கு விற்கலாம் என்றும் நிருணயிக்கலாம்.

ஒரு வணிகர் அல்லது உற்பத்தியாளர் நிருணயிக்கப்பட்ட அதிகப்படியான விலைக்கு அல்லது விகிதத்திற்கு மேலாக விற்கவோ விற்கச் சம்மதம் அளிக்கவோ கூடாது.

ஒரு வணிகரோ உற்பத்தியாளரோ எந்த மருந்தையும் ஒரே சமயத்தில் நிருணயிக்கப்பட்ட அளவுக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது. மேலும், எந்த மருந்தையும் ஒரே சமயத்தில் நிருணயிக்கப்பட்ட அளவுக்குமேல் விற்கவோ விற்கச் சம்மதிக்கவோ தாம் விற்பதாகக் கூறவோ கூடாது. இந்த விதி தலைமை ஆணையாளர் அரசாங்க அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்ட மருந்துகளுக்கு மட்டும் பொருந்தும். ஆனால், உற்பத்தியாளருக்கும் அளிப்புச் செய்பவருக்கும் பொருந்தாது. இந்தச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் ஒருவர் மருந்தைத் தம்மிடம் வைத்திருந்தால் அதனை உடனடியாகத் தலைமை ஆணையாளரிடமோ அவரால் நிருணயிக்கப்பட்ட அதிகாரியிடமோ தெரிவிக்கவேண்டும். பின்னர்த் தலைமை ஆய்வாளர் உத்தரவின்படி அதிகப்படியான அளவு உள்ள மருந்துகளைச் சேமித்து வைக்கவோ பங்கீடு செய்யவோ விற்பனை செய்யவோ நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த ஒரு வணிகரோ உற்பத்தியாளரோ இந்தச் சட்டத்தில் குறிப்பிட்ட அளவின் படி மருந்தை விற்க மாட்டேன் என்று சொல்லக்கூடாது. ஆனால், தலைமை ஆய்வாளர் முன் அனுமதி அளித்திருந்தால் அவர் 'விற்க மாட்டேன்'என்று சொல்லலாம்.

ஒரு வணிகர் அல்லது உற்பத்தியாளர் ரூபாய் ஐந்து அல்லது அதற்குமேல் மருந்தை விற்றால் அதற்கான விலைச் சீட்டை அளிக்க வேண்டும். அதற்குக் குறைவாக இருந்தால் வாங்குபவர் கேட்டால் விலைச்சீட்டு வழங்க வேண்டும். தம்மிடம் உள்ள மருந்துகளின் இருப்பையும், மருந்துகளின் விலைப் பட்டியலையும் அறிவிப்புப் பலகையில் எழுதி, வாங்குபவர்கள் கண்களுக்குத் தெரியும்படி தம் கடையில் வைத்திருக்க வேண்டும். வணிகர் மருந்தின் மேல் உள்ள ஒட்டுச்சீட்டு (Label), குறி (Mark), விலை (Price) ஆகியவற்றை அழித்துவிடவோ அடித்துவிடவோ மாற்றம் செய்யவோ கூடாது. தலைமை ஆய்வாளர் தேவையானது அல்லது அவசரமானது என்று கருதினால் எந்த மருந்தையும் விற்கக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கலாம். இந்தச் சட்டத்தின் கீழ் இடப்பட்ட உத்தரவுகளை மீறி நடப்பவர் அல்லது உத்தரவை நிறைவேற்றாமலிருப்பவர் மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை பெறவும் அல்லது தண்டத்தொகை செலுத்தவும் அல்லது இரண்டு தண்டனைகளையும் சேர்த்து அனுபவிக்கவும் நேரிடும்.

தனி வணிகராக இல்லாமல் ஒரு நிறுமமாகவோ சங்கமாகவோ பலர் சேர்ந்து செய்யும் வணிகமாகவோ இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதன் இயக்குநரும் (Director), மேலாளரும் (Manager), செயலாளரும் (Secretary), முகவரும் (Agent) நிருவாகத்தில் ஏற்பட்ட குற்றங்கள் தமக்குத் தெரியாமல் நடந்தனவென்றும், அவர்கள் எல்லாவகை முயற்சியும் எடுத்தும் குற்றத்தை நடக்காமல் தடை செய்ய முடியவில்லை என்றும் மெய்ப்பிக்கவில்லையென்றால் அவர்கள் குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்கள்.

இந்தச் சட்டத்தின் கீழ்ச் செய்யும் குற்றங்களைக் காவல் அதிகாரி, அல்லது காவல் ஆய்வாளருக்கு மேல் நிலையிலுள்ள அதிகாரி அல்லது நடுவண் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட காவல் ஆய்வாளருக்குக் கீழான நிலையில் இல்லாத அதிகாரி புலன் விசாரணை செய்யலாம். இந்தச் சட்டத்தின் கீழ்ச் செய்யும் குற்றங்களை மாவட்டக் குற்றவியல் நடுவரின் முன் அனுமதி பெறாமல் வழக்குத் தொடர முடியாது.

இந்தச் சட்டத்தின்கீழ்க் குற்றம் செய்யப்பட்டது அல்லது செய்யப்படுகிறது என்று தெரிய வந்தால், அதிகாரி குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 98-இன் கீழ்(Code of Criminal Procedure) அந்த இடத்தைச் சோதனையிடவும், பொருட்களைப் பறிமுதல் செய்யவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்.

வ.வெ.

*மருந்துநூல்*: இந்நூல், மருந்துகள் பற்றிய வருணனை, மருந்துகளின் பட்டியல், கூட்டு மருந்துகள் செய்முறை, மருந்துகளின் தரம் முதலிய விவரங்கள் பற்றிக் கூறுகின்றது. ஒவ்வொரு மருந்தின் தன்மை, தூய்மை, தரம் முதலியவற்றை மெய்ப்பித்தற்குச் சட்டம் இயற்றப்படுதல் இன்றியமையாதது என்பதை உலக நாடுகள் யாவும் உணர்ந்தன. ஆகவே

ஒவ்வொரு நாட்டிலும் மருந்துநூல் தோன்ற வகை செய்யப்பட்டது. இந்தியாவிலும் இந்தியமருத்துவ நூல் என்பதை உருவாக்கியுள்ளனர். அம் மருந்து நூல் அரசின் உயர் அதிகாரிகள், மருத்துவப் பேரா சிரியர்கள், மருத்துவத்துறை வல்லுநர்கள் முதலி யோரைக் கொண்ட குழுவால் உருவாக்கப்படுகிறது. புதுப் புது மருந்துகள் நாள்தோறும் பெருகிவருவ தாலும், மருத்துவத் துறையின் பல கண்டுபிடிப்பு களின் விளைவாலும் மாற்றங்கள் நிகழ்வதால் தொடர்ந்து திருத்தங்கள் அடங்கிய இணைப்புத் தொகுதிகளும் வெளியிடப் படவேண்டியது இன்றி யமையாததாகிறது.

பண்டைக் காலம் முதல் எல்லா நாடுகளிலும் மருந்துகள் பற்றிய நூல்கள் தோன்றியிருந்தன. ஆயி னும் இப்போது பயின்று வரும் மருந்து நூல் (Pharmacopoeia) போன்றது முதன் முதலில் கி.பி. 1542 – இல் செருமனியில் நூரம்பர்கு (Nurembrg) என் னும் நகரில் வெளியான 'திசுபென்சடோரியம்' (Dispensatorium) என்னும் நூலேயாகும். இங்கி லாந்து கி.பி. 1818 – ஆம் ஆண்டு இலண்டன் மருத் துவநூலை வெளியிட்டது. பிரான்சிலிருந்து கி.பி. 1639-இல் வாகடநூல் என்னும் மருந்து நூல் வெளி வந்தது. முதல் தேசிய மருந்துநூல் (Codex medicamentarios of France) கி.பி. 1819-இல் வெளிவந்தது. இசுகாட்லாந்து, எடின்பரோ, அயர்லாந்து, தப்ளின் ஆகிய நாடுகள் தனித்தனியே மருந்துநூல்களை வெளியிட்டன. அந்நான்கு நாடுகளுக்கும் பொது வான பொது மருத்துவக் குழு (General Medical Council) கி.பி. 1864-ஆம் ஆண்டுமுதல் பிரித்தானிய மருந்து நூலை வெளியிட்டது. அது பல மாறுதல்கள் அடைந்து 1948-இல் வெளிவந்தது. அம்மருந்து நூலே பயிலப்படுகிறது. மாற்றங்களும் புதிய சேர்க்கையும் இணைப்புத் தொகுதியாக வெளியிடப்படுகின்றன.

அமெரிக்கா கி.பி. 1778-இல் முதல் மருந்து நூலை வெளியிட்டது. அது இராணுவத்தில் பயன் படுத்தும் முறையில் வடிவமைக்கப்பட்ட ஒன்று. பின் கி.பி. 1820 -இல் மாற்றங்கள் செய்து மருந்து நூல் ஒன்று வெளியிட்டது. அந்நாட்டின் மருந்து நூல் அவ்வப்போது உண்டாகும் மாற்றங்களும் குறிக்கப் பட்டு ஐந்து ஆண்டுகட்கு ஒரு முறை திருத்திய பதிப் பாக வெளியிடப்படுகிறது. உணவு மற்றும் மருந்து பற்றிய கூட்டாட்சிச் சட்டம் (Federal Food and Drugs Act) 1907-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அதன் படிஅமெரிக்க மருந்துகளின் சீட்டின்மீது 'U.S.P' என்று குறிக்கப்பட்டிருந்தால் அது சரியானதாகக் கருதப் படும். அவ்வாறின்றிக் காணப்பட்டால் அச்சட்டத் தின்கீழ் நடவடிக்கை எடுக்க அவ்வமைப்புக்கு அதி காரம் வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் பிரி வான உலக உடல் நல நிறுவனம் (World Health Organisation) என்ற அமைப்பு 1951-இல் பல்வேறு நாடு களின் மருந்து நூல்களில் காணப்படும் வேறுபாடு களைக் குறைத்துத் தேசிய மருந்துகளின் தரத்தை நிலை நிறுத்த முன்வந்தது. ஆகவே, உலகின் பல நாடுகளுக்கும் மக்கள் எளிதில் சென்று வர வாய்ப்பு கள் உள்ளதால் ஒரு நாட்டில் மருத்துவர் தரும் மருந்துச் சீட்டைப் பிற நாடுகளிலும் பயன்படுத்த முடிகிறது.

மருந்து நூலில் காணப்பெறாத மருந்துகளைப் பற்றியும் பல நூல்கள் வெளிவருகின்றன. எம்.சீ.

**மருந்துவழி உளநோய் மருத்துவம்:** இது மருந்துகளைப் பயன்படுத்தி உளநோய்க்கான கிருமி களை முறையாக அழிப்பதாகும். மருந்துவழி உள நோய்சிகிச்சையின் (Chemo psychiatry)முக்கிய குறிக் கோள் உடல் உறுப்புகளின் இயக்கத்தை மாற்றிச் சிகிச் சைக்கு உகந்தவாறு ஆக்குதலாகும். இம் மருந்துவகை கள் விரைவாகவும் குறைந்த பணச்செலவிலும், உள் ளத்தைச் சார்ந்து எழும் இடர்ப்பாடுகளைப்(Psychological Disturbances) போக்க உதவுகின்றன. மருந்து வழி உளச்சிகிச்சை முறையிலுள்ள மருந்துகள் உடலில் நோய்பரப்பும் கிருமிகளை அழித்து அவற்றின் வளர்ச் சியைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன.

ஒருவகையான உடல்நோயைக் குணப்படுத்து வதற்குப் பயன்படுத்திய மருந்து மனக்கோளாறுகளை யும் குணப்படுத்த உதவும் என்பது எதிர்பாராதவித மாகக் கண்டுபிடிக்கப்பட்டது. உள மருத்துவத்தைக் கண்டுபிடித்த பால் எர்லிட்சு (Paul Ehrlitch) தமது ஆராய்ச்சியின் வாயிலாகச் சில வேதிமக் கூட்டுப் பொருள்களைப் பயன்படுத்திச் சில உளநோய்களைக் கட்டுப்படுத்தவும், நீக்கவும் முடியும் என்று கண்டார். அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மருந்து வகைகள், தொற்றுநோய்களை விளைவிக்கும் நுண்ணு யிர்கள், நச்சுயிரி (Virus), காளான் நோய் (Fungi), ஓரணு உயிர் நோய் (Protozoan) போன்ற கிருமி களை அழிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. அண் மைக்காலத்தில் இம்முறை புற்று நோயைக் குணப் படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது.

**வரலாற்றுச் சிறப்பு:** மருந்துவழிச் சிகிச்சை முறை யில் பயன்படுத்தப்படும் மருந்து வகைகள் பல நூற் றாண்டுகளுக்கு முன்னதாகவே நடைமுறையில் உள் ளன. சான்றாக சின்கோனா மரப்பட்டை (Cinchona Bark)தென் ஆப்பிரிக்காவில் முறைக் காய்ச்சலைக் (Malaria) குணப்படுத்த கி.பி. 17–ஆம் நூற்றாண் டின் தொடக்கத்திலிருந்து பயன்படுத்தப்பட்டுவரு

கிறது. சின்கோனா மரப்பட்டையிலிருந்து எடுக்கப் படும் 'குயினைன்' (Quinine) என்னும் மூலப்பொருள் முறைக்காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் மருந்தாக இன் றும் பயன்படுத்தப்படுகிறது. எர்லிட்சு என்பவர் அம் முறையைப் பின்பற்றி 'அர்சுபெனோமின்' (Arsphenamine) என்னும் மருந்தைக் கண்டுபிடித்தார். 'பெனிசி லின்' என்னும் மருந்து கண்டுபிடிக்கும் வரை அம் மருந்து பயன்பாட்டில் இருந்துவந்தது. மருந்து வழிச் சிகிச்சை முறை தொடக்கத்தில் பல நன்மை களை ஏற்படுத்தியபோதிலும் மிகக் குறைந்த அளவு மருந்துவகைகளே கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இந்த மருந்து வகைகள் மேக நோய் (Syphilis) வேறு சில நோய்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த உதவின. மருந்துவழிச்சிகிச்சை முறையில் 1935 – ஆம் ஆண்டு திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. கெசார்டு, தோமக்கு (Geshard Domagk) என்னும் செருமானியர் தம் ஆராய்ச்சியின் விளைவாகக் கந்தகங்கலந்த இரசாய னப் பொருளைக் (Prontosil) கண்டுபிடித்தார். அம் மருந்து வகை நுண்ணுயிர்க் கிருமிகளினால் உண்டா கும் நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுத்தப் பட்டது. அந்த இரசாயனக் கண்டு பிடிப்பிற்குப் பிறகு பலவகையான மருந்துகள் நுண்ணுயிர்க்கிருமிகளினால் ஏற்படும் நோய்களைத் தடுக்க உயிர்வாழ் கிருமி எதிரி (Antibiotics) வகையில் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் முக்கியமானவை பெனிசிலின் (Penicillin) போன்ற மருந்துவகைகள். பெனிசிலின் மருந்தைத் தொடர்ந்து பலவகையான மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டன. அக் கண்டுபிடிப்பு மருந்து வழிச் சிகிச்சை முறை தோன்றவும், வளர்ச்சியடையவும் மிகவும் உதவிற்று.

மருந்துவகைச் சிகிச்சையில் நான்குவிதமான மருந்துவகைகள் உள்ளன. அவை 1) தூக்கநிலை உண்டாக்குபவை (Sedatives), 2) மெய்ப்பாட்டைச் சமநிலைப்படுத்துபவை, 3) உளச்சோர்வுத் தடை செய்பவை(Antidepressants), 4) உளப்பிணி போக்கு பவை (Anti – Psychotics) ஆகியவையாம்.

**தூக்கநிலை உண்டாக்கும், மெய்ப்பாட்டைச் சம நிலைப்படுத்தும் மருந்துவகைகள்,** மிகப் பரபரப்பு (Excitement), கவலை, சோர்வுடைய நோயாளியின் உளநிலை ஆகியவற்றை நிலைப்படுத்துவதற்கு உதவு கின்றன. மெய்ப்பாட்டைச் சம நிலைப்படுத்தும் மருந்துவகைகள் 1950 - ஆம் ஆண்டிலிருந்து பயன் பாட்டில் இருந்து வருகின்றன. ஆனால் 'பெட்சுடின்' (Pedstine) மருந்து இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

தூக்கநிலை உண்டாக்கும் மருந்துவகை பரபரப் பையும், விறைப்பு நிலையையும் மாற்றித் தசை களைத் தளரச்செய்து நல்ல தூக்கத்தையும் ஏற் படுத்துகிறது. அம் மருந்து வகைகள்மேலே குறித்த அறிகுறிகளைக் குறைத்த போதிலும் இவற்றால் ஏற் படும் சில விளைவுகள் உடலைத் தாக்குகின்றன. முக் கியமாக அவை நோயாளியின் சுறுசுறுப்புத் தன்மை யைக் குறைத்துவிடுகின்றன. பொதுவாக எல்லோருக் கும் தெரிந்த சாராயம் போன்ற போதைதரும் குடி வகைகள் தூக்கநிலை உண்டாக்குபவை. 'பார்பிட்யூ ரேட்சு' (Barbiturates) என்னும் தூக்க மருந்தும் அவ்வகையைச் சார்ந்ததே.

நோவகற்றும் மருந்து (Tranquillizer) என்னும் புதுவகை மருந்து 1950-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது. அது நோயாளியின் பரபரப்பைக் குறைப்ப துடன் சுறுசுறுப்புடன் இருக்கவும் உதவுகிறது. அத னால் மேற்கூறிய முதல் வகை, இரண்டாம் வகை மருந்துகளைவிட இப்போது அது மிகவும் பயன் பாட்டில் உள்ளது.

**உளச்சோர்வுத் தடை மருந்துகள்:** நோவகற்றும் மருந்துவகை நோயாளியின் பரபரப்புத் தன்மையைப் போக்குமேயன்றி மனச்சோர்வைப் போக்காது. மனச்சோர்வைப் போக்க உளச்சோர்வுத் தடை மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. முதல் முறை யாகக் கண்டுபிடிக்கப்பட்ட உளச்சோர்வுத் தடை மருந்து 'புரோனியாசிடு' (Proniazid) என்பதாகும். அம் மருந்தினால் சில உடன் விளைவுகள் ஏற்பட்ட போதிலும் அது நோயாளியின் மனச்சோர்வை நீக்கி அவர் வாழ்க்கையில் உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. அம் மருந்துவகை போலவே இப்போது பல மருந்து கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**உளப்பிணி போக்கும் மருந்துகள்:** முதன்முறை யாக உள நோயைக் குணப்படுத்த 'இரௌ உல்பியா சர்பென்டினா' (Rauwolfia Serpentina) என்னும் செடியிலிருந்து ஒருவிதமான மருந்தைக் கண்டுபிடித் தார்கள். இந்திய நாட்டில் 2,500 ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது அம் மருந்து என்று கருதப்படுகிறது. அந்த மருந்துச் செடியின் வேரை இந்தியாவில் பாம்புக் கடியைக் குணப்படுத்தப் பயன்படுத்தி வந் தார்கள். அம் மருந்துச் செடியின் திறனை 1904 – ஆம் ஆண்டின் இறுதியில் மேலைநாட்டினர் கண்டுபிடித்த னர். அச் செடியிலிருந்து 'இரெசர்பைன்' (Reserpine) என்னும் மூலப்பொருளை 1950 – ஆம் ஆண்டு பிரித் தெடுத்தார்கள். அது மன நோயாளியின் மனநிலை யில் அமைதி ஏற்படுத்தியது. ஆனால் வேறுசில உடன் விளைவுகள் நோயாளியின் உடல்நிலையில் ஏற்பட் டன. அதன் காரணமாக இரெசர்பைன் மருந்திற்குப் பதிலாகப் 'பெனோதியாசின்' என்னும் மருந்து பயன்

படுத்தப்பட்டது. அது இரெசர்பைன் மருந்தைப் போலவே உள நோயாளியைக் குணப்படுத்துவதோடு வேறு எந்தவிதமான தீய விளைவுகளும் இல்லாமல் தடுத்தது. முதன்முறையாகப் பெனோதியாசின் என்னும் மருந்திலிருந்து பிரிக்கப்பட்ட 'குளோர்புரோமாசின்' (Chlorpromazine) என்னும் மருந்தே உள நோய்களை நீக்குதற்குப் பயன்படுத்தப்பட்டது. அதுவும் உளச்சோர்வு மருந்தைப் போலவே எதிர்பாராத விதமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அம் மருந்து பயன்படுத்தப்படுவதற்கு முன் மயக்க மருந்து பயன்படுத்தப்பட்டது. அது அறுவைச் சிகிச்சைக்குமுன் நோயாளியின் உடல் நிலையில் அமைதியை ஏற்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. குளோர்புரோமாசின் என்னும் மருந்து மூளைக்கோளாறு நோயாளிகளைக் குணப்படுத்த முக்கியமாக உதவியது. அம் மருந்தைத் தொடர்ந்து மூளைக்கோளாறு நோயாளிகள் உட்கொள்ள வேண்டும். தவறினால் நோயின் அறிகுறிகள் தோன்றும். இரெ.க.

**துணை நூல்கள்:**


**Bourne, L.E.,** and **Ekstrand, B.R.,** Psychology: Its Principles and Meanings, HoltRinehart & Winston, New York, 1982.

Hothersall, D., Psychology, Charles E. Merill Publishing Co., London, 1985.

Worchel, S. and Shebilske, W., Psychology: Principles and Applications, Prentice-Hall Inc, Englewood Cliffs, New Jersey, 1983.


**மருமக்கள் தாயம்:** ஒரு குடும்பத்தின் சொத்துரிமை, மரபுரிமை, வாரிசு போன்றவை அக்குடும்பத்தின் பெண்வழியில் சகோதரியின் குழந்தைகளுக்கு அமைவதைக் குறிக்கும் முறையே மருமக்கள் தாயம் என வழங்கப்பெறும். இம்முறை அண்மைக் காலம் வரையிலும் கேரள நாட்டின் சமூக அமைப்பின் ஒரு தனித்தன்மையாகக் காணப்பட்டது. இம்மருமக்கள் தாயமுறையின் தோற்றம் குறித்துச் சமூக, வரலாற்று அறிஞர்களிடையே பல்வேறு விதமான கருத்துகள் நிலவுகின்றன. பார்ப்பன மேட்டுக்குடியினரால் பரப்பப்பெற்ற மரபுக் கொள்கையும் (Traditional Theory), கேரளோற்பத்தி என்னும் நூலின் விரிவுரைகளும் மருமக்கள் தாயம் மிகப் பழமையான முறை என்பதையும், மக்கள்தாயம் பழங்காலக் கேரளம் அறியாத ஒன்று என்பதையும் காட்டுகின்றன. அதற்கு மாறுபட்ட நிலையில் மக்கள்தாய முறை பழங்காலக் கேரளத்தில் காணப்பெற்றது என்றும் சில கட்டாயப்படுத்தப் பெற்ற சக்திகளால் பிற்காலத்தில் மருமக்கள்தாய முறை தோற்றம் கொண்டது என்றும் சிலர் கருதுகின்றனர். முற்காலச் சேரமன்னர்களின் வாரிசு உரிமையையும், மகோதபுரத்துக் குலசேகரர் தந்தை வழி வந்தமையையும் அதற்குச் சான்றாகக் காட்டுவர்.

பி.டி.சீனிவாச ஐயங்கார் தமிழர் வரலாறு என்ற தம் ஆங்கில நூலில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை கேரளம் மருமக்கள் தாயத்தை அறியவில்லை என்கின்றார். கே.பி.பத்மநாப மேனன் கி.பி.13-ஆம்நூற்றாண்டுவரை கேரளத்தில் மருமக்கள் தாயம் நிலவவில்லை எனக் கருதுகின்றார். மருமக்கள் தாயத்தைக் குறிப்பிட்ட முதல் அயல்நாட்டுப் பயணியாக கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிரயர் சோர்டான்சு (Frair Jordans) என்பவரைக் கருதுவர். எல்லன்குளம் குஞ்சன்பிள்ளை என்பவரும், மருமக்கள்தாயம் பிற்காலத் தோற்றம் என்பதையும் சில கட்டாயச் சூழல்களில் தோன்றியது என்பதையும் ஏற்றுக்கொள்கின்றார். ஏ.எல். பாசம் என்பவர் முற்காலத்தில் கேரளத்தில் சேரமன்னர்களின் மரபுரிமை ஆண் வழியே வந்தது என்றும், ஏறத்தாழ கி.பி. 12-ஆம் நூற்றாண்டு அளவில் மன்னனின் மகனுக்கன்றி மூத்த சகோதரியின் மகனுக்கு வரும் நிலை உருவாயிற்று என்றும் குறிப்பிடுகின்றார். கொச்சி, திருவாங்கூர் ஆகிய இடங்களில் மிக அண்மைக்காலம் வரை மருமக்கள் தாய முறை தொடர்ந்து காணப்பெற்றது எனக் கூறும் அவர், இம்முறை அரசு உரிமையில் மட்டுமன்றிச் சொத்து உரிமையிலும் காணப்பட்டது என்பதையும் குறிப்பிடுகிறார்.

மருமக்கள் தாய முறையின் தோற்றத்தை விளக்குவதற்குப் பல கொள்கைகள் பல்வேறு அறிஞர்களால் கூறப்படுகின்றன. அவற்றுள் பார்ப்பனியக் கொள்கையைக் (Brahminical Theory) கூறுவோர், கேரளத்தைப் பரசுராமர் தோற்றுவித்தார் எனக் கருதப்படும் பழங்காலக் கட்டுக்கதையுடன் தொடர்புபடுத்தி மருமக்கள் தாயத்தின் தோற்றத்தை விளக்குவர். ஆனால், அது கட்டுக் கதை போன்று கற்பனை வளம் நிறைந்தது என்று மறுக்கப்படுகின்றது.

வேறு சிலர் மருமக்கள் தாய முறையின் தோற்றத்திற்குச் சமூக, பொருளாதாரக் காரணங்களைக் கூறுவர். டி.கே. கோலப்பப் பணிக்கர் மருமக்கள் தாயத்தின் தோற்றம் ஒரு பெண் பல ஆண்களைக் கணவர்களாகக் கொள்ளும் பல கணவர் மணமுறையை (Polyandry) அடிப்படையாகக் கொண்டது என விளக்குவார். அந்தமணமுறையினால் உரிமை ஆண் வழியில் புதல்வர்களுக்குச் செல்வதற்குப் பதிலாகப் பெண்வழியில் சகோதரியின் புதல்வர்களுக்குச் சென்றுவிட்டது என்று மேலும் விளக்குவார்.

மேலும் சிலர், மருமக்கள் தாய முறையின் தோற்றத்திற்குச் சொத்துரிமைக் கொள்கையைக் (Property Theory) கூறுவர். வேறு சிலர் படைக் கொள்கையைக் (Military Theory) கூறுவர். ஆனால் எந்த விளக்கமும் மருமக்கள் தாய முறையின் தோற்றத்தை விளக்கப் போதுமானதாக அமைய வில்லை என்று கருதப்படுகின்றது.

உண்மையில், சமுதாயத்தில் காணப்பட்ட சில கட்டாய வலியுறுத்தல்கள்தாம் காரணம் எனக் கருதப்படுகின்றது. எல்லங்குளம் குஞ்சன் பிள்ளை சாம்னி முறை (Jamni System), கலாரி முறை போன்று மருமக்கள் தாய முறையும் கி.பி.11-இல் நிகழ்ந்த சோழ, சேர மன்னர்களின் போர்களின் விளைவால் ஏற்பட்ட சமூக, பொருளாதாரக் கட்டாயங்களின் தோற்றம் என்கின்றார்.

மருமக்கள் தாய முறையின் துணைத்தோற்றங்களாகக் கூட்டுக் குடும்பம், பலதாரமணம் போன்றனவற்றைக் காட்டுவர். தரவாடு எனப்படும் (Tarawad) மருமக்கள் தாய முறைக் குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பம் ஆகும். பொது மூதாதையரின் கீழ் உள்ள அத்தனை வாரிசுகளும் பெண்வழியில் உள்ளடங்கியிருப்பர். ஒரே வீட்டில் ஒரே அடுக்களையைப் பயன்படுத்துவர். வயதில் மூத்த ஆடவர் காரணவர் எனப்படுவர். கேரளத்தில் சத்திரியர், அம்பலவாசிகள் நாயர்கள் போன்ற பல பிரிவினர்களால் மருமக்கள் தாய முறை பின்பற்றப்பட்டது. வடக்கன் பாட்டுகள் போன்ற பல கேரள இடைக்கால இலக்கியங்களிலும், நாட்டுப்புறப் பாடல்களிலும் மருமக்கள் தாயம் பற்றிய குறிப்புகள் உள்ளனவாக அறிஞர்கள் குறிப்பிடுவர்.

தமிழகத்தில் குமரிமாவட்டத்தைச் சார்ந்த நாஞ்சில் நாடு எனச்சொல்லப்படும் பகுதி பழங்காலத்தில் திருவாங்கூர்ப் பகுதியுடன் இணைந்து காணப்பட்டமையால் கேரளத்தில் நிலவிய மருமக்கள் தாய முறை இப்பகுதியிலும் காணப்பட்டது எனலாம். அறிஞர்கள் சிலர் சங்க இலக்கியத்தில் காணப்படும் சேர மன்னர்கள் பற்றிய சில குறிப்புகளைக் கொண்டு மருமக்கள் தாய முறை பழங்காலத் தமிழகத்தில் காணப்பட்டது எனக்கருதுவர். ஆனால், இக்கருத்தை மறுப்போரும் உள்ளனர். எனவே, முற்கூறிய கருத்து பொருந்துவதாகத் தோன்றவில்லை எனலாம்.

மருமக்கள் தாய முறையினால் குடும்பத்தில் காரணவரின் சகோதரிகளுக்கும் மனைவிக்குமிடையே போராட்டங்கள் (Conflicts) தோன்றின. மறைமுகமான சச்சரவுகள் ஏற்படலாயின. குடும்பத்தில் ஆண்வழியினரின் குழந்தைகளும் மனைவியும் பொருளாதார நிலையில் மிகவும் அல்லல் உற்றனர். அந்நிலையினைக் குமரி மாவட்டத்தில் பிறந்த கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை மிகவும் தெளிவாகவும், உணர்ச்சிபொங்கவும் தம் 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூலில் வெளிப்படுத்தியுள்ளார். அந்நூலும் மருமக்கள் தாயத்தின் வீழ்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்தது எனத் துணியலாம்.

மருமக்கள் தாயத்தின் சீர்கேடுகளை உணர்ந்த சமுதாய முற்போக்குச் சிந்தனையாளர்கள் பலர் அவற்றை நீக்க முனைந்துள்ளனர். அதன் விளைவாக திருவாங்கூர் நாயர் சட்டங்கள் (1912, 1925), கொச்சி நாயர் சட்டம் (1937 – 1938) போன்ற பல சட்டங்கள் தோன்றலாயின. இறுதியில் 1956 – இல் எழுந்த இந்து வாரிசுச் சட்டம் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் உள்ள இந்து சமயத்தைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் குடும்பச் சொத்தில் சமமான பங்கினைப்பெற வழி அமைத்துக் கொடுக்கவே, மருமக்கள்தாய முறை சமுதாயத்திலிருந்து அகன்று விட்டது எனலாம். தா.ஈ.

**துணை நூல்:**

**Sreedhara Menon, A.**, Social and Cultural History of India, Kerala, Sterling Publications Pvt., Ltd., New Delhi, 1979.

**மருமக்கள் வழி மான்மியம்:** 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்ற இந்நூல் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையால் இயற்றப்பட்ட ஓர் இன்தமிழ் நூல். நாஞ்சில் நாட்டில் மருமக்கள் தாய முறையின் வழி வந்த வேளாளர் குலத்தில் தோன்றிய ஒரு பெண் தன் வாழ்க்கையில் அனுபவித்த பல்வேறு துயரங்களை எடுத்துக் கூறி வருந்தும் நிகழ்ச்சிப் போக்கை உள்ளடக்கியதாக இந்நூல் திகழ்கின்றது.

பண்டைத் திருவிதாங்கூர்ப் பகுதியின் தெற்குப் பகுதியாய் இப்பொழுதைய குமரி மாவட்டத்தின் ஒரு பகுதியாய் விளங்குவதே நாஞ்சில் நாடு ஆகும். இங்கு வசிக்கும் பல்வேறு பிரிவினருள் வேளாளர்களும் ஒரு பிரிவினர் ஆவர். அவர்களிடையே மக்கள் தாயம், மருமக்கள் தாயம் என்ற இருமுறைகள் நிலவி வந்தன. பண்டைய கேரளத்தில் நிலவி வந்த மருமக்கள்தாய முறையின் தாக்கமே அப்பகுதியிலும் நிலவியிருந்தது எனக் கொள்ளலாம். ஒரு குடும்பத் தலைவனின் சொத்து அவன் சகோதரியின் குழந்தைகளுக்குச் சென்று விட வழி அமைக்கும் முறையே மருமக்கள்தாய முறை எனக் கூறலாம்.

மருமக்கள்தாய முறையில் பெண்கள் பல்வேறு நிலைகளில் அல்லலுற்றனர். அதனைக் கண்ணுற்றுச் சமுதாய நலச் சிந்தனையாளர்கள் அந்நிலையை

மாற்றியமைக்க முனைந்தனர். அவர்களுள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் ஒருவர் ஆவர். அவர் நாஞ்சில் நாட்டுவேளாளர் நிலை குறித்துக் கேரளத்திலிருந்து வெளிவந்த காலாண்டு மதிப்பீடு இதழில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டியது. அவ்விழிப்புணர்ச்சியை மேலும் மிகுதிப்படுத்தும் முயற்சியின் வெளிப்பாடே பிள்ளையவர்களின் 'மருமக்கள்வழி மான்மியம்' என்ற கவிதை நூலாக மலர்ந்துள்ளது.

இந்நூல் விநாயகர் வணக்கம், அவையடக்கம் முதலாகக் குலமுறை கிளத்து படலம், மாமி அரசியற் படலம், கேலிப்படலம், கடலாடு படலம், பரிகலப் படலம், நாகாத்திரப் படலம், கருடாத்திரப் படலம், வாழ்த்துப்படலம், கோடேறிக் குடிமுடித்த படலம், யாத்திரைப்படலம், கும்பியெரிச்சல் படலம் என்ற பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூல் நகைச்சுவை, எள்ளல், துயரம் ஆகிய சுவைகளை வெளிப்படுத்திச் சமுதாய நிலையைச் சுட்டிக்காட்டுகின்றது.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண்களின் நிலை, பலதார மணத்தின் கொடுமை, கணவன் வீட்டில் ஏழைப்பெண் மனைவியாகப் புகுந்து கணவன் குடும்பத்தினரின் கொடுமைகளால் அனுபவிக்கும் அல்லல்கள், மருமக்கள் தாய முறையில் குடும்பத்தின் தலைவன் அடையும் அல்லல்கள், அவன் குழந்தைகள், மனைவி ஆகியோரின் ஆதரவற்ற நிலை என்பனவற்றை உணர்ச்சி வெளிப்படக் கவிமணி பாடுகின்றார்.

இந்நூலின்கண் அமைந்துள்ள பாடல்கள் எளிய, இனிய, சொற்களைக் கொண்டுள்ளதுடன், ஓசை நயம், உவமை நயம், உருவகச் சிறப்பு, இயற்கைத் தன்மை ஆகிய அனைத்தும் ஒருங்கே வாய்க்கப்பெற்றனவாகவும் திகழ்கின்றன.

கவிமணியின் இக்கவிதைகள் சமுதாயத்தில் உண்டாக்கிய விழிப்புணர்ச்சியின் விளைவாகச் சீர்திருத்த மசோதா 1926-இல் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்நூல் வெளிவருதற்கு முன்பு இந்நூலின் கருத்துகள் பல பகுதிகளாக ஆசிரியர் பெயர் சுட்டப் பெறாது வெளியிடப்பட்டன. தா.ஈ.

**மருள் நீக்கியார்**: காண்க: அப்பர்.

**மல்லப்பாடி**, தருமபுரி மாவட்டத்தின் கிருட்டிணகிரி வட்டத்தில் உள்ள ஒரு தொன்மை மிக்க ஊர். இங்குத் தொல் பழங்கால மக்கள் வாழ்ந்து வந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. சில ஆண்டுகட்கு முன்னர் மல்லப்பாடியில் பெருங்கற்காலத் தொடர்புடைய குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலேயே முதன்முதலாக மல்லப்பாடியில் தான் பெருங்கற்காலக் குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுபிடித்த பெருமை, சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பண்டைய இந்திய வரலாறு-தொல்லியல் துறையைச் சாரும். பர்கூருக்குத் தென்கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மல்லப்பாடியில் மலையரண் உள்ளது.

மல்லப்பாடி மலைகளில் பல குகைகள் உள்ளன. இங்குக் காணப்படும் குகைஓவியங்களில் வண்ணங்கள் கொண்டு அழகாகத் தீட்டப்பட்ட பல ஓவியங்கள் உள்ளன. அவற்றுள் குதிரைவீரனின் உருவம் அழகாக உள்ளது. அவற்றால் வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் வேட்டையாடும் தொழிலைப் பின்பற்றினான் என்பது புலனாகும். அடுத்துப் பண்டைய மனிதன் தன் எண்ணங்களையும் உணர்வுகளையும் சைகைகளின் மூலம் முதலில் தெரிவித்து, பின்னர்த் தன் எண்ணங்களை ஓவியங்களின் மூலம் தெரிவித்தான் என்பதும் உணரப்படுகின்றது. அப்பாறை ஓவியங்கள் கால வெள்ளத்தைக் கடந்து இன்றும் உள்ளன.

மல்லப்பாடி வரலாற்றுச் சிறப்பு மிக்கது. புதிய கற்காலக் கைக்கோடரிகள் சில இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல்துறை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மல்லப்பாடியில் ஓர் உயர்நிலைப் பள்ளியும் பல தொடக்கப்பள்ளிகளும் உள்ளன. இங்குள்ள பேட்டையில் (Peta) இராமசாமிக் கோயில், கிருட்டிணசாமிக் கோயில் என்னும் இரு புகழ்மிகு கோயில்கள் உள்ளன. முன்பு மல்லப்பாடி 48 கிராமங்கள் கொண்ட ஒப்பலி (Hobbali)யின் தலைமையிடமாகத் திகழ்ந்தது. அக் கிராமங்கள், ஆர்க்காட்டு நவாபால் அவர் மைத்துனருக்குச் சீதனமாக வழங்கப்பட்டன. படைமுதல்வர் இரீடு (Col. Read) சேலம் மாவட்டத்தை ஆட்சி புரிந்த போழ்து, மல்லப்பாடி அவரால் தனி வட்டமாகக் கருதப்பட்டது. மலைக்கு மேற்புறம் உள்ள பேட்டை பரந்துள்ளது. இவ்வூர் பாய்நெசவால் புகழ் பெற்றுள்ளது. இரா.த.

**மல்லப்பாடி துர்க்கம்**: வரலாற்றுப் புகழ் பெற்ற 'பாரா மகால்' என்று குறிப்பிடப்படும் பன்னிரண்டு கோட்டைகளுள் இது ஒன்று. கிருட்டிணகிரி – திருப்பத்தூர் நெடுஞ்சாலையில், 20 கி.மீ. தொலைவில் சாலையின் இடப்புறம் இம்மலைக் கோட்டை உள்ளது. துர்க்கம் என்றால் மலைக் கோட்டை என்பது பொருள். இங்கு, 710 மீட்டர் உயரம் கொண்ட இம்மலை உச்சியில் கோட்டை

அரண்களும், இடிபாடுகளுடன் கூடிய கட்டடங்களும், சுனைகளும் உள்ளன.

மைசூர் ஆட்சியாளர்களான ஐதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோரிடம் இக்கோட்டை இருந்தபோது, பாராமகாலின் பல வட்டங்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்ந்தது. இம்மலையின் அடிவாரத்தில் இரண்டு விட்டுணு கோயில்கள் உள்ளன. அவை சிதைந்த நிலையில் உள்ளன. அக்கோயிலின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் வேலைப்பாடுமிக்க கற்சிற்பங்கள் பல காணப்படுகின்றன. உட்புறம் உள்ள தூண்களில் அரசன், அரசி, அவர்களின் குழந்தைகள், அட்டதிக்குப் பாலர்கள் ஆகியோர் சிற்பங்களும் தசாவதாரச் சிற்பங்களும் மிக்க வேலைப்பாட்டுடன் வடிக்கப் பட்டுள்ளன. பீசப்பூர் சுல்தானின்படைத்தலைவன் முசுதபர்கானுக்கும் இராமசெக தேவராயருக்கும் இடையே நடைபெற்ற போரில் (கி.பி.1669) இக் கோயில்கள் இடிபாடுகளுக்கு உட்பட்டிருக்கலாம்.

இரா.த.

**மல்லர் இனமக்கள்,** கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் வாழ்ந்தவர்கள். அக்காலத்தில் பல அரசுகள் உருவாக்கப் பெற்றிருந்ததைப் புத்த சமய நூல்களிலிருந்து அறியலாம். அவ்வாறு பதினாறு அரசுகள் இருந்தனவென்றும், அவை மகாசனபதங்கள் (Mahajanapadas) எனப்பட்டன வென்றும், வடமொழியில் அவற்றைச் சோடச மகாசனபதங்கள் எனக்(Soasa Mahajanapadas or 16 kingdoms) கூறினர் என்றும் தெரிகிறது. அவை யாவன: 1. அங்கம் (கிழக்குப் பீகார்), 2. மகதம் (தெற்குப் பீகார்), 3. காசி (வாரணாசி), 4. கோசலம் (அயோத்தி), 5. விரிச்சி (Vriji) (வடக்குப் பீகார்), 6. மல்லா (கோரக்பூர் மாவட்டம்), 7. சேடி (யமுனை-நருமதை ஆறுகளுக்கிடைப்பட்ட பகுதி), 8. வத்சம் (அலகாபாதுப் பகுதி), 9. குரு (தானேச் சுரம், தில்லி, மீரட்டு மாவட்டங்கள்), 10. பாஞ்சாலம் (பரேலி, புதாவுன், பரூக்காபாது மாவட்டங்கள்), 11. மத்சயம் (செயப்பூர்), 12. சூரசேனம் (மதுரா), 13. அசமகம் (கோதாவரி ஆற்றங்கரை) 14. அவந்தி (மாளவம்), 15. காந்தாரம் (பெசாவர், இராவல் பிண்டி மாவட்டங்கள் - பாகிசுத்தான்) 16. காம்போசம் (தென்மேற்குக் காசுமீரம், காபிரிசுத் தானின் பகுதிகள்) ஆகும். அவற்றுள் ஆறாவதாக வருவதுமல்லா அல்லது மல்லர் இன மக்கள் வாழ்ந்த பகுதியாகும்.

அவ்வரசுகளில் சிலவற்றை முடிமன்னர்கள் ஆள வில்லை. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அவையும், வயதில் மூத்த பெரியோர்களும் அரசுப் பணிகளை நடத்தி வந்தனர். இத்தகைய அரசாட்சியை, கணம் (Gana) அல்லது குடியரசு (Republic) என்றனர். மல்லர் இன மக்களும் இத்தகைய அரசியல் அமைப்பினைக் கொண்டிருந்தனர். குசிநகரம், மல்லர்களின் தலைநகரமாகும். மகதப் பேரரசர் அசாதசத் துருவை எதிர்க்க விரிச்சி இனமக்களும் மல்லர் இன மக்களும் ஒன்றாகக் கூடினர் என்றும் தெரிகிறது.

நா.ப.

**மல்லிகிழான் காரியாதி,** சங்ககாலப் புலவராகிய ஆலூர் மூலங்கிழார் காலத்தைச் சேர்ந்தவன்; அவரால் புகழப் பெற்றவன்; கொடை வள்ளல்; மல்லிநாட்டுத் தலைவன்; வேளாண் குடியைச் சேர்ந்தவன். காரியாதி என்பது இவன் பெயர். ஆலூர் மூலங்கிழார் இவனைப் 'பெரும் பெயர் ஆதி' எனக் குறிப்பிடுகின்றார். பாண்டி நாட்டைச் சேர்ந்த இவனைச் சிலர், குடநாட்டை ஆண்டவன் என்பர். அது தவறு. மல்லிநாடு என்பது இப்போதைய திருவில்லிபுத்தூர்ப் பகுதியைச் சேர்ந்தது. ஆகவே பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் என்பதே பொருந்தும்.

இவனை மல்லி என்ற ஊருக்குத் தலைவன் என்பர். திருவில்லிபுத்தூர்க் கோயில் கல்வெட்டுகள் 'மல்லி' நாட்டுச் சீவில்லிபுத்தூர் எனக் குறிப்பிடுவதால் மல்லி என்பது நாட்டுப் பெயரே அன்றி ஊர்ப் பெயரன்று. அதனை, ஆலூர் மூலங்கிழார் இவனைப் புகழ்ந்து பாடிய புறம் 177-ஆம் பாட்டின் வழி அறியலாகும். இவன் அரண்மனைச் சிறப்பும், அரண்களின் சிறப்பும் இவன் நாட்டின் தலைவன் என்பதையே உறுதிப்படுத்துகின்றன.

இவனைப் புகழ்ந்து பாடிய ஆலூர் மூலங்கிழார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனையும் பாடியுள்ளார். கிள்ளிவளவன் காலமே இவன் காலம்.

மன்னர்களைப் பாடிப் பெறும் யானைப் பரிசு, காரியாதியுடன் காலையில் உண்ணும் கறிச் சோற்றுக்கு ஈடாகாது என இவன் கொடைத் திறம் ஆலூர் மூலங்கிழாரால் புகழப்படும். இவன் அரண் மனையில் வேண்டியவர்கள் எளிதில் நுழையலாம்; ஆனால் போர்க்காலத்தில் மட்டும் நிலாக் கூட நுழைய முடியாதபடி பொறிகள் பொருத்தப்பட்டுள்ளன என இவன் அரண்மனையின் தற்காப்பு புலவரால் புகழப்படுகிறது. அருகருகே அமைந்த பல்வேறு அரண்களை உடையது இவன் நாடு என்பதால், இவன் போர்த்திறமும் பாதுகாப்புணர்வும் நன்கு புலப்படும்.

கள் உண்போர் புளிச்சுவையையுடைய களாப் பழத்துடன் துடரிப் பழத்தையும் நாவற் பழத்தையும் உண்பர் என்பதையும், கள் உண்டபின் காட்டுப்

பன்றிக் கறிச் சோறு உண்ணும் வழக்கம் இருந்தது என்பதையும் காரியாதியின் செயல்களாக ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம். காலைப் பொழுதில் பனை ஓலையில் கறிச்சோறு சாப்பிடும் வழக்கம் இருந்தது என்பதையும் இவனைப் பற்றிய பாடல் வழி அறியலாம். க.மு.

மல்லிநாதர் புராணம்: இது ஒரு சமண சமய நூல். மணிப்பிரவாளத்தில் எழுதப்பட்ட சிரீபுராணம் என்னும் நூலுரையில் இந்நூலின் செய்யுள் ஒன்று மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளது. வங்கநாட்டு மிதிலாபுரத்தின் அரசனான கும்பன் என்பவனுக்கு மகனாய்ப் பிறந்த மல்லிநாதர் துறவு பூண்டு தீர்த்தங்கரர் பதவியையடைந்து, சமண சமயத்தைப் பரவச் செய்து வீடுபேறடைந்தார் என்ற செவிவழிச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு இப்புராணம் இயற்றப்பெற்றது என்பர். சிரீபுராணத்தில் மேற்கோளாக வரும், 'வாயில் மாடமும் மதிலும் அமைத்துக், காவலாளரிற் காப்பு நடுபடுத், தரிதினிற் போகி யடவியினிலாடல், மருவியது விடுத்து மறித்துமந் நெறியே' என்ற இந் நூலுக்குரிய பாடல் வைசிரவண அரசன் ஆலமரத்திற்குச் சிறப்பு செய்ததைக் கூறுகின்றது. இது அகவற் பாவாலான நூல் எனத் தோன்றுகிறது. இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. சா.உ.

மலகாசிக் குடியரசு: காண்க: மடகாசுக்கர்.

மலபரிபாகம்: சைவ சித்தாந்த மெய்ப்பொருளியல் வீடு பேறு அடைதற்குக் குறிப்பிடும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிமுறைகளில் இறுதியான ஞான நெறியை உயிர் அடைந்தொழுகும் பொழுது அது இருவினையொப்பு, மலபரிபாகம், சந்திநிபாதம் என்ற நிலைகளில் முதிர்ச்சியடைகிறது. உயிரின் முதிர்ச்சி நிலைகளுள் ஒன்றான மலபரிபாகம் என்பது, உயிர் மலங்கள் அல்லது தளைகள் நீக்கப்படுதற்குரிய சரியான நிலையை எய்தி விட்டது எனப் பொருள்படும். உயிர் தன் உண்மையியல்பையும், இறைவன் மற்றும் உலகின் உண்மை இயல்புகளையும் அறியவொட்டாது மலங்கள் தடுக்கும். உண்மை இயல்பை மறைக்கும் ஆற்றலைத் திரோதான சக்தி என்பர். நல்வினை, தீவினை ஆகியவற்றைப் பற்றிய விருப்பு வெறுப்பு இன்மையாலும், அவற்றால் தாக்குறாது இருப்பதாலும், சிவபெருமானின் ஐந்தெழுத்தை ஓயாது நினைவ்லிருத்தியிருப்பதாலும், உயிர் இறைவனுக்கு அருகில் நெருங்கி நிற்கும். அந்நிலையில்தான் மலங்கள் தங்களுடைய மறைப்பாற்றலை இழந்து இறைவனால் நீக்கப்படுதற்கு உரியவாகின்றன. மலபரிபாகத்தின் உண்மையான பொருள் மறைப்பாற்றலுக்கு எதிரான அனைத்துக் கூறுகளுடனும் ஒருங்கிணைந்திருப்பதாகும். இவ்வாறு மலங்கள் இறைவனால் நீக்கப்படுவதற்கு உரிய முதிர்ச்சியை அடைவதே மலபரிபாகம் எனப்படுகிறது.

உயிர் இந்நிலையில் அசுத்தமாயையின் படிநிலை வளர்ச்சிப் பொருள்களையோ, அவற்றின் விளைவான தனது சிற்றறிவையோ உணர்வதில்லை. மாறாகத் தன்னிடத்தே இறைவனின் இருப்பை உணரத் தொடங்குகிறது. இறைவன் மலங்களின் முதிர்ச்சி நிலைகளுக்கேற்ப் உயிர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். அதன்படி மந்ததர நிலையில் மலங்கள் முதிர்ச்சி அடைந்துள்ள உயிர்களிடத்து ஓரளவிற்கும், மந்த நிலையில் மலங்கள் முதிர்ச்சி அடைந்துள்ள உயிர்களிடத்து ஆழ்ந்து உற்றுநோக்கின் தெரியுமாறும், தீவிர நிலையில் மலங்கள் முதிர்ச்சி அடைந்துள்ள உயிர்களிடத்து இணைபிரியாது ஒருங்கிணைந்த நிலையிலும் இறைவன் வெளிப்படுகிறார். இறைவனின் இம் மூவகை வெளிப்பாடுகளுக்குப் பாலில் மறைந்துள்ள நெய், கனியில் பொதிந்துள்ள சாறு, எள்ளிலுள்ள எண்ணெய் ஆகியவற்றை முறையே எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடுவர். மலங்கள் முற்றிலும் நீக்கப்பட்ட நிலையில் இறைவன் தம்மை முழுவதும் வெளிப்படுத்துவதுடன் அருளையும் வழங்குவார். பி. ஆர். ந.

மலமலசர் பழங்குடியினர் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைமலைப் பகுதியில்வாழ்கின்றனர். அப்பகுதியில் இவர்களைத் தவிர காடர், முதுவப் பழங்குடிமக்கள் ஆகியோரும் வாழ்கின்றனர். ஆனை மலைப் பகுதியில் மலமலசரைப் போன்று பதிமலசரும் உள்ளனர். இவ்விரண்டு மலசருக்கும் பெண் கொள்வினை, கொடுப்பினை கிடையாது. உருவத் தோற்றத்திலும் பேச்சுவழக்கிலும் வேறுபட்டவர்கள். மலமலசரும் பதிமலசரும் இரண்டு வேறுபட்ட பழங்குடிகள் போன்றே உள்ளனர்.

மலமலசர்கள் குட்டையாகவிருந்தாலும் நல்ல உடற்கட்டு வாய்ந்தவர்கள். சிறிது தடித்த உதடும் பிதுங்கிய கன்னமும் கறுப்பு மயிருமுடையவர்கள். இவர்களுக்குத் தாடி அடர்த்தியாக வளர்வதில்லை. இப்பழங்குடிகள் ஆசுத்திரேலிய இனத்தைச் சார்ந்தவர்கள். வயதான பெண்கள் காதில் ஓலை அணிந்து கொள்கிறார்கள். ஆண்கள், காதில்கடுக்கனும் கையில் பித்தளை மோதிரமும் போட்டுக் கொள்கிறார்கள். பெண்கள் மூக்குத்தி, கம்மல் ஆகியவற்றை அணிகிறார்கள். மலமலச்சிகள் 'மயிர் ஒதுக்கி' யை (மயிர் மாட்டியை) காதில் அணிந்து, பின்புறத் தலையில் மாட்டிக் கொள்கின்றனர். ஒரு காலத்தில் காடரைப் போன்று மலமலசரும் பல்லைச் செதுக்கிக்

கொண்டார்கள். இவ்வழக்கம் இக்காலத்தில் அருகி வருகின்றது. சில மலமலச்சிகள் பச்சை குத்திக்கொள் வதும் உண்டு.

மலமலசர்கள் யானை நடமாட்டமில்லாத இடங் களில் குடிசைகள் அமைத்துக் கொள்கின்றனர். மூங் கிலைப் பிளந்து அவற்றையே சுவராகவும் கூரையாக வும் அமைத்து அவற்றின் மீது இலை தழைகளைப் பரப்புகின்றனர். சிலர் யானைக்குப் பயந்து, மரத்தின் மீது குடிசை அமைத்துக் கொள்வதும் உண்டு. காட்டுப் பொருட்களைச் சேகரிக்க அடிக்கடி இடம் மாறுவதா லும் யானைகளுக்குப் பயந்து அடிக்கடி இடம் மாறுவ தாலும் நிலையான குடிசைகள் அமைத்துக் கொள்வ தில்லை.

இவர்கள், தாம் வாழும் பகுதியைப் 'பாடி' என்றும் குடிசையைச் 'சாலை' என்றும் கூறுகின்றனர். முது வப் பழங்குடிகளைப் போன்று இவர்களிடையே மண மாகாதார் குடிசை (Bachelor's dormitary) உள்ளது. அதனை இவர்கள் 'சாவடி வீடு' எனக் கூறுகின்ற னர்.

மலமலசர்கள் உணவு சேகரிக்கும் பழங்குடி (Food gathering tribe) மக்களாவர். காட்டுப்பொருள் களைச் சேகரித்தும் தேன் எடுத்தும் காபி, தேயிலைத் தோட்டங்களில் கூலிவேலை செய்தும் வாழ்க்கை நடத்துகின்றனர். சிலர் தீயிட்டுக்காட்டை அழித்து இராகி, தினை முதலியவற்றைப் பயிரிடு கின்றனர். எங்குச் சென்றாலும் கையில் கத்தி வைத் திருப்பர். நச்சு மரப்பட்டையைத் தண்ணீரில் கலக்கி, மீன்கள் மயக்கமடைந்தவுடன் துணியைப் போட்டுப் பிடிக்கின்றனர். இவர்கள் தேன் எடுப்பதிலும் வல்ல வர்கள். முன்னாளில் பாலை அருந்துவதில்லை. இப்பொழுது பாலை அருந்துகின்றனர். போத்து, பன்றி, மான், அணில், கோழி, உடும்பு ஆகியவற்றின் இறைச்சியை உண்பர். தேன், மெழுகு, ஏலக்காய், குங்கிலியம், இஞ்சி, மஞ்சள், நன்னாரி வேர் போன்ற காட்டுப் பொருட்களைச் சேகரித்து, அவற்றை விற்று வாழ்கின்றனர்.

இவர்தம் தலைவனை 'மூப்பன்' என்று கூறுவர். இவர்களிடையே நடைபெறும் சண்டை சச்சரவுகளை அவரே தீர்த்துவைப்பார். திருமணங்களைத் தலைமை யேற்று நடத்துவார். இப்பதவி வழிவழியாக வருவ தாகும். இவர்கள் தந்தை கால்வழியைப் பின்பற்று பவர்கள்.

இவர்கள் ஆவியுலகக் கோட்பாட்டில் (Animism) நம்பிக்கையுடையவர்கள். முன்னோர் வழிபாடும் இவர்களிடையே உள்ளது. மணகடஆத்தா, ஒழுங்கட அம்மன், பானாத்தி அம்மன், கோழிகமத்தியம்மன், வன பத்திரகாளி முதலிய தெய்வங்களை வணங்கு கின்றனர். பானாத்திஅம்மனைத் தை மாதத்தில் வழி படுகின்றனர். இடாப் சிலிப்புப் போன்ற இடங்களில் வாழும் மலமலசர்கள் பெருங்குன்றத்தாள், பொன்ன லம்மன், நாகூர் ஊத்து அம்மன் போன்றவற்றை வழி படுகின்றனர்.

இவர்கள் செவ்வாயையும், வியாழனையும் நல்ல நாள்களாகக் கருதுகின்றனர். திருமணமும், வேளாண்மை வேலைத் தொடக்கமும் இந்த நாள் களில்தான் நடைபெறும். தண்ணீர்க் குடத்துடன் எதிர்வருதலை நல்ல சகுனமாகக் கருதுகின்றனர். யானை போன்ற விலங்குகளிடமிருந்து இடுக்கண் நேராதிருக்க 'மந்திரக்கல்' என்னும் கல்லைத் தங்களு டன் எடுத்துச் செல்கின்றனர். தலையில் தண்ணீர் ஊற்றல், விறகு கொண்டு வரல், பச்சை மூங்கில் கொண்டுவரல், தும்மல், பூனை குறுக்கே போதல் முதலியவற்றைக் கெட்ட சகுனமாகக் கருதுகின்றனர்.

மலமலசர்கள் பேசுவது தமிழின் கிளைமொழி யாகும். இத்தமிழ்க் கிளைமொழி மற்ற கிளை மொழிகளினின்றும் வேறுபட்டது. இவர்கள் பேச்சில் 'ழ' கரம் 'க' கரமாக ஒலிக்கப்படுகின்றது. மழை 'மக' என்றும் நிழல் 'நிகல்' என்றும் ஒலிக்கப்படுகின் றன. மற்ற தமிழ்க்கிளை மொழிகளில் காணப் படாத சொற்களையும் இவர்கள் பேச்சில் காண லாம்.

பெண்கள் பருவமடைந்தவுடன் தனிக் குடிசையில் வைக்கப்படுகின்றனர். அக்குடிசையினைப் 'பச்சைக் குடிசை' என்பர். தினந்தோறும் இருமுறை குளிக்க வேண்டும். குறிப்பிட்ட நாளில் குளிக்கச் செய்து வீட் டிற்கு அழைத்து வருவர். அப் பெண்மீது மஞ்சள் நீர் தெளித்துப் புத்தாடை அணியச் செய்வர். வந்த விருந்தினர்கட்கு விருந்து அளிப்பர்.

பெற்றோர் பார்த்துத் திருமணம் செய்தலே இவர்களிடையே மிகுதியாக உள்ளது. ஒரு காலத்தில் பெண்ணுடன் காட்டிற்குச் சென்று திரும்பி வந்தபின் திருமணம் செய்தலும் இவர்களிடையே இருந்தது. பருவமடைந்த பின்புதான் திருமணம் செய்கிறார் கள். மாமன் அல்லது அத்தை மகளைத் திருமணம் செய்கிறார்கள். திருமணங்கள் பெரும்பாலும் செவ் வாய்க் கிழமையன்றுதான் நடைபெறும். திருமணம் இரவில்தான் நடைபெறும். மணமக்கள் குளித்துப் புத் தாடை அணிகிறார்கள். மாப்பிள்ளையின் அண்ணன் மனைவி மணப்பெண்ணுக்குத் தாலி கட்டுகிறாள். தாலி கட்டி முடிந்தவுடன் மணமக்கள் பெரியோர் காலில் விழுந்து வாழ்த்துப் பெறுகின்றனர். விருந்து முடிந்தவுடன் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். திருமணம் முடிந்தவுடன் மணமக்களைத் தனிக்குடித்தனம் வைக்

கின்றனர். தமபி இறந்தால் தம்பி மனைவியை ஓராண்டு கழித்து அண்ணன் மணம் முடிக்கலாம். அண்ணன் இறந்தால் அதே போன்று அண்ணன் மனைவியைத் தம்பி ஓராண்டு கழித்து மணம் முடிக்க லாம். மணவிலக்குச் செய்யப்பட்ட பெண்ணும் மனை வியை இழந்தவரும் மூப்பனார் சம்மதத்துடன் கண வன் மனைவியாக வாழலாம்.

மலமலசருடைய குழந்தைப் பேறு தனிக்குடிசை யில் நடைபெறும். வயதான பெண்ணொருத்தி துணைக்கு இருப்பாள். ஆண் குழந்தையாகவிருந்தால் 5-ஆம் நாளும் பெண்குழந்தையாகவிருந்தால் 4-ஆம் நாளும் தாயும்சேயும் நீராடிய பின்பு வீட்டிற்கு அழைத்து வரப்படுவர். தீட்டைக் கழிக்கத் தாய் மீதும் சேய் மீதும் மஞ்சள் தண்ணீர் தெளிப்பர். வீட்டிற்கு விலக்கமாகும் பெண்களும் பருவமடையும்பெண்களும் தனித் தனிக் குடிசைகளில் தங்க வேண்டும். பேறு காலக்குடிசை, விலக்காகும் பெண்களுக்கான குடிசை பருவமடையும் பெண்களுக்கான குடிசை என மூன்று குடிசைகள் தனித்தனியே உள்ளன.

பருவச் சடங்குடன் அல்லது திருமணச் சடங்குடன் இணைத்துப் பிள்ளைகளுக்குப் பெயரிடுவர். ஆண் பிள் ளைகளுக்குத் தேவராசு, நீலன், குசும்பிரி, குஞ்சுரா மன், குட்டன் என்ற பெயர்களையும், பெண் பிள்ளை களுக்குக் கறுப்பி, மயிலம்மா, நீலம்மா, நஞ்சி என்ற பெயர்களையும் விரும்பி வைக்கின்றனர். மற்றவர் களின் தொடர்பால் இராமன், இலட்சுமணன், சீதை என்ற பெயர்களையும் வைக்கின்றனர்.

மலமலசர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். நெருங்கிய உறவினர் பிணத்தைக் குளிப்பாட்டிக் 'கோடி' போடுவர். பின்னர்ப் பிணத்தைப்பாடை கட் டித் தூக்கிச் செல்வர். அதன் பின்னர் மந்திரம் ஓதி ஒரு கல்லைத் தூக்கி எறிவர். அப்படிச் செய்தால் பேய், பிசாசு நடமாட்டத்தைத் தவிர்க்கலாம் எனக் கூறுகின்றனர். ஆண் இறந்தால், அவர் பயன்படுத் திய கத்தி, சக்கிமுக்கிக்கல், புகையிலை, வெற்றிலை, பாக்கு முதலியவற்றைப் பிணத்துடன் புதைப்பர். தலையைத் தெற்குப் பக்கமும் காலை வடக்குப் பக்க மும் வைத்துப் புதைப்பர். இறந்த அன்று சுடுகாட்டி லிருந்து திரும்பும்போது அனைவரும் குளித்துத்தான் வீடு திரும்ப வேண்டும். வீட்டில் விளக்கேற்றி வைப் பர். கருமாதியை 7-ஆம் நாள் நடத்துவர். புதுப்பானை யில் அரிசியும், பருப்பும் இட்டுச் சமையல் செய்து இடு காட்டிற்கு எடுத்துச் செல்வர். சுடுகாட்டிற்கு மூன்று பேர்தான் செல்வர். ஒருவர் காக்கைகளுக்கும், குருவிகளுக்கும் சோறு வைப்பார். மற்ற இரு வர் பேய், பிசாசு வராமலிருக்கக் கல் வீசிக் கொண் டிருப்பர். திரும்பி வரும்போது மூவரும் குளித்துத் தான் வரவேண்டும். தீட்டு நீங்க அவர்கள் மீது மஞ் சள் நீர் தெளித்துச் சூடமேற்றிச் சாம்பிராணி புகைத் துச் சாமி கும்பிடுவர். கணவனை இழந்தவள் உடம்பி லுள்ள அனைத்து அணிகலன்களையும் நீக்கிவிடுவர்.

சு.ச.

*மலாக்கா*: மலேசியாவிலுள்ள ஒரு மாநில மான இது மலாயா முந்நீரகத்தின் தென்மேற்கே உள்ளது. இது ஏறத்தாழ 1965 ச.கி.மீ. பரப்புடை யது. இங்கு இரப்பர் அதிகமாக உற்பத்தி செய்யப் படுகிறது. இப்பகுதியில் உள்ள மலாக்காத் துறைமுகம் சிங்கப்பூருக்கு வடமேற்கே 200 கி.மீ. க்கு அப் பால் உள்ளது. மலாக்காவைப் போர்ச்சுகீசியர்கள் கி.பி. 1511-ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்டார் கள். அதன்பின்னர் கி.பி. 1641-ஆம் ஆண்டு தச்சுக்



மலாக்காவில் வேளாண்மை

காரர்கள் அதைக் கைப்பற்றினர். அதன்பின், கி.பி. 1795 முதல் 1802 வரையும், கி.பி. 1811 முதல் 1818 வரையும் மலாக்கா ஆங்கிலேயரின் கீழ் வந்தது. இது 1948-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மலாயாக் கூட்டர சில் ஒரு மாநிலமாகச் சேர்ந்தது. மலாயாக் கூட்டரசு 1957-ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. மலேசியா 1963 – ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன் ஒரு மாநிலமாக இப்பொழுது மலாக்கா உள்ளது. நா.ப.

*மலாடு*: மலையமான் என்னும் குறுநில மன் னன் குடியினர் ஆண்ட மலையமானாடு என்பதன் மரூஉ வழக்கே மலாடு என்பதாம். இது செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நாடுகளுள் ஒன்று. அப்பன்னிரு நாடுகளுள் அருவா நாட்டிற்கு மேற்காகவும் புனல் நாட்டிற்கு வடமேற்காகவும் அமைந்த இந்நாடு, இக் காலத்துத் தென்னார்க்காடு மாவட்டத்தின் வட மேற்குப் பகுதியாக உள்ளது. இதன் முதல் தலை

நகர் திருக்கோவலூர். அது தென் பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ளது.

மலையமான்களுள் குறிப்பிடத்தக்க முதல்வனாய்ச் சங்க காலத்தே சிறந்து விளங்கிய வள்ளற்பெருமகன் திருமுடிக் காரியைக் 'கோவற் கோமான் நெடுந்தேர்க் காரி' எனத் திருக்கோவலூரோடு இணைத்தே குறிப்பிடுவர் அம்மூவனார் (அகம்.35). அக்கோவலூரையும் துஞ்சாத (ஓயாத) முழவொலியுடையது எனச் சிறப்பிக்கும் அவர், அக்காரியினுடைய கொடுங்கால் என்னும் மற்றோர் ஊர் முன்னே ஓடிய பெண்ணையம் பேரியாற்றுத் துறையினையும் சிறப்பித்துள்ளார். அக்கொடுங்கால் இக்காலத்தும் அப்பெயரோடேயே விளங்கி வருகின்றது.

மலையமானாடு மலாடு என மருவியதைத் தொடர்ந்து அம்மலாட்டிலுள்ளார் மலாடர் எனவும், அவர்க்கு மன்னனாவான் மலாடர் கோமான் எனவும் வழங்கப்பெற்றனர். அம்முறையில் மெய்ப்பொருள் நாயனாரை மலாடர் கோமான் என்பர் சேக்கிழார் (பெரிய. 467). மேலும், மலாடர் கோமானாகிய அம் மெய்ப்பொருள் நாயனார் ஆண்ட திருக்கோவலூரைச் சேதி நாட்டுத் திருக்கோவலூர் என்றும் (பெரிய. 467), அவரைச் சேதியர் பெருமான் என்றும்(பெரிய. 474) சேக்கிழார் குறிப்பிடுவதனால் பண்டைய மலாடே இடைக்காலத்துச் சேதிநாடு எனவும், மலாடர்கோமானே சேதியர் பெருமான் எனவும் வழங்கப் பெற்றமை விளங்கும்.

மலாட்டினையாண்ட மலையமான் வழியினர் முற்காலத்தும் பிற்காலத்தும் சோழர்க்கடங்கிய சிற்றரசராய்த் திகழ்ந்தனர். மலையமான் சோழிய ஏனாதி திருக்குட்டுவன் முதலிய பலர் அவ்வக் காலங்களில் சோழர்க்குப் படைத்தலைவராயுமிருந்து பட்டம்பெற்று விளங்கினர்.

மலாடு என்ற மரூஉப் பெயரும் பின்னர் மிலாடு என்றாயிற்று. 'தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார்' என மெய்ப்பொருள் நாயனாரைக் குறித்து வருகின்ற கல்வெட்டுத் தொடர் முதலாக இடைக்காலத்தே உத்தம சோழ மிலாடுடையான், கங்கைகொண்ட சோழமிலாடுடையான், மிலாடுடையான் நரசிங்கவர்மன் போன்று வழங்கிய பல பெயர்களும் அதற்குச் சான்றுகளாகின்றன.

மலாட்டு மலையமான்களுள் சிலர், பிற்காலத்தே திருக்கோவலூரிலிருந்து பிரிந்து கிளியூரையும் ஆடையூரையும் தனித்தனித் தலைநகர்களாகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் சிற்றரசராய் ஆண்ட கிளியூர் மலையமான் பெரிய உடையானான இராசராசச் சேதிராயன், சதிரன் மலையனான இராசேந்திர சோழ மலையமான் முதலியோரையும் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சிற்றரசராய் ஆண்ட மலையன் நரசிங்கவர்மனாகிய கரிகாலச் சோழ ஆடையூர் நாடாள்வான் முதலியோரையும் அவ்வகைகளில் காணலாம்.

இனி, மலாட்டு மலையமான்கள் சோணாட்டுச் சோழர்களோடு மணவினைத் தொடர்புகளுக்கு உரியவர்களாகவும் திகழ்ந்தனர். இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனுக்கு வானவன் மாதேவியையும் இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கு முக்கோக் கிழானடியையும் மலையமான்கள் மகட்கொடை கொடுத்துள்ளனர். அம்மகளிருள் வானவன் மாதேவி மாமன்னன் முதலாம் இராசராசனைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவளானாள்; முக்கோக் கிழானடி 'மலாடர் குலமணி விளக்கு' என்று மெய்க்கீர்த்தியில் புகழப் பெற்றாள். வ.கு.

## மலாய் - இந்தோனேசிய மொழிகள்:

மலாயா - பாலினீசியன் அல்லது ஆசுட்ரோனேசியன் மொழிகள் என்று வழங்கப்படும் மொழிக்குடும்பம் 110 மிலியன் மக்களால் பேசப்படுகிறது. இது உலகில் வழங்கப்படும் மொழிகளுள், 15 விழுக்காடு ஆகும். மடகாசுகர், தென் வியட்நாம், மலாய் முந்நீரகம், இந்தோனேசியா, பிலிப்பைன்சுத் தீவுகள், பார்மோசா, நியூகினி மைலனேசியன்; மைக்ரோனேசியன், பாலினீசியன் தீவுகள், நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வாழும் மக்கள், இக்குடும்பத்தில் அடங்கிய மொழிகளைப் பேசுகின்றனர். இக்குடும்பத்தில் 300 முதல் 500 வரை உள்ள மொழிகளும் பல கிளை மொழிகளும் உள்ளடங்கும். மொத்த மக்கள் தொகையில் பாதிக்கும் மேலானோர் பிலிப்பைன்சுத் தீவுகள், இந்தோனேசியா ஆகிய இடங்களில் வாழ்கின்றனர். இவற்றில் சில, அரசாங்க மொழியாகவழங்கி வருகின்றன. மலாய் மொழி மலேசியாவிலும், பாசா இந்தோனேசியா இந்தோனேசியக் குடியரசிலும், தகலேக்கு மொழி பிலிப்பைன்சு நாட்டிலும்,மலகாசி மலகாசி நாட்டிலும் ஆட்சி மொழிகளாக உள்ளன. அவற்றுள் மலாய்மொழிக்கும் பாசா இந்தோனேசியா மொழிக்கும் மிகுதியான வேறுபாடு இல்லை.

இக்குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் மிகவும் எளிமையான ஒலிப்பு முறையையும் இலக்கணத்தையும் பெற்றுள்ளன என்று முதலில் தவறாகக் கணித்தனர்.

ஒரு காலத்தில் மலாயா-பாலினீசியன் மொழிகள் ஒரு மொழியாகவே இருந்தன. பின்னர் அவை பிளவுபட்டு, நூற்றுக்கணக்கான கிளைமொழிகளாக உரு

வாகி, தனித்தனி மொழியாக வளர்ச்சியடைந்தன. இம்மொழிக் குடும்பத்துடன் அடுத்துள்ள மிக நெருக்கமான மொழிக்குடும்பமாகத் தாய்லாந்து நாட்டு மொழிகளான 'தாய்மொழிக் குடும்பத்தை'க் கூறலாம்.

**மலாய் மொழி:** மலேசியாவில் ஒன்பது மிலியன் மக்களால் பேசப்படும் மொழி மலாய். இது மேற்குச் சுமத்திராவில் வழங்கும் மேனங்காபவ்வு (Menangkabou) மொழியுடன் தொடர்புடையது. பல கிளை மொழிகளை உள்ளடக்கிய அம்மொழியில், நிலைபேறு வழக்காகப் போற்றப்படும் கிளைமொழி இரியோவுத்(Riow)தீவில் வழங்கும் பேச்சு மொழியும் மலாய் முந்நீரகத்தில் வழங்கும் பேச்சுவழக்கும் ஆகும். அதுவே உயர்வழக்கு அல்லது தகுதி வழக்கு என்று போற்றப்படுகிறது. பாசா இந்தோனேசியா என்று வழங்கும் மொழிக்கும், மலாய்ப் பொதுப்பேச்சு மொழிக்கும் அவ்விரு கிளைமொழிகளுமே அடிப்படையாகும். மொழிகளின் தொடர்பால் உருவான பிட்சின் வழக்கிற்கு 'மெலயூ பசர்'(கடைவீதி மலாய்ப் பேச்சு மொழி) என்பது பெயர். அம்மொழி பெரும்பாலும் வணிகத்துறைப் பேச்சு மொழியாக உள்ளது. மலாய்ப் பேச்சு வழக்கில் பெருமளவு ஆங்கிலச் சொற்களும், இந்தோனேசிய வழக்கில் தச்சு (Dutch) மொழிச் சொற்களும் கலந்து வழங்கி வருகின்றன. மலாய் மொழிக்கான வரிவடிவம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வழங்கி வந்த தென்னிந்தியப் பல்லவர் எழுத்தாகும் (Renchong Script). இசுலாம் சமயம் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் வந்த பொழுது அராபியின் வரிவடிவம், சில மாற்றங்களுடன் இங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பெயர் உருசாவி (Huru Jawi) என்பதாகும். இன்று உரோமன் வரிவடிவத்தை (ஆங்கில மொழி எழுதப்பயன்படும் வடிவம்) ஏற்றுக் கொண்டு மலாய், பாசா, இந்தோனேசியா ஆகிய மொழிகள் தம்மொழி நூல்களை எழுதவும், அச்சிடவும் பயன்படுத்துகின்றன. இரண்டு மொழிகளும் பொதுவான ஒரே எழுத்துமுறையைக் கொண்டுள்ளன.

மலாய்மொழி எட்டு உயிரொலிகளையும், 19 மெய்யொலிகளையும் கொண்டுள்ளது. உயிரொலிகள் மூக்கொலியுடன் கூடி, அசைகளாக வந்து பொருள் வேற்றுமையைத் தரவல்லன.

| | |
|---|---|
| Taon | வருடம்/ஆண்டு (t ā ō n) |
| tāōn | நகரம் |

பெயரடைகள், பெயர்ச்சொற்களுக்குப் பின்னர் வரும் தன்மையன. அவை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் உள்ள அமைப்பினின்றும் வேறுபடுகின்றன. அவை பிரெஞ்சு மொழியின் பண்போடு ஒத்தன. மலாய் மொழிச் சொற்கள், எளிய வடிவம், கூட்டு வடிவம், கலப்புடைய வடிவம் என மூன்று பிரிவுகளுள் அடங்கும். எளிய வடிவம், ஓர் அடிப்படைப் பொருளைத்தரும் மிகச்சிறிய கூறாக இருக்கும்.

நாமா (Nama)-'பெயர்' என்பது ஓர் அடி. கலப்பு வடிவத்தில் ஓர் அடியும் ஒன்று அல்லது பல ஒட்டுகளும் அடங்கியிருக்கும். நமகன் (Namakan)-'பெயரிட' என்பது கலப்பு வடிவம்.

**எண்கள்:** மலாய் மொழியில் பெயர்ச் சொற்கள் ஒருமை பன்மையை உணர்த்தும் முறை, பிற மொழிகளிலிருந்தும் வேறுபடுகின்றது. பெயர்ச்சொல்லே இரட்டித்துப் பன்மையை உணர்த்துகின்றது. தனியொரு உருபனோ ஒட்டோ இல்லை.

| | | |
|---|---|---|
| ரும - 'வீடு', | நம - 'பெயர்', | பனசு - 'குடு', |
| ருமரும - 'வீடுகள்', | நமநம - 'பெயர்கள்', | பனசு - 'குடுகள்'. |

ஒரு சொல் இரட்டித்தோ, ஒரு பகுதி மட்டும் இரட்டித்தோ தொடர் நிகழ்ச்சியினை வினைச்சொற்கள் குறிக்கின்றன.

பெலரி-'ஓடு' (வினைச்சொல்)

பெலரிலரி-'ஓடிக்கொண்டிரு' (அ) அங்குமிங்கும் ஓடு.

எண்ணுப் பெயர்கள் பெயரடையாக வரும்போது, அவை பெயர்ச்சொற்களுக்கு முன்னரே வரும்.

சத்து ரும-'ஒரு வீடு'

துஅ ரும - 'இரண்டு வீடு'

| | |
|---|---|
| ரும கவன் சச<br>வீடு நண்பன் என் | என் நண்பன் வீடு |
| ஓரங் மெலாய்<br>ஆள் மெலாய் | மலாய்க்காரன் |

ஓரங் 'ஆள்' என்ற பெயர்ச்சொல்லிற்கு அடைமொழியாக மெலய் (மலாய்) என்ற சொல் வந்துள்ளது. எதிர்மறைகள் பெயர்ச்சொல்லை அடுத்தும் அல்லது வினைச்சொல்லை அடுத்தும் பொருளுக்கேற்ப வழங்கும்.

பெர்கி - 'போ'

சய - 'நான்'

திடக் - 'இல்லை'

| | |
|---|---|
| சய திடக் பெர்கி<br>நான் இல்லை போக | நான் போகவில்லை |
| இந்த புக்கன் ரும<br>இது இல்லை வீடு | இது வீடு அன்று. |

**மலாய் கிளைமொழி**: மலாய் மொழிக்குப் பல வட்டாரக் கிளை மொழிகளும் வணிகத்தொடர்பால் தோன்றிய 'பிட்சின்' வழக்குகளும் உள்ளன. மலாய் நாட்டின் தென் பகுதியில் வழங்கும் கிளைமொழியே பொதுப்பேச்சு மொழியாக இன்று ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. மூன்று வணிகக் கிளைமொழிகளும் தோன்றியுள்ளன. அவை 1) கடைவீதி மலாய் (Market Malay or Bazaar Malay),2) பாபா மலாய், 3) சாவா மலாய் பசர் ஆகும். மெலயு பசர் என்ற வணிகமொழி கடை வீதிகளில் வழங்கும் பேச்சு வழக்காகும். அது போர்ச்சுகீசியரின் வரவுக்குப் பின்னர் அம்மொழித் தொடர்பால் தோன்றிய வணிக மொழியாகும். மலேயா, இந்தோனேசியா ஆகிய இடங்களில் வாழும் சீனமக்கள் பேசும் மலாய்ப் பேச்சு மொழியைப் பாபா மலாய் என்பர். தச்சு (Dutch) மொழித் தொடர்பால் சாவாவில் வழங்கும் வணிக மொழியையே 'சாவா மலாய்' என்பர்.

**இந்தோனேசிய மொழிகள்**: இந்தோனேசியாவில் பல மொழிகள் வழங்கி வருகின்றன. ஆனால், சுமத்ரா வின் ஒரு பகுதியில் தாய்மொழியாகவும் ஏனைய பகுதி களில் வணிக மொழியாகவும் வழங்கிய மலாய் மொழி 'பாசா இந்தோனேசியா' என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. சாகர்த்தாவில் 1928-ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாளில் நடந்த இந்தோனேசிய இளைஞர்களின் கூட்டமைப்பில் எடுத்த முடிவின்படி 'பாசா இந்தோனேசியா' நாட்டின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் உரிய மொழியாக அறிவிக்கப்பட்டது. அதற்கு முன்னர்த் தச்சு மொழியே பெருவழக்கில் இருந்து வந்தது. அரசு அறிக்கையின்படி 1945-ஆம் ஆண்டிலிருந்து தேசிய மொழியாகப் 'பாசா இந்தோ னேசியா' வழங்கி வருகிறது. இந்தோனேசியா, மலே சியா ஆகிய இருநாட்டினரும் பொது வரிவடிவத்தைப் பின்பற்றும் நோக்குடன் அமைத்த குழுவின் பரிந் துரையின்படி, 1966-ஆம் ஆண்டு எசான் பாரு பாசா மெலயு (Ejaan Baru Bahasa Melayu) என்று மலேசியாவிலும்,எசான் பாரு பாசா இந்தோனேசியா அல்லது எசான் பாரு (Ejaan Baru Bahasa Indonesia) என்று இந்தோனேசியாவிலும் பெயரிட்ட வரிவடிவத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதன்படி ஆறு உயிர்களும் 22 மெய்களும் 14 குறியீடுகளும் கொண்ட வரிவடிவம் இப்பொழுது பயன்பட்டு வரு கிறது. பாசா இந்தோனேசிய மொழியில் அதன் அமைப்பின் அடிப்படையில் சொற்களைப் பிரித்துள் ளனர். அவை, வேர்ச்சொற்கள், கூட்டுவடிவச் சொற் கள், அவற்றிலிருந்து பெறப்பட்ட இரட்டித்த வடிவம் என்றெல்லாம் பிரிக்கப்பட்டுள்ளன. பிறமொழிகளில் காணப்படும் வழக்கமான பெயர், வினை என்ற பாகுபாட்டை இம்மொழி பெற்றிருக்கவில்லை. ஒரே சொல் பெயராகவும், வினையாகவும் வழங்கும். 'சலன்' என்ற சொல் சாலை என்ற பெயர்ப்பொருளி லும், பயணம் செய் என்ற வினைப் பொருளிலும் வழங் கும். இது போன்றே, 'தலம்' என்ற சொல் 'ஆழம்', 'உள்ளே செல்' என்ற பொருள்களில் வழங்கும்.

வேர்ச்சொல்: இசுதெரி, 'மனைவி'

தோற்றுவித்த வடிவம்: பெரிசுதரி 'திருமணமான'

வேர்ச்சொல்: லக்கி 'மனிதன்/கணவன்'

இரட்டித்த வடிவம்: லக்கி லக்கி 'மனிதர்கள்'

வேர்ச்சொல்: மத்த கண்

கூட்டுவடிவம்: மத்த மத்த 'ஒற்றன்'

பெயர்ச்சொல்லையடுத்து, அதன்பின்னர்ப் பெயரடை வரும். மேலும், எண், பால் வேறுபாடுகளை இலக் கண அமைப்பில் பெயர்ச்சொற்கள் பெற்றிருக்க வில்லை. அதுபோன்றே வேற்றுமை உருபுகளையும் பெற்றிருக்கவில்லை. மேச 'மேசை', பெசர் 'பெரிய', குர்சி 'நாற்காலி'; மேச பெசர் என்ற தொடர்,

மேச பெசர் - பெரிய மேசை(கள்)

குர்சி பெசர் - பெரிய நாற்காலி(கள்) என அமைந்து,

1) பெரிய மேசை, 2) பெரியமேசைகள், 3) பெரிய மேசையினுடைய, 4) பெரிய மேசைகளினுடைய என்ற நான்கு பொருள்களையும் குறிக்கும். வினைச் சொற்களும் காலம், எண், இடம் ஆகிய வேறுபாடுகளை உணர்த்தா. ஒரே வடிவம் எல்லாப் பொருள்களிலும் வழங்கும்.

| | |
|---|---|
| சயா திடுர் | – நான் தூங்குகிறேன், தூங்கினேன், தூங்குவேன். |
| தியா திடுர் | – அவன் தூங்குகிறான், தூங்கினான், தூங்குவான். |
| கமி திடுர் | – நாங்கள் தூங்குகிறோம், தூங்கினோம், தூங்குவோம். |

இதன் அடிப்படையில் மேலே குறிப்பிட்ட வேறு பாடுகளே இல்லை என்று கூறமுடியாது. பல தொடரமைப்புகள் மூலம் வேறுபாடுகளை உணர்த்தி வருகின்றனர். தமிழ் மொழி போன்று 'பெயர்பெயர்' கொண்ட சொற்றொடரும் உண்டு.

சயா புரு – 'நான் வேலைக்காரன்'

இனி மேசை- இது 'மேசை'

அப்ப/அப்பக்க இனி – 'இது என்ன'?

எதிர்மறை வாக்கியங்களில் பெயர், எண், பிரதிப்பெயர் ஆகியவற்றை மறுக்கப் 'புகன்' என்ற சொல்லும், பெயரடைவினை ஆகியவற்றை மறுக்கத் 'திடக்' என்ற சொல்லும் பயன்படும்.

அப்பக்க இனி மேச–'இது மேசையா'

இனி புகன் மேச-'இது மேசை அன்று'

சயா குரு, புகன் எங்க்கவ்-'நான் ஆசிரியன், நீங்கள் (ஆசிரியர்) அல்லர்'

மேச திங்கி இனி, (மேசை – உயரம் – இது)-'இது உயரமான மேசை'. கோ.சீ.

**மலிவுப் பணக் கொள்கை:** பணம் மலிவாவதும், அரிதாவதும் அதனைப் பெற மக்கள் தர வேண்டிய வட்டி வீதத்தைப் பொறுத்திருக்கிறது. குறைந்த வட்டியில் போதுமான அளவு பணத்தைப் பெற முடியுமானால் பணம் மலிவாகக் கிடைப்பதாகிறது. அவ்வாறு கிடைக்கும்போது உற்பத்தியாளர்களும், வணிகர்களும் ஊக்குவிக்கப் பெறுகிறார்களாதலால், அரசு மலிவுப்பணக் கொள்கையைய கடைப்பிடிக்க வேண்டுமெனக் குறிப்பிட்ட சில வட்டாரங்களில் கூறுவதுண்டு. உண்மையில், உலகப் பெருமந்தத்தைத் தொடர்ந்து இரண்டாம் உலகப் பெரும்போர் வரை உலகநாடுகள் பலவும் மலிவுப் பணக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தன.

வணிகவங்கிகள், குறைந்த வட்டியில் மிகுதியான அளவு கடன்வழங்க முன்வரும்போதும், அக்கடன் வசதியை நம்பிக்கையுடன் பயன்படுத்தத் தொழில் வணிக முதலாளிகள் முன்வரும் போதும் பணம் மலியும். நாட்டின் மையவங்கி, வங்கிவட்டி வீதத்தைக் குறைக்கவோ, அரசுக்கடன் பத்திரங்களை வாங்கவோ முன்வரும்போது, பணத்தின் புழக்கம் இயல்பாகவே மிகுகிறது. மையவங்கியின் வட்டி வீதக் குறைப்புப் பிற வணிகவங்கிகளால் பின்பற்றப் படும்போது பண அங்காடி எங்கும் கடன் வட்டி வீதம் குறைகிறது. கடன் வசதி மிகுகிறது. பணம் மலிகிறது. தொழில் மந்த காலங்களில் அவ்வாறு பணத்தை மலியச் செய்தால், முதலீடு, உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியவை பெருக முற்படும். அதனால் மந்த நிலையில் ஒரு மாறுதல் ஏற்பட்டு விடுகிறது.

மலிவுப்பணக் கொள்கை சில கேடான விளைவுகளையும் கொணர்ந்து விடுகிறது. அது சேமிப்புகளை ஊக்குவிக்காது. கடன் வட்டி வீதம் குறையும்போது, வைப்புத் தொகைகளுக்குத் தரும் வட்டி வீதமும் குறைய நேர்வதே அதற்குக் காரணம். சேமிப்பதில் ஆர்வமில்லாதபோது செலவுகள் பெருகி விடுகின்றன. மேலும், மலிவுப்பணக் கொள்கையின் விளைவான பணப்புழக்க மிகுதி, பண வீக்கத்துக்குக் காரணமாகி விடுகிறது. உண்மையில், தொடர்ந்து கடைப்பிடிக்கப் பெற்ற மலிவுப்பணக் கொள்கையால், இரண்டாம் உலகப் பெரும்போரைத் தொடர்ந்து, உலக நாடுகள் பலவற்றிலும் பணவீக்கச் சிக்கல் தலைதூக்கி அச்சுறுத்தவே,அந்நாடுகள் மலிவுப் பணக் கொள்கையைக் கைவிட்டுவிட நேர்ந்துள்ளது.

இந்தியாவில் 1935-ஆம் ஆண்டு முதல் 1951-ஆம் ஆண்டு வரை வங்கி வட்டி மூன்று விழுக்காடாகத் தொடர்ந்து இருந்தது. வட்டி வீதம் குறைவாக இருந்தால், வளரும் ஒரு நாட்டில் முதலீட்டையும் தொழில் வளர்ச்சியையும் அது ஊக்குவிக்கும் என்று தொழில் துறையைச் சார்ந்த பலர் கருத்துத் தெரிவித்து வந்துள்ளனர். ஆனால், தொடர்ந்து ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசியைக் கட்டுப் படுத்தப் பணத்தின் அளிப்பைக் கட்டுப்படுத்தியாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டதும், அரசு ஒரு கிராக்கிப் பணக் கொள்கையைக் கடைப்பிடித்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் விளைவாக, வட்டி வீதங்கள் 1951-க்குப்பின் இந்தியாவிலும் ஏறுமுகமாகி விட்டன. அந்த வளரும் வீதங்கள் சிறுதொழில்கள் தேவையான அளவு கடன் பெறுவதற்குத் தடையாக உள்ளன என்னும் கருத்து நிலவி வருகிறது. தே.வே.

**மலேசியா:** தென்கிழக்கு ஆசியாவில் உள்ள மலேசியா (Malaysia) கி.பி.1963 – ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் உருவாகியது. இதில் அடங்கிய பகுதிகள்: 1) மலேயாக் கூட்டாட்சி (காண்க. தனிக் கட்டுரை). 2) சிங்கப்பூர் அரசு (இது 1965 – ஆம் ஆண்டு மலேசியாவிலிருந்து பிரிந்து தனி அரசாகியது), 3) வடபோர்னியோக் குடியேற்றங்கள் (இவற்றின் இப்போதைய பெயர் சாபா (Sabah) என்பதாகும்), 4) சரவாக்கு (Sarawak). இந்நான்கு பகுதிகளிலும் ஆங்கிலேயர் ஆதிக்கம் முன்பு நிலவியது. ஆங்கிலேயர், 1963 – ஆம் ஆண்டில் இவற்றுடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி இவை சுதந்திர நாடுகளாகி, மலேசியக் கூட்டாட்சி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டன. இதன் தலைநகர் கோலாலம்பூர் (Kuala Lumpur). 1965 – இல் பிரிந்து சென்ற சிங்கப்பூர் நீங்கலாக உள்ள மற்றப் பகுதிகளின் மக்கள் தொகை மதிப்பு ஏறத்தாழ 15.07 மில்லியன் (1984). முன்பு இருந்த (1963, செப்டம்பருக்கு முன்னர்) மலேயாக் கூட்டாட்சி அமைப்பை ஒட்டிய ஓர் அரசியலமைப்பையே இப்பொழுது மலேசியா பெற்றுள்ளது. புதிதாகச்



கோலாலம்பூர்

சேர்க்கப்பட்ட சாபா, சரவாக்குப் பகுதிகளின் நல னுக்கு ஏற்ற சில பாதுகாப்பு விதிகள் புதிய அரசிய லமைப்பில் இடம் பெறுகின்றன. அவ்வமைப்பு 1983 – ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது (Amended). அதன்படி மலேயா நாடுகள் ஒன்பதில் உள்ள 9 ஆட்சியாளர்களும், தமக்குள் ஒருவரைக் கூட்டாட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். அக்கூட்டாட்சித் தலைவர் ஐந்து ஆண்டுகள் பதவியிலிருக்கலாம். அவருக்கு உதவியாக ஒரு துணைத் தலைவரையும், மேற்கூறிய ஒன்பது பேரும், ஐந்து ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கின்றனர். மூன்று அங்கங்களையுடைய பாராளுமன்றம், சட்டமியற்றும் பணியைச் செய்கிறது. ஆளவை மன்றம் (Senate), நியமிக்கப்பட்ட 68 உறுப்பினர்களையும், பேராளர் சபை (House of Representations) தேர்ந்தெடுக்கப்பட்ட 154 உறுப்பினர்களையும் கொண்டவையாகும். பேராளர் சபை 5 ஆண்டுகட்கு ஒரு முறையும், ஆளவை மன்றம் 3 ஆண்டுகட்கு ஒரு முறையும் புதுப்பிக்கப்படுகின்றன.

முன்பு இருந்த மலேயாக் கூட்டாட்சியின் பெயர் முந்நீரக மலேசியாவாகும் (Peninsular Malaysia). அதன் பரப்பு ஏறத்தாழ 1,31,587 ச.கி.மீ. 'சாபா' எனப்படும் பகுதியின் பரப்பு 73,711 ச.கி.மீ. அதன் கடலோர நீளம் 1,577 கி.மீ. சரவாக்கின் பரப்பு 1,24,449 ச.கி.மீ. கடலோர நீளம் 720 கி.மீ. தெ.பா.

**துணை நூல்:**

Winstedt, Sir, R., Malaya and its History, Oxford University Press, London, 1953.

**மலேயாக் கூட்டாட்சி:** இது இப்போது மலேசிய நாட்டின் ஒரு பகுதி. முன்பு மலேயாக் கூட்டாட்சியில் (Federation of Malaya) பதினோர ரசுகள் அடங்கியிருந்தன. அவை 1) சோகூர் (Johore), 2) கெடா (Kedah), 3) கிளந்தான் (Kelantan), 4) மலாக்கா (Malacca), 5) நெகிரி செம்பிலான் (Negri Sembilan), 6) பாகாங்கு (Pahang), 7) பினாங்கு (Penang), 8) பேராக்கு (Perak), 9)



மலாய்க்காரர்கள்

பெரிலிசு (Perlis), 10) செலாங்கூர் (Selangor), 11) திரெங்கானு (Trengganu) என்பனவாம்.

மலேயா ஒரு மலை நாடு. வடக்குத் தெற்காக மூன்று மலைத் தொடர்கள் இங்குள்ளன. அவை 1) பின்டாங்கு (Bintang), 2) மெயின் (Main), 3)திரெங் கானு எனப்படும் மேட்டு நிலம். பேராக்கு, பாகாங்கு, கிளந்தான் என்னும் மூன்று ஆறுகள் இதில் பாய் கின்றன. அம் மூன்றும் சிறப்பானவை. அவற்றைத் தவிரப் பல சிற்றாறுகளும் உள்ளன.

இந்நாடு வெப்ப மண்டலத்தைச் சார்ந்தது. இங்கு மழை மிகுதி. இங்கு 80 விழுக்காடு நிலப் பரப்பில் காடுகள் நிரம்பியுள்ளன.

காடுகள் மிகுந்த மலேயாக் கூட்டாட்சியில் இரப்பர்த் தோட்டங்கள் மிகுதியாக உள்ளன. உலக உற்பத்தியில் கணிசமான அளவு இரப்பர் இங்குக் கிடைக்கிறது. இரப்பர்த் தோட்டங்களில் இந்திய மரபு வழியினர் குடியேறிக் கடந்த நூற்றாண்டி லிருந்து பணியாற்றி வருகின்றனர். இன்றும் பத்து விழுக்காடு இந்திய மரபு வழியினர் இங்கு வாழ்கி றார்கள் என்றும் அவர்களுள் பெரும்பாலோர் இரப்பர்த் தோட்டங்களில் பணி புரிகிறார்கள் என் றும் கூறுவர்.

காடுகளில் கோந்து, எண்ணெய் முதலிய பொருட்கள் கிடைக்கின்றன. பள்ளத்தாக்குகளில் தென்னை, தேயிலை, காப்பி, காய்கறிகள் போன்ற வையும் நெல்லும் பயிராகின்றன.

மலேயாவில் கனிப் பொருட்களில் ஒன்றான வெள்ளீயம் (Tin) மிகுதியாகக் கிடைக்கிறது. உலக உற்பத்தியில் ஏறத்தாழ 50 விழுக்காடு வெள்ளீயம் இங்குக் கிடைக்கிறது. பொன், இரும்பு, நிலக்கரி, மின்னிழைமம் (Tungsten), அலுமினிய மண் (Bauxite) முதலியன இங்குக் கிடைக்கும் ஏனைய கனிப் பொருட்களாகும்.

மீன் பிடிக்கும் தொழிலிலும் மலாய்க்காரர்கள் தலைசிறந்தவர்கள். தோராபு (Dorab), எர்ரிங்கு (Herring), மக்ரீல் (Mackerel) முதலான சிறப்புமிக்க மீன்கள் இங்குக் கிடைக்கின்றன.

மேலைச் சமவெளிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் போக்குவரத்திற்குப் பயனாகும் சாலைகளும் இருப்புப் பாதைகளும் போடப்பட்டுள்ளன. சிங்கப்பூரிலிருந்து புறப்படும் இருப்புப் பாதைத் தொடர் பினாங்குத் தீவுக்கு எதிரில் இருக்கும் பட்டர்வொர்த்து (Butter-worth) வரை செல்கிறது. இங்கிருந்து தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கு வரை இருப்புப் பாதை

செல்கிறது. சாலைகள் அழகானவை; விரைந்து செல்லும் ஊர்திகளுக்கும், பேருந்துகளுக்கும் ஏற்றவை.

மக்களுள் 50 விழுக்காட்டினர் மலாய்க்காரர்கள்; 40 விழுக்காட்டினர் சீனர்; எஞ்சியோர் இந்திய மரபு வழியில் வந்தவர்கள். ஐரோப்பியர் சிலரும் இங்கு வாழ்கிறார்கள். மலாய்க்காரர்கள் இசுலாம் சமயத்தினர். சீனர்களில் பெரும்பாலோர் வணிகர். இந்திய மரபு வழியினருள் பெரும்பாலோர் இரப்பர், காப்பித் தோட்டங்களில் பணி செய்யும் தொழிலாளர்கள்; சிறுபான்மையினர் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**வரலாறு:** தென் சீனாவிலிருந்து மலாயர் வந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். மலேயா முந்நீரகம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து 12-ஆம் நூற்றாண்டு வரை சிரி விசயம் (Sri Vijaya) என்னும் பேரரசின் பகுதியாக இருந்தது. அப்போது இதனைச் சைலேந்திர மரபின் மன்னர்கள் ஆண்டனர். சைலேந்திர மரபு மன்னர்கள் சுமத்திராத் தீவிலிருந்து இப்பகுதியையும் ஆண்டனர். பின்னர், இம்முந்நீரகத்தைச் சாவானியர்களும் (Javanese), தாய் மக்களும் (Thais) கைப்பற்றியாண்டனர். மசபாகித்து (Madjapahit) அரசர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இங்கு ஆட்சி நடத்தினர். சீனப்படையெடுப்பாளரும் அராபிய வணிகர்களும் பின்னர் இங்குச் செல்வாக்குற்றனர். அராபியரே இங்கு இசுலாம் சமயத்தைக் கொண்டு வந்தனர். இங்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் ஐரோப்பிய வணிகமும் ஆட்சியும் தொடர்ந்தன.

போர்ச்சுகீசியர்கள் மலாக்காவை கி.பி.1511-ஆம் ஆண்டில் கைப்பற்றினர். போர்ச்சுகீசியரிடமிருந்து மலாக்காவைத் தச்சியர் (Dutch) கி.பி. 1641-இல் பெற்றனர். ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவினர் பினாங்கைப் பெறச் சாசனம் ஒன்றை கி.பி.1786-இல் பெற்றனர். ஆலந்து (தச்சியரின் நாடு) கி.பி. 1795-இல் பிரான்சு நாட்டினரின் ஆதிக்கத்திற்குட்பட்டபோது மலாக்கா, ஆங்கிலேயர் வசமாயிற்று. நெப்போலியனின் போர்கள் நடைபெற்ற காலத்தில் இப்பகுதி ஆங்கிலேயருக்கும், பிரான்சுக்காரருக்குமாகப் பல முறை கைமாறியது. இறுதியாக கி.பி. 1824-ஆம் ஆண்டில் மலாக்கா ஆங்கிலேயர் வசமாயிற்று.

சிங்கப்பூரை கி.பி. 1819-ஆம் ஆண்டில் சர் இசுடாம்போர்டு இராபில்சு (Sir Stamford Raffles) என்பார் உருவாக்கினார். சிங்கப்பூரின் வளர்ச்சி மலாக்காவையும் பினாங்கையும் பெரிதும் பாதித்தது. மலாக்கா, பினாங்கு, சிங்கப்பூர் ஆகிய மூன்றும் ஓராட்சியின் கீழ் கி.பி.1867-இல் வந்தபோது அதனை 'கடற்கால் குடியேற்றங்கள்' (Straits Settlements) என்று கூறினர்.

பேராக்கு, செலாங்கூர், நெகிரி செம்பிலான், பாகாங்கு ஆகியவை கூட்டாட்சி மலாயா நாடுகள் என்று கூறப்பட்டன. அவை கி.பி. 1874 க்கும் 1895 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டன. ஏனைய பகுதிகளும் சிறிது சிறிதாக ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டன.

இரண்டாம் உலகப் போரின்போது சப்பானியர் மலேயா முந்நீரகத்தைக் கைப்பற்றினர். சப்பான் இரண்டாம் உலகப் போரில் தோற்ற பின்னர் இப்பகுதி மீண்டும் ஆங்கிலேயர் வசமாயிற்று.

மலேயாக் கூட்டாட்சியிலிருந்துதான் இக்கால மலேசியா உருவாயிற்று. புதிய மலேசியா 1963-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இதில் மலேயாக் கூட்டாட்சிப் பகுதிகளும், சிங்கப்பூர் அரசும் இணைந்திருந்தன. வடபோர்னியோவின் சாபா (Sabah) எனப்பட்ட பகுதியும், சராவாக்கும் மலேசியாவின் புதிய பகுதிகளாயின. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 1965-ஆம் ஆண்டு சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து தனி அரசாயிற்று.

மலேயாக் கூட்டாட்சியின் தலைநகர் கோலாலம்பூர்; மற்ற முக்கிய நகரங்கள் பினாங்கு, ஈப்போ, மலாக்கா, தைப்பிங்கு, சோகூர் பாரு, செரம்பான், கிளாங்கு, அயோர்கிசுடார் என்பனவாம்.

இங்கு அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி நடைபெறுகிறது. மலேயாக் கூட்டாட்சி, இப்பொழுது முந்நீரக மலேசியா என்ற பெயரைப் பெற்றுள்ளது.

ந.க.ம.

## மலை ஏற்றம்

**மலை ஏற்றம்** என்பது மலைகளின் மீது ஏறும் கலையைக் குறிப்பதாகும். இக்காலத்தில் இதனை ஒரு விளையாட்டாகக் கருதுகிறார்கள். கடத்தற்கரிய மலையுச்சியை விடா முயற்சியால் முயன்று ஏறுதல் உடற்பயிற்சியின் பாற்பட்டது. கடக்க முடியாத மலை உச்சியையோ, நீண்டு உயர்ந்த மலையையோ, மலை முகட்டையோ மனித முயற்சியால் ஏறி வெற்றி காணும் கலையாக இது இன்று வளர்ந்துள்ளது. மலை ஏற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் நிற்பவை மலையின் உயரம், கடுங்குளிர், உடல் அமைப்பு போன்றவையாகும். அவற்றை மனிதன் ஆய்ந்து, சிந்தித்துச் செயற்பட்டு மலையேற்றத்தின் போது ஏற்படும் தடைகளைக் களையமுற்படுகிறான்.

மலையேற்றத்தில் ஈடுபடும் வீரர்களுக்குச் சில சிறப்பான கருவிகள் தேவைப்படுகின்றன. காலில்

அணிந்து கொள்ளும் சிறப்பான காலணிகள் அண்மைக் காலத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் உலகப்போரின்போது நிறைய ஆணிகள் அடிக்கப்பெற்றிருந்த காலணிகளை மலையைக்கடக்க முயன்ற படைவீரர்கள் பயன்படுத்தினர். ஆனால் அப்போருக்குப் பின்னர்த் தோலினாலும், இரப்பரினாலும் ஆன காலணிகள் பயன்படுத்தப்படுகின்றன. அறுபடாத செயற்கை இழைக் கயிறுகள் (Nylon) மலை ஏறுவதற்கும், மலையேற்றத்தில் ஈடுபட்டுள்ள வீரர்களைப் பிணைத்து இடருறும் காலத்தில் உதவுவதற்கும் பயன்படுகின்றன. பனியும், பனிக்கட்டியும் படர்ந்துள்ள மலைகளைக் கடக்க முயலுவோர், கையில் ஊன்றுகோல், கறுப்புக் கண்ணாடி, பனிக்கட்டிகளை வெட்டும் கோடரி போன்ற கருவிகளைத் துணைக் கொள்வர். அதனுடன் உருக்குப் பிடிப்புகளும் (Spikes) பயன்படுத்தப்படுகின்றன.

உலகில் முதன் முதலாக மலையேற்றக்கலை ஐரோப்பாவில் தொடங்கியது. பிளாங்கு மலை (Mount Blank) உச்சி விஞ்ஞானிகளைக் கவர்ந்தது. பலர் பரிசுகள் வழங்குவதாகக் கூறியிருந்தபோதும் கி.பி. 1786 - ஆம் ஆண்டில்தான் மைக்கேல் கேப்ரியல் பிக்கார்டு (Michael Gabriel Piccard) என்ற மருத்துவரும், சாக்குவிசு பால்மட்டு (Jacques Balmat) என்ற குடியானவரும் சேர்ந்து பிளாங்கு மலையுச்சியை அடைந்தனர். பின்னர், அம்மலையின்மீது பலர் ஏறிப்புகழ் பெற்றனர்.

ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த மலையுச்சியான கிளிமாஞ்சரோவை கி.பி. 1889 – ஆம் ஆண்டில் செருமனி நாட்டைச் சார்ந்த ஆன்சு மேயர் (Hons Mayer) என்பாரும் இலட்விக் புரட்செல்லர் (Ludvig Purtescheller) என்பாரும் அடைந்தனர். கினியாவின் மலையுச்சியை ஆல்போர்டு மேக்கிண்டர் (Sir Halford J. Mackinder) என்பவர் அடைந்தார். உரூவன் சோரி மலையுச்சியை 1906-ஆம் ஆண்டில் இளவரசர் உலிய்கி அமேடா (Luigi Ameda) என்பவர் முதலில் சென்றடைந்தார்.

ஆசியாவில் இமயமலையுச்சியை அடையப் பலர் முயன்றனர். தென்சிங்கு (Tenzing) என்ற திபேத்திய செர்பாவும் இல்லாரி (Hillary) என்பாரும் 1952 – ஆம் ஆண்டில் எவரெசுட்டு மலையுச்சியை அடைந்தனர்.

வட, தென் அமெரிக்கக் கண்டங்களிலும் பலர் முயன்று மலையுச்சிகளைக் கண்டு பிடித்துள்ளனர்.

இரா.அ.

மலைக்குறவன் பழங்குடியினர் கேரள மாநிலத்திலுள்ள கொல்லம், கோட்டயம் மாவட்டங்களில் வாழுகின்றனர். சமவெளிப் பகுதியில் வாழும் மற்ற குறவர்களிடமிருந்து வேறுபடுத்த இவர்கள் மலைக்குறவர்கள் எனக் கூறப்படுகின்றனர். இவர்கள் கறுத்த நிறமும் சுருள் மயிரும் உடையவர்கள். பெண்கள் காதில் நீண்ட ஓலை அணிந்திருப்பர். இவர்கள் மலையாளக் கிளைமொழி ஒன்றினைப் பேசுகின்றனர்.

இவர்கள் கௌரவர்களின் வழிவந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். இவர்களிடையே கூன் குறவன், கக்காக் குறவன், பாண்டிக் குறவன் என முப்பிரிவுண்டு. இவர்கள் வேலை செய்யும் இடத்திற்கருகே மூங்கிலைக் கொண்டு குடிசை அமைத்து வாழ்கின்றனர். சமைப்பதற்கும் தூங்குவதற்கும் எனக் குடிசையை இரு பிரிவாகப் பிரித்துள்ளனர்.

மலைக்குறவர்கள் வேளாண்மை செய்தும் வேட்டையாடியும் தேன் சேகரித்தும் வாழ்கின்றனர். வில், அம்பு, துப்பாக்கிகளைக் கொண்டு வேட்டையாடுகின்றனர்.

இவர்கள் ஆவியுலகக்கோட்பாட்டில் (Animism) நம்பிக்கை உடையவர்கள். இம்மக்கள் முன்னோர் வழிபாட்டுடன் இந்துக் கடவுள்களையும் வழிபடுகின்றனர். இவர்களிடையே பூசாரியும் மந்திரவாதியும் (இரவகாரன்) உண்டு. இவர்கள் மாயவித்தைகளில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள்.

இப்பழங்குடியினர் பெருந்தனக்காரரை 'ஊராளி' அல்லது 'காணி' என்று கூறுவர். அவர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்புண்டு. ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு பெருந்தனக்காரர் உண்டு. அக்குடியிருப்பில் நடைபெறும் அனைத்துக் காரியங்களுக்கும் அவரே பொறுப்பாவார். பெருந்தனக்காரர் வேட்டையில் பங்கு பெற்றாலும் பெறாவிட்டாலும், வேட்டையாடிய பொருளில் அவருக்கும் பங்குண்டு. அப்பதவி வழிவழியாக வருகின்றது. பெருந்தனக்காரர் பதவி வகிப்பவரை வனத்துறை அலுவலர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

பெண்கள் பருவமடைந்த பின்னரே திருமணம் செய்து கொள்ள முடியும். ஒரு காலத்தில் பருவமடைவதற்கு முன்பே திருமணம் செய்யும் வழக்கமும் இருந்துள்ளது. இவர்களிடையே பெண்ணுக்குப் பரிசளித்தலும் உண்டு. இவர்களிடையே கடத்தல் திருமணமும் (Marriage by Capture) வழக்கிலிருந்ததாக நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறியலாம். தாய்மாமன் மகளையே விரும்பி மணக்கின்றனர். தந்தையுடன் பிறந்த சகோதரி மகளைப் பெரும்பாலும் மணப்பதில்லை. திருமணத்தில் பெண்ணுக்கு

முண்டு கொடுப்பதும் தாலிகட்டுவதும் இன்றியமையாத சடங்குகளாகும். ஒருவர் பல பெண்களை மணத்தல் செல்வத்தின் அறிகுறியாகக் கருதப்படுகின்றது. அண்ணன் இறந்த பின் அண்ணன் மனைவியைத் தம்பி மணத்தலும், தம்பி இறந்த பின் தம்பி மனைவியை அண்ணன் மணத்தலும் இவர்களிடையே உண்டு. கூடாவொழுக்கத்தைக் கடுமையாகக் கண்டித்துத் தண்டம் விதித்துப் பழங்குடியை விட்டே நீக்கி விடுவதும் உண்டு. கருவுற்ற ஏழாம் திங்களில் 'புளிகுடி சடங்கு' நடத்தப்படுகின்றது.

தனிக் குடிசையில் பருவமடைந்த பெண்களை ஐந்து நாள்களும், மாதவிடாய் ஆன பெண்களை மூன்று நாள்களும், குழந்தை பெற்ற பெண்களைப் 16 நாள்களும் வைத்திருக்கின்றனர். குழந்தைக்கு 20 அல்லது 30 – ஆம் நாளில் பெயரிடுகின்றனர்.

இம்மக்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். புதைத்த இடத்தில் கல் நடுவதும் உண்டு. இவர்கள் பதினாறு நாள்கள் தீட்டு மேற்கொள்கின்றனர். விருந்தினைப் 16 – ஆம் நாள் நடத்தியவுடன் ஈமச் சடங்குகள் முடிவடைகின்றன. சு.ச.

**மலைக்கோவிலூர்**: இந்த ஊர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்தது; கரூர்–திண்டுக்கல் சாலையில் உள்ள பழமையான ஊராகும். இவ்வூரில் பெருங்கற்காலப் பண்பாட்டின் ஈமக் குழிகள் பல்வேறு வகைகளில் மிக அதிகமாகப் பரந்த இடங்களில் காணப்படுகின்றன.

மிகப் பெரிய ஈமக்காடுகளில் பல கற்குவைகளும், கல் திட்டைகளும் காணப்படுகின்றன. சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவினர் இங்குக் கள ஆய்வு செய்துள்ளனர். இங்கு மேற்பரப்பாய்வு மட்டும் செய்யப்பட்டுள்ளதே தவிர இன்னும் முறையான அகழ்வாராய்ச்சி நடைபெறவில்லை. இது போன்ற இடங்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பாடாலூர், பெருமாபாளையம் ஆகிய இடங்களில் உள்ளன. செ.இரா.

**மலைப் பண்டாரம்**: பழங்குடியினர் கேரள மாநிலத்திலுள்ள கல்படவு, அன்னகுப்பம், தலபரா, சபரிமலை ஆகியவிடங்களிலும், தமிழ்நாட்டிலுள்ள செங்கோட்டைப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்கள் நடுத்தர உயரமும் கறுத்த நிறமும் அகன்ற மார்பும் உடையவர்கள். உடலின் மேற்பாகத்தை மறைப்பதில்லை. மலைவேடன், மலைக்குறவன், உல்லாடன் ஆகியோரைக் காட்டிலும் தாங்கள் உயர்ந்தவர்கள் என எண்ணுகின்றனர்.

நாடோடி வாழ்க்கை நடத்தும் இவர்கள் இடைக்காலக் குடிசைகளை அமைத்து வாழ்கிறார்கள். இன்றும் சிலர் குகைகளிலும் பெரும் பாறைகளின் அடியிலும் மரத்தடியிலும் வாழ்கின்றனர். சிலர் நிரந்தரக் குடிசைகளில் வாழ்கின்றனர். இவர்கள் வாழும் குடிசைக்கருகில் இரவு முழுவதும் நெருப்பு எரிந்து கொண்டே இருக்கும். ஒருவர் இறப்பின் அவ்விடத்தை விட்டு நீங்கி வேறோர் இடத்தில் குடிசை அமைப்பர்.

இவர்கள் காட்டுப் பொருட்களைச் சேகரித்தும் வேட்டையாடியும் வாழ்க்கை நடத்துகின்றனர். ஒவ்வொரு குடும்பமும் காட்டுப் பொருட்களைச் சேகரிப்பதற்குத் தனியே செல்கிறது. சில நேரங்களில் கூட்டமாகவும் செல்வர். புதிய இடத்திற்குச் செல்லும்போது, அவ்விடத்தைப் பற்றி அறிந்த பின்னரே செல்வர். குறிப்பிட்ட நாளில் திரும்பவில்லையானால், பெருந்தனக்காரர் ஆளை அனுப்பித் தேடச் சொல்வார். இவர்கள் சேகரிக்கும் பொருட்களை ஒப்பந்தக்காரர்களுக்கு விற்கின்றனர். இவர்களுக்குத் தேவையான அரிசி, மட்பாண்டங்கள், கண்ணாடி, மூக்குத்தி முதலியவற்றையும் கோடரி, அரிவாள், தூண்டில் முதலியவற்றையும் வெளியிலிருந்தே விலைக்கு வாங்குகின்றனர்.

காட்டில் கிடைக்கும் வேர், கிழங்கு முதலியவற்றையும் ஆற்றில் கிடைக்கும் மீன், ஆமை முதலியவற்றையும் உணவாகக் கொள்கின்றனர். நீர்நிலைகளை நஞ்சாக்கி மீன் பிடிப்பதுண்டு. புல் அரிவாள், தோண்டு கழி ஆகியவை இவர்களுடைய இன்றியமையாக் கருவிகளாகும். நாய்களின் உதவியால் உடும்பு, கருங்குரங்கு, அணில் முதலியவற்றை வேட்டையாடிப் பிடிக்கிறார்கள். பொன்னம்பூ, புளிஞ்சிகா, குந்திரிகம், இஞ்சி, மிளகு, ஏலக்காய் முதலியவற்றை ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கின்றனர். நூரம் வள்ளிக்கிழங்கு, விதுவள்ளிக் கிழங்கு, காட்டுப் பலா முதலியவற்றைச் சொந்த நலனுக்குப் பயன்படுத்துகின்றனர். காட்டுப் பகுதியைச் சார்ந்திருக்கும் பழங்குடியினராயினும், வெளி உலகத்துடனும் தொடர்பு கொண்டுள்ளனர்.

பெற்றோர் வைத்துள்ள சொத்தை அனைவருக்கும் சரிசமமாகப் பங்கிட்டாலும், மூத்தமகனுக்கும் இளைய மகனுக்கும் சலுகை காட்டப்படுவதுண்டு.

இவர்கள் பெருந்தனக்காரரை 'முத்துக்கனி' எனக் கூறுகின்றனர். அவருக்கு இச்சமுதாயத்தில் மிக்க செல்வாக்குண்டு. குடியிருக்க இடம் பார்க்கும் போதும் காட்டுப் பொருட்களைச் சேகரிக்கச் செல்லும்போதும் அறிவுரை கூறுவது முத்துக்கனியின் கடமையாகும். அதோடு அவர் மலைப் பண்டார மக்களின் வழக்குகளையும் தீர்த்து வைப்பார். அவர் பூசாரியாகவும் பணியாற்றுவார்.

இவர்கள் சபரிமலைக்கு அருகில் வாழ்வதால் ஐயப்ப தெய்வத்தை வணங்குகின்றனர். இப்பழங்குடி மக்கள் மாமன், அத்தை ஆகியோருடைய பெண்களை மணம் முடிக்கிறார்கள். திருமணத்தின்போது தாலி கட்டுஞ் சடங்கு முடிந்தவுடன், மணமக்கள் திருநீற்றுத் தட்டை ஏந்தி வயது முதிர்ந்தோர்களை வணங்குவர். மணமக்களுக்குத் திருநீறு இட்டுப் பணம் கொடுப்பர். அதற்குக் 'கும்பிடு பணம்' என்று பெயர். மணமக்கள் மூன்றாம் நாள் பெண் வீட்டிற்குச் செல்வர்; பத்து நாள்கள் கழித்துத் திரும்புவர்.

மலைப் பண்டாரங்கள் இறந்தவர்களைப் புதைக்கிறார்கள். இவர்கள் 16 நாள்களுக்குத் துக்கம் கடைப்பிடிக்கின்றனர். 'பதினாறாதியந்தரம்' என்ற சடங்கு 16-ஆம் நாள் நடத்தப்படுகின்றது. அவ்விறுதிச் சடங்கு நடத்தப்படாதவரை இறந்தவருடைய ஆவி அக்குடிசையிலே தங்குமென நம்புகிறார்கள். இறந்தவரின் மனைவி 16-ஆம் நாளன்று தன் கழுத்திலுள்ள தாலியை நீக்கிவிடவேண்டும்.
சு.ச.

*மலைப்பாலைவனத் தீவு:* இது அமெரிக்க மாநிலமான மெயினுக்கு (Maine) அருகில் அட்லாண்டிக்குக் கடலோரத்தில் உள்ள ஒரு பெரிய தீவு. இத்தீவின் பரப்பு 260 ச.கி.மீ. மலைப்பாலைவனத் தீவை (Mount Desert Island), பிரஞ்சுமன் விரிகுடா (Frenchman Bay) அமெரிக்கக் கண்டத்திலிருந்து பிரிக்கிறது. பனிக்கட்டி ஊழிக்காலத்தில் ஏற்பட்ட நில மாற்றங்களின் விளைவாக இத்தீவு தோன்றியது. இதில் பல ஏரிகளும், நீர்வழிகளும், பாறைக் குன்றுகளும் உள்ளன. இதை கி.பி. 1604-இல் சாமுவல்-டி-சாம்பிளெய்ன் (Samuel de Champlain) என்ற பிரான்சு நாட்டு ஆய்வுப் பயணி, கண்டுபிடித்து, இதற்கு 'மலைப்பாலைவனம்' என்று பெயர் சூட்டினார். பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஏசுசங்க சமயப் பரப்புக்குழு, கி.பி.1613-இல் இங்கே ஒரு குடியேற்றத்தை அமைத்தது. பின்னர், கி.பி.1713-இல் பிரான்சுக்காரர்கள் இத்தீவுக்குரிய தம் உரிமைகளைக் கைவிட்டனர். ஆங்கிலேயர், கி.பி.1762-இல் இங்கு நிலையான ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தினர். மீன்பிடித்தல், மரங்கள் வெட்டுதல் ஆகிய தொழில்கள் நடைபெற்றன. பின்னர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இப்பகுதி மக்களின் உடல் நலத்துக்கு ஏற்ற புகலிடமாக (Resort) வளர்ச்சியுற்றது.

இத்தீவின் பெரும் பகுதியை உள்ளடக்கி 1919-ஆம் ஆண்டு, 41,642 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு பூங்கா அமைக்கப்பட்டது. அப்பூங்காவிற்கு அகேடிய தேசியப் பூங்கா (Acadia National Park) என்பது பெயர். இயற்கைக் காட்சிகள் பல நிறைந்த அப்பூங்கா காணத்தக்கது. அங்கு 1947-இல் ஏற்பட்ட ஒரு காட்டுத்தீ பெருகி மலைப்பாலைவனத்தீவின் கிழக்குப் பகுதியில் பல இடங்களை அழித்துவிட்டது.
தெ.பா.

*மலைபடுகடாம்:* பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் சங்க இலக்கியங்கள் ஆகும். பத்துப்பாட்டில் மலைபடுகடாம் பத்தாம் பாடலாகும். இது கூத்தராற்றுப்படை எனவும் வழங்கப்படும். இந் நெடும் பாடல் 583 அடிகளையுடையது; ஆசிரியப் பாவாலாகியது. இதன் ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் ஆவார். பாட்டுடைத் தலைவன் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்பவன். இப்பாடல் பாடாண் திணைக்குரிய ஆற்றுப்படைத் துறையைச் சேர்ந்ததாகும். தொல்காப்பியர் கூறும் அம்மை முதலான வனப்புகள் எட்டனுள் இச்செய்யுள் தோல் என்னும் வனப்பினைப் பெறுமென்பர் இளம்பூரணர். மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப்பித்தமையால் இப்பாட்டு மலைபடுகடாம் என்று பெயர் பெற்றதென்பர் நச்சினார்க்கினியர்.

கூத்தர்களாகிய சுற்றத்தின் தலைவனை நோக்கி நன்னனிடத்துப் பரிசில் பெற்றுவரும் கூத்தன் ஒருவன் 'நீவிரும் நன்னனை நாடிச் சென்றால் பல்வேறு பரிசில்களைப் பெறலாம்' என்று கூறுவதோடு, நன்னனின் மலை நாட்டிற்குச் செல்லும் வழி, வழியிடை அமைந்த முல்லை, குறிஞ்சி, மருத நிலங்களின் வளன், ஆண்டுறையும் மக்களின் விருந்தோம்பற் பண்பு, ஆற்றிடை எதிர்ப்படும் தீங்குகள், அவற்றிலிருந்து உய்யும் வழி, நவிர மலையின்கண் அமைந்த பழைய கோயிற்கண் காணத்தகும் காரியுண்டிக் கடவுள், வளமிக்க சேயாறு, செங்கண்மா எனப்படும் நன்னனது மூதூர்ச் சிறப்பு, நன்னனைக் காணும் முறை, அவனது வள்ளன்மை ஆகியவற்றையும் கூறி ஆற்றுப்படுத்துகிறான்.

**அரிய செய்திகள்:** முழவு, ஆகுளி, பாண்டில், தூம்பு, குழல், தட்டை, எல்லரி, பதலை ஆகிய பல்லியங்களைப் பைகளில் இட்டுக் கட்டித் தோளில் சுமந்து செல்வர் கூத்தர். அவர்கள் கையிற்கொண்ட யாழ் ஒன்பது நரம்புகளுடையது. கானவர் புளிச்சாற்றையும் மோரையும் உலைநீராக அமைத்து மூங்கில் நெற்கொண்டு சோறாக்குவர். நன்னனது மலையகத்தில் மலர்ந்துள்ள குவளை மலர்களில் தெய்வம் உறையும்; அம்மலையிடத்தே வரையர மகளிர் இருக்கையுமுண்டு; ஆதலின் அங்குப் பலநாள் தங்குதல் கூடாது. நவிரமலையில் இடையறாது மழைத்துளி

கள் வீழ்தலின் கூத்தர் இன்னியங்களை இசைக்க முயலுதல் தீதாகும். காட்டில் வழியறியாது மயங்கினால், இன்னியங்களை இசைக்கவேண்டும். உடனே காடுகாத்துறையும் கானவர் வந்தழைத்துச் சென்று விருந்தோம்புவர். கானவர் யானையாற்பட்ட விழுப்புண்ணை ஆற்றுவதற்குக் கொடிச்சியர் பாடுவர். யானையை அதன் பாகர் வடமொழியாற் பயிற்றுவர். வழிப்போகுநர், தாம் மீண்டு வருவதற்கும் பின் தொடர்வார் வழியறிதற்கும் ஏதுவாக ஆங்காங்கு ஊகம்புல்லை முடிந்து செல்வர். கற்பிற் சிறந்த மகளிர் அதற்கு அடையாளமாகக் கொடி பெறுதல் உண்டு.

கூத்தர் தம்மை எதிர்ப்பட்டோரிடம், தாம் கூறும் செய்திகளைத் தொகுத்துக் கூறிப் பின்பு விரித்துரைக்கும் முறை இவ்வாற்றுப்படைக்கு மட்டுமே உரியதென்பர் உ.வே. சாமிநாதையர். செல்லும் நெறியில் உள்ள நலந்தீங்குகளை இந்நூல் கூறுவது போன்றே சிலப்பதிகாரமும் கூறும். கு.வெ.பா.

**மலையமான்:** இவன் சோழ அரசர்களுள் ஒருவன். சிவபெருமானை வழிபட்டுச் சோணாட்டில் காவிரி ஆறு வருமாறு வேண்டிக்கொண்டவன். ஒரு சமயம் சோழநாடு நீரில்லாமல் பெரும் பஞ்சத்தில் வாடியது. அப்போது அந்நாட்டை ஆண்ட காந்தன் என்ற சோழ மன்னன் அகத்தியரை வேண்டி, அவர் தம் கமண்டலத்திலிருந்த காவிரி நதியைப் பூமியில் பெருகச் செய்து, சோழ நாட்டை வளப்படுத்தினான் என மணிமேகலை குறிப்பிடுகிறது. மலையமானும் காந்தன் என்பவனும் ஒருவனே என்பதற்குச் சான்றுகள் இல்லை. வி. அ.

**மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன்:** இவன் மலையமானாட்டுக் கோவலூரினன். அடைதற்கு அரிய வழியையுடைய முள்ளூர் மலையையுடையவன். சங்க காலத்தில் குறுநில மன்னர்களுள் ஒருவனாகக் கருதப்பட்டவன். சோழ மன்னனுக்குப்படைத் தலைவனாகப் பணியாற்றியதால் 'சோழிய ஏனாதி' என்னும் பட்டம் பெற்றவன். சோழன் மகனொருவன் தன் பகைவருக்கு அஞ்சி மலையமான் சோழிய ஏனாதியிடம் அடைக்கலம் கேட்டபோது அவனை ஆதரித்துத்தன் முள்ளூர் மலையில் வைத்துக் காப்பாற்றிப் பகைவரை வென்று அவனுக்காகப் புலிக் கொடியை நிலை நிறுத்தினான் என மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவர் புறநானூற்றில் பாடியுள்ளார். இவனைப் பற்றி அந்த ஒரே பாடல் மட்டும் காணப்படுகிறது. திருக்கண்ணன் என்னும் இவன்பெயருக்குத் திருக்கிள்ளி என்று ஒரு பாடபேதம் உளது. இவன் தன்னைத்தேடி வந்த இரவலர்களுக்கு வாரி வழங்குகின்ற வள்ளல்; புலி இலச்சினையையுடையவன். அசுரர்கள், தேவர்கள் போரின்போது சூரியனை மறைத்த அவுணர்களின் மாயையைப் போக்கித் திருமால் கதிரவனை வெளிக் கொணர்ந்த கதை இவனைப் பற்றி நப்பசலையார் பாடிய பாடலில் (புறம்.174) காணப்படுவது நோக்கத் தக்கது. கே. வி. தா.

**மலையமான் திருமுடிக்காரி:** இவன் கடையெழு வள்ளள்களுள் ஒருவன்; பெண்ணையாற்றின் தென்கரைப் பகுதியும், அதன் தென் பகுதியும் சேர்ந்த 'மலாடு' என்ற நாட்டைக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். பெண்ணையாற்றின் தென் மேற்கிலுள்ள முள்ளூர் என்னும் மலைப்பகுதி இவனுக்குச் சொந்தமாயிருந்தது. அதனை ஆரிய மன்னர் கைப்பற்றக் கருதியபோது அவர்களைத் தன் வேற்படை கொண்டு வென்றான் என்ற செய்தியை நற்றிணை கூறுகிறது.

இவன் தன் குதிரைக்கும் காரி என்ற பெயர் வைத்திருந்தான் என்னும் செய்தியைச் சிறுபாணாற்றுப்படை, புறநானூறு ஆகிய நூல்கள் தெரிவிக்கின்றன. இவனைக் காரி என்றும், மலையமான் என்றும், கோவற்கோமான் என்றும் கூறுவர் என்பதை அகநானூறு, குறுந்தொகை ஆகிய நூல்களால் அறியலாம்.

திருமுடிக்காரி புலவர்க்கும், பாணர்க்கும் களிறும், தேரும் பரிசாகத் தந்த பெருவள்ளலாவான். மூவேந்தர்பால் நட்புப் பூண்டு, அவர்கட்கு வேண்டும் உதவிகள் பல செய்து வந்தான். கபிலர்பால் பேரன்புடையவன். இவனது கோவலூரில் வாழ்ந்த அந்தணரிடத்தில்தான் கபிலர், பாரி மகளிரை அடைக்கலப் படுத்தியிருந்தார். புறநானூற்றில் இவனைக் கபிலர் மட்டுமன்றி மாறோக்கத்து நப்பசலையாரும் பாடியுள்ளார். வி. அ.

**மலையமான் மக்கள்:** மலையமான் திருமுடிக்காரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன். பெண்ணையாற்றின் அருகிலுள்ள மலைநாடாகிய மலாடு நாட்டரசன். அவன் தலைநகர் கோவலூர். தமிழ் நாட்டரசர் மூவர்க்கும் ஒவ்வொரு காலத்தில் போரில் உதவியவன். முள்ளூர் மலையை உடையவன். புலவர்களைப் புரப்பவன். ஓரி என்பவனுடன் போரிட்டவன். அவனை 'மலையன்' என்றும் குறிப்பிடுவர். அவன் குதிரைக்குக் 'காரி' என்பது பெயர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தன் பகைவனான மலையமானின் மக்களைப் பிடித்து வந்து யானையின் காலிற்கீழ் இட்டுக் கொல்ல முயன்றபோது கோவூர்கிழார் மலையமானின் பெருமைகளைக் கூறி அவனுடைய குழந்தைகளைக் கொல்

வது தகாது என்று தடுத்தார். 'கொல்லவரும் யானையைக் கண்டு மருண்டு இதுவரை அழுத அழுகையை மறந்து நிற்கும் குழந்தைகள் இவர்கள்; இந்த மன்றத்தினை மருண்டு நோக்குகின்றனர்; முன்பின் அறியாததொரு புதிய சூழ்நிலையைக் கண்டு வருந்தி நிற்கின்றனர். உன்னைப் போன்றே புலவர்களின் துன்பங்களைப் போக்கிய வள்ளலின் மக்கள் இவர்கள்' என்று கோவூர்கிழார் எடுத்துரைத்தார் (புறம்.46). அவர் உரையைக் கேட்ட கிள்ளிவளவன் மலையமான் மக்களைக் கொல்லாது விடுத்தான். மலையமான் மக்களின் பிற்கால வாழ்க்கை பற்றி ஒன்றும் தெரியவில்லை. மு.ச.

மலையரையன் பழங்குடியினர் கேரள மாநிலத்திலுள்ள கோட்டயம்,எர்ணாகுளம், பீர்மேடு முதலிய பகுதிகளில் வாழ்கின்றனர். அரையன் என்னும் சொல் அரசன் என்ற பொருளையும் குறிக்கும். இப்பகுதியில் வாழும் ஊராளிகள் இவர்களை 'வலியம்மா' என்றழைக்கின்றனர். 'வலியம்மா' என்றால் காட்டை ஆளுபவர்கள் என்பது பொருள். இவர்கள் நடுத்தர உயரமும் கறுத்த தோற்றமும் தடித்த புருவங்களும் உடையவர்கள். கேரளப் பழங்குடி மக்களிலேயே தொல் முதுகுடி மக்கள் இவர்கள் என்பது கூறப்படுகின்றது. இவர்கள் இருடிகள் வழியில் வந்தவர்கள் என்றும், அகத்திய முனிவரால் தமிழகத்திலிருந்து கேரளப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் என்றும் கதை உள்ளது.

மலையரையன் சமூகம் பின்வரும் ஆறு புறமணக் குழுக்களைக் கொண்டுள்ளது. அம்பலப் புழாத் தலைவனுக்கு வளையல் பரிசளித்தவர்களை 'வல இல்லோம்' (வல கால்வழி) என்றும், எண்ணெய் கொடுத்தவர்களை 'எண்ணெய் இல்லோம்' என்றும், முண்டு (துணி) கொடுத்தவர்களை 'முண்டு இல்லோம்' என்றும், மலர் கொடுத்தவர்களைப் 'பூதனி இல்லோம்' என்றும், குரங்கு உண்பவர்களைக் 'குரங்கன் இல்லோம்' என்றும், சடங்கு, திருவிழாக்களில் தலைமைப் பங்கு பெறுபவர்களைப் 'பந்திரிய இல்லோம்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

இவர்கள் குடிசைகளை மண்சுவரால் அமைத்துள்ளனர். அக்குடிசையை அமரவும், தூங்கவுமென இரண்டு அறைகளாகப் பகுத்துள்ளனர். இவர்கள் காட்டுப் பொருட்களைச் சேகரித்தும், மிளகு பயிரிட்டும் வாழ்வு நடத்துகின்றனர்.

கிராமப் பெருந்தனக்காரரைக் 'கூனி' என்றழைக்கின்றனர். கிராமப் பெருந்தனக்காரர் உயிருடன் இருக்கும் போதே தம் வாரிசை நியமித்து விடுவார். கிராமப் பெருந்தனக்காரரை நியமிக்கும் போது, வனத்துறை அலுவலரின் ஒப்புதலும் பெறப் படுகின்றது. பூசாரியாகவும் மருத்துவராகவும் பணியாற்றும் மந்திரவாதிக்கு இச் சமூகத்தில் முக்கிய பங்குண்டு.

புன்சார் இராசா காலத்தில் ஆண்களிடமிருந்து 'தலகரம்' (தலைக்கு வரி) என்ற வரியும், பெண்களிடமிருந்து 'முலகரம்' (கொங்கை வரி) என்ற வரியும் தண்டப்பட்டதற்கு எதிர்ப்பு ஏற்பட்டதன் விளைவாக, அவ்வரிகள் நிறுத்தப்பட்டன.

இவர்கள் ஒரு காலத்தில் ஆவியுலகக் கோட்பாட்டில் (Animism) நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர். முன்னோர் ஆவிகளைத் தொழுவதும் பூதங்களை வழிபடுவதும் இவர்களிடையே இருந்தன. இப்பொழுது துர்க்கை, பகவதி, சாசுதா போன்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். சிலர் சபரிமலைக்கும் பழனி கோயிலுக்கும் செல்வதுண்டு.

பெண்கள் பருவமடையும் போது 'பத்துமாடம்' என்ற தனிக்குடிசையில் ஏழு நாள்கள் தங்க வேண்டும். ஏழாம் நாளன்று அப்பெண் குளத்தில் குளிக்கும் போது அவள் உறவினர்கள் ஏழு வெற்றிலை, மிளகு இலைகளைக் குளத்தில் எறிந்து, அவற்றைச் சேகரிக்கச் சொல்லுவர். அவள் சேகரிக்கும் முறையிலிருந்து அவள் எதிர்காலத்தைக் கணிப்பர். மாதவிடாய்க் காலத்தும் மகவுஈனும் காலத்தும் பெண்கள் அக்குடிசையில் தங்க வேண்டும். அப்போது இப்பெண்களைக் 'கட்டிலாயி' என்பர்.

இப்பழங்குடியினரிடையே பருவமடைவதற்கு முன்பே தாலிகட்டுச் சடங்கொன்று நடக்கும். பருவமடைந்த பின்னரே திருமணம் நடைபெறும். முறைப் பெண்ணைத்தான் (தாய் மாமன்மகள் அல்லது அத்தை மகள்) திருமணம் செய்கிறார்கள். மாப்பிள்ளை பெண்ணுக்குத் தாலி கட்டியவுடன், இருவரும் ஒரே வாழை இலையில் உணவு உண்பர். பின்னர் இருவரும் பால் அருந்துவர். அப்போது மணமகள் தன் கையில் ஓர் அணிகலத்தையோ பாத்திரத்தையோ வைத்துக் கொண்டு, தன் தந்தையின் சொத்து எனப் பாராட்டிக் கொள்வதுண்டு. மணமகன் மணமகளிடமிருந்து அதைப் பறிப்பான். அத்துடன் திருமணச் சடங்கு முடிந்துவிடும்.

மணவிலக்கு இவர்களிடையே வழக்கிலுள்ளது. பெண்ணின்பெற்றோர் அல்லது கிராமப் பெருந்தனக்காரர் மணவிலக்குப் பற்றிக் கூறினாலே அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கணவன் மனைவியை மணவிலக்குச் செய்யவிரும்பின், அவன் திருமணச் செலவைக் கொடுக்க வேண்டும். மணவிலக்கான பெண்களும், விதவைகளும் மறுமணம் செய்து கொள்ளலாம்.

மகப்பேறு காலத்தில் முப்பது நாள்களுக்குத் தீட்டு மேற்கொள்கின்றனர். முறையாகத்திருமணம் நடந்து பிறக்கும் குழந்தைக்கு முதல் உணவு தந்தையாலோ தாய் மாமனாலோ ஊட்டப்பட வேண்டும். தாய்வழியைச் சார்ந்த முன்னோர் பெயர் குழந்தைக்கு வைக்கப்படும்.

மலையரையன்கள் இறந்தவரை அவர்கள் வாழும் இடத்திற்குத் தெற்கே புதைக்கின்றார்கள் பிணத்தைத் தூக்கிச் செல்லாதவர்கள் குழி தோண்ட வேண்டும். பிணத்தைப் புதைப்பதற்கு முன்பு, குழியில் இரண்டு வாழை இலைகளைப் பரப்புகிறார்கள். குழியை மூடுவதற்கு முன் சிறு உலோகத் தகட்டையும் குழியில் போடுகிறார்கள். தலை, மார்பு, கால் பகுதிகளில் மூன்று மேடைகளை எழுப்புகின்றனர். இறந்த இடத்தில் கல்லும் நடுகின்றனர். பதினாறு நாள்களுக்குத் துக்கம் மேற்கொள்கின்றனர். சிவராத்திரியன்று இறந்தவருக்குப் படைக்கின்றனர். அத்துடன் ஈமச்சடங்கு முடிவடைகின்றது. சு.ச.

**மலையனார்**: சங்க இலக்கியப் புலவருள் ஒருவர் மலையனார். நற்றிணையில் உள்ள 93 – ஆம் பாடல் இவருடைய பாடலாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

இவர் தம் பாடலில் மலைவளம் பலபடக் கூறி, 'மல்லற்றம்ம இம்மலைகெழு வெற்பு' எனக் கூறிய அருந்தொடர் மொழியையே தமக்குப் பெயராகப் பெற்றவர். இவர் இயற்பெயர் புலப்படவில்லை. இவர், மலையனூார் என்னும் ஊரினராகவும் இருக்கலாம். மலையம் என்பது தென்பொதியத்திற்கும் பெயராதலால் அப்பகுதியைச் சார்ந்தவராகவும் கருத இடமுண்டு. மலைபோன்ற தோளினர் எனவும் கருதலாம்.

குறிஞ்சித் திணையைச் சார்ந்த இவர்தம் பாடலில் வரும் இறைச்சிப் பொருள் மிக்க சுவையுடையதாகும். தலைவியை விரைந்து மணக்கக் கருதானாய்ப் பலகாலும் பகற்குறியே வேட்டு வருவானாகிய தலைவனுக்கு விரைந்துவந்து தலைவியை மணந்து போகுமாறு அறிவுறுத்தும் தோழியின் கூற்றாக அப்பாடல் அமைந்துள்ளது.

'தேனிறால்கள் எம்மருங்கும் தொங்கிக் கொண்டிருக்கப் பெரிதான பலவகைப் பழக்குலைகள் பழுத்துக் கிடக்க, வெள்ளிய அருவி வரையிடத்திருந்து மாலை போன்ற தோற்றத்தோடு இழிந்து வர, மலைத் தானிய வகைகள் எல்லாம் கொள்வாரற்றுத் தனித்து வருந்தி உதிர்ந்து கிடக்கும் இவ்வெற்பிடம் எந்நாளும் இத்தகைய வளப்பத்தை உடையதாகும் எனச் சொல்வர். அதனைப் பிரிந்து வேற்று நாட்டிற்குச் சென்றோர் இரங்கிப் புலம்புவார்கள்', என மலைநாட்டு வளம் கூறும் தோழி அம்மலை நாட்டுத் தலைவனை வாழ்த்தி, 'நாங்கள் செல்வோம், நீயும் செல்க' என்று கூறுகிறாள். மேலும், 'திருந்திய அணிகலன்களை அணிந்து, பணைத்த தோள்களையும், நுணுகிய இடையினையும், மெல்லிய சாயலையும் உடையவள் தலைவி. அவளது பூண் தாழ்ந்திலங்கும் மார்பகமானது நாணம் துன்புறுத்தலினாலே வருத்தமுற்ற பழங்கண்கொண்ட மாமையினையும் உடையதாகும். முழக்கும் குரலையுடைய மணமுரசின் ஒலியைக் கேட்டறிவதற்கு முன்பாக, இவளது உயிர் இவளுடலிலேயே இருக்கும்படியான ஒரு குறிப்புத் தோன்றக் காணப் பெறுதலும் இனி அரிதாகும்' எனத் தலைவியின் கற்புச் சிறப்பையும் தோழியின் கூற்றாக அறிவிக்கிறார் இப்புலவர்.

இவர் பாடியதாகக் கிடைத்துள்ளது இந்தச் செய்யுள் ஒன்று மட்டுமே. இவர் காலம் போன்ற பிற செய்திகளை அறிய இயலவில்லை. வே.இரா.மா.

**துணை நூல்:**

**கோவிந்தன்,கா.**, சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1954.

**மலையாளம்**: காண்க: திராவிட மொழிகள்:

**மலையாளிப் பழங்குடி** மக்கள் தமிழ் நாட்டில் சேலம், வட ஆர்க்காடு அம்பேத்கார், தென்ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் சேர்வராயன்மலை, கொல்லிமலை, சவ்வாது மலை, ஏலகிரிமலை, பச்சைமலை ஆகியவற்றில் வாழ்கின்றனர். மலையாளிகள் என்றவுடன் கேரள மாநிலத்தில் வாழும் மலையாளம் பேசும் மக்களே நினைவுக்கு வருவர். ஆனால், தமிழ் பேசும் இப்பழங்குடி மக்கள் மலையில் வாழ்வதால் 'மலையாளிகள்' எனப் பெயர் பெற்றனர். இம்மலையாளிப் பழங்குடியினர் ஒரே இனமானாலும் வெவ்வேறு இடங்களில் பரவி வாழ்வதால் பழக்கவழக்கங்கள், பேசும் மொழி முதலியவற்றால் ஓரளவு வேறுபடுகின்றனர். சேர்வராயன் மலையிலும் கல்வராயன் மலையிலும் வாழும் மலையாளிகளைக் 'கொல்லிமலையாளி' என்றும் பச்சைமலையில் வாழும் மலையாளிகளைப் 'பச்சை மலையாளி' என்றும் அழைக்கின்றனர். இவர்கள் 1971–ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணிப்புப்படி 1,59,426 பேர் உள்ளனர்.

மலையாளிகளை 'மலை வெள்ளாளர்' என்றும் 'கொங்கு வெள்ளாளர்' என்றும் 'காஞ்சி மண்டலத்தார்' என்றும் 'மலைக்காரன்' என்றும் 'மலைக் கவுண்டன்' என்றும் 'கவுண்டன்' என்றும் அழைக்கின்றனர். இப்பழங்குடிமக்கள் தங்கள் பெயருக்குப்



மலையாளிகள்

பின்னால் 'கவுண்டன்' என்னும் படடப் பெயரைச் சேர்த்துக் கொள்கின்றனர். இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து இம்மலைகளுக்குக் குடியேறியவர்கள். இவர்கள் கூறும் கதைப்படி மூன்று சகோதரர்கள் (பெரியண்ணன், நடுவண்ணன், சின்னண்ணன்) சாதியினின்றும் நீக்கப்பட்டனர். அவர்கள் கைக்கோளர், வேடர், பள்ளர் பெண்களை மணந்து கல்வராயன், பச்சைமலை, கொல்லி மலைப் பகுதிகளில் வாழ்ந்தனர். காஞ்சிபுரத்திலிருந்து இம்மலைப் பகுதியில் குடியேறிய வேளாளரே 'மலையாளிகள்' என்றும், வேளாளர் இனத்தைச் சார்ந்த மக்கள் இவர்களுக்கு முன்பே மலைப்பகுதியில் வாழ்ந்த வேடர்களுடன் கலந்து வாழ்ந்த கலப்பினமே 'மலையாளிகள்' என்றும் கதைகள் இவர்களிடையே நிலவுகின்றன.

மலையாளிகள் வட்டமான முகத்துடன் நல்ல உடற்கட்டு உடையவர்கள். மற்ற மக்களைப் போன்று வேட்டி, சட்டை அணிகின்றனர். சிலர் கோவணம் கட்டிக் கொண்டு கம்பளிபோர்த்துக் கொள்கிறார்கள். மலையாளிகள் கோவணத்தையும் அரைஞாண் கயிற்றையும் 'தோப்பை' என்பர். கொல்லிமலை மலையாளிகள் கோவணம்கட்டி, தலைப்பாகை அணிவர். ஆண்கள் தலையில் கட்டும் துணிக்குத் 'தலவாட்டி' என்றும், பெண்கள் தலையில் கட்டும் துணிக்கு 'முண்டு' என்றும் பெயர்.

பல்வேறு மலைகளில் இவர்கள் வாழ்ந்தாலும் குடிசையமைப்பு மட்டும் ஒரே மாதிரியாக உள்ளது. குடிசையின் நடுவில் கம்பை ஊன்றி, காட்டில் வளரும் ஒரு வகைப் புல்லால் கூரை வேய்கின்றனர். குடிசையைக் 'குடான்' எனக் குறிக்கின்றனர். குடிசையைச் சுற்றி ஆடு, மாடுகளை அடைத்து வைக்கின்றனர். தானியங்களைச் சேமித்து வைக்கும் இடத்தைப் 'பல்லா' எனக் குறிக்கின்றனர். சில மலைகளில் வாழும் மலையாளிகள் மேல் தட்டு வீடுகள், கீழ்த்தட்டு வீடுகள், நடுத்தட்டு வீடுகள், அடித்தட்டு வீடுகள் எனப் பல்வகைப் பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். ஒவ்வொரு குடிசையிலும் பரண்களும் உண்டு. குடிசையின் முன்பு இரண்டு திண்ணைகள் உண்டு. ஒவ்வொரு குடிசையிலும் வில், அம்பு, துப்பாக்கி, ஈட்டி, வெங்கலச் சாமான்கள், மண் கலங்கள், உலக்கை, உரல் போன்றவற்றைக் காணலாம். வாழுமிடங்களைக் 'காடு' என்றும் 'பாடி' என்றும் வழங்குகின்றனர். வரகுக் கஞ்சிதான் இவர்கள் முக்கிய உணவாகும்.

இப்பழங்குடி மக்கட்கு வேளாண்மை தான் முக்கிய

தொழிலாகும். வரகு, கம்பு, தினை, சாமை முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். உழுது பயிர் செய்யும் காட்டை 'உழவுக் காடு' என்றும் காட்டை அழித்து மண்வெட்டியால் கொத்துகின்ற காட்டைக் 'கொத்துக்காடு' என்றும் கூறுவர். இடம் மாறிப் பயிர் செய்யும் முறையையும்(Shifting Cultivation)பின்பற்றுகிறார்கள். வேடர் இனத்தைச் சார்ந்தவர்களாதலால், வேட்டையாடவும் செய்கின்றனர். துப்பாக்கியால் மான், கரடி, காட்டுப்பன்றி, முயல் முதலியவற்றை வேட்டையாடுகின்றனர். வேளாண்மையில் ஆண், பெண் இருபாலாரும் ஈடுபடுகின்றனர். சிலர் காப்பித் தோட்டங்களில் கூலியாள்களாகவும் பணியாற்றுகின்றனர். சிலர் காட்டுப் பொருட்களைச் சேகரித்தும் வாழ்க்கை நடத்துகின்றனர்.

சவ்வாது மலையில் வாழும் மலையாளிகள் தங்கள் வாழுமிடங்களை 'நாடு' எனக் குறிக்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் பத்துப் பதினைந்து ஊர்கள் அடங்கியிருக்கும். புங்கம்பட்டு நாடு, புதூர் நாடு, நெல்லிவாசல் நாடு எனப் பல பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். ஏறத்தாழ எல்லா மலையாளிக் குடியிருப்புகளிலும் பல ஊர்களைக் கொண்டதை 'நாடு' எனக் குறிப்பிடுகின்றனர். பச்சைமலை தொப்பர நாடு, வண்ணாடு, ஆத்திநாடு என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.

கல்வராயன் மலை மூன்று 'சாகீர்'களைக் கொண்டது. அவற்றைக் குறும்பக் கவுண்டர் சாகீர், அரியக் கவுண்டர் சாகீர், சடையக் கவுண்டர் சாகீர் என்று மக்கள் கூறுகின்றனர். அம்மூன்று சாகீர்களைக் கொண்டதைப் பெரிய கல்வராயன் எனக் குறிப்பிடுகின்றனர். கல்வராயன் மலையில் வாழும் மலையாளிகள் தங்களைக் 'காராளக் கவுண்டர்' என்றே குறிப்பிடுகின்றனர். சாகீர்கள் இம்மக்களை அடிமைகளாகவே வைத்திருந்தனர். இன்று அரசின் முயற்சியால் சாகீர்களின் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு உள்ளனர்.

ஒவ்வொரு ஊருக்கும் ஒரு பெருந்தனக்காரர் என்ற 'மூப்பன்' உள்ளார். அவருக்குத் துணையாக 'நாட்டான்' 'கவுண்டன்' 'சேவகன்' 'கங்காணி' இருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிற்கும் 'நாட்டுக் கவுண்டன்' தலைவராக உள்ளார். அவருக்குக் கீழ் 'சாதிக் கவுண்டன்', 'பட்டக்காரன்' போன்றவர்களும் உள்ளனர். சில இடங்களில் 'ஊர்க் கவுண்டன்' இவர்களிடையே நடைபெறும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு அளிப்பார். ஊர்க் கவுண்டனுக்குக் 'கங்காணி, துணையாகவிருப்பார். ஊர்க் கவுண்டனால் தீர்க்க முடியாத வழக்குகளைப் பட்டக்காரனிடம் முறையிடுவர். பல நாடுகளுக்குப் பெரிய பட்டக்காரன் தலைவராகவிருப்பார். இவர் ஒரு குட்டி இராசா போன்றவர். எல்லாச் சடங்குகளிலும் இவரே முக்கிய பங்கு வகிப்பார். கொல்லிமலை மலையாளிகளிடையே நடைபெறும் வழக்குகளை 'ஊர்க் கவுண்டன்' தீர்த்து வைப்பார். தீர்க்கமுடியாத வழக்குகளைப் 'பட்டக்காரன்' தீர்த்து வைப்பார். பட்டக்காரனுக்கு மணியக்காரன் உதவியாக இருப்பார். மணவிலக்குப் போன்றவற்றைப் பட்டக்காரனும் மணியக்காரனும் தீர்த்து வைப்பர்.

பொதுவாக மலையாளிகள் ஆவியுலகக் கோட்பாட்டில்(Animism) நம்பிக்கையுடையவர்கள். சிவன் விட்டுணுவை வழிபட்டாலும் கரியராமர், தருமராசா, அய்யனார், கருப்பன், காளி, பிடாரி, மாரி போன்ற சிறு தெய்வங்களையும் வழிபடுகின்றனர். கொல்லிமலை மலையாளிகள் கொங்கன், திருமஞ்சிப் பாட்டன், நாச்சியார் போன்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். பிடாரி, பிடாரன் போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர். கல்வராயன் மலையாளிகள் கரியராமன், சானவர்மன் போன்ற தெய்வங்களுக்குச் சித்திரை மாதத்தில் விழா எடுக்கின்றனர். மாரியம்மனுக்கு ஆடி மாதத்தில் கரகம் எடுத்துக்



கனிகள் சேகரித்தல்

கிடா, கோழி முதலியவற்றைப் பலியிடுகின்றனர். 'பூட்டை மாரியம்மன்' திருவிழா ஆவணி மாதத்தில் கொண்டாடுகின்றனர். ஊர்த் தெய்வங்களாகிய தீர்த்தகரியன், பூவாரி, மாரியம்மன், திரௌபதி

போன்றவர்களையும் பயபக்தியுடன் வழிபடுகின்றனர். ஆடி மாதத்தில் கொடிய நோய்கள் வாராமல் இருக்க, கொடிய தெய்வங்களுக்கு ஆடு பலி கொடுக்கின்றனர். கொல்லிமலை மலையாளிகள் ஆனி மாதத்தில் 'கவுண்டன் சிறப்பு' என்ற பெரிய விழாக் கொண்டாடுகின்றனர். இவர்கள் தீபாவளி, பொங்கல் முதலியவற்றையும் கொண்டாடுகின்றனர். பொங்கலுக்குப் பின் 'எருது ஆட்டம்' ஆடுகின்றனர். முன்னோர் வழிபாட்டையும் பலியிடுதலையும் எல்லாச் சடங்குகளிலும் காணலாம்.

மலையாளிகளுள் சிலர் பச்சை குத்திக் கொள் கிறார்கள். பேய், பிசாசு, மந்திரம் முதலியவற்றிலும் நம்பிக்கை உண்டு. மழை வேண்டின் ஒருவர் மீது மற்றொருவர் சாணி உருண்டை எறிவர். பிள்ளை யாரைச் சாணத்தில் மூடி வைப்பர். மழை வந்தால் பிள்ளையாரைத் தோண்டி எடுப்பர். நோய்கள் வந்தால் தெய்வத்திற்குச் சிவப்புச் சேவலைச் சுற்றி விடுவதுண்டு. சேர்வராயன் மலையிலுள்ளவர்கள் கண்ணகிக்குக் குரவைக் கூத்து ஆடுகின்றனர்.

இப்பழங்குடி மக்கள் பேசுவது தமிழின் கிளை மொழியாகும் (Dialect of Tamil). மலையாளிகள் பேசுவது தமிழேயானாலும் வாழுமிடத்திற்கேற்ப அவர்கள் பேச்சு மாறுபடுகின்றது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பெண்கள் பருவமடைந்தவுடன் தனிக் குடிசை யில் ஏழு அல்லது ஒன்பது நாள்கள் தங்கியிருக்க வேண்டும். அந்நாள்களில் அப்பெண் ஆண்களைப் பார்க்கக்கூடாது. வெந்நீரில் மஞ்சளைக் கரைத்துத் தினமும் குளிக்க வேண்டும். கடைசி நாளன்று குடிசைக்குத் தீ வைத்து, அப்பெண்ணைக் குளிக்கச் செய்து வீட்டிற்கு அழைத்து வருவர். வீட்டிற்கு வெளித்திண்ணையில் மூன்று நாள்கள் தங்க வேண்டும். பின் புத்தாடை அணிவித்து வீட்டினுள் அழைத்துச் செல்வர். பின்னர் விருந்தும் நடனமும் நடைபெறும். மாதவிடாய்ப் பெண்களும் நான்கு நாள்கள் வெளியே தங்க வேண்டும்.

இவர்கள் திருமணத்தில் பரிசப் பணமும் உண்டு. மாமனார் வீட்டில் வேலை செய்து திருமணம் செய் கின்ற வழக்கமும் (Marriage by service) இவர் களிடையே உண்டு. ஊர்க்கவுண்டன் முன்னிலையில் மணஉறுதி நிகழ்ச்சி நடைபெறும். மணமக்கள் வெவ் வேறு கிராமத்தைச் சார்ந்தவர்களாக இருப்பின், பட்டக்காரனின் அனுமதி பெற்றேயாகவேண்டும். கொல்லிமலைப் பகுதியில் மாப்பிள்ளை மணமகள் கழுத்தில் தாலியைப் பொருத்த, ஊர்க் கவுண்டன் அதை முடிச்சுப் போடுவார். மற்றவிடங்களில் மாப் பிள்ளையே மணப்பெண்ணுக்குத் தாலி கட்டுகிறார். கல்வராயன் மலையாளிகளிடையே மாப்பிள்ளை வீட்டில் திருமணம் நடைபெறுகிறது. கங்காணி மூலம் பெண் வீட்டாரின் இசைவு பெற்ற பின்பு பரிசம் போடுகிறார்கள். துப்பாக்கி வெடி முழங்க மாப்பிள்ளை மணமகள் கழுத்தில் தாலி கட்டுகிறார். மணமக்களை மூன்று முறை அழைத்தல் ('மறுமுச்சி' 'மல்லக்கு', 'திரும்பவும் அழைத்தல்')இவர்களிடையே வழக்கமாக உள்ளது. ஏற்காடு மலையாளிகளிடையே திருமணப் பழக்க வழக்கங்கள் மாறுபடுகின்றன. மணமக்களுக்கு நெற்றியில் சந்தனமிட்டுத் தரையில் தானியங்களைப் பரப்பிக் கம்பளத்தை விரித்து மண மக்களை அமரச் செய்கின்றனர். இச்சடங்கு செய்த பின்னரே மறுநாள் தாலி கட்டும் சடங்கு நடைபெறு கிறது. மணமகன் மணமகள் கழுத்தில் தெய்வத்திற்கு எதிரே அமர்ந்து தாலி கட்டுகிறான். மணமக்களின் கால்களை மஞ்சள் நீரால் கழுவுவர். மணமக்கள் மூன்று முறை பந்தலைச் சுற்றி வந்து பெரியோர்கள் காலில் விழுந்து வாழ்த்துப் பெறுவர்.மூன்றாம் நாள் மணமாலைகளைக் கிணற்றில் போடுவர். விதவை மறுமணமும் இவர்களிடையே நடைபெறுகிறது. விவாகரத்தும் இவர்களிடையே நடைபெறுகிறது. வெளியாருடன் தொடர்பு கொண்டால் இனத்தை விட்டே நீக்கிவிடுவர். ஒரு பெண் கணவனை மண விலக்குச் செய்ய விரும்பின், மணக்கவிருக்கும் இரண்டாம் கணவன் முதல் கணவனுக்கு முன்பு கொடுத்த பரிசப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இதற்குப் 'பரிசம் திருப்பிக் கொடுத்தல்' என்று பெயர்.

இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். கருவுற்று இறந்தவர்களையும் கொடிய நோயால் இறந்தவர்களையும் எரிக்கின்றனர். இறக்குந்தறு வாயில் வாயில்பாலை ஊற்றுகின்றனர். பிணத்தைக் குளிப்பாட்டிப் புதுத்துணி போர்த்திப் பாடை கட்டித் தூக்கிச்செல்கிறார்கள். கணவன் இறந்தால் மனைவி தாலியை நீக்கிவிட வேண்டும். இறந்தவர் பயன் படுத்திய அனைத்துப் பொருட்களையும் பிணத்துடன் வைத்துப் புதைக்கின்றனர். பிணத்தைப் புதைக்கும் போதும் துப்பாக்கிவெடி முழக்கப்படுகின்றது. சில இடங்களில் மூன்றாவது நாளும், மற்ற இடங்களில் ஒரு மாதம் கழித்தும் இறுதிக் கடன்கள் செய்யப் படுகின்றன. அன்று இறந்தவர் பயன்படுத்திய பொருட்களை வைத்து முன்னோரை வழிபட்டு அழுது புலம்புவர். வந்த உறவினர்கட்கு அன்று விருந்து நடைபெறும். சு.ச.

**மலைரெட்டி** என்பவர்கள் பழங்குடி மக்கள்; ஆந்திர மாநிலத்திலுள்ள கிழக்கு, மேற்குக் கோதா

வரி மாவட்டத்திலும், விசாகப்பட்டினப் பகுதியிலும் வாழ்கின்றனர். மலைரெட்டியைக் கொண்டாரெட்டி (Konda Reddi) என்றும் கூறுவர். இப்பகுதியில் கோயர் என்னும் பழங்குடி மக்களும் வாழ்கின்றனர். மலைரெட்டிப்பழங்குடியினர் உயரமாகவும் நல்ல உடற்கட்டுடனும் திகழ்கின்றனர். ஆண்கள் பெரும் பாலும் கோவணம் கட்டித் தலைப்பாகை அணிகின்ற னர். பெண்கள் சேலைகட்டி மார்பை மறைத்துக் கொள்கின்றனர். ஆண்கள் காதில் கடுக்கனும், பெண் கள் காதில் காதணியும் கையில் பித்தளைமோதிரமும் அணிகிறார்கள். இளந்தலைமுறையினர் மற்ற சம வெளி மக்களைப் போன்று ஆடை அணிகின்றனர். இவர்கள் தெலுங்குக் கிளைமொழி(Dialect of Telugu) ஒன்றினைப் பேசுகின்றனர்.

இவர்கள் வாழும் இடங்களில் பத்துப்பதினைந்து வீடுகள் இருக்கும். அவற்றை அவர்கள் பேச்சில் 'வீதி' என்று குறிப்பிடுவர். வீட்டைக் 'குத்செலு' என்று குறிப்பர். இவர்கள் மூங்கிலைக் கொண்டு வீடமைத் துக் கூரை வேய்ந்துள்ளனர்.



மலைரெட்டி

மலைரெட்டிகள் இடம் விட்டு இடம் பெயரும் (Podu Cultivation) முறையில் வேளாண்மை செய் கின்றனர். ஏறத்தாழ எல்லாப் பழங்குடியினர்க்கும் நிலமும் கால்நடையும் உள்ளன. இவர்கள் உழுது பயிர் செய்கின்றனர். காட்டுப் பொருட்களைச் சேக ரித்தும் வாழ்கின்றனர். வேட்டைக்குக் கூட்டமாகச் சென்று, இரு பிரிவினராகப் பிரிந்து ஒரு பிரிவினர் விலங்குகளைப் பறையடித்து விரட்ட, மற்றைப்பிரிவி னர் வேட்டையாடுவர். வேட்டையில் பெற்றதனை அனைவரும் பங்கிட்டுக் கொள்வர். வேட்டையாடிய வருக்குத் தலையும் காலும் சொந்தமாகும். பெண்கள் அவற்றை உண்ணக்கூடாது. மனைவி கருவுற்றிருந் தால், கணவனும் அவற்றை உண்ணக்கூடாது.

இவர்கள் கேழ்வரகுக்கூழ், தினைச்சோறு போன்ற வற்றை உண்கின்றனர். காட்டிற்குள் செல்லும் போது வில், அம்புடன் செல்வர். தோண்டுகழி, கத்தி இரண்டையும் எப்பொழுதும் வைத்திருப்பர். இவர்கள் மாட்டிறைச்சியை உண்பதில்லை.

இவர்களிடையே பாண்டவரெட்டி, இராச ரெட்டி, சூரிய வமிச ரெட்டி என்ற மூன்று குலங்கள் (Clans) உள்ளன. இப்பிரிவில் உயர்ந்தவர்கள் மலை உச்சியில் வாழ்கின்றனர். அவர்கள் துணிமணி,உப்புப் போன்றவற்றை வாங்குவதற்காகச் சமவெளிப் பகுதிக்கு வருவர்.

இவர்களிடையே நாட்டாண்மைக்காரர் உள் ளார். அப்பதவி பரம்பரைபரம்பரையாக வரும். இவர் சமூகத்தில் நடைபெறும் சண்டை சச்சரவுகளைத் தீர்த்துத் தீர்ப்பு வழங்குவார்.

இவர்கள் முத்தியாலம்மா, உண்ணாமலையம்மா, பாண்டவர்கள் ஆகியோரை வழிபடுகின்றனர். பாபி கொண்டா எனுமிடத்தில் ஏழு ஆண்டுக்கொரு முறை பாண்டவர்களை வழிபடுகின்றனர். அவ்வழி பாட்டின்போது பன்றியைப் பலியிடுவர். ஆடுமாடு களை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லும்போது. தொத்திகங்கா என்னும் தெய்வத்தை வழிபடுகின்ற னர். அம்மைநோய் கண்டால், தேசகங்கா என்ற தெய்வத்தை வழிபடுகின்றனர். கோயர் பழங்குடி மக்களைப் போன்று ஒவ்வொரு அறுவடையின் போதும் விழாக் கொண்டாடுகின்றனர். பாட்டும் நடனமும் இவர்கள் திருவிழாவில் முக்கிய இடம் பெறுகின்றன. வேலை செய்யும் காலத்தும் பாட்டுப் பாடிக் கொண்டே வேலை செய்வர். இவர்கள் கதை கள் கூறுவதிலும் கேட்பதிலும் மிகுந்த விருப்பமுடை யவர்கள்.

பெண்கள் பருவமடைந்தவுடன் தனிக்குடிசையில் முப்பது நாள்கள் தங்க வேண்டும். முப்பதாம் நாள் குளித்து விட்டு வீடு திரும்ப வேண்டும். மாத விடாய்க் காலத்திலும் தனிக்குடிசையில் தங்கவேண் டும். பருவமடைந்த பின்னர்த் திருமணம் செய்கின்ற னர். பருவமடைவதற்கு முன்பு மணமக்களின் பெற்



சடங்கு நிகழ்ச்சி

றோர்கள் மணஉறுதி செய்வர். இவர்களிடையே பெற்றோர்கள் செய்விக்கும் மணமுறை (Marriage by negotiation), கடத்தல் திருமண முறை (Marriage by capture), உடன்போக்குத் திருமண முறை (Marriage by elopement) ஆகியவை உண்டு. திருமணத்தில் தாலி கட்டுகின்றனர். கடத்தல் திருமண முறை பெரும் வழக்கிலுள்ளது. மணவிலக்கு உண்டு. மனைவியை இழந்தவர்களும் விதவைகளும் சேர்ந்து வாழ்வதற்குத் தடையில்லை. ஒருதார முறையைப் பின்பற்றினாலும் பலதார மணமுறையும் இவர்களிடையே உண்டு. கோயர் பழங்குடிகள் ஆடுகின்ற எருமைநடனமும் இவர்கள் திருமணங்களில் இடம் பெறுகின்றது. குழந்தை பிறந்த பதினைந்தாம் நாள் குழந்தைக்குப் பெயர் சூட்டுகின்றனர். குழந்தை பிறந்த நாளையே குழந்தைக்குப் பெயராகச் சூட்டுகின்றனர் (ஆதிரெட்டி, ஆதியம்மா). இப்பழங்குடி மக்களிடையே குடும்பப் பெயரும் உண்டு. இவர்களிடம் இறந்தவர்களை எரிக்கும் பழக்கம் உள்ளது. இறந்த மூன்றாம் நாள் ஒரு சடங்கும், ஓராண்டு கழித்து மற்றொரு சடங்கும் நடத்துகின்றனர்.

சு.ச.

மலை வேடன்: மலைவேடன் பழங்குடி மக்கள், கேரள மாநிலத்திலுள்ள கோட்டயம், கொல்லம் மாவட்டத்திலும், தமிழகத்தில் செங்கோட்டைப் பகுதியிலும், தென்காசியையொட்டிய மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்களை 'வேட்டுவன்' என்றும் 'வேடன்' என்றும் 'கான வேடன்' என்றும் கூறுவர். இவர்கள் பெயரை நோக்கும்போது, வேட்டையாடு தலைத் தொழிலாகக் கொண்டவர்கள் எனத் தெரிகிறது. இவர்கள் மலையில் வாழ்வதால் மலைவேடன் எனக் குறிப்பிடப்படுகின்றனர். நடுத்தர உயரமும் நீண்ட மண்டையும் கறுத்த நிறமும் சுருண்ட முடியும் உடையவர்கள். மற்ற பழங்குடி மக்களினின்றும் வேறுபடுத்திக் காட்ட இவர்கள் பற்களைச் செதுக்கிக் கொள்கின்றனர். அவ்வழக்கம் இன்று, சிறிது சிறிதாக மறைந்து வருகின்றது. ஆணுக்கு 18 வயதிலும் பெண்ணுக்குப் 10 வயதிலும் பற்களைச் செதுக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இத்தகைய வழக்கம் ஆனைமலைக் காடரிடையே இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு காலத்தில் இவர்கள் மரவுரி தரித்து வாழ்ந்தனர் எனக் கூறுவர். இவர்கள் தமிழும் மலையாளமும் கலந்த கிளைமொழி ஒன்றினைப் பேசுகின்றனர்.

இவர்களிடையே மலைவேடன், வேட்டுவன் என்ற இரு பிரிவுண்டு. வேட்டுவர்கள் சமூக – பொருளாதாரத்தில் முன்னேறிய பிரிவினராவர். இதைத் தவிர எலியை உண்பவர்களை 'எலி சாதி வேடன்' என்றும்,

முதலையை உண்பவர்களைச் 'சேகன்னி வேடன்' என்றும் கூறுகின்றனர்.

இவர்கள் காட்டுப் பொருட்களைச் சேகரித்தும் காப்பித் தோட்டங்களில் கூலியாளாகப் பணியாற்றியும் வாழ்கின்றனர். ஆவியுலகக் கோட்பாட்டில் (Animism) நம்பிக்கையுடையவர்கள். முன்னோர் வழிபாடு இவர்களிடையே வழக்கிலுள்ளது. இந்துத் தெய்வங்களையும் வழிபடுகின்றனர். மந்திரம், பில்லி சூனியம் முதலியவற்றிலும் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள்.

இப்பழங்குடி மக்களிடையே திருமணத்திற்குமுன் மணமகன் மாமனார் வீட்டில் பணி செய்து திருமணம் செய்தலும், கடத்தித் திருமணம் செய்தலும் (Marriage by capture), விலை கொடுத்துத் திருமணம் செய்தலும் (Marriage by purchase) வழக்கமாக இருந்தன. திருமணம் மணப் பெண்ணின் வீட்டில் நடைபெறும். மாப்பிள்ளையே தாலி கட்டுவார். சில இடங்களில் மாப்பிள்ளையின் சகோதரியும் தாலி கட்டுவதுண்டு. மணப்பெண் நெய்த பாயில் அமர்ந்து மணமக்கள் விருந்து உண்பர். இதனைக் 'கண்டு கஞ்சிகுடி' என்பர். கத்தியும் கூடையும் பரிசப் பொருட்களாக அளிக்கின்றனர். குழந்தைத் திருமணமும் (Child Marriage) பலமனைவி மணமும் (Polygyny) இவர்களிடையே உண்டு. ஆனால், ஒவ்வொரு மனைவியும் தனித்தனிக் குடிசையில் வாழ வேண்டும். மணவிலக்கு இவர்களிடையே பொதுவாக நடைபெறுகின்றது. விதவைகளும் மனைவியை இழந்தவர்களும் மறுமணம் செய்து கொள்ளலாம்.

பருவமடைந்த பெண்கள் தனிக்குடிசையில் 4-நாள்கள் தங்க வேண்டும். பின்னர், 4-ஆம் நாள் அப்பெண்ணின் மீது சாணித் தண்ணீர் தெளித்து வீட்டிற்கு அழைத்து வருவர். மாதவிடாய் ஆன பெண்கள் 5-நாள்கள் தனியே இருக்க வேண்டும். கருவுயிர்த்த பெண்களை ஒரு மாத காலம் தீட்டுடையவர்களாகக் கருதுகின்றனர்.

கருத்தரித்த பெண்களுக்கு ஏழாம் மாதம் 'புளி குடி சடங்கு' நடத்தப்படுகின்றது. அப்பெண்ணின் விரலில் மந்திரவாதி செம்பு மோதிரம் ஒன்றை அணிவிப்பார். பின் அவள் ஏழு உருண்டை புளிச் சோறும், ஏழு கரண்டி அளவு புளிச்சாறும் அருந்த வேண்டும். பின்பு அவள் தலையில் ஒரு குடம் தண்ணீரைக் கணவன் ஊற்றுவான். கெட்ட ஆவியினின்றும் தடுப்பதற்காக 9-ஆம் மாதம் மனிதனைப் போன்ற உருவம் செய்து குடிசை முன் வைப்பர். குழந்தை பிறந்தவுடன் தேங்காய் உடைத்து வழிபடுவர். குழந்தை பிறந்த 12-ஆம் நாள் தந்தையும் பெருந்தனக்காரரும் இணைந்து குழந்தைக்குப்பெயர் சூட்டுவர்.

இப்பழங்குடி மக்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். இறந்தவுடன் வாய்க்கரிசி போடுகின்றனர். பின்னர்த்தலையையும் உடலையும் புதுத் துணியால் போர்த்துகின்றனர். வெற்றிலைப் பெட்டி, இளநீர், கஞ்சி முதலியவற்றைப் புதைகுழி மீது வைக்கின்றனர். இறந்தவர் ஆவி, அவற்றைப் பயன்படுத்துவதாக நம்புகின்றனர். இவர்கள் 16 நாள்கள் தீட்டு மேற்கொள்கின்றனர். தீட்டுக் காலத்தில் வேட்டையாடச் செல்வதும் காட்டிற்குச் செல்வதும் தவிர்க்கப்படுகின்றன. சு.ச.

மழநாடு: மழநாடு என்பது மழவர்க்குரிய நாடு என்று பொருள்படும். திருச்சி மாவட்டத்தில் காவிரியாற்றின் வடகரையில் திருச்சிராப்பள்ளி, இலால் குடி, முசிறி வட்டங்கள் அடங்கிய பகுதி முற்காலச் சோழர் காலத்தில் மழநாடு என்று பெயர் பெற்றுவிளங்கியது. காவிரியின் வடகரையில் அமைந்திருந்த காரணத்தால் வடகரை மழநாடு என்றே கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின்றது. சங்க காலத்தில் இந்நாட்டுப் பகுதி மழபுலம் எனப்பட்டது.

கொல்லிமலை அடிவாரம் வரையிலும் இந்நாடு முன்பு பரவியிருந்தது. எனவே, அப்பகுதி கொல்லி மழநாடு என்று சொல்லப்பட்டது. சுந்தர சோழன் காலத்துத் தலைவனொருவன் கொல்லி மழவன் ஒற்றியூரன் பிரதிகண்ட வன்மன் என்று வழங்கப்பட்டான். கண்டராதித்த சோழன் மனைவி செம்பியன் மாதேவியின் தந்தை கொல்லிமழவரையர் ஆவார்.

மழநாடு பல உட்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. செம்புறை கண்டம், கலார்க் கூற்றம் கீழ்கூறு, கலார்க்கூற்றம் மேல்கூறு, மீமலை நாடு, பாய்ச்சில் கூற்றம் கீழ்ப்பிலாறு, பாய்ச்சில் கூற்றம் மேல்பிலாறு, வெண்கோன்குடிக் கண்டம், வடவழிநாடு, வெள்ளையூர்க் கண்டம், திருப்பிடவூர் நாடு, பிரமபுரி நல்லூர்க் கண்டம் என்பவை மழநாட்டின் உட்பகுதிகளாகும். திருப்பாச்சிலாச்சிராமம் இந்நாட்டின் தலைநகராகச் சிலகாலம் விளங்கியது.

இராசராசசோழன் காலத்தே புதிய வளநாடுகள் பல அமைக்கப்பட்டபோது மழநாடு இராசாசிரய வளநாடு என்ற பெயர் பெற்றது. இராசாசிரயன் என்பது இராசராசனின் பட்டப்பெயர்களுள் ஒன்று. பின்னர் இவற்றின் பெரும்பகுதி இராசராச வளநாடு என்று பெயர் மாற்றப் பட்டது. அப்போது மழநாடான இராசராச வளநாடு, கீழ்முறி என்றும் மேல்முறி என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது.

சிலர், காவிரியின் தென்கரையிலும் கரைபோட்டான் ஆற்றுக்கும் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியிலும் மழநாடு பரவியிருந்தது என்பர். ஆனால் கல்வெட்டுகளில் அவ்வாறு குறிக்கப்படவில்லை. விசயநகர ஆட்சிக் காலத்தில் இம்மழநாடு தன் பழம் பெயரை இழந்து மழைநாடு என்று வழங்கப்படுவதாயிற்று. திருச்சிராப்பள்ளி உசாவடிக்குச் சேர்ந்த மழநாடு என்பது ஒரு கல்வெட்டுத் தொடர்.

சோழர்காலத்து அரசியல் தலைவன் ஒருவன் மழநாட்டுவேள் என்று கல்வெட்டுகளில் குறிக்குப் படுகின்றான். சில மழநாட்டுத் தலைவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பல கொடைகளை ஈந்துள்ளனர்.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் தம் சொல்லதிகார நூற்பா உரையொன்றில் 'மங்கலம் என்பதோர் ஊருண்டு போலும் மழநாட்டுள்' எனக் குறிக்கின்றார். செ.இரா.

**மழவர்**: மழவர் எனப்படும் வீர மரபினர் சங்க காலத்துத் தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர். சங்க இலக்கியங்களில் அவர்களைப் பற்றிய பல குறிப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன. பெரும் பேராற்றல் கொண்டவர்களாகவும், அஞ்சத்தக்க உருவம் கொண்டவர்களாகவும் இவர்கள் பல இடங்களில் குறிக்கப்பெறுகின்றனர்.

கொல்லிமலை போன்ற பல குறிஞ்சி நிலப் பகுதிகளில் மட்டுமே முதலில் வாழ்ந்த ஆற்றல்மிகு இவ்வீர மழவர்கள் பின்னர்ப் படிப் படியாக முல்லை, மருத நில வாழ்க்கையை மேற்கொண்டு வாழலாயினர். ஆநிரை கவர்தலாகிய வெட்சித்திணை வாழ்க்கையைச் சிலர் மேற்கொண்டனர். மழவர் வீரர்கள் பலர், பேரரசர் சிற்றரசர்களின் படைகளில் சேர்ந்து போர்க்காலங்களில் தம் பேராற்றலைக் காட்டினர். பதிற்றுப்பத்துச் சேரமன்னர்களுள் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும், பல்யானைச் செல்கெழு குட்டுவனும் மழவர் மெய்ம்மறை எனப்பட்டனர். தகடூர் அதியமானும், கொல்லியாண்ட வல்வில் ஓரியும் மழவர் பெருமகன் என்று புகழப்பெற்றனர்.

மழவர்கள் வீரக்கழல் அணிந்தவர்கள். பொற்பூச்சூடி வீரமத்தளம் வாசித்துப் பூந்தொடை விழாக் கொண்டாடி ஊன் புழுக்கையும், சுட்ட கொழுப்பு ஆவையும் உண்பார்கள். இவர்கள் நெடுவேல், குறும்படை, வயவாள், கூர்ம்படை, வெள்வேல் போன்ற பற்பல போர்க்கருவிகளை உடையவர்கள்; அவற்றில் நல்ல பயிற்சியும் உடையவர்கள்; வழுவில் வன்கையும், கடுந்திறனும், பெருந்தோளும் உடையவர்கள். இவர்கள் கடுங்கண் மழவர், செங்கண்மழவர், வன்கண் மழவர், உறுகண் மழவர் என்று பலவாறு குறிக்கப்படுவதால் இவர்கள் தோற்றத்தையும் தன்மையையும் ஒருவாறு அறியலாம். இவர்கள் யானைகளையும் குதிரைகளையும் பழக்கிப் பயன் படுத்தியமைக்குக் குறிப்புகள் உள்ளன.

இவர்கள் வாழ்ந்த பகுதி சங்க காலத்தே மழபுலம் எனப்பட்டது. வேங்கட மலைப் பகுதியை ஆட்சிபுரிந்த புல்லி மழபுலத்தை வென்று அடிமைப் படுத்தியதாகக் கூறப்படுகிறது. மழவர் வாழ்ந்த கொங்கு நாட்டுப் பகுதி மழகொங்கம் எனப்பட்டது. தேவாரத்திலும் பெரியபுராணத்திலும் அவ்வூர் சிறப்பிக்கப்படுகிறது. மழபாடி மழவர் எனக் கல்வெட்டில் காணப்படுகிறது. தஞ்சைக் கல்வெட்டில் மழபாடித் தலைவர்கள் குறிக்கப்பெறுகின்றனர். பிற்காலத்தில் இவ்வூர் மழுவாடி, மலவாடி என்று குறிக்கப்பட்டது. மழவ நல்லூர் என்பதும் ஓரூர்க்குப் பெயராகும். சிலர் மழபாடி என்றே பெயர் வைத்துக் கொண்டனர்.

இம்மழவர் சோழப் பேரரசர்கட்கு மகட்கொடைக்கு உரியவராகக் குறிக்கப்பெறுகின்றனர். நச்சினார்க்கினியர் தம் மதுரைக் காஞ்சி உரையுள் மழவர் என்பதற்கு ஒரு வகை வீரர் என்று பொருள் எழுதியுள்ளார்.

அரியலூர்ப் பாளையக்காரர்கள் மழவராயர் எனப்பட்டனர். ஒரு மரபைக் குறித்த இப்பெயர், பேரரசர்கள் தம் உயர் அரசியல் தலைவர்கட்கு வழங்கிய பட்டப் பெயராக மாறியது. பல தலைவர்கள் மழவராயர் என்று பட்டப்பெயர் கொண்டிருந்தமையைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. செ.இரா.

**மள்ளனார்** கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். மள்ளர் என்பது வீரரைக் குறிக்கும் சொல்லாதலால் இவர் படைவீரராக இருந்திருத்தல் கூடும். இப்பெயரோடு சில அடைமொழிகளைப் பெற்றுள்ள மள்ளனார் என்னும் வேறு இருவர் காணப்படுகின்றனர். மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், கடுவன் மள்ளனார் என்னும் அவ்விருவரும் பாடியனவாகப் பத்தினுக்கு மேற்பட்ட பாடல்கள் சங்க இலக்கியங்களுள் உள்ளன.

இம்மள்ளனார் அவ்விருவரினின்றும் வேறானவரென்று அறிய முடிகின்றது. இவர் இயற்றியனவாக நற்றிணையின் 204-ஆம் பாடலும் குறுந்தொகையுள் 72 – ஆம் பாடலும் காணப்படுகின்றன. அவ்விரண்டும் குறிஞ்சித் திணைப் பாடல்கள். நற்றிணைப் பாடல், 'பின்னின்ற தலைமகன் ஆற்றானாய்த் தோழி கேட்பத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது' என்னும்

துறையில் அமைந்ததாகும். நெஞ்சை நோக்கி 'நின்கைப்பட்ட ஒருத்தியை நீ கைவிட்டு ஏமாந்திருக் கலாமோ' என்று கூறும் வகையில் அப்பாடல் நயம் பெற அமைந்துள்ளது. அழகிய சொற்செறிவையும் தலைவிக்கும் தலைவனுக்குமுள்ள உறவைச் செம் மைப்படச் சொல்லுகின்ற நெறியையும் அதனுள் காணமுடிகின்றது. அப்பாடலைச் 'சொல்லவட் சார்த் தலிற் புல்லிய வகையினும்' என்னும் (தொல். பொருள்.102) நூற்பாத்தொடரில் 'வகை' என்பதற்கு எடுத்துக்காட்டாக நச்சினார்க்கினியர் காட்டியுள் ளார்.

குறுந்தொகைப் பாடல், 'தலைமகன், தன் வேறு பாடு கண்டு வினாய பாங்கற்கு உரைத்தது' என்னும் துறையில் அமைந்ததாகும். தலைவியைக் கண்டு வந்த தலைமகனிடத்து நிகழ்ந்துள்ள வேறுபாடுகளை அறிந்த பாங்கன் இவை எவற்றால் நிகழ்ந்தன என்று கேட்கிறான். அதற்குத் தலைவன், 'மலைச்சாரலிடத் துள்ளதொரு தினைக்கொல்லையில் குருவியோட்டு வாள் ஒருத்தியின் அழகைக் கண்டு மயங்கி இக்காம நோயுற்றேன்' எனக் கூறுவதாக அப்பாடல் அமைந் துள்ளது. தலைவியினது இருப்பிடத்தையும், அவள் யார் என்பதையும், அவளது தொழில் யாது என் பதையும், அவளை அணுகுதற்குரிய காலம் எது என்பதையும் பாங்கனுக்கு அறிவுறுத்தும் நோக்கோடு அப்பாடல் அமைந்துள்ளது.

அப்பாடலை, 'இக்குறுந்தொகையுள் குரீஇ ஓப்பு வாள் கண்ணென வழிநிலைக் காட்சியைப் பாங்கற் குக் கூறினமையின் அத்தினைக்கதிர் முற்றுதற்குரிய இளவேனிலும், பகற்பொழுதும் காட்சிக் கண் வந்தன' எனக் குறிப்பிட்டு மேற்கோளாக நச்சினார்க் கினியர் எடுத்தாண்டுள்ளார் (தொல். பொருள். 16 உரை). சா.கி.

**மற்போர்:** படைக்கலன்கள் ஏதுமின்றி இருவர் உடலால் மோதிக்கொள்ளும் வீர விளையாட்டாகிய இம் மற்போர் மனித வரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்து எல்லா வகையான மனித இனங் களிடத்திலும் வழக்கத்தில் இருந்துவந்துள்ளது. ஒரு குழு அல்லது இனத்தில் வலிமை மிக்க ஒருவன் தலைவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த வழக்கத் தின் பின்புலத்தில், இம்மற்போர்க்கலை தோன்றி யுள்ளதாகக் கருதுகின்றனர். வலிமையும் ஆற்றலும் மிக்க ஒருவன் தலைவனாக இருந்தால்தான் தங்களை எதிரிகளிடமிருந்து காக்க முடியும் என இனக்குழு அல்லது இன மக்கள் எண்ணியதே பல மிக்கவர் களைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்தமைக்கு அடிப்படையாக அமைந்தது என்பர். இம்மற்போர், வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே, இன்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழங்கி வந்துள்ளதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. காட்டாக, இடுப்பில் கச்சை அணிந்துகொண்டு புரியும் மற்போர் பழைய எகிப்திலும் மெசபடோமியாவிலும் இருந்துள்ளது. பாபிலோனியாவில் கி.மு. 3000-ஆம் ஆண்டுக்கு முற்பட்டனவாகக் கருதப்படும் கூம்பு வடிவ முத்திரைகளும், தாமிரத்தாலான ஒரு சிறு உருவச்சிலையும் கி.பி. 2 – ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் மற் போர் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. கில்க மெசு எனப்படும் தொன்மையான காப்பியத்தில் சுமேரியத் தலைவர்களாகிய கில்கமெசுவுக்கும், என்கிடு என்பவருக்கும் இடையே நடைபெற்ற மற் போர் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. கிறித்தவரின் புனித நூலாகிய பழைய ஏற்பாட்டில் சேகப்பு ஒரு தேவதூதனுடன் மற்போர் புரிவது விவரிக்கப்பட் டுள்ளது. ஓமர் தாம் எழுதிய இலியது, ஒடிசி என்ற இரு காப்பியங்களிலும் மற்போர் பற்றிக் குறிப்பிட் டுள்ளார்.

பெரும்பாலும் சுதந்திரமுறை மற்போரை ஒத்த மற்போர் முறை இந்தியாவில் கி.மு. 500-ஆம் ஆண்டி னுக்கு முன்பிருந்தே இருந்து வந்துள்ளதற்கான சான்றுகள் இருக்குவேதத்திலும் இராமாயணம், மகாபாரதம் போன்ற தொன்மையான காப்பியங் களிலும் கிடைக்கின்றன. சீனாவில் இம்மற்போர் கி.மு. 300 – க்கு முன்பிருந்தே இருந்து வந்துள்ளதற் கான சான்றுகள் கிடைத்துள்ளன. மிகப் பழைமை யான ஒரு சப்பானிய சான்றாவணம் சப்பானியப் பழங்கதையில் தெய்வத்திற்கும் மனிதனுக்கும் இடையே நடைபெற்ற மற்போர் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிடுகிறது.

பண்டைய கிரேக்கர்கள் ஒலிம்பியா என்னும் சம வெளியில் சீசு என்னும் தம்முடைய தேவதையின் வழிபாடாக நடத்தி வந்த ஒலிம்பிக்கு ஆட்டங்களில் மற்போரும் ஒன்றாக இருந்துவந்தது. மற்போரில் வெற்றி பெற்ற மல்லன் அக்காலத்தில் மக்களால் பெரிதும் மதிக்கப்பெற்றான். உலக மக்கள் அனை வரும் மற்போரை விரும்பிப் பார்க்கிறார்கள். நாடு, மொழி, இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் இக்கலையில் பெருவிருப்புடன் ஈடுபட்டு வருகின்ற னர். இன்று மற்போர்ப் போட்டி ஒலிம்பிக்குப் பந்த யத்திலும் இடம்பெற்றுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த ஒலிம்பிக்கு விளை யாட்டு விழாவில் இன்று ஐரோப்பா, ஆசியாமைனர், ஆசுத்திரேலியா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் மற்போர் வீரர்கள் கலந்துகொள்கின்ற னர்.

'மல்யுத்தம்' என உலகம் முழுதும் போற்றிப் புகழப்பட்டு வரும் வீர விளையாட்டு, பண்டைத் தமிழகத்தில் மற்போர் என்னும் பெயரால் தமிழர் தம் போர் முறைகளுள் ஒன்றாக இடம்பெற்று வந்துள்ளது. மல் என்பது வலிமை எனப் பொருள்படும். ஒருவன் தன் உடல் வலிமையால் செய்யும் போர் மற்போராகும். மற்போர் புரியும் வீரன் மல்லன் என்றே குறிப்பிடப் பெற்றான். தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் புறத்திணையியலில் இடம்பெறும் வாகைத் திணையில் மற்போரின் வெற்றியைக் குறிக்கும் ஒரு துறையாக 'மல்வென்றி' என்னும் துறை இடம்பெற்றுள்ளது. அதனால், மற்போர் தமிழகத்தில் பண்டு தொட்டே நிலவி வந்துள்ளது எனத் தெளியலாம்.

தமிழர்தம் புறவாழ்வை அறிந்துகொள்ள வரலாற்றுச் சான்றாக விளங்கும் சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில் மற்போர் நிகழ்ச்சி பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனை மற்போர் புரிந்து கொன்ற செய்தி சாத்தந்தையார் என்ற புலவர் பாடிய புறநானூற்றுப் பாடலில் (புறம்.80) இடம்பெற்றுள்ளது. அதில் சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனின் ஆற்றலைக் குறைத்து, ஒரு காலை மண்டியாக அவன் மார்பில் மடித்து வைத்து ஊன்றி மற்றொரு காலால் அவன் செய்யும் முயற்சிகளை விலக்கிக் கொண்டு, பசித்த யானையானது மூங்கிலைத் தன் துதிக்கையால் வளைத்துத் தின்பதுபோல், ஆமூர் மல்லனின் முதுகை வளைத்துத் தலையும் காலும் முரிந்து போகும்படி மோதிக் கொன்றான் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது.

மல்லரைப் பற்றிய செய்திகள் கலித்தொகை (52; 134), ஐந்திணை ஐம்பது (1), புறப்பொருள் வெண்பாமாலை (9 – 4; 12 – 3) போன்ற நூல்களில் காணக்கிடக்கின்றன. கண்ணன் ஒரு மல்லனாகச் சென்று வாணன் என்னும் அவுணனைக் கூவி அழைத்து அவனுடன் மற்போரிட்டு அவனைக் கொன்றான் என்பதும், கண்ணன் புரிந்த அம்மற்போரை விளக்கும் கூத்தாகப் பிற்காலத்தில் 'மல்லாடல்' என்னும் ஒருவகைக் கூத்து ஆடப்பட்டு வந்துள்ளது என்பதும் சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றன. அஞ்சனவண்ணன் ஆடிய ஆடல் பத்துள் ஒன்றாக மல்லாடல் இடம்பெற்றுள்ளது. 'அவுணற் கடந்த, மல்லி னாடலும்' என்பது சிலப்பதிகாரம். (சிலப் 6:49).

பாரதப் போரை விவரிக்கும் மகாபாரதத்தில் வீமன், சராசந்தன், கீசகன், கண்ணன் போன்றோர் சிறந்த மற்போர் புரியும் ஆற்றலுடையவர்களாக விளங்குகின்றனர். அவர்கள் புரிந்த மற்போர் பல பாடல்களால் பாடப்பட்டுள்ளது. அப்பாடல்களில் இடம் பெறும் செய்திகளைத் திரட்டினால் இந்திய மற்போர்க் கலையின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறிவிடலாம்.

கண்ணன் கம்சன் அனுப்பிய மல்லர் இருவரை மற்போரிட்டுக்கொன்றான் என நூல்கள் குறிப்பிடுகின்றன. கம்பராமாயணத்திலும் மற்போர் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அச்சான்றுகளிலிருந்து மற்போர் இந்தியாவில் பழங்காலத்தில் ஒரு போர்க் கலையாகவே இருந்து வந்துள்ளதெனத் தெளியலாம்.


இருவர் கைகோத்துக் கால்களாலும் தலையாலும் இடித்தும் உதைத்தும் ஒருவரையொருவர் வெல்ல வேண்டிச் செய்யும் போர் மற்போராகும். பகைவரது உயிர்நிலை உறுப்புகளையும் அவ்வுறுப்புகள் இணையும் இடங்களையும் முறைமையாகவோ முறை தவறியோ திறமையோடு உராய்தலாலும், கைகளால் பிணித்தலாலும் அவரைக் கொல்லும் செயல் பண்டைத் தமிழக மற்போரிலும் இந்திய மற்போரிலும் இடம்பெற்றுள்ளது. இம்மற்போர் எட்டு வகையில் அமையும். 1) தன் இடக்கையால் தலைவன் தலைமயிரை இறுக்கமாகப் பிடித்தல், 2) வன்மையால் நிலத்தில் வீழ்த்திப் பிசைதல், 3) கால்களால் தலையில் உதைத்தல், 4) முழங்காலால் வயிற்றில் மோதுதல், 5) திரண்ட கைமுட்டியால் கதுப்புகளில் கடுமையாகக் குத்தல், 6) அடிக்கடி முழங்காலால் தாக்குதல், 7) அகங்கைகளால் உடம்பின் எப்பக்கத்தும் அறைதல், 8) பகைவன் சோர்ந்திருக்குங்கால் வஞ்சகமாக அவனைப் போரில் சுழற்றுதல் என்பவை அவை.


தொடக்கத்தில் பகைவரைக் கொல்லும் போர் முறைகளில் ஒன்றாக இருந்த மற்போர் பின்னர் வீர விளையாட்டுகளில் ஒன்றாக மாற்றம் கண்டது. இந்திய மற்போருக்குத் தனி விதிகள் உள்ளன. அவை பெரும்பாலும் சுதந்திர மற்போர் முறை விதிகளை ஒத்தவை. சில பிடிகளைப் பிடிக்கும்போது இந்திய மல்லர்கள் எதிரியின் முண்டத்தைப் (Trunks) பிடிக்கலாம் என்ற வேறுபாடு இந்திய மற்போருக்கு உண்டு. இந்தியாவில் நடத்தப்படும் மாநில, தேசிய அளவிலான மற்போர்ப் போட்டிகளில் அனைத்து நாட்டு மற்போர் விதிகள் பின்பற்றப்படுகின்றன. இந்தியாவின் உடற்பயிற்சிக் கூடங்களில் நடைபெறும் போட்டிகளில் இந்திய மற்போர் விதிகள் கையாளப்படுகின்றன. மற்போருக்குத் தொழில் நுட்பத்திறமையுடன் உடல் வலிமையும் விரைவில் வினையாற்றும் திறனும் தேவைப்படுகின்றன.













பாபர் தில்லியையும் ஆக்ராவையும் கி.பி. 1526 – இல் கைப்பற்றி ஆண்டபோது மற்போர் விழாக்கள் மிகுதியாக இடம்பெற்றன. அதனால் தொழில் முறை மல்யுத்த வீரர்கள் பலர் தோன்றினர். அதன் வளர்ச்சி ஆங்கிலேயர் காலத்திலும், 1947 – இல் இந்திய பாகிசுத்தான் பிரிவினை வரையிலும் செழித்தோங்கியிருந்தது. சிறந்த மற்போர் வெற்றி வீரர்கள் 'இந்தியாவின் உருசுதம்' (Rustum of India) என்ற பட்டமளித்துப் போற்றப்பெற்றனர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குலாம், காமா, காமாவின் உடன்பிறந்தார் ஆகிய மற்போர் வீரர்கள் 1918-இல் இருந்து 1936 வரை இந்தியாவின் தலை சிறந்த மற்போர் வீரர்களாக விளங்கினர்.

மற்போர்க் கலைக்கு மராட்டியர்கள் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர் மகாராட்டிரத்திலுள்ள கோலாப்பூரில் மற்போர் கற்பிக்கும் நிலையங்கள் 175 இருக்கின்றன. குறைந்தது 1200 பேர் அவற்றில் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பொழுது அனைத்திந்திய மல்வித்தைக்குத் தலைமை நிலையமாக விளங்குவது கோலாப்பூர்தான். அந்த நிலையத்தை உருவாக்கிய பெருமை காலஞ்சென்ற சிரீ சத்ரபதி சாகி மகாராசாவையே சாரும்.

தமிழ்நாட்டில் தஞ்சையை மராட்டியர்கள் ஆண்ட காலத்தில், அவர்கள் மற்போருக்குப் பெருமளவில் ஊக்கமளித்துள்ளனர். கோலாப்பூர், மைசூர் ஆகிய இடங்களிலிருந்து மல்லுகசெட்டி என்போர் (இம்மற்போருக்கெனப் பெயர் பெற்ற இனத்தார்) தஞ்சையில் மராட்டிய மன்னர்கள் குடியேறியபோது, இங்கு வந்தனர். அவர்களைச் சாசி மன்னரும் சரபோசி மன்னரும் பெரிதும் ஆதரித்துப் போற்றினர். அவர்களை அரசவையில் மற்போரிடச் செய்து மராட்டிய மன்னர்கள் கண்டு களித்துள்ளனர். அவர்கள் வசிக்கக் கீழவசுத்தாத் சாவடி, மேலவசுத்தாத் சாவடி என்னும் தனிக் குடியிருப்புப் பகுதிகளைத் தஞ்சையின் கிழக்கு மேற்குப் பகுதிகளில் அமைத்துத் தந்து தங்கள் அரசுக்குச் சிறந்த அரணாக அவர்களை மதித்துப் போற்றி வந்துள்ளனர்.

**உலக அளவிலான மற்போர்:** இக்காலத்தில் சுதந்திரமுறை, கிரேக்க – ரோமானிய முறை என்ற இரு வகையான மற்போர் முறைகளே உலகம் முழுவதும் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவ்விரண்டு முறைகளே ஒலிம்பிக்கு விளையாட்டுப் போட்டியிலும் இடம் பெற்றுள்ளன. அதற்காக ஒலிம்பிக்கு விளையாட்டரங்கங்களில் இருவகையான மற்போர்க் களங்கள் அமைக்கப்படுகின்றன. அவ்விரண்டு முறைகளின் விதிகளும் சிற்சில வேறுபாடுகளுடன் அமைந்துள்ளன.

சுதந்திரமுறை மற்போர் தொன்மை மிக்க கிரேக்க மற்போர் முறையிலிருந்து தொடர்ந்து வரும் முறையாகும். அம்முறையில் கைகள் மற்றும் கால்களைப் பயன் படுத்திப் பிடிகள் போடலாம். அதில் இடுப்பிற்கு மேற்பகுதியிலும் கீழ்ப் பகுதியிலும் பிடிகள் போடலாம். அம்முறையில் கால்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதில் கால்கள் சம நிலையில் நிற்பதற்கும் உடலைத் தாங்கிக் கொள்வதற்கும் பயன்படுவதோடு மட்டுமன்றி எதிரியைப் பற்றிக்கொள்வதற்கும் தூக்குவதற்கும் பயன்படுகின்றன. அந்தச் சுதந்திரமுறை மற்போரே உலகில் விரும்பிப் போற்றப்படும் மற்போர் முறையாக விளங்குகிறது. இம்முறை பயில்முறை, தொழில்முறை மல்லர்களால் பின்பற்றப்பட்டுவருகிறது.

சுதந்திரமுறை மற்போரில் கலந்துகொள்ளும் போட்டி மல்லர்கள் இருவருள் ஒருவர் தம் எதிரியைக் காட்டிலும் மிகுதியான புள்ளிகளைப் பெற்று வெற்றி பெறுவார், அல்லது தம் எதிரியின் தோள்கள் நிலத்தில் ஒன்று அல்லது இரண்டு விநாடிகள் வரை பொருந்தியிருக்குமாறு செய்து வெற்றி எய்துவார். இவ்வகைப் போரில் ஒரு மல்லர் தம் எதிரியைத் தம் பிடிக்குள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை வைத்திருந்து வெற்றிக்கான புள்ளிகளைப் பெறுவதுண்டு. ஒருவரின் பிடிக்குச் சிக்கிக் கீழே கிடப்பவர் அப்பிடியிலிருந்து தப்பிப்பதன் மூலமாகவும் வெற்றிக்கான புள்ளிகளைப் பெறமுடியும். எதிரியை முழுக்க வீழ்த்தி வெற்றிபெற முடியாத நிலையில், மூன்று நிமிட நேரம் கொண்ட மற்போரை மூன்று முறை நிகழ்த்தச் செய்து வெற்றி தோல்வியை முடிவு செய்வர்.

**கிரேக்க – ரோமானிய முறை மற்போர்:** இம்முறை மற்போரில் போட்டியாளர்களின் இடுப்பிற்குக் கீழ் எந்தப் பிடியையும் அனுமதிப்பதில்லை. இம் மற்போர் முறையில் மல்லர்கள் எத்தகைய பிடிப்புகளுக்கும் கால்களைப் பயன்படுத்தக்கூடாது என விதிக்கப்பட்டுள்ளது. எதிராளியின் இரண்டு தோள்களையும் மண்ணில் நன்றாகப் பதியும்படி செய்யும் மல்லர் வெற்றி பெற்றவராகவும், அவ்வாறு தோள்கள் நிலத்தில் படிய வீழும் மல்லர் தோல்வியுற்றவராகவும் கருதப்படுகிறார்கள். மற்றபடி சுதந்திர மற்போர் முறைக்குச் சொல்லப்பட்ட அனைத்து விதிகளும் அப்படியே கிரேக்க-ரோமானிய மற்போர் முறைக்கும் பொருந்துவனவாக அமைந்துள்ளன.

**தொழில்முறை மற்போர்:** மற்போர், வீரவிளையாட்டு நிலையிலிருந்து பொழுதுபோக்குக் கலையாகவும் மாறத் தொடங்கியது. மற்போரின் சில

கூறுகளைக் கொண்ட இந்தப் பொழுதுபோக்கு மற்போர், தொழில் முறை மல்லர்களைக் கொண்டு மக்களின் முன்னர் மேடையேற்றப்பட்டது. இவர்கள் மற்போர் வட்டத்திற்குள் நின்று மற்போரைக் காணுதற்கான காட்சி நிகழ்ச்சியாகச் செய்து காட்டினர். இது தொழில்முறை மற்போராகக் கூறப்பட்டது. இது அடிப்படையில் ஒரு காட்சிக் கலையாகத் திகழ்ந்து மக்களைக் கவர்வதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தது. இதற்காகப் போட்டியாளர்கள் கவர்ச்சியான உடை அணிந்தனர். அயல் நாட்டு நடத்தையுடையவர்களாகக் காட்டிக்கொண்டனர். நல்ல மல்லருக்கு எதிராக ஒரு சரியான எதிரி மல்லனை நிறுத்தி நல்லதற்கும் தீயதற்கும் இடையே நடைபெறும் போட்டி போல் உருவகப்படுத்துவர். தொழில்முறை மற்போர் சில சட்ட திட்டங்களைக் கொண்டிருக்கும். அதன்படி மற்போர் வட்டத்திற்குள் ஒரேநேரத்தில் பல மல்லர்களைப் போரிடச்செய்வர். திணற அடித்தல், உதைத்தல், கண்ணைத் தோண்டுதல், கை முட்டியால் குத்துதல், கடித்தல் முதலிய செயல்களைத் தடை செய்திருப்பர். ஆனால் பார்வையாளர்களை மகிழ்ச்சிப்படுத்த அந்தத் தடைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் விடுவர். ஒரு மல்லன் தன் எதிரியை 3 விநாடி நேரம் மண்ணைக் கவ்வச் செய்வது, எதிரியே தோல்வியை ஒப்புக்கொள்வது, எதிரி தொடர்ந்து மல்லிட முடியாமல் போவது போன்ற நிலைகளில் ஒரு மல்லர் வெற்றி பெற்றாரெனக் கருதப்படுவார். பெண் மல்லர்களை மோத விடுவதும் உண்டு. ஒரு மல்லருக்கு எதிராகப் பல மல்லர்களை மோத விடுவதுண்டு. பல மல்லர்கள் ஒரே நேரத்தில் மோதிக்கொண்டு கடைசியில் ஒரு மல்லர் வெற்றி பெறுவதாக அமைப்பதுண்டு. ஒரு போட்டியாக இல்லாமல் காட்சிக்கலை நிலையிலேயே அவை அமைந்துள்ளன. பார்வையாளர்களைக் கவருவதற்காக உறுமுதல், புலம்புதல், முகத்தைச் சுளித்தல் போன்ற செயல்களை மல்லர்கள் வேண்டுமென்றே செய்வர்.

**மற்போருக்கான அமைப்புகள்**: முதல் உலகப் போருக்குப் பின்னர்த் தொழில்முறை மற்போரின் போக்குகளினால் மற்போர் அழியத் தொடங்கியது. 'அனைத்து நாட்டு மல்லர்கள் பயில்முறைக் கூட்டிணைக் கழகம்' (FILA) தோன்றி அழிவினின்றும் இக்கலையைக் காத்தது. அது 1921-இல் தோற்றுவிக்கப் பட்டது. பல மற்போர்ப் போட்டிகளைப் பயில்முறை மல்லர்களுக்காக நடத்தியது. அதனால் ஒலிம்பிக்கு மற்போட்டிகளில் பயில்முறை மல்லர்களுக்கான போட்டிகளுக்கே மிகுதியான இடம் கிடைத்தது. அது மட்டுமன்றி அனைத்து நாட்டுப் பயில்முறை மல்லர்களின் கழகம் (AAU) தோன்றிப் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு வெளியே நிறைய மற்போர்ப் போட்டிகளை நடத்திச் சுதந்திர மற்போர் முறை, கிரேக்க-ரோமானிய மற்போர் முறைகளில் தேசிய வீரர்களைத் தேர்வு செய்தது.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் மற்போர்க் கழகங்கள் உள்ளன. அவைநடத்தும் போட்டிகள் இந்திய மற்போர்க் கூட்டமைப்பின் கண்காணிப்பில் நடைபெறும். மாநில வெற்றிவீரன் என்ற பட்டத்திற்கு மாநிலக் கழகம், மற்போர்ப் போட்டிகளை நடத்தும். இந்திய மற்போர்க் கூட்டமைப்பு குறிப்பிட்ட இடங்களில் ஆண்டுப் போட்டி விழா நடத்தும்.

கு.மு.

**மறத்தலும் கற்றலும்**: செய்திகள், திறமைகள், பழக்கங்கள், ஆர்வங்கள், சமூக இயைபான திறன்கள் ஆகியவை கற்கப்படுகின்றன. விலங்கினங்களுக்கு மூளை வளர்ச்சி வரையறைக்குட்பட்டதாக (Brain Limitation) இருப்பதால், மனிதர்களைப் போல் அவை எதையும் கற்க இயலாது. கற்றல் அனுபவத்தாலும், பயிற்சியாலும் நடத்தையில் ஏற்படக்கூடிய நிலையான மாற்றம் என்றும் வரையறுக்கப்படுகிறது. பயிற்சி, கற்றலை நுட்பமாகவும், விரைவாகவும் செய்யச் செய்கிறது. கற்றல் என்றும் தொடரக்கூடியதும், உட்புகுந்து ஆராய்ந்து அறியக் கூடியதும், முன்னேற்றமானதும், இலக்கை நோக்கிச் செல்வதும், எதையும் நடைமுறைப்படுத்துவதும் ஆகும்.

கவனித்தல், சோதனை செய்தல், பொதுமைப் படுத்துதல், தீர்வு காணுதல் கண்டுபிடித்தல் ஆகிய முறைகளில் கல்வி கற்கப்படுகிறது. கற்பதற்கு வழிநடத்தும் முறை ஓர் ஆசிரியர் முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டிய ஒன்று ஆகும். சிறு வயதிலிருந்தே கற்பதற்கு வழிகாட்ட வேண்டும். இது சரியான சமயத்தில், சரியான அளவில் கொடுக்கப்படல் வேண்டும். அனுபவங்களைச் சரியாக முறைப்படுத்தித்தரல் வேண்டும். சொல்வதை விருப்பமான முறையில் அறிந்து கொள்ள உதவ வேண்டும். தவறான வேலை முறைகளை முன்பே சிந்தித்து அவற்றைத் தடுக்கும் முறை பற்றியும் ஓர் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். ஆசிரியர், கற்பவர்களை ஊக்குவிக்க வேண்டும். வாய்மொழி, செயல், செயல்முறை, கருவி, பயன்படுத்தும் முறை முதலியன மூலமாக ஆசிரியர் வழிநடத்தல் வேண்டும்.

கற்றல், கற்பவர், கற்கப்படும் பொருள், முறை ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறது. புதியனவற்றைக் கற்கும் திறன் 16 வயதிலிருந்து வளர்ந்து 70 வயதிற்கு

மேல் குறைகிறது. ஒரு சில செயல்கள் வாழ்க்கையில் உள்ளமையால் அவை வயதானவர்களிடம் உயர்ந்த அளவில் தொடங்கவும், முடியவும் செய்கின்றன. வயதான காலத்தில் கற்றல் வேறுபடுவது வயதினால் மட்டுமன்று; அனுபவத்திலும், ஊக்கத்திலும் உள்ள வேறுபாடுகளாலுமாகும்.

இளமையில் கற்கும் கல்வி வருங்காலக் கல்வியை முடிவு செய்கிறது. அது, செய்ய வேண்டிய கடமையை நன்றாகத் தெரிந்ததாகவும், எளிமையானதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுகிறது. குடும்பப் பின்னணி, சமூக, பொருளாதார நிலை ஆகியன கற்றலை நிறைவேற்றுவதில் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றன. குழந்தைகள் கற்றலில் மாறுபாடு ஏற்படுதல் அவர்கள் பெற்றோரின் தொழிலைப் பொறுத்ததாகும். ஏனெனில், அவர்கள் வேறுபட்ட போக்குகளையும், சமூகப் பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளனர்.

கருத்துள்ள செயல்கள் தொடர்பு உள்ளனவாகவும், முந்தைய அனுபவம் உள்ளனவாகவும் இருந்தால் மனப்பாடம் செய்வது எளிதாகும். எவ்வளவுக்கு எவ்வளவு கருத்து உயர்ந்ததாக இருக்கிறதோ, அவ்வளவுக்குக் கற்றல் விரைவானதாக இருக்கும். எளிதான செயல்கள், விரைவானதும் திறமையானதுமான கற்றலைத் தருகின்றன. அளவுக்கு மீறிய சொற்கள் இருந்தால் படிப்பது கடினம். ஒவ்வொரு பொருளையும் விரிவாகப் படித்தல் என்பது கால விரையமாகும். ஆனால், அதுதான் என்றும் நினைவில் நிற்கும். படிக்கின்றபோது முதலில் படித்தவற்றையும் படிக்கின்ற பொருளையும் இணைத்துப் பார்க்க வேண்டும். அந்த முறைதான் படித்துக் கொண்டே போவதை விடச் சிறந்த முறையாகும். நினைவுபடுத்திப் பார்த்தல் கற்றலைப் பயனுள்ளதாக்குகிறது. மேலும் ஒருவனுடைய கற்றலில் உள்ள குறைபாடுகளையும் அறிந்து கொள்ள உதவுகிறது.

கற்றல் குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குள் இருந்தால் பயனுள்ளதாக இருக்கும். கற்கும் காலமானது மிக நீண்டதாகவோ, மிகக் குறுகியதாகவோ இருக்கக்கூடாது. கற்றலில் ஒப்பித்தல், படித்தலைவிட உயர்வானது. ஒப்பித்தல் கேட்பதைவிடப் பயனுள்ளது. நினைத்துப் பார்த்தலும் ஒப்பித்தலும் பயனுள்ளவையாகும். அவை குழுமுறைக் கல்விக்குப் பயன்படுவன.

மறதி என்பது கற்றலைப் போல உலகம் முழுமைக்கும் பொதுவான ஒன்றாகும்; வாழ்க்கையில் காணப்படக்கூடியதும் ஆகும். ஒருவன் படித்தது முழுவதையும் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது. ஆனால், அதே சமயத்தில் முன்பு என்ன கற்றிருந்தாலும் அதை முழுமையாக மறக்கவும் முடியாது. மறத்தலைப் பொறுத்தவரை மற்றொரு முக்கியமான ஒன்று உள்ளது. சில நேரங்களில் மறக்க விரும்புவதை எளிதில் மறக்க முடியாது. அதே சமயத்தில் நினைவு வைத்துக் கொள்ள விரும்புவதை உடனே மறக்க நேரிடும். ஒவ்வொருவருக்கும் பல செய்திகளைத் தம் மனத்தில் வைத்துக் கொள்ளும் திறமை உண்டு. ஆனால், அது மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. சிலருக்கு நினைவாற்றல் அதிக அளவில் உள்ளது. அவர்களுக்கு ஒரு நீளமான கவிதையைக் கூட, ஒரு முறை படித்தவுடன் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய திறமை உண்டு. அவர்களைக் கடந்து செல்கின்ற பல நூற்றுக்கணக்கான ஊர்திகளின் எண்களைக் கூட நினைவில் வைத்துக் கொள்ள முடியும். சிலருக்குப் பல தொலைபேசி எண்களைக் கூட நினைவு வைத்துக் கொள்ளகூடிய திறமை உண்டு. ஆனால், அதே நேரத்தில் மற்றவற்றில் அந்த அளவுக்கு நினைவாற்றல் இருப்பதில்லை.

**மறத்தல் விளைகோடு:** எபின்காசு என்பவர் மறத்தல் என்பது, எப்பொழுது படிப்பு நிறுத்தப்படுகிறதோ அப்பொழுதே தொடங்குகிறது என்று கண்டுபிடித்தார். மேலும் படித்தலும், கற்பித்தலும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருக்கின்றன என்றும், ½ மணி நேரத்தில் 50 விழுக்காட்டையும், 6 மணி நேரத்தில் 60 விழுக்காட்டையும், 1 நாளில் 66 விழுக்காட்டையும், 6 நாள்களுக்குப் பிறகு 72 விழுக்காட்டையும், ஒரு மாதத்திற்குப் பிறகு 80 விழுக்காட்டையும் மறந்து விடுகின்றார்கள் என்றும் கண்டறிந்தார். மற்ற அறிஞர்களாகிய இராடாசு, பாலார்டு, போராசு ஆகியவர்களும் இதையே கூறியிருக்கிறார்கள்.

**மறத்தல் கொள்கைகள்; 1. வெளுத்தல் கோட்பாடு** (Fading): முன்னால், மறத்தல் என்பது காலத்தினால் ஏற்படக்கூடியது என்று நம்பப்பட்டது. காலம் செல்லச் செல்ல மறத்தலும் அதிகமாகிறது. முறைப்படி, திரும்பப் படிக்கும் பழக்கம் மறத்தலைச் சற்றுத் தடுக்கிறது. திரும்பப் படிக்கும் பழக்கம் இல்லையெனில் மறத்தல் மிகுகின்றது.

**2. முறையற்ற (அ) குறைபட்ட அமைப்பால் மறத்தல்:** மறத்தலுக்கு மற்றொரு விளக்கம் என்னவெனில், குறைபட்ட அமைப்பும், ஒழுங்குபடுத்தப்படாத பாடங்களுமே ஆகும். பெரும்பாலும் நன்றாக நினைவுபடுத்தக் கூடியவர்கள் அவர்களுடைய பழக்கவழக்கங்களில் ஒரு முறையைக் கையாளுகிறார்கள். அப்படி இன்றி விரைவாக மறக்கக்கூடிய பழக்கம் உடையவர்கள் முறையற்ற பழக்க வழக்கங்

களையும், குழப்பமான செயல்களையும் செய்வார்கள்.

3. **பின்கற்றலின் பாதிப்பு:** புதிய காலக் கருத்துப் படி மறத்தல் என்பது நேரத்தை மட்டும் சார்ந்தது அன்று. கற்றலுக்குப்பின் உள்ள நேரத்தில் என்ன நடக்கிறது என்பதையும் பொறுத்துள்ளது. கற்றலுக்குப் பின் சிறிது நேர இடைவெளி அல்லது சிறிது அறிவுச்சார்வான செயல்களைக் கொடுத்தால் மறத்தலானது சற்றுக் குறைவாகவே இருக்கும் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒன்றைக் கற்றலுக்கு இடைவெளியில் மற்றொன்றைக் கற்பதனால் மறத்தல் அதிகமாகிறது என்று சோதனை மூலமாகத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். ஆகையால் இக்காலக் கருத்துப்படி 'மறத்தல் என்பது பழைய பாடங்களின் அழிவு அன்று; புதிய பாடங்களின் இடைச் செருகலால் ஏற்படுவதேயாகும்' என்று கூறப்படுகிறது.

4. **தூண்டுதலினால் ஏற்படும் மாறுதல்கள்:** மறத்தல், சூழ்நிலைக்கட்டுப்பாட்டின் மதிப்பீட்டு அளவைச் சார்ந்து அமைகிறது. கட்டுப்பாட்டு அளவின் மதிப்பீடானது, முறையாகக் கற்பதன் கால அளவை விட அதிகமாக இருந்தால் அது மிகப் பெரிய பாதிப்பைக் கற்றலில் ஏற்படுத்தும்.

5. **வகுப்பு மாற்றம்:** மாணவனின் மனநிலை ஒரே நிலையில் இருக்கும் பொழுது, மறத்தல் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. அவன் மனநிலை மாறும் பொழுதோ, வேறுதிசையை நோக்கும் பொழுதோ மறத்தல் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

6. **செசுடாலின் மறத்தல் விதிமுறை:** செசுடால் விதிமுறைப்படி மாணவனின் மறத்தல் அவன் புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் அமைகிறது என்பதாகும். சிறிது சிறிதாகப் புரிந்து கொள்வதை விட முழுமையாகப் புரிந்து கொள்வதே மேலானது.

7. **உளநிலைப் பகுப்பு ஆய்வு விதிமுறை:** (Psycho-analytic): பிராய்டும், அவரைப் பின்பற்றுபவர்களும் மறத்தல், மறக்க வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் மறக்கப்படுகிறது என்பர். துன்பம் கொடுக்கக் கூடிய நிகழ்ச்சிகள், குற்ற உணர்வைத் தூண்டும் செயல்கள், சில இழிவுகள் ஆகியவை இயல்பாகவே, மறக்கப்படுகின்றன. சில தவறுகள் ஒருவனைத் தன்னையே மறக்க வைக்கின்றன. மறத்தல் என்பது நினைவிற்குக் கொண்டுவரமுடியாத நிலையே ஆகும். இந்நிலையைப் போக்க உளவியல் நிபுணரை அணுக வேண்டும்.

**வேகமாக மறத்தல் உண்டாவதற்குக் காரணங்கள்:**
1. மேலாகப் படிப்பதை விட ஆழமாகப் படித்தல் நினைவில் தங்கும். ஆழமாகப் படிக்கும் பொழுது மறப்பதற்கு வாய்ப்பு இல்லை.

2. பலமுறை கற்பது, கற்பவற்றை மனத்தில் கொள்ள எளிதாக இருக்கும். பலமுறை படித்ததை நினைவுபடுத்துவதும் படித்ததை நினைவாக வைத்துக் கொள்ள எளிய முறையாகும்.

3. **கற்பவற்றின் அளவு:** பெரிய பாடத்தைப் படித்து நினைவில் வைத்துக் கொள்ளுதல், சிறிய பாடத்தைப் படித்து நினைவில் வைத்துக் கொள்ளுதலை விடச் சிறந்தது. ஏனென்றால், பெரிய பாடம் மிகுதியாகப் படிப்பதாகும்.

4. **கற்கும் பொருளின் தன்மை:** பொருளுள்ள காரியங்கள் ஆழமாக மனத்தில் பதிந்து விடும். ஆனால், பொருளற்ற காரியங்கள் குழப்பத்தை ஏற்படுத்தும். சொற்களைப் புரியாமல் கற்பதை விட செயல் முறையின் மூலம் கற்பது மிகவும் சிறந்ததாகும். கற்பது ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் கற்பது கடினமானதாகும்.

5. **தெளிவு:** தெளிவான எண்ணத்தினால் படிப்பது மனத்தில் நன்றாகப் பதிகிறது. மறக்கும் செயலானது மனிதனுடைய அன்றாட வாழ்வில் அடிக்கடி நடக்கக் கூடியது. மனப்பாடம் செய்வது ஒவ்வொரு ஆளிடமும் வேறுபடுகிறது. ஒரு சிலரிடம் அது குறிப்பிடும்படியாக உள்ளது. 1) மேலாகப் படித்தல், 2) ஓரிரு முறை மட்டுமே படித்தல், 3) குறைந்த அளவே படித்தல், 4) பொருள் உணராது தொடர்பில்லாமல் கற்றல், 5) குழப்பமான சூழ்நிலையில் கற்றல் முதலிய குறைகளை நீக்கிக் கற்றல் என்னும் செயலில் ஈடுபட்டால் மறதி குறைந்து நினைவாற்றல் அதிகமாகும். கே.ஆ.

**மறதி:** இது, நினைவுக்கு எதிர்மறையான உள இயக்கம். நினைவுக்கு அடிப்படையாக உள்ளவை கற்றல் (Learning), கற்றதை நிலைநிறுத்தல் (Retention), மீட்டறிதல் (Recall), பார்த்தறிதல் (Recognition) ஆகியவை ஆகும். அவற்றில் ஒன்றிற்கோ ஒன்றிற்கு மேற்பட்டவற்றிற்கோ பாதகம் ஏற்பட்டால் மறதி உண்டாகும். மேற்கூறிய நான்கு அடிப்படை இயக்கங்களும் மூளையைச் சார்ந்துள்ளன.

மறதி ஓர் இயற்கை வழி எனக் கொள்ளலாம். ஏனெனில் ஒருவன் பிறந்ததிலிருந்து கொள்ளும் அனுபவங்கள் யாவற்றையும் நினைவிற் கொள்ள இய

லாது; தேவையும் இல்லை. கவலையையோ துக்கத்தையோ உண்டாக்கிய நிகழ்ச்சிகளைக் காலம் செல்லச் செல்ல மறப்பது மனிதனுக்கு நன்மையே ஆகும். ஆனால், அந்த அனுபவங்கள் எல்லாம் உள்ளத்தின் ஒரு பாகத்தில் அடங்கியுள்ளன. அந்த உண்மையை வெளியிட்டவர் சிக்மண்டு பிராய்டு ஆவார். அவர் உளப் பாகுபாட்டு முறையைத்(Psycho Analytic Technique) தொடங்கிய போது அறிதுயில் (Hypnosis) முறையைப் பயன்படுத்தினார். அம் முறையைக் கொண்டு தம்மிடம் சிகிச்சைக்காக வந்த நரம்புத் தளர்ச்சி (Hysteria) என்னும் உளக்கோளாற்றினால் பாதிக்கப்பட்ட உளநோயாளிகளை குறிப்பிட்ட வயது வரை ஏற்பட்ட அனுபவங்களை நினைவுபடுத்தச் செய்தார். பென்பீல்டு (Penfield) என்னும் நரம்பியல் நிபுணர் (Neurologist) மூளை நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மூளையின் பகுதிகளை மின் ஊசி கொண்டு தூண்டியபோது, அவர்கள் தாங்கள் குழந்தைகளாக இருந்தபோது கற்ற பாடல்கள் நினைவுக்கு வருவதாகக் கூறினர் என வெளியிட்டுள்ளார். ஒருவனுக்கு ஏற்படும் எல்லா அனுபவங்களுக்கும் மறதி ஏற்படுவதில்லை. ஒருசில அனுபவங்கள் நிலையாக நினைவிலிருப்பதும் உண்டு.

**மறதிக்குக் காரணங்கள்:** கற்ற பொருட்களும் ஏற்பட்ட அனுபவங்களும் கால அளவில் மறந்தொழிகின்றன. எனவே, காலம் மிகவும் முக்கியமாக அமைகிறது. காலத்தின் அடிப்படையில் ஏற்படும் மறதிக்கு இருவகைக் காரணங்கள் உள்ளன. அவையாவன: 1) சூழ்நிலையினின்று எழும் தூண்டல்கள் தொடர்ந்து மனிதனின் பல புலன்களில் மோதிக் கொண்டேயுள்ளன. அத்தூண்டல்களுக்கு எதிர்த் துலங்கலாகத் தொடர்ந்து அவன் பல செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான்; நடத்தைகளில் திறன் அடைகிறான். நாளடைவில் அவனுடைய ஒரு நடத்தை மற்றொரு நடத்தையைப் பாதிக்கிறது. அதனால், அந்த நடத்தைக்குரிய திறன் குறைவாகிறது. 2) மனிதனிடம் பல தேவைகள் (Needs) உள்ளன. அவற்றை நிறைவு செய்வதற்கான நுண்ணிய உறுப்புகளும் பெரிய உறுப்புகளும் உள்ளன. அந்த உறுப்புகளின் வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் கண்ணுக்குப் புலனாகாத உயிரணுக்கள் இன்றியமையாதனவாக உள்ளன. அந்த உயிரணுக்கள் ஒரு வினாடியில் நூற்றுக்கணக்கில் அழிவதும் உற்பத்தியாவதும் உண்டு. அதன் காரணமாகக் கற்ற திறன் மாறுபடுகிறது. முதல் காரணத்தின்படி பயிற்சிபெற்ற ஓர் ஆற்றல் அடிக்கடி பயன்படாவிட்டால் அடிக்கடி பயன்படும் ஆற்றல்கள் அதை அழித்துவிடும். புதிய அனுபவங்கள் பழைய அனுபவங்களை அழித்துவிடுகின்றன. ஒரு திறனுக்கான நரம்புகள் அத்திறன் பயன்படாவிட்டால் அவற்றிலுள்ள இயற்பியல் வேதிம நிலையின் அளவு குறைகிறது. அதன் காரணமாக அத் திறன் பயன்பட வேண்டிய நிலை ஏற்பட்டால் அது முழு வலிவோடு இயங்கமுடிவதில்லை.

மறதி ஏற்படுவதற்கான காரணங்களைச் சோதனை வாயிலாக அறிந்துள்ளார்கள். அவ்வாறு அறிந்தவற்றுள் பின் இயக்கத்தடை (Retroactive Inhibition) முக்கியமானதாகும்.

**பின் இயக்கத் தடை:** தூண்டல் 1க்கும் துலங்கல் 1 க்கும் உள்ள உள்ளத் தொடர்பை ஒருவன் கற்கிறான். பின்னர்த் தூண்டல் 2க்கும் துலங்கல் 2க்கும் உள்ள தொடர்பைக் கற்கிறான். இவ்விரண்டையும் நினைவுக்குக் கொண்டுவர முயன்றால் தூண்டல் 2க்கும் துலங்கல் 2க்கும் கற்ற தொடர்பு, தூண்டல் 1க்கும் துலங்கல் 1க்கும் உள்ள தொடர்பைப் பாதிக்கிறது. அதாவது இரண்டாவதாகக் கற்ற பொருள் முதலில்கற்ற பொருளைப் பாதிக்க அதற்கு மறதி ஏற்படுகிறது. ஓர் ஆய்வில் ஒருவனை ஒரு பாடத்தை இரவில் தூங்கப் போகுமுன் நன்றாகப் படித்து நினைவில் நிறுத்துமாறு செய்து காலையில் தூங்கியெழுந்தவுடன் அவனை ஆராய்ந்த போது, கற்றவையில் 44விழுக்காடு அளவு மறந்திருந்தான். அவனையே மற்றொரு பொருளைக் காலையில் கற்க வைத்து, பின்னர் அன்றாட வாழ்க்கையில் ஈடுபடச்செய்து பிறகு மாலையில் கற்ற பாடத்தை நினைவுபடுத்தும் படி கூறியபோது 91 விழுக்காடு மறந்திருந்தான். இந்த ஆய்விலிருந்து விழித்திருப்பவனுக்குப் பல அனுபவங்கள் உண்டாக அந்த அனுபவங்கள்-கற்ற பாடத்தைப்பாதிக்கின்றன; ஆனால் தூக்கத்திலிருப்பவனுக்கு அனுபவம் ஏதும் ஏற்படாத நிலையில் அவனிடம் மறதி குறைவாக ஏற்படுகிறது என்பது தெளிவுபடுகிறது. மறதியைப் பற்றி உளவியலாளர்களிடையே பல கோட்பாடுகள் உள்ளன. பிராய்டு போன்ற உளப் பாகுபாட்டு உளவியலார், சமூகத்துக்கு ஒவ்வாத இச்சைகளும் உந்துகளும், ஆழ்ந்த உள்ளத்திலுள்ள தன்னுணர்வு உந்துதல் ஆகி, நனவுநிலையை அடைந்து நிறைவு செய்ய முயலும் போது அதனை நிலைமனமும் மிகை நிலைமனமும் ஒடுக்கி ஆழ்ந்த உள்ளத்தில் தள்ளுகின்றன (Repression) என்று கூறுகின்றனர். அதனால் மேலே கூறிய இச்சைகள், உந்துகள் ஆகியவற்றைச் சார்ந்துள்ள பழைய அனுபவங்கள் நினைவுக்குவர இயலாத நிலை ஏற்படுகிறது. வேறுவகையாகக் கூறும் போது அந்த அனுபவங்கள் மறக்கப்படுகின்றன எனலாம். பிராய்டின் கருதுகோளை ஏற்றுச் செய்த பல ஆய்வுகளில் மனவெழுச்சிக்கும் (Emotion), மறதிக்கும் மிகுந்த தொடர்புண்டு என்பது கண்டறியப்பட்டது.

இந்த உண்மையை வெளியிட்ட உளவியலார்களுள் முக்கியமானவர் செல்லர் (Zeller) என்பவராவார். அவர் கருத்துப்படி அருவருப்பு, தாழ்மையுணர்ச்சி ஆகியவற்றைச் சார்ந்துள்ள பழைய அனுபவங்களுக்கு மறதி எளிதில் ஏற்படுகிறது என்பதாகும்.

கோப்கா (Koffka) போன்ற முழுமைக் (Gestalt) கொள்கையினர் மறதி பற்றி வேறுவிதமான கருத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் கருத்தின்படி முடிவடைந்த பொருளோ நிகழ்ச்சியோ எளிதில் மறக்கப்படுகின்றது.

மறதிக்கும் சூழ்நிலைக்கும் தொடர்புண்டு. எடுத்துக்காட்டாக ஒரு சூழ்நிலையில் கற்ற பொருட்களையோ ஏற்பட்ட அனுபவங்களையோ மற்றொரு சூழ்நிலையில் முற்றிலும் நினைவுபடுத்த இயலாமற் போவதுண்டு. அதாவது கற்ற பொருட்களில் சில பகுதிகள், அனுபவங்களின் சில பகுதிகள் மறக்கப்படுகின்றன. கார் (Carr) என்னும் உளவியலார் சீனாவில் வாழ்ந்து சீன மொழியைச் சரளமாகப் பேசக் கற்று அமெரிக்க நாட்டிற்குச் சென்று சில ஆண்டுகள் தங்கியபோது சீன மொழியில் பேச முயன்றார். ஆனால், அப்போது அவரால் சீன மொழியைச் சரளமாகப் பேச முடியவில்லை. அதோடு பல பிழைகளும் இருந்தன. அவருக்கு அந்த மொழித்திறன் போய் விடுமோ என்ற அச்சமும் தோன்றத் தொடங்கியது. பின்னர் மீண்டும் சீன நாட்டை வந்தடைந்தபோது அவரால் சீனமொழியைப் பழையபடி சரளமாகப் பேசமுடிந்தது. சூழ்நிலை மாற்றம் கற்ற பொருட்கள் சிலவற்றை அப்போதைக்கு மறக்கச்செய்கிறது என்பது ஆய்வின்மூலம் உளவியலாளர்கள் கண்ட உண்மையாகும். தா.ஏ.ச.

**துணை நூல்கள்:**

**சண்முகம், தா.ஏ.,** உளவியல் (பாகம் 2), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960.

**Shanmugam, T.E.,** Abnormal Psychology, Tata, Mc-graw Hill Co, New Delhi, 1985.

**Smith, E., Sarason I.G., Sarason B.R.,** Psychology, The Frontiers of Behaviour, Harper & Row, Newyork, 1978.

*மறதிக் கோட்பாடுகள்:* மக்கள் அனைவருக்கும் மறதி ஏற்படுவது இயல்பு. அதனைச் சிலர் தீமையாகவும் குறையாகவும் கருதுகின்றனர். ஆனால், ஒருவன் அன்றாட வாழ்க்கையில் நிகழும் அனைத்து நிகழ்ச்சிகளையும் அதிலும் குறிப்பாக மிகவும் வருத்தம் தருபவற்றை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படின் வாழ்க்கை சுவையாக இராது. எனவே மறதி ஏற்படுவதும் ஓரளவுக்கு நன்மை பயக்கும் இயற்கை வழி எனலாம். மறதியினை 1) இயல்பான மறதி (Normal Forgetting), 2) பிறழ்வான மறதி (Pathological Forgetting) என இருவகையாகப் பிரிக்கலாம்.

I. **இயல்பான மறதி:** இயல்பான மறதி ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்று கோட்பாடுகளுக்குள் அடங்கியுள்ளன. அவை பின்வருவன:

**அ) பயன்பாட்டில் இல்லாது, பழக்கமின்மையால் காலப்போக்கில் ஏற்படும் மறதி:** ஒருவன் கற்றவற்றை நீண்ட நாள்கள் பயன்படுத்தாவிடில் அவற்றை மறந்துவிட ஏதுவாகிறது. ஒருவன் புதிதாகக் கற்கும் ஒவ்வொரு ஆற்றலும் அவன் மூளையின் அமைப்பின் மீது ஒரு சிறு பதிவை (Trace) ஏற்படுத்துகிறது. காலப்போக்கில் அதனைப் பயன்படுத்தாமல் விட்டு விட்டால் அப்பதிவு மங்கி மறைந்துவிடுகிறது. அதனால் அது மறக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஓர் ஓவியத்தைப் பார்த்த சில மணி நேரங்களில் அதை நினைவிற்குக் கொண்டுவர முயற்சி செய்தால் அப் படத்தின் ஒவ்வொரு நுணுக்கமும் (Detail) ஒருவன் நினைவிற்கு எளிதாக வருகிறது. ஆனால் சில நாள்கள் கழித்து அதை நினைவுபடுத்தினால் அதன் வெளித்தோற்றம் (Outline) மட்டுமே நினைவிற்கு வரும்; அப்படத்தின் ஒவ்வொரு நுணுக்கமும் நினைவிற்கு வருவதில்லை. இது காலப் போக்கினால் ஏற்பட்ட மறதி.

அக்கோட்பாட்டிற்கும் ஒரு சில விலக்குகள் உள்ளன. எடுத்துக்காட்டாக வாகனம் ஓட்டும் கலையில் நன்கு தேர்ச்சி பெற்றபின் அதனை ஓட்ட அதிக வாய்ப்புக் கிட்டாவிடினும் காலப்போக்கில் அத்திறமை மறந்துவிடுவதில்லை. அதேபோன்று பலர் சிறு வகுப்பில் மனப்பாடம் செய்த சில செய்யுட்களை இன்றுவரை நினைவில் வைத்திருக்கிறார்கள், அதேசமயம் பெரிய வகுப்பில் ஒருவர் நடித்த நாடகத்தின் வசனப்பகுதியை நினைவுகூர முயற்சிசெய்தால் அது நினைவிற்கு வருவதில்லை. அதற்கு மற்றொரு விலக்காகக் கருதப்படுவது என்னவெனில் வயது முதிர்ந்த பெரியோர் தங்கள் அன்றாட வாழ்க்கையில் காலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியை மாலையில் மறந்துவிட்டதாகக் கூறுவர். ஆனால், அதே முதியவர் தங்கள் குமரப்பருவத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியினை மறக்காமல் நுணுக்கமாக எடுத்துரைப்பதையும் காணலாம்.

எனவே மறதிக்கும் காலப்போக்கிற்கும் மிகுந்த தொடர்பு இருந்தபோதிலும், மறதி காலப்போக்கினால் மட்டும் ஏற்படுவதில்லை. அதற்கு வேறுபல காரணங்களும் உண்டு.

**ஆ) தலையீடு**: ஒருவர் பயிற்சி பெற்ற ஆற்றல் மூளையின் அமைப்பில் நினைவுப் பதிவுகள் அல்லது முத்திரைகள் ஏற்படுத்துவதனால் அது நினைவில் இருக்க ஏதுவாகிறது. ஆனால், ஒரே சமயத்தில் பல தூண்டுதல்கள் அல்லது தலையீடுகளின் காரணமாக ஒன்றின்மீது ஒன்று பதிவு ஏற்படும்பொழுது ஓர் அமைப்பு மற்றொன்றைக் கலைக்கலாம் அல்லது அழித்துவிடலாம். அதனால் மறதி ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாகச் சில மாணவர்கள், வகுப்பில் அன்றாடம் நடத்தும் பாடத்தை ஒழுங்காகப் படிக்காமல் தேர்வுக்கு முன்தினம் அனைத்தையும் ஒரே நேரத்தில் படிக்க முயலும்போது எதையும் நினைவிற்குக் கொண்டுவர இயலாத மறதிநிலை ஏற்படுகிறது. சென்கின்சும் தாலன் பேக்கும் (Jenkins and Dallenbach) தூங்கும்பொழுதும் விழித்துக்கொண்டுள்ள போதும் ஏற்படுகின்ற மறதிநிலையை ஆய்வதற்கான ஆய்வு ஒன்றை நடத்தி முடிவுகளை அறிவித்துள்ளனர். அச்சோதனையின்படி பொருளற்ற எழுத்துகளை யுடைய பட்டியலை (Non-Sense Syllables) ஒருகுழு வினரைக் காலையில் மனப்பாடம் செய்யச் சொல்லி அதன்பின் அக் குழுவினரை அன்றாட வேலைகளில் ஈடுபடுத்தினர். மற்றொரு குழுவினை இரவிலே தூங்குவதற்குமுன் மனப்பாடம் செய்யவைத்தனர். பின்பு இரவு ஒவ்வொரு இடைவெளியிலேயும் இவ்விரு குழுவினரையும் மனப்பாடம் செய்ததை எவ்வளவு பாகம் நினைவில் வைத்து இருக்கின்றனர் என்பதை ஆராய்ந்தபோது படித்தவுடன் தூக்கத்தில் இருந்த குழுவினரது நினைவு சிறப்பாக அமைந்திருந்தது. மற்ற குழுவினரது நினைவு பல சூழ்நிலைத் தூண்டுதல்களின் காரணமாகவும் தலையீட்டின் காரணமாகவும் பாதிக்கப்பட்டிருந்ததை அறிந்தனர். எனவே தலையீடு மறதிக்கு ஒரு காரணமாக இருக்கிறது.

**இ) தடை**: இது 1) பின் இயக்கத் தடை (Retroactive Inhibition), 2) முன் இயக்கத் தடை (Proactive Inhibition) என இருவகைப்படும்.

1) **பின் இயக்கத் தடை**: இத் தடையில் ஒருவர் இப்பொழுது கற்கும் ஆற்றல், அவர் முன்னர்க் கற்ற ஆற்றலுக்குத் தடை அளிக்கும் விளைவாகச் செயற்படுகிறது. அதாவது இப்பொழுது கற்பதன் விளைவாக இதற்கு முன்பாகக் கற்றவை மறக்க நேரிடலாம். உளவியலார் நடத்திய ஆய்வுகளின் மூலம் கண்டறிந்த உண்மையானது, ஒரு பொருளைக் கற்றவுடன் அதேபோன்ற வேறொரு பொருளைக் கற்க முயற்சி எடுத்துக்கொண்டால் மிகப் பெரிய அளவு பின்னியக்கத் தடை ஏற்படுகிறது என்பதாகும். அத்தொடர்பைக்கண்டறிய இராபின்சன் என்பவரால் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவரால் தடையை அளிக்கும் பொருட்களாகப் பயன்படுத்தப்பெற்றவை மூன்று வகைகளைச் சார்ந்தனவாகும். அவையாவன: 1) மிகவும் ஒப்புமை உள்ளவை, 2) சற்றே ஒப்புமை உள்ளவை, 3) மிகவும் வேறுபட்டவை. அம்மூன்று வகைகளில் சற்றே ஒற்றுமையுள்ள பொருட்களாலேயே பின்னியக்கத்தடை மிகப் பெரிய அளவில் ஏற்படுவதாகக் கண்டார்.

2) **முன் இயக்கத் தடை**: இது முன்பு கூறிய தடைக்கு மாறானது. இத்தடையில் முன்னே கற்ற பொருள், பின்னால் கற்கும் பொருளுக்குத் தடையாக அமைகிறது. போசுட்டுமேன் (Postman, 1969) நடத்திய ஆய்வின்படி ஒரு குழுவினை 36 தொடர்புடைய சொற்பட்டியலைச் சற்று இடைவெளிக்குப் பின் மனப்பாடம் செய்ய வைத்தனர். அக்குழுவினர் திரும்ப நினைவுபடுத்தும்பொழுது, எழுபது விழுக்காடு முதன்முதலில் மனப்பாடம் செய்த தொடர்புச்சொற்கள் நினைவில் இருந்தன. கடைசியாக மனப்பாடம் செய்தது சற்றும் நினைவிலில்லை. அதற்குக் காரணம் முன் இயக்கத்தடை.

II. **பிறழ்வு மறதி**: இம் மறதி ஏற்கெனவே விவரித்த காரணங்களால் ஏற்படுவதில்லை. இவ்வகையைச் சேர்ந்த எல்லா நிலைகளிலும் நினைவில் இருத்தல் (Retention) பெரும்பாலான அளவிற்கு நல்லமுறையில் இருக்கும். ஆனால், சில எதிர்பாராத காரணங்களினால் மீட்டறிதல் (Recall) தடைப்பட்டிருக்கும். இது மேடைஅச்சம், தன்னுணர்வு (Self-consciousness) ஆகியவற்றால் ஏற்படும் தடையைப் போன்றதன்று. இத்தகைய மறதியை இருவகையாகப் பிரிக்கலாம். அவை 1) வெளிப்புற ஏதுக்களால் ஏற்படும் மறதி (Exogenic) எனவும், 2) உள்ளார்ந்த ஏதுக்களால் ஏற்படும் மறதி (Endogenic) எனவும் இருவகைப்படும்.

1) **வெளிப்புற ஏதுக்களால் ஏற்படும் மறதி**: இத்தகைய மறதி புறக் காரணங்களால் ஏற்படுபவையாகும். சாதாரணமாக மூளைக்கு அதிர்ச்சி ஏற்படுவதனாலோ தீவிரமான காயம் ஏற்படுவதனாலோ அது நினைவு இயங்குமுறையைப் பாதிக்கிறது. ஆனால், பெரும்பாலும் இத்தகைய அதிர்ச்சியால் உண்டாகும் மறதி மீட்டறிதல் வகையைச் சார்ந்ததாகக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாகப் போர்க்காலங்களில் குண்டு அடிபட்டதனால் நினைவை இழந்து(Amnesia)பாதிக்கப்பட்டவர் பலர். இத்தகைய மறதி பெருமளவு நரம்பியலைச் சார்ந்ததாக இருப்பதனால் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டிய தேவை ஏற்படுகிறது. ஒரு சில நிலைகளில் உளவியல் அடிப்படையில் உணர்த்துதலும் (Re-education), மீண்டும் ஆற்றுப்படுத்தலும் (Re-orientation) தேவைப்படுகின்றன.

2) **உள்ளார்ந்த ஏதுக்கள்**: உள்ளார்ந்த ஏதுக்கள்

என்பன அகத்தேயிருந்து தோன்றுகிற காரணங்களால் எழுபவையாகும். குற்ற மனப்பான்மை (Guilt), வெட்கக்கேடு (Shame), மனமுறிவு (Frustration) ஆகிய உணர்ச்சிகளை அளிக்கின்ற சில அனுபவங்கள் நனவிலி மனத்தினால் (Unconscious mind) ஈர்க்கப்பட்டு ஒரு வினாடிக்குள் முழுமையாக மறக்கப்படுகின்றன. இத்தகைய மறதியை 'இயல்பு ஒடுக்குதல்' (Repression) என்று கூறுகின்றனர். இத்தகையோர் சற்றும் நினைவிற்குக் கொண்டுவர இயலாத நிலையிலிருப்பர். பிராய்டும் (Freud) மற்றும் சிலரும் இதை நினைவிற்குக் கொண்டுவரச் சில வழிகள் வகுத்துள்ளனர். அவற்றுள் 1) உளப்பகுப்பாய்வு (Psycho-analysis), 2) கனவுப் பகுப்பாய்வு (Dream analysis), 3) உறக்கம் போன்ற நிலையை உண்டாக்கும் வித்தை (Hypnosis), 4) புறத்தோற்ற முறைகளைப் பயன்படுத்துதல் (Use of Projective Test) முதலியவை முக்கியமான முறைகளாகும். இத்தகைய மறதி வேண்டுமென்றே மறக்கப்படுவதாகக் கருதப்படுகிறது.

**இடமாற்றத்துடன் ஏற்படும் நினைவிழப்புகள்:** இது ஒருவகைப் பிறழ்வு மறதியாகும். இத்தகைய மறதியால் ஒருவர் திடீரென்று தம்முணர்வு இழத்தல், அடையாளத்தை இழத்தல், முன்னைய நிலையைப் பற்றிய நினைவை இழத்தல் ஆகிய நிலையை அடைகிறார். இத்தகையோர் குறிப்பாகப் பெயர், குடும்பம், வீட்டு முகவரி, தங்களைப்பற்றிய விவரம் ஆகியவற்றை மறந்துவிடுகின்றனர். சிலர் இடம் பெயர்ந்து வேறிடம் சென்று முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை வாழ்வதுண்டு. சில காலத்திற்குப் பின்னர் ஏதோ ஒரு தீவிரத் தொந்தரவு அல்லது மெய்ப்பாட்டு அதிர்ச்சி (Emotional Shock) காரணமாகப் பழைய நிலையை அடைவதுண்டு. இத்தகைய கோளாறு பல்வேறு நிலைகளிலும் பல்வேறு வகைகளிலும் ஏற்படலாம். இவ்வியல்பின் மற்றொரு எளிய வகை தூக்கத்தில் நடத்தல் அல்லது துயில் நடை (Somnam-bulism) என்பதாகும். துயில்நடையின்போதும் துயில் நடைக்குப் பின்னும் என்னநடந்தது என்பதுகுறித்து நினைவுக்கு வருவதில்லை.

எனவே மறதி ஒரு செயல்மிக்க இயங்குமுறை. இதன் காரணமாகச் சிலசமயம் ஒரு நிகழ்ச்சியில் விவரங்கள் விட்டுவிடப்படுகின்றன; புதிய விவரங்கள் சேர்க்கப்படுகின்றன. இதுவே பொய்த் தகவல்கள் (Rumours) பரவுவதற்கும் காரணமாக அமைகிறது. பெ.டே.

**மறதி நோய்:** இது கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவு கூர்கையில் பாதிக்கும் நோயாகும். மறதி நோய் (Amnesia) ஏற்படப் பல காரணங்கள் உண்டு. மறதிநோய் மூளைக்கு விபத்து காரணமாகத் திடீர் அதிர்ச்சி ஏற்படுவதாலோ மூளையின் பகுதிகள் பாதிக்கப்படுவதாலோ ஏற்படுவதாகும். விபத்தைச் சார்ந்த அனுபவங்கள் நனவு இல்லாத நிலை அதிர்ச்சி (Traumatic) மறதிநோய் எனப்படும். விபத்து ஏற்படு முன் ஏற்பட்ட அனுபவங்கள் நினைவில் இல்லாமற் போவது மற்றொரு வகையான மறதிநோய். அதைப் பின்நிகழ்ச்சி (Retrograde) மறதிநோய் என்பர்.

முன்நிகழ்ச்சி மறதிநோய் மூளைப்பகுதியிலுள்ள இரத்தக்குழாய்கள் பாதிக்கப்படுவதால் ஏற்படுவதுண்டு. அதனால் கடந்தகால நிகழ்ச்சிகளுக்கு முழு மறதி ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாகப் பள்ளியில் படித்த நினைவோ, மணம் நடந்த நிகழ்ச்சிகளோ, தனக்குப் பல பிள்ளைகள் உண்டு என்பது போன்ற முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகளோ மறந்துவிடும். நாளடைவில், அந் நிகழ்ச்சிகளில் பாதி அளவோ முழு அளவோ நனவு பெறுபவரும் உண்டு.

விபத்து ஏற்பட்டபிறகு உண்டாகும் அனுபவங்களுக்கு நினைவோ மறதியோ ஏற்படும் நிலையை முன்நிகழ்ச்சி மறதிநோய்(Anterograde Amnesia) என்பர். இந்தநிலை மூளையில் சேதம் ஏற்படுவதனால் ஏற்படுகிறது. அதனால் மூளையின் சூழ்நிலைக்குத் தூண்டல்களை இயக்கும் நிலை பாதிக்கப்படுகிறது. போரில் ஈடுபடும் வீரர்கள் திடீர் விபத்தின் காரணமாகவோ, தம்முடன் போரில் ஈடுபட்டிருக்கும் தம் நண்பர்கள் குண்டால் தாக்கப்பட்டுக் கை கால்களை இழத்தல், இறத்தல் போன்றவற்றைப் பார்க்க நேர்ந்ததன் காரணமாகவோ அதிர்ச்சி ஏற்பட்டு மறதி நோய் ஏற்படுவதுண்டு.இவர்களிடம் மூளைக்குச் சேதம் ஏதும் இல்லாத நிலையிலும் மறதி நோய் உண்டாகிறது. காக்காய் வலிப்பு எனப்படும் நோயினால் பாதிக்கப்படுபவர்கள் உள்ளம் அப்போதைக்குக் கலக்க நிலையிலிருக்கும். அந்நிலையில் அன்றாட நடத்தைகளில் அவர்கள் ஈடுபடுவதுண்டு. அந்நோய் தாக்கும் போது ஒருசிலர் நோய் தாக்கும் முன்னும் தாக்கிய பின்னும் ஏற்பட்ட அனுபவங்களைமறப்பதுண்டு.

நரம்புத் தளர்ச்சி (Hysteria) நோயின் ஒருவகையான 'நினைவிழப்பு' (Fugue) எனப்படும் உளக் கோளாறினால் பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் யார், தங்களுக்கு என்ன பெயர், தங்கள் தாய் தந்தையர் யார், ஊர் என்ன என்பன போன்றவற்றை மறந்து வேற்றூருக்குச் சென்று புதுமனிதர்களாக வாழ்வது உண்டு. பிறகு திடீரென்று ஒருநாள் தூங்கி எழுந்தவுடன் பழைய நினைவுகள் வர,புது அனுபவங்கள் மறக்கப்படுகின்றன..இது ஒருவகையான மறதிநோய். மதுவகைகளை மிகுதியாக உள்கொள்வதனால் மூளையின் பகுதிகள் பாதிக்கப்பட்டு அதன்காரணமாக ஏற்படும் மறதிநோய் மற்றொரு வகையாகும். தா.ஏ.ச.

**துணை நூல்கள்:**

Coleman, J.E., Abnormal Psychology and Modern Life, Tata Pvt. Ltd., Bombay, 1976.

Shanmugan, T.E., Abnormal Psychology, Tata Mc-Graw - Hill & Co., New Delhi, 1985.

*மறு ஆய்வு:* எந்த நீதிபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோ அல்லது தீர்ப்பு வழங்கப் பட்டதோ அந்த நீதிபதி தம்முடைய உத்தரவையோ, தீர்ப்பையோ மறு பரிசீலனை செய்வதையே மறு ஆய்வு அல்லது மறுபரிசீலனை என்று உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு – 114 கூறுகிறது. எந்தச் சூழ்நிலையில் அவ்விதம் மறுஆய்வு செய்யலாம் என்பதையும் அது கூறுகின்றது. எவ்விதம் அதற் குரிய மனுச்செய்ய வேண்டும் என்பதை அச்சட்டத் தின் உத்தரவு 47-இன் உட்பிரிவுகள் கூறுகின்றன.

மறுஆய்விற்கு அவர் எந்தத் தீர்ப்பின் மேல் மறு ஆய்வு சேட்கிறாரோ, அதன் மீதோ உத்தரவின் மீதோ மேல்வழக்குப்(Appeal) போட்டிருக்கக் கூடாது. மேல் வழக்குத் தொடுப்பதற்கு நடைமுறைச் சட்டத் தில் வகை செய்யப்பட்டிருந்தால்கூட மேல்முறையீடு செய்யாமல் மறு ஆய்விற்கான மனுவைக் கொடுக் கலாம். தீர்ப்பையோ, உத்தரவையோ எதிர்த்து மேல்வழக்குச் செய்ய உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் வகை செய்யப்படாமல் இருக்க வேண் டும். அவ்விரு சூழ்நிலைகளிலும் பாதிக்கப்பட்டவர் மறுஆய்விற்கான மனுவை அளிக்கலாம். அந்த மனு வில் புதிதாகவும், முக்கியமானதாகவும் உள்ள செய்தியையோ, சாட்சியத்தையோ தான் கண்டு பிடித்ததின் காரணத்தைக் காட்டித் தீர்ப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கூற வேண்டும். உரிய கவனத்துடன் செயற்பட்டிருந்த போதிலும், தனக்குத் தெரியாதிருந்ததாலோ, அதைத் தக்க சமயத்தில் நீதிமன்றத்தில் கொடுக்க முடியாமற் போனதாலோ, தீர்ப்பையோ, உத்தரவையோ, மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று வேண்டலாம். தீர்ப்புரையோ, உத்தரவோ வழங்குமுன்னர் அதைத் தான் செய்ய முடியாமற் போனதற்குக் காரணமாக, (1) பிழை அல்லது சிலதவறு நடந்து விட்டது என்றோ, (2) அத்தகு பிழை அல்லது தவறு ஆவணத் தில் வெளிப்படையாகத் தெரிகின்றது என்றோ, (3) வேறு தக்க காரணங்களைக் காட்டியோ, பாதிக்கப் பட்டவர் மறுஆய்வின் மூலம், நீதிவழங்க வேண்டு மென்று வேண்டலாம். உரிமையியல் நடைமுறைச் சட்டம் உத்தரவு 47-விதி-1 இதற்கு வகை செய்திருக் கிறது. சிறுவழக்கு நீதிமன்றங்களும் (Court of Small Causes) சில சமயங்களில் உயர்நீதிமன்றத்திற்கு மேல் முடிவுக்கனுப்பி (Reference) மறுபரிசீலனை செய்யு மாறு வேண்டலாம். அதற்கும் பிரிவு 114-உரிமை யியல் நடைமுறைச் சட்டம் வகை செய்கிறது.

பாதிக்கப்பட்டவர் புதியதும், மிகவும் முக்கிய மானதுமான செய்தியையோ, சாட்சியத்தையோ கண்டுபிடித்தது போக எழுத்துப்பிழையோ, கணக்குப் பிழையோ அத்தீர்ப்பாணையில் வெளிப்படையாகக் காணப்பட்டால் அதுகுறித்து மறுஆய்வு செய்யவும் உத்தரவு 47 – பிரிவு-2 வகை செய்கிறது.

மறுபரிசீலனைக்காக விண்ணப்பம் செய்யும் மனு எம்முறையில் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் கூறுகிறது. மேற்படி உத்தரவின் பிரிவு 3 – அதன்படி மனுச் செய்வதற்கான அடிப்படைக் காரணங்களை (Grounds) முறைப்படி எண்ணிட்டுச் சுருக்கமாகக் கூறுவதோடு வழக்கறிஞர் கையெழுத்திட்டிருக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

மறுபரிசீலனைக்கு மனு எடுத்துக் கொள்ளப்பட் டால், எதிர்த்தரப்பினருக்கும் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அவர் தரப்பில் தீர்ப்புரை அல்லது உத் தரவு சரியானது என்று காரணகாரியங்கள் காட்டி வாதிடப்படும். மறுஆய்விற்காக மனுச் செய்தவர் தம்முடைய மனுவில் கூறப்பட்டிருக்கிற கூற்றை நீக்க மற மெய்ப்பித்தால் தம்முடைய தீர்ப்புரையையோ உத்தரவையோ திருத்தியோ மாற்றியோ கூறுவார் நீதிபதி. நீக்கமற மெய்ப்பிக்கவில்லையென்றால், மனு தள்ளுபடி செய்யப்படும். அதன் பின்னர் அதை எதிர்த்து மேல் வழக்குத் (Appeal) தொடர முடி யாது. ஆனால், சீராய்வு (Revision) செய்யுமாறு மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

தீர்ப்பை மறுஆய்வு செய்வதற்கு விண்ணப்பம் செய்யத் தரப்பட்டுள்ள காலக்கெடு ஒரு மாதமாகும். அதற்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும். அதுபற்றி 1963 – ஆம் ஆண்டு காலவரம்புச் சட்டம் – பிரிவு – 124 கூறுகிறது.

வருமான வரிச்சட்டத்தின் கீழ்ப் பிறப்பிக்கப் பட்ட உத்தரவுகளையோ, காப்பாளர் காப்பிலுள் ளோர் சட்டத்தின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு களையோ, குத்தகை குடக்கூலி ஆகியவற்றின் கட்டுப் பாட்டுச் சட்டத்தின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு களையோ, மறுஆய்வு செய்யுமாறு விண்ணப்பிக்க உரிமை அளிக்கப்படவில்லை. குற்றவியல் வழக்கு களின் தீர்ப்புகளை எதிர்த்து மறுஆய்வு செய்ய விண்ணப்பிக்க முடியாது. கீழமை நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் உத்தரவுகளையோ தீர்ப்பு களையோ மறுஆய்வு செய்ய விண்ணப்பிக்கலாம்.

பொருண்மை குறித்துத் தவறாகவோ பிழையா கவோ இருந்தால் மறுஆய்வு செய்யுமாறு விண்ணப் பிக்கலாம்.

அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்து, தவறான கருத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், அதை மாற்றி வழங்க மறு ஆய்விற்கு மனுப்போடலாம். அத்தீர்ப்பை வழங்கும் அதிகாரம் அந்த நீதிமன்றத்திற்கு இல்லை என்று மெய்ப்பித்தால் அத்தீர்ப்புரை நீக்கம் செய்யப்படும்.

சுருங்கக்கூறின் பிழை அல்லது தவறு பொருண்மை குறித்ததாகவோ சட்டத் தொடர்புடையதாகவோ இருந்தால் மறுஆய்விற்கான விண்ணப்பம் செய்து, உரிய தீர்வு பெற உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பி. 114 – உம், அதன் உத்தரவு 47 – இன் விதித்துறைகளும் வகைசெய்கின்றன. எச்.எம்.அ.

**மறு கடன்**: ஒரு மொழியில் உள்ள சொல்லை/கூறினை மற்றொரு மொழி கடன் பெற்று வழக்கில் இருக்கும் நிலையில், அதேசொல் அல்லது கூறு மீண்டும் மூல மொழியால் கடன் பெறப்படுமானால் அது மறுகடன் (Reborrowing) என்று மொழியியலாரால் குறிப்பிடப்படுகிறது. ஒரு காலத்தில் வடமொழி பல மொழிகளில் இருந்து சொற்களைக் கடன் பெற்றது. அவற்றுள் பல சொற்கள் திராவிட மொழி மூலத்தையும், சில சொற்கள் முண்டா மொழி மூலத்தையும் சார்ந்தவை. மிகப் பழங்காலத்தில் வடமொழி இவ்வாறு கடன் பெற்றுள்ளதென்றும் தென்னகத்துடன் தொடர்பு ஏற்பட்டவுடன் அக்கடன் வாங்கல் முறை முற்றிலுமாக நின்றுவிட்டது என்றும் பர்ரோ (1958) வலியுறுத்துகிறார். அக்காலக்கட்டத்தில் வட இந்தியப்பகுதிகளில் வாழ்ந்த திராவிட மொழிகளைப் பேசுவோரிடமிருந்து அச்சொற்கள் கடன் பெறப்பட்டன. அதே போல் தமிழில் இருந்தும் பல சொற்கள் அவ்வாறு கடன் பெறப்பட்டுள்ளன. மேலும், தென் திராவிட மொழிகளைப் பொறுத்த வரையில் வடமொழியாளர்கள் பொதுவாக ஒப்புக் கொள்வதை விட, அவற்றில் மிக அதிகமான திராவிட வேர்ச் சொற்களைக் காண முடியும். அந்தத் தென்திராவிட மொழி வேர்ச் சொற்களும், வட திராவிட மொழிச் சொற்களும் உறவுடையன என்று கூடச் சொல்லலாம். குறிப்பாக, வேதங்களிலும் வேதங்கட்குப் பிற்பட்ட காலத்து வடமொழி இலக்கியங்களிலும் காணப்படும் சில சொற்கள் திராவிட மொழிகளைச் சேர்ந்தவையாக இருப்பதைக் காணமுடிகிறது.

தமிழ் மொழியிலிருந்து, பண்பாட்டுக் கலப்புக் காரணமாகப் பிறமொழிகளுக்குச் சென்றுள்ள சொற்களை அறிஞர்கள் பலர் ஆராய்ந்துள்ளனர். அவ்வகை ஆராய்ச்சியில் பர்ரோ (Burrow) முக்கியமான இடத்தைப் பெறுகின்றார். முண்டா மொழிகளே திராவிட மொழிகளின் மிகப் பழைய அண்டை மொழிகளாகும். தமிழிலிருந்து வந்தவை என ஐயுறத்தக்க சில சொற்கள் அவற்றில் உண்டு. ‘மயூரா’ என்ற வடமொழிச் சொல் ‘மரக்’ என்ற முண்டா மொழிச் சொல்லிலிருந்து வந்தது என்பர். ஆனால், அச்சொல் திராவிட மொழிகளில் காணப்படும் சொற்களுக்கு மிக நெருக்கமாக உள்ளது எனக் கருதப்படுகிறது. ஆசுத்திரேலிய, ஆசிய வடிவத்தில் கூட ‘ரக்’ என்பது விகுதியாக உள்ளது; எனவே ‘ம’ என்பது அங்கு வேர்ச் சொல்லாகிறது. திராவிட மொழிகளில் ‘மயில்’ அல்லது ‘மஞ்ஞை’ என்பதன் வேர் ‘மா’ அல்லது ‘மை’ என்பதாகும். அதன் பொருள் ‘கருப்பு’ அல்லது ‘நீலம்’ என்பதாகும். மயில் அல்லது மஞ்ஞை என்னும் சொல் திராவிட மொழிகளிலிருந்து முண்டா மொழிக்குப் போயிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ‘முரள’ என்ற முண்டா மொழிச் சொல்லிலிருந்து ‘கேரள’ என்ற சொல் திராவிட மொழிகளுக்கு வந்ததாகக் கூறுவர். ‘மு’ என்னும் முன்னொட்டுக்குப் பதில் ‘கே’ என்னும் முன்னொட்டு வந்தது என்பர். ‘கேரள’ என்ற சொல் திராவிட மொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்டதாயிருக்கக் கூடும். ‘கேரள’ என்னும் சொல்லில் உள்ள ‘கே’ என்பதற்குப் பதில் ‘ம’ அல்லது ‘மு’ என்ற முண்டா மொழி முன் ஒட்டுச் சேர்ந்திருக்க வேண்டும்.

வடமொழிச் சொற்கள் பலவற்றை நேரடியாகத் தமிழ் வேர்ச் சொற்களிலிருந்து வந்தன எனக் காட்ட முடியாவிட்டாலும் திராவிட வேர்ச்சொற்களிலிருந்து வந்தவை எனக் காட்ட முடியும் என்று பர்ரோ சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, ‘மயில்’ என்ற தமிழ்ச் சொல்லை வடமொழி கடன் பெற்று ‘மயூரா’ என்று மொழிப் பயன்பாட்டில் வழங்கி வந்தது எனலாம். அச்சொல்லைத் தமிழ் மொழி மறுகடன் பெற்று ‘மயூரா’ என்றே வழக்கில் வழங்கி வருகிறது.

தமிழில் உள்ள ‘ஏலம்’ என்ற சொல்லை வடமொழி கடன் பெற்று ‘ஏலா’ என்று வழங்கி வந்தது. இன்று அச்சொல்லானது தமிழ்க் கிளைமொழிகள் சிலவற்றில் ‘ஏலா’ என்று மறுகடன் பெற்று வழங்கி வருகிறது.

அதே போன்று ‘கமலம்’ என்ற தமிழ்ச் சொல்லை வடமொழி கடன் பெற்றுக் ‘கோமளம்’ என்று வழங்கி வருகிறது. அச்சொல்லைத் தமிழ் மொழி வடமொழியிலிருந்து மறுகடன் பெற்றுக் ‘கோமளம்’ என்றே இன்றும் மொழிப் பயன்பாட்டில் வழங்கி வருகிறது. அதே நிலையினை மீன > மீனம் > மீன், அரவு > சர்பம் > சர்பம் போன்ற சொற்களின் பயன்பாட்டிலும் நன்கு காணலாம். அச்சொற்கள் அனைத்துமே தமிழ் மொழியால் மறுகடன்

பெறப்பட்டு இன்று பரவலாகப் பயன்படுவதைக் காணலாம்.

அவ்வாறு மறுகடன் என்பது வடமொழியில் மட்டும் அல்லாமல் ஆங்கில மொழியிலும் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இந்தியாவிற்கு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வந்த ஆங்கிலேயர்கள் பல பொருட்களைக் கண்டனர். அவற்றிற்கு ஆங்கிலத்தில் சொற்கள் கிடையா. குறிப்பாக, இந்திய நாணயங்கள், அளவைகள், மரக்கட்டைகள் இந்தியப் போக்குவரத்துச் சாதனங்கள், புதிய உணவுப் பொருட்கள், விந்தையான உயிரினங்கள் போன்றவற்றைச் சொல்லலாம். எனவே, தமிழிலிருந்து அவற்றை அவர்கள் கடன் வாங்க வேண்டியதாயிற்று. அவ்வாறு கடன் பெற்ற சொற்களை மீண்டும் தமிழ் மொழி மறுகடன் பெற்றுப் பயன்படுத்தி வருகிறது.

மேலை நாட்டு மொழிகளில் நாவளை 'டகர' மெய்கள் இல்லை. அவ்வொலியானது உச்சரிப்பில் 'ரகர' மெய்யின் உச்சரிப்பை ஒட்டி இருப்பதால் அப்படியே எழுதப்படுகிறது. சான்றாக, தூத்துக்குடி (tu:ttukkuṭi) > (Tuticorin).

இன்று தமிழில் 'தூத்துக்கொரின்' (Tuticorin) என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இதே போன்று காசு (Ka:cu) என்ற தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் 'கேசு' (Cash) என்று கடன் பெற்று மீண்டும் தமிழில் 'காசு' (Cash) என்று மொழிப் பயன்பாட்டில் வழங்கிவருகிறது. பந்தல் (Pantal) என்ற சொல் ஆங்கிலத்தில் பந்தல் (Pandal) என்றே கடன் பெறப்படுகிறது. அதே சொல்லை மீண்டும் தமிழில் உள்ள கிளைமொழிகள் சில மறுகடன் பெற்றுப் பண்டல் (Pandal) என்று பயன்படுத்தி வருவதையும் காணலாம்.

இது போன்ற மறுகடன் நடைபெறுவதற்கு மேல் நிலைத் தாக்கம் ஒரு காரணமாக அமைகிறது.

வே.த.

**மறுகால் தலை,** என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங் கோட்டையிலிருந்து வடகிழக்கே ஏறத்தாழ 17 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு சிற்றூர். இவ்வூரில் பூவினுடையார் மலை என ஒரு மலை உள்ளது. அம்மலையில் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட சிறு கோயில்கள் சில உள்ளன. அம்மலையின் கிழக்குப் பக்கத்தில் இயற்கையான குகை ஒன்று உள்ளது. அக்குகை ஏறத்தாழ 18 மீட்டர் நீளமும் 3 மீட்டர் உயரமும் கொண்டதாகும்.

அங்குச் சமண முனிவர்களுக்காகப் பாறையில் செதுக்கப் பெற்ற ஏழு கல் படுக்கைகள் இருக்கின்றன. அக்குகையின் முகப்பில் பழந்தமிழில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. பெரிய எழுத்துகளில் அக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு எழுத்தும் 30 முதல் 38 செ.மீ. வரை உயரம் உள்ளது.

தொன்மையான பல்லவர் காசுகளிலும் பல்லவர் செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டுள்ள சிங்கம் போன்ற சிற்பம் குகையில் செதுக்கப்பட்டுள்ளது. 'வெண்காஸிபன் கொடுபித கல் கஞ்சணம்' என்பது அங்குள்ள கல்வெட்டின் வாசகமாகும். பழங்காலத்தில் எகர ஏகாரங்களும் ஒகர ஓகாரங்களும் ஒரே மாதிரி எழுதப்பெற்றன. எகர ஒகரங்கள் குறிலைக் குறிக்கமெய்போல் புள்ளி பெறும் என்பது தொல்காப்பிய இலக்கண விதியாகும். அம்மாதிரியே உயிர்மெய் எழுத்துகளும் புள்ளி பெற்றுக் குறிலைக் குறித்தன. அதற்கேற்ப இங்கு 'வே' என்ற முதல் எழுத்து புள்ளி பெற்று வெ என்று ஒலி பெறுமாறு எழுதப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் வெண் கண்ணனார் (அகம். 130, 152), வெண் கொற்றனார் (குறு.86), வெண்பூதனார் (குறு.83) போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. அதுபோல் வெண் காஸிபன் என்ற பெயரையுடைய ஒருவர் சமண முனிவர்களுக்காகக் கல் படுக்கைகளை வெட்டிக் கொடுத்தார் என்ற பொருள் உடையது அக்கல்வெட்டு. நான்காம் எழுத்து மட்டும் பிராகிருத எழுத்தாகும். மற்ற எழுத்துகள் அனைத்தும் பழந்தமிழ் எழுத்துகளே. அவ்வெழுத்துகளைப் பிராமி என்றும் குறிப்பிடுவர்.

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலராக இருந்த எல்.ஏ. கெமைடு என்பவர் அந்தக் கல்வெட்டை 1906 - ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். பழந்தமிழ்க் கல்வெட்டு வரிசையில் அக்கல்வெட்டு இரண்டாவதாகக் கண்டு பிடிக்கப்பட்டதாகும்.

செ.இரா.

**மறுத்தல்:** சிக்மண்டு பிராய்டு என்பவரால் 20 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உளப்பாகுபாட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

உளப் பாகு பாட்டின் முக்கிய அமிசமானது தனியாளின் கவலையைக் குறைத்து, அவனுக்கு உண்டாகக்கூடிய நரம்புவழி நோய்களிலிருந்து, நனவிலி நிலையில் (Unconscious) தற்காப்பு வழிமுறைகளைக் கையாளுவதன் மூலம் அவனுடைய கவலைகளுக்கு விடுதலை காணும் முறையாகும்.

தற்காப்பு வழியமைப்புகளின் எண்ணிக்கை மிக அதிகம். எனினும் அவற்றில் முக்கியமான சில ஈடு செய்தல் (Compensation), ஒன்றுதல் (Indetification)

எதிர்வினை அமைப்பு (Reaction Formation), அறிவார்ந்த விளக்கம் (Rationalization), புறத்தெழும் அகக்காட்சி (Projection), தனித்து விலகியிருத்தல் (Seclusiveness), மறுத்தல் (Denial), எதிர்மறை (Negativism) என்பனவாகும்.

மேற்கண்ட தற்காப்பு வழிமுறைகளில் ஒன்றானது மறுத்தல் என்னும் தற்காப்பு வழிமுறையாகும்.

மறுத்தல் என்னும் நிலை ஒருவன் தன்னை உண்மையின் கசப்பான பகுதியினை அறிந்து கொள்ள அனுமதிக்காத நிலையாகும். பொதுவாக மக்கள் எதிர்மறையான உணர்வுகளைத் தமக்குள் புலன்காண மறுக்கும்போது மறுத்தல் நிலை பரவலாக ஏற்படுகிறது என நம்பப்படுகிறது (Taguiri Burner & Blake, 1958). மரணம் மக்களைப் பயமுறுத்தும்போது மறுத்தல்நிலை ஏற்படுகிறது. சான்றாக மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கும் குழந்தையின் பெற்றோர்கள் மரணம் என்பது உறுதி என்பதை மருத்துவ அடிப்படையாக அறிந்தும், தேறுதல் கடினமென்பதை அறிந்தும் குழந்தையின் உண்மைநிலையை உணர மறுக்கும் நிலை மறுத்தல் எனலாம். மறுத்தல் என்பது பாதுகாப்புப் புலனுக்கும், அன்புநிலைக்கும் இடர் வரும்போது ஏற்படுகிறது.

தற்காப்பு வழியமைப்புகளில் மறுத்தல் முக்கியமான வழியாகக் கருதப்படுகிறது. உண்மைநிலையை மறுத்து மந்திரங்களினாலும் மாயங்களினாலும் உண்மை நிலையை மாற்றலாம் என்னும் கருத்து இவ்விருபதாம் நூற்றாண்டிலும்மக்களிடையே பரவலாகப் பரவியிருக்கிறது. இவை மறுத்தல் தற்காப்புக்கு அன்றாட வாழ்க்கையில் மக்களிடையே உள்ள நம்பிக்கைகளுக்குச் சான்றுகளாகும். மூடநம்பிக்கைகள், அதிட்டம், சோதிடத்தில் நம்பிக்கைவைத்தல் ஆகியவற்றின் மூலம் இயற்கையாக நடக்கப்போகும் விளைவுகளைக் குறைக்கலாம் என்பது போன்ற பாதுகாப்பான நிலையை அடைகிறார்கள். இவையனைத்தும் மறுத்தல் என்னும் தற்காப்பு வழி முறையில் அடங்கும்.

எஸ்.உ.

**மறுதரப்பினர்:** நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவழக்குகள் எந்த நாளில்எந்தநேரத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதனை நீதிமன்றம் வழக்கின் தரப்பினருக்கு அறிவிக்கவேண்டும். அந்த அறிவிப்பினைப் பெற்ற தரப்பாளர்கள் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்காகக் குறிக்கப்பட்ட நாளில், நேரத்தில் நீதிமன்றத்தில் தோன்ற வேண்டும். வழக்கைத் தொடுத்த வாதி வாராமல் போனால் நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது தள்ளிவிடும். அவர் வந்திருந்து எதிர்த்தரப்பாளர்கள் வாராமற்போனால் அவர்களைக் கேட்காமல் வழக்கினை விசாரிக்க நீதிபதி உத்தரவு ஒன்றினை இடுவார். அதனை மறுதரப்பிலா உத்தரவு என்று (Exparte order) கூறுவர். அந்த உத்தரவுக்குப் பின் குறிப்பிட்ட மற்றொரு நாளில் ஒருதரப்பினை (வாதியை) மட்டும் விசாரித்துத் தீர்ப்புரை ஒன்றினை நீதிமன்றம் வழங்கும். அதனை மறுதரப்பிலாத் தீர்ப்புரை என்று கூறுவர். அத்தீர்ப்புரையின் பேரில் வரையப்படும் தீர்ப்பாணை, மறுதரப்பிலாத் தீர்ப்பாணை (Exparte Decree) எனப்படும். மறுதரப்பிலா என்பது பிரதிவாதி வாராமல் வழங்கப்படும் உத்தரவையோ, எதிர்மனுதாரர் வாராமல் உத்தரவிடப்படுவதையோதான் குறிக்கும். மாறாக வாதியோ, மனுதாரரோ, வாராமல் இருந்தால், வழக்கோ மனுவோ தள்ளுபடி செய்யப்படும். அது 'எதிர்த்தரப்பிலா' என்று கூறப்படுவதில்லை. எனவே, 'மறுதரப்பிலா' 'எதிர்த்தரப்பிலா' என்பது பிரதிவாதியோ எதிர் மனுதாரரோ வாராமல் இருந்ததால் பிறப்பிக்கப் பட்ட உத்தரவு என்பதையே குறிக்கும். உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் உத்தரவு 9-விதி-6இது பற்றிக் கூறுகிறது.

பிரதிவாதி எதிர்த்தரப்பிலா உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அன்று தக்க காரணங்களின் நிமித்தம் நீதிமன்றத்தில் வந்திருக்க முடியாமற் போயிற்று என்றிருக்குமானால், அக்காரணங்களைக் கூறித் தமக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கம் செய்ய வேண்டி மனு, தாக்கல் செய்யலாம். அதற்கு, எதிர்த்தரபிலாத் தீர்ப்பாணை வழங்குவதற்கு முன்னர் மனுச் செய்ய வேண்டும். எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பாணை வழங்கப்பட்டதிலிருந்து ஒரு மாதக் காலக் கெடுவுக்குள்ளாக எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பாணையை நீக்கம் செய்யத் தக்க காரணங்களின் அடிப்படையில் மனுச் செய்யலாம். ஒரு மாதத்திற்குள்ளாக அவ்விதம் அந்தத் தீர்ப்பாணையை நீக்கம் செய்யவேண்டி (Setting Aside Decree Exparte) மனுச் செய்தால், எதிர்த்தரப்பினருக்கு (Opposite Party) அறிவிப்புக் கொடுத்து, இருதரப்பாரையும் கேட்டு முந்திய உத்தரவு நீக்கம் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பாணை வழங்கி ஒரு மாத காலம் சென்று விட்டதென்றால், அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்த ஒரு மாதத்திற்கு மேற்சென்ற காலதாமதமான ஒவ்வொரு நாளுக்கும் போதிய காரணத்தைக் காட்டிக் காலதாமதத்தை மன்னித்து விடவேண்டி (Excusing the Delay) மனுக் கொடுத்து அந்த மனுவைப்பற்றி, எதிர்த்தரப்பினருக்கு அறிவிப்புக் கொடுத்து, இருதரப்பினரையும் கேட்டு,

ஏற்றுக் கொள்ளத் தக்க காரணங்கள் இருக்கு மானால், கால தாமதம் மன்னித்து விடப்படும். அவ் விதம் காலதாமதத்தை மன்னித்து விட்ட பின்னரே, எதிர்த்தரப்பிலா உத்தரவையும், தீர்ப்பாணையையும் நீக்கம் செய்யவேண்டிய மனுவைக் கோப்பில் எடுத்து, இருதரப்பினரையும் கேட்ட பின்னர்த் தக்க காரணங் களிருப்பின் அந்த உத்தரவும், தீர்ப்பாணையும் நீக்கம் செய்யப்பட்டு, மூலவழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். சில சமயங்களில் எதிர்த் தரப்பினருக்குச் செலவுத் தொகையோ, குறிப்பிட்ட தொகையோ கொடுக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதித்தும் உத்தரவை நீக்கம் செய்யலாம். அது பற்றிய விதித்துறைகள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் உத்தரவு 9 – விதி 13-இல் கூறப்பட்டுள்ளன.

எதிர்வாதியோ, எதிர்மனுதாரரோ பலர் இருந்து, அதில் ஒருவர்மட்டிலும், நீதிமன்ற அழைப்பைப் பெற்றும் வாராதிருந்தால், அவரைப் பொறுத்த மட்டிலும் எதிர்த்தரபபிலா உத்தரவு பிறப்பிக்கப்படும். மற்றவர்களைப் பொறுத்த மட்டில வழக்குத் தொடர்ந்து நடைபெறும். அவர் விரும்பி னால் அந்த உத்தரவை நீக்கம் செய்த பின்னர்த் தாமும் அந்த வழக்கு நடவடிக்கைகளில் பங்கேற்றுக் கொள்ளலாம்.

எதிர்வாதி முதல் தடவையாக அழைப்பாணை யின் மீது நீதிமன்றத்தில் வந்திருந்து, பின்னர் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் பொழுது, நீதிபதியின் விருப்பத்தைப் பொறுத்து வேறொரு நாளுக்கு வழக்கை ஒத்தி வைக்கவோ, எதிர்த்தரப்பிலா உத்தரவு, உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டத்தின் உத்தரவு 9 – இன் கீழ், பிறப்பிக்கவோ செய்யலாம். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுத் தரப்பினர்கள் விசாரிக்கப்பட்ட பின்னரோ, வாதியோ அவருடைய சாட்சிகளோ விசாரிக்கப்பட்ட பின்னரோ, பிரதி வாதியோ அவ ருடைய வழக்கறிஞரோ வரத் தவறினால், நீதிபதிக் குச் சரியென்று பட்டால், பிரதிவாதி வந்திருப்பதாகக் கருதப்பட்டு (உண்மையில் வாராதிருந்த போதி லும்) வழக்கின் சிக்கல்களை ஆராய்ந்து தீர்ப்பு வழங் கலாம். அவ்விதம் உத்தரவு வழங்கும் அதிகாரத்தை உரிமையியல் நடைமுறைச் சட்டம் உத்தரவு 17-உட் பிரிவு 2-வகை செய்கிறது. அவ்விதம் வழங்கப்படும் உத்தரவு எதிர்த்தரப்பிலா உத்தரவு ஆகாது. தரப் பினர் வரவில்லையாயினும், அவர் வந்திருப்பதாகக் கருதப்பட்டு ஆராய்ந்து வழங்கப்பட்ட தீர்ப்பு ஆகும். எனவே, அதனை எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பு என்று கூறுதற்கில்லை.

குத்தகை, வாடகைக்கட்டுப்பாட்டுச் சட்டம் போன்ற சில சட்டங்கள் தம்முள்ளே எல்லா வகை முறைகளையும் அடக்கி வைத்திருப்பதால் எதிர் மனுதாரர் வரவில்லையானால், அதில் கூறப்பட்டது போல், எதிர்த்தரப்பிலா உத்தரவு பிறப்பிக்கலாம். அதை நீக்கம் செய்ய வேண்டும் என்றால் அதில் கூறப்பட்டுள்ளது போல் ஒரு மாத காலக் கெடுவுக்குள் தகுந்த காரணம் காட்டி எதிர்த்தரப்பிலா உத்தரவை நீக்கம் செய்யவேண்டி மனுச் செய்யலாம். ஒரு மாதக் காலக்கெடு முடிந்த பின்னர், கால தாம தத்தை மன்னிக்க வேண்டி மனுச் செய்யவும், எதிர்த் தரப்பிலா உத்தரவை நீக்கம் செய்யவும் வேண்டி மனு அளிக்கலாம். அதற்கு அச்சட்டத்தின் விதி 13-வகை செய்கிறது. எனவே, கால தாமதத்தை மன்னிக்கவேண்டிக் காலவரம்புச் சட்டம் பிரிவு 5 – இன் கீழ் (S.5 of the Limitation Act) மனுச் செய்ய வேண்டியதில்லை. எச்சட்டத்திலும் கால தாமதத்திற்கும், எதிர்த்தரப்பிலா உத்தரவை நீக்கம் செய்யவும் தனியாக வகை முறைகள் சொல்லப் பட்டிருந்தால் அதன் கீழ் மனுச் செய்தலே சரியான தாகும்.

எந்த மனிதனுக்கும் வாய்ப்புக் கொடுத்து அவன் கூற்றைக் கேட்காமல் அவனுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கக்கூடாது என்பது சட்டக் கொள்கை. 'எதிரியை விசாரித்து முடிவெடு' 'எதிர்த்தரப்பைக் கேட்ட பின்னர் நீதிவழங்கு' என்பது பழமொழி (Aude Alteram Partem). எதிரிக்கு வாய்ப்புக் கொடுத்து அவன் கூற்றைக் கேட்டறிந்த பின்னரே, அவனுக்குத் தண்டனையளித்தோ, இழப்பு ஏற்படுத்தியோ, கண்டித்தோ தீர்ப்பு வழங்குவதே முறையானது. ஆனால், அவன் வேண்டுமென்றே வாராமல் இருக் கவோ, காரணமின்றி வேண்டு மென்றே அழைப் பினைப் பெற்ற பின்னரும் வாரா திருக்கவோ செய் தால், 'எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பு' வழங்குவது சட்டப்படி முறையானது ஆகும். 'எவ்விதம் எதி ரியைக் கேட்காமல் தீர்ப்பு அளிப்பது இயற்கை நியதிக்கு ஒத்து வாராததோ, அதே போன்று எதிரி அறிவிப்புக் கிடைத்த பின்னர் வேண்டு மென்றே வாராதிருந்தால் எதிர்த்தரப்பிலா உத்தரவு பிறப்பிக்காமல் இருப்பதும் நீதியாகாது. எனவே, வழங்குதலில் மறுதரப்பிலா உத்தரவுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. எச்.எம்.அ.

**துணை நூல்:**

**Krishnamoorthi, V.N.,** The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act 1960, C. Sitaraman & Co., Madras, 1960.

*மறுநிகழ்வுக் கல்வி* என்ற புதிய கருத்து, கல்வியியலில் தலையாயதாக இப்போது கருதப்பட்டு வருகிறது. கல்வி என்பது மனிதனின் வாழ்நாள் முழு

வதும் கற்கப்படும் ஒரு தொடர் நடவடிக்கையே. ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்துடன் அது முடிவடைவ தில்லை. ஆகவே அது தொடர் கல்வி (Continuing Education) என்றும், தொடர்ந்து நிகழ்ந்து கொண் டிருக்கும் கல்வி (Continuous Education) என்றும் கூறப்படுகிறது. கல்வியின் இன்றியமையா நோக்கம் ஒருவனின் ஒருங்கிணைந்த கற்றல் (Organised Learning) முறை அவன் தன் இளமைக்காலத்தோடு முற் றுப் பெறாமல் தொடர்ந்து நிகழக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். ஏனெனில், கல்வி மக்க ளைச் சமூகத்தில் வாழ ஆயத்தம் செய்வதோடு வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததாகவும் அமைகின்றது.

மறுநிகழ்வுக் கல்வி (Recurrent Education) என் பது பள்ளிப் படிப்பை முடித்தவர்களுக்குத் தேவைப் படும் கல்வியை, கல்வி நிறுவனங்களின் மூலம் மறு படியும் பல புதிய வாய்ப்புகளில் திறமையுடன் கற் பிப்பதாகும். இக்கல்வி முறை வயது வந்தோர் திட் டச் செயலாக்கத்தை ஓரளவு ஒத்திருக்கின்றது.

**மறுநிகழ்வுக் கல்வியின் தேவை:** முதலாவது, அறிவுவளர்ச்சி நாளுக்கு நாள் பெருகி வருமிந்நாளில் அறிவைப் புதுமைப்படுத்திக் கொள்ளுதல்இன்றியமை யாததாகும். எடுத்துக்காட்டாகத் தொடக்கக் காலத் தில் கற்ற இயற்பியல்,வேதியியல், உயிரியல்,பொறியி யல், பொருளியல், கணக்கியல், கல்வி, வரலாற்றுக் கருத்துகள் ஆகியவை இக்காலத்திற்கு ஏற்றனவாக இல்லை. ஆகவே, அந்தந்தத் துறைகளைச் சேர்ந்த வர்களின் அறிவைப் புதுமைப்படுத்துதல் இன்றியமை யாததாகிறது. மேலை நாடுகளில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் பல உயர்நிலைஅதிகாரிகளும், மேலாளர் களும் கூட நிருவாகப் பயிற்சிப்பள்ளிகளில் பயிலுகின் றனர். அவர்கள் முதிர்ந்த வயதிலுங்கூட புதிய ஆராய்ச்சி முறைகள், திட்டம் பகுத்தாய்தல், கணிப் பொறி முறைகளைக் கற்றல் ஆகியவற்றைச் செய் கின்றனர்.

இரண்டாவது, பணியிலிருக்கும் பல இலட்சம் பேர் பள்ளிப் பருவத்தில் கற்றுக் கொள்ள வேண்டிய அடிப்படைக் கல்வியைக் கூட அவர்களின் குடும்பத் தின் வறுமையினால் கற்றுக் கொள்ள இயலாத நிலையில் உள்ளனர். அதன் விளைவாகக் குறைந்த ஊதியமும், சமூகத்தில் குறைந்த மதிப்பும் ஏற்படு கின்றன. அதோடு அவர்களுக்கென்று அவர்கள் நிறை வான வாழ்வை ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை. ஆகவே, பள்ளிப் பருவத்தில் கல்வியறிவு பெறத் தவ றியவர்களுக்கென்று கல்வி கற்க ஒருதனி ஏற்பாடு செய்தல் இன்றியமையாததாகிறது.

இன்றுள்ள கல்வி முறையை நோக்கினால், மேலை நாட்டுக் கல்வி முறை புகுத்தப்பட்டபின் படித்து மேலாண்மை செலுத்துபவர்களுக்கும் பொது மக் களுக்கும் இடையே நீண்ட இடைவெளி உள்ளதைக் காணலாம். அந்த இடைவெளியால் கல்வியறிவு பெற்ற மக்கள் என்றும் கல்வியறிவு பெறாத மக்கள் என்றும் இரண்டு பிரிவுகள் சமுதாயத்தில் ஏற்பட் டன. மறு நிகழ்வுக் கல்விமுறை முறைசார்ந்த கல்வி பெறாத மக்களின் மேன்மைக்கான பயிற்சியை அளிக் கின்றது. சுருங்கக் கூறின், மறுநிகழ்வுக் கல்வி, கல்வி யறிவு இல்லாத வயது வந்தோர், பணியிலுள்ளோர், அனைத்து வயதிலும் உள்ளோர் ஆகிய மூன்று வகை யினருக்கும் தேவைப்படுகிறது.

மறுநிகழ்வுக் கல்வியின் அடிப்படைக் கருத்து பின்வருமாறு: கல்வி, கல்லூரிப் படிப்புடன் நின்று விடுவதில்லை; கல்வி கற்க வயது வரம்பு கிடை யாது; அனைத்தையும் அறிந்தவர் இல்லை; வளா கத்தில் முழுநேரமும் தங்கிப் படிக்க இயலாமை என் பது கற்றலுக்குத் தடையில்லை; கற்றலின் இன்றிய மையாமையை வயது வந்தோர் உணர்தல் வேண்டும்.

**மறுநிகழ்வுக் கல்வி புகுத்தப்படுவதற்கான துறை கள்:** பணியிடைப் பயிற்சி மூலம் தொழில் நுட்பம் கற்றோர், நிருவாகத் திறமை பெற்றோர், தொழிற் சாலையிலும் அலுவலகத்திலும் பணிசெய்வோர், தொழில் அனுபவம் வாய்ந்தோர், வேலையில்லா இளைஞர் ஆகியோரின் தொழில் திறமைகளையும், தகுதிகளையும் மேலும் வளர்த்தல்; நகரத்திலுள்ள குடிசையிலும் கிராமப்பகுதியிலும் வாழும் மாணவர் களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும், வசதி குறைந் தவர்களுக்கும் நலிவடைந்தோருக்கும் மறுநிகழ்வுக் கல்வி மூலம் கல்வி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து கல் வியறிவை மேம்படுத்துதல்; போட்டித் தேர்வுக்கும், நுழைவுத் தேர்வுக்கும் ஆயத்தப் படுத்த பல மாதிரித் தேர்வுகளை நடத்த ஏற்பாடு செய்தல்; தன் வேலை வாய்ப்பிற்கும், தற்சார்பு நிலையை அடைவதற்கும் பல கல்வி நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவதன் மூலம் ஊக்குவித்தல்; சமுதாய வளர்ச்சிக்கும், குறிப்பாக நலிவடைந்தோருக்கும் தேவையின் அடிப்படையி லான கல்வி நிகழ்ச்சிகளை ஒருமுகப்படுத்திப் பயிற்றுவித்தல்; மக்கள் தொகைக் கல்வி, சட்டஅறிவு மக்களுக்கான அறிவியல் நிகழ்ச்சிகள், சுற்றுப்புறச் சூழற்கல்வி, கிராம வளர்ச்சி, அமைதிக் கல்வி (Peace Education) போன்ற துறைகளில் போதிய பயிற்சியையும் விரிவாக்கக் கல்வியையும் ஏற்படுத்து தல் ஆகியவை மறுநிகழ்வுக் கல்வி புகுத்துவதற்கான துறைகள் ஆகும். மறுநிகழ்வுக் கல்வி முறைகள் பின் வருமாறு பலவகைப்படும்.

**பெண்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி:** பெண்களுக் காக அளிக்கப்படும் பெண்கள் மேம்பாட்டு மறு

நிகழ்வுக் கல்வியில், பலவாறான துறைகளில் (Areas), எடுத்துக்காட்டாகச் சமூக வளர்ச்சி (Social Development), செய்முறையுடன் கூடிய மனையியல் கல்வி (Practical Home Science-சத்துணவு, உடல் நல வாழ்வு, குழந்தை வளர்ச்சி முதலியன), பொருளாதார வளர்ச்சி, சமகாலத்திய சமூகப்பண்பாட்டு விழிப்புணர்வு ஆகிய துறைகளில், வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

**ஆதி திராவிடர், பழங்குடியினர் பின்தங்கியவர் ஆகியோருக்கான மறுநிகழ்வுக் கல்வி:** மறுநிகழ்வுக் கல்வியின் மூலம் மேற்கூறிய வகுப்பினருக்குப் போட்டித்தேர்வு, நுழைவுத் தேர்வு ஆகியவற்றிற்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்த வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. பணியிலிருப்போருக்குத் தொழிற்கல்வியில் பயிற்சியும், கல்வியும் அளித்தலின் மூலம் அவர்களின் வேலைத் திறமையை மிகுதியாக்க இயலும். சமூக நல அமைச்சகமும் இதன் இன்றியமையாமையை உணர்ந்து ஏராளமான நலத் திட்டங்களை இப்பிரிவினருக்காகச் செயற்படுத்தி வருகின்றது.

**பணியாளர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி:** பணியாளர்களுக்கு மறுநிகழ்வுக்கல்வி புகட்டுதலைஇரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1) எழுதப்படிக்கத் தெரியாத பணியாளர்களும், ஓரளவு படிக்கத் தெரிந்த பணியாளர்களும், சமுதாயத்தில் உள்ள பணியாளர்களுள் பாதிக்கு மேல் இந்தப் பிரிவினுள் உள்ளனர். எடுத்துக்காட்டாகத் தொழில் நுட்பத்தில் ஓரளவு பயிற்சி பெற்ற பணியாளர்கள், வீடு கட்டும் தொழில் செய்வோர், தச்சு வேலை செய்வோர், முடிதிருத்துவோர், பேருந்து ஓட்டுநர்கள், போக்குவரத்துப் பணியாளர்கள், மருத்துவப் பிரிவிலுள்ளோர், கடைநிலை ஊழியர்கள் போன்றோர் இப்பிரிவில் அடங்குவர். அவர்களின் கல்வி அறிவை வளர்க்க எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. அது குறித்துத் தகுந்த ஆய்வுகள் நடத்தி ஒவ்வொருவகையான பணியாளர்களின் தேவைகளையும் அறிந்து, அவர்களுக்கு மறுநிகழ்வுக் கல்வி அளிப்பதன் மூலம் அவர்களின் சமூகம், பொருளாதாரம், பண்பாடு ஆகிய வளர்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

2) எழுதப்படிக்கத் தெரிந்த பணியாளர்கள். அனைத்துவகை ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், தொழிற் கல்வி பெற்றவர்கள், நிருவாகத்தினர் ஆகியோரின் தொழிலுக்குத் தேவையான புதிய திறமைகளை அறிந்து, பயிற்சி வகுப்புகளை மறுநிகழ்வுக் கல்வி மூலம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

**அலுவலர், தொழில் செய்வோருக்கான மறுநிகழ்வுக் கல்வி:** வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்பத்திற்கேற்ப, அலுவலர், தொழில் செய்வோர் ஆகியோரின் தொழில் திறமைகளை வளர்ப்பதன் மூலம், அவர்கள் ஊக்கம் பெற்றுப் புதிய கண்டுபிடிப்புகளைச் சமுதாயத்தில் நிகழ்த்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தலாம்.

**பள்ளிப் படிப்பை இடையிலேயே நிறுத்தியவர்களுக்கும் வேலையில்லா இளைஞர்களுக்கும் மறுநிகழ்வுக் கல்வி:** பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களுக்குக் கல்வி புகட்டுவதன் மூலம் அவர்களைத் தேசிய வளர்ச்சியில் பங்கு கொள்ளச் செய்யலாம். வேலையில்லா இளைஞர்களின் மனப்போக்குகளை அறிந்து அவர்கள் தாமாகத் தொழில் தொடங்கத் தேவையான தொழில் திறமைகளைப் பயிற்றுவிக்கலாம். நல்ல திட்டமிடப்பட்ட அறிவுரைகள் மூலம், தொழில் தொடங்குவதற்கான வழியையும் தொழில் திறமைகளையும் வளர்த்துக் கொள்ளுவதற்கான தகுந்த பயிற்சி வகுப்புகளை நடத்தி, அவர்களை ஊக்குவிக்கலாம்.

**நிறுவனங்களின் பொறுப்பில் உள்ள செயல் அலுவலர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி:** அரசாங்கம், தனியார் நிறுவனம், சேவை நிறுவனம் ஆகியவற்றின் பொறுப்பில் உள்ள செயல் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தால் அவர்கள் நிருவாகத்தில் செம்மையாகச் செயற்படுவதோடு தொழிலுக்கான திறமையையும் நன்கு வளர்த்துக்கொள்வர்.

**பிழைப்புக்காக இடம் பெயருவோருக்கான மறுநிகழ்வுக் கல்வி:** பிழைப்புக்காக இடம் பெயருவோரும், குடிசை வாழ் மக்களும், நலிவடைந்தோரும் சமுதாயத்தில் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். அவர்களின் வாழ்வு மிகவும் இரங்கத்தக்க நிலையில் உள்ளது. அறியாமையால் இடைத்தரகர்களின் மூலம் அவர்கள் சுரண்டப்படுகின்றனர். அவர்களின் அறியாமையை நீக்கத் தனிக்கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு அடிப்படைக் கல்வி வழங்குவதோடு, உடல்நல மேன்மை, தொழிலாளர் சட்டங்கள், சுற்றுச்சூழல், பொருளாதார வாய்ப்புகள் சமுதாயவளர்ச்சிக்கான நலன்கள் ஆகியவற்றில் அவர்கள் நிறைந்த அறிவைப் பெற வழிசெய்ய வேண்டும்.

**அனைத்து மக்களுக்கான சமுதாய வளர்ச்சிக் கல்வி:** புதிய நகர்ப்புற வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளால் ஒவ்வொரு தனி மனிதனும் பெற்றோர் நிலையிலும், உறவினர் நிலையிலும், நகரவாசி நிலையிலும், நாட்டின் குடிமகன் என்ற நிலையிலும், உலகத்தில் தான் ஓர் அங்கத்தினன் என்ற நிலையிலும் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதற்கு மேல் இயற்கைச் சூழலைப் பாதுகாத்

தலும் இன்றியமையாததாகும். தனிச் சிறப்புக் கல்வித் திட்டத்தின் மூலம் பயிற்சி அளித்து, அவர்களின் அறிவையும் திறமையையும் போதிய அளவு வளர்த்துச் சமுதாய மேம்பாட்டிற்கு உதவச் செய்யலாம். எடுத்துக்காட்டாகக் குழந்தைக்கல்வி மேம்பாட்டுத் திட்டம்,சுற்றுப்புறச் சூழல்கல்வி, சட்டக் கல்வி, தேசிய ஒருமைப்பாடு, உலகளாவிய சகோதரத்துவம் ஆகியவற்றைப் பற்றிய சிறந்த கல்வியறிவை அளித்தல் இக்கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு கல்லூரியும், பல்கலைக்கழகமும் சமுதாய வளர்ச்சிக்குத் தேவைப்படும் துறைகளைத் தெரிந்தெடுத்து, அவற்றில் தகுந்த பயிற்சி அளித்து மக்களின் அறியாமையைப் போக்க முன்வர வேண்டும். கே.ஆ.

*மறுபிறப்பு*: நிலைபேறுடைய, அணு அளவினதெனக் கருதப்படும் உயிர், தான் செய்த வினைகளின் பயன்களைத் துய்த்துத் தீர்க்க ஒருடம்பிலிருந்து மற்றோர் உடம்பிற் புகுவதே மறுபிறப்பு என்று குறிப்பிடப்படுகிறது. மறுபிறப்பு, வினைக் கோட்பாட்டின் தொடர் விளைவு ஆகும். பிறப்பிலேயே காணப்படும் வேறுபட்ட நிலைகளின் காரணம் பழவினைகளே ஆகும். பழவினைகள் பழைய பிறப்புகளை உள்ளடக்கியவை. செயல்கள் அனைத்தும் ஒரு பிறவியிலேயே பயன்களைத் தருவதில்லை. எனவே, வினைப்பயன்களின் மிகுதியை நுகர்தற் பொருட்டு மற்றொரு பிறப்பு இன்றியமையாததாகும். அவ்வகையில்தான் ஒவ்வோர் உயிரும் தொடர்ச்சியான பிறப்பு இறப்புகளைப் பெறுகிறது. எவ்வாறு ஒருவன் பழுதுபட்ட உடைகளைக் களைந்து புதியனவற்றை அணிகிறானோ அவ்வாறே உயிரும் பழுதடைந்த உடம்பை அகற்றிவிட்டுப் புதிய உடலில் புகுகிறது. அவ்வாறு உயிரானது தொடர்ந்து பல உடல்களில் புகுவது சம்சாரம் அல்லது வாழ்க்கைச் சகடை என்று சொல்லப்படும். அனைத்து வினைச் சுற்றுகளும் நீங்கி உயிர் மீண்டும் இறைவனை உணர்கின்ற வீடு பேற்றினை அடையும் வரை இம்மறுபிறப்புகள் தொடரும் என்பது பல சமயங்களும் ஏற்கின்ற கருத்தாகும்.

உயிரானது நிலை பேறுடையது ஆதலின் அது அழிவதில்லை. உயிர் தங்கியுள்ள உடல் மட்டுமே இறப்பின்பொழுது அழிகிறது. ஓர் உடலைவிட்டு மற்றொரு உடலில் புகுவதை உயிரானது தன் மனம், நடத்தை ஆகியவற்றின் அடிப்படையான நுண்ணிய உடம்பினால் நடத்திக் கொள்கிறது. உயிர், மறுபிறப்பின் பொழுது பெறுகின்ற உடலும், அவ்வுடலில் நடத்தவுள்ள வாழ்க்கையும், அது தான் செய்துள்ள பழவினைகளின்படி அமையும். அதன்படி நல்வினைப் பயனுடைய உயிர் நல்ல பிறப்பையும், தீவினைப் பயனுடைய உயிர் தீய பிறப்பையும் பெறுகின்றன. பிருகதாரண்யக உபநிடதம் ‘வினையின் தன்மை, அறிவின்நிலை ஆகியவற்றின் அடிப்படையிலேயே உயிர்கள் புழுவிலிருந்து மனிதநிலை வரையுள்ள பலவகை இருப்புகளில் புகுகின்றன’ என்று குறிப்பிடுகிறது. அவ்வகையில் இறப்பு என்பது புதிய வாழ்க்கைக்கு, புதிய பிறப்புக்கு ஒரு வழி எனப்படுகிறது.

பிறப்பு இறப்புச் சுழற்சியானது, உயிர் பழவினைகளை முழுமையாகத் துய்த்துத் தீர்த்த பின்னரும், சமயங்களில் சொல்லப்பட்டுள்ள வகையில் நெறிகளைப் பின்பற்றி அச்சமயங்கள் குறிப்பிடும் வீடுபேற்று நிலையினை அடைகின்ற வரைக்கும் தொடரும். வீடுபேற்று நிலையை உயிர் எய்திய வுடன் அது தன் நிலைபேற்றியல்பை உணர்ந்துவிடும்; மீண்டும் பிறப்பு இறப்புச் சூழலுக்குத் திரும்பாது. பி.ஆர்.ந.

**துணை நூல்கள்:**

**லெட்சுமணன், கி.**, இந்திய தத்துவஞானம், பழனியப்பா பிரதர்சு, சென்னை, 1980.

**Mahadevan**, T.M.P., Out Lines of Hinduism, Chetna, Bombay, 1977.

*மறுமதிப்பீடு-பணம்*: மறுமதிப்பீடு என்னும் சொற்றொடர் ஏற்கெனவே உள்ள மதிப்பை மீண்டும் மறுதடவை மதிப்பிடுதல் என்ற விளக்கத்தைத் தருகிறது. பணத்தின் மறுமதிப்பீடு (Revaluation of Money) என்று குறிப்பிடும் போது, அது பணத்திற்கு உள்ளமதிப்பை மீண்டும் மதிப்பிடுதல் என்று பொருள்படும். பணத்தின் மதிப்பு அதன் அளிப்பாலும் அதற்கான தேவையாலும் நிருணயமாகிறது. பணத்திற்கு இருவித மதிப்புகள் உள்ளன. முதலாவது, உள்நாட்டில் உள்ள மதிப்பு. பணம் உள்நாட்டில் பண்டங்களையும் பணிகளையும் வாங்கப் பெரிதும் பயன்படுகிறது; மேலும் பல பணிகளையும் ஆற்றுகிறது. எனவே, பணத்தின் வாங்கும் திறனை (Purchasing Power) பணத்தின் உள்நாட்டுமதிப்பு என்பர். அம் மதிப்புபிற நாடுகளிலிருந்து பண்டங்களையும் பணிகளையும்பெறுவதற்கும் பயன்படுகிறது. அதனைப் பன்னாட்டுப் பரிமாற்ற மதிப்பு என்பர். ஒவ்வொரு நாடும் பலதரப்பட்ட பண்டங்களையும், பணிகளையும் பிறநாடுகளிலிருந்து பெறுகிறது; பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. அப்பண்டம்,பணிஆகியவற்றின் பரிமாற்ற அடிப்படையில் ஒரு நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு நிலை மாற்றமடைகிறது. அயல் வாணிகச் செலுத்து நிலை இருப்பை (Balance of Trade) உள்ளிட்ட அயல்நாட்டுச் செலுத்து

நிலை இருப்பில் (Balance of Payments) ஏற்படும மாற்றங்களினால் ஒரு நாட்டிற்கு அயல் நாட்டுச் செலுத்து நிலையில் துணையான நிலை (Favourable Balance of Payments) அல்லது கேடான நிலை (Unfavourable Balance of Payments) தோன்றலாம். அந் நிலையைச் சமன் செய்யப் பல முறைகள் மேற்கொள்ளப்படுவது இயல்பு. அவற்றில் பணத்தின் அந்நியச் செலாவணி மதிப்பைக் குறைத்தல் (Devaluation of Currency) என்பதும், பணத்தின் அந்நியச் செலாவணி மதிப்பை மிகுதிப்படுத்தல் (Revaluation of Currency) என்பதும் குறிப்பிடப்படுகின்றன. பணத்தின் அந்நியச் செலாவணி மதிப்பை மிகுதிப் படுத்துவதையே பணத்தின் மதிப்பீடு என்னும் சொற்றொடர் குறிப்பிடுகிறது.

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் கேடான நிலை இருந்தால், குறிப்பிட்டதொரு நாடு பிற நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய பணத்தின் அளவு மிகுதியாக இருக்கிறது என்பது பொருள். அந்நிலையைத் தவிர்க்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் பணத்தின் அந்நியச் செலாவணி மதிப்பைக் குறைத்தல் என்பதும் ஒன்று. அதாவது அந்நியச் செலாவணி விகிதம் மிகுதியாகிறது. அந்நிலை அங்காடியில் உள்ள தேவை, அளிப்பின் அடிப்படையில் தோன்றும் போது பரிமாற்ற மதிப்புக்குறைவு (Exchange Depreciation) என்றும், அரசினால் கட்டாயமாகத் தோற்றுவிக்கப்படும்போது பரிமாற்ற மதிப்பைக் குறைத்தல் (Devaluation) என்றும் குறிப்பிடப்படுகிறது. அந்நிலையால் இறக்குமதிப் பண்டங்களுக்கான விலைகளில் ஏற்றமும் ஏற்றுமதிப் பண்டங்களுக்கான விலைகளில் சரிவும் ஏற்பட்டு இறக்குமதி குறைந்து ஏற்றுமதி மிகுதியாகும் நிலை தோன்றலாம். அதற்கு நேர் எதிர்மாறான நிலைகளைப் பணத்தின்மறு மதிப்பீடு (Revaluation) ஏற்படுத்தும். என்.எசு.பா.

**துணை நூல்:**

Mithani, D.M., Money, Banking & International Bank, Himalaya Publishing House, Bombay, 1984.

**மறு விற்பனை விலை நிலைப்பாடு:** உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு விலையை நிருணயம் செய்யும் முறையானது விற்பனை நடவடிக்கைகளில் மிக முக்கிய அமிசமாகும். விலை நிருணயம் செய்யும் முறை, உற்பத்தி செய்பவர்களுக்கும், மொத்த வணிகர்களுக்கும், சில்லறை வணிகர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் மிக இன்றியமையாததாகும். விலை நிருணய முறை, விற்பனையைப் பெருக்குவதற்கு மட்டுமல்லாமல் நாட்டின் ஒரு பொருளாதார வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. விலையை நிருணயம் செய்யும் முறைகள் பல உள்ளன. அவற்றுள் 'மறு விற்பனை விலை நிலைப் படுத்துதல்' (Resale Price Maintenance) என்னும் முறையும் ஒன்றாகும். அதன்படி, விற்பனையாளர்கள், பொருட்களை உற்பத்தியாளர்கள் குறிக்கும் விலைக்குத்தான் விற்கவேண்டும். இந்த முறையினால் நன்மைகளும் உள்ளன; அதே நேரத்தில் பல தீமைகளும் உள்ளன. எனவே, ஒருசிலர் இதை ஆதரிக்கிறார்கள்; வேறுசிலர் இதை எதிர்க்கிறார்கள். நன்மைகளைவிடத் தீமைகள் அதிகமாயிருப்பதால் அரசாங்கம் முற்றுரிமை வணிகக் கட்டுப்பாட்டு முறைச் சட்டத்தின்மூலம் இம்முறையைத் தடை செய்கிறது.

**இலக்கணங்கள்:** மறு விற்பனை விலை நிலைப் படுத்துதலைப் பற்றிப் பல பொருளியல் வல்லுநர்கள் பலவிதமான இலக்கணங்களைத் தந்துள்ளார்கள். அவர்களுள் ஒருவரின் கூற்றுப்படி 'மறு விற்பனை விலை நிலைப்பாடு' என்பது உற்பத்தியாளர்கள் பொருட்களைத் தாங்கள் நிருணயம் செய்த விலையிலேயே நுகர்வோருக்கு விற்க இடைத் தரகர்களைக் கட்டாயப்படுத்தும் முறையாகும். இந்திய அரசால் இயற்றப்பட்டுள்ள முற்றுரிமைக் கட்டுப்பாடு வணிக முறைச் சட்டம், 1969 (பிரிவு 33, உட்பிரிவு 2)-இன் படி மறு விற்பனை விலை நிலைப்படுத்தலானது உற்பத்தியாளர்களுக்கும், விற்பனை மூலம் பொருட்களைப் பெறும் விநியோகிப்பாளர்களுக்கும் இடையே விலையைப் பற்றிய ஓர் ஒப்பந்தமாகும். அதன்படி விநியோகிப்பாளர்கள், உற்பத்தியாளர்களால் நிருணயம் செய்யப்பட்ட விலையிலிருந்து குறைத்துப் பொருட்களை விற்பனை செய்யக்கூடாது. ஏனென்றால் உற்பத்தியாளர்கள் தங்களின் பொருட்களுக்கு விலை நிருணயம் செய்யும்போது பொருட்களின் அடக்கச் செலவுகள், விநியோகிப்பாளர்களின் விற்பனைச் செலவுகள், அவர்களின் ஆதாயப் பங்கு, சில்லறை வணிகர்களின் போட்டி நிலைமை, பொருட்களின் விற்பனை அளவு (Turn Over) ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக ஒரு பொருளுக்கு உற்பத்தியாளரின் செலவு உரூ. 10/-, அவரது ஆதாயப் பங்கு உரூ. 3/-, வணிகர்களின் விநியோகச் செலவு உரூ. 5/-, அவர்களின் ஆதாயப் பங்கு உரூ. 2/-, ஆக மொத்த அடக்கம் உரூ. 20/-. அதன்படி உற்பத்தியாளர்கள் பொருளின் விலையை உரூ. 20/-ஆகக் குறியிடுவார்கள். விநியோகிப்பாளர்களும் குறியிடப்பட்ட உரூ. 20/-க்குத்தான் விற்கவேண்டும்; ஆனால், அதிலிருந்து குறைத்து விற்கக்கூடாது.

**செயற்படுத்தும் முறை**: இசுடில், கண்டிப்பு(Still and Cundiff )ஆகியோர்கூற்றின்படி மறு விற்பனை விலை நிலைப்படுத்துதலை இரண்டு வழிகளில் செயற்படுத்த லாம். அவற்றில் ஒன்றின்படி உற்பத்தியாளர்கள் தங்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட வணிகர் களைப் பட்டியலில் குறிப்பிட்ட விலையில் பொருட் களை விற்கக் கேட்டுக்கொள்ளலாம். இரண்டாம் வழியின்படி அரசு, சட்டத்தின் மூலம் ஒரு விலைக் கொள்கையை அமல் செய்யலாம். அவற்றுள் முதலில் கூறப்பட்ட முறையைப் பேரளவிலான உற்பத்தி யாளர்கள் ஆதரிக்கிறார்கள். ஏனென்றால், அக் கொள்கையைச் செயற்படுத்த ஒத்துழைப்புக் கொடுக் கும் விநியோகிப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள் ளது.

**முக்கிய இயல்புகள்**: 1) இம்முறை பொருட்களுக்கு நிலையான விலை இருப்பதற்கு உதவுகிறது. 2) இதனால் வணிகச் சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவினர் பாதுகாக்கப்படுகிறார்கள். 3) நுகர்வோர் நியாயமான விலையில் பொருட்களைப் பெற இது வழிவகுக்கிறது. குறிப்பாகப் பணவீக்கக் காலத்தில் இம் முறை நுகர்வோருக்கு ஒரு நற்பேறாகும். 4) ஒரேமாதிரியான பொருட்களைக் கையாளுகின்ற உற்பத்தியாளர்களிடையே ஏற்படுகின்ற கழுத்தறுப் புப் போட்டியை இது தவிர்க்கிறது. 5) நியாயமான வணிகக் கொள்கைகளுக்கு இது வழிவகுக்கிறது.

**ஆய்வுக் கருத்துகள்**: மறு விற்பனை விலை நிலைப்பாடு பற்றிப் பலவிதமான கருத்துகள் நிலவு கின்றன. சிறிய சில்லறை வணிகர்களும், பெரிய சில்லறை வணிகர்களும் தங்களுக்கிடையே ஏற்படு கின்ற கழுத்தறுப்புப் போட்டியைத் தவிர்ப்பதாலும் நிருணயம் செய்யப்பட்ட விலையானது தங்களின் அதிக அளவிலான நடைமுறைச் செலவுகளை (Cost of Operation) ஈடு செய்வதாலும் இம்முறையை ஆதரிக்கிறார்கள். ஆனால், புதிய சில்லறை வணிகர் களும் திறமையற்ற சில்லறை வணிகர்களும் இதை ஆதரிக்கவில்லை.

மேலும், மொத்த வணிகர்களில் சிலர் அதிக அளவுப் பொருட்களை விற்பனை செய்யும் நோக்கத் தோடு விலையைக் குறைக்க இயலாத காரணத்தால் இதை எதிர்க்கிறார்கள்.

குறைந்த விற்பனைச் செலவுகளைக் கொண்ட வணிகர்கள் அதன் பலனை நுகர்வோருக்கு அளிக்க இந்த முறை தடையாகயிருப்பதால் இதைப் பொருளி யல் நிபுணர்கள் எதிர்க்கிறார்கள். மேலும், அவர் களின் கூற்றுப்படி இந்த முறையானது அதிக அளவு விநியோகச் செலவுகளைக் கொண்ட வணிகர்கள் தொடர்ந்து வளர வழிவகுக்கிறது.

இறுதியாக, இம் முறையானது போட்டியைத் தவிர்ப்பதாலும், நிலையான விலைக்கு வழி வகுப்ப தாலும் பொருள் உற்பத்தியாளர்கள் இம்முறையை ஆதரிக்கிறார்கள். மேலும், விலை நிலைப்படுத்துதல் மூலம் எதிர்கால வணிகக் கணிப்பிற்கு இம்முறை உதவி செய்வதால் இதை உற்பத்தியாளர்களும் வரவேற்கிறார்கள்.

மறு விற்பனை விலை நிலைப்பாட்டிலுள்ள குறை பாடுகள் சமுதாயத்திலுள்ள நுகர்வோருக்கு விலையு யர்வு போன்ற பல பாதிப்புகளை ஏற்படுத்துவதால் முற்றுரிமைக் குழுவானது இந்த முறையைத் தடை செய்யவேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது. அதன்படி முற்றுரிமை கட்டுப்படுத்தப்பட்ட வணிக முறைச் சட்டம்(Monopolies Restrictive Trade Practice Act, 1969), இந்த முறையை அதன் 39-வது பிரி வின்படி தடை செய்கிறது. ஆனால், இம் முறையைப் பின்பற்ற விரும்பும் உற்பத்தியாளர்கள் முறைப்படி அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற விரும்புபவர்கள் பல நிபந்தனைகளுக்குட்பட்ட வராவர். அதிலும் குறிப்பாக அனுமதி பெற்ற உற் பத்தியாளர்கள் ஒரு விலையைக் குறிப்பிடலாம். ஆனால், அதைத்தான் பின்பற்ற வேண்டும் என்று விநியோகிப்போர்களைக் கட்டாயப்படுத்த முடி யாது. வி.சி.

**மறைஞான சம்பந்தர்**: இவர் பெண்ணாகடத் தில் தோன்றியவர் ஆதலின், கடந்தை மறைஞான சம்பந்தர் எனவும் வழங்கப் பெற்றார். இவர் மெய் கண்ட சந்தான பரம்பரையில் இரண்டாமவராகிய அருணந்திசிவாசாரியாரின் மாணவர் ஆவார். இவர் சிறந்த அனுபவஞானி. இவர் நூல் எதுவும் இயற் றினார் எனத் தெரியவில்லை எனப் பலர் கூறுவர். சதமணிக்கோவை என்ற நூலை இயற்றினார் என ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். இவர் மாணவர்கள் உமாபதி சிவாசாரியாரும் மச்சுச் செட்டியார் என்ற அருள் நமச்சிவாயருமாவர். உமாபதி சிவம் பதினான் காம் நூற்றாண்டினராதலின் இவரும் அக்காலத் தவரே எனக் கொள்ளல் தகும். இவர் சாமவேதத் திற்குரிய பார்ப்பன வகுப்பில் பராசர கோத்திரத்தில் பிறந்தவர். வேதம், ஆகமங்களில் சிறந்து விளங்கி யமையால் இவருக்கு மறைஞானசம்பந்தர் எனப் பெயர் ஏற்படலாயிற்று. இவர் தம் கடைசிக் காலத் தில் சிதம்பரத்தில் திருக்களாஞ்சேரி என்னும் இடத்தை அடைந்து தங்கி நடராசரை வணங்கிக் கொண்டிருந்தார். ஒரு நாள் நடராசருக்கு வழிபாடி யற்றத் தில்லை மூவாயிரவருள் ஒருவராய உமாபதி

சிவம் என்ற தீட்சிதர் பல்லக்கில், பலர் பகல் தீவட்டி பிடித்து முன்னே செல்ல மிகுந்த ஆடம்பரத்துடன் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தார். அதனை வீதியில் ஒரு திண்ணையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மறைஞான சம்பந்தர் 'பட்ட கட்டையில் பகற் குருடு செல்கிறது' என்று கூறினார். அதைச் செவியுற்ற உமாபதியார் பக்குவம் வாய்க்கப் பெற்றமையால் அறிவு விளக்கம் பெற்றுப் பல்லக்கிலிருந்து கீழே குதித்து மறைஞான சம்பந்தர் கால்களில் விழுந்து வணங்கித் தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். பட்ட கட்டை என்பதால் பல்லக்கையும் பகற் குருடு என்பதால் பகலில் தீவட்டி பிடித்துச் சென்றதையும் குறிப்பாய்ப் புலப்படுத்திய மறைஞான சம்பந்தர் உமாபதியாரை உடனே தம் சீடராக ஏற்றுக் கொள்ளவில்லை; பல சோதனைகளை நடத்தினார். யாவற்றிலும் உமாபதியார் மறைஞான சம்பந்தரை விடாது பற்றிக்கொண்டே யிருந்தார். ஒரு சமயம் மறைஞான சம்பந்தர் சிதம்பரம் வீதியில் பாவு தோய்வதற்காக வைத்திருந்த கஞ்சியைத் தமக்குப் பருகக் கையிலூற்றுமாறு அங்குள்ள கைக்கோள மரபைச் சார்ந்த அம்மையாரிடம் வேண்டினார். அப்பெண்மணியும் கஞ்சியைக் கையிலூற்ற அது முழங்கை வழியாகச் சிறிது கீழே சிந்தியது. அவ்வாறு சிந்திய கஞ்சியை உமாபதிசிவம் ஏற்றுக் குடித்தாராம். பின்னரே தம் சீடரின் பக்குவ முதிர்ச்சி கண்டு அவருக்கு உபதேசம் செய்து ஆட்கொண்டதாக வரலாறு கூறுகிறது. உமாபதி சிவாசாரியார் மெய்கண்ட நூல்கள் பதினான்கில் சித்தாந்த அட்டகம் எனக் கூறும் எட்டு நூல்களை இயற்றியுள்ளாரா தலின் சீடரைக் கொணடே குருவின் பெருமையை ஊகித்தறியலாம். இவர் ஆவணி மாதம் உத்திர நன்னாளில் முக்தியடைந்தார். இவர் சமாதி திருக்களாஞ்சேரியில் இப்பொழுதும் உள்ளது. திருக்களாஞ் செடியுடைய மகாதேவர் கோயிலும் இவர் சமாதி அருகில் உள்ளது. இப்போது இவர் சமாதி திருவாவடுதுறை ஆதீன ஆட்சிக்குள் வழிபாடு முதலியன நடத்தப் பெற்றுச் சிறந்து விளங்குகிறது. இரா.ச.

மறைஞான தேசிகர் என்பவர் சீர்காழிப் பகுதியைச் சார்ந்தவர். பார்ப்பன மரபினர். கண்ணுடைய வள்ளல்கள் அறுபத்து நால்வருள் இவர் ஆளவந்தார் பரம்பரையைச் சார்ந்தவர் என்று பெரியோர்கள் கூறுவர். இவரைக் காழி மறைஞான தேசிகர் என்றும் மறைஞான சம்பந்தர் என்றும் குறிப்பிடுவர். இவர் 'பரமத திமிர பானு' என்னும் நூலை இயற்றியவர்; தமிழ் இலக்கணம், இலக்கியங்களில் துறைபோயவர்; வடமொழியிலும் சிறந்த வல்லுநர். இவர் 'பதி,பசு, பாசத்தொகை' என்னும் நூலுக்கு உரை எழுதியிருக்கிறார். மேலும், அருணந்தி சிவாசாரியார் இயற்றிய சிறந்த சைவ சித்தாந்த சாத்திரமாகிய சிவஞான சித்தியாருக்கு மறைஞான தேசிகர் உரை இயற்றியுள்ளார். இத்தேசிகர் உரை காண்டிகை உரையாகும். தருக்க பரிபாடையிலிருந்தும் வேறு பல அளவை நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டிச் சிறப்புற எழுதியிருக்கிறார். இவர் காலம் கி.பி.16 – ஆம் நூற்றாண்டென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சிவஞான சித்தியார் உரையாசிரியர்களுள் இவரே காலத்தால் முற்பட்ட உரையாசிரியர் என்பது தெரிகிறது. இரா.ச.

மறைமலையடிகள், '20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற புலவர்' என்று கா.சு. பிள்ளை அவர்களால் சிறப்பிக்கப் பெற்றவர். தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ்நாட்டிற்கும்இவர் செய்த தொண்டுகள் மிகப் பல. பிற மொழிக் கலப்பால் தமிழ்மொழி அடைந்த கேடுகளைக் களையத் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் இவரே. இவர் இந்தி மொழியைப் புகுத்தக் கண்டு எதிர்த்த ஏந்தல்; சைவ சமயத்தின் மாண்பை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நிலைநாட்டிய மேலோர்; 'துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்து' தமிழ் மொழியில் நூல்கள் பல எழுதிய பேரறிஞர்; ஆராய்ச்சித்திறம் வல்ல அறிஞர்; சீர்திருத்த எண்ணம் கொண்ட செம்மல்; தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லுநர். இவர் வாழ்க்கை வரலாறு 20-ஆம் நூற்றாண்டுத் தமிழக வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது.

வரலாறு: வேதாசலம் என்ற இயற்பெயருடைய மறைமலையடிகள் நாகப்பட்டினத்துக்கு அருகில் உள்ள காடம்பாடி என்ற சிற்றூரில் 15.7.1876-இல் சொக்கநாதப் பிள்ளைக்கும் சின்னம்மாவிற்கும் மகனாகப் பிறந்தார். இவரது 8-ஆம் அகவையிலேயே தந்தையார் இறந்து விட்டதால், மதுரை நாயகம்பிள்ளை என்பவரின் அரவணைப்பில் இவர் வளர்ந்தார். நாகையில் வெசுலியன் மிசன் உயர்நிலைப் பள்ளியில் இவர் நான்காம் படிவம் வரையில் படித்தார்; பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, வெ.நாராயண சாமிப் பிள்ளையிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்ற இவர், 20 அகவைக்குள்ளேயே எண்ணற்ற தமிழ் நூல்களை மனப்பாடம் செய்தார்: இளமைக் காலத்திலேயே'திராவிட மந்திரி','நீலலோசனி', 'பாசுகர ஞானோதயம்', 'இந்து மதாபிமானி','சச்சன இதழ்' முதலிய இதழ்களில் கட்டுரைகள் எழுதினார்; செ.எம். நல்லசாமிப்பிள்ளை நடத்திய 'சித்தாந்ததீபிகை' என்ற தமிழ் இதழுக்கு கி.பி.1897–ஆம் ஆண்டு இதழாசிரியராக விளங்கினார்; சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் கி.பி.1898-ஆம் ஆண்டில் தமிழாசிரியராகச் சேர்ந்தார்; 'ஞானசாகரம்' என்ற இதழை 1902-இல்



மறைமலையடிகள்

தொடங்கினார். இவர் சிறப்பையறிந்த பாண்டித்துரை தேவர் இவரை மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராக 1904-இல் அமர்த்தினார். 'சைவ சித்தாந்த மகாசமாசம்' என்ற சமய அமைப்பு இவரால் 1905-இல் நிறுவப்பட்டது. இவர் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பதவியிலிருந்து 1911-இல் விலகினார்; சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் 'பொது நிலைக் கழகம்' என்ற அமைப்பை ஏற்படுத்திக் காவி உடை அணியும் வழக்கத்தை மேற்கொண்டார். இவர் 1913-இல் வடநாட்டிற்கும் 1914-இல் கொழும்பிற்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்; தனித்தமிழில் 1916 – ஆம் ஆண்டு முதல் நாட்டம் கொண்டு, அதனை ஓர் இயக்கமாகவே வளர்க்கப் பாடுபட்டார்; யாழ்ப்பாணத்தில் 1921-இல் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். சென்னை மரக்கறி உணவுச்சங்க ஆண்டு விழாவில் 1928-இல் உருக்குமணி அருண்டேல் சொற்பொழிவாற்ற, இவர் தலைமை தாங்கினார். இவர் திருப்பாதிரிப்புலியூரில் 1929-ஆம் ஆண்டு நடந்த சைவர் மாநாட்டில் ஆறு நாள்களிலும் தலைவராக இருந்து சொற்பொழிவாற்றினார். சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டுக்கு 1932-ஆம் ஆண்டு தலைமை ஏற்றுத் தமிழ்ப்புலவர்கள் குறித்துச் சொற்பொழிவாற்றினார்; சென்னை கோகலே மண்டபத்தில் தமிழ் நாட்டில் இந்தி புகுத்தப்படுவதை எதிர்த்து நடந்த கூட்டத்திற்கு 1937-இல் தலைமை தாங்கினார். பின்னர்ச் சென்னைக் கடற்கரையில் அரசியல் தலைவர்கள் பலர் கலந்து கொண்ட இந்தி எதிர்ப்புக் கூட்டத்திற்கு இவரே தலைமை தாங்கி உரையாற்றினார். இவர் 1940-இல் அனைத்திந்தியத் தமிழர் மத மாநாட்டிற்கும், 1943-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்த கூட்டத்திற்கும் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றினார்; பள்ளத்தூரில் 1947-இல் நாடு விடுதலையடைந்ததைப் பாராட்டும் கூட்டத்தில் கலந்து கொண்டார்; சென்னை புனித மேரி மண்டபத்தில் 1948 – இல் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றினார்.

**நூல்கள்:** இவர் அறிவியல், கதை, நாடகம் கட்டுரை, சமயம், ஆராய்ச்சி ஆகிய பல்வேறு துறைகளில் பல நூல்களை எழுதியுள்ளார். 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்' என்ற இவர் நூல் அறிவியல் அடிப்படையிலும், சமய அடிப்படையிலும் சைவ உணவின் சிறப்பை ஆராய்ந்து நிலைநாட்டுகிறது. 'தொலைவிலுணர்தல்' என்பது ஐம்புலனுக்கும் எட்டாத தொலைவிலுள்ள பொருட்களையும், உயிர்களையும் உள்ளத்தால் உணரும் ஒருவகைக் கலையை உலகியல் நிகழ்ச்சி கொண்டு விளக்கும் ஒரு நூல் ஆகும். 'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை' என்பது நீண்ட நாள் உயிர் வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய செயல்முறைகளை விளக்குகிறது. தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ள பல்வேறு அறிஞர்களின் கருத்துகள் அதில் இடம் பெற்றுள்ளன. இவரே வாழ்க்கையில் கடைப்பிடித்துப் பார்த்து அறிந்த உண்மைகள் பல அந்நூலில் கூறப்பட்டுள்ளன. 'யோக நித்திரை அல்லது அறிதுயில்' என்பது இவர் சிவராச யோகப் பயிற்சி பெற்றபின் எழுதிய நூலாகும். அறிதுயில் வாயிலாக நோய் நீக்கலாம், எதிர்காலத்தை உணரலாம் என்பன அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. 'இறந்த பின் இருக்கும் நிலை' என்பது ஆவிகளைப் பற்றிய ஆராய்ச்சி நூல். உலகத்தில் நடந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அது எழுதப்பட்டுள்ளது. 'மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி' என்பது இம்மை மறுமை வாழ்க்கைகளில் இன்பத்தை உறுதி செய்வதற்குரிய வழிமுறைகளைப் பரிந்துரைக்கும் ஒரு நூல்.

'குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி' என்ற நூல் இரெய்னால்ட்சு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'இலைலா' என்ற கதையைத் தழுவி எழுதப்பட்டது. 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்ற நூல் சாதிக் கட்டுப்பாடுகளால் கெட்டு வந்த தமிழ் நாட்டில், சாதி வேற்றுமைகளைத் தாண்டிக் காதல் திருமணங்கள் நிகழ வேண்டும் என்ற சீர்திருத்தக் கருத்தை வற்புறுத்தும் புதினமாகும்.

இவர் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்த 'சாகுந்தலம்' என்ற நூலும் அந்நாடகத்தைப் பற்றிய

சாகுந்தல நாடக ஆராய்ச்சி' என்ற திறனாய்வு நூலும் இவர் மொழிபெயர்ப்புத் திறமைக்கும், திறனாய்வுப் புலமைக்கும் தக்க சான்றுகளாம். இவர் எழுதிய இறுதி நூலாகிய 'அம்பிகாபதி அமராவதி' என்ற நூல் நாடக இலக்கணங்கள் பொருந்த நன்கு எழுதப் பெற்ற சிறந்த நாடகநூல். தமிழில் நாடகம் எழுத வருவார்க்கு ஒரு முன்னோடி நூல் அது எனலாம்.

இவர் எழுதிய 'சிந்தனைக் கட்டுரைகள்' என்பது ஆங்கிலத்தில் அடிசன் என்பவர் எழுதிய கட்டுரை களைத் தழுவி எழுதிய கட்டுரைத் தொகுப்பாகும். 'அறிவுரைக் கொத்து' என்ற நூலில் சமயத் தொடர் பாகவும், தமிழ்மொழித் தொடர்பாகவும் கட்டுரை கள் உள்ளன. 'சிறுவர்க்கான செந்தமிழ்' என்ற நூல் சிறுவர்களுக்கேற்ற நடையில் அறிவு புகட்டும் கட்டுரைகளும், கதைகளும் கொண்டது. 'அறிவுரைக் கோவ்வை' (உரைமணிக்கோவை), 'மறைமலையடிகள் கருத்தோவியம்' ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன. 'சோமசுந்தர நாயகர் வரலாறு' என்பது இவர் ஆசிரியரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல். 'சோமசுந்தரக் காஞ்சியாக்கம்' என்ற செய்யுள் நூல் இவர் ஆசிரியர் இறந்தபின் இவர் இரங்கிப் பாடிய கையறு நிலைப்பாடல்களின் தொகுப்பு ஆகும். அது நடைச்சிறப்பு மிக்க நூல் என அறிஞர் பாராட்டுவர்.

'திருவொற்றியூர் முருகன் மும்மணிக்கோவை' கொடிய நோய் நீங்க முருகப் பெருமான் திருவருள் வேண்டி இயற்றிய செய்யுள் நூல். அதன் நடை சங்கப் புலவர் நடை என அறிஞர்களால் பாராட்டப் பெற்றது. 'சைவசித்தாந்த ஞானபோதம்' என்ற நூல் சைவ சமய சித்தாந்தக் கருத்துகளை அனைவரும் அறிந்து கொள்ளும்படி எளிய உரை நடையில் எழு தப்பட்டது. 'அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மை' என்ற நூலில் உயிர்கள், இறைவன், மாயை ஆகிய வற்றின் இயல்புகளைச் சுட்டி, இறைவன் உயிர்களின் அகத்தில் ஆடல் புரிவது சிறப்பாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளது.

'சைவ சமயத்தின் நெருக்கடியான நிலை' என்ற நூலில், சைவ சமயத்தில் புகுந்த போலிக் கோட் பாடுகளாலும், அப்போலிக் கோட்பாடுகளை அடிப் படையாகக் கொண்டு பழித்துரைப்பவர்களாலும், சைவ சமயத்திற்கு ஏற்பட்ட நெருக்கடியான நிலைமை சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. 'திருவாசக விரிவுரை' என்ற நூல் முதல் நான்கு அகவல்களுக்கு மட்டும் எழுதப்பட்ட சிறந்த உரை நூல். அது சமய அறிஞர்களால் பாராட்டப்பட்ட நூலாகும். 'சிவ ஞானபோத ஆராய்ச்சி' என்ற நூல் தன் பெயருக் கேற்பச் சிவஞான போதத்தில் கூறப்பட்டுள்ள சமயக் கருத்துகளை ஆராய்கிறது. 'தமிழர் மதம்' என்ற நூல் இவருடைய நாற்பதாண்டுக் காலச் சமய ஆராய்ச்சியின் முடிபுகளைக் கொண்டது. 'கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா' என்ற நூலில் சைவ சமயக் கோட்பாடுகளுக்கு மாறான போலிப் புராணக் கதைகள் மறுக்கப்பட்டு, சைவ சமய உண்மைகள் விளக்கப்பட்டுள்ளன. 'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' என்ற நூல் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற் றின் அடிப்படையில் சைவசமயம் தமிழ்நாட்டுக்குரி யது என்பதை உறுதிப் படுத்துகிறது. 'சாதி வேற்று மையும் போலிச் சைவரும்' என்ற நூல் சாதி வேற்றுமை பாராட்டக் கூடாது என்பதைத் தொல்லா சிரியர் கருத்தின் வழி நிலை நாட்டும் சீர்திருத்த நூல். 'பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும்' என்ற நூலில் இந்தியாவின் பழங்குடிகள் தமிழரே என்பது நிலை நாட்டப் பெற்று, ஆரியர் வருகையால் ஏற் பட்ட மாற்றங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. 'வேளாளர் நாகரிகம்' என்ற நூல், வேளாளரைச் சூத்திரர் எனத் தாழ்த்திக் கூறியதற்கு மறுப்பாக வேளாளரின் வேண்டுகோளுக்கேற்ப எழுதப் பட் டது. அந்நூலுள் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளிலுள்ள நூல்களின் அடிப்படையில் வேளா ளர் நாகரிகம் உயர்ந்தது என நிலைநாட்டப்பட்டுள் ளது.

இவர் எழுதிய 'மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்' என்ற நூல் தமிழ் ஆராய்ச்சி உலகத்தின் கவனத்தை ஈர்த்ததாகும். முடிபு கருத்து வேறு பாட்டிற்கிடமானது என்றாலும், ஆராய்ச்சி மேற் கொள்வார்க்குத் தக்க வழிகாட்டி அந்நூல் எனலாம். தமிழ்நாட்டு இலக்கிய வரலாற்றையும், பண்பாட்டு வரலாற்றையும் பல கோணங்களில் தம் நுண்மாண் நுழைபுலத்தால் அந்நூலில் இவர் ஆராய்ந்துள்ளார். 'முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை' மாணவர்களைக் கருத்திற்கொண்டு எழுதப் பெற்றது. நச்சினார்க் கினியர் கருத்து மறுக்கப்பட்டு நேரடியான கருத்து அந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. 'பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை' மாணவர்களின் வேண்டுகோளுக் கேற்ப வெளிப்படுத்தப்பட்ட நூல். தமிழ்ப்பழம் பெரும் நூல்களை ஆராயும் போக்கை விளக்கும் திறனாய்வு நெறிகள் அடங்கிய நூல் அது. 'இந்தி பொது மொழியா?' என்ற நூலில் இந்தி மொழி பொது மொழியாகும் தகுதியற்றது என்ற கருத்து வற்புறுத்தப்பட்டுத் தமிழே இந்தியாவின் பொது மொழியாகத் தக்கது என்ற கருத்து நிலைநாட்டப் பட்டுள்ளது. அந்த நூல் ஆங்கிலத்திலும் வெளியிடப் பட்டுள்ளது. 'முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்' என்ற நூல் தமிழ்நாட்டின் புலவர்களைப் பற்றி

எழுதப்பட்ட நூல். முதற் குறள் வாத நிவாரணம், மாணிக்கவாசகர் வரலாறு ஆகியனவும் இவரால் எழுதப்பட்ட நூல்கள் ஆகும். சைவசித்தாந்தம் பற்றி ஆங்கிலத்தில் நூல் எழுதியுள்ளார் (The Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge). இவர் கி.பி. 1950-ஆம் ஆண்டு தம் 75 - ஆம் அகவையில் காலமானார். க.மு.

**துணை நூல்கள்:**

**அரசு, புலவர்.,** மறைமலையடிகள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு, சென்னை, 1951.

**அழகரடிகள்,** மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, 1977.

**மறைமுக வரிகள்:** மறைமுக வரி என்பது ஒரு பொருளின் உற்பத்தியாளர் அல்லது, இறக்குமதியாளர் அல்லது விற்பவர் முதலில் வரியைக் கட்டிவிட்டு, பின்னர் அதனை நுகர்வோருக்கு மாற்றிவிடுவதாகும். வரியை யார்கட்டவேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அவரிடமிருந்து அவ் வரி வசூலிக்கப்பட்டால் அது நேர்முக வரியாகும் (Direct Tax). ஆனால், மறைமுக வரி (Indirect Tax) என்பது ஒருவர்மீது, வரி விதிக்கப்பட்டு, அவர் அவ்விழப்பை ஈடு செய்வதற்காகப் பிறரிடமிருந்து தண்டல் செய்து கொள்வதாகும். வருமானத்தின்மீது விதிக்கப்படும் வரிகள் யாவும் நேர்முக வரிகள் எனவும், செலவின்மீது விதிக்கப்படுபவை யாவும் மறைமுக வரிகள் எனவும் கொள்ளலாம். செய்பொருள் வரி (Commodity Tax), ஏற்றுமதி வரி (Export Duty), இறக்குமதி வரி (Import Duty), விற்பனைவரி (Sales Tax) போன்றவை மறைமுக வரிகளுக்கான மேற்கோள்களாகும்.

**நன்மைகள்:** மறைமுக வரி பொருளின் விலையோடு சேர்ந்திருப்பதால் வரிப்பளுவை நுகர்வோர் உணரும் வாய்ப்பில்லை. இவ் வரிகள் கொஞ்சம் கொஞ்சமாகச் செலுத்தப்படுவதாலும், செலுத்துவதற்கான கால இடைவெளி மிகுதியாக இருப்பதாலும், வரி செலுத்துவோருக்கு இவை ஏற்றனவாக உள்ளன. அரசிற்கும் இவ் வரிமுறை ஏற்றதாகும்.

பொருட்களின் விலைகளில் மறைமுக வரிகள் சேர்ந்திருப்பதால் நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது வரிகளைக் கட்டியே ஆகவேண்டும். வரி ஏய்ப்புக்கு வாய்ப்பில்லை. என்றாலும், பொய்க்கணக்கு, கள்ளக்கடத்தல் ஆகியவை மூலம் மறைமுகவரிகளைக் கட்டாமல் தவிர்த்து அரசை ஏமாற்ற வாய்ப்புண்டு.

குறைந்த வருமானம் உடையவர்கள் நேர்முக வரிவிதிப்பு வரம்புக்கு உட்படாததால் மறைமுக வரி வாயிலாக அவர்களும் அரசின் நிதித் தேவையை நிறைவேற்றுவதில் பங்கு பெறச் செய்ய இயலும். சமூகத்திற்குத் தீங்கு பயக்கும் பொருட்களின் மீது கடுமையான மறைமுக வரி விதிப்பதன்மூலம் அவற்றின் நுகர்வைக் கட்டுப்படுத்த முடியும். ஆடம்பரப் பொருட்களின்மீது உயர்ந்த வீதத்தில் வரிவிதிப்பதன் மூலம் மறைமுக வரிகளை வளர்வீத வரியாக மாற்ற முடியும்.

**குறைபாடுகள்:** எவ்வித வேற்றுமையுமின்றி மறைமுக வரிகள் யாவர்மீதும் விதிக்கப்படுவதால் இவை நியாயமற்றவை எனக் கருத இடமுண்டு. நுகர்வுப் பொருட்கள்மீது வரி விதிக்கும்போது செல்வந்தர்களைக் காட்டிலும் ஏழைகளே வரிப்பளுவை மிகுதியாகச் சுமக்க நேரிடுகிறது.

மறைமுக வரி மூலம் கிடைக்கும் வருவாய் நிலையானதாக இருப்பதில்லை. குறிப்பாக நெகிழ்வான தேவையுடைய பொருட்களின்மீது வரிகள் விதிக்கப்பட்டால் அப் பொருட்களின் விற்பனை பெருமளவு பாதிக்கப்படும்.

வரிப்பளுவை நேரடியாக உணர வாய்ப்பில்லாததால் பொதுப் பணம் எவ்வாறு செலவு செய்யப்படுகிறது என அறிந்துகொள்வதில் வரி செலுத்துவோர் அக்கறை செலுத்துவதில்லை.

மறைமுக வரிகளைத்தண்டல் செய்ய ஆகும் செலவு மிகுதியாகவே இருக்கும். மிகுதியான அளவில் விதிக்கப்படும் மறைமுக வரிகள் பொருட்களின் உற்பத்தியைத் தடை செய்யக்கூடும்.

**விளைவுகள்:** முதலாவதாக, பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிகளின் விளைவாகத் தனியார் துறையிலிருந்து பொதுத்துறைக்கு வளங்கள் திருப்பி விடப்படும். நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களிலிருந்து மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கு உற்பத்திக் காரணிகள் திருப்பி விடப்படும். ஆடம்பரப் பொருட்கள், இன்றியமையாமையில்லாத பொருட்கள் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள், மூலதனப் பொருட்களுக்கு அளிக்கப்படும் வரி விலக்கு ஆகியவை அவ்வித விளைவுகளை ஏற்படுத்தலாம். இறக்குமதிப் பொருட்களுக்குள்ள தேவையைக் குறைத்து உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களுக்கான தேவையைப் பெருக்கவும் மறைமுக வரிகள் பயன்படும். இறக்குமதி வரிவிதிப்பின் மூலம் அதனைச் சாதிக்க முடியும்.

பொருட்களின் மீது விதிக்கப்படும் வரியினால் விலை உயர, அலற்றிற்கான தேவை குறையும். அதன் விளைவாக வரிவிதிப்புக்குள்ளான பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்திக் காரணிகள் வேறு

பொருட்களின் உற்பத்திக்காக மாற்றிவிடப்படும். இதனால் தேவை, அளிப்பு ஆகியவை பாதிக்கப்படும். இம்மாற்றங்களால் பொருளாதார அமைப்பு முழுவதுமே பாதிக்கப்படலாம்.

**பின்தங்கிய/முன்னேறும் பொருளாதாரத்தில் மறைமுக வரியின் பங்கு:** பின்தங்கிய நாடுகளில் நாட்டு மக்களின் வருவாயும், வாழ்க்கைத்தரமும் மிகக் குறைந்த நிலையில் இருப்பதால் நேர்முக வரியிலிருந்து கிடைக்கும் வருவாயைவிட அரசு மறைமுக வரியிலிருந்து கிடைக்கும் வருவாயையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

குறைந்த வருவாயுடையவர்களின் நுகர்வுச் செலவு அவர்கள் வருமானம் உயரும் அளவைப் பொறுத்து மிகுதியாகும். இவ்வாறு மிகுதியாகும் நுகர்வுச் செலவைக் கட்டுப்படுத்தாவிடில் மிகுதியாக உற்பத்தியாகும் பொருட்கள் எல்லாம் நுகர்வுக்காகப் பயன்படுத்தப்பட்டு எதிர்கால மூலதன ஆக்கத்தைப் பாதிக்கும். எனவே பொருட்களுக்கு விதிக்கப்படும் மறைமுக வரிகளின்மூலம் அப்போக்கைத் தடுத்து நிறுத்தி மூலதன ஆக்கத்துக்கு வழி வகுக்கலாம். மேலும், வேளாண்மைத் துறையிலுள்ள மிகுதியைத் தொழில் துறைக்கு மாற்றுவதற்கும் மறைமுக வரிகள் உதவும்.

நாட்டின் பொதுத்துறைக்குத் தேவையான முதலீட்டைப் பெற மறைமுக வரிகள் பெரிதும் உதவுகின்றன. நுகர்வுச் செலவைக் கட்டுப்படுத்தவும், சேமிப்பு வீதத்தைப் பெருக்கவும் இவ்வரிகள் பயன்படும். இதனால் நாட்டில் முதலீட்டு வீதம் உயர வாய்ப்புள்ளது. தவிர பகட்டுப் பொருட்கள் மீதுவளர்வீத வரியும், இன்றியமையாத பொருட்கள் மீது குறைந்த வரியும் விதிப்பதன்மூலம் சமத்துவத்தைக் கொண்டு வரலாம். அரசின் முக்கியமான பணிகளுக்குத் தேவையான நிதியைத் திரட்டப் பெரும்பான்மை மக்கள் நுகரும் பொருட்கள் மீது வரி விதிப்பது நியாயந்தான் என்றும், பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியுள்ள நாடுகளில் மறைமுக வரிவிதிப்பின் மூலமே பெருமளவு வருவாய் திரட்ட வாய்ப்புள்ளது என்றும் கருதப்படுகின்றன.

எஸ்.வே.

**துணை நூல்கள்:**

Metha, J.K., Public Finance, Kitab Mahal, Allahabad, 1973.

Singh,S.K., Public Finance in Developed and Developing Countries, S. Chand & Company Ltd., New Delhi, 1982.

Subrata Ganguly, Public Finance, Navabharat Publishers, Calcutta, 1977.

Vasudevan, K., Public Finance, Progressive Co-operation Pvt. Ltd., Bombay, 1974.

**மன்காட்டன்,** அமெரிக்காவில் நியூயார்க்கு மாநிலத்தின் தென்கிழக்கில் நியூயார்க்கு நகரைச் சேர்ந்ததும் நகராண்மைச் சலுகைகள் பெற்றதுமான ஒரு தீவு ஆகும். இது பேரூராக விளங்குகிறது. மன்காட்டன் (Manhattan) தீவைச் சுற்றி மேற்கில் அட்சன் (Hudson) ஆறும், கிழக்கில் ஈசுட்டு ஆறும் (River East), தெற்கில் நியூயார்க்கு விரிகுடாவும், வடக்கில் ஆர்லேம் (Harlem) ஆறும் அமைந்து இதற்கு எல்லைகளாக உள்ளன.

இந்நிலப்பகுதி நியூசெர்சி மாநிலத்துடனும் மற்ற பேரூர்களுடனும் பல பாலங்கள், சுருங்கைகள்,



மன்காட்டன் நகரம்



(Tunnnels) படகுப் பயணப் பாதைகள் முதலியன மூலம் இணைக்கப்படுகிறது. நியூயார்க்கு நகரின் வாணிக மையமாகவும் பண்பாட்டு மையமாகவும் மன்காட்டன் திகழ்கிறது. அந்நகருக்கே இது பெருமை அளித்து வருகிறது.

**வரலாறு:** முன்பு செவ்விந்தியர்கள் இங்கே தங்கியிருந்தனர். தச்சு மேற்கு இந்தியக் குழுமத்தினைச் (Dutch West India Company) சேர்ந்த பீட்டர் மினிட்டு (Peter Minuit) என்பவர் ஏறத்தாழ 24 தாலர் பெறுமானமுள்ள வாணிகப் பொருட்களைக் கொடுத்துவிட்டு, இந்தியர்களிடமிருந்து மன்காட்டன் தீவை வாங்கினார். இத்தீவின் முனையில் ஒரு பட்டினம் தோற்றுவிக்கப் பட்டது. அதன் பெயர் நியூ ஆம்சுடர்டேம் (New Amsterdam). தச்சுக்காரர் அப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வந்தமை வரை,இந் நகரே 'புதிய நெதர்லாந்து' (New Netherlands) எனப்படும் தச்சுக் குடியேற்றத்தின் தலைநகராக இருந்தது. ஆங்கிலேயர் இந்நகரை, கி.பி. 1664-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டு அதற்கு நியூயார்க்கு எனப் பெயரிட்டனர். சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்துவந்த இந்நகரம் கி.பி. 1898-ஆம் ஆண்டில் பெரிய நியூயார்க்குப் பட்டயத்தின்படி (The Greater New York Charter) நியூயார்க்கு நகரின் ஐம்பெரும் சிறப்புப் பேரூர்களுள் ஒன்றாக அறிவிக்கப்பட்டது. நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை இதன் தலைவர் (President) தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதன் மக்கள் தொகை 14,27,533 (1980).

**மன்காட்டன்[2],** அமெரிக்க மாநிலங்களுள் ஒன்றான கான்சாசின் வடகிழக்குப்பகுதியில் உள்ள ஒரு நகரம். பெரிய நீல ஆறும் (Big Blue), கான்சாசு ஆறும் கூடுமிடத்தில் இது உள்ளது. இது கி.பி. 1857 – ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. சுற்றியுள்ள வேளாண்மைப் பகுதிக்கு இது ஒரு மையமாக விளங்குகிறது. பலவகையான ஆடைகள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. மன்காட்டனின் பொருளாதார வளர்ச்சிக்கு கி.பி. 1863-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கான்சாசு மாநிலப் பல்கலைக் கழகம் துணையாக உள்ளது. இதன்மக்கள் தொகை 33,600 (1980).

**மன்காட்டன் கடற்கரை:** இது அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தின் தெற்கில் உள்ள ஒரு நகரம். மன்காட்டன் கடற்கரை நகரம் (Manhattan Beach) சாந்தா-மோனிகா விரிகுடாவில்(Santa Monica Bay) உள்ளது. இது 1912-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. என்னைச் சுத்திகரிப்பு ஆலையும், வேறு சில தொழிற்சாலைகளும் இங்குள்ளன. இங்குச் செய்யப்படும் முக்கிய பொருட்களாவன வானவூர்திகள். ஏவுகணைக் கருவிகள், மின்சார சாதனப் பொருட்கள், பானை வகைகள் முதலியனவாகும்.

தெ.பா.

**மன்சப்தாரி முறை:** பேரரசர் அக்பரால் பாரசீக நாட்டு முறையைப் பின்பற்றி இந்தியாவில் தொடங்கப்பட்டு, மொகலாயரின் ஆட்சிக்காலம் வரை நீடித்த உள்நாட்டுப்படை நிருவாக அமைப்பிற்கு மன்சப்தாரி முறை (Mansabdari System)என்பது பெயர். 'மன்சப்' என்னும் சொல் அரசாங்கப் பதவியை அல்லது நிலையை (Rank) அல்லது ஒரு வகுப்பைக் (Class) குறிப்பதாகும். அதனைப் பெற்றிருந்தவர் மன்சப்தார் எனப்பட்டார். அவர் கடமை, ஒரு குறிப்பிட்ட அளவு படையை வைத்திருந்து, அரசர் வேண்டும்பொழுது கொடுத்து உதவுவதுடன், உள்நாட்டு நிருவாகத்தில் அவர் குறிப்பிடும் பணிகளை நிறைவேற்றுவதுமாகும். மொகலாயரின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களும், துருக்கியர் பாரசீகர், ஐரோப்பியர், இந்தியர் ஆகியோர் இப்பதவியைப் பெற்றிருந்தனர். இந்துக்களில் ஒரு சிலரே இப்பதவியைப் பெற்றனர். அவர்களுள் பெரும்பான்மையினர் இராசபுத்திரர் ஆவர். இம்முறையில் மன்சப்த்தார் பதவியானது பாரம்பரியமாக தந்தைக்குப் பின் தனையன் என, அளிக்கப்படவில்லை.

**பிரிவுகள்:**மன்சப்தார்கள் அவர்கள் நிலைக்கு ஏற்ப மூன்று வகையினராகப் பிரிக்கப்பட்டனர். அவருள் 10-லிருந்து 400 வரை உள்ளவர்கள் மன்சப்தார் என்ற பொதுப் பெயராலேயே அழைக்கப்பட்டனர். 500 – லிருந்து 2500 வரையிலான நிலையைப் பெற்றிருந்தவரைஉம்ரா (Umra) எனக் குறிப்பிட்டனர். அதற்கு மேற்பட்ட நிலையை அடைந்திருந்தவர் உம்ரா -இ-ஆசம் (Umra – i – Azam) என்னும் பெயரால் கூறப்பட்டார். இச்சொல்லுக்குப் 'பெருஞ்செல்வர்' என்பது பொருளாகும்.

ஒவ்வொரு மன்சப்தாரும் சட் (Zat), சாவர் (Sawar) என்னும் இரு நிலைகளைப் பெற்றிருந்தார். அதன் அடிப்படையில், அவர்கள் சட்நிலையும் சாவர் நிலையும் சமமாக உள்ளவர்; சட்நிலையில் பாதிக்கு மேற்பட்ட சாவர் நிலையை உடையவர்; சட்நிலையில் பாதிக்குக்குறைவான சாவர் நிலையைப் பெற்றவர் என மூன்று வகையினராகப் பிரிக்கப்பட்டனர்.

அக்பர், 10-லிருந்து 10,000 வரையிலான நிலையைப் பெற்றிருந்த இவ்வலுவலர்களை 33 வகையினராகப் பிரித்தார். அவர் காலத்தில் சாதாரண அலுவலருக்கு 5000 வரையிலுமுள்ள நிலைகளே அளிக்கப்பட்டன. அதற்கு மேற்பட்ட பெரும்பதவிகள், 7,000 முதல் 10,000 வரையிலான, அரச குடும்பத்தின

ருக்கே வழங்கப்பட்டன. அவருக்குப்பின் வந்தவர்கள் அப்பதவிகளைத் தங்கள் விருப்பம்போல் மற்றவர்களுக்கும் கொடுத்தனர்.

**தேர்ந்தெடுத்தல்:** மன்சப்தார் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது, பயிற்சி அளிப்பது, பதவி உயர்வு கொடுப்பது, வேலையை விட்டு நீக்குவது ஆகிய அனைத்தையும் பேரரசரே செய்துவந்தார். அப்பதவியினைப் பெற விரும்புவோர் அரசவையில் சிறப்பான நிலையில் இருந்த ஒருவரால் அரசருக்கு அறிமுகப் படுத்தப்பட்டார். அரசர் விரும்பினால் அவரைத் தேர்ந்தெடுத்து, பயிற்சி அளித்து, அவருடைய நிலையை (Rank) நிருணயிப்பார். பின்னர் அவர் பதவி உயர்வு பெறுவது அவரது திறமையையும், உழைப்பையும், நன்னடத்தையையும் பொறுத்ததாகும். அரசர் ஆணைக்கு அடங்கி நடப்பதே எல்லாவற்றிலும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. எப்பொழுதும் அரசருடன் இருப்பவர், தங்களுக்கெனத் தனி அலுவலை உடையவர் என அவர்கள் இருவகைப்பட்டனர். தனித் தனியே பதிவேடுகள் வைக்கப்பட்டு அதில் அவர்கள் பெயர் முதலிய விவரங்கள் குறிக்கப்பட்டன.

**பணி:** மன்சப்தார்கள் உள்நாட்டு நிருவாகம், படைநிருவாகம் ஆகிய இரு துறைகளிலும் பணியாற்றினர். அக்காலத்தில் அவ்விரு துறைகளுக்கும் எவ்வித வேறுபாடும் காட்டப்படவில்லையாதலால் அவர்கள் அடிக்கடி ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றப்பட்டனர். அக்பர் அவைப்புலவர் அறிஞர் பீர்பால் காசுமீரப் போருக்கு அனுப்பப்பட்டு அங்கு மடிந்தார். சிறந்த அறிஞரும் அக்பரின் நெருங்கிய நண்பருமான அபுல்பசல் தக்காணத்தின் மீது படையெடுத்துச் செல்ல அனுப்பப்பட்டார். சிறந்த பொருளாதார வல்லுநரான தோடர்மால் பல போர்களில் ஈடுபடுத்தப்பட்டார். அக்பர் பெரும்பாலும் ஒவ்வொரு பணிக்கும் தக்காரையே தேர்ந்தெடுத்து அனுப்பினார். அவுரங்கசீபின் ஆட்சியில் தகுதியுடையவர்கள் அவர்களுக்கேற்ற பணிகளில் ஈடுபடுத்தப்படாததால் மன்சப்தாரி முறை மிகவும் சீர்கேடடைந்தது.

**ஊதியம்:** மன்சப்தார்களின் ஊதியம் சாகீராகவோ உரொக்கமாகவோ அளிக்கப்பட்டது. அந்நிலத்திலிருந்து வரியாகத் தண்டிய பணத்தை அவர்கள் ஊதியமாக எடுத்துக் கொண்டனர். சாகீர் முறை மன்சப்தாருக்குச் சுதந்திரத்தையும், வலிமையையும் கொடுத்தது. தனக்குட்பட்ட பகுதியில் அவர் வலுவடைந்து பேரரசரையே எதிர்க்கக்கூடிய நிலைக்கு வரலாம். எடுத்துக்காட்டாக, மகபத்கான் பேரரசர் சகாங்கீருக்கு எதிராகக் கலகம் செய்து அவரையே சிறை செய்யக்கூடிய வலிமையைப் பெற்றிருந்தமையைக் கூறலாம். மேலும், மன்சப்தார் தம்முடைய பகுதியில் உழவர்களிமிடருந்து அதிக வரியை வாங்கலாம். அதனால், அரசாங்கத்திற்கு எவ்விதப் பயனும் இன்றி மக்கள் துன்பத்திற்கு உள்ளாயினர். எனவேதான் செர்சா (Sher Shah), அக்பர், சிவாசி முதலானோர் சாகீர் முறையை வெறுத்தனர். ஆகையால், அக்பர் மன்சப்தாருக்குச் சொந்தமான இடத்தில் சாகீர் நிலம் அளிக்காமல் அவர் எங்குப் பணிபுரிந்தாரோ அவ்விடத்தில் கொடுத்தார். மற்றும் அவருக்கு அந்நிலத்திலிருந்து வருவாயைப் பெறுவதைத் தவிர வேறு எவ்வித உரிமையும் கிடையாது.

தங்கள் ஊதியத்தை உரொக்கமாகப் பெறுவோர் அரசாங்கக் கருவூலத்திலிருந்து ஆண்டிற்கு இருமுறை பெற்றனர். 5000 நிலையைப் பெற்ற முதல்தர மன்சப்தார் மாதம் ஒன்றுக்கு உரூ.30,000மும், இரண்டாம் தரத்தினர் உரூ.29,000 மும், மூன்றாம் தரத்தினர் உரூ. 28,000மும் பெற்றனர் என அயின்-இ-அக்பரியிலிருந்து தெரிகிறது. பத்துப் படைவீரர் தலைமைபெற்றவர், மாத ஊதியமாக உரூ. 75 முதல் உரூ. 100 வரையில் பெற்றார். இவ்வூதியம் மிக அதிகமானது எனச் சிலர் கருதுவர். ஏனெனில், அவர்கள் பெற்றிருந்த படைக்கான செலவுபோகப் பெருந்தொகை அவர்களுக்கு மிஞ்சியது. மூர்லண்டின் கணக்குப்படி 5000 நிலை மன்சப்தாருக்கு மாதந்தோறும் உரூ. 18,000; 1000 நிலை மன்சப்தாருக்கு உரூ. 5,000; 500 நிலை மன்சப்தாருக்கு உரூ. 1,000 மீதமிருந்தது.

**தனித்தன்மை:** மன்சப்தார்கள் பேராசைகொண்டு மக்களிடமிருந்து அதிகவரியைப் பெறக்கூடாது என்பதற்காக அவர்கள் சொத்தின் மேல் அவர்களுக்கு உரிமை இல்லாமல் செய்யப்பட்டது இம்முறையின் தனித்தன்மையாகும். அதாவது மன்சப்தார் ஒருவர் இறந்துவிட்டால் அவர் உடைமைகள் அனைத்தும் அரசாங்கத்தைச் சேரவேண்டும். அவ்வாறு எந்தெந்தப் பொருட்கள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டன என்பது குறித்து வரலாறு ஆசிரியர்களிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இறந்தவரின் மனைவியின் நகை, மனைத்துணைப் பொருட்கள் போன்றவை நீங்கலாக மற்றவை அரசாங்கத்தைச் சேர்ந்தன என்பர் சிலர். அரசர் சாகீர் நிலத்தை மட்டும் திரும்பப் பெற்றுக்கொண்டு மற்ற பொருட்களை இறந்தவருடைய மனைவி, மக்களிடம் விட்டுவிட்டார் என்பர் வேறு சிலர். மற்றும் சிலர் அரசாங்கம் இறந்தவருக்குரிய எல்லாப் பொருட்களையும் எடுத்துக்கொண்டு குடும்ப ஓய்வு ஊதியம் வழங்கிற்று எனவும் கூறுவர். அரசர் விரும்பினால் அத்தகையவருடைய மகனை ஒரு மன்சப்தாராக நியமிக்கலாம். ஆனால், அவருடைய தந்தை பெற்றிருந்த

நிலை அவருக்கு அளிக்கப்படாமல், தொடக்க நிலையி லிருந்து தொடங்கி அவர் தம்முடைய திறமையால் மேன்மேலும் முன்னேற வாய்ப்பளிக்கப்பட்டது.

**நிறைகள்:** இம்முறையால் நாட்டிற்குத் தேவையான பெரும்படை முழுவதையும் அரசர் வைத்துப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. உள்நாட்டு நிருவாகத்திற்குத் தேவையான அலுவலர்களும் கிடைத்தனர். மன்சப்தார்களுக்கு அவர்கள் சொத்தின் மீது எவ்வித உரிமையும் இல்லாமல் செய்யப்பட்டதால் அவர்கள் பொருள் சேர்க்கும் பேராசைகொண்டு எவரையும் வருத்தி வரியைப் பெறவேண்டிய அவசியம் இல்லாமல் போனது. இம்முறையில் மன்சப்தார்கள் மரபுவழியாக, தந்தைக்குப்பின் தனையன் என, வாராததால் தகுதி அற்றவர், வாரிசு என்ற ஒரே காரணத்திற்காக இப்பதவியை பெறுவது தடுக்கப்பட்டது. எனவே, தகுதியும், திறமையும் வாய்க்கப் பெற்றவர்களே மன்சப்தார்களாக வந்ததால் நிருவாகம் திறமையாக நடைபெற்றது. அரசர் தம்விருப்பம்போல் மன்சப்தார்களின் நிலையை உயர்த்துவது, அவர்களை நீக்குவது, அவர்கள் சாகிர் நிலங்களை மாற்றுவது ஆகியவற்றைச் செய்ததால் அவர்கள் அரசர் விருப்பம் போல் நடந்தனரேயன்றி அவருக்கு எதிராக ஒன்றுசேர்ந்து சதிச்செயல்களில் ஈடுபட முடியவில்லை. மன்சப்தார்களை அரசர் தம் விருப்பம்போல் உள்நாட்டு நிருவாகம், படைநிருவாகம் ஆகிய இருதுறைகளுக்கும் மாற்றியதால் சூழ்நிலைக்கு ஏற்பத் தக்காரைப் பல்வேறு பணிகளிலும் ஈடுபடுத்த முடிந்தது.

**குறைகள்:** இம்முறையில் மன்சப்தார்கள் அரசரை ஏமாற்றுவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருந்தன. அவர்கள் தாங்கள் வைத்திருக்க வேண்டிய அளவு படையை வைத்திருக்கவில்லை. வீரர்களுக்குச் சிறந்த போர்ப் பயிற்சியும், படைக்கலங்களும் அளிக்கப்படவில்லை. பல்வேறு இடங்களிலிருந்து படையினர் பெறப்பட்டதால் போர்முறையில் அவர்களிடையே ஒருமைப்பாடு இல்லை. அதற்குப் பதிலாக அரசர் ஒரு நிலையான படையைப் பெற்றிருந்தால் தமக்குட்பட்ட, திறமைவாய்ந்த, நன்கு பயிற்சிபெற்ற, சிறந்த போர்க்கருவிகளைக்கொண்ட படையினைப் பெற்றிருப்பதுடன், படைச் செலவும் குறையும். மன்சப்தார்களுக்கு அவர்கள் உடைமைகள் மீது எவ்வித உரிமையும் இல்லாததால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படவேயில்லை. அதற்குமாறாக அவர்கள் பகட்டான வாழ்விலும், கேளிக்கை விளையாட்டுகளிலும் ஈடுபட்டனர். அதனால், அவர்களுடைய ஒழுக்கமும், திறமையும் குன்றி, நிருவாகம் சீர்குலைந்தது. இம்முறை மரபு வழியாக ஏற்படுத்தப்படாததால் நாட்டில் வலிமைமிக்க பிரபுக்கள் இனம் ஒன்று தோன்ற வழியில்லாமல் போனது. அரசர் விருப்பத்திற்கேற்ப அவர்களுடைய பதவியிருந்ததால் அவருக்கு எதிராக ஒன்றுசேர அஞ்சினர். அரசர் தவறான வழியில் செல்லும் பொழுது அவரைத் தடுக்க அல்லது கண்டிக்க இயலாதவர்களாக இருந்தனர்.

மன்சப்தார்களின் செல்வமனைத்தும் அப்பொழுது யார் பதவியில் இருக்கின்றாரோ அவர் விருப்பப்படி அமைந்தது. எனவேதான் அவர்கள் அரசுரிமைப் போர்கள் நடக்கும் பொழுதும், அன்னியர் படையெடுப்பின் பொழுதும் தங்கள் ஆதரவை மாற்றிக் கொண்டேயிருந்தனர். யாருடைய கைஓங்கிநின்றதோ அவர் பக்கமே சாய்ந்தனர். எனவே, மிக நெருக்கடியான நேரங்களில் அவர்களை அரசரால் நம்ப முடியவில்லை. அவர்கள் அடிக்கடி ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றப்பட்டதால் நிருவாகத்தில் சிறப்புத்தன்மை (Specialisation) அடைய முடியவில்லை. மேலும் விருப்பமின்மையும், திறமையின்மையும் வளர்ந்தன.

**மதிப்பீடு:** அக்பர் காலத்தில் இம்முறை மிகச் சிறப்பானதாக, பயனுள்ளதாக விளங்கிற்று. ஏனெனில் அப்பொழுது மன்சப்தார்களின் எண்ணிக்கை. குறைவாக இருந்ததோடு, அதில் ஏற்படக்கூடிய ஊழல்களைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. பேரரசர் சகாங்கீர் தம் தக்காணப் படையெடுப்பின் பொழுது இவர்கள் எண்ணிக்கையைப் பெருக்கியதோடு, மிகப் பெரிய மன்சப்தார் பதவிகளை, அதுவரை அரச குடும்பத்தினருக்கு மட்டுமே அளிக்கப்பட்டு வந்ததை மாற்றிப் பிறருக்கும் அளித்தார். அத்துடன் ஊதியத்திற்குச் சாகீர் நிலமே கொடுக்கப்பட்டது. அவுரங்கசீபின் ஆட்சியில் இம்முறை மிகவும் சீர்கேடான நிலையை அடைந்து அவரோடு மறைந்தது. சி.இரெ.

**மன்சுடர்:** இது மேற்குச் செருமனியின் மேற்கில் உள்ள ஒரு வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நகரம். மன்சுடர் (Munster) செருமானிய மாநிலமான இரைன் – வெசுட்டுபாலியா (Rhine-Westphalia) மாநிலத்தின் தலைநகர். தார்ட்முண்டு எம்சு (Dortmund-Ems) கால்வாய்க் கரையில் உள்ள இத்துறைமுகம் தொழிற்சிறப்புடன் விளங்குகிறது. இங்கு உற்பத்தியாகும் பொருட்களில் முக்கியமாக கனஇயந்திரக் கருவிகள், ஆடைவகைகள், உலோகப் பொருட்கள், புளிப்பேறிய குடிவகைகள் முதலியன குறிப்பிடத்தக்கன. வேளாண்மைக்குப் பயன்படும் கருவிகளும் இங்குச் செய்யப்படுகின்றன. தானிய வாணிகம், மர வாணிகம் ஆகியவற்றுக்கான ஒரு மையமாக இது

விளங்குகிறது. இந்நகரம் ஏறத்தாழ கி.பி. 800-இல் கரோலிங்கிய அரசால் மாவட்டச் சமயத் தலைவர் இருக்கையாகத் தோற்றுவிக்கப்பட்டது. இங்கிருந்த ஆயர்கள் (Bishops) வெசுட்டு பாலியா மாநிலத்தின் பெரும்பகுதிக்குப் புனித உரோமானியப் பேரரசின் சிற்றரசர்களாக இருந்து ஆட்சி நடத்தினர். இந்த ஆட்சி கி.பி.12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நீடித்தது. பிறகு இது சமயச்சார்பற்றதாக ஆக்கப்பெற்றது. செருமானிய வாணிக நகரங்களின் கூட்டுக்குழுவில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் முக்கியமான உறுப்பு நகரமாக மன்சுடர் திகழ்ந்தது. குழந்தைப் பருவத்தில் சமய தீக்கை ஆற்றியிருந்தாலும் வயது வந்தபின் மறு தீக்கை ஆற்றியே ஆகவேண்டுமென்னும் கோட்பாளராகிய (Anabaptist) இலெய்டன் சான் (John of Leiden) இந்நகரில் தம் சமயமுறை ஆட்சியை கி.பி.1534-35-இல் நிறுவினார். பிரசிய நாடு (Prussia) கி.பி. 1816-இல் இந்நகரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இரண்டாம் உலகப் போரில் இங்குப் பெரும் வழிபாடுகள் ஏற்பட்டன. போருக்குப் பிறகு, இந்நகரம் புதிதாக உருவாக்கப்பெற்றது. இதன் மக்கள்தொகை 2,73,500 (1983). இடைக்காலக் கலைப் பண்புச் சின்னங்களை மன்சுடரில் காணலாம். இங்குள்ள வரலாற்றுச்சின்னங்களில் சில, கி.பி. 13 – ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மாவட்டத் தலைமைக் கிறித்தவக் கோயில், கோதிக்கு (Gothic) முறையில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நகரமண்டபம், மஞ்சடைப்புச் சுவர்களையுடைய வீடுகள் (Gabled houses) முதலியன ஆகும்.

மன்சுடர்:[2] அயர்லாந்துக் குடியரசின் மாநிலங்களுள் ஒன்று. அந்நாட்டின் மற்ற மாநிலங்களைவிட இது பரப்பில் பெரியது. இதன் பரப்பு 24,126 ச.கி.மீ. இக்குடியரசின் தென்மேற்குப் பகுதியில் உள்ள இம்மாநிலத்தில் அடங்கியுள்ள வட்டங்களாவன: கிளார் (Clare), கார்க்கு (Cork), கெர்ரி (Kerry), இலிமெரிக்கு (Limerick), திப்பெராரி (Tipperary), வாட்டர்போர்டு (Waterford) முதலியன. மலைப்பாங்கான இம்முந்நீரகத்திற்குச் சுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்றனர். பண்டைய வரலாற்றுச் சிறப்பு இதற்கு உண்டு.

தெ.பா.

மன்ரோக் கோட்பாடு: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவர் சேம்சு மன்ரோ (James Monroe, கி.பி. 1817-1825) அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கி.பி. 1823-திசம்பர் 2-இல் அறிவித்த அயல்நாட்டுக் கொள்கைக்கு மன்ரோக் கோட்பாடு (Monroe Doctrine) என்பது பெயர். அந்நாட்டில் தொடக்கக் காலத்திலிருந்து பின்பற்றப்பட்டு வந்த, ஐரோப்பிய நாடுகளின் விவகாரங்களில் சிக்கிக்கொள்ளாது ஒதுங்கி வாழும் (Isolationist) கொள்கையையே தாம் பின்பற்றப் போவதாக உறுதி கூறினார். அதனோடு இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஐரோப்பிய நாடுகள் தலையிடுவது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு எதிரான செயல் எனத் தெளிவுபடுத்தினார். இவருக்கு முன்னர்க் குடியரசுத் தலைவர்களாகவிருந்த தாமசு பைன், சியார்சு வாசிங்டன், சான் ஆடம்சு, தாமசு சேபர்சன் முதலானோர் இக்கொள்கையை வலியுறுத்தினர். எனினும், இதனை அந்நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையென முதன் முதலில் சேம்சு மன்றோ அறிவித்ததால் இக்கோட்பாடு அவருடைய பெயருடன் இணைத்துக் கூறப்படுகிறது. பின்னர் இது ஒரு நூறு ஆண்டுக் காலத்திற்கு அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கையாக இருந்தது.

அப்பொழுது இசுபெயினிடமிருந்து விடுதலை பெற்றுவந்த இலத்தீன் அமெரிக்கக் குடியேற்றங்களைப் பாதுகாக்க விரும்பி மன்ரோ இக்கொள்கையை அறிவித்தார். அந்நாடுகளில் தோன்றிய விடுதலை இயக்கங்களை நசுக்கி, மீண்டும் அவற்றில் முடியாட்சியைக் கொண்டுவர விரும்பிய ஆசுதிரியா, பிரசியா, உருசியா ஆகிய நாடுகள் புனித கூட்டணியைத் (Holy League) தோற்றுவித்தன. அதனை அமெரிக்க ஐக்கிய நாடுகள் விரும்பாததுடன், மீண்டும் அமெரிக்காவில் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் ஏற்படுவது தன்னுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும்கருதியது. அந்நாடுகளில் அது தன்னுடைய வாணிகத்தை வளர்த்து வந்ததால், இசுபெயின் ஆதிக்கம் அப்பகுதியில் மீண்டும் தோன்றினால் தன்னுடைய வாணிகம் தடைப்படும் என நினைத்தது. புதிதாக ஏற்பட்டிருந்த இலத்தீன் அமெரிக்கக் குடியரசுகளை கி.பி. 1822-இல் அது ஏற்றுக்கொண்டது. அப்பொழுது உருசியா அலாசுகாவிலிருந்து நகரத் தொடங்கி வடஅமெரிக்காவில் சில பகுதிகள் மீது உரிமை கொண்டாடியது. எனவே, மன்ரோ அமெரிக்கக் கண்டத்தில் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தைத் தடுக்க இக்கொள்கையை அறிவித்தார்.

இக்கோட்பாடானது, அட்லாண்டிக்குப் பெருங்கடலும் பசிபிக்குப் பெருங்கடலும் உலகை இருபகுதிகளாக, பழைய உலகம் புதிய உலகம் எனப் பிரிக்கின்றன; ஐரோப்பாவில் முடியாட்சியும், புதிய உலகில் குடியாட்சியும்தான் நிலவ முடியும் என்னும் இரு முக்கிய கருத்துகளின் அடிப்படையில் எழுந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோட்பாட்டின்படி இதன் பின்னர் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்க நிலப்பகுதியைத் தங்கள் குடியேற்றத்திற்கு ஏற்ற இடமாகக் கருதக் கூடாது.

அவை, இப்பகுதியில் தங்கள் அரசியல் அமைப்பினைத் திணிக்க முயன்றால் அல்லது தலையிட்டால் அல்லது விடுதலை இயககத்தை நசுக்கத் திட்டமிட்டால் அல்லது விடுதலை பெற்ற குடியேற்றங்களைக் கட்டுப்படுத்த முயன்றால் அச்செயல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு எதிரான செயலாகக் கருதப்படும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் இப்பொழுதுள்ள ஐரோப்பியக் குடியேற்றங்கள் அல்லது அவற்றைச் சார்ந்துள்ள நாடுகள் ஆகியவற்றின் சிக்கல்களில் தலையிடாது. மேலும், அது ஐரோப்பிய நாடுகளிடையே நிகழும் போர்களிலும் ஈடுபடாது.

இதனை ஐரோப்பிய நாடுகள் மிக வன்மையாக எதிர்த்தன; கானிங்கு பிரபு கடுமையாகச் சாடினார்; ஆசுதிரிய மன்னாய முதல்வர் (Chancellor) மெட்டர்னிக்கு கண்டித்தார்; உருசியா அலட்சியமாக விட்டு விட்டது. இலத்தீன் அமெரிக்க நாடுகள் கூட இதனை விரும்பவில்லை. ஐரோப்பிய விவகாரங்களில் சிக்கிக் கொள்ளாமல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒதுங்கி வாழ்ந்ததால் அதனுடைய பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைந்தது. விடுதலை பெற்ற இலத்தீன் அமெரிக்க நாடுகள் தாய்நாட்டின் அச்சமின்றி வாழ்ந்து வந்தன. அமெரிக்க ஐக்கியநாடுகள் கி.பி. 1845 வரை வலிமையற்று இருந்ததால், இக்கோட்பாட்டை வேகமாகச் செயற்படுத்த முடியவில்லை. அதன் பின்னர் அந்நாட்டுக் குடியரசுத் தலைவர்கள் சிலர் அவ்வப்போது இக்கோட்பாட்டைக் குறிப்பிட்டு இலத்தீன் அமெரிக்க விவகாரங்களில் ஐரோப்பிய நாடுகள் தலையிடுவதைத் தடுத்தனர். இக்கொள்கையின் அடிப்படையில் அந்நாடு முதல் உலகப் போர் வரை எந்த ஐரோப்பியப் போரிலும் ஈடுபடவில்லை. அப்போரில் அது ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபொழுது, அதில் தலையிட்டு வெற்றி தேடித் தந்தது. அதன் பின்னர் 'ஒதுங்கி வாழும்' கொள்கையைப் பின்பற்றிப் பன்னாட்டுச் சங்கத்தில்(League of Nations) சேரமறுத்துவிட்டது. இரண்டாம் உலகப் போர் தொடங்கிய பொழுது இக்கோட்பாட்டின் அடிப்படையில் அதில் ஈடுபடவில்லை. பின்னர்ச் சில சூழ்நிலை காரணமாக வேறுவழியின்றித் தலையிட்டது. அதன் பின்னர் அது ஒரு வல்லரசாக மாறியதால், இக்கோட்பாட்டைக் கைவிட்டு உலக விவகாரங்கள் அனைத்திலும் ஈடுபட்டு வருகின்றது. இக்கோட்பாட்டை அறிவித்ததன் காரணமாகச் சேம்சு மன்ரோவின் பெயர் அமெரிக்க வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. சி.இரெ.

**மன்ரோ, சர் தாமசு (கி.பி. 1761 – 1827),** இந்தியாவில் சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்தவர்களுள் இவர் மக்களால் போற்றப்பட்டவர். இந்தியர்களின்மீது பரிவும் பற்றும் கொண்ட சர் தாமசு மன்ரோ (Sir Thomas Munroe) சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த காலத்தில் (கி.பி. 1820-1827) மக்கள் நலம் பேணும் பல நல்ல திட்டங்களைச் செயற்படுத்தினார். சென்னை மாநில மக்கள் அவர்மீது தமது பேரன்பைப் பொழிந்தனர். அவர் தந்தை போன்று அன்பு செலுத்தியதால், மக்கள் அவரை 'எங்கள் தந்தை' என்று போற்றினர். சிறந்த ஆளுநராகவும், நல்ல அரசியல் வல்லுநராகவும், ஆற்றல் மிகு படைத்தலைவராகவும், நல்லாட்சியாளராகவும் திகழ்ந்த மன்றோ, இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் ஒரு சேரப் பணிபுரிந்து, இந்தியாவை நன்கு புரிந்து கொண்டார். உழவர்களின் நலன்கருதி இரயத்துவாரித் திட்டத்தைத் தீட்டினார். இவர் இலக்கியம், வரலாறு ஆகியவற்றில் விருப்பமிக்கவர்.

இசுகாட்லாந்து நாட்டினரான சர் தாமசு மன்ரோ கி.பி. 1761-ஆம் ஆண்டு கிளாசுகோவில் பிறந்தார். இளமையில் நற்கல்வி பயின்றார். நல்ல உடற்கட்டு வாய்க்கப்பெற்ற இவர் அஞ்சாநெஞ்சினராகவும் இருந்தார். ஆங்கிலேயப்படையில் சேர்ந்து, போர்ப் பயிற்சி பெற்று கி.பி. 1780 – இல் சென்னை வந்து சேர்ந்தார். மைசூருக்கெதிரான ஆங்கிலேயப் படையெழுச்சிகளில் கி.பி. 1780 முதல் 1792 முடியக் கலந்து கொண்டு ஆங்கிலேயர்களுக்கு வெற்றி தேடித் தந்தார். இவர் கி.பி. 1792 முதல் 1799 வரை சேலம் மாவட்டத்தைச் சார்ந்த பாரமகால் பகுதியில், ஆட்சித்துறையில் பணியாற்றினார். படை முதல்வர் இரீடு சேலம் மாவட்ட ஆட்சியாளராக அமர்ந்த போது நிலவியல் அளவீட்டுப் பணிகளை மேற்கொண்டார். கிருட்டிணகிரிப் பகுதியைக் கிரகாமிடம் ஒப்படைத்த படைமுதல்வர் இரீடு,சேலம் பகுதியை மெக்லாடு விடமும், தருமபுரிப் பகுதியைத் தாமசு மன்ரோ விடமும் ஒப்படைத்தார். மன்ரோவின் தலைமையகம் தருமபுரியாகத் திகழ்ந்தது. இவர் கி.பி. 1799 முதல் 1800 வரை கன்னடத்தில் (Canara)பணிபுரிந்தார் கன்னடத்தில் தம் அறிவாற்றலால் தம் ஆட்சித் திறனை வெளிப்படுத்திய மன்ரோ, கி.பி. 1800 முதல் 1807 முடியக் கொடை மாவட்டங்களின் (Ceded Districts) ஆட்சியாளராக அமர்த்தப்பட்டார். இவர் கி.பி. 1807 – இல் தாய்நாடான இங்கிலாந்திற்குத் திரும்பினார். பின்னர் கி.பி. 1814 – இல் மீண்டும் இந்தியாவிற்கு வந்தார். தமிழ்நாட்டில் நீதித்துறையின் நிலை பற்றி ஆராய அமைக்கப்பட்ட நீதிக்குழுவின் தலைவராக மன்ரோ இரண்டாண்டுகள் பணிபுரிந்தார். இவர்தம் பரிந்துரைகளின் அடிப்படையில் கி.பி. 1816 -இல் சென்னை மாநிலத்தின் நீதித்துறை சீர்திருத்தி அமைக்கப்பட்டது. இவர் சென்னை மாநில ஆளுநராகப் பொறுப்பேற்றபின் கி.பி. 1821 – இல் மாநில

மாவட்ட நீதிமன்றங்களை நிறுவினார். இவர் கி.பி. 1817 – 1818-ஆம் ஆண்டுகளில் படையில் சேர்ந்து, படைப்பிரிவு ஒன்றின் தலைவராகப் பொறுப்பேற்று, மராட்டியருக்கு எதிரான போரில் கலந்து கொண்டார். பின்னர்ப் படைத்துறையில்பதவி உயர்வு பெற்று, 'தளபதி' (General)பதவியைப் பெற்றார். தலைமைத் தளபதி சர் தாமசு மன்ரோ 10.6.1820 – ஆம் நாள் சென்னை மாநில ஆளுநராக அமர்த்தப்பட்டு, கி.பி. 1827 முடிய அப்பதவியில் இருந்தார். இவர் ஏசுடிங்சுபிரபு (கி.பி. 1813-23), சான் ஆடம்சு (சனவரி-ஆகசுட்டு 1823), ஆம்கர்சுடு பிரபு (கி.பி. 1823-1828) முதலான தலைமை ஆளுநர்களின் கீழ்த்திறமையுடன் மாநில ஆளுநராகப் பணிபுரிந்தார். எனவே, இங்கிலாந்து மன்னர் நான்காம் சார்சின்(கி.பி.1820-30) நன்மதிப்பைப் பெற்றார். இவர் சேவையைப் பாராட்டி ஆங்கில அரசாங்கம் இவருக்கு வீரத்திருத்தகைப் (Knighthood) பட்டத்தை வழங்கியது. இதன் விளைவாக இவரது பெருமை உயர்ந்தது. முதல் பர்மியப் போரில் இவர் தலைமை ஆளுநர் ஆம்கர்சுடு பிரபுவிற்குப் பெருந்துணை புரிந்தார்.

சென்னை மாநிலத்தின் ஆளுநராக இவர் பதவியேற்றிருந்த போது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பல துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். ஏழை உழவர்களின் நலன் கருதி இரயத்துவாரித் திட்டத்தைச் செயற்படுத்தினார். தமிழ் நாட்டின் கல்வி நிலை பற்றி அறிந்து அறிக்கை அளிக்க விசாரணைக் குழு ஒன்றினை இவர் கி.பி. 1822-இல் அமர்த்தினார். பொதுக் கல்வி விரிவடைய இவர் பல முயற்சிகள் மேற்கொண்டார். பரம்பரையான பள்ளிகளுக்குத் தேவையான நிதியுதவி அளிக்கவும் இவர் தக்க ஏற்பாடுகளைச் செய்தார். மக்களின் மனமறிந்து, தேவையுணர்ந்து அவர்களைப் பரிவுடன் நடத்தி, மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றார். அதனால் கவிஞர் ஒருவர் இவர் மீது 'மாந்தவரிசி' என்னும் புராணத்தைப் பாடியுள்ளார். இதில் மன்ரோவின் இனிய பண்புகள், மக்கள் மீது அவர் கொண்டிருந்த பற்று, அக்கறை, கல்வி பரவுவதற்கு அவர் மேற்கொண்ட பணிகள், மக்களின் மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கப் பாடுபட்டமை முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன. மக்களுக்கு உண்மையான சேவை செய்த மன்ரோவிற்குப் பொது மக்கள் தமது சொந்தச் செலவில் சென்னை தீவுத்திடலில் உருவச்சிலை ஒன்றினை அமைத்துள்ளனர். அக்குதிரை வீரர் சிலை கி.பி. 1839 – இல் நிறுவப்பட்டது. அது இந்தியா முழுவதிலும் காணப்படும் சிலைகளில் மிகச் சிறந்தது. குதிரையின் மீது அமர்ந்து இவர் பயணம் செய்வது போன்று அச்சிலை உள்ளது.

சென்னை மாநில மக்களின் உள்ளங்கவர்ந்த மன்றோ, சென்னை மாநிலத்தை ஆட்சி செய்த ஆங்கிலேய ஆளுநர்களுள் போற்றத்தக்கவர் ஆவார். 'கிழக்கிந்தியக் குழுவின் ஆற்றல்மிக்க ஊழியர்களுள் சர் தாமசு மன்றோவும் ஒருவர்' என்று மார்சுமேன் (Marshman) பாராட்டும் அளவிற்கு இவர் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார்.

இரா.த.

**மன்ரோ சேம்சு (கி.பி. 1758-1831):** இவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஐந்தாம் குடியரசுத் தலைவராகப் பணிபுரிந்தவர். சேம்சு மாடிசனுக்குப் பின் (கி.பி. 1809–1817) பதவியேற்ற இவர், அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளிநாட்டுறவில் புதிய கோட்பாடுகளை வகுத்தளித்தார். அதன் காரணமாக அமெரிக்க வரலாற்றில் இவர் சிறப்பிடம் பெற்றுள்ளார். சேம்சு மன்ரோ (James Monroe) விடுதலைப் போராட்டக் காலந்தொட்டு அமெரிக்க அரசியலரங்கில் பல சிறப்பான பொறுப்புகளை வகித்தார். அமெரிக்காவின் அயல் நாட்டுறவு பற்றி இவர்விடுத்த அறிக்கை'மன்ரோக் கோட்பாடு' என்று இவரது பெயராலே வழங்கப்பட்டது. அமெரிக்க அயல்நாட்டுறவில் அக்கோட்பாடு (Monroe Doctrine) சிறப்பு மிக்க ஆவணமாகக் கருதப்படுகிறது.



மன்ரோ, சேம்சு

மன்ரோ, வெர்சீனியா மாநிலத்தில் உள்ள வெசுடு மோர்லாந்து (Westmoreland) என்னுமிடத்தில், கி.பி. 1758 – ஆம் ஆண்டு பிறந்தார். இளமைக் கல்விக்குப் பின் சட்டம் பயின்றார். எடுப்பான தோற்றமுடைய இவர், அறிவுக்கூர்மை கொண்டவர். இசுபென் எலிசபெத்து, சோன்சு மன்ரோ ஆகியோர் இவர் பெற்றோராவர்.

விடுதலைப் படைவீரராகப் பணியாற்றிய இவர் போருக்குப் பின்னர் இராசதந்திரத்துறையில் பணி

யாற்ற அனுப்பப்பட்டார். பிரான்சிலும் இங்கிலாந்திலும் அமெரிக்கத் தூதுவராகப் பணிபுரிந்த இவர் மாடிசனின் ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுறவுச் செயலராகப் பொறுப்பேற்றார். இவர் கி.பி 1799 -ஆம் ஆண்டு முதல் 1802-ஆம் ஆண்டு முடிய வர்சீனியாவின் ஆளுநராகவும் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார். இறுதியாகப் போர்த்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றுத் திறமையுடன் செயல்புரிந்தார். இவர் கி.பி. 1816-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் மக்களாட்சிக் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு உருபசு கிங்கு(Rufus King) என்பாரை எளிதில் தோற்கடித்துப் பதவியேற்றார். தேர்தலுக்குப்பின் கட்சி வேறுபாடுகள் முற்றிலும் மறைந்து 'நல்லுறவுக் காலம்' (Era of good feeling) தோன்றியது. மன்ரோவின் பதவிக்காலம் (கி.பி. 1817-1825) அமெரிக்க வரலாற்றில் பல வகைகளில் சிறப்புப் பெற்றுள்ளது. வெர்சீனிய மரபு வழியினர் என்று கூறப்பட்ட குடியரசுத் தலைவர் பட்டியலில் இறுதியானவர் மன்ரோதான். மன்ரோ கி.பி.1820-இல் இரண்டாம் தடவை அமெரிக்கக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சான்குயின்சி ஆடம்சு என்பாரை மாநிலச் செயலாளராகவும், கால்கூன் (John Calhoun) ஏன்பாரைப் படைச் செயலாளராகவும், கிரா போர்டைக் (Craw ford) கருவூலச் செயலாளராகவும் அமர்த்தினார். அதன் விளைவாகப் பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் தீர்க்கப்படாதிருந்த பல சிக்கல்கள் தீர்க்கப்பட்டன.

**பிளோரிடா (Florida) இணைக்கப்படுதல்:** இசுபெயின் (Spain) நாட்டின் ஆதிக்கத்தில் இருந்த பிளோரிடா, நீக்கிரோ அடிமைகளுக்கும் வெள்ளையர்களுக்கும் அடைக்கலம் அளித்து வந்தது. அமெரிக்கா, பிளோரிடாவின் மீது படையெடுத்து இசுபானியக் கோட்டைகளைக் கைப்பற்றியது. செவ்விந்தியர்களை அமெரிக்காவிற்கு எதிராகத் தூண்டிய குற்றத்திற்காக ஆங்கிலக் குடிமக்கள் இருவர் தூக்கில் இடப்பட்டனர். கிழக்குப் புளோரிடாவை அமெரிக்கா வன்முறையால் கைப்பற்றக் கூடும் என்று அஞ்சிய இசுபெயின், பிளோரிடாவை விற்று விட விருப்பம் தெரிவித்தது. எனவே, கி.பி. 1819 - இல் ஆடம்சு-ஓனிசு உடன்பாடு (Adams-Onis Treaty) கையெழுத்தாயிற்று. அதன்படி கிழக்குப் பிளோரிடாவை அமெரிக்காவிற்கு அளிக்கவும், அமெரிக்கா கைப்பற்றிய பகுதிகளை அமெரிக்காவிற்கே அளித்துவிடவும் இசுபெயின் இசைந்தது. உலூசியானாவின் எல்லையும், இசுபானிய மெக்சிகோவின் எல்லையும் வரையறுக்கப்பட்டன.

**இலத்தீன் அமெரிக்க நாடுகளை ஏற்றல்:** இசுபெயினும் போர்ச்சுகலும் தென்அமெரிக்காவின் பல பகுதிகளைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தன. நெப்போலியனின் படையெடுப்பினால், இசுபெயினும் போர்ச்சுகலும் வலிமை இழந்தன. இலத்தீன் அமெரிக்கநாடுகள் அதனைப் பயன் படுத்திக்கொண்டு அர்சண்டைனா, சிலி, பெரு, மெக்சிகோ, வெனிசுலா, கொலம்பியா முதலான நாடுகள் விடுதலை பெற்ற நாடுகளாக அறிவித்தன. மன்ரோ கி.பி. 1822 - இல் மேற்கூறப்பட்ட ஐந்து இலத்தீன் அமெரிக்க நாடுகளை ஏற்றிருப்பதாக அறிவித்தார். அவற்றிற்கு அமெரிக்கத் தூதர்களையும் அனுப்ப ஏற்பாடுகள் செய்தார். அது மன்ரோவின் வீரச்செயல் ஆகும்.

**மிசௌரி சமரசம்:** (கி.பி.1820-1821): மிசௌரி ஒரு மாநிலமாக அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைய வேண்டிக் கொண்டது. அப்போது அப்பகுதியில் அடிமைகள் அதிகமாக இருந்தனர். அந்நிலையில் மையச் சட்ட மாமன்றத்தில் சேம்சு தால்மாட்சு (James Tallmadge)என்னும் நியூயார்க்கு நகரப் பேராளர் மிசௌரிப் பகுதியில் அடிமை வாணிகம் ஒழிக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது இணைப்பரசில் அடிமை முறை கொண்ட மாநிலங்கள் பதினொன்று எனச் சமபலம் ஆளவை மன்றத்தில் (Senate) இருந்தது. அடிமைகள் வைத்திருந்த மிசௌரி மாநிலம், கூட்டமைப்பில் சேர்ந்தால் சமநிலை பாதிக்கப்படும் என்று வடமாநிலங்கள் அஞ்சின. உருபசு கிங்கு (Rufus King) போன்ற கூட்டாட்சிக் கட்சிக்காரர்கள் மிசௌரி பற்றிய செய்திகளை அரசியல் சிக்கலாக ஆக்கியிருந்தனர். தெற்கிலும் வடக்கிலும் மோதல் ஏற்படும் நிலையும் உருவானது. இறுதியில் மிசௌரி அமைதி என்ற இடைக்கால உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி மிசௌரி, அடிமை முறையைக் கொண்டுள்ள மாநிலமாக இணைக்கப்படும்.அதே நேரத்தில் மாசசூசெட்சு மாநிலத்திலிருந்து மெயின் எனும் புதிய மாநிலம் உருவாக்கப்பட்டு அது அடிமை முறையற்ற சுதந்திர மாநிலமாகச் சேர்க்கப்படும். இவ்வாறு கி.பி.1821 -இல் மிசௌரி அமெரிக்கக் கூட்டமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

**மார்சலும் அமெரிக்காவின் நீதிநிருவாகமும்:** கூட்டாட்சிக் கொள்கையினரான சான் மார்சல் (John Marshal) என்னும் வர்சீனிய வழக்குரைஞர் ஏறத்தாழ 35 ஆண்டுக் காலம் அமெரிக்கத் தலைமை நீதிபதியாக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். அவரது உதவியால் நீதித்துறை நன்கு சீரமைக்கப்பட்டது

**ஐரோப்பியக் கூட்டணி:** நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐரோப்பாவில் முடியாட்சி வலிமை பெறத் தொடங்கியது. புரட்சி இயக்கங்களை ஒடுக்கவும் முடியாட்சிகளை நிலைபெறச் செய்யவும் கூட்

டணி ஒன்று உருவானது.ஆசுத்திரியா உருசிய,பிரான்சு பிரிட்டன், பிரசியா ஆகியவை அதில் இணைந்தன. அக்கூட்டணி இசுபெயினில் முடியாட்சி நிலைத்திடத் துணை நின்றது.இசுபெயின் ஆதிக்கம் தென் அமெரிக்காவில் தொடர்ந்து இருக்கப் பிரான்சுப் படைகள் அனுப்பப்படலாம் என்ற அச்சம் தென் அமெரிக்க நாடுகளிடையே இருந்தது. அந்நிலையில் தென் அமெரிக்க நாடுகளைக் காத்தற் பொருட்டு மன்ரோ தனது அயல்உறவுக்கொள்கையை மன்ரோக்கோட்பாடு என்னும் பெயரில் வெளியிட்டார். அமெரிக்க அயலுறவுக் கொள்கையில் அது ஒரு சிறப்பான கட்டமாகும்.

**மன்ரோக் கோட்பாடு:** சேம்சு மன்ரோ, அமெரிக்க அயல் நாட்டுறவில் புதியதொரு முத்திரையைப் பதித்தார். அதுவே மன்ரோக் கோட்பாடு (Monroe Doctrine) ஆகும். காண்க: மன்ரோக் கோட்பாடு.

மன்ரோ தம் 61 – ஆம் வயதில் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற போதிலும் சுறுசுறுப்பாகவே பணிபுரிந்தார். நிருவாகத்தைச் சீர்திருத்தினார். பல எல்லைத் தகராறுகளைத் தீர்த்தார். குறிப்பாக கி.பி.1817 – இல் கையெழுத்தான இரசு – பேகட்டு உடன்பாடு (Rush-Bagot Agreement) பிரித்தானிய – அமெரிக்க மனக்கசப்பைத் தீர்த்தது. பெரிய ஏரிப் பகுதியில் போர்க்கப்பல்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டது. இவ்வாறு பல சாதனைகளைப் புரிந்த சேம்சு மன்ரோ, குடியரசுத்தலைவர் வாசிங்டனுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்க புகழ்மிகு தலைவராகக் கருதப்படுகிறார். இவர் கி.பி.1831 – ஆம் ஆண்டில் காலமானார். ம.இரா.

**மன்று சுட்டிய உரிமை:** சட்டப்படியான உரிமைகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று ஒருவர் சுட்டிய உரிமை(Right in Personam) யாகும். மற்றையது, மன்று சுட்டிய உரிமை (Right in Rem) ஆகும். இவற்றுள் மன்று சுட்டிய உரிமையானது ஒருவர் சுட்டிய உரிமைக்கு எதிரிடையாக அமைந்துள்ளது.

ஒருவரது சட்டப்படியான உரிமையானது எவருக்கு எதிராகப் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பதனை வைத்தே ஓர் உரிமையானது ஒருவர் சுட்டியதா மன்று சுட்டியதா என்பதை முடிவுசெய்ய இயலும். ஒருவரது சட்டப்படியான உரிமையானது ஒரு குறிப்பிட்டவருக்கு எதிராகவோ சில குறிப்பிட்டவர்களுக்கு எதிராகவோ பாதுகாக்கப்பட்டிருந்தால் அது ஒருவர் சுட்டிய உரிமையாகும்.

அத்தகைய உரிமையை, எவருக்கு எதிரான பாதுகாப்பினை நல்குகிறதோ அவருக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த முடியும். அவரைத் தவிர்த்து ஏனையோர்க்கு எதிராகப் பயன்படுத்த இயலாது. ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட உரிமைகள் அவ்வகையைச் சாரும். ஏனெனில் அவ்வகை உரிமைகளை ஒப்பந்தத் தரப்பினருக்கு எதிராக மட்டுமே செயலாக்க முடியும். ஏனையோருக்கு எதிராகச் செயற்படுத்த முடியாது.

ஒருவரது சட்டப்படியான உரிமையானது உலகிலுள்ள எவருக்கும் எதிராகப் பாதுகாக்கப்பட்டிருந்தால் அத்தகைய உரிமையை மன்று சுட்டிய உரிமை என்பர். ஏனெனில், இத்தகைய உரிமையானது உலகில் உள்ள அனைவரின் மீதும் இந்த உரிமைக்குத் தொடர்புடைய கடமைகளைச் சுமத்துவதின் மூலமாகப் பாதுகாக்கப்படுகிறது.

(எ-டு) ஒருநிலச் சொந்தக்காரருக்கு அந்த நிலதின்மீது உள்ள உரிமை மன்று சுட்டிய உரிமையாகும். ஏனெனில், அந்த நிலத்தின் பயனைத் துய்ப்பதற்கான உரிமையானது அவரைத்தவிர உலகில் உள்ள மற்ற எவருக்கும் வழங்கப்படவில்லை. மேலும் உலகில் உள்ள அனைவரும் அந்த நிலத்தின் பயனைத் துய்க்கின்ற உரிமை பெற்றவரை அவரின் உரிமையில் தலையிடாமல் அவரைத் துய்க்க அனுமதிக்கும் கடமையினைப் பெற்றிருக்கிறார்கள். அத்தகைய கடமையிலிருந்து எவராவது மீறும் பொழுது நிலச் சொந்தக்காரர் நிலத்தின் மீது பாராட்டுகின்ற உரிமைக்குக் கேடு விளைகின்றது.

மேற்கண்ட எடுத்துக்காட்டின்படி ஒருவர் அவரது நிலத்தின் மீது கொண்டுள்ள நில உரிமையானது மன்று சுட்டிய உரிமை என்பது தெரியவரும். ஏனெனில், அந்த உரிமைக்குத் தொடர்புடைய கடமைகள் நிலச்சொந்தக்காரர் தவிர உலகத்திலுள்ள அனைவர் மீதும் சுமத்தப்பட்டிருக்கின்றன. அல்லது இவ்வுரிமை உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் (மன்று) அது தொடர்பான கடமையைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. மன்று சுட்டிய உரிமைகள், அனைத்துமே எதிர்மறை உரிமைகள் (Negative rights) என்று கூறலாம். ஏனெனில் இவ்வகை உரிமைகள், உரிமை பெற்றவர் இவ்வுரிமையினால் பெறும் நலன்களில் ஏனையவரின் தலையீட்டினை அகற்றுவதின் வாயிலாக நிலைநாட்டப்பட்டிருக்கின்றன. உரிமை பெற்றவர்கள் உரிமையின் வாயிலாகப் பெறுகின்ற நலன்களில் மற்றவர்கள் தலையிடக்கூடாது என்ற சட்டம் இடும் கட்டளையானது (கடமையானது) எதிர்மறையில் விளங்குவதால், இவ்வகைக் (கடமைகள்) கட்டளை எந்த உரிமைகளைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகிறதோ அவ்வுரிமைகளை எதிர்மறை உரிமைகள் என்பர்.

பெரும்பாலான மன்று சுட்டும் உரிமைகள் மனிதன் பருப்பொருள்களின் மீது கொண்டுள்ள உரிமைகளைக் குறிப்பதனால் அவ்வகை உரிமைகள் பெரும்பான்மையும் மெய்உரிமைகளாகத்(Real Rights) திகழ்கின்றன. ம.கா.

**மன்னான்** பழங்குடியினர், கேரள மாநிலத்திலுள்ள கொல்லம், கோட்டயம், பாலக்காடு, இடுக்கி மாவட்டங்களில் வாழ்கின்றனர். இயல்பான உயரமும் கரும்பழுப்பு நிறமும் உடையவர்கள். மலையின் உச்சியில் வாழ்கின்றனர். இவர்கள், மலையாளக் கிளைமொழி (Dialect of Malayalam) ஒன்றினைப் பேசுகின்றனர். மன்னான் பெண்கள் தலையில் சீப்புடன் காணப்படுவர்; நெற்றியில் பச்சை குத்திக் கொள்வர்.

இவர்கள் தாம் வாழும் இடங்களைத் தத்தம் குலப்(Clan) பெயரால் குறிப்பிடுகின்றனர். மருமக்கள் தாய முறையைப் பின்பற்றுகின்றனர்; சிலர் தந்தை வழி (Patrilineage) முறையையும் பின்பற்றுகின்றனர்.

இவர்கள் குடிசைகள் இரண்டாகத் தடுக்கப்பட்டிருக்கும். யானை நடமாட்டமுள்ள இடங்களில் மரத்தின் மீது பரணமைத்து வாழ்கின்றனர். மற்ற மன்னான் குடிசைகளைக் காட்டிலும் பெருந்தனக்காரனின் (Headman) குடிசை பெரிதாக இருக்கும்.

ஒரு காலத்தில் பின்பற்றிய இடம் மாறிப் பயிர் செய்யும் முறையை (Shifting Cultivation) இப்போது பின்பற்றுவதில்லை. கூலிவேலை செய்தும் வேட்டையாடியும் வாழ்கின்றனர். இவர்கள் வேட்டைக்குச் செல்லும்போது துப்பாக்கியையும் பயன்படுத்துகின்றனர். மலைகளில் கிடைக்கும் கிழங்கு, பழவகைகளை உணவாகக் கொள்கின்றனர். தேன் சேகரிப்பதிலும் இவர்கள் வல்லவர்கள். மாட்டுக்கறியை உண்ணமாட்டார்கள். ஆனால், காட்டெருமை இறைச்சியை உண்பர். அக்காலத்தில் பாலே அருந்த மாட்டார்கள். தேங்காயைச் சாப்பிட்டால், யானையும் புலியும் தாக்கும் என நம்புகின்றனர். அந்த நம்பிக்கைக்குரிய காரணத்தை விளக்குவதில்லை. பார்வதி உருவாக்கிய மண் யானையிலிருந்து தோன்றியவர்கள் என்ற நம்பிக்கையும் இவர்களிடையே உள்ளது.

மன்னான் பழங்குடித் தலைவனுக்குக் 'காணிக்காரன்' என்பது பெயர். அவருக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்புண்டு. காணிக்காரனுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் இப்பழங்குடி மக்களே செய்து தருகின்றனர். காணிக்காரனுக்கு உதவியாக 'மந்திரி' என்றொருவர் உண்டு. இவர்களுக்கு மந்திரவாதியும் உதவியாய் உள்ளார். இப்பழங்குடியினர் நோயுற்றால், மந்திரவாதியைக் கலந்தாலோசிப்பர். கஞ்சியார்ப் பகுதி மன்னானை 'இராச மன்னான்' எனக் கூறுகின்றனர். அவர்தான் மன்னார்களுக்குப் பெருந் தலைவர்.

வேளாண்மை வேலை தொடங்கும் முன்பும் அறுவடை சமயத்திலும் சாமி கும்பிடுகின்றனர். 'சாத்த முத்து' என்பது ஆண்டுதொறும் நிகழும் முக்கிய சடங்காகும். இவர்கள் வாழுமிடங்களுக்கருகிலுள்ள கோயில்களுக்குச் செல்கின்றனர்.

பெண்கள் பருவமடைந்த பின்னரே திருமணம் செய்கின்றனர். பெரியோர்கள் பார்த்துச் செய்கின்ற திருமணங்களே பெரும்பான்மை ஆகும். திருமணத்திற்கு முன்பு மாமனாருக்குப் பணி செய்தல் இன்றியமையாததொன்றாகும். திருமணம் மணப் பெண்ணின் வீட்டில் நடைபெறும். அதற்காகும் செலவை இரு வீட்டாரும் பகிர்ந்து கொள்வர். மணப் பெண்ணுக்குச் சீப்பு வழங்குதல், வெற்றிலை மாற்றிக் கொள்ளுதல், மாப்பிள்ளையின் சகோதரி மணப் பெண்ணுக்குத் தாலி கட்டல் போன்றவை திருமணச் சடங்கில் குறிப்பிடத்தக்கனவாகும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறை தான் பெரும்பாலும் பின்பற்றப்படுகிறது. முதல் மனைவிக்குக் குழந்தை இல்லாவிட்டால், இரண்டாம் திருமணம் செய்து கொள்ளலாம். மணவிலக்கடைந்த பெண்ணும் மனைவியை இழந்தவர்களும் சேர்ந்து வாழலாம். மறுமணமும் செய்து கொள்ளலாம். தம்பி இறந்தால், தம்பி மனைவியை அண்ணன் திருமணம் செய்து கொள்ளலாம். அண்ணன் இறந்தால், அண்ணன் மனைவியைத் தம்பி திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

மாதவிடாய் காலத்திலும் பேறு காலத்திலும் 'தீட்டுக் குடிசை'யில் பெண்கள் தங்க வேண்டும். அப்பொழுது அப்பெண்கள் சமைக்கக்கூடாது.

இப்பழங்குடியினர் தாங்கள் வாழும் குடியிருப்புக்கு வெகுதூரத்தில் பிணத்தைப் புதைக்கின்றனர். பிணத்தின் முகத்தை நன்கு மழித்துப் புத்தாடை அணிவித்து, பாயில் சுருட்டி இடுகாட்டிற்குத் தூக்கிச் செல்கின்றனர். இடுகாட்டில் இடைக்காலக் குடிசையொன்றும் அமைக்கின்றனர். ஏழு நாள்களுக்குத் தீட்டுக் கடைப்பிடிக்கின்றனர். சு.ச.

**மன்னிப்பு**: குற்றம் புரிந்தவர்களை மன்னிக்கும் அதிகாரம் ஒவ்வொரு நாட்டின் அரசியல் தலைமைக்கும் உண்டு. குற்றம் புரிந்தவரை மன்னிப்பது மட்டுமன்றி, செய்த குற்றத்தையே மறந்து, குற்றம் புரிந்தவரைக் குற்றமற்றவராக ஆக்குவதும் மன்னிப்பு (Amnesty) ஆகும்.

அரசியற் குற்ற மன்னிப்பு எனப் பொருள்படும்

'அம்னெசுடி' (Amnesty) எனும் ஆங்கிலச் சொல் கிரேக்கச்சொல்லான 'அம்னீசியா' (Amnesia) என்பதிலிருந்து தோன்றியதாகும் 'அம்னீசியா' என்பதற்கு மறதி என்பது பொருள். அரசியற் குற்ற மன்னிப்பு என்பது ஒருநாட்டின் தலைமை தனக்கெதிராகச் சாட்டப்பட்ட குற்றங்களை அருள்கூர்ந்து மன்னித்து மறந்துவிடுவதாகும். பொதுவாக மன்னிப்பு அரசியல் சம்பந்தப்பட்ட கொலைக் (Criminal) குற்றங்களுக்கே வழங்கப்படுகின்றது.

சட்டத் துறையில் அரசியற் குற்ற மன்னிப்பு (Amnesty) பொதுவான மன்னிப்பு (Pardon) என்பதிலிருந்து வேறுபட்டதாகக் கருதப்படுகிறது. மன்னிப்பு (Pardon) என்பது குற்றத்துக்காகச் சட்டம் அளித்த தண்டனையை மட்டும் விலக்குவதாகும். ஆனால், அரசியற் குற்ற மன்னிப்பு(Amnesty) சில வகையான குற்றங்கள், குற்றங்கள் எனக் கருதப்படமாட்டா எனச் சட்டம் மூலம் நடைமுறை செய்வதாகும். பொதுவாக மன்னிப்பு, சட்டம் மூலமாகவே நடைமுறை செய்யப்பட்டாலும், சில சமயங்களில் நிருவாக உத்தரவின் மூலமாகவும் மன்னிப்பு வழங்கப்படலாம்.

மன்னிப்பு, பொதுவாக இரண்டு வகைப்பட்டதாகும். 1) குற்றம் புரிந்தவர்களை எந்த நிபந்தனையும் இன்றி மன்னிக்கும் 'நிபந்தனையற்ற மன்னிப்பு' (Absolute Amnesty). 2)குற்றம் புரிந்தவர்களின் மீது சில நிபந்தனைகளை விதித்து, அந்த நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக் கொண்ட பின்னரே அவர்களை மன்னிக்கும், நிபந்தனைகளுடன் கூடிய மன்னிப்பு (Constitutional Amnesty).

மேலும், மன்னிப்புகள் எல்லா வகையான அரசியல் குற்றங்களுக்கும், அவற்றில் ஈடுபட்ட எல்லாக் குழுக்களுக்கும் பொதுவாக அளிக்கப்படுவதாகும். அத்தகைய மன்னிப்பைப் 'பொது மன்னிப்பு' (General Amnesty) எனக் கூறுவர். இன்னும் சில மன்னிப்புகள் சில குறிப்பிட்ட குற்றங்களையும், குறிப்பிட்ட ஆள் அல்லது குழுக்களையும், மன்னிப்பிலிருந்து விலக்கிவைத்து அளிக்கப்படுவதாகும். இத்தகைய மன்னிப்புக்குக் 'குறிப்பிட்ட மன்னிப்பு' (Particular Amnesty) என்பது பெயர். பொது மன்னிப்புக்கு எடுத்துக்காட்டாக அமெரிக்க அதிபர் சான்சன் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டவர்களுககு கி.பி. 1866-ஆம் ஆண்டு அளித்த மன்னிப்பைக் கூறலாம். குறிப்பிட்ட மன்னிப்புக்கு எடுத்துக்காட்டாக மன்னர் இரண்டாம் சார்லசு கி.பி. 1660-ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றியபோது தம்மை எதிர்த்துப் போராடியவர்களுக்கு அளித்த மன்னிப்பைக் கூறலாம். அந்த மன்னிப்பிலிருந்து சார்லசின் தந்தையைக் கொன்றவர்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

மன்னிப்புப் பலவகைப்பட்ட அரசியல் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு வழங்கப்படுகின்றது. முக்கியமாக உள்நாட்டுக் கலவரங்களில் பங்கு கொண்டவர்களை அரசாங்கங்கள் மன்னிப்பது இயல்பு. அரசை எதிர்த்துப் போராடியவர்களின் போர்க்கருவிப் பலத்தை வீழ்த்தி அதன்பின் அவர்கள் மனத்திலுள்ள பழி உணர்ச்சியைப் போக்க மன்னிப்புப் பயன்படுகின்றது. ஒவ்வொரு உள்நாட்டுப் போரின் முடிவிலும் வெற்றி பெறுபவர் தோற்பவரை முழுமையாக அழிக்க இயலாவிட்டால் மன்னிப்பளித்து அவர்களை முன்னைய இயல்பான வாழ்க்கைக்கு மாற்ற முயல்வது வழக்கம். மேலும், இராணுவத்திலிருந்து அனுமதியின்றி ஓடிய இராணுவ வீரர்களுக்கும்(Army Deserters) மன்னிப்பு வழங்கப்படலாம்.

வரலாற்றின் முதல் மன்னிப்பாக 'ஏதென்சு' நாட்டின் மன்னன் திரெசி பூலசு (Thrasy Bulus)கி.மு. 403 - ஆம் ஆண்டு வழங்கிய மன்னிப்புக் கருதப்படுகின்றது. இந்த மன்னிப்பிலிருந்து ஏதென்சின் முப்பது சருவாதிகாரிகளும் ஒதுக்கிவைக்கப்பட்டமையால் இதை ஒரு குறிப்பிட்ட வகை மன்னிப்பு எனக் கொள்ளலாம்.

ஒரு நாட்டின் அரசு தன் பலத்தில் முழு நம்பிக்கையோடு உறுதியாகச் செயற்படும்போதுதான் தனக்கெதிராகக் கிளர்ச்சி செய்பவரை மன்னிக்கும். மன்னிப்பினால் மன்னிப்பு அளிக்கப்படுபவர்களின் பலம் பெருகாது என்பதும், அதனால் மன்னிப்பளிக்கும் அரசு ஒரு பலவீனமான அரசு எனக் கருதப்படமாட்டாது என்பதும் உறுதியான பின்பே மன்னிப்பு அளிக்கப்படல் வேண்டும். மேலும், அரசியல் சாசனத்தின்படி அமைந்த அரசாங்கங்கள் (Constitutional Governments), மன்னர்கள், சருவாதிகாரிகள் ஆகிய உறுதி செய்யப்பட்ட நாட்டின் தலைமைகளே மன்னிப்பை வழங்கலாம். அத்தகைய மன்னிப்பு பொதுவாக மன்னர்கள் முடிசூட்டு விழாவின்போது அளிப்பது வழக்கம். எஸ்.சு.த.

**மனக்கிளர்ச்சி**: சிலவகை உளநோய்களில் காணப்படும் ஒருவகை அறிகுறி மனக்கிளர்ச்சி (Euphorea) என்பதாகும். நோயாளிகள் எவ்வகைக் காரணமுமின்றி மிகுந்த நன்னிலை உணர்வுடன் காணப்படுவர். அவர்களின் இந் நன்னிலை உணர்வுக்கும் சுற்றுப்புற நிலைக்கும் எவ்வகைத் தொடர்பும் இராது.

இம் மட்டற்ற மகிழ்ச்சியும் நன்னிலை உணர்வும் எவ்வாறு ஏற்படுகின்றன என்பது அறிவியலாளர்

களுக்கு இன்னும் தெளிவாக விளங்கவில்லை. குருதி கலந்து உறுப்புகள் செயற்படத் தூண்டும் சுரப்பு நீர் வகைகளும் (Harmone)மனக் கிளர்ச்சிகளும் தொடர்பு உடையனவாகத் தெரிகின்றன. அவ்வகையில் சிறுநீர கங்களுக்கு மேல் அமைந்துள்ள குண்டிக்காய் (Adrenal) எனப்படும்நாளமில்லாச் சுரப்பிபிலிருந்து வெளிப்படும் குண்டிக்காயின் புறப்பகுதி சார்ந்த (Adreno Cortical) சுரப்புநீர் இவ்வகை உணர்ச்சி மாற்றங்களுக்கு நெருங் கிய தொடர்பு உள்ளதாக ஆராய்ச்சியாளர்களால் காட்டப்பட்டிருக்கிறது.

இம் மனக்கிளர்ச்சியானது கிளர்ச்சிச் சோர்வு உளநோய் (Manic Depression) எனப்படும். இந் நோய் இடையிடையே நன்னிலை மாறி மாறி களிப்பு சோர்வு வெறிகளுண்டுபண்ணும். ஒருவகை உள நோயாளிகளிடத்திலும், அறைகுறை முடக்கு வாத நோயாளிகளிடத்திலும் (Paresis), பலவகைப் போதை மருந்துகள் உட்கொள்வோரிடத்திலும் பரவ லாகக் காணப்படும் ஒன்றாகும். வி.எஸ்.ஆர்.வி.

**துணை நூல்:**

**Shanmugam, T.E.,** Abnormal Psychology, Tata Mcgraw Hill & Co., Ltd., New Delhi, 1985.

மனக்கோட்டை: இது கற்பனையில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனைப் பொதுவாகப் பகற்கனவு அல்லது கற்பனை என்றும் கூறலாம். மனக்குலைவு மனக்கோட்டையை உருவாக்குகிறது. பொதுவாக வாழ்க்கையில் சிக்கல்களுக்குத் தீர்வு காணமுடியாத ஒரு நிலை ஏற்படும்போது மனக்குலைவு உருவா கிறது. அத்தகைய சமயங்களில் மனிதன் மனக் கோட்டையின்மூலம் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு அப் போதைக்கு மன நிம்மதி அடைகிறான். ஆதலால் பலருக்கு மனக்குலைவு (Frustration) மனக் கோட்டையை (Fantasy) உருவாக்க ஏதுவாகிறது.

மனிதன் எந்தப் பருவநிலையிலும் மனக்கோட்டை யில் ஈடுபட வாய்ப்புகள் உண்டு. குழவிப் பருவத்தி லும் (Childhood), குமரப் பருவத்திலும் (Adole-scence) மனக்கோட்டையில் ஈடுபடும் தன்மை மிகுதி யாக இருக்கும். குழந்தையைப் பேணுபவர்கள் குழந் தைகள் நல்லமுறையில் வளருவதற்கு மனவளர்ச்சித் தேவைகள், உடல்வளர்ச்சித் தேவைகள் ஆகிய அடிப் படைத்தேவைகளைத் தருதற்கேற்ற நல்ல சூழ் நிலையை உருவாக்க வேண்டும். நல்ல சூழ்நிலை நல்ல வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும். ஆனால் சில குழந்தைகள் வளரும் சூழ்நிலையில் பல குறை கள் ஏற்பட்டு அவற்றால் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இயலாத நிலை ஏற்படுகிறது. அத்தகைய சூழ்நிலையில் குழந்தைகள் வாழ்க்கை யில் இயல்பாக நிறைவுபடுத்திக் கொள்ளமுடியாத தேவைகளை மனக்கோட்டையில் உருவாக்கிக் கொண்டு மனநிறைவு காண்கின்றனர்.

சான்றாகத் தாயற்ற குழந்தை தாயன்புக்கு ஏங்கி மனக்கோட்டையின் மூலம் தாயின் அன்பும் அரவணைப்பும் கிடைப்பதுபோல் கற்பனை செய்து கொண்டு அப்போதைக்கு மனநிறைவு அடைகிறது.

குமரப்பருவத்தில் மனக்கோட்டை, எதிர்ப்பாலா ரின்(Opposite sex)அன்பினை வெல்லுதல், சமூகத்தில் உயர்ந்த இடத்தை அடைதல், செல்வராதல் ஆகியவை பற்றியதாக அமையும்.

நடுத்தர வயதில் மனக்கோட்டையில் ஈடுபடும் தன்மை குறைந்து காணப்படும். இந்த வயதில் பால் வெற்றி (Sex Conquest), பணி வெற்றி, செல்வம், பதவி, அதிகாரத்தில் வெற்றி போன்ற மனக் கோட்டைகள் பரவலாகக் காணப்படும். மனக் கோட்டை,ஒரு மனிதனின் உளநலம் மன முறிவினால் கெடும்போது மன அமைதியை நிலைநாட்டத் தற் காப்புக் கருவியாக உதவுகிறது.

இத்தகைய நிலை அவ்வப்போது உருவாக்கப்பட் டால் மன ஆரோக்கியத்திற்குத் தீங்கு ஏற்படாது. ஆனால், மனக்கோட்டை மனமுறிவு ஏற்படும் போதெல்லாம் உருவானால் அது மனிதனின் இயல் பான மன வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக்கூடும். சா.வி.கி.

மனச்சாட்சி: மனச்சாட்சி என்னும் சொல் லுக்கு வழக்கத்தில் மூன்றுவகைப் பொருட்கள் உள் ளன. அவை, 1) புறம்பான அதிகாரத்தின் விளை வினால் தன் குற்றம் கண்டுபிடிக்கப்படுமோ அல்லது தனக்குத் தண்டனை ஏற்படுமோ என்ற அச்சத்தில் தன்னிச்சையின்றிக் கீழ்ப்படிதல், 2) தன்னைத் தானே குற்றம்சாட்டித் தீர்மானித்துக்கொள்ளல், 3) ஆக்க உணர்வினால் தன் மீது ஏற்படும் மன நிறைவின்மை ஆகியவையாம்.

பிராய்டு என்பவரின் கருத்துப்படி ஒருவனது மனம் தன்னுணர்வு உந்துதல் (Id), தன்முனைப்பு (Ego), நெறி முறைத் தன்முனைப்பு (Super Ego) என்னும் மூன்று பாகுபாடுகளைக் கொண்டது. தன் னுணர்வு உந்துதல் என்பது உள்ளுணர்வுகளின் சக்தி யாகும். அதிலிருந்து வெளிப்படும் சக்தியை 'இன்ப இயல் பூக்கம்' (Libido) என்பர். அந்த இயல்பூக்கம் காம இயல்பு வாய்ந்தது. அது நனவிலி நிலையிலுள் ளதும் நெறிமுறைக்கு அப்பாற்பட்டதும் ஆகும். தன்முனைப்பு என்பது உள்ளுணர்வுகளால் ஆனது. ஆனால், அது புலன்காட்சியினால் பக்குவப் பட்ட

தாகும். எனவே அது தணிக்கை வேலையினைச் செய்கிறது. நெறி முறைத் தன்முனைப்பு ஒரு பகுதி பிறவி உள்ளுணர்வுகளையும், மற்றொரு பகுதி கற்றலின்மூலம் அறிந்த தடை முறைகளையும் அடக்கியுள்ளன. அது சிறுவயதில் பெற்றோரின் சாயலாக உள்ளது. பெற்றோரின் தடை, பயமுறுத்தல், மதிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. எனவே அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். அவர்களின் தண்டனையைத் தவிர்க்கவேண்டும் அல்லது ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிற கருத்தினைக் கொண்டதாக உள்ளது. அதனுடைய முக்கிய வேலை தன்முனைப்பைக் கட்டுப்படுத்துவதாகும். அதனை மீறும்பொழுது ஒருவகைக் குற்ற உணர்வு ஏற்படுகிறது. அதுவே பிராய்டின் கருத்துப்படி மனச்சாட்சியின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைகிறது.

மோவரெர் (Mowrer) கருத்தின்படி, தன்முனைப்பு நன்றாக வளர்ச்சி அடையாத நிலையில் தன்னுணர்வு உந்துதல் தூண்டுதலின் காரணமாகச் செய்யும் செய்கைகளை நெறிமுறைத் தன்முனைப்பு கண்டிப்பதனால் ஏற்படும் குற்ற உணர்வே மனச்சாட்சியாகும். எனவே, ஒருவனது நெறிமுறை முனைப்பு வலுவற்ற நிலையிலிருந்து அவனது தன்முனைப்பும் வளர்ச்சியற்ற நிலையிலிருப்பதால் அவன் சமுதாயத்தில் விரும்பத்தகாத செய்கைகளையும் குற்றங்களையும் செய்வதாகக் கருதப்படுகிறது. அதே சமயம் மிகப் பெருந்தன்முனைப்பு அளவிற்கு மீறி வளர்ச்சியடைந்திருந்தால் அவன் இணக்கமின்மையுடன் வாழ்பவனாக இருப்பான்.

பிராமரும் சாசுட்டிரம் என்பவரும் (Brammer & Shastrom) மனச்சாட்சியினைத் தன்ஒழுங்குக் கோட்பாட்டின் (Self System Theory) மூலம் விளக்கியிருக்கிறார்கள். ஒரு சிறுவன் சமயம் அல்லது ஒரு போதனையைப் பின்பற்றி வாழ்க்கையை நடத்த முயற்சி செய்யும்போது அவன் அவற்றின் எதிர்பார்ப்புகளுக்குத் தன் நடத்தை ஒத்திருக்கிறதா என்கிற எண்ணத்துடனும், மேலும் தான் செய்யத் தக்கவற்றைச் செய்யாமல் செய்யத்தகாதவற்றைச் செய்கின்றோமா என்கிற எண்ணத்துடனும் வாழ்கிறான். அதுவே அவனது மனச்சாட்சியாக அமைகிறது. எனவே, அவன் தன்ஒழுங்கு முறையைக் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் தேவைகளுக்கும் ஏற்ப ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதுவே மனிதநேய உளவியலாரின் கருத்துமாகும்.

ஆல்போர்ட்டு (Allport) என்பவர் அக் கருத்தினை ஏற்றுக்கொண்டபோதிலும் அக் கருத்து சிறுவரின் மனச்சாட்சியினை மட்டுமே விவரிக்கிறது; பருவமடைந்தோரின் (Adult) மனச்சாட்சியினைப் போதிய அளவு விவரிக்கவில்லை எனக் கூறுகிறார். மனச்சாட்சியானது ஒருவனுக்குக் கட்டுப்படுதல் (Conditionery) மூலமாகவும், தண்டனையின் மூலமாகவும் மட்டுமே ஏற்படுவதன்று. அது ஒரு வகைக் கடமையுணர்வினாலும் ஏற்படுவதாகும். நல்லமுறையில் வளர்ச்சியுற்ற மனச்சாட்சி என்பது, ஒரு மனிதன் தான் தன் ஒழுக்கநிலையைப் பாதிக்கும் வண்ணம் நடந்துகொண்டோமோ என்று நினைக்கிற எண்ணத்திலும், தனது குறிக்கோளை அடையவில்லையே என்கின்ற எண்ணத்திலும் அடங்கியுள்ளது. எனவே, ஆல்போர்ட்டின் கருத்துப்படி ஒருவனின் மனச்சாட்சியில், தண்டனையின் பயத்திற்குப் பதிலாக நல்ல நீதிநெறிகள் இடம்பெறுகின்றன. அதனை ஆல்போர்ட்டு ஒருவன் நடத்தையைத் திட்டமிட்ட மதிப்புகள் (Schemata of Values) நிருணயிக்கின்றன என்று குறிப்பிடுகிறார். அதனை ஆர்மி (Hormey) என்பவர் மனச்சாட்சி என்பது ஆக்கமுறையாகத் தன்னைக் குறித்து ஏற்படும் திருப்தியின்மை என்று கூறுகிறார்.

ஐசன்கு (Eysenck), வாட்சன் (Watson) போன்ற நடத்தைக் கொள்கையினர் (Behaviourists) மனச்சாட்சியானது உள்ளுணர்வு கொண்டதாயிருப்பினும் அது ஆக்கநிலை எதிர்வினை (Conditioned Reflex Action) என்று குறிப்பிடுகின்றனர்.

மே (May) என்பவர், ‘மனச்சாட்சி என்பது ஒருவனது பழைய அனுபவங்களின்மூலம் கற்றறிந்தவை, புதிய அனுபவங்களுடன் இணைந்து விடுகிறது. எனவே அவனது நீதிநெறிமுறைகள் தெளிவுறுகின்றன. அவனது உள்ளாய்வு மிகத் தீர்க்கமாயுள்ளது. எனவே, ஒருவனது நல்மனச்சாட்சியானது அவனது ஆழ்ந்த அனுபவத்திலிருந்து நல்ல வழிமுறையினைப் பாகுபடுத்தவும், பக்குவப்பட்ட நெறிமுறைத் தன்முனைப்பை (Mature Ego) உருவாக்கவும் வழிவகுக்கிறது’ என்று கூறுகிறார். பெ.டே.

**மனச்சாய்வு**: ஒருதலைச் சார்வாகச் செல்வதையும், விருப்பு வெறுப்புக் காட்டுவதையும், ஒன்றைவிட மற்றொன்றில் இயல்பாக அதிக விருப்பம் காட்டுவதையும் மனச்சாய்வு என்று கூறுவர். வழக்குத் தரப்பாரின் மீதோ வழக்குப் பொருண்மை மீதோ மனச்சாய்வு உடைய எவரும் அவ் வழக்கை நியாயமாகத் தீர்வு செய்ய இயலாது. ஏனெனில் சட்டத்தின்படி நீதி வழங்கவேண்டிய நீதிபதியானவர் நீதி வழங்குவதோடு மட்டுமன்றி, அவருடைய தீர்ப்புகள் வெளிப்படையாக ஐயத்திற்கிடமின்றி அவர் நீதி வழங்கியிருப்பது போன்ற தோற்றத்திலும் அமைந்திருத்தல் வேண்டும். மேலும், ஒருவர் தம்முடைய வழக்கிற்குத் தாமே நீதிபதியாக இருக்க முடியாது.

அதுவும், மனச்சாய்வு (Bias) கொண்டவர் நீதிபதியாக இருத்தல் கூடாது என்ற கொள்கையினை வலியுறுத்தலே ஆகும். ஒரு நீதிபதி மனச்சாய்வுக்கு உட்படுத்தப்படும் சூழ்நிலை ஒன்று வழக்குமன்றத்தில் உருவாக்கப்படுமேயானால் அத்தகைய சூழ்நிலையில் அந்த நீதிபதி அந்த வழக்கினை விசாரிக்கக்கூடாது. எடுத்துக்காட்டு: நீதிபதியின் முன்னே அவருடைய மகன் குற்றவாளிக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தப்படுதல்; நீதிபதியின் முன்னே அவர் மகன் வழக்கறிஞராகத் தோன்றி வாதிடுவது; நீதிபதியின் நண்பர் ஒருவரின் வழக்கு, அவர் முன் விசாரணைக்கு வருதல் ஆகும். இத்தகைய சூழ்நிலைகளில் நீதிபதி, எவ்வளவுதான் நீதியாளர் என்று பெயர் பெற்றிருப்பினும் அவர் தீர்ப்பு மனச்சாய்வின் அடிப்படையில் அமைந்திருக்குமோ என்று ஐயுற இடமிருக்கிறது. எனவே, அதுபோன்ற சூழ்நிலைகளில் அவர் நீதிபதியாகச் செயற்படக்கூடாது. தமக்குச் சிறு ஆதாயம் கிடைக்கும் என்றிருக்கும் வழக்குகளிலும் அவர் நீதிபதியாகச் செயற்படக்கூடாது. தம்முடைய பணமோ, பொருளோ தொடர்புற்றிருக்கும் வழக்குகளிலும் அவர் நீதிபதியாகச் செயற்படக்கூடாது. அதுபோலவே, தாம் வழங்கிய தீர்ப்பை மேல் வழக்காக எடுத்து ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்படவில்லை; காரணம் அவர் முடிவை அவரே மறுபடியும் ஆராய்ந்தால் அது மனச்சாய்வு பெற்றதாகவே இருக்கும் என்று கருதப்படுவதே ஆகும்.

நிறுவனங்களில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் பொழுது, நிருவாகத்திற்கும்-தொழிலாளிக்கும் இடையே தீர்ப்பளிக்கும் நடுவர் குறிப்பிட்ட வழக்கின் பொருண்மைக்குத் தொடர்பு உடையவராயிருத்தல் கூடாது. அலுவல் தொடர்பான மனச்சாய்வு எவ்வகையிலெல்லாம் நிகழலாம் என்பதைக் கீழ்க்கண்ட வழக்குகளின் மூலம் அறியலாம்.

மேல் அதிகாரி ஒருவர் தம்கீழ் வேலை பார்த்து வந்த அலுவலர் மீது கொண்டிருந்த வெறுப்பின் காரணமாக, மருத்துவருக்கு மடல் ஒன்று எழுதி, அதில் எப்படியாயினும் மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் தம்மிடம் வேலை பார்ப்பவர் வேலைக்குத் தகுதியற்ற ஆள் என்று சான்றிதழ் வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தார். அதற்கு மருத்துவர் மறுத்து விட்டார். அலுவலரின் வேலை நீக்கம் குறித்த தகராறிலும் மேலதிகாரியே விசாரணை செய்பவராகச் செயற்பட்டார். பாதிக்கப்பட்ட அலுவலர் அதனை எதிர்த்து வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்தார். அதிகாரி மருத்துவருக்கு எழுதிய கடிதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அவ்வழக்கினை விசாரித்த நீதிமன்றம் அவ்வழக்கில் மேலதிகாரியின் செயல் குறைந்த அறிவு படைத்தவரின் கண்ணோட்டத்தில்கூட மனச்சாய்வுடன் கூடியது எனக் கருத இடமளிக்கும் என்று கூறி, அந்த மேலதிகாரிக்குத் தம்கீழ் வேலை பார்த்த அலுவலர் மீது மனச்சாய்வு இருந்தது என்று முடிவு செய்தது.

வேறொரு வழக்கில், ஆந்திர முதலமைச்சர் நாட்டு உடைமையாக்கும் திட்டத்தை ஆதரித்துப் பேசிய சூழ்நிலைகளை எடுத்துக்காட்டிப் போக்குவரத்துத் தடத்தை நாட்டு உடைமையாக்குவது என்ற முதல்வரின் முடிவு மனச்சாய்வினால் எடுக்கப்பட்டது என்றும், எனவே அது செல்லாது என்றும் வாதிடப்பட்டது. அதற்குப் பதிலுரையாக அரசுத் தரப்பு வழக்கறிஞர் தம்முடைய வாதத்தில், அலுவல் சம்பந்தப்பட்ட மனச்சாய்விற்கும் தனிப்பட்ட மனச்சாய்விற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது என்றும் முதன்மந்திரி என்ற முறையில் தனியாருக்கும், அரசுக்கும் இடையே உள்ள தகராறை விசாரித்து முடிவு தெரிவிப்பது மனச்சாய்வுடன் செயற்படுவார் என்று சொல்ல முடியாது என்றும், தனிப்பட்ட முறையில், அதில் அவருக்கு அக்கறையிருந்தது அல்லது அதில் ஏதேனும் வருமானம்-ஆதாயம் இருந்தது என்று மெய்ப்பித்தாலன்றி அவர் மனச்சாயவு உடையவர் என்று எடுத்துக் கொள்ள முடியாது என்றும் கூறினார்.

அரசுத்தரப்பு வழக்குரைஞர்களின் வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. இதனின்று மனச்சாய்வு என்பது வழக்கின் சூழ்நிலையை வைத்து நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒன்று என்பது தெளிவாகும். எச்.எம்.அ.

*மனச்சிதைவு நோய்:* உளநோய்கள் மூளை சம்பந்தப்பட்ட நோய்கள் காரணமாகவும், பிறப்புக் காரணமாகவும் உடற்கூறு சம்பந்தப்பட்ட காரணமாகவும் ஏற்படுகின்றன. அவை பல வகைப்படும். அவற்றுள் முக்கியமானது மனச்சிதைவு நோய்(Schizophrenia) ஆகும். இந்நோய் எண்ணச்சிதைவு (Thought Disorder) நோய் எனவும் சொல்லப்படும். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள், உண்மை நிலையிலிருந்து விலகியவர்களாகவும் மற்றவர்களுடன் நன்கு பழகாமல் தங்களைப் பிரித்துக்கொள்ளும் (Isolate) தன்மையுள்ளவர்களாகவும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத, பிறழ்வான புலன் காட்சி, எண்ணம், உணர்ச்சி நிலை ஆகியவற்றை உடையவர்களாகவும் இருக்கின்றனர்.

இந்நோய் எல்லாச் சமுதாயத்திலும் காணப்படுகிறது. அமெரிக்க மக்கள்தொகையில் ஒரு விழுக்காட்டினர் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். மனநல மருத்துவமனைகளில் சேர்க்

கப்படும் நோயாளிகளுள் நான்கில் ஒருவர் மனச்சிதைவு நோயுள்ளவர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த மனச்சிதைவு நோய் மனிதனைக் குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை எந்த வயதிலும் தாக்கக்கூடியதாக இருந்தாலும் மருத்துவமனைகளில் இந்நோய் காரணமாகச் சேர்க்கப்படுபவர்களுள் முக்கால் பகுதியினர் 16 வயதிலிருந்து 45 வயது வரையறைக்குட்பட்டவர்களாக இருக்கின்றனர். இந்நோய் ஆண், பெண் இருபாலாரையும் ஒரே விதமாகத் தாக்குகிறது.

மனச்சிதைவு நோய், உருவாக்கும் மனச்சிதைவு நோய் (Process Schizophrenia), எதிரியக்க மனச்சிதைவு நோய் (Reactive Schizophrenia) என இரு வகைப்படும். இதில் முதலாம் நோய் உள்ளவர்கள் தனிமையை விரும்புபவர்களாகவும், உலகப்பற்றைப் படிப்படியாக இழப்பவர்களாகவும், அதிக மனக்கோட்டையில் (Fantasy) ஈடுபடுபவர்களாகவும், மெய்ப்பாடு மந்தநிலையை உடையவர்களாகவும் (Blunting of Affect), பொருத்தமற்ற மறிவினை உடையவர்களாகவும் இருப்பர். எதிரியக்க மனச்சிதைவு நோயுள்ளவர்கள் நோயினால் திடீரென்று தாக்கப்பட்டவர்களாகவும், தீவிர உணர்வுக் கிளர்ச்சியை உடையவர்களாகவும் அதி பயங்கரக் குழப்ப எண்ணங்களையுடையவர்களாகவும் இருப்பர்.

மேற்கூறிய இருவகை நோய்களும் ஐந்து நோய் அறிகுறிகளைப் பொதுவாகப் பெற்றுள்ளன. அவை பின்வருவன:

1) **புலன்காட்சி வடிகட்டல் அற்றுப்போதல்:** இந் நோயாளி சுற்றுப்புறச் சூழ்நிலையிலிருந்து தேவையானவை இவை தேவையற்றவை இவை என்று பிரித்துணர இயலாத நிலையில் இருப்பர்.

2) **எண்ணம் மற்றும் உணர்ச்சிகளின் தகவு அமைவின்மை:** நோயாளி கவனத்தை ஒருமுனைப்படுத்த இயலாமை, தூண்டல்களின் தன்மையைப் பிரித்துணர இயலாமை, எண்ண ஓட்டத்தை ஒழுங்குபடுத்த இயலாமை, சிக்கல்களை விடுவிப்பதில் திறமையின்மை, முடிவெடுக்க இயலாமை போன்ற குறைபாடுகளினால் அவதியுறுவர்.

3) **கவலையும், அச்சமும்:** இந் நோயாளிகள் மிகுந்த கவலையும் அச்சமும் கொண்டவர்களாக இருப்பர்.

4) **இல் பொருட்காட்சிகளும், திரிபுணர்வுகளும்:** இந்த நோயாளிகள் இல்லாத ஒரு பொருளை இருப்பதாகக் கருதியும், பார்க்கும் ஒரு பொருளை வேறு ஒரு மாறுபட்ட பொருளாக நினைத்தும் அவதியுறுவார்கள். எடுத்துக்காட்டாக ஒரு கயிற்றைப் பாம்பாகவும், வரும் நிழலை நண்பனாகவும், கடவுள் தேவதை ஆகியவற்றுடன் பேசுவதாகவும் நினைத்துக்கொண்டு வருந்துவார்கள்.

5) **உண்மை நிலையினின்றும் விலகும் தன்மை:** இந்த மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உண்மை நிலையிலிருந்து பெரிதும் விலகி இயங்குவார்கள்.

**மனச்சிதைவு நோயின் வகைகள்: 1) உச்சநிலை மனச்சிதைவு நோய்:** இவ்வகை நோயாளிகள் சூழ்நிலைத் தூண்டல்களைப் பிரித்துணர இயலாமை, கட்டுப்பாடற்ற அச்சம், தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள இயலாமை முதலியவற்றைக் கொண்டவர்களாக இருப்பர். பொதுவாக நோயாளிகள் இந்த உச்ச நிலையிலேயே நெடுங் காலம் இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. விரைவிலேயே தங்கள் குணங்களை அறிந்து கொண்டு சில வாரங்களிலோ சில மாதங்களிலோ குணமடைந்துவிடுவதும் உண்டு.

2) **திரிபுணர்வு அமைந்த மனச்சிதைவு:** இவ்வகையினர் சந்தேகம் கொண்டவர்களாகவும் மற்றவர்களுடன் சுமுகமாகப் பழக இயலாதவர்களாகவும், முட்டாள்தனமான, ஏற்றுக்கொள்ள இயலாத, மாறும் தன்மையுடைய இல்பொருள் காட்சிகளைக் காண்பவர்களாகவும் தாங்களே மிகப்பெரியவர்கள், மற்றவர்கள் தங்களை அழிக்க முயலுகின்றனர் என்பன போன்ற மன மயக்கங்களை உடையவர்களாகவும் இருப்பர். இவர்களுடைய நடத்தை, மேற்கூறியவாறே அமைந்து எதையும் பகுத்துணரும் தன்மையற்றவர்களாக, எப்போது எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்று ஊகிக்க முடியாதவர்களாக இவர்களை மாற்றிவிடுகிறது.

3) **உச்ச உயர்வும், உச்ச விலகுந் தன்மையும் கூடிய மனச்சிதைவு நோய்:** இவ்வகை நோயினர் உண்மை நிலையிலிருந்து விலகும் தன்மை, செயலற்று மரம் போல் நிற்றல், எல்லாச் செயல்முறைகளையும் இழந்துவிடல், மௌனமாக வெற்றிடத்தை வெறித்து நோக்கி நிற்றல், திடீரென்று காரணமில்லாமல் கூச்சலிடுதல், முன்னும் பின்னும் வேக நடைபோடல், கட்டுப்பாடற்ற தன்னிச்சையான வெறிச் செயல்களில் ஈடுபடுதல் போன்ற அறிகுறிகளைக் கொண்டவர்களாக இருத்தல் முதலிய தன்மைகளைப் பெற்றிருப்பர். அந்த நிலையில் நோயாளி தனக்கோ பிறருக்கோ ஆபத்து விளைவிக்கும் நிலையில் உள்ளான்.

4) **கடும் ஆளுமைச் சிதைவுடன் கூடிய மனச்சிதைவு நோய்:** மற்ற வகைகளைவிட மிக இளவய

திலேயே இது நோயாளிகளைத் தாக்குகிறது. இந்த நோயாளி கடுமையான ஆளுமைச் சிதைவுக்கு ஆளா கின்றான். தொடர்பற்ற உணர்வுவெளிப்பாடு, அறிவு மழுக்கம், காரணமற்ற சிரிப்பு, முட்டாள்தனமான நடத்தை, குழப்பமும் அருவருக்கத்தக்கதுமான நடத்தை போன்றவை இந்நோயின் மற்ற அறிகுறி களாகும்.

5) **சிக்கற்ற மனச்சிதைவு நோய்:** இந்த நோய் இளமையில் தொடங்கி வயது முதிர முதிரத் தீவிர மடைகிறது. இவ்வகை நோயினர் தனிமையை விரும்பு பவராகவும், எண்ணத்திரிபுகள் உடையவராகவும், மற்றவர்களை எளிதில் புரிந்துகொள்ள இயலாத வராகவும், எதிலும் விருப்பு வெறுப்பு அற்றவராகவும் இருப்பர். மனக்குழப்பம் மற்ற வகைகளைவிடக் குறைவாக இருப்பதால் இந்த நோயாளி ஓரளவு சாதாரணத்தன்மையுடன் நடந்துகொள்வான். இவ் வகை நோயாளிகள் மருத்துவமனைக்கு வருவது அரிது.

6) **மனச்சிதைவு பாதிப்புடைய மனச்சிதைவு நோய்:** இவ்வகை நோயாளிகள் பொதுவான மனச்சிதைவு நோயாளிகளின் எல்லா அறிகுறிகளையும் பெற்றிருப் பதுடன் மன இறுக்கம், மிகுந்த மகிழ்ச்சி, உணர்ச்சி களின் மழுங்குதன்மை ஆகியவற்றை உடையவர் களாக இருக்கின்றனர்

7) **உள்ளுறையான மனச்சிதைவு நோய்:** இவ்வகை யினர் மற்ற மனச்சிதைவு வகைகளின் அறிகுறிகளைக் கொண்டிருந்தாலும், நோய் பற்றிய வரலாறு அற்ற வர்களாக இருக்கின்றனர்.

8) **கடும் பிரித்துணர்வறியா மனச்சிதைவு நோய்:** இந்நோய், மற்ற வகைகளைப் போலவே நோயாளி யின் மனநிலை நடத்தை ஆகியவற்றைப் பாதித்தா லும் மற்றவற்றைப் போல வகைப்படுத்தலுக்குட் படாது விளங்குகிறது.

9) **படிவு மனச்சிதைவு நோய்:** இந்நோய் உள்ள வர்கள் மிக இலேசான நோய் அறிகுறிகளைக் காட்டு கிறார்கள். நோயின் பாதிப்புக்குப் பின்னர் அதன் தீவிரம் மிகக் குறைந்து இலேசான அறிகுறி மட்டும் தெரிகிறது.

10) **குழந்தைப் பருவ மனச்சிதைவு நோய்:** இந் நோய் பூப்புப் பருவத்துக்கு முன் (Puberty) நோயாளி யைத் தாக்குகிறது. இந் நோயாளி கற்பனைக் காட்சி களைக் காண்பவராகவும், மற்றவரிடம் ஒட்டாமல் விலகும் தன்மையுடையவராகவும் விளங்குகிறான்.

**மனச்சிதைவு நோயின் உயிரியல் காரணிகள்:** மனச்சிதைவு நோய் பற்றிய ஆய்வுகள் பல நடத்தப் பட்டும் அதன் காரணிகள் இன்னும் தெளிவுபட வில்லை. அந் நோய் வருவதற்கான காரணங்களாக அ) மரபுவழி, உயிர் வேதியியல் நரம்புசார் உடலி யல் ஆகியன உள்ளிட்ட உயிரியல் காரணிகளும், ஆ) தவறான கற்றல் முறை, இயல்பிறந்த உறவு முறை, குடும்பப் பங்கு, தாங்கொணா மன இறுக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய உளவியல் மற்றும் உறவுமுறைக் காரணிகளும், இ) நோய் தோன்று தற்குரிய காரணிகளைத் தன்னகத்தே கொண்ட சமூகப் பண்பாட்டுக் காரணிகளும் உள்ளன. அவற்றி டையே தனித்தன்மை இல்லாது போனாலும், அவை ஒன்றுடன் ஒன்று இணைந்தோ, தனித்தோ இயங்கி நோய்க்குக் காரணமாக அமைகின்றன.

**சிகிச்சைகளும் விளைவுகளும்:** சமூகச் சார்புடைய இருவகைச் சிகிச்சைமுறைகள் இந்த நோய்க்கு அளிக் கப்படுகின்றன. முதல்வகைச் சிகிச்சை முறை, புதிய தாக உண்டான, குடும்பத்துடன் தொடர்புடைய, அண்மையில் இந்நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அளிக்கப்படுகிறது. இத்தகைய நோயாளிகள் சிகிச்சைக்குச் சிறந்த முறையில் ஒத் துழைப்பதுடன் விரைவில் குணமடையவும் செய் கிறார்கள். குடும்பங்களில் இவர்களைப் பார்த்துக் கொள்ள வசதியிருந்தால் இத்தகைய நோயாளிகள் 20 முதல் 60 நாள்களில் சிகிச்சை முடிந்து வீட்டிற்குச் செல்லுகின்றனர்.

இரண்டாம் சிகிச்சை முறை கடுமையாகப் பாதிக் கப்பட்ட நோயாளிகளுக்கு அளிக்கப்படுகிறது. அத் தகைய நோயாளிகள் சிகிச்சைக்குப் பின்னர்க் கட்டுப் படுத்தப்பட்ட சூழ்நிலையிலோ தனிப்பட்ட விடுதி களிலோ வைத்துக் கண்காணிக்கப்படுகின்றனர்.

**மருந்துகள் மூலம் செய்யப்படும் சிகிச்சை முறை:** மனச்சிதைவுக்குப் புதிய மருந்துகளும், மயங்கவைக்கும் மருந்துகளும் (Tranquillizers), ஊக்கமூட்டிகளும் (Energizers) நன்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்நோய்க்கு மிகுதியும் பயன்படுத்தப்படும் மருந்துகளான குளோர் புரோமேசைன் (Chlorpromazine), ஆல்டால் (Haldol) ஆகியவை நோயாளியின் பரபரப்பு, ஆத்திரம், எண்ணக் கோளாறுகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்து கின்றன. சோர்வு நீக்கிகள் (Antidepenessants), கவலை நீக்கிகள் (Antianxiety drug) போன்றவை நோயாளிகளின் ஆர்வம், விழிப்பு நிலை ஆகியவற்றை மிகுதிப்படுத்திக் கவலை, பரபரப்பு ஆகியவற்றைக் குறைத்து அமைதியான உறக்கத்தை அளிக்கின்றன. அவை மிகுதியாகத் தனித்தனியாகவோ சேர்த்தோ மனச்சிதைவு நோயாளிகளுக்கு அளிக்கப்படுகின்றன. நோயாளிகளும் அதனால் பெரும் பயனடைகிறார் கள்.

இதனுடன் சமூக, சமுதாய மருத்துவ முறைகள், ஆகியன குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கவும் நோயுண்டாக்கும் குடும்பச் சூழ்நிலையைத் தவிர்க்கவும் ஓரளவு சிகிச்சை பெற்ற நோயாளி நல்லமுறையில் தன் வாழ்வைத் தக அமைத்துக் கொள்ளவும் அளிக்கப்படுகின்றன. என்.சு.

**மனத்தொடர்பு:** வளர்ந்து வருகின்ற மனித சமுதாயம் எல்லாத் துறைகளிலும் சிக்கல்களைக் கொண்டதாக இருந்து வருகிறது. ஒரு குழுவைச் சார்ந்த மனிதர்கள் எல்லாவிதமான வாழ்க்கைத் துறைகளிலும் தொடர்பு கொண்டொழுக வேண்டிய வர்களாக இருக்கின்றனர். ஒரு மனிதன் மற்றவர்களோடு கொள்கின்ற தொடர்பின் படித்தரம் ஒன்று போலவே இருப்பதில்லை.

அறிவுரை கூறலை (Counselling) அந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கு உதவிபுரியும் கருவியாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. மனிதர்களுடைய வாழ்க்கையில் எந்தச் சமயத்திலும் எந்தச் சிக்கலும் தோன்ற முடியுமாதலால் அறிவுரை கூறல் தொடர்ந்து செல்லும் ஒரு செயல்முறை என்று ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அறிவுரை கூறல், எல்லா வயதினருக்கும் ஏற்ற தோர் உளவியல் செயல்முறையாகும். அறிவுரை கூறல் நடைமுறையிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு எவ்வாறு ஓர் உளவியல் கருவியாகப் பயன்படுகின்றதோ அதுபோலவே ஒருவர், வருங்காலத்தில் சிக்கல்களுக்கு இலக்காகி விடாமல் தடுப்பதற்கும் பயன்படுகிறது.

அறிவுரை கூறலுக்கு முக்கியமான ஒன்றாக அமைந்திருப்பது மனத் தொடர்பு அல்லது உள ஒன்றிப்பு (Rapport) ஆகும். அது இருவரிடையே ஏற்படும் ஓர் ஒன்றித்த உணர்வாகும். அவை முறையே ஒருவரையொருவர் நம்புதல், கூட்டுணர்வுடன் செயற்படுதல், ஒருவர் உணர்வை மற்றவர் புரிந்து செயற்படுதல் போன்றவையாகும். சான்றாக மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே உள்ள உறவு, பேட்டியாளருக்கும் பேட்டி அளிப்பவருக்கும் இடையே உள்ள உறவு, தொழில் சூழ்நிலையில் தொழிலாளிக்கும் மேற்பார்வையாளருக்கும் உள்ள உறவு ஆகியன போன்றவை ஆகும். அறிவுரை கூறலின் வெற்றி என்பது அறிவுரையாளரின் திறமையைப் பொறுத்ததாகும். அது அறிவுரையாளருக்கும் அறிவுரைக்குட்பட்டோருக்கும் இடையே உள்ள உள ஒன்றிப்பையும், ஒருமித்த உணர்வையும் பொறுத்ததாகும்.

அறிவுரை என்பது ஒருவருக்கொருவர் உதவும் நோக்கத்தில் தனிப்பட்ட இருவரிடம் ஏற்படும் ஒரு நேரடியான உறவுமுறையாகும். உளஒன்றிப்பு என்பது அறிவுரை வழங்குவதற்கு இன்றியமையாத ஒன்றாகும். பொதுவாக இது சொல்லாடல் (Interview) எனப்படுகிறது. உளஒன்றிப்பு என்பது இருவரிடமும் ஏற்படும் சுமுகமான, ஒருவரையொருவர் புரிந்து கொண்டுள்ள நட்புறவுடன் கூடிய ஒரு நிலையாகும். இது பேட்டியாளருக்கும், பேட்டியளிப்பவருக்கும் இடையே இருக்கவேண்டியது மிகவும் தேவையாகும். கட்டாயத்தின் மூலம் இவ்வுறவுமுறையை அடைய முடியாது. இது அறிவுரையாளர் (Counsellor) அறிவுரையைக் கேட்பவரின் (Counsellee) உணர்வுகளைச் சரியான முறையில் புரிந்துகொள்வதற்கும் அறிவுரைக்குட்பட்டவர் சரியான முறையில் அறிவுரையாளருடன் ஒத்துழைத்து ஒரு சுமுகமான நட்புணர்வுடைய சூழ்நிலையை உருவாக்குவதற்கும் உதவுகிறது. உளஒன்றிப்பு என்பது இருவருடைய கூட்டுமுயற்சியால் வளரும், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் உணர்வாகும். இது அறிவுரையாளரின் தந்திரங்கள் மூலமே ஏற்படுகிறது என்ற தவறான கொள்கை இருந்துவருகிறது.

உளஒன்றிப்பு ஒரு பேட்டியின் வெற்றியைத் தீர்மானிக்கிறது. உளஒன்றிப்பை அடைவது மட்டுமல்லாமல் இது அறிவுரை நேரம் முழுவதும் நீடித்திருப்பது மிகவும் இன்றியமையாதது. இது அறிவுரையாளரின்மீது அறிவுரைக்குட்பட்டவர் வைத்திருக்கும் நம்பிக்கையையும் மரியாதையையும் பொறுத்ததாகும். அறிவுரையாளரின்மேல் விழும் சிறு சந்தேகமும் இந்த உறவுநிலையைக் குலைத்துவிடும்.

மற்ற உளவியல் நிகழவுகளை அளவிடுவதுபோல் உள ஒன்றிப்பை அளவிட முடியாது. உள ஒன்றிப்பின் பண்புக்கூறுகள் பின்வருவன: 1) இருவருக்கிடையே ஏற்படும் சுமுகமான சூழ்நிலை, 2) செய்தி இணைக்கும் வழி (Communication), 3) அறிவுரையாளர் மேல் கொள்ளும் நம்பிக்கை (Mutual Trust).

மேலும், அறிவுரைக்குட்பட்டவரை நல்லமுறையில் வரவேற்றல், இளைப்பாற்றல், அவர்தம் சிக்கல்களிலிருந்து அவரது கவனத்தை வழிதிருப்புதல் ஆகியவை உளஒன்றிப்பின் அடிப்படை முறைகளாகக் கொள்ளப்படுகின்றன. அறிவுரைக்குட்பட்டவரின் தேவைகளைப் புரிந்துகொள்ளும் உணர்வும், அவரது உணர்ச்சிநிலையைப் புரிந்துகொள்ளும் உணர்வும் உள ஒன்றிப்பை நீடிக்க வைக்கலாம். எஸ்.உ.

**துணை நூல்:**

Shanmugan, T.E., Abnormal Psychology, Tata Mcgraw-Hill & Co., New Delhi, 1985.

**மனப்போக்கு:** மனிதனின் ஆளுமையை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை 1) மையம்(Core)

2) வெளிப்புறம் அல்லது சுற்றுப்புறம் (Periphery) என்பனவாகும். மனப்போக்கு என்பது ஆளுமையின் மையப்பகுதியாக இருப்பதாகும். இது இயல்பாக உள்ள உணர்ச்சி (Feeling i.e. Affective), செயல், (Conative) போக்கு ஆகியவற்றைக் குறிக்கும். இம் மையப்பகுதி உடற்கூற்றுக்கு (Physiology) மிகவும் தொடர்புடையதாகவும் பலவித மாற்றங்களை எதிர்த்து நிற்கக்கூடியதாகவும் இருந்து மனிதனை உள்ளிருந்து இயக்குகிறது. ஆளுமையின் புறப்பகுதி சமூகச் சார்புடைய ஒன்றாகும். எனவே, மையப் பகுதியாக அமைந்திருக்கும் மனப்போக்கு (Temperament) பெரிதும் மரபுவழி வந்ததாகவும் (Heredity), புறப்பகுதி பெரிதும் கற்றலினால் (Learning) ஏற்பட்ட ஒன்றாகவும் ஆளுமைக்கொள்கையினர் (Personality Theorists) கருதுகின்றனர்.

**வகைகள்:** சுறுசுறுப்பானவர், சோம்பேறி, கோபக்காரர், சிடுமூஞ்சி, பயப்படுபவர், கலகலப்பானவர் என்ற பல பண்புஉணர்த்தும் சொற்களைக் கொண்டு மனப்போக்கைப் பலவிதங்களில் குறிப்பிடலாம். எனினும், சுருக்கமாகக் கூறவேண்டுமானால் பண்டைக் காலம் முதல் மனப்போக்கு நான்கு விதமாகப் பிரிக்கப்படுகிறது. அவை 1) நம்பிக்கை நிறைந்தவர் (Sanguine), 2) கிளர்ச்சியற்றவர் (Phlegmatic), 3) முகவாட்டம் உடையவர் (Melancholic), 4) சீற்றமுறுபவர் (Choleric) என்பனவாகும். இந்திய மெய்யுணர்வின்படி (Indian Philosophy) குறிப்பாகச் சாங்கியக் கொள்கையினர் மனப்போக்கைச் சத்துவம், இராசதம், தாமதம் என்ற மூன்று குணங்களைக் கொண்டு விளக்குகின்றனர். சத்துவம் என்பது ஒளிமிகுந்த அறிவுள்ள பொருளாகும். இராசதம் என்பது நடவடிக்கைக்குக் காரணமாக விளங்கும் ஆற்றலைக் கொண்ட பொருளாகும். தாமதம் என்பது கரடுமுரடான மந்தமான கூட்டுப் பொருளாகும்.

**தொடர்புடைய கூறுகள்:** ஆளுமை பொதுவாகக் குடிவழிக் கூறுகளால் (Hereditary Factors) அமைந்த ஒன்றா என்று வினா எழுப்பினால் அவ்வினாவிற்குச் சுற்றுப்புறக் கூறுகளால் (Environmental Factors) அமைந்த ஒன்றால் எளிதில் விடையளிக்க முடியாது. ஆனால், ஆளுமையின் மையப் பகுதியாக அமைந்திருக்கும் மனப்போக்கை எடுத்துக்கொண்டால் மனித வேறுபாடுகள் இருப்பதற்குக் காரணம் பெரிதும் மரபுவழிதான் என உறுதியுடன் கூறலாம்.

**1. உடற்கூறு அடிப்படைகள்:** மனப்போக்கு என்பது பெரும்பாலும் உணர்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் (Emotions) வெளிப்படுத்தும் போக்கைக் குறிக்கிறது. மெய்ப்பாடுகள் உடற்கூற்று அடிப்படைகளான சுரப்பிகளுடனும் (Glands), தானியங்கு நரம்பு மண்டலத்துடனும் (Automatic Nervous System), உள்ளிருக்கும் தசைகளுடனும் (Visceral masculature) நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. அவ்வுடற்கூற்று அடிப்படைகள் மரபுவழிக் கூறுகளுடன் மிகுந்த தொடர்புடையனவாகும். சோகட்டு என்பவர் பொருத்தப்பாடு கோளாறு நிறைந்த குழந்தைகளை (Mal-Adjusted Children) பொருத்தப்பாடு கோளாறற்ற குழந்தைகளுடன் (Well Adjusted Children) ஒப்பிட்டுப் பார்த்ததில் அவ்விருவகைக் குழந்தைகளும் உடற்கூற்று அடிப்படையில் வெவ்வேறாக இருப்பதைக் கண்டார். மனக்கோளாறு நிறைந்த குழந்தைகளை இயல்பான நிலையிலும், சிதைவுநிலையிலும் (Frustrated State), மனக் கோளாறற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் இரத்தக்கொதிப்பு, நாடித்துடிப்பு, மூச்சுவிடும் விதம், தோலில் ஏற்படும் மின்மாற்றம் முதலியவற்றில் மிகுந்த மாற்றங்கள் தெரியலாயின.

**2. உடலமைப்பின் பங்கு** பண்டைய கிரேக்கக்காலம் தொட்டு உடற்கட்டுக்கும் (Physique or Body Build) மனப்போக்குக்கும் உள்ள தொடர்பைப் பேசி வருகின்றனர். எல்டன் 1942-இல் மூன்றுவித உடற்கட்டுகளையும் அவற்றுக்கிணையான மனப்போக்குகளையும் முன்மொழிந்தார். அவை கீழ்க்காணும் அட்டவணையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

| உடற்கட்டு வகை | மனப்போக்கு |
|---|---|
| 1. அகத்துறை உருவம் (Endomorph) | உள்ளுறுப்புப் பயம் (Visceretonja) |
| அ. பெரிய உடலுள்ளுறுப்பு | மகிழ்ச்சியானவர். |
| ஆ. இளகிய உடற்கட்டு | எதையும் நினைத்துக் கவலைப்படாதவர். சமூகத் தன்மை கொண்டவர். |
| 2. நடு உறை உருவம் (Mesomorph) | உடல்வயம் (Somatotonia) |
| அ. நன்கு வளர்ச்சியடைந்த தசை உருவம் | சுறுசுறுப்பானவர், தன்னம்பிக்கை கொண்டவர். |
| ஆ. உறுதியான உடற்கட்டு | செயல்முறைவாய்ந்தவர். |
| 3. புறத்துறை உருவம் (Ectomorph) | மூளைவயம் (Cerebrotonia) |
| அ. நீண்டு மெலிந்த உருவம். | கட்டுப்படுத்திக் கொள்ளுதல். |
| ஆ. குறைவான தசை வளர்ச்சியடைந்த எலும்பு உருவம். | |

3. **சுற்றுப்புறச்சூழலும் மனப்போக்கும்:** உடலமைப்பு பெரிதும் குடிவழி வந்த ஒன்றாகையால் உடலமைப்புடன் மிகவும் ஒட்டியுள்ள மனப்போக்கும் மரபுவழியால் பெரிதும் நிருணயிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது செல்டனின் கருத்து. எனினும், மனப்போக்கு முழுமையாகக் குடிவழியில் வந்த ஒன்றா, சூழ்நிலையினால் உருவாக்கப்பட்ட ஒன்றா என்று வினா எழுப்பினால், மனப்போக்கின் பெரும்பான்மையான பகுதி குடிவழியில் வந்ததெனவும் சிறுபான்மையான பகுதி சூழ்நிலையினால் ஆக்கப்பட்டதெனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தை அன்பும் ஆதரவும் உள்ள சமூகச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டால் அக் குழந்தையும் நாளாக நாளாகத் தன்னை மற்றவர்கள் எவ்வாறு அன்புடனும் பாசத்துடனும் நடத்துகின்றார்களோ அவ்வாறே தானும் நடந்து கொள்ளும். அதற்கு நேர் மாறாக ஒரு குழந்தை வெறுப்பு, கோபம் நிறைந்த சூழ்நிலையில் வளர்க்கப்படுமேயானால், அக்குழந்தையும் நாளடைவில் வெறுப்புடனும், கோபத்துடனும் தன்னை நாடுபவர்களிடம் நடந்து கொள்ளும். இவ்வாறு குடிவழியில் அமைந்த மனப்போக்கு ஓரளவு சமூகச் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் மாறும்.

**மனப்போக்கை அளக்கும் விதம்:** மனப்போக்கை அளப்பதற்குப் பல முறைகள் இருப்பினும் பொதுவாக இருமுறைகள் உள்ளன. அவை 1) கூராய்வை (Observation) அடிப்படையாகக் கொண்ட அளவீட்டு முறை (Rating Scale Method), 2) வினாத்தொகுதி முறை (Questionnaire Method) என்பனவாம்.

1. **அளவீட்டு முறை:** செல்டன் தம் உடற்கட்டுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு 7 புள்ளி அளவுகோலைப் (7 Point scale) பயன்படுத்தி ஒருவரின் மனப்போக்கை அறிய முயன்றார். ஒவ்வொரு மனிதனும் மூன்றுவித உடற்கட்டமைப்புகளிலும் எந்த அளவு அவன் இருக்கக்கூடும் என அதில் அளவிடப்படுவான். குறிப்பாக 7-1-1 என்பது அதிக அளவு அகத்துறை கொண்டவனாகவும் மிகச்சிறிய அளவிற்குத்தான் நடுஉறை, புறத்துறை ஆகிய உருவம் கொண்டவனாகவும் இருப்பான் என்பதாகும். மேலும், 4-4-4 என்பது சராசரி மனிதனின் அளவாகும். அவன் எந்த ஓர் உடற்கட்டு வகையையும் சாராதவன் ஆவான். இவ்வாறு உடலமைப்பு மூலம் ஒருவரின் மனப்போக்கை அளக்கமுடியும்.

**வினாத் தொகுதி முறை:** பலவித வினாத்தொகுதிகள் இருப்பினும் தர்சுட்டன் மனப்போக்கு அட்டவணை (Thurstone Temperament Schedule) பெரும்பான்மையோரால் பயன்படுத்தப்படுகிறது. இது 140 வினாக்களைக் கொண்ட தொகுதியாகும். இதில் 7 விதமான மனப்போக்குகள் அளக்கப்படுகின்றன. அவை 1) சுறுசுறுப்புத்தன்மை (Active), 2) வீரியத் தன்மை (Vigorous), 3) தூண்டும் ஆற்றல் (Impulsive), 4) ஆதிக்கம் (Dominance), 5) உறுதியுடைமை (Stable), 6) சமூகத் தன்மை (Sociability),7)ஆழ்ந்து நினைக்கும் தன்மை (Reflective) ஆகியனவாம்.

வ.தே.சா.

**துணை நூல்.**

**Shanmugam,** T.E., Abnormal Psychology, Tata McGraw-Hill Publishing Co., Ltd., New Delhi, 1981.

*மனம்*: பொதுவாக மனம் என்று குறிப்பிடப் படுவது ஒரு மனிதரின் சிந்தனையும் விழிப்புணர்வும் (Awareness) ஆகும். மனம் என்னும் சொல்லின் பொருளை வரையறுத்துக் கூறுவதென்பது மிகவும் சிக்கலான செயல். பல நூற்றாண்டுகளாகவே தத்துவ மேதைகளுக்கும், உளவியல் அறிஞர்களுக்கும் இதைப் பற்றிய ஒரு தெளிவான திட்டவட்டமான கருத்துக் கூற இயலவில்லை. இருப்பினும், கனவுகள், உள்ளுணர்வுகள், புலனுணர்வுகள், சிந்தனைகள் முதலியன பொதுவாக மனச் செயல்களாகக் கருதப்படுகின்றன. அம் மனச் செயல்கள் அனைவராலும் உணரப்பட்டு, மனத்தைப் பற்றிய சில தனியான குணங்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அவை: 1) மனத்தைக் குறிக்கும் மற்றொரு சொல் உள்ளம் ஆகும். ஒவ்வொரு மனிதனும் தன் மனநிலையுடன், அதைப்பற்றி நேரடியாகவும், அனுமானமின்றியும் அறிந்து கொள்ளுமளவிற்கு உறவு கொண்டுள்ளான். 2) ஒவ்வொரு மனிதனும் தன் மனநிலையுடன் நேரடித் தொடர்பு வைத்திருக்கிறான். அதேசமயத்தில் மற்றொருவருடைய மனநிலையை அவன் மறைமுகமாகவோ அனுமானத்தின் அடிப்படையிலோதான் தெரிந்துகொள்ள முடியும். 3) ஒவ்வொரு மனிதனும் தன் மனநிலையின் தோற்றத்தைப் பற்றியும் அதன் தன்நினைவிலுள்ள பொருளைப்பற்றியும் திட்டவட்டமாகத் தெரிந்து வைத்திருக்கிறான். அதேபோல் மற்றொருவனுடைய மனநிலையின் தோற்றத்தைப் பற்றியும், பொருளைப் பற்றியும் அதே அளவு உறுதியாகத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. 4) மனநிலை இடஞ்சார்ந்தது (Spatial) அன்று. அதாவது ஒரு சிந்தனை மனத்தில் எந்த இடத்தில் இருக்கிறது என்பது ஒரு பொருத்தமான கேள்வியாகாது. 5) மனநிலையின் சிறப்பான கூறானது ஏதேனும் ஒன்றைச் சார்ந்தே இருக்கும்; சிந்தனை ஏதேனும் ஒன்றைப் பற்றியதாகவே இருக்கும். உணர்வுகளும் நம்பிக்கைகளும் அவ்வாறே இருக்கும்.

மனம் என்பது ஒரு பொருளாகவோ இயற்பியல் விதிகளுக்குட்பட்டதாகவோ இல்லாதிருப்பதால் அதனைப் புலனுணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு புரிந்துகொள்ள முயலுவது முடியாத செயலாகிறது. மனத்தின் அப் பண்பானது மனித நடத்தையினைச் செயல்முறை அறிவால் புரிந்து கொள்ள முயல்வோருக்கு மன - உடல் சிக்கலைத் தோற்றுவிக்கிறது.

மனத்தை வரையறுப்பதில் மூன்று பெரிய அணுகுமுறைகள் உள்ளன. அவை பின்வருவன:

முதலாம் அணுகு முறை ஓர் உச்சக் குறைப்புக் கோட்பாடு (Extreme Reductionism). இவ்வணுகு முறைப்படி மனம்என்று ஒன்றில்லை. மனம் என்னும் சொல் ஒரு குறிப்பிட்ட நிலையில் நடைபெறும் உயிரியல் பணியைக் (Biological Function)குறிப்பிடும் அடைமொழிப் பெயராகும். இவ்வகையான, இவ்வணுகு முறையின் தலையான நோக்கம் உளவியலையும், உயிரியலையும் ஒன்றுபடுத்திப் படிப்பதேயாகும். நிகழ்காலத்தில் இவ்வணுகுமுறை உட்டல் (W.R. Uttal) என்பவரின் 'மனத்தின் உளவியல்' (Psychology of Mind) என்னும் நூலில் காணப்படுகிறது.

இரண்டாம் அணுகுமுறை ஏதோ ஒரு விதத்தின் தன்மையில் வேறுபடும் மனத்தையும், உடலையும் உறவுபடுத்த முயல்கிறது. உடலைப்பற்றிக் கிடைக்கும் செயல்முறை அறிவைக்கொண்டு மனத்தைப் புரிந்து கொள்ள முயல்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, தேகார்ட்டேயின்(Descartes)பின்னிய செயல் விளைவுக் (Interactionism) கோட்பாடு, இலைப்நிட்சின் (Leibnitz) உள்ளமும் உடலும் தொடர்பின்றியே இணையாக இயங்குகின்றன என்னும் கோட்பாடு (Psychophysical Parallelism), போல்டனின் (Polten), புதிய பின்னிய செயல்விளைவுக் கோட்பாடு (Modern Interaction) முதலியவற்றைக் கூறலாம். இவ்வனைத்து அணுகுமுறைகளும் உளவியல் அறிஞர்களுக்கு மனத்தினுள் நடைபெறும் செயல்களையும், கண்ணுக்குப் புலனாகும் உடலின் நடத்தைகளையும் உறவுபடுத்திப் பார்ப்பதில் மிகுந்த சிக்கலைத் தோற்றுவிக்கின்றன.

மூன்றாம் அணுகுமுறையானது சற்றேறக் குறைய குறைப்புக் கோட்பாட்டினை ஒத்தது எனலாம். ஆனால், அதைப் போன்று அவ்வளவு எளிதானதன்று. இந் நோக்கின்படி மனம் அல்லது உடல் தன் விருப்பமாக இயங்கும் உள்பொருள் (Independent entity) அன்று. அவ்வாறன்றி ஒரு மனிதன் மனமும், உடலும் ஒன்றாக ஒருங்கிணைந்த அங்கமாகப் பார்க்கப்படுகிறான். ஒன்றில்லாமல் மற்றொன்று இருப்பதில்லை. இவ்வித அணுகுமுறையே இரட்டை அங்க அணுகு முறை எனக் கூறப்படுகிறது. அரிசுட்டாட்டிலின் (Aristotle) இயன்மூலவாதம் (Hylomorphism) அல்லது ஒரு பொருண்மை வாதம் (Monism), பைகில்சின் (Feigls) முற்றொருமைக் கோட்பாடு (Identity Theory) முதலியன சில எடுத்துக்காட்டுகளாகும்.

வி.எஸ்.ஆர்.வி.

**மனமகிழ் மருத்துவம்:** மனிதர்களுக்குப் புத்துணர்ச்சியூட்டவும், மனம் வேறெந்தத் தீய எண்ணங்களுக்கும், குழப்பங்களுக்கும் உட்படாமல் இருக்கச் செய்யவும், மனத்தாக்கல் நிலையை அகற்றப் பயன்படும் மருத்துவங்களைச் செய்யவும் இயல்வது மனமகிழ் மருத்துவம் (Recreation Therapy) எனப்படும். மனமகிழ் மருத்துவம் எந்தவித வேறுபாடுமின்றி அனைவருக்கும் அவரவர்கள் சிக்கல்களுக்குத் தக்கவாறு உளவியலார் மூலம் அளிக்கப்படுகிறது. மேலும், இதன் முக்கிய நோக்கம் மனிதர்கள் தாம் செய்யும் வேலைகளில் ஆர்வம் குறைந்து அவர்கள் மனவமைதியின்மை, வெறுப்பு, பற்றுதல் இல்லாதிருத்தல் போன்றவற்றில் மூழ்கியிருப்பதைப் போக்குவதற்கு ஒரு வழி காணுவதாகும்.

**பல்வேறு மனமகிழ் மருத்துவ முறை:** மனமகிழ் மருத்துவம் மனிதர்களுக்கு அவரவர்கள் உளவாய்ப்புக்குத் (Resources) தகுந்த முறையில் அவர்கள் திறமையை வளர்ப்பதன்மூலம், அவர்கள் மனத்தைக் கட்டுப்படுத்திக் குறிப்பிட்ட சிலவகையில் மனத்தைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இதில் பல வகைகள் உள்ளன. அவற்றுள் 1) இசை மருத்துவ முறை (Music Therapy), 2)நடன அசைவுகள் மருத்துவ முறை (Dance and Movement Therapy), 3) கவிதை மருத்துவ முறை (Poetry Therapy), 4) விளையாட்டு மருத்துவ முறை(Play Therapy) போன்றவை முக்கிய மானவையாகும். குழிப்பந்து (Golf), வரிப்பந்து (Tennis),கைப்பந்து முதலிய பந்தாடுதல்,படகுவிடுதல், திரைச் செலவு, நீச்சல், நெய்தல், உலோக வேலை (Metal work), புகைப்படம் எடுத்தல், தோட்ட வேலை, வண்ணம் பூசுதல் (Painting), அஞ்சல் தலைகள் சேகரித்தல், காசு சேகரித்தல் போன்ற பலவகைப் பொழுதுபோக்கு வேலைகளும் மனமகிழ் மருத்துவ முறையில் பலனளிப்பனவாக உள்ளன. அவற்றில் ஈடுபடுவதால் வேறெந்த எண்ணங்களுக்கும் மனத்தில் இடமில்லாமல் மனவமைதி ஏற்படுகிறது. அது போன்ற விளையாட்டு, உடற்பயிற்சி போன்ற முறைகளினால் உள்ளம் வேறு எண்ணங்களால் ஆட்கொள்ளப்படாமல் உற்சாகமாக இருக்கமுடியும். மேலும் மனமகிழ் மருத்துவத்தால் மக்கள் சமூக ஒதுக்கீடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு அவர்கள் மற்றவர்களுடன் எளிதில் கலந்து குழு அமைப்பைப் பாதுகாத்துக் குழு வேலைகளை மிகவும் எளிதாகச் செய்யமுடிகிறது.

**இசை மருத்துவ முறை:** இசையின் தன்மை

தரம், செறிவு ஆகியவை அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதோடு சிலசமயம் தொந்தரவாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக, திடீரென்று ஓர் ஓசையைக் கேட்கும்போது அந்த ஓசை சிலருக்கு அச்சத்தை உருவாக்கும். அதே ஓசை அமைதியான சூழ்நிலையில் உருவாகுமேயானால் உற்சாகத்தையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தும். இசையின் தன்மையைப் பொறுத்து உள மகிழ்ச்சி மாறுபடும்.

இசையின் அமைப்பு, இலயம் (Rhythm) ஆகியவை மனிதர்களிடத்துச் செயல்திறனை ஊக்குவித்து உள அலைவு நிலையைக் (Mental Tension) குறைக்கின்றன. விருப்பமான நல்ல பாடல்களும் இசையுள்ள கீதங்களும் நல்ல மனவெழுச்சியையும் உற்சாகத்தையும் உண்டாக்குகின்றன. அதேசமயம் அவை உள்ளத்தில் தோன்றும் வருத்தமான நிகழ்ச்சிகளை வெளியேற்றிப் புதுச் சக்தியை அளிக்கின்றன. இன்னிசை ஒரு நல்ல மன மகிழ்மருத்துவமாகப் பயனளிக்கிறது. இசை சில நேரங்களில் நல்ல தூண்டுதலாகவும் நல்ல பொழுதுபோக்காகவும் அமைகிறது. சில இசைக்குழுக்கள் பொறுப்பான சமூகம் (Responsible Society) உருவாகக் காரணமாக இருப்பதோடு தனிப்பட்ட மனிதன் தன் சாதனையில் (Individual Achievements) உச்சக் கட்டத்தை அடைவதற்கும், ஒருவனைச் சமூகப்படுத்தவும் (Socialization) வாய்ப்பளிக்கின்றன. இசை முக்கியமாக உள அலைவு நிலையைக் குறைக்கவும் (Relieve-tension), அச்சத்தைக் கட்டுப்படுத்தவும், சலிப்பு உணர்ச்சியை நீக்கவும் குழுவின் அமைப்பை உருவாக்கவும் பயன்படுகிறது.

**நடன அசைவு மருத்துவ முறை:** உடல் அசைவு, உட்காரும் முறை, தசைகளின் ஒத்துழைப்புப் போன்றவை ஒரு மனிதனின் உள அலைவு நிலையை வெளிப்படுத்துகின்றன (Bird Whisttell, 1952,1959). அம்மருத்துவமுறை உணர்வுகளை வெளிப்படுத்தவும் அதன்மூலம் சமூகச் செயல்களில் அதிகமாகப் பங்கேற்கவும் உறுதுணையளிக்கிறது (Rosser E.1957). அம்முறை இருவர் தம்மைத் தாமே ஆள்படுத்திக் கொள்வதன் மூலம் வெட்கம், நாணம் போன்றவற்றை நீக்கவும் தன்முனைப்பு (Assertiveness) தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளவும் உதவுகிறது.

**விளையாட்டு மருத்துவ முறை:** இம் மருவத்துவ முறை பெரும்பாலும் குழந்தைகளுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. மேலும், நடத்தை சரியின்மை, உணர்வுகளால் ஏற்படும் சிக்கலகள் போன்றவற்றைச் சரிப்படுத்தவும் பயன்படுகிறது. இதைப்போன்று இளைஞர்கள், முதிர்ச்சிப் பருவத்தினர் தங்களுடைய நேரத்தை ஒழுங்கானதும், பயன்தரத்தக்கதுமான முறையில் பயன்படுத்திட இம்மருத்துவ முறை பயன்படுத்தப்படுகிறது. முதியோர்கள் தங்களை மறந்து, தங்கள் வயதை மறந்து தங்களை ஆட்படுத்திக்கொண்டு தங்களுடைய கவலைகளை மறந்து வாழ்வதற்கு வகை செய்கிறது. எஸ்.க.

**மனவளர்ச்சி குன்றியமை:** ஆராய்ச்சியாளர்களிடம், மனவளர்ச்சி குன்றியமை (Mental Deficiency) என்றால் என்ன என்பதுபற்றி இதுவரை ஒரு மித்த கருத்து ஏற்படவில்லை. அதற்குக் காரணம் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு கோணங்களில் காரணத்தை ஆராய்ந்து அவரவர்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். எந்த ஒரு நோயும் ஒரே காரணத்தால் ஏற்படுவதில்லை. அதைப்போல மன வளர்ச்சி குன்றியமையும் பல்வேறு காரணங்களால் ஏற்படுகிறது. அக்காரணங்களை மூன்று பிரிவுகளாகப் பாகுபடுத்தலாம். அவையாவன: 1) மரபுவழி (Hereditary), 2) சூழ்நிலை (Environment), 3) அதற்கு அப்பாற்பட்ட அல்லது கண்டுபிடிக்க முடியாத (Unknown Factors) காரணங்கள்.

மனவளர்ச்சி குன்றியமையைப் பல்வேறு வகையில் விளக்கினாலும் ஒருசில முக்கியமான, பெரும்பாலும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விளக்கவுரை கீழே தரப்பட்டுள்ளது. இங்கிலாந்து உடல்நல மருத்துவர் திரெட்கோல் (1908) கருத்துப்படி ‘தனி மனிதன் தனித்துநின்று சூழ்நிலையில் செயற்பட இயலாமையும், முழுவளர்ச்சி பெறாத நிலை’யும் மனவளர்ச்சி குன்றிய நிலையாகும். அமெரிக்கச் சங்கம் ஒன்று மனவளர்ச்சி குன்றியது என்பது ‘பொதுவாக அறிவுத்திறன் செயற்பாடுகள் பொதுவான நிலையைவிடக் குறைவாக இருப்பதும் சூழ்நிலையில் செயற்பாடு பாதிக்கப்படுவதுமாகும்’ என்கிறது.

பொதுவாக நுண்ணறிவு ஈவு (Intelligent Quotient) அளவில் குறைவாகவும், சூழ்நிலையில் செயற்படுவதில் குறைவாகவும் இருக்கிறவன் மனவளர்ச்சி குன்றியவன் என நிருணயிக்கப்படுகிறான். முக்கியமாக மனவளர்ச்சி குன்றியமையை மருத்துவ முறையாலும் (Medical), நடத்தை (Behaviour) முறையாலும், கல்வி (Education) முறையாலும் பாகுபடுத்தியுள்ளார்கள்.

**மருத்துவப் பாகுபாடு:** ஏறக்குறைய 10 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடுவரை மூளைக் காரணங்களால் மனவளர்ச்சி குன்றுவதாக மருத்துவப் பாகுபாட்டின்படி (Medical Classification) கணக்கிட்டுள்ளார்கள். இதைத் தவிர்த்து, மரபுக்கீற்று (Chromosome) அதிகமாக அதாவது 23-க்குமேல் இருந்தால் இந்நோய் ஏற்படலாம். இதனை, ‘மங்கோலியத்

தன்மை' (Mongolism)எனக் கூறுவர். கருவுற்றிருக்கும் காலத்தில் உருபெல்லா' என்ற நோய் பாதிக்கப்பட்ட தாய்க்கு மனவளர்ச்சி குன்றிய குழந்தை பிறக்கலாம். இதோடு மேலைநாட்டுக் குழந்தைகளின் மனவளர்ச்சிக் குறைவு பற்றிய ஆய்வில், குழந்தை பிறக்கும்போது எடை 2.5 கிலோவிற்குக் குறைவாக இருக்குமேயானால் அக் குழந்தை நுண்ணறிவு ஈவு 70 க்குக் குறைவாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

**நடத்தைப் பாகுபாடு**: இதன்படி அறிவுக்கூர்மையின் அடிப்படையில் மனவளர்ச்சி குன்றியவர்கள் பாகுபடுத்தப்படுகின்றனர். பொதுவாக நுண்ணறிவு ஈவு 70 - க்குக் கீழ் இருப்பவர்கள் இதைச் சார்ந்தோராகக் கருதப்படுகின்றனர். உலக உடல் நல நிறுவனம் (WHO) அமெரிக்க மனவளர்ச்சி குன்றியவர்களின் பல்வேறு நிலைகளை (Different Levels) நுண்ணறிவு ஈவின் அடிப்படையில் கீழ்க்காணுமாறு பாகுபடுத்தியுள்ளது.

| மனவளர்ச்சி குன்றிய நிலை | அறிவுக் கூர்மை |
|---|---|
| சிறிதளவு (Mild) | 69 - 55 |
| ஓரளவு (Moderate) | 54 - 40 |
| மோசமானது (Severe) | 39 - 25 |
| மிகவும் மோசமானது (Profound) | 24 -க்குக்கீழ். |

நுண்ணறிவு ஈவைப் பல்வேறு உளவியல் சோதனைகளின்மூலம் (Psychological Test) அறிந்து கொள்ள முடியும்.

**கல்விமுறைப் பாகுபாடு**: மனவளர்ச்சி குன்றியவர்கள் கல்விமுறைப் பாகுபாட்டின்படி (Educational Classification) மூன்று வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளனர். அவை 1) கல்வி கற்கக்கூடிய மனவளர்ச்சி குன்றியவர்கள் (Educable Mentally Retarded), 2) பயிற்சியளிக்கக்கூடிய மனவளர்ச்சி குன்றியவர்கள் (Trainable Mentally Retarded), 3) முழுமையாக மற்றவர்களைச் சார்ந்து இருக்கும் குழந்தை(Totally Dependent Child) என்பவையாகும். இக் கல்விப் பாகுபாட்டின்படி அறிவுக்கூர்மை குறைந்த குழந்தைகளால் எவ்வளவு பயிற்சி பெறமுடியும் என்பதை நிருணயிக்கமுடியும்.

**மனவளர்ச்சி குன்றியமைக்குரிய அறிகுறிகள்**: மனவளர்ச்சிகுன்றியவர்களைப் பற்றிக் கீழ்க்காணும் ஏதாவது ஒரு காரணியின் மூலம் அல்லது அதிகமான அறிகுறிகள் மூலம் அடையாளம் கண்டு கொள்ள முடியும். 1) சரியான உடல் வளர்ச்சியின்மை, 2)உறுப்புகள் வளர்ச்சிப் பாதிப்பு, 3) உற்சாகமின்மை,4) குறிப்பிட்ட காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சியில் அதாவது தவழ்தல், நடத்தல், பேசுதல் போன்றவற்றில் தாமதம் போன்ற நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் மனவளர்ச்சி குன்றியவர்களைத் தெரிந்து கொள்ளலாம். எஸ்.க.

**மனவாசகம் கடந்தார்** என்பவர் மெய்கண்ட சந்தானத்தின் முதல்வராகிய மெய்கண்டாரின் சீடராவார். இவர் திருவதிகையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்ததால் திருவதிகை மனவாசகங் கடந்தார் என்றே ஆன்றோர் இவரைக் குறிப்பிடுவர். இவர் உண்மை விளக்கம் என்னும் சிறந்த மெய்கண்ட சாத்திர அடிப்படை நூலை இயற்றியுள்ளார். 'மன்னதிகை வாழும் மனவாசகங் கடந்தான்.. உண்மை விளக்கம் செய்தான் உற்று' என்னும் சிறப்புப் பாயிரச் செய்யுளால் இவ்வுண்மையை அறியலாம். திருவதிகையில் தெற்குவீதியில் மனவாசகங் கடந்தார் பெயரால் இப்பொழுதும் ஒரு திருமடம் உள்ளது. மெய்கண்டாரின் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டாதலால் அவர் மாணவராய இவர் காலமும் அந்நூற்றாண்டே எனல் தகும். மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனுள் திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் ஆகிய இரண்டு நூல்களும், சைவ சித்தாந்த உண்மையைப் பொதுப் படக் கூறும் தன்மை வாய்ந்தவையாய் மெய்கண்டாருக்கு முன்னரே தோன்றிய நூல்களாகும். மெய்கண்டாருக்குப் பின் முதல் நூலாகச் சிவஞானபோதமும் வழி நூலாகச் சிவஞான சித்தியாரும் சார்பு நூலாகச் சிவப்பிரகாசமும் தோன்றின. அருணந்தி சிவாச்சாரியாரும் உமாபதி சிவமும் இயற்றிய வேறு எட்டு நூல்களோடு பதினொரு நூல்கள் அத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன மனவாசகம் கடந்தார் இயற்றிய உண்மை விளக்கம் சைவசித்தாந்த அடிப்படை உண்மைகளைக் கூறுவதாலும், இவரும் மெய்கண்டார் மாணவர் ஆதலாலும் இவர் பெருமையும் இவருடைய நூலின் பெருமையும் கருதி ஆன்றோர்கள் மெய்கண்ட சாத்திரங்கள் வரிசையில் இந்நூலுக்கும் இடம் கொடுத்தனர் என்று நினைக்கலாம். 'எனை நானென்பதறியேன் பகல் இரவாவதும் அறியேன் மனவாசகம் கடந்தான் எனை மத்தோன் மத்தனாக்கி' என மாணிக்கவாசகர் திருவாசகத்தில் உயிருண்ணிப்பத்தில் அருளியுள்ளார். மாணிக்க வாசகரிடத்தும் அவரியற்றிய திருவாசகத்திடத்தும் கொண்ட பேரீடுபாடு காரணமாக மனவாசகங் கடந்தாருடைய பெற்றோர்கள் இறைவனைப் பற்றிக் குறிப்பிடும் அத்தொடரையே இவருக்கும் மனவாசகங் கடந்தான் என இயற்பெயராக இட்டனர் போலும். இவரைப் பற்றிய கல்வெட்டொன்று திருவதிகையில் காணப்படுகிறது. அதிலிருந்து இவர் காலமும் மெய்கண்டார் காலமும் கி.பி. 12 - ஆம் நூற்றாண்

டாக இருக்கலாமோ எனவும் நினைக்க இடந்தரு கிறது எனக் கல்வெட்டாராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். இரா.ச.

மனவெழுச்சி: தனியன் உடலிலுள்ள உணர்வு கள் முழுவதும் எழுச்சி பெற்றுச் செயற்படுகின்ற நிலையையே மனவெழுச்சி என்கின்றனர். அத்தகைய மனவெழுச்சிக்கு எண்ணற்ற காரணிகள் உள்ளன. அவற்றைப் பொதுவாகப் புறக்காரணிகள் என்றும், அகக்காரணிகள் என்றும் வகைப்படுத்தலாம். மன வெழுச்சி, அகப்புறத் தூண்டல்களினால் உண்டாகும் போது அவற்றின் செறிவுக்குத் (Intensity) துலக்கங் களை ஏற்படுத்திவிட்ட பின்னரே அடங்குகிறது.

மனவெழுச்சிகள், மனித அனுபவத்தின் ஓர் அடிப் படைக் கூறாகும் (Component). ஆனால், அதன் சரியான தன்மை (Nature) யைக் குறிப்பிடுவது மிகக் கடினம் ஆகும். ஏனென்றால், உடலிலுள்ள பல்வேறு அமைப்புகள் (Body System) மனவெழுச்சியில் பங்கு கொள்கின்றன. தவிரத் தனிப்பட்ட மனவெழுச்சி, பகுத்தறிவுச் சிந்தனைச் செயல்களிலிருந்து (Rational Thought Processes) பிரித்தறிய இயலாத சிக்கலாக இருக்கிறது.

உயிரினத்தின் முழு உடலில் கிளர்ந்து எழுந்த நிலைக்குப் பின் ஏற்படும் உணர்ச்சிகள் மனவெழுச்சி எனச் சிலரும், மனவெழுச்சி என்பது நெருக்கடிப் பிரதிவினை (Emergency Reaction) எனச் சிலரும் கருதுகிறார்கள்.

மனவெழுச்சிகள் ஒரு தனியனிடம் செயலைத் தூண்டிவிடவும், அதன் போக்கினை இயக்கவும், செய் கின்றன. அவ்வகையில் தனியனின் நடத்தைகளுக்குச் சக்தியளிக்கவும், ஊக்கமளிக்கவும் செய்கின்றன. ஆதலால், மனவெழுச்சி மனித நடத்தைக்கான ஊக்கிகளில் சிறப்பு வாய்ந்தது. ஒருவன் மன வெழுச்சி பெறும்போது எண்ணற்ற உடலியல் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதற்குத் தானியங்கு நரம்பு மண்டலம் (Automatic Nervous System) முக்கிய பங்கு வகிக்கிறது. உடல் இயக்கத்தின் அடிப்படையில் தானியங்கு நரம்பு மண்டலத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். எதிர்ப்பரிவு நரம்பு மண்டலம் (Para - Sympathetic System), பரிவு நரம்பு மண்டலம் (Sympathetic System) என்பன அவை. மனவெழுச்சி நிலையின்போது பரிவு நரம்பு மண்டலம் ஏற்றமடைகிறது. மனவெழுச்சி அடங்கி இயல்பு நிலை அடையும்போது எதிர்ப்பரிவு நரம்பு மண்டலம் வலிமை அடைகிறது. தனியன் மன வெழுச்சி அடையும் போது உடல் உள்ளுறுப்புகளி லும், வெளியுறுப்புகளிலும் மாறுதல்கள் ஏற்படுகின் றன. அவன் புலன்வழியாக மனவெழுச்சிக்குக் கார ணமான தூண்டல்களை அறியும்போது தானியங்கு நரம்பு மண்டலம் தூண்டப்படுகிறது. அது தன்னோடு இணைந்துள்ள பல்வேறு உறுப்புகளை இயக்கிச் செயற்படத் தொடங்குகிறது. ஆதன் விளைவாகச் செரிமானம் குறைதல், விரைவாக உயிர்த்தல், மயிர்க்கூச்செரிதல், குருதியழுத்தமாகுதல், நாடித் துடிப்பு மிகுதல் போன்ற எண்ணற்ற உடலியல் மாறு தல்கள் ஏற்படுகின்றன. தனியன் உணர்ச்சி அடை யும் போது கல்லீரலில் உள்ள சருக்கரைச் சத்துத் திடீரென வெளிப்பட்டு மிக அதிகமான உடல் செயல் களுக்கான சக்தியை அளிக்கிறது.

மனவெழுச்சியின்போது உடலியல் மாற்றங்கள் ஏற்படுவதை அளவு கருவிகள் வாயிலாக அறியலாம். உடலியல் மாற்றங்களாவன: 1) கண், மூக்கு உதடு, நெற்றி ஆகிய முக உறுப்புகளின் தசைகளில் சுருக் கங்கள், மனவெழுச்சியின்போதுண்டாகி முகபாவனை வேற்றுமைகள் ஏற்படுகின்றன. ஆனால், முக பாவனைகள் மூலம் மனவெழுச்சிகளை அறிவது அரிது. 2) உணர்ச்சி வசப்படும் போது குரல் உரத்தும், அதிகச் செறிவிலும் ஒலிக்கிறது. அச்சத்தின்போது குரல் அடித் தொண்டைக்குள் மூழ்கி ஒலிக்கிறது. 3) குருதியழுத்தம், மனவெழுச்சி மிகுதியால் மிகவும் அதிகரிக்கிறது. 4) மனவெழுச்சியின்போது இதயம் வேகமாகத் துடிக்கிறது. உணர்ச்சி யூக்கத்தின் போது நாடித்துடிப்புக் குறைகிறது என்பது சோதனைவழி தெரியவருகிறது. 5) சீரணத்திற்குத் தேவையான சுரப்பிகள் (Gastric Secretions) சுரப்பது குறைவ தால் சீரணப் பாதிப்பு, முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலை ஏற்படுகிறது. வாந்தி, வயிற்றுப்போக்குப் போன்றவையும் ஏற்படலாம். வயிற்றுப் புண்கள் (Stomach Ulcers), தொடர்ந்து மிகுதியான மன வெழுச்சி அனுபவிப்பவருக்கு ஏற்படலாம். 6) தசை விறைப்பு, நடுக்கம் முதலியன மனவெழுச்சியின் அறி குறிகள். 7) மனவெழுச்சியில் ஏற்படும் புல்லரிப்பு தோலின் மேலுள்ள மயிர்களைக் குத்திட்டு நிற்க வைக் கிறது. 8)வியர்வைச்சுரப்பிகள் வியர்வையினை மிகுதி யாகச் சுரந்து தோலின் மின்தடையைக் குறைத்து விடுகின்றன.

மேலும், மூளையிலிருந்து வெளிப்படும் சாதா ரண 'ஆல்பா' அலைகள் (Alpha Waves) மன வெழுச்சி தோன்றும்போது 'தெல்டா' அலைகளாக (Delta Waves) மாறுகின்றன.

மனவெழுச்சிகளை இனிமையானவை, இனிமை யற்றவை என இருவகைப் படுத்தலாம். இனிமையான அனுபவங்கள், மகிழ்ச்சி, களிப்பு, அன்பு போன்றவை முதல் வகையையும், அச்சம், கவலை, சினம்

பொறாமை, வயிற்றெரிச்சல், சலிப்பு போன்றவை இரண்டாம் வகையையும் சார்ந்தவை. மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த ஒருவன் முதலில் தன்னைத் தானே கட்டுப்படுத்தவும், தன் புலன்களை அடக்கி ஆளவும் தெரிந்து கொள்ளவேண்டும்.

**மனவெழுச்சிக் கோட்பாடுகள்**: பலவகையான கோட்பாடுகள் (Theories) மனவெழுச்சியைப் பற்றித் தோன்றலாயின. அவற்றுள் முக்கியமானவை பின் வருவன:

**சேம்சு-இலாங்சின் மனவெழுச்சிக் கோட்பாடு**: இக் கோட்பாடு 'வில்லியம் சேம்சு' (William James) என்னும் அமெரிக்க உளவியலாளரும் 'இலாங்சு' என்னும் தேனிசு உளவியலாளரும் தனித்தனியே ஒரே சமயத்தில் உருவாக்கிய அடிப்படைக் கருத்தினையொட்டிச் சேம்சு – இலாங்சு மனவெழுச்சிக் கோட்பாடு எனப் பெயர் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக் கோட்பாட்டின் படி தூண்டல்கள் உடலியல் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மறுவிளைவு,உணர்ந்த மனவெழுச்சியை (Felt Emotion) உண்டுபண்ணுகிறது. இக் கோட்பாடு இவ்வகையில் கருதுவது என்னவென்றால், தூண்டல்கள் முதலில் உடல் துலக்கங்களை உண்டாக்கிப் பிறகு,ஏற்படுத்தும் உணர்ச்சி மனவெழுச்சிஎனப்படும்.

2) **கேனான்-பார்டின் மனவெழுச்சிக் கோட்பாடு**: இக் கோட்பாட்டில் தூண்டல், புறணியால் பெறப்பட்டு மனவெழுச்சி உண்டுபண்ணுகிறதாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு, மூளைநரம்பு, முடிச்சின் அடிப்பகுதி (Hypothalamus), நிணநீர்மண்டலம் (Lymbic System) ஆகியவற்றின் மையக் கீழ்மூளைக்கு ஊக்கமளிக்க அனுப்பப்படுகிறது. மூளையின் இந்தப் பகுதியிலிருந்து ஒரே சமயத்தில் வெளித் தசைகளுக்கும், உள் உறுப்புகளுக்கும் சைகைகள் (Signals)அனுப்பப்படுகையில் அவை மீண்டும் புறணி வந்தடைகின்றன. தசைகளும் உறுப்புகளும் உடலியல் எதிர்வினைகளை(Reactions)ஏற்படுத்தும்போது, சைகையை மனவெழுச்சியாகப் புறணி தெரிந்துகொள்கிறது. இவ்வாறாக இந்தக் கோட்பாடு, ஒரே சமயத்தில் உடலியலிலும், மனநிலையிலும் எதிர்வினைகள் ஏற்படுகின்றன எனக் கருதுகிறது.

3) **அறிவாற்றலுடைய இயற்பண்பு - மனவெழுச்சிக் கோட்பாடுகள்**: மனவெழுச்சிகள் பற்றிய சமூக ஆராய்ச்சி அறிவாற்றலுடைய(Intellect) உடலியல் (Bodily) இயக்க விளைவுகளை (Influence) செயலெதிர் செயலாக (Interaction)அறிவுறுத்கிறது. இக் கோட்பாடுகள் அறிவுறுத்தும் இயக்க விளைவால், சிந்தனைச் செயல்கள்மூலம் மனவெழுச்சி பெறமுடியும் என்றும், ஒருவன் மதிப்பீடும்,நிலைமையின் குறிப்பீடும் அதிக விளைவுடைய மனவெழுச்சியை அவன் அனுபவங்கள் ஏற்படுத்தும் என்றும் உணரலாம். இக் கோட்பாடுகள் பல்வேறு சூழ்நிலைக்கும், மனவெழுச்சி அனுபவங்களுக்கும்இடையே உள்ளகாரணங்களையும், அதன் தொடர்பான விளைவுகளையும் அறிவது தனியனது தனித்திறமை என அறிவுறுத்துகின்றன.

இரெ.க.

**துணை நூல்கள்**:

**Janda, L.H.**, and **Klenke Hamel K.E.**, Psychology: Its Study and Uses, Martin Press, New York, 1982.

**Witting, A F.**, Theory and problems of Introduction to Psychology, McGraw - Hill Book Company, New York, 1977.

**மனித ஆற்றல் வளம்**: ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை முடிவுசெய்யும் பல காரணிகளுள் இயற்கை வளமும், மனித வளமும் இன்றியமையாப் பங்கு பெறுகின்றன. மனித ஆற்றல் வளம் (Manpower Resources) விலை மதிக்க முடியாத ஒரு சொத்து ஆகும். அது நாட்டிற்கு நாடு காலத்திற்குக் காலம் மாறுபட்டு வருவது இயல்பே. மனித ஆற்றல் வள ஆக்கத்தைப் பல காரணிகள் பாதிக்கின்றன. முறையான முயற்சிகளும், முதலீடுகளும் மனித ஆற்றல் வளத்தின் பயனைப் பெரிதும் சிறக்கச் செய்ய இயலும். வளர்ந்துவரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி குன்றியிருந்தாலும் மனித ஆற்றல் வளத்தைச் சரியாக வளர்த்துப் பயன்படுத்துவதன் மூலம் வியக்கத்தக்க பொருளாதார முன்னேற்றத்தைப் பெற இயலும். இத் துறையில் சிக்கலான பல செயல்கள் காணப்பட்டாலும் அவற்றிற்கான தீர்வுகளும் போதிய அளவில் வகுக்கப்பட்டுள்ளன.

மனித ஆற்றல் வளத்தைப்பற்றி ஆதம்சுமித்து, ஆல்பிரடு மார்சல் ஆகியோர்தம் காலத்திலேயே சிந்திக்கத் தொடங்கினர். அக்காலத்தில் சூல்சு, தென்னிசன், கார்பின்சன், எண்ட்ரிச்சு, மோசசு குசுநட்சு போன்ற வல்லுநர் பலர் மனித ஆற்றல் வளம் குறித்துச் சுவைபட வாதிட்டு வந்திருக்கின்றனர்.

இயற்கை வள வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் மனிதன் எந்த அளவு ஆற்றலும், சிறப்பும் பெற்றுள்ளான் என்பதைப் பொறுத்தே பொருளாதார வளர்ச்சியின் வேகமும், நிலையும் அமையும். இங்கு ஒரு வியப்பான உண்மையைக் கண்டறியலாம். பொருளாதார வளர்ச்சியின் கருவி (Instrument) யாகவும், இலக்காகவும் (End) மனிதனே அமைந்துள்

ளான். எத்தகைய பொருளாதார நடவடிக்கையின் முடிவான நோக்கமும் மனிதனின் நல்வாழ்வேயா கும்.

பொருளாதார நடவடிக்கைகளை நிலம் (Land), உழைப்பு (Labour), மூலதனம் (Capital), அமைப்பு (Organisation) என்னும் நான்கு காரணிகளே (Factors) முக்கியமாக முடிவுகட்டுகின்றன. நில உரிமையாளனாகவும், உழைப்பாளியாகவும், முத லீட்டாளனாகவும், தொழில் முனைவோனாகவும் மனிதன் பல பாத்திரங்களை ஏற்கிறான். அவன் திறமைகள், எண்ணங்கள், பற்றுகள், அணுகுமுறை கள் ஆகியவைதாம் உற்பத்திக் காரணிகளின் (Factors of Production) அளிப்பையும், திறனையும் மிகுதி யாகப் பாதிக்கின்றன. உற்பத்திக்காரணிகளின் திறன் உச்சநிலை அடைவதற்கு மனித ஆற்றல் வளம் உரிய அளவில் உயர்ந்து சிறத்தல் ஓர் இன்றியமையாத நிபந்தனை எனலாம்.

மனித ஆற்றல் வளம் பற்றி ஆராயும்பொழுது இரண்டு இன்றியமையா இயல்புகளை நினைவில் கொள்ளவேண்டும். ஒன்று மக்கள் தொகையின் அளவு (Size of Population), மற்றொன்று மக்கள்தொகை யின் தரம் (Quality of Population) ஆகும். மக்கள் தொகையின் அளவிற்கும், தரத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

மக்கள்தொகையின் அளவு என்பது ஒரு நேரத் தில் காணப்படும் மனிதர்களின் மொத்த எண் ணிக்கை ஆகும். அந்நேரத்தின் நாட்டு வருமானத்தை (National Income) அந்த எண்ணிக்கையால் வகுத் தால் தனியாள் வருமானம் (Percapita Income) கிடைக் கும். மக்கள்தொகையின் அளவைப்போலவே மக் களின் கட்டமைப்பு (Composition), வளர்ச்சி வேகம் (Growth Rate), பிறப்பு விகிதம் (Birth Rate), இறப்பு விகிதம் (Death Rate), வயதுப் பாகுபாடு (Age Composition), பால் விகிதம் (Sex Ratio), மக்கள் தொகை அடர்த்தி (Density of Population), கல்வி யறிவு (Literacy), இடப்பெயர்ச்சித் தன்மை (Nature of Mobility) போன்றனவும் ஆய்வுக்கு இன்றியமை யாதன ஆகும்.

மக்கள்தொகையின் தரத்தை, அவர்கள் ஆயுட் காலம் (Life Expectancy), கல்வி அறிவு நிலை (Level of Literacy), அலுவல் வகையமைப்பு (Occupational Pattern), தொழில்நுட்ப அறிவு நிலை (Level of Technical Knowledge) போன்றவை மூலம் தெளிந்தறியலாம்.

மனித ஆற்றல் வளம் சிறத்தலை மனித முத லீட்டு வளர்ச்சி (Growth of Human Capital) என்றும் குறிப்பிடுவதுண்டு. மனித ஆற்றல் வளத்தின் வளர்ச் சிக்காகச் செய்யப்படும் முதலீடு பல வழிகளில் பயன் படலாம். உடல்நலம் பேணுதல் தொடர்பான வசதிகள், பணிகள், தொடக்கநிலை, இடைநிலை, மேல்நிலைகளில் முறைசார்ந்த கல்வித் தொடர் பான வாய்ப்புகள்; முதியோர் கல்வி வாய்ப்புகள்; முறைசாரா உயர்நிலைக் கல்வி வாய்ப்புகள், சரியான பணி நிலவரங்கள்; பணிக்காலப் பயிற்சிகள், தொழிலாளர் இடப்பெயர்ச்சி தொடர்பான திட்டங் கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அவ்வாறான முதலீட்டுத் திட்டங்களில் உள்ளடங்கும். போதிய அளவில் புதிய நலவாழ்வுக்கு ஏற்றவை செய்யப்படு வதற்கும் அம் முதலீடுகளில் வாய்ப்புகள் உள்ளன. மனித ஆற்றல் வளம் பெருகவும் உடலாலும், உள்ளத்தாலும், மக்கள் உயர்வான நிலைகளை எட்டிப்பிடிக்கவும் வழிவகை செய்யப்படுதல் இன்றி யமையாதது. உழைப்பு, போதிய ஊக்கம் பெற வேண்டும். வாய்ப்புகள் சமச்சீரான முறையில் காணப்பட்டால் தேவையற்ற சிறு சண்டைகளும், மனச்சுமைகளும் மறையும்.

மனித ஆற்றல் வளம் பொருளாதாரக் காரணி களால் மட்டுமே பாதிக்கப்படுவதன்று; அரசியல், சமுதாயம், வரலாறு, அறிவியல், உளவியல், மரபியல் போன்ற காரணிகளாலும் ஓரளவு பாதிக்கப்படுகிறது. மேலும், பழக்க வழக்கங்களும் நாகரிகமும், பண் பாட்டு நிலைகளும், மனிதர்களின் நம்பிக்கைகளும் கூட மனித ஆற்றலைப் பாதிப்பதுண்டு. மனிதனின் அவாக்களுக்கும், அணுகுமுறைகளுக்கும் அவன் ஆற்றல் நிலைகளை மாற்றியமைக்கும் சக்தி காணப் படுகிறது.

மனித ஆற்றல் வளத்தைப்பொறுத்த மட்டில் உண விற்கு இன்றியமையாப் பங்குண்டு. சத்தான, சம அளவு உணவு போதிய அளவில் உரிய நேரங்களில் கிடைக்க வேண்டும். தூய்மையானகாற்று எவ்வளவு இன்றியமையாததோ அது போலவே மாசற்ற குடி தண்ணீரும் மனித ஆற்றல் வள வளர்ச்சிக்கு இன்றிய மையாததாகும். பல பின்தங்கிய பகுதிகளில் குடி தண்ணீர் அருகில் கிடைப்பதில்லை. தொழில் மையங் கள் நிறைந்த நகரப் பகுதிகளில் தண்ணீர் மட்டுமல்லா மல் சுவாசிக்கும் காற்றுகூட மாசுபடுத்தப்பட்டதா கக் காணப்படுகிறது. தகுந்த திட்டங்கள் மூலம் அந்த அடிப்படையான சிக்கல்கள் தீர்க்கப்படல் வேண்டும்.

மனித ஆற்றல் வளத் திட்ட நிபுணர்கள் ஒருசிலர் கருத்துப்படி பின்வரும் சில சிக்கல்கள் காணப்படு கின்றன. அவை 1) மக்கள்தொகை மிகுதியான நிலை யில் இருக்கும் பொழுதும் போதிய திறமையான தொழிலாளர்கள் கிடைப்பதில்லை; 2) பொருளா தார வளர்ச்சியின் எந்த நிலையில் மனித வளம்

இன்றியமையாப் பங்கு பெறுகிறது என்பதை முடிவு கட்டுவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன; 3) எந் நேரத்தில் எவ்விதக் கல்விக்கு முதன்மையிடம் அளிக்கப்படல்வேண்டும் என்பதை எளிதில் முடிவுகட்ட இயலவில்லை; 4) வேளாண்மைத்துறையிலும் திறமையான தொழிலாளர் ஈடுபடுவதற்கு எம்மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் என்பது தெளிவாகவில்லை; 5) கல்வி நிலையங்களும் உடல் நலம் காக்கும் மையங்களும் எண்ணிக்கையில் பெருகினாலும் கல்வியின் தரமும், நலன் நிலைகளும் முன்னேற்றம் அடைவதில்லை என்பனவாகும்.

அத்தகைய சிக்கல்களை இக்காலப் பொருளாதார நடவடிக்கைகள் எளிதில் தீர்த்துவைக்கும் திறன் கொண்டவை ஆகும். பொது மக்களும் ஓரளவு ஒத்துழைக்கும் சூழ்நிலை உருவாக வேண்டும்.

இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் விரைந்து முன்னேறி வருகிறது எனலாம். பல்லாண்டுகளுக்கு முன்பு சான்.பி.உலூவிசு (John. P. Luwis) என்னும் அறிஞர் இந்தியாவை 'வறுமையான மக்களைக் கொண்ட ஒரு செழுமையான நாடு' (A rich country with poor People) என்றார். இயற்கை வள வாய்ப்புகள் தேவைக்கும் அதிகமான அளவில் காணப்பட்டும் கூட அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்த மக்கள் துணிந்து செயலாற்றாத காரணத்தால் வறுமை காணப்படுகிறது என்பது அவரது கூற்று. இந்திய மக்களின் திறனும், மனத்துணிவும் தேவையான முறைகளில் மாற்றமடைந்து வருகின்றன எனலாம்.

இவ்வாறு மனித ஆற்றல் வளத்தை மனிதர்களின் திறமையும் (Skill), மனத்துணிவுமே (Will) எளிதாக முடிவுகட்டுகின்றன. இ.தி.

**துணை நூல்:**

Caol A. J.,and Hoover. E. M., Population Growth, and Economic Development in Low Income Countries, 1959.

**மனித இன நலக் கோட்பாடு:** மனித இனத்தின் துன்பங்களையும் துயரங்களையும் குறைத்து, இன்பங்களை அதிகரிப்பதே மனித இன நலக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவமாகும். மனித இன நலக் கோட்பாடு (Humanism) ஒரு மதக் கோட்பாடாகவே தோன்றியது. இயேசு கிறித்து கடவுளாகார்; மனிதர்தாம் என்பதே இக்கோட்பாட்டின் தொடக்கக் கால அடிப்படையாகும். ஆனால், இன்று அது ஒரு மதக் கோட்பாடாக அன்றி ஒரு சமூகக் கோட்பாடாகவும் கருதப்படுகின்றது.

மனித இனநலக் கோட்பாடு ஒரு தத்துவமாக அன்றி ஒரு நடைமுறைக் கொள்கையாகப் பண்டைய காலம் முதலே இருந்து வந்துள்ளது. சில வகையான விலங்குகள் புனிதமானவை என்னும் கருத்தும், மறுபிறப்பில் நம்பிக்கையும் விலங்குகளிடம் கொடுமைகளைக் குறைக்க உதவின. இன்றும் இந்திய நாட்டில் விலங்குகளுக்குக் காட்டப்படும் அன்பும் பரிவும் மற்ற நாட்டினருக்கு வியப்பளிப்பதாகும். மேலும், மனிதர்களைப் பலியிடுவதற்கு மாறாக விலங்குகளைப் பலியிடும் வழக்கமும் இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே உருவானதாகும்.

கிரேக்க நாகரிகத்தின் போதே மனித இன நலக் கோட்பாடு ஒரு தத்துவமாக உருவாகியது. 'மார்கசு ஆரேலியசு' (Marcus Aurelius) தமக்குத் துன்பம் செய்பவர் மீதும் அன்பு செலுத்தும்படி கூறியதும், 'எபிகியூரியசு' (Epicureus) 'மனிதர்களை மற்றவர்களுக்கு உதவி செய்து வாழும்படி' அறிவுறுத்தியதும் இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஆகும். இயேசு கிறித்துவும் அன்பு, அருள், அமைதி ஆகியவற்றையே போதித்தார். மனித இன நலக் கோட்பாடு வளரக் கிறித்தவ மதம் பெரிதும் உதவியது. இருப்பினும், கி.பி. 18–ஆம் நூற்றாண்டிலிருந்து மனித இன நலக் கோட்பாடு கிறித்தவ மதத்துக்கு எதிரான கொள்கையாகவே இருந்து வந்துள்ளது. இக்கோட்பாட்டைத் தீவிரமாகப் பின்பற்றுபவர்கள் அனைவரும் சமயச் சார்பற்ற கொள்கையைப் (Secularism) பின்பற்றுபவர்களாகவோ கடவுள் நம்பிக்கை அற்றவர்களாகவோ இருந்து வந்துள்ளனர்.

மனிதஇனநலக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு அறிவியலும் பெரும் துணையாக இருந்துவந்துள்ளது. இவ்வுலகம் சில நியதிகளுக்கு உட்பட்டு ஓர் ஒழுங்குடன் செயற்படுகின்றது என்ற கொள்கை பகுத்தறிவின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. மேலும், மருத்துவத்தின் வளர்ச்சியும், குறிப்பாக அறுவைச் சிகிச்சையில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் மனித இனத்தின் துன்பங்களைக் குறைக்கப் பெரிதும் உதவின.

அவற்றுக்கும் மேலாக மனித இனமே இக்கோட்பாட்டை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கிறது எனலாம். இன்றைய மனிதனின் எண்ணங்களும், செயல்களும் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவை போன்று கொடுமையாக இல்லை. மனித இனத்தின் பெரும் பகுதியினர் இன்று தாமாகச் சென்று மற்ற மனிதர்களுக்கோ, விலங்குகளுக்கோ தீங்கிழைப்பதில்லை. எடுத்துக்காட்டாக, இரண்டாம் உலகப் போரின் போது போர் வீரர்களைப் போரில் ஈடுபடுத்தப் பெரும் தூண்டுதல் தேவைப்பட்டது.

மனித இனநலக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள் உலகில் அடிமைத்தனம் ஒழியவும், குழந்தைகள் பெண்கள் ஆகியோர் நலனுக்காகவும், விலங்குகளைக் கொடுமையாக நடத்துவதைத் தடுக்கவும், தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் நலனைக் காக்கவும், சிறைச்சாலைகளில் கைதிகளை மனிதத் தன்மையுடன் நடத்தவும் பாடுபடுகின்றனர்.

மனிதஇனநலக் கோட்பாடு அரசியல் கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் அப்பாற்பட்டது. மனித இனநலக் கோட்பாட்டைப் பின்பற்றும் ஒருவர் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்கலாம். பொதுவாக இக்கோட்பாட்டின் குறிக்கோள்களை வலியுறுத்தச் சங்கங்கள் முதலியன உள்ளன. விலங்குகளுக்குத் தீங்கு ஏற்படாமல் தடுப்பதற்காக உள்ள 'விலங்குகள் வதைத் தடுப்புச் சங்கம்' (Society for the Prevention of Cruelty to Animals) போன்ற நிறுவனங்கள் 'வலிமையுள்ளவரே வாழ்வர்' எனும் இயற்கை விதிக்கு மாறாக உள்ளன என்பர். மேலும், சிலர் இக்கோட்பாடு துன்பங்களைக் குறைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளதே அன்றி, இன்பங்களைப் பெருக்குவதை அன்று என்பர். எவ்வாறு இருப்பினும் இக்கோட்பாடு மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் ஒரு பங்காக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. எஸ்.சு.த.

**மனிதச் சூழலியல்**: மனிதர்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையே உள்ள தொடர்புகளை ஆராயும் ஒரு மானிடவியல் உட்பிரிவே மனிதச் சூழலியல் (Human Ecology) ஆகும். இப்பிரிவு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. தொடக்கத்தில் விலங்குகளையும் தாவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு மனிதச் சூழலியலை ஆராயும் பிரிவாக இது வளர்ந்தது. மனிதர்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையேயான தொடர்புகள் மிக முதன்மையானதென அமெரிக்க மானிடவியலாளர் சூலியன் எச். இசுடீவர்டு (Julian H. Steward) உணர்ந்து இதைப் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டிய தன் இன்றியமையாமையை உணர்த்தினார். இப்பிரிவு, மக்கள் தொகையியல்சார் சூழலியல் (Population Ecology) எனவும், பண்பாட்டுச் சூழலியல் (Cultural-Ecology) எனவும், சமுதாயச் சூழலியல் (Socio-Ecology) எனவும் குறிக்கப்படுகிறது. மானிடவியலில் பண்பாட்டுத் தோற்றங்கள் (Cultural Origins) பற்றியும் அதன் இக்கால மாறுபாடுகள் பற்றியும் கீழ்க் குறிப்பிட்டுள்ள மூன்று நிலைகளில் அறிவதற்காகச் சுற்றுச் சூழல் (Environment) பற்றிய ஆய்வுகள் மானிடவியலாரால் மேற்கொள்ளப்படுகின்றன.

1. சுற்றுச் சூழலின் அறுதியிடும் தன்மை (Environmental Determinism). அதாவது, மனித உடலமைப்பையும் நடத்தை முறையையும் உருவாக்குவதில் சுற்றுச்சூழல் நேரடியாகப் பங்கினைப் பெற்றுள்ளது.

2. சுற்றுச் சூழலின் நெகிழ்வுத் தன்மையும் சுற்றுச் சூழலின் தாக்கமும் பண்பாட்டில் நேரடியான விளைவுகளை ஏற்படுத்தாமல் அதனோடு இணக்கமுறும் தன்மை.

3. சூழலியல் (Ecology). அண்மைக் காலங்களில் சூழலியல் அணுகுமுறையில் மேற்குறிப்பிட்ட மூன்று கருத்துகளில் முதலிரண்டு பெருவழக்காக வளரவில்லை. அதற்கு மாறாகப் பண்பாட்டுச் சூழலியல் என்னும் வழக்கே சிறப்புப் பெற்றுள்ளது.

பண்பாட்டு மானிடவியலார் சூழலியல் அணுகுமுறையினைப் பயன்படுத்தும்போது மக்கள் குழுவைச் சூழலியல் மக்கள்தொகை (Ecological Population) என்றே குறிப்பிடுவர். அம்மக்கள் ஒரே சிறப்பினத்தைச் (Species) சேர்ந்தவர்கள்; ஒரே வாழ்க்கையமைப்பைக் கொண்டவர்கள். அதாவது, வாழ்வின் ஒவ்வொரு அமைப்பிலும் தனித்தன்மை பெற்ற அமைப்பினை அனைவரும் கொண்டுள்ளனர். உணவுச் சூழலமைப்பை (Nutritional Ecosystem) மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தால் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அதன் உணவுத் தேவையை ஈட்டுதல், உற்பத்தி செய்தல், அதனைப் பகிர்ந்து கொள்ளுதல், மிகுதியானவற்றை விற்றுவிடுதல் முதலான முறைகளில் அதற்கே உரிய பாங்கினைப் பெற்றிருக்கும் என்பது புலனாகும். சமுதாயச் சூழலியலார் அவ்வை அனைத்தையும் ஒன்றுபடுத்தி ஒவ்வொரு குறிப்பிட்ட சுற்றுச்சூழலுக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் உள்ள சூழலமைப்பை விளக்குவர்.

ஒரு சமுதாயத்தின் சூழலமைப்பைப் பற்றி ஆராயும்போது புறக் காரணிகளின் தாக்கம் பற்றியும் விரிவாகக் கருத்திற் கொள்ளப்படும். குறிப்பாக, நீர், காலநிலை, பிற உயிரினங்கள் ஆகிய அனைத்தோடும் மனிதன் கொண்டுள்ள உறவுகள் முதன்மையாக ஆராயப்படும். அவ்வாறே ஒரு சுற்றுச் சூழலில் வாழும் மக்களின் நடத்தை முறைகளும் உடலியங்கியல், மரபியல் பண்புகளும் ஆராயப்படுவதோடு அவற்றிற்கிடையே நிலவும் உறவுகளும் கருத்திற் கொள்ளப்படும்.

மானிடவியலில் சூழலியல் அணுகுமுறையை ஏற்படுத்தியவர் சூலியன் எச். இசுடீவர்டு (Julian H.Steward)ஆவர். இவர் 1930-ஆம் ஆண்டளவில் மேற்கொண்ட பெரும் ஆற்றுப் படுகைப் (Great Basin)

பகுதிகளில் வாழ்ந்த தென்கிழக்கு இந்தியர்களைப் பற்றிய ஆய்வு, அம்மக்களுக்கும் அவர்கள் வாழ்ந்த சூழலுக்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குகிறது. அப்பகுதியின் புறக் காரணிகளான குத்துயரம் (Altitude), நீர், வெப்பம், புவியியல் தடைகள், ஆண்டு முழுவதும் கிடைக்கும் உணவுப் பொருட்களின் வகைகள் ஆகியவை அமெரிக்க இந்திய முதுகுடிகளின் பண்பாட்டை எவ்வாறு அறுதியிடுகின்றன என்று ஆராய்ந்த இவர்தம் முன்னோடி ஆய்வே பண்பாட்டுச் சூழலியல் (Cultural Ecology) என்னும் உட்பிரிவு சிறப்புப் பெற வழிகோலிற்று.

இசுடீவர்டின் முதன்மையான பங்கு பண்பாட்டுச் சூழலியல் முறைகளை விளக்கியது மட்டுமன்று; பண்பாடும் சுற்றுச் சூழலும் தனித்தனியே செயற்படுவன அல்ல; அவையிரண்டும் இயக்கவியல் இடைவினை (Dialectic Interplay) புரிவன என்பதையும் விளக்குவதாகும். அதில் ஒன்றுக்கொன்று சமமாக இடைவினை புரிவதில்லை. ஒருசில பண்பாட்டில், சுற்றுச்சூழலின் தாக்கம் பண்பாட்டைவிட மிகுதியாகவும் ஒருசில பண்பாட்டில் சுற்றுச்சூழலின் தாக்கத்தைக் காட்டிலும் பண்பாட்டின் தாக்கம் மிகுதியாகவும் இருக்கும். அதே நேரத்தில் பண்பாட்டின் ஒருசில நிறுவனத்தைச் சேர்ந்த கூறுகளில் சுற்றுச்சூழலின் செல்வாக்கு மிகுதியாக இருப்பதில்லை. இது அப்பண்பாட்டினரின் நெறிமுறைகள் (Norms), மதிப்புகள் (Values) ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது என இசுடீவர்டு நம்பினார். இதனால், பண்பாட்டின் மையக் கூறுகளை (Culture Core) எடுத்துக் கொண்டு சூழ்நிலைத் தாக்கத்தைப் பற்றி அறிதல் சிறந்த முறை எனவும் இதனால் எந்தெந்த நிறுவனம் எந்தெந்த அளவில் சுற்றுச் சூழலோடு வினைபுரிகிறது எனவும் அறியலாம் என்பார். பண்பாட்டின் மையக் கூறுகள் அச்சமுதாயத்தின் பொருளாதார நிறுவனத்தோடு மிகவும் தொடர்புடையன. இதனால், பண்பாட்டுச் சூழலியல், கீழ்வரும் மூன்று பொருள் குறித்தும் விரிவாக ஆராய்கிறது. அவையாவன:

அ) சுற்றுச் சூழலுக்கும் உற்பத்தி முறைக்கும் இடையேயுள்ள உறவுஅல்லதுஉணவு ஈட்டுதலில் மக்கள் எந்த அளவு சுற்றுச்சூழலைப் பயன்படுத்துகின்றனர் என்பது,

ஆ) நடத்தை முறைக்கும் உற்பத்தி முறைக்கும் உள்ள தொடர்புகள்.

இ) இந்த நடத்தை முறைகள் பண்பாட்டின் பிற கூறுகள் மீது எம்முறையில் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது.

இசுடீவர்டின் பண்பாட்டு மையக் கருத்துகள் சமுதாயக் கூட்டமைப்பின் (Social Structure) பெரும்பான்மைத் தன்மைகளைப் பெற்றிருக்கவில்லை. சமய நடைமுறைகளும் இதில் இடம்பெறவில்லை. இதனால் இவர்தம் அணுகுமுறையில் சிலர் குறை கூறுவர். ஆனால், இப்பிரிவின் இன்றியமையாமை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கே.நி.

**துணை நூல்:**

**Steward, Julian. H.**, Theory of Culture Change: The Methodology of Multilinear Evolution, University of Illinois press, Urbana, 1955.

***மனிதப் பண்பேற்றல் கொள்கை*** என்பது பொதுவாக மனிதப் பண்பைத் தெய்வத்திற்குக் கற்பித்துக் கூறுவதாகும். தெய்வங்களுக்கு மனிதப் பண்பைச் சார்த்தும் தன்மை சமயம் தோன்றிய உடனேயே ஏற்பட்டுவிட்டது. மனிதப் பண்பேற்றல் கொள்கையை (Anthropomorphism) மனித உடல் பண்பேற்றல் கொள்கை என்றும், மனித உளப் பண்பேற்றல் என்றும் இருநிலையாகப் பகுக்கலாம்.

மனிதன் எப்பொழுதும் தன்னைவிடப் பெரிய ஆற்றல் ஒன்று இருக்கிறது என்று நம்பி வந்திருக்கின்றான். அவ்வாற்றல் மனித உருவைக் கொண்டோ, சிலசமயங்களில் விலங்குகள் போலவோ, மரங்கள் போலவோ வருகின்றது என்று நம்பி வந்திருக்கிறான். சூரியனும் சந்திரனும், விண்மீன்களும் கூட மனிதனைவிட மிகுதியான ஆற்றலைப் பெற்றிருக்கின்றன என்று கருதினான். அவற்றைக் கருத்திற் கொண்டு மனிதன் தனக்கு மேலான ஆற்றல் உயிரில்லாப் பொருட்களின் வடிவத்தைப் பெற்றுப் பின்னர்ப் படிப்படியாக உயிருள்ள பொருட்களின் வடிவத்தைப் பெற்றது எனக் கருதினான். படிப்படியாக மனிதப் பண்பேற்றது என்று மெய்ப்பிக்கப் பல சான்றுகள் இருக்கின்றன. ஆனால் மனிதப் பண்பைப்பெற்ற கடவுள் திரும்பவும் விலங்குப் பண்பைப் பெற்றது இல்லை. தெய்வங்களிடமும், கடவுள்களிடமும் இருக்கின்ற மனித எண்ணம், உணர்வு, ஆற்றல் ஆகிய உளம் சார்ந்த மனிதப் பண்புகள் எப்போதும் குறையாமல் நிலைத்திருக்கின்றன. உடல் சார்ந்த மனிதப் பண்பேற்றல் கொள்கை, சில குறிப்பிட்ட சமயங்களில் ஏற்றுக் கொள்ள முடியாமல் போனதால் அந்தச் சமயத்தின் உடல்சார்ந்த பண்பேற்றல் கொள்கை வலுவிழந்து காணப்படுகின்றது.

மனித எண்ணங்களிலும், பேச்சிலும் தவிர்க்க முடியாமல் மனித வகையில்லாத பிறவற்றை மக்கள் எப்போதும் அடக்கி வந்திருக்கிறார்கள். மக்கள் இயற்கையின் கொடூரத்தையும், கடல் அலையின் சினத்தையும், வெள்ளத்தின் கொடுமையையும், புயற் காற்றின் கொடுமையையும், பல நூறு ஆண்டு

களுக்கு முன்னரே சிந்தித்தனர். மக்கள் இக்குணங்களை வீரத்திற்கும், கூரிய அறிவிற்கும், அச்சத்திற்கும், பழிதீர்த்தலுக்கும், கோழைத்தனத்திற்கும் கற்பித்துக் கூறத் தொடங்கியதால் மனிதனை மீறிய ஆற்றலை (கடவுள்) மனிதப்படுத்தும் தன்மைக்கு இட்டுச் சென்றது. அதாவது அந்தப் பண்புகளை மனித இனமல்லாத மற்றவற்றிற்குக் கற்பித்துக் கூறுவதும் அதன் செயல்களை மனித நடத்தைகளாகப் பேசுவதுமாகும்.

கடவுள் பார்க்கிறார், உணர்கிறார், கேட்கிறார், அன்பு கொள்கிறார், வெறுக்கிறார், அறிகிறார் இன்னும் பலவாறாகச் செய்கிறார் என்று கூறப்படுகிறது. பொதுவாக, அது மனிதத் தன்மையை மனித இனமல்லாத வேறொன்றிற்கு இணைத்துச் சொல்வதாகும். குறிப்பாக, அது மனிதப் பண்பைத் தெய்வத்திற்கோ, மனித ஆற்றலுக்கு மீறிய இயற்கைப் பொருட்களுக்கோ இணைத்துப் பார்ப்பதாகும். அது பொதுவாக அனைத்துச் சமயங்களும் ஏற்றுக் கொண்டதாகும். அவ்வகையான மனித இனமல்லாத மற்றப் பொருட்களுக்கு மனிதப் பண்பைச் சார்த்தும் போக்கு எல்லா மக்களிடமும் இருக்கிறது. அது ஆதிகாலச் சமுதாயம் முதல் வளர்ந்து நாகரிகமடைந்த சமுதாயம் வரையில் நீடித்திருப்பதைக் காணலாம்.

மக்களின் செயல்களும், எண்ணங்களும் அன்றாட வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய அனுபவத்தாலும், அதனால் உண்டாகும் உணர்வாலும் வழி நடத்தப்படுகின்றன. அந்த அனுபவங்களும் எண்ணங்களும் இயற்கையிலுள்ள எல்லாவற்றிற்கும், பூமியில் வாழ்வனவற்றிற்கும், பூமியிலில்லாதவற்றிற்கும், சில நிகழ்ச்சிகளுக்கும் அப்படியே கற்பித்துக் கூறப்படுகின்றன. கடவுள்களுக்கு அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்டவற்றிற்குத் தொடர்பில்லாத, நம்பிக்கையில்லாத மனித இனம் எதுவும் கிடையாது. அதுபோல மனித உருவிலோ, மனிதப் பாவனைகளிலோ, நடத்தைகளிலோ, மனித உணர்வுகளிலோ மனிதச் செயற்பாடுகளிலோ மக்கள் அவர்களுடைய தெய்வத்தை மனிதனோடு ஒப்பிடாத இனத்தைக் காண முடியாது.

தெய்வம் இவ்வாறு மனிதனோடு ஒப்பிடப் படுகின்றது என்பதில் சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபாடுகள் இருந்தாலும் ஏன் இப்படி மனிதப் பண்பிற்கு உட்படுத்தப்பட்டது என்பதில் அவ்வளவு வேறுபாடுகள் கிடையா. அதன் அடிப்படை என்னவெனில் சமயம், சமயச் சடங்குகள், சமய உணர்வுகள், வெளிப்பாடுகள் போன்றவை சமுதாயத்திற்குச் சமுதாயம் குறிப்பிடத்தக்க வகையில் மாறுபடுகின்றன என்பதாகும். ஒரு கடவுள் கொள்கையுள்ள சமயங்களாகிய இசுலாம், கிறித்தவம், யூதசமயம் போன்றவை கடவுளை உருவப்படுத்துமிடத்தில் மிகவும் வேறுபாடு கொள்கின்றன. குரானில் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளபடி அவர்களின் கடவுள் முழுவதும் மாறுபட்டது; புதிரானது. அதற்கு உயிருள்ள அல்லது உயிரற்ற பொருட்களுடனோ, உயிர் வாழக்கூடிய, வாழ்ந்து மறைந்துவிட்ட இனங்களுடனோ எந்த விதத் தொடர்பும் கிடையாது. அக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இசுலாத்தில் மனிதப் பண்பேற்றல் என்ற கேள்வி எழுவதற்கே இடமில்லை. ஏனெனில், வெளிப்படையான உடல் அமைப்பு, கடவுளுக்குக் கிடையாது எனக் குரான் கூறுகிறது. கடவுள் (அல்லா) பார்க்கிறார், கேட்கிறார், நேசிக்கிறார், விரும்புகிறார், வெறுக்கின்றார் என்று பேசும்பொழுது மனிதப் பண்பேற்றல் என்ற கொள்கை வெளிப்படையாகத் தெரிகின்றது. காரணம் இசுலாமும் மனிதனுக்கேயுரிய பண்புகளையும், குணநலன்களையும் கடவுளுக்குக் கற்பித்துக் கூறுகிறது. யூதசமயமும், கிறித்தவமும், இசுலாமியத் தத்துவத்துடன் தொடர்புடையனவே. கிறித்தவ சமயத்தில் கடவுளின் குமாரன் ஏசுபிரான் கடவுளின் தூதுவர் எனக் கருதப்படுகிறார். இவரே சித்திரப் படமாகவும், சிலையாகவும் சமைக்கப்படுகின்றார். அதே போல்தான் மேரியும். ஆனால், இசுலாமில் அது கூட மறுக்கப்படுகிறது. தூதுவர்கூட இசுலாத்தில் ஏற்கப்படவில்லை. சித்திரித்தலோ, சிலை வடித்தலோ கிடையாது. இங்கு மீண்டும் குறிப்பிட்டுக் கூற வேண்டியது என்னவெனில், இசுலாமில் உடல் சார்ந்த மனிதப் பண்பேற்றல் கொள்கைக்குப் பதிலாக உளம் சார்ந்த மனிதப் பண்பு கடவுளின் எண்ணத்திலும் செய்கையிலும் கற்பித்துக் கூறப்படுவது வெளிப்படையாகத் தெரிய வருகின்றது என்பதேயாகும்.

பல கடவுள்களுள்ள சமயங்கள் பற்றிப் பார்க்கும்பொழுதும், இந்து சமயம் கடவுளைப் பற்றிய விரிவான கொள்கையைக் கொண்டிருக்கிறது. தெய்வம் மனிதனா இல்லையா என்ற கேள்வியை விட்டுவிட்டாலும், உயிரினமா, உயிரற்றதா என்ற கேள்வியை விட்டு விட்டாலும், உடல் சார்ந்த மனிதப் பண்பேற்றல் கொள்கை இல்லாவிட்டாலும் கடவுட் கொள்கையில் கட்டாயம் மனிதப்பண்புகள் இருப்பதைக் காணலாம். தெய்வங்களைச் சரியான முறையில், வழிபட்டால் அவை வழிபட்டோரைப் பாதுகாக்கும், வாழ்த்தும். ஆனால், அவற்றைக் கவனிக்காது விட்டு விட்டாலோ, சரியான முறையில் வழிபடாவிட்டாலோ, சொல்லமுடியாத துயரத்தையும், சினத்தையும் காட்டிவிடும். சீக்கியமும், புத்தசமயமும், சைனமும் அதே போன்ற குணங்களைக் கொண்டுள்ளன.

பிற சமயங்களைப் பார்க்கும்பொழுது முற்காலச் சமுதாயத்தில் அதுபோன்ற ஒத்த சமயமோ, சமய வழிபாடுகளோகிடையா. ஆனால், மிகவும் பின் தங்கிய தொழில்துறை, பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றைக் கொண்ட இக்கால மக்களிடம் கூட இந்த மனிதப் பண்பேற்றல் கொள்கை முக்கியமாக வும்,வெளிப்படையாகவும் இருக்கிறது. பழங்கால மக் களில் சில இனத்தவர்கள் இயற்கையிலுள்ள பொருட் களைக் கடவுளுக்குப் பதிலாக வழிபட்டனர். அது உயிருள்ளவையாகவோ, உயிரற்றவையாகவோ, மிருகமாகவோ, மரமாகவோ, மலையாகவோ, ஆறா கவோ, குளமாகவோ இருந்தது. அந்தக் குறிப்பிட்ட இயற்கைப் பொருள் தம் மூதாதையர்கள் என் றும், அதிலிருந்து அந்தக் குறிப்பிட்ட ஆதியின மக்கள் வழிவந்தவர்கள் என்றும், அந்த இயற்கைப் பொருளா கிய தெய்வம் தங்களை எல்லாவிதத் தீங்கிலிருந்தும் பேய் பிசாசுகளிடமிருந்தும் காப்பாற்றும் என்றும் உறுதியாக நம்பினர். அதனால் அவற்றை வழிபட்டுத் தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொண்டனர். ஒரு குழு மற்றக் குழுவை ஆட்கொள்ளும் பொழுதோ தாக்கும் பொழுதோ, மந்திரத்தை ஏவிவிடும் பொழுதோ தாம் வணங்கக்கூடிய அந்த இயற்கைப் பொருளாகிய தெய்வத்தை வணங்கி அதன் ஆற்ற லைப் பெறுவார்கள் அல்லது அது துணைக்கு வர வணங்குவார்கள்.

இயற்கைத் தெய்வத்திற்கு அவர்கள் காட்டும் மரியாதை பல வழிகளில் வெளிப்படுவதைக் காண லாம். தம் குழுவிலுள்ள எவரும் இதற்கு மரியா தைக் குறைவுசெய்யவோ, மாசுபடுத்தவோ, குறை படுத்தவோ செய்யாமல் பார்த்துக் கொள்வார்கள். அந்த இயற்கைத் தெய்வம் உயிருள்ளதாக இருந் தால் அதைக் கொல்லவோ, சாப்பிடவோ, துன்பப் படுத்தவோ காயப்படுத்தவோ கூடாது என்று கடுமை யான கட்டுப்பாடு விதித்தார்கள். அது உயிரற்ற பொருளாக இருந்தாலும் அதற்கும் இதே போன்ற மரியாதைகள் செலுத்தப்பட்டன. ஒரு குழு மற்ற குழுவின் இயற்கைத் தெய்வத்தைப் பழித்தாலோ அதனிடம் மரியாதைக் குறைவாக நடந்தாலோ தீராப் பகை ஏற்படும்.

இயற்கைப் பொருளை வழிபட்ட மக்களிடம் மனிதப் பண்பேற்றல் கொள்கை எந்த இடத்தை பெறுகிறது என்ற கேள்வி தத்துவவாதிகளை நீண்ட காலம் சிந்திக்க வைத்தது. அக்கேள்வி மிகவும் நுட்பமாக அமைந்தது; கருத்துச் செறிவான, உணர்ச்சி வயப்படக்கூடிய ஒன்றாக அமைந்தது. இந்த உணர்ச்சி வயப்படக்கூடிய தன்மை மேலோங்கி, மக்களின் சிந்தனை இயக்கத்தையும் செயலையும் வழிநடத்தும்போது மக்களின் பகுத்தறிவுத் தன்மை யைக் குழம்பச் செய்யும் இயல்புடையது.

மனிதப் பண்பேற்றல் கொள்கை இறைமைக் கொள்கையிலிருந்து தனித்து நிற்க வாய்ப்பேற்பட் டால், இறைமைக் கொள்கையில் நம்பிக்கையற்ற வர்களின் கொள்கையின் மேல் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வாய்ப்புண்டு என்று சிந்தனைவாதிகள் அச்சப் படுகின்றனர். அதேசமயம் பிடிவாதமாக, மனிதப் பண்பேற்றல் கொள்கையை இறைமைக் கொள்கையிலி ருந்து பிரிக்கமுடியாது என்றும் கருதுகின்றனர். அவர் களின் வாதம் என்னவெனில், மனிதனின் அறிவும் மொழியும்,அவன் சமுதாயத்தில் பெற்ற அனுபவத்தி லும் அதனால் பெற்ற உணர்வின் அடிப்படையிலும் உருவானவையாகும்.ஆகவே,மனிதன் மனிதச் செயற் பாடுகளை மனிதரல்லாத கடவுளுக்கும் மற்ற தெய் வங்களுக்கும் அப்படியே பொருத்திப் பொருள்படுத் திக் காட்டுகின்றான். அது மறுபடியும் இறைமைக் கொள்கைக்கு மரியாதை இருக்கிறதா என்ற கேள் விக்கு இழுத்துச் செல்கிறது. கடவுள் என்பது மனி தனின் பழுத்த கற்பனையின் முடிவில் உருவான தாகும் என்ற சொற்போராட்டம் வரும்பொழுது மனிதப் பண்பேற்றல் கொள்கையின் எதிர்ப்புறம் செல்லாமல் அதனோடு ஒன்றிய நிலைக்கு வயப் படும் நிலை ஏற்படுகிறது. கடவுள் என்பது மனிதத் தன்மையின் ஒரு மாயைத் தோற்றம்தான் என்ற கருத்தை முன்வைப்பவர்களுக்கு இது சாதகமாக இருக்கிறது. உட்லுவிங் பியுபார்க்கு, சிக்மண்டு பிராய்டு போன்றோர் மிகவும் உறுதியாக அந்தக் கருத்தின் அடிப்படையில் வாதாடுகின்றார்கள். அவர் களுடைய வாதம் அளவையியல் (Logic) அடிப் படையில் அமைகிறது. அவர்களின் கருத்துப்படி இறைமைக் கொள்கையில் மனிதப் பண்பேற்றல் கொள்கையைப் பிரிக்க முடியாததிலிருந்து, ஒன்று மற்றொன்றை எந்த அளவிற்குச் சார்ந்திருக்கின்றது என்பதை உணரலாம். மேலும், அந்தத் தவிர்க்க முடியாத, பிரிக்க முடியாத சார்புத் தன்மை உணர்த்துவது என்னவெனில் கடவுள் என்பது மனி தனின் ஒரு மாயை வெளிப்பாடாகும்; அதில் மனிதன் இயற்கையைக் கடந்த ஓர் உயிரினத்தை ஆவலோடு தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான் என்பதாகும்.

கடவுள் நம்பிக்கையுடையவர்களுக்கு அது ஒரு சிக்க லான சூழ்நிலையாகவும், ஒரு வகையான குறைபாடு உடையதாகவும் தெரிகிறது. மனிதப் பண்பேற்றல் இறைமைக் கொள்கையின் ஆக்கக்கூறு என்றுகாட்டி னால் இறைமைக் கொள்கையில் நம்பிக்கையற்றவர் கள் மனிதப் பண்புகளையும், குணங்களையும் கற் பித்துக் காட்டிய கடவுளை ஏன் நம்பவேண்டும்

என்று சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், மறுபுறத்தில் மனிதப் பண்பேற்றல் கொள்கையானது இறைமைக் கொள்கையின் ஒரு முக்கிய பங்கு பெற்றுள்ளது என்றுவாதிட்டால் அதற்கு மாறாகக் கடவுள்என்பது மனிதன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிற போலியறிவின் கண்டுபிடிப்பே என்ற வாதம் ஏற்படு கிறது. எனவே, இந்த இரண்டு சிக்கலான சூழ்நிலை களிலிருந்து வெளியேற, மன நிறைவான வழியைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமானது. அதனால் இறைமைக் கொள்கையின் மேலுள்ள மதிப்பை இடர்ப்பாடான நிலையில் வைக்கும் நிலை ஏற்படு கிறது.

எகிப்திலுள்ள சான்றுகளின்படி விலங்கு உருவ முடைய தெய்வங்கள் மனிதத் தன்மையுடையவை யாக மாறியுள்ளன. எகிப்தியக் கடவுள்கள் மிருகத் தலையுடன் மனித உடலையும், கை, கால்களையும் கொண்டிருக்கின்றன. முன்னர்க் கூறியது போல மனி தப் பண்பேற்ற தெய்வங்கள் மிருகத் தன்மையுள்ள வையாக மாறவில்லை. அவ்வாறே சமயம் படிப்படி யாக உருவாவதில் மனிதப் பண்பேற்றலுக்கு முக்கியத் துவம் இருந்தது. இது, மனிதன் தான் தோன்றிய பிறகு சமயத்தை உருவாக்கினான் என்ற கூற்றுக்கு இடமளிக்கிறது. இதை உணர்ந்த பிறகு சமயம் மேலும் ஒரு நிலையை நோக்கி நகர்கிறது. எவ்வாறா யினும் மனிதப் பண்பேற்றல் கொள்கை சமயத்தி லிருந்து தனிமைப்படுத்த முடியாத தொடர்புடையது.

மு.அ.

## மனிதாபிமான உளவியல்

**மனிதாபிமான உளவியல்** என்பது உளப் பகுப்பு முறையினின்றும் (Psycho Analysis) நடத் தைக் கொள்கையினின்றும் (Behaviourism) பிரித் தெடுக்கப்பட்ட ஒரு துறையாகும். ஆயினும் இம் மனிதாபிமான உளவியல் (Humanistic Psychology) இவ்விரு துறைகளினும் மாறுபட்ட ஒன்றாகும். ஏனெ னில், இவ்விரு துறையினரும் மனித இயல்பை (Human Nature) ஓர் இயந்திரக் கருவி போல எண் ணினர்; மனிதர்கள் விலங்குகள் போன்று தம் இயல்பூக்கத் தூண்டலாலும் (Instinct) சுற்றுப்புறத் தூண்டுதலாலும் (External Stimuli) உருவாக்கப்படு கிறார்கள் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண் டுள்ளனர். ஆனால், மேலே கூறிய இரு உளவியல் இயக்கங்களின் குறிக்கோளை மனிதாபிமான உளவிய லார் (Humanistic Theorists) புறக்கணித்தாலும் அதேசமயம் அவ்விரு உளவியல் கருத்துகளுக்கும் முக் கியத்துவம் அளித்துள்ளனர்.

**அடிப்படைக் கருத்துகள்:** மனிதர்கள் இயற்கை யிலேயே நல்லவர்கள்; மரியாதைக்குரியவர்கள். அவர்களுக்கு இயற்கையாகவே வளர்ச்சி முறை உண்டு (Natural Growth Process). அதற்குக் கீழ்த் தரமான சூழ்நிலை தடையாக அமையக்கூடும். இவ் வாறாக இத்துறையினர் தன்மைக் கருத்துக்கோள் (Self Concept), தன் ஒன்றுதல் (Self Identity), தன் னிறைவு (Self Fulfilment) ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இத்துறை, கார்ல் உரோசர்சு (Carl Rogers, 1970), ஆபிரகாம் மாசுலோ (Abraham Maslow, 1970) ஆகியோரின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட ஒன்றா கும்.

**உரோசரின் தன்மைக் கோட்பாடு:** உரோசரின் ஆளுமைக் (Personality) கோட்பாட்டில், தன்மை (Self) என்னும் கருத்து முக்கிய இடத்தைப் பெறு கிறது. இந்தத் தன்மை என்னும் கருத்தில் ஒருவன் எண்ணங்கள் (Ideas), புலன்காட்சிகள் (Perceptions), மதிப்பீடுகள் (Values) ஆகிய அனைத்தும் அடங்கி யுள்ளன. இது ஒருவனைத் தான் யார்? தன்னால் என்ன செய்யமுடியும்? என்பதை உணரச் செய் கிறது. ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் ஏற்படும்ஒவ் வொரு அனுபவத்தையும் தன் கருத்தையும் தன்மைக் கருத்துக்கோளினை ஒட்டியே மதிப்பிடுகின்றான். தன்னுடைய உருவத்திற்கு (Self Image) ஒத்த வழி யிலேயே நடக்கவும் விரும்புகிறான். ஆனால், அவன் அனுபவங்களும், உணர்வுகளும் இதற்கு எதிர்மாறாக அமையும் போது அவன் அதனைத் தன் நினைவு நிலையில் வைக்க விரும்புவதில்லை. இதனைத்தான் பிராய்டு, ஒடுக்கம் (Repression) என்று கூறுகிறார். உரோசர் அதனை உருவகப்படுத்தாத ஒன்றாகக் (Unsymbolised) கருதுகிறார். ஆனால், அது பிராய் டின் கருத்திற்குச் சற்றே முரண்பாடானது. ஏனெ னில் உரோசரின் எண்ணப்படி அது தவிர்க்கமுடியாத தது ஒன்றன்று; நிலையானதுமன்று.

எனவே ஒருவன் தன்மைக் கருத்துக்கோளுக்கும் (Self concept) அனுபவத்திற்குமிடையே அதிக இடை வெளிஏற்படின் அவன் துன்பத்திற்காளாகிறான். அந்த இடைவெளி அதிகமாக இருப்பின் அவனுக்குக் கவலை (Anxiety) ஏற்படும் அதன் விளைவாக அவன் பொருத்தக்கேடான (Maladjusted) முறையில் நடக் கிறான். சிலசமயங்களில் நரம்புத்தளர்வு (Nervous break down) ஏற்படவும், ஆளுமை சிதைவுறவும் (Personality Disorganization) காரணமாகின்றது. எல் லோருக்கும் சில சமயங்களில் எளியமுறையில் இத் தகைய நிலை ஏற்படுவதுண்டு. 'முன்னாள் தான் தானாகவே இல்லை', 'தனக்கு என்ன நேர்ந்ததோ' எனக் கவலைப்படும் சமயங்களும் உண்டு. நன்றாக அனுசரித்து வாழ்பவன் ஒருவனுடைய தன் கருத்து என்பது, அவனது நினைவு, அனுபவம், நடத்தை

ஆகியவற்றை ஒன்றியதாக இருக்கும். அவன் சூழ்நிலைக் கொப்ப அனுசரித்து வாழ்பவனாகவும் இருப்பான்.

உரோசரின் கோட்பாட்டில் மற்றொரு தன்மை என்னும் கருத்து இடம்பெறுகிறது. அதைத்தான் மானசிகமான தன்மை (Ideal self) என்று கூறுவர். எல்லோருக்கும் தாம் யாராக வேண்டும் என்ற மானசிகமான தன்மை ஒன்றுண்டு. இது பிராய்டின் தன்மை தன்னயத்தை (Ego-deal) ஒத்தது. இந்த மானசிகமான தன்மைக்கும் உண்மையான தன்மைக்கும் இடையே இடைவெளி குறைவாக இருப்பின் ஒருவன் நிறைவானதும் உற்சாகமானதுமான வாழ்க்கையை உடையவனாயிருப்பான். இடைவெளி அதிகமாயிருப்பின் அவன் நிறைவற்ற துயரமான வாழ்க்கையை அனுபவிப்பான்.

எனவே உரோசரின் கருத்துப்படி இருவகையான இசையாத தன்மை (Incongruence) ஏற்படலாம். அவை: 1) தன்மைக்கும் அனுபவத்திற்கும் இடையில் ஏற்படும் இடைவெளி, 2) தன்மைக்கும் மானசிகமான தன்மைக்கும் இடையே ஏற்படும் இடைவெளி என்பன.

**தன்மை வளர்ச்சி**: மனிதன் வாழ்க்கையில் இளம் பருவத்திலிருந்தே இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கிறான். எனவே, எளிதாக அனுபவத்தின் மூலம் சிலவற்றைக் கற்றுக்கொள்கிறான். அதாவது உண்பது நல்லது, பசியாயிருப்பது நல்லதன்று; அன்னையின் ஆதரவில் இருப்பது நல்லது; சூடான அடுப்பைத் தொடுவது நல்லதன்று போன்றவற்றைக் கற்றுக்கொள்கிறான். இத்தகைய உடல் சம்பந்தமான தேவைகளுக்கும் அப்பால் ஒரு தீர்மானமான சம்பந்தம் (Positive Regard) இருக்கிறது. மனிதர் எல்லோரும் மற்றவர்கள் தம்மை விரும்பவேண்டும், ஏற்றுக் கொள்ள வேண்டும், மதிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒரு குழந்தையின் நடத்தையைத் தொடர்ந்து மதிப்பிடுபவர்கள் அதனுடைய பெற்றோரும் கற்றோருமே. எனவே, அக்குழந்தை, எந்த எண்ணங்களும் நடத்தைகளும் தகுதியுள்ளவை, எவை தகுதியற்றவை என வெகு எளிதில் பாகுபடுத்தி அறிந்துகொள்கிறது. சிலர் பெற்றோரின் உள்ள நிலையை ஒத்தே நடக்க விரும்புகிறார்கள். ஏனெனில் அப்பொழுதுதான் குடும்பத்தில் அன்பின் உறவைப் பாதுகாக்கமுடியும். ஆனால், பெற்றோர் நம்பிக்கையும் எண்ணங்களும் கருத்துகளும், சிறுவர் சிறுமிகளின் அனுபவங்கள் நினைவுகள் ஆகியவற்றிற்கு வேறுபட்டிருப்பின் வலுக்கட்டாயமான சூழ்நிலை ஏற்படும். இந்த வளர்ச்சியினை ஓர் எடுத்துக்காட்டின்மூலம் விளக்கலாம்.

மூன்று வயது சிறுவன், தன் தாய் மற்றொரு குழந்தையை ஈன்றெடுக்கும்பொழுது குழப்பத்திற்குள்ளாகிறான். இப்பொழுது அனைவருடைய கவனமும் புதிதாகப் பிறந்துள்ள தன் தங்கையின்பால் ஈர்க்கப்படுவதைக் கவனிக்கிறான். அவனது உள்ளத்தில் போட்டி மனப்பான்மையும் பொறாமை உணர்வும் தோன்றுகின்றன. ஒருவரும் கவனிக்காத வேளையில் தன் தங்கையைக் கிள்ளவோ, குட்டவோ முயலுகிறான். இதனைக் கவனிக்கும் பெற்றோர் அவனைத் தண்டிக்கின்றனர். அதனால் அச்சிறுவனுக்குத் தன் அனுபவத்திற்கேற்பத் தன் கருத்தை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

1) அவன், தான் கெட்டவனென்று முடிவு கட்டலாம். அதற்காக வெட்கப்படலாம். 2) தன் பெற்றோர் தன்னை விரும்பவில்லை; தன்னைப் புறக்கணிக்கின்றனர் என்று எண்ணலாம். 3) தன் உள்ளுணர்வுக்கெதிராகத்தான் தன் சகோதரியைத் துன்புறுத்த விரும்பவில்லை என எண்ணலாம். இந்த மூன்று நிலைகளுமே உண்மைக்குச் சற்றுப் புறம்பானதாகும் இதில் மூன்றாவதாகக் கூறிய நிலையே இச்சிறுவன் எளிதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலை. ஆனால், அவன் அவ்வாறு ஏற்றுக்கொள்ளும்பொழுது தன் உண்மையான உள்ளுணர்வுகளை மறுதலிக்கிறான். எனவே, அத்தகைய உணர்வுகள் நனவிலி உள்ளத்தை (Unconcious Mind) அடைகின்றன. இத்தகைய சூழ்நிலையைச் சமாளிக்க உரோசர் மூன்று வழிமுறைகளைக் கூறுகிறார். அவை: 1) சிறுவனது உள்ளுணர்வுகளைப் புரிந்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். 2) பெற்றோர்கள் தங்களுடைய சிறுவனிடம் அன்புகாட்டாததுபோல அச்சுறுத்தித் தண்டிக்கக் கூடாது. அவன் நடத்தையைத்தான் புறக்கணிக்கிறோம்; ஆனால், அவனை விரும்பி ஏற்றுக்கொள்கிறோம் என்பதனை வலியுறுத்தல் வேண்டும். 3) விரோதமான செய்கைகள (Hostile actions) நிறுத்தப்படல் வேண்டும். அவை இனியும் நிகழாது தவிர்க்க வேண்டும். சிறுவன் தன் விருப்பப்படி நினைக்கவோ உணரவோ செய்யலாம். ஆனால், தன் விருப்பப்படி நடக்கக்கூடாது என்பதனைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இச் சூழ்நிலையில் அவனுடைய தன் கருத்து நல்லமுறையில் வளர்ச்சியடைய ஏதுவாகிறது. அதனால் அவன் தன்னையே விரும்பி ஏற்றுக்கொள்கிறான். இத்தகைய தன் மதிப்பு அல்லது பாராட்டு (Self esteem) அவனை மகிழ்வுடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ வழி செய்கிறது.

**மாசுலோவின் தன் முதிர்வுற்றோர்**: நன்கு பக்குவப்பட்டு முற்றிலும் நிறைவான மனிதரின் குணநலன்களை ஆராய்ந்தவர் ஆபிரகாம் மாசுலோ (Abraham Maslow) ஆவார். அவருடைய ஆளுமைக் கோட்

பாட்டில் ஒருவனுடைய தேவைகளின் வரிசைக் கிரமம் (Hierarchy) அடங்கியுள்ளது. அதில் முன்னிலையில் இருப்பது தன் முதிர்வு (Self-actualization) என்பது. இத்தேவையானது ஒருவனைத் தன்னைத் தான் அறிந்து கொள்ளவும், உலகத்தைப் புரிந்து கொள்ளவும், புதிதாக உருவாக்கவும், அழகினைக் கண்டுகளிக்கவும் வெற்றியடையவும் செய்கிறது. மனிதன் எவ்வாறு தன்முதிர்வை அடைகிறான், அதை அடைவதற்கு எது தடையாக உள்ளது என்பதை அறிவதே மாசுலோவின் குறிக்கோளாகும்.

ஒருவனுடைய வாழ்க்கையின் உடல்சார் தேவைகள் (Biological needs) நிறைவுபெற்றால் அவன் மாசுலோ குறிப்பிடும் 'மீட்டா' தேவைகள் (Meta needs) என்பதனைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாகும். இது வளர்ச்சியையும் தன்முதிர்வையும் உள்ளடக்கியுள்ளது. இதற்கு இரு முரண்பாடான வழிமுறைகள் உள்ளன என்று மாசுலோ குறிப்பிடுகிறார். அவை: 1) தி. அறிதல் (D. Cognition) முறை. 2) பி. அறிதல் (B. Cognition) முறை என்பவையாகும்.

ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள் செயற்பட வேண்டிய சூழ்நிலையில் ஒருவன் தி. அறிதல் முறையைப் பயன்படுத்துகிறான். அதில் தேவைகள் நிறைவு பெறுவதில்லை. அச்சமயம் அவன் தீர்ப்பு (Judgement) அளிக்கிறான்; குறை கூறுகிறான்; அவனையும் மற்றவர்களையும் மதிப்பிடுகிறான். ஆனால், வரம்பற்ற பாதுகாப்பான சூழ்நிலையில் அவன் பி. அறிதல் முறையினைப் பயன்படுத்துகிறான். அதில் தீர்ப்புச் செய்வதில்லை. அவன் நினைவுகள் உயர்ந்த தேவைகளை நோக்கியுள்ளன. அவன் எல்லாவற்றையுமே அழகானவையாகவும் நன்மையானவையாகவும் குறைவற்றவையாகவும் காணுகிறான். இத்தகைய மனோகரமான அனுபவ சிகரம் (Peak Experience) நீண்டு நிலைப்பதில்லை. அது மீண்டும் தி. அறிதல் முறைக்கு அடிக்கடி செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்பொழுதுதான் அது நீடிக்கமுடியும்.

மாசுலோ தம் ஆராய்ச்சிக்குச் சில வரலாற்றுப் புகழ் பெற்றவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளார். அவர் கருத்துப்படி அவர்கள் தன்முதிர்வடைந்தவர்கள். அம் மக்கள் தங்கள் உள்ளார்ந்த ஆற்றலை (Potential) முற்றிலும் பயன்படுத்தியவர்கள். ஆல்பர்ட்டு ஐன்சுடீன், ஆபிரகாம் இலிங்கன், உரூசுவெல்ட்டு ஆகியோர் அக்குழுவில் அடங்குவர். அவர்கள் வாழ்க்கையை ஆராய்ந்தபின் தன்முதிர்வடைந்தவரைப் பற்றிய சிலகுணநலன்கள் புலனாயின. அவர் எடுத்த முடிவானது தன்முதிர்வடைந்தவர்கள் உண்மையுள்ளவர், தவறான எண்ணம் கொள்ளாதவர், ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவர், மகிழ்ச்சிகரமானவர், மனம்விட்டுப் பேசுபவர், வாழ்க்கைக் குறிக்கோளுடையவர், உருவாக்குபவர்; மேலும் அவர் ஒரு சம உரிமையுடையவர் (Democratic), மற்றவர்கள் காரியங்களில் தலையிடாதவர். அத்தகையோருக்கு ஒரு சில விரும்பத்தகாத குணங்களும் உள்ளன. அவர்களுள் சிலர் பிடிவாத குணம் உடையோராகவும், பெருமைக்காரராகவும், எளிதில் கோபம் கொள்பவராகவும் இருப்பதுண்டு. ஆயினும், பெற்றோரும் சமுதாயமும் உள நிவர்த்தி முறையினரும் (Psycho Therapists) ஒருவரைத் தன்முதிர்வுற்றோராக உருவாக்குவது கடமையென மாசுலோ வலியுறுத்திக் கூறுகிறார். பெ.டே.

**மனு:** வடமொழி இலக்கியங்கள் மனுவைப் பற்றிப் பல இடங்களில் கூறுகின்றன. மிகவும் புகழ் பெற்ற தரும சாத்திரம் என்று சொல்லப்படும் சுமிருதி நூல்களை எழுதிய ஆசிரியர்களுள் மனு இன்றியமையாதவரும் முதன்மையானவரும் ஆவார். இவர் எழுதிய தரும சாத்திரம் மானவதரும சாத்திரம் அல்லது மனுசுமிருதியாகும். இருக்குவேதத்தில் இவர் மனிதர்களின் தந்தை என்று சொல்லப்படுகிறார். நினைப்பது எனப் பொருள்தரும் 'மன்' என்ற மூலத்திலிருந்து மானவன், மனுசன் என்ற சொற்கள் தோன்றின என்றும், அதிலிருந்து ஆதி பிதாவின் பெயரை 'மனு' என்று கற்பித்திருக்கலாம் என்றும் கூறுவர். மனுவைப் பற்றியும் பிரளயத்தைப் பற்றியும் சதபதப் பிராமணம் குறிப்பிடுகிறது. மகாபாரதத்தில் சுவாயம்புவமனு, பிராசேதச மனு போன்றவர்கள் பேசப்படுகிறார்கள். மானிடப் படைப்புக்குக் காரணமானவர்களும் உலகத்தை ஆண்ட மிகப் பழமையான 14 தலைவர்களும் (பிரசாபதிகள்) பொதுவாக மனு என்று சொல்லப்படுகிறார்கள். அப்பதினான்கு மனுக்களின் பெயர்கள் வருமாறு: 1) சுவாயம்புவ மனு, 2) சுவாரோசிச மனு, 3) ஔத்தம மனு, 4) தாமச மனு, 5) இரைவத மனு, 6) சாட்சுச மனு, 7) வைவசுவதமனு, 8) சாவர்ணி மனு, 9) தட்சாவர்ணி மனு, 10) பிரும்மசாவர்ணி மனு, 11) தர்மசாவர்ணி மனு, 12) உருத்திர சாவர்ணி மனு, 13) இரௌச்சிய தேவசாவர்ணி மனு, 14) இந்திர சாவர்ணி மனு.

மனுக்கள் மொத்தம் 14 பேர்களாகையினால் 'மனு' என்ற சொல்லே 'பதினான்கு' என்ற எண்ணைக் குறிக்கக்கூடியதாகவும் உள்ளது. மேற்கூறிய ஒவ்வொரு மனுவும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பூமியை ஆளுகின்றனர். அக்குறிப்பிட்ட காலம் ஒரு மன்வந்திரம் அல்லது மனுவின் காலம் என்றும் சொல்லப்படுகின்றது. ஒரு மன் வந்திரம் என்பது ஏறக்குறைய 43,20,000 ஆண்டுகளாகும்.

சுவாயம்புவ மனு என்று சொல்லப்படும் முதல்

மனு தாமாகவே பிரமனிடமிருந்து தோன்றியவர் என்றும், இவர்தாம் மனுசுமிருதி அல்லது மனு சம்கிதையின் ஆசிரியர் என்றும், மானவ கல்ப சூத்திரத்தை எழுதியவர் என்றும் சொல்லப்படுகிறார். பரம்பொருளே தருமம் கூறுபவர்க்கெல்லாம் மூல புருடர் என்றும், ஓரிலட்சம் அத்தியாயங்களில் முதன் முதலில் தருமம் கூறப்பெற்றது என்றும், அதை இலட்சம் சுலோகமாக இவர் சுருக்கினார் என்றும், அதையே பின்னர் முனிவர்கள் தெரிந்து கொண்டு தரும சாத்திரங்களை எழுதினர் என்றும் பாரதம் குறிப்பிடுகிறது.

ஏழாம் மனுவாகிய வைவசுவத மனு சூரியனிடமிருந்து(விவசுவான் – சூரியன்)தோன்றியவர் என்றும், இப்பொழுது நடைபெறும் மன்வந்திரம் அவருடையது தான் என்றும் தெரிகிறது. மகாபிரளய காலத்தின் பொழுது உலகமே அழிந்து தண்ணீரினால் சூழ்ந்திருந்த பொழுது இம்மனு மட்டும் மீன் உருவம் கொண்ட திருமாலினால் காப்பாற்றப்பட்டார் என்று சதபதப் பிராமணம், மகாபாரதம், மத்ச புராணம், பாகவத புராணம், அக்னி புராணம் ஆகியவற்றில் சொல்லப்படுகிறது.

ஒரு மன்வந்திரம் படைக்கும் தேவனாகிய பிரமனின் ஒருநாள் பகலின் $\frac{1}{4}$ பாகம் என்று சொல்லப்படுகிறது. மேற்கூறிய பதினான்கு மனுவைத் தலைமையாகக் கொண்ட பதினான்கு மன்வந்திரம் பிரமனின் ஒரு நாளின் பகல் ஆகும். இதுவரை ஆறு மன்வந்திரங்கள் முடிவடைந்துள்ளன. இப்பொழுது ஏழாம் மனுவாகிய வைவசுவதமனுவின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எஸ்.ஜெ.

**மனு தரும சூத்திரம்**: வேதத்திற்குப் பின் சமூக அறநெறிகளைக் கூறும் சுமிருதி என்பவை இந்து சமயத்திற்கும், பண்பாட்டிற்கும் பிரமாணங்களாகும். அவை பதினெண்மர் இயற்றிய சிறப்புடையன. இப்பொழுது மனுசுமிருதி மனுதரும சாத்திரம் என மிகப் பரவலாக அறியப்படும் அறநூல் மனுதரும சூத்திரத்தின் சுருக்கமேயாகும் என்பர் ஆராய்ச்சியாளர். மனு மானிட இனத்தின் தந்தை என்றும், அவரே முதன்முதலில் வேள்வியைச்செய்தார்என்றும், மானிடருக்கு அவரே அறநெறியை வகுத்தார் என்றும், அவர்கூறிய அறவழியைப் பின்பற்ற வேண்டுமேயன்றி அதனின்றும் வழுவுதல் கூடாதென்றும், மனு சொன்னதே மருந்து என்றும் இருக்கு வேதமும், தைத்திரீய சம்கிதையும் கூறுகின்றன. தைத்திரீய சம்கிதையும் ஐதரேய பிராமணமும் கூறும் கதையொன்றில், தன் இளைய மகன் நாபா நேதிசுடன் கல்வி பயிலக் குருகுலம் சென்றிருந்த போழ்து, மனு தன் மற்றைய மக்களுக்குச் செல்வத்தைப் பங்கிட்டுக் கொடுத்தாரென்றும், நாபா நேதிசுடன் திரும்பியதும் கல்வியையே அவனுக்குச் செல்வமாக அருளினார் என்றும் கூறப்படுகிறது. சதபதப் பிராமணமும் மனுவின் கதையைக்கூறுகிறது.

கண்களுக்குப் புலப்படாத பரம்பொருளே தருமம் கூறுவோருக்கெல்லாம் மூல புருடர் என்றும், அவர் ஓரிலட்சம் பாடல்களில் தருமத்தைக் கூறினார் என்றும், சுவாயம்புவ மனு அத்தருமத்தைப் பரப்பினார் என்றும், அதையொட்டிப் பின், உசனசு, பிரகசுபதி முதலானோர் தருமநூலை இயற்றினர் என்றும் மகாபாரதம் சாந்தி பருவம் கூறுகிறது. அங்கேயே மற்றொரு செய்தியும் கூறப்படுகிறது. முதலில் பிரம்மா தருமம், அருத்தம், காமம் ஆகியவை பற்றி இலட்சம் அத்தியாயங்களில் கூறியதை, பின் விசாலாட்சர் இந்திரன், பாகுதந்தகன், பிரகசுபதி, முதலியோர் முறையே 10,000, 5,000, 3 000, 1000, அத்தியாயங்களில் தருமத்தைக் கூறினர் என்பதாகும் அச்செய்தி. ஆனால், அங்கு மனு குறிக்கப்படவில்லை.

முதன்முதலில் மனித இனத்தைப் பிறப்பித்தவரும், இப்பூவுலகைத் தரும நெறியுடன் ஆண்டவருமான பதினால்வருக்கும் மனு எனப் பெயர் உண்டு. ஒவ்வொருவருக்கும் இடைப்பட்ட இடைவெளி, மன்வந்தரம் எனப்படுகிறது. அதாவது 43,20,000 ஆண்டுகள். அவருள் முதல் மனுதான் சுவாயம்புவமனு. இதுவரை, சுவாயம்புவர், சுவாரோசிசர் உத்தமர், தாமசர், இரைவதர், சாட்சுசர் என்ற ஆறு மனுக்களின் பொறுப்புக் காலங்கள் நடந்து விட்டன. அவ்வறுவரும் தத்தம் காலத்தில் தருமத்தைப் போதிப்பதும், பரப்புவதும் வழக்கமாகக் கொண்டிருந்த காரணத்தால் அவ்வப்போது தருமசூத்திரத்தை உருவாக்கியிருக்கலாம். மானவ சிரௌத சூத்திரம் மானவகிருசிய சூத்திரம் என்ற நூல்கள் கிடைத்திருப்பதையும், கௌதமர், வசிட்டர், ஆபசுதம்பர் முதலிய தரும சூத்திர ஆசிரியர் மனுவிலிருந்து மேற்கோள் கூறுவதையும் கூர்ந்து நோக்கின், மனு, தரும சூத்திரமும் எழுதியிருக்கவேண்டும் எனத் துணியலாம். ஆகவே, இப்போது வழக்கிலுள்ள மனுசுமிருதிக்கு அதுவே மூலமாக இருத்தல் வேண்டும் எனவும் சிலர் கூறுவர். வேறு சிலர், முன்னரே இருந்த இந்த மனுசுமிருதிதான் கௌதமர் முதலியோர் கூற்றுக்கு மூலமாக இருந்திருக்க வேண்டும் என்றும், அதில் சில பாகங்கள் சேர்ந்தும், சிதைந்தும், உருமாறியும் இப்பொழுதிருக்கும் உருவத்தை எய்தியிருக்க வேண்டும் என்றும் கூறுவர். ஏனெனில் பின்வந்த அத்திரி, பிருகு, சௌனகர், வசிட்டர், விகனசு ஆகியோரின் கொள்கைகளும் அதில் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

மனுதரும சூத்திரம் அல்லது மனுசுமிருதி என்ற இந்நூலில் பன்னிரண்டு அத்தியாயங்களும், 2,694 பாடல்களும் அடங்கியுள்ளன. முதல் அத்தியாயத்தில் முனிவர்கள் மனுவிடம் வந்து தருமம் கூறும்படி கேட்பதும், மனு அவர்களுக்குத் தாம் தோன்றிய செய்தியையும், தம்மிடமிருந்து பத்து முனிவர்கள் மற்ற சீவகோடிகள் தோன்றியதையும், பிரம்மன் தமக்குத் தருமத்தைப் போதித்ததையும், அதன்பின், தாம் மரீசி முதலிய முனிவர்களுக்கு அத்தருமத்தைக் கற்பித்ததையும் கூறிப் பிருகு வாயிலாக ஏனைய முனிவர்களுக்குத் தருமத்தைப் போதிக்க ஆணையிட்டதையும் கூறுகிறார்.

முதலாம் அத்தியாயத்தில் ஒரு நொடி முதல் கற்பம் வரையிலான கால அளவையும், யுகதருமம், பொருளடக்கம் ஆகியவையும் கூறப்படுகின்றன. இரண்டாவது அத்தியாயத்தில் தருமத்தின் இலக்கணம், அதன் பிரமாணங்களான வேதம், சுமிருதி, ஆசாரம், மனச்சான்று ஆகியவையும், சம்சுகாரங்கள் என்ற மரபுச்செயல்களின் தேவையும், சாத கருமம் முதல் உபநயனம் வரையுள்ள சமசுகாரங்களும் உணர்த்தப்படுகின்றன. மூன்றாம் அத்தியாயத்தில் எண்வகைத் திருமணங்களும், ஐவகைப்பெரும்வேள்விகளும் கூறப்படுகின்றன. நான்காம் அத்தியாயத்தில் கல்வி பயின்று முடித்த இசுநாதகனின் தருமங்களும், இல்வாழ்வான் ஒழுக்கமும் கூறப்படுகின்றன. ஐந்தாவதில் உண்ணவும், பருகவும் தகுந்த பொருட்களும் தகாத பொருட்களும் குறிக்கப்படுவதன்றிப் பிறப்பு இறப்பு காரணமாகத் தீண்டாமை, ஈமக்கடன் பரிச தோடம், அதன் போக்கு ஆகியவையும் கூறப்படுகின்றன. ஆறாம் அத்தியாயத்தில் இல்வாழ்க்கை நீக்கிய வானப்பிரசுதனின் தருமங்களும், பின் துறவறம் பற்றிய தருமங்களும் விளக்கப்படுகின்றன. ஏழாம், எட்டாம் அத்தியாயங்களில் அரச நெறிகளும், நீதிவழங்கு முறையும் விரிவாகக் கூறப்படுகின்றன. ஒன்பதாம் அத்தியாயத்தில் சட்டப்படி கணவன், மனைவி, மகன் ஆகியோரிடையேயான உரிமைகளும், தத்துப்பிள்ளை, சொத்து உரிமை முதலியனவும் விளக்கப்படுகின்றன. பத்தாம் அத்தியாயத்தில் பலவித சாதிகள், வருணாசிரமங்கள் ஆபுத் தருமங்கள் ஆகியவை இடம் பெறுகின்றன. பதினொன்றாம் அத்தியாயத்தில் தானம் செய்வதன் பெருமையும், பாபங்களும், அவற்றின் கழிவு முறைகளும் வருணிக்கப் படுகின்றன. பன்னிரண்டாம் அத்தியாயத்தில் சீவாத்மாவின் நிலையும், முக்கிய பேறு வழிகளும், நூற்பயனும் குறிக்கப்படுகின்றன. மனு சுமிருதியின் பதிப்புகள் பல, கி.பி.1813-ஆம் ஆண்டு தொடங்கி வெளிவந்துள்ளன. அவற்றுள் கல்லூதபட்டரின் உரையுடன் நிருணய சாகரப் பதிப்பும், மேதாதிதி, கோவிந்தராசர் முதலிய பல்லோர் உரைகளுடன் அமைந்த வி.என் மாண்டலிக்குப் பதிப்பும் சிறந்தனவாகும். இதற்கு ஆங்கில மொழி பெயர்ப்புகள் பல வெளிவந்துள்ளன. வெ.சீனி.சே.

**மனுமுறை கண்ட சோழன்:** இவன் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பண்டைச் சோழ அரசர்களுள் ஒருவன் ஆவான். இவன் வரலாற்றினைப் பெரியபுராணம் திருமலைச்சருக்கம் திருநகரச் சிறப்புப் பகுதியில் பரக்கக் காணலாம். இவன் இயற்பெயர் யாது எனத் தெரியவில்லை. மனு என்பவர் வகுத்த நீதிமுறையின்படி நேர்மை தவறாது ஆண்ட அரசனாதலின் மக்கள் இவனை மனு முறை கண்ட சோழன் என அழைக்கலாயினர். அப்பெயரே பின்னர்ப் பலராலும் வழங்கப்பெறலாயிற்று. இவன் பெருமை சிலப்பதிகாரம், மணிமேகலை பழமொழி நானூறு, இராசராச சோழனுலா, குலோத்துங்க சோழனுலா முதலிய நூல்களிலும் பேசப்படுகின்றது. இவன் சூரிய குலத் தோன்றல். இவ்வரசன் மனைவி பெயர் இரத்தினமாலை என்ப தாம். இவர்களுக்கு வீதிவிடங்கன் என்ற சிறந்த மகன் ஒருவன் பிறந்தான். அவன் அரசர்க்குரிய பல கலைகளையும் பயின்று சிறந்து விளங்கினான். அவன் ஒருநாள் திருவாரூர்ப் பூங்கோயிலிலுள்ள இறைவனை வழிபடத் தந்தையின் அனுமதி பெற்றுத் தேர்மீது ஏறிச் சென்றான். வழியில் ஓரிளம் பசுங்கன்று அவன் தேர்ச்சக்கரத்தில் சிக்குண்டு இறந்தது. அதுகண்ட அரசிளங் குமரன் மிகவும் துக்கத்திலாழ்ந்தான். அக்கன்றின் தாய்ப்பசு மிகவும் புலம்பி அரண்மனை வாயிலுள்ள ஆராய்ச்சி மணியைக் கொம்பினால் ஆட்டி ஒலி எழுப்பியது. அதுகேட்ட மனுவேந்தன் ஆராய்ச்சி மணி ஒலிக்கும் காரணத்தை 'ஆராய்ந்து அறிந்தான். அமைச்சர்கள் அக்கன்றைக் கொன்ற பாவம் போக்கும் கழுவாய் பற்றிப் பல கூறியும் அரசனின் மனம் அவற்றைக் கேட்டு நிறைவு பெறவில்லை. ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பதையும் நினைந்து பார்க்காதவனாய் அறவழிச் செல்வதே தன் தலையாய கடன் எனக்கருதித் தன் மைந்தனைத் தேர்க்காலில் கிடத்தித் தேரை அவன் மீது செலுத்துமாறு அமைச்சனுக்கு ஆணையிட்டான். அமைச்சன் அது செய்ய மனம்பொறாது அரசன் ஆணைக்கு அஞ்சித் தன் உயிரையே மாய்த்துக் கொண்டான். இது தெரிந்த அரசன் தானே அவ்வாறு செயற்பட முற்பட்டுத் தன் மகன் மீது தேரைச் செலுத்தினான். அரசன் செயல்கண்ட இறைவன் தாமதியாது உடனே விடை மீது காட்சியளித்தான். அவ்வமயமே இறந்த பசுங்கன்றும், மனுவேந்தன் மகனாய வீதிவிடங்கனும், இறந்த அமைச்சனும் தூங்கி எழுந்ததுபோல் உயிர்பெற்று எழுந்தனர். அதனால், வியப்புற்று யாவரும் மகிழ்ந்தனர். இது

போன்ற வரலாற்றுப் பெருமையை 'ஏழுலகும் எடுத்தோதும்' என்று சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் புகழ்கிறார். இவ்வரசன் ஆணை ஈழத்திலும் பரவியிருந்ததாகத் தெரிகிறது. இவ்வரசன் காலம் கடைச்சங்க காலமெனக் கூறலாம். இரா.ச.

**மனுமுறைகண்ட வாசகம்:** திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆட்சி புரிந்தவன் மனுநீதிச் சோழன். அவன் சிவநெறிச் செல்வன். அவன் மகன் வீதிவிடங்கன். அவன் திருவாரூர்த் தியாகராசப் பெருமானை வழிபடுவதற்காகத் தேரேறிச் சென்றான். அத்தேர்க் காலில் பசுங்கன்றொன்று சிக்குண்டு இறந்தது. அக்கன்றின் தாய்ப்பசு, சோழ வேந்தன் அரண்மனை வாயிலை அடைந்து, ஆராய்ச்சி மணியை அடித்தது. நிகழ்ந்ததை அறிந்த வேந்தன், பசுங்கன்று தேர்க்காலில் பட்டு இறந்த இடத்திலேயே தன் மகனைக் கிடக்கச் செய்து தானே தேரைச் செலுத்திக் கொன்றான். இறுதியில் இறைவன் அருளால் பசுங்கன்று உயிர் பெற்று எழுந்தது; மைந்தனும் எழுந்தான். இது மனுமுறை கண்ட வாசகச் செய்திச் சுருக்கமாகும்.

இப்பெரிய புராணக் கதையை உரைநடையில் மனுமுறை கண்ட வாசகம் என்னும் பெயரில் இயற்றிவர் இராமலிங்க அடிகளார் ஆவார்.

தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஒரு பெரும் பங்காக இந்நூல் விளங்குகிறது. நெடிய தொடர்களாக இருந்தாலும், சிக்கல் இல்லாமல் ஆற்றுநீர் ஓட்டம்போல வள்ளலார் உரைநடை செல்கிறது. உணர்ச்சிமிக்க உயிர்நடையாகத் திகழ்வதுடன் பல இடங்களில் எதுகை மோனை முதலிய நயங்களுடன் பாடல் போலவும் இவ்வுரைநடை விளங்குகின்றது. அரசனாகிய மனுவுக்கு நீதி வழங்கித் தண்டிக்கும் அதிகாரமுடையார் ஒருவர் இல்லாமல் இருந்தும் அவனே தன் மனச்சான்றால் தனக்குத் தண்டனை தந்து கொண்ட அறமுறை போற்றிப் புகழத் தக்கதேயாம்.

மனுமுறை கண்ட வாசகத்தின் முதற்பதிப்பு கி.பி. 1854-இல் சாத்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி அச்சாயிற்று. அதில் மனுநீதி கண்ட புராணம் விரிவுள்ள வாசக நடையாகச் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டுப் பாளையம் சுப்பராயச் செட்டியாரால் மேற்குறிப்பிடப்பட்ட சங்கத்தாரின் வித்தியானந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. பதிப்பிக்கப்பட்ட ஆண்டு ஆனந்த வருடம் ஆனி மாதம் என்னும் குறிப்புகள் உள்ளன. ஆ. பாலகிருட்டிணப் பிள்ளையால் இதன் இரண்டாம் பதிப்பு 373 அடிக்குறிப்புகளுடன், 'திருவருட்பா வசனப்பகுதி' என்னும் பெயரில் 1934-இலும், ஐந்தாம் பதிப்பு 1959-இலும் வெளிவந்தன.

இரா.இ.

**மனு விஞ்ஞானேசுவரீயம்:** இது விஞ்ஞானேசுவரர் என்பவரால் விளக்கி எழுதப்பட்ட மனு தரும சாத்திரம் எனப் பொருள்படும். மனு என்பது பிற்காலத்தில் மனு முனிவர் இயற்றிய நீதிநூல் அல்லது தரும சாத்திரம் என்ற நூலுக்குப் பெயரான தோடு அமையாமல் பிறரால் எழுதப்பட்ட அத்தகைய நூல்களையும் குறிப்பதாயிற்று. யாக்ஞவல்கியர் என்பவர் மனுவுக்கு அடுத்தபடியாகப் புகழ் பெற்று விளங்கிய இசுமிருதி கர்த்தாவாவார். இவர் இயற்றிய இசுமிருதியில் உள்ள விதிகள் ஆரிய வர்த்தம் எனப்படும். இந்நூலுக்கு முறையே தாயபாக வழி, மிதாட்சரவழி என இரண்டு முறைகளில் உரை கண்டுள்ளனர். இவை இரண்டிலும் சொத்துரிமை, பாகப் பிரிவினை போன்ற வழக்குகள் பற்றிய சட்டங்கள் அமைந்துள்ளன. அவை இந்துக்களால் இன்றளவும் போற்றப்படுகின்றன.

மேற்கூறிய இரு உரைகளில் விஞ்ஞானேசுவரர் இயற்றிய மிதாட்சரமே சிறந்தது என்பர். விஞ்ஞானேசுவரர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தமிழ்நூலாகிய மனு விஞ்ஞானேசுவரீயம் என்பது மிதாட்சரத்தின் வியவகாரப் பகுதியின் மொழி பெயர்ப்பாகும். இந்நூலைத் திருநெல்வேலியில் வாழ்ந்த வேங்கட குருநாத சோதிடர் படித்துப் பொருள் சொல்ல அழகின் பெருமாள் குமாரன் சங்கரதேசிகன் தமிழாக்கினான் எனக் கூறப்படுகிறது. டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பில் இந்நூல் அழகின் பெருமாள் பாடியருளிய, மனுவிஞ்ஞானேசுவரீயம் என்னும் மிதாட்சரத்தின் வழிநூல் எனக் கூறப்பட்டுள்ளது. இது மிதாட்சரத்தின் நேர்மொழி பெயர்ப்பாயமையாமல் அதிலுள்ள பொருளை மட்டும் காட்டும் வகையில் மேற்கோள்களை எல்லாம் விளக்கிச் சுருக்கமாகவும் பொருட் செறிவுடனும் அமைந்துள்ளது.

இந்நூல் காப்பு, பாயிரம், அவையடக்கம், நூலின் பொழிப்பு என்னும் நாற்பகுதிகளைக் கொண்ட முகவுரையையும், இலட்சணங்கள் என்ற பெயருடைய 49 நாற் பகுதிகளையும் கொண்டுள்ளது. இவற்றுள் 1 – 6 இலட்சணங்கள் அரசன், நீதிபதிகள், பிராட்டு விவாகன், விவகாரமும் அதனை விசாரித்தலும் கூறுதலுமாகிய பொதுச் செய்திகள் போன்றவற்றைக் கொண்டவை; 7-12 இலட்சணங்கள் கடன் முதலியவற்றைக் கொடுத்தல், வாங்குதலைப் பற்றியவை; 13–16 இலட்சணங்கள் வழக்கு விசாரணைக்குரிய மூன்று வகைகளான மானிடப் பிரமாணங்களையும்,

17-26 இலட்சணங்கள் ஒன்பது வகைகளான தெய்வப் பிரமாணங்களையும் விளக்குவன. 27-32 இலட்சணங்கள் சொத்துப் பிரிவினையைப் பற்றிய மிதாட்சர விதிகளைக் கூறும். பின் 33 எல்லை வழக்குப் பற்றியும், 34 விலங்கு வழக்குப் பற்றியும், 35 அசுவாமி விக்கிரயம் பற்றியும், 36-37 கொடுத்ததைத் திரும்பக் கேட்டல் பற்றியும், 38 சேதாரம் பற்றியும், 39 அடிமையை வேலைகொள்ளுதல் பற்றியும், 40-41 கூலி முதலியவற்றைப் பற்றியுமான வழக்கு விசாரணைகளையும், சட்டங்களையும் அமைக்கின்றன. 42-ஆம் இலட்சணம்முதல் உரைநடையில் அமைந்துள்ளன. 42 வண்ணான் பற்றியும், 43 சூதாடல் பற்றியும், 44 வாணிகம் பற்றியும், 45 திட்டுதல் பற்றியும், 46 அடித்தல் பற்றியும், 47 களவு பற்றியும், 48 பெண் குற்றம் புரிதல் பற்றியும், 49 இவற்றில் விடப்பட்டன பற்றியுமாகிய குற்ற இயல் வழக்குகளைப் பற்றியும் கூறும்.

இவ்வாறு உரிமையியல், குற்றஇயல் என்ற இரு பகுதிகளைப் பற்றிய சட்டங்களையும், வழக்கு விசாரணை முடிவுகளையும், அரசன் கடமை முதலியவற்றையும் இந்நூல் விளக்கமாகக் கூறுகிறது. பாடல்கள் மிக எளிய நடையில் அமைந்துள்ளன. சந்த நயம் பொருந்திய விருத்தப்பாக்களில் இது அமைந்துள்ளது. மொழிநடையைப் பொறுத்த அளவில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. கிராமியச் சொற்கள் அவ்வாறே பாடல்களில் புகுத்தப் பட்டுள்ளன. எதுகை நயத்தின் பொருட்டு ர,ற வேறுபாடுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. வடமொழிச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூல் இயற்றப்பட்ட காலத்தைத் தெளிவாகக் கூறஇயலவில்லை.சென்னை அரசு கீழ்த்திசைக் கையெழுத்து நூல் நிலையத்திலுள்ள காகிதப் படியொன்றில் கிடைத்த குறிப்பின்படி இந்நூல் 472 (கொல்லம் 664) ஆண்டுகளுக்கு முன்னர் மொழிபெயர்த்து எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது அறியப்படுகிறது.

தமிழில் செய்யுள் வடிவிலமைந்த சட்ட நூல் இதுவொன்றேயாகும். சட்டத் துறையில் தமிழில் நூல்கள் செய்ய இயலும் என்பதற்கு இது சிறந்ததோர் எடுத்துக்காட்டு. வி. அ.

**மனுவேல் மார்த்தின்சு**: இவர் போர்ச்சுகல் நாட்டினர். இயேசு சபைக் குருவாக கி.பி.1625-ஆம் ஆண்டு தமிழகம் வந்தார். இராபர்ட்டு டி நொபிலியுடன் தமிழகத்தில் சமயப் பணி புரிந்தார். நொபிலிக்குப் பின் மதுரைப் பகுதிவாழ் மக்களிடத்துக் கிறித்தவ சமயம் வேரூன்றி வளரப் பாடுபட்டார். அப்பணியில் இழி சொற்களையும், இழிவையும் அடியுதைகளையும் பெற்றார். எனினும், தளராது சமயத் தொண்டாற்றினார்.

மனுவேல் மார்த்தின்சு அடிகளார் சிறந்த ஆன்மிக ஆற்றல் உடையவர்; மறந்தும் சினம்கொள்ளாத மாதவர்; இனிமையாகப் பேசுபவர். எளிமையும் அடக்கமும் இவரின் பண்புகள். கேட்டவர்க்கு இல்லை என்று கூறாது கொடுப்பவர். தமிழகத் துறவிகளைப் போன்று உணவு முறைகளை மேற்கொண்டார். அறையில் இருக்கும்போது என்ன உடை அணிந்திருப்பாரோ அதேஉடையில்தான் வெளியிலும் செல்வார். இவர் கி.பி. 1656-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் காலமானார்.

மனுவேல் மார்த்தின்சு கிறித்தவ சமய நம்பிக்கையை வளர்க்கவும் அதனைக் காக்கவும் 'ஞானப் பூச்செண்டு' என்ற நூலைப் படித்தார். இயேசுநாதர் இவ்வுலகில் பட்ட துன்பங்களைப் 'பாடுகளின் மேல் தியானம்' என்னும் பெயரில் நூலாக்கினார். 'நற்கருணை' என்ற நூலையும் இவர் எழுதியுள்ளார். இது திருப்பாடுகளைப் பற்றிய நூலினும் சிறந்தது என்று கருதப்பட்டது. கிறித்தவக் கடவுட் கொள்கையான திரித்துவம் பற்றியும் ஒருநூல் எழுதியுள்ளார். கிறித்தவ சமயவாதிக்கும் கிறித்தவரல்லாத ஒருவருக்கும் நிகழ்கின்ற உரையாடல் முறையிலும் ஒரு நூல் இவரால் எழுதப்பட்டுள்ளது.

அடிகளார் பல சமய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'ஞானமுத்துமாலை' என்னும் பெயரில் ஒருநூலை மொழிபெயர்த்துள்ளார். பெல்லார்மின் என்பார் எழுதிய சிறுஞான உபதேச நூலையும், மாற்கு செயோர்சியார் எழுதிய சிறுகுறிப்பிடத்தையும் தமிழ்ப்படுத்தியுள்ளார்.என்றி என்றிக்சு அடிகளால் இயற்றப்பட்டு கி.பி.1577-ஆம் ஆண்டுப் புன்னைக் காயலில் அச்சிடப்பட்ட 'திருத்தொண்டர்களின் திருமலர்' என்னும் நூலில் தமிழக மக்கள் வியந்து போற்றும் வரலாறுகளை மட்டும் தேர்ந்து தமிழ்ப்படுத்தியுள்ளார். ஆயினும், அது முழுமையுறவில்லை. 'கிறித்து நாதர் அனுசாரம்' என்னும் புகழ்பெற்ற நூலை 'உலக நிந்தை' என்னும் தலைப்புடன் மொழிபெயர்க்கத்தொடங்கினார். அந்நூலும் முழுமை பெறவில்லை. கிறித்தவர்கள் செபிப்பதற்கு ஏற்றபடி பல செபங்களையும் வழிபாடுகளையும், பக்தி முயற்சிகளையும் தமிழ்ப் படுத்தியுள்ளார்.

சமயம் பரப்பும் நோக்கில் இவர் பலநூல்களைப் படைத்திருந்தாலும்,அவை தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும் பயன்படுகின்றன. அதுபோலவே கிறித்தவ சமயம் சார்ந்த தமிழக மக்கள் அச்சமயத்தொடர்பான புதிய செய்திகளைத் தெரிந்துகொள்ள இவர்தம் மொழிபெயர்ப்பு நூல்கள் துணைபுரிகின்றன. இர.ஆ.

**மனை அத்துமீறல்:** மனிதரின் வாழ்விட மாகப் பயன்படும் கட்டடம், கூடாரம் அல்லது கப்பல் ஆகியவற்றில் குற்றம் கருதி அத்துமீறி நுழை தல் அல்லது அங்கிருத்தல் அல்லது தொழுகைக்குப் பயன்படும் எந்தக் கட்டடத்திலும் அத்துமீறி நுழை தல் அல்லது பொருட்களைப் பாதுகாத்திடப் பயன் படுத்தப்படும் இடங்களில் அத்துமீறி நுழைதல் மனை அத்துமீறல் எனப்படும். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 442- ஆம் பிரிவு மனை அத்துமீறலின் இலக்கணத்தைக் கூறுகின்றது. குற்றமுறு அத்துமீறு தலைச் செய்பவரது உடலின் எந்தப்பாகத்தையாவது வீட்டினுள் புகுத்துவது, வீட்டினுள் அத்துமீறி நுழை தலாகும்.

மனை அத்துமீறல் குற்றத்திற்காக உயர்ந்த அளவாக ஓராண்டுச் சிறைத்தண்டனை அல்லது ஆயிரம் உரூபாய் ஒறுப்புக்கட்டணம் அல்லது இரண் டும் சேர்த்து விதிக்கலாம்.

மனிதன் தன்னிடமுள்ள சொத்துகளில் உயர்ந்த தாகப் போற்றிப் பாதுகாப்பது மனை அல்லது குடியிருப்பிடமாகும். அதனைப் பாதுகாத்திடத் தக்க உரிமையை அளித்திடல் வேண்டும். எனவே, குற்றங் கருதி மனையில் அத்துமீறல் மனை அத்துமீறல் எனக் கூறப்படுகிறது என இந்தியத்தண்டனைச் சட்டத்தை உருவாக்கியவர்கள் கூறினர். அப்பிரிவு சொத்தின் உடைமையைப் பாதுகாக்கும் பொருட்டு அமைந் துள்ளது.

கட்டடம் என்ற சொல் செங்கல் அல்லது கற் களால் கட்டப்பட்டு மேற்கூரையுடன் அமைந்த இடத்தைக் குறிக்கும். காலியான இடத்தைச் சுற்றி வளைத்து வேலி கட்டினாலோ சுவர் அமைத் தாலோ அந்த இடம் கட்டடம் ஆகாது. மண்ணால் சுவர் அமைக்கப்பட்டுக் கூரை மற்றும் கதவு எதுவு மின்றி அமைந்திட்ட வெற்றிடம் கட்டடமாகாது. அக்கட்டடத்தில் மனிதர்கள் வாழ்ந்திடல் வேண்டும். அந்த இடத்தில் அதன் உரிமையாளரோ குடும்பத் தின் உறுப்பினரோ வேலைக்காரர்களோ வாழ்ந் திடல் வேண்டும்.

விருந்தினர் தங்குமிடம், குதிரை கட்டுமிடம், மாட் டுத்தொழுவம், பால்கறக்குமிடம் முதலியனவும் வீட் டுடன் அமைந்திருந்தால் கட்டடம் எனக் கூறப்படும். அவ்விடங்களில் குற்றங்கருதி அத்துமீறி நுழைதலும் மனை அத்துமீறலாகும்.

மரண தண்டனை விதிக்கக் கூடிய குற்றங்கள் செய்யும்பொருட்டு மனை அத்துமீறல் செய்தல் கடுங்குற்றமாகும். அதற்காக ஆயுள் தண்டனை, அல்லது பத்தாண்டுகள் கடுங்காவல் தண்டனையும் ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம்.

அதேபோன்று ஆயுள் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்கள் செய்யும் பொருட்டு மனை அத்துமீறல் செய்தலும் கடுங்குற்றமாகும். அக்குற்றத்திற்காக உயர்ந்த அளவாகப் பத்தாண்டுகள் சிறைத்தண் டனையும் ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம்.

சிறைத்தண்டனை விதிக்கக் கூடிய குற்றங்கள் செய்யும் பொருட்டு மனை அத்துமீறல் செய்தலும் கடுங்குற்றமாகும். அக்குற்றத்திற்காக உயர்ந்த அள வாக ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம். மீ.அ.

**மனை நிருவாகம்:** குடும்பம் என்பது அன்பின் அடிப்படையில் இணைக்கப்பட்ட ஓர் உறவுமுறையா கும். அது சமுதாயத்திற்கு அடிப்படையாகும். மனை என்பது நான்கு சுவர்கள் மட்டும் கொண்டதன்று. மனையும் குடும்பமும் ஒரு நாட்டின் செல்வ நிலையை அளக்கும் அளவுகோல்கள் ஆகும். அவை நாட்டின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றன. மனிதர் களை ஆக்குவது வீடு. அது குடும்ப உறுப்பினர் களுடைய உடல், உள வளர்ச்சி, தேவை ஆகிய வற்றைக் கவனித்துப் பேணி அவர்கள் வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

குழந்தைகள் நாட்டின் எதிர்காலக் குடிமக்கள். குழந்தைகளின் முதற் பள்ளி இல்லமே என்பதை உளவியல் அறிஞர்கள் காட்டியுள்ளனர் (அவர்களின் முழு வளர்ச்சிக்கும, முன்னேற்றத்திற்கும் ஏற்ற சூழ் நிலையில் அவர்களை வளர்க்க வேண்டும்). ஒருவனின் எதிர்கால வாழ்க்கைக்கான அடித்தளமும் குழந்தைப் பருவத்திலேயே அமைக்கப்படுகிறது. குழந்தைகளின் வெற்றிக்கும், தோல்விக்கும் தாயும், தந்தையும், வீடுமே பொறுப்பாகும்.

நாகரிகம் தோன்றிய காலம் முதல் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், நலத்திற்கும், முன்னேற்றத்திற்கும் மனையே களமாக இருந்திருக்கிறது. மனித சமுதா யத்தின் உயரிய நோக்கங்கள், சாதனைகள் அனைத் தும் இன்ப மயமான இல்லங்களை அடிப்படையாகக் கொண்டே இருந்திருக்கின்றன. வீடு என்பது அனை வரும் வணங்கும் ‘அன்னை’ வாழும் திருக்கோயிலாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. இல்லத் தலைவியர் என்றுமே குடும்ப உறுப்பினர்களுக்குத் தூண்டா விளக்காக உற்ற துணைவியாக வந்திருக்கின்றனர்.

இன்றைய சமுதாய வாழ்க்கை முறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்றைய மக்களின் வாழ்க்கை முறை முன்னோர்களின் வாழ்க்கை

முறைகளிலிருந்து வேறுபடுகிறது. பொருளாதாரத் தேவையின் காரணமாக ஏராளமான மகளிர் தங்கள் இல்லங்களை விட்டு வெளியே சென்று பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மகளிர் ஆண்களுக்குச் சமமாகப் பல துறைகளில் முன்னேறிய போதிலும் அவர்களது பொறுப்பு குடும்பப் பராமரிப்பேயாகும்.

மனையறத்து வெற்றியின் இரகசியம் குடும்ப நிருவாக முறையாலுள்ளது. மனையை நிருவகிப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமன்று. வரும் வருவாய்க்கு ஏற்றவாறு கடன்கள் எதுவும் இன்றி அதே சமயத்தில் முழுமையான வாழ்வுக்குத் திட்டமிட்டுச் செயற்படுவதே சிறந்த நிருவாகம்.

எந்தப் பணியானாலும் அதனைச் செயலாக்கும் முன் திட்டமிடுவது மிகவும் இன்றியமையாதது. அவ்வாறு திட்டமிட்டுச் செயலாக்கப்படும் எந்தப் பணியும் சிறப்புமிக்கதாகும். எனவே, குடும்ப நிருவாகத்திலும் திட்டமிட்டுச் செயற்படுவார்களாயின் மனை நன்கு நிருவகிக்கப்பட, அதனால், மகிழ்ச்சியான சூழ்நிலையும் மனையில் உருவாகும்.

நிருவாகம் என்ற சொல்லுக்கு எத்தனையோ விளக்கங்கள் இருப்பினும் அவையனைத்தும் ‘மனிதனிடம் உள்ளவற்றைக் கொண்டு அவனுடைய தேவைகளைச் சிறந்த முறையில் நிறைவு செய்துகொள்வது’ என்பதையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனவே, குடும்ப நிருவாகத்தில் மனிதனுடைய தேவைகளை நிருணயிப்பதே முதல்படியாக அமைகிறது.

மனிதனுடைய தேவைகள் யாவை என்று நோக்குங்கால் எந்தக் குறிக்கோளை நோக்கி மனிதனுடைய சக்திகள், சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது என்று உறுதி செய்வது நிருவாகத்தின் முதல் பணியாகும். மனிதன் எதைநாடுகிறானோ அதையே அடைகிறான். எனவே, மனிதனுடைய நாட்டங்கள், தேவைகள் உயர்ந்தவையாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் மனிதனுடைய தேவைகள் நாளடைவில் மாறிக்கொண்டே செல்கின்றன. அதனால், மனிதனுடைய சக்தியை ஒரு நிலையான குறிக்கோளை ஒட்டிச் செலுத்த முடிவதில்லை.

சில சமயங்களில் மனிதனுடைய குறிக்கோள்களும், மதிப்புகளும் ஒன்றுபட்டிருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, பெற்றோர்கள் குழந்தைகள் சுதந்திரமாகவும், தெளிவான அறிவும், நல்ல பண்பும் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால், குழந்தைகள் தங்கள் அறிவுரைகளை நாடி வந்து அதன்படியே நடக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். இது மதிப்புகளில் ஏற்படும் முரண்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும், தனக்கென வருவாய் கிடைக்கும் தொழில் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட பெண், பின்னர் இல்வாழ்வில் நுழைவதையே தன் குறிக்கோளாக ஏற்கிறாள். பின்னர்த் தனக்கென்று குழந்தை, குழந்தையின் படிப்பு, குழந்தையின் வாழ்க்கை என்று வேறுபடும் குறிக்கோள்களைக் கொண்டு செல்கிறாள்.

பொதுவாக ஒரு மனிதனிடம் பொருட்களைவிட ஆசைகளும் தேவைகளுமே மிகுதியாக இருக்கும். அவனுக்குத் தேவையான அனைத்தையும் செய்ய அவனுக்கு நேரமோ வலிமையோ போதுமானதாக இருப்பதில்லை. அவனுடைய அறிவையும் ஆற்றலையும் வைத்து அவன் தன் விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்ள முடிவதில்லை. அப்படிப்பட்ட நிலையில் எதற்கு முதன்மை கொடுப்பது என்பது ஒரு கேள்வியாக அமைகிறது. அக் கேள்விக்கு விடை காண்பது என்பதுதான் குடும்ப நிருவாகத்தின் முடிவு. குடும்ப நிருவாகத்தில் வெற்றி காண விரும்பும் ஒவ்வொரு குடும்பத் தலைவியும் ஒரு பண்பட்ட மதிப்பிடும் அறிவைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும்.

மனிதனுடைய தேவைகள் என்ன என்பதை மட்டும் முடிவு செய்துகொண்டால் போதாது. அதை நிறைவு செய்துகொள்ள அவனிடம் என்னென்ன சாதனங்கள் இருக்கின்றன என்றும் சிந்திக்க வேண்டும். அவனிடம் உள்ள பணமும், அறிவும் மாத்திரம் சாதனங்கள் ஆகிவிடா. காலம், திறன், நுட்பமான அறிவு, சக்தி முதலியனவும் இன்றியமையாதவையாகும்.

காலம் எல்லோருக்கும் பொதுவானது. அதை எதிர் காலத்திற்குத் தேவை என்று சேர்த்து வைக்கவும் இயலாது. ஆகையால், ஒவ்வொரு நாளையும் அவ்வப்பொழுது பயன்படுத்துவது நல்லது.

ஒரு குறிப்பிட்ட செயல் அல்லது தேவையை நிறைவு செய்ய எத்தனை சாதனங்களை, எவ்வளவு காலம், எப்படிப் பயன்படுத்தலாம் என்று திட்டமிட்டுச் செயற்படுவதே நிருவாகத்தின் முக்கிய பொறுப்பாகும். ஒரு குறிப்பிட்ட செயலை, தேவையை எப்படிச் செய்வது? யார் செய்வது? என்பதையும் திட்டமிட வேண்டும்.

எந்த ஒரு செயலுக்கும் திட்டத்தை வகுத்தால் மட்டும் போதாது. அதை நல்லமுறையில் செயற்படுத்துவது என்பது அடுத்த முதன்மையான கூறாக அமைகிறது. திட்டத்தைச் செயற்படுத்தும்பொழுது நிலைமைகள் மாறக்கூடும். அவற்றிற்கேற்பத் திட்டத்

தின் முடிவுகளை மாற்றி நிருவாகத்தைச் செயற்படுத்தும் திறமை குடும்ப நிருவாகிக்கு இருக்க வேண்டும்.

மனையை நிருவகிக்கும் பொறுப்பு பெரும்பாலும் இல்லாளுடையது என்பதுதான் பெரும்பாலோரின் கருத்து. குடும்பத்தில் மனமொத்த இருவரும் இணைந்து திட்டமிட்டுச் செயற்படும்போதுதான் நிருவாகம் நல்லமுறையில் அமையும். அவர்கள் இருவரும் தெளிவான குறிக்கோள்களுடன் செயற்படும்போதுதான் குழந்தைகளை நல்ல நிருவாகிகளாக வளர்க்கமுடியும்.

குடும்பத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றப் பயன்படும் சாதனமே குடும்ப நிருவாக முறையாகும். அந்நோக்கம் நிறைவேற வேண்டுமானால் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் கடமையையும், குடும்ப நிருவாகத்தில் தங்களின் பொறுப்பு முதலியவற்றையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

**குடும்ப நிருவாகத்தின் படிகள்: 1) மதிப்பிடுதல்:** மனிதன் தன்னுடைய தேவை என்ன என்பதை நிருணயிக்கும்போது தேவைகளைக் கணக்கிட்டுத் தம்மிடமுள்ள சக்தியையும், பொருளையும், பணத்தையும் கொண்டு அத் தேவைகளை நிறைவு செய்ய முடியுமா என்று ஆராய்ந்து முடிவெடுத்தலையே மதிப்பிடுதல் என்பர். அவ்வாறு மதிப்பிட்டு முடிவு செய்தபின்னரே செயலைத் தொடங்க வேண்டும்.

**2) தேர்ந்தெடுத்தல்:** மனை நிருவாகத்தில் மதிப்பிடுதலை அடுத்துத் தேர்ந்தெடுத்தலே இடம் பெறுகிறது. பல பொருட்கள் தேவையாக இருக்கும் பொழுது அவற்றின் தரத்தை எடை போட்டுச் சீர்தூக்கிப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**குறிக்கோள்கள்:** ஒவ்வொரு குடும்பத்திலும் தேவை என்ன என்று நிருணயித்து, எதுவென்று தேர்ந்தெடுத்தபின்னர் அது குடும்பக் குறிக்கோள்களை நிறைவு செய்யக்கூடியதா என்றும் பார்க்க வேண்டியிருக்கிறது.

குறிக்கோள்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேறுபடும். இருப்பினும் எல்லாக் குடும்பங்களுக்கும் பொதுவான குறிக்கோள்கள் சில கீழே குறிப்பிடப் பட்டுள்ளன. அவை: 1) குடும்பத்தினர் அனைவரும் நலமாக இருப்பது, 2) குடும்பத்தின் உறுப்பினர் அனைவரும் உடல், உள்ளம், ஆன்மிகம், சமூகம் ஆகிய துறைகளில் முழு வளர்ச்சி பெறுவது, 3) குடும்ப வாழ்வில் இன்பமும், மனநிறைவும் நிலவுவது, 4) குடும்பத்தில் அனைவரும் போதிய கல்வி, கலை, நலம் ஆகியவற்றைப் பெற்றுத் துய்க்க இன்றியமையாத பொருளீட்டுவது.5) தங்குவதற்கு நல்ல வீடுபெறுவது. 6) சமூக வளர்ச்சிக்கு ஒத்துழைக்கும் உணர்ச்சியும், ஆவலும் பெறுவது,7) திறமையான குடும்ப நிருவாகம் முதலியவை. காலத்திற்கேற்றவாறு மாறுபடினும் மேற்கூறியவையே வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களாகக் கருதப்படுகின்றன.

தனி மனிதனானாலும், சமுதாயமானாலும் அதன் நல்வாழ்க்கை என்பது பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் பொருளாதாரச் சிக்கலே முதன்மை இடத்தைப் பெறுகிறது. எனவே, அப்பொருளாதாரச் சிக்கலை எவ்வாறு திட்டமிட்டு ஒரு மனை நிருவாகத்தில் செயற்படுவது என்று சீர்தூக்கிப் பார்க்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

ஒவ்வொரு காலத்திலும் ஏற்படும் அப்பொருளாதாரச் சிக்கலுக்குக் காரணம் செலவுக்கேற்ற வருவாய் இல்லாமை என்பதைக் காட்டிலும், வரவுக்கேற்ற செலவு செய்யாதது என்பதே மிகவும் பொருத்தமானதாகும். எவன் ஒருவன் வருவாய்க்கேற்றவாறு வீட்டிற்குத் தேவையானவற்றை நிறைவு செய்துகொண்டு வருங்காலத்திற்கும் சிறிது சேர்த்து வைக்கிறானோ அவனே வாழ்க்கையில் மகிழ்ச்சியாக வாழ்கிறான்.

ஒரு மனையாள் மனையின் வரவு செலவுப் பட்டியலைத் தயாரிக்கும் பொழுது பின்வரும் கருத்துகளை மனத்தில் கொள்ளவேண்டும். 1) திட்டமிடுவதின் முக்கிய குறிக்கோள் என்னவென்பதை மனத்தில் கொள்ள வேண்டும். 2) எல்லா வகையான வருமானங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். 3) குறுகிய, நீண்ட காலத்தில் கிடைக்கக்கூடிய பணத்தைப் பிரித்து உணர்தல் வேண்டும். 4) மனையில் ஒவ்வொரு தேவையையும் ஆராய்ந்து அதற்கேற்றாற் போல் செலவை வகுத்துக்கொள்ள வேண்டும். 5) குறுகிய, நீண்ட காலச் செலவுகளை ஒருங்கிணைத்துத் திட்டமிட வேண்டும்.6) குடும்ப நண்பர்கள், உறுப்பினர் அனைவரையும் மனநிறைவு செய்யும்படி திட்டமிட வேண்டும். பொதுவாகச் செலவினங்களைக் கணக்கிடும்பொழுது வருமானத்தின் அளவு, குடும்பத்தின் அளவு, குழந்தைகளின் வயது, கல்வி நிலை, குடும்பம் இருக்கும் இடம், தனி மனிதனின் விருப்பு வெறுப்புகள் முதலானவை கண்ணோட்டத்தில் இருக்கவேண்டும்.

ஒரு தனி மனிதனுக்காயினும் நடுத்தரக் குடும்பத்துக்காயினும், கீழ்க்காணும் தேவைகளே வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளாக முதன்மை பெறுகின்றன.

| | |
|---|---|
| 1. உணவு | 60 விழுக்காடு |
| 2. உடை | 10 விழுக்காடு |
| 3. உறையுள் | 10 விழுக்காடு |
| 4. கல்வி | 5 விழுக்காடு |
| 5. பொழுதுபோக்கு | 3 விழுக்காடு |
| 6. மருத்துவச் செலவு | 5 விழுக்காடு |
| 7. பயணம் மற்றவை | 2 விழுக்காடு |
| 8. சேமிப்பு | 5 விழுக்காடு |

மேற்கூறிய தேவைகளை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு திட்டமிட்டு மனையை நிருவகிப்பது என்று உற்றுநோக்குங்கால் பொதுவாக எல்லாத் தேவைகளிலும் உணவுத் தேவையே முதலிடம் பெறுகிறது. உணவு என்பது உயிரினங்கள் அனைத்திற்கும் தேவையான ஒன்று. உணவின்றி உயிர்வாழ்தல் என்பதரிது. இருப்பினும், மனிதன் உண்பதில் வேறுபாடு உள்ளது. உணவைத் தெரிந்துதேர்ந்தெடுத்துச் சமைத்து, பகிர்ந்து உண்ணும் பழக்கம் உள்ளவன் மனிதன். எனவே, அவன் அவ்வுணவின் உட்பகுதிகளை அறிந்து குடும்பத்தின் தேவைக்கேற்பத் தேர்ந்தெடுத்துத் தகுந்த முறையில் சமைத்து உண்பது என்பதும் ஒரு மனை நிருவாகத்தின் தேவையாகும்.

எனவே, பொதுவாக 60 விழுக்காடு வருவாயை உணவுக்கு ஒதுக்குவதோடல்லாமல் உணவுத் தேவைகளை நிறைவு செய்யும்போது எவ்வாறு சிக்கன முறைகளைக் கையாளலாம் என்பதையும் மனத்தில் கொள்ளவேண்டும்.

எடுத்துக்காட்டாக உணவுப்பொருட்களை வாங்கும்போது சத்துள்ளனவாகவும் அதேசமயத்தில் மலிவானவையாகவும் வாங்கலாம். அறுவடைக்காலங்களில் மலிவாகக் கிடைக்கும் காய்களை வாங்கிச் சேமித்து வைக்கலாம். வடகம், அப்பளம், ஊறுகாய் முதலியவற்றை வீட்டிலேயே தயாரிக்கலாம். வீட்டுத் தோட்டம் போட்டு அவற்றின் மூலம் காய்கறிகளைப் பெறலாம். எரிபொருட்களைச் சிக்கனப் படுத்தும் முறைகளைக் கையாளலாம். (புகையில்லா அடுப்பு, சாண எரிவாயு, வைக்கோல் பெட்டி) உணவுப்பொருட்களைக் கெடாத வண்ணம் பாதுகாத்து அழிவினங்களைத் தவிர்க்கலாம்.

இருப்பிடம்: கூரை வீடு, மாடி வீடு அல்லது சொந்த வீடு, வாடகை வீடு ஆகியவற்றில் எதுவாயினும், ஒவ்வொரு மனிதனுக்கும் இருப்பிடம் என்பது அவனது இன்றியமையாத தேவைகளுள் ஒன்றாகும். ஒரு வீட்டிற்கு அதாவது சொந்தவீடாக இருந்தால் மின்சாரத்திற்கும், வீட்டு வரி, பழுதுபார்த்தல், வெள்ளையடித்தல் போன்ற செலவினங்களுக்கும், வாடகை வீடாக இருந்தால் வாடகை, தண்ணீர், விளக்கு போன்றவற்றிற்கும் செலவு செய்யவேண்டியிருக்கிறது. அது ஆண்டுச் செலவாக இருந்தால் மாதந்தோறும் சிறிது தொகை ஒதுக்கிவைப்பது நல்ல முறையாகும். எனவே, 10 விழுக்காடு வருவாயை இருப்பிடத்திற்காக ஒதுக்கலாம்.

சொந்த வீடாகிலும், வாடகை வீடாகிலும் இருப்பிடம் அழகாகவும் வசதியாகவும் இருப்பதையே அனைவரும் விரும்புவர். சொந்த வீடாக இருந்தால் வீடு கட்ட மனை வாங்குவதிலிருந்து மனையின் இருப்பிடம், வீட்டிற்குள் இருக்கவேண்டிய வசதிகள், அறைகளின் அமைப்பு. வீட்டின் தோற்றம் முதலியவற்றை மனைகட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலேயே எப்படிச் செய்து முடிக்கலாம் என்று குடும்பத் தலைவனும், தலைவியும் சேர்ந்து திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். வீட்டைப் பாதுகாப்பது பற்றியும் திட்டமிட்டுச் செயற்பட வேண்டியிருக்கிறது.

வாடகை வீடாக இருப்பின் வரவு செலவுத் திட்டத்தில் அதற்காக ஒதுக்கியுள்ள தொகை, குடும்ப ஆள்களின் எண்ணிக்கை, குழந்தைகளின் கல்வி நிலை, பள்ளிக்கூடம், போக்குவரத்து வசதி, அஞ்சல் நிலைய வசதி, மருத்துவ மனை, வங்கிகள் ஆகியன அருகில் இருத்தலை மனத்தில்கொண்டு தேர்ந்தெடுப்போமானால் தேவையற்ற செலவுகளையும், காலதாமதங்களையும் தவிர்க்கலாம்.

எல்லா மனிதனும் பொதுவாகத் தான்வாழும் வீடு அழகாகவும் கவர்ச்சியாகவும் இருப்பதையே விரும்புகிறான். ஓர் அறையாக இருந்தாலும் அதன் கண் பொருட்களை வைத்திருக்கும் முறையைப் பொறுத்தே அந்த அறை அழகு பெற்றதாகும் எனவே, மனை அலங்காரத்தையும் மனை நிருவாகத்தின் ஓர் உறுப்பாக ஏற்றுக்கொள்வது தவறாகாது.

மனை அழகு என்பது பகட்டான அலங்காரப் பொருட்களைக் கொண்டு அலங்கரிப்பது என்பதன்று. இன்றைய பொருளாதார நிலையில் மனை அலங்காரத்திற்கென்று செலவினங்களை ஒதுக்குவது என்பது இயலாது. வீட்டிலுள்ள பொருட்களை ஒழுங்குபடுத்தி வைப்பதிலும் சிறு படங்கள், பொம்மைகள் வைத்துச் செயயும் சுவர் அலங்காரங்களிலும் மனை அழகு பெறுகிறது என்பதை மனையாள் மறந்துவிடக்கூடாது. வீட்டில்வீணாகும் பொருட்களை, எடுத்துக்காட்டாக, பழைய சேலைகள், பூ வேலைப் பாடுள்ளவைகளாக இருந்தால் அவற்றை நிலைகளுக்கும் சாளரங்களுக்கும் திரைச்சீலையாகப் பயன்படுத்தலாம்; மேசைவிரிப்பாகவும், படுக்கை விரிப்பாகவும், தலையணை உறையாகவும் பயன்படுத்தலாம். எத்தனையோ குறைந்த விலைப்பொருட்

களில் பூச்சாடி, பொம்மைகள் போன்ற அழகுப் பொருட்கள் செய்யும் முறையைத் தெரிந்து செயற்படலாம்.

ஒரு மனிதனுக்கு உணவும், உறைவிடமும் எவ்வளவு தேவையோ அவ்வளவு உடையும் இன்றியமையாத் தேவைகளுள் ஒன்றாகும். உடைக்காக ஓரளவுத் தொகையை ஒதுக்குவதோடு உடைகளை வாங்கும்போதும், உடைகளைப்பாதுகாக்கும்போதும் அவற்றைத் தைக்கும்போதும் செலவுகளைக் குறைக்கவும் வேண்டும். (எ-டு.) ஒரு மனிதனுக்கு உடை இன்றியமையாதது. ஆனால், பகட்டான உடை தேவையில்லை. அழகானதாகவும் அதே சமயத்தில் மிகுதியான நாள்கள் உழைக்கக்கூடியதாகவும் வாங்கலாம். குழந்தைகளுக்குச் சூன்மாதம் சீருடைவாங்க வேண்டிய தேவையேற்படும்போதுமே மாதம் அதைத் தவிர்த்து மற்ற வண்ண ஆடை வாங்குதல். அழகுக்காகக் குறிப்பிட்ட ஆடைகளை வாங்குதல் போன்றவற்றைத் தவிர்க்கலாம். பொதுவாக ஒரு மனையாள் உடைகள் வாங்கும்போது கீழேகண்ட கருத்துகளை மனத்தில் கொள்ளவேண்டும். அவை 1) தனது குடும்பச் செலவினப் பட்டியலில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, 2) குடும்பத்தில் தனிஆளின் தேவைகள், 3) காலம் (கோடை, மழை), 4) ஆள்களின் வயது, அவர்களின் விருப்பம், 5) உருவ அமைப்பு, 6) சமுதாயச் சூழ்நிலை முதலியவையாகும். உடைகள் வாங்குவதில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. உடைகளைப் பாதுகாப்பதிலும் பல முறைகள் இருக்கின்றன. குறிப்பாகச் சலவை செய்யும்போதும் உலர்த்தும்போதும் தேய்க்கும்போதும் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

**துணிகளைச் சலவை செய்யும்முன் கவனிக்க வேண்டியவை:** 1) ஊக்குகள், ஆணிகள், நாணயங்கள் போன்றவை பைகளில் இருக்கின்றனவா என்று பார்த்து அவற்றை அகற்றவேண்டும். இல்லையெனில் உடைகள் கிழியும் நிலையும், கறை ஏற்படும் நிலையும் உண்டாகும். 2) கறைகளை உடனுக்குடன் போக்க வேண்டும். 3) பித்தான்கள், கொக்கிகள் இல்லையெனில் உடனுக்குடன் தைக்கவேண்டும். அதற்காகத் தையற்கலைஞரை நாடும் நிலையைத் தவிர்க்க வேண்டும். 4) கிழிந்த துணிகளைத் தைத்த பின்னரே சலவை செய்யவேண்டும்.

1) உடைகளை வெளுக்கும்போது துணிகளின் தன்மைக்கேற்ப அதிகக் காரமில்லாத சவர்க்காரங்களைப் பயன்படுத்த வேண்டும். 2) துணிகளை அடித்துத்துவைத்தல் கூடாது. 3) வண்ண ஆடைகளையும், வெள்ளை ஆடைகளையும் தனித்தனியே துவைக்கவேண்டும். 4) கம்பளி போன்ற ஆடைகளை அடிக்கடி வெளுத்தல் கூடாது, 5) மிகுதியான நேரம் சவர்க்காரத்தில் வைத்திருத்தல் ஆகாது.

துணிகளை வெளுத்தபின் குடு ஏறாத கயிறு, சட்டம் போன்றவற்றில் அவற்றை உலர்த்தவேண்டும். வண்ண ஆடைகளை அதிக நேரம் வெயிலில் உலர்த்தக்கூடாது. உலர்ந்த ஆடைகளைக் காற்றோட்டம் மிகுந்த பெட்டிகளில் வைக்கவேண்டும், துணிகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க வேப்பிலை, மற்ற பொருட்களைத் துணிகளில் போட்டு வைக்கலாம். மேற்கூறிய முறைகளைக் கையாண்டால் ஆடைகளை நீண்ட நாள்களுக்குப் பாதுகாக்கலாம்.

**கல்வி**: குழந்தைகளின் கல்வி நிலையைப் பொறுத்தும், எண்ணிக்கையைப் பொறுத்தும், சமுதாய நிலையைப் பொறுத்தும், கல்விக்கான செலவினம் மாறுபடுகிறது. பொதுவாக வருவாயில் 5 விழுக்காட்டைக் கல்விக்காக ஒதுக்கலாம். இதிலும் அருகினில் உள்ள பள்ளியில் சேர்த்தல், படித்த பெற்றோர்களாக இருப்பின் இரவில் குழந்தைகளுக்குப் பாடம் கற்பித்தல் போன்றவற்றின்மூலம் பயணச் செலவு, பயிற்சி வகுப்புக்கான செலவு முதலியவற்றைத் தவிர்க்கலாம்.

மருத்துவச் செலவு, பொழுதுபோக்குப் பயணங்கள், இதர செலவினங்களுக்கென வருவாயில் 6 விழுக்காட்டை ஒதுக்கலாம். இவை எதிர்பாராத செலவுகளாக இருப்பதால் மாதந்தோறும் இதற்காகச் சிறுதொகை ஒதுக்கிவைப்பது மிகவும் நல்லது.

நல்வாழ்வு முறைகளைக் கையாண்டு நோய்களை முன்கூட்டியே தடுப்பது, அரசு மருத்துவ வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வது போன்றவற்றால் மருத்துவத்திற்காகும் செலவைக் குறைக்கலாம்.

மேற்கூறியதுபோல் வரவுக்கேற்பத் திட்டமிட்டுச் செலவு செய்வதுடன் எதிர்காலத்திற்கென ஒரு சிறிய தொகையைச் சேமித்தும் வைப்போமானால், எந்த எதிர்பாராத சிக்கல்களையும் எளிதில் ஏற்க முடியும்.

மனையை எப்படி நிருவகிப்பது, செலவினங்களை எப்படித் தவிர்ப்பது அல்லது குறைப்பது என்பனவற்றோடு குடும்ப வருவாயை மிகுதிப்படுத்த என்ன செய்யவேண்டும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். துணி தைத்தல், கூடைகள் பின்னுதல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், வீட்டுத்தோட்டம் (காய்கறி) அமைத்தல் போன்றவற்றின் மூலமாகக் குடும்ப வருவாயைப் பெருக்கலாம்.

மனை நிருவாகத்தில் வருவாயை மட்டும் திட்டமிட்டுச்செலவு செய்தால் போதாது. நேரம், சக்தி, வேலை போன்றவற்றையும் திட்டமிட்டு அதன்படி

செயற்படும்போது மனை நிருவாகம் இன்னும் சிறப்புறுகிறது.

**நேரம்:** மனிதனுடைய பணிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1)தனி மனிதனுடைய வேலை: இதில் தூங்குதல், ஓய்வெடுத்தல், குளித்தல், உணவருந்துதல், பொழுதுபோக்குதல், படித்தல், அலுவலகம் செல்லல், விளையாடுதல், சமூகப் பணி முதலியன அடங்கும். 2) குடும்ப வேலை: இதில் கடைக்குச் செல்லுதல், கணவர் மற்றும் குழந்தைகளைக் கவனித்தல், உணவு சமைத்துப் பரிமாறுதல், உணவைப் பாதுகாத்தல், பாத்திரங்கள் துலக்குதல், துணி துவைத்தல், தைத்தல், பலகாரம் செய்தல், கோயிலுக்குச் செல்லுதல் முதலியன அடங்கும்,

மேற்கூறிய பணிகள் ஒவ்வொன்றிற்கும் எத்தனை மணித்துளிகள் செலவிடலாம் என்பதைத் திட்டமிட்டுச் செயற்படும்போது அனைத்துப் பணிகளையும் காலத்தில் செவ்வனே செய்து முடிக்கலாம்.

ஒரு பணியைச் செவ்வனே செய்து முடிக்க நேரம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு சக்தியும் முக்கியமாகிறது. நேர,சக்தி விரயங்களைப் பின்வரும் குறிப்புகளால் குறைத்துக்கொள்ளலாம். அவை: 1) நேரச் செலவுத்திட்டம் தயாரித்தல். 2) வேலை செய்யும் முறைகளைச் சீர்திருத்துதல், 3) வேலைப் பழக்கங்களை மாற்றுதல், 4) மற்றவர்கள் உதவியைப் பயன்படுத்திக்கொள்ளல், 5) முக்கியமான வேலைகளை முதலில் செய்தல். 6) கூடியவரை இரண்டு, மூன்று வேலைகளைச் சேர்த்துச் செய்தல், 7) இடையிடையே ஓய்வெடுத்துக்கொள்ளல், 8) கடுமையான வேலைக்குப்பின் இலகுவான வேலையைச் செய்தல், 9) ஒரே நாளில் பல கடினமான வேலைகளைச் செய்யாதிருத்தல் முதலியனவாகும்.

வீட்டில் வேலையையும், நேரத்தையும் சுருக்கும் முறைகள் பின்வருவன: 1) ஒரு வேலையைத் தொடங்குவதற்கு முன்னர் அதற்கு வேண்டிய சாதனங்கள் அனைத்தையும் அருகில் வைத்துக்கொண்டால் தேவையற்ற அலைச்சல் குறையும். 2) அந்தந்த வேலைக்குரிய பொருட்களை அவ் வேலை செய்யப்படும் இடத்திலேயே வைத்தல் நன்று. எடுத்துக்காட்டாகப் பாத்திரம் துலக்கும் இடத்தில் அதற்குத் தேவையான பொருட்கள், துலக்கிய பாத்திரங்களை வைக்கும் சாதனம் முதலியவை இருப்பின் தேவையற்ற நடையும், தண்ணீர் வீடெல்லாம் தெளிப்பதையும், வேலையின் களைப்பையும் குறைக்கலாம். 3) வீட்டில் வீணாகும் பொருட்களைச் சேர்த்து வைக்காமல் அவ்வப்போது அகற்றிவிட வேண்டும். 4) வேலையைச் சுருக்கும் கருவிகளைப் (தோல் சீவ, காய்கறிகளைச் சுத்தமாக்க. விரைவில் சமைக்க) பயன்படுத்தலாம். 5) ஆங்காங்கே பொருட்கள் வைக்க நிலைப்பெட்டகம் அமைத்தல்,6) உணவுப் பொருட்களைத் தூய்மையானவையாக வாங்குவதால் தூய்மை செய்யும் வேலையைக் குறைத்தல், 7) செய்யும் வேலையைச் சரியான முறையில் செய்யக் கற்றுக்கொள்ளுதல், 8) வீட்டை அடிக்கடித் தூய்மை செய்யும் பழக்கத்தைக் கையாண்டு பலநாள் சேர்ந்த குப்பை, ஒட்டடை முதலியவற்றை அகற்றும்போது சக்தியை மீதப்படுத்துதல்.

கூ.பா.

**துணை நூல்:**

**பங்கசம், ஜி.,** மனையியல், செயா பவர் பிரசு பப்ளிஷர்ஸ், சின்னாளப்பட்டி, 1973.

**மனையடி சாத்திரம்** என்ற நூல், மனை நூல், மனை வாசுத்து இலட்சணம், சிற்ப சாத்திரம், மனை சாத்திரம் என்று பல பெயர்களில் காணப்படுகிறது. மயமதம், விசுவகரும வாசுத்து சாத்திரம், மானசாரம், வாசுத்து வித்தை, மனுசியாலய சந்திரிகை, விசுவகரும சந்திரிகை, சருவார்த்த சிற்ப சிந்தாமணி, காக்கையர் சிற்பம், சிற்ப ரத்தினாகரம், விசுவ கருமிய ஆயாதி விளக்கம் போன்ற நூல்கள் வீடு கட்டும் முறைகளையும், சிற்பி இலக்கணம் முதல் புதுமனைப் புகுதல் வரையிலான பல மனை விதிகளையும் கூறுகின்றன.

மனை என்ற சொல்லுக்கு அகராதியில் குடிப்பிறப்பு, குடும்பம், சிற்றில், சூதாடு பலகையின் அறை, நற்றாய், நில அளவுவகை,பசுத்தொழுவம், மனைவி, வாழ்க்கை, வீடு, வெற்றிடம், ஏறத்தாழ 223 ச.மீ. கொண்ட நிலம் போன்ற பல பொருட்கள் காணப்படுகின்றன. மனிதர்கள் வீடு கட்டும் போது நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து, நல்ல மரங்களைப் பயன்படுத்தி, நல்ல நாள் பார்த்துக் கட்டத் தொடங்கினர் என்பது அனுபவ அறிவின் வாயிலாக உணரமுடிகிறது.

மனைகோலச்செல்லுங்கால் காணப்பெறும் குறிகளின் பலன்கள், மனை கோலுங்கால் மண்ணின் கீழ்க் கிடைக்கும் பொருட்களுக்கேற்ற பலன்கள், மண்ணின் நிறம், சுவை போன்ற தன்மைகளுக்கு ஏற்ற பலன்கள், மனையின் உயர்வு தாழ்வுகளுக்குரிய பலன்கள், மனையில் புற்று காணப்பெறும் திசைகளுக்குரிய பலன்கள், மனை கோலுங்கால் குழி வெட்டி நீரும் மலரும் விட்டு அறியும் குறிகளின் பலன்கள், மனைகோலுங்கால் தேங்காய் உடைக்க அதனால் காணும் அறிகுறிகளுக்குரிய பலன்கள், மனையின் நீள அகலங்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய முறைகள், அளவு முறைகள்,மனையில் தேவதை

களின் இருப்பிடம், பலன் ஆகியவை மனைகோல ஆகும் நாள், மாதம், ஆகாத நாள், மாதம் போல் வனவற்றையும் மனையில் கிணறு, மாட்டுத் தொழுவம், குப்பை கொட்டுமிடம் போன்ற இடங்களை அமைக்கும் விதிகள் போன்ற பல செய்திகளையும் மனைநூல்கள் விரித்துக் கூறுகின்றன.

மனைநூலினை வடமொழி வாசுத்து இலட்சணம் என்று கூறுகிறது. எடுத்துக்கொண்ட செயல் இனிதே முடியவிரும்பி, எந்தச் செயலையும் இறைவனை வழிபட்டுத் தொடங்குவது தமிழர் மரபு. வீடுகட்டத் தொடங்கும் போது ஏற்புடைக் கடவுளான வாசுத்து புருடனை வணங்கித் தொடங்குமாறு பணிக்கிறது மனைநூல்.

வாசுத்துபுருடன் சித்திரை வைகாசியில் மேற்கே தலை வைத்து வடக்கு முகமாகவும், ஆடி, ஆவணியில் வடக்கே தலைவைத்துக் கிழக்கு முகமாகவும், ஐப்பசி, கார்த்திகையில் கிழக்கே தலைவைத்துத் தெற்கு முகமாகவும், தை, மாசியில் தெற்கே தலைவைத்து மேற்கு முகமாகவும் பார்த்துப் படுத்திருப்பார். சித்திரை 10 - ஆம் நாள் 5-நாழிகையும், வைகாசி21-ஆம் நாள் 8-நாழிகையும், ஆடி 11-ஆம் நாள் 2 நாழிகையும், ஆவணி 6-ஆம் நாள் 21 - நாழிகையும், ஐப்பசி 11-ஆம் நாள் 2 நாழிகையும், கார்த்திகை 8-ஆம் நாள் 10 - நாழிகையும், தை 21-ஆம் நாள் 8-நாழிகையும், மாசி 22 - ஆம் நாள் 8-நாழிகையும் கண்விழித்து எழுந்திருந்து, பல் துலக்கிக் குளித்துப் பூசை முடித்துணவுண்டு தாம்பூலம் போட $3\frac{3}{4}$ நாழிகை செல்லும். பின்னரே படுத்துக்கொள்வார். வாசுத்து புருடன் எழுந்திருக்கும் நாளில் உணவு தாம்பூலம் அருந்தும் வேளையில் மனைகட்டத் தொடங்கலாம் என்று மனைநூல் கூறும்.

வீடு கட்டப்படும் பூமியை நான்காகப் பகுத்தால் அவை ஈசானம், ஆக்கினேயம், நிருதி, வாயு என்ற கண்டங்களாகும். அவற்றில் ஈசான கண்டமும், நிருதி கண்டமும் வீடு கட்டுவதற்கு ஏற்றவை. மற்றவை ஆகா.

அசுவனி, உரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, அனுசம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகிய விண்மீன்களும், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, மகரம் கும்பம், மீனம் ஆகிய இராசிகளும், புதுமனை தொடங்கற்கும், புகுதலுக்கும் ஏற்றன. சிறப்பாகத் தொடங்கும் நாளும், குடிபுகும் நாளும் மனைத் தலைவருக்கும், மனைவிக்கும் பொருந்திய நாளாக இருக்கவேண்டும். இலக்கனத்திற்கு நான்காமிடத்தில் ஒரு கோளும் இருக்கக் கூடாது. குரு, சுக்கிர அத்தமனமும் எதிர் சுக்கிரனும் இல்லாததாகவும், பன்னிரண்டாம் இடம் சுத்தமாக உள்ளதாகவுமாக அமைந்த ஒரு நாளில் புதுமனை புகுதல்வேண்டும்.

மயன், அருளிய சிற்ப நூல் (மனையடி சாத்திரம் 1932), சென்னை பு. முனுசாமி அச்சுக்கூடத்தில் பதிப்பான மனையடி சாத்திரம் (1917), சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட மனைநூல் போன்ற நூல்கள் இவ்விவரங்களைத் தெளிவாகக் கூறுகின்றன.

எம்.சீ.

**மனை வன்மீறல்:** இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 445-ஆம் பிரிவு மனை வன்மீறலின் (House breaking) இலக்கணத்தைக் கூறுகின்றது. குற்றம் செய்யும்பொருட்டு ஒரு வீட்டிலோ அதன் பகுதியிலோ நுழைதல் அல்லது அவ்வீட்டிலோ அல்லது அதன் ஒருபகுதியிலோ குற்றம் புரிவதற்காக இருந்துகொண்டு அல்லது குற்றத்தைச் செய்து விட்டுக் கீழ்க்காணும் ஏதேனும் ஒரு வகையில் வெளியேறுதல் மனை வன்மீறல் எனப்படும்.

1) வீட்டினுள் அத்துமீறி நுழைவதற்காகத் தம்மாலோ, அந்த வீட்டினுள் அத்துமீறி நுழைவதற்கு உடந்தையாய் இருப்பவர் எவராலோ செய்யப்பட்ட பாதைமூலம் அவர் நுழைந்தால் அல்லது வெளியேறினால், அது மனை வன்மீறலாகும்.

எடுத்துக்காட்டாக 'அ' என்பவர் 'ஔ' என்பவரின் வீட்டுச்சுவரில் ஒரு துளை செய்வதன் மூலம் மனை அத்துமீறல் குற்றத்தைச் செய்து தன்கையைத் துளை மூலம் உள்ளே நுழைத்தல் அக்குற்றமேயாகும்.

2) தன்னைத் தவிர, அல்லது அக்குற்றத்திற்கு உடந்தையாயிருப்பவர் தவிர, வேறு எவராலும் மனிதர் நுழைவதற்குஎனக் கருதப்படாத வழி எதன் மூலமேனும், அல்லது சுவர் அல்லது கட்டடம் மூலம் ஏறிக்குதிப்பது அல்லது ஏறுவதன் மூலம் எந்தவழி கிடைக்கச் செய்து கொண்டாரோ அந்த வழி மூலமேனும் அவர் நுழைந்தால், அல்லது வெளியேறினால் மனை வன்மீறல் குற்றமாகும்.

எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் கப்பலின் தளங்களுக்கு இடையேயுள்ள துளைகளின் மூலம் ஊர்ந்து சென்று கப்பலுக்குள் நுழைகிறார். இங்கு 'அ' மனை வன்மீறல் குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.

ஒரு சாரளத்தின் வழியாக 'அ' என்பவர் 'ஔ என்பவரின் வீட்டினுள் அத்துமீறி நுழைகிறார். இதுவும் மனை வன்மீறல் ஆகும்.

3) எந்த முறையாலும் திறக்கலாகாது என்று வீட்டில் வாழ்பவர் ஒருவழியை வைத்துக்கொண்டிருக்

கிறார். ஆனால், மற்றொருவர் அந்த முறையிலே வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்யும் பொருட்டுத் தம்மால் அல்லது அத்துமீறி நுழைதலுக்கு உடந்தையாக இருப்பவரால் திறக்கப்பட்டு, அந்த வழிமூலம் அவர் நுழைந்தால் அல்லது வெளியேறினால், மனை வன்மீறல் குற்றமாகும்.

எடுத்துக்காட்டாகக் கதவில் இருக்கிற ஒரு துளையின் வழியாக ஒரு கம்பியை விட்டுத் தாழ்ப்பாளைத் தூக்கிவிட்டு அந்த வாயிலின் வழியாக 'ஔ' வின் வீட்டினுள் 'அ' என்பவர் அத்துமீறி நுழைகிறார். இது மனை வன்மீறலாகும்.

4) வீட்டினுள் அத்துமீறி நுழையும் பொருட்டு அல்லது அத்துமீறி நுழைந்த பின்னர் அந்த வீட்டை விட்டு வெளியேறுவதற்காகப் பூட்டு எதையும் திறந்து கொண்டு அவர் உள்ளே நுழைந்தால் அல்லது வெளியேறினால் அது மனை வன்மீறல் குற்றமாகும்.

எடுத்துக்காட்டு: 'ஔ' என்பவரின் வீட்டுச்சாவி காணாமற் போய்விட்டது. 'அ' என்பவர் அதனைக் கண்டு எடுக்கின்றார். பின்னர் அதைப் பயன்படுத்தி 'ஔ' என்பவரின் வீட்டுக் கதவைத்திறந்து நுழைகிறார். அச் செயல் 'அ' வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிறார் எனப்படும்.

5) வன்முறைத் தாக்குதலைப் பயன்படுத்தல் அல்லது தாக்கமுனைதல் மூலம் அல்லது எவரையேனும் அவர் அவ்வாறு தாக்குவார் என்று அச்சுறுத்துவதன் மூலம் ஒருவர் உள்ளே நுழைந்தால் அல்லது வெளியேறினால் அது வன்மீறல் குற்றமாகும்.

எடுத்துக்காட்டு: 'ஔ' என்பவர் தம்வீட்டு வாசலில் நின்று கொண்டிருக்கிறார். 'அ' என்பவர் 'ஔ' என்பவரைஅடித்துக் கீழே தள்ளிப் பலவந்தமாக வழியுண்டாக்கி மனை அத்துமீறல் குற்றத்தைச் செய்கிறார். 'அ' என்பவர் மனை வன்மீறல் குற்றம் செய்தவராவார்.

(6) நுழைவதை அல்லது வெளியேறுவதைத் தடுக்க வழி ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதனை அறிந்தே தம்மால் அல்லது தமக்கு அந்த வீட்டினுள் அத்து மீறி நுழைதலுக்கு உடந்தையாய் இருப்பவரால், கட்டவிழ்க்கப்பட்ட அவ்வழிமூலம் அவர் நுழைந்தால் அல்லது வெளியேறினால் அது அக் குற்றமாகும்.

'ஔ' என்பவர் ஒருவீட்டில் வசித்து வருகிறார். அவ்வீட்டின் கதவொன்றை ஆணியால் பலமாக அடித்துத்திறக்க முடியாதபடி வைத்திருக்கின்றார். 'அ' என்பவர் கருவிகளின் துணையால் ஆணிகளைக் கழற்றிக் கதவைத் திறந்து கொண்டு வீட்டினுள் நுழைகிறார். இது மனை வன்மீறலுக்கு எடுத்துக் காட்டாகும்.

மனை வன்மீறலுக்கு உயர்ந்த அளவாக இரண்டாண்டுகள் சிறைத்தண்டனையும் தண்டத்தொகையும் விதிக்கலாம்.

வீட்டுடன் புறவீடு மற்றும் வேறு ஏதாகிலும் கட்டடங்கள் இருந்து வீட்டிற்கும் புறவீடு அல்லது கட்டடத்திற்கும் போக்குவரத்து வழி இருப்பின் அது வீட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படும்.

கதிரவன் மறைந்த பின்னரும் உதயமாவதற்கு முன்னரும் வன்மீறல் செய்கிறவர், இரவில் மனை வன்மீறல் செய்தவராகக் கருதப்படுவார். இக்குற்றத்திற்கு உயர்ந்த அளவாக மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையும் தண்டத்தொகையும் விதிக்கலாம்.

மீ.அ.

*மனோன்மணீயம்*: சுந்தரம்பிள்ளை கி.பி. 1891-ஆம் ஆண்டில், தமிழில் நாடகம் இல்லாக் குறையைப் போக்கக் கருதி 'இலிட்டன் பிரபு' (Lord Lytton) எழுதிய 'மறைவான வழி' (The Secret Way) என்ற கதையை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மரபிற்கேற்பப் பெயர் முதலியனவற்றை மாற்றி, வடமொழி ஆங்கில நாடக அமைப்பு முறைகளைப் பின்பற்றி இந்நூலை எழுதியுள்ளார். நாடகக் காப்பியம் என்ற வழக்கிற்கேற்ப நாடகக் கூறுகளையும் காப்பியக் கூறுகளையும் புகுத்தித் தத்துவப்பகுதியை ஊர்ப்பெயர், உறுப்பினர் முதலியவற்றால் உள்ளுறையாக வைத்துச் சிவகாமிசரிதம் என்ற ஒரு பகுதியால் நூல் நுவல் பொருளைச் சுருக்கி விளக்கி எழுதியுள்ளார். தமிழிலுள்ள வெண்பா முதலிய பாக்களையும் அவற்றின் இனங்களையும் கருவியாக்கிச் சீவகன் என்பானின் கதையை அடிப்படையாகக் கொண்டு இந்த நாடகத்தைப் பாடியுள்ளார்.

சீவகன் என்ற பெயருடைய பாண்டியன் ஒருவன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான். அவன் களங்கமற்ற நெஞ்சுடையவன். அவனுக்கு அமைச்சனாய் அமைந்த குடிலன் என்பான் சூழ்ச்சித் திறமையும் தன்னலமும் உடையவன் அவன் அரசனுக்குற்றான்போல் நடித்து அரசனைத் தன்வயப் படுத்திக் கொண்டான். தான் கருதிய சூழ்ச்சிகளை மதுரையில் நிறைவேற்றிக் கொள்ள முடியாதென்று துணிந்த அவன், அரசனுக்கு மதுரை வாழ்க்கையில் வெறுப்புண்டாக்கித் திருநெல்வேலிக்குத் தலைநகரை மாற்ற வேண்டுவன செய்து, ஆண்டுக் கோட்டையையும் கட்டுவித்

துக்கொண்டு தலைநகரை மாற்றிவிடுகின்றான். தலைநகர் மாற்றிய குடிலனின் சூழ்ச்சிவழிப்பட்ட சீவகனுக்கு வரும் தீங்கினின்றும் காக்கச் சுந்தர முனிவர் என்னும் பாண்டியன் குலகுரு நெல்வேலிக்குச் செல்கின்றார்.

முனிவர் வருகை உணர்ந்த சீவகன் அவரை வரவேற்றுத் தானமைத்த கோட்டை முதலியவற்றைக் காட்டி அவை நிலைபேறுடையன என்று வியப்ப, அது கண்ட முனிவர் அவற்றின் நிலையாமையைக் குறிப்பாகக் கூறுகின்றார். அரசன் அதனை விளங்கிக் கொள்ளாதது கண்ட முனிவர், அரசன் குடும்பத்திற்கு நலம் பயக்கும் சில செயல்களைச் செய்யக்கருதித் தமக்குத் தனியறை யொன்று வாங்கிக் கொள்கின்றார்.

சீவகனுக்கு மனோன்மணி என்னும் மகள் உள்ளாள். அவள் அழகு, குணம், செயல் முதலியவற்றால் நலமிக்கவள். அவளுக்கு வாணியென்பாள் உற்ற தோழியாவாள். அவள் ஒழுக்கமுடைய உள்ளமுடையவள். தனக்கு நல்லவெனப் பட்டவற்றைப் பின்பற்றும் கோளுடையவள். நெறிமுறை பிறழ்ந்தவற்றைக் கடியும் இயல்புடையவள். அவள் நடராசன் என்னும் அழகனைக் காதலிக்கின்றாள். ஆனால், வாணியின் தந்தை சகடர் என்ற கலைஞர் பொருளாசை உடையவராய்க் குடிலன் மகன் பலதேவன் என்ற ஒழுக்கக்கேடுடைய ஒருவனுக்கு மணங்கூட்டின் தமக்கு நன்மையுண்டாமெனக் கருதி அரசன் துணைநாடித் திருமணம் முடிக்கத் துணிகின்றார். இதுபற்றித் துன்புற்ற வாணியை மனோன்மணி பலவாறு தேற்றுகின்றாள்.

இவ்வாறு ஒழுகும் நாளில் மனோன்மணி தன் பழவினை முதிர்ச்சியால் சேரவரசன் புருடோத்தமன் என்பானைக் கனவிற் காதலித்து, அதன்வழி சுரங் கண்டு துன்புறுவதை அறியா அரசன், மகள் துன்பங் கண்டு வருந்தியபோது, ஆண்டுவந்த முனிவர் மனோன்மணிக்கு நிகழ்ந்த நோய் காமங்காரணமானது என்று தெளிந்து அதற்கு மருந்து மணவினையே என்று கூறி, அவட்குப் பல்லாற்றானும் பொருத்தமுடையான், சேரவேந்தன் புருடோத்தமனே என்றும் கூறி அவன்பால் நடராசனைத் தூது போக்குமாறு கூறிப்போகின்றார்.

வாணியின் தந்தை கூறிய தீ மொழியால் நடராசன்பால் வெறுப்புற்ற பாண்டியன், குடிலன் சூழ்ச்சியால் முனிமொழி துறந்து குடிலனிடம் மணம் பற்றி வினாவுகின்றான. அவன் தன்னலமுடையவனாதலின் சேரன் பாண்டியனுக்கு மருமகனாகவரின் தனக்குக் கேடுவரும் என்று கண்டு, தன் மகன் பலதேவனுக்கு மனோன்மணியை மணங்கூட்டுவித்துக் கொள்ளலாம் என்று கருதி, முனிவர் கூறிய அத்திரு மணத்தைத் தடுக்கத் துணிகின்றான் அதற்கு அரசனிடம், பெண் வீட்டார் முதன்முதலில் மணம்பேசிப் போதல் இழுக்கென்றும், அதனோடு புருடோத்தமன் மனமறியாது போதல் கூடாதென்றும், அதனை அறியப் பழைய நாட்டுரிமை கேட்டுத் தூதுபோக்கினால் அதன் வழி மணச்செய்தியை அறிவித்து விடலாம் என்றும் கூறி, அதற்குத் தக்கான் பலதேவனே என்று அரசன் நம்புமாறு பேசித் தூது போக்குகின்றான். சேரவரசன் புருடோத்தமன் மனோன்மணியைக் கனவிற்கண்டு காமுற்று இன்னாள் என்று அறியமாட்டாது, மனவமைதியின்றி ஏதேனும் போர் நேரின் அதன் வழி மனமாற்றங்கொண்டு அமைதியோடிருக்க எண்ணங்கொண்டு இருக்கிறான்.

இந்த நிலையில் குடிலன் சொன்னவண்ணம் சேரனவையில் தூதுவனாகப் புகுந்த பலதேவன், தன் பெருமைக்கு இழுக்கு வரும் வண்ணம் நடந்து, நாட்டுரிமையை மணத்தோடு இணைத்துப் பேசுகின்றான். அது கேட்டுச் சினந்த சேர வரசன் போர்க் கோலம் பூண்டு பாண்டிநாடு நோக்கிப்புறப்பட்டு வருகிறான். அச்செய்தியறிந்த சீவகனும் தன் படையை ஊக்கிப்போர்க்களம் புகுந்து பொருகின்றான். பாண்டியன் படைக்குத் தலைவனாக இருந்த பலதேவன், ஒருவீரனின் தங்கையைக் காதலித்து மணப்பதாகக் கூறி அவளுக்கு அரசன் மனையிலுள்ள பொற்றொடியையும் கொடுத்து ஏய்ப்ப, அவள் அத்துன்பத்தால் இறப்ப, அது பொறுக்கமாட்டாத அப்படைஞன் பழிக்குப் பழிவாங்க அவனைக் குத்துகிறான். பலதேவன் குத்துண்டு சோர, அப்படை கெட்டபோது அவ்வீரனும் இறக்கின்றான். பலதேவன் மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது பாண்டியன் சீவகன் உயிர் தப்புவது அரிதாகுமாறு தோல்வி நிகழ, மதிற் காவலில் இருந்த நாராயணன் அது கண்டு ஓடிவந்து தன் திறமையால் அரசனை மீட்கின்றான்.

இந்த நாராயணன் என்பான் அரசனுக்கும் நண்பன். பாண்டியனிடம் படைத்தொழிலிலும் பணியாற்றுபவன். குடிலன் சூழ்ச்சியைத் தெளிவாகத் தெரிந்து அரசனை அச்சூழ்ச்சியினின்றும் காக்கவே அரண்மனையில் வாழ்கின்றவன். போர்க்களத்திலிருந்தால் அரசனுக்குக் கேடுவரவொட்டான் என்பதறிந்த குடிலன் இவனைப் போர்க்களத்திற்குப் போகவொட்டாமல் மதிற்காவலுக்கு அனுப்பி வைத்திருந்தான். எனினும், நாராயணனின் மனம் அரசன் பாலதாதலின் சில படை வீரர்களை அரண்காவலுக்கு வைத்துவிட்டுச் சில வீரரோடு களம்புகுந்து படையுழக்கி அரசனை மீட்கின்றான்.

உண்மை வீரனாகிய அரசன் தான் பின்வாங்கி உயிர் பிழைத்தது குறித்துப் பலவாறு கவல, அவனுக்கு

நாராயணன் மனோன்மணியின் தனிமையை நினைப்பூட்டி ஆறுதல் கூறி அவனைத் தற்கொலை புரிந்து கொள்ளாவண்ணம் தகைத்து வைக்கின்றான். அரசன் அவன் நயவுரையால் ஒருவாறு தேறியிருந்த போது, சேரவரசன் தோற்ற பாண்டியனிடம் ஒரு குடம் தாமிரபரணி நீரும், வேப்பந்தாரும் திறைப் பொருளாகத்தந்தால் போரை நிறுத்துவதாகவும், அன்றேல் மறுநாள் போர் தொடுப்பதாகவும் கூறி ஒரு தூதுவனை அனுப்புகின்றான். அதனைக்கேட்ட சீவகன் உயிரைக்கொடுத்தேனும் அடுத்தநாள் பொரு வதாகக்கூறி அனுப்பி விடுகின்றான். பின்னர், ஒரு நாளைக்கேனும் ஒருகால் சேரன் முற்றுகை இட்டால் அரண்மனை தாங்குமா என்று ஆய்ந்தபோது அது பெரிதும் சிதைவுற்றிருப்பதைக்கண்டு அவ்வாறு படை தோற்கவும் அரண் அழியவும் காரணம் என்ன என்று குடிலனைக்கேட்க, அவன் நாராயணனோடு தனக் கிருந்த பகையைத் தணித்துக்கொள்ள அச்சூழ் நிலையைப் பயன்படுத்திக் கொள்கின்றான். அரண்கா வலுக்கு அமைந்த நாராயணன் போர்க்களம் புகுந்து படையைக் கலக்கியதால் போர்க்களத்தும் தோல்வி, அரணின் கண்ணும் அழிவு என்று கூறுகின்றான். அதற்குச் சான்றாகப் பலதேவன் போர்க்களத்தில் ஒரு சேவகனால் தாக்கப்பெற்றதும் நாராயணன் ஏவலாலேயாம் என்று கூறி, இவ்வாறு நாராயணன் செய்ததற்குக் காரணம் அவனைப் படைத்தலைவ னாக்காமையால் போலும் என்று காரணமும் காட்டி விடுகிறான். அன்றியும் சேவகன் பலதேவனைக் குத்துதற்குக் கூலியாக நாராயணன் அரண்மனை வளையலைத்திருடித் தந்திருப்பதாகவும் சொல்லி வளையலையும் காட்டுகின்றான். இவ்வாறு களவு, கொலை முதலிய குற்றத்திற்குரியோன் நாராயணன் என்று அரசன் நம்புமாறு கூறி அவனைக்கழுவேற்ற வும் ஆணையிடச்செய்துவிடுகின்றான்.

இந்த நிலையில் முனிவர் அரசனைக் காண விழைவதாகச் செய்திவர அரசன் கழுவேற்றுவதை நிறுத்தி முனிவரைக்காணச்செல்கின்றான். அரணே தன்னைக்காக்குமென்று செம்மாந்திருந்த அரச னுக்கு முனிவர் அறிவு கொளுத்தி அது அவனை காக்காதென்றும் அரசன் தன்னையும் மனோன் மணியையும் காத்துக்கொள்ளத்தாம் அமைத்த சுருங்கையே துணைபுரியும் என்றும் கூறுகின்றார். அப்போது அரசன் மானங்கருதித்தான் ஒருமுறை சேரனோடு போர் செய்து வெல்வது அல்லது மடிவது என்று உறுதி கொண்டு பேசுவது கண்டு முனிவர் பாண்டிகுலம் வாழ மனோன்மணியையாவது சுருங்கை வழி அனுப்பி வைக்குமாறு கூற அரசன் அதற்கு உடன்படுகின்றான்.

முனிவர் போனபின் சீவகன் பலவாறு கலங்கிக் குரு மொழியிலும் ஐயங்கொண்டு குடிலனை அழைத்து முனிவர்மிக மறைவாக வைத்திருந்த சுருங்கை முதலிய எல்லாவற்றையும் கூற அது கேட்ட அவன், அது வழி தன் கோள் நிறைவேற்ற எண்ணங் கொள்கின்றான். மனோன்மணியை அச்சூழ்நிலையில் தனியாக முனிவரோடு மணவினை முடியாதவளாய் அனுப்புவது தவறு என்று கூறிச் சீவகனையும் உணரச்செய்கின்றான். அப்பொழுது சீவகன் பல தேவனுக்கு மனோன்மணியை மணங்கூட்டலாம் என்று கூறி மண முடிந்தபின் இருவரும் முனிவர் இருக்கை புகலாம் என்கின்றான். குடிலன், சூழ் நிலையை நன்கு பயன்படுத்தி அரசனைத் தன் மகன் மணத்திற்கு உடன்படச்செய்துவிடுகின்றான்.

ஆனால், அவன் அதோடு நில்லாமல் முனிவர் வகுத்த சுருங்கை வழியைக்காண அவாவி அதனைக் கண்டு அதன் வழிப் புறம் போகின்றான். அது புருடோத்தமன் பாசறைக்குக்கொண்டு செலுத்த ஆண்டு அவன் உலவிக்கொண்டிருக்கக் காணுகின் றான். கண்டவன் தான் இதுகாறும் செய்த சூழ்ச்சி புலப்பட்டாலோ அன்றித்தன் மகன் பண்பற்ற செயலாலோ தனக்குக்கேடு வரும் என்று ஐயுற்றுச் சேரனிடம் கற்படை காட்டிச் சீவகனைக்காட்டிக் கொடுத்துச் சேரன் விழைந்த தாமிரபரணி நீரையும் வேப்பந்தாரையும் தான் தந்து அரசனாக வாழலாம் என்று துணிந்து புருடோத்தமனை அணுகுகின்றான்.

அப்பொழுது கனவிற் கண்ட காதலியை நினைத் துப்புலம்பிக் கொண்டிருந்த புருடோத்தமனிடம் குடிலன் தன் கருத்தைக்கூறப் பாண்டியன்பால் பரி வுடைய புருடோத்தமன் விலங்கிட்டு அவன் காட்டிய சுருங்கை வழி அழைத்து வருகின்றான்.

இந்த நிலையில், சீவகன் தன் மகள் மனோன் மணியைப் பலதேவனுக்கு மணமுடிக்கத் துணிந்த செய்தியை அவளிடம் கூற, அவள் துணுக்குற்றாளே னும் தந்தைக்கும் நாட்டிற்கும் நிகழ்ந்த ஏதங் காக் கத் தன்னலம் பேணல் ஏற்றதன்று என்று துணிந்து, தன்னலமிழக்கவும் துணிகின்றாள். அதே நினைவால் தனக்குக் கேடுவரினும் தன்னைச் சார்ந்தோர் நலங் கருதி அரசனால் கழுவேற்ற நின்ற நாராயணன் விடு தலையையும் அரசனால் தடையுற்றுக் கிடந்த வாணி யின் திருமண நிறைவேற்றமும் நடைபெறவேண்டு மென்று அரசன்பால் கேட்டுக்கொள்கின்றாள்.

அரசன் ஆணைவழித் திருமண நிகழ்ச்சிகளுக்குரி யன நள்ளிரவில் நடைபெறுகின்றன. முனிவரும் நடராசனும் ஆண்டு வருகின்றனர். கற்படைக்கருகி லுள்ள மணவறையை ஒப்பனை செய்து அதில் குடி லன் ஒழிய மற்றைய யாவரும் குழுமி மண நிகழ்ச்சி யைத் தொடங்குகின்றனர். மனோன்மணியை மண

வறைக்கு அழைக்கின்றனர். அதே நேரத்தில் புருடோத்தமன் குடிலனை விலங்கிட்டு அக்கற்படை வழி அழைத்து வருகின்றான். திரைக்குப்பின் மணமாலையோடு பலதேவன் முன் வந்து நின்ற மனோன்மணியைக்கண்டு தான் கனவிற்கண்ட காதலி அவளே என்று துணிந்து அருகிற்செல்ல அவனைக்கண்ட மனோன்மணியும் கனவிற் கண்டான் அவனே என்ற துணிவால் மாலையிட்டு அவன் மார்பிடைச் சாய்ந்து உணர்வற்றுப் போகின்றாள்.

இவ்வாறு மணங்குறித்த பலதேவனுக்கு வேறாக மணவறை புகுந்த அயலான் ஒருவனுக்கு மனோன்மணி மாலையிட்டது கண்ட சீவகன் முதலியோர் திடுக்கிட்டு அது சூழ்ச்சி எனக் கருதிப்பொருதற் கெழுந்தபோது, முனிவர் கையமர்த்தி அமைதியை நிலைநாட்டுகின்றார். அப்போது புருடோத்தமன் குடிலன் செய்த சூழ்ச்சியனைத்தையும் வெளிப்படுத்திக் குடிலனைப் பாண்டியன்பால் ஒப்புவிக்கவே தான் ஆண்டுவந்ததாகவும் வந்தஇடத்தில் கனவிற்கண்ட காதலியைக் காண அவளும் மாலையிட அவளை ஏற்றதாகவும் கூறி அவளோடு தான் பாசறை புகுவதாகவும், அரசன் விருப்பம்போல் மீண்டும் பொரலாம் என்றும் கூறி அகலும் எல்லையில் முனிவர் சீவகனை நோக்கி மகளையும் மருமகனையும் வாழ்த்துமாறு பணிக்க அவனும் வாழ்த்துகின்றான். மணம் இனிது முடிகின்றது. அது கண்ட எல்லோரும் இன்புறுகின்றவர்.

கு தி.


**மா** ஒட்டிய உதடுகளைத் திறந்து அங்காந்த நிலையில் மூக்கொலியாக வெளிப்படுத்தப்படும் ஒலியே மா ஆகும்.

ஓரெழுத்து ஒரு சொல்லாகப் பல பொருட்களைத் தர வல்லது. அவை; விலங்கு, குதிரை, யானை முதலியன. வண்டு, அன்னம், மாமரம், இலக்குமி, சரசுவதி, செல்வம், அளவை, நிறை, கீழ்வாயிலக்கத்தில் 1/20 மதிப்பு, வானத்தில் சிங்கஇராசி, சீலை, ஆணி, வயல், வெறுப்பு, கானல், பெருமை, அழகு, நிறம், பெண், பொடி, துகள், நஞ்சுக்கொடி, வெறும் அசைச்சொல் எனவும் பொருள்படும்.

**உருவம்:** மகரத்திற்குச் சொல்லப்பட்ட உருவமே இதற்கும் பொருந்தும். கி.பி 3 – ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6,7– ஆம் நூற்றாண்டு வரை 'ஆ' நெடிலுக்குரிய குறி வலப்புறக் கோடாக அமைந்தது. ...



கி.பி.7,8 – ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ் எழுத்தில் மற்ற எழுத்துகளுக்கு இடப்பட்ட கால்தான் இங்கேயும் உருப்பெற்றது. ... ...



கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கால் முழுதும் வளர்ந்து பிரித்தெழுதப் பட்டது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விசயநகரக் கல்வெட்டுகளில் காலின் முழுஉருவமும் காணப்படுகின்றது.... ... ...

வட்டெழுத்தில் இறுதிவரை ஒரு நேர்கோடாக வலப்புறத்தில் அமைந்தது. இரண்டாம் உருவம் கி.பி.8-ஆம் நூற்றாண்டு வரையிலும் தொடர்ந்தது. மற்றது பிற்காலத்தில் மாறாமலேயே எழுதப்பட்டது. ...



கே.ஜி.கி.


*மாக் என்றி*: இவர் உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவப் பிரிவைச் சார்ந்த ஒரு சமயகுரு. சமயகுருவாகத் தம் கடமையைச் செய்ததோடு, தொல்பொருளில் இவர் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக கி.பி. 1825-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1841-ஆம் ஆண்டின் இறுதிவரையுள்ள காலங்களில் தென்மேற்கு இங்கிலாந்தின் தென்திவோனில் உள்ள தார்கொரி என்னுமிடத்தில் அமைந்துள்ள கெண்ட்டு குகையை அகழாய்வு செய்யும் பணியையும் ஆற்றினார். இவரால் அங்குக் கண்டுபிடிக்கப்பட்ட பழங்கால மனிதனின் கருவிகள், அவர்களால் வேட்டையாடப்பட்ட மிருகங்களின் எலும்புகள் ஆகியவை கற்கால மனிதனின் வரலாற்றுச் சிறப்பை அறிய உதவும் மிகப் பெரிய சான்றுகளாகும். அங்கே காணப்பட்ட பழைய கற்கால மனிதனின் கருவிகள் அச்சுலியன் வகையைச் சார்ந்தவையாக உள்ளன. மேலும், அக்கண்டுபிடிப்பே பிரிட்டனில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றில் பழமையானதாகக் கருதப்படுகிறது.

மாக் என்றி கண்டுபிடித்துக் கூறியன அக்கால வரலாற்றிஞர்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதனால் இவர் தம் கண்டுபிடிப்புகளின்

முடிவுகளை வெளியிடவில்லை. இவர், கி.பி. 1841-ஆம் ஆண்டு உயிர் நீத்தார். ஆனால், இவர் தம் முயற்சிகள் இவரது இறப்பிற்குப் பின்பும் மற்றவர்களால் நிறைவேற்றக் காரணமாக இருந்தன. இவரது அடிச்சுவட்டைப் பின் பற்றி ஆசிரியரும், நிலவியல் மேதையுமான வில்லியம் பெங்கலி கி.பி. 1840 முதல் 1850 வரை மாக் என்றியால் ஆய்வு செய்யப்பட்ட அதே இடத்தை மேலும் அகழாய்வு செய்தார். இவரும், மாக் என்றியின் கூற்றையே வலியுறுத்தினார். இருப்பினும், 1959-ஆம் ஆண்டுவரை ஏற்றுக் கொள்ளப் படாமலேயேயிருந்த மாக் என்றியின் கூற்று, அதே ஆண்டு திவோனுக்கு அருகிலேயே உள்ள விண்ட்கில் மலையில் ஒரு புதிய குகை கண்டு பிடிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட பின்னர், பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பா.ஜெ.

*மாக்கியவெல்லி, நிக்கோலா,* என்பவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் இத்தாலிய அரசியல் சிந்தனையாளர். இவர், இடைக்கால அரசியல் வரலாற்று மரபுகள் மறைந்து இக்கால வரலாற்று மரபுகளின் தொடக்கத்தைக் காட்டும் சிந்தனையாளராகக் கருதப்படுகிறார்.

**வரலாறு**: நிக்கோலா மாக்கியவெல்லி (Nicholo Machiavelli) இத்தாலிய நாட்டின் சுதந்திர நகரங்களுள் மிகச்சிறப்புடன் விளங்கிய பிளாரன்சில் (Florence) கி.பி. 1469-இல் பிறந்தார்; இவர் பிறந்து வளர்ந்த நகரம், செல்வமும், பண்பாட்டு வளர்ச்சியுமுடையதாகவும், அறிவுவளர்ச்சி மையமாகவும் இருந்தது. அதை ஆண்ட மெடிசிக் (Medici) குடும்பத்தார் பதவி நீக்கம் செய்யப்பட்டு, அது ஒரு குடியரசாக ஆட்சி செய்யப்பட்டபோது, அதன் ஆட்சிப் பணியில் பங்கு பெறுவதற்கு மாக்கியவெல்லிக்கு வாய்ப்புக்கிட்டிற்று. அதனால் இவருடைய அரசியல் சிந்தனை வளர்ந்தது. இவர் கி.பி. 1498 முதல் கி.பி. 1512 வரை பிளாரன்சின் ஆட்சிக்குழுவின் முக்கிய செயலாளர்களுள் ஒருவராகப் பணி செய்தார். அந்தப் பதவியின் காரணமாக இவர் அயல்நாட்டுத் தூதுக் குழுக்களிலும் பணி செய்தார். இவர் தம் காலத்தில் இருந்த சுதந்திர நகரமாகிய உரொமாக்னாவின் (Romagna) ஆட்சியாளர் சீசரே போர்சியா (Ceasre Borgia) என்பவர், எவ்வாறு தமதாட்சிக்கு எதிராகத் தம் நாட்டில் தோன்றியவர்களைச் சிறிதும் இரக்கமின்றி ஒழித்தாரென்பதை நேரில் கண்டு, ஆட்சியாளரின் பாதுகாப்புக்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் இவர் கையாண்ட வல்லந்தமான, தந்திர முறைகளெல்லாம் மிகவும் சரியானவையே என்று ஒப்புதலளித்தார். இவர் கி.பி. 1500-இல் பிரான்சுக்கும், கி.பி. 1507-இல் செருமனிக்கும் தம் நாட்டின் தூதுவராகச் சென்று, அவற்றிலுள்ள அரசியல் நிறுவனங்களின் இயல்பையும், அரசியல் வலிமையையும் ஆய்வு செய்தார். இவர் ஆட்சிப் பணியிலிருந்தபோது, நாட்டின் பாதுகாப்புக்குக் கூலிப்படை (Mercenary army) சிறிதும் உகந்ததன்று என்றும், கட்டாய இராணுவப்பணிமுறை வழியாக (Conscription), பிளாரன்சுக்கு நாட்டுப்படை (தேசியப்படை - National Army) ஒன்று, திரட்டுதல் வேண்டுமென்றும் ஆலோசனை கூறினார். அந்த அறிவுரையே இவருடைய காலத்தில் மட்டுமல்லாமல், இவருக்குப் பின்னரும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிளாரன்சில் கி.பி. 1512-இல் மெடிசிக் குடும்பத்தார் மீண்டும் ஆட்சியாளராக வந்தனர். அதனால் மாக்கியவெல்லி பதவி இழந்து, சிறைப்பட்டுப் பின்னர் நாட்டினின்றும் நீக்கப்பட்டார். இவர் அரசியல் வாழ்விலிருந்து விலகிச் சான்காசியானோ (Sancasciano) என்னுமிடத்தில் தங்கினார். இவர் பிளாரன்சில் கி.பி. 1527-இல் காலமானார்.



மாக்கியவெல்லி

இவர் தாம் அரசியலிலிருந்தபோது பெற்ற அனுபவங்களையும், சீசரே போர்சியா பின்பற்றிய முறைகளையும், தம் காலத்தில் இத்தாலியில் பல நாடுகளில் நிலவிய குழப்பமான அரசியல் சூழ்நிலைகளையும் அடிப்படையாக வைத்துத் தம் அரசியற் கருத்துகளை உருவாக்கினார். இவர் வாழ்ந்த காலம் இலக்கிய மறுமலர்ச்சிக்காலம் (Renaissance) ஆகும். அதில் உள்ள கிறித்தவரல்லாத பண்டைய கிரேக்க, உரோமானியச் சிந்தனையாளர்களுடைய, சமயச் சார்பற்ற, உலகியல் சார்ந்த கருத்துகளெல்லாம் பல புலவர்களால் மீண்டும் விரும்பிக் கற்கப்பட்டன, வரவேற்கப்பட்டன. அவர்களுடைய இலக்கியப் படைப்புகளின் சாயலில் தேசிய மொழிகளில் உலகியல் வாழ்

வின் நோக்கில் பல புதிய இலக்கியங்கள் தோன்றின. இவ்வாறு பல மனித இயல்புப் புலவர்கள் (Humanist Scholars) இத்தாலியிலும், மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் தோன்றினர். அவர்களுடைய உலகியல் வாழ்வின் நோக்கம், மாக்கியவெல்லியின் சிந்தனையையும் வளர்த்தது. மேலும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இத்தாலிய நாடுகளை வென்று தத்தம் ஆட்சிக்குள் கொண்டுவரும் நோக்கத்துடன், இத்தாலியில் பிரான்சு, இசுபெயின் (Spain), ஆசுத்திரியா முதலிய அண்டை நாடுகள் தலையீட்டையும் குடியரசு அமைப்பையும், மக்கள் உரிமை உணர்வையும் உடைய பிளாரன்சு நாடு, போப்பு (Pope), பேரரசர் (Emperor), பிரான்சு அரசர் ஆகியோரிடையே ஏற்பட்ட போர்களின் காரணமாக ஒரு பகடைக் காய் போலானதையும் மாக்கியவெல்லி கண்டார். இச்சூழ்நிலையில் அவர், 1) ஒழுக்க விதிகளுக்கோ, சமயநெறிகளுக்கோ கட்டுப்படாமல் அரசியலில் தன்னியல்பாகச் சிந்தித்தல் வேண்டுமென்றும், 2) அரசு என்பதைப் பற்றித் தனிப்பட்ட ஒரு காரணத்தோடு கூடிய கருத்தை உருவாக்குதல் வேண்டுமென்றும், 3) சாதாரண மனிதர்களுக்குப் பொருந்தக் கூடிய ஒழுக்க விதிகளுக்கு உட்படாத அரசியல் ஒழுக்கத்தைப் பற்றிய ஒரு கருத்தை (Political Morality) உருவாக்குதல் வேண்டுமென்றும், 4) அரசியல் வாழ்வில் அதிகாரம் அல்லது வல்லந்தமே (Power) எதையும் இறுதியாக முடிவுசெய்யவல்லது என்ற கருத்தை உருவாக்குதல் வேண்டுமென்றும் உணர்ந்தார். அவர் எழுதிய நூல்கள் இளவரசர் (The Prince, கி.பி. 1513), உரைகள் (Discourses, கி.பி. 1519), போர்க்கலை (கி.பி. 1519), பிளாரன்சின் வரலாறு (கி.பி. 1525) முதலியவை ஆகும்.

**அரசியற் கருத்துகள்:** 'அரசை நிலைத்திருக்கச் செய்தற்கு முழு வல்லாட்சியுடைய (Absolutism) முடியாட்சியே இருத்தல் வேண்டும். அரசுகளின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் கூறும் வரலாற்றிலிருந்து, அரசு வீழாமல் தடுத்தற்கு அரசியலறிஞர்கள் என்னென்ன வழிகளைக் கையாளுதல் வேண்டுமென்பதை யாவரும் அறியலாம். அரசியல் நோக்கங்களுக்காக ஒழுக்கத்துக்குப் புறம்பான வழிகளைக் கையாளுதற்கு ஆட்சியாளர் தயங்குதல் கூடாது. ஏனெனில், அரசாங்கத்துக்கு அடித்தளமாக அமைந்திருப்பவை பெரும்பாலும் வல்லந்தமும் அரசியல் தந்திரமுமே (Craft) ஆகும்.' பண்டைக் காலத்தில் உரோமானியக் குடியரசில் மக்களுக்கு ஆட்சியில் பங்கு அளித்திருந்த குடியரசு முறை மிகவும் பாராட்டுக்குரியதுதான்; ஆனால், அத்தகைய ஆட்சி முறை, மாக்கியவெல்லியின் காலத்தில் இத்தாலியில் காணப்பட்டது போல, வல்லந்தமும், சூழ்ச்சியும், ஒழுக்கக் கேடும், முறைகேடும், தன்னலமும் நிறைந்த எந்த ஒரு சமுதாயத்துக்கும் ஒத்துவராது. அத்தகைய சமுதாயத்திலே ஒழுக்க விதிகளைப் புறக்கணித்து, வல்லந்தத்தையும் தந்திரமுறையையும் கையாளுகிற ஆட்சியாளரால்தான் ஒற்றுமையையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்தவியலும்; அவரால்தான் நாடு சிதறுண்டு போகாமல் நிலைத்து நிற்கும்.

**ஆட்சியாளர் பின்பற்ற வேண்டிய தந்திரமுறைகள்:** ஆட்சியாளர், எந்த ஓர் அரசியல் சூழ்நிலையிலும் தமக்குச் சார்பாக உள்ள குணங்களையும், தமக்கு எதிரான குணங்களையும் உணரும் திறமை உடையவராகவும், தமது எதிரியினுடைய மனஇயல்புகளையும், செல்வ ஆதாரங்களையும் தெளிவாகவும், நிதானமாகவும் உணரக்கூடியவராகவும், தாம் பின்பற்றும் கொள்கை எதுவாக இருப்பினும் அது எந்த அளவுக்கு அல்லது வரம்புகளுக்குள்ளாகச் செயற்படுதல் கூடுமென்பதை மிகமிகத் துல்லியமாக மதிப்பிடக் கூடியவராகவும், நடப்பிலுள்ள அரசியல் நிகழ்ச்சிகளின் பின்விளைவு எது என்று முன்னதாக, பிழையற உணரக்கூடிய பொது அறிவு பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

ஒரு கவனமான ஆட்சியாளர் தாம் பிறருக்குக் கொடுத்திருக்கும் வாக்குறுதியை நிறைவேற்றினால் தம்முடைய நலனுக்குக் கேடு அல்லது அழிவு உண்டாகுமென்று தெரிந்தாலும் அல்லது வாக்குறுதியை அளிக்குமாறு தம்மைத் தூண்டிய சூழ்நிலைகள் மறைந்துவிட்டாலும், அவர் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுதல் கூடாது. வாக்குறுதியை நிறைவேற்றுதல் என்பது எல்லா மக்களும் நல்லவர்களாக இருக்கும்போது அமைய வேண்டிய நல்ல ஆணையாகும். ஆனால், மக்கள் எல்லோரும் மிகவும் கெட்டவர்களாக அல்லது தீயவர்களாக இருப்பதாலும், அவர்கள் தமக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற மாட்டார்களாகையாலும், தாமும் அவர்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுதலில் கருத்தாக இருத்தல் கூடாது.

அவர் அரசை ஆற்றலுடையதாக ஆக்குதல் வேண்டும். அதற்கு வீழ்ச்சியை உண்டாக்கும் தவறுகளைச் செய்தலாகாது; அவர் தக்க அரசியலை, இராணுவ வழிகளைப் பின்பற்றி, வலிமைமிக்கதாக ஆக்குதல் வேண்டும். இதற்குச் சமூக முறைகளும், சமய விதிகளும், ஒழுக்க நெறிகளும் எந்த அளவுக்குத் துணை செய்யுமோ, அந்த அளவுக்குத்தான் அவற்றைப் பின்பற்றுதல் வேண்டும். அரசியலின் ஒரே நோக்கம், ஆட்சியாளர் அரசியலதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளுதலும், அதனைப் பெருக்குதலுமேயாம்; ஆகையால் அவற்றை அடைதலில் ஏற்படும்

வெற்றி ஒன்றுதான், அரசியலைச் சரியா, தவறா என்று மதிப்பிடுவதற்கு உரிய அளவுகோலாகும். ஒரு கொள்கை கெட்டதா, கொடியதாக நம்பத்தகாததா, சட்டத்துக்குப் புறம்பானதா என்று ஆய்வு செய்தல் வேண்டுவதில்லை.

ஒரு தீங்கு நாட்டிலே வேரூன்றி விட்டால், அதை வல்லந்தமாக நீக்க முயலுதல் இடர்ப்பாட்டைத் தரும்; அப்போது அத்தீங்கின் கடுமையைத் தணித்தலும், அதனை ஏற்றுக் கொள்ளுதலும் தான் உகந்த செயலாகும் (Prince, Part - I - 33).

மனிதர்கள் முதலில் தங்களை மற்றவர்களுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முயலுகிறார்கள். அதன் பின்னர், அவர்கள் மற்றவர்களை ஒடுக்க முயலுகின்றனர். இதுதான் வழக்கமான நிலை (I - 46). சீற்றத்தால் கொதித்து எழும் ஒரு கூட்டத்தை அடக்கி வைத்தற்கு, கடுமையான தோற்றமும் அதிகாரமும் உடைய ஓர் ஆளுக்குத்தான் மிக்க ஆற்றலுண்டு; அத்தகையோர் இருத்தல் வேண்டும் (I-54). பண்டைய உரோம் நகரரசு தன் அண்டை நாடுகளை அழித்து விட்டு, அயலவராகிய அம்மக்களுக்கு உரோமானியக் குடிமை உரிமைகளை வழங்கியதனால், அது புகழும், ஆற்றலும் உடையதாயிற்று. அது போல ஆட்சியாளர் தம் நிலையைப் பாதுகாத்தற் பொருட்டு, மற்றவர்களை ஒடுக்கியபின் அவர்களுக்குத் தமதாட்சியின் நற்பயன்களை அளித்தல் வேண்டும் (II - 3). எந்த அரசிலும் அதற்குத் தொன்றுதொட்டு இருந்து வந்த பழைமையான நிறுவனங்களை அதில் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்தால் தான், அது நிலைத்து நிற்கும் (III - 1). போரிலே வஞ்சகமான, ஏமாற்று வேலையைக் கையாளுதல் தக்கதொரு செயல் மட்டுமன்று, அது புகழுக்கு உரியதுமாகும் (III 40). தன் நாட்டைக் காத்தற்கு ஒருவன் நல்ல வழிகளை மேற்கொண்டாலும் சரி, தீயவழிகளை மேற்கொண்டாலும் சரி, அவனுடைய நோக்கம் மாறாமலிருக்கும் வரை அவன் செய்பவை எல்லாம் சரியே(III-41). ஒரு நாட்டின் நல்ல குடியான எவனும் தன் நாட்டு நலத்தின் பொருட்டுத் தனக்கு இழைக்கப்படும் தீங்குகளைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்(III-47).

ஒரு வெற்றியான அரசு என்பது ஓர் ஆளினால் தான் நிறுவப்படுதல் வேண்டும். அவர் தோற்றுவிக்கும் அரசாங்க அமைப்பும், சட்டங்களும் தான் நாட்டு மக்களின் பண்பை உருவாக்குகின்றன. ஆகையால் அத்தகைய அரசியலறிஞர் தம் அரசியல் தொழிலின் விதிகளை நன்கு அறிந்து பின்பற்றும் வரை, அவருடைய அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட செயல் எதுவும் இல்லை. அவரால் பழைய அரசாங்க அமைப்பை முற்றிலும் ஒழித்துவிட்டு முற்றிலும்புதிய அரசாங்க வடிவங்களை அமைத்தலும், குடிமக்களை இடம் விட்டு இடம் மாற்றுதலும், புதிய பண்புகளை உருவாக்குதலும் இயலும். அவர், ஒரு புதிய சமூகத்தையே அதன் ஒழுக்க, சமய, பொருளாதார நிறுவனங்களோடு உருவாக்கியவருமாவார்.

மாக்கியவெல்லியின் அரசியற் கருத்துகள் இத்தன்மையன என்று அறுதியிட்டுக் கூற இயலாதவாறு ஒரு புதிராக இருக்கின்றன. சூழ்நிலைகளுக்கேற்றவாறு ஆட்சியாளர் ஒழுக்க விதிகளைப் புறக்கணித்து, வஞ்சனையாகவும் வல்லந்தமாகவும் அரசையும், ஆட்சிப் பதவியையும் காத்துக் கொள்ளுதல் வேண்டுமென்று வலியுறுத்துகிற அவர், ஒழுக்க, சமய விதிகளில் நம்பிக்கையற்றவரல்லர். அவர் அவற்றில் நம்பிக்கை உடையவரேனும், அவற்றை ஆட்சியாளர் தம் வெற்றியின் பொருட்டுப் புறக்கணிக்கலாமென்பதனால், அவரை மனித நற்பண்பில் நம்பிக்கை இல்லாத, ஒரு குறைகாணும் இயல்பினர் (A cynic) என்று கூறுவர். சமய, ஒழுக்க விதிகள் அரசியல் நோக்கத்துக்குத் தடையாக இருத்தலாகாவென்று அவர் கருதி அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. அவ்வகையில் அனுபவ முறைக்கு ஏற்ற அரசியற் சிந்தனையை உருவாக்கினார். அவர் சமூக, பொருளாதார, சமயச் சிக்கல்களின் ஈடுபாடின்றி, அரசியல், அரசியற் சூழ்ச்சி, போர்க்கலை ஆகியவற்றில் மட்டுமே ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு எழுதினாராகையால், அவர் எழுதியது அரசியல் கொள்கை எதனையும் பற்றியதாக இராமல் அரசியல் தந்திரக் கலை (Diplomacy) பற்றியதாகுமென்று பேராசிரியர் சபைன் (Sabine) கூறுகிறார். அவர் எழுதியவாறு அரசியல் சூழ்ச்சிக் கலையில் வல்லவர்களாகத்தான் இக்கால வரலாற்றில் கூறப்படும் வல்லரசாளர்கள் காணப்படுகின்றனர். மேலும் அவர், அரசு என்ற சமூக அமைப்புக்குக் கொடுத்துள்ள பொருளே இக்கால அரசியல் வழக்கில் காணப்படுகிறது. இக்காலத்தில் அரசு என்பது ஒரு ஒழுங்காக அமைக்கப்பட்ட வல்லந்தம் ஆகும். அது தனது நில எல்லைக்குள் தலைமை அதிகாரத்தை உடையதாகவும், மற்ற அரசுகளோடு ஒப்பிடுமிடத்துத் தனது வலிமையை வளர்த்துக் கொள்ளும் கொள்கையைப் பின்பற்றுவதாகவும், இக்காலச் சமூகத்தில் உள்ள மற்றெல்லா நிறுவனங்களையும் விடக் கூடுதலான வலிமை உடையதாகவும், அவற்றை அடக்கி ஆளும் உரிமை பெற்றதாகவும் இருக்கிறது.

ஆயினும் அவருடைய கருத்தில் குறைபாடுகளும் காணப்படுகின்றன. மனித இயல்பைப்பற்றி அவர் ஒரு தவறான, குறுகிய எண்ணம் கொண்டிருந்தார். மேலும் அவர் அரசு என்பது ஒரு குறிக்கோளே

தவிர, அது வேறொரு குறிக்கோளை அடைவதற்கு உரியவழி ஆகாது என்று தவறாக எண்ணி, ஆட்சியாளருக்கு இருக்கவேண்டிய தந்திர முறைகளை அவர் மிகைப்படுத்திக் கூறுதலினால் அரசியல் தந்திரக் கலையே அது கையாளப்படுதற்கான நோக்கங்களைவிட மிக முக்கியமானது என்று கருதக்கூடிய ஒரு விரும்பத்தகாத முடிபு தோன்றுகிறது. 'அரசும், ஆட்சி அதிகாரமும் குறிக்கோளல்ல, அவை குறிக்கோள்களை அடைய உதவும் வழிகளே ஆகும்', என்பதே தாராள இயல்புடைய அரசுக்கோட்பாடு ஆகும். மேலும், அரசியல் வெற்றிக்கு ஆட்சியாளரின் அறிவுக்கூர்மை மட்டும் காரணம் ஆகாது; அவரால் ஒதுக்கப்பட்ட ஒழுக்க, சமய, பொருளாதார காரணிகளும் அரசியலை உருவாக்க வல்லவையே ஆகும். மாக்கியவெல்லி எவ்வாறு தம் அரசியல் சிந்தனையில் சமய உண்மைக் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லையோ, அவ்வாறே இக்கால அரசியல் சிந்தனையினின்றும் சமயக் கருத்துகள் ஒதுக்கப்படுகின்றன என்பது உண்மையே. ஆயினும், அவர் வாழ்ந்த காலத்தை அடுத்த இரு நூற்றாண்டுக் காலத்தில் சீர்திருத்தக் கிறித்தவ இயக்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட புதிய சமயக் கருத்துகள் ஐரோப்பிய அரசியல் சிந்தனையில் உண்டாக்கிய தாக்கத்தைப்பற்றி அவரால் ஏதும் கூற இயலவில்லை. பா.சூ.

**துணை நூல்கள்:**

**Butterfield, H.,** The Statecraft of Machiavelli, New York, 1956.

**Whitefield, J.H.,** Machiavelli, Oxford, 1947.

*மாக்சிமிலியன்:* மாக்சிமிலியன் என்னும் பெயரில் பல நாடுகளில் பல மன்னர்கள் ஆண்டுள்ளனர். அவர்களுள் முக்கியத்துவம் வாய்ந்த சிலரைப் பற்றி இங்குக் கூறப்படுகிறது.

**முதலாம் மாக்சிமிலியன்** (கி.பி. 1459–1519) புனித உரோமானியப் பேரரசராக விளங்கியவர். செருமனியின் மன்னராகவும் செயற்பட்ட இவர், போர்ப் படைத் தொடர்பாகச் சீர்திருத்தங்கள் சிலவற்றைப் புரிந்தவர். கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்ட முதலாம் மாக்சிமிலியன் (Maximilian I) தாமே சில நூல்களை எழுதியுள்ளார். எளிமைப் பண்பும் வேட்டைத் தொழிலில் நாட்டமும் கொண்ட இவர், ஆசுதிரியாவின் மன்னர் என்ற முறையில் தமது ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களில் கூட்டாட்சி அரசிற்காக அடிக்கல் நாட்டினார் எனலாம்.


வியன்னாவிலுள்ள நியுசுடாடில் (Neustadt) கி.பி. 1459 – ஆம் ஆண்டில் பிறந்த இவர், ஆசுதிரியாவின் பெரிய கோமகனாக விளங்கினார். ஆப்சுபர்க்கு மரபின் மூன்றாம் பிரடரிக்குப் பேரரசருக்கும், போர்ச்சுகல் நாட்டின் எலியோனோருக்கும் (Eleonore) மூத்த மகனாகத் தோன்றிய மாக்சிமிலியன், கி.பி.1477-இல் பர்கண்டிக் கோமகன் சார்லசின் மகளான மேரியை மணந்தார். பிரான்சுப் பேரரசரான பதினொன்றாம் உலூயி, மேரிஅரசிக்குரிய சில இடங்களைக் கைப்பற்ற முயற்சிசெய்ததால் இருவருக்கும் பகைமை ஏற்பட்டது. ஆருடாய்சிலுள்ள கினிகேட்டில் கி.பி. 1479-இல் பிரான்சுப்படையை மாக்சிமிலியன் தோற்கடித்தார். இருப்பினும் கி.பி. 1482 –இல் பர்கண்டியைப் பிரான்சு அரசருக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று. அடுத்துக் கெல்டர்லாந்தில் (Gelderland) நடைபெற்ற புரட்சியை அடக்குவதில் இவர் வெற்றி கண்டார். இவர் மனைவி மேரி கி.பி. 1482-இல் இறந்தார். பின்னர்ப் பர்கண்டியை இவர் மீட்டார்.

இவர் அர்ராசு (Arras) உடன்படிக்கையினை கி.பி 1493 -இல் ஒப்புக் கொண்டார். அதன்படி இவர் மகள் மார்கரட்டைத்தௌபின் (எதிர்காலப் பிரான்சின் சார்லசு VIII) என்பாருக்குத் திருமணம் செய்ய உறுதி செய்தார். நெதர்லாந்தில் போரைத் தொடங்கிய இவர் கி.பி. 1483–இல் உட்ரெக்டில் தோன்றிய புரட்சியை ஒடுக்கினார். உரோம் திரும்பிய மாக்சிமிலியன் உரோமானியர்களின் மன்னராகப் பிராங்க்பர்ட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கி.பி.1486–இல் முடிபுனைந்து கொண்டு நெதர்லாந்து திரும்பினார். பிரான்சுடன் போரிட்ட இவர் கி.பி. 1488-இல் பிரான்சு மன்னரால் சிறைசெய்யப்பட்டார். பிரான்சு மன்னருடன் கி.பி. 1489-இல் பிராங்க் பர்ட்டு உடன்பாட்டில் கையெழுத்திட்டார். திரோலை (Tirol) கி.பி. 1490-இல் வென்று இணைத்துக் கொண்டார். இவர் தந்தையார், கி.பி. 1493 -இல் இறந்ததால், செருமானிய நாடு முழுமைக்கும் இவர் மன்னரானதுடன் ஆப்சுபர்க்கு அரசகுடியின் தலைவராகவும் ஆனார். மிலான் கோமகனின் மகளைக் கி.பி. 1494 – இல் மணம் புரிந்தார். இத்தாலியில் பிரான்சுக்காரர்களின் வெற்றிகளைத் தடுத்து நிறுத்துவதில் பெருமுயற்சிகள் மேற்கொண்ட போதிலும், போரில் தோல்வியே கண்டார். ஆங்கில நாட்டு 8 – ஆம் என்றிக்கு உதவி செய்து, குதிமுள் (Spurs) போரில் வெற்றி பெற கி.பி. 1513 – இல் பாடுபட்டார்.

இசுபெயின் நாட்டு இளவரசியைத் தம் மகனுக்கு மணம் செய்வித்து, இசுபெயினைத் தம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். இதனைப் போன்று தம் பேரனையும் பேத்தியையும் முறையே பொகீமியா




மாக்சிமிலியன் – ரோமப் பேரரசு



மாக்சிமிலியன் – சோசப்




மாக்சிமிலியன் – மெக்சிகோ



மாக்சிமிலியன் – பாதன்




மாக்சிமிலியன் -இம்மானுவேல்



மாக்சிமிலியன் II-பவாரியா



மாக்சிமிலியன் I-பவாரியா



மாக்சிமிலியன் -செர்மனி

இளவரசிக்கும், அங்கேரி இளவரசனுக்கும் திருமணம் செய்வித்து, அந் நாடுகளையும் தமது பேரரசுடன் இணைத்தார். சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்த மாக்சிமிலியன் பல நூல்களை இயற்றினார். தோட்டக்கலையும் கட்டடக் கலையும்கூட இவர் எழுத்துகளினின்றும் தப்பவில்லை. இவர் நூல்களுள் 'பிரெய்தல்' (Freydal), 'வீசு குனிக்கு' (Weiss Kunig), 'புகழ்மிக்க வீரத்திருத்தகை தியூயர்தன்க்கு அவர்களின் இடர்ப்பாடுகளும் வீரச் செயல்களும்' ஆகியன குறிப்பிடத்தக்கன.

கல்வி கேள்விகளில் மேம்பட்ட இவர், கற்றோரைப் போற்றியதுடன் கலைகளையும் ஆதரித்தார். ஆற்றல்மிகு வீரத்திருத்தகையான (Skilled Knight) மாக்சிமிலியன் புகழ்மிகுந்த வேந்தர்களுள் ஒருவர். இவருக்குப்பின் இவர் பேரனான ஐந்தாம் சார்லசு அரசுக் கட்டிலேறினார். மாக்சிமிலியன் கி.பி.1519-ஆம் ஆண்டு இறந்தார். அவர் உடல் வீனர் நீசுடாடில் புதைக்கப்பட்டது. இவரது புகழ்மிக்க கல்லறை இன்சுப்ரக்கில் (Innsbruck) உள்ளது. 'வீரத்தகைகளுள் இறுதியானவர்' (The Last of the Knights) என இவர் குறிக்கப்படுகிறார்.

**இரண்டாம் மாக்சிமிலியன்** (கி.பி.1527-1576), புனித உரோமானியப் பேரரசர். இவர் பல அரிய நூல்களைச் சேகரித்து வைத்திருந்ததுடன் கலைஞர்களையும், அறிஞர்களையும், கட்டடக்கலை வல்லுநர்களையும் பெரிதும் போற்றிப் பாதுகாத்தார். இவர் சமயத் துறையில் தம்விருப்பப்படி நடந்து கொண்டார். வியன்னாப் பல்கலைக்கழகத்தை முன்னேற்றிய பெருமை இவரைச் சாரும். அடிக்கடி மதம் மாறினார். இவர் காலத்தில் அரசியலில் குறிப்பிடத்தக்க அளவில் எதனையும் இவர் சாதிக்கவில்லை.

உரோமானியப் பேரரசராக கி.பி. 1564-இல் பதவியேற்ற இவர், ஆசுதிரியப் பெருங்கோமகனும் பிற்காலத்தில் முதலாம் பெர்டினாண்டு என்று அழைக்கப்பட்ட வேந்தரின் மூத்த மகனும் ஆவார். இவர் தாயார், பொகீமிய மன்னனான இரண்டாம் விளாடிசுளாவின் மகளான அன்னா ஆவார். இவர் கி.பி. 1527 – இல் ஆசுதிரியாவில் உள்ள வியன்னாவில் பிறந்தார். இவர் தம் மாமனான ஐந்தாம் சார்லசுப் பேரரசரின் கீழ் இருந்து போர் முறையையும் அரசாட்சி முறைகளையும் கற்றுக் கொண்டு, கி.பி.1548-இல் அவர் மகளான மரியாவையே மணந்து கொண்டார்; உலூத்தரன் கொள்கையை கி.பி. 1547 முதல் 1562 வரை பின்பற்றிய மாக்சிமிலியன், கி.பி. 1562 க்குப் பின் கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்தார். துருக்கியப் போரை மேற்கொள்ளும் பொருட்டுப் பணம் தேவைப்பட்டதால், ஆசுதிரியா, பொகீமியா, அங்கேரி ஆகிய நாடுகளைச் சேர்ந்த சீர்திருத்தக் கிறித்தவர்களுக்கு இவர் சமய சுதந்திரம் அளித்தார். உரோமானியர்களின் மன்னனாகக் கி.பி. 1562-இல் பிராங்க்பர்ட்டில் முடிபுனைந்துகொண்டார். அங்கேரியின் மன்னராகக் கி.பி. 1563-இல் பிரசுபர்க் என்னுமிடத்தில் குடிசூடினார். பின்னர்ப் பிரேக் என்னுமிடத்தில் பொகீமியாவின் மன்னராக மணிமுடி தரித்துக்கொண்டார். தம் தந்தையின் இறப்பிற்குப்பின் கி.பி. 1564-ஆம் ஆண்டு புனித உரோமானியப்பேரரசர்ப் பதவியை ஏற்றார். கி.பி. 1575-இல் போலந்தின் மன்னரானார். கி.பி. 1548 முதல் 1550 முடிய இவர் தம் மாமனாரின் பேராளராக இசுபெயினில் இருந்தார். கி.பி. 1552 முதற்கொண்டு துருக்கியரின் படையெடுப்பிற்கு எதிராக ஆசுதிரியப் பகுதிகளைக் காப்பதில் பெரும்பங்கு வகித்தார். கி.பி. 1576-இல் இரெகென்சுபர்கில் இவர் மாண்டார். இவருக்குப்பின் இவர் மகன் உருடால்பு(Rudolf)மன்னரானார். இவர் 'பேமலின் கரசுபாண்டன்சு'(Familien Korrespondonz) எனும் நூலை இயற்றினார். பிபில் (V.Bibl) என்பார் (1916-21) அதனை இரு பகுதிகளாக வெளியிட்டார்.

**பவேரியாவின் முதலாம் மாக்சிமிலியன்** (கி.பி. 1756-1825): இவர் பவேரியாவின் மன்னர். பவேரிய நாட்டிற்குப் புதியதோர் அரசியல் அமைப்பினை வழங்கிய பெருமைக்குரியவர். இவர் கி.பி. 1777 முதல் 1789 முடிய பிரான்சுப்படையில் பணிபுரிந்தார். சுவீப்ரன்கன் என்ற (Zweibruncken) பிரபுப் பட்டத்தை கி.பி. 1795-இல் பெற்று, கி.பி. 1799 – இல் பவேரியாவின் தேர்வாளராகப் பதவியேற்றார். பிரசுபர்க் உடன்படிக்கையினால் (1805) பவேரியா, பேரரசுத் தகுதிக்கு உயர்த்தப்பட்டதால் கி.பி. 1806-இல் அதன் பேரரசராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். கி.பி. 1813 வரையில் நெப்போலியனுக்கு ஆதரவாக விளங்கிய இவர், கி.பி. 1813க்குப் பின்னர் நெப்போலியனுக்கெதிரான கூட்டணியில் சேர்ந்தார். வியன்னாப் பேரவையில் (Vienna Congress,கி.பி. 1814-15) செருமானியக் கூட்டிணைவிற்கு எதிராகக் குரலெழுப்பிய மாக்சிமிலியன், கி.பி. 1818-இல் பவேரிய நாட்டிற்குப் புதிய அரசியலமைப்பினை வழங்கினார். அதனால் இவர் புகழ் பெற்றுள்ளார். சிறந்த படை வீரராகத் திகழ்ந்த இவர் சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கினார்.

**இரண்டாம் மாக்சிமிலியன்:** இரண்டாம் மாக்சிமிலியனைச் சோசப்பு எனவும் கூறுவர். பவேரியாவின் மன்னர். செருமானிய ஐக்கியத்தின் எதிர்ப்பாளர். கலை, கல்வியைப் போற்றிப் புரந்தவர். இவர் கி.பி. 1811 – இல் பவேரியாவிலுள்ள மியூனிச்சில் (Munich) பிறந்தார். மியூனிச்சிலேயே கி.பி. 1864 – இல் இறந்

தார். முதலாம் லூயி மன்னரின் மகனான இவர், கோட்டிங்கனிலும் (Gottingen), பெர்லின் பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்றார். பின்னர் இத்தாலி, கிரீசு முதலான நாடுகளைப் பார்வையிட்டார். இவர் தந்தையார், பதவியைத் துறந்ததால் கி.பி.1848-இல் பவேரியாவின் மன்னரானார். பிரசியாவின் தலைமையில் உருவான செருமானிய ஐக்கியத்தைக் கடுமையாக எதிர்த்ததுடன், பிரசியாவிற்கு எதிராக உருவாக்கப்பட்ட ஆசுதிரியாவை ஆதரித்தார். சிறிய செருமன் அரசுகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டிய தன் இன்றியமையாமை, உடனடித்தன்மை ஆகியவற்றை வலியுறுத்திப் பேசினார். கி.பி. 1859க்குப் பின்னர் மிதவாத அரசியல் அமைப்பைக் கொண்ட அரசினை உருவாக்கினார். அறிவியல், கலை ஆகியவற்றைப் பேணிக் காத்தார்.

**மாக்சிமிலியன் (பெர்டினாண்டு மாக்சிமிலியன் சோசப்பு):** இவர் மெக்சிகோவின் மன்னர்; ஆசுதிரியாவின் பெருங்கோமகன். ஆசுதிரியாவில் உள்ள வியன்னாவில் கி.பி. 1832 – இல் பிறந்த இவர் மெக்சிகோவில் உள்ள குவெடெரோவில் கி.பி. 1867 - இல் காலமானார். ஆசுதிரியக் கடற்படையில் கி.பி. 1846-இல் சேர்ந்தார். தம் அயரா உழைப்பினால் கி.பி. 1854 – இல் கப்பற்படைத் தலைமை அதிகாரியாக உயர்த்தப்பட்டார். ஆசுதிரியாவின் இலம்பார்டோ வெனிசியன் பகுதிகளுக்கு கி.பி. 1857 முதல் 1859 முடிய அரசப் பேராளராக அமர்த்தப் பெற்றார். பிரேசிலுக்கு கி.பி. 1859 - இல் பயணம் மேற்கொண்டார். பெல்சியத்தின் கார்லோடே இளவரசியை கி.பி. 1857-ஆம் ஆண்டு மணந்தார்.

பிரான்சு நாட்டு மன்னன் மூன்றாம் நெப்போலியனுடன் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இவர். கி.பி. 1864-ஆம் ஆண்டு மெக்சிகன் மன்னராக அரியணையேற இசைந்தார். பிரான்சுப் படை இவருக்கு உதவியாக ஆறு ஆண்டுகள் மெக்சிகோவில் தங்கி இருக்கவும் ஏற்பாடாயிற்று. மாக்சிமிலியன் தம் அரசியுடன் கி.பி.1864இல் மெக்சிகோ நகரில் தங்கினார். இவரால் மெக்சிகோவில் வெற்றிகரமாக ஆட்சியை நடத்த இயலவில்லை. நிதியகம் காலியாயிற்று. பிரான்சுக்காரர்களுக்கும் மாக்சிமிலியனுக்கும் மனக்கசப்பு மிகுந்தது; மெக்சிகோ முழுமையும் கைப்பற்றப் படாமல் இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மெக்சிகன் பேரரசை ஏற்க மறுத்தன. எனவே பிரான்சு மக்களும் மாக்சிமிலியனும் மெக்சிகோவை விட்டுவெளியேற வேண்டிய சூழல் உருவாயிற்று. மாக்சிமிலியன் தாம் கி.பி.1866-இல் பதவி விலகுவதாக அறிவித்தார். சொன்னபடி செய்யாததால் கி.பி.1867-இல் இவர் கைது செய்யப்பட்டு, படைத் துறை முறை மன்றத்தால் தண்டிக்கப் பெற்றார். இவர் உடல் ஆசுதிரியாவிற்குத் திருப்பித் தரப்பட்டது. இவர் துணைவியார் கி.பி.1927 வரை பெல்சியத்தில் வாழ்ந்தார். மாக்சிமிலியன் இவ்வாறு வாழ்நாளில் பல சோதனைகளுக்கு உட்பட்டார்.

**மாக்சிமிலியன்:** இவரைப் பேடனின் இளவரசர் மாக்சு (Prince Max of Baden) எனக் கூறுவர். இவர் முழுப் பெயர் மாக்சிமிலியன் அலெக்சாந்தர் பிரடெரிக்கு வில்செல்ம்(Maximilian Alexander Friedrich Wilhelm)என்பதாகும். இவர் ஒரு செருமானிய அரசியல் நிபுணர். செருமனியில்' உள்ள பேடன்—பேடனில் கி.பி. 1867-இல் பிறந்த இவர் 1929 – இல் கான்சுடன்சில் இறந்தார். இவர் பேடனின் மன்னராகத்தகுதியும் உரிமையும் உடையவர். 1907 முதல் 1918 முடிய இவர் பேடன் அரசியல் பகுதியின் (Diet) முதல் கழகத்தின் தலைவராகப் பணியாற்றினார். முதலாம் உலகப் பெரும் போரின்போது செருமனியில் இருந்த ஆங்கிலேயப் போர்க் கைதிகள், உருசியாவில் இருந்த செருமானியப் போர்க் கைதிகள் ஆகியோரின் துயர் துடைக்கப் பாடுபட்டார். இவர் 1918-இல் செருமனியின் வேந்தராக (Chancellor) 5 வாரங்கள் பணி புரிந்தார். ம.இரா.

**மாக்சு முல்லர் (கி.பி. 1823-1900):** இவர் பல மொழிகளை அறிந்த அறிஞர்;கீழை நாட்டு ஆய்வாளர். இவர் கி.பி. 1823-இல் செருமனியில் தெசௌ (Dessau) என்னுமிடத்தில் பிறந்தார். தொடக்கத்தில் சமசுகிருதமொழியின் மீது மிக்க ஆர்வம்கொண்டிருந்த இவருக்குச் சிறிது காலத்தில் ஒப்பீட்டு மொழியியலில் மிகுந்த நாட்டம் ஏற்பட்டது.பழைய ஈரானிய மொழியில் எழுதப் பெற்ற சொராசுட்டர் (Zoraster) வேத நூலான அவெசுத்தாவை (Avesta) இவர் கி.பி.1845-இல் கற்றறிந்து, அதன் பின் சமய ஒப்பீட்டு இயலில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். இந்து வேத நூலான இருக்கு வேதத்தையும் கற்றார். இங்கிலாந்துக்குச் சென்று ஆக்சுபோர்டில் (Oxford) கி.பி.1849 முதல் 1875 வரை தங்கி, இருக்குவேதத்தைப் பதிப்பித்து வெளியிட்டார். அங்கே கி.பி.1850-இல் புதிய கால மொழிகளின் உதவிப் பேராசிரியராக நியமனம் பெற்றார். பிறகு கி.பி.1868-இல் ஒப்பீட்டு மொழி நூல் (Philology) பேராசிரியர் பதவி இவருக்குக் கிடைத்தது. ஆக்சுபோர்டில் மாக்சுமுல்லர் (Max Muller) தங்கியிருந்த காலத்தில், இந்திய ஐரோப்பிய மொழிகளை ஒப்பிட்டு நோக்கும் கல்வியைப் பரப்பி வந்தார்.

புராண இலக்கியம் (Mythology) பற்றிய இவர் தம் கட்டுரைகள் இவருக்கு மிக்க புகழைத் தந்தன. 'கிழக்கு நாட்டுப் புனித நூல்கள்' (The Sacred Books of the East) என்னும் இவருடைய நூல் 51



மாக்சுமுல்லர்

தொகுதிகளைக் கொண்டது. அத்தொகுதிகள், கி.பி. 1875 முதல் வெளிவரத் தொடங்கின. அவற்றில் 48 தொகுதிகள் இவர் காலத்திலேயே இவருடைய மேற்பார்வையிலேயே வெளிவந்தன. அவற்றில் பொருளடக்க அட்டவணைகளும், முக்கிய மொழிபெயர்ப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிற்காலத்தில் இந்தியத் தத்துவத்தைப் பற்றியும் இவர் எழுதினார். கீழ்நாட்டுக் கையெழுத்துப் படிகள், அரிய சுவடிகள், கல்வெட்டுகள் முதலியவற்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டிவிட்ட பெருமை இவருக்குண்டு. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் சப்பானிய மொழியில் உள்ள ஆதிகால இந்திய, பௌத்த சமயத் திருநூல் தொகுதி குறிப்பிடத்தக்கது. அரிய பல சேவைகளைச் செய்துள்ள மாக்சு முல்லர், ஆக்சுபோர்டில், கி.பி. 1900-ஆம் ஆண்டில் காலமானார்.

தெ.பா.

**மாக்மில்லன் எரால்டு**, பிரிட்டனின் ஆற்றல், பட்டறிவு ஆகியவற்றில் சிறந்த தலைமை அமைச்சர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். சர் அந்தோனி ஈடனை அடுத்துத் தலைமை அமைச்சராகப் பதவியேற்ற எரால்டு மாக்மில்லன் (Macmillan -Maurice-Harold), அனைத்துலக அமைதியை நிலைநாட்டும் பொருட்டும், நாடுகளிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையிலும் பல நாட்டு அரசியல் தலைவர்களைச் சந்தித்து, அவர்களுடன் பன்முறை பேச்சுகள் நடத்தினார். பாரிசு உச்ச மாநாட்டை அழிவினின்றும் காப்பாற்றிய பெருமைக்குரியவர். சிறந்த சிந்தனையாளராகவும் எழுத்தாளராகவும் திகழ்ந்த இவர், தம் வரலாற்றையும் மற்றும் பல நூல்களையும் எழுதிப் புகழ் பெற்றார். அரசியல், பொருளாதாரம், வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவை (Memoirs). ஆகியவை பற்றி இவர் எழுதியுள்ளவை இன்றும் பலருடைய பாராட்டுகளைப் பெற்றுள்ளன.

இவர் இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டன் மாநகரில் கி.பி. 1894 – ஆம் ஆண்டு பிறந்தார். மாரிசு கிராபோர்டு மாக்மில்லன் என்பவரும், எலன் ஆர்ட்டீ பெல்லீசு என்பாரும் இவர் பெற்றோர் ஆவர். ஈட்டனிலும் ஆக்சுபோர்டிலுள்ள பெலியோல் கல்லூரியிலும் இவர் கல்வி பயின்றார். அஞ்சா நெஞ்சம் கொண்ட இவர் முதலாம் உலகப் பெரும் போரில் பங்கு கொண்டு, போர்க் களத்தில் மும்முறை காயம்பட்டார்; போர்த்துறை சார்ந்த சிலுவை வடிவப் பதக்கத்தினைப் (Military Cross) பெற்றார். உலகப் போருக்குப் பின்னர் 1919-20-இல் கனடாவின் தலைமை ஆளுநர் மெய்க்காப்பாளராக (Aide-de-Camp) அமர்த்தப்பட்டார், 1920 முதல் 1940 வரை தம் பாட்டனாரால் நிறுவப்பட்ட மாக்மில்லன் குழுமம் என்னும் புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குநராகப் பணிபுரிந்தார். இவர், சீமாட்டி தோரதி எவலின் கோவன்டிசு என்னும் மங்கையை 1920-ஆம் ஆண்டு மணந்து கொண்டார். இவர் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் 1929-1931-ஆம் ஆண்டுகள் நீங்கலாக 1924 முதல் 1964 – வரை பழைமைப் பற்றுக் கட்சி உறுப்பினராக அமர்ந்திருந்தார். பழமைப்பற்றுக் கட்சியின் விளக்கம் செய்பவராக 1930 – இல் இவர் கருதப்பட்டதுடன், வின்சுடன் சர்ச்சிலைப் போன்று கட்சியின் எதிர்ப்பாளராகவும் குறிப்பிடப்பட்டார். இரண்டாம் உலகப் பெரும் போரின் போது நிறுவப்பட்ட, வின்சுடன் சர்ச்சிலின் அமைச்சரவையில் இவர் குடியேற்ற நாடுகளுக்கான பாராளுமன்றச் செயலராக 1942 - இல் அமர்த்தப்பட்டார். வட ஆப்பிரிக்காவில் நிறுவப்பட்டிருந்த நேச நாடுகளின் தலைமையகத்தில் 1942 முதல் 1945 முடிய இவர் பிரிட்டனின் அமைச்சராகப் (Resident Minister) பணியேற்றார்.

பழமைப் பற்றுக் கட்சியினர் 1951 – ஆம் ஆண்டு மறுமுறை பதவிக்கு வந்த போது இவர் வீட்டுவசதி, உள்நாட்டரசு ஆகியவற்றின் அமைச்சராக அமர்த்தப்பட்டு 1954 அக்டோபர் வரை பணியாற்றினார். பின்னர் 1955 ஏப்ரல் முடிய பாதுகாப்பு அமைச்சராகவும், 1955 திசம்பர் முடிய அயல் நாட்டு விவகாரச் செயலராகவும் பொறுப்பேற்றிருந்தார். இவர் கருவூல அதிகாரியாக 1957 முடியப் பணியேற்று நிதி நிலையைச் சீர்செய்தார்.

ஆங்கிலேயநாட்டின் தலைமை அமைச்சராக 1957 – இல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாக்மில்லன், பழமைப் பற்றுக்கட்சியின் தலைவராகவும் பொறுப்பேற்றார். சர் அந்தோனி ஈடனுக்குப் பின்னர் இப்பணியில் அமர்ந்த இவர், பிரிட்டன் – அமெரிக்க உறவுகளை வலுப்படுத்துவதில் முனைந்து செயற்பட்டார். கோனார்டு அடினாருடனும், சார்லசு திகாலேயுடனும் நெருக்கமான, சீரான உறவு கொண்டு ஐரோப்பாவில் ஒற்றுமையை நிலைநாட்டப் பாடுபட்டார்.



மாக்மில்லன்

இவர், 1959 அக்டோபரில் நடந்த தேர்தலிலும் சிறந்தமுறையில் வெற்றியைப் பெற்றுப் பணியில் அமர்ந்தார். உலக அமைதியை நிலைநாட்டப் பல நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து பல நாட்டு அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். பொதுநல நாடுகள் பலவற்றிற்குச் செலவு மேற்கொண்டு, நல்லுறவை மேலும் வலுப்படுத்தினார். இந்தியா விடுதலை பெற்றதன் பின், இந்தியாவிற்கு வருகைபுரிந்த முதல் ஆங்கிலேயத் தலைமை அமைச்சர் இவரே ஆவார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. துவைட்டு டி.இ. ஐசன் ஓவர், கென்னடி முதலான பல மேலை நாட்டுத் தலைவர்களைச் சந்தித்து, உலக அமைதிக்கான வழிமுறைகளை ஆய்ந்தார். சோவியத்து நாட்டுத்தலைமை அமைச்சர் குருச்சேவை இவர் 1959 பிப்ரவரியில் மாசுகோவில் சந்தித்து உலகச் சிக்கல்கள் பற்றிப் பேசினார். சோவியத்து நாடு மிரட்டல்களில் ஈடுபட்டிருந்த போது, இவர் அவரைச் சந்தித்தது பாராட்டத்தக்க செயலாகும். இவர், உலகின் சில முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, 1960 மே மாதம் நடைபெற இருந்த பாரிசு உச்ச மாநாட்டை அழிவினின்றும் காத்த பெருமைக்குரியவர். ஐரோப்பியப் பொதுச் சந்தையில் (European Common Market) பிரிட்டனையும் பங்குகொள்ளச் செய்ய வேண்டுமென்பதற்காக இவர் பெருமுயற்சி மேற்கொண்டார். இருப்பினும் பிரான்சின் கடும் எதிர்ப்பால் இவர் 1963 சனவரியில் அம்முயற்சியில் தோல்வி கண்டார்.

ஆங்கிலநாட்டின் தலைமையமைச்சராகப் பதவியேற்ற அடுத்த ஆண்டு (1960) மாக்மில்லன் ஆப்பிரிக்க நாடுகளுக்குச் செலவு மேற்கொண்டு நல்லுறவினை வளர்த்துக் கொண்டார். இவருக்குச் சோதனைக் காலம் 1962 – ஆம் ஆண்டிற்குப் பின் ஏற்பட்டது. உள்நாட்டு அரசியலில் இவர் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியதாயிற்று. கருவூல அமைச்சர் மூவர் தங்கள் பதவிவிலகும் மடல்களை முன்வைத்தபோது, அவற்றை ஏற்றுக் கொண்டார். கட்சியில் சிக்கல்கள் 1962 சூலையில் தோன்றவே இவர் அரசாங்க அங்கத்தினர் 16 பேரை வெளியேற்றினார். அப்பதினாறு பேர்களுள் பாதுகாப்பு அமைச்சரும் கருவூலச் செயலரும் அடங்குவர். அமெரிக்காவுடன் இராணுவச் சிக்கல் 1962-ஆம் ஆண்டில் ஏற்பட, அமெரிக்கா பிடிவாதமாக இருந்தது. சிக்கல்களைத் தீர்க்க உறுதி பூண்ட மாக்மில்லன், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடியை 1962 திசம்பரில் பகாமாசில் சந்தித்துப் பேசி, நாசா ஒப்பந்தத்தில் (Nassau Agreement) கையெழுத்திட்டார்.

இவர் 1963-இல் தீர்க்க இயலாத சிக்கல் ஒன்றைச் சந்திக்க வேண்டியதாயிற்று. போர்ச் செயலர் சான் புரோபுனே (War Secretary John Profuno) யின் சொந்த வாழ்க்கையில் எழுப்பப்பட்ட பழிகளால் அரசே ஆட்டம் கண்டது. அந்நிலையில் மாக்மில்லனும் உடல் நலம் குன்றி, அறுவை மருத்துவம் செய்து கொண்டார். எனவே, இவர் உடல் நலம் குன்றியதன் காரணமாக 1963–ஆம் ஆண்டு பதவியினின்றும் விலகினார். பதவி விலகு முன் 1963 – இல் உருசியாவுடனும் அமெரிக்காவுடனும் செய்து கொண்ட அணுச் சோதனைத் தடுப்பு ஒப்பந்தம் இவர் உலக நலனில் கொண்டிருந்த அக்கறையை வெளிப்படுத்தியது.

எழுத்தாற்றலில் மேம்பட்ட எரால்டு, மாக்மில்லன் அரசியல் பற்றியும், வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவை பற்றியும் பல நூல்களை இயற்றியுள்ளார். தன்வரலாற்றை மிக விரிவாகவும், அரசியல் நிகழ்ச்சிகளைச் சுவைபடவும் எழுதியுள்ளார்.

தலைமையமைச்சர் பதவியினின்றும் விலகிய இவர், பொது வாழ்க்கையினின்றும் விலகவில்லை. பல பொதுப்பணிகளில் பங்குகொண்டார். ஆக்சு போர்டு பல்கலைக்கழகத்தில் 1960 முதல் பல ஆண்டுகள் வேந்தராகப் பணிபுரிந்துள்ளார். முன்னேற்ற நோக்குடனும், துணிச்சலுடனும், சிக்கல்களை உரிய முறையில் விரைவில் தீர்க்கும் பண்புடனும், அமைதி வழிப்பட்ட நல்லுறவை உலகில் நிலைநாட்டும் தூய பணியில் ஈடுபட்ட எரால்டு மாக்மில்லன் போற்றத்தக்க இராசதந்திரியாவார். இவர் சிந்தனைத் திறனும், எழுத்தாற்றலும் இவருக்கு நிலையான புகழை ஈட்டித்தந்துள்ளன. ம.இரா.

மாகி (மாகே), இந்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பாண்டிச்சேரி அரசைச்சார்ந்த நகரம். தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில், கள்ளிக்கோட்டையிலிருந்து ஏறத்தாழ 62 கி.மீ. தொலைவில் இந்நகரம் அமைந்துள்ளது. மாகி(Mahe) ஒரு சிறு தீவு. இதன் மேற்கில் அரபிக் கடலும், மற்ற மூன்று திசைகளிலும் கேரள மாநிலமும் உள்ளன. இது ஒரு துறைமுகப்பட்டினமாகச் செயற்படுகிறது. மாகே என்றும் இதைக் கூறுகிறார்கள்.

கேரளக் கடற்கரையில் அமைந்துள்ள இந்நகரம் தொடக்கத்தில் மய்யழி (Mayyazhi) என வழங்கப்பட்டது. இந்நகரத்தில் நலுதெரரா என்னும் சிறு பகுதியும் உள்ளது. இந்நகரத்தின் வடபுறம் மாகே எனும் சிற்றாறு ஓடுகின்றது. இங்கே சிறு படகுகளும் ஆற்றுப் படகுகளும் ஓட வசதி உள்ளது. கடற்கரைப் பகுதியாக இருப்பதால் இங்குக் கோடையில் வெப்பம் மிகுதியாக இல்லை. ஏனைய கேரள மக்களைப் போலவே மாகி மக்களும் மலையாளம் பேசுகின்றனர். மாகியும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் ஏறத்தாழ 9 கி.மீ. பரப்பளவு கொண்டதாக உள்ளன. நெல்லும் தேங்காயும் இங்கு மிகுதியாக விளைகின்றன. சில இடங்களில் இரப்பரும் பயிராகின்றது.

மாகி, கி.பி. 1725 – இல் பிரான்சுக் கிழக்கிந்தியக் குழுவால் கைப்பற்றப்பட்டது. பிரான்சு வாணிகக் குழுவைக் கண்காணித்து வந்த இலீனார் (Lenoir) என்பார் இந்நகரைக் கைப்பற்றிப் பாண்டிச்சேரியின் ஆளுகைக்கு உட்படுத்தினார். செழிப்புமிக்க இப்பகுதி பிரான்சுக்காரர்களுக்கு மிகுந்த வருமானத்தைக் கொடுத்தது.

பிரான்சுக் கிழக்கிந்தியக் குழுவினருக்கும், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் குழுவினருக்கும் இடையே ஏற்பட்ட ஆதிக்கப் போட்டியில் மாகியும் பாதிப்பிற்கு உட்பட்டது. மூன்றாம் கருநாடகப் போரின் போது (கி.பி. 1756 – 1763) ஆங்கிலேயர் பிரான்சுக்காரர்களைத் தோற்கடித்தனர். எனவே, கி.பி. 1761 -ஆம் ஆண்டு மாகியும், செஞ்சியும் ஆங்கிலேயருக்கு உரிமையாயின. பின்னர், கி.பி. 1763 – இல் கையெழுத்தான பாரிசு உடன்பாட்டின்படி, இழந்த பகுதிகளைப் பிரான்சுக்காரர்கள் ஆங்கிலேயரிடமிருந்து திரும்பப் பெற்றனர். கி.பி. 1761 முதல் 1817 முடிய மாகி விட்டு விட்டு ஆங்கிலேயரின் பிடியில் இருந்தது.



மாகி

இரண்டாம் மைசூர்ப் போரின்போது (கி.பி.1780 -84) ஆங்கிலேயர்கள் பிரான்சுக்காரர்களின் மீது போர் தொடுத்து மாகியை மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர். இதற்கு முன்பு இத்துறைமுகம் மைசூர் வீரனான ஐதர் அலியின் கட்டுப்பாட்டில் சிறிதுகாலம் இருந்தது.

இடையிடையே விட்டு விட்டு கி.பி. 1817 வரை ஆங்கிலேயரின் அரவணைப்பில் திகழ்ந்த இந்நகரம் 1954 – இல் இந்திய அரசின் நிருவாகத்திற்கு வந்தது. இந்திய அரசு பாண்டிச்சேரி, காரைக்கால், ஏமன் முதலான பகுதிகளைத் தன் ஆட்சிக்குக் கொண்டு வந்த போழ்து மாகியையும் தன் ஆட்சியுடன் சேர்த்தது. பிரான்சு அரசு, இந்திய அரசிற்கு இந்நகரங்களின் மீதான கட்டுப்பாட்டு உரிமையை 1956 - இல் வழங்கியது. இருப்பினும் 1962-இல் தான் பிரான்சு தேசிய சபை இந்த அதிகார மாற்றத்தை ஏற்றது.

மாகியில் கண்டு களிக்கத்தக்க மகிழ்ச்சிக்குரிய பல இடங்கள்உள்ளன.இங்குவரலாற்றுப் புகழ்மிக்கதேவாலயங்களும் கட்டடங்களும் நினைவுச் சின்னங்களும் உள்ளன. இங்குள்ள அபில்லா தேவாலயம் (Abilla Church) ஒரு சிறந்த கலைக் கருவூலமாகும். இங்குள்ள ஆலயத்தில் எல்லாச் சமயத்தவரும் வழிபாடு செய்கின்றனர். இந்தக் கோவிலில் அக்டோபர் மாதத்தில் திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்

படும். நலுதொராப் பகுதி ஒரு சுற்றுலாச் சிறப்பு மிக்க இடமாகும். கேரள மாநிலத்தை ஒட்டி அமைந்திருந்த போதிலும் ஏனாம், காரைக்கால் போன்று மாகியும் பாண்டிச்சேரி ஒன்றியப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக உள்ளது. மாகிப் பகுதிக்கான சட்டமன்றமும் தலைமைச் செயலகமும் பாண்டிச்சேரியில் உள்ளன.

**மாகி[2]** எனும் பெயரில் இந்தியப் பெருங்கடலில் தீவு ஒன்றுளது. இது சேசெல்லிசு (Seychelles) தீவுக் கூட்டங்களில் பெரியது. இதன் முக்கிய பட்டணம் விக்டோரியா. இத்தீவு மலைகள் நிறைந்து காணப்படுகிறது. இதன் பரப்பளவு153 ச.கி.மீ. ஆகும். இதன் மக்கள் தொகை ஏறத்தாழ 65,244 ம.இரா.

**மாங்குடி கிழார்:** மதுரைக்காஞ்சிப் புலவர், மாங்குடி கிழார், மாங்குடி மருதனார் என்னும் பெயர்கள் ஒருவரையே குறிக்கலாம் என்பது உ.வே. சா. கருத்து. பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் அக்கருத்தினரே. மாங்குடியிற் பிறந்த வேளாண் மரபினராதலின் ஊர்ப் பெயரும் குடிப்பெயரும் சேர, மாங்குடி கிழார் எனப் பெயர் பெற்றார். மாங்குடி என்பது தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ளது. நெடுஞ்செழியன் மீது மதுரைக்காஞ்சி பாடிய புலவரும் இவரே என்பது பலர் கருத்து. இவர் பாடிய புறம். 396-ஆம் பாடலால் பின்பொருகால் வாட்டாற்றெழினியாதனைப் பரிசில் வேண்டிப் பாடி, அவனால் புரக்கப் பெற்று, மீண்டும் மதுரையில் தங்கினார் என்பது அறியப்படும்.

நற்றிணை 120-ம் பாடல், தம் ஊடலை வெளிக்காட்டாது தலைவனுடன் வந்த விருந்தினர்க்குத் தானே அட்டில் புக்குச் சமைத்துத் தலைவி அவரை ஓம்பிய முறையினை நன்கு சித்திரிக்கின்றது. மாங்குடி கிழார் என்னும் பெயரில் நற்.120; குறு.302; புறம். 24, 26, 313, 335, 372, 396 ஆகிய பாடல்கள் காணப்பெறுகின்றன. எவ்வி என்னும் வேளிருடைய மிழலைக் கூற்றத்தையும், பழைய வேளிர்களுக்குரிய முத்தூற்றுக் கூற்றத்தையும் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கைப்பற்றினமையை இவர் குறிப்பிடுவர் (புறம்.24). அவன் மறக்கள வேள்வி செய்தலை இவர் பாடல் (புறம்.372) நன்கு சித்திரிக்கின்றது. அந் நெடுஞ் செழியனின் கொடைப்பண்பு, வீரச் சிறப்பு முதலியவற்றை இவர்தம் பாடல்கள் விரித்துரைக்கும். இரா.சா.

**மாங்குடி மருதனார்:** இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். மாங்குடி மருதனார் மாங்குடி கிழார், மதுரைக் காஞ்சிப் புலவர், காஞ்சிப் புலவன் ஆகிய நான்கு பெயர்களும் ஒரே புலவரைக் குறிப்பனவாகக் கொள்ளப்படுகின்றன.

மாங்குடி கிழார் என்ற பெயரில் பாடிய பாடல்களாக – புறம்: 24, 26, 313, 335, 372, 396, குறு: 302, நற். 120 ஆகியனவும், மாங்குடி மருதனார் என்ற பெயரில் மதுரைக்காஞ்சி, குறு. 164 ஆகியனவும், மதுரைக்காஞ்சிப் புலவர் என்ற பெயரில் அகம். 89, குறு. 173 ஆகியனவும், காஞ்சிப்புலவன் என்ற பெயரில் நற்.123-ஆம் பாடலும் குறிப்பிடப் பட்டுள்ளன.

மதுரைக் காஞ்சியில் காஞ்சித் திணை, சிறப்பாக நிலையாமையை விளக்கிக் கூறியதால் காஞ்சிப் புலவர், மதுரைக் காஞ்சிப் புலவர் என்னும் பெயர்களால் இவரை வழங்கி வந்தனர் என்று தெரிகிறது என்பார் உ.வே. சாமிநாதையர்.

'கிழார்' என்னும் மரபுப் பெயரால் இவர் வேளாண் குலத்தவர் என்பர். இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அவைக்களப் புலவர்களின் தலைவர் என்பது, பாண்டியன், 'ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவனாக, உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பிற் புலவர் பாடாது வரைகவென் நிலவரை' (புறம்.72) என்று வஞ்சினம் கூறுவதிலிருந்து தெரிகிறது. 'மழுவா ளெடியோன் றலைவனாக... பெரியோர்க்கு' (மதுரைக். 455-458) என்று கூறுவதால் சிவபெருமானிடம் இவர் அன்புடையவர் என்பது தெரிகிறது.

இப்புலவர் பாண்டியனின் முன்னோர்களின் நேர்மை, ஆட்சிச் சிறப்பு, அவர் பெருமை ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறார். நிலைத்த புகழ் நாட்டத் தன்னலம் கருதாது பிறர்க்கென வாழ்தல் சிறப்பென்றும், அறத்தையும் மானத்தையும் கைவிடாது வாழவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்.

மதுரைக்காஞ்சியில், மதுரை மக்கள் மாலை முதல் காலை வரை பொழுதுபோக்கும் முறை, ஐவகை நில வளம்,பேரூர், அரண்மனை, கோயில், அங்காடி, மக்கள் இயல்பு ஆகியவற்றை விரிவாக வருணித்துள்ளார். அக்காலச் சமுதாய மக்கள் பழக்க வழக்கம், விழாக்கள் (ஓணவிழா, 591) ஆகியவற்றைப் புலப்படுத்துகிறார். பாண்டியன் முதுவெள்ளிலை என்ற ஊரையும் (அடி: 119), பல்குட்டுவரையும் (105), ஏழரசரையும் (128,129) வென்ற வரலாற்றுச் செய்தியையும், அவன் போர்ச் சிறப்பையும் அதில் காணலாம்.

புறம். 24-ஆம் பாடலில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனிடம் நிலையாமையைப்

பற்றிப் பாடுகிறார். அது, மதுரைக் காஞ்சியோடு ஒப்புமை உடையது. போரில் மனம் செலுத்திய அவனை மறுமைக்காக வேள்வி செய்யத் தூண்டு கிறார். அவனது வெற்றி, வள்ளன்மை ஆகியவற் றைப் பாடுகிறார். இவர் வாட்டாற்று எழினியாதன் என்பானையும் பாடியுள்ளார் (புறம்.396). வேறி ரண்டு பாடல்களில் தலைவன் ஒருவனின் கொடைத் தன்மையையும் (புறம்.313) முல்லை நில மக்களின் வாழ்க்கைக் கூறுகளையும் கூறுகிறார் (புறம் 335).

த.ரா.

**மாசசூசெட்சு**, அமெரிக்காவின் மாநிலங்களுள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்று. ஐக்கிய அமெரிக் காவின் வடகிழக்கில் உள்ள மாசசூசெட்சு (Massa-chusetts) மாநிலம், கிழக்கில் அட்லாண்டிக்கு மாக் கடலாலும், தெற்கில் உரோடுத் தீவு, கனெக்டிகட்டு மாநிலம் ஆகியவற்றாலும் மேற்கில் நியூயார்க்கு மாநிலத்தாலும், வடக்கில் வெர்மாண்டு, நியூ ஆம்ப் சயர் மாநிலங்களாலும் சூழப்பட்டுள்ளது. இதன் பரப்பு 21,386 ச.கி.மீ. மக்கள் தொகை 57,37,037 (1980). இங்குள்ள நகரங்களுள் மிகப் பெரியதான பாசுட்டன் (Boston) துறைமுகம் மாசசூசெட்சின் தலைநகராக விளங்குகிறது.



மாசசூசெட்சு

இம்மாநிலத்தில் ஓடும் மெர்ரிமேக்கு(Merrimack) போன்ற விரைந்த ஆறுகள், இதன் தொழில் வள வளர்ச்சிக்கு மிகவும் உதவியாகவுள்ளன. இயற்கைத் துறைமுகங்கள் பல ஏற்படும் வண்ணம் இம்மாநிலக் கடற்கரை நீண்டும் வளைந்தும் அமைந்துள்ளது. மாநில உட்புறத்தில் மேட்டுப் பகுதியைக் கனெக்டி கட்டு ஆற்றுப் பள்ளத்தாக்கும், பெர்க்சயர் பள்ளத் தாக்கும் வளமுறச் செய்துள்ளன. இம்மாநிலம் கடல் மட்டத்திற்கு 155 மீட்டர் உயரத்தில் உள்ளது. மேற்குப் புறத்தில் பல குன்றுகளும், ஏரிகளும் அமைந்துள்ளன. இங்குப் பல அரசப் பூங்காக்களும், காடுகளும், உடல் நலத்துக்கு ஏற்ற கடலோரப் பகுதிகளும் உள்ளன. இம்மாநிலம் 14 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இது தொழிற்சிறப்புப் பெற்ற பகுதிகளுள் ஒன்றாகும். பல வகையான உற்பத்தித் தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. இங்கு உற் பத்தியாகும் பொருட்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை மின்சாரச் சாதனங்கள், நெகிழிப் (Plastic) பொருட்கள், தோல் பொருட்கள், காலணி வகைகள், ஆடைவகைகள், வெடி மருந்துகள், காகிதம், இயந் திரப்பொருட்கள், உலோகப் பொருட்கள், இரப்பர்ப் பொருட்கள் முதலியனவாம். கப்பல் கட்டுந் தொழி லும், அச்சு வேலைகளும், நூல் வெளியிடும் பணி களும் மிகச் சிறப்பாக இங்கு நடைபெறுகின்றன. அமெரிக்க விடுதலைப் போருக்கு முன்பிருந்தே இங்கு உலோக அணிகலன்கள் செய்யும் தொழில் நடை பெற்றுவருகிறது. புதர்ச் செடிக்கொட்டை வகைகள் (Cranberries), புகையிலை, வைக்கோல், ஆப்பிள், காய்கறிகள், பால்பண்ணைப்பொருட்கள், கோழிகள் முதலியனவற்றின் உற்பத்திக்கு இம்மாநிலம் பெயர் பெற்றது. பல வகை மீன்களும் பிடிக்கப்படுகின்றன.

**வரலாறு**: மாசசூசெட்சுப் பகுதிக் கடற்கரைக்கு நார்சுமென் (Norsemen) என்னும் வடக்குப் பகுதி மக்கள், கி.பி. 11 – ஆம் நூற்றாண்டில் சென்றுவந் தனர். பின்பு ஆங்கிலேயர் கி.பி. 16, 17-ஆம் நூற் றாண்டுகளில் இங்குக் குடியேறினர். அவர்கள், 'மே பிளவர்' (May Flower) என்னும் கப்பலில் கி.பி. 1620-இல் இங்கு வந்து இறங்கினர். இறங்கிய இடத் துக்குப் பிளைமௌத்து (Plymouth) என்னும் பெயரைச் சூட்டினர். தொடக்கக் காலத்தில் பல இன்னல்கள் உற்றிருந்த ஆங்கிலேயக் குடியேற்றத் தினர் காலப் போக்கில் அயராது உழைத்து மாச சூசெட்சின் வளர்ச்சிக்கு வழி வகுத்தனர். சேலம் (Salem) என்னும் சமயத்தலைநகர், அவர்களால் கி.பி. 1626-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. அக்குடியேற்ற மக்களுக்கும் ஆங்கிலேய அரசின் ஆளு நராக இருந்த தாமசு அட்சின்சன்(Thomas Hutchin-son) என்பாருக்குமிடையே பூசல்கள் கி.பி. 1760-ஆம் ஆண்டுமுதல் உருவாயின. இங்கிலாந்தின் ஆதிக்கத்தை எதிர்த்து வந்த குடியேற்றத் தலைவர்களுள் சிறப் பாகச் சாமுவல் ஆதம்சு (Samuel Adams), சான் ஆதம்சு (John Adams), சேம்சு ஓடிசு (James Otis), சான் ஏன்காக்கு (John Hancock) ஆகியோர் குறிப் பிடத்தக்கவர். இங்கிலாந்தின் மன்னரை எதிர்த்துப் பாசுட்டன் (Boston) நகர மக்கள் வலிமையாகப் போராடினர். பின்னர் விளைந்த அமெரிக்க விடு தலைப்போரில் அமெரிக்கர்கள் வெற்றிபெற்றபின் புதிய அமெரிக்கக் குடியரசின் ஒரு மாநிலமாக மாச

சூடீசட்சு விளங்கலாயிற்று. இம்மா நிலத்தின் ஆளுநர், நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை மக்களால் தேர்ந் தெடுக்கப்படுகிறார். இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் பேராளர் அவையில் (House of Representatives) 160 உறுப்பினர்கள் உள்ளனர். சட்டசபையின் ஆளவை மன்றத்தில் (Senate) 40 உறுப்பினர் உளர்.

இம்மாநிலத்தில் பல சிறந்த கல்வி நிலையங்கள் உள்ளன. அவற்றில் பின்வருபவை குறிப்பிடத்தக்கன: ஆர்வார்டுப் பல்கலைக்கழகம் (Harvard University), கேம்பிரிட்சில் உள்ள மாசசூசெட்சு தொழில் நுட்ப நிறுவனம், இராட்கிளிப்புக் (Radcliffe) கல்லூரி, மாச சூசெட்சுப் பல்கலைக்கழகம், பாசுட்டன் (Boston) கல்லூரி முதலிய பல.

**மாசசூசெட்சு விரிகுடா:** மாசசூசெட்சு மாநிலத்தை ஒட்டியுள்ள அட்லாண்டிக்கு மாக்கடலைச் சேர்ந்த ஒரு நீள்குடா (Inlet) உள்ளது. அதன் நீளம் 104.6 கி.மீ. அதன் கடற்கரை பல இடங்களில் துறைமுக வசதிக்கு ஏற்றதாக உள்ளது. சில இடங்களில் மலைப் பாங்காகவும் சில இடங்களில் மண் மிக்கதாகவும் அமைந்துள்ள மாசசூசெட்சு விரிகுடா (Massachusetts Bay) காட்சிக்கு அழகாக உள்ளது. தெ.பா.

**மாசரின் (கி.பி. 1602-1661):** பிரான்சின் தலைமை அமைச்சராகவும் (கி.பி. 1642-1661), கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலேயே சிறந்த அரசியல்வாதியாகவும் திகழ்ந்தவர் 'திருத்தூதர்' மாசரின் (Cardinal Mazarin) ஆவர். கிறித்தவப் பாதிரியான இவர் வாடிகனில் போப்பாண்டவரிடம் பணிபுரிந்துவிட்டு, ஒரு போர் வீரராக மாறிப் பின் னர், ஒரு சிறந்த அரசியல்வாதியானார். இவர் 13-ஆம் உலூயி மன்னரின் தலைமை அமைச்சராக விருந்த திருத்தூதர் இரிசல்யூ (Cardinal Richelieu) விடம் கி.பி. 1636 – இல் சேர்ந்தார். பின் 13-ஆம் உலூயி இறந்ததும் கி.பி. 1642-இல் பதவியேற்ற 14-ஆம் லூயி சிறுவராகவிருந்ததால் அவருடைய தாயார் (Anne of Austria) இத்தாலியரான மாசரினைத் தலைமை அமைச்சராக நியமித்தார். அதுமுதல் தாம் இறக்கும் வரை 20 ஆண்டுகள் அப்பதவியிலிருந்து, பிரான்சின் அரசியலைத் திறம்பட நடத்தி, இரிசல்யூவின் கொள்கைகளைப் பின்பற்றி, பிரான்சு மன்னரை அந்நாட்டில் வலிமை மிக்கவராகச் செய்து, அந் நாட்டை ஐரோப்பாவிலேயே வலிமை மிக்கதாகவும் ஆக்கினார்.

**முப்பதாண்டுப் போர்:** அப்பொழுது பிரான்சு ஈடு பட்டிருந்த முப்பதாண்டுப் போரை (கி.பி. 1618-1648) வெற்றியாக முடித்து, வெசுட்டுபேலியா (Westphalia) உடன்படிக்கையை ஏற்படுத்தி, தம்நாட்டிற்குப் பல நன்மைகளைப் பெற்றார். அதன் பின்னரும் இசுபெயின் போரைத் தொடர்ந்ததால் மாசரின் தம்முடைய அரசியல் சூழ்ச்சியால் கிராம்வெல்லின் ஆதரவைப் பெற்றதுடன், செருமானியப் பேரரசரை இசுபெயி னுக்கு உதவி செய்யாமல் தடுத்தார். பிரான்சு-இங்கி லாந்து கூட்டுப்படை இசுபானியர்களைத் தேனிசுப் (Danes) போர்க்களத்தில் வென்று, கி.பி. 1659 – இல் பிரனீசு உடன்படிக்கையில் (Treaty of Pyrenees) கையெழுத்திடும்படி செய்தது. அதன் விளைவாக நெதர்லாந்திலிருந்து ஆர்டாயும் (Artois), வேறுசில பகுதிகளும், தெற்கிலிருந்து உரூசிலானும் (Roussillon), பிரான்சிற்குக் கிடைத்தன. அப்போரின் விளைவாக ஆசுதிரியாவும், இசுபெயினும் நசுக்கப்பட்டு, பிரான்சு ஐரோப்பாவிலேயே வலிமைமிக்க நாடாக ஆனதால், அது புகழின் உச்சியை அடைந்தது. பிரான்சிற்கும் இசுபெயினுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த விரும்பிய மாசரின், 14 – ஆம் உலூயிக்கு இசுபெயின் நாட்டு அரசரின் மூத்தமகள் மரியதெரசா (Maria Theresa) வைத் திருமணம் செய்ய ஏற்பாடுகளைச் செய்தார்.



மாசரின்

**பிரபுக்களை அடக்குதல்:** மாசரின் தம்க்கு எதி ராகத் தோன்றிய உள்நாட்டுக் கலகத்தை அடக்கி, அந்நாட்டுப் பிரபுக்களை அடிபணியச் செய்தது குறிப் பிடத்தக்கதாகும். பிரான்சு நாட்டுப் பிரபுக்கள் தாங் கள் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெறவிரும்பினர். இரிசல்யூவின் கொள்கையையும், அதனைப் பின் பற் றியமாசரினையும் அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். அவர்களுடன் பாரிசு நகர மக்களும், அந்நகர மன்ற மும் (Parlement of Paris) சேர்ந்தன. மாசரினுக்கும், பாரிசு நகர்மன்றத்திற்கும் இடையே வரிவிதிப்புக் குறித்துப் பூசல் ஏற்பட்டது. வரிகள் குறைக்கப்பட வேண்டுமென்றும், சீர்திருத்தங்கள் செய்யப்படவேண் டுமென்றும் அது கூறியது. இவர்கள் கி.பி. 1645

லிருந்து 1652 வரை செய்த கிளர்ச்சிக்குப் பிராண்டி (Fronde) இயக்கம் என்று பெயர். அதனை மாசரின் தம்முடைய அரசியல் சூழ்ச்சியைப் பயன்படுத்தி நசுக்கினார். அது பிரான்சு பிரபுக்கள் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டச் செய்த இறுதி முயற்சியாகும். அதில் அவர்கள் தோல்வியுற்றதால், அரசரின் முழு அதிகாரமும் நிலைநாட்டப்பட்டு பிரான்சில் வல்லாட்சி தோன்றலாயிற்று.

மிகச்சிறந்த அரசியல்வாதியான மாசரின் வியன்சென்னசு (Viencennes) என்றவிடத்தில் மறைந்தார். இருபதாண்டுக்காலம் பிரான்சின் ஆட்சியை நடத்தி அந்நாட்டை ஐரோப்பாவிலேயே வலிமைமிக்கதாகவும், 14 – ஆம் உலூயியை ஐரோப்பாவிலேயே சிறந்த மன்னராகவும் விளங்கச் செய்தார். அரசியல் நேர்மையற்ற இவர் தாம் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கத் தவறான வழிகளையெல்லாம் பின்பற்றினார். இவர் பேராசை கொண்டு, பல் குறுக்கு வழிகளைப் பின்பற்றி, அரசரைவிட, அதிக செல்வத்தைச் சேர்த்தார். இறப்பதற்கு முன்னர்த் தம்முடைய நூலகத்தை மாசரின் கல்லூரிக்கு அளித்தார்.
சி.இரெ.

**மாசாத்துவான்:** இவன் காவிரி வளமூட்டும் சோழநாட்டின் தலைநகராக விளங்கிய பூம்புகாரில் இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்ற மூவகை வணிக மரபினருள் பெருங்குடி வணிகர் குலத்தவன். இவன் தன் மகன் கோவலன் என்பானுக்கு அந்நகரில் வாழ்ந்த அம்மரபினோன் மாநாய்கன் மகள் கண்ணகிஎன்பாளை மணம் புணர்த்தித்தனிமனையையும், இல்லறம் நடத்தற்குரிய குல முதற் பொருளையும், உரிமையுள்ள சுற்றத்தவர்களையும் சேர்த்து அளித்து அறவோர்க்களித்தல், அந்தணர் பேணல், துறவோரைஎதிரேற்றுப்போற்றல் முதலிய அறங்கள் செய்து வாழுமாறு பணித்தவன். கோவலன், இல்லறம் போற்றாவொழுக்கம் புரிந்ததோடு மாதவி என்ற கணிகையை மணந்து வாழ்வதையும் கண்ணகி தனித்துத் துன்புற்றிருப்பதையும் கண்டு, கண்ணகிக்கு ஆறுதல் கூறத் தன் மனைவியொடு போந்து, அறவோர்க்களித்தல் முதலிய இல்லறப் பயனிழந்ததற்கு நொந்தவன். கண்ணகி மனத் துன்பத்தை மறைக்க நகைமுகங்காட்டித் தன்முன் நில்லாது மறைவது கண்டு நொந்து, அவள் பெற்ற பொறையுடைமையைப் பாராட்டி வருத்தமுற்றவன். கோவலன் புகாரினின்றும் கண்ணகியோடு இரவிடைச் செலவு மேற்கொண்ட பின் அவனைக் கண்டு வருதற்கு ஏவலரைப் போக்கியவன். மாதவி, கோசிகன் வாயிலாகக் கோவலனுக்கு விடுத்த முடங்கலைக் கோவலன், அது தன் தந்தைக்கும் இயையும் என்று அனுப்ப அதைக் கண்டு இன்னலுற்றுக் கிடந்தவன். பின், கோவலனுக்குற்ற கொலைச் செய்தி முதலியவற்றை மாடலமறையோன் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள சிறந்தோர்க்குரைக்க, அதனைக் கேட்டுத் தன்கண் இருந்த வான் பொருளனைத்தையும் அறக்கொடையாக ஈந்து, அவ்வூரில் அந்தரசாரிகள் வந்து அறமுணர்த்தியதும் இந்திரனால் அமைக்கப்பெற்றதுமான எழுவகை விகாரமென்னும் புத்த கோயிலிலுள்ள பதின்மர்துறவியர் முன் சென்று, பிறந்த யாக்கையின் பிறப்பறத் துறவியானவன். கோவலன் மகள் மணிமேகலை மாதவியால் துறவுக்கோலம் பூண்டபின் அவள், துறவியாய் இருந்த மாசாத்துவானைக் கண்டு வணங்கியபோது, அவளை அறவணவடிகள்பால் சென்று அறங்கேட்குமாறு அனுப்பியவன்.
கு.தி.

மாசி என்பது தமிழ் மாதங்களில் பதினொன்றாம் மாதமாகும். இது சாந்திரமான மாதத்துள் பதினொன்றாவது ஆகும் (சேதுபுராணம்,சேதுபடல. 6). மலையாளத்தில் இம்மாதத்தினைக் ‘கும்பமாதம்’ எனக் கூறுவர். சக ஆண்டில் இம்மாதக் காலம் ‘பால்குணம்’ எனப்படும். இது ஆங்கில மாதங்களில் பிப்பிரவரி பின்பாதியாகவும் மார்ச்சு முன் பாதியாகவும் அமையும். நிலைபெற்ற மாக்களெல்லாம் குளிரால் நடுங்குகின்ற இம்மாதத்தை ‘மாசி நின்ற மாகூர் திங்கள்’ (59-2) எனப் பதிற்றுப்பத்தும், ‘மாசி யுகுபனி நீர்வந்துறைப்ப’ என நக்கீரர் பாடல் அடியும் (யாப்பருங்கலம் சூ. 36 – உரை) கூறி, இதன் பனி, குளிர் ஆகியவற்றைக் குறிப்பிடும். இம் மாதத்தில் பூரணிமை மக விண்மீனில் கூடி வருவது சிறப்பாகக் கருதப்படும். இம்மாதத்தில் அமாவாசை அவிட்ட விண்மீனில் வருவது இயல்பு. இது உத்தராயாணத்தில் இரண்டாம் மாதமாக அமையும்.

இம்மாதத்தில் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் காளி கோயில்களில் பொங்கலிட்டுத் தீச்சட்டி எடுத்து வழிபாடு சிறப்பாக நடைபெறும். இம்மாதத்தில் வளர்பிறை சதுர்த்தசி திதியில் ‘மகாசிவராத்திரி’ கொண்டாடப்படும்; அன்று தில்லைக் கூத்தர் நீராட்டும் நடைபெறும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இம்மாதத்தில் குரு சிங்கராசிக்கு வரும் புண்ணியநாளில் குடந்தைப்பதியில் ‘மகாமகம்’ சிறப்பாகக் கொண்டாடப்படும்.

மாசிக்கடா (மாசி மாத வைக்கோலைத் தின்ற காளை), மாசிக்கார் (கார் நெல்வகை), மாசிக்கால் வார்த்தல் (மாசி மாதத்தில் அகத்திவிதை பதித்தல்), மாசிக்கோடை (வெயிற்காலப் பகுதி) என்பன ‘மாசியை அடியாக வைத்துப் பிறந்த தொடர்களாகும்.

‘மாசி’. இது ஒருவகைக் கடல்மீன் இனம். குருதிக்

கொளுகை மீன் வகையைச் சார்ந்தது என்பர். இம் மீனைப் பக்குவப்படுத்தி உணவாக உட்கொள்வர். இலங்கையில் இவ்வுணவு அதிகமாக உற்பத்திசெய்யப் படுகின்றது. ந.ச.

*மாசிடோனிய மொழி:* இம்மொழி யூகோசுலோவியாவில் பேசப்படும் மொழியாகும். அங்கு வழங்கும் மூன்று அரசியல் மொழிகளுள் இது ஒன்றாகும். அல்பேனியர்களும் பிறரும் இதனை இரண்டாம் மொழியாகப் பேசுகின்றனர். பல்கேரியப் பகுதியிலும், கிரீசிலும் அம்மொழி பேசும் மக்கள் உள்ளனர். அம்மூன்று நாடுகள் இருக்கும் பகுதிகளே முன்னாளில் மாசிடோனியா என்ற பெயரால் வழங்கி வந்தன. பல்கேரிய மொழிக்கும் இம்மொழிக்கும் மிகுந்த வேற்றுமை இல்லை.

பழைய பல்கேரிய மொழியிலிருந்து உருவானது இது. ஐரோப்பாவில் காணப்படும் இலக்கியமொழிகளில் மிகப் புதிது இதுவாகும். இதன்கண் உள்ள சலோனிக்கா கிளைமொழியின் அடிப்படையில்தான் பழைய கோயில் சிலாவானிக்கு மொழி உருவானது. பின்னர், கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மாரேவியா, பொகிமியா முதலிய இடங்களில் செல்வாக்குடன் விளங்கிச் செக்கு, போலிசு இலக்கிய மொழிகட்கும், பல்கேரியாவின் இலக்கியங்களுக்கும் இந்த மொழி அடிகோலியது. பல பேரரசுகள், பழைய கோயில் சிலாவானிக்கு மொழியைப் போற்றிப் பாதுகாத்து வந்தன. சிலாவிக்குப் பண்பாடு கட்டுக்கோப்புடன் விளங்கியதோடு பழைய சிலாவானிக்கு மொழியே இலக்கிய மொழியாகவும் இருந்து வந்தது. இந்நாடு பின்னர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் துருக்கிய மக்களால் வெல்லப்பட்டபோது அவர்களின் கீழ் வாழ வேண்டியதாயிற்று. சிறந்த இலக்கியப் பணி கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரையிலும் நடக்கவில்லை. தொனீல் அவர்களால் கி.பி. 1793-ஆம் ஆண்டு எழுதப்பட்டநூல் அச்சானது.

பின்னர் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில சமயத் துறையில் கிரேக்கர்களின் செல்வாக்கும் அரசியல் துறையில் செர்பிய, பல்கேரியர்களின் அதிகாரமும் துருக்கியர்களின் இரும்புப்பிடியும் போட்டியிட்டன. பல்கேரிய மொழி அவர்கள் மீது திணிக்கப்பட்டதுடன், அவர்களது மொழிவளர்ச்சியும் தடுக்கப்பட்டது. எனினும், அரசியல் மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் தங்கள் மொழி வளரவேண்டும் என அம்மக்கள் எண்ணினர். அவர்களது கையெழுத்து ஏடும் பல்கேரியர்களால் அழிக்கப்பட்டன. முதல் உலகப்போருக்குப் பின்னர் மாசிடோனியா மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு யூகோசுலோவியா, கிரீக்கு, பல்கேரியா நாடுகளுடன் இணைக்கப்பட்டது. மாசிடோனியமக்கள் 1939-45-இல்நடத்திய போராட்டத்தின் போதுதான் அவர்கள் தனிஇனம் என்றும் அவர்களின்மொழி தனி மொழி என்றும் ஏற்கப்பட்டது. இது 1944 – இல் யூகசுலோவியாவின் அரசியல் மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் மாறும் வாய்ப்பு ஏற்பட்டது. அம்மக்கள் பல்வேறு அரசுகளின் ஆதிக்கத்திற்கும் அதிகாரத்திற்கும் துன்பத்திற்கும் ஆட்பட்டு அல்லற்பட்ட போதிலும் தங்கள் மொழியினைக் காத்துப்பேணி வந்தமை பாராட்டத் தக்கதாகும். பெரும் பான்மையான மக்கள் யூகோசுலோவியாவிலேயே இருந்ததால் அவர்களது மொழியும் அரசியல் மொழியாக வேண்டும் எனக் கிளர்ச்சி செய்து வெற்றி பெற்றார்கள்.

மாசிடோனியா நாட்டுப் புறப்பாடல்கள் வெளியிடப் பட்டன. அந்நாட்டுப்புறப் பாடல்கள் அம் மக்கள் உள்ளத்தில் நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும் வளர்த்தன. அதனால் பிறமொழிச் செல்வாக்கை எதிர்த்து, தமது மொழி வளர வேண்டும் எனப் பாடுபட்டனர். மிலாடினோவு என்பவர் மாசிடோனியா மொழியில் பேரறிஞராவர். அவர் தம் தம்பி கான்சுடாண்டின் கவிதைகளின் வளர்ச்சிக்கும் இலக்கியத்திற்கும் அடிகோலினார். மாசிடோனியக் கிளை மொழிகளிடையே பல வேறுபாடுகள் இருப்பினும் வர்தார் ஆற்றின் மேற்குப் பகுதியில் உள்ள மொழிகளிடையே பல ஒற்றுமை காணப்பட்டதால் அவற்றினின்றும் இலக்கிய மொழி உருவாக்கப்பட்டது. இன்று அம்மொழியின்கண் ஏராளமாக இலக்கியங்கள் உருவாகியுள்ளன. பன்னெடுங்காலம் வெறும் பேச்சு மொழியாய் இருந்ததால் உருசிய, செர்பிய, பல்கேரிய மொழிகளின்றும் 'பல புதிய சொற்களையும் கலைச் சொற்களையும் கடன் வாங்கிய நிலையில் அவற்றின் செல்வாக்கு இம்மொழியில் அதிகமாகக் காணப்படுகின்றது. அம்மக்களும் பழைய சொற்களிலிருந்து புதிய சொற்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இம்மொழியில் ஐந்து உயிர் ஒலியன்களும், இருபத்தாறு மெய் ஒலியன்களும் உள்ளன. வேற்றுமைப் பொருட்கள் முன்னுருபுகளால் உணர்த்தப்படுகின்றன. சிலாவிய மொழிகளில் பல்கேரிய, மாசிடோனிய மொழிகளில்தான் இக் கூறினைக் காண முடியும். பல்கேரிய மொழியுடன் இணைந்து போனாலும், வேறுசில பண்புகளில் வேறுபாடுகளைக் காணலாம்.

| | |
|---|---|
| செத் | 'மைத்துனன்' |
| செத்-அ | 'மைத்துனனிடம்' |
| ந மசத | 'மேசை மேல்' |
| வொ கிரத் | 'நகரில்' |

| | |
|---|---|
| ந செத் | 'மைத்துனனின்' |
| நொ செத் | 'மைத்துனனோடு' |

இம்மொழிப் பெயர்ச் சொற்கள் ஆண், பெண், அஃறிணை என்ற மூன்று பால்களையும் ஒருமை, பன்மை எண்களையும் காட்டுகின்றன. அந்நிலையைப் பெயரடைகளிலும் காணமுடியும்.

| | |
|---|---|
| குச் | 'கட்டையான (ஆண்)' |
| குச்-அ | 'கட்டையான (பெண்)' |
| குச்-ஓ | 'கட்டையான (அஃறிணை)' |
| குச்-இ | 'கட்டையான (பன்மை)' |

இம்மொழியில் மூன்று வகையான சிறப்புச் சுட்டுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஆங்கில மொழியிலுள்ளதைப் போலக் குறிப்பிட்டுக் காட்டும். பிற சிறப்புச் சுட்டுகள் தமிழிலுள்ள அண்மை, சேய்மைச்சுட்டுகளைப் போன்றுள்ளன. அவையனைத்தும் பின்னொட்டுகளாகவே இருக்கின்றன. அச்சுட்டுகளில் ஒருமை, பன்மை வேற்றுமையையும் ஒருமையில் ஆண், பெண், அஃறிணை வேற்றுமையையும் காணலாம்.

| | | |
|---|---|---|
| —ஒத் | பொப்-ஒத் | 'எருது (ஆண்)' |
| —த | மொச்க-த | 'கரடி (பெண்)' |
| —தொ | செஎலா-தொ | 'கிராமம்(அஃறிணை)' |
| — தெ | பொலோய்-தெ | 'எருதுகள்' |
| — தெ | மொச்சி-தெ | 'கரடிகள்' |
| —ஆ | செல-த | 'கிராமங்கள்' |
| —ஒப் | பொல்-ஒப் | 'இந்த எருது' |
| —பெ | பொலோய்-பெ | 'இந்த எருதுகள்' |
| —ஒன் | மொச்த்-ஒன் | 'அந்தப் பாலம்' |
| —நெ | பிளளி-நெ | 'அந்த மலைகள்' |

சிலாவிய மொழிகளைப் போன்றே இம் மொழியிலும் மூவிடப்பெயர்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களைக் காட்டுவதுடன் சுட்டுப் பெயர்களையும் கொண்டுள்ளன. எனினும், அம்மூவிடப் பெயர்கள் தனித்தன்மைகள் சிலவற்றைக் கொண்டிருக்கின்றன என்பர்.

| | |
|---|---|
| ஒவொய் | 'இவன்' |
| ஒவா | 'இவள்' |
| ஒவ | 'இது' |
| தொய் | 'அவன்' |
| தா | 'அவர்' |
| தொவ | 'அது' |
| ஒநொய் | 'அவன்' (சேய்மை) |
| ஒநா | 'அவள்' |
| ஒந | 'அது' |
| ஒநியெ | 'இவர்கள், இவை' |
| தியெ | 'அவர்கள், அவை' |
| யச் | 'நான்' |
| நியெ | 'நாம், நாங்கள்' |
| தி | 'நீ' |
| வியெ | 'நீங்கள்' |

இம்மொழி வினைச்சொற்கள் காலம், எண், இடம் போன்ற பல்வேறு இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. வினைச் சொற்கள் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. காலத்திற்கேற்ப விகுதிகள் மாறி எழுவாய்ப் பொருளைக் காட்டும்.


| | |
|---|---|
| நொச்-அம் | 'சுமக்கிறேன்' |
| நொச்-இச் | 'சுமக்கிறாய்' |
| நொச்-இ | 'சுமக்கிறான்' |
| நொச்-இமெ | 'சுமக்கிறோம்' |
| நொச்-இதெ | 'சுமக்கிறீர்கள்' |
| நொச்-இயத் | 'சுமக்கிறார்கள்' |
| நொச்-எவ் | 'சுமந்து கொண்டிருந்தேன்' |
| நொச்-ஏசெ | 'சுமந்து கொண்டிருந்தாய்' |
| நொச்-எசெ | 'சுமந்து கொண்டிருந்தான்' |
| நொச்-எவ்மெ | 'சுமந்து கொண்டிருந்தோம்' |
| நொச்-எப்தெ | 'சுமந்து கொண்டிருக்கிறீர்கள்' |
| நொச்-எய | 'சுமந்து கொண்டிருந்தார்கள்' |

சு.ச.

*மாசிடோனியா*: பால்கன் முந்நீரகத்தின் மத்திய பகுதியின் தெற்கில் புகழ்பெற்று விளங்கிய பழம்பெரும் நாடு மாசிடோனியா(Macedonia). மேற்கில் அல்பேனிய மேட்டுநிலப்பகுதியும், வடக்கில் சார் (Shar) மலைகளும், கிழக்கில் திரேசும் (Thrace), தெற்கில் ஏசியன் கடலும்(Aegean Sea), இதனுடைய எல்லைகளாக அமைந்துள்ளன. இந்நாடு இரண்டாம் பிலிப்பு, அவருடைய மகன் பேரரசர் அலெக்சாந்தர் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் புகழின் உச்சியை அடைந்திருந்தது. அவர்கள் கிரீசை வென்று, பாரசீகம் முழுவதையும் இணைத்து, ஒரு பேரரசை நிறுவினர். இது ஐரோப்பாவிலேயே வலிமைமிக்கதோர் பேரரசாகத் திகழ்ந்தது. இது 1913-இல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கிரீசு, யூகோசுலோவியா (1918 – க்கு முன் செர்பியா), பல்கேரியா ஆகியநாடுகளுடன் இணைக்கப்பட்டது. இதன் பரப்பளவு ஏறத்தாழ 66,800 சதுர கி.மீ.

**நிலவியல் அமைப்பு**: மலைகள் நிறைந்த இந்நாட்டில் வேளாண்மைக்குத்தேவையான நிலங்கள்பல

துண்டுகளாகப் பிரிந்துள்ளன. இப்பகுதியில் அலியக்மன் (Aliakmon) ஆறும், மத்தியில் வர்தர் (Vardar)ஆறும், மேற்கில் இசுட்ரிமன் (Stryman) ஆறும் பாய்கின்றன. அவற்றுள் வர்தர் மிகப் பெரியதாகும். அதனுடைய பள்ளத்தாக்கும், மொராவா (Morava) நதிப் பள்ளத்தாக்கும் பழங்காலத்திலிருந்து சிறந்த வாணிக நெடுஞ்சாலையாக விளங்கி வருகின்றன. இந்நாட்டில் கிழக்கு மேற்காகச் செல்லும் மற்றொரு நெடுஞ்சாலை அல்பேனியக் கடற்கரையிலுள்ள துராசோ (Durazzo) வையும், இன்றைய இசுதான்புல்லையும், (இடைக்காலக் கான்சுடாண்டிநோபிள்) இணைக்கின்றது. இவ்விரு நெடுஞ்சாலைகளுக்கும் இடையே இந்நாட்டின் தலைநகரான சலோனிகா (Salonika) அமைந்திருந்தது.




மாசிடோனியா அமைவிடம்

**மக்கள்:** உதுமானியத் துருக்கியர்களின் ஆட்சியில் 1921 – க்கு முன் மாசிடோனியாவில் பெரும்பான்மையினரான சிலாவு (Slav) மக்களும், துருக்கியர், கிரேக்கர், வல்சு (Valch) மக்கள், அல்பேனியர், யூதர் ஆகியோரும் வாழ்ந்துவந்தனர். துருக்கியர், கிரேக்கர், யூதர் ஆகியோர் நகரங்களில் தொழில் செய்து வந்தனர். சிலாவுகளும் வல்சுகளும் கிராமங்களில் ஆடு, மாடுகள் மேய்த்து வந்தனர். எனினும், சில மாவட்டங்களில் கிரேக்கர் அல்லது துருக்கியர், வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். முதல் உலகப் போருக்குப் பின்னர் அம்மக்கள் இடமாற்றம் செய்யப்பட்டதால் இனச் சிக்கல் குறைந்தது. கிரேக்கர், அவர்கள் பெரும்பான்மையினராய் வாழ்ந்து வந்த ஆசியாமைனர், பல்கேரியா ஆகிய பகுதிகளிலிருந்து கொண்டுவந்து குடியமர்த்தப்பட்டு, 1912முதல் 1927 வரை உள்ள காலப்பகுதியில் துருக்கியரும், சிலாவு இனத்தவரும் வெளியேற்றப்பட்டனர். இரண்டாம் உலகப் போரின் பொழுது மாசிடோனியாவைச் செருமானியர் கைப்பற்றி சலோனிகாவிலும், வேறு சில நகரங்களிலும் வாழ்ந்துவந்த யூதர்களை அழித்தனர். யூகோசுலோவிய மாசிடோனியாவில் அத்தகைய பெரும் மாற்றம் எதுவும் நிகழாததால், அங்குத் துருக்கியரும் மற்ற இனத்தவரும் வாழ்ந்து வரலாயினர்.

**கிரேக்க மாசிடோனியா:** கிரேக்க அல்லது ஏசியன் மாசிடோனியா என்று கூறப்படும் இப்பகுதியில் கிரேக்கர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். இதில் கிரீசின் வடபகுதி முழுவதும், திரேசுநீங்கலாக அடங்கும். இதன் வடக்கே யூகோசுலோவியாவும், பல்கேரியாவும், தெற்கே தெசாலியாவும் (Thessalia), எபிரசும் (Epirus),மேற்கே பிண்டசு (Pindus)மலைகளும், வடமேற்கே அல்பேனியாவும், கிழக்கே மெசுடா (Mesta) ஆறும் எல்லைகளாக உள்ளன. இதன் பரப்பளவு 34,348 சதுரகி.மீ. மக்கள் தொகை 21,05,649 (1981). இதன் தலைநகர் தெசலோனிகா(Thessalonika). பிற நகரங்கள் கவல்லா( Kavalla),செராய் (Serrai), திரமா (Drama) ஆகும். இது மலைப்பாங்காக இருப்பினும் ஏசியன் கடலில் கலக்கும் ஆறுகளின் அகன்ற பள்ளத்தாக்கு வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது. நடுநிலக் கடற்பகுதிக்குரிய தட்பவெப்ப நிலை இப்பகுதியில் நிலவுகின்றது. இங்குக் கோதுமை, வாற்கோதுமை, நெல் முதலான தானியங்கள், அத்தி, திராட்சை முதலிய பழவகைகள், புகையிலை, பருத்தி, பட்டுப்பூச்சிகள் உண்ணும் இலைகளையுடைய முசுக்கட்டைச் செடிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

**யூகோசுலோவிய மாசிடோனியா:** யூகோசுலோவியா அல்லது வர்தர் மாசிடோனியா எனப்படும் இப்பகுதி யூகோசுலோவியாவுடன் இணைந்துள்ள 6 குடியரசுகளுள் ஒன்று. இது மாசிடோனிய மக்கள் குடியரசு (People's Republic of Macedonia) என்று கூறப்படுகிறது. இதன் வடக்கில் செர்பியாவும், கிழக்கில் பல்கேரியாவும், தெற்கில் கிரீசும், மேற்கில் அல்பேனியாவும் எல்லைகளாக உள்ளன. இங்கு மாசிடோனியர் ஒரு தனி தேசிய இனமாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் இனத்தாலும், மொழியாலும் செர்பியர்களையும், பல்கர்களையும் ஒத்துள்ளனர். இதன் பரப்பளவு 25,713 சதுர கி.மீ. (9928 சதுர மைல்). மக்கள் தொகை 19,14,000 (1981). இதன் தலைநகர் சுகோப்சி(Skopji). மற்ற முக்கிய நகரங்கள் பிடோலசு (Bitolaz), பிரிலிப்பு (Prilep) ஆகியன. இப்பகுதியில் வாழும் மக்களில் 64.1 விழுக்காட்டினர் மாசிடோனியர், 17 விழுக்காட்டினர் அல்பேனியர், 8 விழுக்காட்டினர் துருக்கியர்.

வர்தர் பள்ளத்தாக்கும், வேறு இரு பள்ளத்தாக்குகளும் நீங்கலாகப் பிற இடங்கள் கடல் மட்டத்தி

விருந்து 610 மீட்டர் முதல் 915 மீ. வரை உயர்ந்துள்ள மேட்டு நிலங்களாகும். ஐரோப்பாக் கண்டத்துக்குரிய தட்ப வெட்ப நிலை இப்பகுதியில் உள்ளது. வேளாண்மையும், கால்நடை வளர்த்தலும் இம்மக்களுடைய முக்கிய தொழில். இங்குக் கோதுமை, பார்லி, மக்காச்சோளம், நெல், புகையிலை, பருத்தி, பழ வகைகள் பயிரிடப்படுகின்றன. புல்வெளி நிறைந்திருப்பதால் இங்கு அதிகமாகக் கால்நடைகள்வளர்க்கப்படுகின்றன. தாமிரம், ஈயம், தகரம், இரும்புக் குரும ஈருயிரகை ஆகியவை இரண்டாம் உலகப் போருக்குப்பின் வெட்டி எடுக்கப்படுகின்றன.

**பல்கேரிய மாசிடோனியா:** பல்கேரிய அல்லது பிரின் (Pirin) மாசிடோனியா என்று கூறப்படும் இது அந்நாட்டின் மூன்று பகுதிகளில் சிறியது. இது பல்கேரியாவிற்குத் தென்மேற்கே மெசுடா(Mesta), இசுடுரூமா (Struma) ஆறுகளுக்கு இடையே உள்ளது. வடகிழக்கில் பல்கேரியாவும், தெற்கில் கிரீசும், மேற்கில் யூகோசுலோவியாவும் இதனைச் சூழ்ந்துள்ளன. இப்பகுதியைப் பெலசிட்சா(Belasitsa) மலைத்தொடர்கள் ஏசியன் மாசிடோனியாவிலிருந்தும் மெலசுவிசகா (Maleshevska),ஒசோகோவிசுகா(Osogovska) மலைத்தொடர்கள் வர்தர் மாசிடோனியாவிலிருந்தும் பிரிக்கின்றன. இதன் பரப்பளவு 1,15,36 ச.கி.மீ. மக்கள் தொகை 7,00,000 (1981). அவர்களுள் 18 விழுக்காட்டினர் பல்கர்கள் (Bulgars).

**வரலாறு:** இந்நாட்டில் கி.மு. 2000-இல் மக்கள் குடியேறி மிகப்பழைய நாகரிகத்தைப் படைத்தனர். இரண்டாம் பிலிப்பு என்பவரின் மகன் பேரரசர் மூன்றாம் அலெக்சாந்தர் (கி.மு. 336-323) ஆட்சிக்காலத்தில் மாசிடோனியா ஒரு பேரரசாக மாறியது. அப்பொழுது மத்திய கிழக்கு முழுவதிலும் (அரேபியா நீங்கலாக), வடமேற்கு இந்தியா வரை அது பரவியிருந்தது. இவர்கள் கி.மு. 215-லிருந்து கி.மு. 168 வரை நடந்த மூன்று போர்களில் உரோமானியரால் தோற்கடிக்கப்பட்ட, கி.மு. 148-இல் இந்நாடு உரோமானியப் பேரரசின் ஒரு மாநிலமாக ஆனது. அவர்களுடைய ஆட்சியில் இப்பகுதியில் கிறித்தவ சமயம் பரவியது. உரோமானியப் பேரரசு கி.பி. 47 - இல் அழிந்ததும், இது கிழக்கு உரோமானியப் பேரரசு அல்லது பைசாண்டியப்பேரரசின் ஒரு முக்கிய மாநிலமாக விளங்கியது. இப்பகுதியில் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளில் சிலாவு (Slav) இனத்தவர் குடியேறி, இங்கு வாழ்ந்த மக்களை வெளியேற்றி அல்லது சிலாவுகளாக மாற்றி இதனை ஒரு சிலாவு நாடாகச் செய்தனர். பின்னர் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டில் இம் முந்நீரகத்தை உதுமானியத் துருக்கியர்கள் கைப்பற்றினர். சுல்தான் முதலாம் முராது கி.பி. 1389-இல் செர்பியப்படையை மாசிடோனியாவுக்கு வடக்கிலுள்ள கொசாவோ (Kosovo) என்ற இடத்தில் வென்று துருக்கியின் நேரடி ஆட்சியின் கீழ்க்கொணர்ந்தார். இம்மக்கள் இசுலாமிய சமயத்திற்கு மாற்றப் பட்டாலும், பலர் தங்கள் பழைய சமயத்தையே பின்பற்றினர். பெர்டினாண்டு – இசபெல்லா ஆட்சியின் பொழுது கி.பி. 1492 – இல் இசுபெயினிலிருந்து யூதர்கள் (Jews) வெளியேற்றப்பட்டதால் அவர்கள் மாசிடோனியாவில் குடியேறினர்.

ஐரோப்பாவில் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் தேசிய உணர்ச்சி எழுந்தபொழுது, இந்நாட்டிலும் அது பரவி, 1912 – இல் கிரீசு, செர்பியா, பல்கேரியா ஆகியவற்றின் கூட்டுப்படை முதலாம் பால்கன் போரில் துருக்கியரை விரட்டியடித்தது. ஆனால்,நாட்டைப் பிரித்துக்கொள்வதில் பூசல் ஏற்பட்டு 1913-இல் இரண்டாம் பால்கன் போர் தோன்றியது. அதில் செர்பியரும், கிரேக்கரும், உருமேனியர்களையும் துருக்கியரையும் சேர்த்துக்கொண்டு பல்கர்களைத் தோற்கடித்து அந்நாட்டிலிருந்து அவர்களை வெளியேற்றினர். பின்னர் மாசிடோனியாவைக் கிரீசு, யூகோசுலோவியா, பல்கேரியா ஆகியவை பங்கிட்டுக் கொண்டன. சி.இரெ.

மாசினி, சோசபு (**கி.பி. 1805-1872**): இத்தாலிய ஐக்கியத்தின் தீர்க்கதரிசியாகக் கருதப்படுபவர் சோசபு மாசினி (Joseph Mazzini) ஆவார். அந்நாட்டை ஆசுத்திரியாவிடமிருந்து விடுவித்து, ஒருங்கிணைப்பது நடக்கக்கூடிய செயல் என மக்களுக்கு முதன் முதலில் உணர்த்தியவர் இவரே. இவர் இத்தாலிய மக்களிடையே கருத்துப் புரட்சியை உண்டாக்கி அந்நாட்டின் தேசியத்திற்கும் ஐக்கியத்திற்கும் வழிவகுத்தார். இவர் செனோவாவில் (Genoa) கி.பி. 1805 – ஆம் ஆண்டு பிறந்தார். மருத்துவரான இவர் தந்தை, பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் இருந்து வந்தார். இளம் வயதிலேயே மாசினி இத்தாலியின் நிலைகுறித்து மிகவும் வருந்தினார்; இலக்கியத்தை மிகவும் விரும்பினாலும் இவர் தம் 19–ஆம் வயதில் வழக்குரைஞரானார். இவர் கார்பொனரிக் (Carbonari) கட்சியில் கி.பி. 1829–ஆம் ஆண்டு சேர்ந்து, கி.பி. 1830 – இல் சிறைப்பட்டார். ஆறு மாதங்களுக்குப்பின் விடுதலை செய்யப்பட்டு, நாடுகடத்தப்பட்டதால் இவர் பிரான்சு, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் 40 ஆண்டுகள் வாழ்ந்தார்.

**இளம் இத்தாலி:** இவர் கி.பி. 1831-இல் ‘இளம் இத்தாலி’ (Giovane Italia – Young Italy) என்னும் கட்சியைத் தோற்றுவித்து, இத்தாலிய இளைஞர்களிடையே தேசிய உணர்வையும் விடுதலை வேட்கையையும் உண்டாக்கினார். அவ்விளம் உள்ளங்களில் விடுதலை, ஐக்கியம், தியாகம் முதலிய கோட்பாடுகளைப்

புகுத்தி, இத்தாலியின் ஐக்கியத்தைப் புரட்சியின் மூலமே ஏற்படுத்த முடியும் என்று இவர் கருதினார். அந்நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்றைத் தோற்றுவித்து, அந்நாடு ஒரு குடியரசாக மலர வேண்டுமெனக் கூறினார். அக்கட்சியில் 40 வயதிற்கு உட்பட்டவரே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அந்நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆசுத்திரியாவுடன் போர் செய்து விடுதலையைப் பெறவேண்டும் என்று இவர் கூறினார். இத்தாலிய விடுதலைக்கு அயல் நாட்டினரின் உதவி இருக்கக்கூடாது எனக்கருதி இவர், 'இத்தாலியர் தாங்களாகவே விடுதலை பெறுவர்' எனக் குறிப்பிட்டார். மக்களுக்குப் பண்டைய உரோமானியப் பேரரசின் பெருமைகளை எடுத்துக்கூறி அந்நாட்டின் விடுதலையையும் ஐக்கியத்தையும் இவர் வலியுறுத்தினார். 'முதலில் உரோமாபுரி சீசர்களின் உரோமாபுரியாக இருந்தது; அடுத்துப் போப்பாண்டவரின் உரோமாபுரியாக இருந்தது; ஆனால் இனி, இத்தாலிய மக்களுடைய உரோமாபுரியாக இருக்கவேண்டும்' என முழக்கமிட்டார். மக்களிடையே கடமை உணர்வையும், தியாகச் சிந்தனையையும் தூண்டிவிட்ட இவர் 'தியாகிகள் தம் குருதியை நீராகப் பாய்ச்சினால்தான் கருத்துகள் வேகமாக வளரும்' எனக் குறிப்பிட்டார். அக்கட்சிக்குப் பல இடங்களிலும் கி.பி. 1833 – இல் கிளைகள் அமைக்கப் பெற்றன. அது 60,000 க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. பிரான்சில் கி.பி. 1830-ஆம் ஆண்டு சூலைப் புரட்சி ஏற்பட்டபொழுது மாசினி, பீட்மாண்டின் அரசரான சார்லசு ஆல்பர்ட்டை ஆசுத்திரியாவின் மீது போர் தொடுக்குமாறு வேண்டினார். அதற்கு 'இளம் இத்தாலி'க் கட்சியின் உதவி கிடைக்குமென்றும் இவர் உறுதி கூறினார். ஆனால், அக்கட்சியினரைப் பற்றி அச்சம் கொண்ட அரசர் அதனை நசுக்கிவிட்டார். சிசிலியில் (Sicily) கி.பி. 1843-இல் தோன்றியதோர் கிளர்ச்சியும் அடக்கப்பட்டது. உரோம் நகரை கி.பி. 1848-இல் மாசினி கைப்பற்றி அதனை ஒரு குடியரசாக்கினார். அப்பொழுது தசுகனியும் (Tuscany) ஒரு குடியரசாக மாறி உரோமுடன் இணைய விரும்பியது. ஆனால், ஆசுத்திரியப் படைகள் தசுகனியில் கிளர்ச்சியை அடக்கி, மீண்டும் மன்னராட்சியை ஏற்படுத்தின. மூன்றாம் நெப்போலியன் பிரான்சுப் படையை அனுப்பி, உரோமைக் கைப்பற்றி, மீண்டும் போப்பாண்டவரின் ஆட்சியைக் கொண்டுவந்தார். இவ்வாறு இத்தாலிய விடுதலைக்காக மாசினி மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. எனினும், இவருடைய கட்சியைச் சேர்ந்த கரிபால்டி (Garibaldi) பின்னர் இத்தாலிய விடுதலைப் போரில் முக்கிய பங்கு ஏற்றார். ஐக்கிய இத்தாலி ஒரு குடியரசாக இருக்க வேண்டுமென இவர் விரும்பியதற்கு மாறாக அங்கு முடியாட்சியே ஏற்பட்டது.

சி.இரெ.

**மாசுக்கி:** இந்தியப் பழங்கால வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்று விளங்கிய மாசுக்கி என்னும் ஊர் கருநாடக மாநிலத்தில் இரெய்ச்சூர் மாவட்ட இலிங்சுகர் வட்டத்தில் அமைந்துள்ளது. இது இலிங்சுகரிலிருந்து 22 கி.மீ. தொலைவில் உள்ளது. முன்பு இப்பகுதி ஆந்திர மாநிலத்தின்கீழ் இருந்தது. மாசுக்கியின் வடபுறத்தில் துங்கபத்திராவின் கிளை ஆறு ஒன்று ஓடுகிறது.

இவ்விடம் வரலாற்றின் தோற்றம் முதலே தனக்கென்று ஒரு வரலாற்றைக் கொண்டதாகும். இங்கு 1954 – ஆம் ஆண்டு சனவரி – மார்ச்சு மாதங்களில் இந்தியத் தொல்பொருள் துறையினரும், ஐதராபாது தொல்பொருள் துறையினரும் இணைந்து முறையான அகழாய்வு ஒன்றை நடத்தி முடித்தனர். அவ்வகழாய்வின் மூலம் மாசுக்கி ஒரு பழங்கற்கால மனிதர்களின் வாழ்விடமாக விளங்கியது என்பதற்கான எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதுமட்டுமன்றிப் பழங்காலம் தொட்டே இங்கு வாழ்ந்த மக்கள் நாகரிக வாழ்க்கை வாழ்ந்ததற்கான அடையாளங்களும் தொல்பொருள் ஆய்வின் காலக்கணிப்பு அடுக்குகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட தங்கத்தாலான தொல்பொருள் சின்னங்கள் பழங்காலத்திலேயே மாசுக்கி தங்க வேலைக்குப் புகழ்பெற்று விளங்கியதைத் தெளிவாக்குகின்றன. மேலும், இங்குக் காணப்பட்ட வெளிநாட்டுப் பானை ஓடுகள் அண்டை நாடுகளுடன் மாசுக்கி அக்காலம் முதலே தொடர்பு கொண்டிருந்ததைக் காட்டுகின்றன. மாசுக்கியின் பண்பாட்டுக் கூறுகள் இதே மாநிலத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பிரம்மகிரியின் பண்பாட்டுக் கூறுகளுடன் ஒப்பிட்டுக் காணும் நிலையில் உள்ளன.

இங்குத்தான், மௌரியப் பேரரசர் அசோகரின் (கி.மு.273 – 236) கால வரலாற்று ஆதாரங்களில் முக்கியமானதாகக் கருதப்படும் 'மாசுக்கி சிறுபாறைக் கல்வெட்டு' 1919-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அதுவே அசோகரின் முதல் சிறுபாறைக் கல்வெட்டாகும். அசோகர் புத்தசமயத்தில் பற்றுக் கொண்ட இரண்டாண்டு கழித்து அக்கல்வெட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. அசோகரால் வெளியிடப்பட்ட மற்றைய கல்வெட்டுகளிலிருந்து அது தனிச்சிறப்புப் பெற்றதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். அதற்கு முக்கிய காரணம் அச்சிறுபாறைக் கல்வெட்டில் மட்டுமே அசோகரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பிறகல்வெட்டுகளில் அசோகரின் பெயர்களாகத் தேவனாம்பிய (கடவுளரின் அன்புக்குரிய

வர்), பிரியதர்சின் (நல்லிணக்கத்தோற்றமுடைய வர்) என்பன மட்டுமே குறிக்கப்படுகின்றன. மாசுக்கிக் கல்வெட்டில் 'தேவனாம்பிய பிரியதர்சின் அசோகர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்பாகும். அக்கல்வெட்டு பிராகிருத மொழியையும் பிராமி எழுத்தையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு அசோகரது பேரரசு தென்னிந்தியாவில் பரவியிருந்ததற்கும், அசோகர் புத்த சமயத்தைச் சார்ந்திருந்ததற்கும் ஒரு சிறந்த வரலாற்று ஆதாரமாக விளங்குகிறது.

சிறப்பான முற்கால வரலாறு, பண்பாடு, நாகரிகத் தன்மை ஆகியவற்றைப் பெற்று விளங்கிய மாசுக்கி இப்போது ஒரு சிற்றூராகப் புகழ்மங்கி நிற்கிறது. பா.ஜெ.

**துணை நூல்கள்:**

**Amamath Khann,** Archaeology of India, Clarion Books, New Delhi. 1981.

**Bogand - Levin,** Mauryan India, Sterling Publishers Pvt.Ltd., New Delhi, 1985.

**Dani, A H.,**Indian Paleography, Munshiram Mohanlal Publishers Pvt. Ltd., New Delhi, 1980.

மாசுகோ சோவியத்து நாட்டின் தலைநகராகவும், அந்நாட்டிலேயே பெரிய நகரமாகவும் விளங்குகின்றது. இலெனின் (Lenin) தலைமையிலான பொதுவுடைமை அரசு அந்நாட்டின் தலைநகரை 1918-இல் பெட்ரோகிரேடிலிருந்து (Petrograd - St.Petersburg) இந்நகருக்கு மாற்றியது. இது இலெனின்கிராடுக்கு 640 கி மீ. தென்கிழக்கில் மாசுகோ ஆற்றங்கரையில், உசா (Yauza) ஓடை கலக்குமிடத்தில் அமைந்துள்ளது. காசுபியன், அசோவு (Azov),கருங்கடல், வெண்கடல், பால்டிக்குக்கடல் ஆகியவற்றின் துறைமுகமாக இது இருப்பதால் 'ஐங்கடல் துறைமுகம்' எனப்படுபடுகின்றது. இது 1960 - இல் விரிவுபடுத்தப்பட்ட பின்னர் இதன் பரப்பளவு ஏறத்தாழ 85 சதுர கி.மீ. ஆகியது. மக்கள் தொகை 1985 - இல் 86,42,000 ஆயிற்று. இது இந்நாட்டின் அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றின் பண்பாட்டு மையமாக விளங்குகின்றது; சோவியத்து அரசாங்கம், நிருவாகத் துறைகள், கட்சி ஆகியவற்றின் தலைமையிடமாகவும் உள்ளது.

**பருவநிலை:** மாசுகோவில் (Moscow) ஆண்டில் 5 மாதங்கள் கடுங்குளிராக இருக்கும். அக்டோபர் மாதம் பனி விழத்தொடங்கி நவம்பரில் 1 அல்லது 2 மீட்டர் உயர்ந்து நிற்கும். சூலையில் சராசரி அதிக வெப்பம் 18°செ.; திசம்பரில் அதிக வெப்பம் –5°செ; சனவரியில் -11°செ. ஆகும். சில சமயங்களில் -40°செ. ஆக இருக்கும். ஆண்டின் சராசரி மழை 630 மி.மீ. இங்குக் கோடையில்தான் அதிக மழை பெய்கிறது.

**பண்பாட்டு மையம்:** இந்நகர் நாட்டின் சோவியத்துப் பண்பாட்டு மையமாகவும் விளங்குகின்றது. இங்கு 20 - க்கு மேற்பட்ட நடன, நாடக அரங்குகளும், 120–க்கு மேற்பட்ட திரைப்பட அரங்குகளும் உள்ளன. திரைப்படத் தயாரிப்பில் இது சிறந்து விளங்குகின்றது. நூல்களை அச்சிடுவதிலும், வெளியிடுவதிலும் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. உலகிலுள்ள மூன்று மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான இலெனின் அரசு நூலகம் (The Lenin State Library) இங்குள்ளது. இங்கு, 2,00,00,000 நூல்களும், கையெழுத்துப் படிகளும் உள்ளன. மேலும், 49 அரும்பொருட்காட்சியகங்களும், கலைக்கூடங்களும் இருக்கின்றன. கல்விக்குச் சிறந்த இடமாகவும் இது திகழ்கின்றது. இங்கு 90 உயர்கல்வி நிலையங்கள்,460 அறிவியல் பள்ளிகள், 1000 பள்ளிகள், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள், தொழில் நுணுக்கக் கல்லூரிகள் ஆகியவற்றைக் காணலாம். இங்கு 1953-இல் இலெனின் மலையுச்சியில் கட்டப்பட்ட பல்கலைக்கழகம் (Lomonso State University)32 மாடிகளுடன் சிறந்து விளங்குகின்றது. அப்பல்கலைக்கழகம், கி.பி.1755-இல் தொடங்கப்பெற்றது. அது, உருசியாவிலேயேமிகப் பெரியதும், பழமையானதுமாகும். மருத்துவம், வேளாண்மை, கலைகள்,கட்டடக்கலை ஆகியவை பற்றிய ஆராய்ச்சி நிலையங்களும் உள்ளன. இங்கு, 1960–இல் ஏற்படுத்தப்பட்ட உலுமும்பா பல்கலைக்கழகமும் (Patrice Lumumba People's Friendship University for Afro-Asian and Latin American Students) சிறந்து விளங்குகின்றது. பூங்காக்கள் நிறைந்த இந்நகரில் கார்கிப் பூங்கா (Gorki Park) புகழ்பெற்றதாகும். வடகிழக்கிலுள்ள சோகல்நிகிப்(Sokolniki) பூங்காவில் அடிக்கடி கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மாசுகோவிலுள்ள இலெனின் மத்திய விளையாட்டரங்கில் (Stadium) பல்வேறு விளையாட்டுகளுக்கென 130 கட்டடங்கள் உள்ளன.

**தொழிற்சாலைகள் நகரம்:** இங்கு 1800–க்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் உள்ளதால் இது தொழிற்சாலைகள் நிறைந்ததொரு நகரமாகும். வான ஊர்திகள், பலவகை ஊர்திகள், இயந்திரங்கள், அவற்றிற்கான துணைக் கருவிகள், கணக்கிடும் இயந்திரம், கடிகாரம், மின்சார – மின்னியல் கருவிகள் (வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள்), குளிர்பதனப் பெட்டிகள், மின் பேருந்துகள், விளக்குகள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. பட்டு, பருத்தி, கம்பளித் துணிவகைகளும்,



இலெனின் கல்லறை



மாசுகோ செஞ்சதுக்கம்



மாசுகோ



தொழில்நுட்பக் காட்சியகம்



மாசுகோ நகரவீதி

வண்ணங்கள், சாயங்கள், செயற்கை இரப்பர், மருந்து வகைகள், ஒப்பனைப் பொருட்கள், வாசனைப் பொருட்கள், காலணிகள், தாள்கள், சவர்க்காரம், 'பியானோ' இசைக்கருவி ஆகியவையும் தயாரிக்கப் படுகின்றன.

**கிரெம்ளின் அரண்மனை:** உருசிய நாட்டின் பண்டைக்காலக் கட்டடக் கலையின் நினைவுச் சின்னமாக மாசுகோ ஆற்றின் வடக்குக் கரையில் கிரெம்ளின் அரண்மனை விளங்குகின்றது. முக்கோண வடிவில் அமைந்துள்ள இதில் சார் மன்னர்களின் மாளிகைகளும், அரசுக் கட்டடங்களும், கிறித்தவக் கோயில்களும் உள்ளன. பேரரசன் ஐவானின் கோபுரமும், 98 மீட்டர் உயரமுள்ள மணிக் கூண்டும், அதன் அருகிலுள்ள மேடைமீது வைக்கப்பட்டிருக்கும் 200 கண்டி (Tones) எடையுள்ள உலகிலேயே மிகப்பெரிய மணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. புதிதாக 1961 -இல் அமைக்கப்பட்ட காங்கிரசுகளின் அரண்மனையில் (The Palace of Congresses) அரசியல் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப் பயன்படுகின்றன.

கிரெம்ளின் அரண்மனைக்கு அருகில் வடகிழக்கு மதிலையும், அகழியையும் ஒட்டிச் செஞ்சதுக்கம் உள்ளது. அவ்வரண்மனையிலிருந்து அச்சதுக்கத்திற்குச் செல்ல மூன்று வாயில்கள் உள்ளன. அதன் நடுவில் உருசியப் போல்சுவிக்குப் புரட்சித் தந்தை இலெனினுக்கு 1930 - இல் கட்டப்பட்ட கல்லறை உள்ளது. இங்குக் கிரெம்ளின் மதிலை ஒட்டி கி.பி. 1554-60 - இல் கட்டப்பட்ட மிகப் பெரிய கோயில் (The Cathedral of St. Basil the Beatified) பலவித வண்ணங்களில், பல்வகைக் கோபுரங்களுடன் மிக அழகாகக் காட்சியளிக்கிறது. இப்பொழுது அது ஓர் அரும்பொருட்காட்சியகமாக உள்ளது. சி.இரெ.

**மாசு, மார்சல்(கி.பி. 1872-1950),** தலைசிறந்த பிரான்சு நாட்டுச் சமுதாயவியலாரும் மானிடவியலாருமாவார். இவர் சமுதாய அமைப்பிற்கும் (Social Structure) பரிமாற்ற முறைகளுக்கும் (Exchange Systems) உள்ள உறவுகளை ஆராய்ந்தவர். இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) பற்றிய இவர்தம் சிந்தனைகளும் கொள்கைகளும் புகழ்மிக்க மானிடவியலறிஞர்களான இலெவி இசுட்ராசு (Levi Strauss), இராட்கிளிப் பிரௌன், இவான்சு பிரிட்சர்டு, எர்சுகோவிட்சு போன்றோரைப் பெருமளவு தாக்கம் பெறச் செய்தன.

மார்சல் மாசு (Marcel Mauss) புகழ்மிக்க பிரான்சு நாட்டுச் சமுதாயவியலாரான எமிலி தர்க்கைமின் (Emile Durkheim) நெருங்கிய உறவினர். இவர் பிரான்சில் எப்பினாலில்(Epinal) கி.பி. 1872-இல் பிறந்தார். தொடக்கத்தில் எமிலி தர்க்கைமுடன் பணியாற்றுவதில் இவர் காலத்தைக் கழித்தார். தர்க்கைமின் புகழ்மிக்க நூலான தற்கொலை(Suicide) நூல் முழுமை பெறுவதற்கு மாசு பலநிலைகளில் உதவியாக இருந்தார். பின்னர், 1902 – இல் மாசு தொன்மைச் சமயம் என்னும் பிரிவில் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். பாரிசுப் பல்கலைக் கழகத்தில் இனக்குழு ஒப்பாய்வியல் கழகத்தை 1925 -இல் தோற்றுவித்தார். இதன்பின்னர், பிரான்சுக் கல்லூரி ஒன்றிலும் பேராசிரியராகச் சிலகாலம் (1931 - 39) பணியாற்றினார்.

மாசு தொடக்கத்திலிருந்தே பல்வேறு இனத்தவர்களின் இனக்குழுவியலிலும் (Ethnography) மொழியியலிலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். இவர்தம் புலமை, களப்பணி மூலம் பெறப்பட்டதன்று. பல்வேறு இனக்குழுவியல் ஆய்வுகளிலிருந்து பெறப்பட்டதாகும். இவர்தம் ஆய்வுகள் பெரும்பாலும் பொருளியல் சார் மானிடவியலோடு தொடர்புடையதாக அமைந்தன. குறிப்பாக அன்பளிப்புப் பரிமாற்றம் (Gift Exchange) பற்றி மிகவும் நுணுக்கமாக இவர் ஆராய்ந்தார். சமுதாயத்தில் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் அன்பளிப்பு, அவர்களிடையே மேன்மேலும் பிணைப்பினை ஏற்படுத்துவதோடு அம்மக்களின் பொருளாதார நிலையினை நலிவடையாமலும் காக்கிறது என்று கூறியுள்ளார். அதோடு பரிமாற்றமுறையானது சட்டம், சமயம், தொன்மவியல் (Mytnology) போன்ற நிறுவனங்களோடும் தொடர்பு கொண்டுள்ளது என்று உறுதியாகத் தெரிவித்தார். இவர் எழுதிய 'அன்பளிப்பு' (The Gift) என்னும் நூலில் மெலனீசிய மக்களிடம் காணப்படும் குலா வளையப் பரிமாற்ற (Kula Ring Exchange) முறையின் செயற்பாட்டினை ஆராய்ந்தார். அம்மக்களிடம் பலகாலம் ஆய்வுசெய்த மாலினோசுகி (Malinowski) காணாத புதிய விளக்கங்களை மாசு அந்நூலில் குறிப்பிடுகிறார். இவர் ஆய்வு இவருக்கு அடுத்து வந்த தலைமுறையினரிடம் பெரும் சிந்தனையைத் தூண்டியது. மெலனீசியா, பாலினீசியா, வட அமெரிக்கா முதலான பகுதிகளில் வாழும் பழங்குடிகளின் இனக்குழுவியலைத் தொகுத்து, ஒப்பீட்டு அடிப்படையில் ஆய்வுசெய்த மாசு, தொன்மைச் சமயம் பற்றியும் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொண்டார். குறிப்பாக மாயவித்தை, இறப்புக்குப்பின் செய்யப்படும் சடங்குகள் ஆகியன குறித்துக் கொள்கை அடிப்படையில் அமையும் ஆய்வுகளை இவர் மேற்கொண்டார். இவர் தர்க்கைமுடன் சேர்ந்து எழுதிய 'தொன்மை நிலையிலான வகைபாடு' என்ற நூலும் பிற்கால மானிடவியலில் குறிப்

பாக அமைப்பியல் (Structural) ஆய்வுகளில் சிறப்பிடம் பெற்றது. மாசு 1950-ஆம் ஆண்டு பாரிசில் காலமானார். சி.ப.

**மாசுலோ, ஆபிரகாம்:** அமெரிக்க உளவியல் வல்லுநரான ஆபிரகாம் மாசுலோ உந்து சக்திகளைப் பற்றி ஆராய்ந்து உளவியலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார். மனிதநேய உளவியல் (Humanistic Psychology) கருத்துகளின் அடிப்படையில் ஆய்வு நடத்திய இவர், தம் ஆராய்ச்சியில் 'தன்னிலை உயர்வு அடைந்தவர்கள்' (Self Actualization) என்று தாம் கருதிய அறிஞர் சிலரைத் தம்முடைய முழுத்திறமையையும் ஆக்கவேலையில் ஈடுபடுத்தியவர்களாகத் தேர்ந்து அறிந்தார். அவர்களுடைய வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஊன்றி ஆய்வு செய்த இவர் தம்முடைய ஊக்கிகள் கோட்பாடு (Theory of Motivation) அல்லது தேவைகளின் கோட்பாட்டை (Hierarchy of Needs) வெளியிட்டார்.


மாசுலோ (Abraham Maslow) மனித வாழ்வின் தேவைகளை ஐந்து வகைகளாகப் பிரித்து அவற்றை வரிசைப்படுத்தினார். முதனிலைத் தேவைகளாக உடற்கூற்றுத் தேவைகளை இவர் வரையறுத்தார். பசி,தாகம் போன்ற அடிப்படைத் தேவைகள் அதிலடங்கும். அடுத்துப் பாதுகாப்புத் தேவைகள் (Safety Needs) இரண்டாம் நிலையில் வருவன. உடல், உடைமைப் பாதுகாப்புத்தேவைகளோடு மனத்திண்மை, பாதுகாப்பு உணர்வு ஆகியவையும் பாதுகாப்புத் தேவைகளாகக் கருதப்படுகின்றன. சார்புத்தன்மைத் தேவைகள் (Derived Needs) பாதுகாப்புத் தேவைகளுக்கு அடுத்த நிலையாகக் கருதப்படுகின்றன. மற்றவர்களோடு சேர்ந்திருத்தல், நட்பு, உறவு ஆகியவை அந்நிலையில் குறிப்பிடப்படுகின்றன. தன் மதிப்பு அடுத்த நிலைத் தேவையாக வரையறுக்கப்பட்டுள்ளது. சாதனைகள் புரிதல், தன்மான உணர்வு அடைதல் ஆகியவை அத்தேவைகளின் அளவுகள் ஆகும். ஆராய்ச்சி செய்தல், புது வழிகளைக் கற்றறிதல் போன்றவை கலை உணர்வுத் தேவைகள் (Aesthetic Needs) ஆகும். அழகு, இரசிப்புத்தன்மை ஆகியவை அறிவு முறையான தேவைகளாகும். ஆயினும், சிலர் மேற்கூறிய மூன்றையும் தனித் தனித் தேவைகளாக விளக்குவதுமுண்டு.

முடிவாக, மனித வாழ்வின் மிக உயர்ந்த நிலைத் தேவை 'தன்னிலை உயர்வு உணர்தல்' ஆகும் என்று மாசுலோ குறிப்பிடுகிறார். அந்நிலையை வெகுசிலரே அடைய முடியும் என்றும் குறிப்பிடுகிறார். அந்நிலைகளை ஓர் ஏணிப் படிகள் போன்று வரிசைப்படுத்தி அமைத்துள்ளார் மாசுலோ. அதைக் கீழ்க்காணும் விளக்கப்படத்தில் காணலாம்.

அவற்றுள் உடற்கூற்றுத் தேவைகள், பாதுகாப்புத் தேவைகள், ஒருசில தொடர்புத் தேவைகள் (Affiliation Needs) ஆகியவற்றை 'அடிப்படைத் தேவைகள்' என்றும் பிறவற்றை 'மேனிலைத் தேவைகள்' என்றும் இரு கூறுகளாகப் பிரிக்கிறார்.

மாசுலோவின் கூற்றுப்படி 1) தேவைகளின் வரிசையை முறைப்படி ஒவ்வொன்றாகவே கடக்க முடியும். ஒரு சமயத்தில் ஒரு நிலையே மேலோங்கி நிற்கும். அதாவது, மனிதத் தேவைகள் உடற்கூற்றுத் தேவைகளில் தொடங்கி ஒவ்வொன்றாக மாறுபடுகின்றன. அவற்றில் ஒரு நிலை இல்லாமல் இருத்தலோ, அதனைப்புறக்கணித்தலோ இயலாது. 2) கீழ்நிலையில் இருக்கும் ஒரு தேவையை நிறைவு செய்தபிறகே ஒருவர் அதனின்று மேனிலைக்குச் செல்லமுடியும். அடிப்படைத் தேவைகளைக் கணிசமாகவோ முழுமையாகவோ நிறைவு செய்யாமல் மேனிலைத் தேவைகளை அடைய இயலாது. எடுத்துக்காட்டாகப் பசியினால் வாடுபவர்களுக்கு அழகைக் கண்டு மகிழும் மனப்பாங்கு இருப்பதில்லை. 3) ஒரு

மாசுலோவின் 'தேவைகள் கோட்பாடு'



சமயத்தில் ஒருவருக்கு ஒரு தேவையே மேலோங்கி நிற்கும். சில தேவைகள் மீண்டும் மீண்டும் தோன்றுவன ஆயினும், பொதுமையில் அத்தேவைகளை நிறைவு செய்யும் போது அதன் தேக்கம் இருப்பதில்லை. 4) ஒவ்வொரு மனிதனும் 'தன்னிலை உணர்வு' அடையும் திறன் பெற்றிருந்தாலும் வெகு சிலரே அந்நிலையை அடையமுடிகிறது. 5) தேவைகளின் அனைத்து நிலைகளிலும் 'தன்னிலை உணர்வு' நிலையே முழுவதும் தீர்க்கமுடியாத ஒரு தேவையாகும். 6) எந்த ஒரு நிலையிலும் தேக்கம் அடையும் வாய்ப்பு உண்டு. தீர்க்கப்படாத அல்லது தீர்க்க முடியாத ஒரு தேவை மனிதனை அந்த நிலையிலேயே தேக்கம் அடைய வைக்கிறது என்பதாகிறது.

மாசுலோ தம் ஆய்வில் 'தன்னிலை உயர்வு' அடைந்தவரின் குணவியல்புகளை விவரிக்குமிடத்து அவர்களைத் 'தம் திறன் முழுவதும் ஆக்க வேலையில் ஈடுபடுத்தியவர்கள்' என்று விவரிக்கிறார். மேலும், அவர்கள் 1) தங்களை உள்ளபடியே குறை நிறைகளோடு ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள், 2) சிறந்த நகைச்சுவை உடையவர்கள், 3) வாழ்க்கையை ஆழ்ந்து சுவைக்கும் மனோபாவம் உடையவர்கள், 4) சமூக முன்னேற்றத்தை விரும்புபவர்கள், 5) வாழ்க்கையை விருப்பு வெறுப்பற்ற பரந்த கண்ணோட்டத்துடன் அணுகுபவர்கள், 6) பலருடன் மேற்போக்கான தொடர்பு கொள்வதைவிட ஒரு சிலருடன் ஆழ்ந்த நட்புக்கொள்வதையே விரும்புபவர்கள், 7) படைப்புத் திறனும் (Creativity), கற்பனை வளமும் மிக்கவர்கள், 8) பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகாதவர்கள் என்பது மாசுலோவின் கணிப்பு.

மேலும், அவர்கள் வாழ்க்கையை ஒரு குழந்தையின் செயல்களை அனுபவிப்பது போல் முழுக்கவனத்துடன் சுவைக்கின்றனர்; வழக்கத்தில் இருக்கும் பாதுகாப்பான வழியில் செயற்படுவதைவிடப் புதுமையாகச் செயற்படுவதையே விரும்புகின்றனர்; பொறுப்புகளை விரும்பி ஏற்று நடத்தி வருகின்றனர்; தம் குறைகளை அறிந்து அவற்றைக் களைய முயல்கின்றனர் என்றும் மாசுலோ அவர்கள் இயல்புகளை வருணிக்கிறார். அந்நிலையை அடைந்தவர்கள் முடிவெடுக்கும் திண்மை பெற்றவர்களாகவும் தாம் எடுத்த முடிவை மற்றவர் விரும்பாவிடில் எதிர்ப்புகளை எதிர்நோக்கும் மனஉறுதி உடையவர்களாகவும் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்.

மாசுலோ அத்தன்மை வாய்ந்தவர்களாக ஆபிரகாம் இலிங்கன், மார்டின் உலூதர் கிங்கு, ஆல்பர்ட்டு ஐன்சுடீன், எலினர் உரூசுவெல்ட்டு ஆகியோரைக் குறிப்பிடுகிறார். கல்லூரி மாணவர்களிடையே தாம் நடத்திய ஆய்விலிருந்து அத்தன்மை வாய்ந்தவர்கள் மனமுதிர்ச்சி அடைந்தவர்களாகவும் தம் முழுத் திறமைகளை வெளிப்படுத்துவதில் ஆர்வம் உடையவர்களாகவும் இருப்பதை மாசுலோ கண்டறிந்தார்.

மாசுலோவின் கருத்துப்படி ஒவ்வொருவரும் அந்நிலையை ஒருசில மணித்துளிகளேனும் உணர்ந்திருக்க வேண்டும். அவற்றை இவர் 'உச்சநிலை அனுபவங்கள்' (Peak Experiences) என்று வருணிக்கிறார். அவை முழுமை, உண்மை, மகிழ்ச்சி, தன்நிறைவு, தனிச்சிறப்பு நிலை ஆகிய உணர்வுகளால் வரையப்பட்டவை என்றும் குறிப்பிடுகிறார்.

உந்து சக்திகளிலும் ஆளுமை ஆராய்ச்சியிலும் மாசுலோவின் கோட்பாடுகள் ஒரு புது திருப்புமுனையை ஏற்படுத்தின என்பது மறுக்கமுடியாத உண்மை. எனினும், அவருக்குப் பின்வந்த ஆய்வாளர்கள் ஒருசில குறைபாடுகளைச சுட்டிக் காட்டுகின்றனர்.

மாசுலோவின் கோட்பாடுகள் அறிவியல் ஆய்வு முறைப்படி நடத்தப்பட்டவை அல்ல. மேலும், தன்னிலை உணர்வு அடைந்தவர்கள் (Self Actualization) என்று அவர் குறிப்பிட்ட சிலர் தம்வாழ்வில் சிக்கல் உடையவராக இருந்தனர். மேலும், கீழ்நிலையில் உள்ள தேவைகளை நிறைவு செய்யாமலே உயர்ந்த நிலையை அடைந்தவர்களும் உண்டு. ஒரு சமயத்தில் பல தேவைகளை உணர்தலும் இயலும். அவற்றில் பல மறுக்கமுடியாத உண்மைகளாயிருப்பினும் மாசுலோவின் கொள்கை முதன் முதலில் தேவைகளை வகைப்படுத்த உதவின. அக் கொள்கை, பின்னால் வந்த பல கருத்துகளுக்கு வித்தாக் அமைந்தது தனிச் சிறப்பமிசமாகும். ப.தெ.

**துணை நூல்:**

Maslow, A.H., Motivation and Personality, Harper and Row, New York, 1970.

**மாசூடி, அபுல் ஆசன் அலி,** அரேபியாவில் கி.பி.10 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வரலாற்றறிஞர். பாக்தாது நகரில் இவர் ஏறத்தாழ கி.பி. 956 - இல் பிறந்திருக்கக் கூடும். இளமையிலேயே இவருக்கு வரலாற்று ஆர்வம் மிகுந்திருந்ததால், பல நாடுகளுக்குச் சென்று செய்திகள் திரட்டி ஒரு பெரிய வரலாறு எழுத வேண்டுமென்று விரும்பினார். எகிப்து சிரியா, பாலத்தீனம், சீனா, மடகாசுக்கர், இலங்கை பாரசீகம் முதலிய நாடுகளில் பயணங்கள் மேற்கொண்டார். பல செய்திகளைத் திரட்டினார். மாசூடி அபுல் ஆசன் அலி (Masudi Abul Hasson Ali) முப்பது தொகுதிகள் கொண்ட ஒரு வரலாற்று நூலை இயற்றினார். அதற்கு வரலாற்றுப் பதிவேடுகள் (Annals) என்று பெயர் கொடுக்கப்பட்டது.

அதைத் தவிர வேறொரு நூலையும் இவர் இயற்றி னார். அதன் பெயர், 'தங்கவெளிகளும் மணிச் சுரங் கங்களும்' (Meadows of Gold and Mines of Gems) என்பதாகும். தெ.பா

மா சே துங்கு: இக்கால ஆசிய வல்லரசு நாடா கிய சீனமக்கள் குடியரசைப் பொதுவுடைமைக்கொள் கையினடிப்படையில் நிறுவிய அரசியல் தலைவர் மா சே துங்கு (Mao Tse Tung) ஆவர்.

வரலாறு: மா சே துங்கு வடசீனாவில் ஊனான் (Hunan) மாகாணத்தில் சாவோ சானில்(Shao Shan) ஓர் உழவரின் மகனாக கி.பி. 1893-இல் பிறந்தார். இவருடன் பிறந்தோர் 2 ஆண்களும் ஒரு பெண்ணும் ஆவர்; இவருடைய தகப்பனார் கடுமையாகக் கன் பூசிய விதிகளைப் பின்பற்றிக் குடும்பத்தைக் கட்டுப் படுத்தி வந்தார்; தாய் பிள்ளைகளிடம் அன்பாக இருந்தார். மாவோ தம் 5 - ஆம் வயதில் வேலை செய்யத் தொடங்கினார்; தம் ஏழாம் வயதில் எழு தப்படிக்கக் கற்றுக் கொண்டார். அரசாங்க அலு வலர்களை எதிர்த்த புரட்சி வீரர்களுடைய வரலாறு களைப் படித்த இவர் புரட்சி மனப்பான்மையுடன் வளர்ந்தார். இளமையில் இவர் திருமணம் செய்து, மனைவியை விடுத்து ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார்; சில கட்டுரைகளும் எழுதினார். சாங்சா நகரத்தில் இவர் ஆசிரியப் பயிற்சி பெற்றார். சீனா வில் கி.பி. 1911-இல் புரட்சி நடைபெற்று, மஞ்சு அரசுக் குடும்பத்தாரின் ஆட்சி மறைந்து, சீனக் குடியரசு தோன்றிற்று. எனினும், நாட்டில் உள் நாட்டுப் போரும், பஞ்சமும் நீங்கவில்லை. அத்துன் பங்களையெல்லாம் நேரில் கண்ட மாவோ, சிறிது காலம் புரட்சியாளர் படையில் பணி செய்து, பின் பீகிங்குப்பல்கலைக்கழக நூல் நிலையத்தில் சிறு ஊதி யம் பெறும் எழுத்தராக கி.பி. 1918-இல் பணிசெய் தார். அங்குப் புரட்சிக் கருத்துகளை நூல்களின் வாயிலாகக் கற்கவும், சாங்குவோடோ போன்ற புரட்சியாளர்களுடன் பழகவும் இவருக்கு வாய்ப்பு இருந்தது. இவர் கி.பி. 1921-இல் சாங்காயில் (Shanghai) நடைபெற்ற சீனப்பொதுவுடைமைக் கட்சியின் முதல் மாநாட்டில் கலந்து கொண்டார். கோமிண்ட் டாங்கு எனப்படும் சீனத் தேசியக் கட்சி நாட்டில் வேரூன்றி இருந்தது. அதற்கும் சீனப் பொதுவுடை மைக் கட்சிக்கும் பிளவு தோன்றிற்று. மாவோ கி.பி. 1925-இல் காண்டனில் பொதுவுடைமைக் கட்சியின் விளம்பர அணியின் செயலாளராகவும், அரசியல் வார ஏடு ஒன்றின் ஆசிரியராகவும் வேலை செய் தார். கட்சியின் உயர்நிலை உறுப்பினருக்கு இவர் அவ்வேட்டின் வாயிலாக மறைமுகமாக செய்திகளை விடுத்தார். இவர் பொதுவுடைமைப் படையைத் தோற்றுவித்து, தேசிய படைக்கு எதிராக வடக் கிலிருந்து தென் மேற்கு நோக்கி கி.பி. 1934 - இல் நெடும் பயணம் (Long March) ஒன்றை நடத்தினார். பின்னர், இவர் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் ஆனார். தேசிய கட்சிக்கும், பொதுவு டைமைக் கட்சிக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்து வதற்காக இரண்டாம் உலகப் போரின் முடிவில் நேச நாடுகள் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை. தேசிய அரசாங்கத் தலைவர் சியாங்கே சேக்கும், பொதுவுடைமைக் கட்சித் தலைவர் மாவோவும் கி.பி. 1945, அக்டோபரில் ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். உள்நாட்டுப் போருக்கு ஏற் பாடுகள் நடைபெற்றன. உள்நாட்டுப் போர் தொடங் கிற்று. மாவோவின் பொதுவுடைமைப் படைகள் கி.பி. 1949 சனவரியில் பீகிங்கைக் கைப்பற்றி, அக் டோபருக்குள் நாடு முழுவதையும் வென்றுவிடவே, தேசிய அரசாங்கம் பார்மோசாத் தீவுக்குச் சென்றது. மாவோ சீனப் பொதுவுடைமைக் குடியரசின் தலை வராக 1949-முதல் அவர் 1976-செப்டம்பரில் இறந்து போகும் வரை இருந்தார்.



மா சே துங்கு

**மாவோவின் போர்த் திறமை:** மாவோ தாம் பிறந்த ஊனான் மாகாணத்தில் பொதுவுடைமை அமைப்புகளை நிறுவினார். இவர் அம்மாகாண உழவர்களை வல்லந்தப் புரட்சி செய்யுமாறு தூண்டி 1927 - இல் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அறு வடைக் காலத்தில் உழவர்கள் செய்த புரட்சியை இவரே நடத்தினார். அப்புரட்சி நடைபெற்றபோது தான் இவர் சீனச் செம்படையை உருவாக்கினார். அதனைத் தேசிய படைகள் முதலில் ஒடுக்கினாலும் அதன் சிறுபிரிவுகள் வடசீனாவில் எளிதில் பிறரால்

அணுகமுடியாத சிங்கான்சன் மலை இடுக்குகளில் ஒளிந்து கொண்டு பிற்காலத்தில் சீனாவை வெல்லு வதற்கு வழி வகுத்தன. மறைந்திருந்து தாக்கும் 'கொரில்லாப்' போர்முறையில் பொதுவுடைமைப் படைக்குப் பயிற்சி அளித்து, சப்பானுக்கும், தேசிய அரசாங்கத்துக்கும் எதிராக அதனை இயக்கினார். தொழிலாளர் புரட்சிக்கு நகரமே மையமாக இருத் தல் வேண்டுமென்ற பொதுவுடைமையாளர் கருத்தை இவர் விடுத்து, அதற்கு நாட்டு அல்லது கிராமப் புறத்தையே மையமாகப் பின்பற்றினார். சீனப்படை முழுவதையும் சீனப்பொதுவுடைமைக் கட்சிக்கும், தமக்கும் பொறுப்பாக இருக்கும்படி செய்தார்.

**மாவோவும் சீனப்பொதுவுடைமைக் கட்சியும்:** மாவோ, சீனப்பொதுவுடைமைக் கட்சியைத் தம் முழுக் கட்டுப்பாட்டிலுள்ள ஓர் அரசியற் கருவியாக மாற்றினார். இவர் கி.பி. 1920 – இல் மார்க்சியச் சம நிலைக் கருத்துகளை ஏற்றுப் படிப்படியாகச் சம நிலைப் புரட்சியைக் கொண்டுவரும் முறையை விடுத்து, மக்கள் திரளின் அரசியலதிகாரம், மக்கள் செயற்பாடு ஆகியவற்றின் வழியாகவே சமூகநீதியை நிலைநிறுத்தக் கூடுமென்று துணிந்தார். குடியானவர் புரட்சியை நடத்துவதில் இவர் இலெனினைப் பின் பற்றினார். குறிக்கோள்களிலீடுபாட்டுடன் உறுப் பினரைச் செயற்படும்படி இவர் தூண்டியும், கட்சி யிலிருந்த தம் எதிரிகளைக் குற்றங்களை ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தியும், தமக்குக் கீழ்ப் படியாதவர்களைக் களை எடுப்பின் வழியாக ஒழித் தும் கட்சியின் ஒற்றுமையை நிலைநிறுத்தினார். இவர் சமநிலைத் தொழில் முறைகளையும், கட்டாயத் தொழிற்கூடாரங்களையும் அமைத்தார்.

**அரசியற் கருத்துகள்**: மாவோ பொதுவுடைமைக் கொள்கையின் பல கருத்துகளை மாற்றியும், சில வற்றைத் திருத்தியும், சிலவற்றை விடுத்தும் பின் பற்றினார். பொதுவுடைமைப்புரட்சிக்கு ஒருதொடக்க நிலையாக இவர் கிராமங்களையே தேர்ந்தெடுத்த தனால், அது பரந்த நாடாகிய சீனாவில் விரைவில் வெற்றி பெற்றது. இவருடைய கருத்தின்படி, தனி யார் சுதந்திரக் கொள்கையைப் பின்பற்றும் சமூ கத்தைவிட, சருவாதிகார அமைப்பை உடைய சமூ கமே உயர்ந்ததாகும். கன்பூசியசின் நிதானக் கொள்கையை இவர் முற்றிலும் விடுத்தார். அக் கொள்கையை இவர்தம் 'புதிய மக்களாட்சி' (New Democracy) என்ற நூலில் கூறுகிறார். அரசாங்கத் தின் செயல்களிலுள்ள குறைகளை வெளிப்படையாக எடுத்துக் கூறும் உரிமையை மக்களுக்கு அளிக்கும் நோக்கத்துடன் இவர் 'நூறு பூக்கள் மலரட்டும்' என்ற கொள்கையைக் கொண்டு வந்தார். ஆனால், இவருடைய சருவாதிகாரத்துக் கெதிராகக் குறைகள் கூறப்படவே இவர் அக்கொள்கையை விடுத்தார். சமூக வாழ்வைத் திருத்தும் பொருட்டு இவர் சீன இளைஞர்களடங்கிய 'செங்காவலர்' படையை (Red Guard Movement) 1966 - இல் அமைத்தார்.

**முன்னோக்கிய இயக்கமும், பண்பாட்டுப் புரட்சியும்:** சீனாவைத் தொழில் மயமாக்கும் பொருட்டு மாவோ 1958 – 59 இல் கொண்டுவந்த கொள்கையே 'முன்னோக்கிய இயக்கம்' (Great Leap Forward) ஆகும். இவர் உருசியப் பொருளாதாரத் திட்டங் களை விடுத்து, மக்கள் குழுத் திட்டங்களை (People's Communes Programmes) உருவாக்கினார். அக் குழுக்கள் தனியார்களிடமிருந்த விளைநிலங்கள், பழத்தோட்டங்கள், வளர்ப்பு விலங்குகள் முதலிய வற்றைக் கைப்பற்றின. தனியாருக்குப் பொருளா தாரச் சுதந்திர உரிமை இல்லை. ஒவ்வொருவருக்கும் வேலை பகிர்ந்து வழங்கப்பட்டது. ஒவ்வொருவருக் கும் அவருடைய உழைப்புக்குத் தக்க கூலியும், அவருடைய தேவைக்குத் தக்க அரிசி, கோதுமை, ஆடை முதலியவையும் வழங்கப்பட்டன. திறமையான உழைப்பாளருக்கு ஊக்க ஊதியம் ஏதும் இல்லை; திறமை இல்லாதோரைக் கூட்டுறவு அமைப்புகள் (Co-operatives) காப்பாற்றின. கடுமையான வேலை முறையும், குறைவான ஓய்வு வசதியும் தொழிலாள ரிடம் ஊக்கமின்மையை வளர்த்தன. எனவே, குழு முறை எதிர்பார்த்த அளவு முழு வெற்றியை அளிக்க வில்லை. அதனால், மாவோவின் சருவாதிகாரத்துக்கு இராணுவ, ஆட்சித் தலைமை அலுவலர்கள் எதிர்ப் புத் தெரிவிக்கவே, கட்சியிலுள்ள பலவீனங்களைக் களைதற்காக இவர் 1966 – இல் உழைப்பாளரின் பண்பாட்டுப் புரட்சியை (Great Proletarian Cultural Revolution) நடத்தினார். அதில் இவர் முதியோர்களைக் கட்சியினின்று நீக்கி, இளைஞர் களைச் சேர்த்து, செங்காவலர் படையை அமைத் தார். அப்படையினர் தொழிற்சாலைகளிலும் மிகு தியாகப் பரவினர்.

அயல் நாட்டுத் துறையில் மாவோ அமெரிக்காவுக் கும், உருசியாவுக்கும், இந்தியாவுக்கும் எதிரான போக்கையும், பாகிசுத்தானுக்கு ஆதரவான போக் கையும் கடைப்பிடித்தார். இவருடைய சீன - இந்தி யப் போரின் விளைவாக வடகிழக்கு இந்திய எல்லைப் பகுதியில் சில நிலங்களைச் சீனா கைப்பற்றியது.

மாவோவின் போர்க் கொள்கைகளும், சமநிலைக் கருத்துகளும், இவருடைய காலத்துக்குப் பின்னர் வெகுவாகச் சீனத் தலைவர்களால் மாற்றி அமைக் கப்பட்டுள்ளன. சமநிலைக் கொள்கையின் கடுமையும் சிறிதளவு தளர்த்தப்பட்டுள்ளது. பா.சு.

**துணை நூல்கள்**:

**Lowis, John, W.**, Leadership on Communist China, New York, 1963.

**Roderick, M.**, China Under Mao Cambridge, Mass., 1966.

**மாட்சுயாமா**, சப்பான் நாட்டைச் சேர்ந்த சிகோகூத் (Shikoku) தீவின் மேற்கில் உள்ள நகரம். இதைச் சுற்றியுள்ள எகிமே (Ehime) பகுதிக்கு இதுவே தலைநகர். மக்கள் தொகை 4,12,000 (1983). மாட்சுயாமா (Matsuyama) உள்நாட்டுக் கடலைச் சேர்ந்த ஒரு சிறந்த துறைமுகமாக விளங்குகிறது. மீன்பிடித்தல் மிகுதியாக இங்கு நடைபெறுகிறது. வேளாண்மைப் பொருட்கள் இங்கிருந்து பல இடங்களுக்கு அனுப்பப் படுகின்றன. பருத்தி ஆடைகளும், காகிதப் பொருட் களும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரின் பஞ்சாலைத் தொழில் சிறப்பு வாய்ந்ததாகும். இங்கு இரு பல்கலைக் கழகங்கள் உள்ளன. இந்நகரத்தினரால் நன்கு காப்பாற்றப்பட்டு வரும் ஒரு நிலமானிய காலத்துக் கோட்டை, கி.பி. 1603 – இல் கட்டப்பட்டதாகும். அக்கோட்டையைச் சுற்றிக் கண் கவரும் பூங்கா ஒன்று காட்சி அளிக்கிறது. தெ.பா.

**மாட்டு**: இது தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகளில் 22 – ஆம் உறுப்பாக அமைந்துள்ளது (தொல்-செய். நூ.1, 202, 203). நன்னூலார், 'மாட்டெறிந் தொழுகல்' என்ற ஒன்றை முப்பத்திரண்டு உத்திகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறார் (நன்.நூ.14). மாறனலங்காரம் 'மாட்டெறிந்தொழிதல்' என்றும் 'மாட்டுறுப்பினவாமெனக் கொளக் கூறல்' என்றும் இரண்டு உத்திகளைக் கூறிச் செல்கிறது (நூ.25). அவற்றில் முன்னது நன்னூலார் கூறும் நூற்பா உத்தி; பின்னது தொல்காப்பியர் கூறும் 'மாட்டு' உறுப்பு. சுவாமிநாதம் 'மாட்டெறிதல்' என்பதை உத்திகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது (நூ.10). இளம் பூரணர் மாட்டு என்ற செய்யுளுறுப்பை 'மாட்டேறு' (செய்.நூ.202) என்ற சொல்லால் குறிப் பிடுவார். எனவே, மாட்டு என்பது செய்யுளுறுப்பு ஆகும். 'மாட்டெறிந்தொழுகல்' என்பது தந்திர உத்தி ஆகும்.

**மாட்டெறிந்தொழுகல் – உத்தி**: நன்னூலார் கூறும் 'மாட்டெறிந்தொழுகல்' என்ற தந்திர உத்தியையும், இளம்பூரணர் 'மாட்டேறு' எனக்கூறி உரை விளக்கும் பகுதிகளையும் நோக்குகையில் அம் 'மாட்டேறு', 'மாட்டு' என்ற செய்யுள் உறுப்பில் இருந்து வேறுபட்டது என்பது நன்கு தெளிவாகிறது.

மாட்டெறிந்தொழுகல் என்பது முன்னொரு பொருளுக்கு இலக்கணம் கூறிப் பின்னர் வருவதும் அது போலுமென்றல் (மாறனலங்காரம்-பாயிரம்-25 உரை) என்பதாகும். தொல். எழுத்ததிகாரம் 232 – ஆம் நூற்பாவில் வரும் 'அவற்றோரன்ன' என்ற மாட்டேற்றால் 230 - ஆம் நூற்பாக் கருத்தோடு பொருத்திக் காட்டிக் கருத்து முடிவு கொள்கிறார் இளம்பூரணர்.

'ஒற்றளபெடுப்பினும் அற்றென மொழிப' என் னும் செய்யுளியல் நூற்பா, எழுத்தியலில் உள்ள ஒற்று அளபெடுத்தற்கும் விதியாய் நின்ற வியபதேசம் (மாட்டெறிதல்) என்பார் சுப்பிரமணியதேசிகர். 'மாட்டெறிதல்' என்ற உத்தி 'அதிதேசம்' (ஒன்றிற் குரியதை மற்றொன்றிற்கு ஏற்றிக் கூறுதல்), வியபதேசம் (மாட்டேற்று) என்று வடமொழியில் கூறப் படும் என்று அவர் மேலும் விளக்குகிறார் (பிரயோக விவேகம். காரிகை 37-இன் உரை). அதிலிருந்து பின் னர்க் கூறும் இலக்கணம், முன்னின்றதற்குச் சென்று பொருந்தி அமைவதும் மாட்டேறு ஆகும் என்பது புலனாகிறது.

**மாட்டு**: 'மாட்டு' என்பது அகன்றும் அணுகியும் கிடந்த சொற்களைக் கொண்டு வந்து, பொருளுக்கு ஏற்பத் தொடராகக் கூட்டி முடித்தலாகும் என்பார் தொல்காப்பியர் (தொல் – செய்.நூ.202). மாட்டுதல் என்பது, கொண்டு வந்து கொளுத்துதல் என்பார் பேராசிரியர் (தொல் செய். நூ.202- இன் உரை). பட்டினப்பாலையிலுள்ள 'முட்டாச் சிறப்பிற் .............. நெஞ்சே' (218 20) என்றபாடல் அடிகளுடன் 'வேலிலும் ......... தடமென்றோளே' (300 – 301) என்ற பாடல் அடிகளைப் பொருத்திச் சேய்மை நிலையில் அமைந்த மாட்டுறுப்புகளாகக் கொண்டு பொருள் கொள்வார் பேராசிரியர். ஆனால், நச்சினார்க்கினியர் அதனை அகன்று கிடந்து மாட்டின்றி வந்தது எனக் கூறுவார். 'திறந்திடுமின் .........கதவு' (முத்தொள். 42) என்ற பாடலை அணுகிய நிலையில் மாட்டு அமைத்துப் பொருள் கொள்வதற்கு எடுத்துக்காட் டாகக் காட்டுகிறார் பேராசிரியர்.

அதிலிருந்து கதை, நிகழ்ச்சிகள், வருணனைப் பகுதிகள் ஆகியவற்றின் வரலாற்று முறைக்கு ஏற் பவோ, வேறு பயன் நோக்கிப் பொருள் பொருத்த முற வேறு ஒரு வரிசை முறைக்கு ஏற்பவோ முன் பின்னாகக் கூறப்பட்டிருக்கும் செய்திகளைத் தக்கபடி பிரித்துக் கூட்டி ஒழுங்குபடுத்திப் பொருள் கொள் வதையே 'மாட்டு' என நச்சினார்க்கினியர் கருதி னார் எனத் தோன்றுகிறது.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் பட்டினப் பாலை எடுத்துக்காட்டுக்குக் கொடுக்கும் வேறுவேறு விளக்கங்களை நோக்கும் போதும், நச்சினார்க்கினி யர் பத்துப் பாட்டு, சீவகசிந்தாமணிப் பாடல்களில்

மாட்டாகக் கொள்ளும் பகுதிகளை நோக்கும் போதும் நச்சினார்க்கினியர் நீண்ட செய்யுட்களில் சொல்லும் பொருளும் முறைமாறி அமைந்து கிடப் பதை இயற்கை வரிசை முறையிலோ வேறு தக்க முறையிலோ அமைத்துப் பொருள் கொள்ளும் நிலையை மாட்டுறுப்பு எனக் கருதினார் என்பதும், பேராசிரியர் பொருளை மட்டும் இணைத்துப் பொருத்துகிற நிலையில் அதனைக் கொண்டார் என்பதும் தோன்றுகின்றன. எனினும், புறநானூறு போன்ற அடிஅளவு குறைந்த பாடல்களிலும் அணுகி வந்த மாட்டு அமைந்ததாக நச்சினார்க்கினியர் கொண்டார் என்பதும் தோன்றுகின்றது.

**மாட்டுறுப்பும் - பொருள்கோளும்:** 'மாட்டு' என் பது பொருள்கோளின் ஒருவகை என்றும், பொருள் கோளின் வேறுபெயர் என்றும், பொருள்கோளன்று என்றும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுண்டு.

'மாட்டு' என்பது தொல்காப்பியர் கூறும் நால் வகைப் பொருள்களிலிருந்தும் வேறுபட்டது ஆகும் என்பார் பேராசிரியர் (செய்.நூ.210). இது மொழி மாற்றுப் பொருள்கோளன்றிப் புலவர் தம் வேறு செய்வதோர் செய்கை என நச்சினார்க்கினியர் கூறு வார் (செய்.நூ.210). மேலும், அவர் 'பூட்டுவிற் பொருள்கோளும், அளைமறி பாப்புப் பொருள் கோளும், தாப்பிசைப் பொருள்கோளும், கொண்டு கூட்டுப்பொருள்கோளும் 'மாட்டு' என்னும் உறுப்பின் கண் அடங்கும் என்பார் (தொல்.சொல். எச்சவியல், நூ.13)'மொழி மாற்றாவது கேட்போர் கூட்டி உணரு மாற்றான் ஈரடிக் கண்ணே வருவது என்றும், மாட்டு என்னும் உறுப்பாவது இரண்டு இறந்த பல அடிக்கண் ணும், பல செய்யுள் தொடரின் கண்ணும் அகன்றும் அணுகியும் வரும் என்றும் உணர்க' என மாட்டையும் மொழிமாற்றையும் வேறுபடுத்திக் காட்டுவார் நச்சி னார்க்கினியர் (தொல். சொல்.நூ 409 உரை). மேலும், அவர் 'அருமையும் பெருமையும் உடைய வாய்ப் பரந்த சொல் தொடர்ந்து பொருள் தருவ தோர் இன்பம் நோக்கிச் சான்றோர் இம்மாட்டிலக் கணமே யாண்டும் பெரும்பான்மை வரச் செய்யுள் செய்தலின், பின் தொடர்நிலைச் செய்யுள் செய்த வர்களும் இம்மாட்டிலக்கணமே யாண்டும் வரச்செய் யுள் செய்தார்; இதுவும் பொருள்வகை போற் புல வர் செய்து கொண்டதாயிற்று' என்பார் (செய்.நூ. 210 உரை).

இறையனார் அகப்பொருள் செய்யுள் உறுப்பு களைக் கூறும் பொழுது தொல்காப்பியர் கூறிய செய்யுள் உறுப்புகளில் மாட்டு என்ற உறுப்பினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பொருள்கோள் என்ற உறுப்பினைக் கொண்டுள்ளது. அதுபோல வீரசோழி யமும் மாட்டினைக் கூறாது பொருள்கோளினைக் கூறுகின்றது. எனவே, மாட்டு என்பதைப் பொருள் கோளாக அவர்கள் கொண்டனர் என்பது தோன்று கின்றது.

மாட்டு என்பது பொருள்கோள் என்பதன் பாற் படுவதாகும் என மு.இராகவையங்கார் கூறுவார் (தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப. 170). மாட்டு என்பதனைப் பிற்கால இலக்கண நூலார் பூட்டுவிற் பொருள்கோள் என வழங்குவர் என்று ந. சுப்புரெட்டியார் குறிப்பிடுவார். 'ஒரு செய்யுளில் அடிப்படைத் தொடர் அமைப்புடன் இயையாமல், மாறிக் கிடக்குஞ் சொற்களை முறைப்படுத்தி அமைத்துப் பொருள் கொள்ளுதலைப் பொருள் கோள் என்றும், ஒரு செய்யுளின் கருத்தை இயையு மிடமறிந்து சிலபல செய்யுட்கள் முன்நோக்கியோ பின்நோக்கியோ கொண்டு வந்து கொளுத்துதல் மாட்டு என்றும் நச்சினார்க்கினியர் கருதினர் என்று அரங்கராசன் குறிப்பிடுகிறார். மேற்கூறப்பட்டவற் றைக் கொண்டு நோக்கும்போது பொருள்கோள் என்பது தனிப்பாடல்களில் பொருள் கொள்ளும் முறை என்றும்; மாட்டுறுப்பு என்பது தொடர்நிலைச் செய்யுள்களில் (சொல் தொடர்நிலை – பத்துப் பாட்டு, பொருள் தொடர்நிலை – சீவகசிந்தா மணி) மேற்கொள்ளப்படுவது என்றும் தோன்றுகின் றது.

மாட்டு என்பது கொளுத்துதல், இணைத்தல், தொடுத்தல், உட்கொள்ளுதல் என்ற பொருள்களில் வரும். இன்றைய பேச்சுவழக்கிலும் இச்சொல் 'சேர்த்தல்', 'கொளுத்துதல்' என்ற பொருள்களி லேயே வழங்கி வருகின்றது. ந.ச.

மாட்ரிடு இசுபெயின் நாட்டின் தலைநகர மாகவும், மாட்ரிடு மாநிலத்தின் தலைமையிடமாக வும் அமைந்துள்ளது. ஐபீரியமுந்நீரகத்தின் நடுப் பகுதி யில், மான்சநேரசு (Manzanares) ஆற்றின் கரையில் அமைந்துள்ள மாட்ரிடு (Madrid) அனைத்து நலன் களும் கொண்ட கவர்ச்சிமிக்க நவீன நகரமாகும். கடல் மட்டத்திலிருந்து 635 மீ. உயரத்தில் அமைந் துள்ள இத்தலைநகரம், ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள தலைநகரங்களுள் மிகவும் உயரமான இடத் தில் இருக்கின்றது. தொழில் துறையிலும், பொருளா தாரத் துறையிலும் இந்நகரம், முன்னணியில் உள்ள பிறஐரோப்பிய நகரங்களுடன் போட்டிபோட்டு முன் னேறி வருகிறது. போர் அழிவுகளால் இங்குள்ள பல தொன்மைமிகு கட்டடங்கள் இடிபாடுகளுக்கு உட் பட்ட போதிலும், புதுமையான கட்டடங்கள் பல அவற்றை ஈடு செய்துள்ளன.

இடைக் காலத்தில் இந்நகரம் மச்ரிட்டு (Majrit) என மூர் இனத்தினரால் சுட்டப்பட்டது. மூர் என்று

அழைக்கப்பெறும் வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள அராபியக் கலப்பின இசுலாமியர் கி.பி.932-இல் இங்கு மச்ரிட்டு என்னும் பெயரில் சிறிய கோட்டை ஒன்றினைக் கட்டினர். அக்கோட்டையை (Moorish Fort) இரண்டாம் இராமிரோ (Ramiro II) என்னும் மூரினத் தலைவன் அமைத்தான் என்பர். முன்பு இப்பகுதியில் உரோமானியக் குடியிருப்புகள் சில இருந்துள்ளன. ஏழாம் அல்பான்சோவின் (Alfonzo VII) ஆட்சிக் காலத்தில் இப்பகுதி நன்கு வலுப்படுத்தப்பட்டது. இந்நகரம் கி.பி.11,12,13-ஆம் நூற்றாண்டுகளில் அரசியல் வானில் மிகவும் புகழ் பெற்று விளங்கியது. இந்நகரத்தின்கண் கி.பி.1309, 1478-ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. போர்ச்சுகல் நாட்டின் மூன்றாம் என்றி, நான்காம் சான் ஆகிய அரசர்களும் காசுடில் நாட்டைச் சேர்ந்த நான்காம் என்றி அரசர்களும் பல காலம் இங்கே வாழ்ந்துள்ளனர். காசுடிலின் நான்காம் என்றி இந்நகரில்தான் மாண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் பிலிப்பு மாட்ரிடுக்குத் தன் அரசவையை கி.பி.1756-ஆம் ஆண்டு மாற்றியநுடன், இதனுடைய வசதி கருதித் தலைநகராகவும ஆக்கினான். இவன் தலைநகரின் அருகில் அரண்மனையையும் கன்னிமாடத்தையும்(Convent) அடுத்தடுத்து ஒரே இடத்தில் கட்டினான். இருப்பினும், கி.பி. 1607 – இல் மூன்றாம் பிலிப்பினுடைய ஆட்சிக் காலத்தில்தான் இது அதிகார முறையான தலைநகராக மாற்றப்பட்டதுடன் இன்றைய கவர்ச்சி மிக்க நிலையையும் அடையத்தொடங்கியது. இந்நகரம் 19,20-ஆம் நூற்றாண்டுகளில் பலபோர்களில் சிக்கி, முன்னேற்றம் பெறுவதின்றும் தடுக்கப்பட்டது. இது 1936-39-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த இசுபானிய உள்நாட்டுப்போர் வரையிலும்பல சொல்லொணாத் துயர்களுக்கு ஆளாகியது. அவ்வுள்நாட்டுப் போரின்போது இந்நகரம் 2½ ஆண்டுக் காலம் எதிரிகளின் முற்றுகைக்கு உட்பட்ட காரணத்தால் பேரழிவுக்கு உள்ளாயிற்று.

இந்நகரம் 1960-இல் இசுபெயின் நாட்டின் இரண்டாம் மாபெரும் தொழில் நகரமாக விளங்கியது. பார்சலோனா (Barcelona) முதலிடத்தைப் பெற்றது. மாட்ரிடுப் பகுதி குளிர்மிக்க பனிக்காலத்தையும் மிகு வெப்பம் கொண்ட கோடைக்காலத்தையும் கொண்டது. கலையெழில் மிக்க இந்நகரத்தில் முப்பது மாடிக் கட்டடங்கள் அழகு செய்கின்றன; மாட்ரிடு நகரத்தில் புகழ்மிக்க பல்கல்லக்கழகம் ஒன்றும், உச்ச நீதிமன்றம் (Supreme Court) ஒன்றும் உள்ளன. பழைய மாட்ரிடுநகரில் நான்காம் பிலிப்பு மன்னர் குதிரைமீது அமர்ந்துள்ளது போன்ற சிலை அழகுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இசுபானியரின் பண்பாட்டு உயர்ச்சியை உலகிற்கு உணர்த்தும் கவின்மிகு கட்டடங்களும் நினைவுச் சின்னங்களும் மாட்ரிடு நகரில் உள்ளன. பிரேடோ (Prado) அருங்காட்சியகம், தேசிய அரண்மனைப் பூங்கா ஆகியவை காண்போர் மனத்தைக் கவர்வனவாகும். அரச அரண்மனையில்தான் இன்று அருங்காட்சியகம் செயற்படுகிறது. அந்த அரச குடும்பத்தினரின் அரண்மனை கி.பி. 1737 – இல் தொடங்கப்பட்டு கி.பி. 1764 – இல் முற்றுப்பெற்றது. அழகிய தேவாலயங்கள் பல இந்நகரை அணி செய்கின்றன. மூன்றாம் சார்லசு மன்னர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1759 - 1788) உருவாக்கப்பட்ட அழகிய கட்டடங்களுள் கருவூல அமைச்சகம்(Ministerio-de-Hacienda), வானிலை ஆய்வுக்கூடம்(Observatorio Astronomico) ஆகியவை குறிப்பிடத்தக்கன. முன்னரே கூறப்பட்ட அந்த அருங்காட்சியகத்தில் உலகின் மிகச் சிறந்த வண்ண ஓவியங்களாகக் கருதப்படும் 2500 க்கு மேற்பட்ட ஓவியப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பல இத்தாலிய, பிளெமிய (Flemish) முதலான பலவகைக் கலைப் பாணிகளைச் சித்திரிப்பவையாகும். மாட்ரிடு நகரில் பல பெரிய நூலகங்கள் உள்ளன. அவற்றுள் இசுபெயின் நாட்டின் மிகப் பெரிய நூலகமான 'பிப்ளியோடிகா நேசியோனல்' (Bibliotica Nacional) மாட்ரிடு நகரில் அமைந்துள்ளது.

இப்பெரு நகரில் பல அழகிய பூங்காக்கள் மக்கள் பொழுது போக்கிடங்களாகப் பயன்படுகின்றன. அவற்றுள் சார்டின் தாவரத் தோட்டம் (Jardin Botanical Garden), பார்கே டெல் எசுடே (Parque del oeste), அழகிய இரெட்டிரோ (Retiro) ஆகியவை குறிப்பிடத்தக்கன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் மாட்ரிடு தொழில் துறை உற்பத்தியில் பெரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. எந்திரங்கள், கண் பார்வைக்கும் ஒளிக்கும் உரிய கருவிகள், மின்கருவிகள், வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சிக் கருவிகள், வேளாண்மைக் கருவிகள், தோல்பொருட்கள், மருந்துப் பொருட்கள், வேதிமப் பொருட்கள், நெகிழிப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், துணி வகைகள், அணிகலன்கள், வானஊர்திகள், பேருந்துவண்டிகள், தாள்கள், இரப்பர் முதலானவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. திரைப்படம் தயாரிக்கும் தொழில் இங்கு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அச்சுத் தொழிலிலும் வெளியீட்டுத் துறையிலும் இவர்கள் அண்மைக் காலப் புதிய கருவிகளைப் பயன்படுத்தி முன்னணியில் உள்ளனர். மதுவகைகள் (Beer, Wine) தயாரிப்பதிலும் இந்நகரம் முக்கிய இடம் பெற்றுள்ளது.

மாட்ரிடு நகராட்சி, நகரத்தந்தையின் தலைமையிலான நகர் மன்றம் (Town Council) ஒன்றினால் நிருவகிக்கப்படுகிறது. நகரத்தந்தை மத்திய அரசால் அமர்த்தப்படுகிறார். நகர்மன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாட்ரிடு நகரம் மற்ற நகரங்களுடன் சிறப்பான முறையில் போக்குவரத்துத் தொடர்பினைப் பெற்றுள்ளது.

மாட்ரிடு நகர மக்களுள் பெரும்பான்மையோர் இசுபானிய மொழியைப் பேசுகின்றனர். அதுவே ஆட்சிமொழியாகவும் உள்ளது. பெரும்பான்மையோர் கிறித்தவர்கள். இதன் மக்கள் தொகை 1960-இல் 22,59,931 ஆக இருந்தது. அது 1983-இல் 31,75,000 ஆக உயர்ந்துவிட்டது. மக்கள் நன்கு கற்றவர்கள்; கடுமையான உழைப்பாளிகள். ம.இரா.

மாடலன்: முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் துணைப் பாத்திரங்களுள் மாடலன் சிறந்து விளங்குபவன் ஆவன். சிலப்பதிகாரக் கதையை முழுதும் அறிந்தவன் இம்மாடலன். கண்ணகியின் புகழ் கவுந்தியடிகளால் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறதோ அவ்வாறு கோவலனின் பெருமைகள் மாடலனால் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தப்படுகின்றன.

மாடலன் சோணாட்டு நீர்வளம் நிறைந்த 'தலைச்செங்கானம்' என்னும் ஊரைச் சார்ந்தவன்; நான்கு மறைகளையும் நன்கு கற்றவன். அதனால் தான் இளங்கோவடிகள் மாடலனை 'மாமறை முதல்வன்' எனச் சிறப்பிக்கிறார். நலம்புரி கொள்கை மிக்கவனான இவன், புண்ணிய நதிகளில் நீராடல், பெரியோர்கள் தங்கியிருந்த மலைகளைக் கண்டு வணங்குதல் போன்றவை வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைப் போக்கக் கூடியவை என்ற நம்பிக்கையுடையவன். பிறர் துன்புறுவதைக் கண்டாலோ, அத்தகைய செய்திகளைக் கேட்டாலோ அதற்காகக் கழுவாய் தேடும் உள்ளச் செம்மையைக் கொண்டிலங்குபவன்.

முப்பது காதைகளையுடைய சிலப்பதிகாரத்தில் அடைக்கலக் காதை, நீர்ப்படைக்காதை, நடுகற் காதை, வாழ்த்துக்காதை, வரந்தரு காதை ஆகிய ஐந்து காதைகளில் மாடலன் இடம் பெறுகிறான். மதுரைப் புற நகர்ப்பகுதியில் கவுந்தியடிகளோடு கோவலன், கண்ணகி ஆகியோர் தங்கியிருக்கும்போது மாடலனின் முதல் வருகை இடம் பெறுகிறது. மாடலனைக் கண்டதும் கோவலன் சென்று அவனுடைய திருவடிகளை வணங்குகிறான். இந் நிகழ்ச்சி கோவலனுக்கு மாடலன் முன்பே அறிமுகமானவன் என்பதையும், காப்பியக் கதைத் தலைவனால் வணங்கும் தகுதியுடையவன் என்பதையும் காட்டுகின்றது. அரச குடும்பத்தை ஒத்த சிறப்புடைய பெருஞ்செல்வக் குடியில் தோன்றிய கோவலன் மாடலனைக் கண்டதும் அவனிருக்கும் இடம் சென்று வணங்குவதிலிருந்து மாடலனின் பெருமை தெற்றென விளங்கும்.

கொலைக்களக் காதைக்கு முன்னைய அடைக்கலக் காதையில் கோவலனின் உயர்ந்த பண்புகளையெல்லாம் காப்பிய ஆசிரியர் கூற விரும்புகிறார். அதற்காகவே மாடலனை இளங்கோவடிகள் அறிமுகப்படுத்துகிறார் எனலாம். கோவலனுடைய கொடைச்சிறப்பு, கருணை உள்ளம் நிரம்பிய வீர உணர்வு, செய்ந்நன்றி மறவாப்பண்பு, இல்லோர் செம்மலாக அவன் விளங்கியது போன்ற அருங்குணங்கள் அனைத்தும் மாடலனாலேயே தெரிய வருகின்றன. கோவலன் பண்பு நலன்களை மாடலன் எடுத்துரைப்பதற்கு முன்புவரை கண்ணகியின் துன்பத்துக்குக் காரணமானவன்; சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடியவன்; வம்பப்பரத்தரோடும் வறுமொழியாளரொடும் சுற்றித் திரிந்தவன் என்றே படிப்போர் கோவலனை நினைப்பர். ஆனால், மாடலன் மூலமாகக் கோவலனின் பழைய வாழ்க்கை முறைகளை அறிந்து கொண்ட பின்னர்க் கோவலன் மீது மதிப்பு ஏற்படுகிறது. அவன்மீது கொள்ளற்குரிய தவறான எண்ணங்கள் மாறி, அவன் இறப்புக் குறித்து அவலநிலை தோன்றுவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தியவன் மாடலனே யாவன் எனலாம்.

மாடலன் சொல்லாற்றல் நிரம்பியவன். எனவே 'நாவல் அந்தணன்' எனப் போற்றப் பெறுகின்றான். '..............மாதவி மடந்தை, கானற் பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது.........' என்று சிலப்பதிகாரக் கதையை இரண்டே அடிகளில் நயம்படச் சேரன் செங்குட்டுவனிடம் எடுத்துரைக்கிறான். 'நீ கூறிய மொழியின் பொருள் யாது?' எனச் செங்குட்டுவன் கேட்கக் கோவலன் மாதவியோடு கூடி வாழ்ந்தது, கானல்வரியின்போது பிரிந்தது, அதன் தொடர்ச்சியாக மதுரை சென்றது, அங்குக் கொலைக் களப்பட்டது ஆகியவை எல்லாமே வடதிசை மன்னர் தலை மீது கல் ஏறுவதற்குக் காரணங்கள் என முறையாகத் தொகுத்துக் கூறுவதிலிருந்து மாடலன் சொல்லாற்றல் இனிதே விளங்கும்.

சேர நாட்டை நீண்ட காலம் ஆண்ட செங்குட்டுவ மன்னன் மாடலனைப் பெருமைப்படுத்துகிறான். தன்னுடைய 'நிறை' அளவுடைய பொன்னைப் பரிசாக நல்குகிறான். செங்குட்டுவனுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்தும் அறத்துணையாகவும் மாடலன் விளங்குகின்றான். சோழ, பாண்டியர்கள்

தன்னை இகழ்ந்ததை நீலன் வாயிலாகக் கேட்ட சேரன் செங்குட்டுவன் அப்பெருமன்னர் மீது போர்த் தொடுக்க முற்படுகிறான்; அப்போது மாடலன் அறிவுரையைக் கேட்டுச் செங்குட்டுவன் மனமாறி மறக்கள வேள்வி செய்வதை விடுத்து (போர் மேற்கொள்வதைக்கைவிட்டு) அறக்கள வேள்வி தொடங்குகிறான்.

மாடலன் புராண அறிவு நிரம்பியவன். அகத்திய முனிவர் வசிக்கின்ற பொதியமலையை வலம் வந்ததாகச் செங்குட்டுவன்பால் அவன் தெரிவிக்கிறான். மேலும் கிள்ளிவளவனுக்கு எதிராகச் செயற்பட்ட குறுநில மன்னர்கள் ஒன்பதின்மரைச் செங்குட்டுவன் வெற்றி கொண்டது, சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறாவிற்காகத் தன் தசையை அரிந்து கொடுத்தது போன்றவற்றை மாடலன் குறிப்பிட்டுப் பேசுவதால் அவன் தன் காலத்து அரசர்களையும் அவர் தம் பரம்பரையினரையும் நன்கு அறிந்தவன் என்பது பெறப்படுகிறது.

கோவலன் மாதவியோடு வாழ்க்கை நிகழ்த்திய காலத்து மணிமேகலை என்ற பூங்கொடி தோன்றியது மாடலன் வாயிலாகவே தெரிகிறது.


மேலும் மதுரை எரியூட்டப்பட்ட பிறகு அங்கு மேறகொண்டு நடந்தது என்னவென்பதையும் மாடலன் கூற்றே உணர்த்துகிறது.

மாடலன், சிலப்பதிகாரத்தில் மற்ற துணைப் பாத்திரங்கள் போலல்லாமல் ஓர் உயிர்ப்பாத்திரமாக விளங்குகிறான். இளங்கோவடிகள் தம் உட்கிடக்கையை வெளிப்படுத்த மாடலனைப் படைத்துள்ளார் எனலாம். இளங்கோவின் குரல் மாடலன் எனில் பொருந்தும். சிலப்பதிகாரக் கதையில் இடம் பெறும் காப்பியக் கதைத் தலைவன், கதைத் தலைவி மட்டுமேயன்றி ஏனைய பாத்திரங்கள் பலரைப் பற்றிய விளக்கம் தருபவனும் மாடலனே ஆவன். சுருங்கக் கூறின், மாடலன் உலகியல் அறிவோடு வரலாற்று அறிவும் நிறைந்த,கல்வி கேள்விகளிற் சிறந்த, சொல்லாற்றல் வாய்ந்த ஒரு சான்றோனாவான். மை.அ.கி.

**மாடலூர் கிழார்:** இவர் சங்ககாலப் புலவர்களில் கிழார் எனமுடியும் பெயர்கொண்டவர்களுள் ஒருவர். 'கிழார்' என்னும் பெயர் வேளாண் மரபினரைக் குறித்துப் பெரிதும் வழங்கும் சொல்லாதலின் இவர் வேளாண் மரபினர் என்பர். மாடலூரில் வாழ்ந்த வேளாண் மரபில் வந்தவர் என்பதுபட இவரது பெயர் 'மாடலூர் கிழார்' என்று வழங்கப் பட்டிருக்கவேண்டும்.

இவர் பாடியதாகச் சங்க இலக்கியத்தில் ஒரு பாடல் (குறுந். 150) மட்டுமே காணப்படுகிறது. அப்பாடல், இரவில் தலைவனைத் தலைவி சந்திக்கும் வகைகூறும் தோழிக்குத் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது. குறவர்கள் இரவில் மரத்தின் உச்சியில் அமைந்த பரண் மீது இருந்துகொண்டு, மணம்தரும் மரங்களை எரித்துக்காட்டும் ஒளியானது வானத்தில் தோன்றும் விண்மீன்களைப் போலத் தோன்றும் என்னும் உவமை நயம்பட அமைந்துள்ளது. தன் காதல்நோய் தலைவனை நினைக்கின்ற போது பெருகுவதும், அவனைச் சேர்கின்றபோது மாய்வதும் எவ்வாறோ என வியந்து மொழிகிறாள் இப்பாடல் தலைவி. ச.செ.

**மாடிசன், சேம்சு (கி.பி.1751 – 1836)** அமெரிக்க ஐக்கிய நாட்டின் நான்காம் குடியரசுத் தலைவர். தாமசு செபர்சனின் (கி.பி. 1801-1809) நம்பிக்கைக்குரிய சேம்சு மாடிசன் இரண்டு முறை (கி.பி. 1809,1817) அமெரிக்கக் குடியரசுத் தலைவராக விளங்கினார். அரசியல் சட்ட நுணுக்கங்களில் பெருந்தேர்ச்சி பெற்ற சேம்சு மாடிசன் (James Madison) அரசியல் அமைப்புச் சட்டத்தின் தொடர்பாகக் கூட்டாட்சித் தத்துவத்தை (Federalist Philosophy) விளக்கும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் போற்றத்தக்க சீரிய சிந்தனையாளராகத் திகழ்ந்தார். அரசு சார்பான காரியங்களில் இவருக்கு நல்ல அனுபவமும் இருந்தது. குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்பதற்கு முன்பே இவர் பல பதவிகளில் பணியாற்றித் தம் திறமையை வெளிக்காட்டியுள்ளார். தோற்றத்தில் குள்ளமாக இருந்ததால் தலைவர் என்ற முறையில் இவரால் தம் தனித்தன்மையைச் சிறப்பாகப் புலப்படுத்த இயலவில்லை.



மாடிசன்

மாடிசன இங்கிலாந்து நாட்டிலுள்ள வெர்சீனியா மாநிலத்தின் போர்ட்டு கான்வே என்னுமிடத்தில் கி.பி. 1751-ஆம் ஆண்டு பிறந்தார். இலேனர் ரோசு

கான்வே மாடிசன் ஆகியோர் இவர் பெற்றோர் ஆவர். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் முடித்துக் கொண்ட இவர் கி.பி. 1771 - இல் நியூசெர்சி கல்லூரியில் பட்டம் பெற்றார். பின்னர் வீட்டிலிருந்து பொதுச்சட்டம், சமயவியல் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். கி.பி. 1794 - இல் வடகரோலினாவைச் சேர்ந்த தோலி பெய்னே தாடு (Mrs. Dolley Payne Todd) என்னும் பேரழகுமிக்க மங்கையை மணந்தார். இவர் கி.பி. 1817 - ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் பதவியினின்று ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னரும் இவரது சேவை தொடர்ந்தது. இவர் கி.பி. 1836 - ஆம் ஆண்டு ஆரஞ்சு நகரத்திற்கு அருகில் உள்ள மாண்ட்பெல்லியா என்னுமிடத்தில் காலமானார்.

**இவர்தம் சிறந்த பணிகள்:** மாடிசன் கி.பி. 1774 -ஆம் ஆண்டு ஆரஞ்சு மாவட்டப் புரட்சியாளர் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கி.பி. 1776–77, 1784-86-ஆம் ஆண்டுகளில் வர்சீனியா சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். இவர் கி.பி. 1776 – இல் கூடிய ஆய்வுக் கூட்டத்தில், குடியேற்ற நாடுகளை விடுவிக்க வேண்டுமென்ற அறிவிப்பை விடுக்குமாறு அமெரிக்கக் குடியேற்ற நாட்டுப் பேராளர் பெருங்குழுவினைக் (Continental Congress) கேட்டுக் கொண்டார். சட்டமன்றம் இவரை கி.பி 1779-ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்கக் குடியேற்ற நாட்டுப் பேராளர் பெருங்குழுவின் உறுப்பினராக அமர்த்தியது. இவர் கி.பி. 1780-83, 1786 – 88 ஆகிய ஆண்டுகளில் அப்பொறுப்பில் இருந்தார். பிரான்சு, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் நட்புறவை இவர் ஆதரித்தார். இவர் கி.பி. 1787 - இல் அரசியலமைப்புப் பேரவையின் பதிவாளராகவும் உறுப்பினராகவும் பதவியேற்றார். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தினை விளக்குமுகத்தான் தயாரிக்கப்பட்ட கூட்டாட்சிவாதக் கட்டுரைகளை (Federalist Papers) எழுதுவதில் அலெக்சாந்தர் ஆமில்டன், சான் சே (John Jay) ஆகியோருடன் ஒத்துழைத்தார். அக்கட்டுரைகள் இவரது சட்ட ஞானத்தை வெளிப்படுத்துகின்றன.

குடியரசுக் கட்சியில் தீவிரப் பற்றுமிக்க இவர், புதிய பேராளர்களின் மன்றத்திற்கான தேர்தலில் (House of Representatives) கூட்டாட்சியின் எதிர்ப்பாளரான சேம்சு மன்ரோவைத் தோற்கடித்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டமன்றத்தின் உறுப்பினராக இவர் நற்பணியாற்றினார். வர்சீனியாத் தீர்மானங்களை கி.பி. 1794-ஆம் ஆண்டு இயற்றிய பெருமையும் மாடிசனைச் சாரும். இவர் கி.பி. 1801 -இல் தாமசு செபர்சனின் காலத்தில் மாநிலச்செயலராகப்பொறுப்பேற்றார். அப்போது இவர் உலூசியானாப் பகுதியை விலைக்கு வாங்குதலில் திறம்படச் செயற்பட்டார். இவர் கி.பி. 1808-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டுக் கூட்டாட்சிக் கட்சி வேட்பாளரான சார்லசு கோட்சுவொர்த் பிங்க்நே என்பாரை 75 வாக்கு வேறுபாட்டில் தோல்வியுறச் செய்தார். செபர்சனின்கீழ் கி.பி.1801 முதல் 1809 முடிய மாநிலச் செயலாளராகப் பணியாற்றியதால் இவர் குடியரசுத் தலைவராக கி.பி. 1809-இல் பொறுப்பேற்றவுடன் நிருவாகத்தைத் திறம்படச் செய்தார். தலையிடாச் சட்டத்தை (Non-intercourse) இயற்றினார். அச்சட்டமானது கி.பி.1810-இல் இயற்றப்பட்ட சட்டத்தால் மாற்றியமைக்கப்பட்டது. அதனால், அமெரிக்கா உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வாணிகம் செய்ய வழிவகை செய்யப்பட்டது. இவரது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்ச்சி 1812-ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க - ஆங்கிலேயப் போரேயாகும். அதனை 'மாடிசன் போர்' எனவும் குறிப்பிடுவர்.

கி.பி. **1812-ஆம் ஆண்டுப் போர்:** மாடிசன் குடியரசுத் தலைவராக ஆவதற்கு முன்பே கூட்டாட்சியினர்க்கு எதிராகவும் பிரான்சுக்கு ஆதரவாகவும் செயற்பட்டார். குடியரசுத் தலைவரானவுடன் பிரான்சு நாட்டிற்கு ஆதரவாக மக்களின் இரண்டாம் சட்ட முன்வரைவு (Macon's Bill No.2) நிறைவேற்றப்பட்டுப் பிரான்சுடன் வணிக உறவுகள் வைத்துக்கொள்ளப்பட்டன. அதே சமயம் பிரிட்டன் மீது தடைச்சட்டம் (Non - Importation Act) நிறைவேற்றப்பட்டது. அடுத்துப் பிரிட்டன் தன் வாணிகச் சட்டங்களை நீக்குதற்கு ஆலோசனை செய்துகொண்டிருந்தபோது, போர்ப் பறவைகளின் (War Hawks) விருப்பத்திற்கு இணங்க மாடிசன் பிரிட்டன் மீது 18.6.1812-இல் போர் அறிவிப்புச் செய்தார். எனவே தான் இப்போர் மாடிசனின் போர் என்று சொல்லப்படுகிறது. இது இரண்டாம் அமெரிக்க விடுதலைப் போராகவும் கருதப்படுகிறது. அங்கு கி.பி. 1812-இல் தொடங்கிய இப்போர் 1814-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் கையெழுத்தான கெண்ட்டு உடன்படிக்கையால் (Treaty of Ghent) முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி போருக்கு முந்தைய நிலையை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. பின்னர் கி.பி. 1815-ஆம் ஆண்டு கையெழுத்தான ஒப்பந்தப்படி அமெரிக்கா, பிரிட்டன் இடையே வாணிக உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இப்போரின் விளைவாக அமெரிக்க வாணிகமும் பொருளாதாரமும் சீர்குலைந்தன. வங்கிகள் சீர்

குலைந்தன. கப்பல் போக்குவரத்துத்துறையில் பெரிய இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. மாநில வங்கிகள் சீர் குலைந்ததால் கி.பி.1816-இல் இரண்டாம் தேசிய வங்கி தோற்றுவிப்பதற்கான பட்டயம் தீட்டப்பட்டது. புதிய தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் முயற்சிகள் கி.பி.1815-இல் மேற்கொள்ளப்பட்டன.

மாடிசன் கி.பி.1812-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு 4.3.1817 முடியப் பதவியில் இருந்தார். கடைசி இரண்டாண்டுகளில் இவர் அல்சீரியர்களை வென்றடக்கினார். பிறகு மாடிசன், மன்ரோ கொள்கைக்கு முன் கூட்டியே இசைவு தெரிவித்தார். சில காலம் வர் சீனியாப் பல்கலைக்கழகத்தின் முகவராகப் (Rector) பணியேற்றார்.

மற்றவர்களோடு மகிழ்ச்சியுடன் உரையாடும் திறனும், பிறரைச் சிரிப்பில் ஆழ்த்தும் சொல்லாற்றலும் மிக்கவராகத் திகழ்ந்தார் மாடிசன். இவர் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முதல் பத்துத் திருத்தங்களை உருவாக்கக் காரணமாக இருந்த சட்ட வல்லுநராவார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்புத் திட்டத்தைப் பெரும்பாலும் இயற்றியவர் இவரே எனலாம். அரசியல் சட்ட வல்லுநராகத் திகழ்ந்ததால் அமெரிக்க அரசியலமைப்பு வரலாற்றில் இவர் ஒளிமயமான இடத்தைப் பெறுகிறார். ம.இரா

*மாண்ட்கோமரி*: இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்துப் படையின் தளபதியாகவிருந்த இவர் ஆப்பிரிக்காவிலும், பிரான்சிலும், பல சாதனைகளைப் புரிந்து ஆங்கிலேயரின் இதயத்தில் இடம்பெற்றவர். பல நாடுகளும் இவரைப் பாராட்டிப் பல விருதுகளை வழங்கின. 'மாண்டி' (Monty) என அன்புடன் அழைக்கப்பட்ட மாண்ட்கோமரிக்கு (Montgomery Bernard Law கி.பி. 1887-1976) 1946 - இல் ஆறாம் சார்சு மன்னர், அலாமெனின் முதலாம் இளங்கோவரையர் மாண்ட்கோமரி(First Viscount Montgomery of Alamein) என்னும் பட்டத்தை அளித்தார்.

மாண்ட்கோமரி கி.பி.1887-இல் அயர்லாந்தில் தொனேகல் (Donegal) என்னுமிடத்தில் பிறந்தார். சாண்டகர்ட்டு படைப் பயிற்சி நிலையத்தில் (Sandhurst Royal Military Academy) பயின்று, 1908-இல் காலாட்படையில் சேர்ந்தார். முதல் உலகப் போரின் போது 1937-இல் இவர் பிரான்சிலிருந்த ஆங்கிலேயப் படையில் மூன்றாம் பிரிவின் தலைவராக விளங்கினார். அப்பொழுது 1940-இல் தங்கர்க்கில் (Dunkirk) தம் படையைச் செருமானியர் கைப்பற்றுவதிலிருந்து காப்பாற்றினார். பின்னர், இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியின் பாதுகாப்பை இவர் ஏற்றிருந்தார். ஆப்பிரிக்காவில் மார்சல் எர்வின் உரோமல் (Marshall Erwin Rommel) தலைமையிலான செருமானியப் படை இங்கிலாந்தின் எட்டாம் படையை எல் அலாமென் (El Alamein) எனுமிடத்திலிருந்து விரட்டியடித்தது. இங்கிலாந்து அத்துறைமுகத்தை இழந்துவிட்டால் நைல் ஆறும், சூயசுக் கால்வாயும் செருமானியப் படையின் கட்டுப்பாட்டில் சென்றுவிடும். அததகைய இக்கட்டான நிலையில் மாண்ட்கோமரி இங்கிலாந்துப் படைக்குத் தலைமை ஏற்று, 1942 அக்டோபரில் செருமானியப் படையைத் தாக்கியதால் அது பின் வாங்கி வடக்கு ஆப்பிரிக்கப் பாலைவனத்தின் வழியாகத் துனிசியா (Tunisia) விற்குச் சென்றுவிட்டது. இவருடைய இந்த வெற்றி இரண்டாம் உலகப் போரில் நேசநாடுகளுக்கு ஒரு திருப்புமையமாக அமைந்தது.



மாண்ட்கோமரி

இத்தாலியப் படையெடுப்பில் இவர் 1943-இல் பங்கு கொண்டார். இவர் பிரான்சின் மீது படையெடுத்துச் சென்று, அந்நாட்டைச் செருமனியிடமிருந்து விடுவித்தார். செருமனியை நேசநாடுகள் ஆக்கிரமித்துக் கொண்டபோது, இங்கிலாந்தின் பகுதிக்குத் தளபதியாக இருந்தார். இங்கிலாந்தின் படைத் தலைவராக 1946-48 ஆண்டுகளில் பணி புரிந்தார். பின்னர், 1948-51 ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பிய ஐக்கிய படைத் தலைமைத் தளபதிகளின் தலைவராக இருந்தார். 'நேட்டோ' (NATO) நாடுகளின் படை அலுவலராக 1951-58-இல் விளங்கினார். இவர் இரண்டாம் உலகப் போரைப் பற்றிய பல நூல்கள் எழுதியுள்ளார். இவருடைய நினைவுக் குறிப்புகள் 1958-இல் வெளியிடப்பட்டன.

சி.இரெ.

*மாண்ட்கோமரி நகரம்*: இது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அலபாமா மாநிலத்தின் தலைநகரம்; அலபாமா ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. அமெரிக்க விடுதலைப் போரின் பொழுது தென்மாநிலங்கள் கி.பி.1861-இல் அமெரிக்கக் கூட்டரசை (Confederate States of America) ஏற்படுத்திய பொழுது அதன் தலைநகரமாக மாண்ட்கோமரி (Montgomery) விளங்கியது. கிழக்கு அலபாமா, புதிய பிலடெல்பியா (New Philadelphia) என்னும் இரு நகரங்கள் கி.பி. 1819 – இல் இணைக்கப்பட்டு ஒரே நகரமாயிற்று. அதற்குப் புரட்சி வீரராகத் திகழ்ந்த இரிச்சர்டு மாண்ட்கோமரியின் (Brigadier-General Richard Montgomery) நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டது. இதன் பரப்பளவு 130 ச.கி.மீ. மக்கள் தொகை 1,77,857 (1980). வெப்பநிலை சனவரியில் 9.4 பாகை செல்சியசு, சூலையில் 27.2 பாகை செல்சியசு. ஆண்டுச் சராசரி மழையின் அளவு 1321 மி.மீ.

இந்நகரில் அலபாமா அரசுப் பல்கலைக் கழகம் (Alabama State University), அன்டிங்டன் கல்லூரி (Huntingdon College), ஆபர்ன் பல்கலைக்கழகம் (Auburn University),திராய் அரசுப் பல்கலைக்கழகம் (Troy State University), சட்டசபைக் கட்டடம், மாண்ட்கோமரி நுண்கலைகளின் அருங்காட்சியகம் (Montgomery Museum of Fine Arts), தென் மாநிலக் கூட்டரசின் தலைவராகவிருந்த செபர்சன் தேவிசு (Jefferson Davis) வாழ்ந்த மாளிகை ஆகியவை குறிப்பிடத்தக்க இடங்களாகும்.

இங்கு வேளாண்மை முதன்மைத் தொழிலாக இருப்பினும், இயந்திரங்கள், கண்ணாடிப் பொருட்கள், காகிதம், துணிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் உள்ளன. இது ஒரு வாணிக மையமாகவும் விளங்குகின்றது.

வரலாறு: இப்பகுதியில் ஆங்கிலேயர் குடியேறுவதற்கு முன்னர் அலிபாமு (Alibamu), கிரீக்கு (Creek), இந்தியர்கள் வாழ்ந்து வந்தனர். மாசசுசெட்சைச் சேர்ந்த ஆண்டுரூ தெக்சுடர் (Andrew Dexter of Massachusetts) தலைமையில் சிலர் கி.பி.1817 – ஆம் ஆண்டு இன்றைய மாண்ட்கோமரி நகரமுள்ள இடத்தில், புதிய பிலடெல்பியா நகரை நிறுவினர். அந்த ஆண்டிலேயே சார்சியாவைச் சேர்ந்த சான் இசுகாட்டு (John Scott) தலைமையில் சென்ற ஒரு குழுவினர் அதற்கு அருகில் அலபாமா நகரைத் தோற்றுவித்தனர். அவர்கள் கி.பி.1818 – இல் தங்களுடைய நகரத்தைப் புதிய பிலடெல்பியா வரையிலும் விரிவுபடுத்தி, அதற்குக் கிழக்கு அலபாமா எனப்பெயரிட்டனர். அவ்விரு நகரங்களும் கி.பி 1819 – இல் இணைக்கபபட்டு, மாண்ட்கோமரி எனப பெயரிடப்பட்டது. இது கி.பி.1846 – இல் மாநிலத் தலைநகாமாக ஆயிற்று.


அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நீக்கிரோக்களின் உரிமைக்காகப் போராடிய மார்ட்டின் லூதர் கிங்கு இளையவர் இந்நகரிலிருந்துதான 1955-இல் தம் போராட்டத்தைத் தொடங்கினார். இது தெற்கு மாநிலங்களிலேயே முதலாவதாகப் பேருந்துகளில் இனப் பாகுபாட்டை ஒழித்தது. உள்நாட்டுப் போரின் பொழுது மிகவும் சேதமுற்ற இந்நகர் 1920-இலிருந்து சிறந்த வாணிக, உற்பத்தி நகரமாக வளரத் தொடங்கியது. சி.இரெ.

*மாண்டசுக்யூ, சார்லசு* (கி.பி. 1689-1775), என்பார் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த புகழ்மிக்க பிரான்சு அரசியல் சிந்தனையாளர். மாண்டசுக்யூ (Charles – Louis de Secondat baron de la Brede et de Montesquieu) சாட்டோ டிலா பிரிடு (Chateau de la Brede) என்னுமிடத்தில் கி.பி. 1689-இல் பிறந்தார். இளமையில் கல்லூரிக் கல்வியை நிறைவேற்றி, பின்னர்ப் போர்டோவில் (Bordeaux) சட்டக் கல்வியை இவர் முடித்துக் கொண்டு, பாரிசு நகரத்தில் தங்கி, பண்டைக்காலக் கிறித்தவரல்லாத சிந்தனையாளராகிய சிசரோவின் (Cicero) அரசியல் கருத்துகளை ஆராய்ந்து,புகழ்ந்து, அத்தகையோர் ஒதுக்கித் தள்ளப்படுவதற்குரியரல்லர் என்று கூறி ஒரு கட்டுரையை வரைந்தார். சிறிது காலம் நீதிமன்ற ஆலோசகராகப் பணியாற்றினார். பின்னர், இவர் போர்டோவின் அறிஞர் குழுவில் (Academy of Bordeaux) உறுப்பினராகச் சேர்ந்து, பல உயர்தர ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார். அறிவியல் முறையில் எதனையும் ஆய்வு செய்யுமாறு இவர் அக் குழுவைத் தூண்டினார். இவரே தாவரவியலிலும், இயற்பியலிலும் பெரும் எண்ணிக்கையில் ஆய்வுகளைச்செய்தார். பண்டைக்காலத்தவருடைய ஒழுக்க இயல்விதிகளையும், அரசியல் விதிகளையும் இவர் ஆராய்ந்து தம் காலத்தில் நிலவிய கருத்துகளுடன் ஒப்பிட்டார். இவர் கி.பி.1721-இல் எழுதி வெளியிட்ட பாரசீகக் கடிதங்கள் (Persian Letters)என்ற நூலுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. மனிதருடைய அடிமை நிலை, சுதந்திர நிலை முதலியவற்றையும் இவர் வரலாற்றினடிப்படையில் ஆய்வு செய்தார். இவருடைய அத்தகைய அரிய அணுகுமுறைகளும், நல்ல கருத்துகளும் இவருக்குப் புகழைத் தேடித்தந்தன. இவர் கி.பி. 1728-இல் பிரான்சு அறிஞர் சங்கத்தில் உறுப்பினர் (Academic Francaise) ஆயினார். பின்னர் இவர் வியன்னா, அங்கேரி, இத்தாலி முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, கி.பி. 1729 முதல் 1741 வரை இலண்டனில் தங்கினார். அங்கு அரசக் கழகத்

தில் (Royal Society) உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவர் இங்கிலாந்தில் தங்கி இருக்கும்போது, ஒரு சுதந்திர சமூகம் எவ்வாறு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதற்கு ஓர் ஆதாரத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, தம் காலத்திய ஆங்கில நாட்டின் அரசியலமைப்பை ஒரு முன் மாதிரியாக வைத்து ஆய்வு செய்தார். இவர் கி.பி. 1734-இல் எழுதிய ஒரு நூலில் பண்டைய உரோமானியருடைய புகழுக்கும், வீழ்ச்சிக்கும் உள்ள காரணங்களை ஆய்வுசெய்து, அந்நாட்டுக் குடியரசு முறையையும், அதில் மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளையும் வியந்து விளக்கி, மக்களுடைய ஒழுக்க இயலான காரணங்களே அவர்களுடைய அரசியல் வாழ்க்கையை உருவாக்கின என்று உரைத்தார்.

இவர் கி.பி. 1748-இல் எழுதிய 'சட்டங்களின் இயல்பு' (Spirit of the Laws) என்ற நூல்தான், இவருடைய புகழை ஐரோப்பா முழுவதும் மிகவும் உயர்த்திற்று. அது உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதில் இவர் உலக நாடுகளிலெல்லாம் சட்டங்களும் வழக்கங்களும் வெவ்வேறு வகைகளில் வளர்ந்துள்ளதற்குக் காரணங்களை எடுத்துக்காட்டி, சட்டம் என்பதற்கு இலக்கணம் வகுத்து இக்கால அரசியல் அறிவியலுக்கு ஓர் ஆதாரத்தையும் காட்டுகிறார். இவர் கி.பி. 1755-இல் மறைந்தார். இவருடைய கருத்துகளை ஆங்கில மக்களும் பாராட்டுகின்றனர்.

**மாண்டசுக்யூ சிந்தித்த சூழ்நிலை:** பிரான்சில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அரசர் 4-ஆம் என்றி இரிச்சலு,மாசரின் முதலியோரால் உருவாக்கப்பட்ட அதிகாரிகளின் வல்லந்த ஆட்சி, 14-ஆம் உலூயியின் ஆட்சியில் உச்சநிலை அடைந்தது. அவருடைய முடியாட்சி தெய்வீக முடியாட்சியாகக் கருதப்பட்டது. ஆயினும், கி.பி. 1685-க்கும் கி.பி.1715-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரான்சு முடியாட்சி சிறிது சிறிதாக வலுவிழந்து தேய்ந்து வந்தது. முதலில் அவரடைந்த வெற்றிகள் பிரான்சு மக்களை மயக்கி வைத்திருந்தாலும், அவருடைய பேராசையின் விளைவாக ஐரோப்பா முழுவதிலும் அவருக்குத்தோன்றிய எதிர்ப்புகளும்,போர்களில் அவருக்கு ஏற்பட்ட தோல்விகளும், அரசாங்கத்தின் நிதிஇல்லாத சீர்கேடும், சமத்துவக் கொள்கையிலமையாத அவருடைய வரிவிதிப்புக் கொள்கையும், மக்களை அவர்மீது வெறுப்படையச் செய்தன. பிரான்சு சீர்திருத்தக் கிறித்தவர்களின் சமய உரிமைகளை அவர் பறித்ததும், பிரான்சு கத்தோலிக்கத் திருச்சபையை அவர் ஒடுக்கியதும், அம்மக்களுடைய ஆதரவை இழக்கச் செய்தன. அரசரின் வல்லந்த முடியாட்சியில் சரிவு ஏற்பட்ட அந்தச் சூழ்நிலையில் அந்த அரசாங்க நிறுவனங்களைப் பற்றியும், அரசாங்கத்தின் நோக்கங்களைப் பற்றியும் புதிய அணுகுமுறையில் சிந்தித்து, வால்ட்டேர், தெஅலெம்பர்ட்டு, திடரோ, தர்காட்டு, ஆல்பாசு (Holbach) முதலியோர் நூல்களை எழுதினர். இங்கிலாந்தின் கி.பி. 1688-ஆம் ஆண்டின் புரட்சிக்கு ஆதாரமாக அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கக் கொள்கையை வரைந்த சான்இலாக்கின் கருத்துகளுக்கு பிரான்சில் நல்ல வரவேற்பிருந்தது. ஆனால், மக்களின் இயற்கை உரிமைகள், இயற்கையின் சட்டம், நாட்டின் பொதுச் சட்டம் முதலிய கருத்துகளைச் செயற்படுத்துதற்கு, இங்கிலாந்தில் அரசாங்க நிறுவனங்கள் இருந்ததைப் போல, பிரான்சில் அரசியல் நிறுவனம் எதுவுமில்லை. அவையெல்லாம் முன்பே அழிக்கப்பட்டபடியால்,அரசர் ஒருவருடைய தன்விருப்பமே சட்டமாகக் கருதப்பட்டது; மக்களுடைய சட்டமன்றம் எதுவுமில்லை. அவற்றையெல்லாம் மாண்டசுக்யூ நன்கு கண்டு, பண்டைய உரோமானியக் குடியரசில் மக்களுடைய உரிமைகள் பாதுகாப்பாக இருந்ததற்குக் காரணம், அந்நாட்டு அரசாங்கம் தடை சமன் முறையில் அமைக்கப்பட்டிருந்த தென்றும், தம் காலத்திய இங்கிலாந்தில் மக்கள் உரிமைகளுடன் வாழ்வதற்குக் காரணம், அந்நாட்டினரசாங்கமும் தடை – சமன் முறையிலும் (A System of Checks and Balances), அதிகாரப் பிரிவினைக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டும் அமைந்திருத்தல்தான் என்றும் கருதினார். அக்கருத்துகளையே அதிகாரப் பிரிவினைக் கொள்கையாக (Principle of Separation of Powers) அவர் தமது 'சட்டங்களின் இயல்பு' என்ற நூலில் எழுதினார்.



மாண்டசுக்யூ

**அரசியற் கருத்துகள்:** 1. **அணுகுமுறை:** மாண்டசுக்யூ சமூகம், அரசாங்கம் முதலியவை பற்றித் தம்

காலத்துச் சிந்தனையாளரைப்போல மனித நடத்தை, அனுபவம் முதலியவற்றை ஆதாரமாக வைத்துஆய்வு செய்தார். அதில் இவர் பல சமூகங்களின் அரசாங்க நிறுவனங்களை ஒப்பீடு செய்து, சமூக இயலான அணுகுமுறையைப் (Sociological Approach) பின்பற்றுகிறார்.

2. **சட்டம்**: 'சட்டம் (Laws) என்பது பொருட்களின் தன்மையிலிருந்து தோன்றும் தொடர்புகளைக் குறிப்பதாகும்'.

3. **சுதந்திரம்**: சுதந்திரம் என்பது (Liberty) உயர்தரக் குடிமைப் பண்பிலிருந்து தோன்றவில்லை. அது ஓர் அரசாங்கத்தைச் சரியான முறையில் அமைப்பதனால் தோன்றுவதாகும்.

4. **அரசாங்க நிறுவனங்களின் தோற்றம்**: சமூகத்திலுள்ள இயற்கையின் சட்டம் என்பது மனித அறிவே ஆகும். அந்த இயற்கையின் சட்டமும் பல்வேறு சூழ்நிலைகளில் செயற்படும்போது, பல்வேறு நாடுகளிலுமுள்ள காலநிலை, மண்வளம், மக்களுடைய தொழில்கள், அரசாங்க முறை, வாணிகம், சமயம், வழக்கங்கள் முதலிய காரணிகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் எத்தகைய அரசாங்க நிறுவனங்கள் நிறுவப்படுதல் வேண்டுமென்று முடிவு செய்கின்றன. அரசாங்க இயல்புகளெல்லாம் மாறாத இயல்புடன் தோன்றியுள்ளன. அவை, அவற்றின் சூழல்களின் வலிமையினால்தான் மாறுதலடைகின்றன.

5. **அரசாங்க வகைகளும், மக்கள் இயல்பும்**: அரசாங்கங்கள், 1) குடியரசு, 2) முடியாட்சி, 3) வல்லாண்மை ஆட்சி என மூவகைப்படும். மாண்டசுக்யூ கூறும் குடியரசு என்பது மக்களாட்சியின் சாயலையும், செல்வராட்சியின் சாயலையும் உடையது. வல்லாண்மை ஆட்சி வல்லந்தமாகவும், மனம்போன போக்கிலமைந்த ஆட்சியாகவும் இருக்கும்; அது சட்ட வடிவமுடையது அன்று. முடியாட்சி என்பது சட்டவடிவங்களுக்கு ஒத்ததாகவும் அரசருக்கும், மக்களுக்கும் இடையே பிரபுக்கள் சாதாரண மக்கள் முதலியோரின் மன்றங்களை உடையதாகவும் இருக்கும். ஆட்சிவகைகளுக்கு அடிப்படையாக இருப்பவை மக்களுடைய உணர்வுகளே. வல்லாண்மை ஆட்சி நீடிப்பதற்கு மக்களுடைய அச்ச அல்லது அடிமை உணர்வும், நாட்டில் முடியாட்சி தொடர்ந்து இருப்பதற்கு ஒரு படைவீரர் வகுப்பின் தன்மான உணர்வும், குடியரசு நீடித்திருப்பதற்கு அதற்கு அடிப்படையான மக்களுடைய குடிமைப் பண்பு அல்லது பொதுநலஉணர்வும் உதவுகின்றன.

6. **அரசியல் சுதந்திரத்தின் பாதுகாப்பு-அதிகாரப் பிரிவினைக் கொள்கை**: பண்டைய உரோமானியக் குடியரசில் எந்த உயர்தர அதிகாரி அல்லது நிறுவனம் நினைத்ததைச் செய்யும் தன்மை உடையதாக ஆகிவிடாதபடி, ஒவ்வொன்றும் மற்ற தன் அதிகாரங்களால் தடுக்கப்பட்டு, எல்லா அரசாங்கக் கூறுகளும் சமனான நிலையிலிருந்தன. அதனால், அதில் எவரிடத்தும், எந்த நிறுவனத்திலும் அதிகாரக் குவிப்பு ஏற்படாமலிருந்தது; அதனால், உரோமானியக் குடிமக்களுடைய உரிமைகள் அழிக்கப்படாமல் பாதுகாப்பாக இருந்தன. அதைப் போல இங்கிலாந்து அரசாங்கத்தில் சட்டம் செய்யும் அதிகாரம் சட்ட மன்றமாகிய பாராளுமன்றத்திலும், சட்டங்களை நிறைவேற்றும் நிருவாக அதிகாரம் அமைச்சரவை என்ற உறுப்பிலும், நீதி வழங்கும் அதிகாரம் நீதிமன்றங்கள் என்ற தனியான ஓர் உறுப்பிலும் இருப்பதாலும், அங்கு ஒன்று மற்றதன் அதிகாரத்தில் தலையிடாமலிருப்பதாலும், அங்கு அதிகாரக் குவிப்பு ஏற்படாமல், மக்களுடைய அரசியலுரிமைகளெல்லாம் பாதுகாப்பாக இருக்கின்றன.

சட்டமியற்றும் அதிகாரங்களும், நிறைவேற்றும் அதிகாரங்களும், ஒரே அதிகாரியிடத்திலோ, குழுவினிடத்திலோ இணைக்கப்படுமாயின், அங்குச் சுதந்திரம் இருத்தலியலாது; எவ்வாறெனில் அதில் ஒரே அரசர் அல்லது சட்டமன்றமே கொடுங்கோலான முறையில் செயற்படுதலும் கூடும். மேலும், நீதி வழங்கும் அதிகாரம் சட்டமியற்றும் அதிகாரத்தினின்றும் அல்லது நிருவாக அதிகாரத்தினின்றும் பிரிக்கப்படாமலிருக்குமானால், அங்கும் சுதந்திரம் என்பது இராது. நீதி அதிகாரம் சட்ட அதிகாரத்தோடு இணைக்கப்படுமானால், மக்களின் உயிரும், உடைமையும் நீதிபதியின் தன் விருப்பமான கட்டுப்பாட்டில் வைக்கப்படும். அங்கு நீதிபதியே சட்டமியற்றுபவராதலின் அந்நிலைமை தோன்றும். நீதி அதிகாரம் நிருவாக அதிகாரத்தோடு இணைக்கப்படுமாயின், நீதிபதி வல்லந்தத்துடனும், பிறரை ஒடுக்குமியல்புடனும் நடந்து கொள்ளக்கூடும்.

'ஒரே அதிகாரியோ, பிரபுக்களோ, பொதுமக்களோ அடங்கிய ஒரு குழுவே சட்டமியற்றும் அதிகாரத்தையும், அரசாங்கத் தீர்மானங்களை நிறைவேற்றும் நிருவாக அதிகாரங்களையும் குடிகளின் வழக்குகளைத் தீர்த்து நீதி வழங்கும் அதிகாரத்தையும், கையாண்டால் எல்லாமே அழிந்து போகும்; ஒன்றுமிராது'.

**அதிகாரப் பிரிவினைக் கொள்கை இக்கால அரசியலமைப்புகளிற் காணப்படுதல்**: ஆங்கில நாட்டில் பாராளுமன்றம், அமைச்சரவை, நீதிமன்றம் முதலிய மூன்று உறுப்புகள் முறையே சட்டமியற்றும் அதிகாரம், நிருவாக அதிகாரம், நீதி அதிகாரம் முதலிய

அதிகாரங்களைக் கையாளுகின்றன. எனினும், அங்கு உறுப்பினடிப்படையில் அதிகாரப் பிரிவினை காணப் படவில்லை. ஏனெனில், அம் மூன்று உறுப்புகளும் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றன. அம்முறையானது மாண்டசுக்யூ வின் குறிக்கோளுக்கு எதிர்மாறாக இருக்கின்றது. அதாவது பொதுமக்கள் மன்றமாகிய சட்டமன்ற உறுப்பினரிடையே இருந்துதான் நிருவாக சபையா கிய அமைச்சரவை அமைக்கப்படுவதாலும், அமைச் சரவை, சட்ட மன்றத்துக்குப் பொறுப்பாக இருப்ப தாலும், அங்கு ஒன்றை ஒன்று கட்டுப்படுத்துகின்றது. நீதிபதிகளை நிருவாகம் தன்விருப்பம் போலப் பதவி நீக்கம் செய்தலியலாது. அவ் வகையில் அதிகாரப் பிரி வினை காணப்படுகிறது. ஆனால், சட்ட மன்றத்தில் இரண்டாம் மன்றமாகிய பிரபுக்கள் மன்றமே சுருங் கிய அளவில் நாட்டின் உயர்தர நீதிமன்றமாகவும், பிரபுக்கள் அவையின் தலைவரே (Lord Chancellor), பிரபுக்கள் மன்றத்தின் உறுப்பினராகவும், அதன் நீதி மன்றத்தின் தலைவராகவும் (தலைமை நீதிபதியாக வும்), நிருவாக அவையாகிய அமைச்சர்களுள் ஒரு வராகவும் இருக்கிறார். அந்நிலையில் அதிகாரப் பிரி வினை இல்லை. மாண்டசுக்யூ மேலோட்டமாகத் தான் ஆங்கில நாட்டு அரசியலமைப்பைப் பார்வை யிட்டுள்ளார். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டில் மாண்டசுக்யூ கூறியவாறு அதிகாரப் பிரிவினை காணப்படுகிறது. அங்குக் காங்கிரசு (Congress) என் னும் சட்டசபை சட்டங்கள் இயற்றவும், குடியரசுத் தலைவர் அச் சட்டங்களை நிறைவேற்றச் செய்யவும், உயர்நீதி மன்றம் (Supreme Court) நீதி வழங்கவும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன. நிருவாக அதி காரியாகிய குடியரசுத் தலைவர் சட்டமன்றமாகிய காங்கிரசில் உறுப்பினருமல்லர்; அதற்குப் பொறுப் புடையவருமல்லர்; அவரைச் சட்டமன்றம் துரோகக் குற்ற விசாரணையினால் மட்டுமே பதவி நீக்கம் செய்தலியலும். அவ்வகையில் அங்கு அதிகாரப் பிரி வினைக் கொள்கை மற்றவற்றைவிட மிகத்துல்லிய மாகப் பின்பற்றப்படுகிறது. ஒன்று மற்றதன் அதி காரங்களில் தலையிடுவதில்லை. ஆனால், அங்கும் அதிகாரப் பிரிவினைக் கொள்கை முற்றிலும் பின் பற்றப்படாமல், ஓரளவே பின்பற்றப்படுகிறது. சட்ட மன்ற, நிறைவேற்றும் அதிகாரங்கள் குடியரசுத் தலை வருக்கும், குடியரசுத் தலைவரின் செயல்கள் சிலவற் றுக்கு (அயல்நாட்டு உடன்படிக்கைகள்) ஒப்புதல் அளிக்காமல் மறுப்பதற்குரிய அதிகாரம் மேல் சட்ட மன்றத்துக்கும், சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டங் களை அரசியலமைப்புக்கு மாறானவை என்று கூறித் தள்ளுபடி செய்வதற்குரிய அதிகாரம் நீதிமன்றத் துக்கும், குடியரசுத் தல்லவரைத் துரோகக் குற்ற விசாரணை மூலம் பதவி நீக்கம் செய்வதற்குரிய அதி காரம் சட்டமன்றத்துக்கும் நீதிமன்றத்துக்கும் இருக் கின்றன. அவ்விதமான தடை-சமன் முறையினால் ஒரு பிரிவு மற்றதைவிட உயர்வு என்ற அமைப்பு இல்லாமல் ஒரு சமநிலை ஏற்படுகிறது.

மாண்டசுக்யூ கூறும் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு ஓரளவே நடைமுறைக்கு ஏற்றது என் றாலும், அது மக்களாட்சி அரசாங்க முறைக்கு உள்ள அடிப்படைகளுள் ஒன்று என்பதை மறுத்தலியலாது. இவர் சட்டம் என்பதற்குக் கூறும் இலக்கணமும், அரசாங்க வகைகளை வகுத்த வகையும் சரியானவை அல்ல எனினும் இவர் அரசியற் கருத்துகளை அறி வியல் நோக்கில் அணுகி ஆய்வு செய்தவராவர்.

பா.சூ.

**மாண்டலே**, மேல் பர்மாவில் உள்ள முக்கிய மான நகரம். ஐராவதி ஆற்றின் இடக் கரையில் அமைந்துள்ள மாண்டலே (Mandalay) நகரம், தலை நகரான இரங்கூனிலிருந்து வடக்கே ஏறத்தாழ 620 கி.மீ. தொலைவில் உள்ளது. பர்மாவின் இரண்டாம் பெருநகரமான மாண்டலே, ஓர் ஆற்றுத் துறை முகப் பட்டினம் ஆகும். இங்குச் சுறுசுறுப்பான ஆற்றுப்போக்குவரத்து நடைபெறுகிறது. இது ஒரு புகைவண்டிச் சந்திப்பும் ஆகும். தெற்கில் உள்ள இரங்கூன் புகைவண்டிச் சந்திப்பையும், வடக்கில் உள்ள இலேசியோ, மைஇட்கினா சந்திப்புகளை யும் இது இணைக்கிறது. வரலாற்று அடிப்படையி லும் இந்நகர் முதன்மை வாய்ந்தது. வாணிக மைய மாகவும் இது மிளிர்கிறது.

கப்பல் போக்குவரத்தும் புகைவண்டிப் போக்கு வரத்தும் பெற்றுள்ள மாண்டலே, கி.பி. 1857-ஆம் ஆண்டு மிண்டன் (கி.பி. 1853-1878) என்னும் மன்ன ரால் நிறுவப்பட்டது. பர்மாவின் மன்னனான பாகன் (Pagan-கி.பி. 1845-1853) என்பானின் உடன்பிறந்தா னான மிண்டன் இப்புது நகரத்திற்குத் தன் தலை நகரை மாற்றினான். பர்மா ஆங்கிலேயரால் கைப் பற்றப்படுவதற்கு முன்பு நிலவிய பர்மியப் பேரரசின் (கி.பி.1860-1885) கடைசித்தலைநகரமும் இதுவே ஆகும். இரண்டாம் உலகப் பெரும்போரின்போது, இது சப்பானியர்களால் கைப்பற்றப்பட்டது. மாண்டலே 1942-இல் கைப்பற்றப்பட்டபோதும் மீண்டும் 1945 -இல் நேச நாடுகளால் கைப்பற்றப்பட்ட போதும் இந்நகரின் 85 விழுக்காடு பகுதிப் பேரழிவிற்கு உள்ளா கியது. பழைய நகரைச் சுற்றிலும் அன்று மதிற் சுவரும், அகழியும் இருந்தன. இதன் உள்ளே நகரின் மையத்தில் அரசனின் அரண்மனையும், பல திருக் கோயில்களும் புத்த மடாலயங்களும் இருந்தன.

மாண்டலேயில் ஆங்கில ஆட்சியாளப் பேராளர் (Resident) ஒருவர் தங்கி ஆங்கில அரசின் காரியங்

களைக் கி.பி.1857-க்குப் பின்னர்க்கவனித்து வந்தார். இந்நகரில் 1908-ஆம் ஆண்டளவில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டது. சுபாசு சந்திர போசு சப்பானியருடன் கூட்டுச் சேர்ந்து ஆங்கிலேயரை இந்தியாவினின்றும் விரட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டபோது, பிரான்சுத் தூதரகம் ஒன்று மாண்டலேயில் நிறுவப்பட்டு, பிரான்சு வங்கி ஒன்று நிறுவவும் புகைவண்டி நிலையம் அமைக்கவும் மறைமுகமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலேயர்களின் கை ஓங்கியதால், ஆசாது இந்து போர்ப்படை 1944 – இல் வெற்றி வாய்ப்பினை இழந்தது. சிங்கப்பூரிலிருந்து கொண்டுவரப்பட்ட தேசிய இராணுவ வீரர்படை பர்மாவினின்றும் பின் வாங்க வேண்டியதாயிற்று. பின்னர் 1945-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயப் படைவீரர்கள் வட, தென் பர்மாவின் பகுதிகளில் குவிக்கப்பட்டனர். எனவே, மாண்டலே எளிதில் ஆங்கிலேயர் வசமாயிற்று. இவ்வாறு மாண்டலே நகரம் ஆங்கில–ஆசாத் இந்து ஆதிக்கப் போட்டியின் போர்க்களமாகச் சில காலம் மாறியது.

ஆங்கிலேயரின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், 1948 இல் பர்மா தொழில், வணிக, நிருவாக, பண்பாட்டுத் துறைகளில் மகத்தான வளர்ச்சி பெறத் தொடங்கியது. முன்பே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்த கைத்தொழில்களேயன்றி, பட்டுநெசவு, பொன், வெள்ளி அணிகள் தயாரிக்கும் தொழில், விலையுயர்ந்த பச்சைமணிக்கற்கள் செதுக்கும் தொழில், மரவேலைப்பாட்டுத் தொழில் ஆகியன வெகுவேகமாக வளர்ச்சி பெற்றன. மாண்டலே நகரச் சுவர்களின் வெளியே செக்கியோ கடைத் தெரு (Zegyo Bazaar) என்னும் பெரிய கடைத்தெருவும் வேறு சில கடைத்தெருக்களும் இருந்தன. வட பர்மாவில் செய்யப்படும் பொருட்களும், இறக்குமதியாகும் பொருட்களும் இங்கு விற்கப்பட்டன.

மாண்டலேயில் இருந்த மருத்துவக் கல்லூரி 1957–ஆம் ஆண்டில் மாண்டலே பல்கலைக் கழகமாக உருவாக்கப்பட்டது. அப் பல்கலைக்கழகத்தில் முன்னோடியான வேளாண்மைப் பள்ளி ஒன்றும் உள்ளது. மாண்டலே சிறை, இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் புகழ் பெற்றிருந்தது. இந்திய விடுதலை வீரர்கள் சிலர் அச்சிறையில் அடைக்கப்பட்டனர்.

மாண்டலே பௌத்தர்களின் புண்ணிய மையமாகப் பண்டு விளங்கியது. பர்மியர்களின் பௌத்த மையமான இந்நகரில் அரசிகளின் தங்கமயமான மடாலயம் ஒன்றுள்ளது. தேக்கு மரத்தால் கட்டப்பட்ட அம்மடாலயம் அழகிய வேலைப்பாடுகள் மிக்கது. மாண்டலே மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள குத்தோதா (Kuthodaw Pagodo) விகாரம், அதன் அருகிலேயே அமைந்துள்ள மற்ற 729 சிறு விகாரங்கள் ஆகியன பேரழகு மிக்கவை. அவ்விகாரங்களில் இடம் பெற்றுள்ள கற்களில் புத்த சமயத் திருவாக்குகள் (Buddhist Scriptures)வெட்டப்பட்டுள்ளன.அவை பௌத்த சமயத்தவர்களால் புனிதமாகக் கருதப்படுகின்றன. அவ்விகாரத்திலிருந்து தெற்கே ஐந்து கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள அரக்கான் விகாரத்தில் 4 மீ. உயரம் கொண்ட புத்த பெருமானின் செப்புப் படிமம் ஒன்று வழிபாட்டில் வைக்கப்பட்டுள்ளது. அச்செப்புப் படிமம் கி.பி.1784-ஆம் ஆண்டு அரக்கான் மலைப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆங்கிலஇலக்கியம் அறிந்தவர்கள் பெரும்பாலும் மாண்டலேயின் சிறப்பினை அறிவர். காரணம், உருட்யார்டு கிப்ளிங்கு எனும் புலவர் (Poet Rudyard Kipling) மாண்டலே பற்றிப் போர் வீரர்கள் பாடும் வகையில் பாடல்களில் சித்திரித்துள்ளார் (In Barrack room ballads, 1892). அப்பாடல்கள் புகழ்மிகு இசைக் கலைஞரான 'ஓலே' (Oley-Speaks on the Road to Mandalay C. 1907) என்பவரால் இசையமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவ்வினிய கீதங்கள் மாண்டலேயின் பெருமையை உலகிற்கு உணர்த்தின. மாண்டலேயின் மக்கள் தொகை 4,58,000 (1983) ஆகும். ம.இரா.

*மாண்டவ்வியர்*: இவர் தவளையிடம் பிறந்த தவத்தில் சிறந்த முனிவர் என்பர். சாளுவன் என்னும் பெயருடைய மன்னனின் கருவூலத்தைக் கொள்ளையடித்த திருடர்களைப் பிடிக்கச் சென்ற காவலர்கள் இவரையும் திருடன் என்று நினைத்துப் பிடித்துமன்னனிடம் கொண்டு சென்றனர். அரசனும் உண்மையுணராமல் மாண்டவ்வியரைக் கழுவிலேற்றக் கட்டளையிட்டான். கழுவிலேற்றிய பின் உண்மையை உணர்ந்த மன்னன் மனம் வருந்தி விடுதலை செய்யக் கழுவிலிருந்து மாண்டவ்வியரை எடுக்க முடியாமற் போகவே, உடம்பிலிருக்கும் ஆணியை விட்டு, முன்னும் பின்னும் அறுத்து விடுவித்தனர். கழுமரத்தின் ஆணி உடம்பில் தங்கியதால் இவர் ஆணி மாண்டவ்வியர் எனவும் அழைக்கப்பட்டார். தாம் இளவயதில் தும்பியின் (ஒருவகை வண்டு) வாலில் துரும்பை நுழைத்துத் துன்புறச்செய்து விளையாடியதன் காரணமாகவே தமக்கு இத்தகைய துன்பம் நேர்ந்தது என உணர்ந்தார். குழந்தைப் பருவத்தில் அறியாமல் செய்த அச் சிறு பிழைக்கு அச் கொடுந்தண்டனை தந்த எமன் மீது சினங்கொண்டு அவனை மனிதனாகப் பிறக்கச் சாபமிட்டார். அச்சாபமேற்ற எமன் உலகில் விதுரனாகப் பிறந்தான்.

நளாயினி இருளில் தன் கணவனைக் கூடையில் வைத்துச் சுமந்து வரும்போது மாண்டவ்வியர் காலில் இடித்துவிட்டாள். உடனே பொழுது விடிந்த வுடன் அவள் கணவனை இழக்கச் சாபமிட்டார். பதி லுக்கு நளாயினி சூரியன் எழாமலும் பொழுது விடியாமலும் தன் கற்பின் திறத்தால் தடுத்தாள். தேவர்கள் வேண்டுகோளால் இருவரும் சாபத்தி லிருந்து விடுதலை பெற்றனர். ச.செ.

*மாண்டிசெல்லோ*: அமெரிக்க ஐக்கிய நாடு களின் மூன்றாம் குடியரசுத் தலைவராகவிருந்த தாமசு செபர்சனின் (Thomas Jefferson) பண் ணைக்கு (Estate) மாண்டிசெல்லோ (Monticello) என் பது பெயர். அவர் கி.பி. 1763-ஆம் ஆண்டு ஆகசுட்டு 3-இல் எழுதியுள்ள குறிப்பில்தான் முதன் முத லாக இப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தாலியப் பெயரான இதற்குச் 'சிறிய மலை' என்பது பொருள். தாமசு செபர்சனால் வடிவமைக்கப்பட்ட இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் கட்டடக் கலைக்கு ஓர் எடுத் துக்காட்டாக அமைந்துள்ளது. இன்று இது ஒரு தேசிய அரும்பொருட்காட்சியகமாக உள்ளது.

இப்பண்ணை மத்திய வெர்சீனியாவில் (Virginia) ஆல்பேமார்லே மாவட்டத்தில் (Albemarle), சார் லட்சுவில்லிக்கும் (Charlottesville) தாமசு செபர்சனால் நிறுவப்பட்ட வெர்சீனியாப் பல்கலைக்கழகத்திற்கும் தெற்கில் 3 கி.மீ. தொலைவில் இருக்கின்றது. மலை மீது அமைக்கப்பட்டுள்ள இது கடல் மட்டத்திலிருந்து 261 மீ. உயரத்திலும், தரைமட்டத்திலிருந்து 177 மீ. உயரத்திலும் உள்ளது. அம்மலையின் வடகிழக்குப் பகுதியில் அடிவாரம் மிகவும் செங்குத்தாகவும், பாறை கள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. அதனை ஒட்டி இரிவன்னா (Rivanna) ஆறு ஓடுகின்றது.

மலையின் உயர்ந்த பகுதியில் செபர்சனின் மாளிகை மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. செங் கற்களால் கட்டப்பட்டு மூன்று மாடிகளைக் கொண் டுள்ள அம்மாளிகையில் 35 அறைகள் உள்ளன. இத் தாலிய கிராம வீடு (Villa) போன்ற அமைப்பைக் கொண்ட அதன் முகப்பு (Portico) கிரேக்கக் கட்ட டக் கலையைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ளதுடன், குடியேற்ற நாட்டுக் கட்டடக் கலையின் பல கூறு களையும் கொண்டுள்ளது. அதன் கிழக்கிலும், மேற் கிலும் இரு முக்கிய நுழைவாயில்கள் அமைக்கப்பட் டுள்ளன. கீழ்ப்பகுதியில் சலவை செய்யும் இடம், வண்டிகள் நிறுத்துமிடம், குதிரைகட்டுமிடம், சமையல் அறை, பனிக்கட்டிகள் வைக்குமிடம், பால்பண்ணை ஆகியவை இருக்கின்றன. அவை அம்மாளிகையின் வடக்கு, தெற்குக் கோடிகளிலிருந்து எளிதில் செல்லக் கூடிய வகையிலும், அதேசமயம் வெளியிலிருந்து பார்வைக்குத்தெரியாதவகையிலும் அமைக்கப்பட்டுள் ளன. உணவு அறையின் இருபுறமும் மது அறைகளி லிருந்து மதுவைக் கொண்டு வர வழிகள் உள்ளன. மாடிப் படிக்கட்டுகள் கட்டடக்கலையின் அழகைக் குறைத்துவிடும் என அவர் கருதியதால் 61 செ.மீ. அகலத்தில் மிகக்குறுகியதாகவும், அழகிய முறையி லும் அவற்றை அமைத்துள்ளார். படுக்கைகள், ஐரோப் பிய மாதிரியில், சுவர்களுக்கு இடையே உள்ள இடை வெளிகளில் அமைக்கப்பட்டுள்ளன. செபர்சனின் படுக்கை, அவருடைய படுக்கை அறைக்கும், படிக்கும் அறைக்கும் இடையே உள்ள இடைவெளியில் பொருத்தப்பட்டிருந்தது.



மாண்டிசெல்லோ

இம்மாளிகையின் தென்மேற்கில் அவருடைய குடும்ப இடுகாடு மரங்களால் சூழப்பட்ட தோட்டங் களிடையே அமைந்துள்ளது. அவருடைய கல்லறை யில் 'அமெரிக்க விடுதலை அறிக்கையையும், வெர்சீ னியா மாநிலத்தின் சமயவிடுதலைச் சட்டத்தையும் உருவாக்கிய, வெர்சீனியாப் பல்கலைக்கழகத்தின் தந்தையான, தாமசு செபர்சன் இங்குப் புதைக்கப் பட்டார்' என்ப் பொறிக்கப்பட்டுள்ள சொற்றொ டரை அவரே எழுதியுள்ளார்.

**வரலாறு**: பீட்டர் செபர்சன் (Peter Jefferson) என்பவர், கி.பி. 1735-ஆம் ஆண்டு இரிவன்னா ஆற்


றுக்குத் தெற்கிலிருந்த 405 எக்டேர் நிலத்தை வாங்கினார். பின்னர், அவர் அவ்வாற்றுக்கு வடக்கிலிருந்த 162 எக்டேர் நிலத்தைத் தம்முடைய நண்பனிடமிருந்து பெற்றார். அவர் கி.பி. 1757-இல் இறந்ததும், அப்பண்ணை அவருடைய மகன் தாமசு செபர்சனுக்கு வந்தது. அதனைச் சமப்படுத்தும் வேலையை அவர் கி.பி. 1768 – இல் தொடங்கினார். அப்பொழுது அக் குடியேற்றத்தில் சிறந்த கட்டடக்கலைஞர் எவரும் இல்லாததால் தாமசு செபர்சனே அதனைப் பயின்று, தம்முடைய மாளிகைக்குத் தேவையான வரைபடத்தைத் தீட்டினார். அதில் அவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வெனிசு நகரில் வாழ்ந்த சிறந்த கட்டடக் கலைஞரான ஆண்டிரியா பல்லாடியோ (Andrea Palladio)வைப் பின்பற்றினார். மாளிகை கட்டுவது கி.பி. 1769-இல் தொடங்கப்பட்டது, அப்பணி அவர் தம்முடைய அரசியல் நடவடிக்கைக்கு இடையே அப் பண்ணைக்கு வரும்பொழுது எல்லாம் கவனிக்கப்பட்டது. பலமுறை மாற்றியமைக்கப்பட்ட அது கி.பி. 1809-ஆம் ஆண்டு வரை முற்றுப் பெறவில்லை. அம் மாளிகையிலுள்ள சுழலும் மேசை, பொருட்களை மாடிக்குக் கொண்டு செல்லப் பயன்படும் கருவி (Dumb-waiter), நாள் காட்டிக் கடிகாரம் (Calender Clock) ஆகியவை செபர்சனால் கண்டுபிடிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

செபர்சன் இறந்த பின்னர் 10 ஆண்டுகள் கழித்து ஊரியா பி.இலெவி (Uriah P. Levy) என்னும் கடற்படை அலுவலர் அதனை விலைக்கு வாங்கி, நாட்டுக்கு அளித்தார். அவருடைய விருப்பாவணம் (Will) செல்லாதென அவருடைய வாரிசுகள் வழக்குத் தொடுத்து, அப்பண்ணையைப்பெற்றனர். அவர்களுள் ஒருவரான செபர்சன் எம். இலெவி (Jefferson M. Levy) மற்ற வாரிசுகளின் பங்குகளை விலைக்கு வாங்கி அதனை முழுமையாக்கினார். அம்மாளிகையையும், அதனைச் சுற்றியிருந்த 259 எக்டேர் நிலத்தையும் 1923 – இல் தாமசு செபர்சன் நினைவுக்குழு (Thomas Jefferson Memorial Foundation) விலைக்கு வாங்கி, 1926 – ஆம் ஆண்டு சூலை 4 – இல் அவருடைய 100–வது இறந்த நாளன்று, நாட்டுக்கு அளித்தது. அக்குழு அம்மாளிகையின் அறைகலன்களைபல இடங்களிலும் சிதறி இருந்தபொருட்களைத் திரட்டி மீண்டும் அங்கு வைத்தது. மாண்டிசெல்லோவைப் பெரிதும் விரும்பிய தாமசு செபர்சன் தம்முடைய உயிர் அங்குப் பிரிவதையே தம் இறுதி விருப்பமாகக் கொண்டிருந்தார். சி. இரெ.

மாண்டிசோரி (கி.பி. **1870–1952**): கல்வி உலகில் மாண்டிசோரி கல்விமுறை குழந்தைக் கல்விக்கு மிகவும் ஏற்றதென்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அம்முறையைக் கண்டறிந்த பெருமை இத்தாலியக் கல்வியியல் அறிஞர் மரியா மாண்டிசோரியைச் சாரும். இவர் தம் மருத்துவப் பணியில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை நலப்படுத்தும் அனுபவத்தினடியாகத் தலைசிறந்த கல்வியாளராகத் திகழ்ந்தார்; ஐரோப்பா, அமெரிக்கா முதலான நாடுகளிலெல்லாம் புகழுடன் இயங்கிவரும் மாண்டிசோரிப் பள்ளிகளின் தாய் என்ற பெருமையும் பெற்றார்.

மாண்டிசோரி இளமையில் கணிதக் கல்வியில் நாட்டம் மிக்கவராயிருந்தார். பின்னர்ப் பொறியியலில் பணிபுரிய விரும்பித் தொழில்நுட்பப் பள்ளியொன்றிலும் சேர்ந்தார். பின்பு உயிரியலில் இவர் கவனம் திரும்ப இறுதியில் மருத்துவப் பணியைத் தேர்ந்தெடுத்தார். அக்காலத்துச் சமூகக் கட்டுப்பாட்டையும் மீறி உரோம் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியில் பயின்று மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமையையும் பெற்றார். மருத்துவ மனை உட்பயிற்சியை முடித்தபின் குழந்தை நோய்களைப்பற்றிச் சிறப்பாகப் பயின்று முன்னணியில் நின்ற இவரைப் பல்கலைக்கழக உளநோய்ப் பிரிவில் துணை மருத்துவராக நியமித்தனர். நாட்டின் உளநலம் குன்றியோர்தம் பல்வேறுவிடுதிகளைப் பார்வையிட்டுத் தம் மருத்துவமனைக்கு நோயாளிகளைக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டிருந்த போது குழந்தை உளநலத் துறையில் தம் ஆர்வத்தை மிகுதிப் படுத்திக் கொண்டார். பிரான்சு மருத்துவக் கல்வியாளரும் 'மூடத் தன்மையும் அதன் உடலியல் கல்வி முறைச் சிகிச்சையும்' என்ற நூலின் ஆசிரியருமான எட்வர்டு செகுயின் என்பவர்தம் உடலியற் கல்வி முறையில் மாண்டிசோரி கவனம் செலுத்தினார். மேலும், அவேரான் காடுகளில் கண்டெடுத்த ஒரு காட்டிளைஞனைக் கற்பித்துச் சமூகப்படுத்தும் ஐந்தாண்டுச் சோதனையில் வெற்றிபெற முடியாவிட்டாலும், சீரிய முறையெனப் பாராட்டுப் பெற்று 'அவேரான் காட்டுப் பையன்' என்ற நூலை எழுதிய சூன் இட்டார்டு என்ற பிரான்சு மருத்துவரும் காது கேளாத ஊமையருக்கு ஆசிரியரும் ஆக இருந்தவர் தம் நூல்களையும் மாண்டிசோரி கற்கலானார்.

இவர் கி.பி. 1898-இல் தூரின் நகரில் நடைபெற்றகல்வி மாநாட்டில் தாம் ஆற்றிய உரையில் மற்ற குழந்தைகளை விட அதிகமாக இல்லாவிடினும் அவர்களுக்கு நிகராகவாவது மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் கல்விப் பயன்களைப் பெறும் உரிமையைக் கொண்டவர்கள் என்று வாதாடினார். மனவளர்ச்சி குன்றியநிலை ஒரு மருத்துவச் சிக்கலன்று; ஒரு கல்விச் சிக்கலே என்ற அவர் கருத்து அம்



மாண்டிசோரி

மாநாட்டின் இசைவைப் பெற்றது. அதனையடுத்து உரோமாபுரியின் கல்வியமைச்சர் மாண்டிசோரியைத் தேர்ந்தெடுத்து மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் கல்வி பற்றிய பணியிடைப் பயிற்சியை உரோமாபுரி ஆசிரியர்களுக்கு அளிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். பின்னர்த் தொடக்கப் பள்ளிகளில் உடல்நலம் குன்றிய குழந்தைகளைக் கவனிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட உரோமாபுரியின் மாநில உடல் நலப்படுத்தும் பள்ளியின் (State Orthophrenic School) இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். இலண்டன், பாரிசு நகரங்களில் நிலவிவந்த சிறப்புக் கல்வி நுட்பங்களை உற்று நோக்கிய பின் உரோமாபுரி உடல் நலப் பள்ளியில் கி.பி.1898 முதல் 1900 வரை ஈராண்டுகள் காலை எட்டு மணி முதல் இரவு ஏழு மணிவரை கற்பித்தும் பிற ஆசிரியர்களை மேற்பார்வை செய்தும் வந்த தம் வகுப்பறை அனுபவத்தையே கல்வியியலில் பெற்ற உண்மையான பட்டம் என்று கருதினார். அக்குழந்தைகளில் பலரும் மாநிலத் தேர்வுகளில் பொதுவான குழந்தைகளுக்கு ஒப்பாகப் படிக்கவும் எழுதவும் கற்றுவிட்டனர். அதனால், அந்நாளில் பயன்படுத்தப்பட்ட முறைகளை மாண்டிசோரி முறை வென்று விட்டது என்ற உளநிறைவு அவருக்கு ஏற்பட்டது. பொதுவான குழந்தைகள் கூட வியப்புறத் தக்க முன்னேற்றம் பெறத் தம் முறை துணைபுரியும் என்று பெரிதும் நம்பினார்.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பற்றிய நேர் பணியிலிருந்து சிறிது விலகி மீண்டும் உரோமாபுரிப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கல்வியியல், தத்துவம் ஆய்வுமுறை, உளவியல் ஆகியவற்றைப் பயின்று மனித இனவியல் ஆராய்ச்சியையும் நடத்தினார். அதனோடு அந்நாளில் இருந்த இத்தாலியப் பெண்கள் கல்லூரிகளுள் ஒன்றில் உடல்நலத் துறைத் தலைமைப் பொறுப்பையும் கி.பி. 1896 முதல் 1900 வரை வகித்து வந்தார். உரோமாபுரிப் பல்கலைக்கழகத்தின் மனித இனவியல் பேராசிரியராக 1904 முதல் நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். அவர்தம் விரிவுரைகளின் தொகுப்பு, 'கல்வி சார்ந்த மன இனவியல்' (Pedagogical Anthropology) என்ற நூலாக 1913 – இல் வெளியிடப்பட்டது.

உரோமாபுரியின் சான் இலாரென்சோ மாவட்டத்தில் எண்ணற்ற நடைபாதைக் குடும்பத்தினரின் மறுவாழ்வுத் திட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒரு கட்டடச் சங்கம், கட்டடப் பணி புரியும் பெற்றோர்களின் பள்ளி வயதடையாக் குழந்தைகள் தக்க மேற்பார்வையின்றிச் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு ஒரு பெரிய சிக்கலை உருவாக்குவதைக் கண்டு பிடித்தது. நல்ல கட்டுமானத்திற்கான உரோமாபுரிச் சங்கத்தின் இயக்குநர் எடுபார்டோ தலாமோ, மாண்டிசோரி அம்மையாரை அழைத்து அக்குழந்தைகளுக்கான பகல் நேரப் பாதுகாப்பு வசதிகளை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாய்ப்பைப் பயன்படுத்திப் பொதுவான குழந்தைகளுக்கும் தம் கல்விமுறையைச் சோதிக்க முற்பட்டு 1907 – இல் 3 முதல் 6 வயது வரையுள்ள 60 குழந்தைகளுக்கான முதல் குழந்தை மனையை நிறுவினார். அரே மாவட்டத்தில் 2-ஆம் மனையை 1907-விலும் அடுத்த ஆண்டு, மிலான் நகரில் மற்றொரு குழந்தை மனையையும் அமைத்தார். வழக்கிலிருந்த பிற பள்ளிகளுக்கிடையே உரோமாபுரியின் ஆங்கில நாட்டுத் தூதுவர் மட்டத்தில், உயர் குடும்பக் குழந்தைகளுக்காக ஒரு தனிப் பள்ளியையும், உரோமாபுரியில் நடுத்தரக் குடும்பத்தினர்க்கான இரு பள்ளிகளையும் மாண்டிசோரியின் இயக்கத்தில் ஏற்படுத்தினர்.

மாண்டிசோரியின் அறிவியற் கல்விமுறையின் தோற்றம், கொள்கைகள், நடைமுறை, முடிவுகள் ஆகியவற்றை விளக்கும் இத்தாலிய மொழி நூல் 1909–இல் வெளியிடப்பட்டது. அது பின்னர் 20 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. மாண்டிசோரி முறை என்ற ஆங்கில மொழி நூல் 1912–இல் அமெரிக்காவின் அதிக விற்பனை நூலாகத் திகழ்ந்தது. அவ் வெளியீட்டிற்கு முன்பே, 'மெக்ளூவர்சு இதழ்' என்ற இதழில் 1911 – இல் வெளியான மூன்று தொடர் கட்டுரைகளின் மூலம் இத்தாலிய வியப்புக் கல்விப் பணியாளரிடத்தில் அமெரிக்கர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர். மாண்டிசோரியையும் அவர்தம் புதிய குழந்தைகளையும் பற்றிய 1912 – இல் வெளியான மாண்டிசோரித் தாய், 1913-இல் வெளியான மாண்டிசோரிக் கையேடு போன்ற

நூல்கள் பெற்றோர் நடுவே மாண்டிசோரி முறையைப் பலரறியச் செய்துவிட்டன. ஒரு நியூயார்க்குத் தயாரிப்பாளரிடமிருந்து 1912 தொடக்கத்திலேயே கல்வித் துணைக் கருவிப் பெட்டிகள் அமெரிக்க இல்லங்களில் வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்தன.முதல் அமெரிக்க மாண்டிசோரிப் பள்ளி 1912 -இல் நியூயார்க்கின் தடாரி நகர்ப் பகுதியில், மாண்டிசோரியின் முதல் அமெரிக்க மாணவியும் அவர் கல்வி முறை நூலின் மொழிபெயர்ப்பாளரும் ஓர் ஆசிரியருமான ஆன் சார்சு என்பவரால் தொடங்கப்பட்டது. விரைவில் மெயின் முதல் கலிபோர்னியா வரையுள்ள எல்லாத் தனியார் பள்ளிகளிலும் பொதுக் கல்வித் துறைகளிலும் 'கிண்டர் கார்ட்டன்' தொடக்க நிலை வகுப்புகளில் மாண்டிசோரி முறையில் பயிற்றத் தொடங்கி விட்டனர். மாண்டிசோரி 1913 இறுதியில் தான் அமெரிக்காவுக்கு முதல் வருகை புரிந்து ஒரு மாதம்விரிவுரைப் பயணம் செய்து எலன் கெல்லர், தாமசு எடிசன் ஆகியோரையும் சந்தித்துடன், வெள்ளை மாளிகை விருந்தினராகவும் இருந்தார். பெரும்புள்ளிகள் பலர்,1913-1914-இல் அமைக்கப்பட்ட அமெரிக்க மாண்டிசோரிக் கல்விச் சங்கத்தில் செயற்குழுவினராகப் பணியாற்றினர். மீண்டும் 1915 – இல் அமெரிக்கா சென்று சான்பிரான்சிசுகோவில் நடைபெற்ற பனாமா-பசிபிக்கு வட்டாரத்தின் கோடை வகுப்புகளில் தம் முறை பற்றி மாண்டிசோரி, வகுப்புகள் நடத்தினார். அமெரிக்காவில் மாண்டிசோரி நிறுவனம் அமைக்க அவருக்கு நிதி வழங்கியபோதும், அவர் தம் தனித்தன்மையை விட்டுக் கொடுக்காமல் மீண்டும் ஐரோப்பா திரும்பினார்.

மாண்டிசோரி விரிவான பயணங்கள், ஆலோசனைகள், வகுப்புகள் ஆகியவற்றுடன் பல்வேறு நூல்கள், கட்டுரைகள், சிறுநூல்கள் எழுதுவதிலும் ஈடுபடலானார். அனைத்துலக மாண்டிசோரி சங்கத்தின் தலைவராக 1912 முதல் 1952 வரை விளங்கினார். உலகம் முழுவதிலும் அச்சங்கத்தின் கிளைகளும், அவற்றுடன் இணைந்த பள்ளிகளும், கழகங்களும், ஆசிரியப்பயிற்சி வகுப்புகளும் தோன்றின. பல்வேறு நாடுகளில் ஈராண்டு உலகக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

இறுதி ஆண்டுகளில் கல்வி முறைகளிலிருந்து தத்துவ மூலங்களில் மாண்டிசோரி கவனம் செலுத்தலானார். அவர்தம் முறைகளைச் சரிவரப் புரிந்துகொள்ளாததாலும் அவர் இயக்கத்தில் வேறுபாடுகள் தோன்றியமையாலும் இரு உலகப் போர்களால் குழந்தை மனைகள் சிதைந்தமையாலும் 'மெழுகுவர்த்தி ஒளியில் குழந்தையின் ஒளி' என்பது பற்றி மாண்டிசோரி சொற்பொழிவாற்றி மனித இனத்தின் ஆன்ம மறுமலர்ச்சிக்கு வழிகாட்டும் ஒரு மீட்பாளராகக் குழந்தையைக் கருத வேண்டினார்.

இன்றும் உலகெங்கும் உண்மையான மாண்டிசோரி முறை உருக்குலைந்து விட்ட போதிலும் குழந்தைக் கல்வியை மாண்டிசோரி கல்வி என்று கூறுவதினாலும் மாண்டிசோரி ஆசிரியர் பயிற்சியைத் தொடர்ந்துநடத்துவதனாலும் கல்வியுலகம் அன்னையின் அணையாப் புகழைக் காத்து நிற்கின்றது. எஸ்.சு.

*மாண்டிசோரி கல்வி முறை*: கல்வி முறைகளில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கச் சிறந்த முறையாக விளங்கி வருவது மாண்டிசோரி முறையேயாகும். ஆலந்து நாட்டில் மாண்டிசோரி பள்ளிகள் உயர்கல்வி (Secondary School) நிலையிலும் அரசுத் துணை பெறுகின்றன. இந்தியாவிலும் இம்முறை இன்றும் நிலவிவருகிறது.

மாண்டிசோரி முறை விருப்பமாகச் செயற்படும் ஒரு குழந்தையைத் தன் இயல் கல்வியைத் தூண்டும் திட்டப் பாடச் சூழ்நிலையில் செயற்படச் செய்கிறது. ஒரு புதிய ஆசிரியரின் பயிற்சி பெற்ற உற்றுநோக்கலில் தனிமனிதன் தன் இயல்நிலையை உயர்த்த முடியும். நம்பிக்கை, தகுதி, தன்கட்டுப்பாடு, சூழ்நிலையைச் சந்திக்க ஆயத்த நிலை ஆகியவை யாவும் மாண்டிசோரியின் தன்னிலையாக்கலில் அடங்கியுள்ளன. இளங்குழந்தை, தன் ஆக்கப் பருவத்தையும் உணருங் காலங்களை அறியும் உள்ளத்தையும் பிற தனிப்பண்புகளையும் கற்கும் பணியில் பயன்படுத்த மாண்டிசோரி முறை இசைவளிக்கிறது.

ஆசிரிய உற்றுநோக்கலையும், கல்வித் துணைக் கருவிகளையும் கொண்ட கல்விச் சூழ்நிலையை உருவாக்கிய மாண்டிசோரி கல்விமுறை பொதுவான வகுப்பறைக் கல்வி முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. புலப்பயிற்சி. தன்வளர்ச்சி, தன்கல்வி ஆகிய இன்றியமையாக் கொள்கைகளைக் கொண்டுள்ளது இம்முறை. மாண்டிசோரி முறையில் குழந்தை உற்றுநோக்கல், ஒப்பிடுதல், வகைப்படுத்தல், காரணம் காணல் ஆகிய சிந்தனைச் செயல்களின் மூலம் தன்னை ஆயத்தம் செய்து கொள்ளத்தக்க, செயற்பாட்டுப்புலனூக்க,அறிவுணர் பயிற்சிகளைத் தானே தேர்ந்தெடுத்து முடித்துக் கொள்ள வேண்டும். இந்தத்தன் உணர்வுக் கல்வி முறையால் தன்னகத்தே அடங்கி அமைந்துள்ள திறமைகளைத் தூண்டி வெளிக் கொணர்ந்து, குழந்தை தனக்குத் தானே கற்பித்துக் கொள்கிறது. ஆசிரியரின் பணியோ, தேவைப்படும் பொழுது மட்டுமே தலையிட்டு, மற்ற நேரத்திலெல்லாம் குழந்தை, சூழ்நிலையோடு செயற்படத்தக்க ஆயத்தம் செய்வது மட்டுமே ஆகும். பணி, மன

ஒருமிப்பு ஆகியவற்றால் கட்டுப்பாட்டையும், உள்ளாக்க ஆற்றல்களையும் விடுவித்து வெற்றி பெறுவதன் மூலம் நம்பிக்கையையும், தன்னையும் தன்சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க பகுதியையும் கையாளுவதன் மூலம் தகுதியையும் செயல் சுதந்திரத்தின் மூலம் குழந்தை பெறுகிறது.

பிறப்பிலிருந்து ஆறு வயது வரை குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தின்போது அதனுடைய இயற்கை உள்தாக்கம், ஒரு தனிப்பட்ட ஆளுமை வடிவைப் புலன், தசை, அறிவு ஆகியவற்றின் வளர்ச்சியால் அமைத்துக் கொடுக்கிறது. தன்வடிவாக்கல் அல்லது தன்வளர்ச்சி, பிறப்பிலிருந்தே நேரடியாகக் கல்வி மூலமல்லாமல் துணை பெறுகிறது. உடல், உள்ளம், சிந்தனை, சமூக வளர்ச்சி, ஆன்ம வளர்ச்சி ஆகியவற்றை இன்றியமையாத இளம் வயதிலேயே குழந்தையின் பொதுவான வளர்ச்சிக்கு உதவுவதே கல்வியாகும். உள்ளார்ந்த தேவைகளுக்குத் தக்கவாறும் தன்னாக்கச் செயலுக்குப் பொருத்தமாகவும் உள்ள சூழ்நிலையில், உணர்வுள்ள குழந்தை தன்னாற்றலால் காத்துக் கொள்ளவே பிறப்பு முதலான கல்வி வடிவாக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் பயனற்றதும் வீணானதுமான திருத்தல் முறைகளை விடக் குறைகள் நேராமல் தடுப்பதையே வலியுறுத்தித் தொடக்கப் பள்ளிகளில் மொழிக் குறைகளைத் திருத்துவதை விடுத்துக் குழந்தை மனைகளிலேயே மொழி வளர்ச்சியைக் காத்துக் குறை தவிர்க்கிறது மாண்டிசோரி முறை. அதாவது, இளம் வயதிலேயே மொழி, குழந்தையின் உள்ளத்தில் நிலைப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு குழந்தை மனையிலும் மருத்துவரை இணைத்து உணவுப் பொறுப்பின் பெரும்பகுதியை அவரிடத்து ஒப்படைக்க வேண்டும். குழந்தை மனை இயக்குநர் மேற்பார்வையில் குழந்தைகளே தயாரித்துப் பரிமாறிக் கொள்ளும் நல்லுணவு அவ்வப்போது வழங்க வேண்டும். அந்த இயக்குநர் பெற்றோர்களுக்கும் சத்துணவு பற்றி அறிவுரை நல்க வேண்டும்.

ஆண் குழந்தை தன்னுள்ளத்தை வளர்க்க வளர்க்க ஒரு மனிதனாக உருவாகிறது என்பது மாண்டிசோரி கருத்து. மாற்றப்பட இயலாத உணர்வுள்ள பருவங்களின் தொடர், குழந்தையின் வாழ்வில் சில சிறிய கால வளர்ச்சி நிலைகளில் ஒரு தகுதி நிலையை வளர்க்கிறது. மூன்று வயது, மாண்டிசோரி கல்வி முறையின் இன்றியமையாப் பருவம். குழந்தையின் கல்வியாற்றல், சூழ்நிலைத் தூண்டுதலால் வளர்க்கப்படாவிடில் அதன் அறிவு வளர்ச்சி குன்றிவிடும். மாண்டிசோரி முறையில் நான்கு வயதில் எழுதவும் ஐந்து வயதில் படித்து எழுதும் முறை அறியவும் குழந்தை பயின்று விடுகிறது.

மாண்டிசோரியின் கல்வித் துணைக் கருவிகள், பல்வேறு வடிவங்கள், நிறங்கள், வெளிப்பரப்புகள் கொண்ட சிறு சிறு பொருட்களே ஆகும். அவையடங்கிய மாண்டிசோரி பெட்டியின் உதவியால் பல்வேறு கல்வி விளையாட்டுகளின் மூலம் பயிற்சி பெறுவதே இம்முறையின் மையக்கருத்து. மரம், கனியம், துணி, அட்டை போன்ற பொருட்களாலான அக்கருவிகள், குழந்தைகள் நிறம், வடிவம், அளவு, எடை, ஒலி, தொட்டுணர்வு ஆகியவற்றால் வேறுபாடுகளைத் தாமே உணர்ந்து சூழ்நிலையைப் பற்றிய அறிவு பெறப் பயன்படுகின்றன. குழந்தையின் உள ஒருமிப்பையே கல்விக்கு வித்தாகக் கொண்ட மாண்டிசோரி அக்கருவிகளை இயன்ற அளவு கவனத்தை ஈர்க்கும் வண்ணத்திலும் குழந்தையின் ஆர்வத்திற்கு ஊக்கமளிக்கும் விதத்திலும் அமைத்தார். பள்ளி நேரத்தில் தலையீடற்ற நீண்ட நேரத்தைக் குழந்தைக்கு அளித்துக் குழந்தையே தேர்ந்தெடுத்த பொருட்களைப் பயன்படுத்தி ஏதேனும் ஒரு பணியைச் செய்வதில் ஈடுபடுமாறு சூழ்நிலை அமைக்கப்பட்டது. வடிவமைக்கப்பட்ட பொருட்கள் குழந்தைகள் தவறு செய்யாதவாறு பணி செய்யும் விதத்தில் அமைந்துள்ளதால் தவற்றைத் திருத்த வேண்டிய தேவையில்லை. எளியவற்றிலிருந்து சிக்கலுடையவற்றிற்கும், உருவத்திலிருந்து அருவத்திற்கும் முன்னேறிச் செல்லத்தக்க பொருள் தொகுப்பு, குழந்தை மனைச் சூழ்நிலை அமைக்கப்பயன்பட்டது. குழந்தை மனைகளின் ஒவ்வொரு அறையும் ஒவ்வொரு விதமான துணைக்கருவிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கிறது. வகுப்பு முறையற்ற இக்கல்வி முறையில் குழந்தைகள் தனியாகவோ, சிறுசிறு குழுக்களாகவோ பணிபுரிவதுடன் அறைக்குள்ளும், ஒரு அறையினின்றும் பிற அறைக்கும் தன்விருப்பமாகவே செல்லுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பெரிய குழந்தைகளைக் கவனித்தே சிறிய குழந்தைகள் பணிபுரியக் கற்றுக்கொள்ள முடியும். போட்டியை விட ஒத்துழைப்பே பள்ளிகளில் நிலவியது. மற்றவர் உரிமைகளையும் பணிகளையும் மதிக்கும் உணர்வு வளர்க்கப்படுகிறது. குழந்தைகளின் மிகச்சிறந்த ஆசிரியர்கள் குழந்தைகளே யாவர் என்றும், அவர்களுக்கிடையே விளங்கும் இயற்கையான ஊடுருவல் கல்வி சிறக்கும் வழியாகும் என்றும் மாண்டிசோரி கருத்துரைத்தார். வகுப்பறைகளிலுள்ள குழந்தைகளளவுக்குத் தக்க இருக்கைகளைக் குழந்தைகளே சுத்தமாகவும் ஒழுங்காகவும் அமைத்துக் கொள்வர். சீனாக் களிப் பாண்டங்களையும் உண்மையான பாத்திரங்களையும் கையாளுவதால் உடலுறுப்புகள் உறுதி பெறுகின்றன. செடிகளைத் தக்கவாறு கவனித்து வளர்ப்பர். கலையும் போற்றப்படுகின்றது. தனித்தனியே வழங்கப்பட்டுள்ள நிலவிரிப்புகளுக்குள்ளேயே ஒவ்

வொரு குழந்தையும் விளையாட முற்படுகிறது. அதற்கான சில விதிமுறைகளையும் வகுத்தளித்துள்ளனர்.

மாண்டிசோரி ஆசிரியர், குழந்தை ஒரு புதிய செயலைச் செய்யவும், திரும்பச் செய்யவும் மெதுவாகப் பணியாற்ற வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்து குழந்தை விரும்பாத துணையை அதன் மேல் புகுத்துவதில்லை. புதிய ஆசிரியர் ஒரு உற்று நோக்கராகவே செயற்படுவர். மாண்டிசோரி பள்ளி பொதுவான பிள்ளைகளை விடச் சிறிய வயதிலேயே மாணவர்களைப் பதிவுசெய்து வகுப்புகளில் வயது வேறுபாடு விரிவாயிருக்குமாறும் பார்த்துக் கொள்கிறது. அங்குமிங்கும் செல்ல அளிக்கும் வாய்ப்பையும், தன்திருத்தக் கல்வித் துணைப் பொருள் தொடரை விரிவாகப் பயன்படுத்துவதையும், நீண்டநேரத் தன் வேலை ஈடுபாட்டையும், படிப்பதையும், எழுதுவதையும் ஏனைய பள்ளிகளை விட முன்னமேயே தொடங்குவதையும், ஆசிரியர் குழந்தைகளுடன் தனித்தனியாகப் பணிபுரிவதையும் இப்பள்ளிகள் ஆதரிக்கின்றன. இளம் மாணவர்களிடம் தன் இயல் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்தும் மாண்டிசோரி கல்வி சமூகப்படுத்தலிலும் கற்பனையாற்றல் வளர்ச்சியிலும் பயன்படாது என்று குறைகூறுபவர்கள் இருப்பினும் பிற்கால ஆராய்ச்சி இக்கல்வி முறையின் வெற்றியை நிலை நாட்டியது. மேலும், செய்யப்படும் ஆராய்ச்சியின்மூலம் இம்முறையில் வரலாற்று ஈடுபாட்டையும் தன்னாற்றல் வளத்தையும் விரிந்த பயன்வளத்தையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

எஸ்.சு.

**மாண்டிவிடியோ**: தென் அமெரிக்காவில் உள்ள உருகுவே நாட்டின் தலைநகர் மாண்டிவிடியோ (Montevideo). இது உருகுவேயின் தெற்கில் இரியோ-டி-லா-பிளாடா ஆற்றங்கரையில் அமைந்துள்ள முக்கியமான துறைமுகமாகும். தென்னமெரிக்காவின் மிகப்பெரிய துறைமுகங்களுள் ஒன்றான இந்நகர், உருகுவே நாட்டின் அரசியல், பொருளாதார, வாணிக மையமாகத் திகழ்கிறது. தென் அட்லாண்டிக்குப் பகுதியில் நடைபெறும் மீன்பிடித்தல் தொழில்கள் யாவும், மாண்டிவிடியோ வழங்கும் உதவியையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இங்குத் துணி வகைகள், பால்பண்ணைப் பொருட்கள், மது, கட்டுமானம் செய்யப்பட்ட புலால் உணவுகள் முதலியவற்றிற்கான பெருந்தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளன. சுற்றுலாப் பயணிகள் இங்கு அடிக்கடி வந்து போகின்றனர்.

**வரலாறு**: போர்ச்சுகீசியரும் இசுபானியரும் (Spaniards) தென் அமெரிக்கக் குடியேற்றத்தின் பொருட்டுத் தம்மிடையே போராட்டம் நிகழ்த்திய புதிய காலத் தொடக்கத்தில் மாண்டிவிடியோ நகர் தோன்றியது. போர்ச்சுகீசியர், கி.பி.1717 - இல் இந்நகரத்தின் குன்றின் மீது ஒரு கோட்டையைக் கட்டினர். இதை இசுபானியர் கி.பி. 1724 - இல் தம் வசப்படுத்திக் கொண்டனர். இந்நகரம் கி.பி. 1828-இல் உருகுவே நாட்டின் தலைநகராயிற்று. அந்நாட்டில் உள்நாட்டுப் போர்கள், கி.பி.19 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தபோது, மாண்டிவிடியோ பல துயரங்களுக்கு உள்ளாயிற்று. இது கி.பி. 1843 முதல் 1851 வரை முற்றுகைக்கு உட்பட்டிருந்தது. இப்பொழுது இந்நகரம் புதுப்பொலிவுடன், பெரும் இடவசதியைப் பெற்றுக் கண்ணைக் கவரும் நிலையில் உள்ளது. அழகிய பூங்காக்கள், இருமருங்கிலும் மரங்கள் வளர்க்கப்பட்ட சாலைகள், அழகிய கட்டடங்கள் ஆகியன இந்நகரின் இயற்கை அழகுக்குச் செயற்கை அழகை ஊட்டுகின்றன. இதன் மக்கள்தொகை 13,62,000(1980). இது மாண்டிவிடியோ மாநிலத்தின் தலைநகராகவும் விளங்குகிறது.

தெ.பா.

**மாண்டு**: இந்தியாவில் மாளவத்தை கி.பி.13-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பரமாரர் விந்திய மலைத் தொடரில் 'மாண்டு' (Mandu) என்னுமிடத்தில் ஒரு கோட்டையை நிறுவினர். அது 610 மீ.உயரமுள்ள பீடபூமியில் அமைந்துள்ளது. அக்கோட்டைக்குள் அரிய பல வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை இரேவகுண்ட ஏரி, நீலகண்ட மகாதேவர் கோயில், தைக்கா மகால் (Daika-Mahal), அசரபி (Ashrafi) மகால், சமா (Jama) மசூதி, ஓசாங்கு (Hoshang) சமாதி, திலாவர் (Dilawar) மசூதி, இந்தோலா (Hindola) மசூதி, கப்பல் வடிவ சகாசு (Jahaz)மகால், சாவேளி (Javeli) மகால் முதலியனவாம்.

மாண்டுவுக்குத் 96 கி.மீ. தொலைவில் இந்தூர் நகரமும், 93 கி.மீ. தொலைவில் மௌ (Mhow) நகரமும், 35 கி.மீ தொலைவில் தார் நகரமும் உள்ளன. பல சாலைகள் மூலம் அவை, மாண்டுவுடன் இணைக்கப்படுகின்றன. மாண்டு பீடபூமிக்கு 305 மீ. கீழே நிமார் என்னும் சமவெளி காணப்படுகிறது. பரமாரர்களின் ஆட்சியின் கீழ் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்த மாண்டு, பின்னர் இசுலாமியர்களால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. இரு இனத்தவர்களும் இந்நகரில் கட்டடங்கள் கட்டினர். மாண்டு என்ற சொல்லுக்கு 'இன்பபுரி' என்பது பொருள். பெயருக்கு ஏற்றபடியே இந்நகரம் சிறப்புடன் ஒரு காலத்தில் விளங்கியது. மூன்று பக்கங்களில் ஆழமான மலை இடுக்குகளால் சூழப்பட்ட மாண்டுவின் அமைப்பும் இதன் இயற்கைக் காட்சிகளும் இனிய தட்ப வெப்ப நிலைகளும் இதற்குத் தனிச் சிறப்பைத் தருகின்றன.

தெ.பா.

**மாண்டுபோர்டு, சைமன்-டி:** இவர் இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்ற அரசியல் சீர்திருத்தக்காரராவார். இவர் கி.பி.1208 – ஆம் ஆண்டில் பிறந்திருக்கக்கூடும் என்று தெரிகிறது. பிரான்சு நாட்டில் மாண்டுபோர்டு (Montfort) என்னுமிடத்தில் சைமன் டி மாண்டுபோர்டு கோமகன் (Count Simon -de-Montfort) என்பவரின் மகனாகத் தோன்றிய இவர், கி.பி.1229-ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டுக்குச் சென்றார். இவர் தந்தை, கத்தோலிக்க சமய எதிர்ப்பாளரை எதிர்த்துத் தீவிரமாகப் போரிட்டவர். இளைய சைமன், இங்கிலாந்து மன்னர் மூன்றாம் என்றி (Henry III) யின் தங்கையைத் திருமணம் செய்து கொண்டு, 'இலீசெசுடர்' (Leicester) பிரபு என்னும் விருதைப் பெற்று, பின்னர் கி.பி. 1240-ஆம் ஆண்டில் சிலுவைப் போரில் பங்குபெற எருசலம் சென்று, கி.பி. 1242-ஆம் ஆண்டில் இங்கிலாந்து திரும்பினார். தம் மைத்துனர் என்றியின் ஆட்சியில் காணப்பட்ட சீர்கேடுகளைச் சைமன் வெறுத்தார். இவருக்குப் பல ஆங்கிலேயப் பிரபுக்கள் ஆதரவளித்தனர். மன்னர் தம் இச்சைப்படி ஆளக்கூடாது என்றும், ஆலோசனையாளருடன் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டுமென்றும் சைமன் வற்புறுத்தினார். மன்னருக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படவே, பிரபுக்கள் குழுவுக்கு அவர் அடங்க நேரிட்டது. சைமனைத் தலைமையாகக் கொண்ட பிரபுக்கள் குழுவின் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ள அரசர் இணங்கினார். ஆனால், பின்னர் அவர் தம் வாக்குறுதியை மீறிவிட்டார். அவருக்குப் போப்பாண்டவரின் உதவி இருந்ததால், அவர் பிரபுக்களைப் பொருட்படுத்தவில்லை. அதனால், இங்கிலாந்தில் அமைதியின்மை நிலவியது. சைமன் - டி-மாண்டுபோர்டு கி.பி. 1263-ஆம் ஆண்டில் நாட்டில் எதிர்க்கட்சி ஒன்றைத் தோற்றுவித்து, மன்னருடன் போரிட்டார். இலூவசு (Lewes) என்னுமிடத்தில் கி.பி.1264 -ஆம் ஆண்டில் அரசர் தோல்வியுற்றார். வெற்றிபெற்ற சைமன் ஒரு பிரபுக்கள் குழுவை அமைத்து அதன் மூலம் நாட்டை ஆள வழிவகுத்தார். அடுத்த ஆண்டில் (கி.பி.1265) புதிய பாராளுமன்றம் ஒன்றை இவர் கூட்டினார். அதற்கு மாநிலத்திருத்தகையினருடன் (Knights of the State) கூட, நகரங்களிலிருந்தும் பேராளர்களை அழைத்தார். இங்கிலாந்தின் வரலாற்றில் பின்னவர்களை முதன் முதலாக அழைத்துப் பாராளுமன்றம் அமைத்த பெருமை சைமனுக்கு உண்டு. ஆனால், அவருடைய கட்சியினர் செல்வாக்கு இழந்தனர். இவசாம் (Evesham) என்னும் இடத்தில் கி.பி. 1265-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் நடந்த போரில் சைமன் கொலையுண்டார். சைமன், பாராளுமன்றத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பணி செய்ய இயலாத போதிலும், விரும்பத்தகாத ஆங்கிலேய மன்னரை எதிர்த்து ஓர் எதிர்க்கட்சியை அமைத்த புகழ் இவருக்கு உண்டு. இவசாமில் இவர் கல்லறைக்கு மக்கள் நீண்டகாலம் புனிதப் பயணம் செய்து, தம் அன்பை வெளிப்படுத்தி வந்தனர்.

தெ.பா.

**மாண்டுக்கிய உபநிடதம்:** ஒவ்வொரு வேதத்தின் கடைசிப் பகுதியும் உபநிடதம் என்று சொல்லப்படுகிறது. வேதத்தின் கடைசிப் பகுதியில் உள்ளதால் உபநிடதத்தை 'வேதாந்தம்' என்று கூறுவர். ஒவ்வொரு வேதத்திற்கும் பல உபநிடதங்கள் உள்ளன. 'உப', 'நி', 'சீத்' என்ற மூன்று சொற்கள் சேர்ந்து உபநிடதம் என்றாயிற்று. 'உப' சமீபத்தில்; நிசீத் அமருதல் என்ற பொருளைத்தருவது உபநிடதம் என்னும் சொல். ஆசிரியருக்கு அருகில் அமர்ந்து ஆன்ம விசாரங்களைச் செய்வது உபநிடதம் ஆகும். மாண்டுக்கிய உபநிடதம் மிக முக்கியமாகக் கருதப்படும் 10 உபநிடதங்களுள் ஒன்றாகும். இது அதர்வண வேதத்தைச் சேர்ந்தது. இவ்வுபநிடதத்திற்கு இப்பெயர் வந்த காரணம் தெளிவாகத் தெரியவில்லை. மகாபாரதத்தின் கடைசிப் பகுதியான அரி வமிசத்தில் வருணன் மண்டூக வடிவத்தில் (தவளையின் வடிவத்தில்) வேதங்களைத் கண்டான் என்று கூறப்பட்டுள்ளதனால், இவ்வுபநிடதத்தின் முனிவர், தவளை (மண்டூக) உருவம் கொண்ட வருணனாவார். ஆதலின், 'மாண்டுக்கிய உபநிடதம்' எனப் பெயர் பெற்றதென்பர் சிலர். யோகிகளின் மனம் நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளையும் தவளை (மண்டூகம்) போலத் தாவிச் சென்று நாலாம் நிலையான பேருறக்கத்தை அடைவதால், அந்த அனுபவத்தைக் கூறும் இது 'மாண்டுக்கிய உபநிடதம்' எனப்பட்டது என்று கூறுவாரும் உளர்.

இவ்வுபநிடதம் மிகச் சிறியதாகும். இதில் 12 மந்திரங்களே உள்ளன. 1 முதல் 6-ஆம் மந்திரம் வரை முதற் பாகம் என்றும், 7 - ஆம் மந்திரம் 2-ஆம் பாகம் என்றும், 8 முதல் 11 மந்திரங்கள் வரை மூன்றாம் பாகம் என்றும், 12-ஆம் மந்திரம் நான்காம் பாகம் என்றும் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் அதர்வண வேதத்தின் மகாவாக்கியம் என்று சொல்லப்படும் 'அயமாத்மா பிரமம்' (இவ்வான்மாதான் பிரமம்) என்பது உபதேசிக்கப்படுகிறது. இவ்வுபநிடதத்திற்கு ஆதி சங்கரரின் பரமகுரு (குருவின் குரு, கோவிந்த பகவத் பாதர் என்ற ஆதிசங்கரரின் குருவின் குரு) சிரீகௌடபாதாசாரியார் காரிகை என்னும் வியாக்கியானத்தை எழுதியிருக்கிறார். அந்தக் காரிகையிலும் நான்கு அத்தியாயங்கள் உள்ளன. ஆதிசங்கரர் அந்தக் காரிகையின் நான்கு அத்தியாயங்களுக்கும் பாடியம் (விரிவிரை) எழுதியுள்ளார்.

முத்தியை விரும்புபவர்களுக்கு மாண்டுக்கிய உபநிடதம் ஒன்று மட்டுமே போதும் என்று முத்தி கோபநிடதம் கூறும். ஆகவே இது உபநிடதங்களுள் மிகச் சிறியதாயினும் அனைத்தினும் மிகப் பெருமைவாய்ந்த உபநிடதம் ஆகும்.

**உபநிடதத்தின் பொருட் சுருக்கம்:** சீவன், இந்திரியப் பொருட்களையும், இந்திரியங்களுக்கு எட்டாதவற்றையும் அறியுந் திறமையுடையது. சீவனுக்கு நனவு, கனவு,உறக்கம் என்ற மூன்று நிலைகள் உண்டு. அவற்றை எல்லாம்கடந்துபேருறக்கம்என்ற நாலாம் நிலையும் உண்டு. நனவில் இந்திரியங்களின் வழியாகச் சீவன் வெளிச் செய்திகளை அறிகிறது. கனவில் விடய வாசனைகளின் வடிவங்களை மனத்தில் அறிகிறது. உறக்கத்தில் விடயங்களும் இல்லை; விடய வாசனைகளும் இல்லை. இங்ஙனம் ஒன்றும் விளக்க முடியாததாய் இருட்டறையிலுள்ள சிறு விளக்குப் போன்று ஞானமும் ஆனந்தமும்தாம் இருக்கின்றன. பேருறக்கத்தில் சீவன் தன் உண்மை நிலையை அடைகிறான்.

உபாசனையை நாடுவோர்க்கு ஓங்காரம் ஒப்புயர்வற்றது என உபதேசிக்கப்படுகிறது. நனவைக் குறிக்கும் பருப்பொருளான 'அகாரத்தை', கனவைக் குறிக்கும் சிசுமமான உகாரத்திலும், அதைக் காரணமாகக் கொண்டதும் 'சுழுத்தியை'க் குறிப்பதுமான 'மகரத்திலும்', அனைத்தையும் காரணமான 'பேருறக்கம்' என்ற 'பிரத்தியகாத்மா' விடத்திலும் ஒடுக்கி ஆன்மா தானேயாகிய இரண்டற்ற நிலையை அடைகிறது. எஸ்.ஜெ.

மாண்டெரே: இப்பெயருடைய மூன்று இடங்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. மாண்டெரே (Monterey) அமெரிக்காவில் மேற்குக் கலிபோர்னியா மாநிலத்தில் பசிபிக்கு விரிகுடாவில் உள்ள ஒரு மாவட்டம். இதன் பரப்பளவு 8,609 சதுர கி.மீ. இதற்கு வடக்கில் பசாரோ (Pajaro) ஆற்றுப் பள்ளத்தாக்கும், கிழக்கில் கபிலான் (Gabilan), தயாபுளோ (Diablo) மலைத் தொடர்களும், மேற்கில் சாந்தா உலூசியா (Santa Lucia) மலைத் தொடரும், இதன் நடுவில் சலிநாசு (Salinas) ஆற்றுப் பள்ளத்தாக்கும் உள்ளன. இது கி.பி. 1850 – இல் உருவாகியது. இதன் தலைமையகம் சலிநாசு. இங்கு வேளாண்மை மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. பல வகைக் காய்கறிகள் பயிராகின்றன. பழங்கள் மிகுதி. பால்பண்ணையும், கோழிப்பண்ணையும் வளர்ச்சி அடைந்துள்ளன. பலவகைத் தொழில்களும் இங்கு வளர்ந்துள்ளன. முந்நீரக அமைப்புள்ள இப்பகுதி, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் செழிப்புற்றோங்குகிறது. இதன் மக்கள்தொகை 2,47,450(1970).

**மாண்டெரே[2]:** இது மாண்டெரே விரிகுடாவில் உள்ள ஒரு நகரம். இது கி.பி. 1770-இல் தோற்றுவிக்கப்பட்டது. கலிபோர்னியாவின் மிகப் பழைய நகரங்களுள் ஒன்றாகிய இங்கு, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னங்கள் பலவற்றைக் காணலாம். சுவான் காப்பிரிலோ (Juan Cabrilio) என்பவர் மாண்டெரே விரிகுடாவை கி.பி. 1542-இல் கண்டுபிடித்தார். மாண்டெரே நகரம், கி.பி. 1775க்கும் 1846 க்குமிடைப்பட்ட காலத்தில் பல ஆண்டுகள், ஆல்ட்டா கலிபோர்னியாப் (Alta-California) பகுதியின் தலைநகராகத் திகழ்ந்தது. அமெரிக்கக்கப்பற்படை கி.பி. 1846-இல் இதை வென்றது. திமிங்கிலமும் மீன்களும் பிடிப்பதற்கு ஏற்ற நகராக இது வளர்ச்சியுற்றது. கலிபோர்னியாவில் கி.பி. 1844-இல் அமைக்கப்பட்ட முதல் அரங்கமும், கி.பி. 1847-இல் எடுக்கப்பெற்ற முதல் செங்கல் கட்டடமும் இன்றும் காட்சி அளிப்பதை இங்குக் காணலாம். கலிபோர்னியாவில் முதலில் வெளிவந்த செய்தித்தாள் கி.பி. 1846 – இல் இந்நகரில்தான் வெளியாயிற்று. இங்குக் காணப்படும் பழைய கட்டடங்களில், கி.பி. 1827க்கு உரிய சுங்கவரி நிலையமும், கி.பி. 1854-இல் கட்டப்பட்ட சிறைச்சாலையும் குறிப்பிடத்தக்கன. பல அருங்காட்சியகங்கள் இந்நகரில் உள்ளன. இதன் மக்கள் தொகை 27,558 (1980).

**மாண்டெரே[3]** மெக்சிகோ நாட்டின் வடகிழக்கில் உள்ள நூவோ லியோன் (Nuevo Leon) மாநிலத்தின் தலைநகர். இது மலைகளால் சூழப்பெற்ற ஒரு பள்ளத்தாக்கு; இருப்புப் பாதை, பெருஞ்சாலை ஆகியவற்றின் மையமாகவும் விளங்குகிறது. தொழில்கள் பல இங்கு வளர்ச்சியுற்றுள்ளன. சிறப்பாக இரும்புத் தொழிலும், எஃகுத் தொழிலும் மிகுதியாக நடைபெறுகின்றன. கண்ணாடித் தொழில், உலோக வேலை, காகிதம் செய்தல், பருத்தி ஆலை, மாவு அரைத்தல், மின்சாரப் பொருட்கள் உற்பத்தி, கட்டட வேலைகளுக்கான பொருள் உற்பத்தி, ஆடை உற்பத்தி, மரப்பொருட்கள் செய்தல் முதலியனவும் இங்குச் சிறப்படைந்துள்ளன. மெக்சிகோ நாட்டின் பெரும் ஈய உருக்கு மையம் இங்கேதான் உள்ளது. வெள்ளி, தங்கம் முதலிய கனிமங்கள் இங்குக் கிடைக்கின்றன. இப்பகுதியின் தட்ப வெப்பநிலை உடல் நலத்திற்கு ஏற்றதாக இருப்பதால் இங்கு வந்து மக்கள் தங்குவதை விரும்புகின்றனர். இதன் மக்கள் தொகை 1,916,472 (1980).

இந்நகரம் கி.பி.1579-இல் தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்காவுக்கும் மெக்சிகோவுக்கும் கி.பி. 1846 -இல் நடந்த போரில் இந்நகரைக் காப்பாற்ற மெக்சிகோ அரசு விடாமுயற்சியுடன் முனைந்தது ஆயினும், அமெரிக்கப் படைகள் இதைக் கைப்பற்றின.

பின்னர் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டுத் திரும்பக் கொடுக்கப்பட்டது. தெ.பா.

**மாண்டேகு, எட்வின் சாமுவேல்:** இவர் ஓர் ஆங்கிலேய அரசியல்வாதி. இந்திய அரசியல் சட்டம் கி.பி. 1919 – ஆம் ஆண்டு கொண்டு வந்ததில் இவர் பெரும்பங்கு ஏற்றார். இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியில் அச்சட்டம் ஒரு திருப்பு முனையையும், அதே சமயத்தில் இந்திய மக்களுக்கு ஒரு பெருத்த ஏமாற்றத்தையும் உண்டு பண்ணியது. மாண்டேகு எட்வின் சாமுவேல் என்ற இந்த ஆங்கிலேயர் கி.பி. 1879-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 6-ஆம் நாள் இலண்டனில் சுவேதிலிங்கு (Swaythling) என்ற முதல் வகைப் பிரபுவின் மகனாகத்தோன்றினார். இவர் இலண்டன் மாநகரில் இருந்த கிளிப்டன் கல்லூரியிலும் (Clifton College), கேம்பிரிட்சிலுள்ள ‘திரினிட்டி'க் கல்லூரியிலும் கல்விகற்றார். தாராளக் (Liberal) கட்சியின் சார்பில் 1906 – ஆம் ஆண்டில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். அதில்வெற்றி பெற்றதன் மூலம் தாராளக் கட்சி உறுப்பினராகப் பாராளுமன்றத்தில் நுழைந்தார். அவ்வாறு நுழைந்த உடனே இவர் மாண்பு மிகு ஆசுக்வித்து (H.H.Asquith) அவர்களுக்குச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அதுவே இவர் அரசியல் நுழைவுக்கு முதல் வாயிலாகும்.

இவர் 1910 – ஆம் ஆண்டு முதல் 1914 – ஆம் ஆண்டு வரை இந்திய அலுவலகத்திற்குப் பாராளுமன்றச் செயலாளராகப் (Under Secretary to the Indian Office) பணியாற்றினார். இவர் மார்லே பிரபுவுக்குக் (Lord Morely) கீழும், கிரீவ் பிரபுவுக்குக் (Lord Greeve) கீழும் பணியாற்றும்போது மக்கள் சபைக்கு அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றிய விளக்கங்களைக் கொடுக்கும் பொறுப்பினை ஏற்றிருந்தார். இவர் 1912 – ஆம் ஆண்டில் இந்தியாவைப் பார்வையிட்டு அதன் நிலைமைகளை ஆராய வந்தார்.

முதலாம் உலகப் போரின் முதல் ஆண்டின்போது இவர் பலவிதமான சிறு சிறு பதவிகளை ஏற்றுத் திறம்படச் செயற்பட்டார். இவர் 1915 – ஆம் ஆண்டு இலங்காசுடர் பகுதியின் வேந்தராக (Chancellor) அமைச்சரவையில் நுழைந்தார். கருவூலத்தின் பொருளாதாரச் செயலர்ளராக (Financial Secretary to the Treasury) இருந்த பொழுது, ‘முதல் உலகப் போர்க் கடன்களைத் திரட்டுதல்' (War Loans), ‘தானாகவே முன்வரும் போர்ச் சேமிப்பு அமைப்பு' (Voluntry War – Savings Organisation) ஆகியவற்றை மக்களிடையே செல்வாக்குப் படுத்துவதில் அரசுக்கு மிகவும் உதவியாக இருந்தார். மாண்டேகு, 1916-ஆம் ஆண்டில் இலாய்டு சார்சு (Lloyd George) என்பவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது ஆசுக்வித் பிரபுவின் ஆதரவாளர்களுடன் தம் பதவியை விட்டு விலகினார்.

மீண்டும் 1917-இல் இந்திய நாட்டின் இராச்சிய சபையின் செயலாளராகப் பொறுப்பேற்றார். அதன்பின் ஆங்கில அரசின் கொள்கையைத் தயாரிக்கும் வேலையைத் தொடங்கினார். அதன் பொருட்டு அவ்வாண்டின் ஆகசுட்டுத் திங்களில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தார். இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டவும், அரசாங்கத்தின் பொறுப்பான கொள்கைகளை வகுக்கவும், அதனை நிறைவேற்ற உதவும் வழிகளைக் கண்டறியவும் இவர் அச்சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். இவர் 1917, 18 - ஆம் ஆண்டுகளின் குளிர்காலத்தில் இந்திய மாநிலங்களின் நிலைமையை ஆராய்வதற்காக இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவரும், அப்போது இந்தியாவின் அரசப்பேராளராய் (Viceroy) இருந்த செம்சுபோர்டு பிரபுவும் சேர்ந்து செயற்பட்டனர். அவ்விருவரும் இணைந்து வடித்த திட்டமே மாண்டேகு-செம்சுபோர்டு அறிக்கையாகும். அவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டிருந்த முதன்மையான பரிந்துரைகளே பின்னர் 1919–ஆம் ஆண்டு இந்தியச்சட்டத்தின் கருத்துச் சுருக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அச்சட்டத்தின்படிதான் இந்தியர்களுக்கு முதன்முதலாக இந்தியாவில் தேர்தல் நடத்தவும், அதன்மூலம் சட்டசபையில் சில துறைகளில் அமைச்சராகும் பொறுப்பும் அளிக்கப்பட்டது.

மாண்டேகு, எட்வின் சாமுவேலினுடைய நாட்குறிப்புகள் பத்துப்பாகங்களாக வெளியிடப்பட்டன. அவற்றை இவர்மனைவி வெனெசியா(Venetia)1930 -ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். அதில் அந்த அறிக்கையின் மூலம் வெளிப்படும் இவர் குணவியல்புகளுக்கு முதன்மையிடம் கொடுத்துள்ளார். மேலும், இலாய்டு சார்சினுடைய துருக்கியக் கொள்கைக்கு மறுப்பினையும் இவர் மிக அழுத்தமாகத் தெரிவித்தார். அக்கொள்கையை இந்திய இசுலாமியர் எதிர்த்தனர். அதனால் 1922-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்களில் இவருக்கும் இவர் நண்பர்களுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டது. இவர் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் பின்னால் வரக்கூடிய ஒப்பந்தத்திற்கு எதிராக, இந்திய அரசாங்கத்தின் மறுப்புத்தெரிவித்த பின்னும் கூட, இவர் அதைப் பொருட்படுத்தாமல் 1922-இல் கருத்து வெளியிட்டார். அதனால், இலாய்டு சார்சு இவர் பதவிவிலகலை வேண்டினார். எனினும், அதே ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் இவர் தோல்வி அடைந்ததால் இவர் அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. அதன்பின் இவர் தம் கவனத்தை வாணிகத்தில் செலுத்தினார். இவர் 1924-ஆம்

ஆண்டு இறந்துவிட்டார். அதன் பின்னரே இவர் மனைவியார் இவர் நாட்குறிப்பினை வெளியிட்டார்.

மாண்டேகு எட்வின் சாமுவேல் சிறந்த கல்வியாளர். அரசியலில் அசைக்க முடியாத செல்வாக்குப் பெற்றவர். இந்திய அரசியல் சட்டத்தில் (1919-ஆம் ஆண்டு) இவர் பங்கு பெரியது. எனினும், இவர் அரசியல் வாழ்க்கை பிற்காலத்தில் வெற்றி பெறாமல் இவரை வாணிகத் துறையில் இறங்குமாறு செய்துவிட்டது. எனினும், இவர் பெயர் இங்கிலாந்தின் வரலாற்றிலும், இந்தியாவின் வரலாற்றிலும் இடம் பெறும் சிறப்பு வாய்ந்ததாகும். சி.மூ.

மாண்டேகு செம்சுபோர்டு சீர்திருத்தங்கள் எனப்படுபவை, ஆங்கிலப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில்(Government of India Act, 1919) காணப்படுகின்ற சில சீர்திருத்தங்களைக் குறிப்பிடுவனவாகும். அந்தச் சட்டத்துக்கு அடிப்படையாக அமைந்தது, இங்கிலாந்திலிருந்த இந்தியச் செயலர் எட்வின் மாண்டேகு (Montague) என்பவரும், இந்தியாவிலிருந்த ஆங்கிலேய அரசப் பேராளர் செம்சுபோர்டு பிரபுவும் (Lold Chelmsford)வரைந்த,இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைப் பற்றிய 1918-ஆம் ஆண்டின் கூட்டு அறிக்கையே ஆகும் (Joint Report on Indian Constitutional Reforms, 1918). எனவேதான், 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டமும் சுருக்கமாக மாண்ட்-போர்டு சீர்திருத்தங்கள் அல்லது மாண்டேகு-செம்சுபோர்டு சீர்திருத்தங்கள் என்று கூறப்படுகிறது.

**சீர்திருத்தங்கள் செய்யப்படுவதற்கான காரணங்கள்:** இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சியில் வந்ததும், அது, நடுவண் அல்லது இந்திய அரசாங்கத்தின் எல்லா அதிகாரங்களையும் தம்மிடம் குவித்து வைத்துக் கொண்டு, இந்திய மக்களுக்குப் பொறுப்பில்லாமல் ஆட்சி செய்து வந்த அரசப் பேராளர் அல்லது தலைமை ஆளுநர் (Viceroy or Governor-General) என்ற உயர்ஆங்கிலேய அதிகாரியினால் ஆளப்பட்டது. தலைமை ஆளுநர் இங்கிலாந்திலிருந்த இந்தியச் செயலரின் கட்டுப்பாட்டில் இருந்து, இந்திய நிருவாகக் குழுவின் உறுப்பினர்களின் வழியாக இந்திய அரசாங்கத்தையும், மாகாண ஆளுநர்களையும் (Provincial Governors), மாகாண ஆளுநர்களுக்குக் கீழ்நிலையிலுள்ள மாவட்ட ஆட்சியர்களையும் கட்டுப்படுத்தினார். அவ்வாறு ஆங்கில ஆட்சி இந்தியாவில் கி.பி. 1858 முதல் 1919 வரை அடுக்கு முறையிலமைந்த (Hierarchy), அதிகாரக் குவிப்புடைய Centralised), மக்களுக்குப் பொறுப்பில்லாத, ஆனால், திறமையான அதிகாரிகளின் ஆட்சியாக (Bureaucracy) நடைபெற்றது. இங்கிலாந்தில் கி.பி. 1858, கி.பி.1892, 1909-ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டமன்றங்களின் சட்டங்களும் (Indian Councils Acts),அரசப்பேராளரின் நிருவாகக் குழுவையே சட்டமன்றமாக ஆக்கி இயற்றிய சட்டங்களும் சில கூடுதல் உறுப்பினர்களைச்(Additional Members) சேர்த்தன. அக் கூடுதல் உறுப்பினர்களும் முதலில் அரசப்பேராளரால் அமர்த்தப்பட்டனர். அதில் பெரும்பாலோர் அரசாங்க அதிகாரிகளாக இருந்தனராகையால், அவர்களால் நிருவாகக் குழுவைக் கட்டுப்படுத்தவோ, அது சட்டமன்றத்துக்குப் பொறுப்போடிருக்குமாறு செய்யவோ இயலவில்லை. அவ்வாறு இந்தியர்களுக்குத் தேர்தல் வாயிலாகச் சட்டமன்றத்தில் பங்கு பெறவும், உயர் ஆட்சிப் பதவிகளில் பங்கு பெறவும் வாய்ப்பே இல்லாத சூழ்நிலைகளில், அவ்விரு நோக்கங்களுக்காகப் பாடுபடும் பொருட்டு கி.பி. 1885 - இல் இந்தியத் தேசிய காங்கிரசு (Indian National Congress) தோன்றிற்று. காலப்போக்கில் இந்தியாவிலும், வெளியிலும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றுள் 1) ஆங்கிலேய அரசப்பேராளர் கர்சன் பிரபு வங்காள மாகாணத்தை இரண்டாகப் பிரித்து, இந்திய மக்களின் தேசிய உணர்வைப் புண்படுத்தியது; 2) சிறிய ஆசிய நாடாகிய சப்பான் 1905 - இல் பெரிய ஐரோப்பிய நாடாகிய உருசியாவைத் தோற்கடித்தது முதலியவை சிலவாகும். காங்கிரசு, இந்தியரிடம் தன்னாட்சி உணர்வை வளர்க்கவே, கனடா, ஆசுத்திரேலியா முதலிய நாடுகளிலிருப்பது போன்ற தன்னாட்சிநிலை (குடியேற்ற நாட்டு நிலை - Dominion Status) இந்தியாவுக்கும் வேண்டுமென்ற நோக்கத்தோடு பாடுபட்டது. பம்பாயிலும், வங்காளத்திலும், பஞ்சாபிலும் தேசிய உணர்வின் காரணமாகச் சமயஉணர்வோடு கூடிய சில வன்செயல்கள் நடைபெற்றன; அரசாங்க அலுவலர்கள் இந்தியரின் பகைவரெனத் தாக்கப்பட்டனர். அந்நிலையில் ஆங்கில அரசாங்கம் ஒருபுறம் அடக்கு முறைக் கொள்கையையும், மறுபுறம் மிதவாதப் போக்குடைய கோகலே போன்ற தேசியவாதிகளுக்கு நிறைவளிக்கும் பொருட்டுச் சில அரசியல் சலுகைகளை வழங்கும் கொள்கையையும் கடைப்பிடித்தது. மிண்டோ-மார்லி சீர்த்திருத்தங்கள் எனப்படும், 1909-ஆம் ஆண்டின் இந்தியச் சட்டமன்றங்களின் சட்டத்திலும், தேசியவாதிகள் விரும்பிய பொறுப்பாட்சி நிறுவப்படவில்லை. மாறாக, நடுவண் சட்டமன்றத்தில் 60 கூடுதல் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்; அவருள் 27 பேர் தேர்ந்தெடுக்கபபட்டனர்; மீதி 33-இல் 28 பேர் அலுவலர்கள்;இசுலாமியர்களின் சார்பாக வகுப்புவாரி அடிப்படையில் பேராளர்முறை கொண்டுவரப்பட்டது. சட்டமன்றம்

பொதுப்பணிகளை விவாதிக்கவும், தீர்மானிக்கவும் கேள்விகள் கேட்கவும், அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை, அது நிறைவேற்றப்படுமுன்னதாகப் பல நாள்களுக்கு விவாதிக்கவும் அதிகாரம் பெற்றது. ஆனால், அது இன்னும் நிருவாகசபையின் ஒரு பிரிவாக இருந்ததனால், அதற்கு நிருவாகம் பொறுப்பாக இல்லை. மாகாண நிருவாகச் சட்டமன்றங்களும் விரிவாக்கப்பட்டன. இந்தியர்களுக்குத் தன்னாட்சி செய்யும் பயிற்சி இல்லை என்றும், அதனால் ஆங்கிலேயப் பாராளுமன்ற ஆட்சி முறையை இந்தியாவில் தாம் கொண்டுவரவில்லை என்றும் மார்லி கூறினார். அந்தச் சட்டம் இந்தியாவில் அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக வல்லாட்சியை, (Constitutional Autocracy) நிறுவிற்று என்று தீவிர தேசியவாதிகள் அதனை எதிர்த்தனர். முதலாம் உலகப்போரில் (1914-1918) இந்தியப்போர் வீரர்கள் ஆங்கிலநாட்டிற்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் பல போர் முனைகளில் பேருதவி செய்தனர். இந்திய அரசாங்கம் பெரும் பொருளுதவியை ஆங்கில நாட்டிற்கு வழங்கிற்று. ஆங்கிலேயநாடும் நட்பு நாடுகளும், தாங்கள் உலகத்தில் மக்களாட்சி வளருதற்கும், தேசிய சுயநிருணய உரிமை (Principle of National Self Determination) நிலவுவதற்கும் போரிடுவதாகக் கூறின. எனவே, அவ்வுரிமை இந்தியாவுக்கும் வழங்கப்படுமென எதிர்பார்த்து, காங்கிரசு போரில் பிரிட்டனுக்கு உதவி செய்து, மாகாணத் தன்னாட்சி நிறுவப்படுதல் வேண்டுமெனவும், சட்ட, நிருவாக மன்றங்கள் விரிவாக்கப்படுதல் வேண்டுமெனவும் கூறிற்று. திலகரும், அன்னிபெசண்டும் நடத்திய தன்னாட்சி இயக்கம் (Home Rule Movement) காங்கிரசோடு ஒத்துழைத்தது. அந்நிலையில், 1917-ஆம் ஆண்டில், ஆங்கிலேயப் பாராளுமன்றத்தில், இந்தியச் செயலர் மாண்டேகு, 'ஆங்கிலேயப் பேரரசின் ஒரு பாகமாக இணைந்திருக்கும் வகையில் இந்தியாவில் படிப்படியாகத் தன்னாட்சி நிறுவனங்களைக் கொண்டுவருவதும், இந்திய ஆட்சித் துறைகள் ஒவ்வொன்றிலும் இந்தியர்களை வரவரக் கூடுதலாகச் சேர்ப்பதும் ஆங்கிலேய அரசாங்கத்தின் கொள்கை ஆகும்' என்றும், 'அதனடிப்படையில் சட்டம் செய்யப்படும்' என்றும் ஒரு கொள்கையை அறிவித்தார். பின்னர், மாண்டேகு 1917-இல் இந்தியாவில் பயணம் செய்து, அரசப் பேராளருடன் கலந்து பேசி, 1918- இல் இருவரும் இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றிய கூட்டறிக்கையை வரைந்தனர்.

அவ்வறிக்கையில் பொறுப்பாட்சியைக் கொண்டுவரும்பொழுது முதலில் அது ஆங்கிலேய மாகாணங்களில் கொண்டுவரப்படுதல் வேண்டும் என்றும், இந்திய அரசாங்கமானது தொடர்ந்து முழுவதும் ஆங்கிலேயப் பாராளுமன்றத்துக்கே கட்டுப்பட்டுப் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்றும், உள்ளாட்சி மன்றங்களில் மக்களுக்கே முழுமையான, கட்டுப்பாடு இருத்தல் வேண்டுமென்றும் பரிந்துரைகள் செய்யப்பட்டன. அவற்றினடிப்படையில் 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச்சட்டம் 1919 திசம்பரில் நிறைவேற்றப்பட்டது.

**சீர்திருத்தங்கள்**: 1) ஆங்கிலேய மாகாணங்களில் (வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாபு, பீகார், ஒரிசா, மத்திய மாகாணம், அசாம் முதலியவற்றின்) ஓரளவு பொறுப்பாட்சியை அளிக்கும் இரட்டை ஆட்சியை (Dyarchy) இது நிறுவிற்று. மாகாண அரசாங்கங்களில், மாகாண நிருவாகத் துறைகள், ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects)எனவும், மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects)எனவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. சட்டம், அமைதி, நிதி முதலிய முக்கியமான துறைகள் ஒதுக்கப்பட்டவையாகப் பிரிக்கப்பட்டன. அவையெல்லாம், மாகாண ஆளுநரால் அமர்த்தப்பட்டு, அவருக்கே பொறுப்பாக இருக்கும் 2 முதல் 4 வரையுள்ள நிருவாக சபை உறுப்பினரால் நிருவாகம் செய்யப்பட்டன. உள்ளாட்சி, தன்னாட்சி, பொதுசுகாதாரம், கல்வி, பொதுப்பணி (Public Works) முதலிய துறைகள் மாற்றப்பட்டவையாக ஆக்கப்பட்டு, அவை மாகாணச் சட்டமன்றத்திலிருந்து ஆளுநரால் அமர்த்தப்பட்டு, அதற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர்களின் நிருவாகத்தில் வைக்கப்பட்டன. அவ்வாறு மாற்றப்பட்ட துறைகளுக்கு மட்டும் அமைச்சர்களின் பொறுப்பும், ஒதுக்கப்பட்ட துறைகளுக்கு அமைச்சர்களின் அவை பொறுப்பில்லாமலும் ஆக இரட்டையாட்சி கொண்டுவரப்படவே அது யாவருடைய வெறுப்புக்கும் மறுப்புக்கும் உள்ளாயிற்று. மாகாணச் சட்டமன்றத்தில் நிருவாகக் குழுவின் உறுப்பினர்களும், மாகாண வாக்காளர்களால் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் இருந்தனர். அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினரே அதன் தலைவர். அது மாகாண வரவு செலவுத்திட்டத்தின் ஒரு சில இனங்களைத்தவிர மற்றெல்லாவற்றையும் வாக்கெடுப்பின் வழியாக நிறைவேற்றலாம். அது நிறைவேற்றும் எந்தச் சட்டமுன்வரைவையும் தள்ளுபடி செய்யவும், அது தள்ளுபடி செய்யும் எதனையும் சான்றுரை அளித்துச் சட்டமாக ஆக்கவும், எந்தச் சட்டமுன்வரைவையும் அதன் மறுபரிசீலனைக்கே திருப்பிவிடவும் அல்லது தலைமை ஆளுநரின் முடிவுக்கு ஒதுக்கிடவும் ஆளுநருக்கு அதிகாரங்கள் இருந்தன. இசுலாமியர், சீக்கியர், இந்தியக்கிறித்தவர் முதலியோருக்கு வகுப்புவாரி முறையில் இடம் வழங்கப்பட்டது. மாற்றப்பட்ட துறைகளைப் பொறுத்த வரை ஆளுநர் அமைச்சர்களின் ஆலோசனையை ஏற்கவோ மறுக்கவோ செய்யலாம்.

2. இந்திய (அல்லது) நடுவண் அரசாங்க அமைப்பில் 1909 – ஆம் ஆண்டு செய்யப்பட்டதைப் போல மக்களுக்குப் பொறுப்பில்லாத நிருவாக முறையே தொடர்ந்து நிறுவப்பட்டது. அதன் நிருவாகக் குழுவின் தலைவராகிய அரசப்பேராளருக்குப் பெருமளவு அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. அவை படை, அயல் நாட்டு உறவுகள் தொடர்பான மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அவருடைய முன் ஒப்புதலின் பேரில் தாக்கல் செய்தல், சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாவைத் தள்ளுபடி செய்யவோ, அதற்கே திருப்பி விடவோ, அரசரின் பார்வைக்கு அனுப்பிவைக்கவோ, அவருடைய சான்றுரையின் பேரில் சட்டமன்றம் விவாதிக்கும் எந்த மசோதாவையும் தள்ளிவிடவோ, அது தள்ளுபடி செய்யும் எநத மசோதாவையும், எந்த நிதி ஒதுக்கீட்டையும், தனது சான்றுரை வாயிலாகச் சட்டமாக வெளியிடவோ அதிகாரம் அளித்தல் முதலியனவாகும். முதன்முறையாக நிருவாகக் குழுவின் பிரிவாக இல்லாமல், தனித்த ஓர் இரு மன்றச் சட்டமன்றம் (Bicameral Legislature) அமைக்கப்பட்டது. ‘கூடுதல் உறுப்பினர்கள்’ என்ற வகை இல்லை. சட்டமன்றத்தின் (Legislative Assembly) 140 உறுப்பினர்களுள் 100 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; மீதமுள்ளோருள் மூன்றில் ஒரு பங்கினர் அரசுப் பதவியிலில்லாதோர். அமர்வுக்காலம் மூன்றாண்டுகள். மேற்சபையின் (அரசுச் சபை - Council of States) 60 உறுப்பினருள் பெரும்பாலோர் தேர்ந்தெடுக்கப்பட்டோர். அமர்வுக்காலம் 5 ஆண்டுகள். இவ்விரு சபைகளும் அரசப்பேராளர் கட்டுப்பாடுகளுக்குட்பட்டே தம் அதிகாரங்களைக் கையாளுதல் வேண்டும்.

3. இங்கிலாந்திலுள்ள இந்தியச் செயலருக்கும், அவருடைய ஆலோசனைக் குழுவினருக்கும் ஊதியங்களும், செலவுகளும் இந்திய வரி வருமானத்திலிருந்தல்லாமல் ஆங்கிலேய வரிவருமானத்திலிருந்து வழங்கப்படுதல் வேண்டும். ஆலோசகர்கள் 8 முதல் 12 எண்ணிக்கை வரை இருந்து 5 ஆண்டு பதவி ஏற்றனர். முகவர் பணிகளைச் (Agency functions) செய்தற்கு ஓர் உயர் ஆணையாளர் (High Commissioner) அமர்த்தப்பட்டார்.

4. இந்தியாவில் அரசாங்கப் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தற்கு ஒரு பொதுப்பணி ஆணையம் (Public Service Commission) அமைக்கப்பட்டது.

5. இச்சீர்திருத்தங்கள் 10 ஆண்டுக் காலத்துக்குப் பிறகு செயல்முறையில் ஆய்வு செய்யப்பட்டு, ஓர் ஆய்வு ஆணையத்தின் (A Commission) பரிந்துரையின் பேரில் மேலும் விரிவாக்கப்படுதல் கூடும்.

**சீர்திருத்தங்கள் செயற்படுதல்:** இந்தச் சீர்திருத்தங்கள் 1921-இல் நடைமுறைக்கு வந்த போது, காங்கிரசின் முழு ஆதரவுடன். மகாத்மா காந்தியடிகளின் தலைமையில், ஆங்கிலேய இந்திய அரசாங்கத்துக் கெதிராக, ஒத்துழையாமை இயக்கம் (Non - Co operation Movement) முழுமூச்சுடன் இந்தியாவில் நடந்தது. காங்கிரசின் விருப்பத்துக்கு மாறாக நிதித்துறையைச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள நிருவாகக்குழுவிடம் ஒப்படைக்காமல் ஆளுநரின் ஒதுக்கப்பட்ட துறையாக ஆக்கியதும், மாகாண அரசாங்கங்களில் முழுத்தன்னாட்சியைக் கொண்டுவாராமல், இரட்டை ஆட்சியைக் கொண்டுவந்ததும், 1919 ஏப்பிரலில் பஞ்சாபில் அமிருதசரசில் அமைதியாகக் கூடியிருந்த மக்களின் மீது முன்னறிவிப்பின்றித் துப்பாக்கியால் தயர் என்ற (Dyer) ஆங்கில இராணுவ அதிகாரி சுட்டு 379 பேரைக் கொன்றதும், மக்களை ஊர்ந்து செல்லச் செய்து இழிவுபடுத்தியதும், இராணுவச் சட்டத்தைச் செயற்படுத்தியதும் ஆகிய இவையெல்லாம், மாண்ட்போர்டு சீர்திருத்தங்களைப் புறக்கணித்து, ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தச்செய்தன. அது மாகாண, நடுவண் சட்டமன்றத் தேர்தல்களைப் புறக்கணித்தது. மற்ற கட்சிகள் இரட்டை ஆட்சியைச் செயற்படுத்தின. நடுவண் சட்டமன்றத்தால் (1922-இல்) தள்ளுபடி செய்யப்பட்ட ஓர் அரசாங்க மசோதாவையும், 1923 -இல் உப்புவரியை இரட்டிப்பாக்கிய ஒருமசோதாவையும், 1924 - இல் சட்டமன்றம் தள்ளுபடி செய்த அரசாங்க வரவு செலவுத் திட்டத்தையும் அரசப்பேராளர் தம் சான்றுரை அதிகாரங்களைக் கையாண்டு சட்டங்களாக்கினார். ஒன்பது உறுப்பினர்களடங்கிய ஓர் ஆய்வுக் குழுவிலிருந்த இந்திய உறுப்பினர்கள் தம் சிறுபான்மை அறிக்கையில் (1925-இல்) இரட்டை ஆட்சியை நீக்குதல் வேண்டுமென்று கூறினர். குடியேற்ற நாட்டு நிலை நிறுவப்படுதல் வேண்டுமெனக் காங்கிரசு கூறிற்று. சீர்திருத்தங்களை ஆய்வுசெய்த (1927) ஏழு ஆங்கில உறுப்பினர்களடங்கிய சைமன் குழு இரட்டை ஆட்சியை நீக்கி, மாகாணத்தின் ஆட்சி நிறுவப்படுதற்குப் பரிந்துரை செய்தது. அதன் பரிந்துரையின்மீது செய்யப்பட்ட 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் இரட்டை ஆட்சியை நீக்கி, சில வரம்புகளுக்குட்பட்ட மாகாணத் தன்னாட்சியை நிறுவிற்று. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இந்தியா விடுதலை பெற்றது. பா.சு.

**மாண்புறு புரட்சி (கி.பி.1688):** இங்கிலாந்தில் கி.பி. 1688-இல் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஆங்கில வரலாற்றில் ‘மாண்புறு புரட்சி’ (Glorious Revolution) என்று வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுவர். அமை

தியான முறையில் தொடங்கி, அமைதியாகவே இப் புரட்சி முடிவுற்றதால் இது மாண்புறு புரட்சி என்றும் 'இரத்தம் சிந்தாப்புரட்சி' (Bloodless Revolution) என்றும் கூறப்பட்டது. இப்புரட்சி இரண்டாம் சேம்சு (James II. கி.பி. 1685 - 1688) மன்னரின் காலத்தில் தோன்றியது.

இங்கிலாந்து மன்னரான இரண்டாம் சார்லசு (கி.பி.1661-1685) கத்தோலிக்க சமயத்தை ஆதரித்த வர். இவர் கத்தோலிக்க பிரான்சுடன் உறவு வைத்துக் கொண்டதனைப் பாராளுமன்றம் கண்டித்தது. சார்லசுக்கு ஆண் வாரிசு இல்லாத காரணத்தால் அவர் தம்பியான சேம்சு என்ற யார்க்கு கோமகன்(Duke of York) தான், அடுத்துப் பட்டத்துக்கு வரவேண்டிய உரிமை உடையவர். கத்தோலிக்கரான சேம்சு பட்டத்திற்கு வந்தால் இங்கிலாந்தில் கத்தோலிக்க சமயம் வெளிப்படையாகவே புகுத்தப்படும் என்று அஞ்சிய பாராளுமன்றம், சேம்சு அரியணை ஏறுவதைத் தடுக்க முற்பட்டது. எனவே, விலக்கல் மசோதாவைக் (Exclusion Bill) கொண்டு வந்தது. அதன்படி இரண்டாம் சார்லசிற்கு மனைவி யல்லாத வேறொரு பெண்ணிற்குப் பிறந்த மான்மூத்து கோமகன் (Duke of Monmouth) அடுத்த வாரிசாக ஏற்படுத்தப்பட்டார். அம்மசோதாவை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அம்மசோதா நிறைவேறாவண்ணம் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார் சார்லசு. அவர் இசுடுவர்ட்டு (Stuart) வமிச மன்னராவார்.

இரண்டாம் சார்லசு கி.பி. 1685-இல் இறந்ததும் கத்தோலிக்கரான சேம்சு கி.பி. 1685-இல் அரியணை யேறினார். விலக்கல் மசோதாவைக் கொண்டுவந்து பெருத்த அவமானத்திற்கு அவரை ஆளாக்கிவிட்ட தாகக் கருதிய பாராளுமன்றத்தினரும் மக்களும் இப்பொழுது தம் முழு ஆதரவையும் மன்னருக்கு அளித்தனர். சேம்சு அரியணையேறியதால், மான்மூத்து போர்க்கொடி உயர்த்திக் கலகம் செய்தார். ஆனால், போரில் தோற்கடிக்கப்பட்டார்.

படை வலிமையைப் பெருக்கித் தம்மை வலுப்படுத்திக்கொண்ட சேம்சு, கத்தோலிக்க சமயம் வளரப் பல முயற்சிகளை மேற்கொண்டார். கத்தோலிக்கர்களைப் பதவிகளில் அமர்த்துவதைத் தடை செய்த சட்டங்களைப் புறக்கணித்துச் சீர்திருத்தக் கிறித்தவர்களைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவ்விடங்களில் கத்தோலிக்கர்களை அமர்த்தினார். சீர்திருத்தக் கிறித்தவப் படைத் தலைவர்களும், அமைச்சர்களும் நீக்கப்பட்டு அவ்விடங்களில் உரோமன் கத்தோலிக்கர்கள் அமர்த்தப்பட்டனர். அயர்லாந்தில் உரோமன் கத்தோலிக்கர் ஒருவர் அரசப் பேராளராக (Viceroy) நியமனம் பெற்றார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்திலும் சீர்திருத்தக் கிறித்தவர்கள் நீக்கப்பட்டுக் கத்தோலிக்கரே பேராசிரியர்களாகவும், தலைவர்களாகவும் அமர்த்தப்பட்டனர். ஊரியல் (Civil) படைத்துறை ஆகியவற்றில் இவ்வாறு பல கத்தோலிக்கர்கள் இடம் பெற்றனர்.

பொறுத்தல் ஆணையை (Declaration of Indulgence) வெளியிட்டுக் கத்தோலிக்கர்களுக்கெதிராக இதுகாறும் அமலில் இருந்த பல குற்றச் சட்டங்களை (Penal Laws) நீக்கினார் சேம்சு. சீர்திருத்தக் கிறித்தவர்கள் நிறைந்த பாராளுமன்றத்தைக் கி.பி. 1687 சூலையில் கலைத்துவிட்டு, கத்தோலிக்கர்கள் கொண்ட புதிய பாராளுமன்றத்தையும் நிறுவ முயன்றார்.

**ஏழு ஆயர்கள் வழக்கு** (Seven Bishops Case): சான் கி.பி. 1688 - ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் தடவையும் 'பொறுத்தல் ஆணை' ஒன்றை வெளியிட்டுக் குருமார்கள் மாதா கோயில்களில் அதனைப்படித்து அறிவிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். காண்டர்பரிப் பேராயரும் ஏனைய ஆறு ஆயர்களும் அதனை எதிர்த்துக் கண்டன அறிக்கை ஒன்றினை வெளியிட்டனர். சீற்றம் கொண்ட மன்னர், அவர்கள் அவதூறு செய்தனர் எனக் குற்றம் (Libel) சாட்டி, அவர்கள்மீது வழக்குத் தொடுத்தார்.

சேம்சுக்கு கி.பி. 1688-இல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதனால், இங்கிலாந்தில் பேரதிர்ச்சி ஏற்பட்டது. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. சேம்சின் மூத்தமகள் மேரி ஒரு சீர்திருத்தக் கிறித்தவர். மேரி தீவிர சீர்திருத்தக் கிறித்தவரான ஆலந்தின் (Holland) அதிபர் ஆரஞ்சு வில்லியத்தை மணந்திருந்தார்.சேம்சுக்குப் பின்னர்ச் சீர்திருத்தக் கிறித்தவரான மேரி இங்கிலாந்தின் அரசியாவாள் என்று மக்கள் மனப்பால் குடித்தனர். சேம்சின் மகன் கத்தோலிக்கனாகவே வளர்க்கப்பட்டு, அரியணையேறுவான் என்ற அச்சம் மக்களைத் துன்புறுத்தியது. அதுவே ஆங்கிலேயர்களிடையே அதிர்ச்சியைத் தோற்றுவித்தது.

ஏழு ஆயர்களும் குற்றவாளிகளல்லர் என்று நீதிமன்றம் கி.பி. 1668-ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. அச்செய்தி கேட்டு மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்தனர் மக்கள்; கொண்டாட்டங்கள் நிகழ்த்தினர். படைவீரர்களும் மகிழ்ச்சியுடன் வாண வேடிக்கைகளை நடத்தி மகிழ்ந்தனர். தீர்ப்பு வெளியான அன்றைய இரவே, ஏழு ஆயர்களும் மந்தணமாகக்கூடி, ஆரஞ்சு வில்லியத்தை உடனே படையெடுத்து வந்து இங்கிலாந்தைக் கைப்

பற்றத் தூண்டிக் கடிதம் ஒன்றினை எழுதி அனுப்பினர்.

கடிதத்தைக்கண்டு மகிழ்ந்த வில்லியம் அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டு பெரும்படையுடன் இலண்டனில் இறங்கினார். அனைத்து மக்களும் அவருக்கு வரவேற்பளித்தனர். நிலைமை மோசமானதைக்கண்ட சேம்சு, மக்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களைத் தம் பக்கம் இழுப்பதில் முயன்று தோல்வி கண்டார். அவர் நண்பர்களும் ஆதரவாளர்களும் அவர் இளைய மகள் ஆனும் (Anne) அவரைக் கைவிட்டனர். வேறுவழியின்றி மன்னர் தம் மனைவியுடனும் குழந்தையுடனும் பிரான்சிற்கு சென்றுவிட்டார். பிரான்சு மன்னரான உலூயி, அவர்களை அரச மரியாதையுடன் வரவேற்று, அனைத்து வசதிகளையும்செய்து கொடுத்தார். அந்நிலையில், எவ்விதப் போருமின்றி இரத்தம் சிந்தாமலேயே வில்லியமும் மேரியும் இங்கிலாந்து நாட்டின் அரசன் அரசியாகப் பதவியேற்றனர். இங்கிலாந்தில் மாண்புறு புரட்சி வெற்றிபெற்று இசுடுவேர்டு வமிசத்தின் வல்லந்த ஆட்சி முற்றுப்பெற்றது. இங்கிலாந்து வரலாற்றில் இப்புரட்சி ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். மெக்காலே இதனையே இங்கிலாந்து வரலாற்றின் கடைசிப் புரட்சியாகக் குறிப்பிடுகிறார்.

புரட்சிவிளைவுகள்: 1) இதுகாறும் பாராளுமன்றத்தை ஒடுக்கிவிட்டு மன்னரின் மேலாண்மையை நிறுவிட இசுடுவர்டு வமிசம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்விகண்டன. அதன் விளைவாக இசுடுவர்டுவமிச ஆட்சிக்கே முடிவு கட்டப்பட்டது. 2) இங்கிலாந்தில் பாராளுமன்றத்திற்கு உட்பட்ட முடியாட்சி ஏற்படுத்தப்பட்டது. மன்னரைப் பதவியில் ஏற்றவும் இறக்கவும் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 3) கத்தோலிக்க சமயம் செல்வாக்குப் பெறுவது தடுக்கப்பட்டது. கத்தோலிக்கர்கள் அரியணை ஏறுவதைத் தடைசெய்யும் சட்டம் ஒன்றும் விரைவில் கொண்டு வரப்பட்டது. இவ்விதமாக ஆங்கிலிக்கத் திருச்சபை காக்கப்பட்டது. 4) இங்கிலாந்தின் அயல்நாட்டு விவகாரங்களை நிருணயிக்கும் உரிமை முன்பு போல் பிரான்சிடம் இல்லாது, இப்புரட்சிக்குப்பின் இங்கிலாந்தே தன் அயல்நாட்டு விவகாரங்களைச் சுதந்திரமாகப் பின்பற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. 5) பாராளுமன்றத்தின் இந்த வெற்றியானது இங்கிலாந்தை வாணிகத்திலும், தொழிலிலும் முதன்மை பெற்ற நாடாக ஆக்கியதுடன், பெரிய பேரரசாக மாற்றவும் உதவிபுரிந்தது.

இங்கிலாந்தில் நீண்டகாலமாக மன்னருக்கும் பாராளுமன்றத்திற்கும் தொடர்ந்து நடந்து வந்த ஆதிக்கப் போட்டியை முடிவுக்குக்கொண்டு வந்த இப்புரட்சி, இங்கிலாந்து வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பு முனையாகும். க.ம.

**துணை நூல்:**

Wisan Das. Refresher Course in History of Great Britain, S. Chand & Co., Delhi, 1968.

*மாணவர் அரசாங்கம்* என்பது கல்லூரி, பள்ளி, பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களின் செயற்பாடுகளில் மாணவர்கள் பங்கேற்பதைக் குறிப்பதாகும். மாணவர் பேரவை மூலமாக மாணவர்கள் இந்நிறுவனங்களில் பங்கேற்கிறார்கள். இத்தகைய மாணவர் அமைப்புகள் மாணவர் கழகம், மாணவர் பேரவை, மாணவர் சங்கம், மாணவர் பாராளுமன்றம் என்று பல நிலைகளில் செயற்படுகின்றன.

இந்த அமைப்புகள் வாயிலாக மாணவர்களே நிறுவனச் செயற்பாடுகளில் தங்களின் பேராளர்கள் மூலம் பங்கேற்கிறார்கள். இவ்வகையான மாணவர் அமைப்புகள் பல நாடுகளிலும் செயற்படுகின்றன. எடுத்துக்காட்டாக 1920–இல் இலத்தீன் நாட்டுப் பள்ளிகள் மாணவர் பேரவைகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. பள்ளி நிருவாகம், அறிவிப்புகளை வெளியிடுவதற்கும், பள்ளி ஒழுங்குமுறைகளைச் செயற்படுத்துவதற்கும் ஒழுக்க நன்னெறிப் போதனைகளை அளிப்பதற்கும் மாணவர் பேரவைகளைப் பயன்படுத்தி இருக்கின்றது. பத்தாண்டுகளுக்குப் பின்னர் இப்போக்கு வளர்ச்சி அடைந்து மாணவர் கூட்டங்களில் ஆசிரியர்களும் பிறரும் மாணவர்களிடையே ஏதேனும் ஒரு கருத்து குறித்துச் சொற்பொழிவாற்றும் வழக்கமும் நடைமுறைக்கு வரத்தொடங்கியது.

இப்போது மாணவர் பேரவை ஒரு படிப்புச்சாராத நடவடிக்கை என்று கருதப்படாமல், கல்வி முறையின் ஓர் அங்கம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. படிப்பு மற்றும் நிருவாகம் குறித்த தவிர்க்க இயலாத நடைமுறையாக மாணவர் பேரவை அமைப்புகள் மாறியிருக்கின்றன. இருந்த போதிலும் மாணவர்களின் அரசாங்கம் (Student Self Government) என்பதெல்லாம் நடைமுறைக்கு உகந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. உண்மையில் கல்வி நிறுவனத் தலைவர் தம் நிருவாகப் பொறுப்புகளை மாணவர் அமைப்பிடமே முழுவதும் ஒப்படைப்பது என்பது சட்டப்படியும் அறநெறி அடிப்படையிலும் சரியானதன்று. ஆனால், மாணவர்கள் தங்கள் படிப்புக் காலத்தை வீணாக்காது படிப்பை மட்டும் கவனித்துக் கொள்வதே போதுமானது; நிருவாகம், மாணவர் பேரவை போன்றவற்றின் செயற்பாடுகள் தேவையற்றவை என்கிற வாதம் செல்லத்தக்கதன்று.

ஒரு செயல்ஊக்கம் கொண்ட மாணவர் பேரவை என்பது சமதருமப்படுத்தப்பட்ட கல்வி முறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். சருவாதிகார மனப்போக்குக் கொண்ட ஒரு கல்வி நிறுவனத்தில் மாணவர் அரசாங்கம் சிறப்பாகச் செயற்பட இயலாது. அதே நேரத்தில் ஒரு கட்டுப்பாடற்ற கல்வி நிறுவனத்திலும் சிறப்பாகச் செயற்பட இயலாது. காரணம் ஒரு சரியான வழிகாட்டுதல் மாணவர் பேரவைக்குக் கிடைக்கும் வாய்ப்பு அங்கே இராது. கல்வி நிறுவனத்தின் நிருவாகத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்பதன் மதிப்பை உணர்ந்திருந்தால்தான் ஒரு வெற்றிகரமான மாணவர்பேரவை அமைய முடியும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை மாணவர்களின் பங்கேற்பானது கல்வியின் வளர்ச்சிக்கு ஓர் இன்றியமையாத கருவியாகும். காரணம் மக்களாட்சிப் பண்புகள் நிறைந்த ஓர் எதிர்காலச் சந்ததியினரைப் பயிற்றுவிக்கும் நல்ல சாதனம் மாணவர் பேரவையாகும். இது மாணவர்களைப் பொறுத்த வரை அரியதோர் அனுபவமாக அமையும்.

மாணவர்களின் பக்குவமின்மை, மக்களாட்சி (Democratic) மரபுகள் குறித்த அறியாமை ஆகியவற்றின் காரணமாக ஏராளமான குறைபாடுகள் நேர்ந்த போதிலும், ஒட்டு மொத்த நோக்கமான சனநாயகப் பண்பு நிறைந்த குடிமக்களை உருவாக்கும் பயிற்சிக் களம் மாணவர் அரசாங்கம் என்ற கருத்து உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் புதிய நிலையினை அடைந்து வருகிறது. மாணவர் அரசாங்கம் சிறப்பாகச் செயற்பட வேண்டுமென்பதற்காக மாணவர்களுக்கு வழிகாட்டப் பல்வேறு அமைப்புகள் உள்ளன. அமெரிக்காவில் உள்ள தேசிய மாணவர் பேரவைச் சங்கம் (National Association of Student Councils -NASC), ஐக்கிய நாட்டுத் தேசிய மாணவர் சங்கம் (United States National Students Association)போன்ற அமைப்புகள் இத்தகைய பணிகளைச் செய்கின்றன. தமிழ்நாட்டில் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தலைமைப் பயிற்சி, ஆளுமை வளர்ச்சிப் பயிற்சி ஆகியவற்றை அளித்து மாணவர்கள் பேரவை அமைப்புகளில் சிறப்பாகச்செயற்படும் வாய்ப்பினைச் சென்னையிலுள்ள அகில இந்தியக் கத்தோலிக்க பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்புப் (All India Catholic University Feder ation)போன்றவை அளித்து வருகின்றன.

நிருவாகத்தில் மாணவர்கள் பங்கேற்பது என்பது எதிர்பாராமல் தோன்றிவிட்ட கருத்து அன்று. உண்மையில் மாணவர் பேரவை சரியான குடிமக்களை உருவாக்குவதற்கும் மக்களாட்சி நெறிமுறைகளுக்கு இசைவான வாழ்க்கை வாழ்வதற்குமான பயிற்சிக் களம் ஆகும். கல்வியானது வாழ்க்கையோடு ஒத்துப்போகாத ஒன்றன்று. தங்களைச் சுற்றியுள்ள சூழலோடு ஒத்துப்போகும் புத்திசாலித்தனமான வாழ்க்கை நெறியை உருவாக்கித் தருவதே கல்வி.

**செயற்பாடுகள்:** மாணவர் பேரவை அதன் உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்ததாக இருக்க வேண்டும். அதன் சட்ட விதிகள் மக்களாட்சிக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆசிரியர்களும், நிறுவனத் தலைவர்களும், மாணவர் பேரவையின் செயற்பாடுகளை ஆதரிக்கும் மனப்பாங்கைப் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

அத்தகைய சூழ்நிலைகள் சரிவர அமையப்பெறாவிடில் மாணவர் பேரவை ஓர் அழிவு சக்தியாக உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. நல்ல சூழ்நிலைகள் அமையப் பெற்றிருப்பின் அது, ஒட்டு மொத்தமான மாணவர் சமூகமே கல்வியின் மேம்பாட்டிற்காக, முழுமூச்சுடன் பாடுபட ஏதுவாகும்.

மாணவர் பேரவையின் செயற்பாடுகள் பற்றி ஆய்கின்ற பொழுது மாணவர் பேரவையானது நல்ல குடிப் பண்புகளை, நல்ல எண்ணங்களை, மக்களாட்சி மனப்பாங்கை, சுமுகமான ஆசிரியர் மாணவர் நல்லுறவை, மாணவர்களின் தெளிவான சமூகப் பார்வையை உருவாக்கும் அமைப்பு என்பது புலனாகும். மாணவர்கள் தங்களின் செயற்பாடுகளைத் தாங்களே வரையறை செய்து, முடிவு செய்து, தங்களின் கருத்துகளை வெளியிடும் சிறந்த மேடையாகப் பேரவை உருவாக்கப்படுகிறது. சுருங்கச் சொல்வதானால் மாணவர் பேரவை ஒரு பயிற்சிக் களம்.

பேரவையின் முயற்சிகளில் கல்வி நிலையத்தின் நலன்கள் பேணிக்காக்கப்படுவதுடன் கல்வி நிலையம் சந்திக்க நேர்கின்ற சிக்கல்கள் பல தீர்க்கப்படுவதும் நிகழும். பள்ளியின் கோட்பாடும், பண்பாடும் பேணிக் காக்கப்படும். மாணவர்களைப் பேராளராகச் செய்கிற ஒரு குழு என்கிற வகையில், தனி மாணவனின் நடத்தை பழக்க வழக்கம் ஆகியவற்றை நெறிப்படுத்தும் சாதனமாகவும், மாணவர்கள் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் எதுவாகிலும் பேசித்தீர்க்கும் தளமாகவும் பேரவை விளங்கும்.

மாணவர் பேரவை குறிப்பிட்ட கால இடைவெளியில் கூட்டப்பட வேண்டும். வாரக் கூட்டங்கள் இயலாதவையாக இருக்கலாம். அதே நேரத்தில் மாதக் கூட்டம் என்பது அதிக இடைவெளியுடையதாகவும், பேரவையின் பணிகளை ஒருங்கிணைக்க இயலாததாகவும் இருக்கும். எனவே, இருவாரங்

களுக்கு ஒருமுறை கூடுவது நல்ல பலன்களை அளிக்கத் தக்கதாகும்.

**பேரவையின் பணிகள்:** திறமைமிக்க மாணவர்களை அவர்கள் விரும்பும் துறையில் எழுத்து, நாடகம், பாடல்கள், பேச்சு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வண்ணம் நடத்தலாம். பண்பாட்டு விழாக்கள், மாநாடுகள், சொற்பொழிவுகள் முதலானவற்றை மாணவர்களே முன்வந்து ஏற்பாடு செய்யும்போது பொறுப்புணர்வும் கடமையுணர்வும் மேலோங்கும். மாணவர் பேரவைகளில் மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், பொதுமக்களின் வேண்டுதல்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும் கண்கூடாக உள்ளது கல்வி அமைப்பிற்குள் சீர்திருத்தம், தாய்மொழிப் பாதுகாப்பு, மனித உரிமை தொடர்பான சிக்கல்கள், நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாத்தல், சுற்றுப்புறச் சூழலைச் சீர்கேடுகளிலிருந்து பாதுகாத்தல் போன்றவற்றில் மாணவர் பேரவைகள் முன்னணியில் நின்றிருக்கின்றன சில கல்வி நிறுவனங்களில் மாணவர்களே தங்களின் சிற்றுண்டிச் சாலைகளை நடத்துவதும், குடிசைப் பகுதி மக்களின் மேம்பாட்டிற்காகப் பாடுபடுவதும் மாணவர் பேரவைச் செயற்பாடுகளில் மகுடம் போன்றவை ஆகும்.

**வடிவங்கள்:** மாணவர் பேரவை பல்வேறு வடிவங்களில் உருவாக்கப்படுகிறது. நான்கு முக்கிய வடிவங்கள் இங்கே விவரிக்கப்படுகின்றன.

**முதல் வடிவம்:** இது, பள்ளி அலுவலகப் பாணியிலான பேரவை அமைப்பில் பல்வேறு வகுப்பின் பேராளர்கள் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல் வகுப்புத் தலைவர்களைக் கொண்டு அமைக்கப்படுவதாகும். இம்முறையில் உயர்வகுப்பின் தலைவன் பள்ளியின் தலைவனாக எளிதில் வந்துவிடலாம். இம்முறையில் மக்களாட்சிக் கோட்பாட்டின்படி தேர்தல் இராது. இம்முறை அவ்வளவு சரியான முறையன்று.

**இரண்டாம் வடிவம்:** பள்ளியில் உள்ள பல்வேறு குழுப் பேராளர்களைக் கொண்டு அமைக்கப்படும் பேரவை. இது அமைப்பு வடிவத்தில் மாணவர்களைப் பேராளர்களாகச் செய்வதாகக் கூற முடியாது. இம்முறையில் உள்ள முக்கிய குறைபாடு, குழு உறுப்பினர் அல்லாத மாணவர்கள் சார்பில் பேரவையில் பேராளர்கள் இல்லாமல் போவதும் பல்வேறு குழுக்களில் இருப்போரின் பேராளர்கள் பலர் பேரவை உறுப்பினர்களாக இடம்பெறுவதும்தான்.

**மூன்றாம் வடிவம்:** இது சீர்திருத்தப்பட்ட பேரவை என்கிற அமைப்பில் அரசாங்க அமைப்புப் போன்றே நிருவாகத்துறை, சட்டமன்றத்துறை, நீதித்துறை என்கிற பிரிவுகளைக் கொண்டதாகும் இத்தகைய அமைப்பு சிறந்த முயற்சியும் ஒரு நம்பிக்கை தரும் தோற்றமும் ஆகும். ஆனால், இத்தகைய முறை கல்வி நிறுவனங்களில் ஏற்புடையதா என நம்ப இயலவில்லை.

**நான்காம் வடிவம்:** இது இல்ல மாதிரி முறை போன்றது. இதில் பெருங்குழுவாக உள்ள மாணவர்கள் பல்வேறு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டுப் பேராளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களைக் கொண்டு பேரவையை அமைப்பதாகும். இம்முறையில் அனைத்து மாணவர்களின் சார்பாகப் பேராளர்கள் இடம் பெறுவதுடன் இரட்டைப் பேராளர்கள் முறை தவிர்க்கப்படுகிறது. இம்முறை மிகவும் ஏற்புடையதாக உள்ளது. இது பொதுவாகக் கல்வி நிறுவனங்களில் பரவலாகக் கடைப்பிடிக்கப்படும் முறையும் ஆகும்.

தமிழகத்தில் மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் விளையாட்டு, பண்பாட்டுநிகழ்ச்சி, பொழுதுபோக்குப் போன்ற பல்வேறு பிரிவுகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து பங்கேற்றுத் திறம்பட நடத்துகின்றனர். மாதிரிப் பாராளுமன்றம், நாள் வழிபாடு, இலக்கிய மன்றக் கூட்டங்கள், பண்பாட்டு நிகழ்ச்சிகள், வாழ்க்கை சார்ந்த தொழிற்கல்வித் திட்டம், நூலகம் போன்றவை மாணவர் பங்கேற்புடனும் தொழிற்கல்வி ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடனும் நன்கு நடத்தப்படுகின்றன.

மாணவர் அரசாங்கம் திறம்பட நடத்தப்பட வேண்டுமெனில், திறன்மிக்க ஆசிரியரின் வழிகாட்டுதலும், மாணவர்கள் பேரவையின் கடமைகளையும் உரிமைகளையும் புரிந்து செயற்படத் தேவையான முன்தயாரிப்பும், கல்வி நிறுவன நிருவாகத்தின் பரந்த மனப்பான்மையும் இன்றியமையாதவை ஆகும். ஜே.பா.

**மாணவர் கழகம்:** இது பள்ளிகள் அல்லது கல்லூரிகள் ஆகியவற்றில் மாணவர்களின் நன்மையைக் கருதி ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்பு ஆகும். மாணவர் கழகங்கள் பல்வேறு செயல்களில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றன. பொதுவாக, மாணவர்களின் நடவடிக்கைகளை, மாணவ ஆட்சி அமைப்பு (பேரவை), வெளியீடு, பேச்சு, பட்டிமன்றம், நாடகம், பாடத்திட்டத்தை ஒட்டி அமைந்த குழு, சமயத் தொடர்புடைய அமைப்பு, விளையாட்டு, தேசிய மாணவர் படை, சமூக, தொழில் அடிப்படையிலுள்ள அமைப்பு, மாணவர்நல நிறுவனம், பண்பாட்டு மன்றம் போன்ற பல வகைகளாக அமைத்துக்காணலாம்.

**மாணவர் கழகங்களின் வரலாறு:** வரலாற்று முறையாகப் பார்க்கும் போது மாணவர் அமைப்புகள்

பல்வேறு நிலைகளைக் கடந்து வந்துள்ளதை அறியலாம். பொதுவாக, கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே மாணவர் கழகங்களும் தொடங்கப்பட்டன. அண்மையில் கல்வியிலும், சமுதாய அமைப்பிலும் ஏற்பட்ட மாறுதல்களால் இந்தக் கழகங்களும் மாற்றம் அடைந்தன.

முதன் முதலாகத் தோன்றிய பல்கலைக்கழக மாணவ அமைப்புகள் பன்னாட்டுப் பல்கலைக்கழகங்களிலுள்ள அந்தந்த நாட்டு மாணவர்களால் உருவாக்கப்பட்டன. அவை மாணவர்களுக்கு இருப்பிடம், பல்கலைக்கழகத்தில் பேராளர் அமைப்பு போன்றவற்றை வழங்கின. தொடக்கக்கால மாணவ மன்றங்கள் யாவும் கலைத் திட்டத்தை ஒட்டியே ஏற்படுத்தப்பட்டன. அவை, கல்வி அலுவலர்களின் நேரடி மேற்பார்வையில் அமைக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் பல தொழில்களிலும் பயிற்சிபெற்ற வல்லுநர்கள் தேவைப்பட்டதால் மாணவர்கள் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை விட்டு, தம் எதிர்காலத்திற்கெனத் திட்டமிடத் தொடங்கினர். பல்கலைக்கழகங்களும் மாணவர்களுக்குத் தொழில் அனுபவம் கிடைக்கும்படியாகப் பல துறைகளைத் தொடங்கின.

மாணவர்களின் பல்வேறு தேவைகளையும் ஆர்வங்களையும் நிறைவு செய்யும் வகையில் 1965-ஆம் ஆண்டிலிருந்து பல மாணவர் அமைப்புகள் தோன்றின. மாணவர்கள், சமுதாயத்தில் ஒரு சக்தியுள்ள குழுவாக ஆனார்கள். மாணவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக ஏற்பட்ட மன்றங்கள், அவர்களின் பின்னணிக்குத் தக்கபடி துணை அமைப்புகளைக் கொண்டுள்ளன. அவை மத, இன, மொழி அடிப்படையிலோ, ஆர்வங்கள், கல்விச் சிறப்புகள், இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையிலோ அமைகின்றன.

மாணவர் மன்றங்கள் கல்வி நிறுவனங்களின் நிருவாகத்திலும் உதவ இயலும். மாணவர் மன்றங்களில் ஏற்படுகின்ற ஈடுபாடு கல்லூரி வாழ்க்கைக்குப் பின் மாணவர்களுக்குச் சமுதாயத்தில் ஆர்வத்தினை வளர்த்துக்கொள்ள உதவுவதாக ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**மாணவர் மன்ற நடவடிக்கைகளை நிருவகித்தல்:** 'வான் வேசுனென்' என்ற ஆராய்ச்சியாளர் மாணவர் மன்றங்கள் சரிவரச் செயற்படத் தம் ஆராய்ச்சியின் அடிப்படையில் அமைந்த சில அறிவுரைகளை வழங்கியுள்ளார். அவையாவன: கல்லூரிப் பண்பாட்டு நடவடிக்கைகளை இயக்கும் பொறுப்பை ஓர் ஆசிரியர் அல்லது ஆசிரியர் குழுவுக்குக் கொடுத்தல்; மாணவர் பங்கேற்பை முறைப்படுத்தும் வழிவகைகளை ஏற்படுத்துதல்; மாணவர் மன்றங்களின் வரவு செலவுக் கணக்குகளைச் சரிபார்த்தல்; மக்களாட்சிக் கொள்கைகளை வளர்த்தலில் மாணவர்களின் ஆர்வத்தினைப் பயன்படுத்துதல்; கல்விப் பணிக்கென மாணவர்களை ஈடுபடுத்துதல் முதலியனவாகும் (எடுத்துக்காட்டு: வயது வந்தோர் கல்வித்திட்டம்).

மாணவர் மன்றச் செயல்களில் ஆக்க முயற்சியோடு ஈடுபடும் மாணவர்களுக்கு மதிப்பெண்கள், ஊக்கப்பரிசுகள் தருவதன் மூலம் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்தலாம். மாணவர் மன்றச் செயல்கள் அனைத்தையும் மாணவர்களின் இயற்கையான ஆர்வங்களின் அடிப்படையில் அமையச் செய்வதன் மூலம், மன்றங்கள் நிறைந்த பயனைப் பெற முடியும்.

மாணவர் கழக அனுபவங்கள் யாவும் மாணவர்களின் வருங்காலத்திற்கு உதவியாக இருக்கும் வகையில் கல்விப்பயன் உள்ளனவாக இருக்க வேண்டும். பொதுவாக, பத்திரிகைத்துறை, உரையாடல், பேச்சுப் போட்டி, நாடகம் ஆகியவற்றில் பங்கு பெறும் மாணவர்களின் நுண்ணறிவு, தேர்ச்சி ஆகியவை மற்ற மாணவர்களை விட மிகுதியாக இருப்பதாக ஆராய்ச்சி வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஒருசில மாணவர்களே மாணவர் மன்றச் செயல்களில் அடிக்கடி பங்கேற்பதைத் தவிர்த்து, அனைத்து மாணவர்களுக்கும் சமவாய்ப்புத் தந்து, அவர்களின் முழுத்திறமைகளையும் வெளிக்கொணரும் வண்ணம் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். முறையான நிருவாகம் மாணவர் மன்றங்களின் செயற்பாட்டைச் செம்மையாக்கி, பொருள் உள்ளதாக அமைக்கிறது.

பொதுவாக, மாணவர் அமைப்புகள் என்றாலே வேலை நிறுத்தம், கல்வி நிறுவனங்களில் அமைதி இன்மை, போராட்டம் என்ற நிலை மாறி, அவை நல்ல மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டு மாணவர்களின் ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சிக்கும், சுமுகமான முறையில் சிக்கல்கள் தீர்தலுக்கும் வழிவகுக்கப்பட வேண்டும். மேலும், ஒப்படைப்பு மனப்பான்மையுடன் சமுதாயத்திற்குத் தொண்டு புரிதல், நாட்டுப்பற்று, தேசிய, பண்பாட்டுக் கொள்கைகளை வளர்த்துக் கொள்ளுதல், பிற அமைப்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குதல் போன்ற ஆக்கச் செயல்களில் ஈடுபட்டால் மாணவ சமுதாயத்தின் இணையற்ற சக்தி எந்த ஒரு நாட்டின் மறுமலர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உறுதுணையாவது திண்ணம். பி. பி.

**மாணவர் பதிவேடு**: ஒரு மாணவன் குறித்து அமைக்கப்படும் பதிவேடுகள் முக்கியமானவை:

அவையே முறையான பதிவேடுகள் ஆகும். தனி மாணவர் குறித்து உண்மையான முடிவினை எடுப்பதற்கு உதவும் சான்று அடிப்படையிலான விவரங்களின் தொகுப்பே மாணவர் பதிவேடுகள் (Student Registers) எனப்படும்.

பள்ளிகளில் பாதுகாக்கப்படும் மாணவர் குறித்த பதிவேடுகள் எல்லோருக்கும் எளிதில் கிடைத்து விடலாகா. அவை உடன் ஆசிரியர்கள், மருத்துவர்கள், உதவியாளர்களுக்கு மட்டுமே தரத்தக்கவை. அமெரிக்காவில் 'பக்லி சட்டத் திருத்தம் 1974' (Buckley Amendment) என்று கூறப்படும் குடும்பக் கல்வி உரிமை, தனிமை பற்றிய சட்டம் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. அச்சட்டம் மாணவர் பதிவேடுகளைப் பெற்றோரும் மாணவரும் பெறும் உரிமையை அளித்தது. மேலும், அவர்களல்லாத மூன்றாம் மனிதர் மாணவர் பதிவேடுகளைப் பார்வையிடுதலை அது தடை செய்தது. கனடாவிலும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் பெற்றோருக்கான அத்தகைய உரிமைகள் உறுதி செய்யப்பட்டன.

மாணவர்கள் குறித்துப் பள்ளிகள் பாதுகாக்கும் பதிவேடும் நிருவாகப் பதிவேடு எனினும், அது கல்வி முறை சார்ந்த பயன்மிக்க தகவல்களைத் தருகின்றது. பொதுவாக மைய அளவில் தொகுக்கப்படும் அத்தகைய தகவல்கள் தவிர, பள்ளி அளவில் சேகரித்துப் பாதுகாக்கப்படும் பதிவேடுகள் மிகுதியாக உள்ளன. தமிழகத்தில் பள்ளிகளில் பாதுகாக்கப்படும் மாணவர் குறித்த பதிவேடுகள், சேர்க்கை, விலக்கப் பதிவேடு, மாணவர் வருகைப் பதிவேடு, புதிய மாணவனின் முந்தைய கல்விப் பின்னணியை விளக்கும் பதிவேடு, உதவித் தொகைப் பதிவேடு, சலுகைப் பதிவேடு முலியனவாகும்

வகுப்பாசிரியர்கள் மாணவர் குறித்த பல்வேறு தகவல்களைத் திரட்டுகின்றனர். வருகை குறித்த விவரங்கள், திரள் பதிவேட்டிற்குத் தேவையான விவரங்கள், கட்டணம் செலுத்தல் விவரம் போன்றவை ஆசிரியர்களால் சேகரிக்கப்படுகின்றன. மாணவரின் கல்வித்தரம், பாடத்திறன், தேர்ச்சி, விளையாட்டு ஆர்வம் போன்ற தகவல்களின் அடிப்படையில் மாணவர்களுக்கு அறிவுரை வழங்குதல் பெற்றோருக்கு அறிவித்தல் போன்ற பணிகளை ஆசிரியர்கள் செய்கின்றனர்.

ஆலோசகர்கள் (Counsellor) அத் தகவல்களின் அடிப்படையில் மாணவர்களின் தனிப்பட்ட சிக்கல்களையும் சமூகச் சிக்கல்களையும் தீர்க்கும் அறிவுரைகளை அளிக்கின்றனர்.

திரள் பதிவேடு, மாணவர் குறித்த முக்கியமான தகவல்கள் அடங்கிய பதிவேடு ஆகும். திரள் பதிவேட்டில் கீழ்க்கண்ட விவரங்கள் இடம் பெற்றிருக்கும். 1) முக்கிய அடையாளத் தகவல்கள். எடுத்துக்காட்டாக பெயர், பால், முகவரி, பிறந்த நாள் போன்ற தகவல்கள். 2) உடல் நலம். எடுத்துக்காட்டாகப் பொதுவான உடல்நிலை, உடல் நலக்குறைவு, உடற் குறைகள், பார்வைக் குறைபாடுகள், காது கேட்டலின் குறைபாடுகள் போன்ற தகவல்கள். 3) குடும்பப் பின்னணி. எடுத்துக்காட்டாகப் பெற்றோர், அவர்களின் தொழில், அவர்களின் கல்வித் தகுதி உடன் பிறந்தோர், சமயம் போன்ற தகவல்கள். 4) மாணவரின் கல்விப் பின்னணி. எடுத்துக்காட்டாக முன்னர்ப் படித்த பள்ளிகள், படிப்பு விவரங்கள், தேர்வுகள், சாதனைகள், பொதுவான திறமைகள், சிறப்பான விருப்பங்கள் போன்ற தகவல்கள். 5) தனி ஆள், சமூக முன்னேற்றம். எடுத்துக்காட்டாக ஆசிரியர்கள் நண்பர் குழாமுடன் உறவுமுறை, ஒருமைப் பண்புகள் போன்ற தகவல்கள்.6) தொழில் ஆர்வம்.

இத் தகவல்கள் விருப்பு வெறுப்பு அற்ற கண்ணோட்டத்துடன் பதிவு செய்யப்பட வேண்டும். இப் பதிவேடுகள் ஒரு தனி மாணவன் மீதான தவறான கண்ணோட்டத்தையும் அணுகுமுறையையும் ஏற்படுத்தி விடக் கூடாது.

தொழில் துறையில் முன்னேறிய நாடுகளில் மாணவர் குறித்த தகவல்கள் கணிப்பொறியில் பதிவு செய்யப்படுகின்றன. மாணவர் பதிவேடுகள் ஒரு முழுமையான மையபபடுத்தப்பட்ட பதிவுகளுக்கு வாய்ப் பேற்படுத்தி இருக்கின்றன. மேலும், இவை வாழ்நாள் முழுவதும் பாதுகாக்கப்படுதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

அமெரிக்காவில் மாணவர் பதிவேடுகள் பயன்படும் முறை குறித்து நியூயார்க்கு மாநில மாணவர் பதிவேடுகள் பற்றிய கையேடு (New York State Manual on Pupils Records 1962) விளக்குகிறது. அப்பதிவேடு 33 பயன்களை ஐந்து முதன்மையான தலைப்புகளின் கீழ் விளக்குகிறது. அப் பதிவேடுகள் குறித்த விவாதம் 1970-களில் உச்சத்தில் இருந்தது. பல்வேறு தேசிய இயக்கங்கள் அப் பதிவேடுகள் வெளிப்படையாகக் காட்டப்பட வேண்டும் என்று வேண்டின. இங்கிலாந்து நாடு இது குறித்துத் தெளிவாக ஏதும் முடிவெடுக்கவில்லை. அதே நேரத்தில் ஐரோப்பியப் பொருளாதாரச் சமூக (European Economic Community) விதிகள் மாணவர் பதிவேடுகள் எல்லோருக்கும் எளிதில் கிடைக்க வேண்டும் என்று கூறுகிறது.

மாணவர் பதிவேடுகள் பாதுகாக்கப்படுவது குறித்துத் தெளிவான வழிகாட்டுதல்கள் உள்ளன. அவற்றுள் சில: 1) பதிவேடுகள் ஒரு பொதுவான தன்மையில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். தன்னிச்சைப் போக்கில் சேர்க்கப்பட்ட தகவல் தொகுப்பாக அது இருத்தல் கூடாது. 2) மாணவர் பதிவேடுகள் எளிதில் யாரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். பதிவேடுகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான வழிகாட்டுதல்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். 3)அவை எளிதில் முடிக கப்படக் கூடியனவாகவும் அண்மைக் காலம் வரையிலான தகவல்கள் சேர்க்கப்பட்டனவாகவும் இருக்க வேண்டும். 4) பயன்மிக்க, உண்மையான தகவல்களே இடம் பெற்றிருக்க வேண்டும். ஊகங்களுக்கு அப்பதிவேடுகளில் இடம் இல்லை. 5) எளிதில் கிடைக்கத் தக்கனவாகவும் பரிசோதனைக்கு உட்படுத்தத் தக்கனவாகவும் இருக்க வேண்டும். அதே நேரத்தில் பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ள ஆளின் தனிமை காப்பாற்றப்பட வேண்டும். 6) பதிவேடுகளை நிறைவு செய்யும் ஆசிரியர்கள் உற்றுநோக்கல், மதிப்பிடுதல், பதிவு செய்தல் போன்றவற்றிற்குத் தேவையான திறன்களைப் பெறப் போதிய பயிற்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

பொதுவாக மாணவர் குறித்துப் பள்ளிகள் பாதுகாக்கும் பதிவேடுகள் தவிர மாணவர்களே பாதுகாக்க வேண்டிய பதிவேடுகள் பல உள்ளன. பள்ளி ஆண்டுக குறிப்பேடு அல்லது நாள்குறிப் பேட்டில் மாணவர் குறித்த விவரங்கள் பெயர், வயது, பால், பெற்றோர் பெயர், முகவரி, தொலைபேசி எண் போன்றவை மாணவர்களாலேயே எழுதப்படும். பல பள்ளிகளில் நூலகங்களில் தாங்கள் படிக்கும் நூல்கள் குறித்த விவரங்கள், நூல்களின் மையக் கருத்துகள், புகழ்மிக்க மக்களின் மேற்கோள்கள், பழமொழிகள் போன்றவை மாணவர்களின் நூலகப் பாடத்திற்கான குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

சுற்றுலா செல்லும் மாணவர்கள் தாங்கள் பார்த்த அரிய செய்திகளைப் பதிவு செய்கின்றனர். பொழுதுபோக்கு கைத்தொழில் பதிவேடுகளில் மாணவர்கள் மிகுதியான தகவல்களைப் பதிவு செய்வதுண்டு. இப்போது அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் வாழ்க்கை சார்ந்த தொழிற்கல்வி (Life Oriented Vocational Education) மாணவர் பதிவேடுகளின் இன்றியமையாமையை அதிகரித்திருக்கின்றது. வரலாற்றுப் பாடங்களைப் பொறுத்தவரை மாணவர்கள் வரைபடங்களை (Map drawing) வண்ணமிட்டு அழகுறப் பாதுகாக்கின்றனர். அறிவியல் மாணவர்கள், ஆய்வுக்கூடத்தில் பதிவேடுகள் வாயிலாகச்சோதனை அறிவியல் பாடங்களான வேதியியல், இயற்பியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனிப் பதிவேடுகள் வைத்துள்ளனர். மொழிப் பாடங்களைப் பொறுத்தவரை இலக்கணப் பயிற்சி ஏடுகளும் கட்டுரைச் சுவடிகளும் மாணவர்களால் பாதுகாக்கப்பட வேண்டியவை ஆகும். கணிதம் போன்ற பாடங்களைப் பொறுத்தவரை வரைபட ஏடுகளும், செயற்படிவ இயல் ஏடுகளும் மாணவர்களால் பாதுகாக்கப்படுகின்றன. ஜே.பா.

**மாணவர் மதிப்பீடு:** இது ஒரு தனி ஆள் அல்லது குழுவின் திறமைகள், ஆளுமைக் குணங்கள் ஆகியவற்றைப் பற்றிய எண்ணங்கள், கருத்துகள் போன்றவற்றை அளவிட்டு அந்த அளவுகளை வெளிப்படையாகச் சொல்லுதல் ஆகும். இந்த மதிப்பீடுகளை அதற்கென்று வடிவமைக்கப்பட்ட அளவுகோல்களின் மூலம் வெளியிடும்போது அளவிடப்படும் பண்பு அல்லது பொருளின் தரத்தைத் தெளிவாக அறியமுடிகிறது.

பொதுவாக, மாணவர்களின் மதிப்பீடுகள் யாவும் கற்றல் அனுபவம், ஆசிரியரின் கற்பித்தல் திறன், ஆசிரியரின் பண்புகள், நட்பு மாணவர்களின் இயல்புகள், மாணவ ஆசிரியர்களின் கற்பித்தல் தரம், கல்வி நிறுவனத்தின் செயற்பாடு, தலைமை ஆசிரியர்களின் தன்மை ஆகியவை தொடர்புடையனவாக இருக்கின்றன. இவ்வாறு கல்வியின் பல பகுதிகளும் மாணவர்களால் மதிப்பிடப்படும்போது, மாணவர்களின் கருத்துகளை அறிய முடிவதோடு, அவற்றின் அடிப்படையில் கலைத்திட்டம், பாடத் திட்டம், பயிற்றுமுறை, பயிற்சி, கல்வி நிருவாகம் ஆகியவற்றைச் சீர் செய்து கல்வியை மேம்படுத்த முடிகிறது. கல்வியில் முதன்மையான பங்கு வகிக்கும் மாணவர்களே அதன் பல பிரிவுகளை மதிப்பிடும்போது கல்வியின் தரத்தை உயர்த்த வழி ஏற்படுகிறது.

மதிப்பீட்டிற்கெனப் பயன்படுத்தப்படும் அளவுகோல்களின் ஒரு பண்புத்தொகுப்பு, அதன் விளக்கம், எண் வரிசை, உரிச்சொற்கள் ஆகியவை தரப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக ஓர் ஆசிரியர் தம் மாணவரிடம் எவ்வாறு பழகுகிறார் என்பதை அறியக் கீழ்க்காணும் கேள்வியைக் கேட்டு, அதற்கு ஐந்து விளக்கங்களும் அளிக்கப்படவேண்டும். அவற்றினின்று, தம் ஆசிரியருக்கு எந்த ஒன்று மிகவும் பொருத்தமாக இருக்கிறதோ அந்த ஒன்றை மதிப்பிடும் மாணவர் குறிப்பிட்டுக் காண்பிப்பார்.

தர மதிப்பீடு (Rating) செய்யும் போது அளவுகோல்களின் அலகுகளிடையே இடைவெளி அமைக்கப்பட்டு, எந்த விளக்கம் ஒரு பண்புக்குப் பொருத்த

| உங்கள் ஆசிரியர் எவ்வளவு தூரம் உங்களிடம் அன்பாகப் பழகுகிறார்? | | | | |
|---|---|---|---|---|
| எப்போதும் அன்பாக | பொதுவாக அன்பாக | சில சமயங்களில் அன்பாகவும் சில சமயங்களில் கோபமாகவும் | மிகவும் அரிதாக | அன்பாகப் பழகவே மாட்டார். |

மாக உள்ளதோ அந்த விளக்கம் தேர்ந்தெடுக்கப் படும். இந்த இடைவெளிகள் இத்தனைதாம் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. பொதுவாக, ஐந்து முதல் ஏழு இடைவெளிகள் வரைஅமைப்பது அளவீடு களின் நம்பகத் தன்மையை மேம்படுத்துகிறது.

**அளவிடுதலின் வகைகள்: 1. விளக்க அளவு கோல்:** இதில் ஒரு பண்பு அல்லது பண்புத் தொகுப்பின் பலவித விளக்கங்கள் ஒரு சீரான அமைப்பில் தரப்பட்டிருக்கும். இதில் எந்த விளக்கம் அளவிடப்படும் ஆசிரியர்க்கு அல்லது ஆளுக்கு மிகவும் பொருத்தமாக அமைகிறதோ அதனைத் தேர்ந் தெடுக்க வேண்டும். சில சமயம் இந்த விளக்கங் களுக்கு எண்கள் தரப்பட்டிருக்கும்.

| 5 | 4 | 3 | 2 | 1 |
|---|---|---|---|---|
| நிறைய உள்ளன. | தேவையான அளவு உள்ளன. | ஓரளவு உள்ளன. | போதுமான அளவு கிடையாது. | முற்றிலுமாக இல்லை. |

2. **வருணனை அளவு கோல்:** விளக்கத் தொடர்கள் ஒழுங்காக ஒரே நேர்கோட்டில் அடுக்கப் பட்டிருந்தால் அது வருணனை அளவுகோலாகும். விளக்கங்களுக்கான எண்களும் தரப்பட்டிருக்கும். இதி லிருந்து மதிப்பீட்டாளர் ஏதாவதொரு பொருத்த மான எண்ணைத் தேர்ந்தெடுப்பார்.

எடுத்துக்காட்டு: உங்கள் பள்ளிகளில் ஆய்வக வசதி கள் எவ்வாறு உள்ளன?

விளக்க அளவு கோலுக்கும் வருணனை அளவு கோலுக்குமிடையே நிறைய ஒற்றுமை உண்டு.

3. **ஆள் – ஆள் அளவு கோல்:** மனிதர்களின் பண் புகளை அளவிட இந்த ஆள் – ஆள் அளவுகோல் பயன் படுகிறது. இதில் பலதரப்பட்ட மக்களின் பண்பு களைப் பற்றி விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றில் ஓர் ஆளுக்கு எந்த விளக்கம் மிகவும் பொருத்தமாக அமைகிறதோ அந்த விளக்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. **எண்ணிக்கை அளவுகோல:** இதை எண்ணிக்கை அட்டை என்றும் சொல்வார்கள். இதில் தரப்பட் டுள்ள பண்புகள் ஒவ்வொன்றுக்கும் வரிசைக்கிரம மானபடி மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அளவிடுபவர் மதிப்பிடப்படும் ஆளின் ஒவ்வொரு பண்புக்கும் ஏற்றபடி மதிப்பெண்களை வழங்கு வார். எடுத்துக்காட்டாக, வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்தலின்போது வெளிப்படுத்தும் ஆர்வத்தினை மதிப்பிடத் தேவையான அலகுகளும் அவற்றின் மதிப் பெண்களும் தரப்பட்டுள்ளன.

| |
|---|
| 5 மிகமிக ஆர்வமாக |
| 4 மிகுந்த ஆர்வமாக |
| 3 ஓரளவு ஆர்வமாக |
| 2 ஆர்வமில்லாமல் |
| 1 சற்றும் ஆர்வமே இல்லாமல் |

5. **பட்டியல் சரிபார்த்தல் முறை:** இதில் மக்களி டம் பொதுவாகக் காணப்படும் விரும்பத்தக்க பண்பு களும், விரும்பத்தகாத பண்புகளும் சேர்த்து ஒரு பட் டியலாகத் தரப்பட்டிருக்கும். அவற்றில் எந்தெந்தப் பண்புகள் அளவிடப்படுபவரிடம் காணப்படுகின் றனவோ அவற்றைச் சரிபார்த்து, நல்ல பண்புகளுக்கு ஒரு மதிப்பெண் தரப்பட்டும், விரும்பத்தகாத பண்பு களுக்கு ஒரு மதிப்பெண் குறைக்கப்பட்டும் இம்முறை யில் மதிப்பீடு செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டு:

| | |
|---|---|
| ஒற்றுமையான | கருமித்தனமான |
| கெடு பிடியான | உதவும் எண்ணமுள்ள |
| சிந்திக்கும் ஆற்றலுள்ள | இரக்கமற்ற |
| தன்னலமற்ற | கவனக் குறைவான |
| பொறுப்பிலிருந்து நழுவக்கூடிய | மனிதத் தன்மையுள்ள |
| தரும சிந்தனையுள்ள | பேராசை உள்ள |

6. **கட்டாயத் தேர்ந்தெடுத்தல் அளவுகோல்:** இதில் மதிப்பிடப்படுபவருக்கு இன்னின்ன பண்புகள் உள்

ளனவா, இல்லையா என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக, தரப்பட்டுள்ள இணைப் பண்புகளில் ஏதாவதொன்றை-எது அவரிடம் அதிகமாகக் காணப்படுகிறதோ அதனை - காட்டலாம், தேர்ந்தெடுத்துக் கோடிட்டுக் காட்டவேண்டும் என்று தெரிகிறது.

**மதிப்பிடுதலில் உள்ள சில சிக்கல்கள்**: பொதுவாகவே மதிப்பிடுதல் தர அளவுகோல்களின் மூலம் செய்யப்படுவதால் அவற்றுக்கென்றுள்ள சில குறைகள் மதிப்பிடுதலைப் பாதிக்கின்றன. அவையாவன:

1. மதிப்பிடப்படுபவரின் பண்பு எதுவாக இருப்பினும், அவர் மதிப்பிடுபவருக்கு மிக நன்றாகத் தெரிந்தவராக இருந்தால் அவரை மதிப்பிடும்போது வழக்கத்திற்கு மிகுதியாகவோ, குறைவாகவோ தன் விருப்பு வெறுப்புக்கேற்றபடி மதிப்பெண்களை வழங்க முயல்வதுண்டு. இத் தவற்றினால் மதிப்பீட்டின் உண்மைத் தன்மையும், நம்பகத் தன்மையும் பாதிக்கப்படுகின்றன.

2. சில சமயம் மாணவர்கள் ஆசிரியர்களை அல்லது கல்வி நிறுவனங்களை மதிப்பீடு செய்யும்போது 'மிகுதியாகவும் மதிப்பிட வேண்டாம்; குறைவாகவும் மதிப்பிட வேண்டாம்; நமக்கேன் வம்பு' என்று நினைத்து எல்லாவற்றிற்கும் சராசரி மதிப்பெண்ணை வழங்கிவிடவும் வாய்ப்புண்டு. இதனால் உண்மை நிலையை அறிய முடியாமல் போகிறது.

3. சில சமயம் ஓர் ஆசிரியர் அன்பாகப் பழகுபவராக இருக்கலாம். ஆனால், அந்தக் காரணத்தினால் அவர் பயிற்றுவித்தல் திறனை மதிப்பிடும்போது, அவர் திறனின்றிப் பயிற்றுவித்தால் கூட, நன்றாக இருப்பதாக மதிப்பிடக்கூடிய தவறு ஏற்பட வாய்ப்பு உண்டு.

4. மதிப்பிடப்படும் பண்பு இதுதான் என்று சரியாகப் புரிந்து கொள்ளாத போது சிலசமயம் தவறான மதிப்பெண்ணை வழங்கக்கூடும்.

**சிறப்பான மதிப்பீட்டிற்குச் சில குறிப்புகள்**: பொதுவாக, மாணவர் மதிப்பீடுகள் சரியானவையாகவும், நம்பி ஏற்றுக் கொள்ளக்கூடியனவாகவும் இருக்க வேண்டுமானால் மதிப்பிடும் அளவுகோல்கள் பின்வரும் சிறப்புப் பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். அவை: 1) மதிப்பிடப்படும் பண்புகள் தெளிவாக, துல்லியமாக, ஐயந்திரிபற விளக்கப்பட வேண்டும், 2) மதிப்பிடப்படும் பண்பு, தொடர்பற்ற பல பண்புகளின் தொகுப்பாக அமையக் கூடாது, 3) பொதுவாக, பண்புகளை விளக்கும்போது 'நல்ல', 'சராசரியான', 'மிகமிக' போன்ற சொற்களைவிளக்கச் சொற்றொடர்களில் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும், 4) ஒவ்வொரு பண்பிற்கும் அதனை நன்றாகக் கூர்ந்து கவனிக்கும்படியான மிகவும் துல்லியமான, சரியான விளக்கங்கள் தர வேண்டும். 5) பொதுவாகவே மாணவர் ஒரு சிலரின் மதிப்பீட்டை மட்டும் நம்பி இராமல், எத்தனை மாணவர்களிடமிருந்து கேட்க முடியுமோ அத்தனை மாணவர்களிடமிருந்தும் மதிப்பீட்டைப் பெறும்போது மதிப்பீடுகள் அதிகத் துல்லியமாகவும், நம்பகத் தன்மை வாய்ந்தனவாகவும் அமைகின்றன.

மக்களிடையே பல பண்புகள் இருந்தாலும் தர மதிப்பீட்டு அளவுகோல்களின் மூலம் சில பண்புகளைச் சரிவர அளவிடமுடியும் என்பது ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அவை: செயல் திறமை, தாராள மனப்பான்மை, தலைமைப் பண்பு, ஒற்றுமை, கற்பனை வளம், காலந்தவறாமை, கடும் உழைப்பு, நாணயம், மனஎழுச்சிகளின் கட்டுப்பாடு, படிப்புப் பழக்கங்கள், கவரும்தன்மை போன்றவையாகும்.


கல்வியில் உயிர்நாடியாக விளங்கும் மாணவர்களிடமிருந்து மதிப்பீடுகளைப் பெறுதல் மூலம் கல்வித் திட்டத்தில் பொருந்தாத பல பழைய முறைகளை அகற்றிப் புதிய திட்டங்களையும், கொள்கைகளையும் வகுத்து, கல்வியின் தரத்தைச் செம்மைப்படுத்தி அதனைச் சமுதாயத்துக்கு மேலும் பயனுள்ளதாக ஆக்க முடியும். ஆனால், இந்த மதிப்பீடுகள் தவறுகள் ஏதும் இன்றிச் சிறப்பாக அமைந்தால் மிகவும் பயன் உள்ளனவாக அமைய முடியும். பி. பி.

*மாணிக்க நாயக்கர், பா.வே*: பொறியியல் அறிஞராகிய பா.வே. மாணிக்க நாயக்கர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பாகல்பட்டி என்னும் சிற்றூரில், வேங்கடசாமி நாயக்கர், முத்தம்மாள் ஆகியோருக்குக் கி.பி.1871-இல் பிறந்தவர். சேலத்தில் கல்லூரிக் கல்வியும், சென்னையில் பொறியியற் கல்வியும் பயின்றவர். பொறியியல் தேர்வில் முதல்வராகத் தேறி, கி.பி.1896-ஆம் ஆண்டு. சென்னை அரசின் உதவிப் பொறியாளராகப் பணியாற்றினார்.

இவர் 1912-ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்றார். வலுவூட்டப்பட்ட கற்காரைக்கு (Reinforced Concrete) அமைப்பு முறையின் கணக்கீட்டு முறைகளை எளிதில் தீர்த்து வைத்தற்குரிய கணக்கீட்டு மானி, (Calculograph) என்னும் கருவியை அமைத்தார். பின்னர், 1913-ஆம் ஆண்டு இறுதியில் இந்தியா திரும்பினார். இவர் 1915-ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகள் சென்னை, பொறியியற் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். மீண்டும் நிருவாகப் பொறியாளராகப் பணி அமர்த்தப்பட்டார். அத்

தொழிலிலும் பதவி உயர்வு பெற்று 1927-ஆம் ஆண்டு வரை பணி ஆற்றினார்.

இவர் பல்துறை வல்லுநராகத் திகழ்ந்தார். மேட்டூர் அணைக்கு உரிய இடத்தைத் தேர்ந்தெடுத்துத் திட்டம் வகுத்த பெருமை இவரைச் சாரும். வானியல், புவியியல், விலங்கியல், தத்துவம் ஆகிய பல் துறைகளிலும் இவருக்கு ஈடுபாடு இருந்தது.



பா.வே. மாணிக்க நாயக்கர்

தமிழில் சிறந்த புலமையும், பற்றும் கொண்டவர் தமிழ் மொழியின் பெருமையை அரை நூற்றாண்டுக்கு முன்னரே உலகிற்கு அறிவுறுத்தியவர். தமிழ் எழுத்துகளின் தெய்வத்தன்மைக்கு அறிவியல் நெறி நின்று தத்துவ விளக்கம் தந்தவர் தமிழின் சிறப்பியல்புகளை விளக்குகின்ற தம்முடைய 'தமிழ் எழுத்துகளின் நுண்மை விளக்கம்' (The Tamil Alphabet-Its Mystic Aspect) என்னும் அரிய ஆங்கில ஆராய்ச்சி நூலில் தமிழ் மொழியின் ஒலி இயல்பு, தொல்காப்பியப் பெருமை, தமிழ் மொழியின் தொன்மை, ஆரியரின் வருகை, தென்னாட்டு மக்களின் வாழ்க்கை முறை, தமிழ் வட்டெழுத்துகளின் தன்மை முதலானவற்றைக் குறித்துப் பல புதிய கருத்துகளைக் கூறியுள்ளார். 'அஞ்ஞானம்', 'கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்' முதலியன இவர் படைத்த பிற நூல்களாகும். அவை இவர் ஆய்வுப் புலமைக்குச் சான்றுகளாகும்.

தமிழறிஞர் மு. இராகவையங்காருடைய 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' என்னும் நூலினைப் படித்து அவ்வாசிரியர்க்குப் பல்வகைச் சிந்தனை வினாக்களை மடல் வழி எழுப்பியுள்ளார். அது பற்றி இவ்விருவர்க்கும் இடையே நிகழ்ந்த எழுத்துப் போக்குவரவு 'தமிழ் அலகைத் தொடர்' என்னும் தலைப்பில் உள்ளது. அத்தொடரின் முதல் சுவடி தொல்காப்பிய ஆராய்ச்சி என்னும் தலைப்பில் 1924-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. சு இ.

**மாணிக்கம், வ.சுப.:** அண்ணாமலையெனப் பிள்ளைத் திருநாமங் கொண்ட மாணிக்கனார் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மேலைச் சிவபுரியில் 17.4 1917 – இல் சுப்பையா செட்டியாருக்கும் தெய்வயானை ஆச்சிக்கும் மகவாய்த் தோன்றினார். இளம் பருவத்திலே பெற்றோரையிழந்த இவர், தம் பாட்டனாரால் புரக்கப் பெற்றார். பின், பர்மாவுக்குச் சென்று கடையிற் பணி புரிந்தகாலை பொய்கூற வேண்டிய கட்டாயநிலை ஏற்படவே அப்பணி துறந்து தமிழ் பயிலத் தொடங்கினார். பண்டிதமணி கதிரேசர் முதலியோர்தம் உதவியால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் வகுப்பிற் பயின்று முதன்மையாகத் தேர்ச்சியுற்றார். சில திங்கள் அப்பல்கலைக் கழகத்திலேயே ஆய்வு மாணவராகவிருந்து பின் ஏழாண்டுகள் அங்கேயே விரிவுரையாளராகப் பணியாற்றினார். அப்போழுதே தனியாகப் படித்துப் பி.ஓ.எல்., எம்.ஏ. பட்டங்கள் பெற்றார். அதற்குப் பின் ஆய்வு மேற்கொண்டு தமிழில் வினைச்சொற்கள் பற்றி ஆய்ந்து எம்.ஓ.எல்.பட்டமும் 'தமிழில் அகத்திணைக் கொள்கைகள்' பற்றி ஆய்ந்து பிஎச்.டி.,பட்டமும் பெற்றார். பின்னர், 1948-ஆம் ஆண்டுத் தொடங்கி இருபதாண்டுகள் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணிபுரிந்தார். மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போந்து, தமிழ்த் துறைத் தலைவராகவும் இந்தியமொழிப்புல முதன்மையராகவும் தொண்டாற்றினார். பின் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவியேற்றுத் தமிழியல் வளர்ச்சிக்கும் பிற அறிவியல் துறைகளின் வளர்ச்சிக்கும் வழிவகுத்துத் துணைநின்றார். திருவனந்தபுரத்தின் மொழியியற் கழக ஆய்வு முதியராகப் பணியாற்றிய போது தமிழ்யாப்பு வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார். தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொல்காப்பியத் தகைஞராகப் பணி செய்த தன் பயனாகத் தொல்காப்பியத்துக்கு இவர்தம் புத்துரை விளக்கம் கிடைத்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பொன் விழாவில் இவருக்கு 'டி.லிட்டு'ப் பட்டம் நல்கிச் சிறப்புச் செய்தது. குன்றக்குடி ஆதீனம், 'முதுபெரும் புலவர்' என்னும் சிறப்புப் பட்டத்தையும், மேலைச் சிவபுரி

சன்மார்க்க சபை 'செம்மல்' என்னும் சிறப்புப் பட்டத்தையும் நல்கின.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொடக்க நிலையில் செயன் முறைகளை வகுக்க அமைக்கப்பெற்ற வல்லுநர் குழுவின் தலைவராகவிருந்து அதன் வளர்ச்சிக்கு வழி வகுத்தார். தமிழகப் புலவர் குழுவிற்கும், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்திற்கும், மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபைக்கும் தலைவராகத் திகழ்ந்து இவர் ஆற்றிய பணிகள் மிகப்பல. காரைக்குடித் தமிழ்ச் சங்கம் நிறுவிச் சங்கவிலக்கிய வகுப்பு நடத்தியும், இளஞ்சிறார்க்கு அறநூல்கள் ஒப்பித்தல் போட்டி வைத்துப் பரிசுகள் வழங்கியும் ஒல்லும் வகையெல்லாம் தமிழ்த்தொண்டு செய்தார். தில்லையில் அம்பலத்தின்கண் நின்று திருமுறைகள் ஓதி வழிபடப் பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் போன்றோரின் துணையோடு போராடி வாகைசூடினார்.



வ.சுப. மாணிக்கம்

வள்ளல் அழகப்பரின் கொடை வளம் ஏத்திக் 'கொடை விளக்கு' என்னும் கவிதை நூல் படைத்தார். இவர்தம் தனிப் பாடல்களின் தொகுப்பு 'மாமலர்கள்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. இவர்தம் படைப்புகளுள் 'வள்ளுவமும்', 'தமிழ்க்காதலும்' இருகண்களெனப் போற்றத்தக்கவை. 'தொல்காப்பியக் கடல்','திருக்குறட்சுடர்,' 'சங்க நெறி','காப்பியப் பார்வை','இலக்கியச் சாறு','தமிழ்க்கதிர்','தலைவர்களுக்கு' முதலியவை இவர்தம் பிற படைப்புகள். திருக்குறளை யாவரும் எளிதில் புரிந்துகொள்ள 'உரை நடையில் திருக்குறள்' என்னும் நூலை இயற்றியுள்ளார். மணிவாசகர் நூலக வெளியீடான 'கம்பர்' என்னும் இவரது நூல் தமிழகப் பரிசு பெற்றது. 'தமிழ்யாப்பு வரலாறு','தமிழில் வினைச் சொற்கள்', 'தமிழில் அகத்திணைக் கொள்கைகள்' என்னும் நூல்கள் இவரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றவையாகும். மன்பதையின் முன்னேற்றங்கருதி இவர் படைத்த நாடகங்கள் 'மனைவியின் உரிமை','நெல்லிக்கனி','உப்பங்கழி', 'ஒரு நொடியில்' என்பனவாம்.


'மழலையர் ஆங்கிலப் பள்ளிகளைத் தமிழ்ப்பள்ளிகளாக மாற்ற வேண்டும்; தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை, பயிற்று மொழி தமிழாதல் வேண்டும்' என்னும் கொள்கையினைப் பரப்பத் தமிழ் வழிக் கல்வி இயக்கங்கண்டு அதனைத் தமிழகம் எங்கணும் நடத்தி வந்தார். எழுத்துச் சீர்திருத்தம் என்னும் பெயரில் எழுத்து மாற்றம் செய்து தமிழுக்கு ஊறு செய்தலாகாது என்பதனைத் தம் கட்டுரைவழி அறிஞருலகத்திற்கு உணர்த்தினார். தமிழ்வழிக் கல்வி என்பதும், எழுத்துச் சீர்திருத்தம் தேவையில்லை என்பதும் இவர்தம் இறுதிக் குறிக்கோள்களாக அமைந்தன.

இவர் எளிய தோற்றமும் உயரிய நோக்கமுங் கொண்ட பழுத்த தமிழறிஞர்; சிறந்த சிந்தனையாளர்; தனித்தமிழ் ஆக்கத்திற்குத் தாமே புதியசொற்களைப் படைத்து எல்லா நிலையிலும் எங்குந் தமிழ் வளர ஓய்வென்பதறியாது உழைத்த உரஞ்சான்ற வித்தகர். அனைத்துக்கும் மேலாகப் பண்புவழி உலகினை நடத்தத் தம் மதிநுட்பத்தையும் நூற் புலமையையும் அசைவிலா ஊக்கத்தோடு பயன்படுத்தி வந்த சான்றோர். 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில், இத் தலைமுறையில், பல நிலையினும் சிறந்தோங்கித் தமிழ்ப் பணிக்காகவே வாழ்ந்து பண்பின் திருவுருவாய்த் திகழ்ந்த மூதறிஞர், செம்மல் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் 24.4.89-இல் எதிர்பாரா வகையில் மறைவெய்தியது தமிழன்னையின் தவக் குறையேயாம். இரா.சா.

**மாணிக்கவாசகர்:** தென்பாண்டி நாட்டின் திருவாதவூரில் ஆதிசைவ பார்ப்பனர்(அமாத்தியார்) குலத்தில் சம்புபாதாசிரியருக்கும் சிவஞானவதிக்கும் தவமகனாகத் தோன்றினார் மாணிக்கவாசகர். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் திருவாதவூரர் என்பது. அருளனுபவங் காரணமாக வாதவூர்த் தேசிகன், திருவாதவூரடிகள், பெருந்துறைப்பிள்ளை, மணிவாசகர், மாணிக்கவாசகர், வாசகர், ஆளுடைய அடிகள் முதலிய திருப்பெயர்கள் இவருக்கு அமையலாயின. சிவனுடைய கணநாதர்களுள் தலையாய நந்திதேவரே மாணிக்கவாசகராக வந்துதோன்றி

ஓங்காரப் பொருளை உலகிற்கு உணர்த்தினார் என்பது சைவ நம்பிக்கை. அதற்குச் சான்றாகக் 'குடமுழநந் தீசனைவா சகனாக் கொண்டார்' என்னும் அப்பர் திருத்தாண்டகப் பகுதியை எடுத்து மொழிவர். அதனால், மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர்களுக்குக் காலத்தால் முந்தியவர் என்றும் வாதிடுவர். எனினும், தேவார ஆசிரியர்களுக்கு மாணிக்கவாசகர் முந்தியவரா பிந்தியவரா எனுங் காலவாராய்ச்சியில் ஐயத்திற்கிடமின்றித் தெளிவான முடிவு ஏற்பட்டுள்ளதாகக் கொள்ளவியலாது.

சைவவுலகில் பத்திப் பெருநெறியிலே தமக்கெனப் பெருஞ்சிறப்பைக் கொண்டமையால் வாசகர் சமயகுரவர் நால்வருள் ஒருவர் ஆனார். இவர் பின்பற்றிய நெறியை ஞானநெறி அல்லது சன்மார்க்கம் என்பர்; நுனித்தாராய்ந்து உறழ்ந்துநோக்கி 'ஞானத்தில் ஞானநெறி' என்று கூறுவர். இவர் 'அறிவாற் சிவனே' என்று போற்றப்படும் பெருநிலைக்கு உரியவர் என்பது சைவவுலகங்கண்ட அனுபவ உண்மையாகும்.



மாணிக்கவாசகர்

**வாழ்வியற் படிநிலைகள்:** திருவாதவூரர் நம் இளமையிலே முறையான கல்வி, கேள்வி, ஒழுக்கம், அன்பு, அறிவு, ஆற்றல் முதலிய சிறப்புகளைப் பெற்றிருந்தார். இதைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டிய மன்னன் இவரின் தகுதியையும் திறமையையும் சீர்தூக்கிச் சிந்தித்து இவரை அன்புடன் அழைத்துத் தன் அமைச்சருள் ஒருவராக ஆக்கிக் கொண்டான்; 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்புகள் செய்தான். உலக நடைமுறையில் திருவருளால் அமைந்த அமைச்சுப்பணியில் அமர்ந்து அறநெறி வ்ழுவாமல் இவர் ஆணை செலுத்தி வரலானார். எனினும், உலகப் பொருள்களிலும் ஐம்புல இன்பத்திலும் அழுந்திவிடாமல் இறைநாட்டத்தைத் தம் அடிமனத்தில் பதித்துச் சமயவுணர்வு மிக்கவராய் விளங்கிவந்தார் நாட்டுப் பாதுகாப்பிற்கெனப் பாண்டியன் இவரைக் குதிரைகள்வாங்கிவரப் பெரும் பொருள் கொடுத்து அனுப்பிவைத்தான். குதிரை வாங்கச் சென்ற இவர்,வழியிலுள்ள சிவாலயங்களை வணங்கிக்கொண்டே செல்லலானார். இவர் தம் வாழ்வில் உயர்ந்த மடைமாற்றஞ் செய்யத் திருவுளங் கொண்டான் பரமன். திருவருட்செவ்வி இயைந்தமையால் திருப்பெருந்துறையில்-ஆவுடையார் கோயிலில் -குருந்தமரத்தின் கீழ் அடியார்கள் புடை சூழ அமர்ந்திருந்த மெய்ஞ்ஞானக் குரவரைக் கண்டு இவர் தம்வயமிழந்தார். திருவாதவூரர் ஞான குருவால் நல்லுபதேசமும் தீக்கையும் பெற்று ஆட்கொள்ளப்பட்டார்; மாணிக்கவாசகர் எனக் குருபிரானாலே சிறப்புப் பெயர் பெற்றார். அந்நிலையில் இவர் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் சற்குருவிடம் ஒப்புவித்து உலகியற் சார்பினின்றும் விடுபடலானார். திருவருளால் மனமாற்றமெய்திய இவர் விலையுயர்ந்த அணிமணிகளைத் துறந்து, எளிய திருக்கோலத்தினராய் இறைவனுடைய திருக்கோயிற் பணிகளுக்கே பெரும் பொருளைச் செலவிட்டார். தான் கொடுத்தனுப்பிய பொருளெல்லாம் செலவழிந்து விட்டதைக் கேள்வியுற்ற பாண்டியன் வெகுண்டெழுந்து, திருவாதவூரரைக் கொணரக் கட்டளையிட்டான். அப்போது தம் நிலையுணர்ந்த அடிகள் இறைவனிடம் முறையிடலானார். ஆவணி மாதம் மூல நாளன்று குதிரைகள் வரும் என்று தம் திருக்குறிப்பினால் பரமன் உணர்த்தவே, அதனை இவர் தம் மன்னனிடம் கூறிநின்றார். மன்னனும் நம்பியவனாய் அப்போதைக்கு இவர் மீது கொண்ட சினந் தணிந்தான். ஆனால், குறித்த நாளன்று திருப்பெருந்துறையில் குதிரை யொன்றுங் காணப்படவில்லையென ஒற்றர் வாயிலாக அறிந்த மன்னனுக்கு மீண்டும் சினமேற்பட்டது. இறைவனது வியத்தகு திருவிளையாடல் உலகினர்க்குப் புரியக்கூடிய காலம்

கனிந்தது. எனவே, இறைவன் காட்டு நரிகளைப் பரிகளாக்கிக் குறித்தநாள் முடிவதற்குள் பல குதிரைகளோடு குதிரைச் சேவகனாய்த் தோன்றி அவற்றை மன்னனிடம் ஒப்படைத்தான். மன்னன் வியந்தவனாய்த் தன் சிற்றந்தணிந்து மகிழ்வுற்றான்; திருவாதவூரரைப் பெருந்தன்மையுடன் நடத்தினான். ஆனால், அன்று வந்த பரிகளெல்லாம் அன்றிரவே நரிகளாக மாறி முன்னரே அங்கிருந்த பரிகளுக்கும் மதுரை மக்களுக்கும் தீங்கு புரிந்துவிட்டுக் காட்டிற்கு ஓடிவிட்டன. அதனையறிந்த வேந்தன் கடுஞ்சினங் கொண்டவனாய்த் திருவாதவூரரைப் பலவாறு துன்புறுத்தத் தலைப்பட்டான். தன் அடியவருக்கு நேருந் துன்பத்தினைப் பொறாத பரமன் வையையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்தான். வையைக்கரையைச் செப்பனிட்டுக் காக்கும் பொறுப்பு நகர மக்கள் அனைவருக்கும் ஏற்பட்டது. அச்சூழ்நிலையில் பிட்டு வாணிகம் புரிந்த அடியவளாகிய வந்திக்குக் கூலியாளாகச் சிவபெருமான் வந்து பணிபுரிய முற்பட்டான். எனினும், தன் வேலையில் கருத்தூன்றாமல் பொழுதுபோக்கலானான். ஏற்ற கடமையைப் புறக்கணித்துத் திரியும் அவனைப் பாண்டியன் கண்டு பிரம்பால் அடித்து நின்றான்; அந்தப் பிரம்படி உலகிலுள்ள ஒவ்வொருவர் முதுகிலும் படலாயிற்று. பாண்டியனும் தன்முதுகில் அந்த அடி விழுந்ததையுணர்ந்தான்; குதிரைச் சேவகனாகவும் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டவனாகவும் திருவிளையாடல் நிகழ்த்தியவன் இறைவனே என அறிந்ததும் மனந்திருந்தித் திருவாதவூரருக்கு வேண்டிய உபசாரங்கள் புரிந்து, அவர் விருப்பம்போல் நடந்துகொள்ளுமாறு இசைவளித்து உதவினான். இறைவன் தம் பொருட்டு இத்தகைய திருவிளையாடல் புரிந்துள்ளானே என நினைத்து நைந்துருகலானார் மாணிக்கவாசகர். திருப்பெருந்துறையில் தம்மை ஆட்கொண்டபோது, 'தில்லைக்கு வருக' என ஞானாசிரியர் பணித்ததை நினைவுகூர்ந்த இவர் தில்லைநோக்கிப் புறப்பட்டார். வழியில் பல சிவத் தலங்களுக்கும் சென்று வழிபாடியற்றிக் கொண்டே அருமையான பாசுரங்களைத் திருவாய் மலர்ந்தருளினார். தம்மை ஆட்கொண்ட சூழலிலும் பின்னரும் தம் வாழ்வியலனுபவ உணர்ச்சிகளைத் தீந்தமிழ்ப் பாக்களாகப் பாடிக்கொண்டே வந்தமையால், மாணிக்கவாசகர் என இறைவன் சூட்டிய திருப்பெயர் மிகப் பொருத்தமான காரணப் பெயராகவே ஆயிற்று. இவர் மதுரவாக்கிலே-மணிவாசகத்திலே-சொக்கிய இறைவன் இவரது பெருஞ்சிறப்பினை உலகிற்குணர்த்தத் திருவுளங்கொண்டான். தலப் பயணம் புரிந்துகொண்டு, இறுதியில் தில்லைப்பதியை அடைந்து மணிவாசகர் பத்திக் கனிவுடன் பல பதிகங்களைப் பாடியருளினார். திருவாசகப் பாக்களில் ஈடுபட்ட சிற்றம்பலவன் இவரை நோக்கிப் 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்றதும், ஆர்வத்துடன் திருச்சிற்றம்பலக் கோவையார் பாடியருளினார். திருவாசகம் சிவம் எனின், கோவையார் சக்தி எனத்தக்க சிறப்பும் உண்டாயிற்று.

ஆடல்வல்லானை நித்தமும் வழிபட்டு உருக்கமுடன் பாடித்திளைக்கும் மாணிக்கவாசகர், தில்லையம்மன் கோயிலுக்கருகிலுள்ள திருப்பாற்கடல் மடத்தின்கண் தங்கியிருந்தார். அங்ஙனம் தங்கியிருக்கும் நாளில் பொன்னம்பலவனே ஒரு கிழ வேதியராக வாசகர் முன் தோன்றி, 'உன் பாடல்கள் அனைத்தையும் தொகுத்துக் கூறுவாயாக' என உணர்த்த இவரும் அங்ஙனமே, கூற, அனைத்தையும் தம் திருக்கரத்தால் எழுதி, 'வாதவூரன் சொல்ல அழகிய சிற்றம்பல முடையான் கையொப்பம்' எனக் குறித்துக் கைச்சாத்துமிட்டுத் தம் பஞ்சாட்சரப்படியின் மீது வைத்து மறைந்தருளினார். தில்லை வாழந்தணர் திருவாசக ஏட்டினைக் கண்டு, வாதவூரடிகளை யணுகி அதன் பொருளை விளக்கியருளுமாறு வேண்டினர். மாணிக்கவாசகர் கூத்தப் பெருமானை வணங்கி 'இந்நூற்குப் பொருள் இந்த நடராசப் பெருமானே' என்று கூறி, அவர்கள் காணுமாறு ஆனி மகநாளில் அருட்பெருஞ் சோதியில் கலந்தருளினார் என்பது வரலாறு.

**மாணிக்கவாசகரும் அருளனுபவக் கூறுகளும்:** திருப்பெருந்துறையில் குருவருளால் ஆட்கொள்ளப்பட்ட பின்பு மாணிக்கவாசகர் படிப்படியே ஆன்மிக வானத்தில் சிறகடித்துக்கொண்டே அருளனுபவத்தில் திளைத்து வட்டமிடலானார். எது, எதையோ நிலைபேறுடையதென நம்பித் தம் இளமையைக் கழித்துவிட்டதாக நினைந்து வருத்தப்படலானார். செல்வம் பதவி முதலியவற்றை 'எய்ப்பில்வைப்பு' எனக் கருதியிருந்த பொய்ம்மையும் மயக்கமும் தீர்ந்து, 'சிவனருளே எய்ப்பில் வைப்பு' என்ற மெய்யுணர்வும் தெளிவும் கொண்டார். 'மனத்துணையே என்றன் வாழ்முதலே எனக்கு எய்ப்பில் வைப்பே' (நீத்தல் விண்ணப்பம்: 39)என்று இறைவனை நோக்கி நைந்து பரவலானார். இறைவன் காரணமாகத் தாம் கொள்ளும் அருள் நாட்டத்திற்கு இடையூறாகத் தம் உடம்பே இருப்பதாக உணர்ந்தார். ஒரு காலத்தில் தம் உடம்பையே இறைவனுக்கு இருப்பிடமாகக் கொண்டு 'எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்' (கோயிற்றிருப்பதிகம்: 10) என மொழிந்த வாசகர், துயர்தரும் தம் உடம்பு ஆன்மிக முயற்சிக்கும் ஈடேற்றத்திற்கும் இடையூறாய்த் தம்மைச் சிறைப்படுத்தும் ஒரு வலிய வலையாகவும் உள்ளதே என வெறுத்து ஒதுக்க முற்பட்டார். இதனைத் 'தினைத்துணையேனும் பொறேன் துயராக்கையின் திண்

வலையே' (நீத்தல் விண்ணப்பம்: 39) எனவரும் பகுதியால் அறியலாம்.

சமய ஞான வளர்ச்சிக்கும் பத்தி மேம்பாட்டிற்கும் அடியாரிணக்கம் மிகத் தேவை என்பது மணிவாசகர் நம்பிக்கையாகும். அதனைப் பலவாறு புலப்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாகத் திருவெம்பாவையில் 'உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம், உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்' (9) எனவரும் பகுதி அமையும். பத்திப் பெருநெறிக்கு, இறைவன் பேராற்றலையும் சீவான்மாவின் சிற்றெல்லையையும் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். இதனை மன்பதைக்கு உணர்த்தும் வகையில், தாம் பாடிய பாக்களில் சிவ பரம்பொருளின் பல்வேறு பெருஞ் சிறப்புகளையும் தம் தாழ்நிலையையும் மணிவாசகர் குறித்துச் சென்றுள்ளார். எடுத்துக்காட்டாகத் திருக்கோத்தும்பியில் 'பூ மேலயனோடு மாலும் புகலரிதென்று, ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க, நாய்மேற்றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ' (20) எனவரும் பாவைக் காண்க.

தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பொதுநலக் கொள்கையுடையவர் மாணிக்கவாசகர்; 'காலமுண்டாகவே காதல் செய்துய்ம்மின்' (திருப்பாண்டிப்பதிகம்: 5) எனத் தொடங்கி உலகியலாரைப் பரிவோடு அவர் அழைப்பது மனங் கொள்ளத்தக்கதாகும்.

**மாணிக்கவாசகர் – சமய இலக்கியப் பெரும் புலவர்:** கடல்மடை திறந்தனைய அருளனுபவங்களை விண்டுரைக்கும் வாசகர், இலக்கிய வகைமையைத் தக்கவாறு பாகுபாடு செய்துகொள்ளும் வகையில் பதிகங்களைப் பாடியருளியுள்ளார். சிகாமந்திரமாகிய திருவாசகம் ஒருவகையில் இறை நாட்டத்துடன் மேற்கொள்ளும் சீவான்மாவின் பயணப் பதிவேடாகவே அமைந்துள்ளது. அதனைச் சமயவுணர்வு உடையவர்கள் போற்றி நிற்கும் பாங்கினில் கற்பனை நலமும் மதிநலமும் உணர்ச்சி நலமும் யாப்புநலமும் செறிந்திருக்குமாறு அமைத்துள்ளார் வாசகர்.

மாணிக்கவாசகப் பெருமானார் அருளிய 658 பாடல்களும் 51 தலைப்புகளில் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், முதற்கண் அமைந்த சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் ஆகிய நான்கும் நான்மறைகளாகவே கருதிப் பாராயணஞ் செய்யத்தகும் என்ற நம்பிக்கை சைவர்களிடையே நிலவுகிறது. அவற்றின் சீர்மையைச் சிறிது விளங்கக் காண்கையில், காலத்தொடு கற்பனை கடந்த சிவபரம்பொருளின் தொன்மைச் சிறப்பை எடுத்துரைப்பது சிவபுராணம் 'என்பதும், வாக்கு மனங்கடந்த சிவபரம்பொருள் தன் அடியவர்கள் கண்ணாரக் கண்டு உய்தி பெறுமாறு திருத்தலந்தோறும் கோயில்கொண்டு எழுந்தருளிய மாட்சியை இயம்புவது கீர்த்தித் திருவகவல் என்பதும், அண்டங்களெல்லாம் சிவத்தின் முன்னர் இல்நுழைகதிரின் முன்னைப் பறக்கின்ற சிறு துகள்களாகும் என்று கூறி இறைவனது அளவில் பெருமையை நயந்துணர்த்துவது திருவண்டப்பகுதி என்பதும், உயிர்கள் பல்வேறு பிறவிகள் எடுத்து வருந்தித் துன்புற்று இறுதியில் திருவடிப் பற்றினால் இறைவனைப் போற்றிப் புகழ்வதை மொழிவது போற்றித் திருவகவல் என்பதும் உணரலாகும்

ஆன்மிகச் சிந்தனை மக்களிடையே பரவும் வகையில் மாணிக்கவாசகர் தம் திருவாசகப் பதிகங்களை உவமை முதலிய அணிநலங்களுடன் அமைத்துள்ளார். பதிகப் பாக்களைப் பண்ணொடுபடுத்தித் தாளமறுத்துப் பாடும் வகையில் இசைத்தமிழாகவும் ஆக்கியுள்ளார். திருவெம்பாவை, திருவம்மானை, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி முதலிய பதிகங்கள் மகளிர் ஆர்வமுடன் பாடிப் பயிலவும் சமய ஞானம் கொள்ளவும் சமய வாழ்வு மேற்கொள்ளவும் வழிவகுக்கும் தன்மையன; மகளிராலும் சமயப் பாதுகாப்பு அமைதல் நல்லது என்ற குறிப்புடையன. பொதுவாகக் காண்கையில், திருவாசகப் பாக்களால் பரமான்மாவிடம் சீவான்மா கொள்ள வேண்டிய முழுமையான அடைக்கலம்; திருவைந்தெழுத்தின் மாட்சி, ஆசைகளின் கொடுமை, ஆன்மிக வளாகத்தில் கொள்ள வேண்டிய அகக் குழைவு சமய ஞானத் தெளிவு முதலிய கருத்துகள் பாங்குடன் கூறப்படுகின்றன; திருக்கோவையாரால் உலக நடையில் அகத்திணைக் கூறுகளும் அவை வாயிலாகக் கொள்ளவேண்டிய 'நாயக நாயகி பாவ'மும் (Bridal mysticism) உணர்த்தப் படுகின்றன.

**மணிவாசகரும் சைவ சித்தாந்தமும்:** சைவசித்தாந்தத்தில் மாணிக்கவாசகருக்குப் பெரிதும் தோய்வு உண்டென்பது அங்கை நெல்லிக்கனியாகும். ஆனாலும், மாயாவாதம் உலகாயதம் பௌத்தக்கொள்கை முதலியவற்றில் வெறுப்பும் அவருக்கு இருந்தது.

சைவ சித்தாந்த சாத்திரத்திற்கு இலக்கியமாகும் வண்ணம் பெறலருங் கருத்துகளை மாணிக்கவாசகர் இயம்பியுள்ளார். ஆன்மா பொய்ச் சார்பை விடுத்து இருவினையொப்புணர்வுடன் மலபரிபாகமுற்று, மெய்ச் சார்பாகிய திருவருட்சக்தியின் மடியில் தவமும் பேறு கிட்ட முனைதல் வேண்டும். அவ்வாறு திருவருட்சக்தி ஆன்மாவில் பதிவதே சத்திநிபாதம் ஆகும். ஆன்மா சுத்தநிலையில் புகுகையில் இறை

வனே சற்குருவாகத் தோன்றியருளுகிறான். சற்குருவைப் பின்பற்றும் நிலையில் ஆன்மாவுக்கு ஞான வொளியை அருளவல்லவனே சிவன் என்பது சைவ சித்தாந்தம். இத்தகைய தத்துவ நுட்பங்களையுணருமாறு மாணிக்கவாசகர், 'அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனாகியருளிய பெருமை' (போற்றித் திருவகவல்:75-76) என்றும், 'ஈறிலாத நீ எளியை யாகிவந் தொளிசெய் மானுட மாக நோக்கியும்' (திருச்சதகம்:91) என்றும் பாடியருளியுள்ளார். குருவருளை வியந்தவண்ணம், அதற்கப்பால் பெறும் ஆன்மிக அனுபவத்தினை வாசகர் திருவம்மானையில், 'காட்டாதன வெல்லாம் காட்டிச் சிவங் காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி...ஆட்டான் கொண்டாண்டவா பாடுதுங் காணம்மானாய்' (6) என விளக்கியருளுகின்றார். இறைவன் அருவம் உருவம் அருவுருவம் எனும் மூன்று நிலைகளிலும் விளங்கியருளுதலை 'உரு மூன்றும் ஆகி உணர்வரிதாம் ஒருவனுமே, புரம் மூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ' (திருப்பூவல்லி. 6) என வரும் பகுதியால் உணரலாம். இவ்வாறே சைவ சமயத் தத்துவக் கருத்துகள் இவர் பாக்களில் நிரம்ப உள்ளன. வாசகரின் தேர்ந்த ஞான அனுபவச் சாரத்தினை 'வெள்ளந்தாழ் விரிசடையாய்..' எனத் தொடங்கும் திருச்சதகப் பாடலிலும், 'இன்றெனக் கருளி...' எனத் தொடங்கும் கோயிற்றிருப்பதிகப் பாடலிலும் பொதிய வைத்துள்ளமையைப் போற்றி நிற்பர்.

**மாணிக்கவாசகரது திருவாக்கின் ஆற்றல்:** சிவபரம் பொருளை நினைந்துருகி 'அழுது அடியடைந்த அன்பர்' எனப் போற்றப்பெறும் மாணிக்கவாசகர், புறச்சமயத் தாக்குதலினின்றும் சைவத்தைக் காக்க வேண்டிய சூழலில் பௌத்தர்களுடன் வாதிட்டு வென்றார்; அதனால் சமயக் காவலராகவும் விளங்கினார். பொதுவாகச் சமய அடியவர்கள் திருவருளால் வியத்தகு அற்புதங்களை நிகழ்த்தி மக்கள் மனத்தில் இடம்பிடித்துள்ளமையை வரலாறு கூறும். அவ்வாற்றான் தில்லையில் ஊமைப் பெண்ணைப் பேசவைத்த பெருமையும் மாணிக்கவாசகரின் திருவாக்கிற்கு ஏற்படலாயிற்று.

திருவாசகத்தின் உருக்கத்தையுணர்ந்த அதிவீர ராமபாண்டியர் சமயவூற்றங் கொண்டவராய் மாணிக்கவாசகரின் பாசுரப் போக்கினில் 'திருக் கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி' பாடியருளினார்; அந் நூலைச் சைவ உலகம் 'குட்டித்திருவாசகம்' எனப் போற்றிப் பரவுகிறது.

மாணிக்கவாசகரின் கனிந்த நெஞ்சத்தினை நன்கு புரிந்த அயல் நாட்டவராகிய போப்புப்பெருமகனார் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். செ.வை.

*மாத்தியமிகம்:* பௌத்த சமயத்தின் பதினெட்டு உட்பிரிவுகளுள் ஒன்றான மாத்தியமிகம் மகாயானப் பிரிவைச் சார்ந்ததாகும். வெறுமைக் கொள்கையை (சூனியவாதம்) உள்ளடக்கிய மாத்தியமிகக் கொள்கையை நாகார்ச்சுனர் (கி.பி. 200) என்பவர் மகாயான சூத்திரங்களிலிருந்து முறைப்படுத்தி நிறுவினார். இவர்தம் சிறந்த மாணாக்கரான ஆரிய தேவர் 'சதுசாதிகா' என்னும் நூலை எழுதியுள்ளார். நாகார்ச்சுனரின் தலைசிறந்த நூலான மூலமாத்தியமிக காரிகையைச் சிறந்த முறையில் விளக்கியவர்களுள் சந்திரகீர்த்தி (கி.பி.600 - 650) முதன்மையானவராவார்.

மாத்தியமிகம் என்னும் இப்பெயர், புத்தர் கற்பித்த நடுவு நெறியினைப் பின்பற்றுவோரின் கொள்கை என்பதால் ஏற்பட்டதாகும். புத்தர் தமது முதலாம் சீரிய உண்மையில் இவ்வுலக நுகர்ச்சியில் தோய்ந்திருத்தல், உடலைப் பெரிதும் வருத்துதல் ஆகிய இரு எதிர்நிலைகளுக்கும் நடு நிற்பதே நடுவு நெறி என்று கூறியுள்ளதற்கு, மாத்தியமிகர்கள் கொள்ளும் பொருள் மாறுபட்ட ஒன்றாகும். மாத்தியமிகர்களின் கருத்துப்படி இரு எதிர்நிலைகள் என்பது இரண்டு முடிவுகளைக் குறிக்கும். அவை உள்ளது, இல்லது; நிலைபேறுடையது, நிலைபேறற்றது; உயிர், உயிரில்லாதது போன்ற முடிவுகளாகும். ஏனெனில் 'இருப்பு, இன்மை' போன்ற முடிவுகள் வரையறையான நிலைகள். அவற்றின் நடுவினது யாது என்பதை விளக்க முடியாது. இக்கொள்கையின்படி எப்பொருளையும் உள்ளது என்றோ, இல்லது என்றோ; தோன்றியதென்றோ, மறைவதென்றோ; நிலைபேறுடையதென்றோ, நிலைபேறற்றதென்றோ; ஒருமைப்பாடுடைய தென்றோ, வேறுபாடுடையத் தென்றோ குறிக்க முடியாது. அத்தகையதொரு நடுவு நெறியினை ஏற்றவரே மாத்தியமிகர்கள் ஆவர்.

மாத்தியமிகர்களின் நடுவுநெறிக் கொள்கையைப் புத்த சமயத்தின் சார்பில் எழுதோற்றக் கொள்கையின் (பிரதித்ய சமுத்பாத) மூலம் நன்கு அறியலாம். அதன்படி பொருள்களின் தோற்றம், அதன் முன் காரணங்களையும் நிலைகளையும் சார்ந்ததாகும். இக்கருத்து வெறுமை வாதத்தால் குறிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக வெப்பம் தோன்றுவதற்குக் காரணமான நிலைகள் அமையும்போது அது தோன்றுகிறது. முன்னர் அது இல்லை. வெப்பம் நெருப்பின் இயல்பு அன்று. ஏனெனில் வெப்பம் நெருப்பின் இயல்பு எனின் அது எக்காலத்திலும் நிலைத்திருக்க வேண்டும். ஆனால் வெப்பத்தின் காரணங்கள் அமைகின்ற பொழுதே அது தோன்றுவதால் அது இயல்பு ஆகாது. பொருட்கள் அவற்றின் காரணங்கள் அமைகின்ற பொழுது தோன்றுகின்றன.

காரணங்கள் மறைகின்ற பொழுது பொருட்களும் மறைந்து விடுகின்றன. பொருட்களின் இத்தகைய முன்னரும் பின்னரும் இல்லாத நிலையிலானும், இப்பொழுதைய நிலையின் இயல்பு என்று எதுவும் இன்மையாலும், எப்பொருளைப் பற்றியும் எதுவும் சொல்ல முடியாது. சொல்லமுடியாது என்று கூடச் சொல்ல முடியாது என்று மாத்தியமிகர்கள் கருதுகின்றனர். இவ்வாறு புறப்பொருட்கள் என்று எதுவும் கிடையாது. அறிவு அல்லது கருத்து மட்டுமே உண்டு என்பதும், ஒருவர் புத்தர் அல்லது போதிசத்துவர் நிலையை அடைவது இவ்வுலக உயிர்கள் அனைத்தின் துன்ப நீக்கத்தின் பொருட்டு என்பதும், புத்தரைக் கடவுளாகக் கருதவேண்டுமென்பதும், வீடுபேறு என்பது நிலையற்ற தோற்ற நிலையுள்ள இப்படைப்பு முழுமைக்கும் அடிப்படையாய் விளங்கும் உயர்ந்த நிலை என்பதும் மாத்தியமிகர்களின் கொள்கைகளாகும்.

இன்னது என்று விளக்க முடியாத நிலையினைப் பற்றிக் கூறுவதால் மாத்தியமிகம், வேதாந்தத்தோடும், மேலைநாட்டு மெய்ப்பொருளியல் அறிஞர்களான காண்ட்டு, எகல் போன்றோரின் கருத்துக்களோடும் ஒப்பிடப்பட்டுப் பேசப்படுகிறது.

பி.ஆர்.ந.

**துணை நூல்:**

**லெட்சுமணன், கி.**, இந்திய தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்சு, சென்னை, 1970.

**மாத்திரை:** இதற்குக் கால அளவு என்பது பொருள். ஒலிக்கப் பெறும் பொருண்மையுடைய ஒலிக்கூறுகள் இன்ன கால அளவில் அமைய வேண்டும் என்ற நெறியே மாத்திரை ஆகும். இதனை 'எழுத்தின் குணம்' என்பர் பேராசிரியர் (தொல். பொருள் 313). எழுத்தொலியின் கால அளவாகிய இது, இலக்கணத்தில் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. எட்டு வகைகளாக உணர்த்தப்படும் எழுத்திலக்கணத்துள் 'இன்ன அளவின என்றலும்' என எழுத்துகளின் கால அளவு சுட்டப் பெறுகின்றது. எழுத்துகளின் குறியீட்டுப் பெயர்களும், அவை ஒலிக்கப்பெறும் கால அளவைக் கருதியே பெயரிடப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இம் மாத்திரை இயற்றமிழுக்கு அடிப்படைக் கூறாக அமைவதோடு இசைத்தமிழுக்கும் இன்றியமையாததாகின்றது.

கண்ணிமைத்தலும், கைநொடித்தலும் ஒரு மாத்திரைக்கு அடிப்படை அலகுகளாக அமைகின்றன. இயல்பாக நிகழும் செயலும், முயற்சியால் செய்யப் பெறும் செயலுமாக இரு முயற்சிகள் மாத்திரையாகக் கணக்கிடப்பெறுகின்றன. இயல்பாக நிகழ்தல் கண்ணிமைத்தலாதலால் அதனையே இலக்கண நூல்கள் அனைத்தும் முதலில் வைத்து மொழிகின்றன. எழுத்துகளை அளந்து அறியும் மாத்திரை சார்த்தியளத்தல் என்னும் அளவையைச் சார்ந்ததாகும். இது நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல், நெறித்தளத்தல், தேங்கமுகந்தளத்தல், சார்த்தியளத்தல், எண்ணியளத்தல் என்னும் எழுவகை அளவைகளுள் ஒன்று.

எழுத்துகளுள் குற்றெழுத்து ஒரு மாத்திரை; நெட்டெழுத்து இரண்டு மாத்திரை; உயிரளபெடை மூன்று மாத்திரை; குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் மெய்யும் ஓரோவொன்று அரைமாத்திரை; ஒற்றளபெடை ஒரு மாத்திரை; ஐகாரக்குறுக்கம் ஒரு மாத்திரை; மகரக்குறுக்கம் கால் மாத்திரை; உயிர்மெய்க்குற்றெழுத்து ஒரு மாத்திரை; உயிர்மெய் நெட்டெழுத்து இரண்டு மாத்திரை என இலக்கண நூல்கள் கூறுகின்றன. ஐ, ஔ என்னும் இரண்டு நெட்டெழுத்துகளும் ஒன்றரை மாத்திரை அளவுடையன எனக் கூறுதலும் உண்டு (அறுவகை இலக்கணம் நூ.60).

உந்தியிலிருந்து எழுந்த காற்றினைக் கூறுபடுத்தி மாத்திரை உரைத்தல் வேதத்தில் உண்டு. பொருள் தெரிகின்ற ஒலிக்கூறுகளுக்கு மாத்திரையுரைத்தலையே தமிழ் இலக்கண நூல்கள் கூறுகின்றன.

சா.கி.

**மாத்யூ தியோபால்டு (கி.பி.1790-1856):** இவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பாதிரியார்; குடியொழிப்பு இயக்கச் சீர்திருத்தவாதி (Temperance Reformer). பல இலட்சம் குடிகாரர்களைத் திருத்தும் சமுதாயப் பணி செய்த இவர் உலகப் புகழ் பெற்றவராகத் திகழ்ந்தார். பல நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து, இலட்சக்கணக்கானவர்களிடம் மதுநிறுத்த ஒப்பந்த உறுதிமொழிகளைப் பெற்றவர் இவர்.

மாத்யூ (Theobald Mathew) கி.பி.1790-இல் அயர்லாந்து நாட்டில் கேசலுக்கு அருகில் உள்ள திப்பரேரியில் பிறந்தார் (Tipperary near Cashel). இளமையில் துடுக்குமிக்கவராகத் திகழ்ந்த இவர் கில்கென்னியில் உள்ள புனித கேனிகாக் கல்விக் கழகத்திலும் (St. Canica's Academy), பின்னர் மேனூத்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். படிக்கின்ற காலத்திலேயே இறையன்பில் பெரிதும் ஈடுபட்டுக் கிறித்துவ சமயத்தொண்டு புரிய விழைந்தார். பிரான்சிசுகன் துறவுக் குழுவினைச் சேர்ந்த சிறு படித் துறவிகளின் மடத்தில் (Friars Minor Capuchins) கி.பி 1808-ஆம் ஆண்டு சேர்ந்து படித்தார். ஆறாண்டுகள்

கழித்துத் தியோபால்டு பாதிரியாராக (Priest) ஆனார். பின்னர், இருபத்தைந்து ஆண்டுக் காலம் கார்க்கு நகரில், திருச்சபை ஆட்சி வட்டாரம் சார்ந்த பணிகளில் தம்மை ஒப்படைத்துக் கொண்டார். இவர் ஐரிசுத் துறவுக் குழு வகையினரின் சமய மாநில முதல்வர் பதவியில் கி.பி.1828 - ஆம் ஆண்டு அமர்த்தப்பட்டார். அப்பணியில் இவர் தம்மை 13 ஆண்டுக் காலம் ஈடுபடுத்திக் கொண்டமையால் மக்களால் பெரிதும் மதிக்கப் பெற்றார். போப்பாண்டவர் நிலை சார்ந்த சமய வட்டத் தலைவரின் தனிப் பேராளர்கள் சார்ந்த சமயப் (Commissary Apostolic) பதவி உயர்வு கி.பி.1841 - இல் பெற்றார்.

இவர் மேற்கொண்ட குடியொழிப்பு இயக்கமே (Temperance Campaign) இவருக்குப் பெரும் புகழையும், பெயரையும் தேடித்தந்தது. இவர் அத் தூய பணியை கி.பி.1838-ஆம் ஆண்டிலேயே அயர்லாந்தில் தொடங்கி வைத்தார். அதன் விளைவாக இவர் அனைத்துலகப் புகழ் பெறத் தொடங்கினார். அயர்லாந்துக் குடிப்பழக்க ஒழிப்புப் பணிகளைச் சிறப்புடன் செயற்படுத்திய பின்னர், தியோபால்டு இங்கிலாந்து, இசுகாட்லாந்து (Scotland) முதலான நாடுகளுக்குப் பயணம் செய்து, குடிப்பழக்கத்தின் தீமைகளைப் பற்றி எடுத்துரைத்தார். இவர் கி.பி.1849 முதல் 1851 முடிய அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று 60,00,000 மக்களிடம் மது நிறுத்த ஒப்பந்த உறுதி மொழியைப் பெற்றார். இவர் தம் தூய பணியின் விளைவாக, அமெரிக்காவில் சில தூய நற்பணி மன்றங்கள் முகிழ்த்தன. அவற்றுள் அமெரிக்கக் கத்தோலிக்க முழு மதுத்தவிர்ப்பு மன்றம் (The Catholic Total Abstinence Union of America) அயர் முன்னோடிகள் (The Pioneers of Eire) ஆகியன குறிப்பிடத்தக்கன. இவரது அயராத உழைப்பாலும் நல்லுரைகளாலும் ஏழு மில்லியன் பேர்களுக்கு மேல் மது நிறுத்த ஒப்பந்த உறுதி மொழியை மேற்கொள்ளச் செய்தார். அதன் விளைவாக மது இறக்குமதியும் பெருமளவில் குறைந்தது. இவரது தீவிர உழைப்பால் இவருக்குப் பொருளாதாரத் தட்டுப்பாடும் ஏற்பட்டது. எனவே, கி.பி.1847-இல் சில காலம் இவர் கடனுக்காகச் சிறையில் இருக்க வேண்டியதாயிற்று. இருப்பினும் விக்டோரியா அரசியார் இவருக்கு ஓய்வூதியத் தொகை (Pension) அளித்து இவரை ஊக்குவித்தார்.

பொது நலப்பணிக்காகத் தம்மை ஒப்படைத்துக் கொண்ட இத்துறவி கி.பி.1856-இல் கார்க்கு நகரில் உள்ள குயின்சுடவுனில் காலமானார். தன்னலமற்ற பணி புரிந்த இவர் உலகப் புகழ் பெற்றுள்ளார். 'தந்தை தியோபால்டு' (Father Theobald) எனவும் இவர் அழைக்கப்பட்டார். க.ம.

*மாதரி*: இவள் சிலப்பதிகாரத்தில் பயின்று வரும் ஆயர் குல முதியவள். வைணவ சமயத்தைச் சேர்ந்தவள்; ஆயர்சேரியில் வாழ்ந்தவள்; திருமால் வழிபாடு கொண்டவள்; மதுரைப் புறஞ்சேரியில் பூங்கண் இயக்கிக்குப் பால்மடை கொடுத்து வருகின்ற பழக்கம் கொண்டவள்; சமணத் துறவியாகிய கவுந்தியடிகளிடம் நிரம்பிய அன்பும் மதிப்பும் கொண்டவள். அதனால், கவுந்தியடிகள் கண்ணகியை இவள்பால் அடைக்கலமாகத் தந்தார்.

கவுந்தியடிகளை மாதரி கண்டு அடிதொழுதவுடன் அவளைத் 'தீதிலள்', செவ்வியள்', 'அளியள்' என அவர் எண்ணுகிறார். இச் செயல், மாதரியை மிக உயர்த்திக் காட்டுகிறது. கவுந்தியடிகளைக் கண்டு அடிதொழுததால் மாதரி சமயக் காழ்ப்பற்றவளாகிறாள். கண்ணகியை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என அடிகள் உணர்த்தினாரோ அதேபோன்றே மாதரி பாதுகாக்கிறாள்; கண்ணகிக்கு உதவியாகத் தன் மகள் ஐயையை இருக்கச் செய்கிறாள். 'நோதக வுண்டோ நும் மகனார்க்கு' (சிலப்.16:17) எனக் கண்ணகியிடம் கூறிக் கோவலனின் விருப்பத்தையும் நலத்தையும் மாதரி அறிந்து கொள்கிறாள். கோவலனும் கண்ணகியும் உண்டு இனிது இருக்கும் காட்சியை மாதரியும் ஐயையும் கண்டு மகிழ்கின்றனர். அடிகள் ஒப்படைத்த அடைக்கலப் பொருளுக்கு எவ்வகையான தீங்கும் நேராமல் பாதுகாப்பதில் மாதரி இறுதி வரையில் உறுதியாக இருக்கிறாள்.

மாதரி கோயிலுக்கு முறைநெய் தருகிற வழக்கம் கொண்டிருந்தாள். குடத்துப்பால் உறையாமலும், வெண்ணெய் உருகாமலும், மறி முடங்கி ஆடாமலும் இருத்தலைக் கண்டு அவற்றைத் தீ நிமித்தமாக எண்ணுகிறாள். தன் அடைக்கலப் பொருளுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ எனக் கருதித் தன் மகளைக் குரவையாடச் செய்கிறாள்; கோவலனின் கொலைச் செய்தியை அறிந்த மாதரி கண்ணகியிடம் அதனைச் சொல்வதற்கு வகையறியாமல் வருந்துகிறாள். அடைக்கலப் பொருளைச் காக்கவியலாத காரணத்தால் மனம்நொந்து மயக்கமுற்றுத் துன்பமடைகிறாள். பின் நடுஇரவில் தீமூட்டி அதனுள் சென்று தன்னுயிரைப் போக்கிக் கொள்கிறாள்.

இத்தகு தியாகவுள்ளம் கொண்ட மாதரி மறுபிறவியில் சேரநாட்டில் திருமாலுக்கு அடித்தொண்டு செய்யும் சேடக்குடும்பிக்கு மகளாகப் பிறக்கும் சிறப்பைப் பெறுகிறாள். கண்ணகிக்குச் சேரவரசன் சிலையமைத்து விழாவெடுத்தபோது மாடலன் தெளித்த நீரால் முற்பிறப்புச் செய்திகளைக் கூறுகிறாள்; அடைக்கலப் பொருளை இழக்கக் காரணமாக இருந்ததாகக் கூறி அரற்றுகிறாள்.

இம் மாதரி சிலப்பதிகாரத்தில் ஊன்று பாத்திரமாக நிலவுகிறாள் என்பர். இவள் காப்பியத் தலைமக்களோடு ஒட்டிக் கதையின் வளர்ச்சிக்கு உதவி புரிகிற பாத்திரமாக அமைந்துள்ளாள். 'மாதர் காதல்' (தொல்.சொல்.322) என்பதற்கேற்ப மாதரி என்ற சொல் எல்லோராலும் விரும்பப்படுகின்ற பொருள் எனப் பொருள்தரும். எனவே, மாதரி கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி ஆகியோராலும் விரும்பப்பட்டவளாகவும் இன்றியமையாத பாத்திரமாகவும் விளங்குகிறாள். சா.கி.

*மாதவ சதாசிவ கோல்வால்கர்* (1906-1973). நாகபுரியில் 1906-ஆம் ஆண்டு சதாசிவராவ் இலட்சுமி அம்மாளுக்கு மகனாகத் தோன்றினார்; இளமைக் காலத்திலேயே அறிவாற்றல் நிரம்பப் பெற்றவராக விளங்கினார்; பள்ளிப் பருவத்திலேயே பேச்சாற்றலுக்காகப் பலபரிசுகளைப் பெற்றார்; கவிதை இயற்றுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் இந்தி, மராத்தி, ஆங்கிலம், முதலிய மொழிகள் அறிந்தவர். பள்ளிப் பருவத்திலேயே இவர் ஆசிரியர் போற்றும் வகையில் ஆங்கிலக் கவிதைகளை மராத்தியில் மொழிபெயர்த்தார். முறையாக உடற்பயிற்சி செய்து கட்டான உடலைப் பெற்றிருந்தார். இவர் இராசுட்டிரிய சுயம் சேவக சங்கத்தின் உயர் பதவியினை வகித்தார். இவர் சாந்தா என்னும் ஊரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பயின்று பின்னர், நாகபுரி கில்லாப் கல்லூரியில் பயின்று முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். பின்னர், இவர் காசி இந்துப் பல்பலைக்கழகத்தில் பயின்று 1926-இல் இளங்கலை அறிவியல் (B.Sc.) தேர்விலும் 1928-இல் முதுகலை அறிவியல் (M.Sc.) தேர்விலும் முதல் வகுப்பில் தேறினார். இவர் காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியேற்றார்.

**பொதுப்பணியில் ஆர்வம்:** காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்த போது இவர் அடிக்கடி இராமகிருட்டிணர் குடிலுக்குச் சென்று வந்தார். இவர் ஆர்.எசு.எசு (R.S.S). சங்கத்துடனும், அதன் நிறுவனரான டாக்டர் கெட்கேவாருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டார்; பண்டித மதன் மோகன் மாளவியாவுடன் நன்கு பழகினார்; சிரீ குருசி (Sri Guruji) என்று எல்லோராலும் பாராட்டப்பட்டார்; மூன்றாண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றியபின் நாகபுரிச் சட்டக்கல்லூரியில் பயின்று 1935-இல் சட்டத் தேர்வில் வெற்றி பெற்றார்; இசையிலும் நன்கு தேர்ச்சி பெற்றார்; மக்களுக்குச் சேவைபுரிவதில் மகிழ்ச்சி கொண்டார். யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் இவர் 1936-இல் பொதுப் பணியில் ஈடுபடும் நோக்கத்துடன் வீட்டை விட்டு வெளியேறிச் சுவாமி அகண்டானந்தரின் சீடரானார். டாக்டர் கெட்கேவாருடன் இணைந்து ஆர்.எசு.எசு. இயக்கத்திற்குத் தொண்டு புரிந்தார்; ஆர்.எசு.எசு. பயிற்சி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்துவதில் பேருதவி புரிந்தார்.

பெருமதிப்பிற்குரிய கெட்கேவாரின் இறப்பிற்குப்பின் இவர் 1940-இல் ஆர்.எசு.எசு. இயக்கத்தின் உயர் பதவியை (சர்சங்கசாலக்) ஏற்றார். பாரதம் முழுவதும் பயணம் செய்து ஒவ்வொரு பகுதியிலும் உள்ள முக்கியமான நகரத்திற்குச் சென்று அங்குள்ள பயிற்சிப் பாடிகளைப் (சாகா) பார்வையிட்டுச் சுயம் பணியாளர்களையும், செயல் தலைவர்களையும் சந்தித்துவரலானார். ஆர்.எசு.எசு. இயக்கத்தின் கொள்கைகளை நாடெங்கிலும் பரப்புவதில் இவர் தம் வாணாளைச் செலவிட்டார். இவர் 35 ஆண்டுகள் பாரதம் முழுவதும் தொடர்ந்து பயணம் செய்து ஆன்மிக வளர்ச்சிக்கும் இந்திய ஒற்றுமைக்கும் பாடுபட்டார்.

இரண்டாம் உலகப் போரின்போது நாட்டில் குழப்பமும் பயங்கர வாதமும் தலைவிரித்தாடின. அப்பொழுது இவர் தம் பயணத்தைத் தொடர்ந்தார். பாகிசுத்தான் பிரிவினைக்காலத்தில் ஆயிரக்கணக்கில் இந்துக்கள் கொல்லப்பட்டபோது இந்துக்கள் ஒன்றுபட வேண்டிய இன்றியமையாமை குறித்து இவர் அறிவுரை கூறினார். காந்தியடிகள் 1948-இல் சுடப்பட்டார். அக்கொலைக்கும் ஆர்.எசு.எசு இயக்கத்திற்கும் தொடர்பு இல்லை. ஆயினும் 1948-இல் காந்தியண்ணல் சுடப்பட்டபோது இவர் சார்ந்திருந்த இயக்கம் தடை செய்யப்பட்டதுடன் இவரும் கைது செய்யப்பட்டார். பின்னர், இவர் விடுதலை செய்யப்பட்டார். சங்கத்தின் மீதிருந்த தடையும் 1949-இல் நீக்கப்பட்டது. இவர் தமது சங்கப் பணியினைக் குறைவின்றிச் செய்து வந்தார். இவர் மறுத்தும்கூட 1956-இல் இவருடைய 50-ஆம் ஆண்டு நிறைவு விழா தொண்டர்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**தூய பணிகள்:** மரியாதைக்குரிய இவரது வழிகாட்டுதலின் பேரில் நாடுதழுவிய அளவில் பசுவதை எதிர்ப்பு இயக்கம் வெற்றியுடன் நடந்தது. தொழுநோயாளிகளுக்குத் தொண்டு புரியப் பல மருத்துவ இல்லங்களை இவர் தொடங்கினார்.

**அரசுடன் ஒத்துழைப்பு:** பாகிசுத்தானம் 1965-இல் பாரதத்தின்மீது படையெடுத்தபோது, தலைமை அமைச்சர் இலால்பகதூர் சாத்திரி இவரைத் தில்லிக்கு வரவழைத்துச் சங்கத்தின் ஒத்துழைப்பை வேண்டினார். இவரும் மகிழ்ச்சியுடன் ஒத்துழைப்பு அளித்தார்.

இவரே விசுவ இந்து பரிசத்து (Vishva Hindu Parishad) என்னும் விதையை விதைத்துக் கண்ணும் கருத்துமாக வளர்த்துக் காப்பாற்றினார் என்பர். அச்சபை விரைவாக வளர்ந்து உலகம் முழுவதும் பரவ வேண்டுமென்பதே இவர் ஆசை. அர்சப் பெரு மன்னர் (Harsha Vardhana) ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிரயாகையில் மாபெரும் ஆன்றோர் அவையைக் கூட்டிப் பெருவிழா நடத்தியதைப் போன்று, இவர் தம் பெரும்முயற்சியால் 1966-ஆம் ஆண்டு பிரயாகையில் கும்பமேளா காலத்தில் விசுவ இந்து பரிசத்தினரின் மாபெரும் மாநாடு ஒன்றினை நடத்தினார். நாட்டில் உள்ள சண்டை சச்சரவுகளைத் தீர்க்கவும், பிரிவினை எண்ணங்களை ஒழிக்கவும், ஆன்மிகத்தை வளர்க்கவும் பாடுபட்ட மதிப்பிற்குரிய இவர் 1973-ஆம் ஆண்டு நாகபுரியில் காலமானார்.

க.ம.

*மாதவி*: தமிழிலக்கிய வரலாற்றில், பாத்திரப் படைப்பு அமையப்பெறும் காப்பிய இலக்கிய வகையில் முதல் நூலாகக் கிடைத்திருப்பது இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் ஆகும். அக்காவியத்தின் இரண்டாம் கதைத் தலைவியாகக் கணிகையர் குலத்துதித்த கற்புக்கரசி மாதவி கருதப்படுகிறாள்.

இவளுடைய தாய் பற்றிய குறிப்பு எதுவும் சிலப்பதிகாரத்தில் இல்லாமற் போயினும், அவ்விலக்கியத்தின் தொடர்ச்சியாகக் கருதப்படுகிற மணிமேகலையில் 'சித்திராபதி' யே மாதவியின் தாய் என்பது தெரிகிறது. ஐந்து வயதில் கலை பயிலத் தொடங்கிய மாதவி,ஏழாண்டுகள் அதனைக் கசடறக் கற்ற பின்பு, தன் பன்னிரண்டாம் வயதில் அரங்கேறுகிறாள். அரசன் மாதவிக்களித்த பச்சைமாலையைக் கூனி ஏலமிட்டாள். ஆயிரத்தெட்டுக்கழஞ்சுப்பொன் கொடுத்து அம்மாலையை வாங்குபவரே மாதவிக்கு உரியவர் ஆவார் என்பதை ஏற்றுமாலையை வாங்கிக் கோவலன் கூனியோடு மாதவி இல்லம் செல்கிறான். கோவலன் மாதவி இல்லம் வந்த பின்னர்த் தன் மனைவியான கண்ணகியை மறந்து, 'விடுதல் அறியா விருப்பினனாய்' மாதவியுடன் வாழ்கிறான். பதின்மூன்று ஆண்டுகட்குப்பின், இந்திரவிழாவில் மாதவியின் நடனம்முடிவுபெற்றவுடன்,கோவலனும் மாதவியும் கடல் விளையாட்டைக் காணச் செல்கின்றனர். அப்போது கோவலன் யாழிலிசைத்த பாட்டிற்கு எதிராகக் கருத்துப்படும்படி மாதவி பாட, கோவலன் பிரிகிறான். மாதவி தனியாக இல்லம் வந்து அவன் அன்பிற்காக ஏங்குகிறாள். அவனை அடைய முயற்சியும் செய்கிறாள். அது பயனில்லாதாகிறது. கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட பின்னர் அறவணவடிகளின் அறிவுரையால் புத்த மதத்தைத் தழுவுகிறாள். தன்மகள் மணிமேகலையையும் துறவறத்தில் ஈடுபடுத்துகிறாள்.

சிலப்பதிகாரக் கதைப்போக்கில் இரண்டு இன்றியமையாத் திருப்பங்கள் மாதவியின் நடனத்தாலேயே நிகழ்கின்றன. அரங்கேற்றத்தின் முடிவில் கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியிடம் வருகிறான். இந்திரவிழா நடனத்தின் முடிவில் அவன் மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் செல்கிறான். மாதவி சிறந்த கலையாற்றல் மிக்கவள். அதனால் தான் கனகவிசயரை வென்ற போர்க்களக் காட்சியை விளக்க இளங்கோவடிகளுக்கு அறுபத்தைந்து அடிகளே தேவைப் பட்டன; மாதவியின் கலைக்கள வெற்றியைப் பாட நூற்றறுபத்தைந்து அடிகள் தேவைப்பட்டன. அழகு மகளாகவும், ஆடல் மகளாகவும் விளங்கிய மாதவி, தன் வாழ்க்கையை இரண்டு நோக்கில் நடத்த வேண்டியவளானாள். முதலாவதாக சமூகம், சமயம் இவற்றின் வளர்ச்சிக்காற்றும் கலைப்பணி; அடுத்துத் தன்னிடம் வந்த கோவலனுடன் வாழும் வாழ்க்கை; இரண்டையும் ஒருங்கே மிகச்சிறப்புடன் செய்கிறாள் மாதவி.

பிறப்பால் கீழ்மைப்பட்டவளாயினும், பண்பு நலனால் உயர்ந்து நிற்கிறாள் மாதவி. அதனால் தான், இளங்கோவடிகள் மாதவியை எந்தவிதத்திலும், எந்த இடத்திலும் மாசுபடுத்தவேயில்லை. மாதவி, கோவலன் தன்னைவிட்டுப்பிரிந்த துயரத்திலிருந்தாளே தவிர, கண்ணகியோடு சென்றான் என்பதற்காக அவள் கண்ணகியை எந்த நிலையிலும் பொறாமைக் கண்ணோடு பார்க்கவுமில்லை; ஏசவுமில்லை. மாறாக, தன் மகள் மணிமேகலையை 'மாபெரும் பத்தினி மகள்' என்று கண்ணகியின் மகளாகவே வருணிக்கிறாள்.

மாதவியைக் குறித்துச் சிலப்பதிகாரத்தில் வரும் அடைமொழிகள் எல்லாம், அவளுடைய உடலழகையும், உறுப்பு நலனையும் குறிப்பதாகவே அமைகின்றன. கற்பு பற்றிய அடைமொழி எவ்விடத்தும் இல்லையாயினும், அவள் வாழ்கிற வாழ்க்கையே அவளின் கற்பைத் தெளிவாக்குகிறது. கோவலன் பிரிந்த பிறகு, அவனிடம் செல்வம் இல்லை என்று அவள் நினைத்திருந்தால், தன் வாழ்வை மாற்றிக்கொண்டு வேறொரு ஆடவனோடு வாழ்ந்திருக்க முடியும்; அவ்வாறில்லாமல் ஒரு நெறி மனத்தாளாய் இறுதி வரை வாழ்ந்தாள். சித்திராபதி தன் பேத்தியான மணிமேகலையையாவது கணிகையாக்கிட வேண்டும் என்று முயன்றபோது தாயென்றும் பாராமல் எதிர்த்துப் பேசி, தன் விருப்பப்படியே துறவு வாழ்க்கையில் ஈடுபடுத்துகிறாள். தானும் துறவு வாழ்க்கை

மேற்கொண்டாலும், என்றும் கோவலன் நினைவாகவே வாழ்கிறாள்.

அறிவில் கூட மாதவி உயரிய இடத்தைப் பெறுகிறாள். இதற்கு அவள் கோவலனுக்கெழுதிய இரு மடல்களே சான்றுகளாகும். முதல் மடலை அவள், தாழம்பூவில், பித்திகை அரும்புகளால் செம்பஞ்சுக் குழம்பு கொண்டு தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்தி எழுதுகிறாள். இரண்டாம் மடலோ காதற் சூழ்நிலை ஏதுமின்றி எழுதப்பட்டது. அம்மடலே, யாரால் 'சலம்புணர் கொள்கைச்சலதி' என்று வருணிக்கப்பட்டாளோ, அதேகோவலனால் 'தன் தீது இலள்' என்று உணர்ந்து உரைப்பதற்குக் காரணமாய் அமைந்தது. அந்தமடல், காதலனுக்கு எழுதப்பட்ட மடல் போலின்றி, தந்தைக்கோ, தமையனுக்கோ, ஆசிரியனுக்கோ எழுதும் மடல் போல அமைந்தது.

பல அரிய நற்பண்புகளைப் பெற்ற மாதவி, தீய பண்புகளற்றவளாயினும் சில குறைகளைப் பெற்றிருந்தாள். கோவலன் மற்றொரு பெண்ணின் கணவன் என்பதைப் பற்றிக் கவலையின்றி அவனோடு வாழ்ந்தாள். அவன் செல்வம் குறைகிறபோது சுட்டிக்காட்டும் திறனின்றியிருந்தாள். கடல் விளையாட்டின் போது கோவலன் 'மாதவிதன் மனம் மகிழ'ப் பாடிய பாடலுக்குத் தவறான பொருள் கொண்டு கானல்வரி பாடித் தன் வாழ்க்கையையே திசைமாற்றிக் கொண்டாள்.

இவ்வாறு நல்ல பண்புகள் பல பெற்று, சிற்சில குறைகளையுமுடைய மாதவி, கோவலன் தன்னை உணர்ந்து கொள்ளத் தன் அன்பினாலேயே முயன்று வென்றவள். ஆடலால் வாழ்க்கையை அமைத்துப் பாடலால் உறவைப் பிரித்து, இறுதியில் அனைத்தையும் துறந்து அறநெறியில் தலைப்பட்டாள். தன் குலத்தீமையை வேரொடு களைந்தாள். அரசன் திகைக்க, ஊரார் வியக்க, சுற்றத்தார் இரங்க, பெற்றதாயும் வருந்த, கணிகையர் வாழ்வோடு தனக்குத் தொடர்பில்லை என்பதை நாடறியச் செய்து, தன் மகள் மணிமேகலையையும் தவச்செல்வியாக்கினாள். இவ்வாறு ஒரு பெரும் சமூகச் சீர்திருத்தத்தைச் செய்து புரட்சிமனம் கொண்டு வாழ்ந்தவள் மாதவி. சா.மு.

மாதவையா, அ: இவர் தமிழ்ப்புதின முன்னோடிகளுள் ஒருவர். திருநெல்வேலி மாவட்டம் பெருங்குளத்தில் கி.பி. 1872-ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையின் பெயர் அப்பாவையர்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பி.ஏ., பட்டம் பெற்ற இவர் அரசு அலுவலராகப் பணியாற்றிய பின் 1923 - இல் சென்னையில் வந்து தங்கிப் 'பஞ்சாமிர்தம்' என்ற தமிழ் இதழைத் தொடங்கி நடத்தினார். அதில் அரசியல், கவிதை, இலக்கியத் திறனாய்வு, சிறுகதை, கட்டுரை, சமூகச்சீர்திருத்தம் முதலியன இடம் பெற்றன. 'கோணக் கோபாலன்' என்ற புனைபெயரில் கவிதைகளும், கட்டுரைகளும் எழுதினார். இவர் படைப்புகளில் சமூகச்சீர்திருத்தமும் பெண்கள் முன்னேற்றமும் அழுத்தம் பெற்றன.

பத்திரிகைகளில் முதன்முதல் தமிழில் தொடர்கதை எழுதிய பெருமைக்கு உரிய இவர், கி.பி. 1898-1900-ஆம் ஆண்டுக்கால அளவில் இரு தொகுதிகளாக வெளியிட்ட 'பத்மாவதி சரித்திரம்' முதல் ஐந்து தமிழ்ப்புதினங்களுள் ஒன்று என்னும் சிறப்புப் பெற்றுள்ளது. இலக்கியப் பண்பும் ஆசிரியனின் தனிப்பண்பும் இவர் எழுதிய நூல்களில் இடம் பெற்றன. இவருடைய இராமாயணப் புலமையும், திருக்குறள் ஈடுபாடும் இவர் நூல்களில் வெளிப்பட்டன.

ஆங்கிலத்தில் எழுதும் திறமையும் கைவரப்பெற்ற இவர், ஆங்கிலத்தில் பல கதைகளும், கட்டுரைகளும் எழுதியுள்ளார். 'தில்லைக் கோவிந்தன்' என்ற ஆங்கிலப் புதினம் தமிழர் பண்பாட்டைப் பிறமொழியாளரும் அறிய உதவும் வகையில் படைக்கப்பட்டது. இவரால் இயற்றப்பட்ட நூல்கள் பல திறத்தன; அவற்றுள் சில புதினங்கள் பத்மாவதி சரித்திரம், விசய மார்த்தாண்டம், முத்து மீனாட்சி என்பன. கதைகள் பாலஇராமாயணம், சித்தார்த்தன், தட்சிணசரித்திர வீரர், பால விநோதக் கதைகள். நாடகம் திருமலை சேதுபதி, பாரிசுடர் பஞ்சநாதம். சிறுகதை குசிகர் குட்டிக் கதைகள். பாட்டு, பொது தரும சங்கீத மஞ்சரி, புது மாதிரிக் கல்யாணப்பாடல். பிற குறள் நானூறு, ஆசாரச் சீர்திருத்தம்.

பல திறப்பட்ட எழுத்தாற்றல் வாய்ந்த இவர் 1925 - ஆம் ஆண்டு அக்டோபர் 25 - ஆம் நாள் சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் போதே உயிர் நீத்தார். க.ஆ.

மாதி: அல்-மாதி (Al-Mahdi) என்னும் அரபுமொழிச் சொல்லுக்குக் 'கடவுளால் வழி நடத்தப்படுபவர்' (Divinely guided one) என்பது பொருள். உலகில் கடவுளின் தூதர் தோன்றி, உண்மையான சமயத்தை நிலைநாட்டி, நீதியையும், சமத்துவத்தையும் ஏற்படுத்திப் பொற்காலத்தை உண்டாக்குவார் என்ற நம்பிக்கையே மாதிக் கொள்கை (Mahdism) எனப்படுகிறது. திருக்குரானிலோ அல்லது இசுலாமிய மரபிலோ இதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, சுன்னிப் பிரிவினர் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதில்லை. சியா பிரிவினர் இக்கருத்தைப் பின்பற்றினாலும், மாதியைக் கண்டறியும்

முறையில் மாறுபடுகின்றனர். இது சியாக்களிடையே பல பிரிவுகள் தோன்ற ஒரு காரணமாக அமைந்தது.

அரசியல் வலிமையையும், இசுலாமிய சமயத் தூய்மையையும் நிலைநாட்டுபவர் மாதி என்பதால் இசுலாமிய உலகில் இருந்த அரசுகளுக்கு எதிராக அவ்வப்பொழுது எழுந்த சமூகப் புரட்சியாளர்களும், சமய ஏமாற்றுக்காரர்களும் தங்களை மாதி என குறிப்பிட்டுக் கொண்டனர். இப்பெயரின் சிறப்புக் காரணமாகப் புகழ்பெற்ற அப்பாசித்து காலிபா அருன் அல் இராசீதின் (Harun al-Rashid) தந்தை அல்மாதி என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். பல இடங்களில், பல்வேறு காலங்களில் மாதி என்ற பட்டத்துடன் பலர் தோன்றினர். அவர்களுள் சூடானில் எகிப்திய ஆட்சிக்கு எதிராக எழுந்த முகம்மது அகமது இபின் சையிது அப்துல்லா (Muhammad Ahmad Ibn Sayyid Abdulla கி.பி. 1844-1885) குறிப்பிடத்தக்கவராவார். இவருடைய சமய ஈடுபாடும், துறவறவாழ்க்கையும் மக்கள் பலரை இவர்பால் ஈர்த்தன.

முகம்மது அகமது (Muhammad Ahmad) கி.பி. 1844-இல் சூடான் தொழிலாளி ஒருவரின் மகனாய்ப் பிறந்தார். இளம் வயதிலேயே சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அவர், அரசுப் பணிகளில் சேர ஆர்வமின்றி, ஒதுங்கி வாழ்ந்தார். அந்நாட்டிலிருந்த் சம்மானியா (Sammaniyah) பிரிவில் சேர்ந்து சமயக் கல்வி கற்றார். அவர் தம்முடைய இளம் வயதிலேயே சீடர்களைப் பெற்று, வெள்ளை நைல் நதியிலுள்ள அபா (Aba)த்தீவிற்கு கி.பி. 1870-இல் சென்றார். அத்தீவு கார்டூமிலிருந்து 280 கி.மீ. தொலைவில் உள்ளது.

அப்பொழுது உதுமானியப் பேரரசின் ஒரு பகுதியாகவிருந்தசூடான், எகிப்தின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. துருக்கி மொழியைப் பேசி வந்த சூடானின் ஆட்சியாளர்கள் அந்நாட்டு மக்களிடமிருந்து தோற்றம், கல்வி, வாழ்க்கை முறை ஆகியவற்றில் வேறுபட்டிருந்தனர். முகமதியர் அல்லாதவர்கள் தங்களை ஆட்சி செய்வதை விரும்பாத சூடான் மக்கள் அவர்களை எதிர்த்து வந்தனர். முகம்மது அகமது அம்மக்களை ஒன்று சேர்த்து அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தார்.

எகிப்தை ஆண்டுவந்த கேடிவு (Khedive) இசுலாமிய சமய நம்பிக்கையில்லாதவராய், ஒரு கைப்பாவையாக இருந்து வந்ததால், அவர் இசுலாமியரை ஆட்சி புரியத் தகுதியற்றவர் என முகமது அகமது கி.பி. 1881-இல் அறிவித்தார். எனவே, இசுலாமிய சமயத்தைத் தூய்மைப்படுத்தவும், அதனை மாசுபடுத்தும் அரசுகளை அழிக்கவும் தம்மைக் கடவுள் நியமித்துள்ளார் என கி.பி. 1881 – இல் தம் நண்பர்களிடம் தெரிவித்தார். அவர் சூன் 30 – இல் மாதி என்று தம்மைக் கூறிக்கொண்டு, மீண்டும் இசுலாமிய சமயத்தை நிலைநாட்டுவது தம்முடைய நோக்கமெனக் குறிப்பிட்டார். அவர் அபா தீவிலிருந்து தம்மைப் பின்பற்றியவர்களுடன் வெளியேறி, எகிப்திய அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். அவருக்கு எதிராகக் கி.பி. 1883-இல் எகிப்திய அரசு அனுப்பிய இரு படைகளையும் வென்றார். தளபதி வில்லியம் இக்சு (General William Hicks) தலைமையில் சென்ற, 8000 வீரர்களைக்கொண்ட, மூன்றாம் படையும் தோற்கடிக்கப்பட்டு, அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர். அவர் கார்ட்டூமை (Khartoum) கி.பி. 1885-இல் தாக்கி, அதனைப் பாதுகாத்துவந்த தலைமைத் தளபதி சார்லசு சார்சு கார்டன் (Major General George Gordon) என்பவரைக் கொன்று, அந்நகரைக் கைப்பற்றினார். பின்னர், அவர் கார்ட்டூமை விட்டு ஓம்டர்மேன் (Omdurman) சென்று அதனைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்யலானார். அபா தீவை விட்டு அவர் வெளியேறிய நான்கே ஆண்டுகளில் எகிப்திய அரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த இடங்களையெல்லாம் கைப்பற்றி ஓர் இசுலாமிய அரசை நிறுவினார். இவர் உடல் நலம் குன்றி கி.பி. 1885–இல் தம் 41-ஆம் அகவையில் மறைந்தார். சி.இரெ.

**மாதிரி ஆளுமை:** ஒரு மனிதனின் உள இயல்புகள் அவனை மற்றோரிடமிருந்து தனித்து நிற்கவைத்து அவனை இனங்காட்டுகின்றன. அத்தகைய இயல்புகள் அவனுடைய தனித்தன்மையைப் புலப்படுத்துகின்றன. அக் குணநலன்களையே ஒருவனுடைய ஆளுமை (Personality) என்று உளவியலாளர் கூறுவர். இவ்வாளுமை ஒருவரது வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து மாறுதலுக்கு உட்பட்டு முன்னேற்றமடையத்தக்கதாகும். உளவியல்படி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஆளுமை உண்டு. ஆனால், ஒருசிலரே தனிப்பட்ட ஆளுமை உடையவர்களாக உள்ளனர். அவர்களையே தனி இயல்பு ஆளுமை உடையவர்கள் எனலாம்.

ஆளுமையில் நல்லது, சிறந்தது, உடல் நலம், முதிர்வு நிலை, விரும்பத்தக்கது என்பனபோன்ற குணநலன்கள் கூடிய ஒரு ‘மாதிரி ஆளுமை’ பற்றி அறிவது இன்றியமையாதது. வாழ்க்கை முறைகளில் சில போற்றத்தக்கவையாகவும், குறிக்கோளாகப் பின்பற்றத்தக்கவையாயும் உள்ளனவா என்பதையும் நோக்குதல் வேண்டும்.வாழ்வில் விருப்பு, வெறுப்பின்றி நடுநிலையில் நின்று நோக்குங்கால் இது இயல்

பாக இயலுவதில்லை. குழந்தைகள் எதிர்காலம், மனிதர்களின் தொழில் முன்னேற்றம் ஆகியவற்றை நடுநிலையினின்று நோக்கல் கடினமாகும்.

மனநலம், முதிர்ச்சி, உண்மையான மனிதத் தன்மை குறித்துப் பல தன்மைகளை (Traits) வரிசைப் படுத்தினாலும் தனி மனிதனிடம் அவற்றைப் பாகு படுத்திக் காணுதல் கடினமாகும். பொதுவாக விரும் பத்தகாத குணங்களை அடையாளம் காட்டி வரிசைப் படுத்தலாம். அவை: பொருளற்ற பயம், கட்டுக் கடங்கா உணர்ச்சிகள், தன்னலம், குழந்தைத்தன மான பிறரைச் சார்ந்திருக்கும் தன்மை, பழையன வற்றிலிருந்து விடுபட இயலாத மனப்பான்மை முதலியன. இத்தகைய குணங்களினின்று விடுபட்டு வளர்தல் ஆளுமை வளர்ச்சிக்கு இன்றியமையாதது எனலாம். இதற்கு அடுத்தநிலையில் சில குறிப்பிட்ட குணங்களைத் தனித்து நோக்காது, அவை முழுமை யான ஆளுமையின் ஒரு பகுதியாக எவ்வாறு அமை தல் வேண்டும் என்பதை நோக்கலாம். அதனால், முழுமையான ஆளுமையின் மதிப்பிற்கு அதனுடைய ஆளுமைப்பகுதிகள் எவ்வகையில் மதிப்பூட்டுகின்றன என அறிய இது உதவும். தெளிந்த சிந்தனை, திறமை யைக் காட்டக்கூடிய ஒரு நற்குணம் என்றாலும் அதனை கலைஞர்களிடம் எதிர் பார்ப்பதில்லை. அதே குணம் சில செயல்களை நடைமுறைப்படுத் திக் காட்டவேண்டியவர்களுக்கு இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். ஆளுமையைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது ஒருவருடைய வாழ்க்கைமுறைக்கு ஒரு குணநலன் எவ்வாறு பொருந்துகிறது என்பதைச் சார்ந்து நோக்குதல் வேண்டும்.

வெவ்வேறு காலக்கட்டங்களிலும், இடங்களிலும், மனித வளர்ச்சிக்கான வழிமுறைகளையும், குறிக்கோள் களையும் குறித்த மாறுபட்ட எண்ணங்கள் இருந்து வந்துள்ளன. அவ்வெண்ணங்கள் கல்வி மூலமாகவும், சமூகக் கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள் மூலமாக வும் செயற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. குழந்தை களிடம் எக்குணங்களை ஊக்குவிக்க அல்லது தவிர்க்க முயல்கின்றனரோ, அவை எத்தகைய முன்மாதிரி யாக அவர்கள் வாழ்வு அமையவேண்டும் என்று விரும்புகின்றனர் என்பதைக் குறிக்கும்.

மாதிரி ஆளுமைக்குத் (Model Personality) தேவையாகக் கருதப்படும் பெரும்பான்மையான குண நலன்களைப் பெறுவது மக்களுள் ஒரு சிலராலேயே இயலும் என்ற எண்ணம் வெகு காலமாகவே இருந்து வந்துள்ளது.

**சிந்தனைத் திறன்:** மேலைநாட்டு நாகரிகத்தின் தொடக்கக் காலங்களில் (கிறித்து பிறப்பதற்கு முன் னால்) சிந்தனைத்திறன் மிகுந்திருக்க வேண்டும் என் பது வற்புறுத்தப்பட்டது. ஒருவன் சிந்தனைத்திறன் கொண்டு விளங்கினாலும் அவனுடைய அவாவினை யும், உணர்ச்சிகளையும் அடக்கி வாழாவிட்டால் பல னேதும் ஏற்படாது. அரிசுடாட்டில் என்னும் பேரறிஞர் நற்பழக்கங்களை உருவாக்கப் பரிசுகளை யும், தண்டனைகளையும் பயன்படுத்தவேண்டும் என்று கூறினார். நாட்டின் நலனை ஒருவன் எப் போதும் புறக்கணித்தலாகாது. ஒருவன் உணர்ச்சி களைக் கட்டுப்படுத்தி வீரமுடனும், பெருந்தன்மை யுடனும், நேர்மையுடனும் இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**செயல்திறன்:** பிற்காலத்தில் (கி.பி.1500 - 1600) தலை சிறந்த சிற்பியாகவும் பொறியியலாளராகவும், அறிவியலறிஞராகவும் மீத்திறன் கொண்டவராகவும் விளங்கிய இலியனார்டோ டா வின்சியால் (Leonardo da vinci) சிந்தனைத் திறனைவிடச் செயல் திறனே சிறந்தது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பல துறைகளில் ஆற்றலும், செயல்திறனும் கொண்டு விளங்குதல் (Versatility) பெரிதும் இக்காலத்தில் பாராட்டப்படுகின்றது. கலைத்திறன் (ஓவியம், இசை), உறுதி ஆனால் அடக்கம், விளையாட்டுத் திறன், சிறந்த பேச்சுத்திறன், போர்த்திறன், அறிவுத் திறன், தெய்விக உணர்வு ஆகியவை மாதிரி ஆளு மைக்கு இன்றியமையாத குணங்களாகக் கருதப் பட்டன.

**ஒழுக்கமான வாழ்வு:** யூதர்கள் காலத்தில் ஒழுக்க மான வாழ்வு இன்றியமையாததாக வலியுறுத்தப் பட்டது. கிறித்துவிற்குப் பிறகு மேல்நாடுகளில் முதன்மை பெற்ற இக் குணநலன் இந்தியாவில் வேத காலங்களில் இருந்தே வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது.

**தொழில் ஒழுக்கம்:** மேக்சு வீபர் (Max Weber) என்ற செருமானிய அறிஞரால் இன்றியமையாத தாகத் தொழில் ஒழுக்கம் வலியுறுத்தப்பட்டது. எதிர்கால முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு இப போதைய அவாக்களையும், விழைவுகளையும் விட்டுக் கொடுத்து உழைத்தல் சிறந்தது என்பதே தொழில் ஒழுக்கம் என்பதாகும்.

**மனநலம்:** இக்கால அறிஞர் மனநலம் பெற்றிருத் தலே மாதிரி ஆளுமையை அடையும் வழி என்பர். மனநலம் என்பது உடல்நலம் பெற்று மனநலக் கோளாறுகள் அற்றிருத்தல் எனலாம்.

உள்ள வலிமைகள் (Psychological Strengths) என்று பாகுபடுத்தப்பட்ட சில குணநலன்கள் மாதிரி ஆளுமையைப் பெற இன்றியமையாதவை என்பது இக்காலத்தில் கருதப்படுகிறது. அவை: 1) முதிர்வு,

2) தன்னம்பிக்கை, 3) தளை நீக்கிய உணர்வு, 4) தன்னை உணர்தல் (Self-Actualization), 5) பிறர்க்கு உழைத்தல் முதலியன.

**1) முதிர்வு:** உடலும் உள்ளமும் முதிர்வு பெற்றுத் தானே தனித்தியங்கித் தன் திறனால் உற்பத்தியைப் பெருக்கல் வேண்டும். தாழ்வு மனப்பான்மை, தற்செருக்கு, போட்டியிடும் தன்மை ஆகியவற்றினின்று விடுபட்டு இயங்கல் வேண்டும். தன்னையோ, பிறரையோ அழிக்கும் உணர்ச்சிகளை நீக்கிக்கோபம், வெறுப்பு, குரூரம் ஆகியவற்றை ஒழித்து இயங்கல் வேண்டும். உலகத்தோடு ஒட்ட ஒழுகியும், காதல் உணர்வெய்தியும், உண்மையையும், உலக நடப்பையும் உணர்ந்து ஒழுகியும், வாழ்தல் வேண்டும். ஆக்கத்திறனைப் பயன்படுத்தி வளைந்து கொடுத்து இசைந்தொழுகல் இன்றியமையாததாகும்.

**2) தன்னம்பிக்கை:** எத்தகைய கடினமான சிக்கல்கள் வந்தபோதும் துணிந்து பொருது வெற்றி காண உதவும் தன்னம்பிக்கை இருத்தல் வேண்டும்.

**3) தளை நீக்கிய உணர்வு** சிறு வயதிலிருந்து உருவாகிய மன உணர்வுகள் (Anxieties) தற்காப்புத் திட்டங்கள் (Defensive Strategies) ஆகியவற்றிலிருந்து விடுபட்டு ஒரு விடுதலைத் தன்மையை உணர்தல் வேண்டும்.

**தன்னை உணர்தல்:** ஆபிரகாம் மாசுலோ (Abraham Maslow) என்ற உளவியலாளர் கண்ட தன் திறன் உணர்ந்து பயன்படுத்தல் இன்றியமையாததாகும். பெரு நோக்கும், இயல்பான சிந்தனையும் செயலும், ஏனையோரோடு இணங்கி ஒழுகலும், தனித்தியங்கலும், ஆக்கத்திறனும், தன்னையுணர்தலுக்கு வழிவகுக்கும்.

**பிறர்க்கு உழைத்தல்:** பிறருக்காக உழைத்துத் தொண்டு செய்தல் வேண்டும். தன்னலமின்றி, பொதுநலம் நாடி, எதிர்கால மக்கள் சமுதாயத்திற்காகத் தொண்டுகள் செய்தல் இதிலடங்கும்.

இந்திய நாட்டில் தோன்றிய மகாதமா காந்தியை மாதிரி ஆளுமை பெற்ற ஒருவராகக் கூறலாம். வாய்மை, கொல்லாமை ஆகிய அறங் கொண்டு ஆங்கில வல்லரசை எதிர்த்து வென்ற அவருடைய ஆக்கத்திறன், துணிவு, ஒழுக்கம் ஆகியவை தலைசிறந்த மானுடக் குணங்களைப் வெளிப்படுத்துகின்றன. திருவள்ளுவர் தம் உலகத்திருமறையான திருக்குறளில் சிறந்த குணநலன்கள் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். வே.க.

**துணை நூல்:**

White, R.W., The Enterprise of Living:A View of Personal Growth, Holt, Rine Hart & Winston, New York, 1976.

*மாதிரிப் பாராளுமன்றம்:* இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வர்டு கி.பி. 1295-இல் அனைத்துப் பேராளர்களையும் அழைத்துக் கூட்டிய பாராளுமன்றம், இன்றைய பாராளுமன்றத்தின் முன்னோடியாக -மாதிரியாக-விளங்கியதால் அதனை மாதிரிப்பாராளுமன்றம் (Model Pārliament) என்று குறிப்பிடுகின்றனர். அதனால் 'மாதிரிப் பாராளுமன்றத்தை நிறுவியவர்' என்ற பெயரும் எட்வர்டு மன்னருக்கு ஏற்பட்டது.

குருமார்கள், பெருமக்கள், பொதுமக்கள் முதலான மூன்று வகுப்பினரின் பேராளர்களும் நிலமானியப் பேரவையில் இடம் பெற்றதால் அச்சபை ஒரு தேசிய சபையின் குணவியல்பை விரைந்து வளர்த்துக் கொண்டது எனக் கருத இடமுண்டு. இவர் பெரிய, சிறிய நிலக்கிழார்களையும், நகரப்பேராளர்களையும் ஒரே பேரவையில் கூட்டினார். அதிமேற்றிராணியார் (Archbishop) இருவரையும், மேற்றிராணியார் அனைவரையும், மூன்று சமயப்பிரிவினரையும், பெருமடங்களைச் சேர்ந்த 48 தலைவர்களையும் கோமான்கள் எழுவரையும், 41 பெருமக்களையும் சிறப்புக் கட்டளையின் மூலம் அழைத்தார். பொதுக் கட்டளையால் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரு வீரத்திருத்தகைகளையும், நகரிலிருந்து இரு நகரினர்களையும் மன்னர் அழைத்தார். குருமார்கள் வகையினரும், நீதிபதிகளும், அமைச்சர்களும் அக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர். மொத்தத்தில் அந்த அவையில் 400-க்கு மேற்பட்ட பேராளர்கள் அழைக்கப்பட்டனர்.

எட்வர்டு மன்னரது ஆட்சிக்காலத்திற்கு முன்பு திருச்சபையைச் சேர்ந்த குருமார்களும் பிரபுக்களுமே பாராளுமன்றத்தில் அங்கம் பெற்றிருந்தனர். ஆனால், எட்வர்டோ பொது மக்களின் பேராளர்களுக்குப் பாராளுமன்றத்தில் இடமளிக்க வேண்டுமென்றே புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்தார். மாதிரிப் பாராளுமன்றம் ஒரே ஒரு சமயத்தில்தான் கூடியது. அந்நூற்றாண்டில் தான் இப்பாராளுமன்றம் இருசபைகளைக் கொண்டதாக அமைந்தது. இப்பாராளுமன்றம் கூட்டப் பெற்ற பொழுது பேரவைக்கும் இதற்கும் வேறுபாடுகள் இருக்கவில்லை என்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

மாதிரிப் பாராளுமன்றத்தை கி.பி. 1295, 1296, 1300, 1305, 1307-ஆம் ஆண்டுப் பாராளுமன்

றங்கள் பின்பற்றின. இதனை மாதிரிப் பாராளுமன்ற மாக ஏற்க நாற்பதாண்டுகள் ஆயின.

பேராளர்கள் அடங்கிய சபை பொதுமக்கள் சபை என்று சொல்லப்பட்டது. இவ்விதம் அமைந்த மக்கள்சபை நாளடைவில் பாராளுமன்றத்தின் முக்கிய சபையாக வளர்ச்சி அடைந்தது.

பெரும் நிலக்கிழார்களின் கூட்டத்தோடு, நகரப் பேராளர்கள் இணைப்புதான், இம்மன்னருக்கு 'மாதிரிப் பாராளுமன்றத்தைப் படைத்தவர்' எனும் பெயர் உண்டாகக் காரணமாக அமைந்தது. இது நில மானிய நீதிமன்றம் அன்று; அரசரின் குத்தகைக்காரர்கள் கூட்டமும் அன்று; இது ஒரு தேசிய சபையாகும். இதில் குருமார்கள், பெருமக்கள், பொதுமக்கள் ஆகியோரின் பேராளர்கள் பங்கு பெற்றனர். எனவே, ஆங்கிலப் பாராளுமன்ற வளர்ச்சி வரலாற்றில், மாதிரிப் பாராளுமன்றம் தக்கதோர் இடத்தைப் பெற்றுள்ளது.

க.ம.

**மாதீர்த்தன்:** இவர் சங்ககாலப் புலவர். குறுந்தொகையில் 113 - ஆம் பாட்டு இவர் பாடியதாகும். இவர் இந்த ஒரு பாட்டை மட்டுமே பாடியுள்ளார். மாதீர்த்தர், மாதீரத்தன், மாதிரத்தர், மாதிரத்தனார் என்ற வடிவங்களில் இவர் பெயர் காணப்படுகிறது. அரசராயின் 'அன்' ஈறு பெற்றும் புலவராயின் 'அர்' ஈறு பெற்றும் வழங்கும் ஒரு மரபு சங்க காலத்தில் காணப்படுகிறது. அதனை 'அவனை அவர் பாடியது' என்ற வழக்கைக் காணலாம். இவர் புலவரா அரசரா என்பது அறியக் கூடவில்லை. இவர் அரசர் என்பதற்குச் சான்றில்லை. இவர் புலவர் என்பதற்கு இவர் பாடிய பாடலே சான்றாவதால், வேறு சான்றுகள் கிடைக்கும் வரை 'மாதீர்த்தர்' என்பவரைப் புலவராகவே கொள்ளலாம்.

இவர் பாடிய குறுந்தொகைப் பாட்டு மருதத் திணையைச் சார்ந்தது; தோழி கூற்றில் அமைந்துள்ளது. 'பகற்குறி நேர்ந்த தலைமகற்குக் குறிப்பினாற் குறியிடம் பெயர்த்துச் சொல்லியது' என்ற துறையைச் சார்ந்தது. அத்துறை, பகற்குறியில் தலைவியோடு பேசிச் செல்லும் தலைமகனைத் தோழி எதிரே பார்த்துப் பகலில் வேறு இடத்தில் சந்திக்குமாறு குறிப்பாய்க் கூறுவது.

'ஊருக்கு அருகேதான் பொய்கை; அந்தப் பொய்கையிலிருந்து சிறிய காட்டாறும் நீண்ட தொலைவில் இல்லை. இரைதேடும் குருகைத் தவிரப் பிற அங்கு வர மாட்டா. கூந்தலுக்குத் தேய்க்கும் 'எருமண்' கொண்டு வருவதற்காகத் தலைவி எங்களுடன் அந்த இடத்திற்கு வருவாள்' என்ற கருத்தமைந்த பாடலை இவர் இயற்றியுள்ளார். தலைவன் அந்த இடத்திற்கு வந்தால் இடையூறு இன்றித் தலைவியைச் சந்திக்கலாம் என்பதும், இருவரும் தனியிடத்தில் சந்தித்து மகிழலாம் என்பதும் தோழி வெளிப்படுத்த விரும்பும் கருத்தாகும். இவர் பாட்டு எளிமையும் குறிப்பாய்க் கருத்தைத் தெரிவிக்கும் சிறப்பும் உடையது. அக்காலத்தில் பெண்கள் கூந்தலில் உள்ள எண்ணெய்ப் பசையையும் அழுக்கையும் போக்க 'எருமண்' என்ற ஒருவகை மண்ணைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்ததை இவர் பாட்டின்வழி அறியலாம். இன்றும் சிற்றூர்ப் பெண்களிடம் இவ்வழக்கம் உள்ளது.

க.மு.

**மாதைத் திருவேங்கடநாதர்:** இவர் கி.பி. 17-ஆம் நூற்றண்டில் வாழ்ந்தவர். இவர்பிறந்த ஊர் மாதேவிபட்டினம். இவ்வூர் தஞ்சை மாவட்டம், மன்னார்குடிக்கு அருகிலுள்ளது. மாதை என்று வழங்கப்பட்டது. திருவேங்கடநாதர் பார்ப்பனமரபைச் சார்ந்தவர். இவருடைய தந்தையார் பெயர் பெருமாளையர். திருவேங்கடநாதர் வடமொழியிலும், தமிழிலும் புலமைசான்றவர். இவர், மதுரையில் கி.பி. 1682-இல் அரசினை ஏற்று ஆட்சி புரிந்த அரங்ககிருட்டிண முத்துவீரப்ப நாயக்கரின் அமைச்சராகத் திகழ்ந்தார். அப்போது அரசியலில் இருந்த சிக்கல்களைத் தீர்த்து ஆட்சியைச் செம்மைப் படுத்திய பெருமை இவருக்குண்டு. இவருடைய ஞானாசாரியர் இராகவானந்தர் ஆவர். அவருடைய கட்டளையை ஏற்றுத் திருவேங்கடநாதர் கிருட்டிணமிசிரரின் பிரபோத சந்திரோதயம் என்னும் வட மொழி நாடக நூலை வடமொழியிலும், தமிழிலும் காவியமாக இயற்றினார். தமிழில் இந்நூல் மெய்ஞ்ஞானவிளக்கம் என்னும் பெயருடையது. இது 48 சருக்கங்களையும் 2012 செய்யுட்களையும் கொண்டுள்ளது.

மாதைத் திருவேங்கடநாதர் மாதை வேங்கடேசுரன் என்றும் குறிக்கப்பெற்றார் என்று தெரிகிறது. இவர் மிகப் பெரிய வள்ளலாக விளங்கினார். தமிழ்ப் புலவர்களுக்கு இவர் வரையாது வழங்கித் தமிழை வளர்த்த தனிப்பெரும் சான்றோராவார். ஒரு கவிக்கு ஆயிரம் பொன்னாக நூறுகவி கொண்ட ஒரு தமிழ் நூலுக்கு நூறாயிரம் பொன் வழங்கி கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வள்ளலாகச் சிறப்புற்றார் என்பர். இதுபற்றியே படிக்காசுப் புலவர் தம் தொண்டை மண்டல சதகத்தில் 'எல்லப்பன்' என்னும் செய்யுளிலே, 'மாதை வேங்கடேசுரன் போல வரிசை செய்தான்' என்று இவரைப் புகழ்ந்திருக்கிறார். படிக்காசுப் புலவரால் பாடப் பெறுபவர் மிக்க பெருமைக்குரியவர் என்பது, 'படிக்காசன் உரைத்த தமிழ் வரைந்த ஏட்டைத் தொட்டாலும் கைமணக்கும், சொன்னாலும்

வாய்மணக்கும், துய்ய சேற்றில் நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடும்' என இன்னொரு புலவர் பாடியிருப்பதினின்றும் புலனாகிறது.

திருவேங்கடநாதர் விருப்பத்திற்கிணங்கியே திருவாரூர் வைத்தியநாத நாவலர் 'இலக்கண விளக்கம்' என்னும் நூலை எழுதினார். இவ்வுண்மையை வைத்தியநாத நாவலரின் மகனாகிய சதாசிவ நாவலர் இலக்கண விளக்கச் சிறப்புப்பாயிரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். 'பணவிடு தூது' என்னும் நூல் திருவேங்கடநாதரைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டதாகும். அந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அந்நாலில் திருவேங்கடநாதரின் அரசியல் திறமை, குடும்ப வரலாறு ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. திருக்கழுக்குன்றச்சாசனம், திருநறையூர்க் கல்வெட்டு, நாகலாபுரத்துச் செப்பேடு ஆகியன வடமலையார், தெய்வங்கள் பெருமாள், திருமலையப்பர், அரிதாசர் என்னும்பெயர் கொண்ட நால்வரும் திருவேங்கடநாதரின் புதல்வர்கள் எனக் குறிப்பிடுகின்றன என்பதைச் சாசனத் தமிழ்க் கவிசரிதம் என்ற நூல் கூறுகிறது. அவர்களுள் மூத்தவராகிய வடமலையார்க்கு இறையிலியாக வழங்கப்பட்ட செய்தியை 'ஆற்றுவான் பாடி வித்வான்களில் திருவேங்கலநாதர் மகன் வடமலையார்க்கு இறையிலி காணியாச்சி பண்ணிக் கொடுத்த படி...' என்று ஒரு சாசனம் கூறுவதையும் இந்நூல் குறிப்பிடுகிறது. 'திருவேங்கல நாதர்' என்பது திருவேங்கடநாதர் என்பதன் சிதைவாய் அக்காலத்து மக்கள் பெயராக வழங்கியதாம் எனவும் சாசனத் தமிழ்க்கவி சரிதம் சுட்டிக்காட்டுகிறது. தா.ஏ.ஞா.

*மாநகர் உரிமையியல் நீதிமன்றம்*: பல்வேறு நீதிமன்றங்களில் பலவகையான வழக்குகள் தொடரப்படுகின்றன. எந்தெந்த நீதிமன்றங்களில் எந்தெந்த வழக்குகள் தொடரப்பட வேண்டுமென்பதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறையில் உள்ளன. அவ்வாறான சட்டங்களில் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றச் சட்டம் (Madras City Civil Court Act) என்பதும் ஒன்றாகும். இச்சட்டம் கி.பி. 1892 – ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டு, இன்று நடைமுறையில் இருந்து வருகிறது. இச்சட்டம் கடைசியாகத் திருத்தப்பட்டது 1980 - ஆம் ஆண்டிலாகும்.

மாநகர் நீதிமன்றத்தின் வரையறைகள், அமைப்பு, அதிகாரங்கள், செயல்முறைகள், இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் வழக்குகளின் வகைகள், மேல்முறையீடு, பொது நிருவாகம் ஆகியவை பற்றி இச்சட்டம் எடுத்தியம்புகிறது.

மாநகர் நீதிமன்றம் என்பது இங்குச் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தைக் குறிக்கும். சென்னை மாநகர் என்பது சென்னை உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு உட்பட்ட நிலவரம்பைக் குறிப்பதாகும்.

மாநகர் நீதிமன்றம் உரிமையியல் வழக்குகளையும், நடவடிக்கைகளையும் ஏற்று நடத்தவும் தீர்ப்பு வழங்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. அந்த வழக்குகளும் நடவடிக்கைகளும் சென்னை மாநகர நிலவரம்புக்குள் எழுந்தவையாகவும், உரிமையியல் சம்பந்தப்பட்டவையாகவும், அவற்றின் மதிப்பு உரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாதவையாகவும் இருத்தல் வேண்டும். ஆனால், உயர் நீதிமன்றம் ஏற்று நடத்துகின்ற மணவாழ்க்கை, சொத்துரிமை இறக்கம் பற்றிய வழக்குகளும் நடவடிக்கைகளும், நொடிப்பு நிலைக் கடனாளிக்கு நிவாரணம் வழங்கும் நீதிமன்ற வழக்குகளும் நடவடிக்கைகளும், சிறு வழக்குகள் நீதிமன்றம் (Small Causes Court) ஏற்கின்ற வழக்குகளும் நடவடிக்கைகளும், சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் சட்ட வரம்புக்கு உட்படுவதில்லை.

மாநில உரிமையியல் நீதிமன்றங்களுக்கு ஒரு முதன்மை நீதிபதியும் (Principal Judge) மற்றும் தேவைக்கு ஏற்பக் கூடுதல் நீதிபதிகளும், உதவி நீதிபதிகளும் (Additional or Assistant Judge) மாநில அரசினால் நியமிக்கப்படுவர். அந்த நீதிபதிகள் 1892 சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அல்லது நடைமுறையிலுள்ளவேறு சட்டங்களினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துவர்.

இந்நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வேலைகளையும் பொறுப்புகளையும் முதன்மை நீதிபதி மற்ற நீதிபதிகளுக்குப் பகிர்ந்தளித்துப் பரிபாலனம் செய்கிறார். இம்மாநகர நீதிமன்றத்திற்கு நியமிக்கப்படும் ஒவ்வொரு நீதிபதியும் சிறு வழக்கு நீதிமன்றங்களுக்கும் (Small Causes Court) நீதிபதியாக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஆணைக்கிணங்கச் செயற்படலாம்.

மாநகர் உரிமையியல் நீதிமன்றத்திற்குத் தேவைப்படும் அலுவலர், பணி முதல்வர், அமீன், ஏனைய சட்ட நிறைவேற்ற அதிகாரிகள் அனைவரும் அவ்வப்போதுள்ள தேவைக்கேற்ப மாநில அரசினால் நியமிக்கப்படுவர். அவர்கள் எல்லோருமே முதன்மை நீதிபதியின் கட்டளைகளுக்கு உட்பட்டுத் தத்தம் அதிகாரங்களைப் பயன்படுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் வேண்டும்.

இந்த நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்படும் வழக்குகளிலும் நடவடிக்கைகளிலும் எழுகின்ற

எல்லா வினாக்களையும், உயர்நீதிமன்றம் செயற்படுத்துகின்ற சாதாரண மூல உரிமையியல் அதிகார வரம்புக் கிணங்க (Ordinary Original Civil Jurisdiction) ஆய்வு செய்து அவ்வினாக்களுக்கு முடிவு செய்ய வேண்டும்.

மாநகர் நீதிமன்றங்களின் அழைப்புக் கட்டளைகளை நிறைவேற்ற அல்லது சேர்ப்பிக்க உண்டான கட்டணங்களை உயர்நீதிமன்றம், மாநில அரசின் அனுமதியுடன் வரையறை செய்யும்.

சில வழக்குகளில் அல்லது நடவடிக்கைகளில் செயலாட்சியாளர் (Receiver) நியமனம் செய்யப்படுவர். அவர்கள் நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்றித் தமது அறிக்கையை நீதிமன்றத்தின் முன் வைப்பர். அவ்வறிக்கைகள் நீதிபதிகளால் ஆய்வுசெய்யப்பட்டுத் தகுந்த நீதி வழங்க உறுதுணையாக இருக்கும். அத்தகைய செயலாட்சியாளரை நியமனம் செய்வதற்கு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி (Code of Civil Procedure-1882) மாநகர் உரிமையியல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாநகர் நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புரை அல்லது ஆணை, தமக்குக் கேடுபயப்பதாக உள்ளது என்று கருதும் தரப்பினர் அந்தத் தீர்ப்பு அல்லது உத்தரவின் மீது மேல்முறையீடு செய்யலாம். அந்த மேல் முறையீட்டுக்குச் சில கட்டுப்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

வழக்குடைப் பொருள் மதிப்பு உரூபாய் முப்பதாயிரத்துக்கு மேல் இருந்து, அவ்வழக்கின் தீர்ப்பு அல்லது ஆணை முதன்மை நீதிபதியினாலோ, கூடுதல் நீதிபதியினாலோ பிறப்பிக்கப்பட்டிருந்தால், அத்தீர்ப்புரை அல்லது ஆணையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம். ஆனால், வழக்குடைப் பொருள் மதிப்பு உரூபாய் முப்பதாயிரத்திற்கு மிகாமல் இருந்து தீர்ப்புரை அல்லது ஆணையை உரிமையியல் நீதிபதி எவரேனும் பிறப்பித்திருந்தால் அந்தத் தீர்ப்புரை அல்லது ஆணை மீது முதன்மை நீதிபதிக்கு மேல்முறையீடு செய்யலாம். அவ்வாறு செய்கின்ற மேல்முறையீட்டினாலும் தமக்குச் சார்பான தீர்ப்பு அல்லது ஆணை கிடைக்கவில்லை என்று கருதும் தரப்பினர் அடுத்து இரண்டாம் மேல்முறையீடு (Second appeal) செய்யச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதன்படி ஒரு முதன்மை நீதிபதி அல்லது கூட்டு நீதிபதி தமக்குரிய மேல்முறையீட்டுச் சட்ட அதிகாரத்தைப் (Appellate Jurisdiction) பயன்படுத்தி வழங்கியுள்ள தீர்ப்பாணை மீது இரண்டாம் மேல்முறையீடு செய்யலாம். இந்த இரண்டாம் மேல் முறையீட்டினை உயர்நீதிமன்றத்தில் செய்ய வேண்டும். எந்தெந்தக் காரணங்களின் அடிப்படையில் இரண்டாம் மேல்முறையீடு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றுள்ள விவரங்கள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 100 – இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

முதல் மேல்முறையீடு, இரண்டாம் மேல்முறையீடு ஆகியவை முதன்மை நீதிபதி முன்பு அல்லது உயர் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட நாள்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டுமெனக் காலஅளவு உண்டு. அக்கால வரம்புக்குள் தாக்கல் செய்ய வேண்டும்.

முதன்மை நீதிபதியிடம் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளைக் கூட்டு நீதிபதி எவருக்கேனும் மாற்றிக் கொடுத்து அவரை நீதி வழங்கச் செய்யவும், அவ்வாறு மாற்றிக் கொடுத்த மேல்முறையீட்டினைத் தாமே திரும்பப் பெற்று நீதி வழங்கவும் சட்டம்வழிவகை செய்துள்ளது.

உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய வேண்டிய கால வரம்பு 90 நாள்கள். மற்றைய மேல்முறையீட்டிற்குக் கால வரம்பு 30 நாள்கள். எச்.எம்.அ.

**மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்**: இந் நிறுவனம் 1965-ஆம் ஆண்டுத்தொடங்கப் பட்டது. இதன்பின் மாநிலக் கல்வி மதிப்பீடு நிறுவனமும் மாநில அறிவியல் கல்வி நிறுவனமும் தொடங்கப்பட்டன. கலைத் திட்ட வளர்ச்சிப் பணிக்காக 1972–இல் ஒரு பிரிவு தொடங்கப்பட்டது. பின்னர் 1976-இல் மே மாதம் 14–ஆம்நாள் அரசு ஆணை எண் 910 (கல்வித் துறை)இன்படி மேற்கூறிய அனைத்து நிறுவனங்களையும் இணைத்து மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (Council of Educational Research and Training) எனப் பெயரிடப்பட்டு இந்நிறுவனம் செயற்படலாயிற்று. அச்சமயம் இதில் மூன்று பிரிவுகளே இருந்தன. அவற்றுள் இரண்டு பயிற்சிப் பிரிவுகள்; மற்றொன்று நிருவாகப் பிரிவாகும். முதல் பிரிவானது கல்வி ஆராய்ச்சியையும் பயிற்சியையும் கவனித்தது. இரண்டாம் பிரிவு, இந்நிறுவனத்தின் நிருவாகப் பொறுப்பை ஏற்றது. மூன்றாவது பிரிவானது கலைத்திட்ட வளர்ச்சியைக் கவனித்தது.

பள்ளிக் கல்வி இயக்குநரே இந்நிறுவனத்தின் இயக்குநராவார். இந்நிறுவனத்தில் இன்று ஆறு பயிற்சிப் பிரிவுகளும், ஒரு நிருவாகப் பிரிவும் உள்ளன. பயிற்சித் துறைகளுக்குக் கல்லூரிப் பேராசிரியர் நிலையில் உள்ளவர்கள் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார்கள். இவர்களுடன் இணைப் பேராசிரியர்களும் துணைப் பேராசிரியர்களும் பணிபுரிகிறார்கள்.

கல்வித் துறையில் ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி, இடை நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல் நிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர் நிலையில்பொறுப்பு ஏற்குமுன் அவர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்குகிறார்கள். மேலும், கல்வி ஆய்வாளர்களா கவும்,ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் ஆசிரியர் பயிற்சி யாளராகவும் அமர்வதற்கான நுழைவு-முன் பயிற் சியை அளிக்கிறார்கள்.

பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பள்ளி ஆய்வாளர்களுக்கும் தேவைப்படும் பணியிடைப் பயிற்சியை வழங்குதலும், மாவட்ட அளவில் உயர்மட்டத்தில் பணிபுரியும் கல்வி அலுவலர்களுக்குத் தேவைப்படும் போதெல் லாம் புதிய மேலாண்மை வழிமுறைகளை ஒட்டிய மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்தலும், உள்ளாட்சி நிறுவனங்களில் கல்வி நிரு வாகப் பதவியிலுள்ள அரசு அலுவலர் அல்லாத பிறர்க்கு மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துதலும், பள்ளிகளுக்கும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்குமான விரிவாக்கப் பணியைச்(Extension Service) செய்தலும், பள்ளிகள் (School Complex) பயனுள்ள முறையில் செயற்பட வழிகாட்டுதலும், பள்ளிக் கல்விக்குப் பயன்தரும் வகையில் ஆராய்ச்சி யில் ஈடுபடுதலும் இந்நிறுவனத்தாரின் பணியாகும். மேலும், பிற நிறுவனங்களோடு கூடி ஆராய்ச்சிக் கான முயற்சிகளை மேற்கொள்ளுதலும், ஆசிரியர் கல்வியியலில் ஆய்வுகளையும் ஆராய்ச்சிகளையும்மேற் கொண்டு ஆசிரியர் பயிற்சியைச் செம்மைப்படுத்து தலும், பயிற்சிபெற்ற பள்ளி ஆசிரியர்களின் பணியின் தரத்தை உயர்த்த அஞ்சல்வழிக் கல்வியை அளித்த லும்,பள்ளிக்கூடங்களுக்குப் பயன்படும்வகையில் பருவ வெளியீடுகளையும் கல்வித்துறையில் பயனுள்ள கற் றல் பொருட்களையும் தயாரித்தலும், தேவைப்படும் பொழுது கல்விச் செயல்திட்டங்களை மதிப்பிடுதல் பாடநூல்களை மீள்பார்வை செய்தல் செம்மைப் படுத்தல் மதிப்பிடுதல் ஆகிய பணிகளை மேற் கொள்ளுதலும், கல்வித்தரம் முன்னேறப் பயன்படும் வகையில் பரிசோதனைத் திட்டங்களைச் செயற் படுத்துதலும், கல்வியில் புதுமை முயற்சிகளை மேற் கொள்ளுதலும், கலைத் திட்டத்தையும் கற்பிக்கும் முறைகளையும் சீர்திருத்தலும், கல்வி கற்பித்தலுக் கான சிறந்த துணைக் கருவிகளையும் எளிதில் படைக்கக்கூடிய துணைக் கருவிகளையும் தயாரித்த லும், கல்வி மதிப்பீடு மற்றும் கல்விப் பணியில் தொழில்நுட்பவியல் ஆகிய பொருள்பற்றி ஆசிரியர் களுக்குப் பணியிடைப் புத்துணர்ச்சிப் பயிற்சி நடத்து தலும் அவர்கள் பணியாகும்.

கல்விப் பணியிலுள்ள நடைமுறைச் சிக்கல்களைப் பற்றி (எடுத்துக்காட்டாக வினாத்தாள்களின் பகுத் தறிவாய்வு) விசாரித்தலும் ஆய்வுகளில் ஈடுபடுதலும் கல்வி மதிப்பீட்டுப் பகுதியைச் சார்ந்த முதன்மை வெளியீடுகளைத் தமிழாக்கம் செய்தலும், மாணாக்கர் களுக்கான தேர்வு முறைகளையும், அகமதிப்பீட்டு முறைகளையும் செம்மைப்படுத்துதலும், அப்பொருள் பற்றி ஆசிரியர்களுக்குப் பணியிடைக் கருத்தரங்கு களையும் புதுப்பிக்கும் பயிற்சிகளையும் ஏற்பாடுசெய் தலும், மாநில இடைநிலை மேல்நிலைக் கல்வி வாரியங்கள் பள்ளிப் படிப்பின் இறுதிநிலையில் நடத் தும் புறப் பொதுத் தேர்வுகளைச் செம்மைப் படுத்து தலும் இந்த நிறுவனத்தின் பணியாகும்.

பள்ளிகளிலுள்ள மதிப்பீட்டு முறைகளின்தரத்தை உயர்த்த வினாவங்கிகளை அமைத்தல், மேலும் கல்வித் துறையிலுள்ள அலுவலர்களுக்கும், பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் புறப்பொதுத் தேர்வு களுக்கான வினாத்தாள்களைத் தயாரிப்பவர்களுக்கும் கல்வி மதிப்பீட்டில் பயிற்சி வழங்குதல், மாநிலக் கல்வித் துறைக்குக் கலைத்திட்டத்தைத் தழுவிய சிக்கல்களில் ஆலோசனை தருதல், தொடக்கக் கல்வி யின் இறுதிநிலையிலும் இடைநிலைக் கல்வியின் நிறைவு நிலையிலும் உள்ள மாணாக்கரின் அடைவு நிலையை அளவிட்டு மதிப்பிடுதல், அவ்வடைவு நிலை களில் வட்டாரங்கள் மாவட்டங்களிடையே உள்ள வேற்றுமைகளை வெளிப்படுத்தி அறிக்கைகளைப் படைத்தல், பள்ளிகளிலும் ஆசிரியர் பள்ளியிலும் கணிதக் கல்வியும் அறிவியல் கல்வியும் உயர ஆசிரியர் களுக்குத் தேவையான பயிற்சித்திட்டங்களைத் தீட்டு தல், செயல்முறைகளைத் தழுவிய ஆய்வுகளை மேற் கொள்ளுதல், பள்ளிசாராக் கல்வி நடவடிக்கைகளைத் திட்டமிடுதலிலும் நடைமுறைப்படுத்துவதிலும் பள்ளிக் கல்வித் துறையுடனும் ஏனைய தொடர் கல்வி வாரியத்துடனும் பிற நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுதல், கல்வியிலுள்ள பல அமிசங் களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து நல்லதொரு கல்வி ஏட்டினைத் தயாரித்தல் ஆகிய செயல்களிலும் இந்த நிறுவனம் ஈடுபடுகிறது.

இந்நிறுவனத்தின் செயற்பாட்டில் தொழிற் கல்வியைச் சரிவரத் திட்டமிடக் கல்வித் துறைக்கு உதவுதல், தொழிற்கல்வி சார்பாக மாணாக்கர்களுக் கான வழிகாட்டும் பணிகளைச் சரிவர இணைத்தல், மாநிலத்தில் கல்வி வசதிகளைப் பரப்பவும் கல்வித் தரம் உயரவும் வேண்டிய இன்றியமையாமையை ஒட் டிப்பொதுமக்களுக்கான கல்வியை வழங்குதல்,கல்வித் திட்டங்களைத் தீட்டுவதிலும் நடைமுறைப்படுத்து வதிலும், மாநிலக் கல்வித் துறைக்கு அறிவுரைவழங்கு தல், கல்வித்துறையில் புதிய கருத்துகளுக்கும் பிற செயல்முறைகளுக்கும் மைய இடமாகப் பயன்படுத்

தல்,தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கும் மாநிலக் கல்வித் துறைக்கும் பாலமாகச் செயற்படுதல், பல்வேறு கல்வி நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பணியிடைப் பயிற்சிகளை ஏற்பாடு செய்தல், பலவகைகளில் ஆலோசனைகள் வழங்கல் ஆகியவையும் குறிப்பிடத்தக்கன.

**தேசிய கல்விக் கொள்கை தழுவிய பணிகள்:** தேசிய கல்விக் கொள்கையில் ஆசிரியர்களுக்கும், கல்வி அலுவர்களுக்கும் பெருமளவில் பணியிடைப் பயிற்சி 1985-86 இல் தொடங்கப்பட்டு, ஆண்டுதோறும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தேசிய கல்விக் கொள்கையை ஒட்டித் தமிழகத்தில் பள்ளிக் கல்வியின் கலைத்திட்டம் டாக்டர் மால்கம் ஆதிசேசையா தலைமையின்கீழ்ச் செயற்பட்ட குழுவினால் மாற்றி அமைக்கப்படடுள்ளது. புதிய கலைத்திட்டத்தைத் தழுவிய பாடநூல்கள் 1987-88 -இலிருந்து உருவாக்கப்படுகின்றன. பின்னர் 1987 - 88 -ஆம் ஆண்டில் 1,3,6-ஆம் வகுப்புகளுக்கும், 1988-89 -ஆம் ஆண்டில் 2.4,7,9 11 வகுப்புகளுக்கும், 1989-1990 -ஆம் ஆண்டில் 5,8.10, 12 வகுப்புகளுக்கும், தேவைப்படும் பாடப்புத்தகங்கள் பயிற்சி ஏடுகள், ஆசிரியர் கையேடுகள் ஆகியன உருவாக்கப்படுகின்றன. தமிழ் நாட்டுக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மேற்கூறிய பணிகளில் பெருமளவு ஈடுபட்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக நடுவண் அரசானது பல்வேறு செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. பள்ளிகளுக்கான பல வசதிகளைச்செய்து தரும் நோக்கோடு கரும்பலகைச் செயல்திட்டம், அறிவியல் ஆய்வகம் அமைத்தல், தொழிற் கல்விக்கான சிறப்பு வசதிகளைப் படைத்தல் ஆகிய திட்டங்கள் வந்துள்ளன. ஆசிரியர்களுக்கான பணி முன் மற்றும் பணியிடைப் பயிற்சிகள் தந்திட, மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் அமைத்திட மத்திய அரசுத் திட்டம் ஒன்று செயற்படுகின்றது. இதுபோன்ற பல மத்திய செயல் திட்டங்களை நடைமுறைபபடுத்துவதில் இந்நிறுவனமும் பங்கேற்றுள்ளது. ம.இர

**மாநில சுயாட்சி:** பல்வேறு மொழி, இன மக்கள் தத்தம் வேற்றுமைகளிலும் ஒற்றுமை காண்பதற்காக இணைந்து வாழும் ஒரு பெரு நாட்டின் உறுப்புகளான மாநிலங்களின் அதிகாரங்களை 'மாநில சுயாட்சி' என்னும் பெயர் சுட்டுகிறது. அவை மாநில மக்களின் அடிப்படை உரிமைகள், அம் மாநில மக்களை ஆளுகிற மாநில அரசுகள் நியாயமாகப் பெற்றிருக்க வேண்டிய அதிகார உரிமைகள் ஆகும். ஆக மாநில மக்களின் மொழி,இன,பண்பாட்டு உரிமைகளையும், அரசியல், பொருளாதார உரிமைகளையும் பாதுகாத்துப் பேணி வளர்க்கக் கூடிய மாநில அரசுகளுக்கு அரசியல் சட்டப்படி கொடுக்கப்பட வேண்டிய அதிகாரங்களின் ஈட்டமே 'மாநில சுயாட்சி' யாகும். ஒரு நாணயத்திற்கு உள்ள இரு பக்கங்களைப் போல், 'மத்தியில் கூட்டாட்சி' என்பது கூட்டரசு நாட்டில் ஒருபக்கம்; 'மாநிலத் தன்னாட்சி' என்பது அதன் மறு பக்கம். கூட்டாட்சிக் கொள்கையின் ஒரு சிறப்புக் கூறே மாநிலத் தன்னாட்சி. மாநிலத் தன்னாட்சி என்பது ஒரு மாநிலத்தின் தனியாட்சியன்று; மாநிலத்தின் பிரிவினையுமன்று. மாறாக, பல்வேறு மொழி, மத, இன மக்கள் கொண்ட நாட்டில் அவரவர் தம் தனித் தன்மைகளுக்கும் உரிமைகளுக்கும் ஊறுவிளைவிக்காமல், ஒற்றுமையுடன் வாழ வைக்கும் வழிவகையே 'மாநில சுயாட்சி'.

ஓர் அரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாநிலமும், நடுவண அல்லது தேசிய அரசைப் போலவே, மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தையும், அச்சட்ட மன்றத்துக்குப் பொறுப்பான நிருவாக உறுப்பையும் கணிசமான அளவிலே அதிகாரங்களையும் கொண்டு விளங்குமாயின், அந்த மாநிலம் பெற்றிருப்பது மாநில சுயாட்சி (State Autonomy) என்று கூறப்படும். இத்தகைய இயல்புகளை உடைய மாநில சுயாட்சி முறை கூட்டாட்சி அரசாங்க வடிவத்தில்தான் (Federal form of Government) காணப்படுவதால், மாநில சுயாட்சி என்னும் இந்தக் கருத்து கூட்டாட்சி அரசியலமைப்போடு தொடர்புடையது. கூட்டாட்சி அரசியலமைப்பின் நான்கு முக்கிய இயல்புகளில் முதலாவதாகவும், முக்கியமானதாகவும் கூறப்படும் இயல்பு, 'நடுவண அல்லது தேசிய அரசுக்கும், மாநில அரசுக்கும் (அல்லது கூறுகளுக்கும்) இடையே ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்' என்பதே ஆகும்.

உலக வரலாற்றில் பண்டைக்காலத்தில், அக்கேயா ஈட்டோலியா முதலிய சில கிரேக்க நகரரசுகளில் கூட்டாட்சி அமைப்புக் காணப்பட்டது. இக்காலத்தில் ஆலந்து (Holland), சுவிட்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடு, ஆசுத்திரேலியா, கனடா, இந்தியா, தென்னாப்பிரிக்கா, மலேசியா முதலிய நாடுகளிலும் கூட்டாட்சி அரசியலமைப்புகள் காணப்படுகின்றன. இவற்றிலெல்லாம், கூட்டாட்சி அரசியலமைப்பின் ஏனைய இயல்புகள் வெவ்வேறு அளவுகளில் காணப்பட்டாலும், நடுவண அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அதிகாரப் பகிர்வு வெவ்வேறு அளவில் சுய ஆட்சி பெற்று இருக்கின்றது.

**மாநில சுயாட்சியின் அமைப்பும் அதிகாரங்களும்:** கூட்டாட்சியில் மாநிலத்தின் ஆட்சி அமைப்பு, நடுவண அல்லது தேசிய ஆட்சி அமைப்பைப்போலவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சியாக இருத்தல்வேண்டும். அதாவது நடுவண அரசின் சட்டமன்ற உறுப்பினர்கள் நாட்டிலுள்ள எல்லா வயதுவந்த வாக்காளர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவதைப் போல, மாநில அரசின் சட்டமன்ற உறுப்பினர்களும்,மாநிலத்திலுள்ள வயதுவந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். நடுவண அரசின் நிருவாகத்தைப் போலவே, மாநில அரசின் நிருவாகமும் மாநிலச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள நிருவாகமாக இருத்தல் வேண்டும். அதாவது, மாநில அரசின் நிருவாக உறுப்பும் (அதாவது மந்திரிசபையும்) சட்டமன்ற உறுப்பினரிடையேயிருந்துஅமர்த்தப்பட்டு, அது, அரசாங்கத்தின் கொள்கை, செயல் ஆகியவற்றில் சட்டமன்றத்துக்குப் பொறுப்புடன், அதாவது சட்டமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களுடைய ஆதரவு இருக்கும்வரை மாநில ஆட்சியை நடத்துதல் வேண்டும். மாநில அரசாங்கத்தின் அமைப்பு இவ்வாறு மக்களாட்சியாக அமைப்பில் இருத்தலோடு, அது பலவகையான பணிகளை நிறைவேற்றுமளவுக்கு அதிகாரங்களையும் பெற்றிருத்தல் வேண்டும். அதன் பொருட்டு, நடுவண அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே ஓர் அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

**மாநில சுயாட்சிக்குரிய பாதுகாப்புகள்:** கூட்டாட்சி அரசியலமைப்பிலே, நடுவண அரசுக்கும் மாநிலங்களுக்குமிடையே அதிகாரப் பகிர்வு செய்யும் போது, தோன்றும் ஒரு சிக்கல் யாதெனில், கூட்டாட்சியின் கூறுகளாகிய மாநிலங்கள் சுயாட்சி உடையனவாக இருக்குமாறும், அதே சமயத்தில் கூட்டாட்சி என்ற அமைப்பைப் பாதுகாக்குமளவுக்கு வலுவான, அதிகாரங்களை உடைய ஒரு நடுவண அரசாங்கம் இருக்குமாறும் அதிகாரங்களைப் பிரிப்பது எப்படி என்பதாகும். மாநில சுயாட்சி என்பதனால்,மாநிலங்களுக்குக் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து தனியான, சுதந்திரமுடைய அரசாக இருப்பதற்கு உரிமை உண்டு என்பது பொருளன்று; நடுவண அரசிலிருந்து விலகிச் செல்லும் இயல்புகள் (Centrifugal forces) மாநிலங்களில் தலை தூக்காதபடி தடுத்தற்கு, மிகுதியான கட்டுப்பாடு அதிகாரங்களை உடைய ஒரு மைய அரசு இருத்தல் வேண்டும்; ஆனால் அதே சமயத்தில் சமயம், மொழி, பண்பாட்டுச் சிறப்புகளைப் பெற்றுள்ள சிறிய நிலப்பகுதிகள் ஒவ்வொன்றின் சிறப்பான பாகுபாடுகளையும் பாதுகாத்தற்கு வேண்டிய அளவு சுயாட்சி அதிகாரங்களும் அவற்றுக்கு இருத்தல் வேண்டும். அவற்றின் தனிச் சிறப்புகளைஅழிக்குமளவுக்கு மையம் நாடுகிற அதிகாரக் குவிப்பு இயல்பு (Centripetal forces) நடுவண அரசாங்கத்திடம் தலை தூக்காதபடி மாநில உரிமைகளைக் காப்பாற்றுதற்கு அரசியலமைப்பு விதிகளின் வாயிலாக நடுவண அரசாங்கம் ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். ஆகையால் மாநிலச் சிறப்பியல்புகளின் வளர்ச்சி, பாதுகாப்பு என்ற நோக்கத்தையும், கூட்டாட்சியின் பாதுகாப்பு என்ற நோக்கத்தையும் கருத்தில் கொண்டு, அதிகாரப் பகிர்வில் ஒரு நல்ல விதி பின்பற்றப்படுகிறது. அதாவது, நாடு முழுவதற்கும் தொடர்பான பொருள்களைப் பற்றிய அதிகாரங்களெல்லாம் (அதாவது பாதுகாப்பு, செய்தித் தொடர்புகள். போக்குவரவு படைகளின் கட்டுப்பாடு. அயல் நாட்டு உறவுகள், அயல் நாட்டு வாணிகம், கப்பல் போக்குவரவு, நாணயச் செலாவணி முறை முதலியவையெல்லாம்) கூட்டாட்சி அரசாங்கத்தின் (அதாவது நடுவண அரசாங்கத்தின்) கட்டுப்பாட்டில் வைக்கப்படுதல் வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவையாக அல்லாத பொருட்களின் மீதான அதிகாரங்களெல்லாம், (அதாவது, உள்ளாட்சி, நகராட்சி நிறுவனங்கள், மருத்துவமனைகள், மாநில மராமத்து வேலைகள், சொத்து, குடிமை உரிமைகள், நீதி வழங்குதல் முதலியவை எல்லாம்) மாநில அரசுகளிடம் விடப்படுதல் வேண்டும்.

ஐக்கிய அமெரிக்க நாடு, ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து, உருசியா முதலிய கூட்டாட்சி நாடுகளில் நடுவண அரசாங்கத்தின் அதிகாரங்களெல்லாம் அவ்வவற்றின் அரசியலமைப்புச்சட்டங்களில் எண்ணிக்கைப் படுத்திக் கூறப்பட்டிருக்கின்றன (Enumerated). ஆகையால், அவற்றில் கூறப்படாத அதிகாரங்களை நடுவண அரசாங்கம் கையாளுதலியலாது. அவ்வகையில் நடுவண அரசாங்கம் மாநில சுயாட்சியை அழிப்பதினின்றும் தடுக்கப்படுகிறது. அந்நாடுகளில் எஞ்சிய அதிகாரங்களெல்லாம் மாநிலங்களிடமே விடப்பட்டுள்ளன. அவற்றில் மாநில சுயாட்சிக்கு மேலும் சில பாதுகாப்புகள் அரசியலமைப்புகளின் வழியாக அளிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. நடுவண அரசுக்கும், மாநிலங்களுக்குமிடையே அதிகாரங்களைப் பற்றி எழும் வழக்குகளை அரசியலமைப்புச் சட்டத்தை விளக்குதல் வாயிலாகத் தீர்த்து வைக்கும் அதிகாரத்தைக் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு அளித்தல். ஐக்கிய அமெரிக்கா, ஆசுத்திரேலியா கூட்டாட்சிகளின் நீதிமன்றங்களுக்கு இவ்வதிகாரம் இருக்கிறது.

2. அரசியலமைப்புச் சட்டங்களை இறுதியாக நிறைவேற்றும் அதிகாரம் குடிமக்களிடத்தே விடப்படுதல். சுவிட்சர்லாந்தில் அரசியலமைப்புச் சட்டங்

களெல்லாம் கட்டாயக் குடியொப்பத்துக்கு விடப் படுதல் வேண்டும்.

3. அரசியலமைப்பு ஒரு அடிப்படைச் சட்ட மாகையால் அதைத் திருத்துவதில் நடுவண அரசாங் கத்துக்கும், மாநில அரசுகளுக்கும் பங்கு கொடுக்கப் படுதல். இந்த முறை ஐக்கிய அமெரிக்க நாடு, ஆசுத் திரேலியா முதலிய கூட்டாட்சிகளில் காணப்படு கிறது.

4. கூட்டாட்சி அரசாங்கத்தின் மேல் சட்ட மன்றத்தில் எல்லா மாநிலங்களுக்கும் சமமான அள வில் பேராளர் உரிமை வழங்கப்படுதல். ஐக்கிய அமெ ரிக்கா நாடு, சுவிட்சர்லாந்து, ஆசுத்திரேலியா முதலி யவை எடுத்துக் காட்டுகள்.

**இந்தியாவும் மாநில சுயாட்சியும்:** பல சிறிய சுதந் திர அரசுகளாகப் பிரிந்திருந்த இந்திய நாடுகளைத் தமது ஆட்சியின் வழியாக இணைத்து வைத்த ஆங் கிலேயர் கி.பி.1772 இலிருந்து 1936 வரை இந்தி யாவை ஓரரசு நாடாகவே (Unitary Status) ஆட்சி செய்தனர். நடுவண அரசின் வேலைப் பளுவைக் குறைத்தற்காக நிதித்துறையில் சிறிது அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தினர். அவர்கள் 1919-ஆம் ஆண் டுச் சட்டத்தின்படி மாகாணங்களில் இரட்டையாட் சியைக் கொண்டு வந்தனர். இந்திய தேசிய காங் கிரசு, மாகாணங்களில் சுயாட்சியும், நடுவண அரசில் குடியேற்ற நாட்டுத் தன்னாட்சியும் (Dominion Status) நிறுவப்படுதல் வேண்டுமென்று இயக்கங் களை நடத்திற்று. ஆங்கிலப் பாராளுமன்றம் நிறை வேற்றிய 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் இந்தியாவுக்கு ஒரு கூட்டாட்சி அரசாங்க அமைப்பும், மாகாணங்களில் சுயாட்சியும் ஏற்படுத்தப் பட்டன. ஆனால், இந்தியச் செயலருக்கும், இந்திய அரசப் பேராளருக்கும், மாகாணங்களின் ஆளுநர் களுக்கும் பெருமளவில் சிறப்பு அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன. இந்தியா சுதந்திரம் பெற்ற தும், அதற்கு வரையப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் (1950), நான்கு கூட்டாட்சி இயல்புக ளோடு கூடிய ஒரு நடுவண அரசும், மாநில சுயாட்சி யும் நிறுவப்பட்டன.

அதன்படி மாநிலம் ஒவ்வொன்றிலும் மாநில வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற மும், அதற்குப் பொறுப்பான மந்திரி சபையும் நிறுவப்பட்டன. சட்டம் செய்வதற்கான அதிகாரங் களும், நடுவண அரசுப்பட்டியல், மாநிலப் பட்டியல், கலவைப் பட்டியல் என மூன்றாகப் பிரிக்கப்பட்டன. அரசியலமைப்பை விளக்கும் அதிகாரம் இந்தியத் தலைமை நீதிமன்றத்திடம் கொடுக்கப்பட்டது, அரசி யலமைப்பைத் திருத்துதலில் நடுவண, மாநில அரசு களுக்குப் பங்கு கொடுக்கப்பட்டது.

இந்தியப் பெருநாட்டில் வாழும் அனைத்து மக்களும், ஒரே மொழி, இன, பண்பாட்டு மூலத்தைக் கொண்டவர்கள் அல்லர்; வரையறுக்கப்பட்ட நிலப் பகுதிகளை வளமான, தத்தம் மொழித் தாயகங் களாகக்கொண்டு, வரலாற்றுக் காலம் தொட்டு, தன்னாட்சியமைத்து வாழ்ந்து வருபவர்கள். அத் தகைய மக்களை மொழி நாட்டினங்கள்' (Linguistic Nationalities) அல்லது 'தேசிய இனங்கள்' (Nationalities) என்று ஆட்சியியல் வகைப்படுத்துகிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழர், தெலுங்கர், மராத்தியர், வங்காளிகள், இந்தி மொழித் தேசிய இனத்தினர் போன்ற ஏறத்தாழ இருபதுக்கும் மேற் பட்ட தேசிய இனங்கள் நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். அத்தேசிய இனங்கள் தத்தம் தனிப் பண்பாடு, வரலாறு, மொழி, நாகரிகம், மொழி யினத் தனித்தன்மை ஆகிய இன்னோரன்னவற்றைப் பேணிக் காத்து வருகின்றன.

மௌரியப் பேரரசு, குப்தப் பேரரசு, முகலாயப் பேரரசு, ஆங்கிலேயப் பேரரசு ஆகியவை நடைமுறை யிலிருந்து கால வட்டங்களில் மட்டும் தமது மொழி யின நலன்களுக்குக் குந்தகமின்றி ஒரு நடுவண் அரசின் கீழ்ச் சில உரிமைகளை இழந்து செயற்பட்டு வந்தன. முகலாயப் பேரரசர் அக்பர் ஒரு வலிமை யான மைய அரசின் மூலமாக அப்பல்வேறு மொழியின மக்களை இணைக்கும் அரசியல் ஒருங் கிணைப்பைப் பெற முனைந்தார். ஔரங்கசீபு காலத்தில் ஒருமுக மைய ஆட்சி முழுமை பெற்றது. அவருக்குப் பின்னர் அறுபத்தி ஆறு ஆண்டுகள், இந்தியாவில் 'நடுவண் அரசு' என்ற ஒன்று இயங்க வில்லை.

அடுத்து வந்த ஆங்கிலேயப் பேரரசு முகலாயரைப் பின்பற்றி இந்தியத் துணைக் கண்டத்தை 'ஒரே நாடு' எனவும்; அதில் வரையறுக்கப்பட்ட மொழி பேசும் பகுதிகளில் வாழ்ந்த பல்வேறு தேசிய இனங் களை 'ஓரின மக்கள்' எனவும் கொண்டு ஒரே மத்திய ஆதிக்க ஆட்சியின் கீழ் கி.பி. 1773 முதல் கி.பி. 1860 வரை இயங்கத் தலைப்பட்டது. இந்திய நாடு முழு வதையும் தம் நிருவாக வசதிக்காகப் பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய மூன்றே மூன்று தலை மாகாணங்களாகப் (Presidencies) பகுத்து ஆட்சி செய்தது. மாநிலங்களுக்குத் தன்னாட்சி உரிமைகளும் அதிகாரங்களும் வழங்கப்படவில்லை.

ஆனால், அதில் ஆங்கிலேயர் முழு வெற்றியடைய வில்லை. முதல் இந்திய சுதந்திரப் போரின் விளை வாக மத்திய அரசில் குவிந்திருந்த பல அதிகாரங்கள் மாநிலங்களுக்கும் மெல்ல மெல்ல கி.பி. 1857 க்குப் பின் பரவலாக்கப்பட்டன.

தலை மாநிலங்கள் பின்னர்ப் பல மாநிலங்களாகப்( Provinces) பகுக்கப்பட்டன. இந்தியமன்றங்களின் சட்டங்களால் கி.பி. 1861 – ஆம் ஆண்டு தொடங்கி 1909-ஆம் ஆண்டு வரை மாகாணங்களுக்கு மெல்ல மெல்ல அதிக அதிகாரங்களும், தன்னாட்சி உரிமைகளும் தரப்பட்டன. இந்திய அரசுச் சட்டம் மூலமாக அனைத்திந்தியா முழுமைக்கும் பொருந்தும் அரசுப் பணிகள் (1919) மைய அரசின் அதிகாரப் பட்டியலுக்கும், மாநிலங்களின் தனித் தன்மையைக் காக்கும் சில பணிகள் மாநில அரசுப்பட்டியலுக்கும் வழங்கும் வகையில் 'அரசாங்கப் பணிகள்' தொடங்கப்பட்டன. மாநிலங்களில் 'இரட்டை ஆட்சி' ஏற்பட்டது. மாநிலத் தன்னாட்சியும் மாநிலங்களில் முளைவிட்டது.

மொழி வழி மாநிலங்கள் ஏற்பட வேண்டுமென்ற வலுவான அரசியல் உணர்வும், போராட்டங்களும் 75 ஆண்டுகளுக்கு மேலாக வளர்ந்தன. இறுதியில் 1953-இல் தொடங்கி, 15 ஆண்டுகளில் மொழி வழி மாநிலங்கள் ஏற்பட்டன.

இந்திய அரசுச் சட்டம் (1935) முதன் முதலாக மாநில சுயாட்சியின் வளர்நிலைக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டது. ஆனால், பல மாநில உரிமைகள், மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் அளவில் ஆதிக்கம் உள்ள மத்திய அரசையே அச்சட்டம் படைத்திருந்தது. அதனால், 'குறுக்கப்பட்ட மாநிலத் தன்னாட்சி' நடைமுறைக்கு வந்தது.

இந்தியா விடுதலை பெற்ற போது பாகிசுத்தான் பிரிந்தது. அதனால், மீண்டும் நாடு துண்டாடப் பட்டுவிடுமோ என்ற அச்சத்திலும், ஐயத்திலும் ஆதிக்கம் நிறைந்த மத்திய அரசையும், அரைகுறை மாநில சுயாட்சியைக்கொண்ட மாநில அரசுகளையும் இந்திய அரசமைப்பு (Constitution of India) படைத்தது. மாநில அதிகாரங்களில் தலையிடும் அதிகாரங்களும், தேவையானால் மாநில அரசாங்கங்களைக் கலைக்கும் அதிகாரங்களும், மாநில மக்கள் நியாயமாகப் பெற வேண்டிய மொழி, இன, பண்பாட்டு, பொருளாதார, அரசியல் உரிமைகளும் இன்றைய நடுவண் அரசால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சுருங்கக் கூறினால் இந்திய அரசமைப்புச்சட்டம் உண்மையான 'கூட்டாட்சி அரசமைப்பன்று. முழு மாநிலத் தன்னாட்சியின் பட்டயமுமன்று. மாறாக, மாநில அரசுகளை அடக்கியாளுகின்ற-மாநிலத் தன்னாட்சி உரிமைகளை மொழிவாரி மாநில மக்களுக்கு முழுமையாகத் தராததொரு 'அரைகுறைக் கூட்டாட்சி அமைப்பு' (Quasi Federal System) ஆகும்.

மாநில சுயாட்சி என்பது பிரிவினையன்று. மாறாக பிரிவினையைத் தவிர்க்கும் அரசமைப்பு வழிமுறை. உலக உருண்டையில் இன்று மாநிலத் தன்னாட்சியுடனும், மெய்யான கூட்டாட்சி அமைப்புடனும் இயங்குகிற அமெரிக்க ஐக்கிய நாடுகள், உருசியா, கனடா, சுவிட்சர்லாந்து, ஆசுதிரேலியா போன்ற பல கூட்டாட்சி நாடுகள், கூட்டாட்சி முறையின் உயிர்க் கூறான மாநிலத் தன்னாட்சியைத் தம் உறுப்புகளான மாநிலங்களுக்கு முழுமையாகத் தந்து மெய்யான ஒருமைப்பாட்டுடன் திகழ்கின்றன. ஆங்கெல்லாம் முழு மாநிலத் தன்னாட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதால் பிரிவினை ஏற்பட்டுவிடவில்லை. மாநிலத் தன்னாட்சியின்றி, ஒருமுக மத்திய வல்லாட்சியைக் கொண்ட நாடுகள் பிரிவினையைத்தவிர்த்திட முடியவுமில்லை என்பது வரலாற்றுப் பேருண்மை.

எனவே, இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் பல்வேறு தேசிய இனங்கள் தத்தம் மொழி, இன, பண்பாட்டு, உரிமைகளையும், அரசியல், பொருளியல், சமுதாய உரிமைகளையும் போற்றிப் பாதுகாத்துப் பேணி வளர்க்கக்கூடிய வகையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வரையறைக்குட்பட்டு, இந்தியாவின் ஒற்றுமையை உள்ளடக்கிய உண்மையான ஒரு கூட்டாட்சி அமைப்பினுள், மத்தியத் தலையீடும், கட்டுப்பாடுகளும் இல்லாமல், இந்தியப் பன்மொழித் தேசிய இனங்கள் தேவையான முழு உரிமைகளையும், அதிகாரங்களையும் பெற்றுத் தன்னாட்சியுடன் இயங்குவதே மாநிலத் தன்னாட்சியாகும். கூட்டாட்சி நாட்டினுடைய சிதைவுறாத் தன்மைதான் மாநிலத் தன்னாட்சியின் அடிப்படைக் கூறு. எனவே, அனைத்திந்திய ஒற்றுமையென்ற உறுதியான அடித்தளத்தின் மேல்தான் முழு மாநிலத் தன்னாட்சியையும், மெய்யான கூட்டாட்சியையும் எழுப்ப முடியும்.

கு.ச.ஆ ; கா.நா.அர ; பா.கு.

**மாநிலத் தலைமை வழக்கறிஞர்:** இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 165 – ஆம் பிரிவு, மாநிலத் தலைமை வழக்கறிஞர் (Advocate General) எவ்வாறு பணியமர்த்தப் படுகிறார் என்றும், அவருடைய பணிகள் என்னென்ன என்றும் விளக்குகின்றது.

அதன்படி ஒவ்வொரு மாநிலத்தின் ஆளுநரும் அந்தந்த மாநிலத்திற்கான தலைமை வழக்கறிஞரை நியமனம் செய்யும் அதிகாரம் பெற்று விளங்குகிறார். அவ்வாறு பணிஅமர்த்தப்படும் ஒருவர் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணிசெய்யத் தகுந்த தகுதியைப் பெற்றிருத்தல் இன்றியமையாதது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 217-ஆம் பிரிவு உயர்நீதி மன்றத்தின் நீதிபதிக்கான தகுதிகளைக் கீழ்க்காணுமாறு கூறுகிறது. நீதிபதியாகப் பணியாற்ற

அமர்த்தப்படுகின்ற ஒருவர் (அ) இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும், (ஆ) குறைந்த அளவு 10 ஆண்டுகளாவது இந்திய ஆள்வரைக்குள் நீதித்துறையில் பணியாற்றியிருக்க வேண்டும், (இ) குறைந்த அளவு 10 ஆண்டுகளாவது ஓர் உயர்நீதி மன்றத்திலோ வெவ்வேறு உயர்நீதிமன்றங்களிலோ பணியாற்றிருக்க வேண்டும்.

165-ஆம் பிரிவின் இரண்டாம் உட்பிரிவு மாநிலத் தலைமை வழக்கறிஞரின் பணிகளைக் கூறுகிறது. அதன்படி இவர் மாநில அரசு கேட்கின்ற சட்ட நுணுக்கங்களை வழங்குவார். அதுபோலவே ஆளுநரால் கேட்டுக்கொள்ளப்பட்டபடி சட்டத்தொடர்பான பணிகளையோ அவரால் இவருக்குத்தரப்பட்ட சட்டத்தொடர்பான பணிகளையோ செய்வார். மேலும் அரசியலமைப்புச் சட்டத்தின் படியோ ஏனைய சட்டங்களின் படியோ இவருக்கு இடப்பட்டிருக்கும் பணிகளையும் இவர் செய்ய வேண்டியது இன்றியமையாதது.

இவரது பணிக்காலம் மாநில ஆளுநர் விரும்பும் வரை தொடரும். இவருக்கான ஊதியத்தையும் ஆளுநரே முடிவுசெய்கிறார்.

மாநிலத் தலைமை வழக்கறிஞர் சட்டமன்றக் கூட்டத்தின்முன் தோன்றுவதற்கு உரிமையுடையவர். எனினும், இவர் அங்கு நிறைவேற்றப்படும் சட்டமுன் வரைவுகளின் ஒட்டெடுப்பில் கலந்து கொள்ளத் தகுதியற்றவராவார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் 62 வயதுவரை பணிபுரியலாம். ஆனால், மாநிலத் தலைமை வழக்கறிஞர் ஆளுநர் அனுமதித்தால் 62 வயதிற்கு மேலும் பணிபுரியலாம். ஆனால், ஓய்வுபெற்ற உயர்மன்ற நீதிபதி இந்தப்பணிக்கு நியமனம் செய்யப்படமாட்டார். ஏனெனில் நியமனத்தின்போது 62 வயதுக்கு மேற்பட்டவராயிருத்தலின் அவர் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கத் தகுதி அற்றவராவார். எனவே அரசியல் அமைப்புச்சட்டம் 165-ஆம் பிரிவின்படி அப்படிப்பட்ட ஒருவரை மாநிலத் தலைமை வழக்கறிஞராக நியமனம் செய்ய இயலாது.

பொதுவாக இப்பதவி வகிப்பவர்கள் அரசாங்கம் மாறும்போது பதவியை விட்டுத்தாமே விலகிவிடுவர். எனினும், அடுத்த அரசு பதவியேற்கும் காலம் வரையில் ஆளுநர் விருப்பத்தின் பேரில் அப்பதவியில் தொடர்வதும் உண்டு. அரசில் ஏற்படும் மாற்றங்கள் இப்பதவியினைப் பாதிக்கின்றதால் இதனை அரசுத் தொடர்பான நியமனம் என்று கருதுவதற்கு இடமுண்டு.

ம.கா.

**மாநில நிதிக் கழகங்கள்:** நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில்துறை வேகமாக வளரவேண்டும். அதற்கு நீண்டகால அடிப்படையில் முதல் வேண்டும். அத்தகைய முதலீட்டை வணிக வங்கிகளால் தேவையான அளவு வழங்க முடிவதில்லை. எனவே, அதற்காகத் தனிவகை வங்கிகளை அமைப்பது தேவையாகிறது. அவ்வகை வங்கிகள் பொதுவாகத்தனியார் துறைக்கு இடைக்கால, நீண்டகாலக் கடனை வழங்குகின்றன. முதலீட்டிற்கான வாய்ப்பைக் கண்டுபிடித்துச் சொல்லுவது, தொழில் நுணுக்க நிருவாக ஆலோசனைகளை வழங்குவது போன்ற பணிகளையும் இவ்வங்கிகள் மேற்கொள்கின்றன. இவற்றை வளர்ச்சி வங்கிகள் (Development Banks) எனக்கூறுகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத் தேவைகளுக்கேற்பப் பல்வேறுவகையான வளர்ச்சி வங்கிகள் அமைக்கப்படுகின்றன. மாநில நிதிக் கழகங்கள் என்பவை வளர்ச்சி வங்கிகள் ஆகும். இவை 1951-ஆம் ஆண்டில் இந்திய அரசின் மாநில நிதிக் கழகங்கள் சட்டத்தின்படி எல்லா மாநிலங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 'தமிழ்நாட்டுத்தொழில் முதலீட்டுக் கழகம்' (Tamilnadu Industrial Investment Corporation)என்ற பெயரில் மாநில நிதிக்கழகம் செயற்படுகிறது.

மாநில நிதிக் கழகங்கள் மாநிலத்திலுள்ள சிறுதொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் நிதியுதவி அளிக்கின்றன. அதனால் நாட்டில் சிறுதொழில்களுக்குத் தேவையான முதலீடும், ஆலோசனைகளும் எளிதாகக் கிடைக்கின்றன.

**முதலீடும் நிதிவசதியும்:** மாநில நிதிக் கழகங்களின் முதலீட்டை மாநில அரசே முடிவு செய்கிறது. என்றாலும் முதலீடு 50 இலட்சம் உருபாய்க்குக் குறையாமலும் 5 கோடிக்கு அதிகப்படாமலும் இருக்க வேண்டும். இவை வெளியிடும் பங்குகளில் 75 விழுக்காட்டை மைய இருப்பு வங்கி, வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், காப்பீட்டுக் கழகங்கள், மாநில அரசு போன்றவை வாங்கவேண்டும். மீதியுள்ள பங்குகள் பொதுமக்கள் வாங்குவதற்காக வெளியிடப்படும்.

பணத்தேவை கூடுமானால் இக் கழகங்கள் கடன் பத்திரங்களை வெளியிட்டு நிதி வசதியைப் பெருக்கிக் கொள்ளலாம். ஆனால், அத்தகைய கடன் அதன் முதலீட்டுத் தொகையைப் போல ஐந்து மடங்குகளுக்கு மேல் போகக்கூடாது. மைய இருப்பு வங்கி, தொழில் வளர்ச்சி வங்கி, அரசு ஆகியவற்றிடமிருந்தும் இக் கழகங்கள் கடன்பெற்று, தங்கள்

பொருள் வசதியைப் பெருக்கிக்கொள்ள முடியும். ஐந்தாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட நிலை வைப்புகளைப் பெற்றும் இக்கழகங்கள் நிதி வசதியைப் பெற்றுக்கொள்கின்றன.

**நிருவாகம்:** மாநில நிதிக் கழகங்களை நிருவாகம் செய்ய இயக்குநர் குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு மாநில நிதிக் கழகத்திற்கும் ஓர் இயக்குநர் குழு உண்டு. இந்திய மைய இருப்பு வங்கியின் ஆலோசனைப்படி மாநில அரசு ஒரு நிருவாக இயக்குநரையும், மூன்று இயக்குநர்களையும் நியமிக்கிறது. முதலீட்டை வழங்கும் ஏனைய வங்கிகளுக்கும், பொது மக்களுக்கும் நிருவாகக் குழுவில் இடம் அளிக்கப்படுகிறது. மாநில நிதிக் கழகங்கள் பொதுவாக மாநில அரசின் கொள்கைக்கேற்பச் செயற்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும். அதனால் மாநிலத்தின் சிறுதொழில் வளர்ச்சி பேணிப் பாதுகாக்கப்படுகிறது.

**வளர்ச்சிப்பாதை:** மாநில நிதிக் கழகங்கள் வழங்கும் நிதியுதவியைப் பெற்றுக் கொண்டு சிறுதொழில்களும், நடுத்தரத் தொழில்களும் வளர்கின்றன. நீண்டகாலக் கடனின் காலஉச்சவரம்பு இருபது ஆண்டுகள் ஆகும். மேலும், அரசின் பத்திரங்கள், பங்குகள், சொத்துகள் ஆகியவற்றை அடைமானமாகப் பெற்றுக்கொண்டு தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. மாநில நிதிக் கழகங்கள் 1969-1970-இல் கொடுத்த கடன் உரூ. 104 கோடி ஆகும். அக் கடனின் அளவு 1979-1980-இல் உரூ. 185 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதைப் போலவே இக் கழகங்கள் மைய இருப்பு வங்கியிடமும், தொழில் வளர்ச்சி வங்கிகளிடமும் பெற்ற கடன் 1969-1970-இல் உரூபாய் 25 கோடியாகும். ஆனால், அது 1975-1976 -இல் ஏறத்தாழ 140 கோடி உரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதைப்போலவே செலுத்தப்பெற்ற முதல், நிலை வைப்புகள் எல்லாம் அதிகரித்துள்ளன. அவை இக்கழகங்களின் வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகின்றன. இக் கழகங்களின் வளர்ச்சியைக் கண்டு பன்னாட்டு வளர்ச்சி மன்றம் (The International Development Association) உதவத் தலைப்பட்டது. வெளிநாட்டிலிருந்து சிறுதொழிலின் வளர்ச்சிக்காக இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்கும் ஏனைய பொருட்களுக்கும் அன்னியச் செலாவணி இன்றியமையாதது. ஏறத்தாழ 2.5 கோடி தாலரைக் கடனாக மாநில நிதிக் கழகங்களுக்குப் பன்னாட்டு வளர்ச்சி மன்றம் கொடுத்திருக்கிறது. அதன்பயனாக அயற்செலாவணிக் கடனைக் கொடுப்பது மாநில நிதிக் கழகங்களுக்கு எளிதாகியுள்ளது. தமது மொத்தச் சொத்தில் 80 விழுக்காட்டைக் கடனாக இக்கழகங்கள் வழங்கியுள்ளன.

இவ்வாறு மாநில நிதிக் கழகங்கள் அளித்துள்ள பயன்கள் பலவெனினும், சில சிக்கல்களும் உள்ளன. சிறு தொழில் நிறுவனங்கள் முறையாகக் கணக்கு வைக்காதிருப்பதால் அவற்றின் திட்டங்களை ஏற்றுக் கடன் கொடுப்பதில் காலதாமதமாகின்றது. சிறு தொழில்கள், நிறுவனங்களின் திட்டங்கள் ஆகியன முறையாக அமையாதிருப்பதால் அவற்றை மதிப்பிட்டுக் கடன் கொடுப்பதில் இடர்ப்பாடு ஏற்படுகிறது. என்றாலும், சிக்கல்களைத் தாங்கி, தான் ஏற்றுள்ள பணியினை மாநில நிதிக் கழகங்கள் திறம்படச் செய்து வருகின்றன. டி.ப.

**துணை நூல்கள்:**

குருசாமி, மா.பா., பணம், வங்கி இயல்கள், குரு. தேமொழி வெளியீடு, திருச்செந்தூர், 1984.

**Ruddar Datt and Sundaram K P.M.**, Indian Economy, S.Cband & Co., New Delhi, 1986.

*மாநில நிருவாக முறை:* இந்திய அரசியலமைப்பு, மத்திய மாநில அளவிலான இருவகை நிருவாக நிலைகளைத் தோற்றுவித்திருக்கிறது. ஆளுநர், மாநிலத்தின் தலைவராக விளங்குகிறார். மாநில அரசின் நிருவாகத்தை ஆளுநர் அவர்களின் பணி மூலமும், அரசாங்கத்தின் மூன்று முக்கிய பிரிவுகளான ஆட்சித்துறை, சட்டமன்றம், நீதித்துறை ஆகியவற்றின் மூலமும், மத்திய மாநில உறவுகளின் மூலமும் அறிந்துகொள்ளலாம்.

**ஆளுநர்:** ஆளுநர் மாநில அரசாங்கத்தின் பெயரளவிலான தலைவராவார். இவர் ஐந்து ஆண்டுக்காலத்திற்கெனக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப் பட்டுக் குடியரசுத் தலைவரின் விருப்பமுள்ளளவும் பதவியிலிருக்கிறார். ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவர் 35 வயதை அடைந்தவராகவும், இந்தியக் குடிமகனாகவும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலோ, மாநிலங்களின் சட்டமன்றங்களிலோ அங்கத்தினரல்லாதவராகவும், ஊதியம் பெறும் எப்பதவியும் வகிக்காதவராகவும் இருத்தல்வேண்டும் என்பது அரசியலமைப்புக் கூறும் விதியாகும்.

ஆளுநருக்கு ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்களும், சட்டமன்றம் சார்ந்த அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்களுள் மிகவும் முக்கியமானதாக முதல் அமைச்சரை நியமிக்கும் பணியைக் குறிப்பிடலாம்.

அமைச்சர் குழுவை, முதல் அமைச்சரின் பரிந்துரையின்படி நியமிக்கின்றார். அமைச்சர்களுக்குத் துறைகளை நிருணயிக்கும் உரிமையை

அவர் பெற்றிருக்கின்றார். மாநிலப் பொதுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவின் தலைவர், உறுப்பினர்கள், அரசுத் தலைமை வழக்குரைஞர் (Advocate General) போன்ற முக்கிய பதவிகளுக்கு ஆளுநர் அமைச்சர் குழுவின் ஆலோசனையின்படித் தக்கவர்களை நியமிக்கின்றார்.

ஆளுநர், மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு பகுதியாவார். மாநிலச் சட்டமன்றம் இயற்றும் சட்டவரைவுகள் யாவும் ஆளுநரின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே சட்டமாகின்றன.

சில சூழ்நிலைகளில் ஆளுநர் ஆட்சித்துறைக் கட்டளைகளைப் பிறப்பிக்கவும் உரிமை பெற்றுள்ளார். ஆனால், அவர் பிறப்பிக்கும் ஆட்சித்துறைக் கட்டளைகள் அடுத்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒப்புதலுக்கு வைக்கப்படும். சட்டமன்றம் அவற்றிற்கு ஒப்புதலளிக்காவிட்டால் ஆறு வாரங்களுக்குப் பிறகு அவை செல்லாதவை ஆகும்

ஆளுநருக்குக் குடியரசுத்தலைவரைப் போன்று இராணுவம், வெளிநாட்டுறவு தொடர்பான அதிகாரங்கள் ஆகிய எதுவும் கிடையாது. மேலும், அவருக்கு நெருக்கடி அதிகாரங்களும் அளிக்கப்படவில்லை. அரசியலமைப்பின் 356 - வது விதியின்படி ஆளுநர், மாநில அரசாங்கம் அரசியலமைப்பின்படி செயற்படத் தவறிவிட்டது என்று கண்டால் அதுகுறித்த அறிக்கையைக் குடியரசுத் தலைவரிடம் அளித்து மாநில நிருவாகத்தை நடத்துமாறு கூறும் உரிமை பெற்றுள்ளார். அந்த அதிகாரத்தைப் பொறுத்தவரையில் ஆளுநர், அமைச்சர் குழுவின் ஆலோசனையைக் கேட்காமல் தன்னுரிமையுடன் செயற்படமுடியும்.

ஆட்சித்துறையின் முக்கிய அங்கங்களாக அமைச்சரவையும், செயலகமும் விளங்குகின்றன.

**அமைச்சரவை**: ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் அமைச்சரவை (Ministry) உள்ளது. அது ஒரு முதல் அமைச்சரையும் ஏனைய அமைச்சர்களையும் கொண்டது. ஆளுநர் முதல் அமைச்சரையும் முதல் அமைச்சரின் விருப்பப்படி ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கின்றார்.

அமைச்சர் குழு, சட்டமன்றத்தில், பேரவைக்குப் பொறுப்புடையது. அவ்வமைச்சரவை சட்டமன்ற நிருவாகத்திற்கான செயல் திட்டங்களை உருவாக்கி அவை முறையாக நிறைவேற்றப்படுகின்றனவா என்று கண்காணிக்கிறது. ஆளுநரின் அனைத்து அதிகாரங்களையும் நிறைவேற்றும் பணி அமைச்சரவையிடம் உள்ளது. அது வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கிப் பேரவையில் வைக்கிறது. ஒவ்வொரு அமைச்சரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளுக்குப் பொறுப்புடையவராவார். அவர் தம் துறைகளுக்கு அரசுப் பொறுப்பாவார். அமைச்சர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாநிலத்திலும் அம் மாநிலத்தின் அரசியலமைப்புக்குத் தக்கவாறு மாறுபடுகிறது.

**செயலகம்**: செயலகம் (Secretariat) என்னும் சொல் அரசாங்கத் துறைகளின் தொகுப்பைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. நிருவாகத் தலைவர்கள் செயலர்கள் என்றும், அரசியல் தலைவர்கள் அமைச்சர்கள் என்றும் கூறப்படுகின்றனர். செயலர்கள் குடிமுறைப் பணியைச் சேர்ந்தவர்களாவர். செயலர் அரசாங்க அலுவலர் ஆவார். ஒரு துறையின் செயலர் அமைச்சரின் தலைமை ஆலோசகராவார். அவர் அமைச்சர் செய்யும் முடிவுகளையும், உருவாக்கும் கொள்கைகளையும் செயற்படுத்தும் பொறுப்புடையவராவார்

ஒரு துறையில் செயலர் தவிர இணை அல்லது கூடுதல் செயலரும் துணைச் செயலரும், கீழ்ச் செயலரும், உதவிச் செயலரும் இருக்கின்றனர். அவர்களும் அலுவலர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

செயலகத் துறைகளின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. பொதுவாகத் துறைகளின் எண்ணிக்கை பத்து முதல் முப்பத்தைந்து வரை உள்ளது. துறைகளின் எண்ணிக்கை எதுவாயிருப்பினும் ஒவ்வொரு மாநிலமும் உள்துறை, வருவாய், உணவு, வேளாண்மை, நீதி, சட்டம், கல்வி, தொழிற்சாலை, நல்வாழ்வுத்துறை, பொதுப்பணி, போக்குவரத்து, தொழிலாளர் போன்ற முக்கியமான துறைகளைப் பெற்றிருக்கும்.

செயலர்களே (குடிமுறைப் பணியாளர்கள்) நிருவாகத்திற்கு நிலைப்புத் தன்மையையும் தொடர்ச்சியையும் அளிக்கின்றனர். ஒரு மக்களாட்சி அரசியல் முறையமைப்பில், எப்பொழுதும் நிலையான அரசாங்கம் இருக்கும் எனக் கூற முடியாது. எனவே, நிலையான குடிமுறைப் பணியின் சேவை விலக்க முடியாததாகும். அவர்கள் நிருவாகத்திற்கு நிலையான தன்மையை ஏற்படுத்தி மக்களாட்சி முறையைப் பேணிப் பாதுகாக்கின்றனர்.

**சட்டமன்றம்**: மாநில அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மற்றொரு நிறுவனமாக மாநிலச் சட்டமன்றம் இயங்குகிறது. இந்தியா முழுவதும் ஒரே சீரான சட்டமன்ற அமைப்புக் காணப்படவில்லை. சில மாநிலங்களில் ஓரவைச் சட்டமன்றமும், ஏனைய மாநிலங்களில் ஈரவைச் சட்டமன்றமும் காணப்படுகின்றன. ஈரவைச் சட்டமன்றத்தில் மேலவை என்றும் பேரவை என்றும் இரண்டு அவைகள் உள்ளன.

**பேரவை:** பேரவையில் 40 உறுப்பினர்களுக்குக் குறையாமலும் 500 உறுப்பினர்களுக்கு மேற்படாமலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அமையவேண்டும் என்று அரசியலமைப்புக் கூறுகிறது. உறுப்பினர்கள் அனைவரும் ஐந்தாண்டுக் காலத்திற்கென மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பேரவையில் உறுப்பினராவதற்கு ஒருவர் இந்தியக் குடிமக்களுள் ஒருவராகவும், இருபத்தைந்து வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலவை, ஒரு நிலையான மன்றமாகும். இம்மன்றம் ஆறு ஆண்டுக் காலத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி விலகுகின்றனர். மேலவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒருபங்கிற்கு மிகுதல்கூடாது. ஆறில் ஐந்து பங்கு உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர். மேலவை உறுப்பினராவதற்கு ஒருவர் இந்தியக் குடிமக்களுள் ஒருவராகவும், முப்பது வயது நிரம்பியவராகவும், பேரவைத்தொகுதிஏதேனுமொன்றில் வாக்காளராகவும் இருத்தல் வேண்டும்.

மேலவையில் ஒருதலைவரும், ஒரு துணைத்தலைவரும் அவையின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கென இருக்கின்றனர். பேரவையில் ஒரு தலைவரும் துணைத்தலைவரும் அவை நடவடிக்கைகளை நடத்துகின்றனர்.

மேலவைக்குப் பேரவையுடன் ஒருங்கிணைந்த அதிகாரம்கிடையாது. நிதிச்சட்டவரைவுபேரவையிலேயே அறிமுகப்படுத்தப்படுகிறது. பேரவையில் கொண்டு வரப்படும் நிதிச் சட்டவரைவினைப் பதினான்கு நாள்களும், பொதுவான சட்டவரைவினை நான்கு மாதங்களும் காலதாமதப்படுத்தவே மேலவைக்கு இயலும்.

நிதியல்லாத ஏனைய சட்ட வரைவுகளை எந்த அவையிலும் கொண்டுவரலாம். ஒரு சட்ட வரைவு மூன்றுமுறை பார்வைக்கு வைக்கப்படும். முதல் பார்வையில் சட்டவரைவினை அவைக்குக் கொண்டு வர விரும்பும் உறுப்பினர் அறிமுகப்படுத்தி வைக்கிறார். பின் அது பொறுக்குக் குழு (Select Committee) வின்முன் இரண்டாம் பார்வைக்குப் பரிந்துரைக்காக வைக்கப்படும். வாக்கெடுப்பின் போது மூன்றாம் பார்வைக்கு வைக்கப்படும். இந்த நிலையில் எந்தவித மாற்றத்திற்கும் அனுமதியளிக்க இயலாது. அவையின் ஒப்புதலுக்குப்பின் அது மற்றொரு அவைக்கு அனுப்பப்படும். இரு அவைகளுக்குமிடையே சட்டமுடக்கம் ஏற்படின் பேரவையின் முடிவே நிலைநிறுத்தப்படுகிறது. ஒரு சட்டவரைவு ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றதும் சட்டமாகிறது.

**நீதித்துறை:** மாநில நிருவாகத்தில் பெரும்பங்கு வகிக்கும் அடுத்த நிறுவனமாக நீதித்துறை விளங்குகிறது. அரசியலமைப்பின்படி மாநிலத்திற்கெனத் தனிப்பட்ட நீதித்துறை இல்லை. அதற்குப் பதிலாகத் தலைமை நீதிமன்றத்தைத் தலைமையாகக்கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறையே செயற்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் தலைமை நீதிபதியையும் ஏனைய நீதிபதிகளையும் கொண்ட ஓர் உயர்நீதிமன்றம் இருக்கிறது. உயர்நீதிமன்றங்கள், மத்திய-மாநிலச் சட்டங்களின் செல்லுபடியாகும் தன்மையைத் திறனாய்வு செய்யும் உரிமை பெற்றுள்ளன. உயர் நீதிமன்றத்திற்குக்கீழ் சார்நிலை நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவை ஆளுநரால் நியமிக்கப்படுகின்றன.

**வரவு-செலவுத் திட்டம்:** வரவு - செலவுத் திட்டம் (Budget) நிதி அமைச்சகத்தால் ஆயத்தம் செய்யப்பட்டுப் பேரவையின் முன் வைக்கப்படுகிறது. அது ஒரு மாநிலத்தின் நிதித் தேவைகளையும் மாநிலத் தொகுதி நிதி (Consolidated Fund) யிலிருந்து செய்யும் செலவினங்களையும் குறிக்கும். செலவினங்களைப் பற்றிய விவரங்களை வாக்கெடுப்பிற்காகப் பேரவையின் முன் வைத்தபின் அதைப்பற்றிய விவாதம் நடக்கும். பேரவைக்கு அந்தமானியவேண்டுதல்களை (Demands for Grants) மறுக்கவோ, ஒத்திப் போடவோ, குறைக்கவோ உரிமையுண்டு. பேரவையின் ஒப்புதலுக்குப்பின், நிதி ஒதுக்க முன்வரைவு (Appropriation Bill) ஆயத்தம் செய்யப்பட்டுப் பின் அது பேரவையில் நிறைவேற்றப்படும். பண முன்வரைவும் (Finance Bill) அதே முறையிலேயே நிறைவேற்றப்படும்.

**மாநிலத் திட்ட நிறுவனம்:** தேசிய திட்டங்கள் தவிர, தனியாக மாநிலத்திட்டங்களும் உள்ளன. அதற்காக மாநிலத் திட்ட நிறுவனமும் (State Planning Organisation) சில மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ளது. தேசிய திட்டம் உருவாக்கப்படும் பொழுது அதே முறையில் மாநிலத் திட்டங்களும் உருவாக்கப்படுகின்றன. ஒரு மாநிலம் தயாரிக்கும் திட்ட வரைவு அம் மாநிலச் சட்ட மன்றத்திற்கும், திட்டக் குழுவிற்கும் முன்வைக்கப்பட வேண்டும். மாநில அமைச்சர் குழுவாலும் மாநிலச் சட்டமன்றத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே ஒருமாநிலத்திட்டம் செல்லுபடியாக முடியும். அத் திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பு மாநில அரசாங்கத்தினுடையது.

**மத்திய மாநில உறவு:** கூட்டாட்சி முறையிலான அரசாங்கத்தை இந்திய அரசியலமைப்பு உருவாக்கியுள்ளது. மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையே செய்யப்படும் அதிகாரப் பங்கீடுதான் (Division of Powers) கூட்டாட்சி முறை

அரசாங்கம் கொண்டுள்ள சிறப்புப் பண்புகளில் ஒன்றாகும். சட்டமியற்றும் அதிகாரம் யாவும் மத்திய அரசுப் பட்டியல், மாநில அரசுப் பட்டியல் பொதுப் பட்டியல் என்ற வடிவத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மாநில அரசுப்பட்டியலில் உட்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பான சட்டமியற்றும் ஏக போக அதிகாரம் மாநிலச் சட்டமன்றத்திடம் அளிக்கப்பட்டுள்ளது.

**நிருவாகம் தொடர்பான உறவுகள்:** தேசிய இராணுவம், தொடர்வண்டி, நெடுஞ்சாலைகள், நதிகள், பள்ளத்தாக்குகள் தொடர்பான வழக்குகள், தேர்தல்கள் முதலியனவும் எல்லா மாநிலங்களின் வரவு-செலவுத் தொடர்பான கணக்குகளும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவையாகும். மாநிலங்களில் செயற்படும் உயர்நீதி மன்றங்களின் அமைப்பு மத்திய அரசுப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள பிரிவு ஆகும்.

**நிதித் தொடர்பான உறவுகள்:** மாநிலப் பட்டியலில் உள்ள வரிகள் யாவும் மாநிலங்களுக்குச் சொந்தமானவை ஆகும். எடுத்துக்காட்டாக வேளாண்மை வருமான வரி, நிலம் உழுபவர்கள் மீதான சொத்து வரிமுதலியன அமையும். மத்திய அரசால் விதிக்கப்படும் வரிகளில் பல, மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவற்றுள் சில: பயணிகள் இருப்புப் பாதைப் பயணக்கட்டணம், சரக்குக் கட்டணம், வேளாண்மை வருமான வரி தவிர இதர வருமான வரிகள் ஆகும்.

அவ்வாறு வரிகளைப் பகிர்ந்தளிப்பதுடன் உதவி மானியங்களையும் மத்திய அரசு மாநில அரசுக்கு அளிக்கிறது. அவ்வுதவிமானியங்களைப் பகிர்ந்தளிப்பதில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை நிதி ஆணைக் குழு (Finance Commission) தீர்த்து வைக்கிறது.

மேற்கூறிய மாநில நிருவாக முறையானது அதிகாரப் பொறுப்பைப் பகிர்ந்தளிப்பதுடன் அரசியலமைப்பு விதிகளின் மூலம் அப் பொறுப்புகளை நிறைவேற்றும் வழிமுறைகளைக் கட்டுப்படுத்தி மக்களாட்சி முறையில் நிருவாகம் நடைபெற வழிவகுக்கிறது.

கு.து.

**துணை நூல்கள்:**

Shukla, J.D., State and District Administration in India, IIPA Publication, New Delhi, 1976.

Thavaraj, M K., Financial Administration of India, Sultan Chand, New Delhi, 1978.

Tyagi, A R., Public Administration, Principles and Practice, Ram and Sons, Delhi, 1972.

**மாப்பிள்ளைமார் கலகம்:** இந்தியாவில்கேரள மாநிலத்தில் மலபாரைச் சேர்ந்த இசுலாமியரான மாப்பிள்ளைகள் (Moplahs) கி.பி. 19 – ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் அடிக்கடி கலகங்களில் ஈடுபட்டனர். அராபியரின் கால்வழியினரான இவர்கள் இன்றைய கோழிக்கோடு, மலப்புரம் மாவட்டங்களில் உள்ள எர்னாடு, வள்ளுவ நாடு, வட்டங்களில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர், தீவிரமதவாதியரான மாப்பிள்ளைமார் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, எரியூட்டல் முதலான கொடுமைகளைப் புரிந்து வந்தனர். இவர்களை அடக்க ஆங்கில அரசு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. சமூக விரோதிகளான இவர்களைச் சீர் திருத்தப் பலசட்டங்கள் இயற்றப்பட்டன. இவர்கள் மாப்ளாக்கள் எனக் கூறப்பட்டனர். இவர்கள் வன்முறையைப் பின்பற்றி இந்துக்களை மத மாற்றம் செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர்.

**கலகம்:** இவர்கள் கி.பி. 1836 முதல் 1888 முடிய அடிக்கடி வன்முறைகளில் ஈடுபட்டதால், மலபார்ப் பகுதியில் சட்டம் ஒழுங்கு கெட்டது. இவர்கள் எர்னாடு வட்டத்தில் முதன்முதலாக கி.பி. 1836-ஆம் ஆண்டு கலகம் செய்யத் தொடங்கினர். இவர்கள் கி.பி.1836 முதல் 1853 முடிய 22 தடவை கலகங்களில் ஈடுபட்டனர். அதற்குக் காரணம் மாம்பிராம் தங்கல் (Mampram Tangal of Tirurangadi) போன்ற மாப்பிள்ளைத் தலைவர்களின் தூண்டுதலேயாகும். மஞ்சேரி, அங்கடிபுரம பகுதியில் இவர்கள் கி.பி.1849 -இல் கலகம் செய்தனர்.

**ஆங்கில அரசின் நடவடிக்கைகள்:** கோழிக்கோடு பகுதிகளில் பெருங்கலகங்கள் ஏற்பட்டன. ஆங்கிலேய அரசு கி.பி.1852 – இல் சாதர் அதலத்தின் நீதிபதியாக இருந்த இசுடிரேஞ்சு (T.L.Strange, the judge of the Sadr Adalat) அவர்கள் மாப்பிள்ளை கலகம் பற்றி ஆராய ஆணையிட்டது. அக்கலகங்களை ஒடுக்கத் தனிக்காவலர் படை (Special Police Force) நிறுவப்பட்டது. 23,24 – ஆம் பிரிவில் சட்டங்கள் கி.பி.1854–இல் இயற்றப்பட்டன. கலகக்காரர்கள் மீது தண்டக் கட்டணங்கள் விதிக்கப்பட்டன. மாப்பிள்ளைகள் கத்தி வைத்துக்கொள்ளத் தடைவிதிக்கப்பட்டது. சினங்கொண்ட மாப்பிள்ளைமார் மலபார் மாவட்டக் குற்ற நடுவர் எச்.வி. கனோலி (H.V.Conolly the District Magistrate of Malabar) என்பாரைக் கள்ளிக்கோட்டையில் உள்ள அவர் மாளிகையில் கொன்று பழி தீர்த்தனர். அவர்களை ஒடுக்கச்

சட்டம் கி.பி. 1859 – ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்டது.

கடுமையான நடவடிக்கைக்குப் பின்பும் கலகம் தொடர்ந்தது. கொலத்தூரில் கி.பி.1873-இலும், மேலத்தூரில் கி.பி.1880 – இலும் கலகங்கள் வெடித்தன. பல தீவிர கலகங்கள் கி.பி. 1873-ஆம் ஆண்டிற்கும் கி.பி.1885-ஆம்ஆண்டிற்கும் இடையில் மூண்டன. பல இந்துக்கள் கி.பி. 1896-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரத்தில் கொல்லப்பட்டனர். இருப்பினும் கலகம் ஒடுக்கப்பட்டது. அடக்குமுறைச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு, கி.பி.1887-இல் மாப்பிள்ளைகளின் கொடுமைகள் குறைந்தன. மலபார்ப் பகுதியில் கி.பி. 1898-ஆம் ஆண்டிலிருந்து 1915-ஆம் ஆண்டு வரையில் அமைதி நிலவிற்று. அவர்கள் மறுவாழ்விற்குப் பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. இரண்டாம் எல்சின் பிரபு (Lord Elgin II – கி.பி.1894-99)ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குக் கல்வி வசதிகள் அளிக்கப்பட்டன. மாப்பிள்ளைமார் வாழும் இடங்களில் சாலைகள் அமைக்கப்பட்டன. நிலக்கிழார்களால் வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கும்படி செய்யப்பட்டது.

இரீடிங் பிரபு (Lord Reading - 1921-1926) ஆட்சிக் காலத்தில் 1921 – ஆம் ஆண்டு மாப்பிள்ளைமார் மீண்டும் தீவிரமாகக் கலகத்தில் ஈடுபட்டனர். அக்கலகத்தில் கிலாபத்து இயக்கத்தின் தாக்கமும் இருந்தது. மாப்பிள்ளை இயக்கத்தைச் சேர்ந்த குற்றவாளிகள் சிலர் 1921-இல் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டபோது, தென் மலபார் மாவட்டத்தில் கலகம் பெருமளவில் வெடித்தது. காவலர்கள் பொது மக்களால் தாக்கப்பட்டனர். மத்திய மலபார்ப் பகுதியில் இப்பெருங்கலகம் காட்டுத்தீப் போல் பரவிக் கொழுந்து விட்டெரிந்தது. கேரள மாநிலத்திலேயே அது போன்ற பெருங்கலகம் ஒன்று அதுவரை உருவாகவில்லை என்று கருதும் அளவிற்கு அக்கலகம் தீவிரம் அடைந்தது. மாப்பிள்ளை இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் மலபாரின் மூன்று வட்டங்களைப் (Taluks) பிடித்துக்கொண்டு தம் அதிகாரத்தை ஆங்கு நிறுவினர். ஆங்கிலேயர் பலர் கொல்லப்பட்டனர். சில வாரங்கள் ஆங்கிலேயரின் ஆட்சி அப்பகுதிகளில் ஒழிக்கப்பட்டது. ஆங்கிலேயர் பெரும்படையுடன் அப்பகுதிகளில் நுழைந்தனர். அந்நேரத்தில் மாப்பிள்ளைமார் இந்துக்களைக் கொடுமைப்படுத்திக் கட்டாய சமய மாற்றம் செய்தனர். நம்பூதிரிகளின் வீடுகள் கொள்ளையிடப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்.

**கலகம் அடக்கப்படல்**: மாப்பிள்ளைகளின் கொடுமையைக் கண்ட ஆங்கிலேயப்படைகள் மாப்பிள்ளைகளைத் தாக்கின. இருதிறத்தாருக்கும் கடும்போர் நடைபெற்றது. இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. கலகக்காரர்கள்'கொரில்லாத்'தாக்குதல் செய்து ஆங்கிலேய வீரர்களைக் கொன்று குவித்தனர். இறுதியில் ஆங்கிலேயரின் கை ஓங்கிற்று. ஆங்கிலேயப்படை தீவிரத் தாக்குதலில் ஈடுபட்டுப் பல கலகக்காரர்களைக் கொன்றது. பலர் கைது செய்யப்பட்டனர். ஆங்கிலேயப் படையினர் 90 கலகக்காரர்களை 1921-ஆம் ஆண்டு ஒரு வண்டிப் பெட்டியில் அடைத்து திரூரிலிருந்து கோவைக்கு அனுப்பினர். காற்றோட்ட வசதியும், உணவும், நீரும் இல்லாத காரணத்தால் அவர்கள் அனைவரும் இறந்து விட்டனர். அத்துயர நிகழ்ச்சி கல்கத்தா இருட்டறைச் சம்பவத்தை நினைவூட்டுகின்றது. கொடியவர்களை அடக்க மேற்கொள்ளப்பட்ட இரக்கமற்ற அச்செயல் இந்தியர்களை ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகக் கிளர்ந்தெழச் செய்தது. க.ம.

**மாபாடியம்** என்பது பேருரை எனப் பொருள்படும். ஒரு நூலைப்பற்றிய பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை முதலியன யாவும் பேருரை என்பதன்கண் அடங்கும். தமிழிலக்கண மரபில் காண்டிகை, விருத்தி என இருஉரைகள்தாம் பயிலப்பட்டு வருகின்றன. அதற்கும் மேலாக, 'மாபாடியம்' என்பது மிகச்சிறந்த பேருரையைக் குறிக்கும். வடமொழியில் வேதாந்த சூத்திரத்திற்கு நீலகண்டர், சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோர் பேருரை எழுத முற்பட்டனர். அவ்வுரைகளிலிருந்து அவரவர் கொள்கைகளையும் பிற்காலத்தோர் விளக்க முற்பட்டனர். அவையாவும் அவரவர் பெயரால் நீலகண்டபாடியம், சங்கர பாடியம் என்னும் பெயரில் வழங்கப் பெறுகின்றன. அவற்றைத் தவிர மற்றும் பலபாடியங்களும் வடமொழியிலுள்ளன. தமிழில் அவ்வாறு யாரும் மாபாடியம் எழுத முற்பட்டிலர். அக்குறையைப் போக்கியவர் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சிவஞானமுனிவரேயாவார். அவர்,மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதத்தை மூல நூலாகக் கொண்டு அதற்கு மாபாடியம் எழுத முற்பட்டார். அம் மாபாடியத்தால் வடமொழியில் காணப்படும் மாபாடியங்களைப் போன்றோ அதற்கு விஞ்சியோ தமிழிலும் கருத்துகளைக் கூறி மேற்கொண்ட கொள்கையை நிலைநாட்ட இயலும் என்னும் பெருமை ஏற்பட்டது. அத்துறையில் வெற்றி பெற்றவர் சிவஞான முனிவர். சிவஞான போதத்திற்கு வடமொழியில் சிவாக்கிரயோகிகள் ஒரு மாபாடியம் வரைந்துள்ளார்கள். அம்மாபாடியத்தை யொட்டியே சிவஞான முனிவர் பேருரை எழுதியபோதும் அதனையும் விஞ்சும் நிலையிலேயே அத் தமிழ் மாபாடியம் அமைந்துள்ளது. ஒரு கொள்கையை

நிலைநாட்ட விரும்பின் அதற்கு வேறு சமயத்தினர் கொள்கைகள் என்ன என்பதையும், அவை எவ்வாறு பிழைபட்டவை என்பதையும் விளக்கியபின் தம் கொள்கையை நிறுவவேண்டும். அம்முறை மாபாடியத்தில் காணப்படும் சிறப்பியல்பாகும். தம் கோளை விளக்கி நிறுவுதலைச் சுபக்கம் என்றும், பிறர் கொள்கைகளை எடுத்துக்காட்டி மறுத்தலைப் பரபக்கம் என்றும் சமய உலகில் கூறுவது மரபு. அம்முறை மாபாடியத்தில் சிறப்பிடம் பெற்றிருக்க வேண்டும். மாபாடியத்தில் முதலில் கூறப்படும் பொருளும், அதன்கண் நிகழும் ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும் உரைகளும் அதனை மறுத்துத் தம்கோள் நிறுவும் ஆற்றலும், அவற்றைத் தொடர்புபடுத்திக் காட்டும் திறனும், நெறிமுறை பிறழாது செல்லும் போக்கும் அவை போன்ற பிறவும் சிறந்த இயல்புகளாம். சிவஞான முனிவர் சிவஞானபோத மாபாடியத்தில் மேற்கொண்ட முறைகளால் அவர் புலமை ஆழத்தைக் காணலாம். தமிழ் மாபாடியத்தில் சிவஞான முனிவரின் வடமொழியறிவு, தமிழ் மொழியறிவு ஆகியவற்றின் ஆழங்களைக் காணலாம். பல பழைய உரையாசிரியர்களின் கருத்துகளும் ஆங்காங்கு நிழலாடும். அப்பேருரை நுண்மாண் நுழைபுலம் கொண்டு எழுதப்பட்டதாதலின் அதனை யாவரும் போற்றத் தலைப்பட்டனர். மாபாடியத்தின் முடிவு மேற்கொண்ட கொள்கையில் உறுதி காணப்பெறவேண்டும் என்பதாகும். பிறர் யாரும் அசைக்க முடியாத திண்மை நிலை உற்றதாய்க் கொள்கை நிலைநாட்டப் படவேண்டும். 'தமிழிலுள்ள சிவஞான போத மாபாடியம் தத்துவ ஆராய்ச்சிக்கும் தமிழ் பயில்வோருக்கும் ஒருகருவூலம் போலத் துணை செய்யும்' எனப் பேரறிஞர் திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார். அதனால் அதன் சிறப்பு நன்கு விளங்கும். இரா.ச.

**மாபுராணம்**, சினசேனாச்சாரியார், குணபத்திராச்சாரியார் ஆகிய இருவரால் வடமொழியில் இயற்றப்பெற்ற சமணசமயப் பெருநூலாகும். இந்நூல் தீர்த்தங்கரர்கள், சமண மன்னர்கள் ஆகியோரின் வரலாறுகளை விளக்குகிறது. இது கி.பி.9-ஆம் நூற்றாண்டு இறுதியில் இயற்றப்பட்டது. இதன் தமிழ் மொழிபெயர்ப்பு சிரீபுராணமாகும். அது மணிப்பிரவாள நடையில் உள்ளது. மாபுராணத்தின் கன்னட மொழிபெயர்ப்பு சாமுண்டராயபுராணம் என்பதாகும். அது கி.பி.987 – இல் இயற்றப்பட்டது.

திருத்தொண்டர்புராணம் அறுபத்து மூன்று சைவ சமய நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுவதுபோல, மாபுராணம் அறுபத்துமூன்று சமண சமயப் பெரியார்களின் வரலாறுகளை உரைக்கிறது. மாபுராணப் பூர்வபுராணத்தில் இடபதேவர் வரலாறும்,பரதசக்கரவர்த்தியின் வரலாறும் உள்ளன. உத்தரபுராணத்தில் ஏனைய அறுபத்தொருவர் வரலாறுகளும் உள்ளன.

மாபுராணம் எழுபத்தேழு பருவங்களையுடையது. அவற்றுள் இறுதிப் பருவம், புராணமியற்றிய காலம் கிருபை (பிரசகுதி) முதலியன பற்றிக் கூறுகிறது. ஏனைய எழுபத்தாறு பருவங்களில் அறுபத்துமூவரின் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. முதல் நாற்பத்தேழு பருவங்களில் இடபதேவரின் வரலாறும், பரத சக்கரவர்த்தியின் வரலாறும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அவற்றுள் சினசேனாச்சாரியர் இயற்றிய முதல் நாற்பத்திரண்டு பருவங்களில் கூறப்பட்டுள்ள சரிதம் மிகவும் விரிவானதாகும். சினசேனாச்சாரியர் தம் புராணத்தைக் காவிய நயம் விளங்க எழுதியுள்ளார். அவர் செய்யுள் ஒழுகிய ஓசை நயம் வாய்ந்தது; பலவகை அணிகள் அமைந்து, படிப்போர்க்கு இன்பம் பயக்கும் தன்மையுடையது.

குணபத்திரர் புராண வரலாறுகளைச் சுருக்கிக் கூறியுள்ளார். எனவே, அவர் செய்யுட்களில் வருணனை மிகுதியாக இடம் பெறவில்லை. குணபத்திரர் சீடர்களுள் உலோகசேனர் தலைசிறந்தவர். குணபத்திரர் இப் புராணத்தை இயற்றும்போது அவர் மிகவும் உதவிபுரிந்துள்ளார். வனவாசி நாட்டை வங்காபுரம் என்னும் நகரிலிருந்து ஆட்சி புரிந்த உலோகாதித்தன் என்னும் சிற்றரசன் காலத்தில், கி.பி.898-இல் குணபத்திரர் இப்புராணத்தை எழுதி முடித்தார்.

**நூற்பொருள்:** மாபுராணத்தின் முதலில் தருமம், மக்களின் ஆயுள் வளர்ச்சி முதலியன மேன்மேலும் வளரும் காலம் (உற்சர்ப்பிணி), தருமம் முதலிய குறைந்துவரும் காலம் (அவசர்ப்பிணி) என்னும் கால வேறுபாடுகளும், முதல் மூன்று காலத்து நிலைமையும், போக பூமிகளின் இயல்பும், மனுக்கள் பதினால்வரின் காலத்து நிகழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன. பரத கண்டத்தில் வாழ்ந்தவர் முதல் மூன்று காலங்களில் கற்பக மரங்களால் காலங்கழித்துவந்தனர். முதல் மனுவின் காலத்தில்தான் சூரிய சந்திரரின் தோற்றத்தை மக்கள் அறிந்தனர். இரண்டாம் மனுவின் காலத்தில் விண்மீன்கள் தோன்றின. மூன்றாம் மனுவின் காலத்தில் மக்கள் கொடிய விலங்குகளைக் கண்டு அஞ்சினர்; நான்காம் மனுவின் காலத்தில் மக்கள் கல்லும், தடியும் கொண்டு அவ்விலங்குகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள அறிந்தனர்; ஐந்தாம் மனுவின் காலத்தில் கற்பக மரங்களுக்காகத் தம்முள் பிணங்கினர்; ஆறாம் மனுவின் காலத்தில் அம்மரங்களின் பொருட்டுக் கலகம் செய்தனர்; ஏழாம் மனுவின் காலத்தில் யானை, குதிரைகளை வாகனமாகக் கொண்டனர். எட்டாம் மனுவின் காலத்தில்

மக்கள் குழந்தைகளைப் பெற்று அச்சங்கொண்டு சிறிது நேரம் உயிரோடிருந்தனர். ஒன்பதாம், பத்தாம் மனுக்களின் காலத்தில் குழந்தைகளைப் பெற்றவர் சில நாள்கள் உயிரோடிருந்தனர்; பதினொன்றாம் மனுவின் காலத்தில் பலநாள்கள் உயிரோடிருந்தனர், பன்னிரண்டாம் மனுவின் காலத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்தனர். அவன் காலத்தில்தான் மேகங்கள் தோன்றின. பதின்மூன்றாம் மனுவின் காலத்தில் கருவின் பை அடுக்கினால் (சராயுபடலம்) மூடிப்பிறந்த பிள்ளைகளிலிருந்து அதை வாங்கிப் போடும் வழியை அறிந்தனர். பதினான்காம் மனுவின் காலத்தில் நாபிக்கொடியைப் போக்கும் வழியை அறிந்தனர். அவன் காலத்தில் மேகங்கள் மழை பொழிந்தன. எல்லாப்பயிர்களும் உழுது விதைக்காமலேயே தாமே விளைந்தன. பலவகையான மரங்கள் தோன்றிப் பயன் தந்தன. அக்காலத்திய மக்கள் வாழ்க்கை முறைகளை நன்கு அறிந்தனர். முதல் ஐந்து மனுக்கள் காலத்தில் குற்றம் செய்தோர்க்கு 'ஹா' என்பதே தண்டனை. பின் ஐவர் காலத்தில் 'ஹா' 'மா' (வேண்டா) என்பன தண்டனைகள் ஆயின. பின் நான்கு மனுக்கள் காலத்திலும் 'திக்' (சீ!) தண்டனை ஆயிற்று. முதல் பேரரசனாகிய பரதனது காலத்தில்தான் உடல் தண்டனை முறை ஏற்பட்டது.

இதுவரை கூறியவை மக்களின் அறிவும் வாழ்க்கை முறையும் படிப்படியே முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

முதல் தீர்த்தங்கராகிய இடப தேவர் காலத்தில் பயிர்கள் தாமே விளையாமல் போயின. அதனால், மக்கள் பசியால் வருந்தி அவரை அடைந்து குறையிரந்தனர். அவர், ஊர்கள், வீடுகள் ஆகியவற்றை அமைத்து (பிராமணர் தவிர மற்ற) மூன்று வருணங்கள், ஆறு தொழில்கள், ஒழுக்க வேறுபாடுகள் ஆகியவற்றை ஏற்படுத்தி மணமுறைகளையும் அறிவுறுத்தி உலகம் நடைபெற்று வருமாறு செய்தார். அதனால் அக்காலம் கிருதயுகம் எனப்பெயர் பெற்றது. அவர் ஆதிபகவன் என்றும் வழங்கப்பெற்றார். இவ்வாறு இவருக்கு வழங்கிய ஆயிரம் திருநாமங்களை இம் மாபுராணத்தில் காணலாம். இப்போது உலகம் நிகழ்ந்து வருகின்ற முறைமை இடப தேவர் காலம் முதலாக வருதலால், அவர் இவ்வுலகத்திற்கு முதல்வர் என்று கூறப்படுவார்.

தீர்த்தங்கரர்கள் என்று சிறப்பித்துக் கூறப்படுவோர் இருபத்து நால்வர். அவர்கள் பெயர்களாவன: 1) இடப தேவர், 2) அசிதநாதர், 3) சாம்பவநாதர், 4) அபிநந்தனர், 5) சுமதிநாதர், 6) பதுமநாதர், 7) சுபார்சுவநாதர், 8) சந்திரப்பிரபர், 9) சுவிதி நாதர், 10) சீதளநாதர், 11) சீறியாம்சநாதர், 12) வாசுபூசியர், 13) விமலநாதர், 14) அநந்தநாதர், 15) தர்மநாதர், 16) சாந்திநாதர், 17) குந்துநாதர், 18) அரநாதர், 19) மல்லிநாதர், 20) முனிசுவர்த்தர், 21) நமிநாதர், 22) நேமிநாதர், 23) பார்சுவநாதர், 24) வர்த்தமான மகாவீரர். அவர்களுடைய வரலாறுகளை மாபுராணம் கூறுகிறது. அவர்தம் வரலாறுகள் பெரும்பாலும் ஒரே முறையில் நிகழ்வனவாய் உள்ளன.

தீர்த்தங்கரர் முற்பிறப்பில் பதினாறு நிலைகளில் தவம்புரிந்து பல மேன்மைகளை எய்தித் தேவர் (அகமிந்திரன்) பதவியை அடைந்து வாழ்ந்து, அங்கிருந்து உலகில் வந்து பிறப்பர். அவர் பிறக்குமுன் அவருடைய தாயார் பதினாறு கனவுகளைக் காண்பார். இந்திரன் ஏவலால் குபேரன் அவர் மாளிகையில் ஆறுமாதம் பொன்மாரி பொழிவான். தீர்த்தங்கரர் பிறந்ததும் சௌதர்மேந்திரன் முதலானோர் வந்து அவரை யானை மீது எழுந்தருள்வித்து மந்தர மலையில் நீராட்டிப் பெயர் சூட்டி, மீண்டும் அவருடைய அரண்மனையில் சேர்த்துத் தாயாரை உணர்த்திப் புகழ்ந்து விடை பெற்றுச்செல்வர். பிறகு உரிய காலத்தில் தீர்த்தங்கரருக்குத் தீட்சைக்குரிய காலத்தை உலௌகாந்திக தேவர் அறிவிப்பார். தீட்சைக்குச்செல்லும் போது இந்திரன் முதலியோர் சிவிகையைச் சுமப்பர். தீர்த்தங்கரர் தீட்சை பெற்ற மறுநாள் உண்ணா நோன்பிருந்து உண்ணும் பொருட்டு நகருக்குள் செல்வர். பின்னர் தீர்த்தங்கரர் தவத்தால் கேவலஞானத்தை அடைவர். அப்போது தருமோபதேசம் செய்தற்காக இந்திரன் ஏவலால் விமான மண்டபம் அமைக்கப்படும். அது சமவசரணமண்டபம் எனப்படும். சமவசரணம் பூமிக்கு மேல் 5000 வில்லின் உயரத்தில் 12 யோசனை பரப்புடையதாய் இருக்கும். அதற்கு 20,000 படிகள் உண்டு. சமவசரணத்தைச்சுற்றி 11 பூமிகள் இருக்கும். அவை முறையே சைத்தியப்பிரசாதபூமி, காதிகாபூமி, வல்லிபூமி, உபவனபூமி, துவசபூமி, கற்பகமரப்பூமி, பவனபூமி, துவாதச கோட்ட பூமி, முதற்பீட பூமி, இரண்டாம் பீட பூமி, மூன்றாம் பீட பூமி எனப்பெயர் பெறும். அவற்றுள் எட்டாவதாகிய துவாதச கோட்டங்களுள் முதல் கோட்டத்தில் கணதரர் முதலிய எழுவகை முனிவர்களும், இரண்டாம் கோட்டத்தில் கல்பவாசி தேவியரும், மூன்றாம் கோட்டத்தில் ஆரியகையர் முதலியோரும் இருப்பர். யானை, சிங்கம், மான் முதலியன பன்னிரண்டாம் கோட்டத்தில் இருக்கும். மூன்றாம் பீடத்தின் மேல் 900 வில்லின் உயரத்தையுடைய 'காந்தகுடி' என்னும் மண்டபம் இருக்கும். அம்மண்டபத்தின் சிம்மாசனத்தில் ஆயிரம் இதழுடைய செந்தாமரையின் நடுவிலுள்ள சுவர்ண கர்ணிகையில் (பொன் கொட்டையில்) நாலங்குலத்

தின் மேல் தீர்த்தங்கரர் எழுந்தருளி உபதேசம் செய்வர். பிரதமானுயோகம் முதலிய நான்கு பரமாகமங்கள் அவர் திருவாய் மலர்ந்தருளியனவாகும். அவை கணதரருக்கு உபதேசிக்கப்படும்.

கேவலஞானம் அடைந்த தீர்த்தங்கரர் பல நாடுகளுக்கும் சென்று, அறநெறிகளை அறிவுறுத்தித் திரும்புவர். தீர்த்தங்கரர் 34 வியத்தகு செயல்களை உடையவர். தீர்த்தங்கரர் இறுதியில் ஏதேனும் ஒரு மலையில் யோகத்தில் நின்று, எல்லாக் கருமங்களையும் கெடுத்து, உலகங்கள் அனைத்திற்கும் மேலதாகிய சித்தித்தலம் அடைவர். சித்த நிலையை அடைந்தவர் திருவடியூன்றியிருந்த இடத்தில் திருவடிகளை அமைத்து அவற்றை வணங்குதல் மரபாகும்.

**சக்கரவர்த்திகள் வரலாறு:** சக்கரவர்த்திகள் முற்பிறப்புப் புண்ணிய பலத்தால் இந்திரராகிப் பின் பூமியில் தோன்றி, அரசாட்சி செய்வர். அவர்களுடைய படைக்கொட்டிலில் சக்கரம் உற்பத்தியாகும். உடனே திக்கு விசயம் செய்து ஏழு கண்டங்களையும் அடிப்படுத்தி மீண்டு வந்து அரசாள்வர்; பிறகு தீட்சை பெற்று மோட்சம் அடைவர். அது சக்கரவர்த்திகளின் பொதுவான நிகழ்ச்சி.

**இதிகாச வரலாறுகள்:** வைதிக சமயத்தின் இதிகாச வரலாறுகள் மாபுராணத்திலும் காணப்படுகின்றன. எனினும், அவற்றுள் மாறுபாடுகள் பல உள்ளன. அதிலுள்ள இராமாயணக் கதை பின்வருமாறு உள்ளது.

தசரதர் காசியில் வாழ்ந்த பின்பு அயோத்தியை ஆட்சிபுரிந்தார். சனகர் யாகத்தின் பொருட்டு இராமரை அனுப்புமாறு தசரதரை வேண்டிக் கொண்டார். இராம, லட்சுமணர் தந்தையின் அனுமதி பெற்றுக் காசியில் வாழ்ந்திருந்தனர். இராமர் பொழுது போக்கும் பொருட்டுச் சீதையோடும் இலட்சுமணனோடும் சித்திரகூடத்தில் தங்கியிருந்தார். நாரதர் இராமரைப் பார்க்க அவ்விடத்தை அடைந்தார். அவர் வரவினை இராமர் அறியவில்லை. இராமர் தம்மை அவமதித்தாரென நாரதர் நினைத்து இராவணனிடம் சென்று சீதையின் அழகை வருணித்தார். இராவணன் சீதையைக் கவர நினைத்து, பணிப் பெண்ணாகிய சூர்ப்பணகையை அங்கு அனுப்பினான். அவள்சீதையின் கற்பினை அறிந்து இராவணனிடம் சென்று தெரிவித்தாள். இராவணன்மாரீசனோடு போய் வஞ்சனையால் சீதையை எடுத்துச் சென்றான். அயோத்தியில் தீய சகுனங்கள் தோன்றின. தசரதர் தூதர் மூலமாக இராமருக்கு ஆறுதல் கூறினார். கௌசல்யை, பரதன் முதலானோர் அங்கு அடைந்தனர். சுக்ரீவ, அனுமான்கள் என்னும் வித்தியாதரரும் இராமரை அடைந்தனர். அனுமான் சீதையைக் கண்டு வந்து தெரிவித்தான். மண்டோதரி சீதையைத் தேற்றினாள். இராமர் அனுமானைத் தூது விடுத்தார். வாலி தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி இராமனிடம் தூது அனுப்பினான். ஆனால், போரில் வாலியை இலட்சுமணன் கொன்றான் பிறகு வீடணன் இராமரைச் சார்ந்தான். போரில் இராவணன் முதலிய வித்தியாதரர் இலட்சுமணனால் இறந்தனர். இறுதியில் இராமர் தீட்சை பெற்று முத்தி எய்தினார். அனுமன் முதலியோர் தீட்சை பெற்றனர். இலட்சுமணன் நரகம் அடைந்தான்.

பாண்டவர் வரலாறு, பாரதப் போர் முதலியன மாபுராணத்தில் மிகவும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பாண்டுவிற்குக் குந்தியினிடம் கர்ணன் களவுப் புணர்ச்சியில் பிறந்தவனாவன். உதிட்டிரன் முதலியோர் பாண்டுவிற்கே பிறந்தவர். சராசந்தன், துரியோதனன் முதலானோரைத் துணைக்கொண்டு எதிர்க்க, வாசுதேவர், பாண்டவர் முதலியோர் துணைக்கொண்டு சராசந்தனை வென்று அர்த்த சக்கரவர்த்தியானார். அரக்கு மாளிகையில் தீ வைத்தது, வாசுதேவர் தூது, பாரதப்போர் முதலியனவும் மாபுராணத்தில் கூறப்பட்டுள்ளன. பாண்டவர் நேமி சுவாமியிடமிருந்து தம் முன்னைய வரலாறு அறிந்தனர். பாண்டவர் தீட்சை பெற்று வெயிலில் நின்று தவம் புரிந்தபோது, துரியோதனன் மருமகன் குரியவரன் அவர்களுக்குத் தீமைகள் இயற்றினான். பாண்டவர் அவற்றால் தளர்ச்சி அடையாமல் தவம் முடித்து முத்தி அடைந்தனர்.

அவ்வாறே பாகவதக் கதையும் மாபுராணத்தில் மிகவும் வேறுபடக் கூறப்பட்டுள்ளது. சிபிச்சக்கரவர்த்தி, பரசுராமன், மகாபலி ஆகியோரின் வரலாறுகளும் அதில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. குணபத்திரர் எழுதிய உத்தர புராணப் பிரிவில் சீவகன் கதை உள்ளது. அக்கதைக்கும் சீவகசிந்தாமணி கூறும் சீவகன் கதைக்கும் மிக்க வேறுபாடுகள் உள்ளன.

மாபுராணத்தில் சமணசமயக் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன. இவ்வுலகம் முதலும் முடிவும் இல்லாததாகலின் இதைப் படைத்தவர் எவருமிலர். மக்கள் தவத்தால் வினைகளைக் கெடுத்து, கோபம், அகங்காரம், கபடம், இவறன்மை போன்றவற்றை அறவே ஒழித்து இறைநிலை பெறலாம். அஃறிணை உயிர்களும் உபதேசம் கேட்பதனாலும், நோன்பு மேற்கொள்ளுதலானும் சுவர்க்க பதம் பெறக்கூடும். நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்னும் இரத்தினத்திரயத்தை அனைவரும் மேற்கொள்ளுதல் வேண்டும். உயிர்க்கொலை கூடாது. பிறர் செய்யும் தீங்குகள் தம் தீவினையினால் நேர்ந்தவை எனக்

கொள்ள வேண்டும். அன்றி அவர்கட்குத் தீங்கு செய்ய எண்ணுதல் தீமை தரும். இல்வாழ்வோர் சாவகர் என்றும் சிராவகர் என்றும் வழங்கப்படுவர். அவர்களுக்குச் சில நோன்புகளும் அணுவிரதம் முதலிய விரதங்களும் விதிக்கப்பட்டுள்ளன. அணுவிரதமாவன, உயிர்களைத் துன்புறுத்தாமை, பொய் சொல்லாமை, களவு செய்யாமை, பிறர்மனை விழையாமை, இவறன்மையின்மை என ஐந்தாம். இவை இல்வாழ்க்கையில் ஈடுபட்டோர் மேற்கொண்டொழுக வேண்டிய அணுவிரதம் எனப்படும். துறவோர் பின்பற்றுதற்குரிய ஒழுக்கங்கள் மாவிரதம் எனப்படும். இவை மாபுராணத்தில் விளக்கப்பட்டுள்ள சமண சமயக் கொள்கைகளுள் சிலவாகும். மாபுராணத்தைச் சமணசமயக் களஞ்சியம் எனலாம்.

தா.ஏ.ஞா.

**மாபெக்கிங்கு,** தென்னாப்பிரிக்காவின் வட மத்திய பகுதியில் கேப்பு மாநிலத்தில் உள்ள நகரம். மாபெக்கிங்கு (Mafeking) அப்பொழுதிருந்த பெக்குவானாலாந்தின் (Bechwanaland) தலைநகர். இப்பொழுது அதன்பெயர் போட்சுவானா (Botswana). கேப்பு நகரத்திற்கும் இதற்குமிடையே உள்ள தொலைவு ஏறத்தாழ 1200 கி.மீ. கடல் மட்டத்துக்கு 1729 மீட்டர் உயரத்தில் உள்ள இந்நகர், முக்கியமான போக்குவரத்து மையமாகவும் வாணிக மையமாகவும் விளங்குகிறது. பசும்புல்வெளியால் சூழப்பட்ட இந்நகரம் பால் – வெண்ணெய்-பாலேடு ஆகியவற்றின் ஒரு விற்பனைக்களமாக உள்ளது. இங்குக் கால்நடை வளர்ப்புத் தொழிலும் சிமெண்டுத் தொழிலும் வளர்ச்சியடைந்துள்ளன. மிலோப்போ (Milopo) ஆறு இப்பகுதியை வளப்படுத்துகிறது.

சர் சார்சு வாரன் என்பவர், கி.பி. 1885-இல் ஆங்கிருந்த குடியரசுகளைத் தோற்கடித்து ஆங்கிலேயர் ஆட்சியை விரிவுபடுத்திய சமயத்தில் இந்நகர் தோற்றுவிக்கப்பட்டது. போயர் போர் நடந்த இடங்களில் இதுவும் ஒன்று. போயர்கள் கி.பி. 1899 முதல் 1902 வரை நடந்த போரில் இவ்விடத்தில் நடத்திய முற்றுகையை ஆங்கிலேயர் 217 நாள்கள் எதிர்த்துத் தாங்கினர். இங்குக் கட்டப்பட்டிருந்த கோட்டை, இப்பொழுது ஒரு தேசிய சின்னமாக விளங்குகிறது.

தெ.பா.

**மாபெரும் பட்டயம்:** ஆங்கிலேய அரசியலமைப்பிலே மிகவும் முக்கியத்துவம் உடையதாகக் குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகளுள் முதலாவதாக இருப்பது கி.பி. 1215-இல் அரசர் சான் என்பவரால் (King John-ஆட்சிக்காலம் கி.பி.1199-1216) ஒப்புக் கொள்ளப்பட்டதும், அக்கால ஆங்கிலேய நிலமானியப் பிரபுக்களுடைய உரிமைகளடங்கியதுமான மாபெரும் பட்டயம் (Magna Carta, The Great Charter) ஆகும். இப்பட்டயத்தை வரைந்தோர் அரசருடைய வல்லாண்மைச் செயல்களினால் நிலமானிய உரிமைகள் பாதிக்கப்பட்டுத் துன்புற்ற பிரபுக்களும், ஆங்கிலேயக் கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபைக் குருமார்களின் தலைவரான இசுடீபன் லாங்டன் (Stephen Langton) என்பவரும் ஆவர்.

**பட்டயம் வரையப்படுதற்கான சூழ்நிலைகள்:** ஆங்கிலேய அரசர் சான் தம் காலத்திய நிலமானிய உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தி, அதன் காரணமாக நிலமானியப் பிரபுக்களுடைய பகையைத் தேடிக் கொண்டார். சான் தம் அண்ணன் மகனும், தம்மைவிட ஆங்கிலேயே அரசுரிமைக்கு உறுதியான உரிமை உடையவனுமான ஆர்தர் என்ற சிறுவனைக் கொன்றுவிட்ட காரணத்தால் பிரான்சில் அவருடைய ஆட்சியின் கீழ் இருந்த நார்மண்டி (Normandy), ஆஞ்சு (Anjou) முதலிய மாகாணங்களிலுள்ள நிலமானியப் பிரபுக்களும் ஏனைய மக்களும் ஒன்று சேர்ந்து, சான் மன்னருக்கெதிராகப் போர் செய்து, அவரைத் தோற்கடித்துத் (கி.பி.1204 – இல்) தம் மாகாணங்களைப் பிரான்சு அரசர் பிலிப்பின் ஆட்சியில் அமைத்துக் கொண்டனர். அவ்வாறு பிரான்சில் சான் தம் மாகாணங்களை இழந்ததனால் அவருடைய புகழ் மறைந்தது. பின்னர், அவர் ஆங்கிலேயத் திருச்சபைக் குருமாருடனும், கிறித்தவத் திருச்சபைத் தலைவர் போப்புடனும் சச்சரவு செய்தார். காண்டர்பரியின் பேராயர் பதவியில் (Archbishop of Canter bury) தக்க ஒருவரை அமர்த்த வேண்டிய நிலை தோன்றியபோது, சான் தமக்கு வேண்டிய ஒருவரைத் தேர்ந்தெடுத்தார்; அவரை அப்போதிருந்த, மிகவும் செல்வாக்குப் பெற்ற போப்பு மூன்றாம் இன்னசென்ட்டு என்பவர் ஒப்புக் கொள்ளாமல், கல்வியும், ஒழுக்கமுமுள்ள இசுடீபன் லாங்டன் என்பவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார். ஆனால் சான் அவரை நாட்டினுள் வர விடாமல் தடுக்கவே, போப்பு ஆங்கிலேயக்கிறித்தவக் கோயில்களை மூடிவிடும்படி செய்து, பின்னர், சானைக் கிறித்தவ சமயத்துக்குப் புறம்பாக்கி (Excommunicate), அரசருக்குக் கீழ்ப்படிதலினின்றும் ஆங்கிலேயக்குடிமக்களை விடுவித்த போதும் சான் கீழ்ப்படியாமல் திருச்சபை மானிய வருமானங்களைப் பறித்துப் படை திரட்டினார். போப்பு, பிரான்சு அரசர் பிலிப்பை இங்கிலாந்தின் மீது படையெடுக்குமாறு ஏவ, சான் அனைவருடைய ஆதரவையுமிழந்த நிலையில் போப்புக்குப் பணிந்து அவரைத் தம் நிலமானியப் பிரபுவாக ஏற்று, இசுடீபன் லாங்டனையும் பேராயராக ஏற்றார். ஆனால், பிரான்சு அரசர்,

சானையும் அவருடைய ஆதரவாளர்களையும் பொவைன்சுப் (Bouvines) போரில் கி.பி.1214 - இல் தோற்கடிக்கவே, தோல்வியுற்ற சான் தனக்குப் போரில் உதவி செய்ய மறுத்த ஆங்கிலேய நிலமானியப் பிரபுக்கள் மீது பெரும் சீற்றத்துடன் திரும்பி வந்து, அவர்களைத் தமக்குப் பெரும் ஒறுப்புக் கட்டணம் செலுத்துமாறு கூறினார். முன்னரே அவர் நிலமானியப் பிரபுக்களை அவர்களுடைய இராணுவப் பணிக்குப் பதிலாகப் பெரும் பணத்தொகைகளைச் (Scutage) செலுத்துமாறு கட்டாயம் செய்தும், சிறு குற்றங்களுக்குப் பெரும் தண்டத் தொகைகளை வாங்கியும், மானியப் பண்ணைக்கு (Estate) உரியவர் அதைப் பெறும்போது செலுத்த வேண்டிய உரிமைத் தொகையை (Reliefs) உயர்த்தியும், மானியப் பண்ணையின் உரிமையாளருடைய இளமைக் காலத்தில் தாம் அதைக் கண்காணித்து (Wardship), அதில் இருந்த பண்ணைக் குடியானவர்களிடமிருந்து மிகுதியான பொருள் பெற்று அவர்களை விடுவித்தும், அதிலுள்ள மரங்களை வெட்டி விற்றும், மானிய உரிமையாளர் பெண்ணாக இருந்தால் அவளைத் தமக்கு மிகுதியாகப் பொருளளிப்பவருக்குத் திருமணம்செய்து கொடுத்தும், அவள் மறுத்தால் அவளிடம் பெரும் தண்டத் தொகையைக் கேட்டு வாங்கியும், அவ்வாறெல்லாம் நிலமானிய உரிமைகளைத் தவறாகக் கையாண்டார். அவற்றால் கொதிப்படைந்திருந்த நிலமானியப் பிரபுக்கள் இசுடீபன் லாங்டனின் தலைமையில் ஒன்று திரண்டு, பியூரி செயிண்டு எட்மண்ட்சு என்னும் இடத்திலிருந்து போர்க் கருவிகளுடன் இலண்டன் நகரத்துக்குச் சென்று, நகர மக்களுடைய ஆதரவைப் பெற்றனர்; சானின் செயல்களால் துன்புற்றிருந்தமையால் நகரமக்களோ, குடியானவரோ அரசருக்கு உதவி அளிக்கவில்லை. அவர் தவறாகக் கையாண்ட ஒவ்வொரு நிலமானிய உரிமையையும் பிரபுக்களும், இலாங்டனும் குறிப்பிட்டு, அவற்றைத் 'தாம் இனி ஒருபோதும் மீற மாட்டோம்' என்று அவர் வாக்குறுதி கூறுவதாக எழுதி, அதில் அவரைக் கையெழுத்திடும்படி உரிமையுடன் கேட்டனர். சான் கி.பி.1215-இல் தேம்சு ஆற்றில் இருந்த இரன்னிமீடு (Runnymede) என்னும் தீவில் இந்த மாபெரும் பட்டயத்தைத் தாம் ஒப்புக் கொண்டதாக அறிவித்தார். இதில் அவர் கையெழுத்திட்டாரென்பதற்கு வரலாற்றுச் சான்று இல்லை.

நிலமானியப் பிரபுக்கள் மாபெரும் பட்டயத்தைச் செயலில் கொண்டு வருமாறு சானைக் கட்டாயப்படுத்தி, அவருடன் போர் செய்யும்போது, கி.பி. 1216-இல் நோயுற்று சான் இறந்தார். ஆயினும் அவர் இதை ஒப்புக் கொண்டதாக அறிவித்தமையாலும், அவருக்குப் பின் வந்த பல அரசர்கள் அவ்வப்போது இதை உறுதி செய்தமையாலும் (Confirmation) இது மிகவும் அரசியலமைப்பு முக்கியத்துவமுடைய ஒரு பத்திரமாக ஆயிற்று.

**பட்டயத்தில் கூறப்பட்ட பொருள்கள்:** மாபெரும் பட்டயத்தில் ஏறக்குறைய 61 பிரிவுகள் இருக்கின்றன (அவை இலத்தீன் மொழியில் எழுதப்பட்டன). அவற்றுள் சில முக்கியமானவை; அவற்றின் சுருக்கமான கருத்து:-

பிரிவு I: 'நமது நாட்டிலுள்ள எல்லாச் சுதந்திர மக்களுக்கும் கீழ்க்கண்ட உரிமைகளை அவர்களும், அவர்களுடைய பின்தோன்றல்களும் எக்காலத்தும் அனுபவிக்குமாறு நாம் வழங்குகிறோம்.'

பிரிவு II: 'நம்மிடமிருந்து மானியம் பெறும் பிரபு எவரும் இறந்துவிடின், அவருடைய மரபுரிமையாளர் (Heir), பழங்காலத்தில் செலுத்தப்பட்ட உரிமைப் பணத்தை மட்டும் செலுத்தி (Relief) மானியத்தை அடையலாம்'.

பிரிவு IV: 'இளம் வயதுள்ள மரபுரிமையாளருக்குக் காப்பாளராக இருப்பவர் (அதாவது அரசர்) பண்ணையிலிருந்து நியாயமான அளவில் பொருளும், உதவியும் பெறுதல் வேண்டும்; அவர் அதன் வேலையாளை விடுவித்தலும், அதன் பொருளை அழித்தலும் கூடாது.'

பிரிவு VIII: 'பண்ணைக்குரியவர் கைம்பெண்ணாயிருப்பின் அவரை மறுமணம் செய்யுமாறு எவரும் கட்டாயப்படுத்தலாகாது'.


பிரிவு XII: 'நம் நாட்டவரின் பொதுவான ஆலோசனையின் பேரிலல்லாமல், நாம் எவர் மீதும், போர்ப் பணிக்கு ஈடான பணமோ (Scutage) வேறு எந்த உதவித் தொகையோ விதிக்க மாட்டோம்'.

பிரிவு XIV:, நம் நாட்டவரின் ஆலோசனையைப் பெறும் பொருட்டு முத்திரையிட்ட நமது கடிதங்களின் வாயிலாக (நேரடியாக), பேராயர்கள், ஆயர்கள், பெரிய நிலமானியப் பிரபுக்கள் முதலியோரையும், வட்ட ஆட்சியர்கள் (Sheriffs) வழியாகப் பொது ஆணையை விடுத்து ஏனைய வகை மானியக்காரர்களையும் நாம் வரவழைப்போம்'.

பிரிவு XXXIV: 'நிலமானியப் பிரபுவின் நீதிமன்றத்திலிருந்து எந்த வழக்கும் அரசருடைய நீதிமன்றத்துக்கு மாற்றப்படமாட்டாது'.

பிரிவு XXXIX: 'எந்தச் சுதந்திரக் குடியாளும் பிரபுக்களுடைய சட்டத்துக்கு ஒத்த தீர்ப்பின்படியும் அல்லது நாட்டின் சட்டத்தின் படியும் அல்லாமல், கைப்பற்றப்படவோ, சிறைப்பிடிக்கப்படவோ, மானியப் பறிமுதலுக்கு உட்படுத்தப்படவோ, வேறெவ் வகையாகவும் துன்புறுத்தப் படவோ மாட்டார்'.

பிரிவு LX: 'கடவுளின் பொருட்டும், நம் நாட்டைச் சீர்திருத்தும் பொருட்டும் நாம் மேற்கூறிய சலுகைகளை வழங்கியுள்ளபடியால், நாம் அவற்றுக்குப் பாதுகாப்பு அளிக்கிறோம்; அதாவது நாம் எவருக்குத் துன்பம் செய்தாலும், அல்லது பட்டயத்தின் எந்தப் பிரிவை மீறினாலும், இந்த உரிமைகளைச் செயற்படுத்தும் பொருட்டு நில மானியப் பிரபுக்கள் தங்களுள் 25 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் குறைகளெல்லாம் களையப்படும் வரை, நம்மை எல்லாவழியிலும் துன்புறுத்தவும், கட்டாயப்படுத்தவும் செய்யலர்ம்'.



**பட்டயத்தின் விளக்கமும் அதன் அரசியல் முக்கியத்துவமும்**: பிரிவுகள் I,II, IV, VIII முதலியவை சானினால் தவறாகப் பயன்படுத்தப்பட்ட நில மானிய வழக்கங்கள் எதிர் காலத்தில் மீறப்படலாகா என்று உறுதி செய்தன. பிரிவு XIV இல் கூறப்பட்ட செய்தி, 'நாட்டவருடைய ஒப்புதலின் பேரில் தான், (அவர்களுடைய பேராளர்களின் ஒப்புதலின் பேரில் தான்) வரிவிதிப்புச் செய்யப்படுதல் வேண்டும்', என்று பொருள்படுவதாகப் பிற்காலத்தில் கூறப்பட்டாலும், உண்மையில் அது 'நிலமானியப் பிரபுக்களைக்' குறிப்பிடுகிறதே தவிர, நாட்டிலுள்ள எல்லா மக்களையும் குறிப்பிடவில்லை. பிரிவு XXXIV அரச நீதிமன்றங்களின் வளர்ச்சியைத் தடுத்து, நிலமானியப் பண்ணை நீதிமன்றங்களின் அதிகாரத்தை வளர்த்தது. பிரிவு XXXIX -இல் குறிப்பிடப்பட்டுள்ள 'சுதந்திரக் குடியாள்' என்ற தொடர் நாட்டின் பொது மக்களைக் குறிப்பிடாமல், நிலமானியப் பிரபுக்கள் அரச நீதிமன்றங்களில் விசாரிக்கப்படாமல், அவர்கள் நில மானியப் பிரபுக்களின் நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படுதல் வேண்டு மென்று பொருள்படுவதாகும். மேலும், அதில் வரும் 'நாட்டின் சட்டங்கள்' என்ற சொற்கள் போர் முறையின் வழியாக (Combat) நீதி வழங்கும் அக்கால உள்நாட்டு வழக்கங்களையே குறிப்பிட்டன; நாடு முழுவதற்கும் பொதுவான சட்டம் எதையும் குறிப்பிடவில்லை. பிரிவு LX உண்மையில் அரசருடைய நடத்தையைப் பிரபுக்கள் ஏற்றுக்கொள்ளாதபோது. அவருக்கெதிராக உள்நாட்டுப் போரைத் தொடங்குவதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

மாபெரும் பட்டயத்தின் முக்கியத்துவம், அது கூறியவற்றில் காணப்படாமல், பிற்கால ஆங்கிலத் தலைமுறையினர் அது என்ன கூறிற்று என்று எண்ணினார்களோ, அது அவ்வெண்ணத்தில் காணப்படுகிறது. அது கூறுவதெல்லாம் மறைந்து விட்ட நில மானிய உரிமைகளையும், வழக்கங்களையும் பற்றியே. இசுடூவர்ட்டு அரசர்களுக்கும், பாராளுமன்றத்துக்கும் கி.பி. 1603 வரை நடைபெற்ற அரசியல் போராட்டத்தில் பாராளுமன்ற ஆதரவாளர் அப்போது தாம் கருதிய வரிவிதிப்புக்கு மக்களின் ஒப்புதல், பிரதிநிதித்துவ முறையோடு கூடிய பாராளுமன்றம் ஆள்சுதந்திர உரிமை (Habeas corpus), சான்றாளர் முறை விசாரணை (Trial by Jury) முதலிய உரிமைகளுக்கெல்லாம் மாபெரும் பட்டயத்தை ஆதாரமாகவும், மேற்கோளாகவும் விரித்து விளக்கினர். ஆகையால் ஆடம்சு (Adams) என்ற ஆசிரியர் கூறுவது போல, 'மாபெரும் பட்டயத்தின் முக்கியத்துவம், அதற்கு ஆதாரமாய் அமைந்த கொள்கையில் காணப்படுகிறது'. 'சில செயல்களில் அரசருடைய நடத்தை சட்டத்துக்கு உட்பட்டதாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற அடிப்படை விதியை அவர் உறுதியாக ஏற்குமாறு செய்வதுதான் இப்பட்டயத்தின் நோக்கமாகும்'. இப்பட்டயம் பிற்கால அரசர்களால் உறுதி செய்யப்பட்டது. ஆங்கில ஆட்சியும் அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியாகவும் மக்களாட்சியாகவும் வளர்ந்தது. பா.சு.

**துணை நூல்:**

Adams, G.B., Constitutional History of England, London, 1971.

*மாம்பழக் கவிச்சிங்க நாவலர்*: இவர் கி.பி. 1836-இல் பழனியில் பிறந்தார். தந்தையின்

பெயர் முத்தையாசாரி. 'மாம்பழம்' என்பது இவரது குடிப்பெயர் இவர் மூன்று வயதினராயிருக்கும்போது அம்மை நோய் கண்டது. கண்பார்வையை முற்றாக இழந்தார். தந்தையார் இவருடைய முதுகில் தமிழ் எழுத்துகளை எழுதிக் கற்றுக் கொடுத்தார். விரைவில் இவர் கவி இயற்றும் ஆற்றல் பெற்றார். பழனிப்பதிகம், குமரகுருப்பதிகம், செந்திற்பதிகம் முதலிய பதிகங்களை இயற்றினார்.

இவர் இராமநாதபுரம் சமத்தானம் சென்று, பொன்னுசாமித் தேவர் அவர்களிடம் சேர்க்கும்படி ஒரு சீட்டுக்கவியை அனுப்பி வைத்தார். கண்ணிலாதாரை அரசர்கள் நேர்முகம் காண்பது அக்கால வழக்கமன்று. தேவர், தாம் கொடுக்கும் ஈற்றடிகளை வைத்துக்கொண்டு பாடலை முடிக்க முடியுமா என்று வினவினார். அவ்வாறே அவர் கொடுத்த ஈற்றடிகளை வைத்துக்கொண்டு விரைவில் பாடல்களை நிறைவு செய்தார். அவற்றைக்கண்டு மகிழ்ந்த அரசர் இவருக்குக் 'கவிச்சிங்கம்' என்ற பட்டத்தை வழங்கினார் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் 'கவிச்சிங்க நாவலர்' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார். மாம்பழக் கவிச்சிங்க நாவலர் விரைந்து செய்யுள் இயற்றும் திறன் பெற்றிருந்தார். பல தனிப்பாடல்களைப் பாடினார். மு.ச.

**மாம், வில்லியம் சாமர்செட்டு (கி.பி. 1874 - 1965):** இருபதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் புகழ் பெற்ற நாடகாசிரியர்களுள் ஒருவரும் சிறந்த புதினம், சிறுகதை ஆசிரியருமான சாமர்செட்டு மாம், கி.பி. 1874-இல் இராபர்ட்டு மாம் என்ற சட்ட அறிஞருக்கு ஆறாம் மகனாகப் பிறந்தார். சிறுவயதிலேயே தாய்தந்தையரை இழந்துவிட்ட மாம் சாமர்செட்டு (Maugham, William Somerset) தம் சிறிய தந்தையாரால் வளர்க்கப்பட்டார். உயர்நிலைப் பள்ளிப்படிப்பு முடித்தபின் செருமனியில் உள்ள ஐடல்பர்க்குப் பல்கலைக்கழகத்தில் (Heidelberg University) ஓராண்டைப் பயனுள்ள முறையில் கழித்து, மீண்டும் இங்கிலாந்து வந்து மருத்துவ மாணவராகச் சேர்ந்தார். மருத்துவப் படிப்பில் பட்டம் பெற்று, ஆங்கிலத்தில் எழுத்தாளராகப் புகழ்பெற்றவர்களுள் மாமும் ஒருவர் ஆவார்.

மணவாழ்கையில் ஏற்படும் சிக்கல்கள், சச்சரவுகள் பற்றியும், தவறான பொருத்தத்தால் (Misalliance) ஏற்படும் சிக்கல்கள் பற்றியும் இவர்தம் படைப்புகளில் காணலாம். இவர் 1907-இல் 'பிரெடரிக்குச் சீமாட்டி' (Lady Frederick), 1922-இல் 'சூயசுக் கால்வாய்க்குக் கிழக்கே' (East of Suez), 1927-இல் 'விசுவாசமுள்ள மனைவி' (The Constant Wife)



வில்லியம் சாமர்செட்டு மாம்

என்ற நாடகங்கள் எழுதினார். இவையே இவர்தம் படைப்புகளுள் புகழ்மிக்கனவாகும். காதலும் பொருளும் நெருங்கிய தொடர்புடையவை என்று மாம் உறுதியாக நம்பினார். இவர் கி.பி. 1897-இல் தம் இருபத்து மூன்றாம் வயதிலேயே 'இலாம்பத் நகரத்து இலிசா' (Liza of Lambeth) என்ற தம் முதல் புதினத்தை எழுதினார். தம் நாடகங்கள் மூலம் குறிப்பிடத்தக்க அளவு வருவாய் பெற்றுவந்த இவர் சிறுகதை, புதினங்கள் மூலம் ஒரு பணக்காரராகவே ஆனார். முதல் உலகப்போர் தொடங்கிய போது இவர் 'மனிதப் பிணைப்புப்பற்றி' (Of Human Bondage) என்னும் சிறந்த புதினத்தை எழுதி முடித்தார். அந்தப் புதினம் ஓரளவுக்கு மாமின் சொந்த வாழ்க்கையை வெளிப்படுத்துவதாக அமைந்த படைப்பு ஆகும். 'சந்திரனும் ஆறு பென்னிக் காசும்' (The Moon and Sixpence) என்னும் புதினம், 'பால் காகின்' (Paul Gauguin) என்னும் ஒரு பிரான்சு ஓவிய மேதையின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. 'பணியாரமும் கள்ளும்' (Cakes and Ale), 'ஆசெண்டன்' (Ashenden); 'கத்தியின் விளிம்பு' (The Razor's Edge) என்னும் புதினங்கள் இவர்தம் புகழ் பெற்ற படைப்புகளில் சிலவாம். கதை சொல்லும் இயல்பில் தமக்கென ஓர் இயல்பை வகுத்துக் கொண்ட இவர், பாத்திரப் படைப்புகளிலும் இயற்கை வருணனைகளிலும் வல்லவராகத் திகழ்ந்தார். மாமின் சிறுகதைகள் 'இலையின் நடுக்கம்' (The Trembling of a Leaf), 'சவுக்கு மரம்' (The Casuarina Tree) என்ற இரு

தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. பல நாடுகளில் சுற்றுப் பயணம் செய்வதில் ஆர்வமுள்ள இந்த எழுத்தாளர், தூரக் கிழக்கு நாடுகள், கிழக்கிந்தியத் தீவுகள், ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகள் ஆகியவற்றில் தாம் கண்டு கேட்டறிந்த அனுபவங்களைக் கொண்ட பல சிறுகதைகளை எழுதினார். கூரிய நோக்கு, பரந்த அனுபவம், மருத்துவ அறிவு, மனித மனத்தைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனை ஆகியவற்றைத் தம் படைப்புகளில் வியத்தகு வகையில் பயன்படுத்திக் கொண்டார். 'சிவப்பன்' (Red), 'மழை' (Rain) போன்ற சிறு கதைகள் என்றும் நிலைத்திருக்கும் கலைப்படைப்புகளாகும். இனிமையான எளிய நடை, சொற்சிக்கனம், தெளிவான சொல்லாட்சி ஆகியவை இவர்தம் தனிச்சிறப்புகள். இவர் 20-ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர்களுள் முன்னணியில் நிற்பவர். இவர் 1965-இல் தம் 91-ஆம் வயதில் காலமானார். கே.ஜி.சே.

**மாமண்டூர்**: இவ்வூர் வடஆர்க்காடு மாவட்டச் செய்யாறு வட்டத்தில் அமைந்துள்ள சிற்றூராகும். பல்லவர்களின் தலைநகராக விளங்கிய காஞ்சியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது. மாமண்டூரின் பழைய பெயர் 'மாவண்டூர்' என்பதாகும். இங்குள்ள முதலாம் இராசராசனின் 1011-1012-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று அதனைத் தெளிவுபடுத்துகிறது. இரண்டு சிறுபாறைகளின் மேல் அமைந்துள்ள இவ்விடத்தின் பெயர்க்காரணம் இங்குள்ள பெரிய கரையையுடைய குளத்துடன் இணைத்துக் கூறப்படுகிறது.

கட்டடக் கலைக்கு முன்னோடியான பல்லவர்களே முதன்முதலில் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை அமைக்கும் முறையைக் கொண்டுவந்தனர். தென்னிந்தியக் கட்டடக் கலையின் தோற்றுவாய், பல்லவர்களின் குகைக்கோயில்களிலிருந்துதான் தொடங்குகின்றன. முதன்முதலில் தென்னிந்தியாவில் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை அமைத்த பெருமை பல்லவ மன்னன் மகேந்திரவர்மனையே சாரும் (கி.பி. 580-630). அவன் காலத்தில் செங்கல், மரம், உலோகம் ஏதும் இல்லாமலேயே ஒரே கல்லின் மூலம் மட்டுமே அமைக்கப்பட்ட கலைப்படைப்புகளுள் மண்டகப்பட்டுக்கு அடுத்ததாக மாமண்டூர் சிறப்பிடம் பெறுகிறது.

மாமண்டூரைச் சார்ந்து ஏறத்தாழ நான்கு குகைக்கோயில்கள் உள்ளன. அவற்றில் இரண்டு நன்கு முற்றுப்பெற்றவை; மற்ற இரண்டும் முற்றுப் பெறாத நிலையில் உள்ளன. இங்குக் காணப்படும் சோழர் காலக்கல்வெட்டின் மூலம் முற்றுப் பெற்ற இரண்டு குகைக்கோயில்களும் சிவனுக்காக அமைக்கப்பட்டன என்பது புலனாகிறது. பல்லவர்களுடைய கல்வெட்டுகள் இங்குக் கிடைக்கவில்லையாயினும் இங்குள்ள கல்வெட்டொன்று மகேந்திரவர்மனால் எழுதப்பட்ட 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற புகழ்பெற்ற சமசுகிருத நாடகத்தைக் குறிப்பதாக உள்ளது. மேலும், அந்த நாடகத்தில் மகேந்திரனின் ஏனைய பெயர்களான குணபரா, அவனிபாசனா, மத்தவிலாசா போன்றனவும் காணப்படுகின்றன. மேலும், அக்குகை, தொடக்கக்காலத்தில் சமணசமயத் துறவியருடன் தொடர்புடைய இருப்பிடமாக விளங்கியதென்றும் கூறலாம். பா.ஜெ.

**மாமல்லபுரம்**: இது சென்னைக்குத் தெற்கில் ஏறத்தாழ 60கி.மீ. தொலைவில் செங்கற்பட்டு மாவட்டக்கடற்கரையோரம் அமைந்துள்ள தொன்மையான ஊராகும். கலையார்வமுடையோர் கண்களுக்கு அழகிய விருந்தளிக்கும் பல்லவர் காலச் சிற்பச் செல்வங்களைக் கொண்ட ஊர். ஏறத்தாழ 1300 ஆண்டுகட்கு முன்பு படைக்கப்பட்டாலும் நேற்று அமைக்கப்பட்டன போல் புதுமையுடன் மாமல்லபுரக் கலைப் படைப்புகள் விளங்குகின்றன. மாமல்லபுரம், மகாமல்லபுரம், மகாபலிபுரம், மல்லை, மல்லாபுரி, மாவேலிபுரம், மாவலிபுரம், சனநாதபுரம் எனப் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. மாமல்லபுரம் பகுதியில் தொல்பழங்காலச் சின்னங்களாகிய கற்படை, முதுமக்கள்தாழி ஆகியவை கிடைத்துள்ளன. சில உரோமானிய அரசர்தம் காசுகளும் அங்குக் கிடைத்துள்ளன. காளை, தாமரை, மீன் ஆகியவை பொறிக்கப்பட்டனவும், சிரீபரன், சிரீநிதி என எழுதப்பெற்றவையுமான பல்லவர் காலக் காசுகளும், இராசராச சோழனின் (கி.பி. 985–1014) ஈழக்காசுகளும் மாமல்லபுரத்தில் கிடைத்துள்ளன. வாணிகச் சிறப்பிலும் மாமல்லபுரம் சிறந்து விளங்கியது என்பதை நந்திவர்ம பல்லவனின் 'நகரமான மாமல்லபுரம்' என்னும் கல்வெட்டுத் தொடரால் அறியலாம்.

இராசராச சோழனின் 26–ஆம் ஆட்சியாண்டில் 'செயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க் கோட்டத்து ஆமூர்நாட்டு நகரம் மாமல்லபுரமான சனநாதபுரம்' என இவ்வூர் குறிப்பிடப்பட்டது. சனநாதன் என்பது இராசராச சோழனின் பட்டப் பெயர்களுள் ஒன்று. கோப்பெருஞ்சிங்கன் என்ற பிற்காலப் பல்லவர் தலைவன் தன்னை 'மல்லையர்கோன்' 'மல்லைக் காவலன்' 'மல்லாபுரி மாதவன்' என்று சொல்லிக் கொண்டான். பாண்டியர், சம்புவராயர், விசயநகர அரசர் போன்றோர் இங்கு ஆட்சிபுரிந்துள்ளனர். விசயநகர ஆட்சியின் படைவீட்டு இராச்சியத்தில் மாமல்லபுரம் சேர்ந்திருந்தது.

தண்டியாசிரியர் எழுதிய அவந்திசுந்தரி கதை, நித்தியசூரி சரிதம், ஆழ்வார் பாடல்கள், நந்திக்



கடற்கரைக் கோயில்



ஐந்து ரதம்



பாறைச் சிற்பங்கள்



வராக மண்டபம் குகைக்கோயில்



பீமரதம்



தாமராசா ரதம



நகுல சகாதேவரதம்

கலம்பகம், கலிங்கத்துப் பரணி, பெரிய புராணம், இராசராசசோழன் உலா, குருபரம்பரைப் பிரபாவம் போன்ற இலக்கியங்களில் மாமல்லபுரம் குறிக்கப் படுகிறது.

சரியாக ஆய்வு செய்யப்படாத நிலையில் மாமல்லபுரச் சிற்பங்களை உருவாக்கியவர் அசோகர், சீனநாட்டவர், சயாமியர், வடநாட்டார், குறும்பர் என்னும் பலகருத்துகள் முன்பு நிலவியன.

கோச்ரோ பல்பி (கி.பி. 1582), நிக்கோலாய் மனூச்சி (கி.பி. 1700), கெமில்டன் (கி.பி. 1727), சேமர்பர்சு (கி.பி. 1788), இலா அரிவிட்னி (கி.பி. 1794), கோல்டிங்காம் (கி.பி. 1798), மிரா போலினாடா (கி.பி. 1800), கைன் (கி.பி. 1814), மக்கென்சி (கி.பி. 1816), வால்டர் எலியட்சு (கி.பி. 1844) ஆகிய மேனாட்டு அறிஞர்கள் மாமல்லபுரம் பற்றிய சுவையான செய்திகளைக் கூறியுள்ளனர். இராபர்ட்டு சௌதே (கி.பி. 1810) என்பவர் 'கெகமாவின் சாபம்' என்ற பெயரில் மாமல்லபுரம் பற்றி ஆங்கிலத்தில் கவிதை எழுதியுள்ளார்.

மக்கென்சி காலத்தில் பல பகுதிகள் மணலால் மூடப்பட்டுக் கிடந்தன. அதனை அவர் அப்புறப் படுத்தினார். பொதுவாக வெளிநாட்டவர் 'ஏழு பகோடாக்கள்' அல்லது 'ஏழு சிகரங்கள்' என மாமல்லபுரத்தைக் குறித்தனர். ஐந்து இரதங்களையும், கடற்கரை விமானம் இரண்டையும் கண்டு அவர்கள் அவ்வாறு குறித்திருக்கலாம்.

மாமல்லபுரம் சிற்பச் செல்வங்களை உருவாக்கத் தொடங்கியவன் 'விசித்திர சித்தன்' என்னும் பட்டங்கொண்ட முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 600 -630) என்றும், முதல் நரசிம்மவர்மன் (கி.பி. 630 -668) காலத்தில் தொடர்ந்து பணிகள் நடைபெற்று, முதலாம் பரமேச்வரவர்மன் (கி.பி. 670 – 700) காலத்தில் ஓரளவு முற்றுப் பெற்றது என்றும் கூறுவர். கடற்கரைக் கோயில்கள் இரண்டாம் நரசிம்மன் என்னும் இராசசிம்மனால் (கி.பி. 700-728) கட்டப் பட்டன. முதல் நரசிம்மவர்மனுக்கு 'மாமல்லன்' என்னும் பெயர் உண்டு. அவன் பெயரால் இவ்வூர் மாமல்லபுரம் எனக் குறிப்பிடப்பட்டது.

வேறு சிலர் இரண்டாம் நரசிம்மன் ஒருவன் மட்டுமே மாமல்லபுரக் கோயில்களையும, சிற்பங்களையும் உருவாக்கினான் என்பர். இந்நகரைக் கி.பி. 7 -ஆம் நூற்றாண்டினரான பூதத்தாழ்வார் 'மாமல்லை' என்றும், அவரை அடுத்து வாழ்ந்த திருமங்கையாழ்வார் 'கலங்கள் இயங்கும் மல்லைக் கடல்மல்லை' என்றும் பாடியிருப்பதால் இரண்டாம் நரசிம்மனுக்கு முன்பே மாமல்லபுரச் சிற்பங்கள் உருவாக்கப் பட்டன என அறியலாம். சிற்பங்களின் அமைப்பை ஆராய்ந்த பேராசிரியர்கள்' சிலர் இரண்டாம் நரசிம்மனுக்கு முற்பட்ட சிற்பங்கள் மாமல்லபுரத்தில் இருப்பதைக் கண்டு நிறுவியுள்ளனர்.

மாமல்லபுரச் சிற்பங்களை 4 வகைகளாகப் பிரிக்கலாம். அவை அ) குடைவரைக் கோயில்கள், ஆ) இரதங்கள் அல்லது ஒற்றைக்கல் கோயில்கள், இ) பாறைச் சிற்பங்கள், ஈ) கட்டடக் கோயில்கள் என்பவையாகும். அவற்றைக் குடைவித்தது (அ), செதுக்குவித்தது (ஆ,இ), கட்டுவித்தது (ஈ) என்று சிலர் மூன்றாகவும் பிரிப்பர்.

**குடைவரைக் கோயில்கள்**: மலைகளைக் குடைந்து அமைக்கப் பெற்றதால் அவை இப்பெயரைப் பெற்றன. பொதுவாக அவை குகைகள் என்று சொல்லப்பட்டாலும் பெரும்பாலும் மண்டபங்களாகவே உள்ளன.

1) மும்மூர்த்தி குகை, 2) கோடிக்கல் மண்டபம், 3) தருமராச மண்டபம், 4) இராமானுச மண்டபம், 5) வராக மண்டபம், 6) ஆதிவராக மண்டபம், 7) மகிசாசுரமர்த்தினி குகை, 8) புலிப்புதர் மண்டபம், 9) மகிசாசுரன் குகை, 10) பஞ்சபாண்டவர் மண்டபம். 11) கோனேரிமண்டபம், 12) கோனேரி மண்டபத்தின் வடக்கே உள்ள மண்டபம், 13) மகிசாசுரமர்த்தினி குகை அருகே உள்ள மண்டபம் 14) கலங்கரை விளக்கத்தின் கீழுள்ள மண்டபம் என மாமல்லபுரத்தில் 14 குகைக் கோயில்கள் உள்ளன.

மும்மூர்த்திகுகை, தருமராச மண்டபம், இராமானுச மண்டபம் ஆகியவற்றில் மூன்று கருவறைகள் உள்ளன. சிவன், திருமால், முருகன் அல்லது நான்முகனுக்கு அவை உரியவை. கோனேரி மண்டபமும், புலிப்புதர் மண்டபமும் ஐந்து கருவறைகளை உடையவை. கோடிக்கல் மண்டபம் கொற்றவைக்கு உரியது. ஆதிவராக மண்டபத்தில் மட்டும் இப்போதும் வழிபாடு நடந்துவருகிறது. 'பரமேசுவர மகாவராக விட்டுணுக் கிருகம்' என்று கல்வெட்டுகள் அதனைக் குறிக்கின்றன. சிம்மவிட்டுணு (கி.பி. 570 – 600) மகேந்திரவர்மன் ஆகியோர் உருவச் சிற்பங்கள் அங்கு உள்ளன.

**இரதங்கள்**: இவற்றை ஒற்றைக் கல் கோயில்கள் என்றும், மலைத்தளிகள் என்றும் குன்றன்ன கோயில்கள் என்றும் குறிப்பிடுவர். இவை இரதங்கள் எனக் கூறப் பட்டாலும் இவை அனைத்தும் கோயில்களேயாகும். இரதக் கோயில்கள் மொத்தம் ஒன்பது உள்ளன. 1) தருமராச இரதம், 2) பீம இரதம், 3) அருச்சுன இரதம், 4) சகாதேவ இரதம் 5) திரௌபதி இரதம், 6) கணேச இரதம், 7) முதல் பிடாரி இரதம்,

8) இரண்டாம் பிடாரி இரதம், 9) வலையன்குட்டை இரதம் என்பன அவை.

தருமராச இரதம் அளவில் பெரியது. அது மூன்று தளங்களும் எட்டுப்பட்டைச் சிகரமும் உடையது. 'அத்யந்தகாமப் பல்லவேச்சுரக் கிருகம்' என்று அதனைக் கல்வெட்டு குறிக்கிறது. பீம ரதம் நீள் சதுர வடிவில் பள்ளி கொண்ட பெருமாளுக்காக அமைக்கப் பட்டது. அர்ச்சுன இரதமும் திரௌபதி இரதமும் ஒரே பீடத்தில் செதுக்கப்பட்டுள்ளன. அர்ச்சுன இரதம் இரண்டு தளங்களையும் எட்டுப் பட்டைச் சிகரமும் கொண்டது. பல்லவ அரசன், அரசியர் சிற்பங்கள் இங்குள்ளன. இங்குள்ள முருகனுக்கு யானைவாகனம் காணப்படுகிறது. சகாதேவ இரதம் இந்திரனுக்கு உரியதென்பர். இது கசப் பிருட்டம் என்னும் தூங்கானை வடிவில் அமைக்கப் பட்டுள்ளது. அதைக் காட்டும் வண்ணம் அருகே யானை நின்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. திரௌபதி இரதம் சிங்கங்களும், யானைகளும் தாங்கும் பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. அது குடிசை போன்ற அமைப்பில் உள்ளது. கொற்றவை கோயில் குடிசை வடிவில் அமைவது பண்டைய மரபு. இங்கு அடியார் ஒருவர் தம்மைப்பலியிடும் நவகண்டச் சிற்பம் உள்ளது. சகாதேவ இரதத்தைத் தவிர ஏனைய நான்கும் ஒரே மலையிலிருந்து உருவாக்கப்பட்டவை. அவற்றின் அருகே முன்சொன்ன யானையுடன் சிங்கம், எருது ஆகியவை செதுக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் அன்று தமிழ்நாட்டில் நிலவிய கோயில்களின் பல்வேறு மாதிரிகளாகும். பாண்டவர்கட்கும் இரதங்களுக்கும் தொடர்பில்லை.

கட்டடக் கோயில்கள் கீழே தொடங்கி மேல் நோக்கிக் கட்டப்பெறும். ஆனால், ஒற்றைக் கல் தளிகள் உச்சியில் தொடங்கிக் கீழ் நோக்கிச் செதுக்கிக் கொண்டு வரப்பெறும். அதைக் காட்டும் வண்ணம் மகிசாசுரமர்த்தினிக் குகை எதிரில் ஒரு கோயில் மேலே செதுக்கத் தொடங்கிய நிலையில் உள்ளதைக் காணலாம்.

**பாறைச் சிற்பங்கள்:** இரண்டு இடங்களில் அருச்சுனன் தவம், அல்லது பகீரதன் கங்கையை வரவழைக்கத் தவம் செய்யும் காட்சி திறந்த வெளியில் பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளது.

முற்றுப்பெற்ற பாறைச் சிற்பம் 30 மீ. நீளமுள்ள பாறையில் அமைந்துள்ளது. உலகில் வேறு எங்கும் காண இயலாத அற்புதக் கலைப் படைப்பு என்று அறிஞர் பலர் அச்சிற்பத் தொகுதியைப் புகழ்ந்துள்ளனர். இயற்கையிலேயே பாறையில் உள்ள பிளவில் கங்கை பாய்வதைச் சிற்பி காட்டியுள்ளார். வானுலகத் தேவர்கள், வையகத்து மாந்தர்கள், கானகத்து விலங்குகள் உயிருள்ள தோற்றம் போல் காணப்படுமாறு வியத்தகுவகையில் சிற்பி படைத்துள்ளார். அங்கு, 16 வகைப்பட்ட தனித்தனி 150 விலங்குச் சிற்பங்கள் உள்ளன. பாரவியின் கிராதார்ச்சுனீயத்தில் உள்ள ஒரு காட்சியையே அச்சிற்பம் குறிக்கிறது என்பர். சிலர் அதனைச் சமண சமயத்துடன் தொடர்பு படுத்துவர்.

ஒரு காலில் நின்றுகொண்டு இரு கைகளையும் தூக்கிக் கொண்டு எலும்பும் தோலுமாகக் காட்சி தருகிறான் அருச்சுனன். எதிரே சிவபெருமான் உள்ளார். கம்பீரமாகச் செல்லும் யானைக் குடும்பம், விளையாடும் யானைக் குட்டி, போலித் தவம் செய்யும் பூனை, அதைக் கவனிக்கும் எலி, பேன் பார்க்கும் குரங்கு, படுத்துறங்கும் சிம்மம், பார்த்து நிற்கும் ஆடுகள், கங்கையில் அந்தணர் குளித்துச் சூரியனை வணங்கும் காட்சி ஆகியவை மிக உயரிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

கிருட்டிண மண்டபத்தின் பின்னர்க் கண்ணன் குன்றெடுத்து ஆநிரை காக்கும் காட்சி அமைக்கப் பட்டுள்ளது. கோவர்த்தன கிரியின் கீழ் ஆயர், ஆய்ச்சியர் வாழ்க்கை நிகழ்ச்சிகளும், கால்நடைகளும் உள்ளன. அதன் அருகில் சில விலங்குகள் ஒரு பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. ஒரு சிற்பம் சிம்ம உடலும், மனித முகமும் பெற்றுள்ளது. அது நரசிம்மனை நினைவூட்டுகிறது என்பர்.

**கட்டடக் கோயில்கள்:** 1) கடற்கரைக் கோயில்கள், 2) முகந்த நாயனார் கோயில், 3) ஒலக்கெண்ணேசுவரர் கோயில், 4) தல சயனப் பெருமாள் கோயில் ஆகியவை கட்டடக் கோயில்கள் ஆகும்.

கடற்கரையில் இரு விமானங்களே இன்று காணப்படினும் மூன்று கோயில்கள் அங்குள்ளன. கிழக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் இருப்பவை முறையே சத்திரிய சிம்ம பல்லவேசுரக் கிருகமும், இராசசிம்மப் பல்லவேசுரக் கிருகம் எனப்படும் சிவன் கோயிலும் ஆகும். இடையில் உள்ள கோயில் நரசிம்ம பல்லவ விட்டுணுக் கிருகம் என்னும் திருமால் கோயில் ஆகும். இராசராச சோழன் கல்வெட்டில் பள்ளி கொண்டருளிய பெருமான் என்று திருமால் அழைக்கப் பெறுகின்றார். அப்பெருமாளின் திருக்கரம் ஒன்று சிதைந்திருந்ததாகவும் இலலிதாலயன் என்ற சிற்பி அதைச்சரிசெய்தான் என்றும் தண்டி தன் அவந்தி சுந்தரி கதையில் குறிக்கின்றார்.

முகுந்த நாயனார் கோயில் முகலிப்பா முடையார் கோயில் எனக் கல்வெட்டில் குறிக்கப்படு

கிறது. உழக்கு எண்ணெய் வசூலித்து விளக்கு எரித்த கோயில் ஒலக்கெண்ணேசுவரர் கோயில் ஆயிற்று போலும். மாமல்லபுரத்தில் மிகவும் உயரமான பாறை இதுதான்.

தலசயனப் பெருமாள் கோயில் ஊர்நடுவில் இன்றும் வழிபாட்டில் உள்ளது. அக்கோயிலைக் 'கடல் மல்லைத் தலசயனம்' என்று திருமங்கை யாழ்வாரும் பாடியுள்ளார். உலகுய்யநின்ற பெருமாள், நிலமடந்தை நாச்சியார் எனக்கல்வெட்டில் பெயர்கள் குறிக்கப்பெறுகின்றன.

இவையன்றி ஆங்காங்கு, சிங்கம், சிங்கக் கட்டில், பிள்ளையார், தாய்மார் எழுவர் சிற்பங்கள் உள்ளன. சிங்கக்கட்டில் அரசன் அமரும் இருக்கையாக இருக்கலாம்.

**சாளுவன் குப்பம்:** மாமல்லபுரத்திற்கு வடக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள சாளுவன் குப்பத்தில் புலிக்குகைஉள்ளது. அது கொற்றவை கோயில். குகையின் முகப்பில் அழகிய புலி முகங்கள் சிற்பங்களாக உள்ளமையால் அது புலிக்குகை எனப்படுகிறது.

அருகில் சிவபெருமானுக்குரிய கோயிலான அதிரணசண்ட மண்டபம் உள்ளது. பல்லவர்களின் நாகரிக் கல்வெட்டும், இராசராச சோழன் கல்வெட்டும் உள்ளன. சாளுவன் குப்பத்தின் பழம்பெயர் 'திருவிழிச்சல்' என ஒருகல்வெட்டு மூலம் தெரிகிறது. அருகில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டு அங்குச் சுப்பிரமணியர்கோயில் ஒன்று இருந்ததாகக் கூறுகிறது.

**சிற்பிகள்:** திருக்கழுக்குன்றம் செல்லும் சாலையில் 2½ கி.மீ. தொலைவில் உள்ள பூஞ்சேரியில் சாலையின் தென்புறம் சிறுபாறைகள் சில உள்ளன. ஒரு பாறை தொட்டி போல் உள்ளது. அதன் விளிம்பில் கேவாத பெருந்தச்சன், சாதமுக்கியன், குணமல்லன், திருவொற்றியூர் ஆபாசன் போன்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்கள் மாமல்லபுரம் சிற்பத்தைச் செதுக்கிய சிற்பிகளுள் சிலராக இருக்கலாம்.

**சைவ,வைணவ ஒற்றுமை:** மாமல்லபுரச் சிற்பங்கள் மூலம் பல்லவர் காலத்தில் சைவ, வைணவ ஒற்றுமை பேணப்பட்டது நன்கு தெரிகிறது. அங்குக் கொற்றவைச் சிற்பங்களும் சோமாசுகந்த மூர்த்திச் சிற்பங்களுமே அதிக அளவில் உள்ளன. சந்திரசேகரர், தட்சிணாமூர்த்தி, பைரவர், திரிபுராந்தகர், தாண்டவ மூர்த்தி, அர்த்தநாரி, விருசபாந்திகர், சண்டேசாந்திகர், கங்காதரர், பாசுபத மூர்த்தி, ஏகபாதமூர்த்தி, நந்தீசர், இராவண அனுக்கிரக மூர்த்தி போன்ற சிவபெருமானின் பல்வேறு கோலங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

அனந்தசாயி, கசேந்திர அனுக்கிரக மூர்த்தி, கருடாந்திகர், அரிகரன், வராகமூர்த்தி, திரிவிக்கிரமர், நரசிம்மர், குதிரை அசுரனைக் கொன்றவர், காளிய மர்த்தனர், கோவர்த்தனதாரி ஆகிய திருமாலின் பல்வேறு மூர்த்தங்களையும் காணலாம்.

மாமல்லபுரச் சிற்பங்கள் ஒன்றுபோல் மற்றொன்று இல்லாமல் ஒவ்வொன்றும் தனித்தன்மையுடன் விளங்குவது சிறப்பாகும். பெரும்பான்மையான சிற்பங்கள் முடிவு பெறாமல் வழிபாடு இன்றி உள்ளன. சாளுக்கிய மன்னர்கள் படையெடுப்பும், பிற்காலப் பல்லவர்கள் கட்டடக் கோயில் கட்டுவதில் நாட்டம் செலுத்தியதுமே குறைபணிகட்குக காரணங்களாகும்.

மாமல்லபுரம் சிற்பத் தொகுதிகளில், மேலும் கீழும் நான்கு பட்டைகளும் இடையில் எட்டுப் பட்டைகளும் கொண்ட தூண்கள் உடைய குகைகளை மகேந்திரன்பாணி என்பர். குகைகளோடு குன்றுகளைக் கோயிலாக்கியது மாமல்லன் முதலாம் நரசிம்மன் பாணியாகும். கட்டடக் கோயில்கள் இராசசிம்மன் பாணி என்று குறிப்பிடப்படும். ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலகில் மிக்வும் சிறப்பான கலைப்பண்பாட்டுச் சின்னங்களுள் ஒன்றாக மாமல்லபுரத்தை அறிவித்துள்ளது. செ.இரா.


**துணை நூல்கள்:**

நாகசாமி, இரா., மாமல்லை, தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1968.

**Soundararajan, K.V.**, Cult-in the Pallava Temples, Transaction of the Archaeological Society of South India (1962 - 65), Madras, 1969.

**Srinivasan, K.R.**, Cave Temples of the Pallavas, Archaeological Survey of India, New Delhi, 1964.

*மாமலுக்குகள்* செல்சுக்கியத் துருக்கியர் (Seljuk Turks). இவர்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எகிப்திலும், மேற்கு ஆசியாவிலும் ஆட்சித் தலைமை பெற்றிருந்த காலத்தில், தாம் வென்ற நாடுகளில் கைப்பற்றிய இளைஞர்களுக்குத் தக்கபடைப் பயிற்சி அளித்து அவர்களைத் தம் சுல்தான்களுக்கு மெய்க்காப்பாளர்களாகச் செய்தனர். அத்தகைய மெய்க்காவல் படை, எகிப்தியப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு 'மாமலுக்கியப்படை' என்பது பெயர் (Mamlukes). மாமலுக்கு என்னும் சொல்லுக்கு அரேபிய மொழியில் அடிமை என்பது பொருளாகும். இப்படையினர் போர்த் திறமை மிக்கவர்களாக இருந்தனர். பெரும்பாலும், இவர்கள் காகேசிய




மாமலுக்குகள்

நாடுகளிலிருந்து வந்தவர்களாவர். கோதுசு (Kotuz) எனப்பெற்ற ஒரு மாமலுக்கியத் தலைவன் எகிப்தின் அரசை கி.பி. 1250-இல் கவிழ்த்துவிட்டுத் தன்னையே எகிப்தியச் சுல்தானாக அறிவித்தான். ஆனால் 10 ஆண்டுகள் சென்ற பின் பீபார்சு (Bibars) என்னும் மற்றொரு மாமலுக்கியத்தலைவன், கோதுசைக் கொன்றுவிட்டுத் தன்னைச் சுல்தானாகச் செய்து கொண்டான். இவன் கி.பி. 1277-இல் இறந்தான். இவன் பின் வழியினர், மாமலுக்கு ஆட்சியை எகிப்தில் உறுதிப்படுத்தினர். உதுமானியத் துருக்கியர் கி.பி. 1517-இல் எகிப்தில் படையெடுக்கும் வரை மாமலுக்கியரின் ஆதிக்கம் நிலவியது. ஆட்சிபுரிந்த மாமலுக்கியருள் இரு வகையினர் விளங்கினர். துருக்கிய மாமலுக்கியர் (கி.பி.1250 – 1390), சர்க்காசிய (Circassian) மாமலுக்கியர் (கி.பி 1390-1517) என்று இவர்கள் குறிக்கப்பெறுகின்றனர். பெரும்பாலும், ஒரு சுல்தான், மற்ற சுல்தானைக் கொன்று அரசைக் கைப்பற்றி வாழ்வதே இவர்கள் வழக்கமாக இருந்தது. சிறிய மாமலுக்கியத் தலைவர்கள், மாநிலங்களில் தலைவர்களாக இருந்தனர். அவர்களிடையே ஒரு வகையான நில மானிய முறை பின்பற்றப்பட்டு வந்தது. பொதுவாக, இவர்கள் திறமையுடன் ஆட்சி செய்தனர். இவர்களின் ஆட்சியின் கீழ் எகிப்தின் வளங்கள் பெருகின. இவர்கள், இலக்கியத்தையும் கட்டடக் கலையையும் வேறு கலைகளையும் ஆதரித்தனர். உதுமானியரின் வெற்றிக்குப் பிறகு, எகிப்து ஓர் உதுமானிய 'சா' (Shah) வின் கீழ்க் கொண்டு வரப்பட்டதெனினும், உண்மையான அரசியல் அதிகாரங்கள் மாமலுக்கிய ஆட்சியாளர்களின் கீழேயே இருந்தன. மாநிலங்களில் இவர்கள் ஆதிக்கமே மிகுந்திருந்தது. மாமலுக்கியரின் குதிரைப்படை வலிமைமிக்கதாக இருந்தது. பிரான்சுக்காரர் எகிப்தில் நுழைந்தபோது அவர்களை வலிமையுடன் எதிர்த்தவர்கள் இவர்களே. எனினும், காலப்போக்கில் ஐரோப்பியப் புதியகாலப் படையைத் தொடர்ந்து எதிர்த்துப் போராட இவர்களால் இயலவில்லை. பல மாமலுக்கியர், பிரான்சுப்படையில் சேர்ந்தனர். முகமது அலி என்னும் எகிப்திய பாதுசா, கி.பி. 1811 - இல் மாமலுக்கியரின் அதிகாரங்களை அழித்ததுடன் அவர்களைக் கொலை செய்யவும் முற்பட்டார். பல மாமலுக்கியர் எகிப்தை விட்டு ஓடிவிட்டனர். சிறிது சிறிதாக மாமலுக்கிய இனம் மறைந்தது. இவர்களுடைய வஞ்சனைச் செயல்கள், இவர்களுடைய மறைவுக்குக் காரணமாயின.

தெ.பா.

**மாமிலாடனார்**: இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். மாமலாடனார் என்று இவர் பெயரைச் சில ஏடுகள் குறிப்பிடுகின்றன. 'மலாடு' என்பது செந்தமிழ் நிலஞ் சேர்ந்த பன்னிரு நாடுகளுள் ஒன்றாகும். மலைநாடு என்பதின் மரூஉவே 'மலாடு' என்றும், திருக்கோயிலூரும் அதைச் சூழ்ந்த பகுதிகளுமே 'மலாடு' என்றும் அறிஞர் கூறுகின்றனர். இப்பகுதிக்கு 'மழபுலம்' என்ற பெயரும் உண்டு. இப்புலவர் இப்பகுதியைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று கருத இடமுள்ளது. மிலாடு என்பது மலாடு அல்லது மலையமானாடு என்பதன் திரிபு அன்று.

அது மிலாடு, விலாடு, இலாடு என்றே பெரும் பான்மையான கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. மிலாடு என்பது ஒரு சாதி அல்லது இனத்தின் பெய ராக இருக்கக்கூடும்; அச்சாதியார் தமிழ்நாட்டில் வாழ்ந்த பகுதி மிலாடு எனக் கூறப்பட்டிருக்கலாம். அவர்கள் கருநாடக மாநிலம் தார்வாடுப் பகுதி யிலுள்ள வாரங்கல் என்ற இடத்தைச் சுற்றியிருந்த விராட தேசப்பகுதியிலிருந்து வந்திருக்கலாம் என்பர் வரலாற்று ஆய்வாளர். அக்கருத்துச் சரியாயின் மாமிலாடனார் மிலாடு நாடு அல்லது சாதியைச் சார்ந்தவராகலாம். 'மா' என்ற அடையுடைய ஆடு துறை மாசாத்தனார், ஒக்கூர் மாசாத்தியார், சேர மான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, மாதீர்த்தன், மாமூலனார், மாயேண்டன், மாவளத் தான் என்ற பெயர்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. மாமிலாடன் என்பது 'பெரும் பாக்கன்' போன்று நாட்டினாற் பெற்ற ஒரு பெயர் போலும்.

மாமிலாடனார் இயற்றிய பாடல் ஒன்று குறுந் தொகையில் (46) உள்ளது. அப்பாடல் மருதத் திணையில், ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தான் ஆற்றுவல் என்பது படத் தலைவி சொல்லியது என்ற துறையில் அமைந்தது. அப்பாடல் கருப்பொருள் அடிப்படையில் (ஆம்பல்) மருதத் திணையாக இருந் தாலும் உரிப்பொருள் அடிப்படையில் பாலைத் திணையைச் சார்ந்ததாக அமைகிறது. வீட்டில் தங்குகின்ற குருவிகளின் நிறத்திற்கு ஆம்பற்பூவின் வாடல் நிறத்தை உவமை கூறிய திறம் சிறப்பாக உள்ளது. அஃறிணை உயிர்களான குருவிகளுக்குக் கிடைக்கும் இன்ப வாழ்வு கூடத் தனக்குக் கிடைக்க வில்லையே என்ற தலைவியின் ஏக்கம் இப்பாடல் வழிப் புலப்படுத்தப்படுகிறது. பிரிந்தார்க்குத் துன் பத்தைத் தருகின்ற மாலைக் காலமும் தனிமைத் துயரமும் தலைவர் சென்ற நாட்டில் இல்லையா என்ற வினாவொடு பாடல் முடிகிறது. தே.தே.

**மாமூது கவான்** (கி.பி.1411-1481) தக்காண முகம்மதிய ஆட்சியாளர்களுள் (Administrators)தலை சிறந்தவர். போற்றத்தக்க அரசியல்வாதியாகவும், அரசியல் அறிஞராகவும் திகழ்ந்தவர். இராணுவத் தந்திரங்களில் தேர்ச்சி பெற்றவர். இவர் பாமினி அரசினை விரிவுபடுத்தினார்; நாட்டில் அமைதியை நிலைநாட்டினார். சிறந்த கல்விமானாக விளங் கிய இவர், பல துறைகளிலும் வல்லவராகத் திகழ் தார்; சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார்.

மாமூது கவான் (Mahmud Gawan) கி.பி.1411 –ஆம் ஆண்டு காசுபியன் கடல் மேலக்கரையோரக் கிலான் நாட்டில் கவானில் ஒரு பெருங்குடி மரபில் தோன்றினார். இளமையில் நன்கு கற்றார். இந்தியா வின் மேற்குக் கரையோர அரசான தபோலிற்கு (Dabhol) வாணிகம் புரியும் நோக்கத்துடன் கி.பி. 1453 – இல் வந்தார். இருப்பினும் இவர் அரசியல் துறையில் ஈடுபட வேண்டியதாயிற்று.

பாமினி அரசை அடைந்த இவர் அலாவுதீன் அகமதுவின் (கி.பி.1436 – 1458) அரசவையில் ஓர் அமீராகப் பணியேற்றார். பின்னர், அலாவுதீன் இவரை ஆயிரம் வீரர் கொண்ட படைக்கு மன்சப் தாராக அமர்த்தினார். அடுத்து ஆட்சிக்கு வந்த உமாயூன் (கி.பி.1458-1461) இவருக்குமலிகும் துச்சர் என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்தார். அடுத்து வந்த குழந்தை அரசன் நிசாம் சா (கி.பி 1461 – 63) வின் ஆட்சியில் கவான், குவாசா சகான் ஆகியோர் கொண்ட ஆளுநர் குழு நிருவாகப் பொறுப்பேற்றது. பாமினி அரசின் மீது படையெடுத்த ஒரிசா, தெலிங் கானாப் படைகளைக் கவான் முறியடித்தார். மாளவ சுல்தான் மாமூது கில்சியையும் தோற்கடித்தார்.

மூன்றாம் முகம்மது சா (கி.பி.1463 – 82) இளை ஞராக இருந்ததால், ஆட்சி தொடர்ந்து ஆளுநர் குழுவிடமே இருந்தது. குவாசா சகான் கி.பி.1466- இல் மரண தண்டனை பெற்றபின் கவான் தலைமை அமைச்சராக அமர்த்தப்பட்டு கி.பி.1481 வரை சீரிய பணியாற்றினார்.

முகம்மது சாவின் ஆட்சிக்காலத்தில் பாமினி அரசு நிலப்பரப்பிலும் செல்வாக்கிலும் விரிவடையக் கவானே காரணமாக இருந்தார். மாளவச் சுல்தா னிடமிருந்து கேர்லாக்கோட்டை கைப்பற்றப்பட்டு கி.பி.1468-இல் பாமினி அரசுடன் இணைக்கப்பட்டது. கவானின் அரசியல் திறத்தால் இருநாடுகளிடையே நட்புறவும் ஏற்படுத்தப்பட்டது

கவான் பகல்கோட்டையையும் கூப்ளியையும் வென்றார். கொங்கணத்தை கி.பி. 1470 - இல் தன் னடிப்படுத்தினார். விசய நகர அரசிடமிருந்து கோவா வைக் கைப்பற்றினார். பெல்காமும் பாமினி அரசின் ஆளுமையை ஏற்றுக்கொண்டது. அவ்வெற்றிகளால் அரசிற்கு ஏராளமான பொருட்கள் கிடைத்தன. நாடு செல்வச் செழிப்பில் உயர்ந்தது.

பாமினி அரசிற்குக் கப்பம் செலுத்தும் சிற்றரச ரான அமீர்ராய் தெலிங்கானாவில் புரட்சி செய்த போது அப்புரட்சியை கவான் ஒடுக்கினார். ஒரிசாவும் ஒடுக்கப்பட்டது. கான் தேசத்தை இவர் பாமினி அரசிற்குட்பட்ட காப்பு நாடாக மாற்றினார். கொண்டபள்ளி கி.பி. 1477-இலும் கொண்ட வீடு கி.பி. 1480-இலும் தோற்கடிக்கப்பட்டன. கவானின் பெருமுயற்சியால் பாமினி அரசு வடக்கில் காந்தேசு

வரையிலும் தெற்கில் துங்கபத்திரை வரையிலும் தென்மேற்கில் கோவா வரையிலும் வடகிழக்கில் ஒரிசா வரையிலும் விரிவுபடுத்தப்பட்டது. கிழக்கிலும் மேற்கிலும் கடல்களே எல்லைகளாயின.

இவர் ஆட்சித்துறையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். முதலாம் முகம்மதின் ஆட்சிக் காலத்தில் நாடு நான்கு தரப்தார்களின் கீழியங்கும் நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆனால், கவான் நாட்டை எட்டு மாநிலங்களாகப் பிரித்ததுடன் தரப்தார்களின் அதிகாரத்தையும் குறைத்தார். சில ஆட்சிப் பகுதிகளை அரசரின் நேரடி வரம்பிற்குட்படுத்தினார்.

கவான் இராணுவஆட்சிமுறையை முழுமையாகத் திருத்தி அமைத்தார். தரப்தாரின் பொறுப்பில் ஒரு கோட்டையை மட்டும் ஒப்படைத்து மற்ற கோட்டைகளைக் கிலேதார்களின் பொறுப்பில் ஒப்படைத்தார். கிலேதார்கள் மத்திய அரசிற்குப் பொறுப்புக் கூறக் கடமைப்படுத்தப்பட்டனர். மன்சப்தார்களும் சாகீர் தார்களும் ஒரு குறிப்பிட்ட அளவு வீரர்களை வைத்திருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊதியம் நிருணயம் செய்யப்பட்டது. அவர்களுக்கு முன்பு அளிக்கப்பட்டிருந்த நிலமானியங்கள் நிறுத்தப்பட்டன. வீரர்களின் எண்ணிக்கை குறைந்ததால் அந்த விகிதத்திற்கு அவர்கள் ஊதியத்தை அரசிற்குத் திரும்ப அளித்திடல் வேண்டுமென்று விதிக்கப்பட்டது.

கவான் நிலத்தை முறையாக அளந்து தரம் பிரித்தார். பேரூர்களுக்கும் சிற்றூர்களுக்கும் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. வருவாய் கணக்கிடும் முறை முழுமையாக ஆராயப்பட்டது. அச்சீர்திருத்தங்கள் நாட்டின் வருவாயைக் கணக்கிடவும் உரிமைச் சான்றுகளைத் தொகுக்கவும் உதவின. புதிதாகச் சேர்க்கப்பட்ட மாநிலங்கள் – தக்காணியர், அயற்பெருங்குடியினர் (Dakhins and the Foreigners) ஆகிய இரு வகைப் பிரபுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அகமது சாவினுடைய (கி.பி 1422-36) ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் தக்காணியர் அரசவையில் செல்வாக்குப் பெற்றனர். ஏராளமான அயற்பெருங் குடியினர் கி.பி. 1466-இல் அவர்களால் இரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். அவர்கள் கவானைப் பழிவாங் கவும் சமயம் பார்த்திருந்தனர். அவர்கள் கவானைக் கொல்ல கி.பி. 1481 – இல் சதித்திட்டம் தீட்டினர். மாமூது கவான், ஒரிசா மன்னரைத் தக்காணத்தின் மீது படையெடுக்குமாறு அழைத்தது போன்ற போலிக்கடிதம் ஒன்றைத் தயாரித்து அதனைச் சுல்தான் மூன்றாம் அகமது சாவிடம் காட்டி நம்ப வைத்தனர். எனவே கி.பி. 1481 – இல் சுல்தான் கவானைக் கொல்ல ஆணை பிறப்பித்தார். இவர் மறைவுடன் பாமினிஅரசின் செல்வாக்கும் மறைந்தது.

தக்காணம் கண்ட ஆட்சியாளர்களுள் மாமூது கவான் சிறப்பானதோர் இடத்தைப் பெறுகிறார். பாமினி அரசினை விரிவுபடுத்தி உள்நாட்டுக் குழப்பங்களைப் போக்கிப் படை ஆட்சித்துறைச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு பாமினி அரசின் புகழை உயர்த்தியவர் கவான். கற்ற மேதையான இவர் சிறந்த எழுத்தாளர்; எளிய பண்பினர்; கணித நூல் வல்லார்; கவிஞர்; தூயவர். தம் வருமானத்தை அறப்பணிகளுக்கு வழங்கிய பொது நலத்தொண்டர்.

ம.இரா.

*மாமூலனார்*: இவர் சங்கப் புலவர்களுள் தனித் தன்மை வாய்ந்த சிலருள் ஒருவர். பாலைத் திணையையே மிகுதியாகப் பாடியவர். அந்தணர் மரபினர்; முக்காலமும் அறிந்த யோகியார். இதனை, தொல்–பொருள் 75–ஆம் நூற்பா உரையில் 'பார்ப்பன வாகை குறித்து விளக்கம்தரும் நச்சினார்க்கினியர், 'யோகிகளாய் உபாயங்களால் முக்காலுமுணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன்தேயத்து அனைநிலை வகையோராவார்' என்று விளக்குவதன் மூலம் அறிய முடிகிறது.

இவர் நந்த மன்னரையும் (அகம்.265), மோரியரையும் (அகம்.251,281) பாராட்டியிருப்பதால் அவர்கள் காலத்தைச் சார்ந்தவர் என்று கருதலாம். அவர்கள் காலம் கி.மு. 260 என்பர் ஆய்வாளர்.

அகநானூற்றில் இருபத்தேழு பாடல்களும், (எண் 1,15,31,55,61,65,91, 97, 101, 115, 127, 187, 197, 201, 211, 233, 251, 265, 281, 295, 311, 325, 331, 347,349,359,393) நற்றிணையில் இரண்டும், (14,75) குறுந்தொகையில் ஒன்றும், (11) ஆக 30 பாடல்கள் இவர் பாடியனவாகும். நற்.75-ஆம் பாடல் (குறிஞ்சி) தவிர ஏனைய பாடல்கள் பாலைத்திணையில் அமைந்தவையாகும். அவற்றுள் 14 பாடல்கள் தலைவி கூற்றாகவும், 13 பாடல்கள் தோழிகூற்றாகவும், 2பாடல்கள் தாய் கூற்றாகவும், 1 பாடல் தலைவன் கூற்றாகவும் அமைந்துள்ளன.

வள்ளுவ மாலையில் இவர் பெயரால் ஒரு பாடல் காணப்படுகிறது. இலக்கணநூல் ஒன்று செய்துள்ளதாக 'இலக்கண விளக்கம்' முதலியவற்றால் தெரிய வருகிறது. பரணரைப் போலவே வரலாற்றுக் குறிப்புகள் அமையப் பாடுவதில் வல்லவர். இவர்தம் அகப்பாடல் ஒவ்வொன்றும் அரசரையோ நாட்டையோ அருஞ்செயல்களையோ குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

இவர் பாலை நிலத்தின் சொல்லொணாத் துயர நிலைகளை விவரிப்பதில் சிறப்புப் பெறுகிறார். குறிஞ்சி திரிந்த பாலையே இவரால் புனைவு பெறுகிறது. நிலத்தினைப் பிளக்கும் ஞாயிற்றின்கொடுமை, பிளவுபட்ட நிலங்கள், வற்றியுலர்ந்த மரங்கள், நீரற்ற சுனை, சுழன்றடிக்கும் சூறாவளிக் காற்று (அகம். 1: 9 - 19), மறவர்களால் வீழ்த்தப்பட்டோர் கண்களைப் பறித்து யாமரக் கிளைகளில் உள்ள பார்ப்புகளின் வாயில் பெய்யும் கழுகுகள் (அகம். 31: 6-11), மலைபிளக்கக் காயும் வெயிலைத் தாங்காமல் உருகிவிழும் பறவைகள், உலையிலிட்டுக் காய்ச்சப் பெற்ற உளியினது வாய்போன்ற பருக்கைக் கற்கள், கருகும் மூங்கில்கள் (அகம்.55: 1-4), பசியால் வாடிமெலிந்த யானையின் முதுகில் நடப்பது போன்ற ஏற்ற இறக்கமான மலைப் பாதைகள் (அகம்.65, 14-15), நீரின்மையின் பாசியைத் தின்னும் யானைகள் (அகம். 91: வரி 5), புலியுண்ட கலைமானின் தசைகள் கிடக்கும் கள்ளியங் காட்டில், ஆநிரை கவர்ந்துண்ணும் கொலைவல்ல வெட்சி வீரர் போலச் சூழ்ந்திருக்கும் கழுகுகள், பருந்துகள் (அகம். 97 : 1-8), சுருண்ட முடியினையும் சிவந்த கண்ணினையும் கொடிய நோக்கினையும் உடையவராய், புற்றுமண்ணை வாயிலடக்கிக் கொண்டு வில் அம்போடு திரியும் மறவர்கள் (அகம் 101 : 4 - 10 ; 127 : 14 - 16;265 ; 17) என்றினைய வருணனைகள் இவர்தம் புனைதிறனுக்குச் சான்றுகளாகும். நீரற்ற சுனையில் அறைகாய் விழும் மூங்கிலின் நெல் பொரிந்துவிடுவதை விளக்கும், 'அறுநீர்ப் பைஞ்சுனை ஆமறப் புலர்தலின், உகுநெற் பொரியும் வெம்மைய' என்ற பகுதியும், பறவைகள் மயங்கி விழுவதைச் சித்திரிக்கும், 'காய்ந்துசெலற் கனலி கல்பகத் தெறுதலின், நீந்து குருகுருகும்' என்ற பகுதியும் வெம்மையின் கொடுமையை அருமையாகப் புலப்படுத்துகின்றன. இயற்கைப் பொருட்களைக் கூர்ந்து நோக்கி அவற்றின் வண்ணத்திற்கும், வடிவிற்கும் ஏற்ப உவமை கூறுவதில் இவர் சிறந்து விளங்குகிறார். இருப்பையின் வெண்ணிற மலர்கள் யானையின் தந்தத்தைக் கடைந்தது போல இருப்பது, வெள்ளிய அரிசி பண்ணைக் கீரையின் வெள்ளிய பழத்தின் விதை போன்று இருப்பது, இடையர்கள் ஆக்கியசோறு கொன்றையின் பூந்தாது போல இருப்பது என்றினைய உவமைகள் இக் கருத்தை மெய்ப்பிக்கும் சான்றுகளாகும்.

அலரொலிக்கு மூன்று உவமைகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை 'நீர் ஒலிப்பது' (அகம்.211), பறையறைவது' (அகம். 281), 'முழுமதிநாளில் கடல் 'ஆரவாரித் தெழுவது' ஆகும்.

மனித வாழ்க்கையோடு அன்பு சான்ற விலங்கு வாழ்க்கையை இணைத்துக் கூறுவதில் இவர் சிறக்கிறார். சூலுற்ற பிடியினைத் தழுவிய களிற்றின்மேல் அதன் கன்று ஏறி இறங்கும் செயலுக்கு, மனைவியைத் தழுவியுள்ள தலைவன் மார்பில் புல்லிய தலையினையுடைய புதல்வன் ஏறி இறங்கும் செயலை ஒப்பிடுவதும் (அகம்.197 : 10-15), புலி பாய்ந்ததால் களிறு முழங்க, அம் முழக்கத்தைக் கேட்ட பெண்யானை தன் கன்றினை மறந்து ஓடிப் பின் கையைத் தலைமீது வைத்துக்கொண்டு கன்றினைத்தேடும் காட்சிக்கு மகவிலனைக் காணாது தேடும் பெண்டிரை (அகம்.347 : 11-16) ஒப்பிடுவதும் இக்கருத்தை நிறுவும்.

இவர்தம் பாடல்களால் அரசர்கள் பலரின் அருஞ்செயல்களையும், அவர்தம் நாட்டு வளங்களையும் அறிய முடிகிறது. அவற்றுட் சில வருமாறு: கரிகாற் சோழனொடு வெண்ணிப் பறந்தலைப் போரில் தோற்றுப் புறப்புண் நாணி வடக்கிருந்த சேரலாதனொடு சான்றோர் சிலரும் வடக்கிருந்து உயிர் துறந்தனர் (அகம்.55). சேரலாதன் இமயத்தில் விற்பொறித்துப் பகைவர் தந்த திறைகளை மாந்தை முற்றத்தில் குவித்து இரவலர்க்களித்தான் (அகம். 127). மத்தி என்பவன் எழினி என்பவனை வென்று அவன் பல்லைப் பிடுங்கித் தன் வெண்மணி வாயிற் கதவிற் பதித்தான் (அகம்.211). உதியஞ்சேரல் பாரதப் போரில் பெருஞ்சோறளித்தபோது கூளிச் சுற்றம் எஞ்சிய சோற்றை உண்ண அங்கு வந்து குழுமியிருந்தன (அகம்.233). பாண்டியனது கொற்கையில் முத்தும் சங்கும் எடுக்கப்பட்டன (அகம்.201). கோசரின் பகைவன் மோகூர் மன்னனைக் அழிக்க உதவிய புதிய மோரியர் என்போரின் தேர்ப்படை செல்வதற்கு வசதியாக மலையைக்குடைந்து பாதையமைத்தனர் (அகம்.251). சேரன் கடம்பு முதல் தடிந்தான் (அகம்,347). சேரனின் கழுமலத்தைச் சோழன் வென்றான் (நற்.14). வள்ளல்களுள் புல்லியையும் அவன் வேங்கட மலையையும், (அகம். 61,265, 295, 311, 359, 393) நெடுவேளாவியையும், (அகம்.1, 61) நன்னனையும், அவன் ஏழிற் குன்றத்தையும் (அகம்.15, 349) நன்னன் வேண்மான் என்பவருடைய வியலூரையும் (அகம்.97) மற்றும் வடுகத் தலைவராகிய கட்டி, எருமை என்பவர்களையும் (அகம்.225, குறு. 11) அஞ்சி, கண்ணனெழினி (அகம். 196), பாணன் (அகம்.325) என்ற வடநாட்டுத் தலைவர்களையும் தம் பாடல்களுள் குறிப்பிட்டிருக்கிறார்.

இவர் இயற்கையின் கொடுமையைச் சித்திரிப்பதில் சிறப்பிடம் பெறுகிறார். துன்பம், இன்பம் இரண்டையும் ஒரு சேர வருணிப்பது இவர் இயல்பாகும். பாலை நிலத்து யானையின் பசித்துயரங்களை விவரிக்கும் அதே பாடலில், மருத நிலத்தில்

எருமையொன்று தாமரைமலர் மேய்ந்து பலாமர நிழலில் உறங்குவதாகக் காட்டுவதும் (அகம். 91) பாலையின் கொடுமை நிலையை விவரிக்கும் அதே பாடலில் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையின் மாண்பு களை வருணிப்பதும் (அகம். 97) இதற்குச் சான்று களாகும். உயிரினங்களின் வாழ்க்கை நிகழ்ச்சியில் மிகுதியான ஈடுபாடு கொண்டு, அவற்றை மனித வாழ்க்கையோடு இணைத்துக் காட்டுகிறார். வருணனைத் திறமும், கற்பனை நயமும் இவரிடம் மிகுதியாக உள்ளன. வண்ணம் வடிவஞ் சார்ந்த உவமைகளைக் கையாள்வதில் தனித்திறம் காட்டி யுள்ளார். பழ.மு.

மாயாகோவுசுகி, விலாடிமிர்: இவர் சோவி யத்து நாட்டின் தொடக்கக் காலத்திலும், உருசியப் புரட்சியின் போதும் கொள்கை பற்றிப்பாடும் தலை சிறந்த கவிஞராக வாழ்ந்தவர்.

இவர் கி.பி. 1893 – இல் சார்சியாப் பகுதியில் உள்ள பக்ததியில் ஒரு வனத்துறை அதிகாரியின் மூன்றாம் மகனாகத் தோன்றினார். இவருடைய இளமைக் காலங்களில் ‘வலோத்யா’ என்ற செல்லப் பெயரால் குறிக்கப்பட்டார். தம்முடைய பதின்மூன் றாம் வயதிலேயே தந்தையை இழந்து, வாழவழியின் றிப் பிறந்த மண்ணை விட்டு மாசுகோவிற்குத் தம் தாயுடனும், உடன் பிறந்தவர்களுடனும் சென்றார். ஐந்தாம் படிவம் படித்துக் கொண்டிருந்த காலக்கட் டத்தில் 1906 – ஆம் ஆண்டிலேயே புரட்சி இயக்கத் தோடு தொடர்பு கொண்டிருந்தார். மறைமுகக் காவல் துறையினரால், புரட்சிக்குக் காரணமான போல்சுவிக்குகளோடு மூன்று முறை சிறைப்படுத்தப் பட்டு இளம் வயது காரணமாக விடுவிக்கப்பட்டார்.

அரசுக் கவிழ்ப்பு நடவடிக்கைக்காகத் தனிமைச் சிறையில் 1909 - இல் அடைக்கப்பட்டபோதுதான் மாயாகோவுசுகி, விலாடிமிர் (Mayakovsky Vladimir) கவிதைகளை இயற்றத் தொடங்கினார். தீவிர அரசி யலில் 23 – ஆம் வயதில் பங்கேற்ற இவர், 1925-க் குப் பிறகு, பல்வேறு நாடுகட்குப் பயணம்சென்று தம் எழுத்தாற்றலைப் புலப்படுத்தினார். அகதிப் பெண்ணான ‘இடடியனா யகோவ்லெவா’ வைக் காதலித்து 1928-இல் மணமுடிக்க எண்ணினார். அது நிறைவேறாமல் போயிற்று. அதே நேரத்தில், கொள்கை யுறுதி மிக்க பாட்டாளி எழுத்தாளர் சங்கத்துடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். அப்போது இவர்தம் திரைப்படமான ‘குளியலறை’யும் வெற்றி பெறாமல் போனது. தொடர்ச்சியான இத்தகைய சோதனைகளால், 1930–ஆம் ஆண்டு ‘நான் சாதிக்க வேண்டியது இனி ஒன்றுமில்லை’ என்கிற குறிப்பை வாக்கு மூலமாகத் தந்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இவர் தம்முடைய வாழ்நாளில் முதலாளித்து வத்தை எவ்வாறெல்லாம் எதிர்க்க இயலுமோ அவ்வாறெல்லாம் எதிர்த்தவர். இவர் கவிதைகள் 1912–இல்தான் வெளியிடப் பட்டன. அக்டோபர்ப் புரட்சி நடைபெற்றபோது 1917–இல் முழுமனதுடன் அதனை ஆதரித்து, போல்சுவிக்குகளுக்குப் பெருந் துணையாக நின்றார். அந்நேரத்தில் இவர் இயற்றிய ‘புரட்சி கீதம்’ (Ode to Revolution) ‘தாயகத்தை நோக்கி’ (Left March) ஆகிய கவிதைகள் மக்களி டையே பெரும் வரவேற்பைப் பெற்றன. எதிர்ப் புரட்சியாளர்கள் 1919–ஆம் ஆண்டின் இறுதியில் கட்டவிழ்த்துவிட்ட உள்நாட்டுப்போரின்போது அதற் கெதிராக மக்களை ஒன்று திரட்டும் பணியில் ஈடு பட்ட கவிஞர்கள், எழுத்தாளர்கள் குழுவிற்கு இவர் தலைமையேற்று, ‘தெருவீதிகள் எங்களுக்கு வண்ணத் தூரிகைகள், சதுக்க முனைகள் எங்களுக்கு வண்ண மேந்தும் பலகைகள்’ எனப் பெருமிதத்தோடு முழக்க மிட்டு வெற்றியீட்டியவர். இவர், 3700 வரிகளில் எழுதிய ‘இலெனின் கவிதையஞ்சலி’ இவருக்குப் பெரும் புகழைச் சேர்த்தது.



மாயா கோவுசுகி

மாயாகோவுசுகியின் கவிதைகள் சமூகப் பார்வை கொண்டனவாக அமைந்தாலும் கூட, இவரின் உள் ளுணர்வான காதலை அடக்க முடியவில்லை. இவ ரெழுதிய ‘கால்சராய் மேகங்கள்’ (A Cloud in Trousers), ‘புல்லாங்குழல் முதுகெலும்பு’ (The Back-

bone Flute); 'நான் நேசிக்கிறேன்' (I love); 'இதைப் பற்றி' (About this); முழுமை பெறாத 'என் குர லின் உச்சியில்' (At the Top of My Voice) ஆகிய கவிதைகள் கைம்மாறு கருதாத காதலையும், பற்றற்ற மனைவியையும் கவிஞனின் மனநிறைவின்மையையும் குறித்து விளக்குவனவாக அமைந்து, இவரது புகழுக்குத் துணை புரிகின்றன. பொதுவாக இவரின் கவிதைகள் தன்னுறுதி மிக்கனவாயும், கொடுமைகளை எதிர்க்கிற தன்மையினைக் கொண்டனவாயும் விளங்குகின்றன.

கவிதைகள் மட்டுமன்றி 'பூபே-மர்மம்' (Mystery-Bauffe), 'விலாடிமிர் மாயாகோவுசுகி' ஆகிய நாடகங்களையும் எழுதித் தயாரித்துத் தாமே நடித்திருக்கிறார்.

திரைப்படத்துறையிலும் இவர் ஈடுபாடு கொண்டவர். 'வெறும் பணத்திற்காக அன்று', 'மூட்டைப் பூச்சி', 'குளியலறை' போன்ற படங்களுக்குத் திரைக்கதை, உரையாடல் எழுதி அதன் மூலம் அதிகார வருக்கத்தின் மூடத்தனத்தை ஏளனம் செய்தும், சமயத்திற்கேற்பச் செயற்படும் தன்னலவாதிகளை எதிர்த்தும் செயற்பட்டார்.

உரோசுட்டா (Rosta) என்னும் உருசியச் செய்தி நிலையத்தில் பணியாற்றி எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடிய, எதுகை மோனைகளுடன் கூடிய விளம்பரத் துண்டுகளையும், கேலிச் சித்திரங்களை விளக்கும் கதைகளையும் 1919 – 1921-இல் புரட்சிக்கு ஆதரவாக எழுதினார்.

இளமைக் காலத்திலேயே (1912-இல்), கடந்த கால நாகரிகத்தின் அடக்குமுறைகளை எதிர்த்தும், பழமை இலக்கியங்களின் மீது பகைமை பாராட்டியும், 'எதிர்காலக் கோட்பாட்டாளர்களின்' (Futurists) அறிக்கையில் கையெழுத்திட்ட மாயாகோவுசுகி 'காற்றைக் குதிரையாக்கும் கட்டுக்கடங்கா உணர்ச்சி வேகம் கொண்டவர்' என்று கார்க்கியால் பாராட்டப் பெற்றார்.

தம் துன்பங்களையும், துயரங்களையும் தாங்கிக் கொண்டு, உருசியப் புரட்சியின்போதும் அதற்குப் பின்பும் ஒரு புதிய சமூக அமைப்பைத் தோற்றுவிக்கவும், நாடுநலம் பெறவுமே இவர் எழுதினார். அதனால்தான் இவர் 'மக்கள் கவிஞரெ'ன்று எந்நாளும் போற்றப்படுகிறார். சா.மு.

**மாயா நாகரிகம்**: இது மைய அமெரிக்காவில் வாழ்ந்த அமெரிக்க இந்தியர்களின் பழைய நாகரிகம். உகடான் (Yucatan) முந்நீரகத்தில் வாழ்ந்த உள்நாட்டினர் மாயர்கள் எனப்பெற்றனர். அவர்கள் மொழி 'மாயர் மொழி' எனப்பெயர் பெற்றது. இடைக்காலத்தில் வளர்ச்சியடைந்த 'மாயா நாகரிகம்' மைய அமெரிக்காவின் பல பகுதிகளில் பரவியிருந்தது. பண்டைக் காலத்திலேயே இப்பகுதியில் குறிப்பிடத்தக்க நாகரிக வளர்ச்சியிருந்தது என்பதற்கு அகழாய்வுச் சான்றுகள் கிடைத்துள்ளன. ஐரோப்பியர், புதிய உலகுக்குச் செல்லுவதற்கு முன்பு, மைய அமெரிக்காவில் விளங்கிய நாகரிகம் பின்வரும் இடங்களில் சிறப்புற்றிருந்தது. அவை இக்காலத்திய குவாடிமாலா, பிரிட்டிசு ஆண்டுராசு (British Honduras), மேற்கு ஆண்டுராசு, எல்சால்வடார், மெக்சிகோ முதலியனவாம். அப்பகுதிகளில் பெரும்பாலும் மாயர் மொழி பேசப்பட்டு வந்தது. மாயா நாகரிகம் மிகவும் சிறப்புற்று விளங்கிய காலம் கி.பி. 300-ஆம் ஆண்டு முதல் 900-ஆம் ஆண்டு வரை



மாயா நாகரிகம்

ஆகும். 'பழைய மாயர்ப் பேரரசு' என்று அதனை அறிஞர்கள் குறிப்பிடுவர். அங்குக் கட்டடக்கலை மிகவும் வளர்ச்சியுற்றிருந்தது. கற்கட்டடச் சுவர்கள் தண்டயக் கட்டுகளுடனும் (Carbal), கவிகை மாடங்களுடனும் (Vaults) இருப்பது குறிப்பிடத்தக்கது. உயர்வான கூர்ங்கு கோபுரங்கள் (Pyramids) மீது கோயில்கள் எழுப்பப்பெற்றிருந்தன. மிக உயரமான திக்கல் (Tikal) கோயில் ஏறத்தாழ 70 மீ. உயரங் கொண்ட கூர்ங்கு கோபுரத்தின் மீது உள்ளது. சிற்பத்துறையில், மாயர்களின் திறமை போற்றத் தக்கதாக இருந்தது. மாயரின் ஓவியக்கலையும் மட்பாண்ட வேலையும் சிறப்பானவை. அவர்கள்,

மறை பொருட் குறியீட்டு எழுத்து முறையைப் (Hieroglyphic Writing) பின்பற்றினர். கணக்கு முறை மிக முன்னேறியிருந்தது. அதில் இன்மைக் குறி இலக்கத்தின் (Zero) சிறப்பும் அடங்கும். வானநூலறிவு வியப்புறத்தக்க வகையில் வளர்ச்சியுற்றிருந்தது. மாயர்கள், பெயர் வரி பொறித்த கல்லறைச் சிலைகளை எடுத்து வந்தனர். இயற்கைக் கடவுளர்க்கு அப்பாற்பட்ட சில தெய்வங்களும் அவர்களால் வழிபடப்பட்டன. படிநிலையாக அமைந்த புரோகிதர் அமைப்புப் பண்பாடு மாயர்களிடம் காணப்பட்டது. உழவர்களுடன், தொழில்கள் செய்யும் நகர மக்களும், சமூகத்தில் இருந்தனர். காலத்தையும் நாள்களையும் கணக்கிடும் முறையிலும், நடுகல் எழுப்பும் முறையிலும் மாயர்களின் தனிக் கற்பனைத் திறனைக் காணலாம்.



மாயா நாகரிகம்

மாயர் பண்பாட்டு மையங்களில் சிறப்பாகப் பின்வரும் இடங்கள் குறிப்பிடத்தக்கன. அவை: திக்கல் (குவாடிமாலா), பாலன்குயூ (மெக்சிகோ), கோபன் (ஆண்டுராசு),சான்சோசு (Sanjose - பிரிட்டிசு ஆண்டுராசு), குவிரிகுவா (Quirigua-குவாடிமாலா) முதலியன. மத்திய மெக்சிகோப் பகுதிக்கும், மாயர்நாகரிகத் தென் பகுதிக்கும் அக்காலத்திலே நெருங்கிய தொடர்பு நிலவியது.

இந்நாகரிகம் சிறிது சிறிதாக வீழ்ச்சியுறாமல் திடீரென்று அழிவுற்றது. நாகரிக நகரங்கள் ஒவ்வொன்றாக, மக்களால் கைவிடப்பெற்றன.இவ்வழிவு கி.பி. 800 க்கும் 900 அல்லது 950 க்கு மிடைப்பட்ட காலத்தில்தான் ஏற்பட்டது மக்கள் தொகைக் குறைவு, அழிவுக்கு ஒரு காரணமாகும். வேறுசில காரணங்களும் அறிஞர்களால் ஊகிக்கப்படுகின்றன. உகடான் பகுதியில் கி.பி.10- ஆம்நூற்றாண்டில் மாயா நாகரிகம் மறைந்தது. கடலில் கப்பல் கவிழ்ந்ததால் கி.பி. 1511-இல் 12 இசுபானியர் (Spaniards) உகடான் கடற்கரையை அடைந்தனர். அவர்களில் பலரை, உள்நாட்டில் (மாயர்) கொன்று பலி கொடுத்தனர். பின்னர் வந்த இசுபானியர், உகடானைத் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தி வெற்றிகண்டனர். தெ.பா.

**துணை நூல்கள்:**

Reed, Nelson., The Caste War of Yucaton, Stanford, California, 1964.

Sbindeu,H.J., The Maya and Their Neighbours, New York, 1940.

Streun., Heuri., Living Architecture, Mayan, New York, 1965.

*மாயாவாதம்*: சங்கரரின் அத்துவைத மெய்ப் பொருளியலுக்கு மாயாவாதம் என்ற பெயர் வழங்குகிறது. அத்துவைத மெய்ப்பொருளியல் பிரமம் மட்டுமே உண்மை; இவ்வுலகம் தோற்றமயமானது; பிரமமும் உயிராகிய சீவனும் ஒன்றேயன்றி வேறல்ல என்று கூறுகிறது. அதன்படி பிரமம் மட்டுமே ஒரே உள்பொருள் ஆனதால் தோற்றவியலான அதனிடத்து மட்டுமே தோன்ற முடிவதன்றிப் பிரமமே தன்னிடத்து அதனைத் தோற்றுவிப்பதும் ஆகும் என்பது பெறப்படும். உண்மையான பிரமம் தோற்றவியலான இவ்உலகத்தைத் தன்னிடத்தே எவ்வாறு தோற்றுவிக்கின்றது என்ற வினா எழுகிறது. அதுபோன்றே உயிரும் பிரமமும் ஒன்றெனில் உயிர் அறியாமை கொண்டதாக விளங்குவது எங்ஙனம் என்ற வினாவும், பிரமம் பல உயிர்களாகத் தன்னை மாற்றிக் கொள்வது எங்ஙனம் என்ற வினாவும் எழும். அவ்வினாக்களின் விடையாக மாயை என்ற கோட்பாட்டினை அத்துவைதம் குறிப்பிடுகின்றது. மாயைக் கோட்பாடு அத்துவைதத்தில் இன்றியமையாத நிலையைப் பெற்றுள்ளது. மாயையின் இந்நிலையினால்தான் அத்துவைதத்திற்கு மாயாவாதம் என்ற பெயரும் ஏற்பட்டது.

அத்துவைதம் இவ்வுலகத்தைப் பொய்த்தோற்றம் எனவும், பொய் எனவும் கூறுகிறது. பொய்யான இவ்வுலகம் தோன்றுதற்குரிய அடிப்படைப்பொருள் அத்துவைதத்தின்படி பிரமமாகத்தான் இருக்கவேண்டும். ஏனெனில், பிரமம் மட்டுமே உள்பொருள். உண்மையான வரம்பற்ற உணர்வான பிரமத்திலிருந்து தோற்றவியலான வரம்புடைய உணர்வற்ற பல் வகைப் பொருட்களை உள்ளடக்கிய இவ்வுலகம்

தோன்றுவதற்குக் காரணம், பிரமத்திலுள்ள மாயை என்னும் ஆற்றலாகும். உண்மையான உள்பொருளை மறைத்து அதனிடத்தே பொய்யான ஒரு தோற்றத்தைத் திணிப்பதே மாயையின் இயல்பாகும். இவ்வுலகம் வரம்புடையதாதலின் பிரமம் தன்னிடத்தே உள்ள மாயையால் முதலில் தன்னை வரம்புக்குட்படுத்திக் கொள்கிறது. மாயையினால் அவ்வாறு வரம்புக்குட்பட்ட பிரமம் ஈசுவரன் எனப்படுகிறது. ஈசுவரனாகிய பிரமம் மீண்டும் மாயையினால் தன்னை மறைத்துக்கொண்டு தன்னிடத்தே வரம்புடைய உலகத் தோற்றத்தைத் திணித்துக்கொள்கிறது. பிரமம் உண்மையான உள்பொருள்; அதனிடத்தே மாயையினால் தோன்றிய இவ்வுலகம் பொய்யானது. காரணம் உண்மையாகவும், காரியம் பொய்யாகவும் அமைகின்ற இவ்வாழ்க்கையை விவர்த்தவாதம் எனச் சங்கரர் கூறுகின்றார். இவ்வுலகத்தின் உண்மையான காரணம் மாயை ஆகும்; பிரமம் அன்று.

இவ்வுலகம் தோன்றியதென்பது உண்மையானதன்று. ஏனெனில், உண்மையானது எக்காலத்தும் எவ்விடத்தும் நிலைத்து நிற்பதாகும். உயிரானது தன்னைப் பிரமம் என்று உணர்கின்ற பொழுது அவ்வுலகம் நீங்கிவிடுகின்றது. இவ்வுலகம் பொய்யுமன்று; ஏனெனில், பொய்யான ஒன்று எக்காலத்தும் எவ்விடத்தும் இருப்பில் வாராது. ஆனால், இவ்வுலகம் இருப்பில் வந்துள்ளது. இவ்வுலகம் உண்மையும் பொய்யும் சேர்ந்ததன்று. ஏனெனில், முரண்பட்ட எதிர்நிலைகள் ஒன்றில் சேர்ந்திருத்தல் இயலாது. எனவே, இவ்வுலகம் உண்மையன்று; பொய்யன்று; உண்மையும் பொய்யுமன்று எனப் பொருள்படும் சதசத்து இலக்கணமுடையதாகும். அதாவது இத்தகைய ஒரு நிலையை வாக்கியத்தால் விளக்கமுடியாது (அநிர்வசனீயம்). எனவே அது ஒரு தோற்றமாகும்.

சங்கரர் இவ்வுலகத்தை நுகர்வியலான உள்பொருள் நிலை (வியவகாரிக சத்தா) என்று குறிப்பிடுகிறார். இதனைக் கயிற்றில் குறிப்பிட்ட சூழ்நிலையில் காணப்படுகின்ற அரவின் நிலையை ஒத்ததாகும் எனக் கூறுவர். கயிற்றில் கண்ட அரவு போதிய வெளிச்சம் இருக்கின்றபொழுது மறைந்துவிடுவதைப் போன்று இவ்வுலகத் தோற்றமும் பிரமத்தை (கடந்த நிலை உள்பொருள் அல்லது பாரமார்த்திக சத்தா) உணர்கின்றபொழுது மறைந்துவிடும். திரிபுக் காட்சியாகத் தோன்றிய அரவின் உள்பொருள் தன்மையைத் தோற்றவியலானது என்று அத்துவைதம் குறிப்பிடும். தோற்றவியலான உள்பொருள் நிலைக்கும் (பிரதிபாசிக சத்தா), நுகர்வியலான உள்பொருள் நிலைக்கும் உள்ள வேறுபாடு அவை இருப்பில் இருக்கின்ற கால அளவு மட்டுமே ஆகும். பிரமத்திலிருந்து இவ்வுலகம் மாயையால் தோன்றுவதைப் போன்று கயிற்றிலிருந்து அரவும் மாயையால் தோன்றுகிறது.

பிரமம் உயிராகவும் சீவனாகவும் தோன்றுவதும் மாயையினால்தான். ஆனால், அம்மாற்றத்தின் பொழுது மாயைக்கு அவித்தை என்ற பெயர் அத்துவைதிகளால் சூட்டப்படுகிறது. வரம்பற்ற உணர்வு பிரமம்; வரம்புடைய உணர்வு சீவன். வரம்புக்குட்படுத்தியது அவித்தை. அத்துடன் பிரமத்தின் உண்மையான இயல்பை மறைத்து அவ்விடத்தில் குறையுடைய இயல்பைத் திணித்தது அவித்தை. அவித்தையின் செயலால் பொருள் மாறுபடுவதில்லை. பிரமம், சீவன் இரண்டுமே உணர்வுடைய பொருள்கள். ஆனால், மாயையின் செயலால் உணர்வுப் பொருளாகிய பிரமம் உணர்வற்ற உலகமாகத் தோன்றியது.

பிரமம் அவித்தையினால் கட்டுண்டு ஒரு சீவனாக மாறுகிறது. அம்மாற்றம் ஒரு படிகத்தைச் செந்நிறப் பூவின் வழியாகக் காணுவதைப் போன்றது. அப்பூவிலனை நீக்கிப் படிகத்தைக் காணுகின்றபொழுது அது வெண்மையாகவே காணப்படும். பிரமம் சீவனாக மாறுவதும் அதனைப் போன்றதே. பொருளில் மாற்றமின்றி நிலையில் மட்டும் மாற்றம் நிகழ்கிறது. ஒரே பிரமம் பல சீவர்களாகக் காணப்படுவது பிரமம் உடல்களில் எதிரொளிசெய்தலால் ஆகும். வானத்து நிலா பல நீர்நிலைகளிலும் தன் தோற்றத்தைக் காட்டிப் பல நிலாக்களாகக் காணப்படுவதைப் போன்றே ஒரே பிரமம் பல உடல்களில் தன்தோற்றத்தைக் காட்டுதலால் பல சீவர்களாக ஆகின்றது.

அவ்வாறு ஒரே உள்பொருளான பிரமம் இவ்வுலகத்தோற்றமாகவும், பல சீவர்களாகவும் தோன்றக் காரணம் மாயை அல்லது அவித்தை ஆகும். மாயைக் கோட்பாடு இல்லையெனில் இவ்வுலகத் தோற்றத்தையோ சீவர்களையோ அத்துவைதத்தில் விளக்க முடியாது. மாயைக் கோட்பாடு அத்துவைதம் முழுவதையும் விளக்குவதற்கு இன்றியமையாத ஒரு கருத்தாதலால், அத்துவைத மெய்ப்பொருளியல் மாயாவாதம் எனப்படுகிறது. பி.ஆர்.ந.

**மாயூரப்புராணம்**: இது மயிலாடுதுறை பற்றிய தலபுராணமாகும். சைவத்திருமுறைகள் தோன்றிய காலத்தில் வழங்கிய மயிலாடுதுறை என்னும் அழகிய தமிழ்ப்பெயர் பிற்றைநாளில் மயிலைக் குறிக்கும் 'மயூர்' என்னும் வட சொல்லின் அடிப்படையில் மாயூரம் என மாற்றப்பட்டது. அண்மையில் தமிழக அரசு பழையபெயரை வழக்கிற்குக் கொண்டுவந்தது.

இவ்வூர் தஞ்சைமாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்தின் தலைநகராக அமைந்துள்ளது. காவிரி

யால் வளம் கொழிக்கும் இவ்வூர் உமையம்மை மயில் வடிவிலிருந்து சிவபெருமானை வழிபட்டமையால் மயிலாடுதுறை எனப்பெயர் பெற்றதெனத் தல புராணம் கூறுகின்றது.

இவ்வூரைப்பற்றிய தலபுராணங்கள் இரண்டுள. பொன்விளைந்த களத்தூர் ஆதியப்ப நாவலர் கி.பி. 1720-இல் இயற்றிய புராணம் காலத்தால் முற் பட்டது. பொன்மாறை வைத்தியநாதச் செட்டி யாரின் மகன் வினைதீர்த்தான் விருப்பப்படி இப் புராணம் இயற்றப்பட்டதாக அறியப்படுகிறது. இந் நூல் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது. இப் புராணம் வடமொழியிலுள்ள புராணத்தின் மொழி பெயர்ப்பு என்பர்.

இந்நூலாசிரியர் திருக்களர், கொள்ளம்பூதூர், பூளைவனம், பருதிவனம், தஞ்சைக் கண்ணார் கோயில், வைகல் ஆகிய ஊர்களுக்கும் புராணங்கள் பாடியுள்ளார் என்றும் அவற்றுள் திருக்களர்ப் புராணம் மட்டுமே அச்சாயிற்றென்றும் அறியப்படு கிறது. மாயூரப்புராணம் இன்னும் அச்சாகவில்லை.

ஆதியப்ப நாவலருக்குப்பின்னர் மாயூரப் புராணம் செய்தவர் பெரும்புகழ் மிக்க திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையாவார். இந்நூல் கி.பி. 1869 – இல் அச்சாயிற்றென்று தெரி கிறது. இப்புராணம் 1895 விருத்தங்களால் ஆனது. இது இன்றுகிடைத்தற்கு அரிதாயுள்ளது. பிள்ளையவர் களின் மாணாக்கருள் ஒருவரான திரிசிரபுரம் சோட சாவதானம் சுப்பராயச் செட்டியாரால் பார்வை யிடப்பட்டு, அரங்கக்குடி முருகப்பிள்ளை மகன் வயித்தியலிங்கம் பிள்ளையால் இந்நூல் முதற்கண் பதிப்பிக்கப்பட்டது:

இப்புராணம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், சிறப்புப்பாயிரம் ஆகியவை நீங்கலாக 61 படலங் களைக் கொண்டுள்ளது. கடவுள் வாழ்த்தில் அகத்திய, விநாயகக் கடவுள் வணக்கம் முதல் பிறதெய்வங் களையும் அடியார்களையும் வாழ்த்தும் 25 விருத்தங் கள் உள்ளன. இந்நூல் வடமொழியிலுள்ள தெய்வ, மாயூரமான்மியத்தின் மொழிபெயர்ப்பு என்று ஆசிரியர் தம் அவையடக்கச் செய்யுளொன்றில் குறிப் பிட்டுள்ளார். அவையடக்கத்தின் நான்காம் விருத் தத்தில் மயில் செய்த பூசனையை ஏற்றுக்கொண்ட இறைவன் காகம் செய்த பூசனையையும் ஏற்றருளிய வண்ணம், பெரியோர் செய்த இனிய பாடல்களை ஏற்றுக்கொள்வதுடன் ஞானம் சிறிதுமற்ற தாம் செய்த பாடல்களையும் ஏற்றுக்கொள்வானோ எனக் கூறுகின்றார்.

திருநாட்டுப்படலம், திருநகரப் படலம் ஆகிய இரண்டும் 255 விருத்தங்களால் ஆகியவையாகும். மயிலாடுதுறையின் இயற்கைவளத்தினைக் கற்பனை வளத்துடன் பாடுகின்றார் ஆசிரியர். மாயூரப் படலம் 51 விருத்தங்கள் கொண்டது. உமையம்மை மயில் வடிவிலிருந்து சிவபெருமானைப் பூசித்தமையால் உலகமெல்லாம் போற்றக் கௌரி மாயூரம் என்று இத்தலம் பெயர் பெற்றது என்னும் செய்தி இப்பகுதி யில் இடம் பெற்றுள்ளது. திருமணப்படலம் சுவை மலிந்த 100 செய்யுட்களைக் கொண்டு விளங்குகிறது. இடபதீர்த்த மகத்துவப் படலத்திற்குப் பின்னர் 288 பாடல்களில் நித்திய கரும விதிகள் கூறப்படுகின்றன. பல்துலக்குதல், நீராடல் முதலான அன்றாடக் கடன் கள் செய்யும் முறையும், அனுட்டானம், சூரிய பூசை, சிவபூசை, உணவுண்ணல், சிவாலய தரிசனம், செபம் செய்தல் ஆகியவற்றுக்குரிய விதிகளும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன. நைமிச முனிவர் பூசித்த படலத் துடன் மாயூரப்புராணம் முடிவுறுகின்றது. இறைவனுக் கும் இறைவிக்கும், சைவநெறிக்கும் வாழ்த்துகளைக் கூறிப் புராணத்தை நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

பெ.சு.

**மாயேண்டனார்**: இவர் கடைச்சங்க காலத் துப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் 'மாயெண்ட னார்' என உ.வே. சாமிநாதையர் தம் குறுந் தொகைப் பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். இதில் 'மா' என்னுஞ் சொல் பெருமை என்ற பொருளில் வருவ தாக மொ.அ. துரை அரங்கசாமி குறிப்பிடுவார். மா என்ற அடையுடைய ஆடுதுறை மாசாத்தனார், ஒக்கூர் மாசாத்தியார், சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, மாதீர்த்தான், மாமூலனார், மாவளத்தான் என்ற பிற பெயர்கள் சங்க இலக்கியத் தில் காணப்படுகின்றன. மாயேண்டனார் இயற்றிய பாடலாகக் குறுந்தொகை 235-ஆம் பாடல் மட்டுமே கிடைத்துள்ளது. அப்பாடல் பாலைத்திணையில், 'வரையாது பிரிந்து வருவான் வாடைக்கு உரைப்பா னாய்ப் பாகற்கு உரைத்தது' என்ற துறையில் அமைந்துள்ளது. அப்பாடல் தலைவி வாடைக் காற்றினால் வருந்துவாள் என்பதைப் புலப்படுத்தி அவள் ஊர் உள்ள இடத்தையும் உணர்த்திக் குறிப் பினாற் பாகனை விரைந்து தேரைச் செலுத்தத் தூண்டினான் தலைவன் என்பதைத் தெரிவிக்கின்றது. தலைவன் நெடுந்தொலைவு செல்லாது அண்மைக்கண் பிரிந்தவிடத்துக் கூறியது (தொல். களவு. 17 இளம்.) என்பதற்கு மேற்கோளாக இப்பாடல் இளம்பூரணர் உரையில் காட்டப்பட்டுள்ளது. தூய வெண்மையான அருவிகளுக்குப் பாம்பின் தோலை இப்புலவர் உவமை யாகக் கூறியுள்ளார். நெல்லிக்காய்களை மானினங்கள் உண்ணுகின்ற செய்தியும் இவர் பாடலில் உள்ளது.

தே.தே.

மாயை என்ற சொல் வேதாந்த, சித்தாந்த மெய்ப் பொருளியல்களில் மிக்க அளவில் பயன்படுத்தப்பட்டிருப்பினும், உபநிடதங்களில் உட்கிடையாக இருந்தது. எடுத்துக்காட்டாகச் சுவேதாசுவதர உபநிடதம் 'மாயையை முதற்காரணமாக அறிந்து கொள்க; முடிவில் அனைத்து மாயையும் நீக்கப்படும்' என்று குறிப்பிடுகிறது. பௌத்த சமயமும் மாயைக் கோட்பாட்டினைப் பற்றிப் பேசுகிறது. அது தோற்றவியலானவற்றைத் தவிர்த்து உள்பொருள் என்று எதுவும் கிடையாது என்கின்றது. பௌத்தத்தின் மாயைக் கோட்பாடு இன்மை அல்லது வெறுமையை (சூனியம்) அடிப்படையாகக் கொண்டது. அத்துவைதக் கோட்பாட்டினை அளித்த ஆதி சங்கரரே மாயைக் கொள்கையினை முதன் முதலில் பரந்த அளவில் விளக்கியவர் ஆவார்.

**மாயை (அத்துவைதம்):** 'ஒரே பரம்பொருளான பிரமம் மட்டுமே உண்மை; இவ்வுலகம் போலியானது அல்லது தோற்ற நிலையானது; சீவனாகிய உயிரும் பிரமமும் ஒன்றுதான்; வேறல்ல' என்பதே அத்துவைதக் கோட்பாடாகும். அதன்படி பிரமம் தூய்மையானது, பண்பற்றது, பகுப்பற்றது, மாறுதலற்றது, வரம்பற்றது, உணர்வானது, அறிவானது, நிலையானது ஆகும். ஆனால், இவ்வுலகம் தூய்மையற்றதும், பண்புகளையுடையதும், அறிவற்றதும், அழியும் தன்மை வாய்ந்ததும், மாறிக் கொண்டேயிருப்பதுமான புறநிலைப் பொருட்களையும், விரைந்து மறையும் பலவகை நிகழ்ச்சிகளையும், பகுப்புள்ள பொருட்களையும் தன்னகத்தே கொண்டது ஆகும். அத்துவைதத்தின்படி உள்பொருள் பிரமம் ஒன்றேயெனில் அதனின்று முற்றிலும் மாறுபட்ட இவ்வுலகம் எங்ஙனம் தோன்றும் என்ற வினா எழுகிறது. அதற்கு விடையாகத்தான் சங்கரர் மாயைக் கோட்பாட்டை விளக்குகிறார். வரம்பற்ற பிரமத்தை வரம்புக்குட்படுத்துவதும், உண்மையான உள்பொருளைத் தோற்றவியலான உலகமாக ஆக்குவதும் ஆகிய ஆற்றலே மாயை எனச் சங்கரர் கூறுகிறார்.

சங்கரர் தமது அத்துவைத மெய்ப்பொருளியலில், மாயை என்ற சொல்லிற்கு இணையாக அவித்தை, விவர்த்தம், அத்தியாசம், அஞ்ஞானம், அநிர்வசனீயம், பிரமை, அவியக்தம், நாமரூபம் போன்றவற்றையும் பயன்படுத்துகிறார். மேலும், மேற்கூறிய பொருளில் மட்டுமன்றிப் அவர் பின்வரும் பொருள்களிலும் மாயையைப் பயன்படுத்தியுள்ளார்: 1) இவ்வுலகம் தன்விளக்கமுடையதன்று. இவ்வுலகின் இயற்காட்சியை மாயை என்ற சொல் குறிக்கும். 2) பிரமம் முடிநிலையான உள்பொருள், இரண்டல்லாத ஒன்று. ஆனால், இவ்வுலகம் பன்மையியலானது. ஒன்றான உள்பொருளுக்கும் பன்மையியலான இவ்வுலகத்திற்கும் உள்ள தொடர்பு புரிந்து கொள்ள முடியாதது. புரிந்துகொள்ள இயலாத இந்நிலையை மாயை குறிப்பிடுகின்றது. 3) பிரமத்தை இவ்வுலகின் காரணமாகக் கருதும் பொழுது பிரமத்தின் மீது இவ்வுலகம் அதனைத் தாக்குறாது நிலைத்துள்ளது என்பதாகும். பிரமத்தில் நிலை பெற்றுள்ள இவ்வுலகமே மாயை ஆகும். 4) பிரமம் இவ்வுலகமாகத் தோன்றும் கோட்பாட்டை மாயை குறிக்கும். 5) பிரமத்தின் ஆற்றலையே மாயை குறிக்கும். பிரமம் இவ்வாற்றலை உடையது என்ற நிலையில் அவியக்த பிரகிருதி எனப்படும்.

பிரமத்தின் மீது இவ்வுலகம் தோன்றுவதற்கு மாயை காரணமாக இருக்கின்றபடியால் மாயை உலகின் பொருட் காரணமாகிறது. பிரமத்தின் ஆற்றலாக மாயை இருப்பதால் பிரமம் அறிவுக்காரணமெனினும் மாயையை உடையதாயிருப்பதால் பிரமம் ஒரேகாலத்தில் பொருள் - அறிவுக் காரணமாக விளங்குகிறது. பிரமம் இவ்வகையில் உலகின் பருப்பொருளையும், வடிவத்தையும் நல்குவதாக அமைகிறது. மாயை தன் இயல்பில் பிரமத்தின் ஒருமையை உடைத்து அதனை வரம்புக்குட்படுத்துவதுடன் முற்றிலும் மாறுபட்ட இவ்வுலகத் தோற்றத்தை அதன் மீது உண்டாக்குகிறது. அகவயமான கோட்பாட்டைப் புறவயமான நிலைக்குக் கொண்டு வந்து வடிவம் பெயர் ஆகியவற்றைக் கொடுப்பது மாயை ஆகும். மாயையின் இருப்பு நிலைத் தன்மையைக் கருதும் பொழுது அது உண்மையன்று, ஏனெனில், உண்மை எக்காலத்தும் எவ்விடத்தும் உள்ளதாகும். ஆனால், மாயை பிரமஞானத்தால் ஒரு சமயத்தில் நீங்குவதாகும். அது இன்மையுமன்று. ஏனெனில், இன்மை எக்காலத்தும் எவ்விடத்தும் இருப்பில் வாராதது. ஆனால், மாயை ஒரு காலத்தில் தோன்றியுள்ளது. மாயை உண்மையும் இன்மையும் அன்று; ஏனெனில் முரண் நிலைகள் ஒரே பொருளில் தங்கியிரா. இவ்வாறு மாயை உள்ளதாகவோ இல்லதாகவோ இரண்டுமாகவோ இல்லாததால் அதன் இருப்பு நிலை சதசத்து இலக்கணம் எனப்படும். அதாவது மாயை உண்மை, இன்மை முதலிய இலக்கணங்களற்றது என்றும், சொற்களால் விளக்க இயலாத தன்மையை உடைது (அநிர்வசனீயம்) என்றும் குறிப்பிடப்படுகிறது. முடிவில் அது போலியான ஒன்றாகும். இவ்வகையில் முதலில் குறிப்பிட்ட போலியான இவ்வுலகின் போலியான பொருட் காரணமாக மாயை விளங்குகிறது. மாயை அது தோற்றுவிக்கின்ற உலகத்தைப் போன்றே உணர்வற்றது; எப்பொழுது தொடக்கமுற்றது என்று குறிப்பிட முடியாதது எனினும் முடிவுள்ளது; இருக்கின்றது என்ற இயல்பைக் கொண்டது. நெருப்பில் வெப்பம் போன்று பிரமத்தில் மாயை உள்ளது.

அத்துவைதக் கோட்பாட்டின்படி பிரமம் மட்டுமே ஒரே உள்பொருள் ஆனதால் மாயை அதனிடத்தில் உள்ளதாகவே கொள்ள வேண்டும். பிரமத்தில் மாயை முழுவதுமாக உள்ளதெனில் முற்றறிவாகிய பிரமத்தில் அறியாமைக் கோட்பாடான மாயை உள்ளது என்பது ஏற்க இயலாது. பிரமத்தின் ஒரு பகுதியில் மாயை உள்ளதெனில், பிரமம் பகுதிகள் கொண்டதாகும். பகுதிகள் கொண்ட ஒன்று அழியக் கூடியதாகையால் பிரமத்தின் பகுதியில் மாயை உள்ளது என்பதும் ஏற்க இயலாது. பிரமத்தில் மாயை உள்ளது என்பதை விளக்கச் சுவேதாசுவதர உபநிடதம் குறிப்பிடும், 'படைப்பு முழுமையும் பரவி நின்றபின்னும் பிரமம் பத்து விரற்கடையளவு அதிகமிருந்தது' போன்ற கூற்றுகளைச் சங்கரர் எடுத்துக்காட்டுகளாகக் கூறுகிறார். உயிரையும் மாயையின் இருப்பிடமாகக் கருதமுடியாது. ஏனெனில், வரம்பற்ற பிரமம் மாயையினால் வரம்புக்குட்பட்டு உயிராக மாறுவதால், உயிர் மாயையின் படைப்பு ஆகிறது. தானே படைத்த ஒன்றில் அது தங்கியிருக்கின்றது என்பதும் இயலாத ஒன்று.

மாயை இரு செயல்களைச் செய்வதாக உள்ளது. எதிர்நிலையில் உள்பொருளின் உண்மையியல்பை இது மறைக்கின்றது. அந்நிலையில் இது அத்தியாசம் எனப்படுகிறது. உடன்பாட்டு நிலையில் உள்பொருளின் மீது அதனின்றும் முற்றிலும் மாறுபட்ட ஒன்றின் தோற்றத்தைத் திணிக்கிறது. முன்னதை ஆவரணம் என்றும் பின்னதை விட்சேபம் என்றும் குறிப்பிடுவர். ஆவரணம் என்றால் மறைத்தல்; விட்சேபம் என்றால் திணித்தல் ஆகும். மாயை உணர்வுள்ளதைத்தான் மறைக்கின்றதே தவிரப் புறவயமானவற்றை மறைக்கவில்லை. அதனை 'நான் அறிந்து கொள்ளவில்லை' என்ற கூற்றின் மூலம் அறியலாம். எல்லையற்ற உணர்வான பிரமத்தை மறைத்து, அதனிடத்து எல்லையுடைய உணர்வற்ற இவ்வுலகக் காட்சியைத் திணித்தலே மாயையின் இரு செயல்களாகும். எவ்வாறு வித்தை காட்டுபவன் தான் காட்டும் வித்தைகளினால் பாதிக்கப்படுவதில்லையோ அது போன்றே பிரமத்திலுள்ள மாயையின் செயல்களினால் பிரமம் தாக்குமுறுதலில்லை. உயிர்கள் மட்டுமே பாதிக்கப்படுகின்றன. அவ்வாறு மாயைக் கோட்பாடு இவ்வுலகத்தைப் பிரமத்திலிருந்து முற்றிலும் விலக்கி விளக்குகிறது. மாயைக் கோட்பாட்டின் இன்றியமையாத்தன்மையினால் அத்துவைதக் கோட்பாடு மாயைக்கோட்பாடு என்றும் சொல்லப்படுகிறது. இக்கோட்பாட்டினை அத்துவைதத்தைத் தாங்கி நிற்கும் முகட்டுக்கல் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இராமானுசரும் மாயை பற்றித் தமது விசிட்டாத்துவைத மெய்ப்பொருளியலில் குறிப்பிடுகிறார். மாயை என்பது இறைவனிடத்துள்ள விளக்கமுடியாத ஆற்றல் என்பது அவரது கருத்தாகும். அவ்வாற்றலைக் கொண்டே இறைவன் பல்வேறு விளங்கிக் கொள்ள முடியாத செயல்களைச் செய்வதாகவும் அவர் கருதுகிறார். அவர் சங்கரர் மாயை பற்றிக் கூறும் கருத்துகளை விரிவான முறையில் திறனாய்வு செய்து அவற்றிற்கு ஏழு வகையான கண்டன உரைகளைக் கூறியுள்ளார். அவை மாயையின் இருப்பிடம் (ஆத்ரயம்), மறைப்புச் செயல் (திரோதானம்), தன் வடிவம் (சுயஉருவம்), தீர்மானிக்க இயலாத் தன்மை (அநிர்வசனீயம்), மாயையை அறியும் வழி (பிரமாணம்), மாயை நீக்கம் (நிவர்த்தகம்), வீடுபேறு (நிவிர்த்தகம்) பற்றியவை ஆகும்.

**மாயை (சைவ சித்தாந்தம்)**: சைவ சித்தாந்தம் பேசும் முடிநிலையான மூன்று உள்பொருள்களான பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (தளைகள்) ஆகியவற்றில் ஆணவம், கன்மம், மாயை எனத் தளைகளும் மூவகையாகும். மாயை என்ற சொல் மா, யா என்ற பகுதிகளால் ஆனது. மா என்றால் ஒடுங்குவது; யா என்றால் தோன்றுவது. சைவ சித்தாந்திகள் உயிர் உறையும் உடலும், அவ்வுடல் உறையும் இவ்வுலகும் எப்பொருளிலிருந்து தோன்றி, எப்பொருளில் ஒடுங்குகின்றதோ அதனையே மாயை என்கின்றனர். மாயை அவ்வகையில் படைப்பு முழுமையின் அடிப்படை உள்பொருளாகும். படைப்பு முழுமையானது உணர்வற்றதாதலின், அதன் அடிப்படைப் பொருளும் உணர்வற்றதாகவே இருக்க வேண்டும். எனவே, உணர்வற்ற படைப்பு முழுமைக்கும் உணர்வற்ற மாயையே அடிப்படைப் பொருளாக வேண்டுமேயல்லாது, படைப்பு முழுமைக்கும் அடிப்படைப் பொருளாக உணர்வுப் பொருட்களான இறைவனோ உயிரோ இருக்க முடியாது எனச் சைவ சித்தாந்திகள் கருதுகின்றனர். மேலும், படைப்பு முழுமை தோன்றும்பொழுது அதன் அடிப்படைப் பொருளான மாயை பலவித மாற்றங்களுக்கு உள்ளாகிறது. இறைவன் படைப்பு முழுமையின் அடிப்படைப் பொருள் எனில் இறைவனும் மாற்றங்களுக்கு உட்பட்டவனாகி விடுவான். ஆனால், இறைவன் எக்காலத்திலும் எந்த வித மாற்றமும் அடையாதவன். எனவே, வேதாந்திகளைப் போன்று படைப்பு முழுமைக்கும் உணர்வுப் பொருளை அடிப்படையாகக் கொள்ளாது, சைவ சித்தாந்திகள் உணர்வற்ற மாயையையே அடிப்படைப் பொருளாகக் கருதுகின்றனர்.

மாயை அதன் அடிப்படை நிலையில், நுண்ணிய நிலையில் வடிவமற்று இருப்பதால் புலப்படாதது ஆகும். பகுதிகளற்ற, வடிவற்ற மாயை ஒன்றுதான். இது அழிக்க வொண்ணாதது; நிலைபேறுடையது; எவ்விடத்தும் பரவி நிற்பது; உண்மையானது; புறவயமானது.

மாயை உணர்வற்றதாதலின் தானே உலகைப் படைத்தல் இயலாது. உணர்வுள்ள, அறிவுள்ள உயிர் மாயைக்கு வேண்டிய அறிவுக் காரணமாக விளங்க முடியாது. ஏனெனில், உயிர் மாயையிலிருந்து உண்டான உடலுடன் இணைந்தபின்பே அறிவைப் பெறுகின்றது. எனவே, இறைவனே உலகின் அறிவுக் காரணம் ஆவான். இறைவன் நேரடியாக மாயையின் மீது செயல் புரியாது தனது ஆற்றலின் மூலம் செயற்படுவதால், படைத்தலுக்குப் பொருட் காரணம் மாயையாகவும், அறிவுக் காரணம் இறைவனாகவும், துணைக் காரணம் இறைவனின் ஆற்றலாகவும் உள்ளன.

உயிர் தனது அறிதல், எண்ணுதல், உணர்தல் ஆகிய செயல்களைச் செய்தற்குரிய ஆற்றலை மாயையே தருகின்றது. மேலும், மாயையிலிருந்து உயிர், தனது ஆற்றல்களைச் செயற்படுத்துவதற்குரிய உடல் (தனு), புலன் தொழில் உறுப்புகள் (கரணம்), அவ்வுடல் தங்குதற்குரிய இவ்வுலகம் (புவனம்), உயிர் நுகர்வதற்குரிய பொருட்கள் (போகம்) ஆகிய அனைத்தையும் பெறுகிறது. மேலும், உடலுடன் உயிர் இணைதலின் அதற்கு அறிவும் ஏற்படுகிறது. தளைக் கூட்டின் காரணத்தால் ஏற்படும் அவ்வறிவு ஐவகைக் குறைகளை உடையது. அவை அ) நிலையற்றவற்றை நிலைபேறுடையனவாகக் கருதுதல், ஆ) இவ்வுலகின் செயல்களின் முகவர் ஆகத் தன்னை உயிர் கருதுதல், இ) பொருட்களின் மீது நாட்டம் கொள்ளுதல், ஈ) அப்பொருட்களைக் பெறப் பின் செல்லல், உ) உணர்வில் பொருளான தன்னை உணர்வற்ற உடலுடன் முழுமையாக ஒன்றுபடுத்திக் கொள்ளல் என்பனவாகும். இவற்றை ஐவகைக் குறைகள் (பஞ்சக்கிலேசங்கள்) என்பர். இருப்பினும் அக்குறையறிவை முறையாகக் கருதும் பொழுது அது வீடுபேற்றிற்கு உதவும். அதனால், மாயையை உயிருக்கு முற்றிலும் தீங்கு விளைவிக்கும் தளையாகக் குறிப்பிட முடிவதில்லை.

மாயையை இல்பொருள் (அசத்து)என்றும் சொல்வர். அதன் பொருள் படைப்பு முழுமையானது; இறைவனுக்கு மாறான ஒன்று என்பதாகும். மாயை மூன்று நிலைகளை உடையது. அவை சுத்த மாயை, அசுத்த மாயை, சுத்தாசுத்த அல்லது பிரகிருதி மாயை எனப்படும். சுத்தமாயை என்பது மாயையின் தொடக்க நிலை. அசுத்த மாயை என்பது ஆணவத்துடனும் கன்மத்துடனும் இணைந்தநிலை. இது இன்ப துன்பங்களை உயிர்களுக்கு அளித்து, இறையறிவு ஏற்படுத்தற்குரிய நிகழ்வுகளை அளிக்கும். பருமை நிலையில் மாயை பிரகிருதி மாயை எனப்படும். இதிலிருந்தே இவ்வுலகம் தோன்றுகிறது.

மாயையும் இறைவனைப் போன்று ஓர் உள்பொருளாயினும் மாயையின் தலைவனாக இறைவன் இருந்து அதனைத் தனது கட்டுக்குள் வைத்துத் தான் விரும்பியவடிவங்களைத் தோற்றுவிக்கிறான். அதனால் மாயைதான் இறைவனுக்குத் தலைமைப்பொறுப்பு அளிக்கிறது என்பது தவறாகும். படைப்பு முழுமையின் பல்வேறு வகைகளுக்குக் காரணம் உயிர்களின் வினைகளே எனினும், வினைகள் உணர்வற்றனவாதலின் அவை படைப்பை நிகழ்த்த இயலாது. இறைவனே மாயையைக் கொண்டு அதனை நிகழ்த்துகிறான்.

பி.ஆர்.ந.

*மார்க்கசு அரேலியசு அந்தோனினசு:* இவர் உரோம் நகரில் கி.பி. 121 - ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 - ஆம் நாளில் பிறந்தார் இவர் இயற்பெயர் மார்க்கசு அந்நியசு வெரசு(Marcus Annius Verus) ஆகும். இவர் இளமையிலே பெற்றோரை இழந்து விட்டதால் பாட்டனார் அன்னியசு வெரசுவினால் வளர்க்கப்பட்டார். கிரேக்க, இலத்தீன் இலக்கியக் கல்வியைப் பாதியில் நிறுத்திவிட்டுத் தம் பதினோராராம் வயதில் இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாட்டு மெய்ப்பொருளியலையும் (Stoic Philosophy) சட்டத்தையும் பயிலத் தொடங்கினார். இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாட்டினால் பெரிதும் கவரப்பெற்ற மார்க்கசு தம் உடைகளையும், வாழ்க்கை நடைமுறைகளையும் அக்கோட்பாட்டின் வழிகளிலேயே அமைத்துக் கொண்டார்.

உரோமானியப் பேரரசரான ஆட்ரியன் (Hadrian), மார்க்கசு அன்னியசு வெரசுவின் சிற்றன்னையின் கணவரான அந்தோனியசு பியசுவைத் (Antonius Pius) தம் வாரிசாகத் தத்து எடுத்துக் கொண்டார். அந்தோனியசு பியசு தம் மகள் அன்னியா செலரியா பவுசுடினாவை (Annia Geleria Faustina) மார்க்கசுக்கு மணமுடித்து (கி.பி. 145) அவரது பெயரை மார்க்கசு அரேலியசு அந்தோனினசு (Marcus Aurelius Antoninus) என்று மாற்றியதுடன் உரோமானியப் பேரரசின் முறையான வாரிசும், தம் வளர்ப்பு மகனுமான இலூசியசு கையோனியசு கம்மோடசுவுடன் (Lucius Caionius Commadus) இவரையும் தத்து எடுத்து இருவரையும் பேரரசின் வாரிசுகளாக ஆக்கினார்.

மார்க்கசு அரேலியசு அந்தோனினசு கி.பி.140, 145, 161-ஆம் ஆண்டுகளில் உரோமாபுரிப் பேரரசின் உச்சஆட்சித் தண்டலாளர்(Consul) என்றபொறுப்பை ஏற்றார். பேரரசின் நீதித்துறை உயர் பொறுப்பையும் கி.பி.147-ஆம் ஆண்டில் ஏற்றார். இவர் தம் 17 - ஆம் வயதில் பியசுவின் வாரிசாக அறிவிக்கப்பட்டதிலிருந்து இருபத்து மூன்று ஆண்டுகள் பியசின்

துணையாக இருந்து, ஆட்சிக்கலையில் தேறிய மார்க்கசு கி.பி. 161-ஆம் ஆண்டு பியசு இறந்தவுடன் உரோமானியப் பேரரசராக ஆனார். இவர் பியசின் வளர்ப்பு மகனான இலூசியசு வெரசுவை இணைப் பேரரசராகவும் ஆக்கினார். அப்போதுதான் வரலாற்றின் முதன் முறையாகச் சம உரிமை கொண்ட இரு பேரரசர்களை உரோம் நாடு கண்டது.

மார்க்கசு அரேலியசு அந்தோனினசின் ஆட்சிக் காலத்தின் பெரும்பகுதி நாட்டின் எல்லைகளைக் காப்பாற்றுதற் பொருட்டுப் போர்கள் புரிவதிலேயே கழிந்தது. அவற்றுடன் பெரும் வெள்ளமும் நெருப்பும் எரிமலைச் சிதறல்களும் கொடிய நோய்களும் உரோமானிய மக்களைப் பெரிதும் துன்புறுத்தின. அரசுக்கும் நிதி நெருக்கடி ஏற்பட்டது. ஆனால், மார்க்கசு புதிய வரிவிதிப்புகளைச் செய்யாது அரசின் செல்வத்தை ஏலம்விட்டு நிலைமையைச் சீர்படுத்தினார். இவரது ஆட்சியில் கிறித்தவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டனர். அதன் காரணம் அவர்கள் ஒழுக்கமற்ற, மூடநம்பிக்கையுடையபொல்லாதவர்கள் என்று மார்க்கசு கருதியதுதான். மேலும், அவர்களின் வளர்ச்சி தம் முன்னோர்களின் சமயக் கோட்பாடுகளைச் சிதைத்துவிடும் என்றும் இவர் கருதினார்.

இவர் தம் ஆட்சிக்காலத்தில் மக்களுக்குச் சில சிறந்த பணிகளையும் ஆற்றியுள்ளார். சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரை உயர்த்தப் பலவகையான திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியதும், விதவைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழிமுறைகளைச் செய்து கொடுத்ததும், அடிமைகளுக்குக் குடியுரிமை வழங்கியதும், குற்றவியல் சட்டங்களின் கடுமையைக் குறைத்ததும் இவர்தம் சிறந்த பணிகளாகும். இவர் தம் 59-ஆம் வயதில் கி.பி. 180-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17-ஆம் நாள் இராணுவத் தலைமையகத்தில் உயிர் நீத்தார்.

மார்க்கசு கிரேக்க மொழியில் எழுதி வெளியிட்ட தியானங்கள் என்ற நூல்தான் மெய்ப்பொருளியலைச் சார்ந்தது. தியானங்கள் என்னும் நூல் தனக்குத்தானே உரையாடிக் கொள்ளும் வகையில், வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்ற விளக்கத்தை அளிப்பதாகும். அந்நூல் பன்னிரண்டு சிறு நூல்களை அல்லது இயல்களைக் கொண்டது. முதல் நூல் பிறரது தாக்கத்திலிருந்து மார்க்கசு கற்றவற்றையும், இரண்டாம் நூல் பொதுவான வாழ்க்கை நடைமுறைகளையும், மூன்றாம், நான்காம் நூல்கள் இறைவன், இறைப்பற்று, வீடுபேறு ஆகியவற்றையும், ஐந்தாம் நூல் வாழ்வின் அடிப்படையான நலன்களையும், ஆறாம் நூல் அகவாழ்வின் இன்றியமையாமையையும் விளக்குகின்றன. ஏழாம் நூல் புலன் உணர்வுக் கட்டுப்பாடு, உள்பொருளைத் தேடுதல் பற்றியும், எட்டாம், ஒன்பதாம், பத்தாம் நூல்கள் உளச் சமநிலை, ஊழ்கள், ஊழின் முன்பின் தொடர்ச்சி ஆகியவற்றைப் பற்றியும், பதினோராம் நூல் தன்னலமின்மை பற்றியும், பன்னிரண்டாம் நூல் மரண பயமின்றி முழு நிறைவுடன் வாழ்க்கையைத் துறத்தலைப் பற்றியும் விளக்குகின்றன. நா.பா.

**மார்க்கண்டேயம்:** வடமொழியில் உள்ள 18 மகா புராணங்களுள் மார்க்கண்டேயமும் ஒன்று. இப்புராணம் குப்தர் ஆட்சிக்காலப் பிற்பகுதியில் உருவானதாக அறிஞர்கள் கருதுகின்றனர். சிவ பெருமானின் பெருமைகளை விளக்குகின்ற பத்து மகா புராணங்களுள் மார்க்கண்டேயமும் ஒன்றாகும். இப்புராணம் 32,000 கிரந்தங்களைக் கொண்டு அளவில் பெரிய நூலாகக் காணப்படுகிறது. தேவி பாகவதம் தவிர தாய்த் தெய்வ வழிபாட்டைப் பற்றி விரிவாகப் பேசும் புராணங்களில் இதுவும் ஒன்று.

சப்தமாதர் எனப்படும் தாய்மார் எழுவரின் வழிபாடு பற்றிய குறிப்பு இந்நூலிலேயே முதன் முதலாகக் காணப்படுகிறது என்பர். இந்நூல் பல புராணக் கதைகளுக்கான விளக்கங்களைத் தருகிறது. வினா விடையாக அமைந்துள்ள இப்புராணம் விட்டுணு, மானுட உருத்தாங்கியதற்கான காரணம், திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவியான வரலாறு, பலராமர் மது மயக்கத்திற் செய்த தவற்றிற்குக் கழுவாய் செய்த காரணம், கிருட்டிணன், அர்ச்சுனன் ஆகிய இருவரும் அகால மரணம் எய்தியதற்கான காரணம் போன்றவற்றை விளக்கி நிற்கிறது. மேலும், இம்மார்க்கண்டேய புராணம் இல்லறம், துறவறம், சதாச்சாரம், யோகம், சகுனம் முதலியவற்றையும் சிறப்பித்துப் பேசுகிறது. ச.செ.

**மார்க்கண்டேயர்:** மிருகண்டு முனிவர்க்கு மகனாகப் பிறந்தமையால் இவருக்கு மார்க்கண்டேயர் என்னும் பெயர் வழங்கலாயிற்று. இவர் தாய் மருத்துவதி. சங்ககாலப் புலவர்களிடையே இப்பெயர் வழக்குக் காணப்படுவதால் பழங்காலத்திலேயே மார்க்கண்டேயர் குறித்த கதை பேசப்பட்டது என்பது தெரிகிறது. தமக்கு இவ்வுலக வாழ்வு பதினாறு ஆண்டுக் காலமே எனத் தம் தந்தையார் கூறக்கேட்டு மார்க்கண்டேயர் எப்பொழுதும் சிவபெருமானையே வழிபட்டு, என்றும் இளமையுடன் பதினாறு வயதிலேயே இருக்கும் வரம் பெற்றார். இவருக்குப் பதினாறு வயது நிரம்பியவுடன் காலன் வந்து இவரைப் பாசக்கயிற்றால் இழுக்க, இவர் ஓடிச்சென்று சிவலிங்கத்தைத் தழுவிகொள்ள, சிவபெருமான் மார்க்

கண்டேயனின் பொருட்டுக் காலனைக் காலால் உதைத்து வீழ்த்திக் காப்பாற்றுகிறார்.

சிவபெருமானின் வீரட்டத் தலங்களுள் ஒன்றான திருக்கடவூரில் உள்ள சிவபெருமான் மார்க்கண்டேயனுக்காகக் காலனைக் காலால் உதைத்தாரெனத் தேவாரத்தில் குறிப்புக் காணப்படுகிறது. சிவபெருமானுக்கு அக்காரணத்தால் காலசம்காரமூர்த்தி என்றும், காலாந்தகன் (காலனுக்கு எமன் ஆனவன்) என்றும்கூறப்படும்பெயர் வழக்கும் உண்டு. இச்செய்தி குறித்தமைக்கப்பட்ட சிற்பங்களும், ஓவியங்களும் தமிழ்நாட்டில் பல இடங்களில் காணப்படுகின்றன.

ச.செ.

**மார்க்கண்டேயனார்**: இவர் சங்ககாலப் புலவர். கபிலர், கோதமனார் (கௌதமனார்), கௌசிகனார், பிரமனார், வான்மீகியார் என்று வடமொழிப் பெயர்கள் பல சங்கப் புலவர்கட்கு இயற்பெயர்களாய் அமைந்தாற்போல், மார்க்கண்டேயன் என்ற இப்பெயரும் இவர்க்கு அமைந்தது. இதனால் இவர் அந்தணராவர் என்பது சிலர் கருத்தாகும்.

மார்க்கண்டேயனார் பாடியதாகச் சங்கத் தொகைநூல்களுள் புறநானூற்றில் (365) காஞ்சித் திணைப் பெருங்காஞ்சித் துறையில் ஒரு பாடல் அமைந்துள்ளது. 'ஆணைச் சக்கரத்தைப் போர் முகத்தே செலுத்திப் பகைவரை அழித்து, மேலும் எதிர்த்துப் பொருவோரைக் காணாது, போர்மேம்பட்ட வலிமையமைந்த முன்னோராகிய வேந்தர் பலரும் மாண்டு விண்ணுலகு செல்லவும், யான் செல்லாது விலை நலப் பெண்டிர் போல் பலரும் என்னை ஆள்வாராய் மேம்பட்டுக் கூறும்படி இன்னும் இருக்கின்றேனே' எனப் பலகால் நிலமகள் அழுத காஞ்சியும் உண்டென்று உணர்ந்தோர் உரைப்பர், என்றவாறு நிலையாமையாகிய காஞ்சியை இவர் அழகுறப் புனைவது கற்போர்தம் நெஞ்சில்ஊன்றி நிற்பதாய் உள்ளது. பொறுமைக்குச் சான்றாகும் நிலமகளே பொறாது புலம்பியழுதற் கேதுவானது நிலையாமை என்று இவர் கூறுமளவு எவரும் கூறிற்றிலர்.

இன்னும், மார்க்கண்டேயனார் காஞ்சி என்றொரு நூற்பெயரும் அதில் அடங்கியதாக ஒரு செய்யுளும் யாப்பருங்கல விருத்தியுரை (நூ. 95) யாப்பருங்கலக் காரிகையுரை (கா. 58) ஆகிய இரண்டிலும், 'இழுமென் மொழியால் விழுமியது நுவலும்' தோல் என்னும் இலக்கிய வகைக்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. அச்செய்யுளும் காஞ்சிப் பொருள் உணர்த்தும் பாங்கில் உள்ளது.

'தமிழ்ச் செய்யுட்களுள் இறையனாரும் அகத்தியனாரும் மார்க்கண்டேயனாரும் வான்மீகனாரும் கவுதமனாரும் போல்வார் செய்தன தலையாய ஒத்துக்களென்றும் இடைச்சங்கத்தார் செய்தன இடையாய ஒத்துக்களென்றும்' வருகின்ற நச்சினார்க்கினியரின் உரைப் பகுதியினால் (தொல். பொருள். நூ. 75 உரை) இம்மார்க்கண்டேயனார் தலைச்சங்கப் புலவரென்பதும் இவர் பாடல்கள் சிறந்த மாண்புடையனவாய் மதிக்கப்பட்டனவென்பதும் விளங்கும். வ.கு.

**மார்க்கண்டேயனார் காஞ்சி**: மறைந்து போன தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்று. யாப்பருங்கலக் காரிகை உரையில் குணசாகரர் 'பாயிரும் பரப்பகம்' எனத் தொடங்கும் இந்நூற்செய்யுள் ஒன்றினை மேற்கோள் காட்டியுள்ளார். அச்செய்யுளையே உரையாசிரியர் இளம்பூரணரும் தொல்காப்பிய உரையில் (பொருள். செய். 230-ஆம் நூற்பா) எடுத்துக் காட்டியுள்ளார். ஆனால், அவர் இச்செய்யுள் எந்நூலிலிருந்து எடுக்கப்பட்டது என்று குறிக்கவில்லை. குணசாகரர் உரையிலிருந்து இச்செய்யுள் மார்க்கண்டேயனார் காஞ்சி என்ற நூலுக்குரியது என்பதை அறிய முடிகிறது, முதுமொழிக்காஞ்சி, இரும்பல்காஞ்சி என்னும் நூல்களைப் போன்று இந்நூலும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளைக் கூறுகின்ற நூல் எனக் கருதுவர்.

சா.உ.

**மார்க்கு ஆண்டனி** (கி.மு. 82-30): இவர் பண்டைய உரோமானியத்தளபதி. மார்க்கு ஆண்டனி (Mark Antony) உரோம் நாட்டில் நடைபெற்ற இரண்டாம் மூவராட்சியில் (II Triumvirate) முதன்மைப் பங்கு வகித்தவர். மார்க்கசு அண்டோனியசு என்பது இவருடைய இலத்தீனியப் பெயர். எகிப்தியப் பேரழகி கிளியோபாட்ராவுடன் தொடர்புடையவர். சேக்சுபியர் (Shakespeare) போன்ற பண்டைய நாடகாசிரியர்கள், புதுமை வரலாற்றாசிரியர் ஆகியோருடைய நூல்களில் இவர்தம் வரலாறு எழுதப்பட்டுள்ளது.

பெயர் பெற்ற ஓர் ஆளவை மன்றக் குடும்பத்தில் பிறந்த ஆண்டனி, இளமையில் சற்றுக் துடுக்கு மிக்கவர். முதலில் காபினியசு (Gabinius) என்னும் சிரியா ஆளுநரிடம் குதிரைப்படைத் தலைவராகத் திகழ்ந்த இவர் பின்னர்ச் சூலியசு சீசரிடம் (Julius Caesar) தம் திறமைகளை வெளிப்படுத்தினார். மிக விரைவில் ஒரு தகுதியுள்ள திறமை மிக்க இராணுவத் தளபதியாக உயர்ந்தார். சீசர் போர்மேற் சென்றிருந்த நாள்களில் பல தடவைகள் இத்தாலியின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார்.

அதிவிரைவில் உயர்பொறுப்புகளை ஏற்றார். சீசர் கொலையுண்டபோது கி.மு. 44-இல் அரசு இயந்திரத்தை நிருவகிக்கும் பொறுப்பு இவர் கைக்கு

வந்தது. சிறிது காலத்தில் சிசரோ (Cicero) வுடனும் சீசரின் வளர்ப்பு மகனான அக்டேவியசு போன்றோருடனும் ஆண்டனி பகைமை கொள்ள நேர்ந்தது. அதன் விளைவாக நடந்த போரில் ஆண்டனி தோல்வி கண்டார். ஆனால் சின்னாட்களிலேயே சிசரோவுக்கு எதிராக அக்டேவியசு ஆண்டனியுடன் நட்புக் கொண்டார். இலெபிடசு (Lepidus) என்பவரும் இவர்களுடன் சேர்ந்தார்.

பிலிப்பி (Philippi) என்னுமிடத்தில் கி.மு. 42-இல் நடந்த போரில் ஆண்டனியும் அக்டேவியசும் சீசரைக் கொன்ற புரூடசு (Brutus) காசியசு (Cassius) ஆகியோரை வெற்றி கொண்டு அவர்களைக் கிரீசு (Greece) வரை துரத்திச் சென்றனர். சில சச்சரவுகளைத் தீர்க்கவும் யூப்ரடீசு (Euphrates) நதிக்குக் கிழக்கே உள்ள பார்த்தியா என்னும் அரசின்மேல் படையெடுக்கவும் ஆண்டனி கிரேக்க நாட்டில் தங்கிவிட்டார். படையெடுப்புக்கு எகிப்தின் உதவியைப் பெறுவதற்காக எகிப்தியப் பேரழகி அரசி கிளியோபாட்ராவை தார்சசு (Tarsus) என்னுமிடத்திற்கு வரவழைத்தார். அவளுடன் கி.மு. 41-ஆம் ஆண்டின் மழைக்காலத்தைக் கழித்தார். அதன்பிறகு நான்கு வருடங்கள் வரை இவர்கள் இருவரிடையே எந்தச் சந்திப்பும் நிகழவில்லை.

இதனிடையில் ஆண்டனிக்கும் அக்டேவியசுக்கும் இடையிலான உறவு கேடுற்றது. இத்தாலியிலுள்ள பிரண்டிசியம் (Brandisium) என்னுமிடத்தில் கி.மு. 40-இல் இருவரும் சந்திக்க முடிவுசெய்தனர். பின்பு ஆண்டனி கிழக்கு மாகாணங்களைத் தாம் எடுத்துக் கொண்டு மேற்கு மாகாணங்களை அக்டேவியசுக்கும், இலெபிடசுக்கும் கொடுத்தார். அக்டேவியசின் சகோதரியான அக்டேவியா (Octavia) என்னும் பெண்ணை மணக்கவும் ஒப்புக்கொண்டார்.

முக்கிய சிக்கல்களை ஒழித்தபிறகு கி.மு. 37-இல் ஆண்டனி சிரியாவுக்குச் சென்றார். பார்த்தியா படையெடுப்பில் மீண்டும் ஆர்வம் கொண்டார். மீண்டும் கிளியோபாட்ராவுடன் தொடர்பு கொண்டார். சிரியாவின் சிலபகுதிகள், சைப்ரசு, பொனீசியக் கடற்கரைப் (Phonecian Coast) பகுதி ஆகியவற்றைக் கிளியோபாட்ராவுக்கு வழங்கி, எகிப்தை வலிமையுள்ள நாடாகச் செய்தார். ஒரு வேளை இவர் கி.மு. 36 – இல் கிளியோபாட்ராவை மணந்திருக்கலாம். ஆனாலும் அக்டேவியாவை இவர் மண விலக்குச் செய்யவில்லை.

ஆண்டனி மேற்கொண்ட பார்த்தியாப் படையெடுப்பு வெற்றிகரமாக முடியவில்லை. தம் படையைத் திரும்பப் பெறுவதற்கே ஆண்டனி தம் இராணுவத் திறமைகள் அனைத்தையும் பயன்படுத்த வேண்டியிருந்தது. இதனிடையே ஆண்டனி ஒரு கீழ்த்திசைப் பெண்ணுக்கு அடங்கியிருப்பதாகவும் அவளையே உரோமாபுரியின் அரசியாக்க அவர் முயல்வதாகவும் பொய்ச் செய்திகள் இத்தாலியில் அக்டேவியசால் பரப்பப்பட்டன. ஆண்டனி, கி.மு. 33 – இல் ஆக்டேவியாவை வெளிப்படையாக மணவிலக்குச் செய்தார். இது நிலைமையை மேலும் சீர்கேடாக்கியது.

ஆக்டியம் (Actium) என்னும் கடற்படைத் தளத்தில் கி.மு. 31-இல் ஆண்டனி, கிளியோபாட்ரா ஆகியவர்களுடைய படைகள் அக்டேவியசின் படைகளைச் சந்தித்தன. போரின் நடுவே கிளியோபாட்ரா எகிப்துக்கு ஓடிவிட்டார். ஆண்டனியும் அவரைப்பின் தொடர்ந்தார். அதற்கடுத்த ஆண்டில் இருவரும் எகிப்தில் தற்கொலை செய்து கொண்டனர்.

ஆண்டனி ஒரு வலிமைமிக்க வீரராய்த் திகழ்ந்தார். கிளியோபாட்ராவின் மேல் அவர் கொண்ட காதல் அவர்தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதில் தடையாக இருக்கவில்லை. அரசியல் காரணங்கள் அவர்கள் நேசத்திற்கு இடையூறாய் அமைந்தன. கிழக்கு மாகாணங்களை அடக்கியாள எகிப்தின் உதவியை ஆண்டனி விரும்பினார். எகிப்தை வலிமையுள்ள நாடாக்க ஆண்டனியின் துணையை கிளியோபாட்ரா நாடினார். ஆனால் இருவரில் எவருமே அக்டேவியசுக்கு ஒரு சரியான போட்டியாக இருக்கவில்லை.

சௌ.ல.

**மார்க்குவேசாசுத் தீவுகள்**: பசிபிக்கு மாக்கடலின் தெற்கிலுள்ள மார்க்குவேசாசுத் (Marquesas) தீவுக்கூட்டம் பிரெஞ்சு பாலினீசியாவின் ஒரு பகுதியாகும். இக்கூட்டத்தில் 12 தீவுகள் இருக்கின்றன. இவை தகித்தி (Tahiti) 1,190 கி.மீ. வடகிழக்கில் உள்ளவை. இதன் பரப்பு 1,274 ச.கி.மீ. மக்கள் தொகை 6,548 (1983). இவை மலைகள் நிறைந்தனவாகவும் செழுமையாகவும் உள்ளன. இங்கே 1260 மீ. உயரமுள்ள மலைகளும் இருக்கின்றன; எரிமலைகளும் உண்டு.

இத்தீவுகள் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன. தெற்குத் தீவுகள், மெண்டானா எனவும் சொல்லப்படும். அவை மெண்டானா (Mendana) என்னும் இசுபானிய மாலுமியால் கி.பி. 1595 – இல் கண்டுபிடிக்கப்பட்டன. வடக்குத் தீவுகள் வாசிங்டன் தீவுகள் எனவும் பெயர்பெறும். அத்தீவுகள் கி.பி. 1791 – இல் அமெரிக்க மாலுமி சோசபு இன்கிரகாம் (Joseph Ingraham) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டன. அமெரிக்கா, தொடக்கக் காலத்தில் இத்தீவுகளைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. பிரான்சு கி.பி. 1842 – இல் அவற்றைத் தன் வசப்படுத்திக் கொண்டு, தன் காப்பரசின் கீழ்க்கொண்டு வந்தது.



மார்க்குவேசாசுத் தீவுகள்

பிறகு 1958 – இல் பிரான்சின் கடல்கடந்த நிலப்பகுதிகளில் (French Overseas Territory) இவையும் சேர்க்கப்பட்டன. கரடு முரடான இயற்கை அழகு வாய்ந்த இத்தீவுக்கூட்டம் அமெரிக்க எழுத்தாளர் எர்மன் மெல்வில் (Herman Melville) என்பவரின் தைபீ (Typee) என்னும் புதினம் தோன்ற அடிப்படையாக அமைந்தது. தெ.பா.

**மார்க்கோ போலோ** (கி.பி. 1254 - 1324), இடைக்காலத்தைச் சேர்ந்த வெனிசுநாட்டுப் பயணி. இவர் சீனாவிற்கும், தூரக்கிழக்கு நாடுகளுக்கும், இந்தியாவிற்கும் பயணம் செய்து, அவற்றைப் பற்றிய குறிப்புகளை எழுதியுள்ளார். மங்கோலியப் பேரரசர் குப்ளாய்கானின் அரசவையில் பணிபுரிந்தார். இடைக்கால உலகப் பயணிகளின் அரசர் எனப் போற்றப்பட்டார்.

வெனிசு நகரில் கி.பி. 1254-இல் நிக்கோலோவின் மகனாகப் பிறந்த மார்க்கோ போலோ, வணிகப் பெருங்குடி மரபைச் சேர்ந்தவர். மார்க்கோபோலோ (Marco Polo) ஆறு வயதுச் சிறுவனாக இருந்த போதே, தம் தந்தையுடனும், சிற்றப்பாவான மாபியோவுடனும் (Maffeo) பயணம் செய்யும் போது, பல நாடுகளைப் பார்வையிட்டு, குப்ளாய்கானுடன் தொடர்பு கொண்டார்.


குப்ளாய்கானின் அரசவையில் இவர்தம் 21-ஆம் வயதில் தார்த்தாரிய அரசவை நடைமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொண்டதுடன், நான்கு மொழிகளையும் கற்றார். இவர் திறமையைக் கண்ணுற்ற குப்ளாய்கான் இவரை அரசாட்சி நிருவாகத்தில் 17 ஆண்டுகள் ஈடுபடுத்தினார். இவர் மூன்று ஆண்டுகள் யாங்கோ பெருநகரின் ஆளுநராகவும் பொறுப்பேற்றார். இவர் நாட்டின் பல பகுதிகளைப் பார்வையிட்டுப் பல்வேறு இனமக்களைப் பற்றிய குறிப்புகளையும் திரட்டினார். பல நாடுகளைப் பற்றிய செய்திகளையும் சேகரித்தார். சுருங்கக் கூறின் மற்றெந்த ஐரோப்பியனைக் காட்டிலும் கீழை நாடுகளைப் (Orient) பற்றிய பல செய்திகளை இவர் அறிந்திருந்தார்.

இவர் கி.பி. 1293 – இல் அந்தமான் தீவிலிருந்து இலங்கைக்குப் பயணமானார். இலங்கையில் கிடைக்கும் மணிக்கற்கள் பற்றியும், இலங்கையின் மலைகள், அரசன், மக்கள் பற்றியும், குப்ளாய்கான் இலங்கைக்கு அனுப்பிய தூதுக்குழு (கி.பி. 1284) பற்றியும் இவர் விரிவாக எழுதியுள்ளார். இலங்கையில் புத்தர் பற்றி வழங்கிய கதைகளையும் இவர் சுவைபட விவரித்துள்ளார்.

மாபாரைப் (தென்னிந்தியா) பார்வையிட்ட போலோ, பாண்டிய வேந்தன், முத்துக்குளிக்கும் தொழில், குதிரை வளர்ப்பு, குதிரை வணிகம், மக்களின் பழக்கவழக்கம், சமுதாய வாழ்வு, புனித தாமசின் கல்லறை முதலானவற்றைப் பற்றி விவரித்துள்ளார். காயல் பட்டினம், கொல்லம், குமரிமுனை, மலபார்,



மார்க்கோபோலோ




மார்க்கோ போலோவின் பயணவழி

குண்டூர் மாவட்டத்திலுள்ள மோட்டுப்பல்லி ஆகியவற்றைப் பற்றிப் போலோ விரிவான செய்திகளைத் தம் குறிப்பில் எழுதியுள்ளார். பாண்டிய வேந்தர் ஐவர் பற்றியும், பாண்டிய வேந்தன் கழுத்தில் அணிந்திருந்த 104 முத்தும், மாணிக்கமும், கோக்கப்பட்டிருந்த பட்டுக் கயிறு, மாணிக்கமாலை ஆகியபைற்றியும் இவர் சுட்டுகிறார். மோட்டுப்பல்லி மாநிலத்தின் வைரச் சுரங்கமும், கொல்லத்தின் விலங்குகளும், பறவைகளும், காயல் பட்டினத்தின் வெற்றிலையும், இவர் குறிப்புகளில் முக்கிய இடம் பெறுகின்றன. எலி ராச்சியம் பற்றியும், அப்ரைமணர் வாழ்ந்த இலார் மாகாணத்தைப் பற்றியும் இவர் குறிப்பில் உள்ளன. பாண்டிய நாட்டு மக்கள் வாழ்க்கையை இவர் உயிரோட்டமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். தம்மைத்தாமே பலியிட்டுக் கொள்ளும் வீரர்களைப் பற்றியும், உடன்கட்டையேறும் வழக்கம் பற்றியும் இவர் சுவைபட விவரித்துள்ளார். இவர் குறிப்புகள், தென்னிந்திய மக்களின் சமூக வாழ்க்கையைத் தெளிவாக அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. இந்தியரின் கடல் வாணிகம் பற்றியும் இவர் குறிக்கத் தவறவில்லை. குப்ளாய்கான் நாட்டிலிருந்து பாரசீக வளைகுடா, செங்கடல் ஆகியவற்றின் கரைவரையிலும் இந்திய வணிகம் ஒரு நீண்ட சங்கிலித் தொடர் போலப் பரவியிருந்தது பற்றியும் இந்தியக் கடலின் கரைகளிலும் தீவுகளிலும் இயற்கை வளம் கொழித்துச் செழித்திருந்தது பற்றியும், போலோ குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் உள்ள புட்பராகம், மரகதம், செவ்வந்திக்கல் முதலான உயர் மணிக் கற்களைப் பற்றிய இவர் குறிப்புகள் இந்தியாவின் பெருமையை வெளிநாடுகளில் உயர்த்தின. இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் ஏற்பட்ட பண்பாட்டுத் தொடர்புகளின் இனிய தன்மைகளைப் பற்றி இவர் விவரித்துள்ளார்.

குப்ளாய்கான் இவரிடம் தனியன்பு செலுத்தினார். எனவே,போலோ பல முக்கியமான சமயங்களில் குப்ளாய்கானின் தூதராகச் சில அயல்நாடுகளுக்கும் சென்று வந்தார். முடிவில் குப்ளாய்கானின் குடும்பத்தைச் சேர்ந்த அரசகுமாரி ஒருத்திக்கும் பாரசீக மன்னனுக்கும் திருமணம் உறுதியானபோது மணப்பெண்ணைப் பாரசீகத்திற்கு அழைத்துச் செல்லும் பெரும் பணியையும் குப்ளாய்கான் இவரிடம் ஒப்படைத்தார். சீனாவினின்றும் கி.பி. 1292-இல் புறப்பட்ட போலோ இந்தியக் கடல்களில் ஒன்றரை ஆண்டுப் பயணம் செய்த பின் பாரசீகத்தை அடைந்தார். பாரசீகம் செல்லும் வழியில்தான் இவர் தென்னிந்தியாவைப் பார்வையிட்டார். பின்னர் இவர் பாரசீகத்தில் இருந்து கான்சுடாண்டிநோபிளுக்குச் சென்று அங்கிருந்து கி.பி.1295 – இல் வெனிசு நகரம் திரும்பினார்.

வெனிசு நகரம் திரும்பிய பின்பும், இவர்தம் பயணங்கள் தொடர்ந்தன. செனோவாவிற்கும் வெனிசுக்கும் கி.பி.1298-இல் நடந்த போரில்,போலோ தோற்கடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார்; சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் ஒரு கைதியின்

துணையுடன் தம் குறிப்புகளைத் தொகுத்து, மொழி பெயர்த்தார். விடுதலை ஆன பின்னர் இவர் நூலில் பல படிகள் எடுக்கப்பட்டன. இவர் அனுபவங்களைத் தாங்கிய 'மார்க்கோ போலோவின் நூல்', மிகச்சிறந்த பயண நூலாகும்.

இவர் கி.பி. 1307-இல் பிரான்சுச் செல்வந்தர் ஒருவருக்குப் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட தம் நூலின் படி (பிரதி) ஒன்றினை அளித்தார். இத்தாலி, பிரெஞ்சு, இலத்தின் மொழிகளில் எழுதப்பட்ட 85 கைப்பிரதிகள் இன்றும் பல நூலகங்களிலும், அருங்காட்சியகங்களிலும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவரது நூல் முதன்முதலாக கி.பி. 1559-இல் இத்தாலி மொழியில் அச்சாயிற்று; பிரெஞ்சு மொழியில் கி.பி. 1824-இல் அச்சாயிற்று. கிறித்தோபர் கொலம்பசு, இலத்தின் மொழியில் வெளியான இவரது நூலை வைத்திருந்தார் என்பது கூறப்படுகிறது. இவர் நூல் 1903-1926-ஆம் ஆண்டுகளில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

இவர் திரட்டிய எண்ணிறந்த செய்திகளின் தொகையைக் காண்போர் இவர் இத்தனை செய்திகளையும் எப்படித்தான் திரட்டினாரோ என்று வியப்படையத்தான் செய்வர். இச்செய்திகள் வரலாற்று முக்கியத்துவம் உடையவை என்பதில் ஐயமில்லை. இவர் பயண நூல் 'மார்க்கோ போலோவின் நூல்' (The Book of Marco Polo) என்றே குறிப்பிடப்படுகிறது. ம.இரா.

**துணை நூல்:**

Nilakanta Sastri, K.N., Foreign Notices of South India – University of Madras, 1972.


**மார்க்சியம்** என்பது காரல் மார்க்சு என்பவரால் (கி.பி. 1818-கி.பி. 1883) வகுக்கப்பட்ட ஒரு வரலாற்றுத் தத்துவத்தையும், புரட்சியான திருத்தங்கள் பற்றிய ஒரு திட்டத்தையும் குறிக்கிறது. காரல் மார்க்சு ஒரு செருமானிய யூதர் ஆவர். அவர் வகுத்த பொதுவுடைமைக் கொள்கைத் தத்துவமே 'மார்க்சியம்' (Marxism) ஆகும்.

**கொள்கை: 1) வரலாறு பற்றிய தத்துவம்:** மார்க்சியத்தின் வரலாறு பற்றிய தத்துவம், தருக்கவாதப் பொருளியல் (Dialectical Materialism) என்னும் தொடரில் காணப்படுகிறது. அது, 'முதலாளித்துவ முறையிலமைந்துள்ள பொருளாதார, சமூக, அரசியல் அமைப்புகளெல்லாம் காலப்போக்கில் தேய்ந்து தேய்ந்து மறைந்துவிடும்' என்றும், 'முதலாளித்துவக் கொள்கையிலேயே அதன் அழிவுக்கான காரணங்கள் அல்லது வித்துகள் அடங்கியுள்ளன' என்றும் பொருள்படும். உலக வரலாற்றின் நிகழ்ச்சிகளெல்லாம் பொருள்களை உற்பத்தி செய்தல், பங்கீடு செய்தல் ஆகிய பொருளாதாரச்செயல்களினாலேயே உருவாக்கப்பட்டுள்ளன. தனி மனிதர்களாலோ வேறெந்தக் காரணியினாலோ மனித வரலாறு உருவாக்கப்படவில்லை. பேரரசுகளின் தோற்றங்கள், வீழ்ச்சிகள், சமயநெறிகளின் தோற்றம், வளர்ச்சி, புதியநாடுகள் கண்டுபிடிப்பு, புதிய அறிவியல்கள் கையாளப்படுதல், புதிய தொழில் முறைகள், போர்கள், உடன்படிக்கைகள் முதலியனவெல்லாம் பொருளாதார நோக்கங்களை அடிப்படையாக உடையனவே ஆகும். மூலதன வசதி உடையவர்களே தொழில்களை நடத்துவதிலும், வாணிகம் செய்வதிலும், ஊதியமும் நிதிவசதியும் திரட்டுவதிலும், பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடுதலிலும், வெற்றி பெறுதலிலும், அமைச்சரவைகளை அமைத்தலிலும், நாட்டை ஆளுதலிலும் பங்கு பெற்று முன்னணியில் நிற்கிறார்கள். வாழ்வில் அவர்களுக்கு இவ்வளவு ஏற்றத்தைத் தந்தது, தொழிலாளர்களின் உழைப்பிலிருந்து அவர்கள் எடுத்துக் கொண்ட ஊதியமே ஆகும். இவ்வாறு தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்தை முதலாளிகள் எடுத்துக் கொள்ளுதற்கு ஒரு காரணம், மூலதனத்தை தனி உரிமையாக ஒரு சிலர் பெற்றிருத்தலே ஆகும். அவர்களே முதலாளி வகுப்பினராவர். பெரும்பாலோர் மூலதனம் எதுவுமில்லாமல் தங்களுடைய உழைக்கும் திறனொன்றையே நம்பி, அதனை முதலாளிகளுக்கு அவர்கள் தரும் கூலிக்கு விற்றுப் பிழைக்க வேண்டிய அவல நிலையிலிருத்தல் இரண்டாம் காரணம் ஆகும்.

ஆனால், இவ்வாறு தொழிலாளர்களை முதலாளிகள் தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுதலென்பது நெடுங்காலத்துக்கு நடைபெறாது. ஏதேனும் ஒரு நிலையில் அளவிற் சிறிய முதலாளி வகுப்புக்கெதிராக அளவிற் பெரிய தொழிலாளர் வகுப்பு எழுந்து வன் செயற்புரட்சி செய்து, தங்களைப் பயன்படுத்தும் முதலாளி வகுப்பை அடியோடு ஒழித்துவிடும். இவ்வாறு தருக்கவாதப் பொருளியல் என்னும் கொள்கை தொழிலாளர் புரட்சி தவிர்க்க இயலாதது என்னும் முடிவை உறுதியாக வலியுறுத்துகிறது. இந்தப் பொருளில்தான் மனித வரலாறு உருவாகிறதென்று மார்க்சு கூறினார்.

**2. புதிய சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புகள் உருவாதல்:** முதலாளிகள் வகுப்பு, தொழிலாளர் வகுப்பினால் ஒரு வன்செயற் புரட்சியின் வாயிலாக ஒழிக்கப்பட்ட பின்னர், தொழிலாளர் வகுப்பு, வகுப்பு வேறுபாடற்ற ஒரு புதிய சமூகத்தை உருவாக்குதற்கு முதற்படியாகத் தங்களுடைய தலைவ

ரொருவருடைய தனியரசாட்சியை நிறுவுதல் வேண்டும். அத்தகைய தொழிலாளர் வகுப்பின் தனியரசு ஆட்சியில் (Dictatorship of the Proletariat) சமநிலைக் கருத்துகள் நடைமுறையில் கொண்டுவரப்படும். அந்தச் சமநிலைச் சருவாதிகாரி, முதலாளிகள் வசமுள்ள நிலங்கள், தொழிற்சாலைகள், மற்றுமுள்ள செல்வ மூலங்கள் ஆகியவற்றை எடுத்து, சமூகம் முழுவதற்கும் அரசாங்கத்தின் நிருவாக மேற்பார்வையில் செயற்படும் உடைமையாக ஆக்குவார். அதனால், நாட்டின் செல்வநிலை ஒருசிலர் கையிலிருந்தநிலை மாறி, நாடு முழுவதின் உடைமையாக(Nationalisation) ஆகிவிடும். அந்நிலையில் முதலாளிகள் வகுப்பு மறைந்து சமூகம் என்பது தொழிலாளர்களை மட்டுமே உடையதாக இருக்கும். பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வு சிறிதும் இன்றி, முழுமையான சமத்துவநிலை தோன்றும். இதற்கு ஒரு வலுவான சூழ்நிலையை உண்டாக்குவது எது என்றால், 1)உடைமைகளைச் சமூக உடைமை ஆக்குதலும், 2) சமூகத்தில் யாவரும் உழைத்தே உண்ணுதல் வேண்டுமென்ற கட்டுப்பாடு இருத்தலும் ஆகும். சமநிலைச் சருவாதிகாரி நாட்டின் செல்வ வளங்களை மக்கள் யாவருக்கும் பகிர்ந்தளித்து, ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவருடைய திறமைக்கேற்ப உழைப்பை, அதாவது உழைப்பின் பயனை (அல்லது பொருளை) வாங்கியும், ஒவ்வொருவருக்கும் அவரவருடைய தேவைக்கேற்ப உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வழங்கியும் ஆட்சிசெய்வார். அவருடைய ஆட்சி சருவாதிகார ஆட்சி போல் தோன்றினாலும், உண்மையில் அவருடைய ஆட்சி



காரல், மார்க்சு

நாட்டின் ஒரே வகுப்பான தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த ஒருவரால், அவ்வகுப்பின் சார்பாக, அதன் நலனுக்காக நடத்தப்படுதலால், அது மக்களுக்குப் பொறுப்பான மக்களாட்சியே ஆகும். இதில் முழுமையான அளவில் பொருளாதார சமத்துவம் நிலவும்.

3. முதலாளித்துவ சமூகத்தைச் சமநிலைச் சமூகமாக மாற்றுதற்குக் காரல் மார்க்சு கி.பி. 1848-இல் எங்கல்சோடு சேர்ந்து வெளியிட்ட 'பொதுவுடைமைக் கொள்கை அறிவிப்பு'(Communist Manifesto)என்னும் அறிக்கையில் சில வழிகளைக் கூறுகிறார் அவை: அ) தனியார் வசமுள்ள நில உடைமைகளை அரசாங்கம் அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்; நிலத்திலிருந்து கிடைக்கும் வாரத்தை (Rent) அரசாங்கம் தன் பொதுச் செலவுகளுக்குப் பயன்படுத்துதல் வேண்டும். ஆ) ஊதியம் வரவரக் கூடுதலாகப் பெறுவோரின் மீது, வருமானத்திற்கேற்ப வரவரக் கூடுதல் விகிதத்தில் வருமான வரிவிதிப்புக் கொள்கை கொண்டுவரப்படுதல் வேண்டும். இ) சொத்துகளைத் தாயமுறையில் பெறும் உரிமை (Right of inheritance) ஒழிக்கப்படுதல் வேண்டும். ஈ) ஓர் அரசாங்க வங்கி நிறுவப்படுதலும், அதன் வாயிலாகக் கடன்வழங்குதல் ஓரிடத்தில் மையப்படுத்தப்படுதலும் (Centralisation of Credit) வேண்டும். உ) போக்குவரவுத் தொழில்களெல்லாம் அரசாங்க உடைமைகளாக்கப்படுதல் வேண்டும். ஊ) தொழிற்சாலைகள் அரசாங்கத்தின் உடைமைகளாக்கப்படுதலும், அதனால் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களெல்லாம் மக்களிடையே மறுபகிர்வு செய்யப்படுதலும் வேண்டும். எ) எல்லோருக்கும் உழைத்தல் வேண்டுமென்ற கடமை இருத்தல் வேண்டும். ஏ) எல்லாக் குழந்தைகளுக்கும் அரசாங்கத்தால் இலவசக் கல்வி அளிக்கப்படுவதும், தொழிற் சாலைகளில் குழந்தைகள் பணியிலீடுபடுத்தப்படுதல் அறவே ஒழிக்கப்படுவதும் வேண்டும். 'பொதுவுடைமையாளரின் புரட்சியினால் ஆளும் வகுப்பு நடுங்கட்டும்! இதில் தொழிலாளர் இழப்பது தங்களுடைய அடிமை நிலையைத் தவிர வேறொன்றுமில்லை; தொழிலாளர் உலகம் முழுவதையும் பெறுவர். எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களே! ஒன்றுபடுவீர்!' என மார்க்சும், எங்கல்சும் அறைகூவல் விடுத்தனர்.

**மார்க்சியம் செயற்படுதலும், அதன் மதிப்பீடும்:** மார்க்சு கூறிய வேலைத் திட்டங்கள் யாவும் 1936-ஆம் ஆண்டில் இசுடாலினால் வரையப்பட்ட சோவியத்து உருசியா நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் மக்களுடைய உரிமைகளும், கடமைகளும் என்னும் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. சீனப் பொதுவுடைமை அரசியலமைப்புச் சட்டத்திலும் மார்க்சியக் கருத்துகள்

சேர்க்கப்பட்டன. பொதுவாக உலக நாடுகளில் பல, முன்பு தனியார்களுக்கு இருந்த வரம்பற்ற பொருளாதார உரிமைகளை வரம்புபடுத்தி, அரசாங்கமே பொருளாதாரப் பணிகளை மேற்கொண்டு நடத்துதலும், அதன் வாயிலாக வேலை வாய்ப்பையும், சமூகப் பாதுகாப்பையும் அளித்தலும் செய்து பொருளாதாரச் சமத்துவத்தை ஓரளவேனும் நிறுவி வருகின்றன. அவ்வாறு இருந்தாலும் அவற்றில் தொழிலாளர் புரட்சி நடைபெற்றதென்றோ, சமநிலைச் சருவாதிகாரியின் ஆட்சி நடைபெற்றதென்றோ கூறுதல் இயலாது. பாராளுமன்றக் குடியாட்சி முறையிலேயே அமைதியாக, வன்செயற்புரட்சி ஏதுமின்றி, பிரிட்டன், பிரான்சு, செருமனி, அமெரிக்கா, இத்தாலி, சப்பான் முதலிய நாடுகளில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் பெருமளவு நீக்கக்கூடிய தொழிலாளர் நலச்சட்டங்கள் நல்ல முறையில் செயற்படுத்தப்படுகின்றன. மேலும், பொதுவுடைமை நாடுகளில் மார்க்சு கூறிய, 'ஒவ்வொருவரிடமிருந்தும் திறமைக்கேற்ற பணி, ஒவ்வொருவருக்கும் தேவைக்கேற்பப் பொருள்' என்ற விதி கடைப்பிடிக்கப்படும் போது மிகுதியாக உழைக்கக் கூடியவர்கள் அரசாங்கம் விதித்த வரம்புக்குரிய அளவே உழைத்தும், மிகுதியான அளவுப் பொருளைப் பெற்றும் இருக்கக்கூடிய குறைபாடுகள் காணப்பட்டன. அதனை நீக்குதற்குக் கடுமையான கட்டுப்பாடு தேவைப்படும் போது, சருவாதிகாரியின் அதிகாரம் விரும்பத்தகாத கடுமை, உடையதாகிறது. மேலும், ஓரளவேனும் தனியார் உடைமை முறையும், ஓரளவு ஊதிய நோக்கமும் இருந்தால்தான், உற்பத்தி பெருகுதற்கும், வாணிகம் நடைபெறுதற்கும் இயலும் என்பதைப் பொதுவுடைமை நாடுகள் நன்கு நடைமுறையில் உணர்ந்து, அவ்வகையில் தங்களுடைய பொருளாதார முறையில் மாறுதல்களையும், திருத்தங்களையும் கொண்டு வருகின்றன. பா.கூ.

**துணை நூல்கள்:**

**Coker**, F.W., Recent Political Thought, Appleton, 1934.

**Oakeshott**, M., The Social and Contemporary Political Doctrines of Contemporary Europe, Cambridge, 1939.

*மார்கழி*. தமிழ் மாதங்களில் ஒன்பதாம் மாதமாகும். இது ஆங்கில மாதங்களில் திசம்பர் பிற்பகுதியிலும் சனவரி முற்பகுதியிலும் அமையும். இது தட்சிணாயனத்தின் இறுதிமாதமாகும்; ஏமந்த ருதுவில் இம்மாதம் அடங்கும். 'மாதங்களில் நான் மார்கழி' (விபூதியோகம்-35) எனக் கீதையில் கண்ணன் கூறுவது இம்மாதத்தின் புனிதத்தையும் சிறப்பையும் காட்டுவதாக உள்ளது.

குளிர் நிறைந்த இம்மாதத்தில் மேற்கொள்ளப்படும் மார்கழி நோன்பு பழங்காலந் தொட்டே வழங்கி வந்துள்ளது. இந்த மாதத்தில் சிறு பெண்கள் நாள்தோறும் விடியற்காலையில் நீர்த்துறைகளில் சென்று நீராடுவர்.

'திங்கள் மறுநிறை யாதிரை' என்னும் பரிபாடல் (பா - 11) அடி மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளை உணர்த்துவதாக மு. இராகவையங்கார் குறிப்பிடுவார். அம்மார்கழி நீராடல் சங்க இலக்கியங்களில் தைந்நீராடல் எனக் குறிப்பிடப்படுகின்றது (கலி - 59,ஐங். 84). சங்க காலத்தின் 'அம்பாவாடல்' பிற்காலத்தில் பாவை நோன்பாக மாறியது. இந்நோன்பின் போது பாடப்படும் பாடல் பாவைப் பாடல் எனப்பட்டது. இந்நோன்பு இப்போது மார்கழி மாதத்தில் கொண்டாடப் படுகின்றது.

ஆண்டாளின் திருப்பாவை, மாணிக்கவாசகரின் திருவெம்பாவை என்ற இருநூல்களும் இம்மாதத்தில் பாடுதற்குரிய பக்தி நூல்களாக உள்ளன. இம்மாதத்தில் இந்நூற்பாடல்களைப் பசனை என்ற நிலையில் இசையுடன் பாடி வருகின்ற நிலை இன்றும் பல சிற்றூர்களில் காணப்படுகின்றது. சமணருக்குரிய பாவைப் பாடலும் உண்டு.

இம்மார்கழி நோன்பினை மலையாளத்தில் 'திருவாதிரைப் பெருவிழா' என்பர். இம்மாதத்தில் வரும் திருவாதிரைநாள் சிவனுக்குச் சிறப்புடையதாகும். எனவேதான் 'இளைப்பின்றி மார்கழி ஏற்றமதாமே' எனத் திருமூலர் குறிப்பிடுகிறார் (திருமந்திரம். 594). தில்லை நடராசர் தரிசனம், சுசீந்திரம் தேர்த்திருவிழா போன்றன இம்மாதத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளாகும். இம்மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசி திருவரங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படும். ந.ச.


**துணை நூல்கள்:**

**இராகவையங்கார்**, மு., ஆராய்ச்சித் தொகுதி, தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு, தஞ்சாவூர், 1984.

பகவத் கீதை, பாரதியார் உரை, பூம்புகார் பிரசுரம், சென்னை, 13.

*மார்கன், உலூயி என்றி* (**கி.பி. 1818-1881**): இவர் புகழ்பெற்ற அமெரிக்க மானிடவியல் அறிஞர்; உறவுமுறை ஆய்வுகளுக்கு வித்திட்டவர்; ஒருவழிப் படிமலர்ச்சிக் கொள்கையை(Unilinear Evolutionism) வகுத்தவர்களுள் ஒருவர். மார்கன் (Lewis Henry Morgan) நியூயார்க்கு, அரோராவில் கி.பி.1818-இல்

பிறந்தார். யூனியன் கல்லூரியில் கி.பி. 1840-இல் பட்டம் பெற்றார். மீண்டும் அரோராவிற்குச் சென்று திருமணம் செய்துகொண்டு மூன்று குழந்தைகளுக் குத் தந்தையானார். பிறகு நியூயார்க்குச் சட்ட சபையிலும், பேரவையிலும் உறுப்பினராயிருந்தார். மார்கன் தம் வாழ்நாளில் எந்தக் காலத்திலும் கல் வித் துறைகளில் ஆசிரியராகவோ ஆராய்ச்சியாளரா கவோ பணியாற்ற விரும்பவில்லை. தமக்குக் கிடைத்த, கார்னல் பல்கலைக்கழக இனவியல் துறைத்தலைமைப் பதவியைக்கூட ஏற்கமறுத்து விட்டார். இவர், கி.பி. 1862-இல் சட்டப் பயிற்சிலிருந்து விலகி, இறக்கும் வரையிலும் உரோர்ச்செசுடரிலியே வாழ்நாளைக் கழித்தார்.



மார்கன்

இவருடைய இனவியல் ஆராய்ச்சி இவர் கல்லூரிப் படிப்பை முடித்து இளைஞர்கள் சங்கத்தில் சேர்ந்த வுடன் தொடங்கிற்று. அக்காலங்களில் இவர் இராக் குவர் (Iroquois), செனிகர் (Senega) ஆகிய பழங் குடிகளின் வரலாறு, பண்பாடு, உறவுமுறை குறித்த ஆய்வுகளில் ஈடுபடுத்திக் கொண்டார். அந்த ஆய்வின் முடிவுகளை கி.பி.1851—இல் வெளியிட்டார். அவ்வ மையம் மார்கன் அமெரிக்க இந்தியர்களுக்காக ஆங்கி லேயர்களின் நில ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தொடர்ந்து போராடிவந்தார்.

மார்கன் கி.பி. 1856-ஆம் ஆண்டுக்குப் பின்னர், மீண்டும் இனவியல் தொடர்பான ஆய்வுகளில் தீவிர மாய் ஈடுபட்டார். இம்முறை செனிகர் (Senega) பழங்குடி மக்களின் உறவுமுறைச் சொற்கள் (Kinship terms) ஆங்கிலோ-அமெரிக்க முறைகளிலிருந்து மாறு படுவதையும், மெக்சிகன் பகுதிகளில் வாழும் ஒசிப்வே (Ojipway) இந்தியர்களின் சொற்கள் செனிகர் மக் களின் சொற்களைப் போலவே இருப்பதையும் கண்டார்.

மார்கன், இராக்குவர்உறவு முறை ஏனைய அமெ ரிக்க, ஐரோப்பிய முறைகளிலிருந்து மாறுவதைக்கண்டு அதை வகைப்படுத்தும் உறவுமுறை (Classifactory Kinship System) என்றும், அதற்கு மாறாய் இருக்கும் அமெரிக்க, ஐரோப்பிய முறைகள் விளக்க உறவு முறை (Descriptive System) என்றும் பிரித்துக்காட்டி விளக்ினார்.

மார்கன் அதைத் தொடர்ந்து உலகின் பல பகுதி களிலிருந்து உறவுமுறைச் சொற்களைப் பெற்று அவற்றைப் பகுத்தாய்ந்தார். அமெரிக்க, இந்தியர் களின் உறவுமுறை, ஆசிய மக்களின் உறவுமுறை யோடு ஒத்திருந்ததால் செவ்விந்தியர்களின் தோற்றம் (Origin) ஆசியாவோடு தொடர்புடையது என்று நம்பினார். மார்கன் இவ்வகைக் கருத்துகளை 'மானி டக் குடும்பத்தில் இரத்தவழி அமைப்பும் மனவழி அமைப்பும்' (Systems of Consanguinity and Affinity of the Human Family 1870) என்னும் நூலில் குறிப் பிட்டுள்ளார்.

இந்த ஆய்வுகளின் மூலம் வகைப்படுத்தப்பட்ட உறவுமுறை, விளக்க உறவுமுறைக்கு முந்தியதாக இருக்கலாம் என மார்கன் கருதினார். இந்தமாற் றம் ஏன் நிகழ்ந்தது என்ற மார்கனின் சிந்தனை உறவுமுறை, பொருளாதாரம், அரசியல்அமைப்பு ஆகியவற்றுக்கு இடையேயான உறவுகளை ஊகிப்ப தில் முடிந்தது. அதன் முடிவுதான் 'தொனமைச் சமுதாயம்' (Ancient Society) என்னும் இவர் தம் புகழ் பெற்ற நூல்.

அந்நூலில் மார்கன் பண்பாட்டுப் படிமலர்ச்சியினை விளக்குகிறார். பண்பாடுகள் மூன்று நிலைகளில் வளர்ச்சி பெறுகின்றன என மார்கன் விளக்குகிறார். அவை: விலங்குத் தன்மை (Savagery), காட்டு மிராண்டித் தன்மை (Barbarism), நாகரிகம் (Civili-zation). விலங்குத்தன்மை, காட்டுமிராண்டித்தன்மை ஆகிய இரு நிலைகளையும் மேலும் கீழ்நிலை (Lower), மத்திய (Middle), உயர்ந்த (Upper) என்ற பிரிவு களாகப் பிரித்தார். கீழ்நிலை விலங்குத்தன்மை வாழ் வில் வேட்டையாடுதலும், காய், கனிகள் சேகரித் தலும், மத்திய விலங்குத்தன்மையில் மீன் பிடித்தலும் நெருப்பைப் பயன்படுத்தலும், உயர்ந்த விலங்குத் தன்மையில் வில், அம்பு கொண்டு வேட்டையாடு தலும், கீழ்நிலைக் காட்டுமிராண்டி வாழ்வில் மட் பாண்டங்கள் செய்தலும், மத்திய காட்டுமிராண்டி வாழ்வில் கால்நடைகளையும், பயிர்களையும்

வளர்த்தலும், உயர்ந்த காட்டுமிராண்டி வாழ்வில் இரும்பைப் பயன்படுத்தலும் நிகழ்ந்தன. இறுதி நிலையான நாகரிக நிலையில் நெடுங்கணக்கை (Alphabet) எழுதும் முறையையும் பெற்றனர்.

மார்கனின் 'தொன்மைச் சமுதாயம்' எனும் நூல் மார்க்சிய இலக்கியத்தில் முக்கிய இடத்தைப்பெற்றது. மார்க்சும், எங்கெல்சும், மார்கனின் எழுத்துகளால் கவரப்பட்டனர். மார்கன் குறிப்பிட்ட சொத்தின் பங்கு, பண்பாட்டுப் படிமலர்ச்சி, புதிய சமுதாயத்தில் சொத்துடைமை குறித்த கருத்துகள் ஆகியவற்றின் தாக்கம் எங்கெல்சு எழுதிய 'குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்னும் நூலில் உள்ளதைக் காணலாம்.

மார்கன் கி.பி. 1875 – இல் தேசிய அறிவியற் கழகத்தில் (National Academy of Science) உறுப் பினராகவும், கி.பி. 1879 – இல் அமெரிக்க அறிவியல் மேம்பாட்டுக் கழகத்தின் (American Association for Advancement of Science) தலைவராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டார். இவர் கி.பி.1881 – இல் கால மானார்.

பெ.த.

*மார்கென்சுதர்ன் ஆசுகார்*: இவர் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒரு பொருளியல் அறிஞர். மார் கென்சுதர்ன் ஆசுகார் (Oskar Morgenstern) 1902 - 1977-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். இவர் 'பொருளாதார நடவடிக்கை பற் றிய பகுத்தாய்வு' (Economic Activity Analysis) பொருளாதாரப் புள்ளிவிவரங்களின் துல்லியத் 'தன்மை' (On the Accuracy of Economic Observ- ations) ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். மேலும், வான்நியூமன் (Von Neumann) என்ற கணித மேதை யுடன் சேர்ந்து 'ஆட்டக் கோட்பாடும் பொருளா தார நடவடிக்கையும்' (Theory of Games & Econo -mic Behaviour)என்ற நூலையும் இயற்றியுள்ளார். இவர் 'தேவைக் கோட்பாட்டின் மறு ஆலோசனை' (Demand Theory Reconsidered), 'பொருளியலில் கணிதத்தினைப் பயன்படுத்துவதின் வரம்புகள்' (Limits to the Uses of Mathematics in Economics), 'மதிப்பையும் மூலதனத்தையும் பற்றிய பேரா. இக் சின் கருத்துகள்'(Prof. Hicks on Value and Capital) என்ற ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

சான் கேமேனி, செரால்டு தாம்சன் ஆகியவர் களின் உதவியுடன் 'விரிவாக்கம் பெறும் பொருளா தாரத்திற்கு வான் நியூமனின் வளர்ச்சி மாதிரியைப் பொருத்துதல்' (A Generalisation of the Von Neumann Model of an Expanding Economy) என்ற ஆய்வுக் கட்டுரையையும் படைத்துள்ளார். அவை மட்டுமன்றி ஆபிரகாம் வால்டு (Abraham Wald) என்ற பொருளியலறிஞரின் வாழ்க்கை வரலாற்றை யும் இவர் தொகுத்து அளித்துள்ளார். அப்படைப்பு கள் அனைத்திலும் இவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது 'ஆட்டக் கோட்பாடும் பொருளா தார நடவடிக்கையும்' என்ற நூலேஆகும்.

ஒரு பண்டத்தினை வாங்கி நுகரும் ஒருவர், அந் நுகர்வில் பெறுகின்ற பயன்பாட்டினைத் துல்லியமாக அளந்து கூறமுடியுமா என்பதில் ஆல்பிரடு மார்சல், சே.ஆர். இக்சு போன்றவர்களிடையே கருத்து வேறு பாடு இருந்தது. ஆல்பிரடு மார்சல், இக்சு ஆகியோ ரிடையே 'நிச்சயமான சூழ்நிலையில் பயன்பாட்டினை அளக்க முடியுமா' என்பதில் கருத்து வேறுபாடு இருந்தபோது, உறுதியற்ற ஒரு சூழ்நிலையில் தெரிவு களை மேற்கொள்ளும் ஒரு நுகர்வோன் பெறும் பயன்பாட்டினை எப்படி அளக்கலாம் என்பதை வான்நியூமனும், ஆசுகார் மார்கென்சுதானும் விளக்கினர். ஆசுகார் மார்கென்சுதான் தம் ஆட்டக் கோட்பாடு (Game Theory) பற்றிய நூலில் ஆட் டக் கோட்பாட்டினைப் பயன்படுத்தி எப்படிச் சில லோர் முற்றுரிமை அங்காடியில் உள்ள விலை நிருண யச் சிக்கலை விளக்கலாம் என்று விவரித்துள்ளார். அந்நூல் தோன்றிய காலத்தில் ஆட்டக் கோட்பாட் டின் பயன்பாடு, பொருளியலில் உள்ள பல சிக்கலான கருத்துகளைத் தெளிவாக விளக்க உதவும் என்று பல பொருளியலறிஞர்கள் நம்பினார்கள் ஆனால், பிற்காலத்தில் ஆட்டக்கோட்பாடு அந்த அளவுக்குக் கருத்துதவி செய்யவில்லை என்பதையும் அவர்கள் உணர்ந்தனர்.

ஆட்டக் கோட்பாடு என்பது முரண்பட்ட சூழ் நிலையில் முடிவெடுக்கும்போது ஏற்படும் சிக்கலை ஆராயக்கூடிய ஓர் அணுகுமுறை ஆகும். ஆட்டக் கோட்பாடு பொருளியல், தொழில் நிருவாகம், சமூக வியல் உளவியல், அரசியல், போர்இயல் ஆகிய பல துறைகளுக்கும் பொருந்தக் கூடிய ஒன்றாகும். ஒரு வரையொருவர் எதிர்த்து நிற்கும்போது, ஒருவர் எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதன் விளைவு எதிராளி யின் நடவடிக்கையைப் பொறுத்திருக்கும்போது, எவ் வித நடவடிக்கை எடுப்பது பகுத்தறிவுள்ளதாகும் என்ற வினாவுக்கு ஆட்டக் கோட்பாடு விடை தரு கிறது. காண்க: ஆட்டத் தந்திரக் கோட்பாடு.

மார்கென்சுதான் பொருளியலுக்கு அளித்த பங் களிப்புகளில் மிக முக்கியமானது ஆட்டக் கோட் பாட்டின் உதவியால் சில்லோர் முற்றுரிமை அங்காடி இயங்கும் முறையைத் தெளிவாக்கியதே ஆகும்.

எம்.எஸ்.சு.

*மார்சல், சர் சான்:* இந்தியத் தொல்லியல் வரலாற்றின் வளர்ச்சிக்கு முதன்மையாகவும், முன்னோடியாகவும் விளங்கிய மார்சல், சர் சான் (Marshall, Sir John) கி.பி.1876 – ஆம் ஆண்டு இங்கிலாந்தைத் தாயகமாகக் கொண்டு தோன்றியவர். இந்தியாவின் ஆங்கில ஆட்சியாளராக விளங்கிய கர்சான் பிரபு (கி.பி. 1899 – 1905) தொல்லியல் சின்னங்களின் மீது பற்றுக்கொண்டு, அதன் மேம்பாட்டிற்கு அதிகக் கவனம் செலுத்திய நேரத்தில், இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையை ஒரு முறையான அரசுத் துறையாக ஏற்படுத்தி, 26 வயதே நிரம்பிய இளம்வயதினரான மார்சலை 1901-ஆம் ஆண்டு அத்துறையில் முதல் தலைமை இயக்குநராக நியமித்தார். பின்னர் 1904-ஆம் ஆண்டு இவர்கள் இருவரின் முயற்சியால் 'தொல்பொருள் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டம்' கொண்டுவரப்பட்டது. அதன்மூலம் நூற்றுக்கும் அதிகமான தொல்பொருள் சின்னங்கள், அவற்றைச் சார்ந்த இடங்கள் முதலியன பாதுகாக்கப்பட வழிவகுக்கப்பட்டது. மேலும், அதைச் சீராக்கும் பொருட்டு இவர் காலத்தில் நாட்டின் பல இடங்களில் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. மார்சல், தொல்லியல் அகழாய்வுக்குப் பெரும் முதன்மை கொடுத்தார்.

இவர் காலத்தில் பல பௌத்தசமயம் சார்ந்த இடங்களும், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் அகழாய்வு செய்யப்பட்டன. அவை சாரநாத்து, இராசகிரி, சாஞ்சி, சிரவசுத்தி, குசிநகர், நாலந்தா, பாடலிபுத்திரம் (இப்போதைய பாட்னா), தக்சசிலம் போன்றவை ஆகும். அனைத்து அகழாய்வுகளிலுமே சிறப்புமிக்க பழமைச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை சிலைகள், கல்வெட்டுகள், முத்திரைகள், நாணயங்கள். கட்டடங்கள் போன்றவை ஆகும். அவற்றுள் சிறப்பாகப் பாடலிபுத்திர (மெகசுதனிசு குறிப்பிட்டது) மௌரியர்களின் அரண்மனையும், தக்கசிலத்தில் இந்தியப் பார்த்திய நகர நாகரிகத்தின் திட்டமுறையும் கண்டு பிடிக்கப்பட்டன.

இவர் காலத்தில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினால் ஏற்பட்ட மற்றுமொரு மிகப்பெரிய வெற்றி 'சிந்துச் சமவெளி நாகரிகம்' கண்டுபிடிக்கப்பட்டதாகும். மொகஞ்சதாரோ, ஆரப்பா ஆகிய இடங்கள் இவர் காலத்திற்கு முன்பே ஆய்வு செய்யப்பட்டிருந்தாலும், மார்சலின் 1920–1922-ஆம் ஆண்டு வரையான அகழாய்வு சிந்துவெளி நாகரிகத்தை வெளிக் கொணர்ந்து இந்தியத் தொல்லியல் துறைக்குப் புத்துயிர் ஊட்டியது என்றால் அது மிகையானதன்று. மேலும், இவர் சிந்து வெளி நாகரிகத்தின் சிறப்புக் கூறுபாடுகளை மக்களுக்கும், அறிஞர்களுக்கும் தெரிவிக்கும் பொருட்டு 'மொகஞ்சதாரோ, சிந்துவெளி நாகரிகம்' என்ற தலைப்பின்கீழ் மூன்று தொகுதிகளடங்கிய ஆங்கில நூலினை 1931 – ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டார். இவை தவிர, இவர் காலத்தில் தான் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் பழங்கால முதுமக்கள் தாழியும், ஆந்திரதேசத்தில் உள்ள நாகார்ச்சுனகொண்டா என்னுமிடத்தில் பௌத்தச் சின்னங்களும் அகழாய்வு செய்யப்பட்டதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன.

மார்சல் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வின் கீழ், பல அருங்காட்சியகங்களை நிறுவினார். அவற்றுள் ஆக்ரா, புதுதில்லி, தில்லி செங்கோட்டை, தக்கசீலம் முதலிய இடங்களில் உள்ளவை அடங்கும். இவைதவிர, ஆராய்ச்சி அறிஞர்களுக்குப் பயன்படும் வகையில் தில்லியில் மையத் தொல்லியல் நூலகம் ஒன்றையும் ஏற்படுத்தினார். இன்றும் அது சிறந்த நூலகமாக விளங்குகிறது. தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் ஒவ்வொரு ஆண்டின் சிறப்புகளையும் வெளிக்கொணரத் 'தொல்லியல் துறை இயக்குநரின் ஆண்டறிக்கை' என்னும் அச்சிடப்பட்ட படிகள் வெளியிடப்பட்டதும், இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள்' புதுப்பிக்கப்பட்டதும் இவரது காலத்தில்தான்.

இவர் காலத்தில் பெருமளவில் அகழாய்வுகள் நடைபெற்ற போதிலும், அவை முறைப்படியான அகழாய்வுகளாகத் திகழவில்லை என்பது அறிஞர்கள் கருத்து. மேலும், அப்போது புதிய அகழாய்வு முறைகள் கண்டுபிடிக்கப்படாததே அதற்கு முக்கிய காரணமாகும். அதனால், இவர் காலத்தில் அகழாய்வுகள் மூலம் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் வகைப்படுத்தப்படாமலும், சரியான முறையில் காலவரையறை செய்யப்படாமலும் இருந்தன.

மார்சல் 1914-ஆம் ஆண்டு 'வீரத்திருத்தகை (Knight) என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் 1928-ஆம் ஆண்டு தம் தலைமை இயக்குநர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர், 1934-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் நாள் இந்தியாவிலிருந்து தம் தாயகமான இங்கிலாந்து சென்றடைந்தார். அங்கு 1958-ஆம் ஆண்டு உயிர்நீத்தார். பா.ஜெ.

*மார்சல் திட்டம்* 1947-ஆம் ஆண்டில் சார்சு மார்சல் (George C.Marshall) என்னும் அமெரிக்கத் தளபதியினால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கம், இரண்டாம் உலகப்போரின் போது போர்க்களங்களாக மாறிச் சீரழிந்த ஐரோப்பிய நாட்டுப் பொருளாதாரங்களை மீட்சியுறச் செய்வதேயாகும். இத்திட்டம் ஐரோப்பிய பொருளாதாரக்

கூட்டுறவு அமைப்பு (Organisation for European Economic Cooperation - OEEC.) ஏற்பட வழி வகுத்தது. இது பற்றிய தன் கருத்தை முதன்முதலாக மார்சல் 1947-ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள ஆர்வார்டு (Harvard) பல்கலைக்கழகத்தில் நடந்த சிறப்புக் கூட்டமொன்றில் வெளியிட்டார்.



மார்சல்

**ஐரோப்பாவில் இரண்டாம் உலகப்போரின் விளைவுகள்**: செருமனியின் சருவாதிகாரியாகப் பதவியேற்ற இட்லரின் (Hitler) உலகாளும் பேராசையினால் மூண்டது இரண்டாம் உலகப்போர். இட்லரோடு இணைந்து இத்தாலியின் சருவாதிகாரியான முசோலினியும், சப்பானிய மன்னரான இரோகிட்டோவும் சேர்ந்துகொண்டு உலகை மூன்று கூறுகளாக்கிப் பங்கு போட நினைத்தனர். மேற்கில் இங்கிலாந்து, பிரான்சு, கனடா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகள்மீது செருமனியும், இத்தாலியும் போர் தொடுக்கக் கிழக்கில் சீனாவின்மீது சப்பான் தன் முற்றுகையைத் தொடங்கியது. இந்நிலையில் ஒதுங்கியிருந்த அமெரிக்காவையும், அதன் ஒரு முக்கியமான கடற்படைத்தளமான பேர்ல் துறைமுகத்தின் (Pearl Harbour) மீதும் சப்பானியப் போர் விமானங்கள் குண்டு வீசியதைத் தொடர்ந்து அமெரிக்காவும் இங்கிலாந்து, பிரான்சு, கனடா ஆகிய நேச நாடுகளுக்கு ஆதரவாக இரண்டாம் உலகப்போரில் முழு வேகத்தோடு ஈடுபட்டது.

ஏறக்குறைய 1939-ஆம் ஆண்டு முதல் 1944-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இரண்டாம் உலகப்போர், சப்பான்மீது அமெரிக்கா அணுகுண்டுகள் வீசித் தாக்கியதைத் தொடர்ந்து ஒரு முடிவுக்கு வந்தது. அந்த ஐந்து ஆண்டுக் காலப் போரின்போது அப்போரில் ஈடுபட்ட அனைத்து நாடுகளின் பொருளாதாரங்களும் வெகுவாகச்சீரழிந்தன. செருமனியின் பொருளாதாரம் தரைமட்டமானது. ஐரோப்பிய நாடுகளின் தொழிற்சாலைகள், கட்டடங்கள் பாலங்கள், சாலைகள் ஆகிய அனைத்தும் செருமனியின் குண்டுவீச்சுக்கு இலக்காகி அழிந்தன. அதேபோன்று செருமனியில் ஏற்பட்ட போர்க்காலச் சேதம் கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும். அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் பேர்ல் துறைமுகத் தாக்குதலைத் தவிர்த்து வேறு எந்தப் பகுதியும் போர்க்களமாக மாறவில்லை. எனவே, போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பியப் பொருளாதாரங்களைச் சீரமைக்கும் பெரிய பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது. இத்தகைய பொறுப்பே மார்சல் திட்டம் (Marshall Plan) என்னும் வடிவம் பெற்றது.

**திட்டமும் அமிசங்களும்**: இரண்டாம் உலகப்போர் முடிந்தபின்னர் ஐரோப்பாவை 1946 - ஆம் ஆண்டு முதல் 1947 - ஆம் ஆண்டுவரையில் கடுங்குளிர் தாக்கியமையால் ஐரோப்பிய நாடுகளின் வேளாண்மையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அந் நாடுகளில் கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இவ்வாறு பலவகையிலும் சீர்குலைந்துவிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா அவ்வப்போது உணவுப்பொருள்களையும், பல உதவிகளையும் அளித்து வந்தது. ஐரோப்பா மீண்டும் பொருளாதாதார முன்னேற்றங்காண வேண்டுமெனில் அமெரிக்காவின் உதவியை நெறிப்படுத்தி ஒரு கொள்கைக்குள்வகுத்து இன்னும் பன்மடங்கு பெருக்க வேண்டும் என மார்சல் கருதினார். ஐரோப்பாவின் பொருளாதார மீட்சியே அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையின் நோக்கமாக இருத்தல் வேண்டுமென்று உயர்மட்டத்தில் கருதப்பட்டது.

இத்திட்டத்தின் சிறப்புக்கூறுகள் பின்வருவன: 1) அமெரிக்காவின் உதவியைப் பெற விரும்பும் ஐரோப்பிய நாடுகள் தாங்களே தங்களுடைய பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை வகுத்துக் கொண்டு ஒரு முன்னிலை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். 2) இவ்வாறு உதவிபெறும் நாடுகள் தங்களின் திட்டங்களைத் தாங்களே வகுத்துக் கொள்வதுடன் தங்களுடைய நிதி நிருவாகத்தைச் சீர்படுத்துவதற்கும், அமெரிக்காவோடும் பிற ஐரோப்பிய நாடுகளோடும் முழு அளவிலான பொருளாதார ஒத்துழைப்புக்கும் உறுதிமொழி அளிக்கவேண்டும். 3) இத்திட்டத்தின் கீழ் எல்லா ஐரோப்பிய நாடுகளையும் தன் உதவி என்ற குடையின்கீழ்க் கொண்டுவர அமெரிக்கா விரும்பியது.

**சோவியத்து உருசியாவின் எதிர்ப்பு**: மார்சல் திட்டத்தைக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இங்கிலாந்து, பிரான்சு, கனடா ஆகிய நாடுகளும் ஏற்றுக்கொண்டன. உருசியா தொடக்கத்தில் இதற்கு மௌனம் சாதித்தது. மார்சல் திட்டம் பற்றிய கூட்டத்திற்

கான அழைப்பை உருசியாவின் ஆளுகைக்கு உட்பட்ட செக்கோசுலோவாகியாவும், போலந்தும் ஏற்றுக்கொண்டன. ஆனால், உருசியா திடீரென இத்திட்டத்தை எதிர்த்தது மட்டுமன்றித் தன் ஆளுகைக்கு உட்பட்ட பிற பொதுவுடைமை நாடுகளையும் மேற்படித் திட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை. மார்சல் திட்டம் ஐரோப்பா முழுவதையும் அடிமைப்படுத்தக்கூடிய அமெரிக்காவின் ஏகாதிபத்தியக் கொள்கை. எனவே, மார்சல் திட்டத்தில் உருசியா பங்கெடுத்துக் கொள்ளாது என உருசிய அமைச்சர் 'மாலடோவ்' வெளிப்படையாக அறிவித்தார். அதைத்தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரிந்து செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டன.

**பாரிசு மாநாட்டு அறிக்கை**: பாரிசில் 1948 – ஆம் ஆண்டு சூலை மாதம் நடைபெற்ற கூட்டத்தில் 16 ஐரோப்பிய நாடுகளின் பேராளர்கள் கலந்து கொண்டனர். உருசியாவின் ஆளுகைக்கு உட்பட்ட 8 நாடுகள் இதில் கலந்து கொள்ளவில்லை. இக் கூட்டத்தில் மார்சல் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டு மூன்று அமிசங்கள் கொண்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதன்படி 1) ஐரோப்பாவின் தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான இயந்திரங்களைச் சேகரிப்பது பற்றி ஓர் ஆய்வு, 2) உதவிபெறும் ஐரோப்பிய நாடுகள் தங்களின் பொருளாதார மீட்சிக்காகப் பணவியற் கொள்கை, நிதிக்கொள்கை மற்றும் நிருவாக நடவடிக்கைகள் (Monetary Policy, Fiscal Policy and Administrative Measures) ஆகியவற்றிற்கான திட்டங்களை எந்த அளவுக்குச் செயற்படுத்தத் தயாராக உள்ளன என்பது பற்றிய ஓர் அறிக்கை, 3) மேற்படி ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா எந்த அளவுக்கு நிதியுதவி அளிக்கக்கூடும் என்பது பற்றிய ஒரு மதிப்பீடு. அமெரிக்கா 164 மிலியன் தாலர் முதல் 224 மிலியன் தாலர் வரை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குப் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு நிதியுதவி அளிக்கவேண்டியிருக்கும் என்று கருதப்பட்டது.

**மார்சல் திட்டத்தின் செயற்பாடு**: பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மார்சல் திட்டத்திற்குப் பொதுமக்களின் முழுமையான ஆதரவு கிடைத்தது. எனவே, அமெரிக்கா உருசியாவின் எதிர்ப்பைப் புறக்கணித்துச் செயலில் இறங்கியது. அமெரிக்க அதிபர் துருமன் 1947 திசம்பர் 19 – ஆம் நாள் மார்சல் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குரிய தம் அறிக்கைகளை அமெரிக்கக் காங்கிரசுக்கு அனுப்பினார். ஐரோப்பிய மீட்சித் திட்டம் (European Recovery Programme) என்று பின்னர்க் கூறப்பட்ட இம் மார்சல் திட்டத்தில் 170 மிலியன் தாலர் மீட்சிக்காக என்று மதிப்பிடப்பட்டது. மேலும், இத்திட்டம் 1952-ஆம் ஆண்டுவரை செயற்படுத்துவதற்காக என்று திட்டப்பட்டது. பிரான்சு, இத்தாலி, ஆசுத்திரியா ஆகிய நாடுகளுக்கு 1947, 1948-ஆம் ஆண்டுகளில் இடைக்கால உதவியாக 52 மிலியன் தாலர் உதவித்தொகை வழங்க அமெரிக்கக்காங்கிரசு முடிவு செய்தது. பிற ஐரோப்பிய நாடுகளுக்கு அவற்றின் மீட்சித் திட்டங்களுக்காக முதல் 12 மாதங்களுக்கு 53 மிலியன் தாலர்கள் ஒதுக்கப்பட்டன. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு, ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு நிருவாகம் (Organisation for European Economic Cooperation-OEEC) என்னும் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் உதவி பெறும் ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய வாணிகத் தடைகளை நீக்கி உள்நாட்டுச் செலாவணியை நிலைப்படுத்த வேண்டும் என்பது எதிர்பார்க்கப்பட்டது.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் மார்சல் திட்டத்தில் முழுமையாகப் பங்கேற்றுப் பொருளாதார மறுமலர்ச்சி அடைந்தன. இங்கிலாந்து, பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய நாடுகளிலும், பிற ஐரோப்பிய நாடுகளிலும் மிக விரைவான பொருளாதார மீட்சிஏற்பட்டது. இது மார்சல் மேற்கொண்ட அணுகு முறை சரியானது என்றும், உருசிய அமைச்சர் மாலடோவின் அணுகுமுறை தவறு என்றும் நிறுவியது. இதனால், ஏற்பட்ட மற்றொரு முக்கிய விளைவு மேற்கு ஐரோப்பாவில் பரவத்தொடங்கிய பொதுவுடைமைச் சக்திகளை இது மறையும்படி செய்ததாகும். மேலும், இத்திட்டத்தின் மூலமாக அமெரிக்காமேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பிற்கும் வழிவகுத்தது. அ.வி.

**துணை நூல்கள்:**


**Harry R., Price**, The Marshall Plan and Its Meaning, Cornell University Press, Ithaca, N.Y., 1955.

**Howard S., Ellis**, The Economics of Freedom, Harper & Row, New York, 1950.

**Seymour E., Harris**, The European Recovery Program, Harvard University Press, Cambridge, 1948.

*மார்சல் தீவுகள்*, பசிபிக்கு மாக்கடலின் நடுப் பகுதியில் உள்ள தீவுக்கூட்டம். மார்சல் (Marshall) தீவுகள், அமெரிக்கப் பொறுப்பாட்சிக்கு உட்பட்ட ஓர் ஆட்சித் துறை மாவட்டமாக (U.S. Trust Territory) அமைந்துள்ளன. இவை 1125 கி.மீ. பரப்பளவுடை

யன. இவற்றில் இருபெரும் பிரிவுகள் காணப்படும். கிழக்குப் பிரிவு இரதக்குத் தொடர் (Ratak Chain) என்றும், மேற்குப் பிரிவு இராலிக்குத் தொடர் (Ralik Chain) என்றும் சொல்லப்படும். இவற்றில் 34 பவழத் தீவுகளும், 900 கடல் நீரடி மணல்மேடுகளும், 181.3 ச.கி.மீ. நிலப்பரப்பும் அடங்கியுள்ளன. கொப்பரை, சருக்கரை, காப்பி முதலியன இத்தீவுகளிலிருந்து மிகுதியாக ஏற்றுமதியாகின்றன.




மார்சல் தீவுகள்

**வரலாறு:** இத்தீவுகளில் சிலவற்றை, கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இசுபானிய (Spanish) ஆய்வுப் பயணிகள் கண்டுபிடித்தனர். மார்சல் என்ற ஓர் ஆங்கிலேயக் கப்பல்தலைவன் கி.பி 1788-இல் இத்தீவுகளுக்குச் சென்றான். அவன்பெயரே இத்தீவுக் கூட்டத்திற்கும் வைக்கப்பட்டது. உருசியப் பயணிகள், ஆதாம் சோகன்வான் குரூசென்சுடர்ன் (Adam Johann Von Krusenstern) என்பவன் தலைமையின் கீழ் கி.பி. 1803-இல் இங்கு ஆய்வுப் பயணம் செய்தனர். பிறகு கி.பி.1815, 1823-ஆம் ஆண்டுகளில் இங்கு ஆய்வு செய்தவன் உருசிய ஆட்டோ வான் கோட்சிபூ (Otto Von Kotzebwe) ஆவன். செருமனி கி.பி. 1885-இல் இத்தீவுகளில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்திற்று. ஆனால், தீவுகளின் ஆட்சிமுறை, தனிப்பட்ட செருமானிய, ஆசுத்திரேலியத் தொழில் தலைவர்கள் வசமே இருந்து வந்தது. சப்பான் 1914-இல் மார்சல் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டது. முதலாம் உலகப் போருக்குப் பிறகு 1920 முதல் பன்னாட்டுச் சங்கத்தின் பேராண்மைக்கு உட்பட்ட சப்பானியத் தீவுகளாக இவை விளங்கின. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் (1943-1944 ஆண்டுகளில்) அமெரிக்கா இத்தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டது. போர் முடிந்தபின், 1947-இல் அமெரிக்கப் பொறுப்பாட்சிப் பிரதேசமான பசிபிக்குத் தீவுகளின் வரிசையில் மார்சல் தீவுகளும் இணைக்கப்பட்டன. தெ.பா.

**மார்சலின் பொருளாதாரம்:** மார்சல் (பிறப்பு கி.பி. 1842) கணிதம் பயின்று கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் ஏழு ஆண்டுகள் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர்ப் பொருளியலைத் தெளிவுறக் கற்றுப் பொருளியல் பேராசிரியர் ஆனார். தொழில்களின் பொருளாதாரம் (கி.பி. 1878), பொருளியல் கோட்பாடுகள் (கி.பி. 1890), தொழிலும் வாணிகமும் (1919), பணம் கடன் வாணிகம் (1923) போன்றவை இவர் படைப்புகளில் சிறந்தவையாகும்.

மார்சலின் பொருளியல் கோட்பாடுகள் என்னும் நூலில் பொருளியல் பற்றிய இவர் கருத்துகள் காணப்படுகின்றன. அந்நூலை ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பொருளியலுக்கு விளக்கம் கொடுத்துள்ளார்

**இலக்கணமும் விதிகளும்:** மனிதனின் அன்றாட அங்காடி வாழ்க்கையைப் பற்றிப் பொருளியல் பேசுகிறது. நல்வாழ்விற்குத் தேவையான பொருட்களைப் பெறுதல், பயன்படுத்துதல் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடைய தனிமனிதன் சமுதாயம் ஆகியவற்றின் நடவடிக்கைகள் பற்றி ஆய்வு செய்கிறது. எனவே, பொருளியல் மனித நலம், செல்வம் ஆகிய இரண்டையும் பற்றி ஆய்வு செய்கிறது என்கிறார்.

மார்சல் தம் இந்த ஆய்வில் பகுத்தாய்வு, தொகுத்தாய்வு ஆகிய இரு முறைகளையும் பயன்படுத்தியுள்ளார்.

**விருப்பம்:** அனைத்துப் பொருளாதாரச் செயல்களின் தொடக்கம், முடிவு யாவும் நுகர்வே எனக் கூறுவதன் மூலம் நுகர்வின் முக்கியத்துவத்தை விளக்குகிறார்.

**நுகர்வோர் உபரி:** ஒரு பொருளை வாங்காமல் செல்வதைக் காட்டிலும் அந்தப் பொருளுக்கு என்ன விலை கொடுக்க நுகர்வோர் ஆயத்தமாக இருக்கிறாரோ அதற்கும் அங்காடியில் அப்பொருளுக்கு உண்மையில் அவர் செலுத்துகின்ற விலைக்கும் உள்ள வேறுபாடே நுகர்வோர் உபரி (Consumer's Surplus) ஆகும்.

**தேவை நெகிழ்ச்சி:** ஒரு பொருளின் விலையில் ஏற்படும் மாற்றம், அந்தப் பொருளின் தேவையில் எந்த அளவு மாற்றத்தினை ஏற்படுத்துகிறது என்பதையே தேவை நெகிழ்ச்சி என்பர். 'ஒரு குறிப்பிட்ட விலை வீழ்ச்சியினால் தேவையின் அளவு மிகுதியாகவோ, குறைவாகவோ கூடுகிறதென்பதையும் ஒரு குறிப்பிட்ட விலை ஏற்றத்தினால் தேவையின் அளவு மிகுதியாகவோ குறைவாகவோ குறைகிறதென்பதையும் ஒட்டி அங்காடியில் தேவை நெகிழ்ச்சி (Elasticity of Demand) அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கிறது' என்பது மார்சலின் கருத்தாகும்.

முற்றிலும் நெகிழ்ச்சியுடையது, அதிக நெகிழ்ச்சியுடையது, நெகிழ்ச்சியுடையது, குறைந்த நெகிழ்ச்சியுடையது, நெகிழ்ச்சியற்றது எனத் தேவை நெகிழ்ச்சியை ஐந்து வகைகளாகப் பிரிக்கின்றார். தேவை நெகிழ்ச்சியை விலை மட்டம், பொருளின் தன்மை, பயன், பதிலீடு, காலம் போன்றகாரணிகள் நிருணயிக்கின்றன என்கிறார்.

**குறைந்து செல் விளைவு விதி:** சாகுபடி முறை மாறாமல் இருக்கும்போது நிலத்தில் ஈடுபடுத்தப்படும் உழைப்பும் மூலதனமும் மிக மிக, மொத்த உற்பத்தி குறைந்த வீதத்திலேயே மிகும் என்பதையே குறைந்து செல் விளைவு விதி (Law of Deminishing Returns) என்கிறார். இதில் இறுதி நிலை உற்பத்தி, இறுதி நிலை அலகு ஆகியவற்றைப் பயன்படுத்துகிறார்.

**மக்கள் தொகை:** நலமான குழந்தைகளையுடைய பெரிய குடும்பங்களின் மூலம் நாடு நன்மை பெறுகிறது என்கிறார். ஒரு நாட்டின் மக்கள் தொகை இயற்கையின் மூலமும், குடியேற்றத்தின் மூலமும் மிகுகின்றது என்று கூறுகிறார்.

**வேலைப் பகுப்பு முறை:** இயந்திரங்களின் முன்னேற்றம் வேலைப் பகுப்பு முறைக்கு வாய்ப்பளிக்கிறது. ஒரு பொருளுக்குத் தேவை அதிகரித்து அங்காடி விரிவடைவதே வேலைப்பகுப்பு முறைக்குக் (Division of Labour) காரணமாகும். இதனால், மனித சக்தி, இயந்திரம் இவற்றின் திறமை நன்கு பயன்படுத்தப்படுகின்றது

**பேராளர் நிறுவனம்:** ஓரளவிற்கு நீண்ட காலம் இருக்கக் கூடியதும் வெற்றிபெறக் கூடியதும், இயல்பான திறமையுடையதும், அகப்புறச் சிக்கனங்களை அடைவதும், இயல்பான சூழ்நிலையில் செயற்படக் கூடியதுமான நிறுவனத்தையே பேராளர் நிறுவனம் (Representative Firm) என்பர். இந்த நிறுவனத்தின் உற்பத்திச் செலவு, பொருட்களின் அளிப்பு விலையை நிருணயிக்கிறது.

**மதிப்புக் கோட்பாடு:** மார்சலின் மதிப்புக் கோட்பாட்டினைத் (Value Theory) தேவை அளிப்பு மதிப்புக் கோட்பாடு என்கின்றனர். தேவையைப் பயன்பாடும், அளிப்பை உற்பத்திச் செலவும் நிருணயிக்கின்றன. இவை இரண்டும் சமமாகும் போது சமநிலை நிருணயிக்கப்படுகிறது.

விலை நிருணயத்தில் கால அமிசம் முக்கியம் வாய்ந்தது என்கிறார். காலத்தை மிகக் குறுகிய காலம், குறுகியகாலம், நீண்டகாலம், பன்னெடுங் காலம் என வேறுபடுத்தி அதற்கேற்ப விலையும் வேறுபடும் என்று கூறுகிறார்.

**வளரா அரசு:** நுகர்வு, உற்பத்தி, மாற்று, பகிர்வு போன்ற நிலைகள் மாறாமல் இருக்கின்ற நாட்டினை வளரா அரசு (Stationary State) என்பர். இங்கு மக்களின் சராசரி ஆயுட்காலம் மாறாமல் இருக்கும். இதனால், கால அமிசம் அச்சமுதாயத்தில் விலையைப் பாதிப்பதில்லை.

**பதிலீட்டு விதி:** மிகக் குறைந்த செலவில் அதிக அளவு பொருட்களை உற்பத்தி செய்ய ஒவ்வொரு உற்பத்தியாளரும் உற்பத்திக் காரணிகளை ஒன்றுக்கொன்று பதிலீடு (Substitution) செய்கிறார். அவ்வாறு செய்யும் போது குறைந்த விலையில் கிடைக்கும் உற்பத்திக் காரணிகளுக்காகப் பயன்படுத்துகிறார். ஆனால், தொழிற்சங்கங்கள், பழக்க வழக்கங்கள் போன்றவை இதற்குத் தடையாக உள்ளன என்கிறார்.

**முற்றுரிமை:** மிக அதிக அளவு நிகர வருவாய் பெறுவதற்காக முற்றுரிமையாளர் பொருளின் அளிப்பைத் தேவைக்கேற்ப மாற்றுவார். முற்றுரிமை (Monopoly) விலை பிற அங்காடி விலைகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என்ற கருத்து மக்களிடையே காணப்படுகிறது. ஆனால், அக்கருத்துத் தவறானது என்று மார்சல் கூறுகிறார். ஒரு பொருளைப் பலர் உற்பத்தி செய்யும்போது போட்டியின் காரணமாக விற்பனைக்கு விளம்பரச் செலவு மிகுகிறது. அதனால் விலை மிகும். முற்றுரிமையாளர் பேரளவில் பொருளை உற்பத்தி செய்வதால் அதிகப்புறச் சிக்கனங்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. அதனால் செலவு குறையும். எனவே, முற்றுரிமை விலை பிற அங்காடி விலைகளைவிடக் குறைவாகவே இருக்கும் என மார்சல் கூறுகிறார்.

**தேசியவருவாய்ப் பகிர்வு:** நிகர தேசிய வருவாய் உற்பத்திக் காரணிகளிடையே பகிர்ந்தளிக்கப்படுவதையே தேசிய வருவாய்ப் பகிர்வு என்கிறார். இங்கும் இவர் தேவை அளிப்புக் கோட்பாட்டினைப் பயன்படுத்துகிறார். உற்பத்திக் காரணிகளின் தேவையை அவற்றின் இறுதி நிலை உற்பத்தித் திறனும், அளிப்பை இறுதி நிலைச் செலவும் நிருணயிக்கின்றன. தேசிய வருவாய் அதிகமாகும் போது உற்பத்திக் காரணிகளின் பங்கும் அதிகமாகிறது.

உழைப்பின் திறனை வாழ்க்கைத் தரம் நிருணயிப்பதால், வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் கூலி நிருணயிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். காத்திருப்பதற்கான ஊதியமே வட்டி என்றும், அது மூலதனத்தின் தேவை, அளிப்பு ஆகியவற்றால் நிருணயிக்கப்படுகிறது என்றும் கூறுகிறார்.

பொருட்களின் விலை மாற்றத்தினாலும்

தொழில் முயல்வோரின் திறமை வேறுபாட்டினாலும் ஊதியம் கிடைக்கிறது என மார்சல் குறிப்பிடுகிறார்.

**போலி வாரம்:** குறுகிய காலத்தில் நிலத்தைப் போலவே பிற உற்பத்திக் காரணிகளின் அளிப்பும் நிலையானதாக இருப்பதால் தேவை கூடும்போது அவை கூடுதல் வருவாய் பெறுகின்றன. இந்தக் கூடுதல் வருவாயினை மார்சல் போலி வாரம் (Quasi -rent) என்கிறார்.

**மதிப்பீடு**. முதன் முதலில் அரசியல் பொருளாதாரத்தைப் 'பொருளாதாரம்' எனக் குறிப்பிட்ட பெருமை மார்சலையே சேரும். புதிய தொன்மைப் பள்ளியை நிறுவியவரும் இவரே. இக்கால வரைபடப் பொருளாதாரத்தை நிறுவியவர் மார்சல் எனக் கீன்சு கூறுகிறார். இவர், தம் நூலில் பேரியல் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் தரவில்லை. தொழில் முயல்வோர் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இவர் கருத்துகள் அனைத்தும் பகுதிச் சமநிலையையே விளக்குகின்றன. இருப்பினும் மார்சலின் பொருளியல் கருத்துகள் பொருளாதார வரலாற்றில் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகவே உள்ளன. சு.ப.

*மார்சிலியோ* **(கி.பி.1275 - 1343)**, இடைக்கால அரசியல் ஞானிகளுள் ஒருவராவர். படுவா எனும் ஊரில் கி.பி. 1275-ஆம் ஆண்டு பிறந்த இவர் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டின் சிந்தனையாளர்களுள் தலைசிறந்தவரானார். பாரிசுப் பல்கலைக்கழகத்தில் தத்துவம், மருத்துவம், இறையியல் எனப் பற்பல கல்வி பயின்றார். 'திபன்சர் பாசிசு' (Defensor Pacis) எனும் புத்தகத்தை கி.பி.1324-ஆம் ஆண்டு எழுதிப் பெரும் புகழ் எய்தினார். இவர் கி.பி.1343 -ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். பேரரசரின் ஆதிக்கத்தை (Supremacy) ஆதரித்தும், போப்பின் ஆதிக்கத்தை (Papal Supremacy) எதிர்த்தும் இவர் செயற்பட்டதால் போப்பின் கோபத்திற்கும், இழிமொழிக்கும் ஆளானார். மார்சிலியோவின் கருத்துகள் அப்போதைய திருச்சபையின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு எதிராக இருந்தன. இத்தாலியில் தொடர்ந்து ஏற்பட்ட போருக்குப் போப்பின் அரசியல் தலையீட்டைத் தலையாய காரணமாக எண்ணினார். போப்பைவிடத் திருச்சபை தான் மிகவும் இன்றியமையாதது என்றார். மேலும், திருச்சபை அதிகாரங்கள் அனைத்தையும் அரசின் வழியாகத்தான் பெறுதல் வேண்டும் என்றும், அரசானது, சமயம் சார்ந்த அனைத்து நியமனங்களையும் செய்தல் வேண்டும் என்றும், மதகுருக்களைக் கொண்ட ஒரு பொதுக்குழு போப்பைத் தண்டிக்கவும், பதவிநீக்கம் செய்யவும் உரிமை பெற்றிருத்தல் வேண்டும் என்றும் கூறினார்.

மார்சிலியோ, அரசு குறித்துக் கூறும்போது மனிதன் கூட்டு வாழ்க்கை வாழவும், சமுதாயத்தில் காணப்படும் சீர்கேடுகளைக் களையவும், அரசு தேவைப்படுகிறது எனவும், மக்களின் நல்வாழ்விற்கு நாடு வழி செய்கிறது எனவும், திருச்சபை உண்மையில் நாட்டின் ஓர் அங்கமே எனவும் கூறினார். வாழ்க்கை வளம்பெற, மக்கள் பொது நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் இன்றியமையாதது என்றார். இவர், மக்கள்இறைமையில் (Popular Sovereignty) பெரிதும் நம்பிக்கை உடையவர். அரசாள்பவர் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்படுவராதலால் அவர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் குடிமக்களுக்குப் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும் என்றார். சமயச் சார்பற்ற பொறுப்புள்ள அரசு அமைய உடன்பாடும், அமைதியும் முதலில் அமைய வேண்டும். என்றார்.

தாமசு அக்வினாசின் இயற்கைச் சட்டத்தை இவர் முழுமையாக ஒப்புக் கொள்ளவில்லை ஆயினும், மனிதச்சட்டமே உயர்ந்தது என்றார். ஏனெனில், அதுவே மனிதச் சிந்தனையிலிருந்து உதித்ததாகும். சட்டத்தைக் குறித்து, மார்சிலியோ கூறுமிடத்து, சட்டம் அறிவுச் செறிவுள்ள மக்களைக் கொண்ட குழுவினால் விவாதிக்கப்பட்டு, பரிசீலித்துப் பின்னர் இயற்றப்பட வேண்டியதாகும். அவ்வாறு இயற்றப்பட்ட சட்டம், மக்கள் நலனில் அக்கறைகொண்டதாக இருத்தல் வேண்டும். அரசானது நல்ல திட்டத்தையும், ஒழுக்க நெறியையும் கொண்டிருத்தல் இன்றியமையாதது. தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தவறிழைக்கும் அரசை இடித்துரைக்கும் திறனையும், பொது விருப்பத்தை அடைவதற்கு வழிகோலும் திறனையும் பெற்றிருத்தல் வேண்டும். அனைவரும் மக்கள் விருப்பத்திற்கு (Popular Will) உட்பட்டுச் செயலாற்றுதல் இன்றியமையாததாகும். குடியரசுக் கொள்கைகளை அறிந்து கொள்ளவும், மக்கள் தேர்வாளரது அரசை நிலைநாட்டவும், ஒரு பரந்த, சீரிய கல்விமுறை தேவையாகும். அவ்வாறு பல அரிய கருத்துகளை மக்கள் முன் வைத்து இடைக்கால அரசியல் தத்துவத்தில் பெரும் புகழ் எய்தினார் மார்சிலியோ.

ஜே.ர.

*மார்சுட்டன் மூர் போர்*: வடஇங்கிலாந்தில் யார்க்கு நகரத்திற்கு மேற்கே 11 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் கரம்பு நிலத்தில் உள்ள இடம் மார்சுட்டன் மூர் எனப்படும். இங்கிலாந்தில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரின்போது இப்போர்க்களத்தில் அரசுப்படைகளுக்கும் பாராளுமன்றத்தாரின் படைகளுக்கும் இடையில் கி.பி.1664-இல் கடும்போர்

நடைபெற்றது. இதனை மார்சுட்டன் மூர் போர் (Morston Moor Battle) எனக் கூறுவர். இப்போரில் பாராளுமன்றத்தினரின் படை வெற்றிபெற்றது. அரசுப்படைகளுக்கு ஏற்பட்ட இம் முதல் பெருந் தோல்வியில் அரசுப்படைகளுக்குப்பெரும் ஆள்சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டன.

மார்சுட்டனில் இறுதிப்போர் நடைபெறுவதற்கு முன்னர், இலெவன் கோமகனின் (Earl of Leven) தலைமையிலான இசுகாட்டுப் படையும் (Scot Army) மான் செசுடர் கோமகன் தலைமையிலான (Earl of Manchester) கிழக்கு ஆங்கிலிகன் படையும் பேர்பாக்சுப் பிரபுவின் (Lord Fairfox) தலைமையிலான யார்க்சயர் படையும் கூட்டுச் சேர்ந்து யார்க்கு நகரை முற்றுகையிட்டன. யார்க்கு நகரைப் பாதுகாத்து வந்த அரசர் கட்சிப்படைக்கு நியூகேசிலின் கோமான் (Marquis of New Castle) தலைமைப் பதவியேற்றார். முதலாம் சார்லசு மன்னர் இளவரசர் உரூபர்ட்டுக்கு, யார்க்கு நகரை முற்றுகையினின்றும் காக்க வேண்டுமென்று ஆணையிட்டார். பாராளுமன்றத்தாரின் படைத்தலைவர்கள் கி.பி.1644-இல் தம் முற்றுகையைக் கைவிட்டனர். இளவரசர் உரூபர்ட்டு வடகிழக்கில் முன்னேறிச்சென்று, பாராளுமன்றப் படையினரை வென்று யார்க்கு நகரை விடுவித்தார். அடுத்த நாள் காலையில் எதிரிகளை முற்றிலும் முறியடித்து விரட்டப் போவதாக நியூகேசிலுக்கு உரூபர்ட்டு (Rupert) செய்தி அனுப்பினார்.

உரூபர்ட்டு அனுப்பிய செய்தியைக் கேள்விப்பட்ட பாராளுமன்றப் படையினர் யார்க்சயர் நகரத்திலிருந்து வடமேற்கே 12 கி.மீ. தொலைவிலுள்ள இலாங் மார்சுட்டனுக்கு மேற்கே 2 கி.மீ. தொலைவிலுள்ள சமவெளியில் அணிவகுத்து நின்றனர். போர்க்களத்தின் இடப் பக்கம் ஆலிவர் கிராம்வெல் தலைமையிலான குதிரைப்படையும் நடுவில் இசுகாட்லாந்தியரின் காலாட் படையும் ஏனைய படைகளும் அணிவகுத்து நின்றன. வலப்புறம் யார்க்சயர், இசுகாட்லாந்து குதிரைப்படைகள் சர் தாமசு பேர்பாக்சு தலைமையில் நின்றன. காற்றின் வீச்சும் நில அமைப்பும் அவர்கட்கு ஒருவகையில் ஆதரவாக அமைந்தன. பாராளுமன்றத்தாரின் பெரும்படை 24,000 வீரர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இளவரசர் உரூபர்ட்டு தலைமையில் 22,000 வீரர்கள் அரசர் கட்சிச் சார்பில் அணிவகுத்து நின்றனர்.

உரூபர்ட்டு, சார்சு கோரிங்கு (George Koring) ஆகிய இரு தலைவர்களும் தொடக்கத்திலே முனைப்புடன் போர்புரிந்து இலெவன், பேர்பாக்சு ஆகியோரின் தலைமையிலான படைப்பிரிவுகளைப் பின்வாங்கச் செய்தனர். முன்னேறிய அரசுக் கட்சிப் படையினர் வெற்றி பெற்றுவிட்டதாகவே எண்ணினர். அந்நிலையில் வீரர் கிராம்வெல் முழுமூச்சுடனும் முனைப்புடனும் பெருவீரங்காட்டிப் போர் புரிந்து அரசுக்கட்சிப் படையினரைத் தோற்கடித்தார். பாராளுமன்றக் கட்சிப் படைகளுக்கே இறுதி வெற்றி கிட்டியது.

இப்போரில் அரசக்கட்சிப் படையினருக்கு பெரும் இழப்பீடு ஏற்பட்டது. அவர்கள் 4000 வீரர்களை இழந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பீரங்கிகள் பலவற்றைக் கிராம்வெல் படையினர் கைப்பற்றிக் கொண்டனர். இப்போரின் விளைவாக இங்கிலாந்தின் வடக்குப்பகுதி பாராளுமன்றத்தாரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. ம.நா.

**மார்சேல்**, பிரான்சு நாட்டின் மிக முக்கியமான துறைமுக நகரும், பாரிசு நகரத்தினை அடுத்த இரண்டாம் பெருநகரமும் ஆகும். மத்திய தரைக் கடலின் அரசி என்னும் புகழுரையையும், இத்துறைமுகம் பெற்றுள்ளது. பிரான்சு நாட்டின் வரலாற்றில், மார்சே அல்லது மார்சேல் (Marseilles) சிறப்பான தோர் இடத்தைப் பெற்றுள்ளது.

**அமைவிடம்:** போச்சசு-டு-ரோன் என்னும் மாவட்டத்தின் தலைநகரான மார்சேல், உரோன் (Rhone) ஆற்றின் வடகிழக்கே 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

குவானே ஆற்றுப் (Huveaune) பள்ளத்தாக்கின் முகத்துவாரத்தில் அலைபோல் அடுக்கி அமைந்த மலைகளின் நடுவே மார்சேல் அமைந்துள்ளது. செருமானியர்களின் தாக்குதலால் 1943-இல் அடியோடு அழிக்கப்பட்டபோதும் புதியதாக மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நகரின் உயரமான பகுதியில் நாட்டர் டேம்(Basilica of Notre Dame de-la-Garde) என்னும் புனிதப் பேராலயம் உள்ளது. அதன் கோபுரத்தில் உள்ள பொன்னாலான கன்னிமேரி சிலை மாலுமிகளுக்குக் கலங்கரை விளக்காகவும், நீரிலும் நிலத்திலும் பயணம் செய்பவர்களுக்குப் பெருந் தொலைவில் காணப்படக்கூடியதாகவும் அமைந்துள்ளது. அப்பேராலயம் பெரும் புகழ் பெற்றது.

பண்டைச் சிறப்பு மிக்க நாகரிகம் மார்சேல் நகர் வழியாகத்தான் மேற்கு ஐரோப்பாவை அடைந்தது. அயோனிய கிரேக்கர்கள் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் அந்நகர்ப் பகுதியில் குடியேறி அதனை மச்சிலியா (Massilia) என்று குறிப்பிட்டனர். மத்தியதரைக் கடல் பகுதியில் குடியேற்றங்களை அமைத்து 5

நூற்றாண்டுகளாகப் பெரும் புகழ் படைத்தது மச்சிலியா. மார்சேல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலங்களில் ஒரு சுதந்திரமான நகராட்சியாக மாறியதால் சிலுவைப் போர்களில் பெரும் பங்கேற்றுக் கீழ்த்திசை நாடுகளுடன் வாணிக உறவைப் புதுப்பித்துக் கொள்ளத்தொடங்கிற்று. அதன் மூலம் மையக் கிழக்குப் பகுதிகளில் இன்றைய பிரான்சின் செல்வாக்கு அமைந்திட அடிகோலிற்று.

மார்சேல், பிராவென்சு (Provence) பிரபுக்களின் ஆட்சிக்குள் கி.பி. 1257-இல் கொண்டு வரப்பட்டது. அது கி.பி. 1482-ஆம் ஆண்டில் பிரெஞ்சு மன்னர்களின் ஆட்சிக்குள் அடங்கிற்று. அக்காலத்தில் மார்சேல் பிரான்சின் முதன்மையான வாணிக ஏற்றுமதித் தலமாகப் பெரும்புகழ் பெற்றது. பிரான்சில் நடைபெற்ற உள்நாட்டுப் போர், சமயப் போர்கள் (கி.பி. 1562-1590) போன்றவற்றால் சீரழிந்த போதிலும் இது மீண்டும் எழுச்சி பெற்று, கி.பி. 1669-இல் ஒரு சுதந்திரமான தடைகளற்ற துறைமுகமாய் வளர்ந்தது. மேற்கிந்தியத் தீவுகளில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாணிகச் சந்தை அமைப்பு, வட ஆப்பிரிக்காவில் பிரான்சுக் குடியேற்றங்கள் நிறுவுதல், கி.பி. 1869-இல் சூயசுக்கால்வாய் திறக்கப்படல் போன்றவற்றால் மார்சேல் துறைமுகத்தில் வாணிகம் வளரஅது 'மத்தியதரைக் கடலின் அரசி' எனப் புகழ் பெற்றது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நகர் அமைப்புத் திட்டங்களாலும், புதிய சாலை அமைப்புகளாலும் இந் நகர் புதுத் தோற்றத்துடன் பொலிவு பெற்று விளங்குகின்றது.

**பொருளாதாரச் சிறப்பு:** மார்சேல் ஒரு பெரும் தொழில் மையமாகவும் துறைமுக நகராகவும் வளர்ந்து வருகின்றது. இங்குள்ள பரம்பரைத் தொழில்களோடு நெகிழி, மின் வேதிமத் தொடர்பான தொழில்களும் பெருகிவருகின்றன. மார்சேல் மாவட்டம் 60,000 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மக்கள் தங்களின் முக்கிய வேளாண்மைத் தொழிலைக் கைவிட்டு ஆலைத் தொழிலை மேற்கொண்டவர்களாக மாறி வருகின்றனர். இங்கு, கி.பி. 1599-இல் நிறுவப்பட்ட வணிகச் சங்கம் (Chamber of Commerce) இந் நகரின் பொருளியல் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகிறது. குறிப்பாக 1944-இல் மார்சேல் துறைமுகம் அடியோடு அழிக்கப்பட்டபோது, அச்சங்கம் உடனே மீட்டுருவாக்கப் பணியில் ஈடுபட்டு ஒரு சில ஆண்டுகளுக்குள் அனைத்து வகை புதிய முன்னேற்றங்களும், எந்திர சாதனங்களும் அமைக்கப்பட்டதாக இந்நகரை மாற்றியமைத்தது. உரோன், இரைன் ஆறுகளின் மூலம் மார்சேல் நகரம் மைய ஐரோப்பாவுடன் இணைக்கப்படுகிறது.

இன்று எடாங்க் – டி – பெர்ரோ என்ற பாறை எண்ணெய்த் தொழிற்சாலையையும் புதிய இலெவேரா கழிமுகப் பகுதியையும் இணைத்து மார்சேல் பிரான்சின் ஒரு பெரிய கடற்கரைத் துறைமுக நகரமாய் மாறியுள்ளது. இத்துறைமுகத்திற்கு 1000 ஏக்கர் நீர்ப்பரப்பும், 27 கி.மீ. நீளமுள்ள கப்பல் துறையும், 420 ஏக்கர் பரப்புள்ள சரக்குகளை ஏற்றி இறக்க உதவிடும் மேடையும்,80 கி.மீ. நீளமுள்ள இருப்புப் பாதை அமைப்பும் உள்ளன. ஆண்டொன்றுக்கு 20 மில்லியன் கண்டி சரக்குகளை இத் துறைமுகம் ஏற்றுமதி இறக்குமதி செய்கிறது. இங்கு ஆண்டிற்கு 17,000க்கு மேற்பட்ட கப்பல்கள் வந்து போகின்றன.

**பண்பாட்டு அமிசங்கள்:** மார்சேல் நகரில் ஒரு பேராயர் (Archbishop) உள்ளார். இங்கே பிரான்சின் மிகப்பழமையான ஒரு மாவட்ட நீதிமன்றமும், வணிக நீதிமன்றமும் உள்ளன. ஐக்சு – மார்சேல் (Aix – Marseilles)பல்கலைக்கழகத்தின் இரு பிரிவுகள் இங்கே இயங்குகின்றன. அறிவியல், மருத்துவ இயல், மருந்தியல் போன்ற துறைகள் இங்கே சிறப்பாகச் செயற்படுகின்றன. வான ஆராய்ச்சி நிலையம், அருங்காட்சியகங்கள், ஆகியவற்றுடன் வணிகவியல், பொறியியல் துறைகளும் செயற்படுகின்றன.சம்ப்பு (Champ) அரண்மனையில் பல அருங்காட்சியகங்கள் உள்ளன. அவற்றில் கலை, இயற்கை பற்றிய வரலாற்று அருங்காட்சியகங்கள் குறிப்பிடத்தக்கன. சென்ட்டினி (Centini) அருங்காட்சியகத்தில் அருமையான ஓவியங்களும் சிற்பங்களும் உள்ளன.

மார்சேல் பிரான்சின் பழமையான நகரங்களுள் ஒன்றாயினும், அங்கே பழமையை நினைவூட்டும் நினைவுச் சின்னங்கள் மிகுதியாக இல்லை. இங்கு, கி.பி. 13,14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புனித விக்டர் மடாலயச் சுரங்க ஆலயங்கள் உள்ளன.

செ.ஜோ.

**மார்ட்டின் டு கார்டு, உரோசர்** (கி.பி. 1188-1958): இவர் புகழ்பெற்ற பிரான்சுப் புதின ஆசிரியர். ஆவணக் காப்பாளராவதற்குப் பயிற்சி (Archivist) பெற்ற இவர் புதினங்கள் எழுதுவதில் ஆர்வம் செலுத்தினார். இவரது முதற் புதினம், 'தெவனிர்' (Devenir) 1909-இல் எழுதப்பட்டது. முதல் உலகப்போரில் (1914-1918) மார்ட்டின் (Martin Du Card, Roger) தம் நாட்டுக்காகப் போரிட்டார். இவர் 1918-இல் எழுதி வெளியிட்ட 'சீன் பரோயி ' (Jean Barois) என்னும் புதினம், பிரான்சு நாட்டையே கலக்கிய 'திரேபசு வழக்கு' (The Dreyfus Case) பற்றியதாகும்.

'திபால்ட்டுகள்' என்னும் ஒரு பெரிய புதினத் தொடரை இவர் 1922-ஆம் ஆண்டில் எழுதத்

தொடங்கி, 1940-இல் முடித்தார். அது ஏழு தனித் தனிப் பகுதிகளால் ஆனது. இலக்கியத்திற்காக இவர் 1937-இல் 'நோபல் பரிசு' பெற்றார். அந்தாயின் (Antoine), சாக்குவிசு (Jacques) என்னும் இரு உடன் பிறந்தாரின் வாழ்க்கை வரலாறு பற்றியது அப் புதினம். தாயற்ற அவர்கள் திபால்ட்டு என்னும் கத் தோலிக்க சமயத்தைச் சேர்ந்த சமூகச்சீர்திருத்தவாதி யான கண்டிப்பு மிக்க தந்தையினால் அடக்கி வளர்க் கப்படுகிறார்கள். அந்தாயின் மருத்துவப் படிப்பில் கவனம் செலுத்தித் தன் வாழ்க்கையை ஒரு சீராகக் கொண்டு செல்கிறான். கடமையுணர்ச்சி மிக்க இவன் பிரான்சு இராணுவத்தில் சேர்ந்து தன் நாட்டுக்குச் சேவை செய்கிறான். முதல் உலகப்போரில் 1917-இல் நச்சுக் காற்றினால் பீடிக்கப்பட்டு 1918-இல் இறக் கிறான். ஆனால், சாக்குவிசு எதிலும் பொருந்தாத வனாக வளர்ந்தவன். ஆதலால், தன் கல்லூரிப் படிப்பு முடித்தவுடன் வீட்டைவிட்டு ஓடிவிடுகிறான். இவனைத் தேடிச் செல்லும் அந்தாயின், இவனைச் சுவிட்சர்லாந்தில் (Switzerland) கண்டுபிடித்துப் பாரி சுக்கு அழைத்து வருகிறான். போரில் மற்றவர் போலக் கலந்துகொள்ள மறுத்தது மட்டுமல்லாமல் அமைதி யின் இன்றியமையாமையை வற்புறுத்தும் துண்டு வெளியீடுகளை வானவூர்தியிலிருந்து போர்க்களத்தில் வீசுகிறான். குண்டு வீச்சால் அடிபட்டு வீழ்த்தப் பட்ட இவனைத் தூக்கிச்செல்லும் மருத்துவ ஊழி யன் ஒருவனால் காப்பாற்றப்படுவதற்குப் பதிலாகச் சாகடிக்கப்படுகிறான்.

உண்மையாக உள்ளதை உள்ளபடி சொல்லும் இயல்பை (Realism) ஆசிரியர் கடைப்பிடித்துள்ளார். போருக்கு முன்னால் பாரிசின் பதற்ற நிலைமை, அச்சந்தரும் போர்க்காட்சிகள், பெரிய திபால்ட்டின் அந்திக்காலம், அவரது நோய் முற்றுதல் போன்றவை மிகவும் இயல்பாகச் சித்திரிக்கப்படுகின்றன.

தால்சுடாய் (Tolstoy), செகாவு (Chekhov) இப்சன் (Ibsen), சார்சு எலியட்டு (George Eliot) ஆகிய எழுத்தாளர்களின் தாக்கத்தை இவர் எழுத்தில் காணலாம். கே.ஜி.சே.

**மார்ட்டின் லூதர் (கி.பி. 1483-1546):** செருமனி யில் சமயச் சீர்திருத்த இயக்கத்தைத் (Reformation) தோற்றுவித்தவர்; கிறித்தவ சமயத்தில் சீர்திருத்தக் கிறித்தவர்கள் (Protestants) என்னும் புதிய பிரிவினை உருவாக்கியவர், கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தில் மலிந்திருந்த சீர்கேடுகளை யும் ஊழல்களையும் கண்டிக்கும் வகையிலும் அவற்றை வேருடன் களைந்து, கிறித்தவ சமயத்தைப் புனிதமாக்கும் நோக்கத்திலும் அக்கறை கொண்டு உழைத்தவர்.

**கல்வியும் சமயத்துறை நாட்டமும்:** சமயச் சீர்திருத்த இயக்கத்தை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோற்று வித்து ஐரோப்பிய வரலாற்றில் சிறப்பிடம் பெற் றுள்ள மார்ட்டின் லூதர் (Martin Luther) கி.பி. 1843 -இல் செருமனியில் உள்ள ஐலெபென் (Eisleben) என் னும் ஊரில், வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்தார். இவர் வேளாண்மை செய்வோரின் உடல் வலிமை, எளிமை, கடின உழைப்பு, துணிவு, அன்புள்ளம், பழமையில் ஆர்வம் முதலிய நற்பண்புகளைப் பெற்றி ருந்தார். எர்பர்ட் (Erfurt) பல்கலைக்கழகத்தில் கி.பி. 1502-இல் இளங்கலைப் (B.A.) பட்டம் பெற்ற உலூதர், அதே பல்கலைக்கழகத்தில் கி.பி. 1505-இல் முதுகலைப் (M.A.) பட்டமும் பெற்றார். கி.பி. 1505 -இல் இடியால் தாக்கப்பட்ட இவர், கிறித்தவப் பாதிரி யாராகப் பணியாற்ற உறுதி பூண்டார். இவர் கி.பி. 1505-இல் எர்பர்ட்டில் உள்ள அகசுடினியத் துறவியர் மடத்தில் (Augustinian Monastery) சேர்ந்து, விவிலி யத்தையும் (Bible) புனித அகசுடினின் நூல்களையும் கற்று, சமயத்துறையில் நல்ல தேர்ச்சி பெற்றார். தம் முதல் சமயப் பூசையை (Mass) கி.பி. 1507-இல் நடத்தினார்.



மார்ட்டின் லூதர்

**கத்தோலிக்கச் சமயத்தை ஆய்தல்:** இவர் விட்டன்பர்கு (Wittenburg) பல்கலைக்கழகத்தில் கி.பி. 1508-இல் சமயவியல் பேராசிரியராகப் பணியில் அமர்ந்தார். பின்பு கி.பி. 1510-இல் உரோம் நகருக்குப் பயணம் செய்த உலூதர், திருச்சபையின் சீர் கேடுகளையும், போப்பாண்டவரின் ஒழுங்கீனங்களை யும் நேரில் கண்டறிந்து மனம் நொந்தார். புனித பால், புனித அகசுடின் போன்ற சமயகுரவர்களின் நூல்களைக் கற்றதனால், கத்தோலிக்கத் திருச்சபை யின் கருத்துகளினின்றும் மாறுபடத் தொடங்கினார். கத்தோலிக்கச் சமயம் நற்பணிகளின் மூலமாகவும் சடங்குகளின் மூலமாகவும்தான் மனிதன் வீடுபேற்றை அடைய முடியும் என்றுச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால்

மார்ட்டின் லூதரோ, மனிதன் கடவுளின் அருளில் கொள்ளும் ஆழ்ந்த நம்பிக்கையின் மூலம்தான் வீட்டுலகத்தை அடையமுடியும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தினார். இவர் கி.பி. 1512 – இல் விட்டன் பர்கு பல்கலைக்கழகத்தில் சமயவியலில் முனைவர் பட்டம் பெற்றார். அதே பல்கலைக்கழகத்தில் கி.பி. 1513 முதல் கி.பி. 1517 முடிய சமயப் பேருரைகளை ஆற்றினார். இவர் ஓர் உண்மையான கத்தோலிக்கராகவே கி.பி. 1517 – ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்து வந்தார்.

**பாவ மன்னிப்புச்சீட்டு விற்பனைக்கு எதிர்ப்பு:** உலூதரின் வாழ்க்கையில் கி.பி. 1517 – ஆம் ஆண்டு ஒரு மறக்க முடியாத ஆண்டாகும். அந்த ஆண்டில்தான் தோமினிக்கத் துறவியான சான் தெட்சல் (John Tetzel) என்பார் நிதி திரட்டுவதற்காகப் பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்க, செருமனிக்கு வந்தார். உரோம் நகரில் புனித பீட்டர் ஆலயத்தைக் கட்டும் பொருட்டு நிதி திரட்டவே, போப் பத்தாம் இலியோ அவரைச் செருமனிக்கு அனுப்பியிருந்தார். செருமானியச் சிற்றரசர்கள் பொருளாதார அடிப்படையில், பாவ மன்னிப்புச் சீட்டு விற்பனையை எதிர்த்தனர். மார்ட்டின் லூதரும் அதனைச் சமய அடிப்படையில் எதிர்த்தார். தம் வலிமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் 95 வாதங்களின் (95 Theses) மூலம் தெரிவித்து, கி.பி. 1517–இல் அவற்றை இலத்தீன் மொழியில் எழுதி விட்டன்பர்கு மாதாகோவில் கதவில் பதித்தார். திருச்சபையில் நிகழும் உண்மையான கோட்பாட்டிற்கு எதிரான ஒரு தீய பழக்கத்தை மக்களின் பார்வைக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே உலூதரின் தூய நோக்கம்; திருச்சபையில் பிளவை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இவர் அந்த விவாதங்களைத் தொடங்கவில்லை.

இலத்தீன் மொழி அறிந்த மக்கள் அவ்விவாதங்களைப் படித்தனர். செருமானிய மொழியிலும் அவை மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டன. அதன் விளைவாக அவ்விவாதம் புனித உரோமானியப் பேரரசு முழுவதும் பரவியது. யாங்கணும் அவ்விவாதம் கி.பி. 1517 முதல் 1520 முடிய மூன்றாண்டுக் காலம் தீவிரமாக நடந்தது. அதனால் நாடெங்கிலும் பரபரப்பு ஏற்பட்டது. அது போப் பாண்டவரின் சினத்தைத் தூண்டியது. உலூதரை உரோம்நகருக்கு வரச்சொல்லிப் போப்பு ஆணையிட்டார். திருத்தூதர் சுசேடனை ஆக்சுபர்கில் கி.பி. 1518-ஆம் ஆண்டு நேரில் சந்தித்து தம் வாதங்களின் முக்கியத்துவத்தினை விளக்கினார். சோகன் எக்குடன் கி.பி. 1519 – ஆம் ஆண்டு உலூதர் விவாதங்கள் புரிந்தார். உலூதர் தம் கருத்துகளைத் தெளிவுபடுத்தி கி.பி. 1520-இன் தொடக்கத்தில் போப்பின் ஆதிக்கத்தையும் திருச்சபையின் ஊழல்களையும் வன்மையாகக் கண்டித்துப் பல அச்சடித்த படிகளை வெளியிட்டார். உலூதருடன் போப்பு நடத்திய சமரசப் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறாமையால், கி.பி. 1520-இல் போப்பு, உலூதரை மதவிலக்குச் செய்து ஆணை ஒன்றினைப் (Papal Bull) பிறப்பித்தார். அதன்படி 60 நாள்களுக்குள் உலூதர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. பணிய மறுத்த உலூதர் கி.பி. 1520-இல் போப்பின் ஆணையை விட்டன்பர்கு நகரில் தீயிலிட்டார். அதன் விளைவாக கி.பி. 1521-இல் உலூதர் சமயத்தினின்றும் விலக்கப்பட்டார் (Ex-Communicated).

**சீர்திருத்தக் கிறித்தவ சமயத் தோற்றம்:** போப்பின் தீவிர நடவடிக்கையின் விளைவாகக் கத்தோலிக்கச் சமயம் பிளவுண்டது. திருச்சபையின் சீர்கேடுகளைக் கண்டிக்கும் நோக்கத்துடன் அது தோற்றுவிக்கப்பட்டதால் உலூதரைப் பின்பற்றியவர்கள் சீர்திருத்தக் கிறித்தவர்கள் எனக் கூறப்பட்டனர். கிறித்தவ உலகில் தோன்றிய அப்பிளவு இன்று வரை மறையவில்லை.

**சமய நீக்கம் செய்யப் படுதல்:** இசுபெயின் அரசரான ஐந்தாம் சார்லசு, புனித உரோமானியப் பேரரசராகப் பதவியேற்றார். தீவிரக் கத்தோலிக்கரான அவர் உலூதரின் புரட்சி இயக்கத்தை ஒடுக்க முயன்றார். உலூதரின் இயக்கம், செருமானிய மன்னர்கள், செருமானிய மக்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றிருந்ததால், போப்பால் அதனை எளிதாக ஒடுக்க முடியவில்லை. அடுத்து உலூதரின் சமய நன்றியில்லாச் செயலை முறையான விசாரணையின்றித் தண்டிக்கப் பேரரசர் துணியவில்லை. எனவே உலூதரை விசாரிப்பதற்கென்று ஓம்சு நகரில் புனித உரோமானியப் பேரரசின் சட்டசபை (Diet of Worms, கி.பி.1521) கூட்டப்பட்டது. கி.பி.1521 - ஆம் ஆண்டு உலூதர் அச்சபையின் முன் விசாரிக்கப்பட்டார். உலூதர் தம் சமயக் கருத்துகளைக் கைவிட்டு மன்னிப்புக் கேட்குமாறு வேண்டப்பட்டார். உலூதர் மன்னிப்புக் கேட்க மறுத்தார். எனவே உலூதரும் அவர் ஆதரவாளர்களும் சமூகத்தினின்றும் விலக்கப்பட்டவர்கள் (Out laws), சமய நன்றியற்றவர்கள் (Heretics) என்று ஓம்சு ஆணை மூலம் அச்சபை அறிவித்தது. கி.பி. 1521 – இல் உலூதர், வார்ட்பர்கு அரண்மனையை அடைந்தார். உலூதரின் நண்பரான சாக்சனியின் சிற்றரசர், ஓராண்டுக் காலம் 'வார்ட்பர்குக் கோட்டையில்' (Wartburg Fort) உலூதரைத் தங்க வைத்து, அவருக்குத் தேவையான நலன்களைச் செய்து கொடுத்தார். விவிலிய நூலின்

'புதிய ஏற்பாடு' உலூதரால் இக்கோட்டையில் முதன் முதலாகச் செருமன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

**விவிலிய வெளியீடு**: உலூதர் கி.பி. 1522 - ஆம் ஆண்டு விட்டன்பர்குத் திரும்பினார். செர்மனியின் வடக்கு மத்தியப் பகுதியில் உள்ள அரசுகளில் உலூதரின் சமயக் கருத்துகள் விரைவாகப் பரவின. நூரம்பர்கு நகரில் கூடிய சட்ட சபை கி.பி.1522-இல் சமயச் சிக்கலைத் தீர்க்கப் பொதுக்குழு, கூட்டப்பட வேண்டும் என முடிவெடுத்தது. சுபயர் (Speyer) என்னுமிடத்தில் கி.பி 1526 - இல் ஐந்தாம் சார்லசு சட்ட சபையைக் கூட்டி இரு சமயத்தினரிடையே சமரசம் ஏற்பட முயற்சி செய்து, தோல்வியுற்றார். சீர் திருத்தக் கிறித்தவ சமயம் வலிமை பெற்றது. விவிலிய நூல் முழுமையும் உலூதர் கி.பி.1534 -இல் செருமன் மொழியில் வெளியிட்டார். இவர் கி.பி. 1546 – இல் ஐலெபன் என்னுமிடத்தில் காலமானார்.

உலூதர், சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தைத் தோற்றுவித்ததன் மூலம், போப்பின் அதிகாரத்திற்கு எதிர்ப்பை உருவாக்கியது மட்டுமன்றி, செருமனியில் தேசியம் வளரவும் காரணமாக இருந்தார். செருமானிய மொழியில் விவிலியத்தை மொழிபெயர்த்ததன் மூலம், இவர் செருமன் மொழி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினார். கிறித்தவ சமய வரலாற்றில் உலூதர் தமக்கெனத் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளார். உலகச் சமயவியல் அறிஞர்களுள் ஒருவராகவும் இவர் திகழ்கிறார். ம.இரா.

மார்ட்டெல் சார்லசு (கி.பி. 689-741): இடைக்கால ஐரோப்பாவில் புகழுடன் ஆட்சிபுரிந்த சார்லமேனின் பாட்டனாராகிய இவர், வலிமை மிக்கதோர் பிரெஞ்சுத் தலைவர். மார்ட்டெல் எனும் சொல்லின் பொருளுக்கேற்ப இவர் ஒரு சம்மட்டியாகவே (Hammer) திகழ்ந்தார். எனவே, இவர் சம்மட்டி சார்லசு (Charles, the Hammer) எனவும் கூறப்பட்டார். இவர் ஒரு மாபெரும் வெற்றி வீரர்.

கெரிசுத்தலைச் சேர்ந்த பெபின் என்பாருக்கு முறையற்ற வழியில் தோன்றிய மகனான சார்லசு மார்ட்டெல் (Charles Martel) இளமையிலேயே திறமைசாலியாக இருந்தார். இவர் தந்தையார் மெரோவிஞ்சிய அரசமரபின் (Merovingian dynasty) சார்பில் நியூசுதிரியா (Neustria – வடமேற்கு பிரான்சின் பகுதி), ஆசுதிரியா (மெட்சைச் சூழ்ந்துள்ள கிழக்குப் பிரான்சின் பகுதி) ஆகியவற்றினை ஆண்டு வந்தார். சால்பைதா என்பார் இவருடைய தாயார் ஆவார். பிரான்சில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மன்னர்கள் செல்வாக்குடன் விளங்கவில்லை. உண்மையான அதிகாரம் மாநகர முதல்வர்களிடம் இருந்து வந்தது. கெரிசுத்தலின் பெபினை உள்ளிட்ட பெரும்பாலான மாநகர முதல்வர்கள் அர்னுள் பிங்கர் (Arnul Finger) குடியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். பிற்காலத்தில் கரோலிஞ்சிய மரபினர் (Corolingian) என்று இக்குடியினர் கூறப்பெற்றனர். கெரிசுத்தலின் பெபின் இறந்த பின்னர் கி.பி. 714-இல் பெபினின் மருமக்கள் (Nephews) ஆசுதிரேசிய, நியூசுதிரிய (Austrasian and Newstrian Mayoralities) மாநகர முதல்வர் பதவிகளைப் பிரித்தனர். பெபின் காலத்தில் ஒன்றாகவிருந்த ஆட்சிப் பகுதி பிரிக்கப்பட்டதால் நாட்டின் வலிமை குன்றியது. சார்லசு மார்ட்டெலின் பேரவாவைக் குறைக்க எண்ணிய பெபினின் மனைவியர் அவரைச் சிறையில் தள்ளினர். அந்நிலையில் நியூசுதிரியாவில் தோன்றிய புரட்சியைப் பயன்படுத்திச் சார்லசு சிறையினின்றும் தப்பினார். தப்பிய பின் படை வலிமையைப் பெருக்கினார். ஆசுதிரேசியப் படையைத்திரட்டி கி.பி. 717, 719 – ஆம் ஆண்டுகளில் தாக்குதல்களை மேற்கொண்டு நியூசுதிரியர்களைத் தோற்கடித்து அடிமைப்படுத்தினார். பின்னர்த் தந்தையர் நிருவகித்து வந்த பகுதிகளை வலுவாக்கினார்.

**கிழக்கில் விரிவடைதல்**: தம் நிலைமையை வலுப்படுத்திக்கொண்ட சார்லசு மன்னர், பிரான்சு அரசுகளை விரிவுபடுத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டார். தம் அரசின் கிழக்கு எல்லையில் வாழ்ந்து வந்த காட்டுமிராண்டிகளின் கொட்டத்தை ஒடுக்கினார். காட்டுமிராண்டிகளை நசுக்கிய பின்னர், பிரிசியர்கள், சாக்சானியர்கள் (Frisians and Saxons-கி.பி. 719-738) சுவாபியர்கள் (Swabians-கி.பி. 730) பார்பாரியர்கள் (Barbarians- கி.பி 725-28) ஆகியோரை வென்று அடிமைப்படுத்தினார். வென்ற பகுதிகளில் கிறித்துவ சமய போதகர்களை அனுப்பிக் கிறித்தவ சமயத்தை அங்குப் பரவச்செய்தார். இவ்வாறு அனுப்பப்பட்ட மதபோதகர்களுள் புனித போனிபேசு (St Boniface) மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

**இசுலாமின் மிரட்டல்கள்**: தென்மேற்கில் வலுப்பெற்றிருந்த முகமதியர்களின் மேலாண்மை இவருக்கு அறைகூவலாக அமைந்தது. சார்லசு, அக்விடைன் கோமகன் (Duke of Aquitaine) முதலானோரை முறியடித்தார். இசுபெயின் நாட்டிலும் பகைவர்கள் தோன்றினர். இசுபெயின் கி.பி. 710-11-இல் இசுலாமியப் படைகளால் முறியடிக்கப்பட்டது. கால் பகுதியில் கி.பி. 720 - இல் முசுலீம்கள் பரவினர். சார்லசு கி.பி.725-இல் ஆட்டன் என்னுமிடத்தில் அரா

பியப் படைகளை வெற்றி கொண்டார். இருப்பினும் அராபியரின் ஊடுருவல்கள் தொடர்ந்தன. தூர்சு (Tours) என்னுமிடத்தில் கி.பி. 732 – இல் அராபியர் களை வென்றார். வரலாற்றுப்புகழ்மிக்க அப் போர், 'மௌசை லாபேடைலீப் போர்' (Moussais -la Bataille War) எனவும் குறிக்கப்படுகிறது.

**போப்புடன் நட்பு:** இலம்பார்டியர்களுக்கெதிரா கத் தம்மை வலுப்படுத்திக் கொள்ள எண்ணிய போப் மூன்றாம் கிரிகரி வலிமைமிக்க சார்லசிடம் நட்புக் கொள்ள விழைந்தார். கிரிகரி 'பேராளர்' (Consul) என்னும் பட்டத்தைச் சார்லசிற்கு கி.பி. 739 – இல் வழங்கியதுடன் தமக்குப் படையுதவி செய்ய வேண்டுமென்றும் சார்லசிற்கு வேண்டுகோள் விடுத்தார். தாமே இலம்பார்டியர்களுடன் உடன்பாடு ஒன்றினைச் செய்து கொள்ள விழைந்ததால் போப் பிற்குப் படையுதவிசெய்ய இவர் முன்வரவில்லை. அதனால் மெரோவிஞ்சிய அரசரைக்காட்டிலும் இவரே பிராங்குகளின் ஆட்சியாளராக விளங்கினார் என்பது புலனாகும். மெரோவிஞ்சிய வமிச வேந்த னான நான்காம் தியோடரிக்கு (Theodoric IV) கி.பி. 737 – இல் இறந்த பின்னர், புதிய அரசர் நிய மிக்கப்படாமல் ஆட்சி சார்லசிடமே இருந்தது. பிரான்சு மேலாண்மையை நிலைநாட்டிய சார்லசு கி.பி.741–இல் பிரான்சில் உள்ள 'குயியர்சி-சூர்-ஓய்சு' (Quierzy – Sur-Oise) என்னுமிடத்தில் மாண்டார். இவருடைய சமயப்பணியும் அரசியல் பணியும் போற்று தற்குரியன. ம.நா.

**மார்ட்வினியன் மொழி**, உருசியாவில் உள்ள வோல்காப் பகுதியின் மத்தியில் வாழும் ஏறத் தாழ 15 – இலட்சம் மக்களால் பேசப்படுகிறது. இந்த மொழி உராலிக்கு மொழிக்குடும்பத்தின் உராலிக் –அல்டாய்க்கு என்னும் பிரிவினைச் சார்ந்தது. இது எர்சா மார்ட்வினியன், மொக்சா மார்ட்வினியன் என்னும் இரண்டு கிளைமொழிகளைக் கொண்டது. எனினும் இந்தி, உருது போல எர்சாக் கிளை மொழியும் மொக்சாக் கிளைமொழியும் இரு வேறு இடங்களில் பேசப்பட்டு இரண்டு இலக்கிய மொழி களாக இருக்கின்றன. இவற்றிற்கென்று தனித்தனி யாகச் செய்தித்தாள்களும் கூட உள்ளன.

மார்ட்வினியர்கள் எர்மாரிக்கு என்ற அரசனின் குடிமக்கள் என்று பிசார்டேன் என்ற கோத்திக்கு வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இந்த மொழி யில் எட்டு உயிரெழுத்துகளும், முப்பது மெய்யெழுத்து களும் உள்ளன. பதினொரு வேற்றுமைகள் உள்ளன. வேற்றுமை, தமிழைப் போலவே பின்னொட்டுகளால் குறிக்கப்படுகிறது. ஆனால், தமிழைப் போல் பின்னுருபுகள்(Post Position) இம் மொழியில் இல்லை.எடுத்துக்காட்டாக வழி வேற்றுமை (Path Case) உருபாக வ (-va), நீங்கல் வேற்றுமை உருபாக தொ (-do), ஒப்புமை வேற்றுமை உருபாக சுக (Ska), எனப்பதினொருவேற்றுமைகளுக்கும் தனித்தனியாக உருபுகள் இம் மொழியில் வழங்குகின்றன. குதொவ என்றால் வீட்டின் வழியே, குதொதொ என்றால் வீட்டிலிருந்து, குதொசுக எனில் வீட்டைப்போல் என்பது பொருள்.

இம் மொழியில் ப (P), த (T), க (K) என்னும் ஒலியன்கள் ஒலிப்புடை ஒலிக்கும் முன்னர் வரும் போது முறையே b,d,g. என்னும் ஒலிகளாக மாறும். எடுத்துக்காட்டாகத் தப்பன் (tapan) 'அடி' என்னும் சொல்லில் த/ t/ என்னும் ஒலியன் மொன்தபன் (mondapan ) 'நான் அடிக்கிறேன்' என்னும் தொட ரில்ன வுக்கு முன்னர் வரும்போது d யாக மாறு வது அவ் வகை மாற்றத்தைச் சாரும்.

வினைச்சொற்களில் எழுவாய் காட்டும் விகுதி மட்டுமன்றிச் செயப்படுபொருள் காட்டும் விகுதி யும் வருவது இம்மொழிக்கான சிறப்புக் கூறாகும். மேலும், இம் மொழியின் வினைச்சொற்களும் காலம் எண், இடம் போன்ற இலக்கணக் கூறுகளைக் கொண்டுள்ளன. இகரமும், சகரமும், இறந்தகால இடை நிலைகளாக உள்ளன. வினைக்கு முன்னர் 'அ' வந்தால் அது எதிர்மறையைக் குறிக்கும். எடுத்துக் காட்டாக 'வனன்' என்பது 'வருவேன்' என்ற பொருளையும் 'அவனன்' என்பது 'வரமாட்டேன்' என்ற பொருளையும் தரும். ஆர்.வா.

**மாரத்துவாடா.** மராத்திய மாநிலத்தின் ஒரு பகுதி. வரலாற்று அடிப்படையில் மராத்திய மாநிலம் மேற்கு மராத்தியம், விதர்ப்பம், மாரத்துவாடா என்று மூன்று பிரிவுகளைத் தன்னுள் அடக்கியுள்ளது மாரத்துவாடாப் பகுதியில் பெரும்பான்மையினர் மராத்திமொழியைப் பேசுகின்றனர். மாரத்துவாடாப் (Maratwada)பகுதிவரலாற்றுப் புகழ்மிக்கது. இப்பகுதி யில் அடங்கியுள்ள முக்கிய நகரங்கள் ஔரங்கபாது, பைத்தான், சனா (Jana), கந்தர் முதலியன ஆகும், இங்குள்ள மாரத்துவாடாப் பல்கலைக் கழகம் சிறப்பு வாய்ந்தது. அதன் தலைமையகம் ஔரங்கபாது நகரில் உள்ளது. உசுமானியாப் பல்கலைக்கழகத்துடன் முன்பு இணைக்கப்பட்டிருந்த கல்லூரிகள் 1958 அக்டோபர் மாதம் தனியாகப் பிரிக்கப்பட்டன. அக்கல்லூரிகளைக் கொண்டு மாரத்துவாடாப் பல்கலைக்கழகம் தோற்றம் பெற்றது. அதன் தொடக்க விழா 1958-இல் நடை பெற்றது. இப்போது அப் பல்கலைக்கழகத்தில் 97 கல்லூரிகளும் 11 பல்வேறு கல்வி நிறுவனங்களும்

இணைக்கப்பட்டுள்ளன. அப்பல்கலைக்கழகத்தில் 1983-84-ஆம் ஆண்டில் 36,320 மாணவர்கள் கல்வி பயின்றனர். இங்கு ஒரு பெரிய நூலகம் உள்ளது. அந்நூலகத்தில் 1985-இல் 2,26,156 நூல்களும் 110 இதழ்களும் இடம் பெற்றிருந்தன. அவற்றுள் 5,113 நூல்கள் 1985-ஆம் ஆண்டு புதிதாக வாங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அப்பல்கலைக்கழகத்தில் அனைத்துக் கல்விப் பாடங்களும் (மருத்துவம், பொறியியல், ஆராய்ச்சி இயல், கல்வி இயல் உட்பட) பயிற்றுவிக்கப்படுகின்றன. அப்பல்கலைக்கழகத்துடன் பைத்தான், கங்கப்பூர், சைலூர், அர்சபூர் (Arjapur), சியோரை (Georai), சைனா (Jaina), உருமயர்கா, கங்ககெட்டு, கந்தர், பர்பனி, அம்பசோகை (Ambajogai), நிலங்கா, துல்சாபூர் (Tuljapur), வைசுநாத்து (Vaijnath), சோகோன், பசுமத்நகர், நல்துர்க்கு, சனா (Jana), வாசி (Wash) முதலான நகரங்களிலுள்ள கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன. க.ம.

**மாரிசு, வில்லியம் (கி.பி. 1814-1896):** கலை இலக்கிய உலகில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் நடுவில் தோன்றிய 'முற்படுகலையார்வ ஈடுபாட்டு இயக்கம்' (The Pre-Raphalite Movement) என்ற ஓர் இயக்கத்தைச் சார்ந்தவர் வில்லியம் மாரிசு என்ற ஆங்கிலக் கவிஞர். இவரது முன்னோடியான தாந்தே காபிரியேல் இராசட்டி (Dante Gabriel Rossetti) என்ற ஆங்கிலக் கவிஞரைப் போலவே இவரும் ஓர் ஓவியர் ஆவார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற இவர், பர்ன்சோன்சு என்ற ஓவியரைப் போல வெளிப்படுத்திக் காட்டுவதில் ஆர்வமிக்கவர். வேறு சில கலைஞர்களும் சேர்ந்து வெளியிட்டு வந்த 'ஆக்சுபோர்டு கேம்பிரிட்சு செய்தி இதழில் (The Oxford Cambridge Gazette) கவிதைகளையும், உரை நடையில் கதைகளையும் எழுதிவந்தார். ஓவியக் கலையை இவர் நன்கு கற்று, வீட்டு ஒப்பனைக் கலைப்பொருட்கள் செய்து கொடுக்கும் ஒரு நிறுவனத்தில் முக்கிய பங்கேற்று நடத்தி வந்தார். இவர் தம் கலைப் படைப்புகளினால், கி.பி. 19 - ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இங்கிலாந்து முழுவதிலும் ஒரு புரட்சிகரமான மாறுதலை, வீட்டினை அலங்கரிக்கும் முறையில் ஏற்படுத்தினார் எனலாம்.

கற்பனை வளம் செறிந்த, அழகுணர்ச்சி மிக்க இவர்தம் கவிதைகளும், கதைகளும் ஆற்றொழுக்குப் போன்ற இனிய நடையில் எழுதப்பட்டனவாகும். சலிப்பில்லாமல் எழுதிக் குவிக்கப்பட்ட இவர் படைப்புகளில் முக்கியமானவையாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். 'கிளிவர் தரப்பில் வாதம்' (The Defence of Gulievere, 1858) 'சேசனின் வாழ்க்கையும் சாவும்' (The Life and Death of Jason, 1867), பூலோக சுவர்க்கம்' (The Earthly Paradise, 1868-70)

இவர் ஈலியது, ஓடிசி என்ற இரு பெருங் காப்பியங்களையும் மொழி பெயர்த்துள்ளார். வட ஐரோப்பிய இலக்கியத்தில் இவருக்குள்ள ஈடுபாட்டை இவர் எழுதிய பின்வரும் கவிதைகளில் காணலாம். அவையாவன: 'வோல்சாங் காப்பியம்' (Volsung saga, 1870), 'வோல்சங் சிகர்டின் கதை'(The story of Sigurd the Volsung, 1877), 'பியோவுல்பின் கதை' (The Tale of Beowulf, 1895).

சமதருமவாதியான இவர் 'சான் பாலின் கனவு' (A Dream of John Ball) என்ற படைப்பில் அக்காலத்துச் சமுதாயத்தைச் சாடியுள்ளார். 'கற்பனை நாட்டிலிருந்து செய்திகள்' (News from Nowhere) என்ற இவரது படைப்பு எடுத்துக்காட்டான மனிதர்கள் வாழும் ஒரு புதுயுகத்தைப் பற்றிய இவரது கனவு ஆகும். தம் பண்ணை வீட்டில் ஓர் அச்சு இயந்திரம் நிறுவி அதிலிருந்து பல கலைமிளிரும் படைப்புகளை வெளியிட்டார். பல இதழ்களுக்குக் கற்பனைக் கதைகளை எழுதிக் கொண்டேயிருந்த இவர் கி.பி. 1896-இல் காலமானார். கே.ஜி.சே.

**மாரிப்பித்தியார்:** இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். மாற்பித்தியார், மரற் பித்தியார் என்றும் இவர் பெயர்க்குப் பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன. 'மாரிக்காலத்து மலரும் பித்திகத்தைப் பொற்புறத் தொடுத்துப் பாடிய சிறப்புக் குறித்து இவர்க்கு மாரிப்பித்தியார் என்னும் பெயர் எய்திற்றுப் போலும்; ஆனால் அப்பாடல் கிடைத்திலது' என ஔவை சு. துரைசாமிப் பிள்ளை குறித்துள்ளார். மாற்பித்தியார் என்பார் பெண்பாலார் என்று உ.வே.சா. கூறுவார். இப்புலவர் பாடிய இரு பாடல்கள் புறநானூற்றில் உள்ளன (251,252). அவை வாகைத் திணையில் தாபத வாகை என்னும் துறையில் அமைந்துள்ளன. செல்வ வளத்தோடு இல்லறம் போற்றிய ஒருவன் அதனைத் துறந்து தவம் மேற்கொண்டு நோற்றமையை இவர் பாக்கள் அறிவிக்கின்றன. 'நாலிரு வழக்கிற் றாபதப் பக்கம்' (தொல். புறத். நூற்பா 16) என்பதற்கு இவர் பாடல் இளம்பூரணரால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. எழிலார்ந்த வளமனையை 'ஓவத்தன்ன இடனுடை வரைப்பு' என்றும், இல்லக் கிழத்தியைச் சொல்லாற் கவர்ந்த தலைவனை 'இல்வழங்கு மடமயில் பிணிக்கும் சொல்வலை வேட்டுவன்' என்றும் கூறியிருத்தல் நயம் பயக்கும். காட்டில் தவமியற்றும் முனிவர்க்குச் செந்தீ வேள்வி புரியக் கான யானை விறகு கொணர்ந்து தரும் செய்தியை இப்புலவர் குறிப்பிடுகிறார். இவர் துறவிகள் செயலாக மலையில்

அருவியாடிச் செந்தீ வேட்டுப் புறந்தாழ் புரிசடை புலர்த்துவதையும் தில்லையந் தளிர் போன்ற சடையோடு தாளியிலையைக் கொய்வதையும் புலப்படுத்தியுள்ளார். இரா.சா.

**மாரிமுத்தாப் பிள்ளை:** இவர் 'தமிழ் இசை மும்மூர்த்திகள்' என்று சிறப்பித்துக் கூறப்பெற்ற இசை அறிஞர்களுள் ஒருவர். தில்லைக்கருகே உள்ள தில்லை விடங்கன் என்னும் சிற்றூரில் சைவவேளாளர் மரபில் தெய்வப் பெருமாள் பிள்ளை என்பவருக்கு இரண்டாம் மகவாய் கி.பி.1712-ஆம் ஆண்டு தோன்றினார். இவர் சிவகங்கநாத தேசிகரிடம், தமிழையும், சைவத்தையும் கற்றுத் தேர்ந்தார். இளம்பருவத்திலேயே இசையறிவு பெற்று இசை நாட்ட மிக்கவராக விளங்கினார். அருணாசலக் கவிராயர், சிதம்பரம் வீணை அப்பாக்கண்ணுப் பிள்ளை, நாதசுரம் அரங்கநாத பிள்ளை, முத்துத்தாண்டவர் பரம்பரையில் வந்த குப்பையா பிள்ளை, சின்னையா பிள்ளை ஆகியவர்களிடம் கொண்ட நட்பு, மாரிமுத்தாப் பிள்ளையைச் சிறந்த இசை மேதையாக மாற்றியது.

இனிமையாக இசைபாடும் ஆற்றல் பெற்ற இவர் இயற்கையாகக் கவிதை பாடும் ஆற்றலையும் பெற்றவராக விளங்கினார். தில்லை நடராசப் பெருமானிடம் பற்று மிகக் கொண்டிருந்தார். இவர் தம்முடைய புதல்வர் மூவருள் இருவரைத் தமிழ்ப் புலவர்களாக வளர்த்தமை குறிப்பிடத்தக்கது. தம் மகனுக்கு ஏற்பட்ட மதிமயக்க நோயைத் தீர்க்க வேண்டி, இவர் திருக்கோயிலில் படுத்துறங்கினார். விடிந்ததும் இறையருளால், 'புலியூர் வெண்பா'ப் பாடினார். மகனது மதிமயக்க நோய் தீர்ந்தது.

சிதம்பரேசர் விறலிவிடுதூது, தில்லைப் பள்ளு, வண்ணம், வடதிருமுல்லைவாயில் கொடியிடை அம்மை மீது பஞ்சரத்தினம், வருணாபுரி, ஆதிமூலீசர் குறவஞ்சி, ஆதிமூலீசர் நொண்டி நாடகம், அநீதி நாடகம், புலியூர் சிங்கார வேலவர் பதிகம், விடங்கேசர் பதிகம் முதலிய சிற்றிலக்கியங்களையும் இரதபந்தம், நாகபந்தம், சித்திரகவி முதலிய மிறைக் கவிகளையும் இயற்றினார்.

தமிழ் இசை மரபுகளைக் காக்க இசைப் பாடல்கள் பல இயற்றினார். இவர் எழுதிய எழுபத்தைந்து இசைப் பாடல்களில் இப்போது இருபத்தைந்து பாடல்களே அச்சில் வெளிவந்துள்ளன. தமிழ்ப் புலமை சான்றவராதலின் இவர்தம் இசைப்பாடல்கள் சொற்செறிவும், கருத்துவளமும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றன. கீர்த்தனை, பதம் போன்ற அமைப்புகளில் இசைப் பாடல்களை அமைத்துள்ளார். தொன்றுதொட்டுவரும் பழைய இசைவருண மெட்டுகளைத் தாமும் கையாண்டார்.

பழிப்பது போலப் புகழும் முறையில் இவர் இசைப் பாடல்கள் பல விளங்குகின்றன. சிலேடை அமைப்பில் கீர்த்தனைகள் பாடும் வகையை முதலில் தொடங்கியவர் மாரிமுத்தாப்பிள்ளை என்பர். இவரெழுதிய பாடல்களில், 'வீடும் அம்பலமாகி', 'உம்மைப் போல் ஆட்டை எடுத்து', 'பாருங்கள் வந்து பாருங்கள்' என்று தொடங்கும் கீர்த்தனைகளும் அவை போல்வனவும் சிறப்பாக அமைந்துள்ளன. இவர் பாடல்களில் அமைந்துள்ள சிலேடை நயம் இலக்கியச் சுவை பயப்பதாகும்.

பழமைச் சொல், இசை மணம், தேவாரத் தொடர், புராணச் செய்தி ஆகியவை இவர் பாடல்களில் விரவிக் காணப்படுகின்றன. இவர் தலயாத்திரையை மேற்கொண்டு பல சிற்றிலக்கியங்கள் பாடியுள்ளார் இப்புலவர் இலக்கிய வகைகள் பல இயற்றி இருப்பினும் இவர்தம் இசைப்பாடல் அமைப்புகளே இவருக்குப் புகழைத் தந்தன. தமிழிசைக்கு எழுச்சியூட்டிய மாரிமுத்தாப் பிள்ளை கி.பி. 1787 – ஆம் ஆண்டு தம் எழுபத்தைந்தாம் வயதில் காலமானார். மாரிமுத்தாப் பிள்ளையின் இசைப்பாடல்களில் ஒரு சிலவற்றைப் பிற்காலத்தில் சீர்காழி யாழ் (Fiddle) வல்லுநர் நாராயணசாமி பிள்ளை சுரப்படுத்தியுள்ளார். இரா.குரு.

**மாரியசு கயசு** பண்டைய உரோம் நாட்டின் ஆற்றல்மிகு படைத்தலைவர். அஞ்சா நெஞ்சம் கொண்ட இம்மாவீரர் வீரர்களிடையே பெரும்புகழ் பெற்றவர். ஆனால், பெரும் மேடைப் பேச்சாளராகத் திகழ்ந்தவரல்லர். அரசியல் துறையில் மாபெரும் சாதனைகள் புரிந்தவரும் அல்லர். எனினும், அரும்பெரும் வெற்றிகளைக் குவித்த மாரியசு கயசு (Marias Gaius) பலமுறை நாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கயசு, கி.மு. 155 – ஆம் ஆண்டில் வால்சியன் பகுதியிலுள்ள செரியேடேயில் (Cereatae) பிறந்தவர். இளமையிலேயே நல்ல போர்ப் பயிற்சி பெற்ற இவர் கி.மு.134-ஆம் ஆண்டில் நடந்த நூமன்சியா (Numantia) போரில் தம் மாவீரத்தை வெளிக்காட்டி, செல்வாக்குப்பெற்று கி.மு.119-ஆம் ஆண்டில் நீதிமாளிகையில் நடுவர் உயர் பீடப்பதவி (Tribune) பெற்றார். சூலியசு சீசரின் அத்தையை மணந்ததன் விளைவாக அரசியல் வானில் இவரது செல்வாக்கு ஓங்கியிருந்தது. இவர் கி.மு.115 – ஆம் ஆண்டில் நீதிமன்ற ஆணையராக (Judicial Magistrate) அமர்த்தப்பட்டார். பின்னர் கி.மு.114-ஆம்ஆண்டு இசுபெயின் சென்று, ஆட்சிக்கெதிரான கலகங்களை ஒடுக்கினார். மெட்டலசுடன் (Mettalus) கி.மு.109 ஆம் ஆண்டில் இணைந்து ஆப்பிரிக்காவின் மீது படையெடுத்தார். பின்னர், இவர்

நாட்டுத் தலைவராக (Consul) கி.மு. 107 - இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்து, ஒரு புகழ்மிக்க படையெழுச்சியில் வெற்றி பெற்றதன் பலனாகநான்கு முறை (கி.மு.104-101) தொடர்ந்து, தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் பெருமை பெற்றார். சிம்பிரியரும் (Cimbri) தியூடானியரும் (Teutons) இத்தாலியைத் தாக்கியபோழ்து, அவர்களுக்கு எதிராக இவர் காட்டிய வீரம் இணையற்றது. இவர்மாபெரும் வெற்றி விழா ஒன்றினை கி.மு 104-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடத்தினார். அரசர் சுகுர்தாவையும் தண்டித்தார். இவர் கி.மு.102-ஆம் ஆண்டில் ஐக்சு Aix என்னுமிடத்தில் ஒரு பழங் குடியினரையும், கி மு.101-ஆம் ஆண்டில் வெர்சலே (Vercellae) என்னுமிடத்தில் சிம்பிரிகளையும் வென்றார். இவர் கி.மு.100-இல் மீண்டும் நாட்டுத் தலைவர் ஆனார். பின்னர் இவர் அரசியல் வாழ்வு வீழ்ச்சிப் பாதையை நோக்கி விரைந்தது.

கட்சி அரசியலில் இவர் தலையிட்டமை, இவரது மாபெருந் தவறாக அமைந்துவிட்டது. அவ்வமையம் செல்வாக்குப் படைத்த அரசியல் கட்சியின் கீழ்த்தரமான தலைவர்களுடன் இவர் கூட்டுச் சேர்ந்ததால் இவர் நிலை தாழ்ந்தது. சாடர்னியசுக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடு தோன்றிப் பகைமையில் முடிந்தது. மாரியசு கயசின் புகழும் பெருமையும் உயர்வது கண்டு, சல்லா (Sulla) பொறாமை கொண்டார். உள்நாட்டுப் போர் கி.மு 88-ஆம் ஆண்டு மூண்டது. சல்லா வாகை சூடினார். மாரியசு ஆப்பிரிக்காவிற்கு ஓடினார்

மாரியசின் முயற்சியால் சாடர்னியசும் (Saturnius), கிளாசியாவும் (Glaucia) சிறைப்பிடிக்கப்பட்டு ஆளவை மன்ற (Senate) இல்லத்தில் சிறை வைக்கப்பட்டனர். மாரியசு கி.மு. 87-ஆம் ஆண்டில் எட்ரூரியாவில் (Etruria) இறங்கி, பெரும்படை திரட்டி, ஆசுடியாவைச் (Ostia) சூறையாடி, சின்னாவுடன் சேர்ந்து உரோம் நகரைக் கைப்பற்றினார். இருவரும் கி.மு. 86 - ஆம் ஆண்டிற்காக இணைத் தலைவர்களாகத் (Consuls) தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாரியசு, ஏழாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தம் எதிரிகளான மார்க்கசு அந்தோனியசு, உலுடாசியசு, கட்டூலசு, பப்ளியசு லிசினசு, கிரேசசு ஆகியோர்களையும் பல உயர்குடிப்பிரபுக்களையும் கொலை செய்ய ஆணையிட்டார். மாரியசு கி.மு. 86 - ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இறந்தார்.

உரோம் நாட்டின் இணையற்ற படைத்தலைவரான மாரியசின் சேவைகளைப் பாராட்டும் முகத்தான், ஆப்பிரிக்காவிலுள்ள உச்சி மசூசு (Uchi Majus), திரிபாரிசு (Tribaris) ஆகிய இரு குடியிருப்புகளுக்கும் மாரியானா (Mariana) எனப் பெயரிடப்பட்டது. உரோன் (Rhone) ஆற்றின் கழிமுகப் பகுதியில் இவர் படைவீரர்களால் அமைக்கப்பட்ட கால்வாய், இவர் நினைவாகப் போசா மரியானா (Fossa Mariana) எனப் பெயரிடப்பெற்றது. வரலாறு கண்ட படைத் தலைவர்களுள் மாரியசின் புகழ் ஓங்கி நிற்கிறது.

ம.இரா.

**மாரியம்மன்**, தமிழ் நாட்டின்புகழ்மிக்க கிராமத் தெய்வங்களுள் ஒன்று. மாரியம்மன் கோயில் தமிழ் நாட்டின் பெரும்பான்மையான கிராமங்களில் உள்ளது. இப்பெண் தெய்வம் செல்வி, செல்லி, செல்லியாத்தாள், செல்லாண்டியம்மன், முத்துமாரி, ஆயிரங் கண்ணுடையாள், கண்ணாத்தாள், ஆயி, மகமாயி முதலிய பெயர்களால் அழைக்கப் பெறுகிறது. மாரி என்றால் மழை அல்லது அம்மை நோய் எனப் பொருள்படும். கிராம மக்களைக் காத்து, நாட்டில் செழிப்பை ஏற்படுத்தும் இத்தெய்வம் அம்மை நோயைப் போக்கும் மாரியம்மாளாக வணங்கப்படுகிறாள். இவள் ஒரு திராவிடத்தெய்வம் மாரியாத்தாளை வணங்கினால் மழை பெய்யும் என்பது தமிழ் மக்கள் நம்பிக்கை.

இத்தெய்வத்தின் தோற்றம் பற்றிப் பற்பல விதமான விளக்கங்கள் கூறப்படுகின்றன. தமிழ்நாட்டில் நிலவும் புத்தசமய மரபுக் கதைகளை ஆராய்ந்து பார்க்குங்கால், மாரியம்மன், வேப்பமரத்தின் அடியில் தவமிருக்கும் ஒரு புத்த சமயப் பெண் துறவி ஆவாள் என்பது புலனாகும். அந்த அம்மை நாகபட்டினத்தைச் சேர்ந்தவளாகக் கருதப்படுகிறாள். நாட்டில் அம்மை நோய் பரவியபோது, மக்கள் அந்த அம்மனிடம் சென்று, நோயைப் போக்கத் தன் சக்தியைப் பயன்படுத்தும் படி வேண்டியதாகவும், அவள் அவர்களிடம் புத்தர் மீது நம்பிக்கை வைக்கும்படியும், வேப்பந்தழை விரித்த படுக்கையில் அம்மை நோயாளியைப் படுக்க வைத்து, வேப்பங்கொழுந்தின் சாந்தினை அம்மைப் புண்ணின் மீது பூசும்படி கூறினாள் என்றும் கூறப்படுகிறது. கூறியபடி செய்யக் குணமடைந்ததால் அந்த அம்மை வீடுபேறு அடைந்த பின்னர், மக்கள் அவருக்குச் சிலை வைத்து அவரை வணங்கத் தொடங்கினராம.

மாரியம்மன் பார்ப்பனப் பெண்ணின் தலையையும், புலைச்சியின் உடலையும் கொண்டிருப்பதாகப் புராணக் கதைகள் கூறுகின்றன. எனவேதான் பல கோயில்களில் மாரியம்மனின் தலையை மட்டுமே கருவறையில் வைத்து வணங்குகின்றனர். இதனை விளக்கும் புராணக்கதை கீழ்க் காணுமாறு கூறப்படுகிறது.





மாரியம்மன்

சமதக்கினி முனிவர் தம் மனைவி இரேணுகாவை ஐயுற்றமையால் தம் மகன் பரசுராமனிடம் அவன் தாயை வெட்டிக் கொல்லும்படி ஆணையிட்டாராம். பரசுராமன் தன் தாயும் அவளுடைய வேலைக் காரப் புலைச்சியும் சென்று கொண்டிருக்கும் போது, இருவரையும் வெட்டிக் கொன்றானாம். அதைக் கண்டு மகிழ்ந்த முனிவர் தம் மகனிடம் அவனுக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டாராம். உடனே பரசுராமன் தன் தாய் மீண்டும் பிழைக்க வரம் தரக் கேட்டானாம். முனிவரும் அவ்வாறே வரம் வழங்கினாராம்.

பரசுராமன் தன் தாய் வெட்டுண்டு கிடக்கும் இடத்திற்குச் சென்று அவசர அவசரமாக வெட்டுண்ட உடல்களையும் தலைகளையும் ஒன்று சேர்த்தான். இருவரும் உயிர் பெற்று எழுந்தனர். அப்போதுதான் அவன் தவறுதலாகத் தன் தாயின் உடலுடன் புலைச்சி தலையையும் புலைச்சியின் உடலுடன் தன் தாயின் தலையையும் சேர்த்து வைத்துவிட்டதனை உணர்ந்தான். இருவரையும் தந்தையிடம் அழைத்துச் சென்றான். தந்தை திடுக்கிட்டார். இருப்பினும் இரேணுகாவின் தலையுடைய பெண்ணை ஏற்றுக் கொண்டு மாரியம்மன் என்று பெயரிட்டார். புலைச்சி தலை கொண்ட பெண்ணிற்கு மாதங்கி என்று பெயரிட்டு, மாரியம்மனை விடத் தாழ்ந்த நிலையில் வைத்தார். உயர் சாதிக்காரர்கள் மாரியம்மனையும், தாழ்ந்த சாதியினர் மாதங்கி அல்லது கங்கமமாவையும் வணங்கலாம் என்று முனிவர் அறிவித்தாராம்.

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள தாழ்ந்த சாதியினரான மாதிகர்கள் இன்றும் மாதங்கியை எல்லம்மா, கங்கம்மா என்னும் பெயர்களில் வழிபடுகின்றனர். கங்கம்மனுக்கு எருமைகளும் வெட்டப்படுகின்றன.

மாரியம்மன் பண்டைய திராவிடத் தெய்வம் என்பதனை, ஆதி திராவிடர்களின் தொடர்பு இத் தெய்வத்திற்கு உள்ளதால் அறியலாம். புலையர்களே தொடக்கக்காலத்தில் மாரியம்மன் கோயில் பூசாரி களாக இருந்தனர். எடுத்துக்காட்டாக, திருவேற்காடு கருமாரியம்மன் கோயிலில் கூட முன்பு புலையர் களே பூசாரிகளாக இருந்தனர். சிறிது காலத்திற்கு முன்புதான் சில மாரியம்மன் கோயில்களில் பார்ப் பனர்கள் அருச்சகர்களாக நியமனம் பெற்றனர். பல கிராமங்களில் பார்ப்பனர் அல்லாதாரே பூசாரிகளாக இன்றும் உள்ளனர். மாரியம்மன் தாழ்ந்த சாதி மாப்பிள்ளையை மணந்து கொண்டதாகவும் கதை கூறப்படுகிறது.

அடுத்து, பிருகு முனிவரின் மனைவி நாகாவலி அழகிலும் கற்பிலும் மேம்பட்டவளாக இருந்தாள். ஒருநாள் முனிவர் ஆசிரமத்தில் இல்லாதபோழ்து நாகாவலியின் அழகும் பத்தினித்தன்மையும் உண்மை தானா என்று அறிய மும்மூர்த்திகள் ஆசிரமத்திற்கு வந்தனர். அவர்கள் அவ்வாறு வந்ததைக் கண்டு கோபம் கொண்டு, முனிவரின் பத்தினி அவர்களைச் சிறு குழந்தைகளாக மாற்றிவிட்டார். அதனால் சீற் றங்கொண்ட மும்மூர்த்திகள் அவளைச் சபித்துவிட்ட

னர். அவள் அழகு மங்கியது. அவள் முகத்தில் அம்மை வார்த்தது போன்ற அடையாளங்கள் தோன்றின. திரும்பி வந்த முனிவர், குருபியாக இருந்த மனைவியை, ஆசிரமத்தினின்றும் விரட்டிவிட்டு நீ உலகில் அலகையாகப் பிறந்து, மக்களுக்கு உன்னைப் போல் ஆகும் நோயைப் பரப்பி வருவாய் என்று சாபமிட்டாராம். அவ்வாறு அவ்வம்மை மாறியிருக்கக் கண்டதாலே அவருக்கு 'மாறி' என்னும் பெயர் ஏற்பட்டதாகக் கதை ஒன்று கூறப்படுகிறது மாரியம்மன் திருவள்ளுவரின் மனைவி என்று மற்றொரு கதை கூறப்படுகிறது.

மாரியம்மன் தை, ஆடி மாதங்களிலும், செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய நாள்களிலும் சிறப்பாக வணங்கப்படுகிறாள். இளநீர், பொங்கல், மாவிளக்கு, நீர்மோர், பானகம், அரியரிசி ஆகியவற்றை மாரியம்மனுக்குப் படைக்கின்றனர். காவடியும், கரகமும் எடுத்து, அலகு குத்தி, அக்கினிச்சட்டி எடுத்துத் தீ மிதித்து மாரியம்மன் விழாக்களில் மக்கள் மகிழ்கின்றனர். பலர் நோன்பிருப்பர். வேப்பிலை அம்மனுக்குச் சிறப்புமிக்க அணி. மஞ்சள் துணியும் பிடித்தமானதே.

தமிழ்நாட்டில் திருவேற்காடு, சமயபுரம், அன்பில், தஞ்சை, தென்னலூர், கரூர், வலங்கைமான், மணப்பாறை, அறந்தாங்கி, நாகப்பட்டினம், கோவை, திண்டுக்கல் முதலான ஊர்களில் மாரியம்மன் விழாச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தஞ்சைக்குக் கிழக்கில் மாரியம்மன் கோயில் என்ற ஊரும் உள்ளது. தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவின் பல பகுதிகளிலும் மாரியம்மன் வழிபாடு உள்ளது. பழங்குடி மக்கள் முதல் இன்றைய நாகரிக மக்கள் வரை அனைவரும் மாரியம்மனை வழிபடுகின்றனர்.

பஞ்சாபு, வங்காளம், பலுசிசுத்தானம் முதலான பகுதிகளிலும் மரிமாதா வழிபாடு பரவியுள்ளது. பலுசிசுத்தானத்திலுள்ள இங்குலாச்சு (Hinglaj) என்னும் ஊரில் மரிநாநீ என்னும் பெயரில் அம்மன் கோயில் ஒன்று புகழ்பெற்று விளங்குகிறது. சீதளா தேவி, மரிமாதா, மரிநாநீ என்னும் பெயர்களில் இத்தெய்வம், நாட்டில் அம்மை, வாந்திபேதி, முதலான நோய்கள் நீங்கவும், துன்பங்கள் அகலவும், நாடு செழிக்கவும் பல கோடி மக்களால் வணங்கப்படுகிறது. மலேசியாவில் கோலாலம்பூரில் உலகப் புகழ்மிக்க மாரியம்மன் கோயில் உள்ளது. மத்திய இந்தியாவில் இவ்வம்மை புவனேசுவரி, தந்தேசுவரி என்னும் பெயர்களால் வணங்கப்படுகிறாள். சில பகுதிகளில் பெரியம்மைக்குரிய தெய்வமாகிய அம்மன் கங்கம்மா, கங்கையம்மாள், காளியம்மா, முத்தாலம்மை, முத்தம்மாள் என்னும் பெயர்களாலும் கூறப்படுகிறாள்.

தமிழ்நாட்டு மக்கள் பெயர்கள் பல மாரியம்மன் நினைவாக இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக மாரியாயி, மாரிமுத்து, மாரியப்பன், கண்ணாயிரம் முத்தம்மா, முத்துமாரி, மாரி முதலான பெயர்களைச் சுட்டலாம். இந்தியாவை ஆட்சிபுரிந்த ஆங்கிலேயர்களும் மாரியம்மனுக்கு மரியாதைசெலுத்தியுள்ளனர் என்பது கூறப்படுகிறது. மாரியம்மன் தமிழ்நாட்டின் தொன்மையான, சக்திமிக்க தெய்வமாகும்.

ம. இரா.

*மாரீசன்*. இவன் இராமாயணக் கதையில் வரும் மாந்தருள் ஒருவன்; தாடகையின் மக்களுள் மூத்தவன். சுகேது என்ற இயக்கன் மகப் பேறின்றி, பிரமனைக் குறித்துக் கடுந்தவம் இயற்றினான். பிரமனுடைய திருவருளால் அவனுக்கு ஆயிரம் யானை பலமுடைய தாடகை மகளாகப் பிறந்தாள். மங்கைப் பருவம் எய்திய தாடகையைச் சுந்தன் என்ற இயக்கனுக்கு அவளுடைய தந்தை மணம் முடித்துக் கொடுத்தான். அவர்களுக்கு மாரீசன், சுபாகு என்னும் ஆண் மக்கள் பிறந்தனர். அகத்தியருடைய சாபத்தால் சுந்தன் அழிந்தான். தாடகை ஓர் அரக்கியின் உருவெடுத்து முனிவன் ஒருவனைப் பயமுறுத்த அம்முனிவனின் சாபத்தால் தாடகையும் அவள் மக்களும் அரக்கர்கள் ஆயினர். அரக்கர்களாக உருமாறிய பின்னர், இலங்கையை ஆண்ட இராவணனோடு இவர்களுக்கு உறவு ஏற்பட்டது. தாடகையைத் தன் அத்தையாகவும் அவள் மக்களை மாமன்மார்களாகவும் இராவணன் ஏற்றுக்கொண்டான்.

இராமன் விசுவாமித்திரன் வேள்வியை அழிக்க முயன்ற தாடகையைக் கொன்றான். விசுவாமித்திரன் வேள்வியைத் தொடர்ந்தான். தாடகையின் மக்களான மாரீசனும் சுபாகுவும் அரக்கர் கூட்டத்தொடு விண்ணில் தோன்றி வேள்வியை அழிக்க முயன்றனர். இராமன் மானவம் என்னும் அத்திரத்தை ஏவி, மாரீசனைக் கடலுக்குள் தள்ளினான்; சுபாகுவை அக்கினிப்படையால் கொன்றான்; உடன் வந்த அசுரர்கள் வாயுவின் படையால் மாண்டனர்.

இராமனுடைய வலிமையைக் கண்டு அஞ்சிய மாரீசன் முனிவன் வேடம் பூண்டு தவம் இயற்றத் தொடங்கினான். இடையில், இராமன் சீதையுடன் தண்டகக் காட்டில் இருந்தபொழுது தன் தாயையும் தம்பியையும் கொன்ற இராமனைப் பழிவாங்க எண்ணி இரண்டு அரக்கர்களுடன் கூரிய கொம்புகளுடைய மான்களாக உருமாறி இராமனைக் கொல்ல முயன்றான். இராமன் வில்லை வளைத்துக் கணைகள் தொடுக்கப் பின்வாங்கி ஓடிவிட்டதாக அவன் இராவணனிடம் கூறும் வரலாறு வான்மீகத்தில் மட்டும் உள்ளது.

மாயமான் உருவெடுத்துச் சீதையை மயக்குமாறு இராவணன் வேண்ட அவனுக்கு உடன்படாமல், இறுதியில் இராவணனுக்கு அஞ்சி மாயமான் வடி வெடுத்து இராம, இலக்குவர்களை மயக்கிய வர லாற்றைப் பொறுத்த அளவில் வான்மீகர், கம்பர், துளசி ஆகியோர் பாடிய வரலாறுகளில் பெரிய வேறு பாடுகள் இல்லை.

மான்வடிவெடுத்து இராம, இலக்குவர்களை மயக்கி இலைக்குடிலிலிருந்து மிக்க தொலைவுக்கு அழைத்துச் சென்றுவிட்டால்தான் எளிதில் சீதையைக் கவர இயலும் என்று இராவணன் மாரீ சனிடம் கூறுகிறான். இராமனுடைய பெயரைக் கேட்ட அளவில் மாரீசனுடைய முகம் அச்சத்தால் வாடிற்று; கைகால்கள் நடுங்கின; வாய் உலர்ந் தது; இராவணனைக் கைகூப்பி வணங்கி, வரக் கூடிய துன்பங்களை விரிவாக எடுத்துச் சொல்கிறான். இராவணன் அவன் நல்லுரைகளை ஏற்காமல் தன் கட்டளையை மறுத்தால் அவனைக்கொன்று விடுவ தாக அச்சுறுத்துகிறான். மாரீசன் அஞ்சாமல் மீண்டும் அவனுக்கு அறிவுரைகள் கூறுகின்றான். ஆனால், இராவணன் மனம் மாறவில்லை. எனவே, வேண்டா வெறுப்பாக இராவணன் வேண்டுகோளை ஏற்று மாயமான் வடிவெடுத்துச் செல்லுகிறான். மாயமானைக்கண்ட இலக்குவன் இது மாரீசனின் மாயமே என்று இராமனுக்குக் கூறுகிறான். இராமன், அவ்வாறு இருப்பின் அவனைக் கொன்று வருவதாகக் கூறி மானைப் பின்தொடர்கிறான். மாயமான் அடி பட்டு இறக்கும்பொழுது மாயத்தால் இராமன் குரலை எழுப்பி இறக்கிறது. இவ்வாறு வான்மீகர் கதை அமைக்கிறார்.

இந்த அடிப்படைக் கதையில் சில நுட்பமான அழகிய வேலைகளைக் கம்பன் செய்கிறான். 'இந்தியம் அடக்கி நின்ற மாரீசன்' என்று கம்பர் அவனை அறிமுகப்படுத்துகின்றார். இராவணன்மேல் கொண்ட பரிவால் இவனும் பல நல்லுரைகளை எடுத்துக் கூறுகின்றான். தனக்கு இறுதி நேரும் என்னும் அச்சம் இன்றி, பற்றற்று உண்மையுணர்ந்த முனிவனைப்போல இராவணன் கட்டளையை ஏற்று மாயமான் வடிவெடுத்துச் செல்லுகிறான் என்பது கம்பன் படைக்கும் மாரீசன்.

துளசி படைத்த மாரீசன் இராமபக்தனாக இருக்கிறான். இராவணனிடம் முதலில் மறுப்புத் தெரிவிக்கும் மாரீசன், 'இன்று இராமனைக் கண் ணாரக் காண்போம்; அவன் திருவடிகளில மனத்தைச் செலுத்துவோம். அவன் கணையால் இறப்போம். இதைவிடப் பெரும்பேறு என்ன உள்ளது?' என்று எண்ணமிட்டவனாய் மாயமான் வடிவெடுத்து இராமன் கணையால் மடிகின்றான். இராமகாதை யைப் பாடிய மூன்று பெரும்புலவர்களும் நுட்பமான மாற்றங்களைச் செய்திருப்பது கருதத்தக்கது.

அ.பா.

**துணை நூல்கள்:**

**கம்பர்**, கம்பராமாயணம், கம்பன் கழகம், சென்னை, 1976.

வால்மீகி ராமாயணம், தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை, 1964.

*மாரெங்கோ*: பிரான்சு நாட்டு மாமன்னன் நெப்போலியன் போனபார்ட்டு (Napoleon Bonaparte-கி.பி. 1769 – 1821) வெற்றி பெற்ற போர்க் களங்களுள் மாரெங்கோவும் (Marengo) ஒன்றாகும். இச்சிற்றூர் இத்தாலி நாட்டில் தென் கிழக்குப் பிட் மாண்டில் அலெக்சாண்டிரியாவிற்குக் கிழக்கே 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு நெப்போலியன் ஆசுதிரியப் படைகளைத் தோற்கடித்தார்.

நெப்போலியன் எகிப்துப் படையெடுப்பில் ஈடு பட்டிருந்தபோது, இங்கிலாந்தின் முயற்சியால் இரண்டாம் ஐரோப்பியக் கூட்டணி ஒன்று (கி.பி. 1798–1802) பிரான்சிற்கு எதிராக உருவாக்கப்பட் டது. இங்கிலாந்து, ஆசுதிரியா, உருசியா, துருக்கி, நேபிள்சு, போர்ச்சுகல் ஆகியன அக்கூட்டணியில் சேர்ந்தன. ஆசுதிரிய உருசியப் படைகள் வட இத் தாலியின் மீது படையெடுத்ததன் விளைவாக, பிரான்சு, உரோம், நேபிள்சு ஆகிய நகரங்களை இழந் தது. இயக்குநர் அரசாங்கத்தைக் (Director) கவிழ்த்து விட்டு, தலைவராகப் (Consul) பதவியேற்று நெப் போலியன், கடந்த இத்தாலியப் போரில் பிரான்சுக்கு ஏற்பட்ட இழுக்கைப் போக்க முடிவெடுத்தார். மீண்டும் இத்தாலியப் படையெடுப்பை கி.பி. 1800 -இல் மேற்கொண்டார். அதற்குமுன் தன் அரச தந்திரத்தால், உருசியாவை இரண்டாம் கூட்டணியி லிருந்து விலகும்படி செய்தார். அதன்படி இத்தா லியை மீண்டும் கைப்பற்றுவதில் முனைந்து செயற் பட்டார்.

**மாரெங்கோப் போர்**: நெப்போலியன் படைகள் குளிர், பனி போன்ற இயற்கை இடையூறுகளைப் பொருட்படுத்தாமல ஆல்ப்சு மலையின் மிகப் பெரிய புனித பெர்னாடு கணவாயைக் (Great St. Bernad Pass) கடந்து போ ஆற்றுப் பள்ளத்தாக்கில் இறங் கின. மாரெங்கோ என்னுமிடத்தில் கி.பி. 1800-இல் நெப்போலியன் படை ஆசுதிரியப் படைகளைச் சுற்றி வளைத்தது.

மைக்கேல் பிரீட்ரிச் பெனிடிக்ட் வான் மெலாசு பிரபு (Baron Michael Friedrich Benedikt Von

Melas, கி.பி. 1729-1806) என்னும் மாவீரன் ஆசுதிரியப் படைகளுக்குத் தலைமை தாங்கினான். போரின் தொடக்கத்தில் ஆசுதிரியப் படைகள் பெரு வீரத்துடன் போரிட்டுப் பிரான்சுப் படைகளைப் பின்னடையச் செய்தன. ஆசுதிரியப் படைகள் வெற்றிக் களிப்புடன் முன்னேறிக் கொண்டிருந்த சமயத்தில், பிராங்கோய் எடின்னே டி கெல்லெர்மேன் (General Francois Etinne de Kellerman) என்னும் பிரான்சுப் படைத்தலைவன் தலைமையில் அங்கு வந்து சேர்ந்த புதிய படை, புதுத் தெம்புடன் ஆசுதிரியப் படைகளை எதிர்த்துப் போரிட்டது. முன்னேறிக் கொண்டிருந்த ஆசுதிரியப்படை பின்னோக்கியது. பிரான்சுப் படை வாகை சூடியது.

இப்போரில் பிரான்சுப் படைத் தளபதி உலூயி சார்லசு அண்டோனினே டி வே கௌசு (General Louis Charles Antonnine de Vey Gous) முதலான 4000 பிரான்சு வீரர்கள் மாண்டனர். ஆசுதிரியப் படை வீரர்கள் 9500 பேர் இதில் மாண்டனர். இவ்வெற்றியைத் தொடர்ந்து மோரோ (Moreau) என்ற படைததளபதியின் தலைமையில் மற்றொரு பிரான்சுப்படை தெற்குச் செருமனியில் புகுந்து, ஆசுதிரியர்களைக் கோகன்லிண்டன் போரில் வென்றது. அத்தோல்விகளின் விளைவாக ஆசுதிரியா, பிரான்சுடன் கி.பி. 1801-இல் உலூனேவில் (Luneville) உடன்பாட்டைச் செய்து கொண்டது. கேம்போ போர்மியா உடன்படிக்கையை அது அப்படியே உறுதிப்படுத்தியது. மீண்டும் இங்கிலாந்து மட்டும் போரில் தனித்துவிடப்பட்டது. வட இத்தாலி முழுவதும் பிரான்சிற்கு வழங்கப்பட்டது இப்போரின் மிக இன்றியமையா விளைவுகளுள் ஒன்றாகும்.

ம.இரா.

*மால்கம், சர் சான்* (**கி.பி.1769-1833**): இவர், ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்தில் பணி புரிந்த ஒரு ஆங்கிலேய நிருவாகி. சிறந்த வரலாற்று நூல்களையும் இயற்றியுள்ள இவர், இசுகாட்லாந்தில் (Scotland) இலாங்காம் (Langholm) என்னும் இடத்திற்கு அண்மையில் உள்ள பர்ன்புட்டு (Burnfoot) என்ற இடத்தில் கி பி. 1769-ஆம் ஆண்டு பிறந்தார். தம் 13-ஆம் வயதில் சென்னையில் இருந்த ஆங்கில இராணுவத்தில் ஒரு வீரராகப் பணியில் சேர்ந்தார். சர் சான் மால்கம் (Sir John Malcolm), கி.பி. 1798 இல் வெல்லெசுலி பிரபுவால் ஐதராபாத்தின் பேராளருக்கு (Resident) உதவியாளராக நியமிக்கப்பட்டார். நான்காம் மைசூர்ப் போரில் (கி.பி.1799) பங்கேற்றார். இவர், பாரசீகத்திற்கு கி.பி. 1800,1807,1810 ஆகிய ஆண்டுகளில் தூதுவராக நியமிக்கப்பட்டார். வெல்லெசுலி பிரபுவின் தனிச்செயலாளராகவும் மராட்டியப் போர்க் காலத்தில் அவருடைய அரசியல் முகவராகவும் (Political Agent) கி பி.1801 - 2 ஆகிய ஆண்டுகளில் செயற்பட்டார். வீரத்திருத்தகை (Knight) பட்டம் கி.பி. 1812-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டது. பம்பாயின் ஆளுநராகவும் கி.பி. 1826-30 ஆகிய ஆண்டுகளில் பணிபுரிந்தார். அப்பொழுது இந்திய மக்களுடன் மிகவும் நெருங்கிப் பழகி அவர்களின் குறைகளைக் கேட்டுக் கனிவுடன் அவற்றைக் களைந்திட முயன்றார். அதனால். இந்தியர்களின் அன்பைப் பெற்றார்.

ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இலான்செசுடன் (Launceston) தொகுதியின் பேராளராக கி.பி. 1831-32 ஆகிய ஆண்டுகளில் பணிபுரிந்தார். அக்காலத்தில் இந்தியர்களுக்குக் கல்வி வசதியைப் பெருக்கவேண்டும் என வற்புறுத்தினார்.

ஒரு சிறந்த வரலாற்றெழுத்தாளராகிய மால்கம் கி.பி. 1811-இல் இந்திய அரசியல் வரலாறு (Political History of India). கி பி.1818-இல் பாரசீக வரலாறு (History of Persia), கி.பி. 1833 - இல் 'இந்திய நிருவாகம்', கி.பி. 1836-இல் 'கிளைவின் வாழ்க்கை' (Life of Clive) முதலிய நூல்களைப் படைத்துள்ளார். இவர் கி.பி. 1833-ஆம் ஆண்டில் காலமானார்.

செ.ஜோ.

*மால்கம், நார்மன்*: இவர் அமெரிக்காவின் புகழ்பெற்ற மெய்ப் பொருளியல் அறிஞர். இவர் 1911-ஆம் ஆண்டு கான்சாசு (Kansas) மாநிலத்திலுள்ள செல்டென் என்னுமிடத்தில் பிறந்தார். மெய்ப் பொருளியற் கல்வியை முதலில் வெப்ராசுலியா (Webraslea) பல்கலைக் கழகத்திலும் பின்னர் ஆர்வார்டு (Harward) பல்கலைக் கழகத்திலும் பயின்றார். பேராசிரியர் மூர் என்பவரை 1938,39-ஆம் ஆண்டுகளில் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் சந்தித்தார். மூரின் தாக்கம் மால்கம் நார்மனிடம் (Norman Molcolm)காணப்பட்டாலும் அவருடைய செயல்கள் முழுவதும் விட்கென்சுடீன் (Wittgenstein) என்ற அறிஞரின் கருத்துகளைப் புரிந்து கொள்வதிலேயே அமைந்தன. மால்கம், விட்கென்சுடீனின் மெய்ப்பொருளியல் வினாக்களுக்கு விடை கூறும் வகையில் கருதிப் பார்க்கின்ற முறையையே தம் சிந்தனைகளை விளக்குவதற்குப் பயன்படுத்தினார். எனவே, இவரையும் நேர்காட்சிவாத மெய் விளக்கக் கோட்பாட்டாளர்களில் (Positivists) ஒருவராகக் கருதலாம்.

மால்கம் நார்மனின் எழுத்துகள் இன்றியமையாத உண்மையின் இயல்பு, நுகர்வில் அறியப்படும்

உறுதிப்பாடு (Empirical Certainty), பொது மக்கள் பயன்படுத்தும் மொழிக்கும் மெய்ப்பொருளியலுக்கு முள்ள தொடர்பு, அறிவிற்கும் அறக்கூற்றுகளுக்கும் உள்ள தொடர்பு, உள்ளம் பற்றியதான நினைவு கனவு ஆகியவற்றின் உண்மை அறிவு, பிற உள்ளங் களின் சிக்கல்கள், சமய மெய்ப்பொருளியல் பற்றிய செய்திகள் ஆகியவை பற்றியே இருந்தன. மேலும், இன்றியமையாத உரைகள் உண்மையில் சொல் சார்ந்தவையா என்பது பற்றியும், புலனுக்கு முன் னெழும் (a priori) மொழியியல் கோட்பாட்டுக் கூற்றுகளை உள்நோக்கமாகக் கொண்ட மரபுரிமைக் கட்டுப்பாடுகளின் (Entailments) இயல்பு பற்றியும், நுகர்வு சார்ந்த கூற்றுகளே எப்பொழுதும் உறுதிப் பாடு அமைந்தவை என்பது பற்றியும் மால்கம் ஆராய்ந்துள்ளார். பொதுவாக நேர்காட்சி வாத மெய்விளக்கக் கோட்பாட்டாளர்கள் பயன்படுத்தும் மொழி ஆய்வு, நுகர்வின் உறுதிப்பாடு, புலன்கடந்த பொருளியல் கூற்றுகளின் பொருளற்ற தன்மை பற்றிய விளக்கம் ஆகிய செய்திகளே மால்கமின் மெய்ப் பொருளியலில் விரவியுள்ளன என்று கூறலாம்.

மால்கம் நார்மனின் நூல்கள் பின்வருவனவாகும். அவையாவன: 1) பொது அறிவுக்குப் பாதுகாப்பு (Defending Commonsense - 1949), 2) மெய்ப் பொருளியலும் பொது நிலையான மொழியும் (Philosophy and Ordinary Language - 1951), 3) கனவு காண்டலும ஐயக்கொள்கையும் (Dreaming and Skepticism - 1956), 4) உலுட்விக் விட்கென்சுடீன் ஒருவரலாற்றுக் குறிப்பு (Ludwig Wittgenstein-a-Memoir-1958), 5) கனவு காணுதல் (Dreaming-1959), 6) அறிவும் உறுதிப்பாடும் (Knowledge and Certainty-1963), 7) அறிவியல் பொருள் முதல்வாதமும் முற் றொருமைக் கோட்பாடும் (Scientific Meterialism and Identity Theory-1964), 8) கடவுள் இருக்கின்றார் என்பது ஒரு சமய நம்பிக்கையா? (Is it a Religious Belief that God Exists-1964), 9) நடத்தைக் கொள்கை - ஒரு சமய மெய்ப்பொருளியலாக (Behaviourism as a Philosophy of Religion-1964).

பி.ஆர்.ந.

மால்ட்டா மத்திய தரைக் கடலில் சிசிலித்தீவுக் குத் தெற்கில் உள்ள ஒரு சுதந்திர நாடு. இதன் பரப்பு 316 ச.கி.மீ. இந்நாட்டில் மால்ட்டாத் தீவு (Malta) (பரப்பு 246 ச.கி.மீ.), கோசோத் தீவு (Gozo) (பரப்பு 67.3 ச.கி.மீ.), கோமினோத் தீவு (Comino) (பரப்பு 2.6 ச.கி.மீ.) ஆகியன அடங்கும். மால்ட்டீசுத் தீவுகள் என்றும் இது குறிப்பிடப்படும். இதன் தலைநகர் வலெட்டா (Valetta). மால்ட்டாவில் ஆறு அல்லது ஏரி எதுவும் கிடையாது. இயற்கை வளங்களுமில்லை. மரங்களும் மிகமிகக் குறைவு. பாறைகள் உள்ளன. எனினும், இதன் அமைவிடம் காரணமாக வரலாற் றில் இதற்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டிருந்தது. ஆங்கி லேயர் நீண்டகாலம் இதைத் தம் கடற்படைத் தளமாகப் பயன்படுத்தி வந்தனர். மண்வளம் சிறப் புற்றிராத போதிலும் இங்குக் கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு, காய்கறிகள், பழங்கள் முதலியன விளைகின்றன. சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து போகின்றனர். துணிகளுக்கான நூலும், இரப்பர்ப் பொருட்களும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.



மால்ட்டா

**வரலாறு:** ஏசுநாதர் தோன்றியிருந்த காலத்தில் மால்ட்டா உரோமானியரின் உடைமையாக இருந் தது. அவர்களுக்கு முன்பு, பொயனீசரும் கிரேக்கரும் கார்த்தசீனியரும் இங்கு மேலாண்மை பெற்றிருந் தனர். புனித பால் துறவியின் கப்பல் கி.பி.58-இல் இங்குத்தான் கவிழ்ந்தது என்றுநம்பப்படுகிறது. அந்த இடத்திற்குப் புனிதபால் விரிகுடா என்பது பெயர். மால்ட்டாவை கி.பி. 870-இல் அரேபியர் கைப்பற்றி னர். பிறகு கி.பி. 1090-இல் சிசிலித் தீவின் நார்மானி யர் இதைத் தம்முடன் இணைத்துக் கொண்டனர். இந்த இணைப்பு கி.பி. 1530-வரை தொடர்ந்து நீடித்தது. புனித உரோமப் பேரரசர் ஐந்தாம் சார் லசு (Charles V), இசுலாமியரின் தாக்குதல்களிலிருந்து மால்ட்டாவை வீரத்துடன் காப்பாற்றிய மால்ட்டா புனித சான் வீரத் திருத்தகையினருக்கு (Knights of Saint John of Malta) இதைப் பரிசாக வழங்கினார். இவர்கள் கி.பி. 1798-இல் இத்தீவை நெப்போலிய னுக்குக் கொடுத்துவிட நேர்ந்தது. நெப்போலியன் தோல்வியின் விளைவாக மால்ட்டா ஆங்கிலேயரது 'காப்பரசு' ஆகியது. இரண்டாம்செருமானிய விமானப் படைகளால் மால்ட்டா மிக இடர்ப்பட்டது. தீவின்

மக்கள் உறுதியுடனும் வீரத்துடனும் பகைவர்களை எதிர்த்து நின்றனர். அதற்குப் பரிசாக, 1942 - இல் இங்கிலாந்து மன்னர் ஆறாம் சார்சு (George VI) மால்ட்டா மக்களுக்குச்'சார்சு வீரச் சிலுவை' (George Cross for Bravery) விருதை வழங்கினார். பிறகு 1947 - இல் மால்ட்டா உள்நாட்டுத் தன்னாட்சியைப் பெற்றது. முழுச் சுதந்திரம் வேண்டி, மால்ட்டா மக்கள் கலகங்கள் செய்ததால் 1958 முதல் 1962 வரை உள்நாட்டுத் தன்னாட்சி நீக்கப்பட்டிருந்தது. இத்தீவு 1964 - இல் முழுச் சுதந்திரம் பெற்று, ஆங்கிலேயப் பொதுநலக் கூட்டரசில் (British Commonwealth) உறுப்பினராகத் தொடர்ந்து நின்றது. ஐக்கிய நாடுகள் சபையில் 1965-இல் மால்ட்டாகவும் இடம் பெற்றது. மால்ட்டா நாடாளுமன்றம், 1974 - இல் அந்நாடு ஒரு சுதந்திரக் குடியரசு என்று இங்கிலாந்துக்கு அறிவித்தது. முன்னர்த் தலைமை ஆளுநராக இருந்த சர் அந்தோணி மாமோ (Sir Antony Mamo) குடியரசுத் தலைவரானார். தெ.பா.

**துணை நூல்:**

**Blouet, Brian,** Short History of Malta, Praeger, New York, 1967.

*மால்பரோ, சான் சர்ச்சில்* (**கி.பி. 1659 -1722**) இங்கிலாந்தின் சிறந்த படைத்தலைவர்களுள் ஒருவர். ஆன் அரசியார் (Queen Anne) காலத்தில் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தார். இசுபானிய வாரிசுரிமைப் போரில் (கி.பி. 1702-13) பெரும்பங்கு ஏற்றார். பிற்காலத்தில் இங்கிலாந்தின் பிரதமராக இருந்த வின்சுடன் சர்ச்சில் இவர் குடும்பத்தினர். இவர் தோரிக் (Tory)கட்சியைச் சேர்ந்தவர். ஆனால், மிதவாதி. தேவன்சயரில் (Devonshire) பிறந்த மால்பரோ சான் சர்ச்சில் (Marlborough, John Churchill), புனிதபால் பள்ளியில் படித்தார். இவர் சகோதரியான அரபெல்லா, யார்க்குக் கோமகனின் துணைவியாரிடம் செல்வாக்குடன் இருந்தார். அழகும், கவர்ச்சியும் மிக்க சான், தம் 16 - ஆம் வயதிலேயே படையில் சேர்ந்தார். தச்சுக்காரர்களுக்கெதிரான பிரான்சுப் படையெழுச்சிகளில் மான்மவுத்துப் பிரபுவுடன் இவர் கலந்து கொண்டார். மாசுடிரிக்கு (Mastrich) முற்றுகையில் கி.பி. 1673,74-ஆம் ஆண்டுகளில் தம் திறம் காட்டியதன் மூலம் இவர் பதவி உயர்வு பெற்றார். இளவரசி ஆனின் தோழியாக இருந்த சாரா சென்னிங்சு (Sarah Jennings) என்னும் பெண்ணை கி.பி. 1678-இன் முற்பகுதியில் மணந்தார். அதனால், இவர் செல்வாக்கு உயர்ந்தது. காலாட்படைப் பிரிவின் முதன்மைத் தலைவராக உயர்ந்தார். யார்க்குக் கோமகனாருடன் நெதர்லாந்துக்கும், இசுகாட்லாந்துக்கும் சென்றார். இவர் கி.பி. 1685 - இல் 2-ஆம் சேம்சு (James II) பட்டமேற்ற பொழுது ஆங்கிலேய அரசுக்கு அதிக மானியம் கேட்பதற்காகப் பதினான்காம் உலூயியிடம் தூதுவராகச் சென்றார். சால்,சேம்சின் காலத்தில் எழுந்த கிளர்ச்சிகளை அடக்கியதன் மூலம் தலைமைப் படைத்தளபதியானார்.

பாராளுமன்றம் கி.பி. 1687 - இல் மூன்றாம் வில்லியத்தைப் பட்டமேற்க அழைத்தபொழுது சான் அவருடன் சேர்ந்தார். வில்லியம், கி.பி. 1689 - இல் இவரை ஆலோசனை சபையின் உறுப்பினராக்கினார். இவர் மால்பரோ பிரபுவாக நியமனம் பெற்றதும் வில்லியம் மூலமேயாகும். வில்லியம் சூன் கி.பி. 1690-இல் அயர்லாந்தில் இருந்தபொழுது நிருவாகத்தைக் கவனிக்க அமைக்கப்பட்ட ஒன்பதுபேர் கொண்ட குழுவில் மால்பரோ முதன்மைப் பங்கு ஏற்றார்.



சான் சர்ச்சில் மால்பரோ

இவர் கி.பி. 1692-இல் சதிக்குற்றம் சாட்டப்பட்டுப் பதவி விலக்கப்பட்டார். இடைக்காலத்தில் சிறையும் சென்றார். மீண்டும் கி.பி. 1698-இல் அரசர் ஆதரவு பெற்றார். இவர் மூத்த மகள் என்றியட்டா (Henrietta) கோடால்பின் பிரபுவை கி.பி. 1698-இல் மணந்தார். இவர் மகள் ஆன், சந்தர்லாந்து பிரபுவின் ஒரே மகனான சார்லசை கி.பி. 1700-இல் மணந்தார். இத்திருமணங்கள் அரசியல் முக்கியத்துவம் பெற்றவையாகும்.

இவர் நெதர்லாந்தில் ஆங்கிலேயப் படைகளின் தலைவராகவும், ஏகின் (Hague) அரசத் தூதுவராகவும் கி.பி. 1701-இல் நியமிக்கப்பட்டார். மால்பரோ கி.பி. 1762-இல், இளவரசி ஆன் அரியணை ஏறியபொழுது இங்கிலாந்திலேயே படைகளின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இவர்

பிரான்சு மக்களுக்கெதிரான படையெழுச்சிகளில் பெரிய வெற்றி கண்டு கெய்சர்வொர்த்து, வெண்டோ, இலீசு (Leige) முதலிய இடங்களைக் கைப்பற்றினார். ஆனால், ஆண்ட்வெர்ப்பு நகரத்தை மட்டும் கைப்பற்ற இயலவில்லை. இசுபானிய வாரிசுரிமைப் போரில் தச்சுக்காரர்களுக்கு உதவினார்.

இவர் கி.பி. 1704-இல் பெரும்படையுடன் பிளென்கிம் (Blenheim), என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் பிரான்சுக்காரர்களைப் படுதோல்வி அடையச் செய்தார். பாராளுமன்றத்தின் முயற்சியால் உட்சுடாக்கு (Woodstock) பிரபுவாகச் சிறப்பிக்கப்பட்டார். பிளென்கிம் அரண்மனை இவருக்காகக் கட்டப்பட்டது. நெதர்லாந்து நாட்டிலுள்ள இராமிலீசு என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் (Battle of Ramillies) பிரான்சுப் படைகளை கி.பி. 1706-இல் முறியடித்துப் பிளேண்டர்சுக்கும், பிரான்சுக்கும் இடையிலுள்ள 9 கோட்டைகளைப் பிடித்தார். ஔடனார்டே (Oudenarde) போரில் கி.பி. 1708-இல் வியத்தகு வெற்றி பெற்றார். அதே ஆண்டில் இலில்லிப் (Lille) போரிலும் வென்றார். மால்பிளேக்கெட்டுப் போரிலும் (Battle of Malplaquet) கி.பி. 1709-இல் எதிரிகளை முறியடித்தார்.

சின்னாட்களுக்குப் பின் இவருக்கெதிரான அமைச்சரவை அமைந்த பொழுது இவர் பதவியிழக்க நேரிட்டது. பொதுப்பணத்தைச் சொந்தச் செலவுகளுக்காகக் கையாண்டார் என இவர்மேல் குற்றம் சாட்டப்பட்டது. இதனால், ஏற்பட்ட வெறுப்பில் நெதர்லாந்துக்குச் சென்றார். மீண்டும் இங்கிலாந்து கி.பி. 1714-இல் திரும்பினார். முதலாம் சார்சு (George I) அரசின் கீழ்ப் படைத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

மால்பரோபிரபு, இங்கிலாந்தில் சீர்திருத்தக் கிறித்தவச்சமயத்தின் எழுச்சிக்காகச் சிறந்த சேவை புரிந்தவர். தம் சகபடைத்தலைவர்களிடம் தாராளத்துடன் நடந்து கொண்ட இவர், தம் கீழ்ப் பணியாற்றும் வீரர்களின் நலத்திலும் மிகுந்த அக்கறை காட்டினார்.

சௌ.ல.

**மாலங்கோவ் சார்சி மாக்சி மில்லியனோவிச்சு (1902 – 1988):** இவர் சோவியத்து நாட்டின் அரசியல் தலைவர். சோவியத்துக் கூட்டுக் குடியரசுப் பிரதமராக 1953-ஆம் ஆண்டு பதவி ஏற்றார்.

மாலங்கோவ் (Malenkov Georgi Maksi Millianovich) 1922-ஆம் ஆண்டு சோவியத்து உருசியாவிலுள்ள ஓரன்பர்க்கு (Orenburg),இப்போதைய செகலோவு (Chkalov) என்னுமிடத்தில் பிறந்தார். தளராத உழைப்பும் சுறுசுறுப்பும் கொண்ட இவர் 1946 – ஆம் ஆண்டுச் சோவியத்துக் கூட்டுக் குடியரசின் துணைப்பிரதமராகப் பதவியேற்றார்.



மாலங்கோவ்

சோசப் இசுடாலின் (Joseph Stalin) 1953 – ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் மறைந்தார். அவரது மறைவிற்குப்பின் சோவியத்து அரசின் நிருவாக அமைப்பிலும், கட்சியின் செயல் முறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. பின், 1953-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் அறிவிக்கப்பட்ட, ‘கூட்டுத் தலைமை’ என்ற கொள்கைக்கிணங்க மாலங்கோவ் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றார். கட்சி மத்திய குழுவின் அமைப்பு முறையும் மாற்றி அமைக்கப்பட்டது. ‘பொதுவுடைமைக் கட்சியின் உயரதிகார மத்திய குழுவின்’ பத்து உறுப்பினர்களுள் மாலங்கோவு முதன்மையானவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்திய குழுவின் செயலாளராகக் குருச்சேவு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் 1955 – ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் திடீரென்று பிரதமர் பதவியிலிருந்து விலகினார். சோவியத்து நாட்டு வேளாண்மைக் கொள்கை வெற்றி பெறாமைக்கு இவரே காரணம் ஆவார். இவர் பதவி விலகியதும் புல்கானின் சோவியத்துப் பிரதமர் ஆனார். பதவி இறக்கப்பட்ட இவர் மின்சார நிலையங்களின் (Power Station) அமைச்சராகவும் அமர்த்தப்பட்டார். அப்பதவியில் 1957 – ஆம் ஆண்டு வரை இருந்த இவர் காசக்சுதானின் வடகிழக்கில் உள்ள (North East Kazakhstan) உசட் – காமெனோ கார்சுகு (Ust – Kameno gorsk)நீர் மின்சக்தி நிலையத்தின்(Hydroelectric Power Station) மேலாளராகப் பதவி இறக்கம் செய்யப்பட்டார். இவர் 1957 – ஆம் ஆண்டு சூன் மாதம் மாலடோவ், ககனோவிச்சு ஆகியோருடன் சேர்ந்து கொண்டு குருச்சேவின் புதிய கொள்கைகளைக் கண்டனம்

செய்தார். எனவே, கட்சி விரோதச் செயல்களில் இவர் ஈடுபட்டார் என்று குருச்சேவால் குற்றம் சாட்டப்பட்டுப் பொதுவுடைமைக் கட்சியின் உயரதிகார மத்திய குழுவினின்றும் நீக்கப்பட்டார். மாலங்கோவ் 1988 - ஆம் ஆண்டு சனவரித் திங்கள் காலமானார். இவர் இரண்டாண்டுக் காலமே பிரதமர் பதவியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

க.ம.

**மாலடோவ்:** சோவியத்து உருசியாவின் வரலாற்றில், நிலையான இடம் பெற்றுள்ள அரசியல் பெருந்தலைவர்களுள், மாலடோவ் என்பாரும் ஒருவராவர். அவர் இயற்பெயர் வியாசெசுலாவ் மைகலோவிக்கு (Vyacheslav Mikhaylovich) என்பதாகும். இவர் கி.பி. 1890 - ஆம் ஆண்டில் வியாட்கா (Viyatka) மாநிலத்தில் தோன்றினார். மிக இளவயதிலிருந்தே அரசியலில் முழுமனத்துடன் ஈடுபட்டார். மாணவராயிருக்கும் போதே 1905 – ஆம் ஆண்டுப் புரட்சியில் கலந்து கொண்டார். இவர் 1906-ஆம் ஆண்டில் போல்சுவிக்கு (Bolshevik) கட்சியில் சேர்ந்தார். மூன்றாண்டுகள் அக்கட்சியின் உறுப்பினராகப் பணியாற்றியபின் இவர் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டு வடருசியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். இரண்டு ஆண்டுகள் இவர் அவ்வாறு அரசியலிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டபின் 1911-இல் விடுதலை அடைந்தார். அதனபின் புனித பீட்டர்சுபர்க்கு (இன்றைய இலெனின்கிராடு) நகருக்குச் சென்று தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் சேர்ந்தார். சோசப் இசுடாலின் (Joseph Stalin) என்ற தலைவருடன் 1912-இல் கூடிப் பொதுவுடைமைக் கட்சியின் நாள் ஏடான பிராவ்தா (Pravda) வைத் தொடங்கினார். பெட்ரோகிராடு இராணுவப் புரட்சிக் குழுவில் 1917 – இல் உறுப்பினராகச் சேர்ந்து



மாலடோவ்

உருசியப் புரட்சி உருவாவதற்குத் திட்டங்களைத் தீட்டினார். புரட்சியிலும் பங்கெடுத்துக் கொண்டார். போல்சுவிக்குக் கட்சியினர் 1917-இல் ஆட்சியைக் கைப்பற்றியபோது பெட்ரோகிராடு சோவியத்து ஆட்சிக் குழுவில் இவர் உறுப்பினரானார். புரட்சி ஓய்ந்த பின்னர்ப் படிப்படியாகக் கட்சியில் உயர்நிலை அடைந்தார். உருசிய மக்கள் அவையின் (Peoples' Commissars)ஆட்சிக்குழுத் தலைவராக 1930 -இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களாட்சி நாடுகளின் தலைமை அமைச்சர் பதவிக்கு இணையான அப்பதவியில் இவர் ஏறக்குறைய தம் இறுதிக் காலம் வரை நீடித்தார். இவரது ஆட்சிக் காலத்தில்தான் உருசியா முழுக்க முழுக்கப் பொதுவுடைமை நாடாக மாறியது. விளைநிலங்கள், தொழில் நிலையங்கள், உற்பத்திப் பொருட்கள் முதலியனவெல்லாம் தேசியமயமாயின. திராட்சுகி, புகானின் போன்றவர்களின் நீதிமன்ற விசாரணையின் போதும், இரண்டாம் உலகப் போரின் போதும் நாட்டை நன்கு வழி நடத்திச் சென்றார். இவர் 1941-இல் இசுடாலின் கட்சித் தலைவராகவும், தலைமை அமைச்சராகவும் வந்தபின் துணைத் தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்தப்பட்டார். வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அப்போது இவர் செருமனியோடு 1939 -இல் ஒரு நட்புறவு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். இரு நாடுகளும், ஒன்றை ஒன்று தாக்குவதில்லை என்ற உறுதிமொழியை எடுத்துக் கொண்டன. அதைமீறிச் செருமனி உருசியாவைத் தாக்கித் தோற்றுப் போனபின், வென்ற நாடுகளால் கூட்டப்பட்ட மாநாடுகளிலெல்லாம் மாலடோவ் உருசியாவின் பேராளராகக் கலந்து கொண்டார். தெக்ரான், யால்டா, பாட்சுடாம், சான்பிரான்சிசுகோ மாநாடுகளில் சோவியத்து நாட்டுப் பேராளர் குழுவின் தலைவராகப் பணியாற்றினார். அனைத்து நாட்டுச் சபையிலும் இவர் உருசிய நாட்டின் பேராளராக 1949 வரை பணியாற்றினார். ஆந்த்ரே என்பார் 1949 – இல் உதவித் தலைமை அமைச்சராக இசுடாலினால் நியமிக்கப்பட்டார். விசின்சுகி இறந்துபோன பின் மாலடோவ் மீண்டும் வெளியுறவு அமைச்சரானார். சோவியத்து உருசியாவின் சார்பில், பெர்லின் நகரில் நடைபெற்ற நான்கு வல்லரசுகள் மாநாட்டிலும், செனிவாவில் நடைபெற்ற தூரக் கிழக்கு நாடுகள் பற்றிய மாநாட்டிலும், இவர் உருசிய நாட்டின் பேராளராகப் பணியாற்றினார். பின்னர் 1955 – இல் செனிவாவில் நடைபெற்ற நான்கு வல்லரசு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டிலும் சோவியத்துப் பேராளர் குழுவின் தலைவராகப் பணிபுரிந்தார். அம் மாநாடுகளிலெல்லாம் மேலை நாடுகளுக்கு எதிரான உருசியக் கொள்கையையே இவர் வற்புறுத்தி வந்தார். அதனால் சிக்கல்கள் மிகுந்தனவே அன்றிக் குறைய

வில்லை. அதனால் 1956 - இல் இவர் தாமாகவே பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அதன்பின் அரசுக் கட்டுப்பாட்டு அமைச்சராக (Minister of State Control) நியமிக்கப்பட்டார். அப்போதுதான் கட்சியின் முதல் தலைவராக விளங்கிய நிகிடா குருச் சேவுக்கும் (Nikita S.Khrushchev) இவருக்கும் அடிக் கடி கொள்கை அளவில் மோதல்கள் ஏற்பட்டன. அதன் விளைவாகக் கட்சியின் முக்கிய பதவிகளிலிருந் தும், அமைச்சர் பதவியிலிருந்தும் முற்றிலும் விலக்கப் பட்டார். இறுதியாக மங்கோலியக் குடியரசின் வெளி நாட்டுத் தூதுவராக நியமிக்கபபட்டார். ஏறக்குறைய நாடு கடத்தலுக்குச் சமமான அப்பதவியில் இவர் இறுதிவரை நீடித்தார். கி.ர.அ.

**மாலத் தீவுகள்**, இந்தியப் பெருங்கடலில் சிரீலங் காவிற்குத் தென்மேற்கில் 640 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பவழத்தீவுக் கூட்டமாகும் (Coral Islands). இதில் ஏறத்தாழ 2000 பவழத்தீவுகளடங்கிய 19 வட்டப் பவழத்திட்டுகள் உள்ளன. இங்குச் சுதந்திர அரசு நடைபெறுகின்றது. இந்தியாவிற்கு அருகில் அமைந்துள்ளதால் பண்டைக்காலத்தில் தமிழகத்தை ஆண்டுவந்த சோழவேந்தர்கள் இதனைத் தம் ஆட்சிக் குட்படுத்தியிருந்தனர். மாலத் தீவுகள்(Maldives) 'முந் நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்' எனவும் வழங்கும். 'கன்னித் தென்கரை கடற்பழந்தீபம்', 'குமரியாற்றின் தென்கரைப்பட்ட பழந்தீபம்' என்று தொல்காப்பியச் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரையில் இவை குறிப்பிடப்படுவதால் பண்டைக்காலத்தில், குமரி யாற்றிற்குத் தெற்கில் இவை இருந்தமை புலனாகும். வடக்கு-தெற்கில் இவை 480 கி.மீ. தொலைவு பரந் துள்ளன. இவற்றின் தலைநகரம் மாலே (Male) ஆகும். அந்நகரம் மாலேத் தீவில் உள்ளது. அந்நகரின் மக்கள் தொகை 46,334 (1985) ஆகும். இத்தீவுகளின் மொத் தப்பரப்பளவு 298 ச. கி.மீ. இங்குள்ள 210 தீவுகளில் மட்டும் மக்கள் வாழ்கின்றனர். மொத்த மக்கள் தொகை 2,00,000 (1984) ஆகும்.

அராபியர், இந்தியர், சிங்களர் ஆகியோரின் கலப்பு இன மக்களே இங்கு வாழ்கின்றனர். அரசுச் சமயமாக இசுலாம் திகழ்கிறது. அவர்கள் திவேகி மொழியைப் பேசுகின்றனர். அதனை மால்டேவியன் மொழி எனவும் கூறலாம். இத்தீவுகள் அனைத்தும் தாழ்நிலப்பகுதியிலேயே அமைந்துள்ளன. தட்ப வெப்ப நிலையைப் பொறுத்தமட்டில் மாலத்தீவுகள் பொதுவாக வெப்பமாகவும் ஈரப்பதமாகவும் (Humid) உள்ளன.

சோழப் பெருமன்னனான முதலாம் இராசரா சன் (கி.பி. 985-1014)மாலத் தீவுகளை வென்றான்.



மாலத்தீவுகள்

அராபியர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் மாலத் தீவு களில் குடியேறினர். போர்த்துகீசியர் கி.பி.1507-இல் இத்தீவுகளில் குடியேறினர். அவர்களுக்குப் பின்னர் கி.பி.17-ஆம்நூற்றாண்டில் மாலத்தீவுகள் தச்சுக்காரர் களின் ஆளுகைக்கு உட்பட்டது. ஆங்கிலேயர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சிரீலங்காவைக் கைப்பற்றிய போழ்து இத்தீவுகளையும் தமது நிருவாகத்தின் கீழ்க்கொண்டு வந்தனர். சிரீலங்கா 1948-இல்விடுதலை பெற்றவுடன் இவை ஆங்கிலேயரின் பாதுகாப்பு நாடாயின. இருப்பினும், உள்நாட்டு விவகாரங்களில் மாலத்தீவுகள் முழுச்சுதந்திரம் பெற்றிருந்தன. புதிய உடன்பாடு ஒன்று 14.2.1960 - இல் நிறைவேறியது. அதன்படி நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டுறவு ஆகிய இரண்டும் ஆங்கிலேயரின் பொறுப்பில் விடப் பட்டன. ஆங்கிலேயரின் விமானத்துறை கான் (Gan) தீவில் இருந்தது. மாலத்தீவுகள் 1965, சூன்26 - ஆம் நாள் விடுதலை பெற்றன. பின்னர் 1968-இல் குடி யரசு நாடாகவும் மலர்ந்தன.

குடியரசுத்தலைவர் மாலத்தீவுகளின் ஆட்சித் தலைவர் ஆவார். இதன் சட்டமன்றம் மசுலிசு (Majlis) என வழங்கப்படுகிறது. அதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 56 பேர் உள்ள னர். இது 1965 - ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் (U.N.O.) உறுப்பு நாடாகச் சேர்ந்தது.

இந்நாட்டில் பெரும்பான்மையோர் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளதால் அத்தொழில் இங்கு

முதன்மைத் தொழிலாக உள்ளது. இங்கு வாழ்பவர்களுள் பலர் கடல் வாணிகர்களாகவும் உள்ளனர். தேங்காய், தினை, அத்திப்பழம், பழங்கள், காய்கறிகள் ஆகியன இங்கு விளைகின்றன. சிரீலங்காவிற்கு அதிக அளவில் கருவாடு ஏற்றுமதியாகின்றது. கயிறு, சரிகை (lace), பனை ஓலைப்பாய், கோழி, ஆமை ஓடு ஆகியனவும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ம.நா.

*மாலிக் ஆம்பர்* இந்தியாவில் முகலாயப் பேரரசுக் காலத்தில் அகமதுநகர் அரசில் விளங்கிய ஓர் அரசியல் வல்லுநரும், சிறந்த படைத்தலைவருமாவார். அபிசீனியா நாட்டில் அடிமையாக இருந்த மாலிக் ஆம்பர் (Malik Amber) கி.பி. 1546-இல் பிறந்தார். இவரை, அகமது நகரப் பிரபு ஒருவர் விலைக்கு வாங்கி இந்திய நாட்டுக்குக் கொண்டு வந்தார். அறிவுக் கூர்மையும், அஞ்சாநெஞ்சமும், அரசியல் முன்னறிவும் பெற்றிருந்த ஆம்பர், தமது ஓயா உழைப்பினால் படிப்படியாக உயர்ந்து அகமது நகரத் தலைமை அமைச்சராக அமர்ந்தார். இவருடைய திறமையினால் அகமது நகரம் அதன் வீழ்ச்சி நிலையிலிருந்து எழுச்சிபெற்று ஒரு தனி அரசாக இயங்க முடிந்தது. முகலாயப் பேரரசர் அக்பர், கி.பி. 1600-இல் அகமது நகர அரசின் ஒரு பகுதியைக் கைப்பற்றிய போதிலும், எஞ்சிய பகுதியை ஒரு தனி அரசாகச் செய்து, அகமது நகர அரசகுலத்தைச் சேர்ந்த இரண்டாம் மூர்த்தாசா (Murtaza) என்பவரை அதன் அரசராக்கித் தமது இராணுவ வலிமையைக் கொண்டு அவ்வரசைக் காப்பாற்றிய பெருமை மாலிக் ஆம்பருக்கு உண்டு. தக்காண வரலாற்றில் கி.பி. 16 - ஆம் நூற்றாண்டில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த அகமது நகர் கி.பி. 1600-இல் தோல்வி நிலைக்கு வந்து கொண்டிருந்தது. அப்போக்கை மாற்றி மீண்டும் அதன் சிறப்பை நிலைநாட்டியதுடன், மாலிக் ஆம்பர் அரசனுக்குரிய அனைத்து அதிகாரங்களையும் தாமே பெற்று ஆட்சி நடத்தினார். ஆட்சி முறை, சீர்திருத்தங்களுடன் மாற்றி அமைக்கப்பட்டது. முன்னமேயே செங்சிசுக் கானிடம் இவர் பணியாற்றியிருந்ததால் அரசியலில் இவர் பெற்றிருந்த பயிற்சி நற்பயன்கள் அளித்தது. முகலாயர்களை எதிர்க்க இவர் கொரில்லாப் போர் முறைகளைப் பின்பற்றியதுடன் மராட்டியரின் உதவியையும் பெற்றிருந்தார். தௌலதாபாதிற்கு அண்மையில் கிர்க்கி (Khirki) என்னும் புதிய தலைநகரை இவர் கி.பி. 1610-இல் நிறுவினார்.

இவர், பீடாரில் படையெடுத்ததும், பீசப்பூரை முற்றுகையிட்டதும், அகமது நகரை முகலாயரிடமிருந்து மீட்டதும் குறிப்பிடத்தக்க வெற்றிகளாகும். ஆனால், கி.பி. 1617, 1621 ஆகிய ஆண்டுகளில் இவர் முகலாயப் படையுடன் போரிட்டதில் தோல்வி கண்டார். ஆயினும், கி.பி. 1626 – இல் இவர் இறக்கும் வரை முகலாயருக்கு இவரைப்பற்றிய அச்சம் தொடர்ந்து இருந்து வந்தது. இராசா தோடர்மாலின் நிலவரிச் சீர்திருத்தங்களை ஒட்டி அகமது நகரில் மாலிக் ஆம்பர் நிறைவேற்றிய நிலவரித் திட்டம், அப்பகுதி மக்களுக்கு மிகவும் நன்மையாக இருந்தது. கொரில்லாப்போர் முறையில் இவருக்கு இருந்த பேராற்றல் மிகவும் போற்றத்தக்கதாகும். 'போர்த்துறையிலும், இராணுவத் தலைமையிலும், நுண்மாண் நுழைபுலத்திலும், ஆட்சி முறையிலும் மாலிக் ஆம்பருக்கு இணையானவர் இல்லை' என்று வரலாற்றறிஞர் முதாமத்கான் புகழ்ந்து எழுதியுள்ளார். தமது இறுதிக் காலம் வரை தம் புகழைக் காப்பாற்றிக் கொண்ட பெருமை மாலிக் ஆம்பருக்கு உண்டு. ஓர் அபிசீனிய அடிமை இத்தகைய உயர்நிலைக்கு வந்தது வரலாற்றில் அரிதான நிகழ்ச்சியேயாகும். உள்நாட்டுக் குழப்பத்தைக் களைந்ததும், அகமது நகரின் செல்வச் செழிப்பை உயர்த்தியதும், அதன் படை வலிமையைப் பெருக்கியதும், தக்காணப் போர் முறையை முழுதும் மாற்றி அமைத்ததும், மராட்டியருக்குக் கொரில்லாப் போர் முறையைப் பயிற்றுவித்ததும் மாலிக் ஆம்பரின் சிறந்த சாதனைகளுள் சிலவாம். இவருடைய உதவி பெற்றே சாசகான் (Shajahan), சகாங்கீரை (Jahanghir) எதிர்த்துக் கலகம் செய்தார். இறுதியில் முகலாயரை முறியடிக்க முடியாமல் போனபோது மாலிக் ஆம்பர், அவர்களுடன் அமைதி உடன்பாடு செய்து கொண்டு முகலாயப் பேரரசுக்குத் திறை செலுத்துவதற்கு உடன்பட்டார். எனினும், அகமது நகர் தனி அரசாகவே விளங்கியது. இவர் கி.பி.1626-இல் தம் எண்பதாம் ஆண்டில் உயிர் நீத்தார். தெ.பா.

*மாலிக் காபூர்*, புகழ்மிக்க தில்லி சுல்தானான அலாவுதீன் கில்சியின் (கி.பி. 1296-1316) ஆற்றல் மிக்க படைத்தலைவர் ஆவார். தென்னிந்தியாவின் மீது படையெடுத்துப்பல வெற்றிகளைக் குவித்த மாலிக் காபூர் (Malik Kafur) பெரும்பொருளைக் கொள்ளையிட்டுத் தில்லி திரும்பியவர். கடின உழைப்பும், அஞ்சாமையும், செயல் திறனும், வீரமும் ஒருங்கே அமையப் பெற்ற இவர் கில்சிப் பேரரசின் பெருமையைத் தென்கோடி வரையில் பரப்பியவர்.

**காபூரின் வளர்ச்சி:** அலாவுதீன் தம் தம்பியான உலூ கானைக் (Ulugh Khan) குசராத்து நாட்டின் மீது படையெடுக்க ஆணையிட்டார். குசராத்தைத் தன்னடிப்படுத்திய உலூ கான், இராணியையும் காபூர் என்னும் இளம் அலியையும் சுல்தானிடம் ஒப்படைத்தார். காபூர் தமது உழைப்பாலும் உண்மை அன்பாலும்

சுல்தானின் நம்பிக்கையைப் பெற்றார்; மிக விரைவில் செல்வாக்கு மிக்க பிரபுவானார். பேரரசின் நிருவாகத்தில் சிறப்பிடம் பெற்றார். இவரது திறமையைக் கண்டு மெச்சிய அலாவுதீன் கி.பி. 1306-இல் காபூருக்கு மாலிக் நயீப்பு (Naib) என்னும் பதவி அளித்துச் சிறப்பித்தார்.

**தென்னிந்தியப் படையெழுச்சி**: தக்காணத்தின் அரசுகளுள் ஒன்றான யாதவ அரசின் வேந்தர் இராமச்சந்திர தேவன் முன்பே அலாவுதீனுக்கு அடிபணிந்து, கப்பம் கட்டுவதாக ஒப்புக் கொண்டார். இராமச்சந்திரரின் மகன் சங்கரதேவன், அலாவுதீனுக்குக் கப்பம் கட்டாததுடன், கூர்ச்சரத்தின் மன்னன் கர்ண தேவனுக்கும் அவர்மகள் தேவாலதேவிக்கும் தேவகிரியில் தஞ்சம் அளிக்க இசைவு தெரிவித்தார். அலாவுதீன் தம் படைத்தலைவனான மாலிக் காபூரின் தலைமையில் கி.பி. 1307 – இல் தேவகிரியை நோக்கிப் படையொன்றினை அனுப்பிவைத்தார். காபூர் சங்கரதேவனைப் போரில் வென்றார். மேலும், தேவகிரியைக் கொள்ளையிட்டு, நாட்டையும் கைப்பற்றிக் கொண்டார். இராமச்சந்திரனையும் அவர் குடும்பத்தினரையும் சிறைப்பிடித்துத் தில்லிக்கு அனுப்பினார்.

**காகதீய நாட்டின் மீது படையெழுச்சி**: மாலிக் காபூரின் இரண்டாம் தக்காணப்படையெழுச்சி கி.பி. 1308 – இல் தொடங்கியது. மாலிக் பக்ருதீன் சீனா என்னும் படைத்தலைவனின் கீழ் அனுப்பப்பட்ட வாரங்கல் மீதான படையெழுச்சி கி.பி. 1303 – 1304 -ஆம் ஆண்டுகளில் தோல்வி பெறவே அலாவுதீன் கில்சி, காபூரின் தலைமையில் பெரும்படை ஒன்றினைக் காகதீய நாட்டின்மீது ஏவினான். காபூர் இம்முறை தேவகிரி வழியாகக் காகதீய நாட்டின் தலைநகரான வாரங்கல் வந்து சேர்ந்தார். இருமதில்கள் கொண்ட வலிமைமிக்க வாரங்கல் கோட்டை முற்றுகையிடப்பட்டது. முற்றுகை ஒரு திங்கள் நீடித்தது. பின்னர்க் காகதீய வேந்தனான இரண்டாம் பிரதாப ருத்திரன் காபூருக்குப் பணிந்தான்; ஏராளமான பொருட்களையும், யானை, குதிரைகளையும் கொடுத்து அமைதி உடன்பாடு செய்து கொண்டான். திறை செலுத்தவும் ஒப்புக் கொண்டான். காபூர் பெரும் பொருளுடன் தில்லி சென்று, அலாவுதீன் கில்சியிடம் அவற்றை ஒப்படைத்தார்.

**போசள நாட்டின் மீது படையெழுச்சி**: மாலிக்காபூரின் புகழ்மிக்க மூன்றாம் தக்காணப் படையெழுச்சி கி.பி. 1310-இல் தொடங்கியது. இவர் போசள நாட்டின் மீது படையெடுத்த போது, போசள (Hoysala) வேந்தரான மூன்றாம் வீரவல்லாளன், தாம் இழந்த பகுதிகளை மீட்பதற்காகப் பாண்டிய நாட்டின் மீதுபடையெடுத்திருந்தார். தம் தலைநகரான துவார சமுத்திரத்தில் இசுலாமியப் படைகள் நுழைந்து விட்டதைக் கேள்விப்பட்ட வீரவல்லாளன் உடன்நாடு திரும்பினார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க வீரபாண்டியனும் போசளருக்கு உதவியாகப் படையொன்றினை அனுப்பி வைத்தார். இருப்பினும், வல்லாளன் வெற்றிபெற முடியவில்லை. எனவே, தம் நிலையை உணர்ந்து, பெரும்பொருள் அளித்துக் காபூருடன் உடன்பாடும் செய்து கொண்டார்.

**பாண்டிய நாட்டுப் படையெழுச்சி**: அடுத்து மாலிக் காபூர் பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கும் முடிவுடன், போசள நாட்டில் இருவாரம் தங்கியிருந்தார். பாண்டிய நாட்டில் குலசேகர பாண்டியனின் மக்களான வீரபாண்டியனுக்கும் சுந்தரபாண்டியனுக்கும் இடையே அரசப் பதவிக்கான போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. காபூர் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். வாசாபு, அமிர் குசுரு ஆகியோரின் குறிப்புகளும், கல்வெட்டுகளும் மாலிக் காபூரின் படையெழுச்சி பற்றி விரிவாகக் கூறுகின்றன. சுந்தர பாண்டியன், வீரபாண்டியனுக்கு எதிராக மாலிக் காபூரை அழைத்தார் எனவும் கூறப்படுகிறது. மாலிக் காபூரின் படை மதுரையை அடைந்த போழ்து, அங்குப் பாண்டிய மன்னன் காணப்படவில்லை. எனவே, இசுலாமியப்படைகள் மதுரையைச் சூறையாடிப் பெரும் செல்வத்தைக் கைப்பற்றிக் கொண்டன. வீரபாண்டியன் மாலிக் காபூரிடம் நேரில் மோதாது, அவரை அலைக்கழிக்க எண்ணினான். இசுலாமியப் படை பீர்தாலை (திருச்சிக் கருகில் உள்ள உய்யக்கொண்டான்திருமலை) அடைந்தது. அதனைக் கேள்வியுற்ற வீரபாண்டியன், தம் படைகளுடன் கண்ணனூர்க் (சமயபுரம்) காடுகளில் ஒளிந்து கொண்டார். காபூரின் படை, வழியில் உள்ள திருவரங்கத்தில் பேரழிவினை நிகழ்த்திவிட்டுக் கண்ணனூர் சென்றது. கண்ணனூரில் வீரபாண்டியன் காணப்படவில்லை வீரபாண்டியன் சல்கோட்டா சென்று விட்டார். ஏமாற்றமடைந்த காபூர், பிரமபுரி சென்று பெரும் பொருளைக் கொள்ளையிட்டார். கோயிலை அழித்து விலை மதிப்பிட இயலாத அரும் பொருட்களைக் கைப்பற்றினார். பிரமபுரி என்பது சிதம்பரமாக இருத்தல் கூடும். அதை விரிஞ்சிபுரம் எனக்கொள்வாரும் உளர். அடுத்து இசுலாமியப் படை இராமேசுவரம் நோக்கிச் சென்றது. இராமேசுவரத்தில் அப்படை பெரும் பொருளைக் கொள்ளையிட்டது; தெய்வச் சிலைகளையும் உடைத்தெறிந்தது. மாலிக் காபூர், இராமேசுவரத்தில் மசூதி ஒன்றைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது.

**தில்லி திரும்புதல்**: தக்காணத்தில் பெரும் பொருளைக் கொள்ளையிட்ட மாலிக்காபூர் கி.பி.1311-இல்

தில்லிக்குப் பயணமானார். நூற்றுக்கணக்கான யானைகள், ஆயிரக்கணக்கான குதிரைகள், பல ஆயிரம் மடங்கு எடையுள்ள பொன், முத்து, மணி ஆகியவை அடங்கிய பெட்டிகள் ஆகியவற்றுடன் காபூர் தில்லியை அடைந்தான். அவற்றைக் கண்ட அலாவுதீன் பெரிதும் மகிழ்ந்தார்.

**தேவகிரி மீது மீண்டும் போர்:** மாலிக் காபூர், கி.பி.1312-இல் நான்காம் தடவையாகத் தக்காணத்தின் மீது படையெடுத்தார். தேவகிரியின் வேந்தன் சங்கரதேவன் கப்பம் கட்டுவதை நிறுத்தியதால், அவனைத் தண்டிக்கக் காபூர் படையுடன் தேவகிரியின் மீது பாய்ந்தார். சங்கரதேவன் தோற்கடிக்கப் பட்டுக் கொல்லப்பட்டான். அதனால் மகிழ்ந்த காபூர் தேவகிரியின் பெயரைத் தௌலதாபாது என மாற்றினார். தேவகிரியில் இந்துக் கோயிலைத் தரைமட்டமாக்கிவிட்டு, மசூதி ஒன்றைக் கட்டினார். அடுத்துக் காபூர் தேவகிரியிலிருந்து துங்கபத்திரை நதி வரை படையெடுத்துச் சென்று தில்லி திரும்பினார். அத்துடன் மாலிக் காபூரின் தக்காணப் (தென்னிந்தியா) படையெழுச்சி முடிவுற்றது. இவரது தென்னிந்தியப் படையெழுச்சி நிரந்தரமான விளைவுகளை ஏற்படுத்த வில்லை என்றே கூறலாம்.

**காபூரின் பதவி ஆசையும் இறப்பும்:** மாலிக் காபூர் அலாவுதீன் கில்சியின் இறுதிக் காலத்தில், சுல்தானைத் தம் கைப்பாவையாக ஆட்டிப் படைத்தார். தானே சுல்தானாக ஆகவேண்டுமென்றும் சதி செய்தார். அத்திட்டப்படி, அலாவுதீன் மனத்தை மாற்றி, அவன் மனைவியையும் மகனான கிசிர்கானையும் வெறுக்கும்படி செய்தார். அலாவுதீன் உடல் நலம் கெட்டுப் படுக்கையில் கிடந்தபோது, அவனை இவர் நஞ்சூட்டிக் கொன்றார் எனக் கூறப்படுகிறது. அலாவுதீன் கில்சி இறந்தவுடன் கி.பி. 1316-இல் அவருடைய மனைவியைத் துன்புறுத்தியதுடன், கிசிர் கான், சாதிகான் என்ற அவருடைய மக்களின் கண்களையும் குருடாக்கினார். அடுத்து அலாவுதீனின் இளவயது மகனான சைகப் உத்தீன் உமாராவை அரியணையில் அமரவைத்து, காபூரே ஆட்சிப் பொறுப்பினைக் கவனித்து வந்தார். அலாவுதீனின் மற்றொரு மகனான முபாரக் கானையும், மாலிக் காபூர் சிறையிட்டுக் கண்களைக் குருடாக்கத் திட்டமிட்டார். அதனை அறிந்த முபாரக் சிறையினின்று தப்பியதுடன், அலாவுதீனின் உண்மையான ஊழியர்களின் துணைக்கொண்டு, மாலிக் காபூரையே கொன்றார். இவ்வாறு முப்பத்தைந்து நாள்கள் நீடித்த காபூரின் 'கொடிய ஆட்சி' முடிவுற்றது. கொடுங்கோலாட்சியை மேற்கொண்ட கொடுங்கோலர் கி.பி. 1316-இல் இறந்தார். ம.இரா.

*மாலியவான்* என்பவன், இராவணனின் பாட்டனும் தலைமையமைச்சனுமான அரக்கன். மாலியவான் சுகேசனின் குமரனாவான். இவன் பிரமனை எண்ணி நெடுநாள் தவம்புரிந்து உலகமெல்லாந் தன் ஒரு குடைக்கீழ் அடங்குமாறு வரம்பெற்றவன். விசுவகருமன் முன் நிருமித்த பட்டணமாகிய திரிகூடத்தில் குடிபுகுந்து அரசாண்டவன். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் விட்டுணுவிற்குப் பயந்து பாதலமடைந்து, கைகேசியை விச்சிரவாவிடம் ஏவி அவருடன் இருக்கச் செய்து இராவணன் முதலியவரை வளர்த்தான். இவன் சீதையை விட்டுவிடும்படி இராவணனுக்குப் புத்தி கூறியவனும் ஆவான்.

இவன் புட்பதந்தன் என்ற கயிலையில் இருந்த கண நாதனுடன் பகைத்து, ஒருவரை ஒருவர் யானையும்,சிலம்பியும் ஆகுமாறு சபித்துக் கொண்டனர்.

**மாலியவான்[2]**: இது ஒரு மலையின் பெயர். (கந்தபுராணம். அண்டகோ:34). இது புராணங்களில் அண்டகோளப் பகுதிகளை விளக்கும்போது சம்புத் தீவில், பத்திரவருசம் என்ற பகுதியில் கந்தமாதனத்திற்கு எதிர்த்திசையில் மேருமலையின் கிழக்காக அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. மத்திய ஆசியாவில் மேருமலை என்று கருதப்படும் பாமீர் முடிச்சின் கிழக்காக அமைந்திருக்கும் சரிக்கோல் (Sarikol) மலைத் தொடர்களே 'மாலியவான்' என்று முன்பு கூறப்பட்டதாகப் புராணங்கள் கூறும் என்று பூகோளச் செய்திகளை ஆய்ந்த அலி கருதுகிறார்.

சிலர், இம்மலை துங்கபத்திரை நதிக்கரையில் அமைந்துள்ள 'ஆனகுந்தி' மலையென்பர். அம்மலையைப் பிரசரவணகிரி என்றும் மாலியவான் கிரி என்றும் கூறும் கருத்துவேறுபாடு அறிஞர்களிடையே உண்டு. ஆனால், பார்கிட்டர் (Pargiter) என்பவர் பிரசரவணா என்பது அம்மலைத் தொடரையும், மாலியவான் என்பது அம்மலைச் சிகரத்தையும் குறிக்கும் என்பார். அம்மலை இப்பொழுது'படிகசிலா' (Phatihasila) என வழங்கப்படுகிறது. ந.ச.

**துணை நூல்:**

Nando Lal Dey, The Geographical Dictionary of Ancient and Mediaeval India Cosmo Publication, New Delhi, 1979.

*மாலைமாற்று*: 'மாலைமாற்று' என்பது சித்திரகவி வகையுள் ஒன்றாகும். யாப்பருங்கலம் (சூ. 96), வீரசோழியம் (அலங்காரப் படலம்-179), தண்டியலங்காரம் (சூ. 98), மாறனலங்காரம் (சூ. 270), இலக்கண விளக்கம் (சூ.690), முத்துவீரியம் (அணி.சூ.18),

சுவாமிநாதம் (அணியதிகாரம் சூ. 2), குவலயானந்தம் (சித்திர இயல்-சூ. 11), வெண்பாப்பாட்டியல் (செய்யுளியல்.சூ. 4) ஆகிய இலக்கண நூல்களில் சித்திரகவி வகையுள் ஒன்றாக 'மாலைமாற்று'க் கூறப்பட்டுள்ளது.

மாலைமாற்றாவது 'ஈறு முதலாக வாசித்தாலும் அப்பாட்டே ஆவது' என யாப்பருங்கல உரைகாரர் கூறுவார் (சூ. 96). மாலையை எப்பக்கம் திருப்பினும் அது ஒரே தன்மைத்தாயிருத்தல் போல இச்செய்யுளும் எவ்வாறு மாற்றி வாசிப்பினும் ஒரே தன்மைத்தாய் இருத்தலின் 'மாலைமாற்று' எனப்பட்டது என்பார், சுப்பிரமணிய தேசிகர் (தண்டியலங்காரம் சூ. 98. உரை).

யாப்பருங்கல உரைகாரர் இச்செய்யுளுக்கு எடுத்துக்காட்டாக, 'பூமாலை காரணி பூமேத வேதமே, பூணிர காலைமா பூ' என்ற பாடலைக் காட்டுவார். இதனை ஈறுமுதலாகப் படித்தாலும் பாடலின் சொல்லும் பொருளும் மாறாமல் அமைந்துள்ளமையைக் காணலாம்.

இம்மாலைமாற்று அமைப்பில் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஒருபதிகம் அமைந்துள்ளது. அதில் திருக்கடைக் காப்புப் பாட்டு வருமாறு: 'நேரகழாமித யாசழிதாயேனனி யேனனி ளாயுழிகா காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே' (தலம் சீர்காழி பதிகம் 375)

தண்டபாணி சுவாமிகளின் திருவரங்கத் திருவாயிர நூலில், கலிவிருத்தயாப்பில் மாலைமாற்றுப் பாடல் அமைந்துள்ளது. சிவானந்த ஞான தேசிக சுவாமிகளின் 'சிரீசற்குரு மாலைமாற்று' என்ற பாடலும் மாலை மாற்றுப் பாடலாகக் காணப்படுகின்றது என்பார் ச.வே. சுப்பிரமணியன். சோழவந்தான் அரசஞ்சண்முகனார் 'மாலை மாற்று மாலை' என்னும் நூலை 1903-இல் இயற்றி வெளியிட்டுள்ளார். மேலும், சங்கரமூர்த்திக் கவிராயர், புலவர் திருமலை சக்கையாக்கவுண்டர், மீனாட்சி சுந்தரமுதலியார் ஆகியோர் தனித்தனியாக 'மாலை மாற்று' என்ற பெயரில் நூல் வெளியிட்டுள்ளனர். 'மாலை மாற்று ஏகபாதம்' என்ற நூலைத் தண்டபாணி சுவாமிகள் வெளியிட்டுள்ளார்.

சித்திர கவிகளில், சிலபாடல்களின் எழுத்துகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சித்திர வடிவில் அமைத்துக் காட்டலாம். 'மாலை மாற்று லிங்கபந்தத்தை' மாலைமாற்றாகவும் இலிங்கபந்தமாகவும் அமைத்துக் காட்டலாம். மாலை மாற்றும், திரிபங்கியும், துவித நாக பந்தமும், 'ஏகபாத மாலை மாற்று' என்பனவும் ஒரே பாடலைக் கொண்டு அமைத்துக் கொள்ளும் வேறு வேறு சித்திர கவிகளுக்குக் காட்டாகக் காட்டுகிறார் வே.இரா. மாதவன். மேலும் 'மாற்று' என்ற பெயர் தாங்கிய 'சக்கர மாற்று' என்பதும் சித்திர கவி வகையுள் ஒன்றாகும்.

ந.ச.

**துணை நூல்கள்:**

**சுப்பிரமணியன், ச.வே.,** தமிழ் இலக்கிய வகையும் வடிவும், தமிழ்ப் பதிப்பகம். சென்னை, 1984.

தண்டியலங்காரம்,சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, 1963.

**மாதவன், வே.இரா.,** சித்திர கவிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். 1983.

யாப்பருங்கல விருத்தி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, 1973.

*மாலைமாறன்:* சங்ககாலப் புலவர்களுள் ஒருவரான இவர் குறுந்தொகை 245 - ஆம் பாடலைப் பாடியுள்ளார். இவர் பெயரில் வரும் மாறன் என்ற சொல், இவர் பாண்டிய மரபினராக இருக்கக்கூடும் என்ற எண்ணத்தைத் தருகிறது. இவர் பாண்டிய அரசர் என்றும் 'மாறன்' என்றபெயர் பலருக்கு இருந்தமையால் இவர்பாடலில் வரும் கருத்தாழம் மிகுந்த மாலை என்ற சொல்லையும் (அடி.4) சேர்த்து மாலைமாறன் என வழங்கினர் என்றும் மொ.அ. துரை அரங்கசாமி (சங்க காலச் சிறப்புப் பெயர்கள், மு.ப.1960, ப.153)கூறுவார். நெய்தல் திணையில் வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்தகாலத்து ஆற்றாளெனக் கவலையுற்ற தோழியை நோக்கித் தலைவி சொல்லுவதாக இவர் பாடல் அமைந்துள்ளது. அப்பாடலில் செழுமையான தாழை மடல்கள் வாளுக்கு உவமிக்கப்பட்டுள்ளன. வேல்களை வேலியாக நடுகின்ற வழக்கமும் இவர்பாடல்வழிப் புலப்படுகிறது.

கே.தே.

*மாவ்லங்கர் கணேசு வாசுதேவு* (கி.பி. **1888-1958**), இந்தியத் தேசிய தலைவர்களுள் ஒருவர். தில்லிப்பாராளுமன்ற மக்கள் அவையின் அவைத்தலைவர்(1947-1956)பதவியில் இருந்த பெருமைக்குரியவர். இவர் அகமதாபாதிலும் பம்பாயிலும் கல்வி பயின்றார். பின்னர்ச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்று வழக்குரைஞர் ஆனார். வழக்குரைஞராகப் பணியாற்றிக்கொண்டே அரசியலில் நுழைந்தார். மகாத்மா காந்தியடிகளால் தொடங்கப்பட்ட கைரா சத்தியாக்கிரகத்தில் (Kaira Sathyagraha) முக்கிய பங்கு ஏற்றார். பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட அம்மாவட்ட உழவர்களின் இழிநிலையைப் போக்கும் பொருட்டே அவ்வியக்கம் ஏற்பட்டது.

நாட்டுப்பற்றுமிக்க மாவ்லங்கர் கணேசு வாசுதேவு (Mavlankar Ganesh Vasudeo) இந்தியாவினின்றும் அந்நிய ஆட்சி அகலவேண்டுமென்பதில் அக்கறை கொண்டார். காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்து முழு நேர ஊழியராகப்பாடுபட முன் வந்தார். குசராத்து மாநிலக் காங்கிரசுச் செயற்குழுவின் செயலாளராக 1921 முதல் 1923 முடியப் பணிபுரிந்தார். இந்தியத் தேசிய காங்கிரசின் செயலாளராகவும் 1921 – ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறப்பான பணிபுரிந்தார். அகமதாபாது நகராட்சி மன்றத் தலைவராக 1930 முதல் 1933 வரையிலும், பின் 1935 முதல் 1936 வரையிலும் பணிபுரிந்துள்ளார். இவர் பல தடவை பிற காங்கிரசுத் தோழர்களு டன் அவ்வப்போது மறியலில் ஈடுபட்டு, கைது செய்யப்பட்டுச் சிறை சென்றுள்ளார். இவர் மூன் றாண்டுகளுக்கு மேல் சிறைவாசம் பெற்றுள்ளார். ஒத்துழையாமை இயக்கம், வெள்ளையனே வெளி யேறு இயக்கம், தனியாள் சத்தியாக்கிரகம், சுதேசி இயக்கம் முதலானவற்றில் இவர் பெரும்பங்கு பெற்ற றார். இவரது பேச்சுத்திறமையால் காங்கிரசுத் தொண்டர்கள் பலர் புத்துணர்ச்சி பெற்றனர். இந்தி யாவின் விடுதலைக்குப் பாடுபட்ட கணேசு வாசுதேவு 1956-ஆம் ஆண்டு காலமானார். இந்தியா விடுதலை பெற்ற பின்னர் இவர் சில அரசியல் குழுக் களில் (Commission) அங்கம் வகித்துள்ளார். இவரது பொதுநலத்தொண்டு பாராட்டுதலுக்குரியது. ம.நா.

*மாவளத்தன்*: சங்ககாலப் புலவர்களுள் ஒருவ ரான இவர்தம் பெயர் 'மாவளத்தான்' என்ற சோழன் நலங்கிள்ளியின் தம்பி பெயரோடு ஒத்துக் காணப்படுகிறது. மாவளத்தான் என்ற பெயர் சோழர்குடியைச் சுட்டுவதாகும். கரிகால் பெருவளத் தான் என்பது ஒரு சோழமன்னன் பெயராகும். இன் னும், கரிகால்வளவன், கிள்ளிவளவன், திருமாவளவன் பெருந்திருமாவளவன் போன்ற பெயர்களும் சோழ மன்னர்களைக் குறிப்பனவாகும். இப்புலவர் சோழர் குடியினரா என்பது தெரியவில்லை. எனினும், அரசர் களுக்கு 'அன்' விகுதியும், புலவர்களுக்கு 'ஆர்' விகுதி யும் கொடுக்கும் சங்கமரபை நோக்க இவர் சோழ அரச குடும்பத்தைச் சேராதவரோ என்று ஐயுறத் தோன்றுகிறது. இவர் பாடல் ஒன்று குறுந்தொகை யில் இடம்பெற்றுள்ளது (348). அப்பாடல், செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட கிழத்தியைத் தோழி வற் புறுத்தியது என்னும் துறையில் அமைந்ததாகும். அப் பாடலில் யானைக்கோட்டில் சிக்கிய முல்லை மலரி னின்று தேன் ஒழுகும் காட்சி, முலைமீது கண்ணீர் ஒழுகும்காட்சியோடு உவமிக்கப்பட்டுள்ளது. யானைக் கோட்டிடைக் கொண்ட முல்லை எந்தக் கணத்தில் அதன் வாயினுள் புகுமோ என அறியாநிலையில் இருத்தலைப்போல, இவள் எப்பொழுது உயிர்நீப் பாளோ என்றநிலைவில் இருப்பாள் என்று அப் பாடலில் அமைந்த உவமையை விரித்துப்பொருள் கொள்ளுவர் டாக்டர் உ.வே.சாமிநாதையர். தே.தே.

*மாவளத்தான்*: வளவன் என்பது சோழர் குடிக்குரிய சிறப்புப்பெயர். சங்ககாலச் சோழ மன்னர் களுள் சிறப்புற்று விளங்கிய வேந்தன் நலங்கிள்ளி (கி.பி. 140 – 160). மாவளத்தான் நெடுங்கிள்ளியின் தம்பியாகக் கருதப்படுகிறான். தாமப் பல் கண்ண னார் இவனைத் 'தேர்வண் கிள்ளி தம்பி' என்று புற நானூற்றுப் பாடல் ஒன்றில் (43) சுட்டியுள்ளார். அங்குச் சுட்டப்படும் 'தேர்வண் கிள்ளி' என்னும் சிறப் புப்பெயர், நலங்கிள்ளியைச் சுட்டுவதாகத் தெரிகிறது.

இளவரசரான மாவளத்தானும், பார்ப்பனப் புலவ ரான தாமப் பல் கண்ணனாரும் ஒரு முறை சொக் கட்டான் ஆடியபொழுது, தமக்கு வெற்றிவேண்டி மாவளத்தான் முறைகேடாக நடந்துகொண்டான். அதனைச் சுட்டிக்காட்டிய புலவர்மீது வட்டுக்காயை எறிந்தான். அதனால் புலவர் சீற்றமுற்றார். சோழர் குடியின் தொன்மைச் சிறப்பை எடுத்துரைத்துச் 'சோழ மரபினர் பெருந்தன்மை வாய்ந்தவர்கள்; பார்ப்பனர் மனம் வருந்துமாறு எத்தகைய இழி செய லையும் செய்யமாட்டார்கள். ஆனால், நீயோ, என்னை வருத்தமுறச் செய்தாய். இச்செயல் உன் குடிப்பெருமைக்குப் பொருந்தாது' என்று அவனைப் பழித்துப் பேசினார்.

அதைக்கேட்ட மாவளத்தான், பெரிதும் வருத்த மெய்தி நாணமுற்றான். அதனால் மனம் நெகிழ்ச்சி யுற்ற புலவர், தம்முடைய வெஞ்சொல்லுக்கு நாணி னார். வருத்தத்தோடு 'நானே பிழை செய்தவன் என்னைத் தண்டனைக்குட்படுத்தாது, பொறுமையாக என்பழிச்சொல்லைத் தாங்கிக்கொண்ட நீயே குற்ற மற்றவன். உன் வாழ்நாள் சிறப்புறுவதாக! வளமிக்க காவிரியாற்று மணலினும் பன்னெடுங்காலம் நீ சிறந்து வாழ்வாயாக! என்று மாவளத்தானை வாழ்த்தினாரென மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது. க.த.தி.

*மாவிலங்கை*: பத்துப் பாட்டினுள் சிறு பாணாற்றுப் படையின் தலைவனாக ஓய்மானாட்டு நல்லியக்கோடன் மாவிலங்கை மன்னருள் மறுவின்றி விளங்கியவன் என்று பாடப் பெறுகின்றான் (சிறு. 120-126). அந்நல்லியக்கோடனைப் 'பெருமாவிலங் கைத் தலைவன்' என்றும் (புறம். 176), அவனுக்குப் பின் அவன் வழித் தோன்றலாய் வந்த ஓய்மான் வில்லியாதனை, 'இலங்கை கிழவோன்' என்றும் (புறம். 379) புறத்திணை நன்னாகனார் பாடுவார்.

அவற்றால், இம்மாவிலங்கை ஓய்மான்களுக்கு உரிய தென்பதும் இது இலங்கையென்றும் வழங்கப்பட்ட தென்பதும் விளங்கும்.

இனி, இம்மாவிலங்கையின் பரப்பளவையும் இருப்பிடத்தையும் உணர்ந்து காண்பதில் தெளிவு தோன்றவில்லை. 'மாவிலங்கையென்பது அருவா நாடும் அருவா வடதலை நாடும் சேருமிடத்தில் உள்ளது' என்று கருப்பக்கிளர் சு.அ. இராமசாமிப் புலவரின் சிறப்புப் பெயரகராதி கூறும். ஆயினும், புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய இரண்டின் பாடப் பட்டோர் வரலாறுகளிலும், 'மாவிலங்கையென்பது புனல் நாட்டுக்கு வடக்குள்ள அருவாநாடு, அருவா வடதலை நாடு என்ற இரண்டும் சேர்ந்த இடமென்று கூறுவர்' எனக் குறிப்பிடுவார் உ.வே.சாமிநாதையர். இவ்விரு கூற்றுகளுக்கும் இடையிலுள்ள பெரிய வேற்றுமையை உணரவேண்டும். முன்னைக் கூற்றுப் படி மாவிலங்கை ஓர் ஊரளவே கருதப்படும். ஆயினும், பின்னைக் கூற்றுப்படி அதனைப் பெருநா டெனக்கருதவும் வாய்ப்பாகின்றது. அவ்வாறு கருது தற்குத் துணையாக வேறு சில காரணங்களைக் காணலாம். ஓய்மானாடு என்பதோ ஓய்மானாட்டு நல்லியக்கோடன் என்பதோ அடிக்குறிப்பிலேயன்றிப் பாடல்களில் பயின்று வரவில்லை. ஆனால், மாவிலங்கை மன்னன், மாவிலங்கைத் தலைவன் என்றே அவன் அறிமுகப்படுத்தப் பெறுகின்றான். ஆதலால், மாவிலங்கையென்பதே அவனாட்டின் முன்னைப் பெயராயிருந்து, 'ஓவியர் பெருமகன்'(சிறு. 122) என்ற குடிப்பெயர் வழக்கினால் அவன், 'ஓய்மான்' என மரூஉப் பெயர்பெற்ற பின்னை அவன் மாவிலங்கையும் ஓய்மானாடாகியிருக்கலாம்.

எவ்வாறாயினும் அம்மாவிலங்கை நீர்நில வளங்கள் சிறந்து விளங்கியதாகப் பாடப் பெறு கின்றது. 'நறும் பூக்களையுடைய சுரபுன்னை மரத் தையும், அகில் மரத்தையும், சந்தன மரத்தை யும் அடித்துவரும் நீர், குளிக்கும் துறையிலே புன லாடு மகளிருடைய தோள்களுக்குத் தெப்பமாக அவற்றைத் தரும்' என்று அதன் வளங்களைப் பாடு கின்ற சிறுபாணாற்றுப்படை தொடர்ந்து, 'அது ஒருவராலும் அழித்தற்கரிய மரபினையுடையது' என்றும், 'பழம் பெருமையினையுடைய இலங்கையின் பெயரைத் தானும் தான் தோன்றிய காலத்தே பெற்ற நல்ல மாவிலங்கை' என்றும் அதனைக் குறிக் கும் (சிறு.116-120). 'விளையாட்டுத் திரளிலே மக ளிர் கேழற்பன்றி உழுத கருஞ்சேற்றைக் கிளறி னால் அதன் கண்ணே ஆமையின் முட்டையைத் தேன் மணங்கமழும் ஆம்பற்கிழங்குடனே பெறுதற் கிடமானதும் இழுமென்னும் ஒலிக்குறிப்புடனே முழங்கும் நீர்வழங்கும் மதகுக் கதவங்களையுடையது மான பெருமாவிலங்கை' எனவும் (புறம். 176), 'நெல்லரியும் தொழுவர் அரிவாள் மழுங்கினால் பின்னரும் விரைந்தரியத் தீட்டுங் கல்லெனக் கருதிச் சேற்றிலுள்ள ஆமையின் வளைந்த முதுகிலே. உராய்ந்து தீட்டுதற்கிடமானதுமான இலங்கை' எனவும் (புறம்.379) புறத்திணை நன்னாகனாரின். பாடல்கள் இதன் நலங்களைப் புனையும். வ.கு.

மாளவிகா, வடமொழியில் தலை சிறந்த நாடக ஆசிரியரான காளிதாசரின் மிகஉயர்ந்த படைப்பு களுள் ஒன்றான 'மாளவிகாக்னிமித்திரம்' என்னும் நாடகத்தின் தலைவி ஆவாள். அந்நாடகம் மாளவிகா விற்கும் சுங்க மரபினைத் தோற்றுவித்த புசியமித்திர னின் மகனான அக்னிமித்திரனுக்கும் இடையே தோன்றிய காதலைக் கருப்பொருளாகக் கொண்டது. அப்பொழுது பட்டத்து இளவரசனான அக்னிமித் திரன் விதிசாவைத் (Vidisa - இன்றைய பில்சா - Bhilsa) தலைநகராகக் கொண்ட ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருந்தான்.

மாளவிகா மிகுந்த அழகும், நிறைந்த அறிவும், ஆடல், பாடல்களில் சிறந்த தேர்ச்சியும் பெற்றவள். விதர்ப்பநாடு அல்லது பீராரின் இளவரசனான மாதவசேனனின் தங்கை. அந்நாட்டை இயக்ஞசேனன் கைப்பற்றிக் கொண்டு, மாதவ சேனனைச் சிறையி லடைத்தான். அப்பொழுது மாளவிகா மந்தணமாக அக்னிமித்திரனின் அவைக்கு அனுப்பப்பெற்றாள். ஆனால், வழியில் கொள்ளைக்காரர்கள் அவளைக் கைப்பற்றினர். பின்னர் அவளை அக்னிமித்திரனின் பட்டத்தரசி தாரிணியின் உடன்பிறந்தவனான வீரசேனன் பெற்று, தனது தமக்கையிடம் அனுப்பி வைத்தான். மாளவிகா யார் என்பதை எவரும் அறியவில்லை. அவள் அந்தப்புரத்தில் தாரிணியின் அன்புக்குரியவளாய் ஞானதாசனிடம் ஆடல், பாடல் களை நன்கு கற்று வந்தாள்.

ஒருநாள் அந்தப்புரம் சென்ற அக்னிமித்திரன் அரசி தாரணியின் ஓவியத்தில் பணிப்பெண்களுடன் காட்சியளித்த மாளவிகாவின் உருவத்தைக் கண்டு காதல்கொண்டான். இதனை அறிந்துகொண்ட அரசி மாளவிகாவை அரசன் சந்திக்க இயலாதவாறு தடுத் தாள். ஒரு போட்டியின் விளைவாக மாளவிகா அரச னின் முன் நடனமாடிய பொழுது அவன்மீது கொண் டுள்ள காதலை வெளிப்படுத்தினாள். அவளுடைய அழகிலும், ஆடல், பாடல்களிலும் மயங்கிய அரசனு டைய காதல் மேலும் மேலும் வளர்ந்தது. அரசனும் மாளவிகாவும் ஒரு நாள் எதிர்பாராமல் சந்தித்துத் தங்களுடைய காதலை வெளிப்படுத்தினர். இதை அறிந்த அரசி தாரணி மாளவிகாவையும், அவள் தோழியையும் சிறையில் அடைத்தாள். விதூடகன்

தந்திரமாக அரசியிடமிருந்து அவளுடைய முத்திரை மோதிரத்தைப் பெற்று, இருவரையும் விடுதலை செய்தான். அரசனும், மாளவிகாவும் கோடை இல்லத்தில் இன்பமாக இருந்தனர். அப்பொழுது அசோக மரம் பூத்துவிட்டதைக் காண அரசி அரசனை அழைத்தாள். அங்குச் சென்றதும், அரசி அரசனுடன் மாளவிகாவையும் கண்டாள். அப்பொழுது அங்குக் கொண்டுவரப்பட்ட விதர்ப்ப நாட்டு மகளிர் இருவர் மாளவிகாவைக்கண்டு, தங்கள் நாட்டு இளவரசி என்பதை வெளிப்படுத்தினர். அரசி தாரணி அவர்கள் இருவரையும் இணைத்து வைத்தாள். விதர்ப்பநாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதன் ஒரு பகுதி மாளவிகாவின் தமையன் மாதவசேனனுக்கும், மற்றொரு பகுதி இயக்ஞ சேனனுக்கும் அளிக்கப்பட்டது. இந் நாடகமானது சுங்கமரபின், குறிப்பாக அக்னிமித்திரனின், வரலாற்றை அறிய ஒரு சான்றாகப் பயன்படுகிறது. சி.இரெ.

**துணை நூல்:**

Devadar, C.R., Editor, Works of Kalidasa, Vol.I Dramas, Motilal Banarsidass, Delhi, 1985.

**மாளவியா, பண்டித மதன்மோகன் கி.பி. 1861-1946):** இவர் இந்திய விடுதலைப் போரில் கலந்து கொண்ட தேசபக்தர்களுள் முதன்மையானவர்; சிறந்த பத்திரிகை ஆசிரியர். இவர் பொது நலப்பணிகளில் ஆர்வம் கொண்டவர்; மூன்று முறை காங்கிரசுப் பேரியக்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஒரு சிறந்த கல்வியாளரும் (Educationist) சமூகச் சீர்திருத்தவாதியும் ஆவார்.

அலகாபாதில் கி.பி. 1861 திசம்பர் 25 – ஆம் நாள் ஒரு வைதிகக் குடும்பத்தில் பிறந்தார். பண்டித பிரச்ராத்து (Brajrath)மாளவியா என்பார், இவர் தந்தையார் ஆவார். வடமொழிப் புலவரான பிரச்ராத்து அம்மொழியில் பல நூல்களை இயற்றியுள்ளார். தம் இளமைக் கல்வியை அலகாபாதில் முடித்துக் கொண்டபின், அலகாபாது மாவட்டப் பள்ளியில் (Matriculation) பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்று, மூயர் மத்திய கல்லூரியில் சேர்ந்து கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் மூலம் கி.பி. 1884-இல் இளங்கலைப் பட்டம் பெற்றார். இளமையில் உடற் பயிற்சியும், மற்போரும் செய்ததால் உடற் கட்டு மிக்கவராகத் திகழ்ந்தார்.

பின்னர், அலகாபாது அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியேற்றார். நாட்டுப் பற்றில் நாட்டம் கொண்ட மாளவியா ஆசிரியராக இருந்துகொண்டே அரசியலிலும் பங்கு கொண்டார். கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசு மகாசபைக் கூட்டத்தில் கி.பி. 1886 – ஆம் ஆண்டு 'பேராளர் அமைப்பின்றி வரிவிதிப்பில்லை' என்றுமுழங்கினார். அம்முழக்கம் இவருக்குப் புகழைத் தந்தது. அதுவே இவர்தம் கன்னிப் பேச்சாகும். பின்னர், இவர் காங்கிரசு இயக்கத்திலும் பங்குக்கொள்ளத் தொடங்கினார். தேசி திசாரத்துக் குழுமம் (Deshi Tijarat Company) நிறுவினார்.



மாளவியா.

ஆசிரியர் தொழிலைக் காட்டிலும் பத்திரிகை ஆசிரியர் தொழிலே இவருக்குப் பெரும் புகழ் தேடித் தந்தது. இவர் கி.பி. 1887-இல் ஆசிரியர் வேலையினின்றும் விலகி 'இந்துத்தானம்' (Hindustan) எனும் பத்திரிகையின் ஆசிரியரானார். இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர் அதை விட்டுவிட்டு, 'இந்திய யூனியன்' (Indian Union) என்ற பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பின்னர் 'அப்யுத்தயா' (Abhyudaya) என்ற இந்தி இதழை இவரே தொடங்கி நடத்தி வந்தார். பின்னர்'இலீடர்' (Leader) என்ற ஆங்கிலத் தினசரி பத்திரிகை ஒன்றினைத் தொடங்கப் பெரு முயற்சி மேற்கொண்டார் பிறகு, எல்.எல்.பி. பட்டம் பெற்று கி.பி. 1893 – இல் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகவும் ஆனார்.

இவர் தொடக்கத்தில் அலகாபாது நகராட்சித் தலைவராகவும், பின்னர்த் துணைத் தலைவராகவும் பணியேற்றார். அதன் பின்னர்ப் பல்கலைக்கழக உறுப்பினராகவும் (Fellow) அமர்த்தப்பட்டார். சட்டமன்ற உறுப்பினராக 1902-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது பல குழுக்களில் உறுப்பினராக அமர்த்தப்பட்டு நற்பணி பல புரிந்தார்.

இவர் தம் முயற்சியின் விளைவாக 1915 – இல் காசி இந்துப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

பின்னர் இவரே பல ஆண்டுகள் அதன் துணை வேந்தராகவும் பணிபுரிந்தார்.

இலாகூரில் 1909 - ஆம் ஆண்டு கூடிய 25 - ஆம் காங்கிரசு மாநாட்டிற்கு மாளவியா தலைமை ஏற்றார். தில்லியில் 1918-ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பத்து நான்காம் காங்கிரசு மாநாட்டிற்கும் இவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசு 1916-இல் நியமித்த தொழிற்குழுவில் (Industrial Commission) இவர் அங்கம் வகித்தார். எனவே, இந்தியக் கைத்தொழில்களின் பழம்பெருமை அதன் சீரழிவு ஆகியவை பற்றிய விரிவான தனி அறிக்கை ஒன்றினைத் தயாரித்து அரசிற்கு வழங்கினார். பஞ்சாபில் 1919-இல் நடைபெற்ற வன்முறையைப் பற்றித் துணிச்சலுடன், தில்லிச் சட்டசபையில் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

காந்கியடிகள் 1930-இல் உப்பு அறப்போரைத் தொடங்கியபோது, மாளவியா சட்டமன்ற உறுப்பினர் பதவியினின்றும் விலகி, உப்பு அறப்போரில் பங்கேற்றுப் பலமுறை சிறை சென்றார். இலண்டனில் நடந்த வட்டமேசை மாநாட்டில் 1931 - இல் காந்தி அடிகளுடன் இவரும் கலந்துகொண்டார்.

பின்னர், சுயராச்சியக் கட்சியில் சேர்ந்தார். இந்தியத் தேசிய காங்கிரசு இந்துக்களின் நலனில் அதிக அக்கறை கொள்ளவில்லை என்று கருதியதால், இவர் தேசிய கட்சியை (Nationalist Party) நிறுவினார்.

மாளவியா ஒரு தீவிர வைதிக இந்து. இருப்பினும் தீண்டாமையை வெறுத்தார். இந்துக்களைப் பிளவு படுத்தும் தீண்டாமையை ஒழிக்கத்தீவிரமாகப் பாடுபட்டார். இவர் குழந்தை மணத்தைத் தடை செய்வதில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். வைதிக இந்துவாயினும் கடல் கடந்து செல்லத் தயங்கவில்லை. இவரது சமசுகிருதத் தேர்ச்சியைக் கண்டு மெச்சிய சாத்திரி ஒருவர் தம் பெண்ணை இவருக்குத் திருமணம் செய்து வைத்தார். மாளவியா இறையன்பு மிக்கவராகத் திகழ்ந்தார். மாளவ நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்ததால் இவர் குடும்பத்தினர் 'மாளவியா' என்னும் பெயரைப் பெற்றனர்.

மாளவியா இந்து மகாசபையை நிறுவி, அதன் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல கிறித்தவர்களை இந்து மதத்திற்கு மாற்றினார். இந்து சமய வளர்ச்சியில் இவர் மிகுந்த அக்கறை கொண்டு, அதன் வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற தொண்டுகள் புரிந்தார். நாட்டிற்கு உழைத்த இத் தொண்டர் 1946 - ஆம் ஆண்டு காலமானார்.

இந்தியச் சுதந்திரப் போராட்ட முன்னணித் தலைவராகவும், சிறந்த கல்வியாளராகவும், பொது நலவாதியாகவும், துணிவு மிக்கவராகவும் திகழ்ந்த மதன்மோகன் மாளவியாவின் தொண்டினைப் பாராட்டும் வகையில் இவர் நினைவாகக் கல்கத்தா நகரில் இவர் தம் திருவுருவச்சிலை ஒன்று நிறுவப் பட்டுள்ளது

ம.இரா.


*மாற்பித்தியார்*: காண்க: மாரிப்பித்தியார்.

***மாற்றிலக்கணம்***: மொழியில் ஒருசில வாக்கியங்கள் அமைப்பில் வேறுபட்டிருப்பினும் ஒரே பொருளைக் கொண்டிருப்பதைக் காணலாம். இராமன் இராவணனைக் கொன்றான், இராவணன் இராமனால் கொல்லப்பட்டான் ஆகிய இரு வாக்கியங்களும் ஒரே பொருளையே உணர்த்துகின்றன. இராமன் இராவணனைக் கொன்றான் என்ற அடிப்படை வாக்கியத்தில் உள்ள இராமன் என்ற எழுவாயைக் கருவி வேற்றுமைப் பெயராகவும், இராவணனை என்ற செயப்படுபொருள் பெயரை எழுவாயாகவும், கொன்றான் என்ற செய்வினைப் பயனிலையைக் கொல்லப்பட்டான் என்ற செயப்பாட்டு வினைப் பயனிலையாகவும் மாற்றி இரண்டாம் வாக்கியம் பெறப்படுகிறது. இவ்வாறு மாற்றுவதற்குப் பயன்படும் விதிகள் மாற்றுவிதிகள் எனப்படும். இம் மாற்று விதிகளைப் பயன்படுத்தும் இலக்கணமே மாற்றிலக்கணம் (Tranformational Grammar) ஆகும். எனவே, ஒரு வாக்கியத்தை மற்றொரு வாக்கியமாக மாற்றும் மாற்றுவிதிகளைப் பயன்படுத்தும் இலக்கணம் மாற்றிலக்கணம் எனலாம்.

இவ்விலக்கணம் முதன்முதலாக 1957 - இல் நோம் சம்சுகி (Noam Chomsky) என்னும் மேலை நாட்டு அறிஞர் ஒருவரால் உருவாக்கப்பட்டது. அது மொழியியல் துறையில் ஒரு புதிய விழிப்பையும் மறுமலர்ச்சியையும் தோற்றுவித்தது எனலாம். ஓர் அமைப்பினின்றும் பிற அமைப்புகளைத் தருவிக்கும் மாற்று விதிகளைப் பயன்படுத்திப் பல வாக்கியங்களை எளிய முறையில் தருவிப்பதற்கு இம்மாற்றிலக்கணம் வழிவகுத்தது. எடுத்துக்காட்டாக, செயப்பாட்டு வினையாக்க மாற்று விதி செய்வினை.செயப்பாட்டு வினை வாக்கியங்களைத் தனித்தனியாக உருவாக்காமல் செய்வினை வாக்கியத்திலிருந்தே செயப்பாட்டு வினை வாக்கியத்தைத் தருவிக்கப் பயன்படுகிறது. மேலும், ஒரே வாக்கியம் ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களை உணர்த்துவதையும் மாற்றிலக்கனம் விளக்குகிறது ஒவ்வொரு வாக்கியத்திற்கும் புறநிலை அமைப்பு, புதைநிலை அமைப்பு என இரு அமைப்புகளை வகுத்து, மாற்று விதிகளைக் கொண்டு புதைநிலை அமைப்பினின்றும் புறநிலை அமைப்பு

களை இவ்விலக்கணம் தருவிக்கிறது. புறநிலை அமைப்பில் ஒத்திருக்கும் வாக்கியங்கள் புதைநிலை அமைப்பில் வேறுபட்டிருப்பின் ஒரே வாக்கியம் வேறு வேறு பொருட்களை உணர்த்தி நிற்கும். இம் மாற்றிலக்கணத்தின் சிறப்பையும் பயன்பாட்டையும் உணர்த்த வலுவான காரணங்கள் இருந்தன. ஆகவே, மாற்றிலக்கணம் அறிஞர் பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

சம்சுகி தம்முடைய மாற்றிலக்கணத்தில் 1965-இல் மேலும் சில திருத்தங்களைச்செய்து செவ்வியல் கோட்பாட்டை (Standard Theory) உருவாக்கினார். இம் மாற்றிலக்கணக் கோட்பாடு: 1) தொடரியல் பகுதி, 2) ஒலியனியல் பகுதி, 3) பொருளியல் பகுதி என மூன்று பகுதிகளைக் கொண்டது. தொடரியல் பகுதி அடிநிலை (Base) விதிகள், மாற்றுவிதிகள் ஆகிய இரு வகையான விதிகளைக் கொண்டது. அடிநிலை விதிகள் தொடர் அமைப்பு விதிகள் (Phrase Structure Rules) அடங்கியவை. அவையே ஒரு வாக்கியத்தின் புதைநிலை அமைப்பை உருவாக்குபவை. மாற்றுவிதிகள் ஒரு வாக்கியத்தின் புறநிலை அமைப்பை உருவாக்குபவை. இவ்வாறு தொடரியல் பகுதி விதிகளால் உருவாக்கப்பட்ட வாக்கியங்களுக்குப் பொருளியல் பகுதி பொருள் விளக்கம் அளிக்கிறது. ஒலியனியல் பகுதி இவ்வாக்கியங்களுக்கு ஒலி வடிவம் தருகிறது. இம் மாற்றிலக்கணத்தின் அமைப்பை




என விளக்கலாம்.

மாற்றிலக்கணத்தின் மேற்கண்ட மூன்று பகுதிகளுக்கும் இடையே உள்ள உறவை நிருணயிப்பதில் குறிப்பாகத் தொடரியலுக்கும் பொருளியலுக்கும் இடையே உள்ள உறவை நிருணயிப்பதில் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது. அது இன்னும் விவாதத்திற்குரிய கருத்தாகவே உள்ளது. சம்சுகி 1965-இல் உருவாக்கிய செவ்வியல் கோட்பாட்டிலும் பல திருத்தங்களைச் செய்து விரிவாக்கப்பட்ட செவ்வியல் கோட்பாட்டை (Extended Standard Theory) உருவாக்கினார். உலகப் பொது இலக்கணம் (Universal Grammar) ஒன்றை வரையும் முயற்சியிலும், அறிவியல் அடிப்படையில் மொழிகளின் தன்மையையும், மனிதனின் இயற்கையான மொழி அறிவுத் திறனையும் விளக்கிக் கொள்ளும் முயற்சியிலும் மாற்றிலக்கணத்தில் மேலும் மேலும் பல திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ச.அ.

**துணை நூல்கள்:**

**Agesthialingom, S.,** A Generative Grammar of Tamil, Annamalai Uuiversity, Annamalainagar, 1967.

**Bach, Emmon,** An Introduction to Transformational Grammar, Holt, Rinehart and Winston, New York, 1964.

**Chomsky, N.,** Aspects of the Theory of Syntax, M.I.T. Press, Cambridge, 1965.

**Huddleston, R.,** An Introduction to English Transformational Syntax, Longman, 1976.

**மாற்று உண்டியல்:** பண்டங்களைக் கடனுக்கு வாங்கும்போது பயன்படும் பத்திரங்களின் வகைகளில் ஒன்று மாற்று உண்டியல். கடன் பெறுபவர் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு எவ்விதமான நிபந்தனைகளுமின்றிக் கடன் கொடுத்தவர் குறிப்பிடும் ஓர் ஆளுக்கு அல்லது அவரது ஆணையைப் பெற்ற ஒருவருக்குத் தொகையைக் கொடுப்பதாக உறுதியளித்து எழுதிக் கொடுக்கும் பத்திரம் மாற்று உண்டியலாகும். கடன் கொடுப்பவரை 'வரைபவர்' (Drawer) என்றும், கடனைப் பெறுபவரை 'வரையப் படுபவர்' (Drawee) என்றும், யாருக்குப் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்று மாற்று உண்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அவரைப் 'பெறுபவர்' (Payee) என்றும் குறிப்பிடுவர். யார் மீது உண்டியல் வரையப்பட்டிருக்கிறதோ அவர் தமது சம்மதத்தைத் தர வேண்டும். இதை 'ஒப்புதல்' (Acceptance) என்பர். மாற்று உண்டியலைச் சட்ட வரையறைகளின்படி எழுத வேண்டும்.

மாற்று உண்டியல்களின் பின்புறம் கையொப்பமிட்டு அதன் உரிமையைப் பிறருக்கு மாற்ற முடியும். இவ்வணிக உண்டியல்களுக்கு வங்கிகள் கழிவு செய்து பணம் கொடுக்கின்றன.

குறிப்பிட்ட நாளிலிருந்து மூன்று நாள்களுக்குள் பணம் செலுத்தப் படவேண்டும். அம் மூன்று நாள்களைக் 'கருணை நாள்கள்' (Grace Days) என்பர். பணம் செலுத்தப்படாத உண்டியல்களை மதிப்பிழந்த உண்டியல்கள் என்பர்.

### மாற்று உண்டியலின் மாதிரி வடிவம்

**தஞ்சாவூர், 20, ஏப்பிரல் திங்கள்–1989**

| |
|---|
| முத்திரை (முத்திரைக் கட்டணம்) (Stamp) |

இதில் குறிப்பிட்டிருக்கும் நாளிலிருந்து ஒருமாத காலத்திற்குப் பிறகு எனக்கு அல்லது எனது கட்டளைப்படி, தாங்கள் பெற்றுக் கொண்டவற்றின் மதிப்பிற்காக, உருபாய் பத்து ஆயிரம் செலுத்தவும்.

**உரு 10,000-**

பெறுநர்

……………………………………………

……………………………………………

ஒப்பம்………………

(வரையப்படுபவர் முகவரி)

(வரைபவர் ஒப்பம்)

முகவரி.

வரையப்படுபவர் இம்மாற்று உண்டியலை ஏற்றுக் கொண்டு 'ஒப்புக்கொள்ளப்பட்டது' என்று எழுதிக் கையொப்பமிட வேண்டும்.

**கழிவு செய்தல்:** கடனைக் கொடுப்பவர் மாற்று உண்டியலைப் பெற்றுக்கொண்டு பொருளை அனுப்பி விடுவார். கடனுக்குப் பொருளைப் பெற்றவர் குறிப்பிட்ட தவணைக்குள் மாற்று உண்டியலுக்குரிய பணத்தைச் செலுத்திவிடுவார். கடன் பேரம் நிகழ்வதற்கு இவ்வாறு மாற்று உண்டியல்கள் பயன்படுகின்றன. மாற்று உண்டியலில் குறிப்பிட்டிருக்கும் கால எல்லைவரை மாற்று உண்டியலை வைத்திருப்பவர் பொறுத்திருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், நடைமுறையில் கடனைக் கொடுத்தவர் மாற்று உண்டியலைத் தமது வங்கியில் கொடுத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ள முயல்வார். குறிப்பிட்ட கால அளவிற்குப் பிறகே பணம் வங்கிக்குக் கிடைக்கும் என்பதால் மாற்று உண்டியலைப் பெறும் வங்கி, 'காத்திருத்தல்' பணிக்காக மாற்று உண்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் குறிப்பிட்டதொரு தொகையைக் கழிவு (Discount) என்ற வடிவத்தில் கழித்துக்கொண்டு மீதித் தொகையை வாடிக்கையாளருக்குக் கொடுத்து விடும். கடன் கொடுத்தவர் கழிவுநீக்கிப் பணத்தைப் பெற்றுக் கொள்வார். கெடு முடிந்தவுடன் மாற்று உண்டியலுக்குரிய தொகையைக் கடன் பெற்றவர் திருப்பிச் செலுத்தி விடுவார்.

**மாற்று உண்டியலின் இயல்புகள்:** எழுதப்படும் **நாளும் காலவரம்பும்:** மாற்று உண்டியலில் எழுதப்படும் நாளைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்த நாளிலிருந்து கால வரம்பைச் சேர்த்து மாற்று உண்டியலின் ஆயுட் காலத்தைக் கணக்கிட வேண்டும்.

**கால அளவு:** மாற்று உண்டியலில் கால அளவைக் குறிப்பிட வேண்டும். பொதுவாக 3 மாதங்கள், 45 நாள்கள் என்று கால அளவைக் குறிப்பிடுவர். இக் கால அளவுக்கும் மிகுதியாக மூன்று கருணை நாள்கள் தரப்படுவது வழக்கம்.

**எண்ணாலும் எழுத்தாலும் தொகையைக் குறிப்பிடுதல்:** மாற்று உண்டியலின் இடப்பக்க மூலையில் மாற்று உண்டியலுக்கான தொகையை எண்ணால் குறிப்பிட வேண்டும். மாற்று உண்டியலின் வாசகத்தில் தொகையை எழுத்தால் குறிப்பிட வேண்டும்.

**குறிப்பிடப்பட வேண்டிய பெயர்களும் இடங்களும்:** உண்டியலின் வாசகத்தில் செலுத்தப்படுபவரின் பெயரைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அப் பெயரோடு அவ்வுண்டியலைக் கொண்டு வருபவருக்கு (Bearer) அல்லது ஆணைப்படி (Order) என்ற சொல்லையும் குறிப்பிட வேண்டும். கீழ்ப்பகுதியின் இடப்பக்க மூலையில் வரையப்படுபவரின் பெயரையும், முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். கீழ்ப் பகுதியின் வலப் பக்க மூலையில் வரைபவரின் பெயரையும், முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

**முத்திரைச் சட்டப்படி அமைந்திருக்க வேண்டும்:** சரியான முத்திரைப் பத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். நடைமுறையில் உள்ள முத்திரைச் சட்டப் படி முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும்.

**உண்டியலின் வகைகள்:** மாற்று உண்டியல்களைப் பத்திரங்கள் சேர்த்த உண்டியல்கள், வெற்று உண்டியல்கள் என்றும், உள்நாட்டு உண்டியல்கள், வெளிநாட்டு உண்டியல்கள் என்றும் வகைப்படுத்தலாம்.

**பத்திரங்கள் சேர்த்த உண்டியல்கள்:** தொடர் வண்டிப்பற்றுச் சீட்டுகள், காப்பீட்டுப் பத்திரங்கள், விலைப் பட்டியல்கள் (Invoices) போன்றவற்றை இணைத்து அனுப்பும் உண்டியல்களைப் பத்திரங்கள் சேர்த்த உண்டியல்கள் (Documentary Bills) என்பர். இதில் ஏற்புழிப் பத்திர உண்டியல் (Documents against Acceptance bills – D.A. Bills), செலுத்துழிப் பத்திர உண்டியல் (Documents against Payment bills-D.P. Bills) என இரு வகை உண்டு.

**வெற்று உண்டியல்கள்:** எவ்வகையான பத்திரத்தையும் இணைக்காத உண்டியல்களை வெற்று உண்டியல்கள் (Clean Bills) என்பர்.

**உள்நாட்டு உண்டியல்கள்:** வரைபவரும் வரையப் படுபவரும் ஒரே நாட்டுக்குள் இருந்தால் அவ்வுண்டியலை உள்நாட்டு உண்டியல் (Inland Bills) என்பர். இவ்வகை உண்டியல்களுக்குப் படிகள் எடுப்பதில்லை. எனவே, இவை ஒற்றை உண்டியல்களாக (Bill in single) எழுதப்படுகின்றன. இவற்றின் மதிப்பு உள்நாட்டுச் செலாவணியில் குறிப்பிடப்படுகிறது.

**வெளிநாட்டு உண்டியல்கள்:** வரைபவரும் வரையப்படுபவரும் வெவ்வேறு நாடுகளில் இருந்தால் அவ்வுண்டியலை வெளிநாட்டு உண்டியல் (Foreign Bills) எனலாம். அவ்வகை உண்டியல்களுக்கு மூன்று படிகள் எடுப்பது வழக்கம். இவற்றின் மதிப்பு அந்நியச் செலாவணியில் குறிப்பிடப்படுகிறது.

**நாட்டு உண்டியல்கள்:** மேற்குறிப்பிடப்பட்ட வகைகளைத் தவிர இன்னொரு வகை உண்டியல்களும் உண்டு. அவை நாட்டு உண்டியல்களாகும். அவை இந்திய மொழிகளில் எழுதப்பட்டிருக்கும். இந்தியாவில் காணப்படும் நன்கமைக்கப்படாத பண அங்காடியில் (Unorganised money market) அவை பெருமளவில் புழங்குகின்றன.

**மாற்று உண்டியலுக்கும் கடனுறுதிப் பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகள்:** 1) மாற்று உண்டியலில் வரைபவர், வரையப்படுபவர், பெறுபவர் என மூவகையினர் தொடர்புகொண்டிருப்பர். கடனுறுதிப் பத்திரத்தில் (Promissory Note) வரையப் படுபவர் இடம்பெறார். 2) மாற்று உண்டியல் கடன் கொடுப்பவரால் எழுதப்படுவது. கடனுறுதிப் பத்திரம் கடன் பெறுபவரால் எழுதப்படுவது. 3) பணத்தைச் செலுத்துவதற்கான ஆணை மாற்று உண்டியல், பணத்தைச் செலுத்துவதற்கான ஒப்புறுதி, கடனுறுதிப் பத்திரம். 4) மாற்று உண்டியலுக்கு 'ஏற்பு' (Acceptance) கட்டாயம். கடனுறுதிப் பத்திரத்திற்கு 'ஏற்பு' கட்டாயமில்லை. 5) அயல் நாட்டு மாற்று உண்டியல்களுக்குப் படிகள் எடுப்பது வழக்கம். கடனுறுதிப் பத்திரங்கள் ஒற்றையாக எழுதப்படுவது வழக்கம். 6) ஏற்றுக் கொள்பவர்களுக்குப் பணத்தைச் செலுத்துவதற்கான கூட்டான பொறுப்பு உண்டு. கடனுறுதிப் பத்திரத்தின்படி பணம் செலுத்துவதற்குக் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பு உண்டு. 7) மாற்று உண்டியல்கள் பெருமளவில் பயன்படுகின்றன. கடனுறுதிப் பத்திரங்கள் அந்தஅளவிற்குப் பயன்படுவதில்லை.

**மாற்று உண்டியல்களின் உரொக்கத் தன்மை:** மிக விரைவில் தாமாகவே உரொக்கமாக மாறக்கூடிய தன்மை இவ்வுண்டியல்களுக்கு இருப்பதால் வாணிக வங்கிகள் மாற்று உண்டியல்களில் முதலிடுவதை மிகவும் விரும்புகின்றன. பண்டங்களை வாங்கும் வணிகர்கள் குறிப்பிட்ட தவணையில் பணத்தைச் செலுத்திவிடுவதாக எழுதிக் கொடுத்திருக்கும் வாணிகச் சீட்டுகளே மாற்று உண்டியல்கள். தவணை முடிந்ததும் வணிகர்கள் தாமாகவே உரிய தொகையைச் செலுத்தி விடுவார்கள்.

மாற்று உண்டியல்களை எளிதில் பிறருக்கு மாற்றி விடலாம். தவணைக் காலத்திற்குள் வாணிக வங்கிகளுக்குப் பணம் தேவைப்பட்டாலும் மைய வங்கியிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உண்டு. அவற்றின் மீதான முதலீடுகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கிறது. இத்தன்மைகளை மாற்று உண்டியல்கள் பெற்றிருப்பதால் அவற்றை வணிக வங்கிகள் மிகச் சிறந்த சொத்தாகக் கருதுகின்றன.

**மாற்று உண்டியலை மறுகழிவு செய்தல்:** (Rediscounting) வங்கிக் கடனை மைய வங்கிக் கடனாக மாற்றுவதை மறுகழிவு செய்தல் என்று பேராசிரியர் வில்லிசு (Prof. Willis) குறிப்பிடுகிறார். வணிக வங்கிகள் அவற்றிற்குப் பணம் தேவைப்படும் போது மைய வங்கியிடம் இம் மாற்று உண்டியல்களைக் கொடுத்து மறுகழிவு செய்து கொள்கின்றன. என்.எஸ்.பா.

**துணை நூல்கள்:**

**பாலசுப்பிரமணியன், என். எஸ்.,** பணம், பாங்கு பன்னாட்டு வாணிகம், உமா பப்பிளிகேஷன்ஸ், மதுரை, 1987.

Davar, S. R., Law and Practice of Banking, Progressive Corporation, Pvt. Ltd., Bombay, 1976.

*மாற்றுருபு*: மொழியின்கண் காணப்படும் பொருள்தரும் மிகச் சிறிய வடிவமே உருபு (Morph) எனப்படும். ஓர் உருபினை மேலும் பொருள் தரும் வடிவங்களாகப் பிரித்தல் இயலாது. உருபுகள் ஓர் ஒலியனாலோ அன்றிப் பல ஒலியன்களாலோ அமையப்பெறலாம். ஒரு மொழியிலுள்ள உருபன்களைக் கண்டறியும் முயற்சியில் முதன்முதலில் பகுத்தறியப்படுவன உருபுகளாகும். அவ்வுருபுகளைக் குறிக்கும் வகையில் அமைக்கப்படும் குறியீட்டு வடிவமே (Arbitrary symbol) உருபன் (Morpheme) எனப்படும்.

ஒவ்வோர் உருபனும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உருபுகளைக் குறிக்கும் வகையில் அமையும். ஒவ்வோர் உருபனுக்குரிய உருபுகளே மாற்றுருபுகள் (Allomorphs) எனப்படும். தமிழில் 'தாய்' என்ற உருபனுக்குத் 'தாய்' என்ற ஒரே ஒருமாற்றுருபுதான் உண்டு. ஓர் உருபனுக்கு ஒரே ஒரு மாற்றுருபு அமையும் நிலையில், அது வேறுபாடற்ற மாற்றம் (Invariant alternation) எனச் சுட்டப் பெறும்.

ஓர் உருபனின் மாற்றுருபுகள் அனைத்தும் ஒரே பொருளைச் சுட்டும். ஒரே பொருளைச் சுட்டும் அவ்வடிவங்கள் வடிவ வேறுபாடுடையன. அம் மாற்றுருபுகள் ஒன்று வருமிடத்தில் பிறிதொன்று வாராது, துணைநிலை வழக்கில் (Complementary distribution) அமையப் பெறும். மேலும், அம்மாற்றுருபுகள் ஒரே அமைப்பில் வருவனவாக (Occurrence in parallel formation) அமையும்.

'பல்' என்னும் உருபனுக்குப் 'பற்', 'பல்' என்பன மாற்றுருபுகள். அவை இரண்டும் அனைத்துச் சூழல்களிலும் ஒரே பொருளைச் சுட்டுகின்றன. அவ்விரு மாற்றுருபுகளும் வடிவ நிலையில் வேறுபாடுடையன. அவற்றுள் 'பற்' என்னும் மாற்றுருபு வல்லொலிகளுக்கு முன்னரும் (பற்-பொடி), 'பல்' என்னும் மாற்றுருபு பிற ஒலிகளுக்கு முன்னரும் (பல் – வலி) வருகின்றன. இங்ஙனம் ஒன்று வரும் சூழலில் மற்றையது வரப்பெறாமல் அவை துணைநிலை வழக்கில் அமையப் பெற்றுள்ளன. எனவே 'பற்', 'பல்' ஆகியன ஓர் உருபனின் மாற்றுருபுகளாகக் கருதப்படுகின்றன. சில சூழல்களில் மாற்றுருபுகள் உறழ்ச்சியில் (Free variation) வருவதுண்டு.

ஓர் உருபனுக்கு ஒலிமாற்றம் காரணமாகப் பல மாற்றுருபுகள் அமைவதுண்டு. ஒரினமாதல் (Assimilation) என்னும் ஒலிமாற்றம் காரணமாக 'மரம்' என்னும் உருபனுக்கு 'மரக்' (மரக்-காடு), 'மரச்' (மரச்-சேவை), 'மரத்' (மரத்-தொட்டி), 'மரப்' (மரப் – பெட்டி), 'மர' (மர–வேர்) போன்ற மாற்றுருபுகள் அமையப் பெற்றுள்ளன.

ஓர் உருபனுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட மாற்றுருபுகள் அமையும் நிலையில் ஒன்றினை அடிப்படை வடிவமாகக் (Basic form) கொண்டு ஏனையவற்றை அவ்வடிப்படை வடிவத்திலிருந்து விளக்கிக் காட்டுதல் வேண்டும். மொழியின் கட்டமைப்புக்கேற்ப மாற்றுருபுகளை எளிமையாகவும் சுருக்கமாகவும் விளக்கப் பயன்படும் மாற்றுருபினையும், மொழியில் பெரிதும் பயின்று வரும் மாற்றுருபினையும், பிற மாற்றுருபுகளை வருவிப்பதற்கு ஏற்ற வகையில் அமையும் மாற்றுருபினையும் அடிப்படை வடிவமாகத் தெரிவு செய்யலாம்.

தமிழில் இறந்தகால உருபனுக்கு 'த்', 'ட்', 'ற்' ஆகியன மாற்றுருபுகளாகச் செயற்படுகின்றன. அவற்றுள் 'த்' என்னும் வடிவம் மொழியில் பெரிதும் பயின்று வருவதாலும், பிற வடிவங்களை எளிமையாக விளக்கப் பயன்படுவதாலும், அவ்வடிவத்திலிருந்து 'ட்', 'ற்' ஆகியவற்றை வருவித்துக்கொள்ள இயலுவதாலும் (ண்+த் > ண்ட், கண்டான்; ன்+த்>ன்ற், சென்றான்) அவ்வடிவத்தையே அடிப்படை வடிவமாகக் கொள்ளலாம். சில சூழல்களில் அடிப்படை வடிவம் மொழியில் காணப்பெறாத கொள்கை நிலை அடிப்படை வடிவமாகவும் (Theoritical base form) அமைவதுண்டு.

மாற்றுருபுகளின் வடிவ வேறுபாடு மாற்றுருபுகளை அடுத்துவரும் ஒலிகளுக்கேற்ப அமையுமாயின் அம்மாற்றம் (Alternation) ஒலியன்கட்டு மாற்றம் (Phonological conditioned alternation) எனவும், அம்மாற்றுருபுகள் ஒலியன் கட்டு மாற்றுருபுகள் (Phonological conditioned allomorphs) எனவும் சுட்டப்பெறும். இறந்தகால உருபனின் மாற்றுருபுகளாகிய 'த்', 'ட்', 'ற்' என்பன ஒலியன் கட்டு மாற்றுருபுகளாகச் செயற்படுகின்றன. 'ட்' என்னும் மாற்றுருபு நாமடி ஒலிக்குப் பின்னரும் (கண்-ட்-ஆன், 'ற்' என்னும் மாற்றுருபு அண்பல் மூக்கொலிக்குப் பின்னரும் (கொன்-ற்-ஆன்), 'த்' என்னும் மாற்றுருபு பிறவொலிகளுக்குப் பின்னரும் வருவதால் இவற்றை ஒலியன் கட்டு மாற்றுருபுகளாகக் கருதலாம்.

சில மாற்றுருபுகளின் வடிவ வேறுபாடு அவற்றை அடுத்துவரும் உருபன்களுக்கேற்ப அமையுமாயின் அம்மாற்றம் உருபன்கட்டு மாற்றம் (Morphologically conditioned alternation) எனவும், அம்மாற்றுருபுகள் உருபன் கட்டு மாற்றுருபுகள் (Morphologically

conditioned allomorphs) எனவும் குறிப்பிடப்படும். 'வ', 'வரு', 'வா' ஆகிய மூன்று வடிவங்களும் 'வா' என்னும் இறந்தகால உருபனின் மாற்றுருபுகளாகும். அவற்றுள் 'வ' என்னும் மாற்றுருபு இறந்தகால உருப னுக்கு முன்னரும் (வ – ந்த்-ஆன்), 'வரு' என்னும் மாற்றுருபு எதிர்கால, நிகழ்கால உருபன்களுக்கு முன்னரும் (வரு-கிறு-ஆன்)(வரு – வ் – ஆன்) வருவ தால் அவற்றை உருபன்கட்டு மாற்றுருபுகளாகக் கருதலாம். ஏ.ஆ.

*மாற்றொலி*: மொழிகளின் அடிப்படை உறுப்பு அவற்றின் ஒலிகளேயாகும். பேச்சுப்பொறியின் உறுப்புகளாகிய குரல்வளை, நா, அண்ணம், உதடு முதலியவற்றைக்கொண்டு உருவாக்கப்படும் பல்வேறு பட்ட ஒலிகளினின்று மொழியின் ஒலிகள் பிரித்தறியப் படுகின்றன. உலக மொழிகளில் இவ்வளவுதான் பேச் சொலிகள் உள்ளன என்று அறிஞர்கள் அறுதியிட்டுள் ளார்கள். அனைத்து ஒலிகளையும் ஒரு மொழியில் காணுவதற்கில்லை. ஒரு குறிப்பிட்ட ஒலிகளைக் கொண்டு ஒவ்வொரு மொழியும் செயற்படும். ஒரு மொழியில் உள்ள ஒலிகள் மற்றொரு மொழியில் இல்லாமல் போகலாம். எனினும், ஒவ்வொரு மொழி யும் கருத்துகளை வெளிப்படுத்தும் வகையில் நிறை வுடையதாகவே இருக்கும்.

உலக மொழிகளுக்கான பொதுவான ஒலிகளை ஒவ்வொன்றும் இத்தன்மையது என அவற்றின் பிறக்குமிடம், உச்சரிக்கப்படும் விதம் முதலிய குணங் களின் அடிப்படையில் வகுத்துள்ளனர். மொழியில் வழங்கும் ஒவ்வொரு ஒலியையும் பேச்சொலி (Phone) என்பர். ஒவ்வொரு ஒலியையும் அதன் உச்சரிப்பு முறையை ஒட்டி விளக்கமுடியும். எடுத்துக்காட்டாக 'K' என்னும் ஒலியை ஒலிப்பில்லாப் பின் நா வெடிப்பொலியென்றும் (Voiceless Velar stop), 'G' என்ற ஒலியை ஒலிப்புடைப்பின் நா வெடிப்பொலி யென்றும் (Voiced velar stop), 'x' என்ற ஒலியை ஒலிப்பில்லாப் பின் நா உரசொலி (Voiceless velar fricative) என்றும் குறிப்பிடுவர். இவ்வகைப் பாகு பாடு பருப்பொருள் தன்மையதாகும் (Concrete). இவ்வாறன்றி ஒரு மொழியின் செயல்நிலையில் இவ் வொலிகள் எங்ஙனம் பயன்படுகின்றன என்பதன் அடிப்படையில் இவற்றை ஒலியன் (Phoneme) என்றும், மாற்றொலி (Allophone) என்றும் பகுப்பர். இப்பாகு பாடு நுண்பொருள்தன்மை (Abstract) உடையது.

இரண்டு சொற்களின் பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாயிருப்பது அச்சொற்களில் உள்ள வேறு பட்ட ஒலிகளேயாகும். எடுத்துக்காட்டாகக் கம்பி, தம்பி, என்ற இரண்டு சொற்களின் பொருள் வேறு பாட்டுக்குக் காரணம், க்,த் ஆகிய ஒலிகளேயாகும். ஏனெனில், இந்தச் சொற்களில் உள்ள பிற ஒலிகளில் (அம்பி) வேறுபாடு இல்லை. இவ்வகையில் ஒரு மொழியில் வழங்கும் ஒலிகளுக்குள் ஒற்றுமையுடைய ஒலிகள் மொழியில் செயற்படுவதையொட்டி ஒலியன் கள் அமையும்.

உச்சரிப்பு அடிப்படையில் ஒலி ஒற்றுமை உடைய ஒலிகளைக் கண்டறிந்து, அவை சொற்களில் வரும் இடங்களைக்கொண்டு அவற்றை ஒலியன் என்றும் மாற்றொலி என்றும் பிரிப்பர். எடுத்துக்காட்டாக, 'K', 'G', 'X' ஆகிய ஒலிகளை வரிவடிவத்தில் காட்ட 'க்' என்ற எழுத்தைத் தமிழில் பயன்படுத்துகின்றனர். அவ்வெழுத்து, மொழியில் வழங்கும் இடத்திற்குத் தகுந்தவாறு மூன்று ஒலிகளைப் பெறுகின்றது. கப்பல், கடல்போன்று சொல்லுக்கு முதலில் வரும் போதும், பக்கம், நோக்கம் முதலிய சொற்களில் இரட்டித்து வரும்போதும், வெட்கம், பற்கள் முதலிய சொற்களில் இன்னொரு மெய்யோடு சேர்ந்து வரும்போதும் 'K' என்ற ஒலியையும், பகல், சுகம் போன்ற சொற்களில் இரு உயிரொலிகளுக்கு இடையில் வருங்கால் 'X' என்ற ஒலியையும், ங் என்ற மூக்கொலியை அடுத்துத் தங்கம் சுரங்கம் முதலிய சொற்களில் வரும்போது 'G' என்ற ஒலியையும் ககரம் பெறுகிறது. 'K' வழங்கும் இடத்தில் 'X' வோ, 'G' வழங்கும் இடத்தில் 'X' வோ வழங்கப்படுவதில்லை. இச்சூழ்நிலையை ஒலியனி யல் ஆராய்ச்சியில் துணைநிலை வழக்கு (Complementary distribution) என்பர். (K), (G), (X) ஆகிய ஒலிகள் துணைநிலை வழக்கில் இருப்பதால் இவற்றை ஓர் ஒலியனின் மாற்றொலிகளாகக் கருதலாம். மேலும், இந்த மூன்று ஒலிகளும்(K,G,X) பொதுமைப் படுத்தப்பட்டு நுண்நிலையில் 'K' என்று குறிப்பிடப் படும். ஒலியன் எப்பொழுதும் நுண்மையானது; மாற் றொலி எப்பொழுதும் பருமையானது. ஆகவேதான் ஒலியனாகத் தேர்ந்தெடுக்கப்படும் குறியீடும் மாற் றொலியில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது. 'K' என்ற ஒலியன் 'K', 'G' 'X', என்ற மூன்று மாற்றொலி களைக் கொண்டதாகக் கருதப்படும்.

ஓர் ஒலியனின் மாற்றொலியாக வரும் ஒலிகள் அவ்வொலியோடு உச்சரிக்கப்படும் விதத்தில் ஒலி ஒற்றுமையுடையதாகவும் (Phonetic Similarity) இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட் டாகப் பாதம் முதலிய சொற்களைக் கொண்டு (J) என்ற ஒலியையும் 'X' என்ற ஒலியையும் மாற்றொ லியாகக் கருத முடியாது. ஏனெனில் இந்த ஒலி 'K' என்ற ஒலியுடன் உச்சரிப்பு அடிப்படையில் வேறு பட்டுள்ளது. அதாவது 'K' பின்நாவில் பிறக்கிறது. (J) முன் அண்ணத்தில் பிறக்கிறது. மேலும் 'K' 'G' 'X' ஆகிய ஒலிகள் பின்நாவில் உச்சரிக்கப்படுகின் றன என்ற வகையில் ஒற்றுமை உடையன.

பொதுவாக ஒலியன்கள் மட்டுமே ஒரு மொழியில் வரிவடிவத்தைப் பெறுகின்றன. மாற்றொலிகள் வரிவடிவம் பெறுவதில்லை. எடுத்துக்காட்டாக 'K' என்னும் ஒலியன் (க) என்னும் வரிவடித்தைப் பெற்றுள்ளது. இதன் மாற்றொலிகளான 'K', 'G', 'X' முதலியவற்றிற்கு வரிவடிவம் கிடையாது. இங்கு 'K' என்ற ஒலி வேறு; 'K' என்ற ஒலியன் வேறு என்பார் மொழியியலார். ஆர்.வா.

*மாறவர்ம பாண்டிய மன்னர்கள்*: தமிழ் நாட்டில் கி.பி.13 – ஆம் நூற்றாண்டில் இரண்டாம் பாண்டியப் பேரரசு ஏற்பட்டிருந்தது. அப் பேரரசுக்குத் தலைவர்களாக இருந்த பாண்டிய மன்னர்களுள் மாறவர்மன் என்ற பெயருடையவர்கள் நால்வர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216 -1239), இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1238-1251), முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268-1311), மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (கி.பி.1283-1296) ஆகியோர் ஆவர்.

**முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்** (கி.பி. 1216-1239): இவருக்குமுன் ஆட்சிபுரிந்த குலசேகர பாண்டியனின் தம்பி என இவர் கருதப்படுகிறார். இவர் கி.பி. 1216-இல் பட்டத்துக்கு வந்தார். சோழர் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த பாண்டியரின் நிலையை மாற்றி அவர்களை எழுச்சியுறச்செய்த பெருமை இவருக்குரியது. சோழநாட்டை இவர் கைப்பற்றியதால் 'சோணாடு கொண்டருளிய தேவர்' என்னும் சிறப்புப் பெயர் இவருக்குண்டு. இவருடைய கல்வெட்டுகளும், அவற்றில் உள்ள மெய்க்கீர்த்திகளும் இவர் புகழைப் பேசுகின்றன. அவை அழகிய தமிழ்நடையில் உள்ளவை. வெற்றி வீரனாகிய இவர் தில்லையம்பதிக்குச் சென்று திருச்சிற்றம்பலமுடையாரை வணங்கினார் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அக்காலந்தொட்டுப் பல ஆண்டுகள் பாண்டிய மன்னர்கள் தில்லைத் திருக்கோயிலுக்குச் சிறப்பான பல பணிகள் புரிந்துள்ளனர்.

**இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்** (கி.பி. 1238-1251): இம் மன்னர் காலத்தில் முன்பு தோற்கடிக்கப்பட்ட சோழர்கள் பாண்டிய நாட்டில் படையெடுத்தனர். பாண்டிய மன்னர் தோல்வியுற்றார். எனினும், சில ஆண்டுகளுக்குப் பிறகு பாண்டியரின் ஆதிக்கம் மீண்டும் வலுவுற்றது.

**மாறவர்மன் குலசேகரன்** (கி.பி. 1268-1311): இம் மன்னர் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாடு பாண்டிய அரசர் ஐவரால் ஆளப்பட்டது என்றும், அவர்களுள் மூத்தவரும் தலைசிறந்தவரும் இவரேயாவார் என்றும் மார்க்கோ போலோ என்னும் வெனிசு நாட்டுப் பயணி குறிப்பிடுகிறார். பாண்டிய நாட்டின் பல பகுதிகளில் அவர்கள் ஆட்சி செய்திருக்கக்கூடும். மாறவர்மன் குலசேகரன் சேரநாட்டுத் திருவிதாங்கூர் மீது படையெடுத்துக் கொல்லம் என்னும் பெருநகரைக் கைக்கொண்டதால் 'கொல்லங்கொண்ட பாண்டியன்' என்றும், 'சேரனை வென்றான்' என்றும் பட்டங்கள் அமைந்தன.

**மாறவர்மன் விக்கிரமபாண்டியன்** (கி.பி. 1283-1296): இவர் குலசேகர பாண்டியரின் தம்பி என்று கருதப்படுகிறார். இவருடைய சிறப்புகள் பலவற்றை இவர் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

பாண்டிய அரசுக்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியும், 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் மிகவும் துயர்நிறைந்த காலமாகும். பாண்டிய அரசர்களுக்கிடையே மூண்ட உள்நாட்டுப் போரும் அயலவர் படையெழுச்சிகளும் பாண்டியரின் வீழ்ச்சிக்கு அடிகோலின. தெ.பா.

*மாறன் பாப்பாவினம்*, பாவும் பாவினமுமாக இயற்றப்பட்டதொரு நூல். பாப்பாவினம் என்பது உம்மைத்தொகையானாலும் இலக்கணமின்றி வழக்குநோக்கி ஒற்று மிகுந்தது. சிதம்பரச் செய்யுட்கோவை, திருவலங்கற்றிரட்டுப் போல யாப்பிலக்கணத்திற்காக எழுதப்பட்ட இலக்கியமாகும். இதனுள் காணப்படும் பாடல்கள் அனைத்தும் முன்னைய இலக்கண நூல்களில் கூறப்பட்ட இலக்கணத்திற்கேற்ப அமைந்துள்ளன. அவற்றிற்கு அணி, திணை, துறை போன்ற பாகுபாடுகள் சுட்டப் பெற்றுள்ளதோடு குறிப்புரையும் எழுதப்பட்டுள்ளது.

இந் நூல், முதன்முதலாக 1932-இல் 'செந்தமிழ்' உதவிப் பதிப்பாசிரியராகவிருந்த கி. இராமானுசையங்காரால் மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலையில் பதிப்பிக்கப் பட்டுச் சங்கப் பதிப்பாக வெளியிடப் பட்டது. இவ் வெளியீட்டில் 'பாப்பாவினம்' என்று. இந் நூல் குறிக்கப் படுகின்றது. இந் நூலின் ஆசிரியர் பற்றிய கருத்து வேறுபாட்டில் 'மாறன்' என்பதைச் சேர்க்காமலேயே வெளியிட்டனர். இந் நூலின் ஆசிரியர் பேரைக்காரிரத்தினக் கவிராயர் என்றும், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்றும் கூறுவர். மாறனலங்கார வரலாற்றில் ஆ.மா. சடகோபராமானுசாச்சாரியாரவர்களின் கருத்தை மறுத்துத் திருக்குருகைப் பெருமாள் கவிராயரே இதன் ஆசிரியர் என்று கி. இராமானுசையங்கார் இந் நூலின் முகவுரையில் நிறுவியுள்ளார்.

'இந் நூற் செய்யுட்களின் நடை முதலியவை மாறனலங்கார உதாரணச் செய்யுட்களின் நடை

முதலியவற்றை யொத்தனவாயிருத்தலாலும், மாறனலங்காரத்துள் உதாரணமாக எடுத்தாளப் பட்டனவும், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் இயற்றியனவுமான குருகைமான்மியச் செய்யுட்களிற் சிலவும், மும்மணிக்கோவைச் செய்யுட்களும் வேறுபல செய்யுட்களும் இந் நூலகத்துக் காணப்படுதலாலும் இது, மாறனலங்கார ஆசிரியராகிய திருக்குருகைப் பெருமாள் கவிராயரால் தொகுத்தியற்றப் பட்டிருக்கலாமென்று தெரிகின்றது' என்று அவர் கூறியுள்ளார்.

இவர் காலம் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டாகும். திருக்குருகை மான்மியமும், மாறனகப் பொருளும் முறையே கொல்லம் 723 (கி.பி. 1547), 727 (கி.பி. 1551) ஆகிய ஆண்டுகளில் அரங்கேற்றப்பட்டனவாக அவற்றின் பாயிரங்கள் கூறுகின்றன. எனவே, இந் நூலும் அக்காலத்தில்தான் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

மாறனாகிய நம்மாழ்வார் பெயரால் வழங்கப்படும் இந்நூல், பாக்களின் இலக்கணத்தைக் கூறவில்லை. இந் நூலுள் 140 மேற்கோள் பாடல்கள் உள்ளன. செய்யுள் உறுப்புகள் பற்றி இதனுள் குறிப்பிடப்படவில்லை. வெண்பா 28, வெண்பாவினம் 13, ஆசிரியப்பா 34, ஆசிரியப்பாவினம் 16, கலிப்பா 20, கலிப்பாவினம் 12, வஞ்சிப்பா 3, வஞ்சிப்பாவினம் 5, மருட்பா 4 என ஒன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, குறிப்பிட்டுள்ள பாடல்களைப் பெற்றுள்ளன. இதனோடு 'பாப்பாவினம் முற்றும்' என்று சுட்டப்பட்டுள்ளது. இதன்பின் பரிபாடல் இலக்கணத்திற்குரிய மேற்கோள் பாடல்கள் ஐந்து காணப்படுகின்றன. தொல்காப்பியத்திற்குப் பின்வந்த இலக்கண நூல்கள் எவையும் பரிபாடல் இலக்கணம் கூறாமலிருக்க, இந்நூல் மட்டும் அதற்குரிய பாடல்களைத் தந்துள்ளதாகக் கருதுவர். நூல் முற்றும் என்று குறிப்பிடப்பெற்று அதன் பின் பரிபாடற் செய்யுட்கள் அமைந்துளளதால் இக்கருத்து ஆய்தற்குரியதாகும்.

இது ஒரு வைணவ நூல். இராமானுசரையும் மணவாள முனிகளையும் ஆசிரியர் நூலுள் சுட்டியுள்ளார். மாறன்சீர் பரவுதலும் வைணவத்தைச் சிறப்பித்துரைத்தலுமே நூலின் நோக்கங்களாக அமைந்துள்ளன. சைவத்திற்கு அமைந்த சிதம்பரச் செய்யுட் கோவைக்கு இணையாக அமையவேண்டுமெனக் கருதி இயற்றப்பட்டது போன்று தோன்றுகிறது.

நம்மாழ்வாரின் சிறப்புகள் பலவிடங்களில் கூறப்பட்டுள்ளதை, 'பெருநூல் பிறபல கற்பதின் மாறன், ஒரு நூல் கற்ப தூதியம் உயிர்க்கே' (29) என்றும். 'மாறன் திருவாய்மொழியே மருந்து பிறவிப்பிணிக்கு' (23) என்றும், 'கஞ்சத் திருமால் கழல்பரவு மாறனார் செஞ்சொற் திருவாய் மொழியுணர்ந்த சீலத்தார் வஞ்சப் பிறவி வலைப்பட்டிலாரே' (76) என்றும், 'மாறன் தந்த தமிழ் மறைப்பாக் கேளாதவரே இரு செவியும் கெட்டாரே' (95) என்றும் அமைந்த பாடல் அடிகளால் அறியலாம்.

'யாப்பருங்கலக் காரிகையில் கூறப்பட்டுள்ள பாவும் பாவினங்களும் இந் நூலுள் சுட்டப்பெற்றுள்ளன. சவலை வெண்பாட்டு எனும் பாவகை வெண்பா இயலின் ஈற்றில் புதியதாகக் கூறப்பட்டுள்ளது. 'நனியிரு குறளாய் நான்கடி யுடைத்தாய், தனி வரல் இல்லது சவலைவெண் பாட்டே' (28) என அப் பாவகைக்குரிய இலக்கணம் சுட்டப்பெற்றுள்ளது.

இக் குறிப்புரைகளை ஆசிரியரே எழுதியிருப்பார் என எண்ணத் தோன்றுகிறது. 'நான்கு பாவினும் இனஞ்சேர்த்துப் பண்ணிற்குத் திறம்போலத் தாழிசை, துறை, விருத்தமெனப் பன்னிரு பகுதியாகக் கூறுவர். அவற்றுள் வெண்பாவிற்கும் ஆசிரியத்திற்கும் இனம் முன்னர்க் கூறப்பட்டது. ஒழிந்த இக் கலி முதலிய பாவிரண்டிற்கும் இனம் பின்னர்க் கூறப்படும்' (101) என்பது அவ்வுரை. எனவே, நூலும் அரிய குறிப்புரையுமாக அமைந்த இந்நூல் இன்றியமையா யாப்பிலக்கணச் செய்திகளை உள்ளடக்கிய ஒரு சான்றிலக்கியமாகும். சா.கி.

*மாறன் பொறையனார்*: இவர் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ஐந்திணையைம்பது என்ற நூலை இயற்றியவர். 'பொறையன் என்ற இயற்பெயருடன் 'மாறன்' என்ற சிறப்புப் பெயரினைப் பெற்றுப் பாண்டிநாட்டு அரசியலில் பெரும் பதவியில் இருந்தவர். இவரைப்பற்றிய பிற செய்திகள் தெரிந்தில.

ஐந்திணையைம்பது என்னும் நூல் முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்றும் ஐந்திணைகளின் உரிப்பொருளான இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்ற ஐந்தொழுக்கங்களையும் பப்பத்து வெண்பாக்களில் விளக்கிக் கூறுகிறது. இந் நூலில் பெரும்பாலும் நேரிசை வெண்பாக்களும் சிறுபான்மை இன்னிசை வெண்பாக்களும் வந்துள்ளன. 'ஐந்திணை யைம்பதும் ஆர்வத்தின் ஓராதார், செந்தமிழ் சேரா தவர்' எனப் பாயிரத்தில் இந் நூலின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. மு.ச.

*மாறனகப் பொருள்*: இது திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவரால் எழுதப்பட்ட அகப்பொருள் இலக்கணநூல். இவ்வாசிரியர் திருக்

குருகூரில் பிறந்தவர்; தந்தையார் பெயரும் திருக் குருகைப் பெருமாள் கவிராயர் என்பதாகும். வேளாள குலத்தினர். சடகோபருடைய ஆசுதான கவிராயர் வழியினர். அவர்தம் இயற்பெயர் சடையன் என்பதாகும். அவருடைய குரு சிரீநிவாச ஐயராவார்.

மாறன் என்ற பெயர் நம்மாழ்வாருக்குரியதாகும். நம்மாழ்வாரிடத்து அவர் ஆழங்கால்பட்டதனால் அவர் பெயராலேயே நூலை அமைத்தார். தொல் காப்பியம், இறையனார் களவியல் போன்ற நூல் களில் காணப்படும் அகப்பொருள் கருத்துகளை முறைப்படத் தொகுத்தும் வகுத்தும் இந் நூலைச் செய்துள்ளார். இந் நூலைக் கொல்லமாண்டு 727 -இல் (கி.பி.1551) குருகூர்ச் சடகோபர் கோயிலில் சிரீநிவாச ஐயர் முன்னிலையில் அரங்கேற்றியதாகப் பாயிரம் கூறுகின்றது.

இந் நூல் அகத்திணையியல், களவியல், வரை வியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்து இயல்களைக் கொண்டது என்றும், முந்நூற்று அறுபத்து மூன்று நூற்பாக்களையுடையது என்றும் தெரிகிறது. ஆனால் அகத்திணையியலும் ஒழிபியலும் ஒழிய ஏனைய இயல்களே இப்பொழுது நூல் வடிவில் உள்ளன. இவற்றை நோக்க இதுவொரு குறைநூலாகும். இந் நூலுள், களவியல் 62 நூற்பாக்களும், வரைவியல் 34 நூற்பாக்களும், கற்பியல் 10 நூற்பாக்களுமாக 106 நூற்பாக்கள் காணப்படுகின்றன. நூற்பாக்கள் அனைத்தும் சூத்திர யாப்பில் அமைந்துள்ளன. இந் நூலின் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திருப்பதிக் கோவை காட்டப் பெற்றுள்ளது. திருவரங்கம் முதலாகவுள்ள திருமால் திருப்பதிகள் மீது அகப் பொருள் அமைய இக் கோவை நூல் பாடப்பட் டுள்ளது. இதில் 455 துறைகள் அமைய 527 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் உள்ளன. இக் கோவையுள் 95 திருமால் திருப்பதிகள் சுட்டப் பட்டுள்ளன. நம்பியகப் பொருளுக்குத் தஞ்சை வாணன் கோவை இலக்கியமாக அமைந்ததைப் போல மாறனகப் பொருளுக்குத் திருப்பதிக்கோவை இலக்கியமாக இணைந்துள்ளது. அதன் ஆசிரியர் இன்னார் என்று அறியப்படவில்லை. எனினும் அக் கோவை வைணவச் சார்புடையதாக இருப்பதாலும் நம்மாழ்வார் சிறப்பைக் காட்டுவதாக அமைவதா லும் திருக்குருகைப் பெருமாள் கவிராயரே அதனை இயற்றியிருக்கலாம் என்று கருதுவர். இம் மாறனகப் பொருள் குறைநூலேயாயினும் அகப்பொருள் செய்தி களைத் தெளிவு பட எடுத்துரைக்கிறது என்பதில் ஐயமில்லை. சா.கி.

**மாறனலங்காரம்:** இது ஓர் அணியிலக்கண நூல்; திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவ ரால் எழுதப் பெற்றதாகும். மாறனகப் பொருள், மாறன் பாப்பாவினம், திருக்குருகை மான்மியம் போன்றவை இவர் எழுதிய பிற நூல்கள். இவர் நம்மாழ்வார் மீது ஆறாக் காதல் கொண்டிருந்தமை யால் அவரையே தலைவராகக் கொண்டு அவர் பெயராலேயே இந் நூலை இயற்றியுள்ளார். 'திரு மகிழ்ப் பரமதேசிகன்' பெயரால் நூல்கள் இயற்றப் பட்டதாக மாறனகப் பொருளும் கூறுகின்றது.

வடமொழியிலும் 'சடவைரிவைபவ திவாகரம்' என்ற பெயருடன் குவலயானந்தம், நம்மாழ்வார் தொடர்போடு அணிநூலாக விளங்குகின்றது. இம் மாறனலங்காரம் தண்டியலங்காரத்தின் வழிநூல். தொல்காப்பிய உவமையியல் செய்திகளையும் தண்டி யலங்காரத்தையும் பின்பற்றி இந் நூல் எழுதப் பட்டுள்ளது. இது பாயிரவிலக்கணத்தை முதலில் பெற்றுப் பொதுவியல், பொருளணியியல், சொல்லணி யியல், எச்சவியல் எனும் நான்கு இயல்களை உடைய தாகக் காணப்படுகின்றது; 327 நூற்பாக்களைக் கொண்டது. இந் நூலின் பாயிரப் பகுதி 64 நூற்பாக் களையும், பொதுவியல் 21 நூற்பாக்களையும், பொருளணியியல் 166 நூற்பாக்களையும், சொல்லணி யியல் 48 நூற்பாக்களையும், எச்சவியல் 28 நூற் பாக்களையும் கொண்டுள்ளன.

இந்நூற்பாக்கள் இருவகை யாப்புகளால் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவியல், வெண்பா யாப் பிலும், ஏனையவியல்கள் நூற்பா யாப்பிலும் காணப் படுகின்றன. நன்னூலில் முதற்கண் பாயிரச் செய்தி கள் நிரம்பவும் கூறப்பட்டிருப்பது போல் இந் நூலுள் ளும் கூறப்பட்டிருக்கின்றன. பாயிர விலக்கணம், நூற்பாகுபாடு, சூத்திரவிலக்கணம், சூத்திரப் பொருள் கோள், ஓத்து, படலவிலக்கணங்கள், உரை இலக் கணம். குற்றம், அழகு, தந்திரவுத்திகள், நுவல்வோன் தன்மை, கற்பிக்கப் படாதோர் குணம், நூல் நுவலும் இயல்பு, கொள்வோர் இயல்பு, கோடல் மரபு, சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் போன்ற செய்திகள் பாயிரப் பகுதியில் கூறப்பட்டுள்ளன. நன்னூல் பாயிரப் பகுதியை விட விரிவுடையதாகவே இப் பகுதி அமைந்துள்ளது. நூல் தன்மை கூறும் பொழுது 'மகாபிண்டம்' என்ற அமைப்பை மாறனலங்காரம் சுட்டுகிறது. அகத்தியம் போல இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிண்டங்களையும் உள்ளடக்கிய நூல் 'மகாபிண்டம்' எனப் பெயர்பெறும் என்று கூறுகிறது.

தண்டியலங்காரத்துட் கூறப்பட்ட பொருளணிகளின் தொகை 35. மாறனலங்காரத்துட் கூறப்பட்டவை 64. சொல்லிலக்கணத்திலும் பொருளியலிலும் புறத் திணையியலிலும்கூறப்பட்டு ஏனைய அணிநூல்களுள்

கூறப்படாமலிருந்த பூட்டுவில், இறைச்சி, பொருள் கோள், பொருண்மொழி என்னும் அணிகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. தண்டியலங்காரத்தில் ஒரே நூற் பாவில் பன்னிரண்டு சித்திர கவிகளுக்குரிய பெயர்கள் மட்டுமே சொல்லப்பட்டுள்ளன. ஆனால், மாறனலங் காரத்தில் முப்பத்திரண்டு சித்திர கவிகள் கூறப்பட்டு அவற்றிற்கு இலக்கணமும் கூறப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு உரையெழுதியவர் தென்திருப் பேரைக் காரிரத்தினக் கவிராயர். அவர் இந்நூலா சிரியரிடம் கல்வி பயின்றவர். 'காரிரத்நம்' என்பது ஆழ்வார் திருப்பெயர். அதனையே பெயராகக் கொண்ட இவரும் ஒரு வைணவர். இந்நூலுக்குப் பாயிரமும் இவரே செய்துள்ளார். உரை சிறந்ததாகக் காணப்படுகின்றது. இதில் 844 மேற்கோள் பாடல் கள் காட்டப்பட்டுள்ளன. மேற்கோள் பாடல்கள் பலவற்றிற்குத் திணை, துறை கூறப்பட்டுள்ளன. சிலவற்றிற்குப் பொழிப்புரையும் சிலவற்றிற்குக் குறிப் புரையும் தரப் பட்டுள்ளன. ஒவ்வொரு இயலின் முடிவிலும் 'காரிரத்தினக் கவிராயர் உரையெழுதி னார்' என்று குறிப்பிடும் செய்யுளொன்றும் காணப் படுகின்றது. சா.கி.

மாறனேர் நம்பி: ஆளவந்தாரால் ஆட்கொள் ளப்பட்ட பெரியோர்கள் பலர். அவர்களுள் தலை சிறந்தவர் மாறனேர் நம்பி. இவர் வேளாளர் குலத் தில் பிறந்தவர் என்றும், திருக்குலத்துப் பிறந்தவர் என்றும் கூறுகின்றனர்.

ஒருமுறை ஆளவந்தார் பராந்தகம் என்ற ஊருக் குச் சென்றார். அங்கு வயலில் பணி செய்து கொண் டிருந்த ஓர் உழவரைக் கண்டார். அவ்வுழவர் வயலி லுள்ள சேற்றினைக் கையால் எடுத்துப் பெருமாளுக் குப் படைத்து அதனை உட்கொண்டார். அக் காட்சி யைக் கண்ட ஆளவந்தார் வியந்து 'தாங்கள் உணவையுண்ணாமல் மண்ணையுண்டால் உடல்நலக் கேடு உண்டாகாதோ' என்றார். அதற்கு அவ்வுழவர் 'மண்ணால் உருவான உடம்பிற்கும் மண்ணிற்கும் வேறுபாடு இருப்பதாக அடியேன் கருதவில்லை' என்று கூறினார். அம் மொழியில் உழவரின் ஞானத்தையும், பக்தியையும், மனஉறுதியையும் கண்டு வியந்து 'தாங் கள் திருக்குருகூரில் தோன்றிய மாறனோ' என்று கொண்டாடினார். அன்றுமுதல் உழவரின் இயற் பெயர் மறைந்து மாறனேர் நம்பி என்ற சிறப்புப் பெயரே வழங்கலாயிற்று. மாறனேர் நம்பியை நோக்கி ஆளவந்தார் 'என்னுடன் திருவரங்கத்துக்கு வந்தால் தங்கட்கு மெய்ப்பொருளை உணர்த்து வேன்' என்றார். உடனே நம்பி, உற்றார் உறவின ரையும், ஊராரையும் மறந்து ஆளவந்தாரைப் பின் பற்றிச் சென்றார். ஆளவந்தார், நம்பிக்கு ஞானத்தை அறிவுறுத்தினார்.

மாறனேர் நம்பி வந்து சில மாதங்களில், ஆள வந்தார் ஒரு புதிய வீடு கட்டி அதில் குடிபுக ஒரு நல்ல நாளை முடிவு செய்தார். ஆளவந்தார் எண் ணத்தை அறிந்த நம்பி 'நாம் தாழ்ந்த குலத்தில் பிறந்திருப்பதால் ஆளவந்தார் குடிபுகுந்த பின்னர், அத் திருமாளிகையைக் காணமுடியாது; ஆகையால் அவர் குடிபுகுவதற்கு முன் அவ்வில்லத்தைக் காண வேண்டும்' என்று எண்ணி ஆளவந்தாரின் இல்லத்தி னுள் சென்று கண்டு மகிழ்ந்தார். அதனையறிந்த சில வைணவ அந்தணர்கள் ஆளவந்தாரிடம் சென்று நம்பியின் அடாத செயலினைக் கூறினார்கள். அது கேட்ட ஆளவந்தார் 'நம்பியின் திருவடி நம் குடிலில் எப்போது பட்டதோ அப்போதே அது புனிதம் பெற்றுவிட்டது. அவர் இல்லத்தில் புகுந்த அந்த நேரமே நல்ல நேரம் ஆகும். ஆகையால் இன்றே அவ்வில்லத்திற்குச் செல்வோம்' என்று கூறினார். அன்றே குடிபுகுந்தார் என்பது செவிவழிச் செய்தி.

ஆளவந்தார் புதிய வீட்டில் குடிபுகுந்த சில மாதங்களில் அவருக்கு முதுகிலே பெரும்புண் உண் டாயிற்று. அதனை இராசபிளவை என்று கூறுகிறார் கள். அப்புண்ணைக் கண்டு மனம் பொறாத நம்பி, திருவரங்கப் பெருமானிடம், 'ஆளவந்தாரின் புண் நீங்க வேண்டும்; அப்புண்ணை அடியேனுக்கு வழங் கினால் ஏற்றுக் கொள்கிறேன்' என்று வேண்டிக் கொண்டார். அவ்வேண்டுகோளால் ஆளவந்தாரின் புண் குணமாயிற்று. வினைப்பயனால் மீண்டும் அந் நோய்வாய்ப்பட்டார்.

பல நாள்களுக்குப் பிறகு அச்செய்தியையுணர்ந்த ஆளவந்தார் வியந்து நம்பியின் அன்பிலே கட்டுண் டார். அந்நிலையில் ஆளவந்தாரின் இறுதிக் காலம் நெருங்கியது. அப்போது ஆளவந்தார் நம்பியை நோக்கி, 'என்னுடைய இராசபிளவையைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதனால் நான் மறுபடி யும் மண்ணில் பிறந்து அத்துன்பத்தை அனுபவிக்க நேராது' என்று கூறினார், உடனே நம்பி அப் புண்ணை ஏற்றுக்கொள்ள இசைந்தார். அப்போதே மாறனேர் நம்பியின் மேனியில் அப்புண் சென்று பற் றிக்கொண்டது. மாறனேர் நம்பி அப்புண்ணை ஆச்சாரியர் கொடுத்த அரும் கொடையாகவே எண் ணினார்.

ஆளவந்தார் தம்முடைய திருமேனியை விட்டுப் பரமபதம் போகும்போது, தம் அணுக்கச் சீடரான பெரிய நம்பியை அழைத்து, 'நான் நம்பிக்கு வழங் கிய புண் மிகவும் கடுமையானது; பொறுத்தற்கு அரியது; ஆகையால், தாங்களே அப் புண்ணைக் கழுவி

மருந்திட்டு அவருக்கு உணவூட்ட வேண்டும்' என்று கூறிக் காலமானார். ஆளவந்தார் மறைவுக்குப் பின், காவிரிக் கரையில் தங்கியிருந்த நம்பிக்குப் பெரிய நம்பி பணிவிடை செய்துவந்தார்.

அக் காலத்தில் இராமானுசர் பெரிய நம்பியின் சீடராயிருந்து உபதேசம் பெற்றுக் கொண்டிருந்தார். ஒரு நாள் பெரிய நம்பிகள் மாறனேர் நம்பிக்குத் திருஉணவு கொண்டு செல்கையில், உடையவர் அவரறியாமல் தொடர்ந்து சென்று மறைந்திருந்து நம்பியின் புண்ணினைக் கண்டு, பெருமானை எண்ணித் துதிக்க அப்புண் மறைந்தது. மாறனேர் நம்பி ஆசாரியர் வழங்கிய அருட்கொடை மறைந்ததே என்று எண்ணிக் கல்லெடுத்துத் தம் தலையை மோதச் செல்கையில் அவரது ஆசாரிய பக்தியைக் கண்டு வியந்து புண்ணை அவருக்கே தந்து உடையவர் மீண்டார்.

நம்பிக்குப் பெரிய நம்பி செய்து வந்த பணிவிடைகளை நேரேயறிந்த இராமானுசர் மனத்தில் திருமாலடியார்க்குள் சாதிவேறுபாடு காணக்கூடாது என்ற பேருணர்வு உண்டாயிற்று. மாறனேர் நம்பிக்குப் பரமபதம் செல்லும் நாள் நெருங்கியது. அப்போது அப்பெரியார் பெரிய நம்பியை நோக்கித் தம் உடலைக் காட்டி 'இதனை என் உற்றார் உறவினரிடம் ஒப்படைக்காமல் தாங்களே உரிய கடனைச் செய்யவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். பெரிய நம்பியும் மாறனேர்நம்பிக்கு இறுதிக் கடனைச் செய்து நீராடாமல் அப்படியே இல்லம் சென்று பெருமாளுக்குப் படைத்து வழிபாடு செய்தார். இதனால் வைணவ அந்தணர்கள் பெரிய நம்பியை வெறுத்தனர். ஆனால், பெரிய நம்பியிடம் அவர் செயலை மறுத்துக் கூறத் துணிவற்றிருந்தனர். அதனைப் பெரிய நம்பியின் திருச்செவியில் இராமானுசர் சென்று எடுத்தியம்பினார். பெரிய நம்பி புன்னகை செய்து 'இராமானுசரே! நீர் மாறனேர் நம்பியை யாராக நினைத்திருந்தீர்; அவர் ஆளவந்தாருடைய திருவருள் பெற்றவர் அல்லவா! அவருக்குத் தொண்டு செய்யும் பேறு எனக்கன்றோ கிடைத்தது. அதனால் நான் பேறு பெற்றவனானேன். நான் சந்தியா வந்தனம் செய்வதற்கு எனக்குப் பதிலாகப் பிறரை நான் நியமித்தாலும் நியமிப்பேன். ஆனால் மாறனேர் நம்பிக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்கைப் பிறர்பால் ஒப்புவிக்க மாட்டேன்' என்று கூறினார்.

அப்போது இராமானுசரிடம், 'தாழ்ந்த குலத்தில் தோன்றிய விதுரருக்குத் தருமர் இறுதிச் சடங்கு செய்யவில்லையா; நான் தரும புத்திரனை விட உயர்ந்தவனா; மாறனேர் நம்பி விதுரரை விடத் தாழ்ந்தவரா; நம்மாழ்வார் 'பயிலும் சுடரொளி' என்ற பதிகத்திலும், 'நெடுமாற்கடிமை' என்ற பதிகத்திலும் திருமால் அடியவர்களைச் சாதிவேறுபாடு கருதித் தாழ்வாக நினைக்கக் கூடாது என்று கூறினாரே, அதை நாம் மதிக்க வேண்டாமா? ஆழ்வார் மொழியினை நாம் 'கடலோசை' என்று கருதுவதோ' என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார். அதனால் மனம் தெளிந்த இராமானுசர் மற்ற வைணவ அந்தணர்பால் அதைக் கூறி அவருடைய மதிமயக்கத்தைப் போக்கினார்.

வார்த்தாமாலை என்ற வைணவப் பிரபந்தத்தில் 'பெரிய நம்பி பிராமண வைணவர்களுடைய பகையையும் பொருட்படுத்தாமல் மாறனேர் நம்பிக்கு இறுதிச்சடங்கு செய்தருளினார்' என்ற குறிப்புக் காணப்படுகிறது. அவ்வரலாற்றால் 'வைணவன் சாதிவேறுபாடு கருதினால் அவன் வைணவன் ஆகான்' என்னும் உண்மை புலனாகிறது.

எஸ்.கே. ரா.

**மாறிகள்:** ஆராய்ச்சித் துறையில் பல்வேறு கருத்துகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று மாறி (Variable) என்பதாகும். பொதுவாக மாறுபடக்கூடிய கூறுகள் யாவற்றையும் மாறிகள் என்று சொல்லலாம். ஆயினும் பாலின் யங்கு (Paulin Young) என்பவர் பல்வேறு எண்ணிக்கை அளவிலான மதிப்புகளையோ பல்வேறு வகையினங்களையோ கொண்டு அமைகிற ஒரு தொகையளவு அல்லது இயல்பு, மாறி ஆகும் என்கிறார்.

சில தொகையளவுகளை அல்லது இயல்புகளை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் அளந்து, அவற்றிற்கு எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொடுக்க முடியும். அப்படி அவை எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைப் பெறும்போது மதிப்புகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை, மாறுபட்டு அமையும். அப்படி மாறுபடுகிற எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொண்ட கூறுகளே, (அதாவது தொகையளவுகளோ இயல்புகளோ) மாறிகள் ஆகின்றன. எடுத்துக்காட்டாக, வயது எல்லா மனிதர்களிடத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை; வேறுபட்டு அமையும். அந்த வேறுபாட்டை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் மதிப்பிட இயலும். அதாவது, வயது வேறுபாட்டை 0,1,2,3,4 என்று ஆண்டுக் கணக்கில் (அல்லது ஆண்டுகள் மாதங்கள் என்ற கணக்கில் அல்லது ஆண்டுகள், மாதங்கள், நாள்கள் என்ற கணக்கில்) மதிப்பீட்டு எண்ணிக்கையளவில் குறித்துக் காட்ட இயலும். வயதைப்போலவே காலம், உயரம், எடை, ஊதியம், மதிப்பெண் முதலியனவும் மாறுபட்டு அமையும்.

அவற்றின் மாறுபாட்டையும் எண்ணிக்கை அளவினால் மதிப்பிட்டுக் குறித்துக்காட்ட முடியும்.

இவ்வாறு சில மாறிகள் எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொண்டு அமையும். அவற்றை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் அளந்து குறிப்பிட முடியும். ஆனால், சில மாறிகளை எண்ணிக்கை அளவில் அளக்க இயலாது. உயரத்தை அளக்க முடிவதைப் போல, ஒருவனுடைய உடல் நிறத்தை அளக்க இயலாது மனிதர்களிடையே உடல் நிறம் மாறுபட்டு அமையும். ஆயினும் அந்த உடல் நிறத்தை, நிறமாறுபாட்டை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் குறிப்பிட இயலாது. எடையைக் கிலோ கணக்கிலும், உயரத்தை செண்டி மீட்டர் கணக்கிலும் அளந்து குறிக்க முடிவதைப்போல, உடல் நிறத்தை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் இவ்வளவு என்று அளந்து குறிப்பிட இயலாது. இவ்வாறே விளைச்சலை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் (மூட்டைக் கணக்கில்) குறிக்க முடிவதைப் போல, மண்ணின் தன்மையை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் குறிக்க இயலாது. பாலினம், தொலைக் காட்சிப்பெட்டி வைத்திருப்பது, அரசியல் கட்சிப் பற்று, ஒரு சிக்கலில் (எ.டு. ஆண் – பெண் சேர்ந்து படிப்பது பற்றி) ஒரு கருத்துக் கொண்டிருப்பது போன்ற கூறுகளை இந்த அளவு என்று எண்ணிக்கை அளவிலான அலகுகளால் குறிப்பிட இயலாது. ஆயினும், அத்தகைய கூறுகள் பல்வேறு வகையினங்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வகையினத்தின் நிகழ்வலையை அல்லது விகிதாச்சாரத்தை வேண்டுமானால் அறியலாம். எ.டு. உடல் நிறத்தின் மாறுபாட்டின் அடிப்படையில் பல்வேறு வகையினங்கள் அமையக் கூடும். அந்த வகையினங்களின் ஒவ்வொன்றிலும் எவ்வளவு எண் (Number), அதாவது எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட இயலும். பாலினம் ஆண், பெண் என்ற இரண்டு வகையினங்களில் அமையும். ஒவ்வொரு வகையினத்திலும் எத்தனை பேர் அதாவது ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனைபேர் என்று கணக்கிடலாமே தவிர, பாலினத்தை அளவிட முடியாது. இவ்வாறே ஒரு சிக்கலின்மீது ஒரு குறிப்பிட்ட கருத்தில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், எவ்வளவு பேர் இல்லை என்பதை அறிந்து கொள்ளலாம். அரசியல் கட்சிப் பற்றின் அடிப்படையில் எவ்வளவு பேர் 'அ' கட்சியையும், எவ்வளவு பேர் 'ஆ' கட்சியையும் எவ்வளவு பேர் 'ஈ' கட்சியையும் ஆதரிக்கின்றனர் என்று கட்சி முறையிலான நிகழ்வலையை எண்ண முடியும்.

இவ்வாறு மாறிகள் பல்வேறு எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொண்டு அல்லது பல்வேறு வகையினங்களைக் கொண்டு அமையும். பல்வேறு எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொண்டு அமையும் மாறிகள் இரண்டு வகைப்படும். ஒன்று, ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாகப் பின்னங்களில் (Fractions) இடைவெளி இல்லாமல் அமைகிற – அமையக் கூடிய மாறிகள். இரண்டு, முழு எண்களில் அமைகிற மாறிகள். இவற்றில் ஓர் எண்ணுக்கும், மற்றோர் எண்ணுக்கும் இடைவெளி இருக்கும். பின்னங்களில் அமையக்கூடிய மாறிகள் தொடர் வினைப்புள்ள மாறிகள் (Continuous Variables) என்றும், பின்னங்கள் இல்லாமல் முழு எண்களில் அமைகிற மாறிகள் தொடர்பற்ற மாறிகள் (Discrete Variables) என்றும் குறிப்பிடப்படும். உயரம், உடை, மழை அளவு, நிலப்பரப்பு முதலியன தொடர் மாறிகள் ஆகும். ஏனெனில் இவற்றின் எண்ணிக்கையளவு பின்னங்களில் வரக்கூடும். ஆனால், ஒரு குடும்பத்து உறுப்பினர் எண்ணிக்கை, நூல்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை, தேர்வு மதிப்பெண் முதலியவை தொடர்பற்ற மாறிகள் ஆகும். ஏனெனில் இவற்றின் எண்ணிக்கையளவு பின்னங்களில் வருவதில்லை. முழு எண்களில் மட்டுமே வரும்.

ஒரு மாறியின் நிகழ்வு அல்லது மாற்றம் (அதாவது அதன் ஏற்ற, இறக்கம்) ஆகியன இன்னொரு மாறியின் நிகழ்வு அல்லது மாற்றத்தைச் சார்ந்து அமைந்தால், அது சார்பு நிலை மாறி (Dependent Variable) எனப்படும். அதன் நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்குக் காரணமாக அல்லது பொறுப்பாக இருக்கிற மாறி சார்புநிலையற்ற மாறி (Independent Variable) எனப்படும். அந்த வகையில் சார்புநிலை மாறியின் நிகழ்வு அல்லது மாற்றம் சார்புநிலையற்ற மாறியின் நிகழ்வின் அல்லது மாற்றத்தின் உரு வகையில் விளக்கப்படுகிறது. ஆகவே சார்பு நிலை மாறி விளக்கப்படு மாறி (Explained Variable) என்றும், சார்புநிலையற்ற மாறி விளங்க வைக்கும் மாறி (Explanatory Variable) என்றும் குறிப்பிடப்படுகின்றன. எ-டு. வயது ஏற ஏற உயரமும் (ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்கு) அதிகரிக்கும். அதாவது வயதில் நிகழும் மாற்றம் உயரத்தில் மாற்றத்தை உண்டாக்குகிறது. இவ்வாறு உயரத்தின் மாற்றம் வயதின் மாற்றத்தைச் சார்ந்து அமைகிறது. உயரம் சார்புநிலை மாறியாகவும், வயது சார்புநிலையற்ற மாறியாகவும் இயங்குகின்றன. உயரம் வயதை மட்டுமன்றி, பாலினத்தையும் சார்ந்து அமைகிறது. ஆகவே, அந்த நிலையில் உயரம் வயதையும், பாலினத்தையும் சார்ந்து, அமைகிறது. ஆகவே, அந்த நிலையில் உயரம் வயதையும், பாலினத்தையும் சார்ந்து, சார்பு நிலை மாறியாக விளங்குகிறது. வயதும், பாலினமும் உயரத்திற்குச் சார்புநிலையற்ற மாறியாக அமைந்து, அதில் ஏற்படும் மாற்றங்களை விளக்கக்கூடிய பொறுப்பான காரணிகளாகச் செயற்படுகின்றன.

ஆக, ஒரு கூறு சார்புநிலைக் கூறு எனும்போது ஒரு குறிப்பிட்ட கூறினை அல்லது கூறுகளைப் பொறுத்த அளவிலேதான் அந்த நிலையை எய்தும். அவ்வாறே ஒரு கூறு, சார்பு நிலையற்ற கூறு என்பதும் மற்றொரு கூறினை அல்லது கூறுகளைப் பொறுத்த அளவிலேதான் அந்த நிலையை எய்தும். எ-டு. விளைச்சல் ஒரு சார்பு நிலை மாறி என்கிற போது, அது மண்ணின் தன்மை, நீர்ப்பாசன அளவு, உர அளவு முதலிய கூறுகளைப் பொறுத்த அளவிலே தான் சார்புநிலை மாறியாக அமையும். அவ்வாறே மண்ணின் தன்மை, நீர்ப்பாசன அளவு, உர அளவு முதலியன சார்புநிலையற்ற மாறிகள் என்கிறபோது, அவை விளைச்சலைப் பொறுத்த அளவிலேதான் சார்பு நிலையற்ற மாறிகள் எனப்படும். ஆக, சார்புநிலை மாறி, சார்பு நிலையற்ற மாறி என்பன ஓர் உறவு நிலையைப் பொறுத்தே அமையும். எந்த இரண்டு கூறுகளுக்கிடையே காரண-காரிய உறவு அல்லது இணைவு நிலை இருக்கிறதோ, அந்த நிலையில்தான் அவை ஒன்று இன்னொன்றுக்குச் சார்பு நிலை மாறியாகவும், இன்னொன்று மற்றதற்குச் சார்பு நிலையற்ற மாறியாகவும் அமையும். அதாவது ஒரு மாறி இன்னொரு மாறியைப் பொறுத்த அளவிலேதான் சார்பு நிலை மாறி அல்லது சார்பு நிலையற்ற மாறி என்று அமையும்.

இந்த உறவு நிலை, அதாவது சார்புநிலை மாறி சார்பு நிலையற்ற மாறி என்ற உறவு நிலை, இரண்டு நிலைமைகளில் ஏற்படும். ஒன்று, ஒரு கூறு மேல் நோக்கி அல்லது கீழ்நோக்கி மாறும்போது, அதைத் தொடர்ந்து இன்னொரு கூறும் முறையே மேல் நோக்கி அல்லது கீழ்நோக்கி மாறுங்கால், முன்னது பின்னதற்குப் பொறுப்பானதாகக் கருதப்படுகிறது. முன்னது சார்பு நிலையற்ற மாறியாகவும், பின்னது சார்புநிலை மாறியாகவும் இணைகின்றன. எ-டு. விசை வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, பேரிடர்களும் அதிகரிக்கின்றன. விசை வண்டிகளின் எண்ணிக்கை குறையும்போது பேரிடர்களும் குறைகின்றன. இப்படி விசை வண்டிகளின் எண்ணிக்கைக் கேற்பப் பேரிடர்களின் எண்ணிக்கை நேரிடையாக அமையும்போது, விசை வண்டிகள் சார்பு நிலையற்ற மாறியாகவும், பேரிடர்கள் சார்பு நிலை மாறியாகவும் அமைகின்றன. இங்குப் பேரிடர்களைப் பொறுத்த அளவிலேதான் விசை வண்டிகள் சார்பு நிலையற்ற மாறியாகக் கருதப்படுகின்றன. அவ்வாறே விசை வண்டிகளைப் பொறுத்த அளவிலேதான் பேரிடர்கள் சார்பு நிலை மாறியாகக் கருதப்படுகின்றன.

இரண்டாவது, ஒரு கூறு மேல் நோக்கி மாறும் போது, அதை ஒட்டி இன்னொரு கூறு கீழ்நோக்கி மாறினால் அல்லது ஒரு கூறு கீழ்நோக்கி மாறும் போது, அதை ஒட்டி இன்னொரு கூறு மேல்நோக்கி மாறினால், அந்தக் கூறுகள் சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலை எய்தும். எ-டு. பெண்களின் கல்வி நிலை உயரும்போது கருவள நிலை (Fertility) குறைகிறது. பெண்களின் கல்வி நிலை குறையும்போது, கருவள நிலை உயருகிறது. இவ்வாறு பெண்களின் கல்விநிலைக்கு எதிர்மாறாகக் கருவள நிலை மாறினாலும், அந்த மாற்றம் முன்னதைச் சார்ந்து ஒட்டியே அமைகிறது. ஆகவே, அந்த நிலையில் பெண்களின் கல்வி நிலை சார்புநிலையற்ற மாறியாகவும், கருவள நிலை சார்புநிலை மாறியாகவும் அமைகின்றன.

இவ்வாறு ஒரு கூறுக்கும், இன்னொரு கூறுக்கும் சார்புநிலையற்ற மாறி சார்புநிலை மாறி என்ற உறவு நிலை இரண்டு வகைகளில் அமைகிறது. ஒன்று நேரிடையான (Direct) உறவுநிலை. இன்னொன்று நேர் எதிரான (Inverse) உறவு நிலை. முன்னதில் ஒரே திசையில் இரண்டு கூறுகளும் மாறுகின்றன. சார்புநிலையற்ற மாறி மாறும் திசையிலேயே சார்பு நிலை மாறியும் மாறுகிறது. பின்னதில் எதிர் எதிர்த் திசைகளில் இரண்டு கூறுகளும் மாறுகின்றன. சார்பு நிலையற்ற மாறி ஒரு திசையில் மாறும் போது சார்பு நிலை மாறி அதன் எதிர்த்திசையில் மாறுகிறது.

ஒரு கூறு ஒரு திசையில் மாறும்போது, அதே திசையில் வேறொரு கூறும் மாறுவது இயற்கை. அவ்வாறே ஒரு கூறு ஒரு திசையில் மாறும்போது, வேறொரு கூறு நேர் எதிர்த்திசையில் மாறுவதும் இயற்கை. அவ்விரண்டும் ஒரு சார்பு உறவு நிலையில் தான் மாறுகின்றன என்று சொல்ல முடியாது. அதாவது ஒன்றின் மாற்றத்தின் காரணமாகத்தான் இன்னொன்று மாறுகிறது என்று கூற இயலாது. இரண்டும் தனித்தனியாகச் சுதந்திரமாக இயங்கி மாறலாம். இரண்டுக்கும் தொடர்பு, இணையுறவு இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவ்வாறே ஒரு கூறு ஒரு திசையிலும், மற்றொரு கூறு அதன் நேர் எதிர்த்திசையிலும் மாறும்போது இரண்டுக்கும் இணையுறவு, தொடர்பு இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. இரண்டும் சுதந்திரமாக இயங்கலாம்.

இத்தகைய மாற்ற நிலைமையில் இரண்டு கூறுகள் சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலையை எய்தச் சில நிலைமைகள் நிலவ வேண்டும். அத்தகைய நிலைமைகளில்தான் ஒன்று சார்பு நிலையற்ற மாறியாகவும், இன்னொன்று சார்பு நிலை மாறியாகவும் விளங்க முடியும். சே.எசு.மில்(J.S. Mill)என்னும் அறிஞர், இரண்டு நிலைமைகளில் இரு கூறுகளுக்கிடையே சார்புநிலையற்ற

மாறி சார்பு நிலை யாறி என்ற உறவு நிலை அமையும் என்கிறார். ஒன்று உடன்பாட்டு (Agreement) நிலைமை; இன்னொன்று வேறுபாட்டு (Difference) நிலைமை.

ஒரு கூறு எங்கெங்கு, எவ்வப்பொழுது நிகழ்கிறதோ, அங்கங்கு, அவ்வப்பொழுது இன்னொரு கூறும் நிகழும் பொழுது இரண்டுக்கும் சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலை அமையக்கூடும்.

(எ-டு)

| |
|---|
| கசத ⟶ அ |
| பமத ⟶ அ |
| நவத ⟶ அ |

மேற் குறித்த மூன்று நிகழ்வினங்களிலும் 'த' தொடர்ந்து வருகிறது. 'த' வருகிற இம்மூன்று நிகழ்வினங்களிலும் 'அ' பின்தொடர்ந்து வருகிறது. ஆகவே 'அ' ஏற்பட 'த' இருந்தாலே போதுமானது என்று தெரிகிறது. அவ்வாறு ஒரு கூறு ஏற்பட இன்னொரு கூறு இருந்தாலே போதுமானது என்ற நிலை அமையும்போது, பின்னது சார்புநிலையற்ற மாறியாகவும், முன்னது சார்பு நிலை மாறியாகவும் அமையும். அவ்வாறு கூறு நிகழ அல்லது மாற இன்னொரு கூறின் நிகழ்வு அல்லது மாற்றம் இருந்தாலே போதும் என்ற நிலைமை இருக்கும் கட்டத்தில், இரண்டும் சார்புநிலை மாறி, சார்பு நிலையற்ற மாறி என்ற உறவு நிலையை எய்தும். அத்தகைய நிலைமை உடன்பாட்டு நிலைமை எனப்படும்.

மேலும், ஒரு கூறு நிகழும் இடங்களில், பொழுதுகளில் எல்லாம் இன்னொரு கூறு நிகழ்வதும், முன்னது நிகழாத இடங்களில் பொழுதுகளில் பின்னது நிகழாமல் போவதுமான நிலைமை இருக்கக்கூடிய கட்டத்திலும் இரண்டுக்கும் சார்புநிலையற்ற மாறி, சார்புநிலை மாறி என்ற உறவு நிலை அமையக் கூடும்.

(எ-டு)

| |
|---|
| கசத ⟶ அ |
| கச — |
| பமத ⟶ அ |

மேற்குறித்த மூன்று நிகழ்வினங்களில் இரண்டில் மட்டும் 'த' வருகிறது; ஒன்றில் வரவில்லை. 'த' எங்கு வருகிறதோ, அந்த நிகழ்வினங்களில் மட்டுமே 'அ' பின்தொடர்ந்து வருகிறது.'த'வாராத நிகழ்வினத்தில் 'அ' நிகழவில்லை. ஆகவே 'அ' ஏற்பட;'த' இருப்பது அவசியம் என்று தெரிகிறது. அவ்வாறு ஒரு கூறு ஏற்பட இன்னொரு கூறு இருப்பது அவசியம் என்றநிலை அமையும்போது, பின்னது சார்பு நிலையற்ற மாறியாகவும், முன்னது சார்புநிலை மாறியாகவும் அமையும். அவ்வாறு ஒரு கூறு நிகழ அல்லது மாற, இன்னொரு கூறின் நிகழ்வு அல்லது மாற்றம் இருத்தல் அவசியம் என்ற நிலைமை இருக்கும் கட்டத்தில் இரண்டும் சார்புநிலை மாறி, சார்புநிலையற்ற மாறி என்னும் உறவு நிலையை எய்தும். அத்தகைய நிலைமையே வேறுபாட்டு நிலைமை எனப்படும்.

ஆக, ஒரு மாறி இன்னொரு மாறியின் நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்குப் போதுமான அல்லது அவசியமான காரணியாக அமைகிற போது அது பிந்தைய மாறிக்குச் சார்புநிலையற்ற மாறி என்ற உறவு நிலையிலும், பிந்தைய மாறி முந்தைய மாறிக்குச் சார்புநிலை மாறி என்ற உறவு நிலையிலும் அமையும். எனினும், ஒரு சார்புநிலையற்ற மாறி இன்னொரு மாறிக்குப் போதுயான அல்லது அவசியமான காரணி என்ற உறவு நிலையில் அமைந்திட வேண்டுமானால் சில நிலைமைகள் நிலவ வேண்டும். முதலாவதாக, தொடர்புடைய சார்புநிலையற்ற மாறி கால ஒழுங்கில் சார்பு நிலை மாறிக்கு முந்தி அமைந்திருக்க வேண்டும். அதாவது, சார்பு நிலை மாறிக்கு முன்னாலேயே சார்புநிலையற்ற மாறி நிகழ்வுக்கு வந்திருக்க வேண்டும். ஏனெனில் சார்பு நிலையற்ற மாறி சார்புநிலை மாறியின் நிகழ்வுக்குக் காரணியாக அமைவதில் அது சார்புநிலை மாறிக்குப் பின்னால் நிகழக் கூடாது. அப்படி அது சார்பு நிலை மாறிக்குப் பின்னால் ஏற்பட்டால் அதைச் சார்புநிலை மாறியின் காரணியாய்க் கருத முடியாது. இரண்டுக்கும் சார்புநிலையற்ற மாறி, சார்புநிலை மாறி என்ற உறவும் அமைய முடியாது.

இரண்டாவதாக, சார்பு நிலையற்ற மாறிக்கும் சார்பு நிலை மாறிக்கும் இடையில் வேறெந்தக் கூறும் மாறியும் நிற்கக் கூடாது. ஏனெனில் அத்தகைய நிலையில் இடையில் குறுக்கிடும் மாறியா, முன்னதாக நிகழும் சார்பு நிலையற்ற மாறியா எது சார்பு நிலை மாறியின் நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்குக் காரணம் என்பதை உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல முடியாது. எ-டு. தொடக்க நிலையில் அமைந்திருக்கிற கல்வியே உயர்மட்டத்தில் (அதாவது கல்லூரி, பல்கலைக்கழக மட்டத்தில்) ஒருவனுடைய கல்வியறிவு மேம்பாட்டிற்குக் காரணமாய் அமைகிறது என்று சொன்னால், பின்னதற்கு முன்னது சார்புநிலையற்ற மாறி எனவும், முன்னதற்குப் பின்னது சார்புநிலை மாறி எனவும் பொருள்படும். ஆனால், இந்த இரண்டு மாறிகளும் இடையே, வேறொரு மாறி குறுக்கிட்டால் முன்னதற்கும், பின்னதற்கும் சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலை இருப்பதாக உறுதியாகச் சொல்ல முடியாது. அதாவது நடுநிலை மட்டத்தில் கல்வி உயர்

தரத்தில் அமையும் போது தொடக்க நிலைக் கல்வியின் செய்வாக்கு அடிபட்டுப் போய்விடுகிறது. ஆகவே அத்தகைய சூழ்நிலைகளில் சார்பு நிலையற்ற மாறிக்கும் சார்புநிலை மாறிக்கும் நடுவில் வேறு எந்த மாறியும் குறுக்கிடாமல் இருந்தால் தான் சார்பு நிலையற்ற மாறிக்கும் சார்புநிலை மாறிக்கும் காரண – காரிய உறவை முடிச்சுப் போட இயலும்.

அவ்வாறே சார்புநிலையற்ற மாறிக்கு முன்னாலும் எந்தவொரு மாறியும், அமைந்திடாமல் இருக்க வேண்டும். ஏனெனில், அத்தகைய மாறி சார்பு நிலையற்ற மாறியுடனும், சார்பு நிலை மாறியுடனும் உறவு கொள்ளும் போது, சார்பு நிலையற்ற மாறிக்கும் சார்பு நிலைமாறிக்கும் இடையிலான உறவைக் குழப்பிவிடும். சார்பு நிலை மாறியின் நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்கு அதுகாரணமா அல்லது சார்பு நிலையற்ற மாறி காரணமா என்று புரியாமல் போகும். மேலும், சார்பு நிலையற்ற மாறி சார்பு நிலை மாறியுடன் உறவு கொள்ளுவதால், சார்பு நிலையற்ற மாறி சார்பு நிலை மாறியுடன் கொள்ளும் உறவுக்கு அதுதான் மூலகாரணம் என்று எண்ணத் தோன்றும். அதாவது, சார்பு நிலையற்ற மாறியின் வழியாக அது சார்பு நிலை மாறியுடன் தொடர்புகொண்டு அதன், நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்கு வழி கோலுகிறது என்று எண்ணத் தோன்றும். எனவே சார்பு நிலையற்ற மாறிக்கு முன்னால் யாதொரு மாறியும் நிகழாமலும், அப்படி நிகழும் மாறி சார்பு நிலையற்ற மாறியுடனும், சார்பு நிலை மாறியுடனும் சேர்ந்தாற்போல உறவு கொள்ளாமலும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

எடுத்துக்காட்டாகப் பொருளாதாரத் தகுநிலைக்கும், பிறப்பு விகிதத்திற்கும் சார்புநிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற நிலல கற்பிக்கப்படுகிறது. இத்தகைய உறவுநிலையில் பொருளாதாரத் தகுநிலையின் மாற்றம் பிறப்பு விகிதத்தைப் பாதிக்கும். அதாவது பொருளாதாரத் தகுநிலை உயரும் போது, பிறப்பு விகிதம் குறையும். அவ்வாறு பொருளாதாரத் தகுநிலை குறையும்போது, பிறப்பு விகிதம் உயரும். இப்படிப்பட்ட எதிர் மாறான உறவு நிலை பொருளாதாரத் தகுநிலைக்கும், பிறப்பு விகிதத்துக்கும் இடையே அமைந்துள்ளது என்று சொல்ல முனையும்போது, பொருளாதாரத் தகுநிலைக்கும் முன்னால் எந்த ஒரு மாறியும் நிகழாமலும், அப்படி நிகழும் மாறி இரண்டு கூறுகளோடும் உறவு கொள்ளாமலும் இருக்கும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். கல்வி பொருளாதாரத் தகுநிலைக்கு முன்னால் அமைந்து பொருளாதாரத் தகுநிலையுடனும், அது தொடர்பு கொண்டுள்ள பிறப்பு விகிதத்துடனும் உறவு கொள்ளுகிறது. அதன் காரணமாகப் பொருளாதாரத் தகுநிலைக்கும், பிறப்பு விகிதத்திற்கும் இடையே அமைகிற சார்பு நிலையற்ற மாறி,சார்பு நிலை மாறி என்ற உறவு நிலை குழம்புகிறது. இத்தகைய நிலைமை இல்லாமல் இருக்கும் போதுதான் பொருளாதாரத் தகுநிலையும், பிறப்பு விகிதமும் சார்புநிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலையை எய்த முடியும்.

ஆக, மேற்கூறிய நிலைமைகள் அதாவது 1)சார்பு நிலையற்ற மாறிக்கும், சார்பு நிலை மாறிக்கும் இடையில் பிறிதொரு மாறி குறுக்கிடுதல், 2) சார்பு நிலையற்ற மாறிக்கும் முன்னால் ஒரு மாறி அமைந்து சார்புநிலையற்ற மாறியுடனும், சார்பு நிலை மாறியுடனும் உறவுகொள்ளுதல் முதலிய நிலைமைகள் இல்லாமல் இருக்கும் போதுதான் இரு கூறுகளுக்கிடையே சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலைமாறி என்னும் உறவு நிலை அமையும் என்பது தெளிவு. சி.என்.ந.

**துணை நூல்கள்:**


**Kothari, C.R.**, Research Methodology: Methods and Techniques, Wiley Eastern Limited, New Delhi, 1985.

**Young, Pauline V.**, Scientific Social Surveys and Research, Prentice-Hall of India Private Ltd , New Delhi, 1973.


**மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்:** மாறோக்கம் என்பது கொற்கையைச் சூழ்ந்ததொரு நாடு என்பர் உ. வே. சாமிநாதையர். அந்நாட்டைச் சேர்ந்தமையின் இவர் மாறோக்கத்து நப்பாலத்தனார் என்று கூறப்பெற்றார். இந்நாட்டைச் சேர்ந்த நப்பசலையார் என்னும் பெண்பாற் புலவரும், மாறோக்கத்து நப்பசலையார் என வழங்கப் பெறுதல் காணலாம். காமக்கணி என்பது காமாட்சி என்னும் வட சொல்லின் மொழிபெயர்ப்பு என்பர் பின்னத்தூர் நாராயண சாமி ஐயர். காமக்கணி எனும் பெண்பாற் பெயர் நப்பாலத்தனார் எனும் ஆண்பாற் பெயரோடு இயைந்து வழங்கும் காரணம் புலப்படவில்லை.

இவர் பாடிய ஒரே பாடல் அகநானூற்றில் (377) இடம் பெற்றுள்ளது. அது பாலைத்திணையில் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது என்னும் துறையில் அமைந்துள்ளது. இரந்தார்க்கு வழங்கி இசையுடன் வாழ்தல் வேண்டும் என்னும் நோக்கில் தலைவன் பொருளீட்டச் சென்றதாக இப்புலவர் கூறியுள்ளார். 'கோடை நீடியதால் வறண்ட நிலத்தே உதிர்ந்த புல்லரிசியை எறும்புகள் வளையிற் சேர்த்தவுணவைக் கொண்ட மறவர்,

நிரையைக் கவர்ந்தமையால் குடிகள்போய்விட்டனர். அதனால் பாழ் பட்ட மன்றத்தில் முதியோர் சூதாடும் அழகு அழிந்தது. கறையான் சிதைத்ததால் கவினழிந்த அப்பொதியிலில் ஒரு பக்கம் தங்கித் தலைவியின் பேரெழில் நினைந்து ஏதிலராகிப் பொருளீட்டச் செல்வர். நீயும் அவ்வாற்றாற் செல்வாயாக' எனத் தலைவன் நெஞ்சிற்குக் கூறியதாக அப்பாடலைப் பாடியுள்ளார். இரா.சா.

மாறோகம்: திருநெல்வேலி மாவட்டத்தில் கொற்கையைச் சூழ்ந்த ஒரு சிறுநாடு மாறோக்கம் என்பதாம். அதுவே மாறோகம் என்று பாடவேற்றுமை பெற்று வழங்குகிறது.

சங்க காலம் முதலே இந்நாடு கலை நலம் மலிந்து பொலிந்தது. மாறோக்கத்து நப்பசலையார், மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார் ஆகிய புலவர்களின் பெயர்களோடு ஒன்றிப் புகழ் பெற்றது இந்நாடு.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் பெண்மை யடுத்த மகனென் கிளவியாகிய, 'பெண்மகன்' என்ற சொல்வழக்கம் குறித்து உரையெழுதும் சேனாவரையர், 'புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகனென்று வழங்குப'(தொல். சொல். நூ. 164. சேனா. உரை.) என்று இந்நாட்டு வழக்கினை எடுத்துக் காட்டுவர். அதனால் இந்நாட்டு மொழிமரபின் சிறப்பும் புலனாம். வ.கு.

மான் கீம்: மேற்குச் செருமனியின் நடுப்பகுதியிலுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு நகரம், மான் கீம். இது பேடன் வர்ட்டம் பர்குப் (Baden Wurttemberg) பகுதியில் இரைன் (Rhine) ஆற்றுக்கு வலப்புறத்தில் நெக்கர் (Neckar) ஆற்றின் கழிமுகத்தில் உள்ளது. மான் கீம் (Mann Heim) ஒரு பெரிய உள்நாட்டுத் துறைமுகமாகவும் தொழில் வளம் மிக்க நகராகவும் விளங்குகிறது. இங்கு உற்பத்தியாகும் பொருட்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை வேதிமப் பொருட்கள், கட்டடங்கள் எழுப்பத் தேவையான பொருட்கள், ஆடை வகைகள், வேளாண்மைக்குரிய கருவிகள், உந்து வாகனக் கருவிகள் ஆகியனவாம்.

வரலாறு: இவ்வூர் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் ஒரு மீன்பிடிக்கும் சிற்றூராக இருந்தது. இங்கு கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோட்டை கொத்தளங்கள் ஏற்பட்டு இதற்கு உரிமைப்பட்டயமும் வழங்கப்பட்டது. பாலட்டைன் தேர்வாளர் நாட்டுத் (Electorate of Palatine) தேர்வாளர்கள் (Electors) கி.பி. 1920-இல் மான் கீமைத் தம் இருப்பிடமாகக் கொண்டனர். அவர்களால் இங்கு, கி.பி. 1720 – க்கும் 1760 – க்குமிடைப்பட்ட காலத்தில் ஒரு பெரிய அரண்மனை கட்டப்பட்டது. சிறப்பு வாய்ந்த அவைக்களமும் அமைக்கப்பட்டது. தேர்வாளர் சார்லசு தியோடோர் என்பவர், கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மான் கீமை, ஐரோப்பாவில் சிறப்பு வாய்ந்த இயல், இசை, நாடக மையங்களில் ஒன்றாக விளங்கச் செய்தார். மொசார்ட்டு (W.A.Mozart) கி.பி. 1777-78-ஆம் ஆண்டுகளில் இங்கு வாழ்ந்தார். சோகன் சில்லர் (Johann Schiller) கி.பி. 1782–83-ஆம் ஆண்டுகளில் தம் நாடகத்துறை வாழ்க்கையை மான் கீம் நாடக அரங்கில் தொடங்கினார். மான் கீம், கி.பி. 1802 – இல் பேடன் (Baden) மாநிலத்திற்கு வழங்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் பகைவர்களின் தாக்குதலுக்கு உட்பட்ட இந்நகரம் பல அழிபாடுகளுக்குள்ளாயிற்று. அழிந்த கட்டடங்களில் சில பின்னர்ப் புதுப்பிக்கப்பட்டன. தெ.பா.

**மான்கைம், காரல் (கி.பி. 1893-1947):** சமூகவியலுக்கு ஆக்கம் கொடுத்தவர் காரல் மான்கைம் (Karl Manheim). செருமானிய நாட்டவரான இவர் கி.பி. 1893-ஆம் ஆண்டில் புடாபெசுடு என்ற நகரில் பிறந்தார். பெர்லின், புடாபெசுடு, பாரிசு, பிரைபர்கு ஆகிய பல்கலைக்கழகங்களில் படித்து முடித்துவிட்டு 1926 – இல் ஐடல்பெர்க்குப் பல்கலைக்கழகத்தில் கல்விப்பணியில் சேர்ந்தார். அங்குப் பணியாற்றும் போது இவருக்கு ஆல்பிரெடு வேபர் (Alfred Weber), என்ரிக் இரிக்கெர்ட்டு (Heinrich Rickert), மாரியன் வேபர் (Marian Weber), பிரடரிக் கண்டால்பு (Frederick Gundolf), எர்னசுட்டு காண்டரோவிக்சு (Ernest Kantorowicz), ஏமீல் லெடரெர் (Emil Lederer) முதலிய அறிஞர்களின் தொடர்பு கிடைத்தது. அவர்களின் தொடர்பும், ஐடல்பெர்க்குப் பல்கலைக்கழகத்தில் மேலோங்கியிருந்த மாக்சு வேபர் (Max Weber) கருத்துகளின் தாக்கமும் மான்கைமின் சிந்தனைக்குப் பெரிதும் உரமூட்டின. அதனோடு கியார்கி லூகாக்சு (Gyorgy Lukacs) என்ற அறிஞரின் கருத்துகளும் மான்லகமின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அத் தாக்கங்களே இவருடைய சமூகவியல் சிந்தனைப் போக்குக்கு வழி வகுத்தன.

இவர் 1930-இல் ஐடல்பெர்க்குப் பல்கலைக் கழகத்திலிருந்து விலகிப் பிராங்க்பர்ட்டு பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகச் சேர்ந்தார். தேசிய சமதருமவாதிகள் 1933-ஆம் ஆண்டளவில் செருமனியில் ஆட்சிக்கு வந்ததும் இவர் இங்கிலாந்தில் குடியேறி இலண்டன் பல்கலைக்கழகத்தில் இலண்டன் பொருளாதாரவியல் பள்ளியில் விரிவுரை

யாளராகச் சேர்ந்தார். இவர் 1945 - ஆம் ஆண்டில் அதே பல்கலைக்கழகத்தில் சமூகவியல், தத்துவம் ஆகிய இரு துறைகளுக்கும் பேராசிரியராகச் சேர்ந் தார். இவர் இறக்கும்வரை (1947) அதே துறை யிலேயே பணியாற்றினார்.

மான்கைம் பல நூல்களை இயற்றினார். அவற் றுள் முக்கியமானவை சமூகவியல், சமூக உளவியல் கட்டுரைகள் (Essays on Sociology and Social Psychology, 1922-40), அறிவுபற்றிய சமூகவியல் கட்டுரைகள் (Essays on the Sociology of Knowledge, 1923-29), கருத்தியலும் உண்மைநிலையற்ற கற்பனையும்: அறிவுச் சமூகவியலுக்கு ஒரு முன்னுரை (Ideology and Utopia : An Introduction to Sociology of Knowledge, 1936) ஆகியனவாகும்.

அந் நூல்களில் மானுடச் சிந்தனை-அறிவு எவ் வாறு ஏற்படுகிறது என்பதை மான்கைம் விளக்கு கிறார். சிந்தனை என்பது தனி மனித மனத்தில் உண்டாகும் பொருள் என்றும், தனி மனிதனின் மன இயக்கத்தினால் உண்டாவது மானுடச்சிந்தனை என்றும், தனிமனித மனத்திற்கும், குழுமனம் என்பதற் கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்றும் இவர் கூறுகிறார். அதாவது சமூகம் ஒட்டுமொத்தமாக ஒரு பொது மனத்தைக் கொண்டு ஒரு பொதுமை யான உளவியல் அமைப்பைக் கொண்டிருக்கும் என் பதையோ, அத்தகைய ஒரு பொதுமையான மனத் தின், அதாவது குழு மனத்தின் ஒரு கூறாகத்தான் ஒரு தனி மனிதனுடைய மனம் இயங்கிச் சிந்தனையை உருவாக்கும் என்பதையோ மான்கைம் ஏற் றுக் கொள்ளவில்லை. மக்களுடைய மனம் தனித் தனியே இயங்குகிறது. அந்த இயக்கத்தின் விளை வால் உற்பத்தியாவதுதான் மானுடச் சிந்தனை-அறிவு என்கிறார் மான்கைம்.

ஆனால், மானுட மனம் சுயேச்சையாக, சுதந்தர மாக இயங்குவதில்லை. சமூகத்தில் நிலவும் சூழ்நிலை களும், நிலைமைகளும் மானுட மனத்தின் செயற்பாட் டில் தாக்கத்தை ஏற்படுத்தி மானுட மனத்தின் போக்கை ஈர்க்கின்றன. சமூகத்தில் நிலவும் சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகள் மானுட மனத் தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அந்தத் தாக்கத்திற்கேற்ப அதன் செயற்பாடும் அமைகிறது; அது உருவாக்கும் சிந்தனைகளும், அறிவும் அமைகின் றன.

இவ்வாறு மனிதனுடைய கருத்துகளும், கருத்தி யல்களும் (Ideologies) அவன் வாழுகின்ற சமூக நிலைமைகளின் தாக்கத்தினால் உருவாகின்றன என் கிறார் மான்கைம். ஆகவே, மானுடச் சிந்தனைப் போக்கை, அறிவை அறிந்து கொள்ள அவற்றிற்கு அடிப்படையாக விளங்கும் சமூகச் சூழ்நிலையை அறிந்து கொள்வது இன்றியமையாதது என்கிறார் மான்கைம். அவற்றை விடுத்து மானுடச் சிந்தனையை, அறிவை ஆராய்வது பயனற்ற வேலை என்பது மான் கைமின் கருத்து.

சமூகச் சூழ்நிலை என்றும் ஒரேவிதமாக இருப்ப தில்லை. அது மாறிக்கொண்டேயிருக்கும். அது மாறும் போது அதனால் உருவாகும் மானுடச் சிந்தனைப் போக்கும், அறிவும் மாறும். மானுடச் சிந்தனைப் போக்கும், அறிவும் மாறிக்கொண்டேயிருப்பதற்கு இதுவே காரணம் என்கிறார் மான்கைம்.

இவ்வாறு சமூகச்சூழ்நிலையை ஒட்டியே மானுடச் சிந்தனைப் போக்கும், அறிவும் அமைகின்றன என் கிறார் மான்கைம். ஆனால், சமூகச் சூழ்நிலை கால வெளியில் எங்கும் பரந்து விரவி நிற்பது கிடை யாது. ஒரு குறிப்பிட்ட புள்ளியில்தான் அமைகிறது. அதாவது, ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலை ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில்தான் அமைகிறது. அந்தக்காலக் கட்டம் போய் வேறு காலக்கட்டம் வரும்போது அந்தச் சூழ்நிலை மாறி விடுகிறது. அவ் வாறு சமூகச் சூழ்நிலை காலக்கட்டத்தை ஒட்டி அமைந்து சமூக - வரலாற்றுச் சூழ்நிலையாகத் தோற்றமெடுக்கிறது. அத்தகைய சூழ்நிலையில்தான் மானுடச் சிந்தனைப் போக்கும், அறிவும் அமைகின் றன. அந்தச் சூழ்நிலையின் தன்மைக்கேற்ப அவை அமைகின்றன.

ஆகவேதான், ஒரு கருத்தியலை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில், அதுவும் அக் காலக்கட்டத்தில் நிலவும் ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலையில்தான் காணமுடிகிறது. அந்த இரண்டு காரணிகளும் அதா வது சமூகச் சூழ்நிலையும், அது நிலவும் வரலாற்றுக் காலக்கட்டமும் இணைந்து மானுட மனத்தின்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சிந்தனைப்போக்கை உருவாக்குகின்றன. ஒவ்வொரு வாலாற்றுக் காலக்கட் டத்திலும் ஒருவித சிந்தனைப் போக்குக் காணப்படு வதற்கு இதுவே காரணம். ஒரு குறிப்பிட்ட வரலாற் றுக் காலக்கட்டத்தில் நிலவும் சமூகச் சூழ்நிலை அந் தக் கட்டத்திற்கேற்பத் தனித்து அமையும்போது அதன் தாக்கத்திற்கு ஆளாகும் மானுட மனம் அந்த வரலாற்றுக் கட்டத்திற்கேற்பவும், அதில் நிலவும் சமூகச் சூழ்நிலைக்கு இணங்கவும் செயற்பட்டுச் சிந் தனைகளையும், அறிவையும் உருவாக்குகிறது. அந்தக் காலக்கட்டமும், சமூகச் சூழ்நிலையும் போய் வேறொருகாலக்கட்டமும், சமூகச் சூழ்நிலையும் வரும் போது மானுடச் சிந்தனைப்போக்கும், அறிவும் மாறு கின்றன. இவ்வாறு சமூக-வரலாற்றுச் சூழ்நிலைகளுக்

கேற்ப மானுடச் சிந்தனை அமைவதால்தான் வெவ்வேறு சமூக – வரலாற்றுக் கட்டங்களில் வெவ்வேறு சிந்தனைப் போக்குகள் காணப்படுகின்றன.

இதன் காரணமாகத்தான் பல்வேறு சிந்தனைகளையும், கருத்தியல்களையும் ஒப்பிட இயலாமற் போகிறது. அவை வேறுபட்ட சமூக, வரலாற்றுச் சூழ்நிலைகளை மூலாதாரங்களாகக் கொண்டு அமைவதால் அவற்றை ஒன்றாகக் குவித்து ஒப்பிட இயலாமற் போகிறது.

ஆயினும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரே மாதிரியான சிந்தனைப் போக்கு அமைவது இல்லை என்கிறார் மான்கைம். ஒவ்வொரு காலத்திலும் முரண்படும் சிந்தனைப் போக்குகள் அமைவதுண்டு. பழங்காலத்தைப் பெருமிதத்துடன் நோக்கி அதற்குரிய பழமையைப் போற்றிப் பேணவேண்டும் என்ற மனப்போக்கும், அதை அகற்றிப் புதிய நிலையை, புத்துலகைச் சமைக்கவேண்டும் என்ற எதிர்ப்போக்கும் ஒரே சமயத்தில் எழுவதுண்டு. பழமையைப் பேணவேண்டும் என்ற பற்று ஒரு கருத்தியலாக உருவாகிறது. அந்தக் கருத்தியல் கடந்த காலத்தைச் சிறப்பித்து, பழமையைப் போற்றி, அது நிலைபெற உதவும் காரணிகளை வலியுறுத்துகிறது. ஆனால், பழமைக்கு எதிராக எழும் போக்கு அதைத் திறனாய்ந்து மாற்றத்தை நாடுகிறது. அந்த நாட்டம் ஒரு உண்மையற்ற கற்பனைக்கு (Utopia) வழி கோலுகிறது. அந்தக் கற்பனை எதிர்காலத்தை ஒளிமயமானதாக, புதுமைக்கோலம் கொண்டதாகக் கற்பித்து எதிர்காலத்தைப் போற்றி எதிர்காலத்தில் நிகழக்கூடியதாகக் கற்பனை செய்யப்படுகிற புதுமைகளைக் கொணரக்கூடிய காரணிகளைச்சிறப்பிக்கிறது.

எனவே, ஒவ்வொரு வரலாற்றுக காலக்கட்டத்திலும் அப்பொழுது நிலவுகிற நிலமைக்கு ஆதரவாகவும், எதிராகவும் போக்குகள் நிலவும். ஒரு காலக்கட்டம் மறைந்து வேறொரு காலக்கட்டம் வரும்போது நிலைமையும் மாறுகிறது. அப்பொழுதும் அந்த நிலைமைக்கு ஆதரவாகவும், எதிராகவும் இருவேறு முரண்பாடான போக்குகள் எழும். அப்படி ஓர் ஆதரவான கருத்தியல் போக்கும்,ஓர் எதிரான உண்மைநிலையற்ற கற்பனைப் போக்கும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அப்பொழுது நிலவும் நிலைமைக்கு ஏற்ப அமைகின்றன. அந்த முரண்பாடான போக்குகளினால் மக்கள் இருவேறு பிரிவுகளாகப் பிரிய சமூகம் இரு பகை அணிகளாகப் பிளவுபட்டு அமைகிறது. ஆயினும், எல்லா மக்களும் இந்த இரு பகை அணிகளிலும் பகிர்ந்து அமைவதில்லை என்கிறார் மான்கைம். விருப்பு வெறுப்பற்ற கண்ணோட்டமுடைய அறிஞர் பெருமக்கள் தங்களை அந்த இரு கட்சிகளிலும் இணைத்துக்கொள்ளாமல் விலகி நிற்பர். நிலவும் நிலைமையை எந்தவிதமான ஒருசார் கண்ணோட்டமும் இல்லாமல் ஒரு முழுமையான மொத்தக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து அது தொடர்பான இருவேறு கருத்துகளையும் ஒருங்கு கூட்டி ஒரு நடுநிலையான உண்மையைத் தெளிந்து அறிவர்.

அந்த நடுநிலையான உண்மையே சமூகத்தைப் பற்றிய தெளிவான, மெய்யான அறிவை நல்குகிறது. அந்த உண்மை பழமையைப் போற்றும் போக்குடனோ பழமையை வெறுத்துப் புதுமையைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் போக்குடனோ சேருவதுமில்லை; முரண்படுவதுமில்லை. இரு போக்குகளுக்கும் இடையில் நடுநிலையில் நிற்கிறது. சமூக நிலைமை பற்றி நடுநிலையான, மெய்யான அறிவை நல்குகிறது. அந்த உண்மை பழமைசார் கருத்தியலைப் போலச் சமூகத்தைப் பின்னுக்குத் தள்ளி நிறுத்தி வைக்கவோ புதுமைசார் கருத்தியலைப் போலச் சமூகத்தை முன்னுக்குத் தள்ளவோ முயல்வது கிடையாது. பழமை நிலைப்பாட்டுக்கும், புதுமை நிலைப்பாட்டுக்கும் நடுவில் நின்று சமூகத்தைப் பற்றிய நடுநிலையான, மெய்யான அறிவை நல்குகிறது.

மேற்குறித்த கருத்துகளே காரல் மான்கைமின் நூல்களில் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றன. அந்தக் கருத்துகள் அறிவுச் சமூகவியலுக்கு உரமூட்டி அதனை மேம்படுத்துகின்றன. ஆகவேதான், காரல் மான்கைம் அறிவுச் சமூகவியல் துறையில் முன்னோடியாக விளங்குகிறார். இவர் 1947 – ஆம் ஆண்டு இலண்டனில் காலமானார். சி.என்.ந.

**மான்சிங்கு, இராசா**: இராசபுதனத்தில் உள்ளது ஆம்பூர் என்னும் நாடு. அந்த நாட்டின் மன்னராய் இருந்தவர்களுள் ஒருவர் இராசா பார்மல் (Raja Bharmal). அவர் மகன் பகவான்தாசு. பகவான்தாசின் மகன் மான்சிங்கு ஆவார். மன்வர் பார்மல், சாங்கநர் (Sanganer) என்னுமிடத்தில் ஆசுமீரை நோக்கி வந்து கொண்டிருந்த அக்பரைச் சந்தித்துத் தம் மூத்த மகளான மரியம் உசு சமானி (Maryam -Uz-Zamani) என்பவளைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார். அக்பரும் அத் திருமணத்திற்கு இசைந்தார். எனவே, கி.பி. 1562 – இல் அக்பருக்கும் இராசா பார்மலின் மகளுக்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் பின்னர் இராசா பார்மலின் மகனான பகவன்தாசும், பார்மலின் பேரனும், பகவான்தாசின் மகனுமான மான்சிங்கும் அக்பருடன் ஆக்ராவுக்கு வந்தனர். அக்பர் ஆட்சியில் இராசா மான்சிங் (Man

Singh) ஒரு சிறந்த படைத்தலைவராக இருந்தார். சூரத்துக் கோட்டையைக் கைப்பற்ற அக்பர் பகவான் தாஸையும் இராசா மான்சிங்கையும் அனுப்பினார்.

அக்பர் ஆட்சி ஏற்ற சில ஆண்டுகளில் மேவாரின் சுதந்திரத்தை உயிர் மூச்சாகக் கொண்ட பிரதாப் சிங்கு பணியத் தயாராய் இல்லை. எனவே, முதலில் சமாதான வழியில் பிரதாப்சிங்கை வழிக்குக் கொண்டு வர விரும்பி, இயலாமல் போக கி.பி. 1573-ஆம் ஆண்டுச் சூன் திங்களில் ஆம்பர் இளவரசர் மான்சிங்கைப் பிரதாப்சிங்கைச் சந்திக்க அக்பர் உதயப்பூருக்கு அனுப்பினார். அரசியல் மதியூகியான அக்பர் ஆம்பர் இளவரசர் மான்சிங்கையே பிரதாப்சிங்கிற்கு எதிராக அனுப்பினார். பின்னர் கி.பி. 1576-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அக்பரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும், திறமைமிக்கத் தளபதிகளுள் ஒருவருமான மான்சிங்கு 5,000 தேர்ந்தெடுக்கப்பட்ட போர் வீரர்களுடனும், இராணுவ அதிகாரிகளுடனும் ஆசுமீரினின்றும் புறப்பட்டார். பிரதாப்சிங்கின் படைத் தாக்குதலைத்தாங்க இயலாத முகலாயப் படை நிலை குலைந்தது. எனினும், மலை குலைந்தாலும் நிலை குலையாத மான்சிங்கின் வீரத்தையும், தீரத்தையும் கண்டு சிதறுண்ட முகலாயப் படையினர் தங்கள் தளபதியோடு மீண்டும் சேர்ந்து போரிட்டனர். அப்போரில் மான்சிங்கு வெற்றி பெற்ற போதிலும், அக்பரின் நோக்கம் நிறைவேறவில்லை.

அதன்பின் மான்சிங்கு இலாகூரின் ஆளுநராக இருந்தார். அப்போது மான்சிங்கு அக்பரின் உண்மை ஊழியர் என்பதை மெய்ப்பித்தார்.

இந்தியாவுக்கும் ஆப்கானிசுத்தானத்திற்கும் இடையே உள்ள எல்லைப்பகுதியில்வாழ்ந்து வந்தவர்கள் யூசுப்சைசு (Yusufzais) என்னும் மலைவாழ் மக்கள். அவர்கள் சுதந்திரமாக வாழ விரும்பினர். எனினும்,அவர்களை அடக்க அக்பர், தோடர்மாலை அனுப்பினார். அவருடன் மான்சிங்கும் சென்றார். அத்தாக்குதலில் யூசுப்சைசுகள் சொல்லொணாத் துன்பப் பட்டனர். எனவே, இடைக்காலமாக அவர்களின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது.

தம் அருமை நணபர் அபுல்பாசலைக் கொன்றமைக்காக அக்பர், சலீமின் மீது மிகுந்த சினம் கொண்டார். அந்நிலையில் சலீம் தம் தந்தை அக்பருக்கு எதிராகச் சதிச் செயலில் ஈடுபட்டார். எனவே, அக்பர் தம் பேரனும் சலீமின் மகனுமான குசுரூமீது அன்பைச் செலுத்தினார். அக்பர் தம் பேரனை வாரிசாகக் கொள்வதற்கான சூழ்நிலை உருவாயிற்று. அதில் குசுரூ ஒரு சதித்திட்டம் தீட்டினார். குசுரூவின் சதித் திட்டத்திற்கு மான்சிங்கு உடந்தையாய் இருந்தார். மேலும், அக்பர் மரணப்படுக்கையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்போது சலீமுக்குப் பதில் குசுரூவை அக்பரின் வாரிசாக்கும் முயற்சி தீவிரமாயிற்று. அச்சதியை மான்சிங்கும், மீர்சா அசிசுக் கோக்காவும் முன்னின்று செயற்படுத்தினர். மான்சிங்கின் மூத்த சகோதரியின் மகனும், மீர்சா அசிசுக் கோக்காவின் மருமகனுமான குசுரூ பதினேழே வயதாயினும் அவர் நன்னடத்தைக்காகவும், நேர்மையான வாழ்வுக்காகவும் அனைவரும் ஆதரித்தனர். குடிகாரரான சலீமுக்கு மாறாகக்குணவானான குசுரூவை அரசராக்க முடிவு செய்தனர்.

ஆனால், அக்பர் அம்முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, அச்சதித்திட்டம் தோல்வியடைந்தது. முடிவாகச் சலீமே மன்னராகப் பதவி ஏற்றார். சலீம் தம் ஆட்சியில் மான்சிங்கிற்கு எந்தவிதமான கெடுதலும் செய்யவில்லை. மான்சிங்கு பேரரசிற்குக் கடைசிவரையில் விசுவாசத்தைக் காட்டி கி.பி. 1614 -இல் இறந்தார்.

இராசா மான்சிங்கு இந்திக் கவியுலகப் புலவராகவும், புரவலராகவும் இருந்து புகழ் பெற்றார். அரசவைப் புலவரான கங்கா பிரசாத்து என்பவர் யாத்த ஒரு கவிதைக்கு இராசா மான்சிங்கு ஓர் இலட்சம் உருபாய் கொடுத்தார். இராசா மான்சிங்கு குவாலியரில் ஓர் இசைப்பள்ளியை ஏற்படுத்தினார். வீரமும், இராசதந்திரமும் மிக்க இராசா மான்சிங்கு அக்பர் ஆட்சியிலும், அவர் மகன் சலீம் (சகாங்கீர்) ஆட்சியிலும் உயர் பதவி வகித்து உயர் புகழ் பெற்றார்.

சி.மு.

**மான்டரின் மொழி**, சீன மொழியின் ஒரு கிளைமொழியாகும். சீன மொழியைப் பேசும் 70 கோடி மக்களில் மூன்றில் இரண்டு பங்குத் தொகையினர் இந்த மொழியையே பேசுகின்றனர். இந்த மொழி சீன – திபெத்தியக் குடும்பத்தைச் சேர்ந்தது. மான்டரின் மொழியைச் சிறு வேறுபாடுகளின் அடிப்படையில் மூன்று கிளை மொழிகளாகத் தென் மான்டரின், மத்திய மான்டரின், தென்கிழக்கு மான்டரின் என அவை பேசும் இடத்தை வைத்துப் பிரிக்கின்றனர்.

இம்மொழியில் சொற்கள் தொனியின் (Tone) அடிப்படையில் வெவ்வேறு பொருட்களைக் கொண்டுள்ளன. நான்கு வித தொனிகள் இம்மொழியில் வழங்கப்படுகின்றன. 1) உச்சத்தொனி (High level) 2) மேல்-எழு தொனி (High-rising), 3) கீழ் எழு தொனி (Low - rising), 4) உச்சக்கீழ் விழு தொனி (High falling to low) என்னும் நான்கு வித தொனிகளின் அடிப்படையில் சொற்களின் பொருட்கள் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக $fei^1$ – பூச்சி, $fei^2$ – கொழுப்பு, $fei^3$ – புலமை, $fei^4$ – செலவுசெய்

என்னும் நான்கு பொருட்களை வெவ்வேறு தொனியில் வெளிப்படுத்துவர்.

மான்டரின் மொழியின் வினைகளில் தமிழ்மொழி போல் காலம் காட்டும் விகுதிகளும், பால் விகுதிகளும் இல்லை. காலம், துணை வினை மூலமே காட்டப்படுகிறது. மூன்று காலங்களிலும் ஒரு முடிவு பெற்ற செயல் 'லே' (le) என்னும் விகுதி கொண்டே காட்டப்படுகிறது. தொடர் நிகழ்ச்சியைக்(Progressive Action) காட்டும் விகுதியாகச் 'சிவ்' (Chiv) அல்லது 'சி' (che) என்னும் விகுதி வழங்குகின்றது. மேலும், 'சி' (Shih) என்னும் வினை இணைப்பு வினையாகப் பயன்படுத்தப்படுகிறது. இது ஆங்கில மொழியைப் போல் பயனிலையைச் சுட்டும் பெயருக்கு முன்னர் வரும். எடுத்துக்காட்டாக 'நான் ஒரு மனிதன்' (wo shih jen) என்னும் வாக்கியத்தில் இணைப்பு வினை மனிதன் என்னும் பயனிலைப் பெயருக்கு முன்னர் வழங்கப்படுவது நோக்கத்தக்கது.

மான்டரின் மொழியின் வாக்கியங்களுக்குரிய எழுவாயானது செயலைச் செய்யும் கருத்தாவைக் காட்டாது இடத்தைக் காட்டுவதாக இருக்கும்.

எடுத்துக்காட்டாக, 'இந்த இடத்தில் நாளை கடை திறப்பீர்கள்' என்னும் பொருளில் அமையும் வாக்கியத்தில் (Cher yao kai put-zu) இடத்தை எழுவாயாகக் கொண்டு 'இந்த இடம் நாளை ஒரு கடை திறக்கும்' என்பதாக அமையும். இந்த மொழியில் கூட்டுத்தொடரை வாக்கியங்களின் தொடர்ச்சியிலேயே விளக்குவார்கள். எடுத்துக்காட்டாக 'tung nan hsi pei' என்பது கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்பலதத் தொடராகக் கொண்டுள்ளது. இணைப்பு விகுதி எதுவும் அந்தத் தொடரில் இல்லாதது குறிப்பிடத்தக்கது. ஆர்.வா.

**மான் தாமசு (கி.பி. 1875-1955):** செருமனி நாட்டு எழுத்தாளர்களுள் நூற்றுக்கணக்கான புதினங்களையும், கட்டுரைகளையும் எழுதிப் புகழ் பெற்று விளங்கிய மான் தாமசு (Thomas Marn), இலூபேக்கு என்னும் ஊரில் கி.பி. 1875-ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை கி.பி. 1891-ஆம் ஆண்டு இறக்க, இவர் கலைக்கும் இலக்கியத்திற்கும் புகழ் பெற்ற முனிச்சு (Munich) என்னும் நகருக்குச் சென்று தங்கினார். அங்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் (Life Insurance Office) பற்றுதலின்றிப் பணி செய்து பின்னர், வார இதழ்ப் பதிப்பாசிரியராகப் பணியாற்றி, 1933-ஆம் ஆண்டுவரை அவ்வூரில் வாழ்ந்தார். இவர், கட்சா பிரிங்சேர்ம்(Katja Pringscherm) என்ற அம்மையாரை 1905-ஆம் ஆண்டு மணமுடித்து ஆறு குழந்தைகளைப் பெற்றார்.

திருமணக் காலத்திற்கு முன்பே கலை ஆர்வத்தால் தூண்டப் பெற்ற இவர் முதலில், புதினங்களை எழுதத் தொடங்கினார். இவர் தொடக்கக் காலத்தில் எழுதிய புதினங்கள் நோய், மரணம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு திகழ்ந்தன. தத்துவ ஞானியர்களான இசுகோபன் ஆவர் (Schopen Hauer), நீச்சே (Nietzsche) ஆகியோருடைய நூல்கள் இவருடைய புதினங்களுக்கு வழிகோலின. அந் நூல்களின் கருத்துகளையும் தாமசின் நூல்கள் தம்முட் கொண்டு விளங்கின. 'பட்டன் புரூக்சு'(Budden Brooks) என்ற புதினத்தை 1900-ஆம்ஆண்டு எழுதிப் புகழ் பெற்ற இவர் பிறவகை இலக்கியங்களையும் எழுதத் தொடங்கினார். சிறந்த இலக்கியங்களையும் புதினங்களையும் படைத்ததற்காக 1929-ஆம் ஆண்டு நோபல் பரிசினைப் பெற்றார்.


திருமணத்திற்குப் பின் இவர் எழுதிய புதினங்களில் மகிழ்ச்சியின் எதிரொலி தெரிகிறது. 'மன்னுயிர்த் திருமேனி' (Royal Highness) என்ற தேவதைக் கதையில் தம் வாழ்க்கை அனுபவங்களையெல்லாம் எழுதியுள்ளார். ஆனால், 1912-ஆம் ஆண்டிற்குப் பின் இவருடைய புதினங்களில் துன்பியல் கருத்துகள் புகுந்தன. எடுத்துக்காட்டாக, 'வெனிசின் அழிவு' (Death of Venice) என்ற நூலைக் குறிப்பிடலாம். முதலாம் உலகப்போர் தொடங்கிய காலத்தில் இவர்தம் எழுத்துப் பணிக்குப் பாதிப்பு ஏற்பட்டது. 'அரசியல் கலப்பற்ற மனிதனின் எதிரொலிகள்' (Reflections of an Unpolitical Man) என்ற ஒரு நூலை 1918-ஆம் ஆண்டிலும், செருமானியக் குடியரசு அமைக்கும் முறை பற்றிய நூல்களை 1919-ஆம் ஆண்டிலும் எழுதி மக்களுடைய மதிப்பைப் பெற்றார். பின்னர், இவர் எழுதிய கட்டுரைகளிலும், ஆற்றிய சொற்பொழிவுகளிலும் நாசிக் கொள்கையைத் தாக்கியும், பொதுவுடைமைக் கொள்கையையும், சமஉடைமைக் கொள்கையையும் ஆதரித்தும் அமைந்த கருத்துகள் இடம்பெறலாயின. இட்லர் 1933-ஆம் ஆண்டு செருமனி நாட்டுத் தலைவராகப் (Chancellor) பதவி ஏற்றபின் இவர், தம் மக்களுடைய அறிவுரைப்படி செருமனி நாட்டை விட்டு வெளியேறிச் சுவிட்சர் லாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் செல்லலானார். அமெரிக்க நாட்டில் 1938-ஆம் ஆண்டு குடியேறிய இவர், 1944-இல் அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவர் ஆனார்.

இவர் இரண்டாம் உலகப் போருக்குப்பின் செருமனி நாட்டிற்கும் வந்தார். மக்கள் இவரை வரவேற்று மதிப்பளித்து அந்நாட்டிலேயே தங்குமாறு வேண்டினர் ஆனால், இவர் செருமனியில் நிலையாக வாழவிரும்பாது சுவிட்சர்லாந்து நாட்டிற்குச் சென்

றார். இடைக்காலத்தில் கோயத்து (Ceyoethe-1949), செக்காவு (Chekhov – 1954), சில்லர் (Schiller-1955) ஆகிய எழுத்தாளர்களைப் பற்றிய கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றுள்,'எழுத்தாளர்களின் ஒழுக்க, சமூகப் பொறுப்புகள்' (The Moral and the Social Responsibilities of Writers) என்பதைப் பற்றி எழுதிய கருத்துகள் படிப்போர் உள்ளத்தைத் தொடுவனவாக உள்ளன. இறுதிக் காலத்தில் இவர் எழுதிய கட்டுரைகள் மென்மை, வளம், நகைச்சுவை, உவமை, வஞ்சப்புகழ்ச்சி முதலானவை பொருந்தப் பெற்று விளங்கின. மேலும் அவை பாசத்தை உருவாக்கக் கூடியனவாகவும், மானிடநேயத்தை உண்டாக்கக் கூடியனவாகவும் விளங்கிப் படிப்பவர் உள்ளத்தைக் கவருந்தன்மை வாய்ந்துள்ளன. இவர் 1955-ஆம் ஆண்டு சூரிச்சு (Zurich) என்னும் இடத்திற்கு அருகில் காலமானார். க.அ.

**மான்தீவு** இங்கிலாந்துக்கு அண்மையில் ஐரிசுக் கடலில் உள்ள தீவு. இதன் பரப்பு 572 சதுர கி.மீ. மான்தீவின் (Isle of Man) தலைநகர் தக்லசு (Douglas). இங்கிலாந்துக்கு உரிய இத்தீவு, மலைப்பாங்கானது. இயற்கைக்காட்சிகள் மிகுதியாக இங்கு உள்ளன. சமமான தட்பவெப்பநிலை உள்ளது. இன்ப உலாப் பயணிகள் மிகுதியாக இத்தீவிற்குச் சென்று வருகின்றனர். இனிய ஓய்வை நாடுபவரும் இங்கே செல்கின்றனர். உருளைக்கிழங்கு, கோதுமை, பார்லி, ஓட்சு முதலியன விளைகின்றன. ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. பால்பண்ணைத் தொழிலும், மீன்பிடித்தலும் மக்களின் முதன்மைத் தொழில்கள். கம்பளியும் உற்பத்தி செய்யப்படுகிறது. வேறுசில தொழில்கள் சில இடங்களில் நடைபெறுகின்றன. துத்தநாகம், இரும்பு, தாமிரம் முதலியன இங்குக் கிடைக்கின்றன.

புதிய கற்காலச் சின்னங்கள் இங்கே கிடைத்துள்ளதால், மக்கள், மிகப் பழங்காலத்திலேயே இங்கு வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. பல வரலாற்றுச் சின்னங்கள் இங்கே காணப்படுகின்றன. வைக்கிங்குகள் (Viking) கி.பி.9-ஆம் நூற்றாண்டில் இங்குத் தங்கினர். இத்தீவு, கி.பி. 1266 வரை நார்வே நாட்டின் மேலாண்மைக்கு உட்பட்டிருந்தது. அந்த ஆண்டில் (கி.பி.1266)இசுகாட்லாந்து(Scotland) இதனைக் கைப்பற்றியது. பின்னர்ச் சாலிசுபரி பிரபுக்களும் தெர்பி பிரபுக்களும்கி.பி.14-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.18-ஆம் நூற்றாண்டு வரை, இத்தீவைத் தம் ஆளுமையின் கீழ்க் கொண்டுவந்திருந்தனர். ஆனால், இடையிடையே சிற்சில ஆண்டுகளில் இங்கிலாந்தின் மன்னராட்சி இங்கு நேரிடையாக நிலவியது. அதோல் (Atholl) பிரபு, கி.பி. 1765-இல் இத்தீவைப் பிரிட்டனின் நாடாளுமன்றத்திற்கு விற்றுவிட்டார். இப்




மான்தீவு

பொழுது இங்கிலாந்தின் ஆட்சிக்கு இது உட்பட்டிருந்த போதிலும், தாய்நாட்டின் எல்லாச் சட்டங்களும் இத்தீவில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. குறிப்பிட்ட சட்டங்கள், குறிப்பிட்ட செய்திகளில் சிலவற்றை ஓரளவு கட்டுப்படுத்தும். ஆங்கிலேய மன்னனால் அமர்த்தப்பெற்ற ஓர் ஆளுநர்,மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையின் உதவியுடன் இங்கு ஆட்சி நடத்துகிறார். பெரும்பான்மையான செய்திகளில் இத்தீவு சுதந்திரம் பெற்றே விளங்குகிறது. இத்தீவின் மக்கள் தொகை 64,679 (1981). இதில் வாக்காளர்களின் எண்ணிக்கை 47,449 (1981). இங்குள்ள முதன்மை நகரங்கள் தக்லசு (மக்கள்தொகை 19,944), இராம்சே (மக்கள்தொகை 5,818), பீல் (மக்கள் தொகை 3,688), கேசில்டவுன் (CastleTown - மக்கள்தொகை 3,141) ஆகும். தெ.பா.

**மானக்கஞ்சாற நாயனார்,** சைவ சமயத்திலுள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களுள் பன்னிரண்டாம் இடத்தைப் பெற்றவர். இவரைப் பற்றிய வரலாற்றினைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் முப்பத்தேழு பாடல்களில் விளக்கியுள்ளார்கள். கஞ்சாறூர் என்பது ஒரு சிறந்த பகுதி. அதனை இப்போது மக்கள் ஆனதாண்டவபுரம் என்கின்றனர். ஆனந்தத் தாண்டவபுரம் என்பதுதான் ஆனதாண்டவபுரம் என மருவிற்று என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. அவ்வூர்ச் சிறப்பை ஐந்து பாக்களில் சேக்கிழார் சிறப்பாகச் சித்திரித்துள்ளார். அவ்வூரில் வேளாண் குடியிற் பிறந்து படைத்தலைவராய் விளங்கிய பெருமைமிக்கார் மானக்கஞ்சாறர். இவருக்குப் பெற்றோர் இட்ட இயற்பெயர் தெரியவில்லை. மானம் – பெருமை; கஞ்சாறர் என்பது

கஞ்சாறூரில் பிறந்தவர் என்னும் பொருளது. பெருமைமிக்க கஞ்சாறூரில் பிறந்தவர் என்ற காரணப் பெயர்தான் இவருக்குப் பலராலும் வழங்கப் பெற்றது. இவர் சிவனடியாரிடத்து மாறாத அன்பு பூண்டவர்; அவர்கள் குறிப்பறிந்து எது கேட்கினும் மறுக்காது கொடுக்கும் வள்ளன்மையுடையவராய்த் திகழ்ந்தார். இவருக்கு நீண்டகாலமாய் மகப்பேறு வாய்க்கவில்லை. அப்பால், இறைவனை நினைத்து நோன்புகள் பல ஆற்றியபின் ஒரு பெண் மகவினைப் பெற்றார்; அதனை மிக அருமையாய் வளர்த்தார்; அப்பெண்ணுக்கும் பெண்களுக்குரிய ஒவ்வொரு பருவமும் கடந்து மணப்பருவம் வந்தெய்தியது. அதுகண்ட பெற்றோர் அப்பெண்மணியை ஏயர்கோன் கலிக்காமருக்குத் திருமணம் முடிக்க, வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர். திருமண நாளும் நெருங்கியது. அவ்வமயம் சிவபிரான் மானக்கஞ்சாறரின் உண்மையன்பை உலகினருக்குத் தெரிவிக்க ஒரு மாவிரதி வேடம் பூண்டு நாயனார் வீடு வந்து சேர்ந்தார். அவ்வடியவரைக் கண்ட கஞ்சாறர் எழுந்து பணிந்து பல உபசாரங்கள் செய்தார். வந்த அடியவர் 'இங்கு ஏதோ மங்கல நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றனவே! என்ன சிறப்பு?' என்று கேட்டார். மானக்கஞ்சாறர் தம் ஒரே மகளுக்குரிய திருமணம் பற்றிக் கூறினார். அவ்வடியவர் அது கேட்டு 'மங்கலமுண்டாகுக' என வாழ்த்தினார். அப்பால் மானக்கஞ்சாறர் தம் மகளை அவ்வடியவரை வணங்கச் செய்தார். அப்பெண் வணங்கும்போது அவளுடைய நீண்ட அழகிய கூந்தல் தமக்குப் பஞ்சவடிக்குப் பயன்படுமே என்று கருதினார். அக்குறிப்புத் தெரிந்ததுமே கஞ்சாறர் மணவினைக்குரிய மணப் பெண்ணாயிற்றே என்றும் கருதாது வாளால் அப்பெண்ணின் கூந்தலையறுத்து அடியவர்க்குக் கொடுத்தார். பஞ்சவடி என்பது மயிரால் திரிக்கப்பெற்ற பூணூல். அதனை மாவிரதியர் அணிதல் மரபு. அதைப் பார்த்ததுமே வந்த அடியவர் மறையச் சிவன் உமாதேவியுடன் இடபவாகனத்தின் மீது காட்சிகொடுத்தார். அக்கஞ்சாறரைத் தம்முலகிற்கு வரச்செய்து சாலோக முத்தியினை அருளினார். பின்னர், மானக்கஞ்சாறரின் மகளை மணஞ்செய்து கொள்ளவந்த ஏயர்கோன், நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கேட்டு வியப்புற்றார். இறைவனின் திருவிளையாடலை எண்ணி இன்புற்றார். அதே சமயத்தில் கஞ்சாறர் மகளுக்கு நீங்கிய கூந்தலும் முன்னைப் போன்றே மிக அழகாக இறையருளால் வளர்ந்து விளங்கியது. அப்பெண்ணின் உறவினர்கள் ஏயர்கோனுக்கு அப்பெண்ணை மணமுடித்துக்கொடுக்க, அவரும் திருமணம் செய்து கொண்டு தம்மூர் சென்றார் என்று வரலாறு முடிகிறது. திருமணப் பெண்ணென்றும் பாராது கூந்தலை அரிந்துகொடுத்த சிறப்பு மானக்கஞ்சாறரின் உறைப்பான பக்திப் பெருமையைக் காட்டுவதாம்.

இரா.ச.

**மானசரோவர்**: இமயமலைத்தொடர்கள் இந்தியாவிற்கு அரணாக விளங்குகின்றன. அவை திபெத்திலிருந்துவரும் வறண்ட குளிர்காற்றைத் தடுப்பதோடல்லாமல், பருவக் காற்றைத் தடுத்து நல்ல மழையையும் கொடுக்கின்றன. அங்குத் தோன்றும் ஆறுகள் சிந்து - கங்கைச் சமவெளியை வளமாக்குகின்றன. சில ஆறுகள் இமய மலைக்கு அருகில் திபெத்துப் பீடபூமியின் ஒரு பகுதியாக அமைந்துள்ள பள்ளத்தாக்குகளில் தோன்றுகின்றன. அந்தப் பள்ளத்தாக்கின் நடுவில் 'மானசரோவர்' என்னும் எழில் மிகுந்த ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரிக்கு அப்பால் கயிலாய மலை உயரமாக உள்ளது. இந்த ஏரி மிகுந்த அழகு வாய்ந்ததாகவும், காண்போரைக் கவரும் தன்மை வாய்ந்ததாகவும் உள்ளது. 'சரோவர்' என்றால் தடாகம் அல்லது ஏரி என்று பொருள்படும். அதன் சுற்றளவு 90 கி.மீ. ஆகும். கடல் போன்ற தோற்றம் உடையது. அது சில இடங்களில் 76 மீ. ஆழம் இருக்கும். கடல் மட்டத்திற்கு மேல் 4560 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அதன் கரையில் பல வகையான வண்ணங்களை உடைய கற்களும், மணலும் அமைந்து, ஏரியின் அழகை மிகுதிப்படுத்துகின்றன. அன்னம் போன்ற பறவைகள் இங்கு வாழ்கின்றன. கயிலாயத்திற்குப் பயணம் மேற்கொள்ளுபவர்கள் இந்தத் தடாகத்திற்கு வந்து நீராடுவர். மிகச் சிறந்த புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படும் இத்தடாகமும் கயிலாயமும் சேர்ந்து 'கௌரி சங்கர்' என்று பெயர் பெறும். ஆண்டுதோறும் கிருட்டிணன் பிறப்பு நாளன்று (சன்மாசுடமி) இங்கு ஒரு விழா நடைபெறும்.


கயிலாய மலையைப் பற்றியும், மானசரோவர் ஏரியைப் பற்றியும் இந்தியாவில் பல புராணக் கதைகள் உள்ளன. சீனா (Cheena) என்னும் மலையில் ஓர் ஏரி உள்ளது. அதற்கு நைனிடால் ஏரி என்று பெயர்.

மானசரோவர் ஏரிக்குத் தென்பகுதியில் உள்ளது மாந்தாதா என்ற மலைச்சிகரம். உறைபனியால் மூடப் பெற்றிருக்கும் கயிலாயத்திற்கும், மாந்தாதாவிற்கும் இடையே பச்சை மணி போல மானசரோவர் அமைந்திருக்கிறது. ஏறத்தாழ 2900 கிலோ மீட்டர் நீளமுள்ள சிந்து ஆறு கயிலாய மலையில் மானசரோவர் ஏரிக்கு அருகில் தோன்றிக் காசுமீர் மாநிலத்திலும் பாகிசுத்தான் நாட்டில் பஞ்சாபு, சிந்து மாநிலங்களிலும் பாய்ந்து அரபிக் கடலில் கலக்கிறது. ஏறத்தாழ 2880 கி.மீ. நீளமுள்ள பிரம்மபுத்திரா ஆறு மானசரோவர் ஏரிக்கு அருகில் தோன்றிச் 'சாங்போ' என்ற பெயரில் திபெத்து வழியாக 1280 கி.மீ.

கிழக்கு நோக்கிப் பாய்கிறது. பின்னர்ப் பிரம்மபுத்திரா என்ற பெயரில் அசாம் மாநிலத்தில் பாய்ந்து கங்கையின் கிளை ஆறாகிய பத்மாவுடன் சேர்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது. மானசரோவரில் சில காலங்களில் உறைபனி மூடியிருப்பதால் இதன் தோற்றம் வெளிப்படையாகத் தெரிவதில்லை. இந்த ஏரியில் சேரும் தண்ணீர் நிலப்பரப்பிற்கு அடியிலேயே பெரும்பாலும் வெளியேறுகிறது. இதன் கரையில் எட்டுப் பௌத்த மடங்கள் உள்ளன.

இந்தியாவிலிருந்து 1949-ஆம் ஆண்டு ஒரு குழு மகாத்மா காந்தியின் சாம்பலை மானசரோவரின் புனித நீரில் கரைப்பதற்கு எடுத்துக் கொண்டு சென்றது. பொதுவுடைமைச் சீனா திபெத்தைக் கைப்பற்றிய போதும் கயிலாய மலைக்கும், மானசரோவர் ஏரிக்கும் புனிதப் பயணம் மேற்கொள்வதைத் தடை செய்யவில்லை. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் 1954-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இவ்விரு இடங்களுக்கும் செல்ல அனுமதி அளிக்கப் பட்டிருந்தது. அவ்வுடன்படிக்கை 1962-இல் முடிந்தவுடன் இந்தியப் பயணிகளுக்குத் திபெத்தின் எல்லை மூடப்பட்டுவிட்டது. அ.சி.

*மானிட உடலளவைமானி*: ஒயிட்டு (White) என்பவர் இறந்த மக்களின் எலும்புகளையும், உயிருள்ள மக்களின் எலும்புகளையும் ஆய்வுசெய்து, நீக்ரோ மக்களின் முன்கை எலும்பு, வெள்ளையர்களின் முன்கை எலும்பைவிட, சற்றுப் பெரியது என்று கி.பி. 1794-ஆம் ஆண்டில் முதன் முறையாக மானிடவியலார் கூட்டத்தில் கூறினார். பின்னர் கி.பி. 1838-ஆம் ஆண்டில் மானிடவியலறிஞர் அம்பிரி (Humphery) என்பவர் செய்த ஆய்வில், நீக்ரோக்களின் கீழ்க்கால் எலும்பு (Tibia) வெள்ளையரின் கீழ்க்கால் எலும்பை விடச் சற்று நீளமானது என்று கண்டுபிடித்தார். அவ்வகையான ஆய்வுகளுக்குப் பின்னர் நூற்றுக்கணக்கான அளவுகள் பலவகைப்பட்ட மக்களிடம் எடுக்கப்பட்டன. அவைமூலம் இனவேறுபாடுகள் பற்றிய உண்மைகள் அறிவியல் முறைப்படி ஆராயப்பட்டன. அல்போன்சு பெர்ட்டிலன் (Alphonse Bertillon) என்ற மானிடவியலார், கி.பி. 1882-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டுக் கொலைவழக்கில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிக்க உதவும் 'பெர்டிலோனேசு' (Bertillonage) எனப்படும் மானிட உடலமைப்பை அடிப்படையாகக் கொண்ட முறையைக் கண்டுபிடித்தார்.



படிப்படியாக 1900-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மானிடஉடலளவையியல் (Anthropometry) மானிடவியலின் ஒரு முதன்மையான பிரிவாகத் தோன்றியது. தொடக்கத்தில் பல ஆய்வாளர்களின் ஆய்வுகளில், அளவுகளிலும், அதைப் பயன்படுத்தும் முறையிலும் எண்ணற்ற மாற்றங்களும் வேறுபாடுகளும் காணப்பட்டன. அளவுமுறைகள் வரையறுக்கப்பட (Standardizing) வேண்டும் என்னும் நிலை ஏற்பட்டது. அக்கருத்து 1906-ஆம் ஆண்டு மொனாக்கோ (Monaco) வில் நடைபெற்ற பன்னாட்டு மானிடவியலறிஞர் கூட்டத்தில் (International Congress of Anthropologists) ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. அதையடுத்து, தலையைத்தவிர உடலின் பிற பகுதிகளின் அளவுமுறைகள் 1912-ஆம் ஆண்டு செனிவாவில் நடைபெற்ற பன்னாட்டு மானிடவியலறிஞர் கூட்டத்தில் ஆராயப்பட்டு, நாற்பத்தொன்பது அளவுகளாக ஒழுங்குபடுத்தப்பட்டன. சீராக்கப்பட்ட அளவுகள், அளவுமுறைகள், அளவுகோல்கள் யாவும் 1914-ஆம் ஆண்டில் பேராசிரியர் உருடால்பு மார்டின் (Prof. Rudolf Martin) வெளியிட்ட புத்தகத்தில் (Lehrbuch der Anthropologie) விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**உடலளவைமானியும் அதன் பயன்களும்:** மக்களின் உடலளவுகளைக் கணக்கிட மானிடஉடலளவைமானி (Anthropometer) பெரிதும் உதவுகிறது. இக்கருவியால் புற உடலின் பாகங்களையும் எலும்புக்கூட்டின் பல பாகங்களையும் கணக்கிடமுடியும். இதனை எளிதில் மடிக்கவும், எளிதில் களஆய்விற்கு எடுத்துச் செல்லவும் முடியும். இது 2 மீட்டர் நீளமுள்ளது. இதனைத் தனித்தனியே 55 செ.மீ. கொண்ட நான்கு துண்டுகளாகப் பிரித்து எளிதில் மீண்டும் ஒன்றோ

டொன்று பொருத்திப் பயன்படுத்தமுடியும். இக்கருவி உறுதியான இரும்பினால் செய்யப்பட்ட குழாய் வடிவமைப்பைக் கொண்டதாகும். அந்த 2. மீ. நீளமுள்ள குழாயின் ஒரு பக்கத்தில் கீழ்ப்பகுதியிலிருந்து ஏறுவரிசையில் 200 செ.மீட்டர் வரை அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன. அதன்மேல் விளிம்பில், உறுதியாக அசைக்கப்படா நிலையில் ஓர் இரும்பு உறை (Socket) பொருத்தப்பட்டுள்ளது. அதைப் போன்றே, நிலையாகப் பொருத்தப்படாமல் மேலும் கீழுமாகச் செல்லக் கூடிய மற்றொரு இரும்புஉறையும் அதனுடன் ஒரு குறுக்குக்கம்பியும் (Cross Rod) நீண்ட குழாயில் பொருத்தப்பட்டுள்ளன. அதை உயரஅளவிற்குத் தகுந்தாற்போல மேலும் கீழுமாகத் தள்ளி, அளவைப் பதிவு செய்யலாம். எடுத்துக்காட்டாகச் சமமான தரையில் இந்தக் கருவியை நேராக நிற்கவைத்து மேல் பகுதியில் சரிசெய்யக்கூடிய இரும்புஉறையில் மாட்டப்பட்ட குறுக்குக் கம்பியை மனிதனின் உச்சந் தலையில் மெல்லப் பதிய வைத்து உயரத்தை அளவிடலாம். மனிதனின் உயரத்தை மட்டுமன்றி, இந்தக் கருவியால் மனிதத் தோள் வரை உயரம் (Acromion Height), நடுவிரல் வரை உயரம் (Dactylion Height), உட்காரும் நிலையில் உயரம் (Sitting Height), நெஞ்சுவரை உயரம் (Suprasternal Height) ஆகியவற்றையும் அளக்க முடிகிறது. இக்கருவியில் சில மாற்றங்கள் செய்து, அதை நகரும் கவராயமாக (Red Compass) மாற்றி, தோள்களின் அகலம் (Shoulder Width), நெஞ்சின் அகலம் (Chest Width), நெஞ்சின் ஆழஅளவு (Chest Depth), இடுப்பின் அகலம் (Maximum Hip Width) ஆகியஅளவுகளையும் எடுக்க முடியும்.

மானிட உடலளவுகள் (Stature), சுற்றுப் புறச் சூழ்நிலை (Environment), உணவுப் பழக்கவழக்கங்கள் (Nutritive Conditions), உடல் உள் சுரப்பிகள் (Internal secretion of some glands), மரபியல் (Hereditary) கூறுகள் ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன. அவ்வகையான கூறுகளின் அடிப்படையில் மனித அளவுகளைச் சேகரித்தல் இனவியல் (Raciology) ஆய்வுகளுக்கு இன்றியமையாததாக உள்ளது. நே.தே.

**மானிட உடலளவையியல்** என்பது உடல் சார் மானிடவியலின் (Physical Anthropology) ஒரு முதன்மையான பிரிவாகும். இப்பிரிவு வாழும் மக்களின் உடலளவுகளையும், மண்ணில் புதைந்து கிடக்கும் இறந்த மானுட மண்டையோடுகள், எலும்புகள் ஆகியவற்றின் அளவுகளையும் கணக்கிட்டு மானுட இனங்களின் (Human Races) பல்வேறு தன்மைகளை ஆராய்கிறது.

மானிட உடலளவையியல் (Anthropometry) ஆய்வுகளில் மக்களின் புறப் பண்புகளை ஆராய்தல் ஒரு பகுதியாகவும், உட்பண்புகளை ஆராய்தல் மற்றொரு பகுதியாகவும் உள்ளன. புறப்பண்புகளை ஆராயும் போது முதலில் உடலின் பொதுப்படையான அமைப்புகளை ஆராய்வர். பின்னர் புறஉடலின் சிறப்புப் பண்புகளை விளக்கக்கூடிய மயிர், கண், தோல், முகம் காது, மூக்கு, உதடு போன்றவற்றின் தன்மைகளை ஆராய்வர்.

மனித இனத்தவர்களிடம் காணப்படும் மயிரின் தன்மை பலவகைப்பட்டது. நேரான மயிர், அலை அலையான மயிர், சுருட்டை மயிர், மிகச் சுருட்டை மயிர் போன்ற வகைகளே மிகுதியாக உள்ளன. அவற்றுள் சுருட்டை மயிர், மிகச் சுருட்டை மயிர் ஆகிய இரு வகைகளை ஆராயும்போது அவை இயற்கையில் அமைந்தனவா செயற்கையில் அமைந்தனவா என்பதைக் கவனிக்க வேண்டும்.

மயிரின் நிறத்தை ஆராயும்போது தலைமயிரின் நிறத்தை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். உடலின் பிற பகுதிகளிலுள்ள மயிரின் நிறத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது. தலைமயிரின் நிறங்கள் கருமை, கரும்பழுப்பு, வெளிர் பழுப்பு, சிவப்பு, வெண்மை ஆகிய வகைகளில் அடங்கும்.

மனித இனங்களை வகைப்படுத்துவதில் கண்களின் நிறங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பெரும்பாலும் கருவிழிப்படலத்தின் (Iris) நிறத்தையே கண்ணின் நிறம் எனக் கொள்வர் உடல் சார் மானிடவியலார். கண்விழிப்படலத்தை நல்ல வெளிச்சத்தில் இரண்டு அல்லது மூன்று மீட்டர் இடைவெளியில் தள்ளி நின்று பார்க்கவேண்டும். கண்ணின் நிறத்தைக் கருமை நிறமானது என்றும், இயல்பான (Neutral) நிறமானது என்றும், இளம் நிறமானது என்றும் வகைப்படுத்துவர். கருமை நிறத்தில் பழுப்புக்கண்களும், கருமை நிறக் கண்களும் அடங்கும். இளம்நிறத்தில் நீலநிறக் கண்களும், வெளிரிய சாம்பல் நிறக் கண்களும் நீலம்கலந்த சாம்பல் நிறக் கண்களும் அடங்கும். இயல்பான நிறமுடைய கண் வகையில் பழுப்பு நீல நிறமுடைய (Hazel) கண்களும், மஞ்சள் கலந்தவெளிரிய கண்களும், பழுப்புக் கலந்த சாம்பல் நிறக்கண்களும் அடங்கும்.

மானிட வகைபாடுகளில் தோலின் நிறம் மிகுதியாகக் கணக்கிடப்படுகிறது. உடலின் ஒரு பகுதி புறத்தோல் மறைக்கப்பட்டும், மறுபகுதி மறைக்கப் படாமலும் உள்ளதால் எப்பகுதியைக் கணக்கில் எடுப்பது என்பது கவனிக்கத் தக்க கூறாகும். பொதுவாகச் சூரியஒளி படும் புறத்தோலின் நிறத்தைக் கணக்கிடு

வதில்லை. தோலின் நிறங்களை மதிப்பிடுவதற்கு மானிடவியலாரால் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு வண்ணங்களில் அச்சிடப்பட்ட வரைதாளினை மாதிரியாகக் கொள்வர். அவ்வரைபடம் மானிடவியலாரால் தரப்படுத்தப்பட்டுள்ளது.

மானிட உடலளவையியல் அதன் ஆய்வுத் தன்மைக்கேற்பப் புறத்தோற்ற உடலளவையியல் (Somatometry) என்றும், எலும்பளவை இயல் (Osteometry) என்றும், மண்டையோட்டளவையியல் (Craniometry) என்றும் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும். புறத்தோற்ற உடலளவையியல் என்பது வாழும் மக்களின் புற உடலளவுகளை மட்டும் எடுப்பதைக் குறிக்கும். எலும்பளவையியல் என்பது இறந்த மக்களின் எலும்புகளை ஆராய்வதைக் குறிக்கும். மண்டையோடு மனிதனின் பெரும் பாலான உடற்கூறுகளைக் கொண்டுள்ளதால் அதன் அளவுகளையும், கபாலப் பள்ளங்களையும், முகப்பகுதிகளையும் அளந்து ஆய்வு செய்ய மண்டையோட்டளவையியல் உதவுகிறது.

மேற்கூறிய மூன்று பிரிவுகளில் மனித உடலை அளப்பதற்காக உடலில் பல அடையாளங்கள் (Land marks) வரையறுக்கப்பட்டுள்ளன. அவ்வடையாளங்களைக் கொண்டு பல வகையான அளவுகளை (Measurements) எடுக்கலாம். புறத்தோற்ற உடலளவையியல் பிரிவில் ஏறக்குறைய 55 அடையாளங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு ஏறக்குறைய 120 வகையான அளவுகள் எடுக்கப்படுகின்றன. அவ்வாறே பிற இரு பிரிவுகளிலும் பல அடையாளங்கள் வரையறுக்கப்பட்டு அளவுகள் எடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வகையான அளவையும் எந்தக் கருவி கொண்டு எடுக்க வேண்டும், எந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது வரையறுக்கப்பட்டுள்ளது. மானிட உடலளவையியலில் பயன்படுத்தப்படும் கருவிகளுள் மானிட உடலளவைமானி (Anthropometer), நகரும் இறுக்குமானி (Sliding Caliper), விரியும் இறுக்குமானி (Spreading Caliper), தசைமடிப்பு இறுக்குமானி (Skinfold Caliper), இடுப்பெலும்பளவைமானி (Pelvimeter), தாடைமானி (Goniometer), எலும்பளவைப் பலகை (Osteometric board) போன்றவை குறிப்பிடத்தக்கவை. அக்கருவிகள் சுவிட்சர்லாந்து, செருமனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் செய்யப்படுகின்றன. இன்று இந்தியாவில் உனா நிறுவனமும் (Una & Company) அக்கருவிகளைச் செய்கிறது.

முதல் உலகப் போருக்குப் பின்னர், மானிட உடலளவையியலின் பயன் பல துறைகளுக்குத் தேவைப்பட்டது. குறிப்பாக, இராணுவத் துறையிலும் தொழில் துறையிலும் பலவகையான அளவுகளுக்குக் கருவிகள் செய்ய வேண்டியிருந்தது. எடுத்துக்காட்டாக, இராணுவ வீரர்களுக்குத் தலைக்கவசங்கள் காலணிகள், உடைகள் போன்ற பல பொருட்கள் பெரும் எண்ணிக்கையில் செய்வதற்கு அவ்வளவுகள் தேவைப்பட்டன.

பழங்காலத்தில், மானிட உடலளவையியல் மக்களை உடலளவுகள் அடிப்படையில் பல இனங்களாக வகைப்படுத்துவதிலும், அவர்களிடம் அவ்வேறுபாடுகள் ஏன் தோன்றின என்பதிலும் பெருங் கவனம் செலுத்தி வந்தது. ஆனால், இன்று இப்பிரிவின் பயன் பல புதிய துறைகளில் ஈடுபடுத்தும் வகையில் விரிவடைந்துள்ளது. மருத்துவத் துறையில் இதன் பயன் மிகுதியாக உள்ளது. மக்களுக்குச் செயற்கை உடல் உறுப்புகளை உருவாக்குவதில் மானிட உடலளவை இன்றியமையாததாக உள்ளது. ஒவ்வோர் இனத்தவரும் உடல் வளர்ச்சி முறையில் எவ்வகையான தன்மையைப் பெற்றுள்ளனர் என்ற விவரங்கள் மானிடவியல் ஆய்வுகள் தவிர மருத்துவத் துறையிலும் பயன்மிக்கனவாக உள்ளன. ஏனெனில், சுற்றுச் சூழல், உணவு முறை, உடல் வளர்ச்சி ஆகிய மூன்றையும் இணைத்து மக்களின் வளர்ச்சி வீதங்களை அறிவதில் உடல்சார் மானிடவியலே முதலிடம் பெறுகிறது. காண்க: உடல்சார் மானிடவியல், கே.நி.

**மானிடவியல்**: மனிதனை உயிரியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் ஆராயும் ஓர் அறிவியல் துறையே மானிடவியல் ஆகும். மானிடவியல்(Anthropology) எனப் பொருள்படும் சொல்லை முதன் முதலில் கிரேக்க அறிஞர் அரிசுடாட்டில் பயன்படுத்தினார். எவரொருவர் தம்மைப் பற்றி அறிய முற்படுகிறாரோ அவரே மானிடவியலார் என்னும் பொருளில் அரிசுடாடில் அச்சொல்லைப் பயன்படுத்தினார். மேக்னசு ஹண்ட் (Magnus Hundt) என்பவர் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் அச்சொல்லை உடற்கூற்றியல் (Anatomy) என்கிற குறுகலான பொருள் தரும் சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தினார். அது கி.பி.17–ஆம் நூற்றாண்டில் மனிதனின் மனம், உடல் ஆகியவற்றின் உள்ளார்ந்த தன்மையை விளக்கும் துறை என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டது. மேலும் கி.பி.19 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சற்று வளர்ச்சியடைந்த நிலையில் மானிடவியல் என்னும் வழக்கு உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) என்கிற பொருளில் பயன்படுத்தப்பட்டது. சார்லசு தார்வினின் கொள்கைகளாலும், பிற உயிரியல் வளர்ச்சியாலும் அவ்வழக்கு வலுவடைந்தது.

இன்றைய நிலையில் மானிடவியல் உலகிலுள்ள அனைத்து வகையான மனித இனத்தவர்களின் உயிரி

யலையும் பண்பாட்டையும் ஆராயும் பரப்பைக் கொண்ட துறையாக விளங்குகிறது. மனிதனின் உயிரியல் ஆய்வையும், பண்பாட்டு ஆய்வையும் அடிப்படையாகக் கொண்ட இத்துறை ஒரு சமூகத்துடன் இன்னொரு சமூகத்தினை ஒப்பிடுகிறது. சமூகங்களின் கடந்த காலத்தை நிகழ்காலத்துடன் ஒப்பிடுகிறது. எதிர்காலம் குறித்தும் ஆராய்கிறது. மானிடவியல் மனிதனின் செயல்கள் யாவற்றையும் உயிரியல், பண்பாடு என்னும் கருத்தாக்கத்தின் கீழ் ஒருங்கிணைத்து ஒரு முழுமையான அறிவியல் நோக்குடன் ஆராய முற்படுகிறது.

மானிடவியல் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு துறையன்று. இது அண்மைக் காலங்களில் தோன்றி வளர்ந்த துறையாகும். இது கி.பி.19-ஆம் நூற்றாண்டில்தான் முழுமையான ஒரு கல்வித் துறையாக உருவெடுத்தது. ஆனால், அதனுடைய கருத்து நிலைகள்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டன. தார்வினது (கி.பி.19-ஆம் நூ.) படிமலர்ச்சிக் கொள்கையின் (Evolutionism) மாபெரும் வெற்றியும், அதன் விளைவாகத் தோன்றிய பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கொள்கையும் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டு மானிடவியலில் பெரும் பங்கு பெற்றிருந்தன. ஆனால், அதற்கு முன்னரே முழுமையான ஒரு மானிடவியல் கோட்பாடு இல்லையாயினும் பண்டைய கிரேக்க அறிஞர்களின் பல்வேறு கோட்பாடுகளில் மானிடப் பண்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது. அவற்றுள் முதன்மையானவையான இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர்களின் (Stoics) சுழற்சிக் கோட்பாடுகளும் (Cyclical Theories), தெமோகிரிட்டசின் (Democritus) அணுக் கொள்கையும் (Atomic Theory) பிற்காலப் படிமலர்ச்சிக் கோட்பாட்டிற்கு முன்னோடிகளாக அமைந்தன. பிறகு கி.பி. 15,16 –ஆம் நூற்றாண்டுகளில் அடுத்த முக்கிய வளர்ச்சிகள் நிகழ்ந்தன. மறுமலர்ச்சிக் கால மனிதநேயக் கோட்பாடும் (Humanism), புவியியல் ஆய்வுப் பயணமும் மானிடவியலின் தோற்றத்திற்கு ஓர் அறிவார்ந்த சூழ்நிலையை அமைத்துத் தந்தன. அதையடுத்து கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் பல்வேறு அறிஞர்களால் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் எண்ணற்ற இன மக்களின் பண்பாடுகளை அறிவதற்கான ஒரு புதிய அறிவியல் துறையின் இன்றியமையாமை உணரப்பட்டது. அதற்காகக் குடியேற்ற அரசுகளும் பிற ஐரோப்பிய அரசுகளும் மானிடவியல் வளர்வதற்கு உதவின. அதற்குக் காரணம் உலகின் பல பகுதிகளில் குடியேற்ற அரசுகளை அமைத்த ஐரோப்பியர்கள், குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அம்மக்களின் பண்பாட்டைத் தெரிந்து கொள்ள முற்பட்டதேயாகும். அதன்பின் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலங்களிலும் மானிடவியல் ஆய்வுமுறை அறிவார்ந்த வகையில் நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்துக்கு முன்னரே மானிடவியல் ஒரு தனிக் கல்வித் துறையாக உருவெடுத்தது.

மானிடவியல் வரலாற்று அடிப்படையிலான வளர்ச்சியினைத் தன்னகத்தே கொண்டுள்ளதால், அதன் ஆய்வெல்லை மிகப் பரந்ததாகும். மானிடவியலார், முதன் முதலில் மேலை நாட்டுப் பண்பாட்டிற்குத் தெரியவாராத மக்களையும் அவர்களின் பண்பாடுகளையும் ஆராய்வதில் ஈடுபட்டனர். அம்முயற்சி மொத்த மனித இனத்தின் உயிரியல், பண்பாட்டு நிலைகளை ஆராய்வது என்ற மிகப் பெரும் இலக்கின் தொடக்கமாக அமைந்தது. இன்றைய வளர்ந்த நிலையில் இத்துறை அனைத்துச் சமூகங்களையும் ஆராய்கிறது. இதன் ஆய்வுப்பரப்பு வருமாறு: மனிதனின் உயிரியல் கூறுகள், தகவமைப்பு, மொழி, சமூக அமைப்பு, நடத்தை முறைகள், அரசியல் முறை, சமயம், பிற பண்பாட்டு முறைமைகள் ஆகியன.

மானிடவியல் மக்களின் பண்பாட்டையும் உயிரியலையும் ஆராய முற்படுவதால் அது பல்துறை அறிவைத் தேடும் ஒரு துறையாக விளங்குகிறது. எடுத்துக்காட்டாக எசுகிமோ (Eskimo) சமூகம் குறித்து ஆராயும் மானிடவியல் அவர்களின் உடல் அமைப்புகள் குறித்து அறிய உயிரியல் பிரிவைக் கொண்டுள்ளது. அதைப் போல, அவர்களின் ஆதிகால வாழ்க்கையைப் பற்றி அறியவும், அதற்கும் இக்கால வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு குறித்து அறியவும் தொல்லியல் பிரிவைக் கொண்டுள்ளது. அவர்களிடம் தகவல் சேகரிக்கத் தொடர்புச் சாதனமாய் உள்ள மொழி பற்றி அறிய மொழியியல் என்னும் பிரிவையும் கொண்டுள்ளது. அவர்களின் கிராமங்கள் எவ்விதம் ஆளப் படுகின்றன என்பதனை அறிய அரசியல் சார் மானிடவியல் என்னும் பிரிவு உள்ளது. மேலும் அவர்களின் வேட்டை முறை, உணவு சேகரிக்கும் முறை, உணவு பகிர்ந்து கொள்ளப்படும்முறை, கம்பளி வணிகம் போன்ற பொருளாதார விவரங்களைக் கணக்கில் கொள்ளும் ஆய்வுப் பிரிவும் உள்ளது. அவற்றோடு அம்மக்களிடையே நிலவும் பாடல்கள், பண்ணிசை, நடனம் ஆகிய பிற பண்பாட்டுக் கூறுகளை ஆராயும் பிரிவும் இதனுள் உள்ளது. சடங்குகள், மந்திரங்கள் ஆகியவற்றைக் கொண்ட சமய ஆய்வும் இதில் ஒரு பகுதியாக உள்ளது. மக்களின் நோய், நோய்க் கோட்பாடுகள், நோய் நீக்கு முறைகள் ஆகியவற்றைப் பற்றி ஆராயும்போது மருத்துவம், சமூக உளவியல் குறித்த அறிவும் இதன் ஒரு பகுதி

யாக விளங்குகிறது. அவ்வனைத்து அறிவுப் பிரிவு களையும் ஒருசேரக் கொண்டதாக மானிடவியல் திகழ்கிறது.

மானிடவியல் தவிரப் பிற துறைகளும் மக்களைப் பற்றி ஆராய்கின்றன. தொல்லியலார் வரலாற்றுக் கும் முந்தைய மானிட வரலாற்றை ஆராய்கின்றனர். சமூகவியலார் மானிட சமுதாயத்தை ஆராய் கின்றனர். உளவியலார் மக்களின் நடத்தை முறை களை ஆராய்கின்றனர். மொழியியலார் மக்கள் மொழிகளை ஆராய்கின்றனர். மருத்துவவியலாரும் உயிரியலாரும் மானிட உடற்கூறுகள் செயற்பாடுகள் குறித்து ஆராய்கின்றனர். ஆனால், மானிடவியல் அவையனைத்தையும் ஒருசேர இணைத்து அனைத் துக்காலத்தையும் உள்ளடக்கி ஆராய்கிறது. அதாவது மக்களின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஆராய்கிறது. இவ்வாறு மக்களின் உயிரியல் கூறு களையும் பண்பாட்டுக் கூறுகளையும் ஒருசேர் ஆராய் வதாக அமைகிறது. அதனால் மக்களைப் பற்றி ஆராயும் துறைகளில் மானிடவியலே முழுமை பெற்ற துறையாக விளங்குகிறது. அனைத்துப் பிரிவு அறிவையும் ஒருசேர இணைத்து அறிவதால் இதன் அணுகுமுறை முழுதளாவிய அணுகுமுறை (Holistic Approach) எனச் சிறப்பித்துக் கூறப்படும்.

மேற்கூறிய பரந்த நிலையில் ஆராயும் தன்மை யைக் கொண்ட மானிடவியல், நான்கு முதன்மை யான உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை முறையே உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), தொல்லியல்சார் மானிடவியல் (Archaeologcal Anthropology), மொழியியல்சார் மானிடவியல் (Linguistic Anthropology), பண்பாட்டு மானிடவி யல் (Cultural Anthropology) ஆகும். இராட்கிளிப் பிர வுன் (A.R. Radcliffe-Brown), மாலினோசுக்கி (B.Malinowski) ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட ஆங்கிலேய மானிடவியல் சமுதாயச் செயற்பாட்டுக் கோட்பாட்டால் (Functionalism) கொண்ட தாக்கத் தினால் அவர்கள் பண்பாட்டு மானிடவியல் என்பதற் குப் பதிலாகச் சமுதாய மானிடவியல் (Social Anthropology) என்னும் பிரிவினைத் தோற்றுவித்தனர். இராட்கிளிப் பிரவுனும் மாலினோசுக்கியும் சமூக அமைப்பு, செயற்பாடு ஆகியவற்றிற்கும் வரலாற்று அடிப்படையில் அமைந்த பண்பாட்டு ஆய்விற்கும் (பண்பாட்டு மானிடவியல்) இடையே ஒரு துல்லிய மான வேறுபாட்டைக் காட்டுவதன் மூலம் சமூக மானிடவியலைப் பண்பாட்டு மானிடவியலிலிருந்து பிரிக்கின்றனர்.

மானிடவியலின் ஒரு தலையான பிரிவு உடல் சார் மானிடவியல். அது உயிரியல்சார் மானிடவியல் (Biological Anthropology) என்றும் கூறப்படும். நீண்டகாலமாய் உயிரியல்சார் மானிடவியலின் ஆர் வம் மக்கள் இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்ததாகும். உயிரியல்சார் மானிடவியலுக்கும் பிற உயிரியல்சார் அறிவியல்களுக்கும் இடையேயான வேறுபாட்டினைப் பின்வருமாறு சொல்லலாம். உயிரி யல்சார் அறிவியலின் முதன்மையான நோக்கம் அனைத்து மக்களுடைய பொதுவான உயிரியல் கூறு களை ஆய்வதேயாகும். ஆனால் உயிரியல்சார் மானிட வியல் மக்களிடையே நிலவும் உடல்சார்ந்த வேறு பாடுகளுக்கான காரணங்களை ஆராய்வதாகும்.

தொடக்கக்கால உயிரியல்சார் மானிடவியலார்கள் 'உயிரியல் படிமலர்ச்சியில் மனிதனின் தோற்றக் காலம் எங்கிருந்துதொடங்குகின்றது என்பதைக் கண் டறிவதில் ஈடுபட்டிருந்தனர். அக்காலங்களில், இவர்கள் புதைபடிவங்களை (Fossils) ஒப்பிட்டு ஆராய்ந்ததன் மூலம், ஈடுபட்ட இணைப்பைக் (Missing link) கண் டறிந்தனர். மக்களிடையே நிலவும் வேறுபாடுகளைக் கண்டறிந்து, வெளிப்படையாகத் தெரியக்கூடிய, அளந்து கூறக்கூடிய உடற்கூறுகள் அடிப்படையில் மக்களைவகை பாடுசெய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். ஆயினும், உயிரியலில் நிகழ்ந்த கண்டுபிடிப்புகளும் வளர்ச்சிப் போக்கும் உயிரியல்சார் மானிடவியலின் ஆய்விலும் மாறுபாடுகளை ஏற்படுத்தின. குறிப்பாக, 1900-களில் மெண்டல் (Mendal) என்பாரின் மரபி யல் கோட்பாடுகள், உயிரியல் சார் மானிடவியலில் மனித மரபியல் தொடர்பான ஆய்வுகளுக்கு உதவின. அதே போன்று இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு மூலக்கூறு உயிரியல் (Molecular Biology) பிரிவில் நிகழ்ந்த பெரும் வளர்ச்சி, உயிரியல் படிமலர்ச்சியில் இரண்டு தொடர்புடைய இனங்களுக்கு இடையி லான இடைவெளியினைக் கண்டறிவதில் கவனம் செலுத்த உதவியது. அத்துடன் புதிய காலக் கணிப்பு (Dating) முறைகள் தொல்லுயிரியலின் (Palaeontology) மீட்டுருவாக்கத்திற்குப் பெரிதும் உதவின. இவை தவிர, உயிரியல் சார் மானிடவியலின் பிற் கால ஆய்வுகளில் குரங்கு, மனிதக்குரங்கு உள்ளிட்ட உயர்பாலூட்டிகள் (Primates) பற்றிய ஆய்வுகளில் மிக்க ஆர்வம் காட்டப்பட்டது. குரங்குகள், மனிதக் குரங்குகளிடையே வெவ்வேறு நிலைகளில் நிகழும் சமூக வாழ்வின் நடத்தைகள் சான்றுகளுடன் விளக் கப் பட்டன. எடுத்துக்காட்டாக, ஆண்டு முழுதும் இணைந்து வாழும் ஆண், பெண் இணைகள், நீண்ட காலம் முதியவர்களை நம்பி வாழும் குட்டிகள், உறவு ஏற்படுத்திக் கொள்வதில் இயற்கையாய் விழை யும் தன்மை, ஆயுதங்களைப் பயன்படுத்தல் ஆகிய அந்நடத்தைகள் யாவும் உயிரினப் படிமலர்ச்சியில் பொருத்திப் பார்க்கப்பட்டன. இன்றைய உயிரியல்சார்

மானிடவியலார், இனவேறுபாடுகள், அவற்றோடு தொடர்புடைய அனைத்து வகை ஆய்வுகள் ஆகிய வற்றில் ஈடுபடுகின்றனர்.

மானிடவியலின் மேலுமொரு பிரிவான தொல் லியல்சார் மானிடவியல், வரலாற்றுக்கு முந்திய காலத்து மக்கள் இனத்தின் வாழ்க்கை பற்றி ஆராய் கிறது. அக்கால மக்கள் விட்டுச் சென்றுள்ள பொருட்களை அகழாய்வு மூலம் கண்டு அம்மக்களின் வாழ்க்கை முறைகள் ஆராயப்படுகின்றன. பல நூறு அல்லது பல மிலியன் ஆண்டுகளுக்கு முந்தைய காலத் தைச் சேர்ந்த அப்பொருட்கள் பண்டைய மக்கள் வாழ்ந்த இடங்களிலிருந்து கண்டெடுக்கப்படுகின்றன. அவ்வகை ஆய்வுகளில் பல்வேறு வகையான பொருட் கள் இடம் பெறுகின்றன. கழிவுப் பொருட்களைக் கொண்டு ஆதிகால மக்களின் உணவு முறைகளை யும், புதைபடிவங்களிலிருந்து அவர்களின் உணவின் மூலக் கூறுகளையும், அவ்வுணவு சமைக்கப்பட்டதா, சமைக்கப்படாமல் உண்ணப்பட்டதா என்பதனையும் அறிகின்றனர். அவர்களின் வாழிடங்களில் கிடைக் கும் விலங்குகளின் எலும்புகளைக் கொண்டு அவ் விலங்கின் வயதும், அவ்விலங்கு வீட்டுவிலங்கா, காட்டு விலங்கா என்பது பற்றிய உண்மையும் கண்டறியப் படுகின்றன. அவற்றையெல்லாம் கொண்டு தொல்லி யல்சார் மானிடவியலார் வியக்கத்தக்க வகையில் அக்கால மக்களின் பொருளாதார, சமுதாய அமைப்பு களை மீட்டுருவாக்கம் செய்கின்றனர். வாழிடங்களி லிருந்து கண்டெடுக்கப்படும் கலைப் பொருட்கள், உருவாக்கப்பட்ட கருவிகள் ஆகியவற்றைக் கொண்டு அவை உருவாக்குவதற்கான மூலப்பொருட்கள் குறிப் பிட்ட இடத்திலேயே கிடைத்தனவா, பிற இடங்களி லிருந்து கொண்டு வரப்பட்டனவா என்பதனையும், அதிலிருந்து பழங்கால வாணிகத் தடங்களையும் கண்டுபிடிக்கின்றனர்.

மட்பாண்டச் சிதைவுகளைக் கொண்டு தொழில் நுட்ப வளர்ச்சியையும், அது கிடைக்கும் அளவினைக் கொண்டு மக்கள்தொகை அளவு, நெருக்கம் ஆகிய வற்றையும் ஒரே முறையில் வெவ்வேறு இடங்களில் நிலவியிருந்த தொழில்நுட்ப வளர்ச்சியையும், கலை நுணுக்கத்தையும், அவ்விடங்களுக்கிடையே நிகழ்ந் திருக்கக் கூடிய பண்பாட்டுத் தொடர்புகளையும் அவர்கள் தெளிவுபடுத்துகின்றனர்.

குறிப்பிட்ட அமைப்புகளைக் கொண்ட கட்ட டங்கள், பொது இடங்கள் ஆகியவற்றைக் கொண்டு, அச்சமூகங்களில் நிலவியிருக்கக் கூடிய அரசியல் அமைப்புமுறை அறியப்படுகிறது. சில பழங்காலச் சமூகங்களில் அதிக அளவிலான மக்கள் ஒன்று திரட் டப்பட்டுப் பொதுப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவ்வகையில்தான் பெரிய பெரிய கோயில்களும் கூர்ங் கோபுரங்களும் எழுப்பப்பட்டன. அதிலிருந்து அச்சமூ கம் ஒரு மைய அதிகார அமைப்பைக் கொண்டிருந் தது என்பதை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது.

தொல்லியல்சார் மானிடவியலின் அண்மைக் கால ஆய்வுகள் தொல்பழங்காலச் சூழலியலோடும் (Palaeo - ecology) தொடர்புடையன. அதில், ஆதி கால மனிதன் தன்னுடைய சூழலுடன் கொண்டி ருந்த தொடர்பும், அது காலத்திற்குக் காலம் வெவ் வேறு இடங்களில் எவ்விதம் மாறி வந்திருக்கிறது என்பதும் ஆராயப்படுகின்றன.

மேலும், இவர்கள் தொல்லியலாரின் உதவியுடன் பழங்கால மக்கள் வாழ்ந்த இடத்தில் அகழ்வா ராய்ச்சியில் ஈடுபட்டு மண்ணடுக்காய்வு செய்கின்ற னர். அடுத்தடுத்த வெவ்வேறு நில அடுக்குகளைக் காண்கின்றனர். அதில் ஒவ்வொரு அடுக்கிலும் நிகழ்ந் திருக்கக்கூடிய சமூகப் பண்பாட்டு முறைகளைக் கொண்டு மனிதப் படிமலர்ச்சி ஆராயப்படுகிறது. அதில் மனித வாழிட அமைப்பில் நிகழ்ந்த மாற்றங் களும், அச்சமூகத்தின் பொதுவான சமூகப் பொருளா தார அரசியல் அமைப்புகளில் நிகழ்ந்த மாறுபாடு களும் ஆராயப்படுகின்றன.

மானிடவியலின் மேலுமொரு பிரிவு மொழியியல் சார் மானுடவியலாகும். இது அண்மைக் காலங் களில் வளர்ச்சியடைந்த ஒரு பிரிவாகும். இது ஒரு மொழியினை மனிதச் சூழலமைவிலும், பண்பாட்டு அடிப்படையிலும், சமூகவியல் அடிப்படையிலும் ஆராய்கிறது.

மொழியின் தோற்றம் குறித்த ஆய்வுகளைக்காட் டிலும் மொழிக்கும் பண்பாட்டிற்கும் உள்ள உறவு கள் குறித்தே மிகுதியான ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. காலத்தால் மொழிகள் யாவும் சிறிது சிறிதாக ஒரு முறையான மாற்றங்களுக்கு உள்ளா கின்றன. எனவே, அவற்றின் வரலாறு குறித்து அறி வது, மக்களின் தொடக்கக்கால இடப்பெயர்ச்சி, தொடர்பு ஆகியவற்றை அறிவதற்குத் தேவையான சான்றுகளை அளிக்கின்றது. பெரும்பாலும் உலகின் அனைத்து இனமக்களும், அவர்களின் உடனடியான வாழ்வியல் தேவைகள் குறித்தே அதிகம் பேசுகின்ற னர். எனவே, ஒரு மொழியின் மொழித் தொடர்பு களும், சொற்களும் அம்மொழி பேசும் குழுவின் பொருளுலகம், கருத்துலகம், சமூகம் ஆகியவை பற்றி அறிவதற்கான தரவுகளைக் கொண்டுள்ளன. மேலும், எந்த ஒரு சமூகத்தினைப் பற்றிய ஆய்விலும் அவர் களின் கருத்துப் புலப்படுத்தும் திறன் பற்றிய ஆய் வுச் செய்தி இடம் பெறவில்லையாயின் அவ்வாய்வு முழுமையான ஒன்றாய்க் கருதப்பட மாட்டாது.

ஆகவே, பண்பாடு பற்றிய ஆய்வில் மொழி ஆய்வும் முதன்மையான இடம் பெறுகிறது.

மொழியியல்சார் மானிடவியலாரின் அண்மைக் கால முக்கியத்துவம், குரங்கு, மனிதக்குரங்குகள் உள்ளிட்ட உயர்பாலூட்டிகளின் கருத்துப் புலப்படுத்தும் முறை குறித்தும், வெவ்வேறு பண்பாடுகளில் பேசப்படும் மொழிகளின் தன்மை குறித்தும் அமைகிறது. இதில் முந்தியது உயிரியல் வழியிலான விவர ஆய்வு, பிந்தியது சமூகவியல் வழியிலான விவர ஆய்வு ஆகும். ஒருமொழி குறித்த விளக்கவுரை (Description) அம்மொழிபேசும் மக்கள் எவ்விதம் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்கின்றனர் என்பதையும், அம் மக்கள் தங்களைச் சுற்றியுள்ள உலகினை எவ்விதம் புரிந்து கொள்கின்றனர் என்பதையும் அறிய உதவுகிறது.

மானிடவியலின் மற்றுமோர் உட்பிரிவு பண்பாட்டு மானிடவியல் ஆகும். அப்பிரிவு மனிதப் பண்பாட்டினை முதன்மையான ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது. அது உயிரியல் மானிடவியல் தவிரப் பிற துணைப் பிரிவுகளுடன் நேரடியான தொடர்பு கொண்டிருக்கிறது. அதன் முக்கிய கருத்துருவமான 'பண்பாடு' என்பதன் வரையறையினை அறிவதன் மூலம், பண்பாட்டு மானிடவியலின் ஆய்வுப் பரப்பு வெளிப்படும்.

'பண்பாடு' என்பதில் மனிதன் தன் சமூகத்தில் ஓர் உறுப்பினராக இருந்து அறிந்து கொண்ட அனைத்தும் அடங்கும். பண்பாடு மனிதனை ஏனைய உலக உயிரிகளிடமிருந்து தனித்துவப்படுத்திக் காட்டுகிறது. மனிதன் மட்டுமே மொழியைக் கொண்டிருக்கிறான்: பண்பாட்டைக் கொண்டிருக்கிறான்; பல வகையான குறியீடுகளைக் (Symbols) கொண்டிருக்கிறான்: கருவிகளைத் தொடர்ந்து கண்டுபிடிக்கவும், பயன்படுத்தவும் செய்கிறான். மனிதன் மட்டுமே தன்னுடைய அடுத்த தலைமுறைக்கு மிகுதியான அளவு தகவல்களையும், அனுபவங்களையும் விட்டுச் செல்கிறான். மனிதன் மட்டுமே எவ்வகையான சூழ்நிலையிலும் தன் பண்பாட்டினைப் பேணும் ஆற்றலைக் கொண்டிருக்கிறான்.

பல்வேறு மக்களிடையே நிலவும் பண்பாட்டு அமைப்புகளையும் அவற்றின் செயல்முறைகள், மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றையும் பண்பாட்டுமானிடவியல் ஆராய்கிறது. அத்துறை, மனிதனின் தொடக்கக் காலச் சமூக நடத்தைகள் முதல் இக்காலச் சமூக நடத்தைகள்வரை ஆராய்கிறது. பண்பாட்டுமானிடவியலார் பழங்குடிப் பண்பாட்டிலிருந்து இக்காலத் தொழில்துறைச் சமுதாயங்கள் வரை அனைத்துப் பண்பாடுகளையும் ஆராய்கின்றனர்.

ஆங்கிலேய மானிடவியலாரின் தனிப்பட்ட போக்கால் உருவானதே சமுதாய மானிடவியல் ஆகும். அது சமூக நடத்தைகள், செயல்முறைகள் ஆகியவற்றை அமைப்பியல்-செயற்பாட்டியல் அடிப்படையில் (Structural-functional basis) ஆராய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அது நிலையான (Standardized) நிறுவனமயமாக்கப்பட்ட (Institutionalized) சமூக நடத்தைகள் அனைத்தையும் தன் ஆய்வெல்லையாகக் கொண்டிருக்கிறது. இச் சமூக நிறுவனங்களுள் குடும்பம், திருமணம், உறவுமுறை (Kinship), பொருளாதாரம், அரசியல், சமூகக் கட்டுப்பாடு, ஒழுக்க முறைகள், சமயம் போன்றவையே முதன்மையானவை. ஏனைய துறைகளைக் காட்டிலும் ஒரு சமுதாய மானிடவியலார் மட்டுமே சமூக உறவுகள், நடத்தைகள் குறித்துத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் விளக்கவும் இயலும்:

பண்பாட்டு மானிடவியலினைப் போலவே, சமுதாய மானிடவியலும் சமுதாயம் குறித்து ஒரு முழுதளாவிய (Holistic) அணுகுமுறையைக் கொண்டிருக்கிறது. சமூக நடத்தைகள் என்பன இடைத்தொடர்பு கொண்ட பல்வேறு சமூக நிறுவனங்களில் உள்ளார்ந்த, ஒரு முறையான அமைப்பாக்கமே என்பதைச் சமூக மானிடவியல் வலியுறுத்துகிறது. சமூகத்தில் அத்தகைய செயற்பாட்டு இடைத் தொடர்பினைச் (Functional interrelationship) சமுதாய மானிடவியலார் சிறப்பாக விளக்கிக் கூறுவர். அவர்கள், அனைவரிடமும் நேரடித் தொடர்பு கொள்ள முடிகிற சிறிய அளவிலான சமூகங்களில் கள ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட செய்திகளைக் கொண்டு, செயற்பாட்டு உறவினை (Functional relationship) விளக்கிக் கூறுவர்.

அத்தகைய நிறுவனமயமாக்கப்பட்ட சமூக உறவுகள் குறித்த ஆய்வுகள் தொடக்கக் காலங்களிலிருந்தே காணப்படுகின்றன. முதன் முதலில் ஒரு முறையான கோட்பாட்டு அடிப்படையில் சமுதாய மானிடவியலின் ஆய்வுப் பொருள், உலோவியின் (R.H. Lowie) 'தொன்மைச் சமுதாயம்' (Primitive-Society) என்கிற நூலின் மூலமே அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கிடையே இராட்கிளிப் பிரவுன், மாலினோசுகி ஆகிய இருவரும் கள ஆய்வு அடிப்படையில் கோட்பாட்டுப் பயிற்சியுடனும், உள்பார்வைகளுடனும் சமகாலச் சமூக நிறுவனங்களை ஆராய்வதற்கான கருத்துருவத் திட்ட முறையை (Conceptual framework) உருவாக்கினர். இதுவே இன்றைய ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலின் மையக் கருத்தாக விளங்குகிறது. பெ.த.

**துணை நூல்கள்:**

**Beattie, Jhon**, Other Cultures: Aims, Methods and Achievements in Social Anthropology, The Free Press, New York, 1964.

**Coon, Carleton S.**, A Reader in General Anthropology, Holt, Rinehart and Winston, New York, 1948.

**Jennings, J.D.**, and **E.A. Hoeb** (Eds.), Readings in Anthropology, Mcgraw-Hill, New York, 1966.

**Kroeber, A.L. (Ed)**, Anthropology Today: An Encyclopedic Inventory, The Chicago University Press, Chicago 1952.

*மானிடோபா*: மானிடோபா (Manitoba), கனடாவின் மத்தியபகுதியின்கிழக்குக் கோடியில் உள்ள ஒரு மாநிலமாகும். இதன் பரப்பளவு 6,50,000 சதுர கி.மீ. ஆகும். இம்மாநிலத்தில் வட கிழக்கில் அட்சன் விரிகுடாவும், தெற்கில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் மேற்கில் சாசுகட்சுவான் (Saskatchewan) மாநிலமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் தலைநகர் 'வின்னிபெக்கு' ஆகும்.

இங்கு, வின்னிபெக்கு, வின்னிபேகோசிசு, மானி-டோபா, செடார், மூசு போன்ற பல பெரிய ஏரிகளும் போர்குபைன், இடக்கு, இரைடிங்கு போன்ற மலைகளும் உள்ளன. சர்ச்சில், கேயசு (Hayes) நெல்சன்ரெட்டு, சாசுகட்சுவான் ஆகியவை முக்கிய ஆறுகளாகும். மாநிலத்தின் தென்பகுதியில் கோடைக் காலத்தில்90°பா.முதல்100°பா.வரைவெப்பம்இருக்கும். ஆனால், இரவில் ஓரளவு குளிர் இருக்கும். கோடையில் 375மி.மீ. முதல் 500மி.மீ. வரை மழை பெய்யும்.

இங்குப் புல்வெளிகளும் காடுகளும் உள்ளன. காடுகளில் பல்வேறு வகை மரங்கள் உள்ளன. காடுகளில் கறுப்புக் கரடி, மர ஓநாய், நரி, மூசு போன்றமிருகங்கள் உள்ளன. இங்குள்ள காடுகளில் அடிக்கடி தீப்பிடிப்பதால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் மரங்களும் பாழாகின்றன. ஏரிகளில் பலவகையான மீன்களும் கிடைக்கின்றன. மானிடோபாவின் தென் பகுதியில் அசினிபோயின் (Assiniboin), ஒசிப்வா (Ojibwa) போன்ற இந்தியப் பழங்குடியினரும், காட்டுப்பகுதியில் கிரீ (Cree) பழங்குடியினரும், அட்சன் குடாவில் வட பகுதிக் கடலோரக் கரைகளுக்கு அப்பால் எசுகிமோக்களும் (Eskimos) குடியிருந்தனர்.

மானிடோபா பகுதியில் தச்சுக்காரர்கள் (Dutch) பிரான்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலியோர் குடியேறினர். ஆங்கிலேயருக்கும், பிரான்சுக்காரர்களுக்கும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சண்டையில் இப்பகுதி பாதிக்கப்பட்டது. அட்சன் குடாப்பகுதியில் ஆங்கிலேயர்களும், மானிடோபாவின் கிழக்குப் பகுதியில் பிரான்சுக்காரர்களும் குடியேறிக் கோட்டைகளை அமைத்தனர். ஆங்கிலேயர் கனடாவை வெற்றி கொண்ட பிறகும், சில காலம் ஆங்கிலேயர்களுக்கும், பிரான்சுக்காரர்களுக்கும் சண்டை நீடித்தது. பின்னர் கி.பி. 1869 – ஆம் ஆண்டு, புதிதாக ஆட்சியுரிமை பெற்ற கனடா அட்சன் நிறுவனத்திடமிருந்து அங்குள்ள குடியேற்றப் பகுதிகளைப் பெற்றது. பின்னர் கி.பி. 1870–ஆம் ஆண்டு மானிடோபா மாநிலம் அமைக்கப்பட்டு, கனடாவின் கூட்டாட்சியுடன் இணைந்தது. வின்னிபெக்கு நகரம் விரைவில் வளர்ச்சி பெற்று அமெரிக்க ஐக்கிய நாடுகளுடனும் கனடாவின் கிழக்குப் பகுதியுடனும் தொடர்வண்டி மூலம் இணைக்கப்பட்டது. பின்னர், வெளிநாட்டிலிருந்து பலர் இங்கு அதிக அளவில் குடியேறினர். பிறகு அங்கிருந்து மேற்கில் உள்ள புதிய இடங்களில் குடியேறத் தொடங்கினர்.



வின்னிபெக்கு நகரம்

இங்கிலாந்துப் பாராளுமன்றம் இயற்றிய ஆங்கில-வடஅமெரிக்கச் சட்டத்தின் மூலம் இம்மாநிலம் ஓர் அரசியலமைப்பைப் பெற்றது. அதிகாரங்களை மத்திய அரசும் மாநில அரசும் பங்கிட்டுக்கொண்டிருக்கின்றன. மாநிலச் சட்டமன்றத்திற்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடக்கும். தேர்தலில் பெரும்பான்மை இடத்தைப் பெற்ற கட்சியிலிருந்து முதல் அமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் நியமிக்கப் படுவர். தல ஆட்சிமுறை மாநிலத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இம்மாநிலத்திலிருந்து கனடாவின் பாராளுமன்றத்தின் மேல் சபைக்கு 6 உறுப்பினர்களும் கீழ் சபைக்கு 14 உறுப்பினர்களும் செல்லுகின்றனர்.

இதன் மக்கள் தொகை 1981 - இல் 10,26,241 ஆகும். அதில் பல இன மக்கள் அடங்குவர். ஏறத்தாழ 45% மக்கள் ஆங்கிலேயர். பிரான்சுக்காரர், உக்ரேனியர், செருமானியர், தச்சுக்காரர்கள், போலந்து நாட்டினர், இசுகாண்டிநேவியர், யூதர் முதலியோர் வசிக்கின்றனர். இங்குள்ள முக்கிய நகரங்கள் வின்னிபெக்கு, போனிபேசு (Boniface), புனித சேம்சு (St. James), பிராண்டன் (Branden), புனித வைட்டல் (St. Vital), கிழக்குக் கில்டோனன் (East Kildonan), திரான்சு கோனா (Trans-Cona) முதலியனவாகும்.

பொதுக் கல்வியில் உள்ள தொடக்க, இடைநிலை, தொழில்நுட்பக் கல்விக் கூடங்கள் மாநில அரசுக் கல்வித் துறையின் மேற்பார்வையில் உள்ளன. மானிடோபா, பிராண்டன் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். இலண்டன் பல்கலைக்கழகத்தைப் போல மானிடோபாப் பல்கலைக் கழகம் கி.பி. 1877-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதனுடன் பல கல்லூரிகள் இணைக்கப்பட்டன.

மானிடோபா பல ஆண்டுகளாக வேளாண்மை மாநிலமாகக் கருதப்பட்டாலும், 1960 - ஆம் ஆண்டிற்குப் பிறகு வேளாண்மைப் பொருட்களைக் காட்டிலும் ஏனைய பொருட்கள் அதிக அளவில் உண்டாக்கப்படுகின்றன. இங்குக் கோதுமை, ஓட்சு, பார்லி, இரை, காய்கறிகள் முதலியவை பயிராகின்றன. கோதுமையின் முதன்மை குறைந்தவுடன், மேய்ச்சல் நிலங்களும், புல்வெளிகளும், தீவனப் பயிர்களும் அதிகரித்துள்ளன. எண்ணெய் வித்துகள் பெறுவதற்காக அதிக அளவில் சூரியகாந்திப் பயிர் உற்பத்தி செய்யப்படுகின்றது.


இங்கு அதிக அளவில் ஆடுகள், மாடுகள், பன்றிகள் முதலியன வளர்க்கப்படுகின்றன. மானிடோபா கால்நடைகளை அமெரிக்க ஐக்கிய நாட்டினர் விரும்பி வாங்குகின்றனர். இயந்திரங்கள் அதிக அளவில் புகுத்தப்பட்டதால் குதிரைகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

இங்குள்ள ஏரிகளில் பலவகையான மீன்கள் வளர்க்கப்படுகின்றன. ஏறத்தாழ ஐந்தாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் மீன்பிடிப்பதற்காக விசைப் படகுகளைப் பயன்படுத்திக் கோடையில் மீன் பிடிக்கின்றனர். அம்மீன்களில் 90 விழுக்காடு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் விற்பனையாகின்றது. இன்பப் பயணிகள் பலர் பொழுது போக்கிற்காக இங்கு மீன்பிடிக்க வருகின்றனர்.

பொன், செம்பு, நிக்கல், வெள்ளி, துத்தநாகம் போன்ற தாதுப் பொருட்கள் கிடைக்கின்றன. இம் மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில் கல்எண்ணெய் கிடைக்கிறது. இங்கு இரண்டாம் உலகப் போருக்குப் பின் நீர்மின்சக்தி அதிக அளவில் கிடைக்கிறது. தொடர் வண்டி எந்திரங்கள், பேருந்துகள், ஆகாய விமானத்தின் பாகங்கள், மின்சாரக் கருவிகள், துணி வகைகள், தோல்பொருட்கள், தாள், மரக்கூழ் முதலியவை உண்டாக்கப்படுகின்றன. இறைச்சிகளைத் தகரப் பெட்டிகளில் அடைக்கும் தொழிலும் நடைபெறுகிறது.

ஏரிகள் உள்நாட்டு நீர்வழிகளாகப் பயன்படுகின்றன. இரண்டு பெருவழிச் சாலைகள் மாநிலத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லுகின்றன; இரண்டு பெருவழிச் சாலைகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் செல்லுகின்றன. மேலும், இம் மாநிலத்தின் முதன்மையான நகரங்கள் இருப்புப் பாதை மூலமும் ஆகாய விமானம் மூலமும் இணைக்கப்பட்டுள்ளன. அ.சி.

**மானிதூலின் தீவுகள்,** வடஅமெரிக்காவில் ஹூரன் ஏரிக்கு வடக்கிலும், சார்சியன் விரிகுடாவுக்கு வடமேற்கிலும் உள்ள ஒரு தீவுக் கூட்டம். மானிதூலின் (Manitoulin) தீவுக் கூட்டத்தில் மூன்று பெரிய தீவுகளும் பல சிறு தீவுகளும் அடங்கும். இத் தீவுகளில்




மீன்பிடித்தல் மிகுதியாக நடைபெறுகிறது. இவற்றின் தட்பவெப்ப நிலை காரணமாக மக்கள் பலர் இங்கு வந்து தங்கிப் போவது வழக்கம். பால்பண்ணைத் தொழில், மரம் வெட்டுதல், பயிர் விளைத்தல், சுற்றுலாப் பயணத் தொழில் முதலியன இங்கு நடைபெறுகின்றன. மானிதூலின் தீவு மட்டும், 130 கி.மீ. நீளத்தையும் 3.2 கி.மீ முதல் 48.3 கி.மீ. வரையுள்ள அகலத்தையும் பெற்றுள்ளது. உலகின் ஏரித்தீவுகள் யாவற்றிலும் இவையே மிகப் பெரியன. நூற்றுக்கு மேற்பட்ட ஏரிகளை இவை தன்னுள் கொண்டுள்ளன. தெ.பா.

**மானிய கேடம்:** தென்னிந்தியாவில் தக்காணப்பகுதியில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தலை

நகராகச் சிறப்புற்றிருந்த மானிய கேடம் என்னும் நகரம் (இக்கால மால்கேட்டு, Malkhet) இராட்டிர கூடரின் தலை நகராக விளங்கியது. இதைத் தமது தலைநகராகக்கொண்டு, கி.பி. 814 முதல் 880 வரை முதலாம் அமோக வருசர் என்பார் ஆட்சி செய் தார். அம்மன்னனுக்கு முற்பட்ட பட்டயம் எதிலும் மானியகேடம் தலைநகராக விளங்கிய செய்தி காணப்படவில்லை. மானிய கேடத்தை நிறுவியவர், அமோக வருசர் என்பது ஒரு செப்பேட்டினால் அறியப்படுகிறது. இராட்டிரகூடர், மானிய கேடத்தைத் தலைநகரமாக மாற்றிக்கொள்வதற்கு முன்னர், அவர்கள் தலைநகரம் எது என்பதைப் பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூறுவதற்கில்லை. மானியகேடத்தைத் தம் தலைநகராகக் கொண்டிருந்த இராட்டிர கூடர், பல போர் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. முதலாம் அமோக வருசருக்குப் பிறகு, இரண்டாம் கிருட்டிணன் (கி.பி. 880-914), மூன்றாம் இந்திரன் (கி.பி. 914-928), இரண்டாம் அமோக வருசர் (கி.பி. 928-929), நான்காம் கோவிந்தன் (கி.பி. 930-936), மூன்றாம் அமோக வருசர் (கி.பி. 936-939), மூன்றாம் கிருட்டிணன் (கி.பி. 939-967), கொட்டிகன் (கி.பி. 967-972), இரண்டாம் கார்க்கன் (கி.பி. 972-973) ஆகிய மன்னர்கள் மானிய கேடத்திலிருந்து ஆட்சி புரிந்தனர். அவர்களின் கீழ், கலைத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும், இந்நகர் சிறப்புற்றோங்கியிருந்தது. ஆனால், அடிக்கடி போர்கள் இங்கு நிகழ்ந்து வந்தன. மூன்றாம் கிருட்டிணனின் தவறான சில கொள்கைகள் மானிய கேடத்து இராட்டிரகூட ஆதிக்கத்தை வலிமைகுன்றச் செய்தன. அவருக்குப் பின் அரியணை ஏறிய அரசர்கள் திறமையற்றவர்கள். மக்களின் எதிர்ப்பு வலிமையடைந்தது. நிருவாகச் சீர்கேடுகள் மலிந்தன. சிற்றரசர்கள் சுதந்திர ஆர்வத்துடன் செயற்படலாயினர். இரண்டாம் தைலன் என்ற ஒரு சிற்றரசன், கி.பி. 973-இல் மானிய கேட இராட்டிரகூட மன்னன் கார்க்கனுக்குப் பகையாகப் போரிட்டு மானிய கேட அரசு சிதைவுறுவதற்கு வழிவகுத்தான். வடக்கே நர்மதையையும் தெற்கே காவிரியையும் மேற்கே அரபிக் கடலையும் எலலைகளாகக்கொண்டு, மாளவம், தெற்குக் குசராத்து முதலிய வட இந்தியப் பகுதிகளையும் தன்னுட்கொண்டிருந்த பரந்த மானிய கேட அரசு, தைலனால் முறியடிக்கப்பட்டது. தைலன், கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மானிய கேடத்தைக் கைப்பற்றிக்கொண்டதால், இராட்டிரகூடர் ஆட்சி அங்கு முடிவுற்றது. மேலே கூறப்பட்ட இரண்டாம் தைலன், பாதாமிச் சாளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசியின் இளவலான விட்டுணு வர்த்தனின் கால் வழியில் வந்தவன் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. தெ.பா.

**மானூசி:** இவர் இந்தியாவில் ஆட்சிச்செய்த மொகலாய அரசைப் பற்றி அறிந்துகொள்ள உதவும் ஆதாரங்களில் ஒன்றாகிய முகலாயர் வரலாறு (Storia Do Mogor) என்னும் நூலை எழுதிய ஐரோப்பிய அலுவலர் ஆவார். இவர் இத்தாலியில் உள்ள வெனிசு (Venice) நகரினர். மானூசி (Manucci) கி.பி.1656-இல் இந்தியாவுக்கு வந்தார். மொகலாய ஆட்சியைப் பற்றியும் குறிப்பாகச் சாசகான் (Shajahan), அவுரங்கசீபு ஆகியோரின் ஆட்சி முறையைப் பற்றியும் எழுதப்பட்டுள்ள இவர் நூல், பிரெஞ்சு, போர்ச்சுகீசிய, இத்தாலிய மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. அந்நூல் கால வரையறைப்படி ஒழுங்கு செய்யப்படவில்லை. ஆயினும், அக்காலத்திய சமூக, அரசியல் செய்திகள் பல வற்றை அதன் மூலம் அறிய முடிகிறது. இவர் இந்தியாவிலேயே சில அலுவல்களை மேற்கொண்டு சிலகாலம் தங்கியிருந்ததால், இவருடைய குறிப்புகளுக்குச் சிறப்பு அளிக்கப்படுகிறது. ஆனால், இவர் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் கலந்து எழுதியுள்ளார். தொடக்கத்தில் இவர் முகலாயரின் கீழ் ஒரு பீரங்கிப்படை அலுவலராக அமர்ந்தார். பிறகு ஒன்றன்பின் ஒன்றாகப்பல பெரிய பதவிகள் இவருக்குக் கிடைத்தன. இக்காரணங்களால் இவர் எழுதிய குறிப்புகளுக்கு வரலாற்றறிஞர்கள் தனிச் சிறப்பைக் கொடுக்கின்றனர். தெ.பா.


**மானூர்க் கல்வெட்டு:** தென்னிந்தியாவில் ஆட்சி செய்த பாண்டியர் ஆட்சி முறையைப் பற்றிக் குறிப்பிடும் மானூர்க் (திருநெல்வேலி மாவட்டம்) கல்வெட்டு ஏறத்தாழ கி.பி.800-ஆம் ஆண்டுக்கு உரியது. இது, பாண்டிய நாட்டு ஊராட்சி முறையை விளக்கா நிற்கும். தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களடங்கிய அவைகளைப் பற்றியும் குழுக்களைப் பற்றியும் இக்கல்வெட்டு மூலம் அறியலாம். சோழர்களின் அரசாட்சியில் கி.பி.10 – ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட ஊராட்சி முறையை ஓரளவு ஒத்த ஒரு விவரத்தை, மானூர்க் கல்வெட்டு குறிப்பிடுகிறது. 'அவை'(Sapaa) செயற்படும் போது அதற்குத் தடைகள் ஏற்படும்படி செய்யும் உறுப்பினர்களின் தந்திரங்கள் எவ்வாறு பயனற்றதாக்கப்பட்டன என்ற குறிப்பு இக்கல்வெட்டில் காணக்கிடக்கிறது. அக்கால, இத்தகைய முன்னேற்றத்தைப் பற்றி அறிஞர்கள் பலர் வியந்து போற்றியுள்ளனர். பாண்டியரின் ஊராட்சி முறையில் பல அலுவலகங்களைப் பற்றிய குறிப்புகள் இருந்தபோதிலும், இராணுவத்தொடர்பான அதிகாரங்களும் அமைதிக்கால அதிகாரங்களும் வேறுபடுத்தப்பட்டிருந்தனவாகத் தெரியவில்லை. மானூர்க் கல்வெட்டால் அக்கால இலக்கியச் சிறப்பையும் உணர முடிகிறது. தெ.பா.


மி மகரமெய்யும் இகர உயிர் எழுத்தும் கலந்த இந்த ஒலி உதடுகளைப் பிரித்து, மூக்கால் எழுப்பி, வாயை இளித்த நிலையில் வெளிப்படுத்தும் பொழுது பிறக்கிறது. உருவம், மகரத்தைப்பற்றிய குறிப்பைப் பார்க்கவும். ஏனைய மெய்யெழுத்துகளுக்கு உள்ளதைப்போல் இந்த மகர மெய்க்கும் உயிர்க்குறியீடுகள் சேர்கின்றன.

இகரக்குறி மெய்யெழுத்தின் தலைக்கட்டின் வலப்புறத்தில் ஒரு சிறு நேர்கோடும், அதைத் தொடர்ந்து மேல் நோக்கி ஒரு சிறு கோடும் சேர்க்கப்படுங்கால் தோன்றும். இக்குறி கி.மு.3-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட குகைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. 

அடுத்த கட்டத்தில் மகரத்தின் உருவம் மாறும்பொழுது அதாவது ஏறக்குறைய கி.பி.5-ஆம் நூற்றாண்டில் இகரக்குறி வளைந்து காணப்படுகிறது. இது கோட்டையூர்ச் சோமாசி திருமாறனின் வட்டெழுத்துக் கல்வெட்டில் தோன்றுகிறது. தமிழுக்கும் வட்டெழுத்துக்கும் இது பொதுவான உருவம்.... ... ... 

அடுத்தபடியாக இகரத்தின் வளைந்த குறி அந்த எழுத்தின் மேல், தனியாகக் கொடுக்கப்படுகின்றது. இது கி.பி.7-ஆம் நூற்றாண்டிற்குப்பின் தோன்றுகிறது.... ... ... 

இடைப்பட்ட காலத்தில் இந்த வளைகுறி இணைத்து எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எடுத்துக்காட்டுவதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை.  இப்படித்தனித்து எழுதப்பட்ட உருவம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பல்லவர் காலக் கல்வெட்டுகளிலும் பின்பு, கி.பி.12-ஆம் நூற்றாண்டுச் சோழர் காலக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றது. கி.பி.12 – ஆம் நூற்றாண்டில் சோழன் இரண்டாம் இராசாதிராசனின் திருவாலங்காட்டுக் கல்வெட்டில் சிறிது வலப்பக்கம் தள்ளி மேலே எழுதப்பட்டது. ... 

பின்பு, கி.பி.17–18–ஆம் நூற்றாண்டுகளில் எழுத்தோடு இணைக்கப்பட்டு வலப்புறம் இறக்கி எழுதப்பட்டது.... ... 

வட்டெழுத்தில் இகரக்குறி எழுத்துக்குப் பக்கவாட்டில் காட்டப்பட்டது. ஏறக்குறைய கி.பி.7–8–ஆம் நூற்றாண்டுகளிலிருந்து செங்கம் நடுகற்காலம், பிறகு வட்டெழுத்து மறையும் காலம் வரை இந்த உருவமே இருந்தது.  எனினும் அடிப்படை மெய்யெழுத்தின் வேறுபாட்டை அறிய மகரத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பைப் பார்க்கவும்.... ...

கே.ஜி.கி.

*மிக்காடோ*: ஆசியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள சப்பான் நாட்டின் பேரரசர் 'மிக்காடோ' என்று அழைக்கப்படுகிறார். மிக்காடோ என்ற சொல்லுக்கு 'மரியாதைக்குரிய வழி' என்பது பொருளாகும். இச்சொல் மிக உயர்ந்த பதவியில் உள்ளவரைக் குறிக்கும்.

பழங்கதையின்படி, சூரிய வமிசத்தில் உதித்த சிம்மு (jimmu) என்ற பேரரசரால் கி.மு.660 – இல் மிக்காடோ அரச மரபு தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், அறிஞர்கள் கூற்றுப்படி ஏறத்தாழ கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் அரசாண்ட குடும்பம் தம்மை எதிர்த்த தலைவர்களைத் தோற்கடித்துத் தனது ஆதிக்கத்தைச் சப்பானின் மத்திய மேற்குப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மீது செலுத்தியது. அக்குடும்பத் தலைவர் மிக்காடோ எல்லா அதிகாரமும் தெய்விகத் தன்மையும் உடையவராகக் கருதப்பட்டார். ஆனால், கி.பி.6-ஆம் நூற்றாண்டில் அவ்வரச குடும்பம் படையின்மீது தம் அதிகாரத்தைச் செலுத்த முடியாமல் இருந்தது. மிக்காடோஅரசர், 'சிண்டோ' (Shinto) சமயத்தின் உயர்ந்த குருவாகக் கருதப்பட்டார். இவருடைய அரசு அதிகாரத்தின் சின்னங்களாக, வாள், வயிரக்கல், கண்ணாடி ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மிக்காடோ கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து அதிகாரம் இல்லாத 'கைப்பாவை' அரசராக இருந்தார். உண்மையான அதிகாரமும், வலிமையும் ஒரு பெரிய குடும்பத்தினரிடமோ, இனத்தவரிட்மோதான் இருந்தன. அவர்கள் அரசர் பதவிக்கு வாரிசு யார் என்று தீர்மானிக்கும் அதிகாரமும் பெற்றிருந்தனர். சப்பான் வரலாற்றில் முதன்முதலாக அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் 'சோகோ' (Shogo) என்னும் குடும்பத்திடமும் பின்பு 'பியூசிவாரா' (Fujiwara) என்ற குடும்பத்திடமுமிருந்தது. பியூசிவாரா குடும்பத்தின் செல்வாக்கு மிக அதிகமாயிருந்தது. அதைத் தாங்க முடியாத பேரரசர்கள் சிலர் தங்கள் பதவியை விட்டுவிட்டுப் புத்த மடங்களில் சேர்ந்துவிட்டனர். ஆனால், அவ்வாறு பதவியைத் துறந்த பேரரசர் அரசாங்கச் செயல்களிலிருந்து முற்றிலும் விலகிவிடவில்லை. பொதுவாகப் பதவியிலிருக்கும் மகனுக்கு ஆலோசனை கூறுவதுண்டு. பியூசிவாரா குடும்பம், கி.பி.11-ஆம் நூற்றாண்டில் மிகுந்த செல்வாக்குடனிருந்தது. அதே காலத்தில், நாட்டில் இராணுவத்தலைவர் சிலருடைய குடும்பங்களும், அரசியல் அதிகாரத்திற்காகப் போட்டியிட்டன. அக்குடும்பங்கள் ஒன்றில் தோன்றிய யோரிட்டோமோ (Yoritomo) என்பவர் அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்கு அடைந்ததால் அவருக்குப் பேரரசர், சோகன் (Shogun) என்னும் பட்டத்தை கி.பி.1192 – ஆம் ஆண்டு அளித்தார். அந்தப் பட்டம் பரம்பரையாகிச் சோகனிடமே அதிகாரம் முழுவதும் இருந்து வந்தது. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட 'சோகன்' பதவி ஏறத்தாழ 700 ஆண்டுகள் நீடித்திருந்தது.

சோகன் பதவியை ஏறத்தாழ 150 ஆண்டுகள் யோரிட்டோமோ குடும்பத்தினர் ஏற்றிருந்தனர். அவர்கள் அரசாங்கத்தை நல்ல முறையில் அமைத்து நாட்டில் அமைதியை நிலை நாட்டினர். ஆனால், சிறிது காலத்திற்குப் பின்னர்ப் பேரரசர்க்கும், சோகனுக்கும் இடையே பூசல்கள் ஏற்படலாயின. பேரரசர் முழு அதிகாரத்தையும் மீட்டுத் தம்மிடமே வைத்திருக்க முயன்றார். ஆனால், அப்படிச் செய்ய முடியவில்லை. வேறு குடும்பம் அப்பதவியைப் பெற்று 235 ஆண்டுகள் வகித்து வந்தது. அப்போது சீனாவும், சப்பானும் நல்லுறவு கொண்டிருந்தன. சப்பான், சீனாவிடமிருந்து பல கலைகளைக்கற்றுக் கொண்டது.

சப்பானியர் ஒருபுறம் கலையை வளர்த்தாலும் மறுபுறம் வறுமையில் வாடினர். உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்காலம் நடந்தது. முடிவில் மூன்று மனிதர்கள் தோன்றி உள்நாட்டுப்போரை நிறுத்தி நாட்டை ஒன்றுபடுத்தினர். அவர்கள் 'ஓடா நோபுநாகர்' (Oda Nobu Nagar), 'இதெயோசி' (Hideyoshi), 'தோகுகாவா இயாசு' (Tokugawa Ieyasu) ஆகியோர் ஆவர். பின்னர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சப்பான் முற்றிலும் ஒன்றுபட்டது. தோகுகாவா இயாசு அளவற்ற செல்வத்தைத் திரட்டினார். அவர் ஏற்படுத்திய 'தோகுகாவா' சோகன் குடும்பம் ஏறத்தாழ 250 ஆண்டுகள் அதிகாரம் செலுத்தியது.


இயாசு இரண்டு தலைநகர் முறையைத் தொடர்ந்தார். பேரரசரும், அரசவையினரும் கியாட்டோ (Kyoto) நகரில் வாழ்ந்தனர். சமயத்துறை சார்ந்த விழாக்களுக்குத் தலைமை தாங்குதல், சப்பானிய மரபுகளையும், பண்பாட்டு வளர்ச்சிகளையும் பாதுகாத்தல், பட்டங்கள் வழங்குதல் போன்ற பணிகள் மிக்காடோவிடம் விடப்பட்டிருந்தன. ஏடோ (Yedo) நகரில் (இப்போது தோக்கியோ (Tokyo) எனக் குறிக்கப்படுவது) சோகன் தங்கியிருந்தார். அந்நகரில் இருந்த இயாசுவின் கோட்டை சப்பான் ஆட்சித் துறையின் தலைமை இடமாய் விளங்கியது.

சப்பான் கி.பி.1638 – ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1843 வரை அயல் நாட்டுத் தொடர்பற்று இருந்தது. மூடிக்கிடந்த சப்பானின் கதவுகளைத் திறக்கஉருசியர்களும், ஆங்கிலேயர்களும் முயன்றனர். ஆனால், அவர்கள் முயற்சி பலனளிக்கவில்லை. அமெரிக்கா அனுப்பிய பெர்ரி (Perry) என்பவர் கி.பி. 1853-இல்

சப்பான் கடற்கரையை அடைந்தார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பில்மோர் (Filmore) கொடுத்த கடிதத்தைச் சோகனிடமும் மிக்காடோவிடமும் சேர்ப்பித்தார். அக்கடிதத்தில் சப்பான் அமெரிக்காவிற்கு ஒரு சில துறைமுகங்களைத் திறந்துவிட வேண்டிக் கேட்டிருந்தது. அப்படித் திறக்க மறுத்தால் அமெரிக்கா போரிட்டாவது பெறும் எனக் குறிப்பிட்டிருந்தது. அப்போது சோகன் வலிமையற்று இருந்தார். ஆதலால் அமெரிக்க நாட்டினர் சப்பானில் நுழைய அனுமதி அளித்தார். அதனால் சோகனுக்கு அதிக எதிர்ப்புகள் ஏற்பட்டன. அதன் விளைவாகச் சோகன் பதவியிழந்தார். சோகனின் ஆட்சியும் மறைந்தது. மிக்காடோ தாம் அதுகாறும் இழந்திருந்த அதிகாரத்தை மீண்டும் கி.பி.1868-ஆம் ஆண்டில் பெற்றார். பின்னர் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி ஆளத்தொடங்கினார். அந்நிகழ்ச்சிக்கு 'மிக்காடோவின் முன்னிலை மீட்சி' என்பது பெயர். அவ்வாறு முன்பிருந்த உரிமையைத் திரும்பவும் பெற்று ஆளத்தொடங்கிய முதல் மிக்காடோ முட்சு இடோ (Mutsu Hito) ஆவார். அவர் ஆட்சி மக்கள் நலம் நாடும் ஆட்சியாக அமைந்தது. அவர் தம் ஆட்சிக் காலத்தில் அரிய பல சீர்திருத்தங்களைச் செய்து சப்பானை ஐரோப்பிய மயமாக்கி, உலகில் தலைசிறந்த நாடுகளுள் ஒன்றாக உருவாக்கினார். அவர் காலத்தில் ஏற்பட்ட புதிய மாற்றத்தை 'மெய்சிக் காலம்' (Meiji Era) எனக் குறிப்பிடுகின்றனர்.

பின்னர் கி.பி.1889 - ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் மிக்காடோவிற்கு மிகுந்த அதிகாரம் வழங்கப்பட்டது. அதன்படி இவர் ஆண்டவன் பேராளராகவும், நாட்டை ஆள்பவராகவும், இறைமாட்சி அதிகாரம் பெற்றவராகவும், முப்படைத் தலைவராகவும் கருதப்பட்டார். இரண்டாம் உலகப் போரின் முடிவில் 1945 - ஆம் ஆண்டில் மிக்காடோ பேரரசர், தம் தெய்விக உரிமையையும் உண்மையான அதிகாரங்களையும் இழந்தார். பின்னர் 1947 – ஆம் ஆண்டு ஏற்பட்ட புதிய அரசியல் அமைப்பின்படி மிக்காடோ பேரரசர், இங்கிலாந்து நாட்டின் பேரரசரைப் போலப் பெயரளவிற்கு நாட்டின் தலைவராகவும், ஒற்றுமையின் சின்னமாகவும் விளங்குகிறார். அ.சி.

***மிக்கைல் அலக்சாண்ட்ரோவிச் சோலக்கோவ் (1905-1984)***: இவர் 20–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சோவியத்து எழுத்தாளர். கோசாக்கு என்ற இனத்தைச் சார்ந்தவரையும் உருசிய இனத்தைச் சார்ந்தவரையும் தம் தாய் தந்தையாகப் பெற்றவர். முறையாகக் கல்வியைப் பெற இவரால் இயலவில்லை. வாழ்க்கையில் பல்வேறு தொழில்களும் புரிந்து வந்துள்ள இவர் உருசியப் புரட்சிப் போரில் செம்படையில் சேர்ந்து பணியாற்றியுள்ளார்.



'தான் நதிக்கதைகள்' (Tales of the Don, 1925) என்னும் இவரது வெளியீடு வெற்றி பெறவில்லை. எனினும், இவர் 1928 – இல் தொடங்கிய 'தான்நதி அமைதியாக ஓடுகிறது' (And Quiet Flows the Don) என்னும் புதினம் தலைசிறந்த புதினங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இரண்டு பகுதிக் கதையாக்கம் கொண்ட அப்புதினம் 1940-இல் முடிக்கப்பட்டது என்பர். இரண்டாம் பகுதி 'கடல் வீட்டுக்குத் திரும்பி ஓடும் தான் நதி' (The Don Flows Home to the Sea) என்பதாகும். கோசாக்கு (Cossacks) மக்களின் வாழ்க்கையையும், பொதுவுடைமைச் சமுதாய மாறுதல் காலக் கட்டத்தில் எழும் சிக்கல்களையும் விளக்குவது அப்புதினம். மிக்கைல் அலக்சாண்ட்ரோவிச் சோலக்கோவ் (Mikhail Aleksandrovich Sholokhov) 1965 – இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார். புகழ் பெற்ற இவர் தம் புதினங்கள் இவரால் எழுதப்படவில்லை எனக் கூறும் திறனாய்வாளர்களும் உள்ளனர். சே.இரா.

***மிகிரகுலன்***: ஹூணர்களின் (Huns) தலைவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன், மிகிரகுலன் (Mihiragula). ஹூணர்கள் மத்திய ஆசியாவில் வாழ்ந்த முரட்டு இனத்தவர். அவர்கள் மக்கள் தொகை மிகுந்தமையாலும், வேலையின்மையாலும் கி.பி. 5 – ஆம் நூற்றாண்டில் இரு பிரிவினராகப் பிரிந்து ஒரு பிரிவினர் வால்கா (Volga) நதியை நோக்கியும் மற்றொரு பிரிவினர் ஆக்சசுப் (Oxus) பள்ளத்தாக்கை நோக்கியும் சென்றனர். ஆக்சசுப் பள்ளத்தாக்கை நோக்கிச் சென்றவர்கள் வெள்ளை ஹூணர்கள் எனப்பட்டனர். அவர்கள் பாரசீக அரசனை

வென்று ஆப்கானிசுத்தானம் மூலம் கி.பி. 455-இல் இந்தியாவுக்கு வந்தனர். இசுகந்த குப்தன் (Skanda gupta) அவர்களது படையெடுப்பை முறியடித்துக் காசிக்கு அருகில் வெற்றித்தூண் ஒன்றை நிறுவினான். அவர்கள் இரண்டாம் முறை இந்தியாவின் மீது படையெடுத்த போது அவனால் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இசுகந்தகுப்தன் இறந்தவுடன், ஹுணர்கள் தலைவன் தோரமானன், புத்த குப்தன் என்பானைத் தோற்கடித்துப் பஞ்சாபு, இராசபுதனம், மாளவம் முதலிய பகுதிகளைக் கைப் பற்றினான்.

தோரமானனுக்குப் பின் அவன் மைந்தன் மிகுர குலன் கி.பி. 515-இல் அரியணை ஏறினான். அவனது தலைநகர் சாகாலா எனச் சீனப்பயணி யுவான் சுவாங்கு குறிப்பிடுகிறார். மிகிரகுலன் ‘இந்தியாவின் அட்டில்லா’ எனப்படுகிறான். அவன் கொடூரச் செயல் புரிவதற்குத் தயங்கமாட்டான். காசுமீரத்தில் அவனைப் பற்றி ஒரு கதை உண்டு. அவன் யானை களை மலை உச்சியிலிருந்து கீழே உருட்டி விடும்படி செய்து அவை கீழே விழுவதைப் பார்த்து மகிழ்வான் எனக் கூறப்படுகிறது. இராசதரங்கிணி என்னும் நூலில் காசுமீரத்தைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு கள் உள்ளன. அதில் மிகிரகுலனின் கொடுமையான செயல்கள் விவரிக்கப்பட்டுள்ளன. யுவான் சுவாங்கு அவனைப் பற்றி எழுதிய குறிப்புகள் இராசதரங் கிணியின் குறிப்புகளுடன் ஒத்திருக்கின்றன.

கோசுமாசு (Cosmos) என்று சொல்லப்படும் அறிஞர் கி.பி. 567-இல் தாம் எழுதிய கிறித்தவ இட அமைப்பு விவரம் (Christian Topography) என்னும் நூலில் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டுள்ளார். ‘இந்தியா விற்கு வடக்கில் வெள்ளை ஹுணர்கள்வாழ்கிறார்கள். அவர்களுள் ஒருவனான கோலாசு (Gollas) என்பவன் படையெடுத்துச் செல்லும்போது 2000 யானை களுக்குக் குறைவில்லாமல் கொண்டு செல்லுகிறான். மேலும், ஒரு பெரிய குதிரைப்படையையும் நடத்திச் செல்லுகிறான். அவன் இந்தியாவிற்குத் தலைவன்; மக்களை அடக்கி ஒடுக்குகிறான்; அரசர்களைக் கட்டா யப்படுத்திக் கப்பப்பணம் பெறுகிறான்’. பொது வாகக் ‘கோலாசு’என்பது மிகிரகுலனைக் குறிக்கிறது எனக் கருதப்படுகிறது.

மிகிரகுலன் வலிமை வாய்ந்த ஒரு கொடுங் கோலரசன். அவன் வட இந்தியாவின் பல பகுதிகள் மீது படையெடுத்துள்ளான். இவனது 15 – ஆம் ஆட்சி ஆண்டின் கல்வெட்டு ஒன்றின் மூலம் இவனது ஆட்சி குவாலியர் வரை பரவியிருந்ததெனத் தெரிகிறது. இவனுடைய நாணயங்கள் கிடைத்துள்ளன. யுவான் சுவாங்கு இவன் இந்தியா முழுவதையும் கீழ்ப்படியச் செய்தான் என்று குறிப்பிடுகிறார். கோசுமாசு இவனை இந்தியாவின் தலைவன் (Lord of India) எனக் குறிப் பிடுகிறார். ஆனால், ஹுணர்கள் தங்கள் வெற்றியை நீண்ட நாள்கள் அனுபவிக்க இயலவில்லை. இந்திய அரசர்களான யசோதருமனும், நரசிம்ம குப்தனும் மிகிரகுலனின் முடிவை விரைவில் நிருணயித்தனர்.

மிகிரகுலன் இந்தியாவின் உட்பகுதியை நோக்கி வந்தபொழுது அவனை மாளவ அரசன் யசோதரு மன் தோற்கடித்தான். யசோதருமன் வெற்றி பெற் றாலும் மிகிரகுலனின் அதிகாரமும் அவனது நாடும் அழிக்கப்படவில்லை. யசோதருமன் இறந்த பிறகு மிகிரகுலன் மீண்டும் தலையெடுத்தான்.

குப்தப் பேரரசின் அரியணையை அலங்கரித்த வன் நரசிம்ம குப்த பாலாதித்தன் ஆவான். யசோதரு மன் மிகிரகுலனைத் தோற்கடித்ததால் பாலாதித்தன் சிலகாலம் மகிழ்வுற்றிருந்தான். யுவான் சுவாங்கு, நர சிம்மகுப்தன் மிகிரகுலனுக்குக் கப்பம் செலுத்திக் கொண்டு தாழ்ந்த நிலையில்இருந்ததாரெனக் கூறு கிறார். பின்பு அவன் எவ்வாறு மிகிரகுலனை வெற்றி பெற்றான் என்பதைப் பின்வருமாறு கூறு கிறார். ‘மகத நாட்டரசன் பாலாதித்தன் புத்தரு டைய கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தான். மிகிரகுல னது துன்புறுத்தல்களையும், தீச் செயல்களையும் கேள்விப்பட்டவுடன் அவனுக்குக் கப்பம் செலுத்தா மல் தன் நாட்டின் எல்லையை விழிப்புடன் பாது காத்தான். மிகிரகுலன் தன் நாட்டின் மீது படை யெடுத்தபொழுது பாலாதித்தன் தன் படையுடன் ஒரு தீவில் அடைக்கலம் புகுந்தான். மிகிரகுலன் தன் படையின் முக்கிய பகுதியைத் தன் இளைய சகோதரனிடம் கொடுத்துவிட்டுச் சிறிய படை யுடன் படகுகள் மூலம் அத்தீவை அடைந்தான். அங்கு ஒரு குறுகிய வழியில் படையுடன் செல் லும்போது, பாலாதித்தன் அவனைத் தாக்கிச் சிறைப் பிடித்தான். பின்பு அவனைக்கொல்ல முடிவுசெய் தான். ஆனால், அவனுடைய தாயின் தலையீட்டால் விடுவித்தான். மிகிரகுலன் திரும்பி வந்து பார்த்த பொழுது அவனுடைய சகோதரன் அரியணையைக் கைப்பற்றி ஆட்சி செய்து கொண்டிருந்தான். அதனால் அவன் காசுமீரத்தில் அடைக்கலம் புகுந்தான். அங்கு ஒரு கலகத்தை ஏற்படுத்தி, அரசனைக் கொன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்தான். பின்பு, காந்தார அர சனையும், அரசகுடும்பத்தாரையும் கொன்று விட்டுப் புனிதத்தலங்களைப் பாழ்படுத்தி, நாட்டைக் கொள் ளையிட்டுப் பெருஞ்செல்வத்துடன் திரும்பினான். ஆனால், அவன் திரும்பி வந்த ஓராண்டிற்குள் கால மானான்.

மேலே சொன்ன குறிப்புகளிற் சில ஐயத்திற்குரி

யனவாக இருந்தாலும் பாலாதித்தன் மிகிரகுலனைத் தோற்கடித்துக் குப்தரது ஆட்சிப் பகுதியை ஹூணர்களின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றினான் என்பது உறுதியானதாகும். மிகிரகுலனின் தோல்வி இந்தியாவில் ஹூணர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. பின்பு ஹூணர்கள் சிறு சிறு பிரிவுகளாகச் சிதைந்து போயினர். அ.சி.

*மிகை ஆற்றல்*: காண்க: பேரளவு உற்பத்தி எச்ச ஆற்றல்.

**மிகைநிலை மனம்**; உளப்பாகுபாடு உளவியல் முறையைத் தோற்றுவித்தவர் சிக்மண்டு பிராய்டு. இவர் தொடக்கத்தில் பெரும்பாலும் 'மனச்சோர்வு' (Hysteria) உளக் கோளாறினால் பாதிக்கப்பட்ட பெண்களைக் குணப்படுத்துவதற்கு உளப்பாகுபாடு முறையைப் பயன்படுத்தினார். 'மனச் சோர்வு' உளக்கோளாறினால் பாதிக்கப்பட்ட பல நூறு நோயாளிகளை ஆராய்ந்து உள்ளத்தைப் பற்றிய கோட்பாடுகளை வெளியிட்டுள்ளார். அவர் கருத்துப்படி உள்ளமானது மூன்று பகுதிகளாக உள்ளது. அவை ஆழ்ந்த உள்ளம் (Unconscious Mind), நனவு உள்ளம் (Conscious Mind), மறைவு நனவு உள்ளம் (Sub—conscious Mind) எனப்படும். உணர்வுந்தல் (Id)உளச்சக்தியின்றிப் பிறந்த குழந்தையிடம் உள்ளது. அச் சக்தியானது சூழ்நிலைத் தூண்டல்களோடு இடைவினைச் செயலில் (Interaction) ஈடுபட, நாளடைவில் குழந்தை வளர வளர நிலைமனம் (Ego), மிகைநிலைமனம் (Super Ego) என்பவை குழந்தையின் உள்ளத்தில் உருவாகின்றன.

மிகைநிலை மனத்தை'மனச்சாட்சி' (Conscience) என்பதனோடு ஒப்பிடுவர். குழந்தை பிறந்தவுடன் சமூக சமய விதிமுறைகளைத் தெரியாத நிலையிலிருக்கிறது. அந்த நிலையிலுள்ள குழவி வளர்ந்து குழந்தைப்பருவத்தைக் கடக்குமுன் சமூக, விதிகளைப் பெற்றோர், உறவினர், பள்ளி ஆசிரியர் ஆகியோரிடமிருந்தும் சமூகச் சூழ்நிலைகளிடமிருந்தும் கற்றுக்கொள்கிறது. அந்நிலையில் ஒரு செயலில் ஈடுபடும்போது, தன்னுள்ளே உள்ள ஒரு சக்தி, ஈடுபடப்போகும் செயல் சமூகத்திற்கும் சட்டத்திற்கும் உட்பட்டதா என்று அறுதியிட்டு ஒருவனைச் செயலில் ஈடுபடச் செய்கிறது. மிகைநிலைமனம், இரண்டாம் வயதிலிருந்து மூன்றாம் வயதுகுள் குழந்தையிடம் உருவாகிறது என்று கருதப்படுகிறது. உணர்வுந்தல், நிலைமனம், மிகைநிலைமனம் ஆகியவை தனிப்பட்ட இயக்கங்களைக் கொண்டுள்ளவை என்ற காரணத்தால் இவற்றிற்குள்ளே போராட்டங்கள் ஏற்படுவதுண்டு. ஆனால், பொதுவான மனிதனுக்கு அப்போராட்டங்களை எதிரேற்பதற்கான போக்கு உள்ளது. சிலரிடம் மிகைநிலைமனம் பக்குவமடையாத காரணத்தினாலும் அளவுக்குமீறிப் பக்குவமடைந்ததன் காரணத்தாலும் இம்மூன்று சக்திகளுக்குள்ளே உள்ள சமநிலையில் தடுமாற்றம் ஏற்பட, அத்தடுமாற்றம் அவர்களைச் சமூகத்துக்கு விரோதமான செயல்களில் ஈடுபடச்செய்து குற்றவாளி ஆக்கவோ உளக்கோளாறுகள் உளநோய்கள் ஆகியவற்றை அடைவிக்கவோ ஏதுவாகிறது என்று உளப்பாகுபாடு உளவியலார் கருதுகிறார்கள்.

உள்ளத்தில் உணர்வுந்தல், சமநிலைமனம், மிகை நிலைமனம் உள்ளன என்ற கருத்தைப்பிராய்டின் மாணவர்களாக இருந்து கருத்து வேறுபாட்டினால் அவரிடமிருந்து பிரிந்து தனிப்பட்ட உளவியல் துறைகளை உண்டாக்கிய காரல் யுங்கு (C.G. Jung), ஆல்பிரடு ஆட்லர் (Alfred Adler) போன்றவர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். தா.ஏ.ச.

**மிகை மதிப்புக் கோட்பாடு**: காரல் மார்க்சு என்ற பொருளாதார நிபுணர் உருவாக்கியது 'மிகை மதிப்புக் கோட்பாடு'. அவர் கி.பி. 1818-ஆம் ஆண்டு செருமனியில் பிறந்தார். அவர்தம் கருத்துகளுக்காகவும், வெளியீடுகளுக்காகவும் கி.பி. 1841-ஆம் ஆண்டு செனே (Jena) என்ற பல்கலைக் கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது. 'மூலதனம்' (Das Capital) என்ற நூலின் தொகுப்புகளில் முதல் தொகுப்பை கி.பி. 1867-ஆம் ஆண்டு வெளிட்டார். இரண்டாம் தொகுப்பைகி.பி.1885-ஆம் ஆண்டிலும் மூன்றாம் தொகுப்பை கி.பி. 1894-ஆம் ஆண்டிலும் வெளியிட்டார். 'மூலதனம்' என்றநூலில்தான் மிகைமதிப்புக் கோட்பாட்டைப் பற்றித் தெளிவாக எழுதியுள்ளார். அக்கோட்பாடு தொழிலாளர்கள் சிக்கலுக்கு ஒரு விடிவெள்ளியாகத் திகழ்கிறது.

உற்பத்தி நடைபெறுகின்ற பொழுது, முதலாளிகள் கொள்ளை இலாபத்தைப் பெறுகின்றனர். இலாபத்திற்கு அடிப்படையாக அமைவது மிகை மதிப்பு (Surplus Value) ஆகும். இம்மிகை மதிப்பை உருவாக்கியவர்கள் தொழிலாளர்கள் ஆவார்கள். மிகை மதிப்பு என்பதனைக் கணக்கிட வேண்டுமானால் மொத்த உற்பத்தி மதிப்பிலிருந்து இடுமானங்கள் அளவைக் கழித்துவிட்டால் மிகை மதிப்புக் கிடைக்கும். இதனை அளவிட உதவும் சூத்திரம் பின்வருமாறு:

மிகை மதிப்பு (S) = P (C+V)

இதில் P = இலாப அளவு

C = மாறாத மூலதனம்

V = மாறும் மூலதனம்.

இதனைக் கீழ்க்காணுமாறும் எழுதலாம்.

$$\left( P = \frac{S}{V} \cdot \frac{V}{C+V} \right)$$

(அல்லது)

$$\left( P = \frac{S}{V} \cdot \frac{1}{\frac{C}{V} + 1} \right)$$

C/V என்பது மூலதன அடங்கல். இதுவே மிகை மதிப்பை உயர்த்துகிறது. C/V என்பதை உயர்த்தும் பொழுது, முதல் ஆட்கொள்ளும் தொழில் முறையை முதலாளி கையாளுகின்றார். அதனால் தொழிலாளர்கள் வேலை இழக்கின்றனர். தொழிலாளர்களை அப்படி ஒரு சூழ்நிலையில் தள்ளிக்கூலி குறைக்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் 'மிகை மதிப்பு' எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதைக் காரல் மார்க்சு தெளிவாகச் சொல்லுகின்றார்:

$$\left[ M \longrightarrow C \left\langle \begin{matrix} L \\ \\ MP \end{matrix} \right\} = P \rightarrow Q \rightarrow C' \rightarrow M' \right]$$

முதலில் 'M' என்ற அளவிற்கு இடுமானங்கள் இடப்பட்டு 'C' என்ற பண்டங்கள் உற்பத்தியாகின்றன. 'C' என்பதில் உள்ளசெலவுகள்='L' என்ற அளவுள்ள தொழிலாளர்கட்குக் கொடுக்கப்படும் கூலி+ 'MP' என்ற அளவிற்குள்ள கச்சாப் பொருட்கள். தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் வேலை செய்கின்றனர். 'P' என்ற அளவுக்கு உற்பத்தியை உருவாக்கும் சக்தி படைத்த மூலதனம் கிடைக்கின்றது. 'Q' என்ற அளவிற்கு மூலதனம் கிடைக்கின்றது. C′ என்ற அளவிற்கு மூலதனம் 2 ஆம் சுற்றில் கிடைக்கின்றது. M′ என்ற அளவிற்கு மொத்த வருமானம் முதலாளிக்குப் போய்ச் சேருகின்றது. அதில் $M'>M$; மேலும் $C'>C$ என்று அமைகிறது. அதில் மிகை மதிப்பு$=(C'-C)$ ஆகும். அவ்வாறு மூலதனம் பெருகுவது தொழிலாளர்களின் உழைப்பின் மூலதனம் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மிகை மதிப்பைப் பெறுவதற்கும், பெருக்குவதற்கும் முதலாளி பல வழிகளைக் கடைபிடிக்கின்றார். அவ்வழிகள்: (அ) முதல் ஆட்கொள்ளும் தொழில் முறையைக் கையாள்வது(Capital Intensive Technique) ஆ) கூலியைக் குறைப்பது இ) வேலை நாள்களை அதிகப்படுத்துவது. மேற்கண்ட முறைகளை மொத்தமாகத் 'தொழிலாளர் சுரண்டல்' என்றும் கூறலாம்.

**திறனாய்வு:** காரல் மார்க்சின் மிகை மதிப்புக் கோட்பாடு மிகச் சிறந்ததெனப் போற்றப்பட்ட போதிலும் அறிஞர் பெருமக்கள் சிலர் அதில் உள்ள குறைகள் சிலவற்றையும் சுட்டிக் காட்டியுள்ளனர். எனவே, காரல் மார்க்சின் பொருளாதாரச் சிந்தனையை முழுக்க ஏற்றுக் கொள்ள இயலாது. அவற்றில் உள்ள முக்கியமான குறைபாடுகள்:

1. **உபரிமதிப்பு உண்மைக்குப் புறம்பானது:** உபரி மதிப்பு என்று ஒன்றுண்டு என்றும், அந்த உபரி மதிப்பை மேன்மேலும் அதிகமாகப் பெறுவதற்கு முதலாளிகள் தொடர்ந்து முயற்சி செய்வார்கள் என்றும், அதற்காகத் தொழிலாளர்களை மேன்மேலும் அதிகம் சுரண்டுவார்கள் என்றும் காரல் மார்க்சு வாதிடுவது இக்காலத்தில் பொருத்தமாய் இல்லை. ஏனென்றால், பல நிறுவனங்களில் தொழிலாளர்களே பங்குதாரர்களாகவும், இயக்குநர்களாகவும், முதலாளிகளாகவும் உள்ளனர்.

2. **காலப் போக்கில் வீழ்ந்துவிடும்:** முதலாளித்துவப் பொருளாதார அமைப்புகள் காலப் போக்கில் உலகில் வீழ்ந்துவிடும் என்றும், காரணம் முதலாளிகள் தொழிலாளர் பகைப் போக்கைக் கடைபிடிக்கின்றனர் என்றும் குறிப்பிட்டார். உலகில் இக்காலத்தில் முதலாளித்துவப் பொருளாதார முறைகளைக் கையாளும் நாடுகளாகிய அமெரிக்கா, சப்பான் போன்ற நாடுகள் வேகமாக முன்னேறி வருகின்றன. எனவே, மார்க்சின் கருத்து நடைமுறையில் பரவலான அளவில் இல்லை.

3. **மூலதன மொத்த அளவு:** இது (Organic Composition of Capital) கூடும்பொழுது, மிகைமதிப்பு என்பது உதவுவதில்லை; இலாப வீழ்ச்சியை முறியடிக்க உதவுவதில்லை. இவ்வாறாக, மிகைமதிப்பு முடிவு பெற்ற ஒரு விளக்கமாக இல்லை.

இக் கோட்பாட்டில் சில சிறப்பான கூறுகளும் உள்ளன. அவை பின் வருமாறு: காரல் மார்க்சு கூறிய மிகையூதியக் கோட்பாடு மறக்கப்பட்டனவும் மறைக்கப்பட்டனவுமான உண்மைகள் பலவற்றை வெளிக் கொணர்ந்துள்ளது. அதன் பயனாக, 1) தொழிலாளர்கள் எந்த அளவிற்குச் சுரண்டப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படுகின்றார்கள் என்பது உலகிற்கு விளக்கிக் காட்டப்பட்டது. அதன் பின்புதான் பலநாடுகளில் தொழிலாளர் வேலைப் பாதுகாப்புச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. 2) இலாபத்தில் ஒரு பகுதி ஊக்க ஊதியமாகவும், ஊதிய உயர்வாகவும் தொழிலாளர்கட்குக் கொடுக்கப்படல் வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. 3) உற்பத்திக்கு உதவும் காரணிகளில் முதலுக்கு இணையாக உழைப்பும் நிலவுகிறது எனப்படும் உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டது. 4) தொழிலாளர்கள் தமக்குள்ளே சங்கங்களை அமைத்துக்

கொண்டு தங்கள் உரிமைகளை உயர்த்த வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டது. 5) தொழிலாளர் கட்கும் நிருவாகத்தில் பங்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற இக்காலச் சட்டத்திற்கு அடிப்படை அமைக்கப்பட்டது. எல்.ஜே.சௌ.

**துணை நூல்கள்:**

Antony Cutler, Barny Hindess, Paul Hirst, and Athar Hussain, Marx's Capital and Capitalism To-day, Routledge and Kegan Paul, London, 1977.

Bhatia, H.L., History of Economic Thought, Vikas Publishing House (Pvt.), Ltd., Bombay (2nd Edition), 1980.

***மிங்கு குலம்***: சீனாவில், இடைக்காலத்தில் ஆட்சி செய்த சிறப்பு வாய்ந்த மிங்கு (Ming) குலத்தினர், அந்நாட்டில் ஆதிக்கம் செலுத்திய அயலவர்களான மங்கோலியப் பேரரசர்களுக்கு எதிராக மக்களைத் திரட்டிக் கிளர்ச்சிகள் நடத்தி, நாட்டை விடுவித்து, அரியணையைக் கைப்பற்றினர். 'மிங்கு' என்னும் சீனச் சொல்லிற்கு ஒளி என்பது பொருளாகும். சீன வரலாற்றில் மிங்கு குலம் ஆண்ட காலம் உண்மையில் ஒரு ஒளி பொருந்தியகாலமாகவே விளங்கியது. மிங்கு குல ஆட்சி கி.பி. 1368 – ஆம் ஆண்டு முதல் கி.பி. 1644 – ஆம் ஆண்டு வரை–276 ஆண்டுகள் நீடித்திருந்தது. தம் நாட்டின் பண்டைய பண்பாட்டைப் பேணிக்காப்பதில் இவர்கள் நாட்டம் செலுத்தினர். எனவே, நாட்டுப்பற்று மிக்க ஒரு குடிவழியினராக இவர்கள் கருதப்பட்டனர். இக்குல முதல்வர் மிங்கு – தாய் – சூ (Ming – Tai-Tsu) என்பாராவார்.

கொரியா, மங்கோலியா, சீனத்துருக்கி (Chinese Turkistan), பர்மா, சயாம், வியட்நாம் ஆகிய நாடுகளின் அரசர்கள் சீனாவின் மிங்குகுலத் தலைமையை ஏற்றுக் கொண்டனர். சில காலங்களில் நீண்ட தொலைவில் உள்ள சப்பான், சாவா, சுமத்திரா, இலங்கை, இந்தியா, கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையோரப் பகுதி, பாரசீக வளைகுடாப் பகுதி, சாமர்கண்டு முதலிய பல நாடுகளிலிருந்தும் இவர்களுக்குப் பரிசுப் பொருட்கள் வந்தன.

மிங்கு அரசாங்கத்தின் அரசுச் செயலகமும், தல நிறுவனங்களும் செம்மையாகச் செயற்பட்டன. மாநில ஆளுநர்களும், அரசப் பேராளர்களும் நன்றாகச் செயற்பட்டனர். அரசாங்கம் பொதுவாக, நிலையாகவும் நல்லமுறையிலும் நடந்தது. ஆனால், காலம் செல்லச் செல்ல அதிகாரிகளிடையே பிளவுகள் ஏற்பட்டன. நிருவாகத்தில் அரசவை அலிகள் தலையீடுகளினால் களங்கங்கள் ஏற்பட்டன. தொடர்ந்து வலிவற்ற கவனமற்ற அரசர்கள் ஆட்சி செய்தனர். அதனால் மிங்கு மரபு ஆட்டங்கண்டது.

மிங்கு குலத்தில் தோன்றிய 16 அரசர்கள் சீனாவை ஆண்டனர். மிங்கு குலத்தை நிறுவியவரான சு-யுவான்-சங்கு என்பவர் உங்-ஊ (Hung wu) என்ற பட்டப் பெயரோடு கி.பி. 1368 முதல் ஆட்சி புரிந்து சீனாவிற்கு அப்பால் கொரியாத் தீவு வரையில் தமது ஆதிக்கத்தைப் பரப்பினார். பிறகு கி.பி. 1403 – ஆம் ஆண்டில் அரியணை ஏறிய யுங்–லோ என்பவரும் வலிமை மிக்க பேரரசராகத் திகழ்ந்தார். சப்பான், அன்னாம், சாவா, சுமத்திரா முதலிய பல நாடுகளைச் சார்ந்த அரசர்கள் அவருக்குத் திறை செலுத்தினர். அவருடைய கடற்படைத் தலைவரான செங்-கோ (Cheng-Ho) மிகப்பல போர்க் கப்பல்களோடு மலேசியா, இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, பர்மா, பாரசீக வளைகுடா, செங்கடல், கிழக்கு ஆப்பிரிக்கா ஆகியநாடுகள் வரையில் சென்று அங்கெல்லாம் ஆட்சிபுரிந்த பல அரசர்களிடமிருந்து திறைகளையும், பரிசுப் பொருட்களையும் பெற்றுத் திரும்பினார். இவ்விரு பேரரசர்கள் காலத்தில் சட்டத் தொகுப்புகள், அரசாங்கப் பணிக்கான நுழைவுத் தேர்வுகள், நிருவாக அமைப்பு முதலியன சீர்திருத்தி அமைக்கப்பட்டன. தலைநகரான பீகிங்கு விரிவுபடுத்தப்பட்டது. கலைக்களஞ்சியங்கள் தொகுக்கப்பட்டன. சீனாவின் வாணிகம் பெருகியது. யுங் – லோவிற்குப் பிறகு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலம் சீனா அமைதியுடனும், செல்வச் செழிப்புடனும் விளங்கியது.

சென்-சங்கு (Jen-tsung), சுவான்-சங்கு (Hsuan-tsung), இசியோ – சங்கு (Hsiao - tsung), முதலிய அரசர்கள் கன்பூசியசின் கொள்கைகளின் அடிப்படையில் கி.பி. 1440 முதல் 1510 வரை நாட்டை நல்ல முறையில் ஆண்டனர். நம்பிக்கையுள்ள அமைச்சர்கள் மூலம் நாட்டில் சண்டை சச்சரவில்லாமல் மக்களுக்கு நன்மை பயக்கும் முறையில் ஆட்சி செய்தனர். பின் போந்த ஊ – சங்கு (Wu-tsung), சி-சங்கு(Shih-tsung) ஆகிய இரு அரசர்களும் மிங்கு வமிசத்து அரசர்களுள் மிகவும் திறமையற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். ஊ-சங்கு குடிப்பதிலும், துணிகரச் செயல்கள் செய்வதிலும் விருப்பமுடையவர். சி-சங்கு தவோயிசக் கொள்கையை மிகவும் ஆதரித்தார். ஏறத்தாழ 20 ஆண்டுக் காலம் அரசாங்கச் செயல்களில் தலையிடவில்லை. அப்போது அவருடைய செயலர் என்-சங்கு கொடிய முறையில் ஆட்சி செய்தார். அவ்விரு அரசர்களும் தங்கள் ஆட்சியில் ஏற்பட்ட குறைகளை



மிங்கு தாய் – சு

துணிவுடன் தெரிவித்த நூற்றுக்கணக்கான அதிகாரிகளை இழிவுப்படுத்திக் கடுமையாகத் தண்டித்தனர்.

சி – சங்கு ஆட்சியில் சீனாவின் நீண்ட கால அமைதி குலைந்தது. மங்கோலியர்கள் அண்டா (Anda) என்பவரின் தலைமையில் அடிக்கடி நாட்டின் வடபகுதியில் தொல்லை கொடுத்தனர்; பீகிங் அருகில் உள்ள பகுதிகளை கி.பி. 1542 – ஆம் ஆண்டு தாக்கினர். சப்பானியக் கடற் கொள்ளைக்காரர்கள் சீனாவின் தென்கிழக்குக் கடற்கரைப் பகுதிகளைத் தாக்கினர். அக்கொள்ளைக்காரர்கள் கி.பி. 1550-ஆம் ஆண்டிலிருந்து'நிங்போ சாங்கை'ப் பகுதிகளை ஆண்டு தோறும் தொடர்ந்து தாக்கிக் கொள்ளையிட்டனர். மிங்கு அரசாங்கச் சீனக் கப்பற்படை கி.பி. 1559,1563 –ஆம் ஆண்டுகளில் அக்கொள்ளையர்களைத் தாக்கி அழித்தது. அப்போர் கி.பி. 1560 – ஆம் ஆண்டிற்குப் பிறகும் பலமுறை நடந்தது. அப்போர்களில் அண்டா பலமுறை தோற்கடிக்கப்பட்டு கி.பி. 1571-ஆம் ஆண்டு அமைதி உடன்பாடு செய்து கொண்டார்.

பிறகு கி.பி. 1572 முதல் 1620 வரையில் ஆட்சி புரிந்த வான்-லி பேரரசரை அவர் தலைமை ஆலோசகரான வீய்-செங்-சியன் கொன்றுவிட்டுத் தமக்கு அடக்கமான ஒரு இளவரசனை அரியணையில் அமர்த்தித் தாமே அரசர் போல ஆட்சி செய்தார். அப்போது நிருவாகம் சீர்கெட்டு அதிகாரிகளின் கொடுமைகள் மிகுநதன. சப்பானியப் படை இதயோசி (Hideyoshi) என்பார் தலைமையில் கி.பி. 1592-ஆம் ஆண்டு கொரியா மீது படையெடுத்தது. மிங்கு சீனா தன் கட்டுப்பாட்டில் இருந்த கொரியாவிற்குப் படை கொடுத்து உதவியது. கொரியாப் போர் முடிவில்லாமல் கி.பி. 1598-ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. அந்த ஆண்டு இதயோசி இறந்ததனால் சப்பானியப் படை கொரியாவிலிருந்து விலகியது. அந்நிகழ்ச்சிக்குப் பிறகு சீனாவின் படை வலிமையும் குறையத் தொடங்கியது.

பேரரசர் சுங் – சென் காலத்தில் மாநிலங்களில் ஏழைக் குடியானவர் கலகங்கள் அடுத்தடுத்துத் தோன்றின. பெரும் பிரபுக்களின் மாளிகைகளும் பண்ணைகளும் தாக்கப்பட்டன. அப்போது நடந்த முக்கியமான கிளர்ச்சிகளுள் ஒன்று கி.பி. 1639-இல் இலி-சு-செங்கு (Li-Tzu - Cheng) தலைமையில் நடந்ததாகும். அவர் ஓனான் (Honan) மாநிலத்தில் குடியானவர் படை ஒன்றினைத் திரட்டிப் பல மாநிலங்களைக் கைப்பற்றிப் பின் கி.பி. 1644-இல் தலைநகரான பீகிங்கில் நுழைந்தார். மிங்குப் பேரரசரின் பெரும்படைகள் அப்பொழுது வடக்கில் மங்கோலியர் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்துவதற்காகப் 'பெருமதில்'ன் வாயில்களைக் காத்து நின்றன. அந்நிலையில் அதிகாரிகள் அனைவராலும் கைவிடப்பட்ட பேரரசர் தற்கொலை செய்து கொண்டு உயிர் நீத்தார். இலி-சு-செங்கு அரண்மனையுட் புகுந்து அரசராகத் தம்மை அறிவித்துக் கொண்டார். குறுகிய காலம் நீடித்த இவர் குலம், சுன் (Shun) குலம்

எனப்பட்டது. பெருமதிலின் வாயிலிலிருந்த மிங்கு படைத் தலைவர் ஊ-சான்-குய் (Wu-San-Kui) இலி-சு-செங்கை அரசராக ஏற்றுக்கொள்ள மறுத்து மஞ்சூரியர்களை உதவிக்கு அழைத்தார். அதனைப் பயன்படுத்தி மஞ்சுப் படை பீகிங்கில் நுழைந்து தன் அதிகாரத்தை நிலை நிறுத்தியது. மஞ்சுப் பேரரசர் சீனப் பேரரசராக அறிவிக்கப்பட்டார்.

மிங்கு ஆட்சியில் சீனாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நேரடித் தொடர்பு ஏற்பட்டது. போர்ச்சுக்கீசியர் கி.பி. 1517-இல் சீனாவில் உள்ள காண்டன் நகருக்கு வந்தனர். மகோவாவில் கி.பி. 1557-இல் ஒரு நிலையான பண்டக சாலையை நிறுவினர். விரைவில் மற்ற ஐரோப்பிய நாடுகளும் சீனாவுடன் வாணிகம் செய்யத் தொடங்கின.

மிங்கு ஆட்சியில் சீனா தன் அண்டை நாடுகள் எல்லாவற்றுடனும் நட்புடன் வாழ்ந்து வந்தது. அண்டை நாடுகள் சீனாவை ஒரு வழிகாட்டியாகப் போற்றின. மிங்கு ஆட்சிக்காலத்தில் கலைகளும் கலைப்பண்புகளும் உச்சநிலையை அடைந்தன. பெரிய கட்டடங்களும், அழகிய ஓவியங்களும், அழகான மண்டபங்களும், பல வண்ணப் பீங்கான்களும் அக்காலக் கலைத் திறனுக்குச் சான்றுகளாய் உள்ளன. மிங்கு ஆட்சிக் காலம் முழுவதையும் ஒருசேர நோக்கினால் சீனா ஐரோப்பிய நாடுகளைவிட செல்வத்திலும், தொழிலும், நாகரிகத்திலும் உயர்ந்து விளங்கியது என்பது புலனாகும். அ.சி.

**மிசிகன்:** இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வட பகுதியின் நடுவில் இருக்கும் ஒரு மாநிலம். இதில் இரண்டு முந்நீரகங்கள் அடங்கியுள்ளன. மேல் முந்நீரகத்திற்கு வடக்கில் சுப்பீரியர் ஏரியும், கிழக்கில் புனித மேரீசு ஆறும், தெற்கில் யூரன் (Euron), மிசிகன் ஏரிகளும், மேற்கில் விசுகான்சின் மாநிலமும் எல்லைகளாகும். கீழ்த் தீபகற்பம் மிசிகன் (Michigan) ஏரிக்கும், யூரன் ஏரிக்கும் இடையில் இருக்கிறது. மிசிகன் 68,216 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது. இங்கு மாண்டிரீல், புரூல், மெனாமினி, புனித கிளேர், தெட்ராயிட்டு முதலிய ஆறுகள் பாய்கின்றன. மேல் முந்நீரகத்தின் வடக்குக் கரையில் மிக அதிகமான அளவு பனி பெய்யும்.

இம்மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில் காடுகள் உள்ளன, இங்குள்ள காடுகளில் சிவப்பு, கருப்பு, வெள்ளை ஓக்கு மரங்களும், செர்ரி, வால்நட்டு, எல்ம். பீச்சு, அசோகு முதலிய மரங்களும் உள்ளன.


மிசிகனுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,0 0,00,000 சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். மாநில அரசு நிருவகிக்கும் 76 பூங்காக்களும், பொழுது போக்குமிடங்களும் உள்ளன. காடுகளிலும் ஏறத்தாழ 100 பொழுதுபோக்கு இடங்கள் உள்ளன. மகிழ்வாகப் படகுகள் செலுத்துவதற்கும், வேட்டையாடுவதற்கும், பனிக்கட்டியில் சறுக்கி விளையாடுவதற்கும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

முதன் முதலில் இப்பகுதியில் பிரான்சு மக்கள் குடியேறினர். அவர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும், அமெரிக்காவில் நடந்த கடைசிச் சண்டையின் மூலம் மிசிகனிலிருந்த பிரான்சுக் குடியேற்றங்கள் ஆங்கிலேயர்களுக்கு கி.பி. 1761-ஆம் ஆண்டில் கிடைத்தன. அமெரிக்கச் சுதந்திரப்போருக்குப் பிறகு மிசிகன் அமெரிக்காவுக்கு உரியதாயிற்று. இங்கிருந்த செவ்விந்தியப் பழங்குடியினரால்அமெரிக்கர்களுக்குமிகுந்த தொல்லைகள் ஏற்பட்டன. ஆனால், சிறிது சிறிதாக அத் தொலைகள் நீக்கப்பட்டன. மிசிகன் கி.பி. 1837-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது.

இம்மாநிலத்தில் 1963-ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்ட அரசியலமைப்புச்சட்டப்படி, 18 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு வாக்குரிமை உண்டு. இம்மாநிலத்தில் மக்கள் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் திரும்ப அழைக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். மக்களே சட்டங்களைத் தயாரித்துச் சட்டசபைக்கு அனுப்பிச் சட்டமாக்கச் சொல்லும் உரிமையையும் பெற்றுள்ளனர். மாநில ஆளுநர் மக்களால் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். மாநிலச் சட்டமன்றத்தில் இரண்டு சபைகள் உள்ளன. ஆளவைமன்ற உறுப்பினர்கள் 4 ஆண்டுகளுக்கும், பேராளர்கள் சபை உறுப்பினர்கள் 2 ஆண்டுகளுக்கும் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டு மாவட்ட நீதிமன்றங்கள் மூலமும், மாநில நீதிமன்றங்கள் மூலமும் நீதித்துறை செயற்படுகிறது. மாநிலத்தில் பலவகை நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் உள்ளன.

பொதுப் பள்ளிகளும், தனியார் துறைப் பள்ளிகளும் மக்களுக்குக் கல்வியை அளிக்கின்றன. மிசிகன் ஓர் ஆண்டிற்கு ஏறத்தாழ 1 மிலியன் தாலருக்கு மேல் பொதுக் கல்விச் செலவிற்காகத் தம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்கிறது.


இம்மாநில நிலப்பரப்பில் ஏறத்தாழச்சரிபாதியில் வேளாண்மை நடைபெறுகிறது. பெருமளவில் பழங்களும் உற்பத்திச் செய்யப்படுகின்றன. இங்கு ஆப்பிள், செர்ரி, இலந்தை, தக்காளி, பீச்சு போன்ற பழவகைகள் கிடைக்கின்றன. மேலும், சர்க்கரைப் பீட்டு, ஓட்சு, மக்காச்சோளம், கோதுமை, உருளைக்கிழங்கு முதலியனவும் பயிராகின்றன.



மெக்சீனா பாலம்



பல்கலைக்கழகம்



மிசிகன் நகரம்

மிசிகன் தொழில் வளமிக்க ஒரு மாநிலமாகும். இங்குச் செம்பு, இரும்பு, நிலக்கரி, களிக்கல், சுண்ணாம்புக்கல், உப்பு முதலியவை கிடைக்கின்றன; பாறை எண்ணெய்ப் பொருட்களும், எரி வாயுவும் உள்ளன. சிறந்த நீர்ப் போக்குவரத்து வசதி இருப்பதால் தொழில்கள் செழித்தோங்கியுள்ளன. பேருந்துத் தொழில் தலையாயது. 'தெட்ராயிட்டு' பகுதி உலகின் தலையாய பேருந்துத் தொழில் மையமாக விளங்குகிறது. உப்புச் சுரங்கத் தொழில் முதன்மையாக விளங்குகிறது. மேலும், இரும்பு, எஃகு, சிமெண்ட்டுத் தொழிற்சாலைகளும், பால் பண்ணைகளும் இங்கு மிகுதியாக உள்ளன; காகிதம், கப்பல்கள், மருந்துகள், வேதிமப் பொருட்கள் முதலியவை தயாராகின்றன. மரம் வெட்டுதல் பழமையான தொழில். இதனால் மரவேலைகள் பெருகியுள்ளன.

இம்மாநிலத்தின் மக்கள்தொகை 90,69,000 (1983 மதிப்பின்படி). இதன் தலைநகர் இலான்சிங்கு (Lansing)ஆகும். தெட்ராயிட்டு (Detroit), கிராண்டு இராபிட்சு (Grand Rapids), பிளிண்ட்டு (Flint), சாகினா (Saginaw), பாண்டியாக்கு (Pontiac), தியர்பார்ன் (Dearborn) ஆகியவை பிற சிறந்த நகரங்களாகும். அ.சி.


***மிசிசிப்பி,*** அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்-மத்திய பகுதியில் உள்ள மாநிலமாகும். இம்மாநிலத்திற்கு வடக்கில் தென்னசி மாநிலமும், கிழக்கில் அலபாமா மாநிலமும்; தெற்கில் மெக்சிகோ குடாவும், மேற்கில் உலூசியானா, அர்கான்சாசு மாநிலங்களும் எல்லைகளாக அமைந்துள்ளன. இது 1,23,580 ச.கி.மீ. பரப்பளவுடையது. மிசிசிப்பி (Mississippi) கி.பி. 1817 – ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருபதாம் மாநிலமாக இணைந்தது. மாநிலத்தின் தலைநகர் சாக்சன் (Jackson).

மடிப்பு மலைகள் இம்மாநிலத்தின் பல பகுதிகளில் பரவியிருக்கின்றன. வளைகுடாப் பகுதியின் கரையோரங்கள் வேளாண்மை செய்யத் தகுதியற்றவை. மேற்குப் பகுதியும், கழிமுகப் பகுதியும், கிழக்கில் உள்ள மணற்பாங்கான களிமண் குன்றுகளும் வளமாக இருப்பதால் வேளாண்மை நல்ல முறையில் நடைபெறுகிறது. வடகிழக்குப் பகுதியில் புல்வெளி (Prairie) மண் பகுதி உள்ளது. இப்பகுதியில் முன்பு பருத்தி பயிராகியது. இப்போது கால்நடை வளர்ப்பும், பால்பண்ணைப் பொருட்கள் உற்பத்தித் தொழிலும் நடைபெறுகின்றன. இங்குப் பலவகைக் காடுகளும் புல்வெளிகளும் உள்ளன. பைன் மரக்காடுகள் இங்கு மிகுதியாக இருப்பதால் மரம் வெட்டும் தொழில், காகிதக்கூழ் தயாரித்தல், காகிதம் செய்தல் முதலியவை நன்கு செயற்படுகின்றன.


இம்மாநிலத்தில் 5 பெரிய வடிநிலைப் பகுதிகள் உள்ளன. வடகிழக்குப் பகுதியில் தாம்பிக்பீ (Tombigbee) ஆற்றுப் பகுதியும், தென்கிழக்குப் பகுதியில் பாசு – காகௌலா (Pascagoula) ஆற்றுப் பகுதியும், தென் மத்திய பகுதியில் பேர்ல் ஆற்றுப் பகுதியும், மேற்குப்பிரிவில் மிசிசிப்பி நதிப் பகுதியும், மத்திய மேற்குப் பகுதியில் பெரிய கறுப்பு ஆற்றுப் பகுதியும் உள்ளன. இம்மாநிலத்தின் ஏறக்குறையப் பாதிப் பகுதியில் காடுகள் பரவியுள்ளன. இங்குப் பலவகை மரங்கள் கிடைக்கின்றன. முட்புதர்களும், பல்வகைப் பூச்செடிகளும் உள்ளன. பல தோட்டங்கள் உருவாக்கப்பட்டுப் புதுவகைப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. நாட்செசு (Natchez) என்னுமிடத்தில் உள்ள அழகிய மலர்த் தோட்டம் மார்ச்சு மாதம் முழுவதும் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்படுகிறது. காடுகளில் சில விலங்கினங்கள் அழியும் தறுவாயில் இருந்தன. ஆனால் சட்டங்கள் மூலம் அவை வேட்டையாடுவது தடுக்கப்பட்டு இப்போது நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளையர்கள் மிசிசிப்பிப் பகுதிக்கு வந்தபோது சிகாசாசு (Chickasaws), சொக்டாசு (Choctaws), நாட்செசு (Natchez) முதலிய செவ்விந்தியப் பழங்குடியினர் அங்கு வசித்தனர். ஏறக்குறைய 20 அல்லது 30 ஆயிரம் செவ்விந்தியர்கள் இப்போதுள்ள மிசிசிப்பி எல்லைக்குள் வசித்தனர். வெள்ளையர்கள் முதலில் வாணிகத்திலும் பின்பு செவ்விந்தியப் பழங்குடியினரைக் கிறித்தவராக மாற்றுவதிலும் கவனம் செலுத்தினர். ஆனால், அவர்கள் நிலையாகத் தங்க முயன்றபோது அவர்களுடன் பழங்குடியினர் சண்டையிட்டனர். மிகச் சில செவ்விந்தியர்களே 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிசிசிப்பியில் வசிக்கின்றனர்.

இசுபானியர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மிசிசிப்பி நதி வழியாகப் புதிய பகுதிகளைக் கண்டுபிடிக்க முயன்றபோது கி.பி. 1542-ஆம் ஆண்டு செவ்விந்தியருடன் சண்டையிட்டு மேற்கு நோக்கி முன்னேறினர். அவர்கள் வெற்றியுடன் அர்கன்சாசு, உலூசியானா, தெக்சாசு ஆகிய பகுதிகளைக் கடந்தனர். அதன் விளைவாகப் பின்னர் இசுபானியர்கள் மெக்சிகோவில் குடியேற்றம் அமைத்தனர். பின்னர் 100 ஆண்டுகளுக்குப் பிறகு பிரான்சுக்காரர்கள் இசுபானியர்களைப் போல் ஆய்வு செய்து பல பகுதிகளைக் கண்டனர். உலூயிகோட்டை கி.பி. 1702-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பின்பு பசுகோலா ஆற்றுப் பகுதியில் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. பிரான்



மிசிசிபி



மிசிசிபி ஊரகப் பகுதி

சுக்காரர்களுக்கும் செவ்விந்தியர்களுக்கும் சண்டை நிகழ்ந்தது. பின்னர் ஆங்கிலேயர்களுக்கும் பிரான் சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட சண்டைகளின் விளைவாகப் பிரான்சுக்காரர்கள் மிசிசிப்பியின் கிழக்குப் பகுதியை ஆங்கிலேயருக்குக் கொடுத்தனர். மிசிசிப்பிப் பகுதி கி.பி. 1798 – ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. ஆண்ட்ரு சாக்சன் கி.பி. 1812 – ஆம் ஆண்டு செவ்விந் தியர்களைத் தோற்கடித்து அவர்கள் கொடுத்துவந்த தொல்லைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். அப்பகுதி மிகவும் பெரியதாக இருந்ததால் அமெரிக்க நாடாளுமன்றம் (Congress) அதனை இரண்டாகப் பிரித்து கி.பி. 1817 – ஆம் ஆண்டு மிசிசிப்பி மாநிலத் தையும், கி.பி. 1819 – ஆம் ஆண்டு அலபாமா மாநிலத்தையும் ஏற்படுத்தியது.

புதிய சாலைகளும், இருப்புப் பாதைகளும், நீராவிப் படகுகளும் இம்மாநிலத்தின் செல்வச் செழிப்பை மிகுதிப்படுத்தியுள்ளன. பருத்திக்குத் தேவை ஏற்பட்டதால், பருத்தி உற்பத்தி செய்ய நீக்கிரோ அடிமைகள் இங்குக் கொண்டு வரப்பட்ட னர். விரைவில் நீக்கிரோக்களின் எண்ணிக்கை வெள்ளையர்களைவிட மிகுந்தது.

அமெரிக்க உள்நாட்டுப் போரில் பல சண்டை கள் மிசிசிப்பியில் நடந்தன. அதனால் பல கட்டடங் களும், தொழிற் சாலைகளும், இருப்புப் பாதைகளும் சேதமடைந்தன. உள்நாட்டுப் போர் முடிந்தும் பல ஆண்டுகள் சரியான ஆட்சி அமையாததனால் இம் மாநில மக்கள் அல்லலுற்றனர். அவர்கள் 20 – ஆம் நூற்றாண்டில் பல சட்டங்களை இயற்றிக் கல்வி யிலும் அரசியலிலும் பல முன்னேற்றங்களைக் கண்டுள் ளனர்.

இம்மாநிலத்திற்குத் தனி அரசியலமைப்பு உள் ளது. இம்மாநிலச் சட்டமன்றம் இரண்டு அவை களையுடையது. ஆளவைமன்றத்தில் (Senate) 52 உறுப்பினர்களும், பேராளர் சபையில் 122 உறுப் பினர்களும் உள்ளனர். பலவகை நீதிமன்றங்களும், உச்சநீதிமன்றமும் உள்ளன. மாநில ஆளுநர் மக் களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சில அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர் கள் நான்காண்டுக் காலம் பதவியில் இருக்கலாம்.

இம்மாநிலத்தின் மக்கள்தொகை 75,488 (1820). அது 1980–ஆம் ஆண்டில் 25,20,638 ஆக உயர்ந்துள் ளது. ஒரே மாதிரியான பொதுக்கல்வி கி.பி. 1870–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. உள்நாட்டுப் போருக்கு முன் நீக்கிரோக்கள் கல்வி கற்கப் பள்ளிகள் இல்லை. அவர்களுக்குப் பல பள்ளிகள் கி.பி. 1869 -ஆம் ஆண்டிற்குப் பிறகு திறக்கப்பட்டன.

மிசிசிப்பி மாநிலத்தின் பொருளாதாரம் வேளாண் மையையே சார்ந்திருக்கிறது. பருத்தியே மிக முக்கிய மான பயிராக இருக்கிறது. அப்பயிர் மாநிலத்திற்கு மிகுந்த வருவாயைத் கொடுக்கிறது. நெல், கோதுமை, சோயாபீன்சு முதலியவை பிறவகைப் பயிர்களாகும். உணவு பதனிடுதல், துணி நெய்தல், வேதிமப் பொருள் உற்பத்தி செய்தல் போன்ற தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. தென்னசிப் பள்ளத்தாக் குத் திட்டம் மூலம் கிடைக்கும் மின்சாரம் தொழில் வளர்ச்சிக்கு உற்ற துணையாக உள்ளது. எண்ணெ யும் வாயுவும் இம்மாநிலத்தில் கிடைக்கும் கனிமப் பொருட்களாகும். மிசிசிப்பி நதி போக்குவரத்திற் குப் பெரிதும் பயன்படுகிறது. வாணிகமும் மக்கள் போக்குவரத்தும் 1929 - ஆம் ஆண்டு ஏற்பட்ட வான் வழிப் போக்குவரத்தினால் சிறந்த முறையில் நடை பெற்று வருகின்றன. அ.சி.

*மிசுரா, இராமானந்தன்* **(1905 – 1989)** மகாத்மா காந்தியின் முக்கிய சீடர்களில் ஒருவர். இராமானந்தன் மிசுரா (Ramanandan Mishra) பீகார் மாநிலத்தில் தர்பங்கா மாவட்டத்தில் இரகு நாதபுரம் என்னும் சிற்றூரில் கி.பி. 1905-இல் பிறந் தார். அந்தணர் வகுப்பைச் சேர்ந்த பூமிகார் (Bhumihar) என்னும் செல்வந்தர் குலத்தில் தோன்றிய இவர் தந்தை பெயர் இராசேந்திர பிரசாத் மிசுரா என்பதாகும். இராமனந்தன் மிசுரா ஓராண்டுக் குழந்தையாக இருக்கும்பொழுதே அவர் தாயார் இறந்துவிட்டார். பண்டிட்டு (Pandit) என்னும் சிற்றூரில் மிசுரா, வடமொழிக் கல்வி பயின்றார். பின்னர், 1926 – இல் காசி வித்யா பீடத்தில் கல்வி கற்றுச்‘சாத்திரி’ (Shastri) என்னும் பட்டம் பெற்றார். மகாத்மா காந்தியால் ஈர்க்கப்பெற்ற இவர், 1928 முதல் அப்பெரியாரைப் போலவே எளிய வாழ்க் கையை மேற்கொண்டார். இவருடைய மனைவி, இராச கிசோரி தேவி (Raj Kishori Devi) கயா பகுதியைச் சேர்ந்த ஒரு சமீந்தாரரின் மகளாக இருந்தபோதிலும், தம் கணவனுக்கு ஏற்ற முறையில் பொது வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் அவருடன் ஒத்துழைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மிசுரா, தேசிய தலைவர்களான செயப்பிரகாச நாராயண், அசோக்மேத்தா, அச்சுதபட்டவர்த்தன், கிசோர் பிசோத்து முதலியவர்களுடன் நெருங்கிய நட்புக்கொண்டார். பகவத் கீதையை, இவர் தம் வழி காட்டியாகக் கொண்டார் என்பது கூறப்படுகிறது. பள்ளி மாணவராக இருக்கும்போதே தேசிய இயக்கங்கள் இவர் கருத்தை மிகவும் கவர்ந்தன.

வைதிகக் குடும்பத்தைச் சேர்ந்த மிசுரா, பொரு ளற்ற வைதிகப் பழக்கங்களை அடியோடு வெறுத்

தார். தம் கல்வியை முடித்துக் கொண்டபின் இவர், வைதிக மரபுகளை எதிர்க்கும் ஒரு புரட்சி வீரராகச் செயலாற்றத் தொடங்கினார். மகளிர், திரையிட்டு முகத்தை மூடும் வழக்கத்தை எதிர்த்ததுடன், தம் மனைவியை, அந்த முகத்திரையின்றி வெளியே போய்வரச் செய்தார். இவர் குடும்பத்தினர் அதனால் இவர்மீது சீற்றமடைந்தனர். மிசுராவும் அவர்மனைவியும் சமூகத்திலிருந்து தள்ளி வைக்கப்பட்டனர்; அதனால் கலக்கமடையாமல் இவர்கள் இருவரும் மேலும் மேலும் சமூக சீர்திருத்தத்திற்காக உழைக்கலாயினர். மிசுரா, 1929-இல் பெண்டிர் கல்விக்காக ஒரு குடிலை (Ashram) அமைத்தார். அந்த நிறுவனம். மகாத்மா காந்தி, வல்லபாய் படேல் முதலிய பலருடைய பாராட்டுதல்களையும் பெற்று, பெண்டிரின் சீர்திருத்தக் கல்விக்காக அரும்பணியாற்றி வந்தது. மேலும், மிசுரா,பல நூற்பு மையங்களை அமைத்து, பெண்டிற் கதர் நூற்புப் பணியில் ஈடுபடும்படி செய்தார்.

உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்ட காரணத்திற்காக, 1930 - இல் மிசுரா, பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்றார். மேலும் ஆங்கிலேய அரசு, மிசுரா நிறுவிய பெண்டிர் கல்விக் குடிலை மூடியது. சிறையிலிருந்து வெளி வந்த பிறகு மிசுரா, சம உடைமைக் கொள்கைகளைப் பரப்புவதில் தீவிரமானார். காங்கிரசு சமதருமக் கட்சி (Congress Socialist Party) யைத் தோற்றுவித்தவர்களுள் மிசுராவும் ஒருவராவர். மீண்டும் 1940 - இல் இவர் கைதானார்.

தொடக்கத்தில் வன்முறையை விரும்பாத மிசுரா காலப்போக்கில் தீவிரவாதக் கொள்கைகளை மேற்கொள்ளலானார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் 1942 - இல் ஏற்பட்ட போது, மிசுரா, புரட்சிக் கொள்கைகளை நாட்டில் பரப்பி வந்தார். மேலும், இவர் தலைமறைவாக இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வங்காளம், பீகார், சென்னை முதலிய இடங்களில் செயலாற்றி வந்த இரகசியப் புரட்சிக் குழுக்களுடன் மிசுரா, மிகுந்த தொடர்பு கொண்டிருந்தார். பல முயற்சிகளுக்குப் பின் இவர் மீண்டும், கைதுசெய்யப்பட்டுச் சிறை சென்றார். இவர், 1942 நவம்பர்த் திங்களில், செயப்பிரகாச நாராயணனுடனும் யோகேந்திர சுக்கிலாவுடனும் சேர்ந்து சிறையிலிருந்து தப்பிச் சென்றார். அரசு, இவரைக் கைப்பற்றித் தருபவருக்கு உரூ.5,000/-பரிசு வழங்குவதாக அறிவித்தது. அவ்வாறிருந்தும் மிசுரா, காசி, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களுக்குச் சென்று படையினரைக் கலகம் செய்யுமாறு தூண்டினார். இறுதியில் இவர் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டுச் சித்திரவதைத் துயருக்கு உள்ளானார்.

இவருக்கு 1946 - இல் விடுதலை கிடைத்தது. பிறகு, இந்தியாவில் சம உடைமைக் கட்சி வளர்ச்சி அடைவதற்காக இவர் செயலாற்றினார். அக்கட்சித் தலைமையினருடன், கருத்து வேற்றுமை காரணமாக இவர் 1951-இல் அரசியலை அடியோடு விட்டொழித்தார். பிறகு 1952 - ஆம் ஆண்டு முதல் மிசுரா, ஆன்மிகத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டு துறவற வாழ்க்கையை மேற்கொண்டார். காந்திய வாதியாகவும் சிறந்த சமூக சீர்திருத்தவாதியாகவும், தீவிர புரட்சியாளராகவும் இறுதியில் ஒரு துறவியாகவும் வாழ்ந்த இராமானந்தன் மிசுரா, 1989 ஆகசுட்டுத் திங்களில் காலமானார். தெ.பா.

**மிசுரா, இலலித் நாராயண் (1923-1975):** 'இலித் பாபு' என்று செல்லமாகச் சொல்லப்பெற்ற இலலித் நாராயண் மிசுரா 1923-ஆம் ஆண்டில் பீகாரைச் சேர்ந்த பசந்தாதியில், செல்வாக்குள்ள பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்தார். இவர் 16 வயதிலேயே விடுதலைப் போரில் பங்கேற்றார்; மாணவராக இருந்த போதே இருமுறை (1941, 1942-இல்) சிறை சென்றார்; 1941-இல் பீகார் மாநில மாணவர் காங்கிரசில் சேர்ந்தார்; 1945-இல் அதன் செயலாளராகவும், 1946 வரை அதன் தலைவராகவும் பணியாற்றினார்.

இவர், பாட்னா பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்; 1944 -இல் பீகார் மாநிலக் காங்கிரசின் செயலாளராகி, 1946 வரை அப்பதவியில் இருந்தார்; 1946-48 ஆகிய ஆண்டுகளில் அதன் தலைவரானார்; 1950-53-இல் இந்தியக்காங்கிரசின் உறுப்பினரானார். உறுப்பினரான நிலை 1963 - இலிருந்து தொடர்ந்தது.

இவர்1952 முதல் 1962 வரையுள்ள காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கினார். அப்போது திட்டம், தொழிலாளர், வேலைவாய்ப்புத்துறை ஆகியவற்றின் அமைச்சராக, 1957 - 1960 - ஆண்டுகளிலும் தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறையின் துணை அமைச்சராக 1960-62 - ஆண்டுகளிலும் பணியாற்றிய இவர், பின்னர் உள்துறை, நிதித்துறை முதலான துறை அமைச்சரானார். அயல்வாணிகத் துறை அமைச்சராகப் பணியாற்றிய பின் 1973 முதல் ஆலோசனைக்குழுத்தகுதி பெற்றுத் தொடர்வண்டித் (Railway) துறை அமைச்சரானார்.

தொழிலாளர் நலனிலும் சமுதாய நலனிலும் பெரிதும் அக்கறை கொண்டவர். பாரத் சேவக் சமாசத்தின் பொதுச் செயலாளர், இந்தியச் சமூகப் பணியாளர் கூட்டமைப்பின் உறுப்பினர், இந்தியத் தேசிய தொழிற்சங்கக் காங்கிரசின், பீகார்க் கிளையின்

செயற்குழு உறுப்பினர் ஆகிய பணிகளை ஆற்றி அதன் பின்னர்த் தேசிய குழுவின் உறுப்பினர் முதலான பதவிகளையும் பெற்றார்.

தொடர் வண்டித்துறை அமைச்சராகப் பணியாற்றியபோது பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் வளர்ச்சிக்குத் தொடர்வண்டிப் போக்குவரத்து இன்றியமையாதது என உணர்ந்து திட்டம் வகுத்தார். இளைஞர்களுக்கும், . மாணவர்களுக்கும் சிறப்புச் சலுகைகள் வழங்கினார். படித்து வேலையற்ற இளைஞர்களுக்குப் புத்தகக் கடைகள் அமைப்பதில் முன்னுரிமை வழங்கினார்.


தொடர் வண்டித் துறைப் பாதுகாப்புப் படையைச் சீர்திருத்தி அமைத்து, திருட்டுகளைப் பெருமளவு குறைத்தார். ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டார்.

பாங்காக்கில் நடைபெற்ற ஆசியா, தூரக்கிழக்கு நாடுகளின் ஐ.நா. பொருளாதாரக் குழுவின் (ECAFE) மாநாட்டிற்கு இந்தியப்பேராளர் குழுவின் தலைவராகச் சென்றுவந்தார்.

இவர் 1975 – இல் மேடையில் ஏற்பட்ட வெடி குண்டு விபத்தில் உயிர் துறந்தார். செயல் வீரர் என்று பெயர்பெற்ற இவர், தொடர்வண்டித் தொழிலாளர் போராட்டத்தை உறுதியாக எதிரேற்று வெற்றி பெற்றார். தொடர்வண்டித் தொழிலாளர் அனைவருக்கும் ஒரே தொழிற்சங்கம் காண முயன்றார். ந.க.ம.

***மிசௌரி***: இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடமேற்குப் பகுதியின் மத்தியில் உள்ள ஒரு மாநிலமாகும், இது 1,80,487 சதுர கி.மீ. பரப்பளவு உடையது. வடக்குப் பகுதி புல்வெளி. தென் கிழக்குப் பகுதி தாழ் நிலவெளி. இவ்விரண்டிற்கும் இடையிலிருக்கும் பகுதி மேட்டு நிலம். மிசௌரி (Missouri) மாநிலத்தின் தலைநகர் 'செபர்சன்' நகரமாகும் (Jefferson city). செயின்ட் லூயி,கான்சாசு, செயின்ட் சோப்பு, இசுபிரிங்பீல்டு, (Spring Field) ஆகியவை பிற முக்கிய நகரங்களாகும்.இங்கு மிசிசிபி,மிசௌரி, கரன்டு, பிளாக்கு, செயின்ட் பிரான்சிசு, சேம்சு, மெராமெக்கு முதலிய ஆறுகள் பாய்கின்றன. மிசௌரி நதியின் பெயரே இம்மாநிலத்தின் பெயராக உள்ளது. இம்மாநிலத்தில் பெரிய ஏரிகளும், நீர் ஊற்றுகளும், குகைகளும், மலைகளும், பள்ளத்தாக்குகளும், நீரோடைகளும் உள்ளன.

இம்மாநிலத்தின் பெரும் நிலப்பரப்பில் காடுகளும், பெரும் புல்வெளிகளும் (Prairie) உள்ளன. காடுகளில் பலவகை மரங்களும், செடி கொடி வகைகளும் உள்ளன. காட்டு விலங்குகளான காட்டெருமை, கருங்கரடி, கருப்புமான், மரநாய் போன்ற மிருகங்கள் வேட்டையாடப்பட்டு, இப்போது அந்த இனங்கள் அழிந்துள்ளன. ஆழமான பள்ளத்தாக்குகளில் ஓடும் நீரோடைகளைத் தடுத்துப் பலநோக்கு அணைகள் பல கட்டப்பட்டுள்ளன. அவை பொழுது போக்கிற்கும், வெள்ளத்தடுப்பிற்கும், குடி தண்ணீர் வழங்குவதற்கும், மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் பயன்படுகின்றன.



மாநிலத் தலைநகர்

மிசௌரியில் சுற்றுலா (Tourism) ஒரு தொழிலாக நடைபெறுகிறது. ஒவ்வோர் ஆண்டும் சுற்றுலா மையங்களுக்கு 70,00,00,000 தாலர் செலவிடப்படுகின்றது. மாநில அரசாங்கம் 37 பெரிய பூங்காக்களை அமைத்துக் பாதுகாத்து வருகிறது.

வெள்ளையர்கள் இப்பகுதிக்கு வந்தபோது ஏறத்தாழ 12,000 இந்தியப் பழங்குடியினர் வசித்தனர். பழங்குடியினர் பெருமளவில் கி.பி. 1789 – ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் ஏற்பட்ட போர்கள் மூலம் அழிக்கப்பட்டனர். எஞ்சியுள்ள சில தலைவர்களுக்கு நிலமும் அவர்கள் வாழ்வதற்குப் பொருள் உதவியும் செய்யப்பட்டன.

இங்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரான்சு மக்கள் சில வாணிகத் தலங்களையும் குடியிருப்புகளையும் ஏற்படுத்தினர், அமெரிக்கா உலூசியானாவைப் பிரான்சிடமிருந்து கி.பி. 1803,1804–ஆம் ஆண்டுகளில் வாங்கியது. உலூகியானாவின் மேல் பகுதி கி.பி.



மிசௌரி பல்கலைக்கழகம்



செயின்ட் லூயி நகரம்

1812-ஆம் ஆண்டில் மிசௌரிப்பகுதியாக மாறியது. மிசௌரி கி.பி. 1820 – ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டொடு 24-ஆம் மாநிலமாக இணைந்தது.

மிசௌவுரி நதியில் கி.பி. 1819-ஆம் ஆண்டு நீராவிப் படகுப் போக்குவரத்து ஏற்பட்டதன் மூலம் உரோம (Fur) வாணிகம் பெருகியது. இங்கு உள்நாட்டுப் போரின் விளைவாக நதிப் போக்குவரத்துச் சீர்குலைந்தது. பின்னர்த் தொடர்வண்டிப் போக்குவரத்தில் ஆர்வம் ஏற்பட்டதால் நீராவிப் படகுகள் குறைந்தன.

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது இம் மாநிலத்தின் பல இடங்களில் போர்கள் நடந்தன. கொரில்லாப் போர்கள் மூலம் பல இடங்கள் நாசமாயின. தானியங்கள் எரிக்கப்பட்டன. உள்நாட்டுப் போர் முடிந்ததும் கி.பி. 1875-ஆம் ஆண்டிலிருந்து ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டது. ஒரு புதிய அரசியலமைப்பு1945-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அதன்படி கட்சி அடிப்படையில்லாமல் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் நகரமக்கள் தொகை பெருகியது ; கிராம மக்கள் தொகைகுறைந்தது.

புதிய அரசியலமைப்பின்படி ஆளுநர், துணை ஆளுநர், மாநிலச் செயலர், தணிக்கையாளர், பொருளாளர் போன்ற 6 பெரிய அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எல்லாத் துறைத் தலைவர்களும் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். இம்மாநிலச் சட்டமன்றம் இரண்டு அவைகளை உடையது. இம் மாநிலத்தின் மக்கள்தொகை 49,16,766 (1980) ஆகும். இதில் 10.7 விழுக்காட்டினர் வெள்ளையரல்லாதவராவர்.

நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் தரமான கல்வி அளிக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அரசியலமைப்பின்படி வருவாயில் நான்கில் ஒரு பங்கு பொதுக்கல்விக்குச் செலவிட வேண்டும். விழியிழந்தோருக்கும், ஊமைகளுக்கும் தனிப் பள்ளிகள் உள்ளன. தொடக்கப்பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவை பல உள்ளன. முதலில் நீக்ரோக்களுக்கெனத் தனிப் பள்ளிகள் இருந்தன. ஆனால், 1954-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அப்பள்ளிகள் மறைந்தன.

பல பெரிய பண்ணைகளை அமைத்துப் புதிய இயந்திரங்களைப் புகுத்தி வேளாண்மைப் பொருட்கள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மக்காச்சோளம், சோயாபீன்சு, கோதுமை, ஓட்சு, பார்லி, உருளைக் கிழங்கு, புகையிலை, பருத்தி, பழவகைகள் முதலியன பயிரிடப்படுகின்றன. காரீய உற்பத்தியில் இதுவே அமெரிக்காவின் தலையாய மாநிலம். துத்தநாகம், வெள்ளி, கட்டடக்கல் முதலிய தாதுப் பொருட்களும் கிடைக்கின்றன.

காலணி, துணி வகைகள், போக்குவரத்துச் சாதனங்கள், வேதிமப் பொருட்கள், மின்சார சாதனங்கள், இயந்திரங்கள் முதலியவற்றை உருவாக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. கால்நடை வளர்ப்பும், பால்பண்ணைத் தொழிலும் சிறப்பான தொழில்களாக உள்ளன.

தொடர் வண்டிப் பாதைகளும், வான்வழிப் போக்குவரத்தும், நதிப் போக்குவரத்தும், சாலைப் போக்குவரத்தும் சிறந்த முறையில் அமைந்துள்ளன.

**மிசௌரி ஒப்பந்தம்**: மிசௌரி ஒப்பந்தம் (The Missouri Compromise) அமெரிக்கப் பாராளுமன்றத்தில், மிசௌரி ஒரு மாநிலமாக இணைவதற்கு கி.பி. 1820-இல் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தமாகும். இப்புதிய மாநிலத்தில் அடிமைகள் நிலையாக இருக்க வேண்டும் என்பதனால் சிக்கல் எழுந்தது. இரண்டாம் சிக்கல் ஏற்படக் காரணம் மிசிசிபி ஆற்றின் மேற்குப் பகுதியில் உள்ள இடங்களில் அமெரிக்கப் பாராளுமன்றம் கொண்டிருந்த அடிமை ஒழிப்புக் கொள்கையாகும்.

அமெரிக்கப் பாராளுமன்றம் கி.பி. 1818-ஆம் ஆண்டுத் திசம்பர்த் திங்கள் மிசௌரியிலிருந்து ஒரு விண்ணப்பத்தைப் பெற்றது. அதில் மிசௌரி ஒரு மாநிலமாக உருவாக்கப்படுவதற்கு அனுமதி வேண்டியிருந்தது. அப்போது அமெரிக்காவில் அடிமைகளைக் கொண்ட மாநிலங்கள் பதினொன்றாகவும், அடிமைகள் இல்லாத சுதந்திர மாநிலங்கள் (Free States) பதினொன்றாகவும் இருந்தன. இந்தச் சம நிலை எதிர்பாராது ஏற்பட்டதாகும். பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான பேராளர்கள் அவையில் (House of Representatives) கி.பி.1819-ஆம் ஆண்டு மிசௌரியின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. அப்போது நியூயார்க்கைச்சேர்ந்த ‘சேம்சு தால்மாட்சு’(James Tallmadge) என்பவர் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார். அதன்படி புதிதாக எந்த அடிமையையும் மிசௌரி மாநிலத்தில் சேர்க்கக்கூடாது. அங்கிருக்கும் அடிமைகளுடைய குழந்தைகள் அவர்களுக்கு 25 வயது ஆகும்போது அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். அதன் விளைவாக வடமாநிலங்களிலும், தென் மாநிலங்களிலும் மறுப்புரைகள் எழுந்தன. இறுதியில் அத்திருத்தத்தைப் பேராளர்கள் அவை ஏற்றுக்கொண்டது. ஆனால், மேல் அவை (Senate) அதை நிராகரித்தது. பாராளுமன்றம் கி.பி. 1819, மார்ச்சு 4-ஆம் நாள் இம்மசோதா மீது எம்முடிவும் எடுக்காமல் ஒத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து வந்த கோடைக் காலத்தில் வட பகுதி மக்கள் தால்மாட்சு கருத்திற்கு ஆதரவு அளித்த தோடல்லாமல், அடிமைகள் வைத்திருப்பது நியாயத்திற்குப் புறம்பானது என்றும் கூறினர். மிசௌரிக்கு எதிராகப் பல தலைவர்களும் ஆதரவாகச் சில தலைவர்களும் 'கூட்டாட்சிக் கட்சியில்' (Federalist Party) இருந்தனர். அதனால் கட்சி பிளவுபடும் நிலையில் இருந்தது. இந்த நிலையில் மெயின் (Maine) என்ற மாநிலம் (அடிமைகள் இல்லாத மாநிலம்) அமெரிக்காவுடன் இணைவதற்கு விண்ணப்பித்திருந்தது. அது ஒரு அமைதி உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பளித்தது.

பின்னர் கி.பி. 1819 திசம்பரில் கூடிய பாராளு மன்றம் கி.பி. 1820 சனவரி 3-ஆம் நாள் மெயின் மாநிலத்தை அடிமைகள் அற்ற மாநிலமாகவும் மிசௌரியை அடிமைகள் உள்ள மாநிலமாகவும் சேர்த்துக்கொள்ள இசைந்தது. அதனால், அப்பொழுது இருந்த சமநிலை பாதிக்கப்படாமல், வடக்கே 12 மாநிலங்களும் தெற்கே 12 மாநிலங்களும் இருந்தன. அப்போது மேல்சபையில் இலிநாய்சைச் (Illinois) சேர்ந்த தாமசு என்பவர் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். அதன்படி குறிப்பிடப்பட்ட எல்லைக்கு வடக்கேயுள்ள உலூசியானாப் பகுதியில், அடிமைத்தனம் ஒழிக்கப்பட வேண்டும். முதலில் 'மேல்சபை' அதை ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே என்றி கிளே (Henry Clay) என்பவர் அமைதிப்படுத்த மிகவும் முயன்றார். எனினும், ஒரே சட்ட முன் வரைவு மூலம் சட்டமாக்க முடியவில்லை. பெரும்பான்மையான வட மாநில உறுப்பினர்கள் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் மிசௌரியைச் சேர்க்க மறுத்தனர். பெரும்பான்மையான தென் மாநிலத்தினர் அதை எதிர்த்தனர். கிளே தனித் தனியே வாக்கெடுக்கச் செய்தார். முரண்பாடான முடிவுகள் மிகக்குறுகிய வாக்கு வேறுபாட்டில் நிறைவேற்றப்பட்டன. அவை குடியரசுத் தலைவர் சேம்சு மன்றோவினால் கி.பி.1820 – ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் கையெழுத்திடப்பட்டன.

மிசௌரி ஒப்பந்தம் நாளடைவில் வடபகுதியினருக்கு நன்மையாக அமைந்தது. இரண்டு நிலப்பகுதிகளுக்கிடையே எல்லை வரையறுக்கப்பட்டமையால் வடபகுதிஅதிகமான மாநிலங்களை அடைந்து அதன் மூலம் மேல்சபையில் அதிக உறுப்பினர்களைப் பெற்றது. தென் பகுதியானது, வடபகுதி பருத்தி விளைவிப்பதற்கும், அடிமைகள் வைத்திருப்பதற்கும் ஏற்றதன்று என்ற கருத்தினைக் கொண்டிருந்தது. மேலும், தனக்கு அடிமைகளை உடைய மற்றொரு மாநிலம் கிடைத்த பெருமிதத்தில் இருந்தது. எனினும், இந்த அமைதி ஒப்பந்தத்தால் நீண்ட காலச் சிக்கலுக்குத் தீர்வு அளிக்க இயலவில்லை. வடக்கிற்கும் தெற்கிற்குமான சமநிலை பாதிக்கப்படுவதால் கி.பி. 1854-ஆம் ஆண்டு மிசௌரி ஒப்பந்தம் நீக்கப்பட்டது. அ.சி.

*மிஞிலி:* இவன் சங்ககாலத்து வாழ்ந்த சிறந்த வீரனாவான். இவனைப் பற்றிய செய்திகளைப் பரணர் தம் ஆறு பாடல்களில் (நற்றிணை 265, அகம். 142,148,181,208,396) குறிப்பிட்டுள்ளார். அன்னியின் மகள் மிஞிலி என்னும் பெயரில் இருந்துள்ளாள். அவள் ஞிமிலி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளாள். அதனால் பண்டு மிஞிலி என்னும் பெயர் ஆண் பெண் இருபாலார்க்கும் வழங்கப் பெற்றமை தெரிகின்றது. அன்னி மிஞிலியைப் பற்றிப் பரணரே தம் இரு அகநானூற்றுப் பாக்களில் (196, 262) சுட்டியுள்ளார். மிஞிலியின் தந்தையாகிய அன்னியின் கண்களை அழித்த தவற்றுக்குக் கோசரைத் திதியன், அழுந்தை என்னுமிடத்துப் போர் செய்து கொன்றமையால் அன்னி மிஞிலி தன்மாறுபாடு நீங்கிக் களிப்புற்றாள் என்பதும் (அகம். 196), பயற்றங் கொல்லையில் அன்னியின் பசு மேய்ந்த சிறு பிழைக்காகப் பொறாது அருளின்றிக் கோசர் அன்னியின் கண்களைப் பறித்துக் கொடுமை செய்தனர் என்பதும், அதுகண்டு மிஞிலி கலத்தில் உண்ணாமலும் தூய உடை உடுக்காமலும் வஞ்சினங் கொண்டு அச்செய்தியைத் திதியனிடம் கூறி, அக்கோசரை அழிக்குமாறு செய்து சினம் மாறி மகிழ்ந்தாள் என்பதும் (அகம். 262) பரணர் அன்னி மிஞிலி பற்றிக் கூறும் செய்திகளாகும்.

கலைமானை எய்யும் ஒளிமிக்க அம்பினையும் வில்லினையுமுடைய வீரர் தலைவனும் தோளில் கவசம் பூண்டவனுமான மிஞிலி, பாரம் என்னும் ஊரினைக் காத்தான் எனப் பரணர் குறிப்பிடுவர் (நற். 265). பாழிப் பறந்தலையில் நிகழ்ந்த போரில் இழையணி யானையினையும் இயல் தேரினையும் உடைய மிஞிலி, ஆஅய் எயினனை வாட் போரில் கொன்றான். படுகளத்தில் மாய்ந்து கிடந்த எயினன் மீது ஞாயிற்றுக்கதிர் தெறாதிருக்கப் பறவைகள் ஒருங்கு கூடித் தம் சிறகால் நிழல் செய்தன (அம். 208). பாழியிற் போர் செய்த நன்னனிடம் 'அஞ்சல்' என்று கூறிய ஆஅய் எயினன் சொன்ன சொல் தவறாமல் மிஞிலியுடன் பொருது தன்னுயிர் கொடுத்தான் (அகம். 396). பகைவரது அரணை அழித்து வென்ற பெருந்தானையையுடைய மிஞிலி முருகனை ஒத்த வலிமையொடு சென்று ஆஅய் எயினனைக் கொன்று போர்க்களத்தைச் செந்நிற மாக்கினான் (அகம். 181). மிஞிலியொடு பொருது மாய்ந்து கிடந்த எயினனைப் பார்க்க நாணிப் பகலில் கூகைகள் புறத்தே போகவில்லை (அகம். 148). நன்னனது பாழியில் பலியிடற்கரிய அஞ்சத்தக்க பேய்க்கு ஊட்டுதலை ஏற்றுக்

கொண்ட வாய்மையாளனான மிஞிலி புள்ளிற்குப் பாதுகாவலனான பெரும்பெயர் பெற்ற எயினனைக் கொன்று பறந்தலையில் ஒள்வாளமலை என்னும் வெற்றிக் கூத்தாடி ஆர்ப்பரித்தான் (அகம். 142). இங்ஙனம் பரணர் தம் அகநானூற்றுப் பாடல்களில் மிஞிலி பாழிப்பறந்தலையில் எயினனைக் கொன்று வெற்றி பெற்றதைப் பலவிடங்களில் சுட்டியுள்ளார். இரா.சா.

**மிட்வே தீவுகள்,** பசிபிக்கு மாக்கடலின் நடுப் பகுதியில் உள்ள இரு பவழத்தீவுகள் ஆகும். இத்தீவுக் கூட்டத்தின் பரப்பு 5.2 சதுர கி.மீ. ஆகும். மிட்வே தீவுகள் (Midway Islands), ஆனலூலு (Honolulu) விலிருந்து ஏறத்தாழ 1850 கி.மீ. தொலைவில் உள்ளன. இவை, ஆவாய் (Hawaii) தீவுக் கூட்டத்தைச் சேர்ந்தவை. உள்நாட்டு மக்கள் என்று எவரும் இங்கு வசிக்கவில்லை. இது அமெரிக்காவின் கடற்படைத் தளமாகவும் விமானப் படை இறங்குமிடமாகவும் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கர் இதை கி.பி. 1859-இல் கண்டுபிடித்தனர். பின்னர் கி.பி. 1867-இல் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டனர். கடல் கடந்து தந்திச் செய்தி அனுப்புவதற்கான ஒரு நிலையம், 1903-இல் இங்குத் திறக்கப்பட்டது. அமெரிக்க விமானப் போக்குவரத்து மையம், இங்கே 1935 – ஆம் ஆண்டு முதல் செயற்படத் தொடங்கியது. பிறகு, 1941-இல் இங்குக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது. இப்பொழுது இந்தத் தீவு அமெரிக்க அரசின் உள்நாட்டுத் துறையினால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன் மக்கள் தொகை 453 (1980).



மிட்வே தீவுகள்

**மிட்வே தீவுப் போர்:** இரண்டாம் உலகப் போரில் மிட்வே தீவுகளில் ஒரு முக்கியமான சண்டை நடைபெற்றது. மிட்வே தீவுப் போர், 1942 - ஆம் ஆண்டு மூன்று நாட்கள் நீடித்தது. அப்போரின் விளைவாக, சப்பானியரின் ஆகாயவிமானப் படைகள் முற்றிலும் அழிக்கப்பட்டன. மேலும், சப்பானின் கடல் வலிமையும் அழிவுற்றது. அப்போரில் சப்பானியர் பெரும் தோல்வியுற்றனர். தெ.பா.

**மிடில்செக்சு,** இங்கிலாந்தின் தென்கிழக்கில் உள்ள, வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஒரு பழைய மாவட்டம். உரோமானியர் இங்கிலாந்தில் ஆட்சி செய்த காலத்தில் இது சிறப்புப் பெற்றிருந்தது. இதன் வழியாக ஓர் உரோமானிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு வாட்லிங்குச்சாலை (Watling Street) என்பது பெயர். இலண்டனை அடுத்துள்ள மிடில்செக்சு (Middlesex), 1965-இல் பல பிரிவுகளாக்கப்பட்டது. பெரும்பான்மையான இதன் பகுதி, விரிந்த இலண்டன் (Greater London) என்னும் புதிய அமைப்புக்கு உட்பட்டுள்ளது. இதன் சில பகுதிகள், எர்ட்போர்டு சயரின் (Hertfordshire) வட்டங்களாகவும், சில பகுதிகள் சர்ரேயின் வட்டங்களாகவும் இணைக்கப்பட்டுள்ளன.

மிடில்செக்சு என்ற பெயரினை உடைய மாவட்டங்கள் அமெரிக்காவில் கனெக்டிகட்டு மாநிலத்திலும், மாசசூசட்சு மாநிலத்திலும், நியூசெர்சியிலும், வர்சீனியாவிலும் உள்ளன. தெ.பா.

**மிண்டன்:** இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராச்சியங்களில் ஒன்றான உலூசியானாவின் வடமேற்கில் அமைந்துள்ளதொரு நகரம். இது வெப்சுடர் பாரிசு (Webster Parish) என்னும் மாவட்டத்தின் தலைநகரமாகும். செரிவிபோர்ட்டு (Shreveport) என்னும் நகருக்கு வடகிழக்கில் 43 கி.மீ. தொலைவில் இந்நகரம் அமைந்துள்ளது. மிண்டன் நகரம் கி.பி. 1836-ஆம் ஆண்டில் சார்லசு அன்சே வீடர் (Charles Hanse Veeder) என்பவரால் உருவாக்கப்பட்டது. அவர் செருமனியிலிருந்து வந்து குடியேறிய அமெரிக்கர். ஆதலின், செருமனியிலுள்ள மிண்டன் என்னும் நகரின் பெயரால் இதனையும் மிண்டன் என்று கூறலாயினர். மிண்டன் நகரையொட்டியுள்ள பகுதிகளில் எண்ணெய்க் கிணறுகள், மணல், கூழாங்கல் குழிகள் போன்றவை மிகுதியாக உள்ளன. இது ஒரு வாணிக மையமாக உள்ளது. வேளாண்மைப் பொருட்கள் மிகுதியாக விளையும் மையமான மிண்டன் கப்பல் வந்து போகும் வசதியைப் பெற்றுள்ளது. பருத்தி, மக்காச்சோளம், உருளைக்கிழங்கு போன்றவை இங்குப் பயிராகின்றன. பருத்தியைக் கொட்டைகளிலிருந்து பிரித்தெடுக்கும் தொழிலும், பருத்திக் கொட்டைகளிலிருந்து எண்ணெய் எடுக்கும தொழிலும், மரமறுக்கும் தொழிலும் நடைபெறுகின்றன.

இதன் அருகில் உள்ள பிசுட்டினோ (Bistineau) ஏரியில் மீன்பிடித்தல் ஒரு சிறப்பான தொழில். அண்மையில் பாயும் மிசிசிபி ஆற்றிலும் மீன்பிடிக்கிறார்கள். இப்பகுதி பொழுதுபோக்கும் இன்பச் சுற்றுலா மையமாகவும் உள்ளது. மிண்டன் சிறு நகரமாக கி.பி. 1850-இலும், நகரமாக 1928-ஆம் ஆண்டிலும் ஆக்கப்பட்டது. இதன் மக்கள் தொகை 15,500(1980)ஆகும்.

**மிண்டன்**[2] என்னும் பெயரில் மேற்குச் செருமனி நாட்டில் ஒரு நகரம் உள்ளது. செருமனிக் கூட்டாட்சிக் குடியரசின் வட இரைன்-வெசுட்டுபேனியா மாநிலத்தின் தொழிற்சாலைகள் மிகுந்த நகரங்களுள் ஒன்றான மிண்டன், அனோவர் என்னும் நகரத்திற்கு 58 கி.மீ. மேற்கில் அமைந்துள்ளது. இந்நகரம் வீசர் ஆற்றின் துறைமுகப்பட்டினமாகும். மிட்டல்லாந்துக் கால்வாய் (Mittleland canal) குறுக்கிடும் இடத்தில் இத்துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நகரத் தொழிற்சாலைகளில் மதுவகைகள், மருந்துப் பொருட்கள், கண்ணாடி, இயந்திரங்கள், சுருட்டு, தோல் பொருட்கள் முதலியன உற்பத்தியாகின்றன. சார்லிமேன் என்னும் பெயர் கொண்ட பெருமன்னர் செருமனியை ஆண்ட கி.பி.9-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்திலேயே இங்குக் கிறித்தவப் பேராயரின் பகுதியொன்று உருவாக்கப்பட்டிருந்தது. ஏன்சியாட்டிக் சங்கம் என்னும் (Hanseatic League) வாணிகக் குழுமத்தின் நகரங்களுள் ஒன்றாக மிண்டன் கி.பி. 1295-ஆம் ஆண்டில் ஆக்கப்பெற்றது; சமயப் பிடிப்புகளிலிருந்து கி.பி. 1648-ஆம் ஆண்டு மிண்டன் தளர்த்தப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது இந்நகரம் வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளாகிப் பெரும் அழிவிற்கு ஆளாயிற்று. பல நூற்றாண்டுகளாக விதவிதமான கலைநுட்பங்களைக் கொண்டிருந்த இந்நகரத் திருச்சபையும் அழிவுற்றது. பின்னர் இத்திருச்சபையைச் செப்பனிட்டுக் கட்டி முடித்தார்கள்.

இந்நகரம் கி.பி. 798-ஆம் ஆண்டில் மிம்டா (Mimda) என்னும் பெயரில் உருவாக்கப்பட்ட செருமனியின் தொன்மையான நகரங்களுள் ஒன்றாகும். ஏழாண்டுப் போர்களின் போது மிண்டனில் நடைபெற்ற போரில் ஆங்கிலேயப் படைகளால் பிரான்சு மக்கள் தோற்கடிக்கப்பட்டனர். இதன் மக்கள் தொகை 80,000 (1980) ஆகும். இரா.அ.

*மிண்டோ - மார்லி சீர்திருத்தங்கள்:* இந்தியாவில் 1905-இல் இருந்து 1910 வரை தலைமை ஆளுநராக இருந்தவர் மிண்டோ (Minto) பிரபு ஆவார். இவர் மிகவும் திறமை மிக்கவராகக் காணப்பட்டார். அப்பொழுது இளங்கோமகன் (Viscount) மார்லி (Morley) இந்திய அமைச்சராக விருந்தார். மிண்டோ பிரபு இந்தியாவில் பதவி ஏற்ற பொழுது இந்திய அரசியல் நிலைமை மிகவும் சீர்கெட்டதாகக் காணப்பட்டது. வங்கப் பிரிவினையின் காரணமாக எழுந்த நாடுதழுவிய போராட்டங்கள், கொலை, கொள்ளை ஆகிய நிகழ்ச்சிகள் பெரும் சிக்கலைத் தோற்றுவித்தன. இந்திய அரசாங்கம் பல கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய எழுச்சி இயக்கத்தை முறியடிக்க முயன்றது. எனினும், இந்திய அரசாங்கம் இந்தியத் தேசிய மிதவாதிகளின் நல்லெண்ணத்தைப் பெறும் பொருட்டு, 1909-ஆம் ஆண்டு இந்திய ஆலோசனைக் குழுச்சட்டத்தை (Indian Councils Act) நிறைவேற்றியது. அந்தச்சட்ட முன்வரைவினை இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியவர் மார்லி பிரபு ஆவார். அதன் பயனாகப் பல சீர்திருத்தங்கள் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டன. மிண்டோ பிரபு, மார்லி பிரபு ஆகியவர்களின் முயற்சி காரணமாக அச்சட்டம் நிறைவேற்றப்பட்டதால் அதை மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் எனக் குறிப்பிட்டனர். அச்சட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களாவன: 1.சட்டசபை உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை. 2. தலைமைஆளுநர் சபையின் கூடுதல்உறுப்பினரின் எண்ணிக்கை 60க்கு உயர்த்தப்பட்டமை. சென்னை, வங்காளம், உத்தரப் பிரதேசம், பம்பாய், பீகார், ஒரிசா ஆகியவற்றின் எண்ணிக்கை 50-ஆகவும் பஞ்சாபு, பர்மா, அசாம் ஆகியவற்றின் எண்ணிக்கை 30ஆகவும் உயர்த்தப்பட்டன.

இதன்படி மத்திய சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 60-ஆக உயர்ந்தது. இதில் 27 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எஞ்சிய 33 பேர் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர். அப்படி நியமிக்கப்படுவோருள் அலுவலர் 28 பேருக்கு மேல் இருக்கக்கூடாது. தேர்தல் கோட்பாட்டை ஓரளவு அங்கீகரித்ததுடன், இச்சட்டம் வகுப்புவாதப் பேராளர் தன்மையைத் தொடங்கியும் வைத்தது. சட்டசபையின் கடமைகளும் மிகுந்தன. சட்டசபை உறுப்பினர் பொதுவான செய்திகளைப் பற்றி விவாதிக்கவும் துணைக் கேள்விகள் கேட்கவும் உரிமை பெற்றனர். ஆண்டு வரவு செலவுத் திட்டம் முடிவாகத் தீர்மானிக்கப்படுமுன் அதைப்பற்றிச் சட்டசபை பல நாள்கள் விவாதிக்கவும் சட்டம் வழிகோலியது. கடைசியாகப் பொதுச் செய்திகளைப்பற்றித் தீர்மானம் நிறைவேற்றவும், அவற்றைப் பற்றி வாக்கெடுக்கவும் உரிமை பெற்றனர். மாகாணங்களில் சட்டசபை, நிருவாகக் குழு ஆகியவற்றின் உறுப்பினர் தொகை மிகுதியாகியது. சென்னை, பம்பாய் போன்ற மாகாணங்களில் நிருவாகக்குழு உறுப்பினர்களின் உயர் எல்லை எண்ணிக்கை நான்காக உயர்ந்தது.

துணை ஆளுநர்களின்(Lieutenant Governor)ஆளுகைக் குட்பட்ட மாகாணங்களில் நிருவாகக்குழுவை ஏற்படுத்தவும் சட்டம் இடமளித்தது. மார்லியின் தூண்டுதலால் இந்தியா அவையில் இந்தியர் இருவரும் அரசப்பேராளர் நிருவாகக் குழுவில் இந்தியர் ஒருவரும், சென்னை, பம்பாய் மாகாண நிருவாகக் குழுக்களில் ஒவ்வொரு இந்தியரும் இடம் பெற்றனர்.

இச் சட்டம் தேர்வு முறையை அறிமுகப்படுத்தினாலும், வாக்களிப்போர் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. அதனால் தோன்றிய மறைமுகத் தேர்வின் காரணமாக மக்களுக்கும் தேர்வு செய்யப்படுவோருக்கும் தொடர்பில்லாமல் போனது. இச்சட்டம் இசுலாமியர்களுக்குத்தனிப் பேராளர் தன்மையை அளித்தது. அது நாட்டின் பிரிவினைக்கு வழி செய்தது. மேலும், இச்சட்டத்தால் சமீன்தார்களும், வணிகப் பெருங்குடி மக்களும் பல சிறப்புச் சலுகைகளைப் பெற்றனர். மத்திய சட்டசபையில் இந்தியர்களுக்குக் குறைவான இடங்களே தரப்பட்டன. இறுதியாக இச்சட்டம் இந்தியர்களுக்கு ஒரு பொறுப்பான அரசாங்கத்தை நிறுவ வழி செய்யவில்லை. எனவே, இச்சட்டத்தால் இந்தியர்கள் மன நிறைவு கொள்ளவில்லை. இரா.கி.

**மித்திரடேட்டசு**, பண்டைய பாண்டசு நாட்டின் அரசர். அந்நாடு சிறிய ஆசியாவில் (Asia Minor) கருங்கடலையொட்டியுள்ள பகுதியாகும். மித்திரடேட்டசு(Mithradates)என்னும் பெயரில் அறுவர் அரசாண்டபோதும் ஆறாம் மித்திரடேட்டசு என்பாரே சிறப்பானவராகக் கருதப்படுகிறார். இவர் கி.மு. 132-ஆம் ஆண்டு முதல் கி.மு. 63-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர். ஆசியாவிலிருந்து உரோமானியர்களை அகற்ற வேண்டுமென்பது இவருடைய விருப்பமாகும். ஆசியாவில் தம் ஆட்சி தொல்லைக்காளாகாமல் நிலைத்து நிற்க வேண்டுமென்னும் நோக்குடன் சிறிய ஆசியா பகுதியில் வாழ்ந்த உரோமானியர்கள் அனைவரையும் கொல்ல உறுதிபூண்டார். ஏறத்தாழ 80,000 உரோமானியர்கள் ஒரே நாளில் கொன்று குவிக்கப் பட்டனர் எனக்கருதுவர்.

மித்திரடேட்டசு கி.மு. 86-ஆம் ஆண்டில் கிரீசு நாட்டின் மீது படையெடுக்க இராணுவமொன்றை அனுப்பினார். கிரீசுடன் இரு போர்கள் நடந்தன. எனினும், உரோமானிய வல்லாட்சியாளரான சல்லா (Sulla) என்பாருடன் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு கி.மு. 84–ஆம் ஆண்டில் வற்புறுத்தப் பட்டார். சல்லா காலமானபோது மித்திரடேட்டசு மீண்டும் தம் மூன்றாம் போரைத் தொடங்கினார். அப்போர் மிகப் பெரியதெனக் கருதப்படுகிறது. அப்போர் கி.மு.74 – ஆம் ஆண்டில் மூண்டது. உரோமானியப் படைத் தலைவர்களுள் புகழ்பெற்றவரான பாம்பே (Pompey) மித்திரடேட்டசுடன் போரில் ஈடுபட்டு அவரைக் காகசசு மலைகளுக்கு அப்பால் வரை விரட்டியடித்தார். அப்போர் கி.மு.66 – ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.

மித்திரடேட்டசு மீண்டுமொரு போருக்குத் தம்மை ஆயத்தப் படுத்தினார். இவர் உரோமாபுரி யின் மீது படையெடுக்கத் திட்டமிட்டார். ஆனால் இவருடைய மகன் பார்னாசசு (Pharnaces) என்பார் இவருக்கெதிராகக் கிளர்ச்சியில் இறங்கினார். இதனைத் தாங்கிக் கொள்ள வகையறியாத மித்திரடேட்டசு, நஞ்சுண்டு காலமானார். இவருடைய மறைவால் உரோமாபுரிக்கு வரவிருந்த இடர் தவிர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இரா.அ.

**மித்திராசமயம்**, உலகில் தோன்றி மறைந்த மதங்களுள் மித்திராசமயம் (Mithraism) என்பதும் ஒன்று. 'மித்திரன்' என்ற தெய்வ வழிபாடு சிறப்பிக்கப்படுவதால் இது இப்பெயர் பெற்றது. இந்து வேதப்படி மித்திரன், ஞாயிற்றுக்கும் வருணனுக்கும் உதவியாக இருப்பவன் ஆவான். இருக்கு வேதத்தில் அக்கடவுளைத் துதிக்கும் தோத்திரம் காணப்படுகிறது. ஆனால், பொதுவாக மித்திரன், மற்ற தெய்வத்தைப் போல் இந்தியாவில் மிகுந்த சிறப்புப் பெற வில்லை. ஆனால், ஈரானிய நாட்டினர் மித்திரனை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். அறநெறியைக் காக்கும் தெய்வம் மித்திரன் என்று அம்மக்கள் வழிபாடுகள் செய்தனர். மேலும், போர்த் தெய்வமாக அமைந்த மித்திரன் வழிபாடு, போர் வீரர்களிடையேயும் அரசர்கள் குடும்பங்களிலும் சிறப்பாகப் போற்றப் பட்டது. ஈரான் மக்களில் சிலர், கி.மு. 14-ஆம் நூற்றாண்டிலேயே இச்சமயத்தைப் பின்பற்றினர் என்பதற்குக் கல்வெட்டுச்சான்றுகள் உள்ளன. ஈரானிலிருந்து கி.பி.முதல் நூற்றாண்டில் இச்சமயம் உரோமப்பேரரசுக்குப் பரவியது. மார்க்கசு அரீலியசு (Marcus Aurelius) கி.பி.212-275 உரோமப் பேரரசராக இருந்த பொழுது இச்சமயம் அரசு ஆதரவைப் பெற்றது. இது ஓர் உலகச் சமயமாகப் பெருகக்கூடு மென்றும் கருதப்பட்டது. ஆனால், மக்கள் ஆதரவு மிகுதியாக இல்லை. ஆதலால் விரைவில் இது மறைந்து விட்டது. தெ.பா.

**மித்திராவருணர்**: மித்திரன்+வருணன்=மித்திராவருணர். இவ்வாட்சி கபில பரணர் என்றாற் போல்வது. மித்திரனும் வருணனும் ஒன்றாகக் கூடியிருந்து வருணலோகத்தை ஆளும் தேவர்களாவர். மித்திரன் வருணனுடனிருக்கும் தேவன் என்பர்.

மித்திராவருணர்கள் அகத்தியருக்கும் வசிட்டருக்கும் பிறப்பிடமானவர்கள் என்பது புராணக் கருத்து.

வசிட்டர் ஒருமுறை சுவாயம்பு மன்வந்தரத்தில் ஏற்பட்ட சாபத்தால் உடல் இல்லாது வருந்தினார். தம் தந்தையான பிரமனிடம் சென்று தமக்கு உடலை அளிக்கும்படி வேண்டினார்.

பிரமதேவன் உனக்கு மித்திராவருணரது கலப்பால் உடல் உண்டாகும் என அருளினன். அதனால், மகிழ்ச்சியுற்று வசிட்டர் வருணலோகம் சென்றார். மித்திரனும் வருணனும் வருண லோகத்தை ஆட்சிசெய்து கொண்டிருக்கும்போது, தேவலோகத்து நாட்டிய மங்கையான ஊர்வசி மித்திரனை நாடி வந்தாள். மித்திரனோடு கூடி அவன் ஆவலைத் தணிப்பதாக அவள் முன்னமே வாக்குக் கொடுத்திருந்தாள். ஆனால், அங்குச் சென்றவுடன் வருணன் எதிர்ப்பட்டான். ஊர்வசி பேரழகு அவன் உள்ளத்தை ஈர்த்தமையால் அவளைக் கலவிக்கழைத்தான். ஊர்வசி தான் முன்பே மித்திரனுக்கு வாக்களித்திருப்பதைக் கூறினாள். ஆயினும் வருணன் உன்னிடத்தில் என் ஒளியோடு கூடிய மகன் பிறப்பான் என்று கூறினான். அதை அவளும் ஏற்றுக்கொண்டு மித்திரனிடம் சென்றாள்.

மித்திரன், ஊர்வசி நேரில் தன்னிடம் வராமல் வருணனிடம் சென்று வந்தமைக்காகச் சினங்கொண்டு பூவுலகத்தில் சென்று பிறந்து புரூரவனுக்கு மனைவியாகுக எனச் சபித்தான். அதன்படி அவள் பூமியில் பிறந்து புரூரவனை மணந்து ஆயு என்ற மகனைப் பெற்றாள். மித்திராவருணரின் ஒளியால் ஒரு குடத்திலிருந்து வசிட்டர் தம் உடலைப் பெற்றார். அக்குடத்திலிருந்து அகத்தியரும் பிறந்தார். இரா.சா.

**மித்ரா, இராசா, இராசேந்திரலால் (கி.பி. 1822-1891)** இந்திய இயலின் முன்னோடிகளுள் ஒருவரான இராசேந்திரலால் மித்ரா (Rajendralal Mithra) கல்கத்தாவின் கிழக்குப் புறநகர்ப் பகுதியில் சூரா வகுப்பில் கி.பி. 1822 – இல் பிறந்தார். இவருடைய தந்தை சனமேசய மித்ராவின் குடும்பம் நடுத்தரமான பொருள் வசதியுடையது; பண்பாடு மிக்க குடும்பம். இவர் தம் 9-ஆம் வயதில் கல்கத்தாவில் வசித்த இவருடைய அத்தையிடம் கல்வியைத் தொடங்க அனுப்பப் பெற்றார். பிறகு சேண சந்திர போசுப் பள்ளி, பைசாக்கின் இந்து இலவசப் பள்ளி ஆகியவற்றில் இவர் கல்வி பயின்றார்.

இவர் தம் 15-ஆம் வயதில் கல்கத்தாவில் மருத்துவப் படிப்பில் சேர்ந்து நான்கு ஆண்டுகள் பயின்றார். மருத்துவக் கல்லூரியில், கி.பி. 1841-ஆம் ஆண்டில் நடைபெற்ற விரும்பத் தகாத ஒரு நிகழ்ச்சியின் விளைவால் மருத்துவப் படிப்பினை இவர், பல பரிசுகளும், சிறப்பும் பெற்றிருந்தும் விட வேண்டியதாயிற்று. அதன்பின் சட்டப்படிப்பில் சேர்ந்து தேர்வு எழுதும் வேளையில் வினாத்தாள் வெளியானதால் தேர்வுகள் நீக்கப் பட்டன. மித்ரா அக்கல்வியையும் தொடர்ந்து பயிலவில்லை. இவருக்கு கி.பி. 1846 -ஆம் ஆண்டு வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. அவ்வாண்டில் ஆசியச் சங்கத்தின் (Asiatic Society) நூலகத்தில் உதவிச் செயலர் பணியில் இவர் நூறு உரூபாய் ஊதியத்திற்குச் சேர்ந்து கி.பி. 1856 வரை அப்பணியில் நீடித்தார். அப்பணியில் பண்டைய இந்திய இலக்கியங்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து தெளியும் வாய்ப்புகள் இவருக்குக் கிடைத்தன.

அந்தச் சங்கத்திலேயே கி.பி. 1857 முதல் 1865 வரை செயலராகவும், பிறகு சில ஆண்டுகளில் அதன் துணைத் தலைவராகவும், பின்பு கி.பி. 1885 முதல் அதன் தலைவராகவும் பணியாற்றிய சிறப்பு இவருக்கு உரியதாயிற்று. கல்கத்தா மாநகராட்சிக் குழு உறுப்பினராகவும் இவர் பணியாற்றினார். மேலும், இவர் சேவைகளைப் பெற்ற வேறு சில நிறுவனங்களுள், கல்கத்தாப்பல்கலைக்கழகம், தத்துவ போதினி சபா, வட்டார மொழி இலக்கியச் சங்கம், கல்கத்தாப் பள்ளிப் பாடநூல் குழு, தொழிற் கல்விப் பள்ளி முதலியன குறிப்பிடத் தக்கவையாகும்.

இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டு கல்கத்தாவில் கூடிய அனைத்து இந்தியக் காங்கிரசின் வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றினார். இவருடைய படைப்புகளுள் ஒன்பது தொகுதிகளாக வெளியிடப்பட்ட வடமொழிக் கையெழுத்துச் சுவடிக் குறிப்புகள் (Notices of Sanskrit Manuscripts), வடமொழிப் பௌத்த இலக்கியம் (Sanskrit Buddhist Literature) ஆகியன குறிப்பிடத்தக்கன. மேலும், இவர், 'சாந்தோக்கிய உபநிடதம்', 'தைத்ரீய பிராமணம்', 'ஆரணியகங்கள்', 'கோபத பிராமணம்', 'ஆத்ரேய ஆரணியகம்' 'யோக சூத்திரம்', அக்னி, வாயு புராணங்கள் ஆகிய இந்து சமய நூல்களுக்கும், பல பௌத்த சமய நூல்களுக்கும் விளக்க உரைகள் எழுதியுள்ளார்.

கலை, கட்டடக்கலை பற்றியும் இவர் நூல்கள் எழுதியுள்ளார். 'ஒரிசாவின் பழைமைச் சின்னங்கள்' (Antiquities of Orissa) என்னும் நூல் இரண்டு தொகுதிகொண்டது,'புத்த கயா' (Buddha Gaya), 'சாக்கியமுனியின் துறவி மாடம்' (Hermitage of Sakyamuni) ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

இந்தியக் கலையின் தோற்றம் அயல் மண்ணில் இருந்து உருவாகியது என்ற பெர்குசன் (Fergusson) என்னும் மேலை நாட்டறிஞரின் கருத்தினை மறுத்து, இந்தியக் கலை இந்திய மண்ணுக்குரியது என இவர் மெய்ப்பித்தார்.

அரசியல் கருத்துகளைப் பொறுத்தமட்டில் மித வாதக் கொள்கையினை இவர் பின்பற்றினார். வங்க மக்களுக்கு இந்தியத் தொன்மைச் சிறப்பை அறிவுறுத்த வங்க மொழியில் 'சில்பிக் தர்சன்' (சிற்பதரிசனம்) என்னும் நூலை எழுதிவெளியிட்டார். மேலும், இவர் 'விவிதார்த்த சங்கிரகா', 'இரகசிய சந்தர்ப்பா' முதலிய திங்கள் இதழ்களின் ஆசிரியராகவும் விளங்கி வங்கஇலக்கியத்தை வளப்படுத்தினார்.

கல்கத்தாப் பல்கலைக்கழகம், கி.பி. 1876-ஆம் ஆண்டு, டாக்டர் (Doctor of Laws) பட்டத்தை இவருக்கு வழங்கியது. ஆங்கிலேய அரசு இவருக்கு கி.பி. 1877-இல் 'இராவ்பகதூர்'ப் பட்டத்தையும் 1888-இல் 'இராசா' (Raja) பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது.

இந்தியப் பழம்பெரும் இலக்கியச் சிறப்பை இந்தியர்கள் உணரும்படி செய்த பெருமை இராசேந்திரலாலுக்கு உரியது. இவர் கி.பி. 1891-இல், காலமானார். ந.க.ம.

***மிதுனபுரி***, இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றான மேற்கு வங்காளத்தில் உள்ளதொரு மாவட்டம். இது கடலையொட்டியுள்ளது. இப்பெயரில் நகரமொன்றும் உள்ளது. மிதுனபுரி என்னும் நகரம் கல்கத்தா மாநகரிலிருந்து 112 கி.மீ. மேற்கில் உள்ளது. மிதுனபுரி, மாவட்டத்தின் தலைநகர். மிதுனபுரியில் சாயம்போட உதவும் இண்டிகோ (Indigo) என்னும் பயிர்வகையும், பட்டு உற்பத்தியும் சிறப்பாக நடைபெறுகின்றன. பித்தளை, செப்புப் பாத்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. இங்கு இருப்புப்பாதை நிலையமொன்றும் உள்ளது. மிதுனபுரி நகரின் மக்கள் தொகை சற்றேறக்குறைய 1,00,000 (1981) ஆகும்.

மிதுனபுரி மாவட்டத்தின் பரப்பு ஏறத்தாழ 12,000 ச.கி.மீ. மக்கள்தொகை சற்றேறக்குறைய 50 இலட்சம் ஆகும் (1981). இம்மாவட்டத்தில் கங்கையாற்றின் கிளையாறுகளுள் ஒன்றான ஊக்ளியும் (Hoogly), அதன் துணையாறுகளான உரூபநாராயண், ஆல்டீ (Haldi), இராசூல்பூர் (Rasulpur) ஆறுகளும் பாய்கின்றன. ஆறுகள் கொணரும் வண்டல் மண் படியும் இடங்களில் நெல் நன்கு விளைகிறது. இம் மாவட்டத்தின் மேற்கிலும் வடக்கிலும் உள்ள மேட்டு நிலங்களின் சரிவுகளில் நெல் பயிராகின்றது. மக்காச்சோளம், எண்ணெய் விதைகள், முசுக் கொட்டை, கோதுமை, பார்லி, கரும்பு, சணல், பருத்தி, புகையிலை போன்ற பயிர்களும் மேட்டு நிலங்களில் பயிராகின்றன.

கிழக்கு இந்திய வாணிகக்குழு வங்காளத்தில் தம் ஆட்சியை நிலை நாட்ட முற்பட்டபோது, கிளைவு அங்கு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைக் காக்க முனைந்தார். அப்போது இப்பகுதியை ஆண்ட நவாபு ஆங்கில ஆதிக்கத்தை வெறுத்தார். வாணிகக்குழுவுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை அவரால் கொடுக்க இயலவில்லை. ஆளுநரின் சார்பாக ஆட்சி நடத்திய ஓல்வெல் (Holwell) என்பார் நவாபின் நிருவாகத்தையே கைப்பற்ற வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். ஆனால், வாணிகக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் அத்திட்டத்தை ஏற்க மறுத்து விட்டனர். பின்னர், அவர் நவாபின் மருமகனான மீர் காசிம் (Mir Kasim) என்பாருக்கு ஆதரவு கொடுக்க முனைந்தார். நிலையான ஆளுநராக இருந்த வன்சிட்டார்ட்டு (Vansittart) அதனை ஏற்றுக் கொண்டார். அதன்படி கி.பி.1760-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் நாள் கிழக்கிந்திய வாணிகக் குழுமம் மீர்காசிமுடன் செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கைப்படி மிதுனபுரி ஆங்கிலேயர் வசமாயிற்று. அவ்வுடன்படிக்கையின்படி மீர்காசிம் கிழக்கிந்திய வாணிகக் குழுவுக்கு முந்தைய நவாபு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையைக் கொடுக்கவும், பர்த்துவான், மிதுனபுரி, சிட்டகாங்கு ஆகிய மூன்று மாவட்டங்களைக் கொடையாக வழங்கவும் ஒப்புக்கொண்டார். அதற்குக் கைம்மாறாக ஆங்கிலேயர் அவரைத் துணைச் 'சுபேதார்' (Deputy Subadhar) ஆகவும், வங்காள அரசுக்கு வாரிசினை முடிவுசெய்யும் உரிமை கொண்டவராகவும் ஏற்றுக் கொண்டனர். மிதுனபுரிப் பகுதி ஆங்கிலேயருக்குக் கிடைத்த முதல் பகுதிகளுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இரா.அ.

***மிதுனம்***: மேடம் முதல் இராசிகளை எண்ணி வரும்போது மிதுனம் மூன்றாவது இராசியாகும். அதனை மிதுன வீடு என்றும் கூறலாம். சூரியன் ஆனிமாதம் முழுவதும் இவ்வீட்டில்தான் இயங்குவான். இவ்வீட்டிலும் $2\frac{1}{4}$ விண்மீன்கள் அமைகின்றன. இதில் மிருகசீரிடத்தின் பின்பாதியும், திருவாதிரையும் புனர்பூசத்தின் முக்கால் பகுதியும் அமைகின்றன. இந்த இராசியின் வடிவை ஆராய்ந்த கிரேக்க வான நூல் அறிஞர்கள், இரட்டைக் குழந்தைகள் இருப்பது போல் கற்பனை செய்தனர். வீணை பிடித்த பெண்ணும், கதை ஏந்திய ஆணும் என்றும் இன்ப நிலையில் இருப்பதாக இந்திய நூல்கள் கற்பனை செய்தன. இந்த இராசியில் உள்ள புனர்பூச விண்மீனின் குழுவைச் சார்ந்த காசுடர், போலக்சு என்னும் மீன்கள் மிகவும் ஒளிமிக்கவை. காசுடரைவிடப் போலக்சு ஒளியுடையது என்பர். தொலை நோக்கியில் பார்க்கும்போது காசுடர் ஓர் இரட்டை விண்மீன் என்பது

புலனாயிற்று. அதுவும் ஆறுமீன்கள் அடங்கிய ஓர் மண்டலம் என்று அறிந்துகொண்டனர். இந்த இராசி யின் வேறுபெயர்கள் யாழ், வீணை, தண்டு, கதை, மைதுனம், இரட்டை, தொந்துவம் என்பன. மிதுன இராசியின் அதிபதி புதன். ஆகவே, புதனுக்கு மிதுனக் கோன் என்றும் பெயர். மிதுன இராசி ஓர் உபயராசி. மிதுன இலக்கினத்தில் ஒருவர் பிறந்து ஆறுக்குடைய செவ்வாய் ஏழில் வந்தமர, குல தெய்வமாக அமையும் 21-பந்தி தேவதைகளில் சிறந்த மாடதேவதை கேட்ட வரமளித்து அவருடைய பூசையை ஏற்றுக்கொள்ளும் என்று சோதிட நூல் குறிப்பிடும். மிதுன இலக்கினத் திற்குப் புதன் செவ்வாய் வியாழன் சூரியன் நால் வரும் பொல்லாதவர். சுக்கிரன் நல்லவன். சனி மத் திமம். குருவும் சனியும் கூடி நின்றால் அரசயோக மில்லை. தே.ஆ.

**மியூனிச்சு:** செருமனியிலுள்ள பவேரியா மாநிலத்தின் தலைநகர் மியூனிச்சு (Munich). இது ஆல்ப்சுக்கு வடக்கே 48 கி.மீ. தொலைவில் இசார் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இது சாக்சனி பவேரியா ஆகியவற்றின் ஆட்சியாளராக விளங்கிய 'சிங்க என்றி' என்பவரால் கி.பி 1158-இல் தோற்றுவிக் கப்பட்டது. 'சூ-டென் மொனச்சென்' என்ற சிறிய மடாலயம் காரணமாக அந்நகர் மியூனிச்சு என்னும் பெயரைப் பெற்றது. மொன்சென் என்ற செருமானி யச் சொல்லின் ஆங்கில ஆக்கமே 'மியூனிச்சு' என்ப தாகும்.



மியூனிச்சு

மியூனிச்சு கி.பி.1180-இல் ஆட்டோ என்பவ ரால் கைப்பற்றப்பட்டு அங்குப்புதியதோர் ஆட்சி மரபு தோற்றுவிக்கப்பட்டது. அந்த ஆட்சி 1919 வரை நீடித்தது. விட்டல்சுபாக்குகள் என்ற அவ் வாட்சிப் பிரிவினர் காலத்தில் மியூனிச்சுப் பெரிதா கப் பொருள் வளமுடையதாக வளரலாயிற்று. வனப்புமிகு தேவாலயங்களும், சிறப்பான அரண் மனைகளும், அருங்காட்சியகமும் உருவாக்கப்பட் டன. இங்குள்ள புனித பீட்டர் தேவாலயம் (கி.பி.1169) பழமை வாய்ந்தது. செங்கற்கள், கண்ணாடிகள் கொண்டு கி.பி.1468-இல் கட்டப்பட்ட 'நமது அன்னை தேவாலயம்' கூம்பு வடிவிலான கோபுரங்களுடன் எழில்மிக்கதாகத் திகழ்ந்தது. செம்பினால் இழைக்கப்பட்ட அக்கோபுரங்கள் அந் நகரின் சின்னங்களாகக் கொள்ளப்பட்டன. மியூனிச்சு நகரின் கலைப்படைப்புகள் பெரிதும் இத்தாலி, பிரான்சு ஆகிய நாட்டுச் சிற்பிகளின் கைவண்ணங் களாகும், நகரின் ஓரத்தில் அமைந்துள்ள நியம்பென் பர்க்கு அரண்மனையில் இத்தகைய கலைச்சிறப்பு களைக் காணலாம். அது கி.பி. 1664-இல் உருவாக் கப்பட்டது; கலைப்பொருட்களடங்கிய அருங்காட்சி யகமாகத் திகழ்கிறது.

சென்ற நூற்றாண்டில் மன்னர் முதலாம் இலட்விக்கு என்பவரால் இந்நகரம் புதுப்பொலிவுடன் கூடிய ஐரோப்பியத் தலைநகரமாக மாற்றியமைக் கப்பட்டது. பழைய பினாகொதெக்கு அருங்காட்சிய கம், பவேரிய தேசிய அருங்காட்சியகம், செருமானிய அருங்காட்சியகம் ஆகிய மூன்றும் மியூனிச்சு நகரின் பெருமையை உயர்த்துகின்றன. அவற்றின் வாயி லாகச் செருமனியின் கலை, அரசியல், தொழில்கள், பண்பாட்டு வளர்ச்சி ஆகியன பற்றி நன்கறியலாம்.

வெள்ளி வேலை, மர வேலை, கண்ணாடிப் பொருட்கள் செய்தல் ஆகியன இன்றும் நடைபெறும் முக்கிய தொழில்களாகும். மின்சாரக் கருவிகள் செய்தல், நெசவுத்தொழில், சிறு நுண்ணிய இயந் திரங்கள் செய்தல், கண்ணாடிப் பொருட்கள் உற் பத்தி ஆகியன பிற சிறந்த தொழில்களாகும். இங்குப் 'பீர்' என்னும் மதுவகை உற்பத்தி தலையாய தொழிலாக உள்ளது.

இங்கு ஆண்டிற்கு மூன்று முக்கிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இது மேற்குச் செருமனியின் பண்பாட்டு மையங்களுள் ஒன்றாகும். நான்கு பல் கலைக்கழகங்களும், பத்துக்கு மேற்பட்ட கலையரங்கு களும் இங்குள்ளன.

**மியூனிச்சு உடன்படிக்கை:** இங்கிலாந்தின் பிரதமர் நெவில் சேம்பர்லின் (Neville Chamberlain), பிரான் சின் பிரதமர் எடோர்டு தலாதீர் (Edouard Daladier), செருமானிய வல்லாட்சியர் அடால்பு இட்லர்



புது நகர மண்டபம்

(Adolf Hitler), இத்தாலியின் வல்லாட்சியர் பெனிட்டோ முசோலினி (Benito Mussolini) ஆகியோர் 1938 – ஆம் ஆண்டுச் செப்டம்பர் 30-ஆம் நாள் செருமனியில் உள்ள மியூனிச்சு (Munich) என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இது செக்கோசிலாவாகியா நாட்டைப் பற்றியதாகும்.

இட்லர் தம் கிழக்கு நோக்கிய பரப்புக் கொள்கையின் முதற்கட்டமாகச் செக்கோசிலாவாகியாவைக் கைப்பற்ற முனைந்தார். சேம்பர்லின் தம் தூதுவர் மூலம் 1938 ஆகசுட்டில் செச்கோசிலாவாகியாவிற்கும் செருமனிக்கும் உடன்பாடு ஏற்படச்செய்வதற்கு மேற்கொண்ட முயற்சி பலனளிக்காது போயிற்று. செக்கோசிலாவாகியா மக்களுள் பாதிக்கு மேற்பட்டோர் செருமானிய மொழி பேசுபவர்கள். ஆகையால், அதனைச் செருமனியுடன் இணைக்க வேண்டுமென்பதே இட்லரின் நோக்கமாகும். அதன் காரணமாக, செருமனி போருக்கான வழிகளில் ஈடுபடலாயிற்று. போரைத்தடுக்கச் சேம்பர்லின் செப்டம்பர் 27 - ஆம் நாள் இத்தாலிய அதிபர் முசோலினியின் உதவியை நாடினார். முசோலினி செப்டம்பர் 28-இல் செக்கோசிலாவாகியா தாக்குதலைக் காலந் தாழ்த்தும்படி இட்லரைக் கேட்டுக் கொண்டார். மேலும் இத்தாலி, செருமனி, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளுக்கிடையில் மாநாடு ஒன்று கூட்டப்பட உள்ளதையும் சுட்டிக்காட்டினார். எனவே, இட்லர் அம் மாநாட்டினை மியூனிச்சு அல்லது பிராங்க்பர்ட்டு ஆகிய இடங்களுள் ஏதாவது ஓரிடத்தில் கூட்டலாமென அறிவித்தார். அதன்படி 1938 செப்டம்பர் 29-ஆம் நாள் நண்பகலில் இட்லர், முசோலினி, சேம்பர்லின், தலாதீர் ஆகிய நால்வரும் மியூனிச்சில் கூடினர். செக்கோசிலாவாகியாவின் செருமானிய மொழி பேசும் பகுதிகள் செருமனியுடன் இணைக்கப்படவேண்டுமெனக் கூறப்பட்டது. மேலும், சிக்கலுள்ள பகுதிகள் பன்னாட்டுக் குழுவின் தலைமையின்கீழ்க் குடிஒப்பம் மூலம் முடிவிற்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டது. அதற்கான மியூனிச்சு உடன்படிக்கை செப்டம்பர் 30-இல் கையெழுத்தாயிற்று. அதன் பயனாக ஐரோப்பா போர்த்துயரினின்று அப்போதைக்குக் காப்பாற்றப் பட்டது.

இவ்வுடன்படிக்கை நீண்ட காலம் நீடிக்கவில்லை. இட்லர் 1939 செப்டம்பர் முதல் நாள் போலந்தைத் தாக்கியதாலும் அவர் அமைதியை விரும்பாமல் போர் நடத்துவதிலேயே ஆர்வம் காட்டி வந்ததாலும் மியூனிச்சு உடன்படிக்கை பயனற்றதாயிற்று.

மா.கா.

*மிரட்டல் குற்றம்:* ஒன்றைச் செய்யவோ செய்யாதிருக்கவோ ஒருவரைக் கட்டாயப்படுத்தும் கருத்துடன், அல்லது அவருக்கு அச்சம் ஏற்படுத்தும் கருத்துடன் உடல், பொருள் அல்லது புகழுக்குத் தீமை விளைவிப்பதாகவோ, அவருக்கு வேண்டிய மற்றொருவரது உடல் அல்லது புகழுக்குத் தீமை செய்வதாகவோ அச்சுறுத்துதல் மிரட்டல் குற்றம் (Criminal Intimidation) ஆகும்.

**மிரட்டல் குற்றத்தின் கூறுகள்:** மிரட்டல் குற்றம் இரண்டு கூறுகளைக் கொண்டது. அவை, 1) அச்சுறுத்துதல்; 2) அச்சுறுத்துபவரின் கருத்து என்பன. அவற்றுள் அச்சுறுத்தல் என்பது ஒருவருடைய உடல், நன்மதிப்பு, பொருள் அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள மற்றொருவரின் உடல், நன்மதிப்பு ஆகியவற்றில் ஒன்றிற்குத் தீங்கு விளைவிக்கப் போவதாக ஒருவரை அச்சுறுத்துவது. அச்சுறுத்துபவரின் கருத்து என்பது, 1) அச்சுறுத்தப்படுபவரின் மனத்தில் அச்சத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து; அல்லது 2) உரிமைச் செயலைச் செய்யாதிருக்கவும், செய்ய வேண்டாததைச் செய்யும்படியும் அச்சுறுத்தப்படுபவரைக் கட்டாயப்படுத்தும் கருத்து ஆகும்.

மிரட்டல் குற்றமிழைக்கும் ஒருவர், ஒருவரை நேரடியாக அச்சுறுத்தி மிரட்ட வேண்டும் என்பதில்லை. மூன்றாமவர் ஒருவர் மூலம் செய்தியனுப்பியோ, கூட்டத்தில் பேசுவதன் வாயிலாகவோ, கடிதம் மூலமாகவோ கூட அச்சுறுத்தலாம்.

மிரட்டல் குற்றத்திற்கு அச்சுறுத்துபவரின் கருத்தே முக்கியமானதாகும்; அச்சுறுத்தப்பட்டவர் அச்சுறுத்தியவரின் மிரட்டலால் அச்சம் அடைந்தாரா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டிய தேவையில்லை.

**மிரட்டல் குற்றங்களும் மிரட்டல் குற்றங்கள் ஆகாதனவும்:** பணியிடம் ஒன்றிலிருந்து பணிநீங்கிச் சென்றவர் பணியாண்மையருக்கு எதிராகப் போலிக் கணக்கேடுகளை உருவாக்கி வருமானவரி அலுவலரிடம் தவறான கணக்குகளைக் காட்ட இருப்பதாக அச்சுறுத்துவது; ஒருவரைக் கொன்றுவிட்டு அவரது உடைமையைக் கைப்பற்றப் போவதாக அச்சுறுத்துவது; மறியல் செய்யப் போவதாக மிரட்டுவது; இறைச்சிக் கடைக்காரன் வெட்டுவதற்காகப் பசுமாடு ஒன்றை வாங்கி வரும்போது, பசு மாட்டை வெட்டி விற்பனை செய்தால் மேற்கொண்டு இந்நகரில் இருக்கவோ உயிர்வாழவோ முடியாதென்று நகராட்சி ஒன்றின் ஆணையர் இறைச்சிக் கடைக்காரனை மிரட்டுவது போன்றவை மிரட்டல் குற்றங்களாகும்.

**மிரட்டல் குற்றங்கள் ஆகாதன:** 'உன்னைக் கொன்றுவிடுவேன்; குழி தோண்டிப் புதைத்து விடுவேன்' என்று வேடிக்கையாக மிரட்டுவது; ஒருவருக்கு எதிராகப் பொய் வழக்குகள் இட்டு அவர்தம் வாழ்வைப் பாழ்படுத்தி விடுவதாகக் கூறுவது; சமூகப் புறக்கணிப்புப் (Social Boycott) போன்றவை மிரட்டல் குற்றங்கள் ஆகாதனவாகும்.

ஒருவர் செய்த செயலும் சொல்லிய சொல்லும் மிரட்டல் குற்றத்தைச் சார்ந்தனவா அல்லவா என்பது அந்தந்தச் சூழ்நிலையைப்பொறுத்ததாகும்.

**மிரட்டல் குற்றத்திற்குத் தண்டனை:** மிரட்டல் குற்றமிழைக்கும் ஒருவர் இரண்டாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை அல்லது தண்டத்தொகை விதிப்பு அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

மிரட்டலானது மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிப்பதாக அல்லது சொத்து எதையும் தீயினால் அழிக்கப் போவதாக அல்லது மரணதண்டனையோ ஆயுள் தண்டனையோ ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையோ விதித்துத் தண்டிக்கப்படுவதற்குரிய ஒரு குற்றத்தை விளைவிப்பதாக, அல்லது ஒரு பெண்ணின் கற்புக்குக் களங்கத்தை ஏற்படுத்துவதாக, அச்சுறுத்துவதாக இருந்தால் அத்தகைய குற்றமிழைத்தோர் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை அல்லது தண்டத்தொகை விதிப்பு அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

ஒரு மொட்டைக் கடிதத்தின் மூலம் தம் பெயர் அல்லது இருப்பிடத்தை மறைக்க முன்னெச்சரிக்கை எடுத்துக் கொண்டு மிரட்டல் குற்றமிழைக்கின்ற ஒருவர், முன்னர்க் குற்றத்திற்காக வகை செய்யப்பட்ட தண்டனையோடு கூடுதலாக இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்.

**பு.வே.**

*மிராபோ* என்பார் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த அரசியல்ஞானி; சிறந்த பேச்சாளர்; பிரான்சுப் புரட்சியின்போது மக்கள்தலை


வர்களுள் ஒருவராய் இருந்தார். இவரை 'மக்களின் ஆர்வத்தலைவர்' (Tribune of the People) எனப் போற்றினர்.

மிராபோ (Mirabeau) கி.பி. 1749-ஆம் ஆண்டு பிக்னான் (Bignon) என்னும் ஊரில் பிறந்தார். இவர் கி.பி. 1767 - ஆம் ஆண்டு பாரிசு மாநகரில் இராணுவப் பள்ளியில் சேர்ந்தார். அதே ஆண்டில் குதிரைப் படை அணியொன்றின் தலைவரானார். ஆனால் தீயவொழுக்கம் காரணமாகச் சிறையில் அடைக்கப் பெற்றார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர்க் கார்சிகாவின் மீது போர்தொடுக்கும் படையில் கட்டாயம் சேர வேண்டும் என்னும் உறுதிப்பாட்டுடன் மிராபோ விடுதலை செய்யப்பெற்றார். அதனை ஏற்றுக்கொண்டு படையில் சேர்ந்த மிராபோ விரைவிலேயே படைத்தலைவரானார். எனினும் இவர் கி.பி. 1771-ஆம் ஆண்டில் கடனாளியாகச் சிறையில் அடைக்கப்பட்டார். மற்றொருமுறை கி.பி. 1777 முதல் 1780 வரை சிறையில் வாடிய இவர், விடுதலையானவுடன் பிரான்சு நாட்டை விட்டே வெளியேறினார். இவர் ஆலந்து நாட்டிலும், இங்கிலாந்து நாட்டிலும் சிறிதுகாலம் வாழ்ந்துவிட்டு, கி.பி. 1788-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டிற்குத் திரும்பினார். மிராபோவை அரசியல் வாழ்வு தொடரலாயிற்று. எய்லாசாப்பல் தொகுதியில் இவர் பிரான்சு மக்கள் அவைக்குப் (State General) பொதுமக்கள் அவையின் பேராளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவை உறுப்பினர்கள் அமரும் இடம் குறித்த சொற்பொழிவில் இவர் புகழ்பெற்ற தலைவரானார். இவர் பிரான்சு நாட்டில் உருவாக்கப் பட்டிருந்த மூன்று அவைகளும் ஒரே இடத்தில் கூடவேண்டும் என்று வாதாடி வெற்றி பெற்றார்.

அரசரின் பணியாள்களும் பொதுமக்கள் அவையின் உறுப்பினர்களும் வெர்சேயிலிருந்து கலைந்து செல்ல வேண்டுமென்று அரசர் ஆணையிட்ட பொழுது அதனை எதிர்த்து உறுப்பினர்களை அவையில் தங்கச் செய்தார்.

மிராபோ கி.பி. 1790-ஆம் ஆண்டில் சாகோபின் (Jacobin) கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அடுத்த ஆண்டில் இவர் தேசிய அவையின் தலைவராகத் (National Assembly) தெரிந்தெடுக்கப் பட்டார். அப்பொறுப்பு நீடித்திருக்குமேயாயின் மிராபோவின் செல்வாக்கும் ஓங்கிப் பெருகியிருக்கக் கூடும். ஆனால் கெட்ட நடத்தைகளின் விளைவாக இவருடைய உடல் நலம் கெட்டுப் போய்விட்டது.

பிரான்சுப் புரட்சிக்கு முன் மிராபோ பல சீர்திருத்தங்களுக்கு வழிகோலினார். இவர் திருச்சபைக்குச் சொந்தமான நிலங்களைப் பறிக்க வேண்டுமென்று வேண்டினார். இங்கிலாந்தில் இருந்தது போல் அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பைப் பிரான்சில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இவர் கூறிய போதிலும் மன்னர் கி.பி. 16 ஆம் உலூயி அதனை ஏற்க மறுத்தார்.



மிராபோ

மிராபோ எப்போதும் கடனாளியாகவே காலத்தைக் கழித்தவர். இவருடைய தனிப்பட்ட வாழ்க்கை பாராட்டுதற்குரியதன்று. எனினும், பேச்சுத்திறனால் மக்களின் மனத்தைக் கவர்ந்த மாபெரும் வித்தகர். சொல்லோவியத்தில் தலைசிறந்த இவர் மக்களின் தலைவராக மதிக்கப்பெற்றார். அரசருக்கும், அரியணைக்கும் இவர் கடும்பகைவர். இருப்பினும் பிரான்சுப் புரட்சியின் தொடக்கக்காலத்தில் அரசருக்கு உறுதுணையாக இருந்து அரசாங்கத்துடன் ஒத்துழைப்பு நல்கிய மேதையாவார். அரசரும், சட்டமன்றமும் வேண்டும் என்று நம்பியவர். இங்கிலாந்தில் இருப்பதைப் போன்ற அரசியல் அமைப்புக்குக் கட்டுப்பட்ட அரசர் பிரான்சு நாட்டிற்கும் தேவை என்று விழைந்த மிராபோவை அரசரும் நம்பவில்லை; புரட்சியாளர்களும் நம்பவில்லை.

இவர் ஐரோப்பாவில் பல நாடுகளுக்குச் சென்றவர். அரசியல் கருத்துகளில் இவர் ஒரு மிதவாதி. சாகோபியர்களின் தீவிரவாதக்கொள்கைகளை இவர் ஒப்புக்கொள்ளவில்லை. அதன் பயனாக இவர் அக்கட்சியை விட்டு வெளியேறினார். மிராபோவின் கொள்கைகளை நம்பியிருந்தார்களேயாயின் பிரான்சின் முடியாட்சி ஒழிந்திருக்காது; புரட்சியும் கொடுமை நிறைந்ததாக மாறியிருக்காது. இவர் தம் 42-ஆம் வயதில் காலமானார். இவர் மேலும் சில ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருப்பின், பிரான்சில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைத் தவிர்த்திருக்கக் கூடும் என்பது சில

அரசியல் அறிஞர்களின் கருத்தாகும். இவர் கி.பி. 1791-இல் காலமானர். இரா.அ.

*மிருக சீரிடம்*: இது அசுவதி முதல் எண்ணி வரும்போது ஐந்தாவதாக அமையும் விண்மீன் குழு வாகும். பிரசாபதி (Orion) என்னும் விண்மீன் மண்டலத்தின் வடக்குப் பகுதியில் இம்மீன்குழு அமைந்துள்ளது. இதில் மூன்று மீன்கள் உள்ளன. ஒளி பொருந்திய மீன் எதுவும் இல்லை. இவ்விண்மீன்களின் முன்பாதி இடப வீட்டிலும் பின்பாதி மிதுன வீட்டிலும் அமைகின்றன. இவற்றை இணைத்து நோக்கும் போது மான்தலை போன்று காணப்படுவதால் குமாரசுவாமியம் போன்ற சோதிட நூல்கள் இவற்றை மான்தலை, மான்முகம் என்றே குறிப்பிடும். மான்–மிருகம்; தலை - சிரம் என்ற முறையில் மிருக சிரம் பிறந்தது. அதுவே மருவி மிருக சீரிடம், மிருக சீருசம், மிருகசீரளம், மகேரம் என்றெல்லாம் மாறியது. மிருக சீரிடத்தின் தலைவன் செவ்வாய். ஒவ்வொரு விண் மீனையும் ஒரு நிலமாக எண்ணி, அதற்குரிய முதல் கரு உரிப்பொருட்களை எடுத்துக் கூறுவது வழக்கம். இவ்விண்மீனுக்குரிய விலங்கு-சாரைப் பாம்பு; பறவை-கோழி; உரிய மரம்-கருங்காலி; உரிய தேவதை சந்திரன்; அதுபோல் பொழுது முதலியவற்றையும் கூறுவதுண்டு. சோதிட முறையில் இவ்விண் மீனில் பிறந்த ஒருவருக்குச்செவ்வாய் திசை தொடங்குவதாக எடுத்துரைப்பர். மிருக சீரிடம் நான்கு கால்களில் முதற்காலும் நான்காம் காலும் வலிமை வாய்ந்தவை. அவற்றில் நின்ற கோள்களும் வலிமை வாய்ந்தவை. கணத்தில் இது தேவகணம்; பஞ்ச பட்சியில் வல்லூறு. இந்த விண்மீனின் நாம எழுத்துகள் வெ, வே, வை, வெள என்ற நான்கும் ஆகும். திருமணம், காதுகுத்தல், அன்னமூட்டல், உபநயனம், நெல்விதை சுருணை கட்டி நீரில் இடல் ஆகியவற்றுக்கு இது ஏற்ற விண்மீன் ஆகும். தே.ஆ.

*மிருகண்டு*: முனிவர்களுள் ஒருவராய் விளங்கிய இவர் கௌசிகர் என்னும் முனிவருக்கு மகனாகத் தோன்றினார். முற்கல முனிவரின் மகளான மருத்துவதியை மணந்து வாழ்ந்தார். நீண்ட நாள் மனை வாழ்வில் ஈடுபட்ட இவர்தம் உள்ளத்தில் நீங்காத துன்பம் ஒன்று நிலவியது. தவ வலிமையை உலகிற்கு உணர்த்த ஒரு பிள்ளை இல்லையே என்ற அத்துன்பத்தால், காசிநகர் சென்று, சிவனை நோக்கிக் கடுந் தவம் புரிந்தார்.

மிருகண்டு முனிவரின் தவங்கண்டு மகிழ்ந்த சிவ பெருமான், இவர் முன்தோன்றி, வேண்டும் வரம் கேட்பாயாக என, மிருகண்டு முனிவர், மழலைச் செல்வம் நல்கும் வரத்தை வேண்டினார். சிவபெருமான், 'நூறு ஆண்டுகள் வாழக்கூடிய அறிவில்லாப் பிள்ளை வேண்டுமா அல்லது பதினாறு வயதே வாழ்ந்து மறையும் மிகுந்த அறிவுள்ள பிள்ளை வேண்டுமா' என்று கேட்டார். மிருகண்டு முனிவர், சற்றும் சிந்திக்காமல் உடனே, பதினாறு வயது வரை வாழக்கூடிய அறிவுடைய பிள்ளையே வேண்டுமென்றார். இறைவன் அருளால் மிருகண்டு முனிவருக்கு ஆண் மகவு பிறந்தது. அப்பிள்ளைக்கு, மார்க்கண்டேயன் என்ற பெயர் சூட்டினார்.

சிவபூசையால் இறையருள் பெற்றுக் காலனையும் வெல்ல முடியும் என்பதை, தம் தவ வலிமையால், புரிந்துகொண்ட மிருகண்டு முனிவர் தம் மகனுக்கு, அவன் விவரம் அறியும் பருவத்தில், அவனது பிறப்பில் மறைந்திருந்த உண்மையையும், இறைவன் கொடுத்த வாழ்நாளையும், மறைக்காமல் உரைத்து, சிவபூசைக்குரிய மந்திரங்களைச்சொல்லிச் சிவபூசை செய்ய ஏவினார். ஞானமிக்க நல்ல மகவைப் பெற்ற காரணத்தினால் சைவ உலகில் மிருகண்டுமுனிவர் நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளார். தந்தையின் சொல்லை வேதமாகக் கருதிய மார்க்கண்டேயன் சிவபூசையினைத் தொடர்ந்து செய்து வந்தான். மறைந்தபின்னரும் இறவாப் புகழ் பெற்று விளங்கும் பேறு பெற்றுத் திகழ்கின்றான்.

இரா.குரு.

***மில்ட்டன், சான் (கி.பி. 1608 – 1674)***: ஒரு வசதியுள்ள ஆவண எழுத்தருக்கு கி.பி. 1608-ஆம் ஆண்டில் மகனாகச் சான் மில்டன் (John Milton) இலண்டனில் பிறந்தார். புனித பவுல் உயர்நிலைப் பள்ளியில் படித்து முடித்தபின், தம் பதினேழாம் வயதில் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் கிறித்துக் கல்லூரியில் (Christ's College) தம் மேற்படிப்பைத் தொடர்ந்தார். தம் தந்தையாரின் மேற்பார்வையில் இலக்கியத்தில் ஈடுபட்டு நாளும் நள்ளிரவுவரை ஊன்றிப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக் கொண்டார். முதுகலைப்படிப்புப் பட்டத்தினை கி.பி.1632-இல் பெற்று வெளிவந்த போது இவர் ஐரோப்பிய நாட்டின் எல்லா முக்கிய இலக்கியங்களிலும் சிறந்த புலமை பெற்றிருந்ததுடன், பண்டைய கிரேக்க, உரோமாபுரி நாட்டு இலக்கியங்களிலும் நல்ல தேர்ச்சி அடைந்திருந்தார். அதற்கு மேலும், ஆறு ஆண்டுகள் ஆர்ட்டனில் (Horton) தம் தந்தையாரின் பண்ணை வீட்டில் தங்கித் தம் அறிவை மேலும் விரிவாக்கிக் கொண்டார். அக்காலத்தில் இவர் படித்திராத கிரேக்க, இலத்தீன், ஆங்கில, இத்தாலிய நூல்களே இல்லை எனலாம். தம்மையே ஒரு காவியமாக ஆக்கிக் கொள்ள இவருக்கு அந்த ஆறு ஆண்டுவாழ்க்கை ஒரு பயிற்சிக் காலமாக அமைந்தது. ஒரு பிரபுவின் வேண்டுகோளுக்கிணங்க கி.பி.1634 – ஆம் ஆண்டு

'கோமசு'(Comus) என்ற சிறந்ததொரு கவிதை நாடகத்தை மில்ட்டன் யாத்தார். கடற்பயணத்தில் கி.பி.1637-இல் இறந்த இவர் நண்பன் எட்வர்டு கிங்கு (Edward King) நினைவாக 'இலிசிதசு' (Lycidas) என்ற ஓர் அரிய இரங்கற்பாட்டை (Elegy) உருவாக்கினார். மேலும் 'இல் பென்சரோசோ' (Il Penseroso), 'இல்லலிக்ரோ' ('L'Allegro) என்ற புகழ் பெற்ற இரட்டைக் கவிதைகளையும் எழுதினார். மில்ட்டன் கி.பி. 1638-ஆம் ஆண்டு, ஓர் ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தின் மூலம் தம் அறிவையும் அனுபவத்தையும் பெருக்கிக் கொண்டார். இத்தாலி முழுதும் சுற்றி வந்து அந்நாட்டுச் சிந்தனையாளர்கள், அறிவாளிகள், கலிலியோ, போன்ற அறிவியலறிஞர்கள் ஆகியோருடன் அளவளாவினார். ஆனால், தம் தாய் நாடான இங்கிலாந்தில் அரசியல் நிலைமை உள்நாட்டுக் குழப்பத்தால் சீர்குலையக் கண்டு உடனே ஊர் திரும்பினார். கி.பி. 1660-வரை ஏறக்குறைய இருபது ஆண்டுகள் மில்ட்டனிடம் வசனப் படைப்புகளையே காண முடிகிறது. நாடே 'தூய்மையாளர்' (Puritans), 'காவலியர்' (Cavaliers) என்று இரண்டு பெரிய கட்சிகளாக உடைந்தபோது, மில்ட்டன் உண்மையான ஒரு தூய்மையாளக் கிறித்தவர் என்ற முறையில் ஆலிவர் கிராம் வெல்லின் (Oliver Cromwell)பக்கமே சார்ந்திருந்தார். முதலாம் சார்லசு அரசர் உள்நாட்டுப் போரில் (Civil War) தோற்றுக் கைதாகி, மக்கள் சபைத் தீர்ப்பினால் கொலை செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட கிராம்வெல்லின் ஆட்சியில், மில்ட்டன் இலத்தீன் மொழிச் செயலாளராகப் பதவி ஏற்றார் (Latin Secretary to the Government). அன்றைய ஆங்கிலேய அரசாட்சியின் செயல்களைக் கண்டித்த சால்மேசியசு (Salmasius) போன்ற ஐரோப்பிய அறிஞர்களுடன் வாது செய்து கிராம் வெல்லின் ஆட்சிச் சார்பாகப் பல அறிக்கைகளை வெளியிட்டார்.

அக்காலத்தில்தான் மில்ட்டனின் இன்பமற்ற மண வாழ்க்கையும் தொடங்கியது எனலாம். மேரிபவல் (Mary Powell) என்ற ஒரு சீமாட்டியை, கி.பி. 1642 -இல் மணம் புரிந்தார். மில்ட்டனுடன் பிணக்கு ஏற்பட்டு அம்மையார் தம் பிறந்தகம் சென்றுவிட, மில்ட்டன் திருமணவிலக்குப் பற்றி ஒரு கட்டுரை விரிவாக எழுதி வெளியிட்டார். 'அரியபகிடிக்கா' (Areopagitica) என்ற எழுத்துச் சுதந்திரம் பற்றிய ஒரு கட்டுரையையும் வெளியிட்டார். இரண்டு ஆண்டு கழித்து மனம் மாறித் திரும்பிய மேரியுடன் கூடி மண வாழ்க்கை நடத்தியதில் மில்ட்டனுக்கு மூன்று பெண்கள் பிறந்தனர். மேரி கி.பி. 1652 - இல் இறந்த பின் மில்ட்டன் மறுமணம் செய்து கொண்டார். அந்த அம்மையாரும் இறந்தபின் கி.பி. 1663-இல் தம் 55-ஆம் வயதில் மூன்றாம் திருமணம் செய்து கொண்டார். அதற்கிடையில் இவரது இடைவிடாப் படிப்பின் காரணமாகப் படிப்படியாகக் கண் பார்வை மங்கத் தொடங்கி கி.பி. 1660-இல் முழுமையும் பார்வையற்றவரானார். அந்தக்காலத்தில் இறந்த அரசர் சார்லசின் மகன் அரசராக மறுபடியும் கி.பி.1660-இல் முடிசூட்டப்பட்ட போது அவர் தம் தந்தையைக் கொன்றவர்களையெல்லாம் தண்டிக்க முற்பட்டார். மில்ட்டனும் சிறிதுகாலம் சிறைக்குள் இருந்தாலும் இவரது பேரறிவைப் போற்றிய சில பெரிய இடத்து நண்பர்களால் இவர் காப்பாற்றப் பட்டார்.




சான் மில்ட்டன்

அதுகாறும் தம்முள்ளே பொதித்து வைத்திருந்த மில்ட்டனின் பெரிய திட்டம் எழுத்தில் வெளிவரும் வாய்ப்பு அப்பொழுதுதான் ஏற்பட்டது. சேக்சுபியருக்கு அடுத்தபடியாக மகாகவி என்ற புகழைப் பெற்றுத் தந்தது இவரது உன்னத படைப்பாகிய 'சுவர்க்க நீக்கம்' (Paradise Lost) என்ற பெருங்காப்பியமாகும். அது கி.பி. 1667-இல் வெளியிடப்பட்டவுடன் தலைசிறந்த படைப்பாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது.அக்காவியத்தை, மில்ட்டன் மனத்தில் கவனம் செய்துகொண்டு வாய்மொழியில் சொல்லச் சொல்ல இவர்புதல்வியரும் வேறுசில எழுத்தர்களும் எழுத்தில் எழுதி வந்தார்கள். பல ஆண்டுகளாகச் சிந்தித்து வைத்திருந்த ஒரு மிகப் பெரிய கருப்பொருள் அப்பொழுதுதான் வடிவம் பெற்றது. முதல் மனிதன் ஆதாமும் அவன் மனைவி ஏவாளும் ஈடன் சோலையில் இருந்து சைத்தானின் தீயஉரைகளால் கடவுளின்

ஆணையை மீறியதையும் அதனால் அவர்களுக்கு நேர்ந்தஇரங்கத்தக்க வீழ்ச்சியையும் மிகச்சிறந்த ஆங்கில நடையில் எடுத்துச்சொல்கிறது மில்ட்டனின் 'சுவர்க்க நீக்கம்'. பன்னிரண்டு காண்டங்களில் ஏறக்குறையப் பத்தாயிரம் அடிகளைக் கொண்ட ஒரு மாபெரும்காப்பியமாகும் அது. உடல்நலிவுற்றுக் கண் பார்வையற்று, அரசியலில் ஒதுக்கப்பட்டு, அவமான முற்றநிலையில் மில்ட்டன் மேலும் ஒரு காப்பியம் எழுதினார். 'மீண்ட சுவர்க்கம்' (Paradise Regained) என்ற நான்கு காண்டங்களைக் கொண்ட அத்தொடர் காவியம் 'சுவர்க்க நீக்கத்'தில் முதற் காண்டத்தில் சொல்லப்பட்ட 'நம்மில் எல்லாம் பெரிய ஒரு மானுடன் மீண்டும் நம்மைக் கரை சேர்ப்பான்' ('Till one greater man restore us') என்ற உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. கடைசியாக,'சாம்சன் அகனிசுதசு' (Samson, Agonistes) என்ற கவிதை நாடகத்தை, கிரேக்கச் சோக நாடக முறையைப் பின்பற்றிச் சாம்சனைப் போலவே கண்ணிழந்து எதிரிகளாற் சூழப்பட்டிருந்த மில்ட்டன் எழுதியது பொருத்தமே!

மில்ட்டனின் பேரறிவு, மிகப்பெரிய நூலறிவு, கடவுள் பக்தி, விவிலியநூற் பயிற்சி, ஈடிணையற்ற கவிதை புனையும் ஆற்றல் ஆகியவற்றை இவரது ஒவ்வொரு வரியிலும் காணலாம். இவரது காப்பிய நடை ஒருவராலும் பின்பற்ற முடியாத அளவுக்கு உயர்ந்து நிற்கும் ஒரு தனி நடையாகும் (The Grand style of Milton). கே.ஜி.சே.

*மில்டையடீசு* என்பார் கி.மு. 6-ஆம் நூற்றாண்டுக்கும். கி.மு. 5 – ஆம் நூற்றாண்டுக்கு மிடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த கிரேக்கப் படைத் தலைவர்களுள் ஒருவர் இவர் கி.மு. 540–ஆம் ஆண்டளவில் பிறந்திருக்கக் கூடும் என்பது வரலாற்றாசிரியர்களின் கணிப்பு. ஏதென்சு நகரத்தைச் சார்ந்த மில்டையடீசு (Miltiades) கி.மு. 490 – ஆம் ஆண்டு நடைபெற்ற மராத்தான் போரின்போது கிரேக்கப் (அத்தீனிய) படைகளைத் தலைமை தாங்கி நடத்தியவர். கிரேக்கர்கள் அப்போரில் பாரசீகர்களை எதிர்த்துப் போரிட்டனர். மில்டையடீசு, பிலேய்டிசு (Philaides) என்பாரின் வழித்தோன்றல். ஏதன்சு நகரத்தில் ஆர்க்கன் (Archon) என்னும் பதவியை இவர் கி.மு. 524 – ஆம் ஆண்டில் பெற்றிருந்தார். பின்னர் கி.மு. 518–ஆம் ஆண்டில் சிறு பகுதியொன்றும் இவருடைய ஆட்சிப் பகுதியாயிற்று. அங்கு இவர் நல்லாட்சி புரிந்தார். சித்தியர்களுக்கு (Scythians) எதிராகத் தேரியசு (Darius) என்னும் பாரசீகப் பெருமன்னர் படையெடுத்த போது மில்டையடீசு தேரியசுடன் இணைந்திருந்தார். தான்யூபு ஆற்றின் குறுக்கே இருந்த பாலத்தின்மீது படையெடுத்து வந்தபோது, அப்பாலத்தைத் தகர்த்துவிட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். அப்போதுதான் கிரீசு நாட்டின் மீது செல்லவிருக்கும் பாரசீகர்களின் படைகளைத் தவிர்க்க முடியும் என்றார் இவர். ஆனால், இவருடைய கருத்தை ஏற்க மறுத்தார் இசுடியேசு (Histiaeus) என்னும் பிறிதொரு கிரேக்கப் படைத் தலைவர். பாரசீகப் படையெடுப்பினைத் தாங்க முடியாதென அஞ்சிய மில்டையடீசு கி.மு. 493 – ஆம் ஆண்டில் தம் அரசைக் கைவிட்டார். பாரசீகப் படைகள் கி.மு. 490-ஆம் ஆண்டில் கிரீசு நாட்டின் மீது படையெடுக்கத் துணிந்த போது மில்டையடீசு அத்தீனியப் படைத்தலைவர்கள் பதின்மரில் ஒருவராகப் பதவி பெற்றார். பாரசீகர்களை எதிர்க்க மில்டையடீசு ஒருவரே பொருத்தமானவர் என்று ஏனைய ஒன்பதின்மரும்பொறுப்பேற்க மறுத்தபோது, தாம் தேர்ந்தெடுத்த நாள்வரை காத்திருந்து மராத்தான் போரில் அத்தீனியப் படைகளை தலைமை தாங்கி நடத்திச் சென்றார் (கி.மு. 490). அப்போரில் வந்த பாரசீகத் தரைப்படைகளை மில்டையடீசு தோற்கடித்தார்.



மில்டையடீசு

அடுத்த ஆண்டு இவ்வெற்றிவீரர் தமக்கு 70 கப்பல்கள் கொண்ட படையொன்று வேண்டுமென ஏதென்சு அரசைக் கேட்டார். இவர் பாரசீகர்களைத் தாக்காமல் பாரோசு (Paros) என்னும் பகுதியின்மீது தாக்குதல் நடத்தினார். இவர் பழிவாங்கும் நோக்குடன் செயற்பட்டார் என்று தெரிய வந்தது. அத்தாக்குதல் தோல்வியில் முடிந்தது. அப்போது மில்டையடீசின் நோக்கமும் வெளியாயிற்று. ஒவர் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். ஒறுப்புக்கட்டணம் செலுத்த வேண்டுமெனப் பணிக்

கப்பட்டார். பணம் கட்ட முடியாமையின் காரண மாக இவர் சிறையில் அடைக்கப்பட்டார். போரில் பெற்றபுண் காரணமாக இவர் கி.மு.489-ஆம் ஆண்டில் சிறையிலேயே காலமானார்.

**மில்டையடீசு** என்னும் பெயரில் போப்பாண்டவர் ஒருவர் உரோமாபுரியில் ஏறத்தாழ கி.பி.310 முதல் 314 வரை பதவியிலிருந்தார். இவர் ஆப்பிரிக்காவில் பிறந்தவர் என்று கருதப்படுகிறார். இவருடைய மரணத்தைப் பற்றிய திட்டவட்டமான செய்தி கிடைத்திலது. இரா.அ.

*மில்வாகி* என்னும் நகரம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களுள் ஒன்றான விசுகான்சின் (Wisconsin) மாநிலத்தின் பெருநகரமாகும். பெருத்த இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் உலக நகரங்களில் ஒன்றாக மில்வாகி (Milwaukee) கருதப்படுகிறது. சிறப்பாக மின்சார இயந்திரங்களைப் பெரும் அள வில் உற்பத்தி செய்யும் மில்வாகி ஓர் அழகிய நகர மாகும். மிச்சிகன் ஏரியின் வளை குடாவில் உயர்ந்து ஓங்கியுள்ள மலைமுகட்டில் அமைந்துள்ள மில்வாகி நகரம் மில்வாகி, மெனோமொனி (Menomonee), கிண்ணிக்கிண்ணிக்கு (Kinnickinnic) ஆறுகளின் வாயி லில் எழுந்துள்ளது. மில்வாகி, 'அமெரிக்காவின் மிகப் பாதுகாப்பான மாநகரம்' என்று கருதப்படுவதுண்டு. மில்வாகி என்னும் சொல்லுக்கு 'அழகிய நிலம்' என் பது பொருள்.

இந்நகரம் விசுகான்சின் மாநிலத்தின் தென் எல் லைக்கு 64 கி.மீ. வடக்கிலும், சிகாகோ மாநகருக்கு ஏறத்தாழ 140 கி.மீ. வடக்கிலும் அமைந்துள்ளது. மில்வாகியின் பரப்புச் சற்றேறக்குறைய 250 ச.கி.மீ. ஆகும். ஏரிக்கரை நகரமாகவுள்ளதால் இது குளிர்ந்த தட்பவெப்ப நிலையைக் கொண்டுள்ளது.

மில்வாயிகின் மக்கள்தொகை 6,36,297 (1980). மில்வாகியில் முதன் முதலில் குடியேறியவர்கள் சிவப்பு இந்தியர்களே. இந்தியர் குடியிருப்பு கி.பி. 17 -ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. சிற்றூராக இருந்த மில்வாகி கி.பி.1846-இல் மாநகராகிவிட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டிலேயே சிறந்ததொரு வாணிக மையமாக மில்வாகி உள்ளது. பல வகை இயந்திரங்கள், உந்துவண்டி, மிதிவண்டி, இழுவை எந்திரம் போன்ற பெரும் இயந்திரங்கள் இங்குள்ள தொழிற்சாலைகளில் உருவாக்கப்படுகின்றன. உண வுப்பொருட்களும் பெருமளவில் இங்கு உற்பத்தியா கின்றன. மது (Beer) உண்டாக்குவதில் உலகில் தலைசிறந்து விளங்கும் மில்வாகி ஒரு பொருளா தார மையம் என்றால் மிகையாகாது.

மில்வாகித் துறைமுகம் பெரும் ஏரிகளில் உள்ள துறைமுகங்களுள் ஒன்றாகும். 'புனித இலாரென்சு' கடல் வழி திறக்கப்பட்ட பின்னர் மில்வாகி உலகத் துறைமுகங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

மில்வாகி ஒரு கல்வி மையமாகும். இங்குள்ள பள்ளிகள் அமெரிக்காவிற்கே வழிகாட்டியவை என் னும் புகழ் பெற்றவை. விசுகான்சின் பல்கலைக்கழகத் தின் ஒரு பிரிவு இங்கு இயங்குகிறது. இரா.அ.

*மிலான்*: இது வடக்கு இத்தாலியில் உள்ள வர லாற்றுப் புகழ்பெற்ற நகரம். போ (Po) ஆற்றுச் சமவெளியின் நடுவில் உள்ள இலம்பார்டி (Lombardy) மிலானோ மாநிலங்களின் தலைநகரமாகும். பெரும் போக்குவரத்துப் பாதைகள் பல கூடுமிடத்தில் இது அமைந்துள்ளது. வரலாற்றின் இடைக்காலத்தி லிருந்தே, இது பன்னாட்டு வாணிக, தொழில். பொருளாதார மையமாகச் செயற்பட்டு வந்துள்ளது. இதன் உற்பத்திப் பொருட்களில் முக்கியமானவை ஆடை வகைகள், இயந்திரப் பொருட்கள், வேதி மப் பொருட்கள், அச்சடிக்கப்பட்ட பொருட்கள், உந்து வண்டிகள், வான ஊர்திகள் முதலியனவாம். ஐரோப்பாவின் மிகச் சிறந்த பட்டு வாணிகத் தலங் களுள் இதுவும் ஒன்றாகும். இதன் மக்கள்தொகை 15,61,438 (1983).

**வரலாறு**: மிலானின் ஆதிக்குடிகள் கெல்ட்டுகள் (Celts) என ஒரு கருத்து நிலவுகிறது. இதை கி.மு. 222 - ஆம் ஆண்டில் உரோம் கைப்பற்றியது. உரோ மப் பேரரசின் பிற்கால வரலாற்றில் மிலான், கி.பி. 305-ஆம் ஆண்டு முதல் கி.பி. 402-ஆம் ஆண்டு வரை மேற்குப் பேரரசின் தலைநகராக விளங்கியது. மேலும், வடக்கு இத்தாலியில் ஒரு சமய மையமாக வும் இது விளங்கியது. பேரரசர் முதலாம் கான்சுடன் டைன் (Constantine) கி.பி. 313-ஆம் ஆண்டில் மிலான் அரசுஆணை ஒன்றைப் பிறப்பித்து அதன் வழியாகச் சமயப்பொறையை வழங்கினார். இலம் பார்டியர், கி.பி. 569 - இல் மிலானை வென்றனர். பிறகு, கி.பி.12-ஆம் நூற்றாண்டில் மிலான், ஒரு தன்னாட்சி நகரப்பகுதித் தகுதியுடன் சுதந்திர நகர மாக அறிவிக்கப் பட்டது சிறிது சிறிதாக, இலம் பார்டியின் நகரங்கள் யாவும் மிலானின் ஆதிக்கத் திற்கு உட்பட்டன. உள்நாட்டுக் கலகங்களும், மற்ற நகரங்களின் பகைமையும் மிலானில், கி.பி.11-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுவரை ஒரு நெருக்கடியான நிலைமையை ஏற்படுத்தியிருந் தன. இலம்பார்டிச் சங்கத்தின் (Lombard League) உறுப்பாக இருந்த மிலான், கி.பி. 1176-இல் இலெக்னானோ (Legnano)என்னுமிடத்தில் முதலாம் பிரடெரிக்கு மன்னனை முறியடிக்க மிகவும் உதவியது. இந்நகரின் சுதந்திரம் கி.பி.1183 - ஆம் ஆண்டு




மிலான் நகரம்



மிலான் திருச்சபை

உடன்படிக்கைப்படி உறுதிசெய்யப்பட்டது. கலீசோ விசுகாண்டி (Galeazzo Visconti) என்னும் மிலானியத் தலைவன், கி.பி. 1395-இல் இப்பேரரசரிடமிருந்து மிலானின் கோமகன் என்ற பட்டத்தைப் பெற்றான். அவனுடைய ஆளுகையின் கீழ் மிலான், இத்தாலியிலேயே மிக முக்கியமான கோமகன் நாடுகளுள் ஒன்றாக விளங்கியது.

ஐரோப்பாவில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற பேரரசு ஆதிக்கப் போர்களின் விளைவாக கி.பி.1535-இல் மிலான் இசுபானியப் பேரரசின் கீழ் வந்தது. பிறகு ஆசுத்திரியா (Austria) வின் ஆதிக்கம் அங்கு ஏற்பட்டது. அவ்வாதிக்கத்தின்கீழ் கி.பி.1797-இல் மிலான் சிசால்பைன் குடியரசுக்குத் (Cisalpine Republic) தலைநகராகியது. பின்பு கி.பி. 1805 முதல் 1814 வரை மிலான் புதிதாக அமைக்கப்பட்ட இத்தாலிய அரசின் தலைநகராக விளங்கியது. ஆசுத்திரியாவின் ஆதிக்கம் மீண்டும் இங்கு, கி.பி. 1815 – இல் ஏற்பட்டது. இத்தாலியர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐக்கியத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் தீவிர முயற்சிகள் செய்து வந்தததன் விளைவாக, கி.பி. 1859 – இல் சார்டினிய அரசும் மிலானும், ஒன்றாக இணைக்கப்பட்டன. சுதந்திர ஐக்கிய இத்தாலி கி.பி. 1861-இல் தோன்றிய பிறகு, அத்துடன் இணைக்கப்பட்ட மிலானின்தொழில் துறை வளர்ச்சி மிகுதியாயிற்று.

மிலானின் அழகுக்கு அழகு சேர்ப்பது அங்குள்ள வெண்சலவைக்கல் சமயத் தலைமைப்பீடம். அது கட்டப்பட்ட காலம் கி.பி.1386 முதல் 1813 வரை ஆகும். இங்கு உள்ள ஓவியக் கண்காட்சி சாலையும் பிரேரா (Brera) அரண்மனையும் காணத்தக்கவை. இவை கி.பி.17 – ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டவை. மிலானில் குறிப்பிடத்தக்க மற்றொரு கட்டடம் காசுதெல்லோ சோர்செசுக்கோ(Castello Sforzesco) என்பதாகும். இது கி.பி.15 – ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டது. பிறகு கி.பி.19–ஆம் நூற்றாண்டில் இது புதிய இணைப்புகளைப் பெற்றது. இக்கட்டடத்தில் உள்ளவற்றில் பின்வருவன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன: அருங்கலைக்காட்சியகம், சாந்தாமேரியா தெல்லே கிரேசி திருச்சபை (Church of Santa Maria delle Grazie–கி.பி.1465 – 90). இத்திருச்சபையில் இலியோனார்டோ டாவின்சி வரைந்த இறுதி இராச்சாப்பாடு (Last Supper) சுவரோவியம் காணத்தக்கது. புனித அம்புரோசியோவின் நெடுமாடக் கோயில் (Basilica of Saint Ambrogio) ஒன்று மிலானில் உள்ளது. இது கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் முதலில் தோன்றியது. பிறகு 11, 12–ஆம் நூற்றாண்டுகளில்

திரும்பவும் கட்டப்பட்டது. மிலானில் மூன்று பல்கலைக் கழகங்களும், ஓர் இசைக்கலைக் களஞ்சிய மையமும், ஓர் இசை நாடகக்கொட்டகையும் உள்ளன. தியேட்ரோ அல்லா இசுகாலா (Teatro alla Scala) என்னும் பெயரைக் கொண்ட இந்த இசை நாடகக் கொட்டகை கி.பி. 1778 – இல் திறக்கப்பட்டது.

தெ.பா

*மிலான் ஆணை*: இத்தாலியில் உள்ள இரண்டாம் பெரிய நகரம் மிலான் எனப்படும். இலம்பார்டியின் வடக்குப் பகுதியில் இந்நகரம் அமைந்துள்ளது. இது கி.பி. 1805 – ஆம் ஆண்டில் நெப்போலியனால் இத்தாலியின் தலைநகரமாக்கப்பட்டது. மிலானில் தான் நெப்போலியன் அரசராக முடி சூட்டிக் கொண்டார்.

மிலான் ஆணை எனப்படும் ஆணையினை கி.பி. 1807 திசம்பர் 17-இல் மிலானிலிருந்து நெப்போலியன் வெளியிட்டார். நெப்போலியன் பிரான்சில் பேரரசராக விளங்கியபோது, பிரான்சுக்கு எதிரான கூட்டணிகள் எல்லாவற்றிலும் உயிர்ச் சக்தியாக இங்கிலாந்து விளங்கியது. எனவே, இங்கிலாந்தைப் போரில் வெல்ல அவரால் இயலவில்லை. மேலும் கி.பி. 1805 – ஆம் ஆண்டு திரபால்கர் போரிலும் அவர் தோல்வி கண்டார். எனவே வாணிகச் செல்வாக்குடன் விளங்கிய இங்கிலாந்தின் வாணிகத்தைத் தாக்கி அதனை வீழ்த்த அவர் முடிவு செய்தார். அந்தக் கருத்துரையினை நெப்போலியனுக்கு கி.பி.1805-இல் வழங்கியவர் மாண்ட் கெயில்லார்டு என்பவர். அவர் 'இங்கிலாந்தின் வாணிகத்தை அழிப்பது, இங்கிலாந்தின் இதயத்தில் விழும் அடி' என்றார்.

ஆங்கிலேயக் கால்வாயினைக் கடந்து, இங்கிலாந்தைத் தாக்குவது இயலாது என்பதை நெப்போலியன் உணர்ந்தார். 'பாரிசிலிருந்து தில்லிக்குப் படை அனுப்புவது கூட எளிது. ஆனால் போலோனிலிருந்து போல்கசுடோனுக்கு அனுப்புவதுதான் கடினம்' என்றார். பொருளாதார அடிப்படையில், இங்கிலாந்தைப் பணிய வைக்கும் திட்டம் ஆபத்தான ஒன்று என்ற போதிலும் துணிந்து அம்முயற்சியில் இறங்கினார். அத்திட்டம் கண்டத் திட்டம் எனப்பட்டது. பெர்லின் ஆணை வாயிலாக நெப்போலியன் கி.பி. 1806-இல் அத் திட்டத்தை வெளியிட்டார்.

பிரிட்டன், நெப்போலியனின் இந்தப் பொருளாதாரத் தாக்குதலுக்கு அஞ்சிடவில்லை. பிரான்சுடன் அல்லது அதனுடைய நட்பு நாடுகளுடன் வாணிகம் செய்யும் நாடுகளின் கப்பல்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும், குடியேற்ற நாடுகளின் பொருட்கள் இங்கிலாந்துத் துறைமுகத்தைத் தொட்டுச் செல்ல வேண்டும் என்றும் அவ்வாறு செல்வன கண்டப்பகுதிக்குள் செல்லுமுன் சுங்கம் செலுத்த வேண்டும் என்றும் இங்கிலாந்து பதிலடி கொடுத்தது.

பிரிட்டனின் இந்த நடவடிக்கையினை முறியடிக்கவே கி.பி. 1807 திசம்பரில் நெப்போலியன் மிலான் ஆணையை வெளியிட்டார். நடுநிலை மேற்கொள்ளும் நாட்டினுடைய கப்பலாயினும், இங்கிலாந்து ஆணையின்படி நடந்து கொண்டால், அது பிரான்சினால் கைப்பற்றப்படும் என்றுஅறிவித்தார்.

அத் திட்டத்தினால் தென்மார்க்கு பிரான்சின் நட்பு நாடாகியது. இங்கிலாந்தின் ஆணை இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிடையே, உறவில் விரிசலை ஏற்படுத்திய போதிலும், நெப்போலியனின் கண்டத்திட்டம் தோல்வியடைந்தது. மிலான் ஆணை வெற்றி பெறாத ஒன்றாகவும் பிரான்சின் நலனுக்குப் பாதகமான ஒன்றாகவும் அமைந்தது. தி.அர.இரா.

*மிலிந்த பன்கா*: இது ஒரு சிறப்பு வாய்ந்த புத்த சமய நூலாகும். இது ஏழு அத்தியாயங்களைக் கொண்டது. இந்நூல் 'பாலி' மொழியில் எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் கி.மு. முதலாம் நூற்றாண்டில் வடமேற்கு இந்தியாவில் அல்லது காசுமீரத்தில் எழுதப்பட்டது என்று கூறப்படுகிறது. மிலிந்த பன்கா (Milinda panha) வின் ஆசிரியர் யார் எனத்தெரியவில்லை. புத்த சமயத்தில் இந்த நூலின் கருத்துகளை மிக உயர்ந்தனவாகப் போற்றுகின்றனர். 'மிலிந்தாவின் கேள்வி' என்னும் பொருளுடைய இந்த நூலில் மிலிந்தா என்ற ஒரு பாக்டீரிய-கிரேக்க மன்னர் குறிப்பிடப்படுகிறார். அம்மன்னர் கிரேக்க வரலாற்று ஆசிரியர்களால் 'மினாண்டர்' என்று சுட்டப்படுகிறார். அவர் முக்கியமான புத்த சமயக் கொள்கைகளைப் பற்றிய தம் ஐயப்பாடுகளை நாகசேனர் (Nagasena) என்ற புகழ்பெற்ற புத்த குருவிடம் வினவுவதாக இந்த நூல் அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக, மனிதனின் இயல்பான குணநலம், அவனது மறுபிறவி, அறிவின் திறன் போன்றவற்றைக் கூறலாம். அப்போதனைகளை ஆழ்ந்து படித்த பிறகு மிலிந்தா (நான்காம் பகுதி) அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகளின் மீது 82 கேள்விகளைக் கேட்கின்றார். அவற்றிற்கு நாகசேனர் என்ற புத்த குரு கூறிய மறுமொழிகள் இன்றும்கூட சிறப்பு வாய்ந்தவையாக, ஆக்க முறையிலான விடைகளாகக் கருதப்படுகின்றன. இதில் கூறப்பட்டுள்ள பகுத்தறிவு விளக்கங்கள், உவமைகள், கட்டுக் கதைகள் ஆகியன மிக உயர்வானவையாகக் கொள்ளப்படுகின்றன. புத்தர் வாழ்ந்தாரா என்ற மிலிந்தாவின் வினாவிற்கு 'உண்மை நகரம்' (City of Truth) என்ற புராணக் கதை மூலம் மிக விரிவான விடையைத் தருகின்றார்

இதன் ஆசிரியர். அவற்றில் புத்த மடாலயங்களில் பின்பற்ற வேண்டிய கடுமையான நடைமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன. இறுதியாக ஒரு சிறந்த குரு கடைப்பிடிக்க வேண்டிய அல்லது பெற்றிருக்க வேண்டிய குணநலன்கள் 67 பொருட்களுடனும், விலங்குகளுடனும் ஒப்பிடப்பட்டுள்ளன. எனினும், அவற்றில் இப்போது 33 வகைகள் கிடைக்கவில்லை.

சி.மூ.

*மிலேச்சர்*: சரவாசிகள், கிரேக்கர், அரேபியர் போன்ற வெளிநாட்டவர் தமிழ்நாட்டிலே மிலேச்சர் என்று குறிக்கப்பட்டனர். அம்மிலேச்சர் பற்றிய குறிப்பு முதன்முதலாகப் பத்துப்பாட்டினுள் ஐந்தாவ தாகிய முல்லைப் பாட்டிலே (64-66) வருகின்றது. அரசனாகிய தலைவன் பாசறையிலே தங்கியிருக்கை யில் அவன் பள்ளி கொள்ளும் இடத்தைச் சூழ்ந்து, பேசமாட்டாத நாவினையுடையராய்க் கைகளாலும் முகத்தாலும் செய்கை செய்து செய்தியைக் காட்டு கின்ற சட்டையிட்ட மிலேச்சர்கள் மெய்க்காவல் புரிந்து திரிந்தனராம். ஆகவே, இம்மிலேச்சர் ஊமையரென்பதும், இவ்வூமையரை அரசர் தம் மறைவெளிப் படாமை கருதிக் காவலுக்கு அமர்த்தி யிருந்தனரென்பதும் விளங்கும்.

வ.கு.

*மிலேச்சர் படையெடுப்பு*: இச்சொற்றொடர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6 – ஆம் நூற் றாண்டு வரை ஐரோப்பாக் கண்டத்தைத் தாக்கிய படையெடுப்பாளரைக் குறிக்கும். மிலேச்சர் என்னும் சொல் நாகரிக முதிர்ச்சி குறைந்த மக்களைக் குறிப் பிடும். பண்டைய கிரீசு நாட்டில் கிரேக்கர் அல்லா தார் மிலேச்சர் எனக் கூறப்பட்டனர். கிரேக்கர் உரோமானியரை மிலேச்சர் என்றனர். உரோமானி யர் கிரேக்க மொழியையோ இலத்தீன் மொழி யையோ பேசத் தெரியாத அனைத்து மக்களையும் விடத் தம்மைப் பண்பாட்டில் உயர்ந்தவர்களாக வும் சிறந்தவர்களாகவும் எண்ணியதால், தரங் குறைந்தவர்களும், பண்பாடு குறைந்தவர்களும், குரூரமானவர்களும், எதற்கும் உதவாதவர்களும் மிலேச்சராவர் என்று குறிப்பிடப்பெற்றனர். இன்றும் அதேபொருளில் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார் கள்.

ஐரோப்பாவில் உரோமானியப் பேரரசு வலிமை குறைந்த போது அதன் எல்லைகளில் வாழ்ந்த செரு மானியர் அப்பேரரசுக்குள் நுழையலாயினர். உரோ மானியப் பேரரசு கி.பி. 4 – ஆம் நூற்றாண்டில் இரு பிரிவுகளாகப் பிரியலாயிற்று. அவை கிழக்கு உரோ மானியப் பேரரசு, மேற்கு உரோமானியப் பேரரசு எனப்பட்டன. மேற்கு உரோமானியப் பேரரசை கி.பி. 375 க்கும் 500 க்கும் இடைப்பட்ட காலத்தில் மிலேச்சர்கள் தாக்கி அழித்தனர். அம்மிலேச்சர் படையெடுப்பாளர்களில் பெரும்பாலோர் செருமானி யர்களேயாவர். இக்கூற்று, சரியானதன்று எனக் கரு தும் வரலாற்றாசிரியர்களும் உளர்.

இங்ஙனம் படையெடுத்த மிலேச்சர்களில் கோத்தியர்களும்(Goths),ஆசுட்ராகோத்தியரும்(Ostrogoths) உரோமானியப் பேரரசர்களின் முன் அனு மதி பெற்றே பேரரசுக்குள் வந்தார்கள். மிலேச்சர் களில் பிறிதொரு இனத்தவர்களான வாண்டலர் (Vandals) உரோமானிய அரசு நலிந்து மெலிவதற்கு முன் கால் (Gaul) நாட்டிலும், இசுபெயின் (Spain) நாட்டிலும் நீண்டகாலம் வாழ்ந்தவர்கள். அவர் கள் உரோமானியப் பேரரசின் தளர்ச்சியை வாய்ப் பாகப் பயன்படுத்திக் கொண்டு வட ஆப்பிரிக்கா. தென் இத்தாலி முதலிய பகுதிகளைச் சூறையாடிப் படையெடுத்தனர். பின்னர் வந்த ஊணர்கள் (Huns) கொள்ளையடிக்கவும், பிணைப்பொருள் வெளவவும் படையெடுத்தார்களேயன்றி, நாட்டை வெற்றி கண்டு ஆளும் நோக்குடன் வரவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

மேற்கிலிருந்து படையெடுத்து வந்த மிலேச்சர் களுள் பிராங்குகள் சிறப்பானவர்கள். அவர்கள் இந் நாளைய ஆலந்து (Holland) நாட்டில் தங்கியிருந்த வர்கள். அவர்களுக்கு வடபால் தென்மார்க்கு (Denmark) வரை சாக்சானியர்களும் ஆங்கிலரும் (Saxons and Angles)பரவியிருந்தனர். தென் செருமனி யில் பர்கண்டியர்களும், இந்நாளைய ஆசுத்திரியாவில் வாண்டலரும் அவர்களுக்கு வடபால் இலம்பார்டிய ரும், தான்யூபு ஆற்றுக் கழிமுகப் பகுதியில் விசிகோத் தியரும் (Visigoths), அவர்களுக்கு வடகிழக்கில் ஆசுட்ராகோத்தியர்களும் இருந்தனர். எனவே மிலேச் சர்கள் பல வகைப்பட்டவர்கள்; பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள் என்பது புலனாகும்.


ஊணர்கள் ஆசியாவிலிருந்து படையெடுத்த மங் கோலிய இனத்தைச் சார்ந்த மிலேச்சர்களாவர். ஆசியாவிலிருந்து கிளம்பிய அவர்கள் தம் சூறாவளித் தாக்குதல்களின் மூலம் ஐரோப்பாவின் கிழக்கிலும், நடுவிலும் அழிபாடுகளைச் செய்தனர். அவர்களால் தாக்கப்பெற்ற ஆசுட்ராகோத்தியரும், விசிகோத்தி யரும் தாம் வாழ்ந்த பகுதிகளிலிருந்து விரட்டப்பட்ட போது, உரோமானியப் பேரரசைத் தாக்குவதென முடிவு செய்தனர். அக்காலத்தில் உரோமானியப் பேரரசையாண்ட பேரரசர்கள் திறனற்றவர்களா யிருந்தனர்.

விசிகோத்தியர்களின் தலைவனான ஆலரிக்கு (Aleric) குறிப்பிடத்தக்கவர். அவர் இத்தாலியின்மீது

படையெடுத்தார். உரோமானியப்பேரரசர் படையெடுப்பை எதிர்க்கத் திறனற்றவராய்ப் பெரும் செல்வத்தைக் கொடுத்துப் படையெடுப்பாளர்களைத் திருப்பியனுப்பினார். மீண்டும் அவர்கள் உரோமாபுரியைத் தாக்கி அதனைச் சீர்குலைத்தனர்.

வாண்டலரும் உரோமானியப் பேரரசின் மீது படையெடுத்தனர். உரோமானியப் பேரரசு கி.பி. 476 - ஆம் ஆண்டளவில் ஐரோப்பாவில் முடிவுற்ற தற்கு மிலேச்சர் படையெடுப்புகள் முக்கிய காரணங்களாகும். இரா.அ.

**மிலேட்டசு**, மேற்கு ஆசியாவினைச் சேர்ந்த ஆசியா மைனரின் மேற்குப் பகுதியில் விளங்கிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பண்டைய கடல் துறைமுகம். சாமோசுத் (Samos) தீவுக்கு அருகில் கரியாப் (Caria) பகுதியில் இருந்த மிலேட்டசு (Miletus) கி.மு. 1000 – ஆம் ஆண்டளவில் கிரேக்கரின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாக இருந்தது. அயோனியா (Ionia) வின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகிய மிலேட்டசு, கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் கருங்கடல் பகுதியில் கிரேக்கக் குடியேற்றத்தை நிறுவியது.



மிலேட்டசு

மிலேட்டசு மக்கள் இலிடியாவின் (Lydia) வலிமை பொருந்திய மன்னர்களையே எதிர்த்து நிற்கும் ஆற்றலைப் பெற்றிருந்தனர். பாரசீகரால் கூட இவர்களுக்குத் துன்பம் உண்டாக்க இயலவில்லை. எனினும், கி.மு. 499 – இல் பாரசீகத்திற்கு எதிராக, அயோனியக் கிரேக்கரைப் புரட்சி செய்யுமாறு மிலேட்டசு தூண்டியது. அதனால் வெகுண்ட பாரசீகர்,கி.மு.494-இல் மிலேட்டசைத் தாக்கினர். முக்கியமான ஒரு துறைமுகமாக இருந்த மிலேட்டசு, கிறித்தவ ஆண்டின் தொடக்கத்திற்குப் பின்னர் இயற்கைக் கோளாறு காரணமாகச் சிறப்புக் குன்றியது. பண்டைக் காலக் கிரேக்கத் தத்துவ அறிஞர்களான தேல்சு (Thales), அனாக்சிமாண்டர் (Anaximandar) ஆகியோர் மிலேட்டசில் வாழ்ந்தவர்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. தெ.பா.

**மிழலைக் கூற்றம்**: கூற்றம் என்பது பண்டைத் தமிழகத்திலிருந்த நாட்டின் உட்பிரிவைக் குறிக்கும். சேர, சோழ, பாண்டிய நாடுகள் பல கோட்டங்களாகவும், கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தமையைக் கல்வெட்டுகளால் அறியலாம். அவற்றுள் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை ஓரமாக அமைந்திருந்தது மிழலைக் கூற்றம்.

மிழலைக் கூற்றம் அறந்தாங்கி வட்டத்தின் தென்பகுதியையும் இராமநாதபுரம் மாவட்டத்தின் கீழ்ப்பகுதியையும் தன்பால் கொண்டது என ஆய்வாளர் கூறுகின்றனர். இக்கூற்றம் தஞ்சாவூர்ப் பிரகதீசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்றிலும் திருப்பூவணம் கோயில் செப்புப் பட்டயத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. திருப்பெருந்துறை, துஞ்சலூர், தண்டலை என்னும் ஊர்கள் இதில் அடங்கியிருந்தன என அவற்றால் அறியலாம்.

சங்க நூல்களில் மிழலைக் கூற்றம் பற்றிய செய்திகளைக் காணலாம். இக் கூற்றம் தனிச் சிற்றரசாக வேள் எவ்வி என்பவனால் ஆளப்பட்டு வந்ததென்றும் அவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனோடு போரிட்டுத் துஞ்சினான் என்றும் புறநானூறு கூறுகிறது.

‘ஓம்பா ஈகை மாவேள் எவ்வி, புனலம் புதவின் மிழலை’ என்னும் தொடரால் இக்கூற்றத்தை மாங்குடிகிழார் குறிக்கின்றார். மிழலைக் கூற்றத்தின் சங்ககாலத் தலைநகர் நீடூர். எனவே, இவன் நீடூர் கிழான் எனவும் அழைக்கப் பெற்றான்.

கடற்கரையைச் சார்ந்துள்ள மிழலைக் கூற்றம் வளமிக்க ஊர்களைப் பெற்றிருந்தது. நெய்தல் வளமும், மருதவளமும் செழித்திருந்தன. நீர் பெருகிப் பாயும் கால்வாய்களில் நீர் வேண்டுமளவிற்குப் பெருகிப்பாயவும் வேண்டாதவழித் தடுத்துத் தேக்கவும் ஆங்காங்கு மதகுகளும், அவற்றிடையே கனத்த கதவுகளும் அமைக்கப்பட்டிருந்தன என்பதைப் ‘புனலம் புதவின் மிழலை’ என்னும் புறநானூற்றுத் தொடர் அறிவிக்கின்றது. தொழுவர் (பரதவர்) கடல் திரைமிசைப் பாயும் மிழலை, பரதவர் குரவைச் சீர்தூங்கும் மிழலை, மைந்தர் தலைக்கை தரூஉம் மிழலை என இதன் சிறப்புப் பேசப்படுகின்றது (புறம். 24).

மிழலை நாடு கி.பி.12-ஆம் நூற்றாண்டில் பெரியபுராணம் பாடிய சேக்கிழாராலும் சுட்டப் பட்டுள்ளது. மிழலை நாடு என்ற ஒரு கூற்றம் இருந்ததோடு மிழலை என்ற பெயருடன் ஓர் ஊரும் இருந்ததாகச் சுந்தரரும், சேக்கிழாரும் குறிக்கின்ற னர். 'நிலவுங்குடியால் நெடுநிலத்து மீதுவிளங்குந் தொன்மையது மிழலை நாட்டுப் பெருமிழலை' என் பது பெரியபுராணம். மிழலை நாட்டிலுள்ள பெரு மிழலையில் பிறந்தவர் பெருமிழலைக் குறும்ப நாயனார். அதன்பின், திருத்தொண்டர் புராண சாரம் இயற்றிய உமாபதி சிவனாரும் 'கொண்டல் பனி வளர் சோலை மிழலை நாட்டுக்கோதில் புகழ்ப் பெருமிழலை' எனப் பாடுகின்றார்.

சங்க நூல்களில் குறிக்கப்பட்ட மிழலைக் கூற்ற மும், திருத்தொண்டர்புராணம் குறிக்கும் மிழலை நாடும் ஒன்றா என்பது ஆய்விற்குரியது. இரா.சா.

*மிளைக் கந்தன்* சங்க காலப் புலவர். மிளை யென்பதோர் ஊரென்பர் உ.வே. சாமிநாதையரும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும். பொதுப்பட அரணைச் சூழ்ந்து அமைந்திருப்பதாகிய காவற் காட்டைக் குறிக்கும் அப்பெயர், இங்கே காவற் காட்டுச் சிறப்புடையதோர் ஊரைக் குறித்தது. கந்தன் என்னும் தெய்வப் பெயர் இப்புலவருக்கு இயற்பெய ராக இடப்பெற்றது. இவர் பாடிய அரியதோர் அகப் பாடல் குறுந்தொகையில் 196-ஆம் பாடலாக அமைந் துள்ளது. தலைவியின் ஊடல் தீர்க்கும் வாயிலாகத் தோழியை வேண்டிய தலைவனிடம், அவள் கூறும் முறையில் இவர் அப் பாடலை இயற்றியுள்ளார். 'ஐயனே! முன்பெல்லாம் நின் காதலியாய என்தோழி கைப்புடைய வேம்பின் பசுங்காயையே தரினும் அவளிடத்துக் காதலால் நீர் அதனைத் தேம்பூங்கட்டி யென்று விரும்பிப் புகழ்ந்தீர்; இப்போது பறம்பு மலைப் பனிச்சுனையின் குளிர்ச்சி பொருந்திய தெளிந்த நீரையே தரினும் அவளிடத்து வெறுப்பினால் அதனை வெப்பமுடையதென்றும் உவர்க்கின்ற தென்றும் வெறுத்து மொழிகின்றீர்; நும் அன்பின் பகுதி அத் தகையதாயுள்ளது' என்ற தோழி கூற்றின் முற்பகுதி யில்,'ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது, வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு'(தொல்.பொருள். நூ. 144) எனத் தலைவியைப் பாராட்டும் தலைவனின் பண்பிலக்கணத்தை இவர் நன்கு பொருத்தியுள்ளது காணலாம்.பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீரை இவர் எடுத்துப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். வ.கு.

*மிளைகிழான் நல்வேட்டனார்:* இவர் சங்ககாலப் புலவர். மிளை என்னும் ஊரினராகிய நல்வேட்டனார் என்ற இயற்பெயரையுடைய இப்புல வர், கிழான் எனக் குறிக்கப் பெறுதலால், இவரை வேளாண் மரபினரென்று விளங்கிக் கொள்ளலாம். இவர் நல்வேட்டனார் என்ற பெயரளவிலேயே ஈரிடங்களில் (நற். 53, 292) குறிக்கவும் பெறுகின் றார். குறுந்தொகையில் ஒன்றும் (341), நற்றிணை யில் நான்கும் (53.210,292,349) ஆக ஐந்து பாடல்கள் இவர் பாடியன. குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய மூன்று திணைகளில் இவர்தம் பாடல்கள் அமைந்துள் ளன. பிரிந்து போய்ப் பருவ வரவின்கண்ணும் மீளாத தலைவனை யெண்ணித் தலைவி வன்கண்மையோடு உயிர்தாங்கி வாழ்ந்திருப்பதை அவள் கூற்றிலேயே அமைத்துக்காட்டும் இவரதுகுறுந்தொகைப் பாடலில் காணலாம். பெருமலையிலே பெய்த மழையில் சருகு களையும், இளந்தளிர்களையும் அடித்துக்கொண்டு வரும் புதுநீர் உடலுக்கு மருந்தாகும் தன்மையை இவர் பாடலால் அறியலாம் (நற்.53). 'நெடுமொழி கூறுதலும் கடுமையானவற்றை ஊர்தலும் ஒருவர்க் குச் செல்வமன்று; அவை அவர்தம் செய்வினைப் பயன்களாம். தம்மைச் சார்ந்தோர் துன்பத்திற்குத் தாம் அஞ்சி, அதனைப் போக்கி அவரைக் கைவிடாது ஆளுகின்ற பண்புடனே இனிய தன்மையனாயிருக்கும் செல்வமே சான்றோரால் செல்வமெனப் படுவதாம்' (நற்.210)என்பதுபோன்ற அறக்கருத்துகளை இவர் தம் பாடல்களில்குறிப்பிட்டுள்ளார்.மதியுடம்பாட்டின்கண் தலைவன்தோழியை இரந்து பின்னின்று ஒழுகுதற்குப் போரின்கண் புண்பட்ட மறவரைக் காப்போரின்மை யால்'அவரது உயிர் போமளவும் ஒரியும் நரியும் கழுகும் பருந்தும் கடித்துத் தசை கொண்டு துன்புறுத்துமே என்று கருதி இரக்கமுற்றுப் பேய் தானே அருகிருந்து காத்து வழிபடுவதாகிய பேய்க் காஞ்சியை இவர் உவமித்துள்ள நுட்பம் உணரத் தகும் (நற்.349). 'ஏமச் சுற்ற மின்றிப் புண்ணோன், பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கம்' (தொல்.பொருள். நூ.79) என்ற பேய்க்காஞ்சி இலக்கணத்தை இவ்வுவமையிலே இவர் நன்கு பொருத்தியுள்ளார். வ.கு.

*மிளைப்பெருங் கந்தன்:* இவர் சங்ககாலப் புலவர். இப்புலவரது இயற்பெயர் பெருங்கந்தன் என்பதாம். இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் மூன்று பாடல்கள் (136,204,234) உள்ளன. தலை மகன் பாங்கனுக்குரைத்தது; பாங்கன் தலைமகனுக் குரைத்தது; பருவ வரவின்கண் தலைவி தோழிக் குரைத்தது என்ற மூன்று துறைகளில் அவை அமைந் துள்ளன. 'காமம் காமம் என்ப காமம், அணங்கும் பிணியு மன்றே' என்ற ஒரே தொடக்கத்தைக் கொண்டு இவர் தலைவனையும் பாங்கனையும் எதி ரெதிராகப் பேசவிடுகின்ற இனிய நயம் கண்டின் புறத்தக்கது. தலைவியிடத்துத் தான் கொண்ட

காதலைத் தலைவன் அறிவிக்கக் கேட்ட பாங்கன் அவனைக் கழறும் போது, ‘காமம் காமம் என்று உலகோர் அதனைப் பெரிதாய் அஞ்சிக் கூறுவர்; உண்மையில் அக்காமமானது புதிதாகத் தோன்றுவ தோர் வருத்தமோ பிணியோ அன்று; அதனைக் குறித்து ஆராயுங்காலத்துப் பழங்கொல்லையிலே மேய்ச்சலுக்கும் பற்றாது தளிர்த்த முற்றாத இளம் புல்லை மேயவும் மாட்டாத முதிய பசு நாவினால் நக்கியே இன்புற்றாற்போல நிலைத்த இன்பமாகத் தன்னை நினைப்போர்க்கு அந்த நினைப்பளவிலே தோன்றுகின்ற புத்தின்பமே காமம்’ என்று கூறிப் பழிப்பான் (குறு.204). அவனது பழிப்புரையாகிய கழறலுக்கு எதிர்மறை கூறும் தலைவன், ‘காமம் காமம் என்று உலகோர் பலரும் அதனைப் பழித்துக் கூறுவர்; உண்மையில் அக்காமமானது புதிதாகத் தோன்றுவதோர் வருத்தமோ பிணியோ அன்று; அது மிக நுண்ணியதாய்க் கடுத்தலும் தணிதலும் இல்லாதது; யானையிடத்தே எப்போதுமிருந்து, அது தழையுணவைத் தின்னுங்கால் வெளிப்படுகின்ற மதத் தைப் போலக் காமமும் இயல்பிலே யாவரிடத்தும் அடங்கியிருந்து கண்டு மகிழ்வாரைப் பெற்றவிடத்தே வெளிப்படுகின்ற செவ்வியையுடையது’ என்று புகழ் வான் (குறு.136). இவ்வாறு காமத்தை ஒரே நடை யில் தலைவன் கூற்றிலே புகழ்ச்சிக் குறிப்பாகவும் பாங்கன் கூற்றிலே இகழ்ச்சிக் குறிப்பாகவும் பாடு கின்ற இவரது புலமை நலம் உணர்ந்தின்புறத்தக்க தொன்றாகும்.

பிரிந்த தலைவன் மீண்டு வருவதாகக் குறித்துச் சென்ற பருவம் வந்தும், அவன் வாராத நிலையில் வருந்திய தலைவி, ‘கதிரவன் மறைந்த வானம் சிவப்ப ஒளிமங்கிய பொழுதில், முல்லை மலரும் காலமே மாலைக் காலமென்று வரையறுத்துக் கூறுவர் மயங்கி யோர்; மேலும், காதலரைப் பிரிந்தோர்க்குக் கோழி கூவுகின்ற விடியலும் மாலை; பகலும் மாலையே’ என்று தன் மயக்கத்தைத் தோழியிடம் கூறுவதை இவர் மற்றொரு பாடலில் அமைப்பார் (குறு.234).

பொதுவாக, இவர் பாடல்கள் ஆற்றல் மிக்க சொல் நடையோடு அமைந்துள்ளன. பட்டு வெட்டுப் போன்ற சொல்வெட்டினை இவர் பாடல்களில் பார்க் கலாம். வ.கு.

**மிளைவேள் தித்தன்** சங்ககாலப்புலவருள் ஒருவர். மிளை என்னும் ஊரைச் சேர்ந்த வேளாண் குலத்தினர் என்பது இவர் பெயரால் பெறப்படும். மிளை என்னும் ஊரில் வேறு சில சங்கப்புலவரும் வாழ்ந்திருந்தனர் என்பது மிளைக்கந்தனார், மிளைப் பெருங் கந்தனார், மிளைகிழான் நல் வேட்டனார் என்னும் பெயர்களால் அறியப்படும்.

இவர் பாடியதாகக் குறுந்தொகை 284-ஆம் பாடல் ஒன்றே கிடைத்துள்ளது. தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தபோது ஊரினர் எழுப்பிய அலருக்கு அஞ்சிய தலைவியை நோக்கித் தோழி கூறிய முறையில் இப்புலவர் பாடியுள்ளார். போர் செய்த யானையின் புகர் முகத்தை ஒப்ப மன்றத்திலுள்ள துறுகல் மீது செங்காந்தள் மலர்ந் துள்ளதை உவமை கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. ‘தலைவன் அறவனாயினும் அல்லனாயினும் மலையில் ஓடி வரும் வெள்ளருவி இலையால் வேய்ந்த குடிலின் அருகே இழியும் சிறு குடியிலுள்ளார் தலைவன் உரிய காலத்தில் மணவாவிடின் நம்மை ஏசுவாரோ, ஏசாரோ’ என்று தோழியிடம் கூறுவதாக இவர் பாடல் அமைந்துள்ளது. இரா.சா

**மிறைக்கவி** என்பது நால்வகைக் கவிகளுள் சித்திரகவியைக் குறிக்கும். மிறைக்கவி எனினும் சித்திரப்பா எனினும் ஒக்கும் என்பர் மாறலங்கார உரையாசிரியர். முரசபெந்தம், பதுமபெந்தம், இரத பெந்தம் போன்ற மிறைக் கவிகள் சித்திர வடிவில் அமையப் பெறுவதால் இத்தகைய பாடல்கள் சித்திர கவி எனப்பட்டன.

சித்திர கவி வகை இருபத்தாறு என மாறனலங் காரம் கூறுகிறது. அவை: வல்லினப்பாட்டு, மெல் லினப்பாட்டு, இடையினப்பாட்டு, நிரோட்டியம், ஓட்டியம், ஓட்டிய நிரோட்டியம், அக்கரச் சுதகம், அக்கர வருத்தனை, வக்கிரவுத்தி, வினாவுத்தரம், சக்கரபெந்தம், பதும பெந்தம், முரசபெந்தம், நாக பெந்தம், இரத பெந்தம், மாலை மாற்று, கரந்துறை செய்யுள், காதை கரப்பு, பிரிந்தெதிர் செய்யுள், பிறிது படு பாட்டு, சருப்பதோபத்திரம், கூடசதுக்கம், கோமூத்திரி, சுழி குளம், திரிபங்கி, எழுகூற்றி ருக்கை என்பன. இவை மாறனலங்கார நூற்பாவிற் கூறப்பட்டவை. இவையேயன்றி மாத்திரைச் சுருக்கம், மாத்திரை வருத்தனை, ஒற்றுப் பெயர்த்தல், திரி பதாதி, சதுரங்க பெந்தம், கடகபெந்தம் போன்ற இன்ன பிறவும் சித்திரக் கவிகளாம் என அந்நூலின் உரை கூறுகிறது.

மாலைமாற்று முதலாக எழுத்துச் சுருக்கம் ஈறாக இன்னவை பிறவுமாகிய பல விகற்பத்தாற் செய்யப்பட்டு ஓசைகெடாமல் எழுத்துக் குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம், யாப்புக் குற்றம், அலங்காரக் குற்றம் என்னும் குற்றங்கள் படாமல் பாடப்படுங் கவி சித்திர கவியாம் என வெண்பாப் பாட்டியல் சித்திர கவிக்கு இலக்கணம் கூறுகின்றது. இக்கவி பாடுவோனும் சித்திரகவியாம் என்பர். மாறனலங்காரம் இருபத்தாறு வகைகளைக் கூறவும் மிறைக்கவி இருபது என்று வெண்பாப் பாட்டியல்

கூறுகிறது. மாறனலங்காரம் கூறாத ஏகபாதம், தூகங்கொளல், வாவனாற்றி, ஒரெழுத்துப்பா, சித்திரக்கா, விசித்திரக்கா, வித்தாரக்கா, விகற்பநடை, சித்து, ஒரு பொருள்பாட்டு, பல பொருள்பாட்டு என்பனவற்றை வெண்பாப் பாட்டியல் கூறுகிறது. சித்திர கவி பாடுவது அக்காலத்தில் புலமையின் அளவு கோலாகக் கருதப்பட்டது. இரா.சா.

*மின்சார உற்பத்தி*: மின்சாரம் மனித இனத்தின் பல்வேறு துறைகளையும் இயங்கச்செய்து பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகிறது. நாட்டின் தொழில் மேம்பாட்டிற்கும் வேளாண்மையில் பசுமைப் புரட்சி காண்பதற்கும் மின்சக்தி ஆக்க சக்தியாகத் துணைபுரிகிறது. வீடுகளுக்கு ஒளியூட்டுகின்றது. மின்சார நுகர்வு கூடி வருவது மக்களின் வாழ்வு ஒளி பெறுவதை, நாடு வளமாகி வருவதைக் காட்டுவதாகும்.

இந்தியாவில் சராசரி மின் நுகர்வு 94 கிலோ வாட்டுகளாகும். தமிழ்நாட்டின் நுகர்வு 115 கிலோ வாட்டாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் தலைவீத மின் உற்பத்தி 50 கிலோ வாட்டுகளாகும்.

**நீர் மின்சாரம்**: நாடு விடுதலை பெற்ற பின் மின் உற்பத்தி 100 விழுக்காட்டிற்கு மேல் கூடிஉள்ளது. நீர்மின் நிலையங்கள் அமைப்பதில் முன்னோடியாக விளங்கும் நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. இந்திய நாட்டின் நீர் மின்சார வாய்ப்புகள் 200 மிலியன் கிலோவாட்டுகளாகும். நீர் மின்சார வாய்ப்புகளில் 10 விழுக்காட்டினையே பயன்படுத்துகின்றனர். பிற வாய்ப்புகளைப் பயன்படுத்தும் முயற்சிகள் சிக்கல்கள் நிறைந்தவை. நாற்பது விழுக்காடு வாய்ப்புகள் வடகோடியில் உள்ளன. எனவே, மின்சக்தி உற்பத்திக்குப் பிற வாய்ப்பு வழிகளை நாடவேண்டியுள்ளது.

**ஐந்தாண்டுத் திட்டங்கள்**: நாடு வளம் பெற மேற்கொண்ட திட்டங்களில் நீர்மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு உரியபங்கு அளிக்கப்பட்டது. திட்டகாலத்தில் பலநோக்கு அணைக்கட்டுகள் பல கட்டப்பட்டுள்ளன.

**மின்விசை உற்பத்திக்குச் செலவிட்ட தொகை:**

| திட்டம் | உரூபாய் (கோடியில்) |
|---|---|
| முதல் திட்டம் | 260 |
| இரண்டாம் திட்டம் | 410 |
| மூன்றாம் திட்டம் | 925 |
| நான்காம் திட்டம் | 2991.8 |
| ஐந்தாம் திட்டம் | 7362 |

முதல்திட்டத் தொடக்கக் காலத்தில் 2.3 மிலியன் கிலோவாட்டு ஆக இருந்த மின் உற்பத்தி 1975-76-இல் 22 மிலியன் கிலோ வாட்டு ஆக உயர்ந்துள்ளமை பெரிய சாதனையாகும்.

**பிற வளங்கள்**: இந்தியாவில் கிடைக்கும் அணுமின் சக்தி 640 மிலியன் கிலோ வாட்டு ஆகும். ஆனால், இதனைக் கூட்டுவதற்கான வாய்ப்புகள் குறைவு. மிக அதிகச்செலவில் அணுமின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கனநீர் அதிக விலைக்கே கிடைக்கின்றது. தாராபூர் நிலையத்திற்கு உதிரிப் பாகங்கள் கிடைப்பது சிக்கலாக உள்ளது. இப்போது தோரியம் என்ற வேதிமப் பொருளைப் பயன்படுத்துகின்றனர். இந்திய நாட்டில் அனல் மின்சார உற்பத்தித் திறன் 4550 கிலோவாட்டு ஆகும்.

கிராமப் புற வீடுகளில் 70 விழுக்காடு அளவிற்கு 1990-1991-ஆம் ஆண்டிற்குள் மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என அரசு எண்ணுகிறது. அதனால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். மின்னொளியை 1950-51-இல் 3061 கிராமங்கள் பெற்றிருந்தன. அந்த எண்ணிக்கை 1982-83-இல் 3,23,881 ஆக உயர்ந்துள்ளது. நாற்பத்து நான்கு விழுக்காடு கிராமங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களை மின்மயமாக்குவதில் சில சிக்கல்கள் உள்ளன. அரசுக்கு இழப்பு உண்டு. இருப்பினும், மின்சாரம் இன்றியமையாத தேவையாகும்: மனிதவள மேம்பாட்டிற்குப் பெரிதும் பயன்படுவதாகும். மு.க.

*மின் தூண்டு வலிப்புச் சிகிச்சை*: நோய் நீக்கல் (Therapy) என்னும் சிகிச்சை சில தொகுப்பான செயற்படு முறையில் கொடுக்கப்படுகிறது. இச்சிகிச்சையை உளக் கோளாறு உள்ளவர்களுக்குப் பயன்படுத்தி அவர்கள் மனநிலையில் குறிப்பிடத்தக்க நல்ல முன்னேற்றங்களை ஏற்படுத்தலாம். மின் தூண்டு வலிப்புச் சிகிச்சை (Electrotherapy) என்பது மின்சாரத்தைப் பயன்படுத்தி நோயாளியின் உடலில் சிகிச்சைக்காக வலிப்பு ஏற்படுத்தி நோயைக் குணப்படுத்த உதவுகிறது. இச் சிகிச்சை முறையில் மின்சாரத்திற்கு முக்கிய பங்கில்லை. மின்சாரம் வலிப்பு ஏற்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. இதனை 'மின் அதிர்ச்சிச் சிகிச்சை' (Shock Therapy) எனவும் கூறுவர்.


செர்லெட்டி, பினி (Cerletti, Bini) என்போர் 1938-ஆம் ஆண்டு உடலில் ஏற்படும் வலிப்புப் பற்றி ஆராயும்போது மின் தூண்டலினால் வலிப்பு உண்டாக்கும் முறையைக் கண்டுபிடித்தார்கள். இதுவே இப்பொழுது 'மின் தூண்டு வலிப்புச் சிகிச்சை' என வழங்கப்படுகிறது. அடுத்த பத்து ஆண்டுகளில் இம் மின்

தூண்டு வலிப்புச் சிகிச்சைச் முறை எல்லாவிதமான கோளாறுகளையும் குணப்படுத்த மிகவும் பயன் பட்டது. ஆனால், 1940 – ஆம் ஆண்டுத் தொடக்கத் தில் இந்தச் சிகிச்சை முறை உடல்சார் உளச் சோர்வைக் குறைக்கச் சிறந்த சிகிச்சை முறை என்றும், மற்ற உள நோய்களைக் குணப்படுத்துவதில் அளிக்கும் பலன் குறைவானதே என்றும் கண்டுபிடிக் கப்பட்டது. இச் சிகிச்சை குறித்துப் பலவிதமான எதிர் வாதங்கள் இருந்த போதிலும் இம் 'மின்தூண்டு வலிப்பு முறை' உளநோய்க்கோளாறுகளைக் (Psychiatric Disorder) குணப்படுத்துவதில் சிறந்த முறையாகத் திகழ்ந்தது. இந்தச் சிகிச்சை முறை மனச் சோர்வை ஏற்படுத்தும் பகுதிகளான ஒரு முனைப்பு விசை அல்லது இரு திற முனைப்பு விசைப் பகுதிகளில் தோன்றும் உள நோய்களைக் குணப்படுத்த மிகவும் உதவியது. மின்தூண்டு வலிப்புச் சிகிச்சை உளச் சோர்வைப் போக்கும் சிறந்த மருந்தாக இருந்த போதிலும் மின் அதிர்ச்சி கொடுப்பதால் எந்தவகையில் அது உடலில் மாற்றம் ஏற்படுத்துகிறது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதைத் தெளிவு படுத்தப் பல கோட்பாடுகள் (Theories) உருவாயின. அவற்றில் ஒரு கோட்பாடே மக்கள் கவனத்தை ஈர்க்க வல்லது.

உளச்சோர்வைக் குறைக்கும் மருந்துவகை, உளச்சோர்வுத் தடை (Anti – depresent) கண்டு பிடிப்புக்குப் பின்னர் இம் மின்தூண்டு வலிப்புச் சிகிச்சை முறையைப் பயன்படுத்துதல் சிறிதளவு குறைந்துள்ளது. எனினும், அவசர சிகிச்சைக்கு இம் மின்தூண்டு வலிப்பு முறையே முதலில் பயன்படுத்தப் படுகிறது. சான்றாகத் தற்கொலை செய்துகொள் ளும் மனநிலையில் உள்ளவர்களுக்கு இச் சிகிச்சை கொடுக்கப்படுகிறது. ஏனென்றால், இச் சிகிச்சை முறை நோயாளியின் மனநிலையை உடனே நிலைப் படுத்த உதவுகிறது. மேலும், சோர்வுத் தடுப்பு (Anti -depresent) மருந்துகளைச் சாப்பிட இயலாத இதய நோயாளிகளுக்கும், அவற்றை உபயோகித்தும் குண மாகாத நோயாளிகளுக்கும் இம்மின் அதிர்ச்சிச் சிகிச்சை முறை கொடுக்கப்பட்டு வருகிறது.

**செயல் ஆற்றும் முறை:** மின் அதிர்ச்சிச் சிகிச்சையில் நோயாளியின் மண்டையோட்டின் மேல் கொடுக் கப்படும் மின்விசை மண்டையோட்டை அடுத்துள்ள மற்ற திசுக்களுக்குப் பரவுகிறது. ஆனால், இம் மின் விசை மூளைத் திசுக்களைச் சிறிதே சென்றடையும். இச் சிகிச்சையினால் மூளைத் திசுக்களுக்கு நேரடியாக மின்சாரப் பாய்வு இருக்காது.

இச் சிகிச்சை பெறும் நோயாளியின் தசைகளைத் தளர்த்தக்கூடிய மருந்துகளைக் கொடுத்தபிறகு அந் நோயாளியை மின்சாரம் தூண்டி அதிர்ச்சி கொடுக்கப் பயன்படுத்தும் படுக்கையில் கிடத்த வேண்டும். பின் னர் நோயாளியின் தலையில் மின் பாய்ச்சுவதற்கு இன் றியமையாத மின் முனைகளை (Electrodes) பொருத் திய பிறகு மின்சாரம் பாய்ச்சப்படுகிறது. இச் சிகிச்சை யில் கொடுக்கப்படும் மின்சக்தியின் அளவு 70 மின் மூல அளவி (Volt) லிருந்து 150 மின்மூல அளவு வரை 1 நொடி அல்லது 5 நொடிகளுக்கு இருக்கும். சிகிச் சைக்குப் பிறகு நோயாளி அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம்வரை மயக்கநிலையில் இருக்கக்கூடும். மயக்கம் தெளிந்தவுடன் நோயாளி நனவு கூர்வு இல் லாமல் இருப்பார். இந்த நனவு கூர்வு பாதிப்பு ஒரு மணி நேரமும், ஒருசிலரிடம் நாள்கணக்கிலும் ஒருசில ரிடம் மாதக் கணக்கிலும் ஏற்படலாம்.




அண்மையில் நடந்த ஆராய்ச்சிகளின்படி மின் அதிர்ச்சிச் சிகிச்சை பெறும் 10,000 நோயாளிகளில் எவரேனும் ஒருவர் இறப்பெய்த நேரிடுகிறது. அதுவும் சிகிச்சையினால்தான் என்று காரணம் காட்ட முடியாது. ஏனென்றால் இறப்பு நேரிடுபவர்கள் அனைவரும் இதய நோயாளிகள் என்று தெளிவுபடுத் தப்பட்டுள்ளது.

மின்தூண்டு வலிப்புச் சிகிச்சை, நோயாளியின் முன் அனுமதி பெற்றபின்னரே கொடுக்கப்படுகிறது. எனி னும் சில உள நோயாளிகள் தாங்கள் சிகிச்சை பெறும் மனநிலையில் இல்லாமல் இருப்பதால் இது முடியா மல் போகிறது. மேலும், சில நோயாளிகளுக்கு இச் சிகிச்சை முறை நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் உள நோயாளி களின் விருப்பத்திற்கு மாறாகச் சில நேரங்களில்

இச்சிகிச்சை முறை நோயாளியின் நலன்கருதிக் கொடுக்கவேண்டியுள்ளது.

மின்தூண்டு வலிப்புச் சிகிச்சை ஒரு வாரத்திற்கு மூன்று முறைகள் என்ற விகிதத்தில் ஆறு முதல் பத்து முறைகள் கொடுக்கப்படலாம். இதற்குமேல் இச் சிகிச்சையைப் பயன்படுத்துவதில் பலனில்லை; மேலும், இது இடர்தருவதுமாகும். ஏனெனில் இது நோயாளியின் உடல்நிலையைப் பாதிக்கக்கூடும். மின் தூண்டு வலிப்புச் சிகிச்சை மிக வியக்கத்தக்க வகையில் உளச் சோர்வைக் குறைக்கக்கூடிய சிகிச்சை என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இரெ.க.

**துணை நூல்:**

**Borne, L.E.**, and **Ekstrand, B.R.**, Psychology: Its Principles and Meanings, Holt Rinehart & Winston, New York, 1982.


**Hothersall, D.**, Psychology, Charles E. Merill Publishing Co., London, 1985.

*மின்னசோட்டா:* இது வடஅமெரிக்காக் கண்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்னும் நாட்டின் மாநிலங்களுள் ஒன்று. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடக்கில் கனடா நாட்டையொட்டி நடு மேற்காக உள்ள மாநிலம். கனடாவின் எல்லையோரத்தில் இது அமைந்துள்ளது. அமெரிக்காவின் கிழக்கு, மேற்குக் கரையோரங்களுக்குப் பாதி வழியில் உள்ள மின்னசோட்டா (Minnesota) மாநிலம் ஏரிகளுக்குப் பெயர் பெற்றது. இம் மாநிலத்தில் மட்டும் 11,000 ஏரிகள் உள்ளனவெனக் கூறுவர். இது அமெரிக்காவின் 32-ஆம் மாநிலமாக கி.பி.1858-ஆம் ஆண்டு மே மாதம், 11 - ஆம் நாள் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இதன் வடக்கில் கனடா நாடும், தெற்கில் அயோவா மாநிலமும், கிழக்கில் விசுகான்சின் மாநிலமும், சுப்பீரியர் ஏரியும், மேற்கில் தகோடா மாநிலமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

மின்னசோட்டா மாநிலத்தின் தலைநகர் புனித பால் (St.Paul) என்னும் நகரமாகும். மினியாப் பொலிசு (Minneapolis) இம்மாநிலத்தின் மிகப்பெரிய நகரமாகும்.

அமெரிக்காவின் செழுமைமிக்க பண்ணை நிலங்களுள் சில இம்மாநிலத்தில் உண்டு. எனவே, இங்குக் கோதுமை மிகுதியாகப் பயிராகின்றது. அதனால் மாபெரும் கோதுமை அரைக்கும் மாவு ஆலைகள் உள்ளன. இங்குப் பால்பொருட்களும் மிகுதியாகக் கிடைப்பதால் மின்னசோட்டா மாநிலத்தை 'உரொட்டி, வெண்ணெய் மாநிலம்' (The Bread and Butter State) என்று கூறுவர். இது வெண்ணெய் உற்பத்தியில் முதலிடம் பெறுகிறது. இங்குள்ள மக்கள் மக்காச்சோளம், புல்லரிசி (Oats), சோயாமொச்சை, சணல் போன்றவற்றையும் மிகுதியாக உற்பத்தி செய்கின்றனர். எனினும், செய்பொருள் உற்பத்திப் பொருட்களின் வருமானமே பண்ணைப் பொருட்களைவிட மிகுதியாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. உணவுப்பொருட்கள் பதப்படுத்தும் தொழில் சிறப்பிடத்தைப் பெறுகிறது. அமெரிக்காவின் பத்திலொரு பங்குக் கோதுமை மாவு இங்குள்ள ஆலைகளிலிருந்து பெறப்படுகிறது. இறைச்சியைத் தகரப்பெட்டிகளில் அடைக்கும் தொழில் மூன்றாமிடத்தைப் பெறுகின்றது. நாட்டில் கிடைக்கும் இரும்புத் தாதுகளில் மூன்றிலிரண்டு பங்கு இங்குக் கிடைக்கின்றது.



செயிண்ட்பால் நகரம்


மின்னசோட்டா மாநிலத்தின் இயற்கைப் பிரிவுகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். அவை யாவன: 1) சுப்பீரியர் மேட்டுநிலம், 2) இயற்கை ஓட்டச் சமவெளிகள் (The Young Drift Plains), 3) அறுபட்ட சமவெளிகள் (The Dissected Till Plains), 4) சமவெளிப்பகுதி (Driftiess area).

நீர்நிலைகள் நிறைந்த மாநிலம் மின்னசோட்டா. இம் மாநிலத்தின் இருபதில் ஒரு பங்கு நீர்நிலைகளாகும். மூன்று பெரும் ஆறுகள் இம்மாநிலத்தில் பாய்கின்றன. அவற்றுள் ஒன்று மிசிசிப்பி ஆறு. மின்னசோட்டாவின் 57 விழுக்காடு நிலம் அவ்வாற்றினால் பாசனம் பெறுகின்றது. அதன் துணையாறுகளாகக்



மாட்டுப்பண்ணை





கல்வெட்டும் தொழிற்சாலை

தொழில் நகரம்

மின்னசோட்டா பல்கலைக்கழகம்



குரோவிங்கு (Crow Wing), மின்னசோட்டா, இரம் (Rum), புனித குரோக்சு (St. Croix), சாக்கு (Sauk) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இரெய்னி ஆறும் (Rainy River), செவ்வாறும் (Red River) வடக்கு, வடமேற்குப் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கின்றன. புனித உலூயி ஆறும் ஏனைய ஆறுகளும் சுப்பீரியர் ஏரியில் கலக்கின்றன.

இம்மாநிலத்தின் மண்வகை பல திறப்பட்டது. இங்கு மிகுதியாகக் கனிமப் பொருட்கள் கிடைக்கின்றன. வடக்கில் காடுகள் நிறைய உள்ளன. மரமறுக்கும் தொழில், சிறப்பான தொழில்களுள் ஒன்றாகும். போதுமான அளவுக்கு இங்கு மழை பொழிகிறது. நூற்றுக்கு 55 விழுக்காட்டு மக்கள் மாநகரங்களில் வாழ்கிறார்கள்.

மினியாப்பொலிசும், புனித பாலும் இதில் அடங்கியுள்ள பெருநகரங்களாகும். அவை மக்களின் பண்பாட்டு மையங்களாக விளங்குகின்றன. மேலும், வாணிகத்திற்கும் பணப்புழக்கத்திற்கும் அவை பெயர் பெற்று விளங்குகின்றன. தூலூத்து (Duluth) பிறிதொரு நகரமாகும். அது தொழிற்சாலை மையமாக விளங்குகிறது. இராச்செசுட்டர், புனித கிளவுடு என்பன குறிப்பிடத்தக்க ஏனைய நகரங்களாகும்.

இம்மாநிலத்தின் பரப்பு ஏறத்தாழ 2 இலட்சம் ச.கி.மீ. ஆகும். இதன் மக்கள் தொகை 40,75,970 (1980). சில நகரங்களின் மக்கள் தொகை பின்வருமாறு: மினியாப்பொலிசு (Minneapolis) 3;70,951; தலைநகராகிய புனித பால் (St. Paul) 2;70,230; தூலூத்து (Duluth) 92,811; புளூமிங்ட்டன் (Bloomington) 81,831; இராச்செசுட்டர் (Rochester) 57,890 (1980). இரா.அ.

*மின்னசோட்டா சோதனை*: நுண்ணறிவு, ஆளுமை, ஆர்வம் போன்றவற்றை அளவிடுவதற்காகப் பல்வேறு சோதனைகளை உளவியல் வல்லுநர்கள் உருவாக்கியுள்ளனர். அவை நாட்டு மக்களின் பண்பாடு, வாழ்க்கைத் தரம், வாய்ப்புகள் ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றன. பலரும் தங்கள் நாட்டின் தேவைக்கேற்ப, சோதனைகளை உருவாக்கியதோடுகூட, ஏனையவற்றையும் பல மாற்றங்களோடு ஏற்றுக் கொண்டுள்ளனர். அமெரிக்க நாட்டு மின்னசோட்டாப் பல்கலைக்கழகத்தில் உருவான சோதனைகள்தாம் மின்னசோட்டாப்பள்ளி முன் பருவப் பள்ளிச் சோதனை (Minnesota Pre-school Scale), மின்னசோட்டா பலமுனை ஆளுமைச் சோதனைப் பட்டியல் (Minnesota Multiphasic Personality Inventory), மின்னசோட்டா தொழில் ஆர்வச் சோதனைப் பட்டியல்(Minnesota Vocational Interest Inventory) ஆகியவை.

**மின்னசோட்டாப் பள்ளி முன் பருவப் பள்ளிச் சோதனை:** இது பள்ளி முன் பருவத்தின் அறிவுத் திறனைச் சோதிப்பதற்காக உருவாக்கப்பட்டது. இதில் 26 சோதனைகள் உள்ளன. இது பினே (Binet) யின் சோதனையை ஒத்ததாகவும் உள்ளது. சோதனைப் பொருட்களும் முறையும் மிகவும் எளிமையானவை. எடுத்துக்காட்டாக, படத்தில் உள்ள பொருட்களைக் காட்டுதல், படத்தைப் பார்த்து வரைதல், பின்பற்றிச் செய்தல் (Imitation), வண்ணங்களைக் கண்டு கொள்ளல், காகிதம் மடித்தல், எதிர்ச்சொல் கூறுதல் ஆகியவற்றைக் கூறலாம். இச்சோதனைகளைக் குழந்தைகள் செய்யச் செய்வதும் எளிது. இவை ஆர்வத்தைத் தூண்டக்கூடியனவாகும். இதன் இணைப்புக் கெழு (Correlation) 0.89 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**மின்னசோட்டா பலமுனை ஆளுமைச் சோதனைப் பட்டியல்:** இந்தச் சோதனைப் பட்டியல் மன நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்டது. இச்சோதனைப் பட்டியலுக்காக உளவியல் நூல்களிலிருந்து கருத்துகள் திரட்டப்பட்டன. ஆளுமையின் குறைபாடுகளை அளப்பதற்காக, அவற்றின் அறிகுறிகள், செயல்கள், மனப்பான்மை (Attitude) ஆகியவை வரிசைப்படுத்தப் பட்டன. அவை கீழ்க்காணும் ஒன்பது வகையான ஆளுமைக் குணங்களை அளப்பதற்கும் பயன்படுத்தப் பட்டன. அவையாவன:

1) தம் உடல் நலம் குறித்து எப்போதும் கவலைப்படுவோர் (Hypochondriasis), 2) 'தாம் பயனற்றவர்' என்றும், வருங்காலத்தை எவ்வாறு எதிர்நோக்குவது என்றும் கவலைப்படுபவர்கள், உற்சாகமற்றவர்கள் (Depression-D), 3) தம் சிக்கல்கள் காரணமாக, வாதநோய், வாயுக் கோளாறுகள் அல்லது இதய நோயால் பாதிக்கப்பட்டோர் (Hysteria - Hy), 4) பொறுப்பற்றவர்கள், சமுதாயத்தையும், மற்றவர்களையும் மதிக்காதவர்கள், ஆழ்ந்த மனவெழுச்சிகளை வெளிப்படுத்த இயலாதவர்கள் (Psychopathic Deviate - PD), 5) மிகவும் உணர்ச்சி வயப்படக்கூடியவர்கள், எப்போதும் தம்மைத் தண்டித்து விடுவார்களோ என்று ஐயக்கண்ணோடு பார்ப்பவர்கள் (Paranoids-Pa), 6) தேவைக்கு அதிகமான அச்ச உணர்வொடு ஏதேனும் கருத்துகள் பற்றியோ, செயல்கள் பற்றியோ போராட்டமுள்ளவர்கள் (Psychosthernia - Pt), 7) உண்மை வாழ்க்கையிலிருந்து மாறுபாடுள்ள நடத்தையுள்ளவர்கள் (Schizophrenia - So), 8) மனத்திலும், செயலிலும் மிக்க வேகமுடையவர்கள், தம் எண்ணத்திலும், செயலிலும் விரைவாக மாறிக் கொண்டே இருப்பவர்கள் (Hypomania - Ma), 9) எதிர்பாலினத்தாரோடு

தம்மை இணைத்துக் காணும் தன்மையுள்ளோர் (Masculinity Femininity-MF).

மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக முதலில் மின்னசோட்டாசோதனைபயன்படுத்தப்பட்டாலும், பின்னர்ப் பொதுவானவர்களின் ஆளுமையை அறிந்து கொள்வதற்கும் இச்சோதனை பயன்படுத்தப் பட்டது. அத்துடன் கல்லூரி மாணவர்கள், இராணுவத்தினர், அரசு ஊழியர்கள் ஆகியோரின் சிக்கல்களை அறிந்து கொள்வதற்கும் மின்னசோட்டா சோதனை ஓர் ஆய்வுக்கருவியாகப் பயன்பட்டது.

**மின்னசோட்டா பலமுனை ஆளுமைச் சோதனைப் பட்டியலில் உள்ள குறைபாடுகள்:** ஆளுமையை அளவிடப் பயன்புடுத்தப்படும் முறையில்குறைபாடுள்ளது எனக் கண்டுள்ளார்கள்.மதிப்பீட்டுப் புள்ளிகள் (Scoring Keys) இச் சோதனைக்கெனத் தனியாகத் தயாரிக்கப்படவில்லை. இதே போன்ற வேறுபல சோதனைகளில் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டுப் புள்ளிகள் பயன்படுத்தப்பட்டமையால் குறைபாடுகளுள்ளன வாகக் கூறப்படுகின்றன. அதே போன்று,ஆளுமையின் பல கூறுகள் மீண்டும் மீண்டும் அளவிடப்படுவதாகவும் கூறப்படுகின்றன. பல வினாக்களுக்கு 'ஆம்'/'இல்லை' என்று விடை அளிப்பது கடினமாக உள்ளதாகவும் கூறப்படுகிறது. மேலும் சோதனையில் உள்ள எல்லாக் கூறுபாடுகளுக்கும் விடை இருப்பதில்லை. அதன் காரணமாக ஒருவரின் ஆளுமை இதுதான் என்று மின்னசோட்டா சோதனையால் முடிவு செய்வதும் கடினமாகிறது.

**மின்னசோட்டா தொழில் ஆர்வச் சோதனைப் பட்டியல்:** கல்லூரி மாணவர்களுக்கு அறிவுரை கூறவும், வழி நடத்திச்செல்லவும் பல சோதனைகள் இருந்த காலத்தில் கல்லூரி செல்லாதவர்களின் தொழில் திறனை (Trade Skills) யும், ஆர்வத்தையும் அறிந்து

| | மிக்க விருப்பம் (Like most) | குறைவான விருப்பம் (Likeleast) |
|---|---|---|
| சமையலறை நிலை பேழையைச் சீராக்கல் | " | " |
| தோட்டத்தைச் சீராக்குதல் | " | " |
| பெரிய வண்டி ஓட்டுதல் | " | " |
| வாடகை மகிழுந்து ஓட்டுதல் | " | " |
| உழுவண்டி (Tractor) ஓட்டுதல் | " | " |

கொள்வதற்காக மின்னசோட்டா தொழில் ஆர்வச் சோதனைப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் 158 கேள்விகள் உள்ளன. சோதனையில் உடல் உழைப்புத் திறனுக்குச் (Blue Collar Jobs) சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

(சோதனைக்குட்படுவோர் தம் விருப்பத்தினை '√' என்ற குறியிட்டுக் காட்டல் வேண்டும்.)

ஒருவரின் விருப்பத்துக்கும் அத்தொழிலில் அவருக்கு இருக்கும் திறனுக்கும் மிகுந்த ஒற்றுமை இருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் அந்தத் தொழிலில் அவர் நிலைத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. கல்லூரி செல்லாத, தொழிற் கல்வியை மேற்கொள்வோரின்திறனையும், இளைஞர்களின் தொழில் திறனையும் அளவிட இது பெரிதும் உதவியாக உள்ளது எனக் கூறலாம். ஜி.ப.

**துணை நூல்கள்:**

**Payne David, A, & Robert, F.,**McMoris, Educational and Psychological Measurement, Oxford & IBH Publishing Co., New Delhi, 1967.

**Thorndike Robert. L.,** and **Elizabeth, P. Hagen** Measurement and Evaluation in Psychology and Education,Wiley Eastern Ltd., New Delhi, 1970.

*மினாண்டர்* (**கி.மு. 342-கி.மு. 292**): பண்டைய கிரேக்க நாட்டில் புதிய நகைச்சுவை நாடகத்தின் தலைசிறந்த படைப்பாளி மீனாண்டர் என்னும் நாடகாசிரியரே. மகா அலெக்சாந்தர் இந்தியா மீது படையெடுத்து வந்த காலத்தில், இவர் ஏதென்சு (Athens) நகரத்தில் பெரும்புகழுடன் வாழ்ந்தார். இவர் வாழ்க்கை பற்றிய உறுதியான செய்திகள் மிகுதியாகக் கிடைக்கவில்லை. தியோபிராசுடசு (Theophrastus) என்ற புகழ்பெற்ற அறிஞரிடம் இவர் பயின்றார் என்பது தெரியவருகிறது. ஏதென்சு நகர இராணுவ ஆளுநர் தெமிட்டிரியசு (Demetrius) என்பவரது நட்பும் ஆதரவும் இவருக்கு இருந்தன.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை இவர் இயற்றினாரெனச் சொல்லப்படுகிறது. நகைச்சுவை நாடகங்களுக்குரிய உத்திகளான, இளவயதுக் காதல், பெற்றோர் எதிர்ப்பு, குடும்பச் சண்டைகள், காணாமல் போன குழந்தைகள் கண்டுபிடிப்பு, ஆள் மாறாட்டத்தால் வரும் நகைச்சுவை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை இவர் திறம்படக் கையாண்டிருக்கிறார். அக்கால மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கையை நன்கு வெளிப்படுத்துகின்றன இவர் படைப்புகள்.


'திசுகோலோசு' (Dyskolos) என்ற ஒரு நாடகம் மட்டுமே முழுமையாகக் கிடைத்துள்ளது. அந்நகைச் சுவை நாடகம் அன்றைய நாடக விழாவில் முதல் பரிசு பெற்றது. தன் மகளைப் பெண்கேட்டுவரும் ஓர் இளைஞனை அவளது முரட்டுத் தந்தை கடுமை யாக ஏசி அனுப்பிவிடுகிறான். தந்தையின் மனம் மாற அவன் வளர்ப்புமகனும், காதலனும் செய்யும் தந்திரச் செயல்கள் பயன்தரவில்லை. கடைசியில் ஒரு சிறு விபத்து அவனுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்து கிறது. கிணற்றில் விழுந்துவிட்ட குடத்தை அவன் எடுக்கும்போது தானே தவறி உள்ளே விழ, அவனை அவனது வளர்ப்பு மகன் காப்பாற்றிவிடுகிறான். அத னால் மனம்மாறிய தந்தை தன் மகளை அவள் காத லனுக்கே மணமுடித்து வைக்கிறான். காதலனின் தங்கை வளர்ப்பு மகனுக்கு மனைவியாகிறாள். கி மு. 316-இல் எழுதப்பட்ட அந்த நகைச்சுவை நாட கம் நல்ல பாத்திரப்படைப்புகளைக் கொண்டது எனலாம்.

மினாண்டரின் பிற நாடகங்களுள் ஒருசிலவற்றின் சிறிய பகுதிகளே கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சுவடி வடிவில் கிடைத்துள்ளன. அவற்றுள் மூன்று, புகழ் பெற்றவை. அவை 'சாமோசு நகரத்து மங்கை' (The Girl from Samos), 'கூந்தல் வெட்டப்பட்ட காரிகை' (The girl with her hair cut short), 'நடுவர்கள்' (Arbitrators) என்பனவாகும்.

மினாண்டரின் மறைவுக்குப்பின் இவர்தம் நாடகங் கள் மேலும் புகழ்பெற்றன. இவரது நாடகப் படைப்பின் தாக்கத்தைப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய நாடகாசிரியர்களான மோலியர் (Moliere), சேக்சுபியர் (Shakespeare) ஆகியோரிடம் காணலாம். கே.ஜி.சே.

**மினாண்டர், மிலிந்தன்:** வட. இந்தியாவில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் சிறிது காலம் சில பகுதி களில் கிரேக்கராட்சி நிலவியது. அவ்வாட்சியை நிறுவி யவர் தெமிட்ரியசு (Demetrius) என்பாராவர். அவரி டம் படைத் தலைவராக இருந்த மினாண்டர் (Milinda Menander) அவர் மகளை மணம் செய்து கொண்டு, அவர் நிறுவிய அரசை, கி.மு. 160 முதல் 150 வரை ஆட்சிபுரிந்தார். மினாண்டரின் அரசு வட மதுரையிலிருந்து காந்தாரம் வரை பரவியிருந்தது. சாகளம் என்னும் இடம் அதன் தலைநகராயிருந்தது. மினாண்டர் ஒரு பௌத்தர் என்று தெரிகிறது. இவ ருக்கும் நாகசேனன் என்ற பௌத்தத் துறவிக்கு மிடையே நடைபெற்ற உரையாடல், 'மிலிந்த பன்கா' (Milinda Panha) என்னும் பாலி மொழி நூலில் காணப்படுகிறது. இவர் இறந்தபின் இவருடைய எலும்புச் சின்னங்களைப் பெறப் பல நகரங்கள் ஆர்வம் காட்டின. தெ.பா.

**மினார்க்கா:** இசுபெயினுக்கு உரிமையான இத்தீவு மத்தியதரைக்கடலில் உள்ள பெலியாரிக்குத் தீவுகளில் (Balearic Islands) ஒன்றாகும். அவற்றுள் மினார்க்கா (Minorca) அல்லது மெனார்க்கா (Menorca-இசுபானிய மொழியில்) எனப்படும் இது இரண்டாம் பெரிய தீவாகும். அழகிய இயற்கைத் துறைமுகமான மாகன் (Mahon) இதன் தலைநகரமாக உள்ளது. இத்தீவின் பரப்பளவு 698 சதுர கி.மீ. அழகிய கடற்கரைகளைக் கொண்டுள்ள இத்தீவைக் காண சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் செல் கின்றனர்.



மினார்க்கா


இத்தீவின் பெரும்பகுதி வறண்ட மேட்டுநிலப் பகுதியாக உள்ளது. இதன் சராசரி உயரம் 68 மீட் டர். இங்குப் பொங்கு கேணிகளும் (Artesian wells), காற்றாடி இயந்திரங்களும் (Wind mills) மிகுதியாக உள்ளன. இத்தீவில் தானியங்களும், உருளைக்கிழங்கு களும், திராட்சை, மாதுளை, அத்தி ஆகிய பழங் களும், ஒலிவ (Olive) மரங்களும், சணலும் (Jute) பயி ராகின்றன. இங்கு மேட்டுநிலப்பகுதியில் சிறிதளவு புல்வெளிகள் உள்ளமையால் ஆடு, மாடு, குதிரை ஆகி யவை வளர்க்கப்படுகின்றன. இங்கிருந்து இசுபெயினுக் குப் பாலாடைக்கட்டி அனுப்பப்படுகிறது. இங்குள்ள மக்களுள் 10 விழுக்காட்டினர் தோல் காலணி களைச் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மேலும், இத்தீவில் உலோகப் பொருட்கள், துணிகள், சவர்க்

காரம், மது, ஒலிவ எண்ணெய் (Olive oil) ஆகிய வற்றை உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலைகளும் உள்ளன. சிறிதளவு இரும்புக் கனிமம் வெட்டி எடுக்கப் படுகிறது. இத்தீவு வானூர்தி, கப்பல் ஆகியவற் றின் போக்குவரத்துகளால் பார்சிலோனா (Barcelona), மெசார்க்கா (Majorca) ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து இங்கிலாந்திற்கு வானூர்திப் போக்குவரத்து உள்ளது.

பண்டைக் காலத்திலிருந்தே இத்தீவில் மக்கள் வாழ்ந்து வந்ததற்கான அறிகுறிகள் உள்ளன. இசு பானிசு வாரிசு உரிமைப் போரின் (The War of Spanish Succession) பொழுது கி.பி. 1708 - இல் இங்கி லாந்து இத்தீவைக் கைப்பற்றிக்கொண்டது. ஆனால், ஏழாண்டுப் போரில் (கி.பி. 1756 – 63) பிரான்சுக் கடற்படைத் தளபதி சான் பிங்கு (Admiral John Byng) இதனைக் கைப்பற்றினார். பாரிசு உடன் படிக்கை கி.பி. 1763-இல் ஏற்பட்டபொழுது இங்கி லாந்து இதைத் திரும்பப் பெற்றது. இருப்பினும், கி.பி. 1782-இல் இதனைப் பிரான்சும், இசுபெயினும் அகப்படுத்திக் கொண்டன. பின்னர், பிரான்சுப் புரட்சிப் போர்கள் கி.பி. 1798-இல் நடைபெற்ற பொழுது, இங்கிலாந்து மீண்டும் இதைத் தன்வயப் படுத்தியது. ஆமியன்சு அமைதி உடன்படிக்கை (Peace of Amiens) கி.பி.1802-இல் ஏற்பட்டபொழுது இத் தீவு இசுபெயினுக்கு அளிக்கப்பட்டது. இசுபெயின் உள் நாட்டுப் போர் (Spanish Civil War) 1936-39-இல் நடைபெற்ற பொழுது இது இசுபானிய அரசரின் ஆதரவாளர்கள் கையில் இருந்தது. ஆனால், 1939 பிப்ரவரியில் இதனைக் கிளர்ச்சியாளர் கைப்பற்றினர். இன்று இது இசுபெயின் நாட்டைச் சேர்ந்த தீவுகளில் ஒன்றாக உள்ளது. சி.இரெ.

**மீ** மகரம், ஈகாரம் இரண்டும் இணைந்து ஒலிப்பதால் இவ்வொலி வரும். வாயைச் சற்று நீட்டி இளிப்பதால் தோன்றும். ஓரெழுத் தொருமொழியாக இதற்கு மேலிடம், உயரம், ஆகாயம், மேன்மை முதலிய பொருட்கள் கொள்ளப்படும் மேற்கே உள்ள ஓர் இடத்துக்கும் மீயாறு, மீகொன்றை என்ற நாட்டுப் பெயர்கள் ஆகியவற்றுக்கும் இவ் வெழுத்தையே பயன்படுத்துதல் உண்டு.

இதன் உருவத்தை ஒரு சீராக எழுதும் வழக்கம் காணப்படவில்லை. இலக்கண வகையில் இகரக்குறியின் தொடக்கத்திலோ, பெரும்பாலும் முடிக்கும் இடத்திலோ சுழிக்கப்பட்டால் மீ என்று நெடிலாகக் கொள்ள இடமுண்டு. எடுத்துக்காட்டுகள் மிகக் குறைவு. பல்லவன் கந்த சிசியனின் இராயக் கோட்டைச் செப்பேட்டிலும், சோழன் முதல் இராசேந்திர னின் கரந்தைச் செப்பேடுகளிலும் ஒரு சில இடங்களில் சுழித்திருப்பது போல் காணப்படுகின்றது.... ... ...



சொல்லப்படும் பொருளை நோக்கித்தான் இதனைப் பாவித்துக் கொள்ளவேண்டும். அவ்வாறே வட்டெழுத்திலும். ஆயினும் ஒரு சில இடங்களில் தெளிவாகச் சுழி இடப்படுகின்றது. ஆனால், நூற்றாண்டுக் கணக்கில் வரன்முறை இல்லாமல் எழுதப்பட்டது.... ...

கே.ஜி.கி.

*மீச்செயல்:* குழந்தைகள் ஆலோசனை மையங் களுக்குப் (Counselling Centre) பொதுவாகச் சிக்கல் களுடன் வரும் குழந்தைகளுள் பெரும்பாலாரிடையே மீச்செயல் காணப்படுகிறது. எட்டு வயதுக்கு முன்னர் அதிகமாகவும் அதன்பின்னர்ச் சிறிது சிறிதாக இச் செயற்பாடு குறையவும் தொடங் கிப் 'பதின்' (Teens) வயதுகளில் நிலையாக இல்லா மல் போகிறது.

அறிகுறிகள்: மீச்செயலினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், அதிகப்படியான தசை இயக்கங்களைக் கொண்டவர்கள். மேலும், அவர்கள் கவனக்குறைவு உடையவர்களாகவும், கவனச் சிதறல்களுக்கு ஆளான வர்களாகவும், உணர்ச்சி மிகுந்தவர்களாகவும், பொறுமை குன்றியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களின் தசைஇயக்கங்கள் ஒன்றுக்கொன்று ஒத்து வாராமல் முரண்பட்டனவாகக் காணப்படுகின்றன. அவர்கள் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த முடி யாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் உணர்ச்சி கள் அடிக்கடி மாறுபடுகின்றன. மேலும், அவர்கள் அடக்கும் சக்தியை இழந்தவர்களாகக் காணப்படு கிறார்கள்.

மீச்செயலினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஏனைய குழந்தைகளின் நுண்ணறிவில் (Intelligence) இருந்து மாறுபடுவதில்லை. அவர்கள் தொடர்ச்சி யாகப் பேசிக்கொண்டேயிருப்பவர்களாகவும், பொது இடங்களில் அடக்கவேண்டிய உணர்வுகளை அடக் காதவர்களாகவும், முதிர்ச்சியடையாதவர்களாகவும் (Immature) இருக்கிறார்கள். அவர்கள் கவலையற்ற வர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களின் கற்றலில் சில தனிப்பட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, படிப்பதில், அடிப்படைப்பாடங்களைக் கற்பதில் மீச்செயலினால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். சிறுவயதினரிடையே நடத்தைச் சிக்கல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

**காரணங்கள்:** இக் குறைபாடுகள் முற்றிலும் முதிர்வடையாமல் முன்னரே பிறக்கும் (Premature) குழந்தைகளிடையே அதிகமாகக் காணப்படுகின்றன. அவ்வாறு பிறந்த குழந்தைகள் புலன்காணு தலிலும் தசை இயக்கங்களிலும் சில குறைபாடுகளைக்கொண்டு பிறக்கிறார்கள். மின்மானி அவர்களின் மூளைஅலைகளில் (EEC) பிறழ்வுநிலை (Abnormality) காட்டுகிறது. அந்தக் கண்டுபிடிப்புகளின்மூலம் மீச்செயலினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சில சிறிய மூளைக் குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும் கொள்ளப்படுகிறது. மேலும், கவலை (Anxiety), சோர்ந்த நிலை (Depression), மனச்சிதைவு நோய் (Schizophrenia) போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளிடையேயும் மண்டை அடிபட்டதால் மூளை பாதிக்கப்பட்ட குழந்தைகளிடையேயும் மீச்செயலுக்கான அறிகுறி காணப்படுகிறது.

மீச்செயல்கள் மிகச்சிறிய வயதிலேயே தோன்றிப் பின்னர்ச் சிறிது சிறிதாக வளரத் தொடங்குகின்றன. சரியான நரம்பியல், உளவியல் ஆராய்ச்சிகளின்மூலம் மீச்செயல்கள் எந்த அளவிற்கு ஏற்பட்டிருக்கின்றன என அறிந்து குணப்படுத்தலாம்.

**மருத்துவ முறைகளும் குணமடைதலும்:** தனியார்களின் தேவைகளுக்கு ஏற்ப மருத்துவ முறைகள் வேறுபடுகின்றன. நடத்தை மாற்றுச் செயற்பாடுகளின்மூலம் குறிப்பாக, உடன்பட்ட உந்தல்களின் மூலம் கற்றல் முறையினைச் சரியான வகையில் அமைத்துத் தவறுகளைக் குறைக்கலாம். அடிக்கடி சொல்லவைப்பதன்மூலம் கவனத்தை அதிகப்படுத்தலாம். இந்நிலையினைத் தகுந்த மருத்துவமுறைகள் மூலமும் பெற்றோர்களின் ஒத்துழைப்பின் மூலமும் செம்மைப் படுத்தலாம்.

மருந்துகளின்மூலம் பெருமூளையின் அதிகப்படியான செயல்களைக் குறைக்கலாம். அதனால் மீச்செயல்களால் பாதிக்கப்படும் குழந்தைகள் பள்ளியிலும், வீட்டிலும் நடந்துகொள்ளும் முறையில் சில நல்ல மாறுதல்கள் ஏற்படுகின்றன. அம் மருந்துகள் அக் குழந்தைகளின் நுண்ணறிவினைப் பாதிப்பதில்லை; மாறாக அவர்கள் திறனை அதிகப்படுத்துகின்றன. ஆனால், அம் மருந்துகள் முழுமையாக மீச்செயல் தன்மைகளைக் களைந்துவிடுகின்றன எனக் கூறமுடியாது. மேலும், அம் மருந்துகளை அதிகமாகக் கொடுத்தால் அவை அக்குழந்தைகளின் உடல் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. மேலும், பல எதிர்வினைகளையும் ஏற்படுத்துகின்றன. அதனால் அம்மருந்துகளைச் சரியானஅளவு கொடுப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மருத்துவ முறைகள் எதுவுமே இல்லாமல் 'பதின்' வயதுகளில் மீச்செயல்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதன் காரணங்கள் மருத்துவ அடிப்படையில் இன்றும் அறியப்படவில்லை.

சில சிறிய மூளைக் கோளாறுகள் உள்ளவர்களுக்குச் சரியான முறையில் மருத்துவம் அளிக்கப் பெறாமல் இருப்பின் பிற்காலத்தில் குற்றவாளிகளாகவும் சமூகத்துடன் சரியான் முறையில் ஒத்துப்போகாத நடத்தை உடையவர்களாகவும் ஆவதற்கு இது காரணமாகிறது. அதற்கு அவர்கள் பள்ளிப்படிப்பு சரியான முறையில் அமையாததும், பெற்றோர் அவர்களின் நிலையைப் புரிந்துகொள்ளாததுமே காரணங்களாக அமைகின்றன. த.வெ.பா.

*மீட்சி இயக்கம் (இத்தாலி)* இத்தாலியின் பெரும் பகுதிகி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அயலார் ஆட்சியில் இருந்தது. அவ்வயலாட்சியாளர்களை விரட்டிவிட்டு இத்தாலி முழுவதையும் ஓர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர ஓர் இயக்கம் தொடங்கப்பட்டது. அதன் விளைவாக கி.பி. 1871 – இல் உரோம் நகரைத் தலைநகராகக் கொண்ட ஐக்கிய இத்தாலிய அரசு உருவாகியது. ஆயினும், இத்தாலியர்கள் பெரும் எண்ணிக்கையுடன் வாழும் பல பகுதிகள் தொடர்ந்து அயலார் வயம் இருந்து வந்தன. அவற்றுள் திரெண்டினோ (Trentino), தெற்குத் தைரோல் (South Tyrol), ஏட்ரியாட்டிக்குக் கடற்கரைப் பகுதிகளான இசுத்திரியா (Istria), திரெயிசுடி (Trieste),கொரிசியா (Gorizia) ஆகியவை ஆசுத்திரியாவின் ஆளுகையின்கீழ்இருந்தன. நைசுவும்(Nice), கார்சிகாவும் (Corsica) பிரான்சின் ஆட்சியின் கீழும், மால்டா (Malta) ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழும் இருந்தன. அவற்றை அயலார் ஆட்சியினின்றும் விடுவிக்கும் பொருட்டு இத்தாலியில் நாட்டின்மீது பற்றுடையவர்கள் ஓரியக்கத்தைத் தொடங்கினார்கள். அதுவே மீட்சிஇயக்கம் (Irredenta) எனப்பட்டது. இவ்வியக்கம் கி.பி. 1878 – இல் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இது 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலும் வலுப்பெற்றிருந்தது. ஆசுத்திரியா அரசு இத்தாலிய மீட்சி இயக்கத்தினரை மனநிறைவு செய்தவற்கு மாறாகத் தன் ஆட்சியின் கீழிருந்த இத்தாலியப் பகுதிகளில் செருமனியர், இசுலாவு (Slav) ஆகிய இனத்தவர்களைக் குடியேற்றி அங்கு வாழ்ந்து வந்த இத்தாலியர்களை அழித்துவிட முயற்சி மேற்கொண்டது. ஆனால், அம்முயற்சி வெற்றிபெறவில்லை. மீட்சி இயக்கம் மேலும் வலு

வடைந்தது. இத்தாலிய அரசு ஆசுத்திரியாவுடன் முக்கூட்டு உடன்படிக்கை (Triple Alliance) செய்து கொண்ட போது இவ்வியக்கத்தினர் அதனை வன்மையாகக் கண்டித்தனர். முதலாம் உலகப் போர் 1914 –இல் தொடங்கியபோது இத்தாலிய அரசு ஆசுத்திரியாவுடன் சேர்ந்து போரிடுவதற்கு முட்டுக்கட்டையாக இவ்வியக்கத்தினர் இருந்தனர். இத்தாலியர் வாழும் திரெண்டினோப் பகுதிகளை ஆசுத்திரியா விட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்பதற்காக இத்தாலி முதலில், தான் நடுநிலை மேற்கொள்ளப் போவதாக அறிக்கை விடுத்தது. ஆசுத்திரியாவின் ஆட்சியின் கீழ் இருந்த இத்தாலியப் பகுதிகளின் பொருட்டு இத்தாலி, எதிரிகள் பக்கம் சேரக்கூடிய ஒரு நிலை உருவாவதற்கு வாய்ப்பு இருந்தது. ஆதலின், அப்பகுதிகளை இத்தாலிக்கு விட்டுக் கொடுக்கும்படி செருமனி ஆசுத்திரியாவை வற்புறுத்தியது. அதன் முயற்சி வெற்றி பெறவில்லை. இத்தாலி தொடர்ந்து நடுநிலை மேற்கொள்ள வேண்டுமெனில் திரெண்டினோவை உடனடியாக இத்தாலிக்குக் கொடுக்க வேண்டுமென்றும், திரெயிசுடி, இசுத்திரியா ஆகியவற்றை இணைத்து ஒரு சுதந்திர நாடாகக் வேண்டுமென்றும் அறிவித்தது. ஆசுத்திரியா அதற்கிணங்க மறுக்கவே, ஆசுத்திரியாவிற்கு எதிராக உலகப் போரில் இத்தாலி ஈடுபட்டது.

அதற்குச் சற்றுமுன்னர் இங்கிலாந்து நாட்டுடன் இத்தாலி ஓர் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டது (இலண்டன் உடன்படிக்கை). அதன்படி இத்தாலியர் வாழும் திரெண்டினோ, திரெயிசுடி, கோரிசியா, இசுத்திரியா ஆகியவற்றை இத்தாலிக்குப் பெற்றுத்தருவதாக இங்கிலாந்து உறுதி கூறியது. போரின் முடிவில் அவையாவும் இத்தாலிக்கு வழங்கப்பட்டன. அவ்வாறாக மீட்சி இயக்கத்தினரின் ஆசைகள் நிறைவேற்றப்பட்டன. அது முதல் அயலார்கள் ஆட்சியில் வாழும் தம் நாட்டவர்களை விடுவிக்கத் தொடங்கப்படும் தேசிய கட்சியாளர்களை மீட்சி இயக்கத்தினர் என்று பொதுவாகக் குறிப்பிடும் வழக்கம் தோன்றியது. தி.ஆர்.இரா.

**மீட்டழைப்பு**: மக்களாட்சி மரபிலும், முறைகளிலும், அரசியல் சாசன நெறியின்படியும், தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு பேராளரும் தம் மக்களாட்சிக் கடமைகளைச் சரிவரச் செய்வது கடமையாகும். அவ்வாறு செய்ய முடியாமலோ, தவறிச் செயற்படும் வகையிலோ பல கெடுபிடிகள் இருக்குமாயின் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நியமனம் நீக்கப்படத்தக்கதாகும். அந்நிலையில் ஒரு சிறந்த மக்களாட்சி அப்பேராளரைத் திரும்ப அழைத்து விடும்.

திரும்ப அழைத்தலில் பல முறைகளைக் கையாளலாம். அதில் ஒன்று அரசுத் துரோகக் குற்றச்சாட்டு (Impeachment). நாடாளுமன்றத்தின் ஒன்றுபட்ட தீர்ப்பு, அதிகாரம் ஆகியவற்றையும் சட்டத்தையும் மீறி நடப்பதால், நீதி முறையின்படி விதிக்கப்படும் ‘உரிமை ஏதுவினா’(Quo Warranto) எனப்படும் அதிகாரப் பறிமுதல் ஆணையால் நிருவாகத்தினால் நீக்கப்படுதல், நீதிமன்றத் தீர்ப்புகளின் மூலம் நீக்கப்படுதல் போன்ற பல்வேறு முறைகள் கையாளப்படலாம்.

பண்டைக் காலத்தில் கிரேக்க மக்களாட்சி மரபில் மீட்டழைப்பும் (Recall) ஒரு முறையாக இருந்தது. அதன்மூலம் நிருவாகச் சீர்கேட்டினை அவர்களால் அடக்கவும், நீக்கவும் முடிந்தது.

சீர்கேட்டினால் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் குறைந்தது 10 ஆண்டுக்காலம், குடிமகன் நிலையிலிருந்து நீக்கப்படுவார்கள். சுவிட்சர்லாந்து தேசத்து அரசியலமைப்பு மீட்டழைப்பு முறையைக் கையாளுகிறது. அத்துடன் பொதுமக்கள் வாக்கெடுப்பு (Referendum) போன்ற முறைகளையும் கையாளுகிறது.

**நடைமுறை**: தனி மனிதர் குழு ஒரு விண்ணப்பத்தில், குற்றஞ்சாட்டப்பட வேண்டிய அதிகாரி மீது உண்டான எல்லாத் தீர்ப்புகளையும் எழுத்து வடிவத்தில் எழுதி, அதனைக் கையெழுத்து, சாட்சிகள் ஆகியவற்றோடு அரசினிடத்தில் தெரிவிக்கும் போது, அரசானது அக் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து, வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களில் 25 விழுக்காட்டினர் கையெழுத்து இருந்தால் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும். நிருவாகம் அதற்குரிய முறைகளைக் கையாண்டு, புதிய தேர்தல்களை நடத்தும். அதில் வாக்காளர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கும் முறையில் வாக்குச் சீட்டு அளிக்கப்படும். தேர்தல் முடிவில் வாக்காளர் தீர்மானத்தின்படி, குற்றஞ் சாட்டப்பட்ட அதிகாரி நீக்கப்படலாம். புதிய அதிகாரி ஒருவரை இடைக்கால அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கலாம். பொதுவாக நிருவாக அதிகாரிகள் இத்தகைய முறையிலிருந்து தங்களின் பதவிக் காலத்தின் முதல் ஆறு மாதங்களோ, கடைசி ஆறு மாதங்களோ பாதுகாக்கப்படுவர். லா.பி.

**மீட்டுருவாக்கம்**: மொழி மாறும் தன்மையுடையது. ஒரு மொழியில் காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களை விளக்குவதே அம்மொழியின் வரலாறு ஆகும். அவ்வாறு ஒரு மொழியின் வரலாற்றை அறிய அம்மொழியில் பல்வேறு காலக்கட்டங்களில் எழுதப்பட்ட எழுத்துச் சான்றுகள் துணைபுரிகின்றன. எழுத்துச் சான்றுகளில் கால வகையால்முந்திய

வற்றில் காணப்படும் மொழி வடிவங்கள் நாளடைவில் திரிந்து பிந்திய நிலைக்கு மாறியுள்ளன என்று கொள்ளலாம். எழுத்துச் சான்றுகள் கிடைக்காத காலத்து மொழி வடிவங்களை அறியத் துணை புரிவது மீட்டுருவாக்கம் (Reconstruction) என்றும் உத்தியாகும்.

தெலுங்கு, கன்னடம், தமிழ் போன்ற ஓரினத்தைச் சேர்ந்த மொழிகளில் பல சொற்கள் வடிவ ஒப்புமையும், பொருண்மை ஒப்புமையும் பெருமளவுக்குக் கொண்டு விளங்குவதைக் காணலாம். 'கோழி'யைக் குறிக்க இம்மொழிகளில் அமைந்த சொற்கள் பின்வருவன.

| தெலுங்கு | கன்னடம் | தமிழ் |
|---|---|---|
| கோடி (kōdi) | கோளி (kōḷi) | கோழி (kōḻi) |

இங்கே வடிவ ஒற்றுமை ககர மெய்யும் (k), அதன் பின் ஓகார உயிரும் (o), சொல் இறுதியில் உள்ள இகர உயிரும் (i) ஆகும். இவற்றுக்கிடையே வேற்றுமை; தெலுங்கில் டகரம் (d) கன்னடத்தில் ளகரம் (ḷ) தமிழில் ழகரம் (ḻ). இத்தகைய d/ḷ/ḻ ஒலி இணை (Phonetic correspondence) பல தெலுங்கு, கன்னட, தமிழ்ச் சொற்களில் (உயிரெழுத்துகளுக்கிடையில்) காணப்படும். ஏழு என்ற எண்ணைக் குறிக்கத் தெலுங்கில் வழங்கும் சொல் ஏடு (ēdu) கன்னடத்தில் ஏளு (ēḷu), தமிழில் ஏழு (ēḻu). இந்த ஒலி இணைக்கு இன்னும் சில எடுத்துக்காட்டுகள்.

| தெலுங்கு | கன்னடம் | தமிழ் |
|---|---|---|
| கூடு (kūdu) | கூளு (kūḷu) | கூழ் (kūḻ) |
| பாடு (pādu) | ஹாளு (hāḷu) | பாழ் (paḻ) |

தெலுங்கில் லகரமும், கன்னடத்தில் லகரமும், தமிழில் லகரமும் என இம்மூன்று மொழிகளிலும் லகரம் அமைந்துள்ளமை ஒரு வகை ஒலி இணையாகும். இதனை l/l/l ஒலி இணை எனலாம். எடுத்துக்காட்டு:

| தெலுங்கு | கன்னடம் | தமிழ் |
|---|---|---|
| காலு (kālu) | காலு (kālu) | கால் (kāl) |
| பாலு (pālu) | ஹாலு (hālu) | பால் (pāl) |

தெலுங்கில் லகரமும், கன்னடத்தில் ளகரமும் தமிழில் ளகரமும் ஆக l/ḷ/ḷ ஒலி இணை மற்றொரு வகையினது ஆகும். எடுத்துக்காட்டு:

| தெலுங்கு | கன்னடம் | தமிழ் |
|---|---|---|
| முல்லு (mullu) | முள்ளு (muḷḷu) | முள் (muḷ) |
| தேலு (tēlu) | தேளு (tēḷu) | தேள் (tēḷ) |


தெலுங்கில் டகரமும், கன்னடத்தில் டகரமும், தமிழில் டகரமும் ஆக (உயிரெழுத்துகளுக்கிடையில் வரும்) d/d/d ஒலி இணை வேறொரு வகையினது ஆகும். எடுத்துக்காட்டு:

| தெலுங்கு | கன்னடம் | தமிழ் |
|---|---|---|
| ஆடு (ādu) | ஆடு (ādu) | ஆடு (ādu) |
| பாடு (pādu) | ஹாடு (hādu) | பாடு (pādu) |

இக்கால மொழிகளான தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகியவற்றில் அமைந்த l/l/l ஒலி இணையை, முழு ஒப்புமை கருதி இவற்றின் மூல மொழியில் *l(ல்) என்று மீட்டுருவாக்கம் செய்யலாம். (மூல மொழியை ஆங்கிலத்தில் 'Proto language' என்றும், தமிழில் 'தொல் மொழி' என்றும் வழங்குதல் மரபு). தொல் மொழியின் *l(ல்) ஒலி அதிலிருந்து கிளைத்த சேய் மொழிகளான (Daughter languages) தெலுங்கிலும், கன்னடத்திலும், தமிழிலும் மாறாமல் அப்படியே உள்ளது என்பது *l(*ல்) என்ற இந்த மீட்டுருவாக்கத்தின் விளக்கம் (மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட தொல் மொழி ஒலிக்கு முன் உடுக்குறி இடுதல் மரபு).

இவ்வாறே உயிரெழுத்துகளுக்கிடையில் அமைந்து விளங்கும் d/d/d ஒலி இணையைத் தொல் மொழியில் * d(*ட்) என்று மீட்டுருவாக்கலாம். இந்தத் தொல் மொழி ஒலியும், தெலுங்கு, கன்னடம், தமிழ் என்னும் சேய் மொழிகளில் மாறாமல் அப்படியே இருக்கக் காணலாம்.

l/ḷ/ḷ ஒலி இணையை *ḷ(*ள்)என்றோ, *l(*ல்) என்றோ மீட்டுருவாக்கம் செய்யவேண்டும். *l(*ல்) என்று மீட்டுருவாக்கம் செய்தால், மூன்றுசேய்மொழிகளிலும் l ஒலியே இருக்கவேண்டும் என்பது முதல் ஒலிவிதியின் (Phonetic law) கருத்து. அப்படி இல்லாததால் இதனை *ḷ(*ள்) என்று மீட்டுருவாக்கம் செய்வதே நல்லது. இந்தத் தொல்மொழி ஒலி கன்னடத்திலும் தமிழிலும் மாறவில்லை. தெலுங்கில் மட்டும் l(ல்) ஆக மாறியுள்ளது. எனவே தெலுங்கில் உள்ள l(ல்) ஒலிக்கு இரு மூலங்கள் உண்டு. இதன் தொல் மொழி வடிவம் *l ஆகவோ, *L ஆகவோ இருக்கலாம்.




d/ḷ/ḻ ஒலி இணையை *d என்றோ, *ḷ என்றோ *L என்றோ மீட்டுருவாக்கம் செய்யவேண்டும். *d,

என்பது மீட்டுருவாக்கம் ஆனால், மூன்று சேய்மொழிகளிலும் d ஒலி இருக்க வேண்டும். *ḷ என்று மீட்டுருவாக்கினால் கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் ḷ ஒலியும், தெலுங்கில் l ஒலியும் இருக்கவேண்டும். அப்படி அமையாததால் இந்த ஒலி இணையை *ḻ(*ழ்) என்று மீட்டுருவாக்கலாம்.

இதுவரை நான்கு மீட்டுருவாக்க ஒலிகள் காணப்பட்டன. 1)* l(*ல்), 2)* d(*ட்), 3)*ḷ(*ள்), 4)*ḻ (*ழ்) இந்த நான்கு மீட்டுருவாக்கங்களும் நான்கு ஒலிவிதிகளைக் குறிக்கின்றன. இந்த மீட்டுருவாக்கங்களுக்கு உரிய ஒலிவிதிகள் ஏற்கெனவே தரப்பட்டுள்ளன எடுத்துக்காட்டுகள் வருமாறு:

முதல் மீட்டுருவாக்கம் (*l) *Kāḻ: Kālu/Kālu/Kāl (கால்)

2-ஆம் மீட்டுருவாக்கம் (*d) *ādu: ādu/ādu/ādu(ஆடு)

3-ஆம் மீட்டுருவாக்கம் (*ḷ) *muḷ: mullu/muḷḷu/muḷ (முள்)

4-ஆம் மீட்டுருவாக்கம் (*ḻ) *Kōḻi :Kōdi/Koḷi/Kōḻi (கோழி)

மேலே கண்ட நான்கு தொல்மொழி வடிவங்களும் சேய் மொழியாகிய தமிழ் மொழி வடிவங்களோடு அப்படியே ஒத்திருப்பதைக் காணலாம். ஆனால், சில இடங்களில் தமிழிலும் மாற்றம் நிகழ்ந்துள்ளது. தொல்மொழியில் *Kevi (*கெவி) என்று மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட வடிவம் பின்வருமாறு மூன்று சேய்மொழிகளிலும் சிறிது சிறிது வேறுபட்டுப் பரிணமித்தது.

| தொல்மொழி | தெலுங்கு | கன்னடம் | தமிழ் |
|---|---|---|---|
| *Kevi : | cevi(செவி) | Kivi(கிவி) | cevi (செவி) 'காது' |

இங்கே தொல்மொழிச் சொல்லின் இறுதி இகரம் (i) மூன்று சேய்மொழிகளிலும் அப்படியே மாறாமல் இருக்கிறது. (*i: i/i/i). இடையில் வரும் வகரமும் மாறாமல் உள்ளது (*v: v/v/v). ஆனால், தொல்மொழிச் சொல்லின் முதல் அசையிலுள்ள எகரம் (e) அடுத்த அசையில் இகரம் (i) தொடரும்போது, கன்னடத்தில் இகரமாகத்(i) திரிகின்றது. தெலுங்கிலும் தமிழிலும் மாற்றம் இல்லை. (*e(¯i): e/i/e) *KVvi இங்குப் பெரிய எழுத்து(மெய்யைக் குறிக்கும்). தொல்மொழிச் சொல்லின் மொழி முதற் ககரத்தை (k) எகர ஒலி (e) அடுக்கும்போது தெலுங்கு, தமிழில் அது சகரமாக (e) மாறுகின்றது. கன்னடத்தில் மாற்றம் இல்லை. (*k (-e): c/k/c).

மீட்டுருவாக்க வடிவங்கள் கற்பனையாக அமைத்துக் கொண்ட வடிவங்களாகும். அவற்றைக் குறிக்க அவ்வடிவங்களுக்குமுன்னர் உடுக்குறி இடப்படுகிறது. சேய்மொழிகள் அனைத்திலும் ஒலி மாற்றங்கள் நிகழ்விக்கும் மீட்டுருவாக்கங்கள் ஒரு வகை (*kevi: cevi/kivi:cevi). பெரும்பாலான மொழிகளில் மாற்றம் நிகழ்விக்கும் மீட்டுருவாக்கங்கள் மற்றொரு வகை (*Kōḻi/ Kōdi/Kōḷi/Kōḻi). சில மொழிகளில் மட்டும் மாற்றம் நிகழ்விப்பவை பிறிதொரு வகை (*tēḷ: tēlu/tēḷu/tēḷ). எந்த மொழியிலும் மாற்றம் நிகழ்விக்காமல் தொல்மொழி ஒலிகள் இயல்பாய் நிற்கும் வகையில் அமைந்த மீட்டுருவாக்கங்கள் இறுதி வகை (*ādu:ādu/ādu/ ādu).

மீட்டுருவாக்கங்கள் ஒரு வகை வசதிக்காகப் படைத்துக் கொள்ளப்பட்டவை.ஓரினத்தைச் சேர்ந்த மொழிகளில் கிட்டத்தட்ட ஒரே பொருண்மையைத் தரும் சொற்கள் வடிவத்தில் சிறிது வேறுபட்டு அமைந்திருக்குமானால் அவ்வேறுபாட்டினூடே ஓர் ஒற்றுமையைக் கண்டு அந்த ஒற்றுமை எந்தெந்த மொழிகளில், எந்தெந்தச் சூழலில், எவ்வெவ்வாறு திரிந்தது என்று எடுத்து விளக்கும் குறியீடே மீட்டுருவாக்கம். அந்த ஒற்றுமை சேய்மொழிகளில் திரியாது அப்படியே இயல்பாய் இருக்குமானால் அதனையும் எடுத்தியம்பும் இம் மீட்டுருவாக்கம். இந்த மீட்டுருவாக்கம் மனம் போன போக்கில் படைத்துக் கொள்ளப்பட்டது அன்று. அறிவியல் அடிப்படையில் அமைத்துக் கொள்ளப்பட்ட வேற்றுமையில் ஊடுருவி நிற்கும் ஒற்றுமையைக் காணும் நெறி இது. கிடைத்த தரவுகளைக் கொண்டு கற்பனையாகப் படைத்துக் கொள்ளப்பட்ட மீட்டுருவாக்க வடிவங்கள் அம்மொழியினத்தைச் சேர்ந்த புதியதோர் மொழியிலோ, ஒரு மொழியின் இன மொழியிலோ தரவுகள் கிடைக்கும் போது அத்தரவுகளுடன் முழுவதுமாக ஒத்திருப்பதைக் காண முடிகிறது.

மீட்டுருவாக்கங்கள் அறிவியல் அடிப்படையில் அமைத்துக் கொண்ட வெறும் படைப்புகள் என்றால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வழங்கியதாகக் கருதப்படும் தொல்மொழியின் வடிவங்களை அவை காட்டுகின்றன என்று கூறுவது பொய்ம்மை வாதமாகப் போய்விடும். ஒப்பியல் மொழிநூலில் 'புத்திலக்கண வாதிகள்' (Neogrammarians) என்று கூறப்படும் மொழி வரலாற்று அறிஞர்களும், அவர்களை அடியொற்றியவர்களும் 'இவை உண்மை, வெறும் படைப்பு அல்ல' என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

மொழி வரலாற்றில் இருவகை உண்டு. முன்னது எழுத்துச் சான்றை ஆதாரமாகக் கொண்டது. பின்னது மீட்டுருவாக்கத்தை ஆதாரமாகக் கொண்டது. பின்னதற்கு முந்தைவரலாறு (Prehistory) என்று, பெயர். மீட்டுருவாக்கம் வெறும் கற்பனையானால்

அதனை ஆதாரமாகக் கொண்டு படைத்த முந்தை வரலாறும் கற்பனையாகிவிடும். கற்பனை வரலாறு ஆகாது. புத்திலக்கணவாதிகள் அறிவியல் அடிப்படையில் இந்தோ-ஐரோப்பிய மொழி வடிவங்களுக்கு மீட்டுருவாக்கம் அமைத்துக்கொண்ட பின்னர், தற்செயலாக இந்தோ-ஐரோப்பிய மொழியொன்றின் மிகப் பழங்கால எழுத்துச்சான்றுகள் தோண்டி எடுக்கப்பட்டன. அந்தப் பழங்கால எழுத்து மொழியின் வடிவங்கள் ஒப்பியன் மொழி நூலார் படைத்துக் கொண்ட மீட்டுருவாக்கத்தோடு ஒத்திருந்ததைக் கண்டபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை

இத்தாலியன், பிரெஞ்சு, போர்ச்சுகீசு, இசுபானிசு போன்ற மொழிகளுக்கு உரோமானிய மொழிகள் என்று பெயர். அவை பழங்கால இலத்தீன் மொழியிலிருந்து கிளைத்தவை என்று கருதப்படுகின்றன. மேலே கண்ட உரோமானிய மொழிச் சொற்களின் தொல்வடிவத்தை அறிவியல் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்தபோது, அந்த வடிவங்கள் அவற்றுக்கு இணையான பொருண்மையுடைய இலத்தீன் மொழிச் சொல் வடிவங்களோடு ஒத்திருந்தமையைக் கண்ட புத்திலக்கண வாதிகள் பெருமகிழ்ச்சியடைந்தார்கள். அத்துறையில் மேலும்மேலும் ஆராய்ச்சி செய்ய அவர்களுக்கு அது ஊக்கமளித்தது. மீட்டுருவாக்கம் சரியான நெறிமுறை என்பதும் உறுதியாயிற்று. மீட்டுருவாக்க வடிவங்கள் கால வகையால் முந்தியவையாதலால் அந்தக் காலக் கட்டத்திலிருந்து எழுத்துச் சான்று கிடைக்கும் காலம் வரை மொழி வளர்ந்த வகை மொழி வரலாற்றின் ஒரு பகுதியாக - முந்தை வரலாறாக - கொள்ளப்பட்டது.

மீட்டுருவாக்கத்தில் இருவகை உண்டு. முன்னது புறநிலை மீட்டுருவாக்கம் (External construction); பின்னது அகநிலை மீட்டுருவாக்கம் (Internal construction). இதுவரை விளக்கப்பட்ட மீட்டுருவாக்கம் புறநிலை மீட்டுருவாக்கம் ஆகும். தெலுங்கு, கன்னடம், தமிழ் என்ற மொழிகள் வெவ்வேறு மொழிகள். தமிழ் தெலுங்குக்குப் புறம்பானது. கன்னடம் தமிழுக்குப் புறம்பானது. இவ்வாறு தத்தமக்குப் புறம்பான மொழிகளை ஒப்பிட்டு ஆய்ந்து அவற்றின் தொல்மொழி வடிவங்களைமீட்டுருவாக்கம்செய்வது புறநிலை மீட்டுருவாக்கம் ஆகும். ஒரே பொருண்மை தரும் தனித் தனி (புற) மொழி வடிவங்களின் வேறுபாட்டினூடே ஒற்றுமை காண்டல் இது.

ஒரு காலக் கட்டத்தில், ஒரு நிலப்பகுதியில் வழங்கும் ஒரே மொழியில் ஒரு பொருண்மையைக் குறிக்கப் பெரும்பாலும் ஒப்புமையுடைய வெவ்வேறு சொல் வடிவங்கள் அமைந்திருக்கக் காணலாம். இந்த வேற்றுமையின் அடித்தளத்தில் ஒற்றுமை காண இயலும். தமிழ் நாட்டில் இன்று வழங்கும் பேச்சுத் தமிழில் படர்க்கை ஒருமைப்பெண்பாலைக் குறிக்க அவ (ava) என்ற வடிவம் வழங்குவதைக் காணலாம். இச்சொல் இரண்டாம் வேற்றுமை ஏற்கும்போது அவளே (avaḷ-e) என்று வழங்கக்காணலாம். எனவே, இந்தத் தமிழில் படர்க்கை ஒருமைப் பெண்பாலைக் குறிக்க இரண்டு வடிவங்கள் உள்ளன என்று கூறலாம். ஒன்று அவ (ava) (இதன் பின்னர் உயிரொலியில் தொடங்கும் விகுதி எதுவும் இல்லை). மற்றொன்று அவள் (avaḷ) (இதன் பின்னர் இரண்டாம் வேற்றுமையைக் குறிக்கும் விகுதியான எகர உயிர் (e) அமைந்திருக்கக் காணலாம். வேற்று வடிவங்களான அவ (ava), அவள் (avaḷ) என்ற இரண்டுக்கும் அடித்தள வடிவம் *avaḷ என்று கொள்ளலாம். சொல்லிறுதியில் அகரத்துக்குப் (ஆகாரத்துக்கும் கூட) பின்வரும் ளகரம் (ḷ) கெடும். எனவே உயிர் ஒலி விகுதி அடுக்காத வடிவம் இறுதி மெய் ஒலி (ள்) கெட்டு விகாரமடைகிறது. உயிர் ஒலியில் தொடங்கும் விகுதி அடுக்கும்போது இறுதி மெய் (ḷ) கெடாமல் இயல்பாக நிற்கிறது. இங்கே அவ (*ava) என்பதை அடிப்படை வடிவமாக மீட்டுருவாக்கம் செய்ய இயலாது. அவ்வாறு செய்தால் உயிர் ஒலியாகிய எகரம் (e) சேரும் போது அவ்வ (ava-v-e) என்றாகும். அவ்வாறு இல்லாமல் அவளே (avaḷ-e) என்று இருப்பதால் அவள் (*avaḷ) என்பதே சரியான மீட்டுருவாக்கம். எனவே தமிழ் நாட்டுப் பேச்சு மொழி வடிவமான அவ (ava) என்பதற்கு முந்தை வடிவம் அவள் (*avaḷ) ஆகும். (ஈழத்தில் அவள் (avaḷ) என்று தான் வழங்குவார்கள்) இத்தகைய மீட்டுருவாக்கத்திற்கு அகநிலை மீட்டுருவாக்கம் என்று பெயர். ஒரு சொல்லில் அகரத்தை (அல்லது ஆகாரத்தை) அடுத்த இறுதி ளகர ஒலி (ḷ) அதனை ஓர் உயிர் ஒலி விகுதி அடுக்காதபோது கெட்டது என்ற வரலாற்றுண்மையை இது புலப்படுத்துகிறது. ஒன்றுக்கொன்று புறம்பான ஒரே இனத்தைச் சேர்ந்த வெவ்வெறு மொழிகளுக்கிடையே உள்ள சொல் வடிவங்களை அல்லாமல், ஒரு காலத்து, ஒரு பகுதியில் வழங்கும் ஒரே மொழியில் உள்ள வடிவங்களை மீட்டுருவாக்கம் செய்வதால் இத்தகைய மீட்டுருவாக்கத்திற்கு அகநிலை மீட்டுருவாக்கம் என்ற பெயர் வந்தது.

புறநிலை மீட்டுருவாக்கத்தைப் பயன்படுத்தித் தொல் மொழி வடிவங்களை நிருணயித்தபின், ஒரே பொருண்மையும் மிக்க வடிவொப்புமையும் உடைய தொல் மொழி வடிவங்களை ஒப்பிட்டு அவற்றை அகநிலை மீட்டுருவாக்கம் செய்து அவற்றின் அடித்தள வடிவையும் நிருணயிக்கலாம். தெலுங்கு காரு (kāru), கன்னடம் காரு (kāru), தமிழ் கார் (kar) என்ற வடிவங்களை ஒப்பிட்டு, 'கருமை' என்ற பொருண்மையில் *கார் (*kār) என்ற வடிவத்தைத் தொல்மொழி

யில் புற மீட்டுருவாக்கம் செய்யலாம். தெலுங்கு காக்கு (kāg-gu), கன்னடம் கர்கு (kar – gu), தமிழ் கருகு (kar-ugu) என்ற வடிவங்களை ஒப்பிட்டு 'கருகிப் போ–தல்' என் பொருண்மையில் கருகு (*kar-ugu) என்ற வினை வடிவத்தைத் தொல்மொழியில் புற மீட்டுருவாக்கம் செய்யலாம். தொல்மொழி வடிவங்களான *கார் (*kār) கர்-உகு(kar-ugu) என்ற இரண்டிலும் உள்ள அடிவேர் வடிவங்கள்*கார்(*kār,) *கர்-(kar)-என்பன.குற்றுயிர் கொண்ட வடிவமாகிய *கர் (*kar)என்பது -உகு (-ugu) என்பது போல் உயிர் ஒலியில் தொடங்கும் பின்னொட்டுச் சேரும் போதும், நெட்டுயிர் கொண்ட வடிவமாகிய *கார் (*kār) என்பது பின்னொட்டுச் சேராமல் தனித்து நிற்கும் போதும் அமைந்த வடிவங்கள். குற்றுயிர் கொண்ட வடிவம் பின்னொட்டுச் சேர்ந்த சூழலில் அமைவதால், சூழலால் கட்டுண்ணாத நெட்டுயிர் கொண்ட வடிவத்தையே அடித்தள வடிவமாகக் கொள்ளலாம். எனவே *கர்-உகு (*kar – ugu) என்பதற்கு அடித்தள வடிவம் **கார்–உகு (**kār-ugu) எனக் கொள்ளவேண்டும். இது தொல்மொழி நிலையிலேயே அமைந்த வேறுபட்ட வடிவங்களின் மீட்டுருவாக்கமாதலால், இதனை அகநிலை மீட்டுருவாக்கம் என்பர். **கார்–உகு (**kār-ugu) என்ற மீட்டுருவாக்கம் தெலுங்கு, கன்னட, தமிழ் மொழிகளின் தொல்மொழி நிலைக்கு முந்திய முந்தைத் தொல்மொழி (Pre-proto language) வடிவமாகும். மீட்டுருவாக்கங்கள் அனைத்தும் மொழியின் முந்தைய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு மிகவும் பயன்படும். ஒலிநிலையில் மட்டுமல்லாமல் மொழியின் மற்றக் கூறுகளிலும் இவ்வாறு மீட்டுருவாக்கம் செய்யலாம்.

சுருங்கக் கூறினால், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே மீட்டுருவாக்கம் ஆகும். வசதிக்காக மீட்டுருவாக்கம் செய்து கொண்ட அடித்தள வடிவமானது, வெவ்வேறு மொழிகளில் அல்லது சூழல்களில் எவ்வெவ்வாறு திரிந்தது அல்லது திரியாமல் இயல்பாய் நின்றது என்று தெளிவுபடுத்தும் ஒரு வகை நெறிமுறை விதியே மீட்டுருவாக்கம்.

நா.கு.

**மீடு, சார்சு எர்பர்ட்டு (கி.பி. 1863–1931),** அமெரிக்க மெய்ப்பொருளியல் அறிஞரும், சமூக உளவியல், பயன்வழி உண்மைக் கொள்கை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தவரும் ஆவார். இவர் கி.பி. 1863–ஆம் ஆண்டு தென் ஆட்லியில் (South Hadley) பிறந்தார். இவர் தம் இளங்கலைக் கல்வியை ஒபெர்லின் (Oberlin) கல்லூரியிலும், பின்னர் மெய்ப்பொருளியல், உளவியற் கல்வியை ஆர்வர்டு (Harvard) பல்கலைக்கழகத்திலும் பயின்றார். இவர் மெச்சிகன் (Mechigan) பல்கலைக் கழகத்தில் கி.பி. 1891 – ஆம் ஆண்டில் மெய்ப்பொருளியல், உளவியல் ஆகியவற்றைப் பயிற்றுநராகச் சேர்ந்தார். பின்னர் இவர் கி.பி. 1892-இல் சிகாகோ பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகச் சேர்ந்து 1894-இல் அப் பல்கலைக்கழகத்தின் மெய்ப்பொருளியல் துறைத் தலைவரானார். அப் பல்கலைக்கழகத்தில் இவர் தம் வாழ்நாள் இறுதிவரை (26-4-1931) பணியாற்றினார்.

மீடின் (George Herbert Mead) கருத்துகள் முழுமையான வடிவம் பெறுவதற்கு முன்பே காலமாகி விட்டதால், இவருடைய மெய்ப்பொருளியற் கோட்பாடுகள் இன்னவை என்று உறுதியாகக் கூற முடியவில்லை. ஆயினும் இவருடைய மெய்ப்பொருளியற் கருத்துகளைப் பின் வருவனவாறு வகைப்படுத்திக் கூறுவர். 1) உயிர்ப் பொருட்களுக்கிடையேயான சமூக நடத்தைகளின் தொடர்புகளில்தான் மனமும், 'தான்' (Self) என்பதும் எழுகின்றன என்னும் கருத்தை மீடு தம் 'மனம், தான், சமூகம்' (The Mind Self and Society – 1934) என்னும் நூலில் விளக்கியுள்ளார். 2) அறிவியற் சொற்பொருள் வகைகளின் உளவியலான தோற்றம், பயன்பாட்டு நோக்கம் கொண்ட செயல்களில் நிகழ்கிறது என்பதைச் 'செயல் பற்றிய மெய்ப்பொருளியல்'(The Philosophy of Act-1938) என்னும் நூலில் விவரித்துள்ளார்.3) நிகழ்காலத்தின் இயற்கை பற்றிய சமூகக் கருத்தமைவும், உள்பொருளின் இருப்பிடமும் இறந்தகாலம் எதிர்காலம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியவை என்பதனை 'நிகழ்காலம் பற்றிய மெய்ப்பொருளியல்' (The Philosophy of the Present,1932) என்னும் நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

மீடு தம் சமூக உளவியலில், மனிதனின் 'தான்', 'மனம்' ஆகியவை சமூக நடத்தைகளிலிருந்து எவ்வாறு உருவாகின்றன என்பதைப் பேச்சு மொழியின் துணைக்கொண்டு நிலைநிறுத்துகிறார். மொழியின் மூலம் ஒரு குழந்தை பிறருடைய கடமைக் கூறுகளையும் அவற்றின் விளைவுகளையும் கருதித் தமவாகக் கொள்வதைப் போன்றே மனிதர்களும் தங்கள் உளநடத்தைகளைப் பெறுகின்றனர். சிந்தனையுடன் கூடிய செயற்பாடுகள் உறுதியாகப் பிறரின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். அத்தாக்கங்களினால் மனிதன் தன் கடமைகளைப் பெறுகின்றான் என்பது மீடின் பொதுவான நடத்தைக் கொள்கை என்றாலும், 'தன் உள்ளாய்வு முறைக்கு' (Self- introspection) நடத்தைக் கொள்கையில் இடமளித்தது சிறப்பானதொன்றாகும்.

மீடின் பயன்வழி உண்மைக் கொள்கையில் படிமுறை வளர்ச்சி, தொடர்பியல் கொள்கை (Theory

of Relativity) ஆகியவற்றின் தாக்கம் காணப்படுகிறது. அவருடைய மெய்ப்பொருளியலை அகநிலை சார்ந்த தொடர்பியற் கொள்கை (Subjective Relativism) எனலாம். எவ்வாறு சில பொருட்கள் வயிற்றின் செரிமான முறைக்குத் தக்கவாறு உண்ணக் கூடியவையாகின்றனவோ, அவ்வாறே நுகர்வு, உணர்வு, வாழ்க்கை, மதிப்பீடுகள், ஆளுமை போன்றவை புறவயமான தன்மைகள் என்றும், அவை சில குறிப்பிட்ட வகைச் சூழ்நிலைகளின் தொடர்பினாலேயே அகத்தில் ஏற்படுகின்றன என்றும் மீடு கருதுகின்றார்.

மீடு தம் வாழ்நாளில் எந்த நூலினையும் வெளியிடவில்லை. அவரைப் பின்பற்றியோர் அவர் எழுதியவற்றை நான்கு தொகுதிகளாக வெளியிட்டுள்ளனர். மீடுவின் நூல்கள் பின்வருவனவாகும். 1) நிகழ்காலம் பற்றிய மெய்ப்பொருளியல், 2) மனம், தான், சமுகம் 3) பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிந்தனைப் போக்குகள் (Movements of Thought in the 19 th Century–1936), 4) செயல்பற்றிய மெய்ப்பொருளியல்.

பி.ஆர்.ந.

**மீடு, மார்கரட்டு** (1901-1978): தலைசிறந்த பெண் மானிடவியலறிஞர். மானிடவியல் துறையில் மட்டுமல்லாது மனிதநேயத்தை விரும்பும் அனைவராலும் போற்றப்படக் கூடியவர். மானிடவியலின் எண்ணற்ற ஆய்வுப் பரப்புகளில் இவர் செய்த ஆய்வுகள் புதிய விளக்கத்தைக் கொடுத்ததுடன் அப்பிரிவுகளில் முன்னோடி ஆய்வுகளாகவும் அமைந்தன. பெண்ணுரிமை, குழந்தை வளர்ப்பு முறை, பாலுறவு சார்ந்த ஒழுக்கம், அணுவியல் பெருக்கம் (Nuclear Proliferation), இன உறவுகள், போதை மருந்துகளைத் தவறாகப் பயன்படுத்துதல், மக்கள் தொகைப் பெருக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பஞ்சத்தால் வாடும் நிலை, இளங்குற்ற நடத்தை, பண்பாடும் ஆளுமையும் போன்ற எண்ணற்ற பிரிவுகளில் மேற்கொண்ட இவர்தம் ஆய்வுகள் மானிடவியலுக்குப் புதிய உள்ளொளியைத் தந்தன.

மீடு (Margaret Mead) 1901 – ஆம் ஆண்டு பிலடெல்பியாவில் பிறந்தார். பள்ளி, கல்லூரிப் படிப்புகளுக்குப் பின் இவர் தம் டாக்டர் பட்டத்தைக் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் 1929-இல் பெற்றார். அப்பட்டத்தைப் பெறுமுன்னரே இவர் பல களப் பணி ஆய்வுகளையும், அந்த ஆய்வுகளின் முடிவுகளையும் வெளியிடும் பணியைத் தொடங்கி விட்டார். தொடக்கத்தில் பசிபிக்குக் கடற்கரைப் பகுதிகளில் வாழும் பல பழங்குடிகளை இவர் ஆராய்ந்தார். குறிப்பாக, சமோவாத் தீவுப் பழங்குடிகளிடம் இவர் பலகாலம் ஆய்வு செய்தார். இவர்தம் ஆய்வுகளில் புள்ளியியல் விவரங்களைப் பக்கம் பக்கமாகக் கொடுப்பதைத் தவிர்த்து, அவர்களின் அன்றாட வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு சிறிய நிகழ்ச்சியும் பண்பாட்டில் எவ்வகையான பிணைப்பினைப் பெற்றுள்ளது என்று உற்றுநோக்கி விளக்கினார். இவர்



மார்கரட்டு மீடு

1925 – இல் வெளியிட்ட 'சமோவா சமுதாயத்தில் உரிய வயதடையும் பாங்கு' (Coming of Age in Samoa) என்னும் நூல் மேற்கூறிய வகையில் அம்மக்களின் பண்பாட்டை விளக்குவதாகும். அதனைத் தொடர்ந்து பல ஆய்வுகளை மேற்கொண்டு அவ்வாய்வு முடிவுகளை நூலாக வெளியிட்டார். அவற்றுள் நியூகினி மக்களின் வளர்ப்பு முறை (Growing up in New Guinea – 1930), மூன்று தொன்மைச் சமுதாயங்களில் பாலியல்பும் மனவியல்பும் (Sex and Temperament in Three Primitive Societies-1935), பாலினீசியரின் நடத்தை முறை: ஓர் ஒளிப்படப் பகுப்பாய்வு (Balinese Character: A Photographic Analysis-1942), பண்பாட்டுப் படிமலர்ச்சியில் தொடர்ச்சி (Continuities in Cultural Evolution-1964), இனத்தின் மீது அடித்தல் (Rap on Race- 1971) ஆகியவை இவர் எழுதிய 23 நூல்களுள் குறிப்பிடத்தக்கவை.

எண்ணற்ற ஆய்வுகளில் மீடு ஈடுபட்டிருந்தாலும் இவர்தம் முதன்மையான ஆய்வுகள் உளவியலசார் மானிடவியலை ஒட்டியே அமைந்தன. அதற்குக் காரணம் 1920,30 களில் பொதுமக்களிடமும் அறிஞர்களிடையேயும் மிகவும் விரிவாகப் பேசப்பட்டு வந்த இளங்குற்ற நடத்தைகள், பூப்புக்காலத்தில் ஏற்படும் பொதுவான உணர்வெழுச்சிகளின் தாக்கம் முதலான குமரப் பருவச் சிக்கல்கள் பற்றி மீடு மிகவும் ஈடுபாடு கொண்டு ஆராய்ந்ததேயாகும். குமரப் பருவச் சிக்கல்களினால் தோன்றும் சமுதாயச் சிக்கல்களும்

உணர்வெழுச்சி சார்ந்த முரண்பாடுகளும் உயிரியல் அடிப்படையில் ஏற்படுபவை என்று ஒரு சாரார் வாதிட்டு வந்தனர். அவர்களுக்குச் சமமாக மற்றொரு சாரார் குமரப்பருவச் சிக்கல்கள் அனைத்தும் பண்பாட்டு அடிப்படையில் அமைந்தவை என்று கூறிவந்தனர்.அதனால் மீடு தம்தொடக்கக்கால ஆய்வுகளில் அவ்வகைச் சிக்கல்களுக்குக் காரணமான பண்புகளுள் பண்பாட்டு மரபுரிமையாக வருவது எது, உயிரியல் மரபுரிமையாக வருவது எது என ஆராய்ந்தார். இவர் எழுதிய நியூகினி மக்களின் வளர்ப்பு முறை (1930), சமோவா சமுதாயத்தில் உரிய வயதடையும் பாங்கு (1928) ஆகிய இரண்டு நூல்களும் குமரப்பருவச் சிக்கலை நன்கு ஆராய்ந்து எழுதப்பட்டவையாகும். ஆய்வின் முடிவினைக் குறிப்பிடும்போது குமரப்பருவத்தில் ஏற்படும் உணர்வெழுச்சி சார்ந்த சிக்கல்கள் அனைத்தும் பண்பாட்டு அடிப்படையிலானவை என உறுதியாகக் கூறியுள்ளார்.

இவர் எழுதிய மூன்று தொன்மைச் சமுதாயங்களில் பாலும் மனவியல்பும் (1935) என்னும் நூல் உயிரியல் அடிப்படையில் நிலைநிறுத்தப்படும் பண்புகள் எவை பண்பாட்டு அடிப்படையில் நிலைநிறுத்தப்படும் பண்புகள்எவை என்பதைப் பற்றியதாகும். இருப்பினும் அந்நூல் ஆண், பெண் இருபாலாரின் மனவியல்பு பற்றி முதன்மையாக விளக்குவதற்காகஎழுதப்பட்டது.உயிரியல் கூறுகள் அடிப்படையிலான ஆண், பெண் மனவியல்பு (Temperament) உலகம் முழுவதும் பொதுவாக உள்ளதா அல்லது ஆண்மைத் தன்மை, பெண்மைத் தன்மை என்ற பாங்கைப் பெறுவதற்குப் பண்பாடு மக்களை நெறிப்படுத்துகிறதா? என்னும் வினாவை ஆராய்ந்து மீடு உலகளாவிய நிலையில் ஆண்களுக்கென்று தனியாகவும் பெண்களுக்கென்று தனியாகவும் மனவியல்புக் கூறுகள் இல்லை என அறிந்தார். அவ்வாறு ஆண்களுக்கென்று தனியாக ஆளுமைஇருக்குமானால்அது பண்பாட்டால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாகும்.எடுத்துக்காட்டாக, ஆண்கள் முரட்டுத்தன்மை பெற்றவர்கள் என்பதும் பெண்கள் அமைதித்தன்மை பெற்றவர்கள் என்பதும் பண்பாட்டளவில் ஏற்பட்டனவே. ஆண்மைத் தன்மை,பெண்மைத் தன்மை பற்றி மீடு குறிப்பிடும் இக்கூறுகள் மனவியல்பு, ஆளுமை பற்றியன மட்டுமே என்பதை உணர வேண்டும். இவர் தம் கருத்துகள் இனப்பெருக்கச் செயல்களையோ பிற செயல்களையோ குறிப்பிடவில்லை. ஏனெனில், அவை பண்பாடுகளுக்கிடையே மாறுபடும் தன்மை பெற்றவை. எடுத்துக்காட்டாகச் சில சமுதாயத்தில் ஆண்கள் மட்பாண்டம் செய்கின்றனர்; ஆனால், பிற சமுதாயங்களில் அத்தொழிலைப் பெண்கள் மட்டுமே செய்கின்றனர்.

பண்பாட்டாக்கத்தின் மூலம், ஆண். பெண் இருபாலாரும் தத்தம் சமுதாயத்திற்கு ஏற்ற இயல்பான மனநிலையைப் பெறுகிறார்கள் என்று அறிந்த மீடு சமுதாயத்தில் முரண்பாடுள்ள (Deviant) மனிதர்கள் உருவாகும் முறையை விளக்குவதில் சிக்கல்கள் உள்ளனவென உணர்ந்தார். பாலும் மனவியல்பும் (1935) நூலில் முரண்பாடுள்ள நடத்தை முறை உயிரியல் அடிப்படையில் மட்டுமே தோன்றுகிறது, பண்பாட்டால் அன்று என முடிவு செய்தார். இருப்பினும் ஒவ்வொருவரின் மனவியல்பும் பண்பாட்டால் அறுதியிடப்படுகிறது என்னும் கருத்தில் உறுதியாக இருந்தார்.

மீடு மானிடவியல் சார்ந்த அருங்காட்சியகப் பணியிலும் பெரும் பங்காற்றினார். அமெரிக்க இயற்கையியல் வரலாற்று அருங்காட்சியகத்தில் (American Museum of Natural History) 1926 – முதல் 50 ஆண்டுக் காலம் பணியாற்றினார். அதே காலத்தில் நேரம் கிடைக்கும்போதெல்லாம் களப்பணி மேற்கொண்டு கொள்கைசார் பிரிவில் பல ஆய்வுகள் செய்தார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்கப் பொதுமக்களிடமும் இவர் களப்பணி மேற்கொண்ட பழங்குடிகளிடமும் மிகச் சிறந்த மனித நேயப் பண்பாளர் எனப் பெயர் பெற்றார். இந்நாள் வரை தோன்றிய மானிடவியலார் யாருக்கும் பொதுமக்களிடம் கிடைக்காத பேரும் புகழும் மார்கரட்டு மீடு அம்மையாருக்கே கிடைத்தன. இவரது சிறந்த பணியைப் பாராட்டி அமெரிக்க அரசின் உயர்ந்த குடிமக்கள் விருதும், முன்னணி மானிடவியல் கழகங்களின் உயர்ந்த பரிசுகளும், இந்தியாவின் கலிங்கா விருதும் வழங்கப்பட்டன. இவர் அமெரிக்காவில் 1978 – ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

*மீத்திறக் குழந்தைக் கல்வி*: ஒரு குழந்தையின் • நுண்ணறிவு ஈவு (I.Q.) 1302–ம் அதற்கு மேற்பட்டும் இருப்பின் அக்குழந்தை மீத்திறக் குழந்தை என்று குறிப்பிடப்படும். அதாவது, சமவயதுடைய குழந்தைகளை விட அறிவுத்திறன் மிக்க குழந்தைகளுக்கு மீத்திறக் குழந்தைகள் என்பது பெயர். இவர்கள் கல்வியில் அதிகநாட்டம் கொண்டிருப்பர். இக்குழந்தைகள் மற்றைய குழந்தைகளைவிட எளிதில் பாடக் கருத்துகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பார்கள். அத்தகைய மீத்திறக் குழந்தைகள், குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு 3 முதல் 5 வரை எண்ணிக்கையில் இருப்பார்கள்.

**மீத்திறக் குழந்தைகளைக் கண்டுபிடித்தல்**. மீத்திறக் குழந்தைகளைப் பின்வருமாறு கண்டறியலாம். 1) பள்ளித் தேர்வுகள், கல்வி அடைவுத் தேர்வுகள் (Achievement Tests) மூலம் குழந்தைகளின் வியக்கத்

தக்க, சிறப்பான ஆற்றல் வெளிப்படுவதன் மூலம் அவர்களுள் மீத்திறக் குழந்தைகள் யார் என்பதைக் கண்டறியலாம். 2) தனியாள் நுண்ணறிவுச் சோதனைகள் (Individual Intelligence Tests), நுண்ணறிவுச் சோதனைகள் (Group Intelligence Tests) மூலம் அவர்கள் நுண்ணறிவு ஈவைக் (Iutelligence Quotient) கணக்கிட்டும் கண்டறியலாம். 3) பல்வேறு ஆக்கத் திறன்களைப் பெற்றிருப்பதாலும், மற்றைய குழந்தைகளைவிடத் தனிச்சிறப்புகளைப் பெற்றிருப்பதாலும் நேரடி உற்று நோக்கல் முறையில் (DirectObservation) இவர்களைக் கண்டறியலாம். 4) பள்ளித் திரள்பதிவுகள் (Cumulative Record) மூலம் மீத்திறக் குழந்தைகளைக் கண்டறியலாம். 5) ஆசிரியர்களைத் தவிரப் பெற்றோர்கள், நண்பர்கள் முதலானோரின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டும் இவர்களைக் கண்டறியலாம். 6) அக்கறை, நாட்டச் சோதனைகள், வினா வரிசைகள் மூலம் இவர்களைக்கண்டறியலாம். 7. உடல் வளர்ச்சி, சமூக வளர்ச்சி பற்றிய விவரங்களாலும் அறியலாம்.

**மீத்திறக் குழந்தைகளின் சிறப்பியல்புகள்:** 1) மீத்திறக் குழந்தைகள் பொதுவான மாணவர்களைவிடப் பள்ளிப்பாடங்களில் முன்னணியில் இருப்பார்கள். எனினும் சிலர், பள்ளிப் பாடங்களில் ஆர்வம் குறைந்தவர்களாகவும், ஏனைய துறைகளில் ஆர்வமிக்கவர்களாகவும் இருப்பார்கள். எடுத்துக்காட்டாக, மொழித் திறன். 2) மிகுந்த அளவில் சொற்களஞ்சிய அறிவைப் பெற்றிருப்பர். புதிய புதிய சொற்களையும், சொற்றொடர்களையும், பயன்படுத்த அறிந்திருப்பார்கள். 3) இவர்கள் படிப்பில் ஆழ்ந்த கவனம் செலுத்துவார்கள். 4) செயல்களின் காரணங்களுக்கும் விளைவுகளுக்கும் உள்ள தொடர்பினை எளிதில் உணருவார்கள், 5) உடல் உள்ளம் இரண்டிலும் வலிமை பெற்றிருப்பார்கள். 6) சமவயதினரைக் காட்டிலும் மூத்தோரிடம் நல்ல தொடர்பு கொண்டிருப்பார்கள், 7) நிலைத்த மனவெழுச்சியும் தலைமைப் பண்புகளும் உடையவர்களாக இருப்பார்கள். 8) பலதரப்பட்ட விருப்பச் செயல்களில் ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள்.

**மீத்திறக் குழந்தைளுக்கான கல்வி:**

1. **பாடத்திட்ட அதிகரிப்பு:** மீத்திறக் குழந்தைகளுக்கென்றே சில சிறப்புக் கல்வி ஏற்பாட்டுப் (Special Curriculum) பாடங்களைக் கல்விப் பாடத்திட்ட வல்லுநர்கள் தனிக்கவனம் செலுத்தி உருவாக்கி நடைமுறைப் படுத்த வேண்டும். இம்முறை அதிகப் பயனளிக்கவல்லது.

2. **விரைவான பிரிவு மாற்றம்:** மீத்திறக் குழந்தைகள் மற்றைய குழந்தைகளைவிடத் தனிச்சிறப்பைப் பெற்றவர்களாதலால் இவர்களுக்கெனக்கல்விப் பாடத்திட்டத்தில் சில வாய்ப்புகள் இருத்தல் இன்றியமையாததாகும். ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குக் குறுகிய காலத்தில் முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்பு இருத்தல் வேண்டும். எனினும், இத்தகைய முறை தொடக்கக் கல்வி நிலையில் மட்டும் வெற்றியளிக்கக் கூடியதாகும்.

3. **தனிவகுப்புகள்:** மீத்திறக் குழந்தைகளின் கல்வியில் விரைந்த வளர்ச்சிக்குப் பயன்தரக்கூடிய தனி வகுப்புகளை ஏற்படுத்தி மேன்மையுறச் செய்யலாம்.

4. **தனிப் பயிற்சிகள்:** மீத்திறக் குழந்தைகளுக்குரிய தனிப் பயிற்சிகள் இரு வகைப்படும். ஒன்று பள்ளிகளிலேயே இவர்களுக்கென்று தனிப்பயிற்சி அளிக்கலாம். மற்றொன்று இவர்களுக்கென்று தனிப் பள்ளிகள் ஏற்படுத்தலாம். பள்ளி விடுமுறை நாள்களிலும், கோடை விடுமுறை நாள்களிலும் மீத்திறக் குழந்தைகளுக்குத் தனிப்பயிற்சியளித்து உதவலாம்

5. **புதிய சூழ்நிலை:** மீத்திறக் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காகத் தக்கதொரு கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டும். அதாவது, சுதந்திரமான செயற்பாடு, கூட்டுமனப்பான்மை போன்றவை வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தருதல் வேண்டும்.

6. **தனிக் கவனம்:** மீத்திறக் குழந்தைகளின்மேல் தனிக்கவனம் செலுத்திப் பயிற்றுவிப்பதின் மூலம் இவர்கள் படிப்படியாக உயர வாய்ப்பிருக்கின்றது.

7. **சிறப்புப் பயிற்று முறைகளும் செயல்களும்:** மீத்திறக் குழந்தைகளுக்கு அறிவுரை பகர்தல் வழிகாட்டல் (Guidance and Counselling) ஆகியவற்றிற்கான சிறப்பு அலுவலர் (Counsellor) மூலம் செயற்படுத்துவதால் இக்குழந்தைகளின் தரம் சிறக்கும்.

8. **திறமையான ஆசிரியர்கள்:** ஒரு பள்ளி நன்கு தேர்ச்சிபெற்ற நிருவாகி, ஆசிரியர்கள், உளவியல் ஆசிரியர், தொழில் படிப்பு வழிமுறை காட்டும் அலுவலர் (Vocational and Educational Guidance Officer) ஆகியவர்களுடன் இருத்தல் இன்றியமையாததாகும்.

9. **வசதிகள், கருவிகள் அளித்தல்:** மீத்திறக் குழந்தைகளுக்குக் கற்றலுக்கான சிறப்புக் கருவிகள் அளிப்பதன் மூலம் அவர்கள் மேன்மேலும் சிறக்க வழிவகுக்க இயலும். பல்வேறு மதிப்பீட்டு முறைகள் (Techniques of Evaluation) மூலம் இவர்களின் தரத்தை மதிப்பீடு செய்யலாம்.

10. **தனித்திறமைகளை அடையாளம் காணல்:** இத்தகைய மீத்திறக் குழந்தைகளின் சிறப்புத் தகுதி

களையும் அவர்கள் நடத்தைகளையும் அவ்வப் பொழுது கண்டறிவது இவர்களுக்குப்பயனுள்ளதாக அமையும். எடுத்துக்காட்டாகத் தொடக்கப் பள்ளி களில் சாதி, சமய, இனபொருளாதார வேறுபா டின்றி மீத்திறக் குழந்தைகளைக் கண்டறிந்து அவர் களுக்குக் கல்வி உதவித்தொகை, பயிற்சி ஆகியவை அளித்தல் வேண்டும்.

11. **கல்விப் பயணங்கள், களப் பயிற்சிகளுக்கான வாய்ப்பளித்தல்**: ஆக்கத்திறன் (Creative abilities) மூலம் மீத்திறக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு உதவ முடியும். மேலும் அறிவியல், இசை, நுண்கலை கள், தலைமைப் பண்புகள் போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் இத்தகைய மீத்திறக் குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆசிரியர்களின் நல்லியல்புகள் இவர்களிடம் எதிரொ லிக்க வேண்டும்.

கே.மீ.

*மீத்திறன் குழந்தைகள்*: மிகுந்த திறமை உடைய குழந்தைகளே மீத்திறன் குழந்தைகள். கடந்த சில ஆண்டுகளாக உளவியலில் பல புதிய விரி வான கருத்துகள் மீத்திறன் குழந்தைகளைப் பற்றித் தோன்றியுள்ளன. குழந்தைகளுள் மீத்திறன் கொண்ட வர்கள் யார் என்ற கேள்விக்குப் பல வழிகளில் விடை கூறப்பட்டுள்ளது. நுண்ணறிவுத்திறன் குறித்த பரிசோதனையில் மிகுதியான நுண்ணறிவு பெற்ற இரண்டு விழுக்காடு குழந்தைகளே மீத்திறன் குழந்தைகள் என்கிறார் தெர்மன்.

மீத்திறன் குழந்தைகளைப் பொறுத்த அளவில் நுண்ணறிவு அல்லது அறிவுத்திறமை என்பது ஒரு முக்கியமான கருத்தாக விளங்குகிறது. அறிவுத் திறமை என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக இருந்தாலும். அதுகுறித்த ஆய்வுகள் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே நடத் தப் பட்டிருக்கின்றன என்பது தெரிகிறது.

சார்லசு தார்வின் (கி.பி. 1859), பிரான்சிசு கால் டன் (கி.பி. 1869) போன்றவர்கள் மரபியல் மற்றும் உயிர்வளர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்தபொழுது அறி வுத்திறமை, தனி ஆள் வேறுபாடு ஆகியவற்றையும் கருத்தில் கொண்டனர். கால்டன், தார்வினின் ஆய்வு களினால் மிகவும் கவரப்பட்டார். அவர் அறிவுத் திறமையின் அளவை இறக்கும்வரையிலும் இருக்கும் என்று கூறினார். மேலும், அவ்வாறு இருக்கும் அறி வினைக் கூட்டவோ குறைக்கவோ இயலாது என்றும் கூறினர்.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஆல்பிரடு பினே (Alfred Binet) என்பவர் 1905 – ஆம் ஆண்டில் அறி வுத்திறமை நிலையானது என்பதை ஏற்கவில்லை. மேலும், அவர் நுண்ணறிவினைப் புகட்டமுடியும் என்றும் நம்பினார். இப்பொழுது பெரும்பாலும் பயன் படுத்தப்பட்டு வரும் இசுடேன்போர்டு பினே நுண் ணறிவுத்திறன் அளவை (Stanford Binet Intelligence Scale) உருவாகிடப் பினேயின் கருத்து ஏதுவாயிற்று.

தெர்மன், இசுடேன்போர்டு பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபொழுது 16 வயதுடைய வர்களும், 140-இலிருந்து 150 வரை உள்ள நுண்ணறிவு ஈவினை உடையவர்களுமான 1,500 குழந்தைகளைத் தேர்வு செய்தார். அவ்வாறு அவர் தேர்வு செய்த பொழுது மீத்திறன் குழந்தைகள் என்ற கருத்துக் கேலிக்குரியதாயிருந்தது. மீத்திறன் குழந்தைகளை (Early ripe, Early sot) விரைவாகப் பழுத்து விரை வாக அழுகும் வகையினர் என்று விவரித்தனர் ஆகவே, எந்தப் பெற்றோரும் தங்கள் குழந்தைகளை மீத்திறன் குழந்தைகளாக ஏற்க முன்வரவில்லை. இவ்வாறான மீத்திறன் குழந்தைகளை வளர்ப்பதும் நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது. ஆனால், தெர்மனின் ஆய்வுகள் முன்கூறிய கருத்து களைப் பிற்காலத்தில் மாற்றக்கூடியனவாக இருந் தன. அதனால், அவை ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக வும் இருந்தன.

இசை, கலை, சமூகத்தில் தலைமைதாங்கி நடத் தும் திறன் முதலிய பல செயல்களில் சிறந்து விளங் கும் குழந்தைகளை மீத்திறன் குழந்தைகள் என்று பி.ஏ. விட்டி (Witty, P.A.-1953) என்பவர் வரையறுக் கிறார். ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி அலுவலர் கள் 1972-ஆம் ஆண்டில் மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய விரிவான அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கை மீத்திறன் குழந்தைகள் கீழே குறிப் பிட்டுள்ள துறைகளில் ஏதாவது ஒன்றிலோ பலவற் றிலோ அரிய செயல்களைச் செய்பவராயும் மிகத்திற மையுடையவராயும் இருப்பர் என வரையறுக்கிறது அவை: 1) பொது அறிவுத்திறமை, 2) குறிப்பிடும்படி யான கல்வி சார்ந்த திறமை, 3) படைப்பு அல்லது உருவாக்கும் திறமை, 4) தலைமை தாங்கி நடத்தும் திறமை, 5) பார்வைக்கும் செயலுக்குமுரிய கலைத் திறமை 6) புலன் இயக்கத் திறமை முதலியன.

ஐக்கிய நாடுகளிலுள்ள மீத்திறன் போன்ற திறமையுள்ள குழந்தைகளுக்கான கல்வி அலுவலகத் தில் மீத்திறன் நுண்ணறிவு ஈவினை (Intelligence Quotient) வைத்து வரையறுக்கப்பட்டதனை ஏற்றுக் கொண்டனர். மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய பல புதிய கருத்துகள் ஐக்கிய நாடுகளின் ஆட்சிக்குழு அமைப்பில் தெரிவிக்கப்பட்டன. அவற்றில் முக்கிய மானவை: 1) மீத்திறன் திறமையுள்ள குழந்தை களின் திறமை பல்வேறு வகையிலான கருத்து அளவு கள் மற்றும் தொழில் முன்னேற்ற அளவுகளின்

அடிப்படையில் நிருணயிக்கப்படுகிறது. 2) மேலே குறிப்பிட்டுள்ள ஆறுவகையான துறைகள் மூன்றிலிருந்து ஐந்து விழுக்காடு பள்ளி மாணவர்களிடம் பல்வேறு செயல்களின் மூலம் பயன்படுத்தப்பட்டுள்ளன. 3) மீத்திறன் குழந்தைகளுக்காக வரையறுக்கப்பட்டுள்ள பல்வேறு கல்வித்திட்டங்கள் கீழே குறிப்பிட்டுள்ள பண்புகளைக் கொண்டுள்ளன. அ) அறியும் சக்தி பற்றிய கருத்தினோடு படைப்புத் திறமை, முன்னேற்றம், முடிவுசெய்தல் போன்றவை பற்றியும், மாறுபட்ட பாடத்திட்டத்தைத் தயாரித்தல், ஆ) மீத்திறன் மற்றும் திறமையுள்ள குழந்தைகளின் பாடத்திட்டத்தில் கற்றல் முறை பற்றிய செய்முறைக் குறிப்புகளைப் புகுத்துதல், இ) பல்வேறு வகையான நிருவாக வழிமுறைகள், குறிப்பாகத் தேர்ந்தசில குழந்தைகளுக்குச் சிறப்பு வகுப்புகள், கருத்தரங்குகள் ஆகியவற்றின் மூலம் ஏற்படுத்தித் தருதல் முதலியன.

பல்வேறு பண்பாட்டுக் குழுக்களிலுள்ள ஏழ்மையானவர்களும் பிற்படுத்தப்பட்ட நிலைகளிலுள்ளவர்களுமான குழந்தைகளின் முன்னேற்றம் பண்படுத்தல் மூலம் மறைந்துள்ள மீத்திறனைக் கண்டுபிடித்து வளர்ப்பதற்கான புதிய ஆர்வம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இந்தப் புதிய ஆர்வமானது உளவியல் துறையிலும் பல்வேறு பண்பாட்டுக் குழுக்களிலும் முதன்மை பெற்றுள்ளது. மேலும், பிற பண்பாட்டினால் போற்றத்தக்கதான இந்த ஆர்வமானது மீத்திறன் குழந்தைகளின் கல்வியைத் தூண்டித் திறமைகளைத் தோற்றுவிக்கிறது. மீத்திறன் குழந்தைகளின் சிக்கல்கள் குறித்த ஆர்வமானது, கீழ்நிலைகளில் உள்ள குழந்தைகளைக் குறித்து மரபுநிலையும் சூழ்நிலையும் பற்றிய கருத்து வேறுபாடுகளைச் சார்ந்துள்ளது.

**மீத்திறன் பற்றிய ஒரேகாலத்திய கருத்துகள்:** உளவியலார்களும், கல்வியாளர்களும் ஒரேவகையான மீத்திறன் பற்றிய கருத்தினை மாற்ற முற்பட்டனர். மீத்திறன் பற்றிய கருத்துகள் மிகுதியான மீத்திறனும் திறமையுமுள்ள குழந்தைகளைக் கவர்ந்தன. இதுவே சிறிய வயதினர் தங்களுக்குள் உள்ள திறமைகளை மிகுவிக்க ஏதுவாயிற்று. உளவியலார் சிலரும், கல்வியாளர்களும் படைப்புத் திறமையைக் கொண்டு மீத்திறன் குழந்தைகளை அறிந்துகொள்ளுதல் தவறு என்று கூறினர். சிரில் பர்ட்டு (Cyril Burt) என்பவர் படைப்புத் திறனைக் கொண்டு மீத்திறனை அளவிடுதலை எதிர்த்தார். மேலும், அவர் சரியான படைப்புத்திறமை என்பது அதற்குச் சமமான உயர்ந்த பொது அறிவு இல்லாமல் வருவதில்லை என்று கூறினார்.

மீத்திறன் பற்றி உளவியலல் நிலவிவரும் சிக்கல்கள் பல்வேறு வகைப்பட்ட மீத்திறன் பற்றிய கருத்தினைப் புரிந்துகொள்ளுதல் மேலும் பல்வேறுவகைப்பட்ட திறமைகள், ஆளுமைகள் பற்றிய அளவுகள் ஆகியவற்றோடு தொடர்புடையவை ஆகும்.

உளவியலார்கள் மீத்திறன் குழந்தைகளின் பண்புகளை விவரிக்க முயற்சிசெய்கிறார்கள். ஆல்பர்ட்டு (Albert–1975) என்பவரின் நடத்தை அறிவியல் சார்ந்த ஒரு வரையறையானது அறிவாளர் மற்றும் பெருமைமிக்க மீத்திறனார் குறித்து ஒரு வரையறையைத் தோற்றுவிக்கிறது. அந்த வரையறையானது மீத்திறனாரைக் கண்டுபிடிக்கும் வழிமுறைகளையும் கல்விமுறைகளையும் தொடர்புபடுத்தியுள்ளது.

கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கின்னன்சு (Kinnons – 1961) என்பவர் பல்வேறு தொழில்களிலுள்ள அதிகத் திறமையானவர்களை வைத்து ஆய்வு நடத்தினார். அதில் அவர்களின் படைக்கும் திறன் மூலம் உயர்ந்த நிலையை அடைந்தனர் என்று கண்டறிந்தார். அக்குழுவில் பங்கு பெற்றவர்கள் அறிவியலார், கட்டட நிபுணர், எழுத்தாளர், ஓவிய மாணவர் மற்றும் பலர். பின்வருபவை படைக்கும் படைப்பாளரின் குணநலன்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1) அறிவாளர்கள் எப்பொழுதும் சிறந்த படைக்கும் திறன் வாய்ந்தவர்களாக இராமை, 2) தனித்தன்மை, 3) ஆழ்ந்த பொருளைத் தேடுதல், தொடர்புபடுத்தல், நிகழக்கூடியவற்றைக் கண்டறிதல், 4) முடிவெடுத்தல், கருத்து மற்றும் செயற்படுத்தல் ஆகியவற்றில் தன்விழைவு, 5) அடிக்கடி சினங்கொள்ளலும் கலவரப்படுதலும், தனக்காகக் கொண்டுள்ள குறிக்கோள்களுக்கான செயல்களில் அதிக சக்தியைச் செலவிடுதல், 6) உளத்தையும் வெளி உலகத்தையும் அறியும் சக்தி (செயல்களை அறியும் திறமை), 7) உள்ளுணர்வுகளை அறியும் சக்தியும் வழிமுறைகளை நினைத்தலும், 8) பொறுப்புள்ள மனிதனாகத் தன்னைத் தானே உருவகித்துக்கொள்ளுதலும் தன்னைப் பற்றி ஒரு மனிதனாகத் தானே தீர்மானித்தலும், 9) அனுபவ அடிப்படையில் பெறாதனவும் விரும்பும் தன்மையுடையனவுமான பொழுதுபோக்குகள், அவனுள் எழும் முரண்பாடுகளினால் ஏற்படும் இறுக்கத்தைப் பொறுத்துக்கொள்ளும் தன்மையுடையவனாகவும் ஒத்துப்போகக் கூடியவனாகவும் இருத்தல்.

**மீத்திறன் குழந்தைகளைக் கண்டு கொள்ளுதல்:** மீத்திறன் பற்றிய கருத்துகள், கல்வித் தொடர்பாகக் கண்டிக்கும் ஆசிரியர்களையும் நிருவாகிகளையும் பெற்றோர்களையும் மிகவும்

குழப்புகிறது. அறிவுத்திறன் குறித்த மாதிரி அமைப்பின் அடிப்படையிலான அளவுகளைச் செயற்படுத்தும் பொழுது அதனுள் உள்ள கருத்து பின்தங்கிவிட வாய்ப்புள்ளது. மீக்கர் (Meeker-1969) என்பவர் பல்வேறுபட்ட குழந்தைகளுக்கான 7 அறிவுத்திறனைக் கண்டு அறியும் அளவுகளை முறையான முயற்சி செய்து நடைமுறைக்குக் கொண்டுவந்தார். அவ்வாறு நடைமுறைக்குக் கொண்டுவந்த அளவுகளால் குழந்தைகளின் அறிவுத்திறனை வைத்து ஒரு வரைபடம் (Profile) அமைத்து அவர்களின் திறமையை விரிவுபடுத்தலாம். மீக்கர், மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய தம் புத்தகத்தில் வரையப்பட்ட வரைபடங்களின் மூலம் மீத்திறன் குழந்தைகளைப் பற்றி ஆராய்ந்துள்ளார். மேலும், அந்த வரைபடங்களிலுள்ள செய்திகள் எவ்வாறு மீத்திறன் பற்றிய நிகழ்ச்சிகளுக்கு வழிகாட்டியாக உள்ளன என்றும் விவரித்திருக்கிறார்.

ஐக்கிய நாட்டின் குழந்தைகளுக்கான கல்வி அலுவலகத்தில் 1972-ஆம் ஆண்டில் கூறிய ஆறுவிதமான மீத்திறன்களுக்கு ஏதுவாக அமையும் வகையில் உளவியலார்கள் இப்பொழுது புதிய கருவிகளைக் கண்டுபிடித்துள்ளனர். அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள் கீழ்க்காணும் திறமைகளைக் கண்டறிய ஏதுவாக அமைகின்றன.

**மீத்திறன் குழந்தைகளின் குணங்கள்:** உளவியல் அடிப்படையாக மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய கருத்துகளை இதற்குமுன்பாகக் கண்டுபிடிக்கவில்லை. இதற்கு ஒரு முக்கியக் காரணம் யாதெனில் மீத்திறன் குழந்தைகளைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் எதுவுமே பல்வேறுவகையான மீத்திறனைப் பற்றித் தெளிவாகக் கூறவில்லை. ஆகையால், இது குறித்த ஆய்வுகளை இன்னும் மேற்கொள்ள வேண்டும். அதிக மீத்திறன் மற்றும் திறமையுள்ள குழந்தைகளை வேறுபடுத்தி நடத்தப்பட்ட ஆய்வுகள் 1972-ஆம் ஆண்டு கூறப்பட்ட ஆறு பிரிவுகளிலுள்ள மீத்திறன் வகைகளுக்கு முதன்மை கொடுத்தன. இன்னும் பத்து அல்லது, இருபது ஆண்டுகளில் மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய பயன்மிக்க உளவியல் அடிப்படையிலான ஆய்வுகள் நடத்தப்படலாம் என்பது நம்பப்படுகிறது. கே. மீ.

**துணை நூல்கள்:**

**Cruickshank**, W.M., Psychology of Exceptional Children and Youth, Prentice Hall Inc., Englewood Cliffs, New Jercy, 1880.

**Terman**, L., Mental and Physical Traits of a Thousand Gifted Children, In L. Termon (Ed.), Genetic Studies of Genius (Vol.I) Stanford University Press, 1925.

**மீதியா** மேற்கு ஆசியாவிலிருந்த ஒரு பண்டைய நாடு. மீதியா (Media) காசுப்பியன் கடலிலிருந்து சாக்குரோசு (Zagros) மலைகள் வரை பரவியிருந்தது. இங்கு வாழ்ந்த மீதியர் (Medes) இந்தோ-ஐரோப்பிய இனத்தவர்; பண்டைய பாரசீக மொழியை ஒத்த இரானிய மொழியைப் பேசிவந்தவர். சார்கன் (Sargon) என்னும் மீதிய மன்னன் கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த பொழுது மீதியப் பேரரசு பாரசீகத்தையும் அதனுட்படுத்தியிருந்தது. அம்மன்னனின் குலம் அசுத்தியாகசு (Astyages) என்பவனுடன் முடிவுற்றது. மகாசைரசு (Cyrus the Great) என்ற அகிமீனிய குல மன்னன், கி.மு. 550-இல் அசுத்தியாகசை முறியடித்துவிட்டு அவன் அரசைப் பாரசீகப் பேரரசுடன் இணைத்தான். பிறகு, கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் மீதியா, பார்த்தியா (Parthia) அரசுக்கு உட்பட்டது. உரோமானியர் அப்பகுதிகளை வென்ற பிறகு மீதியா இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. வடமாகாணம் மீதியா அத்துரோபதீன் (Atropatene)எனவும், தென் மாகாணம் மீதியா மேக்னா (Magna)எனவும் பெயர் பெற்றன. பண்டைய மீதியா மறைந்தது.




மீதியா அமைவிடம்

**மீதியா**[2] இக்காலத்தில் அமெரிக்காவில் பிலடெல்பியா நகருக்கு மேற்கே (பென்சில்வேனியா மாநிலம்) மீதியா என்னும் ஒரு நகர் உள்ளது. இது கி.பி.1682-இல் குடியேறப்பட்ட பகுதியாகும். பிறகு கி.பி. 1848-இல் இது அரசுரிமைப்பத்திரத்தின்படி நகராண்மைச் சலுகைகளுள்ள பேரூராக அமைந்தது. இப்பொழுது இது அரசியல் மாமன்றத்துக்கு உறுப்பினர் அனுப்பும் ஒரு நகரமாக விளங்குகிறது. வேளாண்மை இங்

குச் செழிப்புடன் உள்ளது. பல்வகைச் சிறு தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. தெ.பா.

*மீ மகன்*: மீ மகன் என்பது, இக்காலத்திய ஐரோப்பிய மெய்ப் பொருளியலறிஞர்களுள் ஒருவரான நீட்சே பிரெடிரிச்சு (Nietzsche Friedrich) என்பவரின் சிறந்த நூலான 'சாராதூசுட்ரர் இவ்வாறு பேசினார்' (Thus spake Zarathustra) என்பதன் மையக் கருத்தாகும். அந்நூலில் நீட்சே,மீமகன் பற்றி அளித்துள்ள நற்செய்தி (Gospel of Superman) உலகிற்கு அவர் விரும்பி அளித்துள்ள கொடையாகும்.

மனித நடத்தை அனைத்தையும் 'விரும்பியவற்றைச் செய்யும் ஆற்றல்' என்ற அடிப்படைக் கோட்பாட்டினுள் அடக்கிவிடலாம். மனிதன் தன்னைப் பேணிக் காத்தலை மட்டுமே விரும்புவதில்லை; மாறாகத் தன் இருப்பு நிலையில் உயர்வை, மிக்க ஆற்றலை விரும்புகிறான். மனிதன் தன்னை நிலை நிறுத்துவதில், அனைத்துத் திரிபுக் கொள்கைகளுடனும், பிழைக் கொள்கைகளுடனும் போராடிக் கொண்டிருப்பவனாக உள்ளான். இவ்வுலகில் அவன் அமைதியாக வாழ அத்தகைய போராட்டம் தேவையானதாகும். நீட்சேயின் மெய்ப்பொருளியற் கோட்பாட்டில் பொதுமைக்கு இடமே இல்லை. தனி மனிதனே இன்றியமையாதவனாகக் கருதப்படுகிறான். நீட்சே தவிர்க்க முடியாத, நிலையான ஒன்றிற்கு அடிபணிதல் போன்ற கருத்துகளை ஏற்பதில்லை. அவர் மனிதன் அனைத்து மரபுகளையும், நிறுவப் பட்டுள்ள முறைமைகளையும், தற்செயலாக நடந்தது என்ற தற்செயற் கோட்பாடுகளையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தாலே விரும்பியவற்றைச் செய்யும் ஆற்றலைப் பெற்றுள்ள மீ மகனாக விளங்க முடியும் என்று கூறுகிறார். கொதே என்பவரை அண்மைக் காலத்திய மீ மகனாக நீட்சே கருதுகிறார். அனைத்தையும் எதிர்க்கும் அத்தகைய கோட்பாட்டை நீட்சேயின் மெய்ப்பொருளியல் கோட்பாட்டின் அழிவுப் பிரிவாகக் கருத வேண்டியதில்லை. அது அவருடைய ஆக்கம் சார்ந்த மெய்ப்பொருளியல் கொள்கைக்கு ஒரு முன்னோடியேயாகும். மேற்கூறிய அழிவுக்கருத்துகள் 'சான்றோனை', 'கூர்மதி படைத்தோனை'ப் படைக்க வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தும் பொருட்டே அவரால் கூறப்பட்டுள்ளன.

மீ மகன் பற்றிய தம் கருத்தமைவில் நீட்சே புரோட்டொகோரியசின் (Protogorius) 'மனிதனே அனைத்திற்கும் அளவுகோல்' என்ற கொள்கையைச் சிறிது மாற்றிக் கையாளுகிறார். மனிதன் என்பதில் உள்ள பொதுமைத் தன்மைக்கு மாற்றாகத் தனியனையே அளவுகோலாக நீட்சே கருதுகிறார். வரலாறு கூடத் தனிமனித வரலாறாகவே அமையவேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஒரு பன்னிரண்டு மீ மக்களை உற்பத்தி செய்ய இயற்கை எடுத்துக் கொண்ட சுற்றுப் பாதைதான் மக்கள் கூட்டம் என்பது. எனவே, மக்கள் அறிவுக் கூர்மையுள்ள மனிதர்களைப் படைக்கும் வகையில் தங்கள் செயல்களை வகுத்துக் கொள்ள வேண்டும். மனிதன் என்பது மீ மகனாகிய இறுதியை நோக்கிச் செல்லும் வழியிலுள்ள ஒரு ஓய்விடம், பாலம் என்பதாகும். அவ்வோய்வு நிலை முடிவன்றாதலால் அதனைக் கடக்கவும் வெற்றி கொள்ளவும் வேண்டும்.

நீட்சே கூறும் மீ மகன் இப்பொழுதைய முறைமையை முற்றிலும் அழித்துப் புதிய நிலையை உண்டாக்குபவனாக இருப்பான். அத்தகைய புதிய நிலையை இப்பொழுதைய நிலையை மாற்றியமைப்பதனாலோ மேம்பாட்டைச் செய்வதனாலோ கொண்டு வராமல் புதிதாகத் தோன்றும்படி செய்வான். மீ மகனின் முயற்சி அத்தகையதாகும். அக்கொள்கையை நீட்சே அறவியலிலும் பயன்படுத்துகிறார். அறவியலில் ஒரு சிறந்த முறையை இப்பொழுதைய முறைமைகளையும் மதிப்பீடுகளையும் மதிப்பிழக்கச் செய்வதின் மூலம் கொண்டு வரலாம் என்கிறார். அதனடிப்படையில் இப்பொழுதைய அறமுறைமையை அடிமைகளின் அறமுறைமை என்றும், மீ மக்களின் அறமுறைமையை மேலாண்மை அறமுறைமை என்றும் பிரித்துக் காட்டுகிறார். சிறந்த மனிதன் தன்னை மதிப்பீடுகளை நிருணயிப்பவனாகவே கருதுவான். அவன் தன்னுடைய கருத்துகளுக்குப் பிறரின் ஏற்பை இன்றியமையாததாகக் கருதமாட்டான். அவன் தானே மதிப்பீடுகளை உருவாக்குவதுடன் அவற்றில் தன்னையே மேல்நிலையில் வைத்தும் கருதுவான்.

அதன் அடிப்படையில், உண்மை அல்லது உள்பொருளைக் கூட விரும்பியவற்றைச் செய்யும் ஆற்றலே என்று நீட்சே கூறுகிறார். அவ்வுள்பொருளின், உண்மையின் நலன்கூட மீமகனே ஆவான்என்பது நீட்சேயின் முடிந்த கருத்தாகும். வாழ்க்கையில் பிறரைப் பற்றிக் கருதாமல் தன்னைப்பற்றியே கருதித் தன்னை மேன்மேலும் உயர்த்தி அதன்மூலம் நாட்டை உயர்த்திக்கொண்டிருக்கும் மேலாண் மனிதர்களையே மீ மகன் என்ற இக் கருத்தமைவு சுட்டுவதாகக் கொள்ளலாம். பி.ஆர்.ந.

*மீமாம்சை*: இந்திய மெய்ப்பொருளியல்களில் வேதத்தின் தலைமையை முழுமையாக ஏற்பதில் முதன்மையானது மீமாம்சை ஆகும். மீமாம்சை என்ற சொல் முறையாக ஆராய்தல் என்று பொருள்படும். வேதத்தின் முதற் பகுதியாகிய பிராமணங்களையும், அவற்றின் கருப்பொருளாகிய தருமத்தையும் சடங்கு

களையும் ஆராயும்பொழுது ஏற்படும் ஐயப்பாடுகளை அகற்றுதற்குரிய நியாயங்களின் தொகுதியே மீமாம்சை ஆகும். பிராமணங்கள் வேதத்தின் முதற் பகுதியாக (பூர்வமாக) அமைந்திருப்பதால் அவற்றைக் கருதும் மீமாம்சை பூருவ மீமாம்சை எனவும், பிராமணங்களின் கருப்பொருளான தருமத்தை அல்லது கருமத்தைக் (வினை) கருதும் மீமாம்சை கரும மீமாம்சை எனவும் வழங்கப்படுகின்றன.

மீமாம்சையின் அடிப்படை நூல் சைமினியின் (கி.மு.400) மீமாம்ச சூத்திரமாகும். அதற்குச் சபரர் (கிமு. 200) தம் பெயரில் உரையும், பாடியமும் எழுதியுள்ளார்.சாபரபாடியம் பிரபாகரராலும் (கி.பி. 650), குமரில பட்டராலும் (கி.பி.700) இருவகையில் விளக்கப்பட, அவர்கள் பெயராலேயே இரு மீமாம்சைப் பிரிவுகள் தோன்றின. பிரபாகரர் நூல் பிரகதி என்பதாகும். குமாரிலரின் சாபரபாடிய விளக்கம் சுயோக வார்த்தீகம், தந்திர வார்த்தீகம், குப்டீகை என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. அவ்விரு பிரிவுகளுக்கும் தனித் தனியே நூல்களும், விளக்கவுரைகளும் நிரம்ப உள்ளன. முராரி மிசிரர் என்பவர் மீமாம்சையில் மூன்றாம் பிரிவைத் தொடங்கினார் அது பெரும்பாலோரால் அறியப்படாததாகும்.

அறிவைப் பெறுகின்ற வழிகளாகப் பாட்ட மீமாம்சகர்கள் காட்சியளவை, கருதல் அளவை, உரையளவை, ஒப்புமை, அருத்தாபத்தி, அனுபலப்தி அல்லது இன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றனர். முதல் இரு அளவைகள் நியாயவைசேடிகர் கருதுவதை ஒத்தன. ஒப்புமையை மீமாம்சகர்கள், வனத்துறையில் கவயம் பசுவைப்போன்ற ஒரு விலங்கு என்று கூறியதை, வனத்தில் கவயத்தைப் பார்த்தவுடன் அவர் கூறியதை நினைவுகூர்ந்து பசு கவயத்தைப் போன்றது என்ற அறிவைப் பெறுவது என்று கருதுகின்றனர். பிற வகைகளில் விளக்க முடியாத ஓர் உண்மையை விளக்க ஒன்றை ஊகித்து வெளிப்படுத்துவது அருத்தாபத்தியாகும். சான்றாக உயிருடன் இருக்கும் ஒருவன் வீட்டில் இல்லையெனில், வெளியில் எங்காவது உள்ளான் என்று ஊகிப்பது. ஒரு பொருள் இல்லை யென்று அறிவது இன்மையாகும். ஆறுவகை அறிவு வழிகளில் முதல் ஐந்தினை மட்டும் ஏற்பர் பிரபாகரர்.

மீமாம்சகர்களுக்கு உரையளவையே மேலான அறிவைப் பெறும் வழியாகும். வேதத்தை மட்டுமே சிறந்த உரையளவையாக அவர்கள் ஏற்கின்றனர். அதற்குக் காரணமாக அவர்கள் பின்வருவனவற்றைக் கூறுகின்றனர். 1) வேதம் நிலைபேறுடையது. ஏனெனில் அது எவராலும் படைக்கப்படாதது. அது இறைவன் படைப்புமன்று. வேதத்தின் நிலைபேறுடைய தன்மையை மொழிநூல் அடிப்படையில் மீமாம்சகர்கள் நிறுவுகின்றனர். அவர்கள், சொல்லுக்கும் அதன் பொருளுக்குமிடையே உள்ள உறவு இயல்பான ஒன்றானதால் நிலைபேறுடையது என நம்புகின்றனர். சொல்லை உருவாக்கும் எழுத்துகள் பகுதிகளற்றவை; எங்கும் பரவி நிற்பவை; நிலையானவை. எழுத்து பலவகையாக ஒலிக்கப்பட்டாலும் அதன் ஒலி மாறுவதில்லை. மாறாத ஒலிகளையுடைய எழுத்துகள் கொண்டதுதான் சொல். எனவே, சொல்லின் பொருளும் மாறாத நிலைபேறுடையது. இம்முறை அனைத்துச் சொற்களுக்கும் உரியதெனினும், வேதத்தில் சொற்கள் அடைக்கப்பட்டிருக்கும் அநுபூர்வி முறையே அவற்றை நிலைபேறுடையனவாக்குகின்றது. ஏனையவற்றில் சொற்களமைப்பு அம்முறையினது அன்று. 2) வேதம் தன் வெளிப்பாடும் தன் ஏற்பும் கொண்டது. எனவே, அது தரும் அறிவும் ஏற்புடையது; உண்மையானது. 3) ஏனைய அறிவைப் பெறும் வழிகள் காணப்படுகின்ற உலக அறிவைத் தருகின்றன. வேதம் புலன்கடந்த பொருட்களைப் பற்றிய அறிவைத் தருகின்றது. 4) வேதம் தருகின்ற அறிவில் தன் முரண்பாடு கிடையாது. வேதத்தின் பொருளைச் சரியாக அறிந்து கொள்வதற்கு வேண்டிய கோட்பாடுகளை அளிப்பதே மீமாம்சையின் குறிக்கோள்.

வேதத்தின் பொருள், தருமம் அல்லது சமயக் கடமையைக் கற்பிப்பதாகும். வேதத்தில் கூறப்பட்டிருப்பதுதான் தருமம். வேதக்கட்டளைகள் செய்ய வேண்டியவை, தவிர்க்க வேண்டியவை என இருவகைகளில் உள்ளன. வேதத்தில் கூறப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதால் ஒருவன் மேலான நன்மையை அடைவான். வேதம் அறுவகைக் கடமைகளைக் குறிப்பிடுகின்றது. அவை 1) பொதுவான கடமைகள் (மனிதன் மனிதனாக இருப்பதனால் செய்யவேண்டிய கடமைகள்), 2) வருகைக் கடமைகள் (தன் இனத்தினால் செய்யவேண்டிய கடமைகள்), 3) ஆசிரமக் கடமைகள் (வாழ்வின் நிலையில் செய்யவேண்டிய கடமைகள்), 4) நித்திய கடமைகள் (வழிபாடு போன்றவை), 5) நிமித்தக் கடமைகள் (சில காரணங்களின் பொருட்டுச் செய்யவேண்டியவை), 6)காமியக் கடமைகள் (விரும்பினால் மட்டும் செய்ய வேண்டியவை).

வேதக் கடமைகள் உறுதியான பலன்களைத் தருபவை. அவை வேள்விகளாகச் செய்யப்பட வேண்டியவை. கடமைகள், செய்யப்பட்டு முடிந்தவுடன், காணப்படாததொரு சக்தியினைச் செய்பவனின் உள்ளத்தில் உண்டாக்குகின்றன. அச்சக்தி அதிருட்டம் எனப்படும். அதிருட்ட சக்தி கடமையின் பயனை அது முதிர்ந்த நிலையை அடையும் வரைக்

கும் தாங்கி நிற்கிறது. அவ்வாறு வேள்விக்கும் அதன் பலனிற்கும் இடையே உள்ள கால-இடைவெளியைத் தொடர்புபடுத்துவது அரிது என்று மீமாம்சகர்கள் கருதுகின்றனர்.

தொடக்கக் காலத்தில் வேதக் கடமைகளின் பயனாக மனிதன் துறக்க உலகை எய்துவான் என்றும், அதுவே மனிதனின் முடிநிலையான குறிக்கோள் என்றும் மீமாம்சகர் கருதினர். பின்னர், வீடுபேறு அடைதலே முடிநிலையானது எனக் கூறினர். வீடுபேறு அடையச் சார்பற்ற கடமைகளான நித்திய கடமைகளே சிறந்த வழியாகும். ஆனால், காமியக் கடமைகளைத் தவிர்த்து ஏனைய கடமைகளைத் தவிர்க்கக் கூடாது. வேதக் கடமைகளுக்கு இன்றியமையாத தன்மையை அளிக்க விரும்பிய மீமாம்சகர்கள் வீடுபேறு அளிக்கக் கடவுள் என்று ஒருவர் தேவையில்லை என்று கருதினர். மேலும், இயலுலகமும் இன்று போலவே என்றும் நிலையாக இருப்பதால் அதனைப் படைக்கவோ, ஒடுங்கச் செய்யவோ கூட கடவுள் தேவையற்றவராகிறார் என்றும் அவர்கள் கருதுகின்றனர். அவ்வாறு கடவுளைப் பற்றிய அவர்கள் கருத்து மாறுபடினும், அவர்களின் மொழி நூல் ஆய்வும், அதனால் வேதத்தைப் புரிந்துகொள்வதில் ஏற்பட்ட தெளிவும் அரியனவாகும். பி.ஆர்.ந

**மீர் காசிம்**: இந்தியாவில் கி.பி.1760 முதல் 1763 வரை வங்காள நவாபாக இருந்த மீர் காசிம் (Mir Kasim) பாரசீகத்தில் தோன்றிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராவர். இவர் தந்தை வங்காளத்தில் ஓர் ஊழிய நில உரிமையாளராக (Jaghirdar) இருந்தார். வங்காள நவாபு மீர் சாபரின் மகளை மீர் காசிம் மணந்து கொண்டார். மீர் சாபர் நவாபாகப் பட்டத்திற்கு வந்தபின் அவருடைய மருமகன் மீர் காசிமின் செல்வாக்குப் பெருகியது காசிம் கல்வியறிவு வாய்ந்தவர். கணிதத்திலும் சோதிடத்திலும் இவருக்குச் சிறந்த பயிற்சி இருந்தது. இவர், பிளாசிப் (Plassey) போருக்குப் பின் நவாபு சிராசு உத்தௌலாவைத் துரத்திச் சென்று அவரைச் சிறைப்படுத்தினார். அப்பழைய நவாபைச் சேர்ந்த பெண்டிரின் அணிகலன்களை எல்லாம் கைப்பற்றிக் கொண்டார்.

மீர் சாபரின் வீழ்ச்சி நிலையைக் கண்ட மீர் காசிம் தாம் அதனால் பயனடைய முயன்றார். ஆங்கிலேயரின் உதவியையும் நாடினார். தாம் பதவி பெறுவதற்காகத் தம் மாமனாரைக் கொலை புரியவும் துணிந்தார். மீர் காசிம் கி.பி.1760-ஆம் ஆண்டு அக்டோபர் மாதப் புரட்சியின் விளைவாக நவாபு ஆனார். உடன்படிக்கையின்படி ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டிய கடன்களைக் கொடுத்ததுடன் பல பரிசுகளையும் வழங்கினார். இரண்டு இலட்சம் பொற்காசுகள்வரை ஆங்கில ஆலோசனைக் குழுவினர் மீர் காசிடமிருந்து பரிசாகப் பெற்றனர். ஆங்கிலேயப் படையின் செலவிற்காக ஆங்கிலேயருக்கு வர்த்தமானபுரம் (Burdwan), சிட்டகாங்கு, மிதுனபுரி என்ற மூன்று மாவட்டங்களையும் புதிய நவாபு அளித்தார்.

தொடக்கத்தில் மீர் காசிமின் ஆட்சி சிறப்புற்றிருந்தது. நிதி நிலைமையை ஒழுங்கு செய்யப் பல சீர்திருத்தங்களை இவர் மேற்கொண்டார்: செலவுகளைக் குறைக்கப் பல முறைகளைக் கையாண்டார். தம் சொந்தச்செலவுகளையும் குறைத்துக் கொண்டார். மிகுந்த செலவிற்குக் காரணமாயிருந்த விலங்குக் காட்சிச் சாலையை மூடினார். ஆங்கிலேயரின் உதவி கொண்டு பாட்னாவிலும், பீகாரிலும் தம் அதிகாரத்தை நிறுவினார்.

**ஆங்கிலேயருடன் போராட்டம்** (கி.பி. 1762-1763) மீர் காசிம் தம் சீர்திருத்தங்களை நிறைவேற்றி வருகையில் ஆங்கிலேயக் குழும ஊழியர்களால் இவருக்கு இடையூறுகள் விளைந்தன. உப்பு, வெற்றிலை, புகையிலை முதலிய பொருட்களில் உள்நாட்டு வாணிகம் புரிந்து வந்த ஆங்கிலேயர் தாம் செலுத்த வேண்டிய வரிகளை நவாபுக்குக் கொடுக்கவில்லை. தமக்கு அந்த உரிமை இருப்பதாக அவர்கள் முறையற்ற வகையில் வாதாடினர். குழும ஊழியர்கள் தனித்த முறையில் வாணிகம் செய்வதைத் தடுக்க வேண்டுமென்பது மீர் காசிமின் திட்டமாகும். பாட்னாவில் ஆங்கிலேயப் பண்டகசாலையின் தலைவராக எல்லிசு(Ellis) என்பார் அமர்ந்தபின் நவாபிற்கும் ஆங்கிலேயருக்கும் இடையே இருந்த உறவு கி.பி. 1761-ஆம் ஆண்டில் கேடுற்றது. அடுத்த ஆண்டில் நவாபு தம் தலைநகரை மூர்சிதாபாத்திலிருந்து மாங்கீர் என்னும் இடத்துக்கு மாற்றி அதை நன்கு காவல் செய்யலானார். ஆங்கிலேயர் மீர் காசிமிடம் சென்று ஓர் உடன்பாடு செய்து கொண்டனர். அதன்படி ஆங்கிலேயர் 9 விழுக்காடு உள்நாட்டு வாணிக வரியைச் செலுத்த வேண்டுமென்றும் சச்சரவுகளைத் தீர்த்துவைக்கும் உரிமை நவாபிற்கும் உண்டு என்றும் முடிவாயிற்று. ஆனால், கல்கத்தாவிலிருந்த ஆலோசனைக் குழுவினர் அவ்வுடன்பாட்டை ஏற்க மறுத்தனர். அவர்கள் மனம் போரையே நாடியது. ஆளுநர் கைக்கூலி பெற்றுக் கொண்டு ஆங்கிலேயரின் உரிமைகளை அழிக்கிறார் எனக் கூறினர். பின்னர் நவாபு உள்நாட்டுப் பொருட்கள் மீது இருந்த வரிகளை இரண்டு ஆண்டுக் காலத்திற்கு நீக்கினார். ஆங்கிலேயர் அதனால் அடங்கிவிடுவர் என்று அவர் கருதினார். ஆனால், அது நடைபெறவில்லை. சிக்கல்களைத் தவிர்க்கப் போரைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று. எல்லிசு பாட்னாவைக் கைப்பற்றினார். நவாபு கட்டுப்பாடுகளற்று உரிமையுடன் இருக்கவே வேண்டினார்

ஆனால், ஆங்கிலேயர் அதற்கு இடம் கொடாமல் பல வணிக உரிமைகளைக் கேட்டு வந்தனர். எனவே, இரு சாரார்க்குமிடையே போர் மூண்டது.

**மீர் காசிமின் இயல்பு:** நவாபு மீர் காசிம், மீர் சாபரைப் போன்றவரல்லர். இவரிடம் ஆற்றலும், பேரவாவும் இருந்தன. ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்டு இருப்பதை இவர் விரும்பவில்லை. ஆட்சி முறையில் இவருடைய திறமை பாராட்டத் தக்கது. சீர்கேடுகளை நீக்கி அரசியலை நடத்த இவருக்கு ஆற்றல் இருந்தது. இவர் நிதி நிலைமையைச் சீர் செய்தார். வருவாய், முறை வழங்கல் முதலிய செய்திகள் தொடர்பான துறைகளைச் சிறந்த முறையில் மாற்றி அமைத்தார். பிரபுக்களின் அதிகாரங்களை ஒடுக்கினார். அவையாவும் எளிய செயல்கள் அல்ல. பொதுப் பணிகள் ஆற்றும் ஆர்வம் இவரிடமிருந்தது. பிறரைப் பற்றித் தெரிந்து கொள்ளும் அறிவுக் கூர்மையும், பிறர் குறைகளைத் தன்னலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் தந்திர முறையும் இவர்பால் விளங்கின. இவர் குழுமப் படையினின்று விலகியோரைத் தம் படையில் அமர்த்தி அவர்களுக்கு ஐரோப்பிய முறையில் போர்ப் பயிற்சி கொடுத்தார். வெடிமருந்து, துப்பாக்கிகள் முதலியன செய்வதற்குப் போர்க் கருவிச் சாலைகளை ஏற்படுத்தினார். மீர் காசிம் இந்தியச் சிற்றரசர்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்கினார். அறிவாற்றல், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்டார். ஆனால், மீர் காசிம் உறுதியான ஒரு போர் வீரர் அல்லர். தனித் தலைமை பூண்டு நிலைமைகளைக் கையாளும் திட்பம் அவரிடமில்லை. கொடுந் தன்மையும் பிறரை ஐயுறும் சஞ்சல மனப்பான்மையும் இவர்பால் காணப்பட்டன. பாட்னாவில் இவர் நிகழ்த்திய கொலை மறக்கற்பாலதன்று. இவர் தம்மிடமிருந்த இந்தியக் கைதிகளை மணல் மூட்டைகளுடன் பிணைத்துக் கங்கை ஆற்றில் தள்ளிக் கொன்றார். பெரு நிலக்கிழார்களைக் கசக்கிப் பிழிந்தார். திறமைக் கூறுகள் பலவற்றை இவர் பெற்றிருந்தாலும் அக்காலத்தவருள் பெரும்பான்மையினர் இவரை வெறுத்தனர்.

ஆங்கிலேயருடன் நடத்திய போரில் தோற்று அயோத்திக்கு ஓடிய மீர் காசிமும், அந்நாட்டு நவாபு சூசா உத்தௌலாவும்(கி.பி. 1754-1775), மொகலாயப் பேரரசர் இரண்டாம் சா ஆலமும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயர் வசமிருந்த பாட்னாவின் மேல் படையெடுத்தனர். ஆனால், அதை இவர்களால் கைப்பற்ற முடியவில்லை. ஆகவே, இவர்தம் படைகள் பீகாரில் உள்ள பக்சாருக்குப் பின்வாங்கின. ஆங்கிலப் படைத் தலைவர் மன்றோ (Munro) அப்படைகளை, கி.பி. 1764-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பக்சார்ப் (Buxar) போரில் தோற்கடித்தார். மீர் காசிம் தம்மிடமிருந்த அனைத்தையும் இழந்து வடமேற்கு இந்தியாவிற்கு ஓடினார். பக்சார்ப் போர்க்களத்திலிருந்து தப்பியோடிய பிறகு மீர்காசிம் நாடு கடந்து அலைந்து திரிந்து பின் கி.பி. 1777-இல் இறந்தார். இரா.கி.

**துணை நூல்:**

**சத்தியநாத ஐயர், ஆர்., பாலசுப்பிரமணியன், டி.,** இந்திய வரலாறு, மூன்றாம் பாகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1961.

***மீர் சாபர்:*** இவர் கி.பி.1757 முதல் 1760 வரை வங்காள நவாபாக இருந்தார். மீர் சாபர் (Mir Jafar) திறமை அற்றவராகவும், ஆட்சிக் காலம் முழுவதும் அதிகாரமில்லாத நவாபாகவும் செயற்பட்டார். உண்மையான அதிகாரம் அனைத்தும், ஆங்கிலேயத் தலைவர் கிளைவிடமே (Clive) இருந்தது. இவர் பதவி ஏற்ற பொழுது பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. நிதி நிலைமை மிகவும் சீர்கேடாக இருந்தது. முகலாயப் பேரரசு சரிந்த பின் ஆங்கிலேயரின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தவர் வங்காள நவாபாகிய சிராசு உத் தௌலா ஆவார். அவரை விரும்பாத ஆங்கிலேயர், தமக்கு உதவியாக மீர்சாபரை கி.பி. 1757-இல் நடைபெற்ற பிளாசிப் போரின் மூலம் வங்காள நவாபாக்கினார். அதன் பயனாக ஆங்கிலேயர் கல்கத்தாவிற்குத் தெற்கே இருந்த 24 மாவட்டங்களை மானியமாகப் பெற்றனர். கிளைவு மீர் சாபரிடமிருந்து ஏறத்தாழ 2,34,000 பொன் நாணயங்களைக் கைக்கூலியாகப் பெற்றார். மேலும், ஆங்கிலக் குழுமம் தமக்குச் சேர வேண்டிய பெரும் தொகையைப் பல தவணைகளாகப் பெற்றது. கல்கத்தா சபையில் உள்ள எஞ்சிய உறுப்பினர் மீர்சாபரிடமிருந்து போதிய பணத்தைச் சுரண்டினர். எனவே, மீர் சாபர் தம் படை வீரர்களுக்குக் கூட ஊதியம் கொடுக்க முடியாத நிலையில் பெரும் நிதிச் சிக்கலைச் சந்தித்தார்.

துர்லபாரி, இராமநாராயண் ஆகிய இந்திய அதிகாரிகளுக்கு எதிராகத் தவறிழைத்தார். அதன் விளைவாக நாடு முழுவதும் கிளர்ச்சி தோன்றியது. கிளைவின் முயற்சி காரணமாக மீர் சாபருக்கும் இந்திய அதிகாரிகளுக்குமிடையில் அமைதி ஏற்பட்டது.

பின்பு மீர் சாபர் தச்சுக்காரர்களிடமிருந்து (The Dutch) எழுந்த சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. வங்காளத்தில் ஆங்கிலேயரின் முன்னேற்றம் தச்சுக்காரர்களுக்கு அச்சத்தை விளைவித்தது. தச்சுக்காரர், கி.பி. 1759 - இல் ஏற்பட்ட தச்சு-ஆங்கிலேயத் தகராறில் தோற்கடிக்கப்பட்டனர்.

கிளைவ் கி.பி. 1760-இல் வங்காளத்தை விட்டுச் சென்ற பிறகு மீர் சாபருக்குப் பல இடையூறுகள் விளைந்தன. இரண்டாம் மொகலாயப் பேரரசர் சா ஆலம் பீகாரிலும் வங்காளத்திலும் படையெடுப்பை நிகழ்த்தினார். ஆனால், ஆங்கிலேயர் அவர் வெற்றி பெறாமல் தடுத்து விட்டனர். அதற்காக மீர் சாபர் கிளைவிற்குக் கல்கத்தாவின் தென் பகுதி வருமானத்தை அளித்தார். மீரான் இறந்து விட்டபடியால் மீர் சாபருக்குப் பின் யார் வங்காள நவாபு ஆவது என்ற கேள்வி எழுந்தது. இடைக்கால ஆளுநராக இருந்த கால்வெல் மீர் சாபரை வெறுத்தார். நவாபு தச்சுக்காரர்களுக்கும் சா ஆலத்திற்கும் ஆதரவு காட்டியதால் ஆங்கிலேயர் சினம் கொண்டனர். இவர் தொடர்ந்து பதவி வகிப்பதைக் கால்வெல் விரும்பவில்லை. மேலும், குழும அலுவலர்களுக்குப் போதிய அளவு கையூட்டுக் கொடுக்க மீர் சாபரால் முடியவில்லை. எனவே, அவர்கள் இவர் தொடர்ந்து பதவியிலிருப்பதை விரும்பவில்லை. சா ஆலத்திற்கும், தச்சுக்காரர்களுக்கும் நிறையப் பணம் கொடுக்க நேர்ந்தது. மராத்தியர் வங்காளத்தின் மீது படையெடுத்த போது மீர் சாபர் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். அதனால் ஆங்கிலேயப் படையைப் பராமரிக்கும் பொறுப்பையும் இவர் ஏற்க நேர்ந்தது. கால்வெல் என்ற ஆளுநருக்குப் பின் வந்த வான்சிட்டார்ட்டு மீர் சாபரின் மருமகனான மீர் காசிம் என்பாருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் விளைவாக மீர் சாபர் பதவியிழந்தார். மீர் காசிம் வங்காள நவாபு ஆனார். கல்கத்தாவில் தங்கியிருந்து மீர் சாபர் ஆங்கிலேயரின் பாதுகாப்பைப் பெற்றார். அவரைப் பதவியினின்று விலக்கியது நேர்மையற்ற செயல் எனச் சில ஆங்கிலேய அலுவலர்கள் கருதினர்.

ஆங்கிலேயருக்கும் மீர் காசிமிற்கும் ஏற்பட்ட போரில் ஆங்கிலேயர் மீர் காசிமைத் தோற்கடித்து, மீர் சாபரை மீண்டும் 1763-இல் வங்காள நவாபு ஆக்கினர். இவரிடமிருந்துவேண்டிய உரிமைகளை ஆங்கிலேயர்பெற்றனர். மீர் சாபரின் அவையில் ஓர் ஆங்கிலேயப் பேராளர் நிலையாக நியமனம் பெற்றார். நந்தகுமார் என்பார் தலைமை அமைச்சர் பதவி ஏற்றார். மீர் சாபரிடமிருந்து பொருள் பறிப்பதில் வாரன் ஏசுட்டிங்சும் பங்கு கொண்டார். மீர் சாபர் தாம் மீண்டும் முடிசூட்டிக் கொண்டது தவறு என்பதை உணர்ந்தார். இவர் 1765 – ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் காலமானார். இரா.கி.

**துணை நூல்:**

**சத்தியநாத ஐயர், ஆர்., பாலசுப்பிரமணியன், டி.,** இந்திய வரலாறு, மூன்றாம் பாகம், அண்ணாமலைப பல்கலைக்கழகம், 1961.

*மீர் சும்லா*: இவர் பாரசீகத்தைச் சேர்ந்த ஒரு வணிகர். துணிச்சல் மிக்க வீரருமாவார். இயற்பெயர் முகம்மது சையது. மீர் சும்லா(Mir Jumla) என்று கூறப்பட்டார். இந்தியாவிற்கு வந்த இவர் தென்னிந்தியாவில் கோல்கொண்டாவின் சுல்தான் குதுப் சா (Kutub Sha) வின் அமைச்சராகப் பணியாற்றினார்.

மீர் சும்லா கருநாடகப் பகுதியில் வளம் நிறைந்த பகுதியைத் தம் ஆற்றலினால் கைப்பற்றிச் சுல்தானுக்குக் கப்பம் செலுத்தாமல் சுதந்திரமாக ஆட்சி செய்தார். இவர் கி.பி. 1647-ஆம் ஆண்டு சென்னையைச் சுற்றியுள்ள பகுதியைக் கைப்பற்றினார். ஆங்கிலேயருடன் நல்லுறவு கொண்டிருந்த மீர் சும்லா பிறகு அவர்களுடன் உடன்பாடு செய்து கொண்டு அப்பகுதியை ஆங்கிலேயருக்கு விட்டுவிட்டார்.

மீர் சும்லா கோல்கொண்டா சுல்தானின் அவையில் தம் மகனான முகமது அமீன் என்பவரைத் தம் பேராளராக விட்டு வைத்தார். முகமது அமீன், சுல்தானுக்குச் சரியானபடி மரியாதை கொடுக்கத் தவறினார். மீர் சும்லாவுக்காகச் சுல்தான் அதைப் பொறுத்துக் கொண்டார். ஆனால், ஒரு நாள் முகமது அமீன் அளவுக்கு மீறி மது அருந்தி அவைக்கு வந்து சுல்தானின் இரத்தினக் கம்பளத்தில் வாந்தியெடுத்து அவமரியாதையாக நடந்து கொண்டார். இதைத் தாங்கமாட்டாத சுல்தான் மீர் சும்லாவின் மகனையும் அவரது குடும்பத்தாரையும் சிறைப்படுத்தி அவர் சொத்துகளைப் பறிமுதல் செய்தார்.

சுல்தான், மீர் சும்லாவை ஒடுக்குவதற்குக் காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். மீர் சும்லாவும் தம் மகனுக்கு நேர்ந்த கதியை எண்ணி வருந்திச் சுல்தானுக்கெதிராகச் செயற்பட முனைந்தார். அச்சமயத்தில் முகலாயப் பேரரசின் தக்காண அரசப் பேராளராக இருந்த ஔரங்கசீபுடன் தொடர்பு கொண்டு தாமும், தம் மகனும் பேரரசின் கீழ்ப் பணிபுரிய விரும்புவதாகத் தெரிவித்தார். ஔரங்கசீபு மொகலாயப் பேரரசரான தம் தந்தை சாசகானிடம் அச்செய்தியைத் தெரிவிக்க அவரும், கி.பி. 1655-இல் மீர் சும்லாவையும் அவர் மகனையும் தம் கீழ்ப் பணியில் சேர்த்துக் கொண்டதாக அறிவித்தார். இதையெல்லாம் அறியாத கோல்கொண்டாவின் சுல்தான், மீர் சும்லாவின் மகனை விடுதலைசெய்ய மறுத்தார். அதைக் காரணமாகக் கொண்டு ஔரங்கசீபு கோல்கொண்டா மீது படையெடுத்தார்.

மீர் சும்லா பேரரசரின் அவைக்குச் சென்று அவருக்கு ஏராளமான விலைமதிப்பற்ற பொருள்களைப் பரிசளித்தார். பேரரசர் சாசகான் மீர் சும்லாவைத் தம் தலைமை அமைச்சராகவும், 6,000

குதிரைப்படைக்குத் தலைவராகவும் (மன்சப்தார்) நியமித்தார்.

பேரரசரின் தலைமை அமைச்சரான பின்னர் மீர் சும்லாவின் தூண்டுதலினாலும், உதவியாலும் ஔரங்கசீபு பீசப்பூரின் மீது படையெடுத்துப் பீசப்பூர் சுல்தானைத் தோற்கடித்தார். சாசகானுக்குப் பின் பேரரசரான ஔரங்சீபு மீர் சும்லாவைக் கி.பி. 1660 இல் வங்காளத்தின் அரசப்பேராளராக நியமித்தார்; அப்பகுதியில் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கூச் பீகார் அரசனையும், அசாம் அரசனையும், ஒடுக்குமாறு மீர் சும்லாவுக்கு ஆணையிட்டார். கூச்பீகார் அரசனைத் தோற்கடித்தபின் மீர் சும்லா கி.பி. 1662-இல் அசாம்மீது படையெடுத்தார். அசாம் படையெடுப்பின்போது மீர் சும்லா பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. வெள்ளம், சரியான உணவின்மை, கொடும் நோய்கள் போன்றவற்றால் துன்பம் ஏற்பட்டது. மீர் சும்லா தமக்கென்று தனிச் சலுகை ஏதும் எடுத்துக்கொள்ளாமல் ஒரு சாதாரணப் போர் வீரனைப் போன்று அல்லற்பட்டார். முடிவில் அசாம் மன்னருடன் மீர் சும்லா ஓர் உடன்பாடு செய்துகொண்டார். அதற்குப்பின் அசாமிலிருந்து திரும்பும் வழியில் இவர் நோய்வாய்ப்பட்டு தாக்கா நகரை அடையும் முன் கி.பி.1663-ஆம் ஆண்டு உயிர் நீத்தார். ஆ.ஜெ.

*மீரத்து*, இந்தியாவில் உத்தரப் பிரதேச மாவட்டத்திலுள்ள ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரம். வேளாண்மைக்கும், வேளாண்மைப் பொருட்களின் விற்பனைக்கும் இந்நகரம் சிறப்பு வாய்ந்தது. மீரத்தில் (Meerut) மாவு அரைக்கும் தொழிலும் எண்ணெய் உற்பத்தியும் வளர்ந்துள்ளன. இந்நகரை கி.பி.1192 – இல் முகம்மதியர், இந்துக்களிடமிருந்து கைப்பற்றினர். நொண்டித் தைமூர் கி.பி.1399–இல் இங்குச் சூறையாடினான். பிறகு இது முகலாயப் பேரரசுக்கு உட்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து இந்திய வீரர்கள் போரிட்டபொழுது கி.பி 1857–ஆம் ஆண்டு மே மாதம், முதல் எதிர்ப்புக் கலகம் மீரத்தில்தான் தோன்றியது. ஆனால், ஆங்கிலேயர் அதை அடக்கி, இநநகரைத் தம் ஆட்சியின் கீழ் வைத்துக்கொண்டனர். சுதந்திர இந்தியாவில் இது மீண்டும் வளர்ச்சியுறத் தொடங்கியது. இதன் மக்கள்தொகை 53,80,000 (1981). மீரத்துப் பல்கலைக் கழகம் 1966–இல் நிறுவப்பட்டது தெ.பா.

*மீரத்துப் பல்கலைக்கழகம்*: ஆக்ராப் பல்கலைக்கழக எல்லைக்குள் பெருகி வளர்ந்து விட்ட கல்லூரிகளின் எண்ணிக்கையால் ஏற்பட்ட பல்வேறு பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டும், உள்ளூர் மக்களின் உணர்வுகளை மதிக்கும் பொருட்டும் புதிய மீரத்துப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. மாநிலச் சட்ட மேலவை 1965-இல் மீரத்துப் பல்கலைக்கழகச் சட்டத்தை நிறைவேற்றி மீரத்துப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியது. எனினும், 1973-இல் நிறைவேற்றப்பட்ட உ.பி. மாநிலப் பல்கலைக் கழகங்களின் சட்டம், முற்கூறிய சட்டத்தை விலக்கிச் சில மாற்றங்களுடன் மீண்டும் 1974 - ஆம் ஆண்டில் உ.பி. பல்கலைக்கழகங்கள் (மீள இயற்றலும் திருத்தமும்) எனும் பெயரில் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி இப் பல்கலைக்கழகம் புலந்து சாகர், மீரத்து, முசாபர் நகர், சகரான்பூர், காசியாபாது ஆகிய மாவட்டங்கள் அடங்கிய மீரத்துப் பகுதியை ஆட்சிப் பகுதியாகக் கொண்டு இயங்கத் தொடங்கியது. இது, இரு நிறுவனங்களையும் ஓர் உட்கல்லூரியையும் 59-இணைப்புக் கல்லூரிகளையும் கொண்டுள்ளது.

பல்கலைக்கழக நூலகத்தில் 88,221 நூல்களும் 955 பருவ ஏடுகளும் உள்ளன. நுண்பட, நுண்ணட்டை வசதிகளும் இங்குள்ளன, செய்முறைத் தேர்வு இல்லாத இளங்கலை, முதுகலை, இளநிலை வணிகவியல் ஆகியவற்றிற்குள்ள தேர்வுகளில் 1973–ஆம் ஆண்டின் சட்டப்படி பல்கலைக்கழக எல்லைக்குள் வாழ்வோர் தனி மாணவராகச் சேர முடியும். முதுநிலைத் தேர்வில் வென்றவர்கள் தாம் பெற்ற தேர்வு நிலையை உயர்த்தும் பொருட்டு மீண்டும் அத்தேர்வு எழுதவும் இசைவுண்டு. இளங்கலை வகுப்புகளுக்கான அஞ்சல்வழிக் கல்வியையும் இப்பல்கலைக்கழகம் நடத்துகிறது.

மாணவ, மாணவியருக்கெனத் தனி விடுதிகளை அமைத்துள்ள இப்பல்கலைக்கழகத்தில் ஒரு முழுநேர மருந்தகரையும், பகுதிநேர மருத்துவரையும் கொண்ட மருந்தகம் செயற்படுகிறது.

உருசிய மொழியில் சான்றிதழ், பட்டயப்படிப்பு பெறும் வாய்ப்பு இப்பல்கலைக்கழகத்தில் உண்டு. உ.பி. மாநில ஆளுநரை வேந்தராகக் கொண்ட இப்பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர், பதிவாளர், மாணவர் நல முன்னவர், விளையாட்டு இயக்குநர், நூலகப் பொறுப்புப் பேராசிரியர், கலை, மருத்துவம், கல்வி, வணிகம், சட்டம், அறிவியல், வேளாண்மை ஆகிய ஏழு பகுதிகளுக்கான தனித்தனி முன்னவர்கள் உள்ளனர். எஸ்.சு.

*மீராபாய்*: இவர் வடஇந்தியாவில்கி.பி.16 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச் சிறந்த, பக்தி மிக்க பெண்மணியாவார். இவருடைய வாழ்க்கை வரலாறு பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. மீரா

பாய் இராசபுத்திர இனத்தைச் சார்ந்த இரத்தின சிங்கு என்னும் மன்னரின் மகள் என்று கருது கின்றனர்.

மீரா குழந்தைப் பருவத்திலிருந்தே திருமாலிடம் பக்தியுடையவராக இருந்தார். குறிப்பாகக் கண்ணன் மீது தீராக் காதல் கொண்டார். ஆண்டாளைப் போலக் கண்ணனையே தம் கணவனாக வரித்து விட்டார். அதே சிந்தனையோடே வாழ்ந்தார்.

மீராபாய் மேவாரின் மன்னரான இராணா சங் காவின் மகன் போசராசனுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார். இவர், தம் வாழ்நாளைக் கண்ண பிரான் மீது பக்தி செலுத்துவதிலேயே கழித்துவிட எண்ணிப் பல பாடல்களைப் பாடினார்.

மீராபாய் பாடியவற்றில் ஏறக்குறைய 250 பாடல்கள் கிடைத்துள்ளன. அவை இன்றும் மீரா பசன் என்று மக்களால் பெரிதும் போற்றி விரும்பிப் பாடப்படுகின்றன. மீரா வாழ்க்கையின் பிற்பகுதியில் ஒரு துறவியைப் போல வாழ்ந்தார். இந்தியாவில் பக்தியைப் பரப்பிய பெண்களுள் சிறப்பாகக் குறிப் பிடத்தக்கவராக மீராபாய் கருதப்படுகிறார். இறுதி யில் இவர் கண்ணனுடன் இணைந்து விட்டார் என்று கருதுகின்றனர். இவர் மறைந்தாலும், இவருடைய பாடல்கள் இன்றும் திருத்தலங்கள் தோறும், இல்லங் கள் தோறும் ஒலித்துப் பக்திமணம் பரப்பிக் கொண்டே இருக்கின்றன. ஆ.ஜெ.

***மீலாது - உன் - நபி***: பெருமானார் – நபிகள் நாயகம் அவர்களின் பிறப்புப் பெருவிழா மீலாது -உன்-நபி (Meelad – Un – Nabi) எனக் குறிப்பிடப் படுகிறது. உலக உத்தமர், அவனிக்கோர் முன் மாதிரி யாகத் தோன்றியவர்கள் என்று சிறப்பிக்கப் பெறு பவர் நபிகள் நாயகம் ஆவார். பெருமானார் மண் ணுலகில் இறைஒளியின் பகுதியாகவே மனிதவடிவில் வந்துதித்த ஏக இறைவனின் இறுதித் தூதர் ஆவார் கள் என்பது இசுலாமியர்களின் சமய நம்பிக்கை.

நபி வழியில் வரும் இறையடியார்கள் அனைவரும் இறைவணக்கத்தில் ஈடுபடுவதும், இறையன்பு கொள் ளுவதும் போன்று, நபிகளார் மீதும் வற்றாத அன்பு கொள்ளுதலையும் கடமையாகக் கருதுகின்றனர். நபி கள் நாயகத்திற்காக இறைவனிடம் இறைஞ்சுதலும் தொழுகையின் ஒரு பகுதியாகவே சிறப்பாகக் கருதப் படுகின்றது. அதனைச் 'சலவாத்து ஓதுதல்' என்பார் கள். நபிகள் நாயகம் 'இரபியுல் அவ்வல்' (முதல் ராபி- இந்திய வருவாய்க் கணக்குப்படி) மாதம் பிறை 12 - இல் பிறந்தார்கள் அந்நேரம் கி.பி.571 -ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20-ஆம் நாள் திங்கட் கிழமை காலை 4மணி அளவில் ஆகும் எனத் துல்லிய மாக வரலாற்று அறிஞர்கள் கணக்கிட்டுள்ளார்கள். நபிகளார் பிறந்த தினத்தையே மீலாது-உன்-நபி என்று கருதி உலகு எங்கிலும் விழா எடுக்கப்படுகின் றது.

மிலாது- உன்-நபி என்னும் பெருவிழா ரபியுல் அவ்வல் மாதப் பிறை முதல் 12 நாள் கொண்டாடப் பெறும். விழாவின் இறுதி நாளாகிய 12-ஆம் நாளன்று, நபிகள் நாயகத்தின் புகழ்த் துதியாகப் பாக்களும், நல்லுரைகளும் வழங்கிக் கொண்டாடுவர். இவ்விழா தோழமை உணர்வோடும் விருந்தோம்புத லோடும் நிறைவுறும். எச்.அ.

***மீன் வளம்***: இந்தியப் புராணங்கள், வரலாறு, பண்பாடு ஆகியவற்றில் மீன் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. திருமால் மீன் வடிவில் வந்ததாகப் (Matsya Avathara) புராணம் கூறுகிறது. மீன், மீன் வாணிகம், மீனவர் இனம் பற்றியன பெருமளவில் ஓவியங்களிலும், சங்க காலப் பாடல்களிலும் காணப் படுகின்றன.

வேளாண்மையும், கால்நடைகளுக்கு இணையாக மீன் வளமும் (Fisheries) மனித உணவுக்குப் பெரி தும் பயன்படுகின்றன. வேளாண்மை, கால்நடைகள் மூலம் கிடைக்கும் உணவு, வேகமாக வளர்ந்துவரும் உலக மக்கள்தொகைக்குத் தேவையான அளவில் இல்லை. எனவே, மீன்வளத்தைப் பெருக்க முன்னு ரிமை கொடுக்கப்பட்டது. வேளாண்மை, கால்நடை களை வளர்ச்சி அடையச் செய்யக் குறைவாக உள்ள நில வளத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், மீன் வளத்தைப் பெருக்குவதற்கு மிகுந்த அளவில் உள்ள கடல் வளத்தையும், ஆறுகளையும், குட்டைகளையும், குளங்களையும் சிறப்பாகப் பயன் படுத்தலாம். கடல், மனித உணவுக்கு அளவற்ற பொருட்களை அளிக்கும் ஆற்றல் பெற்றுள்ளது.

ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான மக்களுக்கு அன்றாட உணவில் தேவைப்படும் புரதச் சத்து இல்லை என உலக உணவு வேளாண்மை நிறுவனம் (World Food and Agricultural Organisa - tion, Rome) கூறுகின்றது. மனித உணவுக்குத் தேவை யான புரதத்தை மிக எளியமுறையிலும் குறைந்த செலவிலும் அடையக் கடல் வளத்தை ஆராய்ந்த றிந்து முழுமையாகப் பயன்படுத்த முயற்சிகள் ஒவ் வொரு நாட்டிலும் எடுக்கப்பட்டு வருகின்றன. மீனில் 12 விழுக்காடு முதல் 24 விழுக்காடுவரை புரதச்சத்து உள்ளது. மீனில் விரைவில் கரையக் கூடியவாறு புரதம் மிக்குள்ளது. மேலும், அது எளிதில் சீரணம் ஆகும் தன்மையையும் பெற்றுள்ளது. அரிசியையே முக்கிய

உணவாகக் கொண்டுள்ள மக்களுக்கு மீன் சிறந்த உணவாகும்.


மீன்வளத்தை, கடல் மீன்வளம், உள்நாட்டு மீன் வளம் என இரண்டாகப் பிரிக்கலாம். கடல் மீன் உற்பத்தியே உலகின் மொத்த மீன் உற்பத்தியில் பெரும்பங்கு பெற்றுள்ளது. உலக உணவு வேளாண்மை நிறுவனத்தின் 1986 - ஆம் ஆண்டுப் புள்ளிவிவரங்கள் படி உலகின் மொத்த மீன் உற்பத்தியில் 90 விழுக்காடு கடல்மீன் உற்பத்தி ஆகும். கடல் மீன் உற்பத்தி இந்தியாவில் 57 விழுக்காடாகவும், தமிழகத்தில் 58 விழுக்காடாகவும் உள்ளது. இந்தியாவில் 738 ஆயிரம் கண்டி (Tonne) ஆழ்கடல் மீன்வளமும் (Demersal Fishes), 1690 ஆயிரம் கண்டி குறைந்த ஆழ நீர்மட்டத்தில் வாழும் (Pelagic) மீன்களும் உள்ளன என்று தேசிய வேளாண்மைக்குழு (National Commission on Agriculture) கணக்கிட்டுள்ளது. உலகின் தலைசிறந்த மீன் உற்பத்தி செய்யும் நாடுகளுள் இந்தியா 7 - ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. சப்பான் சோவியத்து உருசியா, மக்கள் சீனம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பெரு, நார்வே ஆகியவை மற்ற ஆறு நாடுகள் ஆகும்.

இந்தியா மிகச்சிறந்த கடல்வளத்தைப் பெற்றுள்ளது. இந்தியக் கடற்கரை மேற்கே குசராத்துமாநிலத்தில்உள்ள கண்ட்லாவில் தொடங்கிக் கிழக்கே மேற்கு வங்கத்தில் உள்ள கோலாப்பூர் வரை 5650 கி.மீ. நீள அளவுக்குப் பரந்துள்ளது. வேளாண்மைக்கு அடுத்து முறைப்படுத்தப்படாத தொழில்களில் மீன் பிடித்தல் இரண்டாம் முக்கிய தொழிலாக இந்தியாவில் விளங்குகிறது. மீன்வளத் துறை பல இலட்சம் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிப்பதோடு வலை பின்னுதல், படகு கட்டுதல், கூடை பின்னுதல், மீன் வாணிகம் செய்தல், மீன் ஏற்றுமதி செய்தல், மீன் பதப்படுத்துதல், உப்பு உற்பத்தி செய்தல் போன்ற பல வேலை செய்பவர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பை அளிக்கிறது. எனவே, இந்தியாவின் 6-ஆம் 7-ஆம் ஐந்தாண்டுத் திட்டங்களில் தேசிய திட்டக்குழு மீன் வளத்துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அதன்மூலம் சமுதாயத்தில் நலிந்த,பொருளாதார பலம் குறைந்த மீனவ சமுதாய மக்களுக்குச் சிறந்த முன்னேற்றப் பாதை அமைக்க முடியும் என இக்குழு கருதுகிறது.

இந்தியாவில் கடல் மீன் உற்பத்தியில் கேரளம் முதலிடத்தையும், மராட்டியம் இரண்டாம் இடத்தையும், தமிழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. வெள்ளை இறால் மீன் (Penacid Prawn) உற்பத்தியில் உலகில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. இறால் மீன்கள் சப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இறால் உற்பத்தியில் மராட்டியம் 47.5 விழுக்காடும், கேரளம் 30.7 விழுக்காடும், ஆந்திரம் 5.5 விழுக்காடும், தமிழகம் 4.6 விழுக்காடும், குசராத்து 4.1 விழுக்காடும், கருநாடகம் 3.8 விழுக்காடும் உற்பத்தி செய்கின்றன. இந்தியாவில் பிடிக்கப்படும் பாய்ச்சாளை மீனில் (Oil Sardines) மூன்றில் ஒரு பங்கு கேரளத்தில் பிடிக்கப்படுகிறது. உள்நாட்டு மீன் உற்பத்தியில் மேற்கு வங்கம் முதல் இடத்தையும் தமிழகம் இரண்டாம் இடத்தையும், ஆந்திரம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. இந்தியாவில் 200-க்கும் மிகுதியான மீன் வகைகள் பிடிக்கப்படுகின்றன என்று மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் கணக்கிட்டுள்ளது.

இந்தியாவில் கிடைக்கும் முக்கிய மீன் வகைகள் பின்வருவன: வெள்ளை இறால் (Penacid Prawns) வாவல் (Pomfrets), வஞ்சரம் (Seer Fish), பாய்ச்சாளை (Oil Sardines), சுறா (Shark), உழுவை (Skates and Rays), திருக்கை (Sting-pay), மண்டைக் கெளிறு (Cat Fish), முள்ளு வாளை (Silver Fish) வங்கரவாசி (Bombay Duck), கத்தாளை (Jew Fish) வாசளை (Ribbon Fish), பாரை (Horse Mackerel), காரல் (Silver Bellies), கானான் கெளுத்தி (Indian Mackerel). இவற்றில் வெள்ளை இறால், வஞ்சரம், பாய்ச்சாளை, வாவல் போன்ற வகைகள் உயர்விலை மீன்கள் (High Unit Value Species) ஆகும்.

மீன் வளத்தைப் பெருக்க மத்திய அரசு பல ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவியுள்ளது. மீன்கள் பெருமளவில் உள்ள இடங்களை ஆராய்ந்தறிதல், உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்க வழிமுறைகளை மக்களுக்கு அறிவித்தல், புதிய முறையில் விசைப் படகு மூலம் மீன் பிடிக்க ஏற்ற படகுகளைத் தேர்வு செய்து மீனவருக்கு அறிமுகப்படுத்துதல் போன்றபல கடமைகளை இந்நிறுவனங்கள் செய்து வருகின்றன. கீழ்க்காணும் ஆராய்ச்சி நிறுவனங்கள் சிறப்பு வாய்ந்தவை: 1)மத்தியகடல்மீன்ஆராய்ச்சிநிலையம், கொச்சின் (Central Marine Fisheries Research Institute, Cochin), 2)மத்திய உள்நாட்டுமீன்ஆராய்ச்சிநிலையம், பாரக்பூர் (Central Inland Fisheries Research Institute, Barrackpore), 3) மத்திய மீன் வளத் தொழில் நுட்ப நிலையம், கொச்சின் (Central Institute of Fisheries Technology, Cochin)4) ஒருங்கிணைந்த மீன் வளத் திட்டம்,கொச்சின்(Integrated Fisheries Project, Cochin 5) மீன்வளக் கண்டுபிடிப்புத் திட்டம், பம்பாய் (Exploratory Fisheries Project, Bombay), 6) தேசிய கடல் ஆராய்ச்சி நிலையம், பனாசி (National Institute of Oceanography, Panaji), 7) இந்திய உயிரியல் கழகம், கல்கத்தா (Zoological Society of India, Calcutta).




கடல்வாழ் மீன்கள்





பண்ணையில் வளர்த்தல்





பண்ணையில் வளர்த்தல்

தொட்டிகளில் வளர்தல்

சுவீடன் நாட்டுப் பொருள் உதவியுடன் (Swedish International Development Assistance-SIDA) உலக உணவு வேளாண்மை நிறுவனத்தின் பொறுப்பில் கிழக்காசிய நாடுகளில் மீன் வளத்தைப் பெருக்க ஒரு பெருந்திட்டம் உருவாக்கப்பட்டுக் கடந்த பத்தாண்டுகளாகச் சிறப்பாக நடந்துவருகிறது. சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு இலார்சு ஓ. யங்வால் (Lars O. Engvall) தலைமையில் இந்தியாவில் மீன் வளத்தைப் பெருக்க வங்காள விரிகுடாத் திட்டம் (Bay of Bengal Programme) வகுக்கப்பட்டுள்ளது. அத்திட்டம் கடல் மீன் உற்பத்தியைப் பெருக்குவதிலும் மீனவ சமுதாயத்தின் வாழ்வை மேம்படுத்துவதிலும் பெரும்பங்கு கொண்டுள்ளது. ந.து.

**மீன் வளத்துறை**: மீன் பிடித்தல் இந்தியாவின் பரம்பரைத் தொழில்களில் சிறப்பிடம் பெற்றுள்ள ஒன்றாகும். வேளாண்மை இந்தியக் கிராமங்களின் உயிர் நாடியாக விளங்குவது போல, மீன் பிடித்தல் இந்தியாவின் நீண்ட கடற்பரப்பின் ஓரங்களில் அமைந்துள்ள கிராமங்களின் வாழ்வை நிருணயிப்பதாக உள்ளது. இந்தியாவின் கடல்வளம் மட்டுமன்றி உள்நாட்டு ஆறுகளும், நீர் நிலைகளும், மீன் பிடிக்கும் தொழிலில் பெரும் முன்னேற்றம் அடைய வாய்ப்புத் தருவனவாக உள்ளன. இந்தியாவின் பெருகி வரும் மக்கள் தொகையும், மக்களின் சரிவிகித உணவுத் தேவையும் நாட்டின் அடிப்படைக் குறிக்கோள்களில் உணவு உற்பத்திக்கு முதலிடம் அளிக்கின்றன. இந்நிலையில் மீன் உற்பத்தியில் ஏற்படக்கூடிய வளர்ச்சி நாட்டின் வேலை வாய்ப்பு, வருவாய், உணவு ஆகிய பற்பல தேவைகளை நிறைவு செய்வதாக அமையும்

மேற்கிலும், கிழக்கிலும் நீண்டு தெற்கில் இணையும் இந்தியக் கடற்கரையின் மொத்த நீளம் 5650 கி.மீ. ஆகும். மீன் பிடித்தல், பக்குவப்படுத்துதல் ஆகிய தொழில்கள் அக்கடற்கரைகளை ஒட்டியுள்ள பல ஆயிரம் கிராமங்களின் சிறந்த தொழில்களாக உள்ளன. மேலும், உள் நாட்டில் பாயும் ஆறுகளில் கட்டப்பட்டுள்ள அணைகளின் நீர்ப் பிடிப்புப் பகுதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவையும் மீன் பிடித்தலுக்குப் பெரும் வாய்ப்பை நல்குகின்றன. நமது நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் கடல்மீன்களின் பங்கு 57 விழுக்காடும், உள் நாட்டில் பிடிக்கப்படும் மீன்களின் பங்கு 43 விழுக்காடும் ஆகும். மீன் பிடிக்கும் தொழிலில் உலகில் 7-வது இடத்திலுள்ள நமது நாட்டில் 10 இலட்சம் மக்கள் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். படகு கட்டுதல், கூடை முடைதல், வலை பின்னுதல், கயிறு திரித்தல், மீன் பதப்படுத்துதல், உப்பு உற்பத்தி, மீன் விற்பனை, போக்குவரத்துப் போன்ற மீன் பிடித்தலைச்சார்ந்த தொழில்களில் மேலும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அத்தொழிலில் பெண்களுக்குக் கிடைக்கும் பெருமளவிலான வேலைவாய்ப்புக் குறிப்பிடத்தக்க அமிசமாகும். மீனவர் குடும்பங்களில் பெண்களின் பங்கு சிறப்பான தொன்றாகும். குடும்பப் பொறுப்புகள் தவிர, மீன் விற்பனை, மீன் பதப்படுத்துதல், வலைகளைச் சீர் செய்தல் போன்றவற்றிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். உலக வணிகத்தில் குறிப்பிடத்தக்கதாகப் பதப்படுத்தப்பட்ட மீன், மீன் தொடர்பான பொருட்கள் விளங்குகின்றன. இந்தியா ஆண்டொன்றுக்கு 400 கோடி உரூபாய் அளவிற்கு மீன் ஏற்றுமதி செய்கிறது.

இந்தியாவில் அண்மைக் காலங்களில் மீன் பிடிக்கும் தொழிலில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய சாதனங்களும், அறிவியல் அடிப்படையிலான மீன் பிடிப்பு முறைகளும் குறிப்பிடத்தக்க அளவில் மீன் உற்பத்தியை மிகுத்துள்ளன. இருப்பினும் மீன் துறை வல்லுநர்கள், இந்தியா தன்னிடத்தே உள்ள மீன் வளத்தினை இன்னும் முழுவதும் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று கருதுகிறார்கள். ஆராய்ச்சிகள், மீன் வள வாய்ப்புகளை முழுதும் பயன்படுத்துவதால் நாட்டில் வேலை வாய்ப்பும் உற்பத்தியும், ஏற்றுமதியும் மிகும் எனக் குறிப்பிடுகின்றன. ஆழ்கடல் சென்று மீன் பிடிக்க ஏற்ற புதிய விசைப் படகுகள், வலைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல், குளிர்சாதனச் சேமிப்பு வசதி செய்தல் சுகாதார முறைப்படி பக்குவப்படுத்துதல், புதிய முறைப்படி பெட்டிகளில் அடைத்தல், உயர் தர மீன் குஞ்சுகளை உள்நாட்டு நீர் நிலைகளில் விடுதல், கடல் வளம் பற்றிய செய்திகள் மீனவர்களுக்கு விரைவில் சென்று சேருமாறுசெய்தல், புது மீன் பிடிப்பு முறைகளில் பயிற்சி அளித்தல், புதிய அயல்நாட்டுச் சந்தைகளொடு தொடர்பு கொள்ளல் ஆகிய முயற்சிகள், மீன் துறை வளர்ச்சிக்குப் பெரும் அளவில் உதவும் எனக் கருதப்படுகின்றன.

இந்திய அரசு மீன் வளர்ச்சிக்குப் பல மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்துள்ளது. கொச்சியில் அமைந்திருக்கும் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிறுவனம், பரக்பூரில் உள்ள உள்நாட்டு மீன் ஆராய்ச்சி நிறுவனம், பம்பாயில் இருக்கும் மீன் துறைத் தொழில் நுட்ப மையம் ஆகியன நாட்டின் பல்வேறு இடங்களிலும் தொடர்புகொண்டு மீன் வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளன. நாடு தழுவிய சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களான தன்னிறைவுத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம், மீனவர் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் கடனுதவி ஆகியன விரிவுபடுத்தப்பட்டு மீனவர்களின்

தொழில், வாழ்க்கைத் தரம் ஆகியன உயர வழி வகுக்கப்பட்டுள்ளன.

இந்தியப் பெருங்கடல், அரபிக் கடல், வங்காள விரிகுடா ஆகிய மூன்று கடல்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ள தமிழகத்தில் வேளாண்மைக்கு அடுத்தபடியாகக் கிராமப்புறப் பொருளாதாரத்தில் சிறப்பிடம் பெறுவது மீன்பிடித்தல் ஆகும். கடல் மீன் உற்பத்தியில் கேரளம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாடு மூன்றாம் இடம் பெறுகிறது. நீர் வளம் குறைந்த மாநிலமாக இருப்பினும் தமிழ்நாடு வங்காள மாநிலத்திற்கு அடுத்தபடியாக உள்நாட்டு மீன் பிடிப்புத் தொழிலில் இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் கடல் மீன் உள்நாட்டு மீன் உற்பத்தி 4:3 என்ற விகிதத்தில் அமைகிறது.

தமிழ்நாட்டில் 1000கி.மீ. நீளமுள்ள கடற்கரையும், 3.7இலட்சம் ச.கி.மீ. பரப்பில் உள்ள உள்நாட்டு நீர் நிலைகளும் சற்றேறக்குறைய தமிழக மக்கள் தொகையில் ஒரு விழுக்காடு அளவு மக்களுக்கு வாழ்வு அளிக்கின்றன. ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 80 கோடி உருபாய் வருவாய் நல்கும் தமிழக மீன்துறை, 35 கோடி உருபாய் மதிப்பிற்கு மீன் ஏற்றுமதிக்கு வகை செய்கிறது.

தமிழ்நாட்டின் கடற்பகுதி நில அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (அ) கரை மண்டலக் கரை: சென்னையிலிருந்து கோடிக்கரை வரை உள்ள பகுதி, (ஆ) பாக்சு கடற்கால் (Strait): கோடிக்கரை முதல் பாம்பன் வரை உள்ள பகுதி, (இ) மன்னார் வளைகுடா: பாம்பனில் இருந்து குமரி முனை வரை உள்ள பகுதி. மேற்குக் கடற்கரைப் பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழகக் கடற்கரைப் பகுதி நுரை நிரம்பியதாகவும், அலைகள் அதிகம் உள்ளதாகவும் விளங்குகிறது. ஆதலால், மீன்கள் பொதுவாகக் கரை அருகில் வருவது இல்லை எனவே, ஆழ்கடல் சென்று மீன் பிடித்தல் இன்றியமையாததாகிறது.

கட்டு மரங்கள், வள்ளம் எனும் சிறு படகுகள், ஓடங்கள், விசைப் படகுகள் ஆகியன மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. கட்டு மரங்கள் அனைத்துப் பகுதிகளிலும், வள்ளங்கள் தூத்துக்குடி, திருநெல்வேலிப் பகுதிகளிலும், ஓடங்கள் தென் ஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது தமிழகத்தில் 2600 விசைப்படகுகளும், 43,000 கலங்களும் கடல் மீன் பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. செயற்கை நூலிழைகளால் பின்னப்படும் வலைகள் மீனவர்களிடையே வரவேற்புப் பெற்றாலும், அவற்றின் அதிக விலையால் அனைவராலும்வாங்க முடியாத நிலையில் உள்ளன. கடற்கரையோர மாவட்டங்களுள் தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகியவற்றில் மீன் பிடித்தலே முதன்மைத் தொழிலாக விளங்குகிறது. பரந்த மணற்பாங்கான நிலப்பரப்பும், நீர் வசதிக்குறைவால் வேளாண்மைக்கு அதிக வாய்ப்பின்மையும், பெரும் அளவில் இப்பகுதிகளில் மீன் பிடித்தலுக்குக்காரணமாக அமைகின்றன.

ஆழ்கடல் சென்று மீன் பிடிப்பதற்கு ஏற்ற மீன் பிடிக்கும் படகுகள் இல்லாமை, உயர் தர வலைகளின் அதிக விலை, குறைவான குளிர்சாதன வசதிகள், இடைத் தரகர்களின் தவிர்க்க இயலாத தலையீடு, புதிய மீன் பிடிப்பு முறைகளில் பயிற்சியின்மை, மீனவர்களின் வாழ்க்கை முறை, அனைத்துக் காலங்களிலும் மீன் கிடைக்காத நிலை, மீனவர் மோதல்கள் ஆகியன கடல் மீன்துறையின் வளர்ச்சியினைப் பாதிக்கும் காரணங்கள் ஆகும். நாட்டின் வளர்ச்சி, மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தில் அதிக முன்னேற்றம் ஏற்படுத்தவில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

உள்நாட்டு மீன் பிடிப்பில் தமிழ்நாடு, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சிறப்புப் பெற்று, அதிக மீன் உற்பத்தி உடையதாக விளங்குகிறது. இருப்பினும், தமிழக நீர்நிலைகளில் நீர்ப்பிடிப்பு உறுதியின்மை, தேவைக்கு மிகக் குறைவான உயர்தர மீன் குஞ்சுகள் உற்பத்தி, உள்நாட்டு மீன் பிடிப்புப் பயிற்சி மையம் இல்லாமை ஆகியன உள்நாட்டு மீன் பிடிப்பில் மேலும் முன்னேற்றம் காணத்தடைகளாக உள்ளன.

தமிழகத்தில் மீன் வளர்ச்சியினை அதிகப்படுத்தும் வகையில் அரசு, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகத்தினை நிறுவியுள்ளது. இக்கழகம் விசைப்படகுகளைப் பயன்படுத்துவது உற்பத்தி அதிகரிப்பிற்குத் தேவை என்ற அடிப்படையில் அத்தகைய படகுகளை வடிவமைத்து விற்பனை செய்கிறது. மேலும், தனியார் துறை, மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு விசைப்படகுகளை உற்பத்தி செய்ய ஊக்கம் தந்து, தொழில் நுட்ப அறிவுரைகளையும் வழங்குகிறது. விசைப்படகுகளும், நீண்ட நாள்களுக்குக் கடலில் இருக்கக்கூடிய புதிய கலங்களும் மீன் உற்பத்தியைப் பெருமளவில் அதிகரிக்க உதவும் என்றபோதிலும், தமிழகத்தில் கட்டு மரங்களைப் பயன்படுத்துவது தவிர்க்க இயலாது என வல்லுநர்கள் கருதுகின்றார்கள். இந்நிலைக்குக் கட்டு மரங்களை நம்பி இருக்கும் எளிய மீனவர்களின் பெரும் எண்ணிக்கையும் அவர்களது பொருளாதார வசதியின்மையும் முக்கியமான காரணங்களாகும். பிற வகைகளிலும் மீன் வளர்ச்சி அதி

கரிக்கும் வகையில் தமிழக அரசு ஆறு, கடல் ஆகிய வற்றில் மீன் பிடிப்புப் பயிற்சிகளை ஏற்படுத்தியுள்ளது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மீன் பிடிப்புக்கருவிகள், பதப்படுத்தப் பயன்படும் கருவிகள் ஆகியவை வாங்கக் கடனுதவி அளிக்கவும் வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

உள்நாட்டு மீன் பிடிப்பு அதிகரிக்கப் பல மாவட்டங்களில் மீனவர் வளர்ச்சிச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் மீன் குஞ்சு உற்பத்தி அமைப்புகள் ஏற்படுத்த ஊக்கம் தரப்படுகிறது. தமிழ்நாடு அரசு அண்மைக் காலங்களில் நீர்த்தேக்கங்களில் மீன் வளர்த்தலுக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அதன் தொடர்பாக மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டு அணைகளின் நீர் சேமிப்புப் பகுதிகள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றிலும் மீன் வளர்ச்சிக்கு வழிவகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் மீன் வளர்ச்சி சிறப்பிடம் பெறுகிறது. வல்லுநர்கள் கருத்துப்படி தமிழக மீன் துறை, குறிப்பாக உள்நாட்டு மீன் பிடித்தலுக்கு ஏற்ற வகையில் கவனம் செலுத்துமேயானால் மீன் உற்பத்தி குறுகிய காலத்தில் பல மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதன் தொடர்பாகக் கீழ்க் குறிக்கப்படுவனவற்றிற்கு முதன்மை தருவது இன்றியமையாததாகிறது:

அ) இப்போது செயற்படும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய பணிகளை விரிவு படுத்த வேண்டும். மீனவர்களுக்குத் தொழில்செய்ய மட்டுமேயன்றி வீடு கட்டுதல் போன்ற தேவைகளுக்கும் கடன் வசதிகள் செய்துதரப்படல் வேண்டும். ஆயுள் பாதுகாப்பிற்காகவும் தொழில் பாதுகாப்பிற்காகவும் காப்பீட்டு வசதிகளை உறுப்பினர் அனைவருக்கும் பெற்றுத் தரவேண்டும். மீன் பிடித்தலின் இடர்களைக் கவனிக்கையில் இவை இன்றியமையாதனவாகும். இடைத்தரகர்கள் மீனவர்களின் வருவாயை நியாயமற்ற வகையில் சுரண்டும் நிலை மாற, சங்கங்கள் பெரும் அளவில் மீன் விற்பனையை மேற்கொள்ளுதல் வேண்டும். மீனவர்கள் தங்கள் கடன்களைப் பகுதியைப் பணமாகவும், மிகுதியை மீன் பொருட்களாகவும் தர வாய்ப்புக் கொடுக்கப்படவேண்டும்.

ஆ) புதிய முறைகளைக் கையாளக் கல்வியறிவும் பயிற்சியும் மிகவும் தேவை. ஆதலின் மீனவச் சமுதாயத்திற்கு அடிப்படைக் கல்வி வசதி, தொழில் நுட்பப் பயிற்சி வாய்ப்புகள் அதிகரிக்கப்படல் வேண்டும். மேலும், மீனவர்களுக்கு மீன் கூட்டங்களின் இருப்பிடம், போக்கு, மீன் பிடிக்கத் தகுந்தகாலம் பற்றிய செய்திகள் விரைவில் கிடைக்கும்படி செய்தல் வேண்டும். ஆழ்கடல் மீன் பிடிப்பு இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளதால், அத்துறையில் தகுந்த வசதிகளை உருவாக்க வேண்டும்.

இ) மீன் பிடிக்கப் பயன்படும் சாதனங்களுள் விசைப் படகு தவிர வேறு பல தரமான கருவிகளும் உள்ளன. குறிப்பாக நெருக்கமானதும் கனம் குறைந்ததுமான உயர்தரச் செயற்கை நூலிழைகளினால் பின்னப்பட்ட வலைகள் மீனவர்களுக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.


ஈ) இக்கால வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தி மீன்களைப் பதப்படுத்திப் பெட்டிகளில் அடைத்துச் சிறப்பான முறையில் ஏற்றுமதி செய்ய முயற்சிகள் மேகொள்ளப்படல் வேண்டும். மீனவச் சமுதாயத்தினரே இத்தகைய சார்புத் தொழில்களையும் ஏற்று நடத்தத் தேவையான பயிற்சி, நிதியுதவி ஆகியன அளிக்கப்பட வேண்டும்.

உ) உள்நாட்டு மீன் பிடித்தலில் தேவையான ஆராய்ச்சிகள் மேற்கொண்டு, போதுமான உயர்தர மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து, மீன் வளம் பெருக்குவோருக்கு உதவ வேண்டும்.

ஊ) இறுதியாக மீனவ மக்களின் வாழ்க்கைத் தரம் உயரச் சமுதாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் ஆரோக்கியமான சூழலில் வாழ வழிவகைகள் ஏற்படுத்தப்படவேண்டும். அரசின் உதவியுடன் பொருளாதார மேம்பாடு பெறும் மீனவர்கள் தொழிலில் முன்னேற்றம் காண ஈடுபாடுகொள்வர்.

தமிழ் நாட்டில் மீன் வளர்ச்சி தகுந்த வகையில் அமையுமேயானால், மாநிலத்தின் வேலை வாய்ப்பு, வருவாய், அந்நியச் செலாவணி, மீனவச் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரம் ஆகியன குறிப்பிடத் தக்க வகையில் பெருகும். சு.சு.

*மீனம்*: மேடம் முதல் எண்ணிவரும்போது பன்னிரண்டாவதாகிய கடைசிவீடு மீன இராசி ஆகும். பங்குனி மாதம் சூரியன் இயங்கும் இராசி இதுவே. இந்த இராசியின் வடிவை ஆராய்ந்தோர் மீன் வடிவு போன்றது என எண்ணினர். கிரேக்கரும் பீசசு (Pisces) என்று பெயர் வைத்தனர். அதன் பொருள் மீன் என்பதாகும் ஒரு மீனின் வாலை ஒரு மீன் கவ்விக்கொண்டு இரட்டை மீனாகச் சஞ்சரிப்பது இந்த இராசி வடிவம் என்றனர் இந்தியர். எனவே, கயல், கெண்டை, சமுத்திரம் என்னும் பெயர்களால் இவ்வீட்டை எடுத்துரைப்பார்கள். இவ்வீட்டிற்குரியோன் வியாழன். இந்த இராசியில் பூரட்டாதியின் இறுதிக் கால்பகுதியும், உத்திரட்



மீனம்

டாதியும் இரேவதியும் அடங்கும். இதில் ஒளி பொருந்திய மீன் எதுவும் இல்லை. இவ்வீட்டில் சுக்கிரன் உச்சம் அடைகிறான்; புதன் நீச்சம் அடைகிறான். மீன இலக்கினத்தில் பிறந்தவர் களுக்குச் சனி, புதன், சுக்கிரன், சூரியன், வியாழன் ஆகியோர் பாவிகள். செவ்வாய், சந்திரன் இருவரும் நல்லவர்கள். செவ்வாயும், வியாழனும், இவ்விராசி அல்லது இலக்கினத்தில் பிறந்தவர்களுக்குத் தரும கருமாதிபதி யோகத்தை அளிப்பதுண்டு. இவ்விரு கோள்களும் பார்க்கவோ, கூடி நிற்கவோ நேர்ந் தால் அந்தயோகம் தலைப்படும். தே.ஆ.

***மீனாட்சி சுந்தரக் கவிராயர்***, கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர், பாண்டிய நாட்டைச் சேர்ந்த முகவூரில் தோன்றினார். இவர் தந்தையார் சேற்றூர் சமீன் தார் அரண்மனைப் புலவராக விளங்கிய கந்த சாமிக் கவிராயருக்கு மகனாவார். இளமையிலேயே நன்கு தமிழ்கற்றுச் சிறந்த புலவராக விளங்கிய இவரை எட்டையபுர மன்னர் தம் அரண்மனைப் புலவராக அமர்த்திக் கொண்டார். அப்போது அவ் வரசர் மீது, 'ஒருதுறைக் கோவை' பாடினார். 'கழுகு மலைத் திரிபந்தாதி'யும் இவர் பாடியதேயாகும்.

வடமொழியில் அமைந்த மேற்கோள் செய்யுட் களைத் தமிழ்ப்படுத்தித் தமிழில் உள்ள குவலயானந் தம் என்னும் அணியிலக்கணத்திற்கு, மேற்கோள் களாகக் காட்டியுள்ளார். இவர், அண்ணாமலை ரெட்டியார், ஊற்றுமலை இருதயாலய மருதப்பத் தேவர் முதலானோர் காலத்தவர் என்றும் கூறுவர். இவர், இராசவல்லிபுரம் முத்துசாமிப்பிள்ளை என் பாரைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றவர்.

வீ.சொ.

***மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மகாவித்து வான்***: 'பிள்ளை அவர்கள்' என்று சொன்ன அளவி லும், 'மகாவித்துவான்' என்று சொன்ன அளவிலும், 'மீனாட்சிசுந்தரம்பிள்ளை' என்று தமிழுலகம் அறிந்து கொள்ளும் அளவுக்கு, ஒரு முதுபெரும்புலவராக விளங்கிய இவர் வேளாண்மரபில் சிதம்பரம்பிள்ளைக் கும் அன்னத்தாய் அம்மையாருக்கும் மகனாகத் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள எண்ணெய்க் கிராமத்தில் கி.பி.1815-ஆம் ஆண்டில் தோன்றினார். ஆசிரியப் பணி காரணமாகத் தந்தையார் சோமரசம் பேட்டையில் வாழ்க்கை மேற்கொள்ள வேண்டிய வரானார்.

தந்தையார் ஆசிரியராக இருந்த பள்ளியிலேயே இவர், 5 வயது முதலாகக் கல்வி கற்கத் தொடங்கி, தாய்த் தமிழில் தணியா வேட்கையும், இலக்கிய ஆர்வமும் இலக்கணப் பற்றும் கொண்டு கற்றுத் தேர்ந்தார். மேலும், இவர் தமிழ் பயில வேண்டித் திரிசிரபுரம் வந்து கல்வி பயின்றார். புலமை மிக்க தந்தையார் இவரது 15 – ஆம் வயதிலேயே காலமா னார். இவர் மனைவியார் பெயர் காவேரியாச்சி. அக்காலத்திலேயே இவர் ஏட்டுச்சுவடிகளைச் சேக ரிக்கும் ஆர்வம் கொண்டிருந்தார். தந்தையார் கொடுக்கும் தொடர்களுக்கேற்பக் கவிபாடும் திறம் பெற்றுத் திரிபு, யமகம், சிலேடை முதலானவை இயற்றும் திறமும் கைவரப் பெற்றார்.

இவர் திரிசிரபுரத்தில் தங்கியிருந்த போது பல புலவர்களிடமும் சென்று பணிந்து, பாடங்கேட்டுத் தம் ஐயங்களைப் போக்கிக் கொண்டார். சங்க இலக்கியங்கள், திருமுறைகள் முதலானவற்றைக் கற்றுணர்ந்தார். இவர் சைவப் பற்று மிக்கவர். திரு நீறும், உருத்திராக்கமும், கண்டிகையும், ஐந்தெழுத் தும் உண்மைப் பொருளெனக் கொண்டு அணிந்து, சிவமே சிந்தித்து வாழ்ந்ததோடு பிறரைச் சிந்திக்க வைக்கும் இயல்பினையும் கொண்டொழுகினார். பழந்தமிழ் நூல்களிலுள்ள பயிற்சியினால் இவர் கவி பாடும் திறமும், பாடஞ் சொல்லும் பண்பும் பெற் றார். வடமொழி கற்று, அக்கருத்துகளையும் தம் செய்யுட்களில் அமைத்துப் பாடும் விருப்பம் கொண் டார்.

இவர் காலத்தில், பெரும்புலவர்களாக விளங்கிய வர்கள் மழவை மகாலிங்கையர், மகாவித்துவான் சபாபதி முதலியார், அம்பலத் தின்னமுதம் பிள்ளை முதலானோராவர். இவர் அவர்களுடன் பழகித் தமிழ் கேட்க வேண்டி, அவர்கள் வாழ்ந்த சென்னைக்கு கி.பி. 1841 – ஆம் ஆண்டு சென்று, கண்டு, பழகித் தம் ஐயங்களை நீக்கிக்கொண்டு மீண்டார்.

செய்யுள் இயற்றுவதில் வல்லமை பெற்ற இவர்,

கி.பி. 1851-ஆம் ஆண்டு 'உறையூர்ப் புராணம்' இயற்றினார். அதன் அரங்கேற்றத்தில் இவருக்கு 'வித்துவான்' பட்டம் வழங்கப் பட்டது. திருவாவடுதுறை ஆதீனத்தில் வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர் எழுந்தருளியிருந்தபோது கி.பி. 1854-ஆம் ஆண்டு, அங்குச் சென்று அவர்தம் நன் மதிப்பைப் பெற்று வந்தார். இவர் அடிக்கடி ஆதீனத்தால் அழைக்கப்பெற்று மதிக்கப் பெற்றார். பெங்களூர் சென்று தேவராச பிள்ளை முதலானோருக்குத் தமிழ் கற்பித்துப் பெரும்பொருளும் பெருமையும் பெற்று மீண்டார்.



மீனாட்சிசுந்தரம்பிள்ளை

சீர்காழியை அடைந்து, 'சீகாழிக்கோவை' இயற்றி அரங்கேற்றம் செய்தார்; மயிலாடுதுறையில் சிலகாலம் தங்கியிருந்தார். திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள், இவரைத் தம் ஆதீன வித்துவானாக்கித் தம்பிரான்களுக்கும், மற்றவர்கட்கும் தமிழ் கற்பிக்கச் செய்தார்கள். அப்போது குருமகா சந்நிதானமாக வீற்றிருந்த அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் மீது இவர் 'கலம்பகம்' இயற்றி அரங்கேற்றம் செய்தபோது, சந்நிதானம் அவர்கள், இவருக்கு, 'மகாவித்துவான்' என்ற பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள்.

அயராது படித்தலும், செய்யுள் இயற்றுதலும் ஓயாது பாடஞ் சொல்லுதலும், சிறக்கச் சொற்பெருக்காற்றுதலும் இவருக்குக் கைவந்த கலை. இத்திறங்களில் இவர் நிகரற்றவராக விளங்கினார். இவர்தம் நன் மாணாக்கர்களாக விளங்கியவர்கள், தியாகராசச் செட்டியார், டாக்டர் உ.வே. சாமிநாதையர், வேதநாயகம்பிள்ளை போன்றோராவர். இவர் கி.பி. 1876-ஆம் ஆண்டு காலமானார்.

இவர் மாணாக்கரான டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் 'என் சரிதத்தில்' இவர் பற்றிச் சிறக்க எழுதியுள்ளார். மேலுமவர் இவருடைய வரலாற்றை மிகவும் விரிவாக இரண்டு பாகங்களில் 'சிரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்' என்னும் பெயரில் எழுதியுள்ளார். இவர்தம் ஆற்றலும், புலமையும் பண்புகளும் அளவிடற்கரியன.

இவரியற்றிய நூல்களைக் கண்ட அளவிலேயே இவரது பெரும் புலமை விளங்கும். இவர், மாலை, பிள்ளைத் தமிழ், கலம்பகம், அந்தாதி, தலபுராணங்கள் முதலிய இலக்கிய வகைகளில் 58 – க்கும் மேலான நூல்களை இயற்றியுள்ளார். ஆயிரக்கணக்கான பாடல்களால் தமிழ்ப்புலவர்களின் உள்ளங்களில் இடம் பெற்றுத் திகழும் இவர்தம் பெருமை போற்றிப் பாராட்டத்தக்கதாகும். வீ.சொ.

**மீனாட்சி சுந்தரனார்,தெ.பொ:** 'நடமாடும் பல்கலைக்கழகம்' என்று திரு.வி.க. பாராட்டிய பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், சென்னைச் சிந்தாதிரிப் பேட்டையில் 1901–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8-ஆம் நாள் தோன்றினார். இவர் முன்னோர்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தென்பட்டினம் என்ற கிராமத்தில் தோன்றியவர்கள். அவர்கள் பின்னர்ச் சென்னைக்குக் குடியேறினார்கள். இவர் தந்தை பொன்னுசாமி கிராமணியார், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவரான அட்டாவதானம் சுப்பராயச் செட்டியாரிடம் தமிழ் பயின்றவர். ஆதலின் அவர், சுப்பராயச் செட்டியாரின் ஆசான் பெயரையே தம் புதல்வருக்குச் சூட்டினார்.

இவர் பதினைந்தாம் வயதிலேயே பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றுப் பின்னர்ப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று 1920-இல் பி.ஏ. பட்டம் பெற்றார். அதன் பின் இவர் சட்டக் கல்லூரியில் பயின்று 1922-இல் பி.எல். பட்டமும், பின்னர் 1924 – இல் வரலாற்றுத் துறையில் எம்.ஏ. பட்டமும் பெற்றார். பின்னர்ச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். இவர் வித்துவான் தேர்வுக்குரிய முன்னிலைத் தேர்வு, இறுதித்தேர்வு இரண்டையும் ஒருசேர எழுதி மாகாணத்தில் முதல்வராக வெற்றி பெற்றார்.

இவர் 1923-இலேயே சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவுசெய்து கொண்டு வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினாலும், தம்மைக் குறுகிய வட்டத்தினுள் அடக்கிக் கொள்

ளாது பல்வேறு துறைகளிலும் ஈடுபாடும் ஆர்வமும் கொண்டு விளங்கினார். நாட்டுப்பற்றும் தமிழ்ப் பற்றும் சமயப்பற்றும் மக்களுக்குத் தொண்டாற்றும் ஆர்வமும் இவரிடம் போட்டியிட்டு வளர்ந்தன. இவர் 1924-ஆம் ஆண்டிலேயே சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராகி 1936-இல் சென்னை நகராண்மைக் கழகச் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நாட்டு விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு 1944-ஆம் ஆண்டு சிறை சென்றார்.



மீனாட்சிசுந்தரனார், தெ.பொ.

இவர் முற்போக்குச் சிந்தனையும் குறுகிய சாதி, சமய வேறுபாடுகளினின்றும் விடுபட்ட பரந்த மனப் போக்கும் கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றினார். உயர்வு, தாழ்வு கருதாது 1916-ஆம் ஆண்டிலேயே அரிசனங்களுக்கு இரவுப் பள்ளிக்கூடம் நடத்தி அவர்களது முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டார். இவர் 1925 – இல் அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராகவும் 1935–இலிருந்து தேசிய இசுடார் காப்பீட்டு நிறுவனத்தின் தலைவராகவும் தொண்டாற்றினார். இவர் 1936-இல் வேதாந்த சங்கத்திற்குத் தலைமை பூண்டு, வேதாந்த வகுபபுகளும் தமிழ் வகுப்புகளும் நடத்தும் பொறுப்பினை ஏற்றார். பெரும் பேராசிரியராக விளங்கிய இவர் சென்னை மாநில ஆந்திரப் பிரிவின் காங்கிரசுத் தலைவராகப் பணியாற்றினார். இவர் தொடக்கக் கல்விக்குழுவின் உறுப்பினராகவும், உயர்நிலைக் கல்விக்குழுவின் உறுப்பினராகவும், சென்னை நகர நூலகக் குழுவின் தலைவராகவும், சென்னை மாநிலக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார். ஐக்கியநாட்டுக் கல்வி சமூகப் பண்பாட்டுக் கழகத்தின் 'கூரியர்' இதழ்க் குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் 1927 முதல் இறுதிநாள் வரையிலும் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் செயலாளராகவும் தலைவராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். சிந்தாதிரிப்பேட்டையைச் செந்தமிழ்ப்பேட்டை ஆக்கிய பெருமை இவருக்குண்டு. இவர் 1941-ஆம் ஆண்டில் 'மாண்டிசோரிப் பள்ளி' நிறுவினார். மாண்டிசோரிப் பள்ளிக்குத் துணையாகத் தொடக்கப்பள்ளியும் நிறுவினார். இவர் 1948-ஆம் ஆண்டு 'கல்யாணம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி' ஒன்றையும் நிறுவினார். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை அன்றே உணர்ந்து இவர் செயற்பட்டுள்ளார். இரண்டு பள்ளிகளாயிருந்தனவற்றை இவர் ஆறு பள்ளிகளாகப் பெருக்கினார். தமது வாழ்நாள் இறுதிவரை அப் பள்ளிகளைத் தம் இன்னுயிர் போல் காத்து வந்தார். பேராசிரியரைச் 'சிந்தாதிரிப்பேட்டையின் கல்வித் தந்தை' எனக் குறிப்பிடலாம்.

இவர் கொழும்பு சைவ சித்தாந்த மாநாட்டிற்குத் தலைவராக விளங்கினார். திருவாவடுதுறைத் திருமந்திர மாநாட்டிற்கும், திருவனந்தபுரம் சைவ சித்தாந்த மாநாட்டிற்கும் இவரே தலைவராக இருந்தார். இவர் 1974 முதல் ஆழ்நிலைத் தியானத் தேசிய குழுவில் உறுப்பினராக இருந்து தொண்டாற்றினார். ஓய்வு பெற்ற பிறகு இவர் தம் இறுதிநாள்கள் வரை மகேசு யோகியின் தியானமுறையில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய சமய ஞானத்தை நன்குணர்ந்த மகேசு யோகி இந்திய நாட்டின் தலைமைப் பதவியையே பேராசிரியருக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

இவர், 1945-ஆம் ஆண்டு அண்ணாமலை நகரில் நடைபெற்ற இந்திய வரலாற்று மாநாட்டின் கண்காட்சிப் பகுதிக்குச் செயலாளராக இருந்து தொண்டாற்றினார். அம்மாநாட்டில் புதிதாகத் திராவிடப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அதற்கு இவரையே தலைவராக்கினர்.

இவர், 1956-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்த கீழ்க்கலை மாநாட்டின் போது (Oriental Conference) இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணன் இவரைப் பாராட்டிப் பெருமைப்படுத்தியது இங்குக் குறிப்பிடத்தக்கது. டாக்டர் கே.எசு. கிருட்டிணன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த போது, 'ஒரு துறையில் சிறப்பான அறிவு பெறுவதி

லேயே பெரிதும் ஆர்வம் காட்டும் இன்றைய உலகு, பேராசிரியர் மீனாட்சிசுந்தரனார் போன்று பல துறைகளிலும் தெளிந்த அடிப்படையான அறிவோடு, ஒரு துறையில் சிறந்த அறிவு பெறுவதில் விருப்பமுடையதாக இருக்கவேண்டும்' என்று கூறியது, இவர் பல்கலை உணர்ந்த பெரும் பேராசிரியர் என்பதைப் புலப்படுத்திநின்றது.

பேராசிரியரின் உள்ளமெல்லாம் அறிவுத்திறனையும் ஆய்வுத்திறனையும் வளர்த்துக் கொள்வதிலேயே இருந்தது. கல்லூரியில் பெற்ற ஆங்கிலக் கல்வியோடு இவர் மகாவித்துவான் கோ. வடிவேலு செட்டியாரிடம் முறையாகத் தமிழும் பயின்றார். இவர் தமிழ் ஒலியை ஆராய்ந்து எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். ஆங்கிலம், தமிழ் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமசுகிருதம், இந்தி, பிரெஞ்சு, செருமன் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றுப் 'பன்மொழிப் புலவர்' என்று இவர் பாராட்டப் பெற்றார்.

பேராசிரியர் சங்க காலந்தொட்டு இக்கால இலக்கியம் வரை அனைத்து இலக்கியங்களையும் கற்பதில் பேரார்வம் கொண்டவர். சென்னைப் பல்கலைக்கழக நூல்நிலையம், சென்னை கன்னிமாரா நூல்நிலையம் ஆகிய இரண்டிலும் இவருடைய கைபடாத நூலே இல்லை என்று கூறுமளவிற்கு அனைத்துத் துறை நூல்களையும் கற்றதில் இவருக்கு நிகர் இவரே. மற்றவர்கள் தொடுவதற்குக் கூட அஞ்சும் துறைகளையெல்லாம் இவர் நன்கு கற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. இவர் பற்பல புதிய துறைகளைப் பயின்றதோடு நிற்காமல் தம் அறிவுச் செல்வங்களை மாணவர்களுக்கு வாரி வழங்கவும் செய்தார். தத்துவம், இலக்கியம், இலக்கணம், வரலாறு, மொழியியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் இவர் சிறந்து விளங்கினார். ஒப்பியல் அடிப்படையில் வகுப்புகள் நடத்துவதில் இவருடைய திறன் குறிப்பிடத் தக்கது.

மனைச்செல்வமும் மக்கட் செல்வமும் நிறைவுறப் பெற்ற இவர் இல்லறமே நல்லறம் என வாழ்க்கை நடத்தியவர். குடும்பத்தில் பழகிப் பெற்ற அன்பே ஏனையோரிடமும் அன்பு கொள்ளும் பண்பினை இவருக்கு அளித்தது எனலாம்.

பேராசிரியரின் தமையனார் தெ.பொ.கிருட்டிணசாமிப் பாவலர் தமிழ்ப் பற்றும் நாட்டுப் பற்றும் மிக்கவர். தமிழ் நாடகத் துறையில் சலியாது உழைத்த பெருமகனாராகிய அவர் நாகபுரிக் கொடிப் போராட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு 'தேசிய கொடி' என்னும் நாடகத்தை நடத்தினார். தமது நாடகக் குழுவை அழைத்துக்கொண்டு இங்கிலாந்துக்குச் சென்று தமிழ் நாடகங்களைச் சிறப்பாக நடத்தி, வெற்றியும் கண்டார். அத்தகைய பாவலரின் இளவலாகிய பேராசிரியர் நாட்டுப்பற்றுக் கொண்டு காந்தியடிகளின் தலைமையை ஏற்றுப் பணி செய்தார்.

பேராசிரியர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே வாழ்ந்து வந்தவர்; காட்சிக்கெளியர்; பண்பாடு மிக்கவர்; தமிழர் நல்வாழ்வில் மிக்க கருத்துடையவர். அறிஞர்க்கு அறிஞராய் விளங்கிய பேராசிரியர் குழந்தைகளோடு குழந்தையாய் மாறி விடுவார். அத்தகை இளம் மனம் படைத்தவர் இவர்.

சிந்தாதிரிப் பேட்டையில் வேதாந்த சங்கம் ஒன்று அமைத்துக்கொண்டு காலையிலும் மாலையிலும் தமிழும் தருக்கமும் வேதாந்தமும் பலருக்குக் கற்பித்தார்.

எல்லாப் பாடங்களையும் தாய்மொழியிலேயே கற்பிக்க வேண்டும் எனும் கொள்கையில் தளரா உறுதி கொண்டு அதற்காகப் பேராசிரியர் பாடு பட்டார். இவர் கல்லூரித் தமிழ்க் குழுவில் ஈடுபட்டு அயராது உழைத்து, கலைச் சொல்லகராதிகள் வெளிவரத் துணைநின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் விடுத்த அழைப்பை ஏற்று 1944 முதல் இரண்டு ஆண்டுகள் அங்குத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1958-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக இவர் பணி ஏற்றார். அதே நேரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையைத் தொடங்கி அதன் தலைவராய் இருந்து அதன் வளர்ச்சிக்கு வித்திட்டார். இவர் மொழியியல் துறையை வளர்த்து மொழியியல் உயராய்வு மையமாக (Centre of Advanced Study in Linguistics) மாற்றினார். அவ்வுயராய்வு மையம் உலக அரங்கில் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கிறது. அதன்இன்றைய வெளியீடுகள் உலகிலுள்ள திராவிட மொழியியல் பேறிஞர்களால் பாராட்டப் படுகின்றன. தென்னகத்தில் குறிப்பாகத் தமிழகத்தில் மொழியியலை வளர்த்த பெருமை பேராசிரியராகிய இவரையே சாரும். இந்தியாவில் மொழியியலை வளர்த்த மூவருள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறவியல் வளர்ச்சிக்கும் இவர் வித்திட்டார் எனலாம். அமெரிக்க நாட்டிலும் தமிழைப் பரப்ப 1961-இல் சிகாகோப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்று, தமிழ்க்கல்வியை அங்குத் தொடங்கிவைத்தார். பல்துறை அறிஞரும் பேராசிரியருமான இவரைத் தமிழக அரசு 1966-இல் மதுரைப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக நியமித்தது. இன்று அப்பல்கலைக்கழகம் பல்துறைகளிலும் சிறந்து விளங்க அடிகோலியவர்

இவரேயாவர். திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் 1973-74-இல் திராவிட மொழியின் சிறப்பாய்வாளராகப் பணியாற்றினார். பின்னர் இந்திய நாட்டின் ஆழ்நிலைத் தியான தேசிய குழுவின் தலைவராகவும் இவர் பணியாற்றினார்.

நாற்பது ஆண்டுகளாகத் தமிழ் உலகிற்குச் செய்து வந்த அரும் பெருந்தொண்டுகளைக் கண்டு இவர்பால் பேரன்பு கொண்ட மாணவர்களும், பேராசிரியர்களும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் கோவையிலும் சென்னையிலும் இவர்தம் மணிவிழாவைக் கொண்டாடினர். கோவை, கலைக்கதிர் நிறுவனத்தார் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் மணிவிழாமலர் ஒன்றை வெளியிட்டது இங்குக் குறிப்பிடத்தக்கது. அம்மலரினை ஒரு கலைக் களஞ்சியம் என்றே குறிப்பிடலாம். பேராசிரியரின்பால் பேரன்பு கொண்ட மேனாட்டு மொழியியல் வல்லுநர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அம்மலருக்குத் தனிச்சிறப்பு அளிப்பனவாகும்.

தமிழ்நாட்டிலுள்ள திருவாவடுதுறை ஆதீனம் இவருக்குப் 'பல்கலைச் செல்வர்' என்ற பட்டத்தையும், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் டாக்டர் அழகப்பச் செட்டியார் தலைமையில் 'பன்மொழிப் புலவர்' என்ற பட்டத்தையும் கேடயத்தையும், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை முதலமைச்சர் காமராசர் தலைமையில் 'பெருந்தமிழ் மணி' என்ற பட்டத்தையும் பொற்பதக்கத்தையும் வழங்கின. பூ.சா.கோ. கலைக் கல்லூரி 1958-இல் பொன்னாடை போர்த்திப் பொற்கலன் வழங்கியது. அதே ஆண்டில் கோவை நன்னெறிக்கழகம் பொற்பதக்கம் அளித்துச் சிறப்பித்தது.

பின்னர் 1967-ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகமும், 1976-ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகமும், 1979-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், டி.லிட் பட்டம் அளித்துப் பேராசிரியரைச் சிறப்பித்தன. 'நடமாடும் பல்கலைக்கழகம்' என்று இவர்தம் மாணாக்கர்களால் போற்றுதலுக்குரியவராகத் திகழ்ந்தார். நடுவணரசு 1977-இல் 'பத்மபூசன்' பட்டமும், தமிழக அரசு 1978-இல் 'கலைமாமணிப்' பட்டமும் வழங்கிப் பாராட்டின.

தமிழ்க் கலைக்களஞ்சியப் பதிப்புக் குழுவிலும், தமிழ் வளர்ச்சிக்கழகத்திலும், தமிழ்க்கலை மன்றத்திலும், சாகித்தியக் கழகத்திலும், இந்திய மொழியியல் கழகத்திலும், திராவிட மொழியியல் கழகத்திலும், இன்னோரன்ன பல்வேறு மன்றங்களிலும் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றிய பெருமை இவர்க்குண்டு. ஆண்டுதோறும் நாட்டின் பல்வேறு இடங்களில் கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம் நாடெங்கிலுமுள்ள பல்கலைக்கழகத் தமிழாசிரியர்களையும் ஆய்வாளர்களையும் ஒன்றுகூட்டித் தமிழின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வரும் அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தைத் தொடங்கிவைத்தவரும் இவரே. தமிழகத்தில் மொழியியல் வளர்ச்சியைத்தம் இலக்காகக் கொண்டு செயலாற்றிவரும் அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று இறுதிக் காலம் வரை பணியாற்றியவரும் இவரேயாவர்.

இவர் தம் நூல்களிலும் ஆய்வுக் கட்டுரைகளிலும் நுண்ணிய ஆராய்ச்சித் திறனையும் அரிய கருத்துகளையும் ஒரு சில சொற்களில் விளங்க வைக்கும் ஆற்றலையும் காணலாம். இவரது நூல்களைத் தொகுத்துக் காணின், இவரது பல்துறை அறிவு ஒளிர்வதைக் காணலாம். இவர் இயற்றிய நூல்களாவன: வள்ளுவரும் மகளிரும், அன்புமுடி, கால்டுவெல் ஒப்பிலக்கணம் – அடிச்சொற்கள் (மொழிபெயர்ப்பு), மனோதத்துவ சாத்திரம், தமிழா நினைத்துப்பார், நீங்களும் சுவையுங்கள், வள்ளுவர் கண்ட நாடும் காமமும், பிறந்தது எப்படியோ?, கானல்வரி, சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, கல்விச் சிந்தனைகள், தமிழ் மணம், தமிழும் பிற பண்பாடும், வாழும் கலை, தமிழ்மொழி வரலாறு, மொழியியல் விளையாட்டுகள், பத்துப்பாட்டு ஆய்வு(புறம்), A Histoy of Tamil Language, A History of Tamil Literature, Philosophy of Tiruvalluvar, Advaita in Tamil, Tamil - A Bird's eye view.

வாழ்நாள் முழுவதும் பல்வேறு துறைகளின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய பேராசிரியர் 1980-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 28-ஆம் நாள் காலமானார். இவர்தம் நினைவாக அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம் 'பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் நினைவு மலர்' (1980) ஒன்று வெளியிட்டுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சு.ச.

*மீனாட்சிபுரம்*, மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் உள்ள ஓர் ஊர். இவ்வூரில் அமைந்துள்ள மலையில் பண்டைய தமிழ் எழுத்தான 'தமிழி'யில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் உள. அக்கல்வெட்டுகள் வரலாற்றுப் புகழ்மிக்கவை. இங்குச் சமணப் பெரியார்கள் வாழ்ந்ததற்கான தடையங்கள் கிடைத்துள்ளன. மதுரையிலிருந்து மேலூர் செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து பிரியும் குறுக்குச் சாலை ஒன்றின் வழியே சென்று, அதிலிருந்து பிறிதொரு வண்டிப் பாதை வழியாகச் சென்று, இவ்வூரை அடையலாம்.

இவ்வூரில் தொடங்கி ஏறத்தாழ 7 கி.மீ. தொலைவு நீண்டதாக மலைத் தொடர் ஒன்று தென்வடலாகச் செல்கிறது. அம்மலையின் அடிவாரத்தில் தென்பகுதியில் மீனாட்சிபுரமும் வட பகுதியில் அரிட்டாபட்டியும் அமைந்துள்ளன. இங்குள்ள மலை கழுகுமலை என்றும், ஓவா மலை என்றும் ஊர் மக்களால் குறிப்பிடப் படுகிறது.

ஏறத்தாழ எண்பது ஆண்டுகளுக்கு முன்பு அம்மலையின் கிழக்குப் புறத்தில் இயற்கையாக அமைந்தகுகைத் தளத்தில் சமணர்கள் தங்குவதற்கான படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. மேல் பாறையின் புறத்தே தமிழிக் கல்வெட்டுகள் வெட்டப் பட்டுள்ளன. அக்கல்வெட்டுகள் மாங்குளம் கல்வெட்டுகள் எனவும் அரிட்டாபட்டிக் கல்வெட்டுகள் எனவும் கூறப்படுகின்றன. இருப்பினும் இவற்றை மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் எனக் கூறுவதே பொருந்தும்.

முதல் கல்வெட்டு, நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் நந்தசிரியக்குவன் (இயக்கன்) என்னும் சமண முனிவருக்குப் பள்ளி அமைத்துக் கொடுத்ததைச் சுட்டுகிறது. இரண்டாம் கல்வெட்டில், அதே சமணமுனிவருக்கு நெடுஞ்செழியனின் சாலகன் (சகலை) இளஞ்சடிகனின் தந்தையான சடிகன் என்பான் பள்ளி அமைத்துத் தந்த செய்தி குறிக்கப் பட்டுள்ளது. மூன்றாம் கல்வெட்டு அதே சமணப் பெரியாருக்கு வெள்ளறை நிகமத்தைச் சேர்ந்த காவிதி கழிதிக அந்தை என்பாரின் மகன் படுக்கை அமைத்ததைக் குறிக்கிறது. ஏனைய கல்வெட்டுகள் சந்தரிதன் என்பானும் வெள்ளறை நிகமத்தாரும் பள்ளியமைத்துக் கொடுத்ததைத் தெரிவிக்கின்றன.

தமிழகக் கல்வெட்டு வரலாற்றில் மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. அக்கல்வெட்டுகள் கி.மு. 3 – 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாகக் கருதப்படுகின்றன.முதல்கல்வெட்டில் குறிக்கப் படும் நெடுஞ்செழியன், கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் ஆண்டான் என்பதும், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் ஆகிய இருவருக்கும் இவன் காலத்தால் முற்பட்டவன் என்பதும் இதனால் அறியப்படும் புதிய செய்திகளாகும். அடுத்து அப் பாண்டியன் கடலன், வழுதி, பணவன் முதலான பெயர்களில் அங்குச் சுட்டப்படுகிறான். அவை யாவும் பாண்டியரின் குலப் பெயர் போலும். அக்கல்வெட்டில் தம்மம், சீதன், கணி முதலான பாகதச் (பிராகிருதம்) சொற்களும் பயன்படுத்தப் பட்டுள்ளமை சிந்திக்கத் தக்கது. திருநெல்வேலி மாவட்டத்திலும் மீனாட்சிபுரம் என்னும் ஓரூர் உள்ளது. ம.இரா.

**மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**: இது, கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் விளங்கிய குமரகுருபர சுவாமிகளால் இயற்றப்பட்டது. அவர், திருச்செந்தூர் முருகனருளால், பாண்டிநாட்டுச் சிரீவைகுண்டம் எனப்படும் கைலாசபுரத்தில், சண்முக சிகாமணிக்கவிராயருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார். ஐந்து ஆண்டுகள் வரை வாய் பேசாதிருந்து, செந்தில் வேலவன் கனவில் கட்டளையிட்டவாறு தம் பெற்றோர்களுடன் திருச்செந்தூர் சென்று அவனருளால் திருவாக்குப் பெற்றுக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடினார்

பின்னர்த் திருச்செந்தூரில் சிலகாலம் கழித்து வடநாட்டுப் பயணம் மேற்கொள்ளுங்கால் வழியில், இம் 'மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' பாடி முடித்துத் திருப்பரங்குன்றில் எழுந்தருளியிருந்தார். அப்போது மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னன் கனவில், மீனாட்சியம்மை தோன்றி அச்செய்தியினைத் தெரிவித்துத்தம் திருமுன்னர் அதனை அரங்கேற்றக் கட்டளையிட்டாள். அவ்வண்ணமே மன்னன், பல சிறப்புகளுடனும் குமரகுருபரரை அழைத்து வந்து, அம்மை திருமுன் அமர்த்தி, அரங்கேற்றுகையில் அம்மையே சிவாச்சாரியாருடைய சிறு பெண் வடிவில் வந்து, அரசன் மடியில் அமர்ந்து 'தொடுக்குங் கடவுட் பழம்பாடல்' எனத் தொடங்கும் வருகைப் பதிகப் பாடல் விளக்கம் கேட்கும் போது, மன்னன் கழுத்திலிருந்த முத்து வடத்தினைக் கழற்றிக் குமரகுருபரருக்கு அணிவித்து மறைந்தாள். அரசன் வியப்புற்று, இவரை அமர்த்திப் பொன் சொரிந்து போற்றியதோடு யானை, குதிரை, பல்லக்கு முதலான விருதுகளையும் தந்து சிறப்புச் செய்தான்.

இத்தகு சிறப்பு வாய்ந்தது, இந்நூல். பிள்ளைத் தமிழ் நூல்களிலேயே இது முதன்மையாகக் கருதப் படுவது. இதன் செய்யுட்கள் எல்லாமே பாராட்டுக் குரியன. 'கார்கொண்ட கவுள் மதக் கடைவெள்ளமும்' எனத் தொடங்குகின்றது விநாயகக் கடவுள் வணக்கம். காப்புப் பருவத்துத் திருமால் வணக்கம், 'மணிகொண்ட நெடுநேமி' என்று தொடங்குகின்றது. இந்நூல் 102 செய்யுட்களைக் கொண்டது. இது, 'புழுகு நெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்த கொடி பொன்னூச லாடியருளே', என நிறைவு பெறுகின்றது.

'காலத்தொடு கற்பனை கடந்த' எனத் தொடங்கும் முத்தப் பருவப் பாடலில், சிவபெருமானது மூன்று கண்களுக்கும் விருந்திடுவன, அம்மையின் மூன்று நகில்கள் என்று கூறியிருப்பது அழகுடையது. வருகைப் பருவத்து வரும், 'தொடுக்கும் கடவுட் பழம்

பாடல் தொடையின் பயனே' என்னும் பாடல். பாடிப்பாடி மகிழத்தக்கது. அம்மானைப் பாடலில், அம்மானைக்காய்கள், அண்டகோளங்களை நிகர்த்தன என்று பாடப்பட்டுள்ளது.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பத்துப் பருவங்களும் பேசப்படுகின்றன. பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்களும், விநாயகர் வணக்கம் ஒன்றும், காப்பில் மிகைப்பாடல் ஒன்றும் ஆக 102 பாடல்களைக் கொண்டது இந்நூல். சொல்நயம் பொருள்நயம் மிக்க இது, பலராலும் பல பதிப்புகளாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. வீ.சொ.

*மீனெறி தூண்டிலார்*: இவர் கடைச்சங்க காலப் புலவர்களுள் ஒருவர். குறுந்தொகையுள் 54 - ஆம் பாடலைப் பாடியவர். இவருடைய இயற்பெயர் தெரியாத நிலையில் இவர் பாடலில் அமைந்த 'மீனெறி தூண்டில்' என்ற சிறந்த உவமைத் தொடரால் இப்பெயர் பெற்றார். குறிஞ்சித்திணையில் அமைந்த அப்பாடல் 'வரைவு நீட்டித்த வழி ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லிய'தாக விளங்குகிறது. திருமண ஏற்பாடுகளுக்காகப் பிரிந்து சென்ற தலைவனோடு தலைவியின் மேனி நலனும் சென்று விடுகிறது. அதனால், பிரிந்திருக்கவியலாத தலைவி தன் ஆற்றாமையைத் தோழிக்குக் கூறுகிறாள். பசுமையான மூங்கிலைத் தன் துதிக்கையால் வளைத்த யானை, தினைப்புனம் காப்பவர் விடும் கவண் கல்லின் ஒலியைக் கேட்டு அஞ்சித் தன்பிடியை விடுகிறது. விடுபட்ட அம்மூங்கில், மீனைத் தன்னகத்தே அகப்படுத்திக் கொண்ட தூண்டில் கழி விரைவாக மேல் எழுவது போன்று எழுகின்றது. ஒன்றில் ஏமாற்றமும், பிறிதொன்றில் துன்பமும் வெளிப்படுவதாக இரு வேறு நிகழ்ச்சிகளை அமைத்துத் தலைவனின் ஏமாற்றத்தையும் தலைவியின் துன்பத்தையும் திறம்பட இப்பாடலுள் ஆசிரியர் சுட்டியுள்ளார். கவணொலிக் கஞ்சி மூங்கிலை யானை விடுத்தது, அயலாரின் அலருக்கஞ்சித் தலைவியைத் தலைவன் பிரிந்த ஏமாற்றத்தையும், தூண்டில் கழி மேலேறுவதால்மீன் துன்புறுவது தலைவனின் பிரிவால் தலைவி துன்புறுவதையும் உணர்த்துவனவாக அமைந்துள்ளன. மீன் படுகின்ற ஆற்றொணாத் துன்பத்தை விளக்கும் சிறந்த உவமையால் இவ்வாசிரியர் இப்பெயரைப் பெற்றுள்ளார்.


இத்தகு உவமை வெளிப்பாட்டோடு ஐங்குறுநூறு 278-ஆம் பாடலும் காணப்படுகின்றது. அப்பாடலும் 'வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத் தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது' என மேற்பாடல் துறையோடு ஒத்தே அமைந்துள்ளது நோக்கத் தக்கதாகும். சா.கி.

மு உதடுகளை அழுத்திப் பின் மூக்கொலியாக வெளிப்படும் ஒலியைக் குவித்து வரும் ஒலியே 'மு' ஆகும். மகரத்திற்கும் உகரத்திற்கும் உரிய குறிப்புகளைப் பார்க்கவும்.... ... ...

**உருவம்:** பண்டைய மகர உருவம் கி.மு. 3–ஆம் நூற்றாண்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் உள்ள குகைகளில் காணப்படுகின்றது. ... ... ...



இவ்வுருவத்துக்குக் கீழ் நோக்கி இடப்படும் ஒரு கோடு உகரத்தைக் குறிக்கும். ஒரு சில இடங்களில் உகரக்குறி நடுவிலும் தோன்றும். ...




இதற்கடுத்த உருவத்தை கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் செங்கம் நடுகல் கல்வெட்டுகளில் காணலாம். குறுக்குக்கோடு சுருங்கி வலப்புறம் மட்டும் காணப்படும். ... ... ...




பின்னர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவரின் வல்லம், கூரம் செப்பேடுகள் முதலியவற்றில் கையை எடுக்காமல் எழுதப்படும்பொழுதும் வலப்புறத்தில் வளைத்துச் சுழிக்கும் பொழுதும் உகரக் குறியோடு இணைத்து எழுதினார்கள். இந்தக் குறி ழகரத்தோடு மயங்க நேரிடுமாகையால், கி.பி. 7 –ஆம் நூற்றாண்டில் பல்லவ பரமேசுவரனின் கூரம் செப்பேடுகளில் கீழ் நோக்கி வரும் குறியோடு ஒரு வளைவும் இடப்பட்டது. ...





ழகரம் உகரத்தோடு இணையுங்கால் சற்றே கீழே இழுத்து எழுதப் பட்டது. இந்தச் சிறு வேறுபாடு ஒழுங்காகக் காட்டப்படவில்லை. இவ்வுருவமே நிலைத்தது. எனினும், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நேராகவே இது உருப்பெற்றது. வட்டெழுத்தில் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டுப் பிரமியத்தில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படும் உருவம் இதுவே. வட்டெழுத்து மறையும் வரை இருந்து வந்தது. கே.ஜி.கி.





முக்கல் ஆசான் நல்வெள்ளையார்: முக்கல் என்னும் ஊரினராய நல்வெள்ளையார் ஆசிரியத் தொழில் புரிந்தமையின் முக்கல் ஆசான் நல்வெள்ளையார் என வழங்கப் பெற்றார். ஆசான் என்றதனால் இவர் பார்ப்பனர் எனப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுவர். இவர் பாடியதாக நற்றிணை 272-ஆம் பாடல் ஒன்றே கிடைத்துள்ளது. அது நெய்தல் திணையில் உள்ளது. வரையாது நெடுங்காலம் வந்தொழுகும் தலைவற்கு வரைந்து இல்லறம் மேற்கொள்ளுமாறு தலைவி குறிப்பாற் கூறுவது அப்பாடலின் துறை. கடற்காக்கைச் சேவல் நோன்பு மகளிர் கொய்தழித்த அடும்பு படர்ந்த மணல்மேட்டில், கடுஞ்சூல் கொண்ட பெடைக்கு அயிரை மீன் கொண்டு வந்து தருதற்குக் கழியிடத்துள்ள பூவுடைக் குட்டையைத் துழவுதற்கிடனான துறைவன் அருளாமையின், என் விருப்பம்

வீணாக அதனால் செயலழிந்த என் நோய் அலர் கூறும் ஊரினரால் அறியப்பட்டு நான் முன்பு கொண்ட நோயினும் பெரியதாயிற்று என்று தலைவி உரைப்பதாக அப்பாடலை அமைத்துள்ளார். நீர்க் காக்கைச்சேவல் சூலொடு வதிந்த காமர்பேடைக்கு அயிரைமீனைத் துழவும் என்ற உள்ளுறையால், தன்னை மணஞ்செய்து கொண்டு மனையறம் படுத்து இல்லிடத்தே இருத்தித் தென்புலத்தார், தெய்வம் முதலியோரை ஓம்ப வேற்றுநாடு சென்று தலைவன் பொருளீட்டி வந்து இல்லறம் நிகழ்த்தற்குரியன் என் பதைத் தலைவி அவனுக்கு உணர்த்துவது போலப் புலவர் பாடியிருத்தல் சிறப்பாக உள்ளது. இரா.சா.

*முக்கூடல்*: இது திருநெல்வேலி நகருக்கு வட கிழக்கில் தாமிரபரணியாற்றின் வடகரையில் அமைந் துள்ள ஊர். சித்திரா நதி, கோதண்டராமநதி ஆகிய சிற்றாறுகள் தாமிரபரணியாற்றில் கூடுவதால் இவ் விடம் 'முக்கூடல்' எனப்படுகிறது. இன்று இந்த ஆறு கள் வேறோர் இடத்தில் தாமிரபரணியோடு கலக் கின்றன.

முக்கூடலும் இன்று பெயர் மாற்றம் பெற்றுச் சீவலப்பேரி என வழங்குகின்றது. பாண்டியன் மாற வர்மன் சிரீவல்லவன் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தன் பெயரில் இங்கு ஓர் ஏரி கட்டினமையால் இவ் வூரின் பெயர் சீவலப்பேரி என மாறியது. இவ்வூர் ஏரி கி.பி.18-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த பெரு வெள்ளப் பெருக்கால் உடைந்து சீர்குலைந்துவிட ஏரிப்பகுதி நன்செய் நிலமாகி விட்டது.

இங்குச் சேர, சோழ, பாண்டியர்களின் கல்வெட்டு களோடு கூடிய தொன்மையான திருமால்கோயில் ஒன்று உள்ளது. அங்குக் கோயில் கொண்டுள்ள திரு மாலை அழகர், செண்டலங்காரர் என 'முக்கூடற் பள்ளு' புகழ்ந்து போற்றுகின்றது. சாத்தனுக்கும், பூலாவுடையார் என்னும் தெய்வத்திற்கும் இங்குக் கோயில்கள் உள்ளன. இவ்வூரின் பிடாகையான மறு கால்தலை என்னும் இடத்தில் மலைப் பாறையில் பாலி எழுத்துகளில் செதுக்கப்பட்ட குறிப்புகளோடு கூடிய படுக்கைகள் உள்ளன. புத்த சமயம் செழித் தோங்கியிருந்த பகுதி இது என்பதனை இவை தெளிவுபடுத்துகின்றன. அப்படுக்கைகளை மக்கள் இன்று பாண்டவர் படுக்கை எனக்கூறி வருகின்றனர். சி.ஆர்.நா.

*முக்கூடற்பள்ளு*: திருநெல்வேலிக்கு வடகிழக் கில் சித்திராநதி, கோதண்டராமநதி ஆகிய இரு ஆறுகளும் தாமிரபரணி (தண்ணான் பொருநை)யில் கலக்கும் இடம் முக்கூடல். இப்போது இந்த ஊர் 'சீவலப்பேரி' என வழங்குகிறது. இவ்வூரில் எழுந் தருளியிருக்கும் அழகர் மீது பாடப்பட்ட சிற்றிலக் கியமே முக்கூடற்பள்ளு. இந்நூல் வேளாண்மைத் தொழிலாளர்களான பள்ளர், பள்ளியர் வாழ்வில் இடம் பெறும் நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு புனையப்பட்டுள்ளது. மீன் வகைகள், வித்து வகை கள், மாட்டு வகைகள், ஏர்க்கால் வகைகள், பள்ளன், பள்ளியர் பெயர் வகைகள், வேளாண்மைப் பணிகள், சைவ, வைணவப் புராணக் கதைகள் ஆகியன இந் நூலில் சொல்லப்பட்டுள்ளன. வேளாண்மைத் தொழி லுக்குரிய பல்வேறு தமிழ்க்கலைச் சொற்களை ஒரு வர் இந்நூலில் கண்டறிய முடியும்.

**தோற்றம்**: பள்ளு நூல்களின் அமைப்பை உருவாக் கியவர் யார் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூற இயலவில்லை. ஆயின், முதலில் தோன்றிய தாகக் கருதப்படும் இந்நூலின் ஆசிரியரே இத்தகைய அமைப்பை உருவாக்கியிருப்பார் என ஊகிக்க இட முண்டு. பின்னர்த் தோன்றிய பள்ளு நூல்கள் அனைத்தும் பொது அமைப்பு முறையில் இந் நூலையே பின்பற்றியுள்ளன.

**அமைப்பு**: கவிக்கூற்றாக, தரவு கொச்சகக் கலிப் பாக்கள் நூலின் இடையிடையே அமைந்துள்ளன. இராகம், தாளம் ஆகியன அமைய, பாத்திரங்களின் கூற்றுகளாகச் சிந்துப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாத்திரங்கள் நாடகத்தன்மையுடன் அறிமுகப்படுத் தப்படுவதுடன் உரையாடல் வழியே கதை நிகழ்த் தப்படுகிறது. ஆகவே, இந்நூல் இயல், இசை, நாடகம் கலந்த முத்தமிழ் நூல் ஆகும்.

சங்க அகப்பாடல் மரபின் கூற்றுகளாகப் பாடல்கள் அமைந்துள்ளன. கிளவித்தலைவன் தலைவி யர் சிறப்புப் பெயரால் சுட்டப்படாமல் சங்க அகப் பாடல்களைப் போலவே பொதுப்பெயரால் சுட்டப் படுகின்றனர்.

**காலம்**: காவை வடமலைப் பிள்ளையன், ஆறை அழகப்ப முதலியார், திருமலைக் கொழுந்துப்பிள்ளை யன் ஆகியோர் இந்நூலில் பாராட்டப்படுகின்றனர். இவர்கள் காலம் கி.பி. 1676 முதல் கி.பி.1682 வரை என்று அறியப்படுவதால், இந்நூலின் காலம் கி.பி.17 -ஆம் நூற்றாண்டு எனலாம்.

**ஆசிரியர்**: இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. இந்நூலைத் தழுவி 'முக்கூடற்பள்ளு நாடகம்' என்ற நூலை இயற்றிய என்னயினாப் புலவரைச் சிலர் இந்நூலின் ஆசிரியர் என்பர். அது தவறு. ஆயின் அவர் இயற்றமிழ் வளமும் இசைத்தமிழ் நய மும் நாடகத் தமிழ் நலமும் மிகுந்த மிகச் சிறந்த முத்தமிழ்க் கவிஞர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர் ஆழ்வார்களைப் போலவே, திருமால்பால் பேரன்பு கொண்டவர்; சமூகப் பழக்கவழக்கங்களைப்

பற்றியும், வேளாண்மைத் தொழிலைப் பற்றியும் நன்கு அறிந்தவர். சிலேடை நயமும், கற்பனை வளமும் மிகுந்த சிந்து பாடுவதில் அவர் வல்லவர்; பழமொழிகளைச் சூழ்நிலைக்குப் பொருந்த அமைத்துப் பாடுவதில் இணையற்றவர்.

அறியாதவர்கள் சிலர் தீண்டாமை கருதி,'பள்ளா, பள்ளா விலகு என்று கூறித் தூர விலகிச்சென்றாலும் நாங்கள் அவர்களுக்கு நெருக்கம்தான். ஏனெனில், அவர்கள் உண்ணும் சோறு நாங்கள் பயிரிட்ட வேளாண்மையால் விளைந்ததுதான்' என்று பள்ளன் கூறுவதாக அமைந்துள்ள கூற்றில் இவர் பள்ளர் சமூகத்தின் மீது கொண்ட அன்பு புலப்படும்.

**கதைச் சுருக்கம்**: முக்கூடற்பள்ளுவின் நாடக அரங்கில் முதலில் மூத்த முக்கூடற்பள்ளி தோன்றுகின்றாள்; பின் இளைய மருதூர்ப் பள்ளி தோன்றுகிறாள். அதன்பின் பள்ளன் வடிவழகக் குடும்பன் தோன்றுகிறான். பள்ளன் தன் குடிப் பெருமை கூறுகிறான் மூவரும் தனித்தனியே தத்தம் குடித்தரம் கூறுகின்றனர். இரு பள்ளிகளாலும் தத்தம் நாட்டுவளம், நகர் வளம் ஆகியன இலக்கிய நயம்படத் தனித்தனியே எடுத்துக் கூறப்படுகின்றன.

மழை வேண்டி மேகத்தைக் கூவுமாறு குயிலுக்குத் தனித்தனியே இருவரும் கட்டளையிடுகின்றனர். தெய்வங்களை மழை வேண்டி வழிபடுகின்றனர். மழைக் குறிகள் தோன்றுகின்றன. மழை பெய்கிறது. ஆற்றில் வெள்ளம் பெருகிப் பாய்கிறது.

பண்ணை நயினார் தோன்றுகின்றார். மழை பெய்தும் வேளாண்மைக் கடமைகளைச் செய்யாத பள்ளனைக் குறித்து மூத்தபள்ளி பண்ணை நயினாரிடம் குறை கூறுகிறாள். குடிசைக்குள் பள்ளனை ஒளித்து வைத்துக் கொண்ட இளைய பள்ளி பள்ளனைக் காணவில்லை என்கிறாள். இரண்டு பள்ளிகளுக்கிடையே வாக்குவாதம் முற்றுகிறது.

இளைய பள்ளியின் குடிசைக்குள்ளிருந்து பள்ளன் வெளியே வருகின்றான். பள்ளன் பண்ணை நயினாரிடம் வித்துவகை, மாட்டுவகை, ஏர்க்கால் வகை ஆகியவற்றைச் சிலேடை நயத்துடன் கூறுகின்றான். பண்ணை நயினார் ஆட்டுக்கிடை வைக்க இடையனைக் கூட்டி வரச் சொல்ல, பள்ளன் செல்கிறான்.

கிடை வைப்பதைக் கவனிக்காமல் இளையபள்ளி வீட்டில் பள்ளன் 'கிடையாய்க் கிடக்கின்றான்' என மூத்த பள்ளி பண்ணை நயினாரிடம் குறைகூறுகிறாள். தொழுமரத்தில் கட்டிப் போட்டால்தான் பள்ளன் வழிக்கு வருவான் என்கிறாள். பண்ணை நயினார் பள்ளன் காலில் மரக்கட்டையைக் கட்டிப்போட்டுத் தொழுவில் அடைத்து விடுகின்றார்.

தொழுவில் அடைத்தது கண்டு இளைய பள்ளி வருந்தப் பள்ளன் தேற்றுகிறான். சோறு கொண்டு வரும் மூத்த பள்ளியிடம் தன்னை மன்னிக்கும்படி பண்ணை நயினாரிடம் கூறுமாறு கெஞ்சுகிறான். மூத்த பள்ளியின் வேண்டுகோளை ஏற்று, பள்ளனைப் பண்ணை நயினார் விடுவிக்கின்றார். பின், பள்ளன் மீண்டும் வித்துவகை, மாட்டுவகை, ஏர்க்கால்வகை ஆகியன கூறுகின்றான்.

நல்ல நாள் பார்த்து நாளேர் கட்டும்படி பண்ணை நயினார் பள்ளனிடம் கூறுகிறார். பள்ளர்கள் பெயர்ப் பட்டியல் கூறப்படுகிறது. நல்ல நாள் பார்த்து நாளேரிட்டுப் பள்ளர்கள் உழுகின்றனர். பள்ளனை மாடு முட்டுகிறது. இரு பள்ளியரும் வருந்துகின்றனர். பள்ளன் பணியாற்ற உழவு நடக்கிறது. நாற்று பாவப்படுகிறது. நடவு நடக்கிறது. நடும்போது நடக்கும் வேடிக்கைகள் பல சுவையுடன் சுட்டிக் காட்டப்படுகின்றன. பயிர் வளர்ந்து அறுவடை நடக்கிறது. நெற்பொலி அளக்கப்படுகிறது. நெற்கணக்கு பள்ளனால் கூறப்படுகிறது.

மூத்த பள்ளி தன்கணக்கு விடப்பட்டதறிந்து முறையிடுகிறாள். பண்ணை நயினாரையும் ஏசுகிறாள். அவள் ஏசியதைப் பண்ணை நயினாரிடம் கூறப் போவதாக இளைய பள்ளி அச்சுறுத்துகிறாள். இருவருக்குமிடையே வாக்குவாதம் முற்றுகிறது. பின் இருவர் சண்டையும் சமயப் பூசலாக உருவெடுக்கிறது. புராணக் கதைகளின் அடிப்படையில் மூத்தபள்ளி சிவபெருமானைக் குறைகூறியும், இளைய பள்ளி திருமாலைக் குறைகூறியும் வாக்குவாதம் புரிகின்றனர்.

'பெருமாளின் அடியவனுக்கு வாழ்க்கைப்பட்டுப் பெருமாளைப் பழித்துப் பேசலாமா?' என்கிறாள் மூத்த பள்ளி. 'கோபம் வந்தால் சொல்லாத சொற்களும் உண்டோ?' என்கிறாள் இளைய பள்ளி. 'சினம் வந்தாலும் சீரழியும்படி பேசலாமா?' என்கிறாள் மூத்த பள்ளி. 'முதலில் வைதவரை வாழ்த்தியவரும் உண்டா?' என்கிறாள் இளைய பள்ளி. 'மூத்தவர்கள் பேசியதைப் பொறுத்துக் கொள்ளலாகாதா?' என்கிறாள் மூத்த பள்ளி. 'இந்த வார்த்தையை முதலில் சொன்னால் இத்தனை சண்டைக்கு இடமேது' என்கிறாள் இளையபள்ளி. 'சொன்னதைப் பற்றி என்ன? நீயும் பொறுத்துக் கொள்; நானும் பொறுத்துக் கொள்கிறேன்' என்று கூறி முக்கூடல் அழகர் திருவடிகளை வாழ்த்திப் பாடுவோம் என்கிறாள் மூத்த பள்ளி. முக்கூடல் அழகரையும் அவர் அடியார்களையும் வாழ்த்தும் கவிக்கூற்றுடன் நூல் நிறைவு பெறுகிறது.

**மீன் வகை:** துதிக்கை மீன், மூக்கன் மீன், பண்ணை மீன், சாளை மீன், எண்மெணய் மீன், பசலி மீன், திருக்கை மீன், கசலி மீன், கௌுத்தி மீன், பண்ணாங்கு மீன், பழம்பாசி மீன், மகர மீன், சள்ளை மீன், மத்தி மீன், கடந்தை மீன், செம்பொன் நொறுக்கி மீன், மலங்கு மீன், பஞ்சலைக் கெண்டை மீன், கருங்கண்ணி மீன் ஆகிய மீன் வகைகள் தாமிரபரணியில் காணப்பட்டனவென்பது நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சித்திரா நதியில் பரவை மீன், குரவை மீன், வாளை மீன், கோளை மீன், தேனி மீன், மயிந்தி மீன், உழுவை மீன், அயிந்தி மீன், கூனி மீன், மணலி மீன், ஆரல் மீன், ஓரா மீன், அயிரை மீன், கெண்டை மீன், கெளிற்று மீன், வரால் மீன் ஆகியன காணப் பட்டனவென்பதும் நூலில் குறிக்கப்பட்டுள்ளது.

**வித்து வகை:** மணல்வாரி, பூம்பாளை, திருமங் கையாழ்வான், மச்சு முறித்தான், சொரி குரும்பை, பெரு வெள்ளை, குலை வாழை, மறுவில்லிச் சம்பா, நீலச்சம்பா, வில்லூன்றிச் சம்பா, கடுக்கன் சம்பா, சித்திரக்காலி, வாலான் நெல், சிறை மீட்டான், செஞ்சம்பா, விளங்கி நெல், மலைமுண்டன், பொற் பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற்சம்பா, கத்தூரிச் சம்பா, வாணன் நெல், காடைக் கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, வெள்ளைச் சம்பா, புத்த நெல், கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகள் நூலில் கூறப்பட்டுள்ளன.

**மாட்டு வகை:** ஆயிரமல்லியன், மயிலை, ஒற்றைக் கொம்பன், வடமலையப்பநயினார், செம்பருந்து, குடைக்கொம்பன், செம்மறையன், குத்துக் குளம்பன், மேழை, குடைச் செவியன், குற்றாலன், கூடுகொம் பன், மடப்புல்லை, கரும்போரான், கழற்றிக் கண்ணன், மட்டைக் கொம்பன், கருப்பன், மஞ்சள் வாலன், படைப்புப் பிடுங்கி, கொட்டைப்பாக்கன், அணிற்காலன், படலைக் கொம்பன், விடத்தலை, பூநிறத்தன் வெள்ளைக் காளை ஆகிய மாட்டுவகை கள் நூலில் கூறப்பட்டு உள்ளன.

**ஏர்க்கால் வகை:** கொழு, மேழி, கலப்பை, நீள் வடம், முழுவடம், நுகம், கயமரம், வளைக்கை, கழுந்து, ஏர்க்கால், சிறு கைக்கோல், வயலுழுங் குத்தி, வளைமேழி, வடக்கயிறு ஆகிய வேளாண் கருவிகள் நூலில் கூறப்பட்டுள்ளன.

**வேளாண்மைக் கல்வி:** பதித்த நடவுக்குப் பின் நாற்று வாட்டமடையும்; பின் தேறும்; தெளியும்; பின் பச்சை நிறம் பெறும்; பின்னர்க் குருத்து விடும்; நிலத்தை அடைக்கும்படி தூர் கட்டும்; பின்பு கருப்பு ஏறும்; குழந்து வளையும்; பின் பொதி தோன்றும்; கதிர் வெளியே வரும். பின் நெல் பழுக்கும். இத் தகைய வேளாண்மைக் கல்வியை, 'பதிந்த நடவு தேறிப்பசப்புமேறி' (முக்கூடற்பள்ளு: 134) என்ற பாடலின் மூலம் ஆசிரியர் காட்டியிருப்பது அவரின் வேளாண்மை அறிவுக்குத் தக்க சான்றாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுப் படிக்கப் பெற்ற இந்நூல், சந்த அழகாலும், நடைச் சிறப்பாலும், கற்பனை வளத்தாலும் இன்றும் உள்ளம் கவரும் இலக்கியமாக விளங்குகிறது. க.மு.

**முக்டென்**, சீனாவில் உள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற நகரம். இப்பொழுது இதன் பெயர் சென் யாங்கு (Shen-yang) என்று மாற்றப்பட்டிருக்கிறது. வடகிழக்குச் சீனாவில் இலியானிங்கு (Liaoning) என்னும் மாநிலத் தலைநகராக இது விளங்குகிறது. அன் (Hun) ஆறு இதையொட்டி ஓடுகிறது. முக்டென் (Mukden) நகரின் மக்கள் தொகை 4.02 மில்லியன் (1982). சீனாவின் மக்கள் தொகை மிகுந்த நகரங் களுள் இது நான்காம் நகரமாகும். தொழில்கள் பல மிகுந்துள்ள ஒரு பகுதியின் மையமாக இது விளங்கு கிறது. இங்குச் செய்யப்படும் பொருட்களில் முக்கிய மாக, கனரக இயந்திரங்கள், வானவூர்திகள், தானி யங்கி இயந்திரப் பொருட்கள், சிமெண்டு, மருந்து வகைகள், காகிதப் பொருட்கள், வேதிமப் பொருட் கள், துணிவகைகள், இயந்திரத் துணைக்கருவிகள், இழுவை இயந்திரங்கள் (Tractors), கடலடித் தந்திக் கம்பி வடங்கள் (Cables), மின்னியல் விசை மாற்ற மைவுகள் (Transformers) முதலியவை குறிப்பிடத் தக்கன. இந்நகரம், இலியானிங்கு மாநிலத்தின் பெரிய நகரங்களுடனும், பீகிங்கு என்ற பெய்சிங்குடனும் வடகொரியாவுடனும், இருப்புப் பாதைகள் மூலம் இணைக்கப்பட்டிருக்கின்றது. அண்மையில் தன் னாட்சிப் பண்ணைகள் (Farm Communes) இங்கு அமைக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை இந்நகரம் தன் தேவைகளை நிறைவு செய்துகொள்கிறது. அரிசி, கோதுமை முதலிய தானி யங்கள், சோயா, அவரை, காய்கறிகள் முதலியனவும் இங்கு விளைகின்றன.

சீனாவில் 1912-இல் குடியரசு அமைக்கப்பட்ட பிறகு, பல போர்த் தலைவர்கள் இந்நகரைத் தம் தங்குமிடமாகக் கொண்டிருந்தனர். இங்கு 1931, செப்டம்பரில் இருப்புப்பாதை வெடிகுண்டு நிகழ்ச்சி ஏற்பட்டது. இருப்புப்பாதையில் வெடிகுண்டுவைக்கப் பட்டிருந்த அந்தநிகழ்ச்சி முக்டென் அல்லது மஞ்சூரிய நிகழ்ச்சி (Mukden Incident) எனப்படும். சப்பான் அதைக் காரணம் காட்டி, முக்டென் நகரைக் கைப் பற்றிக் கொண்டது. சப்பான் பின்னர் மஞ்சூரியா

முழுவதிலும் தன்னுடைய ஆட்சியை அமைக்க இந் நிகழ்ச்சி ஒரு தொடக்கமாயிற்று. சப்பான், 1931-இல் முக்டெனை ஒரு சிறந்த தொழில் மையமாக வளர்த் தது.இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ச்சப்பான் தோல்வியுற்றதன் விளைவாகச் சீனத் தேசிய படையி னர் 1945 – இல் முக்டெனில் புகுந்தனர். அவர்களுக் கும் பொதுவுடைமையாளர்களுக்குமிடையே 1946 –ஆம் ஆண்டுமுதல் 1948-ஆம் ஆண்டுவரை உள்நாட் டுப்போர் நடைபெற்றது. பின்னர் 1948-இல் முக்டென் பத்துமாத முற்றுகைக்கு உட்பட்டிருந்ததால் ஆயிரக் கணக்கான முக்டென் மக்கள் பசியால் வாடினர். இறுதியில் தேசிய படையினர் தோல்வியுற்றனர். முக்டென் 1948-ஆம் ஆண்டு நவம்பரில் பொதுவுடை மைக் கட்சியினருக்கு உரியதாயிற்று. சீனாவின் மற்ற பகுதிகளை வெற்றிகொள்ளப் பொதுவுடைமைப் படையினர் முக்டெனைத் தம் படையெழுச்சிமுயற்சி களுக்கு அடித்தளமாகக் கொண்டனர். அடுத்த ஒன்றரை ஆண்டுகள் அவ்வாறே முக்டென் முதன்மை நிலையில் விளங்கியது.

பொதுவுடைமையினர் ஆட்சி சீனாவில் ஏற் பட்டவுடன், 1954 – இல் முக்டென் இலியானிங்கு மாநிலத்தின் தலைநகரமாயிற்று. இப்பொழுது இந் நகரில் 1) பண்டைய சீன நகரப் பகுதி , 2) புதிய நகரம், 3) மக்கள் வாழும் பகுதி என மூன்று பிரிவு கள் உள்ளன. பண்டையசீன நகரப் பகுதியில் ஆட்சி முறைமையம் அமைந்துள்ளது. புதிய நகரத்தில், இருப் புப் பாதைகள் கூடுகின்றன. மக்கள் தொகை 1950-1960-ஆம் ஆண்டுகளில் இரட்டிப்பாகப் பெருகியுள் ளது.

**முக்டென் போர்**: உருசியாவும் சப்பானும் கி.பி. 1895-இல் மேலாண்மை வேட்கைகாரணமாகப் போரில் ஈடுபட்டன. அப்போர்க் காலங்களில் முக்டென் முதன் மையான இடத்தைப் பெற்றிருந்தது. உருசியா, மஞ் சூரியாவில் இருப்புப்பாதை அமைக்க உரிமை பெற்றி ருந்ததால்முக்டென் உருசியரின் வலிமைமிக்க இடமாக விளங்கிற்று. சப்பானுக்கும் உருசியாவுக்குமிடையே 1904-1905-ஆம் ஆண்டுகளில் போர் நிகழ்ந்தது. அப் போது முக்டென் முக்கிய போர் நகராயிற்று. முக்டென் போர் (Battle of Mukden) 1905-ஆம் ஆண்டு பிப்பிரவரி 19-ஆம் நாள் முதல், மார்ச்சு, 16-ஆம் நாள் வரை நீடித்தது. அப்போரில் 1,50,000 உருசியப் படை வீரர்களும், 50,000, சப்பானிய வீரர் களும் உயிரிழந்தனர். எனினும், உருசியாவின் எதிர்ப்பு முனையை இப்போர் மழுங்கச் செய்தது. ஒரு பெரிய ஐரோப்பிய வல்லரசை ஒரு சிறிய ஆசிய நாடு தோற் கடித்த காரணத்தால், முக்டெனில் நடந்த இப்போர் வரலாற்றுச் சிறப்புப் பொருந்தியதாகும். தெ.பா.

முகப்புரை என்பது ஒரு சட்டத்தை அறிந்து கொள்ள உதவும் அல்லது துணை செய்யும் ஒரு திறவு கோலாகும். ஒரு சட்டத்திலுள்ள சொற்களின் உண்மையான நோக்கம், காரணங்கள் ஆகியவற்றை அறியவும், சொற்களின் பொருளில்குழப்பம் இருப்பின் அவற்றின் சரியான பொருள் விளக்கத்தை அறியவும், சட்டத்தின் மெய்ப்பொருள் அல்லது எதற்காக இயற்றப் பட்டது என்பதை அறியவும் முகப்புரை (Preamble) ஒரு திறவுகோல் போல் உதவுகிறது.

முகப்புரை ஒவ்வொரு சட்டத்தின் தொடக்கத் திலும் அளிக்கப்படுகிறது. இதன் இன்றியமையாப் பணி அந்தச் சட்டம் எதற்காக யாருக்காக இயற்றப் பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவதும், அந்தப் பொருள், அதன் வரம்பு நிலைகள், அதிகாரம் முதலி யவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதும் ஆகும். ஆனால், இதுவே அந்தச் சட்டத்தின் எல்லா முக்கிய பொருட்களையும், விளங்க வைப்பதாகக் கொள்ளுதல்கூடாது. இது ஒரு சட்டத்தின்அடிப்படை உணர்வுகளைக் கோடிட்டுக் காட்டும் திறன் கொண் டது. இது சட்டத்தின் முழுப் பொருளையும் விளங்க வைப்பதாகக் கொள்ளக்கூடாது. இது அந்தச்சட்டத் தின் உணர்வை உணர்த்தவல்லது. எந்த ஒரு சட்டத் திலும், அதன் உண்மையான வரன்முறைகளைப் பற்றித் தெரிய வேண்டுமானாலும், அந்தச்சட்டத் தில் கூறப்பட்ட சொற்களில் இருபொருள் இருக்கு மாயின், அதைப் பற்றி அறிய வேண்டுமானாலும், அந்தச் சொற்களுக்கு இரண்டு பொருள் கொள்ளும் நிலையில் எந்தப் பொருளை எடுத்துக் கொள்வது, சரியானது என்பது பற்றித் தெரிய வேண்டுமானா லும் ஒருசட்டம் எந்த நோக்கத்திற்காக அல்லது காரணங்களுக்காக இயற்றப்பட்டதோ அந்தக் காரணங்களுக்கு உரிய பயனை அறியவேண்டுமானா லும், அந்தச்சட்டத்தில் எந்தப் பகுதியாவது ஐயத் திற்கு இடம் உண்டாக்குமேயானாலும் இந்த முகப் புரையைச் சட்ட முறையில் ஆய்வு செய்யவேண்டும். அவ்வாறு ஆய்வு செய்வது ஒரு சட்டத்தின் உண்மைப் பண்புகளை அறிய உதவிசெய்யும். முகப் புரை, ஒரு சட்டத்தின் நோக்கத்தைப் பற்றித்தான் கூறுமே தவிர அந்தச் சட்டத்தின் முழு வரம்பினை யும் பற்றிக் கூறுவதாகச் சொல்ல முடியாது. இந்த முகப்புரை அந்தச் சட்டத்தின் எந்தப் பிரிவி லும் கூறப்பட்டுள்ள பொருளைக் கட்டுப்படுத்தாது. அதுபோலவே அந்தச் சட்டத்தில் உள்ள பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள பொருளிற்கும் முகப்புரைக்கும் முரண்பாடு தோன்றுமேயானால், சட்டத்தின் பிரிவு களில் உள்ள பொருளைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.சட்டத்தின் பொருள் தெளிவாகவும், குறிப் பாகவும் உள்ளபோது முகப்புரையைப் பார்ப் பதையோ ஒப்பிடுவதையோ தவிர்க்கலாம். முகப் புரை என்பது ஒரு சட்டத்தை உருவாக்குவதற்குரிய

பின்னணியாகும். ஆனால், இது எந்த வகையிலும், சட்டப் பிரிவில் விளக்கிச் சொல்லப்பட்டு இருப்பன வற்றையோ, விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன வற்றையோ பாதிக்காது. முகப்புரை என்பது ஒரு சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லிவிடுமே தவிர அதில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் விளக் காது. ஒரு சட்டத்தின் நோக்கம் அந்தச் சட்டத்தின் பிரிவிலிருந்து தெளிவாகத் தெரியவில்லை என்றால், முகப்புரையை நாடி அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, இது ஒரு சட்டத்தின் முக்கிய நோக்கத்தை விளக்குவதன்றி அதனை முழுமையாக வரையறுத்து விளக்குவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. முகப்புரை என்பது ஒரு சட்டப் பேரறையின் நோக்கத்தை அறியக் கூடிய திறவு கோலாக இருந்தாலும், அந்தச் சட்டத்தில் தெளி வாகப் புரிந்து கொள்ளக் கூடிய சொற்கள் இருக்கும் போது முகப்புரை அந்தச் சட்டத்தைக் கட்டுப்படுத்து வதாகவோ, குறிப்பிட்ட பொருளைத் தருவதாகவோ, எடுத்துக் கொண்டு மற்றச் சட்டப் பிரிவுகளை ஆய்வு செய்தல் கூடாது. எப்போது அந்தச் சட்டப் பிரிவு களில் கூறப்பட்டுள்ளவை பற்றி ஐயம் வருகிறதோ அப்போது ஒருவர் அச் சட்டத்தை இயற்றியவர்களின் உண்மையான நோக்கத்தை உறுதிப் படுத்துவதற்காக அதன் முகப்புரையை நாடவேண்டும்.

அந்தச் சட்டப் பிரிவில் உள்ள சொற்களுக்கு இரண்டோ, அதற்கு மேற்பட்ட பொருட்களோ இருக்குமாயின் எந்தப் பொருள் முகப்புரையில் கூறப் பட்டுள்ளவற்றிற்கு ஒத்தும், அதற்குப் பொருத்தமாக வும் இருக்கிறதோ, அந்தப் பொருளைத்தான் தேர்வு செய்ய வேண்டும். முகப்புரை ஒரு சட்டத்தின் பிரிவு களை அறிய உதவும். அது தெளிவாக இருக்கும் சட்டப் பிரிவைப் பாதிக்காது. ஆகையால், நீதிமன்றம் ஒரு சட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டு மெனில் அதனுடைய முகப்புரையிலிருந்து தொடங்கி ஆராய வேண்டும். சில இடங்களில் அந்தச் சட்டப் பிரிவுகள் முகப்புரையில் சொல்லப்பட்டுள்ளன. விவரங்களுக்கு மேன் மேலும்விளக்கம் தரும்போது, வழக்கு மன்றம் அந்தச் சட்டப் பிரிவில் மிகுதியாகச் சொல்லப்பட்டுள்ள விவரங்களுக்குத்தான் முதன்மை யிடம் கொடுக்க வேண்டுமே தவிர, அந்தச் சட்டப் பிரிவை முகப்புரையில் சொல்லப்பட்டுள்ள வரை யறைக்குள் கட்டுப்படுத்த முயற்சி செய்யக் கூடாது.

இந்த முகப்புரை அனைத்துச் சட்டங்களின் தொடக்கத்திலும் வருவதாகும். இந்திய அரசியல் சாசனத்தில் உள்ள முகப்புரையைப் பார்த்தால், இதன் இன்றியமையாமை தெரியும்.

தலைமை நீதிமன்றங்கள் ஒரு சட்டத்தைப் பரி சீலிக்கும் போது முதலில் முகப்புரையின் உணர்வு களை மட்டும் கருத்திற் கொண்டு பரிசீலிக்கும். பின்னர்ச் சட்டத்தின் வெளிப்படையான பொருளை மட்டும் கருத்தில் கொள்ளும்; இரு நிலைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு முழுமையான பொருள் தாராத நிலை உருவாகிய போது, அவ்விரண்டையும் ஒருங்கே இணைத்துத் தேவையான விளக்கங்களைக் கருத்திற் கொண்டு, செயற்படத் தொடங்கும்.

கே.வி.அ

**முகம்மதிய மணக்கொடை:** இசுலாமிய சமயத்தில் திருமணம் காரணமாகக் கணவன் மனை விக்குச் சொத்தாகவோ, பணமாகவோ, பொருளா கவோ தருவது மணக்கொடை அல்லது மகர் (Maher) எனப்படும். கணவன், தான் மனைவியாக ஏற்றுக் கொள்ளும் பெண், தனக்கு நிகரான தகுதி (Status) பெற உள்ளன்புடன் தருவதே இம் மணக்கொடை. மணக்கொடை என்று பொதுவான வழக்கில் குறிப் பிடப்படும் சொல்லுக்கும் இசுலாமிய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள இம் மணக்கொடைக்கும் அடிப் படையான வேறுபாடுகள் உள்ளன. பெண்குலத்தின் பால் இசுலாமிய சமுதாயம் எத்தகைய மரியாதை யும், மதிப்பும் உடையதாக இருந்து வருகின்றது என்ப தற்கு எடுத்துக்காட்டே 'முகம்மதிய மணக்கொடை' எனலாம்.

இம்மணக்கொடை மனைவிக்கே உரிய சொத் தாகும். இதை அவள் தன்விருப்பம்போல் பிறருக்கு மாற்றம் செய்யலாம். கணவன் எந்த வகையான மறு பயனையும் எதிர்பார்க்காமல் மனைவிக்குத் தருவதே இம்மணக்கொடையாகும். இதை எப்படி, எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது திருமணத்திற்கு முன்போ, திருமணத்தின் பொழுதோ, அதற்குப் பின்போ உறுதி செய்யலாம்.

மணக்கொடையைப் பணமாகவோ, பொருளா கவோ மட்டுமன்றி, சொத்திலிருந்து வரும் வருமான மாகவோ கடையிலிருக்கும் கையிருப்புப் பொருளா கவோகூடக் கொடுக்கலாம். ஆனால், போதை தரும் பொருட்களைக் கொடுக்க முடியாது. கணவன் தகுதியைப் பொறுத்து மணக்கொடை அமைய வேண் டும்.

**மணக்கொடை வகைகள்:** முகம்மதிய மணக் கொடையை வரையறை செய்யப்பட்ட மணக் கொடை (Specified Maher) எனவும், முறையான மணக்கொடை (Proper Maher) எனவும் பாகுபாடு செய்வர்.

**வரையறை செய்யப்பட்ட மணக்கொடை:** திருமண ஒப்பந்தத்திற்கு முன்போ, ஒப்பந்தம் செய்யப்படும்

காலத்திலோ, மணக்கொடை இவ்வளவு என்று உறுதி செய்யப்பட்டிருப்பின் அது உறுதி செய்யப்பட்ட மணக்கொடை எனப்படும். அவ்விதம் வரையறை செய்யப்பட்ட மணக்கொடையை மேலும் மிகுதிப் படுத்தக் கணவனுக்கு உரிமை இல்லை. எனினும், இசுலாமிய சமுதாயத்தின் உட்பிரிவுகளில் பெரும் பாலானவற்றில் உள்ள நடைமுறைப்படி மனைவி வயது வந்தவளாக இருந்தால் மனமுவந்த, ஒப்புக் கொள்ளப்பட்ட மணக்கொடையினைக் குறைத்துக் கொள்வது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**முறையான மணக்கொடை**: திருமண ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்போ, திருமண ஒப்பந்தக் காலத் திலோ கணவன் மனைவிக்கிடையில் மணக்கொடை குறித்து யாதொரு ஒப்பந்தமும் ஏற்பட்டிருக்கவில்லை எனில், மணமக்கள் சார்ந்துள்ள உட்பிரிவுகளின் நடைமுறைப்படி வரையறை செய்யப்படுவது 'முறை யான மணக்கொடை' எனப்படுகிறது. உட்பிரிவுகளில் நடைமுறைப்படி மணக்கொடை குறித்து மணமக்க ளுக்குள் ஒப்பந்தம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை எனில் மணமகளின் தந்தை வீட்டில் அவருடைய சகோதரிகளின் திருமணங்களில் வரையறை செய்யப் பட்ட மணக்கொடையினைப் பின்பற்றி உறுதி செய்யப்படுகிறது. முகம்மதிய வழக்கப்படி மணக் கொடை எவ்விதத்திலும் திராம்களுக்குக் (Dirhams) குறைவாக வரையறை செய்யப்படக்கூடாது என்பது பொதுவிதி. ஒரு 'திராம்' என்பதன் மதிப்புப் பற்றிப் பலவகைப்பட்ட கருத்துகள் இருப்பினும், அலகா பாது நீதிமன்றம் ஒரு திராம் என்பது மூன்று அல்லது நான்கு உரூபாய்கள் எனக்கருத்து வெளியிட்டிருப் பது பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

திருமண ஒப்பந்தக் காலத்திலேயே மணக்கொடை எப்பொழுது தரப்படல் வேண்டும் என்று மணமக்கள் ஒப்பந்தம் செய்து கொள்வர். மணமக்கள் வயது வாராதவர்களாக இருப்பின் அவர்களின் பாதுகாவ லர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அவ்விதம் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் காலவரையறை அடிப் படையில் மணக்கொடையினை 'உடனடி மணக் கொடை' எனவும், 'ஒத்தி வைக்கப்பட்ட மணக் கொடை' எனவும் பாகுபாடு செய்வர்.

**உடனடி மணக்கொடை**: மணக்கொடை முழுமை யும் அல்லது அதில் ஒரு பகுதி, திருமண ஒப்பந்தக் காலத்திலோ, திருமண ஒப்பந்தம் ஏற்பட்ட உடனேயோ, மனைவி கேட்கும் காலத்திலோ தரப் படல் வேண்டும் என்று ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பின், அவ்விதம் தரப்பட வேண்டியதாக வரையறை செய் யப்பட்ட முழுக்கொடை அல்லது ஒரு பகுதி 'உட னடி மணக்கொடை' (Prompt Maher) என வழங்கப் படுகிறது.

**ஒத்திவைக்கப்பட்ட மணக் கொடை**: மணக்கொடை முழுமையும் அல்லது அதில் ஒரு பகுதி, மரணம் அல்லது மணவிலக்கு ஆகியவை காரணமாகத் திரு மண ஒப்பந்தம் உலவீனம் அடையும் காலத்தில் தரப்படல் வேண்டும் என ஒப்புக் கொள்ளப்பட்டிருப் பின் அவ்விதம் தரப்பட வேண்டியதாக உள்ள முழுமையான மணக்கொடை அல்லது மணக்கொடை யின் ஒரு பகுதி 'ஒத்தி வைக்கப்பட்ட மணக்கொடை' (Deferred Maher) எனப்படுகிறது.

**மணக்கொடையும் மனைவியின் உரிமைகளும்**: மணக்கொடையைப் பொறுத்து மனைவியின் உரிமை களைத் திருமண ஒப்பந்தம் நிலைத்திருக்கும் காலம் எனவும், திருமண ஒப்பந்தம் உலவீனம் அடைந்த காலம் எனவும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**திருமண ஒப்பந்தம் நிலைத்திருக்கும் காலத்தில் மனைவியின் உரிமை**: உடனடி மணக்கொடை தரப் படவில்லை என்பதைக் காரணமாகக் காட்டி மனைவி கணவனுடன் உடலுறவில் ஈடுபட மறுக்கலாம். முகம் மதியச் சட்டப்படி கணவன் மனைவி பேரில் இல் வாழ்க்கைக்கு இணங்க வேண்டித் தாக்கல் செய் யும் வழக்கில் உடனடி மணக்கொடை தரப்பட வில்லை என்று மனைவி காரணம் காட்டி மெய்ப்பித் தால், அதுவரை அவர்களுக்குள் உடலுறவு ஏற்பட்டி ருக்கவில்லை எனில் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட நேரிடும். ஆயின், அவர்களுக்குள் ஏற்கெனவே உட லுறவு ஏற்பட்டிருந்தால், உடனடி மணக்கொடை செலுத்தக் கணவனுக்கு ஒரு காலவரையறை கொடுத்து அந்தக் காலவரையறைக்குள் கணவன் மனைவிக்கு உடனடி மணக்கொடை செலுத்திவிட் டால், மனைவியை உடலுறவுக்கு அழைக்கும் உரிமையை அளித்து நீதிபதி தம் தீர்ப்பில் முடிவு செய்வார்.

**திருமண ஒப்பந்தம் உலவீனம் அடைந்தபிறகு**: கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட திருமணம் மரணத்தாலோ, மணவிலக்குக் காரணத்தாலோ உலவீனம் அடைந்தால் மனைவி தன் கணவனுடைய சொத்துகளைப் பொறுத்து மணக்கொடைக்காக வழக்குத் தொடரலாம்.

மணக்கொடை என்பது கணவனுடைய சொத்து களைப் பொறுத்துப் பெற்றுக் கொள்ளக்கூடிய கடன் என்று கூறலாம். எனினும், அது காப்பளிக்கப்படா (Unsecured) நிலையிலுள்ள கடன் என்றே கருதப் படல்வேண்டும். மணக்கொடைக்காக யாதேனும் ஒரு சொத்து அல்லது சொத்துகள் கணவனால் மனைவி யின் உரிமையில் விடப்பட்டிருந்தால், அந்தச் சொத் திலிருந்து வரும் வருமானம் மூலம் மணக்கொடை முற்றிலும் பெறப்படும் வரையிலும், அல்லது கணவ ரின் வாரிசுகளாய் மணக்கொடை செலுத்தப்படும்

வரையிலும், அந்தச் சொத்து அல்லது சொத்துகளை மனைவி தன் பொறுப்பில் தக்க வைத்துக் கொள்ள உரிமையுண்டு.

மனைவி தன் கணவனிடமிருந்து தனக்கு வரவேண்டியதாக உள்ள மணக்கொடையினைப் பெற்றுக்கொள்ளும் உரிமையினைப் பிறருக்கு மாற்ற முடியுமா என்பது குறித்து முகம்மதிய சமுதாயத்தில் பல்வேறு மாறுபட்ட கருத்துகள் இருப்பினும், மனைவிக்கு அவ்விதம் மாற்ற உரிமையுண்டு என்று மாநில உயர்நீதிமன்றங்களுள் பெரும்பான்மையான உயர்நீதிமன்றங்கள் தீர்ப்புச் செய்துள்ளன.

கணவனுடைய சொத்துகளைப் பொறுத்துக் கணவனின் வாரிசுகள் மேல் வழக்கிட்டு மணக்கொடையைப் பெற்றுக் கொள்ள மனைவிக்கு உரிமையுண்டு. ஆயினும், அவ்விதம் வழக்கிடுகையில் மணக்கொடைக்காக ஏதேனும் சொத்து அவளுடைய உரிமையில் விடப்பட்டிருப்பின் அந்த உரிமையை விட்டுத் தர நேரிடும். மேலும், கணவனுடைய வாரிசுகள்மேல் கணவனுடைய சொத்துகளைப் பொறுத்து மட்டும்தான் தொடர முடியுமே தவிர அவரவர்களின் தனித்த சொத்துகளைப் பொறுத்துத் தொடர முடியாது. உடனடி மணக்கொடையைத் திரும்பப் பெறுவதற்கு மனைவி அல்லது அவளுடைய வாரிசுகள் வழக்குத் தொடுக்க வேண்டுமானால் மணக்கொடை கேட்டு மறுக்கப்பட்ட நாள், மரணம் அல்லது மணவிலக்குக் காரணமாகத் திருமண ஒப்பந்தம் உலவீனம் அடைந்த நாள் ஆகியவற்றிலிருந்து மூன்று ஆண்டிற்குள் வழக்கிடப்பட வேண்டும். 'ஒத்தி வைக்கப்பட்ட மணக்கொடையை'ப் பெறுவதற்கு மரணம் அல்லது மணவிலக்குக் காரணமாகத் திருமண ஒப்பந்தம் உலவீனம் அடைந்த நாளிலிருந்து மூன்று ஆண்டிற்குள் வழக்கிடப்படல் வேண்டும்.

**மணக்கொடையும் மணவிலக்கும்:** கணவன் தன் மனைவியை மணவிலக்குச் செய்தால் உடனே தனக்கு வர வேண்டியதாக உள்ள மணக்கொடையைக் கணவனிடமிருந்து வழக்கிட்டுப் பெற்றுக் கொள்ள மனைவிக்கு உரிமையுண்டு. குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125 என்பது, கணவனால் கைவிடப்பட்ட திக்கற்ற பெண்கள், முதியோர்கள் ஆகியவர்களுக்கு உடனடி உதவி தருவதற்காகவும் அவர்களை வறுமை காரணமாக நெறிபிறழ்வதிலிருந்து தடுப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும். அதில் ஒருவன் தன்னுடைய சமயச் சட்டப்படி, சாதி வழக்கப்படி மனைவிக்கு ஏதேனும் போதுமான தொகை கொடுத்திருந்தால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் அந்தப் பிரிவு பொருந்தாது. இப்பொழுது அண்மையில் சாபானோ என்ற முகம்மதியப் பெண் தன் கணவன் மேல் தன்னைப் பேணிக் கொள்வதற்காகப் (குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு125-இன் கீழ்) பணம் தரவேண்டி வழக்குச் செய்ததில், அந்தப் பிரிவு மணக்கொடை காரணமாக இசுலாமியர்களுக்கு ஏற்புடையதா என்ற சிக்கல் எழுந்ததில், உச்ச நீதிமன்றம் அவ்விதக் கருத்தினை மறுத்து மணக்கொடை காரணமாகக் குற்றவியல் சட்டம் பிரிவு 125, இசுலாமியர்களுக்குப் பொருந்தாது என்பது ஏற்புடையதன்று எனத் தீர்ப்புச் செய்துள்ளது. அந்தத் தீர்ப்புக் குறித்து இசுலாமியர்களுக்குள்ளும் மற்ற சமயத்தினர்களிடையேயும் பலவிதமான வாத எதிர் வாதங்களும் கருத்து மாற்றங்களும் ஏற்பட்ட நிலையில், மத்திய அரசு 'இசுலாம் பெண்கள் பாதுகாப்புச் சட்டம்' என்று சட்டம் ஒன்றினை இயற்றியது. அந்தச் சட்டத்தின் மூலம் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125, கணவன் மனைவி ஆகிய இருவரும் ஏற்றுக்கொள்ள ஒப்புக் கொண்டால் மட்டுமே இசுலாமியர்களுக்குப் பொருந்தும். யாராவது ஒருவர் ஏற்றுக் கொள்ள மறுத்தால் பொருந்தாது எனக் கூறப்பட்டுள்ளது.

பெண்மையை மதிக்குமுகத்தான், கணவன் தன் மனைவிக்குத் தரக் கடமைப்பட்ட மணக்கொடைச் சட்டங்களில் நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்றளவும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உண்மையிலிருந்து, முகம்மதிய மணக்கொடையின் பெருமையை நன்கு உணரலாம். ஆர்.சு. & வ.வெ.

**துணை நூல்கள்:**

**Hidayatullah & Ansbad Hidayatullah,** Mulla's Principles of Mahomedan Law, Tripathi Publications Pvt. Ltd., Bombay, 1979.

**Thair Mohmood,** The Muslim Law of India, Law Book Company Publications, Allahabad, 1982.

*முகம்மது அலி*: இவர் கருநாடக நவாபுகளுள் ஒருவராவார். தென்னிந்தியாவில் ஆங்கிலேயரும் பிரான்சுக்காரரும் மேலாண்மைப் போட்டியில் முனைந்திருந்த கி.பி. 18-ஆம் நூற்றாண்டில், கருநாடகப்பகுதியின் அரசியல் நிலை அவர்களுக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. கருநாடக நவாபுப் பதவிக்குப் போட்டியிட்டவர்களுக்கு உதவி செய்ததன் மூலம் தென்னிந்தியாவில் ஐரோப்பியர் மேலாண்மை வலிமையடைந்தது. முகமது அலி (Muhammad Ali), கருநாடக நவாபு அன்வர் உத்தீன் (Anwar-Ud-din) என்பவரின் இயல்முரணிய (Illegitimate) மகனாவார். அன்வர் உத்தீன் கி.பி. 1743 முதல் 1749 வரை நவாபாக இருந்தவர் முகம்மது அலி, ஆங்கிலேயரின் வலிமையை உணர்ந்து அவர்களுடன் நட்புப் பூண்டார். அவ்வமையம் திருச்சிராப்பள்ளிப் பகுதியில் நிருவாக உரிமை பெற்று ஆட்சி புரிந்து வந்த தோசுத்து

அலி (Dost Ali) என்பாரின் மருமகனான சந்தா சாகிபு (Chanda Sahib) என்பவர் பிரான்சுக்காரர் களுடைய உதவிபெற்றுக் கருநாடக நவாபாக அமர முயன்று வந்தார். அவருடைய எண்ணத்தை முறியடிக்க முகம்மது அலி, ஆங்கிலேயருடன் உடன்பாடு செய்து கொண்டார். நவாபு அன்வர் உத்தீன் கி.பி. 1749-இல் ஆம்பூர்ப் (Ambur) போரில் சந்தா சாகிபாலும் அவருடன் கூட்டு சேர்ந்த பிரான்சுக்காரராலும் முறியடிக்கப்பட்டு, அப்போரிலேயே உயிர் துறந்தார். பிரான்சுக்காரரின் தலைவரான, புதுச்சேரி ஆளுநர் தியூப்ளே (Dupleix) சந்தாசாகிபுக்கு உதவி செய்து அவரையே நவாபாக்க முற்பட்டார். ஆங்கிலேயத் தலைவர் கிளைவு (Clive) முகம்மது அலிக்கு உதவி புரிந்து வந்தார். அப்போட்டியின் விளைவாக ஏற்பட்ட போரில் கி.பி. 1752-ஆம் ஆண்டு சந்தா சாகிபு கொல்லப்பட்டார். உடனே முகம்மது அலி போட்டியின்றி நவாபானார். இவருக்கு உதவி செய்த ஆங்கிலேயர் இவரிடமிருந்து மிகுந்த சலுகைகளையும் பணத்தையும் பெற்றனர். இறுதியில் கி.பி. 1795-இல் இவர் ஒரு பெரும் கடனாளியாக உயிர் நீத்தார். தெ.பா.

**முகம்மது அலி சின்னா:** இந்திய இசுலாம் மக்களால் பெருந்தலைவர் என்று புகழப்பட்ட இவர் பாகிசுத்தான் என்ற நாட்டை உருவாக்கியவராவார். இவர் கி.பி. 1876-ஆம் ஆண்டு, கராச்சியில் பிறந்தார். வணிகராகிய இவருடைய தந்தையின் பெயர் சின்னபாய். வீட்டில் கல்வி பயின்ற பின்பு, கி.பி. 1887-ஆம் ஆண்டு சிந்து மதரசா (Madrasha) உயர்நிலைப் பள்ளிக்குச் சின்னா அனுப்பப்பட்டார். பின்பு, மிசன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். அதன் பின்னர் வணிகத் துறையில் பயிற்சி பெறும் பொருட்டு இவர் தந்தை இவரை இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார். எனினும், சின்னா (Jinnah Muhammed Ali) தாம் ஒரு வழக்குரைஞராக வர வேண்டுமென நாட்டம் கொண்டிருந்தார். அக்கால இசுலாமிய வழக்கப்படி, சின்னா இங்கிலாந்திற்குச் செல்லு முன்னர், பெற்றோர்களால் திருமணம் செய்து வைக்கப்பட்டார்.

இலண்டனில், வழக்குரைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ‘இலிங்கன்சு இன்’ (Lincoln’s Inn) என்ற அமைப்பில் இவர்தம் 19-ஆம் வயதில் சேர்ந்தார். இவர் இலண்டனில் இருக்கும்பொழுது இவருடைய தாயும், மனைவியும் இறந்து போயினர். ஆங்கில நாட்டுப் பாராளுமன்ற மேலவைக்கு அடிக்கடி சென்று, அந்நாட்டு அரசியலமைப்பைப் பற்றி நன்கு அறிந்தார். வில்லியம் கிளாட்சுடனின் கருத்துகள் இவரை மிகவும் கவர்ந்தன. அதே நேரத்தில் இந்தியா மீதும் இந்திய மாணவர்கள் மீதும் மிகுந்த அக்கறை கொண்டவரானார். இந்தியத் தேசியவாதியான தாதாபாய் நவரோசி, முதல் இந்தியர் என்ற முறையில் ஆங்கில நாட்டுப் பாராளுமன்ற மேலவையில் இடம் பெற்றபொழுது அவருக்காகச் சின்னாவும் இந்திய மாணவர்களும் இரவு பகலாக உழைத்தனர்.

இவர் கராச்சி திரும்பியபோது கி.பி. 1896-இல் மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்த இவருடைய தந்தையின் வணிகத்தையே இவரும் சார்ந்து நிற்க வேண்டியிருந்தது. எனவே, பம்பாயில் இவர் தம் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கத் திட்டமிட்டார். பல ஆண்டுகள் கடின உழைப்பிற்குப் பின்பு ஒரு சிறந்த வழக்குரைஞர் ஆனார்.



முகமது அலி சின்னா

பின்னர் 10 ஆண்டுகள் கழிந்த பின் அரசியலில் பங்கேற்று இந்தியத் தேசிய காங்கிரசின் கல்கத்தாக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அதன் பின்னர் நான்கு ஆண்டுகள் கழித்து இம்பீரியல் சட்ட சபைக்குத் (Imperial Legislative Council) தேர்வு செய்யப்பட்டார். பம்பாயில் முதன்மையான காங்கிரசுத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார். தேசிய அரசியல்வாதிகளால் சின்னா மிகவும் கவரப்பட்டார். ஆங்கில நாட்டு அரசியலமைப்பு அணுகு முறைகளைப் பின்பற்றல், உலக நாடுகளிடையே இந்தியாவின் மதிப்பை உயர்த்துதல், சகோதர உணர்வை இந்திய மக்களிடையே ஊட்டல் ஆகியவை இவருடைய அரசியல் நோக்கங்களாக அமைந்தன. இந்தியத் தேசிய எழுச்சியின் போதே இசுலாமியர்களின் நலன்களைத் தம் கருத்திற் கொண்டார்.

பின்னர் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்து-இசுலாமியர்களிடையே மனக்கசப்பு வளர்ந்தது.

இசுலாமியர்கள் தங்களுடைய நலன்களைக் கருத்திற் கொண்டு இந்தியாவிலிருந்து பிரிந்து நிற்கவும் முனைந்தனர். இசுலாமியர்கள்நலன்களைப் பாதுகாக் கும் பொருட்டு 1906-ஆம் ஆண்டு ‘இந்திய முசுலிம்சங் கம்’ தோற்றுவிக்கப்பட்டது. எனினும், சின்னா அக் கழகத்திலிருந்து தனித்து நின்றார். முசுலீம் லீகு 1913 -ஆம் ஆண்டிலிருந்து காங்கிரசைப் போன்று இந்திய விடுதலைக்காகப் பாடுபடத் தொடங்கிற்று. அதன் பின்னரே சின்னாவும் அக்கழகத்தில் சேர்ந்து கொண் டார். இந்தியத் தன்னாட்சிச் சங்கம் (Home Rule League) தோற்றுவிக்கப்பட்டபொழுது, பம்பாயில் இவ்வமைப்பை உருவாக்கும் முதன்மைப் பொறுப் பாளராகப் பணியாற்றி அவ்வமைப்பிற்குத் தலை வராகவும் தேர்வு செய்யப்பட்டார்.

இந்து-இசுலாமியர் ஒற்றுமைக்கு இவர் ஆற்றிய பணியின் காரணமாகக் கோகலே, இவரை மிகவும் பாராட்டிப் புகழ்ந்தார். இவருடைய பெரும் முயற்சி யின் காரணமாகவே காங்கிரசும், முசுலிம் லீகும் தம் ஆண்டுக் கூட்டங்களை இணைந்து நடத்தின. பம்பா யிலும், இலக்னோவிலும் முறையே 1915, 1916-ஆம் ஆண்டுக் கூட்டங்கள் நடைபெற்றன. இலக்னோ கூட் டத்தின் விளைவாக இலக்னோ உடன்படிக்கை உரு வாயிற்று. அதன்படி காங்கிரசும், முசுலிம் லீகும் இந்திய அரசியலமைப்பில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதையே தங்களுடைய முதன்மை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டன. இரு பிரி வினரும் இணக்கமான முறையிலேயே கருத்துப் பரி மாற்றம் செய்து கொண்டனர். அதன் விளைவாகத் தனித்தொகுதி (Separate Electorate) என்ற சலுகையை இசுலாமியர்கள் பெற்றனர். அரசாங்கம் 1909-ஆம் ஆண்டிலேயே அச்சலுகையை இசுலாமியர் களுக்கு வழங்கியிருந்த போதிலும் காங்கிரசார் எதிர்த்து வந்தனர்.

அதற்கிடையில் இந்திய அரசியலில் ஒருவகைப்புதிய சக்தி காந்தியினால் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியத் தேசிய காங்கிரசும், தன்னாட்சிச் சங்கமும் காந்தி யினுடைய செயற்பாட்டின் கீழ் வந்தன. காந்தியடி களின் ஒத்துழையாமை இயக்கத்திலிருந்தும் அவர் அரசியல் அணுகு முறையிலிருந்தும் கருத்து வேறு பட்ட சின்னா, 1920-ஆம் ஆண்டு இந்தியத் தேசியக் காங்கிரசிலிருந்தும், தன்னாட்சி இயக்கத்திலிருந்தும் வெளியேறினார். சில ஆண்டுகள் வரை அரசியல் இயக்கங்களிலிருந்து தனித்து நின்றார். எனினும், இந்து-இசுலாமியர் ஒற்றுமைக்குத் தொடர்ந்து துணை நின்றார். அதன் பின்னர் முசுலிம் லீகு வாயிலாகத் தம் கருத்துகளை மக்களிடையே பரவச் செய்தார். சின்னாவோடு முசுலிம் லீகும்,1920–ஆம் ஆண்டுக் காலக்கட்டத்தில் காங்கிரசினாலும், முசுலிம் கிலா பத்துக் குழுவினாலும் மிகவும் புறக்கணிக்கப் பட்டனது.

ஒத்துழையாமை இயக்கத்தின் தோல்வியும் இந்து மறுமலர்ச்சி இயக்கங்களும் இந்து-இசுலாமியர்களி டையே கலவரத்தைத் தூண்டின. அதன் விளைவாகத் தனித்துச் செயற்பட்ட இசுலாமியர்கள் சங்கத்தை இந்தியாவின் நலங்கருதி மற்ற இயக்கங்களோடு இணைந்து செயற்பட சின்னா முயற்சி மேற்கொண் டார். காங்கிரசை 1920-1930க்கும் இடைப்பட்ட காலத் தில் சமாதானப் படுத்தி இந்து-இசுலாமியர் தகராறு களுக்குத் தீர்வு காண்பதே இவருடைய தலையாய நோக்கமாக அமைந்தது. அந்நோக்கோடு சட்டசபை, வட்ட மேசை மாநாடு (1930-32) ஆகியவற்றில் பங்கேற்றுத் தம் அறிக்கையை வெளியிட்டார். அதில் கூட்டாட்சி அரசாங்கத்தை உருவாக்குதல், சிறு பான்மையோருக்கு மிக முக்கியத்துவம் அளித்தல், மூன்றில் ஒரு பகுதி இசுலாமியர்களுக்கு மத்திய சட்ட சபையில் இடம் அளித்தல், சிந்து இசுலாமியர்களுக்குப் பம்பாய் மாகாணத்திலிருந்து பிரிவினை வழங்குதல், வடமேற்கு எல்லை மாகாணங்களில் சீர்திருத்தங் களை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இடம் பெற்றன. ஆனால், இவர் தம்முடைய முயற்சியில் தோல்வியே கண்டார். மேலும், நேரு அறிக்கைக் குழுவில் இவர் கொண்டுவர நினைத்த திருத்தங் களும், தனிமாநில வேண்டுதலும், இசுலாமியர்களுக்கு இட ஒதுக்கீடு பற்றிய இவருடைய முயற்சிகளும் ஆகிய அனைத்தும் இவருக்கு ஏமாற்றத்தையே அளித் தன. அதே நேரத்தில் தம் கருத்துகள் காரணமாகச் சின்னா தனித்து விடப்பட்டார்.இசுலாமியர்களுக்குத் தங்களுடைய நலன் குறித்து இவரிடம் மனநிறைவு இன்மையே ஏற்பட்டது. அதன் விளைவாக முசுலிம் சங்கத்தில் பல பிரிவுகள் தோன்றலாயின. பஞ்சாபு முசுலிம் லீகு தோன்றிச் சின்னாவின் தலைமையை ஏற்க மறுத்தது. அவ்வெறுப்பின் காரணமாகச் சின்னா இங்கிலாந்தில் தங்கிவிட முடிவு செய்து 1930–1935-ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இலண்டனில் தங்கியிருந்தார்.

பின்னர் 1935 - ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டப்படி, தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. இந்தியத் தேசிய காங்கிரசும் முசுலிம் லீகும் இணைந்து கூட்டரசாங்கம் ஏற்படுத்து வதையே சின்னா விரும்பினார். ஆனால், 1937-ஆம் ஆண்டுத் தேர்தல் இந்திய அரசியலில் ஒரு புதிய திருப்பத்தைத் தோற்றுவித்தது. காங்கிரசு ஆறு மாகாணங்களில் முழுமையான வலிமையைப் பெற் றது. மாறாக, முசுலிம் சங்கம் தேர்தலில் மனநிறை வின்மையையே கண்டது. எனவே, காங்கிரசு, மாகாண அரசமைப்புகளின் போது முசுலிம் லீகினைத்

தவிர்க்க எண்ணியது. இதன் விளைவாக இந்து-இசுலாமியர் களிடையே தீவிரமாக மனக்கசப்பு வளர்ந்தது.

அத்தருணத்தில்தான் முகம்மது அலி சின்னா மறுமலர்ச்சிப் பெற்ற இசுலாமியர்களின் தலைவரானார். மாகாண காங்கிரசு அமைச்சரவை 1939-ஆம் ஆண்டு, திசம்பர் திங்கள் 22-ஆம் நாள் பதவி விலகிய போது, முகம்மது அலி சின்னா மகிழ்ச்சியுடன் அந்த நாளைக் கொண்டாட வேண்டுமென மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இலாகூரில் 1940-ஆம் ஆண்டில் நடைபெற்ற இசுலாமியர் கூட்டங்களில் தனி முசுலிம் மாநிலத்தைத் தோற்றுவிக்க ஒரு முடிவினை அச்சங்கம் நிறைவேற்றியது. அதைக் காங்கிரசும், ஆங்கில அரசாங்கமும் எதிர்த்தன. ஆனால், முகமது அலி சின்னாவும், இசுலாமிய மக்களும் தம் முயற்சியிலிருந்து சிறிதும் பின்வாங்கவில்லை. அம்முயற்சி இந்தியாவின் பிரிவினைக்கு வித்திட்டு, 1947 – ஆம் ஆண்டில் பாகிசுத்தான் என்ற தனி நாடு உருவாகக் காரணமாகியது. அதன் முதல் தலைவர் பதவியை ஏற்றுச் சின்னா பல சிக்கல்களுக்குத் தீர்வு கண்டார். இசுலாமியர்கள் முகமது அலி சின்னாவைப் பாகிசுத்தான் நாட்டின் தலைமை ஆளுநராக ஏற்றுக் கொண்டதோடு, இசுலாமியரின் தந்தையாகவும் போற்றினர். முகமது அலி சின்னா இறுதிவரை கடினமாக உழைத்து, இறுதியில் நோய்வாய்ப்பட்டுத் தாம் பிறந்த கராச்சியில் 1948 – ஆம் ஆண்டு காலமானார்.

இரா.கி.

**முகம்மது கோரி,** இந்தியாவில் இசுலாமியர் ஆட்சியைத் தோற்றுவித்தவராவார். ஆப்கானிசுத்தானத்தில் இருந்த கோர்(Ghor) அல்லது கூரி (Ghuri) என்ற இசுலாமியர் நாட்டை கி.பி.12–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்டுகொண்டிருந்த முகம்மது கோரி (Muhammad of Ghor), கி.பி.1175-இல் இந்தியாவில் படையெடுத்து முல்ட்டான், ஊச்சுப் (Uch) பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். இவருடைய படை முன்னேற்றம், அன்கில்வாடு (Anhilvad) சிற்றரசின் இரண்டாம் மன்னர் பீமதேவர் என்பவரால் கி.பி.1178-இல் தடையுற்றது. எனினும் கோரி, ஊக்கங் குன்றாது தம் படையை, அடுத்த ஆண்டு முன்னேறச் செய்து பெசாவர் (Peshawar) பகுதியைத் தம் வயப்படுத்திக் கொண்டார். மேலும், இவர் பஞ்சாபில் அவ்வமையம் ஆட்சி புரிந்து கொண்டிருந்த யாமினியரை (Yaminis) முறியடித்துவிட்டுப் பஞ்சாபில் தம் மேலாண்மையை நிறுவினார். ஆசுமீரின் (Ajmer) சகமான குல(Sahamanas)மன்னர் மூன்றாம் பிருதிவிராசர், கி.பி. 1191 - இல் கோரியைத் தரெய்ன் (Tarain) என்ற இடத்தில் தோற்கடித்த போதிலும் அடுத்த ஆண்டில் அதே இடத்தில் நடைபெற்ற இரண்டாம் போரில் கோரி வெற்றி பெற்றார். அப்போர், இந்திய இராணுவ அமைப்பின் குறைபாடுகளையும் கோரியின் படை அமைப்பின் சிறப்புகளையும் வெளிக்காட்டியது. மகாவீரராகக் கருதப்பட்ட மூன்றாம் பிருதிவிராசர் அப்போரில் கொலையுண்டார். வட இந்தியாவில் மேலும் சில வெற்றிகளைப் பெற்ற கோரி, அவருடைய உதவியாளர் குத்புதீன் ஐபெக்கு (Kutb-ud-din-Aibak) என்பாரிடம், தம் பேரரசின் இந்தியப் பகுதியை ஒப்படைத்து விட்டுத் தம் தாய் நாட்டுக்குத் திரும்பினார். இவர், குத்புதீனுக்கு இந்தியாவில், தம் ஆட்சியை வலிமையுறச் செய்ய இன்றியமையாத அனைத்து அதிகாரங்களையும் வழங்கிச் சென்றார். மீண்டும், இவர் கி.பி 1193-இல் இந்தியாவுக்கு வந்து, கன்னோசியின் செயச்சந்திரனைத் தோற்கடித்துப் பின்னர் வாரணாசியைச் சூறையாடிவிட்டுத் தம் நாடு திரும்பினார். குத்புதீன், கி.பி. 1195-இல் கோரியின் அரசப் பேராளராக அமர்த்தப் பெற்றார். அடுத்த ஐந்து ஆண்டுகள் கோரி தமது நாட்டிலேயே தங்கவேண்டியிருந்தது. துருக்கியர்,கி.பி.1205-இல் கோரியைத் தோற்கடித்ததால், இந்தியாவிலும் இவர் செல்வாக்குக் குறையத் தொடங்கியது. அதை அறிந்த கோரி மீண்டும் இந்தியாவுக்கு வந்து தம் மேலாண்மையை உறுதியாக்கிக் கொண்டார். பின்னர்த் தம் நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது, கி.பி. 1206-இல் சிந்து ஆற்றங் கரையில் இவர் கொலை செய்யப்பட்டார். இவருக்கு மகன் இல்லாதபடியால், குத்புதீனே இவர் வாரிசாக இந்தியாவில் ஆட்சிபுரியத் தொடங்கினார். அவ்வாறு தில்லியில் (Delhi) குத்புதீனால் அடிமை வமிச ஆட்சி, கி.பி. 1206 – இல் தொடங்கியது. தில்லி சுல்தானியம் (Delhi Sultanate) என்று கூறப்பட்ட அவ்வரசு கி.பி. 1526 வரை நீடித்தது.

தெ.பா.

**முகம்மது சா** இந்தியாவை ஆண்ட மொகலாயப் பேரரசர்களுள் ஒருவராவார். இவர், கி.பி. 1719 – ஆம் ஆண்டுமுதல்1748-ஆம்ஆண்டுவரை தில்லி அரியணையிலிருந்து ஆட்சி புரிந்தார். இவர் ஆட்சி மொகலாயப் பேரரசு எவ்வாறு வீழ்ச்சியுற்று வந்தது என்பதனைக் காட்டுவதாக உள்ளது.

பேரரசர் ஔரங்கசீபு, கி.பி.1707-இல் இறந்தபின் அவருடைய மொகலாயப் பேரரசு மிகவும் நலிவுற்றது. அவர்தம் பிள்ளைகளுக்கிடையே வாரிசு உரிமைப் போட்டிகளும் போர்களும் ஏற்படலாயின. அச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டவர்களுள் சையது சகோதரர்கள் (Sayyid Brothers) என்ற இருவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோராவர். அவர்களுடைய பெற்றோர்கள் இமயமலைப்பகுதியிலிருந்து

வந்தவராவர். சையது சகோதரர்கள் இந்திய இசுலாமியர்இனத்தவராவர்.அவர்கள், தமது படை வலிமை, திறமை முதலியவற்றால் இந்திய அரசியலில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றதுடன், பேரரசர்களை அரியணையில் அமர்த்தல், அதனின்று நீக்குதல் முதலிய செயல்களையும் செய்து வந்தனர். அதனால் அவர்களுக்கு 'அரசனைப் படைப்பவர்கள்' (King Makers) என்று வரலாற்றில் பெயர் அமைந்துள்ளது. உரௌசான் அக்தார் (Roushan Aktar) என்ற இயற்பெயரையுடைய முகம்மது சாவை (Muhammad Shah) கி.பி.1719 – இல் முகலாயப் பேரரசரராக அமர்த்தியதும் அந்தச் சையது சகோதரர்களே ஆவர். முகம்மது சா கி.பி.1702-இல் சகான் சா (Jaban Shah) என்பவருக்கு மகனாகப் பிறந்தவராவார். இளமைக் காலத்திலேயே சிற்றின்ப விரும்பியாக இருந்த இவரிடம் கல்வி அறிவும் ஆற்றலும் இல்லை. அரசியலில் பொறுப்பில்லாமல் களியாட்டங்களிலேயே கருத்தைச் செலுத்தினார். அவ்வாறிருந்தும், சூழ்நிலை காரணமாக இவருக்குத் தில்லி அரியணை கிடைத்தது. வலிமை வாய்ந்த மைய அரசு இல்லாத காரணத்தால், இவர் காலத்தில் இந்திய முகம்மதியர், பாரசீகத்திலிருந்து வந்த ஈரானியர், மைய ஆசியாவிலிருந்து வந்த துரானியர் ஆகியோரிடையே ஆதிக்கப்போட்டியும், பொறாமையும், பூசல்களும் மிகுந்தன. முகம்மது சா, தம்மை அரியணையில் அமர்த்திய சையது சகோதரர்கள் தமக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதை விரும்பவில்லை. அதனால் அவர்களிடையே பகைமை ஏற்பட்டது. அதன் விளைவாக, சகோதரர்களுள் ஒருவரான உசேன் அலிகான், கி.பி.1720-இல் மன்னரின் சதித் திட்டத்தால் கொலையுண்டார். அப்துல்லாகான் என்ற மற்றவர், அரசரை எதிர்த்து இப்ராகிம் என்பவரை மன்னராக்கினார். தனால் ஏற்பட்ட போரில், முகம்மது சா, அப்துல்லாகானை அசன்பூர் என்னுமிடத்தில் தோற்கடித்துச் சிறைப்படுத்தினார். பிறகு, நிசாம்-உல்-முல்க்கு என்ற துரானியரை, முகம்மது சா, தம் அமைச்சராக்கிக் கொண்டார். நிசாம்-உல்-முல்க்கு திறமை வாய்ந்தவர். நாட்டின் ஆட்சி முறையைச் சீர்திருத்துவதற்கான திட்டங்களை வகுத்தார். ஆனால், மன்னரைச் சூழ்ந்திருந்த கொடிய தன்னலக்காரர்கள், அரசர் ஆக்கவழியில் செல்வதைத் தடுத்து வந்தனர். நிசாம் உல்-முல்க்கு வெறுப்புற்றார். அவர் பொறுப்பில் விடப்பட்டிருந்த தக்காணத்திற்குச் சென்று அங்குச் சீர்திருத்தங்கள் செய்யலானார். அதன் விளைவாக, தக்காணத்தில் வலிமை வாய்ந்த ஆட்சி ஏற்பட்டது. நிசாம்-உல் – முல்க்கு அங்குச் சுதந்திரமாக ஆட்சி நடத்தினார். அவ்வாறு தக்காணத்தில் நிசாம் குல ஆட்சி அமைந்தது. வட இந்தியாவில் தாம் விரும்பாத ஓர் ஆட்சி நடைபெற்று வந்ததைக் கவிழ்க்க நிசாம் தக்க சமயத்தை எதிர் நோக்கியிருந்தார். இவர், வட இந்திய மொகலாய ஆட்சியை எதிர்த்த மராத்தியருடன் மறைமுகமான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டு, அவர்களைத் தில்லிமீது படையெடுக்கத் தூண்டினார். அவ்வுடன்படிக்கை அப்போதைக்கு வெளியிடப்படாமலே இருந்தது. மராத்தியப் பேரரசில் அவ்வமயம் ஆதிக்கம் செலுத்தி வந்த பாசிராவு (Baji Rao) என்பவர், மொகலாயப் பேரரசைத் தாக்கி, கூர்ச்சரம், பண்டல்கண்டு, மாளவம் ஆகிய பகுதிகளைத் தம் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தார். நிசாம், அதை விரும்பவில்லை. அச்சமயத்தில், முகம்மது சா, மராத்தியரை எதிர்த்துப் போர் புரிய, நிசாம் – உல் – முல்க்குக்கு அழைப்பு அனுப்பினார். பேரரசருக்கு உதவிபுரியச் சென்ற நிசாமை, பாசிராவு கி.பி. 1738 – ஆம் ஆண்டில் முறியடித்தார். நிசாம் – உல் – முல்க்கு, அப்போதைக்கு அமைதி தேவை என்பதை உணர்ந்து மொகலாயப் பேரரசரிடமிருந்து சில இடங்களை மராத்தியருக்குப் பெற்றுத் தருவதாகப், பாசிராவுக்குவாக்களித்து அதன் மூலம் அமைதி உடன்பாடு செய்து கொண்டார்.

முகம்மது சாவுக்கு, மேலும் சில துன்பங்கள் ஏற்பட்டன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது நாதர் சா (Nadir shah) என்னும் பாரசீக மன்னரின் படையெடுப்பாகும். அக்கொடிய படையெடுப்பின் விளைவாகத் தில்லி நகர மக்கள் மிகவும் துயருற்றனர். மொகலாயப் படைகள், கி.பி. 1739 - ஆம் ஆண்டில், நாதர் சாவை எதிர்க்க முடியாமல் தோல்வியுற்றன வேறு வழியின்றி முகம்மது சா, நாதர் சாவுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். அதற்குப் பின் பாரசீகப்படை வீரர்கள் சிலரை மொகலாயர் கொன்றுவிட்டதால் நாதர் சா மிகவும் சினமுற்று, தில்லி நகர மக்கள் யாவரையுமே கொன்றுவிடுமாறு பணித்தார். தில்லி மக்கள் பல்லாயிரக் கணக்கில் மாண்டனர். அவர்கள் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டன. முகம்மது சா, வேண்டிக் கொண்டதற்கிணங்க, நாதர் சா, தம் கொலை புரியும் செயலை நிறுத்தினார். நாதர் சா, தம் நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் போது, புகழ்பெற்ற கோகினூர் வைரம், மயிலாசனம் போன்ற பல அரிய பொருட்களைத் தம்முடன் எடுத்துச் சென்றார். அதைத் தடுக்க மொகலாயர்களால் இயலவில்லை.

நாதர் சா இறந்தபின் அவர்மகன் அகமது சா அப்தலி, கி.பி. 1748-ஆம் ஆண்டு தில்லியில் படையெடுத்தார். அவர், பஞ்சாபுப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு தலைநகர் தில்லியை (Delhi) நோக்கி விரைந்தார். முகம்மது சா வின் மகன் அகமது சா, பாரசீகப் படையை எதிர்த்து அப்தலியைத் தோற்கடித்தார். அவ்வெற்றி வீரர் தில்லிக்குத் திரும்புமுன்

கி.பி. 1748-ஆம் ஆண்டு அவர் தந்தை முகம்மது சாவின் உயிர் பிரிந்தது. தெ.பா.

**முகம்மது பின் காசிம்**: இந்தியாவின் மீது படையெடுத்த இசுலாமிய வீரர். முகம்மது பின் காசிம் (Muhammad-Bin-Kasim) ஈராக்கு (Iraq) நாட்டில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செலுத்தி வந்த அசாசு (Hajjaj) என்பவரின் படைத்தலைவர்; உமையத்துக் கலீபாக்களின் ஆளுநர்களுள் ஒருவர். அசாசு ஆதிக்க வெறி பிடித்தவர். ஓர் அமயம் சிந்து (Sindu) விலுள்ள தேபால் (Debal) பகுதியைச் சார்ந்த கடற் கொள்ளைக்காரர்கள், கலீபாக்களுக்கும் அசாசுக்கும் இலங்கை அரசர் அனுப்பி வைத்த பரிசுப் பொருட்கள் அடங்கிய கப்பல்களைக் கொள்ளையடித்தனர். ஆகவே, அவர்களை அடக்க அசாசுப் படையொன்றை அனுப்பிவைத்தார். அது தோல்வியுறவே மேலும் ஒரு படையை முகம்மது பின் காசிமின் தலைமையின்கீழ் அனுப்பி வைத்தார். முகம்மதுஒரு சிறந்த போர்வீரர். இளவயதினராதலின் எதற்கும் அஞ்சாதவர். அசாசு அனுப்பிவைத்த 6,000 போர் வீரர்களுடன் தாம் திரட்டிய 6,000 ஒட்டக வீரர்களுடன் முகம்மது சிந்து நோக்கிப் புறப்பட்டார். இடையில் தேபால் அரசரிடம் வெறுப்புக் கொண்ட சாட்டுகளும் (Jats) இவருடன் சேர்ந்து கொண்டனர். அவர்களுடைய துணையால் சிந்துவைக் கைப்பற்றினார்.

முகம்மது, தேபாலை கி.பி. 712 - இல் அடைந்தார். தேபாலை எளிதில் கைப்பற்றிக் கொள்ளையடித்தார். அங்கு ஒரு மசூதியைக் கட்டினார். இசுலாமிய சமயத்தைத் தழுவ மறுத்தவர்களைக் கொன்றார். அதன் பின்னர், நிரூனை (Nirun) நோக்கிப் புறப்பட்டார். அதன் மக்கள் இவரிடம் சரண் புகுந்தனர். பிறகு சிந்து ஆற்றைக் கடந்து இராவார் (Rawar) நோக்கிச் சென்றார். அங்கே தாகீர் (Dahir) தலைமையின் கீழான படையுடன்போரிட்டு வெற்றி கண்டார். தாகீர், போரில் உயிரிழந்தார். தாகீரின் மனைவி இராணிபாயும் ஏனைய பெண்களும் இறுதியில் தீக்குளித்தனர். இராவார்க் கோட்டையில் எஞ்சி இருந்தவர்களை முகம்மது கொன்று அதனைச் சூறையாடினார்.

அதன் பின்னர், இவர் பாமனாபாது சென்றார். அதன் மக்கள் இவரிடம் சரணடைந்தனர். இசுலாம் சமயத்தைத் தழுவ மறுத்தவர்கள் மீது சிசியா (Jizya) வரியைச் சுமத்தினார். இந்துக்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. பார்ப்பனர்களுக்கு ஆட்சிப் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. வரிவாங்குதல் பற்றிய செய்தியில் அதிகாரிகள் அறமுறையில் நடந்துகொள்ளும்படி ஆணையிட்டார்.

அதன்பின்னர் முகம்மது, அலோர் (Alor) கோட்டையை விட்டுச் சித்தூர் நோக்கிப் புறப்பட்டுச்சென்றார். அக்கோட்டையில் இருந்த படைகள் முகம்மது விடம் கோட்டையை ஒப்படைத்துவிட்டன. அங்கிருந்து இவர் மூல்தான் (Multan) சென்றார். வழியில் சிக்கா (Sikka) கோட்டையை முற்றுகையிட்டார். முற்றுகை 17 நாள்கள் நடைபெற்றது. அப்போது முகம்மது தம்முடைய சிறந்த 25 படைத் தலைவர்களையும் 215 வீரர்களையும் பறிகொடுத்தார். பின்னர் மூல்தானை அடைந்தார். அதனைக் கைப்பற்றி 6,000-க்கும் மேற்பட்ட வீரர்களைக் கொன்றார். மூல்தான் அரசர்பால் வெறுப்புக் கொண்டிருந்த உள்ளூர் மக்கள் முகமதுவிடம் சரணடைந்தனர். அவர்கள் சிசியாவரி செலுத்த இசைந்தமையால் அவர்களுக்கு வழிபாட்டு உரிமையை வழங்கினார். அவர்களுடைய கோயில்களும் அழிக்கப்படவில்லை. ஆனால், கோயில்களிலிருந்து செல்வங்களை இவர் கைப்பற்றிக் கொண்டார்.

மூல்தானை வென்ற முகம்மது,ஒரு பெரும் படையைக் கன்னோசியை நோக்கி அனுப்பினார். புதியதொரு படையெடுப்பை மேற்கொள்ளுவதற்கு இவர் முன்னேற்பாடு செய்து கொண்டிருந்தபோது கலீபாவிடமிருந்து ஓர் ஆணை வந்தது. முகம்மதுவைப் புதிதாக உரிக்கப்பட்ட எருதுவின் தோலில் வைத்துத் தைத்துத் தலைநகருக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்பது அவ்வாணை ஆகும். அத்தகைய ஆணை பிறப்பிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் தாகீர் அரசரின் இரு புதல்வியராவர். அவர்கள் சிறை செய்யப்பட்டுக் கலீபாவின் அந்தப்புரத்திற்கு அனுப்பப்பட்ட போது தங்களை முகம்மது ஏற்கெனவே மாசுபடுத்திவிட்டதாக ஒரு பொய்யைக் கூறினார்கள். தங்கள் தந்தையின் உயிரைக் குடித்தவனைப் பழிவாங்குவதற்காக அவர்கள் அப்பொய்யைக் கூறினர். கோபமுற்ற கலீபா அத்தகையதொரு தண்டனையை முகமதுவிற்கு அளித்தார். ஆணையைப் பெற்ற முகமது தாமே எருதுவின் தோலில் அமர்ந்து தம்மைத் தைத்துவிடும் படி கூறினார். மூன்றாம் நாள் இவர் உயிர் பிரிந்தது. இவருடைய பிணத்தைக் கண்ட தாகீரின் பெண்மக்கள் உண்மையைக் கூறினர். நன்கு ஆராயாமல் முறையற்று ஒரு பெரும் படைத் தலைவரைக் கொன்றுவிட்டமைக்காகக் கலீபா வருந்தினார். அதற்கு ஈடுசெய்யும் வகையில் முகமதுவின் அழிவிற்குக் காரணமாக இருந்த அப்பெண்களைக் குதிரை வாலில் கட்டிச் சாகும் வரை இழுத்துச் செல்லும்படி ஆணையிட்டார். அச்செய்தியைச் சிலர் ஏற்க மறுக்கின்றனர். முகம்மதுவைக் கலீபா கொடுமை செய்து கொன்றுவிட்டார் என்று அவர்கள் கூறுகின்றனர். முகம்மது மூன்று ஆண்டுகளில் சிந்துவை

வென்று, கலீபாவின் ஆட்சியை முதன்முதலில் இந்தியாவில் ஏற்படுத்திய பெருமையை அடைந்தார் என்பதில் எவருக்கும் கருத்துவேறுபாடு இல்லை.

தி.ஆர்.இரா.

**முகம்மது பின் துக்ளக்கு (கி.பி. 1325-1351):** இந்தியாவில் பல மரபினைச் சேர்ந்த சுல்தான்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து தில்லியை ஆண்டனர். அவ்வரிசையில் கில்சி (Khilgi) மரபிற்குப் பின்பு துக்ளக்கு மரபின் ஆட்சி கி.பி. 1320 - இல் தொடங்கிற்று. அம்மரபினைத் தோற்றுவித்தவர் சியாசு-உத்-தீன் துக்ளக்கு (Ghiyas-ud-DinTughlug) ஆவார். அவருடைய மறைவிற்குப் பின்பு அவர் மகன் முகம்மது பின் துக்ளக்கு கி.பி.1325 முதல் 1351 வரை தில்லியை ஆண்டார். இவருடைய இயற்பெயர் சானா கான் (Jaunakhan) ஆகும். இவர் உளுக் கான் என்றும், பின்னர் முகம்மது பின் துக்ளக்கு என்றும் கூறப்பட்டார். இவர் தவுலதாபாதில் (Daulatabad) நாற்பது நாள்கள் தங்கியிருந்து விட்டுப்பின்பு தில்லியில்நுழைந்தார். இசாமி, பரணி, இபின்படுடா ஆகிய வரலாற்று ஆசிரியர்கள் முகம்மது பின் துக்ளக்கைப் பற்றியும் இவர் ஆட்சிக் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் எழுதியுள்ளனர். இடைக்கால இந்திய வரலாற்றில் ஒரு வியத்தகு ஆட்சியாளராக இவர் அனைவருக்கும் காட்சியளிக்கின்றார். இவருடைய குணமும், செயல்களும் மட்டுமன்றி இவருடைய திட்டங்கள், வெற்றி தோல்விகள் போன்றவையும் பலரைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன.

தம் தந்தையிடமிருந்து பெற்ற பரந்த பேரரசை மேலும் விரிவுபடுத்தி ஆட்சி செய்தார். எனினும், இவர் பதவி ஏற்ற பத்து ஆண்டுகளில் இவருடைய பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. கருவூலத்தைச் செம்மைப்படுத்தி அதனை நிறைவு செய்த போதும் தொடர்ந்து பொருளாதார நெருக்கடியை இவர் சந்திக்க நேர்ந்தது. தம்முடைய ஆட்சிக் காலத்திற்கு ஏற்பப் புதிய கோட்பாடுகளையும் கொள்கைகளையும் தோற்றுவித்தார். சமயக் கொள்கைகளில் இவர் மிகவும் தாராள மனப்போக்கைக் கொண்டிருந்தார். சீனா, ஈரான், எகிப்து ஆகிய நாடுகளுடன் அரசியல் உறவுகளை மேற்கொண்டார். திறமையான அதிகாரிகளையே தேர்வு செய்து பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். எனினும், மக்கள் இவர் ஆட்சியில் மனநிறைவு பெறவில்லை. எனவே மக்கள், பிரபுக்கள் ஆகியோரின் புரட்சிகளுக்கு ஆளாகி இறுதியில் தோல்வி கண்டார்.

உலாமா (Ulema), கலிபா (Chaliba)ஆகியோரை இவர் சிறிதும் மதிக்கவில்லை. இவர் இசுலாம் சமயத்தைப் போற்றியவராக இருந்தபோதும் அந்த சமயமும், சமயப் பிரிவும் இவருடைய நிருவாகத்தில் தலையிட முடியவில்லை. இவர் உலாமாவிடமிருந்து நீதிஅதிகாரத்தைப் பறித்துக் காசிகளிடம்(Gazis) ஒப்படைத்தார். காசிகளின் தீர்ப்பையும் இவர் மாற்றி அமைத்தார். தவறு செய்த சமய குருமார்கள் சாதாரண மனிதர்களைப் போல் தண்டிக்கப் பெற்றனர். அதனால் சினம் கொண்ட உலாமா சமயவகுப்பினர் இவருக்கு எதிராக மக்களிடையே வெறுப்பினை உருவாக்கினர். இவர் தம் கடைசி ஆட்சிக் காலத்தில் கலிபாவை ஏற்றுக் கொண்டார்.

முகம்மது பின் துக்ளக்கு இந்துக்களை வெறுக்கவில்லை. இந்து, இசுலாமியர்களைத் திறமையின் அடிப்படையில் நியமனம் செய்த முதல் தில்லிசுல்தான் இவரே ஆவார். அந்த அலுவலர்களுக்கு மரியாதையும் தந்தார். இவ்வாறு தாராள மனப்போக்குக் கொண்டவராக இருந்த போதும் மக்களுடைய நம்பிக்கைக்கும், இரக்கத்திற்கும் இவர் பாத்திரமாக முடியவில்லை. எனவே, இவர் தோல்விகண்டார். இவருடைய தோல்விக்கு வெற்றி பெறாத் திட்டங்களும், முறைகேடான செயல்முறைகளும் காரணமாக அமைந்தன.

**உள் நாட்டுக் கொள்கை:** முகம்மது பின் துக்ளக்கு தம் நிருவாகத்தில் பல மாற்றங்களை மேற்கொண்டார். வெளியுறவுக் கொள்கை வாயிலாக இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் தம் ஆட்சியின் கீழ்க் கொணர முயற்சி மேற்கொண்டார். வருமானத் துறையில், எல்லா இளவரசர்களின் வரவு செலவுக் கணக்கையும் பதிவு செய்தார். அனைத்து மாகாண ஆளுநர்களும் தங்கள் வரவு செலவுக்கணக்குகளை மத்திய அரசிற்குத் தெரிவிக்குமாறு செய்தார். நாடு முழுவதும் ஒரே மாதிரியான நிலவரியை அமல்படுத்த முயற்சி மேற்கொண்டார்.

மழையின்மையால் தோஆபு(Doab) மாநிலத்தில் பஞ்சம் ஏற்பட்டது. எனவே, இவர் அனைத்து வரிகளையும் உயர்த்தினார். மக்கள் வரிகளைக் கொடுக்க முடியாது கொள்ளையர்களாக மாறினர். அதிகாரிகள் வரிகளைத் தண்டல் செய்யக் கடுமையான முறைகளை மேற்கொண்டனர். எனவே, மக்கள் எங்கும் புரட்சி செய்யத் தொடங்கினர். புரட்சியை அடக்கத் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இருந்த போதும் உழவர்களுக்கு விதை, மாடுகள் முதலியவற்றைக் கொடுத்துதவி செய்தார். எனினும், காலம் தவறிய உதவியினால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. எனவே, இவர் மக்களுடைய வெறுப்பிற்கு ஆளானார்.

வேளாண்மையை முன்னேற்றும் பொருட்டுத் தனித் துறை ஒன்றை நிறுவி அதிகாரிகளையும் நியமனம் செய்தார். தரிசு நிலங்களைச் சாகுபடி செய்வதற்கான நிலங்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அதிகாரிகளின் ஊழல்கள் காரணமாக மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அத்திட்டம் முற்றிலும் தோல்விகண்டது.

முகம்மது பின் துக்ளக்கு தம் பேரரசை விரிவுபடுத்தவும், தலைநகரை மத்தியில் நிறுவி, மங்கோலியர் படையெடுப்பில் இருந்து நாட்டைப்பாதுகாத்துக் கொள்ளவும் தம் தலைநகரைத் தில்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றம் செய்தார். அச்செய்கையினால் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாயினர். தம் திட்டம் நிறைவேறாத நிலையில் மக்களை மீண்டும் தில்லிக்குத் திரும்புமாறு ஆணையிட்டார். அதனால் மக்கள் பலர் இறந்து போயினர். அந்நிகழ்ச்சி இவருடைய ஆட்சியின் வீழ்ச்சிக்கு வித்திட்டது எனலாம்.

இவர் தம் ஆட்சியின் காலத்தில் கி.பி. 1329-1330 -இல் பல வகையான தாமிர, பித்தளை நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். காலப் போக்கில் மக்களும் தங்கள் தேவைக்கேற்ப நாணயங்களை உருவாக்கலாயினர். எனவே, நாட்டின் நிதிநிலைமை மிகவும் மோசமடைந்தது. மக்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொண்டு தங்கம் வெள்ளிக் காசுகளை அச்சிட்டு வெளியிட்டார். எனினும், அந்த நாணய முறை முற்றிலும் தோல்வி அடைந்தது.

மங்கோலியர், இந்தியாவின் மீது கி.பி. 1327-இல் படையெடுத்தனர். அப்படையெடுப்பைத் தவிர்க்க ஒரு பெரும் தொகையைக் கையூட்டாகக் கொடுத்து முகம்மது தம் நாட்டைக் காப்பாற்றிக் கொண்டார். அச் செய்கை இவருடைய இயலாமையை மக்களுக்குத் தெளிவுபடுத்தியது.

முகம்மதுபின் துக்ளக்கு தம் பேரரசை விரிவுபடுத்தும் பொருட்டுத் தம் தந்தையைப் போன்று பல நாடுகளைப் பிடிக்கும் முயற்சியில் தீவிரம் காட்டினார். ஈரான், குரசான் (Khurasan) ஆகிய நாடுகளைக் கைப்பற்ற ஒரு பெரும் படையை ஆயத்தம் செய்தார். எனினும்,சூழ்நிலை காரணமாக அப்படையைப் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது. எனவே, பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. கொரசால்(Khorasal)என்ற பகுதியை கி.பி.1337 -இல் பிடிக்க முயன்று தோல்வி கண்டார். பின்பு தென்னிந்தியாவின் மீது படையெடுத்துப் பெரும் பகுதிகளைத் தம் இராச்சியத்துடன் சேர்த்துக் கொண்டார்.இராசசுதானத்தைத்தம் ஆட்சியின் கீழ்க் கொணர முனைந்து முடியாமற் போகவே,அந்நாட்டு விவகாரத்தில் தலையிடாமல் நிறுத்திக் கொண்டார்.

முகம்மது பின் துக்ளக்கு வரலாற்று ஆசிரியர்களால் மிகவும் பாராட்டப்படுகிறார். இவர் அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே அமையப் பெற்றவர்; தோள் வலிமையும் சிறந்த உடற் கட்டும் கொண்டவர். இவர் இலக்கியம், தத்துவம், கணிதம், மருத்துவம், அறிவியல் ஆகியவற்றில் சிறந்த அறிவுக் கூர்மை பெற்றிருந்தார்; பாரசீக, அரபு மொழிகளைக் கற்றிருந்தார். இவர் கலையில் அதிக நாட்டம் கொண்டு கலை வல்லுநர்களைப் பெரிதும்போற்றினார்; ஏழை எளியோருக்கு அள்ளி வழங்கினார்; மருத்துவ மனைகள் நிறுவி இலவசச் சிகிச்சையும் அளிக்கச் செய்தார். இவர் குடிப்பழக்கத்தை மேற்கொள்ளவில்லை. முதியோரிடம் பணிவுடன் நடந்து கொண்டார். இவர் சிறந்த போர் வீரராகவும், நிருவாகத் திறமை மிக்கவராகவும் விளங்கினார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இரா.கி.

**துணை நூல்:**

**Sharma, L.P.**, Medieval History of India, 1000-1707 A.D., Vikas Publishing House Private Ltd., Delhi, 1981.

**முகரம்** என்னும் சொல்லுக்குப் புனிதமான ஒன்று என்ற பொருளும் உண்டு. இசுலாமிய ஆண்டின் முதல் மாதம் முகரம் (Muharram) என்பதாகும். இசுலாமியர், ஆண்டில், நான்கு மாதங்களைப் புனிதமானவையாகக் கருதுவர். அவற்றுள் இதுஒன்றாகும். ஏனைய புனிதமாதங்கள் இரசப்பு (7), சில்காதா (11), சில் – கசு (12) என்பனவாம். முகரம் மாதம், இசுலாமிய சமயத் தோற்றத்திற்கு முன்பே ஒரு புனித மாதமாகக் கருதப்பட்டது. இறைவன் பல நபிகளை, அவர்கள் இன்னல்களிலிருந்து இம்மாதத்தில் விடுவித்து அருள்புரிந்தார் என்பது ஒரு நம்பிக்கை. இம்மாதத்தின் முதல் பத்து நாள்களை, சியா (Shiah) பிரிவு இசுலாமியர் துயர நாள்களாகக் கருதி அதற்குரிய வழிபாட்டு முறையை மேற்கொள்வர். அந்தத் துயரத்துக்குக் காரணம், நபிகள் நாயகத்தின் வழித்தோன்றல்களோடு தொடர்புடையதாகும். நபிகள் நாயகத்தின் மகள் பாதிமா (Fatimah) வின் பிள்ளையும் நான்காம் காலிபு அசரத் அலி அவர்களின் புதல்வருமான உசெய்ன் (Husain) என்பவர், தம் சமயத்திற்காகப் போரிட்டு வீரமரணம் எய்தி, உண்மை நெறிப் புரவலராக விளங்கியது இந்த முகரம் மாதத்தில் தான். ஆதலால், அந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் முகரம் ' மாதத்தின் முதல் 10 நாள்கள் மிகவும் புனிதமானவை என்று கருதப்பட்டுச் சியா வகுப்பினரால் கொண்டாடப்படுகின்றன சன்னி (Sunni) வகுப்பினர், முகரம் மாதத்தின் 10-ஆம் நாளை மட்டும் புனித நாளாகக் கொண்டாடுகின்றனர். அந்தப் பத்தாம் நாள், உல

சுத் தோற்றத்துடன் தொடர்புடைய நாள் என்ற காரணத்திற்காகவே அந்நாளை அவர்கள் புனித நாளாகக் கருதுவர். முகரம் பண்டிகையின்போது நோன்பு மேற்கொள்வர்.

முகரம், அனைத்து நாடுகளிலும் அனைத்து இடங்களிலும் ஒரே முறையில் கொண்டாடப்படுவதில்லை. நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம் அது மாறுபடுகிறது. பொதுவாக இசுலாமியரின் சமயக் கதைகளின்படி சில அற்புதங்களும் முக்கிய நிகழ்ச்சிகளும் முகரம் மாதத்தில் நடை பெற்றன என்று நம்புகின்றனர். முகரம் என்னும் சொல் 'முகர்ரம்' மொகரம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தெ.பா,

**முகலிங்கம்:** ஒரிசா மாநிலக் கஞ்சம் மாவட்டத்தின் பர்லாகிமெடி வட்டத்தில் ஒரு கிராமமாக முகலிங்கம் அமைந்துள்ளது. பர்லாகிமெடியிலிருந்து ஏறத்தாழ 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இக்கிராமம் வமிசதாரா ஆற்றின் இடப்புறக்கரையில் அமைந்துள்ளது. முன்பு இப்பகுதி சென்னை இராசதானியின்கீழ் இருந்தது. இவ்வூர்ப்பெயர் இங்குள்ள முகலிங்கேசுவரர் கோயில் பெயர் அடிப்படையில் அமைந்துள்ளது.

இவ்வூர் கோயில்கள், ஒரிய சிற்ப, கட்டடக்கலைப் பாணி இந்திய-ஆரியப் பாணி ஆகியவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. இங்குள்ள கலையின் அமைப்பு, தென்னிந்தியாவின் திராவிடக் கலைப் பாணிக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இங்குள்ள சிலைகள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிவராத்திரியின்போதும் இங்கு நடைபெறும் சமயச் சார்புடைய விழாவும், கண்காட்சியும் பண்பாட்டுச் சிறப்புடையனவாகும். விழாவின்போது இங்குப் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் வந்து வழிபடுவதும் தனிச்சிறப்பாகும். இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் இவ்விடம் முதலில் புத்த சமயத்தினரைக் கொண்டு விளங்கியதாக அறியப்படுகிறது. மேலும், கலிங்க நாட்டுக் கீழைக் கங்க அரசரின் தலைமையிடமாக இது விளங்கியதாகவும் கருதப்படுகிறது.

இங்குள்ள சோமேசுவரர் கோயில் பழங்காலக் கட்டட அமைப்பினைக் கொண்டது. கீழைக் கங்க அரசர்களால் அமைக்கப்பட்ட இக்கோயிலின் அடிப்பகுதியின் அமைப்பு சதுர வடிவமாக உள்ளது; மேல் அமைப்பு வளைவுக் கோடுகளாக உச்சிவரை செல்கிறது. கோபுரம் மட்டும் பல ஆண்டுகள் தொடர்ந்து கட்டப்பட்டிருக்க வேண்டும். அதன் மைய மாடத்தில் ஒரு புறம் நுழைவாயிலும் மற்றைய மூன்று புறங்களிலும் ஒரு பெரிய மாடமும் அதைச்சார்ந்து இரண்டு சிறிய மாடங்களும் தெய்வ உருவங்களைக் கொண்டனவாக அமைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள முக்கிய சிலைகளுள் கணேசர், கந்தன், மகிசமர்த்தினி, அர்த்தநாரீசுவரர், இலகுலீசர் போன்றன முக்கிய மாடங்களிலும் மற்றைத் தெய்வங்களின் உருவங்கள் துணை மாடங்களிலும் உள்ளன. புகுமுக மண்டபம் அங்கே காணப்படாதது குறிப்பிடத்தக்கதாகும்.



முகலிங்கம்

சிவனுக்காக உருவாக்கப்பட்டுள்ள முகலிங்கேசுவரர் கோயில் மதிற்சுவர் சூழ்ந்த பெரும் வெளியில் அமைந்துள்ளது. அக்கோயில் சோமேசுவரர் கோவிலைக்காட்டிலும் மிகவளர்ச்சியுற்றதாகக் காணப்படுகிறது. அது கலைநயம் வாய்ந்த நுட்பவளமுடைய சிலைகளால் அலங்கரிக்கப்பட்டதாகவும் அமைந்துள்ளது. அக்கோயில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதன் நுழைவாயில் அக்கோயிலுடன் தொடர்புடைய இளவரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் வரலாற்றைக் கூறுவதாக அமைந்துள்ளது. ஆனால், அங்குக் குறிப்பிட்டுள்ள அரச பரம்பரையினர் யார் என்பது தெளிவாக அறியக்கூடவில்லை. அதன் மூலத்தானச்சிலையைச் சுற்றிக் காணப்படும் மாடங்களில் கலைநயமுடைய சிற்பங்கள் அழகு சேர்ப்பனவாய் உள்ளன. அவற்றுள் பன்னிரண்டு கைகளையுடைய நடராசர் உருவம் குறிப்பிடத்தக்கதாகும். வட்டமுகத்தையும் பெரியகண்களையும், உயர்த்திய புருவங்களையும், பின்னல்களால் அழகுசெய்யப்பட்ட மகுடத்தையும், ஏனைய அணிகலன்களையும் கொண்டு விளங்கும் அந்நடராசர் சிலையின் கலைப் பாணி ஒரிசாவின் பழங்காலச் சிலை வடிவமைப்புப்

பாணிக்கே உரிய குணங்களைக் கொண்டதாகக் காட்சியளிக்கின்றது. இங்குள்ள மற்றுமொரு சிறப்பமிசம், திராவிடமுறைப்படி தட்சிணாமூர்த்தி இருக்குமிடத்தில் சிவனின் மற்றொரு வடிவமான இலகுலீசத் திருமேனி காணப்படுகிறது. தம் உதவியாளர்களுடன் நின்றநிலையிலுள்ள கணேசரின் சிற்பம் புகழ்பெற்றதாகும். அதில் காணப்படும் கோடரி, சுருள் முடியாக அலங்கரிக்கப்பட்டுள்ள மகுடம், தந்தம் ஆகியவற்றின் அமைப்பு இந்தியாவில் வேறு எங்கும் காணமுடியாத தன்மையுடையதாக உள்ளது. மேலும், அது பழங்கால ஒரிசாப் பாணியை உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது.

இங்குள்ளவற்றுள் பீமேசுவரர் கோயிலும் ஒன்றாகும். எளிமையான தோற்றமுடைய அக்கோயிலின் வெளிச் சுவர்களிலுள்ள மாடங்களில் பிரமன், தட்சிணாமூர்த்தி, நரசிம்மர் போன்ற கடவுளர்களின் உருவச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள சில கல்வெட்டுகள் 'அணியங்க பீமா' என்ற பெயரைக் குறிப்பிடுகின்றன. அப்பெயரால் அக்கோயில் பீமேசுவரம் என்றும் பெயர் பெற்றது. பா.ஜெ.

**துணை நூல்கள்:**

**Sivaramamurthy**, C., The Art of India, India Book House, Bombay, 1977.

**முகவர்:** வாணிகம் செய்வதாக இருந்தாலும் ஏனைய சொந்தச் செயல்களைச் செய்வதாக இருந்தாலும் ஒருவரே செய்வதென்பது இயலாததொன்றாகும். ஒரு வழக்குரைஞர் தம் தொழிலைச் செய்து கொண்டு தம் ஊரிலுள்ள நிலங்களையும் பிறபணிகளையும் கவனிக்க முடியாது. எனவே, அவர் வேறு ஒருவரைத் தம் பொருட்டுக் காரியங்களை நடத்தித் தர நாட வேண்டும். காரியம் என்றால் அதில் எவ்வளவோ செய்திகள் அடங்கியுள்ளன. எனவே, அக்காரியத்தைப் பொறுப்பேற்றுச் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் தரவேண்டும். அவற்றை எல்லாம் எண்ணியே அவரைத் தம் முகவராக (Agent) நியமிப்பர். இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் (Indian Contract Act) பிரிவு 182-இன்படி முகவர் நியமிக்கப்படுகிறார். அவர் பொறுப்பு என்ன என்பதனையும், எப்படி அவரை விலக்குவது என்பதையும் மேற்கூறிய பிரிவுகளில் காணலாம்.

**முகவர் என்பவர் யார்?:** இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 182-இன் படி குறிப்பிட்ட காரியத்தைத் தம் பொருட்டுச் செய்யவும், மூன்றாம் ஆளிடம் விவகாரங்களை நடத்தவும் நியமிக்கப்படும் ஒருவரே முகவர் ஆவர். நியமிப்பவரை முதல்வர் (Principal) என்றும், நியமிக்கப்படுபவரை முகவர் (Agent) என்றும் கூறுவர்.

**முகவரும் பணியாளரும்:** முதலாளி ஒருவர் தம் பணியாளர் ஒருவரை இச்செயலில் இம்முறையில் செய் என ஆணையிட்டு அறிவுரை கூறலாம். ஆனால், ஒருவரை முகவராக நியமிக்கும் முதல்வர், அந்த முகவரை இந்தக் காரியத்தைச் செய் எனக் கூறலாமே தவிர எவ்வகையில் என்று கூற இயலாது. முகவராக நியமிக்கப்பட்டபின் இவர், தம் முதல்வரின் இடத்தை ஏற்கிறார். அவர் அந்தக் காரியத்தை எப்படிச் செய்வாரோ அவ்வாறே இவரும் செய்ய வேண்டும்.

**தரகரும், முகவரும் (Broker and Agent):** தரகர் முகவராகமாட்டார். ஒரு தரகர் ஒரு செயலைச் செய்ய நியமிக்கப் பட்டபோதிலும், முகவருக்கு அளிக்கப்படும் பொறுப்புத் தரகருக்கு இல்லை. தரகர் வாடகைக்கு வீடு எடுப்பதற்கு இவ்வளவு வாடகை என்று பேசி முடிக்கலாமே தவிர முதல்வருக்காக வாடகை ஒப்பந்த ஆவணத்தில் கையொப்பமிடமுடியாது. அவ்வாறே தரகு முகவரும் (Commission Agent) முகவர் ஆகார். தரகு முகவர் முதல்வரின் பொருளை விற்க நியமிக்கப்படுகிறார்; அதற்குத் தரகு பெறுகிறார். பொருளை விற்கும்வரைதான் அவர் முகவர். எனவே, சட்டப்படி தரகு முகவர், முகவர் ஆகமுடியாது.

**முகவராக நியமிக்கப்படுபவரின் தகுதி-பிரிவு 183:** சட்டப்படி எவர் ஒருவர் பருவம் எய்தியிருக்கிறாரோ (Major) அவர் மனநிலை சரியாக இருப்பின், அவரை ஒரு முகவராக நியமித்துக் கொள்ளலாம். இந்தியப் பருவம் எய்தியோர் சட்டப்படி (Indian Majority Act) எந்த ஒருவரும் 18 வயது நிறைவுற்றதும் பருவம் எய்தியவர் ஆகிறார். அதுவரை அவர் இளவயதினர் (Minor). அந்த ஒப்பந்தச் சட்டப்படி இளவயதினர் எந்தவகை ஒப்பந்தத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல் இயலாது. அப்படி ஈடுபடுத்திக் கொண்டாலும் அது சட்டப்படி செல்லாது.

**முகவராக இருக்கத் தகுதி பிரிவு-184:** யார் வேண்டுமாயினும் முகவராக இருக்கலாம். ஆனால், நியமிக்கப்படும் முகவர் பருவம் எய்தியவராகவும் மனக்கோளாறு எதுவுமில்லாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இன்னார், இன்னாரின் முகவர் என்று நியமித்தால் மட்டும் போதாது. நியமிக்கப்பட்ட முகவர் முதல்வரின் பேராளராக இயங்கி அவருக்காகப் பொறுப்பேற்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

முகவராக இயங்க அவருக்கு அதில் ஆதாயம் இருக்க வேண்டும் என்பதில்லை; இல்லாமலேயே பணிபுரியலாம். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 25

-ஆம் பிரிவின்படி ஆதாயம் (Consideration) இல்லாமல் ஏற்படும் ஒப்பந்தம் செல்லாது. ஆனால், பிரிவு 185-இன் கீழ் அத்தகைய ஆதாயம் தேவையில்லை. எனவே, குப்பன் சங்கரனை முகவராக நியமிக்கும் போது சங்கரன் எந்த விதமான ஆதாயமும் இன்றி அந்த ஒப்பந்தத்தை ஏற்று முகவராக இருக்க இசைகிறார்.

**முகவரின் அதிகாரம்:** முகவரின் அதிகாரம் உட்கிடையாகவோ வெளிப்படையாகவோ இருக்கலாம். எழுத்து மூலமாகவோ வாய்மொழியாகவோ அதிகாரம் வழங்கப்படுமாயின் முகவர் வெளிப்படையாகவே அதிகாரம் பெறுகிறார். அதிகாரம் உட்கிடையாக இருக்கலாம். அதன் குறிப்பறிந்து கொண்டும், சூழ்நிலைகளைக் கொண்டும் அதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். சென்னையிலிருக்கும் சோப்டா, இராசசுத்தானில் துணிக்கடை வைத்துள்ளார். எப்போதாவது அவர் அங்குச் செல்வார். கடையை மேற்பார்வை பார்க்கும் அவர் மைத்துனர், சோப்டா பெயரில் சரக்கு வாங்கி விற்பார். அது சோப்டா விற்கும் தெரியும். எனவே, அதன்படி சோப்டாவின் மைத்துனர் உட்கிடை முகவர் ஆகிறார்.

**முகவரின் அதிகார வரம்பு:** அதிகாரம் பெற்றுள்ள முகவர் சட்டப்படி செய்ய வேண்டியதையும் தம் அதிகாரத்திற்கு உட்பட்டுத் தகுந்தபடி செய்தல் வேண்டும். ஒருவர் தம் வீட்டின் மீது கடன் வாங்க முகவரை நியமித்திருந்தால் முகவர் அதை மீறி வீட்டைப் பணையம் செய்யலாகாது. நியமிக்கப்பட்ட முகவர், சட்டத்திற்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டுச் செயற்படும்போது விருப்பத்திற்கேற்பச் செயற்படலாம். அவ்வாறே, முகவர், அவசர காலத்தில் முதல்வருக்கு எந்தவிதமான நட்டமும் ஏற்படக் கூடாது என்ற வகையிலும், அவரைப் பாதுகாக்கவும் தம் விருப்பப்படி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கலாம்.

**முகவரின் முகவர்:** சட்டப்படி, முகவர் தமக்கு ஒரு முகவரை நியமிக்க இயலாது. ஆனால், வாணிகத்தில் அவ்வாறு வழக்கம் இருப்பின் நியமிக்கலாம்; அல்லது முதல்வர் அவருக்குத் துணை முகவரை (Sub-Agent) நியமித்துக் கொள்ள அதிகாரம் வழங்கியிருந்தால், துணை முகவரை நியமித்துக் கொள்ளலாம். முகவருக்கு என்னென்ன பொறுப்புகள் உள்ளனவோ அப்பொறுப்புகள் அனைத்தும் துணை முகவருக்கும் உண்டு. தவிர, முகவர் தம்மால் நியமிக்கப்பட்ட துணைமுகவரின் செயல்களுக்குத் தம் முதல்வரிடம் பொறுப்பேற்க வேண்டும்.

**உறுதிப்படுத்துதல்:** ஒருவர், மற்றொருவருக்காக, அவர் ஆணையைப் பெற்று அல்லது அவர்க்குத் தெரியாமல், அவருக்காக ஒரு காரியம் செய்வாரேயானால், அக்காரியம் சம்பந்தப்பட்டவர் அதனை உறுதிப்படுத்தலாம் அல்லது ஏற்க மறுக்கலாம். உறுதிப்படுத்தினால் அந்தக் காரியம் தாமே செய்ததுபோல் ஆகும் எடுத்துக்காட்டாக கோவிந்தனுக்குச் சொந்தமான தலைக் கவசத்தை இபுராகிம் விற்க விருப்பம் தெரிவிக்கிறார். அது கோவிந்தனுக்குத் தெரியாது. மூர்த்தி அதனை ஏற்கிறார். பின்னர், கோவிந்தன் அதற்குத் தம் ஒப்புதல் அளிக்கிறார். ஒப்புதல் அளித்த வகையில் அவர் இபுராகிம் செய்த காரியத்திற்கு ஒப்புதல் அளித்து உறுதிப்படுத்தியவராவார்.

முகவர் செய்யும் காரியங்களை,முதல்வர் வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ உறுதிப்படுத்தலாம். ஒருவன் தன் அண்ணனின் பணத்தை இது அண்ணன் பணம்; அவர் கேட்கும் போது கொடுக்க வேண்டும் எனக்கூறித் தன் மைத்துனரிடம் கொடுக்கிறான். அந்தச் செய்தி அவன் அண்ணனுக்குத் தெரியாது. அவன் மைத்துனர், அண்ணனிடம் பணத்தைத் திருப்பித் தருகிறார். அண்ணன் அதை ஏற்கிறான். பணத்தைத் திருப்பிக் கொடுத்தவன், பணம்வந்த செய்தியைக் கூறுகிறான். அது மறைமுக ஒப்புதல் எனப்படும்.

**அதிகாரத்தை நீக்குதல்-201 – ஆம் பிரிவு:** கீழ்க் காணும் வகையில் அதிகாரத்தை நீக்கலாம். முகவர், தம் வணிக முகவர் பதவியைத் துறக்கும்போதும், நியமிக்கப்பட்ட விவகாரம் அல்லது காரியம் முடிந்த போதும், முதல்வர் முகவருக்கு வழங்கிய அதிகாரத்தை நீக்கலாம். முகவரோ நியமனம் செய்த முதல்வரோ இறந்து போய்விட்டாலும், முகவரோ நியமனம் செய்த முதல்வரோ மனநோயுற்றாலும், முதல்வர் நொடிப்பியல் சட்டப்படி (Insolvency Act) நொடித்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டாலும் முதல்வர் தம் முகவருக்கு வழங்கிய அதிகாரம் நீக்கப்பட்டதாகக் கொள்ளப்படும்.

இராசகோபால், தம் வீட்டை விற்கக் கூறிச் சம்பத்தை முகவராக நியமிப்பதுடன், சம்பத்துக்குச் சேரவேண்டிய உரூ.10,000 த்தையும் வீட்டை விற்றுப் பெற்றுக் கொள்ளச் சொல்கிறார். எனவே, சம்பத்திற்கு இந்த முகவராக இருப்பதற்கு ஓர் அக்கறை அல்லது ஈடுபாடு உள்ளது. தன் பணம் வரவேண்டும் என்பதே அந்த அக்கறை. இம் முறையிலான விவகாரங்களில் 201 - ஆம் பிரிவில் கண்டுள்ள நிபந்தனைகள் பொருத்தமானவையாகும்.

முதல்வர், முகவரின் அதிகாரத்தை நீக்கலாமாயினும், ஒப்படைக்கப் பட்ட காரியம் தொடங்குவதற்கு முன்பும் ஒப்பந்தப்படி செயற்படத் தொடங்

கிய பின்பும் முதல்வருக்கு முகவரை நீக்க அதிகாரம் இல்லை. முதல்வர், காரணமின்றி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முகவரை நீக்குவாரேயானால் முக வருக்கு ஏற்படும் நட்டத்தை ஈடு செய்ய வேண்டிய வராவார். முதல்வர் முகவரின் பணியை நீக்கவும், முகவர் அதனைத் துறக்கவும் தக்க முன் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அவ்வாறு முன் அறிவிப்பு இல்லை யேல் நீக்கப்பட்ட செய்தியும் துறந்த செய்தியும்.முக வரும், முதல்வரும் நடந்து கொள்ளும் நிலைகளி லிருந்து குறிப்பாகக் கண்டு கொள்ளலாம். இராமு, தம் வீட்டை முகவரான சோசப்பிடம் நல்ல குடக் கூலிக்காரருக்கு வாடகைக்கு விடும்படி பணிக்கிறார். முகவரான சோசப்பு, பணியை முடிக்கும் முன் இபுரா கீம் இராமுவின் வீட்டில் குடியிருக்கிறார். அதன்படி சோசப்பின் அதிகாரம் நீக்கப்பட்டு விட்டதெனக் கருதலாம். அவ்வகையில்தான் துணைமுகவரின் அதி காரமும் நீக்கப்படுகிறது.

**முகவரின் பொறுப்புகள்:** முதல்வர் கூறிய பணி களை முகவர் அவர் கூறிய வண்ணம் செய்தல் வேண் டும்; கூறாவிடில் நடைமுறைகளைப் பின்பற்றிப் பணிபுரிய வேண்டும். முதல்வர் கூறிய வண்ணம் செய் யாமல் வேறுவிதத்தில் செய்து ஏதேனும் நட்டம் ஏற்படின் முகவர் அந்த நட்டத்திற்குப் பொறுப் பேற்க வேண்டும்.

முகவர், முதல்வருக்கு வரவு செலவுக் கணக்கு அளித்தல் வேண்டும். தம்முடைய அறிவு நுட்பத்தைப் பயன்படுத்தி முதல்வரின் பணியைச் செவ்வனே செய்ய வேண்டும். ஊக்கத்துடனும் அக்கறையுடனும் செயற்பட வேண்டும். தம் அக்கறையின்மையாலும் பொறுப்பின்மையாலும் முதல்வருக்கு நட்டம் ஏற் படின் அத்தகைய நட்டங்களுக்கு முகவரே பொறுப் பேற்று ஈடு செய்யவேண்டும்.

முகவர் அவ்வப்போது, முதல்வரிடம் தொடர்பு கொள்ளவேண்டும். முதல்வரின் ஆணையின்றி அவருக்குத் தெரியாமல் முகவர் செய்யும் விவகாரங் களை அவர் ஏற்க மறுக்கலாம். சுந்தர் தம்முடைய நிலத்தை விற்கச் சேகருக்கு அதிகாரம் அளிக்கிறார். சேகர் தாமே வேறு ஒருவர் பெயரில் அதனை வாங்கு கிறார். அதை அறிந்த சுந்தர் விவகாரத்தை நீக்கு தல் செய்யலாம். கே.கி.

## முகவைப் பாட்டு

**முகவைப் பாட்டு:** இது மருதநிலத்து உழவர் கள் நெல்லை அளக்கும்போது பாடும் ஒருவகைப் பாட்டு. தொழில் அலுப்புத் தோன்றாதவாறு பாடப் படும் நாட்டுப் பாடல் வடிவங்களில் இதுவும் ஒன்று. ஒவ்வொரு திணை நிலத்திலும் இத்தகைய நாட்டுப் பாடல் வடிவங்கள் தொன்று தொட்டுப் பாடப் பட்டுள்ளதைச் சிலப்பதிகாரத்தின் வரிப் பாடல்கள் வழி நன்கு உணரலாம்.

சிலப்பதிகாரத்தில் புகார்க் காண்டத்தின், நாடு காண் காதையில், புகாரிலிருந்து கோவலன்,கண்ணகி, கவுந்தியடிகள் ஆகியோர் மதுரைக்குச் செல்லும் வழி யில் உழவர்கள் முகவைப் பாட்டைப் பாடினர் என்று சொல்லப்படுகிறது. 'அரிந்து கால் குவித்தோர் அரி கடாவுறுத்த, பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட் டும்' என்பது சிலப்பதிகாரம். அடியார்க்கு நல்லார் 'நெல்லையரிந்து போரிட்டார் சூட்டைக் கடா விடுதலானுண்டான முகவைப் பாட்டும்; ஆவது பொலிபாடுதல். முகக்கக்கொடுத்தலின் முகவையா யிற்று', என்று உரை வரைந்துள்ளார். அரும்பத வுரையாசிரியர் 'முகவை பாடுதல், பொலிபாடுதல்; முகவையென்றார் முகந்து கொடுக்கப்படுதலாலே' என்று எழுதியுள்ளார். அடியார்க்கு நல்லார் இது சூடடிக்கும் போது பாடப்படும் பாட்டு என்கிறார். அரும்பதவுரையாசியரோ பொலி தூற்றும் போது பாடப்படும் பாட்டு என்கிறார். ஆனால், சூடடித்துப் பொலி தூற்றிய நெல்லை அளக்கும் போது பாடப் படும் பாட்டு முகவைப் பாட்டு என்பதே பொருத் தம். நெல்லைச் சிறப்பித்து நெல்லை அளப்பதற்கு முந்திய வினைகளை இளங்கோ குறிப்பிட்டது அவர் கள் பிறழ உணர ஏதுவாயிற்றுப் போலும். 'பெருஞ் செய்ந் நெல்லின் முகவை'ப் பாட்டு என்பது சிலப்பதி காரம். முகத்தல் – அளத்தல்; முகவைப்பாட்டு அளக்கும் போது பாடப்படும் பாட்டு. இன்றும் நெல்லை அளக்கும்போது ஒருவகை ஓசையுடன் அளவுகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடும் முறை இருப்பதைக் காணலாம். க.மு.

## முகியித்தீன் புராணம்

**முகியித்தீன் புராணம்:** இசுலாம் தமிழுக்குத் தந்த இனிய காப்பியங்களுள் ஒன்று 'முகியித்தீன் புராணம்'. இசுலாமிய வரலாற்றின்படி, இறைநேயச் செல்வர்கள் எல்லோருக்கும் குரிசிலாகத் திகழ்ந்த அப்துல் காதிர் சீலானி அவர்களுக்கு வழங்கப்பட்ட விருதுதான் 'முகியித்தீன்' என்பது. 'தீன்' என்பதற்கு இசுலாமிய நெறி என்பது பொருள். 'முகியித்தீன்' என்றால் 'தீனை' அதாவது இசுலாம் நெறியை உயிர்ப்பித்தவர் என்பது பொருளாகும்.

இறுதி நபிமுகம்மது முசுதபா(சல்) கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி.7 – ஆம் நூற்றாண் டின் தொடக்கத்திலும் வாழ்ந்து இசுலாமியத்தை நிலைநிறுத்தினார். அவர்களுக்குப் பிறகு கி.பி.11 -ஆம் நூற்றாண்டில், இசுலாமியநெறிக்குச் சோதனை களும் எதிர்ப்புகளும் ஏற்பட்ட இக்கட்டான சூழ் நிலையில், ஈரான் நாட்டில், காசுபியன் கடலுக்குத் தெற்கே அமைந்த தபரிசுதான் மாநிலத்தில், சீலான்

நகருக்கு அண்மையில் நீப்பு என்னும் ஊரில் பிறந்த அப்துல் காதிர், பாக்தாது சென்று பசியுடன் போராடி இசுலாமிய அறிவு அனைத்தையும் கற்றுத் தேர்ந்து, ஞான வலிமை பெற்று, ஓரிறைக் கொள்கையில் ஒளி பூத்த உள்ளத்தராகி, இருபத்தைந்து ஆண்டுகள் கடுந்தவம் ஆற்றித் திருக்குர்ஆன், பெருமானார்(சல்) பொன்மொழிகள் வழிநின்று இசுலாமியக் கொள்கைகளை முழுமூச்சாய்ப் பரப்பத் தொடங்கினார். அவர் தம் ஆழமான அறிவுத் திறனாலும், ஆற்றொழுக்குப் பேச்சு வன்மையாலும் கவரப்பட்டு ஆயிரக் கணக்கானோர் இசுலாத்தில் இணைந்தனர். எதிர்ப்பும் ஏளனமும் செய்தோர், கண்மூடித்தனத்தாலே முரண்பட்டு வாழ்ந்தோர் ஆகியோர் திருந்தினர்; 'தீன்' வழிச் சென்றனர். இசுலாம் புத்துயிர் பெற்று ஏனைய பகுதிகளில் எல்லாம் நிலை கொள்ளத் தொடங்கியது. எனவே, அப்துல் காதிர் சீலானி, முகியித்தீன் அப்துல் காதிர் சீலானி ஆனார். அவருடைய ஆன்மிகச் செறிவிலும், அற்புதங்கள் நிறைந்த ஆற்றல்களிலும் அறிவு நலத்திலும் தம்மைப் பறிகொடுத்த மக்கள் அவர்தம் வழிமுறைகளைப் பின்பற்றி உலகெங்கும் இசுலாத்தைப் பரப்பும் தொண்டர்கள் ஆயினர். அந்த அருந்தவச் செல்வரின் பெயரில் 'காதிரிய்யா தரீக்கர்' என்று தோன்றிய ஆன்மிக இயக்கம் இன்றும் பல நாடுகளில் தழைத்து இசுலாமிய நெறியினைப் பேணிப் பரப்பி வருகிறது.

முகியித்தீன் அப்துல் காதிர் சீலானியினுடைய வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் உள்ளத்தை ஈர்க்கத் தக்கது. தெளிவான வாழ்க்கை வரலாற்று நூல்கள் அந்தப் பெருந்தகைக்கு உண்டு. தமிழில் அந்தச் செம்மல் பற்றி வந்துள்ள நூல்களே மிகுதி. திருப்புகழ், பிள்ளைத்தமிழ், மாலை, ஏசல், சிந்து, கீர்த்தனை என்றினைய பல்வேறு பாவடிவங்களில் அந்தச் சீராளர் பாடப்பெற்றுள்ளார். இசுலாமியத் தமிழ்ப் புலவோர் இயற்றிய தமிழ்க் காப்பியங்களுள் முகியித்தீன் அப்துல்காதிர் சீலானியைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு நான்கு காப்பியங்கள் வந்துள்ளமை இசுலாமிய உலகிலும், தமிழ் உலகிலும் தனிச்சிறப்புப் பெற்ற நிலை ஆகும். அந்த நான்கில் ஒரு காப்பியந்தான் 'முகியித்தீன் புராணம்' ஆகும். நான்கினுள்ளும் அளவால் பெரியது இதுதான்.

புராணம் என்ற பெயரில் இருந்தாலும் முகியித்தீன் ஆண்டகையின் (முகியித்தீன் அப்துல் காதிர் சீலானி) வரலாற்றை 3,982 தமிழ்ப் பாக்கள் கொண்டு காப்பிய நெறி வழுவாமல் பாடப் பெற்றிருப்பதால் பெருங்காப்பியப் பெருமையைப் பெறுகின்றது. நூலினை ஆக்கியோர், தம் பெயரையும் நூலியற்றிய காலத்தையும் பாயிரப் பகுதியில் பாடியுள்ளார். அதன்படி, காப்பியப் புலவர் பதுறுத்தீன் என்பதும், கி.பி. 1816-ஆம் ஆண்டு மேத் திங்கள், இருபதாம் நாள் காப்பியம் முழுமையுற்றது என்பதும் அறியப்படுகின்றன.

நூலாசிரியர், காப்பிய நாயகர் முகியித்தீன் ஆண்டகையே தமக்கு முன்பும் பின்பும் தோன்றிய இறைநேயச் செல்வர்களின் தலைவரானவர் என்பதைப் போற்றி, அவரது அரும்புகழ் பாடுவதையே காப்பியத்தின் குறிக்கோளாகக் கொள்கிறார். இறைநேயச் செல்வர் என்னும் பொருளில் வரும் அரபு மொழிச் சொல் 'வலி', தமிழில் 'ஒலி' என்று அமையும். 'வலிகட்கு நாயகம்', 'ஒலிமார் சீயம்', 'ஒலிமார்களில் அரசரானவர்' என்றெல்லாம் முகியித்தீன் ஆண்டகையின் மேன்மையைப் பதுறுத்தீன் புலவர் பாடுவார். 'புகழிசுலாம் பொலிய வைத்தோர்' (முகியித்தீன்) என்று ஆண்டகையின் புகழ் பாடுவார்.

அற்புத ஆற்றல்கள் நிறைந்தவர் ஆயினும் முகியித்தீன் ஆண்டகை, நபிமார்களுக்கு (இறைத் தூதர்கள்) அடுத்த நிலையில் உள்ளவர்தாம் என்னும் இசுலாமிய நெறியை எடுத்துக்காட்டி அவர் திருநபி(சல்) வழியே திருமறையின் விளக்கம் சொல்லும் பான்மையர் என்பதை 'முகம்மது நபியுரை மொழி வழுவாது' (3777), 'வல்லவன்தரு மாமறை வாய்மையை, நல்லிதயத்தோடு நான்சொலக் கேட்பதற்கு' (3614) என்ற பாவடிகளால் புலவர் பாடுவார்.

ஆண்டகையின் அரிய வரலாற்றைப் பாடும்போதே இசுலாமிய நெறி விளக்கங்களையும் இயம்பிச் செல்வார். இறைவன் ஒருவன், அவன் உருவம் அற்றவன், அரியவன், பெரியவன், ஆற்றல் மிக்கவன் என்பனவற்றை, 'கருத்தன் ஒருவன்', 'உருவமிலாச் சீலமுடையோன்', 'ஆதியந்த நடுவிலாத அரியபெரிய வல்லவன்' என்று பாடி மகிழ்வார். தொடர்ந்து பெருமானார் (சல்) பெருமைகள், தொழுகை, நோன்பு, ஏழைவரி (சக்காத்), புனித மெக்கா செல்லல் ஆகியவற்றின் சிறப்புகளை ஆங்காங்கே பாடிச் செல்வார்.

காப்பிய இலக்கணங்கள் எல்லாம் கனிவுற அமைந்ததே 'முகியித்தீன் புராணம்'. இயற்கைப் பொருட்கள் இதில் இனிதாக வருணிக்கப் படுகின்றன. எழுஞாயிற்றுக்கு முன் புள்ளினம் கூவும் காட்சி, இசுலாமியரைக் காலைத் தொழுகைக்கு எழுங்கள் என்றும், முகியித்தீன் ஆண்டகை அறப்பொழிவு செய்யும் அவைக்கு விரையுங்கள் என்றும் குரல் கொடுப்பது போல உள்ளது என்று தற்குறிப்பேற்றம் அமையப் பாடி, இசுலாமியக் கடமையையும் நினைவுறுத்துவார்.

தமிழ் நிலத்துக்குப் புறத்தே உள்ள தலைமகனைப் பாடினாலும், தமிழ்ச் சாயலே அமையுமாறு 'முகியித்தீன் புராணத்தை' உருவாக்கியுள்ளார் புலவர். தமிழ் மன்னர்களைப் போலவே முகியித்தீன் ஆண்டகை, 'தார் தரும் புயத்தராக' விளங்குகின்றார். தமிழ் நாட்டுச் சூழலை மனத்திற் கொண்டவராய், இசுலாமிய மரபுக்கு முரண்பட்டவற்றைச் சொல்லுதல் பற்றிப் புலவர் கவலைப்படவில்லை. திருமண ஊர்வலம் தமிழ் நாட்டைக் கண்முன் நிறுத்துகிறது. கண்ணேறு கழித்தல், பொட்டணிதல் போன்ற தமிழகச் சடங்குகளும், மண வீட்டில் இசைமுழங்கும் தமிழ்ப் பண்பும் காப்பியத்தை அழகு செய்கின்றன. இசுலாமிய மரபினை மீறியனவாக இவை இருந்தாலும் காப்பியம் கற்போர் தமிழ் மக்களே ஆதலின் தம் முன்னோரைப் பின் தொடர்ந்து தமிழகப் பின்னணியை உருவாக்கி இருக்கவேண்டும். எளிமை, இனிமை, நிறைந்த ஏற்றம் மிகு காப்பியமான 'முகியித்தீன் புராணம்', எழுபத்து நான்கு படலங்களைக் கொண்டது. இரு பகுதிகளாக வெளியாகி உள்ளது.

அ.ர.

**முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்:** இவர் சங்க காலப் புலவர்; முகையலூர் என்ற ஊரைச் சேர்ந்தவர்; சோழநாட்டுப் புலவர். இவர் பெயர் சோணாட்டு முகையலூர்ச் சிறு கருந்தும்பியார்' என்றும் வழங்கி வருகிறது. சிறுகருந்தும்பியார் என்ற இவர் பெயர், இயற்பெயர் அன்று. அணிலாடு முன்றிலார், குப்பைக் கோழியார் என்பன போல இவர் பாடியுள்ள தொடரால் இவருக்கு இந்தப் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், அத் தொடரமைய இவர் பாடிய பாடல் கிடைக்கவில்லை. புறநானூற்றில் (181, 265) இரு பாடல்கள் இவர் பாடியவை. திருவள்ளுவமாலையில் இவர் பெயரில் ஒரு வெண்பா காணப்படுகிறது.

புறநானூற்று 181 – ஆம் பாட்டில் பாணனிடம் கூறுவதாக 'மன்றத்தில் உதிரும் விளாம்பழத்தை மறத்தியின் மகன் எடுப்பான்; காட்டில் வாழும் யானைக்கன்றும் வந்து எடுக்கும். வல்லார் என்ற ஊர் பெரிய அரண் சூழ்ந்த ஊர்; புலால் நாறும் அம்பினையும் போரிட முடியாக் காவற் காட்டையும் உடைய ஊர். அவ்வூரின் தலைவன் பண்ணன். 'பாணனே! உனது பசியால் வாடும் சுற்றம் உண்டு பிழைக்க வேண்டுமென்றால் நீ அவன் பகைப்புலம் செல்வதற்கு முன்னால் சென்று உன் பசிப்பகையைப் போக்கிக் கொள்ளப் பரிசில் பெறுவாயாக' எனப் பாடியுள்ளார். வல்லார் என்ற ஊரின் சிறப்பும், அதன் தலைவனாகிய பண்ணனின் கொடைச் சிறப்பும் இந்தப் பாட்டில் இவரால் கூறப்பட்டுள்ளன.


கரந்தைப் போர் செய்து மாண்ட வல்லார் என்ற ஊர்த்தலைவனாகிய பண்ணனுக்கு, நிரை காத்துக் கொடுத்த அவன் அன்பு கருதிக் கோவலர் நடுகல் எடுத்து வழிபட்டனர். அதுகண்ட இப்புலவர் 'வேங்கைப் பூவைப் பனையோலையில் வைத்துத் தொடுத்த கோவலர்கள், இலைமாலைகளைச் சூட்டி வழிபட, ஊருக்குப் புறத்தே நீ நடுகல் ஆனாய். மழைக்காலத்தில் தோன்றும் இடியேறு போன்ற உன் திருவடிக்கீழ் வாழும் வாழ்க்கையையுடைய பரிசிலர் செல்வமும் வேந்தரது வெற்றியும் உனக்குப் பின் இல்லாமற் போயின' என அவன் கொடைப் பண்பையும் மற மாண்பையும் பாராட்டுகின்றார் (புறம். 265).

'திருக்குறளை விடச் சிறந்த நூல் உள்ளது என்று கூறும் எப்புலவரும் இல்லை; ஆகவே, திருக்குறள் நூற் பொருளைச் சிந்தித்தலும், அதனைப் பிறர்க்கு எடுத்துரைத்தலும், பின் அதன் நூற்பொருளைத் தெளிதலும் ஆகிய செயல்களே நாம் மேற்கொள்ளத் தக்கன' என்பது திருவள்ளுவமாலையில் இவர் பாடிய தாக அமைந்துள்ள திருவள்ளுவமாலை வெண்பாவின் கருத்தாகும்.

க.மு.

**முசிபுர் ரகுமான்,** பங்களாதேசம் என்ற புதிய நாடு உருவாகக் காரணமாக இருந்தவர். முசிபுர் ரகுமான் (Mujibur Rahman) தாக்கா(Dhaka) நகருக்கு அருகில் உள்ள துங்கிபாரா (Tungipara) என்னுமிடத்தில் 1920-ஆம் ஆண்டு பிறந்தார். இவரை எல்லோரும் சேக் முசிபு (Sheikh Mujib) என அன்பாக அழைப்பர். இவர், கிழக்கு வங்காளத்தின் மாபெரும் தலைவர்; அது தனி நாடானபோது முதல் தலைமை அமைச்சர். பின்னர் அதன் குடியரசுத் தலைவராகவும் இருந்தார். இவர் தந்தை நடுத்தர வகுப்பைச் சேர்ந்த நில உடைமையாளர் ஆவர். தம்தொடக்கக் காலக் கல்வியைக் கல்கத்தாவில் பயின்றார். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் அரசியலிலும் அறிவியலிலும் பட்டம் பெற்றார். பின்னர்த் தாக்காப் பல்கலைக் கழகத்தில் சட்டப்படிப்பில் பட்டம் பெற்றார். இவரது இளமைக் காலத்தில் மேற்குப் பாகிசுத்தான், கிழக்குப் பாகிசுத்தான் என இரண்டு பகுதிகள் இருந்தன. அந்த இரண்டு பாகிசுத்தான்களுக்கும் இடையில் ஏறத்தாழ 1600 கி.மீ. தொலைவு இடைவெளி இருந்தது. பாரதநாடு இவ்விரு பாகிசுத்தான்களுக்கு இடையில் இருந்தது.

மேற்குப் பாகிசுத்தான் மக்கள்தொகையைவிடக் கிழக்குப் பாகிசுத்தான் மக்கள் தொகை மிகுதியாக இருந்தது. பொருளாதாரம் வேளாண்மை ஆகிய வற்றின் உற்பத்தியிலும் கிழக்குப் பாகிசுத்தான் முதன்மை பெற்று விளங்கியது. இவ்வளவு வளம்



முசிபுர் ரகுமான்

பெற்று இருந்தும் கிழக்குப் பாகிசுத்தானை மேற்குப் பாகிசுத்தானின் இராணுவ ஆட்சியாளர்கள் தொடர்ந்து சுரண்டி வந்தனர். இவ்வாறு சுரண்டப் பட்ட கிழக்குப் பாகிசுத்தான் மக்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்.

கிழக்குப் பாகிசுத்தானில் 1962–ஆம் ஆண்டு 'அவாமி லீகு' என்ற பெயரில் மாணவர் இயக்கம் ஒன்று உருவாகியது. அவாமி லீகு கட்சியின் தலைவர் சேக் முசிபுர் இரகுமான் 1968-ஆம் ஆண்டில் அளித்த 11 அமிசத் திட்டத்தை வற்புறுத்திப் பெரும் கிளர்ச்சி நடந்தது.கிளர்ச்சியின் போது முசிபுர் ரகுமான் சிறைப் படுத்தப்பட்டார். மௌலானா பாசானி என்பவர் 'அவாமி முசுலீம் லீகு' என்ற அரசியல் கட்சியைத் தொடங்கினர். அக்கட்சியின் இணைச் செயலாளரா கப் பொறுப்பேற்ற முசிபுர் இரகுமான் கிழக்குப் பாகிசுத்தானின் மக்களுக்காகப் பெரிதும் போராடி னார். பாகிசுத்தானில் 1970-ஆம் ஆண்டுத் திசம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் முசிபுர் இரகுமானின் 'அவாமிலீகு கட்சி' கிழக்குப் பாகிசுத்தானுக்கு முழு விடுதலை தேவை என்பது உள்ளிட்ட ஓர் ஆறு அமிசத் திட்டத்தை முன்வைத்துப் போட்டியிட்டுப் பெரிய வெற்றி பெற்றது. ஆயினும், ஆட்சிப் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப்படவில்லை. யாகியாகான் தலைமையில் பேச்சு வார்த்தை நடைபெற்று, அது தோல்வியில் முடிந்தது. அதனால், பெரும் கலகம் ஏற்பட்டது. முசிபுர் ரகுமான் மீண்டும் சிறையிலிடப் பட்டார். இந்தியாவின் உதவியோடு மேற்குப் பாகிசுத்தான் படைகள் முறியடிக்கப்பட்டன.பங்களா தேசம் விடுதலை நாடாக அறிவிக்கப்பட்டது. அதன் தலைமை அமைச்சராக முசிபுர் ரகுமான் 1972-ஆம் ஆண்டில் பதவியேற்றார்.

பங்களா தேசத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சேக் முசிபுர் இரகுமான் பல முற்போக்கு நடவடிக்கை களை மேற்கொண்டு பங்களா தேச மக்களின் வாழ்வு முன்னேற அயராது உழைத்தார். பங்களா தேசத் தின் குடியரசுத் தலைவராக 1974–ஆம் ஆண்டு பதவி ஏற்றார். முசிபுர் இரகுமானும் அவர் குடும்பத்தாரும் 1975–இல் அரசியல் எதிரிகளால் சுட்டுக் கொல்லப்

பட்டனார். முசிபுர் இரகுமானின் உடலைத் துங்கி பாரா என்னுமிடத்தில் எவ்விதச் சமயச் சடங்கு மின்றிப் புதைத்தனர். பங்களாதேச விடுதலைக்காக அரும்பாடுபட்ட முசிபுர் இரகுமானும் அவர் குடும்பத்தாரும் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டது வங்கதேச வரலாற்றில் மிக வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். சு.ஆ.

**முசுகுந்தன்**: இவன் சோழ நாட்டு மன்னன்; சூரிய குலத்தைச் சேர்ந்தவன்; திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். இவன் கருவூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்தான் என்றும் கூறுவர். திருவாரூரின் பல பெயர்களில் ஒன்றான முசுகுந்தபுரம் என்பது இவன் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்பதை மெய்ப்பிக்கும். சப்தவிடங்கத் தலங்களாக இவன் திருவாரூரைச் சுற்றி அமைந்துள்ள ஊர்களையே தேர்ந்தெடுத்ததும், இவன் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்தான் என்பதை உறுதிப்படுத்தும். இன்னும் திருவாரூர்த் தியாகராசருக்கு இவன் பெயரால் முசுகுந்தார்ச்சனை நடப்பதும் இவனது திருவாரூர்த் தொடர்பை உண்மையாக்கும். இவன் வரலாறு புராணத் தொடர்புள்ளதாகையால் பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கு இடந்தந்து நிற்கிறது. வரலாற்று வழி இவன் வரலாறு வரையறுக்கப்படாததாகவே உள்ளது. முசுகுந்தச் சக்கரவர்த்தி என்னும் பெயர் வழக்கு உள்ளதால், இவன் ஒரு பேரரசனாக விளங்கினான் எனக் கருதலாம்.

முசுகுந்தன் என்ற இவன் பெயர் கொண்டு குரங்குபோல் குந்தியிருப்பவன் என்று சிலர் பொருள் கூறுவர். விதூமன் என்ற காந்தருவன் மறுபிறப்பில் குரங்காகப் பிறந்து, கைலாய மலையில் சிவபெருமானை வில்வத்தளிரால் அருச்சித்தமையால், குரங்கு முகத்துடன் திலீபனுக்கும் மங்கலவதிக்கும் மகனாகப் பிறந்து, விசித்திரவதியை மணந்தான் என்பர். சிலர் இவனை மாந்தாதாவின் மகன் என்றும் கூறுவர்.


ஒருமுறை இவன் வேட்டையாடச் சென்றபோது இவன் ஏறியிருந்த குதிரை வேதியன் ஒருவனைக் காலால் மிதித்துக் கொல்ல, சிவபூசை செய்து அக்கொலைப் பாவத்தை இவன் போக்கிக் கொண்டான் என்பர். இவனுடைய ஆட்சியில் மழை பெய்யாத போது இவன் ஊற்றுண்டாக்கிப் பயிர்களைச் செழிப்பித்தான் என்பர்.

வலன் என்னும் அசுரனைத் தோற்கடித்து, இந்திரனுக்குத் தேவலோகத்தில் இவன் உதவி செய்தான். தேவ லோகத்தில் திருமாலிடமிருந்து இந்திரன் பெற்று வணங்கிய தியாகராசரின் திருவுருவைக் கண்டு இவன் உள்ளம் பறிகொடுத்தான். தியாகராசரும் இவனுக்குக் காட்சி தந்து தம்மைக் கொண்டு சென்று பூசை இயற்றுமாறு கேட்டுக் கொண்டார். இந்திரனிடம் இவன் தியாகராசரின் திருவுருவை வேண்ட, இந்திரன் திருமாலிடம் கேட்டுத் தருவதாகக் கூறினான். திருமாலும் இவனுக்குத் தியாகராசரை வழங்கும்படி கூறினார். தியாகராசரைப் பிரிய விரும்பாத இந்திரன் தியாகராசர் போல மேலும் ஆறு உருவங்கள் செய்து ஏதேனும் ஒன்றை எடுத்துக் கொள்ளுமாறு கூறி விட்டான். உண்மைத் தியாகராசர் தன்னுடன் தங்கிவிடுவார் என்பதே இந்திரன் எண்ணம். அவனது எதிர்பார்ப்புக்கு மாறாக, உண்மைத் தியாகராசரை இவன் அடையாளம் காட்டிவிட்டான். வேறுவழியின்றி இந்திரன் ஏழு விடங்கரையும் இவனிடம் வழங்கி விட்டான்.

இந்திரனிடமிருந்து கிடைத்த ஏழு விடங்கரையும் கொண்டுவந்து இவன் ஏழு இடங்களில் நிறுவினான். 'நகவிடங்கர்' எனத் திருநள்ளாற்றிலும், 'சுந்தர விடங்கர்' என நாகைப்பட்டினத்திலும், 'ஆதி விடங்கர்' எனத் திருக்காறாயிலிலும், 'அவனி விடங்கர்' எனத் திருக்குவளையிலும், 'நீலவிடங்கர்' எனத் திருவாய்மூரிலும், 'புவனி விடங்கர்' எனத் திருமறைக்காட்டிலும், 'வீதி விடங்கர்' எனத் திருவாரூரிலும் வழங்கும் மூர்த்தங்கள் இவன் நிறுவியனவேயாகும். அவை சப்த விடங்கத் தலங்கள் எனப்படும். இவன் திருவாரூரில் வீதி விடங்கரை, மாசி மாதத்துக் கிருட்டிண பட்சத்துச் சதுர்த்தியாகிய அத்த நட்சத்திர நாளில் அமைத்துப் பங்குனி உத்திரம் வரை பெருவிழா எடுத்தான் என்பர்.

இவன் இந்திரன் வேண்டுகோளை ஏற்றுத் தேவலோகத்தைக் காத்தான். இவன் செயலைப் பாராட்டி இவன் தூங்கும் போது எழுப்புவோர் சாம்பலாவர் என்னும் வரம் இவனுக்கு வழங்கப்பட்டது. கண்ணனைப் போரில் துரத்திய காலயவனன் என்பவன், தூங்கிய இவனைக் கண்ணன் என எண்ணி அறைந்ததால், அவன் சாம்பலானான் என்று கூறுவர். பின் கண்ணன் இவனுக்குக் காட்சி கொடுத்தான் என்றும் குறிப்பிடுவர். இவன் இறுதிக் காலத்தில் ஆட்சிப் பொறுப்பைத் தன் மகனிடம் ஒப்படைத்து விட்டுத் தவமேற்கொண்டான் என்பர். க.மு.

**முசுதபா கமால் பாசா**, துருக்கி நாட்டினைச் சேர்ந்த சலோனிகாவில் கி.பி. 1880 – இல் பிறந்தார். இவர் துடிப்பு மிக்கவர், அஞ்சா நெஞ்சினர், தன்மானம் மிக்கவர், நாட்டுப் பற்று மிக்கவர், பகைவர்களின் அறைகூவலுக்குப் பதிலடி கொடுத்தவர். சிறந்த போர் வீரராகிய கமால் (Mustafa Kemal Basha) முடியாட்சியை ஒழித்துக் குடியாட்





முசுதபா கமால் பாசா

சியை ஏற்படுத்தினார். மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து துருக்கியை விடுவித்து ஐரோப்பிய மயமாக்கினார். புரட்சி செய்து புதுமை படைத்த இவர், பெண்களும் சம உரிமையடைய வழிகோலினார். 'துருக்கி துருக்கியர்களுக்கே' என்று முழக்கமிட்டார்.

செனிவாவில் 1908 – இல் தோற்றுவிக்கப்பட்ட 'இளந்துருக்கியர்'(Young Turks) இயக்கத்தில் சேர்ந்து கமால் தீவிரமாக உழைத்தார். இவர் துருக்கி இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார்; இத்தாலிக்கு எதிராக இலிபியாவில் 1911–இல் போர் புரிந்தார்; அதுபோலப் பால்கன் போரிலும் பங்கு பெற்றார்; முதல் உலகப் போரில் தார்டனல்சில் பிரிட்டனை எதிர்த்துப் பெரும் வெற்றி பெற்றார். முகமது சுல்தானின் முறையற்ற செயல்களால் நாடு தன் வலிமையையும், புகழையும் இழந்துவிட்டதென்று குற்றம் சாட்டி முடியாட்சியை ஒழிக்க முடிவு செய்தார். புதுக்கட்சி ஒன்றைத் தொடங்கி அதற்கு 'மக்கள் கட்சி' (People's Party) என்று பெயரிட்டார்.

இத்தாலிய, கிரேக்கப் படைகள் 1919 – இல் துருக்கிக்குச் சொந்தமான அனடோலியாவில் அத்துமீறல் செய்தன. அதனை எதிர்த்து இருமுறை தேசிய மாநாட்டைக் கூட்டினார். அனடோலியா, திரேசு ஆகியவை சட்டப்படி துருக்கிக்கே சேர வேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது. கமாலின் தீவிரத்தைக் கண்டு நேச நாடுகளும் அஞ்சின. சுல்தானும் பல வகைகளில் அவரை அடக்க நினைத்து, கைது செய்ய ஆணை பிறப்பித்தார். கிரேக்கப் படைகளிடம் முதல் முறையாகத் தோல்வியுற்ற கமால் பாசா தப்பி ஓடி அங்காராவைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் இடைக்கால அரசை நிறுவினார். ஒரு தேசிய அவையை ஏற்படுத்த அங்காரா ஒப்பந்தத்தை உருவாக்கினார். அதன்படி துருக்கி அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் அடைய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. கமாலின் இம்முயற்சிக்குப் பிரான்சு ஆதரவு அளிக்கப் பிரிட்டன் எதிர்ப்புத் தெரிவித்தது. கிரீசு கமாலைத் தாக்கநினைத்தது.

கமால், 1921-ஆம் ஆண்டு உருசியுரவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு கிரேக்கத்தை எதிர்க்கத் துணிந்தார். கிரேக்கப் படைகள் அங்காரா மலைப் பகுதிகளுக்குள் நுழைய இயலாமல், கமாலிடம் படுதோல்வி அடைந்தன. சிமிர்னாவை (Smyrna) கிரேக்கர்களிடமிருந்து மீட்டுக் கிரேக்க ஆளுமையை ஆசியாவிலிருந்து ஒழித்தார்.

அனடோலியாவில் வெற்றிபெற்ற கமால், தார்டனல்சு நீர் இணைப்பில் தம் பார்வையைச் செலுத்தினார். அப்பகுதியிலிருந்த ஆங்கிலேய, பிரான்சு, இத்தாலியப் படைகளில் பிரான்சு இத்தாலியப் படைகள் கமாலுக்கு அஞ்சி ஓடிவிட்டன. ஆனால், ஆங்கிலேயப் படை எதிர்த்தது. எனினும் இரு நாடுகளுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. துருக்கிச்சுல்தானிடமிருந்து காலிபாப் பதவி பறிக்கப்பட்டு அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

சுல்தான், ஆங்கிலேயருக்குச் சொந்தமான மால்ட்டா விற்குச் சென்று தஞ்சமடைந்தார்.

பிறகு 1923 – ஆம் ஆண்டு செவ்ரே உடன்பாடு புறக்கணிக்கப்பட்டு இலாசேன் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படிகிழக்குத் திரேசு,தெனிடாசு ஆகியவை துருக்கியிடம் கொடுக்கப்பட்டன. துருக்கி இழப்பீடு ஏதும்தாராது தன்னாட்டு மக்களுக்குப் பாதுகாப்புத் தர உறுதி அளித்தது. துருக்கியிலிருந்து அந்நியப்படைகள் விலகின. இவ்வாறு கமால் பாசா துருக்கியருக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்தார்.

தேசிய சபை 1923 – ஆம் ஆண்டு அங்கோராவில் கூடித்துருக்கியைக் குடியரசு நாடென அறிவித்தது. புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையறுக்கப்பட்டது. முசுதபா கமால் பாசா முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**அரசியல் சீர்திருத்தங்கள்:** கமால் பாசா பதவிக்கு வந்ததும், அரசியல் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒழித்துச் சபையில் முழு ஆளுமையைப் பெற்றார். படைகள் அனைத்திற்கும் தலைமைதாங்கி, வல்லாட்சியாளராக மாறிப் பல சீர்திருத்தங்ளைப் புகுத்தி நாட்டை ஐரோப்பிய மயமாக்கினார். இருபாலருக்கும் வாக்குரிமை நல்கி, சட்டசபையில் பெண்களுக்கு உறுப்பினராகும் தகுதியளித்தார். அரசியலிலிருந்து சமயத்தை நீக்கித் துருக்கியைச் சமயச் சார்பற்ற நாடென அறிவித்தார். குரானை அடிப்படையாகக் கொண்ட சட்டங்கள் மாற்றப்பட்டுப் புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அது போலவே நீதிமன்றங்களும், விசாரணை முறைகளும் மாற்றியமைக்கப் பட்டன.

தம்நாட்டு மக்களைப் பழமையிலிருந்து விடுவித்து, ஐரோப்பிய முறையில் உடை அணியுமாறு வற்புறுத்தினார். இசுலாமிய ஆண்டு, நாட்குறிப்பு முறையை நீக்கி, கிரிகேரிய முறையைப் புகுத்தினார். பள்ளிகளும், கல்லூரிகளும் ஐரோப்பியப் பாணியில் நிறுவப்பட்டுப் பாடத் திட்டங்களும் மாற்றியமைக்கப்பட்டன. ஐரோப்பிய இசைக் கலையையும், நடனக் கலையையும் போதிக்கச் சிறப்புப் பள்ளிகள் நிறுவப்பட்டன. கமால் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து பழைய துருக்கி எழுத்துகளை நீக்கினார். புதிய ஐரோப்பிய எழுத்துகள் புகுத்தப்பட்டன. தொழில் முன்னேற்றத்தில் பிற நாடுகளைப் போலத் துருக்கியை உயர்த்தவும், தன் முயற்சியில் மக்கள் அறிவு பெறவும் தொழிற் பள்ளிகளையும், மருத்துவக் கல்லூரிகளையும், வேளாண்மைக் கல்லூரிகளையும் நிறுவி மக்களை ஊக்கப்படுத்தினார்.

பெண்களை முகத்திரையிடும் பழக்கத்திலிருந்து விடுவித்து, அவர்கள் சம உரிமையோடு வாழ வழி செய்தார். ஆண்கள் பல பெண்களை மணப்பதற்கு உரிமை கொடுக்கப்படவில்லை. திருமணச் சட்டத்தை 1826-இல் கொண்டு வந்து அதை நடைமுறைப்படுத்தினார். பெண்களுக்கு மணவிலக்கு உரிமையும், சொத்துரிமையும் கொடுக்கப்பட்டன.

துருக்கி சீர்கேடான பொருளாதார நிலையிலிருந்து மீட்கப்பட்டது. மக்கள் புதிய வசதி நிரம்பிய இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி வேளாண்மையைப் பெருக்க ஊக்குவிக்கப்பட்டனர். புதிய வேளாண்மை முறைகளைப் பின்பற்ற வேளாண்மைக் கல்லூரியை நிறுவினார். பல புதிய வல்லுநர்களைக் கொண்டு குடியானவர்களுக்குப் புதிய இயந்திரங்களின் பயன்பாடுகள் கற்பிக்கப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களையே 1924–இல் நம்பி வாழ்ந்த துருக்கிய மக்கள், 1930-இல் தன்னிறைவு பெற்றனர்.

இரும்பு, நிலக்கரி, வேதிமப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி மிகுதியாக்கப்பட்டு இத்தாலி, உருசியா ஆகிய நாடுகளுடன் வாணிக உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்புப்பாதைகள், போக்குவரத்துச் சாலைகள் ஆகியவை அமைக்கப்பட்டுப் பொருளாதாரம் மேம்படுத்தப்பட்டது. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகமும் ஓங்கின.

**கமால் பாசாவின் வெளிநாட்டுக் கொள்கை:** கமால் பாசா, ஆக்கிரமிப்பை வெறுத்து அமைதியையும், நட்புறவையும் வளர்த்தார். உருசியாவுடன் இரண்டு உடன்பாடுகளை மேற்கொண்டு, உள்நாட்டுப் பொருளாதாரம் உயர்வடையச் செய்தார். துருக்கியின் கீழிருந்த அரேபிய நாடுகளுக்குத் தன்னாட்சி உரிமை அளித்தார்.

இவ்வாறு நாட்டில் அமைதியான முறையில் பெரும் பொருளாதார, சமுதாய, சமயச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தித் துருக்கியின் பெருமையை உலக அரங்கில் உயர்த்தினார். எனவே முசுதபா கமால் பாசாவிற்குத் துருக்கியின் தேசிய அவை 'ஆட்டாடர்க்கு' (Ataturk - 'துருக்கியின் தந்தை') என்ற சிறப்பு விருதை அளித்துச்சிறப்பித்தது. முசுதபா கமால் பாசா 1938–இல் காலமானார். இரா.கி.

**முசுலிம் லீகு:** இந்திய இசுலாமிய மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர்களிடையே முன்னேற்றக் கருத்துகளைப் புகுத்தவும் சையது அகமது கான் என்பவர் 'அலிகார் இயக்கம்' என்ற ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். இவர் தேச பக்தராக இருந்தபோதிலும், இசுலாமியர் காங்

கிரசுக் கட்சியில் சேர்வதைத் தடுத்து அவர்களைத் தனிமைப்படுத்தியே வைத்திருந்தார். அதுவே அவர்களுக்கென்று ஒரு தனிக்கட்சி ஏற்படக் காரணமாக இருந்தது. வங்காள நவாபான சாலிமுல்லா பகதூர் என்பவரால் கி.பி. 1906-ஆம் ஆண்டு 'முசுலிம் லீகு' என்னும் கட்சி (Muslim League) தோற்றுவிக்கப்பட்டது.

இந்திய இசுலாமியர் ஆங்கிலேயே அரசின்பால் நன்றியறிதலையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துதல், இசுலாமிய மக்களின் அரசியல் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாத்தல், தங்களுடைய உரிமைகளை வேண்டும்பொழுது அரசாங்கத்தை எதிர்த்துக் கொள்ளாமல் மரியாதையுடன் விண்ணப்பித்துக் கொள்ளுதல், இசுலாமியர்களுக்கும் மற்ற மக்களுக்குமிடையே நல்லுறவை வளர்த்தல் ஆகியவை இக் கட்சியின் நோக்கங்களாகும்.

இக்கட்சி படிப்படியாக வளர்ச்சியுற்றது. முதல் உலகப் போருக்குப் பின் இந்திய இசுலாமியர்கள் ஆங்கிலேய அரசுக்கெதிராகக் 'கிலாபத்து' இயக்கத்தைத் தொடங்கினர். அப்போருக்குப்பின் துருக்கியின்பால் நேசநாடுகள் பின்பற்றிய கொள்கையே இசுலாமியர்களின் எதிர்ப்புக்குக் காரணமாக இருந்தது. அச் சமயத்தில் இந்து-முசுலிம் ஒற்றுமை ஏற்பட்டது. எனினும் அது அதிக நாள் நீடிக்கவில்லை.

மாநில சுயாட்சி வழங்கப்பட்ட பின்னர் கி.பி. 1937-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடந்தபொழுது கூட்டணி அமைச்சரவை அமைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகுமானால் முசுலிம்லீகு காங்கிரசுடன் ஒத்துழைக்கும் என்று அதன் தலைவர் முகமது அலி சின்னா வாக்களித்திருந்தார். ஆனால், தேர்தலில் ஆறு மாநிலங்களில் காங்கிரசு அறுதிப் பெரும்பான்மை பெற்றதால் அதற்குக் கூட்டணி அரசை ஏற்படுத்தும் தேவை ஏற்படவில்லை. தனித்தே அமைச்சரவைகளை ஏற்படுத்தியது. இச்செயல் சின்னாவைச் சினமடையச் செய்தது. முசுலிம் லீகு நான்கு மாநிலங்களில் கூட்டணி அரசை ஏற்படுத்தியது.

முகமது அலி சின்னா, காங்கிரசு தம்மை ஏமாற்றி விட்டதாகவும், ஏதேச்சாதிகார முறையில் செயற்படுவதாகவும் கூறிக் கொதிப்படைந்தார். 'காங்கிரசு கட்சி இந்துக்களின் கட்சி' எனவும், 'அவர்கள் ஆட்சியில் இசுலாம் அழிந்துவிடும்' எனவும் கூறினார். இதுவே, இந்து இசுலாமியர்களிடையே வேற்றுமையை வளர்த்து, முடிவில் இந்தியா இருநாடுகளாகப் பிரிக்கப்படக் காரணமாக இருந்தது.

முகமது அலி சின்னாவின் தலைமையில் இக்கட்சி இசுலாமியர்களுக்காக இசுலாமியர்களால் ஆளப்படுகின்ற தனிநாடு வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்துப் போராடத் தொடங்கிற்று. இனச் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டுமானால் இந்தியாவைப் பிரிவினை செய்வதே சிறந்தது என மவுண்டு பாட்டன் முடிவு செய்தார். அவர் திட்டப்படி இந்தியா, பாகிசுத்தான் இந்தியா என இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஆ.ஜெ.

**முசோலினி, பெனிட்டோ:** இவர் இத்தாலி நாட்டில் 1922-ஆம் ஆண்டு முதல் 1943-ஆம் ஆண்டு வரை பாசிச வல்லாட்சியை நடத்தியவராவார். இவர் கி.பி. 1883 - இல் இத்தாலியில் போர்லி (Forli) என்னும் மாகாணத்தில், தோவியா டி பிரெடாப்பியா (Dovia di Predaphio) என்னும் சிற்றூரில் ஒரு கொல்லர் குடும்பத்தில் பிறந்தார். இவர் இளமையில் ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியராகச் சில காலம் பணி செய்தபின், 1902 - இல் ஆசிரியப் பணியை விடுத்து, சுவிட்சர்லாந்து நாட்டிற்குச் சென்றார். அங்கு இவர் சில புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டதால் அந்நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார். பின்னர், இவர் ஆசுத்திரிய நாட்டில் இடிரென்ட்டினோவில் 1908-1909 - ஆம் ஆண்டுகளில் தங்கி இருந்தபோது, இத்தாலிய மக்களிடையே நாட்டுப் பற்று உணர்வு குறைந்து வருவதை எண்ணி, அதை வலுவாக வேரூன்றுமாறு செய்தல் வேண்டுமென்று உறுதி கொண்டார். அரசு என்பது வல்லந்தம் (Force) என்ற ஒரே காரணியால்தான் இயக்கப்படுகிறது என்னும் கருத்தினை இவர் நீட்சே (Nietzsche), சோரல் (Sorel) முதலியோரின் நூல்களிலிருந்து தெரிந்து கொண்டார். அதுவே, இவர் பிற்காலத்தில் பாசிச வல்லாட்சிக் கட்சியை உருவாக்க உதவிற்று. இவர் சமநிலைக் கருத்துகளை (Socialism) ஏற்றார். அக்கருத்துகளை இவர் 'அவந்தி' (Avanti) என்னும் ஓர் ஏட்டின் வாயிலாக வெளியிட்டார். அப்பொழுது நடைபெற்ற முதல் உலகப் போரில் (1914-1918) இத்தாலி நேசநாடுகள் பக்கம் இறங்குதல் வேண்டுமென்று இவர் கூறித் தாமே போரில் சேர்ந்தார். அதில் காயமடைந்தார். சமநிலைக் கட்சியாளர் போரை எதிர்த்தமையால், அவர்கள் இவரைத் தம் கட்சியிலிருந்து நீக்கிவிட்டனர். இவரும் சமநிலைக் கொள்கையை விடுத்து, இத்தாலியின் அரசியலில் தாம் வெற்றியுடன் நுழைவதற்குரிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருப்பதை நன்கு எண்ணிப்பார்த்தார். இத்தாலிய மக்களிடையே பொதுவுடைமைப் புரட்சியாளரைப் பற்றிய அச்சம் பரவி இருந்ததையும், பொருளாதார நிலையை உறுதியாக அமைக்கும் திறமை இல்லாமல் இத்தாலிய நாடாளுமன்ற மக்களாட்சி அரசாங்கம் இயங்கியதையும் இவர் கண்டார். இவர் இத்தாலியரிடையே நாட்டுப்பற்றை வளர்க்கும் உரைகளை ஆற்றியும், வெளியீடுகளை



முசோலினி, பெனிட்டோ

வெளியிட்டும் வந்தார். இவர் 1919, மார்ச்சு 3-ஆம் நாள் மிலான் நகரத்தில் பாசிசக் கட்சியை அமைத்து, அதன் தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்காகப் படைக்கருவிகளை உடைய ஒரு கருஞ்சட்டைப் படையையும் (Black Shirts) அமைத்தார். அவர்களின் துணையால் இவர் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் செய்தோரையும், பொதுவுடைமையரையும், சமநிலையாளரையும் அடக்கவே, இவருக்குப் பொது மக்களுடைய ஆதரவு கிடைத்தது. இத்தாலி நாடாளுமன்றத் தேர்தலில் பாசிசக் கட்சியினர் 22 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாட்டில் 1922-இல் நடைபெற்ற ஒரு நீண்ட வேலை நிறுத்தத்தை இவர் உடைத்துவிடவே, இவருக்குப் பொதுமக்களுடைய ஆதரவு பெருகிற்று. அதை இவர் நன்கு பயன்படுத்திக் கொண்டு, போர்க்கருவிகளை ஏந்திய தம் கருஞ்சட்டைப் படையினரை 1922 அக்டோபர் 22-இல் நாட்டின் தலைநகரமாகிய உரோமுக்குள் நுழையும்படி விடுத்துத் தாம் மிலானில் தங்கினார். அரசர் மூன்றாம் விக்டர் இமானுவல் நாட்டில் உள்நாட்டுப் போர் உருவாவதைத் தடுக்கும் நோக்குடன் முசோலினியைத் தலைமை அமைச்சராக்கி, ஓர் அமைச்சரவையை அமைக்குமாறு செய்தார்.

**முசோலியின் பாசிச ஆட்சி**: இவர் 1923 – ஆம் ஆண்டில் கொண்டுவந்த புதிய தேர்தல் சட்டத்தின் விளைவாகப் பாசிசக் கட்சிக்கு நாடாளுமன்றத்தின் கீழ்ச்சபையில் (Chamber of Deputies) மூன்றில் இரு பங்குப்பெரும்பான்மை இடம் கிடைத்தது. இவரால் அமர்த்தப்பட்ட உறுப்பினர்களை உடைய பாசிசப் பெருங்குழுவினால் (Federal Grand Council) வரையப்பட்ட வேட்பாளர் பட்டியலை வாக்காளர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்களா, இல்லையா என்று மட்டும் கூறுமளவுக்கு 1928-இல் தேர்தல் உரிமை சுருங்கி விட்டது. அப்படி அமைக்கப்பட்ட கீழ்ச்சபையும் 1938-இல் ஒழிக்கப்பட்டது. தொழில் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும், பாசிசக் கழகத்தைச் சேர்ந்தவர்களையும் கொண்ட சட்டமன்றம் அமைக்கப்பட்டது. அதன் முன்வைக்கப் பட்ட கருத்துகளை ஆய்வு எதுவுமின்றி ஒப்புக் கொள்ளுதல் ஒன்றே அதன் வேலை ஆகும். பல ஆட்சித் துறைகளை இவரே தம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டார். இவரைத் தலைவர் என்று (Il duce) அழைத்தனர். இவருடைய வல்லாட்சியை எதிர்த்தோரனைவரும் மறைந்தியங்கு காவலராலும், கருஞ்சட்டைப் படையினராலும் ஒழிக்கப்பட்டனர்.

**முசோலியின் வீழ்ச்சியும், பாசிச வல்லாட்சி மறைதலும்**: முசோலினி ஆப்பிரிக்காவில் 1935-இல் எத்தியோப்பியா நாட்டைத் தாக்கிக் கைப்பற்றினார். அச் செயலை எதிர்த்த சருவதேச சங்கத்திலிருந்து இவர் தம் நாட்டை 1937 – இல் விலக்கினார். இவர் 1936 – இல் செருமானிய நாசிச வல்லாட்சியாளரான இட்லருடன் சேர்ந்துகொண்டு, இசுபெயின் நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப்போரில் தலையிட்டு, பிராங்கோ என்ற தளபதிக்கு உதவி செய்தார். பின்னர், இட்லருடன் 1939-இல் உரோம்-

பேர்லின் இராணுவ ஒப்பந்தத்தைச் (அச்சு ஒப்பந்தம்) செய்தார். அல்பேனியா என்ற சிறிய நாட்டை 1939-இல் கைப்பற்றினார். இரண்டாம் உலகப் போரில் 1940-இல் இட்லருடன் சேர்ந்து பிரான்சைத் தென்கிழக்கிலிருந்து தாக்கினார். ஆனால், வட ஆப்பிரிக்காவில் இவர் ஆட்சிபுரிந்த நாடுகளை எல்லாம் ஆங்கிலப் படைகள் தோற்கடித்து மீட்டு, தென் இத்தாலியில் இறங்கி, அந்நாட்டைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிவர, பாசிசப் பெருங்குழுவே இவரைப் பதவியிலிருந்து நீக்கிச் சிறையிலிட்டது. செருமானியர் இவரை விடுவித்துத் தம் ஆட்சியிலிருந்த வட இத்தாலிக்கு இவரைத் தம் பாதுகாப்பில் ஒரு பொம்மை ஆட்சியாளராக ஆக்கினர். ஆனால், 1948 ஏப்பிரலில் செருமனி வீழவும், முசோலினி மாறுவேடத்தில் சுவிட்சர்லாந்துக்குத் தப்பிஓட முயலுகையில், எதிர்க்கட்சியினரால் கைப்பற்றப்பட்டு, இவரும், இவருடைய மனைவி கிளாரா பெட்டாசியும் ஏப்பிரல் 28-இல் சுட்டுக் கொல்லப்பட்டனர். மிலான் நகரமக்கள் இவருடம்பைச் சின்னாபின்னமாக்கினர். இவருடம்பை எவரும் கைப்பற்றாதபடி இத்தாலிய அரசாங்கம் ஒதுக்கிவைத்தது. முசோலினி தம் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். பா.சு.

*முட்டை உற்பத்தி*: வளர்ந்துவரும் நாடுகளில் கடந்த 25 ஆண்டுகளாகக் கோழி இறைச்சி முட்டை ஆகியவற்றின் உற்பத்தி பிற கால்நடை உணவுப் பொருட்களின் உற்பத்தியைக் காட்டிலும் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. ஐக்கிய நாடுகள் (United Nations Organisation) அமைப்பின் உணவு உற்பத்திக் கழகத்தினுடைய (FAO) கணக்கீட்டின்படி வளர்ந்து வரும்நாடுகளில் கால்நடைத் துறையில் ஆட்டிறைச்சி, பால் ஆகியவற்றின் உற்பத்தி 3 விழுக்காடாக உள்ள போது, கோழி இறைச்சி முட்டை ஆகியவற்றின் உற்பத்தி முறையே 8.5, 6 விழுக்காடாக வளர்ச்சியடைந்துள்ளது என்பது அறியப்படுகிறது. இந்த மிகுந்த வளர்ச்சியானது, உணவு உற்பத்தியில் வளர்ந்து வரும் நாடுகளின் தொழில்நுட்ப அறிவையும் முட்டை உற்பத்தியாளர்களிடையே காணப்படும் உற்பத்தி நாட்டத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

**சமுதாய வளர்ச்சியில் முட்டை உற்பத்தியின் பங்கு:** சமுதாய வளர்ச்சியில் முட்டை உற்பத்தி பெரும் பங்கு பெறுகிறது. கிராமப்புற மக்களுக்கு ஆண்டு தோறும் நிலையான வருமானம் கிடைக்க வகைசெய்கிறது. மேலும், நிலத்திற்கேற்ற உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், இத்தொழிலுக்கு ஆகக்கூடிய மூலதனச் செலவு குறைவாக இருப்பதால் எந்தச் சூழ்நிலையிலும் இத்தொழிலைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கிறது. அத்துடன், நுகர்வோருக்கு (Consumers) இது ஒரு நல்ல சத்துணவாகவும் கருதப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு மனிதனுக்குத் தேவையான முக்கியமான சத்துவகைகளான விட்டமின்கள் (Vitamins), சுண்ணகம் (Calcium), புரதங்கள் ஆகியவை போதுமான அளவில் கிடைக்கின்றன. அதாவது, சராசரி மனிதனுக்குத் தேவையான புரதச் சத்தில் பதினொன்றில் ஒரு பங்கு முட்டையில் கிடைக்கிறது. ஒரு மனிதன் தன் அன்றாட உணவில் இரு முட்டைகளைச் சேர்த்து வந்தால் கீழ்க்காணும் அளவில் அவனுக்குச் சத்துணவுகள் கிடைக்கும் என்பது தெரிகிறது.

**அட்டவணை:1 இரு முட்டைகளில் கிடைக்கும் சராசரிச் சத்துணவுகளின் அளவு:**

| சத்துணவுகள் (Nutrients) | அங்கங்கள் (Composition) |
|---|---|
| புரதம் (Protein) | 13 கிராம் |
| வெப்ப ஆற்றல் (Calories) | 167 க (ca) |
| சுண்ணகம் (Calcium) | 51 மை.கி. |
| எரியம் (Phosphorus) | 232 மை.கி. |
| இரும்பு | 2.6 மி.கி. |
| வைட்டமின் A | 1030 ஐ.யு. (I.U.) |
| வைட்டமின் D | 100 ஐ.யு (I.U.) |
| வைட்டமின் B | .16 மை.கி. |
| வைட்டமின் B 12 | .30 மை.கி. |

**இந்தியாவில் முட்டை உற்பத்தி**: வேளாண்மைத் துறையில் பசுமைப்புரட்சி (Green Revolution), காணும் இந்தியா, வேளாண்மைத் துறையின் முக்கியமானதொரு உறுப்பாகக் கருதப்படும் கோழிவளர்ப்பு, முட்டை உற்பத்தித் துறையில் கடந்த 25 ஆண்டுகளாக நல்லதொரு முன்னேற்றத்தைப் பெற்றிருக்கின்றது. அதாவது, 1961 – ஆம் ஆண்டில் எண்ணிக்கையில் 35 மிலியன் கோழிகளைக் கொண்டிருந்த இந்தியா 1985-ஆம் ஆண்டு இறுதியில் 82 மிலியன் கோழிகளைக் கொண்டிருப்பது மேற்கூறிய கூற்றிற்குச் சான்றாக அமைகிறது. கடந்த 25 ஆண்டுகளில் (1961-1985) கோழி வளர்ப்புத் துறையில் இந்தியா கண்டுள்ள முன்னேற்றத்தைக் பின்வரும். அட்டவணை வாயிலாக அறியலாம். (பக் 908)

மேலும், 1961–ஆம் ஆண்டுக் கணக்கீடுகளின்படி 2,340 மிலியன் முட்டைகள் உற்பத்தியைக் கொண்டிருந்த இந்தியா 1985-ஆம் ஆண்டு இறுதிக் கணக்கீட்டின்படி 14,100 மிலியன் முட்டைகள் உற்பத்தியைக் கொண்டு உலக அரங்கில் 5 – ஆம் இடத்தைப் (1985–ஆம் ஆண்டுக் கணக்குப்படி) பெற்றிருக்கிறது. உலக அளவில் முட்டை உற்பத்தி செய்யப்படும் நாடு

அட்டவணை:2

| முட்டையிடும் கோழிகளின் அளவும் முட்டை உற்பத்தியும் (1961–1986) (மிலியன்களில்) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முட்டையிடும் கோழிகள் (Layers) | | | | முட்டைகளின் எண்ணிக்கை | | |
| வருடம் | நாட்டு இனம் | உயர்* தரம் | மொத்தம் | நாட்டு இனம் | உயர் தரம் | மொத்தம் |
| 1961 | 33 | 2 | 35 | 1980 | 360 | 2340 |
| 1966 | 35 | 4 | 39 | 2100 | 720 | 2820 |
| 1971 | 35 | 18 | 53 | 2100 | 3240 | 5340 |
| 1974 | 42 | 29 | 71 | 2520 | 5220 | 7940 |
| 1980 | 30 | 56 | 86 | 1800 | 10700 | 12500 |
| 1983 | 25 | 58 | 83 | 1500 | 11460 | 12960 |
| 1985 கணக்கீடு | 20 | 62 | 82 | 1200 | 12900 | 14100 |
| 1986 கணிப்பு | 20 | 67 | 87 | 1200 | 14025 | 15225 |
| 1990 கணிப்பு | 15 | 88 | 103 | 900 | 13225 | 19125 |

*ஒட்டு இனம் சேர்ந்தது.

களும அந்நாடுகளின் முட்டை உற்பத்தி பற்றிய பட்டியலும் முறையே அட்டவணை 3,2 ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை: 3

| முட்டை உற்பத்தி செய்யும் நாடுகள் (தரம்வாரியாக) 1984 | | |
|---|---|---|
| வ.எண் | நாடுகள் | முட்டை உற்பத்தி (ஆயிரம் கண்டிகள்) |
| 1. | உருசியா | 4242 |
| 2. | அமெரிக்கா | 4035 |
| 3. | சீனா | 3643 |
| 4. | சப்பான் | 2117 |
| 5. | பிரான்சு | 890 |
| 6. | இந்தியா | 820 |
| 7. | பிரேசில் | 810 |
| 8. | செருமன்/ஐக்கியக் குடியரசு | 780 |
| 9. | மெக்சிகோ | 729 |
| 10. | இங்கிலாந்து | 710 |

மேற்கண்ட அட்டவணையின்படி (1984 – ஆம் ஆண்டுக் கணக்கீடு) முட்டை உற்பத்தியில் உருசியா முதலிடத்தையும் அமெரிக்கா இரண்டாம் இடத்தையும் பெறுகின்றன. இந்தியா 820 ஆயிரம் கண்டி எடையுள்ள முட்டைகளை உற்பத்தி செய்து உலக அரங்கில் ஆறாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

நாட்டிலுள்ள மொத்தக் கோழிகளின் (நாட்டு இனம் மற்றும் உயர்தரக் கோழிகள்) எண்ணிக்கையில் ஆந்திரப்பிரதேசம் (15.43 விழுக்காடு) முதலிடத்தையும், மேற்கு வங்காளம் (14.43 விழுக்காடு), மகாராட்டிரம் (9.16 விழுக்காடு), தமிழ்நாடு (8.9 விழுக்காடு) ஆகிய மாநிலங்கள் முறையே இரண்டாம், மூன்றாம், நான்காம் இடத்தையும் பெறுகின்றன. இந்திய நாட்டில் கறிக்கோழிகளின் உற்பத்தி (Broiler Production) அயல்நாடுகளோடு ஒப்பிடு செய்யும் அளவில் இல்லையெனினும், கடந்த சில ஆண்டுகளில் மனநிறைவளிக்கும் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. அதாவது, 1971-ஆம் ஆண்டில் 4 மிலியன்களாக இருந்த கறிக்கோழிகளின் எண்ணிக்கை 1985-ஆம் ஆண்டு இறுதியில் 75 மிலியன்களாக உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முட்டை உற்பத்தியானது 1961 - ஆம் ஆண்டில் 2,340 மிலியன்களாக இருந்தது. மேலும், 1983-ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி 12,960 மிலியன்களாக

இருந்த முட்டை உற்பத்தி 1985 இறுதியில் 14,100 மிலியன்களாக உயர்ந்துள்ளது. அதாவது, கடந்த இரண்டு ஆண்டுகளில் (1983 - 85) மட்டும் இந்தியாவில் முட்டை உற்பத்தி 20 விழுக்காடு மிகுந்துள்ளது. அத்தகையதொரு முன்னேற்றம் இந்தியாவில் முட்டை உற்பத்தியாளர்களிடையே காணப்படும் ஊக்கத்தையும், முட்டை உண்பவர்களிடையே காணப்படும் நுகர்ச்சி நாட்டத்தையும் காட்டுகிறது. இந்தியாவில் ஓர் ஆண்டில் தனி ஆள் முட்டை நுகர்ச்சியின் எண்ணிக்கை (Percapita Consumption of Eggs) 5.3 (1961-ஆம் ஆண்டுக் கணக்கீடு)-இலிருந்து 19.3-ஆக (1985-ஆம் ஆண்டுக் கணக்கீடு) உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அரசுக்கணக்கீட்டின்படி கோழிஇறைச்சி, முட்டை உற்பத்தியின் மதிப்பானது உரூ.650 மிலியன்களில் (1961-ஆம் ஆண்டு மதிப்பீடு) இருந்து உரூ. 10,000 மிலியன்களாக (1985-ஆம் ஆண்டு மதிப்பீடு) உயர்ந்திருக்கிறது. கடந்த பல ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் கோழி வளர்ச்சிக்காக அரசு செலவிட்ட தொகையானது உரூ. 28 மிலியன்களிலிருந்து (1956-57,1960-61) உரூ. 426 மிலியன்களாக(1980-81, 1984-85) உயர்ந்திருப்பது அரசு, இத்துறையில் கொண்டுள்ள நாட்டத்தை உறுதிப்படுத்தியது.

**தமிழ்நாட்டில் முட்டை உற்பத்தி**: வேலைவாய்ப்பு, வருமானப் பெருக்கம், வறுமை ஒழிப்பு ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் கோழிவளர்ப்புத் துறையின் வளர்ச்சியில் பெரும் நாட்டத்தைக் காட்டி வருகிறது. கடந்த 25 ஆண்டுகளில், முன் ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களால் சிறிய அளவில் கோழிகள் அவரவர்தம் வீட்டிலேயே (Backyard Farms) வளர்க்கப்பட்டு வந்த நிலை மாறி, இன்று பெருமளவில் (Large Scale) கோழிகளின் எண்ணிக்கையைக் கொண்டு உயர்ந்த தொழில்நுட்ப வளர்ச்சி (Modernized) பெற்றுக் காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் 1977-இல் 14.347 மிலியனாக இருந்த கோழிகளின் எண்ணிக்கை 1982-ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி 18.233 மிலியனாக உயர்ந்து இந்தியாவில் 4-ஆம் இடத்தைப் பெற்றிருந்தது. தமிழ்நாடு 1979-80-ஆம் ஆண்டுகளில் 950 மிலியன் முட்டைகளை உற்பத்தி செய்து இந்தியாவில் ஐந்தாம் இடத்தைப் பெற்றிருந்தது. பின்னர் 1985-ஆம் ஆண்டில் 1062 மிலியன் முட்டைகளை உற்பத்தி செய்து அதே இடத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது. சேலம், பெரியார், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் கோழி வளர்ப்புப் பெருமளவில் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் 1984-ஆம் ஆண்டில் இருந்த மொத்தக் கோழிகள் எண்ணிக்கையில் (18. 79 மிலியன்) சேலம் மாவட்டம் 4.6 மிலியன் கோழிகளைக் கொண்டு முதலிடத்தையும், 1.56 மிலியன் கோழிகளைக் கொண்டு மதுரை மாவட்டம் இரண்டாம் இடத்தையும் பெறுகின்றன. மேலும், பல இனக் கோழிகள் இங்கு வளர்க்கப்பட்டு வந்தாலும் 'பாப்காக்' வெள்ளைநிறக் கோழிகளே (Babcock White Leghorn) அதிக அளவில் காணப்படுகின்றன. நோய் தடுப்புத் திறன், குறுகிய காலத்தில் பருவமடைதல், அதிக முட்டை உற்பத்தி ஆகியவையே இதற்கு முதன்மைக் காரணமாகச் சொல்லப்படுகின்றன.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், (TAPCO) தமிழ்நாடு கால்நடைப்பராமரிப்புத் துறை ஆகிய இரு நிறுவனங்களும் கோழி வளர்ப்புப் பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றன. பராமரிப்புப் பணிகள் யாவும் தமிழ்நாடு கால்நடைப்பராமரிப்புத் துறையின் மேற்பார்வையிலும்.கோழி உற்பத்தி, விற்பனை (Production and Sale) ஆகியவை தமிழ்நாடு கோழி உற்பத்தி நிறுவனத்தின் மேற்பார்வையிலும் நடைபெற்று வருகின்றன. மேலும், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மேற்பார்வையில் 4,182 கோழிப் பண்ணைகள் (100 கோழிகள் கொண்டது ஒரு பண்ணை) செயற்பட்டு வருகின்றன. மேலும்,38 பயிற்சி நிறுவனங்கள் (Extension Centres), 3 குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் (Hatcheries), 2 கோழித் தீவன உற்பத்தி நிறுவனங்கள் (Feed Mixing Plants), 2 கோழி வளர்ப்பு நிறுவனங்கள், 9 மாதிரிக் கோழி வளர்ப்பு நிலையங்கள் (Intensive Poultry Development Blocks) ஆகியன தமிழ்நாடு கோழி வளர்ப்புத் துறையின் நேரடிப் பராமரிப்பில் இருந்து வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டில் நந்தனம் (சென்னை), கொட்டப்பட்டு (திருச்சிராப்பள்ளி), கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்), திருப்பூர் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்புத் துறை நிறுவனங்கள் பல அரசு, தனியார் கோழிப் பண்ணைகளுக்குத் தீவனம் அளித்து வருகின்றன. அந்த அனைத்து நிறுவனங்களும் சேர்ந்து 1975 – 76 – ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி 4946.6 கண்டி எடையுள்ள தீவனத்தை உற்பத்தி செய்திருக்கின்றன. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனங்கள் 1975-76-ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி 1,66,02,848 முட்டைகளையும், 28,559 கிலோ எடையுள்ள கோழி இறைச்சியையும் விற்பனை செய்துள்ளன. அவற்றைத் தவிர தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் கோழி வளப்புத்

துறையில் பல பணிகளை, குறிப்பாக நோய் தடுப் புப் பணிகளைச் செய்து தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைகளின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றி வருகிறது. ஆ.இரா.

**துணை நூல்கள்:**


Indian Poultry Industry, Year Book, New Delhi, 1986.

Werner Thomann: Poultry Keeping in Tropical Areas, FAO, Rome, 1968.


**முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்:** இவர் அகநானூற்றின் 30–ஆம் பாடலை இயற்றியவர்; சங்க காலத்தைச் சேர்ந்தவர். சேரர் மரபினர் என்பதைச் சேரலாதன் என்னும் பெயரால் அறிய லாம். 'முடங்கிக் கிடந்த' என்னும் அடைமொழி கொண்டு இவர் முடவனாயிருந்தார் என்பர். அடிக் கடி முடக்கிப் படுத்துக் கிடக்கும் இயல்பு கருதியும் இவர் அவ்வாறு கூறப்பட்டிருக்கலாம். இவர், பாடியதாக, சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு பாடல் மட்டுமே காணப்படுகிறது. அதனை நெய்தல் திணை யில் தோழி கூற்றாக இவர் பாடியுள்ளார். 'பகற் குறியில் தலைமகனுக்குத் தோழி சொல்லியது' என்னும் துறையில் இவர் பாடல் அமைந்துள்ளது. தோழி பகற்குறி வந்த தலைவனிடம், தாங்கள் காத் திருந்தும் தலைவன் வரவில்லை என்று அவனைப் பொய்யாய்க் குற்றம் சாட்டுகிறாள். அவன் வாராது போயின் தலைவியின் அழகு கெடும் என்று முன்னறி விப்புச்செய்து வேறு இடம் கூறி அவனை வருமாறு கேட்கிறாள். நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் இவர் பாடலை மேற்கோளாகக் காட்டி யுள்ளார். உள்ளுறைப் பொருளமைய இவர் பாடி யுள்ள திறம் இவர் புலமையை வெளிப்படுத்துகிறது.

'பரதவர்கள் தம் மக்களோடும், மனைவிய ரோடும் உப்பு வணிகர்களின் வண்டிகளில் பூட்டப் பெற்ற காளைகளைப் போலக் கூடி, கடல் போல் ஆரவாரம் செய்து வலைகளை வீசிப் பல்வேறு வகை யான மீன்களைப் பிடிப்பர். பின்னர், உழவர்கள் நெல்லைக் குவிப்பதைப் போல மீன்களைக் குவித்து இரவலர்களின் கலங்கள் நிறையும்படி வாரி வழங்கு வர். பின்னர், மீன்களைப் பல கூறுகளாகப் பிரித்து விலை கூறி விற்றதற்குப் பிறகு,கடற்கரையின் மணல் மேட்டில் கவலையின்றிப் படுத்துறங்குவதற்கு இட மாகிய கடற்கரைத் தலைவனே, ஒருநாள் புன்னை மரங்கள் அடர்ந்த கடற்கரைச் சோலைக்கு வந்து, எங்கள் அழகு என்ன ஆயிற்று என்று கேட்டுச் சென் றால் உன்பெருமை குறைந்து போகுமோ' எனத் தலைவனிடம் தோழி கேட்பதாக இவர் பாடலை அமைத்துள்ளார். பெரும் கடலுள் சிக்கிக் கிடக்கும் மீனைப் பரதவர் அங்கேயிருந்து பிடித்துத் துன்புறுத்தி, அனைவருக்கும் கூறுவைத்துப் பரப்பி, மீனின்உயிர் போக்கினோமே என்ற கவலையில்லாமல் கடற்கரை யில் உறங்கியதைப் போல, பெருங்குடியில் பிறந்த தலைவியை நீ உன் வசமாக்கி, அவள் உடல் வேறு பாட்டால் எல்லோரும் அவளைப் பற்றிப் பேசும்படி அலரை உண்டாக்கி, அவளை வருத்தி, நீ துன்பமின்றி உறங்குகிறாய் என உள்ளுறை அமைத்துக் கருத் தைக் குறிப்பாய்ப் புலப்படுத்தியுள்ள இவர் திறமை பாராட்டத் தக்கது. க.மு.

**முடத்தாமக் கண்ணியார்:** இவர் சங்கஇலக்கி யமாகிய பத்துப்பாட்டுள் இரண்டாவதாக அமைந்த, பொருநராற்றுப் படையைப் பாடியவர். இயற் பெயரோடு 'ஆர்' என்னும் இடைச்சொல் பன்மை யோடு முடிதல் பற்றிக் கூறும் தொல்காப்பிய நூற் பாவிற்குச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'முடத்தாமக் கண்ணியார் வந்தார்' என்று எடுத்துக் காட்டுவர். கண்ணி என்ற பெயர் கொண்டு இவரைப் பெண்பாலர் என்று கருதுதலும், முடம் என்ற சொற் கொண்டு இவர் உறுப்புக்குறை யுடையவர் என்று கூறுதலும் ஆராய்வதற்குரிய செய்திகளாகும். இவர் பாடியது பொருநராற்றுப்படை ஒன்றே.

தடாரிப்பறை கொட்டிப் போர்க்களம் பாடும் பொருநன் ஒருவன், தன்னெதிர் வந்தவனும், வறுமை வயப்பட்டவனுமாகிய பொருநன் ஒருவனையும் அவனுடைய சுற்றத்தாரையும் கரிகாற் பெருவளத் தானிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது பொருந ராற்றுப்படை. அப்பாட்டில் முடத்தாமக்கண்ணி யார் சில அரிய வரலாற்றுச் செய்திகளைக் கூறு கின்றார். கரிகாலனின் தந்தை இளஞ்சேட்சென்னி அழகுமிக்க பல தேரினையுடையவன். கரிகாலன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே அரசுரிமை பெற்றுப் பிறந்தவன். அவன் இளமையிலேயே சேர பாண்டியரை வெண்ணிப் பறந்தலையில் தாக்கி வெற்றி பெற்றவன். அச்செய்திகளை அந்நூல் வழங் கும். முடத்தாமக் கண்ணியார் அப்பாட்டில், பாலை யாழின் அமைதி, பாலைப்பண் ஆறலை கள்வர் மனத்தையும் மாற்றுதல், காவிரி சோழ நாட்டைப் புரக்கும் சிறப்பு ஆகியன குறித்துச் சிறப்புறப் பாடி யுள்ளார்.

முடத்தாமக் கண்ணியார், கருங்குளவாதனார், வெண்ணிக்குயத்தியார், கடியலூர் உருத்திரங்கண்ண னார் ஆகியோர் காலத்தவர். கு.வெ.பா

**முடத்திருமாறன்** சங்க காலத்துப் பாண்டிய வேந்தர்; பாடல் பாடும் வல்லமையுடையவர். இவர்

பாடியனவாக நற்றிணையில் பாலைத் திணையில் (நற்.105) ஒரு பாடலும், குறிஞ்சித் திணையில் (நற்.228) ஒரு பாடலுமாக இரு பாடல்கள் உள்ளன. இவர் இடைச் சங்கத்தின் இறுதியில் இருந்தவர் என்றும், கபாடபுரம் கடல் கொள்ளப்பட்டுத் தமிழ்ச் சங்கம் அழிந்த போது மதுரையில் கடைச் சங்கத்தை நிறுவியவர் என்றும் கூறுவர். அதனை இறையனார் களவியல் உரையாலும் சிலப்பதிகாரத்தின் அடியார்க்கு நல்லார் உரையாலும் அறியலாம். முட்டத் திருமாறன் என்ற பாட வேறுபாடு கொண்டு இவர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருமுட்டத்தைச் சேர்ந்தவர் என்பர். அது பொருந்தாது. உடல் உறுப்புகளின் அடிப்படையிலும், உடற் குறையின் அடிப்படையிலும் அரசர்களுக்கும் புலவர்களுக்கும் பெயரிடும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது. மாறன் என்பது பாண்டியர்களுக்கே உரிய பெயராகச் சங்க காலத்தில் வரையறையுடன் வழங்கி வந்துள்ளது. ஆகவே இவர் பெயர் முடத் திருமாறன் என்பதே பொருத்த முடையதாகும். நற்றிணை 105-ஆம் பாடலில் குட்டுவன் சேரலை இவர் குறிப்பிடுவது கொண்டு இவர் அவன் நண்பர் என்பர். அகப்பாடல் மட்டும் பாடியுள்ள இவர் இறைச்சி, உள்ளுறை ஆகியவற்றைப் பயன்படுத்தி நயமுறக் கருத்தை விளக்கும் ஆற்றலுள்ளவர்.

நற்றிணையில் பாலைத் திணையில் இவர் பாடிய பாடல் தலைவன் கூற்றாக அமைந்துள்ளது. பொருள் ஈட்டுவதற்காகக் காட்டு வழியே தலைவியைப் பிரிந்து செல்கிறான் தலைவன். வழியில் அவன் நெஞ்சம் பிரிவுத் துன்பத்திற்கு அஞ்சி மீண்டும் தலைவியிடம் செல்ல விரும்புகிறது. கடமையை முடிக்காமல் திரும்ப நினைக்கும் தன் நெஞ்சத்தினை இகழ்ந்து தலைவன் கூறுவதாகப் பாட்டின் கருத்து அமைந்துள்ளது. 'காய்ந்த கொடிகள் சுற்றி, முள் படர்ந்த இலவ மரத்தின் கிளைகள் நடுங்கும்படி கொடுங்காற்று மோதும் மூங்கில் புதர்கள் மிகுந்த இடத்தில், பெண் யானை நீரும் நிழலும் இல்லாமல் கன்றுடன் வருந்தும் கொடிய காடு என்பதைக் கருதாமல், நெஞ்சே, நீ நெடுந்தொலைவு வந்து விட்டாய். ஆனால் இப்போதோ குட்டுவன் சேரல் குடமலைச் சுனையிலுள்ள குவளை மலரைச் சூடும் கூந்தலையுடைய தலைவியைத் துன்பத்தில் வருந்த விட்டு வந்து விட்டோமே எனக் கவலைப்படுகிறாய். நெஞ்சே! இவ்வளவு நீண்ட தொலைவு வந்தபின் திரும்ப நினைப்பது மிகவும் வேடிக்கையாய் இருக்கிறது' என்பது இவர் பாடிய பாடலின் கருத்தாகும். இலவமரம் முறியுமாறு காற்று வீசும் என்றது, நினைத்ததைச் செயற்படுத்த விடாதபடி காமம் தலையெடுக்கும் என்றும், யானை கன்றோடு வருந்தும் நீரற்ற சுரம் என்றது தலைவன் நெஞ்சோடு சேர்ந்து வருந்தும் தன்மையையுடையது காடு என்றும் இறைச்சிப் பொருள் நயம் பெற அமைந்துள்ளது.

நற்றிணையில் குறிஞ்சித் திணையில் அமைந்த இவர் பாட்டு தோழி கூற்றாக அமைந்துள்ளது. தலைவியிடம் சொல்வதைப் போல வெளியில் இருந்த தலைவன் கேட்கும்படி தோழி கூறும் துறையில் இந்தப் பாட்டு அமைந்துள்ளது. 'வேட்டைக்காரனது முதுகு போன்ற கையை உடைய யானை அவன் வில்லிருந்து எய்யப்படும் அம்புக்கு அஞ்சி, பள்ளமான மலைப் பிளவுக்குள் சென்று பிளிரும் அருவிகள் வீழும் மலைநாட்டுத் தலைவன், மின்னல் மேகத்தைக் கிழிக்க இடியுடன் முழங்கும் மழை பெய்யும் இருள் செறிந்த நள்ளிரவில், நம்மைக் காக்க வருவானா வரமாட்டானா என்பது எனக்குத் தெரியவில்லை' என்று தோழி கூறுவதாக இவர் பாட்டு அமைந்துள்ளது. வேட்டுவன் அம்புக்கு அஞ்சி யானை மலைப் பிளவில் பிளிறும் என்றது, தலைவி அயலார் கூறும் பழிச் சொல்லுக்கு அஞ்சி வீட்டில் வருந்துவாள் என்னும் உள்ளுறைப் பொருள் குறித்து நின்றது. க.மு.

**முடிகொண்ட சோழபுரம்**: இது தமிழகத்தில் சோழ நாட்டில் கும்பகோணத்திற்குத் தென் மேற்கே ஏறத்தாழ 5 கி.மீ. தொலைவில், இப்போது 'பழையாறை' என்னும் பெயருடன் உள்ள சிற்றூர் ஆகும். அச்சிற்றூரும் அதனைச் சார்ந்த வேறு சில ஊர்களும் சேர்ந்தே பெரிய நகரமாக விளங்கின. இந்நகரம் சோழர்களின் தலைநகராமாக வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர்களுடன் இருந்தது. இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் 'பழையாறை' எனவும், கி.பி.8-ஆம் நூற்றாண்டில் 'நந்திபுரம்' எனவும், கி.பி.9,10 – ஆம் நூற்றாண்டுகளில் 'பழையாறை நந்திபுரம்' எனவும், கி.பி.11-ஆம் நூற்றாண்டில் 'முடிகொண்ட சோழபுரம்' எனவும் வழங்கப்பெற்றது என்பதைத் தமிழ்நூல்களும், கல்வெட்டுகளும் அறிவிக்கின்றன.

இவ்வூர், முதல் இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1044) காலத்தில் அவன் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகிய 'முடிகொண்ட சோழன்' என்ற பெயரால் இப்பெயர் பெற்றது. இந்நகரின் தென்பால் ஓடும் ஆறு அவனால் வெட்டப் பெற்று 'முடிகொண்ட சோழப் பேராறு' என்னும் பெயர் பெற்றிருக்கிறது. பெரியபுராணத்தில் 'பாரில் நீடிய பெருமை சேர் பதி பழையாறை' (அமர் நீதி புராணம்–1) எனக் குறிக்கப்படுகிறது. அக்காலத்தில் இந்நகரில் சோழ

மன்னர்களின் அரண்மனை இருந்த இடம் இப்போது சோழ மாளிகை' என்னும் ஊராக உள்ளது.

த.ரா.

**முடிகொண்ட சோழன்**: சோழ மன்னர்களுள் ஒருவரான முதலாம் இராசேந்திர சோழன் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தார். அவற்றுள் ஒன்று முடிகொண்ட சோழன் என்பதாகும். இவருடைய இயற்பெயர் மதுராந்தகன். முடிசூட்டும்பொழுது இராசேந்திரன் என்று பெயர் சூட்டப் பெற்றார். இவருடைய கல்வெட்டுகளும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இவர்தம் சிறப்புப்பெயர்களைத் தெரிவிக்கின்றன.

இராசராச சோழனின் மைந்தரான இவர் தம் தந்தைக்குப் பின் கி.பி.1012 முதல் கி.பி.1044 வரை சோழப்பேரரசை ஆட்சி செய்தார். தம்முடைய ஆட்சிக் காலத்தில் வடநாட்டு அரசர்களையும், சேர பாண்டிய மன்னர்களையும் வென்றதால் முடிகொண்ட சோழன் என்னும் சிறப்புப் பெயரைப்பெற்றிருக்கலாம்.

சோழ மன்னர்கள் முடிசூட்டும் நகராகவும்,அரச குடும்பத்தினர் தங்கும் பெருநகரமாகவும் விளங்கியது பழையாறை என்னும் நகரம். அது கும்பகோணத்திற்கு வடக்கே உள்ளது. இராசேந்திரன் காலத்தில் அந்நகரம் முடிகொண்ட சோழபுரம் என்றுகூறப்பட்டது. அந்நகருக்குத் தெற்கே இராசேந்திரனால் வெட்டப்பட்ட ஆறு முடிகொண்ட சோழப்பேராறு என்று கூறப்படுகிறது. அதிலிருந்து இவருக்கு முடிகொண்ட சோழன் என்னும் சிறப்புப் பெயர் இருந்தது தெளிவாகின்றது.

அ.சி.

**முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி**: இவன் சோழ மன்னன். சேரமான் அந்துவன் சேரல் இரும்பொறையோடு பகைமையுடையவன். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் இவனைப் பாடாண் திணையில் வாழ்த்தியல் துறையில் பாடியுள்ள பாடல் புறநானூறு 13-ஆம் பாடலாக உள்ளது. இவனைப் பற்றி அப்பாடற் செய்தி தவிர வேறு எக்குறிப்பும் தெரியவில்லை. இச்சோழன் கருவூரை முற்றியிருந்தான் ஒருநாள் கருவூரை நோக்கி இவன் செல்கையில் இவன் ஏறியிருந்த களிறு மதம்பட்டது. அப்போது முடமோசியார் என்னும் புலவர் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையோடு அரசமாளிகையாகிய வேண்மாடத்து இருந்தார். அந்நிலையில் புலவர் சேரனுக்குப் பெருநற்கிள்ளியை அறிமுகப்படுத்துவது போல இப்பாடலைப் பாடியுள்ளார். 'இச்சோழன் வயலிடத்துள்ள மயில் உகுத்த பீலியை உழவர் நெற்சூட்டோடு தொகுக்கும் கொழுமீனையும் விளைந்த கள்ளையும் உடைய நீராகிய வேலியையுடைய நாட்டுக்குரியவன். இவன் புலித்தோலாற் செய்த கவசம் சிதைய அம்புகிழித்த மார்பினன். இவன் கூற்றம் போன்ற களிற்றின் மேலுள்ளான். அக்களிறு கடலைக் கிழித்துச் செல்லும் நாவாய் போலவும், பலமீன்கள் நடுவேயுள்ள திங்கள் போலவும் வாள்மறவர் சூழப் பாகரையறியாமல் மதம் பட்டது. ஆதலின், இச்சோழன் நோயின்றி மீள்வானாக' என்பது அவர்தம் பாடற் கருத்தாகும். இம் மன்னனைப் பற்றிப் பாடியவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ஒருவரேயாவர்.

இரா.சா.

**முடியாட்சி**: சட்ட வரம்புகள் எதற்கும் உட்படாமல் நடைபெறும் ஒற்றை ஆளின் ஆட்சியே முடியாட்சி அல்லது மன்னராட்சி எனப்படும். எச்செயலையும் தன் விருப்பத்துக்கேற்பவே செய்கின்ற ஒற்றை ஆளின் ஆட்சியே முடியாட்சி (Monarchy) என்று அரிசுடாட்டில் கூறுகிறார். மேலும், அவர் ஆட்சி வகைகளைத் தூயவகை, சிதைந்த வகை என இரண்டாகப் பாகுபாடு செய்யும்போது, சமூக மக்களின் நலத்தின் பொருட்டு ஆளும் ஒற்றை ஆளின் ஆட்சியைத் தூயவகையாகக் குறிப்பிடுகிறார். அவருடைய ஆசிரியராகிய பிளேட்டோ, சமூகத்தில் அமைதியும், நீதியும் நிலைபெறுதல் வேண்டுமாயின் அரசர்கள் நல்லறிவுடையோராதல் (தத்துவஞானிகளாதல்) வேண்டுமென்று கூறினார். முடியாட்சியிலே அரசின் தலைவர் என்ற முறையில் அரசரே தலைமை அதிகாரத்தை உடைய ஓர் உறுப்பாகவும் அதன் ஒற்றைப் பேராளராகவும் கருதப்படுகிறார். அவரிடத்தில் நாட்டின் உயரிய மதிப்பும். அதிகாரமும் இணைந்துள்ளன. அவ்வாறு அரசரே நாட்டின் இறைமை அதிகாரத்தையும், மதிப்பையும் ஆள்வடிவத்தில் வெளிப்படுத்துகிறார்.

**முடியாட்சியின் வரலாறு**: மனித சமூக வரலாற்றின் தொடக்கமே முடியாட்சியில் காணப்படுகிறது. பரம்பரையானமுடியாட்சியில்(Heriditary Monarchy) தகப்பனுக்குப்பின் மகன் அரசராதல் என்ற விதி பின்பற்றப்பட்டது; அதில் அரசர்களுக்குக் கல்விப் பயிற்சியும் போர்ப் பயிற்சியும் அளிக்கப்படுதல் வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. ஒரு சில சமூகங்களில் எடுத்துக்காட்டாக, பண்டைய இந்திய அரசுகள் சிலவற்றிலும், பண்டைய உரோம் நகரரசிலும் போலந்து நாட்டில் அண்மைக் காலம் வரையிலும் அரசர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முடியாட்சி எல்லா நாடுகளிலும் அண்மைக் காலம் வரை நீடித்திருந்தது. ஆங்கிலேய நாட்டில் ஆங்கிலேயர்கள் தன் விருப்பதிகார முடியாட்சியை கி.பி.17-ஆம் நூற்றாண்டிலிருந்தே எதிர்த்து, சிறிது சிறிதாக மாற்றிப் பாராளுமன்ற மக்களாட்சி முறையை நிறுவியுள்ள

படியால் அங்கு முடியாட்சி எதேச்சாதிகார வடிவத்திலில்லாமல் (Absolute Monarchy)அரசியலமைப்புக்கு உட்பட்ட சட்டங்களுக்குக் கட்டுப்பட்ட முடியாட்சியாக (Constitutional Monarchy) நீடித்திருக்கிறது. பிரான்சில் அரசியலமைப்புச் சட்டம் எதற்கும் கட்டுப்படாமல் தன்விருப்பதிகார முடியாட்சி நடைபெற்றதால், கி.பி.1789-இல் தோன்றிய வல்லந்தமான பிரான்சுப் புரட்சி முடியாட்சியை ஒழித்துவிட்டது. இன்று ஒரு சில நாடுகளில் தவிர முடியாட்சி காணப்படவில்லை. அவற்றிலும் அது அரசியலமைப்புக்குட்பட்ட வடிவத்திலேயே இருக்கிறது. நாடுகள் பெரும்பாலும் குடியரசுகளாகவே (Republics) இருக்கின்றன.

**நிறைகள்:** முடியாட்சியில் நாட்டின் தலைமை அரசியலதிகாரம் ஒரே ஆளிடத்திலிருப்பதால், அவரால் சமூகத்தில் உள்ள பல்வேறு நோக்கங்களை உடையவர்களை எல்லாம் மாறுபாடின்றி இணைக்கவும், சமூகத்தில் ஒற்றுமையையும், ஒழுங்கையும்,ஏற்படுத்தவும் இயலும். பிரசிய நாட்டின் (Prussia)அறிவுமிக்க மாமன்னர் இரண்டாம் பிரடரிக்கு, நாட்டின் நிதி, ஆட்சிக் கொள்கை, படை முதலியவற்றை மாறுபாடின்றி இணைத்தற்குத் தலைமை அதிகாரம் ஒரே ஆளிடத்தில் இருப்பதுதான் உகந்தது என்று கி.பி. 1752 – இல் கூறினார். ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் தகப்பனுக்குக் கீழ்ப்படிதலென்பது இயல்பாக இருத்தலைப் போல, ஒரு சமூகத்திலும் குடிமக்கள் அரசருக்குக் கீழ்ப்படிதலென்பது இயல்பான வழக்கமாகும் என்று பிரான்சிசு பேக்கன் (Francis Bacon) என்பவரும் இராபர்ட்டு பில்மர்(Robert Filmer)என்பவரும் கூறுகின்றனர். மக்களாட்சி முறையை முடியாட்சியோடு இணைத்தலியலுமாயின், முடியாட்சியை ஒழித்தல் வேண்டுவதில்லை என்று எட்மண்டு பர்க்கு கூறுகிறார். நெருக்கடியான சூழ்நிலைகளில் திறமையாக விரைந்து செயற்படுதற்கு ஓராளால்தான் இயலுமென்று போடின் (Bodin)என்பவர் கூறுகிறார். சீலி என்ற ஆசிரியர் (Seeley), பெரிய நாட்டில் வலிமிக்க சிறுபான்மையர் மற்றொரு சாராரைத் துன்புறுத்தாமல் தடுத்தற்கு முடியாட்சியே சிறந்ததென்று உருசிய சார் (Tsar) அரசரின் ஆட்சியைச் சுட்டிக் காட்டிக் கூறுகிறார். சுயாட்சியில் பயிற்சி இல்லாதோருக்கும், நாகரிக வளர்ச்சி பெறாதோருக்கும். முடியாட்சியே சிறந்ததென்று கார்னர் என்ற ஆசிரியர் (Garner) கூறுகிறார்.

மக்களின் நலன்பேணும் நோக்கமும், தகுதியும், உழைப்புமுடைய மன்னராட்சியில் நன்மை விளையுமென்றாலும், இப்பண்புகளெல்லாம் பரம்பரையாக வருபவை அல்ல. ஆகையால் தன்னலமிக்க கொடுங்கோல் அரசர்களுடைய ஆட்சியில் மக்கள் துன்புறுகின்றனரென்பதை வரலாறு காட்டுகிறது.தீய அரசர்கள் தமக்குத் தாமே அழிவைத் தேடினர். மேலும், முடியாட்சியில் பெறக் கூடிய நன்மைகளையெல்லாம் குடியரசு மக்களாட்சியிலும்(Republican Democracy) பெறுதல் கூடுமென்று இக்கால வரலாறு காட்டுகிறது.

பா.சு.

**துணை நூல்கள்:**

**Bluntschli**, J.K., The Theory of the State, Oxford, 1921.

**Garner**, J.W., Introduction to Political Science, American Book Company, 1910.

*முடியேற்று*: 'முடியேற்று' என்பது 'முடி அணிதல்' என்று பொருள்படும். கேரளத்திலுள்ள திருவாங்கூர், கொச்சி மாவட்டங்களில் அமைந்துள்ள பத்திரகாளி கோயில்களில் முடியேற்று நிகழ்ச்சி நடத்தப் படுகிறது. சடங்குகளுடன் கூடிய மரபுக்கலை வடிவமாக இதனைக் குருப்பு, மாரார் என்னும் இனத்தைச் சார்ந்தவர்கள் நடத்துகின்றனர்.

பத்திரகாளிக்கும் தாருகாசுரனுக்கும் நடைபெறும் சண்டையின் இறுதியில் பத்திரகாளி வெற்றி பெறுவதை மையக்கருத்தாகக் கொண்டுள்ளது இந்நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியை நடத்துவதற்கு நடிகர்கள், கலைஞர்கள் ஆகிய இருவகையினரையும் சேர்த்து 16 மக்கள் தேவைப்படுகின்றனர். இக் கலை நிகழ்ச்சியில் ஆண்கள் மட்டுமே பங்கு பெறுகின்றனர். இக்கலை நிகழ்ச்சியின் தொடக்கமாகக் களம் எழுதுவதும் தெய்வத்திருவுருவிற்குப் பூசை செய்வதும் பின்பு எழுதிய களத்தினை அழித்தலுமாகிய சடங்குகள் நடைபெறுகின்றன.

நிலத்தில் எழுதப்பட்ட காளி உருவத்திற்கு வழிபாடுகள் நடத்துகிறார்கள். அவ்வழிபாட்டில் காளிக்கு, நிலை விளக்கு (குத்து விளக்கு) ஏற்றி, நெல், அரிசி, தேங்காய் போன்ற பொருட்களை வைத்துச் சடங்குகள் செய்யப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியைப் பின்வரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்: 1) நிகழ்ச்சி நடத்தப்படும் களத்திற்கான சடங்குகள், 2) சிவன் – நாரதர் புறப்பாடு, 3) தாருக அரக்கனின் புறப்பாடு, 4) காளியின் புறப்பாடு, 5) கோயம்படி நாயரின் புறப்பாடு, 6) எல்லாப் பாத்திரங்களும் சேர்ந்து ஆடுதல்.

முதற் காட்சியில் சிவனும் நாரதரும் தோன்றுவர். அசுரர் அரசனான தாருகன் இழைக்கும் கொடுமைகளைப் பற்றிச் சிவபெருமானிடத்தில் நாரதர் முறையிட்டு அவனை அழிப்பது ஒரு பெண்ணால் மட்டுமே

முடியுமென்று சொல்லுவார். அந்த அரக்கச் செயல்களை வேரோடு களைவதற்கான எல்லாவகையான உதவிகளையும் தாம் அளிப்பதாகச் சிவபெருமான் உறுதி செய்வார். அடுத்த நிலையில் மேடையில் தாருகன் புறப்படுவான். தாருகன், அவன் உடன் பிறந்தான் ஆகிய அரக்கர் வேடங்களில் நடிப்பவர் இருவர் கொடுமையை வெளிப்படுத்தும் செயல்கள் செய்து நடித்துக் காட்டுவார்கள். அடுத்த கட்டத்தில் மேடையில் காளி தோன்றுவாள். தொடக்க நடனம் முடிந்த பிறகு தாருகாசுரனைப் போருக்கு அழைத்து அறை கூவல் விடுவாள். அந்தக் காட்சியில் தாருகன் மேடைக்கு வர மாட்டான். அவன் அரண்மனையிலேயே இருப்பதாகவும், காளி கொத்தளங்களுக்கு வெளிப்புறத்தில் நின்று கொண்டு, அவனைச் சீவந்துவப் போருக்கு (இருவருக்குமிடையே நடக்கும் போர்) அழைப்பதாகவும் கருதிக் கொள்ள வேண்டும். நடனத்தின் அந்தக் காட்சி, போருக்கு அழைப்பு விடுத்தல் என்னும் பொருள்பட 'போருவிளி' என்று சொல்லப்படும். அடுத்த காட்சி தாருகாசுரனுடைய போர் அறிவிப்புடன் தொடங்கும். கடைசிக் காட்சியில் பத்திரகாளியும் தாருகனும் போரிடுவார்கள். போரின் முடிவில் தாருகாசுரனின் தலையை வெட்டியதை உருவகப்படுத்துவதற்காக நடிகனின் தலையில் அணிந்திருக்கும் கிரீடத்தைக் காளி கொய்து எடுப்பாள். நடனத்தின் அக்காட்சியை ஒட்டித்தான் அக்கலைக்கு 'முடியேற்று' என்று பெயர் வந்தது.

**ஒப்பனை:** பொதுவாக எல்லாப் பாத்திரங்களுக்கும் சிவப்பு, கருப்பு, வெள்ளைக் கலவைகளின் வண்ணக்கோடுகள் முகத்தில் எழுதப்பட்டிருக்கும். காளி வேடத்திற்கு மட்டும் அரிசி மாவினால் வெள்ளைப் புள்ளிகளை முகத்தில் தீட்டுவர். அப்புள்ளிகள் அம்மை நோயைக் குறிப்பதாக அமையும். அந்நோயைக் கட்டுப்படுத்தும் தெய்வமாகக் காளி வழிபடப்படுகிறாள்.

**இசை:** முடியேற்றுப் பாத்திரங்களின் நடனத்திற்கு ஏற்றஇசை உள்ளது. செண்டா, சேங்கிலா, இலித்தாளம் ஆகிய இசைக்கருவிகள் அந்நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

காளி வேடமிட்டவரைக் காளியின் அவதாரமாக நினைத்துக் காண்கின்றனர். அந்நம்பிக்கையில் குழந்தைப் பேறு இல்லாத பெண்கள் காளிவேடம் பூண்டவரிடம் தங்கள் குறைகளைக் கூறி அருள் வாக்குப் பெறுவதும், தங்கள் குழந்தையினை நோயிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்று அவர் முன் குழந்தைகளைக் காட்டி வணங்குதலும் நாடக நிகழ்ச்சி முடிந்த பின்னர் நடத்தப்படுகின்றன. காளி வேடம் பூண்டவர் தாழ்ந்த இனத்தவராக இருப்பினும் பார்ப்பனர்களும் அவரிடம் அருள்வாக்குப் பெற்றுச் செல்கின்றனர். ஒரு செயலின்வழித் தெய்வத்தின் அருளைப் பெறமுடியும் என்கின்ற தத்துவத்தினைக் கூறுவதாக இந்து சமயம் உள்ளது. எவனொருவன் ஒரு செயலை முறையாகப் பயில்கிறானோ அதன் வழி அவன் தெய்வத்தைக் காண்பான் என்கின்ற கொள்கை இந்து சமயத்தில் உள்ளது. அதனடிப்படையில் சடங்கு சார்ந்த மரபுக்கலைகளில் பங்கேற்கும் கலைஞர்களுக்குத் தெய்வ அருள் கிட்டுவதாக நினைத்து அவர்களைத் தெய்வமாக்குவதன் வழி இம்மரபுக் கலைகள் தோன்றியிருக்கலாம். இல்லாத ஒன்றினை இருப்பதாகப் பாவித்தது போலச் செய்வது சடங்கின் சிறப்புத் தன்மையாக உள்ளது.

இல்லாத ஒன்றினை இருப்பதாகப் பாவிப்பதற்குக் குறியீடுகளும் உருவ வழிபாடும் வழிவகுப்பதாக அமைந்திருக்கக்கூடும். அதன் பின்னணியில் உண்டாக்கப்பட்ட கதைகளும் அவற்றினை நடத்திக்காட்டுவதான சடங்குகளும் இருந்திருக்க வேண்டும். அச்சடங்குகளில் ஏற்படுத்தப்பட்ட 'போலச் செய்தல்', சடங்கிற்கு நிகழ்வுத் தன்மையைக் கொடுப்பதாக அமையும். எனவே தான், நாட்டுப்புற வழிபாடுகளில் பங்கு பெறுவோர் தாங்களே தெய்வத்துடன் பேசுதல், தெய்வத்திற்குக் கட்டளையிடுதல், கட்டுப்படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். எனவே, ஒவ்வொருவரும் தெய்வத்துடன் நேரடித் தொடர்பு கொள்ளும் நம்பிக்கையைப் பெறுகின்றனர்.

வழிபாட்டுச் சடங்குகளில் பங்கு பெறுவோர் தெய்வத்தின் அருளைப் பெற்றனர் என்னும் நம்பிக்கையில் அவர்களையே தெய்வங்களாக நினைத்து வழிபடுவதும் உண்டு. எனவே தான், அவர்களின் செயல்கள், சைகைகள், உடலசைவுகள் ஆகிய அனைத்தும் சக்தி வாய்ந்தனவாக இயல்பிலிருந்து மாறியனவாகக் கருதிப் பார்க்கப்படுகின்றன. அது போன்ற தன்மைகளின் அடிப்படையில் சடங்கு சார்ந்த மரபுக் கலைகள் நிகழ்த்தப்படுகின்றன.

காளி தாருகனைக் கொன்று அவன் குடலை உருவிக் குருதியைச் சுவைப்பது போல் பாவனை செய்யப்படுகிறது. அந்நிகழ்ச்சி இடம்பெறும் கதகளி வடிவத்தைச் செவ்வியல் சார்ந்த கதகளி வடிவம் என்கின்றனர். அக்கலை வடிவங்களில் இந்நிகழ்ச்சி நடித்துக் காட்டப்படுவதில் இந்நிகழ்ச்சிகள் சமுதாயத்தில் நடைமுறை வாழ்க்கையில் இடம்பெற்று இருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

**களம் எழுத்து:** கேரள மரபில் ஒன்றிப்போன களம் எழுத்து எனும் வடிவமானது, குறிப்பிட்ட தெய்வத்திற்கென்று நிலத்தில் வரையப்படும்

விரிந்த பெரிய ஓவியமாகும். வழிபாட்டுச் சடங்கு களுக்கு 'யந்திரம்' வடிவ அமைப்பில் களம் எழுத்து எழுதுவது முக்கிய சடங்காக உள்ளது. குருப்பி இனத் தவர் அதனை எழுதுவர். ஐந்து வண்ணப் பொடிகளில் அதனை வரையும் வழக்கம் இன்றும் பழக்கத்தில் உள்ளது. முடியேற்று நிகழ்ச்சி நடத்துவதற்குமுன் நாற்பது நாள் வரை பல்வகை வடிவமான களம் எழுத்து எழுதுவதிலும் அழிப்பதிலும் சடங்கு முறை கள் நிகழ்த்தப்படுகின்றன. 'நாகயட்சி' களம் எழுத்து என்கின்ற மற்றொரு வடிவத்தைப் புலவன்மார் என் கின்ற இனத்தவர் எழுதுகிறார்கள். நாக வழிபாட் டுச் சடங்குகளுக்காக அது எழுதப்படுகிறது. காளி யைப் போர்த் தெய்வமாகவும் (குறிப்பாகக் களரி போன்ற வீர விளையாட்டுக்களில்) நோய்களைத் தீர்க்கும் தெய்வமாகவும் வளம் கொடுக்கும் தெய்வ மாகவும் வணங்குகின்றனர். காளியின் கறுப்பு உரு வத்துடன் கூடிய கொடூரமான தோற்றம், அவளைப் போர்த் தெய்வமாகவும் தீய சக்தியை அழிப்பவளா கவும் காட்ட உதவுகிறது. காளியைப் பெருத்த மார் பகங்களுடன் சித்திரிப்பது அவள் வளம் கொடுத்துக் காப்பாள் என்கின்ற நம்பிக்கையுடன் அமைவதாக உள்ளது.

அம்மனைப் பற்றிப் பாடப்படும் பாடல்களில் தகாதசொற்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின் றன. காட்டாக, கொழு நல்லூர்ப் பரணி வழிபாட் டில் அம்மனைப் பற்றிப் பாடும்பொழுது அருவருக்கத் தக்க சொற்கள் கையாளப்படுகின்றன. தாருகனைக் கொன்ற காளியின் கோபத்தினைத் தணிப்பதற்காக அவ்வாறு பேசப்படுகிறது என்று கூறப்படுகிறது. தமிழகத்தில் உள்ள காளியம்மனே கேரளத்தில் பத் திரகாளியாக வழிபடப்படுகிறாள். இரா.இரா.

**முடுகு வண்ணம்**:இது இருபது வகை வண்ணங் களுள் ஒன்று. இது முடுகிய சந்தவின்பம் அமைய வருவது. இது அராகவடி பயின்று வரும். குறிலிணை பயின்ற அடி அராகவடியாகும். அவ்வாறான அடியால் நாற்சீரின் மிகுந்த சீர்களால் இவ்வண்ணம் வரப் பெறும். அராகத்திற்கு முடுகியல் என்ற வேறு பெயர் உண்டு. முடுகிய ஓசை கொண்ட அராகவடியால் வரப்பெறுவது முடுகு வண்ணமாகும். 'தனதன' எனும் சந்தத்தில் இவ்வண்ணம் வரப் பெறும். எ.டு. 'நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ' (கலித்.39). சா.கி.

**முண்டக உபநிடதம்**: முண்டக உபநிடதம் அதர்வணவேதத்திலமைந்துள்ள முப்பதைந்து உப நிடதங்களுள் ஒன்றாகும். அவற்றுள் பிராசுண, முண் டக, மாண்டுக்கிய உபநிடதங்களுக்குச் சங்கரர் விளக்கவுரைகள் எழுதியுள்ளார். முண்டகம் என்ற சொல்லின் பொருள் தலைமுடியை மழித்தல் என்ப தாகும். இது தலைமுடி மழிக்கப்பட்ட ஒருவரை அல்லது துறவியைக் குறிக்கும். இவ்வுபநிடதம் முண் டக உபநிடதம் என்ற பெயர் பெற்றதற்கு இருவகை விளக்கங்கள் கூறப்படுகின்றன. சிலர் இவ்வுபநிடதத் தில் கற்பிக்கப்படும் மேலான அல்லது கடந்த நிலை அறிவானது, எவ்வாறு கத்தியானது தலையை மறைத் திருக்கும் முடியை மழிக்கின்றதோ அவ்வாறு தன்னை உணர்வதினின்றும் மறைத்து நிற்கும் திணிக்கப்பட்ட அறியாமையை உயிரிடத்தினின்றும் நீக்கவல்லது என் பதனால் இப்பெயர் பெற்றது என்று கூறுவர். வேறு சிலர் அழிக்க முடியாத, நிலைத்த பொருளை அடை தற்குத் துறவின் இன்றியமையாமையை வலியுறுத்து வதால், இது துறவிகளுக்குச் (தலை முடி மழித்தவர் களுக்கு) சொல்லப்பட்ட செய்தியாதலால்இப்பெயர் பெற்றது எனக் கருதுகின்றனர். இவ்விரு விளக்கங் களைத் தவிர்த்து வேறுசிலர் இவ்வுபநிடதம் தலை முடியை மழித்துள்ள பௌத்த துறவியினால் எழுதப் பட்டதால் இப்பெயர் பெற்றதெனச் சொல்வர்.

முண்டக உபநிடதம் சௌனகர் என்பவரின் ஐயப்பாட்டு வினாக்களுக்கு அங்கிராசு என்பவர் கூறும் தெளிவுரைகள் கொண்டதாகும். அத்தெளி வுரைகளை அங்கிராசு தம் ஆசிரியரான பாரத்துவாச சத்தியவாகரிடத்திலிருந்தும், சத்தியவாகர் தம் ஆசிரி யரும் பிரமனின் மூத்த புதல்வருமான அதர்வானி டத்திலிருந்தும், அதர்வான் தம் தந்தையான பிர மனிடத்திலிருந்தும் கற்றனர் எனச்சொல்லப்படுகிறது.

முண்டக உபநிடதம் மூன்று இயல்களாகப் பிரிக் கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலிலும் இரண்டு பிரிவு கள் உள்ளன. இவ்வுபநிடதம் அறுபத்து நான்கு கவிதைகளைக் கொண்டுள்ளது.

இவ்வுபநிடதத்தின் முதல் இயலின் முதற் பிரிவின் தொடக்கத்தில் சௌனகர் தம் ஆசிரியரான அங்கிராசுவிடம் அனைத்து அறிவியல்களுக்கும் மெய்ப் பொருளியலுக்கும் அடிப்படையான 'எந்த ஒன்றை அறிவதனால் மனம், புலன்களால் நுகரப் படும் இயற்காட்சி முழுமையும் அறியப்படும்' என்று கேட்கின்ற வினாவிற்கு ஆசிரியர் அளிக்கும் விரிந்த விடையாகவே எஞ்சிய பகுதிகள் அனைத்தும் அமைந் துள்ளன. ஆசிரியர் அவ்வடிப்படை வினாவிற்கு மட்டு மன்றி அதில் அடங்கக் கூடிய அனைத்து வகையான வினாக்களுக்கும் சேர்த்தே விடையளிக்கிறார். முதலில் அவர் அனைத்தறிவும் இணைகின்ற அழி வற்றதனை உணர்தற்குக் கிடைக்கின்ற செயல்முறை, கோட்பாட்டு அறிவுகளைக் கொண்டுள்ள அறிவின் எல்லை பற்றிய அளவையியலான முறைமையைக்

கொடுக்கிறார். அழிவற்றதனை உணர்தற்கு உபநிடதம் கூறும் அந்த அறிவு கடந்த நிலை அறிவாகும். அழிவற்றதன் இயல்பைத் தகுந்த உவமைகளால் விளக்குவதுடன், அதன் இயல்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகிய படைப்பு முழுமையாகிய இவ்வுலகம் அதிலிருந்து எவ்வாறு தோன்றியது என்பதன் விளக்கமும் அப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

முதல்இயலின் இரண்டாம் பிரிவில் வேதச் சடங்குகள், அவற்றைச் செய்ய வேண்டிய முறைகள், அவற்றைச் செய்யவில்லை எனில் ஏற்படும் தீமைகள் முதலியன கூறப்படுகின்றன. அதன் நோக்கமானது சடங்குகளைச் செய்வதனால் கிடைக்கும் பயன்கள் மிகச் சிறந்தனவாயினும் அவை நிலையற்றவை என்பதனை மெய்யறிவை நாடுபவர்களுக்கு உணர்த்துவதேயாகும். எனவே, ஆன்மிகநெறியை விழைவோர், அழிவற்றதனை உணர்தற்கு அறிவு, பற்றின்மை, ஒருமுனைப்பான சிந்தனை, நம்பிக்கை, தனிமைவேட்கை போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டிய தன் இன்றியமையாமை பற்றியும் அப்பகுதி கூறுகிறது.

இரண்டாம் இயலின் முதற்பிரிவு, உபநிடதங்கள் பேசுகின்ற இவ்வுலகக் கோட்பாட்டை விளக்குகிறது. அதன் இறுதிப்பாடல் உயர்ந்த இருப்பான புருடனே படைப்பு முழுமை, வினை, தவம், நிலைப்பு ஆகிய அனைத்துமாகும் என்று கூறுகிறது. அப்புருடனை உணர்வதே அறியாமை நீக்கும் வழி என்றும் அது கூறுகிறது. அவ்வியலின் இரண்டாம் பிரிவில் ஓங்காரத்தின் துணையுடன் சிந்தனை செய்தலே அழிவற்றதனை உணர்தற்கு வாயிலாகும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. சிந்தனைக்குத் துணைபுரிகின்ற அனைத்தையும் ஒளிரச் செய்கின்ற பரம்பொருளின் இயல்பு மீண்டும் விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் இயலின் முதற்பிரிவு, உயிருக்கும் பரம்பொருளுக்கும் இடையே அமைந்துள்ள உறவினை நன்கு அறிமுகமான உருவமாகிய ஒரே மரத்தில் அமர்ந்துள்ள இரு பறவைகளுக்கிடையேயுள்ள தொடர்பைக் கொண்டு விளக்குகிறது. இறுதிப்பகுதி உயர்ந்ததனை உணர விழைவோர்க்குரிய தகுதிகளான அறப்பண்புகள், ஆன்மிகப் பயிற்சிகள் ஆகியவை பற்றி விளக்குகின்றது.

அளவிற் சிறியதான இம்முண்டக உபநிடதம், கதா, சுவேதாசுவதர உபநிடதங்கள் போன்று கூறப்படும் செய்திகள், முறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கொண்ட செய்யுள்களையுடைய மந்திரோப நிடதமாக விளங்குகிறது. மேலும் பகவத் கீதையைப் போன்று ஞானம், யோகம், பத்தி ஆகியவற்றைப் பற்றிய செயல்முறை நூலாகவும் முண்டக உபநிடதம் அமைந்துள்ளது. பி.ஆர்.ந.

**துணை நூல்கள்:**

**Chitrita Devi,** Upanisads for all, Chand & Co. Ltd., New Delhi, 1973.

**Sanma D.S.**, The Upanisads, An Anthology, Bharatiya Vidya Bhavan, Bombay, 1961.

**Swami Sarvananda,** Mundakopanisad, Sri Ramakrishna Matt, Madras, 1974.

முண்டர் பழங்குடியினர் பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். பீகார் மாநிலத்திலுள்ள இராஞ்சி மாவட்டத்தில் இவர்கள் மிகுதியாக உள்ளனர். முண்டா (Munda) என்ற சொல்லுக்குச் செல்வந்தன், நிலையான உழவன், கிராமத்தலைவன் போன்ற பொருள்கள் உண்டு. வடமொழியில் இச்சொல் தலைவன் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. முண்டா என்ற பெயர் இம்மக்களுக்குச் சாதி இந்துக்களால் வழங்கப்பட்டது என்பர். ஆங்கிலேயர்களால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இப்பெயர் இவர்களுக்கு வழங்கப்பட்டது என்று கூறுவாருமுளர். ஆனால், முண்டர்கள் தங்களை ஓரோ – கோ (Horo-ko) என்று கூறிக் கொள்வர். அதன் பொருள் மனிதர்கள் என்பதே. இவர்கள் முண்டாரி என்னும் மொழியைப் பேசுகின்றனர்.



முண்டர்கள்



முண்டர்கள்

முண்டர் எங்கிருந்து வந்தவர்கள் என்பது பற்றிப் பல கருத்துகள் உள்ளன. முண்டர் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பார் இரிசுலி (Risley) என்னும் மானிடவியலறிஞர்.

முண்டரின் நிறம் பொதுவாகக் கரும்பழுப்பு. கருப்பு நிறத்திலும் காணப்படுகின்றனர். நீண்ட தலையும், அகன்ற மூக்கும், தடித்த உதடுகளும், சதைப் பிடிப்பான அகன்ற முகமும் கொண்டுள்ளனர். குள்ளமாக உள்ள இம்மக்களின் கைகால்கள் உறுதியாக உள்ளன. முண்டர்களின் ஒவ்வொரு கிராமத்திலும் முண்டா எனப்படும் கிராமத் தலைவனும், பாகன் எனப்படும் மதகுருவும் உள்ளனர். அப்பதவிகள் மரபு வழி வருவதாகும். கிராமத் தலைவனுக்குத் துணையாகப் 'பஞ்சு' எனப்படும் துணைத் தலைவர்களும் உள்ளனர். கிராமத்தில் எழும் வழக்குகளுக்குக் காலங் காலமாக உள்ள மரபுவழிச் சட்டங்களின்படி (Customary Laws) கிராமத் தலைவர் தீர்ப்பு வழங்குவார். பட்டி என்பது 12 கிராமங்களைக் கொண்ட கூட்டமைப்புக்குப் பெயர். அவ்வாறு தொகுக்கப்பட்ட ஒவ்வொரு பட்டிக்கும் மங்கி என்னும் பெருந்தலைவர் ஒருவர் உள்ளார்.

முண்டர் பழங்குடிகளுள் பூதுச்சு, கங்கார் ஆகிய பிரிவினரைத் தவிரப் பிறர் அகமண (Endogamy) அமைப்பைக் கொண்டவர்கள். பிற பழங்குடியினருடனோ, சாதி மக்களுடனோ மணம் புரிவது தடை செய்யப்பட்டுள்ளது. முண்டர் பழங்குடியில் பல புற மணக் குழுக்கள் (Exogamous groups) குலக்குறி அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. குலக்குறிகள் (Totems) மிக உயர்வாக மதிக்கப்படுகின்றன. குலங்கள் கிலி எனக் கூறப்படுகின்றன. சூ கிலி (ஒரு வகை மீன்), நாக் கிலி (பாம்பு), ஓரோ கிலி (ஆமை) என்பன அவற்றுள் சில. சில கிலிகள் இந்துக்களின் தாக்கத்தினால் கோத்திரங்களாகக் கருதப்படுகின்றன. முற்காலத்தில் சாந்திக் கிலியாக (நந்தி) இருந்தது, இப்போது சாண்டில்யா கோத்திரமாக மாறியுள்ளது.

முற்காலத்தில் வேட்டையாடுதலும், இரும்புக் கருவிகள் செய்வதுமே முண்டரின் தலையாய தொழில்களாக இருந்தன. அந்நிலை படிப்படியாக மாறி இன்று முண்டர்கள் அனைவரும் நிலையான உழவர்களாக மாறிவிட்டனர். மேட்டு நிலங்களில் சிறுதானியங்களையும், பயறு வகைகளையும் பயிரிடுகின்றனர். காடுகளில் வேட்டையாடுவதிலும், கிழங்குகள் அகழ்ந்தெடுப்பதிலும் அவ்வப்போது ஈடுபடுகின்றனர்.

முண்டர்களின் சமயம் இன்றைய இந்தியச் சமயங்களினின்று முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகிறது. பிற்காலத்தில் பலர் கிறித்தவ சமயத்தைத் தழுவி விட்ட போதிலும் தங்களுக்கென்று இருந்து வந்த சமய நெறியைக் கடைப்பிடிப்போரும் உள்ளனர். முண்டர் சமயத்தின் முதன்மைத் தெய்வம் சிங்பொங்கா ஆகும். அத் தெய்வம் கதிரவனின் வடிவில் உள்ளதாக எண்ணி வழிபடுகின்றனர். சிங்



முண்டர்களின் கரும்பு ஆலை



முண்டர்களின் வேளாண்மை

பொங்காவை மகிழ வைக்க வெள்ளாடு, சேவல் போன்றவை பலியிடப்படுகின்றன. அவ்வாறு மகிழ்விப்பதன் மூலம் நோய்கள் அணுகாமல் வாழமுடியும் என நம்புகின்றனர். அடுத்த நிலையில் உள்ள தெய்வம் புருபொங்கா, மாரங்புரு, பாதசாரணா என்னும் பெயர்களால் கூறப்படுகிறது. அத்தெய்வம் மலைகளில் வாழ்வதாக நம்பப்படுவதால் அதற்குப் பாறைகளில் பலி கொடுக்கப்படுகின்றது. கிராம தேவதைகள் ஆட்டு பொங்காகோ (Hatu Bongako) எனக் கூறப்படுகின்றன. அவை வேளாண்மையிலும் வேட்டையாடுவதிலும் துணை நிற்கின்றன என நம்புகின்றனர்.


மூதாதையார் வழிபாடும் முண்டரிடம் உண்டு. இறந்தோரின் ஆவிகள் வீட்டுத் தெய்வங்கள் என்னும் பொருளில் ஒரா பொங்காகோ எனக் கூறப்படுகின்றன. அகால மரணமடைந்தோரின் ஆவிகளும், கொடுமையான சூழ்நிலைகளில் இறந்தோரின் ஆவிகளும் மக்களுக்கு எல்லா வகையிலும் தீங்கு விளைவிப்பனவெனக் கருதுகின்றனர். எனவே, அவற்றை அமைதிப்படுத்தும் பொருட்டுக் கால்நடைகளைப் பலியிடுகின்றனர்.

இறந்தவர் சடலங்களை எரித்து, எஞ்சியிருக்கும் எலும்புகளைப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். புதைகுழிகளில் பெரிய நினைவுக் கற்கள் நிறுத்தப்படுகின்றன.

ஒரு காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் பரவியிருந்தனர் எனக் கருதப்படும் முண்டர்கள், வரலாற்றுக் காலத்தில், வந்தேறிகளுடன் தங்கள் வாழ்க்கைக்காகப் பெரிதும் போராட நேரிட்டது. இசுலாம், இந்து ஆட்சியாளர்களின் வரித்தண்டல் கெடுபிடிகளையும், கவர்ந்துகொள்ளுதலையும் தாங்கமுடியாத இப்பழங்குடி மக்கள் கன்னி நிலங்களையும், காடுகளையும் தேடிச் சோட்டா நாக்பூர்ப் பகுதிகளில் வந்து தஞ்சம் புகுந்தனர். சோட்டா நாக்பூர்ப் பகுதிகளிலும் தொல்லைகள் தொடர்ந்தன. வட்டிக்குப் பணம் கொடுப்போரும், நிலக்கிழார்களும் முண்டரின் உழைப்பையும், செல்வத்தையும் சுரண்டி வந்தனர். முண்டருள் பலர் புதிய வேலைகளைத் தேடி அசாம், மேற்கு வங்காளம் போன்ற பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்றனர். அத்தொல்லைகளுக்கு எதிராக முண்டர் அவ்வப்போது கிளர்ந்தெழுந்து போராடினர். ஆங்கிலேயர் முண்டருக்கு உதவும் பொருட்டு 1908-இல் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தோற்றுவித்தனர். சோட்டா நாக்பூர்ப் பழங்குடிகள் அனைவரும் ஒரு கூட்டு இயக்கத்தை 1939-இல் தொடங்கினர். அதற்கு வெளிநாட்டில் கற்றுத் திரும்பிய செயபால் சிங்கு என்பவர் தலைவரானார். அவ்வமைப்புக்கு 1950-இல் சார்கண்ட்டு (Jharkhand) என்று பெயரிடப்பட்டது. அதன் பொருள் 'வனநாடு' என்பதாகும். சோட்டா நாக்பூர்ப் பகுதிக்குச் சார்கண்ட்டு என்ற பெயரை அமைத்துத் தனியாட்சியை நிறுவப் போராடுவதே அவ்வமைப்பின் நோக்கமாகும். சார்கண்டில் சிங்பும், நாஞ்சி, அசாரிபார்க்கு, பாலமா, சந்தல் பர்கானா, புரூலியா ஆகிய பீகாரின் ஆறு மாவட்டங்களும் மேற்கு வங்கம், ஒரிசா ஆகிய மாநிலங்களின் எல்லைப் பகுதிகளும் அடங்கும். ப.இரா.

**முண்டா மொழிகள்:** இந்தியாவில் பேசப்படுகின்ற நான்கு மொழிக் குடும்பங்களான திராவிடம், ஆரியம், திபெத்தோ பர்மன், முண்டா ஆகியவற்றில் முண்டா மொழிகளுக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. ஆரியரின் வருகைக்கு முன்னரே இந்தியாவில் பேசப்பட்ட மொழிக்குடும்பங்களுள் முண்டா மொழிக் குடும்பமும் ஒன்று. ஆயினும், கி.பி.19,20 – ஆம் நூற்றாண்டுகளில்தாம் முண்டாமொழிகள் பற்றிய ஆய்வுகள் தெளிவாக வெளிவரலாயின.

முண்டாமொழிகள் ஒரிசா, மகாராட்டிரம், பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பேசப்படுகின்றன. முண்டா மொழிகளில் முக்கிய மொழியான சந்தாலியை மட்டும் ஏறக்குறைய மூன்று மிலியன் மக்கள் பேசுகின்றனர்.



முண்டா மொழிக் குடும்பத்தில் கீழ்வரும் மொழிகள் அடங்குகின்றன. அவை கொர்க்கு (Korku), சந்தாலி(Santali), கடியா (Khaṛia),சுவாங்கு (Juang), குதோபு (Gutob), இரெமோ (Remo), கட்டக்கு (Gatac), கோரும் (Gorum), சோரா (Sora), கோ (Ho), முண்டாரி (Mundari), கொர்வா (Korwa), ஆகியனவாகும். முண்டாமொழிகளை முற்காட்டிய கிளைப்படத்தின் மூலம் உணரலாம். அப்பிரிவு ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்துள்ள காலத்தைக் காட்டாது, பிரிந்துள்ள நிலையைத்தான் காட்டுகின்றது.

முண்டா மொழிகளை ஆசுட்ரோ - ஆசியாடிக்கு மொழிக் குடும்பத்துடன் தொடர்பு படுத்திக் காட்டுகின்றனர்.

முண்டா மொழிகளில் பெரும்பாலும் ஐந்து உயிரொலிகளே இருக்கின்றன. குறில் - நெடில் வேறுபாடு இல்லை. மெய்யொலிகள் பத்தொன்பது உள்ளன. அவற்றுள் 10 மட்டும் சொல்லிறுதியில் வரும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| p | t | — | (c) | K | | | | |
| b | — | ḍ | (j) | g | b' | ḍ' | j' | g' |
| | S | | | | | | | |
| m | n | | ñ | | m | n | ñ | ṅ |
| | l | | | | | l | | |
| | r | | | | | r | | |

சொல்லிறுதியில் பெரும்பாலும் ஒலிப்பில் ஒலிகள் (Voiceless Sounds) வருவதில்லை. ஒலியனியலைப் பற்றிப் பல கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்திருப்பினும் வாக்கிய இசை பற்றிய ஆய்வும் ஒலியியல் கருவிகள் வாயிலாக ஆய்வும் இதுவரை வெளிவரவில்லை.

முண்டா மொழிகளில் எழுவாய்-செயப்படுபொருள் இயைபு இருப்பதாகக் கூறப்படுகிறது. பெயராக்கம் பற்றிய ஆய்வுகள் எதுவும் வெளிவரவில்லை. முண்டா மொழிக் குடும்பத்தின் பெயர்ப் பதிலிகள் பற்றிய ஆய்வுகள் வந்திருக்கின்றன. தொடரியலைப் பொறுத்தவரையில் ஓரளவு ஆய்வுதான செய்யப்பட்டிருக்கிறது. எனினும், தொடரியல் செய்திகளைப் போடிங்கின் அகராதியிலிருந்து பெறலாம். முண்டா மொழிகளின் தொடரியலில் ஆரிய மொழிக்குடும்பத்தின் மொழிகளான, இந்தி, பெங்காலி, ஒரியா, மராட்டி ஆகியவற்றின் தாக்கத்தைக் காணலாம்.

முண்டா மொழிக் குடும்பத்தின் மூன்று மொழிகளுக்கே இதுவரை அகராதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை: 1) சோரா-ஆங்கில அகராதி; ஆங்கிலம்-சோரா அகராதி, 2) முண்டாரிப் பேரகராதி, 3) சந்தால் அகராதி. முண்டா மொழிகளின் சொற்களுக்கான சொற்பிறப்பியல் அகராதியும் இதுவரை வெளிவரவில்லை.

முண்டா மொழிகளிலிருந்து ஆரிய மொழிகளும் திராவிட மொழிகளும் பல சொற்களைக் கடன்வாங்கியுள்ளனவெனக் கூறப்படுகிறது. எனினும், அவற்றின் மெய்த்தன்மை ஐயத்திற்குரியதாகும் என இக்கால ஆய்வுகள் கூறுகின்றன. சான்றாக, மிளகு என்பதற்கான சமசுகிருதச் சொல்லான, மரிசா ஒரு முண்டாச் சொல் எனப் பரோ கூறுகிறார். அது சரியன்று என எடுத்துக்காட்டுதற்குக் குதோபு மொழியின் 'மோரிஸ்' (மிளகாய்) என்னும் சொல்லைக் கூறுகிறார்கள். இது ஒரியாவிலிருந்து கடன் வாங்கப்பட்ட 'மொரித்ஸோ, என்றும், 'ஸ்' சொல்லிறுதியில் முண்டா மொழிகளில் வருவதில்லை என்றும் காரணம் கூறப்படுகிறது. எனவே, முண்டா மொழிகள் பற்றிய ஆய்வுகள் இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

முண்டா மொழிக் குடும்பத்தினர் பெரும்பாலும் படிப்பறிவில்லாதவர்கள். எனினும், முண்டா மொழிக் குடும்பத்தின் முக்கிய மொழிகளான முண்டாரி, சந்தாலி பேசுபவர்களுள் பலர் கல்லூரியில் படித்திருக்கிறார்கள்.

மகாராட்டிரத்தில் கோர்க்கு மொழியும், பீகார், மேற்கு வங்காளம் மாநிலங்களில் சந்தாலி மொழியும் பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன. மலைவாழ் மக்களின் பள்ளிகளில் முண்டா மொழி பேசுபவருள் பலர் இரு மொழியாளர்களாக இருக்கின்றனர். பெரும்பாலும், சந்தாலி – இந்தி, சந்தாலி - பெங்காலி, சோரா – தெலுங்கு, குதோபு - ஒல்லாரி போன்ற இருமொழிகளைக் கூறலாம்.

முண்டா மொழிகளைப் பொறுத்த வரையில் அவற்றை எழுதும்போது அது எந்த மாநிலத்தில் பேசப்படுகின்றதோ அந்த மாநிலத்தின் அலுவலக மொழியின் எழுத்துகளையே பயன்படுத்துகிறார்கள். சான்றாக,

1. கொர்க்கு, கோ, முண்டாரி, சந்தாலி, கடியா போன்ற மொழிகளுக்குத் தேவநாகரி (இந்தி) எழுத்துகள்.
2. முண்டாரி, சந்தாலி, குதோபு போன்ற மொழிகளுக்கு ஒரியா எழுத்துகள்.
3. சோராவுக்குத் தெலுங்கு எழுத்துகள்.
4. முண்டாரி, சந்தாலிகளுக்குப் பெங்காலி எழுத்துகள்.

5. கொர்க்கு மொழிக்கு மராட்டி எழுத்துகள், கிறித்தவத் திருச்சபையினருக்கு உரோமன் எழுத்துகள் எனப் பல வகையாகப் பயன் படுத்தப்படுகின்றன.

இப்போது 'கோ' என்றும் 'ஒல் செமெட்டு' என்றும் இருவகைப்பட்ட எழுத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன. 'கோ' எழுத்து வகை மிகப்பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்ததாகக் கருதப்படுகிறது.

என்.ந.

**துணை நூல்கள்:**

**Biligiri, H.S.**, Kharia Phonology, Grammar and Vocabularys, Poona, 1965.

**Bodding, P.O.**, Materials for a Santali Grammar Dumka, 1922.

**Campbell, A., & Maephail, R.M.A.**, Santali-English, English-Santali Dictionary, Pukhuria., 1933.

**Pinnow, H.J., Ed. & Tr. with P.Kerketta and J. Kullu.**, Kharia - Fexte, Prosa and Poesie, Wiesbaden, 1965.

**Ramamurthi, G.V.**, A Manual of Sora Language, Madras, 1931.

**முத்தரையர்:** தமிழகக் குறுநில மன்னருள் முத்தரையர் முதன்மை மிக்கவர். இவர்கள் ஏறத்தாழ கி.பி.650 முதல் கி.பி. 860 ஆண்டு முடியத் தமிழகத்தின் சிறு நிலப்பகுதியை ஆண்டு வந்தனர். இவர்கள் ஆட்சிக்குரிய பகுதி 'முத்தரையர் நாடு' என்று கூறப்பட்டது. முத்தரையர் நாடு இக்காலத்திய தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களின் சில பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. பல்லவர்க்கு அடங்கிய சிற்றரசராக ஆட்சியைத் தொடங்கிய முத்தரையர் சில காலம் முழுஉரிமை பெற்ற தனி மன்னர்களாகவும் ஆண்டுள்ளனர். தஞ்சை மாவட்டத்திலுள்ள செந்தலை, நேமம் (நியமம்), வல்லம், தஞ்சாவூர், நாகத்தி (நாகத்தீவு) முதலான நகரங்கள் சிலகாலம் இவர்கள் தலைநகரங்களாகத் திகழ்ந்தன. இலக்கிய வளர்ச்சிக்கும், கட்டடக் கலை வளர்ச்சிக்கும் முத்தரையர் பெருந்தொண்டு புரிந்துள்ளனர்.

பல்லவர்-பாண்டியர் போராட்டங்களில் முத்தரையர் பல்லவர்க்குப் பெருந்துணை புரிந்தனர். பாண்டிய நாட்டிற்கும் பல்லவ நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியை ஆண்டு வந்த முத்தரையர், பாண்டியர் பல்லவ நாட்டில் ஊடுருவா வண்ணம் காத்து வந்தனர். இவர்கள் மாற்பிடுகு, விடேல்விடுகு, மாறன் முதலான பட்டங்களைப் பூண்டிருந்தனர். இவர்கள் களப்பிரர்களின் கால்வழியினர் என வரலாற்றறிஞர் பலர் கருதுவர். சங்க இலக்கியத்தில் குறிக்கப் படும் வேங்கடத்தை ஆண்டு வந்த புல்லி எனும் குறுநிலத் தலைவனே முத்தரையரின் முதல்வனாகக் கருதப்படுகிறான். நாலடியார் எனும் நூல் முத்தரையரைப் 'பெருமுத்தரையர்' எனச் சுட்டுகின்றது.

தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகிலுள்ள செந்தலைக் கல்வெட்டு முத்தரைய வேந்தரின் குடிவழிப் பட்டியலைக் கூறுகின்றது. சாத்தன், சாத்தன் மாறனான் விடேல்விடுகு விழுப்பேரதியரையன், மாறன்குலாவன், குவாவன் மாறனான பெரும்பிடுகு முத்தரையன், மாறன் பரமேசுவரனான இளங்கோவதியரையன், சுவறன் மாறனான இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் முதலான வேந்தர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி புரிந்தனர். இவர்களை மூத்த தலைமுறையினர் எனக் கருதலாம். இவர்களுள் இரண்டாம்பெரும்பிடுகு முத்தரையன் தலைசிறந்தவன் ஆவான். தஞ்சைக்கோன், வல்லக்கோன் எனப் போற்றப்பட்டான். சத்துரு கேசரி, அபிமான தீரன் முதலான பல விருதுப் பெயர்களைப் பூண்ட இவன் பாண்டியர்களை வெற்றி கண்டவன்.

பெரும்பிடுகு முத்தரையனை அடுத்து ஆட்சிபுரிந்தவர்கள் இளைய தலைமுறையினர் எனக் கருதப்படுகின்றனர். அக்காலக் கட்டத்தில் இவர்கள் செல்வாக்கு, புதுக்கோட்டைப் பகுதியில் மிகச் சிறந்து விளங்கியது. இளைய தலைமுறை வேந்தருள் குவாவன் சாத்தனான விடேல் விடுகு முத்தரையன், சாத்தன் பழியிலி, மல்லன் விதுமனான தென்னவன் தமிழதியரையன், கோஇளங்கோ முத்தரையன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுள் கோமுத்தரையன் என்பான் விடுதலை பெற்ற வேந்தனாகத் தனியாட்சி செலுத்தி வந்துள்ளான். அவ்வேந்தனுடைய கல்வெட்டுகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருச்சென்னம்பூண்டி, திருக்கோடி காவல், செந்தலை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இவன் ஏறத்தாழ கி.பி.898க்கும் கி.பி.907க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் சோணாட்டைக் கைப்பற்றினான் என்பது தெரிகிறது. மேலும் 18 ஆண்டுகள் ஆட்சி புரிந்த இவ்வேந்தன் மாபெரும் வீரனாகத் திகழ்ந்ததுடன், நாடு கவர்வோனாகவும் கலையார்வம் மிக்கவனாகவும் திகழ்ந்துள்ளான். உத்தமதானி என்பது இவனது சிறப்புப் பெயராகும்.

மேற்கூறப்பட்ட வேந்தர்களேயன்றித் தந்திவர்மப் பல்லவனின் உடன் காலத்தவனான காடுவெட்டிமுத்

தரையன், இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லனை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்கு பெற்ற காடகமுத்தரையன் ஆகியோரும் இக்குலத்தின்புகழ் மிகு மன்னர்களாவர். பல்லவரின் மேலாண்மையை விரிவுபடுத்துவதில் பெரும்பங்கு வகித்த முத்தரையர் கி.பி. 9-ஆம்நூற்றாண்டின் கடைப்பகுதியில் விசயாலய சோழனின் எழுச்சியால் வீழ்ச்சியுற்றனர். பின்னர், கி.பி.12-ஆம் நூற்றாண்டு வரை இவர்கள் சோழரின் கீழ்ப் படைத் தலைவர்களாகவும் அரசியல் அலுவலர் களாகவும் பணிபுரிந்துள்ளனர்.

**ஆட்சிப்பரப்பு**: வடக்கில் ஏறத்தாழ திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், மேலப்பழுவூரிலிருந்து தெற்கில் புதுக்கோட்டை மாவட்டம் கீழ்த்தானியம் வரையில், இவர்களது ஆட்சி பரவியிருந்தது. இவர் கள் சைவ, வைணவ வளர்ச்சிக்கு உதவி வந்ததுடன் சமண சமயத்துக்கும் ஆதரவளித்தனர்.

**இலக்கிய வளர்ச்சி**: இவர்கள் இலக்கிய வளர்ச் சிக்குப் பெருந்தொண்டு புரிந்தனர். நாலடியார் இவர்கள் காலத்தில் இயற்றப்பட்டதென்பர். பாச்சில் வேள் நம்பன், ஆசாரியர் அநிருத்தர், கோட்டாற்று இளம் பெருமனார், குவாவன் காஞ்சன் ஆகிய பெரும்புலவர்கள், இவர்கள் அரசவையை அலங்கரித் தனர். 'தமிழ் முத்தரையர் கோவை' இவர்கள்காலத் தில் இயற்றப்பட்டது.

**கட்டடக் கலை**: இவர்கள் கோயில் கட்டுவதிலும், குளம் வெட்டுவதிலும், அணைகட்டுவதிலும் ஆர்வம் காட்டினர். முத்தரைய மாதர்களும் கோயில் கட்டு வதிலும் இறைவர்க்கு அறக்கொடைகள் அளிப்பதிலும் பெருவிருப்பம் கொண்டனர். முத்தரையரது ஆட்சிக் காலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் கட்டப்பட்டன. பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. அவை பெரும்பாலும் பல்லவர், முற்காலச் சோழர் கலைப்பாணியை ஒத்துள்ள போதிலும், முத்தரைய ரின் தனிப்பாணியும் தெரியாமல் இல்லை. நார்த்தா மலை விசயாலய சோழீச்சுரம் மூன்று நிலைகளுடன் காட்சியளித்து முத்தரையரின் கட்டடக் கலைச் சிறப் பிற்கொரு முடிமணியாகத் திகழ்கிறது. நேமம், நங்க வரம், தில்லைத்தானம் முதலான ஊர்களிலுள்ள கோயில்கள் இருதள விமானங்களைக் கொண்டுள்ளன. திருப்பூர், பனங்குடி, காளியாப்பட்டி (சிவன் கோயில்), விசலூர் (மார்க்கபுரீசுவரர்), கீழ்த்தானியம் (உத்தம நாதசுவாமி), விரலூர் (பூமிசுவரர்) முதலிய இடங் களிலுள்ள கோயில்கள் ஒருதளத்துடன் விளங்கிய போதிலும் கலை நயத்துடன் உள்ளன. நார்த்தா மலைக் குடைவரைக் கோயில் சாத்தன் பழியிலியால் குடையப் பட்டது. அவன் மகளான பழியிலி சிறிய நங்கை அக்கோயிலுக்கு முகமண்டபம், நந்தி மண்ட பம், பலிபீடம் ஆகியவற்றை அமைத்தாள். மேற் கூறப்பட்ட கோயில்கள் அனைத்தும் புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களில் அமைந்துள்ளன. திருச்சி மாவட்டத்திலும் இவர்களது கலைப்பணியைக் காண லாம். தமிழகக் கட்டடக் கலை வரலாற்றில் முத் தரையர் தம் முத்திரையைப் பொறித்துள்ளனர். முத்தரையர் எனும் அரசகுடியினர் இன்று 'முத்து ராசாக்கள்' எனும் பெயரில் வாழ்ந்து வருகின்றனர்.

ம.இரா.

*முத்த வல்லி*: இசுலாமியச் சட்டப்படி அறக் கட்டளை உருவாக்கப்பட்டவுடன் அதன் சொத்து உரிமைகள் அறக் கட்டளையிலிருந்து ஆண்டவனைச் சேருகின்றன. வக்பு (Wakf) என்பது, இசுலாமிய சமயத்தவரான ஒருவர் இசுலாமியச் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமயம், அறம், தெய்விகக் காரியங்கள் ஆகியவற்றிற்காகத் தம் சொத்தை நிரந் தரமாக அளிப்பதாகும். அப்படி அளிப்பவருக்கு வக்புக்குச் சொந்தமான சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லை. அவரை அதன் அறங்காவலரா கவும் கொள்ள முடியாது. அவர் அந்தச் சொத்தின் கண்காணிப்பாளர் அல்லது மேலாளர் மட்டுமே ஆவார். அந்த அறக் கட்டளையின் அமைப்பு அவ ருடைய வாரிசுகளைக் கட்டுப்படுத்தாது. ஆனால், அவர் அந்த வக்புச் சொத்தின் முத்தவல்லியாகத் தம்மை அல்லது தம் மக்களை அல்லது மற்றொரு வரின் மக்களை அல்லது பெண்ணை அல்லது இசுலாமியசமயத்தை சாராத ஒருவரை நியமித்துக் கொள்ளலாம். என்றாலும், அந்த முத்தவல்லி சமயத் தொடர்பான வேலைகளைச் செய்ய வேண்டியிருக் கும் பொழுது ஒரு பெண்ணை அல்லது இசுலாமிய சமயத்தைச் சாராதவரை அப்படி முத்தவல்லியாக நியமிக்க முடியாது, அதேபோல் இளவயதினரையோ மனநிலை சரியாக இல்லாதவரையோ முத்தவல்லி யாக நியமிக்க முடியாது. வக்பை உருவாக்குபவருக்கு அதன் முதல் முத்தவல்லியை நியமிப்பதற்கும் அந்தச் சொத்துகளின் நிருவாகம் பற்றிய திட்டத்தை வகுப்பதற்கும் அதிகாரம் இருக்கின்றது. மேலும், அந்த முத்தவல்லிப் பதவிக்கு அவரைத் தொடர்ந்து வரக்கூடியவர் எவர் என்பவரை முடிவு செய்வதற் கும் உரிமை உண்டு. அமைப்பை உருவாக்கியவரும் அதை நிருவகிப்பவரும் ஆகிய இருவரும் மரண மடைந்தால் அந்தப் பதவிக்கு அவர்களைத் தொடர்ந்து யார் வருவது என்பது பற்றி அது தொடர்பான ஆவணத்தில் குறிப்பிடப்படாவிட்டால் அப்பொழுதுள்ள முத்தவல்லி அவர் தம் மரணப் படுக்கையில் தமக்குப் பின் பதவிக்கு வர வேண்டிய வரை நியமிக்கலாம். ஆனால், அவர் நல்ல சுகத்தோடு இருக்கும் பொழுது அப்படி நியமிக்க முடியாது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முத்தவல்லிகளை நியமித்திருக்கும் பொழுது அவர்களுள் ஒருவர் மரணம் அடைந்தால் உயிரோடு இருப்பவர் அந்தப் பதவியைத்தொடர்ந்து வகித்து வரவேண்டும். முத்தவல்லிப் பதவி பரம்பரையாக வருவதன்று. அப்படிப் பழக்கத்தில் பரம்பரையாக வருவதாக இருந்தால் அந்தப் பழக்கம் தொடர்ந்து கடைப்பிக்கப்பட வேண்டும். முத்தவல்லிக்கு வக்புத் தொடர்பான சொத்துகளை நீதிமன்றம் அல்லது வக்பு வாரியம் ஆகியவற்றின் அனுமதியின்றி விற்பதற்கோ, மாற்றுவதற்கோ அடைமானம் வைப்பதற்கோ அதிகாரம் இல்லை. அப்படிச் செய்ய வேண்டும் என்றால் அவருக்கு அத்தகைய அதிகாரம் அதற்குரிய வக்புப் பத்திரத்தில் தரப்பட்டிருக்க வேண்டும். வக்புச் சொத்து வேளாண்மை நிலமாக இருந்தால் அதனைத் தொடர்ந்தாற்போல் மூன்று ஆண்டுகளுக்கு மேல் குத்தகைக்கு விடக்கூடாது. அத்தகைய அதிகாரம் இல்லாத போது அப்படிச் செய்ய வேண்டும் எனில் அது தொடர்பாக வக்புப் பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் அவர் அதற்குரிய அனுமதியை வக்பு வாரியத்திலிருந்து பெற்றாக வேண்டும். வக்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஏவராவது கடன் கொடுத்தால் அந்தக் கடனை வக்புச்சொத்துகளிலிருந்து ஈடு செய்ய முடியாது. முத்தவல்லிக்கு எதிராகப் பெறப்பட்ட தீர்ப்பாணையை வக்புச் சொத்துக்கு எதிராகப் பயன்படுத்த முடியாது. நிறைவேற்றுகையின் போது முத்தவல்லியின் பதவியை அல்லது அவரது சொந்தச் சொத்தைப் பற்றுகை செய்ய முடியாது. அந்த அறக்கட்டளையை உருவாக்கியவர் அங்குப் பணிபுரியும் அலுவலர்களின் ஊதியத்தை நிருணயித்திருந்தால் அதனை மாற்றுவதற்கு அல்லது அதிகரிப்பதற்கு முத்தவல்லிக்கு அதிகாரம் இல்லை. ஆனால், நியாயமான நிலைகளில் வக்பு வாரியம் அல்லது நீதிமன்றம் அவர்களின் ஊதியத்தை உயர்த்தலாம். வக்புவை உருவாக்கியவர் முத்தவல்லிக்கு ஓர் ஊதியத்தை நிருணயித்து இருக்கலாம். அத்தகைய ஊதியம் ஒரு குறிப்பிட்ட தொகையாகவோ, அல்லது அந்தச் சொத்துகளின் வருமானத்தில் செலவு செய்தது போக மீதி இருக்கும் தொகையாகவோ இருக்கலாம். அப்படி ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை என்றால் வக்பு வாரியம் அல்லது நீதிமன்றம் அந்தச் சொத்தின் வருமானத்திலிருந்து பத்தில் ஒரு பங்குத் தொகையை ஊதியமாக நிருணயிக்கலாம். வக்பை உருவாக்கியவர் நிருணயித்த ஊதியம் மிகவும் குறைவானதாக இருந்தால் அதனை வக்பு வாரியம் அல்லது நீதிமன்றம் அதிகரிக்கலாம். ஆனால், அப்படி அதிகப்படுத்திய தொகை சொத்தின் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கிற்குமேல் போகக் கூடாது.

அறக் கட்டளையை நன்றாக நிருவகிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் பாராளுமன்றம் வக்புச் சட்டத்தை 1954-ஆம் ஆண்டு (Wakf Act - 1954) நிறைவேற்றியிருக்கிறது. அச்சட்டத்தின்படி ஒவ்வொரு மாநிலத்திலும் வக்பு வாரியங்கள் அமைக்கப்படல்வேண்டும். அவற்றில் நாடாளுமன்றச்சட்டமன்ற உறுப்பினர்கள், இசுலாமிய சட்டத்தில் சிறப்பறிவுள்ளவர்கள், நிதிநிருவாகத்தில் தேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கவேண்டும். வக்புகளைப் பதிவு செய்வதற்கும், அளவை செய்வதற்கும், ஆய்வு செய்வதற்கும் அதன் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்து அறிக்கை தருவதற்கும் தொடர்புடைய மாநிலத்தில் அந்த வக்புகளின் நிருவாகம் தொடர்பான விதிமுறைகளை வக்பு வாரியத்தின் மூலம் உருவாக்குவதற்கும் அந்தச் சட்டத்தில் வழிவகை காணப்பட்டுள்ளன. அதனால், இப்பொழுது முத்தவல்லிகள் வக்பு வாரியத்தின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் வருகின்றனர்.

அறக் கட்டளை நோக்கங்களை மீறி நடந்ததற்காகவும் பணவிவகாரங்களில் தில்லுமுல்லுகள் செய்ததற்காகவும் முத்தவல்லிகளை நீக்குவதற்கு வக்பு சட்டத்தின் 54-ஆம் பிரிவின்கீழ் வக்பு வாரியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய ஆள் அந்தப் பதவிக்குத் தகுந்தவர் அல்லர் என்று கருதப்பட்டால் அந்தப் பதவியிலிருந்து அவர் நீக்கப்படலாம். அதனை அமைத்தவர் சொத்துகளை ஒப்படைத்த பின்னர் ஒரு முத்தவல்லியை நீக்க முடியாது. அப்படிச் செய்ய வேண்டுமெனில் அவர் தமது வக்பு பத்திரத்திலேயே அத்தகைய அதிகாரத்தைத் தமக்கு ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஒரு முத்தவல்லி தமக்குள்ள பதவி அதிகாரத்தை மற்றொருவருக்கு மாற்ற முடியாது. அப்படிச்செய்ய வேண்டுமெனில் அத்தகைய அதிகாரம் அந்த வக்புப் பத்திரத்திலேயே அவருக்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவர் தமக்குத் துணை புரிய வேறு ஒருவரை நியமித்துக் கொள்ளலாம். அ.ம.ஷெ.

**முத்தி**, என்பது மனிதன் அடைய வேண்டிய இறுதிக் குறிக்கோள் எனக் கொள்ளப்படுகின்றது. மனிதன் தனது வாழ்க்கையில் அடையவேண்டிய உறுதிப் பொருட்கள் (Purushartha) என நான்கினை இந்து சமயம் குறிப்பிடுகின்றது. அவை அறம், (Dharma), பொருள் (Artha), இன்பம் (Kama), வீடு (Moksha) என்பனவாகும். வீடுபேறு என்பது முடிவாகும். ஏனையவை அம்முடிவை அடைவதற்குரிய வழிகளாகும். வீடுபேறு என்பதுதான் முத்தியாகும்.

வீடுபேற்றைப் பெறுவது என்பது தளைக்குட்பட்ட அல்லது அறியாமையின் பாற்பட்ட உயிர்கள்

அதனினின்றும் நீங்கித் தமது உண்மையான இயல்பை அடைவதாகும். அதுவே தன்னை உணர்தல் (Self-Realisation) அல்லது இறைவனை உணர்தல் (God-Realisation) எனப் பொதுவாகப் பேசப்படுகின்றது. வீடுபேற்று நிலையைச் சமயங்களும், மெய்ப்பொருளியல்களும் பலவாறாகக் குறிப்பிடுகின்றன. அந்நிலையில், உயிரின் நிலை பற்றியும் பலவாறு கூறப்படுகின்றது. சமணசமயம் வீடுபேற்றை அருகதநிலை எனக் குறிப்பிடுகின்றது. அந்நிலையில் உயிர், வினைத்தளையுடன் உயிரற்றதன் தொடர்புமற்று, எல்லையில்லா அறிவு (அனந்த ஞானம்), எல்லையில்லாக் காட்சி (அனந்த தரிசனம்), எல்லையில்லாச் சக்தி (அனந்த வீரியம்), எல்லையில்லாச் சுகம் (அனந்த சுகம்) ஆகியவற்றைப் பெற்று இலங்கும்.

பௌத்த சமயம் வீடுபேற்றை நிருவாணம் என்கின்றது. நிருவாணம் என்னும் சொல் அணைதல், குளிர்தல் முதலியபொருட்களைகொண்டது.அதன்படி நிருவாணம் என்பது அடையாளம் எதுவுமின்றி முற்றாக அழிந்து போதல் ஆகும். அது உயிரின் பேரின்ப நிலையை, எதிர்மறை நிலையில் துன்பம் இல்லாத நிலையாகக் குறிப்பிடுவதாகும்.

வேதத்தின் ஏற்புடைமையை மறுக்கும் உலகாயதம் முத்தியை முழுவதுமாக மறுக்கின்றது. வேதத்தின் ஏற்புடைமையை ஏற்றுக் கொள்கின்ற மெய்ப்பொருளியல்கள் முத்தியடைந்த உயிர்களின் நிலையைப் பலவாறாக விளக்குகின்றன. 'நியாயா' மெய்ப்பொருளியல் உயிரை உணர்வில்லாத ஒன்று எனவும், அது உடலுடன் தொடர்பு கொள்ளும்போதுதான் உணர்வு தற்செயலாக ஏற்படுகின்றது எனவும் கூறுவதால், அம்மெய்ப்பொருளியலின்படி முத்தி என்பது உயிர் உணர்வின்றி நிற்கும் நிலையே ஆகும். இங்கு உயிரானது பேரின்ப உணர்வின்றித் துன்பமற்ற நிலை என விளக்கப்படுகின்றது. இதனை எதிர்மறை முத்தி விளக்கம் எனக் கருதலாம். சாங்கிய மெய்ப்பொருளியலில், உயிராகிய புருடன் முடிநிலையான மற்றொரு உள்பொருளான பிரகிருதியிலிருந்து தன்னை முற்றிலும் பிறிதாகக் கருதுவது கைவல்யம் எனப்படும் முத்தி எனப்படும். அந்நிலையில் உயிர் தனது தூய நிலையில் அமைந்திருக்கும். மீமாம்ச மெய்ப்பொருளியலில்,தொடக்கத்தில் பெருநலன்களை விளைவிக்கின்ற துறக்க உலகத்தை அடைவதே முத்தி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் உயிர் தனது இயற்கை நிலையை அடைவது முத்தி எனக் கருதப்பட்டது. வேதாந்த மெய்ப்பொருளியலில் சங்கரர், தமது அத்துவைதத்தில் சீவன் தன்னைப் பிரமமாக உணர்தலையே முத்தி என்கின்றார். விசிட்டாத்வைதம் முற்றிலும் பற்றற்ற கைவல்ய நிலையினை வீடுபேறு என்கின்றது. சைவ சித்தாந்த மெய்ப்பொருளியல் உயிரானது பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் அடைவதை முத்தி என்கின்றது. இவ்வாறு சமயங்களும் மெய்ப்பொருளியல்களும் வீடுபேற்றை – முத்தியை – பலவாறாகக் குறிப்பிடுகின்றன.

முத்தியில் இருநிலைகள் உள்ளனவாக அத்துவைதமும், சைவசித்தாந்தமும் குறிப்பிடுகின்றன. அவை சீவன்முத்தி, விதேகமுத்தி எனப்படும். முத்தியில் குறிப்பிடப்படும் நிலையினை உயிரானது உடலுடன் கூடி இருக்கின்ற பொழுதே அடைந்தால் அது சீவன் முத்தி எனப்படும். முத்தி நிலையானது உயிர் உடலைவிட்டு நீங்கியபிறகே பெறப்படும் எனில் அது விதேகமுத்தி எனப்படும். சமணர்களும், பௌத்தர்களும்கூட இவ்விருவகை முத்தி நிலைகளை ஏற்பவர் எனக் கூறலாம். பி.ஆர்.ந.

**முத்தி நிச்சயம்** என்பது தருமையாதீனத்தை நிறுவிய முதற் குரவராய குருஞான சம்பந்தரால் இயற்றப்பட்ட 1) சொக்கநாதர் கலித்துறை, 2) பண்டாரக் கலித்துறை, 3) சொக்கநாத வெண்பா, 4)சிவபோக சாரம், 5) திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், 6) சோடசகலாப் பிரசாத சட்கம், 7) முத்தி நிச்சயம், 8) நவரத்தினமாலை என்னும் எட்டு நூல்களுள் ஒன்றாகும். இந்நூல் இருபத்திரண்டு வெண்பாக்களைக் கொண்டது. சிதம்பரத்தில் வாழ்ந்த கண்கட்டி மறைஞான பண்டாரம் என்பவர் முத்தி நிலை என ஒரு நூல் இயற்றினார். அதில் முத்தி பெற்ற ஆன்மா அனுபவிப்பது ஆனந்தமேயன்றிச் சிவானந்தமன்று என்னும் முடிவினைக் கூறியிருக்கிறார். அக்கொள்கைக்கு ஆன்மானந்தவாதம் என்பது பெயராகும். அக்கொள்கையை மறுக்கவே குருஞான சம்பந்தர் முத்திநிச்சயம் என்னும் இந்நூலை இயற்றினார். ஆன்மாவுக்கு முத்திநிலையில் கிட்டுவது சிவானந்தமேயாகும். இறைவனே அழிவற்ற இன்பத்தைத் தரும் ஆனந்தத் தேனைச் சொரிந்து அதில் உயிரைத் திளைக்கச் செய்வான். உயிர் ஆனந்தத்தை தானே துய்ப்பதில்லை. இறையருளே உயிர் சிவானந்தத்தைத் துய்க்கத் துணைசெய்கிறது என்னும் கொள்கையை வலியுறுத்தி இந்நூலை இயற்றினார். 'ஆசு அகற்றி நின் அறிவில் ஆனந்தமாம் சிவனை... என்றன் குணம் என்று பேசியிடும் பேயா' (14-ஆம் பாடல்) என்று குருஞான சம்பந்தர் ஆன்மானந்த வாதியைக் கடிவதிலிருந்து இவ்வுண்மையைத் தெற்றென உணரலாம். 'நீ ஞான குணம் பெற்று இன்னும் நான்நான் எனநவிலும் ஈனகுணம் போன திலையே' (பாடல் 10) என்று அறிவுரை கூறும் பகுதியிலிருந்தும் சிவானந்தப் பேறு இறையருட் பெருக்கால் கிடைப்பது என்பதை உணரலாம்.

இம்முத்தி நிச்சயத்திற்குத் தருமபுர ஆதீனத் தம்பிரான்களுள் ஒருவராய வெள்ளியம்பலவாணத் தம்பிரான் என்பவர் பேருரை ஒன்றும் சிற்றுரை ஒன்றும் எழுதியுள்ளார். அது மிகவும் சிறந்த உரையாகும். குருஞான சம்பந்தர் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகும். ஆகவே, இந்நூல் தோன்றிய காலமும் அதுவே எனலாம். இரா.ச.

**முத்திரை வரிச்சட்டம்**: இங்கிலாந்து, பிரான்சு நாட்டுடன் கி.பி. 1757 முதல் 1763 வரை நடத்திய போரின் விளைவாக உள்நாட்டில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதன் பொருட்டு இங்கிலாந்து தன் ஆதிக்கத்தின் கீழிருந்த அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் உதவியை நாடியது எனவே, ஆங்கிலேய நாட்டுத் தலைமை அமைச்சர் சார்சு கிரன்வில் (George Grenville) என்பாரின் அரசாங்கத்தால், நாட்டினுடைய பொருளாதாரச் சிக்கலைத் தவிர்க்கும் பொருட்டும், குடியேற்ற நாடுகளிடமிருந்து புதிய வரிகளை வாங்கும் பொருட்டும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்களுள் முத்திரை வரிச்சட்டமும் (Stamp Act) ஒன்றாகும்.

அதிகார முறையிலமைந்த செய்தித்தாள்கள், ஆண்டு நாள் காட்டிகள், உரிமங்கள்,குத்தகை உரிமங்கள், ஏனைய துண்டு வெளியீடுகள் ஆகியவற்றிலிருந்து வருவாயை அதிகரிக்கும் பொருட்டு கி.பி. 1765-ஆம் ஆண்டு இந்த முத்திரை வரிச்சட்டம் இயற்றப்பட்டது. மேற்கூறியவை அனைத்தும் அவற்றிற்கான வரியைச் செலுத்தியதற்கு அடையாளமாக முத்திரையைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு வாங்கப்பட்ட வருவாய் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிலிருந்த ஆங்கிலேயப் படைகளுக்காகச் செலவிடப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் ஆண்டிற்கு ஒரு நூறாயிரம் தாலர்கள் (£ 1,00,000) கிடைக்கப் பெற்றன. அது குடியேற்ற நாடுகளிடமிருந்து பெறப்பட்ட மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்காகும்.

குடியேற்ற நாடுகளிடமிருந்து பணம் தண்டல் செய்யும் பழைய முறைகள் கைவிடப்பட்டு, நேரடியாக வரிவாங்கும் முறை மேற்கொள்ளப்பட்டது. இம்முத்திரைச் சட்டம், ஆங்கில நாட்டு நடைமுறையிலிருந்த ஒரு சட்டத்தைப் பின்பற்றியே அறிமுகப் படுத்தப்பட்டது. இச்சட்டம், இலண்டனில் ஒரு முத்திரை அலுவலகம் ஒன்றையும் ஏற்படுத்தி, குடியேற்ற நாட்டு மாவட்டங்கள்தோறும் ஓர் அலுவலரையும், முத்திரை வழங்குபவர் ஒருவரையும் நியமித்தது.

இந்தச் சட்டத்தை எதிர்த்து அனைத்துக் குடியேற்ற நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்தன. வருவாயின் பொருட்டு விதிக்கப்பட்ட இவ்வரியானது குடியேற்ற நாடுகளின் தன்மதிப்பு அரசமைப்பிற்குப் பெரிய இடையூறுயென அவை கருதின. வாணிகர்கள், வழக்குரைஞர்கள், அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள், பதிப்பாளர்கள் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து இச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். முதன் முதலில் மசாசுசட்சு (Massachusetts) மாநில மக்கள் இச்சட்டத்தை எதிர்த்துப் பாராளுமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளின் பேராளர்களை இச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு வேண்டிக் கொண்டனர். வர்சினியாவில் (Virginia) இச்சட்டத்திற்கு எதிராகப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மசாசுசட்சு, உரோடுத் தீவு (Rhode Island), கனெக்டிகட்டு(Connecticut), நியூயார்க்கு, நியூசெர்சி, பென்சில்வேனியா, தெலவேர் (Delaware), மேரிலாந்து (Maryland), தென் கரோலினா ஆகிய மாநிலங்கள் கி.பி. 1765-ஆம் ஆண்டில் தங்களுடைய பேராளர்களை நியூயார்க்கில் நடந்த மாநாட்டிற்கு அனுப்பி இச்சட்டத்திற்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றச் செய்தன. அம்மாநாடு, 'உரிமைகள், குறைகள் பிரகடனம்' ஒன்றை அறிவித்து, ஆங்கில நாட்டு அரசர், பிரபுக்கள், ஏனைய பொது மக்கள் அனைவருக்கும் மனுச்செய்தது. பேராளர்கள் அனைவரும் ஒருமனதாகக் குடியேற்ற நாடுகளின்மீது வரிவிதிக்கும் பாராளுமன்ற உரிமையை எதிர்த்தனர்.

அதே நேரத்தில் 'சுதந்திரத்தின் மைந்தர்' (Sons of Liberty) என்ற ஓர் அரசியல் அமைப்பும் இச்சட்டத்தை எதிர்த்தது. அந்த அமைப்பு, கனெக்டிகட்டு (Connecticut) என்ற மாநிலத்திலிருந்து முதன் முதலாகத் தொடங்கி மற்ற மாநிலங்களுக்குப் பரவியது. அவ்வமைப்பு, முத்திரை வரிச்சட்டத்தையும், குடியேற்ற நாடுகளில் உள்ள மேல்மட்ட மக்களையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தது. நியூயார்க்கு மாநிலத்தில் அது முத்திரைகளைப் பயன்படுத்தாமல் மக்களைத் தடுத்தது. அந்த அமைப்பினர் தெருக்களில் ஊர்வலங்கள் நடத்தி அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். மேலும், அவ்வமைப்பு முத்திரை அலுவலகப் பணியாளர் அனைவரும் பதவி விலகவேண்டுமெனக் கூறி, அரசருடைய மதிப்பையும் குறைத்தது. அப்போராட்டத்தின் விளைவாக ஆங்கில நாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்ய அமெரிக்க மக்கள் மறுத்தனர்.

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் வேண்டுகோள்கள் சில ஆங்கிலேய நாட்டு இராச தந்திரிகளின் கவனத்தை ஈர்த்தன. அவர்கள், அமெரிக்காவில் உள்ள ஆங்கில நாட்டு மக்கள் துன்புறக்கூடாது எனக்

கருதி, குடியேற்ற நாடுகளின் மீது வரிவிதிக்கப் பாராளுமன்றத்திற்கு உரிமை இல்லையென விவாதித்தனர். அவ்விவாதத்தின் விளைவாக ஆங்கிலேய நாட்டுக் கட்சியர்களான விக்குகளுக்கும் தோரிகளுக்குமிடையில் (Whigs & Torries) சச்சரவுகள் மிகுந்தன.

இங்கிலாந்து நாட்டுத் தலைமை அமைச்சர் கிரன்வில்லின் கொள்கை காரணமாக மிகவும் நெருக்கடி நிலை ஏற்பட்டது. அனைத்துக் குடியேற்ற நாடுகளிலும் முத்திரைகள் இல்லாமலேயே பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சுங்கவரித்துறையும் நீதிமன்றங்களும் முத்திரைகளின்றித் தங்களுடைய அலுவல்களை நடத்திச் சென்றன. இம் முத்திரைச் சட்டம் கி.பி.1765–ஆம் ஆண்டு, நடைமுறைக்கு வந்தபோதும் செயலற்றதாகவே இருந்தது. எனவே, இங்கிலாந்துப் பாராளுமன்றம், கி.பி. 1766-இல் இச்சட்டத்தை விலக்கிக் கொண்டது. அது அமெரிக்கர்களின் வெற்றியாகக் கருதப்பட்டு, குடியேற்ற நாடுகள் அனைத்தும் அந்நிகழ்ச்சியைப் பெரும் விழாவாகக் கொண்டாடின.

இரா.கி.

**முத்துக்குமாரசாமி**: வைத்தீசுவரன் கோயில் எனப்படும் புள்ளிருக்கு வேளூரில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் முத்துக்குமாரசாமி என அழைக்கப்படுகிறார். வைத்தியநாதரின் திருக்கோயிலில் வீற்றிருக்கும் இவரைக் கார்த்திகைதோறும் மண்டபத்திற்கு எழுந்தருளுவித்துச் சிறப்பான அபிடேக ஆராதனை செய்து வழிபடுகின்றனர்.

ஒவ்வொரு நாளும் இவருக்குப் புனுகு, பச்சைக் கற்பூரம், சந்தனம், எலுமிச்சம்பழம், அரும்பு முதலியவற்றைச் சாத்திப் பால், பழம், பாற்சோறு படைத்துத் தீபாராதனை செய்வர். அவ்வழிபாடு 'புழுக் காப்பு' எனப்படும். முருகப்பெருமான் இங்குச் செல்வ முத்துக் குமரன் என்ற பெயரில் செல்லக் குழந்தையாக விளங்குவதால், இவரை இருப்பிடத்திலிருந்து வெளியே எழுந்தருளச் செய்கையில் நடைபாவாடை இட்டு, முன்னே தம்பிரான் சுவாமிகள் வணங்கிச் செல்ல, விருதுகளுடன், குழந்தையை எடுத்துச் செல்வதுபோலக் கொண்டு சேர்ப்பர். பிள்ளைத் தமிழும், தாலாட்டும் இசைத்து முருகனைப் பள்ளிகொள்ளச் செய்த பின்னரே, இங்குள்ள சுவாமிக்கும் அம்பாளுக்கும் அர்த்தசாம பூசை நடைபெறும். குமரகுருபரர் இயற்றியுள்ள முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் இவர் மீது பாடப்பட்டதாகும்.

சா.உ.

**முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்**: குமரகுருபர அடிகளால் அருளப்பெற்ற கொழிதமிழ்ப் பிரபந்தமே, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ். தென்பாண்டி நாட்டுத் தலமாம் சிரீவைகுண்டத்தில் வேளாண்குலம் மேன்மையுறச் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மைந்தராய்த் தோன்றினார் குமரகுருபரர். ஐந்தாண்டளவும் இருந்த ஊமைநிலை செந்தூர் முருகனருளால் அகலக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி, அப்பெருமானால் 'குருபரன்' என அழைக்கப்பெற்றுக் 'குமர குருபரன்' ஆனார். மதுரைத் தலத்தை மையமாகக் கொண்டு மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம் ஆகியவற்றை அருளியதோடு 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலும் தந்தார். ஆரூர் இறைவனை வழிபட்டுத் 'திருவாரூர் நான்மணிமாலை' தொடுத்துப் பின் தருமைக் குருமூர்த்தியாம் மாசிலாமணிதேசிகர் ஆணையால் தில்லை செல்லும் வழியில் வைத்தீசுவரன்கோயில் முத்துக்குமாரசாமியைப் போற்றிப் பிள்ளைத்தமிழ் பாடினார். தில்லையில் சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை ஆகியன அருளினார். மேலும், அடிகள் தமக்கு மெய்ப்பொருள் உணர்த்திய தருமைக் குரவர்மேல் 'பண்டார மும்மணிக்கோவை' பாடினார். காசிக்குச் சென்று 'காசிக் கலம்பகமும்' பாடி, இந்துசுத்தானி மொழி அறியக் கலைமகளுக்குச் 'சகல கலாவல்லிமாலை'யும் சூட்டினார். வாழ்க்கையின் நிறைவுப் பகுதியில் காசியில் வைகிச் சமயத் திருப்பணிகள் பல இயற்றி ஒரு வைகாசித் தேய்பிறை மூன்றாம் நாள் வீடுபேறு எய்தினார்.

இந்நூல் காஞ்சிபுரம் மகாவித்துவான் இராமசாமி நாயுடுவின் விரிவுரையோடும் (1918 – ஆம் ஆண்டு) பின்னர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்புரையோடும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. உரையாசிரியர் பு.சி. புன்னைவன நாதமுதலியார், 1958-ஆம் ஆண்டு வெளிவந்த கழகப் பதிப்பில் நாற்பது ஆண்டுகட்கு முன்பு வெளிவந்த நாயுடு உரையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். நாயுடு உரையோடு கூடிய இரண்டாம் பதிப்பு 1945 – ஆம் ஆண்டு வெளிவந்தது. இப்பிள்ளைத்தமிழ், 1939 – ஆம் ஆண்டு வெளிவந்த காசிமடத்துப் பிரபந்தத் திரட்டில் உ.வே.சா. குறிப்புரையுடன் இடம்பெற்றுள்ளது. அவருடைய குறிப்புரையிலிருந்து முத்தையன் பிள்ளைத்தமிழ், புள்ளிருக்கு வேளூர் சேனாபதிப் பெருமான் பிள்ளைத்தமிழ், புள்ளிருக்கு வேளூர்க் குமாரதேவர் பிள்ளைத்தமிழ் என்று வேறு பெயர்களினாலும் இந்நூல் ஏட்டுப் பிரதிகளில் வழங்கப்பட்டிருப்பதை அறியலாம்.

குமரகுருபரரின் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் நூலின் தோற்றமும் அமைப்பும், நூலில் இடம்பெறும் சிறப்புச் செய்திகளும், அடிகள் உள்ளமும் அறிந்தின்புறத்தக்கன. சிறப்புச் செய்திகளில் தலம், தீர்த்தம், மூர்த்தி பற்றிய செய்திகள் இடம்

பெறுகின்றன. அடிகள் உள்ளம் என்னும் துணைத் தலைப்பில் அடிகளின் சமயப்பற்று, தமிழ்ப்பற்று, புலமைநலம் ஆகியன புலப்படுத்தப் படுகின்றன.

**தோற்றமும் அமைப்பும்:** மாசிலாமணி தேசிகரிடம் மெய்ப்பொருள் பெறவந்த அடிகள், குருவின் ஆணைப்படி தில்லை செல்லும் வழியில் புள்ளிருக்கு வேளூர் இறைவனை வழிபட்டுத் திருமடத்தில் இரவில் தங்கினார். அப்போது முத்துக்குமாரன் அவர் கனவில் தோன்றி 'என்னைப் பாட மறந்தது ஏன்' என்று வினவ, 'முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்' பாடியதாகக் கூறப்படுகிறது. பிரபந்தத்தில் விநாயகர் வணக்கப்பாடலின் தொடக்கமாகிய 'பொன்பூத்த குடுமி' என்ற தொடரே முருகன் அருளால் அடிகட்குக் கிடைத்ததாக நம்பப்படுகிறது.

பிள்ளைத்தமிழ்ப் பிரபந்த வகையைச் சார்ந்த இந்நூல், உரிய இலக்கணங்கள் எல்லாம் இனிதே அமையப்பெற்றுத் திகழ்கிறது. ஆண்பாற் பிள்ளைத் தமிழ் ஆதலின் இது காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய பருவங்களோடு அதற்கே உரிய சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய மூன்றையும் பெற்றுள்ளது. நூலின் தொடக்கத்தே விநாயகர் வணக்கப்பாடல் உள்ளது அதனையடுத்துப் பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்கள் இடம்பெறுகின்றன. பல்வேறு தெய்வங்களையும் பிள்ளையைக் காக்க எனப் பாடும் காப்புப் பருவத்தில் தலத்து நாயகராம் வைத்தியநாதரையும், தையல்நாயகியையும், கற்பக விநாயகரையும் அடிகள் வேண்டுகிறார். ஒருகால் மடக்கி ஒருகால் நீட்டி இரு கைகளையும் நிலத்தூன்றித் தலைநிமிர்ந்து முகம் அசைய ஆடுதலைச் செங்கீரை என்பர். அவ்விளக்கம் செங்கீரைப்பருவம் எட்டாம் பாடலில், 'ஒருதாள் உந்தி எழுந்திரு கையும் ஒருங்கு பதித்து நிமிர்ந்து அருள்பொழி திருமுகம் அசைய அசைந்தினிதாடுக செங்கீரை' என்னும் பகுதியில் இடம்பெறுவது கருதத்தக்கது.

**சிறப்புச்செய்திகள்: தலம் –** முத்துக்குமாரசாமி எழுந்தருளியிருக்கும் புள்ளிருக்குவேளூர், தேவாரப் பாடல் பெற்ற சிறப்புடையது. புள்ளாகிய சடாயுவும், சம்பாதியும், இருக்காகிய வேதமும் வேளாகிய முருகனும் இறைவனைப் போற்றி வழிபட்ட தலம். இது சூரியனும் இராம இலக்குவரும் சத்த முனிவரும் பூசித்த தொன்மை உடையது. 'சுருதிக்கும் எரி சுடர்ப் பருதிக்கும் இரவிகுலத் தோன்றற்கும் இளவருக்கும் சம்பாதியொடு நற்சடாயுவுக்கும் பெருந்தவ முனிவர் எழுவருக்கும்' (செங். 2) இறைவன் அருள்புரிந்தார்என அடிகள் இயம்புவார். பிரபந்தத்தில் இடம்பெறும் தலப்பெயர்களும் வழிபட்டவர்களின் பெயர்களை ஒட்டியே அமைந்துள்ளன. குருகூர், சடாயுபுரம், சடாயுபுரி, புள்ளூர் ஆகியன சடாயுவும் சம்பாதியும் வழிபட்டமையினைச் சாற்றும். 'தள்ளாய சம்பாதி சடாயுவென்பார் தாமிருவர் புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே'(2.43.1) எனப்பாடுவார் சம்பந்தர். தினகரபுரி, பரிதிபுரி, பருதிப்பதி என்பன சூரியன் பூசித்ததைத் தெரிவிப்பன. வேதபதி, வேதபுரி ஆகியவை வேதம் துதித்ததை விளக்குவன. வைத்தியநாதன் எழுந்தருளி இருப்பதால் இத்தலம் 'ஆதிவைத்தியநாதபுரி' என்றும் வழங்கப்படுகிறது. செங்கீரைப் பருவம் நான்காம் பாடலில் 'வேதபுரி கந்தபுரி புள்ளூர் எனப் பொலியும் வேளூர்' என்று தொகுத்துச் சிறப்பிப்பார் அடிகள்.

**தீர்த்தம்:** புள்ளிருக்கு வேளூரின் சித்தாமிர்தத் தீர்த்தம் அடியவர் பிணிபோக்கும் புகழுடையது. அதனை அடிகள் 'தேனாறுடன் கடவுள் வானாறு எனப்பெருகும் சித்தாமிர்தம்' (காப்பு.6) எனக் குறிப்பார். அதே பருவத்தின் எட்டாம் பாடலில் 'சிறைபட்ட தண்டுறைச் சித்தாமிர்தப் பெருந்தீர்த்தம்' என்று பாடி வியப்புறுவார். ஊழிப் பெரும்பிணிகளையும் ஒழித்திட 'வற்றாச் சித்தாமிர்தத் தடத் தீர்த்தத் துறைக் குறுந்திவலை ஒன்றே அமையுமால்' (அம்புலி.5) என உறுதி சொல்லுவார்.

**தெய்வம்:** தலத்து இறைவராம் வைத்தியநாதர் பெருமையை நூல் பலவாறு சாற்றும். 'சூக்கும வெளியினில் பரமநடம் நவிற்று திறல் வேளூர் வயித்திய நாதன்' (காப்பு.2) எனவும், 'வயித்தியக் கடவுளார்' (செங்.4) எனவும் இறைவர் குறிக்கப்படுவார். பிணி தீர்க்கும் இறைவர்ப் பெற்றியைத் 'தீராத வினை தீர்த்த தம்பிரான்' (செங்.2. சிறுதேர். 10) எனப் பேசுவார் அடிகள். 'செடியாய உடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்' (2.43.11) எனப் பாடுவார் சம்பந்தர். அப்பர் பெருமானும், 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத நோய்தீர்க்க வல்லான்' (6.54.8) என வணங்குவார். இறைவியாம் தையல்நாயகியைத் 'தம்பிரான் திருமேனியிற் செம்பாதியும் கொண்ட தையல்நாயகி' (செங்.2) என்றும், 'தம்பிரான் தழல் உருவில் ஒருபாதி குளிர ஒருபுறம் நின்ற தையல்நாயகி' (சிறுதேர். 10) என்றும் அடிகள் ஏத்துவார். 'செங்கீரை'ப் பருவ இரண்டாம் பாடலிலும், 'சிறுதேர்'ப்பருவப் பத்தாம் பாடலிலும் அம்மையப்பரை இணைத்துப் பாடுவது சிறப்புடையதாக விளங்குகிறது. தலத்து விநாயகராம் கற்பக விநாயகர், 'பராவரு கற்பகக்கன்று' (காப்பு.4) என்று பரவப்படுகிறார்.

பிரபந்தத் தலைவனாம் முத்துக்குமாரசாமியின் சிறப்புகள் விரிவாகப் பேசப்படுகின்றன.பருவநலத்தை

யொட்டிக் குமரக் கடவுள், குமரகுருபரன், குமரப் பெருமாள், குமார நாயகன், முத்துக் குமாரன் என்றெல்லாம் பாராட்டப் பெறுகிறார் முருகப்பெருமான். உறுப்புநலன் ஒட்டி அறுமுகவேள், ஆறிருபுயத்தன், சடானனன், சண்முகத்தொருவன், மூவிருமுகத்தன் என்றெல்லாம் ஓதப்படுகின்றான். அணியும் மாலைகளாய்க் கடம்பும் காந்தளும் குரவும் குறிஞ்சியும் செச்சையும் பாமாலையில் அணிசெய்கின்றன. குமாரசாமியின் பெருமை உணர்த்தும் கந்தபுராணக் கதைக் குறிப்புகள் பலவிடத்தும் இடம் பெறுகின்றன. தகரேறிய ஆற்றலைத் 'திசைத்திசை கடுநடை உளதகர் ஏறச் சமர்த்தன்' (காப்பு.9) என்னும் தொடரில் குறிப்பார். பிரமன் தலையில் குட்டிய பெருமான் கை 'சாற்றிய செழுமறைப் பொருளின் உரைவிரித்தும் எனும் வேதாமுடித்தலை மோதுகை' (காப்பு.2) என்று பேசப்படும். தந்தைக்கே உபதேசம் செய்த சதுரப்பாடு 'முக்கண் திருத்தாதையார் பணி குருக்கள்' (காப்பு.10) என்பதால் புலப்படும். சூரன் தேரைத் தன்பால் நிறுத்திக்கொண்ட வீரனை 'ஒல்லென் பறந்தலை மறந்தலைக் கொண்ட சூர் உய்த்திட்ட இந்த்ர ஞாலத் திண்டேரை உருளாது நிற்கப் பணித்தவன்' (சிறுதேர்.3) என்று அடிகள் போற்றுவார். 'ஆயிரம் மறைக்கும் ஒரு பொருளாய் இருப்பவர்' (அம்புலி.4), 'முத்திக்கு ஒரு வித்து' (தால்.6), 'மெய்ஞ்ஞான மருந்து' (செங்.10) எனவரும் தொடர்கள், முத்துக்குமாரசாமியின் தனிப்பெருஞ் சிறப்பினைப் புலப்படுத்துவன.

**அடிகள் உள்ளம்:** ஏத்தும் தெய்வங்களோடு இதயம் ஒன்றிப்போகும் பகுதிகளிலிருந்து அடிகளின் சமயப்பற்று இனிது விளங்குகிறது. 'திருவடித்துணை என்முடி பதித்தவடு ஆறாத மெய்ப்புகழாளி' (காப்பு. 2) என்றும், 'புள்ளூர் என எமது உள்ளத்தடம் நிறை புத்தமுதக் கடல்' (தால்.8) என்றும் புராரி மைந்தனைப் போற்றுகிறார். 'பூத்த என் இதய புண்டரிக மலரில் எந்தையொடும் இனிதமர்ந்த ஒரு செல்வி' (காப்பு.3) என்றும், 'அழகு முதிர முதிரா என் அம்மை' (முத்தம்.4) என்றும் தையல்நாயகியைக் கொண்டாடுவார்.

அடிகளின் தமிழ்ப்பற்று, அவர்தம் நூல்களைக் கற்பார் அனைவரும் அறிந்த ஒன்றே. வேளூரைத் தமிழோடு இணைத்தே பலவிடத்தும் விளம்புவார். 'கழகந்தொறும் கொத்து முத்தமிழ் மொய்த்த கந்தபுரி' (காப்பு.1), 'தமிழ் வேளூர்' (தால்.6), 'கொழிதமிழ் வேதபுரி' (சப்.6), 'மும்மைத் தமிழ்த்தேர் கந்தபுரி' (முத்தம்.1), 'அஞ்சொல் தமிழார் புகழ் வேளூர்' (வருகை.8), 'முத்தமிழ் பயில் பருதிப்பதி' (சிறுபறை. 6) எனவரும் தொடர்களில் இடம்பெறும் அடைகள் தமிழின் இயல்பினை உணர்த்துவன. சோணாட்டை அடிகள் 'தெள்ளுதமிழ் விரிபுனற் காவிரித் திருநாடு' (சிறுதேர்.9) எனச் சுட்டுவார். முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்கும் முருகனை 'இழுமென் மொழித் தெளிதமிழின் வடிந்திடும் நவரசமே' (சிறுபறை.10) என அடிகள் அழைப்பது இனிமை பயக்கவல்லது.

அடிகளின் சொல்லாட்சி, தொடரமைப்பு, கற்பனைத்திறன் ஆகியவற்றால் அவர்தம் புலமைநலம் நன்கு புலப்படுகிறது. 'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள' (செங்.1), 'தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்' (செங்.5), 'அன்றைக் கணக்கு இன்றும் வந்திருக்கின்றது' (அம்புலி.8), 'வித்தும் முளையும் வேறன்றே' (சிற்றில்.8) எனவரும் தொடர்கள், நவில்தொறும் இன்பம் பயப்பன. குமரன் குறும்புகளைத் தொகுத்துரைக்கும் வருகைப் பருவ இரண்டாம் பாடல், அடிகளின் கற்பனைத் திறத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாம். அ.க.

**துணை நூல்கள்:**


**குமரகுருபரர்,** முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் கழகப் பதிப்பு, சென்னை, 1978.

**சுப்பிரமணிய பிள்ளை, கா.,** குமரகுருபர அடிகள் வரலாறு, கழகப்பதிப்பு, சென்னை, 1975.

திருஞானசம்பந்தர் தேவாரம், இரண்டாம் திருமுறை, தருமபுர வெளியீடு, தருமபுரம், 1954.


**முத்துச்சாமிக் கவிராயர், நகரம்:** இவர் கி.பி. 1834 – ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம், சங்கர நயினார் கோயிலைச் சார்ந்த நகரம் என்னும் ஊரிற் பிறந்தார். இவர் பிற்காலத்தில் நகரம் முத்துச்சாமிக் கவிராயர் எனப் புகழ்பெற்று விளங்கினார்.

இவர் முன்னோர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். முத்துச்சாமிக் கவிராயர் இளமையிலேயே பள்ளிக் கல்வியை முடித்துச் சிறப்புக் கல்வி கற்கத் தொடங்கினார். ஆயினும், இவர் மனம் கல்வியில் நன்கு பதியவில்லை. இவர் தேவி வழிபாட்டில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். அதனால் இவருக்குத் தேவியின் அருள் கிட்டலாயிற்று.

ஒரு நாள் இவர் தேவியை வழிபட்டு ஆழ்ந்த தியானத்தில் இருந்தபோது தேவி இவருக்குக் காட்சி அளித்தாளாம். அம்மையின் அருட்காட்சியைக் கண்டு மனம் உருகப் பெற்று 'உன்னைப் பார்த்த கண்ணால் இவ்வுலகம் பார்க்கப் போமோ' என்னும் இசைப் பாடலைப் பாடினார். அன்றுமுதல் இவர்

கண்ணிமை வளர்ந்து கண்களை மூடத்தொடங்கியது. நாளடைவில் இவரால் உலகப் பொருள் எதையும் பார்க்க முடியவில்லை. எதையாவது இவர் பார்க்க விரும்பினால் கண்ணிமைகளைக் கையால் தூக்கிப் பிடித்துக்கொண்டு பார்க்கும் நிலை ஏற்பட்டது. எனவே, இவர் அம்மையையும் முருகப்பெருமானையும் பாடுவதிலேயே காலங்கழித்தார்.

முத்துச்சாமிக் கவிராயர் இளமையில் கல்வியில் சிறக்கவில்லை. தேவியின் அருளாலேயே இவர் இசைத்தமிழ், கூத்துநூல், காலக்கணிதம் முதலியவற்றில் புலமை பெற்றார் என்ற செய்தியும் காணப்படுகிறது. இவர் தேவி மீதும் முருகன் மீதும் நூற்றுக்கணக்கான இசைப்பாக்களான கீர்த்தனைகளைப் பாடியிருக்கிறார். போடி நாயக்கனூர் சமீன்தார் மீது அன்னம் விடு தூது, ஆத்திப்பட்டிச் சங்கிலி வீர பாண்டிய வன்னியர் மீது பள்ளு, கும்மிப் பதம் முதலிய நூல்களைப் பாடிப் பரிசில் பெற்றார். ந. பி.

***முத்துச்சாமிக் கோனார்* (கி.பி. 1858 1944)**: இவர் கி.பி. 1858 – ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செங்கோடு என்னும் ஊரில் பிறந்தார். இவர் சைவத்துக்கும் தமிழுக்கும் மிகச் சிறந்த தொண்டாற்றினார். இவர் இளமைப் பருவத்திலேயே தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். சைவ சமய நூல்களில் மிகுந்த ஈடுபாடும் சிறந்த புலமையும் பெற்ற இவர் தெலுங்கு, வடமொழி ஆகியவற்றிலும் புலமையுடையவராக விளங்கினார்.

இவர் விவேக திவாகரன் என்னும் பதிப்பகத்திலிருந்துகொண்டு அப்பதிப்பகத்தின் மூலம் 'விவேக திவாகரன்', 'கொங்குவேள்' என்னும் இதழ்களையும் பல நூல்களையும் வெளியிட்டார்; திருச்செங்கோட்டு மான்மியம், திருப்பணிமாலை, கொங்கு மண்டல சதகவுரை முதலிய நூல்களையும் இயற்றினார்.

இவர் திருச்செங்கோட்டில் சைவ சபை ஒன்று அமைத்துச் சோமசுந்தர நாயக்கர், பூவை கல்யாண சுந்தர முதலியார் போன்ற பெருமக்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தார். எல்லாவற்றுக்கும் மேலாகத் திருச்செங்கோட்டில் இவர் ஒரு பெரிய நூல் நிலையத்தை அமைத்துப் பொதுமக்கள் படிப்பதற்கு வகை செய்து கொடுத்த செயல் பெரிதும் பாராட்டுதற்குரியது.

இவர் தமிழுக்குச் செய்த அருந்தொண்டைப் பாராட்டிச் சேதுபதி மன்னரும், திருவாவடுதுறை ஆதீனத் தலைவரும் இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தினர். இவர் 2 – 11-1944 – இல் காலமானார். ந.பி.

***முத்துச்சாமிப் பாரதியார்***: இவர் சோழ நாட்டுத் தமிழ்ப் புலவர்; கி.பி. 19 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் தஞ்சைக்கு அருகில் உள்ள திருவையாற்றில் கி.பி. 1894-ஆம் ஆண்டு பிறந்தார். இளமை முதற்கொண்டே அறிவாற்றலுடன் விளங்கி வந்த இவர்தம் தந்தையார் அப்பாவாச்சாரி ஆவார்.

தமிழ் மொழி, வடமொழி ஆகிய இருமொழிகளிலும் இவர் புலமையுடன் விளங்கினார். இவர் இயற்றிய புகழ் வாய்ந்த நூல் 'விசுவப் பிரம புராணம்' என்பதாகும். அந்நூலுக்குப் பூண்டி அரங்கநாத முதலியார், சி.வை. தாமோதரம்பிள்ளை, சீனிவாசாச்சாரியார் போன்ற பெரும் புலவர்கள் பலர் சிறப்புப் பாயிரம் எழுதியுள்ளமை அந்நூலின் சிறப்பைத் தெளிவாகப் புலப்படுத்தும். அந்நூல், வடமொழி மரபைப் பின்பற்றி இயற்றப்பட்டதாகும். அந்நூல் 45 அத்தியாயங்களையும் 1121 செய்யுட்களையும் கொண்டது. அப்புராண நூல் கடவுள், உலகப்படைப்பு, காலப் பிரமாணம், பிராமணாதி வருணம், ஐந்தொழில், நித்திய கருமம், கர்ப்பதானம், பும்சவனம், சீமந்தம், சாதகம் போன்ற பல்வேறு உலகியல் முறைகளை விளக்கும் வண்ணம் அமைந்து சிறக்கிறது. சா.உ

***முத்துச்சாமிப் பிள்ளை***: சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் இப்பெயரில் இரு பெரும்புலவர்கள் வாழ்ந்திருந்தனரெனத் தெரிகிறது. ஒருவர் புதுவையில் பிறந்தவர்; பன்மொழிப்புலவர்; கிறித்தவர்; திருநெல்வேலியைச் சார்ந்தவர்; சைவர்.

புதுவையில் வேளாளர் மரபில் பிறந்த முத்துச்சாமிப்பிள்ளை இளம் பருவத்திலேயே ஊக்கமுடன் கல்வி பயின்றார். இவர் தமிழில் செய்யுள் இயற்ற வல்ல புலமையும் திறமையும் பெற்றார்; வடமொழி, உருது, இலத்தீன், ஆங்கிலம் போன்ற பல மொழிகளிலும் வல்லுநராகத் திகழ்ந்தார். சென்னைக் கோட்டையில் ஓர் அலுவலில் அமர்ந்தார். இவர்தம் பன்மொழிப்புலமையை அறிந்த ஆங்கிலேய அரசினர் இவரைத் தமிழாசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் அமர்த்தினர்.

இவர் கி.பி. 1819-ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் பல பகுதிகளைச் சுற்றிப்பார்த்துத் தமிழ் நூல்கள் பலவற்றைத் தொகுத்தார்; வீரமாமுனிவரின் வரலாற்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடச் செய்தார். இவர் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவராயினும் கிறித்தவ சமயத்தைத் தழுவினார்.

அக்காலத்தில் சென்னை, புரசைப்பாக்கத்தில் இருந்த பொன்னம்பலக் கவிராயர் என்னும் சந்தக்

கவிஞர் கிறித்தவ சமயக் கண்டன நூல் ஒன்று எழுதினார். அதற்கு மறுப்பாக, முத்துச்சாமிப் பிள்ளையவர்கள், உரைநடையும் செய்யுளும் கலந்த நடையில் 'திக்காரம்' என்னும் நூலை இயற்றினார். இவருடைய சமயப்பற்றைக் கண்டு மகிழ்ந்த பாதிரிமார்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள்., இவர், மேலும் பல நூல்களை இயற்றியுள்ளாரெனத் தெரிகிறது.

மற்றொருவர் எழுதாயிதம் பிள்ளையின் மகனாகிய முத்துச்சாமிப்பிள்ளை ஆவார். இவர் திருநெல்வேலியைச் சார்ந்த பாலூரில் வாழ்ந்துவந்தார். இவர் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறந்த புலமைபெற்றவர். இவர் திருநெல்வேலிக்கு வந்து பல ஐரோப்பியர்களுக்கும் பாதிரிமார்களுக்கும் தமிழ் கற்பித்து வந்தார். இவர் அக்காலத்தில் திருவாவடுதுறை மகாசந்நிதானமாக விளங்கிய சுப்பிரமணிய தேசிகமூர்த்திக்கும் தமிழ் கற்பித்தார் எனக் கூறுவர். இவருடைய புலமைக்கு 'நானார்த்த தீபிகை' என்னும் இவர் இயற்றியநூல் சிறந்த சான்றாகும்.

நானார்த்த தீபிகையின் சிறப்புப் பாயிரத்திலிருந்து இவர் சிறந்த சொற்பொழிவாளர் என்பது தெரிகிறது. இவர் சைவர். ந.பி.

*முத்துசாமி ஐயங்கார்*: இவர் தமிழுக்கு அருந்தொண்டாற்றிய பெரும்புலவர். பலரை உருவாக்கியவரும், பல நூல்களை இயற்றியவரும், அவதானத்திறமை படைத்தவருமாவார். முத்துசாமி ஐயங்கார் இராமநாதபுரத்தில் பிறந்தவர். தமிழறிஞர் இரா. இராகவையங்காருக்கு மாதுலர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரை தேவரின் தமிழாசிரியராக விளங்கிய பலருள் இவரும் ஒருவர். மிகச்சிறந்த தமிழறிஞர்களான இரா. இராகவையங்கார், திருநாராயண ஐயங்கார் போன்றோர் இவரிடம் தமிழ் பயின்றனர். சேதுபதியின் உதவியால் இவர் நூலாராய்ச்சி செய்தல், மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லுதல் முதலிய பணிகளில் ஈடுபட்டார்.

இவர் தமிழ் மொழியில் புலமை பெற்றிருந்தது போலவே கன்னட மொழியிலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். இவர் தம் இளமைப்பருவத்திலேயே கன்னட நாட்டு அரசர் கிருட்டிணராச உடையார் முன்னிலையில், கன்னட மொழியில் அட்டாவதானம் செய்து பல்லக்கு, குடை, முத்து மாலை, பொற்குவை முதலியவற்றைப் பரிசாகப் பெற்றார். இவர் உரைவன்மையும் செய்யுளியற்றும் திறமும் பெற்ற பெரும் புலவராய்த் திகழ்ந்தார். இவருடைய அவதானத்திறன் பெரும் புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையாலும் பாராட்டப் பட்டது.

இவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் சந்திராலோகம், மணவாள மாமுனி நூற்றந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதித் திருப்பதிகங்கள்,குருகைக் கலம்பகம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.


மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தொண்டுசெய்தவர்களுள் பலர் இவருடைய மாணவராதலின் அச்சங்க வளர்ச்சியில் முத்துசாமி ஐயங்காருக்கும் பங்கு உண்டு எனலாம். ந.பி.

*முத்துசாமிக் கவிராயர்*: இவர் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ள சுன்னாகம் என்னும் ஊரில், கி.பி.19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், வேளாளர் மரபில், சைவக்குடியில், அம்பலவாணப் பிள்ளை என்பாருக்கு மகனாகப் பிறந்தார். தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்று, திரிபு, மடக்கு, சிலேடை முதலியன மிளிரப்பாடுவதில் சிறந்து விளங்கினார்.

தொல்காப்பியம், இலக்கணவிளக்கம் முதலான நூல்களை முதன்முதலில் அச்சிட்டுத் தந்த சி.வை. தாமோதரம் பிள்ளை முதலானோர், இவர்தம் மாணாக்கர்களாவர். இவரியற்றிய 'ஞானக்கும்மி' அச்சாகியுள்ளது. ஏசுமத பரிகாரம், ஐயனாரூஞ்சல், நடராசர் பதிகம் முதலானவை இவரியற்றியவை. மேலும், பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் இருபத்தைந்து தனிச் செய்யுட்களைத் தொகுத்து, சிலவற்றிற்கு உரையும் எழுதி, சுன்னாகம் குமாரசாமிப்பிள்ளை, 'முத்தக பஞ்ச விம்சதி' எனப்பெயரிட்டு அச்சிட்டுள்ளார். இவரியற்றிய 'நடராசர்' பதிகம் மறைந்து போயிற்று. வீ.சொ.

*முத்துசாமி தீட்சிதர்* (கி.பி. 1775 - 1835): இவர் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர்; திருவாரூரில் தோன்றியவர். இவர் தந்தையார் நெடுங்காலம் மகப்பேறு இன்றி வருந்தி முத்துக்குமார சுவாமியிடம் வேண்டுதல் செய்து கொண்டார். அதன் பின்பு இவர் பிறந்தமையால் முத்துசாமி எனப் பெயரிடப் பெற்றார். இவர் 16 வயதுக்குள் வேதம், காவியம், இலக்கணம் ஆகிய நூல்களைப் பயின்று வீணை வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்றார். இளமையிலேயே இவர்க்குத் திருமணம் ஆனது. இவரது உள்ளமோ தியானத்தில் ஈடுபட்டது. இவர் மனைவி அழகின்றி இருப்பதுதான் அதற்குக் காரணம் எனத் தந்தையார் கருதி அழகியான ஒரு பெண்ணை இரண்டாம் மணம் செய்வித்தார். அதன் பின்னும் இவர் மனம் சிதம்பரநாத சுவாமிகள் என்னும் துறவிக்குப் பணிவிடை செய்வதிலேயே மகிழ்வு கண்டது.

சுவாமிகளுடன் இவர் காசிக்குச் சென்றார். மந்திர உபதேசம் செய்விக்கப் பெற்றார். மந்திர சித்தியினால் இவர்க்குக் கங்கையில் சிறப்புடைய வீணை ஒன்று கிடைத்தது. சுவாமிகளின் ஆசியுடன் இவர் திருவாரூரில் இருந்த தம் தந்தையாரைக் காணப் புறப்பட்டு வந்தார். திருத்தணியில் முதியவர் வடிவில் முருகன் தோன்றி இவர் வாயில் கற்கண்டையிட்டு அருளாசி வழங்கி மறைந்தார். அன்று முதல் தீட்சிதர் தாமாகவே பாடல்களை அமைக்கும் கவித்திறம் பெற்றார். தமிழகத்தில் உள்ள பல திருத்தலங்களுக்கும் சென்று அங்குள்ள தெய்வங்களின் மீது பாடல்கள் பாடியுள்ளார். தம் சீடர்களான பொன்னையா, வடிவேலு ஆகியோரின் வேண்டுகோளின்படி தஞ்சாவூருக்கு வந்து பெருவுடையார் பேரிலும், பிரகதீசுவரி பேரிலும் பாடல்கள் பாடியுள்ளார்.



முத்துசாமி தீட்சிதர்

தம் தம்பியைக் காண இவர் இராமேச்சுரம் செல்லும் வழியில் எட்டையபுரம் அடைந்தார். அங்கு நெடுங்காலமாக மழையின்றி மக்கள்படும் துயர் கண்டார். 'ஆனந்தாமிர்த வர்சினி' என்ற பாடலை அமிர்தவர்சினி இராகத்தில் பாட வானம் பொழிந்தது. மக்கள் மகிழ்ந்தனர்.

ஒரு முறை இவர் சீடன் தம்பியப்பன் தாங்க முடியாத வயிற்று வலியினால் வருந்தும்போது சோதிடர், குரு சனி ஆகிய கிரகங்கள் சரியில்லை என்று கூறினார். அப்போது இவர் குரு, சனி ஆகிய கிரகங்களின் பெருமைகளைப் பாடி வேண்டினார். சீடனின் நோய் நீங்கியது. பின்னர் மற்றவர்களின் வேண்டுகோளின்படி ஏனைய கிரகங்களுக்கும் பாடல்களைப் பாடினார். அவை 'நவக்கிரகக் கீர்த்தனைகள்' என இன்றும் பலராலும் பயிலப்பட்டு வருகின்றன.

காலப்போக்கில் தீட்சிதரின் மனைவிமார் இருவரும் சிவகதியடைந்தனர். இவர்க்கு ஆண்மகப் பேறு இல்லை. ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் உண்டு. எட்டையபுரத்தில் இவர் இருக்கும்போது தம் இறுதிக் காலம் நெருங்கி வருவதை அறிந்தார். மதுரை மீனாட்சியம்மன் மீது தாம் பாடிய பாடல் ஒன்றைச் சீடர்களைப் பாடும்படி கூறினார். அன்று தீபாவளித் திருநாள். எல்லோரும் நீராடிப் புத்தாடை பூண்டு மகிழ்ந்திருக்கும் அந்நேரம் சீடர்கள் பாடிய பாடலைச் செவிமடுத்துக் கொண்டே சிவகதியடைந்தார்.

இவர்தம் பாடல்கள் வடமொழியில் அமைந்தன. மணிப்பிரவாள நடையில் அமைந்த பாடல்கள் மூன்றுள்ளன. அவற்றில் மும்மொழிக் கலப்புள்ளது. இவர்தம் பாடல்களில் 'குருகுக' என்னும் முத்திரை காணப்படும். இராகங்களின் பெயர்கள் பாடலில் இடம்பெறும். மானுடரைப் பாடும் இயல்பில்லாத இவர் சைவ சமய குரவராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளைப் பாடி இருப்பது குறிப்பிடத்தக்கது.

நவக்கிரகக் கீர்த்தனையைத் தவிர மாயவரம் அபயாம்பாள், திருவாரூர் கமலாம்பாள், திருத்தணி முருகேசன் ஆகிய தெய்வங்கள் மீதும் இவர் பாடியுள்ளார். காஞ்சிபுரம், திருவானைக்கா முதலிய பஞ்சபூதத் தலங்களில் உள்ள இறைவனைப் பாடிப் பணிந்துள்ளார். இராமனைப் பற்றி எட்டுப் பாடல்கள் உள்ளன. கண்ணன், திருமகள், கலைமகள் ஆகிய தெய்வங்களையும் இவர் புகழ்ந்து பாடிய பாடல்கள் கிடைத்துள்ளன.

இராகமாலிகையாகப் பாடப்பட்ட கீர்த்தனைகள் நான்கு உள்ளன. அவற்றில் ஒன்று 14 இராகங்களில் (சதுர்தச ராகமாலிகை) பாடப்பெற்றது. சங்கராபரண இராகத்தில் அமைந்து மேல்நாட்டு வர்ண மெட்டுக் கொண்டதாக உள்ள பாடல்கள் 37 உள்ளன. வட இந்திய இசை தழுவிய பாடல்களும் உள்ளன. மேலும், இவர் மிக்க அளவில் பழக்கத்தில் இல்லாத அரிய இராகங்களிலும் பாடல் இயற்றியுள்ளார். இவர் விரும்பும் தெய்வம் குருகுகன். எனினும் இவர் தெய்வ பேதம் பாராட்டாத நாத சோதியாக விளங்கினார். ஜி.ஆர்.கி.

**முத்துசிவன், ஆ**: 'தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை; தாய்மொழியைப்

பாராட்டி வீழ்ந்த நாடும் இலலை' என்ற மொழி முழக்கம் செய்தவர் பேராசிரியர் முத்துசிவனார். இவர் நெல்லைமாவட்டத்தில் விக்கிரமசிங்கபுரம் எனும் சிற்றூரில் 1910-ஆம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர் ஆறுமுகம் பிள்ளை – இசக்கியம்மாள். இவர் 1930-இல் தாம் காதலித்த கிருட்டிணம் மாளைப் பெற்றோர் ஒப்புதலுடன் திருமணம் புரிந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1932முதல் 1935 வரை பயின்று தமிழில் பி.ஏ. (ஆனர்சு) பட்டம் பெற்றார். படிக்கும் காலத்தே தம் பேச்சாற்றலால் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். புதுவயல் சரசுவதி வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார். நெல்லை ம.தி.தா. இந்துக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். அழகப்பா கல்லூரி 1947 – இல் தோற்றுவிக்கப்பட்டபொழுது, தமிழ்த்துறைத் தலைவர் பொறுப்பு ஏற்றார். பணியில் இருக்கும்பொழுதே தம் 44-ஆவது வயதில் 1954 –ஆம் ஆண்டு காலமானார்.



ஆ. முத்துசிவன்

இவர் விடுதலைப் போராட்டக் காலத்தினர்; காங்கிரசு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்; தூய கதராடையும் தொப்பியும் அணியும் பழக்கத்தினர். காரைக்குடிக் கம்பன் கழகத்தொடும் கம்பனடிப் பொடி சா. கணேசனார் அவர்களொடும் நெருங்கிய தொடர்பினர். ஆண்டுதோறும் சொற்பொழிவு, பட்டி மன்றம், கவியரங்கம் என்றினைய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திறம்பட விளங்கினார்.

அசோகவனம், கவிதையும் வாழ்க்கையும், மின்னல் கீற்று, மேடைக் கலை, அசலும் நகலும், கவிதை, அமரகவி பாரதி, மதம் வேண்டுமா?, நடராச தத்துவம் என்றினைய நூல்களையும் பல்வேறு கவிதைகளையும் படைத்துள்ளார். தமிழ் இலக்கிய உலகில் திறனாய்வு இலக்கியத்திற்கு வித்திட்டவர் பேராசிரியர் எனில் அது மிகையாகாது. கலிங்கத்துப் பரணியை விளக்கவுரையுடன் பதிப்பித்துள்ளார். பாரதியார் பாடல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

ஆங்கிலத்தை முன்வைத்துத் தமிழ் வளர வேண்டும் என்ற பெருவிருப்பமுடையவர். 'ஒருவன் தமக்குக் கிடைத்த தமிழ் அறிவையும் ஆங்கில அறிவையும் தக்கமுறையில் பயன்படுத்தி, எவ்வித மான விருப்பு வெறுப்பும் இல்லாத முறையில் கருத்துச் செல்வத்தைப் பெருக்கவேண்டும்' என்பதும் 'கருத்துச் செல்வத்தைப் பெருக்கி, உண்மை எதையும் திறந்த கண்ணுடன் காணும் ஒழுக்கத்தை வளர்க்கவேண்டுமே தவிர, சித்தாந்தக் கண் கொண்டோ, விளம்பரக் கண் கொண்டோ காணுகிற ஒழுக்கத்தைப் பேணக் கூடாது' என்பதும் இவர்தம் கருத்துகளாகும். அ.வி.சு.

## முத்துத்தம்பி பிள்ளை (கி.பி.1858 - 1917):

இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள மானிப்பாய் என்னுமிடத்தில் ஆறுமுகம் பிள்ளை என்பவருக்கு மகனாக தோன்றியவர். இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றி 20 – ஆம் நூற்றாண்டின் முதற் பகுதிவரையில் வாழ்ந்து வந்தார். தமிழ்ப் புலமை நிரம்பிய இவர் நாவலப்பட்டி என்னுமிடத்தில் உள்ள பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

இவர் கி.பி. 1880 – இல் தமிழகம் வந்தார்; திருத்துறைப்பூண்டி, நாகை முதலான ஊர்களில் வாழ்ந்தார்; பல தொழில்கள் செய்தார். பொறையாற்றில் கி.பி. 1884-இல் தொடங்கப்பட்ட சத்தியாபிமானி என்னும் வார இதழுக்கு ஆசிரியரானார். மறு ஆண்டிலேயே இவர் சென்னையில் சூபிலி அச்சகத்தைத் தொடங்கினார். இவர் காளிதாசன் வரலாற்றை வடமொழியிலிருந்து தமிழில் பெயர்த்து வெளியிட்டார்.

இவர் கி.பி. 1893 – இல் தாயகம் திரும்பினார்; வண்ணார் பண்ணையில் ஆறுமுக நாவலர் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கினார்; அதற்கு 'நாவலர் கோட்டம்' எனப் பெயரிட்டார். புத்தகமும் மருந்தும் விற்கும் கடையொன்றைத் தொடங்கினார். நாவலர் பெயரில் இவர் அச்சகம் ஒன்றையும் உருவாக்கினார். தமிழுக்கும் சைவத்திற்கும் பல தொண்டுகளைச் செய்தார்; மேலும், 'இலகு போதம்' என்னும் பெய

ரில் பல பாடநூல்களையும் வெளியிட்டார்; அடுத்தடுத்துப் பல நூல்களையும் வெளியிட்டார். அவற்றுள் அபிதான கோசம், நன்னூல் இலகுபோதம், ஆங்கிலத் தமிழ் அகராதி, 'சிவிலியன் தமிழ் இலக்கணம்', யாழ்ப்பாணச் சரித்திரம், தென்மொழி வரலாறு என்பவை குறிக்கத்தக்கவையாகும்.

அபிதான சிந்தாமணி என்னும் நூல் ஆ.சிங்காரவேலு முதலியாரால் வெளியிடப்பட்டது. அந் நூலுக்கு முன்னோடியானது இவருடைய அபிதான கோசம் என்பர். 'சிவிலியன் தமிழ் இலக்கணம்' ஆங்கிலேயருக்காக எழுதப்பட்டது. யாழ்ப்பாணத்தின் வரலாறு இவராலேயே முதற்கண் எழுதப்பட்டது என்பர் ஆய்வாளர். இங்ஙனம் யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் வாழ்ந்து பல தமிழ்ப் பணிகளை ஆற்றிய இப்புலவர் 1917 – இல் உலக வாழ்வை நீத்தார். இரெ.கு.

**முத்துத் தாண்டவர்**: தமிழிசையின் முன்னோடிகள் என்று போற்றப்படும் மூவருளும் மூத்தவர் முத்துத்தாண்டவர். இவர் கி.பி. 1600-ஐ ஒட்டி வாழ்ந்தவர். இவருக்குப் பின் மாரிமுத்தாப்பிள்ளையும், இவர் காலத்திலேயே அருணாசலக் கவிராயரும் தமிழிசைப் பணியைத் தொடர்ந்து செய்தனர்.

முத்துத்தாண்டவர் சோழநாட்டில் திருஞான சம்பந்தர் தோன்றிய சீகாழியில் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் தாண்டவன் என்பது. இளமையில் கொடிய கன்ம நோயால் வருந்திய இவருக்கு இறைவியின் அருளால் நோய் நீங்கிற்று எனவும், முத்துப் போல் முகத்து ஒளியுடன் திகழ்ந்தமையால் இவர் முத்துத் தாண்டவர் எனப் பெயர் பெற்றார் எனவும் கூறுவர்.

இவர் தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களை நன்கு அறிந்தவர். தில்லை நடராசப் பெருமான் சந்நிதியில் இவர் பாடிய 'பூலோக கயிலாசகிரி சிதம்பரம்' என்னும் பாடலே இவரது முதல் கீர்த்தனையாகும். அது பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகிய அமைப்புகள் கொண்டது. முத்துத் தாண்டவர் சிறந்த குரல்வளம் பெற்றிருந்தார். 'சேவிக்க வேண்டுமையா' என்னும் இவரது பாடல் புகழ்பெற்றது. அதில் தில்லையில் விளங்கும் கற்பக விநாயகர், சேவற்கொடியோன் ஆகியோர் பற்றியும் சிவகங்கை, ஆனித் திருமஞ்சனம், மார்கழி தரிசனம் ஆகியவை பற்றியும் கூறப்பட்டுள்ளன. 'என்னை எனக்குத் தெரியச் சொல்வாய்' என்ற பாடலில் சைவ சித்தாந்தக் கருத்துகளை இவர் அழகாகக் கூறுகின்றார்.

'அருமருந்தொருதனி மருந்து' என்ற இவரது பாடலைப் பின்பற்றியே பிற்காலத்தில் கீர்த்தனைகள் பலசெய்த இராமலிங்க அடிகளார் 'நல்ல மருந்திம் மருந்து' என்ற பாடலைப் பாடினார் என்று கூறலாம். 'தெண்டனிட்டேனென்று சொல்வீர்' என இவர் பாடிய தோடி இராகக் கீர்த்தனை போலவே இராமலிங்க அடிகளாரும் 'தெண்டனிட்டேன் என்று சொல்லடி' என்று பாடியிருப்பது எண்ணத் தக்கது. இப்பாடல்கள் அகத்துறைப் பாடல்களாக அமைந்தன. இவ்வாறு அமைந்த பாடல்களைப் பதம் என்பர். இவை நாட்டிய மேடைகளுக்குப் பொருத்தமானவை.

முத்துத்தாண்டவர் மாணிக்க வாசகரிடத்து மிக்க ஈடுபாடு கொண்டவர். அதனை 'மாணிக்கவாசகர் பேறு எனக்குத் தர வல்லாயோ' என்ற பாடலால் அறியலாம். இவருடைய பாடல்களில் 60 கீர்த்தனைகளும் 25 பதங்களும் அச்சாகியுள்ளன. அவற்றில் காணப்படும் இராகங்கள் 21; தாளவகைகள் 7. இராகங்களுள் சன்னிய இராகங்களே மிகுதி. மிகுதியும் பழக்கமில்லாத பரசு போன்ற இராகங்களிலும் இவர் பாடியுள்ளார். இவர் பாடல்கள் பலவற்றில் மூன்று சரணங்கள் உள்ளன. சரணங்கள் பலவாக அமையும்படி கீர்த்தனை செய்வதற்கு இவர் முன்னோடியாக இருந்தார் எனலாம். இவர் கீர்த்தனைகளில் பல்லவி மிகவும் சொற்செட்டாக இருக்கும். இவர் பாடிய 'ஆனந்தத் தாண்டவம் ஆடினார்' என்னும் கீர்த்தனையில் வரும் சரணம் முடுகியல் சந்தம் பெற்று விளங்குகிறது. அருணகிரிநாதரின் திருப்புகழில் ஈடுபட்டதன் விளைவாக அதனைக் கருதலாம். இவரது பாடலாகிய 'மாயவித்தை செய்கிறானே அம்பலவாணன்' என்ற பாடல் தமிழிசைக்குக் கிடைத்த அரிய பாடல்களுள் ஒன்றாகும்.

நாட்டியக்கலையை நன்கு அறிந்த குலத்தில் பிறந்த முத்துத்தாண்டவருக்கு அகப்பாடலாகிய பதம் பாடும் திறமையும் இருந்தது. இவர் பாடிய பதங்கள் 25. அவை நடராசப் பெருமான்மீது காதல் துறையில் அமைந்தவை. 'தெருவில் வாரானோ என்னைச் சற்றே திரும்பிப் பாரானோ' என்று இவர் பாடிய பதம் நாட்டிய மேடைகளில் அடிக்கடி ஒலிப்பதாகும்.

தமிழ் இசையின் மும்மூர்த்திகள் எனப்படும் மூவருளும் முற்பட்டு விளங்கிய முத்துத் தாண்டவரின் பாடல்கள் இசைச்சுரங்கமாக உள்ளன. சாத்திரம், தோத்திரம் ஆகியவை பயின்ற இசைவாணரின் அருள் வேட்கையே இவர் தம் பாடல்கள். நாட்டியக் கலைக்கு இவர் பதங்கள் வளம் சேர்ப்பன. அழியாத் தமிழிசையை வளர்த்த அருளார்களுள் முத்துத்தாண்டவர் தனிச்சிறப்புப் பெற்றவர் ஆவார். ஜி.ஆர்.கி.

**முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள்**: இறைவனுடைய கீர்த்தியை – புகழினை – எடுத்துரைக்கும் இசைப்பாடல்களைக் 'கீர்த்தனை' எனப் போற்றுவது

தமிழ்நாட்டு மரபு. சந்தக் கவிகளைப் பாடிய அருண கிரிநாதருக்குப் பிறகு (கி.பி. 16-ஆம் நூ.) தமிழில் தோன்றிய இசைப்பாடல் வகை பொதுவாகக் 'கீர்த் தனை' எனும் பெயரால் சுட்டப்படும்.

**கீர்த்தனை:** கீர்த்தனைப் பாடல்கள் 'இழும்' எனும் ஒலிநயத்தோடு, சொற்கட்டு அமைப்பு இணைந்தும், இழைந்தும் இயங்குகின்ற பொழுது, இனிய இசைப்பாடல்களாக அமைகின்றன. திரும்பத் திரும்ப, ஒரே வகையான சொற்கள் அமைய, கருத் தும் விளக்கமும் விரவிவரப் பாடப்படுவது கீர்த் தனை.

கீர்த்தனையில் மூன்று பகுதிகள் உள்ளன. அவை பல்லவி, அநுபல்லவி, சரணம் என்பன. 'கீர்த்தனை யில்'. இசைக் கூறுகள் இயல்பாகவே பொருந்தி யுள்ளன. 'பல்லவி' என்பதனை 'எடுப்பு' எனவும், 'அநுபல்லவி' என்பதனைத் 'தொடுப்பு' எனவும் 'சரணத்தை'த் 'தொகுப்பு' அல்லது 'இணைப்பு' என வும் கூறுவர். கீர்த்தனைப் பாடல்கள் சிலவற்றில், 'அநுபல்லவி' என்னும் பகுதி அமைவது இல்லை. பொதுவாகச் 'சரணத்தில்', இரண்டு 'கண்ணிகள்' இடம் பெறுவது வழக்கம். ஆனால், ஆறுக்கு மேற் பட்ட கண்ணிகளைக் கொண்ட கீர்த்தனைகளும் சிறப்பு நிலையில் இயற்றப்படுவதுண்டு.

**முத்துத் தாண்டவரின் கீர்த்தனைகள்:** இத்தகைய இயல்புகளைக் கொண்டனவாக, முத்துத் தாண்டவர் கீர்த்தனைகள் அமைந்துள்ளன. முத்துத் தாண்டவர் இயற்றிய கீர்த்தனைகள் அறுபதும், பதங்கள் இரு பத்தைந்தும் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இவர் இயற்றிய கீர்த்தனைகள் ஐந்நூறுக்குக் குறை யாதவை எனவும் அவற்றுள் அறுபதே கிடைத்துள் ளன எனவும் அறிஞர் கருதுகின்றனர்.

**காலம்:** முதன் முதலில் தமிழில், கீர்த்தனைகள் இயற்றிய பெருமைக்குரியவர் முத்துத் தாண்டவர். தெலுங்குக் கீர்த்தனைப் பாடல்களைத் தமிழ் நாட் டில் இயற்றிப் பெரும்புகழ் பெற்றுள்ள தியாகரா யருக்குக் காலத்தால் முற்பட்ட தமிழிசைவாணர் முத்துத் தாண்டவராவார்.

**வரலாறு:** இன்றைக்கு ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்பு, சோழ நாட்டில் உள்ள சீகாழியில் தோன்றியவர், இத்தமிழ்க் கீர்த்தனை ஆசிரியர். இவர், இசை வேளாளர் குடியில் தோன்றி யவர். நாதசுரக் கலைஞராகச் சிறப்புற்று விளங்க வேண்டிய இக்கலைஞர், தொழுநோயால் சிறுவயதில் தாக்குண்டு, அல்லற்பட்டுத் தம் மரபுத்தொழிலைக் கைவிட வேண்டியவரானார்.

இவருடைய இயற்பெயர் 'தாண்டவன்' என் பதாகும். நோயாலும் வறுமையாலும் வாடிய தாண்ட வன், ஒரு கணிகையிடம் கொண்ட தொடர்பு காரண மாக, உற்றார் உறவினரால் புறக்கணிக்கப்பட்டார்.

சீகாழிக் கோயிலில், 'பிச்சை' யேற்று வாழும் அவல நிலைக்குத் தாண்டவர் ஆளானார். ஒரு நாள் இரவு, கோயிலினுள்ளே, இவர் உறங்கிவிட்டார். கோயில் கதவுகள் சாத்தப்பட்ட பிறகு, நடுநிசியில் தாண்டவர் விழித்து எழுந்தார்; பசியாலும் நோயின் கொடுமையாலும் இவர் பதைபதைத்தார். அந்த நிலையில், அர்ச்சகரின் பத்து வயது மகள் வடிவில் தோன்றிய தேவியின் திருவருளை இவர் பெற்றார். திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டிய அன்னையின் திருவருளால், தாண்டவர் 'ஞானஒளி' யைப் பெற்றார். இவர்முன் எழுந்தருளிய அந்தச் சிறுமி, சிதம்பரம் சென்று, தில்லை அம்பலவாணரைப் போற்றிப்பாடினால் நோயின் கொடுமை குறையும்; ஆன்மிக அனுபவம் பெருகும் என்று சொல்ல, உடனே இவர் புலமை பெறாத தான் எதைப்பற்றி, எப்படிப் பாடமுடியும் எனக் கேட்டார். தில்லைப் பெருமானை வணங்குகின்றபொழுது, காதுகளில் விழுகின்ற சொற் களை முதல் சீராகக்கொண்டு பாடத் தொடங்குக; பாட்டு இயற்றும் ஆற்றலை அம்பலவாணர் அருளு வார் என்று சொல்லி, அப்பெண் மறைந்தாள். அதற் குப் பின்னரே அதுவரையில் தம் முன்னால் நின்று உணவு அளித்து, அறிவுரை கூறிய சிறுமி, அன்னை பராசக்தி என்பதைத் தாண்டவர் உணர்ந்தார்.

பின்னர்ச் சிதம்பரத்திற்குச் சென்று ஆடல் வல்லானை வணங்கி, அவனுடைய திருவருளை வேண்டினார். அப்பொழுது, 'பூலோக கயிலாசகிரி சிதம்பரம்' எனும் சொற்களை யாரோ கூற, அவை தாண்டவர் காதுகளில் விழ, அச்சொற்களைப் பல்லவி யாகக் கொண்டு, 'பூலோக கயிலாசகிரி சிதம்பரம் அல்லால், புவனத்தில் வேறும் உண்டோ?' எனத் தொடங்கும் கீர்த்தனையை இவர் பாடினார் எனச் சொல்லுவர்.

அதைத் தொடர்ந்து, பல ஆண்டுகள், இவர் சிதம்பரத்தில் தங்கி வாழ்ந்தார். இடையிடையே தம் சொந்த ஊரான சீகாழிக்குச் சென்று வந்தார். அப்பொழுது, தம்முடைய திருப்பாடல்கள் மூலம், வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் பலவற்றைச் செய்துள் ளார்.

**பெயர் விளக்கம்:** 'தாண்டவன்' எனும் இயற் பெயரைப் பெற்றிருந்த இவரிடத்து மக்களுக்கு மதிப் பும், பக்தியும் இவர்தம் கீர்த்தனைகளால் காலப் போக்கில் உண்டாயின. அதன் விளைவாக மக்கள், இவரைத் 'தாண்டவர்' என்று மதிப்புடன் போற்ற

லாயினர். தாண்டவருடைய பாடல்கள், 'முத்து களைப் போன்று (அறிவு) ஒளியும், கவர்ச்சியும் வாய்ந்தனவாக விளங்கியமையால், 'முத்தான கீர்த் தனைகள் இயற்றும் கவிவாணர்' என்று இவரைச் சிறப்பித்து, மக்கள் பாராட்டினர். அதன் விளைவாக முத்துத்தாண்டவர் எனும் திருப்பெயரால் இவர் அழைக்கப்பட்டார் எனக் கூறுவர்.

இசைவாணராகப் பேரும் புகழும் பெற்ற பின்னர்த் தம்முடைய குடும்ப முதல்வர் 'முத்தையா' என்பவ ரின் நினைவினைப் போற்றும் வகையில், தம்முடைய பெயருக்கு முன்னால், 'முத்து' எனும் அடையைச் சேர்த்துக் கொண்டார் எனச் சீகாழியைச் சேர்ந்த இவருடைய மரபில் வந்தவர்கள் கூறுகின்றனர்.

துறவியாகவே வாழ்ந்து அருளாளராகவும் பக் திச் செல்வராகவும் சிறப்புற்று விளங்கிய முத்துத் தாண்டவர், ஆவணிப் பூச நன்னாளில் (ஆண்டு யாதெனத் தெரியவில்லை), நடராசப் பெருமான் முன்னர், 'மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல் லாயோ?' எனும் கீர்த்தனையைப் பாடியவாறே, இறைவனுடைய 'திருவடிப்பேற்றை அடைந்தார்' எனக் கூறுவர்.

எளிய மனிதனாக, இசைவாணர் மரபில் பிறந்த முத்துத்தாண்டவர் இறைவனுடைய திருவருளால் இயற்றமிழ்ப் புலமையும், இசைத் தமிழ்ப் புலமையும வாய்ந்த அருளாளராக, மெய்யுணர்வு பெற்ற மெய்ஞ்ஞானியாக மலர்ச்சியுற்றார். 'நாளும் இன் னிசையால் தமிழ் பரப்பி'த் தில்லை அம்பலவாணரின் திருவடிகளில் பேராவியற்கைப் பெருநிலையை இவர் பெற்றார்.

**கீர்த்தனைகளின் சிறப்பியல்புகள்:** இவருடைய கீர்த்தனைகள் பக்திச் சுவை ததும்புவன: சொல் நய மும் பொருள் நயமும் வாய்ந்தன: இசை இன்பம் பயப்பன. இவ்வாறு நாவிற்கும் உள்ளத்திற்கும் இன் பம் பயப்பதோடு, வாழ்க்கையிலும் பக்தி வெள்ளத் தில் ஆழ்த்தும் ஆற்றல் வாய்ந்தன. முத்துத் தாண்ட வரின் பாடல்கள் படிப்பவர், பாடுபவர் உள்ளங் களைக் கனிவித்து, சிவபக்தி பெருகுமாறு செய்கின் றன. எதுகை, மோனைகள் நிறைந்து, இசை நுணுக் கத்தோடு, ஓசை இன்பம் பயக்கின்றன.

இவருடைய கீர்த்தனைகள், பதங்கள் யாவுமே தில்லை நடராசப் பெருமானிடம் காதலாகிக் கசிந் துருகிப் பாடப்பட்டனவாகும். வேறு எந்தத் தெய் வத்தையும் இவர் பாடினாரெனத் தெரியவில்லை.

கேள்வி ஞானத்திலும், ஏட்டுக் கல்வியிலும் இவர் சிறந்து விளங்கியிருக்க வேண்டும் என்பதை, இவருடைய திருப்பாடல்கள் தெரிவிக்கின்றன. நுட்ப மான சைவசித்தாந்தக் கருத்துகள் பல, இவருடைய பாடல்களில் ஒளிவிடுகின்றன. தேவார, திருவாசகக் கருத்துகள், தொடர்கள் பல, தாண்டவரின் கீர்த் தனைகளில் ஏறுநடை போடுகின்றன.

சிம்மவர்மன் எனும் பல்லவ மன்னன், நடரா சரை வழிபட்டதன் பயனாகத் தொழுநோயி லிருந்து விடுபட்டு, 'இரணியவர்மனாக' மாறிய வர லாற்றுச் செய்தியையும் இவருடைய பாடல்கள் குறிப்பாகப் புலப்படுத்துகின்றன.

இறையருள் பெற்ற ஆன்மா ஒன்றின் 'பரலோக யாத்திரையைச்' சித்திரிக்கும் அருட்பாடல்களாக முத்துத் தாண்டவரின் கீர்த்தனைகள் பொலிவுறு கின்றன. மருந்திற்குக்கூடக் 'காமரசம் சொட்டும்' நாயகன்-நாயகி பாவப் பாடல்களைத் தாண்டவரு டைய படைப்புகளில் காண இயலாது.

**தாண்டவரின் தாக்கம்:** இவர் தம் இசைப் பாடல் கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில், செயற்கைப் புலமை வாய்ந்த பண்டிதர்கள் இயற்றிய தமிழ்ச் செய்யுட்களில் இருந்து, வேறுபடுகின்றன. எளிய சொற்கள், பேச்சுமொழிநடை, நெகிழ்ச்சிமிகு தொடர் மொழிகள், எளிய சந்தம் போன்ற புதிய செய்யுட் கூறுகள் முத்துத் தாண்டவரின் கீர்த்தனை களுக்கு வலிவும், வனப்பும் அளித்துள்ளன. தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாருக்கு முன்பே, தமிழ்ப் பாடல்களில் புதுமையைப் புகுத்திய பாவலராக இவர் விளங்குகிறார்.

சரபோசி மன்னருடைய நண்பராக விளங்கிய கிறித்தவ சமயக் கவிஞரான தஞ்சை வேத நாயக சாத்திரியார், முத்துத் தாண்டவரின் கீர்த்தனைகள் பலவற்றைப் பின்பற்றி, இயேசு பெருமானைப் பற் றிய துதிப்பாடல்கள் பலவற்றை இயற்றியுள்ளார். சிறப்பாகத் 'தோத்திரம் செய்மனமே' எனும் முத்துத் தாண்டவரின் பாடலை (51), அதே அமைப்பில் அமைந்துள்ள வேதநாயகரின் பாடலோடு ஒப்பிட்டுக் காணலாம். தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள் போற்றிப் பாடும் பாரம்பரியப் பாடல்கள் பல, முத்துத் தாண் டவரின் கீர்த்தனைகள் தந்த உந்துதல் சக்தியால் வெளிப்பட்டவை என்பதை ஒப்பாராய்ச்சியின் மூலம் அறியலாம்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த கோபாலகிருட் டிண பாரதியாரின் கீர்த்தனைகள் பலவற்றில், முத் துத் தாண்டவரின் தாக்கத்தைக் காண முடிகிறது. 'சேவிக்க வேண்டும் ஐயா சிதம்பரம்' (மு.தா.கீ. 2) எனும் பாடல் பல்வேறு வடிவங்களில் கோபால கிருட்டிண பாரதியாரின் படைப்புகளில் களிநடம்புரி கின்றது.

சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் சிறப்புற்று விளங்கியவர் அருளாளர் இராமலிங்க வள்ளலார். தில்லை நடராசப் பெருமானைப் பற்றி அவர் பாடியுள்ள, கீர்த்தனைகளும், பதங்களும் பலவாகும். அவற்றுள், முத்துத் தாண்டவருடைய கீர்த்தனைகளின் மெட்டு, சொல்லாட்சி, கருத்தோட்டம் முதலியவற்றைப் பரக்கக் காணலாம்.


'அருமருந்து ஒரு தனிமருந்து' (மு.தா. கீ. 37), 'அரகர சிவசிவ' (மு.தா.கீ.40), 'சம்போ சங்கர மகா தேவா' (மு.தா.கீ. 20) என்னும் முத்துத்தாண்டவரின் பாடல்களைச் சிறப்புமிக்க சான்றுகளாக இங்குக் காட்டலாம். அவை, வடலூராரின் பாடல்களில் எதிரொலிக்கின்றன.

இந்த நூற்றாண்டைச் சேர்ந்த சுப்பிரமணிய பாரதியார், கவியோகி சுத்தானந்த பாரதியார் ச.து.சு.யோகியார், பெரியசாமித் தூரன் முதலிய இயலிசைவாணரின் படைப்புகளில், முத்துத் தாண்டவரின் இசைப் பாடல் மரபு ஏரும் எழிலும் பெற்று விளங்குகின்றது.

சுருங்கச் சொல்லுவதெனில், தமிழில் கீர்த்தனைகள் இயற்றிய பிற்காலப் புலவர்கள் எல்லாரும் முத்துத்தாண்டவரின் கீர்த்தனைகளை முன்மாதிரியாகக் கொண்டே, தம் பாடல்களை இயற்றியுள்ளனர் எனலாம். ஆனால், தெலுங்கிலும், மணிப்பிரவாளத்திலும் கீர்த்தனைகள் இயற்றிய தமிழ்நாட்டு இசைவாணர்களுக்குக் கிடைத்திருக்கும் பேரும் புகழும், முத்துத் தாண்டவருக்குக் கிடைக்கவில்லை என்பது சிந்திக்கத்தக்கது. க.த.தி.

**முத்துத் தாண்டராயப் பிள்ளை, ப.அ.:** தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப் பேட்டையைச் சேர்ந்த ப.அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை தமிழில் மட்டுமன்றி, சோதிடம், மருத்துவம், கல்வெட்டு முதலிய பல்துறைகளிலும் பெரும்புலவராக விளங்கியவர். இவர் கி.பி. 1868-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 28-ஆம் நாள் அப்பாசாமி பிள்ளை, அன்னம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். சேலத்தில் படித்துப் பின்னர், பரங்கிப் பேட்டையில் ஒரு பள்ளியைத் தொடங்கினார். அதற்குப் பின் தரங்கம்பாடி உலூத்தரன் திருச்சபை ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஆசிரியராகவும், சீகாழியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் ஐரோப்பியத் திருமறைத்தொண்டர்கட்குத் தமிழ் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். வெளிநாட்டினர் பலர், குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இவரிடம் தமிழ் கற்றுச் சிறந்தனர். இவர்தம் மாணவர்கள் மலேசியா, மோரிசு, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் சிறந்து விளங்கினர்.



ப.அ. முத்துத் தாண்டவராயப் பிள்ளை

இவர்தம் துணையால் திருவாசகம், சிவஞான போதம், சிவஞான சித்தியார், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், தாயுமானவர் பாடல் முதலியவற்றை ஐரோப்பியர்கள் அவர்களுடைய மொழிகளில் மொழிபெயர்த்தனர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, தேவாரம், திவ்வியப்பிரபந்தம் முதலியவற்றின் சிற்சில பகுதிகளும் இவர்தம் துணையால் ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ், ஆங்கில அகராதி வெளிவருவதற்கும் இவர் துணைபுரிந்தார் என்று கூறப்படுகிறது.

இவர் நல்ல பதிப்பாளராக விளங்கியுள்ளார். திருப்பறியலூர்ப் புராணம், திருமுல்லைவாயில் புராணம் முதலியவற்றை ஆராய்ந்து சைவ மடங்கள் வழியாக வெளியிட்டுள்ளார். கார் மண்டல சதகத்திற்கு விளக்கவுரை எழுதியுள்ளார். வாருண மான்மியம் என்னும் பரங்கிப்பேட்டையைப் பற்றிய புராணம் இவரால் இயற்றப்பட்டது. கீர்த்தனங்களும், சித்திர கவிகளும் இயற்றியுள்ளார்.

இவர் பெரியபுராணச் சொற்பொழிவு ஆற்றுவதில் சிறந்து விளங்கினார். இவருடைய சமயப்பற்றினையும், தமிழ்ப் புலமையையும் சிறப்பிக்கும் வகையில், திருவாவடுதுறை ஆதீனத்தால் 'கலை நிரம்பிய அறிஞர்' என்னும் பட்டமும், தருமபுர ஆதீனத்தால்

'வித்துவ சிகாமணி' என்னும் பட்டமும் வழங்கப்பட்டன.

இவருக்குத் தொல்பொருள் ஆராய்ச்சி ஆர்வமும், கல்வெட்டுப் பயிற்சியும் இருந்தன. காழிக் கல்வெட்டுகள், சேதுபதி நாணயம், சோதிட நூல், வைத்திய நூல், மதுபான விலக்கு, தில்லையாடிப் புராணம்,சாதாக்கியத் திருமுறை முதலியன இவரால் இயற்றப்பட்ட நூல்கள். அவை இவர் புலமைக்குச் சான்று பகரும். மாலை, ஊசல், பதிகம், இருபாஇருபஃது, இரட்டைமணிமாலை போன்ற பிரபந்த வகைகளையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

கண்பார்வை இழந்த தம் இறுதிக் காலத்திலும் இவர் பிறருக்குத் தமிழ் கற்பித்து வந்தார் எனத் தெரிகிறது. பல்வகைப் பொதுப்பணியிலும், ஊர், கோயில், மருத்துவம் முதலான பணிகளிலும் ஈடுபட்டிருந்த இவர் 1942-ஆம் ஆண்டு காலமானார். சு.இ.

**முத்துரங்க முதலியார், சி. என்:** விடுதலைப் போராட்ட வீரரும், சமுதாயச் சீர்திருத்தவாதியுமான சி.என். முத்துரங்க முதலியார் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நாசரத்துப் பேட்டை என்னும் ஊரில் கி.பி. 1882-இல் வைணவப் பற்றுள்ள குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வரதப்ப முதலியார்; தாயார் உருக்குமணி அம்மையார். பேட்டை, திருவள்ளூர், திருமழிசை முதலான ஊர்களிலுள்ள வைணவ ஆலயங்களைக்காத்து வந்தவர்கள் இவர்தம் முன்னோர்கள் ஆவர்.

புரசைவாக்கத்திலுள்ள சிங்கிலர் உயர்நிலைப் பள்ளியில் படிப்பை முடித்துப் பின் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் படித்து, 1907-ஆம் ஆண்டு பி.ஏ. பட்டம் பெற்றார். இவர் 1912 - ஆம் ஆண்டு புட்பவல்லி என்பாரை மணந்தார்.

வங்காளப் பிரிவினையைக் காங்கிரசு இயக்கம் எதிர்த்த போது இவரும் அதில் பங்கேற்றார். இவருடைய அரசியல் வாழ்க்கை 1920-30 ஆகிய ஆண்டுகளில் எசு. சீனிவாச ஐயங்கார் தலைமையின் கீழும், 1930-40-இல் இராசாசியின் தலைமையின் கீழும், அதன்பின் 1940-49-இல் காமராசரின் தலைமையின் கீழும் நிகழ்வுற்றது.

சீனிவாச ஐயங்கார் சுயராச்சியக் கட்சியாளரின் (Swaraj Party) தலைவராக விளங்கியவர். அவருடைய அடிச்சுவட்டில் விடுதலைக் கொள்கையில் ஈடுபாடு கொண்டார். பாரதி, வ.உ.சி. ஆகியோரிடம் மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் 1917-ஆம் ஆண்டு டாக்டர் அன்னிபெசண்டின் தன்னாட்சிஇயக்கத்தில்பங்கேற்றார். இவர் 1923-இல் காக்கிநாடாவிலும், 1924 - இல் பெல்காமிலும் நடைபெற்ற இந்தியத் தேசிய காங்கிரசின் மாநாடுகளில் கலந்து கொண்டார். பின்னர் 1925-இல் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலக் காங்கிரசு மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத்தலைவரானார். இவர் 1926-இல் செங்கற்பட்டு மாவட்டத்தில் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது நீதிக் கட்சியின் தலைவர்களுள் ஒருவரான ஆர்க்காடு இராமசாமி முதலியார் இவரிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

இந்தியத் தேசிய காங்கிரசின் வரவேற்புக் குழுத் தலைவராக 1927-ஆம் ஆண்டிலும், தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக 1929-ஆம் ஆண்டிலும் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இந்திய விடுதலை நாள் என 1930 சனவரி 26-ஆம் நாளைக் காங்கிரசு கொண்டாடிய போது இவர் தடையை மீறி ஊர்வலம் சென்றதால் ஓராண்டுக் கடுங்காவல் தண்டனையும், உரூபாய் 100 ஒறுப்புக் கட்டணமும் விதிக்கப்பட்டு வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்தபோது அன்னை உருக்குமணி இறந்த செய்தி கேட்டும் பிணைப் பொறுப்பில் வெளிவர மறுத்துவிட்டார்.

இவர், 1934-இல் மிக்க அளவில் வாக்குகள் பெற்று மத்திய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1936-இல் தில்லியின் தட்பவெப்ப நிலை ஒத்துக் கொள்ளாமையால் பணியினின்றும் விலகினார்.

இவர் 1937, 38-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் காங்கிரசுத் தலைவரானார். தனி ஆள் அறப்போரில் 1939-ஆம் ஆண்டு ஈடுபட்டு மூன்று மாதம் சிறைத் தண்டனையும், உரூபாய் 300 ஒறுப்புக்கட்டணமும் விதிக்கப்பட்டு, பெல்லாரிச் சிறையில் அடைக்கப்பட்டார். வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942--ஆம் ஆண்டு நிகழ்ந்தபோது சிறை செய்யப்பட்டு அம்ரோட்டிச் சிறைக்கு அனுப்பப் பட்டார். உடல் நலக் குறைவினால் 1943-இல் விடுதலை செய்யப்பட்டார். காங்கிரசு இயக்கம் தடை செய்யப்பட்டதால் காங்கிரசுச் சங்கம் என்ற பெயரில் இயக்கம் நடத்திக் காங்கிரசு இயக்கத்திற்கு உயிரூட்டினார். சென்னை மாநிலச் சட்டமன்றத்திற்கு 1946-ஆம் ஆண்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், நாசரத்துப் பேட்டையில் 1949-ஆம் ஆண்டு மறைந்தார்.

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கும், அவர்கள் வாழ்வில் வளம் சேர்ப்பதற்கும், விடுதலைப் போராட்டக் காலத்தில் பெரும் பணியாற்றினார். எண்ணிறந்த ஆலயங்களின் அறங்காவலராக விளங்கிய இவர் முற்போக்கு எண்ணங் கொண்டவராக

வும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ந.க.ம.

**முத்துராசர்:** இவர் சோழநாட்டு உறையூரைச் சேர்ந்தவர்; சைவ சமயத்தினர். இவர் தந்தையார் பெயர் செந்தியப்பர். இவர் 'சிங்கையாரியச் சக்கர வர்த்தி' யாழ்ப்பாண நல்லூரில் தங்கி அரசியல் நடத்தியதைக் கலிவெண்பாவில் 'கைலாயமாலை' எனும் நூலாகப் பாடினார். இது யாழ்ப்பாணக் குடியேற்ற வரலாறு கூறும் நூல்.

மு.ச.

**முத்துராமலிங்கத் தேவர்:** இவர், மாவட்டப் பிரிப்பிற்கு முன்னர் இராமநாதபுரம் என்ற பெயரில் விளங்கிய மாவட்டத்தில் உள்ள பசும்பொன் என்ற கிராமத்தில் 1908 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 – ஆம் நாள் செல்வச் செழிப்பு மிக்க உக்கிர பாண்டியத் தேவருக்கும் இந்திராணி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவர் குழந்தைப் பருவத்திலேயே (29.4.1909) தம் தாயாரை இழந்தார். தந்தையின் நண்பர் குழந்தைசாமி பிள்ளை, முத்துராமலிங்கம் படிக்க ஊக்கமளித்தார். கமுதியிலும், பசுமலையிலும், மதுரையிலும் படித்தார். குடும்பச் சூழ்நிலை காரணமாக உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முழுமையாக முடிக்கவில்லை.

தங்கள் குடும்ப வழக்கை நடத்தி வந்தவரும் சுதந்திரப் போராட்டத் தலைவர்களுள் ஒருவருமான சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் எசு.சீனிவாச ஐயங்கார் அளித்த ஊக்கத்தின் காரணமாக 1927 – இல் சென்னையில் நடைபெற்ற இந்தியத் தேசிய காங்கிரசு மாநாட்டில் கலந்து கொண்டார். அப்போதுதான் சுபாசுசந்திர போசுடன் அறிமுகம் ஏற்பட்டது. சுபாசுசந்திர போசுடன் கல்கத்தா சென்ற முத்துராமலிங்கம், போசு குடும்பத்தினரின் ஒன்பதாம் குழந்தை போல் அன்புடன் நடத்தப்பட்டார்.

கல்கத்தாவில் இருந்து திரும்பிய முத்துராமலிங்கம் தமிழ் இலக்கியங்கள், சமய நூல்களைக் கற்றதோடு சுவாமி விவேகானந்தரின் போதனைகளால் கவரவும் பட்டார்.

இவர் 1932-இல் காந்தியடிகள் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். பின்னர் 1939-இல் நடைபெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயில் 'அரிசன ஆலயப் பிரவேசத்தில்' பெரும் பங்கு பெற்றுச் செயற்பட்டார். மதுரை இராமநாதபுரம் முக்குல மக்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த குற்றப்பரம்பரைச் சட்டத்தை (Criminal Tribes Act) எதிர்த்துப் போராடி வெற்றியும் பெற்றார்.

முத்துராமலிங்கத் தேவரின் உணர்ச்சி மிக்க பேச்சுகளின் வேகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத ஆங்கிலேய அரசு, இவர் எந்த மேடையிலும் பேசக்கூடாது என்று வாய்ப்பூட்டுச் சட்டத்தைப் பலமுறை போட்டது.

இவர் 1937 – 38-இல் பசுமலை மகாலெட்சுமி ஆலை, மதுரை மீனாட்சி ஆலை ஆகிய ஆலைத் தொழிலாளர்களின் போராட்டத்தில் கலந்து பல முறை சிறை சென்றார். தமிழகத்தில் தொழிற்சங்க இயக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பது அதன் மூலம் அறியப்படுகிறது.



முத்துராமலிங்கத் தேவர்

இவர் 1936 – இல் தம் அரசியல் வாரிசான மூக்கையாத் தேவரோடு பர்மா சென்று திரும்பினார். இவர் 1936 - இல் நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் முதுகுளத்தூர்த் தொகுதியில் காங்கிரசு வேட்பாளராக நின்று மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றி பெற்றார். இராமநாதபுரம் பொதுத் தொகுதியில் 1937 – இல் நீதிக் கட்சியைச் சேர்ந்த இராமநாதபுரம் அரசரை எதிர்த்துக் காங்கிரசு வேட்பாளராக நின்று வெற்றி பெற்று நீதிக் கட்சியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தார்.

திரிபுராவில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரசு மாநாட்டில் (1939) காங்கிரசுக் கட்சியின் தலைவர் பதவிக்குப் பட்டாபி சீதாராமையாவும் சுபாசுசந்திர போசும் போட்டியிட்டபோது போசின் வெற்றிக்குப் பெரும் துணையாக இருந்தார். இவர்

1939-சூன் 22 – இல் போசு 'பார்வர்டு பிளாக்கு' கட்சியைத் தொடங்கியபின் செப்டம்பர் 6, 1939 – இல் மதுரையில் போசுக்குத் தேவர் மாபெரும் வரவேற்பு அளித்தார். தேவர் தீவிரவாதியெனக் கருதப்பட்டு 1939 – ஆம் ஆண்டு, பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டுப் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டார். வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம் 1942–இல் தோன்றியபின்தான் காங்கிரசுத் தலைவர்களே கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். உலகப் போர் முடிந்த பின்னர் 1945 செப்டம்பர் 5-ஆம் நாள் தேவர் விடுதலை செய்யப்பட்டார். பின்னர் 1946 – ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் இவர் ஆற்றிய தியாகத்தின் காரணமாக முதுகுளத்தூர்த் தொகுதியில் காங்கிரசு வேட்பாளராகப் போட்டியின்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுதந்திர இந்தியாவில் 1952 சனவரியில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஒரே சமயத்தில் தில்லி பாராளுமன்றத்திற்கும், சென்னைச் சட்டமன்றத்திற்கும் முறையே அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர்த் தொகுதிகளில் 'பார்வர்டு பிளாக்கு' வேட்பாளராகப் போட்டியிட்டு இரண்டிலும் வெற்றிபெற்றார். தேவர் 1962-இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சிரீவில்லிபுத்தூர்ப் பாராளுமன்றத் தொகுதியில் பாராளுமன்ற வேட்பாளராக நின்று தொகுதிக்குச் செல்லாமலே வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வெற்றி வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். தமிழகத்தில் 'பார்வர்டு பிளாக்கு' கட்சித் தலைவராக விளங்கிய தேவர் தம் இறுதிக் காலம் வரை அரசியல் முறையில் காங்கிரசு எதிர்ப்பாளராகவே இருந்தார்.

தேவர் 1955-ஆம் ஆண்டு பர்மாத் தமிழர்கள் சங்க அழைப்பினை ஏற்றுப் பர்மா சென்று இந்து, பௌத்த சமயக் கோட்பாடுகளைப் பற்றி உரை நிகழ்த்தித் திரும்பினார்.

தேவர் 1957 செப்டம்பரில் மதுரையில் நடைபெற்ற சனநாயகக் காங்கிரசுச் சீர்திருத்தக் கட்சி மாநாட்டைத் தொடங்கி உரை நிகழ்த்திவிட்டுத் திரும்புகின்ற வழியில், முதுகுளத்தூர்க் கலவரத்தில் இவர் ஈடுபட்டதாகக் கருதிக் கைது செய்யப்பட்டு, வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் நீதிமன்றம் அக்கலவரத்திற்கு இவர் காரணமில்லை என்று தீர்ப்பளித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தோற்றத்திலும், வாழ்விலும் எளிமையையும், அரசியலில் நேர்மையையும், ஆன்மிகத்தில் ஆழ்ந்த பற்றையும், பேச்சாற்றலில் தனித் தன்மையையும் கொண்டு, 'தேசியம் என் உடல்; தெய்விகம் என் உயிர்' என வாழ்ந்து வந்த தேவர் 1963-ஆம் ஆண்டு அவர் பிறந்த நாளாகிய அக்டோபர் 30 – இல் மறைந்தார். அவர்தம் தியாகத்தையும் அரசியல் நேர்மையையும் பாராட்டித் தமிழகஅரசு 'பசும்பொன் தேவர் திருமகன்' என்று ஒரு மாவட்டத்திற்குப் பெயர் சூட்டியுள்ளது. மேலும், சட்டமன்றத்தில் இவரது நிழற்படத்தையும் வைத்துப் பெருமைப்படுத்தியுள்ளது. க.போ.

**முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி (கி.பி. 1760–1809):** செல்லமுத்து விசயரகுநாத சேதுபதிக்குப் பின்னர்ச் சேதுபதி நாட்டு வேந்தராக இருந்தவர் இந்த 'முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி' ஆவார். 'முத்துராமலிங்க சேதுபதி மன்னர் கி.பி. 1792-இல் ஆங்கில அரசுக்கு எதிராகப் புரட்சி செய்யும் போக்கினைக் கொண்டிருந்தார்' என்றும் 'அதனால் அவர் சீமையை நிருவகிக்கக் கும்பினி ஆட்சியாளர் (Company Collector) நியமிக்கப்பட்டதுடன் சேதுபதி மன்னரும் சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கேயே கி.பி.1809-இல் காலமானார்' என்றும் கூறுவர்.

'மறவர் சீமையின் மன்னரான இவர், ஆர்க்காட்டு நவாபு, ஆங்கிலேயர் ஆகிய இருவர் ஆதிக்கத்தையும்புறக்கணித்தார்; தன்னரசு நிலையை எய்துவதற்கு முயன்றார்' என்று மறவர் வரலாறு (History of Maravas-Page.185) கூறுகிறது. 'விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' என்னும் பெயரில் ஓர் ஆய்வு நூல் வந்துள்ளது. அது, இவ்வேந்தர் தம் வரலாறேயாகும்.

ஆட்சியுரிமை கொண்டாடிய மாப்பிள்ளைத் தேவன் என்பார் வேண்டலாலும் தூண்டலாலும் தஞ்சை மன்னன் துல்சாசியின் பெரும்படை இராமநாதபுரம் கோட்டையை முற்றுகையிட்டுத் (3.2.1771) திடுமெனத் தாக்கிப் பதினாறு நாள்கள் கடும்போரிட்டு வீழ்த்தியது. அந்நிலையில், இராமநாதபுரம் பெரிய கண்மாய் உடைபட்டு வந்த வெள்ளத்தை எதிரிட முடியாமல் அரசியாரிடம் தஞ்சை மன்னன் அமைதி உடன்பாடு செய்து கொண்டு திரும்பினான். ஆனால், மீண்டும் 1771-இல் ஒரு படையெடுப்பு ஆர்க்காட்டு நவாபின் படையும் கும்பினியாரின் படையும் கூடி நடத்தின. ஆர்க்காட்டு நவாபின் மேலாண்மையைச் சேதுபதி ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் அத்தாக்குதல் நிகழ்ந்தது. சேதுநாட்டை அரசாங்கச் சீமையாக ஆக்க வேண்டும் என்ற இருபது ஆண்டுக் கால எண்ணம் பீரங்கியாக வெடித்துக் கோட்டையைப் பிளந்தது. பன்னிரண்டே வயதான இளவரசர் முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதியும், அரசியாரும், பிரதானி பிச்சைப்பிள்ளை என்பாரும் சிறைப்படுத்தப்பட்டனர். பின் திருச்சிக் கோட்டைக்குச்

சிறைக் கைதியாக அனுப்பப்பட்டனர். ஏன் இந்தத் தாக்குதல் நேர்ந்தது? இராமநாதபுர மன்னர் நவாபின் ஒப்புதல் இல்லாமல் மறவர் சீமை மன்னராக முடிசூட்டிக் கொண்டிருப்பது; நவாபிற்குச் சொந்தமான பல ஊர்களை அவர் தம் சீமையில் சேர்த்துத் தம் கீழ்க்கொண்டு வந்திருப்பது; அயலவரான தச்சுக்காரருக்கு மறவர் சீமையில் தொழில் மையமும் பண்டகசாலையும் பிறவும் நிறுவ இசைவளித்திருப்பது; நவாபின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு கப்பத் தொகை இதுவரை செலுத்தாமல் இருந்து வருவது என்பன சாட்டப்பட்ட குற்றங்களாகும்.

சேதுபதியைச் சிறைப்படுத்தியபின், நாட்டின் ஆட்சிமுறையில் வேண்டாத பல மாற்றங்களை நவாபு புகுத்தினார். அதனால் பொறுமை இழந்த மக்கள் ஆங்காங்கு எதிரிட்டு மோதினர். நவாபின் ஆட்சியை அகற்ற வேண்டும் என்னும் சூழ்நிலையும் உருவாகியது பின்னர் கி.பி. 1780-இல் மைசூர் மன்னன் நவாபின் மீது மின்னல் தாக்குத் தாக்கினான். பல இடங்களில் போர் மூண்டது. சேதுநாடும் வீறிடும் நிலையில் இருந்ததால் சிறையில் இருந்த சேதுபதிக்கு விடுதலை தந்து சேதுநாட்டுக்கு விடுத்தான்.

சிறைமீண்ட சேதுபதி முடிசூடிக் கொண்டு பன்னிரண்டாண்டு சீரிய நிலையில் ஆட்சி நடத்தினார். நாட்டின் பரப்பை அளவிட்டு, நிலத்துக்குத் தக்க தீர்வைத் தரம் உண்டாக்கினார். திண்ணைப் பள்ளிகளே நடைமுறையில் இருந்ததை மாற்றி மேனாட்டுக் கல்விமுறைப் பள்ளிகள் உண்டாக உதவினார். திருக்கோயில்களைப் பழுதுபார்த்தல், வழிபாடுகள் முட்டின்றி நடக்கச் செய்தல் ஆகியவற்றில் கருத்துச் செலுத்தினார். அதற்கெனப் பல ஊர்களுக்குச் செல்லும் பக்தர்களுக்குப் பாதுகாப்பும் பசியின்றி உண்ண வாய்ப்பும் ஏற்படுத்தினார். இராமேசுவரத் திருக்கோயில் மூன்றாஞ் சுற்றுத் திருப்பணியை நிறைவித்தவரும் இவரே. இவர் காலத்தில் கைத்தறித் தொழிலும் கப்பல் வணிகமும் மிகச் சிறந்து விளங்கின.

அந்நிலையில் ஆர்க்காட்டு நவாபு தமக்கு ஏற்பட்ட பெருங்கடன் காரணமாகச் சேதுநாட்டு மேலாண்மை உரிமையை கி.பி. 1792 – இல் ஆங்கிலேயருக்கு வழங்கினார். சேதுநாட்டுத் தறிகள் அனைத்தும் கிழக்கிந்தியக் கும்பினிக்கு மட்டுமே நெய்து தர வேண்டும் என்றும் சேதுபதி வழியாக ஆணை பிறப்பிக்க முனைந்தார். சேதுபதி அதனை மறுத்துவிட்டார். அதனால், சேதுபதியின் பிரதானி முத்திருளப்பரைப் பயன்படுத்தித் தம் சூழ்ச்சிகளைச் செயற்படுத்தலானார். கும்பினியார் இறக்குமதி செய்யும் நெல்லுக்கு, வரி நீக்கம் வேண்டினர். அதனையும் மறுத்துவிட்டார் சேதுபதி. ஆர்க்காட்டு நவாபு அது பற்றிக் கண்டிப்பான சில ஆணைகள் விடுத்தார். தம்மைச் சந்திக்குமாறு ஆட்சியாளர் (Collcetor) சேதுபதியை அழைத்தார். அவற்றையெல்லாம் புறக்கணித்தார் சேதுபதி. அந்நிலையில் தூத்துக்குடியில் இருந்து சென்னைக்குச் செல்லும் கும்பினியார் சரக்குக் கப்பல்கள் இரண்டு வந்தன. அவற்றை முறையான சோதனையும், சுங்கவரி கட்டுதலும் இல்லாமல் விடுக்க முடியாதென்று பாம்பனில் நிறுத்தி வைத்து விட்டார் சேதுபதி. அவற்றால், கும்பினியார் சேதுபதியின் மேல் கடுஞ்சினம் கொண்டனர். நாட்டைக் கைப்பற்றத் திட்டமிட்டனர்.

இராமநாதபுரம் கோட்டைக்காவல் கி.பி. 1772 முதலே கும்பினித் தளபதி மார்ட்டின்சு என்பான் பொறுப்பில் இருந்து வருவதால், சேதுபதி அறியாமலே படைகொண்டு தாக்கி முற்றாகக் கோட்டையைத் தம்வசப்படுத்திவிடக் கும்பினியார் சூழ்ச்சி செய்தனர். இதனை அறிந்து கொண்ட சேதுபதி, தப்பிவிட முனைந்தார். எனினும், கும்பினிப் படையின் எதிர்பாராத வஞ்சகத்தால் சிக்குண்டு சிறைப்படுத்தப்பட்டார்.


மீண்டும் திருச்சிக் கோட்டைக்குச் சேதுபதியைக் கொண்டு சென்று சிறைப்படுத்தி வைத்தனர். சேதுபதி கி.பி. 1795 முதல் பதினான்கு ஆண்டுகள் சிறைக் கொடுமையுற்றார். அவர் உடல்நிலை மிகச் சீர்கெட்டுப் போகவே அவர் நண்பர் ஶ்ரீவேங்கடாசலம் செட்டியார் பொறுப்பில் 22-1-1809-இல் சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மறுநாள் இரவே நாட்டு விடுதலையை விரும்பிய சேதுபதிக்கு உலக விடுதலை கிட்டியது. சேதுபதிக்கு 24.1.1809-இல் இறுதிச் சடங்கு நிகழ்ந்தது.

கும்பினியாரை எதிர்த்து விடுதலைககுக் கிளர்ந்தெழுந்த குற்றத்திற்காக 48 ஆண்டுக் கால வாழ்வில் 24 ஆண்டுக் காலம் வெங்கொடுஞ்சிறையில் சிக்கிச் சீரழிந்தார் சேதுபதி. ஆனால், அவ்விடுதலையுணர்வே, பின்வந்த விடுதலைப் புரட்சிகளுக்கும் கிளர்ச்சிகளுக்குமெல்லாம் மூலப் பொருளாக அமைந்தது. முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதியின் உரிமைக்குரல், பிறப்புரிமைக் குரலாய் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாயிற்று. இதே பெயரிடப்பட்ட இருவர் பிற்காலத்தில் ஆட்சி செலுத்தியுள்ளனர். அவர்கள் முத்துராமலிங்க சேதுபதி(கி.பி. 1861-1873), பாசுகர இராசராசேசுவர முத்துராமலிங்க சேதுபதி (கி.பி. 1873-1903) ஆகியோராவர். அவர்களுள் இரண்டாமவர் பலமொழிகளிலும் வல்லவர். வள்ளல் பாண்டித்துரைத் தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை 14-9-1901 – இல் நிறுவியபோது துணையாய் நின்றவர். அவரே

சுவாமி விவேகானந்தரைச் சிகாகோவில் நடைபெற்ற உலகச் சமயங்கள் மாநாட்டிற்கு இந்துசமயப் பேராளராக அனுப்பி நாட்டுக்கும் சமயத்திற்கும், பெருமை சேர்த்தவர் ஆவார். என்.எஸ்.மு.

**முத்துலட்சுமிரெட்டி, திருமதி:** இவர் பெண்ணுரிமைக்காக உழைத்துப் புகழ்பெற்ற பெண்மணி. இவர் புதுக்கோட்டையில் நாராயணசாமி, சந்திரம்மாள் ஆகியோருக்கு மூத்த மகளாக, கி.பி. 1886-ஆம் ஆண்டு, ஜூலை 30 – ஆம் நாள் பிறந்தார். இவர் தநதையார் புதுக்கோட்டை சமசுதானத்தின் கல்வித் துறை இயக்குநராகவும், அங்குள்ள அரசர் கல்லூரி முதல்வராகவும், அரசரின் ஆலோசகராகவும் இருந்தார்.

இவ்வம்மையார் தம் பத்தாம் வயதில் ஆறாம் வகுப்பு முடித்தார். பத்து வயதிற்கு மேல் பெண் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புவது முறையன்று என எண்ணித் தந்தையார் பள்ளிக்கு அனுப்பவில்லை. இவர் தம் ஆசிரியர் பாலையா முயற்சியால் திரும்பவும் பள்ளியில் பயின்றார். பின்னர்த் தம் மகளின் கல்வித் திறனைக் கண்ட நாராயணசாமி வீட்டிற்கு ஆசிரியரை வரவழைத்துத் தம் மகளுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தார். கல்லூரி முன்னிலைத் (Matriculation) தேர்வு எழுதி வெற்றி பெற்றார்.



முத்துலட்சுமி ரெட்டி

புதுக்கோட்டை மன்னரின் தனி ஆணை பெற்றுத் தம் மகளைக் கல்லூரியில் நாராயணசாமி சேர்த்தார். வகுப்பில் திரை மறைவிலிருந்து பாடம்கேட்டு, ஓய்வு நேரத்தில் தனி அறையில் தங்கி, கல்லூரித் தலைவரும் பேராசிரியர்களும் புகழத்தக்க வண்ணம் விளங்கிக் கல்லூரிப் படிப்பை முடித்தார். இவருடன் பயின்று புகழோடு வாழ்ந்தவர்களுள் அறிஞர் சத்தியமூர்த்தி குறிப்பிடத்தக்கவர்.

தாமும் தம் தாயாரும் நோயால் உற்ற துன்பத்தை எண்ணித் தாம் ஒரு மருத்துவராக ஆக வேண்டும் என உறுதி கொண்டார். தம் தந்தையாரின் பழைய மாணவர் சீனிவாசராவின் உதவியுடனும் புதுக்கோட்டை மன்னரின் உதவிப் பணத்துடனும் 1907-ஆம் ஆண்டு, சென்னை மருத்துவக்கல்லூரியில் சேர்ந்தார். ஒவ்வொரு ஆண்டும் சிறந்த கல்வித் தேர்ச்சியினால் நற்சான்றிதழ்களும் தங்கப் பதக்கங்களும் பெற்றுத் தனிச்சிறப்போடு 1912-ஆம் ஆண்டில் மருத்துவப் பட்டம்பெற்றார். அதனால் இந்தியாவிலேயே மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற சிறப்புக்கு உரியவரானார்.

சிறந்த தேசியவாதியான நஞ்சுண்டராவ் அடிக்கடி இவர் வீட்டிற்கு வந்து இவர் தந்தையாருடன் உறவாடியது இவருடைய அரசியல் சிந்தனையைத் தூண்டியது. அதன் காரணமாகச் சரோசினிநாயுடு, அன்னி பெசண்டு அம்மையார், பாரதியார் போன்றவர்களுடைய தொடர்பு ஏற்பட்டு, அவர்களோடு சேர்ந்து சொற்பொழிவாற்றும் சிறந்த வாய்ப்புகளும் ஏற்பட்டன. பின், சென்னை எழும்பூர் மருத்துவமனையில் அத்துறை வரலாற்றிலேயே முதல் பெண் மருத்துவமனைப் பணி மருத்துவராகச் (House Surgeon) சேர்ந்து 1913 – ஆம் ஆண்டு அப்பயிற்சியை முடித்து எழும்பூரில் தனியாக மருத்துவத் தொழில் புரியத் தொடங்கினார்.

திருமணத்தை விரும்பாத அம்மையார் தந்தையாரின் வற்புறுத்தலினால் 1914 – ஆம் ஆண்டில் டாக்டர் சுந்தரரெட்டியைத் திருமணம் செய்து கொண்டார். அவர் இலண்டனுக்குச் சென்று எப் ஆர்.சி.எசு.பட்டம் பெற்ற முதல்இந்தியர் ஆவார். அவர் திருமணம் ஆவதற்கு முன் விசாகப்பட்டினம் சார்சு மன்னர் மருத்துவ மனையில் பணியாற்றினார். இவர்களுக்கு 1914-இல் இராம்மோகன் என்ற முதல் மகனும், 1919-இல் கிருட்டிணமூர்த்தி என்ற இரண்டாம் மகனும் பிறந்தனர்.

திருமணத்திற்குப் பின் டாக்டர் சுந்தரரெட்டி புதுக்கோட்டை மருத்துவ மனையில் தலைமை மருத்துவராகச் சேர்ந்து மூன்று ஆண்டுகள் திறம்படப் பணியாற்றினார். டாக்டர் முத்துலட்சுமியும் அங்குப் பணியாற்றினார். பின், டாக்டர் சுந்தரரெட்டி சென்னை மருத்துவக் கல்லூரியில் உதவிப் பேராசிரி

யராகச் சேர்ந்தார்; அனைவரும் சென்னைக்குச் சென்றனர். சென்னையில் முத்துலட்சுமியின் சகோதரி சுந்தரம்பாள் புற்றுநோயால் துன்புற்றுப் பின் கல்கத்தா மருத்துவ மனையில் மரணமடைந்தார். அந்நிகழ்ச்சி புற்றுநோயைப் போக்கும் முயற்சிக்கு முத்துலட்சுமியை ஈர்த்தது.

இந்திய அரசு உதவியால், தம் குடும்பத்தோடு 1925-ஆம் ஆண்டு இலண்டன் சென்று செல்சியா மருத்துவமனையில் தாய் சேய் மருத்துவப் பயிற்சி பெற்று, 'இராயல்' புற்றுநோய் மருத்துவ மனையில் புற்றுநோய் ஆய்வும் செய்தார். அப்பொழுது பிரான்சு நாட்டுப்பாரிசு நகரில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் இந்திய மகளிர் கழகத்தின் சார்பாக அம்மையார் கலந்துகொண்டு குழந்தைமணக் கொடுமை, விதவைத் திருமணம், பெண்களின் உரிமைகள் ஆகிய வற்றைப் பற்றிச் சிறந்த சொற்பொழிவு ஆற்றினார். பின்னர், இவர் இந்தியா திரும்பினார்.

பெண்களும் வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிடலாமென 1926-ஆம் ஆண்டு, சட்டமியற்றப்பட்டதன் விளைவாகச் சென்னையில் உள்ள இந்திய மகளிர் கழகம் இவரைச் சட்ட மேலவை உறுப்பினராக நியமிக்குமாறு ஆளுநரை வேண்ட அவரும் ஏற்றார். உறுப்பினராக இருந்தவர், துணைத் தலைவர் பதவியும் ஏற்றார். அதனால் இந்தியாவில் முதன் முதல் சட்டப்பேரவையில் ஒரு பெண் இடம் பெற்ற பெருமையைத் தமிழகம் பெற்றது. அப்பணியில் 1926-ஆம் ஆண்டு முதல் 1930 - ஆம் ஆண்டு வரை அமர்ந்து ஆற்றிய பணிகளுள் குறிப்பிடத்தக்கவை, தேவதாசி ஒழிப்புச் சட்டம், விபசார ஒழிப்புச் சட்டம், பெண்கள் திருமண வயதை உயர்த்தும் சட்டம் ஆகியவையாகும்.

தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேற அம்மையார் அடைந்த இடுக்கண்கள் பல. சமூகத்திற்கு வழுக்கி விழுந்தோர் தேவையென்றும், அவர்கள் கோயில் பணிக்கெனப் படைக்கப்பட்டவர்கள் என்றும், அது சாத்திர இசைவுபெற்றது என்றும் சில செய்தித்தாள்கள் எழுதின. அம்மையார் தமிழகம் எங்கும் சூறாவளிப் பயணம் செய்து, அறிஞர் பலருடைய ஆதரவினைப் பெற்றார். சென்னைக்கு 1927 - ஆம் ஆண்டில் வந்த காந்தியடிகளின் ஆதரவையும் வேண்டினார். அம்முயற்சியைக் காந்தியடிகள் பல கூட்டங்களில் பாராட்டி ஆதரவளித்தார். இறுதியில் பெரும் வெற்றிகண்டார். தேவதாசி இனத்தைச் சேர்ந்த பெண்கள் சிலரைச் சென்னையிலிருந்த பெண்கள் காப்பகத்தில் சேர்க்க விழைந்தபொழுது காப்பாளர்கள் மறுக்கவே, அவர்களுக்குத் தம்வீட்டிலேயே அடைக்கலந்தந்து 1930-இல் அவ்வை இல்லத்தைத் தொடங்கித் தம் சகோதரி நல்ல முத்துவைக் காப்பாளர் ஆக்கினார். இன்று அந்த அமைப்பு அடிப்படைப் பள்ளி, தொடக்க, உயர்நிலை, மேல்நிலை, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், முதியோர் பிரிவு, கைத்தொழில் பயிற்சிப் பிரிவு, செவிலியர் பயிற்சிப் பிரிவு, கிராம மருத்துவப் பணிப்பிரிவு, குறைந்த வருமான வேலைபார்க்கும் பெண்களுக்கு விடுதி ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. வீட்டிலிருந்த அவ்வை இல்லம் 1930-ஆம் ஆண்டு அடையாற்றிற்கு மாற்றப்பட்டது. அதன் வளர்ச்சியில் சுந்தரரெட்டி முழுப் பங்கேற்றார்.

உப்பு சத்தியாக்கிரகம் 1930 - இல் நடந்தபோது காந்தியடிகள் சிறையிலிடப் பட்டதை அறிந்து அம்மையார் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவியையும், துணைத்தலைவர் பதவியையும் விடுத்தார். சென்னையில் நடந்த நிருமாண ஊழியர் மாநாட்டில் 2.12.1933 அன்று இவர் ஆற்றிய உரையைக் காந்தியடிகள் மிகவும் பாராட்டினார். சிகாகோவில் 1933 - ஆம் ஆண்டில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். சென்னை மாநகராட்சியில் நியமனக்குழு உறுப்பினராக 1937 முதல் 1939 வரை இருந்து மருத்துவப் பணிக்காகவும், உடல் நல்வாழ்வுப் பணிக்காகவும் சிறந்த தொண்டாற்றினார். புற்றுநோய் நிவாரண நிதியை 1949-ஆம் ஆண்டு ஏற்படுத்தி, 2 ஆண்டுகள் முயன்று நிதி திரட்டிப் புற்றுநோய் நிலையத்தை அடையாற்றில் ஏற்படுத்தினார். அதனைத் தென் மண்டலப் புற்றுநோய் ஆராய்ச்சி மையமாகவும், குணப்படுத்தும் மையமாகவும் மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

இவர் தமிழ்நாடு சமூக நல வாரியத் தலைவராகவும், சட்ட மன்ற மேலவை உறுப்பினராகவும் 1954-1957-ஆம் ஆண்டுகளில் பணியேற்றுத் தொண்டாற்றினார். இவ்வம்மையாருக்கு 1956-ஆம் ஆண்டு 'பத்மபூசன்' விருது வழங்கி மைய அரசு சிறப்புச் செய்தது. இவர் 22.7.1968-இல் தம் 82-ஆம் வயதில் தாம் உருவாக்கிய அடையாறு புற்றுநோய் நிலையத்தில் காலமானார். இப்பெருமாட்டியின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு 1986-87-இல் சிறப்பாகக் கொண்டாட, மைய அரசு சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டது.

க.அ.

*முத்துவீர உபாத்தியாயர்:* இவர் முத்துவீரியம் என்னும் ஐந்திலக்கண நூலை யாத்தவர்; திருச்சி நகரத்திலுள்ள உறையூர் வண்டிக்காரத் தெருவில் வாழ்ந்தவர். கொல்லர் இனத்தைச் சேர்ந்தவர். அதனால் இவர் கம்மாள வாத்தியார் என்றே

அழைக்கப்பட்டார். உபாத்தியாயர் என்று தொழிற் சிறப்புப் பெயரோடு அழைக்கப்படுதலால் இவர் ஒரு நல்லாசிரியராக இருந்திருப்பார் எனத் தெரிகிறது. இவர், கி.பி. 19 – ஆம் நூற்றாண்டினர். திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் எழுதப்பட்ட அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் நூலுக்குச் சிறப் புப் பாயிரம் பாடியுள்ளார். அதனால் இவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் காலத்தில் வாழ்ந்தவர் ஆக லாம். மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடத்து நிரம்பிய மதிப்பும் அன்பும் கொண்டிருந்தார் என்பதை இவ ருடைய சிறப்புப் பாயிரம் காட்டுகிறது. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வரலாற்றை எழுதிய டாக்டர் உ.வே. சாமிநாதையர், 'இவரை (முத்துவீர உபாத்தி யாயரை) நான் பார்த்திருப்பதுண்டு' (ப.17) என்று குறிக்கின்றார்.

முத்துவீர உபாத்தியாயர் தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் நிரம்பப் புலமையுடையவர். நெல்லைச் சுப்பிரமணிய தேசிகர் வேண்ட, முத்து வீரியத்தை இவர் இயற்றினார் எனப் பாயிரம் கூறு கின்றது. அந்நூலின் உரையாசிரியராகிய திருப்பாற் கடனாதன் கவிராயரே அதற்குப் பாயிரம் பாடி யிருக்கிறார். முத்துவீர உபாத்தியாயருடைய மாண வர்கள் அமிர்தம்பிள்ளை, சோமசுந்தர நாயக்கர், பிச்சை இபுராகிம் புலவர், நாகை நாராயணசாமிப் பிள்ளை முதலியோராவர்.

சிறந்த தமிழறிஞர்கள் உருவாவதற்குக் காரண மாக இருந்தவர் என்று இவரைக் கூறலாம். மறை மலையடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார் பேரா சிரியர் சுந்தரம்பிள்ளை, நாகூர் குலாம் காதிறு நாவலர் முதலியோர் இவருடைய மாணவர்களுக்கு மாணவர்கள் ஆவர்.

இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் என்பதை இவருடைய இலக்கண நூலின் ஐந்ததிகாரச் சிறப்புப் பாயிரங்களும் உணர்த்துகின்றன. அவ்விலக்கண நூலன்றி வேறெந்த நூலையும் இவர் எழுதியதாகத் தெரியவில்லை. சா.கி.

**முத்துவீரப்பக் கவிராயர்**: இவர் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற் றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்து மறைந்த தமிழ்ப்பெரியார். இவர் கி.பி. 1891 – ஆம் ஆண்டு பிறந்தார். இவர் செவற்குளம் கந்தசாமிப் புலவரின் மருகர் என்பதும், நகரம் முத்துசாமிக் கவிராயர் தம்பியின் மகள் வயிற்றுப் பேரர் என்பதும் குறிப் பிடத்தக்கன. புராணங்கள் குறித்து இசைச்சொற் பொழிவு நிகழ்த்துவதில் இவர் திறன் மிக்கவர். இனிய இசையுடன் புராணப் பாடல்களைப் பாடி விளக்கம் தரும்பணியில் தம்மை முழுமையாக ஈடு படுத்திக் கொண்டவர் இவர். தமிழ்ச் சங்கத்தார் விரும்பிய வண்ணம் பல இசைப் பாடல்களைப் பாடி யும் இயற்றியும் உள்ளார். அப்பாடல்கள் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன. இவரை, நகரம் முத்து வீரப்பக் கவிராயர் என்றும் குறிப்பிடுவர். இசைத்தமிழ் வளர்ச்சிக்குத் துணைநின்ற இவர் 1943 – ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

**முத்துவீரியம்**: இது முத்துவீர உபாத்தியாயர் என்பவரால் எழுதப்பெற்ற ஐந்திலக்கண நூல். தொல்காப்பியத்திற்குப் பின் எழுத்து, சொல், பொருள் என்ற இலக்கணப் பகுப்போடு,யாப்பு,அணி என்னும் இரண்டையும் சேர்த்து ஐந்திலக்கணப்பகுப் பாக உருவெடுத்தது. முதற்கண் வீரசோழியமும் பின் இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் போன்ற நூல்களும் தோன்றின. நன்னூல் (கி.பி. 15–ஆம் நூ.) ஐந்திலக்கணம் கூறுவதாக அதன் பாயிரம் கூறினாலும், எழுத்து சொல் இரண்டை மட்டுமே கூறுவதாக இப்பொழுது நிலவுகிறது.

இவ்வைந்திலக்கண நூல் வரிசையில் கி.பி.19 –ஆம் நூற்றாண்டில் எழுந்ததுதான் இம் முத்துவீரிய மாகும். தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் வல்ல வராக ஆசிரியப் பணிபுரிந்த முத்துவீர உபாத்தியா யரை நெல்லைச் சுப்பிரமணிய தேசிகர் வேண்ட, அவர் இந்நூலை இயற்றியதாகப் பாயிரம் கூறுகின் றது. ஆக்கியோன் பெயராலேயே நூற்பெயர் அமை தலுண்டு எனும் விதியால் தம் பெயரால் நூலுக்குப் பெயரிட்டார்.

இந்நூல் அதிகாரம் என்ற பெயரில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து பிரிவு களாக அமைந்துள்ளது. ஒவ்வோர் அதிகாரத்திற்கும் தனித்தனியே ஒரு சிறப்புப் பாயிரம் பாடிச் சேர்த் துள்ளார். இந்நூலின் எழுத்ததிகாரத்தில் 458,சொல் லதிகாரத்தில் 311, பொருளதிகாரத்தில் 93, யாப்பதி காரத்தில் 267, அணியதிகாரத்தில் 160 என 1289 நூற்பாக்கள் உள்ளன. நூற்பாக்கள், நூற்பா யாப் பால் ஆனவை. எழுத்தியல், மொழியியல், புணரியல் என எழுத்ததிகாரத்திலும், பெயரியல், வினையியல், ஒழிபியல் எனச் சொல்லதிகாரத்திலும், அகவொழுக்க வியல், களவொழுக்கவியல், கற்பொழுக்கவியல் எனப் பொருளதிகாரத்திலும், உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என யாப்பதிகாரத்திலும் சொல்லணியியல் பொருளணியியல், செய்யுளணியியல் என அணியதிகா ரத்திலும் மும்மூன்றாக இயல்கள் அமைந்துள்ளன. ஐந்திலக்கண நூல்களுள் பெரியநூலாக இது காணப் படுகின்றது.

இந்நூலின் முதல் இரண்டு பகுதிகள் கி.பி.1881 -ஆம் ஆண்டு எம். பட்டாபிராமன் பிள்ளையால் வெளியிடப் பட்டன. அதற்குப் பின் கி.பி. 1889 -ஆம் ஆண்டில் எசு. பழனியாண்டி என்பவரால் சென்னை ஆல்பிண்டன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு நூல் முழுமையாக வெளியிடப் பட்டது.

தொல்காப்பியம் நன்னூல் போன்றவற்றினின் றும் நிரம்பியவளவில் நூற்பாக்கள் எடுத்தாளப் பட்டுள்ளன. உரைகள் பலவற்றினின்றும் கருத்து களை எடுத்து நூற்பாவாக்கப்பட்டுள்ளன. எழுத்து களின் வகை, பெயர், பிறப்பு போன்றவற்றையும் மாத்திரை, போலி, மொழி முதல் இறுதியெழுத்து கள் பற்றியும் எழுத்தியல் என்னும் இயல் ஆய்கின் றது. உயிர்மெய், ஆய்தம் ஆகிய இரண்டும் சார் பெழுத்து என்று கூறுகின்றது. அளபெடை, இயற்கை யளபெடை, செயற்கையளபெடை, இன்னிசையள பெடை, சொல்லிசையளபெடை, நெடிலளபெடை, குறிலளபெடை, ஒற்றளபெடை, எழுத்துப் பேறள பெடை என எட்டு வகைப்படும் என்று வரையறுத் துக் கூறப்பட்டுள்ளது.

மாத்திரையளவில் கால், அரை, முக்கால் முத லானவற்றிற்குக் கூறப்படும் 'உன்னல் காலே ஊன் றல் அரையே முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே' எனும் காரிகை 4 - இன் மேற்கோள் நூற்பா இந் நூலுள் எடுத்தாளப்பட்டுள்ளது. பல பெயர்களுக்கு முரிய இணையான வட சொற்கள் நூற்பாவில் சேர்த்துக் கூறப்பட்டுள்ளன.

மொழியியல் என்னும் பிரிவு பெரும்பான்மையும் வடமொழி இலக்கண மரபைத் தழுவியதாக அமைந் துள்ளது. புணரியல், சாரியைப் புணர்ச்சியையும் சொற்புணர்ச்சியையும் கூறுகின்றது. சாரியைகளைப் பொறுத்த மட்டில் 'மான்' என்னும் புதிய சாரியை யைக் கூறியதாக உரையில் காணப்படுகின்றது (174). இருப்பினும் அதற்கான எடுத்துக்காட்டு எதுவும் தரப்படவில்லை. சாரியைப் புணர்ச்சியைக் கூறு கின்ற இடங்களிலும் 'மான்' என்னும் அச்சாரியைக் குரிய விதியோ எச்சொற்களோடு புணரும் என்பது பற்றியோ குறிப்பிடப்படவில்லை. மாறாகச் சாரியை பற்றிய தொகை கூறும் நூற்பாவில் (174) இல்லாத 'ஆன்' சாரியை பற்றி விதிகள் (230,231) காணப் படுகின்றன. எனவே, தொகைகூறும் நூற்பாவில் கொள்ளப்பட வேண்டியது 'ஆன்' சாரியை என்று கொள்ளுவதே பொருந்துவதாகும்.

சொல்லதிகாரத்துள் அமைந்த பெயரியல் நன் னூலைத் தழுவி அமைந்துள்ளது. சொல்லை ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகையாகப் பாகுபடுத்தியுரைக்கின்றது. வினை யியல், தொல்காப்பியத்தை அடியொற்றிக் காணப்படு கின்றது. இடையியல், உரியியல் போன்றவற்றின் கருத்துகள் ஒழிபியலுள் கூறப்பட்டுள்ளன.

புறப்பொருள் பற்றிய விளக்கம் நிரம்பவும் இல்லாமல் பொருளதிகாரம் அமைந்துள்ளது. பேராசிரியரின் திருக்கோவையார் உரைச் சூத்திரங் களைத் தழுவிக் களவு, கற்பொழுக்கவியல்கள் அமைந் துள்ளன.

உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் ஆகிய மூன்றியல்களைக் கொண்ட யாப்பதிகாரம், யாப்பியல் செய்திகளைத் தெளிவுபடக் கூறுகின்றது. சவலை என்னும் வெண்பா வகைக்கு இலக்கணம் கூறுகின்றது. 'இரண்டு குறள் வெண்பாக்கள் ஒரு விகற்பத்தால் வருவது சவலை வெண்பாவாகும்' என்பது அவ்விலக் கணம் (908). 'ஆனால்' எல்லாவகை வெண்பாக்களும் எழுத்தசை சீர் குறைந்தும் எதுகையின்றியும் தொடை வேறுபட்டும் வருவது சவலை வெண்பா' என இலக் கணச் சூடாமணி (18) கூறுகின்றது. கலிவெண்பா, வெண்பா வகையுள்ளும், வெண்கலிப்பா, கலிப்பா வகையுள்ளும் அடக்கிக் கூறப்பட்டுள்ளன (910,943). பாட்டியல் இலக்கணம் ஒழிபியலுள் பகுத்துரைக்கப் பட்டுள்ளது. குறுகிய இகர, உகரங்கள் அலகு பெறாமையும் சீர், தளை வரையறை போன்றவை களும், பாவுக்குரிய நாள், கிரகம் போன்றனவும் ஒழிபியலுள் அமைந்துள்ளன. சிறு நூல் இலக்கணமும் கூறப்பட்டுள்ளது.


தண்டியலங்காரத்தில் உள்ள அமைப்பு முறை போல் இல்லாமல், முறை மாறி இயல் அமைப்புகள் காணப்படுகின்றன. சித்திரகவிகள், பெரும்பான் மையும் வழக்குக் குறைந்துவிட்ட காரணத்தால் அவைபற்றிச் சுருங்கிய அளவில் எடுத்துரைக்கப்பட் டுள்ளன. பொருளணியியலுள் 58 - அணிகளுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தண்டியலங்காரத்தில் காணப்பெறாத அணிகள் சுட்டப்பட்டுள்ளன; பல அணிகளுக்குரிய வடமொழிப் பெயர்கள் தமிழ்ப் படுத்தப் பட்டுள்ளன. பரிவர்த்தனை, மாற்றுநிலை யணி என்றும், தூரகாரிய ஏது, தொடர்பின்மை அணி என்றும் ஆளப் பட்டுள்ளன.

இவ்வாறு முன்னோர் இலக்கண மரபுகளைப் போற்றியும், புதுக்கியும் யாக்கப்பெற்றுள்ள இந்நூல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் குறிக்கத்தக்க ஐந்திலக் கண நூலாகும். சா.கி.

*முந்தூற்றுக் கூற்றம்*: இது தொன்முதிர் வேளிருக்கு உரியதாக இருந்த ஓர் ஊர். பாண்டிய

நாட்டில் மருதநில வளம் வாய்க்கப் பெற்றதாக இருந்த இந்த ஊரைப் பாண்டியன் தலையானங் கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன்வேளிர் குலத் தவரிடமிருந்து கைப்பற்றினானென மாங்குடி கிழார் புறநானூறு 24-இல் கூறுகிறார். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பூவணம் தாமிரப் பட்டயத்தில் இக் கூற்றத்தின் பெயர் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. கயலூர் என்ற ஊரும் இக் கூற்றத்தை ஒட்டி அமைந்த ஊராகும். இது முத்தூர்க் கூற்றம் எனவும் வழங்கும். க.ஆ.

**முத்தையா செட்டியார்,அரசர்**: இவர் புகழ் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நிறுவிய அரசர் அண்ணாமலை செட்டியாருக்கும், இராணி சீதை ஆச்சிக்கும் 1905-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 5-ஆம் நாள் தலைமகனாய் இன்றைய பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்த செட்டி நாட்டில் பிறந்தார். மெய்யம்மை ஆச்சியை 1917-இல் மணந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று 1924-இல் இளங்கலைப் பட்டம் பெற்றார். இந்தியன் வங்கியில் 1928-இல் இயக்குநர் ஆனார். நீதிக்கட்சி உறுப்பினராக 1930-இல் சேர்ந்து 1936 – வரை அதன் தலைவராகத் திகழ்ந்தார்.



அரசர் முத்தையா செட்டியார்

சென்னை மாநகராட்சியின் முதல் நகரத்தந்தை யாக (Mayor) 1933-இல் தேர்ந்தெடுக்கப் பெற்றார். சென்னை மாநிலக்கல்வி அமைச்சராக 1936-இல் விளங்கினார். இந்தி எதிர்ப்புப் போரில் 1937 – இல் முனைந்து நின்று தலைமையேற்றார். தென்னிந்திய வணிக சங்கம், இந்திய வணிக சங்கம் ஆகியவற்றின் தலைவராக 1940 – 41 – இல் பொறுப்பேற்றார். அண்ணாமலை அரசரின் மறைவுக்குப்பின் 1948-ஆம் ஆண்டு முதல் 1984 வரை-அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகத் தம் இறுதிவரை – திகழ்ந்தார். பல்கலைக்கழக வெள்ளி விழாவில் (1955 -இல்) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மதிப்பியல் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது. காரைக் குடித் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினராக 1957 – இல் தேர்ந்தெடுக்கப் பெற்றார். உலகச் சுற்றுப் பயணத்தை 1962-இல் மேற்கொண்டார். தமிழக மேலவை உறுப்பினராக 1963-இல் திகழ்ந் தார். இவருடைய மணிவிழா 1965-இல் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. இந்திய அரசு இவருக்குப் பத்மபூசன் என்னும் சிறப்புப் பட்டத்தை 1973 – இல் வழங்கிற்று. மதுரையில் 1974 –இல் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவித்தார். தமிழிசைக் காவலர் என்னும் சிறப்புப் பட்டம் 1979 – இல் அளிக்கப் பட்டது. மிகச்சிறந்த முறையில் சென்னையில் தமிழிசைச் சங்கத்திற்காக அண்ணா மலை மன்றத்தை உருவாக்கினார். சென்னைப் பல்கலைக்கழகம் 1983 – இல் . இவருக்கு மதிப்பியல் டாக்டர் பட்டம் வழங்கியது. பேரோடும் புகழோடும் விளங்கிய இப்பெருமகனார் 1984, மே திங்கள் 12-ஆம் நாள் இயற்கை எய்தினார். மதுரையில் இவர் தோற்றுவித்த 'அரசர் முத்தையா மன்றம்' கலைக் கோயிலாக அமைந்து தமிழிசை வளர்க்கும் நினைவுச் சின்னமாகவுள்ளது. இந்திய அரசு இவருக்கு விருதுகள் அளித்ததோடு நினைவஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப் பித்துள்ளது. இவர் எவரையும் உறவாக அணைத்து மகிழும் இயல்பினர்; எவரொடும் பகைகொள்ளாத பண்பாளர்; பதவியெல்லாம் படிப்படியாய்ப் பெற்று யர்ந்த பெருமகனார். பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம் ஆகியவற்றை நிறுவியதோடு மட்டு மல்லாமல் கல்விச் சிந்தனையாளராகவும், கல்வியாள ராகவும், கல்வி அமைச்சராகவும் திகழ்ந்த பெருமை இவரைச்சாரும்.

மதுரை கோட்சு, பின்னி நிறுவனம், செட்டிநாடு சிமிண்ட்டு முதலிய பெரும் தொழில் நிறுவனங்களில் பங்குதாரராக இருந்து பெரும் செல்வம் ஈட்டி அவை யனைத்தையும் கல்விக்கு வழங்கியவர். மலர்ந்த முகத்துடன் யாவரையும் வரவேற்பதிலும் விருந்து அளிப்பதிலும் தலைசிறந்து விளங்கினார். பெருவணி கராய், தமிழிசைக் காவலராய், இணைவேந்தராய், கல்வியாளராய், கல்வி அமைச்சராய், தமிழகம் முழு தும் மதித்துப் போற்றும் இயல்பினை உடைய இவர், பெருமகன் என்னும் இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர். அறிஞர்களை மதித்துப்

போற்றுவதிலும் புலவர்களை ஆதரிப்பதிலும் கலைஞர்களுக்கு அள்ளி வழங்குவதிலும், இசைஞர்களை ஊக்குவிப்பதிலும் இணையற்றவராகத் திகழ்ந்தார். தமிழ்மொழி இலக்கியம், மரபு, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைக் காப்பதில் தம் வாழ்நாள் முழுதும் உழைத்த இவரைத் 'தமிழ்க்காவலர்' எனத் தமிழ் நாடு போற்றிப் புகழ்கிறது.

மிகவும் பின்தங்கிய பகுதியாகிய தென்னார்க்காடு மாவட்டத்தில் அமைந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பெருவளர்ச்சிக்கு முழுப் பொறுப்பேற்று உழைத்தார். கண்ணைக் காக்கும் இமையாகப் பல்கலைக்கழகத்தைக் காத்தார். தமிழ் ஆராய்ச்சி வளரவும் வளம் பெறவும் வகை செய்தார். நல்ல நிதி ஆதாரங்களை ஏற்படுத்திப் பல்கலைக்கழகத்தில் 45-துறைகளை உருவாக்கித் தமிழ்நாட்டில் கல்வி செழிக்க வழிவகுத்தார். தமிழகக் கல்வி வரலாற்றில், பெரும் பணி ஆற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், அதனைப் பேணி வளர்த்த முத்தையா வள்ளலுக்கும் ஒரு பெரிய இடமுண்டு. நினைவாற்றலும் நினைந்து உதவும் பண்பும் செயற்கரிய செய்யும் திறனும் வாய்ந்த செம்மலாகத் திகழ்ந்த இவர் நகரத்தார்களின் குலவிளக்காகத் திகழ்ந்தார். ச.மெ.

**முத்தையா பாகவதர் (கி.பி. 1887-1945)** திருநெல்வேலி மாவட்ட அரிகேச நல்லூரில் கி.பி. 1877–ஆம் ஆண்டு இலிங்கமையருக்கும் ஆனந்தவல்லி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இளவயதிலே தந்தையை இழந்த இவர், திருவையாறு சென்று சாம்பசிவ ஐயரிடமும், சபேச ஐயரிடமும், பின்னர்ப் பட்டணம் சுப்பிரமணிய ஐயரிடமும் இசை பயின்றார்.

முத்தையா பாகவதர் ஒரு சிறந்த இசை மேதை. இசையிலும், கோர்ட்டு வாத்தியத்திலும், கதை சொல்வதிலும், இசை ஆராய்ச்சியிலும், பாடல் இயற்றுவதிலும் தம் காலத்தில் சிறந்து விளங்கினார். பாகவதர், மைசூர்ச்சமசுதான வித்வானாக இருக்கையில் 'காயகசிகாமணி' என்ற பட்டத்தையும், 'சங்கீத கல்பத்திருமம்' என்னும் ஆராய்ச்சி நூலை எழுதியமைக்காகக் கேரளப் பல்கலைக்கழகத்தில் 'டாக்டர்' பட்டத்தையும் பெற்றார். அதனால், இவர், காயக சிகாமணி டாக்டர் எல்.முத்தையா பாகவதர் என்றும் கூறப் பெற்றார்.

பரந்த அறிவும், சொல்லாற்றலும், இசைபாடும் திறமையும் பெற்ற முத்தையா பாகவதர் திருமணங்களிலும், விழாக்களிலும் இசைநிகழ்ச்சிகள் செய்வதோடு அரிகதையும் செய்து வந்தார். அவற்றில் வள்ளி திருமணம், தியாகராச சுவாமிகள் வாழ்க்கை ஆகியவை பாகவதருக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தன. கதைகளுக்கேற்ப, பாடல்களைத் தாமே இயற்றி அழகுறப் பாடி மக்களை மகிழ்வித்தார்.

பாகவதர் தஞ்சாவூரில் வாழ்ந்த காலத்தில் 'கருணாமிருத சாகரம்' என்னும் பெரிய இசை நூலை வெளியிட்ட தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் 1916–இல் நடத்திய இசை மாநாட்டில் கலந்து கொண்டார். மேலும், அவர் மேற்கொண்டிருந்த இசை ஆராய்ச்சி முயற்சிகளில் பெரிதும் ஈடுபட்டு வாழ்ந்தார்.

பின்னர் மதுரை சென்று பல ஆண்டுகள் இசைப் பள்ளி ஒன்று நடத்தினார். பாகவதரே அதனுடைய முதல்வராகவும் பணியாற்றினார்.

பாகவதர் 1927–இல் மைசூர் சமசுதான வித்துவானாக நியமிக்கப்பட்டார். அப்போது இவர் 'காயக சிகாமணி' என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் இசைத் திறனையும், இசைத் தொண்டையும் சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய சமசுதானங்களும் பாராட்டின.

தெலுங்கு, தமிழ், வடமொழி, கன்னடம் ஆகிய மொழிகளில் பாகவதர் ஏராளமான பாடல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய கீர்த்தனைகளில் மைசூர் மன்னருடைய குலதெய்வமாகிய சாமுண்டீசுவரி மீது பாடிய 108 கீர்த்தனைகளும், சிவ அட்டோத்திர நாமாக்களை வைத்துச் சிவபெருமான் மீது பாடிய 108 கீர்த்தனைகளும், ஒன்பது கோள்களின் கீர்த்தனைகளும் குறிப்பிடத்தக்கவை. தான வருணம், தருவருணம், பதவருணம், தில்லானா ஆகிய இசை வகைகளிலும் பல பாடல்களைப் பாகவதர் இயற்றியுள்ளார். நாடகக்குழு ஒன்றை அமைத்துப் பல நாடகங்களை மேடையேற்றிய பாகவதர் இலவகுச என்னும் திரைப்படத்திற்கு இசை இயக்குநராகவும் பணிபுரிந்தார்.

பாகவதருடைய இசைப்பணி திருவனந்தபுரத்திலும் தொடர்ந்தது. திருவாங்கூர் அரசர் இராமவருமாவாலும், அரசி சேதுபார்வதியாலும் அழைக்கப் பெற்ற பாகவதர் 1937 முதல் திருவனந்தபுரத்திலிருந்து சுவாதித் திருநாள் அரசர் பாடல்களின் இசை வடிவங்களை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டார். தம் சீடர்களாகிய எசு.வி. நாராயண ஐயர், வித்துவான் சீனிவாசன் ஆகியோருடைய உதவியோடு சுவாதித் திருநாள் அரசரின் பாடல்களைச் சுர, தாளக் குறிப்புகளுடன் மலையாள எழுத்தில் இரு பாகங்களாக வெளியிட்டார். அப்பாடல்கள் பின்னர்ச் செம்மங்குடி சீனிவாச ஐயரால் தமிழ் எழுத்தில் வெளியிடப் பட்டன.

திருவனந்தபுரத்தில் 'சுவாதித்திருநாள் இசைப்

பள்ளி என்னும் நிறுவனத்தையும் பாகவதர் தொடங்கி அதன் முதல்வராகப் பணி ஆற்றினார். சுவாதித் திருநாள் கீர்த்தனைகளை நாடெங்கும் பரப்பினார். இப்பணியில் செம்மங்குடி சீனிவாச ஐயர், கேசவ பாகவதர், எசு.வி. நாராயண ஐயர், வேலூர் கே ஆர். குமாரசுவாமி ஆகியோர் பாகவதருக்குத் துணை நின்றனர்.

பழமையான பண்களில் பாகவதர் பல பாடல்களை இயற்றிப் பாடினாலும், புதிய பண்களைப் பாடல்கள் மூலம் வழக்கில் கொண்டு வருவதில் அவருக்கு நாட்டம் இருந்தது. இவர் அறிமுகப்படுத்திய பல புதிய பண்களில் 'வலசி', 'நாகபூடணி', 'விசயநாகரி' ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இவர் 1945 – ஆம் ஆண்டு தம் 67-ஆம் வயதில் காலமானார். ஞா.கு.

**முத்தொள்ளாயிரம்:** இது சங்க காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய நூல். பல தனிப்பாடல்களின் தொகுதியாக உள்ளது. அகமும் ' புறமும் இந் நூலில் கலக்கின்றன. எனினும், அகப்பொருளுக்கே முதன்மை தரப்பெறுகிறது. புறத்துறையில் 43 பாடல்களும், அகத்துறையில் 65 பாடல்களும் உள்ளன.

'முத்தொள்ளாயிரம்' என்ற இலக்கிய வகைக்கு இலக்கணம் கூறப்போந்த பேராசிரியர் தம் உரையில், 'புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வது முத்தொள்ளாயிரம்' என்று கூறியுள்ளார். 'தொள்ளாயிரம்' என்று நூலுக்குப் பெயரிடும் வழக்கம் பிற்காலத்திலும் தொடர்ந்தது; வச்சத்தொள்ளாயிரம் (கி.பி. -11-ஆம் நூ.) அரும்பைத் தொள்ளாயிரம் (கி.பி. 12 -ஆம் நூ.) என்னும் நூல்கள் பிற்காலத்தே தோன்றின.

தமிழின ஒருமைப்பாட்டை நிலைநாட்ட இளங்கோவடிகள் முயன்றது போலவே முத்தொள்ளாயிரமும் சேர, சோழ, பாண்டியர் மூவர் மீதும் பாடப்பெற்றது. நூல்முழுவதும் வெண்பாவினால் இயன்றது. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. டாக்டர் சுப்புரெட்டியாரின் முத்தொள்ளாயிர விளக்கம் 108 பாடலைத் தருகிறது. 'டி.கே.சி.' பதிப்பில் 99 பாடல்களும், பிற்சேர்க்கையில் 9 பாடல்களும் உள்ளன. இரெ. முத்துக்கணேசன் பதிப்பு 109 பாடலைத்தர, கழகப்பதிப்பு 130 பாடலைத் தருகின்றது.

முத்தொள்ளாயிரத்தில் உள்ள பாடல்களில் பாண்டியனுக்கு 56, சோழனுக்கு 29, சேரனுக்கு 22 என்னும் அளவில் பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றுள் புறத்துறையில் பாண்டியனுக்கு 22 பாடலும், சோழனுக்குப் 11 பாடலும், சேரனுக்கு 9 பாடலும் உள்ளன. புறத்துறை நாடு, நகர், திறை, எயில் கோடல், குதிரைமறம், யானை மறம், களம், பகைப் புலம் பழித்தல், வென்றி, புகழ் எனப் பத்துவகையாக அமைகின்றது. சங்க இலக்கியம் புறத்தை இயல்பு நவிற்சியாகக் கூற, முத்தொள்ளாயிரம் அதனை மிகைப்படுத்தியே கற்பனைச் செறிவுடன் விளக்குகிறது. சங்க இலக்கியத்தில் ஆண்பாற் கைக்கிளையில் சில பாடல்களே உள்ளன. பெண்பாற் கைக்கிளைப் பாடல்கள் இல்லை. முத்தொள்ளாயிரத்தில் பெண்பாற் கைக்கிளையில் பல பாடல்கள் உள்ளன.

சங்க இலக்கியத்தின் பெயர்சுட்டா அகமரபு வீழ்ந்துபட,மன்னன் எனத் தகுதியும், சேர, சோழ, பாண்டியர் எனக் குலமும் குறிக்கப்படுகின்றன. தலைவி தன் காதலைத் தலைவனிடமோ, பிறரிடமோ பறைசாற்றுதல் சங்க இலக்கியங்களில் மரபன்று. ஆனால் முத்தொள்ளாயிரத்தில் கைக்கிளைத் தலைவி தன் பிரிவுத் துன்பங்களைத் தோழியிடம் அல்லது பலர் முன்பு வெளியிடுபவளாக அமைகின்றாள். மேலும் சங்க இலக்கியத்தில் தலைவியின் காதல், தோழி ஒருத்திக்கு மட்டுமே வெளிப்பட்டு நிற்கும்; தலைவியின் உணர்வுகள் பற்றித் தாயர் அறிவதோ, பேசுவதோ காணப்படாது. உடன்போக்கின் பின்னரே செவிலி, நற்றாய் போன்றோர் அவளுடைய நிலையறிந்து வருந்துவர். ஆனால், முத்தொள்ளாயிரத்தில் வரும் செவிலியோ தன் மகளின் நிலையுணர்ந்து அவளுக்காகப் பரிதவித்து இரங்கும் பாங்கினளாக உள்ளாள். மேலும், முத்தொள்ளாயிரத்தில்தான், மன்னனைக் கண்டால் மங்கை மயங்குவாள் என முன்னெச்சரிக்கையுடன் கதவடைக்க முயலும் செவிலியரும், மயங்கிய மடந்தை மீண்டும் உலாவரும் மன்னனைக் காணாதிருக்கக் கதவடைக்கும் தாயர் நிலையும் காணமுடியும். அவ்வாறு சங்க இலக்கிய மரபில் இருந்து மாறுபடும் பான்மைகள் பலவற்றை முத்தொள்ளாயிரத்தில் காணலாம்.

மு.ச.

**முதல் தகவல் அறிக்கை:** குற்றங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிடி ஆணையின்றிக் கைது செய்யக்கூடிய . குற்றங்கள், பிடி ஆணை வேண்டாக் குற்றங்கள் என்பனவே அவ்விரண்டு வகைகளாகும். பிடி ஆணை வேண்டாக் குற்றங்கள் நடை பெற்றுள்ளதைப்பற்றி அறிந்துள்ள ஒருவர், உடனடியாக அது பற்றிய தகவலை நிகழ்ச்சி நடைபெற்ற இடத்திற்கு அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு அளிக்க வேண்டும். அதனை அந்தக்

காவல் நிலையப் பொறுப்பில் உள்ள அலுவலர் உடனே பதிவு செய்து கொண்டு அது பற்றிய புலன் விசாரணையை மேற்கொள்ள வேண்டும். அப்படி நடைபெற்ற ஒரு குற்றம் பற்றிய தகவலைக் காவல் நிலையத்தில் பதிவு செய்துள்ள அறிக்கை, முதல் தகவல் அறிக்கை எனப்படும்.

அப்படித் தரப்படும். தகவலை ஒரு காவல் நிலையப் பொறுப்பில் உள்ள அலுவலர் பதிவு செய்வதற்கு மறுத்தால், அதனை அஞ்சல் வழியாக அந்த மாவட்டத்தின் காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கலாம். அவர் அதனைத் தாமே புலனாய்வு செய்யலாம் அல்லது தமக்குக் கீழ்ப் பணிபுரியும் ஒரு காவல் அலுவலரை அது பற்றிய புலனாய்வை நடத்துமாறு பணிக்கலாம்.

பிடி ஆணை வேண்டாக் குற்றம் நிகழ்ந்துள்ளதைப் பற்றிய தகவலை அறிவிக்கின்ற ஒருவருக்கு அப்படிப் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை, அதனைப் பதிவு செய்த அலுவலர் அளிக்க வேண்டும்.

முதல் தகவல் அறிக்கை, நடைபெற்றுள்ள குற்றம் பற்றிக் காலத்தால் முற்பட்ட ஒரு சாட்சியமாகும். அது விசாரணையின்போது, அத்தகைய குற்றம் பற்றி அளிக்கப்படும் சாட்சியத்தை ஒப்பிடுவதற்கும் அதன் நிறைகுறைகளைச் சீர்தூக்குவதற்கும், அதுபற்றிய முழு உண்மைகளைக் கண்டறிவதற்கும் பயன்படத்தக்கதாகும். குற்றம் சாட்டப்பட்டவருக்கு அது, தம் தற்காப்பிற்குப் பயன்படுத்தத்தக்க உயரிய ஆயுதமாகும். இம் முதல் தகவலறிக்கை ஒரு பிடி ஆணை வேண்டாக் குற்றம் பற்றிய புலனாய்வைத் தொடங்குவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். ஆனால், முதல் தகவல் அறிக்கை ஒன்றை மட்டுமே அக்குற்றம் பற்றிய சாட்சியமாக ஏற்கக்கூடாது. அதனைச் சாட்சியச் சட்டத்தின் 157-ஆம் பிரிவின்படி ஏனைய சாட்சியங்களை ஈடுசெய்வதற்கும், அச்சட்டத்தின் 145-ஆம் பிரிவின்படி மாறுபடுத்துவதற்கும் பயன்படுத்தலாம். எனினும், அதனையே சாட்சியத்தின் முடிந்த முடிபாகக் கொள்ள இயலாது. மாறாகக் குற்றத்தரப்பின் கூற்றுகளைச் சீர்தூக்கி ஆய்வதற்கு அது பெரிதும் பயன்படுத்தத் தக்கதாகும்.

முதல் தகவல் அளித்தவரின் கூற்றிலுள்ள உண்மை அல்லது பொய்ம்மையினை ஆய்வு செய்வதற்கு அதனைப் பயன்படுத்தலாம். நிகழ்ச்சி நடந்தவுடனேயே அறிவிக்கப்படுவதால், நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு அறிவித்துள்ளதாகக் கருதலாம். அது பற்றிக் கூட்டியும் குறைத்தும் தத்தம் கற்பனை வளத்திற்கேற்ப உருமாற்றியும் அளிப்பதற்கேற்ற சூழ்நிலைகள் இல்லாத நிலையில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியமாக அது கொள்ளத்தக்கதாகும்.

ஒருசில சூழ்நிலைகளில், அத்தகைய தகவல் அளித்தவரின் மரணத்திற்குப் பின்னர், அத்தகவலைச் சாட்சியச் சட்டம் 32-ஆம் பிரிவின்படி அவரது மரண வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளலாம்.

அத்தகைய நிகழ்ச்சியை நேரில் கண்டவர் அல்லது அதில் ஈடுபட்டவர், அத்தகைய முதல் தகவல் அறிக்கையை அளிக்கும்போது, அதன் சாட்சிய மதிப்பு உயர்கின்றது.

முதல் தகவல் அறிக்கை, ஒரு காவல் நிலையப் பொறுப்பில் உள்ள அலுவலரிடம் அளிக்கப்பட வேண்டும். அந்த அலுவலர் ஒரு காவலர் நிலைக்குக் குறையாத அலுவலராக இருக்க வேண்டும். எனவே, ஒரு காவலரால் மற்றொரு காவலருக்கு எதிராக ஒரு குற்றம் புரியப்பட்டிருக்கும் போது, அது பற்றிக் காவல் நிலையப் பொது நாள்குறிப்பில் எழுதப்படும் அல்லது காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு அஞ்சல்வழி அனுப்பப்படும் தகவலை, முதல் தகவல் அறிக்கையாக ஏற்க முடியாது.

குற்ற விசாரணை முறைச்சட்டத்தின் 154-ஆம் பிரிவின்கீழ் எழுத்து மூலமாகத் தரப்பட்ட தகவல் அல்லது எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்பட்ட தகவல் பொதுவாக முதல் தகவல் அறிக்கை என்று கூறப்படும். முதல் தகவல் அறிக்கை என்பது ஒரு காவல் நிலையத்தில், ஒருகாவலரிடம் அளிக்கப்பட்டு, குற்றவிசாரணை முறைச்சட்டத்தில் கூறியுள்ளபடி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலமாகும். அதனால் அது அனுமக்கத் தக்க சாட்சியமாகும்.

ஒரு தகவலை முதல் தகவல் அறிக்கையாகக் கொள்வதற்கு இரண்டு வரன்முறைகள் இருக்கின்றன. 1) அத்தகைய தகவல், பிடி ஆணை வேண்டாக் குற்றம் புரிந்துள்ளதனை விளக்குவதாக இருக்க வேண்டும். 2) அத்தகவல் தெரிவிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

ஒரு குற்றம் பற்றிய முதல் தகவல் அறிக்கை காலதாமதமின்றி அளிக்கப்பட வேண்டும். அப்படி அளிப்பதில் ஏற்படும் காலதாமதம், அதன்மேல் ஐயம் கொள்ள இடம் அளிக்கும். அதனையே முழுமையாக நம்பி, ஒருவரைத் தண்டனைக்குள்ளாக்குவது முறையாகாது. எனினும், அத்தகைய தாமதத்திற்குப் போதிய காரணம் இருப்பின், அதற்குரிய சூழ்நிலைகளுக்கேற்ற விளக்கம் தரப்பட்டிருப்பின், அத்தகைய ஐயம் எழத்தேவையில்லை.

இரவு நேரம், காவல் நிலையம் தொலைவில் உள்ளமை, போதிய போக்குவரத்து வசதியின்மை, ஆயுதம்தாங்கிய எதிரிகள் நடமாடும் சூழ்நிலையில் விளையும் அச்சம் போன்ற காரணங்களால் தகவல் தருவதற்குத் தாமதம் ஏற்பட்டால், அதனைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் உடனடியாக அருகில் உள்ள குற்றவியல் நடுவருக்கு அனுப்பப்பட வேண்டும் அ.ச.ந.

**முதல்நிலை அளவாய்வு**: ஆய்வு முறைகளில் ஒன்று அளவாய்வு (Survey) ஆகும். இது ஒரு பொருளைப் பற்றிய மெய்ம்மைகளைக் கண்டறிவதற்காக நடத்தப்படும் ஆய்வு ஆகும்.

சி.ஏ. மோசர், சி. கால்ட்டன் (C.A.Moser and G.Kalton) ஆகியோர் அளவாய்வின் கீழ் ஆய்வு செய்யப்படும் பொருள் நான்கு வகையினங்களுள் அடங்கும் என்கின்றனர். அவை, 1) ஒரு மக்கள் தொகுதியின் மக்கள்தொகையியல் (Demographic) இயல்புகள், 2) அம் மக்களின் சமூகச் சூழ்நிலை, 3) அவர்களுடைய நடவடிக்கைகள், 4) அவர்களுடைய விருப்பங்களும், மனப்பான்மைகளும் ஆகும்.

ஒரு மக்கள் தொகுதியின் மக்கள்தொகையியல் இயல்புகள் அளவாய்வின்கீழ் ஆய்வுக்குத் தெரிந்தெடுக்கப்படும்பொழுது அம் மக்கள் தொகுதியின் குடும்ப அல்லது இல்ல ஆக்க அமைவு, பாலின ஆக்க அமைவு, வயது ஆக்க அமைவு, திருமண நிலை, கல்வி நிலை, கருவளம், இறப்பு நிலை முதலியன ஆராயப்படும். இங்கிலாந்தில் மக்கள்தொகை பற்றிய அரச ஆணையம் (Royal Commission on Population) 1946-இல் ஏற்பாடு செய்த குடும்பக் கணிப்பு (Family Census) என்ற அளவாய்வு இதுபோன்ற மக்கள் தொகையியல் கூறுகளையே உள்ளடக்கி இருந்தது.

சமூகச் சூழ்நிலை பற்றிய அளவாய்வு என்றால் அது மக்களுடைய சமூக, பொருளாதார வாழ்க்கை நிலைமைகளைப் பற்றிய ஆய்வாக அமையும். மக்களுடைய செய்தொழில்கள், வருமானம், வீட்டு வசதி நிலைமைகள், சமூக வசதிகள் முதலிய தன்மைகள் அத்தகைய அளவாய்வில் இடம்பெறும்.

மக்களுடைய நடவடிக்கைகளை அளவாய்வின் மூலம் ஆய்வு செய்யும்பொழுது அவர்களுடைய நடத்தை எவ்வாறிருக்கிறது, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பனபற்றி ஆராயப்படும். அதாவது, அவர்கள் பொழுது போக்குவதற்காக எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளுகிறார்கள், அவர்களுடைய பயணப் பழக்கங்கள், செலவு செய்யும் கோலங்கள், குழந்தை வளர்ப்பு முறை, தொலைக் காட்சி பார்ப்பது, வானொலி கேட்பது, செய்தித்தாள் படிப்பது முதலியன எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பது அளவாய்வில் ஆராயப்படும்.

மக்களுடைய விருப்பங்களும், மனப்பான்மைகளும் அளவாய்வின் மூலம் ஆராயப்படும்பொழுது அவை எவ்விதம் அமைந்துள்ளன, அவற்றின் பரிமாணங்கள் யாவை என்று ஆராயப்படும். ஒரு சிக்கலில் அவர்களுடைய கருத்து என்ன, சமூகக் குழுக்கள் அமைப்பு முறைகள், சமூகப் புதுப் புனைவுகள் (Innovations) ஆகியவை பற்றி அவர்களுடைய மனப்பான்மை என்ன என்பனவெல்லாம் அளவாய்வின்மூலம் ஆராயப்படும். நாடாளுமன்ற அல்லது குடியரசுத்தலைவர் தேர்தலுக்கு முன்னர் நடைபெறுகிற கருத்து வாக்கெடுப்பு (Opinion Poll) இப்படிப்பட்ட அளவாய்வேயாகும். அமெரிக்காவில் நடைபெறும் 'விரைவு வாக்கெடுப்பு' (Gallop Poll) என்ற கருத்து வாக்கெடுப்பு உலகப் புகழ்வாய்ந்தது.

இவ்வாறு நான்கு வகைச் செய்திகள் அளவாய்வில் ஆராயப் பட்டாலும், ஓர்அளவாய்வு ஏதாவதோர் செய்தியை மட்டுமே உள்ளடக்கி அமையும் என்பதில்லை. இந்த நான்கு செய்திகளையுமே உள்ளடக்கி அல்லது இவற்றில் சிலவற்றை உள்ளடக்கி அமையக்கூடும். பேரா.டி.ஆர். காட்கில் 1945 – இல் பூனா (இப்பொழுது புனே) நகரில் ஒரு விரிவான அளவாய்வு நடத்தினார். அதில் பூனா நகரின் மக்கள் தொகை, போக்குவரத்து, வாணிகம், மக்களின் செய்தொழில்கள், குடும்ப வருமானங்கள், வீட்டு வசதி நிலை, கல்வி முதலிய பல்வேறு செய்திகள் அகப்படுத்தப்பட்டன.

மேற்கூறிய நான்கு செய்திகளையும் ஆராய்கிற பொழுது அவை தொடர்பான சிக்கல்களையும் அளவாய்வுகள் ஆராய்கின்றன. ஒரு மக்கள் தொகுதியில் இறப்பு நிலை எப்படியிருக்கிறது என்று அளவாய்வு செய்யப்படும் பொழுது இறப்பு விகிதம் அதிகமாக இருந்தால் அதற்கு என்ன காரணம் என்றும் ஆராயப்படுகிறது. அவ்வாறே வீட்டு வசதி நிலைமைகள் ஆராயப்படும்பொழுது அவை தொடர்பான வீட்டு வசதியின்மைச் சிக்கலும் ஆராயப்படுகிறது. அவ்வாறு நிலைகள் அல்லது நிலைமைகள் ஆராயப்படும் பொழுது அவைதொடர்பான சிக்கல்களும், தேவைகளும் கூடவே ஆராயப்படுகின்றன. அப்படி அவை ஆராயப் படுவதற்குக் காரணம், அதன் அடிப்படையில் ஒரு நிருமாணத் திட்டம் இயற்றுவது ஆகும். அதுதான் அளவாய்வின் நோக்கம் என்கிறார் பர்கெசு (E.W. Burgess) என்பவர்.

எனவே, அளவாய்வு ஒரு மக்கள் தொகுதியின் வாழ்க்கை, மற்றும் வேலை நிலைமைகளை ஆராயும்

பொழுது ஒரு செயல்முறைக் கண்ணோட்டத்தில் நடத்தப்படுகிறது. அதாவது, அந்த ஆய்வின் கண்டு பிடிப்புகளை-மெய்ம்மைகளைக் கொண்டு ஒரு நிரு மாணத் திட்டம் இயற்றவேண்டும் என்ற நோக்கத் திலேயே அளவாய்வு நடத்தப்படுகிறது.

அளவாய்வு ஒரு மக்கள் தொகுதியை ஆராயும் என்கிறபொழுது அது ஒரு சிறிய குழுவை ஆராய்வ தில்லை. ஒரு சமுதாயமாக விளங்குகிற மக்கள் தொகையை (ஈ.எசு.பொகார்டசு- E.S.Bogardus) அல்லது ஒரு பெரிய, பரவலாகச் சிதறிக் கிடக்கிற மக்கள் தொகுதியை (பெசுடின்சரும் காட்சும்- Festinger and Katz) ஆராயும். அத்தகைய மக்கள் தொகுதியின் மக்கள்தொகையியல் இயல்புகள், சமூகச் சூழ்நிலை, நடவடிக்கைகள், மனப்பான்மைகள் ஆகிய வற்றை அளவாய்வு ஆராயும்.

அளவாய்வில் ஒரு பெரிய மக்கள் தொகுதிதான் பொதுவாக ஆய்வுப்பொருளாக அமையும் என்றா லும், எப்பொழுதும் மொத்த மக்கள் தொகுதியே முழுதாக அளவாய்வு செய்யப்படுவதில்லை. அதிலி ருந்து ஒரு பகுதி மாதிரியாகத் (Sample) தேர்ந் தெடுக்கப்பட்டு அளவாய்வுக்கு உட்படுத்தப்படும். மாதிரியைக் கொண்டு அளவாய்வு செய்து கிடைக் கும் மெய்ம்மைகள் மொத்த மக்கள் தொகுதி முழுவ தற்கும் அமல்படுத்தப்படும். தேசிய மாதிரி அளவை நிறுவனம் (National Sample Survey Organisation) அடிக்கடி நடத்தும் மக்கள்தொகையியல் செய்திகள் பற்றிய தேசிய மாதிரி அளவாய்வுகள் இந்த வகை யில்தான் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகின்றன.

இப்படிப்பட்ட செய்திகளை அளவாய்வின்கீழ் ஆராய்ந்து அறியத் தரவுகள் (Data) வேண்டும். ஓர் ஆராய்ச்சியாளர் அல்லது ஆராய்ச்சி முகமை ஒரு பொருளை (எடுத்துக்காட்டாக ஒரு மாநிலத்தின் வேளாண்மைத் தொழிலாளர்களின் கூலி நிலைமையை) அளவாய்வின் மூலம் அறிய, தாமே, தம் சொந்த முயற்சியால் வேண்டிய தரவுகளைத் திரட்டினால் அப் படி அமையும் அளவாய்வு முதல்நிலை அளவாய்வு எனப்படும். சுருங்கச்சொன்னால் முதல்நிலைத் தரவு களைக் கொண்டு அமையும் அளவாய்வு முதல்நிலை அளவாய்வு எனப்படும். பிறர் அல்லது பிற நிறுவனங் கள் திரட்டி வைத்துள்ள ஆய்வறிக்கைகளைத் தொகுத்து அவற்றின் தரவுகளைக் கொண்டு அளவாய்வு மேற்கொள்ளப்பட்டால் அது இரண்டாம் நிலை அளவாய்வு எனப்படும்.

குறிப்பாக அளவாய்வாளர்கள் ஒரு மக்கள் தொகுதியில் வாழும், பணிபுரியும் நிலைமைகளையும், அவற்றில் உள்ள சிக்கல்களையும் பற்றி ஆராய்வதில் தான் பெரிதும் நாட்டம் செலுத்துகின்றனர். அப் படிப்பட்ட அளவாய்வு ஆராய்ச்சிகளில் முதல்நிலைத் தரவுகளே சரியான, துல்லியமான மெய்ம்மைகளைத் தரமுடியும் என்பதால் அவற்றில் முதல்நிலைத் தரவு களே திரட்டப்படுகின்றன. அப்படித் திரட்டப்படும் தரவுகள் எண்ணிக்கை அளவிலான (Quantitative) தரவுகளாக இருக்கும்படி கவனம் செலுத்தப்படுகிறது.

ஒரு முதல் நிலை அளவாய்வு ஆராய்ச்சி பொது வாக ஒரு பெரிய, பரவலாகச் சிதறிக் கிடக்கிற மக் கள் தொகுதி (எடுத்துக்காட்டாக, வேளாண்மைத் தொழிலாளர்கள் அல்லது சுரங்கத் தொழிலாளர் அல்லது கட்டுமானத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் கள் அல்லது கிராமமக்கள் அல்லது பழங்குடி மக்கள்) தொடர்பாக அமைவதால் அதற்குத் திட்டமிட்ட முறையில் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலில் ஆராயவிருக்கிற பொருளைப் பற்றித் தெளிவு ஏற்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட அளவாய்வு வேளாண்மைத்தொழிலாளர் களைப் பற்றியது என்றால் முதலில் வேளாண்மைத் தொழிலாளர்கள் யார் என்பது தெளிவுபடுத்தப்படு கிறது. ஏனெனில், வேளாண்மைத் தொழிலாளர் என்பது தெளிவற்ற சொல். ஆகவேதான், முத லில் வேளாண்மைத் தொழிலாளர் யார் என்பது தெளிவாக வரையறை செய்யப்பட்டு, அவர்கள் தொடர்பான அளவாய்வு ஆராய்ச்சி மேற்கொள்ளப் படுகிறது.

பின்னர்த் தரவுகளைத் திரட்டவேண்டியகருவிகள் ஆயத்தம் செய்யப்படுகின்றன. அளவாய்வில் ஒரு பெரிய மக்கள்தொகை ஆராயப்படுவதால் அளவாய்வு பெரியதாகவும், பரவலாகவும் அமைய நேரிடுகிறது. ஒரு பெரிய, பரந்த ஆராய்ச்சிக்கு நேர்காணலே சிறந்த கருவியாக இருக்கும். அதிலும் வினாப் பட்டி யல் மூலம் நடத்தப்படும் நேர்காணலே சிறந்த கருவி யாக இருக்குமாதலால் வினாப் பட்டியலைக்கொண்ட நேர்காணலே முதல் நிலை அளவாய்வில் பெரிதும் கடைப்பிடிக்கப்படுகிறது. அதற்காக ஆராயப்பட வேண்டிய செய்திகளைத்தொகுத்து, அவை தொடர் பாக விரிவான வினாக்களைத் தொகுத்து அவற்றை ஓர் ஒழுங்கு நிரல் முறையில் அமைத்து வினாப் பட்டியல் (Schedule) உருவாக்கப்படுகிறது.

ஒரு முதல்நிலை அளவாய்வில் வினா நிரல் (Questionnaire) மூலமும் தரவுகள் திரட்டப்படலாம். ஆயினும், அளவாய்வுப் பொருள் ஒரு பெரிய, பரவ லான மக்கள் தொகையாக இருப்பதால் தகவலாளர் களை நேரடியாகச் சந்தித்து வினா நிரல்களை வழங்குவது என்பது மிகுதியான காலச் செல

வும், பணச் செலவும், சக்திச் செலவும் ஆகும். ஆகவே, முதல் நிலைஅளவாய்வுகளில் வினா நிரல்பயன்படுத்தப் படும்பொழுது அஞ்சல் வழியிலேயே அவை வழங்கப் படுகின்றன. அதாவது அஞ்சல் வினாநிரலே (Mailed Questionnaire) அத்தகைய சூழ்நிலையில் பயன்படுத்தப் படுகிறது.

உற்றுநோக்கல் (Observation) மூலமும் தரவுகள் திரட்டப்படலாம். இராபர்ட் லிண்டு, எலன் லிண்டு (Robert Lynd and Helen Lynd) என்போர் மத்திய மேற்கு அமெரிக்காவின் நகரமான மிடில் டவுனைப் பற்றி நடத்திய இரட்டை அளவாய்வுகளின்(1929, 1937) பெரும்பகுதிகள் உற்றுநோக்கலின் மூலமே நடத்தப்பட்டன.

இவ்வாறு ஓர் அளவாய்வில் நேர்காணல், வினாப் பட்டியல், வினாநிரல், உற்றுநோக்கல் என்று பல தரவு கள் திரட்டும் கருவிகள் பயன்படுத்தப்படுவதுண்டு. இப்படித்தான் இந்திய மைய இருப்பு வங்கி 1951-52 –இல் நடத்திய அனைத்திந்தியக் கிராமப்புறக் கடன் வசதி அளவாய்வில் நேர்காணல், வினாப்பட்டியல், அஞ்சல் வினாநிரல் என்று பல்வேறு தரவுகள் திரட்டும் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. எனினும், பொதுவாக நடைமுறையில் நேர்காணலே அளவாய்வில் தரவுகள் திரட்டப் பயன்படுத்தப்படுகிறது. நேர்காணலில் வினாப்பட்டியல் நிருவகிக்கப்பட்டுத் தரவுகள் திரட்டப் படுகின்றன. ஆயினும், இதில் ஒரு சிக்கல் உண்டு. ஓர் ஆளோ ஒரு முகமையோ மட்டும் தாமே தம் சொந்த முயற்சியில் தரவுகளை நேரடியாகத் திரட்ட இய லாது. ஏனெனில் அளவாய்வின் இலக்குக் குழு பெரி தாகவும், பரவலாகவும் இருப்பதால் அவரோ அதுவோ தனித்துத் தரவுகள் திரட்டுவது கடினம். ஆகவே, ஓர் அளவாய்வாளர் அல்லது அளவாய்வு முகமை, தரவுகள் திரட்டுவதற்கென அதிக அளவு கணக்கீட்டாளர்களை நியமித்துக் கொள்ளுகின்றனர். அவர்கள் தரவுகள் திரட்டக் களப் பணிக்கு அனுப்பப் படு முன்னர் அவர்களுக்கு ஆராய்ச்சி உத்திகளிலும், தரவுகள் திரட்டும் உத்திகளிலும் சீரான பயிற்சி, முறையாக அளிக்கப்படுகிறது. ஒரு சீரான பயிற்சி தரப்படாவிட்டால் தரவுகள் திரட்டுவதில் அவர் களிடையே குளறுபடிகள் ஏற்பட்டுக் குழப்பமான தரவுகள் கிடைக்க நேரிடும். ஆகவேதான், கணக்கீட் டாளருக்கு முறையாகத் தரவுகள் திரட்டுவதில் ஒரேவிதமானதும், சீரானதுமான பயிற்சி அளிக்கப்படு கிறது.

பயிற்சி முடிந்த பின்னர்க் கணக்கீட்டாளர்கள் பல் வேறு இடங்களுக்கும் சென்று இலக்குக் குழுவை மொத்தமாகவோ அல்லது அதிலிருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரு மாதிரியையோ நேர்காணல் முறையில் கண்டு தரவுகளைத் திரட்டுவார்கள். திரட்டப்பட்ட தரவுகள் பின்னர்ச் சரிபார்க்கப்பட்டுப் பதிக்கப்படுகின் றன. பதிக்கப்பட்ட தரவுகள் தனித்தனிக் குறியீட்டு எண்களால் குறிக்கப்பட்டுத் தொகைப் படுத்தப்படு கின்றன. அடுத்து அவை அவற்றின் இயல்புகளுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு அலசி ஆராயப்படுகின்றன. இறுதியில் முடிவுகள் வரையப்பட்டு அளவாய்வு அறிக்கை தயாராகிறது.

அளவாய்வு பொதுவாக மிகுந்த காலம் பிடிக்கக் கூடியது. ஆனால், அதற்காகக் கால வரையறை இல் லாமல் ஒரு நீண்ட கால அளவில் அளவாய்வை நடத்தமுடியாது. ஏனெனில், ஒரு நீண்டகாலத்திற்கு அளவாய்வு நீடிக்குமேயானால் அது நீர்த்துப்போகும். தொடக்கக் கட்டத்தில் கண்ட மெய்ம்மைகள் அள வாய்வின் இறுதிக் கட்டத்தில் மாறிவிடும். அந்த நிலையில் இறுதியான முடிவுகளை நிலைநிறுத்த இய லாமற் போய்விடும். ஆகவே, முதல்நிலை அளவாய் வுக்கு ஒரு கால எல்லையை வகுத்துக்கொண்டு அதற் குள் அளவாய்வை முடித்துக்கொள்ள வேண்டும். கடன் வசதி நிலை என்பது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக் குள் மட்டும் அமைவது இல்லை. ஆயினும், அனைத்திந் திய அளவில் 75 மாவட்டங்களிலுள்ள 600 கிராமங் களில் மாதிரி முறையில் இந்திய மைய வங்கி கிராமப் புறக் கடன்வசதி நிலை பற்றி 1951 – 52 - இல் ஓர் அளவாய்வு நடத்தியபோது அது காலவரையறையை நிருணயம் செய்துகொண்டு அதாவது அளவாய்வை ஓராண்டுக்கால அளவுக்குள் முடித்துவிடவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு அதன்படி அள வாய்வை நடத்தியது. அளவாய்வில் அதிகமான கணக்கீட்டாளர்கள் ஆய்வுப்பணிக்கு நியமிக்கப்படுவ தும் அந்தக் கால வரையறை கருதியே ஆகும்.

சி.என்.ந.

**துணை நூல்கள்:**

**Gopal, M.H.**, An Introduction to Research Procedure in Social Sciences, Asia Publishing House, Bombay, 1970.

**Moser, C.A.**, and **Kalton, G.**, Survey Methods in Social Investigation, Heinemann Educational Books Ltd., London, 1971.

**Raj, Hans.**, Theory and Practice in Social Research, Surjeet Publications, Delhi, 1984.

*முதல்நிலைக் குழுக்கள்*: மனிதர்கள் ஒருவ ரோடு ஒருவர் இடைவினை கொண்டு இயைந்து உற வாடும் போது குழுக்கள் தோன்றுகின்றன. ஆயினும் அவை ஒரே வகையாக இருப்பதில்லை. மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் இணையும்போது ஏற்படும் உறவு

கள் ஒரே மாதிரியாக அமைவதில்லையாதலால் உறவு களில் முகிழ்க்கும் குழுக்களின் தன்மைகளும் வேறுபடு கின்றன.

உறவுகளின் தன்மையில் ஏற்படும் வேறுபாட்டைக் கொண்டு சார்லசு ஆர்ட்டன் கூலி (Charles Horton Cooley) என்பவர் குழுக்களை முதல் நிலைக் குழுக்கள் (Primary Groups) என்றும், இரண்டாம் நிலைக் குழுக்கள் (Secondary Groups) என்றும் வகைப் படுத்தியுள்ளார். மனித உறவுகள் நேருக்கு நேராக வும், நெருக்கமாகவும் அமைகின்ற குழுக்களை முதல் நிலைக் குழுக்கள் என்று வகைப்படுத்துகிறார். குடும் பம், குழந்தைகளுடைய விளையாட்டுக் குழு, அண்டை யம், வயதானவர்களின் அரட்டைக் குழாம் ஆகியவை முதல் நிலைக் குழுக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு கள் என்கிறார். இக்குழுக்களில் உறுப்பினர்களுக் கிடையே நேருக்கு நேரான, நெருக்கமான உறவுகள் நிலவுகின்றன.

முதல் நிலைக் குழுக்களில் உறுப்பினர்களிடையே அமையும் உறவுகள் நேருக்கு நேராக இருக்கும் என் பது முறை. அதற்காக எப்பொழுதும் நேருக்கு நேராக இருக்க வேண்டுமென்பதோ அவ்வாறு அமை யும் போதுதான் முதல் நிலைக் குழுக்கள் ஏற்படும் என்பதோ இல்லை. எல்சுவொர்த்து பாரசு (Ellsworth Fares) என்ற அறிஞர் கூறுவதைப் போல முதல் நிலைக் குழுக்களில் உறவுகள் நேருக்கு நேராக அமைவது ஒரு தற்செயலான இடைநிகழ்வே தவிர, அவை நேருக்கு நேராக அமைய வேண்டும் என்பது கட்டாயமன்று. நண்பர்கள் குழாம் ஒரு முதல் நிலைக் குழுதான். அதில் பொதுவாக நண்பர்களிடையே உறவுகள் நேருக்கு நேராகத்தான் இருக்கும். ஆயினும் அவை எப்பொழுதும் நேருக்கு நேராக அமைவ தில்லை. நேருக்கு நேராகப் பழகாமலேயே சிலர் தம் மிடையே ஒரு நெருக்கமான, பாசமான நட்புறவை வைத்துக் கொண்டிருப்பதுண்டு. கோப்பெருஞ் சோழ னும், பிசிராந்தையாரும் கொண்டிருந்த நட்புறவு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். அவ்விருவரும் ஒருவரையொருவர் நேரில் பார்த்ததில்லை. நேரில் பார்க்காமலேயே, சந்திக்காமலேயே தம்மிடையே ஒரு பாசமான உறவை–ஆழ்ந்த நட்பை – வளர்த்துக் கொண்டிருந்தனர். இவ்வாறே பிரிட்டனில் எமர்சன், கார்லைல் ஆகிய இரு கவிஞர்களும் ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே ஆழ்ந்த நட்புறவு கொண்டிருந்த னர்.

ஆக, முதல் நிலைக் குழுக்களில் உறவுகள் நேருக்கு நேராகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எனினும் நடைமுறையில் முதல் நிலைக் குழுக்களில் உறவுகள் பொதுவாக நேருக்கு நேராகவே அமைகின்றன. முதல் நிலைக் குழுக்கள் பொதுவாக அளவில் சிறியனவாக இருக்கும். உறுப்பி னர்கள் குறைந்த அளவில் இருக்கும் பொழுது அவர் களுக்கிடையே நேருக்கு நேராகத் தொடர்புகள் ஏற் படப் பெரிதும் வாய்ப்புண்டு. அதனால், அவர்கள் ஒருவரோடு ஒருவர் நேருக்கு நேராகப் பழகுகின்ற னர். அப்படி அவர்கள் நேருக்கு நேராக நெருங்கிப் பழக முடிவதால் அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடிகிறது; நெருக்கத்தை வளர்த்துக் கொள்ள முடிகிறது. நெருக்கமான உறவு அமைகிற போதுதான் அவர்கள் ஒரு முதல் நிலைக் குழுவாக அமைகின்றனர்.

கிங்சுலீ தேவிசு (Kingsley Davis) என்னும் சமூக வியல் அறிஞர் உறவுகள் நேருக்கு நேராக, நெருக்கமாக அமையவும், அத்தகைய உறவுகளின் அடிப்படையில் முதல் நிலைக் குழுக்கள் ஏற்படவும் சில நிலைமைகள் நிலவ வேண்டும் என்கிறார். உறுப் பினர்களுக்கிடையே உடலளவில் அணிமையும், அளவில் குழுவின் சிறிய தன்மையும், நீண்ட நாள் நீடிக்கும் உறவு நிலைமையும் இருக்கும் போதுதான் உறவுகள் நேருக்கு நேராக, நெருக்கமாக அமையும். அந்த நிலையில்தான் ஒரு குழு முதல் நிலைக் குழுவா கச் செயற்பட இயலும் என்கிறார்.

**உடலளவு அணிமை:** தனிப்பட்ட இருவரிடையே அமையும் உறவு நெருக்கமாக அமைய வேண்டு மானால் அவ்விருவருக்குமிடையே அணுக்கமான தொடர்பு ஏற்பட வேண்டும். அத்தொடர்பு நேருக்கு நேராகப் பழகும்போதுதான் ஏற்படும். நேருக்கு நேராகப் பழகும்போது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவும், அந்தத் தொடர்பால் ஒருவர் முகம் இன்னொருவர் நினைவில் நிற்கவும், ஒருவரோடு ஒரு வர் உரையாடவும், தத்தம் கருத்துகளையும், உணர்வு களையும் பரிமாற்றம் செய்து கொள்ளவும், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் வழி ஏற்படுகிறது. அந் தச் செயற்பாடுகள் தொடர்பை அணுக்கப்படுத்தி, அதன் மூலம் உறவு நெருக்கத்திற்கு வழி கோலுகின் றன.

ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து கூடி வாழும்போது அவர்களுக்கிடையே உடலளவில் அணிமை ஏற்படுகிறது. அவர்கள் ஒன் றாகச் சேர்ந்து உண்பதும், உறங்குவதும், பொழுது போக்குவதும், குடும்ப நிகழ்ச்சிகளில், சடங்குகளில், கொண்டாட்டங்களில், விழாக்களில் பங்கேற்பதும், ஒன்றாகக்கூடிச் செயற்படுவதும் இந்த அணிமையினை வலுப்படுத்துகின்றன; நெருக்கத்தை உண்டாக்கு கின்றன. இவ்வாறே ஒரு நண்பர் குழாம் சேர்ந்து விளையாடுவது, பொழுது போக்குவது, படிப்பது,

ஊர் சுற்றுவது என்று உடலளவில் அணிமை கொண்டு செயற்படும் போது அவர்களுக்கிடையே உறவு நெருக்கமடைந்து வலுப்படுகிறது.

இவ்வாறு உடலளவு அணிமை நெருக்கம் ஏற்படுவது முதல் நிலைக்குழு உருவாக வழி வகுக்கிறது. இந்த உடலளவு அணிமை சரளமாக, நெருக்கமாக இருக்கும்போது நெருக்கமான உறவு ஏற்படுகிறது. ஆயினும், இந்த அணிமை பண்பாட்டின் நெறிமுறைகளால் நெறிப்படுத்தப்படுவதால் அது ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்குகிறது. எவ்வளவுதான் முறைப் பையனாக,முறைப் பெண்ணாக இருந்தாலும் அத்தை, மாமன் மக்கள் திருமணமாகாத நிலையில் உடலளவில் அணிமை கொள்ளுவதைத் தமிழ்ப் பண்பாடு அனுமதிப்பதில்லை. ஆனால், திருமணத்தில் கணவன் மனைவியாக அவர்கள் இணையும்போது அவர்களுக்கிடையில் உடலளவில் அணிமை ஏற்படப் பண்பாடு அனுமதிக்கிறது. இந்த அணிமை அவர்களுக்கிடையே பிணைப்பை ஏற்படுத்தி ஒரு முதல் நிலைக்குழு-குடும்பம்-அமைய வழி வகுக்கிறது.

**சிறிய அளவு:** ஒரு குழு பெரியதாக-அதிக அளவு உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தால் அதில் உறுப்பினர்களிடையே நெருக்கம் ஏற்பட வாய்ப்பிராது. அவர்கள் ஒருவரோடு ஒருவர் உடலளவில் அணிமை கொண்டு கூடிப் பழகவோ, தெரிந்து கொள்ளவோ வாய்ப்பில்லாததால் அவர்களிடையே நெருக்கம் ஏற்பட இயலாமற் போகிறது. எனவே, அத்தகைய குழுக்கள் முதல் நிலைக் குழுக்கள் என்ற நிலையை அடைவதில்லை. ஒரு பெரிய வாணிக நிறுவனம், தொழிற்சாலை, அரசியல் கட்சி ஆகியவற்றில் உறுப்பினர்களிடையே நெருக்கம் இருப்பதில்லை. அதற்குக் காரணம் அவர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதேயாகும். உறுப்பினர்கள் மிகுதியாக இருக்கும்போது அவர்கள் எல்லாரும் உடலளவில் அணிமை கொண்டு கலந்து பழக வாய்ப்பிலலை. ஆதலால், அவர்கள் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளவும், நெருக்கமாக உறவு கொள்ளவும் வழியில்லாமற்போகிறது.

ஆனால், முதல் நிலைக்குழுக்களில் உறுப்பினர்கள் அளவு குறைவாக இருக்குமாதலால் அவர்கள் உடலளவில் அணிமை கொள்ளவும், ஒருவரோடு ஒருவர் கலந்து பழகவும், உணர்வுகள், கருத்துகள், விருப்பார்வங்கள் முதலியவற்றைப் பரிமாறிக்கொள்ளவும், அதன் வாயிலாக ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும் வாய்ப்பு அமையும். அந்த வாய்ப்பினால் முதல் நிலைக் குழு உறுப்பினர்கள் தமக்குள் நெருக்கத்தை வளர்த்துக் கொள்ள வழி பிறக்கிறது.

**கால நீட்சி:** எவ்வளவுதான் ஒரு குழு சிறியதாக இருந்தாலும், எவ்வளவுதான் உறுப்பினர்களிடையே உடலளவில் அணிமை அமைந்திருந்தாலும், அவற்றால் மட்டும் அக்குழு நெருக்கமான உறவைக் கொள்ள முடியாது. உறுப்பினர்களிடையே ஏற்படும் நேருக்கு நேரான தொடர்பு வலுப்பட்டால்தான் அது ஒரு முதல்நிலைக் குழு என்ற நிலையை எய்த முடியும். உறுப்பினர்களுக்கிடையே ஏற்படும் தொடர்பு நீண்ட நாள் தொடரும்போது, அது ஆழமாகவும், வலுவாகவும் அமைந்து உறுதிப்படுகிறது. அந்த நிலையில் அவர்களுக்கிடையே அமைகிற நெருக்கம்தான் அதன் நிலையை முதல் நிலைக்குழு நிலைக்கு உயர்த்தி, அதன் அடிப்படையைக் கெட்டிப் படுத்துகிறது.

நீண்ட நாள்சேர்ந்து வாழும் ஒரு கணவன் மனைவி இணையிடையே அடிக்கடி ஊடல்களும், பூசல்களும் ஏற்படக்கூடும். ஆயினும் அவர்கள் நீண்ட நாள் சேர்ந்து வாழ்ந்து வருவது ஒன்றே அவர்களை ஒரு நெருக்கமான உறவுடன் பிணைத்து வைத்திருக்கும். எவ்வளவுதான் சண்டை போட்டாலும் அவர்கள் ஒருவர் இன்றி இன்னொருவர் வாழ முடியாது என்ற அளவில் உணர்வு நிலையில் ஒன்றியிருப்பர். காலம் அவர்களுடைய பிணைப்பை வலுப்படுத்தி அவர்களுடைய நெருக்கத்திற்கு உறுதி கூட்டுகிறது.

இந்த மூன்று நிலைமைகள் சேர்ந்து அமையும் போது நெருக்கமான உறவு ஏற்படவும், அதன் மூலம் முதல்நிலைக் குழு அமையவும் செய்கின்றன என்கிறார் கிங்சுலீ தேவிசு. ஆயினும் அம்மூன்று நிலைமைகளும் சேர்ந்து அமையும்போதுதான் முதல் நிலைக் குழுக்கள் தோன்றும் என்பதில்லை. அம்மூன்றில் ஏதாவது இரண்டு நிலைமைகள் இருந்தாலும் முதல் நிலைக்குழுக்கள் தோன்றக்கூடும். உடலளவு அணிமை இல்லாமலேயே கோப்பெருஞ் சோழனும், பிசிராந்தையாரும் நண்பர்களாக ஆனது இங்குக் குறிப்பிடத் தக்கது.

**முதல்நிலை உறவு:** முதல் நிலைக் குழுக்களில் அமையும் உறவு நேருக்கு நேராக, நெருக்கமாக மட்டும் அமைவதில்லை. அது சில குறிப்பிட்ட இயல்புகளைக்கொண்டும் விளங்கும் என்கிறார் வில்லியம் கூடு (William J. Goode) என்பவர்.

1) முதல் நிலைக் குழுக்களில் அமையும் உறவு உணர்ச்சி மயமானதாக இருக்கும். அதாவது முதல் நிலைக் குழுக்களில் இருக்கும் உறுப்பினர்கள் தங்களுடைய உறவில் உணர்ச்சிகளை வெளிப்படுத்திப் பழகுவர். சொல்லப்போனால் அவர்கள் தம் உறவில் உணர்ச்சிகளை வெளிப்படுத்த எதிர்பார்க்கப்படுவர்.

குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே ஊடலும் இருக்கும்; கூடலும் இருக்கும். ஒரு சமயம் கோபித்துக்கொள்வதும், மறுசமயம் கனிவாக நடந்து கொள்வதும் இருக்கும். இப்படி மாறுபட்ட உணர்ச்சிகள் கணவன் மனைவி உறவில் அமைவது இயல்பானது. இவ்வாறே குழந்தைகள் ஒரு சமயம் வெறுப்போடு அடித்துக்கொள்வதும், பிறிதொரு சமயம் அன்போடு இழைந்து போவதும் இயற்கை. நண்பர்கள் சினந்து கொள்வதும், சண்டை போடுவதும், பின்னர் இயல்பாய்ச் சமரசமாகி இணைந்து போவதும் உண்டு. இத்தகைய உணர்ச்சிமயமான உறவை முதல்நிலைக் குழுக்களில்தான் பார்க்க முடியும். பிற குழுக்களில் பார்க்க இயலாது. அப்படியே அது நிகழ்ந்தாலும் அங்கு அது பொறுத்துக் கொள்ளப்படுவதில்லை. குடும்பத்தில் உறுப்பினர்களுக்கிடையிலான உறவில் உணர்ச்சி வெளிப்பாடு மிகவும் இயல்பானது. அது அங்கு அனுமதிக்கப்படுகிறது. ஏற்றுக்கொள்ளப்படுகிறது; ஆனால் ஒரு வணிக நிறுவனத்தில், ஒரு வங்கியில் பணியாளருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையே உணர்ச்சிகள் ஊடுருவிய தொடர்பு உறவு அனுமதிக்கப்படுவதில்லை; ஏற்றுக் கொள்ளப்படுவதுமில்லை.

2. முதல்நிலை உறவு ஒரு குறுகிய எல்லையைக் கொண்டிராமல் விரிந்த அளவில் இருக்கும். வாணிக முறையில் ஒரு முதல்வனுக்கும் (Principal), ஒரு முகவருக்கும் (Agent)இடையே நிலவும் உறவு, எந்த நோக்கத்திற்காக அவர்களிடையே தொடர்பு ஏற்பட்டதோ, அந்த நோக்கத்தை ஒட்டியே அமையும். அது ஓர் ஒப்பந்த அளவிலான உறவாக, குறிப்பிட்ட வாணிக நடவடிக்கையை மட்டும் சார்ந்து அமையும். ஆனால், ஒரு குடும்பத்தில், ஒரு நண்பர் குழாமில் அமையும் உறவு எந்த ஒரு குறிப்பிட்ட நோக்கத்தையும் அடிப்படையாகக்கொண்டு அமைவதில்லை. அது விரிந்த அளவில் இருக்கும். இன்னது என்றில்லாமல் பற்பல செயல்களை உள்ளடக்கி அமைந்திருக்கும்.

3. முதல்நிலை உறவு தனி ஆட்களை நோக்கியே அமையும். தொடர்புடைய தனி ஆட்களைப் பொறுத்து அவர்களுக்காகவே அந்த உறவு அமையும். அந்த ஆட்கள் இன்றி, வேறு எவரிடத்திலும் அந்த உறவு அமையாது. ஒரு கணவன் அன்பை, நெருக்கத்தைத் தன் மனைவியிடம் மட்டுமே காட்டுவான். அவ்வாறே ஒரு நண்பன் தன் நெருங்கிய நண்பனிடம் மட்டுமே உரிமை கலந்த உறவு கொண்டாடுவான். பொதுவான ஒரு வகையினத்தின் (Category) மீது அந்த உறவு செலுத்துவதில்லை. மனைவியிடம் மட்டுமே கணவன் நேசமும், அன்பும் காட்டுவானேயன்றி, மனைவிமார்கள் என்ற வகையினத்தில் வரும் அனைத்துப் பெண்களிடமும் அவற்றைக் காட்டுவதில்லை. அவ்வாறே ஒரு நண்பன் நெருங்கிய நண்பனிடத்தில் மட்டுமே உரிமை கலந்த உறவு கொள்வானேயன்றி நண்பர்கள் என்ற ஒரு பொதுத் தொகுதியிடம்-வகையினத்திடம்-உரிமை பாராட்டுவதில்லை.

ஆக, முதல்நிலை உறவுகள் தொடர்புடைய தனி ஆட்களைப் பொறுத்து அமையுமே தவிர, எல்லாரிடத்திலும் அமைவது இல்லை. அந்த ஆட்கள் இன்றி வேறு ஆட்களிடத்தில் அமையாது. தொடர்புடைய ஒரு ஆள் மறைந்தால் அல்லது உறவிலிருந்து விலகினால் அந்த இடத்தில் வேறொருவரை வைத்துச் சரிக்கட்ட முடியாது. வேறு நண்பர்கள் வரக்கூடும். ஆயினும் மறைந்த, இழந்த நண்பருக்கு அவர்கள் மாற்றாக இயலாது. பழைய உறவு வேறு. புதிய உறவு வேறு. இரண்டும் ஒன்றிற்கு ஒன்று மாற்றானவையல்ல. அந்த உறவு ஆள் தொடர்புடையது. ஆள் மறைந்து போனால் அவர் தொடர்புடைய உறவும் அவரோடு மறைந்து போகும். வேறொருவர் வந்தாலும் அவர்பால் கொள்ளும் உறவு வேறு. அது தனி உறவு. முன்னதைப்போல இருந்தாலும், அது முன்னதற்கு மாற்றாக அமைவதில்லை.

முதல்நிலை உறவுகள் தனிப்பட்டவை. ஒருவனுக்கு நண்பர்கள் பலர் இருப்பினும் ஒவ்வொரு நண்பரிடத்திலும் கொண்டுள்ள உறவு தனியானது; தனித் தனியானது. ஒருவரிடம் கொண்டுள்ள அந்த நட்புறவை அவரிடமிருந்து விலக்கி வேறொருவரிடம் செலுத்த இயலாது. அவ்வாறே ஒரு நண்பர் மறைந்தால் அல்லது நட்புறவிலிருந்து விலகினால் அவரிடம் கொண்டிருந்த நட்புறவை வேறொருவருக்கு மாற்ற இயலாது. வேறொருவரிடம் புதிதாக நட்புறவு அமைந்திடினும், அது தனியான, வேறு உறவாகத்தான் இருக்குமே தவிர பழைய உறவிற்கு அது மாற்றாக அமையாது; அமைய முடியாது.

இந்தக் கட்டத்தில் கிங்சுலீ தேவிசு முதல் நிலை உறவு பற்றி ஒரு கருத்தைக் கூறுகிறார். முதல்நிலை உறவு ஒரு தனி ஆளை நோக்கி அமையும்போது, அது அனைத்தையும் அகப்படுத்தியதாக (Inclusive) இருக்கும் என்கிறார். அதாவது அந்த ஆளின் ஓர் அமிசத்திற்காக அல்லது சில குறிப்பிட்ட அமிசங்களுக்காக அது அமைவதில்லை. அவரின் முழு ஆளுமையை நோக்கி அது அமையும். ஒருவரிடம் காட்டுகிற நட்புறவு அவருடைய சில பிடித்தமான குணங்களுக்காக மட்டும் அமைவதில்லை. அவருடைய மொத்தக் குணங்களையும் அகப்படுத்தி அமையும். ஒரு சில குணங்களுக்குத்தான் நட்புறவு, மற்ற குணங்களுக்கு இல்லை என்ற அளவில் நட்புறவு அமைவது இல்லை. அவ்வாறே, மனைவியிடம் காட்டுகிற

பாச உறவு மனைவியின் சில அமிசங்களுக்காக மட்டும் அதாவது அவளுடைய அழகுக்காகவோ, பொருளாதாரத் தகு நிலைக்காகவோ மட்டும் அமைவதில்லை. அவளுடைய முழு ஆளுமையையும் எல்லாக் குணங்களையும் அகப்படுத்தியே அமையும். சுருங்கச் சொன்னால் முதல் நிலை உறவு ஒருவருடைய முழு ஆளுமையையும் ஊடுருவியே அமையும்.

4. ஒரு முதல் நிலை உறவு தனி ஆட்கள் பால் மட்டும் காட்டப்படுவதில்லை. அவர்கள் உள்ளடங்கிய மொத்தக் குழுவின் மீதும் காட்டப்படுகிறது. ஒவ்வொரு ஆள் மீது மட்டுமன்றி, அவர்கள் உள்ளடங்கிய முழுக் குழுவின் மீதும் நேசமும், அன்பும், அக்கறையும் காட்டப்படுகின்றன. தங்களுக்குள் சச்சரவிட்டுக்கொண்டாலும், ஒரு குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் தாம் சார்ந்துள்ள குடும்பத்தைப் பற்றி வேறொருவர் குறைகூறினால் அவருக்கு எதிராக ஒன்று திரண்டு அவரை எதிர்ப்பர். குடும்பத்தின் பெயர் கெடுவதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

இவ்வாறு முதல் நிலை உறவு ஒரு கூட்டுச் சார்புத் தன்மையோடு இயங்குகிறது. இதில் சில கூறுகள் உள்ளடங்கியிருக்கின்றன. முதலாவதாக முதல்நிலை உறவு அமைந்த நிலையில் (அதாவது ஒரு முதல் நிலைக் குழுவில் பங்கேற்கிற நிலையில்) சம்பந்தப்பட்ட ஆட்கள் அனைவரும் அந்த உறவை ஒரு வெறும் கருவியாகப் பார்க்காமல் ஒரு விழுமிய பொருளாக (Value)-இலட்சியமாக-கருதுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு கூட்டுப்பார்வை முதல் நிலைக் குழுவில் நிலவுகிறது. ஒரு வணிகத் தொடர்பைப் போல, முதல்நிலை உறவு (எடுத்துக்காட்டாக இல்லற உறவு, நட்புறவு) ஒரு செயல் நிமித்தமாக ஏற்படுத்தப்படுவது இல்லை. அந்த உறவினால் பலன் ஏதும் உண்டா, இலாபம் கிடைக்குமா என்றெல்லாம் இலாப நட்டக் கணக்குப் பார்த்து முதல் நிலை உறவு ஏற்படுத்தப்படுவது இல்லை. காரிய நோக்கை எல்லாம் தாண்டி அந்த உறவு அமைகிறது. தொடர்புடைய ஆட்கள் அந்த உறவை ஒரு மதிப்பு மிக்க, விழுமிய பொருளாகக் கருதிப் பெரிதும் போற்றிப் பேணுகின்றனர். உறவின் மூலம் கிடைக்கும் உள்ளார்ந்த நிறைவையே அவர்கள் அதன் பயனாகக் கருதுகின்றனர்.

கிங்சுலீ தேவிசும் இக்கருத்தை வலியுறுத்துகிறார். முதல் நிலை உறவுதொடர்புள்ள ஆட்களால் ஒரு விழுமியமாக, இலட்சியமாகக் கருதப்படுமே தவிர, ஓர் இலட்சியத்தை அடைவதற்கான கருவியாகக் கருதப்படுவது இல்லை என்கிறார். முதல் நிலை உறவு ஒரு கருவியாக அமையுமேயானால் அதை முதல் நிலை உறவு என்று குறிப்பிட முடியாது என்கிறார். ஒரு நட்புறவு ஓர் ஆதாய நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டால் அது மெய்யான நட்புறவாக இருக்காது. அவ்வாறே பொருளாதாரப் பயனுக்காக (எடுத்துக்காட்டாக, சொத்தை அடைவதற்காக) ஒரு திருமண உறவு அமைந்தால் அது ஓர் உண்மையான திருமண உறவாக இருக்க இயலாது என்கிறார் கிங்சுலீ தேவிசு.

முதல் நிலை உறவு கொண்டுள்ள ஆட்கள் ஒத்த இலட்சியங்களைக் கொண்டு விளங்குகின்றனர். ஒத்த இலட்சியங்கள் அவர்களின் நெருக்கத்தை வலுப்படுத்தி, அவர்களை ஓர் உறுதியான முதல் நிலைக் குழுவாக ஆக்கி வைக்கின்றன.

எனினும், ஒரு முதல் நிலைக்குழுவில் எல்லா உறுப்பினர்களும் ஒத்த இலட்சியங்களைக் கொண்டிருப்பர் என்று சொல்ல இயலாது. ஒரு சிலர் ஓரளவுக்கு மாறுபட்ட இலட்சியங்களையும், ஆசைகளையும் வைத்திருக்கக் கூடும். ஆயினும், அவர்கள் மற்றவர்களோடு சேர்ந்து ஒன்றாக இணைந்து நெருங்கி வாழ்வதால் அவர்களோடு அனுசரித்துப் பொதுவான குறிக்கோள்களைக் கொண்டிருப்பர். ஒருவருடைய இலட்சியம் அல்லது ஆசை மற்றவருடைய இலட்சியத்திலிருந்து அல்லது ஆசையிலிருந்து வேறுபட்டு இருந்தாலும், மற்றவருடைய இலட்சியத்தை, ஆசையை அவர் மறுதலிப்பது இல்லை. அதை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கிறார். அது நிறைவேறும் போது அவரும் முன்னவரைப் போல மனம் மகிழ்கிறார். அந்த அமிசத்தை ஒரு மெய்யான நட்புறவில் காணலாம்.

ஒரு முதல் நிலைக் குழுவில் ஒருவர் இன்னொருவர் நலத்தின் மீது அக்கறை காட்டும் ஆர்வம் அமைந்திருக்கும். இரு நண்பர்களிடையே நெருக்கமான நட்புறவு இருந்தாலும் சில சமயங்களில் அவர்களிடையே கருத்து வேறுபாடும், முரண்பட்ட அணுகுமுறையும் இருக்கக்கூடும். எனினும், அந்த நிலையில் ஒருவர் இன்னொருவரை நெறி பிறழவோ, முறைகேடான செயல் செய்யவோ அனுமதிப்பதில்லை. அத்தகைய செயலால் என்ன விளைவு ஏற்படும் என்பதை அவர் உணர்வதால், அத்தகைய விளைவுக்குத் தம் நண்பர் ஆட்படக் கூடாது என்ற விருப்பமே அதற்குக் காரணமாகும். நண்பர் கோபித்துக் கொண்டாலும் கூட அவர் மேல் உள்ள அக்கறையை முன்னவர் கைவிடுவது இல்லை. இது முதல் நிலை உறவுக்கு உரிய சிறப்பாகும். இவ்வாறே ஒரு குடும்பத்தில் தாய் தன் குழந்தை நலம் கருதிக் கண்விழித்து, மெய் வருத்தித் தன்னையே சீரழித்துக் கொள்வதுண்டு குழந்தையின் நலமே தனது நலம்; குழந்தை

யின் மகிழ்ச்சியே தனது மகிழ்ச்சி என்ற ஓர் உணர்வு முறையிலான முனைப்பே தாயை அத்தகைய செயலைச் செய்ய வைக்கிறது. குழந்தையின் நலத்தின் மீதுள்ள பற்றால் தாய் தன் நலத்தைக் கூடப் பாராமல் தன்னையே வருத்திக்கொள்கிறாள்.

இப்படி முதல் நிலை உறவில் ஒரு கூட்டுச் சார்புத் தன்மை அமைவதால் முதல் நிலைக்குழு உறுப்பினர்களிடையே 'நாம்' என்ற ஓர் ஒன்றுணர்வு ஏற்படுகிறது. 'நாம்', 'நமது', 'நம்மவர்' என்ற உணர்வுகள் அவர்களிடம் அமைகின்றன. அது குழுவின் கட்டொருமைப்பாடு நிலைப்பெறப் பெரிதும் உதவுகிறது.

முதல் நிலை உறவு நீடித்து இருக்கக் கூடியது. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கென்று அது அமைவதில்லை. ஆதலால் அதற்கு ஒரு முடிவு ஏற்படுவது இல்லை. மேலும், முதல் நிலை உறவு தொடர்பான ஆட்களால் ஒரு விழுமிய பொருளாகப் போற்றப்படுவதால், அது நீண்ட காலம் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. உறவுத்தொடர்புடைய ஆள் மறைந்தால் ஒழிய அல்லது அவர் உறவுத் தளையிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டால் ஒழிய முதல் நிலை உறவு மறைவது இல்லை. உறவு நிலவும் நிலையில் அது எப்பொழுது முடிவுக்கு வரும் என்று சொல்ல முடியாது. தொடர்புடைய ஆட்களும் அதை விரும்பவோ, முடிவு செய்யவோ முடிவதில்லை. ஒவ்வொருவரும் அந்த உறவு நீடிக்க வேண்டும் என்றே எதிர்பார்த்து; அதற்கேற்ப நடந்துகொள்வர்.

மேற்கூறிய இயல்புகள் மட்டுமன்றி வேறு சில இயல்புகளும் முதல் நிலை உறவில் அடங்கியிருக்கும் என்கிறார் வில்லியம் கூடு. ஒன்று, அது இயல்பாய் ஏற்படும். இப்படித்தான் உருவாக வேண்டும் என்று நிருணயிக்கப்பட்டு அது அமைக்கப்படுவது இல்லை. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கென்று அது அமைவதில்லை. இரண்டு, அது தன்னிச்சையாக அமைகிறது.

முதல் நிலைக் குழுக்களில் கூட்டுறவு உணர்வு மேலோங்கியிருக்கும் என்கிறார் கூலீ. நெருக்கமான உறவு அமையும் போது ஒரு முதல் நிலைக் குழுவின் உறுப்பினர்களிடையே கூட்டுறவு உணர்வு ஏற்படுவது விந்தையன்று. சொல்லப்போனால் இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல்வன. எனவே, அவை இரண்டும் சேர்ந்தே அமையும்.

முதல் நிலைக் குழுவின் உறுப்பினர்கள் ஒத்த இலட்சியங்களையும், பொதுவான குறிக்கோள்களையும், பிறர் நலத்தில் அக்கறையையும் கொண்டிருப்பதால் அவர்கள் கூட்டாக இணைந்து செயற்படுவது இயல்பே. மொத்தக் குழுவின் மீது அக்கறையும், ஆர்வமும் வைத்திருப்பதால் அவர்கள் குழுவின் நலனுக்காகக் கூட்டுறவோடு நடந்து கொள்ளுகிறார்கள். இதற்கு 'நாம்-உணர்வு'ம் தூண்டுகோலாக அமைகிறது.

ஆயினும் எல்லா உறுப்பினர்களும் செதுக்கி வைக்கப்பட்டது போல ஒரே மாதிரியான, அதாவது ஒரே விதமான கருத்துகளையும், ஆசைகளையும் கொண்டிருப்பதில்லை. அவர்களிடையே கருத்து வேறுபாடுகளும், வேறுபட்ட ஆசைகளும் இருக்கக் கூடும். அந்த வேறுபாடுகள் வளர்ந்தால் ஒரு முதல் நிலைக் குழுவின் கூட்டொருமைப்பாடு சிதைந்து உருக்குலைந்து போய்விடும். எனவே, கருத்து வேறுபாடுகள் அடக்கப்பட்டு எல்லோரிடையேயும் ஒரு கருத்திசைவு (Consensus) ஏற்பட்டு அவர்கள் கூட்டுறவோடு செயற்பட வேண்டும்.

உறுப்பினர்களிடையே அடிப்படையான செயல்களில் கருத்திசைவும், கூட்டுறவுச் செயற்பாடும் அமைவதற்கு முதல் நிலைக் குழுக்களில் சில ஏற்பாடுகள் நிலவுகின்றன. அவை: 1) அதிகாரத் தலைமை. இந்த ஏற்பாட்டு முறையில் ஒருவரிடம் அதிகாரத் தலைமை குவிந்திருக்கும் (எடுத்துக்காட்டு தந்தையாட்சிக் குடும்பம்). அவர் குழுவின் முடிவுகளை முடிவுசெய்து, குழு உறுப்பினர்களை அதை ஏற்கச் செய்து ஒரு கூட்டுறவு நிலையை ஏற்படுத்துவார். 2) சமரசம். இந்த முறையில் கருத்து வேறுபாடுகள் கொண்டோர் தமக்குள் கலந்து பேசி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒரு சமரசத்திற்கு வருவார்கள். பின்னர் ஒரு தீர்மானத்தை மேற்கொண்டு கூட்டாகச் செயற்படுவர். 3)வாக்கெடுப்பு. இம்முறையில் ஒரு தீர்மானத்தின் மீது பெரும்பான்மையானவர்கள் ஒரு முடிவுக்கு வந்திருந்தால். மற்றவர்கள் அம்முடிவுக்குக் கட்டுப்பட்டுக் கூட்டுறவோடு செயற்பட முன் வருவர். 4) ஒருமைப்பாடு. இம்முறையில் பலரும் தத்தம் கருத்துகளைக் கூட்டியிணைத்து ஓர் இணக்கமான முடிவிற்கு வந்து அதன்படி செயற்படுவர். இந்த முறையில் அமைகிற கூட்டுறவே குழு ஒற்றுமையாக நல்லிணக்கத்தோடு செயற்படப் பெரிதும் உதவுகிறது என்கிறார் மாக்ஐவர் (MacIver) என்னும் அறிஞர்.

கூட்டுறவு மனப்பான்மையும், ஒத்த இலட்சியங்களும், உணர்வுகளும் குழு உறுப்பினர்களை ஒன்றுபடுத்தி ஒருங்கிணைப்பதால் முதல் நிலைக் குழு உறுப்பினர்களின் தனித் தன்மைகள் அனைத்தும் உருகிக் கலந்து ஒன்றாக ஒரு பொது முழுமையாக வடிவெடுக்கின்றன. உறுப்பினர்கள் 'தான்', 'தனது'

என்ற நினைப்பு இல்லாமல் 'நாம்', 'நமது' என்ற பொதுமை உணர்வோடு நடந்து கொள்ளுகிறார்கள். குழுவின் நலனே முதன்மையானதென்று அதை முன்னிருத்திச் செயற்படுகிறார்கள்.

இத்தகைய சிறப்புகளை முதல் நிலைக் குழுக்கள் பெற்றிருக்கின்றன. அதற்கு மேலாக அவை சமூகத்தில் முதன்மையான பணியைப் புரிந்து தனித்தன்மை பெறுகின்றன என்கிறார் கூலீ. அதாவது அவை ஓர் அடிப்படையான, முதல் நிலையான, பணியைப் புரிந்த முதல் நிலைக் குழுக்கள், சமூகத்தில் முதல் நிலையில் இருக்கிற குழுக்கள் என்ற நிலையைப் பெறுகின்றன என்கிறார். மேலுமவர், தனி மனிதனைச் சமூகப்படுத்துவதிலும், அவனுடைய சமூகத் தன்மையையும், எண்ணங்களையும் உருவாக்குவதிலும் குடும்பம், அண்டையம் (Neighbourhood), நண்பர் குழாம் போன்ற குழுக்களே முதன்மையாக இருப்பதால், அப்படிப் பட்ட குழுக்கள் முதல் நிலைக் குழுக்கள் என்ற நிலையை எய்துகின்றன என்கிறார். மனிதர்களின் இயற்கைத் தன்மையைச் சமூகத்திற்கு ஏற்ப அமைத்துச் செம்மைப்படுத்தும் முதன்மையான பணியை முதல் நிலைக் குழுக்கள் செய்கின்றன. ஆதலால் அவை 'மனித இயற்கையின் நாற்றங் கால்கள்' என்று கூறப்படுகின்றன.

முதல் நிலைக் குழுக்கள் சமூகத்தின் அடிப்படையாகவும் அமைகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டே சமூகம் அமைவதால் அவை 'சமூகத்தின் நடுவணு' (Nucleus) என்ற பெயரையும் பெறுகின்றன.

சி.என்.ந.

**துணை நூல்கள்:**

**Cooley, Charles Horton,** Social Organization, Free Press, New York, 1956.

**Davis, Kingsley,** Human Society, Surjeet Publications, Delhi, 1981.

**Goode, William, J.,** Principles of Sociology, Tata McGraw-Hill Publishing Company, New Delhi, 1979.

**MacIver, R.M., and Page, Charles, H.,** Society, An Introductory Analysis, Macmillan Co., Ltd., London, 1955.

*முதல்நிலைத் தரவுகள்*: எந்த ஓர் ஆய்வுக்கும் அது தொடர்பான விவரங்களும் செய்திகளும் தேவைப்படும். அவற்றைத் தரவுகள் (Data) என்று ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவர். வெறும் செய்திகளை – விவரங்களை-தரவுகள் என்று கூறமுடியாது. ஆராய்ச்சித் துறையில் தான் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆராய்ச்சிக்கு உட்படும் பொருள் தொடர்பான மெய்ம்மைகள்(Facts) பற்றிய விவரங்களே தரவுகள் ஆகும். ஆக, தரவுகள் மெய்ம்மைகள் பற்றியே அமையும். புலன்களால் அறியக்கூடிய பொருட்களே மெய்ம்மைகளாகும். அந்த மெய்ம்மைகளைப் பற்றிக் கிடைக்கும் அல்லது திரட்டப்படும் விவரங்களே தரவுகள் ஆகும்.

தரவுகள் முதல்நிலைத் தரவுகள் (Primary Data), இரண்டாம் நிலைத் தரவுகள்(Secondary Data) என இரு வகைப்படும். ஓர் ஆராய்ச்சியாளர் தாமே தம் முயற்சியால் திரட்டும் தரவுகள் முதல்நிலைத் தரவுகளாகும். ஆகவே,அவை முதலாக இருக்கும். மற்றவர்கள் திரட்டிய தரவுகளை ஆராய்ச்சியாளர் பயன்படுத்தும் பொழுது அவை இரண்டாம் நிலைத் தரவுகளாகும்.

ஆக, ஒரு தரவு முதல்நிலைத் தரவு அல்லது இரண்டாம் நிலைத் தரவு என்பது ஆராய்ச்சியாளரின் செயலைப் பொறுத்து அமைகிறது. அவரே தம் முயற்சியில் திரட்டும்பொழுது அவை முதல் நிலைத் தரவுகளாகும். பிறர் திரட்டிய தரவுகளை அவர் தமது ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தும்பொழுது அவை இரண்டாம் நிலைத் தரவுகளாகும். ஓர் ஆராய்ச்சியாளர் தம் முயற்சியில் ஒரு சிற்றூரிலுள்ள தகுதி வாய்ந்த ஒரு குடும்பத்தினர் பற்றித் தகவல்கள் திரட்டினால் அவை முதல்நிலைத் தரவுகளாகும். தகுதிவாய்ந்த குடும்பத்தினர் பற்றி மாவட்டக் குடும்ப நல அலுவலகம் திரட்டி வைத்திருக்கும் தரவுகளை அவர் எடுத்தாண்டால் அவை இரண்டாம் நிலைத்தரவுகளாகும். அவ்வாறே நூல்கள், ஆய்வேடுகள், ஆராய்ச்சி அறிக்கைகள் முதலியவற்றிலிருந்து தகவல்களைச் சேகரித்தால் அவையும் இரண்டாம் நிலைத்தரவுகளாகும்.

பொதுவாக ஆராய்ச்சியில், குறிப்பாகச் சமூக அறிவியல் ஆராய்ச்சியில் முதல்நிலைத் தரவுகள்பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் நிலைத் தரவுகளைக் கொண்டு ஆய்வுகள் நடத்த வாய்ப்பு இருப்பினும்ஆய்வுத்துறையில் முதல்நிலைத்தரவுகளே பெரிதும் விரும்பப்படுகின்றன. ஏனெனில்,இரண்டாம் நிலைத் தரவுகள் மற்றவர்களால் திரட்டப்பட்டவை. அவை திரட்டப்பட்ட முறை, நிலைமைகள் ஆகியவை சரியானவையா, அந்தத் தரவுகள் அனைத்தும் சரியானவையா, நம்பகமானவையா என்பன குறித்து ஆராய்ச்சியாளரால் முடிவுசெய்ய இயலாது. ஆனால், முதல்நிலைத் தரவுகள் ஆராய்ச்சியாளரின் சொந்த முயற்சியில் திரட்டப்படுவதால் அவர் அவற்றைக் கவனமாகவும், அக்கறையோடும் திரட்டுவார். தவறு

ஏற்படாமல், குறை வாராமல், இடைவெளி ஏற்படாமல் தேவையான தரவுகளைத் திட்டமாக, செம்மையாகத் திரட்டுவார். அவருடைய திரட்டும் பணியில் குறை ஏற்பட்டால் பாதிக்கப்படுவது அவரேதவிர வேறு யாருமில்லை. ஆதலால், அவர் தம் முயற்சியில் கவனமாகவும், அக்கறையாகவும் செயற்படுவார். ஆகவே, சரியான, நம்பகமான தரவுகளே அவர் முயற்சியில் திரட்டப்படும்.

மேற்கூறிய காரணத்துக்காக மட்டும் முதல்நிலைத் தரவுகள் திரட்டப்படுவதில்லை. இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தும் சூழ்நிலையில் கூட ஓர் ஆராய்ச்சியாளருக்கு முதல்நிலைத் தரவுகள் தேவைப்படும். இரண்டாம் நிலைத் தரவுகள் போதுமானவையாக, நிறைவாக இல்லாமல் இருந்தால் ஆராய்ச்சியாளர் அக்குறையை ஈடுசெய்ய முதல்நிலைத் தரவுகளைத் திரட்ட முயல்வார். அதுமட்டுமல்லாமல் இரண்டாம் நிலைத் தரவுகள் வெளிப்படுத்தும் உண்மைகளை உறுதிப்படுத்தவும்கூட முதல்நிலைத் தரவுகள் திரட்டப்படுவதுண்டு.

முதல்நிலைத் தரவுகள் பெரும்பாலும் மனிதர்களிடமிருந்தே திரட்டப்படுகின்றன. ஆராய்ச்சியாளரால் அவருடைய ஆய்வுக்காகத் தகவலாளராகத் (Respondents) தேர்ந்தெடுக்கப்படுகிற மனிதர்களிடமிருந்து தரவுகள் திரட்டப்படுகின்றன. அந்தப் பணியில் பல கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை நேர்காணல், வினாநிரல்/வினாப் பட்டியல், உற்றுநோக்கல் ஆகியனவாகும்.

**நேர்காணல்**: இதில் ஆராய்ச்சியாளர் தகவலாளரிடம் கேள்விகள் கேட்டு அவற்றுக்குரிய விடைகளைப் பெறுகிறார். அந்த விடைகளே அவருக்கு வேண்டிய தரவுகளைத் தருகின்றன.

பெரும்பாலும் நேர் காணுதல் நேருக்கு நேராகத் தான் நடைபெறுகிறது. தொலைபேசி வாயிலாகக் கூட நேர் காணப்படுவதுண்டு. ஆனால், அந்த உத்தி அவ்வளவாக ஆய்வில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. வளர்ந்த நாடுகளில் தொழில்துறை தொடர்பான அளவீட்டு ஆய்வுகளில் அந்த உத்தி ஓரளவு கடைப்பிடிக்கப்படுகிறது.

நேருக்கு நேராகக் காணும்போது நிறைய தரவுகளை ஓர் ஆராய்ச்சியாளரால் திரட்டமுடியும். நேர் காணுதல் ஒரு நெகிழ்வான செயற்பாங்கு. ஆகவே, ஓர் ஆராய்ச்சியாளர் தாம் நிறைவு அடையும் வரை வினாக்கள், குறுக்கு வினாக்கள், ஐயங்கள் என்று வினாக்களைத் தொடர்ந்து கேட்டுத் தமக்குத் தேவையான, மனநிறைவான தரவுகளைப் பெறமுடியும். அதுமட்டுமல்லாமல் அளவற்ற முறையில் ஏராளமான தரவுகளையும் பெறமுடியும். தகவலாளர் கேள்வி புரியாமல் விடை தந்திருக்கிறார்; தந்த விடை போதவில்லை என்ற பேச்சுகளுக்கே நேர் காணுதலில் இடமில்லை. தகவலாளருக்குத் தேவைப்படும் விளக்கங்களை அப்போதே, அந்த இடத்திலேயே தந்து, அவர் தரும் மறுமொழிகளில் ஐயம் இருந்தால் அதை அங்கேயே உடனேயே கேட்டு நீக்கம் செய்து, குறுக்கு வினாக்களின் மூலம் மறுமொழிகளுக்கு விளக்கம் பெற்று ஓர் ஆராய்ச்சியாளர் தமக்கு வேண்டிய தரவுகளைக் குறைவில்லாமல் நிறைவான அளவில் நேர் காணுதலின்மூலம் பெற முடியும். அதுவும் சரியான, துல்லியமான தரவுகளைப் பெறமுடியும். இதுதான் நேர் காணுதலின் தனிச் சிறப்பு ஆகும்.

நேர்காணுதல் பொதுவாக இரண்டு வகைப்படும். ஒன்று கட்டமைப்பான நேர்காணல் (Structured Interview); மற்றொன்று கட்டமைப்பற்ற நேர்காணல் (Unstructured Interview). கட்டமைப்பான நேர்காணலில் நேர்காணும் போது எந்த அமிசங்களைப் பற்றி வினாக்களைக் கேட்க வேண்டும் எவ்வளவு வினாக்கள் கேட்கவேண்டும், எவ்வளவு நேரத்தில் கேட்டு நேர்காணலை முடிக்கவேண்டும் என்பன முன் கூட்டியே முடிவெடுக்கப்படுகின்றன. வினாக்கள் எவ்வாறு ஓர் ஒழுங்குநிரலாக வரவேண்டும் என்றும் திட்டமிடப்படுகிறது. இப்படி முன்கூட்டியே திட்டமிடப்பட்டு அதன்படி நடத்தப்படுவதுதான் கட்டமைப்பான நேர்காணல். கட்டமைப்பற்ற நேர்காணலில் இவையெல்லாம் இரா; முன்கூட்டியே எதுவும் முடிவு செய்யப்படுவதில்லை. நேர்காணல் சுதந்திரமாக, திட்டமிடப்படாமல் இயங்குகிறது. இவற்றை, இன்ன மாதிரிதான் கேட்கவேண்டும் என்ற எந்தவொரு திட்டமும் இல்லாமல் கட்டமைப்பற்ற நேர்காணல் நடத்தப்படுகிறது.

இவ்விரண்டுவகை நேர்காணல்களுக்கும் இடையில் வேறுசில வகை நேர்காணல்களும் இருக்கின்றன. அவை குவிமையப்படு நேர்காணல் (Focussed Inter-view), ஆழ்ந்துநேர்காணல் (Depth Interview) ஆகியன. குறிப்பிட்ட சூழ்நிலையில் அல்லது நிகழ்ச்சியில் தகவலாளர்களின் அனுபவம் எப்படியிருந்தது என்பதைத் தெளிவாக அறிவதற்காக நடத்தப்படும். நேர்காணல் குவிமையப்படு நேர்காணல் என்று சொல்லப்படுகிறது. இதில்நேர்காணலின் போது கேட்கப்படும் வினாக்கள் மேற்படி செய்தியின் மீதே ஒருமுகப்படுத்தப்படுகின்றன. வேறு செய்திகளின் மீது நேர்காணல் திருப்பப்படுவது இல்லை. ஆழ்ந்து நேர்காணல் ஒரு முனைப்பான, துருவித் துருவித் தேடிப் பார்க்கும் நேர்காணலாகும். ஒருவருடைய ஆளுமை இயங்கியலையும், உளநிலைப் போக்கையும்

பற்றித் தெரிந்து கொள்வதற்காக இந்நேர்காணல் நடத்தப்படும். இதில் துருவித் துருவி வினாக்கள் கேட்கப்படும். இதில் தகவலாளரின் ஆழ்மனதில் என்னென்ன உணர்ச்சிகள், கருத்துகள், உள் நோக்கங்கள் முதலியவை அடங்கியிருக்கின்றன என்பது பற்றிக் கேட்டறியப்படும். தேடலில் கிடைக்கிற உண்மைகளைக் கொண்டு தகவலாளரின் ஆளுமை இயங்கியல் பற்றியும், உளநிலைப் போக்குப்பற்றியும் அறிந்து கொள்ளமுடியும்.

**வினாநிரல்/வினாப்பட்டியல்:** ஆராய்ச்சியாளர் வினாக்கள் அடங்கிய ஒரு படிவம் தயார்செய்து அதைத் தகவலாளர்களுக்குக் கொடுத்து, அவர்களிடமிருந்து விடைகளைப் பெற்றுத் தரவுகள் திரட்டுவதுண்டு. அந்தப் படிவம் வரிசையாக, ஒழுங்குமுறையோடு அமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அந்தப் படிவம் வினாநிரல் அல்லது வினாப் பட்டியல் எனப்படும். அது வினா நிரலா, வினாப் பட்டியலா என்பது அது நிருவகிக்கப்படும் விதத்தைப் பொறுத்திருக்கிறது. அந்தப் படிவம் தகவலாளர்களிடம் தரப்பட்டு, அவர்கள் அதிலுள்ள வினாக்களுக்கு அவர் தாமே மறுமொழிகளை, விடைகளை எழுதி நிறைவு செய்தால் அது வினாநிரல் எனப்படும். அதற்கு மாறாக, ஆராய்ச்சியாளரே வினாக்கள் படிவத்திலுள்ள வினாக்களைத் தகவலாளர்களுக்குப் படித்துக்காட்டி, அவர்கள் தருகிற மறுமொழிகளை இவரே எழுதிப் படிவத்தை நிறைவு செய்தால் அந்தப் படிவம் வினாப்பட்டியல் (Schedule) எனப்படும்.

வினாப் பட்டியல் தகவலாளர்களுக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவர்களிடமிருந்து விடைகளைப் பெற்று, ஆராய்ச்சியாளரால் நிறைவு செய்யப்படுவதால் அது ஒரு நேர்காணல் சூழ்நிலையில்தான் நிருவகிக்கப்படும். அதாவது ஆராய்ச்சியாளர் தகவலாளர்களை நேருக்கு நேராகச் சந்தித்தால் ஒழிய வினாப் பட்டியலைக் கையாளமுடியாது. இப்படி ஒரு பேட்டிச் சூழ்நிலையில் - நேருக்கு நேர் சந்திப்பில்—வினாப்பட்டியல் கையாளப்படுவதால் அது நேர்காணல் வினாப் பட்டியல்' (Interview Schedule) எனப்படுகிறது.

வினாநிரலும் ஒரு நேருக்கு நேர் சந்திப்பில் கொடுக்கப்படுகிறது. ஆராய்ச்சியாளர் தகவலாளரை நேரில் சந்தித்து வினாநிரலை அவரிடம் கொடுக்கிறார். ஆனால், வினாப்பட்டியலைப் போல அல்லாமல் வினாநிரல் ஒரு நேர்காணல் சூழ்நிலையில் நிறைவு செய்யப்படுவதில்லை. தகவலாளரை நேருக்கு நேர்சந்தித்து வினாநிரலை அவரிடம் தந்துவிட்டு ஆராய்ச்சியாளர் அவ்விடத்தைவிட்டு நகர்ந்துவிடுகிறார். தகவலாளர் தாமே வினாநிரலைப் படித்து, மறுமொழிகளை எழுதி நிரலை நிறைவு செய்கிறார். அப்போது அங்கு, அந்த இடத்தில் ஆராய்ச்சியாளர் இருப்பதில்லை. நிரலைக்கொடுக்கும்போதும், நிறைவு செய்யப்பட்டபின் தகவலாளரிடமிருந்து வினா நிரலைத் திருப்பி வாங்கும் போதும் மட்டும்தான் ஆராய்ச்சியாளரும் தகவலாளரும் நேருக்கு நேர் சந்திக்கிறார்கள். ஏனைய சூழ்நிலையில் அதாவது நிறைவு செய்யும் போது அவர்கள் சந்திப்பதில்லை.

வினாநிரல் நேரில் மட்டுமல்லாமல் அஞ்சல் மூலமும் தகவலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதுண்டு. அப்படிக்கொடுக்கப்படும் வினாநிரல் அஞ்சல் வினாநிரல் (Mailed Questionnaire) எனப்படும். அம்முறையில் வினாநிரல் அஞ்சல்மூலம் தகவலாளர்களுக்கு அனுப்பப்படும். அவர்கள் அதைப்பெற்று நிறைவு செய்துஅஞ்சல் மூலம் திருப்பி அனுப்புவார்கள். ஆராய்ச்சியாளர் அவர்களைச் சந்திப்பதில்லை. அவர்கள் இருவரும் சந்திக்காமலேயே வினாநிரல் நிருவகிக்கப்படுகிறது.

பெரும்பாலும் சமூக அறிவியல் ஆய்வுகளில் இப்போது தரவுகளைத் திரட்ட வினாநிரலே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. அதன்மூலம் குறுகிய காலத்தில் நிறைய தகவலாளர்களுக்கு வினாப்பட்டியல்களைத் தந்து தரவுகளைத் திரட்டமுடியும். அஞ்சல் வினாநிரலைப் பொறுத்த அளவில் பரவலாகச் சிதறிக் கிடக்கிற தகவலாளர்களிடமிருந்து குறைந்த காலத்தில் தரவுகளைத் திரட்ட முடியும். இதனால், காலம், சக்தி, பணம் ஆகியவற்றைச் சேமிக்க இயலும். ஆனால், வினாப்பட்டியல் கொடுக்கும் முறையில் ஒவ்வொரு தகவலாளரையும் நேரில் பார்த்து அதைஒரு நேர்காணல் சூழ்நிலையில் நிறைவு செய்ய வேண்டியிருப்பதால் மிகுந்த காலச் செலவு, சக்திச் செலவு, பணச்செலவு ஆகியன ஏற்படும்.

ஆயினும், வினா நிரலுக்கு ஒரு வரையறை இருக்கிறது. தகவலாளர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாய் இருந்தால்தான் அதை நிருவகிக்க முடியும். எழுதப் படிக்கத் தெரியாதவர்களிடத்தில் அதைநிருவகிக்க முடியாது. ஆனால், வினாப் பட்டியலைப் பொறுத்த அளவில் அந்தச் சிக்கல் இல்லை. படித்தவர், படிக்காதவர் யாராயிருந்தாலும் சரி, அவர்களிடம் வினாப் பட்டியலைக் கொடுத்து நிருவகிக்க முடியும்.

**உற்றுநோக்கல்:** இதில் ஒரு சூழ்நிலையில் ஒரு நிகழ்ச்சியில் ஒரு தனி மனிதன் அல்லது குழு எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதை உற்றுக் கவனித்துத் தரவுகள் திரட்டப்படுகின்றன. இது வெறும் பார்வையாக அமைவதில்லை. ஒரு காரியக் கண்

ணோட்டத்தோடு அதாவது தரவுகள் திரட்டும் நோக்கத்தோடு அமைந்த விழிப்பான பார்வையாக இருக்கும்.

உற்றுநோக்கலுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது நேர் காணுதல், வினாநிரல்/வினாப்பட்டியல் கொடுத்தல் ஆகிய தரவு திரட்டும் உத்திகளிலிருந்து வேறுபட்டது. நேர் காணுதலும், வினாநிரல்/வினாப் பட்டியல் கொடுத்தலும் தொடர்புடைய தகவலாளர்கள் ஆராய்ச்சியாளருடன் ஒத்துழைத்தாலொழிய அந்த உத்திகளின் மூலம் ஆய்வாளர்கள் தரவுகளைத் திரட்ட இயலாது. அவர்கள் மறுமொழி தர இணங்காவிடில் அல்லது சரியான மறுமொழி தரமறுத்தால் ஆராய்ச்சியாளரின் நோக்கம் நிறைவேற இயலாது. ஆனால், உற்றுநோக்கல் உத்தியில் இந்த இடர்ப்பாடு இல்லை. அதில் தகவலாளர் ஒத்துழைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. தகவலாளரைச் சாராமலேயே சுதந்திரமாகத் தரவுகளை அந்த உத்தியின்மூலம் திரட்ட முடியும்.

இந்த நன்மை மட்டுமல்லாமல் வேறுசில நன்மைகளும் உற்றுநோக்கலில் உண்டு. மனித ஒழுகலாறு நடைபெறும் சமயத்திலேயே உற்றுநோக்கல் மூலம் அதைப் பற்றிய தரவுகளைச் சூட்டோடு சூடாகத் திரட்டலாம். ஆனால், மற்ற உத்திகளில் ஒழுகலாறு நடைபெற்று முடிந்தபிறகு, தொடர்புடைய தனி ஆள் அதுபற்றித் தருகிற விவரங்களே தரவுகளாக அமைகின்றன.

மேலும், மற்ற உத்திகளில் தகவலாளர்கள் தமது ஒழுகலாறு பற்றித் தம் சொந்த விருப்பு வெறுப்போடு தகவல்களைத் தரலாம். ஆனால், புறவயத் தன்மை (Objectivity)இல்லாமல் அந்தத் தகவல்கள் இருக்கக்கூடும். ஆனால், புறவய நோக்கோடு மனித ஒழுகலாறு உற்றுநோக்கலில் ஆராய்ச்சியாளரால் ஆராயப்படுவதால் அங்கே தகவலாளரின் அகவய விருப்பு வெறுப்புத் தரவுகளில் நுழைந்திட வழியில்லை.

மற்ற உத்திகளில் தகவலாளர்கள் தம் ஒழுகலாறு பற்றி விளக்கங்கள் தருகையில் தமது ஒழுகலாற்றின் சில அமிசங்களைப் பற்றிச் சொற்களில் விளக்கமுடியாமற் போகும். ஆனால், உற்றுநோக்கலின் மூலம் ஓர் ஆராய்ச்சியாளர் அந்த அமிசங்களைத் தாமே உற்றுக் கவனித்து, சொற்களில் வாராத-வரமுடியாத உண்மைகளை வெளிக்கொணர முடியும்.

உற்றுநோக்கல் இருவகைகளில் அமையும். ஒன்று கட்டமைப்பான உற்றுநோக்கல்; இன்னொன்று கட்டமைப்பற்ற உற்றுநோக்கல். கட்டமைப்பான உற்றுநோக்கலில் உற்றுநோக்கின் போது என்னென்ன அமிசங்களை உற்றுநோக்க வேண்டும்; எந்தச் சூழ்நிலைகளில் அவற்றை உற்றுநோக்க வேண்டும்; உற்றுநோக்கும்போது நோக்கப்படுவனவற்றை எவ்வாறு பதிவு செய்ய வேண்டும் என்பனவெல்லாம் முன்கூட்டியே திட்டமிடப்படுகின்றன. ஆனால், கட்டமைப்பற்ற உற்றுநோக்கலில் அப்படியெல்லாம் திட்டமிடப்படுவதில்லை. அது சுதந்தரமாக, திட்டமிடப்படாமல் இயங்கும். இவற்றைத்தான் உற்றுநோக்க வேண்டும்; இந்தச் சூழ்நிலையில்தான் உற்றுநோக்க வேண்டும்; இப்படித்தான் பதிவு செய்ய வேண்டும் என்பனவெல்லாம் முடிவு செய்யப்படாமலேயே மனித ஒழுகலாற்றை அது நடைபெறும் போக்கிலேயே வைத்துக் கண்ணில் தட்டுப்படும் எல்லா அமிசங்களையும் நோக்குவது கட்டமைப்பற்ற உற்றுநோக்கலில் கடைப்பிடிக்கப்படுகிறது.

மேலும் உற்றுநோக்கல் பங்கேற்பு உற்று நோக்கல் (Participant Observation), பங்கேற்பு இல்லாத உற்றுநோக்கல் (Non – participant Observation) என இருவகைகளாக அமைவதுண்டு. ஒரு குழுவின் உறுப்பினர்கள் ஒருசில சூழ்நிலைகளில் எப்படி நடக்கிறார்கள் என்பதையறிய, ஓர் ஆராய்ச்சியாளர் அக்குழுவில் மற்றவர்களுக்குத் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் சேர்ந்து, மற்றவர்களோடு கலந்து பழகி அவர்களுக்குத் தெரியாமல் அவர்களுடைய ஒழுகலாற்றை உற்றுக் கவனித்து ஆராய்வது பங்கேற்பு உற்றுநோக்கலில் நிகழும். ஒரு குழுவின் உறுப்பினர்களை அக் குழுவுக்கு வெளியே நின்று அவர்கள் பார்வையில் படாதவாறு அவர்களை உற்றுநோக்கி ஆராய்வது பங்கேற்பு இல்லாத உற்றுநோக்கலில் அமையும். ஓர் ஆராய்ச்சியாளர் தம் வயது ஒத்த ஆட்களின் குழுவில் பங்கேற்று அவர்களின் ஒழுகலாற்றை உற்றுநோக்கி ஆராயலாம். ஆனால், ஒரு குழந்தைகள் குழுவிலோ வேறுபட்ட பாலினக் குழுவிலோ அவர் பங்கேற்க முடியாது. அந்த நிலையில் அத்தகைய குழுவின் ஒழுகலாற்றை ஆராய அவர் பங்கேற்பு இல்லாத உற்று நோக்கலைத்தான் கடைப்பிடிக்க முடியும். அதாவது அந்தக் குழுவுக்கு வெளியே நின்று அவர்கள் பார்வையில் படாமல்தான் அவர்களைக் கண்காணித்து ஆராயமுடியும்.

உற்றுநோக்கல் பெரும்பாலும் மனித ஒழுகலாறு இயற்கையாக, இயல்பாக நிகழும் சூழ்நிலையில்தான் மேற்கொள்ளப்படும். அவ்வகையான உற்றுநோக்கல் கட்டுப்படுத்தப்படாத உற்றுநோக்கல் (Uncontrolled Observation) எனப்படும். சிலவேளைகளில் ஒரு குறிப்பிட்ட நிலைமையை அதாவது ஓர் ஆய்வுக்கூட நிலைமையை ஏற்படுத்தி அதில் தனித்தனி ஆட்களை

இருத்தி, அந்த நிலைமையில் அவர்கள் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்று பரிசோதனை முறையில் ஆராய்தலும் நடைபெறும். அத்தகைய செயற்பாங்கு, கட்டுப்படுத்தப்பட்ட உற்றுநோக்கல் (Controlled Observation) எனப்படும்.

**மதிப்பீட்டு அளவுகோல்கள்:** மேற்கண்ட கருவிகள் மட்டுமன்றி வேறுசில கருவிகளும் முதல் நிலைத் தரவுகளைத் திரட்டப் பயன்படுத்தப் படுகின்றன. அவற்றில் ஒன்று மதிப்பீட்டு அளவுகோல்கள் (Rating Scales) ஆகும். ஒரு குறிப்பிட்ட செய்தியில், சிக்கலில் ஒரு குழுவின்அல்லது தனிஒருவரின் நிலைப்பாடு எப்படியிருக்கிறது, அந்த நிலைப்பாடு எத்தகைய சாயல்களைக் கொண்டிருக்கிறது என்பதை மதிப்பீட்டு அளவுகோல்களின்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு மதிப்பீட்டு அளவுகோல் முக்கியமாக இரண்டு மூலகங்களைக் கொண்டிருக்கும். ஒன்று, மதிப்பிடவேண்டிய செய்தி அல்லது பொருள், இரண்டு, மதிப்பீடுகள் அமைந்த ஒரு தொடர்பம் (Continuum). ஒரு மதிப்பீட்டு அளவுகோல் அமைக்கப்படும்பொழுது ஆராய்ச்சியாளர் அது தொடர்பானபொருளைப்பற்றித் தனி ஒருவரின் நிலைப்பாட்டுச் சாயல்கள் எப்படியிருக்கும் என்பதை அனுமானித்துப் பல கூற்றுகளை, மதிப்பீடுகளை உருவாக்குகிறார். அந்தக் கூற்றுகளை, மதிப்பீடுகளை ஒரு தொடர்பத்தில் சீராக அமைத்து மதிப்பீட்டு அளவுகோலை அமைக்கிறார். அந்தக் கூற்றுகளே, மதிப்பீடுகளே அளவுகோலின் புள்ளிகளாக அமைகின்றன. பிறகு அந்த அளவுகோலைத் தகவலாளர்களிடம் கொடுத்து அவர்களுக்கு ஏற்புடைய மதிப்பீடுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுகிறார். அப்படி ஒரு செய்தியின் அல்லது பொருளின் பல்வேறு பரிமாணங்களின்மீது தகவலாளர்கள் கொண்டுள்ள மதிப்பீடுகள் ஆராயப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக மாணவர்கள் கல்லூரி நிருவாகக் குழுவில பங்கேற்பது பற்றிய சிக்கலில் தகவலாளர்களின் நிலைப்பாடு எத்தகையது, எத்தகைய சாயல்கள் கொண்டது என்பதையறிய கீழ்க்காணுமாறு சில கூற்றுகள் மதிப்பீட்டு அளவுகோலில் இடம் வலமாகத் தரப்படும். தகவலாளர்கள் தமக்கு ஏற்புடைய கூற்றை அதற்குக்கீழ்✓என்ற குறிபோட்டுத் தேர்ந்தெடுப்பர். அந்த முறையில் மேற்படி சிக்கல்மீது தகவலாளர்களின் நிலைப்பாடு என்ன, எப்படிப்பட்டது என்று மதிப்பீட்டு அளவுகோலின் மூலம் கண்டறியப்படுகிறது.

ஒரு சிக்கலுக்கு உண்டான பல தீர்வுகளைப் பற்றியும் தகவலாளர்கள் எவ்விதம் மதிப்பீடு செய்கிறார்கள் என்பதையறியவும் மதிப்பீட்டு அளவுகோல்கள் உதவுகின்றன. ஒரு சிக்கலுக்குத் தரப்படும், தரக்கூடிய தீர்வுகளை வரிசையாகக் கொடுத்துத் தகவலாளர்கள் அவற்றைத் தர வரிசைப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுண்டு. அதன்மூலம் எந்தத் தீர்வுகள் சிறந்தவையாகவும், எந்தத் தீர்வுகள் சாதாரணமானவையாகவும் தகவலாளர்களின் மதிப்பீட்டில் விளங்குகின்றன என்பதை அறியலாம்.

| தீர்வுகள் | தரவரிசை |
|---|---|
| க... | 3 |
| ச... | 2 |
| த... | 4 |
| ப... | 1 |

அப்படிப் பலவழிகளில் ஒரு பொருளைப் பற்றி, ஒரு நிகழ்வைப் பற்றி, ஒரு செயலைப் பற்றி, ஒரு சிக்கலைப் பற்றி, தனிஆளின் இயல்பைப் பற்றித் தகவலாளர்களுடைய மதிப்பீடுகள் எப்படியிருக்கின்றன என்பதைப் பற்றிய தரவுகளை மதிப்பீட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| மாணவர்களுக்குக் கல்லூரி நிருவாகக் குழுவில் கட்டாயம் இடம்தரப்பட வேண்டும் என்று கூறுகிறேன். | கல்லூரி நிருவாகக் குழுவில் மாணவர்கள் இடம்பெற வாய்ப்பு அளிப்பது நல்லதென்று நினைக்கிறேன். | இச்சிக்கல் பற்றி எனக்கு ஓரளவு உடன்பாடும் உண்டு; ஓரளவு எதிர்ப்பும் உண்டு. | மாணவர்கள் கல்லூரி நிருவாகக் குழுவில் இடம்பெறத் தேவையில்லை என்பது என் கருத்து. | எக்காரணங் கொண்டும் மாணவர்களுக்குக் கல்லூரி நிருவாகக் குழுவில் இடம்தரக் கூடாதென்பது என் திடமான கருத்து. |

அளவுகோல்களின் மூலம் திரட்டலாம். அந்த வகையில் வரி விளக்கமான மதிப்பீட்டு அளவுகோல் (Graphic Rating Scale), வகைவகையாய் உணர்த்தப்படும் மதிப்பீட்டு அளவுகோல்(Itemized Rating Scale), ஒப்புமை மதிப்பீட்டு அளவுகோல் (Comparative Rating Scale), தரவரிசை ஒழுங்கு அளவுகோல் (Rank Order Scale) ஆகிய மதிப்பீட்டு அளவுகோல்கள் சிறப்பாகப் பயன்படுகின்றன.

**மனப்பான்மை அளவுகோல்கள்**: மதிப்பீட்டு அளவுகோல்கள் மட்டுமன்றி மனப்பான்மை அளவுகோல்களும் (Attitude Scales) முதல்நிலைத் தரவுகளைத் திரட்டுவதில் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு சிக்கல் அல்லது ஒரு நிகழ்வு பற்றித் தகவலாளர்களுக்கு ஒரு நிலைப்பாடு, மதிப்பீடு இருக்கக்கூடும். மதிப்பீட்டு அளவுகோல்கள் அது எப்படிப்பட்டது என்பதை ஆராய்கின்றன. ஆயினும், தகவலாளர்களுடைய நிலைப்பாடு மதிப்பீடு ஒரே அளவுடையதாக இருப்பது கிடையாது. அது மிக்க ஏற்புடையதாக அல்லது ஏற்புடையதாக இருக்கக்கூடும் அல்லது மிக எதிராக அல்லது எதிராக இருக்கக் கூடும். அல்லது ஏற்புடையதாகவும் இருக்காது; எதிராகவும் இருக்காது. அப்படிப்பட்ட அளவு வேறுபாடுகளை அளவிடுவதற்கு மனப்பான்மை அளவுகோல்கள் பயன்படுகின்றன.

எந்தவகையில், அளவில் வேறுபட்டு அமைந்துள்ளன என்று கண்டறிவார்கள்.

அத்தகைய அளவீட்டுப் பணியில் முக்கியமாகத் தர்சுடன் என்பவரின் அளக்கப்படு மதிப்புகளின் உத்தி (Thurstone's Technique of Scaled Values) என்ற அளவுகோலும், இலிக்கர்ட்டு என்பவரின் கூட்டுத் தொகை மதிப்பீடுகளின் முறை (Likert's Method of Summated Ratings) என்ற அளவு கோலும் பெரிதும் பயன்படுத்தப் படுகின்றன. அவற்றில் முன்னதை விடப் பின்னதே ஆய்வுகளில் பெரிதும் பயன்படுத்தப் படுகிறது.

அவையன்றிப் பொகார்டசு (Bogardus) என்பவரின் சமூகச் சேய்மை அளவுகோலும் (Social Distance Scale) மனப்பான்மைகளை அளவிடுவதில் பயன்படுகிறது. அது இனக்குழுக்கள், மதக்குழுக்கள் அல்லது சாதிகள் குறித்துத் தனிமனிதர்கள் எத்தகைய மனப்பான்மைகள் கொண்டிருக்கிறார்கள், எந்தெந்தச்செயல்களில் எந்தந்த அளவுக்கு அவர்கள் அவற்றுடன் உறவு வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்பதை அளவிட முயலுகிறது. அந்த அளவீட்டைக் கொண்டு தகவலாளர்கள் எந்தெந்தச் செயல்களில் எந்த அளவுக்கு ஓர் இனக்குழுவுடன் அல்லது ஒரு மதக் குழுவுடன் அல்லது ஒரு சாதியுடன் அணித்

எ-டு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கல்லூரி நிருவாகம் தொடர்பாக நிருவாகத்தினர் ஆசிரியர்களைக் கலந்தாலோசித்தே முடிவுகள் எடுக்க வேண்டும். | இக்கருத்தைத் தீவிரமாக ஆதரிக்கிறேன். | இதை ஒப்புக் கொள்கிறேன். | இது பற்றி எதுவும் சொல் வதற் கில்லை. | இதை நான் ஒப்புக் கொள் கிறேன். | இதைத் தீவிர மாக எதிர்க் கிறேன். |

மனப்பான்மை அளவுகோல்களின் மூலம் தகவலாளர்களுடைய மனப்பான்மைகளில் நிலவும் அளவு வேறுபாடுகளை அளந்திட முனையும்போது ஒவ்வொரு நிலைப்பாட்டுக்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும். இடமிருந்து வலமாக – 2, 1, 0, - 1-2 என்றோ; 5,4,3,2,1, என்றோ (அல்லது 1,2,3,4,5 என்றோ) நிலைப்பாடுகளுக்கு மதிப்பெண்கள் தரப்படும். அப்படி ஒரு சிக்கலின் பல்வேறு பரிமாணங்களைப் பற்றி மேற்கண்டவாறு ஐந்து அல்லது ஏழு கூற்றுகளாகப் பல கூற்றுகளை உருவாக்கித் தகவலாளர்களை அவற்றுள் அவர்களுடைய நிலைப்பாட்டுக்கு ஒத்துவரும் கூற்றை √ குறி போட்டுத் தேர்ந்தெடுக்கச் சொல்லுவார்கள். கடைசியில் ஒவ்வொரு தகவலாளரும் பெற்ற மதிப்பெண்களைக் கூட்டித் தகவலாளர்களுடைய நிலைப்பாடுகள்

தான உறவு அல்லது விலகிநிற்கும் சேய்மை உறவு வைத்துக் கொள்ளும் மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியமுடியும்.

**சமூக அளவை**: முதல்நிலைத் தரவுகள் திரட்டுவதில் சமூக அளவை (Sociometry) என்றோர் உத்தியும் பயன்படுத்தப்படுகிறது. சே.எல்.மொரீனோ (J.L. Moreno), எலன் ஆல் சென்னிங்சு (Helen Hall Jennings) ஆகியோர் அந்த உத்தியை உருவாக்கினர். அந்த உத்தி ஒரு குழுவில் அதன் உறுப்பினர்கள் எவ்வாறு பழகுகிறார்கள், எந்த அளவுக்குத் தமக்குள் உறவு வைத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை ஆராய்கிறது.

**புறத்தெறிவு உத்திகள்**: மேற்கூறிய அளவுகோல்கள், உத்திகள் மட்டுமன்றி, புறத்தெறிவு உத்திகள்

(Projective Techniques) என்ற ஒருவகை ஆய்வு உத்திகளும் தகவலாளர்களிடமிருந்து முதல்நிலைத் தரவுகளைத் திரட்டப் பயன்படுத்தப்படுகின்றன. உளவியல் ஆய்வுகளில் அந்த உத்திகள் பெரிதும் கடைப் பிடிக்கப்படுகின்றன. அவை மறைமுகமான நேர் காணல் உத்திகள் ஆகும். நேர்காணலில் தகவலாளர்கள் தம் உள்ளக் கிடக்கைகளையும், உந்துதல்களையும், உள்தூண்டல்களையும் வெளியிட மறுக்கலாம். அல்லது அவற்றிற்குச் சொற்களில் வடிவம் கொடுத்து வெளியிட இயலாமற் போகலாம். ஆகவே, அந்தகைய இடர் நிலையைச் சரிக்கட்ட உளவியல் வல்லுநர்கள் புறத்தெறிவு உத்திகள் மூலம் தகவலாளர்களுடைய உள்ளக் கிடக்கைகள், உந்துதல்கள், உள்தூண்டல்கள் முதலியவற்றை வெளிவரச் செய்து அவற்றை அறிந்து கொள்ளுகிறார்கள்.

இந்த உத்திகளில் தகவலாளர்களுக்குச் சில புறத் தூண்டல்கள் (Stimuli) தரப்படுகின்றன. அவை ஓர் ஒலித்தொடராகவோ, சொல்லாகவோ, சொற்றொடராகவோ, நிழற்படமாகவோ, படமாகவோ, மை ஊறிய தாளாகவோ, விளையாட்டுப் பொம்மையாகவோ இருக்கும். அந்தப் புறத் தூண்டல்களுக்கு அவர்கள் எவ்விதம் மறுமொழி தருகிறார்கள் என்பதைக் கவனித்து அவர்களுடைய உள்ளக் கிடக்கைகளும், ஆளுமைப் போக்கும், உள இயல்பும் அறியப் படுகின்றன. அந்த உத்திகளில் ஒலித்தொடர், சோதனை (Tautophone), சொற்களை இயைபு படுத்தும் சோதனை (Word Association Test), வாக்கிய நிறைவுச் சோதனை (Sentence Completion Test), கதை கற்பிக்கும் சோதனை (Story Completion Test), புறத்தெறிவு வினாக்கள் (Projective Questions), விவரச் சோதனை (Description Test), கருப்பொருளைக் காணும் சோதனை (The Matic Apperception Test) தாம்கின்சு-கார்ன் பட ஒழுங்கமைப்புச் சோதனை(Tomkins Horn Picture Arrangement Test), உரோசன்சுவைகுச் சோதனை (Rosenzweig Test), உரோசாக்குச் சோதனை (Rorschach Test), ஓல்ட்சுமேன் மைத்தடச் சோதனை (Holtzman Ink-blot Test), பொம்மை விளையாட்டு உத்தி (Doll-play Technique), உளநாடக, சமூக நாடக உத்திகள் (Psychodramatic and Sociodramatic Techniques) முதலியன முக்கியமானவையாகும்.

**உள்ளடக்கப் பகுப்பாய்வு:** இவ்வாறு முதல்நிலைத் தரவுகள் பல கருவிகளின் மூலம் தனி மனிதர்களிடமிருந்து திரட்டப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் இவை தனி மனிதர்களுடைய பேச்சுகள், நூல்கள் கட்டுரைகள் முதலியவற்றிலிருந்தும் திரட்டப்படுகின்றன. உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content Analysis) என்ற உத்தியின் மூலம் மேற்குறித்த உருப்படிகளைப் பகுப்பாய்ந்து அவற்றின் உள்ளடக்கம் என்ன என்பது பற்றிய தரவுகள் திரட்டப்படுகின்றன.

அப்படிப் பல வழிகளில் திரட்டப்படும் முதல் நிலைத் தரவுகள் சரிபார்க்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் படுகின்றன. பிறகு இவை ஒவ்வொன்றும் தனித்தனி எண்களினால் குறிக்கப்பட்டுத் தொகைப்படுத்தப்படுகின்றன. இறுதியாக இவற்றின் இயல்புகளுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றன.

சி.என்.ந.

**துணை நூல்கள்:**

**Kothari, C R.,** Research Methodology: Methods and Techniques. Wiley Eastern Ltd., New Delhi, 1985.

**Sukhia, S.P., Mehrotra P.V. and Mehrotra R N.** Elements of Educational Research, Allied, Publishers PVt. Ltd., New Delhi, 1974.

**Wilkinson, T.S. and Bhandarkar P.L.,** Methodology and Techniques of Social Research. Himalaya Publishing House, Bombay, 1977.

*முதல் பெருக்கம்*: ஒரு நாட்டிற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய உதவும் உற்பத்திப் பொருளே மூலதனம் ஆகும். நாட்டு வருமானத்தை அதிகரிப்பதில் மூலதனப் பெருக்கம் பெரும் பங்கு ஏற்கிறது. மூலதனப் பெருக்கத்திற்கான வள ஆதாரங்கள் பலவகைப்படும். குறிப்பாக வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கும் நாடுகளில் வள ஆதாரங்களைப் புழக்கத்திற்குக் கொண்டுவருவதிலும், மூலதனப் பெருக்கம் ஏற்படுத்துவதிலும் பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன. அத்தகு சிக்கல்களைத் தவிர்த்து மூலதனச் சிந்தனையை மக்களிடையே வளர்த்து மூலதனப் பெருக்கத்தை உருவாக்குவதில் அரசாங்கம் பெரும்பணி ஆற்ற வேண்டியுள்ளது.

**மூலதனம்:** சமுதாயத்தின் நிகழ்கால உற்பத்தி முழுவதும் உடனடி நுகர்வுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை. அதன் ஒரு பகுதி மூலப் பொருட்கள், துணைக்கருவிகள், இயந்திரங்கள் போன்ற உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவும் பொருட்கள், சாதனங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. அத்தகைய உற்பத்திக்கு உதவும் உற்பத்திப் பொருளே மூலதனம் அல்லது முதல் என்று வரையறுக்கப்படுகின்றது. அதாவது, செல்வத்தை மேலும் பெருக்குவதற்குப் பயன்படுத் தப்படும் செல்வமே மூலதனம் என்று குறிக்கப்படுகின்றது. அது பலதரப்பட்ட இயந்திரங்கள், உற்

பத்தித் துணைக்கருவிகள், கட்டடங்கள், சரக்கிருப்பு, போக்குவரத்து வசதிகள் போன்ற பல்வேறு விதமான பொருட்களை உள்ளடக்கியதாகும்.

**மூலதனப் பெருக்கம்:** ஒரு நாட்டிற்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை மூலதனப் பொருட்களால்தான் உற்பத்தி செய்யமுடியும் என்பது யாவரும் அறிந்த உண்மை. அதிக அளவில் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யவேண்டுமானால் அந் நாட்டின் மூலதனக் கையிருப்புப் பெருகவேண்டும். நிலம், மற்றும் இயற்கை வள ஆதாரங்களைப் போலல்லாமல் மனித சக்தியால் மூலதனத்தின் கையிருப்பைப் பெருக்க முடியும். அதிக அளவில் மூலதனத்தைக் குவிக்கும் வழிமுறை மூலதன ஆக்கம், முதல் பெருக்கம் அல்லது மூலதனத் திரட்சி எனப்படும். தருக்க அடிப்படையாக, மூலதனத்தை உருவாக்குதலை மூலதன ஆக்கம் என்றும் அதன் தொடர்ச்சியாக மூலதனத்தைப் பெருக்குதலை முதல் பெருக்கம் அல்லது மூலதனத் திரட்சி என்றும் கூறுவது பொருத்தமாகும். ஆயினும், பொருளாதார வளர்ச்சிப் பகுதியில் மூலதன ஆக்கம், முதல்பெருக்கம் இரண்டும் ஒரே பொருளில்தான் பயன்படுத்தப்படுகின்றன.

சமுதாயத்தின் வருமானத்தில் ஒரு பங்கு சேமிக்கப்பட்டு மூலதனப் பொருட்களின் கையிருப்பைப் பெருக்கும் பொருட்டு முதலீடு செய்தலே மூலதன ஆக்கத்தின் சாரமாகும். அதன்மூலம் நாட்டின் உற்பத்தியும் தேசிய வருமானமும் பெருக்கமடைகின்றன. இதன் காரணமாக முதலீடும், மூலதன ஆக்கமும் மேலும் மேலும் பெருக்கமடைய ஏதுவாகின்றன. அவ்வாறு முதலீடு மிகும்போது வருமானம் பன்மடங்கு பெருகி மூலதனக் கையிருப்பைக் கூட்டுவதால் மூலதனப் பெருக்கம் ஏற்படுகின்றது; ஏற்கனவே, புழக்கத்தில் உள்ளபடியே மூலதனத்தை விரிவுபடுத்திக்கொண்டே சென்றால் அது மூலதனத்தை விரிவுபடுத்துதல் ஆகும். தொழில்நுணுக்க முன்னேற்றமுள்ள மூலதனத்தைப் பெருக்குதல் மூலதனத்தை ஆழப்படுத்துதல் என்று சொல்லப்படும். மூலதனப் பெருக்கம் என்பது அவை இரண்டையும் உள்ளடக்கியது ஆகும்.

**மூலதனப் பெருக்கத்தின் வகைகள்:** மூலதனப் பெருக்கம் என்ற தொடரைக் குறுகிய நோக்கிலும், விரிவான நோக்கிலும் பயன்படுத்தலாம். கட்டடங்கள், இயந்திரங்கள் போன்ற புலனாகும் பருப்பொருள் ஆக்கத்தை மட்டும் கணிக்கும்போது மூலதனப்பெருக்கம் என்னும் கருத்து குறுகிய நோக்கில் கையாளப்படுகிறது. மேற்கூறியவற்றுடன் புலனாகா மனித மூலதனத்தைப் பெருக்குவதற்காகச் செய்யப்படும் கல்வி வசதி, தொழிற்பயிற்சி வசதி பொழுதுபோக்கு வசதி, உடல்நல வசதி போன்றவற்றையும் சேர்க்கும் போது மூலதனப்பெருக்கம் என்ற சொல் விரிவான நோக்கில் கையாளப்படுகிறது. அதாவது விரிவான நோக்கில் மூலதனப் பெருக்கம் என்பது பருப்பொருள் மூலதனம் மனிதமூலதனம் இரண்டையும் குறிக்கிறது. குறுகியநோக்கில் பருப்பொருள்மூலதனத்தை மட்டும் குறிக்கின்றது. மனித மூலதனமும் பருப்பொருள் மூலதனத்திற்குச் சமமான முதன்மை வாய்ந்ததாக இருப்பினும், பொதுவாக மூலதனப் பெருக்கம் என்ற தொடர் குறுகிய நோக்கிலேயே பயன்படுத்தப்படுகின்றது.

கையிருப்பிலுள்ள மூலதனத்திற்கான மொத்தச் செலவே மொத்த மூலதனப் பெருக்கம் ஆகும். மேற்கூறப்பட்ட செலவுகளிலிருந்து தேய்மானம், மதிப்புக் குறைப்பு, எதிர்பாரா இடர்களினால் உண்டாகும் இழப்பு ஆகியவற்றை நீக்கிக் கிடைப்பது நிகர மூலதனப் பெருக்கம் எனப்படும். கோட்பாட்டின்படி நிகர மூலதனப் பெருக்கமே கணக்கிடப்பட வேண்டும். ஆனால், அதைக் கணக்கிடுவதிலுள்ள பல்வேறு சிக்கல்களின் காரணமாக நடைமுறையில் மொத்த மூலதனப் பெருக்கமே கணக்கிடப்படுகின்றது.

மொத்த தேசிய உற்பத்தியில் மொத்த மூலதன ஆக்கத்தின் விகிதம் மொத்த மூலதன ஆக்க விகிதம் என்றும், நிகர தேசிய உற்பத்தியில் நிகர மூலதன ஆக்கத்தின் விகிதம் நிகர மூலதன ஆக்க விகிதம் என்றும் வரையறுக்கப்படுகின்றன. முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தைவிடக் கூடுதலான வீதத்தில் மூலதனப் பெருக்கம் ஏற்பட்டால்தான் மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற வாய்ப்புண்டாகும்.

**மூலதனப் பெருக்கத்தின் முக்கியத்துவம்:** ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முதல் பெருக்கம் இன்றியமையாததாகும். அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடாக இருந்தாலும், உருசியா போன்ற பொதுவுடைமை நாடாக இருந்தாலும் மூலதனப் பெருக்கம் இன்றி முன்னேற்றம் அடைய இயலாது. மூலதனப் பெருக்கத்தை உருவாக்கும் நெறிமுறைகள் நாட்டிற்கு நாடு மாறுபடுகின்றன. பொதுவுடைமை நாடுகளில் மூலதனப் பெருக்க வீதத்தை அரசாங்கம் முடிவுசெய்கிறது. முதலாளித்துவ நாடுகளில் மூலதனப் பெருக்க வீதத்தைத் தனியார் துறைகள் முடிவுசெய்கின்றன. கலப்புப் பொருளாதாரத்தில் அரசாங்கமும், தனியார் துறையும், கலந்து முடிவுசெய்கின்றன. ஒரே அளவு முன்னேற்றம் அடைந்துள்ள இருவேறு நாடுகளில் அதன் பொரு

ளாதார அமைப்பில் உள்ள வேறுபாட்டால் மூலதனப் பெருக்க வீதம் வேறுபடக்கூடும்.

நுகர்வுத்தேவைக்கு மேல் உள்ள அதிகப்படியான தேசிய வருமானம், மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யும்பொருட்டு முதலீடு செய்யப்பட்டு மூலதனப்பெருக்கம் ஏற்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளில் நுகர்வுக்குப் பயன்படுத்தப்படுவதைவிட அதிக அளவு வள ஆதாரங்கள் மூலதனப் பொருட்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதால் மூலதனப் பெருக்கம் விரைவாகவும், தன்னிச்சையாகவும் நடைபெறுகிறது. வளர்ச்சி குன்றிய நாடுகளில் நுகர்வுத்தேவை அதிகமாக இருப்பதால் மூலதனப்பெருக்கம் குறைந்த அளவில் நடைபெறுகிறது. தேவையான மூலதனப் பெருக்கம் இல்லாமையே பல நாடுகளின் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக உள்ளது.

ஒரு நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும் திறன், அந்நாட்டு வருமானத்தில் எத்தனை விழுக்காடு மூலதனப் பெருக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்தே அமைகிறது. மூலதனப் பெருக்கத்தின் காரணமாகத் தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்படுகிறது. அதன் விளைவாகப் பெருமளவு உற்பத்தியும், தனித்துறைப் பயிற்சியும் கைகூடுகின்றன. உற்பத்தி மிகுவதால் அப்பொருளுக்கான சந்தை விரிவுபடுத்தப்படுகிறது. மேலும், மூலதனப் பெருக்கத்தின் காரணமாக ஒரு நாடு அயல் நாடுகளிலிருந்து பெறும் உதவியைத் தவிர்க்கவோ அல்லது குறைக்கவோ முடியும்.

**வரையறைகள்**: மூலதனப் பெருக்கம் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானது என்றபோதிலும் அதுவே போதுமானதன்று. உருவாக்கப் பட்ட மூலதனம் ஏனைய உற்பத்திக் காரணிகளுடன் இணைந்தே செயற்பட வேண்டியுள்ளது. எனவே, ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் மூலதனத்திற்கு அளிக்கப்படும் முதன்மை ஏனைய காரணிகளுக்கும் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு பொருளாதார வளர்ச்சியில் மூலதனப் பெருக்கத்தின் பங்கைப் பற்றி ஆராயும்போது ஏனைய காரணிகளின் முதன்மையைக் குறைத்து மதிப்பிடலாகாது.

**மூலதனப் பெருக்கத்தின் படிநிலைகள்**: பொருளாதார முன்னேற்றத்திற்கான கதவைத் திறக்கும் திறவுகோலாக விளங்கும் மூலதனப் பெருக்கத்தை உருவாக்குவதில் மூன்று படிநிலைகள் உள்ளன. அவை, சேமிப்பைத் திரட்டுதல், சேமிப்பைப் புழக்கத்திற்குக் கொணர்தல், சேமிப்பைத் தகுந்த முறையில் பயன்படுத்தல் ஆகியவை ஆகும்.

சேமிப்பைத் திரட்டும் பொருட்டுத் தனி ஆளின் சேமிப்பு மனப்பான்மை வளர்க்கப்பட வேண்டும். கூட்டு நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் ஆதாயத்தின் ஒரு பகுதியைச் சேமிப்பில் வைக்குமாறு ஊக்குவிக்கப்பட வேண்டும். அரசாங்கமும் தன் வரி வருவாயைப் பெருக்கித் தன் நுகர்வுச் செலவுகளைக் குறைக்கவேண்டும்.

அவ்வாறு திரட்டப்படும் சேமிப்பு வீணாக முடங்கிவிடாமல் தகுந்த நிதி நிறுவனங்களின்மூலம் புழக்கத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

அடுத்தபடியாகப் புழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்ட சேமிப்புகள், உற்பத்தித் துறைகளில் முதலீடாக்கப்பட வேண்டும். அரசின் பொருளாதார நிதியியல் கொள்கைகளும் பணவியல் கொள்கைகளும் அதிக அளவில் முதலீடுகளை ஊக்குவிக்கச் சாதகமான முறையில் அமையவேண்டும்.

மேலும், அரசு ஏற்றுமதித் துறையை விரிவாக்கம் செய்வதன் மூலமும், அயல்நாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதன்மூலமும், அயல்நாட்டு உதவி மூலமும் அயல்நாட்டு மூலதனத்தைப் பெறலாம்.

இவ்வாறாக மூலதனப் பெருக்கத்தின் சாரம் உண்மைச் சேமிப்பாகும். இந்தியா போன்ற வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் நாடுகளில் அங்காடி இயக்கப்படி விடப்பட்டால் சேமிப்பு அதிகரிப்பது இயலாத காரியமாகும். சேமிப்பையும், முதலீட்டையும் அதிகரிக்கத் தகுந்த நிறுவனங்களும் சரியான கொள்கைகளும் தேவைப்படுகின்றன. அவ்வகையில் அரசாங்கம் ஆற்றவேண்டிய பணி மிகப் பெரியதாகும்; க.தெ.

**முதல் வட்டிக் கோட்பாடு**: உற்பத்திக்காக மூலதனத்தைப் பயன்படுத்தும்போது அதற்குக் கிடைக்கும் ஆதாயமே வட்டி என்றும், அது மூலதனப் பொருளின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்குச் சமமாக இருக்கும் என்றும் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கருதினார்கள். இருப்பினும், பணப் பொருளாதாரத்தில் மூலதனப் பொருள் பணத்தினால் வாங்கப்படுவதால் மூலதனப் பொருளை வாங்கப் பயன்படுத்திய பணத்திற்குக் கிடைக்கும் ஆண்டு வருவாய் வீதமே வட்டி வீதம் எனக் குறிப்பிடப்படுகிறது.

தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் வட்டிக் கோட்பாடு பொதுச் சமநிலைக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. மூலதனத்தின் தேவையும் அளிப்பும் எந்தப் புள்ளியில் சமமாகின்றனவோ

அங்குச் சமநிலை வட்டி வீதம் நிருணயிக்கப்படுகிறது என்பதே தொன்மைப் பொருளியலின் வட்டிக் கோட்பாடாகும். எனவேதான், இது முதல் வட்டிக் கோட்பாடு எனப்படுகிறது.

மூலதனத்திற்கான தேவை தொழில் முயல்வோரின் முதலீட்டு முடிவுகளாலும், மூலதனத்தின் அளிப்பு சமுதாயத்திலுள்ள மக்களின் சேமிப்பினாலும் ஏற்படுகின்றன. முதலீட்டுப் பட்டியல் மூலதனத் தேவையையும், சேமிப்புப் பட்டியல் மூலதன அளிப்பையும் எதிரொலிக்கின்றன. எனவே சேமிப்பும், முதலீடும் வட்டி வீதத்தை நிருணயிக்கின்ற இரண்டு உண்மைக் காரணிகள் ஆகும். அதாவது முதலீட்டுத் தேவைக் கோடும், சேமிப்புக் கோடும் வெட்டிச் செல்லும் புள்ளியில் வட்டி வீதம் நிருணயிக்கப்படுகிறது. அந்தச் சமநிலை வட்டி வீதத்தில் மொத்த முதலீடும் மொத்தச் சேமிப்பும் சமமாக இருக்கும்.

இந்தக் கோட்பாட்டில் உண்மைச் சேமிப்பும் உண்மை முதலீடுமே கருதப்பட்டுள்ளன. உண்மைச் சேமிப்பு என்பது முதலீட்டிற்குத் தேவையான நிதியைத் தருவதற்காக நுகர்விற்குப் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் உண்மை வருவாயைக் குறிக்கும். உண்மை முதலீடு என்பது இயந்திரங்கள், கருவிகள், சாதனங்கள் போன்ற புதிய மூலதனச் சொத்துகள் வாங்குவதற்காக வளங்களைப் பயன்படுத்துவதைக் குறிக்கும். அது முதற்பொருள் தொழில்களில் முதலீடு செய்வதைக் குறிக்கும்.

**மூலதனத்திற்கான தேவை:** மூலதனத்திற்கான தேவை முதற்பொருள் தொழில்களில் முதலீடுசெய்ய விரும்பும் தொழில் முயல்வோரிடமிருந்து வருகின்றது. அது சேமிப்பிற்கான தேவையையே குறிக்கும். அந்தச் சேமிப்பிற்கு முதலீடு செய்வோர் வட்டி கொடுக்கத் தயாராய் இருப்பர். ஏனென்றால் அந்தச் சேமிப்பை முதலீடு செய்வதன் மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் இலாபம் அவர்கள் தரும் வட்டியை விட மிகுதியாக இருக்கும். அதற்குக் காரணம் மூலதனம் உற்பத்தித் திறன் உடையதாக இருப்பதாகும். எனவே, மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறன் வளைகோடே மூலதனத்தின் தேவைக் கோட்டினை நிருணயம் செய்கிறது. ஒரு புள்ளிக்குப் பிறகு இறுதிநிலை உற்பத்தித் திறன் கோடு கீழ்நோக்கிச் சரிந்து செல்லும்.

மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் = மூலதனத்தின் இறுதிநிலை பொருள் உற்பத்தி + பொருளின் விலை


(Marginal Productivity of Capital = Marginal Physical Product of Capital + The Price of the Product.)

இறுதிநிலை உற்பத்தித் திறன் மாறாமல் இருக்கும்போது வட்டி வீதம் குறைந்தால் தொழில் முயல்வோர் முதலீட்டினை உயர்த்துவர். அது வட்டி வீதம் இறுதிநிலை உற்பத்தித் திறனுடன் சமமாகும் வரை தொடரும். அதேபோல் வட்டி வீதம் மிகுந்தால் முதலீடு குறையும். அதாவது முதலீடு வட்டி வீதத்துடன் எதிர்மறைத் தொடர்புடையதாகும்

$$I = f(r)$$

I = முதலீட்டுத் தேவை, (r) = வட்டி வீதம்,
f = சார்புத் தொடர்பு

முதலீட்டுச் சார்பு





வட்டி வீதம் Or 1 ஆக இருக்கும்போது முதலீடு OQ1 ஆக இருக்கும். வட்டி வீதம் Or2 ஆகக் குறையும்போது முதலீடு OQ2 ஆக மிகும். அது முதலீட்டுக்கோடு கீழ்நோக்கிச் சரிந்து வருவதைக் காட்டுகிறது.

**மூலதனத்தின் அளிப்பு:** மூலதன ஆக்கத்திற்குச் சேமிப்பே மூலமாகும். எனவே, மூலதனத்தின் அளிப்பிற்குச் சமுதாயத்தின் சேமிப்பு அடிப்படையாகும். மக்களின் சேமிக்கும் விருப்பமும், சேமிக்கும் திறனுமே சேமிப்பின் அளவினை நிருணயிக்கின்றன. மக்கள் நுகர்வைத் தவிர்த்துச் சேமிப்பதற்குக் காரணம் அதற்குக் கிடைக்கும் வட்டி வீதமாகும். சேமிப்பிற்கும் வட்டி வீதத்திற்கும் நேரடித் தொடர்புண்டு என்று தொன்மையர்கள் கருதினார்கள். வட்டி வீதம் மிகுதியாகும் போது சேமிப்பும் மிகும். வட்டி வீதம் குறையும் போது சேமிப்பும் குறையும்.

$$S = f(r)$$


இதில் S= சேமிப்பின் அளவு, r=வட்டி வீதம், f= சார்புத் தொடர்பு.

சேமிப்புச் சார்பு




வட்டி வீதம் Or2 ஆக இருக்கும்போது சேமிப்பு OQI ஆகவும் வட்டி வீதம் Or1 ஆக மிகுதியாகும்போது சேமிப்பு OQ2 ஆகவும் மிகுதியாகும். இதில் சேமிப்பு வளைகோடு மேல்நோக்கிச் செல்கிறது.

**சமநிலை வட்டி வீதம்:** மூலதனத்தின் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும்போது சமநிலை வட்டி வீதம் நிருணயிக்கப்படுகிறது. அதாவது சேமிப்பும் முதலீடும் சமமாகும் போது சமநிலை வட்டிவீதம் நிருணயிக்கப்படுகிறது. அதனைக் கீழ்வரும் வரை படம் மூலம் விளக்கலாம்.




சேமிப்பும் முதலீடும்

OR வட்டி வீதத்தில் சேமிப்புக் கோடும் முதலீட்டுக் கோடும் ஒன்றையொன்று வெட்டிச் செல்கின்றன. அப்புள்ளியில் சேமிப்பும் முதலீடும் OQ ஆக உள்ளன. அது OR வட்டி வீதத்தில் மூலதனத்திற்கான தேவை (OQ) மூலதனத்திற்கான அளிப்புடன் (OQ) சமமாக இருப்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. மூலதனத்திற்கான தேவை மூலதனத்தின் அளிப்பு, அதன் உற்பத்தித் திறன் ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறது. சேமிப்பு மக்களின் சிக்கனப் பழக்கத்தினால் நிருணயிக்கப்படுகிறது. அவ்வாறு சேமிப்பும் உற்பத்தித் திறனும் தொன்மையரின் வட்டிக் கோட்பாட்டில் வட்டியை நிருணயிக்கும் உண்மைக் காரணிகள் என்பது விளக்கப்படுகிறது.

**கருத்து வேறுபாடுகள்:** தொன்மைப் பொருளியலின் வட்டிக் கோட்பாட்டைக் கீன்சு வன்மையாகக் கண்டிக்கிறார். 1) சேமிப்புக்குத் தரப்படும் ஊதியமே வட்டி வீதம் என்பதைக் கீன்சு தாக்குகிறார். பணத்தைச் சேமிக்காமலே முன்னோர்களிடமிருந்து கிடைத்த பணத்தைக் கடன் கொடுப்பதன் மூலமும் வட்டி பெறமுடியும். அதைப்போல் சேமிப்பை பணமாகப் பதுக்கி வைத்தாலும் வட்டி கிடைக்காது. மேலும், வட்டி வீதம் மட்டுமல்லாது, வருவாயும் சேமிப்பின் அளவினை நிருணயிக்கிறது. கீன்சின் கருத்துப்படி வட்டி வீதமென்பது ஒரு பணக்காரணியாகும். அது நீர்மைத் தன்மையுடைய பணத்தை விட்டுக் கொடுப்பதற்காகத் தரப்படும் ஊதியமாகும். 2) தொன்மையரின் வட்டிக் கோட்பாடு முடிவற்றதாகவும் குழப்பம் உள்ளதாகவும் இருக்கிறது என்று கீன்சு கூறுகிறார். சேமிப்பு, வட்டி வீதத்தைச் சார்ந்தது. முதலீடும் வட்டி வீதத்தைச் சார்ந்தது. அவ்விரண்டும் வட்டி வீதத்தை நிருணயிக்கின்றன என்று கூறுகிறார். அதில் வட்டி வீதத்தை நிருணயிக்க முதலில் நிலவும் வட்டி வீதம் தெரிய வேண்டும் என்பதே அதன் குறைபாடாகும். 3) தொன்மைக் கோட்பாடு பணத்தை ஓர் இடையீட்டுக் கருவியாகவே கருதுகிறது. நுகர்விற்குப் பயன்படுத்தப்படாத வருவாய் முதலீடாகிறது என்று கூறும்போது பணம் ஒரு சேமிப்புக்கருவி என்பதை மறந்து விட்டது. அக்காரணிகளே ஓர் இயக்கப் பொருளாதாரத்தில் தொன்மையரின் வட்டிக்கோட்பாடு பொருந்தாவண்ணம் செய்து விட்டன. 4) சேமிப்பும் முதலீடும் சமமாகும்படி செய்வது வட்டி வீதம் என்பது தவறாகும். அவையிரண்டையும் சமநிலைக்குக்கொண்டு வருவது வருவாயில் ஏற்படும் மாற்றமேயாகும் என்று கீன்சு கூறுகிறார். 5) நுகர்விற்காகப் பெறப்படும் கடன்களை விட்டுவிட்டு, உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலதனம் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளது மற்றொரு தவறாகும். 6) வட்டி

வீதத்தை நிருணயிப்பதில், வங்கிப் பணம் பெற்றிருக்கின்ற சிறப்பிடமும் கருத்தில் கொள்ளப்படவில்லை. இப்போதைய பொருளாதாரத்தில் சேமிப்பு, வங்கிப் பணம் அல்லது கடன் பணம் ஆகிய இரண்டும் சேர்ந்தே வட்டி வீதத்தை நிருணயிக்கின்றன.

சு.ப.

**முதலாழ்வார்கள்:** ஆழ்வார்கள் பன்னிருவருள் காலத்தால் முற்பட்ட பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் முதலாழ்வார்கள் என்பர். இவர்கள் மூவரும் சம காலத்தவர்கள். இவர்கள் இருண்டகாலம் எனக் கருதப்படும் களப்பிரர் காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும்.

முதலாழ்வார்களைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று வழங்கப்படுகிறது. ஒருநாள் இரவு மூவரும் திருக்கோவலூரில் கூடினர். பெருமழை பெய்யவே, பொய்கை யாழ்வார் ஒரு சிறிய வீட்டுத் திண்ணையில் ஒதுங்கினார். பூதத்தாரும், பேயாரும் அங்கு வந்து இடங்கேட்டனர். ஒருவர் கிடக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம் என்று கூறிவிட்டு அவர்களிருவருக்கும் இடந்தந்தார். நான்காவதாக ஓர் ஆள் அங்கு வந்து நின்றார். அவரை மூவரும் திருமாலே என அறிந்து திருவந்தாதிகள் பாடினர். 'வையம் தகழியா வார்கடலே நெய்யாக', எனத் தொடங்கிப் பொய்கையார் முதல் திருவந்தாதி பாடினார். அவரைத் தொடர்ந்து 'அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக' எனத் தொடங்கிப் பாடினார் பூதத்தாழ்வார். பேயாழ்வர் 'திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன்,' எனத் தொடங்கிப் பாடுவாராயினர். திருமாலைக் கண்டு மூவரும் அவ்வாறு நூறு நூறு பாடல்களை இயற்றினர். அவையே இயற்பா திருவந்தாதி எனக் கூறப்படுகின்றன.

**பொய்கையாழ்வார்** ஐப்பசி மாதம் சிரவண விண்மீனில் காஞ்சிபுரத்திலுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயிலில் பொற்றாமரைப் பொய்கையில் பிறந்தவர். பாஞ்சசன்னிய (சங்கு) அமிசமாய்த் தோன்றியவர்; 'விண்ணகரம் வெஃகா விரிநீர் வேங்கடம்' என்னும் பாட்டில் பரமேச்சுர விண்ணகரத்தைக் குறித்துள்ளார். பரமேச்சுர விண்ணகரம் கி.பி.715 – இல் இரண்டாம் பரமேச்சுரனால் அமைக்கப்பட்டது. இவர் அக்காலத்தைச் சார்ந்தவராதல் வேண்டும்.

இவர் பாடிய முதல் திருவந்தாதி சிறந்த சொன்னயம் மிக்கது. திருமாலிடம் கொண்ட அன்பினைப் பலவாறு வெளிப்படுத்தும் இவர், அரியும் சிவனும் ஒன்றெனக் கருதுபவர்.

**பூதத்தாழ்வார்** ஐப்பசி மாதம் அவிட்ட விண்மீனில் கடல்மல்லையில் மாதவிப் பூவில் தோன்றியவர். இவர் தண்டின் அமிசமாகத் தோன்றியவர் என்பர். இவர் பாடிய இரண்டாம் திருவந்தாதி சிறந்த சொல்வளம், பொருள்வளம் நிறைந்தது. 'ஒருவனில்லை ஒளியுருவம் நின்னுருவம், ஈருருவம் என்பர் இருநிலத்தார் என்று சிவனும்,மாலும் இணைந்துள்ள கோலத்தைப் பாடிச்சமயப் பொறையைக் காட்டுவர். தமிழ் மாலையால் திருமாலைப்பாடிப் பெருமிதம் கொண்டவர். பொய்கையாரின்தொடக்கப் பாடலைப் போலவே இவருடைய தொடக்கப்பாடலும்விளங்கும்.

**பேயாழ்வார்** ஐப்பசி மாதம் சதய விண்மீனில் மயிலாப்பூரில் ஆதிகேசவன் கோயில் கிணற்றில் உண்டானதொரு செவ்வல்லிப்பூவில் தோன்றியவர்.

'பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே' என்று கூறும் இவருடைய திருமால் பற்று வியக்கத்தக்கது. 'அழுவன் தொழுவன் ஆடிக்காண்பன் பாடியே ஏற்றுவன்' எனவும், 'காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்' எனவும் பாடியதால் இவர்தம் பத்தி மேம்பாடு இனிதே விளங்கும்.

இவர் பாடிய மூன்றாம் திருவந்தாதி முதலிரண்டைப் போலவே சிறப்புமிக்கது. இரண்டாம் திருவந்தாதியில் பூதத்தார் பாடிய, 'கண்டேன் திருமேனி யான்கனவில், ஆங்கவன் கைக்கண்டேன்' என வரும் அடிகளை நெஞ்சிருத்தித் தம் பாடலைத் 'திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்றுதொடங்குகிறார்.

இவரும் ஏனைய இருவரைப் போலவே, சமயப் பொறை மிகுந்தவர். திருவேங்கட மலையில் சிவனும் மாலும் இணைந்திருப்பதாகவே குறிப்பர். 'தாழ் சடையும் நீண்முடியும்' எனவரும் பாடல் அதற்குச் சான்றாகும்.

மூன்று திருவந்தாதிகளும் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன; சங்க காலத்தை அடுத்து அவை இயற்றப்பட்டனவாகக் கருதுவர். இவர்கள் மூவரும் ஒருசேர இறைவனைக் கண்டு அடுத்தடுத்துத் தம் பாடல்களைப் பாடியிருக்க வேண்டும். மூவரும் சமயப் பொறை மிக்கவரெனத் தெரிகிறது. புறச்சமயக் காழ்ப்புணர்ச்சி சற்றேனும் இவர்கள் பாடல்களில் இல்லாதது குறிப்பிடத்தக்கது.

இராம.கு.

**முதலாளித்துவம்:** சமூகத்தில் ஒரு சிறிய பிரிவு அல்லது வகுப்பு (Section or Class), தனக்குக் கீழ் நிலையில், உடைமை ஏதும் இல்லாமல் தன் உழைப்புத் திறன் ஒன்றையே கொண்டு அதனைத் தன்பிழைப்புக்காகக் கூலிக்கு விற்கும் நிலையிலுள்ள

பெரிய வகுப்பு ஒன்றை உடையதாயும், அச் சிறிய வகுப்பினிடத்திலேயே பொருளாதார உற்பத்திக் காரணிகளாகிய நிலம், தொழில் அல்லது உழைப்பு, மூலதனம், மேலாண்மைத் திறன் முதலியனவெல்லாம் குவிக்கப்பட்டும், பொருளுற்பத்தி அச்சிறிய வகுப்பின் ஊதிய நோக்கத்துக்காகவே நடைபெறுமாயின், அத்தகைய அமைப்பினைக்கொண்ட பொருளாதார முறைக்கு முதலாளித்துவம் என்பது பெயர்.

உருசியப் பொதுவுடைமைப் புரட்சியை உருவாக்கிய இலெனின், 'முதலாளித்துவம்' (Capitalism) என்பதற்கு, மேற்கூறிய வகையில் பொருளாதார நோக்கில் மட்டும் பொருள் கொள்ளாமல், முதலாளித்துவம் என்ற பொருளாதார அமைப்பைத் தம் காலத்திலிருந்த 'தாராள மக்களாட்சிக்' கொள்கையோடு இணைத்து (Liberal Democratic Theory) அதைச் சமநிலைக் கொள்கைக்கு (Socialism) மாறான ஓர் அரசியல் பொருளாதாரக் கொள்கையாகவும் கொண்டு விளக்கினார். மேலும், பொருளுற்பத்தியும், பகிர்ந்தளிப்பும் நாட்டின் கட்டுப்பாட்டில்லாமல், 'தன் ஊதிய நோக்கமுடைய எண்ணிக்கையில் குறைவாக உள்ள முதலாளிகள் வகுப்பில் குவிந்திருக்கும் வரை, அவர்களால், அல்லது அவர்களுடைய தாராள இயல்புடைய மக்களாட்சி அரசாங்கத்தால் பொருளாதார முடக்கங்களையோ (Economic Depression) வேலையில்லாத நிலைமையையோ நீக்குதல் இயலாது' என்று முதலாளித்துவம் என்பதற்கு அரசியல் நோக்கிலும் பொருள் விளக்கம் கூறினார். காரல்மார்க்சும் அவருடைய கருத்தை ஏற்றுக் கொண்டவர்களும், தாராளக் கொள்கையை (Liberalism), ஒரு முதலாளித்துவ அரசியற் கொள்கை என்றும், அதனுடைய நோக்கம் தடையற்ற பொருளாதாரக் கொள்கையை நிறுவுதலே (Principle of Free Enterprise) என்றும் விரிவாகப் பொருள் கூறினர். எவ்வகை விளக்கத்திலும், முதலாளித்துவம் என்பது, பொருளுற்பத்திக் காரணிகள் நாட்டின் பொது நன்மைக்காக நாட்டின் அரசாங்கக் கட்டுப்பாட்டிலில்லாமல், தங்களுடைய ஊதிய நோக்கத்துக்காக ஒரு சிறிய வகுப்பாரிடம் குவிக்கப்பட்டிருக்கும் முறையையே குறிப்பிடுகிறது.

**முதலாளித்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்:** இக்கால முதலாளித்துவ முறைஎன்பது இங்கிலாந்தில் முதலில் நடைபெற்ற தொழில் அல்லது பொருளாதாரப் புரட்சியின் (Industrial or Economic Revolution) விளைவாகத் தோன்றியதாகும். தொழிற் புரட்சி என்ற தொடர் பொருட்களை உற்பத்திசெய்தலிலும், போக்குவரவு முறைகளிலும் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டதையே குறிப்பதாகும். இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர், இடைக்காலத்தில், பயிர்த் தொழிலிலும், நூற்பு, நெசவு முதலியவற்றிலும் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தம் கையினால் வேலை செய்வதற்கு வேலை இருந்தது. அந்த வீட்டுமுறைத் தொழிலுக்குப் பெருமளவு மூலதனமும் தேவைப்படவில்லை. அந்த முறை கி.பி.15,16-ஆம் நூற்றாண்டுகளில் புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும், கி.பி. 17,18 - ஆம் நூற்றாண்டுகளில் நூற்பு, நெசவு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுக் கையாளப்பட்ட பின்னரும் மறைந்தது. நாட்டில் நிலையான அரசாங்கமும், தனியார் சொத்துகளுக்குப் பாதுகாப்பும் இருந்த காரணத்தால், ஓரளவு பொருள் வசதி உடையோரெல்லாம் மூலதனம் சேர்த்து இயந்திரங்களை உடைய ஆலைகளை நிறுவித் தொழிலாளர்களைக் கூலிக்கமர்த்தி, பெருமளவில், ஒரே வகையான பொருட்களைச் செய்து குவித்து, அவற்றை குடியேற்ற நாடுகளிலும், ஏனைய நாடுகளிலும் ஊதியத்திற்கு விற்று மேலும் பெரிய முதலாளிகளாயினர். முதலில் முதலாளித்துவம் வளருவதற்குத் தனியார் உடைமை உரிமைக் கொள்கையும் (Principle of Private Property), தடையற்ற வாணிகக் கொள்கையும் (Laissez-faire or Individualism or Free Trade) புதிய நாடுகள் கண்டுபிடிப்பும், குடியேற்ற நாட்டுக் கொள்கையும், தொழிற்புரட்சியும் பெரிதும் காரணங்களாக அமைந்தன. மூலதன வசதி இல்லாத சிறு நில உடைமையாளர் நிலத்தைப் பயிரிடுவதற்குப் பொருள் வசதி இல்லாமல் அதைப் புதிய முதலாளி வகுப்புக்கு விற்று விட்டு, கூலிகளாக உழைத்துப் பிழைப்பதற்குப் புதிய தொழிற் பட்டணங்களில் குடியேறினர்.

அவ்வாறு, சமூகத்தில் ஒரு சிறிய முதலாளி வகுப்பும், மூலதனமில்லாத ஒரு பெரிய தொழிலாளி வகுப்பும் தோன்றின. மேலும், முதலாளித்துவப் பொருளாதாரத்தில், ஒரு சிறிய வகுப்பார் தங்களுடைய ஊதியத்துக்காகப் பெருமளவில் பொருளைச் செய்தல் என்ற முறையும், அதில் அரசாங்கக் கட்டுப்பாடு எதுவுமின்றிப் பொருட்களின் விலையைமுடிவு செய்யவும், தொழிலாளருடைய கூலியைமுடிவு செய்யவும் முதலாளிகளுக்குச் சுதந்திரம் இருத்தல் வேண்டுமென்ற தடையற்ற பொருளாதாரக் கொள்கையும் பின்பற்றப் படலாயின. அரசியல் துறையில் முதலாளித்துவ முறையினால் தோன்றிய விளைவு யாதெனில் பொருள் வசதி உடையவரே தேர்தல்களில் வேட்பாளர்களாகப் போட்டியிட்டுச் சட்டமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சரவை உறுப்பினர்களாகவும் ஆயினர். அவ்வாறு மக்களுக்குப் பொறுப்பான, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அரசாங்கம் தோற்

றத்தில் இருந்தாலும், அது உண்மையில் முதலாளி வகுப்பின் நலம் பேணும் செல்வராட்சியாகவே இருந்தது. முதலாளித்துவத்துக்கு எதிர்ப்பாகத் தோன்றியதே சமநிலைக் கொள்கை. இங்கிலாந்தில் தோன்றிய தொழிற்கட்சி அரசியலமைப்புக்கொத்த சமநிலைக் கொள்கையைப் பின்பற்றியதன் விளை வாகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஓரளவு நீங்கி, மக்களாட்சி முறை காணப்படுகிறது.

**இக்கால முதலாளித்துவத்தின் கூறுகள்:** இங்கிலாந்தில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட பழைய முதலாளித்துவப் பொருளாதார முறையின் கூறுகள் மிகுதியும் மாறியும், மறைந்தும் வருகின்றன. இக்காலத்தில் முதலாளித்துவம் என்பது தடையற்ற வாணிகக் கொள்கையையோ, அரசாங்கத்தின் கட்டுப் பாட்டில் இல்லாத பொருளுற்பத்தி, விற்பனை முறையையோ, தொழிலாளர் நிலையையோ குறிப்பிட வில்லை. அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தொழில் முறை இருப்பதனால், தொழிலாளர் நலச் சட்டங்களின்படி ஆலைகளில் அவர்களுடைய வேலை நேரங்கள் துல்லியமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. அரசாங்கக் கண்காணிப்பிற்கு உட்பட்டே தொழிலாளர் வேலை செய்து, கூலி பெற்று, ஓய்வு, நல்வாழ்வு, கல்வி முதலிய வசதிகளை அடைகின்றனர். தொழிற் சங்கங்களும், தொழிற்கட்சியும் தோன்றி அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதால், பழைய முதலாளித்துவத்தின் தீங்குகள் ஓரளவேனும் கட்டுப்பாட்டுக்கு உள்ளாகி இருக்கின்றன. இக்கால முதலாளித்துவத்தின் இரண்டாம் கூறு என்னவென்றால் அது பழைய தடையற்ற பொருளாதாரக் கோட்பாட்டை விட்டு விட்டுப், பல தொழில்களிலும் தனக்கே உரித்தான முதலாளித்துவ முறையைப் (Systems of Monopolies) பின்பற்றி, அயல்நாட்டுப் பொருள்களின் போட்டிக்கெதிராகவும், தம் நாட்டுப் பொருட்களின் விற்பனைக்குச் சார்பாகவும் அரசுக்காப்பு வரிக் (State Protection) கொள்கையைப் பின்பற்றுதல் வேண்டும் என்று கூறுதலே ஆகும். அவ்வாறு பழங்காலத்திலிருந்த தடையற்ற போட்டிமுறை முதலாளித்துவம் (Free Competition Capitalism), இக்காலத்தில் தனக்கே உரித்தான முதலாளித்துவமாக (Monopolist Capitalism) மாறியுள்ளது.

தனக்கே உரித்தான முதலாளித்துவ முறையில் ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டுள்ள சிறுமுதலாளிகள் ஒன்றாக இணைந்து, பெரும் மூலதன வசதியுடைய இணைப்புகளாக (Combines or Groups or Trusts and Kartels) ஆகின்றனர். அதனால், உற்பத்திச் செலவு குறைகிறது. பெரும் பொருளுற்பத்தி நடைபெற்று, அயல் நாடுகளுடன் வாணிகம் அரசின் காப்புக் கொள்கையின் உதவியோடு நடைபெறுதற்கு வழியும் ஏற்படுகிறது. அம்முறையிலே சமநிலைப் பொருளாதார முறையின் கூறுகளாகிய அரசாங்கக் கண்காணிப்பில் பொருள் உற்பத்தி, ஒரு மையத்திலிருந்து செலுத்தப்படும் பொருளாதாரத் திட்டத்தின்படி (Central Economic Planning) பொருளுற்பத்தி முதலியவற்றைப் பெறுதலியலும். தனக்கே உரித்தான முதலாளித்துவ முறையில் தொழில் துறையில் வல்லுநரான அதிகாரிகளே (Bureaucrats) உற்பத்திச் செயலிலீடுபடுவதால், அதை முதலாளிகள் கவனிக்காமல் தம் மூலதனப் பங்குக்கு உரிய ஊதிய வீதத்தைப் (Dividends) பெறுதலில் மட்டும் கவனம் செலுத்துகின்றனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் சமநிலைக் கொள்கையைப் பின்பற்றாத மேலை நாடுகளில் தனக்கே உரித்தான முதலாளித்துவ முறை வளர்ந்துள்ளது. ஏனெனில், அந்த முறையில் வளர்ச்சிக்குகந்த தனியார் முயற்சியும்(Private Initiative)பொது நலனுக்குகந்த அரசாங்கக் கட்டுப்பாடும் இணைக்கப் பட்ட கூறுகளாக இருக்கின்றன. பா.சு.

**துணை நூல்கள்:**

Meyer, A.G., Leninism, Cambridge, Mass., 1957.

Watkins, F.M., The Political Tradition of the West, A Study in the Development of Modern Liberalism, Cambridge, Mass, 1948.

*முதலியாண்டான்:* விசிட்டாத்துவைத சிரீவைணவ சித்தாந்தத்தில் இப்பிறவிப் பயனை அடையப் 'பகவத் பாரதந்தர்யமே'. அதாவது, எம்பெருமானையே உபாயமாகக் கொள்ளுதலே உரிய வழி என்பதும், அதனினும் உயர்ந்தது 'பாகவத பாரதந்திரியமே' எனும்வழி என்பதும் நிலைநாட்டப் படுகின்றன. அதுவே, 'எம்பெருமானார்(இராமானுசர்) தரிசனம்' என்று பின்னர்ப் புகழ் பெற்றது. அவர் காட்டிய வழியைப் பின்பற்றி ஒழுகி வருபவர்கள் 'சிரீவைணவர்கள்' என்று சிறப்பாகக் கூறப் படுவர். அப்படி இராமானுச முனியை அடியொற்றிய எண்ணற்ற முதலிகளுள் முதன்மையானவர்கள் 'வானிட்ட கீர்த்தி வளர்' கூரத்தாழ்வானும், இராமானுசரின் (யதிராச பாதுகா) திருவடி என்றும் திரிதண்டம் என்றும் அழைக்கப்படுபவரும், வாதூல குலத்தின் அணிகலனாக விளங்குபவரும் ஆகிய முதலியாண்டானும் ஆவர்.

முதலியாண்டானின் இயற்பெயர் தாசரதி. இவர் சென்னைக்கருகில் பூவிருந்த வல்லிக்குப் பக்கத்தில்

உள்ள பச்சைப் பெருமாள் கோயில் என்னும் தலத்தில், நாராயண தீட்சிதர் என்ற பார்ப்பனகுல அறிஞர்க்கும் இராமானுசரின் உடன்பிறந்தாளாகிய மங்கை நல்லாளுக்கும் மகனாக கி.பி. 1027-ஆம்ஆண்டு (பிரபவ ஆண்டு) தோன்றினார். இவர் பிறப்பு கி.பி. 1033 - இல் நிகழ்ந்தது என்னும் வழக்குண்டு. இவர் ஆத்ம குணத்தை மிகவும் விரும்பி 'வைணவ தாசன்' என்னும் திருநாமத்தைத் திருகோட்டியூர் நம்பி சூட்டினார் என்பது மரபுச் செய்தி. 'வாதூல தேசிகர்' என்னும் சிறப்புத் திருநாமம் இவருக்கிருந்தது என்பதை இன்றும் அவர் சந்ததியருக்குத் திருவரங்கம் கோயிலில் மரியாதைகள் செய்யப்படும் அருளிப் பாட்டினின்று தெரிகின்றது.

பெருமாள் கோவில் என்று வைணவர்களால் போற்றப்படும் காஞ்சியில் சன்னியாசம் ஏற்றுக் கொண்ட பின், இராமானுசரின் திருவடியில் முதன் முதலாகத் தஞ்சமடைந்தவர்கள் கூரத்தாழ்வானும், முதலியாண்டானுமே ஆவர். இராமானுசரிடம் திருவாய் மொழிப் பாடம் கேட்டறிந்து இருவரும் தெளிந்தனர். பின்னர் முதலியாண்டான் இராமானுசரின் அந்தரங்க சீடராகித் திருமண்காப்பிடல், திருவாராதனைக்குப் பரிசாரகம் திருவடி நிலைகள் ஆகிய சமர்ப்பித்தல் முதலிய பணிகளில் ஈடுபட்டார். இராமானுசர் துறவறம் பூண்டபொழுது, முதலியாண்டானைத் தவிர அனைத்தையும் துறந்தோம் என்று கூறியதாகக் குருபரம்பரைச் செய்தி இவர் ஏற்றத்தை வெளிப்படுத்தும். ஒரு சமயம், இராமானுசர் தம் ஆசார்யனின் திருமகளாகிய அத்துழாய் அம்மைக்குச் 'சீதனவெள்ளாட்டியாக' இவரை அனுப்ப, அதை ஓர் 'ஆசார்ய கைங்கரியம்' என உவகையுற்று, ஒரு பணிப் பெண் செய்ய வேண்டிய பணிகளை மிக்க மனநிறைவுடன் இவர் செய்தார் என்பர் பெரியோர். எம்பெருமானாருடன் ஆசார்யத் தொடர்பின்றி வைணவர்கள் இல்லறத்திலிருந்து கரையேற முடியாது என்பது முதலியாண்டானின் உறுதியான கொள்கை.

இராமானுசர் சோழப் பேரரசினின்று நீங்கி மேல் நாடு போந்த போழ்து, அவர் திருமேனிக் காப்பாக முதலியாண்டானும் உடன் சென்றார். அவ்வமையம் ஓர் ஊரில் உள்ள சமணர்களைத் திருத்த, அவர்கள் நீரெடுக்கும் ஊருணியில் முதலியாண்டானைத் திருவடிகளை விளக்கி வரும்படி இராமானுசர் நியமித்தார். முதலியாண்டான் அவ்வண்ணமே செய்ய அந்த ஊருணி நீரை அதன் பின்னர்ப் பருகிய மக்கள் அனைவரும் மனத்தூய்மை பெற்று,இராமானுசர் திருவடிகளில் வந்து படிந்தனர் என்றும் கூறுவர். மற்றும் 'மேல்கோட்டை' எனப்படும் திருநாராயண புரத்தில் பஞ்சநாராயண உருவங்களை நிறுவினார். எம்பெருமானாரின் திக்குவிசயம் பற்றிக் கூறும் 'தாடீ பஞ்சகம்' என்னும் துதிமாலையை இவர் இயற்றினார்.

திருவரங்கத்தில் ஆளவந்தாருக்குப்பின் கோயில் நிருவாகம் இராமானுசரை வந்தடைந்தது. அதனால், திருவரங்கத் திருப்பதியில் இராமானுசரும், கூரத்தாழ்வாரும், முதலியாண்டானும் வாழ நேரிட்டது. முதலியாண்டானுக்குப் பெருமாளிடத்திலுள்ள ஈடுபாடு பற்றி அறிந்த இராமானுசர் கோயில் நிருவாகத்தில் தமக்குத் துணையாக, அவருக்குச் 'சேனாதிபதி துரந்தரர்' என்ற சீர்காரியப் பொறுப்பினை அளித்தார். அதற்கு அடையாளமாக முதலியாண்டானிடத்தில் செங்கோல் வரிசையை அளித்ததாகக் கோயிலொழுகு கூறும். பின்னர் இராமானுசர் திக்குவிசயப் பயணம் போந்தார்.

முதலியாண்டானும் அந்நியமத்தை ஏற்று, குறட்டிலேயிருந்து கோவில் நிருவாகத்தையும் கருவூலக வாசலிலேயிருந்து பெரியபெருமாள் திருமேனி உபசாரத்தையும், சந்நிதியிலிருந்து கொண்டு திருப்பவள உபகாரங்களையும் செவ்வனே நிறைவேற்றி வந்தார். 'திக்குவிசய' பயணம் மேற்கொண்டிருந்த இராமானுசர் மீண்டதும், முதலியாண்டானின் பணியை மிகவும் பாராட்டினார் என்பது மரபுச் செய்தி.

சோழ நாட்டை விட்டு நீங்கிப் பன்னிரண்டாண்டுகளுக்குப் பின்னர்த் திருவரங்கம் மீண்ட இராமானுசர் கங்கை கொண்ட சோழபுரத்தில் அரசோச்சி வந்த இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1120 - 1163)என்னும் சோழப்பேரரசனை,முதலியாண்டான் திருவடித் தொடர்பு பெறச் செய்து கோயில் நிருவாகத்தை முதலியாண்டானிடம் முழுமையாக விட்டு விட்டதாகவும், அவரும் உடையவர் திட்டப்படியே நிருவாகத்தைச் சிறப்பாகச் செய்ததாகவும் செய்திகளுண்டு. மேலும், முதலியாண்டானுக்குத் திருமாளிகை கட்டிக்கொள்ள, கீழச்சித்திரை வீதியில் ஒரு மனையை உரிமை செய்து கொடுத்துச் சிரீ சேனாபதிப் பட்டயமும் வழங்கினார். இவர் வாழ்ந்த திருமாளிகை இன்றும் 'முதலியாண்டான் சுவாமி திருமாளிகை' என்ற பெயருடன் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தம் ஓரே திருமகனாருக்கு இராமானுசன் என்றே பெயரிட்டார். அவரே பிற்காலத்தில் 'துன்னு புகழ்க் கந்தாடையாண்டான்' என்று மணவாளமாமுனிகளால் கொண்டாடப்பட்டவர். தம் தந்தையின் மறைவிற்குப் பிறகு திருவரங்கக் கோயில்

நிருவாகத்தைச் சிறப்புடன் நடத்தினார். இராமானுசரின் அர்ச்சைத் திருவுருவங்கள் திருவரங்கத்திலும், பெரும்புதூரிலும், மேல்கோட்டையிலும் நிறுவப்படக் காரணமானவர்.

'கூரத்தாழ்வானையும், முதலியாண்டானையும் இருகரையர்' என்பார் வடுகநம்பி. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் முதலாவதாகப் பொய்கை ஆழ்வாரின் முதல் திருவந்தாதியின் தனியனை முதலியாண்டான் அருளிச்செய்தார். இவர் நூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்து கி.பி. 1132 - இல் காலமானார்.

வெ.சீனி.சே.

**துணை நூல்கள்:**

**Pin Pazhabia Perumal Jeeyar**, Arayirappadi - Guru Parambrap Prabavam, S. Krishnaswamy Iyenger, No.3, Puthur Agraharam, Trichy, 1980.

**Srinivasa Ayengar**, C.R., The Life and Teachings of Sri Ramanujacharyah, Sri Venkateswara and Company, Madras, 1908.

**முதலீட்டு நிறுவனங்கள்**: பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள், இந்திய ஒருமப் பொறுப்பாளகம் (Unit Trust of India) போன்ற நிறுவனங்கள் பொது மக்களின் சேமிப்பினைத் திரட்டி நீண்ட கால முதலீடுகள் செய்கின்றன. தனிமனிதர்கள் குழுமப் பங்குகளில் முதலீடு செய்யும்போது இடர்தாங்க வேண்டியிருப்பதனால் துணிந்து புதுக் குழுமங்களின் பங்குகளை வாங்கப் பலர் முன் வருவதில்லை. எனவே, இத்தகைய நிறுவனங்கள் பொது மக்களின் சேமிப்புகளைக் குறிப்பிட்ட வட்டியில் திரட்டிக் குழுமத்தின் பங்குகளில் முதலீடு செய்கின்றன. இவை முதலீடு செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவை முதலீடு செய்யும்போது பலதரப்பட்ட குழுமங்களின் பங்குகளை வாங்குவதால் முதலீடு செய்வதில் காணப்படும் இடர்ப்பாடுகளைப் பரவலாக்கி விடுகிறது. இதனால், ஒன்று அல்லது இரண்டு குழுமங்கள் வீழ்ச்சி அடையும்போது முதலீடுகள் பெருமளவில் பாதிக்கப்படுவதில்லை. இவற்றின் பங்குகள் இடரற்றனவாகவும், ஆதாயம் தரக்கூடியனவாகவும் இருப்பதால் மக்களால் பெருமளவில் வாங்கப்படுகின்றன.

இந்த முதலீட்டு நிறுவனங்களில் காப்பீட்டு நிறுவனங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவை பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் எனப் பிரிக்கப்படுகின்றன. காப்பீட்டின் முக்கிய நோக்கம் இடரினை நீக்கிப் பாதுகாப்பதே. சிறுகச்சிறுகச் சேர்க்கப்படும் கட்டணங்களை முதலீடு செய்வதன் மூலம் காப்பீட்டு நிறுவனங்கள் ஆதாயம் ஈட்டி நாட்டின் பொருளாதாரத்தை வளரச் செய்கின்றன. இந்தியாவில் 1956-இல் ஆயுள் காப்பீடு நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்பு 319 ஆயுள் காப்பீட்டுக் குழுமங்கள் இருந்தன. இன்று அந்த நிறுவனம் பலகோடிகள் நிதிப்புழக்கத்துடன் செயற்படுகின்றது.

இந்தியாவில் 1963-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி இந்திய ஒருமப் பொறுப்பாளகம் நிறுவப்பட்டது. இது தொழில் நிதி வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற ஒரு செயல் எனலாம்.

இந்திய ஒருமப்பொறுப்பாளகம் உரூ. 5 கோடி தொடக்க முதலுடன் நிறுவப்பட்டது. அதற்குரிய மூல தனம் கீழ்க்கண்ட வழிகளில் பெறப்பட்டது. அவை: இந்திய மைய இருப்பு வங்கி உரூ.2.50 கோடி; இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் 0.75 கோடி; மாநில வங்கியும் அதன் கிளைகளும் 0.75 கோடி; பிற வரையறுக்கப்பட்ட வங்கிகளும் நிதி நிறுவனங்களும் உரூ.1கோடி. தொடக்க முதல் உரூ. 5 கோடியும் உரூ. 50,000 மதிப்புடைய 1000 சான்றிதழ்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக நிதி தேவைப்பட்டால் அந்நிறுவனம் இந்திய மைய இருப்பு வங்கியிடமிருந்து கடன் பெறலாம். ஆனால் வாங்கிய கடனை, கேட்கும்போது அல்லது 18 மாத காலத்திற்குள் திரும்பச் செலுத்த வேண்டும்.

**நிருவாகம் அல்லது மேலாண்மை**: இந்தப் பொறுப்பாளகம் மேலாண்மைப் பொறுப்பாளகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் பெருந்தலைவர், இந்திய ஒருமப்பொறுப்பாளகச் சட்டம் 10 (பி)-இன் படி இந்திய மைய இருப்பு வங்கி நியமித்த நான்கு பேர்கள், பிரிவு 10(சி) - இன் படி ஆயுள் காப்பீட்டுக் கழகம் நியமனம் செய்த ஒருவர், பிரிவு 10 (டி) - இன் படி பாரத மாநில வங்கி நியமனம் செய்த ஒருவர், பிரிவு 10 (இ)-இன் படி நிதி செலுத்தும் நிறுவனங்கள் தேர்வு செய்த இருவர் ஆகியோர் இடம் பெறுவர். இக்குழு தொழில் விதிகளின்படி செயற்படும். பொதுமக்கள் நலனுக்காக இந்திய மைய இருப்பு வங்கியின் உதவியுடன் செயற்படுகிறது.

**பணிகள்**: இந்த நிறுவனத்திற்கு 1963-ஆம் ஆண்டு இந்திய ஒருமப்பொறுப்பாளகம் சட்டத்தின் பிரிவு 9-இன் படி ஒருமங்களை (Units) வாங்கவோ விற்கவோ உரிமை உண்டு. பத்திரங்களை வாங்கவோ, விற்கவோ, வணிக வங்கிகளில் பணத்தை வைப்பு வைக்கவோ அதிகாரம் உண்டு.

இந்தப் பொறுப்பாளகம் ரூ.10 மதிப்புடைய ஒருமங்களை (Units)வெளியிடுகிறது. அவை 1964 - ஆம் ஆண்டு சூலை மாதம் 1-ஆம் தேதி முதல் ஆகஸ்ட்டு 14-ஆம் தேதி வரை அவற்றின் முக மதிப்பிற்கு விற்பனைக்கு விடப்பட்டன; அதன்பிறகு அன்றாடம் பொறுப்பாளகம் நிருணயிக்கும் விலையில் விற்பனைக்கு அளிக்கப்பட்டன. ஒருமங்களை 10 அல்லது 10-இன் மடங்குகளில் வாங்கலாம் அந்தக்காலத்தில் உரூ.17.38 கோடிக்கு ஒருமங்கள் விற்பனை செய்யப்பட்டன. 1964 - ஆம் ஆண்டு சூலை 1 முதல் 1965 -ஆம் ஆண்டு சூன் 30 வரை மொத்த விற்பனை ரூ.19.13 கோடியாகும். இதில் தனியாரால் உரூ. 17.33 கோடிக்கும் நிறுவனங்களால் உரூ.1.40 கோடிக்கும் ஒருமங்கள் வாங்கப்பட்டன. மறு முதலீட்டுத் திட்டத்தின்படி 1966 – ஆம் ஆண்டு சூலை முதல் ஒருமங்களை வைத்திருப்பவர்கள் அதிலிருந்து கிடைக்கும் வருவாயைத் தாங்களே முதலீடு செய்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இந்த ஒருமங்கள் வங்கிக் கிளைகள் மூலமும், அஞ்சல் அலுவலகங்கள் மூலமும் விற்பனை செய்யப்படும். இந்த ஒருமங்களை வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்குப் பாதுகாப்பாகப் பயன்படுத்தலாம். இவற்றின் மூலம் பெறப்படும் வருவாய் ஒரு குறிப்பிட்ட அளவு வரை வருமான வரியிலிருந்து விலக்குப் பெறுகிறது. இந்தப் பொறுப்பாளகம் 1969 – ஆம் ஆண்டு தன் விருப்பச் சேமிப்புத் திட்டத்தையும், 1970 – ஆம் ஆண்டு குழந்தைகள் கொடைத் திட்டத்தையும், தொடங்கியதன் மூலம் சேமிப்புத் திட்டத்தை வளர்த்தது.

**நிதி முதலீடு**: இந்தப் பொறுப்பாளகத்தின் மூலதனத்தை முதலீடு செய்யும்போது பாதுகாப்புக்கும், ஓரளவு வருவாய்க்கும் முக்கியத்துவம் தர வேண்டும். நிதியை முதலீடு செய்யும்போது சில விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஏதாவது ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்யும் போது இந்தப் பொறுப்பாளகத்தின் மொத்த முதலீட்டு நிதியில் 5 விழுக்காடு அல்லது பொறுப்பாளகம் அளித்த பாதுகாப்பின் மதிப்பில் 10 விழுக்காடு இதில் எது குறைவோ அந்த அளவே முதலீடு செய்தல் வேண்டும். பொறுப்பாளகத்தின் முதலீட்டு நிதியில் 5 விழுக்காட்டிற்கு மிகாமல் புதிய நிறுவனங்கள் முதலீடு செய்தல் வேண்டும்.

**செயற்பாடு**: இந்தப் பொறுப்பாளகம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை இது விற்பனை செய்த மொத்த ஒருமங்களின் அடிப்படையில் அளவிடலாம். ஒருமங்கள் 1980-ஆம் ஆண்டு சூன் மாத இறுதிவரை உரூ.390.9 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்த ஒருமப்பொறுப்பாளகம் பல வழிகளில் தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்கிறது. நேர்மைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் ஆகியவற்றைக் குறைத்தெழுதுதல் போன்ற பணியினைச் செய்கிறது. தேவையான நிதியினை அளித்தல், நேரடியாகச் செலுத்துதல் போன்றவற்றையும் செய்கிறது.

**நன்மைகள்**:1) முதலீட்டிற்குப் பாதுகாப்பு உண்டு. 2) இதன் வருவாயில் 90 விழுக்காடு பகிர்ந்தளிக்கப்படுவதால் ஒருமம் வைத்திருப்போர் தொடர்ந்து நல்ல வருவாய் பெறுவர் 3) உரூ.1000 வரையான பங்கு ஆதாயம் வருமான வரி விலக்குப் பெறுகிறது. 4) ஒருமங்களை நிறுவனத்திற்கே குறிப்பிட்ட விலையில் விற்கும் உரிமை தரப்பட்டிருப்பதால் நீர்மைத் தன்மையுடைய முதலீடாகிறது. ஒருமங்களை மற்றொருவருக்கு விற்கவோ கடன்பெறப் பாதுகாப்பாகக் கொடுக்கவோ முடியும்.

**ஒருமப் பொறுப்பாளகத்தின் முக்கியத்துவம்**: மக்களிடமிருந்து சேமிப்பைத் திரட்டி அதனைத் தேவையான வழிகளில் முதலீடு செய்கின்ற பணி இந்தப் பொறுப்பாளகத்தின் இன்றியமையாப் பணியாகும். நடுத்தர மக்களின் சேமிப்பை வருவாய் தரக்கூடிய தொழில்களில் முதலீடு செய்யவும், அவர்களது சேமிப்புப் பாதுகாப்பாக இருக்கவும் உதவி செய்யும் ஒரு நிறுவனம் இந்திய ஒருமப்பொறுப்பாளகம் ஆகும். ஆனால், செல்வந்தர்கள் 300 அல்லது 400 பங்குகளையும், சிலர் 20 அல்லது 30 பங்குகளையும் வைத்திருக்கும்போது அதிகப் பங்கு வைத்திருப்போர் மற்றவர்களை ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகும். அதனை நீக்கச் சிறு முதலீடு செய்வோரை ஊக்குவிக்க இந்தப் பொறுப்பாளகம் முயற்சி செய்து வருகிறது. நாட்டில் இருக்கும் அனைவருக்கும் முதலீடு செய்வதில் உதவி செய்யும் நோக்கத்துடன் ஒருமப்பொறுப்பாளகத்தின் மண்டல அலுவலகங்கள் பம்பாய், கல்கத்தா, புதுதில்லி, சென்னை ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டுள்ளன. சு.ப.

*முதலீடு*: பொதுவாக, வழக்கில் 'முதலீடு' என்ற சொல் வருவாய் தரக்கூடிய சொத்துகளான வீடு, பங்குகள் (Shares),அரசுப் பத்திரங்கள் (Government Bonds), கடனீட்டுப் பத்திரங்கள் (Debentures) போன்றவற்றின்மீது செலவிடுவதைக் குறிக்கிறது.

எடுத்துக்காட்டாக 'இரிலையன்சு' (Reliance) நிறுவனத்தில் ஒருவர் கடனீட்டுப் பத்திரம் வாங்கினால் அந்நிறுவனத்தில் அவர் முதலீடு (Investment) செய்திருக்கிறார் என்று பொருள்படும். பங்குகளையும் பத்திரங்களையும் வாங்குவதால் சொத்துகள் கைமாறுகின்றனவே தவிரச் சமுதாயத்தின் மொத்தச்

சொத்துகள் பெருகுவதில்லை. இது 'நிதி முதலீடு' (Financial Investment) எனப்படுகிறது.

பொருளாதாரத்தில் 'முதலீடு' என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் புதிய நிலையான முதலீட்டுப் பொருள்மீது (New Fixed Capital Goods) அல்லது கூடுதல் இருப்புச் சரக்குகள் (Additions to Stock) மீது செலவிடும் தொகை ஆகும். புதிய நிலையான முதலீட்டுப் பொருட்களாக ஆலைகள் (Plant), இயந்திரங்கள் (Machines) போன்றவற்றைக் கூறலாம். இருப்புச் சரக்குக்கு மூலப்பொருட்கள் (Raw-materials), இடைநிலைப் பொருட்கள் (Intermediate Goods) போன்றவற்றைக் கூறலாம். அவற்றின்மீது செய்யும் செலவுகள் உண்மையான முதலீடு (Real Investment) ஆகும். கீன்சு என்னும் பொருளாதார அறிஞர் உண்மையான முதலீட்டையே முதலீடு எனக் கூறுகிறார். அதாவது புதிய கருவிகள், இயந்திரங்கள், அணைகள், சாலைகள், கட்டடங்கள், தொழில்,வாணிகம், வேளாண்மை முதலியவற்றைத் தொடங்கி நடத்த ஆகும் செலவுகள் உண்மையான முதலீட்டில் அடங்குகின்றன.

நிகழ்கால நுகர்வுக்குரிய பண்டங்களுக்கோ பணிகளுக்கோ பணத்தைச் செலவழிக்காமல் வருங்கால உற்பத்தியை உயர்த்தக்கூடிய பண்டங்களுக்கும், பணிகளுக்கும் செலவழிக்கப்படும் செலவினம் முதலீடு என்று கூறப்படும். எடுத்துக்காட்டாக உழவன் ஒருவன் தன்னிடமுள்ள மூலதனத்தைத் தன் நிலத்தில் மேடு பள்ளத்தை நிரவி மேம்படுத்த, புதிதாகக் கிணறு வெட்ட, உழவு மாடுகள் வாங்க, உழவுக் கருவிகள் வாங்கப் பயன்படுத்தினால் அது முதலீடாகும்.

நுகர்ச்சிச் செலவும், சேமிப்பும் சேர்ந்தது மொத்த வருமானம் ஆகும்.

வருமானம் = நுகர்ச்சி + சேமிப்பு

(Income = Consumption + Savings)

அல்லது

$$(I = C+S)$$

இதில் சேமிப்பை மூலதனப் பொருட்களான இயந்திரங்கள், கருவிகள், தொழிற்சாலைகள், கட்டடங்கள் போன்றவற்றை வாங்கப் பயன்படுத்தினால் அது முதலீடு ஆகும். சேமிப்புதான் முதலீட்டிற்கான முதல் படியாகும். முதலீடு பலவகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை:

**தூண்டப்பட்ட முதலீடு:** வருமானம், தொழில் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக மேற்கொள்ளப்படுவது தூண்டப்பட்ட முதலீடு (Induced Investment) ஆகும். இம் முதலீடு ஆதாய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இது, பெரும்பாலும் தனியாரால் செய்யப்படுகிறது.

**தன்னியக்க முதலீடு:** உற்பத்தி, ஆதாயம் ஆகிய வகைகளைக் கருதாமல் தேசிய நலனை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் முதலீடு தன்னியக்க முதலீடாகும் (Autonomous Investment). இது பொதுத்துறையினரால் செய்யப்படும் முதலீடாகும். புதிய உற்பத்தி முறை, புதிய பண்டங்கள் கண்டு பிடித்தல், புதிய மூலப்பொருட்களைக் கண்டுபிடித்தல், மக்கள்தொகை பெருகுதல் போன்ற காரணங்களால் ஏற்படுவது தன்னியக்க முதலீடு ஆகும்.

**தனியார் முதலீடு:** தனிப்பட்ட ஒருவரும், நிறுவனங்களும் ஆதாய நோக்கத்தோடு முதலீடு செய்வது தனியார் முதலீடாகும் (Private Investment). தனியார் துறையிலுள்ள தொழில்கள் தனியார் முதலீட்டால் ஏற்பட்டதாகும்.

**பொதுத்துறை முதலீடு:** அரசு பல்வேறு துறைகளில் செய்யும் முதலீடு பொதுத்துறை முதலீடு (Public Investment) ஆகும். இந்தியாவில் மத்திய அரசு இருப்புப் பாதைகள், கனரகத் தொழில்கள், பல்நோக்குத் திட்டங்கள் போன்றவற்றில் முதலீடு செய்வது பொதுத்துறை முதலீடாகும்.

**திட்ட முதலீடு:** திட்டமிட்டு உற்பத்தித் திறனைப் பெருக்குவது, ஆக்கச் செலவைக் குறைப்பது போன்ற நோக்கங்களுக்காகச் செய்யப்படும் முதலீடு திட்டமிட்ட முதலீடு (Intended Investment) ஆகும். எடுத்துக்காட்டாகப் பொருட்களின் விற்பனை அல்லது விலைகள் மிகுதியானால் தங்கள் கையிருப்புச் சரக்கின் இருப்பை மிகுதிப்படுத்திக் கொள்வதற்காகச் செய்யும் முதலீடு திட்டமிட்ட முதலீடாகும்.

**திட்டமிடா முதலீடு:** எதிர்பாராத வாணிகம் தொழில் மாற்றங்களினால் முதலீடு செய்யவேண்டிய இன்றியமையாமையினால் முதலீடு செய்வது திட்டமிடா (Unintended Investment) முதலீடாகும். எடுத்துக்காட்டாக இருக்கின்றதொரு பொருள் வழக்கொழிந்ததால் (Out-dated) மாற்றுப்பொருளை உற்பத்தி செய்வதற்காகச் செய்யும் முதலீடு திட்டமிடா முதலீடாகும்.

**எதிர்பார்க்கும் முதலீடும் உண்மையான முதலீடும்:** முதலீட்டாளர்கள் செய்ய விரும்புகின்ற முதலீட்டு அளவு எதிர்பார்க்கும் முதலீடு (Ex-ante Investment) ஆகும். உண்மையில் செய்யப்பட்ட முதலீடு உண்மை முதலீடாகும் (Ex-post Investment). எதிர்பார்க்கும் முதலீட்டளவும் உண்மை முதலீட்டளவும் வேறுபடு

கின்றன. அதற்குக் காரணம் சேமிப்பவர்களும் முதலீடு செய்பவர்களும் வெவ்வேறு ஆட்களாகஇருப்ப தேயாகும்.

**ஈடு செய்யும் முதலீடு**: முதலீட்டுக் கருவிகள் தேய் மானத்தை ஈடு செய்வதற்காகச் செய்யப்படும் செலவு ஈடுசெய் முதலீடாகும் (Replacement Investment). இது மூலதனக் கருவிகளின் தேய்மான வேகத்தைப் பொறுத்து அமைகிறது.

**வெளிநாட்டு முதலீடு**: வளர்ச்சி குறைந்த நாடு களின் பொருளாதார வளர்ச்சிக்காக அந்நாடுகளில், வளர்ச்சி பெற்ற நாடுகள் முதலீடு செய்வது வெளி நாட்டு முதலீடாகும் (Foreign Investment). அது நேரடி முதலீடாகவோ முதலீட்டு உதவியாகவோ அமையலாம்.

**மொத்த முதலீடும் நிகர முதலீடும்**: புதிய, நிலை யான முதலீட்டுப் பொருட்கள்மீதும் இருப்புச் சரக்கு கள் மீதும் செலவிடும் தொகை மொத்த முதலீடாகும் (Cross Investment). மொத்த முதலீட்டில் தேய்மானச் செலவு (Depreciation Cost) போக எஞ்சியிருப்பது நிகர முதலீடாகும் (Net Investment). இயந்திரங் கள் பழையனவாகிப்பயன்படாதனவாகப் போய்விடும். அவற்றிற்கு மாற்றாகப் புது இயந்திரங்களைப் புகுத்த வேண்டியிருக்கிறது. அதற்காகும் செலவு தேய்மானச் செலவு ஆகும். மொத்த முதலீடு =நிகர முதலீடு+தேய்மானம்.

**முதலீட்டை முடிவு செய்யும் காரணிகள்**: சேமிப் பாளர்கள் தங்கள் சேமிப்பைத் தாங்களே முதலீடு செய்துகொள்வதுண்டு. சிலர் சேமிப்பை, முதலீடு செய்ய விரும்பும் பிறருக்குக் கடனாகக் கொடுத்து வட்டியைப் பெற்றுக்கொள்கின்றனர். வேறு சிலர் தங்கள் சேமிப்புகளை வங்கிகளில் வைப்பாகப் போடு கின்றனர். வங்கிகள் அச்சேமிப்பு வைப்புகளை முத லீடு செய்பவருக்குக் கடனாகக் கொடுக்கின்றன. அவ்வாறு சேமிப்பாளர்கள் ஒரு வகையினராகவும், முதலீடு செய்பவர்கள் வேறொரு வகையினராக வும் இருக்கின்ற காரணத்தினால் முதலீட்டை முடிவு செய்வதில் பல காரணிகள் பங்கு பெறுகின்றன.

முதலீடு ஆதாய நோக்கத்திற்காகச் செய்யப்படு கிறது. இருந்த போதிலும் ஆதாயத்தை முடிவுசெய் வதில் பல காரணிகள் பங்கு பெறுகின்றன. அவை:

1. மக்கள்தொகைப் பெருக்கம்: மக்கள்தொகை பெருகும்போது எல்லாப் பொருட்களின் தேவையும் மிகுதியாகிறது. அதனால் முதலீடும் பெருகுகிறது.

2. புதிய பகுதிகளின் முன்னேற்றம்: இது வரை பொருளாதார முன்னேற்றமடையாத பகுதி களில் போக்குவரத்து, மின்சாரம், நீர்ப்பாசனம் வேளாண்மை, தொழில்கள், குடியிருப்பு ஆகியவ வற்றை ஏற்படுத்த முதலீடு தேவையாகிறது.

3. தொழில்நுட்ப முன்னேற்றம்: உற்பத்தியில் தொழில்நுட்ப முன்னேற்றம், புதிய கருவிகள் கண்டு பிடித்தல், புதிய தொழில் நுணுக்கங்கள் ஆகியவற் றால் முதலீட்டு வாய்ப்புகள் மிகுதியாகின்றன.

4. பொருளாதாரக் கொள்கைகள்: அரசின் பொருளாதாரக் கொள்கை முதலீட்டை முடிவுசெய் வதில் பங்கு வகிக்கிறது.' கடன் முதலீட்டுச் சலுகை வரிச்சலுகை, முதலீட்டு வசதிகள் போன்றன அளிப்ப தால் முதலீடு மிகுதியாகிறது.

5. தொழில் நம்பிக்கை: தொழிலில் ஆதாயம் ஏற்படும் என்ற நம்பிக்கை இருந்தால் முதலீடு மிகுதி யாக்கப்படுகிறது. எனவே, முதலீடு ஓர் உளவியல் சார்பான கருத்தாக அமைகிறது.

6. தேவையின் தன்மை: உற்பத்தி செய்யும் பொருட்களுக்குரிய தேவையையொட்டி முதலீடு அமைகிறது. எதிர்காலத்தில் பொருட்களுக்குரிய தேவை மிகுந்தால் முதலீடுமிகுதியாகும்.

7. உற்பத்திச் செலவும் விலையும்: எதிர்காலத் தில் உற்பத்திச் செலவுகள் குறைந்து விலைகள் உய ரும் என்று முதலீட்டாளர்கள் எதிர்பார்த்தால் முத லீடு பெருகும். அதற்கு மாறாகச் செலவுகள் மிகுந்து விலைகள் குறையும் என்று எதிர்பார்த்தால் முதலீடு குறையும்.

8. நுகர்ச்சி நாட்டம்: நுகர்ச்சி நாட்டம் மிகுதி யாக இருந்தால் முதலீடும் மிகுந்திருக்கும். நுகர்ச்சி நாட்டம் குறைவாக இருந்தால் முதலீடும் குறைவா கவே இருக்கும்.

9. நடப்பு நிலவரம்: முதலீடு செய்பவர்கள் நடப்புக்காலத்தில் ஆதாயம் மிகுதியாக இருந்தால் முதலீட்டைப் பெருக்குவார்கள். அதாவது நடப்பு விளைவு விகிதம் மிகுதியாக இருந்தால் முதலீடும் மிகுதியாக இருக்கும்.

10. நீர்மைச் சொத்துகள்: நிறுவனத்திடம் நீர் மைத் தன்மையுடைய சொத்துகள் (எளிதில் பண மாக்கக்கூடிய சொத்துகள்) மிகுதியாக இருந்தால் முதலீடும் மிகுதியாக இருக்கும்.

11. பொதுச் செலவுகள்: அரசின் பொதுச்செலவு மிகுதியானால் அதன் காரணமாக முதலீடும் மிகுதி யாகும்.

12. மூலதனச் சேர்க்கை: முதலீட்டிற்கு மூல

தனம் அவசியமாகும். மூலதனச் சேர்க்கை முதலீட்டைப் பெருகச் செய்கின்றது.

13. வருமானம்: வருமான மிகுதி, வேக வளர்ச்சித் தத்துவப்படி முதலீட்டைத் தூண்டுகிறது.

14. மூலதனத்தின் இறுதிநிலைத் திறன்: மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் (Marginal Efficiency of Capital) என்பது எதிர்பார்க்கின்ற ஆதாய வீதமாகும். எதிர்பார்க்கின்ற ஆதாய அளவு முதலீட்டின் அளவைத் தீர்மானிக்கிறது.

15. வட்டி வீதம்: தனியார் முதலீட்டை முடிவு செய்வதில் வட்டி வீதம் முக்கிய பங்காற்றுகிறது. வட்டிவீதம் மிகுந்திருந்தால் முதலீடு குறைவாக இருக்கும். வட்டிவீதம் குறைவாக இருந்தால் முதலீடு மிகுதியாக இருக்கும்.

16. கூலி வீதம்: குறைந்த அளவுக் கூலி ஆதாய வாய்ப்பை மிகுதிப்படுத்துகிறது. அதனால் முதலீடு மிகுதியாகிறது.

17. புறக் காரணிகள்: முதலீட்டை முடிவுசெய்வதில் புறக் காரணிகளாக (Exogeneous Factors) பின்வருவன அமைகின்றன. அவை, அ) புதிய கண்டுபிடிப்புகள், ஆ) மக்கள்தொகை வளர்ச்சி, இ) இயற்கைச் செல்வங்களின் வளர்ச்சி, ஈ) நுகர்வோரின் உளவியல் தன்மை, உ) அரசின் பணம், நிதி பற்றிய கொள்கைகள், ஊ) சட்டப் பாதுகாப்பு, எ) தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள், ஏ) சமுதாய நிறுவனங்கள் (Sociological Institutions), ஐ) போர், புரட்சி, ஒ) தட்பவெப்பச் சூழ்நிலைகள் ஆகியவை.

18. அகக் காரணிகள்: முதலீட்டின் அளவை முடிவுசெய்வதில் அகக் காரணிகளாகப் (Endogeneous Factors) பின்வருவன அமைகின்றன. அவை: அ) வருமானம், ஆ), நுகர்ச்சித் தேவை, இ) முன்பே புழக்கத்தில் இருக்கும் மூலதனத்தின் அளவு, ஈ) பணக் கூலி வீதம், உ) உற்பத்தியில் மூலப் பொருட்களின் விலை, ஊ) வெளிநாட்டு அங்காடி நடவடிக்கை, எ) இடர்களும் நிச்சயமற்றத் தன்மையும் முதலியன.

**முதலீட்டின் அளவு:** இல்லத் துறை, நிறுவனத் துறை, அரசுத் துறை ஆகியன முதலீட்டைச் செய்கின்றன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் (Capitalist Economy) இல்லத் துறையும், நிறுவனத் துறையும் முதலீட்டை மேற்கொள்கின்றன. சமவுடைமைப் பொருளாதாரத்தில் (Socialist Economy) முதலீடு அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இந்தியா போன்ற கலப்புப் பொருளாதாரத்தில் (Mixed Economy) இல்லத் துறை, நிறுவனத் துறை, அரசுத் துறை ஆகிய மூன்றும் முதலீட்டை மேற்கொள்கின்றன. ஒரு நாட்டின் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்குத் தேசிய வருமானத்தில் 25 விழுக்காட்டிற்குமேல் முதலீட்டு அளவு இருப்பது ஏற்றது. ஒரு நாட்டின் வருமானம், உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியன அந்நாட்டின் முதலீட்டு அளவைச் சார்ந்துள்ளன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில், முழு வேலை நிறைவையும் பொருளாதார முன்னேற்றத்தையும் திறக்கும் திறவுகோலாக முதலீடு இருக்கிறது எனக் கென்னத் குரிகாரா (Kenneth Kurikara), குறிப்பிடுகிறார்.

கோ.சட

**துணை நூல்கள்:**

Alfred, W., Stonier & Douglas, C. Hague, A Text Book of Economic Theory, The English Language Book Society, Londan, 1982.

David, W., Pearce, The Dictionary of Modern Economics, Macmillan Press Ltd., London, 1983.

முதலேற்பு ஆள்வரை: உரிமையியல் என்பது என்ன என்பதைப் பற்றியும், ஒரு வழக்கை எங்கு எப்படித் தொடங்குவது என்பதைப்பற்றியும், எந்த இடத்தில் எந்த மன்றத்தில் ஒரு வழக்கைத்தொடங்குவது என்பதைப் பற்றியும் முடிவு செய்யப் பல வகையான கோட்பாடுகள் உள்ளன.

வழக்கு எவ்வகையானது என்பதும், எந்த இடத்தில் வழக்காடும் தரப்பினர்கள் நிலையாகக் குடியிருக்கிறார்கள் என்பதும், வழக்கு நிகழ்ச்சிகள் எங்கு நடந்தன என்பதும், வழக்கின் பணமதிப்பு குறிப்பிட்ட நீதிமன்ற விசாரணை அதிகாரத்துக்கு உட்பட்டதா என்பதும் அக்கோட்பாடுகளுள் மிக முக்கியமானவையாகும்.

இந்தியச் சட்டங்களின் அடிப்படையே ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டதுதான். நீதித்துறை அமைப்பு கி.பி. 1600 – ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்படுகிறது. கிழக்கு இந்தியக் குழுமம் மூலம் வணிகர்களாக வந்து ஆங்கிலேயர் இந்த நாட்டை ஆளத் தொடங்கினர். அதை இங்கிலாந்து அரசு ஏற்றுக்கொண்டு அதற்கெனப் பல சட்டங்களைப் பிறப்பித்தது. சிறிது காலத்திற்குப்பின் குழுமப்பிடியிலிருந்து ஆட்சிப் பொறுப்பு நேரடியாக இங்கிலாந்து மன்னர் ஆட்சியின் கீழ் வந்தது.

இந்திய நாட்டின் நீதித்துறை அமைப்பை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1)கி.பி.1600 – ஆம் ஆண்டு முதல் கி.பி.1800-ஆம் ஆண்டு வரை, 2) கி.பி. 1801-ஆம் ஆண்டு முதல் கி.பி.1862-ஆம் ஆண்டு வரை,

3) கி.பி.1862-ஆம் ஆண்டு முதல் 1947-ஆம் ஆண்டு வரை, அதாவது நாடு விடுதலை அடையும் வரை, 4) நாடு விடுதலை அடைந்தபின் என்பனவாகும்.

உரிமையியல் வழக்கை எங்குத் தொடங்க வேண்டுமென்பதை அறியப் பலசட்டங்களை ஆய்வு செய்ய வேண்டும்.

சென்னை நகரிலுள்ள மாகாணச் சிறிய வழக்குகள் நீதிமன்றச் சட்டம் (1882), (The Presidency Small Causes Courts Act, 1882) ரூ. 3000 க்கு உட்பட்ட வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கிறது. பாகப் பிரிவினை, நிலை பெயர்க்க முடியாத சொத்துகளை மீட்பதற்கான வழக்குகள், தடையாணை உறுத்துக் கட்டளை வழக்குகள், திருமண சம்பந்தமான வழக்குகள் போன்றவற்றை இவ்வகை நீதிமன்றங்களில் தொடங்க முடியாது.

சென்னை மாநகர உரிமையியல் நீதி மன்றச் சட்டம் (1892) (The Madras City Civil Courts Act, 1892) ஒருஇலட்ச உருபாய் வரை மதிப்புள்ள வழக்குகளை அந் நீதிமன்றத்தில் விசாரிக்க வழி வகுத்திருக்கின்றது. அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள வழக்குகளைச் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடங்க வேண்டும்.

மாவட்டங்களில் வட்ட நீதிமன்றம் (Munsiff Court), கீழ் மட்ட நீதிமன்றம், மாவட்ட நீதி மன்றம் ஆகியவை உரிமையியல் வழக்குகளை விசாரிக்க அதிகாரம் பெற்றிருக்கின்றன.

நீதிப்பேராணைகள் (Writs) உரிமையியல் வழக்குகளாயினும் அவற்றை வேறுபடுத்தி நீதிப் பேராணைகள் பற்றிய விசாரணைக்கான அதிகாரம் என்று வழங்கப்படுகின்றது. அந்த அதிகாரம் அரசியல் சாசனப்பிரிவுகளின்படி உயர் நீதிமன்றத்திற்கும், உச்சநீதிமன்றத்திற்கும் மட்டுமே இருக்கின்றது.

ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டை ஆண்ட போது விக்டோரியா மகாராணியால் பிறப்பிக்கப்பட்ட சட்டக் காப்புரிமைப் பட்டயத்தின்படி (Letters Patent, 26-6-1862) சென்னையில் உயர் நீதிமன்றம் அமைக்கப்பட்டு கி.பி.1862 - ஆம் ஆண்டு ஆகசுட்டு 15 - ஆம் நாளிலிருந்து செயற் படத்தொடங்கியுள்ளது.

உயர்நீதி மன்றத்திற்கு அரசியல் சாசனப் பிரிவு 226-இன் கீழ் நீதிப்பேராணை மனுக்களை விசாரிக்கவும், 228- ஆம் பிரிவின் கீழ், உயர்நீதி மன்றத்தின் கீழ் இயங்கும் மற்ற நீதிமன்றங்களில் விசாரணைக்குள்ள வழக்கைத் தாங்களே விசாரிக்கவும் அதிகாரம் உள்ளது.

மேலும் விருப்பாவணம் (Will), நொடிந்தவர்களுக்குரிய வழக்குகள் ஆகியவற்றைச் சென்னையில் உயர் நீதிமன்றமும், மாவட்டங்களில் மாவட்ட நீதி மன்றங்களும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும். நொடிந்தவர்களுக்கான ஆள்வரை (Insolvency Jurisdiction) தனியானதாகக் கருதப்படுகிறது.

முன்காலத்தில் தமிழர் அண்டைய நாடுகளுடன் கடல் வாணிகம் செய்தனர் என வரலாறு கூறுகின்றது. பூம்புகார், மாமல்லபுரம் போன்ற பல துறைமுகங்கள் இருந்தன. ஆனால், கடல் வாணிகத்துறையில் ஏற்பட்ட குற்றவியல், உரிமை இயல் வழக்குகளை விசாரிக்க எவ்வகைச் சட்டங்கள் இருந்தன என்பதும் எவ்வகை மன்றங்கள் இருந்தன என்பதும் இன்னும் ஆராய்ச்சிக் குரியனவாகும்.

ஆங்கிலேயர் சென்னைப் புனித சார்சு கோட்டையை அமைத்தபின் கடற் கொள்ளை, வாணிகம் ஆகியவற்றைப் பற்றிய வழக்குகளை விசாரிக்க மன்றங்கள் அமைத்தனர். அவர்கள் கப்பல் துறை நீதி மன்றத்தை அமைத்துப் பல குற்றவியல் வழக்குகளை விசாரித்தனர் இப்பொழுது சென்னை உயர் நீதிமன்றம் கப்பல் துறை நீதிமன்றமாகவும் (Admir-ality Jurisdiction) இயங்குகிறது. மாலுமிகள் ஊதியம், கப்பல்கள் மோதிக்கொள்வதால் ஏற்படும் இழப்பீடு வழக்குகள், கடல் வாணிகம் குறித்துக் கப்பல்களை வாடகை ஒப்பந்தம் செய்து கொள்வதில் (Charter) ஏற்படும் தகராறுகள், புயல், சூறாவளி ஆகியவற்றால் கப்பல்களுக்கு ஏற்படும் இழப்புகள் பற்றிய வழக்குகள் என்று பல்வேறு வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரம் சென்னை உயர்நீதிமன்றத்துக்குள்ளது. கப்பல் துறை நீதிமன்றம் இயங்குவது ஒரு தனித்துறையாகவே கருதப்படுகிறது.

இந்திய (மத்திய) அரசுக்கும் மற்ற மாநிலம் அல்லது மாநிலங்களுக்கும் இடையேயுள்ள தகராறு, மாநிலங்களுக்கிடையே ஏற்படும் தகராறு ஆகியவற்றை விசாரணை செய்ய உச்ச நீதி மன்றத்திற்கு அரசியல் சாசனப் பிரிவு 131 - இன்படி அதிகாரம் இருக்கிறது.

முதலேற்பு ஆள்வரை (Ordinary Original Civil Jurisdiction) என்பது மேலே குறிப்பிட்ட பல வகைகளில் எழுகின்றது. அதை விசாரிக்கப் பல மன்றங்கள் இருக்கின்றன. வழக்குகளைத் தொடங்குவது எந்த மன்றத்தில் என்பதை அவற்றை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். எம்.பி.சு.

**முதற்பொருள்**, அகமும் புறமுமாகிய இருதிணைப் பொருட்களும் நிகழ்தற்கு இடமாகிய பொருள். முதல், கரு, உரி என்னும் மூன்றனுள் ஒன்றாகிய முதற்

பொருள் இருதிணைக்கும் பொதுவாக அமைவது. இது நிலம், காலம் என இருவகைப்படும். அவற்றுள் நிலம் என்பது உலகத்துப் பொருட்கள் அனைத்தும் தோன்றுதற்கு இடமாக அமைவது.அந்நிலம் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என ஐவகைப் படும். காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்றும், மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை என்றும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்றும் வழங்குவர். காலம் என்பது மாத்திரை நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அயனம், ஆண்டு, ஊழி என்னும் பல பகுதிகளை உள்ளடக்கியதாகும். காலம் இரண்டு வகைப்படும். அவை பெரும்பொழுது, சிறுபொழுது என்பன. கூதிர், கார், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன பெரும் பொழுதுகள். மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு என்பன சிறு பொழுதுகள்.

கூதிர் என்னும் பெரும்பொழுதும், யாமம் என்னும் சிறுபொழுதும் குறிஞ்சிக்குரியன. முதுவேனில், பின்பனி என்னும் பெரும் பொழுதுகளும், நண்பகல் என்னும் சிறுபொழுதும் பாலைக்குரியன. கார் என்னும் பெரும்பொழுதும், மாலை என்னும் சிறுபொழுதும் முல்லைக்குமுரியன. ஆறுபெரும் பொழுதுகளும் மருதத்திற்கும் நெய்தலுக்குமுரியன. வைகறை என்னும் சிறுபொழுது மருதத்திற்கும், எற்பாடு என்னும் சிறுபொழுது நெய்தலுக்கும் உரியன. சா.கி.

முதன்முறைக் குற்றவாளி: குற்றவாளிகளை, முதன் முறைக் குற்றவாளி என்றும், குற்றம் புரிவதையே வழக்கமாகக் கொண்டவர் (Habitual Offenders) என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். முதன் முறைக் குற்றவாளி (First Offender) என்பவர், ஏழாண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றிற்காகத் தண்டனை அளிக்கப் பட்டு முன்தண்டனை ஏதுமில்லாத 21 – வயதிற்குக் குறையாதவர். மரண தண்டனை அல்லது ஆயுள் சிறைத் தண்டனை நீங்கலான வேறு வகைத் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றிற்காகத் தண்டனை அளிக்கப்பட்டு முன் தண்டனை ஏதுமில்லாத ஒரு பெண் அல்லது 21–வயதுக்குட்பட்ட ஆண் ஆகியோர் முதன் முறைக் குற்றவாளி எனக் கருதப்படுவார்.

**முதன் முறைக் குற்றவாளிக்குச் சட்டத்தில் தரப் படும் சலுகைகள்:** முதன் முறைக் குற்றவாளிக்கு, குற்றமுறை விசாரணைச் சட்டத்தின் பிரிவு 360-இன் கீழும், குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் பிரிவு 4-இன் கீழும், முதன் முறையாக ஒரு குற்றத் திற்காகத் தண்டிக்கப்பட்டவருக்குச் சில சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. குற்றத்தின் தன்மை, குற்ற வாளியின் இயல்பு, குற்றம் நடந்த சூழ்நிலை ஆகியவற்றை மனத்திற் கொண்டு, குற்றவாளிக்குத் தண்டனை விதிக்காமல், குறிப்பிட்ட காலத்திற்குக் குற்றவாளி நன்னடத்தைக் கண்காணிப்பாளர் ஒருவரின் மேற்பார்வையில் இருக்க வேண்டும் என நீதிமன்றம் கட்டளை இடலாம். அவ்வாறு கட்டளை இடும் போது குற்றவாளி பிணைமுறி ஒன்று பிணையாட்களுடன் அல்லது பிணையாட்கள் இன்றி எழுதிக் கொடுத்து, அதன்படி மூன்று ஆண்டுக் காலத்திற்குள் நீதிமன்றத்தால் எப்போது கட்டளை இடப்படுகிறதோ அப்போது நீதிமன்றத்திற்கு வந்து அத் தண்டனையை ஏற்றுக் கொள்ளப் பிணைமுறி எழுதிக் கொடுத்தும், அதற்குள் இடைப்பட்ட காலத்தில் அமைதி காத்தும், நன்னடத்தையைக் கடைப்பிடித்தும் நடந்து கொள்வதாக உறுதியளிக்கும் கட்டாயத்தின் பேரில், அக்குற்றவாளி விடுவிக்கப்படுவார். திருட்டுக் குற்றத்தின் கீழும், ஒரு கட்டடத்தில் உட்புகுந்த திருட்டுக்குற்றம், நேர்மையின்றிக் கையாடல் செய்தல் குற்றம், வஞ்சித்தல், மற்றும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அளிக்கக்கூடிய அல்லது தண்டத்தொகை மட்டும் விதிக்கக்கூடிய எந்தக் குற்றத்தின் கீழும், ஒருவர் தண்டிக்கப்பட்டால், அவ்வாறு தண்டிக்கப்பட்டவர் முதன் முறைக் குற்றவாளியாயிருப்பின், அந்நீதிமன்றம், குற்றவாளியின், வயது, குணம், முன்நடத்தை, குற்றவாளியின் உடல் அல்லது மனநிலை, குற்றம் நடைபெற்ற சூழ்நிலை, வழக்கின் ஏற்புத்தன்மை முதலிய காரணங்களை நினைவிற்கொண்டு, தண்டனை வழங்குவதற்குப் பதிலாக அக்குற்றவாளியை மன்னித்து விடுவிக்கலாம்.

**முதன்முறைக் குற்றவாளிக்குச் சட்டத்தில் சலுகைகள் தருவதற்கான காரணங்கள்:** முதன் முறையாக ஒரு குற்றத்தில் ஒருவர் சூழ்நிலையின் காரணமாக ஈடுபட்டுக் குற்றவாளியாக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படலாம். அவ்வாறு குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டவர், குற்றங்களைச் செய்யும் உள்நோக்கும், எண்ணமும் சிறிதளவும் இன்றி ஒரு குற்றத்தைச் செய்தவராக இருந்தாலும், அவர்மீது குற்றம் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டால், சட்டம் அவரைக் குற்றவாளியாகவே கருதித் தண்டனை கொடுக்க முற்படும். ஆனால், அவ்வாறு தண்டிக்கப்படுபவர், அத்தண்டனையை ஏற்றுச் சிறைச் சாலையில் அடைக்கப்படும் நிலையில் அவருக்கு ஏற்படும் பாதகங்

களைச் சட்டம் ஆய்வு செய்து அதற்காகவே சில சலுகைகள் வழங்கியுள்ளது.

சிறைச்சாலை என்பது, கொடூரமான குற்றங் களைச் செய்து தண்டிக்கப்பட்டவர்களையும் பல குற்றங்களைப் பல முறை செய்து தண்டிக்கப்பட்ட வர்களையும், குற்றங்கள் செய்வதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்களையும், பல குற்றங்கள் செய்து தண்டிக்கப்பட்டதனால் குற்றங்கள் செய்வதைப் பற்றி அச்சம் இல்லாதவர்களையும், அதன் விளைவு களைப் பற்றிக்கவலைப் படாதவர்களையும், அவர் கள் போன்ற பல தரப்பட்ட குற்ற உணர்வுள்ள கைதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அத் தகைய ஒரு கேடான சூழ்நிலையில் ஒரு முதன் முறைக் குற்றவாளி இருக்க நேரிடுமாயின் அம்முதன் முறைக் குற்றவாளி, ஏனைய குற்றவாளிகளின் தகாத குற்றமனப்போக்கையும், நடத்தையையும் பழக்கத் தையும் பெற்றுத் தன்னிலையிழந்து, தகாத செயல் புரிந்து தரங்கெட்டுப் போக ஏதுவாகும் என்ற கார ணத்தினாலும், அத்தகையவர் திருந்துவதற்கு உரிய வாய்ப்பு அறவே அற்றுப்போகும் என்ற காரணத் தினாலும் முதன்முறைக் குற்றவாளிக்குத் தண்டனை ஏதும் அளிக்காமல், கட்டுப்பாட்டின் பேரில் அம் முதன்முறைக் குற்றவாளியைச் சிறைக்கு அனுப்பாது விடுவித்து, அவர் திருந்துதவற்கும், திருந்திச் சமூகத் தில் ஒரு மதிப்பிற்குரிய குடிமகனாக நடந்து கொள் வதற்கும் வாய்ப்பளிக்கும் வகையில் சட்டம் இடம் கொடுத்துள்ளது.

குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதன் நோக்கமே, 1) மீண்டும் குற்றம் புரியாது தடுத்தல், 2) குற்ற எண்ணம் எழாதிருக்கச் செய்தல், 3) குற்ற வாளிகளுக்குப் புதுவாழ்வு அளித்தல் போன்ற உயர்ந்த கருத்துகளின் அடிப்படையில் எழுந்ததாகும். இச்சட்டத்தின் பயனால், ஒரு முதன்முறைக் குற்ற வாளி திருந்தி நடக்கவும் அதுவே முதலும், இறுதியு மான குற்றமாகி அவன் திருந்தி விடவும் வாய்ப்பு உண்டாகிறது. சி.வி.இரா.

**முதியோர் நலத் திட்டம்:** பொதுவாக, அறுபது வயது ஆனவர்கள் முதியோர் எனக்கருதப் படுகின்றனர். அவர்களுக்கு ஏற்படுகிற மூப்பும், அதைத் தொடர்ந்து வருகிற உடல் நலிவு, தள்ளாமை, சோர்வு ஆகிய எல்லாமும் சேர்ந்து அவர்களை இரக்கத்திற்கும், அனுதாபத்திற்கும் உரியவர்களாக ஆக்குகின்றன. அந்த நிலையில் அவர்களுக்கு ஆதர வும், அவர்களுக்கேற்ற பேணுதலும் தேவைப்படு கின்றன.

முன்பு கூட்டுக் குடும்ப முறை, தந்தையாதிக்கம் ஆகியன மேலோங்கியிருந்த காலத்தில் குடும்பமே முதியவர்களைப் பேணுகிற நிலையமாக, ஆதரவற்ற முதிய உறவினர்களுக்குப் புகலிடம் தந்து ஆதரிக்கிற உய்விடமாகச் செயற்பட்டது. வயதான பெற்றோர் களையும், உறவினர்களையும் ஆதரித்துப் பேண வேண்டியது கடமையாகக் கருதப்பட்டது. அதன் காரணமாக முதியோர் தவிப்பு என்பது இல்லாத ஒன்றாக முன்பு இருந்தது.

குடும்பம் மட்டுமன்றி, சமுதாயமும் முதியோருக்கு ஆதரவும், பாதுகாப்பும் நல்கிடும் பணியில் ஈடு பட்டது. ஆதரவற்ற முதியோர்களைப் பேணுவதற்கு என்று பல அமைப்புகள் சமுதாயத்தில் அமைந்திருந் தன. இந்தியாவில் சாதி மன்றங்கள் 'சதாவர்த்தாக் கள்', 'தருமத்தலங்கள்' என்ற அமைப்புகள், மடங்கள் முதலியன முதியோர்களுக்கு ஆதரவளித்துக் காப் பாற்றின. அவற்றுடன் ஆலயங்களும் முதியோர் ஆதரவு இல்லங்களை அமைத்து முதியோரைப் பேணி வந்தன. ஊர் நாட்டாண்மைகளும் இந்தப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு முதியோருக்கு ஆதரவு நல்கிடும் நல்வாழ்வு நிலையங்களை நடத்தின. அருணாசலப் பிரதேசத்தில் ஊரகப் பகுதிகளில் 'கெபாங்கு' என்ற அமைப்பு ஊர் நாட்டாண்மைக் காரர்களால் நடத்தப்படுகிறது. அவ்வமைப்பில் ஆதர வற்ற முதியோருக்குத் தங்குமிடம், உணவு முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

ஆனால், இன்று முதியோரைக் காப்பாற்றுவதி லும், பேணுவதிலும் குடும்பத்தின் பொறுப்பு குறைந்துகொண்டு வருகிறது. தலைமுறை இடை வெளியினால் இளைய தலைமுறையினர் முதிய தலை முறையினருடன் ஒத்துப்போகும் போக்குக் குறைந்து கொண்டு வருகிறது. அதன் காரணமாக இளைய தலைமுறை யினருக்கும், முதிய தலைமுறையினருக் கும் இடையே நல்லிணக்கம் அமையாமல் போகிறது. இரு தரப்பினரிடையே புகைச்சலும், பூசலும் ஏற்படு கின்றன. இருவரும் ஒத்துப் போகாமல் முரண்படு வதால் அவர்களுக்கிடையேயான உறவுகள் சீர் குலைந்து முதியவர்களை இளையவர்கள் வெறுக்கும் போக்கும், புறக்கணிக்கும் செயலும் நிகழ்கின்றன. இளைய தலைமுறையினரின் புறக்கணிப்பால் முதிய தலைமுறையினர் ஆதரவும் அரவணைப்பும் இன்றி அல்லற்படுகின்றனர்.

முதியவர்களால் குடும்ப வருமானத்திற்கு எந்தப் பங்கும் வருவதில்லையாதலால், அவர்கள் குடும்பத் திற்குச் சுமையாகின்றனர். பணிகளிலிருந்து அவர்கள் ஓய்வு பெற்று விடுவதால் அவர்களிடமிருந்து வரக் கூடிய பொருளாதாரப் பங்கு மறைகிறது. அப் படியே அவர்களுடைய ஓய்வூதியம் வந்தாலும், அது போதாத காரணத்தினால், முதியோர்

களுடைய இருப்பு, பொருளாதார முறையில் குடும்பத்திற்குச் சுமையாகிறது. தள்ளாமையின் காரணமாகவும், வேலை வாய்ப்பு அருகிப்போனதன் காரணமாகவும் முதியவர்கள் எந்த வருமானப் பணியிலும் சேர இயலாமல் இருக்கிறார்கள். இப்படி அவர்களால் வருமானம் ஏதும் வாராத நிலையில், அவர்கள் குடும்பத்தில் வெறும் செலவினமாகவே அமைகிறார்கள். விலைவாசி, உயர்ந்து கொண்டே போகும் நிலையில் பொருளாதாரப் பங்கு ஏதும் தாராத, தர இயலாத முதியவர்களின் இருப்பு குடும்பத்திற்குப் பொருளாதாரச் சுமையாக, தொந்தரவாக இருக்கிறது. அதனால் சுமையாகிப் போன முதியவர்கள்மீது பிள்ளைகளுக்கு எரிச்சல் ஏற்பட்டு அவர்களைப் புறக்கணிக்கின்றனர். போதிய பேணுதல் காட்டாமல் அவர்களைக் கைகழுவுகின்றனர்.

அத்தகைய புறக்கணிப்பால் மன உளைச்சல் ஏற்பட்டு, முதியவர்களுடைய உடல்நிலை மேலும் சீரழிகிறது. மன அமைதி இழந்து அல்லலுறுகின்றனர். அத்தகைய நிலையில் அவர்களுக்குச் சமுதாயத்தில், அரசின் ஆதரவே கைகொடுக்கிறது.

**அமெரிக்க ஐக்கிய நாடுகள்**: மேலை நாடுகளில் முதியோர்களுடைய நலனுக்காகப் பல சிறப்பான திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கூட்டரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முதியோர்களுக்கு மாதந்தோறும் 80 தாலர் அளவில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஓய்வூதியம் மட்டுமன்றிக் கூடுதலாக நிதி உதவியும் முதியோர்களுக்கு வழங்கப்படுகிறது. கூடுதல் பாதுகாப்பு வருமானத் திட்டத்தின் (Supplemental Security Income) கீழ் 65 வயது கடந்த முதியவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு குறைந்த அளவு வருமானமாக இருக்க வேண்டும் என்பது நிருணயிக்கப்படுகிறது. அதன்படி 65 வயது கடந்த முதியவர்களின் ஓய்வூதியம் நிருணயிக்கப்பட்ட குறைந்த அளவுத் தொகையை விடக் குறைவாக இருந்தால், அக்குறைவை ஈடு செய்யும் விதத்தில் இத்திட்டத்தின் கீழ் அவர்களுக்குக் கூடுதல் வருமானம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைக் கூட்டரசே நிருவகித்துச் செயற்படுத்துகிறது.

மாநில அரசுகளும் முதியவர்களுக்கு உதவி செய்வதில் தம்மை ஈடுபடுத்திகொள்ளுகின்றன. மாநில அரசுகளுள் 50 விழுக்காடு அரசுகள் 'மெடிகெய்டு' (Madicaid) என்ற திட்டத்தை முதியோர்களுக்காக அமல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் முதியவர்கள் எந்த மருத்துவரையும் அல்லது மருத்துவமனையையும் நாடி மருத்துவம் பெறலாம். மருத்துவச் செலவைச் தொடர்புடைய மாநில அரசுகளே ஏற்றுக்கொண்டு, தொடர்புடைய மருத்துவர்களுக்கு அல்லது மருத்துவமனைகளுக்கு உரிய தொகையை நேரில் செலுத்தி வருகின்றன.

உள்ளாட்சி நிறுவனங்களும் முதியோர் நலப்பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளுகின்றன. அவை கூட்டரசின் நல்வாழ்வு, கல்வி, நன்னலத் துறையைச் சேர்ந்த முதியோர் நல நிருவாகக் குழு என்ற முகமையிடமிருந்து நிதியுதவி பெற்று, நல்வாழ்வு இல்லங்களை நிறுவி, முதியோர்களுக்கு நலம், கல்வி, பொழுதுபோக்கு முதலிய வாய்ப்புகளைச் செய்து கொடுக்கின்றன. அது மட்டுமன்றி, குறைந்த சொத்துவரிச் சலுகை, இலவசச் சட்ட உதவி, குறைந்த கட்டணத்தில் பயணம் செல்லச் சலுகை முதலிய உதவிகளையும் முதியோர்களுக்கு உள்ளாட்சி நிறுவனங்கள் செய்கின்றன. இத்தகைய பணிகளில் மாநில அரசுகளும் ஈடுபடுகின்றன.

**கனடா**: கனடாவில் முதியோர் பாதுகாப்புத் திட்டம் (Old Age Security Programme) என்றொரு திட்டம் செயற்படுகிறது. அத்திட்டத்தின் கீழ் கனடாவில் பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தங்கியிருக்கிற 65 வயது கடந்த முதியவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவர்கள் வேலைக்குப் போய்ச் சம்பாதித்தாலும்கூட அந்நிதியுதவி அவர்களுக்கு உண்டு.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருக்கும் கூடுதல் பாதுகாப்பு வருமானத் திட்டம் போலவே கனடாவிலும் ஒரு திட்டம் செயற்படுகிறது. அதன் பெயர் காப்புறுதி செய்யப்பட்ட வருமானக் கூடுதல் திட்டம் (Guaranteed Income Supplement Programme) என்பதாகும். அத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் போதாமல் இருக்கிற முதியவர்களுக்கும், குறைந்த அளவு வருமானம் உடைய முதியவர்களுக்கும், வருமானமே இல்லாத முதியவர்களுக்கும் குறைந்த அளவு இவ்வளவு வருமானம் இருக்க வேண்டும் என்று நிருணயிக்கப்பட்டு, அந்த அளவுக்கு முதியோர்களுடைய வருமானம் அமையும் வகையில் கூடுதல் நிதியுதவி தரப்படுகிறது. இந்த நிதி உதவித் திட்டத்தை மாநில அரசுகள் செயற்படுத்துகின்றன. ஆயினும் திட்டச் செலவைத் தேசிய அரசும், மாநில அரசுகளும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ளுகின்றன.

**பிரிட்டன்**: பிரிட்டனில் முதியோர்களுக்கு இலவச மருத்துவ வசதி தரப்படுகிறது. முதியவர்கள் எந்த மருத்துவரிடமும் சென்று மருத்துவம் செய்து கொள்ளலாம். அது இலவசமே. பல்சோதனைகளும் இலவசமே. பல் கட்டுவது, மூக்குக் கண்ணாடி போடுவது போன்ற உருப்படிகளுக்கு மட்டுமே கட்டணம் செலுத்த வேண்டும். அக் கட்டணமும் குறைவே.

**பிற நாடுகள்:** நார்வேயில் தேசிய காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. சுவீடனிலும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவர்களுடைய பணிக்காலத்தில் மிகுதியாக வருமானம் கிடைத்த 15 ஆண்டுகளின் மொத்த வருமானத்தின் சராசரியில் 60 விழுக்காட்டுக்கு ஈடாக ஓய்வூதியம் நிருணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. டென்மார்க்கு, நெதர்லாந்து முதலிய நாடுகளிலும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**இந்தியா:** இந்தியாவில் முதியோர்களுடைய நலனுக்காகத் தொண்டு நிறுவனங்களும், அரசும் செயற்படுகின்றன. தொண்டு நிறுவனங்கள் முதியோர் இல்லங்களை நிறுவி அவர்களை அரவணைக்கின்றன. அரசு அவர்களுக்காக நன்னலத்திட்டங்களைத் தீட்டிப் பாதுகாப்பு அளிக்கிறது. அந்த முயற்சிகள் காரணமாக முதியோர்களுக்கு ஓரளவு பாதுகாப்பும், அரவணைப்பும் கிடைக்கின்றன.

**தொண்டு நிறுவனங்களின் பணி:** முதியோர்களுடைய நல வாழ்வுக்கெனப் பல தொண்டு நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. நாடு முழுதும் 150-க்கு மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் இன்று முதியோர் நலத்திற்கெனச் செயற்பட்டு வருகின்றன. அவற்றில் 'தேவைக் கால நண்பன் சங்கம் (The Friend in Need Society) என்ற தொண்டு நிறுவனம் தான் இந்தியாவிலேயே முதன் முதலாக முதியோர்களுடைய நலனுக்கென்று தொடங்கப்பட்ட நிறுவனமாகும். அது கி.பி. 1840 - இல் பெங்களூரில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கி.பி. 1865 -இல் புனேயில் தேவிடு சாசூன் உடல் நலிவினர் புகலிடம்(The David Sasson Infirm Asylum) என்ற முதியோர் புகலிடம் தொடங்கப்பட்டது. பிறகு கல்கத்தாவில் ஏழைகளின் சிறிய சகோதரிகள் (Little Sisters of the Poor) என்ற முதியோர் நலத் தொண்டு நிறுவனம் கி.பி.1882-இல் தொடங்கப்பட்டது. அந்தத் தொண்டு நிறுவனம் சென்னை, பெங்களூர், செகந்தராபாது ஆகிய நகரங்களில் தன் கிளைகளைத் தொடங்கியிருக்கிறது.

அந்தத் தொண்டு நிறுவனங்கள் முதியோர்களுக்கு நல்வாழ்வு இல்லங்களைத் தொடங்கி அவற்றில் அவர்களுக்குத் தங்கும் வசதி செய்து தருகின்றன; உணவு வழங்குகின்றன; உடை தருகின்றன. அது மட்டுமன்றி மருத்துவ உதவியும் நல்குகின்றன. இந்த வசதிகளை அந்த நிறுவனங்கள் மட்டுமன்றி மேலும் பல நிறுவனங்களும் இன்று முதியோர்களுக்குச் செய்து கொடுக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை, குசராத்து மாநிலத்தில் சூரத்தில் செயற்படும் அசக்தாசிரமம், மகாராட்டிராவின் புனேயில் இயங்கும் இராணி மேரி ஊனமுற்ற இந்தியப்படை வீரர்களுக்கான தொழிற் பயிற்சிப் பள்ளி, அதே மாநிலத்தில் அமைந்துள்ள முதலாம் சார்சு அரசரின் நினைவு இல்லச் சங்கம், தில்லியில் இயங்கும் 'கிராண்ட்டு கோவன் நினைவு இல்லச் சங்கம்' உத்தரப் பிரதேச இலக்னோவில் செயற்படும் சேவா சதன், அசாமில் செயற்படும் சிரீமந்தா சங்கர் சங்கம், தமிழ்நாட்டில் இயங்கும் விச்ராந்தி சிவானந்த சரசுவதி சேவாசிரமம் (சென்னை) முதலிய நிறுவனங்கள் ஆகும். அந்த நிறுவனங்கள் முதியோர் இல்லங்களை நிறுவி முதியோர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகிய வசதியும், மருத்துவ வசதியும், தொழிற் கல்வி வசதியும், பொழுதுபோக்கு வசதியும் செய்து கொடுக்கின்றன.

மேற்குறித்த தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே பெரிதும் முனைப்பாகச் செயற்படுகின்றன. இந்தியா முழுவதும் கிளைகளை அமைத்து முதியோர் நலப் பணியில் ஈடுபட்டிருப்பவை 'செசையர் இல்லங்கள்' என்ற அமைப்புகள் ஆகும். இவை விமானப் படைத்தலைவர் இலியோனார்டு செசையர் (Group Captain Leonard Cheshire) என்ற ஆங்கிலேயரால் தொடங்கப்பட்டன. செசையர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். முதலாம் உலகப் போரில் பணியாற்றியவர். போர் முடிவுற்றதும் அவர் முதியோர் நலப் பணியில் தம் கவனத்தைச் செலுத்தினார். 'செசையர் இல்லங்கள்' என்ற பெயரில் முதியோர் நல்வாழ்வு இல்லங்களை நிறுவினார். அவர் இந்தியாவுக்கு 1955 - ஆம் ஆண்டில் வந்தார். அவர் 'செசையர் இல்லங்களை' நாடு முழுவதும் நிறுவினார். அவை இப்பொழுது பம்பாய், புனே, தேராடூன், தில்லி, சாம்செட்பூர், கல்கத்தா, செராம்பூர், காட்பாடி, கோயம்புத்தூர் முதலிய இடங்களில் செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல தொண்டு நிறுவனங்கள் இந்தியாவின் பல பகுதிகளில் முதியோர்களுடைய நல்வாழ்வுக்காக இல்லங்களைத் தொடங்கி நடத்தி வருகின்றன. அவற்றுக்கு மைய, மாநில அரசுகளின் சமூக நல வாரியங்கள் மானியங்கள் கொடுத்து ஊக்குவித்து வருகின்றன.

**அரசின் பணி:** மைய, மாநில அரசுகள் முதியோர்களின் நல்வாழ்வுக்காக முதியோர் நலத் தொண்டு நிறுவனங்களுக்குச் சமூக நல வாரியங்களின் மூலமாக மானியங்கள் வழங்குவது மட்டுமன்றித் தம் பங்குக்கென முதியோர் நலத்திட்டங்களையும் இயற்றிச் செயற்படுத்தி வருகின்றன. முதியோருக்கு ஓய்வூதியம், சத்துணவு, உடை, பயணச் சலுகை முதலியன கொடுக்கின்றன. மைய அரசு 1989-

-ஆம் ஆண்டில் ஆதரவற்ற பெண்களுக்கு இலவசப் புடவை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தியது. அத்திட்டத்தின்கீழ் முதியவர்களே(பெண்கள்)பெரும்பாலும் பயனடைகின்றனர். மேலும் தொடர்வண்டித்துறைகளில் 1989 – ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து, 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் பயணம் செல்ல 500 கி.மீ. மேற்பட்ட பயணத்திற்கு 25 விழுக்காடு கட்டணச் சலுகையை மைய அரசு அளிக்கிறது.

மாநில அரசுகளைப் பொறுத்த அளவில் பல்வேறு முதியோர் நலத் திட்டங்கள் செயற்பாட்டில் இருக்கின்றன. கருநாடக மாநிலத்தில் 60 வயதான முதியவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. அதோடு அரசுப் பேருந்துகளில் பாதிப் பயணக் கட்டணச் சலுகை தரப்படுகிறது. தமிழ்நாட்டிலும் முதியோர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆதரவற்ற முதியவர்களுக்குத் தமிழ்நாடு அரசு மாதந்தோறும் 50 உருபாய் ஓய்வூதியமாக வழங்குகிறது. (1989 ஏப்பிரலுக்கு முன்னர் இத்தொகை 35 உருபாயாக இருந்தது. 1989 ஏப்பிரலிலிருந்து 50 உருபாயாக உயர்த்தப்பட்டுள்ளது). ஆண்டுதோறும் ஏறத்தாழ 20 கோடி உருபாய் செலவு பிடிக்கும் இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 4 இலட்சம் முதியவர்கள் பயனடைகின்றனர். முதியவர்களுக்குச் சத்துணவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இயங்கும் சத்துணவு மையங்களின் மூலமாக முதியவர்களுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்காகத் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 15.1.1983 – இலிருந்து, முதியோர்களும் கொண்டு வரப்பட்டு, அவர்களுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. ஆயினும், ஓய்வூதியம் பெறுகிற முதியவர்களுக்கே சத்துணவு வழங்கப்படுகிறது. நாள்தோறும் மதியவேளையில் சுமார் 103 காசுகள் மதிப்புக்கு 200 கிராம் அரிசியும், 15 கிராம் பருப்பும், 10 கிராம் எண்ணெயும், 50 கிராம் காய்கறிகளும், மசாலாப் பொருட்களும் கொண்ட சத்துணவு வழங்கப்படுகிறது. ஏறத்தாழ 1.98 இலட்சம் முதியவர்கள் 1987-88-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி சத்துணவுப் பயன் அடைகிறார்கள். மேலும், வாரத்தில் இலவசமாக அரைக் கிலோ அரிசி ஓய்வூதியம் பெறுகிற முதியோர்களுக்கு வழங்கப்படுகிறது.

இவ்வாறு இந்தியாவில் முதியோர்களுக்கு அமைப்பு முறையாகப் பல நலத் திட்டங்களும், நல்வாழ்வு இல்லங்களும் தொடங்கப்பட்டு அரவணைப்பும், பாதுகாப்பும் வழங்கப்பட்டு வருகின்றன. முதியோர்களுடைய உடல் நலத்தைப் பேணுவதற்கு என்று சிறப்பான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. முதியோர்களுக்கு வருகிற நோய்களை உடல் நலிவுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு என்றே முதியோர் நலத் துறை (Geriatrics) என்ற பிரிவு அரசு பொது மருத்துவ மனைகளில் இன்று தமிழ்நாடு உட்படப் பல மாநிலங்களில் தொடங்கப்பட்டு இருக்கிறது. முதியோர் சிக்கல்களை ஆராய்வதற்கென்று பல்கலைக்கழகங்களும் முதியோரியல்(Gerontology)என்ற ஆய்வுத் துறையைத் தொடங்கியுள்ளன. திருப்பதியில் உள்ள சிரீ வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் இத்துறை இன்று முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

பல்வேறு நலத் திட்டங்களின் வாயிலாக இன்று முதியோர் நலம் ஓரளவு மேம்பட்டிருக்கிறது. ஆயுட்காலத்தின் அளவு உயர்ந்திருப்பதும், முதியோர்களுடைய இறப்பு எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டிருப்பதும் இதற்குச் சான்றுகள். இந்தியாவில் சராசரி ஆயுட் காலம் 1961-இல் 47.5 ஆண்டுகளாக இருந்தது. இது 1981 – ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 54.17 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. இறப்புக் கட்டுப்பாட்டினால் முதியோர்களுடைய எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகிறது. முதியோர் எண்ணிக்கை 1951 – இல் 1.7 கோடியாக இருந்தது. அந்த எண்ணிக்கை 1961 – இல் 2.2 கோடியாக உயர்ந்தது. அது 1971 – இல் 3.0 கோடியாகவும், 1981 – இல் 4.0 கோடியாகவும் மிகுந்து, 1986-இல் 4.6 கோடி அளவை எட்டியுள்ளது.

முதியோர் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருவது முதியோர் நல மேம்பாட்டைக் குறித்தாலும், அது முதியோர் நலச் சிக்கலின் அளவு எவ்வளவு விரிவடைகிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. மிகுந்து வரும் முதியோர் எண்ணிக்கையினால் முதியோர் நலம் பேணுகிற இல்லங்களும், அரசு முயற்சிகளும் தம்முடைய பணியைச் செம்மையாகச் செய்ய முடியவில்லை. சி.என்.ந.

# பொருளடைவு


அக்கினி புராணம் 287
அக்பர் 35, 329, 569, 789
அகத்தியர் 46
அகத்துறை உருவம் 583
அகநிலை மீட்டுருவாக்கம் 853
அங்காடிக் காலம் 2
அங்காடி வகைகள் 2
அசாதசத்துரு 261
அசோர்சுத் தீவு 202
அட்டப் பிரபந்தம் 350
அண்டர்சன் சட்ட அகராதி 160
அதியமான் 41
அபிதம்ம பிடகம் 293
அபிமன்யு 284
அபினி 187
அபுல்பாசல் 789
அயல்நாட்டுச் செலுத்து நிலை 55
அயற் செலாவணி இருப்பு 113
அரக்கவால் நடனம் 375
அரங்கநாத சுவாமி 484
அரசு ஊழியர் வகைகள் 48
அரம்பன் 299
அரிசுடாட்டில் 52
அருச்சுனன் 283
அருணகிரி நாதர் 467
அலுவலர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
அலெக்சாண்டர், பிரான்சு 475
அளிப்பின் அளவு 2
அறிவாற்றலுடைய இயற்பண்பு - மனவெழுச்சிக் கோட்பாடுகள் 589
ஆங்கிலேய இந்தியாவின் புள்ளிவிவரச் சுருக்கம் 129
ஆத்திரையன் பேராசிரியன் 5
ஆதிதிராவிடருக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
ஆதிபருவம் 282
ஆர்க்காட்டு நவாபு 940
ஆல்போர்ட்டு, சி.டபுள்யூ. 52,578
ஆலன், ஆர்.சிடி. 11
ஆள் - ஆள் அளவுகோல் 674
ஆளுமைச் சிதைவுடன் கூடிய மனச்சிதைவு 580
இசுட்டீவர்டு. சூலியன்,எச். 592
இசைவழிச் சிகிச்சை 585
இடப தேவர் காலம் 705
இடம்பெயருவோருக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
இந்தியத் தண்டனைச் சட்டம் 53
இந்திய நிறுமச் சட்டம் 62
இந்தியப் புள்ளிவிவர நிறுவனம் 130
இந்தியப் பொருளாதார விசாரணைக் குழு 129
இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் 130
இந்தியாவில் பொதுத் துறை 62
இந்தியாவில் மருத்துவச் சமூகவியல் 502
இந்தியாவும் மாநில சுயாட்சியும் 696
இந்திரசித்து 342
இந்திர விழா 381
இந்தோனேசிய மொழிகள் 523
இயங்காநிலைப் பேரியல் பொருளாதாரம் 9
இயங்குநிலைப் பேரியல் பொருளாதாரம் 9
இயல்பான மறதி 549
இயேசுநாதர் 492
இரகுநாத சேதுபதி 308
இரகுநாதராவ் 484
இரண்டாம் உரோம் 27
இரண்டாம் உலகப் போர் 200
இரண்டாம் மராட்டியப் போர் 485
இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 777
இராகுலன் 382
இராசபுத்திரர் 263
இராசராசன், முதலாம் 152
இராசலீலா நடனம் 374
இராமதாசர் 483
இராமலிங்கம் 168
இராமன் 343
இராமானுசர் 351,728
இராவணன் 342
இராவன்னா கோயில் 28
இரிக்கார்டோவின் கோட்பாடு 120
இலக்கணநிலை மயக்கம் 458
இலக்குவன் 342
இலங்கதிலகா 152
இலங்கை மகிந்தர் 300
இலிங்க புராணம் 287
இலிதுவேனியர் 217
இலெய்சம் சாகோய் நடனம் 372
இலெயி அரோபா நடனம் 372
இளம் இத்தாலி 633
இளம்பூரணர் 3
இளைஞர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
ஈழ மண்டல சதகம் 341
உச்சநிலை மனச்சிதைவு நோய் 580
உட்வொர்த்து, ஆர்.எசு. 210
உடல்சார் மானிடவியல் 797
உடனடி மணக்கொடை 886

உண்டியலின் வகைகள் 774
உண்மைச் சராசரி வருமானம் 138
உண்மை நாட்டு வருமானம் 138
உண்மை வருமானம் 112
உத்தமக் கொள்கை மாதிரிகள் 132
உத்தியோக பருவம் 284
உதயகுமரன் 381
உமாயூன் 35
உய்யக் கொண்டார் 348
உரோசரின் தன்மைக் கோட்பாடு 596
உரோசுவெல்ட்டு 208
உலா மடல் 336
உலூசிபசு 105
உள்நாட்டு உண்டியல்கள் 774
உள்நாட்டுக் கடன் 55
உள்நாட்டுக் கடன்களின் மறைமுகச் சுமை 56
உள்நாட்டுக் கடன் மறுப்பு 56
உள்நாட்டுக் கால்வாய்ப் போக்குவரத்து 173
உள்ளடக்கப் பகுப்பாய்வு 963
உள்ளுறையான மனச்சிதைவு நோய் 581
உளச் சோர்வுத் தடை மருந்துகள் 513
உளநிலைப் பகுப்பு ஆய்வு விதிமுறை 547
உளப்பிணி போக்கும் மருந்துகள் 513
உற்பத்தி அளவுக் குறியீட்டெண் 112
உற்பத்திக் கடன் 55
உற்பத்திக் கோட்பாடு 118
உற்பத்தி முறைகள் 1
உற்பத்தியற்ற உள்நாட்டுக் கடன்கள் 56
உற்பத்தியற்ற கடன் 55
உற்பத்தியற்ற வெளிநாட்டுக் கடன்கள் 55
உற்பத்தியாளர்களின் சந்தை 148
உற்பத்தியுள்ள உள்நாட்டுக் கடன்கள் 56
உற்பத்தியுள்ள வெளிநாட்டுக் கடன்கள் 56
உறழ்ச்சி வழக்கு 460
ஊசின் போர்கள் 40
எச்ச வருவாய் 56
எமபுரிக்குகை 298
எமு 35
ஏகநாதர் 483
ஏழு ஆயர்கள் வழக்கு 667
ஐதர் அலி 484
ஐரோப்பியக் கூட்டணி 573
ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு
முன்னேற்றக் கழகம் 115
ஒத்த மந்திரம் 456
ஒத்திவைக்கப்பட்ட மணக்கொடை 886
ஒப்படைக்கப்பட்ட நாடுகள் 5
ஒயிட்டு, எல். டி. 50
ஒலிகளின் தன்மை 227
ஒலிகளின் வகை 227
ஒலி மணிகள் 367
ஒலிமாலை வரைவி 227
ஒலிமாலை வரைவு 227
கசினிமுகமது 419
கஞ்சா 188
கடன் கழிவு நிதி 56
கடன் மறுப்பு 56
கடிகார மணி 369
கடி போலி 296
கடுமையான பைத்தியம் 31
கண்ணகி 381
கம்பிவழிப் பொம்மலாட்டம் 78
கர்த்தர் சோலம் நடனம் 375
கரிகாற் பெருவளத்தான் 99
கருட புராணம் 286
கருப்பு மசூதி 329
கல்வித் திட்ட மதிப்பீடு 396
கலப்புப் பொருளாதார அமைப்பு 109
களம் எழுத்து 915
கன்றுப் பொங்கல் 44
கன்ன பருவம் 284
கன்னிசார்ந்த பைத்தியம் 31
காணும் பொங்கல் 44
காந்தன் 508
காந்தாரி 283
காய சண்டிகை 383
காரணம் சார்ந்த பொருள் முதற் கொள்கை 104
காரல் மார்க்சு கோட்பாடு 120
காராடு, தோமர் மாதிரிகள் 10
காரீயகம் 366
கால்டாரின் பகிர்வுக் கோட்பாடு 120
கிரம்ளின் அரண்மனை 638
கிராபெலின் 30
கிருட்டிணப்ப நாயக்கர், முதலாம் 444
கிருட்டிணப்ப நாயக்கர், இரண்டாம் 444
கிருட்டிணப்ப நாயக்கர், மூன்றாம் 444
கிரேக்க - உரோம முறை மற்போர் 544
கிரேக்க மாசிடோனியா 632
கிழக்கு மங்கோலியர் 317
கிளார்க்கு, காலின் 140
கீன்சுக் கோட்பாடு 120
கீன்சு சான், மேனார்டு 11,60,122
கீன்சு மாதிரியின் சுருக்கம் 8
குடியரசுத் தலைவர் குடியாட்சி முறை 254
குடிலன் 611
குணங்குடியார் 325
குணபத்திரர் 704

குணம்சார்ந்த பொருள் முதல்கொள்கை 104
குப்ளாய்கான் 317,734
குபாகிசி நடனம் 375
கும்பினியார் 940
குமாரகம்பண்ணன் 421
குலாம்காதர் நாவலர் 436
குலாவளையம் 146
குழந்தைப் பருவ மனச்சிதைவு நோய் 581
குழுத் தொடர்பு 249
குறிப்பிட்ட மன்னிப்பு 576
குறியீட்டுத் தொடர்பு 249
குறைந்துசெல் விளைவு விதி 744
கூடற் கோவை 436
கூர்மபுராணம் 33,287
கேசவ தேவர் கோயில் 420
கேப்சுபர்கு 205
கேனான் - பார்டின் மனவெழுச்சிக் கோட்பாடு 589
கொங்கு மண்டல சதகம் 341
கொடும்பாளூர் மணிக்கிராமம் 353
கொல்லி மலையாளி 533
கோகுலம் 421
கோப்பெருஞ் சோழன் 45
கோமேதகம் 364
கௌரவர்கள் 283
சகாங்கீர் 263
சகாதேவன் 284
சங்கநாடு 41
சங்கரர் 727
சங்கிராந்தி 43
சசுடீனியன் 27
சதுரகராதி 46
சந்தனு 282
சந்தேச காவியங்கள் 471
சந்தையின் வகைகள் 148
சந்தையும் வணிகமும் 148
சபாபருவம் 283
சம்புவராயர் 421
சமமான பொருள் முதல் கொள்கை 104
சமி-ஆ-மசூதி 329
சமுதாய மானிடவியல் 799
சமூக அமைப்பும் மருந்துவமும் 504
சருவதேச சங்கம் 5
சல்லிய பருவம் 284
சனநாதமங்கலம் 152
சாசகான் 329
சாதுவன் 383
சாமிநாத கவிராயர் 46
சாலைப் போக்குவரத்து 171
சாளுவன் குப்பம் 717
சிக்கந்தர் லோடி 419
சிக்கற்ற மனச்சிதைவு நோய் 581
சிசுமாண்டி 11
சித்திர மடல் 336
சிரீதத்துவ நிதி 33
சிவபுராணம் 33, 286
சிறிய திருமடல் 336
சினசேனாச்சாரியர் 704
சீவகன் 610
சுக்கிராச்சாரியார் 280
சுதமதி 383
சுந்தரம்பிள்ளை 610
சுபத்திரை 283
சுமித்து, ஆதம் 60, 121, 399
சுவாயம்புவ மனு 598
சுற்றுச் சூழலின் அறுதியிடும் தன்மை 592
சுற்றுச்சூழலும் மனப்போக்கும் 584
சூரசேனதேசம் 417
சூலு மக்கள் 503
சூழ்நிலையும் நலவாழ்வும் 503
சூழலியல் 592
சூழலியல் மக்கள்தொகை 592
செங்கிசுகான் 316
செசுடாலின் மறத்தல் விதிமுறை 547
செந்தமிழ் 443
செய்தித்தாள் வழித் தொடர்பு 250
செயராம் சுவாமி 484
செர்சா 35
செல்வத்தின் சுழல் ஓட்டம் 12
செவ்வந்திக்கல் 366
செவ்வைச்சூடுவார் 281
சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை 442
சேம்சு-இலாங்சின் மனவெழுச்சிக் கோட்பாடு 589
சேம்சு, வில்லியம் 196
சேரமண்டல சதகம் 341
சேரமான் கணைக்கால் இரும்பொறை 85
சேரமான் கோக்கோதை 85
சைமன், எர்பட்டு 50
சொக்கநாதன், முதலாம் 444
சொக்கநாதன், இரண்டாம் 444
சொத்துவரி 479
சொல்நிலை மயக்கம் 459
சோழமண்டல சதகம் 341
ஞானேசுவரர் 483
தக்காணப் போர் 263
தகுதிகாட்டுச் சடங்கு 147
தமிழ்நாட்டில் முட்டை உற்பத்தி 909
தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் 909
தமிழகப் பொம்மலாட்டம் 78

தர்கைம், எமிலி 456
தர்சகா 262
தர்சுட்டன் மனப்போக்கு அட்டவணை 584
தர்சுட்டன் வினாத் தொகுதி முறை 584
தரச்சின்னங்கள் 403
தரச்சின்னங்களை நிறுவும் முறை 404
தன்னியக்க முதலீடு 974
தனநந்தன் 262
தனியார் முதலீடு 974
தனியாள் வருமானம் 112
தனியுடைமைப் பொருளாதார அமைப்பு 108
தாகௌசபா நடனம் 376
தாங்ககோய் நடனம் 376
தால்சுடாய், இலியோ 196
திட்ட முதலீடு 974
திப்பு சுல்தான் 311
திரிபுணர்வு அமைந்த மனச்சிதைவு 580
திருக்குடந்தை 288
திருதராட்டிரன் 282
திருமலை நாயக்கர் 425,444
திருமலை நாயக்கர் மகால் 425
திருவிதாங்கூர்ப் போர் 308
திரைப்படம் வழித் தொடர்பு 251
திரோபிரியாண்டுத் தீவினர் 146
திரௌபதி 283
தில்லி பாதுசா 419
தில்லையம்பூர்ச் சந்திரசேகரக் கவிராயர் 168
திவம்கா கோயில் 153
தீய மந்திரம் 457
தீர்த்தங்கரர்கள் 705
துக்காராம் 483
துணைநிலை வழக்கு 460
துணைப் பாடச் செயல்கள் 401
துரியோதனன் 283
துரோண பருவம் 284
துறவி மகாநாமன் 279
தூண்டப்பட்ட முதலீடு 974
தூண்டுதல் முறை 63
தூய மந்திரம் 457
தெமல மகா சேயா 152
தெமாகிரிடசு 105
தெல்லசு, ஆர்.எச். 52
தென் பசிபிக்கு நாடுகளின் பொறுப்பாண்மைக் குழு 114
தேக்சந்து 160
தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு 130
தேசிய வருவாய்ப் பகிர்வு 744
தேவை நெகிழ்ச்சி 743
தைத்தியர் 299
தொட்டில் சமத்துவம் 479
தொடர்நிலை மயக்கம் 458
தொடர் வண்டிப் போக்குவரத்து 172
தொண்டியார் 325
தொண்டை மண்டல சதகம் 341
தொத்து மந்திரம் 456
தொல்காப்பியர் 3
தொல்லியல்சார் மானிடவியல் 798
தொலைக்காட்சி வழித் தொடர்பு 251
தொழில் செய்வோருக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
தொழில்துறைப் புள்ளி விவரங்கள் 131
தொழில் புள்ளிவிவரச் சட்டம் 129
தொழில்முறை மற்போர் 544
தோற்பாவை நிழற்கூத்து 78
நச்சினார்க்கினியர் 3
நடன அசைவுச் சிகிச்சை 586
நடுஉறை உருவம் 583
நந்த மண்டல சதகம் 341
நவமணி 365
நாட்டார் மருத்துவம் 504
நாட்டு அணுகுமுறை 128
நாட்டு உண்டியல்கள் 774
நாட்டு வருவாய்க் குழு 130
நாட்டு வருவாய்ப் புள்ளிவிவரங்கள் 131
நாதமுனி 348
நாமதீப நிகண்டு 46
நாமதேவர் 483
நாரத புராணம் 286
நாராயணன் 611
நிகரிலிசோழமண்டலம் 41
நிசங்க இலாட மண்டபம் 152
நிதியற்ற கடன் 55
நிதியுள்ள கடன் 55
நிபந்தனையற்ற மன்னிப்பு 576
நிம்பைச் சங்கர நாராயணன் 436
நிருவாக நோக்கு 50
நிலாக்கல் 366
நிறைகுறைப் போட்டி 177
நிறைவுப் போட்டி 177
நீர் மின்சாரம் 840
நீலம் 362
நுகர்வுக் கோட்பாடு 117
நுகர்வோர் விலைக் குறியீட்டெண் 114
நூர்சகான் 263
நேமிநாதர் 5
நேர்காணல் 958
நேரடிப் பரிமாற்றம் 145
நேரடியாகத் தரசின்னம் வழங்கும் முறை 403
பகிர்வுக் கோட்பாடு 118

பகுதி மயங்கொலியன் 460
பங்கி 188
பச்சை மலையாளி 533
பசவர் 339
படிவு மனச்சிதைவு நோய் 581
பண்டமாற்றம் 145
பண்டிதர் மயில்வாகனன் 467
பண்பாட்டுச் சூழலியல் 592
பண்பாட்டு நெகிழ்வுத் திறன் 67
பண்பாட்டு மானிடவியல் 799
பண்பாட்டு வேறுபாடுகளும் மருத்துவமும் 504
பண அளிப்பு 113
பணமதிப்புக் கோட்பாடு 119
பணியாளர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
பத்திரங்கள் சேர்த்த உண்டியல்கள் 774
பத்தேபூர் சிக்ரி 329
பத்ம புராணம் 286
பதிலீட்டு விதி 744
பதுங்கு குழிப் போர் முறை 198
பரத நாட்டியத்தில் மயில் நடனம் 462
பராக்கிரமபாகு, முதலாம் 152
பரிமாற்ற முறைகள் 145
பல்கேரிய மாசிடோனியா 633
பல்துறை மாதிரி 132
பவளம் 363
பவிசிய புராணம் 286
பவேரியாவின் முதலாம் மாக்சிமிலியன் 621
பழங்குடியினருக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்கள் 55
பன்னாட்டு அணுகுமுறை 128
பன்னாட்டு வாணிகக் கோட்பாடு 120
பன்னாட்டு வாணிகம் 139
பாகவத புராணம் 286
பாகியான் 419
பாசி மணிகள் 367
பாசிராவ் 485
பாசு எசுடன் சோரோ 157
பாட்ரியார்க்கு 29
பாண்டவர்கள் 283
பாண்டித்துரைத் தேவர் 442
பாண்டி மண்டல சதகம் 341
பாண்டியன் புத்தக சாலை 443
பாபர் 35
பாம்பாட்டிச் சித்தர் 507
பாரிசு மாநாட்டு அறிக்கை 742
பால் எர்லிட்சு 512
பாவைக்கூத்து 76
பிசர் 11
பிம்பிசாரர் 261
பிரகன்சா மரபு 205
பிரதாப் சிங் 789
பிராண்டு, இல்டே 140
பிராய்டு, சிக்மண்டு 577
பிருந்தாவனம் 421
பிரும்ம புராணம் 286
பிரும்ம வைவர்த்த புராணம் 286
பிரும்மாண்ட புராணம் 286
பிறழ்வு மறதி 550
பின் இயக்கத் தடை 550
பின்தங்கிய பொருளாதாரத்தில் மறைமுக வரியின்பங்கு 566
புகழ்க்கோயில் 212
புங்சோலம் நடனம் 375
புஞ்சால் தீவு 202
புட்பராகம் 363
புதியகாலப் போர்க் கருவிகள் 200
புதுமணிகள் 366
புருடோத்தமன் 611
புலத்திபுரம் 152
புலன் சார்ந்த தொடர்பு 249
புறத்துறை உருவம் 583
புறத்தெறிவு உத்திகள் 962
புறநிலை மீட்டுருவாக்கம் 853
புறப்பாடச் செயல்கள் 401
புனித சோபியா தேவாலயம் 28
பூதத்தாழ்வார் 86, 87
பெண் அத்யட்ச - மகாமாத்திரர்கள் 289
பெண்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி 557
பெண்டிர் எழுத்தறிவு வளர்ச்சி 269
பெண்டிர் கல்வி எழுத்தறிவு நிலை 269
பெர்டினாண்டு மாக்சிமிலியன் சோசப் 622
பெரிய திருமடல் 336
பெருமளவு உற்பத்தி 1
பேச்சொலிப் பண்பு 227
பேயாழ்வார் 86, 87
**பேரளவு உற்பத்தியில் மிகை ஆற்றல்** 1
**பேராசிரியர்** 3
**பேராண்மை உரிமை நாடுகள்** 5
**பேராலவாயர்** 6
பேராளர் மக்களாட்சி 254
**பேரிங்குக்கடல்** 6
**பேரி சாத்தனார்** 7
பேரியல் பகிர்வுக் கோட்பாடு 119
**பேரியல் பொருளாதார மாதிரிகள்** 8
பேரியல் பொருளாதார வகைகள் 9
**பேரியல் பொருளியல்** 11
பேரியா இலாவரன்சி பாவ்லோவிச்சு 12
**பேரூர்** 13

பேரூர்ப் புராணம் 15
பேரெயின் முறுவலார் 16
பேரோ தீவு 17
பேலூர் 18
பேறுகால உளப்பிணி 19
பேறுகாலச் சலுகைகள் 20
பேறுகாலச் சலுகைகள் சட்டம் 21
பேறு முன்கால இன்னல்கள் 22
பை 25
பைக்கால் ஏரி 25
பைசாண்டியப் பேரரசு 26
பைத்தியம் 30
பையம்பள்ளி 32
பைரவர் 32
பைரன் பிரபு 34
பைராம்கான் 35
பொ 37
பொகாரோ 38
பொகீமியா 39
பொகுட்டெழினி 41
பொங்கல் விழா 41
பொத்தப்பி நாடு 44
பொத்தியார் 45
பொதிகை நிகண்டு 45
பொதிகை முனிவர் 46
பொதிய மலை 47
பொது அரசு ஊழியர் 47
பொது ஆட்சி இயல் 49
பொது ஆட்சித் துறை 49
பொது ஆட்சித் துறைக் கோட்பாடுகள் 50
பொது ஆவணங்கள் 50
பொது உளவியல் 51
பொது ஊழியர் 53
பொதுக் கடன் 54,113
பொதுக் கடன் சுமை 55
பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்துதல் 56
பொதுக் கயத்துக் கீரந்தையார் 57
பொதுக் கருவளச் செறிவு விகிதம் 57
பொதுச் செலவு 113
பொதுத் துறைகள் 59
பொதுத்துறை முதலீடு 974
பொதுத் துறையின் வளர்ச்சி 62
பொதுத் துறை வளர்ச்சிக்கான காரணங்கள் 61
பொதுப் பயன்பாடுகள் 63
பொதும்பில் 65
பொதும்பில்கிழார் 65
பொதும்பிற் புல்லாளங் கண்ணியார் 65
பொதுமக்கள் கருத்தின் உருவாக்கம் 66
பொதுமக்கள் கருத்து 66
பொதுமக்கள் தொடர்பு 68
பொது மன்னிப்பு 70, 576
பொதுவுடைமை 70
பொதுவுடைமைக் கட்சி 71
பொதுவுடைமைக் கொள்கை அறிவிப்பு 736
பொதுவுடைமைப் பொருளாதாரம் 108
பொப்பண்ண காங்கெயர்கோன் 74
பொம்மலாட்டம் 74
பொய்க் கணக்குப் புனைதல் 80
பொய்க்கால் குதிரை ஆட்டம் 81
பொய்கையார் 85
பொய்கையாழ்வார் 86
பொய் பேசுதல் 87
பொய்யடிமையில்லாத புலவர் 89
பொய்யாமொழிப் புலவர் 90
பொருட்டொகை நிகண்டு 91
பொருண்மை 92
பொருண்மையியல் 92
பொருத்தப்பாடு 94
பொருந்தில் இளங்கீரனார் 98
பொருநராற்றுப் படை 99
பொருள் இணைத்தறி சோதனை 100
பொருள் ஏற்புடைமை 101
பொருள்சார் மானிடவியற் கோட்பாடுகள் 148
பொருள் நிலைப்பு 103
பொருள்மயக்கம் 104
பொருள்முதல் கொள்கை 104
பொருளாதார அமைப்புகள் 108
பொருளாதார அளவையியல் 109
பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென்பசிபிக்கு நிறுவனம் 114
பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக் கழகம் 115
பொருளாதாரக் கோட்பாடுகள் 116
பொருளாதாரச் சமூகவியல் 121
பொருளாதார சமுதாய முன்னேற்ற அரபு வங்கி 123
பொருளாதாரத் திட்டமிடல் 123
பொருளாதாரத் திட்டமிடல் வகைகள் 124
பொருளாதார நலன் 125
பொருளாதாரப் பின்னடைவு 125
பொருளாதாரப் புவியியல் 127
பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் 129
பொருளாதார மீட்சி 55
பொருளாதார முன்கணிப்பு 133
பொருளாதார முன்னேற்றத்தில் பங்குபெறும் காரணிகள் 136
பொருளாதார முன்னேற்றத்தில் பொருள்சாராக் காரணிகள் 135

பொருளாதார முன்னேற்றத்தின் தடைகள் 138
பொருளாதார முன்னேற்றம் 137
பொருளாதார முன்னேற்றமும் குடும்ப அமைப்பும் 135
பொருளாதார வளர்ச்சி 140
பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு 120
பொருளாதார வளர்ச்சி வரலாறு 151
பொருளாதார வீக்கத்தைத் தவிர்க்கும் வழிகள் 142
பொருளாதார வீக்கம் 141
பொருளியல் கருத்துகளின் வளர்ச்சி 143
பொருளியல்சார் மானிடவியல் 144
பொருளியல் வரலாற்றுக் கருத்துகள் 149
பொருளியல் வரலாறு 150
பொலநருவா 152
பொலிவியா 153
பொவாடா 158
பொற்கட்டித் திட்டம் 164
பொற்கைப் பாண்டியன் 159
பொற்றெக்காட்டு. எசு.கே. 159
பொறுப்பிணைக் கொடை 160
பொறுப்பு நிலை 160
பொறுப்புரிமை அமைப்பு 161
பொறுப்புறுதியின் மீது வங்கிக் கடன் 161
பொறையாற்று கிழான் 163
பொன் திட்டத்தின் கூறுகள் 164
பொன்திட்ட வகைகள் 164
பொன் பரிமாற்றத் திட்டம் 163
பொன் மணியார் 166
பொன்முடியார் 166
பொன் வண்ணத்தந்தாதி 166
பொன்னம்பலம் பிள்ளை, ந.ச.ச. 167
பொன்னாகனார் 167
பொன்னுச்சாமி தேவர் 167
போ 169
போ ஆறு 169
போக்குவரத்து 170
போக்குவரத்தும் பொருளாதாரமும் 175
போகி 43
போசர் 176
போசர் (நேபாளம்) 176
போசன் 177
போட்கல் விகாரை 152
போட்டி 177
போட்டியப் பழங்குடி 179
போட்டி விலைக் கோட்பாடு 181
போடின், சீன் 183
போண்டாப் பழங்குடி 184
போத்தனூர் 185
போத்தா, பர்ல் எமில் 185
போதிகை 185
போதி மரம் 186
போதை மருந்துகள் 187
போதை மருந்துப் பழக்கம் 186
போந்தைப் பசலையார் 188
போப் அலெக்சாந்தர் 189
போப்பு, சி.யு. 190
போபால் 193
போயர் போர்கள் 193
போர் 194
போர்க் கருவிகள் 199
போர்க் காலக் கடன்கள் 55
போர்க்குற்றங்கள் 196
போர்க் கைதிகள் 198
போர்ச்சுகல் 201
போர்ச்சுகீசிய கினி 206
போர்ச்சுகீசிய மொழி 207
போர்ட்சுமவுத்து உடன்படிக்கை 208
போர் நரம்புப்பிணி 209
போர்பந்தர் 212
போர்பந்தர் சிற்றரசு 212
போர்வைக் கோப்பெருநற்கிள்ளி 212
போர்ன் மத் 213
போர்னியோ 213
போரசு 214
போராபுதூர் 214
போருக்குப்பின் பொன் பரிமாற்றத் திட்டம் 165
போல்சுவிக்குக் கட்சி 215,71
போலந்து 216
போலிவர், சைமன் 218
போலி வாரம் 745
போவாசு, பிரான்சு 219
போளுவாம்பட்டி 221
போனசு அயர்சு 222
போனபார்ட்டு 223
பௌ 224
பௌச்சர் டி பெர்த்சு 224
பௌதிக ஒலியியல் 224
பௌரவ்ய வியவகாரிகள் 289
ம 228
மக் ஆர்தர் 229
மக்ஐவர், இராபர்ட் மாரிசன் 230
மக்கள் அழிப்பு 232
மக்கள் உரிமைகள் நாள் 233
மக்கள் எழுத்தறிவு நிலை 270
மக்கள் தொகை 233
மக்கள் தொகைஇயல் 234
மக்கள் தொகை இறக்கம் 236

| | |
|---|---|
| மக்கள் தொகை உயர்வளர்ச்சி வீதம் | 236 |
| மக்கள் தொகைக் கட்டுப்பாடு | 237 |
| மக்கள் தொகைக் கணிப்பும் திட்டமிடலும் | 237 |
| மக்கள் தொகைக் கொள்கை | 238 |
| மக்கள் தொகைக் கோட்பாடுகள் | 240 |
| மக்கள் தொகைச் செறிவு | 243 |
| *மக்கள் தொகைச் செறிவைப் பாதிக்கும் காரணி* | 244 |
| மக்கள் தொகைப் பதிவேடு | 244 |
| *மக்கள் தொகைப் புள்ளிவிவரங்கள்* | 131 |
| மக்கள் தொகைப் புறத்தோற்றம் | 245 |
| மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கை | 246 |
| மக்கள் தொகைப் பெருக்கம் | 247 |
| மக்கள் தொகை மாற்றம் | 248 |
| மக்கள் தொடர்பு சாதனம் | 248 |
| மக்கள் முன்னணி | 252 |
| மக்களாட்சி | 253 |
| மக்களாட்சிச் சமநிலைக் கொள்கை | 254 |
| *மக்களாட்சியின் வரலாறு* | 253 |
| மக்கன்சி, சர் அலெக்சாந்தர் | 255 |
| மக்காசர் | 256 |
| *மக்காசர் கடற்கால்* | 256 |
| மக்கார்த்தி, சோசபு | 256 |
| மக்காரா | 257 |
| மக்டனால்டு, சேம்சு இராம்சே | 257 |
| மக்டனால், மலைத் தொடர் | 258 |
| மக்டுகல், வில்லியம் | 259 |
| மக்மாகன்கோடு | 260 |
| மகதம் | 261 |
| மகதி ஏரி | 263 |
| மகபத்கான் | 263 |
| மகம் | 264 |
| மகர் | 265 |
| மகரம் | 265 |
| மகரயாழ் | 265 |
| மகர ரேகை | 265 |
| மகலநோபிசு, பிரசந்தா சந்திரா | 266 |
| *மகவேற்பளிக்கத் தகுதியுடையவர்கள்* | 268 |
| மகவேற்பு | 267 |
| *மகவேற்பு நடைமுறை* | 268 |
| *மகவேற்புப் பெறத் தகுதிகள்* | 267 |
| மகளிர் விடுதலை இயக்கம் | 269 |
| மகாகாவியம் | 272 |
| மகா சங்கிகா | 273 |
| மகாசதிக்கல் | 274 |
| மகாசாசனம் | 274 |
| மகாசிவராத்திரி | 274 |
| மகாத்மா காந்தி | 274 |
| மகாதேசி சிந்தியா | 274 |
| மகாதேவமாலை | 275 |
| மகாதேவன், டி.எம்.பி. | 276 |
| மகாநதி | 278 |
| மகாபதும நந்தன் | 262 |
| மகாபரி நிருவாண சூத்திரம் | 279 |
| மகாபலி | 280 |
| மகாபலேசுவர் | 281 |
| மகாபாகவதம் | 281 |
| மகாபாரதம் | 282 |
| மகா பீட்டர் | 285 |
| மகாபுராணம் | 285 |
| மகா போசர்கள் | 287 |
| மகா மகம் | 288 |
| மகாமாத்திரர் | 289 |
| மகாயானம் | 290 |
| மகாராசாத் துறவு | 290 |
| மகாராட்டிரம் | 291 |
| மகாலிங்கம், டி.வி. | 291 |
| மகாலிங்கையர், மழவை | 292 |
| மகாவக்கா | 293 |
| மகா வாக்கியங்கள் | 294 |
| மகாவீரர் | 295 |
| மகாவீரர் பிரசாத்து துவி வேதி | 296 |
| மகா வைத்தியநாதையர் | 297 |
| மகிசாசுரமர்த்தினி | 297 |
| மகிசாசுரன் | 299 |
| மகிந்தர் | 300 |
| *மகிந்தர், முதலாம்* | 300 |
| *மகிந்தர், இரண்டாம்* | 300 |
| *மகிந்தர், நான்காம்* | 300 |
| *மகிந்தர், ஐந்தாம்* | 300 |
| *மகிந்தர், ஆறாம்* | 301 |
| மகில்மோசியப் பண்பாடு | 301 |
| மகுடி | 303 |
| மகேசுவர் | 303, 305 |
| மகேந்திர பாலா | 306 |
| *மகேந்திரவர்மன்* | 307 |
| மகேந்திரவாடி | 306 |
| மகோதை | 308 |
| மங்கம்மாள் | 308 |
| மங்கலவள்ளை | 309 |
| மங்கள்பாண்டே | 310 |
| மங்களூர் | 311 |
| மங்கோபார்க்கு | 312 |
| மங்கோலியக் குடியரசு | 312 |
| மங்கோலிய மொழி | 313 |
| மங்கோலியர் | 316 |
| மங்கையர்க்கரசியார் | 318 |
| மச்ச புராணம் | 318 |

**மச்ச முனி** 319
**மச்சேந்திரநாதர்** 320
**மசாய்ப் பழங்குடி** 321
**மசாவா** 324
**மசுக்காட்டு** 324
**மசுதான் சாகிபு** 324
**மசுதி வேங்கடேச ஐயங்கார்** 325
**மசும்தார், தீரேந்திரநாத்து** 326
**மசுலின்** 327
**மசூதி** 327
**மசூலிப்பட்டணம்** 329
**மசெண்டா** 330
**மசோதா** 330
*மசோதாக்களின் வகைகள்* 330
**மஞ்சட் கடல்** 332
**மஞ்சரிப்பா** 332
*மஞ்சிரா சோலம் நடனம்* 375
**மஞ்சி விரட்டு** 332, 44
**மஞ்சுகோ** 332
**மஞ்சூரிய நெருக்கடி** 332
**மஞ்சூரியா** 333
**மட்டக்களப்பு** 334
**மடகாசுகர்** 334
**மடங்கள்** 336
**மடல்** 336
**மடல் பாடிய மாதங்கீரனார்** 337
**மடலேறுதல்** 337
**மடியரா** 339
*மடியரா ஆறு* 339
**மடிவால மாச்சையர்** 339
**மண் சிற்பங்கள்** 340
*மண்டல அணுகுமுறை* 128
**மண்டல ஆய்வு** 340
**மண்டல சதகங்கள்** 341
**மண்டல புருடர்** 341
**மண்டையளவைமானி** 342
**மண்டோதரி** 342
**மண்ணடுக்காய்வு** 343
**மண்ணரிப்பு** 345
**மண்மேடு** 347
**மணக்கால் நம்பி** 348
**மணக்குடவர்** 349
*மணக்கொடை வகைகள்* 885
**மணவாளதாசர்** 349
**மணவாள மாமுனிகள்** 351
**மணி ஐயர், பாலக்காடு** 352
**மணி ஐயர், மதுரை** 352
**மணிக்கிராமம்** 352
**மணிகள்** 354
**மணிப் பிரவாள நடை** 370
**மணிப்புரி நடனம்** 371
**மணிப்புரி மொழி** 377
**மணிப்பூர்** 378
*மணிபல்லவத் தீவு* 382
**மணி பல்லவம்** 379
**மணி முத்தாறு** 380
*மணிமுத்தாறு நீர்த்தேக்கம்* 380
**மணிமேகலா தெய்வம்** 380
**மணிமேகலை** 381
**மணிலா உடன்படிக்கை** 385
*மத்சய புராணம்* 287
**மத்த விலாசப் பிரகசனம்** 385
**மத்தி** 386
**மத்திய அரசுத் தலைமை வழக்கறிஞர்** 386
**மத்திய ஆசியா** 387
**மத்திய கிழக்கு** 387
**மத்திய தரைக் கடல்** 389
**மத்திய பிரதேசம்** 390
**மத்துவாச்சாரியார்** 391
**மதங்க சூளாமணி** 392
**மதன்பாய் தேசாய்** 393
**மதன்லால் திங்ரா** 393
**மதன பள்ளி** 394
**மதிப்பின் கோட்பாடு** 394
*மதிப்பீட்டின் கருத்து* 398
**மதிப்பீடு** 396
*மதிப்பீடு அளவிடுதலின் வகைகள்* 674
**மதிப்பு** 398
*மதிப்புக் கோட்பாடு* 118, 744
**மதிப்புணர்வுக்கல்வி** 400
*மதிப்புணர்வுக் கல்விப் பாடத் திட்டம்* 400
*மதிப்பெண்ணைத் தரச்சின்னமாக்கும் முறை* 403
**மதிப்பெண் வழங்கும் முறைகள்** 402
*மதிப்பெண் வழங்கும் முறையில் குறைபாடுகள்* 403
**மதிப்பேற்ற வரி** 405
**மதிய உணவுத் திட்டம்** 405
**மதிவாணனார்** 408
**மதிவாணனார் நாடகத் தமிழ்** 408
**மதீனா** 409
**மதுசூதன தத்தர் மைக்கேல்** 412
**மதுப்பழக்கம்** 413
**மதுபன் கல்வெட்டு** 416
**மதுர கவியாழ்வார்** 416
**மதுரா** 417
**மதுரா விசயம்** 421
**மதுரை** 422
**மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்** 426
**மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்** 426
**மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனார்** 426

மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார் 427
மதுரை இளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார் 427
மதுரை ஈழத்துப்பூதன் தேவனார் 427
மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார் 427
மதுரை எழுத்தாளனார் 428
மதுரை ஓலைக் கடைக் கண்ணம்
புகுந்தாராயத்தனார் 428
மதுரை ஓலைக் கடையத்தார் நல்வெள்ளியார் 429
மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார் 429
மதுரைக் கண்டர தத்தனார் 429
மதுரைக் கண்ணத்தனார் 429
மதுரைக் கண்ணனார் 430
மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் 430
மதுரைக் கலம்பகம் 431
மதுரைக் கவுணியன் பூதத்தனார் 432
மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் 432
மதுரைக் காஞ்சி 433
மதுரைக் காஞ்சிப் புலவர் 434
மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார் 434
மதுரைக் காருலியங் கூத்தனார் 435
மதுரைக் கூத்தனார் 435
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் 435
மதுரைக் கொல்லன் புல்லன் 436
மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் 436
மதுரைக் கோவை 436
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 437
மதுரைச் சிவப்பிரகாசர் 438
மதுரைச் சுள்ளம் போதனார் 439
மதுரைச் செங்கண்ணனார் 440
மதுரை ஞானப் பிரகாசர் 440
மதுரைத் தத்தங்கண்ணனார் 440
மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் 441
மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார் 441
மதுரைத் தமிழ்ச் சங்கம் 441
மதுரைத் தமிழ் நாகனார் 443
மதுரைத் தமிழக் கூத்தனார் 443
மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார் 444
மதுரை நாயக்கர்கள் 444
மதுரைப் படைமங்க மன்னியார் 446
மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனார்
சொகுத்தனார் 446
மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார் 446
மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார் 446
மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார் 447
மதுரைப் பாலாசிரியனார் 447
மதுரைப் புல்லங் கண்ணனார் 447
மதுரைப் பூதனிள நாகனார் 447
மதுரைப் பூவண்டல் நாகன் வேட்டனார் 447
மதுரைப் பெருங் கொல்லனார் 447
மதுரைப் பெரு மருதனார் 448
மதுரைப் பெருமருதிள நாகனார் 448
மதுரைப் பேராலவாயர் 448
மதுரைப் பொன்கொல்லன் வெண்ணாகனார் 448
மதுரைப் போத்தனார் 449
மதுரை மருதங்கிழார் மகனார் இளம்போத்தனார் 449
மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் 449
மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் 450
மதுரை மாதெய்வம் 450
மதுரை மாவட்டம் 450
மதுரையமக அந்தாதி 451
மதுரை வீரன் 451
மதுரை வேளாசான் 452
மதுரை வேளாதத்தர் 452
மதுவிலக்கு 453
*மதுவிலக்கு விசாரணைக் குழு* 453
*மதுவெறிக்கான காரணங்கள்* 414
*மதுவெறியின் விளைவுகள்* 415
*மந்திரத்தின் வகைகள்* 457
மந்திரம் 454
மந்திரி சபை 457
மயக்கம் 457
மயங்கொலியன் 459
மயன் 461
*மயில் கூடு* 463
மயில் நடனம் 462
*மயில் நடன வரலாறு* 462
மயில் ராவணன் 465
மயில்வாகனப் புலவர் 466
மயில்வாகனப் புலவர், க. 466
மயில் விருத்தம் 467
மயிலம் 468
மயிலாப்பூர் 468
மயிலேறும் பெருமாள் பிளளை 469
மயிலை நாதர் 469
மயூர கிரிக்கோவை 471
மயூர சந்தேசம் 471
மயேச்சுரர் 472
மயேச்சுரர் யாப்பு 472
மயோரிகள் 472
மர்க்காரா 475
மர்சியா 474
*மர்பி,சி.* 52
மர்ரே 475
*மர்ரே, எச்.ஏ.* 52
*மரகதம்* 361
மரணம் விளைவிக்கும் குற்றம் 476
மரண வரி 478
மரண வாக்குமூலம் 480

*மரப்பாவைக் கூத்து* 78
**மரபுத் தொடர் உருவாக்கம்** 481
**மராட்டியத் துறவிகள்** 482
**மராட்டியப் போர்கள்** 484
**மராத்தான்** 486
**மராத்தி** 486
*மராத்தியின் கிளைமொழிகள்* 488
**மரியநாயகம் பிள்ளை** 491
**மரியம்மை** 491
**மரியா தெரசா** 493
**மரியானாசுத் தீவுகள்** 493
**மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்** 494
**மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார்** 494
**மருங்கூர்ப் பாகைச் சாத்தன் பூதனார்** 495
**மருட்கை** 495
**மருட்பா** 496
**மருத்துவச் சட்டவியல்** 497
**மருத்துவச் சமூகவியல்** 498
*மருத்துவச் சூழலியல்* 503
**மருத்துவ மானிடவியல்** 498
**மருத்துவன் தாமோதரனார்** 505
**மருத்துவன் நல்லச்சுதனார்** 505
**மருதம்பாடிய இளங்கடுங்கோ** 505
**மருதமலை** 505
**மருதனிள நாகனார்** 507
**மருதி** 508
**மருதுபாண்டியர்** 509
**மருந்துகள் சட்டம்** 510
**மருந்து நூல்** 511
**மருந்துவழி உளநோய் மருத்துவம்** 512
**மருமக்கள் தாயம்** 514
**மருமக்கள் வழி மான்மியம்** 515
**மருள் நீக்கியார்** 516
**மல்லப்பாடி** 516
**மல்லப்பாடி துர்க்கம்** 516
**மல்லர் இனமக்கள்** 517
**மல்லிகிழான் காரியாதி** 517
**மல்லிநாதர் புராணம்** 518
**மலகாசிக் குடியரசு** 518
**மலபரிபாகம்** 518
**மலமலசர்** 518
**மலாக்கா** 520
**மலாடு** 520
**மலாய் – இந்தோனேசிய மொழிகள்** 521
*மலாய் கிளைமொழி* 523
*மலாய் மொழி* 522
**மலிவுப் பணக் கொள்கை** 524
**மலேசியா** 524
**மலேயாக் கூட்டாட்சி** 525
**மலை ஏற்றம்** 527
**மலைக் குறவன்** 528
**மலைக் கோவிலூர்** 529
**மலைப் பண்டாரம்** 529
**மலைப் பாலைவனத் தீவு** 530
**மலைபடுகடாம்** 530
**மலையமான்** 531
**மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன்** 531
**மலையமான் திருமுடிக்காரி** 531
**மலையமான் மக்கள்** 531
**மலையரையன்** 532
**மலையனார்** 533
**மலையாளம்** 533
**மலையாளிப் பழங்குடி** 533
**மலைரெட்டி** 536
**மலைவேடன்** 538
**மழநாடு** 539
*மழவ சதகம்* 341
**மழவர்** 540
**மள்ளனார்** 540
**மற்போர்** 541
*மறத்தல் கொள்கைகள்* 546
*மறத்தல் விளைகோடு* 546
**மறத்தலும் கற்றலும்** 545
**மறதி** 547
*மறதிக்குக் காரணங்கள்* 548
**மறதிக் கோட்பாடுகள்** 549
**மறதி நோய்** 551
**மறு ஆய்வு** 552
**மறுகடன்** 553
**மறுகால் தலை** 554
**மறுத்தல்** 554
**மறுதரப்பினர்** 555
**மறுநிகழ்வுக் கல்வி** 556
*மறுநிகழ்வுக் கல்வியின் தேவை* 557
*மறுபங்கீடு* 146
**மறுபிறப்பு** 559
**மறுமதிப்பீடு – பணம்** 559
**மறுவிற்பனை விலை நிலைப்பாடு** 560
**மறைஞான சம்பந்தர்** 561
**மறைஞான தேசிகர்** 562
**மறைமலையடிகள்** 562
**மறைமுக வரிகள்** 565
*மறைமுடிக் கறை மிடற்றினார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்* 5
**மன்காட்டன்** 567
*மன்சப்தார்கள்* 567
**மன்சப்தாரி முறை** 567
**மன்சுடர்** 569

மன்ரோக் கோட்பாடு 570
மன்ரோ, சர் தாமசு 571
மன்ரோ, சேம்சு 572
மன்று சுட்டிய உரிமை 574
மன்னான் 575
மன்னிப்பு 575
மனக்கிளர்ச்சி 576
மனக்கோட்டை 577
மனச்சாட்சி 577
மனச்சாய்வு 578
மனச்சிதைவு நோய் 579
மனச்சிதைவு நோயின் உயிரியல் காரணிகள் 581
மனச்சிதைவு நோயின் வகைகள் 580
மனத்தொடர்பு 582
மனநோய் வகைகள் 30
மனப்பான்மை அளவுகோல்கள் 962
மனப்போக்கு 582
மனப்போக்கை அளக்கும் முறை 584
மனம் 584
மனமகிழ் மருத்துவம் 585
மனவளர்ச்சி குன்றியமை 586
மனவளர்ச்சி குன்றியமையும் அறிவுக் கூர்மையும் 587
மனவாசகம் கடந்தார் 587
மனவெழுச்சி 588
மனவெழுச்சிக் கோட்பாடுகள் 589
மனித ஆற்றல் வளம் 589
மனித இனநலக் கோட்பாடு 591
மனிதச் சூழலியல் 592
மனிதப் பண்பேற்றல் கொள்கை 593
மனித மூலதனம் 139
மனித வளமும் வேலைப்பங்கீடும் 270
மனிதாபிமான உளவியல் 596
மனு 598
மனுசுமிருதி 599
மனுதரும சூத்திரம் 599
மனுமுறை கண்ட சோழன் 600
மனுமுறை கண்ட வாசகம் 601
மனு விஞ்ஞானேசுவரீயம் 601
மனுவேல் மார்த்தின்சு 602
மனை நிருவாகம் 603
மனையடி சாத்திரம் 608
மனை வன்மீறல் 609
மனோன்மணி 611
மனோன்மணீயம் 610
மா 614
மாக் என்றி 614
மாக்கியவெல்லி, நிக்கோலா 615
மாக்சிமிலியன் 618
மாக்சிமிலியன், முதலாம் 621
மாக்சிமிலியன், இரண்டாம் 621
மாக்சுமுல்லர் 622
மாக்மில்லன், எரால்டு 623
மாகி (மாகே) 625
மாங்குடி கிழார் 626
மாங்குடி மருதனார் 626,433
மாசசூசெட்சு 627
மாசசூசெட்சு விரிகுடா 628
மாசரின் 628
மாசாத்துவான் 629
மாசி 629
மாசிடோனிய மொழி 630
மாசிடோனியா 631
மாசினி, சோசபு 633
மாசுக்கி 634
மாசுகோ 635
மாசு, மார்சல் 638
மாசுலோ, ஆபிரகாம் 639
மாசுலோவின் தன்முதிர்வுற்றோர் 597
மாசூடி, அபுல் ஆசன் அலி 640
மா சே துங்கு 640
மாட்சுயாமா 643
மாட்டு 643
மாட்டுப் பொங்கல் 43
மாட்டுறுப்பும் பொருள்கோளும் 644
மாட்டெறிந்தொழுகல் உத்தி 643
மாட்ரிடு 644
மாடலன் 646
மாடலூர் கிழார் 647
மாடிசன், சேம்சு 647
மாண்ட்கோமரி 649
மாண்ட் கோமரி நகரம் 650
மாண்டசுக்யூ, சார்லசு 650
மாண்டலே 653
மாண்டவ்வியர் 654
மாண்டிசெல்லோ 655
மாண்டிசோரி 656
மாண்டிசோரி கல்விமுறை 658
மாண்டிவிடியோ 660
மாண்டு 660
மாண்டுபோர்டு, சைமன் டி 661
மாண்டுக்கிய உபநிடதம் 661
மாண்டெரே 662
மாண்டேகு, எட்வின் சாமுவேல் 663
மாண்டேகு செம்சுபர்டு சீர்திருத்தங்கள் 664
மாண்புறு புரட்சி 666
மாணவர் அரசாங்கம் 668
மாணவர் கழகங்களின் வரலாறு 670
மாணவர் கழகம் 670

மாணவர் பதிவேடு 671
மாணவர் மதிப்பீடு 673
மாணிக்க நாயக்கர், பா.வே. 675
மாணிக்கம், வ.சுப. 676
மாணிக்கவாசகர் 677
மாத்தியமிகம் 681
மாத்திரை 682
மாத்யூ தியோபால்டு 682
மாதரி 683
மாதவ சதாசிவ கோல்வால்கர் 684
மாதவையா, அ. 685
மாதவி 685
மாதி 686
மாதிரி ஆளுமை 687
மாதிரிப் பாராளுமன்றம் 689
மாதீர்த்தன் 690
மாதைத் திருவேங்கடநாதர் 690
மாநகர் உரிமையியல் நீதிமன்றம் 691
மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் 692
மாநில சுயாட்சி 694
மாநிலத் தலைமை வழக்கறிஞர் 697
மாநில நிதிக் கழகங்கள் 698
மாநில நிருவாக முறை 699
மாப்பிள்ளைமார் கலகம் 702
மாபாடியம் 703
மாபுராணம் 704
மாபெக்கிங்கு 707
மாபெரும் பட்டயம் 707
மாம்பழக் கவிச்சிங்க நாவலர் 709
மாம், வில்லியம் சாமர்செட்டு 710
மாமண்டூர் 711
மாமல்லபுரம் 711
மாமலுக்குகள் 717
மாமிலாடனார் 718
மாமூது கவான் 719
மாமூலனார் 720
மாயாகோவுசுகி, விலாடிமிர் 722
மாயா நாகரிகம் 723
மாயாவாதம் 724
மாயூரப்புராணம் 725
மாயேண்டனார் 726
மாயை 727
மார்க்கசு அரேலியசு அந்தோனியசு 729
*மார்க்கண்டேய புராணம்* 286
மார்க்கண்டேயம் 730
மார்க்கண்டேயர் 730
மார்க்கண்டேயனார் 731
மார்க்கண்டேயனார் காஞ்சி 731
மார்க்கு ஆண்டனி 731
மார்க்குவேசாசுத் தீவுகள் 732
மார்க்கோபோலோ 733
மார்க்சியம் 735
*மார்க்சு, காரல்* 11,122,399,735
மார்கழி 737
மார்கன், உலூயி என்றி 737
மார்கென்சுதான், ஆசுகார் 739
மார்சல், சர் சான் 740
மார்சல் திட்டம் 740
மார்சல் தீவுகள் 742
மார்சலின் பொருளாதாரம் 743
மார்சிலியோ 745
மார்சுட்டன் மூர் போர் 745
மார்சேல் 746
மார்ட்டின் டு கார்ட், உரோசர் 747
மார்ட்டின் லூதர் 748
மார்ட்டெல் சார்லசு 750
மார்ட்வினியன் மொழி 751
மாரத்துவாடா 751
மாரிசு, வில்லியம் 752
மாரிப்பித்தியார் 752
மாரிமுத்தாப்பிள்ளை 753
மாரியசு கயசு 753
மாரியம்மன் 754
மாரீசன் 756
மாரெங்கோப் போர் 757
மால்கம், நார்மன் 758
மால்ட்டா 759
*மால்தசு, தாமசு* 11,241
மால்பரோ, சான் சர்ச்சில் 760
மாலங்கோல் சார்சி மாக்சி மில்லியனோவிச்சு 761
மாலடோவு 762
மாலத் தீவுகள் 763
மாலிக் ஆம்பர் 764
மாலிக்காபூர் 764
மாலியவான் 766
*மாலினோசுக்கி* 456
மாலைமாற்று 766
மாலைமாறன் 767
மாவ்லங்கர் கணேசு வாசுதேவு 767
மாவளத்தன் 768
மாவளத்தான் 768
மாவிலங்கை 768
*மாவோவின் அரசியல் கருத்துகள்* 642
*மாவோவின் போர்த் திறமை* 641
*மாவோவின் முன்னோக்கிய இயக்கம்* 642
மாளவிகா 769
மாளவியா, பண்டித மதன்மோகன் 770
மாற்பித்தியார் 771

*மாற்றிலக்கணக் கொள்கை* 458
**மாற்றிலக்கணம்** 771
**மாற்று உண்டியல்** 772
*மாற்றுநிலை மயக்கம்* 458
**மாற்றுருப்பு** 775
**மாற்றொலி** 776
**மாறவர்ம பாண்டிய மன்னர்கள்** 777
*மாறவர்மன் குலசேகரன்* 777
*மாறவர்மன் விக்கிரம பாண்டியன்* 777
**மாறன் பாப்பாவினம்** 777
**மாறன் பொறையனார்** 778
**மாறனகப் பொருள்** 778
**மாறனலங்காரம்** 779
**மாறனேர் நம்பி** 980
**மாறிகள்** 781
**மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்** 785
**மாறோகம்** 786
**மான்கிம்** 786
**மான்கைம், காரல்** 786
**மான்சிங்கு, இராசா** 788
**மாண்டரின் மொழி** 789
**மான், தாமசு** 790
**மான் தீவு** 791
**மானக்கஞ்சாற நாயனார்** 791
**மானசரோவர்** 792
**மானிட உடலளவைமானி** 793
**மானிட உடலளவையியல்** 794
**மானிடவியல்** 795
**மானிடோபா** 800
**மானிதூலின் தீவுகள்** 801
**மானிய கேடம்** 801
**மானூசி** 802
**மானூர்க் கல்வெட்டு** 802
**மி** 803
**மிக்காடோ** 804
**மிக்கைல் அலக்சாண்ட்ரோவிச் சோலக்கோவ்** 805
**மிகிரகுலன்** 805
**மிகை ஆற்றல்** 807
**மிகைநிலை மனம்** 807
**மிகைமதிப்புக் கோட்பாடு** 807
**மிங்கு குலம்** 809
**மிசிகன்** 811
**மிசிசிப்பி** 813
**மிசுரா, இராமானந்தன்** 815
**மிசுரா, இலலித் நாராயண்** 816
**மிசௌரி** 817
**மிசௌரி ஒப்பந்தம்** 819
*மிசௌரி சமரசம்* 573
**மிஞிலி** 820
**மிட்வே தீவுகள்** 821
*மிட்வே தீவுப் போர்* 821
**மிடில்செக்சு** 821
**மிண்டன்** 821
**மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள்** 822
**மித்திரடேட்டசு** 823
**மித்திராசமயம்** 823
**மித்திராவருணர்** 823
**மித்ரா, இராசா இராசேந்திரலால்** 824
**மிதுனபுரி** 825
**மிதுனம்** 825
**மியூனிச்சு** 826
**மிரட்டல் குற்றம்** 828
**மிராபோ** 828
**மிருக சீரிடம்** 830
**மிருகண்டு** 830
**மில்ட்டன், சான்** 830
**மில்டையடீசு** 832
**மில்வாகி** 833
**மிலான்** 833
**மிலான் ஆணை** 835
**மிலிந்த பன்கா** 835
**மிலேச்சர்** 836
**மிலேச்சர் படையெடுப்பு** 836
**மிலேட்டசு** 837
**மிழலைக் கூற்றம்** 837
**மிளைக் கந்தன்** 838
**மிளைகிழான் நல்வேட்டனார்** 838
**மிளைப் பெருங் கந்தன்** 838
**மிளைவேள் தித்தன்** 839
**மிறைக்கவி** 839
*மின் இயக்கத் தடை* 548
**மின்சார உற்பத்தி** 840
**மின்தூண்டு வலிப்பு மருத்துவம்** 840
**மின்னசோட்டா** 842
**மின்னசோட்டா சோதனை** 844
*மின்னசோட்டா தொழில் ஆர்வச் சோதனைப் பட்டியல்* 845
*மின்னசோட்டா பலமுனை ஆளுமைச் சோதனைப்பட்டியல்* 844
*மின்னசோட்டா பள்ளி முன்பருவப் பள்ளிச்சோதனை* 844
**மினாண்டர்** 845
**மினாண்டர், மிலிந்தன்** 846
**மினார்க்கா** 846
**மீ** 848
**மீச்செயல்** 848
**மீட்சி இயக்கம் (இத்தாலி)** 849
**மீட்டழைப்பு** 850

மீட்டுருவாக்கம் 850
மீடு, சார்சு எர்பர்ட்டு 854
மீடு, மார்கரட்டு 855
மீத்திறக் குழந்தைக் கல்வி 856
மீத்திறக் குழந்தைகள் 858
மீத்திறக் குழந்தைகளின் சிறப்பியல்புகள் 857
மீத்திறக் குழந்தைகளைக் கண்டுபிடித்தல் 856
மீதியா 860
மீமகன் 861
மீமாம்சை 861
மீர்காசிம் 863
மீர்சாபர் 864
மீர்சும்லா 865
மீரத்து 866
மீரத்துப் பல்கலைக்கழகம் 866
மீராபாய் 866
மீலாது உன்-நபி 867
மீன் வளம் 867
மீனம் 872
மீனாட்சி அம்மன் கோயில் 425
மீனாட்சி சுந்தரக் கவிராயர் 873
மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மகாவித்துவான் 873
மீனாட்சி சுந்தரனார், தெ.பொ. 874
மீனாட்சிபுரம் 877
மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் 878
மீனெறி தூண்டிலார் 879
மு 880
முக்கல் ஆசான் நல்வெள்ளையார் 880
முக்கூடல் 881
முக்கூடற்பள்ளு 881
முக்டென் 883
முக்டென் போர் 884
முகப்புரை 884
முகம்மதிய மணக்கொடை 885
முகம்மது அலி 887
முகம்மது அலி சின்னா 888, 905
முகம்மது கோரி 890
முகம்மது சா 890
முகம்மது பின் காசிம் 892
முகம்மது பின் துக்ளக் 893
முகரம் 894
முகலாயர் படையெடுப்பு 308
முகலிங்கம் 895
முகவர் 896
முகவைப் பாட்டு 898
முகியித்தின் புராணம் 898
முகுந்தராசர் 483
முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் 900
முசிபுர் ரகுமான் 900
முசுகுந்தன் 902
முசுதபா கமால்பாசா 902
முசுலிம் லீகு 904
முசோலினி, பெனிட்டோ 905
முட்டை உற்பத்தி 907
முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் 910
முடத்தாமக் கண்ணியார் 910, 99
முடத்திருமாறன் 910
முடிகொண்ட சோழபுரம் 911
முடிகொண்ட சோழன் 912
முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி 912
முடியாட்சி 912
முடியேற்று 913
முடுகு வண்ணம் 915
முண்டக உபநிடதம் 915
முண்டர் 917
முண்டா மொழிகள் 919
முத்தரையர் 921
முத்தவல்லி 922
முத்தி 923
முத்தி நிச்சயம் 924
முத்திரை வரிச்சட்டம் 925
முத்து 357
முத்துக்குமாரக் கவிராயர் 926
முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் 926
முத்துச்சாமிக் கவிராயர். நகரம் 928
முத்துச்சாமிக் கோனார் 929
முத்துச்சாமிப் பாரதியார் 929
முத்துச்சாமிப் பிள்ளை 929
முத்துசாமி ஐயங்கார் 930
முத்துசாமிக் கவிராயர் 930
முத்துசாமி தீட்சிதர் 930
முத்துசிவன்.ஆ. 931
முத்துத் தம்பி பிள்ளை 932
முத்துத்தாண்டவர் 933
முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள் 933
முத்துத்தாண்டவராயப் பிள்ளை, ப.அ. 936
முத்து மகுதி 329
முத்துரங்க முதலியார், சி.என். 937
முத்துராசர் 938
முத்துராமலிங்கத் தேவர் 938
முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி 939
முத்துலட்சுமி ரெட்டி. திருமதி 941
முத்துவீர உபாத்தியாயர் 942
முத்துவீரப்பக் கவிராயர் 943
முத்து வீரியம் 943
முத்தூற்றுக் கூற்றம் 944
முத்தேசுவரர் 483
முத்தையா செட்டியார். அரசர் 495

**முத்தையா பாகவதர்** 946
**முத்தொள்ளாயிரம்** 947
முதல் உலகப் போர் 200
**முதல் தகவல் அறிக்கை** 947
**முதல்நிலை அளவாய்வு** 949
முதல்நிலை உற்பத்தியாளர்களின் சந்தை 148
முதல்நிலை உறவு 953
**முதல்நிலைக் குழுக்கள்** 951
**முதல்நிலைத் தரவுகள்** 957
**முதல் பெருக்கம்** 963
முதல் மராட்டியப் போர் 484
**முதல் வட்டிக் கோட்பாடு** 965
முதலாக்கம் 139
முதலாழ்வார்கள் 968
**முதலாளித்துவம்** 968
**முதலியாண்டான்** 970
**முதலீட்டு நிறுவனங்கள்** 972
**முதலீடு** 973
**முதலேற்பு ஆள்வரை** 976
**முதற் பொருள்** 977
**முதன்முறைக் குற்றவாளி** 978
**முதியோர் நலத்திட்டம்** 979
முப்பதாண்டுப் போர் 40,628
முழு மயங்கொலியன் 461
முழுமையான அங்காடி 139
முறையான மணக்கொடை 886
முன் இயக்கத் தடை 550
முன்னேறும் பொருளாதாரத்தில் மறைமுக வரியின் பங்கு 566
மூலதன ஆக்கம் 138
மூலதனப் பெருக்கத்தின் படிநிலைகள் 965
மூலதனப் பெருக்கத்தின் வகைகள் 964
மூலதனப் பெருக்கம் 964
மூலதன வரி 56
மூன்றாம் மராட்டியப் போர் 485
மெக்டூகல், வில்லியம் 52
மெடேரா தீவுகள் 202
மேலாண்மை நோக்கு 50
மேற்கு மங்கோலியர் 317
மைய அரசுப் பொதுத் துறையின் வளர்ச்சி 62
மொத்த விலைக் குறியீட்டெண் 113
மொழியியல்சார் மானிடவியல் 799
மௌனப் பரிமாற்றம் 145
யமுனைத்துறைவர் 348
யூகோசுலேவிய மாசிடோனியா 632
வடக்குக் கோயில் 152
வடமர் 7
வர்த்தமானர் 295
வராக புராணம் 33, 286
வருணகுலாதித்தன் மடல் 336
வருணனை அளவுகோல்கள் 674
வரையறை செய்யப்பட்ட மணக்கொடை 886
வழிவகைக் கடன்கள் 55
வளர்ச்சி மாதிரிகள் 132
வளரா அரசு 744
வறுமையின் நச்சுவட்டம் 138
வனபருவம் 283
வாட்சன் 578
வாணிகச் சுழற்சிக் கோட்பாடு 120
வாமன் பண்டிதர் 483
வாமன புராணம் 286
வாயறையும் பேச்சொலியும் 227
வார்சா 216
வாரிசு வரி 479
வானொலி வழித் தொடர்பு 251
விசுவநாத நாயக்கர் 425,444
விட்டிங்சு, சான் 503
விட்டுணு தர்மோத்தர புராணம் 33
விட்டுணு புராணம் 286
விமானப் போக்குவரத்து 174
விராட பருவம் 284
விளக்க அளவுகோல்கள் 674
விளை பொருட்கள் அணுகுமுறை 128
விளை முத்துகள் 358
விளையாட்டு வழிச் சிகிச்சை 586
வினய பிடகம் 293
வினாநிரல் 959
வினாப்பட்டியல் 959
வீடும பருவம் 284
வீடுமர் 284
வீமன் 284
வீரப்ப நாயக்கர், முதலாம் 444
வெண் குன்றுப்போர் 40
வெல்லெசுலி பிரபு 485
வெளிநாட்டு உண்டியல்கள் 774
வெளிநாட்டுக் கடன் 55
வெளிநாட்டுக் கடன்களின் மறைமுகச் சுமை 56
வெளிநாட்டுக் கடன் மறுப்பு 56
வெளுத்தல் கோட்பாடு 546
வெற்று உண்டியல்கள் 774
வேளாண்மைப் புள்ளிவிவரங்கள் 131
வேற்றுநிலை வழக்கு 459
வைடூரியம் 364
வைரம் 358
வைவசுவத மனு 599

# கலைச்சொற் பட்டியல்

## தமிழ் – ஆங்கிலம்

| | | |
|---|---|---|
| அகமணம் | ... | Endogamy |
| அகழாய்வு | ... | Excavation |
| அங்காடிக் காலம் | ... | Market Period |
| அணுக்கொள்கை | ... | Atomism |
| அரசு தலையிடாக் கொள்கை | ... | Laissez-faire |
| அழகியல் | ... | Aesthetics |
| அளவை அடிப்படை | ... | Quantitative Basis |
| அளவையியல் | ... | Logic |
| அறவியல் | ... | Ethics |
| அறிதிறன் | ... | Cognition |
| அறியொணாக் கொள்கை | ... | Agnosticism |
| அறிவுரை கூறல் | ... | Counselling |
| ஆட்டக் கோட்பாடு | ... | Game Theory |
| ஆவியுலகக் கோட்பாடு | ... | Animism |
| ஆளுமை | ... | Personality |
| ஆளுமைச் சிதைவு | ... | Personality Disorganization |
| இடைக்கற்காலம் | ... | Mesolithic Age |
| இடைவினை | ... | Interaction |
| இயக்கவியல் பொருள்முதல்வாதம் | ... | Dialectical Materialism |
| இயல்பூக்கம் | ... | Instinct |
| இயற்கைவாதி | ... | Physiocrat |
| இருமைக் கொள்கை | ... | Dualism |
| இருவர் முற்றுரிமை | ... | Duopoly |
| இறுதிநிலைச் செலவு | ... | Marginal Cost |
| இறுதிநிலை வருவாய் | ... | Marginal Revenue |
| இனக்குழு ஒப்பாய்வியல் | ... | Ethnology |
| இனக்குழு மருத்துவம் | ... | Ethnomedicine |
| இனக்குழுவியல் | ... | Ethnography |
| இனவியல் | ... | Raciology |
| ஈற்றயற் பகுதியின் இடைக்காலம் | ... | Middle Pleistocene |
| உட்கட்டமைப்பு | ... | Infrastructure |
| உடலியங்கியல் | ... | Physiology |

உடற்கூற்றியல் ... Anatomy
உணர்வு உந்துதல் ... Libido
உணவுச் சூழமைப்பு ... Nutritional Ecosystem
உயர்பாலூட்டி ... Primate
உயிர் மருத்துவம் ... Biomedicine
உருபன் ... Morpheme
உலகளாவிய படிமலர்ச்சிக் கொள்கை ... Universal Evolutionism
உளநோயியல் ... Psychopathology
உளப்பகுப்பாய்வு ... Psychoanalysis
உளப்பிணி ... Psychosis
உளமருத்துவர் ... Psychotherapist
உறவுமுறை ... Kinship System
ஊக்கமூட்டி .. Energizer
எலும்பளவையியல் ... Osteometry
ஒத்த மந்திரம் ... Homoeopathic Magic
ஒருமைக் கொள்கை ... Monism
ஒலியன் ... Phoneme
ஒலி விதி ... Phonetic Law
ஓரணு உயிரி ... Protozoan
ஓரினமாதல் ... Assimilation
கடனீட்டுப் பத்திரங்கள் ... Debentures
கடுமையிராத பைத்தியம் ... Hypomania
கதிரியக்கவியல் ... Radiology
கருத்தியல் ... Ideology
கருத்துமுதற் கொள்கை ... Idealism
கருதுகோள் ... Hypothesis
கருவள விகிதம் ... Fertility Ratio
கருவிழிப்படலம் ... Iris
கலப்புப் பொருளாதாரம் ... Mixed Economy
காட்டுமிராண்டித்தன்மை ... Barbarism
காப்பு மந்திரம் ... Protective Magic
கிளைமொழி ... Dialect
கும்பம் ... Dome
குலக்குறி ... Totem
குலப் புறமணம் ... Clan Exogamy
குலம் ... Clan

| | |
|---|---|
| குழு முற்றுரிமை | ... Oligopoly |
| குற்றவியல் | ... Criminology |
| கூர்கோபுரத் தூபி | ... Minar |
| கெழு | ... Coefficient |
| கொள்ளை நோயியல் | ... Epidemiology |
| சட்டஞ்சார்ந்த நோயியல் | ... Forensic Pathology |
| சமயச்சார்பின்மை | ... Secularism |
| சமுதாயச் சூழலியல் | ... Socioecology |
| சமூகமயமாதல் | ... Socialization |
| சன்னிசார்ந்த பைத்தியம் | ... Delirious Mania |
| சார்பற்ற மாறி | ... Independent variable |
| சார்பு மாறி | ... Dependent variable |
| சான்றாயர் | ... Jury |
| சான்றுறுத்தம் | ... Corroboration |
| சூழலமைப்பு | ... Ecosystem |
| சூழலியல் | ... Ecology |
| செயல்முறை உளவியல் | ... Applied Psychology |
| செயற்பாட்டியற் கொள்கை | ... Functionalism |
| செலாவணி | ... Currency |
| சொத்து | ... Asset |
| தன்முதிர்வு | ... Self-actualization |
| தன்முனைப்பு | ... Ego |
| தன்னுணர்வு உந்துதல் | ... Id |
| திரிபுணர்ச்சி | ... Delusion |
| தீய மந்திரம் | ... Black Magic |
| தூக்கத்தில் நடத்தல் | ... Somnambulism |
| தூய மந்திரம் | ... White Magic |
| தொகுத்தறி முறை | ... Inductive Method |
| தொத்து மந்திரம் | ... Contagious Magic |
| தொல் சூழலியல் | ... Palaeoecology |
| தொல்லுயிரியல் | ... Palaeontology |
| தொழிற்பயிற்சி வழி சிகிச்சையாளர் | ... Occupational Therapist |
| தொன்மவியல் | ... Mythology |
| நகரும் இறுக்குமானி | ... Sliding Caliper |

| | | |
|---|---|---|
| நச்சுயிரி | .. | Virus |
| நச்சுவியல் | ... | Toxicology |
| நஞ்சுக்கொடி | ... | Placenta |
| நடத்தைக் கொள்கை | ... | Behaviourism |
| நரம்புப் பிணி | ... | Neurosis |
| நல அரசு | ... | Welfare State |
| நாட்டார் மருத்துவம் | ... | Folk Medicine |
| நிதிக் கொள்கை | ... | Fiscal Policy |
| நிபந்தனையற்ற பொது மன்னிப்பு | ... | Absolute Amnesty |
| நுண்கற்கருவி | ... | Microlith |
| நுண்கிருமி | ... | Bacteria |
| நுண்ணறிவு ஈவு | ... | Intelligent Quotient |
| நுண்ணினப் பொருளியல் | ... | Micro economics |
| நெறி முறை | ... | Norm |
| நேர்முக வரி | ... | Direct Tax |
| நோயறிதல் | ... | Diagnosis |
| பகுத்தறி முறை | ... | Deductive Method |
| படிமலர்ச்சி | ... | Evolution |
| படிமலர்ச்சிக் கொள்கை | ... | Evolutionism |
| பண்பாட்டுச் சார்புடைமை | ... | Cultural Relativism |
| பண்பாட்டுச் சூழலியல் | ... | Cultural Ecology |
| பண்பாட்டுத் தோற்றம் | ... | Cultural Origin |
| பண்பாட்டுப் படிமலர்ச்சி | ... | Cultural Evolution |
| பணக்கொள்கை | ... | Monetary Policy |
| பயிற்சி வழிச் சிகிச்சையாளர் | ... | Physiotherapist |
| பலகணவர் மணம் | ... | Polyandry |
| பலமனைவி மணம் | ... | Polygyny |
| பலவழிப் படிமலர்ச்சிக் கொள்கை | ... | Multilinear Evolutionism |
| பன்மைக் கொள்கை | ... | Pluralism |
| புத்திலக்கணவாதி | ... | Neogrammarian |
| புதை படிவம் | ... | Fossil |
| புலன்காட்சி | ... | Perception |
| புறத்தெறிவு உத்திகள் | ... | Projective Techniques |
| புறத்தோற்ற உடலளவையியல் | ... | Somatometry |
| புறமணம் | ... | Exogamy |
| பெருங்கால்வழி | ... | Phratry |
| பேராண்மை உரிமை நாடுகள் | ... | Mandated Territories |

பேரியல் பொருளியல் ... Macro-economics
பேறுகால உளச்சோர்வு ... Puerperal Depression
பேறுகால உளப்பிணி ... Puerperal Psychosis
பைத்தியம் ... Mania
பொதுப் பொறுப்பாண்மை ... Public Trust
பொதுமன்னிப்பு ... Amnesty
பொருள்முதற் கொள்கை ... Materialism
பொருளாதார அளவையியல் ... Econometrics
பொருளாதார மாறி ... Economic Variable
பொறுப்பு நிலை ... Liability
பொறுப்புரிமை அமைப்பு ... Trust
போர் நரம்புப் பிணி ... War Neurosis
மக்கள் அழிப்பு ... Genocide
மக்கள் தொகைப் புறத்தேற்றம் ... Population Projection
மக்களாட்சி ... Democracy
மகவேற்பு ... Adoption
மசோதா/உண்டியல் ... Bill
மண்டல ஆய்வுகள் ... Area Studies
மண்டையளவைமானி ... Craniometer
மண்டையோட்டளவையியல் ... Craniometry
மண்ணடுக்காய்வு ... Stratigraphy
மதிப்புக் கோட்பாடு ... Value Theory
மந்திரம் ... Magic
மயக்கமூட்டும் மருந்து ... Tranquillizer
மரபுக்கீற்று ... Chromosome
மருத்துவச் சமூகவியல் ... Medical Sociology
மருத்துவச் சூழலியல் ... Medical Ecology
மருந்தாளுநர் ... Pharmacist
மருந்துவழி உளநோய் மருத்துவம் ... Chemotherapy
மறதிநோய் ... Amnesia
மறுதரப்பிலா உத்தரவு ... Exparte Order
மறுதரப்பிலாத் தீர்ப்பாணை ... Exparte Decree
மறைமுக வரி ... Indirect Tax
மனக்கிளர்ச்சி ... Euphorea
மனச்சிதைவு நோய் ... Schizophrenia

மனமகிழ் மருத்துவம் ... Recreation Therapy
மனிதச் சூழலியல் ... Human Ecology
மனிதநேயக் கோட்பாடு ... Humanism
மனிதப்பண்பேற்றல் கொள்கை ... Anthropomorphism
மனிதாபிமான உளவியல் ... Humanistic Psychology
மாற்றிலக்கணம் ... Transformational Grammar
மாற்றுருபு ... Allomorph
மாற்றொலி ... Allophone
மாறி ... Variable
மானிட உடலளவமானி ... Anthropometer
மானிட உடலளவையியல் ... Anthropometry
மிகுதி தோன்றூழி ... Pleistocene Epoch
மின் அதிர்ச்சி மருத்துவம் ... Shock Therapy
மின்தூண்டு வலிப்பு மருத்துவம் ... Electro-therapy
முடியாட்சி ... Monarchy
முதலாளித்துவம் ... Capitalism
முதுமைச்சோர்வு உளப்பிணி ... Involutional Melancholia
முழுதளாவிய அணுகுமுறை ... Holistic Approach
முழுதளாவியம் ... Holism
முழுமை உளவியல் ... Gestalt Psychology
முற்றுரிமை ... Monopoly
மூலக்கூறு உயிரியல் ... Molecular Biology
மூளைக்கோளாறு ... Phrenitis
மேற்பரப்பாய்வு ... Exploration
மௌன வணிகம் ... Silent Trade
வமிசாவளிப் பட்டியல் ... Genealogy
வளர்ச்சிச் சொத்து ... Development Asset
வாணிகவாதி ... Mercantilist
விரியும் இறுக்குமானி ... Spreading Caliper
விலக்கு ... Taboo
விலங்குத்தன்மை ... Savagery
விலைக் கொள்கை ... Price Policy
விளையாட்டு வழி யருத்துவம் ... Play Therapy
வினாநிரல் ... Questionnaire
வேற்றுமை உளவியல் ... Differential Psychology

## ஆங்கிலம் – தமிழ்

| | |
|---|---|
| Absolute Amnesty | ... நிபந்தனையற்ற பொது மன்னிப்பு |
| Adoption | ... மகவேற்பு |
| Aesthetics | ... அழகியல் |
| Agnosticism | ... அறியொணாக் கொள்கை |
| Allomorph | ... மாற்றுருபு |
| Allophone | ... மாற்றொலி |
| Amnesia | ... மறதிநோய் |
| Amnesty | ... பொதுமன்னிப்பு |
| Anatomy | ... உடற்கூற்றியல் |
| Animism | ... ஆவியுலகக் கோட்பாடு |
| Anthropometer | ... மானிட உடலளவைமானி |
| Anthropometry | ... மானிட உடலளவையியல் |
| Anthropomorphism | ... மனிதப்பண்பேற்றல் கொள்கை |
| Applied Psychology | ... செயல்முறை உளவியல் |
| Area Studies | ... மண்டல ஆய்வுகள் |
| Asset | ... சொத்து |
| Assimilation | ... ஓரினமாதல் |
| Atomism | ... அணுக்கொள்கை |
| Bacteria | ... நுண்கிருமி |
| Barbarism | ... காட்டுமிராண்டித்தன்மை |
| Behaviourism | ... நடத்தைக் கொள்கை |
| Bill | ... மசோதா/உண்டியல் |
| Biomedicine | ... உயிர் மருத்துவம் |
| Black Magic | ... தீய மந்திரம் |
| Capitalism | ... முதலாளித்துவம் |
| Chemotherapy | ... மருந்துவழி உளநோய் மருத்துவம் |
| Chromosome | ... மரபுக்கீற்று |
| Clan | ... குலம் |
| Clan Exogamy | ... குலப் புறமணம் |
| Coefficient | ... கெழு |
| Cognition | ... அறிதிறன் |
| Contagious Magic | ... தொத்து மந்திரம் |
| Corroboration | ... சான்றுறுத்தம் |
| Counselling | ... அறிவுரை கூறல் |

Craniometer ... மண்டையளவைமானி
Craniometry ... மண்டையோட்டளவையியல்
Criminology ... குற்றவியல்
Cultural Ecology ... பண்பாட்டுச் சூழலியல்
Cultural Evolution ... பண்பாட்டுப் படிமலர்ச்சி
Cultural Origin ... பண்பாட்டுத் தோற்றம்
Cultural Relativism ... பண்பாட்டுச் சார்புடைமை
Currency ... செலாவணி
Debentures ... கடனீட்டுப் பத்திரங்கள்
Deductive Method ... பகுத்தறி முறை
Delirious Mania ... சன்னிசார்ந்த பைத்தியம்
Delusion ... திரிபுணர்ச்சி
Democracy ... மக்களாட்சி
Dependent Variable ... சார்பு மாறி
Development Asset ... வளர்ச்சிச் சொத்து
Diagnosis ... நோயறிதல்
Dialect ... கிளைமொழி
Dialectical Materialism ... இயக்கவியல் பொருள்முதல்வாதம்
Differential Psychology . வேற்றுமை உளவியல்
Direct Tax ... நேர்முக வரி
Dome ... கும்பம்
Dualism ... இருமைக் கொள்கை
Duopoly ... இருவர் முற்றுரிமை
Ecology ... சூழலியல்
Econometrics .. பொருளாதார அளவையியல்
Economic Variable ... பொருளாதார மாறி
Ecosystem ... சூழலமைப்பு
Ego ... தன்முனைப்பு
Electro therapy ... மின்தூண்டு வலிப்பு மருத்துவம்
Endogamy . அகமணம்
Energizer ... ஊக்கமூட்டி
Epidemiology ... கொள்ளைநோயியல்
Ethics ... அறவியல்
Ethnography ... இனக்குழுவியல்
Ethnology ... இனக்குழு ஒப்பாய்வியல்

| | | |
|---|---|---|
| Ethnomedicine | ... | இனக்குழு மருத்துவம் |
| Euphorea | ... | மனக்கிளர்ச்சி |
| Evolution | ... | படிமலர்ச்சி |
| Evolutionism | ... | படிமலர்ச்சிக் கொள்கை |
| Excavation | ... | அகழாய்வு |
| Exogamy | ... | புறமணம் |
| Exparte Decree | ... | மறுதரப்பிலாத் தீர்ப்பாணை |
| Exparte Order | ... | மறுதரப்பிலா உத்தரவு |
| Exploration | ... | மேற்பரப்பாய்வு |
| Fertility Ratio | ... | கருவள விகிதம் |
| Fiscal Policy | ... | நிதிக் கொள்கை |
| Folk Medicine | ... | நாட்டார் மருத்துவம் |
| Forensic Pathology | ... | சட்டஞ்சார்ந்த நோயியல் |
| Fossil | ... | புதைபடிவம் |
| Functionalism | ... | செயற்பாட்டியற் கொள்கை |
| Game Theory | ... | ஆட்டக் கோட்பாடு |
| Genealogy | .... | வமிசாவளிப் பட்டியல் |
| Genocide | ... | மக்கள் அழிப்பு |
| Gestalt Psychology | ... | முழுமை உளவியல் |
| Holism | ... | முழுதளாவியம் |
| Holistic Approach | ... | முழுதளாவிய அணுகுமுறை |
| Homoeopathic Magic | .. | ஒத்த மந்திரம் |
| Human Ecology | ... | மனிதச் சூழலியல் |
| Humanism | ... | மனிதநேயக் கோட்பாடு |
| Humanistic Psychology | ... | மனிதாபிமான உளவியல் |
| Hypomania | ... | கடுமையிராத பைத்தியம் |
| Hypothesis | ... | கருதுகோள் |
| Id | ... | தன்னுணர்வு உந்துதல் |
| Idealism | ... | கருத்துமுதற் கொள்கை |
| Ideology | ... | கருத்தியல் |
| Independent variable | .. | சார்பற்ற மாறி |
| Indirect Tax | | மறைமுக வரி |
| Inductive Method | ... | தொகுத்தறி முறை |
| Infrastructure | | உட்கட்டமைப்பு |
| Instinct | .. | இயல்பூக்கம் |
| Intelligent Quotient | ... | நுண்ணறிவு ஈவு |

| | | |
|---|---|---|
| Interaction | ... | இடைவினை |
| Involutional Melancholia | ... | முதுமைச்சோர்வு உளப்பிணி |
| Iris | .. | கருவிழிப்படலம் |
| Jury | ... | சான்றாயர் |
| Kinship system | ... | உறவுமுறை |
| Laissez-faire | ... | அரசு தலையிடாக் கொள்கை |
| Liability | ... | பொறுப்பு நிலை |
| Libido | ... | உணர்வு உந்துதல் |
| Logic | ... | அளவையியல் |
| Macro economics | ... | பேரியல் பொருளியல் |
| Magic | ... | மந்திரம் |
| Mandated Territories | ... | பேராண்மை உரிமை நாடுகள் |
| Mania | ... | பைத்தியம் |
| Marginal Cost | ... | இறுதிநிலைச் செலவு |
| Marginal Revenue | ... | இறுதிநிலை வருவாய் |
| Market Period | ... | அங்காடிக் காலம் |
| Materialism | ... | பொருள்முதற் கொள்கை |
| Medical Ecology | ... | மருத்துவச் சூழலியல் |
| Medical Sociology | ... | மருத்துவச் சமூகவியல் |
| Mercantilist | ... | வாணிகவாதி |
| Mesolithic Age | ... | இடைக் கற்காலம் |
| Micro-economics | ... | நுண்ணினப் பொருளியல் |
| Microlith | ... | நுண்கற்கருவி |
| Middle Pleistocene | ... | ஈற்றயற் பகுதியின் இடைக்காலம் |
| Minar | ... | கூர்கோபுரத் தூபி |
| Mixed Economy | ... | கலப்புப் பொருளாதாரம் |
| Molecular Biology | ... | மூலக்கூறு உயிரியல் |
| Monarchy | ... | முடியாட்சி |
| Monetary Policy | ... | பணக் கொள்கை |
| Monism | ... | ஒருமைக் கொள்கை |
| Monopoly | ... | முற்றுரிமை |
| Morpheme | ... | உருபன் |
| Multilinear Evolutionism | ... | பலவழிப் படிமலர்ச்சிக் கொள்கை |
| Mythology | ... | தொன்மவியல் |
| Neogrammarian | ... | புத்திலக்கணவாதி |

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்